ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீபாஷ்யம்.

(ச்ருதப்ரகாசிகா ஸஹிதம்)

தமிழ் மொழி பெயர்ப்பு.

ஜிஜ்ஞாஸாதிகரணம்

திருச்சி
ஸேண்ட்ஜோஸப் காலேஜ் ஸம்ஸ்க்ருத தலைமைப் பண்டிதர்
மஹாவித்வான், ஸாரஸ்வத ஸாஜ்ஞர், கவிசிகாமணி,
ஸ்ரீமத் உ. வே. டி. வி. ஸ்ரீநிவாஸாச்சார்யா
ஸ்வாமிகளால்
மொழி பெயர்க்கப்பெற்று.

ஸ்ரீமத் உ. வே.
A. V. கோபாலாச்சாரியார் அவர்கள், M.A., B.L.,
அவர்களால் பார்வையிடப்பட்டு.

ஸ்ரீரங்கம்.
ஸ்ரீ பாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்பு ஸங்கத்து பிரிஸிடண்டு
T. D. இராமஸ்வாமி நாயுடு அவர்களால்
கும்பகோணம்
லார்ட் ரிப்பன் அச்சுயந்திரசாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.

1930.

ககஙடு

Copy Right.

Rs. 7 8 0



ஸ்ரீ பாஷ்யகாரர்.

|| ஸ்ரீ: ||

ஸ்ரீ பாஷ்யத்தின் முகவுரை.

ஶ்ரிய:பதியாயும் பரம காருணிகனாகவும் ஷாட்குண்ய பரிபூர்ணனாகவுமிருக்கிற ஸ்ரீமன் நாராயணன், த்யாஜ்யோபாதேயங்களுக்கு உரித்ததான இஷ்டா நிஷ்டங்களையும், அவைகளின் ஸாதனங்களையும் நன்கு பகுத்தறிவதற்காக வேதாந்தமென்கிற ப்ரமாணதீபத்தை பகுத்தறிவுள்ள பிராணி வர்க்கங்களுக்கு அளித்து, அவதாரம் முதலியவற்றின் மூலமாக அதன் ஞான ஒளியை உலகில் நன்றாகப் பரவச்செய்தான். அத்தகைய சிறப்புற்ற ஞான தீபப்ரபையானது க்ருதயுகத்தில் அவ்வண்ணமே நிலை பெற்றிருந்தது. த்ரேதாயுகத்தில் சிறிது மாறுபட்டது. த்வாபரயுகத்தில் சிதறுண்டது. அதினால் தத்வஜ்ஞானத்தை இழந்து பராவர தத்துவ விஷயத்தில் மாறுபட்டமுள்ளவர்களான ப்ரஹ்ம ருத்ராதி தேவர்கள் ஸ்ரீமன் நாராயணனைச் சரணமடைந்து முற்றிலுமழிந்துபோன ஜ்ஞானத்தை உலகின்கண் பிரகாசிப்பிக்கச்செய்ய வேண்டுமென்று வேண்ட, அவ்வண்ணமே அவர்களுடைய கோரிக்கைக்கு இணங்கி உலகமுய்யுமாறு ஸ்ரீமன் நாராயணன் தாமே பராசர மஹரிஷி வாயிலாக ஸத்யவதீ தேவிக்குப் புதல்வனாகத் தோன்றினார். நதியின் நடுத்திட்டில் ஆவிர்ப்பவித்ததினால் த்வைபாயனர் என்றும், ப்ரஹ்மஜ்ஞான தீபப்ரபையினால் ஜீவகோடிகளுடைய அஜ்ஞாநாந்தகாரத்தை ஓட்டி, மீண்டும் அது அவைகளை அணுகா வண்ணம் அதை இழுக்கும் வல்லமையுடையவராக இருப்பதுபற்றி மாதா பிதாக்கள் ப்ரத்யக் திருஷ்டியினால் க்ருஷ்ணனென்றும் பெயரிட்டு அழைத்தனர். அறியாவண்ணம் ஒன்றுபட்டுக்கலந்து குவிந்திருந்த வேதங்களை ருக், யஜுஸ், ஸாம, அதர்வ வென்று நான்காகப் பகுத்து அவ்வாறு பகுக்கப்பட்டிருக்கிற ஒவ்வொன்றையும் முறையே இருபத்தொரு விதமாயும், நூற்றொன்று விதமாயும், ஆயிரம் விதமாயும், ஒன்பது விதமாயும், பிரித்து அவைகளை அத்தியயனம் செய்வதற்குத் தக்க முறைகளை உபதேசித்து உலகத்தில் சிஷ்யர்கள் முகமாக பரவச்செய்ததனால் வ்யாஸரென்கிற திருநாமத்தையும் வஹித்தார். இத்தகைய மகிமை வாய்ந்தவராக இருப்பதனால் ஸாக்ஷாத வேதபுருஷனே ' "ஸகோவாச வ்யாஸ: பாராசர்ய: " என்று புகழ்ந்தான். பரமக்ருபாநிதியான ஸ்ரீ வேதவ்யாஸ மஹரிஷியானவர் கர்மஸ்வரூப ப்ரதிபாதகமாக இருக்கிற அந்த வேதத்தின் பூர்வபாகத்திற்கு தன்னுடைய சிஷ்யனான ஜைமினி மஹரிஷியைக் கொண்டு பன்னிரண்டு அத்தியாயங்களடங்கிய பூர்வமீமாம்ஸா ஸூத்ரங்களையும் காசக்ருத்ஸ்ந மஹரிஷியினால் நான்கு அத்தியாயங்களடங்கிய தேவதா காண்ட ப்ரதிபாதகமான ஸூத்திரங்களையும் செய்வித்து ப்ரம்ஹஸ்வரூபப்ரதிபாதகமான உத்தரபாகத்தை நன்கு உலகில் ப்ரகாசிக்கும்படி செய்யக்கருதி, தாமே நான்கு அத்தியாயங்களடங்கிய ஐநூற்று நாற்பத்தைந்து ப்ரஹ்ம ஸூத்ரங்களைச் செய்தார். சுருங்கின அக்ஷரங்களுடனும் விரிந்த பொருளுடனும் இருப்பதுடன் ஸாரவத்தாகவும் ஸர்வதோமுகமாகவும் அநர்த்தக சப்தங்களில்லாததாகவும் நிர்தோஷமாகவுமிருப்பதனால் இந்த ப்ரஹ்ம ஸூத்திரமொன்றே ஸூத்ர லக்ஷணத்துக்கு இசைந்த இலக்கியம். யோக தசையில் மந்திரங்களை நேரில் காண்பவர்களே ரிஷிகள் என்று கூறப்படுவார்கள். அப்படி ஆசார்யருடைய உபதேசமின்றி தன் யோக மஹிமையினாலேயே மந்திரங்களை ஸாக்ஷாத்கரித்தவரான வ்யாஸ மஹரிஷியினால் இயற்றப்பட்டிருக்கிற ஸூத்திரங்களின் கருத்தை அவர்போன்ற மஹரிஷியே அறியவல்லவர். ஏனெனில் ஸர்வஜ்ஞர்களான ரிஷிகளின் அபிப்பிராயத்தை ப்ரத்யக் த்ருஷ்டி இல்லாத ஸாமான்யமான மனிதன் அறியத் திறமையுடையவனாக ஆகான். ஆர்ஷமான வசனங்கள் ப்ரம விப்ரலம்ப ப்ரமாதங்களில்லாததாகவும் ஸத்யார்த்த ப்ரதிபாதகங்களாகவு மிருப்பதனாலேயே வேதோபப்ரும்ஹணங்களாக ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கின்றன. ஆதலால்

அப்படிப்பட்ட மஹரிஷி குலதுரந்தரரான வேதவியாஸரால் அனுக்ரஹிக்கப்பட்டிருக்கிற ப்ரஹ்ம ஸூத்ரங்களின் கருத்தை உள்ளபடி ஆர்ஷ த்ருஷ்டியால் உணர்ந்து போதாயன மஹரிஷியினால் விரித்து உரைக்கப்பட்டுள்ள வ்ருத்திக் கிரந்தத்தை மூலமாகக்கொண்டு அவதரித்திருக்கிற ஸ்ரீ பாஷ்யமே இவ்வுலகின்கண் ஸம்ஸாரக் கடலில் வீழ்ந்து கரை காணாமல் மூழ்கித் தவிக்கிற ப்ராணிகளுக்கு வீடு பெறுவதில் இன்றியமையாத ஸாதனமாக விளங்குகிறது. ஸூத்திரங்களை அனுஸரியா நின்ற பதங்களால் எங்கு ஸூத்ரார்த்தம் எடுத்துரைக்கப்படுமோ, முதலில் சுருக்கமாகச் சொல்லப்பட்டுள்ள தன்னுடைய சொற்களே எங்கு விரித்துப் பொருள் தெளிவுபடக் கூறப்படுமோ, அதை அறிஞர்கள் பாஷ்யமெனக் கூறுகின்றனர். இவ்வாறு பகரப்பட்டுள்ள இலக்கணத்துக்கு இணங்கி இருக்கிற இந்த ஸ்ரீ பாஷ்யத்திற்கு கர்த்தா ஸ்ரீ ராமானுஜ முனிவர்.

ப்ரஹ்ம ஸ்வரூபத்தை இடைவிடாமல் எக்காலத்திலும் மனனம் செய்து அஜ்ஞான இருளை ஞானச்சுடரொளியினால் போக்கி பரமார்த்த ஸாக்ஷாத்காரம் செய்து தான் நேரில் கண்டவண்ணம் உள்ளது உள்ளபடி ப்ரஹ்ம ஸ்வரூபத்தையும் அதன் குண விபூதிகளையும் இதில் பரக்கப்பேசி இருப்பதால் இதை உபநிஷத்தென்றே அபியுக்தர்கள் கூறுகின்றனர். மேலும் இந்த பாஷ்யமானது திருக்கச்சிநம்பி முகமாக கச்சிமா நகரில் திருக்கோயில் கொண்டிருக்கிற ஸ்ரீ பேரருளாளன் நியமனப்படி அந்த பகவத் ப்ரோக்தார்த்தங்களை அவ்வண்ணமே அமைத்து இயற்றி இருப்பதால் புலவறிவாளர்களான மனிதர்களால் செய்யப்பட்டுள்ள மற்ற போலிபாஷ்யங்களைவிட ஆயிரம் மடங்கு போற்றத்தக்கதாக இருக்கிறது. ஔபநிஷத பரம புருஷ ஸ்வரூபியாக இருக்கிற ஸ்ரீ பேரருளாளன் திருக்கச்சி நம்பி முகமாக இளையாழ்வாருக்கு உபதேசித்த ரஹஸ்யார்த்தங்கள் ஆறு. அவைகளாவன:—நானே பரதத்துவம். ப்ரபத்தி மோக்ஷோபாயம். நிர்யாண ஸமயத்தில் என்னுடைய ஸ்மரணம் நுவறுமலுண்டாக வேண்டுமென்பது அவசியமில்லை. சரீரத்தின் முடிவில் மோக்ஷம். நம்முடைய மதம் விசிஷ்டாத்வைதம். பெரிய நம்பிகளை ஆச்ரயிக்க வேண்டியது என்று. உலகத்தில் ஆர்ஷ கிரந்தங்கள் அளவிறந்தவைகளாக இருந்தபோதிலும் ஸ்ரீ வால்மீகி மஹரிஷியினால் இயற்றப்பட்ட ஸ்ரீமத் ராமாயணமொன்றே ப்ரதிபாத்ய நாயகரான ஸ்ரீ ராமபிரானால் நேரில் கேட்டு அபிநந்திக்கப்பட்டதால் எவ்வாறு அஸாதாரணமான உத்கர்ஷத்தைத் தாங்கி ஜ்வலிக்கிறதோ, அவ்வாறாகவே இந்த ஸ்ரீபாஷ்யமும் உபநிஷதர்த்த விவரண ரூபமாக இருக்கிற இந்த கிரந்தத்தால் ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கிற பரம புருஷனால் நேரில் ஸ்வாபிப்ராயத்தைத் திருக்கச்சி நம்பியிடம் வெளியிட்டு இந்த ஸ்ரீ ராமானுஜமுனிவரைக்கொண்டு செய்விக்கப்பட்டிருப்பதால் மிதஜ்ஞர்களால் ப்ரமம், ப்ரமாதம், அசக்தி, விப்ரலம்பம் முதலிய தோஷங்களால் தூஷிக்கப்பட்டுள்ள மனதுடனும் ஆக்ரஹத்துடனும் சேர்ந்து ச்ருத்யர்த்தங்களை நன்கு பராமர்சியாமலும் முன்பின் தன்னுடைய சொற்களில் வரும் குற்றங்களைக் கவனியாமலும் துரர்த்தங்களால் நிறைந்த பிரமாண ஹீனவசன ஜாலங்களால் நிறைத்து இயற்றப்பட்டிருக்கிற மற்ற அபஸித்தாந்த கிரந்தங்களனைத்தையும் மேருகிரியின் ச்ருங்கத்திலிருப்பவன் பூமியிலிருப்பவர்களைப் பார்ப்பதுபோல் பார்த்து நகையுறுகின்றது. இந்த ஸ்ரீ பாஷ்ய கிரந்தமானது விஷய வைலக்ஷண்யத்தைப் போல் வக்த்ருவைலக்ஷண்யத்தையும் பொதிந்து கொண்டிருக்கிறது.

இந்த கிரந்தநிர்மாதாவான ஸ்ரீ பகவத் ராமானுஜ முனிவர் ஸ்ரீ பெரும்பூதூரில் ஆஸூரிகுலதிலகரான கேசவ ஸோமயாஜிக்கு கலியுகம் ௪௧௧௮-வதான பிங்கள வருஷம் சித்திரை மாஸம் திருவாதிரை நக்ஷத்திரத்தில் அருமைப்புதல்வராகத் தோன்றினார். வேதாந்தஸூத்திரத்திற்கு ஸ்ரீபாஷ்யமுகத்தாலே ஸமீசீனார்த்தங்களைத் தெரிவிக்கைக்

காக தம் பக்கலில் அல்லும் பகலுமகலாமல் நிரந்தர சேஷ வ்ருத்தி நிரதராக இருக்கிற திருவனந்தாழ்வானையே எம்பெருமான் நேரில் நியமித்து இந்த இளைய ஆழ்வாராக அவதரிக்கச் செய்ததினால் இவர் தெய்வத்தன்மை வாய்ந்தவரென்று உலகிலுள்ளோர் பூஜிக்கின்றனர். இந்த மஹானுபாவர் ஜநித்தவாறே ஸ்ரீ பெரிய திருமலை நம்பிகள் ஸ்ரீ பெரும்பூதூருக்கு எழுந்தருளி சிசுவைக் குளிரக் கடாக்ஷித்து, 'லக்ஷ்மணோ லக்ஷ்மி ஸம்பந்ந:' என்கிறபடி திவ்யலக்ஷ்மீ ஸம்பன்னனாக இருப்பதால் இளைய பெருமாள் திருநாமமே தகும் என்று இராமாநுஜன் என்று திருநாமம் சாத்தினார். ஸத்ஸித்தாந்தத்தை உலகில் நிலைநிறுத்தி 'அபஸித்தாந்தங்களை ஒட்டி அஜ்ஞர்களாகவும் அநாதர்களாகவுமிருந்த ஜனங்களை ரக்ஷிக்கவந்த ஸ்வாமியானதால் உடையவர் என்றும் இந்த திவ்யவ்யக்தியை அழைப்பார்கள். இந்தத்திருநாமத்தைப் பெரிய பெருமாள் அர்ச்சகமுகத்தால் இவருக்கு அளித்தான். ஜ்ஞாநாதிகளாலும் அமானுஷங்களான சக்தி விசேஷங்களாலும் அநிதரஸாதாரண ஜகத்ரக்ஷண ஸாமர்த்தியத்தினாலும் எம்பெருமானோடு ஐக்கிய பாவனையினால் இந்தமகா புருஷனை எம்பெருமானார் என்றும் கூறுவார்கள். இவர் பால்யத்தில் யாதவ ப்ரகாசனிடம் பூர்வபக்ஷ சாஸ்திரங்களை ஸவிஸ்தாரமாகக்கேட்டவர். ஞானவ்ருத்தராக ஆகவேஅதிபால்யத்திலேயே வைராக்யத்தால் உலகப்பற்றைவிட்டு துரீயாச்ரமத்தைக் கைகொண்டார். பிறகு இவருடைய ஞாநவைராக்யாதிகளாலும், அனுஷ்டானத்தினாலும், ப்ரஹ்மஞாநத்தாலும், இவரிடம் ஈடுபட்டு இவருக்கு உபாத்தியாயராக இருந்த அந்த யாதவப்ரகாசனே இவரை ஆசார்யனாக ஆச்ரயித்து த்ரிதண்டி ஸன்யாஸத்தை ஏற்று கோவிந்த ஜீயர் என்று இவரால் இடப்பட்ட நாமதேயத்தையும் வஹித்து இவருக்கு சிஷ்யனாகவுமானார். இவர் ஒன்பதினாயிரம் ஸந்யாஸிகளுடனும் பன்னீராயிரம் பரமைகாந்திகளுடனும் எங்கும் ஸஞ்சரித்து துர்வாதிகளையும் குத்ருஷ்டிகளையும் வாதத்தால் ஜயித்து ஆங்காங்கு இந்த விசிஷ்டாத்வைதமதத்தை ஸ்தாபித்துக்கொண்டு ஸ்ரீ ஸரஸ்வதி பீடத்தேற எழுந்தருள, ஸரஸ்வதியும் எதிர்கொண்டு அழைத்து தத்வார்த்தங்களைக் கொண்டு இந்தபாஷ்யம் உம்மால் இயற்றப்பட்டிருப்பதால் இந்த கிரந்தம் ஸ்ரீ பாஷ்யமென்று உலகில் வழங்கத்தக்கது. இந்த மஹநீய கிரந்தகர்த்தாவான உமக்கு ஸ்ரீ பாஷ்யகாரர் என்று இன்று நாம் பெயர்கொடுத்தோம் என்று சொல்லி, ஸ்ரீ பாஷ்யத்தைச் சிரஸாவஹித்து தனக்கு ஆராத்யதேவதையான லக்ஷ்மீ ஹயக்ரீவனையும் அந்த ஸ்ரீ பாஷ்யத்தையும் உடையவர்கையிலே கொடுக்கவே, உடையவரும் அந்த மஹாதனங்களைப் பெற்று மனமகிழ்ந்து மீண்டும் அநேக தேசங்களில் நிரங்குசமாக ஸஞ்சாரம் செய்து விசிஷ்டாத்வைதஸித்தாந்தத்தை பரவச்செய்து வைஷ்ணவஸித்தாந்த த்வஜத்தை உலகில் நிலைநாட்டினார். இந்த தத்வார்த்தப்ரதிபாதகமான ஸ்ரீ பாஷ்யக்ரந்தத்தால் உடையவர் இவ்விருள் தருமாஞாலத்தில் ஆழங்கால்பட்டிருக்கிற சேதனர்களுக்கு ஸ்வரூபோபாயபுருஷார்த்தங்களைத் தெரிவித்து வர்ணாச்ரமதர்மங்களை வழுவாமலனுஷ்டிப்பவர்களுக்கே பரமபுருஷார்த்தஸித்தியுண்டென்பதை துலக்கிக் காட்டிஇருக்கிறார். இவர் இயற்றிய கிரந்தங்கள் ஒன்பது. அவைகளாவன-ஸ்ரீ பாஷியம், ஸாரம்; தீபம், வேதார்த்தஸங்கிரஹம், ஸ்ரீரங்ககத்யம், சரணாகதிகத்யம், ஸ்ரீ வைகுண்டகத்யம், நித்யம், கீதாபாஷ்யம்.

விஷயம், ஸம்சயம், விசாரம், நிர்ணயம், ப்ரயோஜனம்! என இவ்வைந்து விஷயங்களையும் அடக்கிக்கொண்டிருப்பது அதிகரணமென்று சொல்லப்படும். அத்தகைய லக்ஷணமுள்ள அதிகரணங்கள் இதில் நூற்றைம்பத்தாறு இருக்கின்றன. ஒன்பதினாயிரம் கிரந்தமென்று இந்த பாஷ்யம் அபியுக்தர்களால் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு மூலமாக இருக்கிற ப்ரஹ்மஸூத்ரமானது நான்கு அத்தி

யாயங்களடங்கியது. ஒவ்வொரு அத்தியாயமும் நான்குபாதங்களுடன் கூடியது. முதலாவது ஸமன்வயாத்தியாயம். இரண்டாவது அவிரோதாத்யாயம். மூன்ருவது ஸாதனாத்யாயம். நான்காவது பலாத்யாயம். முதல் அத்யாயங்கள் இரண்டையும் விஷயத்விகமென்றும், பிந்தின அத்யாயங்கள் இரண்டையும் விஷயித்விகமென்றும் வேதாந்திகள் கூறுகின்றனர். நான்கு அத்தியாயங்களடங்கிய இந்த ப்ரஹ்மஸூத்ரங்களில் பதினாறு பாதங்கள் அடங்கியிருக்கின்றன. முதலாவது அயோகவ்யவச்சேதபாத மென்றும், இரண்டுமூன்று நான்குபாதங்கள் அன்யயோகவ்யவச்சேதபாதஙகளென்றும், ஐந்தாவது ஸம்ருதிபாத மென்றும், ஆருவது தர்க்கபாதமென்றும், ஏழாவது வியத்பாதமென்றும், எட்டாவது ப்ராணபாதமென்றும், ஒன்பதாவது வைராக்யபாதமென்றும்,பத்தாவது உபயலிங்கபாதமென்றும்,பதிஞெராவது குணோபஸம்ஹாரபாதமென்றும், பன்னிரண்டாவது அங்கபாதமென்றும், பதிமூன்ருவது ஆவ்ருத்திபாதமென்றும், பதினான்காவது உத்க்ராந்திபாதமென்றும், பதினைந்தாவது கதிபாதமென்றும், பதினாருவது முக்திபாத மென்றும். கூறப்படுகிறது.

உபநிஷத்துக்களென்று கூறப்படுகிற வேதாந்த பாகங்களுக்கு விசிஷ்டாத்வைதத்திலேயே முக்கியமான கருத்து என்கிற பரமதத்வார்த்தத்தை இந்த பாஷ்யம் துலக்கமாக நிரூபிக்கிறது. அத்வைத மெனகிற பதத்திற்கு 'ஐக்யம்' என்று பொருள். இதின்வயுத்பத்தி இவவாறு கண்டுகொள்ளததக்கது. த்வயோர்பாவ: த்விதா, த்விதைவ த்வைதம், நத்வைதம் அத்வைதம-ஒன்ருகஇருத்தலென்று பொருள். 'விசிஷ்டஸ்ய அத்வைதம் விசிஷ்டாதவைதம்' சித்துக்களையும், அசித்துக்களையும், விசேஷணஙகளாகக்கொண்ட ப்ரஹ்மமானது ஒன்று என்றுஅர்த்தம். இதனுல் ப்ரஹ்மம் ஒன்றே மெய்யாகஇருக்கும்பொருள். அதைத்தவிர்த்து மற்றது யாதும் உண்மைப்பொருளல்ல. எல்லாம் மித்யை என்று சொல்லுகிற மாயாவாதிகளின் மதக்கோட்பாடு முற்றிலும் ச்ருதிவிருத்தமென்று காட்டப்பட்டது. இந்த விசிஷ்டாத்வைதஸித்தாந்தத்தின் கொள்கையானது, எல்லாச்ருதிகளுடைய உண்மையான கருததைக் கவர்ந்துகொண்டிருக்கிறது. ஸர்வச்ருதிகளுக்கும் ஸாமஞ்ஜஸ்யம் இந்த ஸித்தாந்த,த்திலேயே குடிகொண்டிருக்கிறது. விசிஷ்டாத்வைத மதமானது சருதிபலததிஞல் ப்ரஹ்மத்திறகே உபாதானகாரணத்வத்தையும், நிமித்தகாரணதவததையும, ஸாதிக்கிறது. ஆதலால் இவர்கள் அபின்னநிமித்தோபாதானவாதிகள் என்று உலகில வழங்கப்படுகின்றனர். ஸூக்ஷ்மசித சித் விசிஷ்டப்ரஹ்மமே காரணம். ஸ்தூலசித சித்விசிஷ்ட அந்த ப்ரஹ்மமே கார்யமாகவுமாகிறது. இநத ஸித்தாந்ததகில் ப்ரஹ்மம் பரிணாமிகாரணம். இந்த ஸித்தாந்திகளைப்போல் மாயாவாதிகளும் ப்ரஹ்மததிற்கு உபாதானத்வத்தையும், நிமித்தத்வத்தையும் ஸாதிக்கின்றனர். ஆனுல் அவர்கள் விவர்த்தோபாதாநத்வத்தையே ப்ரஹ்மத்துக்கு ஸாதிக்கின்றனர். ப்ரஹ்மமே ஸத்யம் ஜகத் மித்யை. கானலிலும், கயிற்றிலும், முறையேதண்ணீர், ஸர்ப்பம் 'என்று ப்ராந்திஉண்டாவதுபோல், ப்ரஹ்மஸ்வரூபத்தை மறைக்குந்தன்மை பொருந்திய அவித்யையால் ஸ்வயம்ப்ரகாசவஸ்துவான ப்ரஹ்மமே மறைக்கப்பட்டு அதின்விக்ஷேபசக்தியினுல் அதினிடம் பற்பலவிதமானப்ராபஞ்சிகவஸ்துககள் தோன்றுகின்றன.' உண்மையில் ப்ரஹ்மத்தைத்தவிர.மற்றது ஒன்றுமே கிடையாது. ப்ரஹ்மசைதன்யம் ஒன்றே அவித்யையினுல் கவரப்பட்டதாக இருந்துகொண்டு நாநாவிதசேதநாசேதநவர்க்கங்களாகப் பாவிக்கிறது. இவவளவு ப்ரமஙகளுக்கும் அதிஷ்டானம் ப்ரஹ்மமே. அஹம்ப்ரஹ்மாஸ்மி என்கிற மஹாவாக்யார்த்தஜ்ஞாநத்தால் முற்கூறப்பட்டுள்ள அவித்யை நீங்கி தன் கண்டத்திலுள்ள மணியைத்தான் தெரிந்துகொள்வதுபோல தன் ஸ்வரூபத்தை 'நானே ப்ரஹ்மமாக இருக்கிறேன்' . என்று தான் தெரிந்துகொள்வதுதான் மோக்ஷமென்றும் கூறு

கின்றனர். இந்த அத்வைதஸித்தாந்தத்தில் ம்ருஷாவாதிகள் அபேதச்ருதிகளைத் தவிர்த்து மற்ற எல்லாச்ருதிகளுக்கும் எள்ளும் தண்ணீர் வார்த்துவிட்டார்கள். பௌத்தர்களோ ச்ருதிகள் அனைத்துக்கும் தாரைவார்த்தார்கள்.

இந்தவிசிஷ்டாத்வைதஸித்தாந்தமோ எல்லாச்ருதிகளுக்கும் நல்வரவுகூறி அவை களின் வரவை ஏற்று அவைகளைத் தலைவர்களாக ஏற்படுத்தித் தான் அவைகளுக்கு விதேயமாக இருந்து தொண்டுபுரிகிறது. பேதச்ருதிகள் அபேதச்ருதிகள் ஸகுண ச்ருதிகள் நிர்குணச்ருதிகள் எல்லாவற்றிறகும் இம்மதத்திலேயேஸாமஞ்ஜஸ்யம் ஸம்ப விக்கிறது. வேதபுருஷனுடைய உண்மையான அபிப்ராயத்துக்கு இதுதான் இணக் கமுள்ள மதமாக இருக்கிறது. பேதச்ருதிகள் கூறியபடி இந்தமதத்தில் ப்ரஹ்ம மும் பற்பல சிதசித்வஸ்துக்களும் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. அபேதச்ருதிகளுக் கும் பேதச்ருதிகளுக்கு பாதமின்றி விசிஷ்டவஸ்துவின் ஐக்யத்தில் கருத்து கூறப் பட்டிருக்கிறது. ஸகுணச்ருதிகளுக்கு இந்த ஸித்தாந்தத்தில் நிகரற்ற முடிசூட்ட ப்பட்டிருக்கிறது. நிர்குணச்ருதிகளுக்கும், ஸகுணச்ருதிகளுக்கு விரோதமின்றி ஹேயகுணங்களின் இன்மையை உணர்த்துவதில் நோக்கு கூறப்பட்டிருக்கிறது. ஆதலால் ஸர்வச்ருதி மனோகரமான இந்த ஸத்ஸித்தாந்தமானது இம்மண்ணுலகில் கற்பகவிருக்ஷம்போல் வேண்டும் பயன்களைப் பயப்பதில் பத்தகங்கணமாக பிர காசிக்கிறது. ப்ரஹ்மமேப்ரபஞ்சரூபமாக பரிணமிக்கிறதென்று கூறினால் அப்போது ப்ரஹ்மத்திற்கு ஸ்வரூபவிகாரம் ஏற்படுகிறது. இது நிர்விகாரச்ருதிகளுக்கு விரோ தமென்று வினவப்படுமேயாகில், அவ்வண்ணமல்ல; காரணாவஸ்தையிலும்கார்யாவஸ் தையிலும் ப்ரஹ்மத்தைவிட்டு அகலாமல் அத்துடன் சேர்ந்தேஇருக்கிற சிதசித்வஸ் துக்களே காரியாவஸ்தையில் ஸ்தூலரூபமான ஸ்வரூபஸ்வபாவவிகாரங்களைக் கொள் ளுகின்றன. காரணாவஸ்தையில் அவைகளே ஸ்வகாரணத்தில் ஸூக்ஷ்மமாக ஒடு ங்கி ப்ரஹ்மத்தைவிட்டு தனித்து பிரித்து உரைக்கக் கூடாவண்ணம் நிலைபெற்றிருக்கின் றன. சித்துக்களுக்கு ஸ்வரூபவிகாரம் கிடையாது. ஸ்வபாவ விகாரமாத்திரமே. அசித் துக்களுக்கோ ஸ்வரூப விகாரம் ஸ்வபாவவிகாரம் இரண்டும் உண்டு. சித்துக்களுக்கு ஸ்வரூபவிகாரமென்பது ஞானவிகாஸம். அசித்துக்களுக்கு ஸ்வரூப விகாரமென்பது ஸூக்ஷ்ம ரூபத்தைவிட்டு ஸ்தூல ரூபத்தைத் தாங்கி இருத்தல். ஸ்வபாவவிகாரமென் பது புதிதாக ஆவிர்பவித்திருக்கிற ரூப, ரஸ, கந்த, ஸ்பர்ச, சப்த, குணங்களோடு கூடியிருத்தல். இந்த விகாரங்கள் ப்ரஹ்மத்தினிடம் விசேஷணங்களாக இருக்கிற சித்துக்களிடத்திலும் அசித்துக்களிடத்திலும் ஸம்பவிக்கிறதேயொழிய, விசேஷ்ய பூதமான ப்ரஹ்மத்தினிடம் ஒருக்காலும் ஸம்பவிக்கிறதேயில்லை. அது இரண்டு அவ ஸ்தைகளிலும் நிர்விகாரமாகவே இருந்துகொண்டு ஜ்ஞாநாநந்தமயமாகவும் தேசகால வஸ்து பரிச்சேதமில்லாததாகவும் அமலமாகவும் ஜ்வலிக்கிறது. சிதசித்விசிஷ்டவஸ்து வே விகரிக்கும்பொழுது விகாரம் பேதமின்றி மூன்றிலும் ஸம்பவிக்கவேண்டியதாக இருக்க எங்ஙனம் விசேஷணாம்சங்களான சிதசித்துக்களில் மாத்திரம்? என்று கேட் கில், மூன்று வஸ்துக்களுக்கும் ஸ்வரூப ஸ்வபாவங்கள் வ்யவஸ்திதங்களாகஇருப்பதால் சேர்ந்திருத்தலாலேயே ஒன்றின் ஸ்வபாவம் மற்றொன்றுக்கு வருவதற்கு ஹேதுவி ல்லை. விசேஷணமாக நிற்கிற சித்ஸம்பந்தத்தால் ப்ரஹ்மத்துக்கு விகாரம் ஏற்றுக் கொள்ளப் படுமேயாகில் ப்ரஹ்மம் அபுருஷார்த்தங்களுக்கு ஆஸ்பதமாகும். அவ்வா றே அசித்ஸம்பந்தத்தால் ப்ரஹ்மத்திற்கு விகாரம்வரின் ஸ்வரூப ஸ்வபாவாந்யதா பாவங்கள் ஸம்பவிக்கவேண்டியதாகும். நிர்விகார ச்ருதிபலத்தால் இவைகள் அனைத் தும் நிராகரிக்கப்பட்டன. எந்த அவஸ்தைகளிலும் ப்ரஹ்மத்தை விகாரம் அணுகா. சிகப்பு, வெளுப்பு, கருப்பு நிறமுள்ள மூன்று நூல்களால் நெய்யப்பட்ட ஒரு வஸ்திரத் தில் எந்த எந்த நூல்கள் எந்த எந்த இடங்களில் போய் இருக்கிறதோ அவ்வவ்விடங்

களில் அந்தந்த நிறமிருக்கிறதே ஒழிய இடம் மாறி நிறங்கள் கலந்து காணப்படுகிறதில்லை. அவ்வாறாகவே காரணாவஸ்தையைவிட்டு கார்யாவஸ்தையை அடைந்திருக்கும் ஸமயத்தில் நிர்விகார ஸ்வபாவமான ப்ரஹ்மம் நிர்விகாரமாகவே இருக்கிறது. காரணாவஸ்தையில் ஸ்வபாவ ஸங்கோசமுள்ளதாக இருந்த சித்துக்கள் கார்யாவஸ்தையில் ஞானவிகாஸரூபமான ஸ்வபாவ விகாரத்தைப் பெறுகின்றன. இங்ஙனமே காரணாவஸ்தையில் ஸங்குசித ஸ்வரூப ஸ்வபாவமுள்ள அசித்துக்களும் கார்யாவஸ்தையில் ஸ்தூல ஸ்வரூப விகாரத்தையும் வ்யக்தமான ரூபரஸ கந்தஸ்பர்ச சப்தரூப விகாரங்களையும் அடைகின்றன. ஆகையால் சிதசித்துக்களை சரீரங்களாகக் கொண்டிருந்த போதிலுங்கூட அவைகளின் ஸம்பந்தத்தினால் நிர்விகாரமான ப்ரஹ்மத்திற்கு அபுருஷார்த்தாச்ரயத்வமும் ஸ்வரூபஸ்வபாவ விகாரமும் ஸம்பவிப்பதில்லை. ஆயினும் கார்யதசையில் ஸ்தூல நியந்த்ருத்வ ரூபமான விகாரம் ப்ரஹ்மத்தை அணுகவே அணுகும். அப்படிப்பட்ட விகாரம் ப்ரஹ்மத்திற்குவரின் யாதொரு ச்ருதிவ்யாகோபமுமில்லாததினால் அது மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

அதாதோ தர்ம ஜிஜ்ஞாஸா என்கிற ஸூத்ரம் தொடங்கி 'அநாவ்ருத்திச்சப்தாத் அநாவ்ருத்திச சப்தாத்' என்கிற ஸூத்திரம்வரையிலுள்ள இருபது அத்தியாயங்களடங்கிய ஸூத்ரங்கள் அனைத்தும் 'கர்மகாண்டம் ப்ரஹ்மகாண்ட'மென்று வழங்குகிற இரண்டு பாகங்களடங்கிய வேதமென்கிற ஒரு ப்ரபந்தத்தின் வியாக்கியானமானதால் ஸமஸ்தமும் ஒரே சாஸ்திரம். இது விஷயத்தில் போதாயன மஹரிஷியின் 'ஸம்ஹிதமேதத் சாரீரகம் ஜைமினீயேந ஷோடசலக்ஷணேந இதி சாஸ்த்ரைகத்வஸித்தி:' என்கிற வசனம் முக்கிய ப்ரமாணம். இவற்றுள் முந்தியபாகமான பூர்வ மீமாம்ஸாசாஸ்திரத்தினால் பசு புத்ர வ்ருஷ்டி அன்னம் ஸ்வர்க்கம் முதலிய ஐஹிகாமுஷ்மிகபலன்களுக்கு ஸாதனமான தர்மம் நிரூபிக்கப்படுகிறது. "உத்தரபாகமான சாரீரக மீமாம்ஸா சாஸ்திரத்தில்" ப்ரஹ்மஸ்வரூபம் நிரூபிக்கப்படுகிறது. இந்த சாரீரக மீமாம்ஸாசாஸ்திரத்தில் 'பூர்வத்விகமென்று'' வழங்கப்படுகிற முதல் இரண்டு அத்தியாயங்களாலும் சேதநாசேதனங்களைக்காட்டிலும் விலக்ஷணமாயும் எல்லாஜகத்துக்களுக்கும் காரணமாகவுமிருக்கிற ப்ரஹ்மத்தின ஸ்வரூபம் நிரூபிக்கப்படுகிறது. 'உத்தரத்விக'' மென்கிற பிந்தின இரண்டு அத்தியாயங்களாலும் முறையே உபாஸனமும் பலமும் நிரூபிக்கப்படுகிறது. அதிலும் ஸமன்வயாத்யாயம் என்கிற முதலத்தியாயத்தில் ப்ரஹ்மத்திற்கு ஜகத்காரணத்வம் நிரூபிக்கப்படுகிறது. எல்லாகாரணவாக்கியங்களும் ப்ரஹ்மத்தினிடம் நன்றாக அன்வயிப்பதால் இதற்கு ஸமன்வயமென்று அன்வர்த்தமான நாமதேயம். இதிலும் முதலிலிருக்கிற நான்கு ஸூத்ரங்களால் இந்த வேதாந்த சாஸ்திரமும ஆரம்பிக்க வேண்டியதில்லை எனகிற சங்கையை நிராகரித்து சாஸ்திராரம்ப ஸமர்த்தனம் செய்யப்பட்டிருப்பதால் இந்த நான்கு ஸூத்திரங்களும் சேர்ந்து ஒரு பேடிகை என வழங்கப்படுகிறது.

இந்த சாரீரசாஸ்திரத்தில் முதன்மை வாய்ந்துள்ள நான்கு ஸூத்திரங்களாலும் முறையே சாஸ்திரத்தின் ஆரம்பத்திற்கு மூலமாக இருக்கிற வ்யுத்பத்தியினது இன்மை, ப்ரதிபத்தியினது தௌஸ்த்யம், மற்றொன்றினால் ஸித்தித்தல், பயனில்லாமை என்கிற இந்நான்கு சங்கைகளும் நிராகரிக்கப்பட்டன. முதல் அத்தியாயத்தில் முதல் பாதத்தால் ப்ரஹ்மமானது ஜகத்காரணமே என்பதும், மற்ற மூன்றுபாதங்களால் ப்ரஹ்மமே ஜகத் காரணம் என்பதும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இதனால் ப்ரஹ்மலக்ஷணத்திற்கு மந்தபுத்திகளால் ஸந்தேஹிக்கப்பட்ட அஸம்பவாவ்யாப்தி தோஷங்கள் பரிஹரிக்கப்பட்டன. இவ்வாறு முதல்அத்தியாயத்தால் சிதசித்விலக்ஷணமாகவும், ஞாநாநந்த ஸ்வரூபியாகவும், அபரிமிதோதாரகுண ஸாகரமாகவும், நிகில ஜக

தேககாரணமாகவும் ஸர்வாந்தராத்மாவாகவுமிருக்கிற பரப்ரஹ்மமானது வேதாந்தங்க ளால் அறியத்தக்கதென்று கூறப்பட்டது. பிறகு இந்த அர்த்தம் எவ்விதத்தாலும் ப்ரமாணங்களாலோ, யுக்திகளாலோ, நியாயங்களாலோ அசைக்கவொண்ணாதது என்பதை நிரூபிப்பதற்காக இரண்டாவது அத்தியாயம் தொடங்கப்படுகிறது. இதற்கு அவிரோதாத்தியாயம் என்று பெயர். முற்கூறப்பட்டுள்ள பொருள்களில் சுருதிகளுக் கும் ப்ரமாணங்களுக்கும் ஸ்மிருதிகளுக்கும் நியாயங்களுக்கும் விரோதமின்மையை விளக்கிக்காட்டுவதுபற்றி இதற்கு இப்பெயர் வாய்ந்துள்ளது. இந்த அத்தியா யமானது "ஸ்மிருதிபாதம், தர்க்கபாதம், வியத்பாதம், ப்ராண பாதம்" என நான்கு பாதங்களடங்கியது. முதலாவது ஸ்மிருத்யதிகரணத்தில் ஸாங்கியஸ்மிருதி விரோதம் வருவதால் வேதாந்தங்களுக்கு ப்ரஹ்மபரத்வம் சொல்லக்கூடாதென்று சொல்லு கிற ஸாங்க்யனுடைய ப்ரத்யவஸ்தானத்தைக் கணிசித்து வேதத்தால் புகழப்பெற் றவர்களும், யோகதசையில் மந்திரங்களை ஸாக்ஷாத்கரித்தவர்களும், ஆப்த தமர்களு மான மன்வாதிகளுடைய தத்துவார்த்த ப்ரதிபாதகங்களான அனேக ஸ்மிருதிகளின் விரோதம் வருவதால் ப்ரமம் விப்ரலம்பம் ப்ரமாதம் முதலிய தோஷங்களுள்ள பரிமி த ப்ரஜ்ஞரான கபிலரிஷியினுடைய ஸ்மிருதியானது ஆதரிக்கத் தக்கதல்லவென் பதை ப்ரமாணங்களாலும் அவைகளுக்கு உபஷ்டம்பகங்களானயுக்திகளாலும் நிரூபித் திருக்கிறார். அதற்கடுத்த அதிகரணத்தால் அப்ரஹ்மாத்மக ப்ரதான காரணவாதி யான ஹிரண்ய கர்ப்பரால் செய்யப்பட்டுள்ள யோக ஸ்மிருதியும் ச்ருதி விரோதத் தால் தகர்க்கப்பட்டது. பிறகு முறையே பாசுபதமதம் முதலிய புறச் சமயக்கோட் பாடுகளும் நிரஸிக்கப்பட்டு பரபக்ஷநிரஸனத்தை முன்னிட்டு ஸ்வபக்ஷ ஸ்தாபன மும் செய்யப்பட்டிருக்கிறது.

மூன்றாவதான உபாஸனாத்தியாயத்தினால் ப்ரஹ்மப்ராப்திக்கு உபாயம் சிந்திக்கப்படுகிறது. இது வைராக்கியபாதம், உபயலிங்கபாதம் குணோபஸம் ஹாரபாதம், அங்கபாதமென நான்கு பாதங்களடங்கியது. ப்ரஹ்மப்ராப்திக்கு உபாயபூதமான உபாஸநத்தின் சிந்தனமிங்கு செய்யப்படுகிறது. அடையப்படத் தக்க ப்ரஹ்மத்தைத் தவிர்த்த மற்ற வஸ்துக்களிடம் பற்றுதலில்லாமலிருத்தலும், அடையப்படத்தக்க ப்ரஹ்மத்தினிடம் ஆசையும், உபாஸனாரம்பத்திற்குச் சிறந்த உபாயங்களாதலால் அவைகள் வித்திப்பதின்பொருட்டு ஜீவனுக்கு லோகாந்தரஸஞ் சாரத்திலும் ஜாகரண ஸ்வப்நாத்யவஸ்தைகளிலும் ஸம்பவிக்கிற தோஷங்களும், ப்ர ஹ்மத்திற்கு அப்படிப்பட்ட தோஷங்களில்லாமலிருத்தலும், ஸமஸ்தகல்யாண குணங் களுக்கு ஆஸ்பதமாக இருத்தலும், முறையே ஒன்று இரண்டு பாதங்களால் ப்ரதிபா திக்கப் படுகிறது. மூன்றாவது பாதத்தில் ப்ரஹ்மோபாஸனங்களுடைய குணோப ஸம்ஹார விகல்ப நிர்ணயத்தின்பொருட்டு வித்யைகளின் பேதாபேத சிந்தை தொட ங்கப்படுகிறது. நான்காவதான அங்கபாதத்தில் வித்யையினால் புருஷார்த்தமா? அல் லது வித்யை அங்கமாகக்கொண்ட கர்மாவினால் புருஷார்த்தமா என்பது விசாரிக்கப் படுகிறது. இவ்விதமாக மூன்றாவது அத்தியாயத்தினால் ஸாதனங்களோடு வித்யை சிந்திக்கப்பட்டது. நான்காவதான பலாத்தியாயத்தில் வித்யைகளின் ஸ்வரூப சோதனத்தை முன்னிட்டு வித்யாபலம் சிந்திக்கப்படுகிறது. இந்த விசிஷ்டாத்வைத வேதாந்த ஸித்தாந்தத்தில் புண்யம் பாபமென்கிற இருவினைகளும் தீர்ந்து கர்மபந்த த்தினின்று விடுபட்டு மூர்த்தன்ய நாடியினால் உத்க்ரமித்து தேவயான மார்க்கத்தால் அப்ராக்ருதமான ஸ்தான விசேஷத்தை அடைந்து பகவத்ஸான்னித்தியம் பெற்று தன் முடியில் அந்த பரமபுருஷனுடைய சரணாரவிந்த ஸம்பர்க்கத்தால் குணாஷ்ட காவிர்ப்பாவத்தைப் பெற்று மீண்டும் ப்ரக்ருதிஸம்ஸர்க்கத்தை அடையாமல்பரப்ரஹ் மத்தோடு வாசியற அகண்டபரிபூர்ணாநந்தத்தை ஜீவன் அனுபவிப்பதே மோக்ஷ

மெனக் கூறுகின்றனர். இந்த பரம புருஷார்த்த ப்ராப்தியே வேதாந்த சாஸ்திரத்திற்கு பரமப்ரயோஜனம். இந்த அத்தியாயத்தின் முதல் பாதத்தில் ப்ரஹ்ம ப்ராப்திக்கு ஸாதனமாக விதிக்கப்பட்டிருக்கிற வேதனமானது ஒரு தரம் அனுஷ்டித்தாலே போதுமென்பதுதான் சாஸ்திரத்தினது கருத்தா? அல்லது அடிக்கடி பலதடவை அனுஷ்டிக்க வேண்டுமென்பது சாஸ்திரத்தினது கருத்தா என்று விசாரித்து வேதனம் அஸக்ருதாவ்ருத்தமே சாஸ்திரார்த்தமென்று தெளிய நிர்ணயம் கூறப்பட்டிருக்கிறது. இரண்டாவது பாதத்தால் ஜீவனுடைய உத்க்ராந்தி ப்ரகாரம் சிந்திக்கப்படுகிறது. மூன்றாவது பாதத்தால் மூர்த்தன்ய நாடியினால் உத்க்ரமித்துச் செல்லுகிற வித்யாநிஷ்டனுடைய மார்க்கம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறாக ப்ரஹ்மத்தை உபாஸிப்பவர்களுக்கும் ப்ரக்ருதி வியுக்தமாகவும் ப்ரஹ்மாத்மகமாகவும் ப்ரத்யகாத்ம ஸ்வரூபத்தை உபாஸிப்பவர்களுக்கும் அர்சிராதி மார்க்கத்தால் மறுபடி ஸம்ஸாரத்தில் மீட்சி இல்லாவண்ணம் கமனம் கூறப்பட்டது. நான்காவது பாதத்தால் முக்தர்களுடைய ஐச்வர்யப்ரகாரம் நனகு ஸவிஸ்தாரமாக உபபாதிக்கப்பட்டிருக்கிறது.

வேதநம் உபாஸனம் தியானம் பக்தி அநுத்யானம் இந்த பதங்களெல்லாம் பர்யாயங்கள். "நிதித்தியாஸன" மென்கிற ஒரு அர்த்தத்தையே இவைகள் உணர்த்துகின்றன, நிதித்யாஸனமாவது—அதிவிசதமான ப்ரத்யக்ஷ ஸமாநாகாரமாயும் தைலதாரை போல இடை வெளியற்றதாயும் உத்க்ரமணகாலம் வரையில் அனுவர்த்திக்கத் தக்கதாயும் நாள்தோறும் அப்யாஸத்தினால் உண்டுபண்ணத்தக்க அதிசயத்தோடு கூடியதாயுமிருக்கிற பரமபுருஷவிஷயமான ப்ரீதிரூபாபன்ன ஸ்மருதி ஸந்ததியே. இதுபரபக்தி,பரஞானம், பரமபக்திஎன்று உத்தரோத்தரம் மேல் மேல் சிறப்புள்ள மூன்று பர்வாக்களுடன் கூடியது. இந்த பக்தியே மோக்ஷஸாதநமென்பது இந்த வேதாந்தசாஸ்திரத்தின் பரமதாத்பர்யம். இதைக்கருத்தில் கொண்டே இந்த ஸ்ரீபாஷ்ய கிரந்தத்தில் தொடக்கத்திலே "சேமுஷீ பக்திரூபா" என்று இந் நூலாசிரியர் பக்தியையே ஆசம்ஸித்தார். இந்த பக்திமார்க்கததில் இழிய வல்லமை இல்லாதார்க்கு ப்ரபத்திதான் மோக்ஷோபாயமாக அணுகத்தக்கது. இதுதான் எளிதில் அந்த பரமபுருஷனை வசீகரிப்பதற்குத்தகுந்த ஸாதனம். இந்தஅர்த்தத்தை "தஸ்யசவசீகரணம் தச்சரணாகதிரேவ", என்று ஸ்ரீபாஷ்யகாரரே இந்த கிரந்தத்தில் ஆநுமானிகாதிகரணத்தில் அருளிச்செய்தார். பக்தியில் த்ரைவர்ணிகர்களுக்கே அதிகாரம். சூத்ரர்கள் முதலியவர்களுக்கு அதிகாரமில்லை. பக்திஎன்பது அவதாநத்தாலும் நெடுங்காலத்தாலும் சக்தியினாலும் ஞானத்தாலும் காலவிளம்பஸஹநசக்தியினாலும் ஓயாமலனுஷ்டிப்பதாலும் ஸாதிக்கத தக்கதாக இருப்பதுபற்றி அசக்தர்களுக்கு அஸாத்தியமே. ப்ரபத்தியோ வர்ணவயவஸ்தை இல்லாமலே அந்தணர்முதலாக அந்தியர்ஈறாக அனைவர்களாலும் எளிதில் அனுஷ்டிக்கத்தக்கதாக இருப்பதாலும் ஸுலபமாதலாலும் ஒருதடவை ஒருக்ஷணம் செய்யதக்க கார்யமாக இருப்பதாலும் அந்திமஸ்ம்ருதியை அபேக்ஷியாயாமலே மோக்ஷரூபமான பரமபுருஷார்த்தத்தைப் பயக்கும் தன்மைவாய்ந்திருப்பதாலும் இதையே அசக்தர்கள் இக்கலியில் அவலம்பிக்கின்றனர். இந்த கிரந்தத்தில் மஹாத்மாவான ஸ்ரீபாஷ்யகாரரால் புறச்சமயங்கள் முற்றிலும் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன. அச்சமயஙகளுள் எந்தஎந்த அம்சங்கள் வேதவிருத்தங்களோ அவைகள் நிராகரிக்கப்பட்டிருககின்றன. இதில் "ப்ரத்யக்ஷம், அனுமானம், சப்த"மென மூன்றுப்ரமாணங்களே அப்யர்ஹிதங்களாதலால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. ச்ருதிகளின் தாத்பர்யத்தை நனகு பராமர்சித்துசிதசிதீச்வர தத்துவவ்யவஸ்தைகளும் செய்யப்பட்டிருக்கின்றன. இதில் தத்துவங்கள் 26. பக்ஷபேதத்தால் கால-

த்தைச்சேர்த்து 27 தத்துவங்களென்றும் சொல்லுவார்கள். சுத்தஸத்துவத்தைச் சேர்த்து 28 என்றும் சொல்வது உண்டு. ஆன்மாக்கள் "பத்தர் முக்தர் நித்யர்" என மூவகைப்பட்டிருக்கின்றனர். மோக்ஷதசையில் முக்தனானவனுக்கு ப்ரப்ரஹ்மத்தோடு ப்ரஹ்மயாதாத்ம்யாநுபவரூபமான போகமாத்திரத்தில் ஸாம்யமுண்டு. உலகத்தை ஆக்கல், அழித்தல், நிருத்தல் இவை மூன்றும் அஸாதாரணப்ரஹ்மக்ருத்யமே. இந்த மூன்றுடன் லக்ஷ்மீபதித்வமும் அந்த ப்ரஹ்மத்துக்கே அஸாதாரணம்.

ந ஶூத்ரா பகவத்பக்தா விப்ரா பாகவதா: ஸ்ம்ருதா:|
ஸர்வவர்ணேஷு தே ஶூத்ரா யே ஹ்யபக்தா ஜநார்தநே ||

என்று பகவத்பக்தியாகிற குணவிசேஷ ஸத்பாவங்களாலே நான்காவது வர்ணத்தார்களுக்கு ப்ராஹ்மண்யமும், உத்கிருஷ்டவர்ணத்தார்களுக்கு சூத்ரத்வமும் சொல்லப்பட்டிருக்கிறது. "திருஸாரபியானாலும் கோத்வம் கழியாதிறே" என்கிற அபியுக்த வசனத்தின்படி ஜாதிமாறவிட்டாலும் பகவத்பக்தியின் ப்ரபாவத்தால் சூத்திரர்களுக்கும் பிராஹ்மணர்களைப்போல் ச்ரைஷ்ட்யமும் மரியாதையும் உண்டாகிறதென்பது கண்டாகுருஷ்டமென்று பூர்வாசார்யர்கள் கூறி இருக்கின்றனர். பரமபுருஷார்த்தரூபமான மோக்ஷத்தைப் பெறுவதில் எல்லோரும் ஸமானர்கள். அதில் ஒருத்தருக்கும் வேற்றுமை இல்லை.

யோ ஹ்யேநம் [illegible] வேத தேவா அபி ந தம் விது:|

என்று பகவத்ஜ்ஞானமுடையவனுடையப்ரபாவம் தேவர்களாலும்பரிச்சேதிக்கவொண்ணாதென்கிறார்களிறே. 'குலந்தரும்' என்கிற பாட்டுக்கு வியாக்கியானம் பண்ணின அபியுக்தரும் "ஜன்மத்தால் வ்ருத்தத்தால் குறைந்தானொருத்தனுக்கு பகவத்ஸம்பந்தமுண்டானால் அவனை இவையுடையானொருத்தன் தாழ நினைக்கக்கூச வேண்டும்படியாயிற்று பகவத் ப்ரபாவமிருக்கும்படி "என்று கூறி, "ச்லாகை குணநிபந்தனை" என்று நிஷ்கர்ஷித்தார்.

ஆபஸ்தம்பதர்மத்தில் ஆர்யாதிஷ்டிதா வா ஶூத்ரா: ஸம்ஸ்கர்தார: ஸ்யு:| என்று பிராஹ்மணனுக்கு வைச்வதேவார்த்தமான அன்னத்தை பக்குவம்செய்வதில் நான்காவது வர்ணத்தார்கள் தகுதியுள்ளவர்களென்றுஸ்பஷ்டமாகப்பகர்ந்திருக்கிறார்.

உபாயபக்தி: ப்ராரப்தவ்யதிரிக்தாகநாஶிநீ |
ஸாத்யபக்திஸ்து ஸா ஹந்த்ரீ ப்ராரப்தஸ்யாபி பூயஸீ ||

என்கையால் ஸர்வோத்தமையான ஸாத்தியபக்தி என்கிறப்ரபத்தியை அனுஷ்டித்து ப்ராரப்தபாபங்களையும் கழித்து நிர்மலஸ்வரூபர்களாக பகவத்ப்ரஸாதத்தை எதிர்பார்த்திருக்கிற பாகவதோத்தமர்களுக்கு எவர்கள்தான் ஸமானர்கள். சமாதிகுணங்களாலும் வ்ருத்தத்தாலும், ஆசாரத்தாலும், சீலத்தாலும், பாகவதோபாஸனத்தாலும், ஆசார்யப்ராதிபத்தியினாலும் பகவத்பக்தியினாலும், மற்றவர்களைப்போலல்லாது விசேஷித்து ஸச்சூத்ரர்களென்று வியவஹரிக்கப்படத்தக்க வ்யக்திகளுக்கு புராணேதிஹாஸங்களில்போல் அத்யாத்ம சாஸ்திரத்திலும் ப்ரவ்ருத்தி அப்யர்ஹிதமே.

ஶ்ராவயேச்சதுரோ வர்ணாந் க்ருத்வா ப்ராஹ்மணமக்ரத: |

என்கிறவசனத்தின்படி ப்ராஹ்மணமுகமாக உபதேசம்பெற்று புராணேதிஹாஸார்த்தங்களைக்ரஹிப்பதுபோல் அத்யாத்மசாஸ்திரார்த்தத்தையும் ஆசார்யமுகமாக உபதேசம் பெற்று நிஷ்கர்ஷம்செய்து ஸம்சயவிபர்யயங்களற்றே தேவதாஸ்வரூபமின்னதென்று தெளிந்து பந்தநிவ்ருத்தியை முன்னிட்டு மோக்ஷஸம்ராஜ்யத்தைப் பெறுவதற்கு யாவரும் தகுதியுள்ளவர்கள். எல்லோரும் எளிதில் அதிகரிகக்கூடியதான லலிதமான தமிழ்பாஷையில் த்ராவகாஹமான வேதாந்தார்த்தங்களை பண்டிதர் முதலாக

பாமரர்களுக அறிந்து ஆநந்திக்கும்படி செய்த இம்மஹான்களுடைய உதாரஸ்வபாவத்தை என்னென்று எடுத்து உரைப்பது. வர்ணபேதமின்றி எல்லாரும் இந்த ஸ்ரீ பாஷ்யத்தை இந்த தமிழ்பாஷையினால் அறிந்து உஜ்ஜீவிக்கும்படியான பாக்கியம் இம்மண்ணுலகில் இந்தக்ரந்தத்தின் வாயிலாக ஏற்பட்டது. இது பகவானுக்கு முகோல்லாஸத்தை உண்டுபண்ணுகிறது. உடையவர் ஸம்பந்தம்பெற்ற எல்லோரும் இதை அதிகரிக்கத் தகுந்தவர்கள். நம்முடைய ஸித்தாந்தத்தில் ஸ்ரீராமானுஜமுனிவரை ஆச்ரயித்த ஒவ்வொருவரும் மோக்ஷத்திற்கு அதிகாரிகளாகிறபொழுது அவர்கள் வேதாந்தத்தின் கருத்தை அறிந்தே தீரவேண்டும். ப்ரணவார்த்தத்தையும் வேதாந்தார்த்தங்களையும் தெளிவாக வெளியிடுகிற நம்மாழ்வார் திவ்யஸூக்திகளைப்போல ஸ்ரீ பாஷ்யார்த்தப்ரதிபாதகமான இந்த திராவிடபாஷ்யத்தையும் ஜாதிபேதமின்றி எல்லோரும் அறிந்து உஜ்ஜீவிக்கத் தகுதியுள்ளவர்களாக ஆகிறார்கள். ஸ்வார்த்தத்தில் நோக்கமில்லாமல் தனவ்யயத்தையும் சரீரச்ரமத்தையும் புத்திக்லேசத்தையும் பாராட்டாமல் விடாமுயற்சியுடன் இந்ததிவ்யகைங்கர்யத்தில் ஈடுபட்டு எல்லோரும் இம்மண்ணுலகில் வேதாந்தார்த்தத்தை அறிந்து முக்திமார்க்கத்தை அணுகும்படியான உபாயத்தை நன்கு காட்டிக்கொடுத்தவர்களான இந்த பாகவதசிரோமணிகள் நீடூழிகாலம் அரோகத்ருடகாத்ரர்களாகவும் திவ்ய ஸம்பத்துடன் உத்தரோத்தரம் விருத்தியடைந்து இம்மையில் கீர்த்தியைப்பெற்று நெடுங்காலம் வாழ்ந்து மறுமையிலும் அகண்ட பரிபூர்ணப்ரும்மாநந்தத்தையும் அனுபவித்து பிறவித்துன்பத்தை அகற்றி சாச்வதபதவியை அடைந்து ஸுகித்திருப்பார்களாக.

ஸ்ரீரங்கம் ஸ்ரீ பாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்புச்சங்கத்தின் அக்கிராஸனாதிபதியாகிய திருக்குடந்தை ஸ்ரீமான் T. D. இராமஸ்வாமி நாயுடு அவர்களுடைய விடாமுயற்சியினாலும் தனவ்யயத்தாலும் இந்த மஹனீயக்ரந்தம் அச்சிட்டு முடிவுபெற்று வெளியில் ப்ரசாரமடைந்து எல்லா ஆஸ்திகர்களையு மாநந்தமடையும்படி செய்கிற விஷயம் எல்லோருக்கும் தெரிந்ததே. பரோபகார துரந்தரராகவும் இருக்கிற இந்த ஸ்ரீமான் இராமஸ்வாமி நாயுடு அவர்கள் விஷயத்தில் ஸாதுக்கள் அனைவர்களும், மிகுந்த நன்றி அறிவுபாராட்டுவதுடன் இந்த மஹாக்ரந்தத்தை தாங்களும் வாங்கி மற்றவர்களையும் வாங்கும்படி செய்வித்து இவருடைய முயற்சியை ஸபலமாகும்படிசெய்து பகவன்முகோல்லாஸத்தை உண்டுபண்ணுவார்களென்று திடமான நம்பிக்கையுள்ளவனாகயிருக்கிறேன்.

திருச்சிராப்பள்ளி,
9—11—29.

தட்டை, வாதூல
ஸ்ரீநிவாஸதாஸன்.

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

உபோத்காதம்

வடமொழியில் தர்சனம் என்று மதத்திற்குப் பெயர். பொருள்களைக் காட்டும் கண்ணிற்கும் பெயர். மிகச்சிறந்த நற்கதிக்கு வழிகாட்டுவது தர்சனத்தின் கார்யம்: ஆத்மாவின் உயர்ந்த க்ஷேமத்திற்கு கண்போல நின்று வழிகாட்டுவதால் தர்சனமென்றுபெயர் இந்த்ரியங்களுக்கும் மனவுணர்வுக்கும் புலப்படாத பரம்பொருள், தர்மம், முதலியதை நமக்குத்தெரியச் செய்வது வேதமென்பது வைதிகர்களின் கொள்கை. வேதத்தை த்தினையேனும் ஒப்புக்கொள்ளாத மதங்களை ப்ராஹ்யதர்சனமென்று வியவஹரிப்பர். பாஹ்யமென்பது வேதத்திற்கு புறம்பாயுள்ள தர்சனங்களைச் சொல்லும். பௌத்தமதமும், ஜைனமதமும் நமது தேசத்தில் பிறந்தனவாயினும், அந்தமதத்திற்குள்ள ப்ராசீனமான ஸூத்திரங்களும் மற்ற க்ரந்தங்களும் வடமொழியிலும் அதன் திரிபுகளான பாளி மாகதீ முதலிய ப்ராகிருத பாஷைகளிலும் ஏற்பட்டன வாயினும், வேதத்தை பிரமாணமல்லவென்று தள்ளிவிட்டதால், அந்த மதங்கள் வேதபாஹ்யங்களென்று சொல்லுவர். வேதத்தை ஒப்புக்கொள்ளாத சார்வாகாதி தர்சனங்களும் பாஹ்ய மதங்கள். ஸ்ரீ ஸாயணாசாரியருடைய ஸர்வதர்சன ஸங்க்ரஹத்தில் பாஹ்ய தர்சனங்களையும் பற்றி வியாஸங்கள் வரையப்பட்டன "ஷட்தர்சனம்"; என்று பிராசீனமாக ஆறு தர்சனங்களுக்குப் பெயர்—ஸாங்க்யம், யோகம், கௌதமீயம், வைசேஷிகம், மீமாம்ஸை, வேதாந்தம், என்று ஆறுதர்சனங்கள். இந்த தர்சனங்களில் கடையிரண்டு தர்சனங்கள் வேதத்தின் பிராமாண்யத்தை முழுவதும் ஒப்புக் கொள்ளுவன. மற்றய நான்கிலும், தங்களுக்கு இஷ்டமான வேதவாக்கியங்களை மட்டும் தங்கள் மதத்திற்கு ஆதாரமாக ஒப்புக்கொள்ளுவர். வேதத்தின் ப்ராமாண்யத்தை முழுவதும் ஒப்புக் கொள்ளாததால் அவைகளைப் புறமென்று சில கிரந்தங்களில் சொல்லுவதுண்டு. மீமாம்ஸா தர்சனத்தில் கர்மகாண்டத்திற்கு ப்ராதான்யத்தைச் சொல்லுவர். கர்மங்களை அனுஷ்டிப்பதற்குக் கர்த்தா அவசியம் வேண்டியபடியாலும், கர்த்தாவும் கர்மங்களுக்கு த்ரவ்யங்களைப்போல் சேஷமாவதாலும், கர்மானுஷ்டானத்திற்கு சேஷபூதனான கர்த்தாவின் ஸ்வரூபம் தெரிந்துக்கொள்வதற்காக மட்டும் வேதாந்தங்கள் உபயோகப்படுகின்றனவென்றும், வேதாந்தங்கள் ஸ்வதந்திரமாக் ப்ரமாணமாகாவென்றும், ஞானம் கர்மத்துக்கங்கமென்றும், வேதாந்திகள் சொல்லுகிறபடி ஆத்மஞானத்திற்குக் கர்மமங்கமல்லவென்றும் சொல்லுவர். வ்யாஸர் காலத்தில் இந்த ஆறுமதங்களும் நடைபெற்றிருந்தன. வேதாந்தம தவிர மற்ற ஐந்து தர்சனங்களும் வெகுகாலம் பிரகாசமில்லாமல் நீங்கிப் போய்விட்டது.

ஆகமங்கள்என்று பஞ்சராத்ரம், பாசுபதம், சாக்தம் என்கிற தந்திரங்களின் கிரந்தங்களைச் சொல்லுவர். பஞ்சராத்ரம் மட்டும் வைதிகமான வேதாந்தத்திற்கு ஒற்றுமையுள்ளதென்றும், அது வேதாந்தத்துடன் சேர்ந்ததென்றும் உடையவரும் ஸ்ரீமத் வாசார்யரும் கொள்ளுகிறார்கள். ஸ்ரீ சங்கராசாரியர் பாஞ்சராத்ரம் வ்யூஹ ப்ரக்ரியை சொல்லுமிடத்தில் மட்டும் பிரமாணமல்லவென்றும், மற்ற அம்சங்களி

லெல்லாம் பிரமாணமென்றும் ஸூத்ரபாஷ்யத்தில் கூறுகிறார். ஸஹஸ்ரநாம பாஷ்யத்தில் “சதுர்வ்யூஹ:”; என்கிற திருநாமத்தை வியாக்கியானம் செய்யுமவஸரத்தில் பகவான், வாஸுதேவனே நான்கு வ்யூஹங்களையும் பரிக்ரஹம் செய்திருப்பதாகச் சொல்லும். வ்யாஸ ஸ்மிருதிவசனத்தை உதாஹரித்து நாங்கு வ்யூகங்களும் பரமாத்மாவின் ரூபங்களென்று கூறுகிறார்கள். அத்வைத ஸம்பிரதாயத்தில் பிரஸித்தமான கல்பதருவில் பஞ்சராத்திரத்தின் ப்ராமாண்யத்தை நாம் ஸமர்த்தனம் செய்வது போலவே ஸமர்த்தித்திருக்கிறார். பாசுபதாகமம் முதலியது வேதாந்தசத்திற் கொவ்வாதென்று ஸூத்திரகாரர் தள்ளினார். பாசுபதத்தையும், சாக்தத்தையும், சிலர் சார்ந்து வந்தாலும், வைதிக மதங்களுள் வேதாந்த தர்சனமொன்றே பெரும்பான்மையாகப் ப்ரசாரத்திலுள்ளது. இந்ததர்சனத்திற்கு வேதாந்தங்களென்னும் உபநிஷத்துக்கள் மூலப் பிரமாணமாகும். வேதத்தின் முடிவு பாகத்திற்கு வேதாந்தமென்று பெயர். ஞானத்தின் முடிவென்றும் வேதாந்தத்திற்கர்த்தம் பொருந்தும். வேதாந்தத்திற்கு மேற்பட்ட சாஸ்திரமில்லையென்பர். மூலப்பிரமாணங்களான உபநிஷத்துக்களின் அபிப்பிராயங்களைத் தெளிவாய்காட்டுவது உபப்ரம்ஹணங்களென்கிற ஸ்ரீ ராமாயணம், மஹாபாரதம் ஸ்ரீ விஷ்ணுபுராணம்முதலிய இதிஹாஸ புராணங்களின் காரியம். இதிஹாஸ புராணங்களால் வேதார்த்தங்களைத் தெளிந்து கொள்ளவேணும். வேதங்களற்பமே படித்தவனிடமிருந்து “எங்கே என்னைத் தப்பர்த்தவர்ணனத்தால் மோசம் செய்துவிடுவானோ!” என்று, நடுங்குகின்றனவென்று சொல்லுவர். உபப்ரம்ஹணங்களை ஸ்ம்ருதிகளென்றும் அநுமானமென்றும் ஸூத்ரகாரர் வ்யவஹரிக்கிறார். வேதத்தை ப்ரத்யக்ஷமென்றும், ஸ்ம்ருதிகளை அநுமானமென்றும் வ்யவஹரிக்கிறார். வேதங்களின் அர்த்தங்கள் ஸ்ம்ருதிகளிலும் தெளியாமல் ஸ்ம்ருதிகளுக்கும் பல அர்த்தங்கள் கொள்ளும்படியாகி, வேதார்த்தங்களை நிர்மாணிப்பதற்காக நியாயஸஞ்சாரம் செய்வது மீமாம்ஸையெனப்படும்.

மீமாம்ஸையென்பது, உயர்ந்த விஷயத்தைப்பற்றி விசாரத்தைச்சொல்லும். ஜிஜ்ஞாஸை என்பது ப்ரேமையுடனும் போக்யதா புத்தியுடனும் விசாரித்து நிர்ணயம் செய்யவேண்டுமென்கிற ஆசையைச் சொல்லும். லக்ஷணையினால் அது விசாரமாகிய மீமாம்ஸையைச் சொல்லுமென்றும் சிலர் சொல்லுவர். தர்மம் என்பது நம்முடைய ச்ரேயஸ்ஸுக்கு ஸாதனமாக வேதத்தினால் விதிக்கப்படுமதையும் தெரியப்படுத்தப்படுவதையும் சொல்லும். ஸாதனத்தை உபாயமென்றும் சொல்லுவர். தர்மம் என்பது ஸித்தமென்றும், ஸாத்தியமென்றும் இருவகைப்படும். பகவான்ஸித்தமான தர்மம். நம்முடைய ஸகல ச்ரேயஸ்களையும் ஸாதிப்பதான தர்மங்கள் ஸாத்யோபாயமெனப்படும். ஸாதிப்பாதன தர்மங்களினால் ஸித்தனான பகவான் ஸந்தோஷப்படுத்தப்பட்டு, அவன் அந்த கர்மங்களுக்குப் பலம் கொடுக்கவேணும். ஸாத்யமான தர்மங்கள் நேரில் அத்ருஷ்டத்தை யுண்டு பண்ணிப் பலங்கொடுப்பிக்கின்றனவென்று பூர்வமீமாம்ஸகர் சொல்லுவர். அந்த கர்மங்களினால் ஆராதிதனான ஈஸ்வரன் தான் பலம் கொடுக்கிறானென்று ஸூத்ரகாரருடைய மதம். “க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம்”; என்று ஸித்தனான பகவானையே தர்மமென்று கூறப்பட்டிருக்கிறது. வேறு பிரமாணங்களாலறியக் கூடாத ஈச்வரன் போன்ற இந்த வஸ்துவை வேதத்திலேகதேசமான வேதாந்தங்கள் பிரமாணமாகத் தெரிவிக்கின்றனவென்று ஸமன்வயாதிகரணத்தில் கூறுகிறார். தர்மங்களை அறிய விரும்புகிற ஜிஜ்ஞாஸுக்களுக்கு ச்ருதிதான் கதியென்று சாஸ்திரம் தர்மவிஷயத்தில் வேதங்களின் உண்மையான

தாதபர்யத்தை நிர்ணயம் செய்துகொள்வதற்கு மீமாம்ஸை அங்கமாகும். வேதம் அதில ஸாதனம். மீமாம்ஸை என்கிற விசாரம் அங்கம். வேதாந்த விசாரமான மீமாமஸை முழுவதும் ஒரேசாஸ்திரமென்று உடையவர் திருவுள்ளம்.

'பிறகு ப்ரம்ஹ மீமாம்ஸை செய்யவேண்டும்', என்று, முதல் ஸூத்திரத்தால் சாஸ்திராரம்பத்தை ஸமர்த்தனம் செய்யப்ராரம்பிக்கிறார். பிறகு ஒருமீமாம்ஸை ஆரம்பிக்கப்படுகிறதென்று சொல்லுவதால் இதற்குமுன் பொரு மீமாம்ஸை நடந்ததென்றும், அதற்குப்பிறகு இன்னும ஒருமீமாம்ஸை ஆரம்பிக்கிறதென்று மர்த்தம் கொள்ளுவது ஸ்வாரஸ்யமென்று ச்ருதப்ரகாசிகையில் காட்டப்படுகிறது. பூர்வதந்திரமென்கிற அநேக க்ரந்தங்களில் ஜைமினீயமீமாம்ஸையைச்சொல்லுவது வழக்கம். பூர்வதந்திரத்திற் சொன்ன விஷயத்தை மறுபடியும் இங்கே சொல்லுவானேனென்று ஸ்ரீசங்ரபாஷ்யத்திலும புநருக்ததோஷத்தை சங்கித்துப்பரிஹாரம் செய்யப்படுகிறது. ஸ்ரீமத்வமதத்திலும் உடையவர் மதத்திலும் இரண்டு மீமாம்ஸைகளும் வேதார்த்த விசாரம் செய்யும் ஒரேசாஸ்திரமாகும். இப்படிக் கொருசாஸ்திரமாயிருந்தாலும் நம் ஸ்வரூபஞானத்திற்காக அவசிய முபாதேயமான உத்தர மீமாம்ஸைக்கே இந்த நான் காவது யுகத்தில் நமக்கு அவகாசம் கிடைப்பதரிதாகையால், முன்பாகத்திலிருந்து ஆரம்பிக்காமல் முடிவுபாகத்திலேயே இறங்குகிறோமென்று அதிகரண ஸாராவளியில் கூறப்பட்டது.

ஆறு தர்சனங்களுக்கும் வேண்டிய ஆதாரங்களையும், யுக்திகளையும் காட்டுவது மூலமாய் ஸ்வமதத்தின் முக்கிய அம்சங்களை தெளிவுக்குக் குறையில்லாமல் ஐயந்திரிபறச்சுருக்க ஸூத்திரங்களென்ற குறள் வாக்கியங்களால் அந்தந்த் தர்சனப்ர வர்த்தகர்களான ஸூத்திரகாரர்களால் உரைக்கப்பட்டிருக்கின்றன வேதாந்த தர்சனத்திற்கு ஸூத்திரகாரர் வ்யாஸரென்கிற பாதராயணர். ஸூத்திர மென்பது நூலுக்குப்பெயர். ஒருதர்சனத்திற்கு நூல்பிடித்து ஒரு ஒழுங்காய் மார்க்கமேற்படுத்துவது ஸூத்திரநூலின் வேலை. ஒருவஸ்துவின் அளவைத்தெரிந்து வரையறுப்பதற்கும் ஸூத்திரமென்கிற நூல்வேணும். தத்துவங்களை அளவிடுவதாலும் ஸூத்திரமென்னும் பெயர் நன்கு அமைந்ததென்று சொல்லலாம. வேதாந்த வாக்யங்களென்கிற புஷ்பங்களைத் தொடுக்கும் நூல் ஸூத்திரமெனப்படுமென்பது ஸ்ரீ சங்கர பாஷ்யத்தில் கூறப்பட்டது. வேதம் என்கிற சப்த ப்ரம்ஹமமான ஸ்ரீ என்றும் தேவியையும அவருடைய நாயகனுமாகிய நாராயணனென்றும் ப்ரும்ஹத்தையும், விவாஹம் செய்துவைக்கும் மங்கள ஸூத்திரம் ப்ரம்ஹ ஸூத்திரமாகுமென்று பட்டரால் ஸ்ரீ ரங்கராஜஸ்தவத்தின் மங்கள ச்லோகத்தால் த்வனியால்காட்டப்பட்டது.

ப்ரும்ஹம் என்று வேதத்திற்கு பெயர், பரப்ரம்ஹத்திற்கும் பெயர். சப்தப்ரம்ஹத்தையும் பரப்ரம்ஹத்தையும் புணைத்துவைக்கும் மாங்கள்யஸூத்திரம் ப்ரம்ஹஸூத்திரமெனப்படுமென்று த்வனி. உபநிஷத்தென்னு மம்ருதஸமுத்திரத்தை, ஸூத்திரமென்னும் கயிறுகளைக்கொண்டுகடைந்து ஸாரதமமான அமிருதத்தைத்திரட்டி யெடுப்பதால், உபநிஷத்துக்களைக் கடைந்து ஸாரத்தைத்திரட்டி யெடுக்க ஸாதனமாகும் கயிறுகள் ஸூத்திரங்களாகுமென்று அதிகரணஸாராவளியினிறுதியில் வேதாந்தசாரியனுடைய பாசுரம். மூன்றுவிதமான யோஜனைகளிலும் ஸூத்திரமென்பதற்கு நூலென்னும் ரூடியான பொருளாதரிக்கப்படுகிறது. ஸூசனம செய்வது ஸூத்திரமென்பது

யௌகிகமான பொருள். ஸூத்திரங்களே ஒரு தர்சனத்திற்கு முதல் நூலாகும்—வழிநூலுமாகும். அந்த ஸூத்திரங்கள் மிகச்சுருங்கியவையான படியால், அவைகளின் அபிப்பராயங்கள் வார்த்திகமெனும் விருத்தி கிரந்தங்களால் விவரிக்கப்படும். பூர்வ மீமாம்ஸைக்கு குமாரில பட்டர் செய்தவார்த்திகங்களிருந்தாலும் அகற்ற உபவர்ஷ ரென்பவர் விருத்திகிரந்தம் செய்ததாக சபரபாஷ்யத்திலும் ஸ்ரீ சங்கரபாஷ்யத்திலும் மற்ற ப்ராசீனகிரந்தங்களிலும் கூறப்படுகிறது. பூர்வமீமாம்ஸை ஸூத்திரங்கள் ஜைமினி மஹருஷியா லியற்றப்பட்டன. அவர் வ்யாஸருடைய சிஷ்யரென்று மஹா பாரதத்தில் கூறப்பட்டது: அதற்கு பாஷ்யகாரர்சபரஸ்வாமி உத்தரமீமாம்ஸையை சாரீரக மீமாம் ஸையென்று எல்லோரும் வியவஹரிப்பர். இதற்கு விருத்திகாரர் உபவர்ஷர் என்று அத்வைத க்ரந்தங்களி னபிப்பிராயமெனச் சொல்லலாம். போதாயனர் இதற்கு விருத்திகாரர் என்றும், அந்த விருத்திகாரத்தை த்ரமிட பாஷ்யகாரர் முதலிய பூர்வாசார்யர்கள் சுருக்கமாய் ஸங்கரஹித்ததாகவும், அந்த க்ரந்தங்களினபிப்பிராயங்களை யனுஸரித்து ஸூத்ராக்ஷரங்களுக்கு பாஷ்யம் செய்வதாக உடையவர் ஸாதித்திருக்கிறார். போதாயன விருத்தியிலிருந்தும் த்ரமிடபாஷ்யத்திலும் ஸ்ரீபாஷ்யத்திலும், ச்ருதப்ரகாசிகையிலும் சில வாக்கியங்களுதாஹரிக்கப் பட்டிருக்கின்றன. ஸ்ரீ பாஷ்யகாரரந்த க்ரந்தங்களை கடாக்ஷித்தது நிச்சயம். அந்த க்ரந்தங்க ளிப்பொழுது கிடைக்கமாட்டாது.

"சாரீரக ஸூத்திரங்களுக்கு மூலப்ரமாணங்கள் வேதாந்தங்களும், உபப்ரும்ஹணங்களான ஸ்ம்ருதிகளுமென்றும் சொன்னோம வேதாந்தங்களின் ஹ்ருதயத்தையும் ஸூத்திரங்களின் ஹ்ருதயத்தையும் நன்றாய்த் தெளிந்துகொள்ள வேதந்தமிழ்செய்த மாறனுடைய ப்ரபந்தங்கள் நன்றாய் உபகரிக்கின்றனவென்பதை அத்யாத்ம சாஸ்திரத்தில் பரிச்ரமப்பட்டவர்களறிவர். வேதாந்தாசாரியரென்று ப்ரஸித்தரான தூப்பில்பிள்ளை ஆழ்வார்களின் திராவிட ப்ரபந்தங்களைத் தெளியவோதி ' தெளியாத மறைநிலங்கள் தெளிகின்றோமே " என்றும், திருவாய்மொழியின் முதல் இரண்டு திருவாய்மொழிகளாலும் ப்ரம்ஹஸூத்திரத்தின் அதிகரணங்கள் முழுவதையும் ஸங்கிரகிக்கப்பட்டனவாகவும் கூறுகின்றார். அப்படியே முழுவதும் ஸங்கிரஹிக்கப்பட்டதாக விஸ்தாரமாகப் பெரியோர்களால் நிரூபிக்கப்பட்டிருக்கிறது அந்த நிரூபணங்களைப் பார்த்தால சாரீரகம் முழுவதும் இரண்டுதிருவாய்மொழிகளில் யதாக்ரமமாகயடைக்கப்பட்டிருக்கின்றதென்று நன்கு விளங்கும். அதிலும் முதல்பாசுரத்தில் நான்கு அத்தியாயங்களின் விஷயங்களையும் நான்குஅடிகளால் ஸங்கிரகித்திருக்கிறார் உயர்வற வுயர்நல முடையவனெவனென்று ப்ரம்ஹத்தின் லக்ஷணத்தைக் கூறுகிறார். ஜ்ஞானானந்த மயத்வம ப்ரம்ஹத்தின் ஸ்வரூபலக்ஷணமென்று சொல்லுவர். ஆநந்தவல்லியிலோதப்பட்ட ப்ரம்ஹத்தின் கணக்கிடக்கூடாததும், வாக்குக்கும் மனதிற்கு மெட்டாததுமான ஆனந்தமயத்வத்தை ஆனந்தமயமான தம்முடைய ஸஹஸ்ரகாதையான ப்ரபந்தத்தினுதியிலேயே ஸாதித்தருளினார். ஜகத்காரணத்வத்தை இலக்கணமாக ஸூத்ரககாரருரைத்தபடி ஆழ்வாரும் கூறவேண்டாவோ? வென்று கேள்விவரலாம். அதற்குப் பரிஹாரமுண்டு. ப்ருகுவல்லியி னாரம்பத்தில் ப்ருகுவினால் தன்னுடைய புத்திரனுக்கு "எதனிடமிருந்து இந்த சேதனாசேதன பூதங்கள் முழுவதும் பிறக்கின்றனவோ, பிறந்தனவெல்லாம எதனால் ஜீவித்திருக்கின்றனவோ, ப்ரளயமடையும்காலததில் எல்லாம எதில் லயத்தை யடைகின்றனவோ, அதை இன்பததுடன விசாரிககவேணும அதுதான் பிரமஹமம்என்று உபதேசித்தார். அந்த இலக்கணச் சொல்லமைதியை யனுஸரிதது ஆழ்வாரும் "யவன் அவன்" என்று மூன்றுதரம் கூறினார். அந்தபிரம்ஹம் பொதுவாக யவனெவனென்று

முதலில் கூறப்பட்டதிலிருந்து மட்டும் அது இன்னதென்று நன்கு விளங்கவில்லை. இந்தக் குறையைத்தீர்த்து குறிப்பாக ப்ரம்ஹம் இன்னதென்று அறிவிக்க ஆனந்தவல்லியின் முடிவில் "ஆனந்தத்திலிருந்துதான் இந்தப் பிராணிகளெல்லாம் பிறக்கின்றன" "பிறந்ததெல்லாம் அதனாலேயே உயிர்த்து வாழ்கின்றன, பிரளய காலத்தி லதையே மீண்டு அடைகின்றன" "ஆனந்தந்தான் ப்ரம்ஹம்" என்று தீர்மான வாக்யத்தைக் கூறினார் இதனால் ஆனந்தமென்றும ஆனந்தமயனே ஜகத்காரணமென்று ப்ருகுவல்லியின் தீர்மானமென்று நிச்சயமாயேற்படுகிறது. ஆழ்வார் முதலடியில் ஆனந்தமய ஸ்வரூபத்தைச் சொன்னதால், ஜகத்காரணமான ஆனந்தத்தையே கூறினதாகிறது. ஸூத்திரக்காரர் ஜகத்காரணத்தை இலக்கணமாகக் கூறியதற்கும் ப்ருகுவல்லியின் முடிவான தீர்மானத்தையனுசரித்து அந்தக்காரணம் ஆனந்தமென்று ஸூசிப்பதில் நோக்கு. ஆழ்வார் இந்த ஸூக்ஷ்மமான விஷயத்தை வெளிப்படுத்துவதற்காக ஆனந்தமயம் என்கிற முடிவுரையையே தெளிவாகக் காட்டிவிட்டார். ஆனந்தமயன் என்பதையிட்டு காரணத்வத்தை ஆழ்வார் ஸூசனம் செய்தார். ஸூத்திரக்காரர் காரணத்தைக்கூறி ஆனந்தமென்றும் ஸ்வரூபலக்ஷணத்தை ஸூசனம் செய்தார். இருவருக்கும் இரண்டிலும் தாத்பர்யம். ஸூத்திரகாரர் ப்ருகுவல்லியி னாரம்பவாக்யத்தை யெடுத்தார். ஆழ்வார் முடிவான தீர்மான வாக்யத்தை யெடுத்தார். ஆழ்வார் அனுபவத்திலாழவேண்டியதைக்கருதி ஆனந்த வாக்யத்தையே தமது சாஸ்த்திராரம்பத்திற் கைப்பற்றினார்.

ப்ரம்ஹ ஸூத்திரத்திற் கனேக பாஷ்யங்களுள. அதில் ப்ரஸித்தமானதும் பிரசாரத்திலுள்ளன மூன்று. ஸ்ரீகண்ட பாஷ்யம் சைவ விசிஷ்டாத்வைதமென்று அந்த பாஷ்ய வாக்கியங்களால் ஸ்புடமாய்த்தெரிகிறது. ஆரம்பாதிகரணத்தில் 'நாம் விசிஷ்டாத்வைத வாதிகள்" என்று ஸ்பஷ்டமாகக் கூறியிருக்கிறார். அந்த பாஷ்யம் அநேக பாகங்களில் உடையவர் ஸ்ரீ பாஷ்யத்தை அநுஸரித்து அந்த பாஷ்யம் அத்வைதத்திலேயே தாத்பர்யமுடையதென்று நிரூபிக்க அப்பய்ய தீக்ஷிதர் ரொம்பவும் சிரமப்பட்டிருக்கிறார். ஆனந்தலஹரியில் ச்லோகரூபமாயும் அதற்கு வியாக்கியான ரூபமாயும் இதை நிரூபித்திருக்கிறார். இதுவிஷயமாக அவர் செய்திருக்கும் "சிவாத்வைத நிர்ணய" என்கிறகரந்தம் இப்பொழுது சென்னை கலாசாலையாரால் அச்சிடப்பட்டு வருகிறது. ஸ்வல்பதினத்தில் பிரசாரமாகும். தீக்ஷிதருக்கு முன்னிருந்தவர்கள் நீலகண்ட பாஷ்யத்தை விசிஷ்டாத்வைத மதமென்றே அபிப்பிராயப்பட்டார்கள். சிவார்கமணிதீபிகை யென்னும் ஸ்ரீகண்டபாஷ்ய வியாச்யானத்தில் தீக்ஷிதர் அனேகமாக ஸ்ரீ பாஷ்யத்திற்கும் ச்ருதப்ரகாசிகைக்கு மொத்தே வ்யாக்யானம செய்திருக்கிறார். ஸ்ரீ பாஷ்யம் மூர்ந்தியா? ஸ்ரீகண்டபாஷ்யம் மூர்ந்தியா? என்பதைப்பற்றி ஒரு வாதம் கிளம்பி விசாரம் நடந்துவருகிறது. ஸ்ரீபாஷ்யம் மூர்ந்தியதென்று தீக்ஷிதர் சிவார்க்கதீபிகையில் ஸ்பஷ்டமாக கூறுகிறார். அவருக்கும் முந்தியுள்ள புற மதக்ரந்தங்களில் ஸ்ரீகண்டரை ராமாநுஜ மததஸ்கரரென்று வர்ணிக்கப்பட்டிருக்கிறது. தஸ்கரரென்றால் அந்த பாஷ்யத்திலிருந்து களவுசெய்தவரென்று பொருள். ச்ருதப்ரகாசிகைகாலத்தில் அந்த பாஷ்யம் ப்ரசாரமாயிருந்தது ஸந்தேகம். ஒவ்வொரு அதிகரணத்தின் முடிவிலும் பரமத வியாக்யானங்களை அனுவாதஞ்செய்து அவைகளைப்பற்றி விசாரம் செய்யப்பட்டிருக்கிறது. ஸ்ரீகண்ட பாஷ்யத்தைப்பற்றி பிரஸ்தாபிக்கப்படவில்லை. ச்ருதப்ரகாசிகைக்குமுன் மாத்வ பாஷ்யம் ஏற்பட்டதென்பது நிச்சயம். அந்த மதத்தை அனுவாதம் செய்யாததற்குக் காரணம், அது உடையவர்தர்சனத்திற்கு முக்கியமான தத்துவபாகங்களில் ஒத்திருப்பதுதானென்று நினைக்கவேணும். ஸூத்திரங்களி னர்த்தமாகவுரை செய்யும

கிரமம் அத்யந்தம் வேற்றுமையிருந்தாலும், தத்துவஹிதபுருஷார்த்தங்களி லனேகமாக ஒத்திருப்பதால் அந்த பாஷ்யத்திற்கு கிரக்கஷி சொல்லவில்லை. ஆனால் ஸத்வித்யா விசாரத்தில் மட்டும ப்ரதான வஸ்துவாகிய ப்ரம்ஹஜ்ஞானத்தினு லெல்லா மறியப்பட்டதாக ஔபசாரிகமாகக் கொள்ளவேணுமென்று அந்த பாஷ்யத்தில் கூறப்பட்டதை மட்டும் அங்கீகாரம் செய்வது உசிதமில்லை யென்று ஸாதிக்கப்பட்டது. மாத்வமதஸ்தரை ஏகாயனரென்று ஒரு விஷயத்தில் மட்டும் பேதப்படுவதாக ஈட்டில் வ்யவஹரித்திருக்கிறார் வேதாந்தாசார்யர் அவர்கள் மதத்தை நமக்கு நெருங்கிய மதமென்று சததூஷணியிலும் “ [illegible] ” என்கிற ஶ்லோகத்திலும் ஸாதித்தார். பரமதபங்கம் முதலிய கிரந்தங்களில் ஸ்ரீகண்ட பாஷ்யத்தையாவது மதத்தையாவது எடுக்கவில்லை. ஸூத்ரையிலும், சந்திரிகையிலும், அந்த மதத்தினது வாதமாவது தூஷணமாவது கிடையாது. சந்திரிகைக்கு வ்யாக்கியானமான ப்ரகாசம் என்றும் கிரந்தத்தில்மட்டும், ஸ்ரீகண்டபாஷ்யத்திற்கும், சிவார்க்கமணிதீபிகைக்கும் அநுவாதமிருக்கிறது. அந்த பாஷ்யம பிந்தியதென்பதற்கு ப்ரபலமான காரணங்கள் வேதாந்த தீபிகையில் அனேக வியாஸங்களில் விஸ்தாரமாக காட்டப்பட்டிருக்கின்றன

ஸ்ரீ சங்கரபாஷ்யம் ஸ்ரீ பாஷ்யத்திற்கு அநேக வருஷங்களுக்கு முந்தியது. அந்த பாஷ்யத்தை அங்கீகரிக்காமல் அதினம்சங்களை விஸ்தாரமாகத் தூஷிக்கும் விஷயதில் இப்பொழுது ப்ரசாரத்திலுள்ள கிரந்தங்களில் முதல் க்ரந்தம ஸ்ரீ ஆளவந்தாருடைய ஸித்தித்ரயமும் ஆகமப்ராமாண்யமும். ஸித்தித்ரயம் ஸூத்திரங்களின் வியாக்யானமாக ஏற்படவில்லை. பஞ்சராத்ராதிகரண ஸூத்திரங்கள் மட்டும் ஆகம ப்ராமாண்யத்தில் வ்யாக்யானம் செய்யப்பட்டன. போதாயன வ்ருத்தியும் த்ரமிடபாஷ்யமும் இப்போது கிடையாது. போதாயனர், டங்கர், த்ரமிடர், குஹதேவர் முதலியவர்கள் நம் தர்சன விஷயமாய் உடையவருக்கு முன்பு க்ரந்தங்கள் செய்தவர்கள். போதாயன விருத்தியை உடையவர் கடாக்ஷித்து அதை அநுஸரித்து ஸ்ரீபாஷ்யம் ஸாதித்தாரென்பது ஸித்தம் ஸித்திதரயம், ஸ்ரீபாஷ்யத்திற்கு ஒரு முக்கியமான ஆதாரம் அதிலுள்ள அநேக வாக்யங்கள் அப்படியே ஸ்ரீபாஷ்யத்தில் முதலதிகரணத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன. நம் தர்சனத்தோரெல்லாரும் ஸ்ரீ பாஷ்யத்தையும் அதற்கு லோகோத்தரமான வியாக்யானமான ச்ருதப்ரகாசிகையையும் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம், நம் தர்சனத்திலுள்ள ஏற்றம் ஸ்ரீ பாஷ்யத்தையும் அதின் வியாக்யான பூதங்களான க்ரந்தங்களையும ஸேவித்தால்தான் பூர்ணமாய்த்தெரியும். புறமதத்தார்கள் கேட்கும் கேள்விகளுக்கு இந்த கிரந்தங்களின் ஸஹாயமில்லாமல் ஸமாதானம் சொல்லுவது கடினம்.

ஸ்ரீ சங்கரபாஷ்யம் சுமார் 40 வருஷங்களுக்குமுன்பு ஜர்மனிதேசத்திய ஸம்ஸ்கிருத்விதவானகிய டாக்டர் தீபா என்பவரால் வெகு அழகாக இங்கிலீஷில் மொழி பெயர்க்கப்பட்டது. அந்த மொழிபெயர்ப்பில் ஒரு தோஷமும்கூட அகப்படாது. அவர் காசியில் வித்வான்களின் உதவியோடு இரண்டு பாஷ்யங்களையும் நன்றாக கற்றறிந்தவர். ச்ருதப்ரகாசிகையின் விஷயங்களையும் அவர்க்ரஹித்தவர். சங்கரபாஷ்யத்திற்கு அவர் ஒருவிஸ்தாரமான முகவுரை எழுதியிருக்கிறார். அதில் இரண்டு பாஷ்யங்களுடைய வியாக்யானங்களையும் அனேகஅதிகரணங்களில் சீர்தூக்கிப்பார்த்திருக்கிறார். விஸ்தாரமாக இரண்டு வ்யாக்யானங்களின் ஸ்வாரஸ்யங்களை விசாரித்திருக்கிறார்.

உடையவர் பாஷ்யம் ஸூத்ராக்ஷரங்களுக் கனுகுணமென்று தம்முடைய நிர்ணயத்தை வியக்தமாகக்காட்டியிருக்கிறார். இருவர்களுக்குள் விவாதம் வந்தால், மத்தியஸ்தனுடைய உக்தியைக்கொண்டு ஸாதுத்வத்தை நிர்ணயம்செய்ய வேண்டுமென்பது ப்ரஸித்தம். ஸூத்ராக்ஷரங்களுக்கு வியாக்கியானம் செய்வதாக பாஷ்யகாரர் செய்தருளிய ப்ரதிக்ஞை இப்படிக் கொத்த மத்தியஸ்தர் நிர்ணயத்தால் ஸத்யாபிதமாகிறது. ச்ருதப்ரகாசிகையில் கூறப்பட்ட உக்திகளை எடுத்து அவர் காட்டியிருக்கிறார். சுமார் 30 வருஷங்களுக்குமுன் ஸ்ரீபாஷ்யத்தையும் அவர் இங்கலீஷில் மொழி பெயர்த்து பிரசுரம் செய்திருக்கிறார். அந்த மொழி பெயர்ப்பை வாசித்து வெளிதேசங்களில் வேதாந்தவிசாரத்தில் ருசியுள்ள வித்வான்கள் நமது மதத்தைத் தெரிந்து கொண்டு வருகிறார்கள். பெரும்பான்மையாக அந்த மொழி பெயர்ப்பு ஸரியாகவேயிருக்கிறது. 30 வருஷங்களுக்குமுன் இங்கிலீஷில் மொழிபெயர்ப்பு ஏற்பட்டிருந்தும் “ [illegible] ” என்றபடி ஆழ்வார்களவதரித்த இந்த தமிழ் நாட்டில் இனிமையான தமிழ் பாஷையில் இந்தக்ரந்தம் இதுகாறும் மொழிபெயர்க்கப்படாதது பெரிய குறையேயாகும். ச்ருதப்ரகாசிகையுடன் ஸ்ரீ பாஷ்யத்தைத் தமிழ் மொழி பெயர்த்துவைத்து அச்சிட்டு ப்ரசுரம்செய்யும் மஹாநுபாவர்களை நாம்மிகவும் க்ருதக்ஞர்களாகப் புகழ்ந்து பல்லாண்டு பாடுகிறோம்.

ஸ்ரீபாஷ்யத்தின் பெருமையை தீபா என்றும் ஜர்மனிதேசத்து வித்வான் புகழ்ந்திருப்பது மட்டுமல்ல. இந்த தர்சனத்தை அநுஸரித்து வட தேசத்தில் நிம்பார்ககர், பாஷ்யம் செய்தார். வல்லபரும், சைதன்யரும் நம்தர்சனத்தை அநேக அம்சங்களிலனுஸரித்தவர்கள். மத்வஸம்ப்ரதாயங்களில் ஸூத்ரவ்யாக்யானத்தைப்பற்றி தர்க்கம் செய்தாலும், ச்ருதப்ரகாசிகையில் கூறப்பட்ட அநேக யுக்திகளை அத்வைதத்திற்கு விரோதமாக அவலம்பித்திருக்கிறார்கள். சந்திரிகையையும், ச்ருதப்ரகாசிகையையும் ஒற்றுப்பார்த்தால் இது நன்கு விளங்கும். விசிஷ்டாத்வைதமான ஸ்ரீகண்ட பாஷ்யத்திற்கு வியாக்யாணமான சிவார்கமணி தீபிகையில், ச்ருதப்ரகாசிகையின் யுக்திகள் அநுஸரிக்கப்பட்டிருக்கிறது.

ஸ்ரீபாஷ்யத்தின் பெருமையை வேதாந்தசார்யர் பலவாறும் புகழ்ந்திருக்கிறார். ஸ்ரீ பாஷ்யத்தை ப்ரவர்த்திப்பதே ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு ப்ரதானகைங்கர்யமென்று ரஹஸ்யத்ரயஸாரத்தில் கூறினார். ஸங்கல்ப ஸூர்யோதயம் முதலிய க்ரந்தங்களில் எது வரையில் எத்தனை ஆவ்ருத்தி பாஷ்யத்தைக் காலக்ஷேபம் சொல்லிவித்திருக்கிறோமென்று ஸாதிக்கிறார். தம்முடைய காலங் கழிந்ததெப்படியென்று கூறும் பொழுது—தமது யௌவன முழுவதும் யதி ஸார்வ பௌமருடைய ஸ்ரீ ஸூத்திகளை ஆவ்ருத்திகள் செய்வதினால் ப்ரமபோக்யமாய் அனுபவிக்கப்பட்டதென்கிறார். ஸங்கல்ப ஸூர்யோதயத்திலிரண்டாவது அங்கத்தில் பாஷ்யத்தை இளமோவி யிளமை கெடுவதன்முன்னம் யௌவனபருவம் முதலே நன்றாய் அநபாயமான ப்ரீதியுடன் அனுபவிக்கவேண்டுமென்றும், இந்தஸம்ஸாரமென்னும் நள்ளிருளில் ஸ்ரீபாஷ்யமென்னும் தீபம் உடையவரா லேற்றிவைக்கப் பட்டதென்றும் கூறுகிறார். சததூஷணியின் வாதங்களனேகமாய் ஸ்ரீ பாஷ்யத்தில் முதலதிகரணத்தில் விசாரிக்கப்பட்ட விஷயங்களைப் பற்றியன. ஸ்ரீபாஷ்யத்தை அநேக ஆவ்ருத்திகள் சிஷ்யர்களுக் கத்யயனம் செய்வித்து அதன்பிறகு அதிகரண ஸாராவளி செய்ததாகக் கூறுகிறார்.

நம் தர்சனத்தை நாம் புகழ்வது பெரிதல்ல. ஸ்ரீ பாஷ்யத்திலும் ச்ருதப்ரகாசிகையிலும் கூறப்பட்ட தூஷணங்களை மற்ற மதத்தர் ஒப்புக்கொண்டதற்கு அநுஸமாக தங்கள் வியாக்யானத்தை திருத்தியதினால் உடையவர் பாஷ்யத்தின் உண்மையும் ஸ்வாரஸ்யமும் நன்று விளங்கும். முதலாவது அத்தியாயம் இரண்டாம்பாதம் முதலாவது அதிகரணமான ஸர்வத்ர ப்ரஸித்தோப தேசாதிகரணத்தில் முதல் ஸூத்திரத்தை ஒரே பதமாக ஸ்ரீ சங்கரபாஷ்யத்தில் வியாக்யானம் செய்தார். உடையவர் ஸ்ரீ பாஷ்யத்தையும், ச்ருதப்ரகாசிகையையும் நன்குபடித்த அப்பய்யதீக்ஷிதர் ந்யாய ரக்ஷாமணியென்னும் க்ரந்தத்தில் நம் ஸ்ரீ பாஷ்யத்திற்போல இரண்டு பதங்களாகவே வைத்து வியாக்யானம் செய்தார். பஞ்சராத்ராதிகரணத்தில் பஞ்சராத்ரத்தை ஸூத்திரக்காரர் சிலவம்சங்களில் மட்டும் பரமதமென்று தூஷித்ததாக ஸ்ரீ சங்கர பாஷ்யத்தில் கூறப்பட்டது அதன் வியாக்யானமான பாமதத்திற்கு வியாக்யானமான கல்பதரு க்ரந்தத்தில், பாஞ்சராத்திரத்தை ஸூத்திரக்காரர் தூஷிக்கவில்லையென்றும் அதில் ஆக்ஷேபிக்கப்பட்டஅம்சங்களுக்கு, அதாவது வ்யூஹோத்பத்திக்கும், ஜீவோத்பத்திக்கும் கௌணமாக அர்த்தம் சொல்லவேண்டுமென்றும ஸமர்த்தித்தார். இது ஸ்ரீபாஷ்யத்தை யனுஸரித்ததாகும ஆநந்தமயாதிகரணத்தில் ஸூத்திரங்களுக்கும் ஸ்ரீ சங்கர பாஷ்யத்தில் செய்யப்பட்ட முந்தி வ்யாக்கியானமாகிய இரண்டாவது வர்ணகம் ஸூத்திரங்களுக்கு நேர் விருத்தமென்றும், ஸூத்திரங்களின் அர்த்தம் ஸ்ரீபாஷ்யம் வியாக்கியானத்தைப் போன்ற விருத்திக்காரருடைய உரைப்படிதானென்றும் கல்பதருவிலொப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. 4வது அத்யாயம் 3வதுபாதம முடிவில் கார்யாதிகரணத்தில் முதலில் ஸித்தாந்தத்தையும் பிறகு பூர்வபக்ஷத்தையும். ஸூத்திரக்காரர் கூறியதாக ஸ்ரீ சங்கரபாஷ்ய வ்யாக்யானம் முதலில் ஸித்தாந்தோபக்கிரமமாக ஒரு அதிகரணம் ப்ரவ்ருத்தித்துப் பிறகு பூர்வபக்ஷத்தைச் சொன்னால் கடைசியில் அந்தப்பூர்வபக்ஷத்தை நிஷேதம்செய்து ஸித்தாந்தத்தைக் காட்டவேணுமென்று ச்ருதப்பிரகாசிகையில் நிரூபித்தார். இந்த யுக்தி அபேத்யமானதென்று இதைஒப்புக்கொண்டு கௌட ப்ரம்ஹாநந்தியமென்ற க்ரந்தக்காரர் தாம் செய்திருக்கும் ஸூத்திர வியாக்யானத்தில் இறுதி ஸூத்திரத்திற்கு அதற்கு முன பூர்வபக்ஷத்தைத் தள்ளி மறுபடியும் ஸித்தாந்தத்தை உறுதிப்படுத்தினதாக அர்த்தம் செய்தார் அப்படிச் செய்திருப்பது ஸ்ரீ சங்கரபாஷ்யத்திற்கு நேர் விருத்தம். உதாஹரணத்திற்கு ஸ்தாலீபுலாக ந்யாயத்தால் சிலதையெடுத்துக்காட்டினோம். ஸ்ரீ பாஷ்யம ச்ருதப்ரகாசிகை இந்த இரண்டு க்ரந்தங்களின் ரஸம் அநுபவரஸிகர்களறிவார் புத்திமான்களுடைய ரஸநாடியை இந்தக்ரந்தங்கள் தொட்டு ரஸம் புத்தியில் விச்சேதமில்லாமலோடிக கொண்டிருக்கும்படி செய்யுமென்று வேதாந்தாசார்யரனுபவித்தும் பேசியவார்த்தை.

ஸ்ரீ பாஷ்யத்திற்கு ச்ருதப்ரகாசிகையைத தவிர மேகனாத ஸூரி என்பவர் செய்த ப்ராசீன வியாக்யானம் ஒன்றுண்டு. அந்த வியாக்யானம் அகப்படாவிட்டாலும், அதற்கு மாத்ருகைகளிருக்கின்றன. முதல் நான்கு ஸூத்திரங்களாகிய நான்கு அதிகாரணங்களில் முதல்அதிகரணமட்டும் சாஸ்திராரம்பத்தை ஸமர்த்திப்பதாயும், ஜந்மாத்யதிகரணம்முதல் சாஸ்த்ர மாரம்பித்துவிட்டதென்றும் பாஷ்யக்காரருக்குத் தாத்பர்யமென்றும் அந்த வியாக்யானத்தில் ஸமர்த்திருப்பதை ஆக்ஷேபித்து ச்ருதப்ரகாசிகையில் யுக்திகள் ஸாதிக்கப்பட்டிருக்கிறது. அதிகரண ஸாராவளியில் அந்த பக்ஷத்தை சிலர் பக்ஷமென்று கூறப்பட்டது. ச்ருதப்ரகாசிகாசார்யருடைய ஆசார்யரான அம்மாள் என்கிற வரதாசார்யர் தத்துவஸாரம் என்றும் ஒரு சிறிய க்ரந்தம் ஸாதித்திருக்கினார். அதிலுள்ள ச்லோகங்கள் சிலது ச்ருதப்ரகாசிகையிலுதஹரிக்கப்பட்டிருக்கிறது.

ச்ருதப்ரகாசிகை விஸ்தாரமாயிருக்கிறதென்று அதன் விஷயங்களை ஸங்கிரஹித்து ச்ருதப்ரதீபிகை யென்று ஒரு வியாக்யானமும் ஸாதிக்கப்பட்டிருக்கிறது. அதில் சில பாகம் விசாகப்பட்டணத்தில் மஹாவித்வானான பரவஸ்து ஸ்வாமியால் அச்சிடப்பட்டது. ச்ருதப்பிரகாசிகையைப் போன்ற ஸம்பூர்ணமான வியாக்யானம் ஸ்ரீ பாஷ்யத்திற்கு அமைந்தது ஸ்ரீ வைஷ்ணவ லோகம் பண்ணின புண்ணியமே. வடமொழியிலிதொரு முப்பத்தாறாயிரம். இதன் பெருமையையும், ரஸத்தையும் அனுபவிப்பதினும் வேறு பேறில்லை. இதை ஸுலபமாக எல்லோரும் எளிதில் அனுபவிக்கும்படி தமிழ்செய்து ப்ரசுரம் செய்யும் மஹோபகாரத்திலும் பேருதவியில்லை. இதனிலும் பெரிய கைங்கரியமில்லை. ச்ருதப்ரகாசிகாசார்யருக்கு ஸுதர்சன பட்டர் என்று திருநாமம். வ்யாஸாய ரென்று இவருக்குப் பெரிய பெருமாள் சாற்றின திருநாமம் என்பது ப்ரஸித்தம். இங்கில்லாதது எங்குமில்லை, மற்ற கிரந்தங்களிலுள்ளது இங்கேயுளது என்றும், மஹத்வத்தாலும், பாரவத்வத்தாலும், மஹாபாரதமெனப்படும் என்றும் வாணிக்கப்பட்ட மஹாபாரதம் போன்ற பெருமையுளது இந்த கிரந்தம் என்பதைத் திருவுள்ளம்பற்றி வியாஸரென்றே திருநாமம் சாத்தினதற்கு ஔசித்யம். அத்யாத்ம சாஸ்திரத்தில் இது ஒரு மஹாபாரதமாகும். இதில் நடக்கும் வாதயுத்தங்களை மஹாபாரதயுத்தங்களுக்கொப்பிடலாம். ஜயம் எப்பொழுதும் ராமாநுஜனாகிய கண்ணனுக்கு. ஸுதர்சனத்திற்கே ஜயம். ஜயமென்று மஹாபாரதத்திற்குப் பெயர். இந்த க்ரந்தத்தை ஆதியில் வேதாந்தாசார்யார் ரக்ஷித்து ப்ரவ்ருத்திப்பித்ததாக ஸம்பரதாயம். அவருடைய அதிகரண ஸாராவளி இதற்கும் ஸ்ரீ பாஷ்யத்திற்கும் ஸங்க்ரஹம். இதற்கு பாவப்ரகாசிகை யென்றொரு வியாக்யானம் உபநிஷத் பாஷ்யகாரரென்று ப்ரஸித்திபெற்ற ரங்கராமாநுஜ ஸ்வாமியால் ஸாதிக்கப்பட்டது. அதுவுமச்சிடப்பட்டிருக்கிறது.

இந்த ச்ருதப்பிரகாசிகைக் க்ரந்தத்தின் பெருமை தத்த்வமார்த்தாண்ட மென்னும் கிரந்தத்தைப் பார்த்தால் நன்கு விளங்கும். மாத்வ ஸம்பரதாயத்தில் சந்திரிகை யென்கிற ஒரு அருமையான கிரந்தம். அதில் ஒவ்வொரு ஸூத்திரத்திற்கும் தங்கள் ஸம்ப்ரதாயத்திலுள்ள அர்த்தமே ஸரியென்றும் மற்ற பாஷ்யகாரர்கள் அர்த்தங்கள் ஸ்வரஸமல்லவென்றும் கூறியிருக்கிறார். ஒவ்வொரு அதிகரணத்திலும் ஸ்ரீ பாஷ்யத்தையும் ச்ருதப்ரகாசிகையையும் அநுவாதம் செய்து அதன் பேரில் கோடி சொல்லியிருக்கிறார். அந்த கோடிகளுக்கு ஸமாதானம் செய்து ச்ருதப்ரகாசிகார்த்தங்களை ஸமர்த்தனம் செய்ய அந்த க்ரந்தம் ஏற்பட்டது. [illegible] என்று வ்யாஸாசார்ய விஷயமாய் அந்த க்ரந்தத்தில் மங்களம் ப்ரபஞ்சம் முழுவதற்கும் நாமரூப வியாகரணம் செய்த பெரிய பெருமாளால் இவருக்கு வியாஸரென்கிற ஒரு அபூர்வமான திருநாமம் சாற்றப்பட்டதென்று அங்கே கூறினார். சந்திரிகையின் கோடிகளை யனுவாதம் செய்து அதற்கு ஸமாதானம் ச்ருதப்ரகாசிகையின் அக்ஷரங்களைக்கொண்டே கிடைக்கிறதாக மிகவும் அழகாக அங்கே நிரூபித்திருக்கிறார். ச்ருதப்ரகாசிகையை எழுத்தெழுத்தாய் அந்த ஸ்வாமி அனுபவித்து ரஸித்து மனப்பாடம் செய்தவரென்று அவர் க்ரந்தத்தால் தெரிகிறது. "[illegible]" என்று அங்கங்கேயெடுத்து உதாஹரித்திருக்கிறார். இப்பொழுதும் ஸ்ரீ பாஷ்யத்திற்கும், ச்ருதப்ரகாசிகைக்கும் மேல் கோடிகள் சொல்லுவதாக ஒரு க்ரந்தம் செய்து அச்சிடப்பட்டிருக்கிறது.

ச்ருதப்ரகாசிகையைக் கொண்டே அந்த க்ரந்தத்திற்கு ஸுலபமாய் ஸமாதானம் சொல்லலாம்.

உபநிஷத்துக்களுக்கு மற்றபாஷ்யகாரர்கள் பாஷ்யம் செய்ததுபோல் ஸ்ரீ பாஷ்யகாரர் பாஷ்யங்களருளிச்செய்யாவிட்டாலும், அந்தந்த அதிகரணங்களில் விஷய வாக்கியங்களான கண்டங்களிற்கு விஸ்தாரமாக பாவங்களை ஸாதித்திருக்கிறார். அத்ராதிகரணத்திலும் ஆநுமாநிகாதிகரணத்திலும், கடவல்லி வியாக்யாதமாயிற்று. தஹராதிகரணத்தில் தஹரப்ரஜாபதி வாக்யங்கள் வ்யாக்யாதமாயிற்று வேதார்த்த ஸங்க்ரஹத்திலும், ஜிஜ்ஞாஸாதிகரணத்திலும் ஸத்வித்யாதிகள் வியாக்யாதமாயிற்று. ச்ருதப்ரகாசிகையில் உபநிஷத்துக்களிலுள்ள முக்கியமான வாக்கியங்கள் முழுவதும் வியாக்யானம் செய்யப்பட்டுள்ளன. ச்ருதப்ரகாசிகை வாக்யங்கள் அங்கங்கே விஸ்தாரமாய் உபநிஷத்பாஷ்யத்தில் வரையப்பட்டிருக்கின்றன. ஆறாயிரப்படியின் வியாக்யானமான இருபத்திநாலாயிரப்படியில் ச்ருதப்ரகாசிகையில் ஸாதிக்கப்பட்ட அம்சங்களை அங்கங்கே உதாஹரித்திருக்கிறார். உபநிஷத்தின் வாக்கியங்களுக்கும் நம்முடைய பக்ஷத்திலும் பிறர் பக்ஷத்திலுமுள்ள ஸ்வாரஸ்யங்களை கணக்கிட்டு திராசில் வைத்து நிறுத்து இந்த க்ரந்தத்தில் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. இந்தக்ரந்தங்களிலுள்ள அருமையான விஷயங்களின் பெருமையை இங்கே எடுத்துரைப்பதற்கு அவகாசமில்லாததால், மற்றொரு ஸமயத்தில் விரித்துரைப்போம். ஸகுண நிர்குண வாக்கியங்களுக்கு உடையவர் ஸாதித்தபடிதான் விஷயவ்யவஸ்தையால் வ்யாக்யானம்செய்தது உசிதமென்பதற்கு ஒரே சிறிய வாக்யத்தால் 15 அபேக்ஷிதமான யுக்திகளை ஸங்க்ரஹித்திருக்கிறார். இதை 448-வது பக்கத்தில் கண்டுகொள்க. ப்ரதானப்ரதிதந்த்ரமாகிய சரீரசரீரபாவத்தை விஸ்தாரமாய் உபபாதிக்கும் ஸுபாலோபநிஷத்திற்குத் தாமே வ்யாக்யானம் செய்திருக்கிறார். இவர் வ்யாஸரென்று திருநாமம் சாத்தப்பெற்று, ஸ்ரீ பாகவதத்திற்கு சுகபக்ஷீயமென்று ஒரு அழகான வியாக்யானம்ஸாதித்து அது ப்ருந்தாவநத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. அதையநுஸரித்தே வீரராகவீயம் என்னும் வியாக்யானம் செய்யப்பட்டதென்று அந்தவியாக்யாதா ஸாதித்தார். இவர்பெருமையும் ஞானமும் அளவிடக்கூடாததாயிருந்தும் இவராசார்யராகிய அம்மாளிடம் கேட்ட அர்த்தங்களையே தாம வெளிப்படுத்துகிறதாக க்ரந்தத்திற்குத திருநாமம சாற்றினார். இதனால் இவருடைய ஆத்மகுணங்கள் ப்ரகாசிதமாயிற்று. வேதாந்தாசார்யரும இதையனுஸரித்து “தஸ்மை நமோ வ்யாஸாய ஸுதர்ஸநஸூரயே” என்று ஸாதித்தார்

இக்காலத்தில் பகுத்தறிவுள்ள எல்லோரும் தினைவு செட விஷயங்களை விசாரித்து ஸாரதமமான தர்சனமின்னதென்று தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறார்கள். அது நியாயமே. கேவலம் மூடச்ரத்தையினால் மட்டும் ஒரு தர்சனம் நீடித்து நிற்கமாட்டாது. இப்போது தமிழ் செய்து அச்சிட்டிருக்கிற இந்த இரண்டு க்ரந்தங்களை நன்றாய்தெரிந்து கொண்டுவிட்டால், நம் தர்சனத்தைச் சார்ந்தவர்கள் சலிக்கமாட்டார்கள். ஞானத்தினால் மட்டும தான் மோக்ஷம் கைகூடுமென்பது ப்ரஸித்தம். “ஸா வித்³யா யா விமுக்தயே” என்று மோக்ஷத்தை ஸாதித்துக்கொடுக்கும் வித்யைதான் வித்யையாகும். மானிடரெல்லோரும ஞானத்தால் மோக்ஷத்தையடைய விரும்புவர். மோக்ஷருசியுடையவரெல்லோரும், இந்த அத்யாத்ம வித்யையையதிகரிக்க அதிகாரிகளாவர். ஸ்ரீ பாஷ்யம் இரண்டாவது சுலோகத்தில் ஸுமநஸோ பௌமா꞉ பிப³ந்த்வந்வஹம் என்பதில் ஸுமனஸ: என்பது ஸாராஸாரவிவேகமுள்ளவர்களால் இந்தகிரந்தம் அதிகரிக்கத்தக்கது என்று சுருதப்ரகாசிகாசார்யர் அருளிச்

செய்துளர். "ஆத்யஸ்ய ந: குலபதே:" என்கிறபடியே ப்ரபந்நஜனகூடஸ்தரான ஆழ்வாருக்கு, ஈச்வரன் தன் ஸ்வரூப ரூபகுணவிபூதிகளை நிர்ஹேதுக க்ருபையாலே காட்டிக் கொடுக்க அந்த ஜ்ஞானம் பக்திரூபாபந்ந ஞானமாகையாலே அவற்றினுடைய அநுபவ ஜனித ப்ரீதியுள்ளடங்காமல் வழிந்த த்ரமிடோபநிஷத்தை ஸ்ரீமந்நாதமுனிகள் "ஆழ்வாருடைய ப்ரஸாதத்தாலே லபித்து பின்பு ஆசார்ய உபதேச க்ரமத்தாலே ஸ்ரீஆளவந்தார் அந்த த்ரமிடோபநிஷத் ப்ரதிபாத்யமான தத்வஹிதங்களை லபித்து அத்தைத்தாமும் அநுசந்தித்து ஸம்ஸாரிகள் துர்க்கதியைக்கண்டு அவர்கள் இத்தை இழக்கவொண்ணாதென்று பரம க்ருபையாலே ஸகலோபநிஷத் ரகஸ்யமாம் துர்ஜ்ஞேயமான அர்த்தத்தை ஸர்வாதிகாரமாம்படி ஸ்தோத்ரரூபேண அருளிச்செய்திருக்கிறார்" என்று பெரியவாச்சான் பிள்ளை வ்யாக்யாந அவதாரிகையில் ஸாதித்துளார். இங்கு ப்ரதிபாதிக்கப் படுகிறதும், ஆழ்வார் தாம் பெற்றதும், அதடியாக ஸ்ரீமந் நாதமுனிகள் தொடக்கமான பூர்வாசாரியர்களாகவும் வந்து "லோகே அவதீர்ண பரமார்த்த ஸமக்ரபக்தி" என்கிறபடியே பகவத் பக்திக்கு கேட்டுமடையான ஸம்ஸாரத்திலே, பரமபதத்தில் பரிமாறக்கடவ இந்த ஸாத்ய பக்தி "நான்முகனார் பெற்ற நாட்டுளே நற்பாலுக்குய்த்தனன்" என்ற ஆழ்வார் ஸ்ரீ ஸூக்தியின்படியே ஸர்வாதிகாரமாயிற்று. இதற்கேற்ப தத்வத்ரய வியாக்யான அவதாரிகையில் ஸ்ரீ மணவாள மாமுனிகளும் "சாஸ்த்ர அப்பியாஸத்திற்கு அநதிகாரிகளான ஸ்திரீசூத்ராதிகளுக்கு முமுக்ஷுத்வமுண்டானாலும் நிஷ்ப்ரயோஜனமாம்படி யிருக்கையாலும், உபதேச ஸம்பமாமளவில் உக்த தோஷம் ஒன்றுமில்லை யென்று அருளிச் செய்திருக்கிறார்.

பஞ்ச ஸம்ஸ்கார ஸம்பந்நனாய் முமுக்ஷுவான சேதநன் பகவத் விஷயத்திலும் மற்ற திவ்ய ப்ரபந்த வ்யாக்யானங்களிலும் பொதிந்துகிடக்கிற ரகஸ்யார்த்தங்களையும் உடையவர் ப்ரஸாதித்த ஸ்ரீபாஷ்யம், ஸ்ரீ பகவத்கீதா பாஷ்யம், பூர்வர்களருளிச்செய்த ரகஸ்யத்ரய, தத்வத்ரய, தத்வசேகர, தத்வதீபாதி ரகஸ்ய க்ரந்தங்களையும், ஸ்தோத்ர ரத்ந, கத்யத்ரய பஞ்சஸ்தவ, ஸ்ரீரங்கராஜஸ்தவாதி ஸ்தோத்ர பாடங்களையும், ஸம்சய விபர்யயமற அறிவதில் அவைகளிலும் அவற்றின் வ்யாக்யானங்களிலும் உதாஹரிக்கப்பட்டிருக்கிற ச்ருதிகளின் அர்த்தங்களை அறிந்துகொள்வது அவசியாபேக்ஷிதம். மேற்கூறிய வ்யாக்யானங்களில் உதாஹரிக்கப் பட்டிருக்கிற ச்ருதிவாக்யங்களை உச்சரித்து தெரிந்துகொள்ளுமிடத்து அபசூத்ராதிகரண நியாயம் ப்ரஸங்கிக்குமென்பது "ஆஜ்யாவேக்ஷண" நியாயத்தாலே பரிஹ்ருதம். ஸ்ரீபாஷ்யத்தை அதிகரிப்பதற்கு பாஷ்யகாரரால் கூறியுள்ள அர்த்தித்வ ஸாமர்த்திய நியமங்கள் "உபய பரிகர்மித ஸ்வாந்தஸ்ய" இத்யாதிப்படியே அதி க்ருதாதிகாரமான ஸாதன பக்தியைப்பற்றியதே யன்றி ஸாத்ய பக்திவிஷயமன்று. முமுக்ஷுவாய் ப்ரபந்நனான சேதநனுக்கு உபதேச ஸம்யமாய் வருமளவில் ஸ்ரீபாஷ்யகாரர் அபசூத்ராதி கரணத்தில் ஸாதனபக்தி அதிகாரிக்கு அபேக்ஷிதமென்று கூறின ஸாமர்த்தியம் இவ்வதிகாரிக்கும் வரத் தட்டில்லை. "ஸுமனஸ:" என்ற சப்தத்திற்கு அர்த்தமாகக்கொண்ட ஸாராஸார விவேசனம் இவ்வதிகாரிக்குமுண்டு. உடையவர் திருவடிஸம்பந்தமுடைய அனைவரும் இந்த பாஷ்யத்தையும் ச்ருதப்ரகாசிகையையும் நன்றாய் கற்றுணர்ந்து அநுபவத்திற்குக் கொண்டு வரவேணும்.

"பொலிக பொலிக" வென்று ஸ்ரீ வைஷ்ணவதர்சனத்திற்கும், ஸ்ரீ பாஷ்யத்திற்கும், ச்ருதப்ரகாசிகைக்கும் இஹபர லோகோபகாரமாகத் தமிழ்செய்த ஸ்வாமிக்கும், இந்த க்ரந்தத்தைத் தமிழ்நாட்டில் பிரசுரிக்கும்படி செய்யும் புண்யபுருஷர்களுக்கும். ஸம்ருத்தியை ஆசாஸனம் செய்வதே நமது கடமை.

"ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா வர்த்ததாமபிவர்த்ததாம்"

அ. வி. கோபாலாசாரியன்.

ஸ்ரீபாஷ்யம் தமிழ் மொழிபெயர்ப்புச் சங்கத்தின் மெம்பர்கள், அபிமானிகள், மற்றும் பொருளுதவி செய்தவர்களின் திருநாமங்கள்.

ஸ்ரீமத் பரமஹம்ஸ இத்யாதி வானமாமலைமடம் ஜீயர்ஸ்வாமிகள்.

ஸ்ரீமான் இளையாழ்வார் தாசர் அவர்கள் மெட்டுவிப்பட்டி. கோவில் பட்டி.

,, கொப்பியம், திருநாராயண பிள்ளை அவர்கள் சீர்காழி.

(மெம்பர்கள்)

,, R. K வேணுகோபால நாயுடு அவர்கள். B.A.B.L.
,, அழகிரிராமாநுஜதாசர் அவர்கள் ஸ்ரீ ரங்கநிலயம்
,, C. இராமாநுஜம் பிள்ளை அவர்கள், ஸ்ரீரங்கம்.
,, வரயோகிராமாநுஜதாசர் அவர்கள். ,
,, ஆளவந்தார் ராமாநுஜதாசர் அவர்கள் ,,
,, வடமலைப்பிள்ளை அவர்கள் கண்டிராக்டர்,,
,, N. ராமையநாயுடு அவர்கள் டாக்டர் ,,
,, தி லெ கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் ,
,, T. V. பாலகிருஷ்ணபிள்ளை அவர்கள் மிராசுதார் திருச்சிகோட்டை
,, M. A. கோவிந்தராஜுலு நாயுடு அவர்கள் ரங்கூன் ,,
,, ஏ. மா. மாமுண்டிகோனார் அவர்கள் ,
,, T N. ரெங்கநாயகலு அண்டு பிரதர்ஸ் உறையூர்
,, தேசாய் அங்கண்ணசெட்டியாரவர்கள் சென்னை
,, பகதூரங்கிரிரேணு முதலியார் அவர்கள் ,
,, தில்லை, கோவிந்தபிள்ளை அவர்கள் சிதம்பரம்
,, எ. வெ. ஸ்ரீநிவாச செட்டியார் அவர்கள் திருக்குடந்தை
,, கெந்தபொடி கோதண்டபாணி செட்டியார் அவர்கள் ,,
,, ஜில்லடி, சாமுஅய்யா அவர்கள் .
,, T. D. இராமஸ்வாமி நாயுடு அவர்கள் திருப்புறம்பயம்
,, சாரங்கபாணி ராமாநுஜதாசர் அவர்கள் மேலபட்டி மதுரை
,, C. சௌரிராஜபிள்ளை அவர்கள் நாகப்பட்டணம்
,, மெ கு ரெங்கசாமி நாயக்கர் அவர்கள் சக்கரலிங்கபுரம்
,, பெருமாள இராமானுஜதாசர் அவர்கள் கிருஷ்ணபநாயக்கன்பட்டி.
,, தேவபிரான் இராமானுஜதாசர் அவர்கள் நாலாட்டாபுத்தூர்
,, புலிகுத்தி சின்ன கிருஷ்ணஸ்வாமிகள், சாத்தூர்
,, இராமாநுஜதாசர் அவர்கள் மினிவா ரங்கூன்
,, இராமசாமி நாயக்கர் அவர்கள் (அ) சிந்தாமணி திருச்சி
,, கலியன்ராமானுஜதாசர் அவர்கள் (அ) அம்மாபேட்டை.
,, பங்கயச்செல்விதாசர் அவர்கள் (அ) ஸ்ரீரங்கம்
,, கன்னையநாயுடு அவர்கள் டாக்டர் (அ) சென்னை
,, ராமாநுஜதாசர் அவர்கள் மாவாடி (அ) சிதம்பரம்
,, J வெங்கடேச நாயுடு அவர்கள் சூபர்வைசர் மன்னார்குடி.

இதில் விட்டுப்போனவர்களின் திருநாமங்களை அடுத்த ஸஞ்சிகையில் வெளியிடப்படும்.

॥ 𑌶𑍍𑌰𑍀𑌃 ॥

॥ 𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌾𑌯 𑌨𑌮𑌃 ॥

ஸ்ரீபாஷ்யகாரரருளிச்செய்த

ஸ்ரீ பாஷ்யம்.

முதல் அத்யாயம்.

முதல் பாதம்.

𑌶𑍍𑌰𑍀𑌭𑌾𑌷𑍍𑌯𑌮𑍍.

𑌅𑌖𑌿𑌲𑌭𑍁𑌵𑌨𑌜𑌨𑍍𑌮𑌸𑍍𑌥𑍇𑌮𑌭𑌙𑍍𑌗𑌾𑌦𑌿𑌲𑍀𑌲𑍇
𑌵𑌿𑌨𑌤𑌵𑌿𑌵𑌿𑌧𑌭𑍂𑌤𑌵𑍍𑌰𑌾𑌤𑌰𑌕𑍍𑌷𑍈𑌕𑌦𑍀𑌕𑍍𑌷𑍇 ।
𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌶𑌿𑌰𑌸𑌿 𑌵𑌿𑌦𑍀𑌪𑍍𑌤𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌿 𑌶𑍍𑌰𑍀𑌨𑌿𑌵𑌾𑌸𑍇
𑌭𑌵𑌤𑍁 𑌮𑌮 𑌪𑌰𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌶𑍇𑌮𑍁𑌷𑍀 𑌭𑌕𑍍𑌤𑌿𑌰𑍂𑌪𑌾 ॥

ஸ்ரீபாஷ்யத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு.

ஸமஸ்த புவனங்களுடைய ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாராதிகளை லீலையாக உடையவனும்; வணங்கின பற்பல பக்தர்களையும், ப்ரபன்னர்களையும், அவர்கள் ஸம்பந்தம் பெற்றவர்களையும் ரக்ஷிப்பதில் ப்ரதான ஸங்கல்பமுள்ளவனும்; வேதாந்தத்தில் விசேஷித்து ப்ரகாசிப்பவனுமான ப்ரஹ்மமென்று ப்ரஸித்திபெற்ற ஸ்ரீநிவாஸனிடத்தில் எனக்கு பக்திரூபமான ஜ்ஞானம் நிலைபெற்றிருக்கவேண்டும்.

ஸ்ரீஸுதர்சனபட்டரருளிச்செய்த

ஸ்ரீ ஶ்ருதப்ரகாசிகையின் தமிழ் மொழிபெயர்ப்பு.

𑌵𑌰𑌦𑌂 𑌵𑍃𑌷𑌾𑌦𑍍𑌰𑍀𑌶𑌂 𑌶𑍍𑌰𑍀𑌨𑌿𑌧𑌿𑌂 𑌕𑌰𑍁𑌣𑌾𑌨𑌿𑌧𑌿𑌮𑍍 ।
𑌶𑌰𑌣𑍍𑌯𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌯𑌾𑌮𑌿 𑌪𑍍𑌰𑌣𑌤𑌾𑌰𑍍𑌤𑌿𑌹𑌰𑌂 𑌹𑌰𑌿𑌮𑍍 ॥

1. பக்தர்களுக்கு அபீஷ்டங்களைக்கொடுப்பவனும், ஏறஸதிகளிர்கு இறைவனும், ஸம்பத்துகளுக்கு நிதியாக இருப்பவனும் (லக்ஷ்மிக்கு நித்யவாஸஸ்தானமாக இருப்பவனும்) கருணைக்கடலும், ரக்ஷணத்தில் ஸமர்த்தனும், வணங்கினவர்களின் துன்பத்தை, அல்லது பாபத்தை அபகரிப்பவனுமான ஹரியை நான் சரணமடைகிறேன்.

பஹிரந்தஸ்தமச்சேதி ஜ்யோதிர்வந்தே ஸுதர்சநம் |
யேநாவ்யாஹதஸங்கல்பம் வஸ்து லக்ஷ்மீதரம் விது: ||

2. உள்ளும் புறமுமுள்ள இருளை அடியோடு அறுக்கும் தன்மை வாய்ந்த ஸுதர்சனமென்கிற ஜோதியை வந்தனம் செய்கிறேன்.—எதனால் லக்ஷ்மியை தரித்துக்கொண்டிருக்கிற (வாஸுதேவன் என்கிற) வஸ்துவானது தடையற்றதான ஸங்கல்பத்துடன் கூடியதாக ப்ரகாசிக்கிறதென்று (மகான்கள்) அறிகிறார்களோ.

ஸந்ந்யாயகலாபேந மஹதா பாரதேந ச |
உபப்ரும்ஹிதவேதாய நமோ வ்யாஸாய விஷ்ணவே ||

3. யுக்திகளால் அசைக்கவொண்ணாத சிறந்த ந்யாயங்களின் ஸமூஹத்தாலும், மஹாபாரதத்தாலும், வேதார்த்தவிசதீகரணம் செய்தவரும், விஷ்ணுஸ்வரூபியாகவுமிருக்கிற வ்யாஸமஹர்ஷிக்கு வந்தனம்.

தஸ்மை ராமாநுஜார்யாய நம: பரமயோகிநே |
யச்ச்ருதிஸ்ம்ருதிஸூத்ராணாமந்தர்ஜ்வரமசீசமத் ||

4. யோகிகளுக்குள் சிறந்தவரான அந்த ராமானுஜாசார்யருக்கு நான் வந்தனமளிக்கிறேன்.—எவர் ச்ருதிகளுடையவும் ஸ்ம்ருதிகளுடையவும் (ப்ரஹ்ம) ஸூத்ரங்களுடையவும் உள் ஜ்வரத்தைத்தணியும்படி செய்வித்தாரோ.

வந்தேஹம் வரதார்யம் தம் வத்ஸாபிஜநபூஷணம் |
பாஷ்யாம்ருதப்ரதாநாத்ய: ஸஞ்ஜீவயதி மாமபி ||

5. ஸ்ரீவத்ஸவம்சத்துக்கு அலங்காரமாக இருக்கிற அந்த வரதாசாரியரை நான் வந்தனம் செய்கிறேன்.—எவர் பாஷ்யமாகிற அம்ருதத்தைப்பருகச்செய்து என்னைக் கூட நன்கு ஜீவிக்கச்செய்கிறாரோ.

ப்ரபத்யே ப்ரணவாகாரம் பாஷ்யம் ரங்கமிவாபரம் |
பரஸ்ய ப்ரஹ்மணோ யத்ர சேஷித்வம் ஸ்புடமீக்ஷ்யதே ||

6. வேறு ஒரு ரங்கவிமானம் போல் ப்ரணவாகாரமாக ப்ரகாசிக்கிற பாஷ்யத்தை சரணமாக வரிக்கிறேன்.—எதில் ப்ரஹ்மத்தின் *சேஷித்வமானது ஸ்பஷ்டமாகக்காணப்படுகிறதோ.

ச்ருத்யந்தேஷு ச்ருதம், பாஷ்யே மதம், த்யாதம் ஹ்ருதம்புஜே |
லக்ஷ்மீபதிம் ப்ரபத்யேஹம் த்ருஷ்டம் ஸ்ரீரங்கதாமநி ||

7. வேதாந்தங்களில் கேட்கப்பட்டவரும், பாஷ்யத்தில் மனனம் செய்யப்பட்டவரும், ஹ்ருதயகமலத்தில் த்யானிக்கப்பட்டவரும், ஸ்ரீரங்கக்ஷேத்திரத்தில் காணப்பட்டவருமான ஸ்ரீதரனை நான் சரணமடைகிறேன்.

---

* சேஷித்வம் - பிறர்களால் உண்டு பண்ணப்பட்டிருக்கிற அதிசயத்தை (மேன்மையை)த்தாங்கி இருத்தல்.

இதனால், “ஆத்மா வா அரே! த்ரஷ்டவ்ய:, ச்ரோதவ்யோ
மந்தவ்யோ நிதித்யாஸிதவ்ய:”

என்கிற ச்ருதியின் அர்த்தம் அநுஸந்திக்கப்பட்டதுடன் அந்த ச்ருதியினால் ப்ரதிபாதிக்கப்பட்ட பரமாத்மா ஸ்ரீரங்கநாதனென்றும் நிச்சயிக்கப்பட்டது.

ப்ரமாணஞ்ச ப்ரமேயஞ்ச ப்ரமாதாரஶ்ச ஸாத்விகா: |
ஜயந்து க்ஷபிதாரிஷ்டம் ஸஹ ஸர்வத்ர ஸர்வதா ||

8. † ப்ரமாணமும், ப்ரமேயமும் ‡ ஸத்வோத்தரர்களான $ ப்ரமாதாக்களும் எல்லாவிடத்திலும், எப்பொழுதும் சேர்ந்து அரிஷ்டம் நசிக்கும்படி ஜயம் பெறுவார்களாக.

அவிஸ்த்ருதா ஸுகம்பீரா ராமாநுஜமுநேர்கிர: |
தர்சயந்து ப்ரஸாதேந ஸ்வம் பாவமவிரளம் த்ருடம் ||

9. விஸ்தாரமில்லாததும், மிக்க காம்பீர்யமுள்ளதுமான ஸ்ரீராமாநுஜமுனியினுடைய வாக்குகள் ¶ ப்ரஸாதகுணத்தால் தன்னுடைய கருத்தனைத்தையும் திடமாகக் காண்பிக்கவேண்டும்.

ஸ்ரீரங்கேசாஜ்ஞயா வ்யாஸஸம்ஜ்ஞாம் ஸந்தததோ ஸ்ஸுதே: |
வாக்விஜயிந: ஸூநோ: பாஷ்யபக்திர் விஜ்ரும்பதாம் ||

10. ஸ்ரீரங்கநாதனுடைய ஆஜ்ஞையினால் அடையப்பட்ட வ்யாஸர் என்கிற நாமதேயத்தை வகித்தவனும், வாக்விஜயிபட்டரின் புத்ரனுமான ஸுதர்சனனை ஸ்ரீபாஷ்யத்திலுள்ள பக்தியானது (ஸ்ரீபாஷ்ய விவரணத்தில்) ஏவியது.

குருப்ய: ச்ருதை: ஶப்தைஸ்தத்ப்ரயுக்தைஶ்ச யோஜிதா: |
ஸௌகர்யாய புபுத்ஸூநாம் ஸங்கலய்ய ப்ரகாச்யதே ||

11. ஆசார்யர்களிடமிருந்து கேட்கப்பட்டதும், அவர்களால் ப்ரயோகிக்கப்பட்டிருக்கிற சப்தங்களோடு சேர்க்கப்பட்டிருப்பதுமான அர்த்தமானது அறிய விருப்பமுள்ளவர்களின் ஸௌகர்யத்திற்காக ஒன்று சேர்த்து ப்ரகாசிப்பிக்கப்படுகிறது.

ய: க்ருத்ஸ்நம் வேத்தி பாஷ்யார்த்தம்! ச்ருதாம்ஶஸ்ய ததீய க்ருதி: |
ஆட்யை: காகணிகேவைஷா நோபேக்ஷ்யா பாஷ்யவித்தமை: ||

12. ஸ்ரீபாஷ்யத்தின் அர்த்தம் அனைத்தையும் எவன் அறியத்திறமையுள்ளவன்! என்னுடைய இந்த விவரணக்ரந்தமானது எந்த அம்சம் (ஆசார்யரிடத்திலிருந்து என்னால்) கேட்கப்பட்டிருக்கிறதோ அது (உலகத்தில்) நிலை பெறுவதற்காக. தனவான்களால் $ காகணிகை போல, ஸ்ரீபாஷ்யத்தில் விசேஷப்ராஜ்ஞையுள்ளவர்களாலும் கூட இந்த ச்ருதப்ரகாசிகை உபேக்ஷிக்கத்தக்கதல்ல.

† ப்ரமாணம் - ப்ரமாகரணம்.

‡ ப்ரமேயம் - ப்ரமாணத்தாலறியத்தக்க வஸ்து.

$ ப்ரமாதா - ப்ரமாணத்தால் வஸ்துவை அறிபவன்.

¶ ப்ரஸாதம் - விரைவாக அர்த்தத்தை உணர்த்தும் சப்தசக்தி

$ காகணிகா - ஒரு சிறு நாணயம். அதாவது ஒரு பைசா.

𑌭𑌾𑌷𑍍𑌯𑌂 𑌚𑍇𑌦𑍍𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌤𑍍𑌸𑍍𑌵𑌯𑌂 𑌯𑌤𑌿𑌪𑌤𑌿𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌨𑌵𑌾𑌚𑌾𑌂

𑌤𑌥𑌾 𑌗𑌾𑌂𑌭𑍀𑌰𑍍𑌯𑌾𑌦𑌨𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌰𑌿𑌤𑌿 𑌤𑌦𑌪𑌿 𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑍇𑌯 𑌜𑌨𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌨𑌾 ।

𑌦𑍂𑌷𑍍𑌯𑌃 𑌕𑌤𑌂 𑌸𑍍𑌵𑌧𑌿𑌯𑌾 𑌨𑌃 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌾𑌦𑍍𑌵𑌾 𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌂

𑌤𑌦𑍍𑌭𑌾𑌷𑍍𑌯𑌂 𑌸 𑌚 𑌭𑌾𑌷𑍍𑌯𑌕𑍃𑌤𑍍𑌸 𑌚 𑌹𑌰𑌿𑌸𑍍𑌸𑌤𑍍𑌕𑍃𑌪𑌾𑌂 𑌕𑌰𑍋𑌤𑍁 𑌨𑌃 ॥

13. யதிராஜர் தாமருளிச்செய்த பாஷ்யத்தைத்தாமே வ்யாக்யானித்திருப்பாரேயாகில் வ்யாக்யானவாக்குகளிலுள்ள அப்படிப்பட்ட காம்பீர்யத்தினுல் அதை விவரிப்பதற்காக மற்ெருரு வ்யாக்யானம் வேண்டும். அதுவும் அர்த்தகாம்பீர்யமுள்ளதாதலால் அதையும் விவரிக்க மற்ெருரு வ்யாக்யானம் வேண்டியிருக்கும். இவ்வண்ணம் அநவஸ்தை ஏற்படும். மிதமான மதியை உடையவர்களோ அந்த ஸ்ரீயதிபதியின் வாக்குகளுக்கு வெகுதூரத்திலேயே நிற்கத்தக்கவர்கள். ஸர்வஜ்ஞனை பரமாத்மாவையே நாடி ஸ்ரீபாஷ்யத்திற்கு ஒரு வ்யாக்யானம் செய்தருளவேண்டுமென்று வேண்டிக்கொள்வோமென்ருல் அவர் நம்முடைய கண்களுக்குப்ரத்யக்ஷமாகக்கூடியவரல்ல. ஆகையால் அந்த பாஷ்யம், அந்த பாஷ்யத்தைச்செய்தருளினவர், அந்த ஹரி, எல்லாரும் நம்மிடத்தில் அநுக்ரஹம் செய்யக்கடவர்கள்.

இஷ்டாநிஷ்டங்களையும், அவற்றின் ஸாதனங்களையும் முறையே பெறுவதிலும், விடுவதிலும் விருப்பமுற்றவர்களும், ப்ரமாணதீனமான ப்ரமேயநிச்சயமுள்ளவர்களுமான எல்லா புருஷர்களுக்கும் அலௌகிக $ † புருஷார்த்தமாகவும், அதற்கு ஸாதனரூபமாகவுமிருக்கிற வஸ்துவானது சப்தப்ரமாணத்தாலேயே அறியத்தக்கது. அதிலும் புருஷபுத்தி தோஷமாவதால் அழுக்கடையாத வேத'‡ மென்கிற அக்ஷரராசியே முக்யப்ரமாணமாக ஆச்ரயிக்கத்தக்கதென்பது ஸித்தம். அந்த வேதத்திலும் முந்தின பாகமாக இருக்கிற கர்மகாண்டமானது பசு, புத்ர, வ்ருஷ்டி, அன்னம், ஸ்வர்கம் முதலான * ஐஹிகங்களையும் ¶ ஆமுஷ்மிகமான ஸர்வாபீஷ்டங்களையும் ப்ரதிபாதிக்கிறதாக அறியப்படுகிறது. பரமபுருஷார்த்தத்தையும், அதன் ஸாதனங்களையும்

$ அலௌகிகம் – சாஸ்த்ரத்தாலறியத்தக்கது.

† புருஷார்த்தம் – தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம், புருஷர்களால் அர்த்திக்க (வேண்ட)ப்படுவதால் புருஷார்த்தம் என்று பெயர்.

‡ வேதம் – வேதயதி—அறிவிக்கிறது (தர்மாதர்மங்களை) என்கிற சப்த வ்யுத்பத்தியினுல் வேதமென்று கூறப்படுகிறது. இது யோகரூடமான பதம்.

> ப்ரத்யக்ஷேணனுமித்யா வா யஸ்தூபாயோ ந வித்யதே.
> ஏநம் விதந்தி வேதேந தஸ்மாத் வேதஸ்ய வேததா

என்று வேதபாஷ்யத்தின் துடக்கத்தில் ஸாயணரும் நிருக்தி கூறியிருக்கிருர். (இதற்கு அர்த்தம்)ப்ரத்யக்ஷத்தாலும் அனுமிதியினுலும் உலகத்தில் எந்த இஷ்ட ப்ராப்தியுபாயமும், அநிஷ்டநிவ்ருத்தியுபாயமும் அறியப்படுகிறதில்லையோ அப்படிப்பட்ட உபாயங்களை அறிவதற்கு ஸாதனமாக இருப்பதால் இதை வேதமென்று (பெரியோர்கள்) அறிகிருர்கள்.

* ஐஹிகபலம் - இந்த உலகத்தில் அனுபவிக்கக்கூடிய க்ருஹம், ஆராமம், க்ஷேத்ரம் பசு, புத்ரன், பார்யை முதலியது.

¶ ஆமுஷ்மிகபலமாவது – ஸ்வர்கம், ஸ்வாராஜ்யபாலனம், • ஸத்யலோகவாஸம் முதலியது.

தெரிவிப்பது அதற்கு மேற்பட்ட ப்ரஹ்மகாண்டம். அது பூர்வாசார்யர்களுக்கு அபிமதமான முக்திராஜமார்க்கத்திற்கு முட்கள்போன்ற பல குத்ருஷ்டி ¶ களுடைய அனேக தூர்வசனங்களால் அழிவுண்டாயிற்று. அந்த குத்ருஷ்டிகள் காட்டின கொடிவழியில் இழிந்து மயங்குகிற உலகத்தை உஜ்ஜீவிக்கச்செய்ய வேண்டுமென்கிற எண்ணத்தினுல் நன்கு ஆராய்ந்து, நன்று, தீதெனப்பகுத்து அறிவதில் ஸமர்த்தர்களான பூர்வாசார்யர்களால் பரிசயம செய்யப்பட்டுள்ளதும், புராதனமாகவே இருப்பதுமான நல்வழியை முட்களில்லாமல் செய்து பரமபுருஷார்த்தத்தை வேண்டுகிற 'சேதனர்களை க்ருதார்த்தர்களாகச்செய்வதற்கு ஸம்ஸாரத்திலுள்ள தாபத்ரயத்தால் மிகவும் வருந்துகிற ஜனங்களின் அத்ருஷ்டவைபவத்தாலவதரிக்கும்படி செய்விக்கப்பட்டவரும், பரமகாருணிகருமான, பகவானுன, ஸ்ரீபாஷ்யகாரரால் சாரீரகசாஸ்த்ரமானது வ்யாக்யானம் செய்தருளப்பட்டது. ' வ்யாக்யானம் செய்யத்தக்க க்ரந்தங்கள் மஹர்ஷிகளால் செய்யப்பட்டவைகள். அவைகளுக்கு வ்யாக்யானங்களும் மஹர்ஷிகளால் செய்யப்பட்டிருக்குமாகில் அவைகளே அனுஸரிக்கத்தக்கவைகள். ரிஷியாக ‡ இல்லாதவன் ஸூக்ஷ்மதர்சி ஆகான். ரிஷியின் அபிப்ராயத்தை ரிஷியே தானுக அறிவதற்குத்தகுதியுள்ளவன். மந்தபுத்தியுள்ள மற்றவன் அறியான். ஒரே ரிஷியினுல் சொல்லப்பட்டிருக்கிற வசனங்களுக்கு அந்யோன்யம் விரோதம் வரின் பூர்வபக்ஷா * பிப்ராயம் வைபவவாதம் ¶ முதலிய காரணங்களால் அவிரோதம் ஏற்படுத்தத்தக்கது. பல வக்தாக்களின் வசனங்களுக்கு விரோதம் எவ்விதத்தாலும் பரிஹரிக்க முடியாமற்போனுல் எது யுக்திக்கு இசைந்திருக்குமோ அதுவே ஏற்றுக்கொள்ளத்தக்கதாகும். ஆதலால் தோஷமில்லை. எவர்கள் வ்யாக்யானிக்கத்தக்க க்ரந்தங்களும், வ்யாக்யானங்களுமிருக்க அவைகளை அனுதரித்து, அவைகளுக்கு விருத்தமான க்ரந்தங்களைச் செய்கிறுர்களோ அவர்கள் ஆக்ரஹத்தினுல் கவரப்பட்ட மனதையுடையவர்கள்; பண்டிதர்கள் என்கிற எண்ணமுள்ளவர்கள்; பாண்டித்யத்தை வெளியிடுவதில் நோக்கமுள்ளவர்கள்; என்பதில் அவர்களுடைய க்ரந்தபிரவிருத்தியே ப்ரமாணமாகும். ஸ்ரீபாஷ்யகாரரைத்தவிர்த்த மற்ற ஸூத்ரவ்யாக்யாதாக்கள் † ஆர்ஷவ்யாக்யானங்களை மீறி நடந்தவர்களென்பது 'உபாஸத்ரைவித்யாத், ஸர்வத்ரப்ரஸித்தோபதேசாத், பூமா ஸம்ப்ரஸாதாத், அத்யுபதேசாத், தஹர உத்தரேப்ய:' இவை முதலான ஸூத்ரங்களில் நன்கு ஸ்பஷ்டமாக ஏற்படுகிறது. இந்த பாஷ்யத்திலோ என்றுல் † வ்ருத்தி க்ரந்தத்தை அனுஸரித்தல் பிரதிக்ஞை செய்யப்பட்டிருக்கிறது. பரிஹரிக்க முடியாத பாதகங்கள் அறியப்படாமையால் அந்த ப்ரதிக்ஞையானது மனதொப்பிச்சொல்லியதல்லவென்று ஸந்தேகிக்கத்தக்கதல்ல. ஆனுலும் கர்ம¶ மீமாம்ஸையில் சிற்சில இடங்

¶ குத்ருஷ்டிகள் - வேதவிருத்தார்த்தங்களை உரைப்பவர்கள்.

‡ ரிஷி - யோகதசையில் மந்த்ரங்களை நேரில் காண்பவர். வேதத்திற்கும் இந்தப் பெயருண்டு.

* பூர்வபக்ஷம் - நிச்சிதமான ஸித்தாந்த வசனத்தினுல் பாதிக்கப்படுகிற யுக்தியில்லாத கக்ஷி.

¶ வைபவ வாதம் - ஒரு அர்த்தத்தைப்புகழ்வதில் நோக்கத்துடன் கூடிய வாதம்; அல்லது 'இப்படியும் சொல்வோம்'; ஆக்ஷேபணை ஏற்பட்டால் ஸமர்த்திப்போம்.' என்று வித்யையில் தேட்டையால் கூறப்படும் வசனம்: இதை ப்ரௌடி வாதமென்றும் சிலர் கூறுவார்கள்.

† ஆர்ஷம் - ரிஷிகளால் கூறப்பட்டது.

† வ்ருத்தி - போதாயன மஹர்ஷியினுல் கூறப்பட்டுள்ளதும் ஸ்ரீபாஷ்யத்துக்கு மூலமாயுமுள்ள க்ரந்தம்.

¶ மீமாம்ஸா - விசாரணை.

களில் பிற்பட்டிருக்கிற வ்யாக்யாதாக்களால் குழப்பம் உண்டுபண்ணப்பட்டிருக்கிறது. ஆயினும், அந்தக் $ கர்மமீமாம்ஸையில் (மந்த்ரங்களின்) ப்ரயோகமார்கத்தில் தடுமாற்ற மில்லாமையால் அனுஷ்டானமாத்ரத்தைச்சார்ந்ததாயுள்ள ஸ்வர்கம் முதலிய பல வித்தியானது தேவதைகளின் ‡ ஸ்வரூபம். அந்த தேவதாஸ்வரூபத்தின் உண்மையான நிலைமை ஸத்† கார்யவாதம் முதலியவைகளின் அறிவைக்கருதாதென்றும், பரமபுருஷார்த்தமான மோக்ஷமானது ஞானமொன்றினாலேயே ஸாதிக்கத்தக்கதாக இருப்பதினால் ஞானமார்கத்தில் தடுமாற்றமேற்படுவது ¶ ஆத்மஹானியை உண்டுபண்ணக்கூடியதாகையால் அதற்கு விபரீதமான ஜ்ஞானங்கள் அவசியம் பரிஹரிக்கத்தக்கவைகளென்றும் (பிந்தின மேல்) பாகமாகிய ப்ரஹ்மமீமாம்ஸையிலும் அந்தந்த அர்த்தங்களுக்கு ஸாதகங்களாகக்கூறப்பட்டிருக்கிற முன் பாகத்தைச்சார்ந்த அர்த்தங்கள் நன்கு காண்பிக்கப் பட்டேயிருக்கிற ரீதியினால் சொல்லப்படாமலிருந்தபோதிலும் சிக்ஷிக்கத்தக்க அர்த்தங்கள் ஸுலபமாக நிர்வஹிக்கத்தக்கவைகளென்றுமெண்ணி பகவான் ஸ்ரீபாஷ்யகாரர் ப்ரஹ்மஸூத்ரங்களையே விவரிக்கத்துடங்குகிறார்.

இவ்வண்ணம் துடங்கவேண்டுமென்று விரும்பப்பட்ட ப்ரபந்தமானது இடையூறின்றி முடிவு பெறுவதற்காகவும், அபிவ்ருத்தி அடைவதற்காகவும், ஸ்ம்ருதியினாலும் ஆசாரத்தினாலும் விஹிதமான இஷ்டதேவதோபாஸன ரூபமான ‡ மங்களத்தை சாப்தமாக அனுஷ்டிக்கிறார். ('அகில' என்கிற பதத்தை முதன்மையாகக் கொண்ட ச்லோகத்தினால்) † "மங்களாசாரயுக்தாநாம் நித்யஞ்ச ப்ரயதாத்மநாம், ஜபதாம் ஜுஹ்வதாஞ்சைவ விநிபாதோ ந வித்யதே" என்றல்லவோ ஸ்ம்ருதி கூறுகிறது; எல்லா க்ரந்தக்காரர்களாலும் ஆசரிக்கப்படுகிறது; கேட்பவரின் மனஸ்ஸமாதானத்தின் பொருட்டு சாஸ்த்ரார்த்த ஸங்க்ஷேபமும், செய்யப்படுகிறது. எவ்வாறெனில், $ சோதனாஸூத்ரத்தினால் தர்மத்தினுடைய ஸ்வரூபமும், ப்ரமாணமும் ச்ருத்யர்த்தங்களால் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. கேட்பவர் விஷயங்களை ஸுலபமாகத்தெரிந்து கொள்வதற்காக விரிவான விஷயங்களைச்சொல்பவன் துடக்கத்தில் சுருங்க எடுத்து உரைப்பது உலகத்தில் பிரஸித்தமே.

$ வேதத்தில் முந்தின பாகம் கர்மாக்களையே ப்ரதிபாதிப்பதால் கர்மகாண்ட மென்றும், பிந்தின உபநிஷத் பாகங்கள் ப்ரஹ்மத்தை நிரூபிப்பதால் ப்ரஹ்மகாண்டமென்றும் கூறப்படுகிறது.

‡ தேவதா – ஹோமம் செய்யப்படுகிற ஹவிஸ்ஸுக்கு உத்தேச்யமான வ்யக்தி. தேவ ஏவ தேவதா, ஸ்வார்த்தத்தில் தல் ப்ரத்யயம்.

† ஸத்கார்யவாதம் – காரணவஸ்துவினிடத்தில் ஸூக்ஷ்மமாக ஒடுங்கி இருந்த கார்யமே பின்பு ஸ்தூல ரூபத்துடன் வெளிப்படுகிறதென்று கூறுதல்.

¶ ஆத்மா – (ஆப்னோதி) சேதனாசேதனங்கள் அனைத்தையும் வ்யாபித்திருக்கிறான் என்பதினால்—

‡ மூன்று விதமான மங்களங்கள் :—காயிகம், வாசிகம், மானஸம்.

† சோதனாஸூத்ரம் — 'சோதனாலக்ஷணோர்த்தோ தர்ம:' என்கிற பூர்வமீமாம்ஸா ஸூத்ரம்.

$ (மங்களா)—மங்களாசாரத்தோடு கூடியவர்களும், எப்பொழுதும் பரிசுத்தமான சித்தவ்ருத்தி உள்ளவர்களும், (மந்த்ரங்களை) ஜபிக்கிறவர்களும், (சாந்திக, பௌஷ்டிக) ஹோமங்களைச்செய்பவர்களுமான (ஸாதுக்களுக்கு) (ஒருவிதமான) அனர்த்தமும் உண்டாகாது.

†"இஷ்டம் ஹி விதுஷாம் லோகே ஸமாஸவ்யாஸதாரணம்." என்று வசனம். சாஸ்த்ரார்த்தத்தின் ஸங்க்ஷேபத்தினால் $ வஸ்துநிர்தேசமும், 'பவது' என்பதினால் ஆசீர்வாதமும் செய்யப்பட்டவைகளாக ஆகின்றன. 'விநத' என்னும் 'பக்திரூபா' என்னும் பதங்களால் ப்ரஹ்மவிஷயத்தில் வணக்கம் அறியப்படுவதால் ப்ரணாமமும் பலித்தது. 'ணமு ப்ரஹ்வத்வே' 'வணக்கம்' என்றல்லவோ ‡ தாது. இவ்வாறாக மூன்று விதமான மங்களமும் செய்யப்பட்டதாக ஏற்படுகிறது. ச்லோகத்தின் முதல் பாதத்தினால் முந்தின இரண்டு அத்யாயங்களின் அர்த்தம் சுருங்க ப்ரதிபாதிக்கப்பட்டது. இரண்டாவது பாதத்தினால் பிந்தின இரண்டத்யாயத்தினுடைய அர்த்தம் ஸங்க்ரஹிக்கப்பட்டது. கர்மமீமாம்ஸையில் ப்ரதிபாதிக்கத்தக்க விஷயபேதத்தால் * ஷட்கபேதம்போல் இங்கேயும் ‡ விஷயம், $ விஷயி என்கிற ப்ரதிபாத்யபேதத்தால் ¶ த்விகபேதம் ஏற்படுகிறது. உபாயம், உபேயம் இரண்டும் சாஸ்த்ரத்தால் ப்ரதிபாதிக்கத்தக்கவைகள். ப்ரஹ்மமானது † ஸித்தோபாயமாகவும், உபேயமாகவுமிருக்கிறது. பக்தியானது ஸாத்யோபாயம். இந்த ச்லோகத்திலுள்ள ஏழாம் வேற்றுமைப்பதங்களால் ஸித்தோபாயரூபமாயும் $ உபேயமாயுமிருக்கிற ப்ரஹ்மம் சொல்லப்படுகிறது. உண்டாகுதலென்கிற அர்த்தத்தை உணர்த்துவதால், 'புவன' சப்தம் கார்யவர்கத்தைக்குறிக்கிறது. ¶ ரூடிசக்தியினால் அந்தக்கார்யவர்கங்

---

† (இஷ்டம்) - உலகத்தில் சுருங்கச்சொல்லியதை விரித்துரைப்பது அறிஞர்களுக்கு இஷ்டமன்றோ.

$ வஸ்துநிர்தேசம் — க்ரந்தத்தினால் ப்ரதிபாதிக்கத்தக்க முக்யவிஷயத்தைக் கூறுதல்.

‡ தாது — க்ரியாவாசகம்.

* ஷட்கம் — ஆறு அத்யாயங்களடங்கிய ஒரு க்ரந்தஸந்தர்ப்பம்.

‡ விஷயம் — நிரூபணத்திற்கு உரித்தானது.

$ விஷயி — விஷயத்துடன் கூடியது.

¶ த்விகம் — இரண்டு அத்யாயங்களடங்கிய ஒரு க்ரந்தஸந்தர்ப்பம். சாரீரகசாஸ்த்ரத்திலுள்ள நான்கு அத்யாயங்களும் இரண்டு த்விகங்களாகப்பிரிக்கப்பட்டிருக்கின்றன. முதலாவதான ஸமன்வயாத்யாயம், இரண்டாவதான அவிரோதாத்யாயம், இவ்விரண்டுடன் கூடின க்ரந்தஸந்தர்ப்பமானது விஷயத்விகம் என்று கூறப்படுகிறது. எனெனில், சேதனாசேதனவிலக்ஷணமாயும், அகிலஜகதேககாரணமாயும் இருக்கிற ப்ரஹ்மமானது ப்ரதிபாத்யவிஷயமாக இருப்பதால். அதற்குமேலுள்ள ஸாதனாத்யாயம், பலாத்யாயம் இவ்விரண்டுடன் கூடின க்ரந்தஸந்தர்ப்பமானது விஷயத்விகமென்று கூறப்படுகிறது. எனெனில், இதிலுள்ள உபாஸனையும், பலமாகிய பரிபூர்ணப்ரஹ்மானந்தானுபவமும் ப்ரஹ்மத்தை விஷயீகரித்துக்கொண்டிருப்பதால்.

† ஸித்தோபாயம் — ஸித்தமான உபாயம். மனிதனுடைய ப்ரயத்னத்தால் பக்தி-ப்ரபத்திகளைப்போல் ஸாதிக்கத்தகாததாக இருப்பதால் இந்தப்பெயர்.

$ உபேயம் — உபாயத்தால் நாடத்தக்கது.

¶ ரூடம் — ரூடிசக்தியினால் அல்லது ஸங்கேதத்தால் அர்த்தத்தை உணர்த்துகிற சப்தம். பதங்கள் ரூடம், யௌகிகம், யோகரூடம், யௌகிகரூடம், என நான்கு வகைப்பட்டிருக்கின்றன. அவயவார்த்தத்தின் பொருத்தத்தால் பொருளை விளக்கும் சப்தம் யௌகிகம். அவயவசக்தியினாலும், ரூடியினாலும் ஒரே பொருளை உணர்த்தும் சப்தம் யோகரூடம். யோகசக்தியினாலும், ரூடியினாலும் தனித்தனிப்பொருள்களை உணர்த்தும் பதம் யௌகிகரூடம்.

களுககுக்காரணமான குயவன் முதலியவர்களுக்கு விலககம். புவனசப்தமோ மிகப் பெரிதாக இருக்கிற கார்யவிசேஷத்தில் ரூடியுள்ளது. 'அகில' என்கிற பதத்தால் எல்லா இடங்களிலும், எக்காலஙகளிலும் உள்ள அண்டஸமூஹங்கள் கூறப்படுகின்றன. அதனால் நான்முகன் முதலியவர்கள் விலக்கப்பட்டவர்கள். கொஞ்சம் அல்லது சிதறினது கிலம்; அப்படியில்லாதது அகிலம். கார்யங்களில் ப்ரஹ்மத்தினுடைய ஸ்ருஷ்டி முதலிய செய்கைகளுக்கு விஷயமாகாதது ஒன்றுமில்லை என்று பொருள். இந்த † வ்யதிரேக வசனத்தினால் உலகங்கள் பெரும்பான்மையாக ப்ரஹ்மஸ்ருஷ்டியாதிகளுக்கு விஷயமே; சிலது விஷயமல்லாமலுமிருக்கலாமென்கிற ஸந்தேகம நீக்கப்பட்டது. இது 'உனக்குத் தெரியாததொன்றுமில்லை' என்பது போன்றது. ஆகையால் 'ஸகல' என்று ¶ அன்வய முகத்தால் கூறப்படவில்லை. அகாரத்தினால் க்ரந்தத்தினது ஆரம்பம வரித்திப்பதின் பொருட்டு 'நிகில' என்று கூறவில்லை. $ " அ இதி பகவதோ நாராயணஸ்ய ப்ரதமாபிதானம், பகவதோ வாசகம் மகாரம் ப்ரயுஞ்ஜாநேந கிந்நம மங்களம் ந க்ருதம்;" என்றும் பெரியோர்களால் உரைக்கப்பட்டிருக்கிறது. இங்கு அகாரத்தை பகவத்வாசகமாகச் சொல்வதில் கரந்தகாரருக்குக்கருத்து இல்லாவிட்டாலும் பகவானைப்பொருளாக உணாத்தும் சக்திஸம்பந்தம் இந்த அக்ஷரத்துக்கு இருப்பதால் அகாரம் மங்களகரமானது. 'அ இ உண்' என்கிற இடத்தில் அகாரம்போல. ந என்கிற அவ்யயத்திற்கு நிஷேதத்தைச் சொல்லும் தன்மை இருந்தபோதிலும் நிஷேதிக்கத்தக்க வஸ்துவைச்சார்ந்து (ஸந்தர்ப்பத்திற்குத்தக்கபடி) மங்களமும், அமங்களமும் பொருள் ஆதலால் குறைவை மறுத்து சீர்மையைக்காட்டுவதில் தாத்பர்யமிருப்பதால் ' நிஷ்ப்ரத்யூஹமுபாஸ்மஹே ' இது முதலான நிர்தேசம்போல இதுவும் மிக்க மங்களகரமானது. 'அகில' சப்தத்தினால் † சிதசித்துக்களுடைய பேதமும் குறிக்கப்பட்டிருக்கிறது. (ஜன்ம) நித்யநைமித்திகப்ராக்ருதரூபமாயுள்ளது. (ஸ்தேமா) ஸ்திதி அதுவும் அந்தர்யாமி, விஷ்ணுவின் அவதாரம், லோகபாலர்கள், மன்வாதிகள், அரசர்கள், மாதா, பிதா முதலியவர்கள் முகமாகச்செய்யப்படுகிற பல்வகைப்பட்டுள்ளது விவக்ஷிக்கப்பட்டிருக்கிறது. * (பங்க:) நித்யம், நைமித்திகம், ப்ராக்ருதம் என மூன்று வகைப்பட்டுள்ளது. மோக்ஷமும் ‡ லயத்தில் அடங்கினதாக இருந்த போதிலும் அது சாஸ்த்ரத்

---

† வ்யதிரேகம் - சொல்லக்கருதிய விஷயத்தின் இன்மையை மறுத்துக்கூறுதல்.

¶ அன்வயம் - சொல்லக்கருதிய விஷயத்தை சப்தத்தால் நேராகக்கூறுதல்.

$ அ - என்கிற அக்ஷரமானது பகவானை நாராயணனுக்கு முதன்மையான வாசகம் பகவத்வாசகமான அகாரத்தை ப்ரயோகியாநின்ற க்ரந்தகர்தாவால் என்ன மங்களம் தான் அனுஷ்டிக்கப் படவில்லை! எல்லாமங்களங்களும் அனுஷ்டிக்கப்பட்டன என்று கருத்து.

† சித் - ஜீவன். அசித் - ஜடவஸ்து.

* (ப்ரளயம்) - நித்யம், நைமித்திகம், ப்ராக்ருதம் என மூன்று விதம். நாள்தோறும் ஸுஷுப்தி ஸமயத்தில் ஜீவன் ஆத்மாவினிடம் போய் லயிப்பது நித்யப்ரளயம். நான்முகன்உறக்கத்தை நிமித்தமாகக்கொண்டு உண்டாவது நைமித்திகப்ரளயம். ஸ்தூலமான ப்ரபஞ்சம் முழுவதும் ப்ரக்ருதியில் லயித்து அது பரமாத்மாவினிடம் ஏகீபாவத்தை அடைவது ப்ராக்ருதப்ரளயம்.

‡ லயமாவது காரணபூதமான ப்ரஹ்மத்தினிடத்தில் சேதனுசேதனவர்க்கங்கள் அனைத்தும் அதிஸூக்ஷ்ம ஸ்வரூபத்துடன் ஒடுங்குதல். அதாவது பிரிக்கமுடியாத ஓாதமான ஸம்யோகவிசேஷம் இந்த லயமானது மோக்ஷத்திலும் ஸமானம். ஆனால் இந்த

துக்கு முக்ய ப்ரயோஜனமானதால் இதில் உட்படுத்தப்படவில்லை. ஆனதுபற்றியே ஆதி சப்தத்திலும் உட்படுத்தத்தக்கதல்ல. அந்த 'ஆதி' சப்தமானது பொதுவாக இருப்பதால் மோக்ஷமென்கிற அர்த்தத்தை ஸ்பஷ்டமாக உணர்த்துவதற்குக்காரணமாகாது. பூர்வாசார்யர்களால் தனித்தே மிக்க ஸ்பஷ்டமாக மோக்ஷம் நிர்தேசிக்கப்பட்டிருக்கிறது. 'ஜகதுத்பவ, ஸ்திதி, ப்ரணாச, ஸம்ஸார, விமோசனாதய:' என்றும், 'ஜகஜ்ஜன்ம, ஸ்திதி, த்வம்ஸமஹானந்தைகஹேதவ:' என்றும் நிர்தேசங்கள். அவ்வாறே பகவத்பாஷ்யகாரரும் வேதார்த்தஸங்க்ரஹத்தில், 'உத்பவ, ஸ்திதி, ப்ரளய, ஸம்ஸார, நிவர்த்தனைக,ஹேதுபூத" என்று நிர்தேசித்திருக்கிறார். பாஷ்யத்திலும் 'நிகிலஜகதுதயவிபவமஹானந்தைககாரணம்' என்று தனித்தே எடுத்து உரைக்கப்பட்டிருக்கிறது. 'விநத' இது முதலான பதங்களால் ஸ்திதியில் அந்தர்பூதமான ஸ்வர்கம் முதலிய ஸாம்ஸாரிகபலப்ரதத்வத்திற்குத்தனித்து நிர்தேசம் வேண்டுவதில்லை. அஸாதாரணமாயும், பரமப்ரயோஜனமாயுமிருக்கிற மோக்ஷம் ஒன்றுக்கே தனித்து நிர்தேசம் வேண்டும். 'ஆதி' சப்தத்தால் ஸ்ருஷ்டியாதிகளுக்கு யோக்யமான அந்த:ப்ரவேசம், நியமனம், முதலியது குறிக்கப்படுகிறது. அவ்விதமாகவே பாஷ்யத்தில் 'ஜகதுத்பத்திஸ்திதிஸம்ஹாராந்த:ப்ரவேசநியமனாதிலீலம்' என்று தாமே சொல்லப்போகிறார். 'ஜன்ம, ஸ்தேம, பங்க,' என்கிற சொல்லினாலேயே அந்த:ப்ரவேசநியமனாதிகளும் அர்த்தஸித்தமென்று பொருள் கொள்வது யுக்தமல்ல. † அத்யாஸபக்ஷத்திலும் ‡ பரிணாமபக்ஷத்திலும் அதற்கு ஆர்திகத்வமில்லாமையால் அதை விலக்குவதின் பொருட்டு தன்மதத்தில் தனித்துச்சொல்லத்தக்கதாக இருத்தலாலும், சப்தத்தாலேயே விளங்கக்கூடியதாக இருக்க, அதற்கு அர்த்தத்தினால் ஸித்தியைக்கல்பிப்பது தகாததாலும், விரிவாகச்சொல்லப்பட்ட அர்த்தத்தை சுருக்கமாக எடுத்து உரைப்பதில் விவக்ஷிதம் பொருந்துதலாலும், அந்த:ப்ரவேசநியமனாதிகள் அர்த்தஸித்தங்களெனப்பொருள் கொள்வது பொருந்தாது. 'லீலா' சப்தத்தினால் பகவான் பரிபூர்ணனாக இருப்பதால் பிறருக்கு அதீனனாக இராமை, தன்னிஷ்டப்படி செய்தல்,முதலியவைகள் கூறப்படுகின்றன. இந்த விஷயம் மஹாபாரதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ¶ "அப்ரமேயோ நியோஜ்யஸ்ச யத்ர காமகமோ வசீ, மோததே பகவான் பூதைர்பால: க்ரீடநகைரிவ" என்று. அப்ரமேயத்வம் – பரிபூர்ணனான இருத்தல், அநியோஜ்யத்வம் – இதர சேதனனால் ப்ரேரணம் செய்யத்தகாமை. 'யத்ர காமகம': என்கிற இந்த பதத்தினால் காற்று, ஜலம், முதலியவற்றின் ப்ரேரணத்தினால் ஸம்பவிக்கிற அபுத்திபூர்வகமான சலனம் முதலிய சேஷ்டைகள் விலக்கப்படுகின்றன. அல்லது தன்னிச்சையினால் செய்கிற ப்ரவ்ருத்திக்குத்தடையில்லாமை. தனக்கு அதீனமான லீலோபகரணங்களோடு கூடி இருத்தல் 'வசீ' சப்தத்தின் அர்த்தம். எவனுக்கு விச்வம் வசமாக இருக்கிறதோ

லயத்தில் லயித்த வஸ்துக்களுக்கு மீண்டும் மீட்சி உண்டு. மோக்ஷத்தில் மீண்டுவருதலில்லை. இக்காரணம் பற்றியே ஆத்யந்திகலயம் மோக்ஷமெனக் கூறப்பட்டிருக்கிறது.

† அத்யாஸபக்ஷமாவது – இது 'அத்வைத' ஸித்தாந்தத்தைக்கருதிச்சொல்லியபடி. அத்யாஸமென்றால் ப்ரமம். கிளிஞ்சலைப்பார்த்து வெள்ளி என்று எண்ணுதல்போல் ப்ரஹ்மஸ்வரூபத்தை அறியாமையால் அதனிடம் ப்ரபஞ்சம் என்கிற ப்ரமம்.

‡ பரிணாமபக்ஷமாவது – இது யாதவப்ரகாசமதம். ப்ரஹ்மமே சேதனாசேதனரூபமாகப்பரிணமிக்கிறது என்பது அவர்கொள்கை. இது மிகவும் பாபகரமான பக்ஷம்.

¶ (அப்ர) – ப்ரத்யக்ஷாதிப்ரமாணங்களால் அறியத்தகாதவனும், பிறரால் ஏவத்தகாதவனும், தடையற்ற ப்ரவ்ருத்தியுள்ளவனும், உலகங்கள் அனைத்தையும் தன்வசத்தில் வைத்துக்கொண்டிருப்பவனுமான பகவான், சிறுவன் மரப்பாவைகளால் விளையாடுவது போல், ப்ராணிகளால் விளையாடுகிறான்.

அவன் வசீ. இந்த்ரிய பராதீனமான சேஷ்டை இல்லாமையைச்சொல்லுகிறதாகவாவது ‘வசீ’ சப்தம் ப்ரயோகிக்கப்பட்டிருக்கிறது. பாலகத்ருஷ்டாந்தத்தினால் லீலைக்கு வேறு ப்ரயோஜனத்தில் அபேக்ஷையில்லாமை விளக்கப்பட்டது. இதனால் ராஜாக்கள் பந்தயமாகப்பொருட்களைக்கட்டி ஆடும் சூதாட்டம் முதலியது விலக்கப்பட்டது. கார்யவர்கத்தை அபேக்ஷித்து பகவானுடைய மகிமை மிகப்பெரிது என்பது ‘க்ரீடநகை’: என்றதனால் பலித்தது. † ப்ரயோஜகனுடைய செய்கையன்றோ லீலை, ஆதலால் பங்கமொன்றை மாத்திரம் லீலை என்று சொல்லவேண்டியிருக்க ‡ ப்ரயோஜ்யவ்யாபாரங்களான ஜன்மஸ்திதிகளை எவ்வாறு லீலையென்று சொல்லலாமெனில், மறுமொழி கூறுகிறார். † “பஹுஸ்யாம் ப்ரஜாயேய” என்றே ச்ருதி. அதனால் ப்ரயோஜகவ்யாபாரம் போல் ப்ரயோஜ்யவ்யாபாரங்களையும் லீலை ¶ என்று சொன்னதினால் உபாதானத்வம் பலித்தது. ‘லீலா’ சப்தத்தால் நிமித்தத்வமும் ஸித்தித்தது. ‘பங்காதி’ என்ற சொல்லை ஈற்றிலுடைய பதஸமுதாயத்தினால் முதலத்யாயத்தின் அர்த்தம் சுருக்கமாகக்கூறப்பட்டது. பூர்ண காமனுக்குச்செய்கை ஒன்றும் பொருந்தாது என்கிற ஆக்ஷேபத்தைப்பரிஹரிக்கிற லீலா சப்தத்தால் விரோதபரிஹாரபரமான இரண்டாவது அத்யாயத்தின் அர்த்தம் ஸூசிக்கப்பட்டது. இவ்வாறாக பூர்வத்விகத்தில் சொல்லப்பட்ட காரணத்வரூபமான பரத்வம் சுருங்கக்கூறப்பட்டது. அவனே ஆச்ரயிக்கத்தக்கவன் என்பதற்காக உத்தரத்விகத்தில் சொல்லப்பட்டிருக்கிற $ அபிகம்யத்வ, மோக்ஷப்ரதத்வரூபமான ஸௌலப்யம் ஸங்க்ஷேபமாக (‘விநத’ இது முதலானதால்) கூறப்படுகிறது. மஹாமேருவுக்கும், மண்கட்டிக்கும் உள்ள கேவலமான மேன்மையும், ஸௌலப்யமும், நன்மையை அடையக்கருதி, நாடுகிறவர்களுக்கு பயன்படாததலால் அவைகளை விலக்குவதற்காக இந்த இரண்டு பதமும் விசேஷணங்கள். விசேஷமாக வணங்கினவர்கள் விநதர்கள். ந்யாஸோபாஸனரூபமான எல்லா வித்யாவிசேஷங்களிலும் நிலைபெற்றவர்கள் விவக்ஷிக்கப்பட்டிருக்கிறார்கள். பலவாறாக இருததலும் “ததுபர்யபி பாதராயண:, ஊர்த்வரேதஸ்ஸுச” இது முதலியதால் மேலே சொல்லப்போகிற தேவத்வ, மனுஷ்யத்வ,வர்ணாச்ரமாதி பேதத்தினாலும் ஜன்மம்,ஒழுக்கம,குணங்கள் இவைகளாலுமென்று கருதப்பட்டிருக்கிறது.

---

† ப்ரயோஜகன் - நியந்தா, அதாவது கார்யங்களில் ஏவுகிற ப்ரபு.

‡ ப்ரயோஜ்யன் - ஏவலைச்செய்கிற கிங்கரன்.

† (பஹுஸ்யாம்) - விசித்ரானந்தசித்சின்மிச்ரவ்யஷ்டிஜகத்ரூபமாய் நானே பஹுவாக ஆகக்கடவேன். அதற்காக தேஜோபன்னாதி ஸமஷ்டிரூபமாகப்பரிணமிக்கக்கடவேன்

¶ அத்ராதிகரணத்தில் சொல்லியபடி சராசரங்களனைத்தையும் ஸம்ஹரிப்பது பரமாத்மாவுக்கு விளையாட்டே. ஏனெனில் அவன் ஸ்வதந்த்ரனாதலால், தன்னிச்சையினாலே வேறு பலனை உத்தேசிக்காமல் செய்வதால். ஸ்ருஷ்டி, ஸ்திதிகள், நான்முகன் முதலியவர்களாலும், மாதாபிதாக்களாலும், செய்யப்படுவதால் அவ்விரண்டும் ப்ரயோஜ்யர்களுடைய க்ருத்யம். அது அவர்களுக்கு லீலையாகாது. ப்ரபுவால் நியமிக்கப்பட்டல்லவோ நிர்பந்தத்துடன் அந்தவேலையைச்செய்கின்றார்கள். ஆதலால் ஸ்ருஷ்டி, ஸ்திதிகள், ப்ரயோஜகனை பரமாத்மாவுக்கு எவ்வாறு லீலையாக ஆகும் எனில், ‘பஹுஸ்யாம் ப்ரஜாயேய’ என்று ஸங்கல்பித்து பரமாத்மா தானே சராசரரூபியாகத்தோன்றி உள்ளே ப்ரவேசம், நியமனம் இவைகளால் அவைகளுக்கு ஸ்திதியையும் செய்வதால் அந்த ஸ்ருஷ்டி, ஸ்திதிகளும், ப்ரயோஜகனை பரமாத்மாவின் வியாபாரங்களே. ஆகையால் மூன்று செய்கைகளும் பரமாத்மாவுக்கு லீலை. இவ்வாறு ஶ்ருதி கூறியதால் ப்ரஹ்மத்திற்கு உபாதானத்வமும், ‘லீலை’ என்றதினால் அதற்கே நிமித்தத்வமும், ஸித்தித்தது.

$ அபிகம்யத்வம் - ஸுலபமாக எல்லோராலும் நாடத்தக்க தன்மை.

பகவத்ஜ்ஞானத்தால் ஸத்தையைப்பெறுதல் 'பூத' சப்தத்தின் அர்த்தம். † " அஸ்தி ப்ரஹ்மேதி சேத் வேத, ஸந்தமேநம் ததோ விது:" என்றல்லவோ ஶ்ருதி. ஸ்வரூபலாபம் பெற்றவர்களுக்கும் ¶ " தேஷாமேவாநுகம்பார்த்தமஹமஜ்ஞானஜம் தம:, நாசயாம்யாத்மபாவஸ்தோ:, ததாமி புத்தியோகந்தம், அஹம் ஸ்மராமி மத்பக்தம்." இது முதலான வசனங்களால் ஸாக்ஷாத்கார, விரோதிநிவர்த்தனம் முதலியது பகவானுடைய பாரமாகவேயிருப்பதால் $ ஸ்வரூப ப்ரச்யுதி ஸம்பவிக்காது. பூதங்களுடைய வ்ராதம், பூதவ்ராதம். தன்னை ஆஶ்ரயித்தவர்களின் ஸம்பந்தம் பெற்றவர்கள்கூட அக்காரணத்தினாலேயே பகவானுக்கு ரக்ஷிக்கத்தக்கவர்களாக ஆகிறார்களென்று அபிப்ராயம். † 'ஆஸ்போடயந்தி பிதர: ப்ரந்ருத்யந்தி பிதாமஹா:, வைஷ்ணவோ ந: குலே ஜாதோ நஸ்ஸந்தாரயிஷ்யதி.' என்றும், ‡'பசுர்மனுஷ்ய: பக்ஷீ வா யே ச வைஷ்ணவஸம்ஶ்ரயா:, தேநைவ தே ப்ரயாஸ்யந்தி தத் விஷ்ணோ:பரமம் பதம்.' என்றும் வசனங்கள் கீழ் கூறிய அர்த்தத்தைத்தெரிவிக்கின்றன. 'ப்ராஹ்மணஸமாஜ:' என்கிற வ்யவஹாரத்தில் 'ஸமாஜ' ஶப்தம்போல் 'வ்ராத' ஶப்தம் ஆறாம் வேற்றுமையிலுள்ள பூதஶப்தத்தால் உணர்த்தப்பட்ட அர்த்தத்தோடு வேறுபடாத அர்த்தமுள்ளதாக இருக்கவேண்டுமென்றால், அவ்வாறு அல்ல. 'ராஜபரிஷத்' முதலிய வ்யவஹாரங்களில் ஆறாம் வேற்றுமையிலுள்ள 'ராஜ' ஶப்தத்தால் கூறப்பட்டிருக்கிற அர்த்தத்தைவிட வேறான அர்த்தம் ஸமுதாயத்தை போதிக்கிற சப்தத்திற்குக்காணப்படுவதால், ஸமாஸத்தில் அடங்கிய ஆறாம் வேற்றுமையானது ஸம்பந்தமாத்ரத்தைத்தெரிவிப்பதாலும், ஸமுதாயத்தால் போதிக்கத்தக்க அர்த்தமானது ஆறாம் வேற்றுமையிலிருக்கும் ஶப்தத்தால் சொல்லப்பட்டிருக்கிற அர்த்தத்தைக்காட்டிலும் வேறாக இருக்கக்கூடாதென்கிற நியமமில்லாமையாலும், ஸமுதாயவாசகஶப்தம் கேட்கப்பட்டவுடன் ஸமுதாயிகள் எவைகளென்று அபேக்ஷிக்கையில் பக்கத்திலிருக்கிற ஶப்ததால் சொல்லத்தக்க அர்த்த நிஷ்டமான ஸமுதாயம் ஶீக்ரமாக அறியப்படுகிறபடியால், ப்ராஹ்மணஸமுதாயம் முதலிய வ்யவஹாரங்களில் ஸமுதாயியை விட ஸமுதாயத்திற்கு பேதமின்மை அறியப்படுகிறது 'ராஜபரிஷத்' இது முதலிய வ்யவஹாரங்களில் ஸமுதாயியைக்காட்டிலும் ஸமுதாயத்திற்கு பேதமும் காணப்படுவதால் அந்தந்த ஸமுதாயக்ரஹண ப்ரமாணங்களை அனுஸரித்து அர்த்தத்தை வர்ணிப்பது யுக்தமாதலால் கீழ் கூறப்பட்ட அர்த்தமே பொருத்தமுள்ளது. இவ்விதம் பொருள் கொண்டதனால் 'வ்ராத' ஶப்தப்ரயோகம் அர்த்த

†(அஸ்தி ப்ரஹ்மேதி) - ப்ரஹ்மமிருக்கிறதென்று எவன் அறிகிறானோ அவனை ஸத் என்று அறிகிறார்கள்.

¶ (தேஷாமேவ) - அவர்களிடம் தயவினாலேயே அவர்களுடைய மனதிலிருந்துகொண்டு நான் அஜ்ஞானத்தினாலுண்டான இருளை நாசம் செய்கிறேன். அப்படிப்பட்ட புத்தியோகத்தைக்கொடுக்கிறேன். நான் பக்தனை ஸ்மரிக்கிறேன்.

$ ஸ்வரூபப்ரச்யுதி - பரமாத்மாவுக்கு சேஷனாக இருத்தலே சேதனனுக்கு ஸ்வரூபம். ஸ்வாதந்த்ரியம் வஹித்து இவன் ஒருகார்யத்தைச்செய்தானேயாகில் அது இவனுடைய சேஷத்வஸ்வரூபத்துக்கு விருத்தம். அப்பொழுது சேஷத்வரூபமான ஸ்வரூபத்தினின்று இவனுக்கு நழுவுதலுண்டாகும்.

† (ஆஸ்போடயந்தி) - நம்முடைய குலத்தில் வைஷ்ணவன் பிறந்துவிட்டான்; அவன் நம்மை உத்தாரணம் பண்ணப்போகிறான்? என்று பித்ருக்கள் கைகொட்டுகிறார்கள். பிதாமஹர்கள் அதிகமாகக்கூத்தாடுகிறார்கள்.

‡ பசுவோ, மனிதனோ, பக்ஷியோ, எவர்கள் வைஷ்ணவஸம்பந்தம் பெற்றவர்களோ அவர்கள் அந்த ஸம்பந்தத்தினாலேயே அப்படிப்பட்ட விஷ்ணுவினுடைய ஸர்வோத்தமஸ்தானத்தை அடைவார்கள்.

முள்ளதாக ஆகும். இஷ்டத்தை அடைவித்தல், அநிஷ்டத்தை விலக்குதல், ரக்ஷை எனப்படும். அதில்(ஏகதீக்ஷ:) ப்ரதான ஸங்கல்பமுள்ளவன். தன் ஸத்தையைக்காட்டிலும் தன்னை அணுகினவர்களை ரக்ஷிக்கிற ஸங்கல்பத்தை நிறைவேற்றுவது அபிமதமாதலால் ரக்ஷை ப்ரதானமாயிற்று. * "அப்யஹம் ஜீவிதம் ஜஹ்யாம்." என்று கூறப்பட்டிருக்கிறது. ‡ "காமமாத்மானம், பார்யாம், புத்ரம் வா, உபருந்த்யாத் நத்வேவ தாஸகர்மகரம்." என்று ஆபஸ்தம்பர் சொல்லியிருக்கிறார். இப்படிப்பட்ட இந்த ஸ்ம்ருதி எவனுடைய ஆஜ்ஞையோ அவனுக்குக்கூட அப்படி அநுஷ்டிப்பது மிகவும் அபிமதம் என்பது 'அப்யஹம் ஜீவிதம் ஜஹ்யாம்.' என்கிறதினால் அறியப்படுகிறது. தீக்ஷாப்ராதான்யத்தால் ரக்ஷாப்ராதான்யம் பலித்தது. 'தீக்ஷா' ஶப்தத்தினால் ஆஶ்ரிதரக்ஷணம் ஸ்வப்ரயோஜனமென்று காண்பிக்கப்பட்டது. வ்ரதத்தினின்று தவறாதலாலும், அதை நிறைவேற்றுதலாலும், ஸம்பவிக்கிற அர்த்தமும், நன்மையும், வ்ரதத்தை அனுஷ்டிப்பவனுக்கே 'ததாம்யேதத் வ்ரதம் மம.' என்று சொல்லியிருப்பதால் ஆஶ்ரித ரக்ஷணம் அவனுடைய வ்ரதம். 'விநத' 'ரக்ஷா' ஶப்தங்களால் மூன்றாவது, நான்காவது அத்யாயார்த்தங்கள் ஸங்க்ரஹிக்கப்பட்டன. இவ்வண்ணமாக ஜகத்காரணத்வ, மோக்ஷப்ரதத்வங்கள் கூறப்பட்டன. இவ்விரண்டும் ராஜனுக்கு சத்ரசாமரங்கள் போல் ப்ரஹ்மத்துக்கு அஸாதாரணசின்ஹங்கள். பரத்வ, ஸௌலப்ய, குணங்கள் ஆஶ்ரயிக்கத்தக்க தன்மைக்குக்காரணங்களாக அறியப்பட்டிருக்கின்றன. எப்படியென்றால் † 'ய ஏநம் விதுரம்ருதாஸ்தே பவந்தி.' என்று தொடங்கி'ஸம்பாஹூப்யாம் நமதி ஸம்பதத்ரைர்த்யாவா ப்ருதிவீ ஜநயந்தேவ ஏக:.' என்றும் ¶'ஸர்வலோகமஹேஶ்வரம்,ஸுஹ்ருதம் ஸர்வபூதாநாம்,ஜ்ஞாத்வா மாம் ஶாந்திம் ருச்சதி.' என்றும் ப்ரமாணத்தைத்தெரிந்து கொள்வோமேயாகில் ப்ரமேயஶரீரம் திடமாக ஸித்திக்கும். ஆதலால் இரண்டு த்விகங்களுக்கும் ஶேஷமாயிருக்கிற நான்கு ஸூத்ரங்களுடைய அர்த்தத்தைச்சொல்லிக்கொண்டு ப்ரமேயாநுரூபமான ப்ரமாணத்தைக்காட்டுகிறார். (ஶ்ருதிஶிரஸி விதீப்தே) என்பதால். 'எப்பொழுதும் கேட்கப்படுகிறது' என்கிற அவயவார்த்தத்தால் 'ஶ்ருதி' என்று வேதத்திற்குப்பெயர். † அபௌருஷேயமானதால் தோஷமின்மை விவக்ஷிக்கப்பட்டது. இதனால் ப்ராமாண்யம் முதலிய

---

* (அப்யஹம்) - உயிரை விட்டாலும் விடுவேன்.

‡ (காமமாத்மானம்) - இது ஆபஸ்தம்பதர்மத்தில் இரண்டாவது ப்ரச்னம், ஒன்பதாவது கண்டிகையிலிருக்கிற ஸூத்ரம்.

தாஸனாக ஆகி எவன் ஊழியம் செய்கிறானோ, அவன் தாஸகர்மகரன். அவனை உபரோதிக்கலாகாது-அன்னத்தைக்கொடாமல் பசியால் வருந்தும்படி செய்யலாகாது.

தன்னையோ, மனைவியையோ, புத்ரனையோ அன்னபானாதிகளின் குறைவினால் ஸம்பவிக்கக்கூடிய வருத்தத்துக்கு உள்ளாக்கிக்கொள்ளலாம். அடிமைபூண்டவனை ஒரு பொழுதும் வருத்தலாகாதென்று கருத்து.

† (ய ஏனம்) - எவர்கள் இவனை அறிகிறார்களோ, அவர்கள் முக்ததுல்யர்களாக ஆகிறார்கள்.

¶ (ஸர்வலோகமஹேஶ்வரம்) - எல்லா உலகங்களுக்கும் மஹேச்வரனாக இருப்பவனும், எல்லா ப்ராணிகளுக்கும் ஸுஹ்ருத்தாகவுமிருக்கிற என்னை அறிந்து ஶாந்தியை அடைகிறான்.—கீதை.

† அபௌருஷேயம் - மனிதனால் உண்டு பண்ணப்படாதது.

வற்றில் உபயோகமுள்ள பூர்வமீமாம்ஸாந்யாயங்களுக்கு † உபஜீவ்யத்வம் இங்கு ஸூசிப்பிக்கப்பட்டது. ‘ஶிரஸ்’ ஶப்தத்தால் அநந்யபரத்வம் விவக்ஷிக்கப்பட்டது. மந்த்ர, ப்ராஹ்மண, பாகங்களாயிருக்கிற உபநிஷத்துகள் பரதத்வத்தையே ப்ரதானமாக ப்ரதிபாதிக்கின்றனவன்றோ. (விதீப்தே) பூர்வபாகத்திலும் அக்னி, இந்திரன் முதலான தேவதாரூபமாக ப்ரஹ்மமே ப்ரதிபாதிக்கப்படுகிறது என்பது ‘ததேவாக்னிஸ்தத்வாயு:’ இது முதலான உபநிஷத்வாக்யத்தினாலேயே அறியப்படுவது பற்றி விசேஷித்து ப்ரகாசிக்கிற தன்மை விதீப்தமென்று கூறப்பட்டது; அல்லது, அல்பஸாரகத்துக்கு ஸாதனபூதமாயும், துக்கரூபமாயுமிருக்கிற * ப்ரவ்ருத்தி, ‡ நிவ்ருத்திரூபமான ப்ரயோஜனம் பூர்வபாகத்தில் தீப்தம். ப்ரஹ்மமோவென்றால், ஸ்வயம் நிரதிஶயாநந்தரூபமாகையால் பரமபுருஷார்த்தபூதமாக மேல்பாகத்தில் விசேஷமாய் தீப்தம் என்று கருத்து. இதனால் † ‘ஸமந்வயாதிகரணத்தின் அர்த்தம் ஸூசிக்கப்பட்டது. † வ்யுத்பத்திலக்ஷண ஸௌஷ்டவமில்லாவிடில் ஶ்ருதிஶிரஸால் அறியத்தக்க தன்மை பொருந்தாததாலும், ‘ஶ்ருதிஶிரஸ்’ ஶப்தமானது வேறு ப்ரமாணங்களுக்கு வ்யாவர்த்தகமாயிருத்தலாலும், அதற்கு முந்தின மூன்று அதிகரணங்களின் அர்த்தமும் இங்கு த்யோதனம் செய்யப்பட்டதாக ஆகிறது. ‘ப்ரஹ்மணி’ என்ற ஸாமாந்யபதம் உபநிஷத்தில் கூறப்பட்டுள்ள ‘ஸத் ப்ரஹ்ம, ஆத்மா, இது முதலான ஸாமாந்ய சப்தங்களைக்காட்டுவதற்காக. (ஸ்ரீநிவாஸே) என்ற விசேஷ பதமானது நாராயணஶப்தம் முதலான விசேஷ ஶப்தங்களைக்காட்டுவதற்காக. ‘பஶுநா யஜேத’ ‘ச்சாகஸ்ய வபாயா மேதஸ:’ என்கிற இடத்தில் § ‘ச்சாகோவா மந்த்ரவர்ணாத்’ என்கிற ஸூத்ரத்தில் சொல்லப்பட்டிருக்கிற ந்யாயத்தினால் ‘பசு’ ஶப்தத்துக்கு ச்சாகத்தில் பர்யவஸாநம் நிர்ணயிக்கப்பட்டிருப்பதால், ஸாமந்யவாசக சப்தங்களுக்கு விசேஷவாசகஸப்தமிருந்தால், அதில் பர்யவஸாநம் ஶாஸ்த்ரஸம்மதம்.

† உபஜீவ்யத்வம் – ப்ராதான்யம்.

* ப்ரவ்ருத்தி – விஷயாநுபவேச்சையால் இந்த்ரியங்களின் மூலமாய் வெளிப்படும் மனதின் போக்கு.

‡ நிவ்ருத்தி – விஷயாநுபவங்களினின்று உண்டாகும் மனதின் ஒழிவு.

† ஸமந்வயாதிகரணம் நான்காவது. இதில் பரமபுருஷார்த்தபூதமான ப்ரஹ்மம் வேதாந்தவாக்யங்களில் அபிதேயமாக நன்கு அந்வயிப்பதால் ப்ரஹ்மத்துக்கு ஶாஸ்த்ரப்ரமாணகத்வம் ஸித்திக்கிறதென்பது ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு முந்தி முறையே மூன்று அதிகரணங்கள்:—முதலாவது, ஜிஜ்ஞாஸாதிகரணம். இரண்டாவது, ஜன்மாத்யதிகரணம். மூன்றாவது, சாஸ்த்ரயோந்யதிகரணம்.

† வ்யுத்பத்தி—பதங்களுக்கு அர்த்தங்களோடு ஸம்பந்தம் அறிந்து கொள்ளுதல்.

† ‘ச்சாகோவா மந்த்ரவர்ணாத்’–இது பூர்வமீமாம்ஸாஸூத்ரம். ச்சாகபசுந்யாயமாவது.– ஓரிடத்தில் ‘பசுநா யஜேத.’ என்கிற விதியினால் பசுகரணகமான யாகம் செய்யத்தக்கதென்று ஏற்படுகிறது. ‘பசு’ ஶப்தம் நான்குகாலுள்ள எல்லா ப்ராணிகளையும் குறிப்பதால் எந்தப்பசுவைக்கொண்டு யாகம் செய்கிறதென்று ஸந்தேஹம் வரின், மேலே, ச்சாகஸ்ய வபாயா:, என்கிற வாக்யத்தில்‘ச்சாக’பதமிருப்பதால் ப்ரக்ருதமான பசுசப்தம் ச்சாகரூபமான பசுவைக்குறிக்கிறதென்று ஸாமாந்யமான பசுபதத்துக்கு விசேஷமான ச்சாகபதத்தில் பர்யவஸாநம் செய்வது. அந்யதாநுபபத்தியினால் ஸாமாந்யவாசகசப்தங்களை விசேஷங்களிலேயே பர்யவஸாநம் செய்யவேண்டும்.

இதனால் ஸத்ப்ரஹ்ம, ஆத்மா, முதலான ஸாமாந்ய ஶப்தங்களுக்கு நாராயணரூப விசேஷத்தில் பர்யவஸாநம ஸூசிக்கப்பட்டது 'ஸ்ரீநிவாஸ' ஶப்ததிதுக்கு ஸமபத்துகளுக்கு இருப்பிடமாயுள்ளவர் என்கிற அவயவார்த்தத்தினால் நித்யவிபூதியுடன் கூடியிருத்தல ஸூசிக்கப்பட்டது ரூடிசக்தியினால தரிமூர்த்திஸாம்யமும், த்ரிமூர்த்திகளுக்கு ஐக்கியமும், ப்ரஹ்மமானது தரிமூர்த்திகளுக்கு மேலாக இருக்கிறது என்பதும், நிஷேதிக்கப்பட்டது, ஈஶ்வரனே ப்ரஹ்மம; அவன் மும்மூர்த்திகளைவிட வேறாயிருக்கும் ஸதாசிவன்; ப்ரஹ்மாதிகளான மூவரும் ஈச்வரத்தன்மையில்லாதவர்கள் என்கிற பக்ஷமும் நிராகரிக்கப்பட்டது. (பரஸ்மிந்) இந்தப்பதத்தினால் 'பரமத: ஸேத்வன்மாந' என்ற அதிகரணத்தின் அர்த்தஸூசனம். அதனால் 'ப்ரஹ்மவிதாப்நோதி பரம்' என்கிற இடத்தில் ப்ராப்யத்தை பரஶப்தத்தால் சொல்லியிருப்பதினால் உபேயாந்தரவ்யாவ்ருத்தி ஏற்பட்டது. அல்லது ஜகத்காரணத்வவிஷயத்தில சங்கிக்கப்பட்ட தோஷத்தை விலகுவதற்காக, 'நஸ்தாநதோபி' என்கிற அதிகரணஸித்தமானதும், † சோதகவாக்யங்களால் சொல்லப்பட்டதுமான ¶ உபயலிங்கத்துடன் கூடியிருத்தலால் உண்டான $ வைலக்ஷண்யம் ஸூசிக்கப்பட்டது. பிறகு உபாயஸ்வரூபத்தைச்சொல்லுகிறார். (சேமுஷீ) இது ஸாமான்யசப்தம். (பக்திரூபா) இது விசேஷசப்தம். இந்த இடத்திலும் 'சசாகோ வா மந்த்ரவர்ணாத்'. என்கிற ந்யாயம் அங்கீகரிக்கத்தக்கது. 'சேமுஷீ' ஶப்தத்தை எடுத்ததினால் * ஜ்ஞானகர்மங்களுடைய ஸமுச்சயம் வ்யாவ்ருத்திக்கப்பட்டது. (பக்திரூபா) என்றதினால் வாக்யார்த்தஜ்ஞானம் வ்யாவ்ருத்திக்கப்பட்டது. $ 'ஶுத்தபாவம் கதோ பக்த்யா ஶாஸ்த்ராத் வேத்மி ஜநார்தனம்,' 'பக்த்யாத்வநந்யயா, ஜ்ஞாதும், த்ரஷ்டுஞ்ச தத்வேந ப்ரவேஷ்டுஞ்ச' என்று சொல்லப்பட்டிருக்கிற ரீதியில் ஜ்ஞானத்துக்கும, தர்சனத்துக்கும், ப்ராப்திக்கும் ஸாதனமான பக்தியும் இங்கு விவக்ஷிக்கப்பட்டிருக்கிறது; பொதுவாக 'பக்திரூபா' என்று சொல்லியிருப்பதால். "அஹமஸ்ம்யபராதாநாமாலய:" இது முதலான இடத்தில் கூறியிருக்கிற வண்ணம் தன்னை அனுஸந்தித்துக்கொண்டு சொல்லுகிறார் (மம) என்று. (பவது) பக்தி மிகவும் ருசியுள்ளதாக இருப்பதால் பக்தர்களாலேயே பிரார்த்திக்கத்தக்கதாக இருத்தல் ஸூசிக்கப்பட்டது. அல்லது, பக்தியானது எல்லோருக்கும் ருசிக்காதேன்றோ வெனில், கூறுகிறார் (மம) என்று. பித்தம் தணிந்தவனுக்குப்பால் மிகவும் ருசியுள்ளதாகத் தோன்றுவதுபோல, ப்ரதிபந்தகமான பாபமற்ற எனக்கு என்று கருத்து. (ரக்ஷைகதீக்ஷே) என்கிற பதம் தொடங்கி (பரஸ்மிந்) என்கிற பதத்தை ஈறாககொண்ட பதங்களால் உபேயபூதனாக இருப்பவனே ஸித்தோபாயமென்று கூறப்பட்டது. (பக்திரூபா) என்பதால் ஸாத்யோபாயம் சொல்லப்பட்டது. இந்த ஶ்லோகத்தில் ஶாஸ்த்ரத்தினால் ப்ரதிபாதிக்கத்தக்க விஷயங்களில் ஏகதேசமான பரபக்ஷநிராஸமும் அர்த்தாத் ஸூசித

---

† சோதகவாக்யம்—ஸத்யம் ஜ்ஞானமனந்தம் ப்ரஹ்மம.

¶ உபயலிங்கம்—ஹேயப்ரத்யநீகத்வம். கல்யாணகுணைகதானத்வம்.

$ வைலக்ஷண்யம்—வேற்றுமை. (வேறுபாடு)

* கர்மயோகமானது ஜ்ஞானத்தை இடையிட்டும், இடையிடாமலும் மோக்ஷஸாதகமென்று விசிஷ்டாத்வைதவேதாந்திகளின் கொள்கை. ஜ்ஞானம், கர்ம, இரண்டும் சேர்ந்தே ஸமப்ரதானங்களாக இருந்து மோக்ஷத்தைப்பயக்கிறதென்பது மதாந்தரஸ்தர்களின் கொள்கை.

$ (சுத்தபாவம்) - பக்தியினால் சுத்தமான சித்தவ்ருத்தியை அடைந்திருப்பவனான நான் ஶாஸ்த்ரத்தினால் ஜநார்தனனை அறிகிறேன். (மஹாபாரதம்.)

மாகிறது. 'ஜன்ம, க்ஷேம, பங்காதி,' சப்தங்களால் † ஒரே காலத்தில் ஸ்ருஷ்ட்யாதிகளை ஏற்றுக்கொள்ளாதவர்களான பாட்டர்களும், ப்ராபாகரர்களும் திரஸ்கரிக்கப்பட்டார்கள். 'லீலா' பதத்தினால் ஈச்வரனை ஸாக்ஷியாக மாத்திரம் இருப்பவனாக ஒப்புக்கொள்கிற ஹிரண்யகர்பமதம் நிரஸிக்கப்பட்டது 'விநத' இது முதலான பதங்களால் ஜீவன்களுக்கு அந்யோன்யம் அபேதத்தையும், ப்ரஹ்மத்தோடு அபேதத்தையும் சொல்லுகிற ப்ரஹ்மாஜ்ஞானவாதிகளும் நிரஸிக்கப்பட்டார்கள். 'ஶ்ருதிஶிரஸி' என்கிற பதத்தால் வேதபாஹ்யர்களான சார்வாக, பௌத்த, ஜைனர்கள் நிரஸிக்கப்பட்டார்கள். அதே பதத்தினால் ஆநுமானிகேச்வரவாதிமதமும் தகர்க்கப்பட்டது. 'ப்ரஹ்மணி' என்கிற பதத்தினால் அப்ரஹ்மாத்மகப்ரதானத்தையும், பரமாணுவையும் காரணமாகக் கூறுகிற ஸாங்க்ய, வைசேஷிகாதிமதங்கள் நிரஸிக்கப்பட்டன. 'ஸ்ரீநிவாஸ' பதத்தினால் பாசுபதாதிமதம் நிரஸிக்கப்பட்டது. இதனாலேயே ஈச்வரோத்தீர்ணப்ரஹ்மாதிகளும், பேதாபேதவாதிகளும் திரஸ்கரிக்கப்பட்டார்கள். 'பேமுஷீ' பதத்தால் ஜ்ஞானகர்மஸமுச்சயத்திற்கு உபாயம் சொல்லுகிறவர்களின் மதம் நிரஸிக்கப்பட்டது. 'பக்திரூபா' என்றதினால் வாக்யார்த்தஜ்ஞானமாத்திரத்தை உபாயமாகச்சொல்லுகிறவர்கள் தகர்க்கப்பட்டனர். என அனுஸந்திக்கத்தக்கது. (மங்கள ஶ்லோகவ்யாக்யானம் முற்றிற்று.)

𑌪𑌾𑌰𑌾𑌶𑌰𑍍𑌯𑌵𑌚𑌸𑍍𑌸𑍁𑌧𑌾𑌮𑍁𑌪𑌨𑌿𑌷𑌦𑍍𑌦𑍁𑌗𑍍𑌧𑌾𑌬𑍍𑌧𑌿𑌮𑌧𑍍𑌯𑍋𑌦𑍍𑌧𑍃𑌤𑌾𑌂
𑌸𑌂𑌸𑌾𑌰𑌾𑌗𑍍𑌨𑌿𑌵𑌿𑌦𑍀𑌪𑌨𑌵𑍍𑌯𑌪𑌗𑌤𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌤𑍍𑌮𑌸𑌂𑌜𑍀𑌵𑌨𑍀𑌂 ।
𑌪𑍂𑌰𑍍𑌵𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌸𑍁𑌰𑌕𑍍𑌷𑌿𑌤𑌾𑌂 𑌬𑌹𑍁𑌮𑌤𑌿𑌵𑍍𑌯𑌾𑌘𑌾𑌤𑌦𑍂𑌰𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌂
𑌆𑌨𑍀𑌤𑌾𑌂 𑌤𑍁 𑌨𑌿𑌜𑌾𑌕𑍍𑌷𑌰𑍈𑌸𑍍𑌸𑍁𑌮𑌨𑌸𑍋 𑌭𑍌𑌮𑌾𑌃 𑌪𑌿𑌬𑌨𑍍𑌤𑍍𑌵𑌨𑍍𑌵𑌹𑌂 ॥

உபநிஷத்தாகிற பாற்கடலின் மத்தியிலிருந்து எடுக்கப்பட்டதும், ஸம்ஸாரமாகிற நெருப்பின் இடைவிடாத எரிச்சலால் ப்ராணபூதமான பரமாத்மாவை லபிக்கப்பெறாத ஆத்மாக்களை உஜ்ஜீவிக்கச்செய்கிறதும், பூர்வாசார்யர்களால் நன்கு பாதுகாக்கப்பட்டதும், வெகு மதிவிகல்பங்களால் ஸமீசீனார்த்தங்களுக்கு வ்யாகாதம் நேர்ந்ததினால் அவகாஹிக்க அரிதாம்படி தூரத்திலே விலகி நின்றதும், அம்ருதாக்ஷரங்களால் ஸமீபத்தில் கொண்டுவரப்பட்டிருக்கிறதுமான வ்யாஸருடைய வசனாம்ருதத்தை இவ்வுலகில் நுண்ணறிவினர் நாள்தோறும் பருகுவாராக.

†'பஹுஸ்யாம் ப்ரஜாயேய' என்று ஸங்கல்பித்து உடனே அசேதனவர்க்கங்களை உண்டுபண்ணி, அவைகளில் அந்தந்த கர்மாக்களுக்குத்தக்க ஜீவன்களை ப்ரவேசிக்கச்செய்து, அந்த ஜீவன்களுக்குள் தானும் அந்தர்யாமியாக அநுப்ரவேசித்து உலகத்தை ரக்ஷிப்பதால், பரமபுருஷனால் செய்யப்படும் ப்ரபஞ்சஸ்ருஷ்டியும், ரக்ஷணமும் ஒரே ஸமயத்திலென்றே ஏற்படுகின்றன. 'யஸ்ய ப்ரஹ்ம ச க்ஷத்ரஞ்ச உபே பவத ஓதந:; ம்ருத்யுர்யஸ்யோபஸேசநம்' என்கிற ச்ருதியினாலும், 'நஷ்டே லோகே' என்கிற உபப்ரஹ்மணவசனங்களினாலும் ப்ரபஞ்சத்தின் உபஸம்ஹாரம் ஒரே ஸமயத்திலேதான்.

வேதத்திலேயே உபாயோபேயங்கள் அறியப்படுங்கால், உம்மால் சொல்லத்தக்கது யாது? என்றால் அதற்கு உத்தரமருளிச்செய்கிறார். 'பாராசர்ய' என்று. தன் ப்ரபந்தத்துக்கு பரமப்ரயோஜனமாதலால் ஸித்தரூபமாகிய பரமவிஷயமானது முன் ஶ்லோகத்தில் காண்பிக்கப்பட்டது. ஸாத்யரூபமான ப்ரயோஜனமும் 'ரக்ஷா' பதத்தினால் அதி ஸங்க்ஷேபமாகக்காட்டப்பட்டது. பிறகு இரண்டாவது ஶ்லோகத்தில் தன் ப்ரபந்தத்துக்கு மத்ய விஷயமும், பரம்பரையாக ப்ரஹ்மவிஷயத்வமும், தன் ப்ரபந்தத்துக்கு ஸம்யக்ஞானம் அடுத்ததான மத்யப்ரயோஜனமென்பதும், பரம்பரையாக முக்தியானது பரம ப்ரயோஜனமென்பதும், தன்னால் வ்யாக்கியானிக்கத்தக்க க்ரந்தமானது ப்ரமாணமூலமென்பதனால், வ்யாக்யேயங்களான மற்ற க்ரந்தங்கள் ப்ரமாணத்தை மூலமாக உடையவைகளல்லவென்றும், தன்னால் வ்யாக்யானிக்கப்படும் 'ப்ரஹ்மஸூத்ரத்தை விஷயமாகக்கொண்ட மற்ற பாஷ்யங்களை விலக்குவதின் பொருட்டு, தன்னால் செய்யப்பட்ட ப்ரபந்தத்துக்கு ஸாம்ப்ரதாயிகத்வம் முதலியதும் சப்தத்தால் சொல்லப்படுகிறது. ஸ்துதிரூபமான, குருபாஸநரூபமங்களாசாரமும் ஶ்லோகத்தின் அர்த்தத்தினால் செய்யப்படுகிறது. † "ஜாயமாநம் ஹி புருஷம் யம் பச்யேந்மதுஸூதன:" ¶ "தத் வித்தி ப்ரணிபாதேந" ‡ "ததாமி புத்தியோகம் தம்." இது முதலியவைகளால் ஆசார்யனை அனுஸரிப்பது குவதற்குங்கூட பகவத்கடாக்ஷம் ஹேதுவென்று அறியப்படுவதால், பரதேவதோபாஸனத்துக்கு அடுத்தது குருபாஸனம் என்பது யுக்தம். அவ்வாறே ஶ்ருதி †"யஸ்ய தேவே பரா பக்திர்யதா தேவே ததா குரௌ." என்று முன்னோர்களாலேயே அவ்வாறு ஆசரிக்கப்பட்டிருக்கிறது. எப்படியெனில், பகவானை வைசம்பாயனரால் $ 'நமஸ்க்ருத்ய ஹ்ருஷீகேசம்' என்றும்; ‡ 'நமோ பகவதே தஸ்மை வ்யாஸாய." என்று த்ரமிடாசார்யர்களாலும்; ¶ "நம: ப்ரவரகுணைகாஸ்பதாய, ஸ்திரத்ரஸகுலபீஜகும்பபூதாய, புவனகோசஸ்ய கோப்த்ரே ப்ரஹ்மணே, நமோ ஜைமிநயே, வேதரஹஸ்யஸம்புடநிகூடவிஷ்பாரயித்ரே ந்யாயப்ரஜ்வலிதசேதஸே, நமோஸ்த்வாசார்யேப்ய:" என்று, பிந்தினவர்களாலும், * "விசுத்தஜ்ஞான தேஹாய" † "அபிவந்த்ய குருனதௌ"

† (ஜாயமானம்)—பூமியில் ஜனிக்கும்போது எந்த சேதனனை மதுஸூதனன் கடாக்ஷிக்கிறானோ.

¶ (தத்வித்தி)—ஸாஷ்டாங்க வந்தனத்தினால் அதை அறிவாயாக:—(கீதை)

‡ (ததாமி)—அந்த புத்தியோகத்தை நான் கொடுக்கிறேன்:—(கீதை)

† (யஸ்ய)—எவனுக்கு பரமாத்மாவினிடம் பரபக்தி இருக்கிறதோ; எப்படி பரமாத்மாவினிடத்திலோ அப்படியே ஆசார்யனிடத்திலும்.

$ (நமஸ்க்ருத்ய)—ஹ்ருஷீகேசனை நமஸ்கரித்து.

‡ (நமோ பகவதே)—பகவானை அந்த வ்யாஸருக்கு வந்தனம்.

¶ (நம:ப்ரவர)—மிக்க சிறப்புற்ற குணங்களுக்கு முக்ய ஆதாரமாக இருப்பவரும், ஸ்தாவர, ஜங்கம ஸமூஹங்களாகிற வித்துகளுக்கு ஸ்தாபககும்பம் போன்றவரும், புவனகோசத்தை ரக்ஷிப்பவரும், ஸ்வரூபத்தாலும், குணங்களாலும் எல்லையற்ற மேன்மைவாய்ந்த ப்ருஹத்வ' குணம் பொதிந்தவருமான பரமாத்மாவுக்கு வந்தனம். வேதங்களாகிற ரஹஸ்யார்த்த ஸம்புடங்களில் மறைத்து வைக்கப்பட்டிருக்கிற அர்த்தரத்னங்களை ப்ரகாசப்படுத்துகிறவரும், ந்யாயங்களால் நன்றாக ஜ்வலிக்கிற மனதை உடையவருமான ஜைமினிக்கு வந்தனம். ஆசார்யர்களின் பொருட்டு வந்தனம்.

* (விசுத்த) - பரிசுத்தமான ஜ்ஞானத்தை உருவமாகக்கொண்ட,—

† (அபிவந்த்ய) - தொடக்கத்தில் ஆசாரியர்களை நமஸ்கரித்து,—

என்றும் ¶ "ப்ரணம்ய ஹேதுமீச்வரம் முநிம் காணுதமன்வதே" என்றும் ஆசரிக்கப்பட்டது. 'பாராசர்ய' சப்தத்தினால் பிறப்பின் ஏற்றம் கூறப்பட்டது. $ 'ஸஹோவாச வ்யாஸ:பாராசர்ய:' என்று ஶ்ருதியில் ப்ரஸித்தம். அவருக்கே பாதராயணர் என்றும் பெயர்.

† "த்வீபே பதரிகாமிச்ரே பாதராயணமச்யுதம், பராசராத் ஸத்யவதீ புத்ரம் லேபே பரந்தபம்" என்று மஹர்ஷியினாலேயே கூறப்பட்டிருக்கிறது. என்றாலும், வேறு ரிஷியினிடம் கூட பாதராயணசப்தம் ப்ரயோகிக்கப்பட்டிருக்கிறது. ஆயினும் ஸூத்ரகாரரைச் சொல்லுகிற பாதராயண சப்தம் பாராசரபுத்ரரையே குறிக்கிறது. அவ்வாறே ஸ்காந்தத்தில் வ்யக்தமாக உரைக்கப்பட்டிருக்கிறது. ‡ "நாராயணாத் விநிஷ்பந்நம் ஜ்ஞானம் க்ருதயுகே ஸ்திதம்,கிஞ்சித்ததந்யதாபூதம் த்ரேதாயாம்,த்வாபரே கிலம், கௌதமஸ்ய ரிஷே:சாபாத். ஜ்ஞானே த்வக்ஞானதாம் கதே. ஸங்கீர்ண புத்தயோ தேவா ப்ரஹ்மருத்ரபுரஸ்ஸரா: சரண்யம் சரணம் ஜக்முர்நாராணமநாமயம், தைர்விக்ஞாபிதகார்யஸ்து பகவான் புருஷோத்தம: அவதீர்ணோ மஹாயோகீ ஸத்யவத்யாம் பராசராத், உத்ஸன்னான் பகவான் வேதானுஜ்ஜஹார ஹரி:ஸ்வயம். சதுர்தா வ்யபஜத்தாம்ஶ்ச சதுர்விம்சதிதா புன: சததா சைகதா சைவ ததைவச ஸஹஸ்ரதா.க்ருஷ்ணோத்வாதசதா சைவ புனஸ்தஸ்யார்த்த வித்தயே. சகார ப்ரஹ்மஸூத்ராணி யேஷாம் ஸூத்ரத்வமஞ்ஜஸா, அல்பாக்ஷரமஸந்திக்தம் ஸாரவத் விச்வதோ முகம். அஸ்தோமமநவத்யஞ்ச ஸூத்ரம் ஸூத்ரவிதோ விது

¶ (ப்ரணம்ய) - ஜகத்காரணமான ஈச்வரனை வந்தனம் செய்து அதற்குப்பிறகு கணாதமஹர்ஷியை—

$ (ஸஹோவாச) - பாராசரபுத்ரனான அந்த வ்யாஸர் சொன்னார்.

† (த்வீபே பதரிகா) - ஸத்யவதீதேவியானவள் இலந்தை மரங்களுடன் கூடின (யமுனையாற்றின் நடுவிலுள்ள) திட்டில் அரிஷட் வர்கங்களை நிராகரித்தவரும், அச்யுதனுடைய அம்சபூதனாகவுமிருக்கிற பாதராயணர் என்கிற புத்ரனை பராசரரிடத்திலிருந்து அடைந்தாள்.

‡ (நாராயணாத்) - நாராயணனிடத்திலிருந்து உண்டான ஜ்ஞானம் க்ருதயுகத்தில் நிலைபெற்றிருந்தது. த்ரேதாயுகத்தில் அது கொஞ்சம் மாறுபட்டத்தை அடைந்தது. த்வாபரத்தில் சிதறிப்போய்விட்டது. கௌதமரிஷியினுடைய சாபத்தால் ஜ்ஞானமானது அஜ்ஞானபாவத்தை அடையவே தத்வநிச்சயமில்லாமையால் ஸங்கீர்ணபுத்தியுள்ள ப்ரஹ்மா, ருத்ரன் முதலான தேவர்கள் ரக்ஷணத்தில் ஸமர்த்தனும், தோஷமற்றவனுமான நாராயணனை சரணமடைந்தார்கள். அவர்களால் விக்ஞாபனம் செய்யப்பட்ட கார்யத்தை உடையவரும், ஆறு குணங்களுள்ளவரும், மஹாயோகியாகவுமிருக்கிற புருஷோத்தமன் பராசரரிடத்தினின்று ஸத்யவதியினிடத்தில் அவதரித்தார். ப்ரஹ்ம, ருத்திராதிகளை பலாத்கரித்து ஸம்ஹரிப்பவரான பகவான் தானே வ்யாஸரூபியாகத்தோன்றி சிதறிப்போன வேதங்களை உத்தாரணம் செய்தார். அவைகளை நான்காகப்பங்கிட்டார். அவ்வாறே நூற்றொன்றாகவும், ஆயிரமாகவும்,பன்னிரண்டாகவும் பகுத்து அவைகளின் அர்த்தங்களைத் துலக்கிக்காட்டுவதற்காக ப்ரஹ்மஸூத்ரங்களைச்செய்தார்,—எவைகளுக்கு ஸூத்ரத்வம் உள்ளபடி அமைந்திருக்கிறதோ. ஸூத்ரத்தின் ஸ்வரூபமறிந்தவர்கள்,—பரிமிதமான அக்ஷரங்களுள்ளதும், ஸந்தேஹத்தை அறுக்கும் தன்மை பொருந்தியதும், ஸாரமுள்ளதும், எவ்வழியிலும் ப்ரவ்ருத்திக்கும் வல்லமையுள்ளதும், நிரர்த்தகமான சப்தமில்லாததும், தோஷமற்றதுமான சப்தஜாலத்தை ஸூத்ரமென்று அறிகிறார்கள்.

‡ "நிர்விசேஷிதஸூத்ரத்வம் ப்ரஹ்மஸூத்ரஸ்ய சாப்யத: ஸவிசேஷாணி ஸூத்ராணி ஹ்யபராணி விதோ விது: முக்யஸ்ய நிர்விசேஷேண சப்தோந்யேஷாம் விசேஷத: இதி வேதவித: ப்ராஹு: சப்ததத்வார்த்தவேதிந:, ஏவம் விதாநி ஸூத்ராணி க்ருத்வா வ்யாஸோ மஹாயசா: ப்ரஹ்மருத்ராதிதேவேஷு மனுஷ்யபித்ருபக்ஷிஷு, ஜ்ஞானம் ஸம்ஸ்தாப்ய பகவான் க்ரீடதே பரமேச்வர:"

'வசஸ்ஸுதயாம்' 'வசஸ்' சப்தத்திற்கு அர்த்தத்தில் தாத்பர்யம். எப்படியெனில், 'வேதவித், சாஸ்த்ரவித்' இது முதலிய இடங்களில் வேதம் முதலிய சப்தங்களுக்கு அர்த்தபரத்வத்தைக்கண்டிருப்பதால், அர்த்தத்தைச்சொல்வதல்லவோ வாக்யம். ரூபகப்ரகரணமாதலாலும் 'ஸுதா' சப்தத்தில் லக்ஷணையைக்கல்பிப்பதில் பயத்தினாலும், வசஸ்ஸினுடைய ஸுதையை என்று சில ஆசார்யார்கள் சொன்னார்கள். ஸுதையைப்போல் வசஸ் என்று உபமித ஸமாஸத்தை வேறு ஆசார்யர்கள் ஆதரிக்கிறார்கள். 'ஸுதா' சப்தத்தினால் போக்யமாயிருக்கும் தன்மை அபிப்ராயவிஷயம். இவ்வாறாக அவாந்தர விஷயம் உரைக்கப்பட்டது. அங்ஙனமாகில் எவ்வாறு ப்ரஹ்மத்துக்கு விஷயத்வமென்கிற சங்கைவரின் ப்ரஹ்ம விஷயத்வம் ஸத்வாரகமென்று சொல்லுகிறார்.—(உபநிஷதிதி). ப்ரஹ்மத்தினிடத்தில் நெருங்கி இருப்பதால் உபநிஷத். 'உபநிஷண்ணத்வாத் வா உபநிஷத்' என்றல்லவோ வாக்யம். "கஹநே ஹ்யம் வித்யா ஸந்நிவிஷ்டா" என்று அதின் விஷயமான த்ரமிட பாஷ்யம். "ப்ரஹ்மண்யுபநிஷண்ணு" என்று அது விஷயமாய் வாமனருடைய டீகை. நேராக ப்ரஹ்மத்தை ப்ரதிபாதிக்கிற திறமையுள்ளது உபநிஷத். (துக்த) சப்தத்தினால் பூர்வபாகத்தைக்காட்டிலும் உபநிஷத்தானது ஸாரமென்று விளக்கப்பட்டது. 'ஆரண்யகஞ்ச வேதேப்ய:, † ஒஷதிப்யோ, யதாம்ருதம்." என்பது இதில் ப்ரமாணம். (அப்தி) சப்தத்தினால் ஆலோசிக்கப்பட்டிருக்கிற உபநிஷத்துகள் அநந்தங்கள் என்பது ஸூசிக்கப்பட்டது. (மத்ய) சப்தத்தினால் எல்லா வாக்யங்களும் முக்யார்யத்தத்தை விடாமலிருக்கின்றனவென்று அபிப்ராயம். சுற்றிலுமுள்ள எல்லா ப்ரதேசங்களையும்விட மத்யப்ரதேசத்திற்கு ஸமபந்தமானது துல்யமாகவன்றோ இருக்கிறது! (உத்ருத) சப்தத்தால் மிக்க ஆழ்ந்த இடத்திலிருந்து நன்றாக மூழ்கி மேலே எடுப்பதைச்சொல்லுகிறபடியால் மீதியின்றி எல்லா அர்த்தங்களுமெடுக்கப்பட்டதென்று ஸூசிக்கப்படுகிறது. தன் க்ரந்தத்திற்கு அவாந்தர விஷயம் உபநிஷத், அதற்கு விஷயம் ப்ரஹ்மம் என்று பரம்பரையாக ப்ரஹ்மம் ப்ரதிபாத்யமாகிறது. பாதராயணஸூத்ரங்களுக்கு உபநிஷத்தை மூலமாகச்சொன்னதினால் ஸாங்க்யாதிக்ரந்தங்களுக்கு அப்ராமாண்யம் பலிததது. அக்காரணத்தினாலேயே அவைகளை அனாதரித்து இவைகளுக்கு வ்யாக்யானஞ்செய்யப்படுகிறதென்பது ஸூசிதமாயிற்று. சுருக்கமாக சாஸ்த்ரத்தினாலுண்டாகிற பரமப்ரயோஜனத்தைக்கூறுகிறார் (ஸம்ஸார) என்று. 'ஸம்ஸாராக்னி' சப்தத்தால் ஸம்ஸாரம் முழுமையும் * தாபத்ரயரூபமென்பது விவக்ஷிக்கப்பட்டது.

---

‡ ப்ரஹ்மஸூத்ரம்ஒன்றுக்கே தனித்த 'ஸூத்ர' சப்தத்தால் வ்யவஹரிப்பது பொருத்தமுள்ளதாதலால் மற்றஸூத்ரங்களை ஸவிசேஷங்களென்றே அறிஞர்கள் அறிகிறார்கள். சப்தங்களின் தத்வார்த்தவேதிகளான வேதவித்துகள் முக்யத்திற்கு நிர்விசேஷசப்தத்தாலும், மற்றவைகளுக்கு ஸவிசேஷசப்தத்தாலும், அபிதானமென்று கூறுகிறார்கள். அதிக கீர்த்தியுள்ளவரும், பரமேச்வரனுகவுமிருக்கிற வ்யாஸரூபியான பகவான் இப்படிப்பட்ட ஸூத்ரங்களைப்பண்ணி ப்ரஹ்மருத்திராதிகளான தேவர்களிடத்திலும், மனுஷ்யர்களிடத்திலும், பித்ருக்களிடத்திலும், பக்ஷிகளிடத்திலும் ஜ்ஞானத்தை நிலைநிறுத்தி க்ரீடிக்கிறார்.

† (ஆரண்ய) - ஒஷதிகளிடத்திலிருந்து அம்ருதம்போல் வேதங்களினின்று (ஸாரமான) வேதாந்தபாகம் எடுக்கப்பட்டிருக்கிறது.

* தாபத்ரயங்கள்:—ஆத்யாத்மிகம், ஆதிதைவிகம், ஆதிபௌதிகம்.

'இதில் ப்ரமாணம், $ "ஸ்வர்கேபி பாதபீதஸ்ய க்ஷயிஷ்ணோர்நாஸ்தி நிர்வ்ருதி:" என்று. ஸங்கோசமின்றி எப்பொழுதும் நாற்புறங்களிலும் ஜ்வலித்தலைச்சொல்லுகிற (தீபந) சப்தத்தால் வித்யாலாபத்திற்கு முந்தி ஒரு ஸமயத்திலாவது இது அணைக்கத் தக்கதாக இருந்ததில்லையென்பது அபிப்ரேதம். தீபநமும் ஆத்யாத்மிகாதி ரூபத்தால் பலவகைப்பட்டுள்ளது. அந்த மூன்றிலும் ஒவ்வொன்றும் சாரீரம், மானஸம், வாசிகமெனப் பலவகைப்பட்டிருக்கிறது. ஆத்மாக்களுக்கு ப்ராணன் பரமாத்மா. இது ¶ "ஸர்வாணி ஹவா இமாநி பூதானி ப்ராணமேவாபிஸம்விசந்தி" † "கோஹ்யேவாந்யாத் க: ப்ராண்யாத்" முதலான ச்ருதிகளில் ஸித்தம். (ம்ருத) சப்தத்தால் அதினுடைய அலாபமும் இரண்டு வி, அப, என்ற உபஸர்கங்களால் அதற்கு (பகவத்லாபத்திற்கு) அனுதித்வமும் விவியுத்வமும் விவக்ஷிக்கப்பட்டது. ஞான, தர்சன, ப்ராப்திகளில் ஒன்று கூட லபிக்காமையால் அலாபம் பலவிதமாயுள்ளது. (ஸஞ்ஜீவினீம்) ஜீவனம்—உஜ்ஜீவனம். அதாவது, ஸம்ஸாரத்தை வேரோடு களைதல். 'ஸம்' என்கிற சப்தத்தால் கைவல்யத்தை விலக்கினபடி. இதற்குமேல் ஸாம்ப்ரதாயிகமென்பதைக்கூறுகிறார். (பூர்வ)என்பதால் பூர்வசப்தத்தினால் சங்கரர் முதலான பிற்காலத்தவர்கள் விலக்கப்பட்டனர். (ஸமாரக்ஷிதாம்) உபதேசமாத்ரத்தினாலல்ல, க்ரந்தரூபத்தாலுமென்று கருத்து. பூர்வாசார்யக்ரந்தங்களால் அர்த்த ஸ்வரூபம் நிர்ணயிக்கப்பட்டுவிட்டால் உம்முடைய க்ரந்தகரணப்ரவ்ருத்திக்கு யாதுபயன்? என்று வினவ, மறுமொழி அளிக்கிறார் 'பஹுமதி—'என்று. அநேகங்களான மதிகள் அல்லது, அநேகர்களுடைய மதிகள். அவைகளுடைய பரஸ்பர வ்யாகாதத்தினாலும், அவைகளால் நல்ல அர்த்தம் நாசம் செய்யப்பட்டதினாலும் அர்வாசீனர்களால் எவ்விதத்தினாலும் உள்ளே ப்ரவேசிக்க முடியாமையைக்கூறுகிறார் 'தூரஸ்திதாம்' என்று. உள்ளபடி அறியாதது மாத்ரமல்ல, விருத்தமாகவும் ப்ரதிபத்தி உண்டாய்விட்டது என்று கருத்து. ஸூத்ரம் முதலான அவாந்தரவிஷயத்திற்குத்தன் க்ரந்தம் விஷயீ என்பது முன்பு கண்டோக்தமாக இல்லை. ஆதலால், அதைக்கூறுகிறார் (ஆநீதாம்) என்று. அம்ருதபக்ஷத்தில் (நிஜாக்ஷரை:) காயத்ரியின் அவயவங்களான ‡ அம்ருதாக்ஷரங்களால் என்று கருத்து. அதனால் என் அக்ஷரங்களால் என்று சொல்லவில்லை. (ஸுமனஸ:) ஸாராஸார விவேசனத்தை

$ (ஸ்வர்கேபி) – ஸ்வர்கத்திலும் கீழே விழுவதினின்று பயந்து க்ஷயோன்முகனாக இருக்கிறவனுக்கு ஸுகம் கிடையாது.

¶ (ஸர்வாணி ஹவா) – இந்த எல்லா பூதங்களும் பிராணசப்தவாச்யனான பரமாத்மாவையே அபிமுகமாக ப்ரவேசிக்கிறதன்றோ.

† (கோஹ்யேவா) – ஆனந்தமயனான ஆகாசசப்தவாச்யனான பரமாத்மா இல்லாவிடில் எவன் தான் சலிப்பான். எவன் தான் உச்ச்வாஸ நிச்வாஸமுள்ளவனாக உயிரோடிருப்பான்.

‡ அம்ருதஹரணோபாக்யானம்:— கிருஷ்ணயஜுர்வேதம் 6-வது காண்டத்தில் இந்த உபாக்யானம் ஸவிஸ்தரமாகக்கூறப்படுகிறது. அதாவது—நாகமாதாவான கத்ருவுக்கு அடிமையாயிருந்த 'விநதை' என்கிற தன்தாயை அவ்வடிமையினின்று மீட்கவேண்டி, வேதஸ்வரூபியான கருடன் ஸ்வர்கலோகம் சென்று,—அம்ருதத்தைப்பாதுகாத்துக்கொண்டு ஒருவருக்கும் கொடாமல் தன்வசமாக்கிக்கொண்டிருந்த இந்த்ரனோடு அநேக சந்தஸ்களை அனுப்பிக்கடும்போர் புரிந்தார். அதில் ஜயம்பெறாமல், கடைசியாகயிருந்த காயத்ரீச்சந்தஸை அனுப்பி சண்டைசெய்து இந்த்ரனை அபஜயமடையச்செய்து காயத்ரீச்சந்தஸைச்சார்ந்த அக்ஷரங்களால் அம்ருதத்தை அபஹரித்துவந்து கத்ருவிடம் கொடுத்து தன்தாயாரான விநதையை அடிமைத்தொழிலின்று மீட்சியடையச்செய்தார்.

அறிந்தவர்கள். இதனால் அஸத்துகளுடைய அபரிகாஹம் தோஷமல்ல என்பது கூறப்பட்டது. தேவர்கள் முதலானவர்களுக்கு வ்ருத்திகாரருடைய க்ரந்தம் முதலியவற்றால் ஸூலபமாக அர்த்தஜ்ஞானமேற்படுமாததால் (பௌமா:) என்று அருளிச்செய்கிறார். (பிஹுந்த் வங்வஹம்) ரஸ்யதையின் அதிசயத்தால் போதுமென்ற த்ருப்தியை உண்டுபண்ணுகிறதில்லை, என்று கருத்து. வேறு பலனைவிட பகவத்ப்ராப்த்யுபாயமே மிகக ஸ்வாதுவாயுள்ளது. § "க்வ நாகப்ருஷ்டகமனம புனராவ்ருத்திலக்ஷணம், க்வ ஜபோ வாஸுதேவேதி முக்திபீஜமநுத்தமம்." என்று ப்ரமாணம். அல்லது, கம்பீரமாயிருப்பதால் நாள்தோறும் பரிசீலனஞ்செய்யத்தக்கதென்று கருத்து.

𑌭𑌾𑌷𑍍𑌯𑌮𑍍 :— 𑌭𑌗𑌵𑌦𑍍𑌬𑍋𑌧𑌾𑌯𑌨𑌕𑍃𑌤𑌾𑌂 𑌵𑌿𑌸𑍍𑌤𑍀𑌰𑍍𑌣𑌾𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌸𑍂𑌤𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌂 𑌪𑍂𑌰𑍍𑌵𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌾𑌃 𑌸𑌂𑌚𑌿𑌕𑍍𑌷𑌿𑌪𑍁𑌃। 𑌤𑌨𑍍𑌮𑌤𑌾𑌨𑍁𑌸𑌾𑌰𑍇𑌣 𑌸𑍂𑌤𑍍𑌰𑌾𑌕𑍍𑌷𑌰𑌾𑌣𑌿 𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌸𑍍𑌯𑌨𑍍𑌤𑍇।

𑌸𑍂। 𑌅𑌥𑌾𑌤𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑌾 ॥ க-க-க

𑌅𑌤𑍍𑌰𑌾𑌯𑌮𑌥𑌶𑌬𑍍𑌦 𑌆𑌨𑌨𑍍𑌤𑌰𑍍𑌯𑍇 𑌭𑌵𑌤𑌿। 𑌅𑌤𑌶𑍍𑌶𑌬𑍍𑌦𑍋 𑌵𑍃𑌤𑍍𑌤𑌸𑍍𑌯 𑌹𑍇𑌤𑍁𑌭𑌾𑌵𑍇।

போதாயனபகவானால் செய்யப்பட்டுள்ளதும், விஸ்தீர்ணமாயுமிருக்கிற ப்ரஹ்மஸூத்ரவ்ருத்தியை பூர்வாசார்யர்கள் மிகச் சுருக்கமாகச்செய்தார்கள். அவர்களுடைய மதத்தை அனுஸரித்தே ஸூத்ராக்ஷரங்கள் வ்யாக்யானஞ்செய்யப்படுகின்றன.

ஸூ. அதாதோ ப்ரஹ்மஜிஜ்ஞாஸா

(பிறகு) ஆதலால், தர்மவிசாரத்தில் இச்சை.

இந்த ஸூத்ரத்திலிருக்கிற 'அத' சப்தமானது கர்மவிசாரத்திற்குப்பிறகு என்கிற அர்த்தத்தை உணர்த்துகிறது. 'அத:' என்கிற சப்தமானது முந்தின கர்மவிசாரத்திற்கு ஹேதுத்வத்தைக் காட்டுகிறது.

ச்ருதப்ரகாசிகை:—அங்ஙனமாகில், புராதனமான க்ரந்தங்களே படிக்கத்தக்கவைகள்; அபூர்வமான க்ரந்தத்தைச்செய்வதாலும் அதை வெளியிடும் ப்ரயதனகௌரவத்தாலும் யாது பயனெனில், உத்தரம் கூறுகிறார். 'பகவதிதி' பகவான் என்று சொன்னதினால் சங்கரர் முதலியவர்கள் போல ரிஷி அநாப்தரல்ல. போதாயனர் என்று சொன்னதினால் 'பூர்வாசார்ய' சப்தமும் சேர்ந்து விவரிக்கப்பட்டது. "விஸ்தீர்ணாம் ஸஞ்சிக்ஷுபுரிதி" இதனால் வ்ருத்தி முதலிய க்ரந்தங்களால் இப்புவியிலுள்ள இக்காலத்தவர்களுக்கு உபயோகமில்லாமை ஸூசிக்கப்பட்டது. போதாயனரால் மிகவும் பெரிதான வ்ருத்திக்ரந்தம் செய்யப்பட்டது. த்ரமிடபாஷ்யகாரர் முதலியவர்களோவென்றால் பரபக்ஷநிரஸனம் முதலியதை அனுதரித்து அதிக சுருக்கமாக க்ரந்தங்களைச்செய்தார்கள். அதிவிஸ்தீர்ணமாயும், அதிஸங்க்ஷிப்தமாயுமிருக்கிற க்ரந்தங்கள் பெரும்பான்மையாய் சிறந்த ஆயுளும், புத்தியுமுள்ள ஜனங்களடர்ந்த தேசாந்தரங்களிலும், காலாந்தரங்களிலும் பயன்படுகின்றன.

---

§ (க்வ நாக) - மீண்டுவருதலை ஸ்வபாவமாக உடைய ஸ்வர்க்கமனமெங்கே! முக்திக்குச்சிறந்த வித்தான வாஸுதேவஜபம் எங்கே!

இககாலததிலுளள எலலா மனிதாகளுககும நூறு வருஷகாலம ஆயுளாவது, உயிருளளவரை கரநதஙகளில உழைபபாவது, ஜனமஸிததமான அறிவாவது இலலை. ஆதலால, பரமதநிராஸததிறகாகவும, அதிக விஸதாரமிலலாமையால விஷயஙகளை ஸுலப மாகததெரிநதுகொளவதறகாகவும, ஸூதரம வயாகயானம செயயததககதெனறு கருத்து

'தனமதாநுஸாரேண' இதனுல தனனுல உதபரேக்ஷிககபபடட மதாநதரததை அனு ஸரிதது வயாகயானம செயயபபடவிலலை எனபது கூறபபடடது ஸூதரததிலடங்கிய பதஙகளின பரகருதி, பரதயய விபாகததிறகு அனுகுணமாகசசொலலுகிறேம, நமமால உதபரேக்ஷிககபபடட அாயததில ஸூதராக்ஷரஙகளை ஒருவிதமாகசசேோபபிககிறேம— எனகிற ஆகரஹமிலலை —எனறு கருதது 'வயாகயாஸயநதே' • வி-ஆ எனகிற உபஸா கஙகளால அபேக்ஷிதவிஸதாரமும, அநபேக்ஷிதஸஙக்ஷேபமும ஸூசிபபிககபபட்டது

"§ ஸூதராாயோ வாணயதே யதர வாகயைஸஸூதராநுஸாரிபி, ஸவபதாநிச வாணயநதே பாஷயம பாஷயவிதோ விது" எனறலலவோ பாஷயலக்ஷணம ஆகவே, ஸூதரவயாகயானததிறகு ஆநுரூபயமிலலாமையால 'அகில' இது முதலானது பாஷயத தில சேரககை பெருது எனறு சொலல ஒண்ணுது ஸூதரததபாயாாததததில நோக குளளதாதலால பாஷயததிலடஙகியதே ஸூதரதாதபாயபரதவமானது சலோகவயாக் யானததில ஸபஷ்டம மேலும, தொடஙகவேணடுமெனறு விருமபபபடடிருககிற கரநதம் இடையூறினறி முடிவுபெறுவதறகாக மஙகளாசரணம செயயபபடுவதால, பாஷயததிறகு உபயோகமாக இருநதுகொணடு பாஷயததிலடஙகினதாகவே ஆகிறது சாஙகரபாஷயம், சாஙகரபாஷயம, முதலியவறறில நமஸகாரம காணப்படாமையால இநத பாஷ்யததில நமஸகாரததைககூறியது பொருநதாதெனறு சொலலககூடாது எனெனில, தரமிட பாஷ்யததில் ‡ "நம பரவரகுணைகாஸபதாய" எனறு தேவதா, குரு, நமஸகாரம செயயப் பட்டிருககிறது சாஙகரபாஷயததிலும, சாஙகர பாஷயததிலும ஈசவரனை ஒப்புககொள ளாமையாலும, ஜீவபரஹமபேததததை ஏறறுககொளளாமையாலும, நமஸகாரம அனுதரிக் கப்படடது இநத கரநதததிலோவெனனுல ஸிததாநததநிறகு ஆனுரூபயமிருபபதால நமஸகாரம மிகவும பொருததமுளளது சஙகரகரநதததின தொடககததிலும நமஸகாரம் முதலிய மஙகளாசரணமிலலாமையால வயாகயாதாககள குகரநதமெனறு ஸநதேகிதது 'யுஷமத-அஸமத' எனகிற பதஙகளை முதன்மையாககொணட கரநதததில பரதயகாத தானுஸநதானமிருபபதால ¶ ஆாததிகமாக மஙகளாசாரம செயயபபடடிருககிறதெனறு ஸநதேகத்தை பரிஹரிததுககொணடாாகள

ஜிஜஞாஸாதிகரணம

அயாதோ பரஹமஜிஜஞாஸா,

முனபு பதஙகளை வயாகயானமபணணபபோகிறவராக தொடககததில 'அய' சப்தத ததை வயாகயானிககிறுா "அதராயமதசபத ஆனநதாயே பவதி" எனறு † "பதசசே த: பதாாததோகதிா விகரஹோ வாகயயோஜனு, ஆக்ஷேபஸய ஸமாதானம வயாகயானம

§ (ஸூதரா)-ஸூதரஙகளை அனுசரிககினற வாககியஙகளால எநத இடததில ஸூத் ராாததம வாணிககபபடுகிறதோ, தனனுல சொலலபபடட பதஙகளும விவரிககப்படுகின் றனவோ, அதை பாஷயமெனறு பாஷயததை அறிநதவாகள கூறுகினறாகள

‡ (நம ப்ரவர) - மிகக சிறநத குணஙகளுககு முகயமான ஆதாரமாக இருககிற வருககு நமஸகாரம்

† (பதசசேத.)—பதஙகளைப்பகுததல, பதாாததஙகளை உரைததல, விகரஹம், வாக் யங்களின் யோஜனை, ஆக்ஷேபததிறகு ஸமாதானம—என வயாகயானம, ஐநது விஷயஙக ளுள்ளதென்று சொல்லபபடுகிறது

¶ ஆாத்திகம—முன்பின இருககிற அாததஸநதாப்பததால ஏறபடுவது.

பஞ்சலக்ஷணம்." என்றல்லவோ வ்யாக்யானத்தின் லக்ஷணம். இந்த 'அத', 'அத:' என்கிற இரண்டு சப்தங்களும் வ்யாக்யானம் செய்யத்தக்கவைகளல்ல. ஏனெனில், ப்ரயோஜனமில்லை. அஜ்ஞானம், ஸம்சயம், விபரீதநிச்சயம் இவைகளை நிவ்ருத்தி செய்வதற்கல்லவோ வ்யாக்யானம்! ஆநந்தர்யத்திலும், ப்ரக்ருதத்தினுடைய ஹேதுபாவத்திலும் இவ்விரண்டு பதங்களுக்கும் ப்ரஸித்தி இருப்பதால் இங்கு அக்ஞானமில்லை. இவ்விரண்டு பதங்களுக்கும் வேறு அர்த்தங்கள் இருந்தபோதிலும் முன் கூறப்பட்ட அர்த்தங்களையே முக்யமாக உணர்த்துவதில் பெரும்பான்மையாக ப்ரஸித்தியிருப்பதால் இங்கு ஸம்சயமுமில்லை. 'கௌ' என்கிற சப்தத்தைக்கேட்பவனுக்கு ஸாஸ்நாதிகளுள்ள வ்யக்தியில் ஸம்சயமுண்டாவதில்லையன்றோ! அதினாலேயே விபர்யயமும் தூரத்தில் விலக்கப்பட்டதே—என்றால், இந்தக்கேள்விக்கு ஸமாதானம் சொல்லுகிறோம். ஆநந்தர்யரூபார்த்த நிர்ணயமும், வ்ருத்தஹேதுபாவபரத்வநிர்ணயமும் பூர்வவ்ருத்தவிசேஷஜ்ஞானத்தை அபேக்ஷிப்பதால், அதன் ப்ரதீதி, இங்கு இல்லாமையால், ப்ரஸித்திப்ராசுர்யமானது அபவாதமுள்ளதாக இருப்பதாலும், 'அத:' சப்தத்திற்கு அதிகாரம் முதலிய அர்த்தங்களிலும் 'ஏதத்' சப்தத்திற்கு 'ஏததுக்தம்பவதி' இது முதலிய வாக்யங்களில் கூறப்போகிற அர்த்திலும், எல்லாவேற்றுமைகளுடைய அர்த்தத்தையும் சொல்லுகிற தஸிலந்தமான 'இத:' இது முதலிய இடங்களில் ஐந்தாம்வேற்றுமைப் பொருளைக்காட்டிலும் வேறாக இருக்கிற பொருளிலும் ப்ரயோகம் காணப்படுவதாலும்,—ஸம்சய-*விபர்யயங்கள் உண்டாகலாம். அதைப்போக்குவதற்காக அத, அத: என்கிற சப்தங்களுக்கு வ்யாக்யானம் செய்வது பொருந்துமென நினைத்து அவைகள் வ்யாக்யானிக்கப்படுகின்றன.

இந்த இடத்தில், அத சப்தத்துக்கு 'அதிகாரம் அர்த்தம் என்று சொல்லுவது பொருந்தாது; அதிகாரம் என்றால் ப்ரஸ்தாவம், அதாவது ப்ரக்ருதவிஷயம் என்றல்லவோ அர்த்தம். ஆகவே, பாஹமஜிகளுனாவை ப்ரஸ்தாவிக்கப்படுகிறது.' என்றால், இது மந்தப்ரயோஜநமுள்ள வசனம். ஏனெனில்,—'இது தொடங்கப்படுகிறது.' என்று முதலில் சொல்லாமலேயே ஓர் விஷயத்தைத்தொடங்கின மாத்ரத்தால் 'இது தொடங்கப்படுகிறது.' என்று தெரியவரும். சொல்லப்போகிற விஷயமானது, 'இப்பொழுது சொல்லப்போகிறேன்.' என்று சொல்லாமலேயே அருகிலுள்ளவனால் 'இது சொல்லப்படுகிறது.' என்றுதானே அறியப்படும்;—'இது சொல்லப்படவில்லை.' என்று அறிய முடியாதன்றோ?

அல்லது, 'ப்ரஸ்தாவத்துக்கு யோக்யம்' என்று அர்த்தம் சொல்வோம் என்றால், அப்பொழுதுகூட ந்யாயத்தை ப்ரதிபாதிக்கிற ஸூத்ரத்துக்கு உபதேசத்தை ஞாபகப்படுத்துவதில் தாத்பர்யம் இல்லையாதலால், யுக்தியாலேயே 'ஆரம்பத்துக்கு யோக்யம்.' என்று அர்த்தம் ஏற்படும். ஏனெனில், யோக்யத்வம் சப்தத்தால் சொல்லப்படவில்லை.

மேலும், 'அத்யாஹாரத்தால் அதிகாரம்' என்று பொருள்படுத்தலாம்; 'ஆநந்தர்யம் அர்த்தம்' என்று சொல்லுகிற பக்ஷத்தில் கூட 'கர்த்தவ்யா' (செய்யவேண்டும்) என்று அத்யாஹாரம் செய்துகொள்ளவேண்டியிருக்கிறதே—என்றால், அப்படியல்ல. அத்யாஹாரத்தால் 'அதிகாரம் அர்த்தம்' என்று சொன்னாலும், அத்யாஹாரம் செய்த 'அதிகாரம்' என்கிற பதத்துக்கு அந்வயம் ஒட்டாது. 'ச யோக்யா' என்றால் 'ஸமுச்சயத்துக்கு யோக்யம்' என்னும் அர்த்தம் எப்படி சப்தத்தால் சொல்லமுடியாதோ, அப்படியே 'அத யோக்யா' என்கிற இடத்திலும் 'அதிகரிப்பதற்கு யோக்யம்' என்று அர்த்தம் சொல்லமுடியாது. ஆகையால் தான் மஹாபாஷ்யத்தில்—'சப்தாநுசாஸனம் என்கிற சாஸ்த்ரம் அதிகரிக்கப்பட்டதெனத்தெரிந்துகொள்ளவேண்டும்.' என்று சொல்லப்பட்டிருக்கிறதே ஒழிய, 'அதிகரிக்க யோக்யம்' என்றில்லை. 'அதிகரிக்கப்பட்டது' என்பதுகூட பலிதார்த்தத்தைச்

---

* விபர்யயம்—அந்யதாஞானம். கயிற்றைப்பார்த்து ஸர்ப்பமென்று எண்ணுதல்.

சொல்லுகிறதேயன்றி வாசநிகோக்தி இல்லை யென்னில், ச முதலியவைகளுக்கு த்யோதகத்வமே ஸ்வபாவம் இவ்விடத்தில் அதிக்ருதம் என்று அர்த்தம் சொன்னாலும் வையார்த்யம் சொல்லியாய்விட்டது. ஆனால், சப்தாநுசாஸநத்தின் தொடக்கத்திலோ அதிகாரம்—என்கிற அர்த்தமானது கதியில்லாமல் ஆச்ரயிக்கப்பட்டது உபநயநம் ஆனதும் வேதாத்யயனம் செய்கிறவனால் அத்யயனம் செய்யவேண்டிய அங்கமான வ்யாகரணத்துக்கு அஸாதாரணமான வ்ருத்தவிசேஷம் உண்டாவதில்லையன்றோ! இவ்விடத்திலோவெனில், ப்ரயோஜநமுள்ள வேறு அர்த்தம் கிடைக்கையில் அத சப்தத்துக்கு அதிகாரம் என்கிற அர்த்தத்தை ஆச்ரயிப்பது அயுக்தம். அத சப்தத்துக்கு ஆநந்தர்யம் என்று அர்த்தம் சொன்னால் ஏற்படும் ப்ரயோஜநம் பிறகு சொல்லப்படும். அத சப்தத்துக்கு மங்களம் வாச்யார்த்தம் அல்ல. ஆனால், சங்கநாதம் போல் காதால்கேட்ட மாத்ரத்தில் அத சப்தம் மங்களத்தை உண்டுபண்ணும். அத சப்தத்துக்கு வேறு அர்த்தம் இருந்தபோதிலும், ஓங்காரத்தைப்போல் இதற்கும் மங்களம் ஸித்தம் ஏனென்னில், அத சப்தம் ஓங்காரத்துக்கு ஸமமாகவன்றோ ஸ்ம்ருதியில் சொல்லப்படுகிறது! §"ஓங்காரஶ்சாதஶப்தஶ்ச த்வாவேதௌ ப்ரஹ்மண: புரா, கண்டம் பித்வா விநிர்யாதௌ தஸ்மாந்மாங்களிகாவுபௌ" என்று—

அல்லது, அத சப்தம் மங்களவாசகம் என்று ஒப்புக்கொண்டாலும், ப்ரஹ்மஜிஜ்ஞாஸை மங்களரூபமானது—என்று பொருள்பட்டு ப்ரஹ்மஜிஜ்ஞாஸை புகழப்படுவதுபோலாகும். ஆகவே, ஸூத்ரம் அர்த்தவாதம் என்று ஏற்படும், ந்யாயநிபந்தநத்வம் ஸித்திக்காது. ஜிஜ்ஞாஸாபதத்துக்கு இதை விசேஷணமாகக்கொள்ளாவிடில் 'மங்களம் பவதி' என்று வாக்யபேதம் ஏற்படும். ப்ரக்ருதமான அர்த்தத்தைவிட்டு வேறு அர்த்தம் சொல்லுவதும் சரியல்ல, அது ப்ரக்ருதத்தைக்காட்டிலும் இனி சொல்லப்போவது வேறு அர்த்தம் என்று தெரிவிக்கிறது, அதுவும் வேறுகல்பத்தை உபந்யஸிக்கும் விவக்ஷையில்தான் காணப்பட்டிருக்கிறது. இவ்விடத்திலோ என்றால், வேறு கல்பம் உபந்யஸிக்கப்படாமையால் அது உபபன்னமாகாது. அத சப்தத்துக்கு வினாவைப்பொருளாகக்கொள்ளுவதும் பொருந்தாது ஏனென்னில், வசநவ்யக்தியானது ப்ரச்நப்ரதிவசநமாக இல்லை. அப்படியானால், 'கிம் ப்ரஹ்மஜிஜ்ஞாஸா கர்த்தவ்யா?' என்று கேள்வியிருக்க வேண்டும், 'ஸா கர்த்தவ்யா?' என்று வேறொரு வாக்யத்தால் பதிலும் இருக்கவேண்டும். ஆனால், பதிலாக இங்கு ஒரு வாக்யத்தையும் காணோம்

அத சப்தத்துக்கு முழுமையும் என்பொருள் கொண்டால், ப்ரஹ்மஜிஜ்ஞாஸையானது முழுவதும் செய்யத்தக்கது—என்று அர்த்தம் ஏற்படும், அதுவும் பொருந்தாது, ஏகதேசம் செய்யவேண்டுமோ!—என்ற ஸந்தேஹத்திற்கே இடமில்லையாதலால் இங்கு செய்யவேண்டியது மாத்ரம் ஸந்தேஹத்துக்கு இடமேயன்றி அதன் ஏகதேசமல்ல. இந்த ஸந்தேஹத்தைப்போக்கடிப்பதற்குத்தான் இருக்கிறது இந்த ஸூத்ரம். மேலும், அத: ஶப்தத்துடன் ஸம்பந்தமானது அத ஶப்தத்திற்கு அதிகாரம் முதலிய பலவேறு அர்த்தங்களை நிவாரணம் செய்கிறது அத ஶப்தமோவெனில் ப்ரக்ருதார்த்தத்தை ஹேதுவாகப் பராமர்சித்துக்கொண்டு, அத ஶப்தத்தினால் உபஸ்தாபிக்கப்பட்டு,ஸாமர்த்யத்தால் ஆக்ஷிப்தமான 'ப்ரஹ்ம ஜிஜ்ஞாஸா' பதத்தைப்பராமர்சிக்கிறது அவ்விடத்தில் அத ஶப்தத்தால் உணர்த்தப்பட்ட அதிக்ருதத்வம் என்கிற அர்த்தத்தைப்பராமர்சிக்குமாகில், அப்பொழுது

§ (ஓங்கார) - ஓங்காரம், அத ஶப்தம், இவ்விரண்டும் முன்காலத்தில் ப்ரஹ்மத்தின் கண்டத்தைக்கிழித்துக்கொண்டு வெளிப்பட்டன ஆகவே, இவை மங்களகரமானவைகள்.

‘அதிக்ருதத்வாத் அதிகாத்தவ்யா’ என்று ஹேதுவுக்கு * ஸாத்யாவிசிஷ்டத்வமான தோஷம் வரும். மங்களமானது ஶப்தத்தால் சொல்லப்படவில்லையாதலால் வேறு பதத்தைப்பராமர்சிக்கும் யோக்யதை கிடையாது. அதற்கு வாசயத்வத்தை ஒப்புக்கொண்டபோதிலும், அதற்கும், ப்ரக்ருதாபேக்ஷத்வத்திற்கும், கார்த்ஸ்ன்யத்துக்கும் (முழுமைக்கும்) பூர்வபக்ஷயுக்தி விரோதமில்லையாகையால் அவைகள் ஹேதுவாகப்பராமர்சிக்கத்தகுந்தவையல்ல; அமங்களத்வ, ப்ரக்ருதாநபேக்ஷத்வ, அகார்த்ஸ்ன்யங்களால் பூர்வபக்ஷத்திற்கு உத்தாநம் இல்லையன்றோ! † ந்யாயஸூத்ரங்களும் விருத்தார்த்தத்தை நிரஸநம் செய்வதில் நோக்கமுள்ளவைகள். ப்ரஶ்நவாக்யத்திலுள்ள ப்ரஶ்நமோ அதே வாக்யத்தில் ஹேதுவாகப்பராமர்சிக்கத்தகுதியற்றதே. ‘கிம் ப்ரஹ்மஜிஜ்ஞாஸா கர்த்தவ்யா?’ என்னும் வாக்யம் முடிவுபெறாமலிருக்கையில், கிம்ஶப்தார்த்தமானது எப்படி ஹேதுவாகப்பராமர்சிக்கப்படலாம். ஆகையால், அதஶப்தமானது அத:ஶப்தபராமர்சயோக்யமான அர்த்தமுள்ளது—என்று ஒப்புக்கொள்ளப்பட்டால், அப்பொழுது அதிகாரம் முதலிய அர்த்தங்கள் பொருந்தாது.

ப்ரஹ்மஜிஜ்ஞாஸாபதஸாமர்த்யத்தினால் ஆக்ஷிப்தமாயும், பூர்வவ்ருத்தமாய் அந்தந்த வ்யாக்யாதாக்களால் அபிமானிக்கப்பட்டதாயுமுள்ள கர்மவிசாரத்திற்கு அத:ஶப்தத்தால் பராமர்சமானது இச்சிக்கப்படுமாகில், ஜிஜ்ஞாஸைக்கு உபயோகமற்ற அர்த்தம் அத:ஶப்தத்தால் ஆக்ஷேபிக்கத்தகாது; உபயோகமுள்ள அர்த்தம்தான் அதசப்தத்தால் ஆக்ஷேபிக்கத்தகுந்தது. ஆகவே, அதைப்பராமர்சிக்கிற அத:ஶப்தத்தால், ஜிஜ்ஞாஸைக்கு உபயோகமாயிருப்பது பற்றி, அதற்குப்பூர்வபாவியான அர்த்தவிசேஷத்திற்கு உபஸ்தாபநம் ஏற்படுகிறது. இவ்விதம் அதசப்தத்துக்கு ஸ்வாரஸிகமான ‘ஆநந்தர்யம்’ என்ற அர்த்தம் கிடைக்கையில், அஸ்வாரஸமாயும், விபலமாயுமுள்ள பலவேறு அர்த்தங்களை ஸ்வீகரிப்பது பொருந்தாது. ஆகையால், அத:ஶப்தம்போல், ப்ரஹ்மஜிஜ்ஞாஸாபதஸாமர்த்யம்கூட அதஶப்தத்திற்கு அதிகாரம் முதலிய அர்த்தங்களை உணர்த்தும் தன்மையைத்தடுக்கும்.

இவ்விதம் வேறு எந்த அர்த்தமும் பொருந்தாது என்பதைக்காட்டிக்கொண்டு, அதஶப்தத்துக்கு ‘ஆநந்தர்யம்’ என்கிற அர்த்தத்தையே ‘அத்ர’ என்று தொடங்கி உபபாதநம் செய்கிறார்.

‘அதஶப்தம் ஆநந்தர்யார்த்தத்தில்’ என்று ப்ரதிஜ்ஞை. ‘அத்ர, அயம், பவதி’ என்கிற இம்மூன்று பதமும் அதற்கு உபபாதகம். அவற்றுள் ‘பவதி’ என்னும் பதத்தால் ஆநந்தர்யத்தில் ஸ்வாரஸ்யம் ஸூசிக்கப்படுகிறது. அந்த ஸ்வாரஸ்யத்தை மாற்றுகிற † பூர்வவ்ருத்தாப்ரதிபத்தியை ‘அத்ர’ என்னும் பதத்தால் ஸ்ரீபாஷ்யகாரர் பரிஹரிக்கிறார்.

---

* ஹேதுவுக்கு ஸாத்யாவிசிஷ்டத்மாவது—ஸாத்யஸந்தேஹாதீன, ஸந்தேஹவிஷயத்வம். ‘பர்வதம் வந்ஹியையுடையது, வந்ஹியை யுடையதாயிருப்பதால்,’—என்பது போலுள்ளவை ஸாத்யஹேதுநிர்தேசஸ்தலங்கள்.

† ந்யாயஸூத்ரங்கள்—ந்யாயநிபந்தநங்களான ஸூத்ரங்கள். இவை ஜைமிநி எழுதிய பூர்வமீமாம்ஸாஸூத்ரங்களும், வ்யாஸர் எழுதிய ப்ரஹ்மஸூத்ரங்களுமாம். ந்யாயங்களாவன,—ப்ரமாணங்களுக்கு யாதொரு பாதகமுமில்லாமல் ஸாதிக்கத்தக்க அர்த்தங்களை ஸாதிப்பதற்கு வேண்டிய யுக்திகள், அதாவது, ப்ரதிஜ்ஞா, ஹேது, உதாஹரணம், உபநய, நிகமனம், என்கிற பரார்த்தாநுமான ப்ரயோஜகங்களான பஞ்சாவயவவாக்யங்கள். இவைகளில் சிலவற்றை மூலமாகக்கொண்டு ஸூத்ரங்கள் ப்ரவ்ருத்தித்திருப்பதால் ந்யாயஸூத்ரங்களென்று சொல்லப்படுகின்றன.

† பூர்வவ்ருத்தாப்ரதிபத்தி - என்றால் இதற்குமுன் நேரவில்லை என்கிற ஜ்ஞானம்.

'அத்ர'—வேதத்தின் உத்தரபாகவிசாரரூபமான ப்ரஹ்மமீமாம்ஸையின் முதல் ஸூத்ரத்தில்—என்று இந்தப்பதத்திற்கு அர்த்தம். ப்ரஹ்மஜிஜ்ஞாஸாபதஸாமர்த்யத்தால் பூர்வபாகத்தின் விசாரரூபமான வ்ருத்தவிசேஷம் ஆக்ஷேபிக்கப்பட்டது என்று கருத்து 'அயம்'—வேறு ஹேதுவை அபிப்ராயங்கொண்டு இந்தப்பதத்தைச்சொல்லுகிறார். இந்த அதஶப்தம்-'அதஶப்தாநுஶாஸநம், அத யோகாநுசாஸநம்' முதலிய ஸூத்ரங்களிலுள்ள அதஶப்தத்தைக்காட்டிலும் வேறு-என்று அர்த்தம். இதனால் பக்கத்தில் அத:ஶப்தத்தை யுடைய இந்த அதஶப்தம்—என்று சொன்னது போலாகிறது. இந்த அர்த்தம் வேதாந்த ஸாரத்திலன்றோ ஸ்ரீபாஷ்யகாரரால் கண்டோக்தமாய் சொல்லப்பட்டிருக்கிறது! ப்ரக்ரு தத்தைப்பராமர்சிக்கிற அத:ஶப்தத்தால் பூர்வவ்ருத்தமானது சொல்லப்பட்டது,—என்று கருத்து. இவ்விதம் ஒன்று சேர்ந்த இவ்விரண்டு பதங்களின் ஸ்வாரஸ்யத்தால், ஸாமாந்ய மாய் சொல்லப்பட்டு,விசேஷமாய் ஆக்ஷிப்தமான பூர்வவ்ருத்தம் ஸித்தித்தது. ஆகையால், ஸ்வாரஸ்யத்துக்கு அபவாதகமான பூர்வவ்ருத்தாப்ரதிபத்தி இல்லை. எனவே, அதஶப்தம் 'ஆநந்தர்யம்' என்கிற அர்த்தத்தையே சொல்லுகிறதென்று வாக்யார்த்தம். இவ்விதம் அத சப்தத்துக்கு—உத்தரபாகவிசாரத்தின் முதல் ஸூத்ரத்தை அடைந்திருப்பதையும், அத: ஶப்தத்தை அருகில் வைத்துக்கொண்டிருப்பதையும், ஆநந்தர்யம் என்கிற அர்த்தத்தில் இருக்கும் ஸ்வாரஸ்யத்தையும் காட்டுகிற, ஆநந்தர்யத்துக்கு உபபாதகங்களான, 'அத்ர, அயம், ஹவதி' என்னும் பதங்களாலேயே இந்த முதல் ஸூத்ரத்தில் கதியில்லாமல் ஒப்புக் கொள்ளவேண்டியதாயிருந்த மற்றைய அர்த்தங்களுக்கு அநாதரவு பலித்தது.

இனி, 'அத: ஶப்தோ வ்ருத்தஸ்ய ஹேதுபாவே' என்று தொடங்கி அத:ஶப்தத்தை வ்யாக்யாநம் பண்ணுகிறார்.

'வ்ருத்தஸ்ய' என்றதால் † ப்ரக்ருதியின் அர்த்தம் சொல்லப்பட்டது. 'ஹேதுபாவே' என்று ப்ரத்யயத்தின் அர்த்தம். இது ப்ரதிக்ஞை. இவ்விடத்திலும் 'அத்ர, அயம், பவதி' என்று $ அநுஷங்கிக்கப்பட்ட மூன்று பதமும் உபபாதகம். ப்ரக்ருதி, ப்ரத்யயம், இவ் விரண்டும் இப்பொழுது சொன்ன அர்த்தத்தில் நோக்குள்ளவைகள்என்கிற ப்ரஸித்திப்ராசுர்யமானது 'பவதி' சப்தத்தால் காட்டப்பட்டது. 'அத்ர' என்பதற்கு முன்போலவே அர்த்தம் இதனால் வ்ருத்தவிசேஷமும், அதற்கு ஹேதுத்வயோக்யதையும் ஆக்ஷிப்தமா யிற்று. அந்த யோக்யதையும் சீக்ரத்தில் வெளியாகப்போகிறது. 'அயம்:' ஆநந்தர்யார்த் தத்தில் ஸ்வாரஸ்யமாகிற அத ஶப்தத்தை முதலில் வைத்துக்கொண்டிருக்கிற. இத னால் வ்ருத்தஸாமாந்யம் ஆக்ஷிப்தமாயிற்று.

அத ஶப்தத்தின் அர்த்தநிர்ணயமானது, அத: ஶப்தத்தின் அர்த்தநிர்ணயத்தை அபேக்ஷிப்பதாலும், அத:ஶப்தத்தின் அர்த்தநிர்ணயமானது அத ஶப்தத்தின் அர்த்த

---

† ப்ரக்ருதி-ப்ரத்யயத்தை ஏற்றுக்கொள்ளும் பதம். அதாவது பகுதி. அத: என்னும் சப்தத்தில்—'இதம்' என்கிற பதம் ப்ரக்ருதி. அதன்மேல் 'தஸி' என்கிற ப்ரத்யயம் (விகுதி) ஶப்தாநுசாஸநத்தால் விதிக்கப்பட்டிருக்கிறது. தஸிப்ரத்யயம் வரும்பொழுது ப்ரக்ருதியாயுள்ள 'இதம்' சப்தம் முதலில் அ என்று ஆதேசம் பெற்று 'அத:' என்று மாறுகிறது. இங்கு 'வ்ருத்தம்' என்பது ப்ரக்ருதியின் அர்த்தம்; 'ஹேதுபாவம்' என்பது தஸிப்ரத்யயத்தின் அர்த்தம்.

$ அநுஷங்கமாவது—ஒருமுறை ஓரிடத்தில் அந்வயித்த பதத்தையே ப்ரயோஜநத் தை விரும்பி மறுமுறை மேலுள்ள வாக்யத்திலோ, பதத்திலோ சேர்ப்பது.

நிர்ணயத்தை அபேக்ஷிப்பதாலும் ‡ அந்யோந்யாச்ரயதோஷம் வருமேயென்றால்,—அப்படியல்ல. அத² ஶப்தத்திற்கு ஆநந்தர்யத்திலுள்ள ஸ்வாரஸ்யமானது அத:ஶப்தார்த்தநிர்ணயத்தை எதிர்பார்க்கவேயில்லை. இவ்விதமே, அத:ஶப்தத்தின் வ்ருத்தஹேதுபாவபரத்வமான ஸ்வாரஸ்யமும் அத²ஶப்தார்த்தநிர்ணயத்தை எதிர்பார்க்கிறதில்லை. அத² ஶப்தமானது தன் ஸ்வாரஸ்யத்தாலும், சேர்ந்து ப்ரயோகிக்கப்பட்ட அருகிலுள்ள வேறுபதத்தின் ஸ்வாரஸ்யத்தாலும் ஆநந்தர்யத்தையே சொல்லுகிறது. அப்படியே அத:ஶப்தமும் தன் ஸ்வாரஸ்யத்தாலும், அதோடு சேர்ந்த மற்றொரு பதத்தின் ஸ்வாரஸ்யத்தாலும் வ்ருத்தார்த்தஹேதுத்வத்தை உணர்த்துகிறது—என்பது 'பவதி, அயம்' என்கிற இவ்விரண்டு சப்தங்களாலும் நன்கு காட்டப்பட்டதாகிறது. இவைகளும் ¶ அப்யுச்சயயுக்திகள். 'அத்ர' என்னும் பதத்தால் குறிக்கப்பட்ட ப்ரஹ்மஜிஜ்ஞாஸாபதத்தின் ஸாமர்த்யத்தாலேயே இரண்டு பதங்களுக்கும் முன் சொல்லிய அர்த்தபரத்வம் ஸித்திப்பதால். ஆதலால், தன் ஸ்வாரஸ்யத்தாலும், பக்கத்திலுள்ளபதத்தின் ஸ்வாரஸ்யத்தாலும், ப்ரஹ்மஜிஜ்ஞாஸாபத ஸாமர்த்யத்தாலும் அத²அத:ஶப்தங்களிரண்டும் எப்படி அர்த்தம் சொல்லப்பட்டிருக்கிறதோ அதே அர்த்தத்தையுடையவைகள் என்பதனால் தோஷமில்லை.

அத² அத:ஶப்தங்களிரண்டில் ஒன்று போதுமென்பதும் ஸரியல்ல. ஏனெனில், அநந்தரகாலத்தை உபஸ்தாபிக்கிற அத²ஶப்தமானது, நடந்தேறப்போகிற ப்ரஹ்மஜிஜ்ஞாஸைக்கு விசேஷணமாயிருக்கிறது; அத:ஸப்தமானது முன் நடந்திருக்கிற கர்மஜிஜ்ஞாஸைக்கு ஹேதுபாவத்தைச்சொல்லுகிறது. ஆகவே, பர்யாயத்வம்(ஒரே அர்த்தத்தை உணர்த்துதல்)என்பது அத² அத:ஶப்தங்களுக்கு இல்லையாதலால் இவ்விரண்டில் ஒன்றுபோதுமென்பது தகாது. மேலும், * ப்ரதிஜ்ஞாஹேதுரூபமாக இவ்விரண்டு பதங்களுக்கும் ப்ரயோஜநம் வேறுபட்டிருககிறது. ப்ரஹ்மஜிஜ்ஞாஸை செய்யத்தகுந்தது—என்றல்லவோ ப்ரதிஜ்ஞை! என்றால் அப்படியல்ல. 'ப்ரஹ்மஜிஜ்ஞாஸா' என்று தர்மியைநிர்தேசித்தார். அத² என்று ஸாத்யதர்மத்தைக் கூறியபடி கர்த்தவ்யதாமாத்ரம் ஸாத்யதர்மமல்ல. ஆநந்தர்யத்வவிசிஷ்ட கர்த்தவ்யத்வமே ஸாத்யதர்மம். இவ்வாறாக, அத²அத:ஶப்தங்களிரண்டுக்கும் 'ப்ரதிஜ்ஞா ஹேது' என்கிற அர்த்தஹேததால் விபாகம் 'அதா²தோ தர்மஜிஜ்ஞாஸா'என்கிற இடத்திலும் ஸமாநம். இப்படி அர்தங்களின் வேறுபாட்டை விவக்ஷிக்கவில்லையாதலால், அத² யோகாநுஶாஸநம், அத² ஶப்தாநுஶாஸநம்' முதலிய இடங்களில் அத:ஶப்தம் ப்ரயோகிக்கப்படவில்லை.

மேலும், ப்ரஹ்மஜிஜ்ஞாஸா பதஸாமர்த்யத்தால் ஆக்ஷிப்தமானதால் மனதில் ஊன்றியுள்ள கர்மவிசாரத்திற்கு ஹேதுபாவமானது அத:ஶப்தத்தாலேயே அறியத்தக்கதாகிறது; ஆகவே, அத²ஶப்தத்தால் என்ன ப்ரயோஜநம்?-எனில், அப்படியல்ல. அத²ஶப்தமானது

‡ அந்யோந்யாசரயம்:—இது ஒரு விதமான வாக்யார்த்ததோஷம். இது இரண்டுவிதம். அவைகளாவன:—உத்பத்தௌ அந்யோந்யாச்சரயம். ஜ்ஞப்தௌ அந்யோந்யாச்ரயம். இரண்டு வாக்யார்த்தங்களும் அந்யோந்யம் (ஒன்று மற்றொன்றை) தவறாமல் அபேக்ஷிப்பதால் (அந்யோந்யாபேக்ஷாரூபமான ப்ரதிபந்தகத்தால் வாக்யார்த்தஜ்ஞானமாவது, வாக்யார்த்தத்தின் உத்பத்தியாவது இல்லாமல போவது.)

¶ அப்யுச்சயயுக்திகள் – அதிகமான யுக்திகள். அப்யுச்சயபதம் 'கூட' என்னும் அர்த்தத்தில் சாஸ்த்ரகாரர்களால் உபயோகிக்கப்படுகிறது.

* ப்ரதிஜ்ஞாஹேதுரூபம் – 'ப்ரஹ்மஜிஜ்ஞாஸை செய்யத்தகுந்தது' என்பது ப்ரதிஜ்ஞாவாக்யம். 'கர்மவிசாரம் முந்தி நடந்திருப்பதால்,' என்பது ஹேதுவாக்யம். (ப்ரஹ்மஜிஜ்ஞாஸா கர்த்தவ்யா, கர்மவிசாரஸ்ய பூர்வவ்ருத்தத்வாத்.)

ஆநந்தர்யரூபார்த்தத்தின் மூலமாய் வ்ருத்தமானகர்மவிசாரரூபஹேதுவுக்கு வேறு சாஸ்த்ரச்ரவணத்தினுல் விலக்கத்தைக்கரூதாமையைக் காண்பிக்கிறது. இதனுல் வேதாந்தச்ரவணத்துக்குமுன் வேறுசாஸ்த்ரங்களைக்கேட்காமல் ஸம்பாதிப்பது அசக்யமாதலாலும், சாஸ்த்ராந்தரங்கள் அஸமயத்தால் பீடிக்கப்பட்டிருப்பதாலும், சாஸ்த்ராந்தரங்களை அபேக்ஷித்துவரத்தக்க நித்யாநித்யவஸ்துவிவேகாதிகளுக்கு பூர்வவ்ருத்தித்வநிராஸம் பலித்ததாகும்! ஆனுல் முன் நடந்த ஏதோ ஒன்றை பூர்வவ்ருத்தம் என்றுசொல்லக்கூடாது. சொன்னுல் § அதிப்ரஸங்கம் வரும். ஆகையால், இனி வரப்போகிற ப்ரஹ்மவிசாரத்துக்கு உபயோகமாய் எந்த பூர்வவ்ருத்தம் இருக்கிறதோ அது அதசப்தத்தினுல் உபஸ்தாபிக்கப்படுகிறது.

சாஸ்த்ராந்தரச்ரவணநைரபேக்ஷ்யம்போல ஹேதுத்வமும் அந்த வஸ்துஸாமர்த்யத்தினுலேயே ஸித்திக்கையில் அத: ஶப்தத்தினுல் என்ன ப்ரயோஜநம்?—என்றுல், அப்படியல்ல. அத:ஶப்தமானது அதஶப்தத்தால் ஆக்ஷேபிக்கப்பட்டுள்ள ஹேதுவின் அஸித்திசங்கையை பரிஹரிப்பதற்கு மிகவும் அவச்யமானது. †ஹேதுவோ விசிஷ்டமாயிருக்கிறது. ஸூத்ரகாரர் அபிப்ராயப்பட்டிருக்கிற அந்த விசிஷ்டஹேதுவினுடைய விசேஷண, விசேஷ்யாம்சங்களைச்சார்ந்த அஸித்திசங்கையும், அதன்பரிஹாரமும் மேலே காண்பிக்கப்படப்போகிறபடியால் இந்த அத அத:ஶப்தங்களிரண்டும் மிகுந்த ப்ரயோஜநமுள்ளவை.

𑌭𑌾𑌷𑍍𑌯𑌮𑍍:—

𑌅𑌧𑍀𑌤𑌸𑌾𑌙𑍍𑌗𑌸𑌶𑌿𑌰𑌸𑍍𑌕𑌵𑍇𑌦𑌸𑍍𑌯 𑌅𑌧𑌿𑌗𑌤𑌾𑌲𑍍𑌪𑌾𑌸𑍍𑌥𑌿𑌰𑌫𑌲𑌕𑍇𑌵𑌲𑌕𑌰𑍍𑌮𑌜𑍍𑌞𑌾𑌨𑌤𑌯𑌾 𑌸𑌞𑍍𑌜𑌾𑌤𑌮𑍋𑌕𑍍𑌷𑌾𑌭𑌿𑌲𑌾𑌷𑌸𑍍𑌯 𑌅𑌨𑌨𑍍𑌤𑌸𑍍𑌥𑌿𑌰𑌫𑌲𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑌾 𑌹𑍍𑌯𑌨𑌨𑍍𑌤𑌰𑌭𑌾𑌵𑌿𑌨𑍀 ।

வ்யாகரணம் முதலிய அங்கங்களோடும், உபநிஷத்தாகிற ஶிரஸோடும் கூடிய வேதங்களை அத்யயனம்செய்து, கர்மவிசாரம் பண்ணி, கேவல கர்மங்கள் அல்பமாகவும் அஸ்திரமாகவுமுள்ள பலனையே கொடுப்பவைகள் என்றும் அறிந்து, மோக்ஷத்தில் அபிலாஷம் பிறந்திருக்கிற சேதநனுக்கு அநந்தமாயும், ஸ்திரமாயுமிருக்கிற பலனை விளைக்கும் ப்ரஹ்மத்தை அறியவேண்டுமென்கிற இச்சையன்றோ அநந்தரம் உண்டாவது.

ச்ருதப்ரகாசிகை:—'அத்ர' என்கிற பதத்தால் ஸூசிக்கப்பட்ட 'ப்ரஹ்மஜிஜ்ஞாஸா' பதத்தின் ஸாமர்த்யத்தினுல் ஸித்தமான ¶ வ்ருத்த, ‡ வர்த்திஷ்யமாணங்களையும், அவ்விரண்டுக்குமுள்ள ஹேதுஹேதுமத்பாவத்தையும் விவரித்துக்கொண்டு முன்சொன்ன ஆநந்தர்யத்தை நிரூபணம்பண்ணுகிறுர் ' அதீத ' என்ற வாக்யத்தால்.

† ஹேது விசிஷ்டமாயிருப்பதாவது - வ்ருத்தஸ்ய கர்மவிசாரஸ்ய அல்பாஸ்திரபலத்வாத் - என்று விசிஷ்ட ஹேதுஸ்வரூபநிர்தேசம்.

§ அதிப்ரஸங்கமாவது - அலக்ஷ்யத்தில் லக்ஷணஸத்தை (இருப்பது) அல்லது நியமத்துக்குத்தவறுதல்.

¶ வ்ருத்தம் - நடந்த விஷயம்.

‡ வர்த்திஷ்யமாணம் - நடக்கப்போகிற விஷயம்.

'கர்மக்ஞான' சப்தத்தால் வ்ருத்தம் கூறப்பட்டது. 'ப்ரஹ்மஜிஜ்ஞாஸா' பதத்தால் வர்த்திஷ்யமாணம் சொல்லப்பட்டது. 'அல்பாஸ்திரபல, அநந்தஸ்திரபல—' என்னும் இவ்விரண்டு சப்தங்களால் ஹேதுஹேதுமத்பாவம் காண்பிக்கப்பட்டது. 'கேவல' சப்தத்தால் ப்ரஹ்மக்ஞானபூர்வகமாயுள்ள கர்மாவை விலக்குகிறார்.

கர்மக்ஞானம்தான் பூர்வவ்ருத்தம் என்பது எப்படி?— அநந்தஸ்திரபலப்ராப்திதான் எப்படி உண்டாகும்?— என்று ஸந்தேஹம் உண்டானால், 'அதீத' என்று தொடங்கிய பதத்தால் விவரிக்கிறார். 'ஸபிரஸ்கவேத' என்கிற சப்தத்தால் முழுவேதத்தின் அத்யயனமும் விவக்ஷிக்கப்பட்டது; வ்யாக்யாநபௌர்வாபர்யத்துக்கு ஹேதுமான ¶வ்யாக்யேய-க்ரந்தத்தின், $பௌர்வாபர்யநியமமும், இரண்டு பாகங்களும் சேர்ந்து ஒரே ப்ரபந்தம் என்பதும் இந்த சப்தத்தாலேயே ஸூசிப்பிக்கப்படுகிறது. 'ஸாங்க' சப்தத்தால் அநந்தஸ்திரபலத்துக்கு § ஆபாதப்ரதீதியை உண்டுபண்ணுவதில் காரணத்வம் காட்டப்பட்டது. *"க்ருஷ்ணபக்ஷே ததாங்காநி, உபநீயது ய: ஶிஷ்யம் வேதமத்யாபயேத் த்விஜ:, ஸகல்பம், ஸரஹஸ்யஞ்ச தமாசார்யம் ப்ரசக்ஷதே." இதுமுதலான வசநங்கள் 'அதீதஸாங்கஸஶிரஸ்கவேதஸ்ய' என்கிற இடத்தில் அபிப்பிராயப்படப்பட்டுள்ளன. இவ்விதம் 'அதீத' என்று தொடங்கப்பட்டு, ஆறும் வேற்றுமையிலுள்ள இரண்டு விசேஷணங்களால் 'ப்ரஹ்மஜிஜ்ஞாஸா' பதத்தின் ஸாமர்த்யத்தால் பாதுகாக்கப்படும் அத அத: ஶப்தங்களால் ஏற்படுத்தப்பட்டுள்ள அதிகாரி விசேஷம் காண்பிக்கப்பட்டதாக ஆகிறது. கர்மங்களை நன்றாய் அறிந்தவனும், ஸாம்ஸாரிகபலன்களில் நிர்வேதம் அடைந்தவனும், அநந்தமாயும், ஸ்திரமாயுமிருக்கிற பலத்தை அடையவிரும்புகிறவனுமான சேதனனன்றோ சாஸ்திரத்திற்கு அதிகாரி.

"அநந்தஸ்திரபலப்ரஹ்மஜிஜ்ஞாஸா."

அளவற்றதும்; சாச்வதமாயுமுள்ள பலரூபமான ப்ரஹ்மத்தை அறியவேண்டுமென்ற விருப்பம்—என்று அர்த்தம். அநந்தஸ்திரபலத்வம் என்பது ஜிஜ்ஞாஸைக்கு விசேஷணமானால், ஜிஜ்ஞாஸைக்கு அத்தன்மை ஆகமங்களால் உண்டான விவேகத்தின் மூலமாய்,— என்று தெரிந்துகொள்ளவேண்டும்.

'அநந்தரபாவிநீ'—என்னும் பதத்தால், 'அத அத:' சப்தங்களால் கிடைத்துள்ள ஹேதுவின் சாஸ்த்ராந்தர †நைரபேக்ஷ்யம் விவக்ஷிக்கப்பட்டது. கர்மவிசாரத்திற்குப் பிறகு ப்ரஹ்மவிசாரம் செய்யத்தக்கது—என்பதில், கர்மாக்கள் அல்பாஸ்திரங்கள் என்னும் நிர்ணயத்துடன் கூடிய அநந்தஸ்திரபலத்தின் ஆபாதப்ரதீதி—என்பது விசிஷ்ட ஹேது. அத:சப்தத்தால் வ்ருத்தமான கர்மவிசாரத்துக்கு ஹேதுத்வம் சொல்லப்பட்

¶ வ்யாக்யேயம் - வ்யாக்யாநம் செய்யத்தகுந்த க்ரந்தம்.

$ பௌர்வாபர்யம் - முன்னும் பின்னுமாயுள்ள வரிசைக்ரமம்.

§ ஆபாதப்ரதீதியாவது மேலெழுந்தவாரியாக உண்டாகும் ஸம்சயவிபர்யயஸஹமான ஜ்ஞானம்.

* (க்ருஷ்ணபக்ஷே) க்ருஷ்ணபக்ஷத்திலும் அவ்வாறே வேதாங்கங்களும் கற்கத்தகுந்தவைகள். எந்த ப்ராஹ்மணன் உபநயநம் செய்துவைத்து சிஷ்யனுக்கு கல்பத்துடனும், ரஹஸ்யமான மந்த்ரங்களுடனும் அத்யயநம் செய்து வைக்கிறானோ அவனைத்தான் ஆசார்யன் என்று சொல்லுகிறார்கள்.

† நைரபேக்ஷ்யம் - மற்றொன்றை எதிர்பாராதிருத்தல்.

டிருப்பதாலும்,—கர்மவிசாரமானது ‡ ஸாங்க வேதாத்யயனத்தால் உண்டான அநந்தஸ்திரபலாபாதப்ரதீதியை முன்னிட்டு வருவதாலும்,—'அடிக்கடி செய்யவேண்டும்' என்கிற விதி முதலியவைகளால் கர்மாக்கள் அல்பாஸ்திரமான பலனுள்ளவைகள் என்கிற எண்ணத்துக்குக்காரணமாயிருப்பதாலும் இது விசிஷ்டஹேது. இத்தன்மையுள்ள விசிஷ்டஹேதுவானது—"அதிகதால்பாஸ்திரபலகேவலகர்மஜ்ஞானதயா ஸஞ்ஜாதமோக்ஷாபிலாஷஸ்ய" என்னும் பதங்களால் சொல்லப்பட்டது.

இங்கு 'அதிகத' என்கிற பதத்தால் கர்மாக்கள் பலத்தின் மூலமாய் ஓதுக்குவதின் பொருட்டு அறியத்தக்கவைகள்—என்பது கண்டோக்தமாயிற்று. ஸ்வரூபத்தால் க்ரஹிப்பதற்காக அறியத்தக்கதென்பதும் கூட கர்மவிசாரத்தின் பூர்வவ்ருத்தத்வத்தில் ஹேது; அபேக்ஷிதமான கர்மஸ்வரூபத்தின் ஞானமும், கேவல கர்மாக்களுக்கு அல்பாஸ்திரத்வபலஜ்ஞானமும் கர்மமீமாம்ஸையினால் நிச்சயிக்கத்தக்கது;—என்றுமல்லவோ மேலே சொல்லப்போகிறார். அந்த கர்மஸ்வரூபஜ்ஞானம் முதலியவைகளில் கர்மாக்கள் ஸ்வரூபத்தால் உபாதேயங்கள்—என்கிற ஜ்ஞானம் அநந்தஸ்திரபலாபாதப்ரதீதியில் உள்ளடங்கியது. உபாயம், அதன் இதிகர்த்தவ்யதாவிசேஷங்கள், இவைகளோடு கூடவேயன்றோ அநந்தஸ்திரபலாபாதப்ரதீதி—என்பதால் விசிஷ்டஹேதுவில் அந்தர்பாவமும், மேல் க்ரந்தத்தின் அவிரோதமும் ஸித்திக்கிறது.

ஆனால், கர்மவிசாரம் ப்ரஹ்மவிசாரத்திற்கு நிரபேக்ஷஹேதுவாயிருக்குமாகில்,—கர்மவிசாரம் செய்த யாவராலும் ப்ரஹ்மமானது விசாரிக்கப்படவேண்டுமாதலால், ஸ்வர்கார்த்தமான கர்மாக்களை அனுஷ்டிப்பவர்களே இல்லாமற்போக நேரிடுமே—எனில், அப்படியல்ல. ஏனென்றால், மீமாம்ஸையைக்காதால் கேட்காமலிருந்தபோதிலும், உபாத்யாயர் முதலியவர்களின் வசநத்தினால் எவர்கள் அனுஷ்டிக்கிறார்களோ அவர்களுக்கு ஸ்வர்கார்த்தமான கர்மாக்களை அனுஷ்டிப்பதில் விரோதம் கிடையாது. மீமாம்ஸையைக்கேட்டும் எவர்கள் ஸ்வர்கத்தில் விருப்பமுள்ளவர்களோ அவர்களுக்கு அத்ருஷ்டதோஷத்தாலும், அஸமீசினமான வ்யாக்யானங்களைச்செவியுற்று மோக்ஷத்தில் விருப்பமில்லாமை ஸம்பவிப்பதாலும்.

ஸாங்காத்யயநம் கர்ம விசாரத்துக்கு பூர்வவ்ருத்தமாகில் ஸாங்கவேதாத்யயநம் செய்த எல்லோராலும் கர்மாவானது விசாரிக்கப்படவேண்டியதாகும்; ஆனால், அப்படிச்செய்யப்படுவதில்லை. வேதாத்யயநம் செய்திருந்தபோதிலும், அநேகர் கர்மமீமாம்ஸாச்ரவணமில்லாதவர்களாகவே காணப்படுகின்றனர். அவர்களுக்கு கர்மவிசாரம் இல்லாதிருப்பது அத்ருஷ்டம், தேசம், காலம் முதலியவற்றின் வைகுண்யத்தால் ஏற்படுகிறதே தவிர ஸாங்காத்யயநத்துக்கு பூர்வவ்ருத்தத்வம் இல்லாமையால் அல்ல;—என்றாலும், அது இவ்விடத்திலும் ஸமாநம். அப்படியே ஸாதநசதுஷ்டயம் முதலானது ஸித்தித்திருந்தபோதிலுங்கூட ப்ரஹ்மவிசாரத்தை அறியாதவர்களாகவே அநேகர் காணப்படுவதால், ஸாதநசதுஷ்டயம் முதலியவற்றிற்கு ப்ரஹ்மவிசாரத்தைக்குறித்து நியமேந காரணத்வம் எவ்விதம் பொருந்தும்?—என்று சோத்யம் ஏற்பட்டால், அதற்கு பூர்வவ்ருத்தவாதிகள் கூட அத்ருஷ்டம் முதலியவற்றின் 'வைகுண்யத்தால் தோஷமில்லை' என்று பரிஹரிக்கவேண்டிவரும். அதுவும் இங்கு ஸமாநம்தான். ஆகவே, பரிஹரிக்கமுடியாத வேறு தூஷணங்கள் அவர்களுக்கு அதிகம். ஆகையால், பானை செய்வதற்குக்குயவன்போல், ப்ரஹ்மவிசாரத்துக்கு கர்மவிசாரம் அவச்யம் முன்பாகவே இருந்து தீரவேண்டும். த்ருஷ்

‡ வேதாங்கங்கள் ஆறு:—சிக்ஷை, வ்யாகரணம், ச்சந்தஸ், நிருக்தம், ஜ்யோதிஷம், கல்பம்.

டாத்ருஷ்டப்ரதிபந்தகம் இல்லாத புருஷனுக்கு ஸமீசீநமாயுள்ள கர்மவிசாரம் ப்ரஹ்ம விசாரத்திற்கு புஷ்கலமான காரணமாகிறது. ஆதலால், ஒரு தோஷமுமில்லை.

இவ்விதம் அத அத:ஶப்தங்களின் அர்த்தம் நிரூபிக்கப்பட்டது.

𑌭𑌾𑌷𑍍𑌯𑌮𑍍:—

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋 𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑌾। 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣 𑌇𑌤𑌿 𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 𑌷𑌷𑍍𑌠𑍀। '𑌕𑌰𑍍𑌤𑍃𑌕𑌰𑍍𑌮𑌣𑍋𑌃 𑌕𑍃𑌤𑌿' 𑌇𑌤𑌿 𑌵𑌿𑌶𑍇𑌷𑌵𑌿𑌧𑌾𑌨𑌾𑌤𑍍। 𑌯𑌦𑍍𑌯𑌪𑌿, 𑌸𑌮𑍍𑌬𑌨𑍍𑌧𑌸𑌾𑌮𑌾𑌨𑍍𑌯𑌪𑌰𑌿𑌗𑍍𑌰𑌹𑍇𑌪𑌿 𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑌾𑌯𑌾𑌃 𑌕𑌰𑍍𑌮𑌾𑌪𑍇𑌕𑍍𑌷𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌕𑌰𑍍𑌮𑌾𑌰𑍍𑌥𑌤𑍍𑌵𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌃। 𑌤𑌥𑌾𑌪𑌿, 𑌆𑌕𑍍𑌷𑍇𑌪𑌤𑌃 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌾𑌦𑌾𑌭𑌿𑌧𑌾𑌨𑌿𑌕𑌸𑍍𑌯𑍈𑌵 𑌗𑍍𑌰𑌾𑌹𑍍𑌯𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 𑌷𑌷𑍍𑌠𑍀 𑌗𑍃𑌹𑍍𑌯𑌤𑍇। 𑌨 𑌚 ¶ '𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌦𑌵𑌿𑌧𑌾𑌨𑌾 𑌷𑌷𑍍𑌠𑍀 𑌨 𑌸𑌮𑌸𑍍𑌯𑌤𑍇' 𑌇𑌤𑌿 𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 𑌷𑌷𑍍𑌠𑍍𑌯𑌾𑌃 𑌸𑌮𑌾𑌸𑌨𑌿𑌷𑍇𑌧𑌃 𑌶𑌙𑍍𑌕𑌨𑍀𑌯𑌃; '𑌕𑍃𑌦𑍍𑌯𑍋𑌗𑌾 𑌚 𑌷𑌷𑍍𑌠𑍀 𑌸𑌮𑌸𑍍𑌯𑌤𑍇' 𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑍍𑌰𑌸𑌵𑌸𑍍𑌮𑌰𑌣𑌾𑌤𑍍

ப்ரஹ்மத்தை அறிய வேண்டுமென்கிற இச்சை ப்ரஹ்மஜிஜ்ஞாஸை. 'ப்ரஹ்மண:' என்று கர்மார்த்தத்தில் ஷஷ்டீ வந்திருக்கிறது. 'கர்த்ருகர்மணோ:க்ருதி' என்று விசேஷித்து ஷஷ்டியை விதித்திருப்பதால், ஸம்பந்தஸாமாந்யத்தை பரிக்ரஹித்தாலும், ஜிஜ்ஞாஸையானது கர்மாவைக்கருதுவதால் இந்த ஷஷ்டிக்கு கர்மார்த்தத்வம் ஸித்திக்கிறது. ஆகிலும், ஆக்ஷேபத்தால் கிடைப்பதைவிட ஆபிதாநிகமே க்ராஹிக்கத்தக்கதாதலால் கர்மணி ஷஷ்டீ க்ராஹிக்கப்படுகிறது. 'ப்ரதிபதத்தால் விதிக்கப்பட்ட ஷஷ்டியானது ஸமாஸத்துக்கு விஷயமாவதில்லை' என்பதால், கர்மணி ஷஷ்டிக்கு ஸமாஸத்தில் நிஷேதம் சங்கிக்கத்தக்கதல்ல. ஏனெனில், 'க்ருத்யோகாச ஷஷ்டீ ஸமஸ்யதே' என்று ‡ ப்ரதிப்ரஸவம் ஸம்பவிப்பதால்.

ச்ருதப்ரகாசிகை:—பிறகு 'ப்ரஹ்மஜிஜ்ஞாஸா' பதத்திற்கு அர்த்தம் சொல்லவிரும்பி அது ஒரே பதமாவதற்கு ஸமாஸம் காரணமாதலால் முதன்முதல் ஸமாஸார்த்தத்தை நிரூபிக்கிறார், 'ப்ரஹ்மண:' இது முதலிய வாக்யத்தால். † கர்மத்வகரணத்வாதி-ஸம்பந்த விசேஷங்களில் மற்றைய விபக்திகள் 'கர்மணித்விதீயா' முதலிய ஸூத்ரங்களால் விதிக்கப்

¶ 'ப்ரதிபதவிதாநாச ஷஷ்டீ ந ஸமஸ்யதே இதி வக்தவ்யம்.' இது காத்யாயநருடைய வார்த்திகம். (இதற்குப்பொருள்) ஒரு ஸூத்ரத்தில் ஆநுபூர்விவிசேஷத்தோடு ஒருவார்த்தை எடுக்கப்பட்டு அதின் ஸம்பந்தத்தால் ஷஷ்டீ விதிக்கப்பட்டால் அந்த ஷஷ்டியந்தபதங்களுக்கு ஸமாஸம் கிடையாது. விக்ரஹவாக்யம் மாத்ரமே.

‡ ப்ரதிப்ரஸவம் - அபவாதத்துக்கு அபவாதம்.

† காரகவிபக்தி 6—1. கர்த்ருத்வம், 2. கர்மத்வம், 3. கரணத்வம், 4. ஸம்ப்ரதாநத்வம் 5. அபாதாநத்வம், 6. அதிகரணத்வம். (சேஷே ஷஷ்டி. இதுகாரகமல்ல.)

பட்டுள்ளன. 'ஷஷ்டீ சேஷே' என்னும் ஸூத்ரத்தால் ஸம்பந்தஸாமாந்யத்தில் ஷஷ்டீ விதிக்கப்பட்டிருக்கிறது. இங்கு அந்த ஷஷ்டிக்கு ஸாமாந்யவிஷயத்வத்தை சங்கித்து கர்மவிஷயத்வம் நிச்சயிக்கப்படுகிறது. அந்த இடத்தில் பொதுவாக ஸமாஸமானது அநேக விபக்திஸாதாரணமாயிருப்பதால், விபக்தியந்தரஸந்தேஹத்தை நீக்குவதற்காக இங்கு அவைகளுக்கு அநுபபத்தியை நினைத்துக்கொண்டு விக்ரஹவாக்யத்தைக்காட்டுகிறார் 'ப்ரஹ்மணோஜிஜ்ஞாஸா' என்று. சதுர்த்தியை (நான்காம் வேற்றுமையை) எடுத்துக் கொண்டால் ப்ரயோஜனம் கிடைத்தபோதிலும்,—‡ ப்ரக்ருதிவிக்ருதிபாவம் இல்லாத இடத்தில் சதுர்த்தீஸமாஸம் வரக்கூடாதாகையால், அதை எடுக்கவில்லை.

'ஸப்தமீ' என்று யோகவிபாகத்தால் 'ப்ரஹ்மணி ஜிஜ்ஞாஸா' என்று ஸமாஸம் வந்தாலும், ப்ரஹ்மத்துக்கு விஷயத்வம் தான் ஸித்திக்குமே ஒழிய ப்ரயோஜநத்வம் ஸித்திக்காது. ஆகவே, ஸப்தமீயை (ஏழாம் வேற்றுமையை) எடுக்கவில்லை.

¶ 'சங்குலயா கண்ட:' என்பதுபோல் த்ருதீயா - (மூன்றும் வேற்றுமை) ஸமாஸத்தை ஒப்புக்கொண்டாலும் விஷயத்வம், ப்ரயோஜநத்வம்,இரண்டும் ஸித்திக்காதென்று கருத்து.

'ப்ரஹ்மண:' என்கிற இந்த ரூபம் பஞ்சமீ (ஐந்தாம் வேற்றுமை) ஷஷ்டீ (ஆறும் வேற்றுமை) இரண்டுக்கும் ஸமானமாகயிருப்பதாலும், ஷஷ்டிக்கு அநேக அர்த்தங்கள் இருப்பதாலும், அதன் நிர்ணயத்துக்காகவும் 'ப்ரஹ்மண இதி' என்று சொல்லுகிறார். எந்த விதியினால் இந்த விபக்தி வருகிறது ?—என்றால், 'கர்த்ருகர்மணோ:' என்று சொல்லுகிறார்.

ஷஷ்டியானது கர்த்ருகர்மா இரண்டுக்கும் ஸாதாரணமாயிருந்தபோதிலும்,தாபத்ரயத்தால் பீடிக்கப்பட்டவனுக்கே ப்ரஹ்மஜிஜ்ஞாஸாகர்த்ருத்வம், ப்ரஹ்மத்துக்கே கர்மத்வம் என்கிற அபிப்ராயத்தால் 'ப்ரஹ்மண இதி கர்மணிஷஷ்டீ' என்று சொன்னார். கர்மணி ஷஷ்டியை ஸ்வீகரித்தால் ப்ரஹ்மத்துக்கு விஷயத்வ,ப்ரயோஜநத்வங்கள் ஸித்திக்கும்.

இப்படியானால், ஸம்பந்தஸாமான்ய பரிக்ரஹசங்கா விஷயமான 'யத்யபி' என்று தொடங்கப்படும் பாஷ்யத்துக்கு உத்தானம் எவ்வாறு பொருந்தும்?—இதோ பதில்சொல்லுகிறோம். ஸம்பந்த ஸாமாந்யத்தை அங்கீகரித்தபோதிலும், ஜிஜ்ஞாஸாபதத்தின்ஸாமர்த்யத்தால் ப்ரஹ்மத்துக்கு கர்மத்வம் ஸித்திப்பதாலும்,—பரம்பரையாக ஸம்பந்தம்பெற்ற—† உபாய, § உபாஸக, ¶ப்ரதிபந்தம் முதலியவைகளுக்கும் ஜிஜ்ஞாஸ்யத்வம் ஸித்திப்பதாலும்,—ப்ரதிபதத்தால் விதிக்கப்பட்ட ஷஷ்டிக்கு ஸமாஸநிஷேதம் இருப்பதாலும்,—அங்கே ஸாமர்த்யத்தால் ஷஷ்டிக்கு கர்மார்த்தத்வஸித்தியையும், ப்ரஹமாநுபந்திகளுக்குங்கூட ஜிஜ்ஞாஸ்யத்வஸித்தியையும் 'யத்யபி' என்பதால் சங்கிக்கிறார்.

'ஸம்பந்தஸாமாந்யபரிக்ரஹே' என்னும் இடத்தில் 'பரி' என்கிற உபஸர்கபலத்தால் ப்ரஹ்மாநுபந்திகளுக்குங்கூட ஜிஜ்ஞாஸ்யத்வஸித்தி ஸூசிப்பிக்கப்படுகிறது. பரித:(நாற்

‡ ப்ரக்ருதி - வேறுபாட்டுக்கு ஆதாரமான மூலவஸ்து. விக்ருதி - வேறுபாடு. ஓர் அவஸ்தையிலிருந்து அவஸ்தாந்தரப்ராப்தி.

¶ 'சங்குலயா கண்ட:' கண்டக்கோடரியால் வெட்டப்பட்ட ஓர் துண்டு.

† உபாயம் - பக்தி, அல்லது ப்ரபத்தி.

§ உபாஸகன் - பக்தன்.

¶ ப்ரதிபந்தங்கள் - உபாஸநாவிரோதிகள்—அல்லது இடையூறுகள்.

புறங்களிலும்) க்ரஹணததாலன்றோ பரித: இருக்கிற வஸ்துக்களுக்கும் க்ராஹ்யத்வம் ஸித்திக்கிறது. ஆகவேதான், மேலே 'க்ருஹ்யதே' என்று சொல்லப்பட்டதேயொழிய 'பரிக்ருஹ்யதே' என்றில்லை. அவ்விரண்டையும் 'ததாபி, என்று தொடங்கி பரிஹரிக்கிறார்.

இந்த இடத்தில் இதுதான் அர்த்தம்—ப்ரதானமாயுள்ள ப்ரஹ்மத்துக்கும், அப்ரதானமாயுள்ள மற்றவைகளுக்கும், கர்மத்வம் ஆக்ஷேபத்தால் ஸித்திக்கிறதென்பதைவிட ப்ரதானப்ரஹ்மநிஷ்டமான கர்மத்வத்திற்கு நேராக வாசகசப்தத்தால் $ அபிதானமும், மற்றவைகளுக்கு ப்ரதானஸம்பந்தத்தாலும், ஆகாங்க்ஷாபலத்தாலும், ஸித்திக்கிற கர்மத்வத்திற்கு ஸாமர்த்யத்தினால் ஸித்தியும் ஏற்றுக்கொள்ளத்தக்கது. ஆகையால், "தாமதித்து வரும் புத்திக்கு எது காரணமோ அதைவிட சீக்ரபுத்திக்குக்காரணமாயுள்ளதற்கு அதிகபலம் உண்டு"—என்கிற ந்யாயத்தால் ப்ரதிபதவிஹிதமான ஷஷ்டியே க்ரஹிக்கத்தகுந்தது. ஷஷ்டிக்கு ஸம்பந்தஸாமான்யவிவக்ஷையிருந்தால் கர்மத்வபுத்தியானது விளம்பமுள்ளதாகும். கருத்யோகஷஷ்டியை விவக்ஷித்தால் அது சீக்ரமாய் உண்டாகும். கர்த்ருத்வம், கர்மத்வம் என்கிற இரண்டு அர்த்தங்களும் ஸூத்ரத்தால் ப்ரதிபன்னமாயிருப்பதால் கர்மத்வபுத்தியானது விளம்பித்து வரக்கூடியது—என்றால், அப்படிச்சொல்லக்கூடாது. அறியவேண்டுமென்று எண்ணமுள்ள கர்த்தா கர்மஜ்ஞானமுள்ளவன் என்று அறியப்பட்டிருப்பதால் கர்மத்வரூபமான அர்த்தமன்றோ முதன்முதல் புத்தியில் ஏறும்.

ஸமாஸநிஷேதத்தை ஆசங்கித்து 'நச' என்ற பரிஹரிக்கிறார். ச—என்பது சங்காஸமுச்சயத்தில். அபவாதத்திற்கு அபவாதம் ப்ரதிப்ரஸவம் எனப்படும். 'ஸர்ப்பிஷோ ஜ்ஞானம்' இது முதலிய ப்ரயோகங்களில், 'ஜ்ஞோவிதர்த்தஸ்ய கரணே' என்கிற ஸூத்ரத்தால் விதிக்கப்பட்டுள்ள ஷஷ்டியில் ஸமாஸநிஷேதம் நிலை பெறுகிறது. 'ஸர்ப்பிஷினால் (நெய்யினால்) ப்ரவ்ருத்தி' என்றல்லவோ அந்த வாக்யத்துக்கு அர்த்தம். ஜ்ஞானபதம் க்ருதந்தம் தான். ஆயினும், ஸர்ப்பிஷ: என்ற ஷஷ்டியானது க்ருத்ப்ரத்யயஸம்பந்தத்தால் விதிக்கப்பட்டதல்ல. ஏனெனில், 'ஸர்ப்பிஷோ ஜாநீதே' என்பது திஙந்தபதாந்வயார்ஹமாக இருப்பதாலும், தாதுவுக்கும், விபக்திக்கும் ப்ரவ்ருத்தி, அதன் காரணம்—என்ற அர்த்தம் இருப்பதாலும், அவையனைத்தும் கர்மத்வமானது க்ருத்ஸம்பந்தத்தால் விதிக்கப்பட்டது என்று சொல்லும் பக்ஷத்தில் ஸித்திக்காது. ஆகையால், இங்கே 'க்ருத்யோகாச' என்கிற ப்ரதிப்ரஸவசாஸ்த்ரத்திற்கு ப்ராப்தியில்லாததால் ஸமாஸநிஷேதம் அவகாசமுள்ளதாயிற்று.

இந்த ஷஷ்டீ வ்யாக்யாநம் செய்யத்தகுந்ததல்ல. ஏனெனில், ஸூத்ரத்தில் இது ப்ரயோகிக்கப்படவில்லை. ப்ரயோகிக்கப்பட்ட சப்தமல்லவோ போதகம். ப்ரயோகிக்கப்படாதது போதகமாகாது. போதகசப்தமே வ்யாக்யானிக்கத்தக்கது. ப்ரயோகிக்கப்படாமலிருந்தாலும், ஸ்மரிக்கப்பட்ட விபக்தியானது போதத்தை உண்டுபண்ணுவதால் அது வ்யாக்யானிக்கத்தக்கது,—என்றால், இவ்விதம் சொல்லக்கூடாது. ஏனெனில், அதன்ஸ்மரணமின்றியே அர்த்தப்ரதிபத்தி உண்டாவதால். அர்த்தப்ரதிபத்தியும் ¶ ப்ராதி

$ அபிதானம் - சப்தத்தால் சொல்லப்படுதல்.

¶ ப்ராதிபதிகம்—தாது, ப்ரத்யயம், ப்ரத்யயார்த்தம் இல்லாததாயும், அர்த்தமுள்ளதுமான சப்தஸ்வரூபமும், க்ருத் தத்திதப்ரதயயாந்தங்களும், ஸமாஸமும் ப்ராதிபதிகம்.

பதிகத்தாலும் ¶ லக்ஷணையாலும் உண்டாகிறது. லக்ஷணையும் § யோக்யதை முதலிய வைகளால் ஸித்திக்கிறது. ஆகையால், அநுசாஸநத்தினுல் (ஸூத்ரத்தால்) ஷஷ்டிக்கு வ்யாக்யாநம் யுக்தமல்ல—என்ருல், ஸமாதானம் சொல்லுகிருேம்.

ப்ரயோகிக்கப்படாத விபக்தியின் அர்த்தத்திற்கு ப்ராதிபதிகத்தால் லக்ஷணையன்ருே ஸமாஸம். இந்த இடத்தில் லக்ஷ்யார்த்தத்துக்கு உபலக்ஷணமாக விபக்தி அனுப்ரவிஷ்டை. (கூட ப்ரவேசித்தாக இருக்கிறது) ஆகையால், லக்ஷ்யார்த்தவிசேஷநிர்ணயத்தின் பொருட்டு விக்ரஹவாக்யத்திலுள்ள ஷஷ்டீ வ்யாக்யாநிக்கத்தக்கதே.

அப்படியானுல், அது அனுசாஸநத்தினுல் வ்யாக்யாநிக்கத்தகுந்ததல்ல. லாக்ஷணிகார்த்தமன்ருே யோக்யதை முதலியவற்ருல் நிச்சயிக்கப்படுகிறது. 'கங்கையில் இடைச்சேறி' (கங்காயாம் கோஷ:) இது முதலிய இடங்களில் அனுசாஸநவசத்தால் கரை லக்ஷ்யார்த்தமாகிறதில்லையன்ருே! ஆனுல, யோக்யதை முதலியவற்ருல் தான் லக்ஷ்யார்த்தம் ஸித்திக்கிறது—என்ருல், அப்படியல்ல. எல்லா லக்ஷணைகளிலும் யோக்யதை முதலிய வற்ருலேயே அர்த்தநிர்ணயநியமம் இல்லாமையால், ப்ராதிபதிகத்தினுல் வேறு ப்ராதிபதிகத்தின் அர்த்தலக்ஷணையில் நியமம் கிடையாது. ப்ராதிபதிகத்தால் விபக்தியர்த்தத்துக்கு லக்ஷணை சொல்லுகிற இடத்திலோ இந்த விபக்தியர்த்தம் லக்ஷ்யம். வேறு விபக்தியின் அர்த்தம் லக்ஷ்யமல்ல என்கிற நியமம் இருக்கிறது. அதுவும் சப்தாநுசாஸநாதீனமாக இருப்பதால் அதை அநுஸரித்து நிருபிப்பதே யுக்தம். இங்கே ஸம்பந்தஸாமாந்யத்தை லக்ஷ்யார்த்தமாகச்செய்து அதனுல் கர்மத்வத்தை ஆக்ஷேபிப்பதைவிட முதலிலேயே சப்தாநுசாஸநத்தினுல் அனுமதிக்கப்பட்ட கர்மத்வத்துக்கே லக்ஷணை யுக்தமானது. ஆதலால், ஸமஸ்தபதலக்ஷ்யார்த்தவிசேஷநிர்ணயத்துக்காக அநுசாஸநத்தை அநுஸரித்து. லக்ஷ்யார்த்தத்துக்கு உபலக்ஷணமாயுள்ள, விக்ரஹவாக்யத்திலிருக்கும் ஷஷ்டீ வ்யாக்யாநம் செய்யத்தக்கது.

அல்லது, (லுப்த) தோன்றி மறைந்துள்ள விபக்தியுடன் கூடிய சப்தத்தால் விபக்தியின் அர்த்தத்தை அறிவிப்பது முக்யமாகும். ஸம்பந்தமுள்ள வஸ்துவுக்கன்ருே லக்ஷணை காணப்பட்டிருக்கிறது. ஸம்பந்தத்துக்குமாத்ரம் லக்ஷணை காணப்படவில்லையே. விபக்தியர்த்தமோ ஸ்வயம் ஸம்பந்தரூபமாயுள்ளது. ஸம்பந்தமானது வேறு ஸம்பந்தத்தை அபேக்ஷிக்காமலே தன்னிடத்தில் ஸம்பந்தித்ததின் கார்யத்தை உண்டுபண்ணுவதால் லக்ஷணை ஸம்பவிக்காது—என்று சொல்லக்கூடாது. ஏனெனில், ஸம்பந்தம் ஸ்வபரநிர்வாஹம்—என்கிற விஷயத்தை அறியாதவர்களுக்குக்கூட விபக்தியர்த்தப்ரதீதி ஏற்படுவதால். ஸம்பந்தமானது தன்ஸத்தையினுல் லக்ஷணைக்குக்காரணமல்ல. ஆனுல், அறி

¶ லக்ஷணை—சப்தத்தின் ஒரு வ்ருத்தி. 'கங்கையில் இடைச்சேறி' என்று ஒருவன் சொன்னுல், 'கங்காபதவாச்யமான ப்ரவாஹத்தின்மீது இடைச்சேறி இருக்கிறது' என்று பொருந்தாதாகையால், கஙகாபதமானது லக்ஷணுவ்ருத்தியினுல் கங்காதீரத்தை உணர்த்துகிறது. இந்த இடத்தில் கங்காபதம் லக்ஷகம். தீரம் லக்ஷ்யம். இந்த அர்த்தத்தை உணர்த்தும் சப்தசக்தி லக்ஷணை.

§ யோக்யதையாவது. வாக்யத்தின் அர்த்தங்கள் அந்யோந்யம் விரோதமில்லாமல் அன்வயித்தல். ஆகாங்க்ஷை, யோக்யதை, ஆஸத்தி, தாத்பர்யம் இந்நான்கும் சேர்ந்திருந்தாலொழிய ஒருவாக்யம் வக்தாவினுல் கருதப்பட்ட அர்த்தத்தை உணர்த்தத்திறமையுள்ளதாக ஆகாது.

யப்படுவதினாலேயே காரணம். அப்படியில்லாவிடில் † அதிப்ரஸங்கம் வரும். இவ்விதம் லக்ஷணானுபபத்தியினால் ப்ரயோகம் அந்யதாஸித்தமாயிருப்பதால், ஸமஸ்தசப்தத்தால் விபக்தியர்த்தபோதநம் முக்யம். அமுக்யமாயிருந்தால்கூட நமக்கு என்ன கெடுதல்!

விக்ரஹவாக்யத்திலும் கர்மத்வம் எவ்வாறு வாச்யமாகும்? ப்ரயோகிக்கப்பட்டாலுங்கூட, உபபதவிபக்தியானது ப்ரயோஜநமற்றது. அதற்கு விதியானது—'தாரா: களத்ரம்' என்பதுபோல் ப்ரயோகத்திற்கு ஸாதுத்வத்தின்பொருட்டே. அர்த்தமோ வென்றால்,—அர்த்தஸாமர்த்தியத்தால் ஆக்ஷிப்தமாகிறது. ஆகையால்தான், § காரகவிபக்தியைக்காட்டிலும் $ உபபதவிபக்திக்கு பலக்குறைவு. ஸமாஸத்திலோ, ப்ரயோகிக்கப்படாத உபபதவிபக்தியானது எப்படித்தான் கர்மத்வரூபமான அர்த்தத்தை உணர்த்தும்?—இந்தக் கேள்விக்கு பின்வருமாறு உத்தரம்.

ஆபிதாநிகம் போல, க்ருதந்தப்ரயோகத்தால் சீக்ரபுத்திவிஷயத்வரூபகுண ஸாம்யத்தினால் ஆபிதாநிகத்வ வசனம் பதாந்தரச்ரவணாபேக்ஷாமாத்ரத்தால், ஆக்ஷேபம் முதலியவைகளாற்போல், விளம்பாதிக்யமில்லை. ஸாமான்ய ஷஷ்டீ பக்ஷத்தில் ஸம்பந்தஸாமாந்யத்தை அறிந்து ஜிஜ்ஞாஸாசப்தார்த்தத்தைசார்ந்திருக்கிற ஸகர்மகத்வஸ்வபாவாலோசனையினால் அர்த்தவிசேஷநிச்சயம் ஏற்படுவதைவிட, க்ருதந்தபதச்ரவணமாத்ரத்தால் உண்டாகும் கர்மத்வபுத்தி சீக்ரமானது—என்று ஒருவிதமாகப்பரிஹாரம்.—'கர்மணி த்விதீயா' என்பதுபோல், 'கர்த்ருகர்மணோ: க்ருதி.' என்று ஸப்தம்யந்தத்தால் நிர்தேசிக்கப்பட்ட கர்த்ருகர்மாக்களுக்கு அபிதேயத்வம் அநுசாஸநத்தின் ஸ்வாரஸ்யாநுகுணம்—என்பது ஸ்ரீபாஷ்யகாரரால் கருதப்பட்ட பரிஹாரம்—என்று ஸம்ப்ரதாயம். காரகவிபக்தியைக் காட்டிலும் உபபதவிபக்திக்கு பதாந்தரஸம்பந்தவிதானரூபவைஷம்யம் இருக்கவே இருக்கிறது. பதாந்தரஸம்பந்தத்தால் அறியத்தக்க தன்மையிருப்பது ஆபிதாநிகத்வ விரோதியல்ல. ஏனெனில்,—அதற்கு சில இடங்களில் முக்யார்த்த வ்யவஸ்தாபகத்வம் இருப்பதால். 'ஆதித்யஸ்ய காவ: ப்ரகாசயந்தி' இது முதலியவை இங்கு உதாஹரணங்கள். அந்த இடத்தில் ஆதித்யாதிபதாந்தரஸம்பந்தத்தால் கோசப்தத்திற்கு கிரணம் என்கிற அர்த்தத்தைக்கொடுக்கும் தன்மை லாக்ஷணிகமல்ல. பதாந்தரபராமர்சத்தை அபேக்ஷிப்பதால் உபபதவிபக்தியானது விளம்பித்து வரும் புத்திக்கு ஹேதுவாயிருக்கிறது. காரகவிபக்தியோவென்றால், அதை அபேக்ஷிக்காமல் சீக்ரபுத்தி ஹேதுவென்று ப்ராபல்ய தௌர்பல்யவிபாகமேயன்றி ஸார்த்தகத்வ-நிரர்த்தகத்வங்களால் வைஷம்யம் கிடையாது. விபக்திச்ரவணம் இல்லாமையால் அமுக்யத்வம் பரிஹரிக்கப்பட்டது.

பாஷ்யம்:—

ப்ரஹ்மஶப்தேந ச ஸ்வபாவதோ நிரஸ்தநிகிலதோஷோऽநவதிகாதிஶயாஸங்க்யேயகல்யாணகுண: புருஷோத்தமோऽபிதீயதே ।

---

† அதிப்ரஸங்கம்—அதிவ்யாப்திரூபமான தோஷம்.

§ காரகவிபக்தி—க்ரியா, காரகபாவஸம்பந்தத்தால் விதிக்கப்படும் விபக்தி.

$ உபபதவிபக்தி—ஸமீபத்திலுள்ள பதஸம்பந்தத்தால் விதிக்கப்படும் விபக்தி. உபபதவிபக்தியைக்காட்டிலும் காரகவிபக்தி அதிக பலமுள்ளதென்று வையாகர்ணர்களின் கொள்கை. உப-ஸமீபத்திலுள்ள பதஸம்பந்தத்தால வருகிற, விபக்தி - வேற்றுமையுருபு - உபபதவிபக்தி. பக்கத்திலுள்ள சப்தத்தை நோக்கி அடைகிற விபக்தி உபபதவிபக்தி. 'நம:, ஸ்வாஹா' முதலிய சப்தங்கள் இருந்தால் உண்டாகிற சதுர்த்தீமுதலியவேற்றுமைகளுக்கு உபபதவிபக்தியெனப்பெயர்.

ப்ரஹ்மசப்தத்தினால் ஸ்வபாவத்தினாலேயே ஹேயகுணங்களொன்றுமில்லாதவனும், எல்லையற்ற மேன்மை தங்கிய எண்ணிறந்த மங்களகுணஸமூஹங்களுள்ளவனுமான புருஷோத்தமன் சொல்லப்படுகிறான்.

ச்ருதப்ரகாசிகை:—

இவ்வாறாக ஸமாஸாந்தர்கதமான விபக்தியர்த்தம் நிரூபிக்கப்பட்டது. பிறகு ஸமஸ்தமான இரண்டு பதங்களுக்குள் முதலிலுள்ள ப்ரஹ்மசப்தத்தை வ்யாக்யானிக்கிறார் 'ப்ரஹ்ம சப்தேந ச' என்ற வாக்யத்தால். ப்ரஹ்மசப்தத்துக்கு ப்ரதானம் முதலிய அர்வாசீனமாயுள்ள அர்த்தாந்தரங்களில் ப்ரயோகம் காணப்படுவதாலும்,—மற்றைய வ்யாக்யாதாக்களால் ஈச்வரனைத்தவிர்த்த வேறு வஸ்து பரத்வமாய் வ்யாக்யானம் செய்யப்பட்டிருப்பதாலும்,—சிலர் தேவதாந்தரபரத்வம் ஒப்புக்கொள்வதாலும்,—இவற்றையெல்லாம் விலக்குவதற்காக ப்ரஹ்மசப்தத்தால் * புருஷோத்தமன் தான் சொல்லப்படுகிறான்—என்று ப்ரதிக்ஞை செய்கிறார். புருஷோத்தமசப்தத்தின் ரூடியால் ப்ரஹ்மசப்தத்துக்கு வேறு தேவதைகளை அர்த்தமாகச்சொல்லுவது நிராகரிக்கப்பட்டது அவயவசக்தியால் பத்தர்களாயும், முக்தர்களாயுமுள்ள சேதனர்களைவிட வேறுபாடு ஆர்த்திகமாய் ஸித்திக்கிறது. தன்னையொழிய மற்றைய வஸ்துக்களில் வைலக்ஷண்யமாத்ரம் த்ருணாதிகளுக்குங்கூட இருப்பதால் அதை விலக்குவதற்காக '**ஸ்வபாவத:**' என்று தொடங்கிய இரண்டு விசேஷணங்களால் அந்த வேறுபாட்டைப்பிரித்துக்காட்டுகிறார். (இரண்டு விசேஷணங்களாவன—ஸ்வபாவத: நிரஸ்தநிகிலதோஷ:, அநவதிகாதிசயாஸங்க்யேயகல்யாணகுணகண:)

இந்த இரண்டு விசேஷணங்களும் சப்தசக்தியாலும், அர்த்தசக்தியாலும் 'ப்ரஹ்மசப்தம் புருஷோத்தமனையே சொல்லுகிறது'—என்பதற்கு உபயோகங்களாகச்சொல்லப்பட்டனவேயொழிய ப்ரவ்ருத்திநிமித்தங்களாகச்சொல்லப்படவில்லை. குணத்தாலும் பெரிதாகியவளவில், சப்தசக்திக்கு அஸங்கோசம் ஏற்படுவதாலும்,— எல்லா தோஷங்களையும் நிவர்த்திக்கிற அளவிறந்த ஆனந்தத்தை முமுக்ஷு அடைவதற்குக்காரணமாவதாலும்,—இதராதிகளால் சொல்லப்பட்ட அவித்யை முதலிய தோஷஸம்பந்தத்தையும், நிர்குணத்வத்தையும் விலக்குவதற்காகவும்,—உபாதியினால் கவரப்பட்டிருக்கிற ப்ரஹ்மஸ்வரூபத்துக்கே கர்மவச்யத்வ, துக்கித்வாதிகளை விலக்குவதற்காகவும்,—'ஜ்ஞானம் முதலிய சக்திஸம்பந்தமே இவனுக்கு இயற்கையாயுள்ளது ; ஸர்வஜ்ஞநிரதிசயாநந்தம் முதலியவற்றின் ஸம்பந்தம் ஏதோ ஒரு ஸமயத்தில் தான் உண்டாகிறது—என்று சொல்லும் மதத்தை விலக்குவதற்காகவும் 'ஸ்வபாவத:' என்று தொடங்கிய இந்த இரண்டு விசேஷணங்கள் காட்டப்பட்டன.

சில தோஷங்களின் நிராஸமும், எல்லாதோஷங்களின் நிராஸமும் பத்தர்களுக்கும், முக்தர்களுக்கும், நித்யர்களுக்குங்கூட இருப்பதால் அதை விலககுவதற்காகவே 'ஸ்வ

* புருஷோத்தமபதம் ஸ்ரீமந்நாராயணனிடத்தில் யோகரூடம். 'புருஷஸ்சாஸௌ உத்தமஸ்ச புருஷோத்தம: ; புருஷாணாம் உத்தம: புருஷோத்தம: புருஷேஷு உத்தம: புருஷோத்தம:,—என்று மூன்றுவிதமான ஸமாஸம் அபியுக்தர்களால் சொல்லப்பட்டிருக்கிறது. இம்மூன்று ஸமாஸங்களுக்குள் ஷஷ்டீ ஸமாஸம் பலஹீநம். ஏனெனில், அநுசாஸனமில்லை. 'புருஷேப்ய: உத்தம: புருஷோத்தம':—என்று சில அபியுக்தர்கள் சொல்லுகிறார்கள் இது மிகவும் சிறந்தது.

பாவத: நிரஸ்த நிகிலதோஷ:' என்று அருளிச்செய்தார். ஏனெனில், நித்யர்களுக்குங்கூட பகவானுடைய நித்யஸங்கல்பாதீனமாயன்றோ நித்யநிர்தோஷத்வம் இருக்கிறது. ஸ்வ பாவத்தினால் இல்லையே.

'ஸ்வபாவத:' என்னும் பதத்தை மேலேயும் சேர்த்துக்கொள்ளவேண்டும். அப்படிச் சேர்த்தால் குணங்கள் அவித்யையினால் கல்பிதங்கள் என்கிற பக்ஷத்துக்கு வ்யாவ்ருத்தி ஏற்படும்.

'தே யே சதம்' என்னும் இடத்தில் பூர்வபூர்வமாயுள்ள குணங்களைவிட உத்தரோத் தரகுணங்களுக்கு அதிசயமானது வரம்புள்ளதாதலால் அதை வ்யாவ்ருத்திப்பதற்காக 'அநவதிகாதிசய' பதம் ப்ரயோகித்திருக்கிறார். அவ்விடத்தில் ப்ரஹ்மகுணாதிசயமானது வாக்குக்கும், மனஸுக்கும் விஷயமாகாதாதலால் 'அநவதிகம்' என்று சொன்னார். வசித்வம் முதலிய குணங்கள் ஸத்யஸங்கல்பத்தில்உள்பட்டவை யென்று மேலே உபந்யாஸிக்கப் போகிறார். ஆதலால், ஏதோ ஒரு குணத்தில் அதன் ப்ரகாரபேதமுள்ள அநேக குணங் களுக்கு அந்தர்பாவம்—என்கிற அபிப்ராயமுள்ளது 'கண'சப்தம்.

மேலும்,—"அநவதிகாதிசயசப்தம் குணங்களுக்கு விசேஷணமானால், கணசப்தத் தோடு ஸாமாநாதிகரண்யம் இல்லாமையால், பஹுவ்ரீஹி ஸமாஸம் வராது. கணசப்தத் துக்கு விசேஷணமாகச்சொல்லுவதும் தகாது, குணங்களின் ஸ்வரூபவன்றோ அநவதி காதிசயமுள்ளது, கணஸ்வரூபமல்லவே" என்று ஆக்ஷேபம் வந்தால்,—அப்படியல்ல, கணம்தான் விசேஷ்யம். ஆகவே, பஹுவ்ரீஹி ஸித்திக்கிறது. ஆனாலும், அர்த்தவசத் தால் கணத்திலடங்கிய ஒவ்வொரு குணவ்யக்திக்கும் அநவதிகாதிசயத்வம் பலிதமாகும். எப்படியென்றால்,—"இந்த கோஷ்டீ அபிஜநங்களையுடையது, சாஸ்த்ரத்தில் தேர்ச்சியுள் ளது." என்கிற வாக்யத்தில் சாஸ்த்ரம் முதலியவை கோஷ்டிக்கு விசேஷணங்களாகக் கூறப்பட்டிருந்தாலும் அந்த கோஷ்டியிலிருப்பவர்களுக்கே சாஸ்த்ரம் முதலியவற்றின் ஸம்பந்தம் ஏற்படுகிறது. ஸமூஹத்துக்கு இல்லையன்றோ! ஆகையால், கோஷ்டியில் சேரா தவர்களுக்கு சாஸ்த்ரம் முதலியவை இல்லையென்று சொல்லவேண்டி வரும்.

மேலும், அஸங்க்யேயத்வத்தையும் கணத்துக்கு விசேஷணமாகச்சொல்லுவதுதான் பொருந்தும். கணத்துக்கு அஸங்கயேயத்வம் நேர்ந்தால் கைமுத்யந்யாயத்தால் குணங்க ளுக்கும் அஸங்க்யேயத்வம் ஸித்திக்கிறது.

'அநவதிகாதிசய' சப்தத்தால் அவர்களுடைய குணங்கள் ஜகத்வ்யாபாரத்துக்கு அநு நுகுணமாயிருப்பது பற்றி பகவானுடைய குணங்களைவிட நிக்ருஷ்டமாயிருப்பதால் நித்ய ஸித்தர்களுடைய வ்யாவ்ருத்தியும் உண்டாகிறது. அவர்களுக்கு அத்யந்தாநுகூலமான அந்த பகவத்குணவிபூதிஸாக்ஷாத்காரம் நிரவதிகாதிசயமாயிருந்தபோதிலும், அப்படிப்பட்ட அஸங்க்யேயகுணங்களில்லாமையால் அவர்களுக்கே வ்யாவ்ருத்தி ஸித்தித்தது. அல்லது, அநுஷங்கம் செய்யப்பட்ட 'ஸ்வபாவத:' என்கிற பதத்தினாலாவது நித்யஸித்தவ்யாவ் ருத்தி ஸம்பவிக்கிறது. அவர்களுக்கு அப்பேற்பட்ட குணங்கள் பகவானுடைய நித்யமான இச்சையின் அதீநம். ஸ்வரூபத்தால் அநவதிகாதிசயத்வமில்லாமையாலும் நித்யஸித்தவ்யா வ்ருத்தி ஏற்படுகிறது. அவர்களோ அணுஸ்வரூபிகள். இங்கே ஸ்வரூபத்துக்குக்கூட அந வதிகாதிசயத்வம் உண்டு—என்கிற அபிப்ராயம் உள்ளடங்கியிருக்கிறது. ஏனெனில், விபுத்வத்தைக்கூட குணங்களுள் அடங்கியிருப்பதால் 'விபுத்வம் ஸ்வரூபத்தாலும், குணங்க ளாலும்' என்று உபபாதகக்ரந்தத்தில் சொல்லியிருப்பதாலும் கண்டு கொள்ளவேண்டி யது.

'அபிதீயதே'—முக்யவ்ருத்தியால் சொல்லப்படுகிறது. இந்த க்ரந்தத்தில்'யோநாக்ஷரம் புருஷம் வேத ஸத்யம்.' என்கிற ச்ருதியும் இந்த ஸூத்ரத்திற்கு ஒத்திருப்பதால் அநுஸந்திக்கத்தகுந்ததே. அங்கே "ப்ரோவாச தாம் தத்வதோ ப்ரஹ்மவித்யாம்" என்று ப்ரஹ்மசப்தம் புருஷபர்யாயமாக ப்ரயோகிக்கப்பட்டிருக்கிறது.

பாஷ்யம்:—

𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌬𑍃𑌹𑌤𑍍𑌤𑍍𑌵𑌗𑍁𑌣𑌯𑍋𑌗𑍇𑌨 𑌹𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌶𑌬𑍍𑌦𑌃 । 𑌬𑍃𑌹𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌚 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑍇𑌣 𑌗𑍁𑌣𑍈𑌶𑍍𑌚 𑌯𑌤𑍍𑌰𑌾𑌨𑌵𑌧𑌿𑌕𑌾𑌤𑌿𑌶𑌯𑌂 𑌸𑍋𑌽𑌸𑍍𑌯 𑌮𑍁𑌖𑍍𑌯𑍋𑌽𑌰𑍍𑌥𑌃 । 𑌸 𑌚 𑌸𑌰𑍍𑌵𑍇𑌶𑍍𑌵𑌰 𑌏𑌵 । 𑌅𑌤𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌶𑌬𑍍𑌦𑌸𑍍𑌤𑌤𑍍𑌰𑍈𑌵 𑌮𑍁𑌖𑍍𑌯𑌵𑍃𑌤𑍍𑌤𑌃 । 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑌨𑍍𑌯𑌤𑍍𑌰 𑌤𑌦𑍍𑌗𑍁𑌣𑌲𑍇𑌶𑌯𑍋𑌗𑌾𑌦𑍌𑌪𑌚𑌾𑌰𑌿𑌕𑌃 । 𑌅𑌨𑍇𑌕𑌾𑌰𑍍𑌥𑌕𑌲𑍍𑌪𑌨𑌾𑌯𑍋𑌗𑌾𑌤𑍍, 𑌭𑌗𑌵𑌚𑍍𑌛𑌬𑍍𑌦𑌵𑌤𑍍 ।

எல்லா இடங்களிலும் பெருமை என்னும் குணத்தின் ஸம்பந்தத்தாலன்றோ ப்ரஹ்மசப்தம் வழங்கப்படுகிறது. எந்த வஸ்துவினிடத்தில் ஸ்வரூபத்தாலும்,குணங்களாலும் அளவிறந்த மேன்மை வாய்ந்த ப்ருஹத்வம் (பெருந்தன்மை) இருக்கிறதோ அதுதான் இந்த சப்தத்துக்கு முக்யமான அர்த்தம்; அந்த வஸ்து ஸர்வேச்வரனே. ஆதலால், ப்ரஹ்மசப்தமானது அந்த ஸர்வேச்வரனிடத்திலேயே முக்யவ்ருத்தியுள்ளது. ஒரே சப்தத்துக்கு அநேகம் அர்த்தங்களில் வ்ருத்தியைக்கல்பிப்பது சாஸ்த்ரவிருத்தமாதலால் 'பகவத்' சப்தம்போல் இந்த ப்ரஹ்மசப்தமும் அந்த ஸர்வேச்வரனைத் தவிர மற்றைய வஸ்துக்களில் அந்த ப்ருஹத்வகுணலேசம் இருப்பதுபற்றி ஔபசாரிகமாக வழங்கப்படுகிறது.

ச்ருதப்ரகாசிகை:—

இவ்விதம் ப்ரதிக்ஞை செய்த அர்த்தத்தை முதலில் 'ஸர்வத்ர' என்று தொடங்கி சப்தஸாமர்த்யத்தால் உபபாதிக்கிறார். அதில் அர்த்தாந்தரங்களில் ப்ரஹ்மசப்தப்ரயோகத்திற்கு அந்யதாஸித்தியைச்சொல்லவிரும்பி அதற்கு உபயோகமுள்ள குணஸம்பந்தத்தைக்காட்டுகிறார்.

"ஸர்வத்ர" ப்ரஹ்மசப்தம் ப்ரயோகத்திற்கு விஷயமாயிருக்கிற எல்லா வஸ்துக்களிலும் ப்ருஹத்வமென்கிற குணத்தின் ஸம்பந்தம் இருக்கிறது—என்று பொருள்.

இந்த சப்தம் புருஷோத்தமனிடத்தில் கௌணமாகவும், மற்ற வஸ்துக்களிடத்தில் முக்யமாகவும் ஏன் ஆகக்கூடாது?—என்கிற இந்தக்கேள்விக்கு பதில் "ப்ருஹத்வஞ்ச" என்று தொடங்கிச்சொல்லுகிறார். ப்ருஹத்வகுணமாத்ரஸம்பந்தமுள்ள எல்லா வஸ்து

விலும் பரஹ்மசப்தத்துக்கு ப்ரயோகமில்லாமையால் ஸ்வரூபத்தாலும், குணங்களாலும் எல்லையற்ற மேன்மைவாய்ந்த ப்ருஹத்வம் ‡ ப்ரவ்ருத்திநிமித்தம் என்று பொருள்.

† "ப்ருஹதி ப்ரும்ஹயதி தஸ்மாதுச்யதே பரம் ப்ரஹ்ம, ப்ருஹத்வாத் ப்ருஹ்மணத் வாச்ச தத் ப்ரஹ்மேத்யபிதீயதே." என்கிற ச்ருதிஸ்ம்ருதிகளாலே ப்ருஹத்வம், ப்ரும்ஹணத்வம் இரண்டும் ப்ரவ்ருத்திநிமித்தங்கள் என்று அறியப்படுகிறது. ஆகவே, இங்கு எப்படி ப்ருஹத்வம்மாத்ரம் ப்ரவ்ருத்திநிமித்தமென்று சொல்லக்கூடும்?—என்றால், பதில் சொல்லுகிறோம். குணங்களால் ஏற்பட்டிருக்கிற ப்ருஹத்வத்தில் ப்ரும்ஹணத்வம் அடங்கியிருப்பதால்என்று விடைசொல்லுகிறோம். "ஸசாநந்த்யாய கல்பதே"என்கிற ச்ருதிப்ரஸித்தமான ஸகலஸங்கோசநிவ்ருத்திபூர்வக-நிரவதிகஜ்ஞானவிகாஸரூப-ஆநந்த்யத்தை வஹித்தலன்றோ ப்ரும்ஹணத்வமாவது. அது ஸகல ஹேயகுணங்களுக்கும் விரோதியாயிருத்தல் க்ஷமை, கருணை முதலிய மோக்ஷப்ரதானத்துக்கு உபயோகமுள்ள குணகணங்களோடு சேர்ந்திருத்தலன்றோ! ஆதலால்தான், 'இயற்கையாகவே எல்லாதோஷங்களையும் நிரஸித்தவன்'—இதுமுதலியவைகள் ப்ரதிஜ்ஞாவாக்யத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

அப்படியாகில், ஸ்வரூபத்தால் ப்ருஹத்வமே நிமித்தமாயிருக்கட்டும்; கௌரவத்தால் என்னபயன்?—என்றால், அப்படியல்ல. ஸ்வரூபத்தால் ப்ருஹத்தாயிருப்பதால் ப்ருஹத்வ குணம் முதலியவற்றுக்குக்கூட ப்ரஹ்மசப்தவாச்யத்வம் ப்ரஸங்கிக்குமன்றோ.

அப்படியானால், குணங்களால் ப்ருஹத்வமே நிமித்தமாயிருக்கட்டும்—என்றால், அதுவும் கூடாது. சப்தசக்திக்கு ஸங்கோசமின்மை ஸ்வபாவமாகவே இருக்கிறது. ஸ்வரூபத்தாலும் ப்ருஹத்வம் இருப்பதால் "ஸத்யம் ஜ்ஞானம் அநந்தம் ப்ரஹ்ம." என்றே ச்ருதி. குணங்களால் ப்ருஹத்வம் என்பது ஸத்வாரகமான ப்ருஹத்வம். குணங்களின் வழியாயன்றோ அந்த ப்ருஹத்வம்.

ஸ்வரூபத்தாலும், குணங்களாலும, நிரதிசயப்ருஹத்வமான வஸ்துவானது புருஷோத்தமனைத்தவிர வேறொன்றும இருக்கலாம்; அல்லது, வேறொன்றாகவேயாவது இருக்கலாம்—என்ற ஸந்தேஹத்தை **'ஸச'** என்று தொடங்கிப்பரிஹரிக்கிறார்.

இங்கு சகாரம் சங்காநிவ்ருத்தியைககாட்டுகிறது. ஸர்வேச்வரசப்தத்தாலும், ஏவகாரத்தாலும் § "தமீச்வராணும் பரமம் மஹேச்வரம்—நதத்ஸமச்சாப்யதிகச்ச த்ருச்யதே" என்ற இரண்டு வாக்யத்தின் அர்த்தம் விவக்ஷிக்கப்பட்டது.

அதனால் என்ன ப்ரயோஜநம்? எனில், **'அத:'** என்று தொடங்கி உத்தரம் சொல்லுகிறார்.

---

‡ ப்ரவ்ருத்திநிமித்தம் - ஒரு வார்த்தை எந்தப்பொருளைச்சொல்லுகிறதோ அந்தப் பொருளின் அஸாதாரணதர்மம்தான் அவ்வார்த்தையின் ப்ரவ்ருத்திக்கு நிமித்தம், ஆகவே கடம் என்றால் குடம் தான் அர்த்தமாகும். படத்தின் தாமம் கடத்துககு நிமித்தமாகாததால் கடம் படத்தைச்சொல்லாது.

† ப்ருஹதி - பெரிதாயிருப்பதாலும், பெரிதாகச்செய்வதாலும் 'பரம் ப்ரஹ்ம'என்று சொல்லப்படுகிறது.

§ தமீச்வராணும் - ப்ரஹ்மா முதலிய ஈச்வானுககெல்லாம் ச்ரேஷ்டனும், மஹேச்வரனும் உள்ளவன்-(ந தத்ஸம) அவனுக்கு ஸமம் ஒருவருமில்லை, மேலாக யாருமில்லை.

'அத:' என்பதற்கு—அநவதிகமான அதிசயத்துடன் கூடிய ப்ருஹத்வமுள்ள வனிடத்தில் ப்ரஹ்மசப்தம் முக்யமாயிருப்பதாலும, ஸர்வேச்வரனுக்கே அப்பேற்பட்ட ப்ருஹத்வகுணஸம்பந்தம் இருப்பதலாலும் - என்று அர்த்தம்.

அது எவ்விதம் அங்கேயே முக்யவ்ருத்தமாகும்?—வேறு இடத்திலும் ப்ரஹ்மசப்தம் ப்ரயோகிக்கப்படுகிறதே!—என்றால், 'தஸ்மாத்' என்று தொடங்கி பதில் சொல்லுகிறார். தஸ்மாத் - அந்த ப்ரஹ்மத்தைககாட்டிலும்—என்று அர்த்தம்.

எல்லா இடத்திலுமே என் ப்ரஹ்மசப்தம் முக்யமாகக்கூடாது?—என்ற கேள்விக்கு 'அநேகார்த்த' என்று பதிலளிக்கிறார். 'அநேகார்த்த'— பரப்ரஹ்மத்தைத்தவிர மற்ற வைகளில் ப்ரயோகம அந்யதாஸித்தமாகையால் அவ்விடங்களில் சக்தியைக்கல்பிக்க வேண்டாம். அநந்யதாஸித்தமாகாத ப்ரயோகம் தான் சக்தியைக்கல்பிக்கிறது—என்று ந்யாயம் இருக்கிறதென்று கருத்து. ப்ருஹத்வகுணஸம்பந்தமுள்ள எல்லா வ்யக்திகளி லும் ஒரு சக்தியினாலேயே முக்யத்வம் ஸித்தித்தால் அநேக சக்தி கல்பனமாவது, கௌ ணத்வமாவது ஸம்பவிக்காது என்றால் 'பகவத்சப்தம்போல்' என்று காண்பிக்கிறார். அவ்விதமே ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் பகவத்சப்தத்தை விஷயீகரித்து சொல்லப்பட் டிருக்கிறது. $ "தத்ர பூஜ்யபதார்த்தோகதிபரிபாஷாஸமந்வித: சப்தோயம் நோபசா ரேண, அந்யத்ரஹ்யுபசாரத:" என்று.

இதனால் ப்ரஸ்துதமான சோத்யத்துக்கு எவ்விதம் பரிஹாரம் சொல்லப்பட்டதாகும்? இந்தக்கேள்விக்குப்பின்வருமாறு பதில்:—ப்ருஹிதாதுவில் 'மநிந்' ப்ரத்யயாந்தத்தினால் நிஷ்பன்னமான ப்ரஹ்மசப்தத்துக்கு ப்ரதானம் முதலியவைகளில் காணப்படுகிற ப்ர யோகமானது அவயவசக்தியாலல்ல. அப்படியிருந்தால், ப்ருஹத் 'மஹத்' இது முதலிய சப்தங்கள் போல ஆபேக்ஷிகமான ப்ருஹத்வஸம்பந்தம் பெற்ற எல்லா வஸ்துக்களிடத்தி லும் ப்ரயோகம் வரும். ஆனால், அவ்வாறு ப்ரயோகிக்கப்படுகிறதில்லை. த்ரஸரேணுக்குங் கூட, அதைவிட மிகவும் அணுவாயுள்ள வேறு வஸ்துக்களைக்காட்டிலும் மஹிமகுண முள்ளதென்று சொல்லுகிறார்கள். த்ரியணுகம் முதலியவற்றில் ப்ரஹ்மசப்தத்திற்கு மாத்ரம் ப்ரயோகத்தைக்காணோம். இவ்விதம் எல்லா இடங்களிலும் ப்ரயோகம் காணப் படுவதால் பங்கஜசப்தவ்யவஸ்தாபகமாயும், குமுதம் முதலிய புஷ்பங்களில் வ்யாவ்ருத்த மாயும், தாமரஸத்தையே அநுவர்த்திக்கிறதுமான பத்மத்வஜாதியைப்போல்,—ப்ரஹ்ம சப்தத்துக்கு விஷயமான ஐந்தாறு வ்யக்திகளில் தொடாந்திருக்கிறதும், வேறு வ்யக்திகளை விட்டு விலகி நிற்பதுமான ரூபம் காணப்படாமையால் அநேக சக்தி கல்பிக்கவேண்டியதாக ஏற்பட்டால்,—அநந்யதாஸித்தமான ப்ரயோகம் சக்திகல்பகமாகையால், ப்ரஹ்மசப்த ப்ரயோக விஷயமான மற்றவைகளிலும் ப்ருஹத்வகுணலேசத்தின் ஸம்பந்தத்தினால் ப்ர யோகம் அந்யதாஸித்தம். ஆகவே, அநேக சக்தி கல்பிப்பது சரியல்ல. ஆதலால், ப்ர வ்ருத்திநிவ்ருத்திபுஷ்கலமாயுள்ள பரமபுருஷனிடத்தில் தான் ப்ரஹ்மசப்தம் முக்ய வ்ருத்தம். மற்றைய இடங்களில் ஔபசாரிகம் தான். "சக்திஸங்கோசத்தைப்பொருத் துக்கொள்ளும் ஔபசாரிக ப்ரயோகம் ஸம்மதம் தான்; ஆனால், அது எல்லா இடத்திலும் வரக்கூடாது." என்கிற இந்த ந்யாயத்தை மனதில் வைத்துக்கொண்டு—"பகவத் சப்தம் புருஷோத்தனிடம் தான் முக்யம்; வேறு வஸ்துக்களிடத்தில் அமுக்யம்" என்று ஸ்ரீபரா சர மஹரிஷியால் சொல்லப்பட்டிருக்கிறது. எப்படியெனில்,

$ தத்ர - பூஜ்யமான அர்த்தத்தைச்சொல்லும் இந்த பகவத்சப்தமானது புருஷோத் தமனிடம முக்யமாகயோகரூடியினால்ப்ரயோகிக்கப்படுகிறது.மற்றவர்களிடம்ஔபசாரிகம்.

'பகவத்' சப்தத்துக்கு ஜ்ஞானம்மாத்ரம் ப்ரவ்ருத்திநிமித்தமா? அல்லது, தடையற்ற ஜ்ஞானம் முதலிய யாவும் ப்ரவ்ருத்திநிமித்தமா? முதலில் சொன்னது தான் ஸரி என்றால், எறும்பு முதலிய ஜந்துக்களிடம் கூட பகவத்சப்தம் ப்ரயோகிக்க வேண்டிவரும். இரண்டாவதுதான்ஸரிஎன்றால், எல்லா வஸ்துவிலும் தடையற்ற ஜ்ஞானம் முதலியவை இல்லையாதலால் ப்ரவ்ருத்திநிமித்தம் ஸித்திக்காது. ஆகவே, ஒரு சக்தியால் எல்லா இடத்திலும் முக்யத்வம் என்பதும் கூடாது. ஆதலால், அநேக சக்தி கல்பிப்பது அயுக்தம். ப்ரயோகங்கள் எல்லாம் அந்யதாஸித்திப்பதா என்பது ஸ்ரீபராசருடைய அபிப்ராயம்.

"உத்பத்திம் ப்ரளயஞ்சைவ பூதாநாம்கதிம் கதிம்-வேத்திம்வித்யாம் அவித்யாஞ்சஸ வாச்யோ பகவாநிதி"என்கிற க்ரந்தத்தால் சொல்லப்பட்ட ஔபசாரிக பகவத்சப்தப்ரயோகத்துக்கு யோக்யங்களான வ்யக்திகளில் எந்த அலௌகிகார்த்தஸாக்ஷாத்காரசக்தி இருக்கிறதோ அதையே ப்ரவ்ருத்திநிமித்தமாககொண்டு பகவத்சப்தம் எல்லா இடத்திலும் முக்யமாகலாமே—என்றால், அப்படியல்ல. அலௌகிகார்த்தஸாக்ஷாத்காரம் மட்டும் ப்ரயோகத்துக்கு அவிஷயங்களான வ்யக்திகளை விலக்கத்திறமையுள்ளதாக ஆகாது. அங்ஙனமாகில், ஸமாதிபர்யந்தமான யோகநிஷ்டையில் நிலைபெற்றவர்களான கேசித்வஜர், காண்டிக்யர், ப்ரஹ்லாதர் முதலியவர்களிடத்திலும் பகவத்சப்தம் ப்ரயோகிக்கவேண்டிவரும். ப்ரயோகமோ அவ்வாறு காணப்படவில்லை. மேலும், ப்ரத்யக்ஷமூலவ்யுத்பத்தியினால் 'கோ' முதலிய சப்தங்களுக்குப்போல், சாஸ்த்ரமூலமான வ்யுத்பத்தியினால் நிறைந்த ஆறுகுணங்கள் முதலியவற்றுடன் கூடியவரிடத்தில் தான் பகவத்சப்தத்துக்கு முக்யத்வம் அறியப்படும். "ஜ்ஞான, சக்தி, பல, ஐச்வர்ய, வீர்ய தேஜாம்ஸ்யசேஷத: பகவத்சப்தவாச்யாநி விநா ஹேயைர் குணாதிபி:" நிர்தோஷத்வபர்யந்தங்களான ஜ்ஞாந, சக்தி—முதலியவைகள் ப்ரவ்ருத்திநிமித்தமாதலால் வாச்யத்வம் சொல்லப்படுகிறது. நிர்தோஷத்வமும் நிமித்தமாதலால் வாச்யமாகிறது. இல்லாவிடில் அதைச்சொன்னது பயனற்றதாகும். அவாச்யமெல்லாம் நிஷேதிக்கத்தக்கதல்லவன்றோ. சொல்லாமலிருந்தாலே அவாச்யத்வம் ஸித்திக்கிறதே.

ஜ்ஞாந, சக்தி—முதலியவைகளில் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக ப்ரவ்ருத்திநிமித்தத்வமில்லை. ஆனால், ஜ்ஞாநம் முதலிய குணஸமுதாயத்துக்கு மாத்ரம்தான். இப்படியில்லாவிடில், 'அசேஷத:' என்கிற பதம் வீணாகும். ஏனெனில், 'ஐச்வர்யஸ்ய ஸமக்ரஸ்ய, என்று சொல்லியிருக்கிறது. தவிர, கோ முதலியவற்றில் அதிப்ரஸங்கம் வரும் என்ற பயம் இருக்கிறது. ஆகையால், மேன்மை வாய்ந்த ஜ்ஞானம் ஜ்ஞானம் முதலியவற்றின் கூட்டத்துக்கே ப்ரவ்ருத்திநிமித்தத்வம் சொல்லப்பட்டதென்று ஒத்துக்கொள்ளத்தக்கது.

இவ்விதம் ந்யாயத்தினால் ஸித்தமான அர்த்தத்துக்கு ஆகமத்தால் ஸித்தமான அர்த்தம் பாஷ்யத்தில் 'பகவத்சப்தவத்' என்று த்ருஷ்டாந்தம் காட்டப்பட்டிருக்கிறது. இவ்வாறே, வேதவ்யாஸமஹர்ஷியால், "பரம் ஜைமிநிர்முக்யத்வாத் ஸ்யாச்சைகஸ்ய ப்ரஹ்ம சப்தவத்." இது முதலான ஸூத்ரங்களில் ப்ரஹ்மசப்தத்துக்கு பகவானிடத்திலேயே முக்யவ்ருத்தி மேலே கூறப்படுகிறது. ஆதலால், இங்கே எவ்வாறு அர்த்தம் சொல்லப்பட்டதோ அதே யுக்தமானது.

இவ்வாறே ஸ்ரீகாருடபுராணத்திலும்—§ "வேதே ஹரி ப்ரயோகாச்ச குணயோகாச்ச சார்ங்கிணி—தஸ்மிந்நேவ ப்ரஹ்மசப்தோ முக்யவ்ருத்தோ மஹாமுநே." என்று

§ வேதே ஹரி – மஹர்ஷே! வேதத்தில் அதிகமாய் ப்ரயோகிக்கப்பட்டிருப்பதாலும், அவயவார்த்தமானது நன்கு பொருந்தியிருப்பதாலும், ப்ரஹ்மசப்தம் அந்த சார்ங்கதரனை ஸ்ரீமந்நாராயணனிடத்திலேயே முக்யவ்ருத்தியுள்ளது.

தொடங்கி,—¶ "யஸ்மிந் ப்ரயுஜ்யமாநே து குணயோகஸ்ஸுபுஷ்கல: தத்ரைவ முக்ய வ்ருத்தோயமந்யத்ர ஹ்யுபசாரத:" என்று ஸ்பஷ்டமாக சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விதம் சப்தஸாமர்த்யம் உபபாதிக்கப்பட்டது.

பாஷ்யம்:—

தாபத்ரயாதுரைரம்ருதத்வாய ஸ ஏவ ஜிஜ்ஞாஸ்ய: அதஸ்ஸர்வேச்வர ஏவ ஜிஜ்ஞாஸாகர்மபூதம் ப்ரஹ்ம। ஜ்ஞாதுமிச்சா ஜிஜ்ஞாஸா। இச்சாயா இஷ்யமாணப்ரதாநத்வாத் இஷ்யமாணம் ஜ்ஞாநமிஹ விதீயதே॥

ஆத்யாத்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதைவிகம், என்கிற மூன்று தாபங்களால் துன்பப்படும் ஸம்ஸாரிகளால் மோக்ஷத்திற்காக அறியத்தக்கவன் அவனே. ஆகையால், அறியவேண்டுமென்கிற விருப்பத்திற்கு கர்மாவாக இருக்கிற ப்ரஹ்மம் ஸர்வேச்வரனே. அறிவதற்கு விருப்பம்—என்கிற பொருளுள்ளது 'ஜிஜ்ஞாஸா' என்னும் பதம். இச்சையானது இச்சைக்கு விஷயமாக இருப்பதை ப்ரதானமாக உடையதாதலால் இச்சிக்கப்படும் ஜ்ஞானமே இங்கு விதிக்கப்படுகிறது.

ச்ருதப்ரகாசிகை:—

இதற்குப்பிறகு ப்ரஹ்மசப்தமானது அநேக அர்த்தங்களை முக்யவ்ருத்தியினால் உணர்த்தும் தன்மை வாய்ந்திருந்தபோதிலும் இந்த ஸூத்ரத்திலுள்ள அந்த சப்தத்திற்கு அர்த்தஸ்வபாவத்தால் புருஷோத்தமபரத்வமே சொல்லப்படுகிறது 'தாபத்ரயாதுரை:' என்று. "ஸ ஏவ அம்ருதத்வாய" என்கிற பதங்களால் † "தமேவம் வித்வாநம்ருத இஹ பவதி-நாந்ய: பந்தா:" இது முதலான ச்ருதியின் அர்த்தம் விவக்ஷிக்கப்பட்டது. அந்த ச்ருதியின் அர்த்தம் விவக்ஷிக்கப்பட்டிருப்பதினாலேயே புருஷோத்தமன் சொல்லப்படுகிறான் என்று உரைக்கப்பட்டது. ச்ருதிக்குங்கூட முன்கூறப்பட்ட ஹேயப்ரத்யநீகத்வ, கல்யாணகுணைகரத்வ விசிஷ்டனே தாபத்ரயத்தால் வருந்துகிறவர்களால் உபாஸிக்கத்தக்கவனே தவிர்த்து தாபத்ரயத்தால் வருந்துகிறவர்களுக்குள் ஒருவனல்லவென்று கருத்து. சிறைச்சாலையில் விலங்கினால் பந்திக்கப்பட்டால் அவனே அவ்விலங்கினின்று விடுதலையை வேண்டுகிறவர்களால் வேண்டத்தக்கவனல்லவன்றோ. அவ்வாறே விஷ்ணுபுராணத்தில் தோஷமில்லாதவனும், கல்யாணகுணங்களுக்கு இருப்பிடமாயும் உள்ளவனே முக்தியை அடையவிருப்பமுள்ளவர்களால் உபாஸிக்கத்தக்கவனென்று கூறப்பட்டிருக்கிறது.—"ஸ ஸர்வபூதப்ரக்ருதிம் விகாராந்." (அவன் எல்லா

¶ யஸ்மிந் – எந்த அர்த்தத்தில் இந்த ப்ரஹ்மசப்தம் ப்ரயோகிக்கப்பட்டால் அவயவார்த்தஸம்பந்தம் நன்கு பொருந்துமோ அந்த அர்த்தத்திலேயே முக்யவ்ருத்தியுள்ளது. அதைத்தவிர வேறு அர்த்தங்களில் ப்ரயோகிக்கப்படுமாகில் அந்தப்ரயோகம் உபசாரத்தாலன்றோ ஸித்திக்கிறது.

† தமேவம் – இவ்விதமாக ப்ரஹ்மத்தை அறிந்தவன் இந்த இடத்தில் (உபாஸநாதசையில்) முக்ததுல்யனாக ஆகிறான். வேறு வழியில்லை.

பூதங்களுக்கும் மூலகாரணமான மூலப்ரக்ருதியையும் அதினின்று உண்டாகிற கார்யவர்க்கங்களையும) "ஸமஸ்தகல்யாணகுணாத்மகோஸௌ" (எல்லா மங்களகுணஸ்வரூபி அவன்) இதுமுதல் "தஜ்ஞானமஜ்ஞானமதோந்யதுக்தம்" (இதைவிட வேறானது அஜ்ஞானம்) இதுவரையிலுள்ள சப்தஸந்தர்பத்தால். 'ப்ரஹ்ம' சப்தவ்யாக்யானத்தை முடிக்கிறார் 'அத:' என்று. தோஷமில்லாதவனுகவும் மங்கள குணங்களுள்ளவனுகவுமிருக்கிற ஸர்வேச்வரனே தாபத்ரயத்தினுல் வருந்தப்பட்டவாகளால் அறியத்தகுந்ததாகச்சொன்ன ப்ரஹ்மம் ஸர்வேச்வரனே என்று பொருள். இல்லையேல், கீழ் கூறப்பட்ட இந்த சப்தஸாமர்த்யத்தினுலும், அர்த்தஸாமர்த்யத்தினுலும் என்று அத: சப்தத்துக்குப் பொருள்.

ப்ரஹ்மசப்தமானது $ வ்யுத்பந்நமாகவோ, ¶ அவ்யுத்பந்நமாகவோ, எவ்வாறுக இருந்துகொண்டு பகவானிடத்தில் முக்யமாக இருக்கிறது?—அவ்யுத்பன்னமென்றுசொல்லும்பக்ஷத்தில் போதிக்கும் தன்மையில்லாத அந்த சப்தமானது ஓரிடத்திலும் முக்யமாகாது. வ்யுத்பன்னமான அந்த சப்தம் முக்யமெனபதும் கூடாது. அலௌகிகமான அர்த்தத்தில் வ்யுத்பத்தி ஸம்பவிககாததால் அறியப்படாததும், வ்யவஹாரத்திற்கு விஷயமல்லாமலுமிருக்கிற வஸ்துவில் புத்திபூர்வகமாகவும், * யாத்ருச்சிகமாயுமுள்ள வ்யுத்பத்தியானது எவ்வாறு உண்டாகும்?

(உத்தரம் சொல்லப்படுகிறது.) காமிநீ, சந்தனம், க்ருஹம்—முதலியவைகளில் ப்ரயோகத்தினுல் ஸுகமென்கிற பொருளை உணர்த்தும் தன்மையுள்ளதென்று நிச்சயிக்கப்பட்ட ஸ்வர்கசப்தத்திற்கு—"யஸ்மிந்நோஷ்ணம்" (எந்த இடத்தில் சூடில்லையோ) இது முதலான † அர்த்தவாதபதத்தின் சேர்க்கையால் ‡ அலௌகிகஸுக விசேஷவிஷயமாகவும் எவ்வாறு வ்யுத்பத்தி ஏற்படுகிறதோ,—லோகத்தில் ஓரிடத்தில் அவ்யுத்பந்நமாயிருந்தபோதிலும் § யூப, ஆஹவநீய, ஸ்ப்ய, கபால, சஷால, சாத்வால—முதலிய சப்தங்களுக்கு வாக்யார்த்தத்தின் சேர்க்கையாலும், பதாந்தரங்களின் சேர்க்கையாலும் எவ்வாறு அந்தந்த அர்த்தவிஷயமான வ்யுத்பத்தி ஸித்திக்கிறதோ—இவ்வாறுக, ப்ரஹ்ம, ஆத்மா, ஈச்வராதி சப்தங்களுக்கும் உலகத்தில் சில அர்த்தங்களில் ப்ரயோகத்தினுல் வ்யுத்பத்தி இருந்தாலும், இல்லாவிடினும் "யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே" (எவனிடத்தினின்று இந்த சிதசித்ரூபமான ப்ரபஞ்சங்களுண்டாகின்றனவோ) "ஸத்யம், ஜ்ஞானமனந்தம் ப்ரஹ்ம." (விகாரத்திற்கு ஆஸ்பதமான அசேதநவஸ்துவைக்காட்டிலும்

$ வ்யுத்பந்நம் - போதிகத்தக்க அர்த்தத்துடன் ஸம்பந்தநிச்சயமுள்ளது.

¶ அவ்யுத்பந்நம் - போதயார்த்தஸம்பந்தநிச்சயமில்லாதது.

* யாத்ருச்சிகம் - யத்ருச்சையாய் ஸம்பவிப்பது.

† அர்த்தவாதம் - வேதத்திலுள்ள ப்ராஹ்மணபாகத்தின் ஓர் பகுதி—தேவதையையாவது, த்ரவ்யத்தையாவது, கர்மாவையாவது, பலத்தையாவது புகழ்ந்து பேசும் ஓர்வித பாகம், பெரும்பான்மையாக விதிசேஷமாயிருந்துகொண்டு விதேயார்த்தத்தை துதிப்பதில் நோக்கமுள்ளது.

‡ அலௌகிக - பரலோகத்தில் உண்டாகிற ஸ்வாகாதிஸுகம்.

§ யூப - மாடுகட்டும் தூண். ஆஹவநீய - த்ரேதாக்நிகளுள் ஒன்று. ஸ்ப்ய - ஹோம ஸாதனபாத்ரம். கபால - புரோடாசத்தை பக்வம் செய்கிற மண்ஓடு. சஷால - பசு பந்தனஸ்தம்பத்தில் போடப்பட்டிருக்கும் வளையம். யூபகடகம் என்றும் சொல்லுவார்கள். சாத்வால - யாகசாலையில் நான்கு மூலைச்சதுரமாக போடப்பட்டிருக்கும் ஒரு வேதி.

விலக்ஷணமாயும், ப்ரகாசமற்ற ஜடவஸ்துவைக்காட்டிலும் வேருகவும், தேசகாலவஸ்துக்களால் அளவிடப்படாததாயுமிருக்கிற ப்ரஹ்மம்.) இது முதலான ப்ரஸித்தார்த்தமுள்ள வாக்யவிசேஷம், பதவிசேஷம் ஆகிய இவற்றின் சேர்க்கையிஞல் அலௌகிகமான பரமாத்ம விஷயத்வநிச்சயமானது உபபன்னமாகிறது. ஆகையால், ப்ரஹ்மசப்தத்திற்கு முன் கூறப்பட்ட நீதியிஞல் பகவானிடத்திலேயே முக்யத்வம் பொருத்தமுள்ளது.

பிறகு '**ஜிஜ்ஞாஸா**' என்கிறசப்தத்தின் வ்யாகபாஷிக்கத்தக்க தன்மையை வெளியிடுவதற்காக ப்ரக்ருதிப்ரத்யயங்களின்பாகுபாட்டை '**ஜ்ஞாதுமிச்சா ஜிஜ்ஞாஸா**' என்பதால் காட்டுகிருர். விஷயவைலக்ஷண்யத்தைசசார்ந்திருக்கிற இச்சையானது எவ்வாறு விதிக்கத்தக்கது என்கிற ஆக்ஷேபத்துக்கு உத்தரம 'இச்சாயா' என்பதால் அருளிச்செய்கிருர். ஞானம் விதிக்கத்தக்கது என்று '**இஷ்யமாணப்ரதானத்வாத்**' என்பதால் சொல்லுகிருர். ஸந்ப்ரத்யயததால் சொல்லத்தக்க இச்சைக்கு தாதுவின் அர்த்தமான ஞானம் கர்மா. ஏனெனில், கர்மவித்திக்காகவே கரியை இருப்பதால். யாகஸம்பந்தமான $ வ்ரீஹி முதலியவற்றிற்கு ப்ரோக்ஷணம் முதலியது போல், கர்மாவுக்கு க்ரியை சேஷமாக இருக்கிறது. கர்த்தாவினுடைய க்ரியையிஞல் அடைவதற்கு எது ப்ரதானமாக விரும்பப்படுகிறதோ அது கர்மா. ஆதலால், ப்ரக்ருதிக்கு அர்த்தமான ஜ்ஞானத்தை கர்மாவாக உடைய இசசையானது அந்த கர்மவித்தியையே ப்ரயோஜனமாகக்கொண்டது. ஆகவே, இச்சையானது இச்சிக்கப்படுகிற ஜ்ஞானத்தை ப்ரதானமாகக்கொண்டிருத்தலால் இஷ்யமாணமாயிருக்கும் ஜ்ஞானமே விதேயமென்று பொருள்.

'ஜிஜ்ஞாஸை செய்யத்தக்கது' என்று விதியிருக்கையில் எவ்வாறு ஞானம் விதேயமாகலாம்?—என்ருல், பதில் சொல்லப்படுகிறது. ¶ "ஸ்நாத்வா புஞ்ஜீத" "ப்ராங்முகோ புஞ்ஜீத" என்கிற இடங்களில் 'புஜி' தாது விதிப்ரத்யயாந்தமாயிருப்பதால் போஜனம் செய்யத்தக்கதென்பது அறியப்பட்டிருந்தபோதிலுங்கூட, விதிக்கு ஸ்நாநத்திலும், தவருமல் கிழக்கு முகமாக இருப்பதிலுமே தாத்பர்யமென்று அர்த்தஸ்வபாவத்தால் ஒத்துக்கொள்ளப்படுகிறது. அவ்விரண்டும் அப்ராப்தயாக இருப்பதால் அப்ராப்தமான அர்த்தத்தைத் தெரிவித்தாலன்ருே சாஸ்த்ரம் ப்ரயோஜனமுள்ளதாக ஆகும். அந்த வாக்யத்தில் வேறு காரணத்தால் ப்ராப்தமான போஜனம் அனுவதிக்கப்படுகிறது. அவ்வண்ணமாகவே இச்சைக்கு விதேயத்வம் ஸம்பவியாததலால், அந்த இச்சைக்கு விதேயமாயிருக்கிற விசாராத்மக ஜ்ஞாபகமே தாத்பர்யத்தால் விதிக்கப்படுகிறது. இஷ்யமாணமாயுள்ள ஞானம் இங்கே அபிப்ராயப்படப்பட்டிருக்கிறதென்றல்லவோ வேதாந்தஸாரத்தில் கூறப்பட்டிருக்கிறது. ஸந்பரத்யயாந்தநிர்தேசமும்—"நிதித்யாஸிதவ்ய:" (த்யானம் செய்யத்தக்கவன்) "விஜிஜ்ஞாஸிதவ்ய:" (அறியவேண்டுமென்று விரும்பத்தக்கவன்) "தத் விஜிஜ்ஞாஸஸ்வ." (அதை அறிய விரும்பு) இது முதலான ச்ருதிவாக்யங்களையனுசரித்து செய்

$ வ்ரீஹீந் ப்ரோக்ஷதி – என்கிற இடத்தில் யாகஸம்பந்தம் பெற்ற வ்ரீஹிக்கு ப்ரோக்ஷணம் அதிசயாதாயகமாக இருப்பதால் வ்ரீஹிக்கு ப்ரோக்ஷணம் சேஷமாவது போல்—'ப்ரஹ்ம ஜிஜ்ஞாஸா' என்கிற இடத்திலும் ஜ்ஞா–தாதுவாச்யமாயுள்ள ஜ்ஞான ரூபமான கர்மாவுக்கு ஸந்ப்ரத்யயவாச்யமாயுள்ள இச்சாரூபமான க்ரியை மேன்மையை உண்டு பண்ணுவதாயிருப்பதுபற்றி சேஷமாகிறது. சேஷம் – வேறு வஸ்துவுக்கு அதிசயத்தை உண்டுபண்ணும் வஸ்து. சேஷியாவது – வேருென்ருல் உண்டாகும் மேன்மையை அடையும் வஸ்து.

¶ ஸ்நானம் செய்துவிட்டு சாப்பிடவேண்டும். கிழக்குமுகமாயிருந்து சாப்பிடவேண்டும்.

பாஷ்யம்:—

மீமாம்ஸாபூர்வபாகஜ்ஞாதஸ்ய கர்மணோऽல்பாஸ்திரபலத்வாத் உபரிதநபாகாவஸேயஸ்ய ப்ரஹ்மஜ்ஞாநஸ்யாநந்தாக்ஷயபலத்வாச்ச பூர்வவ்ருத்தாத் கர்மஜ்ஞாநாதநந்தரம் தத ஏவ ஹேதோர் ப்ரஹ்ம ஜ்ஞாதவ்யமித்யுக்தம் பவதி। ததாஹ வ்ருத்திகார:,—‘வ்ருத்தாத் கர்மாதிகமாதநந்தரம் ப்ரஹ்மவிவிதிஷா’ இதி। வக்ஷ்யதி ச “கர்மப்ரஹ்மமீமாம்ஸயோரைகஶாஸ்த்ர்யம், ஸம்ஹிதமேதச்சாரீரகம் ஜைமிநீயேந ஷோடஶலக்ஷணேநேதி ஶாஸ்த்ரைகத்வஸித்தி:” இதி ॥

மீமாம்ஸையின் முந்தின பாகமான கர்மகாண்டத்தால் அறியப்பட்ட கர்மாக்கள் அல்பமாயும், நச்வரமாயும் உள்ள பலன்களுடன் கூடியிருத்தலாலும், மேல் பாகத்தால் நிச்சயிக்கப்பட்டிருக்கிற ப்ரம்மஜ்ஞானமானது முடிவில்லாததாயும், அழிவில்லாததுமான பலத்தையுடையதாதலாலும்,-முந்தி நடைபெற்றிருக்கிற கர்மவிசாரத்திற்குப்பிறகு கர்மாக்கள அல்பாஸ்திரபலப்ரதங்களென்கிற அக்காரணத்தினாலேயே ப்ரஹ்மம் அறியத்தக்கதென்று கூறப்பட்டதாக ஆகிறது. “முந்தி நடந்த கர்ம விசாரத்திற்குப்பிறகு ப்ரஹ்மத்தை அறியவேண்டுமென்கிற விருப்பம்”—என்று வ்ருத்திக்ரந்தத்தைச்செய்தருளின போதாயனர் கூறுகிறார். கர்மமீமாம்ஸை, ப்ரஹ்மமீமாம்ஸை இரண்டும் ஒரே சாஸ்த்ரமென்று சொல்லப்போகிறார். “இந்த சாரீரகசாஸ்த்ரமானது பதினாறு அத்யாயங்களடங்கி இருக்கிற ஜைமினிப்ரோக்தமான பூர்வமீமாம்ஸையோடு நியதபௌர்வாபர்யமுள்ள ஒரு வ்யாக்யேயவ்யாக்யானரூபமாக இசைந்திருப்பதுபற்றி ஒரே சாஸ்த்ரமென்பது ஸித்தித்தது” என்று.

ச்ருதப்ரகாசிகை:—பிறகு ‘மீமாம்ஸா’ என்று தொடங்கி ஸூத்ரத்தினுடைய வாக்யார்த்தத்தைக்கூறுகிறார்.

இந்த இடத்தில் “பூர்வ வ்ருத்தாத் கர்மஜ்ஞானாதநந்தரம் தத ஏவ ஹேதோ:” என்றதனால் அத, அத: சப்தங்களுடைய அர்த்தம் கூறப்பட்டது. ‘ப்ரம்மஜ்ஞாதவ்யம்’ என்பதனால் ப்ரஹ்மஜிஜ்ஞாஸாபதத்தின் அர்த்தம் சொல்லப்பட்டது. ஜ்ஞாதவ்யம் விசாரத்துக்குத்தகுந்தது. ‘தத ஏவ’ என்கிற ஏவகாரத்தால், அதசப்தத்தால் சாஸ்த்ராந்தரங்களுடைய ஜ்ஞானத்தைக்கருதாமை பலித்தது என்று அபிப்பிராயம். ‘உக்தம் பவதி’ சப்தத்தால் அர்த்தத்தாலும் என்று அபிப்ராயம்.

தில் ச்ரத்தை த்ருடப்படுவதற்காக அபேக்ஷிக்கப்பட்டிருக்கிற இதரபக்ஷநிரஸநம் இங்கே செய்யப்படுகிறதென்கிற மதம் யாதொன்றுண்டோ அது உப்பன்னமாகாது. ஏனெனில், செய்ததைச்செய்ததென்கிற தோஷம சம்பவிப்பதால்,

இது சொல்லப்பட்டதாக ஆகிறது. இங்கே ப்ரதானம் முதலியவைகளுக்கு அஜிஸ்ஞாஸ்யத்வமானது வேதாந்தங்களுக்கு அவைகளில் அபிப்ராயமில்லாமையை உபபாதிப்பதினுல் ஸமர்த்திககப்படுகிறதா ?—அல்லது, கபில, ஸுகதாதிகளுடைய சாஸ்த்ரப்ராமாண்யத்திற்கும் ப்ரமேயத்திற்கும் இருக்கிற நிலைதவறுதலை ப்ரதி பாதிப்பதினுல் ஸமர்த்திககப்படுகிறதா ?—முந்தினபக்ஷம் சரியல்ல —ஈக்ஷத்யதிகரணம் முதலியவைகளால் வேதாந்தவாக்யங்களுக்கெல்லாம் அவைகளின் தாத்பர்யமின்மை சொல்லப்போகிறபடியால் இங்கு சொல்லத்தக்கதொன்றுமில்லை. இரண்டாவதும் சரியல்ல. ஏனெனில், வேதவிருத்தமான ஸ்ம்ருதிகளுககு அப்ராமாண்யம் பூர்வ மீமாம்ஸையிலேயே ஸமர்த்திக்கப்பட்டிருககிறது. மேலும், ஸாங்க்ய, ஸௌகதாதிகளுக்கு அபிமதமான ப்ரமேயத்தினுடைய நிலைதவறுதலானது தர்க்கபாதத்தில் ப்ரதிபாதிக்கப் படப்போகிறது. "விப்ரதிஷேதாச்சாஸமஞ்ஜஸம், இதரேஷாஞ்சானுபலப்தே: ஏதே நயோக: ப்ரத்யுக்த:, உதாஸீநாநாமபிசைவம் ஸித்தி: அந்த்யாவஸ்திதேஶ்சோபாய நித்யத் வாதவிசேஷ:" இது முதலிய ஸூத்ரங்களால் அவர்கள் சொன்ன மோக்ஷஸ்வரூபங்க ளையும், அவற்றின் உபாயங்களையும் நிராகரிககப்போவதால் இங்கு சொல்ல வேண்டிய தில்லை: மேலும் "ஏதேந ஸர்வேவ்யாக்யாதா வ்யாக்யாதா:" என்கிற இடத்தில் "அனுவ் ருத்தி:சப்தாத்" என்கிற சாஸ்த்ரத்தின் முடிவிலும் ஸூத்ரங்களின் அப்யாஸத்திற்கு சொல்லப்படாத அம்சங்களைத்தெரிவிப்பது பலம். அநுக்தாம்சமானது ஸாங்க்ய. யோகங் களால் அறியத்தக்கதென்று சொல்லுகிறவர்களுக்கும், மோக்ஷமானது ஸாங்க்ய, யோகங்க ளுடைய ஸமுச்சயத்தை அபேக்ஷித்திருக்கிறதென்று ப்ரதிபாதிக்கிறவர்களுக்கும், ஸௌக தர் முதலியவர்களைப்போல், ஸாங்க்யர் முதலியவர்களுடைய நிரஸநத்தினாலே சாரீரகசாஸ்த் ரத்திற்கே ஆரம்பணீயத்வ ப்ரதிஜ்ஞையானது மிக்க விருத்தமாக ஆகும்.

ஸாங்க்ய, யோகங்கள் ஆதரிக்கத்தக்கவைகளல்லவென்று சொன்னது விருத்தாம்சங் களைககுறித்தி என்று?—அல்ல. விருத்தாம்சமானது ஆதரிக்கத்தகாததென்பது ¶ விரோ தாதிகரணந்யாயத்தாலேயே ஸித்தம். ஆதலால், யாதவப்ரகாசரால் செய்யப்பட்ட ஸூத் ரதாத்பர்யவர்ணநம் உபபன்னமாகாது என்பது தான் இஹசப்தத்தின் அபிப்ராயம்.

'விதீயதே' அறியப்படாததை அறிவித்தல் எனப்பொருள்படும் விதியானது இங்கே விவக்ஷிக்கப்படுகிறது. ப்ரவ்ருத்திக்காதவனை ப்ரவ்ருத்திக்கச்செய்தல் எனப் பொருள் படும் விதியல்ல. இச்சையினுல் ப்ரவ்ருத்தியானது மேலே கூறப்படுவதால் ராகத்தினுல் ப்ரவ்ருத்தித்தவனுக்குங்கூட பூர்வபக்ஷயுக்தியினுல் அனாரம்பணீயத்வபுத்தி உண்டாகில் ஆரம்பணீயத்வ ஜ்ஞாபனமல்லவோ அஜ்ஞாதஜ்ஞாபனம். அதனுல் 'விதீ யதே' என்பதற்கு தானே ப்ரவ்ருத்திக்கிறானென்கிற மேல் க்ரந்தத்தோடு விரோதமில்லை. இவ்வண்ணம் பதார்த்தங்கள் வ்யாக்யானிக்கப்பட்டன.

¶ விரோதாதிகரணந்யாயம்—"விரோதே த்வநபேக்ஷ்யம் ஸ்யாத்" என்று பூர்வ மீமாம்ஸாஸூத்ரம். ச்ருதி, ஸ்ம்ருதி இரண்டுக்கும் விரோதம் வந்தால் ஸ்ம்ருதியை அனாதரித்து ச்ருதியை ஆதரிக்கவேண்டும். ஏனெனில், ச்ருதியானது அபேக்ஷிக் காமல் ஸ்வதந்த்ரப்ரமாணமாகிறது. ஸ்ம்ருதியோ தன்னுல் கூறப்பட்டுள்ள அர்த்தப்ரா மாண்யத்திற்கு மூலபூதமான வேதத்தை எதிர்பார்க்கிறது.

𑌭𑌾𑌷𑍍𑌯𑌮𑍍:—

𑌮𑍀𑌮𑌾𑌂𑌸𑌾𑌪𑍂𑌰𑍍𑌵𑌭𑌾𑌗𑌜𑍍𑌞𑌾𑌤𑌸𑍍𑌯 𑌕𑌰𑍍𑌮𑌣𑍋𑌽𑌲𑍍𑌪𑌾𑌸𑍍𑌥𑌿𑌰𑌫𑌲𑌤𑍍𑌵𑌾𑌦𑍁𑌪𑌰𑌿𑌤𑌨𑌭𑌾𑌗𑌾𑌵𑌸𑍇𑌯𑌸𑍍𑌯 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍍𑌯𑌾𑌨𑌨𑍍𑌤𑌾𑌕𑍍𑌷𑌯𑌫𑌲𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌪𑍂𑌰𑍍𑌵𑌵𑍃𑌤𑍍𑌤𑌾𑌤𑍍 𑌕𑌰𑍍𑌮𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌦𑌨𑌨𑍍𑌤𑌰𑌂 𑌤𑌦𑍇𑌵 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌜𑍍𑌞𑌾𑌤𑌵𑍍𑌯𑌮𑌿𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌭𑌵𑌤𑌿। 𑌤𑌥𑌾𑌹 𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌕𑌾𑌰𑌃,—'𑌵𑍃𑌤𑍍𑌤𑌾𑌤𑍍 𑌕𑌰𑍍𑌮𑌾𑌧𑌿𑌗𑌮𑌾𑌦𑌨𑌨𑍍𑌤𑌰𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌵𑌿𑌦𑌿𑌷𑌾' 𑌇𑌤𑌿। 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑌿 𑌚 "𑌕𑌰𑍍𑌮𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌮𑍀𑌮𑌾𑌂𑌸𑌯𑍋𑌰𑍈𑌕𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍍𑌯𑌂 𑌸𑌂𑌹𑌿𑌤𑌮𑍇𑌤𑌚𑍍𑌛𑌾𑌰𑍀𑌰𑌕𑌂 𑌜𑍈𑌮𑌿𑌨𑍀𑌯𑍇𑌨 𑌷𑍋𑌡𑌶𑌲𑌕𑍍𑌷𑌣𑍇𑌨𑍇𑌤𑌿 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍈𑌕𑌤𑍍𑌵𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌃" 𑌇𑌤𑌿 ॥

மீமாம்ஸையின் முந்தின பாகமான கர்மகாண்டத்தால் அறியப்பட்ட கர்மாக்கள் அல்பமாயும், நச்வரமாயும் உள்ள பலன்களுடன் கூடியிருத்தலாலும், மேல் பாகத்தால் நிச்சயிக்கப்பட்டிருக்கிற ப்ரம்மஜ்ஞானமானது முடிவில்லாததாயும், அழிவில்லாததுமான பலத்தையுடையதாதலாலும்,-முந்தி நடைபெற்றிருக்கிற கர்மவிசாரத்திற்குப்பிறகு கர்மாக்கள அல்பாஸ்திரபலப்ரதங்களென்கிற அக்காரணத்தினாலேயே ப்ரஹ்மம் அறியத்தக்கதென்று கூறப்பட்டதாக ஆகிறது. "முந்தி நடந்த கர்ம விசாரத்திற்குப்பிறகு ப்ரஹ்மத்தை அறியவேண்டுமென்கிற விருப்பம்"—என்று வ்ருத்திக்ராந்தத்தைச்செய்தருளின போதாயனர் கூறுகிறார். கர்மமீமாம்ஸை, ப்ரஹ்மமீமாம்ஸை இரண்டும் ஒரே சாஸ்த்ரமென்று சொல்லப்போகிறார். "இந்த சாரீரகசாஸ்த்ரமானது பதினாறு அத்யாயங்களடங்கி இருக்கிற ஜைமினிப்ரோக்தமான பூர்வமீமாம்ஸையோடு நியதபௌர்வாபர்யமுள்ள ஒரு வ்யாக்யேயவ்யாக்யானரூபமாக இசைந்திருப்பதுபற்றி ஒரே சாஸ்த்ரமென்பது ஸித்தித்தது" என்று.

ச்ருதப்ரகாசிகை:—பிறகு 'மீமாம்ஸா' என்று தொடங்கி ஸூத்ரத்தினுடைய வாக்யார்த்தத்தைக்கூறுகிறார்.

இந்த இடத்தில் "பூர்வ வ்ருத்தாத் கர்மஜ்ஞாநாதநந்தரம் ததேவ ஹேதோ:" என்றதனால் அத², அத: சப்தங்களுடைய அர்த்தம் கூறப்பட்டது. 'ப்ரம்மஜ்ஞாதவ்யம்' என்பதனால் ப்ரஹ்மஜிஜ்ஞாஸாபதத்தின் அர்த்தம் சொல்லப்பட்டது. ஜ்ஞாதவ்யம் விசாரத்துக்குத்தகுந்தது. 'தத ஏவ' என்கிற ஏவகாரத்தால், அத²சப்தத்தால் சாஸ்த்ராந்தரங்களுடைய ஜ்ஞானத்தைக்கருதாமை பலித்தது என்று அபிப்ராயம். 'உக்தம் பவதி' சப்தத்தால் அர்த்தத்தாலும் என்று அபிப்ராயம்.

இந்த ஸூத்ரத்திற்கு இந்த அர்த்தம் எவ்வாறு ஏற்படுமெ என்று ஸந்தேகம்வர அதை உபபாதிக்கிறார். 'மீமாம்ஸா இது முதலியதால்' 'அதஅத:' இது முதலிய பதங்களால் எவ்வாறு பொருள் கூறப்பட்டதோ அதே ஸரியானது. கர்மப்ரஹ்மமீமாம்ஸைகள் ஒரே சாஸ்த்ரமாதலால், தவறாமல் முன்பின்னாக இருக்கிற இரண்டு பாகங்களுடன் கூடிய வேதமென்கிற ஒரு ப்ரபந்தத்துக்கு இரண்டும் சேர்ந்து ஒரு வ்யாக்யானரூபமாக இருப்பதால் இரண்டும் ஒரே சாஸ்த்ரம் இந்த இடத்தில் வ்யாக்யானிக்கத்தக்க வேதமானது முன்னும் பின்னும் இருக்கிற இரண்டு பாகங்களோடு கூடி இருக்கிறதென்றும்,—அக்காரணத்தால் அதற்கு வ்யாக்யானமாக இருக்கிற மீமாம்ஸையும் முன் பின்னாக அமைந்துள்ள இரண்டு பாகங்களுள்ளதென்றும்,—பதயோஜனையிலும், வாக்யயோஜனையிலும் சொல்லத்தக்கது. அவ்வாறு இருந்தாலும் க்ரந்தலாகவத்திற்காக பதயோஜனையில் "அதீதஸாங்க ஸசிரஸ்கவேதஸ்ய" என்று வ்யாக்யானிக்கத்தக்க (வேதத்திற்கு) மாத்ரம் நியதபௌர்வாபர்யமுள்ள இரண்டு பாகங்களுடன் சேர்ந்திருக்கும் தன்மை சொல்லப்பட்டிருக்கிறது. இந்த இடத்திலேயென்றால், வாக்யயோஜனையில் வ்யாக்யானத்திற்கு நியதபௌர்வாபர்யங்களான இரண்டு பாகங்களோடு கூடியிருப்பதால் ஐகசாஸ்த்ர்யம் கூறப்பட்டிருக்கிறது. இரண்டிடத்திலும் இரண்டும் அநுஸந்திக்கத்தக்கது.

ஹாக சப்தங்களால் மீமாம்ஸைகளிரண்டும் ஒரே அவயவி என்பது ஸூசிக்கப்பட்டது. 'பூர்வ, உபரிதந' சப்தங்களால் க்ரமநியமம் உரைக்கப்பட்டது. 'கர்ம, ப்ரஹ்ம' சப்தங்களால் வருத்தவர்த்திஷ்ய மாணங்கள் சொல்லப்பட்டன. அல்பாஸ்த்திரபலத்வ, அநந்தஸ்திரபலத்வசப்தங்களால் அவ்விரண்டுக்கும் ஹேதுஹேதுமத்பாவம் உபபாதிக்கப்பட்டது. முக்தியின் உபாயத்திற்கு உபயோகியாக இருப்பதால் கர்மாக்கள் ஸ்வரூபத்தால் உபாதேயங்கள் என்கிற ஜ்ஞானம் அநந்தஸ்திரபலாபாதப்ரதீதியில் உள்ளடங்கியது. அதனால் தனித்து உபந்யஸிக்கவில்லை. இவ்விதம் க்ரமவிசேஷத்துடன் கூடிய வ்யாக்யானிக்கத்தக்க ஒரு க்ரந்தத்துக்கு வ்யாக்யானமாக இருப்பதினால் கர்ம ப்ரஹ்ம மீமாம்ஸைகளுக்கு ஐகசாஸ்த்ரயம் ஏற்படுவதால் ஸூத்ரத்திற்கு இங்கே சொல்லப்பட்ட அர்த்தமே பொருத்தமானது என்று பொருள்.

முன் ப்ரதிஜ்ஞை செய்யப்பட்ட வ்ருத்திகாருடைய மதாநுசாரத்தை * வ்ருத்திக்ரந்தத்தோடு † ஸம்வாதமுள்ளதைக்காட்டுகிறார். 'ததாஹ' என்பதால் கர்மவிசாரத்துக்கு பூர்வவ்ருத்தத்வமானது வாசகசப்தத்தால் சொல்லப்பட்டது மாத்ரமல்ல; ஐகசாஸ்த்ரோக்தியினால் ஆக்ஷிப்தமாகவுமிருக்கிறது.—என்று அபிப்ராயமுள்ளவராக 'லக்ஷ்யதிசேதி' எனச்சொல்லுகிறார். 'வ்ருத்தாத்' என்று தொடங்கி இருக்கிறதும், 'ஸம்ஹிதம்' என்கிற பதத்தை முதன்மையாகக்கொண்டிருப்பதும் வ்ருத்திக்ரந்தங்களின் காண்க. 'சாரீரகம்' ப்ரஹ்மமீமாம்ஸை, ஜகத்தை சரீரமாக உடையவன் பரமாத்மா சாரீரன்; "தஸ்யைஷ ஏவ ‡ சாரீர ஆத்மா" (அவனுக்கு இந்த சாரீரனே ஆத்மா) என்று ச்ருதி. அந்தசாரீரவிஷயத்தைப்பற்றிய சாஸ்த்ரம் சாரீரகம் என்று சொல்லப்படுகிறது. $ ஷோடசலக்ஷணேந (பதினாறு அத்யாயங்களடங்கின பூர்வமீமாம்ஸையோடு) **ஸம்ஹி**

---

* வ்ருத்தி—போதாயநமஹர்ஷியால் செய்யப்பட்ட ப்ரஹ்மஸூத்ரவிவரணம்.

† ஸம்வாதம்—ஒற்றுமை.

‡ சாரீரன்—சேதநங்களையும், அசேதநங்களையும் சரீரமாகக்கொண்டிருப்பதால் பரமாத்மா சாரீரன்.

$ லக்ஷணம்—அத்யாயம்.

தம்' நியத ¶ பௌர்வாபர்யத்துடன் கூடின வ்யாக்யானிக்கத்தக்க வேதத்திற்கு வ்யாக்யான ரூபமாகயிருப்பதினால் ஸங்கதமென்று கருத்து. 'அர்த்தைகத்வாதேகம் வாக்யம்' (பொருள் ஒன்றாயிருப்பதால் வாக்யம் ஒன்று) என்கிற ந்யாயத்தாலே ப்ரதிபாத்யவஸ்து ஒன்றாகயிருப்பதால் வ்யாக்யானிக்கப்பட்ட வேதத்திற்கும் ஏகப்ரபந்தத்வம் உண்டாகும். வேதம் புருஷார்த்தபரமாகவும், ப்ரஹ்மபரமாகவாகவும் இருப்பதினால் அதுவும் உபபன்னமாகிறது. "ஸர்வே வேதா யத்பதமாமனந்தி" (எல்லா வேதங்களும் அடையத்தக்க எந்த ப்ரஹ்மத்தை சொல்லுகின்றதுகளோ) "வேதைச்ச ஸர்வைரஹமேவ வேத்ய:" (எல்லா வேதாங்களாலும் நானே அறியத்தக்கவன்) என்றன்றோ ச்ருதிஸ்ம்ருதிகள். வேதார்த்தவிசாரத்திற்குத்தகுந்ததாக இருப்பதால் மீமாம்ஸைக்கு ஏகப்ரபந்தத்வம், இந்த ஐகசாஸ்திரத்தினால் பூர்வவ்ருத்தத்வம் கர்மவிசாரத்திற்கு ஆக்ஷேபிக்கப்படுகிறது.

பூர்வபக்ஷம்:—

கர்மப்ரஹ்மவிசாரங்களுக்கு ஐகசாஸ்த்ரயமிருக்குமேயாகில் அப்பொழுது க்ரந்தத்தின் தொடக்கத்தில் "அதாதோ வேதார்த்தஜிஜ்ஞாஸா" என்று ஸாதாரணமான அர்த்தம் ப்ரதிஜ்ஞை பண்ணப்பட்டிருக்கலாம். இவ்வண்ணம் ப்ரதிஜ்ஞை செய்யவில்லை. பூர்வபாகத்திற்கும் அஸாதாரணமான அர்த்தமே ப்ரதிக்ஞை செய்யப்பட்டிருக்கிறது—'அதாதோ தர்மஜிஜ்ஞாஸா' என்று. ஆகையால், ஐகசாஸ்த்ர்யம் இல்லை. இதற்கு பதில் சொல்லுகிறோம் "அதாதோ ப்ரஹ்மஜிக்ஞாஸா" என்பதே இரண்டு பாகங்களுக்கும் ஸாதாரணமாக இருக்கும் அர்த்தத்தில் ப்ரதிஜ்ஞை. கர்மவிசாரமோவென்றால்,—ப்ரஹ்மமீமாம்ஸையின் மூன்றாவது அத்யாயத்தைச்சார்ந்த, நான்காவது பாதத்தில் சேர்ந்து விடுகிறது. எப்படி நிக்ரஹத்தில் உள்ளடங்கின *ச்சலம், ஜாதி இரண்டுக்கும் ஆஹ்நிகபேதத்தால் தனித்து உக்தியோ,—எப்படி நிக்ரஹத்தில் அந்தர்பூதங்களான ‡ஹேத்வாபாஸங்களுக்கு அத்யாயபேதத்தால் தனித்து உக்தியோ—அவ்வாறே ப்ரஹ்மவிசாரத்தில் உள்பட்டிருந்தபோதிலும் (கர்மாவை) வேறுபடுவது உபபன்னமாகிறது. பஹுக்ரந்தங்களால் ப்ரதிபாதிக்கத்தகுந்ததாக இருப்பதுபற்றி தனியாகப்பிரிக்கப்பட்டிருக்கிறது. அதிலும் முந்தி இருத்தலானது மேலே சொல்லப்போகிற உபஜீவ்ய, உபஜீவக பாவம்முதலிய ஹேதுக்களால் ஸித்திக்கிறது. இது சொல்லப்பட்டதாக ஆகிறது. அர்த்த க்ரமத்தால் ப்ரஹ்ம †மீமாம்ஸையில் மூன்றாவது அத்யாயத்தின் நான்காவது பாதத்தோடு கர்மவிசாரம் பொருந்துகிறது. ப்ரதிபத்திஸௌகர்யரூபமான க்ரமத்தால் கர்மவிசாரத்துக்கு பூர்வபாவம் ஸங்கதமாகிறது என்று. இவ்வண்ணமாவது ஸாதர்ம்ய §ஸமம் வைதர்ம்யஸமம் என்கிற இரண்டு ஜாதிகளையும் நிரூபித்ததனால் இரண்டையும் அனுஸரித்ததான ப்ரதிதர்மஸமம் எவ்வாறு அர்த்தஸித்தியோ இவ்வாறாக இரண்டு பாகங்களுக்கும் அசாதாரணங்களாக இருக்கிற அர்த்தவிஷயமான இரண்டு ப்ரதிக்ஞைகள் செய்யப்பட்டால் ஸாதாரணமான அர்த்தப்ரதிக்ஞை ஆர்த்தமாக ஸித்திபெறலாம்—ஸாதாரணமான அர்த்தம் ப்ரதிக்ஞை பண்ணப்பட்ட போதிலுங்கூட அஸாதாரணமான அர்த்தம்

¶ பௌர்வாபர்யம்—முன்பின்னாக இருத்தல்.

*ச்சலம் - அர்த்தாந்தராபிப்ராயத்தால் ப்ரயோகிக்கப்பட்டதற்கு வேறு அர்த்தத்தைக் கல்பித்து தூஷிப்பது. ஜாதி—அஸதுத்தரம்.

‡ஹேத்வாபாஸங்கள்—ஹேதுக்களைச்சேர்ந்த தோஷங்கள் அல்லது, துஷ்டஹேதுக்கள்,

†மீமாம்ஸா—வேதார்த்தவிசாரம். 'மான்'தாது. ஸ்வார்த்தத்தில் 'ஸன்'ப்ரத்யயம்.

§ ஸமம்—ஜாதிதோஷத்தின் உட்பிரிவு.

தனித்தே ப்ரதிக்ஞை செய்யத்தக்கது. தர்மஜிஜ்ஞாஸை ப்ரதிக்ஞை செய்யப்பட்டிருந்தபோதிலும் "அதாத: சேஷலக்ஷணம், அதாத:க்ரத்வர்த்தபுருஷார்த்தயோர்ஜிஜ்ஞாஸா" என்கிற இது முதலிய இடங்களில் அஸாதாரணமாக இருக்கிற அர்த்தவிஷயகமான ப்ரதிக்ஞை செய்யப்பட்டிருக்கிறது. ஆகையால், இரண்டு பாகங்களுக்கும் அஸாதாரணங்களாக இருக்கிற அர்த்தங்களின் ப்ரதிக்ஞையினால் அதையனுஸரித்திருக்கிற ஸாதாரணமான அர்த்தத்தின் ப்ரதிக்ஞையும் ஆர்த்தமாக ஆகலாமென்று முதலில் "அதாதோ தர்மஜிஜ்ஞாஸா" என்று ப்ரதிக்ஞை செய்யப்பட்டது. 'வேதார்த்தஜிஜ்ஞாஸா' என்று கூறப்படவில்லை. அல்லது, "அதாதோ தர்மஜிஜ்ஞாஸா" என்பதே ஸாதாரணமான ப்ரதிக்ஞை. அலௌகிகமாகவும்,ச்ரேயஸ்ஸாதனமாகவும் இருப்பதல்லவோ தர்மம். அதை அனுஸரித்திருப்பதுப்ரதிபாதிக்கத்தக்கது. தர்மமோ ஸாத்யமென்றும்,ஸித்தமென்றும் இருவகைப்பட்டிருக்கிறது. ஸித்தரூபமான வஸ்துவினிடத்தில் தர்மசப்தத்திற்கு ப்ரயோகம் மஹாபாரதத்தில் காணப்பட்டிருக்கிறது. எப்படியெனில்,-"யேச வேதவிதோ விப்ரா யே சாத்யாத்மவிதோ ஜநா: தே வதந்தி மஹாத்மாநம் க்ருஷ்ணம் தர்மம் ஸநாதனம்." (வேதார்த்தத்தையறிந்த அந்தணர்களும், வேதாந்தார்த்தத்தையறிந்த ஜனங்களும் மஹாத்மாவான விஷ்ணுவை சாசவதமான தர்மமென்று சொல்லுகிறார்கள்.) அவ்வண்ணமே, ஜ்ஞானத்தினால் சிறப்புற்றவர்களாலும் 'அலௌகிகத்வே ஸதி ஶ்ரேயஸ்ஸாதனத்வம்'என்பதை ப்ரவ்ருத்திநிமித்தமாக எண்ணி ஸித்தரூபமான அர்த்தத்தில் தர்மசப்தம் ப்ரயோகிக்கப்பட்டது. "த்ரவ்யம், க்ரியை, குணம், முதலியவைகளுக்கு தர்மத்வம் ஸ்தாபிக்கப்படப்போகிறது. அவைகள் இந்திரியங்களாலறியத்தக்கதாக இருந்தபோதிலும்கூட தர்மசப்த வாச்யங்கள். ஆனால் த்ரவ்யத்வாதிரூபத்தால் அவைகள் தர்மங்களாகா". இது முதலியதில். அந்த இடத்தில் த்ரவ்யம் முதலியது இருந்தபோதிலும்கூட க்ரியையின் ப்ராதான்யத்தால் பூர்வபாகமானது ஸாத்யதர்மபரம். உபாஸனங்களும், அதற்கு அங்கங்களும் இருந்தபோதிலும் ப்ரஹ்மப்ரதானமானதால் மேல் பாகம் ஸித்ததர்மபரம். ஆகையால், இரண்டு பாகங்களின் விசாரத்திற்குப்பொதுவானது முதல் ப்ரதிக்ஞை. அதில் தர்மசப்தத்திற்கு ஸாத்யதர்மவிஷயமாக விசேஷப்ரஸித்தி இருப்பதாலும், புத்திஸ்தமாக இருப்பதாலும், அது பூர்வபாகத்தால் அறியப்பட்டபடியால் முதன்மை வாய்ந்திருப்பதாலும், தர்மஜிஜ்ஞாஸா பதத்தினாலேயோ, † தந்த்ரத்தினாலேயோ, அர்த்தத்தினாலேயோ ப்ரதிக்ஞாவிஷயத்வம் ஸபன்னமாதலாலும் § சோதனாஸூத்ரத்தில் அதின் லக்ஷணம் கூறப்பட்டது. ஸித்தரூபமான தர்மவிசேஷமானது சாதாரண ப்ரதிக்ஞையினாலேயே அர்த்தத்தினால் ப்ரதிக்ஞை பண்ணப்பட்டிருந்தபோதிலும் அதற்கு பஹுக்ரந்தங்களால் ¶ வ்யவதான மேற்பட்டிருப்பதாலும், சப்தத்தால் அது போதிக்கத்தகுந்ததாக ஆகாது என்கிற சங்கையை பரிகரிக்கவேண்டுமென்கிற எண்ணத்தினாலும், மீண்டும் ப்ரதிக்ஞை செய்யப்பட்டது. அதற்கு 'ஜன்மாதி' ஸூத்ரத்தில் லக்ஷணம் கூறப்பட்டிருப்பதால் ஐகசாஸ்த்ர்யம் தகுதியுள்ளதே.

---

† தந்த்ரம் - ஒரே சப்தத்தை அர்த்தங்களின் வேறுபாட்டைக்கருதி இருமுறை ஆவ்ருத்தி செய்து கொள்ளுதல்.

§ சோதனாஸூத்ரம் - "சோதனாலக்ஷணோர்த்தோ தர்ம:" என்று ஜைமினியின் பூர்வமீமாம்ஸையில் இரண்டாவது ஸூத்ரம்.

¶ வ்யவதானம் இடைவெளி அல்லது விலக்கம்.

𑌭𑌾𑌷𑍍𑌯𑌮𑍍:—

𑌮𑍀𑌮𑌾𑌂𑌸𑌾𑌪𑍂𑌰𑍍𑌵𑌭𑌾𑌗𑌜𑍍𑌞𑌾𑌤𑌸𑍍𑌯 𑌕𑌰𑍍𑌮𑌣𑍋𑌽𑌲𑍍𑌪𑌾𑌸𑍍𑌥𑌿𑌰𑌫𑌲𑌤𑍍𑌵𑌾𑌦𑍁𑌪𑌰𑌿𑌤𑌨𑌭𑌾𑌗𑌾𑌵𑌸𑍇𑌯𑌸𑍍𑌯 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍍𑌯𑌾𑌨𑌨𑍍𑌤𑌾𑌕𑍍𑌷𑌯𑌫𑌲𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌪𑍂𑌰𑍍𑌵𑌵𑍃𑌤𑍍𑌤𑌾𑌤𑍍 𑌕𑌰𑍍𑌮𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌦𑌨𑌨𑍍𑌤𑌰𑌂 𑌤𑌦𑍇𑌵 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌜𑍍𑌞𑌾𑌤𑌵𑍍𑌯𑌮𑌿𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌭𑌵𑌤𑌿। 𑌤𑌥𑌾𑌹 𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌕𑌾𑌰𑌃,--‘𑌵𑍃𑌤𑍍𑌤𑌾𑌤𑍍 𑌕𑌰𑍍𑌮𑌾𑌧𑌿𑌗𑌮𑌾𑌦𑌨𑌨𑍍𑌤𑌰𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌵𑌿𑌦𑌿𑌷𑌾’ 𑌇𑌤𑌿। 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑌿 𑌚 “𑌕𑌰𑍍𑌮𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌮𑍀𑌮𑌾𑌂𑌸𑌯𑍋𑌰𑍈𑌕𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍍𑌯𑌂 𑌸𑌂𑌹𑌿𑌤𑌮𑍇𑌤𑌚𑍍𑌛𑌾𑌰𑍀𑌰𑌕𑌂 𑌜𑍈𑌮𑌿𑌨𑍀𑌯𑍇𑌨 𑌷𑍋𑌡𑌶𑌲𑌕𑍍𑌷𑌣𑍇𑌨𑍇𑌤𑌿 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍈𑌕𑌤𑍍𑌵𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌃” 𑌇𑌤𑌿 ॥

மீமாம்ஸையின் முந்தின பாகமான கர்மகாண்டத்தால் அறியப்பட்ட கர்மாக்கள் அல்பமாயும், நச்வரமாயும் உள்ள பலன்களுடன் கூடியிருத்தலாலும், மேல் பாகத்தால் நிச்சயிக்கப்பட்டிருக்கிற ப்ரம்மஜ்ஞானமானது முடிவில்லாததாயும், அழிவில்லாததுமான பலத்தையுடையதாதலாலும்,-முந்தி நடைபெற்றிருககிற கர்மவிசாரத்திற்குப்பிறகு கர்மாக்கள அல்பாஸ்திரபலப்ரதங்களென்கிற அக்காரணத்தினலேயே ப்ரஹ்மம் அறியத்தக்கதென்று கூறப்பட்டதாக ஆகிறது. "முந்தி நடந்த கர்ம விசாரத்திற்குப்பிறகு ப்ரஹ்மத்தை அறியவேண்டுமென்கிற விருப்பம்"—என்று வ்ருத்திக்ராந்தத்தைச்செய்தருளின போதாயனர் கூறுகிறார். கர்மமீமாம்ஸை, ப்ரஹ்மமீமாம்ஸை இரண்டும் ஒரே சாஸ்த்ரமென்று சொல்லப்போகிறார். "இந்த சாரீரகசாஸ்த்ரமானது பதினறு அத்யாயங்களடங்கி இருக்கிற ஜைமினிப்ரோக்தமான பூர்வமீமாம்ஸையோடு நியதபௌர்வாபர்யமுள்ள ஒரு வ்யாக்யேயவ்யாக்யானரூபமாக இசைந்திருப்பதுபற்றி ஒரே சாஸ்த்ரமென்பது ஸித்தித்தது" என்று.

ச்ருதப்ரகாசிகை:—பிறகு 'மீமாம்ஸா' என்று தொடங்கி ஸூத்ரத்தினுடைய வாக்யார்த்தத்தைக்கூறுகிறார்.

இந்த இடத்தில் "பூர்வ வ்ருத்தாத் கர்மஜ்ஞாஞதநந்தரம் ததேவ ஹேதோ:" என்றதனல் அத, அத: சப்தங்களுடைய அர்த்தம் கூறப்பட்டது. 'ப்ரம்மஜ்ஞாதவ்யம்' என்பதனல் ப்ரஹ்மஜிஜ்ஞாஸாபதத்தின் அர்த்தம் சொல்லப்பட்டது. ஜ்ஞாதவ்யம் விசாரத்துககுத்தகுந்தது. 'தத எவ' என்கிற எவகாரத்தால், அதசப்தத்தால் சாஸ்த்ராந்தரங்களுடைய ஜ்ஞானத்தைக்கருதாமை பலிததது என்று அபிப்பிராயம். 'உக்தம் பவதி' சப்தத்தால் அர்த்தத்தாலும் என்று அபிப்ராயம்.

ணில்,—"அததர்த்ததயா க்லுப்தமபி யோக்யமபேக்ஷிதம் தாதர்த்யமர்ஹதி க்ராமே குல்யே பூர்வதடாகவத்" (க்ராமம் புதிதாக ஏற்படுத்தவேண்டியதாக இருந்தால் ஏற்கனவே முந்தி இருக்கிற தடாகத்தை அந்த க்ராமத்துக்கு உபயோகப்படுத்திக்கொள்வதுபோல், பரஹ்மக் ஞானஸம்பாதனத்தை ப்ரயோஜனமாகக்கருதி ஜைமினியினால் செய்யப்படாமலிருந்த போதிலுங்கூட, ப்ரஹ்மக்ஞானம் கர்மாவை அபேக்ஷித்திருப்பதால் அதையும் இத்துடன் சேர்த்து ஒரே சாஸ்த்ரமெனக்கொள்வது பொருத்தமாகும். இவ்வாறு வக்தாவினுடைய கருத்தும், ஸம்பவமும் காட்டப்பட்டது.

பாஷ்யம்:—

𑌅𑌤𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌿𑌪𑌾𑌦𑌯𑌿𑌷𑌿𑌤𑌾𑌰𑍍𑌥𑌭𑍇𑌦𑍇𑌨 𑌷𑌟𑍍𑌕𑌭𑍇𑌦𑌵𑌤𑍍, 𑌅𑌧𑍍𑌯𑌾𑌯𑌭𑍇𑌦𑌵𑌚𑍍𑌚 𑌪𑍂𑌰𑍍𑌵𑍋𑌤𑍍𑌤𑌰𑌮𑍀𑌮𑌾𑌂𑌸𑌯𑍋𑌰𑍍𑌭𑍇𑌦𑌃 । 𑌮𑍀𑌮𑌾𑌂𑌸𑌾𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 '𑌅𑌥𑌾𑌤𑍋 𑌧𑌰𑍍𑌮𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑌾' 𑌇𑌤𑍍𑌯𑌾𑌰𑌭𑍍𑌯 "𑌅𑌨𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌃 𑌶𑌬𑍍𑌦𑌾𑌦𑌨𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌃 𑌶𑌬𑍍𑌦𑌾𑌤𑍍" 𑌇𑌤𑍍𑌯𑍇𑌵𑌮𑌨𑍍𑌤𑌂 𑌸𑌂𑌗𑌤𑌿𑌵𑌿𑌶𑍇𑌷𑍇𑌣 𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌕𑍍𑌰𑌮𑌮𑍍 ॥

ஆகையால், ப்ரதிபாதிக்க வேண்டுமென்று விரும்பப்பட்ட அர்த்தபேதத்தால் ¶ ஷட்கபேதம் போலும், அத்யாயபேதம் போலும், பூர்வோத்தரமீமாம்ஸைகளிரண்டுக்கும் பேதம். மீமாம்ஸாசாஸ்த்ரமானது—'அதாதோ தர்மஜிஜ்ஞாஸா' என்று தொடங்கி 'அநாவ்ருத்திஃ சப்தாத், அநாவ்ருத்திஃ சப்தாத்' என்கிற ஸூத்ரம் ஈறாக முந்தினது பிந்தினது என்பதற்கு நியாமகமான ஸம்பந்த விசேஷத்தால் க்ரமவிசேஷமுள்ளதாக அமைந்திருக்கிறது.

ச்ருதப்ரகாசிகை:—

சாரீரகசப்தத்தால் ஸூசிப்பிக்கப்பட்டிருக்கிற ப்ரதானமாய் ப்ரதிபாத்யமான வஸ்து பேதத்தாலும், ஜைமினீயசப்தத்தால் ஸூசிப்பிக்கப்பட்ட கர்த்ருபேதத்தாலும், அவ்விரண்டினாலும் பலித்த ப்ரயோஜனபேதத்தாலும், அர்த்தவிரோதத்தாலும், இந்த ஐகசாஸ்த்ர்யம் கூடாது.—என்கிற சங்கையை **அத:** என்று தொடங்கி பரிஹரிக்கிறார்.

அத: ப்ரதிபிபாதயிஷித வ்ருத்திகாரரால் சொல்லப்பட்ட ஏகவ்யாக்யேய வ்யாக்யானரூபஸம்பந்தத்தால் என்றுபொருள். ஷட்கபேதமும், பூர்வமீமாம்ஸையில் அத்யாயபேதமும், அங்கே மேலேயும் நிதர்சனார்த்தமாகக்காட்டப்பட்டது. அர்த்த பேதமில்லாவிடில் ஏகஷட்கமாகவாவது ஏகாத்யாயமாகவாவது இருக்கலாம். ஆதலால், அவயவி ஒன்று என்பது ஸித்தித்தபிறகு அவாந்தரங்களான அர்த்தங்களின் வேறு

¶ ஷட்கம்—ஆறு அத்யாயங்களடங்கிய க்ரந்தஸந்தர்பம். பூர்வமீமாம்ஸாசாஸ்த்ரத்தி லிருக்கிற பன்னிரண்டு அத்யாயங்களும் ஆறு அத்யாயங்கள் வீதம் இரண்டாகப்பிரிக்கப் பட்டிருக்கின்றன. முதல் ஆறு அத்யாயங்கள் அடங்கிய க்ரந்தஸந்தர்பம் ப்ரதமஷட்கம். இதை ப்ராக்ருதஷட்கமெனக்கூறுவார்கள். இரண்டாவது, ஆறு அத்யாயங்களடங்கிய க்ரந்தஸந்தர்பம். த்விதீயஷட்கம். இதை வைக்ருதஷட்கம் என்பார்கள்.

பாடானது மஹாவாக்யத்தினுடைய ஏகத்வத்துக்கு விரோதியாகாது. எவ்வாறு பதார்த்த பேதங்கள் வாக்யார்த்தத்தின் ஏகத்வத்துக்கு விரோதியாகாதோ, அவ்வாறு என்று கருத்து. இதனால் ப்ரதிபாத்யபேதம் பரிஹரிக்கப்பட்டது. இரண்டு ஷட்கங்களில் சிந்திக்கப் பட்டிருக்கிற ப்ரக்ருதிவிக்ருதிகளுடைய ப்ரயோஜனபேதமான சாஸ்த்ரங்களுடைய வேறுபாட்டுக்குக்காரணமாகாததால் ப்ரயோஜனபேதமும் அர்த்தாத் பரிஹரிக்கப்பட்டது. இதனால் வ்ருத்திகாரந்தத்திலுள்ள 'ஷோடசலக்ஷண' சப்ததாத்பர்யமும் காட்டப்பட்டது. 'பூர்வோத்தரமீமாம்ஸா' சப்தத்தால் 'ஜைமினீய, சாரீரக' சப்தங்களும் விவரிக்கப்பட்டன. 'ப்ரதிபிபாதயிஷித' சப்தத்தால் அர்த்தவிரோதம் பரிஹரிக்கப்பட்டது. ப்ரதிபாதிப்பதற்கு இஷ்டப்பட்ட வஸ்துவன்றோ ப்ரதிபிபாதயிஷிதம். அது தாத்பர்யவிஷயமான அர்த்தம். விருத்தமாக ப்ரதீதிவிஷயமாகிற தேவதாநிராஸாதிகளில் தாத்பர்யமில்லை என்று அபிப்ராயம்.

மேல் ஆக்ஷேபம்:—

இவ்விதம் எப்படி சொல்லக்கூடும்? வேதமானது யஜ்ஞாதிக்ரியாநுஷ்டானங்களை ப்ரயோஜனமாகக்கொண்டிருப்பதால் ஸித்தபரவாக்யங்களெல்லாம் அந்த க்ரியைகளுக்கு சேஷம் என்றல்லவோ ஸூத்ரகாரரால் கண்டோக்தமாய்க்கூறப்பட்டிருக்கிறது. அது விருத்தமாகவே ஆகிறது. ஆகையால், சாஸ்த்ரபேதம்.

இப்படியல்ல. "பதே ஜுஹோதி. ஆஹவனீயே ஜுஹோதி. ந ஹிம்ஸ்யாத். பசுமாலபேத." (காலடியில் ஹோமம் செய்கிறான். ஆஹவனீயாக்நியில் ஹோமம் செய்கிறான். ஒன்றையும் ஹிம்ஸிக்கக்கூடாது. பசுவை யக்ஞத்தில் கொல்லவேண்டும்.) என்பது போலவும்,—வ்யாகரணசாஸ்த்ரத்தில் "கர்மண்யண், ஆதோநுபஸர்கே க:" (கர்மகாரகன் உபபதமாயிருக்கையில் தாதுவின் மீது 'அ' என்ற விகுதி வருகிறது. ஆகாரத்தை ஈற்றிலுடைய தாதுககளின்மீது 'க' என்கிற விகுதி ஏறுமானால் உபபதம்உபஸர்கமாயிருக்கக்கூடாது) என்பது போலவும்,—$ உத்ஸர்காபவாதந்யாயத்தால் சாஸ்த்ரங்களுடைய ஐக்யத்துக்கு விரோதமில்லை. பொதுவாக ஸித்தபரவாக்யங்களுக்கு க்ரியாசேஷத்வம் சொல்லப்பட்டிருந்தால், ஸித்தபரவாக்யசேஷத்துக்கு விதிசேஷத்வம் உண்டா? இல்லையா?—என்று விசாரித்து, ஸ்வயம் புருஷார்த்தமாகயிராத ஸித்தபரவாக்யங்களே க்ரியாசேஷங்கள்.—ஸ்வயம் புருஷார்த்தமாக பர்யவஸிக்கிற ஸித்தபரவாக்யங்கள் அந்த க்ரியைக்கு சேஷமாக ஆகா—என்று நிர்ணயிப்பதன்றோ யுக்தம். எப்படி, ஹோமம் ஸாமாந்யமாக ஆஹவனீயத்தில் செய்யத்தக்கதென்று ஏற்பட்டிருந்தாலும், 'ஹோமவிசேஷமான குதிரையின் காலடியில்'—என்று நிச்சயிக்கப்படுகிறதோ, எப்படி, ஸாமாந்யமாய் ஹிம்ஸாநிஷேதம் இருந்தபோதிலுங்கூட, ஹிம்ஸாவிசேஷம் செய்யலாம் என்று சொல்லப்படுகிறதோ,—எப்படி ஸாமாந்யமாய் கர்மகாரகன் உபபதமாயிருந்தால் 'அண்' ப்ரத்யயம் வருவதாயிருக்கையில், ஆகாராந்ததாதுக்களைக்காட்டிலும கப்ரத்யயவிதியோ,—அங்கு சாஸ்த்ரபேதமில்லையோ—அப்படியே இவ்விடத்திலும் அபேதம்கொள்ளத்தக்கது.

தேவதாநிராஸத்திலும் தாத்பர்யம் கிடையாது. வேதாந்தம் கேளாதவர்களுக்கு கர்மாவில் ஏற்படும் அச்ரத்தையைத்தடுப்பதற்காக அது கர்மப்ராதாந்யத்தை ப்ரதிபாதிக்கிறது. "நஹி நிந்தா நித்யம் நிந்திதும் ப்ரவர்த்ததே. அபிது நிந்திதாதிதரத் ப்ரசம்ஸி

$ உத்ஸர்கம் - பொதுவான விதி. அபவாதம் - விசேஷவிதி. "பரிஹ்ருத்யாத் வாததோஷாந் தத உத்ஸர்கோபிநிவிசதே" என்கிற வசனத்தின்படி அபவாத சாஸ்த்ரத்தின் ப்ரவ்ருத்திக்குத் தகுந்த லக்ஷயத்தை விட்டு மற்றைய லக்ஷ்யங்களில் உத்ஸர்கசாஸ்த்ரம் நிலைபெறுகிறது.

தும்'' (நிந்தையானது நிந்திக்கத்தகுந்த வஸ்துவை நிந்திப்பதற்காகவே ப்ரவ்ருத்திப்பதில்லை. ஆனால், நிந்திக்கத்தகுந்ததைவிட வேறு வஸ்துவின் மேன்மையை வெளியிடுவதற்காக.) என்று ந்யாயமறிந்தவர்கள் சொல்லுகின்றனர். அல்லது, வேதப்ராமண்யத்திலும் கர்மாக்கள் அவச்யம் செய்யத்தகுந்தவை—என்பதிலும் தாத்பர்யமிருப்பதால் 'தேவதையில்லை' என்று சொன்னது கர்மவிரோதிகளை நிராகரிக்க வேண்டுமென்கிற எண்ணத்தால் * அந்வாருஹ்யவாதமாயிருக்கலாம். தன்னுடைய அதிகமான அபிமானத்திற்கு விஷயமாயிருப்பதை அநாதரித்துங்கூட சத்ருநிராகரணம் காணப்படுகிறது. எப்படியென்றால், ''அபீஷ்டார்த்தவ்யயேநாபி ஜய்தி க்ஷேத்ரஹாரிணம்—லப்தக்ஷேத்ரைர்து ஷ்ப்ராப: ஸ்யாதர்த்த இதி நிச்சயாத்.'' (ப்ரியமான பொருளைச்செலவுசெய்தாவது தன்நிலத்தை அபகரித்தவனை ந்யாயஸ்தலத்தில் ஜயிக்கிறான்,—நிலம் கிடைத்தால் பொருளையடைவது வருத்தமல்ல என்கிற நிச்சயத்தால்.) இவ்விதமே, அபிமததரனை ஈச்வரனை நிராகரித்தாவது வேதப்ராமாண்யஸமர்த்தநம் செய்தால் பிறகு அபிமத ஸித்தி ப்ரயத்னமின்றியே அடையப்படும்—என்று ஜைமிநியின் அபிப்ராயம். அதன் ஸித்திப்ரகாரமும் அவராலேயே சொல்லப்பட்ட † 'ராத்ரிஸத்ரந்யாயம்' முதலியவற்றைச் சார்ந்ததென்று மேலே வ்யக்தமாகும். அதன் ஸித்தியை ஒப்புக்கொண்டமாத்ரத்தினாலேயே அதன் அநாதரவாதத்திற்கு விரோதம் ஒன்றுமில்லை,—அது அந்வாரோஹித்து செய்யப்பட்டிருப்பதால்.

அது எப்படி அந்வாருஹ்யவாதமென்று நிச்சயிக்கப்படுகிறதெனில், பதில் சொல்லுகிறோம்.

''ஸம்பதத்ரேதி ஜைமிநி:, அந்யார்த்தம் து ஜைமிநி:, பரம் ஜைமிநிர்முக்யத்வாத். ப்ராஹ்மேண ஜைமிநி :'' இது முதலிய ப்ரஹ்மஸூத்ரங்களாலேயே ப்ரஹ்மஸ்வரூபம், அதன் குணம், அதன் உபாஸநம், அவற்றின் பலம், முதலியவற்றின் அங்கீகாரம் ஜைமிநிக்கு இருப்பதாக அறியப்படுவதாலும்,—மஹாபாரதத்திலும், ஜஹயக்ரீவ உபாக்யானதிகளில் பகவானன வ்யாஸருடைய உபதேசத்தால் அடையப்பட்ட பரமாத்மஜ்ஞானமுள்ளதாக அறியப்படுவதாலும்,—இக்காரணங்களாலே விருத்தமான அர்த்தத்தில் தாத்பர்யமில்லாமையால் அர்த்தவிரோதமில்லை.

மேலும், அர்த்தவிசேஷம் எவ்விதத்திலும் பரிஹரிக்கமுடியாது. ஏனென்றால், விசேஷா * திதேசங்களை நிரூபிப்பதில் நோக்கமுள்ள 8-வது அத்யாயத்தில்—§ விக்ருதிகளில் ‡ ப்ரக்ருதிதர்மாதிதேசம் செய்யத்தக்கதாக ஏற்படும் ஸந்தர்பத்தில்—எந்த கர்மா

---

* அந்வாருஹ்யவாதம்—விரோதிகளை நிக்ரஹிப்பதற்காக விஷயத்தை அபிமதம் போல் சொல்லுதல்.

† ராத்ரிஸத்ரந்யாயம்,—'ப்ரதிஷ்டையில் விருப்பமுள்ளவன் ராத்ரிஸத்ரத்தை அனுஷ்டிக்கக்கடவன் என்று' ச்ருதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அர்த்தவாதமெல்லாம் ச்ருதியின் அர்த்தத்தை ஸ்துப்பதிலேயே தாத்பர்யமுள்ளதாயிருந்தபோதிலும் இங்கு ராத்ரிஸத்ரத்துக்கு ப்ரதிஷ்டை பலமாகவும் ஆகிறது.

* அதிதேசம் - ஏற்கனவே ஓரிடத்தில் சொல்லியிருப்பதை மற்றொரு இடத்தில் ஏறிடுதல்.

§ விக்ருதி - அதிதிச்யமானதர்மவதீ—அதாவது, அதிதேசிக்கப்பட்ட தர்மத்துடன் கூடியது.

‡ ப்ரக்ருதி - அதிதேசாங்கப்ரயோஜகதர்மவதீ—அதாவது, அதிதேசத்துக்கு ப்ரயோஜனமான தர்மத்தையுடையது.

வில் எந்த கர்மத்தினுடைய தர்மாதிதேசம் செய்யவேண்டும் என்று அபேக்ஷிக்கையில்,—எந்த கர்மாவுக்கு எந்த கர்மாவோடு த்ரவ்யஸாம்யமோ, தேவதாஸாம்யமோ இருக்கிறதோ, அதில் அந்த தர்மம் அதிதேசிக்கத்தக்கதென்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அந்த இடத்தில் எந்த கர்மாவுக்கு ஒரு கர்மாவோடு த்ரவ்யஸாம்யமும், மற்றொன்றோடு தேவதாஸாம்யமும இருக்கிறதோ, அந்த தர்மமே அதிதேசிக்கப்படவேண்டும். தேவதாஸாம்யமுள்ள கர்மாவின் தர்மம் அதிதேசிக்கத்தக்கதல்ல—என்று ஜைமினி மஹர்ஷியினால் "த்ரவ்யதேவதாஸாம்யே த்ரவ்யம் பலீய:" (த்ரவ்யஸாம்யமும தேவதாஸாம்யமும் வந்தால் த்ரவ்யஸாம்யம் ப்ரபலம்.) த்ரவ்யப்ரதானம் சொல்லப்பட்டது.

த்ரவ்யம் ப்ரதானமென்று சொன்னது அதிவதாமல்ல. ஏனென்றால் அநுஷ்டான விரோதம் ஏற்படுவதால். த்ரவ்யப்ராதான்யத்தாலன்றோ அநுஷ்டாநம் காணப்படுகிறது. ஆகையால், த்ரவ்யத்துக்கு ப்ராதான்யம் சொல்லுகிற ஜைமினிக்கு தேவதாநிராஸத்தில் தாத்பர்யமுண்டு.

இவ்விஷயத்தில் ஸமாதானம் சொல்லுகிறோம்.

ஸத்பாவாஸத்பாவங்களால் த்ரவ்யதேவதைகளுடைய ப்ராதான்யாப்ராதான்யங்கள் சொல்ல உத்தேசிக்கப்படவில்லை. ஆனால் விளம்பித்தும், விளம்பமின்றியும் ப்ரவ்ருத்திக்கிற ப்ரமாணங்களுக்கு விஷயமாக இருப்பதுதான் உத்தேச்யம். த்ரவ்யமோ அவிளம்பிதப்ரத்யக்ஷத்தால் அறியத்தகுந்தது. தேவதையோவென்றால், விளம்பிதமான சாஸ்த்ரத்தினால் அறியத்தகுந்தது. விளம்பாவிளம்பங்களே ச்ருதிலிங்கம் முதலியவற்றிலும், ப்ரத்யக்ஷாநுமாநாதிகளிலும், முன்பின்னிருப்பவைகளுக்கு ப்ராபல்யத்திலும் காரணங்கள்.

ஹவிஸாக இருக்கும் தன்மை சாஸ்த்ரத்தினாலேயே அறியத்தகுந்ததாதலால் த்ரவ்யத்துக்கும் ப்ராதான்யம் இல்லை யென்றால்,—

இப்படியல்ல. † சரு ‡ புரோடாசம் முதலிய த்ரவ்யமன்றோ ப்ரத்யக்ஷமாகக்கண்டறியப்படுகிறது. அதில் ஹவிஷ்ட்வம் என்கிற தர்மம் மாத்ரமே சாஸ்த்ரத்தால் அறியத்தகுந்தது. தேவதைக்கு மாத்ரம் ஸ்வரூபம், ச்ரேயஸ்ஸாதனத்வம், முதலிய தர்மம்—இவ்விரண்டும் சாஸ்த்ரத்தினால் அறியத்தக்கது. ஆகவே, ஸ்வரூபத்தாலும், த்ரமத்தாலும், விளம்பமுள்ள ப்ரமாணத்தால் அறியத்தகுந்ததாயிருப்பதால், தேவதைக்கு அப்ராதான்யம். தர்மம்மாத்ரம் சாஸ்த்ரத்தால் அறியத்தக்கதாயிருந்தபோதிலும், தர்மிரூபமான அம்சத்தினால் அவிளம்பிதமான ப்ரமாணத்தால் அறியத்தக்கதாயிருப்பதால் ஹவிஸுக்கு ப்ராதான்யம். ஆகவே, ப்ராதான்யாப்ராதான்யங்கள் ப்ரமாணத்தை த்வாரமாகக்கொண்டிருப்பதால் ஸ்வரூபத்தின் அஸத்தையில் (இன்மையில்) தாத்பர்யமில்லாததுபற்றி தேவதாநிராஸவசனம் வேறு விஷயத்தில் நோக்குள்ளது. இவ்விதம், வேறு அர்த்தங்களும் நிரூபணம் செய்ய முடியுமாதலால் அர்த்தவிரோதமில்லை.

ப்ரஹ்மஸூத்ரங்களாலேயே ஜைமினியின் பக்ஷம் அநுவதித்து நிராகரிக்கப்பட்டிருப்பதால் எவ்விதத்தாலும் பரிஹரிக்கமுடியாது. எப்படியெனில், "பலமத உபபத்தே:" என்கிற ஸூத்ரத்தில் ஈச்வரன் கர்மபலன்களைக்கொடுப்பவன் என்பதால், "தர்மம் ஜைமி

† சரு—ஹோமஸாதனமாக இருப்பதும், மந்த்ரத்தினால் பரிசுத்தமுமான சால்யன்னம் முதலியது.

‡ புரோடாசம்—தேவதோத்தேசமாக ஸம்ஸ்கரிக்கப்பட்ட நெய்கலந்த மாவு.

நிரத ஏவ' என்கிற ஸூத்ரத்தில் ப்ரதிபாதிக்கப்பட்டுள்ள தர்மம் பலப்ரதம் என்றவிஷயம் அநுவதித்து நிராகரிக்கப்பட்டிருக்கிறது.

அப்படியல்ல. ச்ருதியினால் சொல்லப்பட்டிருத்தல், உபபத்தி,—இவ்விரண்டாலும் ஒரு காலவிசேஷத்தில் வரப்போகிற பலன்களுக்கு ஸாதனம் மாத்ரம் ஜைமினியால் சொல்லப்படவே அவ்விரண்டினாலேயே இங்கு பலஸாதனவிசேஷஸித்தி சொல்லப்பட்டிருப்பதால் ஆக்ஷேபம் சரியல்ல.

"சேஷத்வாத் புருஷார்த்தவாதோயதா "அந்யார்த்தம் து ஜைமிநி:" என்கிற ஸூத்ரத்தில் வேதாந்தத்தினால் சொல்லப்பட்ட ஆத்மஜ்ஞானம் கர்மசேஷமாதலால் ஆத்மாக்களுக்கு கர்மசேஷத்வம் சொன்னது "அதிகோபதேசாத்" என்கிற ஸூத்ராத்தரத்தோடு விரோதப்படுகிறது. விகல்பத்தால் விரோதம் ஸம்பவிக்காது. ஏனெனில், வஸ்துவிகல்பம் கூடாது. ஜைமினியால் அந்யபதம் உபந்யஸிக்கப்பட்டதென்று சொல்லவுங்கூடாது. ஜைமினிமதமாயிருப்பதால் ஸித்தாந்தியால் நிராகரிக்க முடியாததலால் விரோதம்.

இப்படியல்ல. சத்ருவின் நிராஸத்தை பலமாகக்கொண்டிருக்கிற ஜைமினியின் அந்வாருஹ்யவாதத்திற்கு அவ்விதம் உபந்யாஸமும், நிராஸமும் பொருந்தலாம். அப்படியில்லாவிடில், "பரம் ஜைமிநி:" இது முதலிய ஸூத்ரங்களுக்கு ஒன்றோடொன்று விரோதமும், பாரதவசனவிரோதமும் வரும். ஜைமினியின் அந்வாருஹ்யவாதத்தைத் தெரிந்துகொள்ளாதவர்களுக்குத்தான் அவர் சொல்லிய விஷயத்தில் தத்வபுத்தி உண்டாகுமென்று அதைத்தடுப்பதற்காக ப்ரஹ்மஸூத்ரத்தில் அதன் உபந்யாஸநிராஸங்கள் இரண்டும் செய்யப்பட்டன. ஆகையால் தான், "பராமர்சம் ஜைமிநி:" என்கிற ஸூத்ரத்தில் நைஷ்டிகம் முதலிய †ஆச்ரமங்களின் நிராகரணமும் பரிஹரிக்கப்பட்டது. ஏனெனில், "தத்பூதஸ்ய" என்கிற ஸூத்ரத்தில் நைஷ்டிகன் முதலியவர்களுக்கு ஆச்ரமப்ரம்சமானது ஜைமினிக்கு அநபிமதம் என்று சொல்லியிருப்பதால். ஆச்ரமமே அநபிமதமானால் அதிலிருந்து ப்ரம்சமும் அநபிமதம் என்று சொல்லமுடியாது. ஆகையால், வீதராகனைத் தவிர மற்றவர்களுக்கு அக்நிஹோத்ரம் முதல்யவற்றைத்தடுப்பதற்காக ஆச்ரமாந்தரங்களைத்தடுத்ததும் முன்போல் அந்வாருஹ்யவாதம். அதுவும் பூர்வமீமாம்ஸையில் ஸூத்ரத்தால் சொல்லப்படவில்லை. ஆனாலும் 'ஔடுலோமி' முதலியவர்களின் மதம்போல் அனுவதித்து நிராகரிக்கப்பட்டிருக்கிறது.

---

† ஆச்ரமங்கள் - ப்ரஹ்மசர்யம், கார்ஹஸ்த்யம், வாநப்ரஸ்தம், ஸந்யாஸம்—என நான்கு வகைப்படும். இந்நான்கும ப்ராஹ்மணன் ஒருவனுக்கே. க்ஷத்ரியனுக்கும், வைச்யனுக்கும்—ப்ரஹ்மசர்யம், கார்ஹஸ்த்யம், வாநப்ரஸ்தம் இம்மூன்றுதான். ப்ரஹ்மசாரிகள்—ஸாவித்ரன், ப்ராஜாபத்யன், ஸௌம்யன், ஆக்நேயன், வைச்வதேவன், உபகுர்வாணன் நைஷ்டிகன்—என ஏழுவகைப்படுகிறார்கள். உபநயனமானபிறகு அத்யாயோபாகர்மா வரையில் ஸாவித்ரீமந்த்ரத்தை மாத்ரம் உச்சரிக்க அதிகாரமுள்ளவனாதலால், ஸாவித்ரன். நியமாத்யயனகாலத்தில் ப்ராஜாபத்யம் முதலிய நான்கு காண்டங்களை க்ரமமாய் அத்யயநம் செய்கையில் அந்தந்தக்காண்டஸம்பந்தமாய் ப்ராஜாபத்யன், ஸௌம்யன், ஆக்நேயன், வைச்வதேவன், என்று ப்ரஹ்மசாரிக்குப்பெயர். குருகுலத்தில் வேதாத்யயனத்தையும், வேதவ்ரதத்தையும் விதிப்படி அனுஷ்டித்து முடித்தபிறகு, ஆசார்யன் கோரினபடி குருதக்ஷிணை ஸமர்ப்பித்து, ஸ்நாதகவ்ரதத்தையும் முடித்து க்ருஹஸ்தாச்ரமத்துக்கு வருபவன் உபகுர்வாணப்ரஹ்மசாரி. உயிருள்ளவரையில் ப்ரஹ்மசர்யவ்ரதத்தோடு குருகுலத்திலேயே இருந்து முக்தியடைபவன் நைஷ்டிகன்.

ஆனால், மதுவித்யையில் வஸ்வாதிகளுக்கு அதிகாரமில்லையென்று சொன்னது அதிகாரத்தைச்சொல்லும் வார்த்தையோடு இது விரோதப்படுகிறதே என்று சொல்லக் கூடாது. அதிகாரோக்தியானது வஸ்வாதிதேவதாங்கீகாரத்துக்கு அடையாளமாதலால் சாஸ்த்ரங்களின் ஐக்யத்துக்கு விரோதமில்லாமையால் அதை வெளிப்படுத்துவதில் ப்ரயோஜனமில்லை "ஸாவம் ஜைமிநி:" என்ற ஸூத்ரத்தில் சொன்ன பக்ஷங்களும் சாஸ்த்ர ஐக்யத்துககு விரோதமில்லாதவைகள். கூடவிசாரத்தில் அவைகளுக்கு ஸமர்த்தனமில்லாதலால அந்தக்கேள்விக்கே அவகாசமில்லை. ஆகவே, அர்த்தவிரோதம் கிடையாது. கர்த்ருபேதபரிஹாரம் ப்ரஸித்தமாயிருப்பதால் சப்தத்தால் சொல்லப்படவில்லை. அதனால் தான் சப்தத்தால் ஸூசிப்பிககப்பட்டதாகிறது. தூர்த்ஸ்வாமி, கபர்தி இவ்விருவரும் செய்த ஆபஸ்தம்பஸூத்ரவ்யாக்யானத்துக்கு வ்யாக்யானம் செய்யத்தகுந்த க்ரந்தத்தின் ஐக்யத்தினால் ஏகப்ரபந்தத்வம் காணப்படுகிறதன்றோ! பாணினீஸூத்ரஙகளுக்கு $ வாமனன், ஜயாதித்யன் என்கிற இரண்டு பண்டிதர்களால் செய்யப்பட்டு முன்பின்னாக அமைந்திருக்கிற இரண்டு வ்ருத்தி க்ரந்தங்களுக்கும் வ்யாக்யேயங்களின் ஐக்யத்தால் ஏக வ்யாக்யானத்வம் காணப்படுகிறது. ஆகையால், ஐகசாஸ்த்ர்யம் உபபன்னம.

ஒரே சாஸ்த்ரம் என்பது இருக்கட்டும். பௌர்வபர்யநியமம் எப்படி? என்கிற ஸந்தேஹத்தைப்பரிஹரிப்பதற்காக வ்ருத்திக்ரந்தததிலிருக்கிற ¶ 'ஸம்ஹிதம' என்றபதத்தை **"மீமாம்ஸா"**—என்று தொடங்கி ஸ்ரீபாஷ்யகாரர் விவரிக்கிறார்.

க்ரமவிசேஷத்தோடு கூடிய ஐகசாஸ்த்ர்யம் 'ஸம்ஹிதம்' என்ற பதத்தினால் கருதப்பட்டிருக்கிறது. 'ஆரப்ய, ஏவமந்தம' (இது தொடங்கி இதுவரையில்) என்பதினால் பௌர்வஷர்யநியமம் சொல்லப்பட்டது. **'ஸங்கதிவிசேஷண'**—இந்தப்பதத்தால், பாடக்ரமம்,—சேதனர்களுக்கு தர்மார்த்தகாமங்களில் முதலில் ப்ரவ்ருத்தி உண்டாகும் அர்த்தஸ்வபாவம்,—உபநிஷத்துகளில் அங்காங்கிபாவத்தை ப்ரதிபாதிக்கிற வாக்யங்களில் யக்ஞம் முதலிய கர்மாக்களுக்கு பதார்த்தபாவத்தால் ஸம்பந்தம்,—சில வித்யைகளில் யக்ஞங்களையும், அவற்றின் உபகரணம் முதலியவைகளையும், த்ருஷ்டவிசேஷங்களாகக் கூறுதல்,—கர்மப்ரஹ்மவிசாரங்களுக்கு த்ருஷ்டாந்ததார்ஷ்டாந்திகபாவம்,—வித்யைக்கும், கர்மாவுக்கும் § உத்பாத்யோத்பாதகபாவமிருப்பதால் அவைகளுக்கு சேஷமான விசாரங்களும் அந்தக்ரமத்தையே அனுஸரித்திருக்க வேண்டுமென்கிற உபபத்தியும்,—வேதவ்யாகயானமாயுள்ள மீமாம்ஸையில் உததரபாகத்துககு பூர்வபாகத்தில் சொல்லப்பட்ட ந்யாயங்களை அபேக்ஷித்தல்,—என்பதும 'ஸங்கதிவிசேஷண' என்ற பதத்தால் அபிப்ராயங்கொள்ளப்பட்டன. இவ்வாறான பௌர்வாபர்யநியாமகஸங்கதிவிசேஷத்தோடு "விசிஷ்டக்ரமம்" க்ரம விசேஷமுள்ளது—என்று அர்த்தம்.

வேதப்ராமாண்யம் ஸித்திப்பதற்காக முதல் அத்யாயம் முந்தியிருக்கட்டும். இரண்டாவது அத்யாயத்துக்கு முன் ப்ரஹ்மவிசாரம் ஏன் இருக்கக்கூடாது?

கூடாது. அங்கங்கே சொன்ன ஸங்கதிவிசேஷங்களால் பதினாறு அத்யாயங்களுக்கும் வரிசைக்ரமம் ஸித்திப்பதாலும், ப்ரஹ்மவிசாரம் அதற்குப்பின் வருவதாலும் இதை

$ வாமனன், ஜயாதித்யன்—இவ்விருவரும் ஜைனர்கள். பாணினீ செய்த வ்யாகர்ண-அஷ்டாத்யாயிக்கு ஸூத்ரக்ரமமாக 'காசிகாவ்ருத்தி' என்னும் க்ரந்தத்தை இவ்விருவரும் செய்தார்கள்.

¶ ஸம்ஹிதம் - ஸங்கதம். இசைக்கப்பட்டிருப்பது.

§ உத்பாத்யம் - உண்டுபண்ணத்தகுந்த கார்யம். உத்பாதகம்-ஹேது.

அபிப்ராயப்பட்டு "ஸங்கதிவிசேஷேண விசிஷ்டக்ரமட்" என்று சொன்னார். இவ்விதம் ஐகசாஸ்த்ர்யம், பௌர்வாபர்யநியமம், சாஸ்த்ரத்துக்கு ஆரம்பிக்கவேண்டிய யோக்யதை, ஆகிய இம்மூன்றும் ப்ரதிக்ஞை செய்யப்பட்டது.

பாஷ்யம்:—

ததா ஹி — ப்ரதமம் தாவத் 'ஸ்வாத்யாயோऽத்யேதவ்ய:' (யஜு-ஆ உ. கரு) இத்யத்யயநேநைவ ஸ்வாத்யாயஶப்தவாச்யவேதாக்யாக்ஷரராஶேர் க்ரஹணம் விதீயதே। தத³த்யயநம் கிம்ரூபம்? கதம் கர்தவ்யம்? — இத்யபேக்ஷாயாம், — "அஷ்டவர்ஷம் ப்ராஹ்மணமுபநயீத, தமத்யாபயீத" (ஶத-ப்ரா) இத்யநேந,

"ஶ்ராவண்யாம் ப்ரௌஷ்டபத்யாம் வா உபாக்ருத்ய யதாவிதி।
யுக்தஶ்சந்தாம்ஸ்யதீயீத மாஸாந் விப்ரோऽர்தபஞ்சமாந்"

(மநுஸ்ம்ரு. ச. கரு) இத்யாதிவ்ரதநியமவிஶேஷோபதேஶைஶ்சாபேக்ஷிதாநி விதீயந்தே.

அவ்விதமே முதன்முதல் "வேதம் அத்யயநம் செய்யவேண்டும்" என்கிற விதியினால் அத்யயநத்தினாலேயே ஸ்வாத்யாயசப்தத்தால் சொல்லத்தகுந்த வேதமென்கிற அக்ஷராசிகளின் க்ரஹணம் விதிக்கப்படுகிறது. அந்த அத்யயநமும், எவ்விதம்?—எப்படிச்செய்யவேண்டும்?—என்கிற அபேக்ஷையில் 'எட்டு வயதுள்ள ப்ராஹ்மணனுக்கு உபநயனம் செய்து வேதத்தை அத்யயநம் செய்து வைக்கவேண்டும்' என்கிற விதியிருப்பதால் ச்ரவணமாதத்தின் பௌர்ணமாஸியிலாவது, ப்ரோஷ்டபதிமாதத்தின் பௌர்ணமாஸியிலாவது விதிப்படி வேதாரம்பம்செய்து ப்ராஹ்மணன் நியமத்துடன் நாலரை மாதம் அத்யயனம் செய்யவேண்டும்" என்று இது முதலிய வ்ரதநியமவிசேஷோபதேசங்களால் அபேக்ஷிக்கப்பட்டவைகள் விதிக்கப்படுகின்றன.

ச்ருதப்ரகாசிகை:—

முன் சொல்லப்பட்ட அங்கங்களோடும், சிரஸோடும் கூடிய வேதாத்யயனத்துக்கு ப்ரமாணத்தையும், ஸாதனசதுஷ்டயத்தை எடுத்துரைப்பதற்கு ஸமயமில்லாத்தையும் காண்பித்துக்கொண்டு ப்ரதிக்ஞை செய்யப்பட்ட மூன்று அர்த்தங்களையும் உபபாதிப்பதற்காக '**ததா ஹி**' என்று சொல்லுகிறார்.

ப்ரதிக்ஞை செய்த மூன்று அர்த்தங்களையும் உபபாதிப்பதற்காக 'ப்ரதமம்' என்று அத்யயனவிதியை நிரூபிக்கிறார்.

வேதப்ராமாண்யஸமர்த்தநம் போல கர்மவிசாரத்தால் ஸித்தித்த அத்யயனவிதிநிரூபணம் என் ஆச்ரயிக்கப்படுகிறதில்லை?—என்றால்,

அப்படியல்ல, ஏனெனில், பின் காலத்திலிருந்த வ்யாக்யாதாக்களால் அவ்விடத்தில் அர்த்தக்ஞானபர்யந்தத்வம் சொல்லப்பட்டிருக்கிறது. அக்ஷராராசிக்ரஹணபர்யந்தத்வம் தான் ஸ்ரீவ்யாஸபகவானுக்கு அபிமதம்—ஏனெனில், "அத்யயனம் மாத்ரமுள்ளவனுக்கு" என்றல்லவோ மேலே சொல்லுகிறார்! ஆகையால், அங்கே சொல்லப்போகிற அர்த்த மானது சாஸ்த்ரம் 'ஆரம்பிக்கத்தகுந்தது' என்பதற்காக இங்கே ப்ரதிபாதிக்கப்படுகிறது. அத்யயனவிதிக்கு அக்ஷராராசிக்ரஹணமாத்ரபர்யந்தத்வம் நிரூபிக்கப்பட்டால் சாஸ்த்ரா ரம்பணீயத்வம் ஸித்திக்கிறது. முழுவதும் விஷயமென்று நிரூபிக்கப்பட்டால் ஜகசாஸத் யமும், பௌர்வாபர்யநியமமும் ஸித்திகிறது.

அக்ஷரக்ரஹணமாத்ரத்தை அத்யயனசப்தம் சொல்லுமேயாகில் எவ்வாறு ஆரம்பணீ யத்வம்? — எனில், இவ்வாறாக:—அத்யயனவிதிக்கு அர்த்தஜ்ஞானபர்யந்தத்வம் ஏற்பட் டால், அர்த்தஜ்ஞானத்துக்கு "அதீத்ய ஸ்நாயாத்" (அத்யயனம் செய்து § ஸ்நாதக வ்ரதம் அனுஷ்டிக்கவேண்டும்) "ஆசார்யகுலாத் வேதமதீத்ய அபிஸமாவ்ருத்ய" (ஆசார்ய க்ருஹத் தினின்று வேதாத்யயனஞ் செய்து ஸமாவர்த்தனஞ் செய்து) என்று யக்ஞாதி, கர்மானுஷ்டா னத்துக்கு சேஷமாக விநியோகமிருப்பதால், உபநிஷத்துகளில் ஸித்தமான ப்ரஹ்மஜ் ஞானத்துக்குங்கூட கர்மசேஷத்வம் வரவேண்டியதாகும். அந்த ஜ்ஞானத்துக்கு "ஆத்மாவா இதம்" (இந்த ப்ரபஞ்சம் ஆத்மாவே) "ப்ரஹ்ம வா இதம்" (இந்த உலகம் ப்ரஹ்மமே) "அயமாத்மா ப்ரஹ்ம" (இந்த ஆத்மா ப்ரஹ்மம்) இது முதலான வேதாந்தத்திலிருக்கிற ப்ரஹ்மசப்தம் ஆத்மபர்யாயமாதலால் ஆத்மஜ்ஞானத்திற்கு ஆத்மவிஷயத்வம் இருப்ப தால், வ்ரீஹி முதலியவற்றின் வாயிலாக ப்ரோக்ஷணம் முதலியவற்றுக்குப்போல, த்வார பூத ஆத்மாவுக்கும் கர்மசேஷத்வம் ஏற்பட வேண்டியதாக ஆகும்.

ஸமுத்ரம் முதலியவற்றின் த்யானம் போல, ஆத்மஜ்ஞானத்துக்கும் அத்ருஷ்டம் முதலியவற்றின் வாயிலாக கர்மசேஷத்வம் இருப்பதால், ஸமுத்ரம்போல ஆத்மா கர்ம சேஷமல்ல என்று சொல்லக்கூடாது.—ஏனென்றால், கர்மசேஷமாக ஏற்பட்டிருக்கிற ஆத்மாவுக்கு த்வாரபாவம் ஸம்பவிப்பதாக இருக்கையில் அத்ருஷ்டகல்பனம் கூடாதாத லால். ஸமுத்ரத்துக்கு யக்ஞோபகாரகத்வம் ஸம்பவியாமையாலல்லவோ அத்ருஷ்டகல் பனம்.

ஆத்மாவுக்கு பலத்தைக்கொடுக்கும் தன்மை பொருந்தியிருப்பதால் கர்மசேஷ மென்று சொல்வது பொருந்தாது. ஸம்ப்ரதிபன்னமான ஆத்மாவினுடைய ஆத்மஜ்ஞானத்துக்கு கர்மசேஷத்வம் ஸித்தித்திருக்க அஸம்ப்ரதிபன்னமான ஆத்மாவுக்கு கர்மசேஷத்வகல் பனம் கூடாது. ஜீவனைவிட விலக்ஷணனாக ஆத்மா நிச்சயமாக ஸித்திக்கவில்லையன்றோ! ஆகையால், அனுஷ்டானத்திற்கு சேஷமாக இருக்கிற ஆத்மா கர்மாக்களில் கர்த்தாவாக இருக்கிற ஜீவனேதான்—என்று வேதாந்தங்கள் ஜீவப்ரதிபாதனபரங்களாதால் அந்த ஜீவனைக்காட்டிலும் வேறான ஈஸ்வரனிருப்பதில் ப்ரமாணமில்லாமையால், அப்ராமாணிக மான ஈஸ்வரவிசாரரூபமான சாஸ்த்ரம் ஆரம்பிக்கத்தக்கதல்ல—என்று ஏற்படும். அக்ஷர ராசிக்ரஹணமாத்ரபர்யந்தம் (அத்யயன சப்தார்த்தமாகில்), அர்த்தஜ்ஞானத்துக்கு அனுஷ் டானசேஷத்வமில்லாமையால், கர்மாக்களில் கர்த்தாவாக இருக்கிற ஜீவாத்மாவைவிட வேறான ஆத்மாவுக்கு ப்ரதிபாதனம் ஸம்பவிக்கிறபடியால் ப்ராமாணிகமான பரமாத்ம விசாரரூபமான சாஸ்த்ரம் ஆரம்பிக்கத்தக்கதாக ஆகும். ஆதலால், அத்யயனவிதியானது நிரூபிக்கப்படுகிறது.

---

§ ஸ்நாதகவ்ரதம்—வேதத்தை அத்யயனம் செய்து, வ்ரதத்தையும் முடித்த ப்ரஹ்ம சாரியினால் அனுஷ்டிக்கத்தக்க ஒரு வ்ரதவிசேஷம். இதை ஸமாவர்த்தனமென்றும் கூறுவார்கள்.

அதில் ப்ராபாகரர்களுக்கு அபிமதமான அத்யயனம், ஸக்துஹோமம் போல், ப்ரதானகர்மா என்பதையும், ஸ்வரூபத்தினால் விதேயமென்பதையும், அத்யாபனவிதிப்ரயுக்த மென்பதையும், உபநயநம் அத்யாபனத்துக்கு அங்கமென்பதையும், அநாதரித்தும்,—$ கௌமாரிளர்களுக்கு அபிமதமான அத்யயனம், அவகாதம் முதலியதுபோல், குணகர்மா, நியமம் விதேயம், அத்யயனம் ஸ்வவிதிப்ரயுக்தம், உபநயனம் அத்யயனத்திற்கு அங்கம்,—என்கிற நான்கையும்—இருவர்களுக்கும் ஸம்மதமில்லாத அக்ஷரராசிக்ரஹணமாத்ரபர்யந்தத்வத்தையும் சுருக்கமாக ப்ரதிஜ்ஞை பண்ணுகிறார். '**ப்ரதமம்**' என்பதால் '**ப்ரதமம் தாவத்**' முதலியவையே—'யாவத்தாவச்ச ஸாகல்யேவதௌ மானேவதாரணே' (யாவத்தாவத் இரண்டு சப்தங்களும் முழுமையும் என்கிற அர்த்தத்திலும், எல்லை, அளவு, நிச்சயம், இந்த அர்த்தங்களிலும ப்ரயோகிக்கப்படுகின்றன) என்று நிகண்டுகளைச்செய்தவர்கள் கூறுகின்றனர். முதன்மையாவது சாஸ்த்ரவிசேஷங்களைக்கேட்பதற்குரிய நிலைமையை அபேக்ஷித்து முந்தியிருத்தல். கர்பகாலம் தொடங்கி எட்டாவது வர்ஷத்தில் உபநயநம் செய்யப்பட்டிருக்கிறவனுக்கல்லவோ அத்யயனம்,—அதற்கு முன் சாஸ்த்ராந்தரபரிச்ரமத்துக்கு அநர்ஹனானதால். அத்யயனவிதிக்கு உடன்பட்டிருப்பவனான (மாணவகனுக்கு) ஸாங்காத்யயனத்திற்குப்பிறகு கர்மவிசாரம் அவச்யம் செய்யவேண்டுமென்பது தானாகவே ஏற்படுவதால் ஸாதநசதுஷ்டயம் முதலிய பூர்வவ்ருத்தவிசேஷங்களால் ஏற்படவேண்டுவதென்பது ஸந்தர்பவிருத்தம் என்கிற விஷயம் "ப்ரதமந்தாவத்" என்பதினால் பலித்தது.

"வேதாக்ய" என்கிற சப்தமானது லௌகிகமான அக்ஷரராசியை விலக்குவதற்காக. "வேதாக்ய" என்கிற சப்தத்தினால் முழுமையும் அத்யயனம் செய்யத்தக்கதென்பது ஸூசிக்கப்பட்டது. வேதாந்தபாகம்மாத்திரம் ஸ்வாத்யாயசப்தவாச்யமல்ல. 'அத்யயநேந' என்று சொன்னதினால் அப்ரதானகர்மத்வம் ஸூசிதமாயிற்று. ஹாவார்த்ததாத்வர்த்தத்திற்கு அந்யனிடத்தில் ஸ்திதி அறியப்படுவதால், அத்யயனத்துக்கு ப்ரதானகர்மத்வத்தைச்சொல்லவேண்டுமென்று விருப்பமுள்ளவராக இருப்பரேயாகில், அப்பொழுது "ஸ்வாத்யாயத்தினால் அத்யயனம் ஸம்பாதிக்கத்தக்கது" என்று வசநமிருந்திருக்கும். "அத்யயநேநைவ" என்கிற, ஏவகாரத்தால் நியமவிதித்வம் த்யோதனஞ்செய்யப்பட்டது. புஸ்தகம் பார்ப்பது முதலியவைகளால் வேதம் க்ரஹிக்கக்கூடாதென்று பொருள். "ஸ்வாத்யாயோத்யேதவ்ய:" என்று அத்யயனவிதிவாக்யத்தை எடுத்ததினால் ஸ்வவிதிப்ரயுக்தத்வம் ஸூசிப்பிக்கப்பட்டது. "அத்யாபயேத்" என்று வாக்யமெடுக்கப்பட்டிருக்கவில்லை. ப்ராதம்யவசநத்தினால் அத்யயனம் உபநயநத்தை அங்கமாகவுடையதென்பது பலித்தது. சாஸ்த்ராந்தரபரிச்ரமத்துக்குத்தகாத கர்பாஷ்டமவர்ஷாபிப்ராயத்தாலன்றோ முதன்மைகூறப்பட்டது. அத்யயனத்துக்கு ப்ராதம்யமானது "அஷ்டவர்ஷம் ப்ராம்மணமுபநயீத" என்று. உபநயனவிஷயமாகக்குறிக்கப்பட்டிருக்கிற காலத்திற்கு உபநயனம் வாயிலாக அத்யயன சேஷத்வம் இருந்தாலொழிய உபபன்னமாகாது. இவ்வண்ணம் ¶ ஐந்து அர்த்தங்கள் சுருக்கமாக ப்ரதிக்ஞை செய்யப்பட்டதாக ஆகிறது,

$ குமாரிளபட்டர்—மீமாம்ஸா சாஸ்த்ரப்ரவர்த்தகாகளுக்குள் ஒருவர்.

¶ ஐந்து அர்த்தங்கள் :—

௧. அத்யயனத்திற்கு, அவகாதம் முதலியவற்றுக்குப்போல், குணகர்மத்வம்.
௨. ,, ,, ,, ,, நியமவிதித்வம்
௩. ,, ,, ,, ,, ஸ்வவிதிப்ரயுக்தத்வம்.
௪. ,, ,, ,, ,, உபநயனத்திற்கு அத்யயனாங்கத்வம்.
௫. ,, ,, ,, ,, அக்ஷரராசிக்ரஹணமாத்ரபர்யந்தத்வம்.

இந்த அத்யயனவிதிவாக்யத்தில அத்யயனத்திற்கு ப்ராதம்யமும், ஸாங்கத்வமும், உபநயனத்தை அங்கமாகக்கொண்டிருத்தலும் தோன்றுது. என்னென்றல்—"உபநீய, தமத்யாபயேத்" என்கிற வாக்யாந்தரததால் அத்யயனத்திற்கு அத்யாபநவிதிப்ரயுக்தத்வமும், அத்யாபனத்திற்கு உபநயநாங்கத்வமும், அறியப்படுகிறதென்று ஸந்தேஹம் வர, அதற்குப்பரிஹாரங்கூறுகிறர்—"தச்ச" என்று. சகாரம் சங்கையின் நிவ்ருத்தியிலிருக்கிறது. அது "ஸ்வாத்யாயோத்யேதவ்ய:" என்கிற வாக்யத்தால் ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கிறதென்று பொருள்.

"ஆத்யே த்வத்யயநே நைவ காசிதஸ்தி பலச்ருதி: தாரணே ஜபயஜ்ஞேஷு யா ஸாப்யேவம் நிவாரிதா" (முதன்மையான அத்யயனத்தில் ஒருவிதமான பலச்ரவணமுமில்லை. தாரணத்திலும், ஜபயஜ்ஞத்திலும், எந்த பலச்ருதியுண்டோ அதுவும் இவ்வண்ணம் நிரஸிக்கப்பட்டது) என்று ஜபம் முதலியதுகூட அத்யயனசப்தத்தால் சொலலத்தக்கதாதலால் அவைகளில் ப்ரஸ்துதாத்யயனத்திற்கு ஆத்யாத்யயனத்வநிச்சயத்தின்பொருட்டு "கிம்ரூபம்" என்று கூறுகிறா. ஒரு தடவை உச்சாரணரூபமா? அல்லது, அடிக்கடி உச்சாரணரூபமா? ஸ்வதந்த்ரோச்சாரண ரூபமா? அல்லது பாதந்த்ரோச்சாரணரூபமா? என்று பொருள். பாதந்த்ரோச்சாரணரூபத்வமும், அஸக்ருதுச்சாரணரூபத்வமும் இருந்தாலன்றே ஆத்யாத்யயனத்வம் ஸித்திக்கிறது.

"கயும்" எதை அங்கமாகவுடையது என்று பொருள்.

"இத்யபேக்ஷாயாம்" (அபேக்ஷையுண்டாகில்) அபேக்ஷிதங்கள் விதிக்கப்படுகின்றன என்று அந்வயம். ப்ராதம்யத்தையும், ஆசார்யன் சொன்னபிறகு அதை அநுஸரித்து உச்சரிக்க வேண்டுமென்பதையும, உபநயனததை அங்கமாகக்கொண்டிருப்பதையும் காட்டுவதற்காக "அஷ்டவர்ஷம்" என்று சொல்லுகிறார். இதனுல ப்ராதம்யம் ஸிததித்தது. காலம் உபநயனத்தின்வாயிலாக † அத்யயனத்திற்கு சேஷமாதலால், 'ப்ராஹ்மணமுபநயீத' என்று இரண்டாம் வேற்றுமையின் சரவணத்தால் மாணவகசேஷத்வமறியப்படுவதால், § உபநயனத்திற்கு அவனை அடைந்துள்ள அத்யயனுங்கத்வம ஸித்திக்கிறது. உபநயனமானது "ஸ்வரிதஞித: கர்த்ரபிப்ராயே க்ரியாபலே" என்கிற ஸூத்திரததினுல் விதிக்கப்படாததாலும், அதற்கு அத்யாபனுங்கத்வஸித்தியில்லை. "அத்யாபயேத்" என்றதினுல் பாதந்த்ரோச்சாரணரூபத்வம ஸித்தித்தது.

"த்வாதசாஹேந ப்ரஜாகாமம் யாஜயேத், அந்நாத்யகாமம் யாஜயேத், நிஷாதஸ்தபதிம் யாஜயேத" என்கிற விதிகளால் ஏற்பட்ட யாஜநம்போல, அத்யாபனமும் பொருள் முதலியவற்றை ஸம்பாதிப்பதற்குக்காரணமாயிருப்பதுபற்றி ராகப்ராப்தமாதலால் விதேயமாகாததாலும் அத்யாபனத்தில் அதிகாரிவிசேஷச்ரவணமில்லாமையாலும், அத்யயனத்திற்கு அத்யயனஞ்செய்விக்கிற ஆசாரயனை முன்னிட்டிருத்தல் கூறப்படுகிறதென்பதினுல் இது அத்யயனுங்கவிதி என்று கருத்து.

உபாகர்மம் முதலிய வ்ரதநியமங்களை அங்கங்களாகக்கொண்டிருப்பதையும், அங்கங்களோடு கூடியிருப்பதையும காட்டுவதற்காக கூறுகிறா. "ச்ராவண்யாம்" (திருவோண நக்ஷத்திரத்துடன் கூடின பௌர்ணமாஸியில்) என்று. ¶"அர்தபஞ்சமாந்மாஸாநித்யாதி"

---

† அத்யயனம்—முக்யமானது. இதற்கு அங்கம் உபநயனம். இந்த உபநயனத்திற்கு காலம் அங்கம். சேஷம்—அதிசயத்தை உண்டுபண்ணுகிற வஸ்து.

§ உபநயநம்—ஆசார்யன் பக்கலில் வேதாத்யயனத்திற்காக மாணவகனைச்சேர்ப்பித்தல், எந்த காமாவில் ஏற்படுகிறதோ அது.

¶ அர்தபஞ்சமாந் மாஸாந் - நாலரை மாதங்கள் முழுமையும்.

—நாலரை மாதங்கள் இது முதலியது—ஆதி சப்தத்தாலெடுக்கப்பட்ட "அதஊர்த்வந்து ‡ ச்சந்தாம்ஸி சுக்லேஷு நியத: படேத்—வேதாங்காநி ரஹஸ்யஞ்ச க்ருஷ்ணபக்ஷேஷு ஸம்படேத்" இது முதலான வசனங்களால் அங்காத்யயனத்திற்குக்காலம் காட்டப்பட்டது.

"வ்ரதம்" வேதாரம்பம்,காண்டவ்ரதம் முதலியது. 'நியம'மானது "பத்யு ஹ வா ஏதத் ச்மசானம் யச்சூத்ர:—தஸ்மாத் சூத்ரஸமீபே நாத்யேதவ்யம்" (சூத்ரன் என்பவன் ஜங்க மஸ்மசானம், ஆகையால், சூத்ரன்பக்கலில் அத்யயனஞ்செய்யக்கூடாது.) இது முதலாகக் கூறப்பட்டிருக்கிற தேசம், காலம், பக்ஷ்யம், அபக்ஷ்யம், இது முதலியவைகளுடைய வ்ய வஸ்தாரூபமாயுள்ளது. "அத்யாபயேத்" என்றும், "வ்ரதநியமவிசேஷோபதேசைஸ்ச" என்றும் தனித்து நிர்தேசமானது ச்ருதிஸ்ம்ருதிவிபாகத்தாலும், ¶ விப்ரதிபன்னத்வ $ அவிப்ரதிபன்னத்வவிபாகத்தாலும் செய்யப்பட்டிருக்கிறது. உபாகர்மம் முதலிய வ்ரத நியமங்கள் போல, உபநயனமும் அத்யயனத்திற்கு அங்கமென்பது கருத்து. அது எந்த ஸ்வரூபமுள்ளது, எவ்வாறு செய்யத்தக்கது; என்று அபேக்ஷிக்கையில், அங்கங்களை விதிக்கிற இந்த வாக்யங்களால் அபேக்ஷிக்கப்பட்டவைகள் விதிக்கப்படுகின்றனவென்று பொருள்.

பூர்வபக்ஷம்:—

"அஷ்டவர்ஷம் ப்ராஹ்மணம்" என்கிற வாக்யத்தில் உபநயனத்திற்கு அத்யயனாங்கத்வம் அறியப்படுகிறதென்பது ஸரியல்ல. அது உபநயனம் செய்விக்கத்தக்க மாணவகனுடைய ஸாமீப்யம் வாயிலாக அத்யேதாவை ஆகாங்க்ஷிக்கிற அத்யாபனத்திற்கன்றோ அங்கமென்று அறியப்படுகிறது. "உபநீய து ய: சிஷ்யம்" (எவன் சிஷ்யனுக்கு உபநயனத்தைச்செய்வித்து) இது முதலான ஸ்ம்ருதிவசனத்தாலும் அது அறியப்படுகிறது—என்றால், மறுமொழி சொல்லப்படுகிறது,

"ப்ராஹ்மணமுபநயீத" என்கிற இடத்தில் இரண்டாம் வேற்றுமையின் ச்ரவணத்தால் உபநயனம் மாணவகனுக்கு சேஷமென்று அறியப்படுகிறது. உபநயனமும், அதைச் சார்ந்திருக்கிற அத்யயனமும் மாணவனுக்கு சேஷம். அதில் † அந்தரங்க § பஹிரங்கத்வாயத்தால் உபநயனம் அத்யயனத்துக்கு அங்கமே. "உபநீய து ய:சிஷ்யம் வேதமத்யாபயேத் த்விஜ: ஸகல்பம் ஸரஹஸ்யஞ்ச தமாசார்யம் ப்ரசக்ஷதே" (எந்த அந்தணன், சிஷ்யனுக்கு உபநயனத்தைச்செய்து வேதத்தை கல்பங்களோடும், ரஹஸ்யங்களோடும் அத்யாபனம் செய்விப்பனோ அவனை ஆசார்யனென்று சொல்லுகிறார்கள்) என்கிற வச

‡ அத ஊர்த்வந்து—தைமாதத்தில் புஷ்யநக்ஷத்திரத்துடன் கூடின பௌர்ணமாஸியில் உத்ஸர்ஜனவ்ரதத்தைச்செய்து விட்டு அதற்குமேல் அத்யயனம் செய்த வேதபாகங்களை சுக்லபக்ஷங்களில் ஆவ்ருத்தி செய்யவேண்டும். வேதாங்கங்களான வ்யாகரணம் முதலியவைகளையும், ரஹஸ்யத்தையும், க்ருஷ்ணபக்ஷங்களில் படிக்கவேண்டும்.

¶ விப்ரதிபன்னத்வம்—விப்ரதிபத்திக்கு விஷயமாக இருத்தல்.

$ அவிப்ரதிபன்னத்வம்—விப்ரதிபத்திக்கு விஷயமாகாமல் எல்லோராலும் ஏகமுகமாக ஒப்புக்கொள்ளப்பட்டிருத்தல்.

† அந்தரங்கம்—அல்பநிமித்தத்தை அபேக்ஷித்திருப்பது.

§ பஹிரங்கம்—அநேகநிமித்தங்களை அபேக்ஷித்திருப்பது.

னத்தில் 'உபநீய' என்று, ¶ 'க்த்வா' ச்ருதியிருப்பதால் உபநயனத்துக்கு அத்யாபனாங்கத்வம் தகுந்தது. அந்தரங்கத்வமென்பது வஸ்துஸாமர்த்யரூபமான லிங்கமன்றோ? ஆதலால், க்த்வாச்ருதி அதிக பலமுள்ளது என்று சொல்வதுகூடாது.

அந்தரங்கத்வமோவென்றால், ப்ரத்யக்ஷச்ருதியினால் ஸித்தம். 'க்த்வா' ச்ருதியோ என்றால், ஸ்ம்ருதியையடைந்திருக்கிறதாயும், அநுவாதவசனத்திலிருக்கிறதாயுமிருக்கிறது. ஆதலால், இது ஸ்ம்ருதிவசனத்திலிருப்பதால் மூலச்ருதியை அபேக்ஷித்தல்,—அநுவாதரூபமான வசனத்தை அடைந்திருத்தலால் வேறு விதியை அபேக்ஷித்தல்,—என விளம்பத்துக்கு இரண்டு காரணங்களிருக்கின்றன. * ச்ருதிலிங்காதிகளில் விளம்பித்து வருகிற புத்திக்கு ஹேதுவாகயிருத்தலன்றோ பரதௌர்பல்யஹேது. ஆதலால், இரண்டு விளம்பங்களால் அபஹ்ருதமான க்த்வாச்ருதியானது அதிக பலமுள்ளதாகா.

மேலும், ச்ரோத்ரியன், உபாத்யாயன், குரு, இது முதலான பெயர்களை விதிக்கும் ப்ரகரணத்திலிருக்கிற இந்த வசனமானது உபநயனஞ்செய்து அத்யாபனஞ்செய்விக்கிறவனுக்கு ஆசார்யனென்று பெயரை விதிப்பதில் நோக்குள்ளதாக இருப்பதுபற்றி க்த்வா ச்ருதியானது உபநயனம், அத்யாபனத்துக்கு அங்கமென்பதில் ப்ரமாணமாக ஆவதற்குத் தகுதியுள்ளதாகா. மேலும், "ஸ்வரிதஞித: கர்த்ரபிப்ராயேக்ரியாபலே" (ஸ்வரிதத்தையும், அழிந்து போவதை ஸ்வபாவமாகக்கொண்ட, 'ஞ' காரத்தையும் இத்தாகக்கொண்ட தாதுக்களின் மீது க்ரியையினால் உணர்த்தப்பட்ட பலன் கர்த்தாவை அணுகியிருக்குமேயாகில் ஆத்மநேபதமென்று பெயருள்ள ப்ரத்யயங்கள் வரும்) என்கிற ஸூத்ரத்தினால் ஆத்மநேபதம் வருவதாக இருந்தபோதிலும், "ஸம்மானநோத்ஸஞ்ஜனாசார்யகரணஜ்ஞானப்ருதிவிகணநவ்யயேஷு நிய:" (மர்யாதை, மேலே தூக்குதல், ஆசார்யகஞ்செய்தல், ஞானம், கூலி கொடுத்தல், கடன்தீர்த்தல், செலவிடுதல், இந்த அர்த்தங்களில் 'நீ' என்கிற தாதுவின்மீது ஆத்மநேபதமென்று பெயருள்ள ப்ரத்யங்கள் வருகின்றன) என்கிற ஸூத்ரத்தால் மீண்டும் ஆத்மநேபதவிதானமானது பலம் கர்த்தாவை அடையாமலிருந்தபோதிலும்கூட இந்த ப்ரத்யயங்கள் வரத்தடை இல்லை—என்று கூறுவதால் உபநயனம் அத்யாபனத்துக்கு அங்கமாகா. அந்த ஸூத்ரத்திற்கு வ்ருத்தி எழுதினவர் பலம் கர்த்தாவை அணுகாமலிருந்தபோதிலும் ஆத்மநேபதப்ரத்யயங்கள் வருவதற்காக இந்த ஸூத்ரம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறதென்று பகர்ந்திருக்கிறார்.

கர்த்ரபிப்ராயத்வமாவது கர்த்தாவினிடத்திலேயே க்ரியாவாச்யபலம் நாடியிருக்க வேண்டுமென்பது. அந்த ஏவகாரப்பொருளை மறுப்பதற்காக மீண்டும ஸூத்ரவிதானம். பலம் இரண்டிடத்திலும் ஸம்பந்தமுள்ளது. ஆகையால், மாணவகன் வாயிலாக உபநயன

¶ க்த்வா—இது இறந்தகாலத்தைக்காட்டும் ஒரு ப்ரத்யயம். 'உப' என்கிற உபஸர்க்கத்தோடு கூடிய 'நீ'என்கிற தாதுவின்மீது 'க்த்வா' என்கிற ப்ரத்யயம் வந்து உப-நீ-த்வா. என்று ரூபம் முதலில் ஏற்பட்டு, பிறகு 'த்வா' ப்ரத்யயத்திற்கு 'ய' என்கிற ஆதேசம் வந்து 'உபநீய' என்கிற சப்தம் நிஷ்பன்னமாகிறது. உபநயனத்தைச்செய்துவிட்டு, பிறகு அத்யயனத்தை செய்விக்கவேண்டும் என்பதினால் அத்யாபனத்திற்கு ப்ராதான்யமும், உபநயனத்திற்கு அத்யாபனாங்கத்வமும் ஸித்தித்தது.

* ச்ருதி, லிங்கம், வாக்யம், ப்ரகரணம், ஸ்தானம் ஸமாக்யை, என ஆறு ப்ரமாணங்கள் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றன, இவைகளுக்குள் முந்தி முந்தியிருப்பதைவிட பிந்திபிந்தியிருப்பவைகள் துர்பலங்கள். ஏனெனில், விளம்பித்து அர்த்தோபஸ்திதியை உண்டு பண்ணுவதால்—என்பது பூர்வமீமாம்ஸகர்களின் கொள்கை.

பலம் ஆசாரியனிடத்தில் ஸம்பந்திக்கிறபடியால் அத்யாபனுங்கத்வம் தகுந்தது என்று சொல்வாயேயாகில்,—அது ஸரியல்ல. “அக்நீநாததீத” (அக்னிகளை ஆதானஞ் செய்ய வேண்டும்) என்கிற இடத்தில் ஆத்மநேபதமானது ‘கர்த்ரபிப்ராய’ஸூத்ரத்தால் விதிக்கப் பட்டிருந்தபோதிலும், பலம் இரண்டிடங்களிலும் அந்வயிப்பதால் நியமத்தை நிஷேதிப் பதற்காக இந்த ஸூத்ராரம்பம் என்பது பொருந்தாதாதலால் பலத்துக்கு கர்த்ரபிப்ராயத்வ மாத்ரம் நிஷேதிக்கப்படுகிறது என்று அர்த்தங்கொள்ளவேண்டும். அதனால் அத்யா பனுங்கத்வமில்லை ‘கர்த்ரபிப்ராய’ சப்தத்தினால் கர்த்தாவைத்தவிர்த்த மற்ற சேதனனி டத்தில் பலஸம்பந்தமின்மை விவக்ஷிக்கப்பட்டிருக்கிறது. அதனால் ‘அக்நீநாததீத’ என் கிற இடத்தில் தோஷமில்லை.

மீண்டும் ஸூத்ரத்தால் ப்ரத்யயவிதானத்துக்கு அதை மறுப்பதுதான் பலம் என்கிற தீர்மானத்தில் ஆசாரியனிடத்தில்கூட பலஸம்பந்தத்துக்கு உபபத்தி இருப்பதால் உப நயனத்திற்கு அத்யாபனுங்கத்வம் சொல்வதே பொருந்துமென்கிற ஆக்ஷேபம் சரியல்ல. “ருத்விஜோவ்ருணீதே” (ருத்விக்குகளை வரிக்கின்றான்) என்கிறவிடத்தில் ¶‘ஸ்வரித’ என் கிற பதத்தை முதலிலுடையதான ஸூத்ரத்தால் ஆத்மநேபதம் விதிக்கப்பட் டிருந்தாலும் கர்த்தாவைத்தவிர்த்து வேறு சேதனர்களிடத்திலும் பலஸம்பந் தம் காணப்படுவதால் மறுபடி ஸூத்ரவிதானத்திற்கு நியமநிஷேதார்த்தத்வம் சொல் வது பொருத்தமில்லாமல் போவதுபற்றி புநர்விதானம் கர்த்ரபிப்ராயமாத்ரத்தை நிஷே திக்கிறது—எனப்பொருள்படுத்தப்பட்டிருப்பதால் உபநயனம் அத்யாபனத்துக்கு அங்க மல்ல. க்ரியாபலமாவது க்ரியையை அடுத்து வரும் பலம். அதற்கு, கர்த்தாவிடத்தில் அந் வயமேற்படுவது கர்த்ரபிப்ராயத்வம். ஆகையால், ஆசார்யகமானது உபநயனக்ரியையை அடுத்து வருந்தன்மையுள்ளதாக இராமையாலும், அவ்யவஹிதமானபலத்துக்கு கர்த்ரு காமித்வமில்லாமையாலும், ஆத்மநேபதம் வராமல் போக, அவ்யவஹிதபலத்துக்கு கர்த்ர பிப்ராயத்வமில்லாமல் போனாலுங்கூட ஆத்மநேபதம் ‘ஸம்மாநந’ என்கிற ஸூத்ரத்தினால் விதிக்கப்படுகிறது. ஆகையால், பலம் கர்த்ரபிப்ராயமாக இராமலிருந்தபோதிலும், வ்ய வஹிதமான ஆசார்யகநிஷ்பத்தியை ப்ரயோஜனமாகக்கொண்டிருத்தலால் உபநயனத் துக்கு அத்யாபனுங்கத்வம், விருத்தமல்லவென்று கூறுவது சரியல்ல.

“அக்நீநாததீத” என்கிற இடத்தில் “ஸ்வரித” என்கிற ஸூத்ரத்தினால் ஆத்மநே பதம் விதிக்கப்பட்டிருந்தாலும் அக்நிஸம்ஸ்காரத்தால் வ்யவஹிதமான ஆஹிதாக்நித்வா-

¶ ‘ஸ்வரிதஞித: கர்த்ரபிப்ராயே க்ரியாபலே’ என்கிற ஸூத்ரத்திலிருக்கிற கர்த்ரபிப் ராயபதம் கர்த்தாவை நாடியிருக்கிறதென்கிற அர்த்தத்துடன் கூடியது. அதாவது க்ரியை யின் பலமானது கர்த்தாவை அடைவதாக இருக்குமேயாகில், உபயபதிதாதுக்களின் மீது ஆத்மநேபதப்ரத்யயங்கள்வரும். அந்த தாதுக்கள் ஸ்வரிதத்தையாவது, ஞாகரத்தையாவது இத்தாகக்கொண்டிருக்கவேண்டும்—என்று ஸூத்ரத்தின்பொருள். உதாஹரணம்—உப நயீத—அத்யயனம் செய்விப்பதற்காக பையனை விதியினால் தன்பக்கலே அடையச்செய்து கொள்ளவேண்டும் என்று அர்த்தம் ஏற்படும். அங்ஙனமாகில், உபநயனத்தாலுண்டாகிற பலமாகிய ஆசார்யகரணம், சிஷ்யசுச்ரூஷை முதலியவைகள் ஆசார்யனை அணுகுவதால் உபநயனம் அத்யாபனத்துக்கு அங்கமாய்விடும். அத்யயனுங்கமாகாது. ஆகையால், ‘உப நயீத’ என்கிற இடத்தில் இங்கு கூறப்பட்டுள்ள ஸூத்ரத்தால் ஆத்மநேபதப்ரத்யயத்தை சொல்லக்கூடாது. “ஸம்மாநந......” என்கிற ஸூத்ரத்தாலேயே ப்ரத்யயத்தை விதிக்க வேண்டும். அதற்கு அப்பொழுது ஆசார்யகரணமே அர்த்தம். உபநயனபூர்வகமான அத்யாயனத்தினாலன்றோ உபநேதாவினிடத்தில் ஆசார்யத்வம் ஸ்வீகரிக்கப்படுகிறது.

ஆபத்திரூபமான பலத்துக்கு கர்த்ருகாமித்வம் காணப்படுவதால். ஆதலால், அகர்த்ரபிப்ராயார்த்தமான 'ஸம்மகாநந' என்கிற ஸூத்ரமானது பலமாத்ரத்துக்கு கர்த்ருஸம்பந்தத்தைத்தடுப்பதற்காக.

ஸம்ஸ்காரத்துடன் கூடிய அக்நியானது பலமாதலால் ஆதானஞ்செய்பவனிடத்தில் வ்யவஹிதபலாந்வயமில்லை என்று கேட்கப்படுமேயாகில்,—அப்படியானால், உபநயனஸம்ஸ்காரத்துடன் கூடினமாணவகஸித்திமே அவ்யவஹிதமான பலமென்று கர்த்ரபிப்ராயஸூத்ரத்தினாலேயே ஆத்மநேபதம் ஸித்திப்பதால் அகர்த்ரபிப்ராயஸூத்ரம் பயனற்றதாக ஆகும். இவ்வாறாகில், வ்யவஹிதமோ, அவ்யவஹிதமோ பலம் மாத்ரம் அகர்த்ரபிப்ராய ஸூத்ரத்தால் நிவாரணஞ் செய்யப்படுகிறது—என்றாலோ, உபநயனகர்த்தாவுக்கு ப்ரவ்ருத்தியே உபபன்னமாகாது. ஏனெனில், "ப்ரயோஜனமநுத்திச்ய ந மந்தோபி ப்ரவர்த்ததே" (அறிவில் குறைவுடையவனாக யிருந்தாலும் ஒருவனும் பலனைக்கருதாமல் கார்யங்களில் ப்ரவர்த்திக்கமாட்டான்) எனில்—இப்படியல்ல, உபநயனபலம் மாணவகனைச்சார்ந்திருந்தபோதிலும் ஆசார்யனுக்கு தக்ஷிணை கொடுக்கவேண்டியதென்கிற வேறு விதியினால் ப்ராப்தமான தக்ஷிணாரூபபலத்தில் விருப்பத்தினால் ப்ரவ்ருத்திக்கு உபபத்தி வருவதால்.

இதனால் அகர்த்ரபிப்ராயஸூத்ரமானது அஸாதாரணமான பலஸம்பந்தத்தின் இன்மையை விஷயமாகக்கொண்டிருப்பதால், மற்றொன்றினால் இடையுற்றிராத க்ரியாபலத்திற்கு கர்த்ரபிமதத்வந்தான் கர்த்ரபிப்ராயத்வம். அந்த கர்த்தாவுக்கு அநபிமதமாக இருத்தல்தான் அகர்த்ரபிப்ராயத்வம் என்பதும் யுக்தமன்று,—க்ரியாபலத்துக்கு கர்த்ரநபிமதத்வம் விருத்தமாதலால், ஆசார்யநிஷ்பத்திக்கு உபயோகியான மாணவகஸம்ஸ்காரத்துக்கு ஆசார்யாநபிமதத்வம் பொருந்தாதாதலால். ஆகையால், உபநயனமானது அத்யயனஞ் செய்யப்போகிற மாணவகனுடைய ஸாமீப்யமுகத்தால் அத்யாபனாங்கமன்று. பின்னையோ வென்றால், அத்யயனாங்கமே. அத்யாபநவிதியானது அத்யயனத்தை ப்ரயோகிக்கிறதில்லை. 'அத்யாபயேத்' என்கிற விதியோவென்றால், 'த்வாதசாஹேந ப்ரஜாகாமம்' (ஸந்ததியில் விருப்பமுள்ளவனை பன்னிரண்டு நாள்களால் நிறைவேறத்தக்க த்வாதசாஹமென்கிற யாகவிசேஷத்தால் யாகம் செய்விக்கவேண்டும்.) இதுமுதலிய விதிபோல் என்று சொல்லப்பட்டிருக்கிறது. என்றாலும், 'ப்ரஜாகாமம், அந்நாத்யகாமம்' (ஸந்ததியில் அபிலாஷையுள்ளவன் அன்னம்முதலியவற்றில் ஆசையுள்ளவன்) என்பதுபோல, § ப்ரயோஜ்ய கர்த்ருவ்யாபாரமாக இருக்கிற அத்யயனத்திற்கு ‡ அதிகாரிவிசேஷணமான பலம் கேட்கப்படவில்லை. அப்படியிருந்தபோதிலும் 'ஸ்வாத்யாயஸித்தி' அதிகாரிவிசேஷணமாக ஆகலாம், $ ஸ்வாத்யாயோத்யேதவ்ய என்று ஸ்வாத்யாயத்திற்கு அத்யயனஸாத்யத்வம் அறியப்படுவதால். எவ்வாறு 'அக்நீநாததீத' என்கிற இடத்தில் அக்னிகள் ஆதானத்தால் ஸாத்யங்களென்று அறியப்படுவதால் அக்நிஸித்தியானது அதிகாரிவிசேஷணமோ அவ்வாறு.

---

§ ப்ரயோஜ்யன் - ஏவல் செய்கிறவன். ப்ரயோஜகன் - ஏவுகிறவன். ப்ரதானன்.

‡ அதிகாரிவிசேஷணம் - கார்யத்தில் ப்ரவ்ருத்திக்கிற ஒருவனுடைய ப்ரவ்ருத்திக்கு முக்யஸாதநமாகவும், ஏற்கனவே ஸித்தமாகவும் இருக்கிற ஒரு தர்மம்—'ஜ்யோதிஷ்டோமேந ஸ்வர்ககாமோ யஜேத' என்கிற இடத்தில் யாகம் செய்பவனான அதிகாரியிடமிருக்கும் ஸ்வர்ககாமனை அதிகாரிவிசேஷணம். அதிகாரிவிசேஷணம் என்பது முந்தியே ஸித்தமாதலால் விசேஷ்யமாகாது.

$ 'ஸ்வாத்யாயோ அத்யேதவ்ய:' என்கிற விதியினால ஸ்வாத்யாயசப்தவாச்யமான அத்யயநம் விதிக்கப்பட்டிருப்பதால் அத்யயநவிஷயத்தில் இது ஸ்வவிதி.

அத்யயனம் ஸ்வவிதிப்ரயுக்தமாகில் அனுஷ்டானஞ்செய்பவர்களே இல்லாமல்போகும் என்று சொல்லக்கூடாது. அறிவில் சிறந்த அத்யேதாக்கள் இருக்கிறார்களன்றோ! அவ்வண்ணம் பகவான் ஆபஸ்தம்பர் கூறியிருக்கிறார். "தஸ்மிந்நபிஜநவித்யாஸமுதேதம் ஸமாஹிதம் ஸம்ஸ்கர்த்தாரமீப்ஸேத்" (அந்த உபநயனவிஷயத்தில் நல்லவம்சம், வித்யை இவைகளோடு கூடியிருப்பவனும் வெளி இந்த்ரியங்களையும், மன இந்த்ரியத்தையும், ஒடுக்கினவனுமான ஒருஉத்தமஅந்தணனை ஸம்ஸ்கர்த்தாவாக அடைய விரும்பவேண்டும்). அவர்கள்விஷயத்தில் பரவிதிப்ரயுக்தத்வம் சொல்லப்பட்டால் அத்யயனம் உபபன்னமாகாது. அப்ரபுத்தவிஷயத்திலோவென்றால், ஸ்வதந்த்ரமான அத்யயனவிதிக்கு மாணவகன் விஷயம்—என்பதை அறிந்து ஹிதத்தை விரும்புகிறவர்கள் மாணவகனுக்கு அத்யயநம் முதலியவற்றைச்செய்விக்கின்றனர். ஆகையால், ப்ரபுத்தர்கள், அப்ரபுத்தர்கள்—விஷயத்திலும் அத்யயநத்திற்கு ஸ்வவிதிப்ரயுக்தத்வம் யுக்தம். பரவிதிப்ரயுக்தத்வம் சொன்னால் நித்யமான அத்யயனத்திற்கு காம்யவிதிப்ரயுக்தத்வம் ஏற்படும். அதனால் அனுஷ்டானநியமம் உண்டாகாது,—ஆசார்யகத்தில் விருப்பமுள்ளவனன்றோ அத்யாபகன்; அவனுக்கு ஆசார்யகத்தில் விருப்பமில்லாவிட்டால் அத்யயனம் ஸித்தியாமல் போவதால். அத்யாபகர்கள் ஏராளமாகயிருப்பதால் அத்யயனம் ஸித்திக்கிறது எனில்—அல்ல, அத்யாபகர்களைவிட அத்யயனஞ்செய்பவர்களே அதிகமாயிருப்பதாகக்காணப்படுவதால். ஆதானமானது மேலேயுள்ள க்ரதுவிதிப்ரயுக்தமாக இருந்த போதிலுங்கூட காம்யவிதிமாத்ரப்ரயுக்தமல்ல, 'வஸந்தே வஸந்தே ஜ்யோதிஷா யஜேத—யாவஜ்ஜீவமக்நிஹோத்ரம் ஜுஹோதி' (ஒவ்வொரு வஸந்தகாலத்திலும் ஜோதிஷ்டோமத்தினால் தேவதாராதனம் செய்யவேண்டும். உயிருள்ளவரையில் அக்நிஹோத்ரம் செய்யவேண்டும்) என்கிற நித்யவிதி இருப்பதினால். இது முதலானது இங்கே அனுஸந்திக்கத்தக்கது. ஆகையால், எவ்வாறு அர்த்தம் உரைக்கப்பட்டதோ அதுதான் பொருத்தமுள்ளது.

𑌭𑌾𑌷𑍍𑌯𑌮𑍍:—

𑌏𑌵𑌂 𑌸𑌤𑍍𑌸𑌨𑍍𑌤𑌾𑌨𑌪𑍍𑌰𑌸𑍂𑌤 𑌸𑌦𑌾𑌚𑌾𑌰𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌤𑍍𑌮𑌗𑍁𑌣𑍋𑌪𑍇𑌤𑌵𑍇𑌦𑌵𑌿𑌦𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑍋𑌪𑌨𑍀𑌤𑌸𑍍𑌯 𑌵𑍍𑌰𑌤𑌨𑌿𑌯𑌮𑌵𑌿𑌶𑍇𑌷𑌯𑍁𑌕𑍍𑌤𑌸𑍍𑌯 𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑍋𑌚𑍍𑌚𑌾𑌰𑌣𑌾𑌨𑍂𑌚𑍍𑌚𑌾𑌰𑌣𑌂 𑌅𑌕𑍍𑌷𑌰𑌰𑌾𑌶𑌿𑌗𑍍𑌰𑌹𑌣𑌮𑌧𑍍𑌯𑌯𑌨𑌮𑌿𑌤𑍍𑌯𑌵𑌗𑌮𑍍𑌯𑌤𑍇 । 𑌅𑌧𑍍𑌯𑌯𑌨𑌞𑍍𑌚 𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌃; '𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑍋𑌽𑌧𑍍𑌯𑍇𑌤𑌵𑍍𑌯𑌃' 𑌇𑌤𑌿 𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌸𑍍𑌯 𑌕𑌰𑍍𑌮𑌤𑍍𑌵𑌾𑌵𑌗𑌮𑌾𑌤𑍍 । 𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑍋 𑌹𑌿 𑌨𑌾𑌮 𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑌰𑌯𑍋𑌗𑍍𑌯𑌤𑌾𑌕𑌰𑌣𑌂 𑌧𑌰𑍍𑌮𑌾𑌰𑍍𑌥𑌕𑌾𑌮𑌮𑍋𑌕𑍍𑌷𑌰𑍂𑌪𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌰𑍍𑌥𑌚𑌤𑍁𑌷𑍍𑌟𑌯𑌤𑌤𑍍𑌸𑌾𑌧𑌨𑌾𑌵𑌬𑍋𑌧𑌿𑌤𑍍𑌵𑌾𑌜𑍍𑌜𑌪𑌾𑌦𑌿𑌨𑌾 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑍇𑌣𑌾𑌪𑌿 𑌤𑌤𑍍𑌸𑌾𑌧𑌨𑌤𑍍𑌵𑌾𑌚𑍍𑌚

இவ்வண்ணமாக நற்குலத்திலுதித்தவனும், நல்லொழுக்கத்தில்நிலைபெற்றவனும், ஆத்மகுணங்களுள்ளவனும், வேதார்த்தங்களை அறிந்திருப்பவனுமான ஆசார்யனால் உபநயனம் பண்ணப்பட்டு, வ்ரதநியமவிசேஷங்களோடும் கூடின மாணவகனுக்கு ஆசார்யோச்சாரணாநூச்சாரணரூபமான அத்யயனமானது அக்ஷரராசிக்ரஹணத்தை பலமாகக்கொண்டதென்று அறியப்படுகிறது.

அத்யயநமும் ஸ்வாத்யாயமென்று சொல்லப்படுகிற (வேதத்திற்கு) ஸம்ஸ்காரம்; ஸ்வாத்யாயம் அத்யயனம் செய்யத்தக்கதென்கிற (விதியினால்) ஸ்வாத்யாயத்திற்கு கர்மத்வம் அறியப்படுகிறது. ஸம்ஸ்காரமோவென்றால் கார்யவிசேஷத்தில் யோக்யதையை உண்டுபண்ணுதல். ஸ்வாத்யாயத்திற்கு ஸம்ஸ்கரிக்கப்படத்தக்க தன்மை பொருந்தமுள்ளது,— தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்கிற நான்கு புருஷார்த்தங்களையும் அவைகளின் ஸாதனங்களை யும்அறிவிப்பதினாலும் ஜபம் முதலியதால் ஸ்வரூபத்தாலும அவை களுக்கு ஸாதனமாக இருப்பதாலும்.

ச்ருதப்ராகாசிகை :—

*அங்கவிதியுடன் கூடின ப்ரதானவிதியினால் அங்கஸ்வரூபமும், அங்கிஸ்வரூபமும் எவ்வாறு அறியப்பட்டதாக ஆயிற்றென்றால், ‘எவம்’ எனத்தொடங்கிச்சொல்லுகிறார். இவ்வண்ணம் அங்கவிதிகளோடுகூட ப்ரதானவிதியானது நிரூபிக்கப்பட்டதாலென்று அர்த்தம். ‘ஸத்ஸந்தாந’ என்பதால் ‘அந்த உபநயநவிஷயத்தில் நல்ல ‘வம்சம், வித்யை’ என்கிற ஆபஸ்தம்பருடைய வசனத்தின் அர்த்தமானது அநுஸந்திக்கப்பட்டது. ஆத்ம குணங்கள்,—க்ரோதமின்மை முதலியவைகள். இதனால் ‘ஸமாஹித’ சப்தத்தினுடைய அர்த்தம் கூறப்பட்டது. ‘வேதவித்’ என்கிற சப்தத்தால் ‘வித்யாஸமுபேத’ என்கிற சப்தத்தினுடைய அர்த்தம் சொல்லப்பட்டது. ‘வேதவிதாசார்யோபநீதஸ்ய’ ஆசார்ய விசேஷணமானது உபநயனத்தின் வாயிலாக மாணவகனுக்காகச்சொல்லப்பட்டிருக்கிறது. உபநயனம் அத்யாபனாங்கமாக ஆகும்பொழுது * மாணவகவிசேஷணம் எவ்வாறு ஆசார் யார்த்தமாக ஆகிறதோ, அவ்வாறு—என்று கருத்து. ‘வ்ரதநியமவிசேஷயுக்தஸ்ய’ வ்ரதநியமவிசேஷம் போல் † ஆசார்யவிசேஷணமும் மாணவகார்த்தமென்று கருத்து. ‘உச்சரிக்கப்பட்ட ஆசார்யனுடைய சொற்களை’ அநுஸரித்து சிஷ்யன் அச்சொற்களை உச் சரிக்கவேண்டும்’ என்றதனால் பாதந்த்ரோச்சாரணரூபத்வம் காட்டப்பட்டது. ‘அக்ஷர ராசிக்ரஹணபலம்’ என்கிற பதமானது அடிக்கடி ஆவ்ருத்தி செய்யத்தக்கதென்கிற அர்த்தத்திற்கும் ஆக்ஷேபகமென்பதைக்காட்டுகிறார். எப்படி ‘வ்ரீஹீநவஹந்தி’ (நெல்லுகளைக்குத்துகிறான்) என்கிறவிடத்தில் த்ருஷ்டபலத்தில் லேசங்கூட விடத் தகாதது பற்றி குத்துதலானது உமி போகிற வரையில்—என்பது சொல்லப்படாம லிருந்தபோதிலும், ஆவ்ருத்திவிதத்தமாக இருக்கிறதோ, அப்படியே இவ்விடத்திலும் ஸாமர்த்யத்தினால் ஆவ்ருத்தி விதிக்கிறது—த்ருஷ்டப்ரயோஜநத்தை விடாமலே நியமம் விதிக்கத்தக்கதாக இருப்பதால் “ஆசார்யோச்சாரணாநூச்சாரணம்” என்ற தனாலும், ‘வேதவிதாசார்யோபநீதஸ்ய’ என்றதனாலும் அத்யயனம் அத்யாபயிதாவை எதிர்பார்த்திருப்பதனால் அதற்கு பாதந்த்ரோச்சாரணரூபத்வமும், ஸ்வவிதிப்ரயுக்தத்வ மும், உபநயனாங்கத்வமும் உரைக்கப்பட்டது. ‘ஆசார்யோச்சாரணாநூச்சாரணம் அக்ஷர ராசிக்ரஹணபலம்’ என்கிற பதங்களால் அத்யயனம் எந்த ஸ்வரூபமுள்ளது என்கிற*

---

* மாணவகவிசேஷணம்—வ்ரதநியமானுஷ்டானம் முதலியது.

† ஆசார்யவிசேஷணம்—ஸத்ஸந்தாநப்ரஸூதி, ஸதாசாரநிஷ்டை, ஆத்மகுண பூர்த்தி முதலியது.

ஆகாங்க்ஷை தணிக்கப்பட்டது. 'வேதவிதாசார்யோபநீதஸ்ய' 'வ்ரதநியமவிசேஷ யுக்தஸ்ய' என்கிற பதங்களால் எவ்வாறு செய்யத்தக்கது என்கிற அபேக்ஷை பூர்த்திசெய் யப்பட்டது. 'அக்ஷராசிக்ரஹணபலம்' என்றதனால் ஸ்வாத்யாயத்தை க்ரஹிப்பதில் விருப்பத்தோடு கூடியிருத்தல் அத்யயனாதிகாரிவிசேஷணமென்றும் ஸூசிப்பிக்கப் பட்டது.

'ஸக்தூந் ஜுஹோதி' (மாவுகளை ஹோமஞ் செய்கிறான்)என்கிற இடத்தில் புருஷன் ஸக்துஹோமத்தாலுண்டான அத்ருஷ்டத்தை அடையத்தக்கவனாக இருப்பதால், ஸக்துஹோமம் எவ்வாறு புருஷஸம்ஸ்காரமோ, அவ்வாறே அத்யயனம் புருஷ னுக்கு ஸம்ஸ்காரமாகில், இதற்கு அக்ஷராசிக்ரஹணபலத்வம் ஸித்தியாது. அபூர்வ ஸித்தியை பலமாகக்கொண்டிருப்பதால் ஸ்வாத்யாயஸித்தியானது பலமாகாது. அதனால், அக்ஷராசிக்ரஹணம் பலமில்லாமல் போவதால் ஆவ்ருத்தி ஏற்படாததுபற்றி அத்யயன மானது ஒரு தடவை உச்சாரணரூபமாகவே ஆய்விடுமென்று ஸந்தேகித்து 'அத்ய யனஞ்ச' என்று கூறுகிறார். உபநயனாங்கத்வம் போலவும், ஸவிதிப்ரயுக்தத்வம் போலவும், இதுவும் உபபாதிக்கத்தக்கதென்று பொருள். "ஸ்வாத்யாயஸம்ஸ்கார:" ஸக்துஹோ மம் அபூர்வத்தை விஷயமாகக்கொண்டிருப்பதால் எவ்வாறு புருஷஸம்ஸ்காரமோ அவ்வாறாக இது புருஷஸம்ஸ்காரமல்லவென்று பொருள். ஏனெனில், "ஸ்வாத்யாய" என்று சொல்லுகிறார். தவ்யப்ரத்யயத்தால் கர்மத்வம் அறியப்படுகிறது. ஸ்வாத்யாயத்துக்கு கர்மத்வமே தவிர்த்து, புருஷனுக்கு கர்மத்வமில்லை. கர்த்தாவினுடைய க்ரியையினால் அடைவதற்கு இஷ்டதமமாக இருப்பதல்லவோ கர்மா ஆதலால், அத்யயனம்ஸ்வாத்யா யத்திற்கு ஸம்ஸ்காரம், புருஷனுக்கு இல்லையென்று பொருள்.

க்ரியையினால் நிஷ்பாத்யமான வஸ்து முதலிவற்றுக்கும் பொதுவான கர்மத்வமானது எவ்வாறு ஸம்ஸ்கார்யத்வத்தில் ஹேதுவாகக்கூறப்படுகிறது—என்று கேள்விவர, அதற் காக, நிர்வர்த்யத்வவிகார்யத்வாநுபபத்தியை எண்ணி 'ஸ்வாத்யாயஸ்ய' என்று மறுபடி யும் சொன்னது. வஸ்துஸாமர்த்யத்துடன் கூடிய கர்மத்வஜ்ஞானம் ஸம்ஸ்கார்யத் வத்தில் ஹேதுவென்று கருத்து. வேறு பலம் ஸம்பவிக்கிறதாக இருக்க, ப்ராப்யத்வமாத் ரத்தில் பர்யவஸாநமும் தகாதது.

கர்மத்வமாத்ரம் அறியப்படுவதினால் ஸம்ஸ்கார்யத்வமேற்படுமாகில் "ஸக்தூந் ஜு ஹோதி, ஸுவர்ணம் பார்யம்" என்கிற இடங்களில் ஸக்து, ஸ்வர்ணம் இவ்விரண்டுக் கும் ஸம்ஸ்காரயத்வமில்லையே—என்று, சங்கைவர, ஸம்ஸ்காரஸ்வரூபத்தை சோதிக்கிறார். 'ஸம்ஸ்காரோ நாமஹி' என்று. 'ஹி, நாம' இந்த இரண்டு பதங்களாலும் ப்ரஸித்தியும், ப்ரதி யோகியின் அங்கீகாரமும் ஸூசிப்பிக்கப்படுகிறது. அல்லது, அபிச என்கிற அவ்யயம்போல, அநேகாவ்யயங்களுக்கு துல்யரூபமுள்ள ஒரு சப்தமாகவும் கொள்ளலாம். என்றாலும், இருக் கிற ஸ்வபாவத்துக்கு மேன்மை உண்டுபண்ணுதல் ஸம்ஸ்காரமென்று சென்றகாலத் துக்கும், வருங்காலத்துக்கும் உபயோகியான, ஸம்ஸ்காராநுரூபமான அநுகதலக்ஷணம்; ஆயி னும், ஸ்வாத்யாயத்திற்கு பூதகாலோபயோகம் ஸம்பவியாமையால் வருங்காலத்துக்கு உபயோகப்படக்கூடிய ஸம்ஸ்காரலக்ஷணம் இங்கு கூறப்பட்டது. ஸம்ஸ்காரலக்ஷணம் உப பன்னமாகாமையால், 'ஸக்தூந் ஜுஹோதி' இது முதலிய இடங்களில் ப்ரத்யயஸ்வாரஸ்யத் தாலறியப்பட்ட கர்மத்வம் பக்னம்—என்று கருத்து. இந்த இடத்திலோவென்றால், அவ் வாறு அநுபபன்னமாகாது என்று 'ஸம்ஸ்காரியத்வம்ச' எனச்சொல்லுகிறார். சகாரம் சங் கையின்நிவர்த்தியைக்காட்டுகிறது. எந்தக்காரணத்தாலென்றால், சொல்லுகிறார் 'தர்மார்த்த'

என்று. 'புருஷார்த்ததத்ஸாதந' என்பதினால் முன்சொல்லப்பட்டுள்ள வ்யாக்யேயத்தின் ஐக்யத்திற்காக ப்ரயோஜனத்துடன் கூடிய அர்த்தத்தைத்தெரிவித்தல் என்பது அநுகதமென்று காட்டப்பட்டதாக ஆகிறது—அல்லது, புருஷார்த்தபரத்வம் அநுகதமானது. தர்மம் முதலியவற்றிலோ புருஷார்த்தத்வம் அநுகதமாயுள்ளது; இஷ்டம், அதன் ஸாதனம்—இரண்டும் புருஷார்த்தமாதலால். அர்த்தகாமங்களிலும், அவைகளின் உபாயங்களிலும் சிலது லோகஸித்தங்கள்; ஆயினும், குபேரன், இந்த்ரன் முதலானவர்களுடைய ஐஸ்வர்யரூபமும், மிக்க மேன்மை வாய்ந்திருக்கிற அர்த்தகாமங்களும், அவைகளின் ஸாதநங்களும், லோகஸித்தமான பசுபுத்ராந்நாதிகள் ‡ சித்ரை—முதலியதால் ஸாத்யங்கள் என்பதும் லௌகிகப்ரமாணகோசரமாதலால், நான்கு புருஷார்த்தங்களும் வேதவேத்யங்களென்று சொன்னது பொருத்தமுள்ளதே. 'அவபோதிதவத்தால்' அனுஷ்டானத்திற்கு உபயோகமான ஜ்ஞானத்தை உண்டு பண்ணுவதாலென்று கருதது. அர்த்தத்தை அறிவிக்குந்தன்மையானது 'ஹ்ரூம்' முதலிய மந்த்ரசாஸ்திரத்திலுள்ள பீஜாக்ஷரங்களுக்கு இல்லாமையால் அவ்யாப்திதோஷம் வர, அதை 'ஜபாதிஷு' என்பதால் பரிஹரிக்கிறார். 'ஸ்வரூபேணாபி' அர்த்தஜ்ஞானம், அநுஷ்டானம் இரண்டும் இல்லாவிடினும் ஜபிக்கப்படுகிற அக்ஷரமாத்ரத்தினாலேகூட என்று பொருள். ஆதிசப்தத்தினால் அத்யாபனம் க்ரஹிக்கத்தக்கது. அனுஷ்டானத்திற்கு அநுகுணமான ஜ்ஞானமும், ஜபம் முதலியதும் அத்யயனத்தினால் ஸம்ஸ்கரிக்கப்பட்ட ஸ்வாத்யாயத்தினாலேயே என்று சொல்லப்பட்டதாக ஆகிறது. அன்றிக்கே, புருஷார்த்தங்கள், அவைகளின் ஸாதனங்கள்—இவைகளைத்தெரிவித்தலோடு அவைகளுக்கு ஸாதநத்வமென்கிற அர்த்தமும் சப்தத்தால் சேர்த்துக்கொள்ளப்படுகிறது. அவைகளுக்கு ஸாதனமாக இருத்தலும் இரண்டு ப்ரகாரமாக. அதாவது,—ஜபம் முதலியவற்றாலும், மறக்காமல் உள்ளத்தில் தரிக்கப்படுகிற ஸ்வரூபத்தாலுமென்று. ஆகையால், மத்தியில் ஸமுச்சயம்செய்துகொள்ளத்தக்க அர்த்தத்தை ஸமுச்சயிப்பதில் கருத்துள்ளது 'அபி' சப்தம்.

இவ்வண்ணமாக நியமவிதிதவமும் உபபாதிக்கப்பட்டதாக ஆகிறது.

பாஷ்யம் :—

ஏவமத்⁴யயநவிதி⁴ர்மந்த்ரவத் நியமவத³க்ஷரராஶிக்³ரஹணமாத்ரே பர்யவஸ்யதி। அத்⁴யயநக்³ருஹீதஸ்ய ஸ்வாத்⁴யாயஸ்ய ஸ்வபா⁴வத ஏவ ப்ரயோஜநவத³ர்தா²வபோ³தி⁴த்வத³ர்ஶநாத் க்³ருஹீதாத் ஸ்வாத்⁴யாயாத³வக³ம்யமாநாந் ப்ரயோஜநவதோ(அ)ர்தா²நாபாததோ த்³ருஷ்ட்வா தத்ஸ்வரூபப்ரகாரவிஶேஷநிர்ணயப²லவேதவாக்யவிசாரரூபமீமாம்ஸாஶ்ரவணே [illegible] ஸ்வயமேவ ப்ரவர்ததே.

இவ்வண்ணமாக அத்யயனவிதியானது * மந்த்ரம் போல நியமத்தோடு கூடின அக்ஷரராசிக்ரஹணமாத்ரத்தில் பர்ய

---

‡ சித்ரா—ஓர் காம்யயாகம்.

* மந்த்ரம் போல—அத்யயனோபகாரகமான சந்நோமித்ர: இது முதலிய மந்த்ரம் போல.

ஸானமடைகிறது. அத்யயனத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்ட வேதத்துக்கு ஸ்வபாவத்தினாலேயே ப்ரயோஜனங்களுள்ள அர்த்தங்களைத்தெரிவிக்கிற தன்மை காணப்படுவதால், க்ரஹிக்கப்பட்ட வேதத்தால் அறியப்படுகிற ப்ரயோஜநங்களுள்ள அர்த்தங்களை மேலெழக்கண்டு அவைகளின் ஸ்வரூபஸ்வபாவவிசேஷநிர்ணயங்களை பலமாகக்கொண்ட வேதவாக்யவிசாரரூபமான மீமாம்ஸையைக்கேட்டுணர்வதில், வேதாத்யயனஞ்செய்த புருஷன் தானாகவே ப்ரவ்ருத்திக்கிறான்.

ச்ருதப்ரகாசிகை: —

அர்த்தஜ்ஞானபர்யந்தத்வம் சப்தஸ்வாரஸ்யத்தால் ஏற்றுக்கொள்ளப்படுகிறதா? அல்லது, அர்த்தம் பொருந்தாமல் போவதினாலா?—என்று விகல்பத்தை அபிப்ராயப்பட்டு அவற்றுள் சப்தஸ்வாரஸ்யத்தைப்பற்றி பதில் சொல்லப்போகிறவராக அத்யயனவிதி நிரூபணத்தை உபஸம்ஹரிக்கிறார். 'ஏவம்' என்று 'மந்த்ரவத்' என்று தனித்து நிர்தேசமானது, வ்ரதத்துக்கு உள்பட்டோ, உள்படாமலோ அத்யயனத்துக்கு உபகாரமான மந்த்ரமென்கிற அபிப்ராயமுள்ளது. 'சந்நோமித்ர:' இது முதலான மந்த்ரங்களுக்கு வ்ரதாநுப்ரவேசமில்லாமல் கூட ஜபமாத்ரத்தா உபகாரத்வமிருக்கிறதன்றோ! நியமங்கள் முன் சொல்லலப்பட்டவைகள். அன்றிக்கே, எவ்வாறு சிறுவனுக்கு உபநாயன காலத்திலும், ஸந்த்யோபாஸனம் முதலிய கர்மாக்களை அனுஷ்டிக்கும் காலத்திலும் விதிக்கப்படுகிற உச்சாரணமானது நியமத்துடன் கூடின அக்ஷரபடநமாத்ரமே ஒழிய அர்த்தஜ்ஞானஸம்பாதனமில்லையோ அதுபோல; பாலகர்களுக்கு முதலில் மந்த்ரார்த்தங்களை அறிவது ஸம்பவிக்காதன்றோ!

அக்ஷரராசிக்ரஹணம்—நியமனத்துடன் கூடின வேதாக்ஷரங்களின் உச்சாரணமே அத்யயனசப்தத்திற்கு முக்யமான அர்த்தம்,—"வேதாநாம் கிஞ்சிததீத்ய ப்ராஹ்மண: ஏகாம் சாகாமதீத்ய ச்ரோத்ரிய: அங்காத்யாயீ அநூசாந: கல்பாதயாயீ ரிஷி: கல்பஸூத்ரப்ரவசனாத்யாயீ ப்ரூண:" (வேதங்களில் அல்பபாகத்தை அத்யயனம் செய்தவன் 'ப்ராஹ்மணன்', ஒருசாகையை அத்யயனம் செய்தவன் 'ச்ரோத்ரியன்', அங்கங்களை அத்யயனம் செய்தவன் 'அநூசானன்', கல்பத்தை அத்யயனம் செய்தவன் 'ரிஷி', கல்பஸூத்ரப்ரவசனங்களை அத்யயனம் செய்தவன் 'ப்ரூணன்', என்று,) இதுமுதலான ப்ரயோகமிருப்பதால். தன்னுடைய சாகையின் ஒருபாகத்தை அத்யயனம் செய்தவனுக்கு அர்த்தஜ்ஞானம் ஸம்பவிக்காதன்றோ; அங்காத்யயனத்தைத்தனித்து எடுத்திருப்பதால், அது இல்லாவிட்டால் அர்த்தஜ்ஞானத்திற்கு ப்ரஸங்கமில்லாமையால். ஸ்வாத்யாயசப்தமும் அர்த்தஜ்ஞானத்தை உணர்த்தாது. தன் சாகையை மட்டும் சொல்லுகிறதாதலால் அத்யயனகர்மத்வம் ஸ்வாத்யாயத்திற்கே தகுந்தது; அர்த்தஜ்ஞானத்துப்பொருந்தாது,—அத்யயனத்துக்கு ப்ரயோஜனாகாங்க்ஷை உண்டாகுங்கால், த்ருஷ்டப்ரயோஜனம் ஸம்பவிப்பதாக இருக்க, அத்ருஷ்டப்ரயோஜனகல்பனம் தகாததலால். அக்ஷரக்ரஹணமே அதில் தோற்றுவதாலும், "ஹ்ராம்" முதலியவற்றில் அநுகதமாயிருப்பதாலும், அதை ஸ்வீகரிப்பதே யுக்தமாம். விலகியிருப்பதாலும், எல்லாவிடத்திலும் இல்லாமையாலும் அர்த்தஜ்ஞானபர்யந்தத்வம் கூடாதென்று அபிப்ராயம். ஒருதடவை உச்சரிப்பதை அளவாகக்கொண்டிருக்

கும் தன்மையை வ்யாவ்ருத்திப்பதற்காக அக்ஷரக்ரஹணத்தில் ப்ரயவஸானம கூறப்பட்டது.

"மாத்ரச்' ப்ரத்யததால் விதிவ்யாபாரத்திற்கு ஆர்த்தஜ்ஞானபர்யந்தத்வத்தை விலக்கினபடி. "பர்யவஸ்தி" எப்படி 'அக்நீநாததீத' என்கிற வாக்யம் ஆதானமாத்ரபரமோ மேலேயுள்ள க்ரதுவிநியோகபர்யந்தமாகாதோ, எவ்வாறு, "காரீர்யா வ்ருஷ்டிகாமோ யஜேத" (மழைவேணுமென்கிற எண்ணமுள்ளவன் காரீரியாகத்தால் தேவதைகளை த்ருப்தி செய்விக்க வேண்டும்.) என்கிற வாக்யம் வ்ருஷ்டிஸித்திபர்யந்த கர்மவிசேஷபரமோ, வ்ருஷ்டிக்கு மேல்பட்டுள்ள பலஸித்தியின் உபயோகத்தை ப்ரதானமாகக்கொள்ளாதோ, அவ்வாருக என்று கருத்து.

இவ்வண்ணமாக சப்தஸ்வாரஸ்யத்தினுல் அர்த்தஜ்ஞானபாயந்தத்வம் நிரூபிக்கப்பட்டது. பிறகு அர்த்தாநுபபத்தியைப்பரிஹரிக்கிருர். அநுபபத்திசங்கை மூன்று விதமாக உள்ளது. அந்த சங்கையின் விதங்களாவன:—

க விதியானது அக்ஷரக்ரஹணமாத்ரபரமாயிருக்கும் பக்ஷத்தில் க்ரஹணத்துக்கு சேஷமாக விநியோகிக்கப்பட்டிருக்கிற ஸ்வாத்யாயத்திற்கு ஆர்த்தபரத்வத்தில் ப்ரமாணமில்லாமையால் அவிவக்ஷிதார்த்தத்வம் ஏற்படும்;

உ. மீமாம்ஸைக்கு ப்ரவர்த்தகமில்லாமையால் அநாரம்பணீயத்வம் ஏற்படும்;

ந. அக்ஷரங்களை மாத்ரம் க்ரஹிப்பதென்பது துக்கரூபமாதலால் விதிக்கு ப்ரயோஜனபர்யவஸானம இல்லாமல் போகவேண்டியதாக வரும்—என்று.

இந்த மூன்று சங்கைகளின் நிராகரணத்தை முன்னிட்டு அத்யயனவிதிக்கு அர்த்தஜ்ஞானபர்யந்தத்வத்தையும், அதை நிமித்தமாகக்கொண்ட ப்ரஹ்மவிசாராரம்பசங்கையையும் நிராகரித்துக்கொண்டு வேதமென்கிற ஒரு ப்ரபந்தத்துக்கு வ்யாக்யானரூபமாக இருப்பதால் காமப்ரஹ்மவிசாரங்களிரண்டுக்கும ஐகசாஸ்த்ர்யத்தையும் காண்பிக்கிருர்—'அத்யயநக்ருஹீதஸ்ய' என்பதால்.

இந்த இடத்தில் அங்கங்களுடன் கூடின அத்யயனம் விவக்ஷிக்கப்பட்டிருக்கிறது, 'அதீதஸாங்கவேதாத்யயநாத்' என்றும் 'கநு ச ஸாங்கவேதாத்யயநாத்' என்றுமிருக்கிற முன்பின் க்ரந்தங்களுடைய ஒற்றுமையினுல். அதனுலன்றே ப்ரயோஜனமுள்ள அர்த்தத்திற்கு ஆபாதப்ரதீதி ஸித்திக்கிறது. அர்த்தங்கள்—யஜ்ஞம், உபாஸனம், முதலியவை. அவைகள் ஸ்வர்க்கம், மோக்ஷம முதலியவைகளை ப்ரயோஜனமாயுள்ளவை. ப்ரயோஜனமுள்ள அர்த்தமென்கிற சப்தத்தால், காகதையின் பற்களைப்போல, பரீக்ஷை செய்யத்தகாதவைகள் என்கிற சங்கையானது நிராகரிக்கப்பட்டது.

"ப்ரயோஜநவதர்த்தாவபோதித்வதர்சநாத்" இதனுல் விதிக்கு பரம்பரையாக புருஷார்த்தத்தில் பாயவஸானம் சொல்லப்பட்டதாக ஆகிறது. அத்யயனத்திற்கு நேரான ப்ரயோஜனம அக்ஷராசிக்ரஹணம் என்று சொல்லப்பட்டது, 'அத்யயனக்ருஹீதஸ்ய' என்கிற பதத்தால் இது பொருள்—விதிககு நேராக புருஷாரத்தபாயவஸானம விவக்ஷிககப்பட்டதா? அலலது, பரம்பரையாகவா? ஆர்த்த ஜ்ஞானபாயந்தத்வம் சொனனபோதிலுங்கூட, விதிக்கு நேராக ப்ரயோஜனபர்யவஸானம் பொருந்தாது,—அநுஷ்டானத்தையும், அபூர்வத்தையும், இடையிட்டு ஸ்வாகமே ப்ரயோஜனமாக இருப்பதாலும், அத்யயனவிதிக்கு ஸ்வர்க்கபாயந்தத்வம் ஒப்புகொள்ளப்படாமையாலும். பரம்பரையினுல் புருஷார்த்தபர்யவஸானம என்று சொன்னுலோ அது எங்கள் பக்ஷத்திலுமஸம்பவிக்கிறது—என்று.

'ஸ்வபாவாத்' சப்தத்திற்கு அர்த்தத்தை அறிவிக்கிற சக்தி ஸ்வபாவத்தாலென்று பொருள். வ்யுத்பன்னபதபதார்த்தங்களைக்குறித்து சப்தத்துக்கு அர்த்தத்தை உணர்த்தும் தன்மையானது ஸ்வபாவஸித்தமென்பது உலகத்தில் ப்ரஸித்தம். ஏவகாரமானது விதியின் அபேக்ஷை வேண்டாமையைக்காட்டுகிறது. வேறு அர்த்தத்தில் ப்ரயோகிப்பது சப்தத்துக்கு ஸ்வபாவஸித்தமான அர்த்தபரத்வத்தை விலக்காது, ஜபவிதிபோல. பிறருக்கு யாகம் செய்வித்தாலும், அல்லது, ப்ரதிக்ரஹம் செய்தாலும் அந்த பாபநிவ்ருத்தியின் பொருட்டு உபவாஸமிருந்து மூன்று தடவை தன்வேதத்தை அத்யயனம் செய்யவேண்டும்; அல்லது, மூன்று நாள் காயத்ரீஜபம் செய்யவேண்டும்; வேதத்தையே நித்யம் ஜபிக்கவேண்டும்—இது முதலான விதியானது வேதத்தினுடைய அர்த்தபரத்வத்தைத் தடைசெய்யாது.

அத்யயனம் செய்யப்பட்ட வேதம் தானாகவே அர்த்தத்தை உணர்த்துமேயானால் மீமாம்ஸையால் யாதுபயன் எனில், கூறுகிறார் 'க்ருஹீதாத்' என்று. 'க்ருஹீதாத்' க்ரஹிக்கப்பட்ட மாத்ரத்தினாலே; அத்யயனத்தினால் க்ரஹிக்கப்பட்டிருக்கிற என்று சொல்லியிருப்பதால். அதனால், மீமாம்ஸை என்கிற இதிகர்த்வ்யதையின் இன்மை விவக்ஷிக்கப்பட்டது. ஆபாதப்ரதீதியானது ஸம்சயவிபர்யங்களைப்பொதிந்து கொண்டிருக்குமாதலால் அவைகளைப்பரிஹரிப்பதற்காக மீமாம்ஸை என்று கருத்து. 'அத்யயநக்ருஹீதஸ்ய' இது முதலியதினால் வேதத்திற்கு போதகத்வஸ்வபாவம் சொல்லப்பட்டது. அங்கு ப்ரயோஜனவதர்த்த சப்தமானது பரம்பரையாக புருஷார்த்தத்தில் பர்யவஸானத்தைத்தெரிவிப்பதற்காக. மேலே அதற்குக்காரணமான ஆபாதப்ரதீதியை உண்டுபண்ணுதலென்கிற தன்மையானது ஸஹகாரிகளின் இன்மையால் உண்டாவதுபற்றி பௌநருக்த்யதோஷமில்லை.

வேதத்துக்கு ஆபாதப்ரதீதியை உண்டுபண்ணுவது ஸ்வபாவமாக மாட்டாதே, ப்ரமையை உண்டுபண்ணுவதே ஸ்வபாவமாதலால். மீமாம்ஸையாகிற பரிகாமில்லாதபோது அந்த வேதம் ப்ரமையை உண்டுபண்ணமாட்டாதென்று சொல்லுவது ச்ருதியினுடைய ப்ரமிதிஜனகத்வஸ்வபாவத்திற்கு விரோதியன்று. எப்படி ஸூர்யப்ரகாசம் முதலான ஸஹகாரிகளில்லாவிடில் ரூபம் முதலியவை அறியப்படாமலிருப்பதினாலேயே, அந்த ரூபாதிகளுடைய அநுபலம்பமானது கண் முதலிய இந்த்ரியங்களுக்கு இயற்கையாயுள்ள ரூபாதிஸாக்ஷாத்காரசக்தியைக்கெடுக்காதோ—அப்படிப்போல, ஆபாதப்ரதீதியில் கூட ப்ரயோஜனமுள்ளதென்கிற ஜ்ஞானமிருக்கிறதென்பதைக்காண்பிப்பதற்காக மறுபடியும் 'ப்ரயோஜனவதர்த்த' என்கிற சப்தம் என்றறிக. ப்ரயோஜனமுள்ள அர்த்தத்தின் ஆபாதப்ரதீதியன்றோ அதன் நிர்ணயத்தில் இச்சையை உண்டுபண்ணும். ப்ரயோஜனமில்லாத காக்கையின் தந்தம் முதலியவற்றின் ஆபாதப்ரதீதியானது அதன் நிர்ணயத்தில் ப்ரதீதியை உண்டுபண்ணுகிறதில்லையன்றோ! ஆபாதமாக அறியப்படுகிறவைகளைக்கண்டு என்று அந்வயம். அர்த்தங்களுடைய அவகம்யமாநத்வத்தைக்கண்டு என்று அர்த்தம், தன்னுடைய புத்தியின் உத்பத்தியைக்கண்டு என்பதுபோல. ப்ரயோஜனமுள்ள அர்த்தத்தின் ஆபாதப்ரதீதியானது தன் அனுபவத்தால் ஸித்தமாக இருப்பதால் அதை மறுப்பது சக்யமல்லவென்று கருத்து.

வ்யாகரணம் முதலிய சாஸ்த்ரங்களின் பலஸ்வரூபங்களைக்காட்டிலும் விலக்ஷணங்களான மீமாம்ஸாபலஸ்வரூபங்களைக்காட்டுகிறார் "தத்ஸ்வரூப" என்று. ஸ்வரூபவிசேஷங்கள் அங்கிகள்; ப்ரகாரவிசேஷங்கள் அங்கங்கள். பூர்வபக்ஷத்தில் கூறப்பட்டுள்ள ஸ்வரூபப்ரகாரங்களைக்காட்டிலும் ஸித்தாந்திக்கப்பட்டிருக்கிற பலஸ்வரூபங்

களுக்கு வைலக்ஷண்யமானது 'விசேஷ' சப்தத்தால் விவக்ஷிக்கப்பட்டிருக்கிறது. 'ப்ரயோஜனவதர்த்தஸ்வாத்யாயவேதமீமாம்ஸா' சப்தங்கள் பூர்வோத்தரபாகங்களிரண்டுக்கும் பொதுவாக இருக்கின்றன. 'ஸ்வயமேவ' தானாகவே, விதியினாலல்ல. 'அதீதவேத: புருஷ:' என்கிற இரண்டு பதங்களும் அதற்கு உபபதாகங்கள். 'அதீதவேத' அத்யயன விதிவ்யாபாரமானது அனுஷ்டிதாம்சத்தில் பர்யவஸிப்பதால் மீமாம்ஸையில் அதற்கு ப்ரவர்த்தகத்வமில்லை—என்பது த்யோதனம் செய்யப்பட்டது. சேதனனாக இருப்பதால் பலத்துடன் கூடின அர்த்தங்களுடைய ஆபாதப்ரதீதியினால் தானாகப்ரவ்ருத்திக்கிறானென்பது புருஷசப்தத்தின் அபிப்பராயம்.

அத்யயனத்துக்கு அக்ஷரராசிக்ரஹணமாத்ரம் பலமென்று ஏற்படுகிற பக்ஷத்தில் ராகத்தினால் ப்ரவ்ருத்தித்தல் என்பதுகூட உபபன்னமாகாது. "வேதாங்காநி ஸமஸ்தாநி க்ருஷ்ணபக்ஷேஷு ஸம்படேத் நிஷ்காரண: ஷடங்கோ வேதோத்யேய:வேதமத்யாபயேத் த்விஜ: ஸகல்பம் ஸரஹஸ்யஞ்ச" (வேதத்தினுடைய அங்கங்களான வ்யாகரணம், ஜ்யோதிஷம் முதலியவைகளனைத்தையும் அபரபக்ஷத்தில் படிக்கவேண்டும். த்ருஷ்டபலனைக் கருதாமல் ஆறு அங்கங்களுடன் கூடின வேதமானது அத்யயனம் செய்யத்தக்கது. கல்பங்களோடும், ரஹஸ்யங்களோடும் கூடின வேதத்தை ப்ராஹ்மணன் அத்யயனம் செய்விக்க வேண்டும்) இதுமுதலியவைகளால் விதிக்கப்பட்டிருக்கிற அங்காத்யயனமும் அக்ஷரக்ரஹணபர்யந்தமாக இருப்பதால் வ்யாகரணம் முதலியவற்றால் அர்த்தாவபோதமில்லாமையாலும், ப்ரக்ருதிப்ரத்யயஜ்ஞானமில்லாமையாலும் ஆபாதப்ரதீதி உண்டாகாது, எனில்,—

அப்படியல்ல. வ்யாகரணம் முதலியவை வேதாங்கங்களாக இருப்பதால் அங்கிக்கு கொஞ்சமேனும் உபகரிக்காமலிருப்பவைகளுக்கு அங்கத்வம் பொருந்தாததலால் ப்ரயோஜனம் அவச்யம் கல்பிக்கவேணும். அவ்வாறு கல்பிக்கவேண்டிய இடத்தில் த்ருஷ்டமான ஒருவித ப்ரயோஜனம் ஸம்பவிப்பதாயிருக்க அதைவிட்டு அத்ருஷ்டப்ரயோஜனகல்பநம் கூடாததலால், பதம் முதலியவற்றின் அவரோதஸ்வரூபமான த்ருஷ்டமான ப்ரயோஜனமே ஸ்வீகரிக்கத்தக்கது. அதுஇல்லாவிடில் அங்கத்வம் பொருந்தாததலால் வ்யாகரணம் முதலியவைகளால் பதபதார்த்தவாக்யார்த்தஜ்ஞானம் ஸித்திப்பதால் ப்ரயோஜனத்வாரா அர்த்தங்களின் ஆபாதப்ரதீதியினால் மீமாம்ஸாரம்பம் உபபன்னமாகிறது.

அத்யயனம் செய்த புருஷன் தானாகவே ப்ரவ்ருத்திக்கிறான் என்றதனால் "அதாதோ தர்மஜிஜ்ஞாஸா" என்கிற ஸூத்ரம் அர்த்தாத் வ்யாக்யானம் செய்யப்பட்டது. விதிக்கு அக்ஷரராசிக்ரஹணபர்யந்தத்வம் நிச்சயிக்கப்பட்டால் ப்ரவர்த்திக்குந்தன்மை இல்லாமையாலும், ஸ்வாத்யாயத்திற்கு அர்த்தப்ரவ்ருத்தியில் ப்ரமாணமில்லாமையாலும், மீமாம்ஸை ஆரம்பிக்கத்தக்கதல்லவென்று பூர்வபக்ஷம். அங்கங்களோடு கூடின வேதாத்யயனத்திற்குப் பிறகு சப்தத்திற்குத்தானாகவே அர்த்தத்தை உணர்த்தும் ஸ்வபாவம் காணப்படுவதால் வேறு ப்ரவர்த்தகமான வஸ்து ஒன்று இல்லாமலிருந்தபோதிலும்கூட ராகத்தினால் ப்ரவ்ருத்தி உபபன்னமாவதால் (மீமாம்ஸை) ஆரம்பிக்கத்தக்கதே என்று ஸித்தாந்தம்.

(கேள்வி) கர்மவிசாரம் ராகப்ராப்தமாகும் பக்ஷத்தில் "அதீத்ய ஸ்நாயாத்" (அத்யயனம் செய்து ஸ்நாதகவ்ரதத்தை அனுஷ்டிக்க வேண்டும்) என்கிற ஸமாவர்த்தன ஸ்ம்ருதியானது ச்ருதிக்கு பாதகமாகும். (கர்மவிசாரம்) வைதமாக இருக்குமேயாகில் ஸ்ம்ருதியைக்காட்டிலும் ச்ருதி அதிக பலமுள்ளதாகையால் ஸ்ம்ருதி (ச்ருதிக்கு) இடம் கொடுக்கும் எனில், இப்படியல்ல.

அத்யயனவிதியைச்சார்ந்திருக்கிற அக்ஷரராசிக்ரஹணபர்யந்தத்வம், அர்த்தஜ்ஞானபர்யந்தத்வம்—ஆகிய இவை இரண்டுக்குள் எதை அபிப்ராயப்பட்டு இவ்வண்

ணம் உரைக்கப்பட்டது? அர்த்தஜ்ஞானபர்யந்தத்வம் என்பதைக்கருதிச்சொல்லப் பட்டிருந்தாலோ, அப்பொழுது, "அதீத்ய ஸ்நாயாத்" என்கிற ஸ்ம்ருதியிலுள்ள அத்ய யன சப்தத்திற்கு ச்ருதியிலுள்ள சப்தத்தோடு அர்த்தத்தில் ஒற்றுமை வந்து விட்டபடியால் விரோதமில்லை. அக்ஷராராசிக்ரஹணபர்யந்தத்வம் என்பதை எண்ணிச்சொன்னாலோ, அப்போது முக்யமாக அர்த்தமிருப்பதால், விரோதமில்லை. மேலும், விரோதம் வந் தாலும் ப்ரத்யக்ஷச்ருதியுமிருக்கிறது. எங்ஙனமெனில், ச்சாந்தோக்யத்தில் "ஆசார்ய குலத்தினின்று முறை தவறாமல் வேதத்தை அத்யயனம் செய்து குருவுக்குச்செய்ய வேண்டிய சுச்ரூஷாசேஷமான தக்ஷிணைதானத்தினால் அவருடைய ஸம்மதி பெற்று ஸமாவர்த்தனம் செய்து கொண்டு குடும்பத்தில் சுத்தமான இடத்தில்"—இது முதலி யது. ஆதலால், ஸ்ம்ருதிவசனத்துடன் கூடின ஸ்நாநச்ருதியானது மிக்க பலமுள்ளது. ஆகையால், ச்ருதிஸ்ம்ருதிவசனங்கள் இரண்டுக்கும் ப்ராபல்யதௌர்பல்யங்களைச்சொல் லுவது ப்ரயோஜனமற்றது.

இங்ஙனமாகில், ச்ருதியினாலும் ராகத்தால் ப்ரவ்ருத்தியானது பாதிக்கப்படுமே எனில், இல்லை, ஸமாவர்த்தனத்தைச்செய்தவனுக்கும் ராகத்தால் ச்ரவணமுபபன்னமாவதால்.

ஸமாவர்த்தனமானது அத்யயனத்திற்குப்பிறகு செய்யவேண்டியதாக இருப்பதால் அந்த ஸமாவர்த்தனத்தை முன்னிட்ட க்ருஹஸ்தகர்மானுஷ்டானங்களால் தடை செய்யப் படாத ச்ரவணஸமயம் கிடைக்காமையால் மீமாம்ஸையின் அநாரம்பம் ப்ரஸங்கிக்குமெனில், இங்ஙனமல்ல. ஸமாவர்த்தனத்தைச்செய்தவனாக இருந்தபோதிலும் வேதாத்யயனச்ர வணத்தில் நோக்கமுள்ளவனுக்கு ஸமயம் நேர்வதுபோல, ஸமயம் ஸம்பவிக்கலாம்.

ஆசார்யனுக்கு அத்யாபனம் விஹிதம்; க்ருஹஸ்தனுக்கு ச்ரவணம் விதிக்கப்பட வில்லையே என்றால், அப்படியல்ல—யாஜனப்ரதிக்ரஹங்கள் போல் அத்யாபனம் ராக ப்ராப்தமாக இருப்பதால். ராகப்ராப்தமாயிருந்தபோதிலும் அத்யாபனமானது ப்ரதிக்ரஹம் முதலியவற்றால் பொருளைத்தேடவேண்டுமென்கிற சாஸ்த்ரத்தினால் அனுமதிக்கப்பட் டிருக்கிறதெனில், ச்ரவணமும் நிஷேதிக்கப்படாததாலும் யக்ஞாநுஷ்டானத்துக்கு உப யுக்தமாக இருப்பதாலும் சாஸ்த்ராநுமதம்.

'ஸம்வத்ஸரே ஸம்வத்ஸரே த்வௌ த்வௌ மாஸௌ ஸமாஹித ஆசார்யகுலே வஸேத் பூய: ச்ருதிமிச்சந்நிதி ச்வேதகேது:' (மறுபடியும் வேதச்ரவணத்தில் விருப்பமுள்ளவன் சித்தஸமாதானமுள்ளவனாக வருஷந்தோறும் இரண்டு இரண்டு மாதங்கள் முழுமையும் ஆசார்யக்ருஹத்தில் வஸிக்கவேண்டும் என்று ச்வேதகேது) என்று தொடங்கி "தச்சாஸ்த் ரைர்விப்ரதிஷித்தம் நிவேசே ஹி வ்ருத்தே நையமிகாநி சரூயந்தே அக்நிஹோத்ரமதிதய:" என்பதால் க்ரஹஸ்தனுக்கு ச்ரவணம் நிஷித்தமென்று கூறப்பட்டிருக்கிறதென்றால் அப்படியல்ல,—

இரண்டு மாதங்கள் முழுவதும் குருகுலவாஸமானது அநுஷ்டானத்திற்குத்தடை யாக இருப்பதால் அது மாத்ரமே நிஷேதிக்கப்பட்டிருப்பதால். விவாஹம் ஆனவுடன் அக்நிஹோத்ரம், அதிதிஸத்காரம் முதலிய க்ருஹஸ்ததர்மநியதங்களான கர்மாக்கள் சாஸ்த் ரத்தினால் விதிக்கப்பட்டிருக்கின்றன என்றல்லவோ கூறப்படுகிறது. ஆசார்யனுக்கும் அனுஷ்டானத்திற்கு உபரோதமின்றி ச்ராவணம் சாஸ்த்ரத்தினால் ஸம்மதிக்கப்பட்டிருக் கிறது. ஆகையால், அனுஷ்டானத்தின் உபரோதாநுபரோதங்களைக்காரணமாகக்கொண்ட அநுமதியையும், அநநுமதியையும் விஷயமாய்க்கொண்டிருத்தல் † ச்ரவணத்துக்கும்

† ச்ரவணம் - கேட்கல்

§ ச்ராவணத்துக்கும் ஸமானம். அதனாலேயே, க்ருஹஸ்ததர்மநிஷ்டர்களான யுதிஷ்டிரர் முதலியவர்களுக்கு பீஷ்மர் முதலியவர்களிடத்திலிருந்து ச்ரவணமானது பாரதம் முதலிய இதிஹாஸங்களில் ப்ரதிபாதிக்கப்படுகிறது.

என்றாலும், சராவணகாலமேதான் ச்ரவணகாலம். ஆயினும், ச்ரோதாவுக்கு, தீர்த்தங்கொண்டு வருதல், விறகுதேடுதல் முதலியவைகளால் அநுஷ்டானத்திற்கு உபரோத மேற்படுமெனில், அல்ல,—

அத்யயனவிதியினால் விதிக்கப்பட்ட உதகாஹரணம் முதலிய கார்யமானது அத்யயனம் முடிந்ததனாலேயே முடிவு பெறுவதால். பொருள் சேர்த்தல், புகழ்ச்சியைத்தேடுதல் முதலிய ப்ரயோஜனாந்தரங்களில் விருப்பத்தாலும், சிஷ்யனிடத்திலுள்ள ஸ்நேஹத்தாலும் குருவுக்கு ச்ராவணம் உபபன்னமாகிறது.

ச்ரவணத்தைச்செய்விக்கிற ஆசார்யன் அர்த்தங்களை அறிந்தவராக இருப்பதால் அனுஷ்டானம் பொருந்தும். ச்ரோதாவுக்கு அர்த்தஜ்ஞானமில்லாமையால் அனுஷ்டானம் ஸம்பவியாதென்றால், அப்படியல்ல,—உபநயனம் தொடங்கி அநுஷ்டானமுள்ளவர்களான ஹிதைஷிகளின் வசனத்தினால் அனுஷ்டானமுபபன்னமாவதால். அங்ஙனமாகில், ஹிதைஷியினுடைய வாக்யமே போதும், எதற்காக மீமாம்ஸையின் ச்ரவணம் என்றால், ஹிதைஷிகளுடைய வசனத்திற்கு ப்ரமாணமூலத்வநிச்சயத்தின் பொருட்டும், ப்ரச்னம் பண்ணுகின்ற மற்றவர்களுக்கும் தான் உபபாதனம் செய்வதின் பொருட்டும். ஹிதைஷியின்வசனத்தினால் அனுஷ்டானம்ஸம்பவிக்கும் பக்ஷத்தில் சூத்ரன்முதலியவர்களுக்குக்கூட அனுஷ்டானம் ப்ரஸங்கிக்க வேண்டியதாக ஆகும் என்றால், அதுஸம்பவிக்காது. 'ந சூத்ராய மதிம் தத்யாத் நசாஸ்யோபதிசேத் தர்மம். ந சாஸ்ய வ்ரதமாதிசேத்' (சூத்ரனுக்கு ஜ்ஞானத்தைக்கொடுக்கக்கூடாது. அவனுக்கு தர்மத்தை உபதேசிக்கக்கூடாது. அவனுக்கு வ்ரதங்களையும் உபதேசிக்கலாகாது) இது முதலான நிஷேதவசனமிருப்பதால் ப்ராஹ்மணர்கள் யக்ஞம் முதலியவற்றைசூத்ரனுக்கு உபதேசிக்கிறார்களில்லையன்றோ. சுச்ரூஷை செய்யாத சூத்ரவிசேஷவிஷயமானதால் இப்படிப்பட்ட நிஷேதவசனங்களுக்கு ஸங்கோசம் செய்ய வேண்டுமென்பது ஸரியல்ல, ஸங்கோசத்தைச்செய்வதற்குத்தகுந்த ப்ரமாணமில்லாமையால். சூத்ரன் யக்ஞம் முதலிய கர்மாக்களுக்குத்தகுதியுள்ளவன் என்பதைக்காட்டுகிற வேறு வசனம் காணப்படவில்லையன்றோ! மேலும், யாகம் செய்பவனால் வேதம் முழுவதும், . மந்த்ரவிசேஷங்களும் ஜபிக்கத்தக்கவைகளென்று வசனமிருப்பதாலும், அந்த வேதம் முதலியவைகள் அத்யயனத்தினால் அடையத்தக்கதாலும், அந்த அத்யயனம் உபநயனத்தை அபேக்ஷித்து இருப்பதாலும், அந்த உபநயனத்தில் மூன்று வர்ணத்தார்களுக்கே அதிகாரமிருப்பதாலும், சூத்ரனுக்கு அதிகாரப்ரஸங்கமே இல்லை.

உபநயனவிதியானது, மூன்று வர்ணத்தார்களுடைய அத்யயனவிஷயமாக, ஒதுக்கக்கூடும். ஆதலால், சூத்ரனுக்கு உபநயனத்தை அபேக்ஷிக்காமலே அத்யயனம் ஸம்பவிக்கலாம். அவனுக்கு யாஜமானமந்த்ரங்களின் உச்சாரணமும் ஸம்பவிக்கலாம் என்றால், கூடாது. "தஸ்மாச்சூத்ரஸமீபே நாத்யேதவ்யம்" (ஆதலால் சூத்ரன் பக்கலில் அத்யயனம் செய்யத்தக்கதல்ல) "அத ஹாஸ்யவேதமுபச்ருண்வதஸ்த்ரபுஜதுப்யாம் ச்ரோத்ர ப்ரதிபூரணம்" (அப்படிக்கின்றி வேதத்தைக்கேட்டானேயாகில் அவன் காதில் ஈயத்தையும், அரக்கையும் காய்ச்சிவிடவேண்டும்) இது முதலிய சாஸ்த்ரங்களால் சூத்ரனுக்கு வேதச்ரவணம் நிஷேதிக்கப்பட்டிருக்கிறது. எப்பொழுது அத்யயனம் உபநயனாங்கமாக

§ ச்ராவணம் - கேட்பித்தல்

முடிந்ததோ, அதனால் அதில் த்ரைவர்ணிகர்களுக்கே அதிகாரம்; சூத்ரனுக்கு அதில் அதிகாரமில்லை—என்று ஏற்பட்டது. அக்காரணம் பற்றி மந்த்ரவிசேஷணங்களின் உச்சாரணம் உபபன்னமாகாததால் ஹிதைஷிவசனத்தால் சூத்ரன் முதலியவர்களுக்கு யாகாநுஷ்டான ப்ரஸங்கமில்லை. ஆதலால், அபசூத்ராதிகரணவிரோதமில்லை.

மேலும், எவ்வாறு "யாவஜ்ஜீவம் அக்நிஹோத்ரம் ஜுஹோதி" (உயிருள்ளவரையில் அக்னிஹோத்ரஹோமம் செய்யவேண்டும்.) இது முதலான விதியானது 'ந ஸ்வாங்கம் ஸ்வவ்யவதாயகம்' (தன்னுடைய அங்கம் தனக்கு § வ்யவதானத்தை உண்டுபண்ணுவதாக ஆகாது) என்கிற ந்யாயத்தால் தனக்கு உபயோகியாயும், ராகப்ராப்தமாயுமிருக்கிற பொருள் சேகரித்தல் முதலியவைகளுக்கு அவகாசத்தைக்கொடுக்கிறதோ—அவ்வாறாக அநுஷ்டானத்துக்கு உபயோகியான மீமாம்ஸாச்ரவணத்திற்கு ஸமாவர்த்தனவிதியும் அவகாசத்தைக்கொடுப்பதாக ஆகும்.

க்த்வாப்ரத்யத்துக்கு ஸமானமான கர்த்தாவோடுகூடி யிருத்தல்,—முந்தின காலத்தில் இருத்தல்—இதுமாத்ரமே பொருள். பிறகு என்கிற பொருள் இல்லை.

(நநு) ஆநந்தர்யமே விதிக்கத்தக்கது. இல்லாவிட்டால் விதி பயனற்றதாகும், துக்க ரூபமான குருகுலவாஸநிவ்ருத்தியானது தானாக வந்துவிடுமாதலால்,—என்று கூறப்படுமே யாகில், அப்படியல்ல. ஆநந்தர்யத்தை அர்த்தமாகக்கொண்டபோதிலும் விதிக்கு வையர்த்யம் வருகிறது, அதுவும் குருகுலவாஸம் துக்கரூபமாக இருப்பதினாலேயே. ஆகையால், நியமத்துடன் கூடிய ஸம்ஸ்காரவிசேஷமே ஸ்நாநமென்று அது விதேயம்; ஆநந்தர்யம் விதேயமல்ல. ஆதலால், 'ஆதீத்ய' என்கிற க்த்வாச்ருதிக்கு விரோதமில்லை. ஆதலால், தானாக ப்ரவ்ருத்திக்கிறான்.

"யோ ஹ வா அவிதிதார்ஷேயச்சந்தோதைவதேநமந்த்ரேண யஜதி யாஜயதி வாத்யாபயதி வா ஸ்தாணும் வர்ச்சதி கர்தம் வாபத்யதே, ப்ரவாமீயதே பாபீயாந்பவதி அயாதயாமாந்யஸ் யச்சந்தாம்ஸி பவந்தி, அத யோ மந்த்ரே மந்த்ரே வேத ஸர்வமாயுரேதி ச்ரேயாமச்சபவ தஸ்மாதேதாநி மந்த்ரே மந்த்ரே வித்யாத்" (எவன் ரிஷிச்சந்தஸ் தேவதைகளை அறியாமல் மந்த்ரத்தினால் செய்வனோ, செய்விப்பனோ அத்யயனத்தைச்செய்விப்பனோ— அவன் நரகத்தில் விழுகிறான். மிக்க பாபியாகி ரஸமில்லாமல் போகின்றான். எவன் ஒவ்வொரு மந்த்ரத்திலும் ரிஷிமுதலியவற்றை அறிகிறானோ அவன் பூர்ணமான ஆயுளைப்பெறுகிறான். ச்ரேயஸை அடைகிறான். அவனுடைய வேதங்கள் பழசாகி ரஸமற்றவைகளாக ஆகிறதில்லை. ஆதலால், ஒவ்வொரு மந்த்ரத்திலும் இந்த ரிஷி, தேவதைமுதலியவற்றை அறியவேண்டும்) இது முதலிய ச்ருதியினாலும 'அவிதித்வா ரிஷம் சந்தோதைவதம் யோகமேவச யோத்யாபயேஜ்ஜபேத்வாபி பாபீயாந் ஜாயதேஸ':(ரிஷியையும், சந்தஸையும், தேவதையையும், மந்த்ரத்தின் விநியோகத்தையும் அறியாமல் எவன் மந்த்ரத்தைப் பிறருக்கு அத்யயனம் செய்விப்பானோ, அல்லது ஜபிப்பனோ அவன் மிக்க பாபமுள்ளவனாகிறான்) என்கிற ச்ருத்யுபப்ருஹ்மணமான ஸ்ம்ருதியினாலும் அர்த்தஜ்ஞானவிதானம் பலித்தது,—

மந்த்ரத்தால் ப்ரதிபாதிக்கத்தக்க தேவதாஜ்ஞானம் இங்கு விதிக்கப்பட்டிருப்பதால் ஸமானந்யாயத்தாலும் தைவதசப்தமானது மந்த்ரத்தால் ப்ரகாசிக்கத்தக்க அநுஷ்டேயார்த்தத்தை விளக்கிக்காட்டுவதற்காக இருப்பதாலும், விதிமுதலிய பாகங்களின் அர்த்த ஜ்ஞானமும் விதேயமாகவேண்டுவதாலும். (பலித்தது) யோகமாவது மந்த்ரங்களுடைய

§ வ்யவதானம் - விலக்கம், மறைதல்.

விநியோகம். அதன் ஜ்ஞானமானது ப்ராஹ்மணபாகத்தினுடைய அர்த்தஜ்ஞானத்தை அபேக்ஷித்திருப்பதாலும், என்றால் அல்ல.

ப்ரதிக்ரஹம், ருதுகாலஸம்வேசனம் இவை முதலியவைகளுக்குப்போல ராகப்ராப்தத்வம் போகாது. ப்ராஹ்மணன் ப்ரதிக்ரஹம் முதலியவற்றால் பொருளைத்தேட வேண்டும். ருதுகாலத்தில பத்னியை போகத்துககாக அணுகவேண்டும். இதுமுதலிய வசனமானது ப்ரதிக்ரஹம் முதலியவற்றுக்கு ராகத்தால் ப்ராப்தியைத்தடுக்காதுபோலும். இந்த வாக்யத்தினாலேயே அர்த்தஜ்ஞானம் விதிககப்பட்டிருப்பதால் அத்யயனவிதிக்கு அர்த்தஜ்ஞானபர்யந்தத்வம் ஆச்ரயிககத்தககதல்ல. எப்படி க்ரதுக்கள் வேறு விதியினால் ஸித்தித்துவிட்டபடியால் ஆதானவிதிக்கு மேலே உள்ள க்ரதுபர்யந்தத்வம் ஆச்ரயிக்கப் படுகிறதில்லையோ- அப்படிப்போல,இந்த வாக்யமானதுஅத்யயனம் அர்த்தஜ்ஞானபர்யந்தம் என்பதை விதிக்கிறதில்லை, அர்த்தஜ்ஞானமானது வேறு வாக்யத்தினால் ஸித்திப்பதாலும், இந்த இடத்தில் மந்த்ரமாத்ரத்துக்கு ரிஷி,சந்தஸ்,தேவதைகளுடைய விஜ்ஞானவிதானப்ரதீதியிருப்பதாலும. அதனால வேதமானது ஸாங்கமாக அத்யயனம் செய்யத்தக்கதென்பது ஸித்திக்கும்; அர்த்தஜ்ஞானம் ஸித்திக்காது,—சந்தஸ்தேவதை முதலியவற்றின் ஜ்ஞானமானது சந்தஸ், கல்பம், வ்யாகரணம், நிருக்தம், முதலான க்ரந்தங்களை அபேக்ஷிப்பதாலும், மீமாம்ஸையை அபேக்ஷியாமலிருப்பதாலும்.

விநியோகவிஷயமான ஸந்தேகமுண்டாகும்போது மீமாம்ஸை அபேக்ஷிக்கத்தக்கதாக ஆகுமே என்றால், அப்பொழுது ஸந்தேஹத்தைப்போக்குவதற்காக ராகத்தினால் ப்ரவ்ருத்தியானது உண்டாகலாம்.

"யததீதமவிஜ்ஞாதம் நிகதேநைவ சப்த்யதே—அநக்நாவிவ சுஷ்கைதோ நதஜ்ஜ்வலதி கர்ஹிசித்" (அத்யயனம் பண்ணப்பட்ட எந்த வேதவாக்யமானது அர்த்தஜ்ஞானமின்றி சப்தாநுபூர்வீமாத்ரத்தால் படிக்கப்படுமோ அது நெருப்பில்லாத சாம்பலில் உலர்ந்த விறகு போல ஒருபொழுதும ப்ரகாசிக்காது) என்கிற இந்த வசனமும் அத்யயனவிதிக்கு அர்த்தஜ்ஞானபர்யந்தத்வத்தை அறிவிக்கிறதில்லை. 'அதீதம் அவிஜ்ஞாதம்' என்கிற இந்த ச்லோகத்திலேயே அத்யயனம், அர்த்தஜ்ஞானம்—இரண்டுக்கும் தனித்து நிர்தேசமிருப்பதாலும்,ராகத்தினால் ப்ராப்தமாக இருப்பதை விதிப்பது அசக்யமாதலாலும் வேதங்களில் ஸ்வல்பத்தை அத்யயனம் செய்தவன் ப்ராஹ்மணன்,ஒரு சாகையை அத்யயனம் பண்ணினவன் ச்ரோத்ரியன், அங்கங்களை அத்யயனம் செய்தவன்¶ அநூசானன்—இது முதலியவைகளும், கல்பஸூத்ரப்ரயோகங்களும் அத்யயனத்தைக்காட்டிலும் அர்த்தஜ்ஞானம் வேறாக உள்ளதென்பதை அறிவிக்கின்றன. ஆதலால், ச்ரவணம் துக்கரூபமாதலால் சோம்பலாலேயோ, பொருள் தேடுவது முதலிய வேறு கார்யாஸக்தியினாலேயோ, எவன் ச்ரவணம் செய்கிறதில்லையோ அவனுக்கு ஆசையுண்டுபண்ணுவதற்காக 'யததீதம்' இது முதலியவசனம். எவ்வாறு பச்சகாய்களால் சூதாடாதே, க்ருஷியைத்தெரிந்துகொண்டு நிலத்தை உழுது பயிரிடு—பஹுமதி செய்யப்பட்டவனாக பொருளில் ரமிப்பாயாக— என்கிற வாக்யமானது, சோம்பேறிகளுக்கு ப்ரரோசனையின் பொருட்டோ; ப்ரபலமான பலேச்சையாலன்றோ ப்ரவ்ருத்தி உத்கடமாகும். இவ்வளவு மட்டினாலேயே க்ருஷிக்கும்,பொருள் சேகரிக்கும ராகப்ராப்தமென்கிற தன்மைககு பங்கமுண்டாகாதோ—அப்படிப்போல, இந்த வசனமும் ச்ரவணம் ராகப்ராப்தமென்பதைக கெடுக்காது. ஆதலால் ராகத்தாலேயே ப்ரவ்ருத்திக்கிறான்.

¶ அநூசானன்:—குருவினிடத்திலிருந்து நியமத்துடன் வேதத்தை ஸாங்கமாய் அத்யயனம் செய்தவன்.

இவ்வண்ணம், வேறொன்றினால் ப்ரவ்ருத்தி ஸம்பவிக்கிறதாயிருக்க சப்தசக்தியை உல்லங்கனம் பண்ணி மீமாம்ஸாச்ரவணத்துக்கு விதேயத்வத்தை கல்பிப்பது யுக்தமல்ல.

பாஷ்யம்:—

தத்ர கர்மவிதிஸ்வரூபே நிரூபிதே, கர்மணாமல்பாஸ்திரஃபலத்வம் த்ருஷ்ட்வா அத்யயநக்ருஹீதஸ்வாத்யாயைகதேசோபநிஷத்வாக்யேஷு அம்ருதத்வரூபாநந்தஸ்திரஃபலாபாதப்ரதீதேஸ்தந்நிர்ணயஃபலவேதாந்தவாக்யவிசாரரூபசாரீரகமீமாம்ஸாயாமதிகரோதி | ததா வேதாந்தவாக்யாநி கேவலகர்மஃபலஸ்ய க்ஷயித்வம் ப்ரஹ்மஜ்ஞாநஸ்ய சாக்ஷயஃபலத்வம் ப்ரதர்சயந்தி |

'தத்யதேஹ கர்மசிதோ லோக: க்ஷீயத' ஏவமேவாமுத்ர புண்யசிதோ லோக: க்ஷீயதே' (சா. ௮. ௧. ௬.)

'அந்தவதேவாஸ்ய தத்பவதி.' (ப்ரு. ௫. ௮. ௰.)

'நஹ்யத்ருவை: ப்ராப்யதே ஹி த்ருவம் தத்'(கா. ௨. ௰.)

'ப்லவா ஹ்யேதே அத்ருடா யஜ்ஞரூபா:'(மு. ௧. ௨. ௭.)

'பரீக்ஷ்ய லோகாந் கர்மசிதாந் ப்ராஹ்மணோ நிர்வேதமாயாந் நாஸ்த்யக்ருத: க்ருதேந |

'தத்விஜ்ஞாநார்த்தம் ஸ குருமேவாபிகச்சேத் ஸமித்பாணி: ச்ரோத்ரியம் ப்ரஹ்மநிஷ்டம் |

'தஸ்மை ஸ வித்வாநுபஸந்நாய ஸம்யக் ப்ரசாந்தசித்தாய சமாந்விதாய |

'யேநாக்ஷரம் புருஷம் வேத ஸத்யம் ப்ரோவாச தாம் தத்த்வதோ ப்ரஹ்மவித்யாம்' (மு. ௧. ௨| ௧௨. ௧௩.)

'ப்ரஹ்மவிதாப்நோதி பரம்' (தை. ௨. ௧. ௧.)

'ந பச்யோ ம்ருத்யும் பச்யதி' (சா. ௭. ௨௬. ௨.)

'ஸ ஸ்வராட் பவதி' (சா. ௭. ௨௫. ௨.)

'தமேவம் வித்வாநம்ருத இஹ பவதி' (பு. ஸூ. ௧. ௬.)

'தமேவம் விதித்வாதிம்ருத்யுமேதி நாந்ய: பந்தா அயநாய வித்யதே' (ச்வே. ௫. ௮.)

'ப்ருதகாத்மாநம் ப்ரேரிதாரம் ச மத்வா ஜுஷ்டஸ்ததஸ்தேநாம்ருதத்வமேதி' (ச்வே. ௧. ௬.)

இத்யாதீநி ||

அந்த வேதத்தில் கர்மவிதிஸ்வரூபத்தை நிரூபணம் செய்ய கர்மங்கள் அல்பமாயும், நச்வரமாயுமுள்ள பலனுள்ளவைகள் என்பதை அறிந்து, அத்யயநத்தால் க்ரஹிக்கப்பட்டிருக்கிற வேதத்தின் ஏகதேசமான உபநிஷத்வாக்யங்களில் மோக்ஷரூபமான அநந்தஸ்திரமாயுள்ள பலத்தில் ஆபாதப்ரதிதியினால் அதன் நிர்ணயத்தை பலமாக உடைய வேதாந்தவாக்யவிசாரரூபமான சாரீரகமீமாம்ஸையில் அதிகாரமுள்ளவனாக ஆகிறான். அப்படியே, வேதாந்தவாக்யங்கள் (ப்ராஹ்மஜ்ஞாநத்தை முன்னிட்டிராத) கேவலகர்மபலத்துக்கு க்ஷயத்தையும், ப்ராஹ்மஜ்ஞாநத்துக்கு அக்ஷயபலத்தையும் காண்பிக்கின்றன.

"எவ்வாறு இவ்வுலகில் க்ருஷிமுதலிய செய்கைகளால் ஸம்பாதிக்கப்பட்ட (வ்ரீஹிமுதலிய) பலமானது க்ஷயிக்கிறதோ, அவ்வாறே மறுமையிலும புண்யத்தால் தேடப்பட்ட ஸ்வர்கம முதலிய பலன்களும் க்ஷயத்தை அடைகின்றன."

"(அந்த கர்மங்களால் அடையப்பட்ட உலகம்) இவனுக்கு முடிவுள்ளதாகவே ஆகிறது."

"அசாச்வதங்களான (கர்மாக்களால்) அது அடையப்படாதன்றோ!"

"யஜ்ஞரூபங்களான ஓடங்கள் (ஸம்ஸாரமாகிற ஸமுத்ரத்தைத்தாண்ட எண்ணமுள்ளவர்களுக்கு) த்ருடமுள்ளவைகளல்ல."

"கர்மபலன்களை நன்றாக ஆராய்ந்து (ஸாங்கமாய் வேதாத்யயநம் செய்த) ப்ராஹ்மணன் அவைகளில் நிவ்ருத்தியை அடைய வேண்டும். செய்யப்பட்ட கர்மாவினால் நித்யனான (பரமபுருஷன்) ஸித்திக்கமாட்டான். அந்த ப்ரஹ்மஜ்ஞாநத்தை ஸம்பாதிப்பதற்காக அவன் ஸமித் முதலியவற்றைக்கையில் கொண்டவனாக, வேதாத்யயநம் செய்தவரும், ப்ரஹ்மஸாக்ஷாத்காரமுள்ளவருமான குருவையே நாடவேண்டும்."

"தன்னை அணுகியவனும், வணக்கமுள்ளவனும, நன்றாக மனதை அடக்கியவனும், வெளி இந்த்ரியங்களை ஜயித்தவனுமான அந்த சிஷ்யனுக்கு ப்ரஹ்மத்தை அறிந்தவரான அந்த குரு எந்த விஜ்ஞாநத்தினால் ஸ்வரூபத்தாலும், குணங்களாலும், விகாரமில்லாத புருஷனை அறிகிறாரோ அப்படிப்பட்ட ப்ரஹ்மவித்யையை உண்மையாய் உபதேசிக்கக்கடவர்."

"ப்ருஹத்வகுணவிசிஷ்டமான வஸ்துவை உபாஸிப்பவன் எல்லா வஸ்துக்களையும் விடச்சிறந்ததான ப்ரஹ்மத்தை அடைகிறான்."

"அந்த நிகரற்ற ப்ரஹ்மத்தை ஸாக்ஷாத்கரிப்பவன் மீண்டும் ஸம்ஸாரத்தைப்பார்க்க மாட்டான்."

"அவன் கர்மவாச்யனாக ஆகிறதில்லை."

"இவ்விதம் அவனை அறிபவன் இங்கேயே முக்தனாக ஆகிறான்."

"அந்த (பரமபுருஷனை அடைவதற்கு) இதைத்தவிர வேறு வழி கிடையாது."

"ஜீவாத்மாவையும், ப்ரேரகனான பரமாத்மாவையும் தனித்திருப்பவர்களென்று அறிந்திருப்பவன் அந்த ப்ருயக்த்வஜ்ஞானத்தினால், (ப்ரீதிக்கு விஷயமாக்கப்பட்டவனாக) மோக்ஷத்தை அடைகிறான்."

இது முதலியவைகள் என்று (காட்டுகின்றனர்.)

ச்ருதப்ரகாசிகை.—

ஐகசாஸ்த்ர்யமும், ராகத்தினால் ப்ரவ்ருத்தியும் இருக்கட்டும். பௌர்வாபர்யநியமம் எவ்வாறு?—என்றால், 'தத்ர'என்று தொடங்கி பதில் சொல்லுகிறார்.

'தத்ர'—அந்தவேதத்தில். "கர்மவிதிஸ்வரூபே நிரூபிதே" கர்மபாகம் வேதத்தின் தொடக்கத்தில் இருப்பதால் அத்யயநக்ரமத்திலேயே நிரூபணம் யுத்தமாக இருப்பதால் கர்மவிசாரம் முந்தியதாக ஆயிற்று—என்று கருத்து.

கர்மாக்களுக்கு அல்பாஸ்திரபலத்வமும், அநந்தஸ்திரபலத்வமும் பூர்வபக்ஷித்தாந்த ரூபமாக ஓரிடத்திலும் நிரூபிக்கப்படவில்லை. அப்படியிருக்க எவ்வாறு அல்பாஸ்திர பலத்வஜ்ஞானம் உண்டாகும்?—என்றால், 'கர்மவிதிஸ்வரூபே நிரூபிதே'-என்று தொடங்கிச்சொல்லுகிறார்.

கேவலகர்மவிதிஸ்வரூபமே நிரூபிக்கப்பட்டது. அல்பாஸ்திரபலத்வஜ்ஞானமானது ஆவ்ருத்திவிதானம் (மீண்டும் வருவதைச்சொல்லுகிற விதி) முதலியதால் பலித்ததென்று கருத்து. அல்லது, கர்மவிதிஸ்வரூபம் நிரூபிககப்பட்டது. ஆராதிக்கத்தகுந்த பரதேவதாஸ்வரூபம் நிரூபிக்கப்படவில்லை—என்று கருத்து. அவனுடைய ஆராதனமாக கர்மாக்கள் செய்யப்பட்டாலன்றோ அநந்தமான ஸ்திரபலத்வம் ஸித்திக்கும்.

அத்யயநக்ருஹீத்ஸ்வாத்யாய' அத்யயநத்துக்கு வேதம் முழுவதும் விஷயமாக இருப்பதாலும், உபநிஷத்தானது ஸ்வாத்யாயசப்தத்தில் உள்ளடங்கி இருப்பதாலும்—என்று கருத்து.

'ஏகதேச' சப்தத்தால் ஒருப்ரபதந்தத்தின் அம்சம்—என்பது ஸூசிக்கப்பட்டது. ஸாதாரணமான வேதசப்தத்தால் நிர்தேசிக்கப்பட்ட சப்தராசியில் 'உபநிஷத்'சப்தத்தினால்

மற்றவைகளை ப்ரதிபாதிக்காமல் ப்ரஹ்மத்தையே ப்ரதிபாதிக்கும் பாகத்தைத்தனித்து நிர்தேசிக்கிறார்.

‘வேதாந்த’—சப்தத்தால் விசாரத்தைச்சார்ந்த பௌர்வாபர்யநியமத்துக்கு ஹேது காட்டப்பட்டது. ‘மீமாம்ஸா’ சப்தத்தால் சொல்லப்பட்ட வ்யாக்யாநத்தில் ‘சாரீரக’ சப்தத்தால் ப்ரதேசபேதத்தை விசேஷிக்கிறார்.

‘அந்நவாநந்நதோ பவதி, மஹாந் பவதி ப்ரஜயா பசுபிர் ப்ரஹ்மவர்சஸேந’ (ஐச்வர்ய முள்ளவன் ஸுகாநுபவம் பண்ணுகிறான். ஸந்ததியினாலும், பசுக்களாலும், ப்ராஹ்மவர்ச்சஸத்தினாலும் மஹிமையுள்ளவனாக ஆகிறான்.) இது முதலியவைகளால் சொல்லப்பட்ட †ஆநுஷங்கிகமான அல்பாஸ்திரபலன்களை வ்யாவ்ருத்திப்பதற்காக ‘அம்ருதத்வரூப’ சப்தம ப்ரயோகிக்கப்பட்டுள்ளது. ஆநுஷங்கிகங்கள் அல்பாஸ்திரங்களாயிருந்தபோதிலும் ப்ரதானபலத்திற்கு அநந்தஸ்திரத்வேந ஆபாதப்ரதீதி இருக்கிறதென்று அர்த்தம். கர்மமீமாம்ஸையினால் ஸம்ஸ்கரிக்கப்பட்ட மனதுடன் கூடியிருத்தலால் இதில் அடையத்தக்க ஆநுஷங்கிகமும், ப்ரதானபலமும், ஸம்பவிக்கிறதென்று ச்ரோதாவுக்கு அறிவு உண்டாகவே உண்டாகிறது.

பலமாதலால் இதுவும் அத்யயநம் என்று புத்தி உண்டாகலாம் என்றால் அப்படியல்ல. ஏனெனில்,—

விபக்ஷத்தில் பாதகமில்லாமையால். எப்படி பூமியிலுள்ள ஸுகத்தைவிட ஸ்வர்கம் முதலிய ஸுகம் விலக்ஷணமென்று அறியப்பட்டிருக்கிறதோ, அதிலும் ஒன்றுக்கொன்று வேறுபாடு தேசகாலஸ்வரூபத்தால் அறியப்படுகிறதோ,—அப்படியே அதைக் காட்டிலுங்கூட விலக்ஷணமான ஸுகம் ஸம்பவிக்கலாமென்று அதிகமாய் ராகமுண்டாகும் பொருட்டு இதற்கும் ப்ரதீதி உண்டாகலாம்.

‘அதிகரோதி’—அதிகாரியாகிறான். இவ்விதம் கர்மவிசாரம் செய்தவனே அதிகாரியாக ஆகிறான். ஸாதநசதுஷ்டயமுள்ளவன் ஆகான்—என்று அபிப்ராயம் இவ்விதமாக ஐகசாஸ்த்ர்யம், க்ரமம், நியமம், ஆரம்பணீயத்வம்—இவைகள் உபபாதிக்கப்பட்டன.

எந்த வேதாந்தவாக்யங்களால் ஆரம்பணீயத்வத்துக்கு உபயுக்தமான ஆபாதப்ரதீதி உண்டாகிறது—என்பதை ‘தயாச’ என்பதால் சொல்லுகிறார். எப்படி ஸூத்ரம் வ்யாக்யாநம் செய்யப்பட்டதோ அப்படியே என்று அர்த்தம். சகாரம் சங்கையின் நிவ்ருத்தியிலாவது, ப்ரஸித்தியிலாவது இருக்கிறது. ‘கேவல’ சப்தத்தினால் ஜ்ஞாநாங்கமான கர்மா வ்யாவ்ருத்திக்கப்பட்டது.

கர்மவிசாரத்தால் கர்மபலன்கள் அழிவுள்ளவைகள் என்று நிச்சயிக்கப்பட்டிருந்தபோதிலுங்கூட மீண்டும் அல்பாஸ்திரபலத்வப்ரதீதியை உண்டு பண்ணும் வாக்யங்கள் யாது காரணம்பற்றி உதாஹரிக்கப்படுகின்றன? அநந்தஸ்திரபலாபாதப்ரதீதியை உண்டு பண்ணும் வாக்யங்களே உதாஹரிக்கத்தக்கவைகள்.

இந்தக்கேள்விக்கு உத்தரம் சொல்லப்படுகிறது :—விசாரம்செய்து கர்மாக்களை அறிந்தவனுக்கல்லவோ நிச்சயிக்கப்பட்ட அர்த்தங்களோடு ஸம்வாதமுள்ள வாக்யங்களைக் காண்பதினால் கர்மபலன்களின் அஸ்தைர்யம் போல, ப்ரஹ்மஜ்ஞாநபலத்துக்கு அக்ஷ

† ஆநுஷங்கிகம்—அப்ரதானம்.

யித்வமும் ப்ராமாணிகமாக ஸம்பவிக்கிறதென்கிற ச்ரத்தையை உண்டுபண்ணுவதற்காகவே (உதாஹரிக்கப்படுகின்றன.)

(தத்யதா) லோக்யதே என்ற வ்யுத்பத்தியினால் 'லோக'சப்தம் பலவாசீ. 'அந்தவத் தேவாஸ்ய தத் பவதி' என்கிற வசனத்தினால் ஜ்ஞாநமில்லாத கர்மாக்கள் அநேக காலங்களாக அநுஷ்டிக்கப்பட்டபோதிலும், அவை பலவிதமாயிருந்தபோதிலும், க்ஷயத்துடன் கூடியிருத்தல் சொல்லப்பட்டதாக ஆகிறது; அந்த வாக்யமானது $ 'யோ வா ஏததக்ஷரம் கார்க்ய விதித்வாஸ்மிந் லோகே ஜுஹோதி, யஜதே, தபஸ்தப்யதே, பஹூநி வர்ஷஸஹஸ்ராணி' என்கிற இந்த வாக்யத்தை முந்தினதாகக்கொண்டிருப்பதால்.

அந்தவத்—(முடிவுள்ளது) என்று சொன்னால், க்ரியாஸ்வரூபம் முடிவுள்ளதென்பது உலகத்தில் ப்ரஸித்தமாதலால் அது உபதேசிக்கத்தக்கதல்லவென்று பலத்துக்கே அந்தவத்வம் அர்த்தஸித்தம் என்பதை ப்ரகாசப்படுத்துவதற்காக முந்தி 'தத்யதா' என்ற வாக்யம் எடுக்கப்பட்டிருக்கிறது. ஸாம்ஸாரிகபலத்துக்கு அத்ருவத்வம் இருக்கலாம்—கர்மாக்களாலேயே த்ருவமான பலம் ஸம்பாதிக்கப்படலாம்—என்கிற சங்கையை அகற்றுவதற்காக 'ந ஹ்யத்ருவை: ப்ராப்யதே' என்று எடுக்கிறார்.

'த்ருவம் தத்' என்று வாக்யகண்டம். அதற்கு உபபாதகமாய் அறியப்படுகிற 'ப்லவாஹ்யேதே அத்ருடா யஜ்ஞரூபா:' என்கிற வேறு வாக்யத்தை உதாஹரிக்கிறார். ஸம்ஸாரமாகிற ஸமுத்ரத்தைக்கடந்து அக்கரை சேரும்படி செய்வதற்கு இவை ஸாமர்த்யமுள்ளவைகள் அல்ல ; ஏனெனில், நடுவில் உடைந்து போகக்கூடியவைகள்—என்று கருத்து.

'பரீக்ஷ்ய லோகாந்' என்று ஸூத்ரயோஜனைக்கு மிகவும் பொருத்தமுள்ளதான கர்மாக்களின் அஸ்திரபலத்வத்தையும், ப்ரஹ்மோபாஸநத்தின் அக்ஷயபலத்வத்தையும் காண்பிக்கிற வாக்யத்தை எடுக்கிறார். இந்த வாக்யத்தில் ந்யாயஸித்தமான அர்த்தத்தை அநுவாதம் செய்ததால் குருபஸதநம் விதிக்கப்படுகிறது.

'கர்மசிதாந்' கர்மத்தால் ஸம்பாதிக்கப்பட்ட. 'பரீக்ஷ்ய' மீமாம்ஸாந்யாயங்களால் நிரூபித்து. 'ப்ராஹ்மண:' ஸாங்கமாயும், ஸசிரஸ்கமாயுமுள்ள வேதத்தை அத்யயநம் செய்தவன். 'ய:' என்று சேர்த்துக்கொள்ளவேண்டும். ஏனெனில், 'ஸ:' என்று மேலே இருப்பதால். 'அக்ருத:' நித்யன். இங்கு 'புருஷ:' என்பது விசேஷ்யம். ஏனெனில், லிங்கவசத்தாலும், 'அக்ஷரம் புருஷம்' என்று உடனே சொல்லுவதாலும். 'க்ருதேந' கர்மாவினால். 'நாஸ்தி' ஸித்திக்காது—கிடைக்காது. 'இதி' சப்தம் காரணத்தகுந்தது. எவன் நிர்வேதமடைவனோ அவன் அதை அறியும்பொருட்டு குருவையே நாடவேண்டும். 'ஏவ'காரத்தால் நியமவிதித்வம் அறியப்படுகிறது. 'ஸமித்பாணி:' என்பதால் வெறுங்கையுடன் இருக்கக்கூடாதென்று ஏற்படுகிறது. இவ்விஷயத்தில் 'ரிக்தஹஸ்தேந நோபேயாத் ராஜாநம் தைவதம் குரும்' (ராஜா, குரு, தேவதை—இவர்களிடம் வெறுங்கையுடன் போகக்கூடாது) என்று ஸ்ம்ருதி ப்ரமாணம். 'ச்ரோத்ரியம்' வேதாந்தத்தை குருமுகமாகக்கேட்டவனை. 'ப்ரஹ்மநிஷ்டம்' ப்ரஹ்மஸாக்ஷாத்காரம் பிறந்தவனை. வேதாந்தம் கேட்டவனாயிருந்தபோதிலும், ப்ரஹ்மநிஷ்டனல்லாதவன் ருசிபேதத்தால் நாடத்தகுந்தவனாகான் என்று கருத்து. 'அபிகச்சேத்' என்பதோடு அந்வயம். 'சம:' வெளி இந்த்ரியங்களை அடக்குதல். ப்ரசாந்தசித்தாய என்னும் பதத்தால் அந்த:கரணம் சொல்லப்பட்டு விட்டபடியால் பரிசேஷாத்

$ யோ வா—இதற்கு அர்த்தம் ருO-ம் பக்கத்தில் பார்க்க.

இதுதான் ‘சம’ சப்தத்தின் அர்த்தம். இதனால் ச்ரமமேமையுக்தமான அவதாநம் விவக்ஷிக்கப்பட்டது. உபாஸநோபயுக்தமான அத்யந்த ஸூக்ஷ்மார்த்தஜ்ஞாநம் முதலியவை சொல்லப்படவில்லை. ‘தஸ்மை ஸ வித்வான் ப்ரோவாச’ என்று அந்வயம். ‘யேந’ இந்த நிர்தேசம் விஜ்ஞாநாபிப்ராயமுள்ளது; தத்விஜ்ஞாநார்த்தம் என்றல்லவோ ப்ரக்ருதம். ஸாமாந்யமாய் காரணாபிப்ராயமுள்ளதாவது, லிங்கத்தின் மாறுதலாவது. ‘அக்ஷரம்’ ஸ்வரூபத்தால் விகாரமற்றது. ‘ஸத்யம்’ குணத்தினாலும் விகாரமில்லாதது. இவ்விரண்டு பதங்களாலும் அசித், ஜீவன், இவைகளைக்காட்டிலும் வ்யாவ்ருத்தி ஏற்பட்டது. ‘தாம்’ ப்ரஹ்மவித்யாம். ‘ப்ரோவாச’ ப்ரப்ரூயாத் என்று அர்த்தம், என்று இவ்விதம் வேதாந்தஸாத்ரத்தில் வ்யாக்யாநம் செய்யப்பட்டிருக்கிறது. ச்சந்தஸி லுங், லங், லிட: என்று லிட்

‘ப்ரசாந்தசித்தாய சமாந்விதாய’ என்கிற பதங்களால் சமம் முதலியவைகளுக்கு பூர்வவ்ருத்தத்வம் அறியப்படுகிறதே—என்றால், இல்லை,—ச்ரவணத்துக்கு உபயோகமான கவனம்மாத்ரம் விவக்ஷிக்கப்பட்டிருக்கிறது. இவ்விடத்தில் உபாஸநத்துக்கு அங்கமாயுள்ள அத்யந்த விஷயவைத்ருஷ்ணயம் விவக்ஷிதமில்லை. அந்த விஷயமும் ‘சமதமாத்யுபேத: ஸ்யாத்’ என்று நிரூபிக்கப்படப்போகிறது. ஆதலால், நிரூபிக்கத்தகுந்த வஸ்துவால் ஸம்பாதிக்கத்தக்க அவைகளோடு முந்தியே சேர்ந்திருக்கை உபபன்னமாகாது. ச்ருதியும், சாஸ்த்ரத்தினால் உண்டுபண்ணத்தகுந்த ஜ்ஞாநமுள்ள புருஷனுக்கு அதற்குமேல் வரக்கூடிய சமம் முதலியவற்றை அங்கமாகக்கொண்ட உபாஸநத்தைக்காட்டுகிறது.—“தஸ்மாத் ஏவம் வித் சாந்தோ தாந்த உபரதஸ்திதிக்ஷுஸ்ஸமாஹிதோ பூத்வா ஆத்மந்யேவாத்மாநம் பச்யேத்” என்று. (ஆதலால், இவ்வண்ணம் அறிந்தவன் வெளி இந்த்ரியங்களையும், மனதையும் ஒடுக்கினவனாகவும், ஒழிவுள்ளவனாகவும், பொறுமையுள்ளவனாகவும், அவதாநமுள்ளவனாகவும், தன்னுள்ளத்தில் ஆத்மாவைப்பார்க்கவேண்டும்.) இங்கு ‘ஏவம் வித்’ என்பதால் சாஸ்த்ரங்களால் ஜ்ஞாநத்வம் கூறப்பட்டது. ‘பூத்வா பச்யேத்’ என்றதால் உபாஸநத்துக்கு சமம்முதலியவைகளை அங்கங்களாகக்கொண்டிருத்தல் ஸ்தாபிக்கப்பட்டது. ‘ப்ரஹ்மவித்’ என்பதால் தனித்த அநந்தஸ்திரபலபரமான வாக்யங்களை உதாஹரிக்கிறார்.

இந்த அனுவாகத்தில் ‘யதோ வாசோ நிவர்த்தந்தே’ என்ற ச்ரவணத்தால் அநந்தபலத்வஸித்தி. ப்ராப்யமான ப்ரஹ்மத்துக்கு அநந்தத்வம், ஸ்திரத்வம் இவைகளிருந்தபோதிலும் ப்ராப்தி ஏதோ ஒரு ஸமயத்திலோ என்கிற சங்கையை விலக்குவதற்காக ‘நபுந:’ என்பதால் அபுநாநிவ்ருத்தியைக கூறுகிறார். அல்லது, வித்யையினால் அநந்தஸ்திரபலரூபமான ப்ரஹ்மப்ராப்தியைச்சொல்லுகிறார் ‘ப்ரஹ்மவித்.’ ப்ரதிபந்தகநிவ்ருத்தியை முன்னிட்டு வித்யையினால் ப்ரஹ்மப்ராப்தியை ‘நபுந:’என்பதால் சொல்லுகிறார். ‘ம்ருத்யு’ ப்ரமாதம், அல்லது மோஹம். ‘மோஹோ ம்ருத்யுஸ்ஸம்மதோய: கவீநாம்’ ‘ப்ரமாதம் வை ம்ருத்யுமஹம் ப்ரவீமி’ (மோஹமென்பது ம்ருத்யு என்று சொல்லுகிறேன்)என்று இரண்டிடத்திலும் ம்ருத்யுசப்தத்தால் மோஹத்தையும், ப்ரமாதத்தையும் வ்யபதேசித்திருக்கிறது. ப்ரமாதமாவது ஆத்மஸ்வரூபத்தை உள்ளபடி அறியாமை. மோஹமென்பது ப்ராந்திஜ்ஞாநம் என்று ‘திங்மோஹம்’ முதலிய வ்யபதேசத்தால் ஏற்படுகிறது. ம்ருத்யுநிவ்ருத்திமாத்ரமேயல்ல, கார்யமும் நிவ்ருத்திக்கிறது—என்பதை ‘ந பச்யோ ம்ருத்யும் பச்யதி’ என்பதால் கூறுகிறார். ஏனெனில், இந்த வாக்யத்துக்குமேல், ‘ந ரோகம் நோத துக்கதாம்’ என்று ச்ருதிவசநமிருக்கிறது. ‘நபுந:’ இது முதலிய வாக்யம்—ப்ரஹ்மம் பார்க்கப்பட்டால் ம்ருத்யு முதலியது நிவ்ருத்திக்கிறது-என்பதைத் தெரிவிப்பதற்காக. ‘ந பச்யோ ம்ருத்யும்’ என்கிற இடத்தில்கூட ‘பச்ய’ சப்தத்திற்கு ப்ரஹ்மத்தைப்பார்ப்பவன் என்று அர்த்தம். ஏனெனில், ‘ததேகம் பச்யதி’ என்று அடுத்ததாக

உதாஹரிக்கப்பட்ட வாக்யத்தில் விஷயத்வம் காட்டப்பட்டிருப்பதால். 'ஸ ஸ்வராட்பவதி' கர்மவச்யனாக ஆகிறதில்லை என்று பொருள். 'ஸ்வராட் ஸ்வதந்த்ரோ விஜ்ஞேய:' (எவன் ஸ்வதந்த்ரனோ அவன் ஸ்வராட் என்று அறியத்தக்கவன்) என நிகண்டுகாரர்கள் சொல்லுகிறார்கள். 'தமேவம் வித்வாந்' என்கிற வாக்யத்தினால் நிர்விசேஷசிந்மாத்ரஜ்ஞாநதேவதாந்தரோபாஸநம் முதலான உபாயாந்தரவ்யாவ்ருத்தி ஸித்தித்தது எனெனில்,புருஷோத்தமோபாஸநமே உபாயமென்று சொல்லியிருப்பதால். அதனுடைய உபாஸநாரூபஜ்ஞாநமும் ஆத்மைக்யவிஷயமன்று. ஆனால் ப்ருதக்த்வவிஷயம் என்பதை 'ப்ருதகாத்மாநம்'என்பதால் காட்டுகிறார். மத்வா-அறிந்து. 'தத:' ப்ருதக்த்வஜ்ஞாநத்தினால், 'ஜுஷ்ட:' ப்ரீதிக்கு விஷயமாக்கப்பட்டவன். அநுக்ரஹிக்கப்பட்டவன் மோக்ஷத்தை அடைகிறான். என்று அர்த்தம். 'இத்யாதீநி வேதாந்தவாக்யாநி-என்று முந்தினதோடு அந்வயம்.

பாஷ்யம்:—

நநு ச ஸாங்கவேதாத்யயநாதேவ கர்மணாம் ஸ்வர்காதிபலத்வம், ஸ்வர்காதீநாம் ச க்ஷயித்வம், ப்ரஹ்மோபாஸநஸ்யாம்ருதத்வபலத்வம் ச ஜ்ஞாயத ஏவ, அநந்தரம் முமுக்ஷோர் ப்ரஹ்மஜிஜ்ஞாஸாயாமேவ ப்ரவ்ருத்திர்யுக்தா, கிமர்த்தா தர்மவிசாராபேக்ஷா ?

ஏவம் தர்ஹி சாரீரகமீமாம்ஸாயாமபி ந ப்ரவர்திதவ்யம்; ஸாங்கவேதாத்யயநாதேவ க்ருத்ஸ்நஸ்ய ஜ்ஞாதத்வாத் | ஸத்யம்; ஆபாதத: ப்ரதீதிர்வித்யத ஏவ, ததாபி ந்யாயாநுக்ருஹீதஸ்ய வாக்யஸ்யார்த்தநிச்சாயகத்வாதாபாதப்ரதீதோऽர்த்த: ஸம்சயவிபர்யயௌ நாதிவர்ததே, அதஸ்தந்நிர்ணயாய வேதாந்தவாக்யவிசார: கர்தவ்ய இதி சேத்; ததேவ தர்மவிசாரேऽபி கர்தவ்ய இதி ஸமாநம் ஹவாந்॥

அங்கங்களுடன் கூடின வேதாத்யயநத்தினாலேயே கர்மாக்கள் ஸ்வர்கம் முதலியவற்றை பலமாக உடையவைகள் என்றும், ஸ்வர்கம் முதலியவை அழிவுள்ளவைகள் என்றும், ப்ரஹ்மோபாஸநமானது மோக்ஷத்தை பலமாகக்கொண்டதென்றும், நிச்சயமாய் அறியப்படுகிறது. பிறகு முக்தியில் விருப்பமுள்ளவன் ப்ரஹ்மவிசாரத்திலேயே ப்ரவ்ருத்திக்கலாம். தர்மவிசாராபேக்ஷை எதற்காக?

என்றால், அப்படியாகில் சாரீரகமீமாம்ஸையிலும் ப்ரவ்ருத்திக்கக்கூடாது, ஸாங்கவேதாத்யயநத்தாலேயே எல்லாம் அறியப்பட்டிருப்பதால். ஸத்யம்—ஆபாதமான அறிவு இருக்கவே இருக்கிறதென்றாலும், ந்யாயத்தினால் அநுக்ரஹிக்கப்பட்டுள்ள வாக்யம் அர்த்தநிச்சாயகமாதலால் ஆபாதஜ்ஞாநத்தாலறியப்பட்டிருந்தபோதிலுங்கூட அந்த அர்த்தமானது ஸம்சயவிபர்யயங்களை

விலக்கமாட்டாது. ஆகையால், அதன் நிர்ணயத்தின் பொருட்டு வேதாந்தவாக்யவிசாரம் செய்யத்தக்கதென்றால், அப்படியே தர்ம விசாரமும் செய்யத்தக்கதென்று நீ கண்டுகொள்வாயாக.

ச்ருதப்ரகாசிகை —

உதாஹரிக்கப்பட்ட ஸ்பஷ்டமான அர்த்தத்துடன் கூடிய வாக்யமாத்ரத்தால் த்ருப்தியடைந்த ஒருவன் 'நநுச' என்று சோதநம் செய்கிறான். இவ்விடத்தில் முன்புள்ள வேறு சோத்யங்கள் கண்டோக்தமாய் இல்லாவிட்டாலும், அவைகளின் பரிஹாரம் கண்டோக்தமாக இருப்பதால் அந்த சோத்யங்கள் அபிப்ராயப்பட்டிருக்கின்றன. ஆகவே, 'ச' சப்தத்தால் அர்த்தஸித்தங்களான அவைகளோடு (அந்த சோத்யங்களோடு)கூட ஸமுச்சயம் தகுந்தது.

'ஸாங்க' காமஜ்ஞாநத்துக்கு பூர்வவ்ருத்தத்வம் சொல்லுபவனால்கூட ஸாங்காத்யயநம் அபேக்ஷிதமென்று அங்கீகரிக்கப்பட்டிருப்பதால் அதைவிட அதிகாம்சநிராகரணார்த்தமாக 'ஏவ'காரம். அத்யயநம் ஸாங்கமாகச்செய்யவேண்டியதாலும்,—அங்கங்கள் அர்த்தஜ்ஞாநத்துக்குக்காரணமாயிருப்பதாலும்,—மீமாம்ஸையை எதிர்பாராமலே ஸ்வர்கம் முதலியவைகள் கேவலகர்மபலங்களென்றும், அவை அழிவுள்ளவைகள் என்றும், ப்ரஹ்மோபாஸநம் அக்ஷயமான பலமுள்ளதென்றும் அறியப்படுகிறதென்று பொருள்.

'ப்ரஹ்மோபாஸநஸ்ய' இதுமுதலிய க்ரந்தம் த்ருஷ்டாந்தாபிப்ராயபரம். 'ஜ்ஞாயத ஏவ' என்கிற ஏவகாரமானது ஜ்ஞாதத்வஸம்ப்ரதிபத்தியை ஸூசிப்பிக்கிறது. ஜ்ஞாந ஸாமக்ரீ ஸித்தமாகவன்றோ இருக்கிறது—என்று அபிப்ராயம். அதனால் என்னவென்றால்,—'அநந்தரம' என்று தொடங்கிசொல்லுகிறார். கர்மாக்கள் அல்பாஸ்திர பலனுள்ளவைகள்—என்கிற ஜ்ஞாநத்தினால் மோக்ஷத்தில் விருப்பம் உண்டாவதின் பொருட்டன்றோ கர்மவிசாரம். அதை அபேக்ஷிக்காமலே அல்பாஸ்திரபலத்வஜ்ஞாநத்தினால முமுக்ஷுத்வம ஸித்திப்பதால் ப்ரஹ்ம ஜிஜ்ஞாஸையே செய்யத்தக்கது,—தர்ம விசாரத்தில் ப்ரயோஜநமில்லாமையால் என்று பொருள்.

'ஏவம' என்பதால பரிஹரிக்கிறா. 'ஏவம் தர்ஹி' உதாஹரிக்கப்பட்ட வாக்யமாத்ரத்தினால த்ருப்தியுள்ளவனாக ஆகிறாயேயாகில். 'க்ருத்ஸ்நஸ்ய' ப்ரஹ்மத்துக்குங்கூட என்று கருத்து. வேதாந்தவாக்யங்கள் கூட ஸ்புடமாகவன்றோ நம்மால் உதாஹரிக்கப்பட்டன. அவைகளுடைய அர்த்தமும மீமாமஸையை அபேக்ஷிக்காமல் அறியப்படுகிறது. ஆதலால் அநந்தஸ்திரபலஜ்ஞாநத்தின்பொருட்டு ப்ரஹ்மவிசாரம செய்யத்தக்கதல்லவென்று பொருள்.

'ஸத்யம'என்கிற பதம் அர்தாங்கீகாரத்திலே. ஆபாதப்ரதீதியில் அங்கீகாரம். ப்ரஹ்ம விசாரநைரபேக்ஷ்யத்தில் அநங்கீகாரம. 'ஆபாத' ஆபாதப்ரதீதி அஜ்ஞாநநிவ்ருத்திமாத்ரத்தினால் ஸம்சயவிபர்யயங்களை ஸஹிக்கிற ஜ்ஞாநம். ஸம்சயவிபர்யயங்களும காரணவாக்யங்களிலிருக்கிற ஸத், ப்ரஹ்ம, ஆத்மா, ஆகாச, ப்ராண, வைச்வாநர—முதலிய சப்தங்களால் அர்த்ததத்வம நிச்சயிக்கப்படாமலிருப்பதால், 'விஜ்ஞாநகந ஏவ ஏதேப்யோ பூதேப்யஸ்ஸமுத்தாய தாநயேவாநு விநச்யதி' (ஜீவன் இந்த பூதங்களிலிருந்து எழுந்து அவைகளையே அநுஸரித்து விநாசமடைகிறான்,) 'அஸத்வா இதமக்ர ஆஸித்' (இதுமுதலிய

அஸத்தாகவே இருந்தது.) இது முதலியவற்றால் ஆத்மாவுக்கு அநித்யத்வம் முதலியன அறியப்படுவதால் 'அந்நவாந் அந்நாதோ பவதி, மஹாந் பவதி ப்ரஜயா பசுபிர்ப்ரஹ்மவர்ச்சஸேந' இது முதலியவற்றால் அல்பாஸ்திரபலம் அறியப்படுவதாலும் உண்டாகக்கூடும்! அதனால் ஸாங்காத்யயநமாத்ரத்தால் அவ்விரண்டும் போகாததலால், அவைகளை விலக்குவது ந்யாயத்தினால் அநுஸரிக்கப்பட்ட வாக்யபலமாதலாலும், ப்ரஹ்மவிசாரம் செய்யத்தகுந்தது—என்று கூறப்படுமேயாகில் என்று அர்த்தம். 'பவாந்' உதாஹரிக்கப்படாத வாக்யாந்தரங்களையுங் கூட பர்யாலோசிப்பதில் ப்ரவ்ருத்திக்கிற நீ என்று கருத்து. 'தஸ்யைவ' இந்த ரீதியாக இவ்விடத்திலும் ஸம்சய விபர்யங்களின் நிராஸம் அபேக்ஷிதமென்று தெரிந்துகொண்டவனாக உதாஹரிக்கப்படாத வாக்யங்களைப்பார்க்கவேண்டுமென்று பொருள்.

"அக்ஷய்யம் ஹ வை சாதுர்மாஸ்யயாஜிந: ஸுக்ருதம் பவதி, பூர்ணாஹுத்யா ஸர்வாந் காமாநவாப்நோதி, ஸர்வாந் லோகாந் பசுபந்தயாஜ்யாபிஜயதி, அபாமஸோமமம்ருதா அபூம, அநந்தம் ஹ வா அபாரம் அக்ஷய்யம் லோகம் ஜயதி யோக்நிம் நாசிகேதம் சிநுதே, நாஸ்யேஷ்டா பூர்த்தே க்ஷீயதே. யோக்நிம் நாசிகேதம் சிநுதே" (சாதுர்மாஸ்யமென்கிற யாகத்தினால் தேவதாராதனம் செய்பவனுக்கு அக்ஷயமான ஸுக்ருதம் உண்டாகிறது. பூர்ணாஹுதியால் எல்லா அபீஷ்டங்களையும் அடைகிறான். பசுபந்தத்தினால் தேவதைகளை பஜிப்பவன் எல்லா லோகங்களையும் அடைகிறான். ஸோமபானம் பண்ணி மோக்ஷம் பெற்றவர்களாக ஆனோம். முடிவில்லாததும், அக்கரையில்லாததும், க்ஷயமில்லாததுமான உலகத்தை அடைகிறான், எவன் நாசிகேதம் என்கிற அக்நியை மந்த்ரத்தினால் ப்ரதிஷ்டை செய்கிறானோ) இது முதலியவைகள் 'அம்ருதத்வம் பஜந்தே, ஸோச்நுதே ஸர்வாந் காமாந், இமாந் லோகாந் காமாந்நீ காமரூப்யநுஸஞ்சரந்' (மோக்ஷத்தை அடைகிறார்கள். அவன் எல்லா அபீஷ்டங்களையும் அடைகிறான். வேண்டிய போகங்களை அனுபவிக்கிறவனாகவும், காமரூபியாகவும் இந்த உலகங்களில் ஸஞ்சரிக்கிறவனாகவும்) இது முதலிய ப்ரஹ்மவேதநபலவாக்யங்களோடு துல்யங்களான வாக்யங்கள் காணப்படுகின்றன. ஆகையால், உபநிஷத்வாக்யங்களில் போல, உதாஹரிக்கப்படாத வாக்யங்களில் ¶ ஸம்சய விபர்யயங்கள் அநேகம் இருப்பதால் அவைகளை விலக்குவதற்காக கர்மவிசாரம் செய்யத்தகுந்தது—என்று அர்த்தம்.

¶ ஸம்சயம்—ஸந்தேஹம். இது த்விகோடிகமாயும், சதுஷ்கோடிகமாயும் உண்டு. இது பாம்போ, அன்றோ! என்று உண்டாகும் ஸம்சயத்தில் பாவம் அபாவம் இரண்டும் விஷயமாயிருப்பதால் இது த்விகோடிகம். 'கட்டையோ! மனிதனோ!' என்று ஸம்சயமாயின் அது சதுஷ்கோடிகம். ஏனெனில்,—இங்கு கட்டை, அதன் அபாவம், மனிதன், அவனுடைய அபாவம்—நான்கும் விஷயமாக இருப்பதால்.

பூர்வபக்ஷ꞉

நநு ச ப்³ரஹ்மஜிஜ்ஞாஸா யதே³வ நியமேநாபேக்ஷதே, ததே³வ பூர்வவ்ருத்தம் வக்தவ்யம் | ந கர்மவிசாராபேக்ஷா,— ப்³ரஹ்மஜிஜ்ஞாஸாயா꞉ அதீ⁴தவேதா³ந்தஸ்யாநதி⁴க³தகர்மணோ(அ)பி வேதா³ந்தவாக்யவிசாரோபபத்தே꞉| கர்மாங்கா³ஶ்ரயாண்யுத்³கீ³தா²த்³யுபாஸநாந்யத்ரைவ சிந்த்யந்தே| தத³நதி⁴க³தகர்மணோ ந ஶக்யம் கர்துமிதி சேத், அநபி⁴ஜ்ஞோ ப⁴வாந் ஶாரீரகஶாஸ்த்ரவிஜ்ஞாநஸ்ய | அத்ர ஹி ஶாஸ்த்ரே அநாத்³யவித்³யாக்ருதவிவித⁴பே⁴த³த³ர்ஶநநிமித்தஜந்மஜராமரணாதி³ஸாம்ஸாரிகது³꞉க²ஸாக³ரநிமக்³நஸ்ய நிகி²லது³꞉க²மூலமித்²யாஜ்ஞாநநிப³ர்ஹணாயாத்மைகத்வவிஜ்ஞாநம் ப்ரதிபிபாத³யிஷிதம் | அஸ்ய ஹி பே⁴தா³வலம்பி³கர்மஜ்ஞாநம் க்வோபயுஜ்யதே, ப்ரத்யுத விரோத⁴ ஏவ, உத்³கீ³தா²தி³விசாரஸ்து கர்மஶேஷபூ⁴த ஏவ ஜ்ஞாநஸ்வரூபத்வாவிஶேஷாதி³ஹைவ க்ரியதே| ஸ து ந ஸாக்ஷாத் ஸங்க³த꞉, அதோ யத்³வ்யயாநம் ஶாஸ்த்ரம் தத³பேக்ஷிதமேவ பூர்வவ்ருத்தம் கிமபி வக்தவ்யம்|

பா⁴ஷ்யம் | தத³பேக்ஷிதஞ்ச கர்மவிஜ்ஞாநமேவ, கர்மஸமுச்சிதாத் ஜ்ஞாநாத³பவர்க³ஶ்ருதே꞉| வக்ஷ்யதி ச 'ஸர்வாபேக்ஷா ச யஜ்ஞாதி³ஶ்ருதேரஶ்வவத்' (ப்³ர. ஸூ. ௩. ௪. ௨௬) இதி— அபேக்ஷிதே ச கர்மண்யஜ்ஞாதே கேந ஸம்ப³ந்த⁴꞉, கேந நேதி விவேகோ ந ஶக்யதே ஜ்ஞாதும் | அதஸ்ததே³வ பூர்வவ்ருத்தம் ||

ப்ரஹ்மஜிஜ்ஞாஸையானது எதைத்தவறாமல் அபேக்ஷிக்கிறதோ அதே பூர்வவ்ருத்தம்—என்று இங்கு சொல்லத்தகுந்தது. ப்ரஹ்மஜிஜ்ஞாஸைக்கு தர்மவிசாராபேக்ஷை கிடையாது, வேதாந்தத்தை அத்யயநம் செய்தவனுக்கு கர்மஜ்ஞாநம் இல்லாமலிருந்த போதிலுங்கூட வேதாந்தவாக்யார்த்தவிசாரம் கூடுமாதலால். கர்மத்துக்கு அங்கமான உத்கீதாதி விஷயமான உபாஸநங்கள் இங்கேயே (வேதாந்தத்திலேயே) சிந்திக்கமுடியாதெனில், சாரீரகசாஸ்த்ரவிஜ்ஞாநத்தை நீ அறியாதவனாகிறாய். இந்த சாஸ்த்ரத்தில் அநாதியான அவித்யையினால் உண்டுபண்ணப்பட்ட பற்பல பேததர்சநத்தை நிமித்தமாகக்கொண்ட பிறப்பு, மூப்பு,

இறப்பு—முதலிய ஸாம்ஸாரிக துக்கமாகிற கடலில் அமிழ்ந்திருக்கிறவனுக்கு எல்லா துக்கங்களுக்கும் காரணமான மித்யாஜ்ஞாநநாசத்தின் பொருட்டு ஆத்மா ஒன்று-என்கிற ஜ்ஞாநம் ப்ரதிபாதிப்பதற்கு இஷ்டம். இதற்கு பேதத்தை அவலம்பித்திருக்கிற கர்மஜ்ஞாநம் எங்கே உபயோகப்படும். உபயோகப்படாதுமாத்ரமல்ல, நேர்விருத்தமே. உத்கீதம் முதலியவற்றின் விசாரமோவென்றால், கர்மாக்களுக்கு சேஷமாகவே இருந்தாலும் ஜ்ஞாநரூபத்வம் இதற்கு ஸாதாரணமாய் இருப்பதால் இவ்விடத்திலேயே செய்யப்படுகிறது. ஆனால், அது நேரான ஸங்கதமாகாது. ஆகையால், சாஸ்த்ரம் எதை ப்ரதானவிஷயமாக உடையதோ அவ்விஷயத்தினால் பூர்வவ்ருத்தம் அபேக்ஷிக்கப்பட்டிருக்கிறது—என்று சொல்லத்தகுந்தது.

(அர்யாங்கீகாரத்துடன் பாஸ்கரீயர்கள் எதிர்த்து உத்தரம் சொல்லுகிறார்கள்) உண்மை, (ஆனால்) அதினால் அபேக்ஷிக்கப்பட்டது கர்மஜ்ஞாநமே,—கர்மாவோடு ஸமுச்சயிக்கப்பட்ட ஜ்ஞாநத்தினால் மோக்ஷத்தை ச்ருதி சொல்லுவதால். மேலேயும் ஸூத்ரகாரர் சொல்லப்போகிறார்-"ஸர்வாபேக்ஷா ச யஜ்ஞாதிச்ருதேரச்வவத்" என்று அபேக்ஷிக்கப்பட்ட கர்மா அறியப்படாமலிருந்தால் எதோடு ஸமுச்சயம், எதோடு ஸமுச்சயமில்லை-என்கிற விபாகம் அறியமுடியாது. ஆதலால், அதே பூர்வவ்ருத்தம்.

ச்ருதப்ரகாசிகை:—

இவ்விதம் பலத்வாரா விடுவதற்காக கர்மஜ்ஞாநாபேக்ஷை காட்டப்பட்டது. பிறகு, ஸ்வரூபத்தால் க்ரஹிப்பதன்பொருட்டு தவறாமல் கர்மஜ்ஞாநாபேக்ஷை உளதென்பதைக் காண்பிப்பதற்காக, முமுக்ஷுவுக்கு நித்யமாக கர்மாபேக்ஷை வேண்டியதில்லை—என்கிற எதிரியின் பக்ஷத்தை உபந்யஸிக்கிறார்.

'நநுச' எது அவச்யம் விவக்ஷிதமோ, அதைத்தவிர மற்றதை விலக்குவதற்காக முதல் ஏவகாரம். அவச்யமாய் அபேக்ஷிக்கப்படாமலிருப்பது பூர்வவருத்தமாகக்கூடாது—என்பதற்காக இரண்டாவது ஏவகாரம். அதனால் என்ன? என்றால், 'ந யர்ம' என்று சொல்லுகிறார். எங்ஙனமெனில், 'அதீத' என்று கூறுகிறார். எவர்கள் ப்ரஹ்மவித்யாதிகாரிகளோ, அவர்கள் எல்லோருக்கும் அவச்யமாக அபேக்ஷிதமன்றோ நியமேந அபேக்ஷிக்கப்பட்டது. வேதாந்தமாத்ரத்தை அத்யயநம் செய்தவனுக்கோவெனில் அதிலேயே ஆபாதப்ரதீதியும், அறியவேண்டுமென்கிற விருப்பமும் உண்டாகும். அவனுக்கு கர்மவிஷயமான ஆபாதப்ரதீதி இல்லாமையால் கர்மவிசாரத்தில் நியமேந அபேக்ஷையில்லை' என்று பொருள். அன்றிக்கே,முழுவேதத்தையும் அத்யயநம் செய்திருந்தபோதிலுங்கூட பூர்வஜந்மஸுக்ருதவசத்தால் வேதாந்தவாக்யத்தினாலேயே புபுத்ஸை உண்டாகிறதெனில், அவனுக்கு

கர்மாபேக்ஷை இல்லையென்று அப்பொழுது 'அதீதவேதாந்தஸ்ய' என்கிற பதம் அயோகத்தை வ்யவச்சேதிக்கிறது—அந்யயோகத்தை வ்யவச்சேதிக்கிறதில்லை. முழுவேதத்தின் அத்யயநத்தினால் அபேக்ஷிக்கப்பட்ட வேதாந்தபாகமும் அத்யயநம் செய்யப்பட்டதே—என்று அர்த்தம். இவ்வண்ணம் விடுவதற்காகவும் கர்மா அறியத்தக்கதென்பது நிஷித்தம்.உபாதாநத்திற்காகவும் அறியத்தக்கதல்ல என்பதை உபபாதிப்பதற்காக வேதாந்த மாத்ரத்தை அறிய எண்ணமுள்ளவனுக்கும் கர்மவிசாராபேக்ஷையை 'கர்மாங்க' என்பதால் சங்கிக்கிறார். ஒரு *ஸாமாவுக்கு ஐந்து பாகங்கள் உள்ளன. அவைகளுக்கு வரிசையாக-ப்ரஸ்தாவம், உத்கீதம், ப்ரதீஹாரம், உபத்ரவம், நிதநம்— என்று பெயர். அந்த ஐந்து பக்திகளில் ப்ரஸ்தாவமானது ஹிங்காரபூர்வமாய் காநம் செய்யப்படுகிறது. உத்கீதமானது ப்ரணவபூர்வமாக காநம் பண்ணப்படுகிறது. அதில் ஐந்துவித ஸாமோபாஸனம் ஒரு இடத்தில் விதிக்கப்படுகிறது. "லோகேஷு பஞ்சவிதம் ஸாமோபாஸீத" என்று ஓரிடத்தில் ஸாமாவின் அவயவங்களான ஐந்துகளில் ஒவ்வொரு அவயவோபாஸனம் விதிக்கப்படுகிறது. அதில் உத்கீதத்திற்கு அவயவமாக இருக்கிற ப்ரணவத்தின் உபாஸனம் விதிக்கப்படுகிறது. "ஓமித்யேததக்ஷரமுத்கீதமுபாஸீத" என்று (கர்மாங்காச்ரயாணி) கர்மாவுக்கு அங்கபூதமான ‡ உத்கீதாதி விஷயங்கள். கர்மாவை அறியாதவனுக்கு உத்கீதாத்யுபாஸன சிந்தனம் செய்வது முடியாதென்று ப்ரதிஜ்ஞை. 'கர்மாங்காச்ரயாணி' என்பது ஹேது கர்பமான விசேஷணம். கர்மாங்கங்களான உத்கீதம் முதலியவற்றை ஆச்ரயித்த உபாஸனங்கள் என்று சொல்லப்படுமேயாகில் உதகீத சப்தம் பயனற்றதாக ஆகும். உபாஸன மாத்ரத்துக்கு பக்ஷீகாரமும் அறியப்படுகிறது. ஆகையால், இங்கே வசனவ்யக்தி எவ்வாறு சொல்லப்பட்டதோ அதே சரி. கர்மா அறியப்படாமலிருந்தால் உத்கீதாதி விஷயமான உபாஸனசிந்தையானது செய்யமுடியாததலால் கர்மவிசாரம் அபேக்ஷிக்கப்பட்டது என்று கூறப்படுமேயாகில் என்று அர்த்தம். நிந்தையுடன் பரிஹரிக்கிறார். (அநபிஜ்ஞ இதி) சாஸ்த்ரத்தில் ப்ரதானமாக ப்ரதிபாதிக்கத்தக்க ஜ்ஞானம் இது என்று உன்னால் அறியப்படவில்லை என்று பொருள்.

இதில் ப்ரதானமாக ப்ரதிபாதிக்கத்தக்க ஜ்ஞானமெது என்பதற்கு மறுமொழி கூறுகிறார் 'அஸ்மிந்நிதி'. 'பேத:' அறிகிறவன், அறியத்தக்கது, அறிவு என மூன்று வகைப்பட்டுள்ளது. 'பலவகைப்பட்டிருத்தல்' அதின் உள் பிரிவுகளின் பாஹுள்யம், இவ்வாறு பற்பல பேததர்சனத்திற்குக்காரணம் அவித்யை. அந்த அவித்யைக்கு ஹேது எது என்கிற அநவஸ்தையின் பரிஹாரத்திற்காக அநாதி சம்பதம். இவ்வண்ணம் அவித்யையினால் உண்டுபண்ணப்பட்ட பேததர்சனத்தைக்காரணமாக உடைய ஜன்மஜராமரணம் முதலியதே ஸாம்ஸாரிகதுக்கம். ஆதி சப்தத்தால் நரகம், கர்பவாஸம், முதலியது வாங்கத்தக்கது. ஸம்ஸாரமாவது ப்ருக்ருதி ஸம்பந்தம். அதிலிருந்து உண்டானது ஸாம்ஸாரிகம். அது விலக்கத்தக்கதென்பதற்காகவே துக்கரூபமாகச்சொல்லப்பட்டது.

* ஸாமா—கானப்ரதானமாயுள்ள ருக்.

‡ உத்கீதம்—உத்கீதத்தில் அவயவமான ப்ரணவம். இந்த ப்ரணவத்தில் ப்ரஹ்ம த்ருஷ்டி பண்ணி உபாஸனை விதிக்கப்பட்டிருக்கிறது. இதுதான் ப்ரஹ்ம கோபாஸனம். 'ஸாகர'சப்தமானது அதின் முடிவின்மையைக்காட்டுகிறது 'நிமக்நஸ்ய' என்பதால் துக்க நிவ்ருத்திக்குக்காரணமான உபாயத்தின் அபேக்ஷையானது ஹேதுவாகக்கூறப்பட்டது; அதிகாரஸ்வரூபம் சொல்லப்பட்டது.

ப்ரயோஜனத்தைச்சொல்லுகிறார் ''கில என்பதால். மித்யாஜ்ஞானம்-ப்ராந்திஜ்ஞானம்; 'துககஜன்மப்ரவ்ருத்திதோஷமித்யாஜ்ஞானங்களுள் மேல் மேலுள்ளவைகளுக்கு அபாயம் வரின் அதற்கு அடுத்ததற்கு அபாயம் வருவதால்' என்ற பொருளுள்ள வாக்யத்தில் ப்ர யோகமிருப்பதால். ப்ராந்திஜ்ஞானம் என்பது பேததர்சனம். அன்றிக்கே, மித்யாபூதமான அஜ்ஞானம் மித்யாஜ்ஞானம், ஜ்ஞானத்தால் நிவர்த்திகத்தக்கதாக இருப்பதின்பொருட்டு மித்யா சப்தம் அதினுடைய நாசத்திற்காக. அதினுடைய நாசமே மோக்ஷமென்று அபிப் ப்ராயம்.

அதற்கு ஸாதனம் எது என்றால்சொல்லுகிறார்'ஆத்மைகத்வ விஜ்ஞானம்'என்று.ஸர்ப் பப்ரமத்துக்கு ரஜ்ஜுவின் யாதாத்ம்யஜ்ஞானமன்றோ நிவர்த்தகம். அதே ஒழிய, காம விசேஷமாகாது. இவ்வண்ணம், பேததர்சனம் அவித்யையினால் உண்டுபண்ணப்பட்டிருப் பதினால் ஐக்யஜ்ஞானமே அதற்கு நிவர்த்தகமென்று வேதாந்தவாக்யங்களுக்கு அதிலேயே தாத்பர்யமென்று பொருள். அதனால் என்னவென்றால் சொல்லுகிறார 'அஸ்யஹி' என்று. 'க்வோபயுஜ்யதே' ஓரிடத்திலு மில்லை. ஜ்ஞானத்தினுடைய ஸ்வரூபோத்பத்தியிலாவது, அதினுடைய பலோத்பத்தியிலாவது, ஜ்ஞானோத்பத்திஸாதனாநுக்ரஹத்திலாவது உபயோ கப்படுகிறதில்லை என்று அர்த்தம். உபயோகமில்லை என்பது மாத்ரமல்ல. ப்ரதிகூலபலத் வங்கூட என்று சொல்லுகிறார் 'ப்ரத்யுத' என்பதால். த்வைதவாஸனையை உண்டுபண்ணு வதாலென்று அபிப்ராயம்.

எனினும், உபநிஷத்துகளில் பழக்கப்பட்டிருப்பதாலும் ப்ரஹ்மமீமாம்ஸையில் நிரூ பிக்கப்படாநின்றிருப்பதாலும் உத்கீதாத்யுபாஸனம் ப்ரஹ்மவித்யையினால் அபேக்ஷிக்கப் பட்டிருக்கிறதென்று உத்கீதாதி விசாரம் நேராக ஸங்கதமாகிறதென்றால் சொல்லுகிறார் 'உத்கீதாதி' என்று. அங்ஙனமாகில், உபநிஷத்துகளில் அதின் அத்யயனமும், ப்ரஹ்மவிசா ரத்தில் அதின் விசாரமும் எவ்வாறு பொருந்துமெனில் சொல்லுகிறார் ''ஜ்ஞானஸ்வரூபத் வாவிசேஷாதிதி.''ஜ்ஞானரூபத்வமென்கிற ஸ்வபாவத்தின் ஒற்றுமையினால் புத்திஸ்தமாக இருப்பதால் செய்யப்பட்டது; ப்ரதானமான அர்த்தத்துக்கு உபயோகியாக செய்யப்பட வில்லை என்றுபொருள். அதினால் என்-என்கிற ப்ரச்நத்துக்கு உத்தரம் 'ஸத்விதி.' து-சப் தங்கள் இரண்டும் இரண்டு ஸந்தேஹங்களை நிவ்ருத்திக்கின்றன. ப்ரதிபாதிக்கத்தக்க ப்ரதானவஸ்துவுக்கு உபயுக்தமாக இருப்பதற்கே பூர்வவ்ருத்தத்வத்தை நிகமனம் செய்கி றார்—அத:என்று. 'கிமபி' கர்மவிசாரத்தைக்காட்டிலும் வேறு என்று கருத்து. ப்ரதான மான அர்த்தத்துக்கு உபயோகியாக இருப்பதுபற்றி ஏற்படும் 'ஸங்கதி' ஸாக்ஷாத்ஸங்கதி. ஏதோ ஒரு ஆகாரத்தால் ஸாம்யமிருப்பதுபற்றி புத்திஸ்தமாக இருத்தல் ப்ரஸங்காத்ஸங் கதி. ஆதலால், ப்ராஸங்கிகமான உத்கீதாத்யுபாஸனசிந்தையினால் அபேக்ஷிக்கப்பட்டிருக் கிறதும், ப்ரதாநார்த்தவிருத்தமாகவுமிருக்கிற கர்மவிசாரத்திற்கு பூர்வவ்ருத்தத்வம் தகாது. ஆனால், ப்ரதானமாகப்ரதிபாதிக்கத்தக்க ஆத்மைகத்வவிஜ்ஞானத்தால் அபேக்ஷிக்கப்பட்ட பூர்வவ்ருத்தம் சொல்வதற்குத்தக்கது எனறு சொல்லப்பட்டதாக ஆகிறது.

இவ்விடத்தில் பாஸ்கரீயர்கள் எதிர்வாதம் செய்கிறார்கள்:—'பா஢மிதி' பா஢ம் என் பது பாதி அங்கீகாரத்தைக்காட்டுகிறது. சாஸ்த்ரம் எதை ப்ரதானமாகக்கொண்டிருக் கிறதோ, அதினால் அபேக்ஷிக்கப்பட்டதே பூர்வவ்ருத்தம் என்கிற இவ்வளவு மாத்ரத்தில் அங்கீகாரம். 'ததபேக்ஷிதஞ்ச' என்பது ப்ரதிஜ்ஞா—உன்னால் எது அபேக்ஷிக்கப்பட்ட தல்லவென்று சொல்லப்பட்டதோ அதே அபேக்ஷிக்கப்பட்டிருக்கிறதென்பது ஏவகாரத் தின் அபிப்பராயம். எதனாலென்றால், சொல்லுகிறார் 'கர்மஸமுச்சித' என்று. ஸமுச்சித சப்தமானது சேர்ந்திருத்தலென்கிற அர்த்தத்தை மாத்ரம் உணர்த்துகிறதே ஒழிய

† ஸமுச்சயபரமல்ல, "அஸமத்வித்யா, ஆத்மவித்யாமேசது ஸமுச்சிதம்யாபத்தாத்" என்கிற இடத்தில் ஸமுச்சித்யபதம்போல. கர்மஜ்ஞானாப்யாம் என்று நிர்தேசிக்கப்படவில்லை. பின்னேயோவெனில, 'கர்மஸமுச்சிதாத்ஜ்ஞாநாத' என்று விசேஷணவிசேஷ்ய பாவத்தால் நிர்தேசிக்கப்பட்டிருக்கிறது. அதனால், ஜ்ஞானப்ராதான்யம் அறியப்படுகிறது. கர்மத்தை அங்கமாகக்கொண்ட ஜ்ஞானத்தாலென்று அர்த்தம். ச்ருதியும் 'யஜ்ஞேநதாநேந' இது முதலியது விவக்ஷிக்கப்பட்டிருக்கிறது. காமா வித்யாங்கமென்றால, ஸூத்ரகாரரின் ஸம்மதியைக்காட்டுகிறார் 'வக்ஷ்யதிசேதி.' சகாரம் ப்ரதிபாதகஸமுச்சயத்தில். அங்கமாக இருப்பதினால் கர்மாவினுடைய அநுஷ்டானமபேக்ஷிக்கப்பட்டதாக இருக்கும்; அதின் ஜ்ஞானத்துக்கு எவ்வாறு பூர்வபாவித்வம்? கர்மஜ்ஞானமானது ப்ரஹ்மவிசாரத்துக்குப்பிந் தினதாக ஏன் ஆகக்கூடாது?—என்றால சொல்லுகிறார் 'அபேக்ஷதேசேதி'. ப்ரயாஜம் முதலியதுபோல், நிஷ்பலமான யாகத்துக்கு பலமுண்டாகிற நிலைமையில் அநுக்ராஹக மாக இருப்பதால், அங்கதயா அபேக்ஷை விவக்ஷிக்கப்பட்டிருக்கிறது. மூன்றாவது அத்யா யத்தில், நான்காம்பாதத்தில், ஸமாவ்ருத்தனாக இருந்துகொண்டு விவாஹஞ்செய்து கொள் ளாதவன், மனையாளை இழந்தவன் முதலியவர்களுக்கும், ஆச்ரமவிசேஷத்திலிருப்பவர்களு மான ப்ரஹ்மவித்யாநிஷ்டர்களுக்கும் காமங்களில், அனுஷ்டிக்கத்தக்கது, தகாதது என்கிற பாகுபாடானது நிரூபிக்கப்படப்போகிறபடியால் அதை அபிப்ராயப்பட்டு சொல்லப்பட் டது 'கேந முச்சய',கேந ந' என்று. அல்லது, நித்யநைமித்திகங்களுக்கு ஸமுச்சயம், காம்ய நிஷித்தங்களுக்கு ஸமுச்சயம் கிடையாதென்கிற விபாகம் அறியப்படுகிறதில்லை என்று பொருள்.

இது திரண்டபொருள்—பதார்த்தஜ்ஞானத்தை முன்பட்டதாகவன்றோ வாக்யார்த் தஜ்ஞானமுண்டாகிறது. "யக்ஞேந'தாநேந" இது முதலிய வாக்யத்தினால் யக்ஞம் முத லிய கர்மாக்கள் பாதார்த்தமாக இருப்பதாலும், வாக்யார்த்தஜ்ஞானம் பதார்த்தஜ்ஞான த்தை முன்னிட்டிருப்பதாலும், யக்ஞம் முதலிய கர்மாக்களின் விசாரம் முந்தியது. 'வ்ரீஹீ நவஹந்தி' இதுமுதலிய 'வாக்யார்த்தஜ்ஞானமானது, வரீஹிமுதலான பதார்த்தஜ்ஞானம் இல்லாவிடில் உபபன்னமாகாதன்றோ, வாக்யார்த்தமானது பதார்த்தஸம்ஸர்கரூபமாக இருப் பதால்.

'பசுவைக்கொண்டுவா' என்கிற வாக்யத்தினால் வ்யுத்பத்தியுண்டாகுங்கால் 'பசுவைக் கொண்டுவருதல்' என்கிற வாக்யார்த்தத்தை முதலில் அறிந்த § ஆவாபோத்வாபமுகத் தால் பிறகு பதார்த்தஜ்ஞானமுண்டாவதால் வாக்யார்த்தஜ்ஞானம் பதார்த்தஜ்ஞானத்தை அவஶ்யம் முன்னிட்டே வருகிறதென்பது கிடையாது என்றால்,—

உத்தரம் கூறப்படுகிறது. வ்யுத்பன்னசப்தத்தினால் அர்த்தஜ்ஞானமுண்டாகும் ஸமயத்தில் எல்லாவிடத்திலும் பாதார்த்தஜ்ஞானத்தை முன்னிட்ட வாக்யார்த்தஜ்ஞான முண்டாகிறது. வயுத்பத்திதசையிலோவென்றால், ப்ரமாணாந்தரத்தாலோ, சப்தாந்தரத் தாலோ வாக்யார்த்தஜ்ஞானம் முந்தி உண்டாகலாம். அதை ஒழிய அதே சப்தத்தாலல்ல, அதற்கு அர்த்தத்தோடு ஸம்பந்தக்ரஹமில்லாமைபற்றி போதகத்வம் இல்லாமையால். வ்யுத்பத்தியில்கூட வாக்யார்த்தஜ்ஞானம்முந்தியிருக்கவேண்டுமென்கிற நியமமில்லை,-பதாந் தரஸம்பந்தமில்லாமலே இருக்கிற 'அம்பாதாதமாதுல' முதலிய பதங்களுக்கு முதன்மை

† ஸமுச்சயம—ஸமப்ராதான்யமுள்ள இரண்டு. அல்லது, அதற்குமேல்பட்டிருக்கிற வஸ்துக்களின் சேர்க்கை (அல்லது) அநேகங்களின் சேர்கை.

§ ஆவாபம்—சேர்த்துக்கொள்ளுதல்.

¶ உத்வாபம்—தள்ளுதல்.

யாக அர்த்தத்தில் வ்யுத்பத்தி காணப்படுவதால், இந்த சப்தத்துக்கு இது அர்த்தம் என்கிற வ்யுத்பத்தியில், வாக்யார்த்தஜ்ஞானத்துககு பூர்வபாவம் இல்லாமையாலும். இதே வாக்யத்தில் யஜ்ஞம் முதலிய சப்தங்களுககு வ்யுத்பத்தி ஸம்பவிக்கிறதென்பதில்லை, வேதநேச்சாநிஷ்பத்திரூபமான வாக்யார்த்தம் அப்ரத்யக்ஷமாக இருப்பதால் கவாநயனம் முதலியவற்றில்போல், வ்யுத்பத்தி உபபன்னமாகாது. அதனால் பதார்த்தஜ்ஞானத்தை முன்னிட்டு வாக்யார்த்தஜ்ஞானமென்று கூறப்பட்டது.

'யாஜ்ய' என்கிற பதந்தொடங்கி மேலுள்ள வாக்யங்கள், ஸித்தாந்தியினுடைய சோத்ய ப்ரதானங்களென்று வ்யாக்யாதாக்களால், வ்யாக்யானிக்கப்பட்டிருக்கின்றன. அப்பொழுதும் பதார்த்தவாக்யார்த்தபாவமானது க்ரமவிசேஷணத்திற்கு ஹேதுவாக விவக்ஷிக்கப்பட்டிருக்கிறது. மேலும், "அபேக்ஷிதேச" என்பதனால் அங்கமாக அபேக்ஷிக்கப்பட்டிருக்கிறதென்கிற விவக்ஷையிருப்பதாலும், கர்மாக்கள் ஜ்ஞானத்துக்கு உத்பாதகங்களாக இருப்பதுபற்றி அதற்கு அங்கங்களானபடியால், உத்பாத்யத்திற்கும் உத்பாதகாத்திற்கும் பௌர்வாபர்யம் நியதமாதலாலும், விசாரவிஷயங்களான கர்மஜ்ஞானங்கள் இரண்டுக்கும் பௌர்வாபர்யம் இருப்பதால் அதற்கு சேஷமாக இருக்கிற விசாரங்கள் இரண்டுக்கும், அந்த க்ரமத்தை அடைந்திருத்தல் ந்யாயமென்று கருத்து. † சேஷமாக இருப்பது § சேஷிக்ரமத்தைஅனுஸரித்தே இருக்குமென்பது ந்யாயஸித்தமன்றோ! உதாஹரணம் 'ஸாரஸ்வதௌ ஹோமௌ பவத:' என்று ஸாரஸ்வதஹோமங்கள் இரண்டும் ஒரே ஸமயத்தில் உண்டாயிருந்தபோதிலுங்கூட "யாஜ்யாபுரோநுவாக்யா" மந்த்ரங்களை அனுஸரித்து ஸரஸ்வதீயாகம் முந்தியும், ஸாரஸ்வதயாகம் பிந்தியும் ஏற்படவேண்டியதாக ஆக, அவைகளின் அங்கங்களுக்கும் அந்த க்ரமத்தினாலேயே அநுஷ்டானம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறாப்போல த்ருஷ்டாந்தத்தில். தார்ஷ்டாந்திகத்திலும் சேஷிகளுக்கு க்ரமநிச்சாயக ஹேது வைஷம்யமாத்ரமே, அவ்விரண்டுக்கும் க்ரமம் நிச்சயிக்கப்பட்ட பிறகு சேஷத்திற்கு சேஷிக்ரமாநுஸரணம் அங்குமிங்கும் ஸமானம்.

ஆகவே விசாரத்தைக்குறித்து உபாஸனம் சேஷியாகயிருப்பதால், மூன்றாவது அத்யாயத்தில் செய்யப்பட்டிருக்கிற உபாஸனசிந்தனத்திற்கு மாத்ரம் காமவிசாரத்தை அபேக்ஷித்து பிந்தியிருத்தல் வேண்டும் என்றும் சொல்லக்கூடாது. வித்யாவிஷயசிந்தனமும் அவைகளின் பலசிந்தனமும் அதனாலபேக்ஷிக்கப்பட்டிருப்பதால் ப்ரஹ்மமீமாம்ஸை முழுவதும் கர்மவிசாரத்திறகுப்பிறகுதான் இருக்கவேண்டியதாக ஏற்படுகிறது. நிகமநம் செய்கிறார். 'அத:' என்று யாஜமென்கிற சப்தத்தை முதலாகக்கொண்டக்ரந்தமானது ஸித்தாந்தியின் சோத்யபரமாக இருந்தாலும் யாஸ்கரமதத்தில் நோக்குள்ளதென்று சொல்வது உசிதம்; "கர்மஸமுச்சிதாத் ஜ்ஞாநாதபவர்கச்ருதே:" என்கிற இந்த க்ரந்தம், யாஸ்கரபாஷ்யத்தில் இருப்பதாலும், அங்கபாவம் அவனால் ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதால் அது விஷயமான ஸூத்ரோபாதனத்திற்கு விரோதமில்லாமையாலும். சப்தத்தாலும் அர்த்தத்தாலும் ப்ரத்யபிஜ்ஞை வருவதால் ஸித்தாந்திசோத்யமும் அதில் அந்தர்பூதமாவதாலும் யாஸ்கர பக்ஷத்தையும், யாதவப்ரகாசபக்ஷத்தையும் ஆதாரமாகப்பற்றி 'யாஜ' மென்கிற பதத்தை முதலில்கொண்ட க்ரந்தத்தினால் பக்கத்திலிருப்பவன் சோதநம் செய்கிறானென்று நிர்வாஹம் செய்வது ஸாம்ப்ரதாயிகமாகும்.

---

† சேஷம் - அப்ரதானம்

§ சேஷி - ப்ரதானம்

அதில் இவ்வண்ணம் யோஜனை—'கர்மஸமுச்சிதாத்' என்பதினுல் ஸமஸமுச்சயம் விவக்ஷிக்கப்பட்டது. கர்மத்தோடு ஸமுச்சயிக்கப்பட்ட ஜ்ஞானத்தால் என்று விசேஷண விசேஷ்ய பாவத்தால் நிர்தேசம் செய்ததானது ஜ்ஞானத்திற்கு மோக்ஷோபாயத்வப்ரஸித்திப்ராசுர்யமடியாக. ச்ருதியும் 'வித்யாஞ்சாவித்யாஞ்ச' இது முதலியது. இந்த வாக்யத்திலுள்ள ம்ருத்யு சப்தமானது உபேயப்ராப்திவிரோதியான கர்மாவைச்சொல்லுகிறது. ப்ரதிபந்தநிவ்ருத்தி, ப்ரஹ்மப்ராப்தி இவ்விரண்டும் ஸாத்யம்; க்ரமேண கர்ம,ஜ்ஞாநம் ஸாதகங்களென்று யாதவப்ரகாசமதஸ்தர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆகையால், வித்யாஞ்ச' என்கிற வாக்யத்தில் பூர்வகண்டம் ஸாதனத்வித்வ ப்ரதானமானது, 'வித்யாஞ்சா உத்தரகண்டமோ என்றால் ஸாத்யத்வித்வபரமென்று அவர்களுடைய நிர்வாஹம்.

'வக்ஷ்யதிசேதி'ச சப்தமானது ப்ரதிபாதிக்கப்பட்ட விஷயத்தினுடைய ஸமுச்சயத்தில் அங்கபாவத்தையும் சொல்லப்போகிறார் என்று அர்த்தம். ஜ்ஞானோத்பத்திக்குப்பிறகு கர்மாவுக்கு ப்ரஹ்மப்ராப்திக்கு ப்ரதிபந்தகமாக இருப்பவைகளை விலக்கும் திறமையும், ஜ்ஞானோத்பத்திக்கு முன் கர்மாவுக்கு ஜ்ஞானோத்பாதகத்வசக்தியிருப்பதால் அதற்கு அங்கத்வமுமென்றல்லவோ அவர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. அங்கத்வப்ரதிபாதகமான ஸூத்ரத்தை எடுக்கிறார் 'ஸர்வாபேக்ஷேதி.' ஸர்வாபேக்ஷா என்கிற ஸூத்ரம் அங்காங்கிபாவத்தைக்காட்டுகிறது. 'ஸஹகாரித்வேநச' என்கிற, ஸூத்ரமானது ஸமுச்சய ப்ரதிபாதகமென்றல்லவோ அவர்களுடைய ப்ரக்ரியை. அங்கபாவததிலும், ஸமுச்சயத்திலும் ச்ருதிவாக்யமும், ஸூத்ரமும் உதாஹரிக்கத்தக்கதாக இருந்தபோதிலும், க்ரந்தலாகவத்திற்காக ஸமுச்சயத்தில் ச்ருதியும், அங்கபாவவிஷயத்தில் ஸூத்ரமும் உதாகரிக்கப்பட்டது. அங்கபாவத்தை ப்ரதிபாதிக்கிற வாக்யங்களை விஷயமாகக்கொண்ட ஸூத்ரத்தை எடுத்ததினால் பாஸ்கரமதமும் அவலம்பிக்கப்பட்டதாக ஆகிறது. இவ்வண்ணம் இரண்டுவிதமாக கர்மாவின் அபேக்ஷை காட்டப்பட்டது. அதனாலென்னவென்றால் சொல்லுகிறார் 'அபேக்ஷிதே'. ஸமப்ராதான்யத்தினாலும், அங்கபாவத்தாலும், அபேக்ஷிக்கப்பட்டிருக்கிற என்றுபொருள். மற்றதெல்லாம் முன்போல. என்றாலும், யாதவப்ரகாசமதத்தில் கர்மவிசாரத்திற்கு பூர்வவ்ருத்தத்வம் சொல்லப்படவில்லை. எனினும், ஸமுச்சயத்தாலும், அங்கபாவத்தாலும் கர்மஜ்ஞானாபேக்ஷித்தவமென்று அவனால் உபபாதிக்கப்பட்டிருப்பதால் அவ்வளவு மாத்ரத்தை ஆதாரமாகக்கொண்டு இரண்டு மதங்களையும் அவலம்பித்து சோதனம் செய்கிற பக்கத்திலிருப்பவனால் பூர்வவ்ருத்தத்வத்தை ஆபாதநம் செய்தல் வாயிலாக சோதநம் செய்யப்பட்டதென்றதனால் நிகமனக்ரந்தவிரோதமில்லை. ஸமுச்சய சப்தத்தை ப்ரதானமாக அந்வயிப்பதில் ஸ்வாரஸ்யமிருப்பதாலும், அங்கத்வபரமான ஸூத்ரத்தை எடுத்திருப்பதினால் அதற்குப்பிறகு ஸாத்யத்வத்வம், ஸாதனத்வத்வம்—இரண்டும் நிராகரிக்கப்படப்போகிறபடியாலும் இரண்டு மதங்களை அவலம்பித்து சோதநம் செய்யப்பட்டதென்று பூர்வாசார்யர்களால் நிர்வாஹம் செய்யப்பட்டது.

भाष्यम्:—

नैतद्युक्तम्; सकलविशेषप्रत्यनीकचिन्मात्रब्रह्मविज्ञानादेवाविद्यानिवृत्तेः। अविद्यानिवृत्तिरेव हि मोक्षः। वर्णाश्रमविशेषसाध्यसाधनेतिकर्तव्यताद्यनन्तविकल्पास्पदं कर्म सकलभेददर्शननिवृत्तिरूपाज्ञाननिवृत्तेः कथमिव साधनं भवेत्। श्रुतयश्च कर्म

णां नित्यत्वमेव च मोक्षविरोधित्वं, ज्ञानस्यैव मोक्षसाधनत्वं च दर्शयन्ति — "अन्तवदेवास्य तद्भवति" "तद्यथेह कर्मचितो लोकः क्षीयत एवमेवामुत्र पुण्यचितो लोकः क्षीयते." "ब्रह्मविदाप्नोति परम्" "ब्रह्म वेद ब्रह्मैव भवति." "तमेवं विदित्वातिमृत्युमेति." इत्याद्याः। यत्तु विविदिषायां यज्ञादिकर्मापेक्षा [illegible] तदप्य[illegible] विविदिषोत्पत्त्यपेक्षया [illegible]ते, न फलोत्पत्तौ; विविदिषन्ति श्रवणात्। विविदिषायां जातायां ज्ञानोत्पत्तौ शमादीनामेवान्तरङ्गसाधनत्वं श्रुतिरेवाह — "शान्तो दान्त उपरतस्तितिक्षुः समाहितो भूत्वात्मन्येवात्मानं पश्येत्" इति।

இது சரியல்ல,—ஸகலமான விசேஷங்களுக்கும் ப்ரதிபடமாகவும், ஜ்ஞானமாத்ரஸ்வரூபமாகவுமிருக்கிற ப்ரஹ்மவிஜ்ஞானத்தினலேயே அவித்யையானது விலகிவிடுவதால். அவித்யையின் நிவ்ருத்தியே யல்லவோ மோக்ஷம். வர்ணவிசேஷம், ஆச்ரமவிசேஷம் ஸாத்யம், ஸாதனம், இதிகர்த்தவ்யதை முதலிய அந்தமில்லாத பேதங்களுக்கு ஆதாரமாக இருக்கிற கர்மாவானது ஸகலபேதஜ்ஞானநிவ்ருத்திரூபமான அஜ்ஞானநிவ்ருத்திக்கு எவ்வாறு ஸாதனமாகும். ச்ருதிகளும் கர்மாக்கள் அநித்யபலத்தைத் தருவதால் அவைகளுக்குமோக்ஷவிரோதித்வத்தையும்,ஜ்ஞானத்துக்குமோக்ஷஸாதனத்வத்தையும் காட்டுகின்றன 'இவனுக்கு கர்மத்தால் அடையப்பட்ட உலகம் முடிவுள்ளதாகவே ஆகிறது.' 'எவ்வாறு இவ்வுலகில் க்ருஷிமுதலிய கர்மாக்களால் தேடப்பட்ட நெல்முதலிய பலம் க்ஷயமுள்ளதோ, இவ்வாருகவே மறுமையில் புண்யத்தினுல் தேடப்பட்ட ஸ்வர்க்கம் முதலியபலனும் க்ஷயமுள்ளதே.' 'ப்ரஹ்மத்தை அறிந்தவன் உத்தமமான பதத்தை அடைகிருன்.' 'ப்ரஹ்மத்தை அறிந்தவன் ப்ரஹ்மமாகவே ஆகிருன்' 'அந்த ப்ரஹ்மத்தையே அறிந்து அவித்யைத்தாண்டுகிருன'—என்கிற இதுமுதலியவைகள். வித்யையானது யஜ்ஞம்முதலிய கர்மாக்களை அபேக்ஷித்திருக்கிறதென்று கூறப்பட்டது. அதுவும்—த்வைதவாஸனஜனகத்வாநித்யபலத்வரூபவஸ்து விரோதத்தாலும், ஸக்ப்ரத்யயாந்தஜிஜ்ஞாஸாபதகத ச்ருதியின் அக்ஷரங்களின் பர்யாலோசனத்தாலும அக்

த:கரணத்திற்கு தெளிவையுண்டுபண்ணி அதன் வாயிலாக ப்ரஹ்மத்தை அறியவேண்டுமென்கிற இச்சையை உண்டுபண்ணுவதில் உபயோகப்படுகிறதில்லை, விவிதிஷந்தி என்கிற ச்ருதி கூறுவதால். விவிதிஷை உண்டாய்விட்டால் ஜ்ஞானோத்பத்தியில் சமம், தமம் முதலியவைகளே அந்தரங்கோபாயங்கள் என்பதை ச்ருதியே கூறுகிறது. "சாந்தோ தாந்த உபரதஸ்திதிக்ஷுஸ்ஸமாஹிதோ பூத்வா ஆத்மந்யேவாத்மானம் பச்யேத்" (வெளி இந்த்ரியங்களையும் மனதையும் ஒடுக்கினவனாகவும், விஷயங்களினின்று ஓழிவடைந்தவனாகவும், பொறுமையுள்ளவனாகவும், ஸமாதானமுள்ளவனாகவுமாய் ஆத்மாவினிடத்திலேயே ஆத்மாவைப்பார்க்கக்கடவன்) என்று.

ச்ருதப்ரகாசிகை:—

இந்த விஷயத்தில் மறுதளித்துக்கூறுகிறார் "நைதத்யுக்தம்" என்று. விடுவதற்காக கர்மாக்கள் அறியத்தககவைகள் என்பது முந்தியே தள்ளப்பட்டது;—வேதாந்தமாத்ரத்தை அத்யயநம் செய்தவனுக்குகாமவிஷயமான ஆபாதப்ரதீதி இல்லாமையால் கர்மாபேக்ஷையின்மை கூறப்பட்டிருப்பதாலும், புண்ய விசேஷததால் வேதாந்தமாத்ரத்தில் புபுத்ஸை உள்ளவனுக்கு கர்மஜ்ஞானத்தின் அபேக்ஷை சொல்லப்பட்டிருப்பதாலும்.

இவ்விடத்தில் (ஸ்வரூபத்தால்) உபாதானத்தின் பொருட்டு கர்மா அறியத் தக்கது என்பதை நிராகரிக்க எண்ணங்கொண்டவராக ஸமஸமுச்சயத்தாலும், அங்கபாவத்தாலும செய்யப்பட்ட இரண்டு விதமான உபாதானத்திலும் ஸமஸமுச்சயமான உபாதானத்தை முதலில் நிராகரிப்பதற்காக ஸாதநத்வித்வத்தையும், ஸாத்யத்வித்வத்தையும் இரண்டு வாக்யங்களாலே நிரஸநம் செய்கிறார் "ஸகல விசேஷ" என்பதால். எப்போது 'பாரமை' என்கிற பதத்தால் தொடங்கப்பட்டிருக்கிற க்ரந்தமானது, பாஸ்கரமதத்திலாவது, ஸித்தாந்திமதத்திலாவது சோத்யபரமோ, அப்போது பூர்வபக்ஷத்தில் ஸம்பாவிதமான ஸர்வப்ரகாரத்தாலும் கர்மாவினுடைய அபேக்ஷையை நிராகரிக்க விருப்பமுள்ளவராக "உன்னால் ஸமஸமுச்சயம் விவக்ஷிக்கப்பட்டதா, அல்லது, அங்கபாவமா?" என்று விகல்பத்தைககருதி முதலில் ஸமுச்சயபக்ஷத்தை நிரஸிக்கிறார் என்று நிர்வஹிக்கத்தக்கது. 'ஸகலவிசேஷங்கள்' ஸஜாதீயவிஜாதீய ஸ்வகதவ்யாவ்ருத்தியுடன் அந்வயரூபமான விசேஷங்கள். 'அவைகளுக்கு ப்ரத்யநீகம்' ஸர்ப்பம் முதலிய வஸ்துவின் ஆகாரங்களுக்கு ரஜ்ஜுத்வம்போல், அவைகளுசகு நிவர்த்தகமென்று கருத்து. 'சின்மாத்ரம்' மாத்ரச் ப்ரத்யயத்தால் ஜ்ஞாத்ருத்வ ஜ்ஞேயத்வ தர்மங்களுக்கு வ்யாவ்ருத்தி கூறப்பட்டது. அன்றிக்கே, 'ஸகலவிசேஷப்ரத்யநீக' சப்ததநினால் ஸஜாதீயவிஜாதீயபேதப்ரத்யநீகத்வமும், 'சின்மாத்ரம்' என்கிற பக்ஷத்திலுள்ள மாத்ரச் ப்ரத்யயத்தினாலும் தன்னை அடைந்திருக்கிற பேதத்தின் இன்மையும் விவக்ஷிககப்பட்டது. ப்ரத்யநீக சப்தத்தால் நித்யமான அநர்ஹத்வம் விவக்ஷிக்கப்பட்டது கிளிஞ்சல் துண்டு ஒருபோதும் ரஜதத்வஸம்பந்தார்ஹமாகாதன்றோ! நித்யாநர்ஹமாக இருப்பதினாலேயன்றோ சுக்திஜ்ஞானம் ரஜதத்வநிவர்த்தமாக இருக்கிறது.

"ப்ரஹ்மவிஜ்ஞானாதேவ அவித்யா நிவ்ருத்திரிதி" ரஜ்ஜுதவஜ்ஞானத்திலேயேயன்றோ ஸாப்பத்வ நிவ்ருத்தி வருகிறது; கர்மாவினாலே இல்லையென்பது கருத்து. இவ்

வண்ணம் ஸாதநத்வித்வம்நிரஸிக்கப்பட்டது. ஸாத்யத்வித்வமறியப்பட்டிருக்க எவ்வாறு ஸாதநத்வித்வம்நிராகரிக்கப்படலாமென்று ஸந்தேகம்வர, ஸாத்யத்வித்வத்தை வ்யுதஸநம் செய்கிறார் 'அவித்யா நிவ்ருத்திரேவ ஹி மோக்ஷ' என்பதால். ப்ரஹ்மம் நித்யப்ராப்தமாக இருப்பதால் ப்ரதிபந்தநிவ்ருத்தி ஒன்றே ஸாதிக்கத்தக்கது; அதையடைதலென்பது ஸாதிக்கத்தக்கதல்ல. 'ஹி' சப்தத்துக்கு இது அபிப்ராயம். எந்த ப்ரதிபந்தநிவ்ருத்தியானது கர்மாவினால் ஸாதிக்கத்தக்கதாக உன்னால் சொல்லப்பட்டதோ, அதுவே ஜ்ஞானத்தால் ஸாத்யமென்று ச்ருதிஸ்ம்ருதிஸூத்ரங்களால் சொல்லப்பட்டிருக்கிறது—"தமேவம் விதித்வா திம்ருத்யுமேதி, ஜ்ஞாத்வா தேவம் முச்யதே ஸர்வபாசை:, நிசாய்ய தம் ம்ருத்யுமுகாத் ப்ரமுச்யதே, க்ஷீயந்தே சாஸ்யகர்மாணி தஸ்மிந் த்ருஷ்டே பராவரே, ஏவமேவம் விதி பாபம் கர்ம ந ச்லிஷ்யதே, ஜ்ஞானாக்னி: ஸர்வகர்மாணி பஸ்மஸாத் குருதே ததா, ததயிகம உத்தரபூர்வாகயோ:" (அவனை இவ்வண்ணமறிந்து ஸம்ஸாரத்தைத்தாண்டுகிறான். ஸ்ருஷ்டி முதலியவைகளை விளையாட்டாகக்கொண்ட பரமாத்மாவை அறிந்து ம்ருத்யுமுகத்தினின்று விடுபடுகிறான். அந்த பராவரவஸ்து காணப்பட்டவுடன் இவனுடைய எல்லா வினைகளும் க்ஷீணிக்கின்றன. இவ்வண்ணமாக பரமபுருஷனை அறிந்தவனிடத்தில் பாபகர்மாவானது ஒட்டாது. ஜ்ஞானமாகிற நெருப்பானது எல்லா கர்மாக்களையும் அவ்வண்ணம் சாம்பலாகச்செய்கிறது. உத்தரபூர்வாகங்கள் முறையே ஒட்டாமையும் நாசமும் ஸம்பவிக்கிறது. இப்படியல்லவோ வித்யாமாகாத்ம்யமறியப்படுகிறது.) இது முதலியவைகளால். ஆதலால், இரண்டு வாக்யங்களால் ஸாத்யஸாதநத்வித்வமிருக்கிறதென்று சொல்லப்பட்டதாக ஆகிறதில்லை.

அவித்யையின் நிவ்ருத்தியே மோக்ஷமாக இருக்கட்டும், அதனால் கர்மநைரபேக்ஷ்யத்திற்கு என்னவெனில்,—கூறுகிறார் 'வர்ணாச்ரம' என்று. இந்தப்பதத்தால் முன்கூறப்பட்டுள்ள கர்மாவினுடைய பேதாவலம்பித்வமானது சொல்லவிரும்பப்பட்டதாக ஆகிறது. ஆதி சப்தத்தினால் நிஷித்தங்களும், ப்ராயச்சித்தகர்மங்களும் விவக்ஷிக்கப்படுகின்றன; 'அநந்த' சப்தத்தினால் வர்ணம் முதலியவற்றின் ப்ராஹுல்யம். 'விகல்பம்' பேதம். 'ஸகலபேததர்சனநிவ்ருத்திரூப ஜ்ஞானநிவ்ருத்தே:' மூலமான அஜ்ஞானநிவ்ருத்தியின் பலமன்றோ பேததர்சனநிவ்ருத்தி. அதனால், பேததர்சனநிவ்ருத்தியானது அஜ்ஞானநிவ்ருத்தியிலுள்ளடங்கியதென்று அர்த்தம். 'கயமிவ ஸாதநம்' ஒரு விதத்தாலும் ஸாதநமாகாதென்று கருத்து.

'வசநவிரோதம் வருகிறஇடத்தில் ந்யாயம் முதன்மையை வஹியாது' என்கிற ந்யாயத்தால் ச்ருதிஸித்தமான கர்மாபேக்ஷையானது பாதிக்கத்தக்கதாக ஆகாதென்று சங்கைவர, சொல்லப்பட்ட உபபத்தியால் ச்ருதியினுடைய ஆனுகூல்யத்தைக்காட்டுகிறார் "ச்ருதயச்ச" என்பதால். உபபத்திமாத்ரமல்ல, அதனால் அனுக்ரஹித்ததாயும் இருக்கிறதென்பது 'ச' சப்தத்தின் கருத்து. முன்பு பேதத்தை அவலம்பித்து விரோதம்சொல்லப்பட்டது. இவ்விடத்திலோவென்றால், பலத்தினுடைய அநித்யதையால் வரும் விரோதமும் வேறு யுக்தியினால் காண்பிக்கப்பட்டது. "அநித்யபலத்வேந" நித்யபலமான மோக்ஷத்திற்கு அநித்ய பலத்தைக்கொடுக்கிற கர்மா எவ்வாறு ஸாதனமாகுமென்றுபொருள். "ச்ருதய:"என்பதால் ஒன்றைக்காட்டிலும் அநேகவாக்யங்களுக்கு ப்ராபல்யம் விவக்ஷிக்கப்பட்டது. "தர்சயந்தி" என்பதால் மறைவான அர்த்தமுள்ளதைவிட வ்யக்தமான அர்த்தமுள்ள வாக்யங்களுக்கும் ப்ராபல்யம் கூறப்பட்டது. "அந்தவதேவாஸ்ய" கர்மஸாத்யமாகில் மோக்ஷத்திற்கு அநித்யத்வம் வரும்; நித்யமாகில் கர்மாவுக்கு நச்வரமான பலத்தைக்கொடுக்கும் தன்மை தவறுதலிருத்தலால் என்று கருத்து. இந்த வாக்யத்தில் கர்மாக்கள் அநித்யங்களென்று உரைக்

கப்பட்டது. "ததயுஶ" என்கிற இந்தச்ருதியிஞல் கர்மக்ஷயம் பலத்வாகமென்பது கூறப்பட்டது. பூர்வாக்யமானது அநேககாலங்களாக அனுஷ்டிக்கப்பட்ட எல்லாகர்மாக்களும் முடிவுள்ளதென்பதைத்தெரிவிப்பதற்காக; "அஸ்மின் லோகே ஜுஹோதி யஜதே தபஸ்தப்யதே பஹூநி வர்ஷஸஹஸ்ராணி அந்தவதேவாஸ்ய தத்பவதி" என்றல்லவோ ச்ருதிவசனங்கள். அதனுலே கர்மனைரபேக்ஷ்யவாதத்தில் இந்த வாக்யத்தை முதலில் எடுத்தது. 'ப்ரம்மவிதாப்னோதி' என்பதிஞல் ஜ்ஞானத்துக்கு மோக்ஷஸாதநத்வம் சொல்லப்பட்டது. அடையத்தக்க வஸ்து, அடைகிறவன்—என்கிற பேதத்தை நிஷேதிப்பதற்காக "ப்ரஹ்மவேத ப்ரஹ்மைவபவதி" என்று எடுக்கப்பட்டது. "தமேவம்"என்கிற ச்ருதிவசனத்திஞல் ஜ்ஞானபலத்வம் ப்ரதிபந்தநிவ்ருத்தி என்பது தெளிவாக்கப்பட்டது. ஜ்ஞானபலத்தைத் தவிர்த்த கர்மா முதலியவற்றிற்கு உபாயத்வநிஷேதமும் இதஞல் ஸித்தம்; "நாந்ய:பந்தா:" என்பதல்லவோ அடுத்த வாக்யம். இவ்வண்ணம் ஜ்ஞானத்துக்கே மோக்ஷோபாயத்வஸாதகதர்க்கத்தால் அனுகாஹிக்கப்பட்டதும், ஸ்புடார்த்தங்களுடன் கூடியதுமான அனேக வாக்யங்களே எடுத்ததஞல் "வித்யாம் சாவித்யாம்ச" என்று ஸமுச்சயபரமாக பிறரால் சொல்லப்பட்ட ச்ருதியும் அவ்வர்த்தமுள்ளதல்லவென்று கூறப்பட்டதாக ஆகிறது,—அது ஒன்ருக இருப்பதாலும், அஸ்புடமான அர்த்தமுள்ளதாக இருப்பதாலும், தர்க்கத்தோடு சேர்ந்திராமையாலும், வேறு ச்ருதிகளுக்கு விரோதமின்றி வர்ணிக்கத்தக்கதாக இருப்பதாலும்.

இவ்வாருக ஜ்ஞானமே மோக்ஷத்திற்கு உபாயம் என்பதில் ப்ரமாணங்களாக ச்ருதிகளும், உபபத்திகளும் காட்டப்பட்டன. பிறகு யஜ்ஞாதி ச்ருதியானது வித்யைக்கு கர்மாபேக்ஷயை ப்ரதிபாதிக்கிறதென்பதை நிரஸனம் செய்கிருர்—'யதபிச' என்பதால். ஸித்தாந்தி, பாஸ்கரன், யாதவப்ரகாசன் மூவர்களுக்கும் கர்மாவானது அபிமதமாதலால் இப்படிப்பட்ட ப்ராதான்யத்தை 'அபி'சப்தம் ஸூசிப்பிக்கிறது. ஸமுச்சய பரமான வாக்யத்திற்கு ச்ருத்யந்தரானுகுணமாக நிர்வாகம் வரும்பொழுது யஜ்ஞாதி ச்ருதியும் நிர்வஹிக்கத்தக்கதென்று ஸமுச்சயாபிப்ராயமுள்ளது 'ச'சப்தம், அன்றிக்கே,அபிச என்பது ஒரே பதம். அப்பொழுதும் சொல்லப்பட்ட ப்ரகாரமாக ஸமுச்சயபரம். "யஜ்ஞாதி கர்மாபேக்ஷாவித்யா" என்று எது சொல்லப்பட்டதோ இந்த வசனவ்யக்தியில் ஸமுச்சயத்தால் வித்யையிஞலபேக்ஷிக்கப்பட்ட எந்தக்கர்மா சொல்லப்பட்டிருக்கிறதோ என்று அர்த்தம். வஸ்துவிரோதமாவது த்வைதவாஸனையை உண்டாக்குதல், அநித்யமனாபலத்துடன் கூடி இருத்தல். ச்ருத்யக்ஷரபர்யாலோசனையாவது ஸம்ப்ரத்யயார்த்தத்தின் நிருபணம். 'சகாரம்' ஸமுச்சயத்தில். விவிதிஷோத்பத்தியில் உபயோகப்படுகிற மாதிரியைச்சொல்லுகிருர்—"அந்த:கரணேதி." "ந பலோத்பத்தௌ" மோக்ஷோத்பத்தியில் அல்ல. "யஜ்ஞேந தாநேந அதபஸா நாசகேந ப்ராஹ்மணு விவிதிஷந்தி" என்றுச்ருதி. பந்தத்தினின்று விடுபடுகிருர்களில்லையென்று கருத்து. அக்ஷரபர்யாலோசனை எவ்வாறு என்ருல் கூறுகிருர் 'விவிதிஷந்தீதி'. ச்ரவணுதிதி. ஏவம்ச யஜ்ஞாதிச்ருதிபர்யாலோசனத்திஞலும் ஞானகர்மாக்களுடைய ஸமுச்சயம் மறுக்கப்பட்டது. 'நபலோத்பத்தௌ' என்கிறவிடத்தில் பலசப்தத்திற்கு மோக்ஷத்தில் ஸ்வாரஸ்யத்தாலே இவ்வாறு யோஜனைசெய்யபட்டது. அன்றிக்கே, "யஜ்ஞாதி கர்மாபேக்ஷா வித்யா" என்கிற வசனபங்கியிஞல் அங்கத்வேந அபேக்ஷிக்கப்பட்டதாக எந்த கர்மா சொல்லப்பட்டதோவென்று பொருள். 'ந பலோத்பத்தௌ வேத' நோத்பத்தியில்லையென்று அர்த்தம். விவிதிஷையை அபேக்ஷித்து வேதனம் பலமன்ரு. மற்றது அனைத்தும் முன்போல. இந்த யோஜனையில் "யஜ்ஞாதிகர்மாபேக்ஷா வித்யா" என்று நிர்தேசஸ்வாரஸ்யமிருக்கிறது; —ஏனென்ருல்,

இந்த நிர்தேசமானது அங்காங்கிபாவமுள்ள ஸூத்ரஸ்மாரகமாக இருப்பதால். அன்றிக்கே யஜ்ஞாதி என்பதால் நிஷ்பன்னமானகரணத்திற்கு பலோத்பத்திதசையில் ப்ரயாஜம்முதலியவைபோல, எந்தகர்மா அங்கமென்று சொல்லப்பட்டதோ, அது பொருந்தாது என்று பொருள். “ந பலோத்பத்தௌ” போக்ஷோத்பத்தியிலல்ல காரணமயிருக்கிற வித்யைக்கு அனுக்ராஹமாக உபயோகப்படுகிறதில்லை என்று பொருள். இந்த யோஜனையில் அங்காங்கிபாவஸூத்ரஸ்மாரகநிர்தேசத்திற்கும், ‘பலோத்பத்தௌ’ என்கிற நிர்தேசத்திற்கும் ஸ்வாரஸ்யமிருக்கிறது. ‘விவிதிஷந்தி’ என்கிற சொல்லானது ‘அவிநாஜிகாம்ஸதி’ என்கிறவசநம் போலாதலால், யஜ்ஞம் முதலியவைகளுக்கு வேதனோபயோகித்வம் ஸம்பவிக்கலாம் என்று சங்கை வருமேயாகில், வேதனோத்பத்தியில் ஹேதுத்வம் ஒப்புக்கொள்ளப்பட்டால் கர்மாவுக்கு இதிகர்த்தவ்யதாத்வமும், கரணத்வமும் உபபன்னமாகாதென்று கூறுகிறார் “விவிதிஷாயாம்” என்கிற பதத்தை ஆதியில் கொண்ட இரண்டு வாக்யங்களால். அதில் சமாதிகளோடுகூட ஸமுச்சயத்தாலும், விகல்பத்தாலும் இதிகர்தவ்யதாத்வத்தை முதலில் நிராகரிக்கிறார் “விவிதிஷாயம்” என்கிற பதத்தை முதலில் கொண்ட வாக்யத்தினால். இரண்டு ஏவகாரங்களால் கர்மாவுக்கு ஸமுச்சயமும், விகல்பமும் நிரஸிக்கப்படுகிறது. சமம்முதலியவைகளெல்லாம் இந்த்ரியவ்யாபாரங்களின் நிவ்ருத்திரூபமாகையாலும், யஜ்ஞம் முதலிய கர்மாக்கள் அதன் ப்ரவ்ருத்திரூபமாதலாலும், அந்யோந்யம் விரோதிகளாக இருப்பதினால் ஸமுச்சயம் உபபன்னமாகாதென்கிற அபிப்ராயத்தினால் ‘சமாதிகளுக்கே’ என்று கூறப்பட்டது. ஸமபலமுள்ளவைகளுக்கன்றோ விகல்பம். “பூத்வாத்மாநம் பச்யேத்” (ஸமாதானமுள்ளவனாகி ஆத்மாவை ஸாக்ஷாத்கரிக்கவேண்டும்) என்று சமாதிகளுக்கு ஆத்மதர்சனத்தைக்குறித்து நேராகவே ஸாதனத்வமானது ந்யாயாபேக்ஷையில்லாமலே சீக்ரமாக அறியப்படுவதால், அதிக . பலமுள்ளவைகளாக இருப்பதாலும், விவிதிஷந்தி என்று யஜ்ஞம் முதலியவைகள் இச்சைக்கு ஸாதனங்களாக ஸ்வரஸமாய் அறியப்பட்டிருந்தபோதிலும், ஸ்வாரஸ்யபங்கத்தினால் “அவிநா ஜிகாம்ஸதி” இதுமுதலான த்ருஷ்டாந்தபர்யாலோசனரூபமான ந்யாயத்தை அபேக்ஷிப்பதினால், கர்மாவுக்கு வித்யாஸாதநத்வம் விளம்பித்து அறியப்படுவதால் துர்பலமாதலாலும், விகல்பம் கூடாதென்கிற அபிப்ராயத்தால் கூறுகிறார் “ச்ருதிரேவாஹ.” என்று.

அவ்விதமிருந்தபோதிலும், விவிதிஷையினால் அபேக்ஷிக்கப்படுவதால் கர்மாவும் ஜ்ஞானத்துக்கு உபயோகமானது, அவ்வாறிருக்க எப்படி இது விடக்கூடும்—சமாதிகள் எப்படி எடுத்துக்கொள்ளக்கூடும்—என்று ஸந்தேஹவா, அதை விலக்குவதற்காக கர்மாவுக்கு சமாதிகளைக்காட்டிலும் வைஷம்யத்தைக்கூறுகிறார் “ அந்தரங்கோபாயதாம்” என்று. “பூத்வா பச்யேத்” என்கிறதினால் அந்தரங்கத்வம் ஸ்பஷ்டம். விவிதிஷைக்கு முந்தியன்றோ கர்மாவுக்கு உபயோகம்; சமாதிகளோவென்றால், பிறகும் உபயோகப்படுகிறது—என்று எண்ணி “ஜாதாயாம்” என்று சொல்லப்பட்டது.

பாஷ்யம்—

ததேவம் ஜ்ஞாநஸ்ய ஸதாநுவிஷ்டாநவிஸம்ஹிதவ்ருத்திவிசேஷகாத்யர்ஜிதகஷாயஸ்ய விவிதிஷோத்பத்தௌ ஸத்த்வம்—‘ஸத்த்வ ஸோசே ஸர்வ த்ருவா ஸ்ம்ருதி:, ஸாங்கேவாஹிதீயம்’ (ஸா. கா. உ. க.) ‘ஸத்த்வம் ஜ்ஞாநஸஞ்ஜம் ஸர்வ’ (கீதா. உ. க. க.) ‘நிஷ்க்ரியம் நிஷ்க்ரியம்

கரு

ஶாந்தம் நிரவத்யம் நிரஞ்ஜநம்' (ஶ்வே. ௯. ௧. ௯.) 'அஜரோ(அ)மர:' (ப்ரு. ௨. ௫. ௧. ௬.) தத்த்வமஸி (சா. ௬. அ. ௭.) இத்யாதிவாக்யஜந்யஜ்ஞாநாத் அவித்யா நிவர்ததே। வாக்யார்த்தஜ்ஞாநோபயோகீநி ச ஶ்ரவணமநநநிதித்யாஸநாநி । ஶ்ரவணம் நாம — வேதாந்தவாக்யாநாமைகாத்ம்யவித்யாப்ரதிபாதகாநீதி தத்த்வதர்ஶிந ஆசார்யாந்ந்யாயயுக்தார்த்தக்ரஹணம் । மநநம் நாம ஆசார்யோபதிஷ்டஸ்யார்த்தஸ்ய ஸ்வாத்மந்யேவமேவ யுக்தமிதி ஹேதுத: ப்ரதிஷ்டாபநம் மநநம் । மதஸ்யாநாதிவாஸநா நிரஸநாயைவ ஸ்வார்த்தஸ்யாநவரதபாவநா — நிதித்யாஸநம்। ஏவம் ஶ்ரவணாதிபி: நிரஸ்தஸமஸ்தவாஸநஸ்ய வாக்யார்த்தஜ்ஞாநமவித்யாம் நிவர்த்தயதீத்யேவம்ரூபஸ்ய ஶ்ரவணஸ்யாவஶ்யாபேக்ஷிதமேவ பூர்வவ்ருத்தம் வக்தவ்யம்। தச்ச நித்யாநித்யவஸ்துவிவேக:, ஶமதமாதிஸாதநஸம்பத் இஹாமுத்ரார்த்தபலபோகவிராக:, முமுக்ஷுத்வம் சேத்யேதத்ஸாதநசதுஷ்டயம் । அநேந விநா ஜிஜ்ஞாஸாநுபபத்தே: அர்த்தஸ்வபாவாதேவ பூர்வவ்ருத்தமிதி ஜ்ஞாயதே ।

ஆகையால், இவ்வண்ணமாக முன்புள்ள அநேக ஜன்மங்களில் பலவிசேஷங்களைக்கருதாது செய்யப்பட்ட கர்மாக்களால் பாபங்கள் நாசஞ்செய்யப்பட்ட ஒருவனுக்கு விவிதிஷை உண்டானால், 'ஸோமபானத்திற்குரியவனே ப்ரத்யக்ஷமாகக்காணப்படுகிற இந்த ஜகத்தானது ஸ்ருஷ்டிக்கு பூர்வகாலத்தில் ஸத்தாகவே இருந்தது. இரண்டாவதன்றிக்கே ஒன்றேயிருந்தது' 'ப்ரஹ்மம் அஸத்யத்தினின்றும், ஜடவஸ்துக்களினின்றும பரிச்சின்னவஸ்துக்களினின்றும் வ்யாவ்ருத்தமாக இருக்கிறது.' 'அவயவமில்லாதது, க்ரியை இல்லாதது, சாந்தஸ்வபாவமுள்ளது.' 'இந்த ஆத்மா ப்ரஹ்மமாகிறது' 'நீ அதுவாக இருக்கிறாய்'—என்கிற இவை முதலான வாக்யங்களாலுண்டான ஜ்ஞானத்தினால் அவித்யையானது நிவ்ருத்தியடைகிறது. ச்ரவண மனன நிதித்யாஸனங்களும் வாக்யார்த்தஜ்ஞானோபயோகிகள். ச்ரவணமாவது—வேதாந்தவாக்யங்கள் ஆத்மா ஒன்று என்கிற அறிவையுண்டுபண்ணுகிற வித்யையைப்ரதிபாதிக்கின்றனவென்று தத்வதர்சியான ஆசார்யனிடத்தினின்று ந்யாயங்களுடன் கூடின அர்த்தங்களை க்ரஹித்தல். இவ்வண்ணம், ஆசார்யனால் உபதேசிக்கப்பட்ட அர்த்தத்தைத்தன்மனதில் 'இவ்வண்ணமே ஸரி'

என்று காரணங்களால் நிலைநிற்கச்செய்வது—மனனம். இதற்கு விரோதியாய் அநாதியான பேதவாஸனையை நிரஸனம் செய்வதின் பொருட்டு இந்த அர்த்தத்தையே இடைவிடாது சிந்தித்தல்—நிதித்யாஸநம். ச்ரவணம் முதலியவைகளால் எல்லா பேதவாஸனைகளும் நீங்கினவனுக்கு வாக்யார்த்தஜ்ஞானம் அவித்யையை நிவ்ருத்தியடையச்செய்கிறதாதலால் இப்படிப்பட்ட ச்ரவணத்துக்கு அவச்யமாய் அபேக்ஷிக்கப்பட்டதாக இருக்கிறதே பூர்வ வ்ருத்தமென்று சொல்லத்தக்கது. அதாவது—நித்யமாயும், அநித்யமாயுமிருக்கிற வஸ்துக்களை, பகுத்தறிதல், சமம், தமம் முதலிய ஸாதனங்களின் ஸம்பத், இம்மையிலும், மறுமையிலும் பலானுபவத்தில் ஆசையின்மை, முக்தியடைவதில் விருப்பமென்கிற நான்கு ஸாதனங்கள். இவையில்லாவிடில் ஜிஜ்ஞாஸை உபபன்னமாகாது. அர்த்தஸ்வாபவத்தினாலேயே இதுவே பூர்வவ்ருத்தமென்று அறியப்படுகிறது.

ச்ருதப்ரகாசிகை:—

ஜ்ஞாநத்தைக்குறித்து கர்மாவுக்கு கரணத்வமுமில்லை என்று சொல்லுகிறார் 'ததேவம்' என்று. கரணத்வம் ஸம்பவிக்கிறதெனெ ஆசங்கித்து நிரஸிக்கிறார், ஒப்புக்கொள்ளுதலாலல்ல. விசுத்தமான மனதல்லவோ கரணம், "மநஸா து விசுத்தேந" (தூய்மை வாய்ந்த மனதால்) என்று ச்ருதி இருப்பதினால். 'தத்' கூறப்பட்ட காரணங்களால் 'ஏவம்' ஸமுச்சயத்தாலும், விகல்பத்தாலும், இதிகர்த்தவ்யதாத்வம் உபபன்னமாகாமல் போகவே ஸ்வர்கம் முதலிய மறுமைப்பயன்களுக்கு ஸாதனமான கர்மாவுக்கு விவிதிஷாஸாதநத்வம் பொருந்தாதென்பதைப்பரிஹரிப்பதின் பொருட்டு 'அநபிஸம்ஹிதபல' என்கிற சப்தம் கூறப்பட்டுள்ளது. விவிதிஷையும் கூட அந்த கர்மாவினால் ஸாதிக்கத்தக்கதாக இருப்பதால் பலமாக ஆகிறது. அந்த விவிதிஷைக்கு அநபிஸம்ஹிதத்வவ்யாவ்ருத்தியின்பொருட்டு "பலவிசேஷ" என்று கூறப்பட்டது. விவிதிஷை ஸித்திப்பதை உத்தேசித்து இப்பொழுதுங்கூட அனுஷ்டானத்திற்காக கர்மஜ்ஞானம் அபேக்ஷிக்கப்பட்டது என்கிற ஸந்தேஹநிவ்ருத்தியின்பொருட்டு 'ஜன்மாந்தர'சப்தம். 'அநேக ஜந்மஸம்ஸித்த' என்கிற இது முதலிய வசநங்களால் இப்பொழுதும் அநுஷ்டிக்கத்தக்கதென்கிற சங்கையை வ்யாவ்ருத்திப்பதற்காக "சத" சப்தம். காரணம் கார்யத்தினால் கல்பிக்கப்பட்டதன்றோ. இப்பொழுது விவிதிஷோத்பத்தி காண்பதனால் முந்தின அநேக ஜந்மங்களில் அனுஷ்டானம் கல்பிக்கத்தக்கதென்று கருத்து.

தேந—அந்த கர்மாவினால், ம்ருதிதகஷாயஸ்ய—அழிந்த பாவமுள்ளவனுக்கு. 'கஷாய பக்தி: கர்மாணி ஜ்ஞானம் து பரமா கதி: கஷாயே கர்மபி:பக்வே ததோ ஜ்ஞானம் ப்ரவர்த்ததே (கர்மாக்கள் பாபங்களைப் பக்வம் செய்கின்றன. ஜ்ஞானமோவென்றால் அடையத்தக்கவைகளுக்குள் சிறந்தது. கர்மாக்களால் பாபம் பக்வமானால் பிறகு ஜ்ஞாநம் உண்டாகிறது) என்றல்லவோ ஸ்ம்ருதி.

இவ்வண்ணம் விவிதிஷை உண்டான அளவில் ஞானோத்பத்தி ஸாதனத்தைச்சொல்லுகிறார் 'ஸதேவ' என்று. ஸதேவ இதுமுதலானது காரணவாக்யம். 'ஸத்யம் ஜ்ஞானம்' என்பது சோதகவாக்கியம். ஸத்யஜ்ஞாநாதிவாக்யங்களால் பலித்த வ்யாவ்ருத்தியைத்தெளிவாய் காட்டுவதற்காக "நிஷ்கலம்" முதலான வாக்யம் எடுக்கப்பட்டிருக்கிறது. "அயமாத்மா ப்ரஹ்ம" என்பது ஐக்யவாக்யம். $உபக்ரமம்முதலிய ஆறுவிதமான தாத்பரியங்களோடு கூடிய வாக்யதாத்பர்யத்தை நிர்ணயிப்பதற்கு ஆறுவித ப்ரமாணங்கள் உண்டு. அவை யாவன:—(க) உபக்ரமம்-உபஸம்ஹாரம், (உ) அப்யாஸம், (ங) அபூர்வதை, (ச) பலம், (ரு) அர்த்தவாதம், (சா) உபபத்தி,—இவைகள் தாத்பாய நிர்ணயகளங்கள்.

ஐக்யவாக்யத்தைக்காட்டுகிறார் 'தத்வமஸி' என்று. இந்த வாக்யத்தில் ப்ரஹ்மத்தோடு ஜீவவிசேஷத்திற்கு ஐக்யம் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஐக்யமானது எல்லா ஆத்மாக்களுக்குமென்று அறிவிப்பதின்பொருட்டு 'அயமாத்மா ப்ரஹ்ம' என்ற வாக்யம். இது முதலிய வாக்யம் ஜ்ஞானோத்பத்தியில் காணம்;—கர்மாவல்ல என்று பொருள். வாக்யத்தாலுண்டாகி ஜ்ஞாநமானது அவித்யைக்கு நிவர்த்தகமாகுமேயாகில், 'ச்ரவணம்' முதலியவைகள் பூர்வகமான த்யானவிதியானது பயனற்றதாக ஆய்விடுமென்று ஆசங்கித்துச் சொல்லுகிறார் 'வாக்யார்த்த' என்று. சகாரமானது சங்கையை விலக்குகிறது. அவைகளுடைய ஸ்வரூபத்தைச்சொல்லுகிறார்—'ச்ரவணம் நாம' என்று. ப்ரதிபாதகாநி—நிஷ்பாதனத்தில் ஸமர்த்தங்கள். வாக்யத்தினுலுண்டான ஞானத்தினுலென்றல்லவோ சொல்லப்பட்டிருக்கிறது.

ஏதத்விரோதி—ஆத்மைகத்வவித்யாவிரோதி. ச்ரவணம் முதலியவைகள் இவ்விதமான ஸ்வரூபமுள்ளவைகளாக இருக்கலாம். இவைகளுக்கு எவ்வாறு வாக்யார்த்தஜ்ஞானத்தில் உபயோகம் எனில் சொல்லுகிறார்—"ச்ரவணமநநாதிபி:" என்று. வாக்யார்த்தஜ்ஞானோத்பத்திக்கு விரோதி எதோ அதை நிரஸநம் செய்வது உபயோகமென்று அர்த்தம். இதி—கூறப்பட்டுள்ள காரணத்தினுல். ஜ்ஞாநகர்மஸமுச்சய அங்காங்கிபாவாநுபபத்தி ஹேதுக்களால் என்று அர்த்தம்.

எவம்ரூபஸ்ய—பந்தநிவ்ருத்தியில் கர்மாவை அபேக்ஷியாமலிருக்கிற வாக்யார்த்த ஜ்ஞாநத்திற்கு உபக்ரமமாயிருக்கிற ச்ரவணத்துக்கு; ப்ராஸங்கிகமான அர்த்தத்திற்கு அல்ல. அவச்யாபேக்ஷிதம்—தவறாமல் அபேக்ஷிக்கப்பட்டிருகிற. அபேக்ஷிக்கப்பட்டதும் எது, என்றால் சொல்லுகிறார்—'தச்ச' என்று. யாது காரணத்தினுல் இது அபேக்ஷிக்கப்பட்டது, எனில்—கூறுகிறார் 'அநேநவிநா' என்று. ஜிஜ்ஞாஸாநுபபத்தே:—விசாரம் உபபன்னமாகாததால். அனுபபத்தியை உபபாதிக்கிறார்—'அர்த்தஸ்யபாவாத், என்று அர்த்தஸ்வபாவம் எப்படி? இவ்வாறாக—நித்யாநித்யவஸ்துவிவேகத்தால் அநித்யஸாம் ஸாரிகபலபோகத்தில் ஆசையின்மையும், நித்யமான புருஷார்த்தத்தில் விருப்பமும் உண்டாகலாம். அதற்குப்பிறகு ச்ரவணம் முதலியவற்றில் ப்ரவ்ருத்தி மனதின் அவதானத்திற்குக்காரணமாக இருப்பதால் சமம் முதலியவைகளின் ஸம்பத்தியான்து அந்த ச்ரவணாதிகளுக்கு உபயுக்தமாகிறது. அர்த்தஸ்வபாவாதேவ—பூர்வ ப்ரக்ருதத்தாலேயே என்று எவகாராபிப்ராயம். ஜ்ஞானத்துக்கே உபாயத்வமும், கர்மாவுககு அநபேக்ஷிதத்வமும் அர்த்தஸ்வபாவத்தாலன்றோ முன் சொல்லப்பட்டது. அல்லது, "அநேந விநா ஜிஜ்

$ உபக்ரமோபஸம்ஹாராவப்யாஸோ பூர்வதாபலம், அர்த்தவாதோபபத்தீச லிங்கம் தாத்பர்யநிர்ணயே.—

ஞானாநுபபந்தே:" சமமுதலியவற்றின் அர்த்தஸ்வாபவத்தால் என்று அர்த்தம். சமம் முதலியது பூர்வவ்ருத்தமாக இருக்கட்டும், கர்மாவும் பூர்வவ்ருத்தமாக இருக்கட்டும் என்றால் விடை அறிவிக்கிறார் 'அர்த்தஸ்வபாவாதேவ' என்று. எந்த அர்த்தஸ்வபாவத்தால் சமம் முதலியவற்றிற்கு பூர்வவ்ருத்தத்வம் ஸித்திக்கிறதோ, அதே அர்த்தஸ்வபாவத்தால் மற்றதுக்கு பூர்வவ்ருத்தத்வநிஷேதம் ஸித்திக்கிறதென்று முதல் ஏவகாரத்துக்கு கருத்து. மற்றது பூர்வவ்ருத்தமல்லவென்பதற்காக இரண்டாவது ஏவகாரம். இந்த இடத்தில் அர்த்தஸ்வபாவசப்தத்தால் சமாதிகளுடைய அர்த்தஸ்வபாவம் சொல்லப்பட்டது. ஜ்ஞானார்த்தஸ்வபாவமும், கர்மார்த்தஸ்வபாவமும் அபிப்ராயப்பட்டிருக்கிறது;—ஏனெனில், ஜ்ஞானத்திற்கு கர்மாவை அபேக்ஷியாத உபாயமாக இருப்பது ஸ்வபாவமாதலாலும், கர்மாவும் பேதத்தை அவலம்பித்திருப்பதுபற்றி விருத்தஸ்வபாவமுள்ளதாக இருப்பதாலும், சமம் முதலியவைகள் நிவ்ருத்திரூபமாதலால் ப்ரவ்ருத்திரூபமான கர்மாவை விரோதிக்கிற ஸ்வபாவமுள்ளதாக இருப்பதாலும—ஸாதன சதுஷ்டயமே பூர்வவ்ருத்தம். மற்றதல்லவென்று சொல்லப்பட்டதாக ஆகிறது. "இதமேவ பூர்வவ்ருத்தமிதி ஜ்ஞாயதே" இதம் ஏவ சப்தமிரண்டும் அயோக அந்யயோக வ்யவச்சேதபரம். இதம் சப்தமோவென்றால் ஸாதனசதுஷ்டயமே பூர்வவ்ருத்தமென்பதைக்காட்டுகிறது. ஏவகாரமானது கர்மாவின் நிராஸத்தை விளக்குகிறது. சமம் முதலியவைகளின் அர்த்தஸ்வபாவத்தால் அவைகளின் அயோகநிவ்ருத்தி ஏற்படுகிறது. ஆகையால், ஜ்ஞாநகர்மாக்களுடைய அர்த்தஸ்வபாவத்தாலும் அந்யயோகநிவ்ருத்தி உண்டாகிறது.

பா⁴ஷ்யம்:—

ஏதது³க்தம் ப⁴வதி — ப்³ரஹ்மஸ்வரூபதிரோதா⁴நகராவித்³யாமூலமபாரமார்த்தி²கம் பே⁴த³த³ர்ஶநமேவ ப³ந்த⁴மூலம்|

ப³ந்த⁴ஶ்சாபாரமார்த்தி²க:| ஸ ச ஸமூலோऽபாரமார்த்தி²கத்வாதே³வ, ஜ்ஞாநேநைவ நிவர்த்யதே| நிவர்தகஞ்ச ஜ்ஞாநம் தத்த்வமஸ்யாதி³வாக்யஜந்யம், தஸ்ய ச வாக்யஜந்யஸ்ய ஜ்ஞாநஸ்ய ஸ்வரூபோத்பத்தௌ கார்யே வா, கர்மணாம் நோபயோக³:, விவிதி³ஷாயாமேவ து கர்மணாமுபயோக³:, ஸ ச பாபநிரஸநத்³வாரேண ஸத்த்வவ்ருத்³த்⁴யா ப⁴வதீதி 'யஜ்ஞேந தா³நேந தபஸாऽநாஶகேந ப்³ராஹ்மணா விவிதி³ஷந்தி' (ப்³ரு. ௪. ௪. ௨௨.) இத்யாதி³ஶ்ருதே:| அத: கர்மஜ்ஞாநஸ்யாநுபயோகா³தே³வ ஸாத⁴நசதுஷ்டயம் பூர்வவ்ருத்தமிதி வக்தவ்யம்|

இது சொல்லப்பட்டதாக ஆகிறது. ப்ரஹ்மஸ்வரூபத்தை மறைக்கிற அவித்தியையை மூலமாகக்கொண்ட வாஸ்தவமல்லாத பேதஜ்ஞானமே பந்தத்துக்குமூலம், பந்தமும் பாரமார்த்திகமன்று, அதுவும் (பேதஜ்ஞானமும்) மூலமாகிற அவித்யையுடன் பாரமார்த்திகமாக இல்லாமலிருப்பதினால் ஜ்ஞானத்தாலேயே நிவர்த்திக்கப்படு

கிறது. நிவர்த்தகமான ஜ்ஞாநமானது 'தத்வமஸி' இத்யாதிவாக்யத்தால் உண்டாகிறது. அப்படிப்பட்ட இந்த வாக்யஜந்யஜ்ஞானத்தினுடைய ஸ்வரூபோத்பத்தியிலாவது, கார்யத்திலாவது கர்மாவுக்கு உபயோகம் கிடையாது. விவிதிஷையிலேயே கர்மாக்களுக்கு உபயோகம், அதுவும் பாபமடியாக வந்த ரஜஸ்தமஸ்களின் நாசத்தின் வழியாக ஸத்வகுணத்தின் வ்ருத்தியினால் உண்டாகிறதென்று— இந்த உபயோகத்தைக்கருதி 'ப்ராஹ்மணர்கள் அறிய விரும்புகிறார்கள்' என்று சொல்லப்பட்டது. ஆகையால் கர்மஜ்ஞாநம் உபயோகமில்லாததால் முன்கூறிய ஸாதநசதுஷ்டயமே பூர்வவ்ருத்தமென்று சொல்லவேண்டும்.

ஸகலவிசேஷங்களுக்கும் ப்ரஹ்மம் நிவர்த்தகமாகில், எவ்வாறு ஸம்ஸாரப்ரவ்ருத்தி உண்டாகலாம், எவ்வாறு வாக்யார்த்தஜ்ஞானத்தினாலேயே அவித்யாநிவ்ருத்தி உண்டாகக்கூடும், எதனால் அந்த:கரணத்திற்கு அழுக்கு உண்டாகிறது, கர்மாவினால் எவ்வாறு அதற்குத்தூய்மை ஸம்பவிக்கிறது, அந்த அர்த்தஸ்வபாவங்கள் எவ்வாறு அந்யயோகவ்யவச்சேதங்களுக்கு காரணங்களாக ஆகக்கூடும்—என்கிற சங்கை உண்டாக, முன்கூறப்பட்டுள்ள அர்த்தத்தை ஒன்றாகத்திரட்டிக்காட்டாநின்றுகொண்டு சங்கைகளைப்பரிஹரிக்கிறார்—"ஏததுக்தம்" என்று.

'ப்ரஹ்மஸ்வரூபாச்சாதிகா' சப்தத்தினால் ப்ரஹ்மம் ஸகலவிசேஷப்ரத்யநீகமாக இருந்தபோதிலும், ஸ்வரூபத்துக்கு மறைவு ஏற்படுவதால் பேதஜ்ஞாநம் உண்டாகிறது என்று உரைக்கப்பட்டது. பேதமாவது அறிகிறவன், அறியத்தக்கவை முதலியது. அபாரமார்த்திகமான பேததர்சனமே பந்தத்துக்கு மூலம்; கர்மா அல்லவென்று கருத்து. கர்மாவும் ப்ராந்தியடியாக வந்ததென்று கருத்து. அன்றிக்கே, பேததர்சனமே அபாரமார்த்திகம், ஸத்யமாக இருக்கிறதொன்றுமில்லை—என்று கருத்து. அவ்வாறு இருந்தாலன்றோ கர்மாபேக்ஷை. பந்தமாவது பிறப்பு, இறப்பு முதலியது. "பந்தச்சாபாரமார்த்திக:" அவித்யை அடியாக வந்திருக்கிற அபாரமார்த்திகமான பேதஜ்ஞானத்தின் கார்யமாக இருப்பதால் என்று கருத்து. அதனால் கர்மநைரபேக்ஷ்யத்திற்கு என்ன ப்ரயோஜனம் எனில், கூறுகிறார்—'ஸச' என்று. "அபாரமார்த்திகத்வாதேவ" முன்கூறப்பட்டதாகவே இருக்கிற அபாரமார்த்யத்தினால் கர்மநைரபேக்ஷ்யஸித்தியென்பது ஏவகாராபிப்ராயம்.

"ஜ்ஞாநேநைவ" கர்மாவினாலல்லவென்று பொருள். அபாரமார்த்தஸர்ப்பநிவ்ருத்திக்கு ரஜ்ஜுஜ்ஞாநத்தைத்தவிர்த்து வைநதேயோபாஸநரூபமான கர்மாபேக்ஷை இல்லையன்றோ. இவ்வண்ணம் ஸமஸமுச்சயம் மறுக்கப்பட்டது. ஜ்ஞாநத்தைக் குறித்தும் கர்மாவுக்கு ஸாதநத்வமில்லையென்று சொல்லுகிறார்—"நிவர்த்தகஞ்ச" என்று. நிவர்த்தக ஜ்ஞாநம் ப்ரமாணத்தால் உண்டாகிறதென்று கருத்து. ப்ரமாணத்தினாலுண்டாகிற சிப்பி ஜ்ஞானமல்லவோ, வெள்ளியை விலக்குகிறது. இங்கு க்ஷமாதிகளுக்கு இதிகர்த்தவ்யதாத்வமிருப்பதினால் கர்மாவுக்கு விரோதத்தினால் இதிகர்த்தவ்யதாத்வமும் இல்லையென்று அபிப்ராயம்.

அதனாலென்னவெனில் சொல்லுகிறார் 'தஸ்ய' என்று. தஸ்ய—கர்மாவை அபேக்ஷிக்காமலிருக்கிற. ஏதஸ்ய—அத்வைதவிஷயமான. 'தத் ஏதத்' இவ்விரண்டு சப்தங்களுக்கும் பா

ஸ்துதவாசித்வம் ஸமானமாக இருந்தபோதிலும், 'தூரத்திலிருக்கிற ஸமீபத்திலிருக்கிற' என்கிற விசேஷணங்களுடன் கூடின வஸ்துக்களின் பராமர்சமல்லவோ தகுந்தது. அத்வைதவிஷயமென்பதில் காரணத்தைக்கூறுகிறார் 'வாக்யஜந்யஸ்ய' என்று. தத் த்வமஸி-முதலிய வாக்யங்களாலுண்டாயிருப்பதால் அத்வைதவிஷயத்வமென்று கருத்து.

கார்யே—மோக்ஷத்தில். அங்ஙனமாகில், எவ்விடத்தில் உபயோகமென்றால் சொல்லுகிறார் 'விவிதிஷாயாம்' என்று. துசப்தமானது, கரணத்வத்தையும், இதிகர்த்தவ்யதாத்வத்தையும் நிரஸநம் செய்கிறது. உபயோகம் எவ்வாறாக என்பதைக்கூறுகிறார்'ஸச'என்று. பாபமூல என்பது தொடங்கி அந்த:கரணநைர்மல்யத்வாரேண என்று முன் கூறப்பட்டுள்ளது விவரிக்கப்பட்டதாக ஆகிறது. ரஜஸ்தமஸ்களுடைய நாசம் முதலியது, இந்த வாக்யத்தில் சப்தத்தால் ப்ரதிபாதிக்கப்படவில்லை எனில் சொல்லுகிறார் இதிமம் என்று. அபிப்ரேத்ய சப்தத்தத்தால் சங்கைக்குப்பரிஹாரம். இதி என்பது ஹேதுவில். வஸ்து விரோதத்தால்—இதிகர்த்தவ்யதாத்வம்,கரணத்வம் முதலியவற்றின் அனுபபத்தி ஹேதுக்களாலென்பது அர்த்தம். 'இமம் உபயோகம்' ரஜஸ்தமஸ்களின் நாசம் ஸத்வத்தின் அபிவ்ருத்தி ஸ்வரூபமான பரம்பரோபயோகமென்று கருத்து. 'விவிதிஷந்தீத்யுக்தம்' என்பதற்கு 'ஏததுக்தம் பவதி' என்பதோடு அந்வயம். ப்ரக்ருதத்தை உபஸம்ஹாரம் செய்கிறார்—அத: கர்மஜ்ஞாநஸ்ய—என்று. அத:-விடுவதற்கும், எடுப்பதற்கும் கர்மஜ்ஞாநம் அபேக்ஷிதமில்லாமையாலென்று கருத்து.

இவ்விடத்தில் வ்யாக்யாதாக்களால் இரண்டு ஸங்க்ரஹச்லோகங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

விரோதாதப்ரமாணத்வாச்சித்தசுத்யுபயோஜநாத்.
ஜ்ஞானமாத்ரஸ்ய ஹேதுத்வச்ருதேஸ்ஸாமர்த்யதோபி ச. (க)

க்ஷமாத்யங்ககதாம்நாநாத் ந தீகர்மஸமுச்சய:
ச்ரவணாதிக்ரமோந்நித்ரவாக்யஜா தீர்விமோசிகா. (உ)

(விரோதத்தாலும், ப்ரமாணமில்லாமையாலும் சித்தசுத்திக்கு உபயோகப்படுவதாலும், ஜ்ஞாநத்துக்கு மாத்ரம் ஹேதுத்வததைக்கூறுகிற ச்ருதியினாலும், ஸாமர்த்யத்தினாலும் சமாதிகளை அங்கங்களாகக்கொண்டிருப்பதாக ச்ருதிவசனமிருப்பதாலும், ஜ்ஞாநகர்மஸமுச்சயமானது மோக்ஷஸாதனமாகாது. ச்ரவணம் முதலியவற்றால் க்ரமமாக ப்ரகாசிக்கிற வாக்யஜந்யஜ்ஞானமே பந்தநிவர்த்தகம்) என்று.

விரோதாத்—என்பதினால் கர்மாக்கள் அநித்யபலத்துடன் கூடியதாக இருப்பதாலும், பேதவாஸனையை உண்டுபண்ணுவதாலும் விரோதம் விவக்ஷிக்கப்பட்டது. 'ஸாமர்த்யத:' என்பதினால் ஜ்ஞாநத்துக்கு மித்யார்த்தநிவர்த்தகத்வத்தில் கர்மநைரபேக்ஷ்யரூபமான வஸ்து ஸாமர்த்யம் விவக்ஷிக்கப்பட்டது.

ஸித்தாந்த:

உச்யதே। யதுக்தமவித்யாநிவ்ருத்திரேவ மோக்ஷ:; ஸா ச ப்ரஹ்மவிஜ்ஞாநாதேவ பவதீதி, ததப்யுபகம்யதே। அவித்யாநிவ்ருத்தயே ஹி வேதாந்தவாக்யைர்விதித்ஸிதம் ஜ்ஞாநம் கிம்ரூபமிதி விவேசநீயம்। கிம் வாக்யஜந்யவாக்யார்த்தஜ்ஞாநமாத்ரம்?—உத தந்மூலோபாஸநாத்மகம் ஜ்ஞாநம்? இதி। ந தாவத்வாக்யஜந்யம் ஜ்ஞாநம்; தஸ்ய விதாநமந்தரேணாபி வாக்யாதேவ ஸித்தே:, தாவந்மாத்ரேணாவித்யாநிவ்ருத்த்யநுபலப்தேஶ்ச।

ந ச வாச்யம்—பேதவாஸநாயாமநிரஸ்தாயாம் வாக்யமவித்யாநிவர்த்தகம் ஜ்ஞாநம் ந ஜநயதி। ஜாதே ந ஜாதேऽபி ஸர்வஸ்ய ஸஹஸைவ பேதஜ்ஞாநாநிவ்ருத்திர்ந தோஷாய, சந்த்ரைகத்வே ஜ்ஞாதேऽபி த்விசந்த்ரஜ்ஞாநாநிவ்ருத்திவத் அநிவ்ருத்தமபி சிந்நமூலத்வேந ந பந்தாய பவதீதி ||

இந்த பூர்வபக்ஷத்தில் ஸித்தாந்தம் கூறப்படுகிறது—அவித்யையின் நிவ்ருத்தியே மோக்ஷம் அதுவும் ப்ரஹ்மவிஜ்ஞானத்தினுலேயே உண்டாகிறதென்று எதுசொல்லப்பட்டதோ அது ஒப்புக்கொள்ளப்படுகிறது. (ஆனல்) அவித்யையின் நிவ்ருத்திக்காக வேதாந்தவாக்யங்களால் விதிப்பதற்கு விரும்பப்பட்ட ஜ்ஞானம் எந்த ஸ்வரூபமுள்ளதென்று விவேசித்தறியத்தக்கது. (அதாவது) அது வாக்யத்தினுலுண்டான வாக்யார்த்தஜ்ஞானமாத்ரமா? அல்லது, அதை மூலமாகக்கொண்ட உபாஸநாத்மகமான ஜ்ஞானமா? என்று.—நிச்சயமாக வாக்யஜந்யஜ்ஞானமன்று; அது விதிக்கப்படாமலிருந்தபோதிலும் வாக்யத்தினுலேயே ஸித்திக்குமாதலாலும், அவ்வளவு மாத்ரத்தினுலேயே அவித்யையின் நிவ்ருத்திக்கு உபலப்தியில்லாமையாலும்.

பேதவாஸனை நீங்காமலிருக்குமளவில் வாக்யம் அவித்யாநிவர்த்தகமான ஜ்ஞானத்தை உண்டுபண்ணுகிறதில்லை. உண்டானலும் சந்த்ரன் ஒன்று என்கிற நிச்சயமிருந்தபோதிலும் சந்த்ரன் இரண்டு என்கிற ஜ்ஞானம் நீங்காமலிருப்பதுபோல, பேதஜ்ஞானம் எல்லோருக்கும் முழுமையும் உடனே நீங்காமலிருந்தபோதிலும் மூலம் அவித்யை அற்றபடியால் பந்தநிமித்தமன்று என்று சொல்ல ஒண்ணுது.

ச்ருதப்ரகாசிகை:—

ஸித்தாந்தத்தை ஆரம்பிக்கிறார் அத்ரோச்யதே—என்று. இந்த பூர்வபக்ஷத்தில் ஸித்தாந்தம் கூறப்படுகிறதென்று அர்த்தம்.

பூர்வபக்ஷங்களில் சொல்லப்பட்டிருக்கிற அர்த்தங்களில் விரோதமில்லாத அம்சத்தை ஒப்புக்கொண்டு மறுமொழி கூறுகிறார் 'யதுக்தம்' என்று. அவித்யாநிவ்ருத்தி: ப்ரதிபந்த நிவ்ருத்தி. ஸாதநத்தின் த்வித்வநிராஸனமானது அபிமதமென்று பொருள். எந்த ப்ரதிபந்த நிராஸம் கர்மஸாத்யம்,—என்று சொல்லப்பட்டதோ அதற்கு 'தமேவம் விதித்வாதிம்ருத்யுமேதி' இது முதலியவைகளில் ஞாநஸாத்யத்வம் கூறப்பட்டது. ப்ரமப்ராப்தியோவென்றால் தானாக ஸித்தித்திருக்கிறது. ஏவகாரங்களால் வேறு ஸாத்யமும் வேறு ஸாதனமும் வ்யாவ்ருத்திக்கப்படுகிறது. என்றாலும், அநிஷ்டநிவ்ருத்தி, இஷ்டப்ராப்தி இரண்டுமிருக்கிறது. ஆகிலும், ஸ்வதஸ்ஸித்தமாயுள்ள இஷ்டதமமான ப்ரஹ்மப்ராப்திக்கு தனியாக உபாயஸாத்யத்வமில்லாமையால் ப்ரதிபந்தநிவ்ருத்தியே ஸாத்யம். தானாகவே எல்லாவற்றையும் நேராகக் காண்பதில் தகுதியுள்ள ஜ்ஞாநமானது ப்ரதிபந்தகம்.நிவ்ருத்தித்தவுடன் ப்ரஹ்மத்தினுடைய ஸ்வரூபரூபகுணவிபவம் முதலிய அனைத்தையும் ஸாக்ஷாத்கரிக்கிறது. அணை உடைந்துபோனால் ஜலம் தானாகவே எப்படி செல்லுகிறதோ, ஒருவராலும் நடத்தத்தக்கதல்லவோ, எப்படி கல்லைக்கொண்டு வருவதற்காக வழியை மேடுபள்ளமில்லாமல் ஸமமாக்குதல், அந்தக்கல்லை கடத்துதல் இவ்விரண்டும் எவ்வாறு தனித்தனியான யத்நங்களால் ஸாத்யங்களோ அவ்வாறு இல்லை—என்று அர்த்தம். அல்லது, பாவாந்தரமே அபாவரூபமாதலால் அவித்யாநிவ்ருத்தியே ப்ரஹ்மப்ராப்தியென்று பொருள்.

ஸாத்யஸாதநங்களுடைய த்வித்வநிராஸம் ஒப்புக்கொள்ளப்பட்டதேயாகில் விப்ரதிபத்திவிஷயம் எது?—என்கிற கேள்விக்கு உத்தரம் சொல்லுகிறார் அவித்யா—என்று. ஸாதனஸ்வரூபவிசேஷத்தில் விப்ரதிபத்தி என்று அர்த்தம். கிம்ரூபம்—கர்மங்களை அங்கங்களாகக் கொள்வதற்குத்தகுதியற்றதாக உன்னால் சொல்லப்பட்ட ஜ்ஞாநமா?—அல்லது, கர்மங்களை அங்கங்களாகக்கொள்வதற்குத்தகுதியுள்ளதாக நம்மால் சொல்லப்பட்ட ஜ்ஞாநமா?—என்று பொருள். கிம்ரூபமென்கிற பதத்தால் கருதப்பட்டதை விவரிக்கிறார் கிம்—என்று. கிம் வாக்யாத்—இது முதலியவற்றால் அந்யமதத்தையும் தன்மதத்தையும் சொல்லுகிறார்; பரமதவிகல்பமல்ல. தொடக்கத்தில் பரபக்ஷநிராகரணம் செய்யப்படுகிறது. தன் பக்ஷத்தை ஸ்தாபநம் செய்தலோ, பிறகு என்று அபிப்ராயப்பட்டுச் சொல்லுகிறார் ந தாவத்—என்று. தூஷிக்கத்தக்கதான இரண்டினுள் ஒன்றின் தூஷணம் செய்யப்படுகிறதில்லை. ஏனெனில் கூறுகிறார் தஸ்ய—என்று. விதாநமந்தரேணாபி—ப்ரமாணஜ்ஞாநம் வஸ்துதந்த்ரமேயொழிய புருஷதந்த்ரமல்ல, செய்யவும், மாற்றவும்அசக்யமாக இருப்பதால். ஆகையால், புருஷதந்த்ரத்வமில்லாததால் அது விதிக்கத்தக்கதல்ல என்று அவர்களாலேயே சொல்லப்பட்டிருக்கிறதென்று கருத்து. வாக்யாதேவ — ப்ரம்மஸ்வரூபபரவாக்யத்தினாலேயே. வ்யுத்பத்தியுள்ள புருஷனைக் குறித்து ந்யாயாநுக்ருஹீத வாக்யத்திற்கு அர்த்தபோதகத்வம் ஸ்வதஸ்ஸித்தமாக இருக்கிறது; விதிக்கு அதீநமல்ல; அதைக்கேட்பதில் புருஷனுக்கு ப்ரவ்ருத்தியும் ராகத்தாலேயே என்று உபபாதிக்கப்பட்டது. என்றாலும் ராகத்தாலல்ல. ஆகிலும், அத்யயநவிதியே ,அத்யயநம் செய்யப்பட்ட முழு வேதவாக்ய விசாரத்தில் ப்ரவர்த்தகமாதலால் 'ப்ரஜ்ஞாம் குர்வீத' இது முதலான விதியானது ப்ரயோஜனமற்றதே. ப்ரமாணஜ்ஞாநத்துக்கு ச்ரேயஸ்ஸாதநத்வம் அலௌகிகமாதலால் அதற்கு

தாத்ரூப்யேண விதேயத்வமுண்டென்று சொல்லுவது சரியல்ல;—சிப்பியில் வெள்ளி முதலிய ப்ரமத்திற்கு நிவர்த்தகமான ஜ்ஞாநத்தைப்போல, பந்தநிவர்த்தகஜ்ஞாநத்துக்கு த்ருஷ்டாந்தத்வம் ஒப்புக்கொள்ளுவதால்.

இதனால் விதிக்கு வையர்த்யம் ஸம்பவிக்கிறது. அதனால் அடிக்கடி ஆவ்ருத்திக்கப் பட்ட ஸாக்ஷாத்காரபக்திஸ்வரூபப்ரதிபாதகங்களும், உயிருள்ளவரையில் அனுஷ்டிக்கத் தக்க அக்நிஹோத்ரம் முதலியவைகளை நிரூபிக்கிறவைகளும், 'யாவந்நவிமோக்ஷ்யே அத ஸம்பத்ஸ்யே.'

(எவ்வளவு வரையில் ப்ராரப்தகர்மசேஷமான சரீரத்தால் விடப்படுகிறேனில்லையோ அவ்வளவு காலம் வரையில்தான் விளம்பம். பிறகு ப்ரஹ்மத்தை அணுகி ஸாயுஜ்யத்தை அடையப்போகிறேன்) என்று சரீராவஸாநத்தில் வரப்போகிற முக்தியைச்சொல்லு கின்றவைகளும் நாடீவிசேஷங்களால் ஜீவனுடைய நிஷ்க்ரமணத்தைச்சொல்லுகிற மார்கப்ரதிபாதகங்களுமான அநேக ச்ருதிகள் ப்ரயோஜனமற்றவைகளாக ஆகவேண்டிய தாகும் என்று.

இவ்வண்ணம் அநேக ச்ருதிவிரோதத்தைக் காட்டுவதற்காக தஸ்யவிதாநமந்தரே ணாபி—என்று கூறப்பட்டது. பிறகு ப்ரத்யக்ஷவிரோதத்தைக்காட்டுகிறார்—'தாவந்மாத் ரேண' என்பதால். அவ்வளவு அம்சமானது அதைவிட அதிகத்திலும் இருக்கிறபடியால் அதை வ்யாவர்த்திப்பதற்காக 'தாவந் மாத்ரேண' என்று உரைக்கப்பட்டது. அநேக சாஸ் த்ரவிரோதரூபமாகவும், ப்ரத்யக்ஷவிரோதரூபமாகவுமிருக்கிற இந்த இரண்டு தூஷணங் களையும் சொல்லாநின்ற பகவானுன ஆபஸ்தம்பராலும் வாக்யார்த்த ஜ்ஞாநமாத்ரம் மோக்ஷ ஸாதனமென்பது மறுக்கப்பட்டது. எவ்வாறு என்றால், "புத்தே க்ஷேமப்ராபணம் தச் சாஸ்த்ரைர்விப்ரதிஷித்தம், புத்தேசத் க்ஷேமப்ராபணம் இஹைவ ந துக்கமுபலபேத, ஏதேந பரம் வ்யாக்யாதம்" (வாக்யார்த்தஜ்ஞாநம் வந்தவுடன் முக்தியை அடைதலென்பது சாஸ்த்ரவிருத்தம். வாக்யார்த்தஜ்ஞாநமாத்ரத்தினால் ஜீவன்முக்தி வருமானால் இங்கேயே துக்கத்தை அறியாமலிருக்கவேண்டியதாக வரும். இதனால் மற்றதும் வ்யாக்யானிக்கப் பட்டது.) என்று. "சாஸ்த்ரை:" என்கிற பஹுவசனத்தினால் முன் உதாஹரிக்கப்பட்ட அநேக ச்ருதிகளின் விரோதம் கருதப்பட்டது.

விப்ரதிஷேதமாவது அதிக பலமுள்ளதினால் நிராகரிக்கப்படுதல்; ப்ரகரண ஸமம் போல துல்யபலமுள்ளதினால் நிராகரணமல்ல. பஹுசாஸ்த்ரவிரோதம் ப்ரபலதரம். 'பூயஸாம் ஸ்யாத் பலீயஸ்த்வம்' (அதிக வசனங்களுக்கு ஸ்வல்பவசநத்தைவிட பலாதிக்யம் உண்டாகலாம், என்ற ந்யாத்தாலென்கிற அபிப்ராயத்தால் விப்ரதிஷித்தமென்று உரைக்கப்பட்டது.

இந்த தூஷணத்திற்குப் பிறர்களால் இரண்டு விதமாக எந்த மறுமொழி உரைக்கப் பட்டதோ அதை அநுவதித்து தூஷிக்கிறார் நச வாச்யம்—என்று. வாக்யம் ஜ்ஞாநோத் பத்தியை இப்பொழுது உண்டுபண்ணுகிறதில்லை. என்று ஒரு நிர்வாஹம் அதைக் கூறுகிறார் பேதேதி. இப்பொழுது ஜ்ஞாநோத்பத்தி காணப்படுகிறதென்றால் அதன் பரி ஹாரத்தின் பொருட்டு சொல்லுகிறார் அவித்யாநிவர்த்தகம்—என்று. பிறகும் வாக்யத்தின லேயே அவித்யாநிவர்த்தகமான விசதஜ்ஞாநோத்பத்தியுண்டாகுமேயானால் இப்பொழுதே உண்டுபண்ணட்டும் எனில் கூறுகிறார் பேதவாஸநாயாமிதி. ப்ரதிபந்தகாபாவங்கூட காரணகலாபத்தில் உள்ளடங்கினது. ஆகையால், ஸாமக்ரியின் குறைவினால் ஜ்ஞாநமுண் டாகவில்லை. த்யாநாதிவிதிகள் ப்ரதிபந்தகநிராஸத்துக்கு ஸாதகங்களென்று கருத்து.

இதனால் சாஸ்த்ரப்ரத்யக்ஷவிரோதங்கள் இரண்டும் பரிஹரிக்கப்பட்டவைகளாக ஆகின்றன. ஜ்ஞாநாதிகர்களாக ச்ருதிஸ்ம்ருதிப்ரஸித்தர்களான ஸநகாதிகளுக்குங்கூட ஜ்ஞாநாநுத்பத்தி உபபந்நமாகாதென்கிற சங்கையை நீக்குவதற்காக வேறு நிர்வாஹத்தைக் கூறுகிறார் ஜாதேபி—என்று. அவித்யை ஒன்றானதாலும், ப்ரபஞ்சப்ரதிபாஸமானது அத்விதீயமான ப்ரஹ்மத்துக்கு ஸ்வப்நரூபமாக இருப்பதாலும் ஸர்வஸ்ய என்று—கூறப்பட்டது. 'ந தோஷாய' அநிவர்த்தகத்வமானது தோஷத்தின்பொருட்டு ஆகிறதில்லை. ஜ்ஞாநோதயமுண்டாகியும் ப்ரமநிவ்ருத்தி உண்டாகாமலிருப்பதில் த்ருஷ்டாந்தத்தைக் காட்டுகிறார் சந்த்ரைகத்வம்—என்று. பேதஜ்ஞாநம் நிவ்ருத்தியாமலிருந்தால் பந்தகமாக ஆகட்டுமென்கிற வினவுக்கு விடை அறிவிக்கிறார் அநிவ்ருத்தமபி என்று. சிந்நமூலத்வேந—அவித்யை என்கிற மூலம் வெட்டப்பட்டு போனபடியால். கார்யகரமாக ஆகிறதில்லை—எவ்வாறு, எரிக்கப்பட்ட வஸ்த்ரமானது முந்தின ஸந்நிவேசத்தோடு அறியப்படாநின்றிருந்தபோதிலும், உடுத்துதல் முதலிய கார்யங்களுக்கு யோக்யமல்லாததாக க்ரமமாக விநாசத்தை அடையுமோ,—எவ்வாறு குயவனால் சுற்றி விடப்பட்ட சக்ரமானது சுற்றும்படி செய்விக்கிறவனுடைய செய்கை ஓய்ந்துபோனாலும்கூட முந்தின வேகத்துக்கு உடன்பட்டபடியால் கொஞ்சகாலம் தானாகவே சுழன்று க்ரமமாக ஓய்வடைகிறதோ. அவ்வாறு என்று கருத்து.

இங்கு இதி சப்தத்திற்கு ந ச வாச்யம் என்பதோடு அந்வயம்.

பாஷ்யம்:—

ஸத்யாம் ஸாமக்ர்யாம் ஜ்ஞாநாநுத்பத்த்யநுபபத்தே: | ஸத்யாமபி விபரீதவாஸநாயாம், தத்த்வாவேதகஶாஸ்த்ரஜந்யஜ்ஞாநோத்பத்திதர்ஶநாத் | ஸத்யபி பாத்யஜ்ஞாநே அநாதிவாஸநயா ஶாத்ர்யா ஸஜ்ஞாநமநுவர்த்தத இதி பவதா ந ஶக்யம் வக்தும்; ஸஜ்ஞாநஸாமக்ர்யா அபி வாஸநாயா மித்யாரூபத்வேந ஜ்ஞாநோத்பத்த்யைவ நிவ்ருத்தத்வாத் | ஜ்ஞாநோத்பத்தாவபி மித்யாரூபாயாஸ்தஸ்யா அநிவ்ருத்தௌ நிவர்த்தகாந்தராபாவாத் கதாசிதபி நாஸ்யா வாஸநாயா நிவ்ருத்தி: | வாஸநாகார்யம் ஸஜ்ஞாநம் சிந்நமூலமப்யநுவர்த்தத இதி ஸுபாஷிதம் | ஏவம் ப்ரஜ்ஞாநாதௌ து பாதகஸந்நிதாவபி மித்யாஜ்ஞாநஹேதோ: ப்ரமாயுக்திவிராதிதோஷஸ்ய ஜ்ஞாநபாத்யத்வாபாவேநாவிநஷ்டத்வாத், மித்யாஜ்ஞாநாநுவ்ருத்திரவிருத்தா, த்ருவ்யத்ருசாணவாயிதேந ஹயாதிகாரணே ந நிவர்த்ததே | அபி ச ஸஹவாஸநாநிரஸநஸமர்த்தேந ஜ்ஞாநோத்பத்திஸஹ்யமாத்ரம் கதாசிதபி ஜ்ஞாநோத்பத்திர்ந ஸம்பவதி; ஸஹவாஸநாயா அநாதிகாலோபசிதத்வேந அபரிமிதத்வாத், ததிதராயிவாஸநாயா ப்ரவ்ருத்த்யா தந்நிரஸநாநுபபத்தே: | அதோ

வாக்யார்த்தஜ்ஞாநமாத்ரேணைவ யஸ்மாந்நாவஸாநமதிப்ஸ்வாந்தஸ்ய
ஜ்ஞாநம் வேதாந்தவாக்யைர்விதீயதே ॥

ந்யாநுக்ருஹீதவாக்யமாகிற ஸாமக்ரீ இருக்கும்பொழுது ஜ்ஞானமுண்டாவதில்லை என்று சொல்வது பொருந்தாது. விபரீத வாஸனையிருக்கும்பொழுதே ஆப்தர்களுடைய உபதேசம், அனுமானம், இவை முதலியவைகளால் பேதவாஸனைகளுக்கு பாதகமாகிற ஜ்ஞானத்தின் உத்பத்தி காணப்படுவதால் பொருந்தாது. வாக்யார்த்த ஜ்ஞாநமுண்டானபோதிலும் அநாதியாயுள்ள அல்பபேதவாஸனையினால் பேதஜ்ஞாநத்துக்கு ஸாமக்ரியான வாஸனையும் மித்யாரூபமானது பற்றி ஜ்ஞாநோத்பத்தியினாலேயே நிவ்ருத்தி அடைந்துவிட்டபடியால் ஜ்ஞாநம் இறந்தும்மித்யாரூபமாக அந்த வாஸனை போகாமலிருக்குமேயாகில் வேறு நிவ்ருத்தவஸ்து இல்லாமையால் ஒருபொழுதும் இந்த வாஸனைக்கு நிவ்ருத்தி உண்டாகாது. வாஸனையின் கார்யமான பேதஜ்ஞாநம், மூலமற்று இருந்தபோதிலும்கூட தொடர்ந்து வருகிறதென்பது பாலனுடைய பேச்சு.

சந்த்ரன் இரண்டு என்கிற ஜ்ஞாநம் முதலியவற்றிலோவென்றால், மித்யாஜ்ஞாநத்துக்கு ஹேதுவான பரமார்த்ததிமிரம் முதலிய தோஷமானது ஜ்ஞாநத்தால் பாதிக்கத்தகாமையால் இந்த ஸந்நிதியிலுங்கூட விநாசமடைகிறதில்லை. ஆகையால், மித்யாஜ்ஞாநத்தின் அநிவ்ருத்தி விருத்தமல்ல.

கயிறு முதலியவற்றில் ஸர்ப்பத்தின் பயம் முதலிய கார்யங்களோவென்றால் ப்ரபலப்ரமாணத்தால் பாதிக்கப்பட்டிருப்பதால் நிவர்த்தி அடைகிறது.

மேலும், பேதவாஸனையின் நிராகரணவாயிலாக ஜ்ஞாநோத்பத்தியை ஒப்புக்கொள்ளுகிறவர்களுக்கு ஒருபொழுதும் ஜ்ஞாநோத்பத்தி ஸித்தியாது.

பேதவாஸனை அநாதிகாலமாக வ்ருத்தி அடையும்படி செய்யப்பட்டு அபரிமிதமாக இருப்பதாலும், அதற்குவிரோதியான பாவனை அல்பமாக இருப்பதாலும் இதனால் அதை நிரஸிப்பதென்பது பொருந்தாது. ஆகையால் வாக்யார்த்த ஜ்ஞாநத்தைக்காட்டிலும் வேறாகவே இருக்கிற த்யானம், உபாஸநம் முதலிய சப்தங்களால் சொல்லத்தக்க ஜ்ஞாநமானது வேதாந்தவாக்யங்களால் விதிக்க இச்சிக்கப்பட்டிருக்கிறது.

ச்ருதப்ரகாசிகை:—

முதலில் ஜ்ஞாநோத்பத்தியை தூஷிக்கிறார் ஸத்யாம் என்று. ந்யாயத்தினுலுபகரிக்கப்பட்ட வாக்யமே ஸாமக்ரீ, பேதவாஸனையானது ப்ரதிபந்தமாக இருக்கிறது—என்றால் சொல்லுகிறார் 'ஸத்யாமபி' என்று. நிவர்த்திக்கத்தகுந்த வாஸனை நிவர்த்தகத்தின் உத்பத்திக்கு ப்ரதிபந்தமாகாதென்று பொருள். ஆதிசப்தத்தால் இந்த்ரியம் க்ரஹிக்கப்படுகிறது. எவ்வாறு, நெடுங்காலமாக இருளடைந்த குகையில் தீபமானது ப்ரகாசமுண்டாகாமல் இராதோ, அந்த தீபமானது ஏற்றப்பட்டவுடன் இருள் எவ்வாறு நாசமடைகிறதோ, எவ்வாறு ஒரு இடத்தில் ஸர்ப்பமென்கிற வாக்யத்தினுல் மனிதன் நெடுங்காலம் ப்ரமமுள்ளவனுக இருந்தபோதும், அங்கு ஸர்ப்பமில்லையென்று ஆப்தோபதேசத்தால் அறிகிறானே,—எவ்வாறு காடு எரிக்கப்படவில்லை என்கிற வசநத்தைக்கேட்டு நெடுங்காலம் ப்ரமமுள்ளவனுக்கு பிறகு அங்கு சென்று கணல் முதலிய அடையாளங்களைக் காண்பதினுல் காடு தீயினுல் எரிக்கப்பட்டதென்கிற ஜ்ஞாநம் உண்டாகிறதோ,—எவ்வாறு நெடு நேரமாக ஸர்ப்பமென்று நினைக்கப்பட்டிருந்த வஸ்துவில் ஸமீபத்தில் சென்றவுடன் இந்த்ரிய வ்யாபாரத்தால் கயிறு என்கிற ஜ்ஞாநம் உடனே உண்டாகிறதோ—அவ்வாறு என்கிற அபிப்ராயத்தால், 'ஆப்தோபதேசலிங்காதிபிர்பாதகஜ்ஞாநோத்பத்திதர்சநாத்' என்று சொல்லப்பட்டது. வேதாந்தவாக்யமன்றோ தார்ஷ்டாந்திகம். அதனுல் ஆப்தோபதேசம் முதலில் எடுக்கப்பட்டது.

பிறகு இரண்டாவது நிர்வாஹத்தை அநுவதித்து நிரஸிக்கிறார் "ஸத்யபி" என்று. மாத்ரயா—அல்பமென்று அர்த்தம். பவதா—ப்ரஹ்மத்தைத்தவிர்த்த எல்லா வஸ்துக்களுக்கும் மித்யாத்வத்தைச் சொல்லுகிற உன்னுல் என்று கருத்து.

பவதா என்கிற பதத்தினுல் ஸூசிக்கப்பட்ட அர்த்தத்தை விவரிக்கிறார் 'பேதேதி.' வாஸனையுங்கூட மித்யாபூதமாதலால் அதற்கும் ஜ்ஞாநத்தினுல் நிவர்த்தித்தல், அவச்யம் ஆச்ரயிக்கத்தக்கதென்று கருத்து. ஜ்ஞாநமுண்டாகியுங்கூட வாஸனையானது நிவ்ருத்தி அடைவதில்லை, என்று சொல்லப்படுகிறதா?—அல்லது, அது நிவ்ருத்தித்தபோதிலும் காரணமில்லாமலே பேததர்சனமுண்டாகிறதா?—என்ற இரண்டு சங்கைகளை மனதில் வைத்துக்கொண்டு முந்தினதைப்பரிஹரிக்கிறா.

'ஜ்ஞாநோத்பத்தாவபி' ப்ரஹ்மத்தைத்தவிர்த்து மற்றதெல்லாம் மித்யையானபடியால் வாஸனையும் ஜ்ஞாநத்தினுலேயே நிவர்த்திக்கத்தக்கது. அப்படி இல்லாவிடில், நிவர்த்தகாந்தரமும் ஜ்ஞாநமாதலால் அது இதை நிவ்ருத்தியடையச் செய்யாதென்று பொருள். தானுகவே வாஸனை நசிக்கிறதென்றாலோ அது யுக்தமன்று; "ஸ்வயமேவ" என்கிற சப்தத்தால் பாதகஜ்ஞாநாபேக்ஷையின் இன்மை விவக்ஷிக்கப்பட்டிருக்குமாகில், அழிகின்ற வாஸனைக்குங்கூட ஸத்யத்வம் ப்ரஸங்கிக்கும். ஸ்வயமேவ நச்யதி—என்பதினுல் தன்னுலேயே தன்னை நாசப்படுத்திக்கொள்ளுதல் விவக்ஷிக்கப்பட்டிருக்குமேயாகில் வ்யாகாதம். பலத்துக்கு உபாந்த்யமான காரணத்தின் நாசம் முதலியதால் நசிக்கப்படுந்தன்மை இருந்தபோதிலும்கூட ஸத்யத்வப்ரஸங்கம் அவர்ஜநீயமே,—கர்மசப்தம் முதலியவைகளில், வைசேஷிகர்களால் அப்படியே வர்ணிக்கப்பட்டிருப்பதுபற்றி அவைகளுக்கு பாரமார்த்யம் காணப்படுவதால். மேலும், ஸ்வப்நாவஸ்தையில் காணப்படுகிற வஸ்துக்களின் உத்பத்தி முதலியதுபோல, வாஸனை மித்யையாக ஆகும்போது அதன் உத்பத்தி ஸ்திதிகளும் மித்யையாக ஆவதால், அதன் விநாசமும் மித்யாபூதம்; ஆகையால், விநாசவிஷய ப்ரமையானது மீண்டும் இருக்கிறபடியால் சேஷமில்லாமல் ப்ரமநிவ்ருத்தியானது உண்டாகாது

பிறகு இரண்டாவது ஸந்தேஹத்தைப் பரிஹரிக்கிறார் 'வாஸநா' என்று. 'சிந்நமூலம்' அறுக்கப்பட்ட வாஸனையாகிற மூலம். "பாவிசபாதஷிதம்" காரணமின்றி கார்யம உண்டாக வேண்டியதாக ஏற்படுவதால் என்று பொருள்.

பேதஜ்ஞாநம் காரணமில்லாமலே உண்டாகுமேயானால், அப்பொழுது மூக்தியும் ஜ்ஞாநத்தை அபேக்ஷிக்காமலே உண்டாகலாம்,—ச்ரவணம் முதலியதில்லாமலே வாக்யார்த்தஜ்ஞாநமுண்டாகலாம்,—அவித்யையில்லாமலே ஜகத்ப்ரமமும் உண்டாகலாம்,—அதிஷ்டாநமில்லாமலே அவித்யையும் கார்யகாரியாகலாம்—என்று கருத்து. அங்ஙனமாகில், பாதகஜ்ஞாநமிருக்கும்பொழுதே யாது காரணத்தால் சந்த்ரத்வித்வத்திற்கு நிவ்ருத்தி வருகிறதில்லை?—என்கிற வினாவுக்கு விடை கூறுகிறார் த்விசந்த்ர:—என்று. துசப்தமானது விவக்ஷிதமான அர்த்தத்திற்கு வைஷம்யத்தை உணர்த்துகிறது. பாதகஸந்நிதாவபி—பாதகஜ்ஞாநத்தின் ஸந்நிதியில் கூட திமிரம், காசம், காமரம்—ஆகிய தோஷங்கள் பரமார்த்தமாதலால் ஜ்ஞாநத்தால் பாதிக்கதகாததாக ஆகின்றன என்று கருத்து

அவைகள் பரமார்த்தங்களென்று வ்யவஹாரத்திற்காவது பிறரால் ஒப்புக்கொள்ளத் தக்கவைகள். இல்லையேல். ஆப்தோபதேசத்திற்கு அடுத்த க்ஷணத்தில கயிற்றில் ஸர்ப்ப வ்யவகாரத்திற்கு நாசம வருவதுபோல, தோஷம், மித்யை என்கிற வசநத்திற்கு அடுத்த க்ஷணத்தில் தோஷநிவ்ருத்தியினால் சந்த்ரத்வித்வ வ்யவகாரங்களுக்கு நாசம் வரவேண்டியதாக ஆகும். ஆகையால், தோஷமிருப்பதால் பேதப்ரமமாகிறது மூலமுள்ளது. இதனால் பாதகஸந்நிதியில் பாதிகத்தகதின் ஸத்தையும், காரணமில்லாமலே கார்யமுண்டாகுதல் என்கிற இரண்டு தூஷணங்களும் த்ருஷ்டாந்தத்தில் பரிகரிக்கப்பட்டதாக ஆகிறது. அந்ய மதத்திலோவென்றால், இரண்டு தூஷணங்களும் இருக்கவே இருக்கிறது. அப்படியானால், ஆப்தோபதேசம் முதலியவற்றுக்கு வையர்த்யம் வருமென்றால், சொல்லுகிறார்—ப்ரபல என்று. ரஜ்ஜுவில் பாம்புப்ரமமுள்ள மனிதனை அபேக்ஷித்து பயம் முதலிய கார்யங்களின் நிவ்ருத்தியானது பலமாக உரைக்கப்பட்டது. ஆதி சப்தத்தால் ஓடுதல் முதலியது கரஹிக்கப்படுகிறது. இரண்டு சந்த்ரன் என்கிற ஜ்ஞாநத்திலும் தன்னுடைய இந்திரியங்கள் தோஷமுள்ளவைகளல்ல என்கிற புத்தி நிவ்ருத்தியும், ஔஷதம் முதலியவற்றில் ப்ரவ்ருத்தியும் பலம. ஐந்த்ரஜாலிகப்ரமாதிகளில் ப்ரமத்துக்கு ஹேது ப்ரபலமாக இருப்பதால், உள்ளபடியே ப்ரமமாக இருந்தபோதிலும் அஸத்யவிஷயத்வ நிச்சயம் ப்ரதிபந்தமாக ஆகுமென்று அதை வ்யாவர்த்திப்பதற்காக ப்ரபலப்ரமாண சப்தம். 'நிவர்த்ததே' தோற்றமிருந்தபோதிலும் விஷயம் ஸத்யம் என்கிற நிச்சயப் படியாக ஆப்தோபதேசம் முதலியது பயம் முதலியவற்றின் நிவ்ருத்திக்கு ஹேதுவென்று பொருள். அல்லது, உள்ளபடி வஸ்துஸ்வரூபத்தை நேராகக் காண்பதற்கு உரிய ப்ரவ்ருத்தியின் வாயிலால் பயம் முதலியதின் நிவ்ருத்திக்கு காரணமென்று பொருள். துசப்தம் சங்கையை விலக்குகிறது.

ஜ்ஞாநத்தின் அநுத்பத்திபக்ஷமானது அநேகர்களுக்கு அபிமதமாக இருப்பதால் ஸிம்ஹாவலோகநத்தினால் அதை தூஷிக்கிறார்—அபிச என்று. இது ஸர்ப்பமல்ல கயிறு, என்பது போல் த்ருஷ்ட த்வாரத்தாலன்றோ பேதநிராகரணம். அத்ருஷ்ட த்வாரமாக பேதநிராகரணம் ஏற்படுமேயானால் பேதத்துக்கு ஸத்யத்வம் ப்ரஸங்கிக்கும். ஆகையால், அதிகமான பேதவாஸனைக்கு அல்பமான அத்வைத வாஸனையினால் நிராஸம் உபபந்நமாகாதென்று பொருள்.—அத்ருஷ்டத்வாரமாக நிவர்த்யத்வம் சொல்லப்படுமேயாகில் நிவர்த்திக்கத்தக்கதற்கு ஸத்யத்வம் அநிஷ்டமல்ல; த்யா

னத்தினால் நிவர்த்திக்கத்தக்க ஸர்ப்பத்துக்குப்போல, வ்யவஹார தசையில் வாஸனைக்கு ஸத்யத்வத்தை ஒப்புக்கொள்ளுவதால் ஜ்ஞானம் உண்டாகிவிட்டதேயாகில் அந்த பேத வாஸனையின் உத்பத்தி, ஸ்திதி, விநாசங்கள் — பாதிக்கப்பட்டவைகளாக ஆகும்— எனில், இவ்வண்ணமல்ல. த்யானத்தால் நிவ்ருத்திக்கத்தக்க ஸர்ப்பத்திற்கு அநித்யத்வமே. ஒருபொழுதும் பாத்யத்வம் ஸித்திக்கிறதில்லை. அப்படிப்போலவே, அத்ருஷ்டத்தினால் நிவர்த்திக்கத்தக்க வாஸனைக்கும் வாஸ்தவமான ஸத்யத்வம் ப்ரஸங்கிக்கும். ஐக்ய பாவனாரூபமான நிதித்யாஸனம் ப்ரதிபந்தநிவர்த்தகமாகுமேயாகில், கூறப்பட்டுள்ள தோஷம் வரும். அதுவோ ப்ரதிபந்தநிவ்ருத்தியின்பொருட்டு ஆகாது. பின்னையோவென்றால், வாக்யார்த்தஜ்ஞானத்தின் உதயத்துக்கு ஸஹகாரி, என்று சொல்லில், இப்படியல்ல. ஸ்ம்ருதிரூபமான நிதித்யாஸனமானது அனுபவஸாபேக்ஷமாக இருப்பதால் அதற்கு வாக்யார்த்தஜ்ஞானத்தை உண்டுபண்ணுவதில் ஸஹகாரித்வம் பொருந்தாது—என்றாலும், பரோக்ஷாநுபவத்திற்கு த்யானம் அநுபகாரமே. ஆகிலும், நிதித்யாஸனத்தினால் உதவி புரியப்பட்ட வாக்யமானது அபரோக்ஷவ்ருத்திக்கு காரணமாக ஆகலாம்—என்றால், இவ்வண்ணமல்ல. நிதித்யாஸனத்தினால் ஸஹகரிக்கப்பட்டிருந்தபோதிலும், சாப்தமாக இருப்பதினாலேயே அபரோக்ஷஜ்ஞானத்திற்கு காரணமாகாது, ஜ்யோதிஷ்டோமவாக்யம்போல. இவ்வண்ணமாக சாஸ்த்ரப்ரத்யக்ஷங்களுக்கு விரோதம் வருவதாலும், அவைகளுக்கு அவிரோத நிர்வாஹம் உபபந்நமாகாமையினாலும், வாக்யார்த்தஜ்ஞானமாத்ரத்திற்கு நிவர்த்தகத்வம் ஸம்பவியாமையாலும், வேறு வழி இல்லாமையால் வாக்யார்த்தஜ்ஞானத்தைக்காட்டிலும் வேறாகவே இருக்கிற முக்திஉபாயஜ்ஞானம்விதிக்கப்பட்டிருக்கிறதென்று கூறுகிறார் 'அத:' என்று.

பாஷ்யம்:—

ததா ச ஶ்ருதய:,—'விஜ்ஞாய ப்ரஜ்ஞாம் குர்வீத' 'அநுவித்ய விஜாநாதி' 'ஓமித்யேவாத்மாநம் த்யாயத' 'நிசாய்ய தம் ம்ருத்யுமுகாத் ப்ரமுச்யதே' 'ஆத்மாநமேவ லோகமுபாஸீத' 'ஆத்மா வா அரே! த்ரஷ்டவ்ய:, ஶ்ரோதவ்யோ மந்தவ்யோ, நிதித்யாஸிதவ்ய:, ஸோऽந்வேஷ்டவ்யஸ்ஸ விஜிஜ்ஞாஸிதவ்ய:' இத்யேவமாத்யா: |

அத்ர நிதித்யாஸிதவ்ய இத்யநேநைகார்த்யாத் 'அநுவித்ய விஜாநாதி, விஜ்ஞாய ப்ரஜ்ஞாம் குர்வீத' இத்யேவமாதிபிரபி வாக்யார்த்தஜ்ஞாநஸ்ய த்யாநோபகாரகத்வாத் அநுவித்ய விஜ்ஞாய இத்யநூத்ய ப்ரஜ்ஞாம் குர்வீத, விஜாநாதி இதி த்யாநம் விதீயதே| ஶ்ரோதவ்ய இதி சாநுவாத:; ஸ்வாத்யாயஸ்யாத்யயநவிதிநாதீதவேத: புருஷ: ப்ரயோஜநவதர்த்தாவபோததர்ஶநாத் தந்நிர்ணயாய ஸ்வயமேவ ஶ்ரவணே ப்ரவர்த்தத இதி ஶ்ரவணஸ்ய ப்ராப்தத்வாத்| ஶ்ரவணப்ரதிஷ்டாயுக்த்யநுஸந்தாநநஸ்ய மநநஸ்ய இதி சாநுவாத: | தது³பயாநந்தரமேவ விதீயதே |. வக்ஷ்யதி ச— 'ஆவ்ருத்திரஸக்ருதுபதேஶாத்' (ப்ர. ஸூ, ௪. ௧. ௧.) இதி|

𑌤𑌦𑌿𑌦𑌮𑍇𑌵 𑌮𑍋𑌕𑍍𑌷𑍋𑌪𑌾𑌯𑌤𑌯𑌾 𑌵𑌿𑌧𑌿𑌤𑍍𑌸𑌿𑌤𑌂 𑌵𑍇𑌦𑌨𑌮𑍁𑌪𑌾𑌸𑌨𑌮𑌿𑌤𑍍𑌯𑌵𑌗𑌮𑍍𑌯𑌤𑍇; 𑌵𑌿𑌦𑍍𑌯𑍁𑌪𑌾𑌸𑍍𑌯𑍋𑌰𑍍𑌵𑍍𑌯𑌤𑌿𑌕𑌰𑍇𑌣𑍋𑌪𑌕𑍍𑌰𑌮𑍋𑌪𑌸𑌂𑌹𑌾𑌰𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌤𑍍 । '𑌮𑌨𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍇𑌤𑍍𑌯𑍁𑌪𑌾𑌸𑍀𑌤' 𑌇𑌤𑍍𑌯𑌤𑍍𑌰 '𑌭𑌾𑌤𑌿 𑌚 𑌤𑌪𑌤𑌿 𑌚 𑌕𑍀𑌰𑍍𑌤𑍍𑌯𑌾 𑌯𑌶𑌸𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌰𑍍𑌚𑌸𑍇𑌨 𑌯 𑌏𑌵𑌂 𑌵𑍇𑌦' '𑌨 𑌸 𑌵𑍇𑌦 𑌅𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑍋 𑌹𑍍𑌯𑍇𑌷𑌃, 𑌆𑌤𑍍𑌮𑍇𑌤𑍍𑌯𑍇𑌵𑍋𑌪𑌾𑌸𑍀𑌤' '𑌯𑌸𑍍𑌤𑌦𑍍𑌵𑍇𑌦 𑌯𑌤𑍍𑌸 𑌵𑍇𑌦 𑌸 𑌮𑌯𑍈𑌤𑌦𑍁𑌕𑍍𑌤𑌃' 𑌇𑌤𑍍𑌯𑌤𑍍𑌰 '𑌅𑌨𑍁 𑌮 𑌏𑌤𑌾𑌂 𑌭𑌗𑌵𑍋 𑌦𑍇𑌵𑌤𑌾𑌂 𑌶𑌾𑌧𑌿 𑌯𑌾𑌂 𑌦𑍇𑌵𑌤𑌾𑌮𑍁𑌪𑌾𑌸𑍍𑌸𑍇' 𑌇𑌤𑌿 ॥

ச்ருதிகளின் தாத்பர்யமும் அவ்வண்ணமே. "அறிந்து உபாஸனை செய்யக்கடவன்" அறிந்து, ஓம் என்று ஆத்மாவை த்யானி "அவனை ஸாக்ஷாத்கரித்து ம்ருத்யுவின் வாயிலிருந்து விடுபடுகிறான்." ஆத்மாவையே லோகம் உபாஸிக்கடவது. அடே! ஆத்மாவானது நிச்சயமாக காணத்தக்கது, ச்ருதிவசனங்களால் கேட்கத்தக்கது, மனனம் செய்யத்தக்கது, அந்த ஆத்மா தேடத்தக்கது, அது அறிய இச்சிக்கத்தக்கது—இவைமுதலிவைகள்.

இங்கு "நிதித்யாஸிதவ்ய:" என்ற சப்தம் முதலியதோடு ஏகார்த்தமாக இருப்பதால் "அநுவித்ய விஜாநாதி விஜ்ஞாய ப்ரஜ்ஞாம் குர்வீத" இவை முதலிய வாக்யங்களால் வாக்யார்த்தஜ்ஞானத்திற்கு த்யானோபகாரகத்வமேற்படுவதால் "அநுவித்ய விஜ்ஞாய" என்று அநுவதித்து "ப்ரஜ்ஞாம் குர்வீத விஜாநாதி" என்று த்யானம் விதிக்கப்படுகிறது. ச்ரோதவ்ய: என்பதும் அநுவாதம் வேதாத்யயனம் அர்த்தப்ரதானமானதால் வேதாத்யயனம் செய்த புருஷன் ப்ரயோஜனமுள்ள அர்த்தங்களைத்தெரிவிக்கிற சப்தஸ்வபாவத்தைக் கண்டு அதை நிச்சயிப்பதற்காக தானாகவே ச்ரவணத்தில் ப்ரவ்ருத்திக்கிறான் என்று ச்ரவணம் ப்ராப்தம். மனனமும் ச்ருதமான அர்த்தங்கள் மனதில் நிலைபெறுவதற்காக வேண்டி இருப்பதால் மந்தவ்ய என்பதும் அநுவாதம்.

ஆகையால், த்யானம் மாத்ரம் விதிக்கப்படுகிறது. பின்பு "ஆவ்ருத்திரஸக்ருதுபதேசாத்" (அடிக்கடி த்யானம் ஆவ்ருத்திக்கத்தக்கது. ச்ருதியினால அவ்வண்ணம் உபதேசிக்கப்பட்டிருப்பதால்) என்றும் ஸூத்ரகாரர் கூறப்போகிறார். ஆகையால் மோக்ஷாத்ரயமாக விதிக்கவேண்டுமென்று விரும்பப்பட்ட இந்த வேதமானது உபாஸனமென்று அறியப்படுகிறது.

விதி உபாஸி இவ்விரண்டு பதங்களும் பர்யாயங்களாக ஒன்றோடொன்று கலந்து உபக்ரமவாக்யங்களிலும், உபஸம்ஹாரவாக்யங்களிலும் காணப்படுவதால். "மநோ ப்ரஹ்மேத்யுபாஸீத" (மனதை ப்ரஹ்மமென்று உபாஸிக்கக்கடவன்.) என்கிற இடத்திலும்,

"பாதி ச தபதி ச கீர்த்யா யசஸா ப்ரம்மவர்சஸேந ய ஏவம் வேத." "ந ஸவேத அக்ருத்ஸ்நோ ஹ்யேஷ ஆத்மேத்யேவோபாஸீத," "யஸ்தத்வேத யத்ஸ வேத ஸ மயைதது்க்த:" எவன் இவ்வண்ணம் அறிகிறானோ அவன் கீர்த்தியினாலும் யசஸ்ஸினாலும் ப்ரம்மவர்சஸத்தினாலும் ப்ரகாசிக்கிறான். சத்துருக்களைத் தன் சக்தியினால் வாட்டுகிறான். அவன் அறிகிறானில்லை, அவன் அபூர்ணனன்றோ. ஆத்மா என்றே உபாஸிக்கக்கடவன், எவன் அதை அறிவனோ, எதை அவர் அறிவரோ, அவரும் அதுவும், என்னால் கூறப்பட்டது என்கிற இடத்திலும் "அநு ம தாம் பகவோ தேவதாம் சாதி யாம் தேவதாமுபாஸ்ஸே" (ஹே! * பகவானே! எந்த தேவதையை உபாஸிக்கிறீரோ அப்படிப்பட்ட இந்த தேவதையை எனக்கு உபதேசிப்பீராக) என்றும்.

ச்ருதப்ரகாசிகை:—

பாரிசேஷ்யம் மாத்ரமல்ல. அதனால் அநுக்ரஹிக்கதக்க ச்ருதிகளும் இருக்கின்றன என்று கூறுகிறார் ததாச என்று. விஜ்ஞாய என்கிற பதம் முதலாக இரண்டு வாக்யங்களில் ஜ்ஞாநஸாமான்யபோதக சப்தமும், இரண்டு வாக்யங்களின் உபாதாநமும் உபஸர்கங்கள் வெவ்வேறாக இருந்தபோதிலும், விதிப்ராத்யத்தை ஈற்றில் உடைத்தாயிருப்பினும், அவ்வண்ணமில்லாதிருப்பினும், அர்த்தபேதமில்லை என்பதைத் தெரிவிப்பதற்காக. த்யாயீத என்பது விசேஷசப்தம். நிசாய்ய என்று த்யானத்துக்கு ப்ரத்யக்ஷஸமாநாகாரத்வம் காட்டப்பட்டது. சாய்ரு தர்சனே என்று தாது. உபாஸீத என்பதினால் ஜ்ஞாநத்துக்கு உபாஸந சப்தவாச்யத்வம் ஸித்தித்தது. அந்வேஷ்டவ்ய: என்பதினால் மநநத்தை ப்ரதானமாகக் கொண்ட ச்ரவணம் கூறப்பட்டது. நிதித்யாஸிதவ்ய:, விஜிஜ்ஞாஸிதவ்ய:, என்று எடுத்ததினால் ஸந்நந்தமாக இருந்தபோதிலும் வாக்யமானது இஷ்யமாணஜ்ஞாநப்ரதானம் என்பது காண்பிக்கப்பட்டது. ஸாமாந்ய விசேஷ சப்தங்களாக இருப்பதினால் ஸந்நந்தங்களான

* பகவான்—ஆறு குணங்களுள்ளவன்.

"உத்பத்திஞ்ச விநாசஞ்ச பூதாநாமாகதிம் கதிம் |
வேத்தி வித்யாமவித்யாஞ்ச ஸ வாச்யோபகவாநிதி ; என்றும்
ஐச்வர்யஸ்ய ஸமக்ரஸ்ய வீர்யஸ்ய யசஸ: ச்ரிய:
ஜ்ஞாநவைராக்யயோச்சைவ ஷண்ணாம் பக இதீரணா

என்றும் புராண நிர்வசனம்—

இரண்டு பதங்களும் எடுக்கப்பட்டன. (இத்யேவமாத்யா) இதி சப்தமானது எடுக்கப்பட்டிருக்கிற ச்ருதிவாக்யத்தின் ஸ்வரூபமாத்ரப்ரதர்சகம். ஏவம சப்தமானது ஸம்ப்ரத்யத்தை ஈற்றிலுடைத்தாயிருத்தல், விதிப்ரத்யத்தை கடைசியில் கொண்டிருத்தல், அங்ஙனமில்லாமை, உபஸர்கங்களுடைய வேறுபாடு, இது முதலிய ப்ரகாரங்களைக்காட்டுகிறது. உதாஹரிக்கப்பட்ட வாக்யங்களில் ஜ்ஞானஸாமான்யத்தை உணர்த்துகிற பதங்களுக்கு விசேஷாகாங்க்ஷை வருங்கால், வாக்யார்த்தஜ்ஞானஸ்வரூபமான விசேஷம் பர்யவஸானபூமியாக ஆகலாமென்ற சங்காநிவ்ருத்தியின் பொருட்டு சொல்லுகிறார் அத்ர என்று. அத்ர—எடுக்கப்பட்ட வாக்யங்களில் இத்யேவமாதிபி: த்யானம் விதீயதே என்று அந்வயம்.

'நிதித்யாஸிதவ்ய இத்யாதிநா' ஆதி சப்தத்தால் 'ஸந்நிஹிதஜ்ஞானவிசேஷ வாசியான வாக்யாந்தரம் விவக்ஷிக்கப்பட்டது. † ஸர்வசாகாப்ரத்யயந்யாயத்தால் ஐகார்த்யமும்—அது சொல்லப்படாததும், ஆகாங்க்ஷிக்கப்பட்டுள்ளதுமான அர்த்தத்தின் ஸ்வீகாரத்தை பலமாகக்கொண்டதன்றோ. அந்த இடத்தில் "சாகோவாமந்த்ரவர்ணாத்" என்கிற ந்யாயத்தால் ஸாமாந்யவாசிசப்தங்களுக்கு விசேஷத்தில் பர்யவஸானம். "அநுவித்ய விஜாநாதி, விஜ்ஞாய ப்ரஜ்ஞாம் குர்வீத" என்கிற இடத்தில் எந்த பதத்தினால் வாக்யார்த்தஜ்ஞானம் அநுவதிக்கப்படுகிறது—எதனால் த்யானம் விதிக்கப்படுகிறது—என்று அபேக்ஷை வருங்கால் கூறுகிறார் 'அநுவித்ய விஜ்ஞாயேத்யநூத்ய' என்று. அநுவாதம் எதற்காகவென்றால் சொல்லுகிறார்—த்யானோபகாரகத்வாத் என்று. 'ப்ரஜ்ஞாம் குர்வீத' விஜாநாதி, என்கிற வாக்யத்வயத்தின் உபாதானத்திற்கு முன்கூறியதே பலம். இவ்வண்ணம் ஸ்ம்ருதிகளிலும் ஸாமான்யசப்தமானது விசேஷோபஸ்தாபகமிருக்குமேயாகில் அந்த விசேஷத்தில் பர்யவஸித்ததாய் காணப்பட்டிருக்கிறது. 'நிஷித்தபக்ஷணம், ஜைஹ்ம்யம் உத்கர்ஷே ச வசோந்ருதம், ரஜஸ்வலாமுகாஸ்வாதஸுராபாநஸமாநி து'. (சாஸ்த்ரங்களால் விலக்கப்பட்டவைகளை சாப்பிடல், கௌடில்யம், சிறப்புள்ளவர்களிடத்தில் பொய் சொல்லுதல், உதக்யையினுடைய அதரபானம் செய்தல் இவைகள் சாராயத்தை குடிப்பதற்கு ஸமானங்கள்) என்கிற இடத்தில் நிஷித்தஸாமான்யத்தின் பக்ஷணஸாமாந்யம் பாதித்யத்திற்கு ஹேதுவென்று அறியப்பட்டிருக்கிறது. "சத்ராகம் விட்வராஹஞ்ச லசுநம் க்ராமகுக்குடம், பலாண்டும் க்ருஞ்ஜநஞ்சைவ மத்யா ஜக்த்வா பதேத்விஜ:" (நாய்க்கொடையையும், மலத்தைத்தின்கிற பன்னியையும், வெங்காயத்தையும், ஊர்க்கோழியையும், உள்ளிப்பூண்டையும், ஒரு தலைப்பூண்டையும் புத்திபூர்வகமாக ப்ராஹ்மணன் சாப்பிடுவனேயாகில் பதிதனாவான்.) என்கிற இடத்தில் நிஷித்தத்துக்கு பக்ஷண விசேஷம் பாதித்ய ஹேதுவெனக்காணப்பட்டிருக்கிறது. இங்கு முந்தின க்ரந்தமானது பிந்தின விசேஷகாந்தத்தில் பர்யவஸிக்கிறது.

ஸாமாந்யசப்தம் விசேஷபர்யவஸாயி ஆகட்டும். இங்கேயோவென்றால் ஜ்ஞானஸாமாந்யவாசியான சப்தமானது 'ச்ரோதவ்ய:' என்று ச்ரவணரூபமான ஜ்ஞானவிசேஷத்தில் பர்யவஸிக்கட்டும் என்றால் கூறுகிறார்— "ச்ரோதவ்ய இதி ச" என்று. சகாரம்

---

† ஸர்வசாகாப்ரத்யயந்யாயம்,—ஒரு விஷயத்தை பல வேதசாகைகளில் எடுத்து சொல்லியிருந்தால், எந்த சாகையில் அவசியம் வேண்டியதான எந்த பாகம் குறைவோ அதை மற்றொரு சாகையிலிருந்து எடுத்துக்கொள்ளுதல்

(இந்த சாகையில் இல்லாததை அந்த சாகையிலிருந்தும், அந்த சாகையிலில்லாததை இந்தசாகையிலிருந்து எடுத்துக்கொள்ளலாம்.)

சங்கையின் நிவ்ருத்தியிலாவது, ஸமுச்சயத்திலாவது இருக்கிறது. "விஜ்ஞாய அநுவித்ய" என்பது போல, இதுவும் அநுவாதமென்று கருத்து. அதை சுருக்கமாக உபபாதநம் பண்ணுகிறார்—'ஸ்வாத்யாயஸ்ய' என்று. ஆபாதப்ரதீதியினால் ச்ரவணத்துக்கு தானாகவே ப்ராப்தி உண்டாகலாம்,மநநத்திற்கு அவ்வித ஹேது இல்லாததால் அதில் பர்யவஸாநமுண்டாகவேண்டாமென்றால் சொல்லுகிறார்— 'ச்ரவணப்ரதிஷ்டார்த்தத்வாத்' என்று. சகாரம் முன்போல் என்றறிக. 'தஸ்மாத்யாநமேவ' வாக்யார்த்தஜ்ஞாநமல்ல என்று அர்த்தம். 'ச்ரோதவ்ய:' என்பது புஸ்தகத்தைப்பார்த்துப்படித்தல் முதலியதை வ்யாவ்ருத்தி செய்கிற விதியாக என் ஆகக்கூடாது? என்றால், இவ்வண்ணமல்ல,—வேதாந்தவாக்யங்களுக்கும் புஸ்தகத்தைப்பார்த்தல் முதலியதின் வ்யுதாஸமானது அத்யயனவிதியினால் ஸித்தித்திருப்பதாலும், ப்ரஹ்மமீமாம்ஸையை எழுதல், படித்தல் முதலியது நிஷேதிக்கப்பட்டிராமையாலும், குருபஸதனத்தில் ச்ரவண சப்தத்திற்கு முக்யார்த்தத்வமில்லாமையாலும், அந்த உபஸத்தியானது இங்கே விதிக்கப்பட்டதாக இருந்தபோதிலும், 'குருமேவாபிகச்சேத்' என்கிற வாக்யாந்தரத்தால் ஸித்தித்திருப்பதாலும்.

ந்யாயத்துடன்கூடிய வாக்யமாத்ரத்தால் அறியத்தகாததும் கேவலோபதேசத்தால் அறியத்தக்கதுமான அர்த்தவிசேஷத்தின் ச்ரவணமானது ச்ரோதவ்ய: என்கிற பதத்தினால் விதேயமென்று சொல்வது கூடாது,—மநநத்துக்கு முந்தி இருக்கவேண்டியதாதலால், இந்த ச்ரவணமானது ந்யாயத்தினால் உபகரிக்கப்பட்ட வாக்யஜந்யஜ்ஞாநரூபம் என்று அறியப்படுவதாலும், சப்தஸ்வாரஸ்யத்தினாலும். மந்தவ்ய: என்பது § ஆலம்பந ஸம்சீலநரூபமான மநநவிதியென்று சொல்லத்தக்கதல்ல,—ச்ரவண சப்தத்திற்கு ந்யாயோபேதமான வாக்யஜந்யஜ்ஞாநத்துக்குப்போல், மந்தவ்ய சப்தத்திற்கு அந்த ஜ்ஞாநத்தின் ப்ரதிஷ்டாபநத்தில் ப்ராஸித்தி ப்ராசுர்யத்தாலும், அதற்கு அபவாதமில்லாமையாலும், இரண்டுக்கும் அப்ராப்தமான அர்த்த த்வய விதாயித்வத்தை ஒத்துக்கொண்டால் வாக்யபேதம் ப்ரஸங்கிப்பதாலும், கத்யந்தரம் இருக்க விசிஷ்டவிதாநாச்ரயணம் அந்யாய்யமாதலாலும். விதியோவென்றால், பதங்களாலறியப்பட்ட அர்த்தங்களில் ஓரிடத்தில் உபக்ஷீணசக்தியுள்ளதாக லாகவத்தின் பொருட்டு அதைத்தவிர்த்த மற்றவைகளில் தானாகவே அநுவாதத்தை அபேக்ஷித்து அடையும் தன்மையில்லாமையால், விசிஷ்டத்தில் தாத்பர்யத்தை அடைகிறது. இந்த இடத்திலோவென்றால், அநுவாதத்திற்கு ஸம்பவமிருப்பதால் விசிஷ்டவிஷயத்வகல்பநம் யுக்தமல்ல. ஆகையால், அநுவாதம். இதனால் ச்ரவண சப்தத்திற்கு யாதவமிச்ரனால் சொல்லப்பட்ட நிர்வாஹம் நிரஸிக்கப்பட்டது. இந்த இடத்தில் த்ரஷ்டவ்ய சப்தமானது, உபாயோபேயநிலைகளில் ஸாதாரணமாக இருப்பதால் மேலே நியாமகமாயும் வ்யக்தமான அர்த்தத்துடன் கூடியதுமான வாக்யாந்தரத்தோடுகூட வ்யாக்யானம் செய்யப்படப்போகிறது. நநு ஸாதாரணத்வமில்லை; த்ரஷ்டவ்ய: என்கிற தவ்யத்ப்ரத்யயத்தால் தர்சநத்திற்கு விதேயத்வம் அறியப்படுவதால், பலத்திற்கும் விதேயத்வம் கூடாததால், என்றால் கூறப்படுகிறது—நிதித்யாஸநத்தைப்போல், தர்சநத்திற்கும் விதாநம் ஒப்புக்கொள்ளப்பட்டால் வாக்யபேதம் ப்ரஸங்கிப்பதாலும், நிச்சிதாநுவாதச்ரவண மநந ஸாஹசர்யத்தாலும்,விதித்வநிச்சயப்ரதிபந்தத்தால் உபாயத்திற்கு தர்சநரூபத்வவிஷயப்ரமாணம் காணப்படாமையாலும், விசிஷ்டவிதித்வாச்ரயணம் கூடாது. 'மநஸைதாந் காமாந் பச்யந் ரமதே ய ஏதே ப்ரஹ்மலோகே பராத்பரம் புரிசயம் புருஷமீக்ஷதே' (மனதினால் இந்த காமங்களைப்பார்த்துக்கொண்டு ரமிக்கிறான்—எவன் ஸ்ரீவைகுண்

§ ஆலம்பநஸம்சீலனம்—அடிக்கடி பகவத்விக்ரஹஸ்வரூபத்தை சிந்தித்தல்.

டத்தில் பரமான வஸ்துவைக்காட்டிலும் பரனாகவும், எல்லா ப்ராணிகளுடைய சரீரத்தில் அநுப்ரவேசித்திருப்பவனுமான புருஷனைக் காண்கிறானோ) இதுமுதலியவைகளால் பல தசையில் தர்சநம் ப்ராமாணிகமாக இருப்பதாலும், ச்ரோதவ்ய என்கிற இடத்தில்போல, தவ்யதார்த்தத்தை அநாதரித்து த்ரஷ்டவ்ய சப்தத்திற்கு பலஸமர்ப்பகத்வம் சங்கிப்பது யுக்த மென்பதனால், மேலே வ்யாக்யேயத்வம்.—

பிறகு உபாஸநம விதித்வித மென்பதை த்ருடப்படுத்துவதற்காக ஸூத்ரகாரருடைய உக்தியைக்காட்டுகிறார வக்ஷ்யதிச என்று. அப்படிப்பட்ட ஸூத்திரத்தின் அஸம்பவத்தை நிரஸிப்பதற்கு ஸூதரத்தைஎடுக்கிறார்'ஆவ்ருத்தி' உபாஸநசப்தத்திற்குஎன்று.ச்ரவணமில்லாமையால் ஸூத்ரத்திற்கு உபாஸகபரத்வம் அஸ்புடமென்று அதனுடைய அர்த்தத்தைச் சொல்லுகிறார் ததிதம் என்று. இரண்டு மூன்று தடவை என்பதை வ்யாவ்ருத்திப்பதன் பொருட்டு "அஸக்ருத்" என்கிற ஸௌத்ரபதம். எதற்கு ஆவ்ருத்தி என்று அபேக்ஷை வருங்கால், கூறுகிறார் 'ததிதம் வேதநம்' என்று. ததிதம்— அந்த இந்த. மூன்றாவத த்யானத்தின் முடிவில் "ஏவம் முக்திபலாநியம: ததவஸ்தாவத்ருதே:" என்று ப்ரஸ்தாபிக்கப்பட்டுள்ளதாயும், மோக்ஷத்தை பலமாக உடையதுமான ஜ்ஞாநமென்று பொருள். அல்லது, ப்ரஜ்ஞாம் குர்வீத இது முதலான ஸாமாந்யசப்தத்தால் சொல்லப்பட்ட வேதநமானது அஸக்ருதாவ்ருத்திரூபமான உபாஸநமென்று பொருள்.

வாக்யத்தின் ஈற்றிலுள்ள அவகம்யதே என்ற பதத்தால் 'ஆவ்ருத்திரஸக்ருத்' என்கிற ஸூத்ரத்தின் அம்சம் வ்யாக்யாநிக்கப்பட்டது. உபதேசாத் என்கிறபதத்தை வ்யாக்யானிக்கிறார் 'வித்யுபாஸ்யோ:' என்று. ஸ்தலத்ரயத்தையும் உதாஹரிக்கிறார் 'மந' என்று. மநோப்ரஹ்ம என்கிற வாக்யம் ராத்ரீருபேயாத் என்பதுபோல. 'ப்ரதிதிஷ்டந்திஹ வா ய ஏதா ராத்ரீருபயந்தி' (எவர்கள் ப்ரதிஷ்டாரூபமான பலனைப்பெறுகிறார்கள்) என்கிற இடத்தில் 'ய ஏதா ராத்ரீ:' என்று ஸத்ராநுவாதம்போல, 'ஏவம் வேத' என்று முன் விதிக்கப்பட்டிருக்கிற உபாஸநத்தின் பலார்த்தமாக அநுவாதம். கொடுத்தல் அதிசக்தி முதலிய ஹேதுபேதததால் கீர்த்தி,யசஸ் இவ்விரண்டுக்கும்பேதம், மநோப்ரஹ்மேத்யுபாஸித (மனதை ப்ரஹ்மமென்று உபாஸிக்ககடவன்.)இதைமுதலாகக்கொண்ட ப்ரகாணத்திலும், "யஸ்தத்வேத" இதுமுதலான ப்ரகாரணத்திலும் வேதந, உபாஸந, வாசிசப்தங்களிரண்டுக்கும் விலக்கமிருப்பதால் ப்ரகரணைக்யத்தைத்தெரியப்படுத்துவதற்காக "அத்ர" என்று உரைக்கப்பட்டது. 'அநும' எந்த தேவதையை உபாஸிக்கிறாயோ அந்த தேவதையைப் பகுத்தறிந்து தெரிவிப்பீராக. அநுஎன்கிற உபஸர்கபூர்வகமான சாஸ்தாதுவுக்கு பகுத்தறிதல் அர்த்தம், விவேசநம்செய்து தெரிவிப்பீராகவென்று அர்த்தம், "வ்யவஹிதாச்ச" என்கிற ஸூத்ரத்தினால் வேதத்தில் உபஸர்கங்களுக்கு வ்யவஹிதப்ரயோகம். 'ந ஸ வேத' என்கிற இடத்தில் ஸாமீப்யத்தினால் அத்ரசப்தத்திற்கு ப்ரயோகமில்லை. 'ந ஸ வேத' என்பது "அத யோऽந்யாம் தேவதாமுபாஸ்த" என்கிற இந்த வாக்யபூர்வகமாக உபக்ரமோபஸம்ஹாரங்களில் உபாஸநசப்தம், நடுவில் வேதநசப்தம். இதுவும் முந்தின வாக்யத்தில் 'உபக்ரமோபஸம்ஹாரதர்சநாத்' என்கிற க்ரந்தத்தால் அபிப்ராயப்பட்டிருக்கிறது. "யஸ்தத்வேத" அந்த ப்ரமத்தையறிந்தவர் எந்த ரைக்வர் 'யத்ஸ வேத' அந்த ரைக்வருக்கு அறியத்தக்கதான எந்த ப்ரஹ்மம். அதையறிந்தவரான யாதொரு ப்ரஹ்மம் ரைக்கவர். இவராலறியத்தக்கது. இரண்டும் உனக்கு என்னால் உரைக்கப்பட்டது என்று அர்த்தம்.

ஸாமாந்யவிசேஷந்யாயத்தால் வேறு ப்ரகாணத்தில் சொல்லப்பட்டுள்ள ஜ்ஞாந ஸாமாந்யவாசியான சப்தங்களுக்கு விசேஷத்தில் பர்யவஸாநம்முந்தியே பாஷ்யகாரரா

லேயே காட்டப்பட்டிருக்கிறது. ஸூத்ரவ்யாக்யாநத்திலோவென்றால், ஒவ்வொரு ப்ரகரணத்திலும் கலந்தே உபக்ரமோபஸம்ஹாரதர்சநமானது "உபதேசாத்" என்கிற பதத்திற்கு அர்த்தமாக உரைக்கப்பட்டது. இரண்டிடத்திலும் இரண்டும் ஹேதுவாகச்சொல்லத்தக்கது, ஆயினும், விரிவாக இல்லாமலிருப்பதற்காக ஒவ்வொன்று சொல்லப்பட்டது. அதினாலேதான் நான்காவது அத்யாயத்தில் இரண்டையும் காரணமாகக்கூறப்போகிறார். அப்படியில்லாவிட்டால் 'ததிதம் அபவர்கோபாயதயா விதித்ஸிதம் வேதநம்' என்று சொல்லப்பட்டிருக்கவேண்டாம். பின்னையோவென்றால் 'த்யாநம் உபாஸநம்' என்றே சொல்லப்பட்டிருக்கலாம். வேறுவிதமாக இருந்தால் சங்கிலிப்பிணைபோல், ஒன்றோடொன்று கலந்து தொடர்ச்சியாக வருகிற வசனப்ரகரணத்திற்கு ஔசித்யம் இராது;— பிந்தியும் "த்யாநஞ்ச தைலதாராவதவிச்சின்னஸ்ம்ருதிஸந்தாநரூபம்" என்று முந்தி ப்ரக்ருதமான த்யாநசப்தத்தினால் நிர்தேசிப்பதால் முந்தின க்ரந்தத்தில் த்யாநத்திற்கு உபாஸநரூபத்வம் விவக்ஷிக்கப்பட்டிருக்குமேயாகில், பிந்தி 'உபாஸநம் அவிச்சிந்நஸ்ம்ருதிஸந்தாநரூபம்' என்று உபாஸநசப்தத்தால் சொல்லப்பட்டிருக்கலாம்.

𑌭𑌾𑌷𑍍𑌯𑌮𑍍—

𑌧𑍍𑌯𑌾𑌨𑌞𑍍𑌚 𑌤𑍈𑌲𑌧𑌾𑌰𑌾𑌵𑌦𑌵𑌿𑌚𑍍𑌛𑌿𑌨𑍍𑌨𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌸𑌨𑍍𑌤𑌾𑌨𑌰𑍂𑌪𑌮𑍍; '𑌧𑍍𑌰𑍁𑌵𑌾 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌃 । 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌲𑌮𑍍𑌭𑍇 𑌸𑌰𑍍𑌵𑌗𑍍𑌰𑌨𑍍𑌥𑍀𑌨𑌾𑌂 𑌵𑌿𑌪𑍍𑌰𑌮𑍋𑌕𑍍𑌷𑌃' 𑌇𑌤𑌿 𑌧𑍍𑌰𑍁𑌵𑌾𑌯𑌾𑌃 𑌸𑍍𑌮𑍃𑌤𑍇𑌰𑌪𑌵𑌰𑍍𑌗𑍋𑌪𑌾𑌯𑌤𑍍𑌵𑌶𑍍𑌰𑌵𑌣𑌾𑌤𑍍। 𑌸𑌾 𑌚 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌰𑍍𑌦𑌰𑍍𑌶𑌨𑌸𑌮𑌾𑌨𑌾𑌕𑌾𑌰𑌾 ; '𑌭𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 𑌹𑍃𑌦𑌯𑌗𑍍𑌰𑌨𑍍𑌥𑌿𑌃 𑌛𑌿𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌸𑌂𑌶𑌯𑌾𑌃। 𑌕𑍍𑌷𑍀𑌯𑌨𑍍𑌤𑍇 𑌚𑌾𑌸𑍍𑌯 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌦𑍃𑌷𑍍𑌟𑍇 𑌪𑌰𑌾𑌵𑌰𑍇' 𑌇𑌤𑍍𑌯𑌨𑍇𑌨𑍈𑌕𑌾𑌰𑍍𑌥𑍍𑌯𑌾𑌤𑍍। 𑌏𑌵𑌞𑍍𑌚 𑌸𑌤𑌿 '𑌆𑌤𑍍𑌮𑌾 𑌵𑌾 𑌅𑌰𑍇 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌵𑍍𑌯𑌃' 𑌇𑌤𑍍𑌯𑌨𑍇𑌨 𑌨𑌿𑌦𑌿𑌧𑍍𑌯𑌾𑌸𑌨𑌸𑍍𑌯 𑌦𑌰𑍍𑌶𑌨𑌸𑌮𑌾𑌨𑌾𑌕𑌾𑌰𑌤𑌾 𑌵𑌿𑌧𑍀𑌯𑌤𑍇। 𑌭𑌵𑌤𑌿 𑌚 𑌸𑍍𑌮𑍃𑌤𑍇𑌰𑍍𑌭𑌾𑌵𑌨𑌾𑌪𑍍𑌰𑌕𑌰𑍍𑌷𑌾𑌦𑍍𑌦𑌰𑍍𑌶𑌨𑌰𑍂𑌪𑌤𑌾 ।

த்யாநமாவது, எண்ணெயின் தாரைபோல, இடையின்றி தொடர்ந்து வருகின்ற ஸ்ம்ருதி. த்ருவமான ஸ்ம்ருதியானது ஸ்ம்ருதி உண்டானால், ராகம் முதலிய எல்லா க்ரந்திகளுக்கும் ஆத்யந்திக நாசம், என்று த்ருவையான ஸ்ம்ருதிக்கு மோக்ஷோபாயத்வம் ச்ருதியினால் கூறப்பட்டிருப்பதால் அந்த ஸ்ம்ருதியும் தர்சநஸமான ஆகாரத்துடன் கூடியது. 'அந்த பராவர வஸ்து காணப்பட்டவுடன் ஹ்ருதயத்திலுள்ள ராகாதிகள் பிளந்துபோகின்றன. எல்லா சம்சயங்களும், விபர்யயங்களும் வெட்டப்படுகின்றன. இவனுடைய கர்மாக்கள் நாசமடைகின்றன' என்கிற வசநத்தோடு ஏகார்த்தமாக இருப்பதால். ஆகவே, 'ஆத்மா வா அரே த்ரஷ்டவ்ய:' என்கிற ச்ருதிவசநத்தினால் நிதித்யாஸநத்திற்கு தர்சநஸமா

நாகாரத்வம் விதிக்கப்படுகிறது. ஸ்ம்ருதிக்கு பாவநாப்ரகர்ஷத்தால் தர்சநரூபத்வம் ஸம்பவிக்கிறது.

ச்ருதப்ரகாசிகை:—

இவ்வண்ணமாக ப்ரஸ்துதஸூத்ரார்த்தம் நிச்சயிக்கப்பட்ட பிறகு முந்தி ப்ரக்ருதமான த்யாநத்திற்கு த்ருவாநுஸ்ம்ருதித்வத்தை உபபாதிக்கிறார் 'த்யாநஞ்ச' என்று. இது வேதநத்துக்கு அடிக்கடி ஆவ்ருத்தியைச்சொல்லுகிற ஸூத்ரகாரருக்குத்தாத்பர்யம்—எவ்வாறு, ஜ்ஞாநஸாமந்யவாசிசப்தங்களுக்கு விசேஷத்தில் பர்யவஸாநத்தினால் அஸக்ருதாவ்ருத்திரூபஜ்ஞாநபரத்வம் ஸித்தமோ, அவ்வாறே வேறு விசேஷங்களை உணர்த்துகிற சப்தங்கள் இருக்குமாகில், அந்த அர்த்தவிசேஷத்தில் பர்யவஸாநம் ந்யாய்யம் என்று. ஆகையால், ஸூத்ரகாரரால் ஜ்ஞாநத்துக்கு கண்டோக்தமாயுள்ள அஸக்ருதாவ்ருத்திரூபத்தையே உபபாதித்துவிட்டு அவரால் அபிப்ராயப்பட்டிருக்கிற வேறு ச்ருதிகளால் உபஸ்தாபிக்கப்பட்டிருக்கிற விசேஷாந்தரத்தைச்சொல்லுகிறார் 'த்யாநஞ்ச' என்று. இந்த க்ரந்தத்தினால் அடிக்கடி ஆவ்ருத்திக்கு வ்யாவஹிதத்வசங்கையை நிரஸிப்பதற்காக. விஜாதீயமான ப்ரத்யயாந்தரத்தால் அவ்யவஹிதத்வம் கூறப்பட்டது.

இந்த இடத்தில் இடையில் விட்டுப்போகிற ஸ்ம்ருதிஸந்ததிக்கும், விடாத ஸ்ம்ருதிஸந்ததிக்கும் ஸாதாரணமாக த்யாநசப்தமிருக்குமேயானால் 'த்யாநஞ்ச' இது முதலியதால் விசேஷாந்தரத்தில் பர்யவஸாநம் சொல்லப்பட்டதாக ஆகிறது. த்யாநசப்தம் அவிச்சிந்நஸ்மிருதி ஸந்தாநத்தையே சொல்லுகிறதென்றால், த்யாநசப்தம் வ்யாக்யாநிக்கப்பட்டதாகிறது. த்யாநசப்தம் அவிச்சிந்நஸ்மிருதிஸந்ததியையே சொல்லுகிறதென்பதில் ப்ரமாணவசநம்கூறுகிறார் 'த்ருவ' என்று. ஸ்ம்ருதிக்கு த்ருவமாவது வேறான ஜ்ஞாநவிசேஷத்தால் மறைக்கப்படாத ஸந்ததிதான்,—ஸ்ம்ருதிவ்யக்திகளெல்லாம் க்ஷணிகமாக இருப்பதால்.

"அபவர்கோபாயத்வச்ரவணாத்" அங்கு மோக்ஷத்திற்கு உபாயமாக இருக்கிற வேதநத்திற்கு அடிக்கடி ஆவ்ருத்தி கூறப்பட்டது. இங்கும் அந்த அபவர்கோபாயத்வப்ரத்யபிஜ்ஞையினால்அதற்கே விட்டுப்போகாத தொடர்ச்சியானது விவக்ஷிதருத்து. அந்ததம் என்று ஸ்ம்ருதிக்கு தாசநரூபதவம் சொல்லப்படுகிறது 'ஸாச' என்று.விஷயம் ஒன்றாக இருப்பதினால்மாத்ரம் ஸாம்யமென்பதில்லை. அபரோக்ஷபாவத்தாலுங்கூட என்று ஆகார சப்தத்தின் கருத்து. ஹ்ருதயஸ்ய—மனதினுடைய. க்ரந்தய:—ராகாதிகள் அல்லது, 'மஞ்சா: க்ரோசந்தி' (சோளக்காட்டுபந்தலகள் கத்துகின்றன) என்பதுபோல, ஹ்ருத்யசப்தமானது அதில் இருக்கிற ஜீவனைச்சொல்லுகிறது—அன்றிக்கே, ஹ்ருத்ஸ்தாநத்தை அடைந்திருக்கிறான்—என்கிற வ்யுத்பத்தியினால். தஸ்ய க்ரந்தி: ப்ரக்ருதிஸம்பந்தம். அல்லது, ஹ்ருதயசப்தத்தால் உபலக்ஷிக்கப்பட்ட சரீரம் க்ரந்தி. ஸம்சயசப்தம் விபர்யயத்தையும் காட்டுவதற்காக, தேஹாத்மாபிமானம் முதலியவற்றை ஸ்வரூபமாகக்கொண்டிருக்கிறஅவித்யையென்று அர்த்தம்.

கர்மாக்களாவன புண்யபாபரூபங்கள். அவித்யையினால் ஸஞ்சிதமான கர்மங்களால் உண்டான ப்ரக்ருதிஸம்பந்தநிவ்ருத்திதான் தர்சனஸமாநாகரோபாஸனை—என்று அர்த்தம்.

'ஏவஞ்சஸதி' உபாயதசையில் ஜ்ஞாநத்துக்கு தர்சநரூபத்வமானது ஸ்பஷ்டமான அர்த்தமுள்ள வாக்யாந்தரங்களால் ஸித்தித்திருக்குமளவில்—என்று பொருள். சப்தமானது

த்ரஷ்டவ்ய சப்தத்திற்கு பலதசையில் அபிப்ராயத்வசங்கையை நிவ்ருத்திப்பதற்காக. தர்சந சப்தத்திற்கு ஜ்ஞாநஸாமாந்யபரத்வம் ஸம்பவித்தாலும் "த்ரஷ்டவ்ய : ச்ரோதவ்யோ மந் தவ்யோ நிதித்யாஸிதவ்ய:, ஆத்மநி கல்வரே த்ருஷ்டே ச்ருதே மதே விஜ்ஞாதே இதம் ஸர்வம் விதிதம்" என்று ச்ரவணாதிகள் தனித்துச்சொல்லப்பட்டிருப்பதால் த்ரஷ்டவ்ய : என்கிற பதமானது ஸாக்ஷாத்காரரூபத்வபரம். த்ருஷ்டசப்தமும் அதற்கு ஸமானமான பொருளுள்ளது. அதுவும் உபாயதசையில் அபிப்ராயமுள்ளது;—அது பார்க்கப்பட்டவுடன் ஹ்ருதயக்ரந்தியானது பிளக்கப்படுகிறதென்று சொல்லப்பட்டிருப்பதால் 'எதனால் நான் மோக்ஷத்தைப்பெற்றவனாக ஆவேன், பொருளால் மொக்ஷத்தை அடைய ஆசைப்படு வதில் பயனில்லை. இவ்வளவேதான் அர்த்தம்' என்கிற மோக்ஷமுள்ள முன்பின் வாக்யங் களில் பலத்தை நிர்தேசித்திருப்பதாலும், வேறு ப்ரகாரணத்தில் சொல்லப்பட்டிருக்கிற ஸாக்ஷாத்காரத்வமானது இங்கேயும் சொல்லுவதற்கு அபேக்ஷிக்கப்பட்டிருப்பதாலும், அபேக்ஷிக்கப்பட்டிருக்கிற விதியைவிட அபேக்ஷிக்கப்பட்டிராததை விதிப்பது துர்பலமாத லாலும்.

த்ருவாநுஸ்ம்ருதிக்கே தர்சநரூபத்வவிதியானது யுக்தமன்று. வெவ்வேறு ப்ரகரணங் களில் கூறப்பட்டுள்ள த்ருவாநுஸ்ம்ருதி, தர்சநம்—இரண்டுக்கும் தஹரசாண்டில்யாதிவித் யைகளைப்போல அந்யோந்யாநபேக்ஷோபாயத்வமன்றோ அறியப்படுறது—என்றால், இவ் வண்ணமல்ல,—'த்ரஷ்டவ்யோ நிதித்யாஸிதவ்ய'என்று ஒரே வாக்யத்தில் விதிக்கப்பட் டிருப்பதால். அங்கும் இரண்டு வித்யைகளின் விதாநம் சங்கிக்கவேண்டாம் ரூபபேதமில் லாமையால். அதனால்தான் ஏகவாக்யத்வம் ஸம்பவிக்கும்பொழுது வாக்யபேதத்தை ஆச்ர யிப்பது கூடாததாலும், வித்யாந்தரங்களைப்போல் அவ்விரண்டுக்கும் விகல்பப்ரஸங்கம் வரு தலாலும். நிரபேக்ஷோபாயத்வவாதிக்கு அவ்விரண்டுக்கும் விகல்பம் இஷ்டம்—என்றால் அல்ல. வேறு கதி இருக்கும்பொழுது எட்டு விததோஷதுஷ்டமான அது ஏற்றுக்கொள் ளுவதற்குத் தகுதியுள்ளதாகாது.

வ்ரீஹியவசாஸ்த்ரங்களில் அந்த விகல்பத்துக்கு எட்டுதோஷங்களால் துஷ்டத்வம் காண்பிக்கப்படுகிறதன்றோ, கவ்ரீஹியை அநுஷ்டிக்கும் தருணத்தில் யவசாஸ்த்ரத்துக்கு ப்ராமாண்யத்யாகம், (௨) இல்லாத அப்ராமாண்யத்தை ஏற்படுத்தல், (௩) யவாநுஷ்டாநத் தில் அதற்கு இழக்கப்பட்ட ப்ராமாண்யத்தால் ஸ்வீகரித்தல், (௪)ஸ்வீகரிக்கப்பட்ட அப்ரா மாண்யத்தை த்யாகம்செய்தல், என்று யவசாஸ்த்ரத்தில் நான்கு தோஷங்கள். (க) யவா நுஷ்டான வேளையிலேயே முதன்மையான ப்ரயோகத்தில் ஸ்வீகரிக்கப்பட்ட வ்ரீஹிசாஸ் த்ரப்ராமாண்யத்யாகம், (௨) அதற்கு அப்ராமாண்யகல்பநம், (௩) மூன்றாவது ப்ரயோகத் தில் வ்ரீஹிகள் உபாதாநம் செய்யப்படும் ஸமயத்தில் இரண்டாவது ப்ரயோகத்தில் ஸ்வீ கரிக்கப்பட்ட வ்ரீஹிசாஸ்த்ரப்ராமாண்யத்யாகம். (௪) இழக்கப்பட்ட ப்ராமாண்யத்தை ஏற்றுக்கொள்வது என்று வ்ரீஹிசாஸ்த்ரத்தில் நான்குதோஷங்கள். இங்கும் ஸம்பவத்துக் குத் தக்கபடி தோஷப்ராப்தி அன்றிக்கே, ப்ரதிபத்திஸாமயம், அநுஷ்டாநஸாமயதம், பூர்வஸாமயம், பலஸாமயம்—என ஒவ்வொன்றிலும் நான்கு தோஷங்கள் வருவதால் எட்டுதோஷங்களால் துஷ்டத்வம் ஸித்திக்கிறது. ஆகையால், வேறு கதி இருக்கும்பொ ழுது விகல்பம் கூடாததலால் த்ருவாநுஸ்ம்ருதி, தர்சநம் —இவ்விரண்டுக்கும் தனித்து உபாயத்வம் கிடையாது. ஸச்சயமும் இல்லை. சசப்தம் கேட்கப்படாததால் தர்சபூர்ண மாஸங்களுக்குப்போல, த்வந்த்வநிர்த்தேசமில்லாமையாலும். பரமாத்மா அதீந்த்ரியமாத லால் ஸாக்ஷாக்காரம் கண்ணால் சப்தச்ரவணம்போல யோகத்தைத்தொடங்கினவனைக் குறித்து அந்த ப்ரஹ்மஸாக்ஷாத்காரவிதாநம் அசக்யமாக இருப்பதாலும், சப்தவிஷயங்க

ளான ஸ்மரணம், சாக்ஷாத்காரஜ்ஞாநம்—இவ்விரண்டுக்கும்போல, ஸமுச்சயமானது அநுப பந்நம்.

பரமாத்மா யோகத்தினுல் பரிசுத்தமான மனதினுல் க்ரஹிக்கதக்கவனுக இருப்ப தால் அந்த பரமாத்மாவைக்காண்பது கண்ணுல் சப்தத்தை க்ரஹிப்பதுபோலுமென்று சொல்லக்கூடாதாதலால் தர்சநோபாயமாக இருக்கிற வ்யாபாரத்திற்கு விதேயத்வம் உப பந்நமாவதால் ஸமுச்சயம் ஸம்பவிக்கிறதென்ருல்,—உண்மையே; அவனுடைய தர்சநத் திற்கு உபாயம் எது? 'ததஸ்து தம் பச்யதே நிஷ்களம் த்யாயமாந:' (அந்த பரமாத்மாவை ஸாக்ஷாத்கரிக்கிருன்.) என்கிற ச்ருதியிருப்பதினுல் த்யாநமே என்ருல், அப்பொழுது த்ரஷ்டவ்ய: நிதித்யாஸிதவ்ய: என்கிற இரண்டு பதங்களுக்கும் புநருக்தி ஏற்படும். இரண்டுக்கும் தர்சநோபாயத்யாநவிதிபரத்வம் ஸமாநமாதலால் த்ரஷ்டவ்ய:' என்று தர்ச நோபாயம் விதிக்கப்பட்டவுடன் எது உபாயமென்று அபேக்ஷிக்கும்கால் நிதித்யாஸநம் விதிக் கப்படுகிறது.

த்ரஷ்டவ்ய:" என்கிற பதமில்லாவிடில் நிதித்யாஸநத்திற்கு தர்சநோபாயத்வமறியப் படமாட்டாததாலல் அதைத்தெரிவிப்பதற்காக ப்ரயோகிக்கப்பட்டிருப்பதால் புநருக்தி இல்லை—என்று சொல்வாயேயாகில், அது சரியல்ல. த்ரஷ்டவ்யபதத்தைக்கேட்டும் தர்சநத் திற்கு த்யாநஸாத்யத்வம் தோன்ருதாதலால். 'தர்சநத்தில் விருப்பமுள்ளவனுல்' என்று இல்லையே. அவ்வாறு இருந்தாலன்ருே ஸ்வர்கயாகங்களைப்போல் ஸாத்யஸாதநபாவம் அறியப்பட்டதாகும். த்யாநத்தைக்குறித்து ச்ரவணமநநங்களுக்குப்போல, தர்சநத்தைக் குறித்து த்யாநத்திற்கு த்ருஷ்டமான உபகாரம் ஒன்றுமில்லை,—ஆகையால் வேறுப்ரமா ணத்தினுல் அவ்விரண்டிருக்கும் ஸாத்ய ஸாதநபாவஜ்ஞாநமேற்படுவதால் வையர்த்யம். மேலும், தர்சநம் த்யானஸாத்யமானுல், த்யாநம், தர்சநம்—இரண்டுக்கும் ஸமுச்சயமும் ஸம்பவியாது: தர்சநத்தைக்குறித்து ஸமுச்சயத்தை சொல்லுவாயாகில், தர்சநத்திற்கு தர்சநம் ஸாதநமென்று ஆத்மாச்ரய தோஷம் ப்ரஸங்கிக்கும். மோக்ஷத்தைக்குறித்து ஸமு ச்சயத்திற்கு சம்பவமில்லை, தன்னுல் ஸாதிக்கப்பட்ட தர்சநத்தினுல் விலககப்பட்டிருக்கிற த்யாநத்திற்கு மோக்ஷத்தைக்குறித்து தர்சநத்தோடுகூட நெருங்கின ஓர் வித உபகாரமு மில்லாமையால். யாகத்தின் நிஷ்பத்தியை ப்ரயோஜனமாகக்கொண்ட ப்ரோக்ஷணம், அவகாதம்—முதலியவைகளுக்கு அபூர்வத்தை உண்டுபண்ணுவதில் யாகத்தோடுகூட ஸமுச்சயமில்லையன்ருே. ஸாக்ஷாத்காரத்தைக்குறித்து த்யாநத்துக்கு இடைவெளியின்றி நெருங்கின உபகாரம் ஸித்திப்பதின்பொருட்டு, தர்சநஸமாகாரம் என ஜ்ஞாநாந்தரம்விதி தேயமென்று சொல்லப்படுமேயாகில், அது யுக்தமல்ல,—ஸ்வர்கத்தைக்குறித்து ஜ்யோதி ஷ்டோமம்போல, நிதித்யாஸநத்திற்கு ஸாத்யத்தைக்குறித்து நிரபேக்ஷோபாயத்வப்ரதீதி யின் ஸ்வாரஸ்யத்திற்கு பங்கம் ப்ரஸங்கிப்பதால். "ஜ்யோதிஷ்டோமேந ஸ்வர்காமோ யஜேத" என்கிற வாக்யத்தினுல் அறியப்பட்டிருக்கிற ஜ்யோதிஷ்டோமத்திற்கு ஸ்வர்க ஸாதநத்வமானது வேறு கர்மாவை அபேக்ஷிக்கிறதாக அறியப்படுகிறதில்லையன்ருே— இந்த இடத்தில் சப்தமுமில்லை, த்வந்த்வஸமாஸமுமில்லை. ஆகையால், தர்சநஸமா காராகாரநிரூப விசேஷணத்திற்கு எது விசேஷ்யமென்று ஆகாங்க்ஷித்தால், வேறு விசேஷ்ய மும் காணப்படவில்லை, நிதித்யாஸநமோ பக்கத்திலிருக்கிறது. ஆகையால், அதே தர்சநஸ மாநாகாரமாக விதிக்க விரும்பப்பட்டதென்று ஒப்புக்கொள்வது யுக்தமானது. அவ்வாறு ஒப் புக்கொண்டால் வாக்யபேதமும் உண்டாகாது. நிதித்யாஸநத்திற்கு நிரபேக்ஷோபாயதா ப்ரதீதிஸ்வாரஸ்யமும் பாதிக்கப்படமாட்டாது.

விசிஷ்டவிதியை ஆச்ரயிக்கும்பக்ஷத்தில் உபதேசத்தினலேயே அறியத்தக்க அர்த்தத்தின் ச்ரவணம், சுபாச்ரயமநநம், தர்சநம்—இவைகளோடுகூடின நிதித்யாஸநவிதி என் இருக்கக்கூடாதென்றால் இவ்வண்ணமல்ல,—நான்கு அம்சங்களில் தாத்பர்யம் கல்பிப்பதைவிட இரண்டுக்கு அந்த தாத்பர்யத்தைக்கல்பிப்பதில் லாகவமிருப்பதால், இன்னமும் லகுவானபக்ஷம் ஸம்பவிக்கிறதாக இருக்க குருவான பக்ஷத்தை ஆச்ரயிப்பது பொருந்தாததாலும். இந்த வாக்யத்தில் விதாநமில்லாமையால், உபதேசத்தால் வரத்தக்க அர்த்தஜ்ஞாநம், ஆலம்பநஸம்சீலநம்—இவ்விரண்டுக்கும் அவித்தியானது ஸந்தேகிக்கத்தக்கதல்ல, 'தஸ்மாத் ப்ராஹ்மண: பாண்டித்யம் நிர்வித்ய பால்யேந திஷ்டாஸேத் பால்யஞ்ச பாண்டித்யஞ்ச நிர்வித்யாத முநி:' (ஆதலால் ப்ராஹ்மணன் பாண்டித்யத்தைப்பெற்று பாலபாவத்தோடு இருக்க விரும்பவேண்டும். பால்யத்தையும் பாண்டித்யத்தையும் பெற்று பிறகு முனியாக ஆகிறான்.) என்று தன்னுடைய விதிக்கு வேறொன்றை அபேக்ஷியாத வாக்யாந்தரத்தால் விதித்திருப்பதால் அதல்லவோ நிரூபிக்கப்படப் போகிறது. ஆகையால், தர்சநஸமாநாகாரத்வ விசிஷ்ட நிதித்யாஸநம் விதிக்கப்படுகிறது. இப்படி இருந்தபோதிலும் எல்லா உபாஸநங்களுக்கும் தர்சநஸமாநாகாரரூபத்வவிதி வராது,—த்ரஷ்டவ்யோ நித்யாஸிதவ்ய: என்கிற வாக்யமானது மைத்ரேயீப்ராஹ்மணத்திலிருப்பதால். ஆகையால், அங்கு ப்ரதிபாதிக்கத்தக்க உபாஸநாவிசேஷத்துக்கே அப்படிப்பட்ட ஸ்வரூபம் ப்ரதிபாதிக்கத்தக்கதாக ஆகும் என்றால்; இவ்வண்ணமல்ல,—"ஆத்மநி கல்வரே த்ரஷ்டே ச்ருதே மதே விஜ்ஞாதே இதம் ஸர்வம் விதிதம்" என்கிற அவ்விடத்திலிருக்கிற வாக்யத்தினலே ஜகத்காரணவிஷயமான எல்லா உபாஸநங்களுக்கும் தர்சநஸமாநாகாரநிதித்யாஸநரூபத்வமறியப்படுவதால். இந்த வாக்யம் வித்யாவிசேஷவிதாயகமல்ல; காரணஜ்ஞாநத்தால் எல்லாம் அறியப்பட்டதாக ஆகிறதென்கிற ப்ரதிஜ்ஞாநப்ராதான்யத்தால். காரணமேயன்றோ எல்லா வித்யைகளாலும் உபாஸிக்கத்தக்கது; 'எது த்யாநம் செய்யத்தக்கது' என்று தொடங்கி 'காரணந்து த்யேய' என்று காரணத்துக்கே த்யேயத்வத்தை விதித்திருப்பதால். காரணவிஷயமான உபாஸநமானது இந்த இடத்தில் தர்சநஸமாநாகாரநிதித்யாஸநரூபமாக அறியப்படுகிறது. இந்த வாக்யத்தில் விஜ்ஞாத சப்தம் நிதித்யாஸநத்தைச்சொல்லுகிறது,— 'த்ரஷ்டவ்ய: ச்ரோதவ்யோ மந்தவ்யோ நிதித்யாஸிதவ்ய: த்ருஷ்டே ச்ருதே மதே விஜ்ஞாதே' என்கிற ஸ்தாநப்ரமாணத்தினல். அதனல் இந்த வாக்யமானது ஸர்வவித்யாஸாதாரண காரணமந்த்ர விஷயமாக இருப்பதால் ஜகத்காரணோபாஸநமாகில் அது தர்சநஸமாநாகார நிதித்யாஸந ரூபமென்று அறியப்படுறது.

மேலும், பற்பல வித்யைகளுக்கு விகல்பம் சொல்லப்படப்போவதால், குருபக்ஷவிஷயமான சாஸ்த்ரத்திற்கு வையர்த்ய ப்ரஸக்தி வருவதால் குருகுலயத்நங்களுக்கு விகல்பம் தகாததலாலும், வஸ்துஸாமர்த்யம் ப்ரகரணத்தைவிட அதிக பலமுள்ளதாக இருப்பதாலும், த்ருவாநுஸ்ம்ருதிரூபத்வமும், தர்சநரூபத்வமும், இனி சொல்லப்போகிற பக்திரூபத்வமும் எல்லா வித்யைகளுக்கும் ஸாதாரணமான ஆகாரங்களாக ஆவதற்குத்தகுதியுள்ளவைகள். இந்த்ரியங்களால் உண்டாகும் அநுபவத்துக்கல்லவோ அபரோக்ஷரூபத்வம், அவ்வாறு இருக்க—அது எப்படி ஸம்பவிக்கும்? என்றால் கூறுகிறார் 'பவதிக' என்று பாவனை - வாஸனை. தர்சநரூபதா - தர்சந ஸமாநாகாரம். 'வ்ருக்ஷே வ்ருக்ஷச பச்யாமி' (ஒவ்வொரு மரத்திலும் பார்க்கிறேன்) இது முதலிய இடங்களில் கூட ஸ்ம்ருதிக்கு தர்சநஸமாநாகாரத்வம் காணப்பட்டிருக்கிறதென்று கருத்து.

அதுவும் அதிவிசததராபாஸரூபத்வம். இது அநுபவத்திற்கு அஸாதாரணமன்று,—ஸ்ம்ருதிக்கும் அது ஸம்பவிப்பது ப்ராமாணிகமாதலால். தர்சநஸமாநாகாரத்வம் யுக்தமல்ல, தர்சநத்தைச்சொல்லுகிற சப்தத்திஞல் அந்த தர்சநஸமாநாகாரத்தை உபாஸ்தாபிப்பது முக்யமில்லாதிருப்பதால் "ந விதௌ பர: சப்தார்த்த:" என்றல்லவோ ந்யாயமறிந்தவர்கள் சொல்வது—என்று கேட்கில், அல்ல. அவர்களாலேயே "தர்சபூர்ணமாஸாப்யாம் ஸ்வர்ககாமோ யஜேத" (ஸ்வாகத்தை விரும்புகிறவன் தர்சபூர்ணமாஸங்களால் தேவதையை ஆராதிக்கக்கடவன்) என்கிற இடத்தில் தர்சபூர்ணமாஸசப்தங்களுக்கு லக்ஷணையிஞலும், ச்யேநாதி வாகயத்தில் ச்யேநாதி சப்தங்களுக்கு கௌணீவ்ருத்தியிஞல் கர்மநாமதேயத்வம் ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதாலும், "அர்யமந்தர்வேதி மிநுயாதர்யம் பஹிர்வேதி"

(பாதி அந்தர்வேதியிலும் பாதி பஹிர்வேதியிலும் சேரக்கடவான்) என்கிற இடத்திலும் மதயதேசலக்ஷணை அங்கீகரிக்கப்பட்டிருப்பதாலும். விசததரத்வம் பலரூபமாதலால், அபுருஷதந்த்ரத்திற்கு எவ்வாறு விதாநமென்று வினவுவது ஸரியல்ல, † ஆஜ்யாவேக்ஷணத்தைப்போல, விதாநத்துக்கும் உபபத்தி வருவதால். அங்கு ஆஜ்யஸாக்ஷாத்காரத்திற்கு ஹேதுவாக இருக்கிற வ்யாபாரவிஷயமான விதி என்ருலோ, அது ஸரியல்ல. இங்கேயும் அதிவிசததரபாவத்துடன் கூடின ஸ்ம்ருதிஸந்ததிவிஷயமான மனேவ்யாபாரவிதி என்று உபபந்நமாகிறது.

𑌭𑌾𑌷𑍍𑌯𑌮𑍍:—

𑌵𑌾𑌕𑍍𑌯𑌕𑌾𑌰𑍇𑌣𑍈𑌤𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌂 𑌪𑍍𑌰𑌪𑌞𑍍𑌚𑌿𑌤𑌂 — "𑌵𑍇𑌦𑌨𑌮𑍁𑌪𑌾𑌸𑌨𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌤𑌦𑍍𑌵𑌿𑌷𑌯𑍇 𑌶𑍍𑌰𑌵𑌣𑌾𑌤𑍍" 𑌇𑌤𑌿। 𑌸𑌰𑍍𑌵𑌾𑌸𑍂𑌪𑌨𑌿𑌷𑌤𑍍𑌸𑍁 𑌮𑍋𑌕𑍍𑌷𑌸𑌾𑌧𑌨𑌤𑌯𑌾 𑌵𑌿𑌹𑌿𑌤𑌂 𑌵𑍇𑌦𑌨𑌮𑍁𑌪𑌾𑌸𑌨𑌮𑌿𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌮𑍍। '𑌸𑌕𑍃𑌤𑍍 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌯𑌂 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌚𑍍𑌛𑌬𑍍𑌦𑌾𑌰𑍍𑌥𑌸𑍍𑌯 𑌕𑍃𑌤𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌯𑌾𑌜𑌾𑌦𑌿𑌵𑌤𑍍' 𑌇𑌤𑌿 𑌪𑍂𑌰𑍍𑌵𑌪𑌕𑍍𑌷𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 '𑌸𑌿𑌦𑍍𑌧𑌂 𑌤𑍂𑌪𑌾𑌸𑌨𑌶𑌬𑍍𑌦𑌾𑌤𑍍' 𑌇𑌤𑌿 𑌵𑍇𑌦𑌨𑌮𑌸𑌕𑍃𑌦𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑌂 𑌮𑍋𑌕𑍍𑌷𑌸𑌾𑌧𑌨𑌮𑌿𑌤𑌿 𑌨𑌿𑌰𑍍𑌣𑍀𑌤𑌮𑍍। '𑌉𑌪𑌾𑌸𑌨𑌂 𑌸𑍍𑌯𑌾𑌦𑍍𑌧𑍍𑌰𑍁𑌵𑌾𑌨𑍁𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌰𑍍𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌨𑍍𑌨𑌿𑌰𑍍𑌵𑌚𑌨𑌾𑌚𑍍𑌚' 𑌇𑌤𑌿 𑌤𑌸𑍍𑌯𑍈𑌵 𑌵𑍇𑌦𑌨𑌸𑍍𑌯𑍋𑌪𑌾𑌸𑌨𑌰𑍂𑌪𑌸𑍍𑌯𑌾𑌸𑌕𑍃𑌦𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑌸𑍍𑌯 𑌧𑍍𑌰𑍁𑌵𑌾𑌨𑍁𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌤𑍍𑌵𑌮𑍁𑌪𑌵𑌰𑍍𑌣𑌿𑌤𑌮𑍍। 𑌸𑍇𑌯𑌂 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌰𑍍𑌦𑌰𑍍𑌶𑌨𑌰𑍂𑌪𑌾 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑌿𑌤𑌾। 𑌦𑌰𑍍𑌶𑌨𑌰𑍂𑌪𑌤𑌾 𑌚 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌤𑌾𑌪𑌤𑍍𑌤𑌿𑌃।

𑌏𑌵𑌂 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌤𑌾𑌪𑌨𑍍𑌨𑌾𑌪𑌵𑌰𑍍𑌗𑌸𑌾𑌧𑌨𑌭𑍂𑌤𑌾𑌂 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌂 𑌵𑌿𑌶𑌿𑌨𑌷𑍍𑌟𑌿 — "𑌨𑌾𑌯𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌪𑍍𑌰𑌵𑌚𑌨𑍇𑌨 𑌲𑌭𑍍𑌯𑍋 𑌨 𑌮𑍇𑌧𑌯𑌾 𑌨 𑌬𑌹𑍁𑌨𑌾 𑌶𑍍𑌰𑍁𑌤𑍇𑌨 𑌯𑌮𑍇𑌵𑍈𑌷 𑌵𑍃𑌣𑍁𑌤𑍇 𑌤𑍇𑌨 𑌲𑌭𑍍𑌯𑌸𑍍𑌤𑌸𑍍𑌯𑍈𑌷 𑌆𑌤𑍍𑌮𑌾 𑌵𑌿𑌵𑍃𑌣𑍁𑌤𑍇 𑌤𑌨𑍂𑌂 𑌸𑍍𑌵𑌾𑌮𑍍" 𑌇𑌤𑌿। 𑌅𑌨𑍇𑌨 𑌕𑍇𑌵

---

† ஆஜ்யாவேக்ஷணம்—நெய்யைப்பார்த்தல.

ஶ்ரவணமநநநிதித்யாஸநாநாமாத்மப்ராப்த்யநுபாயத்வமுக்த்வா யமேவைஷ ஆத்மா வ்ருணுதே தேநைவ லப்ய:' இத்யுக்தம்। ப்ரியதம ஏவ ஹி வரணீயோ பவதி। யஸ்யாயம் நிரதிஶயப்ரிய: ஸ ஏவாஸ்ய ப்ரியதமோ பவதி। யதாயம் ப்ரியதம ஆத்மாநம் ப்ராப்நோதி ததா ஸ்வயமேவ பகவாந் ப்ரயதத இதி பகவதைவோக்தம்—

'தேஷாம் ஸததயுக்தாநாம் பஜதாம் ப்ரீதிபூர்வகம்
ததாமி புத்தியோகம் தம் யேந மாமுபயாந்தி தே' இதி,
'ப்ரியோ ஹி ஜ்ஞாநிநோऽத்யர்த்தமஹம் ஸ ச மம ப்ரிய:' இதி ச॥

வாக்யகாரரால் இவை அனைத்தும் விஸ்தரிக்கப்பட்டிருக்கின்றன—'வேதநமென்பது உபாஸநமே - அந்த வேதநவிஷயத்தில் உபாஸநசப்தம் விதியில் ப்ரயோகிக்கப்பட்டிருப்பதால்,' என்று. எல்லா உபநிஷத்துகளிலும் மோக்ஷத்திற்கு ஸாதநமாக விதிக்கப்பட்டிருக்கிற வேதநம் உபாஸநமென்று கூறப்பட்டிருக்கிறது. 'யஜ்ஞாங்கமான ப்ரயாஜம் முதலியதுபோல, வேதநத்தை ஒரு தடவை செய்வதினாலேயே விதாயகசாஸ்த்ரம் சரிதார்த்தமாகிற படியால்' என்று பூர்வபக்ஷத்தைச்செய்து, 'அந்த வேதநத்துக்கு உபாஸநரூபத்வம் ஸித்தாந்தம் செய்யப்பட்டிருப்பதனால்' என்று அடிக்கடி ஆவ்ருத்தி செய்யப்பட்ட வேதநம் மோக்ஷஸாதநமென்று நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. 'உபாஸநமென்பது த்ருவாநுஸ்ம்ருதி ச்ருதிவாக்யத்தாலும்' என்று உபாஸநரூபமாகவும் அஸக்ருதாவ்ருத்தமாகவுமிருக்கிற அந்த வேதநத்திற்கே த்ருவாநுஸ்ம்ருதித்வம் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. அவ்விதமுள்ள இந்த ஸ்ம்ருதியானது தர்சநரூபமாக ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கிறது.

தர்சநரூபத்வமாவது ப்ரத்யக்ஷஸ்வபாவத்தை அடைந்திருக்கிறதும், மோக்ஷத்திற்கு ஸாதநபூதையாக இருக்கிறதுமான ஸ்ம்ருதியை வேதம் விசேஷித்துச்சொல்லுகிறது.

'இந்த ஆத்மா மநநத்தினாலும் பஹுச்ரவணத்தினாலும் அடையத்தக்கவனல்ல. எவனை அவனே வரிக்கிறானோ அவனாலடையத்தகுந்தவன்; அவனுக்கே இந்த ஆத்மா தன்திருமேனியை வெளிப்படுத்துகிறான்' என்று. இதனால் ப்ரீதியில்லாத ச்ரவண,

மநந, நிதித்யாஸநங்களுக்கு ஆத்மப்ராப்திவிஷயத்தில் அநுபாயத்வத்தை சொல்லிவிட்டு, இந்த ஆத்மா எவனைத் தானே வரிக்கிருனே அவனாலேயே அடையத்தக்கவனென்று சொல்லப்பட்டது. ப்ரியதமனேயன்றே வரிக்கத்தக்கவனாக ஆகிறான். எவனுக்கு இவன் நிரதிசயப்ரீதிவிஷமாக இருக்கிருனே, அவனே இவனுக்கு ப்ரியதமனாக ஆகிறான். ப்ரியதமனான இவன் எப்படி ஆத்மாவை அடைவனே, அவ்வாறு பகவான் தானே முயற்சிக்கிறான் என்று பகவானாலேயே சொல்லப்பட்டிருக்கிறது—

'இடைவிடாத ஸம்பந்தத்தை விரும்புகிறவர்களும் ப்ரீதிபூர்வகமாய் என்னை பஜிப்பவர்களுமான அவர்கள் என்னை எதனால் அடைவார்களோ அந்த புத்தியோகத்தை நான் கொடுக்கிறேன்' என்றும்.

'ஜ்ஞாநிக்கு நான் எவ்வளவுமட்டில் ப்ரியன் என்பது சொல்ல முடியாது அவ்வண்ணமே அவனும் எனக்கு ப்ரியன்' என்று.

ச்ருதப்ரகாசிகை:—

பிறகு ஸூத்ரகாரருடைய அபிப்ராயத்தை அறிந்தவர்களுடைய வசநத்தைக்காட்டுகிறார்—"வாகயகாரேண" என்று. "ஏததஸர்வம்" ஸூத்ரகாரரால் கண்டோக்தமாயும் அபிப்ராயப்பட்டுள்ளதாயுமென்றுபொருள்.

"ப்ரபஞ்சிதம்" பூர்வபக்ஷஸித்தாந்தரூபமாக உரைக்கப்பட்டிருக்கிறதென்று பொருள். ப்ரபஞ்சமும்—"வேதநமுபாஸநம் ஸ்யாத்" இதுமுதலான நான்கு வாக்யங்களால்.

வாக்யம் ஒவ்வொன்றையும் வ்யாக்யாநிக்கிறார். "ஸர்வாஸூபநிஷத்ஸு" சாந்தோகயத்தில் மாத்ரமல்லவென்று அர்த்தம். மோக்ஷஸாதநமாக விதிக்கப்பட்ட வேதநமென்பதினால் கடாதிஜ்ஞாநம் வ்யாவ்ருத்திக்கப்பட்டது. விஹிதமென்பதினால் அநுவதிக்கப்பட்ட ச்ரவணம்முதலியதின் வ்யாவ்ருத்தி ஸித்தித்தது, இந்த அர்த்தத்தை பூர்வபக்ஷஸித்தாந்தரூபத்தால் வெளிப்படுத்துவதற்காகவும், 'ஸக்ருத்ப்ரத்யயம் குர்யாத், என்கிற வாக்யத்திற்கு பூர்வபக்ஷபரத்வசங்கையின் வ்யாவ்ருத்திக்காகவும், ஸக்ருத் இதுமுதலியதை வ்யாக்யாநிக்கிறார். 'ஸக்ருத்' என்கிற பதத்தை முதலில் கொண்டிருக்கிற வாக்யமே பூர்வபக்ஷபரம். "வேதநமுபாஸநம் ஸ்யாத்" என்கிற வாக்யேம் பூர்வபக்ஷபரம் அல்ல; பின்பே வேதநத்திற்கு உபாஸநாரூபத்வம் ஸித்தாந்தம் செய்யப்படப்போவதால் என்று கருத்து. அவ்வண்ணமே ஸித்தாந்திக்கப்பட்டிருப்பதைக்காட்டுகிறார் 'ஸித்தந்து' என்று. ஸித்தந்து ஸித்தாந்தமோவென்றால் என்று அர்த்தம். அன்றிக்கே, வேதநமானது உபாஸநம் என்று ஸித்தம் என்று பொருள்.

'உபாஸநசப்தாத்' என்பதை வ்யாகயாகயாநிக்கிறார் 'வேதநம் அஸக்ருதாவ்ருத்தம்' என்று. இதற்கு ஸூத்ரகாரரால் அபிப்ராயப்படப்பட்டுள்ளதும், வாக்யகாரராலே கண்டோகதமாயுமிருக்கிற அவிச்சிந்நஸ்ம்ருதிஸந்ததிரூபத்வத்தைக் காட்டுகிறார் 'உபாஸநம்

ஸ்யாத்' என்று. 'தர்சநாத்' லோகத்தில் காணப்படுவதால். 'நிர்வசநாத்'—ச்ருதிவாக்யத்திஞல். 'தஸ்யைவ' மோக்ஷஸாதநமாக விதிக்கப்பட்டிருக்கிற என்று அர்த்தம். "உபாஸநாரூபஸ்ய" என்பது ஹேதுகர்பம். உபாஸநாரூபத்வாத்—அடிக்கடி ஆவ்ருத்தி செய்யப்பட்டிருக்கிற வேதநமானது உபாஸநாசப்தவாச்யமாக இருப்பதால், என்று அர்த்தம்,—அடிக்கடி ஆவ்ருத்திக்கப்பட்டிருக்கிற ஜ்ஞாநமல்லவோ உபாஸநம்!

இவ்வண்ணமாக அவிச்சிந்நஸ்ம்ருதிஸந்ததிரூபத்வம் உபபாதிக்கப்பட்டது. ஸூத்ரகாரரால் கண்டோக்தமான அஸக்ருத் ஆவ்ருத்திரூபத்வத்தையும், அவரால் அபிப்ராயப்படப்பட்டிருக்கிற த்ருவாநுஸ்ம்ருதித்வத்தையும் சொல்லுகிற வாக்யகாரருக்கு இது கருத்து:—இதற்கு ஸமாநமான ந்யாயத்துடன் கூடி இருப்பதால், விசேஷாந்தரோபஸ்தாபக வாக்யமிருந்தால் வேதநம்முதலிய சப்தங்கள் அந்த விசேஷாந்தரங்களில் பர்யவஸாநமுள்ளவைகளாக ஆகுமென்று.

ஆகையால், முன்கூறப்பட்டுள்ள தர்சநஸமாநாகாரத்வமும், வாக்யகாரருக்கு அபிப்ரேதமென்பதை அபிப்ராயங்கொண்டு கூறுகிருர் 'ஸேயம்' என்று. ஸேயம்—அஸக்ருதாவ்ருத்திரூபமாயும், த்ருவாநுஸ்ம்ருதிரூபையாயுமிருக்கிற என்று அர்த்தம்.

தர்சநசப்தத்திற்கு அர்த்ததர்சீ, தத்வதர்சீ — இது முதலிய ப்ரயோகத்திஞல் பரோக்ஷாபரோக்ஷஸாதாரண்யத்தை ஆசங்கித்துச் சொல்லுகிருர் — 'தர்சநரூபதாச ப்ரத்யக்ஷதாபத்தி:' என்று. ப்ரத்யக்ஷஸமாநாகாரத்தைப்பெறுதல் என்று அர்த்தம். 'ஆத்மாவானது காணப்பட்டால், கேட்கப்பட்டால், மநநம் செய்யப்பட்டால், அறியப்பட்டால், இவை அனைத்தும் அறியப்பட்டதாக ஆகும். ஹே! ஆத்மா காணத்தக்கது கேட்கத்தக்கது, மநநம் செய்யத்தக்கது, நிதித்யாஸநஞ் செய்யத்தக்கது'—என்று சொல்லப்பட்டிருக்கிற ச்ரவணம் முதலிய பரோக்ஷஜ்ஞாநபர்வங்களில்கூட தனித்து நிர்தேசிப்பதாலென்று கருத்து.

ஸூத்ரகாரவாக்யகாரர்கள் இருவர்களுக்கும் விசேஷாந்தரோபஸ்தாபக சப்தமிருக்குமேயாகில் அதில் பர்யவஸாநம் செய்வது ஸம்மதமாதலால், வேறு ச்ருதியால் ஸித்தமான வேறு விசேஷமிருக்கிறதென்று சொல்லுகிருர் 'ஏவம்' என்று. இதஞல் ச்ரவணம் முதலியவைகளுக்கு முக்த்யுபாயத்வம் நிஷேதிக்கப்பட்டிருப்பதிஞல், உபாஸநத்திற்கு மோக்ஷோபாயத்வமில்லை என்கிற சங்கையினுடைய நிராஸமும் ஏற்படுகிறது. சொல்லப்பட்ட ப்ரகாரம் ஸாமாந்யவிசேஷந்யாயத்தால் ஸ்ம்ருதிப்ரத்யக்ஷதையை அடைந்திருக்கிறதென்று அர்த்தம்.

'அபவர்கஸாதநபூதாம்' என்பதஞல் †ப்ரதீகோபாஸநம் விலக்கப்பட்டது. 'நாயமாத்மா-' ப்ரவசநமானது மநநபலமாக இருப்பதால், ப்ரவசநசப்தத்திஞல் மநநத்தைத் தெரிவிக்கிருர். மநநமானது ஆசார்யனுடைய ப்ரவசநபலமாக இருப்பதாலாவது, 'ப்ரோச்யதே அநேந' என்கிற கரணவ்யுத்பத்தியிஞலாவது, ப்ரவசநம் மநநம். மேதா—நிதித்யாஸநம்; பரிசேஷத்தால். இந்த வாக்யத்தில் ச்ரவணம் முதலியவைகளுக்கு அநுபாயத்வம் அறியப்படுகிறது. த்ருவாநுஸ்ம்ருதி விசேஷணத்வத்திஞல் ஒன்றும் அறியப்படவில்லை. ஆகையால், அதை

† ப்ரதீகோபாஸநம்—நாமாதிகளில் ப்ரஹ்மத்ருஷ்டி பண்ணி உபாஸிப்பதும், ஆத்மஸ்வரூபத்தை ப்ரக்ருதி விசிஷ்டமாகவோ, ப்ரக்ருதி வியுக்தமாகவோ, உபாஸிப்பதும் பரமாத்ம சரீரபூத ஸ்வாத்ம சிந்தநமும், இந்த நான்கு உபாஸனைகளுக்கும் ப்ரதீகோபாஸனமென்று பெயர்.

வ்யாக்யாநம் செய்கிறார்—'அநேந' என்று. 'கேவலச்ரவணமநந நிதித்யாஸநாநாம்' என்று அர்த்தம். 'இனி கூறப்போகிற விசேஷத்தினின்று விடுபட்டவைகளாக' இனி கூறப் போகிற விசேஷத்தினின்று விடுபட்டவைகளாக இருக்கிற என்று அர்த்தம். ப்ருதிவியில் அக்னியானது சயநம் செய்யத்தக்கதல்ல என்கிற அர்த்தமுள்ள வாக்யத்தில் ஹிரண்யோ பாதாநமில்லாத ப்ருதிவியில் எவ்வாறு, சயநம் நிஷேதிக்கப்பட்டு, ப்ருதிவீமாத்ரத்தில் நிஷேதிக்கப்படுகிறதில்லையோ அவ்வாறே என்று கருத்து.

விவக்ஷிக்கப்பட்ட விசேஷத்தை வாக்யதாத்பர்யநிரூபணத்தால் காண்பிப்பதாக வாக்யத்திற்கு அர்த்தாந்வயத்தைக் காண்பிக்கிறார்—'யமேவைஷ ஆத்மா வ்ருணுதே தேநைவ லப்ய: இத்யுக்தம்' என்று.

வரிக்கத்தக்கவனால் அடையத்தக்கவனாக இருக்கட்டும், அதனால் எவ்வாறு த்ருவாநுஸ் ம்ருதிக்கு விசேஷம் என்று சங்கைவர, அதைக் காண்பிப்பதற்கு லோகஸித்தமான ப்ரீதி யைக்கூறுகிறார். ('ப்ரியதமஏவஹி') என்று ப்ரீதிவிஷயமாக இருக்கிற எல்லோருக்கும் பக வானால் வரிக்கத்தக்க தன்மை கிடையாது. பின்னையோவென்றால், தானாக தன்னருகில் வந்தவனுக்கு ஸ்வீகரித்தல் மாத்ரம் தான். ஆதலால், அதை விலக்குவதற்காக 'ப்ரியதம:' என்று உரைக்கப்பட்டது. அதனாலென்னவென்றால், கூறுகிறார்—'யஸ்ய' என்று. எந்த உபாஸகனுக்கு இந்த பரமாத்மா நிரதிசயப்ரீதி விஷயமாகிறானோ அவனே இந்த பரமாத்மா வுக்கு நிரதிசயப்ரீதி விஷயமாக ஆகிறான்.

சேதநத்வமும், பகவானால் வரிக்கத்தக்க தன்மையும், பகவானிடத்தில் நிரதிசய ப்ரீதியுள்ளவனுக்கே. அன்றிக்கே, ஸ்வத: ப்ரியத்வமும், வரணீயத்வமும், தன்னிடத்தில் ப்ரீதியுள்ளவனுக்கே. புண்யக்ஷேத்ரம் முதலியவைகளில் பகவான் உகந்திருப்பது தன் னிடத்தில் ப்ரீதியுள்ள புருஷர்களை வரிப்பதற்காக. அவர்களுடைய ஸம்பந்தத்தைக் கொண்டு பத்ரம், புஷ்பம், பலம் முதலியவைகளில் ப்ரீதியுண்டாகிறது. 'ஸ ஏவ' என் கிற ஏவகாரத்தால் ப்ரீதியில்லாத கேவல ச்ரவணம் முதலியவைகளை உடையவர்களுக்கு வ்யாவ்ருத்தி ஏற்படுகிறது.

பகவானிடத்தில் ப்ரீதியுள்ளவனுக்கே பகவத் ப்ரீதிவிஷயத்வமென்பது எவ்வாறு அறியப்படுகிறது என்கிற அபேக்ஷையில், இந்த விஷயத்தில் ப்ரமாணமாக ஸ்ம்ருதி வச நத்தை அர்த்தோபந்யாஸ பூர்வகமாகக் காண்பித்துக்கொண்டு வரணப்ரகாரத்தையும் விவ ரிக்கிறார்—'யதா' என்று. அயம்—பகவானிடம் நிச்சயப்ரீதியுள்ளவன். ப்ரியதம:—நிரதி சயமான பகவத் ப்ரீதிக்கு விஷயமாக ஆகிறான் என்று அர்த்தம். 'ததாமி புத்தியோகந்தம்' என்கிற இந்த வசநத்திற்கு அர்த்தவிவக்ஷையினால் பகவான் தானே ப்ரயத்நம் செய்கிறான் என்று சொல்லப்பட்டது. இதனால் வரணப்ரகாரம் காண்பிக்கப்பட்டது.

'பகவதைவோக்தம்' என்கிற ஏவகாரத்தினால் பகவானுடைய ஆப்த்யதிசயம் ஸூசிக் கப்பட்டது.

‡ 'ஸததயுக்தாநாம்' எப்பொழுதும் என் ஸம்பந்தத்தை விரும்புகிறவர்களுக்கு § 'ஆசம்ஸாயாம் பூதவச்ச' என்ற ஸூத்ரத்தினால் கர்த்ருவாசகமான க்தப்ரத்யயம் வந்திருக்

---

‡ 'தேஷாம் ஸததயுக்தாநாம்' என்கிற இடத்திலிருக்கும் க்தப்ரத்யத்திற்கு ஆசம்ஸை மாத்ரம் அர்த்தம். காலவிசேஷம் அர்த்தமல்ல. 'ஆசம்ஸாயாம் பூதவச்ச' என்று ஸூத் ரம். ஆசம்ஸாரூப அர்த்தத்தில் யுஜதாதுவின்மீது பூதகாலிகப்ரத்யயம் வருகிறது.

§ ஆசம்ஸை – பேராவல்.

கிறது. ப்ரீதிபூர்வகமாகக் கொடுக்கிறேனென்று அந்வயம். இதனால் பரஸ்பரவிஷயமான ப்ரீதியானது உபாஸ்யன், உபாஸகன் இருவர்களுக்கும் காண்பிக்கப்பட்டது. 'ஸததயுக்த' சப்தார்த்தத்தைத் தெளிவுறும்படி சொல்லுகிறார் 'ப்ரியோஹி' என்று. அத்யர்த்தம் அபி தேயத்தை மிஞ்சிக்கிடக்கிறது.

அதாவது, ப்ரியத்வமானது வாசகங்களுக்கு அகோசரம் என்று அர்த்தம். த்ருவாநு ஸ்ம்ருதியை விசேஷிக்கிறாரென்றல்லவோ முந்தி உரைக்கப்பட்டது. இந்த இடத்தில் எவன் பகவானிடத்தில் ப்ரீதியுள்ளவனாக ஆகிறானோ அந்த உபாஸகனிடத்தில் பகவானுக்கு ப்ரீதித்வம் கூறப்படுகிறது.

𑌭𑌾𑌷𑍍𑌯𑌮𑍍:—

𑌅𑌤𑌃 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌤𑍍𑌕𑌾𑌰𑌰𑍂𑌪𑌾 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌃 𑌸𑍍𑌮𑌰𑍍𑌯𑌮𑌾𑌣𑌾𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌪𑍍𑌰𑌿𑌯𑌤𑍍𑌵𑍇𑌨 𑌸𑍍𑌵𑌯𑌮𑌪𑍍𑌯𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 𑌯𑌸𑍍𑌯 𑌸 𑌏𑌵 𑌪𑌰𑍇𑌣𑌾𑌤𑍍𑌮𑌨𑌾 𑌵𑌰𑌣𑍀𑌯𑍋 𑌭𑌵𑌤𑍀𑌤𑌿 𑌤𑍇𑌨𑍈𑌵 𑌲𑌭𑍍𑌯𑌤𑍇 𑌪𑌰 𑌆𑌤𑍍𑌮𑍇𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌭𑌵𑌤𑌿। 𑌏𑌵𑌂𑌰𑍂𑌪𑌾 𑌧𑍍𑌰𑍁𑌵𑌾𑌨𑍁𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌰𑍇𑌵 𑌭𑌕𑍍𑌤𑌿𑌶𑌬𑍍𑌦𑍇𑌨𑌾𑌭𑌿𑌧𑍀𑌯𑌤𑍇; 𑌉𑌪𑌾𑌸𑌨𑌪𑌰𑍍𑌯𑌾𑌯𑌤𑍍𑌵𑌾𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑌿𑌶𑌬𑍍𑌦𑌸𑍍𑌯। 𑌅𑌤 𑌏𑌵 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌭𑌿𑌰𑍇𑌵𑌮𑌭𑌿𑌧𑍀𑌯𑌤𑍇—'𑌤𑌮𑍇𑌵 𑌵𑌿𑌦𑌿𑌤𑍍𑌵𑌾𑌤𑌿𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌮𑍇𑌤𑌿', (𑌶𑍍𑌵𑍇. ௩. 𑌅.) '𑌤𑌮𑍇𑌵𑌂 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑌮𑍃𑌤 𑌇𑌹 𑌭𑌵𑌤𑌿, 𑌨𑌾𑌨𑍍𑌯𑌃 𑌪𑌨𑍍𑌥𑌾 𑌅𑌯𑌨𑌾𑌯 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇' (𑌪𑍁. 𑌸𑍂. ௧. ௬.)

"𑌨𑌾𑌹𑌂 𑌵𑍇𑌦𑍈𑌰𑍍𑌨 𑌤𑌪𑌸𑌾 𑌨 𑌦𑌾𑌨𑍇𑌨 𑌨 𑌚𑍇𑌜𑍍𑌯𑌯𑌾 ।
𑌶𑌕𑍍𑌯 𑌏𑌵𑌂𑌵𑌿𑌧𑍋 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑌵𑌾𑌨𑌸𑌿 𑌮𑌾𑌂 𑌯𑌥𑌾 ॥
𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌤𑍍𑌵𑌨𑌨𑍍𑌯𑌯𑌾 𑌶𑌕𑍍𑌯 𑌅𑌹𑌮𑍇𑌵𑌂𑌵𑌿𑌧𑍋𑌽𑌰𑍍𑌜𑍁𑌨 ।
𑌜𑍍𑌞𑌾𑌤𑍁𑌂 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌂 𑌚 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑍇𑌨 𑌪𑍍𑌰𑌵𑍇𑌷𑍍𑌟𑍁𑌂 𑌚 𑌪𑌰𑌨𑍍𑌤𑌪 ॥
𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 𑌸 𑌪𑌰𑌃 𑌪𑌾𑌰𑍍𑌥! 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌲𑌭𑍍𑌯𑌸𑍍𑌤𑍍𑌵𑌨𑌨𑍍𑌯𑌯𑌾" 𑌇𑌤𑌿।

𑌏𑌵𑌂𑌰𑍂𑌪𑌾𑌯𑌾 𑌧𑍍𑌰𑍁𑌵𑌾𑌨𑍁𑌸𑍍𑌮𑍃𑌤𑍇𑌸𑍍𑌸𑌾𑌧𑌨𑌾𑌨𑌿 𑌯𑌜𑍍𑌞𑌾𑌦𑍀𑌨𑌿 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑍀𑌤𑌿 '𑌯𑌜𑍍𑌞𑌾𑌦𑌿𑌶𑍍𑌰𑍁𑌤𑍇𑌰𑌶𑍍𑌵𑌵𑌤𑍍' (𑌬𑍍𑌰. 𑌸𑍂. ௩. ௪. ௪௬) 𑌇𑌤𑍍𑌯𑌭𑌿𑌧𑌾𑌸𑍍𑌯𑌤𑍇 ॥

ஆகையால், ஸ்மரிக்கப்படுகிற வஸ்து அதிப்ரியமானதால் ஸாக்ஷாத்காரரூபஸ்ம்ருதி தானும் எவனுக்கு இருக்கிறதோ, அவனே பரமாத்மாவினால் வரிக்கத்தக்கவனாக ஆகிறானென்றும் அவனாலேயே பரமாத்மா அடையப்படுகிறான் என்றும் சொல்லப் பட்டதாக ஆகிறது. இப்படிப்பட்ட த்ருவாநுஸ்ம்ருதியே பக்தி சப்தத்தால் சொல்லப்படுகிறது,—பக்தி சப்தம் உபாஸநபர்யாய மாக இருப்பதால். அதனாலேயே ச்ருதிகளாலும், ஸ்ம்ருதிகளா லும், இவ்வண்ணம் கூறப்படுகிறது. "அவனையே அறிந்து ஸம்.

ஸாரத்தைக்கடக்கிறான். அந்த பரபுருஷனை இவ்வண்ணம் அறிந்தவன், இவ்வுலகத்திலே முக்தனுக்கு துல்யனாக ஆகிறான். அந்த பரமாத்மாவை அடைவதற்கு வேறு வழியில்லை.”

“என்னை இப்பொழுது எவ்வாறு கண்டாயோ இப்படி உன்னை நான் வேதங்களாலும், தபஸினாலும், தாதத்தினாலும், யாகத்தினாலும் காணமுடியாதவன். அர்ஜுனா! சத்துருக்களை தபிக்கச் செய்பவனே! இப்படிப்பட்ட என்னை உள்ளபடி அறிவதும், பார்ப்பதும், அடைவதும் அநந்யமான பக்தியினால்மாத்ரம் கூடும்.

“ஹே, குந்திபுத்ரா. அந்த பரமபுருஷன் அநந்யமான பக்தியினால் அடையத்தக்கவன்” என்று, இப்படிப்பட்ட த்ருவாநுஸ்ம்ருதிக்கு யஜ்ஞம்முதலிய கர்மங்கள் ஸாதநங்கள் என்று ‘யஜ்ஞாதிச்ருதேரச்வவத்’ என்று ஸூத்ரகாரர் சொல்லப்போகிறார்.

ச்ருதப்ரகாசிகை: —

அவ்வாறு இருக்க, எங்ஙனம் த்ருவாநு ஸ்ம்ருதிக்கு விசேஷமெனில் கூறுகிறார். ‘அத:’ சொல்லப்பட்ட அர்த்தமானது, உலக நடையினாலும் ஸ்ம்ருதியினாலும் ஸித்தமாக இருப்பதால் என்று அர்த்தம்.

அன்றிககே, த்ருவாநு ஸ்ம்ருதி வசநத்தாலும், வரணீயத்வ வசநத்தாலும், வரணீயமான சேதநநுக்கு பகவானிடத்தில் நிரதிசயப்ரீதிமத்வ வசநத்தாலும்—என்று பொருள்.

‘ஸாக்ஷாத்கார ரூபமான ஸ்மருதி’ என்பதினால் முன் கூறப்பட்ட ஆகாரத்துடன் கூடின அதற்கே வேறு விசேஷம் இவ்வாறு காட்டப்பட்டது.

‘ஸ்மர்யமாணத்யாத்த ப்ரியத்வேந ஸ்வயமப்யத்யர்த்தப்ரிய, ஜ்ஞாநங்களுக்கு ஆகாரமில்லாமையால் அர்த்தத்திலேயேயன்றோ, விசேஷமென்று கருத்து, தானும் அதயர்ததப்ரியை என்கிற இந்த நிர்தேசமாநது அநுபவிக்கப்படுகிறதை அநுபவமென்பதுபோல, ஔபசாரிகம் அத்யர்த்தப்ரதிரூபை என்று அர்த்தம்.

அன்றிககே, அத்யர்த்தப்ரியா—மிக்க அநுகூலரூபை—ஸ்மரிக்கப்படுகிற பகவத்ரூபமான விஷயத்திற்கு நிருபாதிகமாயும், நிரவதிகமாயுமுள்ள ஆநுகூல்யமிருப்பதால் அது விஷயமான அநுஸ்ம்ருதியும் நிரதிசயாநுகூலமாகவல்லவோ ஆகிறது.

அன்றிக்கே, த்ருவாநுஸ்ம்ருதியானது தான் அத்யந்தம் அநுகூலமாக இருப்பதினால் † அயுக்தாவஸ்தையிலுங்கூட ப்ரீதிரூபஜ்ஞாநத்தினால் ப்ரதிஸந்தாநம் பண்ணப்படுகிறதென்பதினால் ப்ரியையாக இருககிறது.

அதனாலேயன்றோ—“யா ப்ரீதிரவிவேகாநாம் விஷயேஷ்வநபாயிநீ” (அவிவேகிகளுக்கு விஷயங்களில் அழிவற்றதான எந்த ப்ரீதியுண்டோ) இது முதலியதால், அது வேண்டப்படுகிறது. ப்ரீதிரூப த்ருவாநுஸ்மருதிககு மோக்ஷாபாயத்வம் சொல்லப்பட்

---

† அயுக்தாவஸ்தை—யோகத்திலிருந்து ஒழிந்து இருக்கிற நிலைமை.

டது. வேறு இடத்தில் பக்திக்கு உபாயத்வம் காணப்படுகிறது. அவ்வாறு இருக்க, எங்ஙனம் இவ்விரண்டுக்கும் ஐகார்த்யம் என்று கேட்கில் சொல்லுகிறார்—'ஏவம்ரூப' என்று.

அன்றிக்கே, 'சேமுஷீ பக்திரூபா' என்று பக்திரூபமான ஜ்ஞாநத்துக்கு முன்பு உபாயத்வம் கூறப்பட்டது. இப்பொழுது, எவ்வாறு, ப்ரீதிரூபத்ருவாநுஸ்ம்ருதிக்கு உபாயத்வம் ப்ரதிபாதிக்கப்படுகிறது என்றால் கூறுகிறார் 'ஏவம் ரூப' என்று. ஏவம் ரூபா—ஸாக்ஷாத்காரத்வ ப்ரீதிரூபத்வபர்யந்தமான த்ருவாநுஸ்ம்ருதியே பக்தி சப்தத்தால் சொல்லப்படுகிறதென்று கருத்து.

ஏதனாலெனில் சொல்லுகிறார்—'உபாஸந § பர்யாயத்வாத்'—என்று. உபாஸநம் முதலிய சப்தங்களுக்கும், பக்திசப்தத்திற்கும் ஏகார்த்தவ்ருத்தித்வம் விவக்ஷிக்கப்பட்டிருக்கிறதே ஒழிய கடகும்பசப்தங்களைப்போல் பர்யாயத்வமில்லை. ஏகார்த்தவ்ருத்தித்வமும்—'ஸேவா பக்திருபாஸ்தி'என்று நிகண்டு செய்திருப்பவர்களுடைய வசநத்தினால் அறியப்படுகிறது.'ஸ்நேஹபூர்வமநுத்யாநம் பக்திரித்யபிதீயதே பஜ இத்யேஷ யாதுர்வை ஸேவாயாம் பரிகீர்த்தித: தஸ்மாத் ஸேவாயுதை: ப்ரோக்தா பக்திசப்தேந பூயஸீ' ஸ்நேஹமடியாக வந்த தொடர்ச்சியான த்யாநம் பக்தி என்று சொல்லப்படுகிறது. பஜ என்கிற தாதுவானது ஸேவா என்கிற அர்த்தத்திற்கு வாசகமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால், அறிஞர்களால் நிரந்தரஸேவையானது பக்திசப்தத்தால் சொல்லப்பட்டிருக்கிறது. இது முதலியவைகளும் அநுஸந்திக்கத்தக்கது. என்றாலும், ஸாக்ஷாத்காரரூபத்வம் பக்திரூபத்வம் முதலியவற்றில் நோக்குள் வாக்யங்கள் வித்யாவிசேஷவிஷயமான ப்ரகரணங்களில் பரிக்ரஹமிருந்தபோதிலும், லகுவாயும், குருவாயுமுள்ள யத்நங்களுக்கு விகல்பம் உபபந்நமாகாததால் எல்லா உபாஸநங்களுக்கும் அவைகள் ஸாதாரணமாயிருத்தல் ப்ராப்தமாகிறது.

அப்படி இருந்தபோதிலும், ப்ரபதநத்தில் மாத்ரம் குருலகுயத்நங்களுக்கு விகல்பாநுபபத்திரூபந்யாயம் வசநபலத்தால் நிரஸிக்கப்பட்டது. வசநவிரோதமுள்ள இடத்தில் ந்யாயம் ப்ரவ்ருத்தியாதன்றோ. வசநவிரோதமில்லாமையால் உபாஸநங்களில் அதற்கு ப்ரவ்ருத்தி இருக்கிறது.

வேதாந்தங்களில் உபாஸநாபரவாக்யங்களுக்கு ஐகார்த்யம் ஸித்திப்பதற்காக, பக்திதசாபந்நமான உபாஸநத்திற்கே மோக்ஷோபாய வேதநத்வம் கூறப்பட்டது.

ஸ்ம்ருதி வசநப்ரதர்சநமும் ச்ருத்யர்த்தவைசத்யத்திற்காக செய்யப்பட்டது. இப்பொழுதோவென்றால், ச்ருதிஸ்ம்ருதி இரண்டுக்கும், அர்த்தைக்யமிருப்பதால், முக்திக்கு உபாயமாக இருக்கிற வேதநத்திற்கு பக்திரூபோபாஸநத்வம் உபபாதிக்கப்படுகிறது 'அத ஏவ' என்பதால். அத ஏவ—அபவர்கோபாயவேதநமானது பக்திரூபோபாஸநமாக இருப்பதனாலேயே என்று அர்த்தம்.

'தமேவ விதித்வா' என்கிற வாக்யம் ச்வேதாச்வதரோபநிஷத்தில் இருக்கிறது. அந்த இடத்தில் 'தஸ்மாத் ஸர்வகத: சிவ:' என்று சிவசப்தம் எடுக்கப்பட்டிருப்பதினால், சிவன் பரமாத்மாவோ என்கிற ப்ரமமானது ஒரு மந்த புத்தியுள்ளவனுக்கு உண்டாகலாமென்று அதை நிவர்த்திப்பதன் பொருட்டு. "வேதாஹமேதம் புருஷம் மஹாந்தம், மஹாந்ப்ரபுர்வை புருஷ: ஸத்வஸ்யைஷ ப்ரவர்த்தக:" (நான் இந்த மஹாபுருஷனை அறிகிறேன். இந்த மஹாபுருஷன் ப்ரபுவாக இருப்பவன், ஸத்வகுணத்துக்கு ப்ரவர்த்தகன்) என்று

§ பர்யாயங்கள்—ஏகார்த்தங்களான பதங்கள்.

உபக்ரமோபஸம்ஹாரங்களால் அறியப்பட்ட பரமபுருஷபரமே அந்த உபநிஷத்தென்று புருஷஸூக்தத்தோடு ஐகார்த்யத்தைக்காண்பிப்பதற்காக ''தமேவம் வித்வான்'' என்ற வாக்யமெடுக்கப்பட்டது. 'தமேவாம் விதவான்' என்கிற வாக்யத்தினால் ''நாந்ய: பந்தா:'' என்று பரமபுருஷவேதநத்தைத்தவிர்த்து வேறு உபாயத்தின் நிஷேதம் சொல்லப்பட்டது

''நாஹம் வேதை:'' இது முதலியவற்றால் அந்த பகதியைத்தவிர்த்த வேறு உபாயத்தின் நிஷேதம சொல்லப்பட்டது. உபப்ரஹ்மணோபப்ரஹ்மணீய வசநங்கள் இரண்டுக்கும் ஐகார்த்யமானது, வேதநாதி சப்தங்களுக்கு பக்தி பர்யாதத்வம் சொல்லப்பட்டால் ஸித்திக்கிறதென்று கருத்து. உபாயாந்தரநிஷேதமானது சப்தத்தால் ஸ்பஷ்டமாகச் சொல்லப்பட்டிருப்பதாலும், ஜ்ஞாநம் தர்சநம், ப்ராப்தி – இவைகள் பக்தி ஸாத்யங்களென்று கண்டோக்தமாக இருப்பதாலும், 'நாஹம் வேதை:' என்கிற வசநம் எடுக்கப்பட்டது.

'பக்த்யா மாமபிஜாநாதி' (பக்தியினால் என்னை அறிகிறான்) ''ததோ மாம் தத்வதோ ஜ்ஞாத்வா விசதே ததநந்தரம்''(என்னை உண்மையாய் அறிந்த பிறகு அடைகிறான்)என்று பக்தியினால் உண்டாகிற ஜ்ஞாநத்துக்கே * அவ்யவஹிதோபாயத்வம் அறியப்படுகிறது. பக்திக்கு உபாயத்வம் கிடையாது—என்கிற சங்கையும் 'நாஹம் வேதை:' என்பதனால் பரிஹரிக்கப்பட்டதாக ஆகிறது;—இந்த இடத்தில் ஜ்ஞாந தர்சநங்களுக்குப் போல, ப்ராப்திக்கும் பக்திஸாத்யத்வம் அறியப்படுவதால்.'பக்தியினால் ப்ரவேஷ்டுஞ்ச சக்ய:' என்றல்லவோ அந்வயம். 'பக்த்யாமாம்' என்கிற வசநத்திலும்''ததோ மாம் விசதே'' என்று தச்சப்தத்தால் பராமர்சிக்கப்பட்டிருக்கிற பக்திக்கே ப்ராப்த்யுபாயத்வம் அறியப்படுகிறது. 'தத:' என்கிற பதத்தினால் பக்தியை பராமர்சிக்காமல் போனால் ததநந்தரம் என்பதினால் பௌநருக்த்யம் ப்ரஸங்கிக்கும். அதினாலும் பக்திரூபோபாஸநத்வம் ஸித்தித்தது.

'புருஷ:ஸ பர: பார்த்த' என்கிற இடத்திலும் 'பக்த்யா லப்ய:' என்று பக்திக்கு ப்ராப்திஸாதநத்வம் ஸ்வரஸமாய் அறியப்படுகிறது. இதனால் புருஷசப்தத்தால் தெரிவிக்கப்பட்ட புருஷஸூக்த ப்ரதிபாத்யமான வஸ்து ஐக்யம்போல, அதனால் ப்ரதிபாத்யமான உபாய ஐக்யமும் ந்யாய்யம் என்று காட்டப்பட்டது:

வேதநத்துக்கு பக்திரூபமாந உபாஸநத்வஸித்தி இருக்கட்டும், அதனால் ப்ரக்ருதமான கர்மாபேக்ஷத்வத்திற்கு ப்ரயோஜனமென்னவென்னில் சொல்லுகிறார்—'ஏவம' என்று. 'ஏவம்ரூபாயா:' ப்ரத்யக்ஷமாயுள்ள அபரோக்ஷ்யப்ரதிரூபதவவிசேஷண விசிஷ்டையான. வாக்யகாரர், ஸூத்ரகாரர், இருவர்களாலும் அபிப்ராயப்பட்டும் கண்டோக்தங்களுமான மோக்ஷோபாய ஜ்ஞாநாவஸ்தா விசேஷங்கள் காமஸாதனங்கள் என்று கருத்து.

'த்ருவாநுஸ்ம்ருதேஸ்ஸாயநாநி' எவ்வாறு 'கத்தியினால் வெட்ட விரும்புகிறான்.'என்கிற இடத்தில் கத்திக்கு ஹநநக்ரியாஸாதநதவமே ஒழிய இச்சாஸாதநத்வமில்லையோ, அவ்வாறு 'யஜ்ஞத்தினால் அறியவேண்டுமென்று விரும்புகிறார்கள்' என்கிற இடத்திலும் வித்யாஸாதநத்வமே கூறப்பட்டது. வேதநேச்சாஸாதநத்வம் கூறப்படவில்லை. யஜ்ஞம் முதலியவைகளுக்கு வேதநேச்சாஸாதநங்களாக விநியோகமில்லாமையால் என்று கருத்து. அவ்விதமாகவே புருஷர்களுக்கும் அவாந்தரமான ஸாத்யத்தின் உபாயத்தில் ப்ரவ்ருத்தியானது, பரமஸாத்யத்தில் இச்சையில்லாவிடில் உபபந்நமாகாதன்றோ. எவ்வாறு, யாகம் முதலியவைகளுக்கு உபாயமாக இருக்கிற த்ரவ்யார்ஜநம் முதலிய

*அவ்யவஹிதம்—இடையில் ஒன்றுமில்லாமல் அடுத்து நெருங்கி எது இருக்கிறதோ அது. வ்யவஹிதம்—விலகி இருக்கிறது; இதற்கு எதிர்தட்டு அவ்யவஹிதம்.

வற்றில் ப்ரவ்ருத்தியானது யாகாதிகளால் ஸாதிக்கத்தக்க அபூர்வம் முதலியவற்றில் இச்சை இல்லாவிடில் பொருந்தாதோ—அவ்வாறே, இச்சாஸித்யர்த்தமான அநுஷ்டாநமானது இச்சையினால் ஸம்பாதிகக வேதநேச்சை இல்லாவிடில் உபபந்நமாகாது. ஆகையால், வேதநேச்சை உண்டானால் வேதநத்திற்கு உபாயபூதமாய் இச்சாஸித்யர்த்தமான அநுஷ்டானம் ஏற்கனவே உண்டாய்விட்டால் அதற்காக அநுஷ்டாநம் வேண்டியதில்லை என்று அதின் அநுஷ்டாநவிதிக்கு வையர்த்யம் வரும். மேலும் தன்னுடைய ஸித்தியை தன்னுடையஸித்தி அபேக்ஷிக்கிறது. என்பதினால் * ஆத்மாச்ரய தோஷம் வருகிறது.

அன்றிக்கே, வேதநேச்சையால், இச்சாஸித்யர்த்தமான கர்மாநுஷ்டாநத்தால், வேதநேச்சாஸித்தி என்று அந்யோந்யாச்ரயதோஷம் வரும்.

ஆதலால், கர்மங்களுக்கு விவிதிஷாஸாதநத்வம் யுக்தமல்ல, இச்சாஸித்யர்த்தகர்மாநுஷ்டாநமானது ஆத்மாச்ரயம் முதலிய தோஷங்களால் கவரப்படுமேயாகில் ஒரு ஸமயத்திலும் இச்சை ஸம்பவியாது,—இச்சைக்குக்காரணமான கர்மாநுஷ்டாநமில்லாமையால்—இச்சைக்கு விஷயவைலக்ஷண்யஜ்ஞாநமாத்ராதீநத்வமென்பது கிடையாது,—வைலக்ஷண்யஜ்ஞாநமிருந்தபோதிலுங்கூட ஒருவனுக்கு இச்சை உண்டாகாமலிருப்பது காணப்படுவதால். ஆகையால், ஒருவனுடைய இச்சோத்பத்திக்கு கர்மஹேதுத்வம் ஆச்ரயிக்கத்தக்கது. அதுவும் உனக்கு உபபந்நமாகாது என்றால் இவ்வண்ணமல்ல—போகாத்ருஷ்டத்தினால் தூண்டிவிடப்பட்டிருக்கிற வாஸனையுடன் கூடின விஷயவைலக்ஷண்யஜ்ஞாநத்தினால் இச்சையானது உத்பத்தி உபபந்நமாவதால் அறியாத ஸுக்ருதவசத்தால் தர்மத்தில் வேதநேச்சை ஸித்திக்கிறதென்று சொல்லக்கூடாது—ஏராளமான பொருள் சிலராலும் ப்ரயாஸத்தாலும் ஸாதிக்கத்தக்கயஜ்ஞம் முதலியவைகளுக்கு அஜ்ஞாதஸுக்ருதரூபத்வம் அஸம்பாவிதமாவதால். 'யஜ்ஞேந—விவிதிஷந்தி' என்கிற வாக்யத்திற்கன்றோ அர்த்தம் சிந்திக்கப்படுகிறது.

ஆகையால், யஜ்ஞாநுஷ்டாநம் புத்திபூர்வகமே. மோக்ஷோபாயமான வேதநேச்சை இல்லாவிடில் ஏராளமான பொருள்களாலும், முயற்சியினாலும், ஸாதிக்கத்தக்க கர்மங்களுக்கு பலாந்தராபிஸந்திபூர்வகத்வம் நியதமாதலால் விவிதிஷையைஸாதிக்காது. பலாந்தராபிஸந்திசூந்யமானயஜ்ஞம் முதலியதோவெனில், வேதநேச்சை இல்லாவிடில் உபபந்நமாகாது,-ப்ரயோஜநத்தை உத்தேசிக்காமல் பக்திமானுக்கு ப்ரவ்ருத்தி ஸம்பவியாததாலும்,சிறந்த ப்ரயோஜனம், அதற்குரிய உபாயத்தில்' இச்சை இவைகளில்லாவிடில் அல்பப்ரயோஜநங்களை விடுவது பொருந்தாததாலும். ஆகையால், அவாந்தரஸாத்யேச்சாஸித்யர்த்தமான அநுஷ்டாநமானது, பரமஸாத்யவேதநேச்சை இல்லாவிடில் உபபந்நமாகாததலால், ஸ்வஸித்யர்த்தமான கர்மாநுஷ்டாநத்திற்கு ஸ்வஸித்தியின் அபேக்ஷை இருப்பதால் ஆத்மாச்ரயம் முதலிய தோஷம் வரவே வரும். 'அபிதாஸ்யத' இங்கு உபாதிகப்போகிறோமென்று கருதது.

𑌭𑌾𑌷𑍍𑌯𑌮𑍍—

𑌯𑌜𑍍𑌞𑍇𑌨 𑌵𑌿𑌵𑌿𑌦𑌿𑌷𑌨𑍍𑌤𑌿 𑌯𑌜𑍍𑌞𑌾𑌦𑌯𑍋 𑌵𑌿𑌵𑌿𑌦𑌿𑌷𑍋𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑍌 𑌵𑌿𑌨𑌿𑌯𑍁𑌜𑍍𑌯𑌨𑍍𑌤𑍇, 𑌤𑌥𑌾𑌪𑌿 𑌤𑌸𑍍𑌯𑍈𑌵 𑌵𑍇𑌦𑌨𑌸𑍍𑌯 𑌧𑍍𑌯𑌾𑌨𑌰𑍂𑌪𑌸𑍍𑌯𑌾𑌹𑌰𑌹𑌰𑌨𑍁𑌷𑍍𑌠𑍀𑌯𑌮𑌾𑌨𑌸𑍍𑌯𑌾𑌭𑍍𑌯𑌾𑌸𑌾𑌧𑍇𑌯𑌾𑌤𑌿𑌶𑌯𑌸𑍍𑌯𑌾𑌪𑍍𑌰𑌯𑌾𑌣𑌾𑌦𑌨𑍁𑌵𑌰𑍍𑌤𑌮𑌾𑌨𑌸𑍍𑌯 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍍𑌯𑍁𑌪𑌾𑌯𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌤𑌦𑍁𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑌯𑍇

ஸர்வாண்யாஶ்ரமகர்மாணி யாவஜ்ஜீவமநுஷ்டேயாநி | வக்ஷ்யதி ச 'ஆப்ராயணாத்தத்ராபி ஹி த்ருஷ்டம்' 'அக்நிஹோத்ராதி து தத்கார்யாயைவ தத்தர்ஶநாத்' 'ஸஹகாரித்வேந ச' இத்யாதிஷு | வாக்யகாரஶ்ச த்ருவாநுஸ்ம்ருதேர்விவேகாதிப்ய ஏவ நிஷ்பத்திமாஹ — 'தல்லப்திர்விவேகவிமோகாப்யாஸக்ரியாகல்யாணாநவஸாதாநுத்தர்ஷேப்ய:, ஸம்பவாந்நிர்வசநாச்ச' இதி — விவேகாதீநாம் ஸ்வரூபமாஹ — 'ஜாத்யாஶ்ரயநிமித்தாதுஷ்டாதந்நாத் காயஶுத்திர்விவேக:' இதி — அத்ர நிர்வசநம் 'ஆஹாரஶுத்தௌ ஸத்த்வஶுத்தி: ஸத்த்வஶுத்தௌ த்ருவா ஸ்ம்ருதி:' இதி — 'விமோக: காமாநபிஷ்வங்க:' இதி | 'ஶாந்த உபாஸீத' இதி நிர்வசநம் | 'ஆரம்பணஸம்ஶீலநம் புந:புநரப்யாஸ:' இதி — நிர்வசநஞ்ச ஸ்மார்தமுதாஹ்ருதம் பாஷ்யகாரேண 'ஸதா தத்பாவபாவித:' இதி 'பஞ்சமஹாயஜ்ஞாத்யநுஷ்டாநம் ஶக்தித: க்ரியா' இதி நிர்வசநம் 'க்ரியாவாநேஷ ப்ரஹ்மவிதாம் வரிஷ்ட:,' 'தமேதம் வேதாநுவசநேந ப்ராஹ்மணா விவிதிஷந்தி யஜ்ஞேந தாநேந தபஸாநாஶகேந' இதி ச 'ஸத்யார்ஜவதயாதாநாஹிம்ஸாநபித்யா: கல்யாணாநி' இதி — நிர்வசநம் 'ஸத்யேந லப்யஸ்தபஸா ஹ்யேஷ ஆத்மா' இத்யாதி — 'தேஶகாலவைகுண்யாச்சோகவஸ்த்வாத்யநுஸ்ம்ருதேஶ்ச தஜ்ஜம் தைந்யமபாஸ்வரத்வம் மநஸோऽவஸாத:' இதி — தத்விபர்யயோऽநவஸாத: | நிர்வசநம் — 'நாயமாத்மா பலஹீநேந லப்ய:' இதி | 'தத்விபர்யயஜா துஷ்டிருத்தர்ஷ:' இதி | தத்விபர்யயோऽநுத்தர்ஷ: | அதிமாத்ரஸந்தோஷஸ்யாபி விரோதித்வம் | நிர்வசநமபி — 'ஶாந்தோ தாந்த:' இதி |

என்றும், 'விவிதிஷந்தி' என்று யஜ்ஞம் முதலியவைகள் விவிதிஷையின் உத்பத்தியில் விநியோகப்படுகின்றன.

அங்ஙனமிருந்தபோதிலும், நாள்தோறும், அநுஷ்டிக்கப்படுகிறதும், அப்யாஸத்தால் உண்டு பண்ணத்தக்க அதிசயத்துடன் கூடினதும, ப்ராணோத்க்ரமணம்வரையில் தொடர்ந்து வருகிற த்யாநரூபமான அந்த வேதநமே ப்ரஹ்மத்தை அடைவதற்கு ஸாதநமாதலால், அதன் உத்பத்தியின்பொருட்டு எல்லா ஆச்ரமகர்மங்களும் உயிருள்ளவரையில் அநுஷ்டிக்கத்தக்கவைகள.

" ஆப்ராயாணாத் தத்ராபி ஹி த்ருஷ்டம" (மாணம்வரையில் அபவர்கஸாதநமான உபாஸநம் அநுவ்ருத்திக்கத்தக்கது) என

னில், உபாஸநோத்யோககாலந்தொடங்கி மரணகாலம் வரையி லுள்ள மத்யகாலத்திலும் உபாஸநம் காணப்பட்டிருக்கிறது.) "அக்நிஹோத்ராதி து தத்கார்யாயைவ தத்தர்சநாத்" (அக்நி ஹோத்ரம் முதலிய நித்யநைமித்திக காம்யகர்மங்களும் அந்த வித்யாரூபமான கார்யத்தின்பொருட்டே அநுஷ்டிக்கத்தக்கவை கள்,—ஏனெனில், ச்ருதியில் காணப்படுவதால்.) "ஸஹகாரித்வே நச" (வித்யைக்கு ஸஹகாரியாக இருப்பதாலும்) இவை முதலிய வைகளில் சொல்லவும் போகிறார். வாக்யகாரரும் த்ருவாநுஸ்ம்ரு திக்கு விவேகம் முதலியவைகளாலேயே நிஷ்பத்தியைக் கூறுகிறார்- "அந்த த்ருவாநுஸ்ம்ருதியின் லாபமானது விவேகவிமோகாப்யாஸ கல்யாணாநவஸாதாநுத்தர்ஷங்களால் உண்டாகிறது. ப்ரமாணத் தாலும் உபாயத்தினாலும்" என்று. விவேகம் முதலியவற்றின் ஸ்வரூ பத்தையும் சொல்லுகிறார்—"ஜாதியினாலும், ஆச்ரயத்தினாலும், நிமித்தத்தாலும் தோஷமுள்ளதாக இராத அன்னத்தினால் தேக சுத்தி விவேகம்" என்று. இந்த விஷயத்தில் நிஷ்க்ருஷ்டவசநம்— "ஆஹாரசுத்தி உண்டாகில் ஸத்வசுத்தி. ஸத்வசுத்தி ஸித்தித்தால் த்ருவையான ஸ்ம்ருதி" என்று "விமோகமென்பது காமம், க்ரோ தம்-முதலிய துர்குணங்களின் இன்மை" என்று. "சாந்தனாக இருந்து கொண்டு உபாஸிக்கக் கடவான்" என்று ப்ரமாணவசநம். "அடிக் கடி ஆரம்பணஸம்சீலநம் அப்யாஸம்" என்பது த்ரமிடபாஷ்ய காரரால் ஸ்ம்ருதிவசநம் ப்ரமாணமாக உதாஹரிக்கப்பட்டிருக் கிறது. "ஸதா தத்பாவ ¶ பாவித:" (எப்பொழுதும் அந்த பரம புருஷபாவனையினால் நிலைபெற்ற மனமுள்ளவனாக) என்று, சக்திக் குத்தக்கபடி பஞ்சமஹாயஜ்ஞாதிகளை அநுஷ்டிப்பது க்ரியை என்று ப்ரமாணவசநம் "க்ரியாவானான இவன் ப்ராஹ்மவித்துகளுக் குள் பெருமைவாய்ந்தவன்"-"ப்ராஹ்மணர்கள் அப்படிப்பட்ட பரம புருஷனை யஜ்ஞத்தாலும், தாநத்தாலும், தபஸ்ஸாலும், அநசநவ்ர தத்தினாலும், அறிய விரும்புகிறார்கள்" என்று. "ஸத்யம், ஆர்ஜவம், தயை, தாநம், அஹிம்ஸை, அநபித்யை-இவைகள் கல்யாணங்கள்" என்று. ப்ரமாணவசநம். "ஸத்யேந லப்யஸ்தேஷாமேவைஷ விர ஜோ ப்ரஹ்மலோக:" (அவர்களுக்கே ரஜஸ்தமஸ்களால் விடுபட்டி ருக்கிற இந்த ப்ரஹ்மலோகமானது, ஸத்யத்தினால் அடையத்தக் கது) இதுமுதலியது. "தேசகால வைகுண்யத்தாலும், சோகநிமித்

¶ பாவித :—நிலையுற்ற மனதையுடையவனாய்

தமான வஸ்து முதலியவைகளை நினைப்பதினாலும், அவைகளால் உண்டாகிற தைக்ஷ்ண்யம், மனதின்ப்ரகாசமின்மை, அவஸாதம்'' என்று, அதன்விபர்யம் அநவஸாதம். ப்ரமாணவசநம். ''நாயமாத்மா பலஹீநேந லப்ய:''(இந்த ஆத்மா மனோபலமற்றவனால் அடையத்தக்கவனல்ல)என்று. ''அவைகளின் விபர்யயத்தால் உண்டாகிற துஷ்டி, உத்தர்ஷம்.'' அதின்விபர்யயம், அநுத்தர்ஷம் என்று. அதிஸந்தோஷமும் விரோதி என்று அர்த்தம். நிர்வசநமும் ''சாந்தோ தாந்த'' என்று (பஹிரிந்த்ரியங்களையும், மனதையும் அடக்கினவனாக) என்று.

ச்ருதப்ரகாசிகை:—

யஜ்ஞாதிகள் விவிதிஷைக்கு ஸாதநங்களென்று சொல்வதில் ஆத்மாச்ரயம் முதலிய தோஷங்களின் இன்மையை ஒப்புக்கொண்டு சொல்லுகிறார் 'யத்யபி' என்று. தஸ்யைவ- இச்சைக்கு விஷயமாக ஆயிருக்கிற. த்யாநவிரூபஸ்ய—என்பதினால் வாக்யார்த்தஜ்ஞாநத்துக்கு வ்யுதாஸம் விதித்தது. த்யாநமும் ஒருதினம் அநுஷ்டிக்கத்தக்கதென்பதை நிராகரிப்பதற்காக கூறுகிறார்—'அஹரஹ:' என்று.

தினந்தோறும் அநுஷ்டாநத்திற்கு பலத்தைக்கூறுகிறார்—'அப்யாஸ' என்று. ப்ரதிதினமும் அநுஷ்டாநமிருந்தபோதிலும, யாஸம், ருது, ஸம்வத்ஸரம்முதலிய காலவிசேஷங்களால் அதற்கு அவதியை நிராகரிப்பதற்காகச்சொல்லுகிறார்—'ஆப்ரயாணாத்' என்று, ப்ராணோத்க்ரமணபர்யந்தம தொடர்து வந்துகொண்டிருந்தபோதிலும், ஒன்று, இரண்டு, மூன்று, தினங்ளால் வ்யவதாநத்தை வ்யாவர்த்திப்பதற்காக தினந்தோறும் அனுஷ்டிக்கப்படுகிற என்று கூறப்பட்டது. அதிலும் ஸ்ம்ருதிவிச்சேதத்தை வ்யுதஸிப்பதற்காக 'த்யாநரூபஸ்ய' என்று கூறப்பட்டது. ததுத்பத்யே—விவிதிஷையின் உபத்தியின்பொருட்டு. வேதநமானது வ்யதானமின்றி ப்ரக்ருதமாக இருந்தபோதும் அர்த்தவசந்தினால் அதன் சப்தமானது விவிதிஷாபரம. கர்மங்களுககு விவிதிஷாஸாதநத்வமன்றோ ஒப்புக்கொண்டு சொல்லப்படுகிறது. மரணபர்யந்தம் நாடோறும் உபாஸநத்தின் அநுவ்ருத்தியிலும், உயிருள்ளவரையில அவைகள் அநுஷ்டிக்கத்தக்கவைகளென்பதிலும் ப்ரமாணம் எது என்றால் அதற்கு உத்தரம் சொல்லுகிறார்—'வக்ஷ்யதி ச' என்று. சகாரம் சங்கையின் நிவ்ருத்தியில். ஸூத்ரத்தைக்காண்பித்தால் அதற்கு விஷயமாக இருக்கிற ச்ருதிவாக்யமும் காட்டப்பட்டதாக ஆகிறதென்கிற அபிப்ராயத்தால் உபாஸநாநுவ்ருத்திபரமான ஸூத்ரம் காண்பிக்கப்பட்டது—'ஆப்ரயாணாத்' என்று. 'ஸ கல்வேவம வர்தயந் யாவதாயுஷம்'—என்று ச்ருதி—யாவத் என்கிற சப்தம் ஸாகல்யார்த்தகமாதலால் அஹரஹரநுஷ்டாநம் விதிக்கிறது. அவ்வளவு காலம்வரையில் கர்மாபேக்ஷையைச்சொல்லுகிறா—'அக்நிஹோத்ர, என்று. ஆச்ரமதாமங்களுககு ஆச்ரமசேஷத்வமிருந்தபோதிலும் வித்யாங்கத்வமிருக்கிறதென்று சொல்லுகிறார்—'ஸஹகாரித்வேந ச' என்று. இதுமுதலிய ஸூத்ரங்களில் இந்த அர்த்தைதச்சொல்லப்போகிறார் என்று அர்த்தம்.

கர்மாவுக்குச்சொல்லப்பட்ட வித்யாயங்கத்வமானது உபாஸநத்தினுடைய ஸமாத்யங்கத்வத்துடன் விரோதிப்பதால் உபபந்நமாகாதென்று சங்கித்து, விரோதத்தைப்பரிஹரிக்கவும், அதற்கு விஷயமான ச்ருதிவாகயததைக்காட்டுவதால் அப்ராமாண்யத்தையும் நிரா

ஹரிக்கவும் திருவுள்ளங்கொண்டு கூறுகிறார்—'வாக்ய' என்று. ஸூத்ரகாரருடைய அபிப்ராயத்தை அறிந்தவர்களாலும் இவ்வண்ணம் சொல்லப்பட்டது என்று கருத்து.

'தல்லப்தி' என்கிற இடத்தில் தத்சப்தம் த்ருவாநுஸ்ம்ருதி சப்தத்தால் வ்யாகிக்கப் பட்டது. விவேகம் முதலியவைகளாலேயே கேவலகர்மாவினுலாவது கேவலஸமாதியினு லாவது இல்லை. என்று அர்த்தம்.

வாக்யகாரருடைய க்ரந்தம் எடுக்கப்படுகிறது.—'தல்லப்தி:'—என்று.

'உபாஸநம் ஸ்யாத் த்ருவாநுஸ்ம்ருதி:' என்பதன்றே ப்ரக்ருதம். அதனுல் த்ருவாநு ஸ்ம்ருதியின் லாபமென்று பொருள்.

"விவேக விமோகாப்யாஸக்ரியா கல்யாணுநவஸாதாநுத்தர்ஷேப்ய:" என்று—

அதுவும் இதரேதரயோகார்த்தத்தில், இவைகளுள் ஏதாவது ஒன்றினுல் அதின் லாபம் துஷ்கரமாக இருப்பதால் ஸமுச்சயம் ஸம்பவிக்கிறதாக இருக்க பாக்ஷிகமாயும் பாயத்தை உள்ளடக்கிக்கொண்டு விகல்பம் யுக்தமாகாதன்றே.—அந்த விகல்பம் எட்டு தோஷங்களால் துஷ்டமாக இருப்பதால், ஸமுச்சயத்திற்கும் இங்கு ஸம்பவமிருப்பதால்.

இவ்வண்ணம் விவேகம் முதலியவற்றை விதிக்கிற வாக்யங்களுக்கு ஸமுச்சயத்தில் தாத்பர்யமென்பதைக்காண்பிப்பதற்காக இதரேதரயோக த்ருவத்தால் வாக்யகாரருடைய நிர்தேசம் இதரேதரயோகம் ஸமுச்சயத்தைக்காட்டிலும் வேறான அர்த்தம். அவ்வா றிருக்க இதரேதரயோகத்வத்தால் எவ்வாறு ஸமுச்சயலாபம்?—உத்தரம் கூறப்படு கிறது—அந்வாசயத்தோடு சேர்ந்து படிக்கப்பட்டிருக்கிற ஸமுச்சயத்தைக்காட்டிலும் விகல்பப்ரதிஸம்பந்தியான ஸமுச்சயம் வேறான அர்த்தம்.

ஒரு கார்யத்தில் ஒன்றேடொன்று நிரபேக்ஷங்களான ஸாதகங்களுக்கு அந்வயம். அந் வாசயத்தோடுகூட படிக்கப்பட்டிருக்கிற ஸமுச்சயம். விகல்பத்தோடு சேர்ந்து படிக்கப்பட் டிருக்கிற ஸமுச்சயமோவென்றால், ஒரு கார்யத்திலேயே ஒன்றேடொன்று ஸாபேக்ஷங்க ளுக்கு அந்வயம். அதுவே இதரேதரயோகமென்பதினுல் விரோதமில்லை என்று. நிவ்ருத்தி ரூபமாந ஸமாதிகளுக்கும், ப்ரவ்ருத்தி ரூபமான யஜ்ஞாதிகளுக்கும், விரோதத்தால் ஸமுச்ச யம் இல்லை என்று சொல்வாயேயாகில்—அது சரியல்ல. விஷயம் பிந்நமாக இருப்பதால் விரோதமில்லை. ஸமாதிகள் அவிஹிதமாயும், அப்ரதிஷித்தாயுமிருக்கிற நிஷித்தவிஷய காம்யவிஷயங்களன்றே 'ஸம்பவாத்' உபபந்நமாவதால். 'நிர்வசநாச்ச' ச்ருதிவசநத்தாலும் ப்ரமாணுேப்பத்திகளாலென்று அர்த்தம்.

விவேகம் முதலியவைகள், எந்த ஸ்வரூபமுள்ளவைகள், எவ்வாறு சமாதிகளுக்கும் கர்மாவுக்கும் அவிரோதம்? என்றால் சொல்லுகிறார்—'விவேகாதீநாம் ஸ்வரூபஞ்சாஹ'— என்று. எண்ணிக்கை மாத்ரமல்ல அதின் ஸ்வரூபத்தையும் வாக்யகாரரே சொல்லுகிறார் என்று அர்த்தம்.

முதலில் விவேகஸ்வரூபவிஷயவாக்யத்தை உதாஹரிக்கிறார்—'ஜாத்யாச்ரய:' என்று.

ஆஹார விஷயவிவேசநமானது விவேகசப்தத்தால் விவக்ஷிக்கப்பட்டதாக ஆகிறது. (க) துஷ்டாஹாரத்தினின்று ஸாத்விகாஹாரங்களுடைய விவேசநம், விவேகம். (உ) களஞ் சம், க்ருஞ்சநம் முதலியவைகள் ஜாதி துஷ்டங்கள். 'ஆச்ரய:' த்ரவ்யத்திற்கு யஜமான னாக இருக்கிற புருஷன். (௩) ‡ அபிசஸ்தன், பதிதன், சண்டாளன் முதலியவர்களுடைய

‡ அபிசஸ்தன்—மஹாபாதகி, அல்லது உபபாதகி. பதிதன்—ஜாதிப்ரஷ்டன்.

த்ரவ்யம், ஆச்ரயதுஷ்டம். (௩) எச்சல், மயிர் முதலியவைகளால் கொடுக்கப்பட்டது—நிமித்ததுஷ்டம். இந்த மூன்று வித தோஷமில்லாத ஆஹாரவிவேசநத்திற்கு பலமாக இருக்கிற காயசுத்தியில் விவேகசப்தம் உபசரிக்கப்பட்டிருக்கிறது.

அன்றிக்கே, விவிக்தாஹார ஸேவையினுல் ராஜஸதாமஸாஹாரங்களால் ஆப்யாயிதமான தேஹத்தினின்று தன் தேஹத்தை விவேசநஞ்செய்தல் விவேகம். அசுத்தங்களினின்று விவேசநமல்லவோ சுத்தி. இதிசப்தம் பாஷ்யகாரருடையது. 'அத்ர நிர்வசநம்' என்பதும் பாஷ்யகாரர்தம். நிர்வசநம்—நிஷ்க்ருஷ்ட வசநம். அப்ரமாணங்களினின்று நிஷ்க்ருஷ்டம் ப்ரமாணபூதமான வசநமென்று அர்த்தம். 'ஆஹாரசுத்தௌ' இது முதலியது நிர்வசநம்.

விமோகமாவது காமத்தின் அநபிஷங்கம். எதினுல் விஷயத்தை அநுபவிக்காமல் இருக்கமுடியாதோ அந்த விகாரம் அபிஷ்வங்கம். 'காமாத் க்ரோதோபி ஜாயதே' (காமத்தினின்று கோபமுண்டாகிறது) இது முதலியவசாதத்தினுல் க்ரோதம் முதலியதின் இன்மையும் பலித்தது. 'சாந்த உபாஸீத' என்கிற நிர்வசநத்தில் சாந்தசப்தத்தினுல் ராகத்வேஷாதிகளின் அபாவம் விவக்ஷிக்கப்பட்டது. ஆரம்பணமாவது ஆலம்பநம்—சுபாச்ரயம் அதினுடைய ஸம்சீலநம். எவ்வாறு இது ஸாதநம்? ஸாத்யமல்லவோ இது. அல்ல. "சுசௌ தேசே ப்ரதிஷ்டாப்ய" இது முதலியவற்றுல சொல்லப்பட்டிருக்கிற தேசகாலாவிசேஷங்களில் அப்யஸிக்கத்தக்க யோகசப்தவாச்யமான த்ருவாநுஸ்ம்ருதியல்லவோ ஸாத்யம்.

இதுயோககாலத்தில் செய்யத்தக்க த்யாநாநுக்ராஹமான ஸர்வகாலிகஸம்சீலநம் 'ஸதா தத்பாவபாவித:' என்றல்லவோ சொல்லப்போகிறுர். எப்பொழுதும் பகவத்ஸம்சீலநமில்லாவிட்டால் யோககாலங்களில், காலாந்தரத்தில் ஸம்சீலநம் செய்யப்பட்டிருந்த விஷயாந்தரம் புத்திஸ்தமாக ஆகும். ஆகையால், ஆரம்பண ஸம்சீலநத்துக்கு ஸாத்யாவிசிஷ்டத்வமில்லை.

"நிர்வசநஞ்ச ஸ்மார்த்தமுதாஹ்ருதம் பாஷ்யகாரேண" என்பதினுல் முன்சொல்லப்பட்ட நிர்வசநங்களும் த்ரமிடபாஷ்யத்தில் சொல்லப்பட்டவைகளென்று அறியப்படுகிறது. 'அயமுநி:' என்று ச்ரௌதமான வசநம். அது ந்யாயோபந்யாஸஸாபேக்ஷமாயிருப்பதாலும், 'ஸஹகார்யந்தரவிதி' என்கிற அதிகரணத்தில் வ்யாக்யாநிக்கத்தக்கதாக இருப்பதாலும், ஸ்மார்த்தநிர்வசநமானது ஸ்பஷ்டார்த்தமாக இருப்பதாலும், ஸ்மார்த்தநிர்வசநம் உதாஹரிக்கப்பட்டது.

'தஸ்மாத் ஸர்வேஷு காலேஷு மாமநுஸ்மர' என்பதை ஈற்றிலுடையவசநம் இவ்விடத்தில் அபிப்ராயப்பட்டிருக்கிறது.

'பஞ்சமஹாயஜ்ஞ:'— சக்தித: சாஸ்த்ரம் அசக்யத்தை விதிக்காதன்றே:—

'க்ரியாவாநேஷ' ஸம்ப்ரத்யயமில்லாத வாக்யம். ப்ரஹ்மவிதாம் வரிஷ்ட:—ப்ரஹ்மவித்துகளுடைய மத்தியில் மேன்மைபெற்றவன். 'ப்ரஹ்மவிதிஷ்டிணும்' என்று சொல்லப்பட்டிருக்கவில்லையன்றே.

க்ரியா சப்தத்தின் அர்த்தத்தினுடைய விசதீகரணத்தின்பொருட்டுசொல்லுகிறுர்—'தமேதம்' என்று. 'ஸத்யம்'—பூதஹிதமானது. ஆர்ஜவம்—மநோவாக்காயங்களுக்கு ஐகரூப்யம். தயா—ஸ்வார்த்தத்தை அபேக்ஷியாத பரதுக்காஸஹிஷ்ணுத்வம். 'அஹிம்ஸா—

கரணத்ரயத்தாலும் பரஹிம்ஸையினின்று விலகுதல். தாநம்—பேராசை இல்லாமை. அபித்யா—பிறருடைய வஸ்துவினிடத்தில் தன்னுடையதென்கிற புத்தி, அல்லது, நிஷ்பல சிந்தை. அன்றிக்கே, அந்யனால் செய்யப்பட்ட அபகாரத்தைச்சிந்தித்தல்—அதில்லாமல் அநபித்யை. 'ஸத்யேந' என்கிற வாக்யத்திலிருக்கிற ஆதிசப்தத்தால் ஆர்ஜவாதிகளை ப்ரதிபாதிக்கிற வாக்யஸமூஹம் க்ரோடீகரிக்கப்பட்டது. (தேசே—இத்யாதி) அநவஸாதம் அநுத்தர்ஷம் இரண்டும் அவஸாதோத்தர்ஷ விபர்யயரூபமாக இருப்பதால் வாக்யகாரரால் அவஸாதோத்தர்ஷலக்ஷணம் மாத்ரம் கூறப்பட்டது. அதன் விபர்யயரூபமான நஞர்த்தமானது அர்த்தாத் ஸித்திக்கிறதென்று வாக்யகாரருடைய அபிப்ராயம். சோகவஸ்து—சோகநிமித்தமான வஸ்து. அதீதமான புத்ரமரணம் முதலியது. ஆதி சப்தத்தினால் வரப்போகிற பய நிமித்தம் விவக்ஷிக்கப்பட்டது. சோகம் ¶ அதீத விஷயமன்றோ பயமானது. † ஆகாமி விஷயம். அபாஸ்வரத்வமென்பது தைந்யசப்தவிவரணம். அபீஷ்டமான கார்யத்தில் ப்ரவ்ருத்திப்பதற்குத்திறமை இல்லாமை தைந்யமென்று சொல்லப்பட்டதாக ஆகிறது.

'பாஸ்வரத்வவிரோதி' என்றாவது தைந்யவிசேஷணம். சசப்தம் பிந்நக்ரமமுள்ளது தஜ்ஜஞ்ச—தைந்யத்தாலுண்டான தைந்யமுமென்று அர்த்தம். பந்து ஜனங்களுடைய தைந்யத்தாலும் தைந்யமுண்டாகும். தேசகாலவைகுண்யம்—சோகநிமித்தமான வஸ்து இவைகளின் மரணம். இவைகளைக்காரணமாகக்கொண்ட மனத்தெளிவின்மையாவது மனத்தெளிவின் விரோதியாவது தைந்யம். தைந்யத்தினாலுண்டான தைந்யமும் மனதினுடைய அவஸாதம் என்று அர்த்தம்.

அல்லது, பிந்நவாக்யமாக யோசிக்கத்தக்கது. தேசகாலவைகுண்யசோகவஸ்த்வாத்யநுஸ்ம்ருதிஜநிதம் மநஸோஅபாஸ்வரத்வமவஸாத:" எது சொல்லப்பட்டதாக ஆகிறதென்றால் சொல்லுகிறார்—'தஜ்ஜம் தைந்யம்' என்று. அந்த அபாஸ்வரத்வம் 'தஜ்ஜம்.' கூறப்பட்டுள்ள காரணத்துடன் கூடின தைந்யமென்று வ்யாக்யேயவ்யாக்யாநரூபமான வாக்யத்வயமென்று. 'தத்விபர்யய.' இதுமுதலானது பாஷ்யக்ரந்தம். பலஹீநேந—மநோபலமில்லாதவனால். 'தத்விபர்யயஜா'—தேசகால ஸாத்குண்ய ப்ரியவஸ்து முதலியவற்றின் மரணத்தால் "துஷ்டிருத்தர்ஷ:' என்று இவ்வளவு மட்டிலுமே தான் வாக்யம். "தத்விபர்யய: அநுத்தர்ஷ:' என்பது அர்த்தஸித்தம். "ஸ்வாத்யாய சௌசஸந்தோஷதபாம்ஸி நியதாத்மவாந்" என்று அபேக்ஷிக்கப்பட்டிருக்கிற ஸந்தோஷம் எவ்வாறு இழக்கத்தக்கதாக ஆகலாமென்றால் சொல்லுகிறார்—'அதிஸந்தோஷச்ச விரோதீத்யர்த்த:' என்று அஸந்தோஷம் மாத்ரம் விரோதியல்ல. அதிஸந்தோஷமும் விரோதி என்பது சகாரத்தின் அர்த்தம்.

அந்யவிஷயங்களிலேயே எவ்வாறு ப்ரவ்ருத்தி உண்டாகுமோ அவ்வாறான ஸந்தோஷம் அதிஸந்தோஷம். அது விடத்தக்கதென்று ஆகிறது. 'நிர்வசநமபி' என்கிற இடத்திலிருக்கிற அபிசப்தமானது எல்லா நிர்வசநங்களுடைய ஸமுச்சயத்தில். இவ்வண்ணம் பதார்த்தங்கள் வ்யாக்யாநிக்கப்பட்டன. 'தல்லப்தி:' இது முதலிய வாக்யகாரக்ரந்தத்தினுடைய வாக்யார்த்தைக்கூறுகிறார் 'ஏவம்' என்று. இவ்வாறு நியமமுள்ளவனுக்கு ஆச்ரமவிஹிதகர்மாநுஷ்டாநத்தாலென்று தனித்து நிர்தேசமிருப்பதால் ப்ரவ்ருத்தி நிவ்ருத்திரூபமான கோடித்வயவிபாகம் காண்பிக்கப்பட்டது. இந்த இரண்டு பதங்களால் கேவல சமாதிகளும், கேவல கர்மாவும், வ்யாவ்ருத்திக்கப்பட்டது. சமாதிகளும், கர்மாவும், சேர்ந்து அங்கமென்று பொருள்.

¶ அதீதம்—சென்றது.

† ஆகாமி—வரப்போகிறது.

ஏது விவிதிஷாஸாதநமென்று உன்னால் கூறப்பட்டதோ அதினாலேயே வித்யாநிஷ்பத்தி என்பது ஏவகாராபிப்ராயம். 'இத்யுக்தம் பவதி'—என்று வாக்யார்த்தம் ஏற்படுகிறது என்று அர்த்தம். 'வித்யாஞ்சாவித்யாஞ்ச' என்கிற ச்ருதிககு சங்கரயாதவப்ரகாசர்களுக்கு அபிமதமான யோஜனையை நிரஸிப்பதற்காக அதை வ்யாக்யாநம் செய்யத்திருவுள்ளங் கொண்டு உபாதாநம் பண்ணுகிறார் 'ததாச'—என்று.

பாஷ்யம்:—

ஏவம் நியமயுக்தஸ்யாஶ்ரமவிஹிதகர்மாநுஷ்டாநேநைவ வித்யாநிஷ்பத்திரித்யுக்தம் பவதி ।

ததா ச ஶ்ருத்யந்தரம்—"வித்யாம் சாவித்யாம் ச யஸ்தத்வேதோபயம் ஸஹ । அவித்யயா ம்ருத்யும் தீர்த்வா வித்யயாம்ருதமஶ்நுதே" (ஈஶா. ௧௧.) இதி ।

அத்ராவித்யாஶப்தாபிஹிதம் வர்ணாஶ்ரமவிஹிதம் கர்ம । அவித்யயா—கர்மணா । ம்ருத்யும் ஜ்ஞாநோத்பத்திவிரோதி ப்ராசீநம் கர்ம । தீர்த்வா அபோஹ்ய । வித்யயா ஜ்ஞாநேந । அம்ருதம் ப்ரஹ்ம । அஶ்நுதே ப்ராப்நோதீத்யர்த: । ம்ருத்யுதரணோபாயதயா ப்ரதீதா அவித்யா வித்யேதராபிஹிதம் கர்மைவ । யதோக்தம் "இயாஜ ஸோऽபி ஸுபஹூந் யஜ்ஞாந் ஜ்ஞாநவ்யபாஶ்ரய: । ப்ரஹ்மவித்யாமதிஷ்டாய தர்தும் ம்ருத்யுமவித்யயா ।" (வி.பு. ௬.௬. ௧௨.) இதி । ஜ்ஞாநவிரோதி ச கர்ம புண்யபாபரூபம், ப்ரஹ்மஜ்ஞாநோத்பத்திவிரோதித்வேநாநிஷ்டபலத்வேநோபயோரபி பாபஶப்தாபிதேயத்வம் । அஸ்ய ச ஜ்ஞாநவிரோதித்வம் ஜ்ஞாநோத்பத்திஹேதுபூதஶுத்தஸத்த்வவிரோதிரஜஸ்தமோவிவ்ருத்திதாரேண ॥

இவ்வண்ணம் நியமத்துடன் கூடியவனுக்கு, ஆச்ரமவிஹித கர்மாநுஷ்டாநத்தினாலேயே வித்யையின் நிஷ்பத்தி என்று சொல்லப்பட்டதாக ஆகிறது. அவ்வாறே மற்றொரு ச்ருதியும்—'வித்யை அவித்யை இரண்டையும் எவன் அறிவனோ அவன் அந்த பரப்ரஹ்மத்தை அறிகிறான்—'

'கர்மாவினால் ம்ருத்யுவைக்கடந்து வித்யையினால் அம்ருதத்தை அடைகிறான் என்று. இந்த இடத்தில் அவித்யா சப்தத்தால் சொல்லப்பட்டிருப்பது வர்ணாச்ரமவிஹிதமான கர்மம். அவித்யையினால் கர்மாவினால். ம்ருத்யுவை ஜ்ஞாநோத்பத்தி விரோதியானப்ராசீந

கர்மாவை. தீர்த்வா-போக்கடித்து வித்யையினால்-ஜ்ஞாநத்தினால் அம்ருதத்தை-ப்ரஹ்மத்தை அடைகிறானென்று பொருள். ம்ருத்யுவை-விநாசஞ் செய்வதற்கு உபாயமாக அறியப்பட்ட அவித்யையானது வித்யையைக்காட்டிலும் வேறான விஹிதகர்மாவே. ஜ்ஞாநயோகி என்று ப்ரஸித்திபெற்ற ஜநகரும், ப்ரஹ்மவித்யையை அதிஷ்டாநம் செய்து, அவித்யையினால் ம்ருத்யுவை தரணம் செய்வதற்காக அபரிமிதங்களான யஜ்ஞங்களை அநுஷ்டித்தார்" என்று கூறப்பட்டிருக்கிறது.

ஜ்ஞாநவிரோதியான கர்மாவானது புண்யபாபரூபமாயுள்ளது. ப்ரஹ்மஜ்ஞாநோத்பத்திக்கு விரோதியாய் அநிஷ்டபலங்களை விளைவிப்பதினால் இரண்டும் பாபசப்தத்தால் சொல்லப்படுகின்றன. இதற்கு ஜ்ஞாநவிரோதித்வமானது ஜ்ஞாநோத்பத்திக்கு ஹேதுவான சுத்தஸத்வத்திற்கு விரோதியான ரஜஸ்தமஸ்களுடைய வ்ருத்தியினடியாக

ச்ருதப்ரகாசிகை :—

இதனால், கர்மா அபேக்ஷிதமென்கிற விஷயத்தில் ஸம்ப்ரதாயமில்லாத ச்ருத்யந்தரம் காண்பிக்கப்பட்டதாக ஆகிறது. அப்படியே ச்ருத்யந்தரம் எது உங்களால் வேறு விதமாக வ்யாக்யாநம் செய்யப்பட்டதோ அதுவும், நம்மால் சொல்லப்பட்ட அர்த்தத்திற்கு அநுகுணமென்று ததாசப்தத்தையும், அந்தரசப்தத்தையும் ப்ரயோகித்தவருககுக்கருத்து.

ஸங்ரஹிதமாக இருப்பதால் யஜ்ஞாதி வாக்யவைலக்ஷண்யமும் அந்தரசப்தத்தால் அபிப்ராயப்பட்டிருக்கிறது. இந்த வாக்யத்தில் கர்மவாசிசப்தம் கேட்கப்படவில்லையே என்றால், கூறுகிறார் 'அத்ர' என்று. அத்ர இந்த ச்ருதிவாகயத்தில்; "ஆநாத்மந்யாத்மபுத்திர்யா" இது முதலியவைகளிலல்ல. வர்ணாச்ரமவிஹிதமான கர்மாவானது அவித்யாசப்தத்தால் சொல்லப்பட்டதாக இருக்கட்டும், அதனால் சொல்லப்பட்டதாக ஆகிறது என் என்று சங்கை வர பதாந்தரங்களையும் (விவரித்துக்கொண்டு வாக்யார்த்தத்தைக்கூறுகிறார் 'அவித்யா' என்று.

அவித்யையினால்—கர்மாவினால். வித்யயா—ஜ்ஞாநேந என்கிற இடத்திலும் கர்மஜ்ஞாநசப்தங்களால்—"கஷாயபக்தி : கர்மாணி ஜ்ஞாநந்து பரமாகதி: கஷாயே கர்மபி: பக்வே ததோ ஜ்ஞாநம் ப்ரவர்ததே" கர்மாக்கள் பாபத்திற்கு பரிபாகத்தை உண்டுபண்ணுகிற ஸ்வபாவமுள்ளவைகள். ஜ்ஞாநமோவென்றால், அடையத்தக்கவைகளுக்குள் சிறந்தது. பாபம் கர்மாக்களால் பகவம் செய்யப்பட்டால் பிறகு ஜ்ஞாநமுண்டாகிறது என்று தனக்கு உபஜீவ்யமான அர்த்தத்துடன் கூடின ஸ்ம்ருதியானது ஸ்மரிக்கும்படி செய்யபபட்டதாக ஆகிறது. கர்மாணி கஷாயபக்தி : கஷாயபக்திக்கு நிமித்தங்கள். கஷாயசப்தம் பாபவாசகம்,—'தர்மத்தினால் பாபத்தைப்போக்கடிக்கிறான்' என்கிற வசநத்தோடு ஏகார்த்தமாக இருப்பதால் கஷாயசப்தம் ராகம் முதலியவற்றை போதிக்கிறதாக இருந்தபோதிலும் பாப

நிர்ஹரணமடியாக ராகாதிபரிபாகஹேதுத்வம். ‘ஜ்ஞாநம் பரமாகதி :’ சிறந்த கத்யுபாயம். இரண்டிடத்திலும் காரணத்தில் கார்யோபசாரம். கஷாயம் பக்வமானால் பிறகு ஜ்ஞாநம் ஸம்பவிக்கிறது—ப்ரஸரிக்கிறதென்று அர்த்தம். இந்த இடத்தில் உபாயவிரோதி நிராஸகத்வம கர்மாவுக்கு ஸ்பஷ்டம். விவிதிஷை ப்ரவ்ருத்திக்கிறது; மோக்ஷம் ப்ரவ்ருத்திக்கிறதென்று சொல்லப்படவில்லையன்றோ. ஜ்ஞாநம் ப்ரவ்ருத்திக்கிறதென்றே கூறப்பட்டிருக்கிறது. இந்த வாக்யத்தினுடைய அர்த்தத்தை உபஜீவித்து சொல்லுகிறார்—‘ம்ருத்யும் ஜ்ஞாநோத்பத்தி விரோதி’—என்று ப்ரஹ்மப்ராப்தி விரோதியல்ல. விவிதிஷாவிரோதியல்ல என்று அர்த்தம். உபேயவிரோதியான கர்மாவுக்கு ஜ்ஞாநநிவர்த்யத்வம் அநேக ச்ருதிகளாலும், ஸ்ம்ருதிகளாலும் ஸித்தம்.

எப்படி என்றால்—‘தமேவ விதித்வாதிம்ருத்யுமேதி நாந்ய : பந்தா :, ஏவமேவம விதி பாபம், கர்ம ந ச்லிஷ்யதே, க்ஷீயந்தேசாஸ்ய கர்மாணி தஸ்மிந் த்ருஷ்டே பராவரே நிசாய்யதம் ம்ருத்யுமுகாத்ப்ரமுச்யதே, ஜ்ஞாத்வா தேவம் முச்யதே ஸர்வபாசை:, ஜ்ஞாநாக்நி : ஸர்வகர்மாணி பஸ்மஸாத் குருதேநதா’ என்று, இவ்வாறாக உபேயவிரோதிக்கு ஜ்ஞாந நிவர்த்யத்வம் ச்ருதியினால் அறிபப்படுவதால் பரிசேஷத்தால் ‘நாந்ய : பந்தா’ என்று உபேய விரோதி நிராஸத்தில் உபாயாந்தரநிஷேதஸ்வாரஸ்யத்தாலும்,ஸமஸமுச்சய பக்ஷத்தில் கர்மாவும், உபாயமாதலால் வேதநத்தைத்தவிர்த்த மற்ற எல்லாவற்றையும் விஷயீகரிக்கிற அந்ய சப்தத்திற்கு ஸங்கோசம் ப்ரஸங்கிப்பதாலும், ‘யஜ்ஞேந விவிதிஷந்தி’ என்று கர்மாவுக்கு உபாயஹேதுத்வம் கண்டோக்தமாக இருப்பதாலும், ‘கஷாயே கர்மபி: பக்வே ததோ ஜ்ஞாநம் ப்ரவர்த்ததே’ என்கிற ஸ்ம்ருதியின் ஆநுகுண்யத்தாலும், ஸாமாந்யமான ம்ருத்யுசப்தத்தால் நிரஸிக்கத்தக்கது அறியப்பட்டிருந்தபோதிலும் உபாயவிரோதி கர்மரூப விசேஷத்தில் பர்யவஸிக்கிறது.

அப்படியே விவிதிஷாஸாதநத்வமானது முன்கூறப்பட்ட அந்யோந்யாச்ரயம் முதலியவற்றால் நிரஸிக்கப்பட்டபடியால் பரிசேஷத்தால் ‘விவிதிஷந்தி’ என்கிற இடத்திலும், ப்ரக்ருதிப்ரத்யங்களின் அர்த்தங்களான வேதநம், அதின் இச்சை இவ்விரண்டுக்கும் விசேஷமின்றி யஜ்ஞாதிகள் ஸாதநங்களென்று அறியப்பட்டிருந்தபோதிலும்—‘ததோ ஜ்ஞாநம் ப்ரவர்த்ததே’’ என்கிற ஸ்ம்ருதி முதலியவைகளுக்கு அநுகுணமாயிருப்பதாலும், நீதியை அறிந்தவர்களால் வேண்டப்பட்ட ப்ரக்ருத்யர்த்த ப்ராதாந்யம் நிர்ணயிக்கப்பட்டிருப்பதாலும், ப்ரக்ருத்யர்த்தமான வேதநஸாதநத்வம் ஸித்தமாயிற்று. ஆகையால், உபாயத்துக்கு விரோதியான கர்மாவே இந்த இடத்தில ம்ருத்யு சப்தவாச்யமாயும், அவித்யா நிவர்த்யமாயுமிருக்கிறதென்று அபிப்ராயம். உபாஸநாரூபமாயும் ந்யாயரூபமாயுமிருக்கிற உபேயவிரோதிநிராஸகஜ்ஞாநமானது உத்தரபூர்வபாகம் இரண்டுகளுக்கும் நிராஸகமாக ஆகலாமென்று அதை வ்யாவ்ருத்திப்பதற்காக ப்ராசீநமென்று கூறப்பட்டது. உபாய விரோதிநிராஸககாமாவானது ப்ராசீனபாபத்தையே தணிக்கிறது, ‘உத்தராகத்தைத்தணிக்கிறதில்லை—என்று பொருள். ‘தீர்த்வா’ என்கிற பதத்தை வ்யாக்யாநிக்கிறார்—‘அபோஹ்ய’ என்று. ‘ஏதம் ஸேதும் தீர்த்வா’ என்கிற இடத்தைப்போல் ப்ராப்திவசநமல்ல என்று கருத்து. ‘அவித்யயா தீர்த்வா’ என்கிற இரண்டு பதங்களின் வ்யாக்யாநத்தினால், சங்கரமதயோஜனையானது நிரஸிக்கப்பட்டது. அஜ்ஞாநத்தினால் ஸம்ஸாரத்தை அடைந்திருக்கிறவன் என்றல்லவோ அந்த மதயோஜனை. அதில் அவித்யையானது ஹேயமாக அறியத்தக்கது. அவித்யாசப்தமானது விவிதிஷாவிரோதி நிவர்த்தககர்மவாசி என்றுவது, சங்கராபிமதமான யோஜனையாக இருக்கலாம். அவித்யாசபதம் உபேயவிரோதி நிவர்த்தக கர்மவாசி என்று யாதவப்ரகாசாபிமதமான யோஜனை.

'ஜ்ஞாநோத்பத்தி விரோதி' என்கிற ம்ருத்யுசப்தவ்யாக்யாநத்தினுல் அவை இரண்டும் நிரஸிக்கப்பட்டன. இந்த அவித்யாசப்தமானது ஸம்ஸாரத்திற்கு ஹேதுவான அஜ்ஞாநமாக ஏன் ஆகக்கூடாது?—அதற்கு கர்மவாசித்வம் எவ்வாறு?—என்று கேட்கில் சொல்லுகிருர் 'ம்ருத்யுதரண'—என்று தரதிக்கு உத்தரணார்த்தகத்வம் ஸ்வாரஸ்யத்தால் ஸித்தம். ப்ராப்தியை அர்த்தமாகக்கொண்டால் ஸ்வாரஸ்யத்திற்கு பங்கமென்று அபிப்ராயம் அவித்யாசப்தம் கர்மவாசி என்பதைக்காண்பிக்கிருர். 'வித்யேதரத்' என்று. அதைக்காட்டிலும் வேறு என்கிற அர்த்தத்தில, நஞ் என்று கருத்து.

'விஹிதம் கர்மைவ' என்கிற ஏவகாரத்தால் அஜ்ஞாநமும், அவிஹிதகர்மாவும் வ்யாவ்ருத்திக்கப்படுகிறது. இந்த இடத்தில் 'வித்யாஞ்சாவித்யாஞ்ச' என்கிற 'ச' சப்தங்கள் அநுக்தஸமுச்சயபரங்கள்.

வித்யாநுபந்தியாயும், கர்மாநுபந்தியாயுமுள்ளது எது சொல்லப்படவில்லேயோ, அது ஸமுச்சயிக்கத்தக்கது. வித்யாநுபந்தியாக இருப்பவை சமதமாதிகள். கர்மாநுபந்தியாக இருப்பவை பலாபிஸந்திகர்த்ருத்வாரமான ராஹித்யம் முதலியவை. அது இரண்டும் 'ச' சப்தத்தால் ஸமுச்சயிக்கத்தக்கது.

அன்றிக்கே, "தர்மே சார்த்தேச காமேச மோக்ஷேச பரதர்ஷப" என்கிற இடத்தில் 'ச' சப்தம் போல், இங்கும் சொல்லப்பட்டிருக்கிற அர்த்தத்திற்கு விரோதிகள் எவைகளோ அவைகளின் ஸமுச்சயத்தைக்காட்டுகிறவைகளாக இரண்டு 'ச' சப்தங்கள் இருக்கலாம். வித்யாவிரோதியும், கர்மவிரோதியும், ஹாநத்திற்காக அறியத்தக்கவைகளாக இருப்பதால், சப்தங்களால் ஸமுச்சயிக்கப்பட்டவைகளாக ஆகின்றன.

வித்யா-ப்ரஹ்மவித்யா. அதற்கு விரோதி அதற்கு வேருன வஸ்துவை விஷயீகரிக்கிற ஜ்ஞாநம் அது விஷயமான ராகத்வேஷம் முதலியது. அவித்யா—வித்யாங்கமான கர்மம். அதற்கு விரோதியாக இருப்பது. ஸம்ஸாரத்துக்கு ஹேதுவாயும் பலாபிஸந்தி முதலியதோடு கூடியதாயுமிருக்கிற கர்மாவும், பாபமும், அது இரண்டும் விட்டுவிடுவதற்காக அறியத்தக்கதென்பது சப்தங்களுடைய அபிப்ராயம். அன்றிக்கே, ப்ரதிபதத்யோதகங்களாக 'ச' சப்தங்கள் இருக்கலாம். எப்படி என்ருல், "தர்மே சார்த்தேச காமேச" என்று பதந்தோறும் எது அபிதேயமோ அதன் ஸமுச்சயத்யோதகத்வம், ப்ரதிபதத்யோதகத்வம்—அது இங்கேயுமிருக்கலாம். இந்த வாக்யத்தில் 'அவித்யா, தரண' சப்தங்களுக்கு கூறப்பட்ட அர்த்த பரத்வத்தை ஸ்தாபிப்பதற்காக உபப்ரும்ஹண வசநத்தைக் காட்டுகிருர்.—'யதோக்தம்' என்று 'ஜ்ஞாநவ்யபாச்ரய:' ஆகமத்தாலுண்டான ஜ்ஞாநமுள்ளவர். 'ப்ரஹ்ம வித்யாமதிஷ்டாய' உபாஸநாத்மகமான ஜ்ஞாநத்தை ஸாத்யமாக அவலம்பித்து என்று அர்த்தம்.

ஜ்ஞாந வித்யா சப்தங்கள் இரண்டுக்கும் அர்த்தபேதமறியவேண்டுமென்கிற இச்சையுண்டாகில் ஆகமத்தினுலும், விவேகம் முதலியவாற்ருலும் உண்டாகிற ஜ்ஞாநங்கள ப்ரக்ருதமாக இருப்பதால், தத்பரத்வாச்ரயணமன்ருே யுக்தம், 'தாத்வா ம்ருத்யும்' என்றதனுல் அர்த்தத்தை உணர்த்துந்தன்மையுள்ளது என்கிற த்ருதாதுவானது ப்ராப்தி என்றும் சங்கை விலக்கப்பட்டது.

ஸம்ஸாரத்தை அடைவதற்காக, ப்ரஹ்மவித்தான கேசித்வஜராஜனுல் யஜ்ஞம் முதலிய கர்மா அனுஷ்டிக்கப்படுகிறதில்லேயன்ருே. ம்ருத்யுசப்தம், விவிதிஷைக்கு விரோதியான கர்மாவைச்சொல்லுகிறதென்று சந்தேகிக்கத் தக்கதல்ல,—'ஜ்ஞாநவ்யபாச்ரய:'

என்றதினால் சாஸ்த்ரத்தினால் உண்டாகிற ஜ்ஞாநம் சொல்லப்பட்டிருப்பதாலும். ப்ரஹ்ம வித்யேச்சையை அதிஷ்டித்து என்று சொல்லப்படவில்லையன்றோ. ஜ்ஞாநோத்பத்திக்கு விரோதியான ப்ராசீநமான கர்மம் என்று புண்யபாப ஸாதாரணகர்மசப்தத்தால் எவ்வாறு கர்மம்மாத்ரம் நிரஸிக்கத்தக்கதாக சொல்லப்பட்டது. ச்ருதியோவென்றால், 'தர்மேண பாப மபநுததி' என்று பாபரூபமான கர்மவிசேஷத்திற்கு நிராஸத்தைச்சொல்லுகிறதென்று சங்கை உண்டாகில், அவ்விடத்திலும் பாபசப்தத்திற்கு புண்யபாபபரத்வத்தைக்காட்டுவ தற்காக புண்யபாபம் இரண்டுக்கும் பாபசப்தவாச்யத்தை உபபாதிப்பதின் பொருட்டு அவ்விரண்டுக்கும் ஜ்ஞாநோத்பத்தி விரோதித்வத்தைக் கூறுகிறார்—'ஜ்ஞாநவிரோதிச' என்று. 'ச'காரம் சங்கையின் நிவ்ருத்தியைக்காட்டுகிறது. புண்யபாபங்கள் இரண்டும் ஜ்ஞாநவிரோதிகளாக ஆகுமேயாகில், எவ்வாறு அவ்விரண்டினுள் ஒன்றான பாபத்திற்கு நிரஸநீயத்வமும் மற்றொன்றான புண்யத்திற்கு நிராஸகத்வமும் ச்ருதியினால் கூறப்படு கிறது—எனில் கூறுகிறார் 'உபயோரபி' என்று. அவ்விரண்டுக்கும், நிவர்த்யத்வமும், பலாபிஸந்தி முதலியதில்லாத தர்மாந்தரத்திற்கே நிவர்த்தகத்வமும் விவக்ஷிக்கப்பட்ட தென்று கருத்து.

இரண்டுக்கும் பாபசப்தவாச்யத்வம் எவ்வாறு பொருந்துமென்றால், சொல்லுகிறார் 'ப்ரஹ்மஜ்ஞாநோத்பத்தி' என்று 'அநிஷ்டபலதயா' என்கிற பதத்தினால் ப்ரவ்ருத்தி நிமித்த ஸூசநம் செய்தபடி அலௌகிகத்வமிருந்தாலும் அநிஷ்டாபலாஸாதாரணகாரணத் வம் பாபரூபமாயிருக்குமென்று கருத்து.

அதினால்தான் சாஸ்த்ரம்முதலியதிலும், ஈசவரனிடத்திலும் அதிவ்யாப்தி இல்லை. 'வாஸுதேவே மநோ யஸ்ய ஜபஹோமார்ச்சநாதிஷு தஸ்யாந்தராயோ மைத்ரேய, தேவேந் த்ரத்வாதிகம் பலம் ஏதேவை நிரயாஸ்தாத ஸ்தாநஸ்ய பரமாத்மந :" (ஹேமைத்ரேய! ஜபம் ஹோமம் அர்ச்சநம்முதலிய கர்மாக்களில் எவனுடைய மனது வாஸுதேவனிடத்தில் பற்றுதலுள்ளதாக இருக்குமோ, அவனுக்கு தேவேந்திரனுடைய பதத்தைப்பெறுதல் முதலிய பலங்கூட இடையூறாக ஆகிறது. ஸௌம்ய ! பரமாத்மாவினுடைய ஸ்தாநத்திற்கு இவைகள் நரகங்கள்.) இதுமுதலியவைகளால் புண்யத்துக்கும் முமுக்ஷுவைக்குறித்து அநிஷ்டபலனைக்கொடுக்குந்தன்மை ஸித்தம். ச்ருதியும் பாபத்தோடு கூட முற்கூறப் பட்ட ஸுக்ருதத்தையும், பாப்மசப்தத்தால் நிர்தேசியாநின்றுகொண்டு நிகமநம் செய்கி றது, 'நைதம் ஸேதுமஹோராத்ரம் தரதோ ந ஜரா ந ம்ருத்யுர்ந சோகோ ந ஸுக்ருதம் ந துஷ்க்ருதம் ஸர்வே பாப்மாநோதோ நிவர்த்தந்தே' (இந்த ஸேதுவை அஹோராத்ரங்கள் தாண்டிச்செல்லுகிறதில்லை. ஜரையாவது, ம்ருத்யுவாவது சோகமாவது, ஸுக்ருதமா வது, துஷ்க்ருதமாவது தாண்டிச்செல்லுகிறதில்லை. எல்லா பாபங்களும் இவனிடத்தி னின்று நிவர்த்திக்கின்றன) என்று பாப்மசப்தம், சொல்லப்படாத பாபாந்தர விஷய மென்றுசொல்வது ஸரியன்று. துஷ்க்ருதசப்தமானது எல்லோராலுமறியப்பட்ட எல்லா பாபங்களுக்கும் ஸாதாரணமாக இருப்பதால், சொல்லப்படாத பாபாந்தரங்களுக்கு ஸம் பவமில்லாமையால், அதை விஷயமாக உடையதென்பது பொருந்தாது. ஸம்பவித்தபோ திலும், பாப்மசப்தமானது, அந்த பாபாந்தர விஷயத்தளவு ஆகமாட்டாது.

சொல்லப்பட்ட எல்லா ஹேயநிவ்ருத்திக்கும் ஸம்வாதியாக எடுக்கப்பட்ட 'அபஹத பாப்மாஹ்யேஷ ப்ரஹ்மலோக:' என்கிற அடுத்த வாக்யத்தில், பாப்ம சப்தமானது எல்லா (ஹேய) விஷயமாகக் காணப்படுவதால். சொல்லப்பட்டிராத சில பாபநிவ்ருத்தியைச சொல்லும் பக்ஷத்தில் கூறப்பட்டிருக்கிற ஸர்வ ஹேய நிவ்ருத்தி ஸம்வாதம் ஸித்தியாது.

சோகம்முதலியவைகளில் பாபசப்தம் அமுக்யமாக இருந்தபோதிலும் ஸுக்ருததுஷ்க்ருதங்களில் ப்ரவ்ருத்திநிமித்தம் ஸம்பவிப்பதால் முக்யத்வம் விடவொண்ணாது,—ஓரிடத்தில் அமுக்யமாக இருக்கிற வஸ்துவானது, எல்லா இடங்களிலும் அமுக்யமாக இருக்கவேண்டுமென்கிற நியமமில்லாமையால். ஆதலால் "ஸர்வே பாப்மாந:" என்கிற இடத்தில் $ சத்ரிந்யாயத்தால் அஜஹல்லக்ஷணை ஒப்புக்கொள்ளத்தக்கது. 'தர்மேண பாபம்' என்கிற இடத்தில் முக்யத்வமே.

பாஷ்யம்:—

பாபஸ்ய ச ஜ்ஞாநோதயவிரோதித்வம்—'ஏஷ ஏவாஸாது கர்ம காரயதி தம் யமதோ நிநீஷதி' இதி ஶ்ருத்யாவகம்யதே | ரஜஸ்தமஸோர்யதார்த்தஜ்ஞாநாவரணத்வம் ஸத்த்வஸ்ய ச யதார்த்தஜ்ஞாநஹேதுத்வம் பகவதைவ ப்ரதிபாதிதம்—'ஸத்த்வாத்ஸஞ்ஜாயதே ஜ்ஞாநம்' இத்யாதிநா—

அதஶ்ச ஜ்ஞாநோத்பத்தயே பாபம் கர்ம நிரஸநீயம் | தந்நிரஸநஞ்சாநபிஸம்ஹிதபலேநாநுஷ்டிதேந யஜ்ஞேந | ததா ச ஶ்ருதி:—'யஜ்ஞேந பாபமபநுததி' இதி | ததேவம் ப்ரஹ்மப்ராப்திஸாதநம் ஜ்ஞாநம் ஸர்வாஶ்ரமகர்மாபேக்ஷம் | அதோ(அ)பேக்ஷிதகர்மஸ்வரூபஜ்ஞாநம், கேவலகர்மணாமல்பாஸ்திரபலத்வ

$ சத்ரிந்யாயம்—குடையுள்ள சிலர்களும், குடையில்லாத சிலர்களும் சேர்ந்து செல்லுகிற கூட்டத்தைப் பார்த்து—'குடைக்காரர்கள் போகிறார்களென்று சொன்னால் குடைக்காரர்களைச் சொல்லுகிற சத்ரிபதம் குடையுள்ளவர்கள், குடை இல்லாதவர்கள் இவ்விருவர்களையும் போதிக்கிறது. இந்த இடங்களில் அஜஹல்லக்ஷணை ஒத்துக்கொள்ளத்தக்கது. இடத்திலோவென்றால் பதங்களுக்கு அர்த்தங்களை போதிக்கும் வ்யாபாரங்கள் மூன்று—அவையாவன. சக்தி, லக்ஷணை, வ்யஞ்ஜனை.

சக்தியாவது இந்த சப்தத்தால் இந்த அர்த்தம் அறியத்தக்கது என்கிற ஈச்வரனுடைய இச்சை. சில இடங்களில் மனிதர்களுடைய இச்சையைக்காரணமாகக்கொண்ட ஸங்கேதமும்.

லக்ஷணையாவது—வாச்யார்த்தத்திற்கு அநுபபத்திவரின் அந்த வாச்யார்த்தஸம்பந்தத்தால் வேறு அர்த்தத்தை உணர்த்திவைக்கும் சப்தவ்யாபாரம். இது மூன்று விதம். ஜஹல்லக்ஷணை, அஜஹல்லக்ஷணை, ஜஹதஜல்லக்ஷணை என்று. சப்தமானது வாச்யார்த்தத்தை முற்றிலும் இழக்குமேயாகில் ஜஹல்லக்ஷணை. வாச்யார்த்தத்தை விடாமல் வேறு அர்த்தத்தை போதிக்குமேயாகில், அஜஹல்லக்ஷணை. வாச்யார்த்தத்தில் சில பாகத்தை விடாமலிருக்குமேயாகில் ஜஹதஜஹல்லக்ஷணை. இந்த மூன்றுவது லக்ஷணையானது ஜீவனுக்கும் ப்ரஹ்மத்திற்கும் ஐக்யம் கூறுகிற மாயாவாதிகள் மதத்திற்கே ஏற்கும். மற்ற ஒரு ஸித்தாந்திகளும் இந்த லக்ஷணையை ஒப்புக்கொள்ளார்கள்.

ஜ்ஞாநம் ஸர்வாஸ்ரமகர்மாபேக்ஷமிதி அபேக்ஷிதா ப்ரஹ்ம ஜிஜ்ஞாஸாயா: பூர்வவ்ருத்தா வக்தவ்யா—

பாபத்திற்கும் ஜ்ஞாநோதய விரோதித்வமானது 'எவனை நரகத்தில் தள்ள விரும்புகிறானோ அவனை இவனே தீய செயல்களை செய்விக்கிறான்' எனகிற ச்ருதியினால் அறியப்படுகிறது. ரஜஸ்தமஸ் இரண்டும் யதார்த்தஜ்ஞாநத்திற்கு ஆவரணமென்பதும் ஸத்வமானது யதார்த்தஜ்ஞாநஹேது என்பதும் பகவானாலேயே ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கிறது "ஸத்வத்தினாலே ஜ்ஞாநம் உண்டாகிறது" இதுமுதலியதால்.

ஆதலால், ஜ்ஞாநத்தின் உத்பத்தியின்பொருட்டு பாபமான கர்மாநிரஸிக்கத்தக்கது. பலத்தைக்கருதாமல் அநுஷ்டிக்கப்பட்டிருக்கிற தர்மத்தால் அதன் நிரஸநமும ஸித்திக்கிறது. அவ்வாறே ச்ருதி கூறுகிறது. 'தர்மத்தினால் பாபம் நீக்கப்படுகிறது' என்று இவ்விதமாக ப்ரஹ்மப்ராப்திக்கு ஸாதநமான உரிய கர்மங்களை அபேக்ஷித்திருக்கிறது. ஆகையால், அபேக்ஷிக்கப்பட்டிருக்கிற கர்மஸ்வரூப ஜ்ஞாநமும், கேவலகர்மாக்கள் அல்பமாயும், அஸ்திரமாயுமிருக்கிற பலத்துடன் கூடியவைகள்—என்கிற ஜ்ஞாநமும் கர்மமீமாம்ஸையினால் நிச்சயிக்கத்தக்கதாக இருப்பதால் ப்ரஹ்மஜிஜ்ஞாஸைக்குப் பூர்வவ்ருத்தமாக அதுவே அபேக்ஷிக்கப்பட்டதென்று சொல்லத்தக்கது.

ச்ருதப்ரகாசிகை:—

பாபத்துககு எவ்வாறு ஜ்ஞாநவிரோதித்வம்?—ரஜஸ்தமஸ்களுக்கல்லவோ அது அறியப்படுகிறது—என்று சங்கைவா த்வாரத்வாரிபாவாததால் அவிரோதத்தைச்சொல்லுகிறார்—அஸ்ய, என்று.

பாபத்துக்கும், ரஜஸ்தமஸ்களுக்கும் ஜ்ஞாநவிரோதித்வம் ப்ராமாணிகமாக இருப்பதால் அவைகளுக்கு த்வாரத்வாரிபாவம் கலபிக்கப்படுகிறதென்று கூறுகிறார்—'பாபஸ்யச'—என்று

இந்த ச்ருதியானது நரகப்ராபணேச்சாவிஷயமாக என் ஆகக்கூடாது?—அதோநயநமானது உந்நயநத்திற்கு விருத்தமாக இருப்பதால என்றால் சொல்லுகிறோம். இந்த இடத்தில் விவக்ஷிக்கப்பட்டிருக்கிற உந்நயநஹேதுத்வம் உபாஸநநிஷ்பாதநஸ்வரூபமாயுள்ளது. உந்நயநமும் ஸ்வாகம முதலிய ஸ்தாநங்களை அடைவிப்பித்தலென்று ஸந்தேகிக்கத்தக்கதல்ல—"யமேப்யோ லோகேப்ய: உந்நிநீஷதி" என்கிற ச்ருதிவாக்யத்தினால் ஸமஸ்தலோகங்களை விட மேலான ஸ்தாநத்தை அடையும்படி செய்தலென்று அறியப்பட்டிருக்கிற உந்நயமானது மோக்ஷப்ரமாண ரூபமாக இருப்பதால், அங்ஙனமாகில், கர்ப, ஜந்ம, ஜரா,

மரணம், முதலிய ஸம்ஸாரப்ராபணம் அதோநயநமாக ஆகட்டும்; உபாஸநவிரோதமாக வேண்டாமெனில்—அல்ல,—உந்நயநத்திற்கு ஜ்ஞானோத்பாதநத்வாரமாக இருக்கும் தன்மை அறியப்படுவதால். "யம் த்வம் மநுஷ்யாய ஹிததமம் மந்யஸே" (எதை நீர் மனிதனுக்கு மிக்க ஹிதமென்று எண்ணுகிறீரோ) என்கிற உபக்ரமவாக்யத்தினால் "மாமு பாஸ்வ" என்று விதிக்க இச்சிக்கப்பட்டிருக்கிற உபாஸநத்திற்கு அவ்யவஹிதோபாயத்வ மன்றோ அறியப்பட்டிருக்கிறது.

'நாந்ய: பந்தா:' இது முதலான ச்ருத்யந்தரங்களும் அவ்வாறு அறிவிக்கின்றன. அது வும் கர்மங்களுக்கு † அபவர்கத்தைக்குறித்து அவ்யவஹிதோபாயத்வம் சொல்லப்பட்டால் விரோதிக்கும்.

ஆகையால், உபக்ரமம் முதலியவைகளுக்கு விரோதமில்லாமையால் ஸாதுகர்மங் களுக்கு மோக்ஷத்தைக்குறித்து உபாயத்வம் உபாஸநமூலமென்று நிச்சயிக்கப்படுகிறது.

ஆதலால், கர்மங்களுக்கு உந்நயநஹேதுத்வம் உபாஸந நிஷ்பாதந ரூபமென்றும், அதற்கு விபரீதமான அதோ நயநமானது உபாஸநப்ரதிபந்த ரூபமென்றும், மிகவும் ஸ்பஷ் டமாக அறியப்படுகிறது.

மேலும் உந்நயநாதோநயநங்கள் இரண்டும் ஸ்வர்க நரக ப்ராபண ரூபங்களே. ஆகிலும், அஸாது கர்மங்களுக்கு ஜ்ஞாநவிரோதித்வம் ஸித்திக்கிறது—

எப்படியென்றால், §உந்நிநீஷை¶ அதோநிநீஷை இரண்டுக்கும் காரணமின்மை கூறப் படுமேயாகில் பரமாத்மாவுக்கு வைஷம்யநைர்க்ருண்யங்கள் ப்ரஸங்கிப்பதால், நடத்தத்தக்க சேதநஸவிலுள்ள யாதொரு வ்ருத்தத்வமுண்டோ அது, கதித்வய நிநீஷைக்கு நிமித்த மாக இருக்கிற அபரிமிதமான புண்யபாப கர்த்ரு விஷயமாக அறியப்படுகிறது.

அதில் இரண்டு கதிகளுக்கும் போதுமான திறமை வாய்ந்த மேன்மேலாக நற்செயல், தீச்செயல்களை செய்வித்தலானது, ஈச்வரனுக்கு, பூதப்ரவேசம் முதலியவற்றைப்போல், ஜீவனுடைய புத்தியை அபேக்ஷிக்காமல் உண்டாகிறதில்லை. அங்ஙனமொப்புக்கொள்ளப் படுமேயாகில், ஜ்ஞாநம், செய்வதிலிச்சை இது முதலியது இல்லாமையால், காற்று,ஜலம் முதலியதால் ப்ரேரணஞ்செய்யப்பட்ட த்ருணம் முதலியவற்றைப்போல் ஸம்ஸாரிகளுக்கு சாஸ்த்ரவச்யத்வமில்லாமல் போவதால், கர்மபலங்களை அனுபவிப்பதென்பது பொருந்தா மல் போகவேண்டியதாகும்.

இவ்வண்ணமாக ஸாம்ஸாரிகளுக்கு கர்மபலபோக்த்ருத்வம் இன்றியமையாதது—என் கிற ந்யாயத்தாலநுக்ரஹிக்கப்பட்டிருக்கிற "ஏஷ ஏவ" இது முதலான இரண்டு வாக்யங் களும் ஜ்ஞாநப்ரதாநத்துக்கு மூலமாயிருக்கிற காரயித்ருத்வவிஷயமென்று நிச்சயிக்கப் படுகிறது. அவ்வாறு நிச்சயம் கொள்வதில் ஸ்ம்ருதியின் அநுக்ரஹமும் உண்டாகிறது. இடையர்கள் கோலைக்கையில் எடுத்து பசுக்களைக்காப்பதுபோல, தேவர்கள் யஷ்டியை எடுத்துக்கொண்டு காக்கிறார்களில்லை. எவனை ரக்ஷிக்கவேண்டுமென்று விரும்புகிறார்களோ அவனை புத்தியோடு சேர்ப்பிக்கிறார்கள். தேவர்கள் எந்த மனிதனுக்கு அவமானத்தைக் கொடுக்க விரும்புகிறார்களோ அவனுடைய புத்தியை இழுத்துவிடுகிறார்கள். அந்த புத்தி

† அபவர்கம்—மோக்ஷம், அல்லது முடிவு.

§ உந்நிநீஷை—மேலான பதத்திற்குக்கொண்டு வரவேண்டுமென்கிற இச்சை.

¶ அதோநிநீஷை—கீழ்நிலைமைக்குக்கொண்டு போகவேண்டும்—என்கிற இச்சை.

யிலிருந்து விலக்கப்பட்டவனாக நாலும் அடைகிறான். என்றல்லவோ சொல்லப்படுகிறது. அவ்வாறே "அடிக்கடி செய்யப்படுகிற புண்யமானது ப்ரஜ்ஞையை வ்ருத்திபண்ணுகிறது. திடமான ப்ரஜ்ஞையுள்ள மனிதன் நித்யம் புண்யத்தையே செய்ய ஆரம்பிக்கிறான். அடிக்கடி செய்யப்படும் பாபமானது ப்ரஜ்ஞையை நாசமடையச்செய்கிறது. ப்ரஜ்ஞையை இழந்த மனிதன் எப்பொழுதும் பாபத்தையே செய்யத்தொடங்குகிறான்" என்றும் அதில் "புத்திமவர்த்தந்தி ப்ராஜ்ஞோம நாசயதி" என்றும் நல்ல அறிவின் அழிவை முன்னிட்ட அதற்கு விபரீதமான ஜ்ஞானத்தின் நிஷ்பத்தியானது இங்கே விவக்ஷிக்கப்பட்டிருக்கிறது. அங்ஙனமிலலாவிடில், வேறு கர்மங்களின் ஆரம்பம் உபபந்நமாகாது.

எப்படியும் இந்த வசநகலாபமானது ஸாவகர்மதேவதாஸாமாந்யவிஷயமாக இருக்கிறது, ஆயினும் பகவத்ஜ்ஞானமானது ஸயயக்ஜ்ஞாநஸாமாந்யத்திற்கு வெளிப்பட்டிராமையால், அஸாதுகர்மாவுக்கு அந்த ஜ்ஞாநவிரோதித்வம் ஸித்திக்கிறது. அவ்வாறே விசேஷித்தும் சொல்லப்படுகிறது—"ததாமி புத்தியோகந்தம் யேந மாம் உபயாந்தி தே, ஆஸுரீம் யோநிமாபந்நா மூடா ஜந்மநி ஜந்மநி, மாமப்ராப்யைவ கௌந்தேய, ததோ யாந்த்யதமாம் கதிம்" (எதனால் அவர்கள் என்னை அடைகிறார்களோ அப்படிப்பட்டபுத்தியை நான் கொடுக்கிறேன். ஹே குந்தீபுத்ர! அஸுரஜாதியை அடைந்தவர்களாகவும், ஒவ்வொரு ஜந்மத்திலும் மூடர்களாகவும் என்னை அடையாமலே அதினின்று அதமமான கதியை அடைகிறார்கள்) என்றும், இவ்வண்ணம் ந்யாயத்தினாலும், ஸ்ம்ருதியினாலும் உபப்ருஂஹணம் செய்யப்பட்ட இந்த ச்ருதியினால் அஸாதுகர்மங்களுக்குப்பொதுவாக ஜ்ஞாநவிரோதம் ஸித்தித்தது. இந்த நிர்வாஹததாலும் முற்கூறப்பட்டது உபபந்நமாகிறது—ப்ரகாரணத்தின் ஒற்றுமை இருத்தலால்.

இவ்வாறாக பாபம் ஜ்ஞாநவிருத்தமென்பதில ப்ரமாணம் காட்டப்பட்டது. பிறகு ரஜஸ்தமங்கள் ஜ்ஞாநவிரோதிகள் என்பதிலும், ஸத்வகுணமானது ஜ்ஞாநத்துக்கு ஹேது என்பதிலும், ப்ரமாணத்தைக்காட்டுகிறார். 'ரஜஸ்தமஸோ:' என்று. அதனால் ப்ரஸ்துத கர்மாபேக்ஷிதத்வத்திற்கு ப்ரயோஜனமென்னவெனில், கூறுகிறார் 'அதஶ்ச' என்று. அத: பாபத்திற்கு ஜ்ஞாநவிரோதித்வம் சொல்லப்பட்டிருப்பதால். அதினாலும் என் எனில் சொல்லுகிறார்—'தந்நிரஸநஞ்ச'—என்று. பாபசப்தத்தால் சொல்லத்தக்க புண்யபாபம் இரண்டும் நிரஸிக்கத்தக்கதாலால், பாபத்தை விலக்குகிற கர்மாவின் அஸம்பவத்தை ஆசங்கித்து கூறப்பட்டது. † 'அநபிஸம்ஹிதபலேந' இதனால் ஸ்வர்கம் முதலிய பலத்தைக் கொடுக்கிற கர்மங்கள் வ்யாவ்ருத்திக்கப்பட்டன. அநுஷ்டிக்கப்பட்டிருக்கிற—அறியப்பட்ட மாத்ரத்தினாலே' அந்த கர்மாவின் நிரஸநம் ஸம்பவியாதென்று கருத்து. அதில் ப்ரமாணம் எது என்றால் கூறுகிறா.–'ததாச ச்ருதி:' என்று. இப்பொழுது நிராஸகவிசேஷத்தில் ப்ரமாணமாக உதாஹரிக்கப்பட்ட வாக்யத்தின் அர்த்தநிர்ணயத்திற்கு உபயோகியாக இருப்பதால், இந்த வாக்யத்திலுள்ள நிரஸிககவேண்டிய வஸ்துவாசியான பதத்தினுடைய அர்த்தமானது முன்னமே சிக்ஷிக்கப்பட்டது. நிராஸகவாசிபதத்தினுடைய அர்த்தமானது அடுத்து உரைக்கப்பட்டது.

இந்த தர்மசப்தமானது * க்ருச்ரம் சாந்த்ராயணம் முதலிய † ப்ராயச்சித்தரூபமான

---

† அநபிஸமஹிதம்—கருதப்படாதது.

* க்ருச்சரம—சாந்த்ராயணம், இவைகள் ப்ராயத்சித்த பேதங்கள்.

† ப்ராயசித்தம்—பாபத்தை போக்கடிப்பதற்காக செய்யப்படும் சாஸத்ரியமான கர்மாநுஷ்டாநம். ப்ராயஸ் என்றால் பாபம் சித்தம் என்றால் அதைப்போக்குகிற சாஸ்த்ர ஸம்மதமாக கர்மாநுஷ்டாநம்.

ப்ராயம் பாபம் விஜாநீயாத்—சித்தம் தஸ்யவிசோதநம்—என்று நிருக்தி.

தர்மமாத்ர விஷயமாக ஏன் இருக்கக்கூடாது. அநபிஸம்ஹிதபலதாமவிஷயமென்று ஏன் நிச்சயிக்கப்படவேண்டும் எனில் சொல்லப்படுகிறது.

"யஜ்ஞேந, தாநேந, தபஸாநாசகேந சாந்தோ தாந்த உபரதஸ்திதிக்ஷு:, கஷாயே கர்மபி: பக்வே ததோ ஜ்ஞாநம் ப்ரவர்த்ததே. யஜ்ஞதாநம், தப:, கர்ம ந த்யாஜ்யம் கார்யமேவ தத், யஜ்ஞோ தாநம் தபஶ்சைவ பாவநாநி மநீஷிணாம், சமோ தமஸ்தபஶ்சௌசம்" (யஜ்ஞத்தாலும், தாநத்தாலும், தபஸ்ஸினாலும், அநசநவ்ரதத்தாலும்—வெளி இந்த்ரியங்களையும் மநதையும் ஒடுக்கினவனாகவும், விஷயங்களிலிருந்து ஒழிவுள்ளவனாகவும், ஸஹநசக்தியுள்ளவனாகவும்—பாபமானது கர்மாக்களால் எரிக்கப்பட்டால் பிறகு ஜ்ஞாநம் உண்டாகிறது. யஜ்ஞம், தாநம், தபம், கர்ம, இவைகள் விவேகிகளுக்கு பரிசுத்தியையுண்டுபண்ணுகிற ஸ்வபாவமுள்ளவைகள் சமம், தமம், தபஸ் சுத்தியாக இருத்தல்; இது முதலிய ச்ருதிஸ்ருதிகளால் முமுக்ஷுவுக்கு அபேக்ஷிதங்களாகச்சொல்லப்பட்டிருக்கிற யஜ்ஞம், தாநம், தபஸ், சமம் முதலியவைகள் இங்கு கூறப்பட்டிருப்பதாலும், "விஜ்ஞாநாதாநந்தோ ப்ரஹ்ம யோநி:" இதுமுதலியதால் இந்த ப்ரகரணத்திற்கு ப்ரஹ்மவித்யாவிஷயத்தம் ஸித்தித்திருப்பதாலும், இந்த தர்மசப்தமானது முமுக்ஷுவினால் அபேக்ஷிக்கப்பட்ட அநபிஸம்ஹித பல தர்மவிஷயமென்று அறியப்படுகிறது.

இந்த இடத்தில் யஜ்ஞதாநாதி பர்யாயங்களில் "தாநேந த்விஷந்தோ மித்ரா பவந்தி" (சத்ருக்கள் கொடையினால் மித்ரர்களாக ஆகிறார்கள்.) இது முதலியதால் ஸாம்ஸாரிகபல கீர்த்தநமானது, "அந்நவாநந்நாதோ பவதி" இது முதலியது போல, ப்ரஹ்மவேதநாநுகுணமாயும், $ ஆநுஷங்கிகமாயிருக்கிற பலவிஷயமாக எண்ணத்தக்கது,— "பூயோ ந ம்ருத்யுமுபயாஹி வித்வாந்" என்று ப்ரதாநபலச்ரவணத்தால். மேலும், இந்த வாக்யம் எப்படியும் முமுக்ஷுமாத்ரவிஷயமல்ல. ஆயினும், அமுமுக்ஷுமாத்ரவிஷயமுமாகாது,— ப்ரவ்ருத்திநிமித்தம் ஸாதநமாக இருப்பதால். காம்யபலத்தைக்கொடுத்தல் தர்ம சப்தார்த்தமல்லவன்றோ. அலௌகிகமான இஷ்டத்திற்கு அஸாதாரணமான ஸாதநத்தினால் அலௌகிக நிஷ்டா ஸாதாரண காரணத்தைப்போக்க வேண்டுமென்றல்லவோ அர்த்தமாகும்.

அப்படியானால், முக்தியில் விருப்பமுள்ளவனைக்குறித்து காம்யகர்மாவானது அநிஷ்டபலமுள்ளதாக இருப்பதால், தர்மசப்தத்தால் சொல்லத்தகாததலாலும், பாப சப்தத்தால் சொல்லத்தக்கதில் உள்ளடங்குவதாலும், பக்ஷதர்மதையின் பலத்தினால் பலாபிஸந்தி இல்லாத தர்மத்தினால் புண்யபாபம் இரண்டுக்கும் போக்கக்கூடிய தன்மை சொல்லப்பட்டதாக ஆகும். ஜ்ஞாநம் கர்மாபேக்ஷையுள்ளதென்பதை நிகமநம் செய்கிறார்—'ததேவம்'—என்று. தத்-ச்ருதிஸ்ம்ருதிகள் அவைகளுக்கு அநுக்ராஹகங்களான உபபத்திகள், ஸூத்ரகாரவசநங்கள் இவைகளாலுண்டான, இவ்வண்ணம் உபாயப்ரதிபந்தநிராஸத்திற்காக எல்லா ஆச்ரமிகளுக்கும் அந்தந்த ஆச்ரமதர்மங்களை அங்கங்களாகக்கொண்ட உபாஸநாதிகாரம் மேலே உரைக்கப்படப்போகிறதை மனதில் வைத்துக்கொண்டு ஸர்வாச்ரகர்மாபேக்ஷமென்று உரைக்கப்பட்டது. அதனால் ப்ரஹ்மவிசாரபூர்வவ்ருத்தத்வத்தில் கர்மவிசாரத்திற்கு என்ன ப்ரயோஜநமென்று அபேக்ஷை உண்டாகுங்கால், அநுஷ்டாநம் ஜ்ஞாநஸாபேக்ஷமாக இருப்பதால், ஜ்ஞாநம், மீமாம்ஸாதீநமாதலால், அதின் ஜ்ஞாநம் முந்தியிருக்கவேண்டும் என்று சொல்லுகிறார். 'அத:' ப்ரம்மஜ்ஞாநத்திற்கு பலாபிஸந்தி இல்லாத ஆச்ரமகர்மாவை அபேக்ஷித்திருப்பதால். ஜ்ஞாநம் ஹாநத்திற்காகவாவது, உபாதாநத்திற்காகவாவது வேண்டியது.

$ ஆநுஷங்கிகம்—அப்ரதாநம்.

இங்கேயோ இரண்டுக்காகவுமென்று சொல்லுகிறார்—‘அபேக்ஷித’—என்று. பலத வாரா ஹாநம். ஸ்வரூபத்தால் உபாதாநம். மீமாம்ஸாசப்தம் பூர்வோத்தரஸாதாரணமாத லால் காமமீமாம்ஸையினால் நிச்சயிக்கத்தக்கதென்று உரைக்கப்பட்டது. ‘ஸைவ’ எது விருத்தமென்று உன்னால் நிரஸிக்கப்பட்டதோ அதுவே என்று அர்த்தம். எது அநபேக்ஷித மென்று அந்யனால் கூறப்பட்டதோ அதுவே அபேக்ஷிதமென்று கூறப்பட்டது.

𑌭𑌾𑌷𑍍𑌯𑌮𑍍:—

𑌅𑌪𑌿 𑌚 𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌨𑌿𑌤𑍍𑌯𑌵𑌸𑍍𑌤𑍁𑌵𑌿𑌵𑍇𑌕𑌾𑌦𑌯𑌶𑍍𑌚 𑌮𑍀𑌮𑌾𑌂𑌸𑌾𑌶𑍍𑌰𑌵𑌣𑌮𑌨𑍍𑌤𑌰𑍇𑌣 𑌨 𑌸𑌂𑌭𑌵𑌨𑍍𑌤𑌿; 𑌫𑌲𑌕𑌰𑌣𑍇𑌤𑌿𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌤𑌾𑌧𑌿𑌕𑌾𑌰𑌿𑌵𑌿𑌶𑍇𑌷𑌨𑌿𑌶𑍍𑌚𑌯𑌾𑌦𑍃𑌤𑍇 𑌕𑌰𑍍𑌮𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌤𑌤𑍍𑌫𑌲𑌤𑌤𑍍𑌸𑍍𑌥𑌿𑌰𑌤𑍍𑌵𑌾𑌸𑍍𑌥𑌿𑌰𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌨𑌿𑌤𑍍𑌯𑌤𑍍𑌵𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌦𑍁𑌰𑌵𑌬𑍋𑌧𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 ।

மேலும், நித்யாநித்யவஸ்துவிவேகம் முதலியவைகள் மீமாம்ஸையின் ச்ரவணமில்லாவிட்டால் ஸம்பவியாது,—பலம், காரணம், †இதிகர்த்தவ்யதை, அதிகாரி விசேஷம் இவைகளின் நிச்சயமில்லாவிடில், கர்மஸ்வரூபம், அதின் பலம், அதின் ஸ்திரத்வாஸ்திரத்வங்கள் ஆத்மநித்யத்வம் முதலியவைகள் அறிவதற்கு ஸாத்யப்படாததலால்.

ச்ருதப்ரகாசிகை—

எது அந்யனால அபேக்ஷிதமென்று உரைக்கப்பட்டதோ அதற்கு அநபேக்ஷிதத்வம், கூறப்படுகிறது—‘அபிசேதயாதிநா.’ ‘நிதயாநித்யவஸ்து விவேகாதயஶ்ச’—என்று. சகாரம் து என்பதின் அர்த்தமுள்ளது. முற்றிலும் அாததவிரோதம் என்று அர்த்தம். ‘மீமாம்ஸா ச்ரவணமந்தரேண, கர்மப்ரஹ்மமீமாம்ஸாச்ரவணமிலலாவிட்டால் என்று அாததம.’ “ந ஸம பத்ஸ்யந்தே” என்றதினால் பிறகு வருந்தன்மை சொலலப்பட்டது. எதனாலென்றால் சொல் லுகிறார் ‘பல’—என்று. பலவிசேஷமாவது போகமோக்ஷரூபமாயுள்ளது.

கரணவிசேஷம்—யஜ்ஞம், உபாஸநம் முதலியது. ப்ரயாஜம் முதலியதும், ஸாதந ஸப்தகமும், போகத்தில் இச்சையுள்ளவனும், மோக்ஷத்தில் விருப்பமுள்ளவனும் அதிகாரி விசேஷம். இவைகளின் நிச்சயமில்லாவிடில் கர்மஸ்வரூபமாவது—அங்கங்களோடு கூடின யஜ்ஞாத்மகமாகவும், உபாஸநாத்மகமாயுமுள்ளது.

பாஷ்யகாரரும் யாகாத்மகமாயும், உபாஸநாத்மகமாயுமிருக்கிற கர்மம் என்று உரைக் கப்போகிறார். “ப்ரகாசஶ்ச கர்மண்யப்யாஸாத்” என்றும் ஸூத்ரம்—‘உபாஸநாத்மகமான கர்மணி’ என்றும் அதற்கு பாஷ்யம். உபாஸநத்திற்கு காமத்வமானது ஸ்ம்ருதிஸந்ததி ரூப மாக இருத்தலால்; அது ப்ரயநஸாத்யமாக இருப்பதால். “ப்ரமாணம் வாசிகை பக்ஷிம்ரு கதாம் மாநஸைரந்த்யஜாதிதாம்—சரீரஜை கர்மதோஷை: யாதி ஸ்தாவரதாம் நர:” (மனி தன் வாக்தோஷங்களால் பக்ஷிகளாகவும், ம்ருகங்களாவும் பிறக்கிறான். மாநஸதோஷங்க ளால் சண்டாளனாகப்பிறக்கிறான்—சரீரத்தில் உண்டான தோஷங்களால் ஸ்தாவரஜந்மா

†இதிகர்த்தவ்யதை—அங்கம்.

வைப்பெறுகிறான்.) என்கிற இடத்தில் மநுவும் † "மாநஸை: கர்மதோஷை:" என்று சொன்னார். பலமும்—போகம், மோக்ஷமென இரண்டு.

'ஆத்மநித்யத்வாதீநாம்' என்று ஆதிசப்தத்தால் ஆத்மாக்களுக்கு ¶ 'நிர்வாண மய ஏவா யம்' என்று சொல்லப்பட்ட ஜ்ஞாநாநந்தஸ்வரூபத்வம் முதலியது விவக்ஷிக்கப்பட்டது. இங்கு ஸாதநத்துக்கு § ஸாத்யாவிசிஷ்டத்வம் அறியப்படுகிறதென்றால், இப்படி அல்ல. மீமாம்ஸையில் பலகரணேதிகர்த்தவ்யதை முதலியவைகளுக்கு ஒவ்வொரு அதிகரணத்திலும் அந்தந்த ந்யாயங்களால் எந்த நிர்ணயம் செய்யப்படுகிறதோ அது ஹேது ஸாதநம். இவ்வண்ணம் அந்த அந்த அதிகரணந்யாயத்தால் அநுக்ரஹிக்கப்பட்ட ச்ருதி வாக்யங்களால் உண்டாகிற உபாயோபேய விஷயமான யாதொரு ஜ்ஞாநம் உண்டோ அது ஸாத்யம். அந்தந்த வாக்யார்த்த நிச்சயங்களால் அவைகளின் ஸமுதாயரூபமான மஹாவாக்யார்த்த நிச்சயம் ஸாதிக்கப்படுகிறதென்று அர்த்தம். பதார்த்த நிச்சயங்களால் வாக்யார்த்த நிச்சயமென்று சொன்னால் எவ்வாறு ஸாத்யாவிசிஷ்டத்வமில்லையோ, அப்படிப்போல, அதனாலேயன்றோ கரணேதிகர்தவ்யதாதிசப்தங்களால் முந்தி தனித்துச்சொல்லி பிறகு கர்மஸ்வரூபசப்தத்தால் சொல்லப்பட்டது. பலகரண சப்தங்களால் தொடங்கப்பட்டிருக்கிற பாஷ்யக்ரந்தமானது கர்மமீமாம்ஸாமாத்ரவிஷயமாக இருக்குமேயாகில், 'தத்பல ஸ்திரத்வாஸ்திரத்வாத்மநித்யத்வாதீநாம்' என்று சொல்வது யுக்தமன்று. உபபதமில்லாத 'மீமாம்ஸா' சப்தமானது, 'மீமாம்ஸா சாஸ்த்ரம்' என்கிற பதங்களை முதலாகக்கொண்ட பாஷ்யத்தில் பாகத்வயவிஷயமாக ப்ரயோகிக்கப்பட்டிருப்பதாலும் நாம் சொன்னதே ஸரியான அர்த்தம்.

ஆகையால், கர்மப்ரம்ம விசாரங்களுக்கு அநந்தரஹாவீ (க) நித்யாநித்யவஸ்துவிவேகமும்—அதற்குப்பிறகு (உ) இம்மையிலும், மறுமையிலும் பலபோகத்தில் வைராக்யமும்—(ங) முக்தியடைய வேண்டுமென்கிற இச்சையும் (ச) சமதமாதிஸாதநஸம்பத்தும். சமதமாதிகளோடு கூடினவனாக இருக்கவேண்டுமென்று ப்ரம்மமீமாம்ஸையிலல்லவோ சமதமாதிஸ்வரூபம் நிரூபிக்கப்படுகிறது. இந்த நான்கும் ஸித்தித்தால் ப்ரஹ்மவிசாரம், ப்ரஹ்மவிசாரத்தால் சமாதி ஸித்தி என்று அந்யோந்யாச்ரயதோஷம் ஸம்பவிக்கும். ஆகையால் பிந்தி வரப்போகிறதற்கு முந்தி நடைப்பெற்றிருத்தல் பொருந்தாது. ஸாங்காத்யயநத்தாலுண்டான ஆபாதப்ரதீதியே நித்யாநித்யவஸ்துவிவேகமென்று கூறப்படுமேயாகில், அது யுக்தமல்ல.

ஆபாதப்ரதீதியானது, இம்மையிலும் மறுமையிலும் பலபோகவிராகத்துக்கும் முமுக்ஷுத்வத்திற்கும் ஹேதுவாகாதன்றோ,—நித்யாநித்யங்களுடைய விபர்யயத்திற்கு ப்ரதீதி வருவதால். மேலும், ஆபாதப்ரதீதியானது இரண்டு பாகங்களின் விசாரத்திற்திற்கும் பொதுவானது.

அதில் முதலில் கர்மவிசாரத்திலேயே தான் ப்ரவ்ருத்தி யுக்தமானது, இரண்டிடத்திலும் புபுத்ஸை வேற்றுமையின்றி இருப்பதாலும், முந்தி இருப்பதை அதிக்ரமிப்பதில்

† மாநஸை:—மாநஸிகங்களான கர்மதோஷங்களால்.

¶ நிர்வாண மய ஏவாயம்—இந்த பரமாத்மா ஆநந்தமயனே.

§ ஸாத்யாவிசிஷ்டத்தும் ஸாதநத்துக்கு அதாவது (ஹேதுவுக்கு) ஸாத்யத்தைவிட வேற்றுமை இன்மை.

காரணமில்லாமையாலும்—வேறு சாஸ்த்ரத்தாலும் நித்யாநித்யவிவேகம்முதலியது உப பந்நமாகாது.

முதலிலேயே புருஷன் அத்யயநவிதிக்கு வச்யனுக இருப்பதால் வேறு சாஸ்திரத்திற்கு அவகாசமில்லாமையால், மேலும் சாத்திராந்தரத்தில் பரமாணுகாரணத்வமும், அப்ரஹ்மாத்மக ப்ரதாநகாரணத்வமும், ககநாதி நித்யத்வமும், நிமித்தமாத்ர ஈச்வரத்வமும்-இவை முதலிய வேதாந்த விருத்தங்களான அர்த்தங்களே அநேகங்கள் அறியப்படுகின்றன.

ஆகையால், வேறு சாஸ்தரங்களினுல் உண்டாகிற நித்யாநித்ய வஸ்து விவேகமானது, வேதாந்தவிருத்தமாதலால் அதின் விசாரத்தைக்குறித்து பூர்வவ்ருத்தமாக ஆவதற்குத்தகுதியுள்ளதல்ல.

மேலும், சாஸ்த்ராந்தரத்தில் ஆறுபதார்த்தங்களின் ஜ்ஞாநமும், பதினுறு பதார்த்தங்களின் ஜ்ஞாநமும் இவை முதலியவைகளுக்கு மோக்ஷஸாதநத்வம் ப்ரதிபாதிக்கப்பட்டிருப்பதாலும், வேதாந்தச்ரவணுபேக்ஷை இல்லாமையாலும் அதினுலுண்டாகிற விவேகத்திற்கு பூர்வவ்ருத்தத்வம் யுக்தமல்ல.

'எதனுல் † அப்யுதய § நிச்ரேயஸ ஸித்தி உண்டாகிறதோ அது தர்மம். ஹலஜாதி நிக்ரஹஸ்தாநங்களுடைய தத்வஜ்ஞாநத்தினுல் மோக்ஷப்ராப்தி என்றல்லவோ ஆங்காங்கு கூறப்படுகிறது மேலும் † "தஸ்மாதேவம் வித் சாந்தோ தாந்த உபரததஸ்திக்ஷ:, ஸமாஹிதோ பூத்வா ஆத்மந்யேவாத்மாநம் பச்யேத்" என்று ச்ருதியானது 'ஏவம்வித்' என்கிற சப்தத்தினுல், சாஸ்த்ரத்தினுலுண்டான ஜ்ஞாநத்தை அநுவதித்து 'பச்யேத்' என்று ப்ரதிபந்நமான உபாஸநத்திற்கு அங்கங்களாக சமாதிகளே உபதேசிக்கிறது. ஆகையால், சமாதிகளுக்கு ச்ரவணபூர்வவ்ருதத்வம் ச்ருதிவிருத்தம். 'ப்ரசாந்தசித்தாய' என்கிற சப்தத்தை முதலிலுடைய ச்ருதியோவென்றுல், ச்ரவணத்திற்கு உபயுக்தமான அவதாநத்தை உண்டுபண்ணுவதற்காக—என்று சொல்லப்பட்டிருக்கிறது. § இதிஹாஸம்¶புராணம் முதலியவைகளே ச்ரவணம்செய்வதினுல் நித்யாநித்யவிவேகம் உண்டாகலாமென்றுல் அப்பொழுது அதனுலேயே ப்ரஹ்மஸ்வரூபமறியப்படுவதால ப்ரஹ்மவிசாரம் ஆரம்பிக்கத்தக்கதாக ஏற்படும். இதிஹாஸ புராணங்களிலும் ஸம்சயவிபர்யயங்கள் அதிகமாக இருப்பதால் அவைகளே விலக்குவதற்காக ப்ரஹ்மவிசாரமானது அபேக்ஷிக்கப்படுகிறதென்றுல், ஸம்சயவிபர்யயங்களுடைய பாஹுள்யத்தாலேயே நித்யாநித்யவிவேகங்கூட அவைகளில் ஸம்பாதிக்க முடியாதென்று ஸாதநசதுஷ்டயத்திற்கு பூர்வவ்ருத்தத்வம் தகுதியுள்ளதாகாது.

---

† அப்யுதயம்—காம்யகர்மாக்களால் அடையப்படும் அல்பபலம்.

§ நிச்ரேயஸம்—நிச்சிதமான ச்ரேயஸ், அதாவது மோக்ஷம நித்யநைமித்திக காமங்கள் இரண்டுகேகும் இந்த நிச்ரேயஸமே பலம்—காம்மயகர்மாக்களுககு அப்யுதயம பலம்.

† தஸ்மாதேவம்—ஆகையால், இவ்வண்ணமறிந்தவன் பஹிரிந்த்ரியங்களே அடக்கினவனுகவும், மனதை அடக்கினவனுகவும், விஷயங்களில் ஒழிவு உள்ளவனுகவும பொருமையுள்ளவனுகரும், சித்தஸமாதாநமுள்ளவனுகவும் ஆகி—தன் உள்ளத்திலேயே ஆத்மாவை ஸாக்ஷாத்கரிக்கவேண்டும்.

§ இதிஹாஸம்—தர்மார்த்த காமமோக்ஷங்களுடைய உபதேசத்தோடு கூடியதும் முன் காலத்தில் நடந்தேறியதும் பல கதைகளோடு கூடியதுமான புண்யபுருஷர்களின் சரித்ரம்.

¶ புராணம்—ப்ரபஞ்சத்தின் ஸ்ருஷ்டி, ப்ரளயம் வம்சங்கள், மந்வந்தரங்கள், வம்சங்களே அநுஸரித்த சரித்திரங்கள் இந்த ஐந்து மடங்கினது.

'நித்யாநித்யங்களில் வஸிக்கின்றன' என்று 'நித்யா நித்ய வஸ்துக்கள், அவைகளின் ‡ தர்மங்கள்' என்று தொடங்கி நித்யமான தர்மிக்கு நித்யத்வம், ஸத்யத்வம், அதனாலேயே உபாதேயத்வம்; அநித்யமான தர்மிக்கு அநித்யத்வம் அஸத்யத்வம் அதனாலேயே ஹேயத்வம் என்று இவ்வண்ணங்களாலும், அவைகளின் தர்மங்களாலும் பிறக்கிற விவேகம் நித்யாநித்யவஸ்து விவேகமென்று வாசஸ்பதியால் எது சொல்லப்பட்டதோ அந்த விஷயத்தில் சொல்லுகிறோம். அநித்யமான வஸ்துவுக்கு முற்றிலும் அஸத்யத்வம் மேலே சொல்லப்போகிற ரீதியினாலே நிரஸிக்கப்பட்டதாக அறியத்தக்கது.

எது நித்யமோ அது உபாதேயம், எது அநித்யமோ அது ஹேயம்-என்கிற இரண்டும் உபபந்நமன்று.

ஸுகம், துக்கநிவ்ருத்தி, அவைகளின் ஸாதநங்கள், அவைகளுக்கு உபயோகிகள் இவைகளுக்கே உபாதேயத்வபுத்தி காணப்படுவதாலும், அவைகளைத்தவிர்த்த மற்றவைகளுக்கு அநுபாதேயதாபுத்தி காணப்படுவதாலும் நித்யமாக இருந்தபோதிலும் துக்கரூபமாகவாவது துக்கநிமித்தமாகவாவது இருக்குமேயாகில், அது ஹேயமென்றே அறியப்படும். இரண்டு ப்ரகாரமாக இல்லாவிட்டால் உபேக்ஷிக்கப்படும், அநித்யமாக இருந்தபோதிலும் ஸுகரூபமாகவாவது, ஸுகநிமித்தமாகவாவது இருக்குமேயானால் அது உபாதாநம் செய்யப்படுகிறது.

ஆனால் நிரூபகனுக்கு ஹேயமாகிறது—என்று கூறப்படுமேயாகில், அல்ல—மேலான வேறு ஸுகத்தின் தர்சநம் அத்யந்த துக்கத்தால் ஸாதிக்கத்தக்க தன்மை, துக்கத்தை பிந்தின பலமாகக்கொண்டிருத்தல் இவைகளின்றிக்கே இருக்குமேயாகில் நிரூபகனுக்குக் கூட அதில் உபாதேயதா புத்தி காணப்படுவதால்.—பாலுடன் சேர்ந்த அந்நத்தின் லாபத்தால் கணம் விடப்படுகிறது. பாழுங்கிணற்றில் விழுந்த சோழி அதை எடுப்பதில் ஸம்பவிக்கக்கூடிய க்லேசமானது, அடைவதினாலுண்டாகிற ஸுகத்தைவிட அதிகமாக இருப்பதால் இழக்கப்படுகிறது.

விஷம் கலந்த அந்நமானது மரணபயத்தால் த்யஜிக்கப்படுகிறது. புஷ்பமாலை, சந்தனம் முதலியதோவென்றால் அவைகளிடத்தினின்று சிறந்த ஸுகம் கிடைப்பதாலும், தொடக்கத்திலும், முடிவிலும் தீவ்ரமான துக்காநுபந்தமில்லாமையாலும் பரிமிதமாக இருந்தபோதிலும் க்ரஹிக்கப்படுகிறது.

ஆகையால், அநித்யத்திற்கு ஹேயத்வமானது அநித்யத்வமாத்ரத்தினால் உண்டு பண்ணப்பட்டதன்று. நித்யமான வஸ்துவானது துக்கத்தோடு கலவாத ஸுகரூபமாக இருப்பதால் அது உபாதேயம், அதில்லாமையால் அநித்யமான வஸ்து ஹேயம் என்று கூறப்படுமேயாகில் கூறப்படுகிறது—நித்யத்திற்கு துக்கத்தோடு கலவாத ஸுகரூபத்வமானது வ்யாப்தியினால் அறியப்படுகிறதா? அல்லது சாஸ்திரத்தினாலா!

முதலாவது சரியல்ல,—நித்யமான காலம் முதலியவைகளுக்கு ஸுகரூபத்வம் காணப்படாமையால், நித்யமான ஆத்மாவுக்கு துக்கத்தோடு சேராத ஸுகரூபத்வம் காணப்

‡ தர்மங்கள்—அலௌகிகமாயும். ச்ரேயஸ்ஸுக்கு ஸாதநமாயிருப்பது தர்மம். இது ச்ரௌதம், ஸ்மார்த்தமென இருவகைப்பட்டுள்ளது. முதலாவன ச்ரௌததர்மம் ஒன்றே ஸ்மார்த்த தர்மங்கள் ஆறுவிதங்கள்.—

அவைகளாவன:—வர்ணதர்மம், ஆச்ரம தர்மம், வர்ணாச்ரம தர்மம், ஜாதிதர்மம், நிமித்த தர்மம், குண தர்மம்—என.

படாமையாலும். 'நான் துக்கமுள்ளவன்' என்று ஆத்மாவுக்கல்லவோ துக்கம் உபலப்தி விஷயமாகிறது

சாஸ்த்ரத்தினுலென்ருல்—வேதத்தினுலாகில் வேதத்தினுலுண்டாகிறது ஆபாத ஜ்ஞானமா? ப்ரமிதிரூபமா?

முதல் பக்ஷத்தில் காமப்ரஹ்ம பாகங்களுக்குப்பொதுவாக இருப்பதால் கர்மவிசாரத்தை அதிகரமித்து ப்ரஹ்ம விசாரத்தைக்குறித்து அதற்கு பூர்வ வ்ருத்தத்வம அநுபபந்நம்.

நிச்சயரூபமானுல், மீமாம்ஸா த்வயபலம் உண்டாகலாம். ஆகமாந்தர மூலத்வம் சொல்லப்படுமேயாகில் விருத்தமாதலால, உபயோகமில்லாமையாலும் அதற்கு இதன் அபேக்ஷை இல்லாமையாலும் பூர்வவ்ருத்ததவம் உபபந்நமாகாது. ஆன பின்பு எது நித்யமோ அது உபாதேயம என்று சொல்லப்படுமேயாகில் கூடாது. இவ்வண்ணம் ப்ரதீதி உண்டாகிறதில்லே. பின்னே நித்யமான சுகம ஸம்பவிக்கிறதேயாகில் அது உபாதேயம். அது இருக்க அதில் அநித்யம அநுபாதேயமென்று அதில், நித்யஸுகஸம்பவஜ்ஞாநத்திற்கு ப்ரம்ம விசாரத்தின் உபயோகமானது நித்யமான பலத்தைக்கொடுப்பதில் இச்சையினடியாக என்று சொல்லத்தக்கது. சாஸ்திராந்தரங்களிலும் கர்மகாண்டத்திலும் நித்யபல ஸம்பாவனைக்கு நிவாரகமொன்றுமில்லாமையால், நித்யா நித்ய விவேகம் வந்தவுடன் அவைகளும் ஆரம்பிக்கத்தக்கதாக ஆகும். அவைகளிலன்றே நித்யமான பலம் அறியப்படுகிறது. அது அஸத்தென்று சொல்லப்படுமேயாகில், அந்த அஸத்வமானது அப்ராமாண்யத்தாலாவது § அந்யபரத்தாலாவது இருக்கவேண்டும். அவைகள் இரண்டும் கர்மமீமாம்ஸை இல்லாவிடில் ஸித்திக்கிறதில்லே என்பதினுல் அந்த கர்மமீமாம்ஸைக்கு பூர்வவ்ருத்தத்வம் ஒப்புக்கொள்ளத்தக்கது. முதல் ஸூத்ரமானது அதைத்தெரிவிப்பதில் நோக்குள்ளதென்று சொல்லப்படுமேயாகில் அல்ல,—அதற்கு ஸ்வசாஸ்திராரம்பத்திற்கு யுக்தமான விஷயப்ரயோஜநபரதவமிருப்பதால், சாஸ்திரங்களேக்குறித்து அப்ராமண்யாதி ப்ரதிபாதந பரத்வ மில்லாமையால. ஸ்வார்த்தோபயோகியாக இருப்பதால் அதற்கு அப்ராமாண்யம் முதலியது அபிப்ராயப்பட்டிருக்கிறதென்று கொள்ளில், அப்பொழுது அதற்கு ஸ்வோபஜீவ்யஜ்ஞாநம் அபேக்ஷிதமாதலால் கர்மவிசாரத்திற்கும், தர்க்கபாதத்திற்கும் பூர்வவ்ருத்தத்வம் ஏற்படவேண்டியதாக வரும்.

சாஸ்திராந்தராப்ராமாண்யமோவென்ருல் கர்மமீமாம்ஸையின் முதல் பாதத்தால் நிச்சயிக்கத்தக்கது, அந்யபரத்வம் வாக்யாந்தரவிரோதம் முதலியவைகளால் நித்யபலத்தின் அவிவக்ஷாத்யவஸாயமும் அந்த இடத்திலுள்ள ந்யாயதீநமாக இருக்கிறது. சாஸ்திராந்தரப்ரமேயத்தின் நிலகுலேதல் தர்க்கபாதத்தில் காண்பிக்கப்படும். மேலும். முதல் ஸூத்ரத்தினுலேயே சாஸ்திராந்தரத்திலுள்ள நித்யபலத்தின் அஸத்வமறியப்படுமேயாகில் அந்யோந்யாச்ரயதோஷம் வருகிறது. இப்படியாகில் தர்ம ஜிஜ்ஞாஸா ஸூத்ரத்திலும் அந்யோந்யாச்ரயம் வருமென்று சங்கிக்கத்தக்கதல்ல. பிதாமுதலியவர்களுடைய ப்ரேரணையால் ஸாங்காத்யயநம் செய்த புருஷனுக்கு ப்ரயோஜநமாயுள்ள அர்த்தத்தின் ஆபாதப்ரதீதியினுலேயே ப்ரவ்ருத்திக்கு உபபத்தி இருப்பதால், எவர்களுக்கு தர்மவிசாரம் வைதமோ அவர்களுக்கேதான் அந்யோந்யாச்ரயம். வைதத்வஜ்ஞாநத்தால் விசாரம், விசாரத்தால் வைதத்வ ஞாநமென்று. மேலும், அநித்யபலஹேயதா ஜ்ஞாநத்திற்கு ப்ரம்மவிசாரோபயோகம் சொல்லத்தக்கது.

§ அந்யபரத்வம்—வேறு ஒன்றில் நோக்குள்ளதாக இருத்தல்.

ஸ்வர்கம்முதலிய பலத்திற்கு அநித்யத்வமும், துக்கத்துடன் சேர்ந்திருத்தலும் எவ் வண்ணம் அறியப்படுறது.?

சாஸ்திராந்தரத்தினுலென்ருல், அதனுலேயே நித்யபுருஷார்த்தம் ஸித்திப்பதால், ஆகாங்க்ஷை இல்லாதபோது ப்ரம்மவிசாரத்தில் ப்ரவ்ருத்தி உண்டாகாது. ஆகையால், அதற்கு பூர்வவ்ருத்தத்வம் உபபந்நமாகாது.எது சுகமோ அது அநித்யமென்று தன்னுல் உத்ப்ரேக்ஷிக்கப்பட்டிருக்கிற தர்க்கமாத்ரத்தினுலென்ருல், அதனுலேயே நிரஸ்தமான நித்ய புருஷார்த்த ஸம்பாவனையுடன் கூடி இருந்தால். ப்ரம்மவிசாரம் ப்ரதிபந்திக்கப்படும். துக்க நிவ்ருத்திக்கு முடிவு இல்லாமையாலும், ஸ்வாபாவிகமான ஸுகமானது அநாதியாக இருப்ப தாலும், அந்தமில்லை என்பது பொருந்துவதாலும்நித்யபுருஷார்த்த ஸம்பாவனை இல்லை எனில், அல்ல—வேதாந்தச்ரவணத்தை முன்னிட்டு வ்யாப்தி நிச்சயம். அதை முன் னிட்டு வேதாந்தச்ரவணம் என்று அந்யோந்யாச்ரயதோஷம் ப்ரஸங்கிப்பதால்.

ஆகையால்,ப்ரஹ்மவிசாரத்தைக்குறித்து நித்யாநித்யங்களிலுள்ள தர்ம விவேகோப யோகத்திற்காக நித்யாநித்யவிவேகத்தில் பரத்பக்ஷம் ப்ரவ்ருத்தியாதலாலும்,தர்க்கம் அதிப்ர ஸக்தமாவதாலும் சாஸ்த்ராந்தரங்கள் ப்ரம்மவிசாரத்தில் அநாகாங்க்ஷையை உண்டுபண்ணு வதாலும், அதின் விரோதத்தால் உபயோகமில்லாமையாலும், வேதமே ப்ரமாணமாக ஆச் ரயிக்கத்தக்கது. அதில் ஆபாதப்ரதீதியானது இரண்டு பாகங்களுக்கும் ஸாதாரண மாக இருப்பதாலும், நித்யாநித்ய நிச்சயமானது இரண்டு மீமாம்ஸைகளின் பலமாக இருப் பதுபற்றி அந்யோந்யாச்ரயம் எவ்விதத்தினுலும் தாண்டமுடியாததாக இருப்பதாலும், நித் யாநித்யங்களை அடைந்திருக்கிற ஹேயோபாதேயத்வஜ்ஞானம் நித்யாநித்யவஸ்துவிவேக மென்பது யுக்தமன்று.

வேறு சாஸ்திரங்களில் நித்யபலஸம்பாவனைக்கு நிவாரகமில்லாமையால் நித்யாநித்ய விவேகம் முதலியதை உடையவனுக்கு அவைகளிலும் ப்ரவ்ருத்திவரக்கூடுமென்று எது சொல்லப்பட்டதோ, அது சரியல்ல,—முதல் ஸூத்ரம் சாஸ்த்ராந்தரங்களுக்கு நிவாரகமா தலால், ப்ரம்மமே ஜிஜ்ஞாஸ்யம், ப்ரக்ருதி புருஷர்களல்லவென்றல்லவோ ஸூத்ரார்த் தம்—என்று சொல்வது யுக்தமாகாது,—ஸாதநசதுஷ்டயத்துக்கு பூர்வவ்ருத்தத்தைச்சொல் லுகிறவர்களால் இந்த அர்த்தம் அங்கீகரிக்கப்பட்டிராததால். தாபத்ரயஜ்ஞாநத்திற்கு பூர்வவ்ருத்தத்வவாதிகளால் இந்த அர்த்தம் கூறப்பட்டிருக்கிறது. இந்த அர்த்தமும் உபபந்நமாகாது. தயாஹி—எனெனில். நிச்சயமாக இந்த அர்த்தமானது ஸூத்ரகாரரால் உபதேசிக்கப்படவுமில்லை.—ஆனுல் ஸூத்ரங்கள் ந்யாயநிபந்தனமாதலால், உபபாதிக்கப் படுகிறதென்று சொல்லத்தக்கது. உபபத்தியும் சாஸ்த்ராந்தர தௌர்பல்யமேயா? அல்லது ஸ்வசாஸ்த்ரப்ராபல்யமேயா? அல்லது ஸமுச்சிதமான இரண்டுமேயா? இவற்றுள் முதலா வது பொருந்தாது ஸ்வசாஸ்திரத்துக்கு (வேதத்திற்கு) தௌர்பல்யம் வரின் ப்ர ம்மத்துக்குங்கூட அறியவேண்டுமென்கிற இச்சாவிஷயத்வமில்லாமல் போவதால் இரண் டாவது சரியல்ல.

சாஸ்த்ராந்தரங்களுக்கு ப்ராபல்யம் உண்டாயின், ப்ரம்மத்துக்கே ஜிஜ்ஞாஸ்யத்வம் ஸித்தியாமல் மூன்ருவதில் ஸூத்திரத்துக்கு வையர்த்யம் வருகிறது,—பூர்வமீமாஸையி லேயே சோதநாஸூத்ரம் முதலியவைகளால் அவை இரண்டும் ஸித்திப்பதால் அவச்யம பேக்ஷிக்கப்பட்டிருப்பதால். அதனுலேயே அதற்கு பூர்வவ்ருத்தத்வாபத்தியும் ஸித்திக் கிறது. வேதப்ராமாண்யம்மாத்ரம் ஸித்தித்தபோதிலும் அவ்வளவு மாத்ரத்தினுல் ப்ரம்மத்தி னிடத்தில் ப்ராமாண்யம் ஸித்தியாதென்ருல்—அங்ஙனமாகில், எந்த ஹேதுக்களால் உன

க்கு ப்ரம்மத்தினிடத்தில் ப்ராமாண்யாஸம்பவசங்கைகள் பரிஹரிக்கத்தக்கவைகளோ, அவைகளும் ஸித்தவஸ்துவில் வ்யுத்பத்யநுபபத்தி முதலியவை என்று அவைகளின் பரிஹாரத்தால் ப்ரம்மத்தினிடத்தில் வேதார்த்தப்ராமாண்ய ஸமார்த்தபரத்வம் அங்கீகரிக்கில் நம்முடைய பக்ஷமே ஏற்றுக்கொள்ளப்பட்டதாக ஆகும். அதனாலேயே மூன்று துக்கங்களின் * அபிகாதஜ்ஞாநத்திற்கு பூர்வவ்ருத்தத்வமும் நிரஸிக்கப்பட்டது.

நிரஸநப்ரகாரம் காட்டப்படுகிறது. ஐஹிகதுக்க ஜ்ஞாநமே பூர்வவ்ருத்தமா? அல்லது, நாரகதுக்கஜ்ஞாநமா? அல்லது, ஸ்வர்கமுதலியது அல்பமாயும் அஸ்திரமாயுமிருப்பதால் தாபத்ரயாந்தர்கதத்வஜ்ஞாநமா? முதலாவதல்ல,—ஆயுர்வேதம் முதலியவைகளால் அவைகளின் நிரஸநோபாயமறியப்படுவதால். வேதாந்த விசாரத்துக்கு நைரபேக்ஷ்யம் வருவதால் இரண்டாவதுமல்ல,—நரகதுக்கத்துக்குக் காரணமான பாபங்களைப் போக்கடிக்கிற வ்ரதநியமங்களை விதிக்கிற சாஸ்திரங்கள்தான் அநேகமாக இருப்பதால் வேதாந்தத்திற்கு நைரபேக்ஷ்யம் வருவதால். மூன்றாவதிலோவென்றால் கர்மவிசாராபேக்ஷை நிச்சயமாக உண்டாகலாம்,—முதலிலேயே அத்யயநவிதிவசனுக்கு சாஸ்த்ராந்தரங்களை அறிவதற்குப் போதுமான ஸமயமில்லாமையாலும், அவஸரமிருந்தபோதிலும் ஸ்வர்காதிகளுக்கு அல்பாஸ்திரத்வஜ்ஞாநமாகிற பூர்வவ்ருத்தத்வம் கூடாததாலும் ஆபாதப்ரதீதியும், இதிஹாஸ புராணங்களும் அல்பாஸ்திரத்வாநந்தஸ்திரத் வவிபர்யயப்ரதீதிக்கு ஹேதுவாக இருப்பதாலும்.

பாஷ்யம்:—

ஏஷாம் ஸாதநத்வஞ்ச விநியோகாதவஸேயம்| விநியோகஶ்ச ஶ்ருதிலிங்காதிபி:| ஸ ச தார்தீய: உத்கீதாத்யுபாஸநாநி கர்மஸம்ருத்த்யர்தாந்யபி ப்ரஹ்மத்ருஷ்டிரூபாணி ப்ரஹ்மஜ்ஞாநாபேக்ஷாணீதீஹைவ சிந்தநீயாநி| தாந்யபி கர்மாண்யநபிஸம்ஹிதபலாநி ப்ரஹ்மவித்யோத்பாதகாநீதி [illegible]ணாவாக்ஷநாபேக்ஷாநி ஸர்வாண்யேவ ஸங்கதாநி| தேஷாஞ்ச கர்மஸ்வரூபாணாம் ஜ்ஞாநாபேக்ஷா ஸர்வஸம்மதா

இவைகளுக்கு ஸாதநத்வமானது விநியோகத்தால் நிச்சயிக்கத்தக்கது. விநியோகமும் ச்ருதிலிங்கம் முதலியவைகளால். அதுவோ பூர்வமீமாம்ஸையின் மூன்றாவது அத்யாயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

உத்கீதம் முதலியவைகளின் உபாஸநங்கள் கர்மத்திற்கு ஸம்ருத்தியை விளைவிக்கக்கூடியவைகளாக இருந்தபோதிலும் ப்ரம்மத்யாநரூபங்களாக இருப்பதால் ப்ரம்மஜ்ஞாநஸாபேக்ஷங்களென்று இங்கேயே சிந்திக்கத்தக்கவைகள். பலத்தைக் கருதாமல் அநுஷ்டிக்கப்பட்டிருக்கிற அக்கர்மங்களும் ப்ரம்மவித்யோத்பாதகங்க

* அபிகாதம்—ஹிம்ஸை.

ளாக இருப்பதால் அதற்கு சீக்கிரபலப்ரதத்வத்தை உண்டுபண்ணுகிற இந்த உத்கீதாத்யுபாஸநங்கள் இங்கேயே மிக்க பொருத்தமுள்ளவைகள். அவைகளுக்கு கர்ம ஸ்வரூபஜ்ஞாநாபேக்ஷையானது எல்லோருக்கும் ஸம்மதமானது.

ச்ருதப்ரகாசிகை:—

முன்பு வ்யாக்யேயஸ்வபாவத்தால் கர்மநியமம் கூறப்பட்டது. வ்யாக்யாநஸ்வபாவத்தாலும் அதன் ஸித்தி இப்போது கூறப்படுகிறது—ஏஷாம்—என்று. ஏஷாம்—சமாதிகளுக்கு ஸாதநத்வம். சகாரம் ஸமுச்சயத்தில். 'விநியோகாவஸேயம்' விநியோகமாவது அங்கத்வஜ்ஞாபநம். அதனுலென்னவென்றால் கூறுகிறார்—'விநியோகாச்ச' என்று. அதனுலுமென்னவென்றால் கூறுகிறார்—'ஸ ச தார்த்தீய:' என்று. மூன்றுவது அத்யாயத்தில் சொல்லப்பட்டது என்று அர்த்தம். இது நிதர்சநார்த்தமாக சொல்லப்பட்டது.

ப்ரம்மவிசாரமானது கர்மவிசாரத்தில் சொல்லப்பட்ட எல்லா ந்யாயங்களையும் அபேக்ஷித்திருப்பதால் இவைகளன்றே கர்மமீமாம்ஸாத்யாயங்களின் ப்ரமேயங்கள்.

முதலத்யாயத்தில்—ப்ரமாணலக்ஷணம் சொல்லப்பட்டது.

இரண்டாவது அத்யாயத்தில்—சாஸ்திரபேதம், கர்மபேதம், . பேதத்திற்கு ஹேதுக்களும் சப்தாந்தராப்யாஸ ஸங்க்யாகுண ப்ரக்ரியாநாமதேயங்கள்.

மூன்றுவதில்—அங்கநிரூபணம். ச்ருதி, லிங்க, வாக்ய, ப்ரகாண, ஸ்தாந, ஸமாக்யாநங்கள் அங்கத்வஜ்ஞாபகப்ரமாணங்கள்.

நான்காவதில்—க்ரத்வர்த்தபுருஷார்த்தங்களுடைய பேதநிரூபணத்தால் புருஷார்த்தங்களால் க்ரத்வர்த்தங்களுக்கு யுக்தியானது நிரூபிக்கப்பட்டது.

ஐந்தாவதில்—க்ரமம், ச்ருத்யர்த்த பாட ப்ரவ்ருத்தி முக்ய காண்டங்கள், கர்மப்ரமாணங்கள்.

ஆறுவதில்—அதிகாரி நிரூபணம்.

ஏழாவதில்—ஸாமாந்யாதிதேசம் நிரூபிக்கப்பட்டது.

எட்டாவதில்—விசேஷாதிதேசம்.

ஒன்பதாவதில்—ஊஹம்.

பத்தாவதில்—பாதம். பதினொன்று, பன்னிரண்டுகளில்—தந்த்ரப்ரஸங்கங்கள் இவ்வாறே சொல்லப்பட்டிருக்கிறது.—

'தர்மநீமாநபேதாங்க ப்ரயுக்தி க்ரமகர்த்ருபி: ஸாதிதேச விசேஷோஹ பாத தந்த்ர ப்ரஸக்திபி:' என்று. இந்த ந்யாயங்களின் அபேக்ஷையும், ஸங்கர்ஷ காண்டாபேக்ஷையும் ப்ரம்மவிசாரத்தில ஆங்காங்கு காணத்தக்கது. ஆகையால், 'ஸ ச தார்தீய:' என்பது ப்ரதர்சநார்த்தம் சொல்லப்பட்டது. பிறகு கர்மவிசாராபேக்ஷையில் உபயுக்தியானது கூறப்படுகிறது. 'உதகீதாதி' என்று வேறு ஒன்றோடு ப்ரஸங்கத்தால் வரும் ஸங்கதி கூறப்பட்டது.

இந்த இடத்திலோவென்றால் ஸாக்ஷாத் ஸங்கதி .உபபாதிக்கப்படுகிறது. 'கர்ம ஸம்ருத்யர்த்தாநபி':—என்று 'கர்மஸம்ருத்யர்த்தத்வே தத்ப்ரயோஜநம் தந்நிவசநாத்' என்கிற

வாக்யகாரவசநம் ஸ்மரிப்பிக்கப்பட்டது. 'ப்ரம்மத்ருஷ்டிரூபாணி' என்று ப்ரம்மமல்லாத வஸ்துவினிடத்தில் ப்ரம்மத்வேந த்ருஷ்டி தான் ப்ரம்மதிருஷ்டி. ப்ரம்மதிருஷ்டிரூபமாக இருப்பதால் ப்ரம்மஜ்ஞாந ஸாபேக்ஷங்களென்று அர்த்தம். 'இதி' என்பது ஹேதுவில் 'இஹைவ சிந்தநீயாநி' கர்மவிசாரத்தில கூடாது. 'தாந்யபிகர்மாணி' உத்கீதம் முதலியவற்றின் உபாஸநங்கள் எவைகளின் ஸம்ருதியை உத்தேசிக்கின்றனவோ அவைகளுமென்று அர்த்தம். 'அநபிஸம்ஹித பலாநி' அநபிஸம்ஹிதபலமாக இருப்பதால ப்ரம்மவித்யைககு உத்பாதகங்கள் என்று அர்த்தம.

'இதி' சப்தம் ஹேதுவில். 'ததஸாத்குண்யாபாதநாநி' ஸாத்குண்யமாவது ப்ரபல ப்ரதிபந்தகமிருககும்போதே சீக்ரமாக பலத்தைக்கொடுக்கும் தன்மை, அதை உண்டு பண்ணுகின்றன. ப்ரமமவித்யையை விரைவாக ஸம்பாதிககின்றனவென்று பொருள். 'ஏதாநி' உத்கீதாத்யுபாஸநங்கள். ஆதலால், 'இங்கேயே மிகவும பொருத்தமுள்ளவைகள். ப்ரஸங்காத் ஸங்கதியாவது முகயவிஷயத்திற்கு உபயோகியாக இல்லாமையால் ஒற்றுமை முதலியதால் புத்தியிலூன்றியிருக்கும் தன்மை ப்ராஸங்கிகஸங்கதி. இரண்டிலொன்றின் அபேக்ஷையினாலாவது, இரண்டின் அபேக்ஷையினாலாவது உண்டாகிற சங்கதி ஸாக்ஷாத ஸங்கதி. இங்கேயோவென்றால் இரண்டும் அபேக்ஷிதங்களென்று ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கிறது. 'ப்ரம்மத்ருஷ்டிரூபாணி' என்று உத்கீதாத்யுபாஸநங்களுக்கு ப்ரம்மஜ்ஞாநாபேக்ஷை சொல்லப்பட்டது. 'ப்ரம்மவிதயோத்பாதகாநி' என்று ப்ரம்மஜ்ஞாநத்துககு உத்கீதம் முதலியவற்றின் உபாஸநாபேக்ஷை சொல்லப்பட்டது. இந்த அபிப்ராயத்தால் 'ஸூத்ராம்' என்று கூறப்பட்டது 'இஹைவ'—என்று உபாயாபேக்ஷை இங்கேயே, இருப்பதால் இந்த இடத்திலேயே மிகவும் பொருத்தமுள்ள ஸங்கதி கர்மவிசாரத்திலில்லை என்று அர்த்தம்.

எவ்வாறு உத்கீதாதி விசாரத்திற்கு ப்ரம்மவிசாரத்திலேயே மிகவும் பொருத்தமுள்ள ஸங்கதி? கர்மவிசாரத்திலும ஸூதராம் ஸங்கதி இருக்கிறது. உபாயாபேக்ஷையினால் ஸங்கதியன்றோ ஸூதராம் ஸங்கதி. உத்கீதாதி புத்திகள கர்மத்திற்கு அங்கங்களாயும் ஆச்ரயித்திருப்பதால் அந்த விசாரத்திற்கு கர்மாபேக்ஷை இருககிறது. கர்மங்களுக்கும் ஸ்வ ஸம்ருத்யர்த்தமாக உத்கீதாத்யுபாஸநாபேக்ஷை இருக்கிறதென்று உபாயாபேக்ஷை இருப்பதால்—எனில், உத்தரம் சொல்லப்படுகிறது.

கர்ம ஸம்ருத்யர்த்தங்களான உத்கீதாத்யுபாஸநங்களின் அபேக்ஷை கேவலகர்மங்களுக்கும், வித்யாங்கங்களான கர்மங்களுக்கும் துல்யை, ஆதலால், கர்மஸம்ருத்யர்த்தத்வ ஹேது பொதுவானது,கர்மாங்காச்ரயத்வமானது பூர்வபாக விசாரஸங்கதிக்கு அஸாதாரண ஹேது, ப்ரம்மஜிஜ்ஞாஸாபேக்ஷத்வம் உத்தரபாகவிசாரஸங்கதிககு அஸாதாரணஹேது. இவ்வண்ணம் ஸாதாரணாஸாதாரணங்களான இரண்டு ஹேதுக்களுடன் கூடியிருத்தல் ஸமானமாக இருந்தபோதிலும்,ப்ரும்மத்ருஷ்டி ரூபோத்கீதாத்யுபாஸனங்கள் ப்ரம்மஜ்ஞான ஸாபேக்ஷமாக இருப்பதால் அதில்லாவிடில் அவைகளைச்சிந்திப்பது பூர்வபாக விசாரத்தில் அசக்யம். கர்ம விசாரத்திற்குமுன் ப்ரம்மசவிசாரம் உபபன்னமாகிறதில்லையன்றோ,—அவ்விரண்டும் முன்சொல்லப்பட்ட ஸங்கதிவிசேஷங்களோடு கூடியிருப்பதால். உத்தரபாகத்திலோவென்றால் ப்ரம்மஜ்ஞானமாகிறது சுலபமாதலால் கர்மவிசாரஞ்செய்திருப்பவனுககு † உத்கீதாத்யுபாஸனசிந்தனம்செய்வது சகயமாகும். அதினாலேயே சக்யமாயிருப்பதால் உத

† உத்கீதம்—ஸாமாவின் ஓர்பாகம். பாகத்தை பக்தி என்று சொல்வார்கள். ஐந்து விதமான பக்திகளில் உத்கீதமென்கிற இரண்டாவது பக்தியானது ப்ரணவபூர்வக கானம் செய்யப்படுகிறது.

கீதாத்யுபாஸனங்கள் உபநிஷத்பாகத்தில் விதிக்கப்பட்டன. அதினலேயே ப்ரம்மமீமாம்ஸை யில் நிரூபிக்கப்பட்டிருப்பதும். இவ்வண்ணமாக வேதாந்தபாகவிஹிதத்வமும், ப்ரஹ்ம மீமாம்ஸாவிசாரத்வமும, சக்யத்வரூபமுமான மூன்று வைஷம்யங்களால் விசேஷிக்கப்பட் டுள்ள உபயாபேக்ஷையானது உத்தரபாகத்திலேயே இருப்பதால் அதை ஹேதுவாகக் கொண்டது ஸூத்ராம் ஸங்கதியானது அந்த இடத்திலேயே என்கிற அபிப்ராயத்தால் “ஸூத்ராமிஹைவ ஸங்கதாநி” என்று உரைக்கப்பட்டது. அப்ரதானமான அர்த்தத்துக் கும் ஸாக்ஷாத் ஸங்கதி இருப்பதால் அதற்கும் கர்மவிசாரம் அவச்யாபேக்ஷிதமேயென்பது யாதொன்றுண்டோ இதுவும் அப்யுச்சயமான ஹேது ப்ரதானஹேது தவாமல் அபேக்ஷிக் கப்பட்டிருத்தல் என்கிறது முன்சொல்லப்பட்டது.

அதனல் ப்ருக்ருதாநந்தர்யத்திற்கு என்ன ப்ரயோஜனமென்றால் சொல்லுகிறா ‘தேஷாஞ்ச’ என்று. ‘தேஷாம்’ உத்கீதாத்யுபாஸநங்களுக்கு. ‘ஸர்வஸம்மதா’ அவைகளு க்கு ஸாக்ஷாத் ஸங்கதத்வம் சொல்லப்பட்டாலன்றோ நிந்தை. உத்கீதாத்யுபாஸநம் சிந்திக் கத்தக்கதாக இருக்கும் தருணத்தில் அதற்கு கர்மஜ்ஞாநாபேக்ஷை எல்லோராலும் நிந்திக் கப்படாதது. வேதாந்தாத்யயனம் செய்தவனுக்கு கர்மஜ்ஞாநாபேக்ஷை இல்லையென்று எது சொல்லப்பட்டதோ அது யுக்தமன்று,—வேதாந்தங்களிலும் உபாயபரமும் முக்திபரமுமா யுள்ள வாக்யமாத்ரத்தை அத்யயநம் செய்த புருஷனுக்கு, ப்ரஹ்மவிசாரத்திலும் மூன்று வது, நான்காவது அத்யாயங்களில் மாத்ரம் ச்ரவணம் ப்ரஸங்கிப்பதால். மூன்றுவது, நான்காவது அத்யாயங்கள் இரண்டுக்கும் முதல் இரண்டு அத்யாயத்திலும் சொல்லப்பட்ட ந்யாயாபேக்ஷையிருக்கிறதென்றால்—அங்ஙனமாகில், ப்ரம்மவிசாரம் முழுவதும் கர்மவிசார ந்யாயஸாபேக்ஷமாதலால் அதற்கே பூர்வவ்ருத்தத்வம் ஜந்மாந்தரஸூக்ருதவிசேஷத்தால் ஏதோ ஒருவனுக்கு ப்ரம்மவிசாரமாத்ராபேக்ஷை என்று சொன்னல், அவனுக்கு ஸூக்ருத விசேஷத்தால் மூன்றுவது, நான்காவது அத்யாயமாத்ராபேக்ஷை ஏன் உண்டாகக்கூடாது. அன்றிக்கே புண்யாதிக்யத்தால் ஸமஸ்தப்ரம்மவிசாரநிரபேக்ஷை ஏன் உண்டாகக்கூடாது? மேலும், வேதாந்தங்களில் உபாயபலபரவாக்ய மாத்ராத்யயநம் அசாஸ்த்ரீயமென்று உன்னு லும் சொல்லத்தக்கது. அது வேதாந்தமாத்ராத்யயநத்திற்கும் துல்யம்,—ஸம்பூர்ணமான து விதிக்கப்பட்டிருப்பதால். ஆகையால், விதியை அதிலங்கநம் செய்பவர்களுக்கு எது அபேக்ஷிதமோ அதுவே பூர்வருத்தமென்பது அஸங்கதம். முழுமையும் அத்யயநம் செய்தவ னுக்கும் ஸூக்ருதவசத்தால் ஏதோ ஒரு சமயத்தில் ச்ரவணாபேக்ஷை ஸம்பவிக்கலாமென் றால் முன்பே உத்தரம் சொல்லப்பட்டிருக்கிறது.

‘விரோதாதப்ரமாணத்வாத்” இது முதலிய க்ரந்தத்தால் ஸங்க்ரஹிக்கப்பட்டிருக்கிற தூஷணங்கள் ‘அத்ரோச்யதே’ இது முதலான ஸித்தாந்த பாஷ்யத்தினல் பரிஹரிக்கப் பட்டன. அந்த பரிஹார ப்ரகாரங்களாவன—கர்மங்கள் அநித்யபலத்தைக்கொடுப்பதால் விரோதமென்பது அநபிஸம்ஹிதபலத்துடன் கூடி இருப்பதால் பரிஹரிக்கப்பட் டது. பேதவாஸனையை உண்டுபண்ணுவதால் ஐக்யஜ்ஞான விரோதமும் ‘ப்ருதகாத் மாநம்’ என்று ப்ருதக்த்வ ஜ்ஞானத்திற்கு மோக்ஷோபாயத்வ ச்ருதியினல் பரிஹரிக்கப்பட் டது. இந்த விரோதம் இனி சொல்லப்படும் வஸ்து ஸாமர்த்யத்தில் அந்தர்பூதமானது. மோக்ஷத்திற்கு ஸகலபேத தர்சந நிவ்ருத்திரூபதையானது ப்ரபஞ்ச மித்யாத்வோபாதாந ஸாபேக்ஷமாக இருப்பதால், ‘ஐக்யஜ்ஞாநத்திற்கு உபாயத்வமிருந்தபோதிலும் கர்மங்களுக்கு அத்ருஷ்ட த்வாரத்தினல் உபயோகமிருப்பதால் விரோதமில்லை. அப்ரமாணத்வமானது ‘க்ரியாவாநேஷ ப்ரஹ்மவிதாம் வரிஷ்ட:’—இது முதலிய ஸம்ப்ரதாயமில்லாத விநியோ ஜகப்ரமாணங்களால் பரிஹரிக்கப்பட்டது. விவிதிஷார்த்தமான சித்தசுத்தியின் உபயோ

கமோ வேதனோத்பத்திக்கு உபயுக்தமான மனத்தெளிவுக்கு காரணத்வத்தை உபபாதநம் செய்ததினால் விவிதிஷார்தத்வமிருந்தபோதிலும் அதற்கு தினந்தோறும் உத்பத்யபேக்ஷையின் உபபாதனத்தாலும் மறுமொழி கூறப்பட்டது. ஞானமாத்ரத்திற்கு ஹேதுத்வச்ரவணமும் ஸாதநத்வத்தை ஒப்புக்கொள்ளாமையால் உத்தரமளிக்கப்பட்டது. ஸாமர்த்யமாவது மித்யாபூதமான சப்தத்திற்கு ஜ்ஞானத்தினாலேயே நிவர்த்திக்கத்தக்க தன்மையாகிற வஸ்துஸாமர்த்யம். அதற்கு ப்ரபஞ்சத்தின் மித்யாத்வத்தை தூஷிப்பதால் மறுமொழி உரைக்கப்பட்டதாக ஆகப்போகிறது. சமாதிகள் அங்கங்களென்று சொல்லுகிற ச்ருதியில் உண்டான விரோதமும் ப்ரவ்ருத்திரூபமான யஜ்ஞாதிகளுக்கும், நிவ்ருத்திரூபமான சமாதிகளுக்கும் விஷயபேதத்தால் விரோதமில்லாதது பற்றி பரிஹரிக்கப்பட்டது. சமாதிகளோவென்றால் அவிஹிதமாயும், அப்ரதிஷித்தமாயும், நிஷித்தகாம்யமாயுமுள்ள விஷயங்களென்று கூறப்பட்டது. வாக்யார்த்தஜ்ஞானத்திற்கே மோக்ஷோபாயத்வம் ப்ரத்யக்ஷவிரோத, சாஸ்த்ரவிரோதங்களால் நிரஸிக்கப்பட்டது. அதில் நிவ்ருத்திக்கப்படுகிற வாஸனைக்கு நிவாத்தகமும் உத்பத்திப்ரதிபந்தகத்வமுமில்லாமையாலும் ச்ரவணம்முதலியவற்றிற்கு பேதவாஸனையைப் போக்கடிக்கும் விஷயத்தில் அபேக்ஷை இல்லாமையாலும், அதின் வையர்த்யபரிஹாரம் அநுபபன்னமாதலாலும ச்ரவணம் முதலியதால் க்ரமமாக எழுந்து ப்ரகாசிக்கின்ற வாக்யஜந்யஞானம் விமோசகம் என்பதும் நிரஸிக்கப்பட்டது.

லகுஸித்தாந்தம்

ஸம்பூர்ணம்.

THE ACADEMY OF SANSKRIT RESEARCH
MELKOTE 571 431
(KARNATAKA STATE)

ஸ்ரீ: ॥

லகுபூர்வபக்ஷ: ॥

யதுக்தம்—ஸகலவிசேஷ ப்ரத்யநீக சிந்மாத்ரம் ப்ரஹ்மைவ பரமார்த்த:, ததிரேகி நாநாவித ஜ்ஞாத்ருஜ்ஞேய தத்க்ருத ஜ்ஞாநபேதாதி ஸர்வம் தஸ்மிந்நேவ பரிகல்பிதம் மித்யாபூதம் ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீதேகமேவாத்விதீயம் (சா-௬-௨-௧) அத பரா யயா ததக்ஷரமதிகம்யதே யத்ததத்ரேச்யமக்ராஹ்யமகோத்ரமவர்ணமசக்ஷு:ச்ரோத்ரம் ததபாணிபாதம் நித்யம் விபும் ஸர்வகதம் ஸுஸூக்ஷ்மம் ததவ்யயம் யத்பூதயோநிம் பரிபச்யந்தி தீரா: (மு-௧-௧-௬) ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம (தை-௨-௧-௧) நிஷ்கலம் நிஷ்க்ரியம் சாந்தம் நிரவத்யம் நிரஞ்ஜநம் (ச்வே-௬-௧௯) யஸ்யாமதம் தஸ்ய மதம் மதம் யஸ்ய ந வேத ஸ: । அவிஜ்ஞாதம் விஜாநதாம் விஜ்ஞாதமவிஜாநதாம் (கே-௨-௩) ந த்ருஷ்டேர்த்ரஷ்டாரம் பச்யே: - ந மதேர்மந்தாரம் மந்வீதா: (ப்ரு-௫-௪-௨) ஆநந்தோ ப்ரஹ்ம (தை-ப்ரு-௬) இதம் ஸர்வம் யதயமாத்மா (ப்ரு-௪-௪-௬) நேஹ நாநாஸ்தி கிஞ்சந । ம்ருத்யோ: ஸ ம்ருத்யுமாப்நோதி ய இஹ நாநேவ பச்யதி (ப்ரு-௬-௪-௧௯) யத்ர ஹி த்வைதமிவ பவதி ததிதர இதரம் பச்யதி யத்ர த்வஸ்ய ஸர்வமாத்மைவாபூத் தத்கேந கம் பச்யேத் தத்கேந கம் விஜாநீயாத் (ப்ரு-௪-௪-௧௪) வாசாரம்பணம் விகாரோ நாமதேயம் ம்ருத்திகேத்யேவ ஸத்யம் (சா-௬-௧-௪) யதா ஹ்யேவைஷ ஏதஸ்மிந்நுதரமந்தரம் குருதே அத தஸ்ய பயம் பவதி (தை-௨-௭-௨) ந ஸ்தாநதோऽபி பரஸ்யோபயலிங்கம் ஸர்வத்ர ஹி (சா-ஸூ-௩-௨-௧௧) மாயாமாத்ரம் து கார்த்ஸ்ந்யேநாநபிவ்யக்தஸ்வரூபத்வாத் (சா-ஸூ-௩-௨-௩)

ஸ்ரீபாஷ்யம்:—

(ஜ்ஞாத்ரு ஜ்ஞேயம் முதலிய) எல்லா விசேஷங்களுக்கும் ப்ரத்யநீகமாய் சிந்மாத்ரமாக விருக்கிற ப்ரஹ்மமே ஸத்யம். அதைத்தவிர்ந்து அந்த பரப்ரஹ்மத்தினிடத்திலேயே ஏறிடப்பட்டிருக்கிற நாநாவிதமான ஜ்ஞாத்ரு ஜ்ஞேயங்கள், அவைகளாலுண்டான ஜ்ஞாநபேதம் முதலியவனைத்தும் மித்யாபூதம். "ஸோமபானம் பண்ணததகுதியுள்ளவனே! இது (ஸ்ருஷ்டிக்கு) முந்தினகாலத்தில் (ப்ரளயகாலத்தில்) இரண்டாவதின்றிக்கே ஒன்றுமாத்திரம் ஸத்ரூபமாகவேயிருந்தது"; "அதற்குமேல் பரவித்யை-எந்த பரவித்யையினால் அழிவற்றதான அந்தப்ரஹ்மம் அறியப்படுகிறதோ, எது கண்ணால் காணவும் மற்ற இந்திரியங்களால் க்ரஹிக்கவும் ஆகாததோ; பெயரும் நிறமுமில்லாததோ; கண், காது, கை கால்களில்லாததோ; நித்யமாயும், விபுவாயும், எங்

கும் நிலை பெற்றதாயும், மிக்கஸூக்ஷ்மமாயும், அறிவற்றதாயும் இருக்கிறதோ; பூதங்களுக்குக்காரணமான அந்தப்ரஹ்மத்தை ஜ்ஞானிகள் ஸாக்ஷாத்கரிக்கிறார்கள்"; "ப்ரஹ்மமானது ஸத்யமாயும், ஜ்ஞானமாயும் அநந்தமாயும் இருக்கிறது"; "அது, அவயவமில்லாததாயும், செய்கையற்றதாயும், சாந்தமாயும், கர்மஸம்பந்தமும், அதன் பயனும் அற்றதாயும் இருக்கிறது"; "(ச்ரவணமநநாதிகளால்) அறியமுடியாததென்று இந்தப்ரஹ்மத்தை எவன் எண்ணுகிறானோ அவனால்தான் இது அறியப்படுகிறது எவன் இது, (ச்ரவணாதிகளால்) அறியத்தக்கதென்று எண்ணுகிறானோ அவனிதையறியான்"; "அறிந்துவிட்டோமென்றுஎண்ணுகிறவர்களுக்கு அந்தப்ரஹ்மம் அறியப்படாததாகவும், அறியத்திறமை இல்லையென்றெண்ணுகிறவர்களுக்கு அறியப்பட்டதாகவும் ஆகிறது"; த்ருஷ்டியைத்தவிர வேறான த்ரஷ்டா இருக்கிறானென்றெண்ணாதே. மதியைத்தவிர வேறான மந்தாவிருக்கிறானென்றெண்ணாதே"; "ஆனந்தரூபம் ப்ரஹ்மம்"; "இவையனைத்தும் இந்த ஆத்மாவே"; "இவ்வுலகில் ஆத்மாவைத்தவிர வேறு நாநாவிதமாயுள்ளதொன்றும் கிடையாது"; "இவ்வுலகில் எவன் ப்ரஹ்மத்தைத்தவிர வேறுவஸ்துக்களிருப்பதுபோலப் பார்க்கிறானோ அவன் அவித்யையினின்று (அதிக) அவித்யையையடைகிறான்"; எப்பொழுது இரண்டாக இருத்தல் ஸம்பவிக்கிறதோ அப்பொழுது மற்றவன் மற்றொருவனைப்பார்க்கிறான். எப்பொழுது எல்லாமாத்மாவாகவேயாய்விட்டதோ அப்பொழுது, எவன் எதனால் எவனைப்பார்ப்பான், எவன் எதனால் யாரை அறிவான்"; "குடம் முதலிய வஸ்துக்களின் அவயவஸம்ஸ்தானமும் நாமதேயமும் வ்யாவஹாரிகம், ம்ருத்திகையே உண்மை"; "எப்பொழுது இவன் இந்த ப்ரஹ்மத்தினிடத்தில் கொஞ்சம் பேதத்தைப் பாராட்டுகிறானோ அவனுக்கு பயம் உண்டாகிறது"; "எல்லாவிடங்களிலிருந்தபோதிலும் அந்த பரப்ரஹ்மத்திற்கு ஆச்ரயஸம்பந்தத்தாலுண்டாகக்கூடிய தோஷமணுவுமில்லை, எல்லாவிடத்திலும் ப்ரஹ்மத்திற்கு ஸாகாரத்வம் ஸாகாரநிராகாரத்வமென்கிற இரண்டு அஸாதாரண சிஹ்நங்கள் இருக்கின்றனவன்றோ"; (எவ்விதத்தாலும் நிரூபிக்கமுடியாததால்) கனவில்கண்ட வஸ்துஸமூஹம் முழுவதும் மாயைமாத்ரமே.

ஶ்ருதப்ரகாசிகை:—

\$ ஸாதன சதுஷ்டயம் பூர்வவ்ருத்தமென்கிற விஷயத்தில் வஸ்துஸாமர்த்தியமன்றோ ஹேதுவாக உரைக்கப்பட்டது. அது முந்தி "ப்ரஹ்மஸ்வரூபா†ச்சாதிகா" என்றிது முதலியவற்றால் ப்ரதிஜ்ஞை செய்யப்பட்டது. அதை உபபாதித்தல் தூஷித்தல் இவை இரண்டும் வெகுக்ரந்த ஸாத்யமாதலால் அவ்விரண்டும் முன்பு செய்யப்பட

\$ ஸாதநசதுஷ்டயமாவது:—நித்யாநித்யவஸ்துவிவேகம், இம்மையிலும் மறுமையிலுமுள்ள பலன்களை அநுபவிப்பதில் ஆசையின்மை, மனதையும் வெளி இந்திரியங்களையுமடக்குதல் முதலிய ஸாதனங்களின் ஸம்ருத்தி, மோக்ஷத்தை அடைவதில் விருப்பம்.

† ஆச்சாதிகா—மறைக்குமது

வில்லை. இதற்குமேல் அவற்றை உபபாதிக்கத்தொடங்குகிறார். முன்பு உபாயோபதேச பரவாக்யங்களின் பர்யாலோசனையினால் வஸ்துஸாமர்த்யத்தைத்தவிர மற்ற ஹேதுக்கள் உபந்யஸிக்கப்பட்டு நிரஸிக்கவும் பட்டன. விதிபபதற்கு விரும்பப்பட்ட ஜ்ஞானமென்றல்லவோ அங்கு சொல்லப்பட்டது-வஸ்துஸாமர்த்யமோ வென்றால், ஸித்தபரவாக்கியங்களால் ஸித்திப்பது. 'வஸ்துஸ்வரூபோபதேசபரை:' என்றல்லவோ சொல்லப்படபோகிறது. ஆகவின் ஸ்வரூபபரவாக்ய $பர்யாலோசநாமுகத்தால் அதை உபபாதிக்கத்தொடங்குகிறார்-யதப்யாஹு: என்று. 'அபி' சப்தத்தினால் உபபாதிக்கப்படும் அர்த்தத்திற்கு ப்ராதாந்யம் ஸூசிப்பிக்கப்படுகிறது. ''ஆஹு:'' என்பதனால் க்ரந்தகாரர்கள் அநேகர்கள் என்று ஏற்படுகிறது. இதனால் இக்கிரந்தம் அவ்வவபிரபந்தங்களில் சொல்லப்பட்டுள்ள ஸகலார்த்தங்களையும் தன்னுட்கொண்டிருக்கிறதென்பது காண்பிக்கப்பட்டது. ஸர்வே வேதாந்தா ஆரப்யந்தே இதி யதப்யாஹு; ததநாதரணீயம், என்று மேலே அந்வயம். முதலில் ப்ரஹ்மமொன்றே ஸத்யம் என்று ப்ரதிஜ்ஞை செய்கிறார்—அசேஷ என்று. அசேஷவிசேஷங்களாவன—சொல்லப்படப்போகிற *ஜ்ஞாத்ரு $ஜ்ஞேயம் முதலியவைகள். அல்லது, ‡விஜாதீய §ஸஜாதீய ♆ஸ்வகதபேதஙகள். ஸ்வகதங்களுக்குள் அந்வயிப்பனவாகவும் ¶வ்யாவ்ருத்தி ரூபங்களாகவுமிருக்கிற விசேஷங்கள் அசேஷசப்தத்தால் விவக்ஷிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுக்கு ப்ரத்யநீகம்—ஸ்வஜ்ஞானத்தால் நிவர்த்தகம். ரஜதத்திற்கு சுக்திபோல வென்று பொருள். நிர்விசேஷத்வம் கூறப்படுமேயாகில் சூந்யதையுண்டாக வேண்டியதாகுமெனில் கூறுகிறார்—சிந்மாத்ரம் என்று. சித்சப்தத்தால் துச்சத்வத்திற்கு வ்யாவ்ருத்தி ஏற்படுகிறது. ஸ்வயம் ப்ரகாசத்வமல்லவோ சித்த்வம. 'மாத்ரச்' $ ப்ரத்யயத்தால் ஜ்ஞேயத்வத்திற்கு வ்யாவ்ருத்தியுண்டாகிறது. அன்றிக்கே ப்ரத்யநீகஸ்வரூப தர்மமும் கூட மாத்ரச்சினால் வ்யாவர்திக்கப்படுகிறது. அன்றிக்கே மாத்ரச்சினால் உள்ளபடி ஸமஸ்த விசேஷங்களினின்மை சொல்ல விரும்பப்படுகிறது. 'ப்ரஹ்மைவ' என்கிற ஏவகாரத்தால் ஸகுண ப்ரஹ்மம் வ்யாவர்த்திக்கப்பட்டது. பரமார்த்தமாவது தத்வத்தை தெரிவிக்கிற ப்ரமாணத்திற்கு விஷயம். ஸகுணவாக்யங்களுக்கு தத்வத்தில் நோக்கில்லை. பல விசேஷத்தை உத்தேசித்து செய்யப்படுமுபாஸநத்தில் அவைகள் அந்யபரங்களாக இருப்பதாலென்று கருத்து. ப்ரஹ்மத்துக்கு மட்டும் ஸத்யத்வமெப்படி? மற்றதும் அறியப்படுகிறதன்றோ வென்று சங்கைவரின், ப்ரஹ்மத்துக்கே பரமார்த்தத்வஸித்தியின் பொருட்டும் அதைத்தவிர்ந்த மற்றவைகளுக்கு அந்த ப்ரஹ்மஜ்ஞானத்தால் நிவர்த்யத்வம் ஸித்திப்பதற்காகவும் எல்லாவற்றுக்கும் மித்யாத்வத்தை ப்ரதிஜ்ஞை செய்கிறார்—தத் என்று. †''அயாத ஆதேசோ நேதிநேதி'' இது முதலிய சுருதியில் ''பரக்நதைதாவத்த்வம்'' என்கிற ஸூத்ர விஷயத்தில் ஸமஸ்தமும் மித்யையானதால் ப்ரஹ்மத்

$ பர்யாலோசனை—பராமசித்தல்

* ஜ்ஞாத்ரு—ஞானத்துக்கு ஆதாரமாயிருப்பவன், அதாவது அறிகிறவன்.

$ ஜ்ஞேயம்—அறியப்படுவது.

‡ விஜாதீயம்—வேற்றுமைப்பாடுள்ளது.

§ ஸஜாதீயம—ஒற்றுமையுள்ளது.

♆ஸ்வகத—தன்னை அடைந்திருக்கிறது.

¶வ்யாவ்ருத்தி:—வேறுபாடு.

$ ப்ரத்யயம்:—விகுதி.

† அதாத ஆதேசோ நேதி நேதி—இதுவன்று, இதுவன்று என்று புலப்படும் வஸ்துகள் அனைத்தையுமறுத்து ப்ரஹ்மத்தை உபலக்ஷித்தல்.

திற்கும் $மித்யாத்வமானது அநேகயுக்திகளால் பூர்வபக்ஷமாக நிரஸிக்கப்பட்டதென்று அவ்வபிப்ராயத்தால் கூறப்பட்டது—த்ருஷ்டிரேதி என்று. ''நேஹ நாநாஸ்தி'' இது முதலிய நிஷேதவாக்யத்திற்கு ப்ரஹ்மத்தைத்தவிர மற்றதிலும் நிஷேதிக்கத்தக்க வஸ்துக்களின் நாநாத்வம் ஸித்திக்கிறதென்பது ஸாதிக்கப்பட்டது—நாநாவித என்று முன்பு அசேஷ விசேஷசப்தத்தால் சொல்லப்பட்ட விசேஷத்தை விவரணம் செய்வதற்காகவும், ''நேஹநாநாஸ்தி'' இது முதலிய வாக்யங்களிலுள்ள நாநாசப்த விவரணத்திற்காகவும், நாநாவிதசப்த வாச்ய பேதம் விவரிக்கப்பட்டது ஜ்ஞாத்ருஜ்ஞேய என்று. ''தத்க்ருதஜ்ஞாநபேத — ஜ்ஞாத்ருஜ்ஞேயங்களை விஷயீகரிக்கின்ற ¶வ்ருத்திஜ்ஞாநபேதம்'' இதனால் வ்ருத்தியில் ஸ்புரிக்கின்ற சைதந்யபேதத்திற்கு ஸ்வரூபப்ரயுக்தத்வம் விலக்கப்பட்டது. பேதசப்தத்தினால் ஒவ்வொன்றிலும் அவாந்தரபேதங்கள் விவக்ஷிக்கப்பட்டன. 'ஆதி' சப்தத்தினால் நிரஸிக்கத்தக்கதுக்கரூபமான ஜந்மஜராமரணங்கள் சொல்லப்படுகின்றன; ஸர்வம் என்று சொல்லப்போகிற ச்ருதியிலிருக்கிற ஸர்வசப்தத்திற்கு இது அர்த்தமென்று கருத்து. ''தஸ்மிந்'' என்பதனால் நிரதிஷ்டாநப்ரமபக்ஷம் விலக்கப்பட்டது. ஏவகாரத்தால் $அதிஷ்டாநபஹுத்வத்திற்கு நிஷேதம் ஸித்தித்தது. அப்படியிருந்தாலன்றோ ப்ரபஞ்சத்திற்கு அதத்ப்ரஹ்மஜ்ஞாநத்தால் நிவர்த்யத்வம் ஸித்திக்கும். அன்றிக்கே ''தஸ்மிந்'' என்கிற ஏகவசனத்தினால அதிஷ்டாநத்திற்கு ஏகத்வம் ஸித்திக்கிறது. நாநாவித அத்யாஸங்கள் அநேக அதிஷ்டாநங்கள் உள்ளவைகளாகக்காணப்படுகின்றன; அங்ஙனமிருக்க நாநா அத்யாஸங்களுக்கு ஒரே அதிஷ்டாநமெப்படி ஸம்பவிக்குமெனகிறவிரோதத்தையும், ஸ்வயம் ப்ரகாசவஸ்துவுக்கு *அதிஷ்டாநத்வ விரோதத்தையும், ஏவகாரம் ஸ்புரிக்கும்படி செய்கிறது. மித்யாபூதம்—பொய்யானது. சொல்லப்போகிற மித்யாத்வ லக்ஷணமுள்ளதென்று அர்த்தம் ப்ரஹ்மமே ஸத்யம் மற்றது மித்யை என்பதில் ப்ரமாணம் யாது எனில் கூறுகிறார்-ஸதேவ என்று, ஸதேவ என்பதனால்விஜாதீயபேதம் விலக்கப்படுகிறது ஏகமேவ என்பதனால் ஸஜாதீயபேதம் விலக்கப்படுகிறது. அத்விதீயமென்பதனால் தன்னை அடைந்துள்ள பாவாபாவரூபமானபேதம் விலக்கப்படுகிறது. ஆறுவிதமான தாத்பர்ய அடையாளங்களோடுகூடினஸத்வித்யையிலிருப்பதால் இந்த வாக்யம் முதலில் எடுக்கப்பட்டது. பிறகு ஏவகாரத்தால் பலித்த நிஷேதத்தை ஸ்பஷ்டமாகச்சொல்லுகிற பரவித்யா வாக்யத்தை எடுக்கிறார்—அத என்று இதுவும் காரணத்வ விஷயத்தில சங்கிக்கப்பட்டிருக்கிற தோஷத்தின் நிராஸத்தை தொடக்கத்திற்கொண்டிருக்கிற காரணவாக்யம்; ''பூதயோநிம்'' என்று சொல்லிவிட்டு பிறகு அதையே விஸ்தரித்திருப்பதால். அத்ரேஸ்யம், அக்ராஹ்யம்—ப்ரத்யக்ஷத்துக்கு அகோசரம், அநுமாநத்திற்கு அகோசரம். அன்றிக்கே, கண்ணுக்கு எட்டாதது; மற்ற இந்திரியங்களுக்கும் அகப்படாதது. அகோத்ரம்—நாமதேயமில்லாதது. அவர்ணம்—கருப்பு முதலிய நிறமில்லாதது. அசக்ஷுஸ்ஸ்ரோத்ரமபாணிபாதம்—ஜ்ஞாநேந்திரியகர்மேந்திரியங்களில்லாதது. நித்யம் விபும்—காலதேசங்களால் அளவிடப்படாதது ஸர்வகதம்—ஜகத்திலுள்ள எல்லாவற்றிலும் அதிஷ்டாநமாக ஆச்ரயிக்கப்பட்டிருக்கிறது. வஸ்துபரிச்சேதமில்லாததென்று அர்த்தம். ஸுஸூக்ஷ்மம்—அத்ருச்யத்வமானது, §துச்சத்வம் அதிதூரத்வம் முதலியவற்

$ மித்யாத்வம்:—முற்பட தோற்றத்துக்கு விஷயமாக விருந்து யதார்த்தஸத்திதமான வஸ்து ஜ்ஞானத்தால் நிவ்ருத்திக்கப்படத்தக்கத் தன்மையுள்ளது.

¶ வ்ருத்திஜ்ஞானம்:—இந்திரியங்களின் வாயிலாக வெளியில் ப்ரஸரித்து பாஹ்ய விஷயங்களை அவகாஹிக்கும் ஜ்ஞானம்.

$ அதிஷ்டானம்:—ஆதாரம்.

* அதிஷ்டானத்வம்:—பிரமத்திற்கு ஆதாரமாயிருக்கை

§ துச்சத்வம்—வஸ்து ஸ்வரூபத்தின் இன்மை.

ரூலன்று, பின்னையோவெனில், மிக்க ஸூக்ஷ்மமாக இருப்பதனாலென்று அபிப்ராயம். வாக்யபேதத்தால் அநேக யத்தச்சப்தாந்வயத்திற்கு உபபத்திவருகிறது. பிறகு ஸோதக வாக்யத்தை எடுக்கிறார்—ஸ்தூபம் என்று. காரணவாக்யங்களோடும் மற்ற ஸோதகவாக்யங்களோடும் ஒரே பொருளாயிருப்பதாலும் ஸாமாநாதிகரண்யத்திற்கு வேறு விதத்தால் உபபத்தியில்லாமையாலும் இந்தவாக்யம் $ அந்ருத, ஜட, பரிச்சிந்ந வஸ்து வ்யாவ்ருத்தமான நிர்விஸேஷவஸ்துபரமென்று உரைக்கப்படப்போகிறது. நிஷ்களம்—களா:— என்பது அவயவங்கள், அவயவமில்லாததென்று பொருள். அதில் நிஷ்க்ரியத்வம் ஹேது. சாந்தம்–ஆறு ஊர்மிகளில்லாதது பசி தாஹம், சோகம் மோஹம், மூப்பு, மரணம் இவைகள் ஊர்மிகள் என்றுசொல்லப்படுகின்றன. நிரவத்யம், நிரஞ்ஜநம்—கர்மஸம்பந்தமும கர்ம்பலமும் இல்லாதது. இதனால், *ஸத்யஜ்ஞாநாதிவாக்யங்களுக்குள்ளடங்கியதான வ்யாவ்ருத்தியானது ஸ்பஷ்டமாக்கப்பட்டது. இதற்குமேல் சிந்மாத்ரசப்தத்தால் அபிப்ராயப்பட்ட ஜ்ஞேயத்வவ்யாவ்ருத்தியைக்கூறுகிறார்-யஸ்ய–என்று. அமதம அவிஜ்ஞாதம் என்பதனால்—ச்ரவண மநநாதிரூபமான ஜ்ஞானங்களுக்கு விஷயமல்லவென்பது கூறப்பட்டது. இதற்குமேல் ஜ்ஞாத்ருத்வநிஷேதத்தில் கருத்துள்ள வாக்யத்தைக் கூறுகிறா–நந்ருஷ்டே: என்று. இதிலும முற்கூறப்பட்ட ஜ்ஞானத்தினுடைய நிலைமையின் வேறுபாடு விவக்ஷிக்கப்பட்டது. இது புருஷார்த்தமெனபதற்காக சுகமின்மையினின்று வ்யாவ்ருத்தி உரைக்கப்படுகிறது—ஆநந்தோ ப்ரஹ்ம என்று ஆநந்த சப்தமானது ஸுகமின்மையினின்று வ்யாவ்ருத்தி மாத்திரத்தை ப்ரதிபாதிக்கிறது. அதனாலேயே 'ஆநந்தீ' என்று சொல்லவில்லை. இவ்வண்ணமாக ப்ரஹ்மத்திற்கு நிர்விசேஷ சிந்மாத்ரத்வத்தில் சுருதிவாக்யஸமூஹம் உபந்யஸிக்கப்பட்டது. பிறகு ப்ரஹமததைத்தவிர்ந்த மற்றது அனைத்தும் மித்யை என்பதில் ப்ரமாணம் எடுத்துக்காட்டப்படுகிறது. அதில் முதலில் மித்யாபூதமான ஜகத்தானது ப்ரஹ்மமாகிற அதிஷ்டானத்தில் அத்யஸ்தமென்பதைக் காட்டுகிறார்—"இதம்ஸர்வம் யதயமாத்மா"என்று ஸாமாநாதிகரண்யத்தால். அதிஷ்டானத்துடன் அத்யஸ்தவஸ்துவுக்கு ஸாமாநாதிகரண்யம் அதாவது (ஒற்றுமைச்சொல்) முன் தோற்றத்தை பாதிப்பதற்கல்லவோ காணப்பட்டிருக்கிறது. உதாஹரணம், ரஜ்ஜுவானது ஸர்ப்பமென்று முன்பு, "எல்லாம் அதனிடத்திலேயே" என்று ப்ரதிஜ்ஞை பண்ணப்பட்டிருக்கிற ப்ரஹமத்தினுடைய ஸர்வ ப்ரமங்களுக்கும் ஆதாரத்வமும் இந்த வாக்யத்தால் காண்பிக்கப்பட்டது. ப்ரஹ்மத்தைத் தவிர்ந்த வஸ்துவினது நிஷேதத்தை நேராகச்சொல்லிஇருப்பதைககாட்டுகிறார்-நேஹ நாநாஸ்தி கிஞ்சந என்று. பலவாறாகப் பார்ப்பவன் மிக்க அறிவீனன் என்பதைக்காண்பிக்கிறார்—ம்ருத்யோ: என்று. இவ்விடத்தில் ம்ருத்யுவென்பது அவித்யை, "தமஸோ வா ஏஷ தம: ப்ரவிஸதி" (இவன் சொற்ப இருட்டிலிருந்து மிக்க இருட்டில் ப்ரவேசிக்கிறான்) என்பதுபோல. 'இவ' சப்தத்தால் நாநாத்வத்திற்கு அபாரமார்த்யம காண்பிக்கப்பட்டது. மித்யாபூதமாக இருக்குமேயாகில் ஒரு ஸமயத்தில் நிவ்ருததியுண்டாகலாமெனில், சொல்லுகிறார்—யத்ரஹி என்று. யத்ர்-எப்போது. த்வைதமிவ பவதி—இவ சப்தம் முன்போல. தத்—அப்போது. இதரன் இதரத்தை இதரத்தினால் பார்க்கிறான் என்று அர்த்தம்—கேந (எதனால்) என்று சொல்லப்போகிறபடியால் இதரேண என்கிற பதத்தை அத்யாஹாரம் செய்துக்கொள்ளவேண்டும். யத்ரது என்று. யத்ர-எப்பொழுது, இவனுககு எல்லாம் ஆன்மாவாகவே ஆயிற்றோ

$ அந்ருதம்:—அஸத்யம், அதாவது மித்யாபூதம்

* ஸத்யம் ஜ்ஞானம் அநந்தம் ப்ரஹ்ம (இது ஸோதகவாக்யம்.) ப்ரமஹ்த்தின் ஸ்வரூபம் இத்தன்மைவாய்ந்தது என்று நன்கு சோதித்து காட்டும் தன்மை பொருந்தி இருத்தலால் இதற்கு இப்பெயர் வாய்ந்தது.

தக-அப்பொழுது எதனால் எவனைப்பார்ப்பான 'ஸ:' என்கிறபதம் *அத்யாஹரிக்கத்தக்கது. "இதர" என்று முன் சொல்லப்பட்டிருப்பதால் 'பஶ்யேத, விஜாநீயாத்' என்று ஜ்ஞானத்தின் அவஸ்தாபேதம் உரைக்கப்பட்டது. இதெல்லாம் மித்யை என்பதை த்ருஷ்டாந்தத்தினால் உபபாதிக்கின்ற ச்ருதியை உதாஹரிக்கிறார்-வாசா என்று. விகாரம் குடமுதலியவற்றின் உருவம், (அதுவும்) நாமதேயமும், வாசாரம்பணம்—$ வாகாலம்பநம் (வாக்கை ஆலம்பித்திருக்கிறது) வ்யாவஹாரிகமென்று அர்த்தம். ஆகலால் ம்ருத்திகை (மண்) என்பதே ஸத்யம—ப்ரஹ்மத்தினிடத்தில் நாநாத்வத்தைப் பார்க்கிறவனுக்கு முற்கூறப்பட்ட ம்ருத்யுசப்தத்தால் சொல்லப்பட்ட அஜ்ஞானகார்யமான பயத்தையும் காண்பிக்கிறார் யதாஹி என்று உதரம்-உ என்பது நிச்சயத்தில், "ததேவர்தம் தது ஸத்யமாஹு: ததேவ ப்ரஹ்ம பரமம் கவீநாம்" (அதே ருதமென்றும் அதே ஸத்யமென்றும் அதே பரப்ரஹ்மமென்றும் ஜ்ஞானிகள் கூறுகின்றார்கள்) என்கிற வாக்யத்திற்போல. அரம் அல்பம். அன்றிக்கே உத் அரம் உத என்பதற்கு பஶ்சாத் என்பதோடு அந்வயம், 'வ்யவஹிதாஶ்ச' என்கிற வ்யாகரணஸூத்ரத்தால். அரம் சீக்கிரம. யதாஹ்யேவ இது முதலியதைப்பின் எடுத்ததானது ஸித்தாந்தத்தில பரிஹார ஸௌகர்யத்திற்காக-அதுவும முற்கூறப்பட்ட வாக்யங்களை ஏகவாக்யந்யாயத்தால பரிஹரிக்கத்தக்கதாக இருப்பதால். ப்ரஹ்மம் நிர்விசேஷசின்மாத்ர மென்பதிலும, அதைத்தவிர்ந்த மற்றவைகள் மித்யை என்பதிலும் ச்ருதி காண்பிக்கப்பட்டது, அந்த ப்ரஹ்மத்தினிடத்தில நிர்விசேஷத்வத்தில் ஸூத்ரம காண்பிக்கப்படுகிறது—ந ஸ்தா'நத: என்று. உபயலிங்கம—ஸாகாரத்வமும் ஸாகாரநிராகாரத்வமும்—ப்ரஹ்மம் எல்லா இடத்திலும் இருந்த போதிலுங்கூட அதற்கு இல்லை; அது நிராகாரமென்று அர்த்தம. ப்ரஹ்மத்தைத்தவிர்ந்த மற்றவை மித்யை என்பதற்கு ஸூத்ரத்தைச் சொல்லுகிறா-மாயா என்று ஸ்வப்நஸமயத்தில் காணப்படும வஸ்துக்கள் அனைத்தும் மாயாமாத்ரம. யாதுகாரணத்தாலென்றால், அவ்யக்த மாகாதஸ்வரூபத்துடன் கூடியிருப்பதால்—நிரூபிக்கமுடியாமையால் பாதிக்கப்பட்டிருப்பதால் என்று அர்த்தம் ஸ்வப்நத்தில காணப்படுகிற வஸ்துக்களின் மித்யாத்வம ஜகந்மித்யாத்வத்திற்கு த்ருஷ்டாந்தமாகக் காண்பிக்கப்பட்டது

𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌸𑍍𑌤𑌮𑌿𑌤𑌭𑍇𑌦𑌂 𑌯𑌤𑍍 𑌸𑌤𑍍𑌤𑌾𑌮𑌾𑌤𑍍𑌰𑌮𑌗𑍋𑌚𑌰𑌮𑍍 । 𑌵𑌚𑌸𑌾𑌮𑌾𑌤𑍍𑌮𑌸𑌂𑌵𑍇𑌦𑍍𑌯𑌂 𑌤𑌜𑍍𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌸𑌂𑌜𑍍𑌞𑌿𑌤𑌮𑍍 (வி-பு-௬-௭-௫௩) 𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌮𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌨𑌿𑌰𑍍𑌮𑌲𑌂 𑌪𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑌤𑌃 । 𑌤𑌮𑍇𑌵𑌾𑌰𑍍𑌥𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑍇𑌣 𑌭𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌿𑌦𑌰𑍍𑌶𑌨𑌤𑌃 𑌸𑍍𑌥𑌿𑌤𑌮𑍍 ॥ (வி-பு ௧-௨-௬) 𑌪𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑌸𑍍𑌤𑍍𑌵𑌮𑍇𑌵𑍈𑌕𑍋 𑌨𑌾𑌨𑍍𑌯𑍋𑌽𑌸𑍍𑌤𑌿 𑌜𑌗𑌤𑌃 𑌪𑌤𑍇 । (வி-பு ௧-௪-௩௮) 𑌯𑌦𑍇𑌤𑌦𑍍𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍇 𑌮𑍂𑌰𑍍𑌤𑌮𑍇𑌤𑌜𑍍𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌤𑍍𑌮𑌨𑌸𑍍𑌤𑌵 । 𑌭𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌜𑌗𑌦𑍍𑌰𑍂𑌪𑌮𑌯𑍋𑌗𑌿𑌨𑌃 ॥ 𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌮𑌖𑌿𑌲𑌂 𑌜𑌗𑌦𑍇𑌤𑌦𑌬𑍁𑌦𑍍𑌧𑌯𑌃 । 𑌅𑌰𑍍𑌥𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌂 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑍋 𑌭𑍍𑌰𑌾𑌮𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌮𑍋𑌹𑌸𑌂𑌪𑍍𑌲𑌵𑍇 ॥ 𑌯𑍇 𑌤𑍁 𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌿𑌦𑌃 𑌶𑍁𑌦𑍍𑌧𑌚𑍇𑌤𑌸𑌸𑍍𑌤𑍇𑌽𑌖𑌿𑌲𑌂 𑌜𑌗𑌤𑍍 ॥ 𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌤𑍍𑌮𑌕𑌂 𑌪𑍍𑌰𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌤𑍍𑌵𑌦𑍍𑌰𑍂𑌪𑌂 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰 ॥ (வி-பு ௧-௪-௩௯-௪௰-௪௧) 𑌤𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌪𑌰𑌦𑍇𑌹𑍇𑌷𑍁 𑌸𑌤𑍋𑌽𑌪𑍍𑌯𑍇𑌕𑌮𑌯𑌂 𑌹𑌿 𑌯𑌤𑍍 । 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌪𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑍋

---

* அத்யாஹரிக்கத்தக்கது—ஸந்தர்ப்பாநுகுணமாக வாக்யபூர்த்தியின் பொருட்டு சப்தத்தையோ அர்த்தத்தையோ சேர்த்துக்கொள்ளுதல்.

$ ஆலம்பநம்—ஆச்ரயம்.

ஸௌ த்வைதிநோऽதத்யதர்சிந: ॥ (வி-பு உ-௧௪-௩௧) யத்யந்யோऽஸ்தி பர: கோऽபி மத்த: பார்திவஸத்தம । ததைஷோऽஹமயம் சாந்யோ வக்துமேவமபீஷ்யதே ॥ (வி-பு-உ ௧௩-௯௰) வேணுரந்த்ரவிபேதேந பேத: ஷட்ஜாதிஸம்ஜ்ஞித: । அபேதவ்யாபிநோ வாயோஸ்ததாऽஸௌ பரமாத்மந: ॥ (வி-பு-உ ௧௪-௩௨) ஸோऽஹம் ஸ ச த்வம் ஸ ச ஸர்வமேததாத்மஸ்வரூபம் த்யஜ பேதமோஹம் । இதீரிதஸ்தேந ஸ ராஜவர்யஸ்தத்யாஜ பேதம் பரமார்த்ததிருஷ்டி: ॥ (வி-பு-உ ௧௬-௨௩) விபேதஜநகே ஜ்ஞாநே நாசமாத்யந்திகம் கதே । ஆத்மநோ ப்ரஹ்மணோ பேதமஸந்தம் க: கரிஷ்யதி ॥ (வி-பு ௬-௭-௯௪) அஹமாத்மா குடாகேச ஸர்வபூதாசயஸ்தித: ॥ (கீ ௧௰-௨௰) க்ஷேத்ரஜ்ஞம் சாபி மாம் வித்தி ஸர்வக்ஷேத்ரேஷு பாரத । (கீ ௧௩-௩) ந ததஸ்தி விநா யத்ஸ்யாந்மயா பூதம் சராசரம் । (கீ ௧௰-௩௯) இத்யாதிபி: வஸ்துஸ்வரூபோபதேசபரை: சாஸ்த்ரை: - நிர்விசேஷசிந்மாத்ரம் ப்ரஹ்மைவ ஸத்யமந்யத்ஸர்வம் மித்யா - இத்யபிதாநாத் ॥

ஸ்ரீ பாஷ்யம்:—

'எது ஸத்தாமாத்ரமாய் பேதமில்லாததோ, வசனங்களுக்கு அகோசரமோ, ஸ்வயம்ப்ரகாசமோ, அந்த ஜ்ஞானம ப்ரஹ்மமென்று பெயருள்ளது'. "ஜ்ஞானஸ்வரூபனையும், அத்யந்த நிர்மலனையும், பரமார்த்த பூதனையும், ப்ராந்திஜ்ஞானத்தால் ப்ரபஞ்சரூபமாகப்பார்க்கப்பட்டவனையுமிருக்கிற அவனையே (விஷ்ணுவையே நமஸ்கரித்து)" "ஜகத்பதியே! நீ ஒருவனே பரமார்த்தமாகவிருப்பவன், வேறொருவனில்லை". '*மூர்த்தமாக எது காணப்படுகிறதோ, இது ஜ்ஞானஸ்வரூபியான உனனுடையதே இதையோகஜ்ஞானமில்லாதவாகள் ப்ராந்தி ஜ்ஞானத்தால் ஜகத்ரூபமாகக்காண்கிறார்கள்'. 'ஜ்ஞானஸ்வரூபமாகவிருக்கிற இந்த ஸமஸ்த ஜகத்தையும், புத்தியில்லாதவர்கள் ஜடஸ்வரூபமாகப்பாராநின்றுகொண்டு மோஹமாகிறவெள்ளத்தில் சுழலுகின்றார்கள். ஹே! பரமேச்வர! எவர்கள் ஜ்ஞானஸ்வரூபனை ஆத்மாவை அறிந்தவர்களாயும் சுத்தமனதுள்ளவர்களாயும் இருக்கிறார்களோ அவர்கள் உலகமனைத்தையும் ஜ்ஞாநாத்மகமான உன்னுடைய உருவமாகக் காண்கிறார்கள்'. "தன் தேகத்திலும், பிறர் தேகங்களிலும் நிலைபெற்றிராநின்றபோதிலுங்கூட அந்த ப்ரஹ்மத்தினுடைய ஏகமயமாயிருக்கிற யாதொரு விஜ்ஞானமுண்டோ, அதுவன்றோ பரமார்த்தம். த்வைதபாவனை உள்ளவர்கள் உண்மையறியாதவர்கள்". "ஹே! வேந்தர்களுள் சிறந்தவனே! என்னைக்காட்டிலும் வேறு ஆகாரமுள்ளவனாக மற்றொருவன் இருப்பானேயாகில் அப்போது இது நான், இது மற்றவன் என்று இவ்வண்ணம் சொல்வதற்காவது பொருத்தமுண்டு".

* மூர்த்தம்—க்ரியைக்கு ஆதாரமான வஸ்து.

“பேதமின்றி எங்கும் வ்யாபித்திருக்கின்ற காற்றுக்கு புல்லாங்குழல் முதலியவற்றின் த்வாரபேதத்தினால் எவ்வாறு §ஷட்ஜம் முதலிய நாமபேதங்கள் ஏற்படுகின்றதோ, அவ்வண்ணமே பரமாத்மாவுக்கு பேதமேற்படுகின்றது” “அப்படிப்பட்ட நானும், நீ, அவன், இவை அனைத்தும் ஆத்மஸ்வரூபம். பேதமபக்கத்தை விட்டு விடு இவ்வண்ணம் அவரால் (ப்ரதரிஷியால்) சொல்லப்பட்ட அந்த ராஜசிரேஷ்டன் பரமார்த்ததிருஷ்டியுள்ளவனாகி பேதத்தை இழந்தான்”. “பேதஜநகமான (அஜ்ஞானமானது) முற்றிலும் நாசமடைந்த பிறகு, ஆத்மாவுக்கும் ப்ரஹ்மத்திற்கும் வாஸ்தவமாயில்லாத பேதத்தை எவன் உண்டு பண்ணப்போகிறான்”. “ஹே! ஆலஸ்யமற்றவனே! (அர்ஜுனா) *வ்யாபனசீலனான நான் எல்லாப்ராணிகளினுடைய உள்ளத்தில் நிலைபெற்றிருக்கிறேன். ஹே! பரதகுலத்தினுதித்தவனே! எல்லா தேகங்களிலுமிருக்கிற (ஜீவாத்மாவாகவும்) என்னையறிவாயாக” “சராசரரூபமான பூதவர்க்கங்களுக்குள் நானில்லாமல் எது இருக்குமோ, அது இல்லை” என்கிற இது முதலான வஸ்துஸ்வரூபோபதேசபரங்களான சாஸ்திரங்களால் நிர்விசேஷ சிந்மாத்ர ப்ரஹ்மமே ஸத்யம், மற்றது அனைத்தும் மித்யை என்று சொல்வதால்.

ஶ்ருதப்ரகாசிகை:—

இவ்விரண்டு அர்த்தங்களில் உபப்ரஹ்மணவசநங்களைக் காண்பிக்கிறார்—**ப்ரத்யஸ்தமித** என்று. ப்ரத்யஸ்தமித பேதம்—ஸஜாதீய விஜாதீய பேதமில்லாதது. ஸத்தாமாத்ரம்—ஸ்வகத பேதமில்லாதது, அதனாலேயே வாக்குகளுக்கு அகோசரம், அங்ஙனமாகில் துச்சத்வம் ஏற்படலாம், ஸத்தையில்லாமல் போகுமெனில் கூறுகிறார்—**ஆத்மஸம்வேத்யம்** என்று. தனக்குத்தானே ப்ரகாசம் என்று அர்த்தம், **ப்ரஹ்ம ஸம்ஜ்ஞிதம்** என்று. ப்ரஹ்மம் என்று பெயர் மாத்திரமே; ப்ருஹத்த்வம் முதலிய குணங்களின் ஸம்பந்தமில்லை என்று கருத்து. நிர்விசேஷமாக இருக்குமேயாகில் எவ்வாறு ஜகத்தின் தோற்றமென்று கேட்பவரின் ப்ரமாணம் எடுக்கிறார்—**ஜ்ஞான ஸ்வரூபம்** என்று. இந்த சுலோகத்தால் ப்ரபஞ்சமித்யாத்வம் கூறப்படுகின்றது. அத்யந்த நிர்மலம்—ஸகல விசேஷங்களுமில்லாதது. அர்த்தஸ்வரூபத்தால்—ஜடஸ்வரூபத்தால். அர்த்தங்களின் நானாத்வம் ப்ராந்திஸித்தமாதலால் ஒன்றே பரமார்த்தமென்று காண்பிக்கிறார்—**பரமார்த்தஸ்த்வம்** என்று. இதை இரண்டு சுலோகங்களால் விவரிக்கிறார்—**யதேதத்** இது முதலியதால். ப்ராந்தியாகில் எவனாவது ஒருவனுக்கு நிவர்த்திக்கக்கூடுமென்று அபேக்ஷையுண்டாகில் சிலருக்கு அதன் நிவ்ருத்தியைக்காண்பிக்கிறார்—**யேது ஜ்ஞானவித.** என்று. ஜ்ஞானஸத்யத்வமும் ஜடமித்யாத்வமும் சொல்லப்பட்டது. பிறகு ஜ்ஞானாகாரமான ஆத்மாக்களுக்கு ஐக்யோக்தியைக் காண்பிக்கிறார்—**தஸ்ய** என்று ஏகமயம்- ஏகம். ஆத்ம என்றும பர என்றும் சப்தங்களின் ப்ரயோகத்தால் உண்டாகக் கூடியபேதசங்கையையும் நிரஸிக்கிறார்--**யத்யந்யோஸ்தி** என்று. இதற்கு த்ருஷ்டாந்தம்

§ஷட்ஜம்— ஷட்ஸ—ஜாயதே உரஸ, கண்டம முதலிய ஆறுஸ்தானங்களினின்றுஉண்டாவதால் ஷட்ஜம என்று பெயர். இது காந்தர்வ சாஸ்திரத்தில் ப்ரஸித்தமான ஸப்த ஸ்வரங்களிலொன்று. இது மயிலினுடைய குரலை ஒத்திருக்கும்.

*வ்யாபனசீலன்—பரவிச்செல்லும் ஸ்வபாவமுள்ளவன்.

சொல்லுகிறார் — வேணுரந்த்ர என்று. உபபாதனஞ்செய்யப்பட்டிருக்கிற இவ்வர்த்தத்தின் உபதேசத்தைக்காண்பிக்கிறார்—ஸோஹம் என்று. உபதேசிக்கப்பட்டபடி செய்தார் என்பதைச்சொல்லுகிறார்—§தத்யாஜ என்று. பிறகு ஆத்மாக்களுக்கு ப்ரஹ்மத்தோடு ஐக்யோக்தியைக் காண்பிக்கிறார்—விபேதஜநகே என்று. பிறகு, பகவத்கீதையில் எல்லா ஆன்மாக்களுக்கும், ஒன்றோடொன்றும், ப்ரஹ்மத்தோடும் ஐக்யோக்தியை உதாஹரிக்கிறார்—அஹமாத்மா என்று. ஸர்வபூதசப்தம் சரீரங்களைச்சொல்லுகிறது, இதை நன்கு வெளிப்படுத்துகிறார்—க்ஷேத்ரஜ்ஞஞ்ச என்று. “ஸர்வக்ஷேத்ரேஷு” என்கிற இப்பதத்தினால் பூதசப்தம் சரீரபரமென்று வெளிப்படுத்தப்பட்டது. அதிலேயே ப்ரஹ்மத்தைத்தவிர்ந்த பதார்த்தங்களுக்கு மித்யாத்வப்ரதிபாதகவசநத்தைக் காண்பிக்கிறார்—நதத்ஸ்தி என்று. வஸ்து ஸ்வரூபோபதேசபரங்களான-உபாயபரங்களல்லாத-அநந்யபரங்களான என்று கருத்து. நிர்விசேஷசிந்மாத்ரமென்று—அர்த்தம் முன்போல. ‘அபிதாநாத’ என்பதற்கு ‘அசேஷ’ என்கிற பதத்தைத்தொடக்கத்தில் கொண்டிருக்கிற முந்திய ப்ரதிஜ்ஞாவாக்யத்தோடுகூட அந்வயம்.

மித்யாத்வம் நாம ப்ரதீயமாநத்வபூர்வக யதாவஸ்தித வஸ்துஜ்ஞாந நிவர்த்யத்வம், யதா ரஜ்ஜ்வாத்யதிஷ்டாநஸர்பாதே: । தோஷவஶாச்ச தத்ர தத்கல்பநம் । ஏவம் நிர்தோஷே ப்ரஹ்மணி தோஷபரிகல்பிதமிதம் தேவதிர்யங்மநுஷ்யஸ்தாவராதிபேதம் ஸர்வம் ஜகத்யதாவஸ்தித ப்ரஹ்மஸ்வரூபாவபோதபாத்யம் மித்யாரூபம் । தோஷஶ்ச ஸ்வரூபதிரோதாந விவிதவிக்ஷேபகரீ ஸதஸதநிர்வசநீயா அநாத்யவித்யா । “அந்ருதேந ஹி ப்ரத்யூடா: (சா-அ-௩-௨) தேஷாம் ஸத்யாநாமந்ருதமபிதாநம் (சா-அ-௩-௧) நாஸதாஸீந்நோ ஸதாஸீத் ததாநீம் தம ஆஸீத் தமஸா கூடமக்ரே ப்ரகேதம் (ய-உ அஷ் அ-௯) மாயாம் து ப்ரக்ருதிம் வித்யாந்மாயிநம் து மஹேஶ்வரம் (ஶ்வே ௪-௰) இந்த்ரோ மாயாபி: புரூரூப ஈயதே (ப்ரு-௪-௫-௧௯) மம மாயா துரத்யயா (கீ-௭-௧௪) அநாதிமாயயா ஸுப்தோ யதா ஜீவ: ப்ரபுத்யதே (மா-உ-௨-௧)” இத்யாதிபிர்நிர்விஶேஷசிந்மாத்ரம் ப்ரஹ்மைவாநாத்யவித்யயா ஸதஸதநிர்வசநீயயா திரோஹிதஸ்வரூபம் ஸ்வகதநாநாத்வம் பஶ்யதீத்யவகம்யதே । யதோக்தம்—“ஜ்ஞாநஸ்வரூபோ பகவாந்யதோ(அ)ஸாவஶேஷமூர்திர்ந து வஸ்துபூத: । ததோ ஹி ஶைலாப்திதராதிபேதாந் ஜாநீஹி விஜ்ஞாநவிஜ்ரும்பிதாநி ॥ யதா து ஶுத்தம் நிஜரூபி ஸர்வகர்மக்ஷயே ஜ்ஞாநமபாஸ்ததோஷம் । ததா ஹி ஸங்கல்பதரோ: பலாநி பவந்தி நோ வஸ்துஷு வஸ்துபேதா: ॥ (வி-௨-௧௨-௩௯, ௪௰) தஸ்மாந்ந விஜ்ஞாநம்ருதே(அ)ஸ்தி கிஞ்சித் க்வசித்கதாசித் த்விஜ வஸ்துஜாதம் । விஜ்ஞாநமேகம் நிஜகர்மபேதவிபிந்நசித்தைர்பஹுதா(அ)ப்யுபேதம் ॥ ஜ்ஞாநம் விஶுத்தம் விமலம் விஶோகமஶேஷலோ

§தத்யாஜ—விட்டான்.

[illegible]

ஸ்ரீபாஷ்யம்—

மித்யாத்வமாவது—முற்பட்டதோற்றத்திற்குவிஷயமாகவிருந்து உள்ள படி இருக்கிற வஸ்துஜ்ஞானத்தால் நிவருத்திக்கத்தக்க தன்மையுள்ளது. எவ்வாறு ரஜ்ஜு முதலியவைகளை அதிஷ்டானமாகக்கொண்ட ஸர்ப்பம் முதலியவைகளோ (அவைபோல.) தோஷவசத்தாலன்றே அந்த அதிஷ்டானத்தில் அந்த (வஸ்துவின்) *கல்பநம் ஸம்பவிக்கிறது. இவ்வண்ணம் சின்மாத்ரத்தை சரீரமாகக்கொண்ட பரப்ரஹ்மத்தினிடத்தில் தோஷத்தால் *கல்பிக்கப்பட்டிருக்கிற இந்த தேவ திர்யக் மனுஷ்ய ஸ்தாவராதி பேதங்களுள்ள உலகமனைத்தும் யதாவஸ்திதமான ப்ரஹ்மஸ்வரூபஜ்ஞானத்தால் பாதிக்கத்தக்கதாதலால், மித்யா ரூபமாக இருக்கிறது தோஷமோவெனில், ஸ்வரூபத்தை மறைக்கிறதும், பற்பலவிசித்ர §விக்ஷேபத்தை உண்டுபண்ணுகிறதும், ஸத்தென்றும் அஸத்தென்றும் ¶நிர்வசனம் செய்யத்தகாததுமான அநாதியான அவித்யை. "அவித்யையினாலன்றோ ‡வைபரீத்யத்தை அடைவிக்கப்பட்டிருக்கிறது". "ஸத்யங்களான அவைகளுக்கு அந்ருதம (அவித்யை) †ஆவரணமாக இருக்கிறது". "அப்பொழுது (ஸ்ருஷ்டிக்குமுன்பு) அஸத்துமில்லை; ஸத்துமில்லை; தமஸ் இருந்தது பூர்வம் தமஸினால ஜ்ஞானம்

*கல்பநம்—இல்லாத வஸ்து ப்ராந்தி ஜ்ஞானத்தால் ஏற்படுவது
§விக்ஷேபம்—பலவாறான வஸ்துக்களின் தோற்றம்.
¶நிர்வசனம்—தீர்மானமான சொல்.
‡வைபரீத்யம்—மாறுபாடு.
†ஆவரணம்—மறைவு.

மறைபட்டிருந்தது". "மாயையை ப்ரக்ருதி என்றும், மஹேச்வரனை மாயையை உடையவனென்றும் அறியவேண்டும்". "இந்திரன் (பரமாத்மா) மாயைகளால் அநேக உருவங்களை எடுக்கிறான்" "என்னுடைய மாயை எவ்விதத்தினாலும் தாண்டமுடியாதது". "அநாதியான மாயையினால் உறங்குகிறஜீவன் எப்பொழுது விழித்துக்கொள்ளுகிறானோ" இது முதலியவைகளால் நிர்விசேஷசின்மாத்ர ப்ரஹ்மமே, ஸத் என்றும் அஸத் என்றும் நிரூபிக்கத்தகாத அநாதியான அவித்யையினால், ஸ்வரூபதிரோதானத்தைப்பெற்று நாநாத்வத்தைத்தானடைந்திருப்பதாகக் காண்கிறதென்று அறியப்படுகிறது. இந்த விஷயத்தில் ப்ரமாணம் கூறப்பட்டிருக்கிறது. "எதனால் ஸமஸ்த க்ஷேத்ரஜ்ஞரூபியாக இருக்கிற அந்தபகவானுக்கு ஜ்ஞானமே ஸ்வாபாவிகமான ரூபமோ (தேவமனுஷ்யாதி) வஸ்துக்கள் ஸ்வரூபமன்றன்றோ, அதினாலேயே மலை, ஸமுத்திரம், பூமி முதலிய வஸ்துபேதங்களை அந்த ஜ்ஞானாகாரமாக இருக்கிற (ப்ரஹ்மத்தின்) ‡வைவித்யாநுஸந்தானமூலங்கள் என்றறிவாயாக. அவித்யாஸம்பந்தமற்றதாயும், பேததர்சனமில்லாததாயும், (அவைகளுக்கு நிமித்தங்களான) எல்லாக்கருமங்களும் நாசமடைந்தபின், (ராகாதி) தோஷங்களினின்று அகன்று, ஜ்ஞானம் எப்பொழுதுஉளதோ அப்பொழுதன்றோ ஸங்கல்பமாகிற (அவித்யை என்கிற) மரத்தின பழங்களான ஆகார பேதங்கள் (தர்மிபூதங்களான) பதார்த்தங்களில் உண்டாவதில்லை. ப்ராஹ்மணா! ஆதலால் விஜ்ஞான (ரூபியான ப்ரஹ்மத்தை)த்தவிர்ந்த வேறு யாதொரு வஸ்துவும் எவ்விடத்திலாவது எக்காலத்திலாவது இருந்ததில்லை விஜ்ஞானமொன்றே, தந்தம் கர்மபேதங்களால் பலவகைப்பட்டிருக்கிற சித்தவ்ருத்தியுடன் கூடியவர்களால் பலவாறாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. சுத்த ஸ்வரூபியாயும், மலமற்றதாயும், சோகமற்றதாயும், லோபம்முதலிய ஸமஸ்தமான மனோமலங்களின் ஸம்பந்தமில்லாததாயும், ஒன்றாயும பிறப்பு வளர்ச்சி முதலியதில்லாததாயும், யாதொரு விஜ்ஞானமுண்டோ, அதுவே தனக்கு மேற்பட்டவன் இல்லாதவனும் ப்ரஹ்மாதிகளுக்குங்கூட நியந்தாவுமான வாஸுதேவன். அவனைவிட வேறொரு வஸ்துவுமில்லை. எவ்வாறு ஜ்ஞானமொன்றே ஸத்யம், மற்றது அஸத்யமோ, இவ்வாறாக ஸத்பாவமானது என்றால் உனக்கு உரைக்கப்பட்டதாகவாகிறது. (ஞானாகாரமாயிருப்பதால் ஸமமாயிருக்கிற) யாதொரு இந்த ப்ரஹ்ம ஸ்வரூபமானது உலகத்தை ஆச்ரயித்து (தேவமனுஷ்யாதிரூபமாக) நன்குவ்யவஹரிக்கத்தக்க பேதமுள்ளதாகவிருக்கிறதோ அதற்கும் (அவித்யையே) ஹேதுவென்று (உனக்கு) உரைக்கப்பட்டது. நிர்விசேஷசின்மாத்ர ப்ரஹ்மாத்மைகத்வ விஜ்ஞானத்தினால் இவ்வவித்யைக்கும் நிவ்ருத்தியை (மேலே உதாஹரிக்கப்போகிற சுருதிகள் கூறுகின்றன.) "அந்த (ப்ரஹ்மத்தை)எவன் ஒன்றென்று பார்க்கிறானோ அவன்மீண்டும மருத்யுவை

$திரோதானம்—மூடுவது.

‡வைவித்யம்—பற்பலவிதமாக இருத்தல்.

(அவித்யையை) அடைவதில்லை" "(அதை) பார்ப்பவன் அவித்யையைப்பாரான்", "ப்ரத்யக்ஷாதிகளுக்கு விஷயமாகாததும், சரீரமில்லாததும், இப்படிப்பட்ட ஸ்வபாவமுள்ளதென்று நிர்வசனஞ் செய்யத்தகாததும், ஆதாரமற்றதுமான இப்ரஹ்மத்தினிடத்துஎப்போது இவன் அபயார்த்தமாக நிலைபெறுதலை அடைகிருனே, அதன்பிறகு அபயத்தை அடைந்தவனுகவாகிருன்". "பராவர வஸ்துவாகிய (அந்த ப்ரஹ்மமானது) ஸாக்ஷாத்கரிக்கப்பட்டவுடன் ஹ்ருதயத்திலுள்ள முடிச்சு (அவித்யை) பிளக்கப்படுகிறது. எல்லா ஸம்சயங்களும் அறுபடுகின்றன. இவனுடைய கர்மங்கள் எல்லாம் நாசமடைகின்றன". "ப்ரஹ்மத்தையறிகிறவன் ப்ரஹ்மமாகவேஆகிருன்". "அப்பரமபுருஷனை இவ்வண்ணமறிந்தவன் அவித்யையைக் கடக்கிருன். வேறுவழி கிடையாது", இது முதலிய சுருதிகள்.

ஸ்ருதப்ரகாசிகை—

ஐயா! வேறு இடத்தில் இருக்கிற வஸ்துவுக்கு மற்ெருரு இடத்தில் தோற்றுவது மித்யாத்வமா? அல்லது முற்றிலும் அஸத்வமா? முந்தின கல்பத்தில் ஓரிடத்தில் பாரமார்த்யம் ஒப்புக்கொள்ளப்பட்டதாக ஆகும். இரண்டாவது கல்பத்திலோ என்ருல், நிவர்த்திக்கத்தக்கதேயில்லை என்பதனுல் சாஸ்த்ரம் பயனற்றதாக ஆகிறது. அத்யந்தாஸத்வம் என்பதும் பொருந்தாது-ஜ்ஞானத்துக்கு விஷயமாவதால். ஸ்வயம் பிரகாச வஸ்துவுக்கு ஊமாதிஷ்டானத்வம உபபந்நமாகாது. அத்யாஸம் என்பது தன்னுடைய யதார்த்த ஸ்வரூபத்தின் அப்ரகாசத்தை மூலமாகக்கொண்டதன்ருே. பராதீன ப்ரகாசமான ஜட வஸ்துவுக்கே அது ஸம்பவிக்கிறது. ஆகையால் முந்தி ப்ரதிஜ்ஞை செய்யப்பட்டிருக்கிற ப்ரபஞ்சமித்யாத்வமும், ப்ரஹ்மத்தினுடைய ஊமாதிஷ்டானத்வமும் அயுக்தம் என்கிற இவவிரண்டு ஆக்ஷேபங்களில் முந்தினதை பரிஹரிப்பதற்காக மித்யாத்வத்தின் லக்ஷணத்தைக்கூறுகிருர்-மித்யாத்வம்நாம என்று. நிவர்த்யத்வமே மித்யாத்வமென்று சொல்லும்பக்ஷத்தில குண்டாந்தடி முதலியவைகளால் நிவர்த்திக்கத்தக்க கடம்முதலியவற்றில் *அதிவயாப்திவருகிறது. அதைப் பரிஹரிப்பதற்காக ஜ்ஞானசப்தம். அங்ஙனம் லக்ஷணம்கூறினும் சக்தியுள்ள ஈச்வரன் முதலியவர்களுடைய ஸங்கல்பரூபமான ஜ்ஞானத்தால் நிவர்த்திக்கத்தக்க வஸ்துவில் அதிவயாப்திவருகிறது. அந்த அதிவயாப்தியும் "யதாவஸ்தித வஸ்துஜ்ஞான" மாத்ரத்தால் நிவர்த்யத்வம் விவக்ஷிகப்பட்டிருப்பதால் பரிஹரிக்கப்பட்டதாக ஆகிறது. ப்ரபலமான ப்ராந்திஜ்ஞானத்தால நிவர்த்திக்கத்தக்க ஸத்ய ரஜதம் முதலியவைகளில் அதிவயாப்தியைப் பரிஹரிப்பதற்காக 'யதாவஸ்தித' என்கிற சப்தம். 'யதாவஸ்திதஜ்ஞான நிவர்த்யத்வம்' என்று சொல்லப்பட்டால், ஸமாநாதிகரணபுத்தியுண்டாகும் அப்போது, ப்ராந்திஜ்ஞானத்தால் நிவர்த்திக்கத்தக்கதில் (ஸத்யரஜதஜ்ஞாநத்தில்) உண்டான வ்யபிசாரமானது அப்படியே நிலைபெற்றிருக்கும். அவ்விடத்தில் ஜ்ஞானஸ்வரூபம் யதாவஸ்திதமன்ருே-விஷயத்துக்கே அயதார்த்தத்தன்மை. ஆகையால் யதாவஸ்திதம் ஜ்ஞானமென்று ஸாமாநாதிகரண்ய சங்கையை வ்யாவர்த்திப்பதற்காக யதாவஸ்தித வஸ்துஜ்ஞான நிவர்த்யத்வம் என்று உரைக்கப்பட்டது. ஜ்ஞானப்ராகபாவத்தில் வயபிசாரம் வருவதால் அதை நிரஸிப்பதற்காக "ப்ராதீயமாநத்வ பூர்வக" பதம். ஜ்ஞாநப்ராகபாவமுங்கூட ஒருஸமயத்தில்,

*அதிவயாப்தி—அலக்ஷ்யங்களில் லக்ஷணத்தினிருப்பு.

ப்ரதீயமாநத்வபூர்வகமாக நிவர்த்திக்கப்படுகிறதென்றால் அல்ல-(அதைவ்யாவர்த்திப்பதற்காக) நியமம் விவக்ஷிக்கப்பட்டிருப்பதால். (ஆகையால் நியமேந ப்ரதீயமானத்வபூர்வக யதாவஸ்திதவஸ்து ஜ்ஞாநநிவர்த்யத்வம் என்று பலித்தது). எவ்வாறு "ஸிதௌ சப்தார்த்தஸம்பந்தே" என்கிற வாக்யத்தில் "ஸிதௌ ஏவ" என்று அவதாரணம் விவக்ஷிக்கப்பட்டிருப்பதால் நித்யத்வம் ஸித்திக்கிறதோ; எவ்வாறு "அப்பக்ஷோ வாயு பக்ஷ:" இது முதலியதில் அப்பையே பக்ஷிக்கிறான் என்று §அவதாரணம் ஸித்திக்கிறதோ அவ்வண்ணமாக. பூமிவெடிப்பு என்கிற தோற்றத்தினால் நிவர்த்திக்கப்பட்ட ரஜ்ஜுஸர்ப்பத்திற்கு யதாவஸ்திதவஸ்துஜ்ஞாநநிவர்த்யத்வம் இல்லாமையால் †அவ்யாப்தி வருகிறதென்றால்; அல்ல—அதுவும் (ரஜ்ஜுஸர்பஜ்ஞாநமும்) யதாவஸ்தித வஸ்து ஜ்ஞாநத்தால் நிவர்த்திப்பதற்குத்தகுதியுள்ளதாய் இருப்பதால். அதனாலேயேயன்றோ *நிவர்த்யத்வம் என்றுசொல்லப்பட்டதேயொழிய ‡நிவ்ருத்தத்வம் என்று சொல்லப்படவில்லை. ஸர்பப்ரமத்தால் உண்டுபண்ணப்பட்டதும் ரஜ்ஜுஜ்ஞாநத்தால் நிவர்த்திக்கத்தக்கதும் பாமார்த்தபூதமுமான பயத்தில் அதிவ்யாப்தி என்று சொல்லவுங்கூடாது. பயமாகிறது க்ஷணிகமானதால் தானாகவே நீங்கின அந்த பயத்துக்கு ரஜ்ஜுஜ்ஞாநநிவர்த்யத்வம் இல்லாமையால். ரஜ்ஜுஜ்ஞாநமோ எனில், மேல்வரப்போகிற பயத்தின் உத்பத்தியைத்தடுக்கிறது. ஆகையால் ப்ரதீயமாநத்வநியமபூர்வகயதாவஸ்திதவஸ்துகோசரஜ்ஞாநமாத்ரநிவர்தநீயத்வம் மித்யாத்வம் என்று அர்த்தம். இந்த லக்ஷணத்தால் ஸதஸத் வைலக்ஷண்யம் பலித்தது. அதில் ப்ரதீயமாநத்வபூர்வக என்பதனால் அஸத்வ்யாவ்ருத்தி ஏற்படுகிறது. மிகுதியால் ஸத்வ்யாவ்ருத்தி ஏற்படுகிறது.

இந்த மித்யாத்வலக்ஷணம் அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட மித்யாவஸ்துக்களில்தொடர்ந்துவருகிறதென்பதைக்காண்பிக்கிறார்- யதா என்று. இனி, கூறியலக்ஷணத்தை $பக்ஷமாகிய ப்ரக்ருதத்தில் ஏறிட்டுக்காட்டுவது உசிதமாயினும், ஸ்வப்ரகாசவஸ்துவினிடத்தில் அத்யாஸம்அஸம்பாவிதமென்கிற இரண்டாவது ¶சோத்யத்தைபரிஹரிப்பதற்குக்கூறுகிறார்-(தோஷவசாதி தத்ர தத்கல்பநம்)என்று அஜடத்வம்போல் ஜடத்வமும் அத்யாஸத்திற்கு ஸாதகமாகாது ஜடவஸ்துவினிடத்திலும் தோஷமில்லாவிடில் அத்யாஸம் காணப்படாமையால் ஆதலால் தோஷமேயன்றோ எல்லாவிடத்திலும் கல்பனைக்குமூலம். கல்பகம் தோஷாதீனமாக இருக்கும்போது, தன்னாலேயோ மற்றொன்றினாலேயோ, ப்ரகாசம் அதிஷ்டானத்வத்திற்கு உபயோகியாக இருக்கிறது. எதிரிலிருந்து ப்ரகாசிக்கின்ற வஸ்துவில்லையோ, ரஜதப்ரமம் உண்டாகிறது தார்ஷ்டாந்திகத்தில் பரிஹரிப்பதற்காக, த்ருஷ்டாந்தத்தில் கல்பநத்திற்கு தோஷாதீனத்வம் கூறப்பட்டது. இவ்வாறு ப்ரதீயமாநத்வபூர்வகயதாவஸ்திதவஸ்துஜ்ஞாநநிவர்த்யத்வரூபமான மித்யாத்வமும் மித்யாபூதமான அர்த்தகல்பநமும் தோஷவசத்தால் என்று த்ருஷ்டாந்தத்தில் *ஸிக்ஷிதமான இரண்டு அர்த்தங்களையும் தார்ஷ்டாந்திகத்தில் $அதி

---

§அவதாரணம்—நிச்சயம்.

†அவ்யாப்தி—லக்ஷ்யங்களுள் சிலவற்றில் இல்லாமலிருத்தல்.

*நிவர்த்யத்வம்—நிவர்த்திக்கப்படும் தன்மை.

‡நிவ்ருத்தத்வம்—நிவர்த்திக்கப்பட்டிருத்தல்.

$பக்ஷம்—ஸந்தேஹவிஷயமான ஸாத்யத்துடன் கூடியது.

¶சோத்யம்—ஆக்ஷேபனை.

*ஸிக்ஷிதமான—சாஸ்திரத்தாலும் ந்யாயத்தாலும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிற.

$அதிதேசியாநின்று கொண்டு—ஏறிடாநின்றுகொண்டு.

தேசியா நின்றுகொண்டு, இரண்டு சங்கைகளையும் அர்த்தாத் நிராகரிக்கிறார்-ஏவம் என்று. மிகவும் வேற்றுமையில்லாத சில வஸ்துக்களின் அத்யாஸம் ஒரு அதிஷ்டானத்தில் காணப்படுகிறது. எவ்வாறு ரஜ்ஜுமாத்திரத்தில் ஸர்ப்பம், பூமிவெடிப்பு, ஜலதாரை, முதலியவற்றின் அத்யாஸமோ. (அவ்வாறென்றபடி) எப்படி ஒரு அதிஷ்டானத்தில் ஓரேஸமயத்தில் ஒன்றோடொன்று மிகவும் ஒற்றுமை இல்லாதவைகளாயும் அநந்தங்களாயுமுள்ள ப்ரபஞ்சங்களின் அத்யாஸம் ? என்பது ஒன்று ; "யஸ்ஸர்வஜ்ஞ:" இது முதலியவைகளில் ஸர்வஜ்ஞத்வம் முதலிய குணங்களுள்ளதாக ப்ரஸித்தி பெற்றிருக்கிற ப்ரஹ்மத்தினிடத்தில் எங்ஙனம் அத்யாஸம் ? என்பது இரண்டாவது. சிந்மாத்ரவபுஷி என்பதனால் முன்சொல்லப்பட்டதும், ஸ்வயம் ப்ரகாசத்வத்தால் உண்டுபண்ணப்பட்டிருப்பதுமான அத்யாஸாநுபவத்தியை †ஸ்புரிக்கச் செய்கிறார். பரே ப்ரஹ்மணி என்பதனால் இரண்டு சங்கைகளும் பரிஹரிக்கப்பட்டதாக ஆகின்றன-விலக்ஷணாதிஷ்டானமாக இருப்பதால் எல்லா அத்யாஸங்களும் உபபந்நம் என்று. வைலக்ஷண்யமும் ஸர்வஸாதாரணமான ஸந்மாத்ரரூபத்வம். ஸர்வஜ்ஞத்வம் முதலிய குணங்கள் அபரப்ரஹ்மத்தினிடத்தில். பரப்ரஹ்மத்தினிடத்திலோவெனில், சிந்மாத்ரமாக இருப்பதால் ஸர்வஜ்ஞத்வாதி குணஸம்பந்தமில்லாமையால், அத்யாஸம் உபபந்நம் என்றும் அபிப்ராயம். அறியப்படுகிற ஆகாரத்தைப் *பராமர்சிக்கின்ற "இதம்" என்கிற பதத்தினாலும், யதார்வஸ்திதப்ரஹ்மஸ்வரூபாவபோதாய பார்த்யம் என்கிற பதத்தாலும், முற்கூறப்பட்ட மித்யாத்வலக்ஷணம் அநுவதிக்கப்பட்டதாக ஆகிறது. தோஷபரிகல்பித மென்பதனால், தோஷவசாத் என்று ஆரம்பித்த வாக்கியத்தால் சொல்லப்பட்டிருப்பது அதிதேசிக்கப்பட்டது. பற்பலவிதமுள்ள எல்லா அத்யாஸங்களையும் காண்பிக்கிறார்-தேவ என்று. மித்யாரூபம்—மித்யாத்வலக்ஷணத்துடன் கூடியிருப்பதால், ரஜ்ஜு ஸர்ப்பம்போல் மித்யை யென்று சொல்லப்பட்டதாக ஆகிறது.

தோஷமென்பது யாது — அது பரமார்த்தமா ? அல்லது அபரமார்த்தமா? பரமார்த்தமாகில் ஜ்ஞாநநிவர்த்யமாகாது, அபரமார்த்தமாகில் ப்ரபஞ்சத்திற்குப்போல் (தோஷத்துக்கும்) வேறு கல்பகம் அபேக்ஷிக்கப்படுவதால் அநவஸ்தை வரும். அந்த தோஷமானது, மறைக்கப்படாத பிரஹ்மத்தினிடத்தில்(ப்ரபஞ்சத்தை) கல்பிக்கிறதா? அல்லது மறைக்கப்பட்டிருக்கிற(ப்ரஹ்மத்தினிட)த்திலா?—மறைக்கப்படாத ப்ரஹ்மத்தினிடததில் என்றுசொல்லப்படுமேயானால் அது உபபந்நமாகாது—ரஜ்ஜுத்வம் ப்ரகாசியாநிற்கையில் (ஸர்ப்பாத்யாஸத்திற்குப்) போல, ப்ரஹ்மத்தினிடத்தில் (ப்ரபஞ்ச) கல்பனை உண்டாவதற்கு விரோதம் வருவதால். விரோதமில்லை என்றால் பிறகும் நிவ்ருத்திவரக்கூடாது. திரோஹிதமாக இருக்கிற ப்ரஹ்மத்தினிடத்தில் எனில், திரோதானம் தானாகவே உண்டாயிருக்கிறதா ? அல்லது வேறு ஒன்றினாலா ? தன்னாலேயே என்று சொல்லப்படுமேயாகில் நிவர்த்திக்கத்தகாத தன்மையாவது அல்லது நிவ்ருத்தியின் ஸ்வரூபத்துக்கே நாசமாவது வரும். வேறொன்றினாலென்றால் வேறாகயிருக்கிற அந்த வஸ்து எது என்று சொல்லவேணும். மேலும், பற்பல அத்யாஸங்களுக்கு பற்பல தோஷமூலத்வம் காணப்பட்டிருக்கிறது. ஆதலால் அநேக தோஷங்கள் ஒப்புக்கொள்ளத்தக்கவைகள் என்கிற இந்த சங்கைகளை பரிஹரிப்பதற்காகச் சொல்லுகிறார்-தோஷஸ்ச என்று. சகாரம் சங்கையைப் போக்குகின்றது. தோஷம் என்ன ? வென்பதற்கு அவித்யை என்று மறுமொழி. அந்த அவித்யை வாஸ்தவமா? அவாஸ்தவமா? என்

†ஸ்புரிக்க—தோன்றும்படி.

*பராமர்சிக்கின்ற—குறிக்கிற.

கிற விகல்பத்தில் ஸதஸதநிர்வசநீய என்று அபாரமார்த்யத்தை அங்கீகரித்தபடி. அநவஸ்தைக்குப் பரிஹாரம் அநாதி-என்று. ஸ்வரூபதிரோதாந சப்தத்தினால் திரோஹிதாதிரோஹித விகல்பத்திற்கு மறுமொழிகூறப்பட்டது. அந்ததிரோதானமும் தன்னாலேயா, வேறொன்றினாலேயா என்கிற விஷயத்தில், திரோதானத்திற்குக்காரணத்தை நிர்த்தேசித்திருப்பதால், வேறொன்றினாலென்று அங்கீகரிக்கப்பட்டது. விவித இது முதலியவற்றால் நாநாத்யாஸங்களுக்கு ஏகதோஷமூலத்வம் கூறப்பட்டது. விக்ஷேபம்—அத்யாஸம். ஆச்சாதிகாவித்யை விக்ஷேபிகாவித்யை என்று அவித்யை ஒன்றுக்கே இரண்டு அவஸ்தைகள். அவர்களுக்கு அபிமதமான அந்த அவஸ்தாத்வயமானது திரோதானத்துக்கும் விக்ஷேபத்திற்கும் ஹேதுத்வஞ் சொன்னதினால்ஸூசிப்பிக்கப்பட்டது.

இவ்வண்ணமாக விருக்கிற அவித்யையை ப்ரதிஜ்ஞைசெய்து இதற்கு அநுகுணமான ப்ரமாணத்தைக்கூறுகிறார்- அந்ருதேந இது முதலியதால். ப்ரத்யூடா:—விபரீத புத்தியை யடைவிக்கப்பட்டன. ப்ரத்யூட சப்தத்தைத் தெளிவாக அறிவதின் பொருட்டு எடுக்கிறார்-தேஷாம் என்று †“அதிதி பாசாந் ப்சமுமோக்து” என்கிற விடத்திற் சொல்வதுபோல இங்கு பஹுவசனத்தில் தாத்பர்யமில்லை. இந்த அவித்யைக்கு ஸதஸத்நிர்வசநீயத்வம் கூறப்படுகிறது- நாஸதாஸீந்நோஸதாஸீத் என்று. எது இருந்தது எனில் கூறுகிறார்-தம என்று. தமஶ்ஶப்தத்தினால்“மறைத்தல்” என்கிற அர்த்தம் கருதப்பட்டிருக்கிறது. தமஸ்ஸாவது “அக்ஷரம் தமஸிலீயதே” என்று ப்ரக்ருதிதான் சொல்லப்படுகிறது என்று சங்கைவரின் உதாஹரிக்கிறார்-மாயாந்து ப்ரக்ருதிம் என்று. பற்பல அத்யாஸங்களுக்கு ஹேதுத்வத்தைக் காணபிக்கிறார்-இந்த்ரோமாயாபி: என்று. ஐக்யஜ்ஞாந மில்லாவிடில் இந்த (அவித்யை) நிவர்த்திக்கமுடியாத தென்பதைக் கூறுகிறார்-மம என்று. அநாதித்வத்தைச் சொல்லுகிறார்-அநாதி என்று. இந்த விடத்தில் நியாம்யவஸ்துக்களை அபேக்ஷித்திருக்கிற மஹேச்வரத்வ, இந்த்ரத்வ, பஹுவசநங்களின் ச்ரவணத்தால் விஜாதீய ஸஜாதீய ஸ்வகத பேதங்களோடு கூடியிருத்தல் ஏற்படக்கூடுமாதலால், அதை நிராகரிப்பதற்காக வ்யாக்யாநம் செய்கிறார்-நிர்விசேஷ என்று. ஸகுணத்வம் அறியப்பட்டிருந்த போதிலும், ஸ்வரூப பரவாக்யங்களுக்கு அநுகுணமாக தோஷத்தை வெளியிடுவதில் நோக்குள்ள வாக்யங்களுக்கு, வெளிப்படையாக அர்த்தமாகும் பேதத்தில் தாத்பர்யமில்லை என்று கருத்து. ப்ரஹ்மைவ—இந்த்ராதிசப்தங்களால் உணர்த்தப்பட்டிருந்த போதிலும், ஸ்வரூபபரவாக்யங்களால் உபதேசிக்கப்பட்டிருப்பது ப்ரஹ்மமே என்று கருத்து. (ப்ரமாணங்களாக) எடுக்கப்பட்டிருக்கிற அந்தந்த வாக்யங்களால் அறியப்பட்டிருப்பவைகளான அநாதித்வ, ஸதஸதநிர்வசநீயத்வ, திரோதாயகத்வ, விவிதாத்யாஸகரத்வங்களைச்சொல்லுகிறார்-அநாத்யவித்யயா இது முதலியதால். ஸ்வகத சப்தத்தால் அதிஷ்டானமாக இருத்தலால் ஸம்பந்தம் விவக்ஷிக்கப்பட்டதே யொழிய, ஸஜாதீய விஜாதீயங்களோடுகூட சேர்த்துசொல்லப்பட்டிருக்கிற ஸ்வகதநாநாத்வம் விவக்ஷிக்கப்பட்டதல்ல.

இவ்வாறாக தோஷவாசியான வாக்யங்களையடைந்திருக்கிற இந்த்ர, மஹேச்வர முதலிய பதஸமூஹமானது அர்த்த ஸ்வாரஸ்யத்தால் ஸ்வரூபபரவாக்யப்ராபல்யத்தை யநுஸரித்து நிர்விசேஷவஸ்து பரமாக வ்யாக்யானிக்கப்பட்டது. அதற்கு மேல், தோஷவாசிகளான உபப்ருஹ்மண வாக்யங்களாலேயே நிர்விசேஷவஸ்துவுக்கே தோஷஸம்பந்தித்வம் சொல்லப்பட்டிருக்கிற தென்பதைக் காட்டுகிறார்-யதோக்தம் என்று. ஜகத்தானது சின்மாத்ரமான ப்ரஹ்மத்தினது அஜ்ஞாநவிகாஸமென்று ப்ரதிக்ஜ்ஞை செய்யப்படுகிறது-ஜ்ஞாநஸ்வரூபம் என்று. நதுவஸ்துபூத:—(அது) சொல்லப்போகிற மலை, ஸமுத்திரம், பூமி முதலியவஸ்துக்களாக ஆகிறதில்லை

†அதிதி:பாசாந்ப்ரமுமோக்து—அதிதிதேவதை பாசத்தைஅவிழ்த்துவிடட்டும்.

என்றுபொருள். விஜ்ஞாநசப்தத்தினால் 'விவிதம் ஜ்ஞாயதே அநேந' என்கிற ‡காரணவ்யுத்பத்தியினால் அவித்யைசொல்லப்படுகிறது. ப்ரதிஜ்ஞைசெய்யப்பட்டிருக்கிற ப்ரபஞ்சத்தினுடைய அவித்யாகல்பித ஸ்வபாவத்தை வ்யதிரேகமுகத்தால் உபபாதிக்கிறார்-யதா என்று. சுத்தம்—அவித்யையில்லாதது. நிஜரூபி பேததர்சநமில்லாதது-அதற்கு நிமித்தமான கர்மங்கள் நாசமடைந்ததினால் ராகம் முதலிய தோஷங்களற்றது. 'ஸமந்தாத்கல்ப்யதே அநேந' என்று ஸங்கல்பம்—அதாவது அவித்யை. வஸ்துஷு—தர்மிபூதங்களான பதார்த்தங்களில். வஸ்துபேதா:—ஆகாரபேதங்கள் ஜகத்தில் காணப்படுகிறபடி வஸ்துபேதம் ஸத்யமல்ல என்பதை உபபாதிக்கும் நடுவிலுள்ள "வஸ்த்வஸ்தி கிம், மஹீ கடத்வம்" என்கிற இரண்டு ச்லோகங்களும் உபபாதிக்கவேண்டிய அதிக ப்ரமேயமில்லாமையால் இங்கு எடுக்கப்படவில்லை. அப்பிரமாணங்களையும் ஸித்தாந்தத்தில் எடுக்கப்போகிறார். விஜாதீயபேதமில்லாமையை உபஸம்ஹரிக்கிறார். தஸ்மாத் என்கிற முன்பாதியால். பிறகு ஆத்மபஹுத்வம் கால்பநிகம் என்று சொல்லுகிறார்- விஜ்ஞாநம் என்கிற பாதிச்லோகத்தால்- முன் சொல்லப்பட்டிருக்கிற ஆத்மைக்யத்தை ஏகம் ஸதைகம் என்கிற விடத்தில் 'ஏக' சப்தத்தால் அநுவதித்து, ஸ்வகதநாநாத்வத்தை நிஷேதித்து, பரம பரேசாதி சப்தங்களுக்குங்கூட வஸ்துமாத்ர பரத்வத்தை ப்ரதிபாதிக்கிறார்- ஜ்ஞாநம் என்று. 'விசுத்தம்' இது முதலிய பதங்களால் அவித்யாராஹித்யமும், அந்த அவித்யையினால் உண்டுபண்ணப்பட்டிருக்கிற பேததர்சநாராஹித்யமும், அந்த பேததர்சநமூலமாக ஸம்பவிக்கிற சோகம், லோபம் முதலியவைகளினின்மையும் கூறப்படுகிறது. ஸமௌகம்—ஜந்மவ்ருத்தி முதலியவைகளால் விடுபட்டது. எதைக்காட்டிலும் வேறொன்று இல்லையோ அது யதோக்த ஸ்வரூபத்துடன் கூடியதென்று அர்த்தம். இது பரமதமல்லவென்று சொல்லுகிறார்-ஸத்பாவ: என்று. ஏதத்ஸுவநாச்ரிதம்—புவநத்தினால் அதிஷ்டானமாக ஆச்ரயிக்கப்பட்ட ஜ்ஞானம். ஸம்வ்யவஹாரபூதம்—நாலாபக்கங்களிலும் வ்யவஹார விஷயமாக எது இருக்கிறதோ அந்த விஷயத்திலும் காரணம் அவித்யை என்று கூறப்பட்டது. அதுவும் பரமதம் அல்ல, உள்ளபடியேசொல்லப்படுகிறதென்று அர்த்தம்.

இவ்வண்ணம் ஸித்தபரமான வாக்ய பர்யாலோசனையினால் ப்ரஹ்மத்துக்கே ஸத்யத்வமும், மற்றதுக்கு அவித்யாபரிகல்பிதத்வமும் தத்வமென்று உரைக்கப்பட்டது. கர்மங்கள் அங்கங்களாக இருக்கத்தகாத வாக்யார்த்தஜ்ஞாநத்துக்கு மோக்ஷோபாயத்வம் சொல்லும் ப்ரஸ்துத விஷயத்திற்கு இதனால் என்னப்ரயோஜநம்? என்கிற சங்கைவர, உபாய பரவாக்யங்களுக்கும், ஸித்த பரவாக்யங்களால் அறியப்பட்டிருக்கிற அர்த்தத்திற்கு அநுகுணமான உபாயபரத்வத்தைக் கூறுகிறார்- அஸ்யா: என்று. சகாரம் சங்கையைவிலக்குகிறது. அஸ்யா: என்கிற பதத்தினால் †ஸதஸதநிர்வசநீயத்வாதி விசேஷண விசிஷ்டத்வம் விவக்ஷிக்கப்பட்டது. அதன் நிவ்ருத்தியில் ப்ரமாணத்தைக் காண்பிக்கிறார்—நபுந: என்று. இங்கு ம்ருத்யு: என்பது அவித்யை. அதன் நிவ்ருத்தியும் ஐக்ய ஜ்ஞானத்தினால் என்றுகூறுகிறார்-நதேகம்பச்யதி என்று. ம்ருத்யுகார்யமான ரோகம் முதலிய வற்றுக்கும் நிவ்ருத்தியை ஜ்ஞாபநம் செய்கிறார். நபச்யோ ம்ருத்யும்- என்று. 'நரோகம் நோத துக்கதாம்' என்பது அதற்கு சேஷம். நிர்விசேஷவஸ்து ஜ்ஞாநம் உண்டான க்ஷணத்துக்கு அடுத்த க்ஷணத்திலேயே அபய

‡காரணவ்யுத்பத்தியாவது—அநேந என்று மூன்றாம்வேற்றுமையினால் காட்டப்படும் காரணகாரகத்தை முன்னிட்டு ஏற்படுத்தப்படும் சப்தநிஷ்பத்தி.

†ஸதஸதநிர்வசநீயம்—இருக்கிறதென்றாவது இல்லையென்றாவது நிரூபிக்கக் கூடாதது.

ப்ராப்தியைக் காண்பிக்கிறார்-யதாஹி என்று. அத்ருஶ்யே—ப்ரத்யக்ஷாதிகளுக்கு விஷயமாகாதது. அநாத்ம்யே ஆத்ம்யம்—வ்யாபிக்கப்படுவது, அதாவது சரீரம்; சரீரமில்லாதது. அநிருக்தே—நிர்வசனம் செய்யத்தகாதது. அநிலயநே—ஆதாரமில்லாதது. அபயம்—பயமின்மைக்காக. அவ்யயீபாவஸமாஸம். ப்ரதிஷ்டா—நிஷ்டை. வாதிகளால் பந்தத்துக்கு மூலமாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிற கர்மமும் அவித்யா கல்பிதமாதலால் அதற்கும் ஜ்ஞாநத்தால் நிவ்ருத்தியைக்கூறுகிறார்-பித்யதே என்று. ஹ்ருதயக்ராந்தி:—அவித்யை. முன் வாக்யங்களில் ஸ்வல்பபேதம் அறியப்பட்டது போலாகிறதென்று அதை வ்யாவ்ருத்திப்பதின் பொருட்டு ஜ்ஞாநத்திற்கு ஐக்யவிஷயத்வத்தை ஜ்ஞாபிப்பதற்காக ஐக்யாபத்தியாகிற பலத்தைக் காண்பிக்கிறார்-ப்ரஹ்ம வேத என்று. எவ்வாறு உபாஸநமோ அவ்வாறன்றோ பலம். ஆதலால் ஐக்யஜ்ஞாநமே பந்தநிவர்த்தகமென்று கருத்து. உபாயாந்தரநிஷேதத்திற்காக உதாஹரிக்கிறார்-தமேவம் என்று.

𑌅𑌤𑍍𑌰 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌶𑌬𑍍𑌦𑍇𑌨𑌾𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌭𑌿𑌧𑍀𑌯𑌤𑍇। 𑌯𑌥𑌾 𑌸𑌨𑌤𑍍𑌸𑍁𑌜𑌾𑌤𑌵𑌚𑌨𑌮𑍍— “𑌪𑍍𑌰𑌮𑌾𑌦𑌂 𑌵𑍈 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌮𑌹𑌂 𑌬𑍍𑌰𑌵𑍀𑌮𑌿, 𑌸𑌦𑌾𑌪𑍍𑌰𑌮𑌾𑌦𑌮𑌮𑍃𑌤𑌤𑍍𑌵𑌂 𑌬𑍍𑌰𑌵𑍀𑌮𑌿” (𑌭𑌾-𑌉-௪௧-௪) 𑌇𑌤𑌿 । “𑌸𑌤𑍍𑌯𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌨𑌨𑍍𑌤𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 (𑌤𑍈-𑌆-௧-௧) 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌾𑌨𑌨𑍍𑌦𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮” (𑌬𑍃-௫-௯-௨௮) 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌶𑍋𑌧𑌕𑌵𑌾𑌕𑍍𑌯𑌾𑌵𑌸𑍇𑌯𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌶𑍇𑌷 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌕𑌤𑍍𑌵 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌞𑍍𑌚— “𑌅𑌥 𑌯𑍋𑌽𑌨𑍍𑌯𑌾𑌂 𑌦𑍇𑌵𑌤𑌾𑌮𑍁𑌪𑌾𑌸𑍍𑌤𑍇𑌽𑌨𑍍𑌯𑍋𑌽𑌸𑌾𑌵𑌨𑍍𑌯𑍋𑌽𑌹𑌮𑌸𑍍𑌮𑍀𑌤𑌿, 𑌨 𑌸 𑌵𑍇𑌦 (𑌬𑍃-௩-௪-௰) 𑌅𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑍋 𑌹𑍍𑌯𑍇𑌷𑌃, 𑌆𑌤𑍍𑌮𑍇𑌤𑍍𑌯𑍇𑌵𑍋𑌪𑌾𑌸𑍀𑌤 (𑌬𑍃-௩-௪-௭) 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑌸𑌿 (𑌛𑌾-௬-௮-௭) 𑌤𑍍𑌵𑌂 𑌵𑌾 𑌅𑌹𑌮𑌸𑍍𑌮𑌿 𑌭𑌗𑌵𑍋 𑌦𑍇𑌵𑌤𑍇, 𑌅𑌹𑌂 𑌵𑍈 𑌤𑍍𑌵𑌮𑌸𑌿 𑌭𑌗𑌵𑍋 𑌦𑍇𑌵𑌤𑍇, 𑌤𑌦𑍍𑌯𑍋𑌽𑌹𑌂 𑌸𑍋𑌽𑌸𑍌, 𑌯𑍋𑌽𑌸𑍌 𑌸𑍋𑌽𑌹𑌮𑌸𑍍𑌮𑌿” 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌵𑌾𑌕𑍍𑌯𑌸𑌿𑌦𑍍𑌧𑌮𑍍 । 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑌿 𑌚𑍈𑌵𑌮𑍍— “𑌆𑌤𑍍𑌮𑍇𑌤𑌿 𑌤𑍂𑌪𑌗𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑌿 𑌗𑍍𑌰𑌾𑌹𑌯𑌨𑍍𑌤𑌿 𑌚” (𑌶𑌾-𑌸𑍂-௪-௧-௩) 𑌇𑌤𑌿 । 𑌤𑌥𑌾 𑌚 𑌵𑌾𑌕𑍍𑌯𑌕𑌾𑌰𑌃- “𑌆𑌤𑍍𑌮𑍇𑌤𑍍𑌯𑍇𑌵 𑌤𑍁 𑌗𑍃𑌹𑍍𑌣𑍀𑌯𑌾𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌤𑌨𑍍𑌨𑌿𑌷𑍍𑌪𑌤𑍍𑌤𑍇𑌃” 𑌇𑌤𑌿 । 𑌅𑌨𑍇𑌨 𑌚 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌕𑌤𑍍𑌵𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨 𑌮𑌿𑌥𑍍𑌯𑌾𑌰𑍂𑌪𑌸𑍍𑌯 𑌸𑌕𑌾𑌰𑌣𑌸𑍍𑌯 𑌬𑌨𑍍𑌧𑌸𑍍𑌯 𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌰𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌾 ॥

ஸ்ரீபாஷ்யம்.—

இவ்விடத்தில் ம்ருத்யு சப்தத்தால் அவித்யை கூறப்படுகிறது. இந்த விஷயத்தில் ப்ரமாணம் ஸநத்ஸுஜாதவசநம்—“ப்ரமாதத்தையே ம்ருத்யுவென்று நான் சொல்லுகிறேன். எப்போதும் அப்ரமாதத்தை (ப்ரஹ்மஸ்வரூபத்தை உள்ளபடி யறிதலை) மோக்ஷமென்று சொல்லுகிறேன் “ப்ரஹ்மமானது அஸத்யத்தினின்றும், ஜடத்தினின்றும், தேசகாலங்களால் பரிச்சின்னமானவஸ்துவினின்றும் வ்யாவ்ருத்தமானது”. “விஜ்ஞாந

மாநந்தம் ப்ரஹ்ம" இது முதலிய ‡சோதக வாக்யங்களால் நிச்சயிக்கத்தக்க நிர்விசேஷ ஸ்வரூப ப்ரஹ்மாத்மைகத்வ விஜ்ஞானமும் "பின்பு அது வேறு நான் வேறாக இருக்கிறேன் என்று எண்ணி எவன் தேவதையை தன்னிலும் வேறாக உபாஸிக்கிறானோ, அவன் அந்த ப்ரஹ்மத்தை அறிகிறானில்லை— இவன் அபூர்ணனன்றோ, தான் என்றே உபாஸிக்கக்கடவன்" "நீ அந்த ப்ரஹ்மமாக இருக்கிறாய்" "ஹே பகவன்! தேவதையே! நீயே நானாகிறேன். பகவன்! தேவதையே! நான் தான் நீ ஆகிறாய். ஆகையால் நான் என்பவன் யாரோ அவன்தான் அந்த பரமாத்மா. எவன் அந்த பரமாத்மாவோ அவன்தான் நானாகிறேன்" என்கிற இது முதலிய வாக்யங்களால் ஸித்தம். இதையே (ஸூத்ரகாரரும்) கூறப்போகிறார், "ஆத்மேதி தூபகச்சந்தி க்ராஹயந்திச" தான் என்றே உபாஸிக்க வேண்டும். அவ்வண்ணமல்லவோ (முமுக்ஷுக்கள்) உபாஸிக்கிறார்கள். அவ்வாறே சாஸ்திரங்களும் உபதேசிக்கின்றன என்று. அப்படியே வாக்யகாரரும் "ஆத்மேத்யேவது க்ருஹ்ணீயாத் ஸர்வஸ்ய தந்நிஷ்பத்தே:" (ஆத்மாவென்றே க்ரஹிக்க வேண்டும்; எல்லாம் அங்கு கல்பிதமாக இருப்பதால்) என்று. இந்த ப்ரஹ்மாத்மைகத்வவிஜ்ஞானத்தினால் மித்யாரூபமானதும் காரணத்துடன் கூடியதுமான பந்தத்திற்கு நிவ்ருத்தி யுக்தமானதே.

ச்ருதப்ரகாசிகை.—

இந்தவிடத்தில் அவித்யாநிவ்ருத்தியானது அறியப்படுகிறதில்லை; அவ்வர்த்தத்தை உணர்த்துகிற சப்தச்ரவணமில்லாமையால், என்று கேட்கில் சொல்லுகிறார்—அத்ர என்று. "ம்ருத்யுர்தாவதி பஞ்சம:" (ஐந்தாவனாக யமன் ஓடுகிறான்) என்கிற இது முதலிய சுருதிவாக்யத்தில் ம்ருத்யுசப்தத்திற்கு யமன் முதலியவர்களிடத்தில் ப்ரயோகம் காணப்படுவதால், அதை வ்யாவ்ருத்திப்பதற்காகச் சொல்லப்பட்டது-அத்ர என்று. பந்தநிவ்ருத்திபரவாக்யங்களிலென்றர்த்தம். அதில் ப்ரயோகத்தைக் காணபிக்கிறார்-யதா என்று. "ப்ரமாதம் வை" என்கிற வசநத்திற்கு முந்தி "மோஹோ ம்ருத்யு: ஸம்மதோய: கவீநாம்" என்பது கூறப்பட்டது. மோஹம்—விபரீதஜ்ஞானம். அது ம்ருத்யு என்பது அங்யமதம். ஸநத்ஸுஜாதரோ ப்ரமாதத்தை ம்ருத்யுவென்கிற சப்தத்தால் வ்யவஹரிக்கிறார். ப்ரமாதமாவது—உள்ளபடி வஸ்துவை அறியாமை. ஸ்வரூபத்தை க்ரஹிக்காவிட்டால் வேறுவிதமாகவன்றோ ஞானம் உண்டாகிறது. ஆகையால் மோஹத்திற்கும் ஹேதுவாக விருக்கிறது, ஆத்மாவினிடத்திலுள்ள¶அநவதான ரூபமான ப்ரமாதம். இதனால் அதற்கு ஹேதுவாக இருக்கிற அவித்யையே ப்ரமாத சப்தத்தால் விவக்ஷிக்கப்பட்டது. அந்த அவித்யையே ம்ருத்யுவென்று அபிப்பிராயம். எடுக்கப்பட்ட வாக்கியங்களில் ஞானம் அவித்யையைப் போக்குகிறதென்று அறியப்பட்டது. ப்ரஹ்மமானது நிர்விசேஷ சிந்மாத்ர மென்பதும், அதனால் ஆத்மாவினுடைய ஏகத்வஜ்ஞானம் நிவர்த்தகமென்பதும் அறியப்படவில்லை என்று

‡ சோதகவாக்யம்—ப்ரஹ்மம் காரணமென்றுசொல்வதால், விகாரித்வம்முதலிய தோஷங்கள் வரக்கூடியதாயிருப்பதால் அந்த தோஷங்கள் ப்ரஹ்மத்தினிடத்தில் தட்டாதபடி சுத்தமாகக்காட்ட ப்ரஹ்மஸ்வரூபத்தை தெளிவாய் சோதிக்கும் "ஸத்யம் ஜ்ஞாநம்" இது முதலிய வாக்யம்.

¶ அநவதானம்— கவனமின்மை.

கேட்கில்கூறுகிறூர்-ஸத்யம்ஜ்ஞாந மென்று. ஸத்யஜ்ஞாநாதிவாக்யம்,எல்லாவஸ்துக்களிடத்தினின்றும் ப்ரஹ்மத்திற்கு வ்யாவ்ருத்தியை அறிவிப்பதற்காக எடுக்கப்பட்டது. புருஷார்த்தத்வத்தின் பொருட்டு அஸுகத்தினின்றும் வ்யாவ்ருத்தியை ஞாபிப்பதற்காக எடுக்கப்பட்டது—விஜ்ஞானமானந்தம் என்று. ஆதி சப்தத்தினுல் 'அஸ்தூலம்' இது முதலியது க்ரஹிக்கப்படுகின்றது, இவ்வண்ணம் ப்ரஹ்மத்துக்கு நிர்விசேஷத்வத்தில் ஶோதகவாக்யங்கள் உதாஹரிக்கப்பட்டன. பிறகு, ப்ரஹ்மமும் ஆத்மாவும் ஒன்று என்று அறிவிக்கும் ஶ்ருதியை எடுக்கிறூர்—அந்ய: என்று. “அந்ய யோऽந்யாம்” என்று ஐக்ய உபாஸனவிரோதியான பேதவாஸனையை விலக்குவதற்காக § விஹிதமான உபாஸனத்திற்கு ஐக்யம் தான் விஷயமென்று ஞாபிப்பதற்காக ஐக்யோபதேசத்தைக்காண்பிக்கிறூர்—தத்வமஸி என்று. உபதேசாநுகுணமாக உபாஸகன் தேவதையைக் குறித்துச்சொல்லுகிறுன்— த்வம்வா என்று. உபதேசிக்கப்பட்ட அர்த்தத்தை தன்மனதில் அநுஸந்தானஞ்செய்கிறுன், தத்யோஹம் என்று. இந்த அர்த்தம ஶ்ருதிக்கு தாத்பர்ய மென்று காட்டும் பொருட்டு ஸூத்ரத்தைக் காண்பிக்கிறூர்—வக்ஷ்யதிச என்று “ஆத்மேதி தூபகச்சந்தி க்ராஹயந்தி ச”—ஆத்மா என்றே உபாஸிக்கவேணும், அவ்வண்ணமே முமுக்ஷுக்கள் உபாஸிக்கிறூர்கள். க்ராஹயந்தி — அவ்வாறே ஶாஸ்திரஙகளும் ஞாபிக்கின்றன. ஸூத்ரகாருடைய அபிப்பிராயத்தை அறிந்தவர்களுடைய வாக்யத்தைக்காண்பிக்கிறூர்— தயாச என்று. அதில் நிஷ்பன்னமானதால் அதாவது ஆங்கு கல்பிதமாக விருப்பதால், என்று அர்த்தம். ஶ்ருதிமாத்ரமல்ல, அதற்கு அநுக்ராஹக தர்க்கமும் இருக்கிறதென்று சொல்லுகிறூர்—அநேநச என்று. சகாரம் ஸமுச்சயத்தில். கர்ம நிரபேக்ஷமான ஞானத்தினுல் நிவர்த்திக்கத்தக்கதென்பதற்காகச் சொல்லுகிறூர்— மித்யாநுபஸ்ய என்று. இந்த விசேஷணத்தில ஹேதுத்வம் உள்ளடங்கியிருக்கிறது. ஸகாரணஸ்ய— அவித்யையினுல் உண்டுபண்ணபட்ட ஹேத தர்சனதோடு கூடின பந்தத்திற்கு நிவ்ருத்தியானது யுக்தம், மித்யாஸர்ப்ப நிவ்ருத்தியில் இது ஸர்ப்பமல்ல இது கயிறு என்கிற ஞானத்தைத் தவிர்த்து கர்மாபேக்ஷையில்லை என்று கருத்து.

𑌨𑌨𑍁 𑌚 𑌸𑌕𑌲𑌭𑍇𑌦𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌃 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌵𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑌾 𑌕𑌥𑌮𑌿𑌵 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌜𑌨𑍍𑌯𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨 𑌕𑍍𑌰𑌿𑌯𑌤𑍇 ? । 𑌕𑌥𑌂 𑌵𑌾 “𑌰𑌜𑍍𑌜𑍁𑌰𑍇𑌷𑌾 𑌨 𑌸𑌰𑍍𑌪𑌃” 𑌇𑌤𑌿 𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌵𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑌾 𑌸𑌰𑍍𑌪𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌃 𑌕𑍍𑌰𑌿𑌯𑌤𑍇 ? । 𑌤𑌤𑍍𑌰 𑌦𑍍𑌵𑌯𑍋𑌃 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌯𑍋𑌰𑍍𑌵𑌿𑌰𑍋𑌧𑌃; 𑌇𑌹 𑌤𑍁 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌮𑍂𑌲𑌸𑍍𑌯 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌸𑍍𑌯 𑌚 — 𑌇𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍 ; 𑌤𑍁𑌲𑍍𑌯𑌯𑍋𑌰𑍍𑌵𑌿𑌰𑍋𑌧𑍇 𑌵𑌾 𑌕𑌥𑌂 𑌬𑌾𑌧𑍍𑌯𑌬𑌾𑌧𑌕𑌭𑌾𑌵𑌃 ? 𑌦𑍁𑌷𑍍𑌟𑌕𑌾𑌰𑌣𑌜𑌨𑍍𑌯𑌤𑍍𑌵𑌾𑌦𑌨𑍍𑌯𑌤𑌰𑌸𑍍𑌯 — 𑌇𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍 ; 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌯𑍋𑌰𑌪𑌿 𑌸𑌮𑌾𑌨𑌮𑍇𑌤𑌤𑍍 ॥

ஸ்ரீபாஷ்யம்.—

ஐயா ! ப்ரத்யக்ஷவிருத்தமான ஸகலபேதநிவ்ருத்தியானது, எவ்வாறு

---

§ விஹிதம்—விதிக்கப்பட்டது.

சாஸ்திரஜந்யஜ்ஞானத்தினால் உண்டுபண்ணப்படும்? இது பழுதை பாம்பல்ல என்கிற ஞானத்தால் ப்ரத்யக்ஷ விருத்தையான ஸர்ப்பநிவ்ருத்தி எவ்வாறு செய்யப்படலாம்? அங்கு இரண்டு ப்ரத்யக்ஷங்களுக்கு விரோதம். இங்கேயோ ப்ரத்யக்ஷமூலமான சாஸ்திரத்திற்கும் ப்ரத்யக்ஷத்திற்கும் விரோதம் என்றால், துல்யங்களான இரண்டுக்கும் விரோதம்வரின் எவ்வாறு பாத்யபாதகபாவம்? பூர்வோத்தரங்களிரண்டுக்கும் துஷ்டகாரணஜந்யத்வமும் தத்பாவமுமாகிற இவைகளாலென்று கூறப்படுமேயானால், சாஸ்திரம் ப்ரத்யக்ஷம் இவையிரண்டுக்கும் (இந்த நியாயம்) ஸமாநம்.

ஶ்ருதப்ரகாசிகை—

பிறகுஅநுமானம் ♆ஆகமம் இரண்டும் ‡ வியாப்திக்ரஹணம்*லிங்கதர்சனம், ‡‡ தர்மிப்ரதிபத்தி இவைகளின் பொருட்டும் வ்யுத்பத்தியின் பொருட்டும் ப்ரத்யக்ஷத்தை அபேக்ஷித்திருப்பதால்--அநுஷ்ணோயமக்நி: த்ரவ்யத்வாத்– "இந்த அக்நியானது உஷ்ணமில்லாதது, த்ரவ்யமாக இருப்பதால்" "ஆதித்யோ † யூப:"சூர்யன் பசுபாதநஸ்தம்பம் "யஜமான: || ப்ரஸ்தர:" யாகம் செய்பவன் கல், இது முதலிய விடங்களில் அநுமாநம் ஆகமம், இரண்டும் ப்ரத்யக்ஷவிருத்தமான அர்த்தத்தை ப்ரதிபாதிப்பதில் சக்தியற்றவைகளாகக் காணப்பட்டிருக்கின்றன, ஆதலால், ஶ்ருதியானது ப்ரத்யக்ஷ விருத்தமான அர்த்தத்தை ப்ரதிபாதிப்பதில் ஸாமர்த்தியமற்றது என்கிற அபிப்பிராயத்தினால், பேதவாதியானவன் வினவுகிறான்--நநுச என்று. சுருதிவாக்யங்களில் @ அவாந்தரசோத்யங்கள் பரிஹரிக்கப்பட்டபோதிலும், இந்த சோத்யமும் இருக்கிறதென்பது சகாரத்தினர்த்தம். ஸ்வப்நம் முதலியவைகளிலும், ஸர்ப்பம் பூமியின் பிளவு முதலியவைகளிலும், சில பேதநிவ்ருத்தியானது காணப்பட்டிருக்கிறது; அதை விலக்குவதற்காக ஸகல சப்தம். இவ்விடத்தில் ப்ரத்யக்ஷமானதால் பாத்யத்வ மில்லையா? அல்லது, § பரோக்ஷமாயிருப்பதாலும் மூலமான ப்ரத்யக்ஷத்தை அண்டியிருப்பதாலும் ஆகமத்திற்கு பாதகத்வமில்லையா? என்கிற இரண்டு சங்கைகளையும் மனதில் வைத்துக்கொண்டு முதலில் ப்ரத்யக்ஷத்வத்தால், அபாத்யத்வம் என்பதைப்பரிஹரிக்கிறார்– கடிம் வா என்று. அது ப்ரத்யக்ஷாபாஸமென்று கூறப்படுமேயாகில் அது ஒவ்வாது— முதலில் தோற்ற முண்டாகும் பொழுது ஆபாஸத்வம் அறியப்படாமையாலே பிறகு ப்ரமாண பாதத்தால் அது அறியப்படுகிறதென்று கூறப்படுமேயாகில், அது ப்ரபஞ்சக்ராஹியான ப்ரத்யக்ஷத்திற்கும் ஸமானம். "பேதத்திற்கு சுருதியினால் பாதம் வருவதால்"என்கிற இது இவ்விடத்தில் அபிப்பிராயப்படப்பட்டிருக்கிறது. ப்ரத்யக்ஷத்தை மூலமாகவுடையதாயிருப்பதாலும் பரோக்ஷமாக இருப்பதாலும், சாஸ்திரம் பாதக

♆ ஆகமம்—சாஸ்த்ரம். ‡ வ்யாப்தி கிரஹணம்— ஹேதுவும் ஸாத்யமும் தவறாமல் அநேகவிடத்தில் சேர்ந்திருத்தலை க்ரஹித்தல்.

* லிங்கதர்சனம்—ஸாத்யத்தை ஸாதிக்கக்கூடிய அதுஷ்டமானஹேதுவைக்காணுதல்.

‡‡ தர்மிப்ரதிபத்தி—வஸ்து ஸ்வரூபஜ்ஞானம்.

† யூபம்—யாகத்தில் பசுவைக்கட்டும் ஸ்தம்பம். || ப்ரஸ்தர:—கல்.

@ அவாந்தரசோத்யங்கள்—இடையில் வரும் ஆக்ஷேபங்கள்.

§ பரோக்ஷம்—நேரில் காணப்படாதது.

மாகாது என்று சங்கிக்கிறார்—தத்ர என்று. இஹது என்று; துல்யத்வத்தை விலக்குவதற்காக "து" சப்தம். ப்ரத்யக்ஷ மூலஸ்ய என்று. || மூலியாக இருப்பதினால் சாஸ்திரம பாதகமல்லவென்று கருத்து. ஶாஸ்த்ரஸ்ய என்று பரோக்ஷமாக விருப்பதால் பாதகமல்லவென்று கருத்து. துல்யத்வம் ஹேதுவாக இருக்கும் பக்ஷத்தில், பாத்ய பாதகபாவமானது மாறியும வரக்கூடுமாகையால் அது † ப்ரயோஜகமல்ல. ஆதலால் அந்த இடத்தில் பாத்ய பாதக பாவத்தில் உன்னல் வேறு காரணம் சொல்லத்தக்கது. அதுவே நமக்கும ஹேது என்கிற அபிப்பிராயத்தினால் சொல்லுகிறார்—துல்யயோ: என்று. பாத்ய பாதக பாவத்தில நியமத்தை வ்யாவர்த்திப்பதற்காக பேதவாதி சொல்லக்கூடிய வேறு ஹேதுவை ஆசங்கிக்கிறார்—பூர்வோத்தரயோ: என்று பூர்வோத்தரயோ:—பாத்யபாதகங்கள் இரண்டுக்கும்,உன்னல்சொல்லப்பட்ட ப்ரயோஜகம இவ்விடத்திலும துல்யமென்று கூறுகிறார்—சாஸ்த்ர என்று.

இதமுக்தம் பவதி— பாத்யபாதகபாவே துல்யத்வஸாபேக்ஷத்வநிரபேக்ஷத்வாதிர் ந காரணம்; ஜ்வாலாபேதாநுமாநேந ப்ரத்யக்ஷஸ்ய பாத்யத்வாப்ரஸங்காத் | தத்ர ஹி ஜ்வாலைக்யம் ப்ரத்யக்ஷேணாவகம்யதே | ஸர்வத்ர—ஸதி த்வயோ: ப்ரமாணயோர்விரோதே யத்ஸம்பவதந்யதாஸித்தி, தத் பாத்யம்; அநந்யதாஸித்தநிரவகாஶம் து பாதகம்— இதி ஸர்வத்ர பாத்யபாதகபாவநிர்ணய:— இதி ||

ஸ்ரீ பாஷ்யம் —

இது சொல்லப்பட்டதாக வாகிறது—பாத்ய பாதக பாவத்தில் துல்யத்வம், ஸாபேக்ஷத்வம், நிரபேக்ஷத்வம் முதலியது காரணமன்று $ ஜ்வாலாபேதானுமானத்தால். ப்ரத்யக்ஷத்திற்கு பாத்யத்வமானது உண்டாகாமல் போகவேண்டி வருவதால். அவ்விடத்திலோ எனில் ப்ரத்யக்ஷத்தால் ஜ்வாலை ஒன்று என்று அறியப்படுகிறது. ஆனது பற்றி இரண்டு ப்ரமாணங்களுக்கு விரோதம் வரின், எது ஸம்பவிக்ககூடிய அந்யதாஸித்தியுடன கூடியதோ, அது பாத்யம் ; † அநந்யதாஸித்தமாயும் ‡ அவகாசமில்லாததாகவுமிருக்கிற மற்றது பாதகமென்று எல்லாவிடத்திலும் பாத்யபாதக பாவ நிர்ணயம்.

ஶ்ருதப்ரகாசிகை:—

மூலமூலித்வம் முதலியது உள்ளவிடத்தில் மூலமான ப்ரத்யக்ஷத்திற்கு பாதகத்வமும், மற்றதுக்கு பாத்யத்வமும் காணப்பட்டிருக்கிறது. ஆகையால், மூலமூலி

|| மூலி—மூலத்தை யுடையது.　　　† ப்ரயோஜகம்—காரணம்.

$ ஜ்வாலாபேதாநுமானமாவது— தீபஜ்வாலையானது பார்க்கும்போது ஒன்றாய் தோன்றினபோதிலும எண்ணெய் திரிமுதலிய ஸாமக்ரிகளின் பேதத்தினால் ஜ்வாலைகள் அநேகங்கள் என்று அநுமானித்தல்.

† அநந்யதாஸித்தி—வேறுவிதத்தினால் ஸித்திக்க முடியாதது.

‡ அவகாசம்—வேறுபோக்கு இடமில்லாதது,

த்வம், பரோக்ஷத்வ அபரோக்ஷத்வம் முதலிய வைஷம்யங்களில்லாமலிருக்கும்போது த்ருஷ்டகாரண ஜந்யத்வம் தத்பாவம் என்கிற இரண்டும் பாத்யபாதக பாவத்தில் ப்ரயோஜகங்களென்கிற சங்கையை கூறுகிறார்— ஏதத்துக்தம் என்று. துல்யத்வமிருக்கையில் த்ருஷ்டகாரண ஜந்யத்வ தத்பாவங்கள் இரண்டும் ப்ரயோஜகங்கள் அல்லவென்கிற அபிப்பிராயத்தினால் துல்ய சப்தம் பிரயோகிக்கப்பட்டது. ‡‡ விசிஷ்டத்துக்கு ஹேதுத்வம் வரின் விசேஷணாம்சத்துக்குங்கூட ஹேதுத்வம் வருவதால் துல்யசப்தத்தினால் $ ஏகதேசத்தை எடுத்தபடி. த்ருஷ்டகாரண ஜந்யத்வ தத்பாவங்களுக்கு விசேஷணபூதமாயிருக்கிற துல்யத்வம் விவக்ஷிக்கப்பட்டிருக்கிறது. துல்யத்வே ஸதீ—விபரீத, ப்ராபல்ய, தௌர்பல்ய காரணாபாவமிருக்கையில் த்ருஷ்டகாரண ஜந்யத்வ தத்பாவங்கள் பிரயோஜகங்களல்லவென்று பொருள். ஸாபேக்ஷத்வம நிரபேக்ஷத்வம்—*மூலமூலிபாவம். ஆதி சப்தத்தினால் பரோக்ஷாபரோக்ஷபாவ, ‡ விளம்பாவிளம்பங்கள் விவக்ஷிக்கப்பட்டிருக்கின்றன சுருதிலிங்காதிகளில் † விளம்பாவிளம்பங்களாலன்றோ ப்ராபல்ய தௌர்பல்யங்கள். அன்றிக்கே— அப்ரயோஜகமாகக்கூறப்பட்ட துல்யத்வமானது, திருஷ்டாந்தமாக அநுவதிக்கப்பட்டது. வேறுவிதமான வைஷம்ய மில்லாமலிருக்கையில் 'த்ருஷ்டகாரண ஜந்யத்வ தத்பாவங்கள்கூட ஆதி சப்தத்தால் விவக்ஷிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளுக்கு அப்ரயோஜகத்வத்தை ஒரு திருஷ்டாந்தத்தால் உபபாதனஞ் செய்கிறார்— ஜ்வாலா என்று. ''அந்யதா'' என்கிற பதம் சேர்த்துக் கொள்ளத்தக்கது. ப்ரத்யக்ஷோபமர்த்தாயோகாத் என்று. ┼(உபமர்த்தத்திற்கு) அஸித்தியானது ப்ரஸங்கிக்கவேண்டிவருவதால் என்று அர்த்தம். ஜ்வாலாபேதாநுமாநத்திலோவெனில் மூல*மூலிபாவமிருக்கிறது. § விளம்பா விளம்பங்களும் இருக்கின்றன. அநுமானம் ப்ரத்யக்ஷ ஸாபேக்ஷமாக இருப்பதால்-துல்யத்வமிருக்கையில், த்ருஷ்டகாரணஜந்யத்வம் அதின் அபாவம் இவ்விரண்டுக்கும்,ப்ரயோஜகத்வங்கூட இதனால் தள்ளப்பட்டதாக ஆகிறது—அந்த துல்யத்வ மில்லாமலிருந்தபோதிலுங்கூட பாத்ய பாதக பாவம் காணப்படுவதால். அதில் எதை விஷயீகரிக்கிற ப்ரத்யக்ஷம் பாதிக்கத்தக்கதாக ஆகிறது எனில் சொல்லுகிறார்— தத்ராஹி என்று. ஐக்யத்தை க்ராஹிக்கிற ப்ரத்யக்ஷம் பாதிக்கத்தக்கதென்று அர்த்தம். அங்ஙனமாகில் எது ப்ரயோஜகமெனில் கூறுகிறார்- ஏவஞ்ச - என்று. துல்யத்வம் முதலியவைகளுக்கு ப்ரயோஜகத்வமானது பொருந்தாமல் போகவே, த்வயோ: என்று. இரண்டு ப்ரத்யக்ஷங்களுக்கும், இரண்டு அநுமானங்களுக்கும், இரண்டு ஆகமங்களுக்கும், ப்ரத்யக்ஷம் அநுமானம் இரண்டுக்கும், அநுமானம் ஆகமம் இரண்டுக்கும், ப்ரத்யக்ஷம் ஆகமம் இரண்டுக்குமாவது என்று பொருள். யத்ஸம்ஹாவ்யமாநாந்யதாஸித்தி என்று. ஸாவகாசமாயிருப்பதால் அந்யதாஸித்தம் என்று அர்த்தம்— அடுத்து அநந்யதாஸித்தம் அநவகாசமென்று சொல்வதால். × விஷயாந்தராலாபமாவது அல்லது அப்ரமாணகோடிநிவேசமாவது ஸாவகாசத்வம்-தன்னால் உணர்த்தப்பட்டுள்ள அர்த்தவிஷயப்ராமாண்யத்தை விட்டுங்கூட ஸம்பாவிதமான உத்பத்தியுடன் கூடியிருத்தல் அந்யதாஸித்தத்வம்-விருத்தமான அர்த்தத்தை

---

‡‡ விசிஷ்டம்—விசேஷணத்துடன் கூடியது. $ ஏகதேசம்—ஒரு அம்சம்.

‡ விளம்பம்—தாமதமாய் அறியப்படுதல். அவிளம்பம்—சீக்கிரம் அறியப்படுதல்.

┼ உபமர்த்தம்—நாசம்.

* மூலம்—காரணம், மூலி—ஹேதுவுடன் கூடியது-அதாவது கார்யம்.

§ விளம்பம்—தாமதம், அவிளம்பம—சீக்கிரம்.

× விஷயாந்தராலாபம்— வேறுவிஷயத்தினால் விலக்கப்பெற்று பூர்வத்துக்கு அப்ராமாண கோடி நிவேசம்.

உணர்த்துகிற, பிரமாணத்தை வாதிக்காமலுங்கூட தான் உதித்தல் என்று. கருத்து. அநந்யதாஸித்தம் அநவகாசம் என்று. அநந்யதாஸித்தமாவது - தன்னுடைய அர்த்தத்தில் ப்ராமாண்யமில்லாமல் உண்டாகாமை விருத்தார்த்த அப்ரமாணங்களை வாதியாமல் உண்டாகாமை என்று அர்த்தம்— அதுவும் அநவகாசமாக விருத்தலால். அநவகாசத்வமாவது—வேறு இடம்கிடையாமை, அல்லது அப்ரமாணகோடிநிவேசாபாவம். அப்ரமாணகோடியில் சேர்க்கக்கூடாமை, வேறுபோக்கிடம்கிடையாமை இவ்விரண்டுகாரணங்களால் விருத்தார்த் ‡ தோபஸ்தாபகமான ப்ரமாணத்தை வாதியாமல் உதியாமை என்று அர்த்தம். இதிலரீவத்ர—முற்கூறப்பட்ட விதமாக ¶ ஸஜாதீயங்களாகவோ, $ விஜாதீயங்களாகவோ இருக்கிற இரண்டு பிரமாணங்களுக்கு விரோதம் வருமாகில், என்று அர்த்தம்.

தஸ்மாதநாதிநிதநாவிச்சிந்ந ஸம்ப்ரதாயாஸம்பாவ்யமாநதோஷ
கந்தாநவகாஶ ஶாஸ்த்ரஜந்ய நிர்விஶேஷ நித்யஶுத்த முக்தபுத்த ஸ்வ
ப்ரகாஶ சிந்மாத்ர ப்ரஹ்மாத்மபாவாவபோதேந ஸம்பாவ்யமாநதோஷ
ஸாவகாஶ ப்ரத்யக்ஷாதி ஸித்த விவிதவிகல்பரூப பந்தநிவ்ருத்திர்யுக்
தைவ । ஸம்பாவ்யதே ச விவிதவிகல்பபேதப்ரபஞ்சதர்ஶிந: ப்ரத்ய
க்ஷஸ்யாநாதி பேதவாஸநாதிரூபாவித்யாக்யோ தோஷ: ।

ஸ்ரீபாஷ்யம்—

ஆதலால், ஆதியும் அந்தமுமில்லாததும் தொடர்ச்சியாகவும் இருந்து வருகிற ஸம்ப்ரதாயமுள்ளதும், தோஷகந்தமில்லாததும, அவகாசமற்றதுமான சாஸ்திரத்தினால் உண்டாகக்கூடிய நிர்விசேஷ, நித்யசுத்த முக்த புத்தஸ்வப்ரகாச சின்மாத்ரப்ரஹ்மாத்ம பாவஜ்ஞானத்தினால், ஸம்பாவ்யமானதோஷத்துடன் கூடியதும் ஸாவகாசமாகவுமிருக்கிற ப்ரத்யக்ஷாதிஸித்தமான பற்பல விகல்ப ரூபமானபந்தம் நிவ்ருத்தியாவது யுக்தமே. பற்பல விகல்பபேதமுள்ள ப்ரபஞ்சக்ராஹியான ப்ரத்யக்ஷத்திற்கு அநாதி பேதவாஸநாதிரூபமான அவித்யை என்கிற பெயருள்ள தோஷமானது ஸம்பவிக்கக்கூடியதே.

ச்ருதப்ரகாசிகா—

இவ்வண்ணம் வாய்யவாயக பாவத்தில் ப்ரயோஜநமிருக்கட்டும், அதனால் ப்ரஸ்துதமான சாஸ்த்ர ப்ராபல்யத்திற்கு என்ன பிரயோஜனமென்று வினவினால் அதற்கு உத்தரம் கூறுகிறார்.—தஸ்மாத் என்று. தஸ்மாத்— அந்யதாஸித்தத்வம் அநந்யதாஸித்தத்வம் இவ்விரண்டுமே வாய்யவாயகபாவத்தில் பிரயோஜநமாக விருப்

‡ உபஸ்தாபகமான—உணர்த்துகிற, ¶ ஸஜாதீயம்—ஓர் வகுப்பிலடங்கியது.
$ விஜாதீயம்—வெவ்வேறு வகுப்பைச்சார்ந்தது.

பதால். அநாதி நிதநாவிச்சிந்நஸம்ப்ரதாய என்று விட்டுப்போகாமல் தொடர்ந்து வருகிற ஸம்ப்ரதாயமாதலால், அநாதிநிதனம் (ஆதியந்தமில்லாதது). $ ஸம்ப்ரதாயத்துக்கு அவிச்சேதமிருக்கும்போது † கர்த்ருஸ்மரணம் இல்லாமையன்றோ அபௌருஷேயத்வத்திற்கு ஸாதகம். "அநாதிநிதநா ஹ்யேஷா வாகுத்ஸ்ருஷ்டா ஸ்வயம்புவா। ஆதௌ வேதமயீ திவ்யா யத: ஸர்வா: ப்ரஸூதய:". (எதனிடத்திலின்று அனைத்தும் உண்டாயிருக்கின்றனவோ அப்படிப்பட்டதும், ஆதியந்தமில்லாததுமான வேதமயமான இந்த திவ்ய வாக்கானது, ஆதியில் பரமாத்மாவினால் வெளியிடப்பட்டது). "அநாதிநிதநம் ப்ரஹ்ம" இது முதலிய வசனங்களும் அநாதிநிதந சப்தத்தினால் ஞாபகப்படுத்தப்பட்டன. அதனாலேயேதான் தோஷஸம்பாவனையற்றது. ப்ரமம், ஏமாற்றும் எண்ணம் கவனமின்மை, அசக்தி எனகிறநான்கு தோஷங்களுடன் கூடியிருத்தல், பௌருஷேயத்வத்தால் உண்டுபண்ணப்படுகிறதன்றோ, அதனாலேயே அநவகாசம். சாஸ்த்ரஜந்ய என்கிற சப்தத்திற்கு ‡‡ அவபோத சப்தத்தோடு அந்வயம் ஸாத்யஸாதநபாவத்தின் அங்கீகாரமானது விரோதத்தை அபேக்ஷித்திருப்பதால், விரோதத்தைக் காண்பிக்கிறார்—நிர்விசேஷ இது முதலியதால். நித்யம் - காலத்தால் அளவிடப்படாதது. சுத்தம் - அவித்யாஸம்பந்தமில்லாதது. அதனாலேயே முக்த சப்தமானது அவித்யையினால் உண்டுபண்ணப்பட்ட பிறப்பு முதலியவற்றின் இன்மையை உணர்த்துகிறது. ஸ்வயம் - ப்ரகாசிக்கின்ற, ஸ்வப்ரகாச சப்தமானது, பூர்வம் புத்தசப்தத்தால் சொல்லப்பட்ட ப்ரகாசமானது பராதீனமென்கிற ஸந்தேஹத்தை நிரஸிப்பதற்காக. தானே ப்ரகாசிக்கின்ற ஸ்வபாவத்துடன் கூடியிருத்தல் ஸ்வப்ரகாசத்வம் - அதுவும் சிந்மாத்ர சப்தத்தால் வாச்யமாகவிருப்பதால்; ஸ்வயம் ப்ரகாசத்வமல்லவோ சித்த்வம். சித்ஸ்வரூபத்வமும் ச்ருதிஸித்தம். மாத்ர சப்தம் ஜ்ஞேயத்வநிராஸத்தில் நோக்குள்ளது. ப்ரஹ்மாத்மபாவாவபோதே—இப்படிப்பட்ட ப்ரஹ்மத்திற்கும் தனக்கும் ஐக்யஜ்ஞானத்தினால் என்று அர்த்தம். ஸம்பாவ்யமாந என்று. ஸம்பாவ்யமானதோஷத்துடன் சேர்ந்திருப்பதால ஸாவகாசம் - அப்ரமாணகோடியில் இடம் பெற்றது. அதனாலேயே அந்யதாஸித்தத்வமும் பலித்தது. அந்யதாஸித்தத்வமாவது - விபரீதப்ரமாணத்தைப்பாதியாமல் கூட உத்பத்தியின் ஸம்பவம். ப்ரத்யக்ஷாதி என்று ஆதிசப்தத்தால் அநுமாநம் முதலியது சொல்லப்படுகிறது. விவித என்று. தேவாதி ரூபத்தாலும் ஸ்வகார்யமான ஜந்மஜராமரணாதி ரூபத்தாலும் பலவாறாக இருக்கிற ஜ்ஞாத்ரு ஜ்ஞேயாதி விகல்பம் - அதுவே பந்தம், அதின் நிவ்ருத்தி என்று அர்த்தம் ஸம்பாவ்யமானதோஷம் எது வெனில் சொல்லுகிறார்—ஸம்பாவ்யதோஷ என்று. பேதப்ரபஞ்ச: - பேதஸமுதாயம், அன்றிக்கே பேதரூபமான ப்ரபஞ்சம் விவித விகல்ப சப்தமானது, ப்ரபஞ்ச விசேஷணம். அல்லது பேதவிசேஷணம். பேதம் ஜ்ஞாத்ருஜ்ஞேயம் முதலியது. அதுவும் ப்ராஹ்மணாதி ரூபத்தால் பலவாறாக உள்ளது. தேவமனுஷ்யாதி ரூபத்தால் விகல்பமுள்ளது. இக்காலத்திலுள்ளவர்கள் சிலர் காமாலை, § திமிரம் முதலியதோஷத்தைக்கூறுகின்றனர். அது யுக்தமன்று. அது ஏதோ ஒரு ஸமயத்தில் ஸம்பவிப்பதால்: காசாதிகளால் துஷ்டமான ப்ரத்யக்ஷத்தை ஸபக்ஷமாகச் செய்துகொண்டு, மற்றவைகளுக்கு காசாதி துஷ்டத்வம் அநுமானிக்கப்படுகிறது எனில், அல்ல;—அதிப்ரஸங்கம் வருவதால். அநாதி நிதநம் என்று

$ ஸம்ப்ரதாயம்—பரம்பரையாக வருகிற ஸதாசார்யாளுடைய உபதேசம்.

† கர்த்ருஸ்மரணம்—கர்த்தாவை ஸ்மரிப்பித்தல். § திமிரம், காசம்—ஓர்விதமான கண்ணுக்குவரும் ரோகங்கள். ‡‡ அவபோதம்—ஞானம்.

எந்த சாஸ்திரம் சொல்லப்பட்டதோ அதற்கும் "சப்தத்வாத்" இது முதலிய ஹேதுவால் துஷ்டகர்த்ருத்வாநுமானம் சுலபமாகச் செய்யத்தக்கதன்றோ. அங்கு, கர்த்தா $ யோக்யாநுபலப்தியினால் நிரஸிக்கப்பட்டானென்று சொல்லப்படுமேயானால் அது இங்கேயும் துல்யம். காசம் முதலியவற்றுக்கு தோஷத்வகல்பனம் பொருந்தாமல் போவதால் அதை வ்யாவ்ருத்திப்பதற்காகக் கூறுகிறார்— அநாதி இது முதலியதால். பேதவாஸநாதி ரூபா— ஆதிசப்தத்தினால் பேதவாஸனைக்கு ஹேதுவாக இருக்கிற பேததர்சனம் விவக்ஷிக்கப்பட்டிருக்கிறது. இவ்விரண்டுக்கும் ஹேதுஹேதுமத்பாவத்தில் அந்யோந்யாஸ்ரயதோஷபரிஹாரத்திற்காக அநாதி சப்தம். பீஜாங்குர நியாயத்தால் என்று கருத்து பேதர்சனமும் பேதவாஸனையுமன்றோ கார்யாவித்யை அதனால் தான் சொல்லப்பட்டது பேதவாஸநாதி ரூபா அவித்யா என்று. " ஆதித்யோ யூப: " இது முதலியவிடங்களில யூபம். ஆதித்யன் முதலியவற்றுக்கு ஐக்யம முதலியவற்றை ப்ரதிபாதியாமலிருப்பது ப்ரத்யக்ஷவிரோதத்தாலல்ல; பின்னையோ, அந்யபரமாகவிருப்பதால், " யத்பரஸ்ஸப்த: ஸஸப்தார்த்த: " (சப்தம் எந்த அர்த்தத்தை ப்ரதிபாதிப்பதில் முக்கியமான நோக்குள்ளதோ, அதுதான் சப்தத்தினர்த்தம்) என்றல்லவோ நியாயத்தை யறிந்தவர்கள் கூறுகின்றனர். அந்யபரத்வமும் தாத்பர்யலிங்கமில்லாமையால் அறியபபடுகிறது. ஆதித்யோ யூப: என்கிற வாக்யம், § யூபாஞ்ஜநவிதிசேஷமாக விருப்பதால், அந்யபரமெனறு அந்யனுடைய அபிப்பிராயம்.

[illegible] ([illegible]) [illegible] (ஶா-அ-க-௫) [illegible] ? [illegible] ॥

$ உபலப்தியின் அபாவம் அநுபலப்தி, உபலப்தி - அறிதல், அதின் இன்மை அநுபலப்தி - யோக்யாநுபலப்தியாவது, ப்ரதியோகி ஸத்வப்ரஸஞ்ஜந ப்ரஸஞ்ஜித ப்ரதியோகித்வம் - ப்ரதியோகியின் ஸத்தாப்ரஸஞ்ஜநத்தினால் ப்ரஸஞ்ஜிதமான ப்ரதியோகியோடு கூடியிருத்தல் (உதாஹரணம்) பூமியில் கடம் இல்லாதவமயத்தில் அந்த கடத்தின் அபாவமானது இந்தயோக்யாநுபலப்திப்ரமாணத்தால் அறியப்படுகிறது, கடம் இங்கு இருக்குமேயானல் பூதலத்தைப்போல அறியப்படும். அப்படி அறியப்படாமையால் இங்குகடமில்லை என்பது அநுபலப்திக்கு 'யோக்ய" என்கிற அடைமொழியினால் ஒருபோதும் புலப்படாத ப்ரதியோகிகளான பிசாசம்முதலிய அதருச்யவஸ்துக்களின் அபாவமானது இந்தப்ரமாணத்துக்கு விஷயமாகாது. § அஞ்ஜநம்— அபிஷேகம்.

ஸ்ரீபாஷ்யம்—

ஐயா ! ஆதியந்தமில்லாமல் அவிச்சின்ந ஸம்ப்ரதாயத்துடன் கூடியிருப்பதால் தோஷமில்லாமலிருந்தபோதிலும் “ ஜ்யோதிஷ்டோமேந ஸ்வர்க்க காமோ யஜேத ” (ஸ்வர்க்கத்திலாசையுள்ளவன் ஜ்யோதிஷ்டோமத்தினால் தேவதையை ஆராதிக்கவேண்டும்) எனகிற இது முதலான பேதத்தை அவலம்பித்திருக்கிற சாஸ்திரத்திற்கு பாத்யத்வம ப்ரஸங்கிக்குமேயெனில், உண்மைதான்; பூர்வாபராபச்சேதத்தில் பூர்வசாஸ்திரத்தைப் போல; மோக்ஷ சாஸ்திரத்திற்கு அவகாசமில்லாமையால் அந்த மோக்ஷசாஸ்திரத்தினால் (பேதாவலம்பியான சாஸ்திரம்) பாதிக்கவேபடுகிறது வேதாந்த வாக்கியங்களிலும் பரப்ரஹ்மம் நிர்குணமாக இருப்பதால், ஸகுணப்ரஹ்மோபாஸந பரசாஸ்திரஙகளுககு இதுவே நியாயம். ஐயா ! “ யஸ்ஸர்வஜ்ஞ: ஸர்வவித்” ‘பராஸ்ய ஶக்திர் விவிதைவ ஶ்ரூயதே ஸ்வாபாவிகீ ஜ்ஞானபல க்ரியா ச” “ஸத்யகாமஸ்ஸத்யஸங்கல்ப:” எவன (எல்லாவற்றையும் ஸாமாந்யாகாரத்தாலுமறிகிறனோ, எல்லாவற்றையும் விசேஷித்துமறிகிறனோ, இவனுக்குச் (பரப்ரஹ்மத்திற்கு) சிறந்த சக்தியானது பற்பலவிதமாக சுருதியினால் கூறப்படுகிறது ஜ்ஞானம்,பலம், க்ரியை, இவைகள் அனைத்தும் ஸ்வபாவஸித்தமாக இருக்கிறது. ஸத்யமான காமமுள்ளவன் - ஸத்யமான ஸங்கல்பமுள்ளவன்) இது முதலிய ப்ரஹ்மஸ்வரூபத்தை நிரூபிப்பதில் நோக்குள்ள சாஸ்திரங்கள் எவ்வாறு பாதிக்கத்தக்கதாக ஆகும் ? நிர்குணவாக்யங்களுடைய ஸாமர்த்யத்தால், என்று சொல்லுகிறோம்.

ச்ருதப்ரகாசிகை.—

எது தோஷமற்றதென்று உரைக்கப்பட்டதோ, அதிலும் பாத்யபாதகபாவத்திற்கு நிமித்தமாக இருக்கிற அர்த்த விரோதமிருக்கிறது. ஆகையால் அவசியம் இரண்டில் ஒன்றுக்கு பாத்யத்வ முண்டாகலாம. அதில், பாத்யத்வத்தில் ப்ரயோஜகமான யாதொரு துஷ்டகாரண ஜந்யத்வமுண்டோ அது இல்லையே இந்த விடததில் எவ்வாறு நிர்வாஹம்? என்கிற அபிப்பிராயததால் சோதநஞ்செய்கிறார்--நநுஎன்று. ப்ராபல்ய தௌர்பல்யஙகளுக்கு ஹேதுவில்லையென்று சொல்லுகிறார்—அநாதி என்று. “அபி” சப்தம விரோததவதைக்காட்டுகிறது. அாத்தவிரோதத்தைக் காணபிககிறார்—ஹேதூாவலம்பிந: என்று. ஸத்யமென்கிற பதம் பாதிஅங்கீகாரததில். பேதாவலமபி சாஸ்திரத்திற்கு பாத்யத்வம் என்கிறவிஷயததில் அங்கீகாரம - துஷ்டகாரணஜந்யதவ விஷயத்தில் அஙகீகாரம். பாதயபாதகபாவத்தில் அநயதாஸித்தத்வாநந்யதாஸிததத்வங்களே ப்ரயோஜகஙகள். முற்கூறப்பட்ட துஷ்டகாரண ஜந்யத்வமும் அந்யதாஸிதத்வப்ரகாரவிசேஷமன்றோ, இவ்விடத்திலும முகபேதததால் அந்யதாஸித்தியை உபபாதிக்கிறார்—பூர்வாபர இது முதலியதால். அபச்சேத நியாயததால் பாத்யத்வம் ப்ரத்யக்ஷத்திற்கும துல்யம், அவ்விடததில் தோஷமூலத்வமும் பாத்யத்வவிஷயத்தில் அதிகமான ஹேது. அபச்சேதத்தில் பூாவாபரசாஸ்திரஙகளிரண்டுக்கும் பௌர்வாபர்யமானது, ‡ ப்ரமிதியின் உதபத்தி க்ரமததாலல்லது பாடகரமத்தாலல்ல “ஜந்து ருதவிக்

‡ ப்ரமிதி—ஞானம்.

குக்கள் நன்ருக * அந்வாரம்பணஞ்செய்துகொண்டவர்களாக ஸஞ்சரிக்கின்றார்கள். அத்வர்யுவை ப்ரஸ்தோதா பின் தொடருகிறன்; ப்ரஸ்தோதாவை ப்ரதிஹர்தா; ப்ரதிஹர்தாவை உத்காதா; உத்காதாவை ப்ரஹ்மா; ப்ரஹ்மாவை யஜமானன்" என்று விதிக்கப்பட்டிருக்கிற அந்வாரம்பணத்திற்கு விச்சேதம் வரின் ப்ராயச்சித்தம சொல்லப்படுகிறது. ¶ வெஹிஷ் பவமானத்தில் ஸஞ்சரிக்கின்றவர்களுள் உத்காதா, ப்ரதிஹர்தாவை விட்டுவிடுவானேயாகில் தக்ஷிணையில்லாமலே அந்தயஜ்ஞம் நிறுத்தத்தக்கது. அவன் மறுபடியும் யாகஞ்செய்யவேண்டும் முந்தின யாகத்தில் எந்த தக்ஷிணையைக்கொடுக்கப் போவதாக தீர்மானித்திருந்தானே, அந்த தக்ஷிணையைகொடுக்கக்கடவன். ப்ரதிஹர்த்தா விட்டு விடுவானேயாகில் தன்சொத்துமுழுவதையும் தக்ஷிணையாகக்கொடுத்து யாகத்தை முடித்து விடவேண்டும்' என்று. அப்படிப்பட்ட இந்த இரண்டு சாஸ்திரங்கள் விஷயம். இவ்விடத்தில் உக்காதா ப்ரதிஹர்தா இரண்டுபேர்களுக்கும் வெவ்வேறு ப்ரயோகத்தில் அபச்சேதம் ஸம்பவிக்குங்கால் அதற்கேற்பட்ட ப்ராயச்சித்த சாஸ்திரம் ப்ரவ்ருத்திக்கிறது. ஒரு ப்ரயோகத்திலேயே இருவரும் ஒரேஸமயத்தில் விட்டு விடுவார்களேயாகில், உத்காதாவுக்கு ப்ராயச்சித்தம் ப்ரவ்ருத்திக்கிறது—அவன் வர்க்கத்தில் ப்ரதானனுதலால். ப்ரதானாபச்சேதமே ஸமாதானஞ்செய்யத்தக்கதாதலால். அன்றிக்கே இதையாவது அதையாவது விகல்பித்தும் அநுஷ்டிக்கலாம்; ஒன்றிலேயே முன் பின்னுக அபச்சேதம் நேர்ந்தால் முந்தின ப்ராயச்சித்தசாஸ்த்ரத்திற்கு தௌர்பல்யமும். பிந்தினசாஸ்திரத்திற்கு ப்ராபல்யமும் கர்மமீமாம்ஸையில் கூறப்பட்டிருக்கிறது. "பௌர்வாபர்யேபூர்வ தௌர்பல்யம் ப்ரக்ருதிவத்" என்று. இவ்விடத்தில், விரோதியுண்டாவதற்கு முன்பே உதித்தபடியினுல் பூர்வசாஸ்திரத்திற்கு ப்ராபல்யம். பரசாஸ்திரம் ப்ரதிபக்ஷத்தோடு கூடவே உதிப்பதால் அதற்கு தௌர்பல்யமென்று பூர்வபக்ஷம். ஸித்தாந்தமோவெனில் பூர்வசாஸ்திரம் பிறக்குந்தருணத்தில் விரோதியில்லாமையால் அந்தவிரோதியைபாதியாமலுங்கூட உத்பத்தி ஸம்பவிக்கிறது. பிந்தின சாஸ்திரத்துக்கோ; தானுண்டாகுந்தருணத்தில் விரோதியிருப்பதால் அதை பாதியாமல் தானுண்டாவதென்பது பொருந்தாததலால் முந்தியதை பாதித்தே பிந்தினசாஸ்திரமுண்டாகிறது. ஆதலால், அநந்யதாஸித்தமாக இருப்பதால் உத்தரசாஸ்திரத்திற்கு ப்ராபல்யமென்று, "பூர்வத்தை பாதியாமல் உத்தரசாஸ்திரத்திற்கு உத்பத்தி ஸித்தியாது"என்றல்லவோ நியாயமறிந்தவர்கள் கூறுகின்றனர்.

ஐயா ! உத்தரசாஸ்திரம் உதிக்குமேயானுல் பூர்வசாஸ்திரத்தை பாதியாமல் உதிக்கமுடியாது. பூர்வசாஸ்திரம் உத்தரசாஸ்த்ரோத்பத்திக்கு, என் ப்ரதிபந்தகமாகக் கூடாதெனில் ?— இவ்வண்ணமல்ல; நிமித்தமுண்டாகும்போது ‡‡ நைமித்திக சாஸ்த்ரம் உதித்தே விட்டதாதலால். அங்கு உதிக்கிற உத்தரசாஸ்தரத்திற்கு பூர்வ சாஸ்த்ர பாதமில்லாமல் உத்பத்தி அநுபபநமாதலால் முந்தினது பாதிக்கப்பட்டதே. மேலும் சாஸ்த்ரத்தில் எவ்வாறு உறைக்கப்பட்டிருக்கிறதோ அவ்வாறன தக்ஷிணையுடன் கூடியகர்ம † ஸமாபநமனரே சாஸ்திரத்தினுல முந்தியே தானுக ப்ராப்தமாக இருக்கிறது. அதுவோ ப்ராயச்சித்தசாஸ்த்ரத்தினுல் வேறுகச்செய்யப்பட்டு விட்டது.

* அந்வாரம்பணம்—ஒருவரையொருவர் தொடர்ந்து பின்புறம் கச்சத்தைப்பிடித்துக்கொள்தல்.

¶ பஹிஷ்பவமானம்—ஹோமவேதிக்கு நாற்புறத்திலுமுள்ள வெளிப்ரதேசம்.

‡‡ நைமித்திகம்—நிமித்தத்தினுல் ஸம்பவிக்கிறது (அமாவாஸ்யையில் தர்ப்பணம் போலவும் அபச்சேதத்தில் ப்ராயச்சித்தம் போலவும்.

† ஸமாபநம்—நிறைவேற்றுதல்,

இவ்வண்ணம் முந்தி ஸித்தமாக விருக்கிற அர்த்தத்தை வேருகச் செய்கிற ப்ரகரண மாதலால் இவ்விடத்திலும் முந்தியதே பாதிக்கப்படத்தக்கது என்று காமவிசாரத்தில், நிச்சயிக்கப்பட்டது. இவ்வாருக உத்தரசாஸ்திரத்தைப்போல மோக்ஷசாஸ்திரத்திற்கு வேறு அவகாச மில்லாமலிருப்பதால, பேதாவலம்பியான சாஸ்திரம் பூர்வசாஸ்திரம போல் பாதிக்கப்படுகிறதென்று அர்த்தம் பாரத்வம (பிந்தி இருத்தல்) என்பதும பாடக்ரமத்தாலும, அர்த்தக்ரமத்தாலும். தர்மார்த்தகாமங்களை பயனுகக்கொண்டிருந்த வாலன்ரே கர்மத்தில் ப்ரதமபராவண்யம. நிரூபகனுகவும தத்வபரனுகவும இருப்பவ னுக்கன்ரே மோக்ஷேச்சை அப்படிப்பட்ட பௌர்வாபர்யங்களில்லாததும வ்ரோத காப்பங்களாகவும ஸகுணுபாஸனபரங்களாகவுமிருக்கிற வேதாந்த வாக்யங்களில் எவ் வாறு நிர்வாஹம என்னில ? சொல்லுகிருர்—வேதாந்த வாக்யேஷ்வபி என்று. 'அபி' சப்தம் * ஸமுச்சயத்தில். பூர்வோத்தரபாகங்களிரண்டுக்கும விரோதம பரிஹரிக்கப்பட் டது. உத்தரபாகத்திலும் விரோதம பரிஹரிக்கப்படுகிறதென்று அர்த்தம். எவ்வாறு இவ்விடத்தில || அபச்சேத நியாயத்திற்கு அவதாரம் என்னில் கூறுகிருர்-நிர்குணத்வாத் என்று. 'பர' சப்தத்தால ¶ அர்வாசீனமான ஸகுணப்ரஹ்மத்தின் வ்யாவ்ருத்தி வருகிறது. அபச்சேத நியாய அவதாரணத்திற்கு பலனுக விருக்கிற நிர்குணத்வ வைபவம் காணப்படு வதால் அபச்சேத நியாயம் பிரவேசித்தது என்று அறியத்தக்கது என்று பொருள்.

§ "ஜக்ஷந் க்ரீடந் ரமமாண:" இதுமுதலிய சுருதியினுடைய † தாத்விகத்வாதாத்விகத் வங்களின் நிரூபணத்தை அநாதரித்து முதலில் ஸகுணுபாஸனத்தில $ ப்ராவண்யம. நிரூபகனுவெனில் நிர்குண பரப்ரஹ்ம வேதநத்தில அதிகாரியென்று பௌர்வாபர்ய மென்று கருத்து. உபாஸன பரங்களான ஸகுணநிர்குண வாக்யங்களிரண்டுக்கும பலத் தின் வாயிலாக பௌர்வாபர்யம் கூறப்பட்டது அதுவோவெனில் ஸ்வரூப பரங்களான ஸகுண நிர்குண வாக்யங்களிரண்டுக்குமில்லை யாதலால், எவ்வாறு அங்கே பாத்யபாதக பாவம் ? என்று சோதனஞ் செய்கிருர் நநுச என்று விதி நிஷேதரூபமான பௌர்வா பர்யத்தை மனதில வைத்துக்கொண்டு சொல்லுகிருர்—நிர்குண என்று.

ஏதது³க்தம் ப⁴வதி—"அஸ்தூ²லமநண்வஹ்ரஸ்வமதீ³ர்க⁴ம்" (ப்³ரு-௫-அ-அ) "ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்³ரஹ்ம" (தை-ஆ-௧-௧) "நிர்கு³ணம்" (ஆத்மோபநிஷத்) "நிரஞ்ஜநம்" (ஶ்வே-௬-௧௯) இத்யாதி³ வாக்யாநி நிரஸ்தஸமஸ்தவிஶேஷகூடஸ்த²நித்யசைதந்யம் ப்³ரஹ்ம இதி ப்ரதி பாத³யந்தி, இதராணி ச ஸகு³ணம் । உப⁴யவிதா⁴நாம் வாக்யாநாம் விரோதே² தேநைவாபச்சே²த³ந்யாயேந நிர்கு³ணவாக்யாநாம் கு³ ணாபேக்ஷத்வேந ப்ராப³ல்யமிதி ந கிஞ்சித³வஹீநம் ॥

ஸ்ரீபாஷ்யம —

இது சொல்லப்பட்டதாக ஆகிறது—அஸ்தூலம், அநணு, அஹ்ரஸ்வம்,

* ஸமுச்சயம்—கூட்டும்மை. || அபச்சேத:—தொடர்ச்சி விட்டுப்போகுதல்.
¶ அர்வாசீநம்—கீழ்பட்டது.
§ ஜக்ஷந்க்ரீடந்ரமமாண:— சாப்பிடுகிறவன், விளையாடுகிறவன், ரமிக்கிறவன்.
† தாத்விகத்வம்—யாதார்த்யம். $ ப்ராவண்யம்—இழிதல்.

அதீர்க்கம்' "ஸத்யம் ஜ்ஞாநமநந்தம்ப்ரஹ்ம" "நிர்குணம் நிரஞ்ஜனம்" (பெருத்ததாக இராததும், அணுவாக இல்லாததும் குட்டையாகவும் நீண்டுமிராததும. ப்ரஹ்மம், அஸத்யமாயும் ஜடமாயுமிருக்கிற வஸ்துக்களினின்று வ்யாவருத்தமாயும் தேசகாலவஸ்துக்களால் அபரிச்சிந்நமானகவுமிருக்கிறது. குணசூந்யமாயும் கர்மஸம்பந்தமில்லாததாகவுமிருக்கிறது இது முதலானவாக்யங்கள், ப்ரஹ்மத்தை எல்லாவிசேஷங்களினின்று விடு) பட்டதாயும் $ கூடஸ்தமாயும் நித்யமாயுமிருக்கிற † சைதந்யமென்று ப்ரதிபாதிக்கின்றன. மற்றவைகளோ, ஸகுண ப்ரஹ்மத்தை ப்ரதிபாதிக்கின்றன. இரண்டுவித வாக்யங்களுக்கு விரோதம் வரின், அந்த அபச்சேத நியாயத்தினாலேயே நிர்குண வாக்யங்கள் குணங்களை அபேக்ஷித்திருப்பது பற்றி பிற்பட்டவையாயிருப்பதால், அதிகபலமுள்ளது. ஆதலால் ஒருகுறைவுமில்லை.

ஶ்ருதப்ரகாசிகை:—

எவை நிர்குணவாக்யங்கள், எவ்வாறு அவைகளுக்கு ஸாமர்த்தியமெனில் கூறுகிறார்—ஏதத்துக்தம் என்று. அஸ்தூல இதுமுதலானவாக்யம் குணவிசேஷங்களை மறுப்பதில் கருத்துள்ளது. ஸத்யஜ்ஞாநாதி வாக்யத்தில் அஸத்யவ்யாவ்ருத்தியானது உள்ளடங்கி இருக்கிறது. நிர்குணம் இதுமுதலான வாக்யம் குணஸாமாந்யநிஷேதத்தில் கருத்துள்ளது. ஆதி சப்தத்தினால் "யத்தத்தத்ரேஶ்யம்" இது முதலியது க்ரஹிக்கப்படுகிறது. விரோதத்தை ஸ்புரிக்கும்படி செய்கிறார்--நிரஸ்த என்று. கூடஸ்த சப்தமானது நிர்விகாரத்வத்தையாவது ஸர்வாதிஷ்டாநத்வத்தையாவது சொல்லுகிறது. ‡ கூடம்போல் நிலைபெற்றிருக்கிற தென்கிற அர்த்தத்தினாலன்றோ கூடஸ்த சப்தம் ப்ரஹ்மவாசகமாகிறது. "நித்யசைதந்யம்" எனகிறவரையிலுள்ள பதங்களால் உதாஹரிக்கப்பட்ட நிர்குண சுருதியின் அர்த்தமானது ஸங்க்ரஹிக்கப்பட்டது. இதராணி—யஸ்ஸர்வஜ்ஞ: இது முதலிய முன்பு எடுக்கப்பட்டிருக்கிற வாக்யங்கள். சகாரம் ஸமுச்சயத்தில். ஸகுண நிர்குண பரமாதலால் இரண்டுவிதவாக்யங்களுக்கும் விரோதம். தேநைவ—பூர்வோத்தர பாகங்களுக்கு விரோதம்வரின் உத்தரவாக்யத்திற்கு எது ப்ராபல்ய ஹேதுவாகச் சொல்லப்பட்டதோ, அதினாலேயே என்று அர்த்தம். நிர்குண வாக்யங்களுக்கு அதிகபலம் எதனாலென்றால் சொல்லுகிறார்—குணபேக்ஷத்வேந பரத்வாத் என்று. நிஷேதிக்கப்படத்தக்கதை விஷயமாகக்கொண்டன்றோ நிஷேதம உதிக்கிறது. நிர்விஷயமான நிஷேதமில்லையன்றோ. முந்தயே ப்ரஸக்தமாக இருக்கிற விஷயத்திற்கு நிஷேதிக்கத்தக்க தன்மை அதனால் நிஷேதிக்கப்படுமதை அபேக்ஷித்திருப்பதால் நிஷேதத்திற்கு பரத்வ

$ கூடஸ்தம்—கூடம்போல் ஸ்திரமாக இருக்கிறது. கூடம் என்பது கொல்லன் வேலை செய்யும இடத்தில் இரும்புகளைக் காய்ச்சி அடிப்பதற்காக அங்கு போடப்பட்டிருக்கிற அடிப்பட்டறை, அதின்மீது அடிக்கப்படும இரும்புகள் பற்பல ஆயுதங்களாக மாறுதலை அடைந்து கொண்டிருந்த போதிலும் இவ்வனைத்துக்கும் ஆதாரமாயுள்ள கூடம் மாத்திரம ஒருவிதவேறுபாடும் உள்ளதாக ஆகிறதில்லை, ஒரே நிலைமையுடன் எப்போதும் மாறுதலின்றி இருக்கிறது. † சைதந்யம்—ஜ்ஞானம் ;

‡ கூடம்—கருமான் உலையில் இரும்புகளைக் காச்சி அடிப்பதற்கு ஆதாரமாக இருக்கிற ஒரு இரும்புப்பட்டரை.

மென்று கருத்து. ஸகுணவாக்யங்களுக்கு வையர்த்த்யமும், உபாஸனவிஷயமாக விருப்பதால், பரிஹரிக்கப்பட்டதென்கிற அபிப்பிராயத்தால் ஒரு குறைவுமில்லையென்று கூறப்பட்டிருக்கிறது.

அன்றிக்கே " யஸ்ஸர்வஜ்ஞ: " இது முதலியவாக்யங்களுங்கூட உபாஸனத்திற்கு சேஷங்கள் என்கிற அபிப்பிராயத்தால் சொல்லுகிறார்— வேதாந்தவாக்யேஷு என்பது முதலாக உபாஸநபராணிம் என்று, அந்தவாக்யங்களும் ஃபலவிசேஷார்த்தமாக உபாஸனபரங்களே யொழிய தத்வபரங்களல்லவென்று கருத்து. அபச்சேத ந்யாயாவதாரத்தை உபாதானஞ்செய்கிறார்— நிர்குணத்வாத் என்று அர்த்தம்முன்போல நிர்குணத்வம் ஸித்திக்கமாட்டாது—பௌர்வாபர்ய மில்லாமையால், அபச்சேத ந்யாயத்திற்கு அவகாசமில்லாததுபற்றி குணங்களுக்கு பாத்யத்வம் ஸித்தியாமையால். அதனாலேயே ஸகுணவாக்யங்களுக்கு வையர்த்த்ய பரிஹாரமும் பொருந்துகிறதில்லை. ஸ்வரூப பரமாகவே யறியப்பட்ட வாக்கியங்களுக்கு உபாஸன பரத்வ கல்பநமானது பாத்யத்வ ஸித்த்யதீன மன்றோ என்று. சோதனஞ்செய்கிறார்— நநு ச என்று. பரிஹரிக்கிறார்— நிர்குண என்று. மற்றதெல்லாம் முன்போலவே.

நநு ச " ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம " இத்யத்ர ஸத்யஜ்ஞாநாதயோ குணா: ப்ரதீயந்தே । ஸாமாநாதிகரண்யேநைகார்த்தத்வப்ரதீதே: । அநேககுணவிஶிஷ்டாபிதாநேऽப்யேகார்த்தத்வமவிருத்தமிதி சேத், அநபிஜ்ஞோ தேவாநாம் ப்ரிய: । ஏகார்த்தத்வம் நாம ஸர்வபதாநாமர்த்தைக்யம், விஶிஷ்டபதார்த்தாபிதாநே விஶேஷணபேதேந பதாநாமர்த்தபேதோऽவஶ்யாஶ்ரயணீய:, ததஶ்சைகார்த்தத்வம் ந ஸித்யதி । ஏவம் தர்ஹி ஸர்வபதாநாம் பர்யாயதா ஸ்யாத், அவிஶிஷ்டார்த்தாபிதாயித்வாத் । ஏகார்த்தாபிதாயித்வேऽப்யபர்யாயதாமவஹிதமநா: ஶ்ருணு, ஏகத்வதாத்பர்யநிஶ்சயாதேகஸ்வரூபார்த்தத்வம் தத்தத்பதார்த்தவிரோதிப்ரத்யநீகஸ்வரூபேண ஸர்வபதாநாமர்த்தவத்த்வமேகார்த்தத்வமபர்யாயதா ச ॥

ஸ்ரீபாஷ்யம்.—

ஐடா ! " ஸத்யம் ஜ்ஞானமநந்தம் ப்ரஹ்ம " என்கிற விடத்தில் ஸத்யஜ்ஞானாதி குணங்கள் அறியப்படுகின்றன ! (மறுமொழி) அல்ல என்று கூறப்படுகிறது—ஸாமாநாதிகரண்யத்தினால் ஏகார்த்தத்வம் அறியப்படுவதால். அநேக குணங்களுடன் கூடின வஸ்துவைச்சொன்ன போதிலும், ஏகார்த்தத்வம் விருத்தமல்லவென்று சொல்லப்படுமேயானால், * அபிதானத்தை அறியாதநீ அஜம் தான். ஏகார்த்தத்வமாவது எல்லாபதங்களுக்கும் அர்த்த ஐக்யம். விசிஷ்டபதார்த்தத்தைச் சொல்லுமிடத்தில் விசேஷண பேதத்தால் பதங்களுக்கு அர்த்தபேதம் விடத்தக்கதன்று; ஆகவே ஏகார்த்தத்வம் ஸித்தியாது. இங்ஙனமாகில் விசேஷமின்றி ஒரு அர்த்தத்தையே

* அபிதானம்—சப்தசக்தி, அபிதேயம் - அர்த்தம் (வஸ்து),

உணர்த்துவதால் எல்லாபதங்களும் பர்யாயங்களாக ஆகட்டும்! ஒரு அர்த்தத்தையே உணர்த்துகிறதாக விருந்தபோதிலும், அபர்யாயத்வத்தை கவனமுள்ள மனதுடன் கேள் ஏகத்வ தாத்பர்ய நிச்சயமிருப்பதால் ஒரு அர்த்தத்திற்கே அந்தந்த பதார்த்த விரோதிகளுக்கு ¶ ப்ரத்யநீகதையில் நோக்கிருப்பதால் எல்லாபதங்களுக்கும் அர்த்தவத்த்வமும், ஏகார்த்தத்வமும் † அபர்யாயத்வமும் ஸித்திக்கிறது.

ச்ருதப்ரகாசிகை:—

நிர்குண வாக்யங்களோடுகூட எடுக்கப்பட்டிருக்கிற ஸத்யஜ்ஞாநாதிவாக்யம் ஸகுண ப்ரதிபாதநபர மென்கிற புத்தியினால் சோதநம் செய்கிறார்— நநுச என்று. சகாரம் சோத்ய ஸமுச்சயத்தில். "ஸத்யஜ்ஞாநாதயோ குணா: ப்ரதீயந்தே" என்கிற இடத்தில் ஸத்யஜ்ஞாந சப்தங்கள் ஸத்யத்வஜ்ஞாநத்வபரங்கள் § த்வ்யேகயோர்த்விவசநைகவசநே' என்கிற பாணிநிஸூத்ரத்திலிருக்கிற "த்வ்யேக" சப்தங்களிரண்டும் எவ்வாறு த்வித்வ ஏகத்வபரங்களோ அங்ஙனமில்லாவிடில் "த்வ்யேகேஷு" என்றல்லவோ சொல்லத் தக்கதாக ஆகும். அவ்வண்ணமே, ஸ்ரீவத்ஸாங்கமிச்ரர்கள் (அதாவது - கூரத்தாழ்வான்) "குணாஸ்ஸத்யஜ்ஞாந ப்ரப்ருதய உத" என்றார்.

இந்த வாக்யத்தின் வைசத்யத்திற்காக முதலில் ஸாமாநாதிகரண்யம் நிரூபிக்கப்படுகிறது. அது ⚘ ஆசார்யபாதர்களால் ப்ரமேயமாலையில் மிக்கதெளிவாக உபந்யஸிக்கப்பட்டிருக்கிறது அவ்வாறே பகவானான பதஞ்சலியினால், "லடஶ்ஶத்ருஶாநசாவப்ரதமா ஸமாநாதிகரணே" "தத்புருஷஸ்ஸமாநாதிகரண: கர்மதாரய:" இது முதலான ஸூத்ரங்களிலுள்ள ஸமாநாதிகரண சப்தவிவரணத்திற்காக ஸாமாநாதிகரண்ய லக்ஷணம் கூறப்பட்டிருக்கிறது— "பிந்நப்ரவ்ருத்திநிமித்தாநாம் சப்தாநாமேகஸ்மிந்நர்த்தே வ்ருத்திஸ்ஸாமாநாதிகரண்யம்" என்று. இதற்கு இது அர்த்தம். ப்ரவ்ருத்திக்கு எது நிமித்தமோ அது ப்ரவ்ருத்தி நிமித்தம். ப்ரக்ருஷ்டையானவ்ருத்தி ப்ரவ்ருத்தி. சப்தத்திற்கு அர்த்தத்தில் வ்ருத்தியாவது— அதை போதித்தல் அதில் விசேஷ்யமாயிருக்கிற ப்ரதாநார்த்தவிஷயமான வ்ருத்திதான் ப்ரவ்ருத்தி. விசேஷ்யத்திற்கு ப்ராதான்யமும் "குணங்களுடைய ப்ரதிபத்தியானது "குணியின் ப்ரதிபத்திக் காகவன்றோ" என்பதினால், ஸித்திக்கிறது. அந்த ப்ரவ்ருத்திக்கு, நிமித்தம்—த்வாரம்; ‡ நிமித்த மாத்ரம் பவ ஸவ்யஸாசிந்" இது முதலிய ப்ரயோகம் இருப்பதால். அதுவும்

¶ *ப்ரத்யநீகதை—விரோதியாயிருத்தல்*   † *பர்யாயங்கள்—ஏகார்த்தக பதங்கள்.*

§ *த்வ்யேகயோர் த்விவசநைக வசநே—ஒருமை, இருமை இருக்குமிடங்களில் ஏக வசனமும த்விவசனமும வருகின்றன.*

⚘ *ஆசார்யபாதாகள்— நடாதூர ஸ்ரீ அம்மாள், இந்த ஸ்வாமிக்கு வரதாசார்யர் என்று திருநாமம்,*

‡ *நிமித்த மாத்ரம்பவஸவ்யஸாசிந்—(பகவத்கீதை): இடது கையினாலும் பாணங்களை ப்ரயோகிக்குந் திறமையுள்ளவனே! நீ, (இந்த கௌரவர்களைக் கொல்வதில்) த்வாரமாக மாத்ரம் இருப்பாயாக. (தத்புருஷஸ்ஸமாநாதிகரண:கர்மதாரய: லடஶ்ஶத்ருசாநசாவப்ரதமா ஸமாநாதிகரணே) இந்த இரண்டும பாணிநிஸூத்ரங்கள்.*

விசேஷணமாக இருக்கிற ஜாதிகுணம் முதலியது. ஸமாந:- ஏகம். அதிகரணமாவது- விசேஷணங்களுக்கு ஆதாரபூதமான விசேஷ்யம 'ஏகஸ்மிந்நர்த்தே வ்ருத்தி:" என்கிற இடத்தில் ஏகசப்தத்தினால் ஸமாந சப்தத்திற்கு ஸத்ருசார்த்த பரத்வம் நிரஸிக்கப்பட்டது. ஸமாநசப்த ஸாமர்த்தியத்தினால், ஏகசப்தம் ஸாதாரணபரம், ஸமாந சப்தம் ஸாதாரணத்தில் ப்ரயோகிக்கப்படுகிறதன்றோ— § "ஸமாநகர்த்ருகயோ: பூர்வகாலே" என்று. அர்த்த சப்தமும் விசேஷ்யபூதமான பாதாநாபிதேயபரம் இதனால் அதிகரண சப்தமானது விசேஷ்யபரமாக வியாக்கியானிக்கப்பட்டது.

இது சொல்லப்பட்டதாக ஆகிறது— சப்தங்கள் மூன்றுவிதங்கள். சில சப்தங்கள் விசேஷணத்தாலும் விசேஷ்யத்தாலும் ஒரு அர்த்த முள்ளவைகளே உதாஹரணம் கட:, கும்ப:, நீலம், க்ருஷ்ணம், இது முதலியவைகள். சில சப்தங்கள் இரண்டு ப்ரகாரத்தாலும் அர்த்தபேதமுள்ளவைகள். உதாஹரணம் — கௌ அச்வ:, ¶ மஹிஷ: நீலம், சுக்லம், படம், இது முதலியவைகள். சில சப்தங்கள், விசேஷணத்தால் பின்னார்த்தங்களாகவும் விசேஷ்யத்தால் ஏகார்த்தங்களாகவும் இருக்கின்றன. உதாஹரணம்:—நீலமுத்பலம், தேவதத்த: ச்யாமோ யுவா லோஹிதாக்ஷ: இது முதலியவைகள். அவற்றுள் முந்திய இரண்டு கோடிகளிலிருந்து விலகி, மூன்றாவது கோடியில் ப்ரவேசித்திருக்கிற சப்தங்களுக்கு ஸாமாநாதிகரண்யம் அவற்றுள் "பிந்நப்ரவ்ருத்திநிமித்தாநாம்" என்பதினால் விசேஷணத்தாலும் விசேஷ்யத்தாலும் ஏகார்த்தங்களானகட:கும்ப: இது முதலியவைகளுக்கு ஸாமாநாதி கரண்யமில்லை என்று கூறப்பட்டது. "ஏகஸ்மிந்நர்த்தே வ்ருத்தி:" என்றதினால் இரண்டினாலும் அர்த்தபேதமுள்ள கௌரச்வோ மஹிஷ: இது முதலியவைகளுக்கு ஸாமாநாதிகரண்யமில்லை என்று கூறப்பட்டது. ஆகையால் விசேஷணத்தால் பின்னார்த்தங்களாகவும் விசேஷ்யத்தால் ஏகார்த்தங்களாகவுமிருக்கிற நீலமுத்பலம் இது முதலிய சப்தங்களுக்கே ஸாமாநாதிகரண்யம்— என்று, அதில் ப்ரவ்ருத்தி நிமித்தசப்தங்கள் இரண்டுக்கும் இவ்வண்ணம் அர்த்தம் சொல்லலாம்-- ப்ரவ்ருத்தி:—அபிதானம் ; நிமித்தம் – அபிதேயம் அர்த்தசப்தமும் அபிதேயத்தைச் சொல்லுகிறது. வெவ்வேறான அபிதேயங்களுள்ள சப்தங்களுக்கு ஒரு அபிதேயத்தில் வ்ருத்தி ஸாமாநாதிகரண்யம் என்றதினால், பின்னவிசேஷணாபிதாயிகளான சப்தங்களுக்கு ஒரு விசேஷ்யத்தில் வ்ருத்தி.— அதாவது பர்யவஸாநம் (இது) ஸாமாநாதிகரண்யமென்று சொல்லப்பட்டதாக ஆகிறது. "பிந்ந" என்கிற பதத்தின ஸாமர்த்தியத்தால் நிமித்தசப்த நிர்த்திஷ்டம் விசேஷண பூதமான அபிதேயமென்றும், 'ஏக' சப்த ஸாமர்த்தியத்தால் அர்த்த சப்த நிர்த்திஷ்டம், விசேஷ்ய பூதமான அபிதேயமென்றும் அறியப்படுகிறது. ஆகையால் இரண்டு விதத்தாலும் அநேக விசேஷணாபிதாயிகளான சப்தங்களுக்கு ஒரு விசேஷ்யத்தில் பர்யவஸாநம் ஸாமாநாதிகரண்யம் என்று. "பிந்நப்ரவ்ருத்தி நிமித்தாநாம்" இத்யாதியான ஸாமாநாதிகரண்ய லக்ஷண வாக்யத்தால் சொல்லப்பட்டதாக ஆகிறது. இங்குசொல்லப்பட்ட அர்த்தத்தைவிட முற்கூறப்பட்ட அர்த்தம் சிறப்புற்றது.

ஸமாநாதிகரணபதங்களில் † ப்ராதிபதிகம் விசேஷணாந்வயபரம். அதோடு (விசேஷணத்தோடு) ஸமானமான விபக்தியானது விசேஷ்யைகயத்தைக காட்டுகிறது.

---

§ ஸமாநகர்த்ருகயோ: பூர்வகாலே—பாணினி ஸூத்ரம் ¶ மஹிஷ:— எருமை

† ப்ராதிபதிகம்—அர்த்தமுள்ளதும் தாதுவல்லாததும் ப்ரத்யயமல்லாததும் ப்ரத்யயாந்தமல்லாததுமான சப்தஸ்வரூபம். அநேகமாய் பெயர்ச்சொல்லாய் வரும்.

ஸமானவிபக்திகளுக்கு ஐக்யபோதகம் வ்ருத்தி சப்தத்தினல் விவக்ஷிக்கப்பட்டிருக்கிறது. அதனல் "ராஜா தஸ்ய புத்ரஶ்ச தர்சநீயௌ" (அரசனும் அவன் புதல்வனும் ஸௌந்தர்யமுள்ளவர்கள்) என்கிற இடத்தில் ராஜ சப்தத்திற்கும் 'தத்' என்கிற சப்தத்திற்கும் ஸாமாநாதிகரண்ய நிவ்ருத்தி ஸம்பவிக்கிறது. அந்த இடத்தில் ப்ரக்ருத பராமர்சியான தச் சப்தப்ராதிபதிகத்தால் ஐக்யம் தெரியவருகிறதே ஒழிய ஸமாந வி_க்தியினலல்ல. அப்யா! நீலாநி உத்பலாநி (கருத்தசெய்தல்கள்) என்கிற இடத்தில் ஸாமாநாதிகரண்யம் வாராமல் போகவேண்டியதாகும். ஏனெனில் விசேஷ்யங்கள் வெருவாக இருப்பதுபற்றி ஏகார்த்த வ்ருத்தித்வம் பொருந்தாமல் போவதால்; இவ்வண்ணமல்ல:—"ஏகஸ்மிந்" என்கிற பதமானது சேர்ந்து ப்ரயோகிக்கப்பட்டிருக்கிற பதாந்தரத்தினல் † உபஸ்தாபிக்கப்பட்ட ஆகாரத்திற்கு அதிகரணமன்று என்பதை வ்யாவ்ருத்திப்பதின் பொருட்டு இருப்பதால். அந்தந்த பதஙகளால் உபஸ்தாபிக்கப்பட்டிருக்கிற அனேக விசேஷணஙகளை அபேக்ஷித்துப்பொதுவாக இருத்தலன்றே ஏகசப்தத்தின் அர்த்தம். நீலாநி உத்பலாநி என்கிற இடத்தில் நீலத்வத்திற்கு ஆதாரமாயில்லாத வஸ்துக்களில் உத்பலத்வமானது இருக்கிறதில்லை யன்றே— ஆகைபால் அங்கே ஸாமாநாதிகரண்யம் பொருந்துகிறது. ஆதலால் ஸாமாநாதிகரண்ய லக்ஷணக்ரந்தத்திற்கு எவ்வாறு இங்கே கூறப்பட்டிருக்கிறதோ இது தான் அர்த்தம்.

இந்த இடத்தில் ‡ ம்நுவஷாவாதிகள் சொல்லுகிறர்கள்— ஸாமாநாதிகரண்யவாக்யம் ¶ அகண்டார்த்தமுள்ளது. நிரூபிக்கிறர், ஸாமாநாதிகரண்யத்திற்கு ஏகார்த்தபரத்வம் நிர்விவாதம். அதில் ஸாமாநாதிகரண்ய பதஙகள் விசேஷணமாத்ர பரங்களா? அல்லது, விசேஷண விசிஷ்டபரஙகளா? அல்லது, ஸ்வரூபமாத்ர பரங்களா? என்று பகுத்தறியத்தக்கது. விசேஷணமாத்ர பரஙகளல்ல— விசேஷணங்கள் அநேகார்த்தங்களுள்ளதாதலால். ஏகார்த்தத்வம் ஸித்தியாமையால் விசிஷ்ட பரங்களுமல்ல— விகல்பத்தை ஸஹியாமையால். பதஙகளுக்கு விசிஷ்டார்த்த ப்ரதிபாதநமானது க்ரமமாகவா? அல்லது ஒரே ஸமயத்திலேயா? க்ரமமாக என்பது பொருந்தாது. அவற்றுள் முதற்பதத்தால் ப்ரதிபன்னமான விசிஷ்டத்திற்கு மற்றெரு பதமானது தன்னல் உபஸ்தாபிக்கப்பட்டுள்ள விசிஷ்டத்தோடு ஐக்யத்தை விதிக்கிறதா? அல்லது வேறு விசேஷணத்தோடு அந்வயத்தை விதிக்கிறதா? முதல் பக்ஷத்தில் விசிஷ்டைக்யம் விதிக்கப்படுமளவில், இரண்டு விசேஷ்யாம்சங்களைப்போல விசேஷணம்சபூதஙகளான ஜாதி குணம், இரண்டுக்கும் ஐக்யம் ப்ரஸஙகிக்கவேண்டி வரும். இரண்டாவது பக்ஷத்திலும் விசேஷணங்களுக்கு * அந்யோந்ய ஸமவாயம் ப்ரஸங்கிக்கும். முதலில் ஒரு விசேஷணத்தோடு கூடியதாக அறியப்பட்டிருக்கிற வஸ்துவுக்கு பிறகு வேறு விசேஷணத்தோடு சேர்க்கை பெற்றிருப்பதாக போதிப்பதன்றே விசேஷணந்தராந்வய ப்ரதிபாதனம்-அதில் விசிஷ்டத்தைககுறித்து விசேஷணமாக அந்வயிக்கப்படும் சப்தம் பூர்வ

† உபஸ்தாபிக்கப்பட்ட—ஏற்படுத்தப்பட்ட, அல்லது உணர்த்தப்பட்ட.

‡ மருவஷாவாதி— ப்ரபஞ்சத்தை மித்யை என்று அபலாபஞ் செய்கிறவன்.

¶ அகண்டார்த்தம—அவயவார்த்தங்களின் பாகுபாடன்றி மொத்தமாகத்தோன்றும் அர்த்தம்.

* அந்யோந்ய ஸமவாயம்—விசேஷணங்கள் இரண்டுக்கும் ஒன்றுக்கொன்று விசேஷண விசேஷ்யபாவம். இது சாஸ்திர ஜ்ஞர்களால் ப்ரப்லதோஷ மென்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

விசேஷணத்துக்குங்கூட விசேஷணமாக ஆகிறதாதலால் விசேஷணங்களுக்கு அந்யோந்யவிசேஷண விசேஷ்யபாவப்ரஸங்கம் தடுக்கமுடியாதன்றோ. பதங்களுக்கு க்ரமமாக அர்த்தப்ரதிபாதனமானது விடத்தகாதது—ஏனெனில், எல்லாவாக்யங்களும் உத்தேச்யோ பாதேய விபாகமுள்ளதாகயிருப்பதால். ஒரே ஸமயத்தில் அர்த்த ப்ரதிபாதனமென்பதும் ஸரியன்று. ¶ உத்தேச்யோபாதேய விபாகத்திற்கு ஹாநியானது ப்ரஸங்கிப்பதால் ஒரேஸமயத்தில் ப்ரதிபாதநம் ஸம்பவியாது. ஸம்பவித்தபோதிலும், விசேஷணங்களுக்கு பரஸ்பர ஐக்யம் ப்ரஸங்கிப்பதாலும். இதை நிரூபிக்கிறார். ப்ராதிபதிகங்கள் விசிஷ்டார்த்த பரங்களாகில், ப்ராதிபதிகார்த்தங்களுக்கு ஐக்யத்தைக்காட்டுகிற ஸமாந $ விபக்தி நிர்தேசத்திற்கு விசிஷ்டைக்யபரத்வம் அவசியம ஆச்ரயிக்கத்தக்கதாதலால், விசேஷ்யஐக்யம்போல விசேஷணங்களுக்கும் ஐக்யம் சொல்லவேண்டியதாக ஆகும் அது பொருந்தாதாதலால், ஸமாநவிபக்தி நிர்தேசமானது விசேஷ்யத்திற்குங்கூட ஐக்யத்தை ப்ரதிபாதிப்பதற்கு ஸாமர்த்தியமுள்ளதாக ஆகாது.

மேலும், விசிஷ்ட பரத்வம் சொல்லில் விசேஷண விசேஷ்யங்களிரண்டாலும் அனேகார்த்தத்வமும், விசேஷண பகுத்வத்தாலும் அநேகார்த்தத்வமும் ஏற்படும். ஆதலால் ஸாமாநாதிகரண்யம் ஸித்தியாது. மேலும் விசேஷணங்களுக்கு § வ்யாவர்த்தகத்வம் ஸ்வபாவமாதலால் விசேஷணபேதத்தால் விசேஷ்ய பேதப்ரஸங்கம் எவ்விதத்தாலும் தடுக்கமுடியாது. இதை உபபாதனஞ்செய்கிறார்; பேதகம் விசேஷணம், பேத்யம் விசேஷ்யமென்றல்லவோ விசேஷணவிசேஷ்யங்களுடைய ஸ்வரூபவிவேகம். விசேஷணங்களுக்கு விசேஷ்யபேதகத்வமானது— வண்ட:,முண்ட:, கட:, பட:, இது முதலிய ப்ரயோகஸ்தலங்களிலும் காணப்படுகிறதன்றோ. நீலம் உத்பலம், தேவதத்த: ச்யாம: யுவா, இது முதலிய ப்ரயோகஸ்தலங்களில் விசேஷணபேதமிருந்தபோதிலும் விசேஷ்யைக்யம் காணப்படுகிறதே என்றால் இது தோஷமல்ல. இந்த இடத்தில் விசேஷணங்களுக்கு ஸ்வபாவ ஸித்தமாக இருக்கிற விசேஷ்ய பேதகத்வமானது ப்ரத்யக்ஷவிரோதத்தால் தள்ளப்படுகிறது. ப்ரத்யக்ஷாகோசரமான ப்ரஹ்மத்தினிடத்திலோ, விசேஷண பேதத்தால் உண்டுபண்ணப்பட்ட விசேஷ்ய பேதமானது யாரால் தடுக்கக்கூடும். ஆகையால் ஸமாநாதிகரணவாக்யம் வஸ்துமாத்ரபரமே. நீலம் உத்பலம் இது முதலிய வாக்யத்தில் ஸித்திப்பதுபோல ஸத்யாதி வாக்யத்திலும் ஏகவசநாந்தமான தர்மிவாசிபதைக்யத்தினால் விசேஷ்யைக்யம் ஸித்திக்கிறதென்று சொல்லில், அல்ல; ''வண்ட', முண்ட:, பூர்ணச்ருங்க:, கௌ:,'' என்கிற இடத்தில் விசேஷ்யபேதமிருப்பதால். ஐயா! விசேஷணபேதமானது விசேஷ்யைக்யத்திற்கு விரோதி அன்று, ப்ரத்யக்ஷமே தான் அதற்கு விரோதி. ப்ரத்யக்ஷத்திற்கெட்டாத ப்ரஹ்மத்தினிடத்தில், ஏகவசநாந்ததர்மிவாசியானபதைக்யத்தால் தானாக கிடைத்திருக்கிற ஏகத்வமானது தடுக்கமுடியாதது என்றால், அல்ல. ''வண்டோ, முண்ட:, பூர்ணச்ருங்கோகௌ:'' என்று. எருது எதிரில் இல்லாதபோது சொல்லும் வாக்யத்திலும் விசேஷ்யபேதம் அறியப்படுவதால். ஆதலால், தர்மிவாசிபதைக்யமானது பரோக்ஷமான ப்ரஹ்மத்தினிடத்தில் ஐக்யப்ரதிபாதந ஸமர்த்தமன்று. ஆகையால் விசேஷணபேதப்ரயுக்தமான

$ விபக்தி--வேற்றுமை உருபு;

§ வ்யாவர்த்தகத்வம்— வேறுபாட்டை உண்டுபண்ணுகிற வஸ்துவின் தன்மை.

¶ உத்தேச்யம்— விதிக்கவேண்டியதாகக் கருதப்பட்டிருக்கிற குணங்களுக்கோ தர்மங்களுக்கோ ஆதாரமான வஸ்து. ‡‡ விதேயம்—விதிப்பதற்குத் தக்கது.

விசேஷ்யபேதம் எவ்விதத்தாலும் தடுக்கமுடியாதது. ஆகவே ஏகார்த்தத்வம் ஸித்தி பெறுது. ஆகையால் பாரிசேஷ்யத்தால் மற்றொரு வழியு பொருந்தாததால் ஸமாநாதிகரணபதங்களுக்கு ஸ்வரூபமாத்ரத்தை போதிப்பதில் தாத்பர்யம் என்று அங்கீகரிக்கத்தக்கது.

இங்ஙனமாகில் பதங்களுக்கு பர்யாயத்வமும், ஒரே பதத்தால் ஸ்வரூபம் அறியப்பட்டபடியால் மற்றபதங்களின் ப்ரயோகத்துக்கு வையர்த்யமும், ப்ரவ்ருத்தி நிமித்தபேதமில்லாமையால் ஸாமாநாதிகரண்யலக்ஷணத்திற்கு ஹாநியும் ப்ரஸங்கிக்கும் எனில், இவ்வண்ணமல்ல. ஒரே அர்த்தத்திற்கு அந்தந்த பதத்தால் உணர்த்தப்படும் அர்த்தத்திற்கு எதிர்தட்டான அர்த்தத்தைத் தள்ளுவதில் மட்டும் நோக்கு என்று ஒப்புக்கொள்ளப்படுவதால். ஒவ்வொரு பதத்திற்கும் பிரயோஜனமும் † அபர்யாயத்வமும், நிமித்தபேதலாபத்தினால் ஸாமாநாதிகரண்யலக்ஷணஸித்தியும் உண்டாகின்றன. இதனாலேயே ஜகத்காரணத்வத்தால் சங்கிக்கப்பட்ட அந்ருதத்வ ஜடத்வ பரிச்சின்னத்வரூபமான தோஷங்களின் வ்யாவ்ருத்தியானது, ஸத்யஜ்ஞாநாதி வாக்யத்தால் உண்டு பண்ணப்படுகிறது. வ்யாவ்ருத்தி ரூபமான தர்மமும் ப்ரஹ்மத்தை அந்தணுகாது. ப்ரஹ்மத்தினுடைய ஸ்வரூபமோ, ஸகலமான இதரபதார்த்தங்களின் வ்யாவ்ருத்தி ரூபமாதலால்— எவ்வாறு வெண்மை முதலியவற்றுக்கு கருமை முதலியவைகளின் வ்யாவ்ருத்தியானது அப்பதார்த்தஸ்வரூபமேயொழிய வேறுதர்மமல்லவன்றோ— வேறுதர்மம் காணப்படாமையால். அதை ஒப்புக்கொண்டால் || அநவஸ்தை வருவதலாலும். ஆதலால் ‡ கார்ஷ்ண்யவ்யாவ்ருத்தமாயும் ¶ ரக்திமவ்யாவ்ருத்தமாயுமிருக்கிறது "சௌக்ல்யம்" என்பதனால் சௌக்ல்ய ஸ்வரூபமாத்ர விஷயங்களான பதங்களுக்கு, வ்யாவர்த்திக்கத்தக்க வஸ்துபேதத்தால் எவ்வாறு அபர்யாயத்வமும் அர்த்தவத்த்வமும் ஏகார்த்தத்வமும், அதனாலேயே ஸாமாநாதிகரண்ய லக்ஷணப்பொருத்தமும் ஸித்திக்கிறதோ,— அவ்வாறாக ஸத்யாதி பதங்களுக்கும் விலக்கப்படும் தர்ம பேதத்தால் பர்யாயத்வ தோஷம் ப்ரஸங்கியாது.

இவ்வண்ணம் அந்தந்தபதார்த்தங்களின் விரோதிவ்யாவ்ருத்திபரத்வம் கூறப்படுமேயாகில் லக்ஷணை ஏற்படவேண்டியதாகுமெனில், இவ்வண்ணமல்ல; வாச்யமல்லாத அர்த்தத்தை உணர்த்தினாலன்றோ லக்ஷணை ; எவ்வாறு கங்கையில் எடைச்சேரி இருக்கிறதென்கிற வாக்யத்தில் கரையை உணர்த்தும் விஷயத்தில் கங்காபதம் லக்ஷகமோ. கரை கங்காபதவாச்ய மல்லவன்றோ. இவ்விடத்திலோ ஸத்யாதி பதங்களுக்கு வாச்யைகதேசமான விசேஷணத்திற்கு பரித்யாகமிருந்தபோதிலும், வாச்யப்ரதாநாம்சமாக இருக்கிற விசேஷ்யஸ்வரூப ப்ரதிபாதனத்தினால் லக்ஷணைக்கு ப்ரஸக்தி இல்லை. அவ்வாறிருந்தபோதிலும் விசிஷ்டவாசியான சப்தத்திற்கு விசேஷ்ய மாத்ர பரத்வம் சொல்லில், ஸ்வாரஸ்யத்திற்குபங்கம் நேரிடுகிறது என்றால், இது தோஷமல்ல; ஸமாநாதிகரணவாக்யங்களில் ஏகார்த்தபரத்வ பலத்தால் விசேஷணங்களின் பரித்யாகத்தினால் ஸ்வரூபமாத்ர பரத்வமே பதங்களுக்கு ஸ்வாரஸிகம்— அவ்வண்ணம் வ்யுத்பத்தி

---

† அபர்யாயத்வம்— ஒரே பொருளை உணர்த்தும் சப்தங்கள் பர்யாயங்கள். அப்படிக்கல்லாத சப்தங்கள் அபர்யாயங்கள் - வட:, கும்ப: என்கிற சப்தங்கள் - பர்யாயசப்தங்கள். பர்யாயசப்தங்கள் சேர்ந்து பரயோகிக்கத்தகாதவை.

|| அநவஸ்தை—முடிவின்மை. ‡ கார்ஷ்ணயம்—கருப்புநிறம். ¶ ரக்திமா—சிகப்புநிறம்.

இருக்கிறபடியால். வ்யதிகரணவாக்யங்களில் பதங்களுக்கு விசிஷ்ட பரத்வம் ஸ்வாரஸிகம். லக்ஷணையை ஏற்றுக்கொண்டாலும் தோஷமில்லை வாக்யதாத்பர்யாநுகுணமான லக்ஷணையானது, அதற்கு விரோதியான முக்கிய வ்ருத்தியைக்காட்டிலும் அதிக பலமுள்ளதாகக் காணப்பட்டிருக்கிறதன்றோ— கங்காபதத்தில் போல. ஸமானாதிகரண வாக்கியத்திற்கு ஐக்யத்திலேயே தாத்பர்யம் என்பது ஸர்வஸம்மதம் அன்றோ. ஐயா எல்லாபதங்களுக்கும் லக்ஷணையானது காணப்பட்டதில்லை. ஸரியுமல்ல. முக்யார்த்தத்தை உணர்த்துகிற ஒரு பதத்தால் தாத்பர்யம் நிச்சயிக்கப்பட்டாலன்றோ பதாந்தரங்களுக்கு லக்ஷணை யுக்தமானது எல்லாபதங்களுக்கும் லக்ஷணை அங்கீகரிக்கப்படுமேயாகில் தாத்பர்யத்திற்கு $நிச்சாயகம் ஏது ? கூறப்படுகிறது — ¶ "விஷம் புங்க்ஷ்வ" (விஷத்தைச்சாப்பிடு) இது முதலியவாக்யங்களில் எல்லாபதங்களுக்கும் லக்ஷணை காணப்பட்டிருக்கிறது. அதில் விஷபதமானது நிஷித்தமான போஜ்யவஸ்துவை லக்ஷணா வ்ருத்தியினால் உணர்த்துகிறது. 'புங்க்ஷ்வ' என்கிறபதம் போஜனம் பண்ணவேண்டாமென்று காட்டுகிறது. அதில் யோக்யதை முதலிய ஸாமக்ரிகளின் உடன்பாட்டினால் வாக்யதாத்பர்யநிச்சயம், ஸத்யாதிவாக்கியங்களில் ஸமானவிபக்திபலத்தால் ஐக்யதாத்பர்ய நிச்சயம் ; அந்த (ஐக்யதாத்பர்ய நிச்சயத்தின்) அவிரோதத்திற்காக ப்ராதிபதிகங்களுக்கு லக்ஷணை ஸ்வீகரிக்கப்பட்டிருக்கிறது. ஏகபதலக்ஷணையிலும் கூட வாக்யதாத்பர்ய விரோதமேயன்றோ ஹேது. கங்காயாம் கோஷ:. இது முதலிய வாக்யங்களிற்போல. அதற்கு விரோதமில்லாவிடில் ஒரு பதத்திற்குங்கூட லக்ஷணை காணப்பட்டதில்லை. கங்காயாம் மத்ஸ்யா: ப்ரதிவஸந்தி" (கங்கையில் மத்ஸ்யங்கள் வாஸம்பண்ணுகின்றன) இது முதலியவாக்யங்களிற்போல ஆகையால் வாக்யதாத்பர்யத்தின் அவிரோதத்திற்காக ஒருபதத்தைப்போல் எல்லாபதங்களுக்கும் லக்ஷணை தோஷமன்று. ஆகையால், ஸமானாதிகரணவாக்யம் வஸ்துமாத்ரபரமே.

இந்த அபிப்பிராயத்தால் மறுக்கிறார்—நேத்யுச்யதே என்று " ஸத்யஜ்ஞானாதி குணங்கள் காணப்படுகின்றன" என்று சோதனம் ஏற்படவே, "நேத்யுச்யதே" என்று சொல்லுகிறவருக்கு இது அபிப்பிராயம்— 'ப்ரதீயதே' என்பதினால் ஆபாதப்ரதீதி மாத்ர விவக்ஷை இருக்குமேயானால், அதனால் ஒரு ப்ரயோஜனமும் இல்லை. ப்ரமிதி விவக்ஷை என்று சொல்லப்படுமேயாகில், 'நதப்ரமிதிர் ஜாயதே" என்று உபபாதிக்கப்படுகிறது. ஏதனாலெனில் கூறுகிறார்— ஸாமாநாதிகரண்யேந ஏகார்த்தத்வ ப்ரதீதே: என்று. சங்கிக்கிறார்—அநேக என்று எவ்வாறு ‡ வ்யதிகரணவாக்யங்களில் வெவ்வேறு அர்த்தங்களில் ப்ரயவஸிக்கின்ற காரகபதார்த்தங்களின் பரித்யாகமில்லாமலிருந்தபோதிலும், ப்ரதானார்த்தமான கார்யத்திற்கு ஏகத்வமானது, "ஆத்மைகத்வாதேகம் வாக்யம்" என்கிற விடத்தில் நிச்சயிக்கப்படுகிறதோ: அவ்வாறாக ஸமானாதிகரண வாக்யங்களிலும் விசேஷண பூதகுணவாசியான சப்தார்த்தங்களின் பரித்யாகமில்லாமலிருந்தபோதிலும் விசேஷ்யைக்யம் ஸித்திக்கிறதென்று அர்த்தம். வினவுகிறவனை நிந்திக்கிறார்—அநபிஜ்ஞ: என்று. வ்யதிகரண ஸமானாதிகரணவாக்யங்கள் இரண்டின் அபிதானவிசேஷத்தை அறியாதவன் என்று அர்த்தம். தேவர்களுக்குப்பிரியன்.

¶ விஷம் புங்க்ஷ்வ—விஷத்தைச் சாப்பிடு அதாவது சத்துருவின் அன்னமாதலால் சாப்பிடாதே என்பது பொருள்.

$ நிச்சாயகம்—தாத்பர்யநிச்சயத்தை உண்டுபண்ணுகிறசப்தம்.

‡ வ்யதிகரணவாக்யம்—வெவ்வேறு வேற்றுமைகளையுடைய பதங்களால் இணைக்கப்பட்டவாக்யம்.

அதாவது ஆடு; அஜ்ஞன் என்று அர்த்தம். பரிஹரிக்கிறார்— ஏகார்த்தத்வம் என்று. ஏகார்த்தத்வமாவது— எல்லாபதங்களுக்கும் ஒரு அபிதேயத்தில் பர்யவஸானம்; வாக்யத்திற்கு அல்லவென்று அர்த்தம். தனித்தனியான அர்த்தங்களில் பர்யவஸிக்கின்ற பதங்களுககு ஒரு ப்ரதானார்த்தத்தில் அந்வயத்தினால் அர்த்தைக்யமானது வ்யதிகரணவாகயத்தில் மாத்ரமே. ஸமாநாதிகரணவாக்யத்திலோ, பதங்களுக்கே ஏகார்த்தபர்யவஸாயித்வமென்பது சொல்லப்பட்டதாகிறது. அதனால் என்ன? என்று அபேக்ஷிக்குங்கால் ஸமாநாதிகரணபதங்களுக்கு விசேஷணமாத்ரபாத்வத்திலும் விசிஷ்டபரத்வத்திலும் தூஷணத்தை ஒரே க்ரந்தத்தால் சொல்லுகிறார்— விசிஷ்ட என்று. "விசிஷ்ட" என்று ஆரம்பித்த முழுவாக்யத்தால் விசிஷ்டபக்ஷத்தில் தூஷணம் கூறப்பட்டது. விசேஷணபேதத்தால்-விசேஷணங்களுக்கு ஒன்றுக்கொன்றாலும் விசேஷ்யத்தாலுமுண்டாகிற பேதத்தால், விசேஷணங்களாலும் விசேஷ்யத்தாலும் அநேகார்த்தத்வம் உண்டாகுமென்று கருத்து. மேலும்: அர்த்தசப்தமானது விசேஷ்யபரமாகவும் விவக்ஷிக்கப்பட்டிருக்கிறது; அதனால் விசேஷண பேதமிருந்தால் விசேஷ்யபேதம் உண்டாகலாமென்கிற வேறு தூஷணமும் சொல்லப்பட்டதாக ஆகிறது. மேலும், விசேஷண பேதத்தால் விசேஷ்யபேதமென்று சொல்லில், † வ்யதிரேகவசத்தால் விசேஷ்யத்தின் அபேதத்தால் விசேஷணாபேதமும் உண்டாகலாமென்று சொல்லப்பட்டதாக ஆகிறது. விசிஷ்டைக்யத்தைப்ரதிபாதிக்கிற ஸமானவிபக்தியானது, பேதமின்றி விசேஷ்யைக்யத்தைப்போல், விசேஷணைக்யத்தையும் ப்ரதிபாதிக்கிறதென்று அபிப்ராயம் இவ்வாறாக விசிஷ்டபரத்வத்தில், ஒரேஸமயத்தில் அபிதாந மென்கிறபக்ஷத்தில் தூஷணம் கூறப்பட்டதாக ஆகிறது—உத்தேஸ்யோபாதேயவிபாகஹாநிப்ரஸங்கமும் அர்த்தஸித்தம். க்ரமமாக அபிதான மென்கிறபக்ஷத்தில் அன்யோன்யஸமவாயமானது, ஆநந்தமயாதிகரணத்தில் சொல்லப்படப்போகிறது. விசேஷணபேதத்தால் அர்த்தபேதம் என்கிற இவ்வளவு அம்சத்தினால் விசேஷணமாத்ர பாத்வத்திலும் தூஷணம் உரைக்கப்பட்டதாக வாகிறது. விசேஷணங்கள் அநேகங்களாதலால் ஏகார்த்தத்வத்திற்கு ஹாநி என்று பொருள். இவ்வண்ணம் பதங்களுக்கு ப்ரதிபாத்யபேதம் எடுத்துக்காட்டப்பட்டது.

அதனால் என்? எனில் சொல்லுகிறார்— தத்ஸமைகார்த்தத்வம் ந ஸித்யதி என்று ஸாமாநாதிகரண்யலக்ஷணம் ஸித்தியாதென்று பொருள் ஆகையால் வஸ்துமாத்ரபரம் என்பது பாரிசேஷ்யத்தால் ஸித்தம். அதை அநுவதித்து சோதனம் செய்கிறார்— ஏவம் என்று. ஏவம் தர்ஹி— வஸ்துமாத்ரபாத்வம் சொல்லில். எதனால் என்று கேட்கில் சொல்லுகிறார்— அவிசிஷ்டார்த்தாபிதாயித்வாத் என்று. இதனால் "தத்ஸ்சைகார்த்தத்வம் ந ஸித்யதி" என்கிற விடத்தில் பலிதமான அர்த்தம் விவரிக்கப்பட்டது. இந்த பர்யாயத்வசோத்யத்தில், ப்ரவ்ருத்தி நிமித்தபேதமில்லாமையால் ஸாமாநாதிகரண்ய லக்ஷணஹாநியும், இரண்டில் ஒருபதத்திற்கு வையர்த்யமும் என்கிற இரண்டு சோத்யங்கள் கருதப்பட்டிருக்கின்றன; பரிஹரிக்கப்படப்போவதால் கூறப்பட்டுள்ள மூன்று சோத்யங்களையும் பரிஹரிப்பதற்காகச் சொல்லுகிறார்— ஏகார்த்த என்று. கவனமுள்ளமனதுடன் கூடியவனாகக்கேள். மறுமொழியானது அநேக வாக்கியங்களால் ஸாதிக்கத்தக்கதாக இருப்பதால், மத்தியில் சோதனம் செய்யத்தக்கதல்ல. ஆனால் அர்த்தம் அறியவரிதாதலால் கவனம் வைக்கத்தக்கதென்று கருத்து. மூன்று அநுபபத்திகளையும் பரிஹரிக்கிறார்— ஏகத்வ இது முதலியதால். ஏகத்வதாத்பர்ய

வ்யதிரேகம்—முற்கூறப்பட்ட அர்த்தத்திற்கு எதிர்தட்டானது.

நிச்சயம் ஸமானவிபக்தியினால் அர்த்தவத்த்வமாவது—ப்ரயோஜனத்துடன் சேர்ந்திருத்தல் § வ்யாவர்த்யபேதத்தால் செய்யப்பட்ட ¶ வ்யாவ்ருத்திபேதத்தால் அபர்யாயத்வமும் வ்யாவ்ருத்திரூபப்ரவ்ருத்திநிமித்தலாபத்தால் ஸாமாநாதிகரண்ய ஸித்தியும், † வ்யாவர்த்தகங்களின் பஹுத்வத்தால் பதங்களுக்கு அநந்த வ்யாவ்ருத்திரூபமான ப்ரயோஜனமும் என்று அர்த்தம்.

ஏதது³க்தம் ப⁴வதி — லக்ஷணத: ப்ரதிபத்தவ்யம் ப்³ரஹ்ம ஸகலேதரவஸ்துவிரோதி⁴ரூபமேவ | தத்³விரோதி⁴ரூபம் ஸர்வமநேந பத³த்ரயேண ஸமஸ்தோ வ்யாவர்த்யதே | தத்ர ஸத்யபத³ம் விகாராஸ்பத³த்வேநாஸத்யாத்³வஸ்துநோ வ்யாவ்ருத்தப்³ரஹ்மபரம் | ஜ்ஞாநபத³ம் சாந்யாதீ⁴நப்ரகாஶஜட³ரூபாத்³வஸ்துநோ வ்யாவ்ருத்தப்³ரஹ்மபரம் | அநந்தபத³ம் ச தே³ஶத: காலதோ வஸ்துதஶ்ச பரிச்சி²ந்நவ்யாவ்ருத்தபரம் | ந ச வ்யாவ்ருத்திர்பா⁴வரூபோ'பா⁴வரூபோ வா த⁴ர்ம: | கிந்து ஸகலேதரவிரோதி⁴ ப்³ரஹ்மைவ | யதா² ஶௌக்ல்யாதே³: கார்ஷ்ண்யாதி³வ்யாவ்ருத்திஸ்தத்பதா³ர்த²ஸ்வரூபமேவ, ந த⁴ர்மாந்தரம் | ஏவமேகஸ்யைவ வஸ்துந: ஸகலேதரவிரோத்⁴யாகாரதாவக³மயத: பத³த்ரயஸ்ய ஸார்த²க்யமைகார்த்²யம் ச ஸித்⁴யதி | தஸ்மாதே³கமேவ ப்³ரஹ்ம ஸ்வயஞ்ஜ்யோதிர்நிர்தூ⁴தநிகி²லவிஶேஷமித்யுக்தம் ப⁴வதி ||

ஏவம் வாக்யார்த²ப்ரதிபாத³நே ஸத்யேவ “ஸதே³வ ஸோம்யேத³மக்³ர ஆஸீதே³கமேவாத்³விதீயம்” (சா²-௬-௨-௧) இத்யாதி³பி⁴ரைகார்த்²யம் | “யதோ வா இமாநி பூ⁴தாநி ஜாயந்தே (தை-ப்⁴ரு-௧) ஸதே³வ ஸோம்யேத³மக்³ர ஆஸீத், ஆத்மா வா இத³மேக ஏவாக்³ர ஆஸீத்” (ஐத-௧-௧-௧) இத்யாதி³பி⁴ர்ஜக³த்காரணதயா உபலக்ஷிதஸ்ய ப்³ரஹ்மண: ஸ்வரூபமபி⁴தீ⁴யதே— “ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்³ரஹ்ம” (தை-ஆ-௧-௧) இதி | தத்ர ஸர்வஶாகா²ப்ரத்யயந்யாயேந காரணவாக்யேஷு ஸர்வேஷு ஸஜாதீயவ்யாவ்ருத்தமத்³விதீயம் ப்³ரஹ்மாவக³தம் | ஜக³த்காரணதயோபலக்ஷிதஸ்ய ப்³ரஹ்மணோ'த்³விதீயஸ்ய ப்ரதிபிபாத³யிஷிதம் ஸ்வரூபம் தத³விரோதே⁴ந வக்தவ்யம் | அத்³விதீயத்வஶ்ருதிர்கு³ணதோ'பி ஸத்³விதீயதாம் ந ஸஹதே | அந்யதா² “நிரஞ்ஜநம்” (ஶ்வே-௬-௧௯) “நிர்கு³ணம்” (க்ஷுரோபநிஷத்) இத்யாதி³ஶ்ருதிவிரோத⁴: | அதஶ்ச தல்லக்ஷணவாக்யமபி அக²ண்டை³கரஸமேவ ப்ரதிபாத³யதி ||

§ வ்யாவர்த்யம்—விலக்கப்படத்தக்க வஸ்து. ¶ வ்யாவ்ருத்தி—விலக்குதல்.
† வ்யாவர்த்தகம்—வ்யாவ்ருத்தியைச் செய்கிற பதம்

ஸ்ரீபாஷ்யம்:—

இது சொல்லப்பட்டதாகவாகிறது—இலக்கணத்தாலறியத்தக்க ப்ரஹ்ம மானது, இதரபதார்த்தங்களெல்லாவற்றுக்கும் விரோதிரூபமாயிருக்கிறது. அந்த (ப்ரஹ்ம) விரோதிகளான (வஸ்துக்களின்) ரூபங்களனைத்தும் இம் மூன்று பதங்களால் பலித்த அர்த்தத்தால் நிரஸிக்கப்படுகிறது. அவற்றுள் ஸத்பதமானது விகாராஸ்பதமாக விருப்பதால், அஸத்யவஸ்துவைக்காட்டிலும் வ்யாவ்ருத்தமான ப்ரஹ்மத்தைக்குறிக்கிறது. ஜ்ஞாநபதமும், அந்யாதீனப்ரகாசமான ஜடரூபவஸ்துவைக் காட்டிலும் வேறாக விருக்கிற ப்ரஹ்மத்தை ப்ரதிபாதிக்கிறது. அநந்தபதமும் தேசத்தாலும் காலத்தாலும் வஸ்துவினாலும் பரிச்சின்னவஸ்துக்களைக்காட்டிலும் வ்யாவ்ருத்தமான வஸ்துவை ப்ரதிபாதிப்பதில் நோக்குள்ளது. வ்யாவ்ருத்தியானது பாவரூபமாகவோ. அபாவரூபமாகவோ இருக்கிற தர்மம் அல்ல; பின்னையோ வெனில் ஸகலமான இதரவஸ்துக்களுக்கு விரோதியாக இருக்கிற ப்ரஹ்மமே. எவ்வாறு வெண்மை முதலியவற்றுக்கு கருமை முதலிய நிறங்களின் வ்யாவ்ருத்தியானது அந்த பதார்த்தஸ்வரூபமேதானே, வேறு தர்மம் அல்லவோ, இவ்வாறே இம்மூன்று பதங்களும் ஒரு வஸ்துவுக்கே ஸகலேதர விரோதியான ஆகாரத்தை அறிவித்து ஸிரம்பபிரயோஜனமுடையதாகவும் ஏகார்த்தங்களாகவும், அபர்யாயங்களாகவும், இருக்கின்றன. ஆகையால் ப்ரஹ்மமொன்றே ஸ்வயம் ஜ்யோதிஸாகவும் ஸகலவிசேஷங்களற்றதாயுமிருக்கிறதென்று சொல்லப்பட்டதாகவாகிறது.

இவ்வண்ணமாக வாக்யார்த்த ப்ரதிபாதனம் இருந்தால் தான் "ஸதேவ ஸோம்யே உமக்ர ஆஸீத் ஏகமேவாத்விதீயம்" இவை முதலியவைகளோடு ஐகார்த்யம் ஸித்திக்கும். "யதோவா இமாநி பூதாநி ஜாயந்தே" "ஸதேவஸோம்யே உமக்ர ஆஸீத்" "ஆத்மாவா இதமேக ஏவாக்ர ஆஸீத்", இவை முதலியவைகளால் ஜகத்காரணமாக உபலக்ஷிக்கப்பட்டிருக்கிற ப்ரஹ்மத்தின் ஸ்வரூபம் இதுவென்று கூறப்படுகிறது. "ஸத்யம் ஜ்ஞாநமநந்தம்ப்ரஹ்ம என்று" அதில் ஸர்வசாகாபரத்யயந்யாயத்தினால் காரணவாக்யங்கள் எல்லாவற்றிலும் ஸஜாதீய விஜாதீய வ்யாவ்ருத்தமாகவும் அத்விதீயமாகவும் ப்ரஹ்மம் அறியப்பட்டிருக்கிறது. ஜகத்காரணமாக உபலக்ஷிக்கப்பட்டதும், அத்விதீயமாயும், இங்கு ப்ரதிபாதிக்கப்படவேண்டிய ப்ரஹ்மஸ்வரூபமானது (முற்கூறிய) அந்த (லக்ஷணத்திற்கு) விரோதமின்றி சொல்லத்தக்கது. அத்விதீயத்வ சுருதியானது குணங்களாலும் ஸத்விதீயதையை ஸஹிக்கிறதில்லை. அப்படி இல்லாவிடில் "நிரஞ்ஜனம் நிர்குணம்" இது முதலியவைகளோடும் விரோதம் ஸம்பவிக்கும். அதனாலும் இந்த லக்ஷணவாக்யமானது, அகண்டைகஸ்வபாவத்தையே ப்ரதிபாதிக்கிறது.

ச்ருதப்ரகாசிகை—

ஐயா ! " தத்த்வமஸி "முதலியவாக்யம் போல அந்வயமுகத்தால் உபலக்ஷணமாக ஆகட்டும். வ்யாவ்ருத்தி எதற்காக ?—வ்யாவ்ருத்திகள் அநேகமாயிருப்பதால் அநேகார்த்தத்வம் வந்து சேருகிறது. வ்யாவர்த்திக்கப்படத்தக்க ஆகாரங்கள் அநந்தங்களாக விருப்பதால் சிலபதங்களால் அவைகளின் வ்யாவ்ருத்தியானது செய்வதற்கு சக்யமாகாது. ப்ரஹ்மத்திற்கு எவைகளினின்று வ்யாவ்ருத்தியோ அவவஸ்துக்கள் எவை ? ப்ரஹ்மத்திற்கு அநேக வ்யாவ்ருத்திகள் வருவதால் தாமங்களோடு கூடியிருக்குந்தன்மை (ஏற்படும்). வ்யாவ்ருத்திகளை தாமங்களென்று ஒப்புக்கொள்ளாவிட்டால் பதங்களுக்கு பர்யாயத்வம் (வரும்) இது முதலான அநேக சங்கைகளை பரிஹரிப்பதற்காகச் சொல்லுகிறார்— ஏதுக்தம்பவதி என்று லக்ஷணத:— ஸ்வரூபலக்ஷணத்தினால். தடஸ்த்த லக்ஷணத்தாலல்ல. இதனால் ஜகத்காரணமாக சங்கிக்கப்பட்டிருக்கிற தோஷங்களின் வ்யாவ்ருத்தியின் பொருட்டு, ப்ரஹ்மத்திற்கு ஸகல இதரவிரோதித்வத்தை ப்ரதிபாதிக்கிற இந்த ப்ரயோஜகவாக்யமானது வ்யாவ்ருத்திபரமாவதற்குத் தகுந்ததென்று சொல்லப்பட்டதாக ஆகிறது. பஹுவ்யாவ்ருத்திகளால் அநேகார்த்தத்வ ப்ரஸங்கத்தைப்பரிஹரிக்கிறார்— தத்விரோதிரூபம் என்று. ஹலதோவ்யுஹஸ்யதே என்று இந்த வாக்யம் ஸ்வரூபமாத்ரபரமே. இதனால் ஜகாரத்யம் ஸித்தித்தது; மற்றபொருள்களுக்கு வ்யுதாஸமேவெனில், பலித்தது என்று கருத்து. வ்யாவர்த்திகத்தக்க ஆகாரங்கள் அநேகங்களாக விருப்பதால் சிலபதங்களால் வ்யாவ்ருத்தியானது சக்யமாகாதென்பதை பரிஹரிக்கிறார்— ஸர்வம் அநேந பதத்ரயேணஹலதோவ்யுஹஸ்யதே என்று. $ ப்ரயோஜகரூபத்தால் வ்யுதாஸம்வரின் எல்லாம் வ்யுதஸ்தமாக ஆகிறதென்று அர்த்தம். விரோதிகள் எவைகள் எனில் ? கூறுகிறார்—தந்த்ர என்று. ஜகத்காரணத்வத்தால் துச்சத்வம் வ்யாவ்ருத்திக்கப்பட்டது எதற்காக அஸத்யவ்யாவ்ருத்தி எனில் கூறப்பட்டது. விகாராஸ்பதத்வேந அஸத்யாத் என்று. அசைவற்றிருக்கிற வஸ்து, சீதம், முதலிய அர்த்தங்களுக்கும் பொதுவாக போதகமாக விருப்பதால், அநேகார்த்த ஸாதாரணமான ஜடசப்தவிவரணத்திற்காக "அந்யாதீனப்ரகாஶ" என்கிற சப்தம் சொல்லப்பட்டிருக்கிறது. எப்படியும் ஸத்யாதிபதங்களில் ஒவ்வொருபதத்தினாலேயே ஸமஸ்தவ்யாவ்ருத்தியும் ஸித்திக்கிறது. ஆயினும்; ப்ரஹ்மத்தினிடத்தில் சங்கிக்கப்பட்டிருக்கிற, தன்னைக்காட்டிலும் வேறான பதார்த்தங்களிலுள்ள விரோதி ஆகாரமானது ஒரு பதத்தினால் நிவ்ருத்தி அடையாததலால் மூன்று பதங்களுக்கும் ஸாஃபல்யம். வ்யாவ்ருத்திகளால் ஏற்படக்கூடிய ஸதர்மகத்வத்தைப் பரிஹரிக்கிறார்— நச என்று. † ப்ராபாகர பக்ஷத்திலும ஸித்தாந்தி மதத்திலும் பாவரூபமான தர்மம். § வைசேஷிகன் முதலியவர்களின் மதத்திலோ அபாவரூபமான தர்மம். அதனால் "பாவரூப: அபாவரூபோவா" என்று சொல்லப்பட்டது. வ்யாவ்ருத்தியானது தாமமில்லாவிடில் வேறு எவ்விதமாக இருக்கக்கூடுமெனில் கூறுகிறார்—அபிது என்று. சிப்பிமுதலியவற்றில் தர்மத்திற்கு வ்யாவ்ருத்தித்வமானது ரஜதம் முதலியவற்றிற்கு விரோதியாக விருப்பதால் ஒப்புக்கொள்ளப்படுகிறதன்றோ. இவ்வண்ணமாக ப்ரஹ்மமானது ஸகல இதர விரோதியாக இருப்பதால், தானே வ்யாவ்ருத்தி என்று அர்த்தம்.

ஸ்வரூபமே வ்யாவ்ருத்தி என்பதில் த்ருஷ்டாந்தத்தைக்கூறுகிறார்—யதா என்று. வெண்மை முதலியவற்றுக்கு கருமைமுதலியதின் வ்யாவ்ருத்தியானது வேறுதாமமல்ல.

$ ப்ரயோஜகரூபேண—மொத்தவகுப்பாய். † ப்ராபாகரர்—மீமாம்ஸகர்.
§ வைசேஷிகர்—காணாத மஹரிஷியின் மதத்தை அநுஸரிப்பவர்.

அப்படிக்காணப்படாமையால் வேறு தர்மமாக ஒப்புக்கொள்ளப்படும்பக்ஷத்தில் அநவஸ்தை வருவதாலுமென்று அபிப்ராயம். அங்ஙனமாகில், பதங்களுக்கு பர்யாயத்வம் உண்டாகட்டும் என்று ஆசங்கித்து கார்ஷ்ண்யவ்யாவ்ருத்தம் ப்ரதிமவ்யாவ்ருத்தம், சௌக்ல்யம் என்று த்ருஷ்டாந்த வாக்யாபிப்ராயத்தால் பரிஹரிக்கிறார்— ஏகஸ்ய என்று. விலக்ஷ்யத்தக்கவஸ்துக்களின் * வ்யுதாஸபேதத்தால் பதங்கள் ப்ரயோஜனமுள்ளவைகள். அதினாலேயே அபர்யாயத்வம் என்று அர்த்தம்.¶ ப்ரதியோகியைக்குறிப்பிட்டுக்காட்டும் வேஷத்தால் ப்ரவ்ருத்திநிமித்தலாபம் ஏற்படுவதால் ஸாமாநாதிகரண்யலக்ஷணஸித்தியுமென்று அபிப்ராயம். பர்யாயத்வம் முதலியவைகளின் ப்ரஸங்கத்திற்குப் பரிஹாரம் ஐகார்த்யத்திற்கு விரோதமில்லாமல் செய்யப்பட்டிருக்கிறது என்கிற அபிப்ராயத்தால் சொல்லப்பட்டது— ஏகார்த்தம் என்று. ஸ்வரூபமாத்ரபரத்வத்தைக்கூறினதினால் ஐகார்த்யம் ரக்ஷிக்கப்பட்டதன்றோ. அர்த்தவத்தரம் என்று. தாத்பர்யத்தினால் த்ருஷ்டாந்தமான சௌக்ல்யத்தைக்காட்டிலும் பேதவாதிக்கு அபிமதமான ஸகுணபரத்வத்தைக் காட்டிலுமும் ப்ரயோஜனாதிக்யம் கருதப்பட்டிருக்கிறது. சௌக்ல்யாதித்ருஷ்டாந்தம் ப்ரத்யக்ஷமாகவல்லவோ இருக்கிறது. அதில் ஸ்பஷ்டார்த்தமாக கார்ஷ்ண்ய வ்யாவ்ருத்தம் இதுமுதலிய பதப்ரயோகம். ப்ரத்யக்ஷத்திற்கு அகோசரமான பரப்ரஹ்மத்தினிடத்திலேயோ வெனில் ஸகலேதர வ்யாவ்ருத்திவசனமானது அதிசப்ரயோஜனமுள்ளதாக இருப்பது பற்றி த்ருஷ்டாந்தத்தைக்காட்டிலும் ப்ரயோஜனாதிக்யமுள்ளது. ஜகத்காரணபூதமான ப்ரஹ்மத்திற்கு சங்கிக்கப்பட்டுள்ள தோஷங்களின் வ்யாவ்ருத்தியே அபேக்ஷிக்கப்பட்டிருக்கிறதேயொழிய, வேறுகுணம் அபேக்ஷிக்கப்படவில்லை என்பதனால் பேதவாதிபக்ஷத்தைக் காட்டிலும் ப்ரயோஜனாதிக்யம். இவ்வண்ணம் ஸத்யஜ்ஞானாதிவாக்யத்திற்கு அநுக்ராஹகதர்க்கம் கூறப்பட்டது. தர்க்கத்தால் அநுக்ரஹிக்கப்பட்ட வாக்யத்தினால் எந்த அர்த்தம் அறியப்பட்டதென்றால் சொல்லுகிறார்— தஸ்மாத் என்று. தஸ்மாத்— இந்த வாக்யமானது சொல்லப்பட்டநியாயங்களால் அநுக்ரஹிக்கப்பட்டிருப்பதனால் என்று பொருள். ஏகம் என்று ஸமானவிபக்திநிர்தேசத்தால் பலித்தஐக்யம் உரைக்கப்பட்டது ஏவகாரத்தால், ஸ்வரூபத்தால் ஐக்யம்§குணங்களால் பேத்யமென்று. அம்சத்தால் அநேகார்த்தத்வம் தள்ளபபடுகிறது. இதை விசதமாக்குகிறார்— நிர்தூதநிகிலவிசேஷம் என்று. நிர்விசேஷவஸ்துவுக்கு † துச்சத்வத்தை விலக்குவதற்காக "ஸ்வயம்ஜ்யோதி:" என்கிறபதம். இத்யுக்தம் என்று. "ஸத்யஜ்ஞானாதி"வாக்யத்தினால், இந்தவாக்யம் பூரிக்கத்தக்கது. இப்படி ஸாமாநாதிகரண்யம் வேறுவிதமாய் பொருந்தாதலால் ஸத்யஜ்ஞானாதி வாக்யத்திற்கு வஸ்துமாத்ரபரத்வம் உபபாதிக்கப்பட்டது.

பிறகு, காரணவாக்யத்துடன் ஒற்றுமை, மற்றபோதகவாக்யங்களோடு ஒற்றுமை என்கிற, இவ்விரண்டு ஹேதுக்களால் வஸ்துமாத்ரபரத்வம் உபபாதிக்கப்படுகிறது-ஏவம் இதுமுதலியதால். அதில் முதலில் காரணவாக்ய ஐகார்த்யம் என்கிற ஹேது கூறப்படுகிறது-ஏவம் என்று. ஏவம்—நிர்விசேஷவஸ்துபரமாக நிர்வாஹமிருந்தால்தான் காரணவாக்ய ஐகார்த்யம் என்று பொருள். காரணவாக்ய ஐகார்த்யம் எதற்காக அபேக்ஷிக்கப்பட்டிருக்கிறது? ஐகார்த்யம்வரின்எவ்வாறு நிர்விசேஷபரத்வம் எனில்கூறுகிறார்—யத: இது முதலியதால். "யதோவா இமாநி" இது முதலியது லக்ஷணவாக்யம். காரணத்வத்தை முன்புசொல்லப்பட்டதாக வைத்துக்கொண்டு இந்தவாக்யம் லக்ஷணத்தை

* வ்யுதாஸம்—விலக்குதல். ¶ ப்ரதியோகி—ப்ரதிஸம்பந்தி.
§ துச்சத்வம்— தர்மிஸ்வரூபத்தின் இன்மை.

விதிப்பதால், காரணத்தைமுதலில் சொல்லும் வாக்யத்தை எடுக்கிறார்—ஸதேவ என்று. உபலக்ஷிதத்திற்கு உபலக்ஷணமாவது, சந்திரனுக்கு கிளைபோல் ஸ்வரூபத்துக்கு வெளியிலிருந்தே காட்டிக்கொடுப்பது. ஸத்யம்ஜ்ஞானமநந்தம் ப்ரஹ்ம என்கிற இந்தவாக்யத்தினுடைய ஸ்வரூபபோதகமாக விருப்பதால், காரணவாக்யத்தோடு ஒற்றுமை இதற்கு அபேக்ஷிதமென்று சொல்லப்பட்டதாக வாகிறது. காரணவாக்ய ஐகார்த்யமிருக்கட்டும்; அந்த ஒற்றுமை ஸகுண ப்ரஹ்மத்துக்கு காரணத்வத்தைச்சொல்லும் ''யஸ்ஸர்வஜ்ஞஸ்ஸர்வவித்'' ''யஸ்யஜ்ஞானமயம் தப:'' தஸ்மாதேதத் ப்ரஹ்மநாமரூபமந்நஞ்ச ஜாயதே'' '' தமீச்வராணாம் பரமம் மஹேச்வரம் '' '' ஸகாரணம் காரணாதிபாதிப:'' (எவன் ஸர்வவிஷய ஸாமான்ய ஜ்ஞானமுள்ளவனோ, எவன் ஸர்வ வஸ்துக்களையும்பற்றி ஸர்வப்ரகாரஜ்ஞானமுள்ளவனோ, எவனுக்குஜ்ஞானமயமான தபஸ்ஸிருக்கிறதோ) (ஸங்கல்பத்தால் ஸ்ருஷ்டியில் உந்முகமான அந்த ப்ரஹ்மத்தினிடத்திலின்று) இந்த § (அவ்யாக்ருதமென்ற அவஸ்தையுள்ள) ப்ரஹ்மமும், அதின் வாயிலாக நாமரூபமுள்ள (போக்த்ரு போக்யரூபமான) ப்ரபஞ்சமும் உண்டாகிறது. ஈச்வரர்களுக்கெல்லாம் சிறந்த மஹேச்வரனை அந்த பரமாத்மாவை. அவன் காரணவஸ்து, இந்திரியங்களுக்கு நியந்தாவான ஜீவனுக்கு ‡ நியந்தா' இது முதலிய வாக்யங்களோடேயே இருக்கட்டுமென்று சொல்லப்படுமேயானால், உத்தரம் சொல்லுகிறார்.—தத்ர என்று. தத்ர—காரண வாக்ய ஐகார்த்யம் அபேக்ஷிக்கப்பட்டிருக்கையில் ஸர்வசாகாப்ரத்யயந்யாயமானது, சொல்லப்பட்டிராத அர்த்ததின் ஸ்வீகாரத்தை பலமாகக்கொண்டது. அதனால், இங்கே சொல்லப்பட்டிராததும் வேறு உபநிஷத்துக்களில் சொல்லப்பட்டதாகவுமிருக்கிறவர்த்தம் ஸ்வீகரிக்கத்தக்கதாகவிருக்கையில் ஸகுணப்ரஹ்ம மாத்திரத்தை ப்ரதிபாதிக்கிற உபநிஷத்துக்களில் நிர்குணமான ப்ரஹ்மமும் சொல்லப்பட்டதாக ஆகிறது. அதில் அபச்சேதந்யாயத்தால் நிர்குணவாக்யங்கள் ஸகுணவாக்யங்களைவிட அதிகபலமுள்ளவைகளாதலால், எல்லாவிடத்திலும் ஸஜாதீய விஜாதீய வ்யாவ்ருத்தமாயும் அத்விதீயமாகவுமிருக்கிற ப்ரஹ்மமே ப்ரதிபாதிக்கப்பட்டதாகவாகிறதென்று அபிப்ராயம். அதனால் என்ன? எனில், கூறுகிறார்—ஜகத் என்று ''ஜகத்காரண'' என்கிற இதுமுதலிய பதங்களால் காரணவாக்யங்களால்சொல்லப்பட்ட அர்த்தத்தை அநுவதிக்கிறார். ப்ரதிபிபாதயிஷிதம்— தாத்பர்யவிஷயம்—வஸ்து மாத்திரத்திலேயே தாத்பர்யமென்றுபொருள். ''தத்விரோதேந வாக்யம்''—காரணவாக்யங்களாலறியப்பட்டிருக்கிற ப்ரஹ்மஸ்வரூப போதகமாதலால், அதற்கு விரோதமின்றி இந்த வாக்யத்தினால் சொல்லத்தக்கதென்று அர்த்தம். ''நரபதி: அத்விதீய: '' இது முதலிய வ்யவஹாரத்தில் போல ஸமானனும் மேலானவனுமில்லை என்கிறஅர்த்தம் கொள்ளில், †அத்விதீயத்வம் பொருத்தமுள்ளதாவதால், அதோடு ஐகார்த்யம் இதற்குச்சொன்னபோதிலும், நிர்குணபரத்வம் ஸித்தியாதெனில் சொல்லுகிறார்—அத்விதீயத்வச்ருதி: என்று '' ஸதேவ '' '' ஏகமேவ '' என்று விஜாதீய ஸஜாதீய வ்யாவர்த்தகமான அவதாரணத்வயத்தோடு சேர்க்கை பெற்றிருப்பதால், இந்த அத்விதீயபதமானது குணத்தினாலும் ஸத்விதீயதையை ஸஹிக்கிறதில்லை என்று அபிப்ராயம். இவ்வண்ணமாக காரணவாக்யத்தோடு ஐகார்த்யத்தால் ஸத்யஜ்ஞானாதி வாக்யத்துக்கு வஸ்துமாத்ரபரத்வம் உபபாதிக்கப்பட்டது. பிறகு, போதகவாக்யாந்தர ஐகார்த்யரூபமான ஹேது

---

§ அவ்யாக்ருதம்— நாமரூபவ்யாகரணமில்லாதது.

‡ நியந்தா—ஆஜ்ஞை இடுகிறவன் அல்லது ஏவுகிறவன்.

† அத்விதீயம்—தன்னுடைய குணமென்கிற இரண்டாவது பதார்த்தத்தைக்கூட ஸஹிக்கிறதில்லை.

சொல்லப்படுகிறது—அந்யதா என்று. அந்யதா-ஸத்யஜ்ஞாநாதி வாக்யத்துக்கு விசிஷ்டபரத்வம் சொல்லில், ' நிரஞ்ஜனம் நிர்குணம் " இது முதலியவைகளோடு விரோதம் வரும் ஆகையால் அவைகளோடு அவிரோதத்தின்பொருட்டு இந்தவாக்யம் நிர்விசேஷவஸ்துமாத்ரபரமென்று அர்த்தம், " அந்யதா, நிரஞ்ஜனம் நிர்குணமித்யாதி ஹ்ர்விரோதப்ரஸ" என்பதினால், அத்விதீயசுருதிக்கு குணத்தினாலும் ஸத்விதீயதா நிஷேதபரத்வமும் ஆர்த்திகமாக உபபாதிக்கப்பட்டதாக வாகிறது. மூன்று ஹேதுக்களால் உபபாதிக்கப்பட்ட அர்த்தத்தை நிகமநஞ்செய்கிறார்—அதஸ்ச என்று. அத:—முற்கூறப்பட்ட ஸாமாநாதிகரண்யம வேறுவிதமாக பொருந்தாதலாலும், பிறகு கூறப்பட்டுள்ள காரணவாக்ய ப்ரோதகவாக்யாந்தர ஐகார்த்ய ரூபமான, இரண்டுஹேதுக்களாலும் என்று அர்த்தம். ஏதல்லக்ஷணவாக்யம்— ஸ்வரூபலக்ஷணவாக்யம். அகண்டைகரஸம்— நிர்விசேஷைகஸ்வபாவத்தையே ப்ரதிபாதிக்கிறதென்று அர்த்தம்.

நநு ச ஸத்யஜ்ஞாநாதிபதாநாம் ஸ்வார்த்தபரித்யாகேந ஸ்வார்த்தவிரோதிவ்யாவ்ருத்தவஸ்துஸ்வரூபோபஸ்தாபநபரத்வே லக்ஷணா ஸ்யாத் | நைஷ தோஷ:, அபிதாநவ்ருத்தேரபி தாத்பர்யவ்ருத்திர்பலீயஸீ | ஸாமாநாதிகரண்யஸ்யைக்ய ஏவ தாத்பர்யமிதி ஸர்வஸம்மதம் | நநு ச ஸர்வபதாநாம் லக்ஷணா ந த்ருஷ்டசரீ | தத: கிம்? வாக்யதாத்பர்யாவிரோதே ஸத்யேகஸ்யாபி ந த்ருஷ்டா; ஸஹிவ்யாஹ்ருதபதஸமூஹாயைதத்தாத்பர்யமிதி நிஶ்சிதே ஸதி த்வயோஸ்த்ரயாணாம் ஸர்வேஷாம் வா தத்விரோதாய ஏகஸ்யேவ லக்ஷணா ந தோஷாய | ததா ச ஶாஸ்த்ரஸ்தைர்வ்ருத்தைரப்யுபேதம் | கார்யவாக்யார்த்தவாதிபிர்லௌகிகவாக்யேஷு ஸர்வேஷாம் பதாநாம் லக்ஷணா ஸமாஶ்ரீயதே | அபூர்வகார்யஸ்ய லிங்காதேர்முக்யவ்ருத்தத்வாத் லிங்காதிபி: க்ரியாகார்யம் லக்ஷணயா ப்ரதிபாத்யதே | கார்யாந்விதஸ்வார்த்தாபிதாயிநாம் சேதரேஷாம் பதாநாமபூர்வகார்யாந்வித ஏவ ஶக்த்யவதாரணாத் க்ரியாகார்யாந்விதப்ரதிபாதநம் லாக்ஷணிகமேவ | அதோ வாக்யதாத்பர்யாவிரோதாய ஸர்வபதாநாம் லக்ஷணாபி ந தோஷ: | அத ஏவமேவ வாக்யஜாதம் ப்ரதிபாதயந்தோ வேதாந்தா: ப்ரமாணம் ||

ஸ்ரீபாஷ்யம்—

இன்னும் ஐயா ! ஸத்யஜ்ஞாநாதிபதங்கள், தன் அர்த்தத்தையிழந்து, ஸ்வார்த்த விரோதிகளினின்று வேறுபட்டிருக்கிற வஸ்துஸ்வரூபத்தை உணர்த்துவதில் நோக்குள்ளவைகளாக ஆகின்றன என்று சொன்னால் லக்ஷணை ஏற்படுமே— எனில், உத்தரம்—இது தோஷமல்ல—அபிதாநவ்ருத்தியைவிட தாத்பர்யவ்ருத்தியானது அதிக பலமுள்ளதாக இருப்பதால். ஸாமாநாதிகரண்யத்திற்கு ஐக்யத்திலேயே தாத்பர்யமென்பது எல்லோருக்கும் ஸம்மதம்,

ஐயா ! எல்லாப்பதங்களுக்கும் லக்ஷணையானது எங்கும் காணப்பட்டிருக்கவில்லையே என்றால், அதனாலென்ன ? வாக்யதாத்பர்யத்திற்கு விரோதமில்லாவிடில், ஒரு பதத்திற்குக்கூட லக்ஷணை காணப்பட்டதில்லை. சேர்ந்து ப்ரயோகிக்கப்பட்டிருக்கிற பதங்களின் ஸமுதாயத்திற்கு "இது தாத்பர்ய" மென்று நிச்சயிக்கப்பட்டுவிட்டால், அந்த தாத்பர்யத்திற்கு விரோதமில்லாமலிருப்பதற்காக இரண்டுபதங்களுக்கோ மூன்றுபதங்களுக்கோ, எல்லாபதங்களுக்குமோ, எதாயினும ஒருபதத்தைப்போல் லக்ஷணையைக்கற்பிப்பது தோஷத்தின் பொருட்டாகாது. அவ்வண்ணமே சாஸ்திரத்தில் நிலைபெற்றவர்களால் ஒப்புக்கொள்ளப்படுகிறது. கார்யரூபவாக்யார்த்தவாதிகளால் லௌகிகவாக்கியங்களில் எல்லாபதங்களுக்கும் லக்ஷணை ஆச்ரயிக்கப்படுகிறது. ஏனெனில் அபூர்வரூபமான கார்யத்தை "லிங்" முதலியவைகளே முக்கிய வ்ருத்தியினால் ப்ரதிபாதிப்பதால், "லிங்" முதலியவைகளால் க்ரியா கார்யம் லக்ஷணையினால் ப்ரதிபாதிக்கப்படுகிறது. கார்யத்துடன் அந்வயித்து ஸ்வார்த்தத்தைச் சொல்லுகிற மற்றபதஙகளுக்கும் அபூர்வகார்யாந்விதமே முக்யார்த்தமாதலால் *க்ரியாகார்யாந்விதப்ரதிபாதநம் லாக்ஷணிகமே. ஆகையால் வாக்யதாத்பர்யத்தின் விரோதம் வாராமலிருப்பதற்காக எல்லாப்பதங்களுக்கும் லக்ஷணை கல்பிப்பதும் தோஷமாகாது. ஆதலால் இந்தஅர்த்த ஸமூஹத்தையே ப்ரதிபாதனஞ்செய்கின்றவேதாந்தங்கள் ப்ரமாணம்.

ச்ருதப்ரகாசிகை—

இதற்கு மேல், முக்யமான அர்த்தத்தைவிட்டு லக்ஷணையை அங்கீகரிப்பதில் தோஷத்தை வெளியிடுகிறார்— நநுச இது முதலியதால். ஸ்வார்த்தப்ரஹாணேந— ஸ்வார்த்தமோ விசேஷணத்தை த்வாரமாகக்கொண்ட விசேஷ்யம். அதை யிழப்பதாலென்று அர்த்தம். லக்ஷணையை ஒப்புக்கொண்டு அதனால் தோஷமில்லை என்று ப்ரதிஜ்ஞை பண்ணுகிறார்—நைஷ தோஷ: என்று. முக்யார்த்தவம மேலே கூறப்படப்போகிறது. ஹேதுவைச்சொல்லுகிறா— அபிதாநவ்ருத்தேரபி என்று. தாதபர்யவ்ருத்தியாவது தாத்பர்யத்தால் வந்த வ்ருத்தி—அன்றிகே அந்த அர்த்தத்திலேயே ஒரே நோக்குடையவ்ருத்தி. அதுவும் இங்கு லக்ஷணை வ்ருத்தியாக விவக்ஷிக்கப்பட்டிருக்கிறது. வாக்ய தாத்பர்யத்திற்கு விரோதியாயுள்ள முக்கியவ்ருத்தியைவிட வாக்யதாதபர்யாநுகுணமான லக்ஷணைவ்ருத்தியானது அதிகபலமுள்ளதென்று பொருள். எந்த அர்த்ததில் தாத்பர்யம் ? எதை அநுஸரிப்பதற்காக லக்ஷணை ஸ்வீகரிக்கத்தக்கது, என்றால் சொல்லுகிறார்— ஸாமாநாதிகரண்யஸ்ய என்று. ஐக்ய ஏவதாத்பர்யமிதி— ஸமாந விபக்தியானது தாத்பர்யநிச்சயத்தை உண்டுபண்ணுகிறதென்று கருத்து. ஆநந்தமயாதிகரணத்தில் ஸித்தாந்தியினாலன்றோ இந்த அர்த்தம் கூறப்படப்போகிறது. ஸர்வஸம்மதம்—விசிஷ்டைக்யவாதிகளாலும், மற்றவர்களாலும் ஸம்மதிக்கப்பட்டிருக்கிறதென்று அர்த்தம்.

*க்ரியாகார்யாந்விதம்—க்ரியாரூபமான கார்யத்தோடு சேர்க்கைபெற்றது.

கங்காயாம் கோஷ: இதுமுதலிய வாக்யங்களில் ஸர்வபதலக்ஷணை காணப்பட்டிருக்கவில்லையே என்று ஆக்ஷேபிக்கிறார்—நநுச என்று. தாத்பர்யநிச்சாயகமான சில பதத்தின் முக்கியவ்ருத்தியினால், அதற்கநுகுணமாக மற்ற பதங்களுக்கு லாக்ஷணிகத்வம் ஆச்ரயிக்கத்தக்கது. ஸர்வபதலக்ஷணை ஒப்புக்கொள்ளப்படுமேயாகில் அது ஸம்பவியாதென்று அபிப்பிராயம். தாத்பர்யாவிருத்தமான பதத்திற்கு முக்யார்த்த ஸ்வீகாரமானது தாத்பர்யவிருத்தபதலக்ஷணாஸ்வீகாரத்திற்கு விருத்தமன்று என்கிற எண்ணத்தினால் சொல்லுகிறார்— தத:கிம் என்று. தத:கிம் என்பதனால் கருதப்பட்டதை விவரியாநின்றுகொண்டு பதில் கேள்வி கேழ்ப்பதால் சொல்லக்கருதப்பட்ட அர்த்தத்தைக்காண்பித்துப்பரிஹரிப்பதற்காக எதிராகக்ஷியில் வ்யாபக தோஷத்தை உள்ளடக்கிக்கொண்டிருக்கிற ப்ரதிபந்தியைக்கூறுகிறார்-வாக்யதாத்பர்ய என்று. தாத்பர்யத்திற்கு விரோதமில்லாதபோது பதத்திற்கு முக்யார்த்தத்வம் சொல்வதைக்கொண்டு தாத்பர்ய விரோதமுள்ளவிடத்திலும் பதத்திற்கு லக்ஷணை சொல்லக்கூடாதென்றால் அப்போது "கங்காயாம் மத்ஸ்யா: ப்ரதிவஸந்தி" இதுமுதலிய வாக்யங்களில் விரோதமில்லாமையால் ஒரு பதத்திற்குக்கூட லக்ஷணை ஒப்புக்கொள்ளப்படாமையால், கங்காயாம் கோஷ: என்கிற இது முதலியவைகளிலும் ஒரு பதத்துக்குக்கூட லக்ஷணை வாராமல் போகவேண்டியதாக வருமென்று அபிப்பிராயம். "கங்காயாம் மத்ஸ்யா:" என்கிறவாக்கியத்தில் விரோதமில்லாமையால் லக்ஷணை அங்கீகரிக்கப்படவில்லை; "கங்காயாம் கோஷ:" என்கிற விடத்தில் விரோதமிருப்பதால் லக்ஷணைகல்பநம் தோஷமாகாதென்று சொல்லப்படுமேயாகில், அது இங்கும் ஸமானமென்று சொல்லுகிறார்—ஸமபிவ்யாஹ்ருத என்று. "விஷம் புங்க்ஷ்வ" இதுமுதலிய வாக்கியங்களில் ஸர்வபதலக்ஷணையும் காணப்பட்டிருக்கிறதென்று அபிப்ராயம். ஏதத்தாத்பர்யநிர்ணீதே ஸதி என்று. § அபவாதகமில்லாத ஸமானவிபக்தி நிர்தேசம நிர்ப்சாயகமென்று கருத்து. "த்வயோஸ்த்ரயாணாம் இத்யாதி" அவிரோதம் விரோதம் இவைகளே முக்யவ்ருத்தியையும் லக்ஷணாவ்ருத்தியையும் ஏற்றுக்கொள்வதில் ப்ரயோஜகங்களேயொழிய பதங்களின் ஏகத்வம் த்வித்வம் முதலியவைகள் ப்ரயோஜகங்கள் ஆகா என்று அர்த்தம். "விஷம் புங்க்ஷ்வ" இது முதலிய லௌகிகப்ரயோகங்களிலே மாத்ரம் ஸர்வபதலக்ஷணையானது கதியில்லாமையால் ஆச்ரயிக்கப்பட்டதென்பதில்லை, பரீக்ஷகர்களான மற்றவர்களாலுங்கூட ஆச்ரயிக்கப்பட்டிருக்கிறதென்று கூறுகிறார்—தந்த்ராச என்று. தத்ரா-ஸர்வபதலக்ஷணைக்கு தோஷமில்லாமை ஒப்புக்கொள்ளப்படுகிறது. ஒப்புக்கொள்வதற்கு ஹேது இருப்பதினால் ஒப்புகொள்ளாமலிருக்கமுடியாது என்றுகருத்து.

எந்த பரீக்ஷகர்களால் எந்தவிடங்களில் ஸர்வபதலக்ஷணை ஆச்ரயிக்கப்பட்டிருக்கிறதென்றால் சொல்லுகிறார்-கார்யவாக்யார்த்த என்று. லௌகிகவாக்கியங்களில் எல்லாபதங்களும் லாக்ஷணிகங்கள் என்பதை உபபாதிக்கிறார்—அபூர்வகார்யஏவ என்று. க்ரியாகார்யம் லாக்ஷணிகமாக விருக்கட்டும். அதனால் எவ்வாறு ஸர்வபதலக்ஷணையெனில்கூறுகிறார்— கார்யாந்வித என்று. பதஙகள் க்ரியையோடு அந்விதமானதையே சொல்லுவதால் அபூர்வகார்யாந்விதாபிதாயிகளான காரகபதங்களுக்கு அந்த அபூர்வத்தோடு ஸம்பந்தம் பெற்றதே முக்யார்த்தமாதலால் அதோடு அந்வயத்தை விட்டு விட்டால் லக்ஷணை என்றே அர்த்தம்.

ஐயா! "கங்காயாம் கோஷ: ப்ரதிவஸதி" இது முதலிய வாக்யங்களில் கங்கா பதத்திற்கு லாக்ஷணிகார்த்தத்வம் இருந்தபோதிலும், அதோடு அந்விதார்த்தாபிதாயி

§ அபவாதம்—மறுப்பு

களான பதார்த்தங்களுக்கு அமுக்யத்வம் காணப்பட்டிருக்கவில்லையே என்று சொல்லப்படுமேயாகில், அப்படியல்ல—கஙகாபதத்தால் லக்ஷிதமான கரையானது வாக்யத்தினர்த்தமாகாமையால். இங்கேயோ வாச்கியததிற்கு ப்ரதானப்ரதிபாத்யமாகவிருக்கிற கார்யரூபமான அர்த்தத்தை உணர்த்துகிறபதம லாக்ஷணிகமாதலால் அதோடு அந்விதமானதைசசொல்லும பதங்களுக்கு லக்ஷணை வந்தேதீறும். அதனாலேயே கார்யவாக்யார்த்தவாதிகளாமென்று உரைககப்பட்டது. ஐயா! “கமலானி § நிமீலந்தி, $ குமுதாந்யுந்மிஷந்திச” என்கிறவிடஙகளில் வாக்யார்த்த பூதமான மீலநம் முதலியவற்றுக்கு லாக்ஷணிகதவமிருந்தபோதிலும், அதோடு அந்விதமான அர்த்ததைச்சொல்லுகிற கமலமமுதலிய பதஙகளுக்கு லாக்ஷணிகத்வம காணப்படவில்லையே என்று வினவுவாயே யாகில், அபிப்பிராயத்தை யறியாதவனாக நீ சோதனஞ்செய்கிறாய். எல்லாபதங்களுக்கும் நிமீலனரூப வாக்யார்த்த பரதவம ஒருவராலும் வ்யவஸ்தாபிக்கப்படாததால். நிமீலனரூபார்த்ததிற்கு உபஸ்தாபகமான பதத்திற்கு லக்ஷணை சொன்னபோதிலும் அதோடு அந்விதார்த்தாபிதாயிகளான பதங்களுக்கு லாக்ஷணிகத்வம் ஏற்படவேணடுமென்பது கிடையாது. உன்னாலேயோ எல்லாபதஙகளுக்கும் கார்யபரத்வம் ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதால் அந்தகார்ய ஸமர்ப்பகமான பததிற்கு லாக்ஷணிகத்வம் ஸம்பவிக்கும்போது அதோடு அந்விதமான அர்த்தத்தைச்சொல்லுகிற பதஙகள் லக்ஷணையை அடைகின்றன.

(அதை உபபாதிக்கிறார்) கார்ய வாக்யார்த்த வாதியினால் பதங்களுக்கு விசிஷ்டகார்யைகதேசத்தில் பதசகதி நிச்சயிக்கப்படுகிறதா ? அல்லது, விசிஷ்ட ஸ்தாயிகார்யைகதேசத்திலா ? முந்தினபக்ஷத்தில் விசிஷ்டகார்யைகதேசதவம் பொதுவாக விருப்பதால் ஸ்வார்த்தஙகளில் காரகபதஙகளுககுப்போல “ லிங் ” முதலியவற்றுக்கு கரியா கார்யத்தில் முக்யத்வம் ப்ரஸங்கிக்கும் இரண்டாவது பக்ஷததில், விசிஷ்டஸதாயிகார்யைகதேச பரத்வத்தை விடுவது, எல்லாபதங்களுக்கும, ஸமமாதலால் ‘லிங்’ முதலியவற்றுக்கு க்ரியாகார்யத்தில் போல காரகபதங்களுககு க்ரியாகார்யாந்விதபரத்வத்தில் லக்ஷணை ஏற்படவேண்டும் பதங்களுக்கு விசிஷ்டகார்யைகதேசபாத்வம் துல்யமாக இருந்தபோதிலும் ‘லிங’ முதலியது கரியாகாரயத்தில் லாக்ஷணிகம்; கார்யாந்விதமாத்ரததில காரகபதங்களுககு முக்யதவமெனறு கூறப்படுமேயானால், கார்யாநவிதமாத்ரத்தில் காரகபதஙகளுக்கு முக்யதவம் இஷ்டமாகில் ‘லிங்’ முதலியவற்றுக்கு க்ரியாகார்யத்தில் எவ்வாறு லாக்ஷணிகத்வம் ? ஸதாயிகார்யபரமாக வேதத்தில் பிரயோகிக்கப்பட்டிருக்கிறதென்கிற நிச்சயத்தால், லக்ஷணையினாலுங்கூட, க்ரியாகார்யபோதனம்

§ நிமீலந்தி—மூடுகின்றன; ‡ குமுதானி–அல்லிப்பூக்கள், $ உந்மிஷந்தி–மலர்கின்றன;

ப்ராபாகர மீமாம்ஸகர்கள், லிங லோட், தவ்யப்ரத்யாந்த பதஙகளோடுகூடிய விதிவாக்கியஙகளால் அபூர்வம் போதிக்கப்படுகிறதென்று கூறுகின்றனர். லிங முதலிய ப்ரத்யங்களால் நேராக அபூர்வமே சொல்லப்படுகிறது. அதுதான் விசேஷ்யம் கரியையினாலும் காரகங்களாலும் அதுவே விசேஷிக்கப்படுகிறது. வைதிகவாக்கியங்களில் அபூர்வரூபமான கார்யத்தோடு அந்வயித்த அர்த்தங்களைச்சொல்லுகிற பதங்களுக்கு அந்த அபூர்வகார்யத்தோடு அந்வயித்த அர்த்தத்திலேயே முக்கியவ்ருத்தி. லௌகிகவாக்யங்களிலோ அபூர்வகார்யாந்வய பரித்யாகத்தால் ஸர்வபதங்களும் லக்ஷணாவ்ருத்தியினாலேயே அர்த்தங்களை போதிக்கின்றன. இந்த லக்ஷணாகல்பநத்திற்கு பீஜம் தாத்பர்யாநுபபத்தியே. அந்வயாநுபபத்தி என்று சிலர் கூறுவார்கள்.

ஸம்பவிக்கலாமென்றால் காரகபதங்களுக்கும் ஸ்தாயியான கார்யாந்விதபரமாக வேதத்தில் ப்ரயோகம் காணப்படுவதால், லக்ஷணையினுலுங்கூட க்ரியா கார்யாந்விதபோதநம் உபபன்னமாவதால் க்ரியாகார்யாந்வித ப்ரதிபாதநம் லாக்ஷணிகமாக ஆகும். ஐயா! 'கோ' பதத்திற்கு 'ஏ' ஸாஸ்நைமுதலிய அவயவஸம்ஸ்தானமுள்ள வ்யக்தியில் மாத்திரம் முக்யத்வ மிருந்தபோதிலும், வேறுப்ரமாணத்தால் *லுண்டாதிகள் ஸித்திக்கிறதுபோல 'லிங்' முதலியது கார்யமாத்ர பரமாகில், கார்யவிசேஷத்திற்கு வேறு பிரமாணத்தால் ஸித்தி இல்லாமையாலும் இரண்டு இடத்திலும் ஒரு சக்தி கல்பிப்பது பொருந்தாததாலும், சக்தித்வய கல்பநத்தில் கௌரவத்தாலும், லிங முதலியவற்றுக்கு அபூர்வகார்யத்தில் முக்யத்வமென்பதுபற்றி க்ரியாகார்ய ப்ரதிபாதநம் ¶ லாக்ஷணிகம். அப்படி இல்லாவிட்டால் சப்த சக்தியானது கார்யமாத்ர விஷயமாதலாலும் ப்ரத்யக்ஷம் முதலியவற்றுக்கு விஷயமில்லாமலிருப்பதாலும், கார்யவிசேஷம் ப்ரமாணமற்றதாக ஆகவேண்டியதாகுமென்று சொல்லப்படுமேயானல், அல்ல— 'கார்யவிசேஷம் ப்ராமாணிகமாகில், அங்கு சக்தி கல்பநம் செய்யத்தக்கது. சக்தி கல்பிக்கப்பட்டால், அதற்கு ப்ராமாணிகத்வம்' என்று அந்யோந்யாச்ரய தோஷம் ப்ரஸங்கிப்பதால். மேலும் கார்யவிசேஷத்திற்கு அப்ராமாணிகத்வத்தைப் பரிஹரிப்பதற்காக அங்கு சக்தி கல்பிக்கப்படுமேயாகில், அப்பொழுது காரகபதங்களுக்கு கார்யாந்விதமாத்ரபரத்வம் ஏற்படுவதால் கார்ய விசேஷாந்வயம் ப்ரமாணாந்தரத்துக்கு அகோசரமாதலாலும் இரண்டு இடத்திலும் சக்தி கல்பிப்பதில் கௌரவமேற்படுவதாலும் கார்யவிசேஷாந்வயத்தில் ப்ரமாணம் இல்லாமல்போகுமென்று அதைப்பரிஹரிப்பதற்சாக கார்யவிசேஷத்தோடு அந்வயத்தில் காரகபதங்களுக்கு முக்யத்வமென்பதினல் க்ரியா கார்யாந்விதபரத்வம் லாக்ஷணிகமாக ஆகும். 'லிங' முதலியவற்றின் ஸமபிவ்யாஹார பலத்தால் காரகபதங்ளுக்கு கார்யவிசேஷாந்வயபரத்வம் ஸித்திக்கிறது என்று சொல்லப்படுமேயானல் அப்பொழுது ஸ்வர்க காமபதத்தின் சேர்க்கைபலத்தால் 'லிங' முதலியவற்றுக்கு கார்யவிசேஷபரத்வஸித்தி என்று 'லிங' முதலியது கார்யமாத்ரபரமாக ஆகும். ஆகையால் லிங்முதலியவைகள் அபூர்வகார்யத்திலேயே முக்ய வ்ருத்தமாதலால் க்ரியாகார்யம் அமுக்யமானதுபற்றி காரகபதங்களுக்கும் க்ரியாகார்யாந்வித பரத்வம் லாக்ஷணிகமென்றே ஒப்புக்கொள்ளத்தக்கது. காரகபதஙகளுக்கு அந்வயாம்சத்தில் லக்ஷணை எல்லாஇடத்திலுமில்லை என்று கூறப்படுமேயானல் ஸமாநாதிகரணவாக்யத்திலும் பதஙகளுக்கு ப்ராதிபதிகாம்சத்திலேயே லக்ஷணை, ஸமாநவிபக்தியிலில்லை என்பது துல்யம்.

ஸர்வபதலக்ஷணநுபபத்திபரிஹாரத்தை உபஸம்ஹரிக்கிறர்— அத: என்று. அத: எல்லாபதங்களுக்கும் லக்ஷணை கல்பிப்பது உபபத்திஸித்தமாதலாலும், லௌகிகர்களாலும் பரீக்ஷகர்களாலும் அங்கீகரிக்கப்பட்டிருப்பதாலும் என்று அர்த்தம். யதப்யாஹு: என்று தொடங்கி சாஸ்திரத்தினல் செய்யப்பட்டிருக்கிற தமக்கு அபிமதமான அர்த்தத்தின் ஸித்தியை உபஸம்ஹரிக்கிறர். அத: இதமேவ என்று. அத: - வஸ்து நிர்விசேஷமென்பதிலும்; அதேபரமார்த்தம், அதைத்தவிர்ந்தமற்றதெல்லாம் மித்யை என்பதிலும்; அந்த பேதம் தோஷத்தால் உண்டுபண்ணப் பட்டிருக்கிறது, தோஷமும் ஸத்தென்றாவது அஸத்தென்றாவது நிர்வசநம் செய்யத்தகாதது ஜ்ஞாநமாத்ரத்தினல்

ஏ ஸாஸ்நை—பசுக்களின் கழுத்துக்குக்கீழ்பக்கத்தில் தொங்கும் சதை.

* லுண்ட:—ஒரு கொம்பு ஒடிந்தமாடு.

¶ லாக்ஷணிகம்—லக்ஷணவ்ருத்தியினல் அர்த்தத்தை போதிக்கிறபதம்.

நிவர்த்திக்கத்தக்கது என்கிற விஷயத்திலும்; சொல்லப்பட்டிருக்கிற உபபத்தியுடன் கூடிய சுருதிவாக்யங்களால் என்று அர்த்தம். இதமேவார்த்தஜாதம் — முன்சொல்லப்பட்டதாகவே இருக்கிற அர்த்த ஸமூஹமே ஒழிய ஸகுண வஸ்து முதலியதல்ல. ப்ரதிபாதயந்தோ வேதாந்தா: ப்ரமாணம் என்று. வாக்யாந்தரங்களுக்கு கால்பநிகார்த்தத்தில் நோக்குண்டாய் தத்வத்தை உணர்த்துந்தன்மை இல்லாமையால், கூறப்பட்டுள்ள அர்த்தத்தையே விஷயமாகக்கொண்டிருக்கிற வாக்யஸமூஹம் தத்வத்தில் ப்ரமாண மென்று அர்த்தம்.

𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌾𑌦𑌿𑌵𑌿𑌰𑍋𑌧𑍇 𑌚 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌸𑍍𑌯 𑌬𑌲𑍀𑌯𑌸𑍍𑌤𑍍𑌵𑌮𑍁𑌕𑍍𑌤𑌮𑍍 । 𑌸𑌤𑌿 𑌚 𑌵𑌿𑌰𑍋𑌧𑍇 𑌬𑌲𑍀𑌯𑌸𑍍𑌤𑍍𑌵𑌂 𑌵𑌕𑍍𑌤𑌵𑍍𑌯𑌮𑍍 । 𑌵𑌿𑌰𑍋𑌧 𑌏𑌵 𑌨 𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍇, 𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌶𑍇𑌷𑌸𑌨𑍍𑌮𑌾𑌤𑍍𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌗𑍍𑌰𑌾𑌹𑌿𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌸𑍍𑌯 । 𑌨𑌨𑍁 𑌚 "𑌘𑌟𑍋𑌽𑌸𑍍𑌤𑌿, 𑌪𑌟𑍋𑌽𑌸𑍍𑌤𑌿" 𑌇𑌤𑌿 𑌨𑌾𑌨𑌾𑌕𑌾𑌰𑌵𑌸𑍍𑌤𑍁𑌵𑌿𑌷𑌯𑌂 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌂 𑌕𑌥𑌮𑌿𑌵 𑌸𑌨𑍍𑌮𑌾𑌤𑍍𑌰𑌗𑍍𑌰𑌾𑌹𑍀𑌤𑍍𑌯𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 । 𑌵𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌗𑍍𑌰𑌹𑌣𑌾𑌭𑌾𑌵𑍇 𑌸𑌤𑌿 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌨𑌾𑌮𑍇𑌕𑌵𑌿𑌷𑌯𑌤𑍍𑌵𑍇𑌨 𑌧𑌾𑌰𑌾𑌵𑌾𑌹𑌿𑌕𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌦𑍇𑌕𑌵𑍍𑌯𑌵𑌹𑌾𑌰𑌹𑍇𑌤𑍁𑌤𑍈𑌵 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 । 𑌸𑌤𑍍𑌯𑌮𑍍; 𑌤𑌦𑍇𑌵𑌾𑌤𑍍𑌰 𑌵𑌿𑌵𑌿𑌚𑍍𑌯𑌤𑍇 । 𑌕𑌥𑌮𑍍? 𑌘𑌟𑍋𑌽𑌸𑍍𑌤𑍀𑌤𑍍𑌯𑌤𑍍𑌰𑌾𑌸𑍍𑌤𑌿𑌤𑍍𑌵𑌂 𑌤𑌦𑍍𑌭𑍇𑌦𑌶𑍍𑌚 𑌵𑍍𑌯𑌵𑌹𑍍𑌰𑌿𑌯𑌤𑍇; 𑌨 𑌚 𑌦𑍍𑌵𑌯𑍋𑌰𑌪𑌿 𑌵𑍍𑌯𑌵𑌹𑌾𑌰𑌯𑍋𑌃 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌮𑍂𑌲𑌤𑍍𑌵𑌂 𑌸𑌂𑌭𑌵𑌤𑌿, 𑌤𑌯𑍋𑌰𑍍𑌭𑌿𑌨𑍍𑌨𑌕𑌾𑌲𑌜𑍍𑌞𑌾𑌨𑌫𑌲𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 । 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍍𑌯 𑌚𑍈𑌕𑌕𑍍𑌷𑌣𑌵𑌰𑍍𑌤𑌿𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 । 𑌤𑌤𑍍𑌰 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌂 𑌵𑌾 𑌭𑍇𑌦𑍋 𑌵𑌾 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌸𑍍𑌯 𑌵𑌿𑌷𑌯 𑌇𑌤𑌿 𑌵𑌿𑌵𑍇𑌚𑌨𑍀𑌯𑌮𑍍 । 𑌭𑍇𑌦𑌗𑍍𑌰𑌹𑌣𑌸𑍍𑌯 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌗𑍍𑌰𑌹𑌣𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌤𑌿𑌯𑍋𑌗𑌿𑌸𑍍𑌮𑌰𑌣𑌸𑌾𑌪𑍇𑌕𑍍𑌷𑌤𑍍𑌵𑌾𑌦𑍇𑌵 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌵𑌿𑌷𑌯𑌤𑍍𑌵𑌮𑌵𑌶𑍍𑌯𑌾𑌶𑍍𑌰𑌯𑌣𑍀𑌯𑌮𑌿𑌤𑌿 𑌨 𑌭𑍇𑌦𑌃 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑍇𑌣 𑌗𑍃𑌹𑍍𑌯𑌤𑍇 । 𑌅𑌤𑍋 𑌭𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌿𑌮𑍂𑌲 𑌏𑌵 𑌭𑍇𑌦𑌵𑍍𑌯𑌵𑌹𑌾𑌰𑌃 ॥

ஸ்ரீபாஷ்யம்.—

ப்ரத்யக்ஷம் முதலியவற்றோடு விரோதம்வரின், சாஸ்திரத்திற்கு ப்ராபல்யம் உரைக்கப்பட்டது. விரோதம் வந்தாலன்றோ ப்ராபல்யமும் சொல்லத் தக்கது. விரோதமே காணப்படவில்லை—ப்ரத்யக்ஷத்திற்கு நிர்விசேஷ ஸந்மாத்ர ப்ரும்மத்தை க்ரஹிக்கும் தன்மை வாய்ந்திருப்பதால். ஐயா! “குடம் உளது, வஸ்திரம் உளது” என்று நாநாவித ஆகாரங்களுள்ள வஸ்துக்களை விஷயமாகக்கொண்ட ப்ரத்யக்ஷமானது எவ்வாறு ஸந்மாத்ர க்ராஹி என்று சொல்லப்படுகிறது? பேதவஸ்துக்களின் க்ரஹணமில்லாவிடில் எல்லாஜ்ஞாநங்களுக்கும் விஷயம் ஒன்றாக இருப்பதால் *தாராவாஹிக

---

* தாராவாஹிக விஜ்ஞானம்—வேறு வஸ்துக்களை விஷயீகரிக்காமல் தொடர்ச்சியாகவந்துகொண்டிருக்கிற ஒரே வஸ்து விஷயகமான ஜ்ஞானம்.

விஜ்ஞானத்தைப்போல ஒரே வ்யவஹாரத்திற்கு ஹேதுத்வமே இருக்கவேண்டியதாக ஆகும். ஸரிதான்— அப்படியே இங்கு விவேசநம செய்யப்படுகிறது. எவ்வாறு? "குடம் உளது" என்கிற இடத்தில் அஸ்தித்வமும் (இருப்பும்) அதின் வேற்றுமையும் வ்யவஹரிக்கப்படுகிறது? இரண்டு வ்யவஹாரங்களுக்கும் ப்ரத்யக்ஷ மூலத்வம் ஸம்பவியாது— அவையிரண்டும் பின்னகாலங்களில் உண்டாகிறஜ்ஞானங்களுக்கு பலனைக விருப்பதால். ஏனெனில்— ப்ரத்யக்ஷஜ்ஞானமானது ஒரு க்ஷணமே நிலைபெற்றிருப்பதால். அந்த (ஏகக்ஷணவர்த்திஜ்ஞானத்தில்) ஸ்வரூபமோ அல்லது பேதமோ ப்ரத்யக்ஷத்துக்கு விஷயமென்று பகுத்தறியத்தக்கது. பேதக்ரஹணமானது ஸ்வரூப க்ரஹணத்தையும் அதனுடன் அதின் ப்ரதியோகி ஸ்மரணத்தையும் அபேக்ஷித்திருப்பதனாலேயே ஸ்வரூபவிஷயத்வம் அவச்யம் ஆச்ரயிக்கத்தக்கதாதலால், பேதம் ப்ரத்யக்ஷத்தால் க்ரஹிக்கப்படுகிறதில்லை. ஆகையால் பேதவ்யவஹாரம் ப்ராந்தி மூலமே.

ச்ருதப்ரகாசிகை:—

முன்பு, ப்ரத்யக்ஷத்தோடு விரோதம்வரின் சாஸ்திரத்திற்கு ப்ராபல்யமும் சாஸ்திரத்திலும் பேதாவலம்பிகளாகவிருக்கும் வசனங்களுக்கு பாத்யத்வமும் கூறப்பட்டது. இதற்குமேல். ப்ரத்யக்ஷவிரோதமில்லை என்பதை உபபாதிப்பதற்குத்தொடங்குகிறார்— ப்ரத்யக்ஷாதி என்று. சாஸ்திரத்திற்கும் ப்ரத்யக்ஷத்திற்கும் விரோதம்வரின், சாஸ்திரத்திற்கு ப்ராபல்யத்தை ப்ரதிபாதிக்கிற க்ரந்தத்தோடு இனிகூறப்போகிற அர்த்தத்திற்கு ஸங்கதி என்று கருத்து சகாரம் ஸமுச்சயத்தில். அவிரோதபக்ஷம் புத்தியில் நிலைபெற்றிருப்பதால் அதற்கும் $ அப்யுபகமம் செய்து சொல்லப்பட்டதற்கும் ஸமுச்சயம். விரோதத்தை ஒப்புக்கொண்டபோதிலுமென்று அர்த்தம். ஸதீச என்று. இங்கு 'ச' சப்தம் 'ஹி' சப்தத்தின் அர்த்தமுள்ளது. அவிரோதத்தை ப்ரதிஜ்ஞை செய்கிறார்— விரோத ஏவநத்ருச்யதே என்று. ஹேதுவைச்சொல்லுகிறார்— நிர்விசேஷ என்று ※விஷய விஷயிபாவரூபமான பேதவ்யாவ்ருத்தியின் பொருட்டு 'ஸந்மாத்ர ப்ரஹ்ம' என்று கூறப்பட்டது. ப்ரதீதிவிரோதத்தால் சோதகம் செய்கிறார்— நநுச என்று. விரோதத்தை உபபாதிக்கிறார்—கடோஸ்தி இது முதலியதால். தனித்து அஸ்தி என்று மாத்திரம் ஜ்ஞானம் வருகிறதில்லையன்றோ; பின்னையோ "குடம் உளது, வஸ்திரம் உளது" என்றேயல்லவோ ப்ரமிதி உண்டாகிறதென்று அர்த்தம். ப்ரதீதிக்கு ப்ராந்திரூபத்வம் ஸம்பவிக்கக்கூடியதாதலால், அதைவிலக்குவதற்காக வ்யவஹாரவிரோதத்தைச்சொல்லுகிறார்— விலக்ஷண என்று. பரிஹரிக்கிறார்-ஸத்யம் என்று. ஸத்யம்என்று அர்த்தாங்கீகாரத்தால்குடம் உளதுவஸ்திரம் உளது என்கிற இடங்களில், அஸ்தித்வவ்யவஹாரம் ஏகரூபமாக இருப்பதால் அவ்வளவு மாத்திரத்திலும் பேதா ‡ வபாஸமாத்திரத்திலும் அங்கீகாரமும், பேதவ்யவஹாரம் ப்ரத்யக்ஷமூலம்

$ அப்யுபகமம்—எதிரிபக்ஷத்தை ஒப்புக்கொண்டும் ஸமாதானம் சொல்லுதல்.

※ விஷயவிஷயிபாவரூபமானபேதம்—ஸத்வேறு, ஜ்ஞானம்வேறு, ஸத் ஜ்ஞானத்துக்கு விஷயம் என்று சொல்லக்கூடிய பேதம்.

‡ அவபாஸம்—தோற்றம்.

என்பதிலும் பேதாவபாஸம் ப்ரத்யக்ஷம் என்பதிலும் அங்கீகாரமும் ஸூசிப்பிக்கப்படுகிறது. தயோரேவ— எவ்வாறு ஸந்மாத்ரத்திற்கே ப்ரத்யக்ஷத்வமும் வ்யவஹாரஹேதுத்வமும் உண்டாகுமோ அவ்வாறே என்று அர்த்தம். அத்ர - கடாதிவிஷய வ்யவஹாரம் ஸ்வரூபவிஷய வ்யவஹாரம் இவைகளின் கலப்பில். விவிச்யதே-எவ்வாறு "இதுவெள்ளி" என்கிற வ்யவஹாரத்தில் "இதம்" வ்யவஹாரத்திற்கு ப்ரத்யக்ஷமூலத்வமும், ரஜதவ்யவஹாரத்திற்கு ப்ராந்திமூலத்வமும் ஸம்பவிக்குமோ அவ்வாறு விவேசநஞ் செய்யப்படுகிறதென்று அர்த்தம். அதில இதமம்ச ரஜதாம்ச வ்யவஹாரங்களிரண்டுக்கும் அபாதிதத்வபாதிதத்வங்களால் விவேகம உண்டாகிறது இந்த விடத்தில் ஸ்வரூபவிஷய பேதவிஷய வ்யவஹாரங்கள் இரண்டுக்கும அபாதிதத்வம் விசேஷமின்றி இருக்க, எவ்வாறு விவேகம உண்டாகிறது என்கிற அபிப்பிராயத்தால் கூறுகிறார்— கதம் என்று. யௌக்திகவிபாகமிருக்கிறதென்கிற அபிப்பிராயத்தால் சொல்லுகிறார்— கடோஸ்தி என்று.

அஸ்தித்வம், பேதம் இரண்டும் ஒரு பதார்த்தமா? அல்லது இரண்டா? இரண்டாகில், அந்த இரண்டு வ்யவஹாரங்களும் ப்ரத்யக்ஷமூலமா? அல்லது இரண்டில் ஒன்று மட்டுமா? இரண்டுக்கும ப்ரத்யக்ஷமூலத்வம சொல்லப்படுமேயாகில், ப்ரத்யக்ஷமானது ஒரே ஸமயத்தில் இரண்டையும க்ரஹிக்கிறதா? அல்லது க்ரமமாக ஒன்றன் பின் ஒன்ருக க்ரஹிக்கிறதா? என்கிற விகல்பங்களைமனதில் வைத்துக்கொண்டு அஸ்தித்வ லக்ஷணமான ஸ்வரூபம் அதின்பேதம் இவையிரண்டுக்கும ஐக்யம் ஸம்பவியாது, பேதக்ரஹணமானது ஸ்வரூபக்ரஹணத்தையும் ப்ரதியோகிஸ்மரணத்தையும் அபேக்ஷித்திருப்பதாலும், ஸந்மாத்ரக்ரஹணமானது அதை அபேக்ஷியாமலிருப்பதாலும் என்று அபிப்பிராயங்கொண்டு கூறுகிறார்— அஸ்தித்வந்து பேதஶ்ச என்று. பிந்ந: என்கிற வ்யவஹாரத்தில் போல கட: என்கிற அஸாதாரணவ்யவஹாரத்திலும் கடம், படத்தைக்காட்டிலும் வேறுபட்டதென்கிற ப்ரதீதியில் ப்ரதியோகியின் அபேக்ஷையிருப்பதால், கடவ்யவஹாரமே பேதவ்யவஹாரமென்று உரைக்கப்படுகிறது. இரண்டு என்கிறபக்ஷத்திலும் இரண்டுக்கும்ப்ரத்யக்ஷமூலத்வமில்லை என்று சொல்லுகிறார்— நச த்வயோரபி என்று. த்வயோரபி வ்யவஹாரயோ:— ஸ்வரூபவிஷய, பேதவிஷய வ்யவஹாரங்கள் இரண்டுக்கும். ப்ரத்யக்ஷமானது ஒரே ஸமயத்திலா? அல்லது க்ரமமாக ஒன்றின்பின் ஒன்ருக மூலமாக ஆகிறதா? என்கிற விகல்பத்தை கருதி, ஒரே ஸமயத்தில் என்கிற பக்ஷத்தை தூஷிக்கிறார்— தயோ: என்று. ப்ரதியோகியின் அபேக்ஷை, அநபேக்ஷை என்கிற வைஷம்யத்தாலென்று கருத்து. க்ரமபக்ஷத்தை நிரஸிக்கிறார்— ப்ரத்யக்ஷஜ்ஞாநஸ்ய, என்று. சகாரம் ஸமுச்சயத்தில். இவ்வண்ணம் ஒரே ஸமயத்தாலும் க்ரமத்தாலும் இரண்டு வ்யவஹாரங்களுக்கும் ப்ரத்யக்ஷமூலத்வம் ஒவ்வாததலால், அவ்விரண்டில் ஒன்றுக்கு ப்ரத்யக்ஷவிஷயத்வத்தைச் சொல்லுகிறார்— தத்ர என்று. பேதம் ப்ரத்யக்ஷ விஷயமாக ஆகட்டும? என்று கேட்கில் சொல்லுகிறார்— பேத என்று. அஸ்தித்வம் பேதம் இரண்டுக்கும் ஐக்யம் ஸம்பவியாது என்பதிலும், அந்த வ்யவஹாரங்கள் இரண்டும் பிந்நகாலஜ்ஞானபலன்கள் என்பதிலும், எது ஹேதுவாகக் கூறப்பட்டதோ அதிலேயே என்பது ஏவகாராபிப்ராயம். ப்ரத்யக்ஷம், ஸ்வரூபமாத்ரவிஷயமாகில், எவ்வாறு பேதவ்யவஹாரத்திற்கு ஸம்பவம்? என்று ஶோத்யம்வரின் சொல்லுகிறார்— அதோப்ராந்தி என்று அவ்வண்ணமே ஸமவித்ஸித்தி என்கிற க்ரந்தத்

‡ யௌகபத்யம்—ஒரே காலத்தில்.

தில் "யௌகபத்யக்ரமாயோகாத் வ்யவச்சேத விதாநயோ: | ஐக்யாயோகாச்ச பேதோ ந ப்ரத்யக்ஷ இதி யோ ப்ரம: ||" (பேதக்ரஹணம், ஸ்வரூபக்ரஹணம் இரண்டும் ஒரே ஸமயத்திலாவது, பின்காலத்திலாவது ஸம்பவியாததாலும் இரண்டுக்கும் ஐக்யமும் பொருந்தாததாலும், பேதம் ப்ரத்யக்ஷமன்று என்கிற யாதொரு ப்ரமமுண்டோ அந்தப்ரமம்) என்று சொல்லியிருக்கிறது. வ்யவச்சேத:— பேதக்ரஹணம். விதாநம ஸ்வரூபக்ரஹணம் இவ்வண்ணம் பேதத்தில் ப்ரமாணானுபபத்தி உரைக்கப்பட்டது.

𑌕𑌿𑌞𑍍𑌚, 𑌭𑍇𑌦𑍋 𑌨𑌾𑌮 𑌕𑌶𑍍𑌚𑌿𑌤𑍍 𑌪𑌦𑌾𑌰𑍍𑌥𑍋 𑌨𑍍𑌯𑌾𑌯𑌵𑌿𑌦𑍍𑌭𑌿𑌰𑍍𑌨𑌿𑌰𑍂𑌪𑌯𑌿𑌤𑍁𑌂 𑌨 𑌶𑌕𑍍𑌯𑌤𑍇 । 𑌭𑍇𑌦𑌸𑍍𑌤𑌾𑌵𑌨𑍍𑌨 𑌵𑌸𑍍𑌤𑍁𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌂, 𑌵𑌸𑍍𑌤𑍁𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑍇 𑌗𑍃𑌹𑍀𑌤𑍇 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌵𑍍𑌯𑌵𑌹𑌾𑌰𑌵𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌭𑍇𑌦𑌵𑍍𑌯𑌵𑌹𑌾𑌰𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗𑌾𑌤𑍍 । 𑌨 𑌵𑌾𑌚𑍍𑌯𑌂 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑍇 𑌗𑍃𑌹𑍀𑌤𑍇𑌽𑌪𑌿 𑌭𑌿𑌨𑍍𑌨 𑌇𑌤𑌿 𑌵𑍍𑌯𑌵𑌹𑌾𑌰𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌤𑌿𑌯𑍋𑌗𑌿𑌸𑍍𑌮𑌰𑌣𑌸𑌾𑌪𑍇𑌕𑍍𑌷𑌤𑍍𑌵𑌾𑌤𑍍, 𑌤𑌤𑍍𑌸𑍍𑌮𑌰𑌣𑌾𑌭𑌾𑌵𑍇𑌨 𑌤𑌦𑌾𑌨𑍀𑌮𑍇𑌵 𑌨 𑌭𑍇𑌦𑌵𑍍𑌯𑌵𑌹𑌾𑌰𑌃— 𑌇𑌤𑌿 । 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌮𑌾𑌤𑍍𑌰𑌭𑍇𑌦𑌵𑌾𑌦𑌿𑌨𑍋 𑌹𑌿 𑌪𑍍𑌰𑌤𑌿𑌯𑍋𑌗𑍍𑌯𑌪𑍇𑌕𑍍𑌷𑌾 𑌚 𑌨𑍋𑌤𑍍𑌪𑍍𑌰𑍇𑌕𑍍𑌷𑌿𑌤𑍁𑌂 𑌕𑍍𑌷𑌮𑌾, 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌭𑍇𑌦𑌯𑍋𑌃 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌕𑍃𑌤𑌾𑌵𑌿𑌶𑍇𑌷𑌾𑌤𑍍 । 𑌯𑌥𑌾 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌵𑍍𑌯𑌵𑌹𑌾𑌰𑍋 𑌨 𑌪𑍍𑌰𑌤𑌿𑌯𑍋𑌗𑍍𑌯𑌪𑍇𑌕𑍍𑌷𑌃, 𑌭𑍇𑌦𑌵𑍍𑌯𑌵𑌹𑌾𑌰𑍋𑌽𑌪𑌿 𑌤𑌥𑍈𑌵 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 । "𑌹𑌸𑍍𑌤𑌃 𑌕𑌰𑌃" 𑌇𑌤𑌿𑌵𑌤𑍍 "𑌘𑌟𑍋 𑌭𑌿𑌨𑍍𑌨𑌃" 𑌇𑌤𑌿 𑌪𑌰𑍍𑌯𑌾𑌯𑌤𑍍𑌵𑌞𑍍𑌚 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 । 𑌨𑌾𑌪𑌿 𑌧𑌰𑍍𑌮𑌃, 𑌧𑌰𑍍𑌮𑌤𑍍𑌵𑍇 𑌸𑌤𑌿 𑌤𑌸𑍍𑌯 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌾𑌦𑍍𑌭𑍇𑌦𑍋𑌽𑌵𑌶𑍍𑌯𑌾𑌶𑍍𑌰𑌯𑌣𑍀𑌯𑌃 । 𑌅𑌨𑍍𑌯𑌥𑌾 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌮𑍇𑌵 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 । 𑌭𑍇𑌦𑍇 𑌚 𑌤𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌭𑍇𑌦𑌸𑍍𑌤𑌸𑍍𑌯𑌾𑌪𑍀𑌤𑍍𑌯𑌨𑌵𑌸𑍍𑌥𑌾 । 𑌕𑌿𑌞𑍍𑌚, 𑌜𑌾𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌵𑌸𑍍𑌤𑍁𑌗𑍍𑌰𑌹𑌣𑍇 𑌸𑌤𑌿 𑌭𑍇𑌦𑌗𑍍𑌰𑌹𑌣𑌂, 𑌭𑍇𑌦𑌗𑍍𑌰𑌹𑌣𑍇 𑌸𑌤𑌿 𑌜𑌾𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌵𑌸𑍍𑌤𑍁𑌗𑍍𑌰𑌹𑌣𑌮𑌿𑌤𑍍𑌯𑌨𑍍𑌯𑍋𑌨𑍍𑌯𑌾𑌶𑍍𑌰𑌯𑌣𑌮𑍍 । 𑌅𑌤𑌃 𑌭𑍇𑌦𑌸𑍍𑌯 𑌦𑍁𑌰𑍍𑌨𑌿𑌰𑍂𑌪𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌸𑌨𑍍𑌮𑌾𑌤𑍍𑌰𑌸𑍍𑌯𑍈𑌵 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌕𑌂 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌮𑍍 ॥

ஸ்ரீபாஷ்யம்.—

மேலும், பேதமென்கிற ஒரு பதார்த்தமானது நியாயத்தை அறிந்தவர்களால் நிரூபிப்பதற்கு சக்யமாகாது. பேதமானது வஸ்துஸ்வரூபமன்று; வஸ்து ஸ்வரூபம் க்ரஹிக்கப்பட்டால் ஸ்வரூபவ்யவஹாரம்போல், எல்லாவற்றைக்காட்டிலும் பேதமென்கிற வ்யவஹாரம் ப்ரஸங்கிக்கவேண்டியதாகும். ஸ்வரூபம் க்ரஹிக்கப்பட்டிருந்தபோதிலும், "பின்ன:" என்கிற வ்யவஹாரம், எதைக்காட்டிலும் வேறுபட்டது என்று ப்ரதியோகியின் ஸ்மரணத்தை அபேக்ஷித்திருப்பதால் அந்தப்ரதியோகிபதார்த்தத்தின் ஸ்மரணமில்லாமையால் அப்பொழுதே பேதவ்யவஹாரமுண்டாகிறதில்லை என்று சொல்லத்தக்கதல்ல; (ஏனெனில்) ஸ்வரூபமாத்ரத்தை பேதமாகச்சொல்லுமவனுக்கு ப்ரதியோகியின் அபேக்ஷையானது உத்ப்ரேக்ஷிக்கத்தக்கதன்று—

ஸ்வரூபம்,பேதம் இரண்டுக்கும் ஸ்வரூபத்வம் விசேஷமின்றியிருப்பதால் எவ்வாறு ஸ்வரூப வ்யவஹாரம ப்ரதியோகியை அபேக்ஷிக்கிறதில்லையோ, பேத வ்யவஹாரமும் அப்படியேயாகும். ஹஸ்த: கர: என்பதுபோல கட: பின்ன: என்கிற இரண்டும் பர்யாயங்களாகவுமாக வேண்டிவரும். அந்த பேதம்தர்மமுமன்று. தர்மமாக ஒப்புக்கொண்டால் அதற்கு ஸ்வரூபத்தைக்காட்டிலும். பேதம் (வேறுபாடு) அவச்யம் ஒப்புக்கொள்ளத்தக்கது. அப்படியில்லாவிட்டால் ஸ்வரூபமாகவே ஆகும். அந்த தர்மத்திற்கு ஸ்வரூபத்தையபேக்ஷித்து பேதம் ஒப்புக்கொள்ளபபட்டால், அதற்கும் ஸ்வரூபத்துக்குமுள்ள பேதம், அதினுடைய தர்மம் அதற்கும் ஸ்வரூபத்துக்குமுள்ள பேதம், அதினுடைய தர்மமென்று அநவஸ்தை ஏற்படும். மேலும் ஜாத்யாதி விசிஷ்ட வஸ்துக்ரஹணம் வரின்,பேதக்ரஹணம்; பேதக்ரஹணம்வரின் ஜாத்யாதி விசிஷ்ட வஸ்துக்ரஹணம் என்று அந்யோந்யாச்ரயணதோஷம ஸம்பவிக்கும். ஆதலால் பேதம் எவ்விதத்தாலும் நிரூபிக்கமுடியாததலால் ப்ரத்யக்ஷம் ஸந்மாத்ரத்திற்கே ப்ரகாசகம்

ச்ருதப்ரகாசிகை—

பிறகு, ப்ரமேயாநுபபத்தியைக்கூறுகிறார்—கிஞ்ச என்று. கிஞ்ச இது முதலியதால் ப்ரமாணத்துக்கு அநுக்ராஹகமான தாககமில்லாமையும் உபபாதிக்கப்பட்டதாக ஆகிறது. துர்நிரூபத்வத்தை ப்ரதிஜ்ஞை டண்ணுகிறார்— பேதோநாம என்று. விகல்பத்தை ஸஹியாமையால் என்று கருத்து. ந்யாயவித்பி ஆபாதப்ரதீதியினல் த்ருப்தியுள்ளவர்களாலல்ல வென்று கருதது. ஸ்வரூபமா, தர்மமா என்கிற விகல்பத்தை மனதில் வைத்துக்கொண்டு ஸ்வரூபபக்ஷத்தை தூஷிக்கிறார்— பேதஸ்தாவத் என்று எதனுலெனில் சொல்லுகிறார்— வஸ்துஸ்வரூபமே என்று. ஸ்வரூபவ்யவஹாரவத்ஸர்வஸ்மாத்பேதவ்யவஹாரப்ரஸக்தே என்று. ப்ரதியோகியை அபேக்ஷியாத பேதவ்யவஹாரப்ரஸக்தியினுல் என்று அர்த்தம் ஸ்வரூபக்ரஹணமானது சப்தவ்யுத்பத்தியையும் வ்யுத்பந்நசப்த ஸ்மரணத்தையும் அபேக்ஷியாமலிருந்தபோதிலும், பிந்ந: என்கிற வ்யவஹாரம்மாத்திரம் எவ்வாறு அந்த சப்த ஸ்மரணஸாபேக்ஷமாக ஆகிறதோ, அவ்வாறே ப்ரதியோகி ஸ்மரணமும் பேதவ்யவஹாரஸாமக்ரியிலுள்ளடங்கியது. ஆதலால் அந்த ப்ரதியோகியின் ஸ்மரணமில்லாமையால் அப்பொழுதே பேதவ்யவஹாரமில்லையே யொழிய பேதக்ரஹணமில்லாமையாலல்ல வென்கிற பரமதத்தை ஆசங்கித்துச் சொல்லுகிறார்— நச என்று. எதனுலென்று கேட்கில் சொல்லுகிறார்—ஸ்வரூப என்று. எவ்வாறு ஸ்வரூபக்ரஹணத்தில் ப்ரதியோகியின் அபேக்ஷை இல்லையோ, அவ்வாறே பேதவ்யவஹாரத்திலும் என்பது சப்தார்த்தம் 'ஹி' சப்தம் ஹேதுவில்-ஸ்வரூபக்ரஹணத்திற்போல பேதவ்யவஹாரத்தில் ப்ரதியோகியின் அபேக்ஷை ஸம்பவியாமையாலென்று அர்த்தம் அஸம்பவம் எதனுலெனில் கூறுகிறார்—ஸ்வரூப என்று. ஸ்வரூபம் பேதம் இரண்டுக்கும் ஸ்வரூபத்வம் விசேஷமின்றி இருக்கட்டும். அதனுல் ப்ரதியோகிநிரபேக்ஷபேதவ்யவஹாரப்ரஸக்திக்கென்ன ப்ரயோஜனமென்கிற சங்கைவர, அதை விவரிக்கிறார்—யதா என்று. ஸ்வரூபபக்ஷத்தில் வேறுதூஷணத்தையும் சொல்லுகிறார்—ஹஸ்த, கர: என்று. பர்யாயமாக இருக்குமேயாகில் சேர்ந்து ப்ரயோகமானது விடத்தக்கதாக ஆகும் என்று கருத்து. ஸ்வரூபபக்ஷத்தில், ம்ருஷாவாதிகளால் தூஷணந்த

ரங்களும் சொல்லப்பட்டன. உதாஹரிக்கப்பட்ட தூஷணபரிஹாரத்தினால் அவை களும் பதில் சொல்லப்பட்டவைகளாக ஆகின்றனவென்று பாஷ்யத்தில் கண்டோக்தங் களாக இல்லை. அவைகள் கூறப்படுகின்றன—ஸ்வரூபபக்ஷத்தில். பிந்ந: என்று வ்யவ ஹரிப்பது யுக்தமன்று. பேதயோகமுள்ளதன்றோ பின்னம் இந்த வ்யவஹாரம் ஸித்திப்பதின்பொருட்டு ஸ்வரூபபூதமான பேதாந்தரம் ஸ்வீகரிக்கப்படுமேயானால் அவ் விடத்திலும் பிந்ந: என்கிற வ்யவஹாரம் அயுக்தமாதலால் அதற்கும் ஸ்வரூபபூதமான வேறு பேதம் ஆச்ரயிக்கத்தக்கதென்று அநவஸ்தைவரும். மேலும் சப்தாந்தரத்தால் தர்மமென்று சொல்லப்பட்டதாக ஆகும். அப்பொழுது தர்மபக்ஷதூஷணங்கள் நாலா பக்கங்களினின்றும் வந்து விழும் மேலும் பேதம் அநுவ்ருத்தமா? அல்லது வ்யா வ்ருத்தமா? வ்யாவ்ருத்தமென்று சொல்லப்படுமேயாகில், அது ஸ்வரூபமா? தர்மமா? முதல் பக்ஷத்தில் கடத்துக்குபேதவ்யவஹாரம் செய்யப்பட்டிருக்கையில்படவிஷயபேத வ்யவஹாரம் வாராமல் போகும்—வ்யாவ்ருத்தமாக விருப்பதால். தர்மமாகில் முற்கூ றப்பட்டதோஷமும் தர்மத்வ ப்ரயுக்த தூஷணங்களும் வரும். அநுவ்ருத்தமானால் அது வும் ஸ்வரூபமாகயிருக்குமேயாகில் சப்தாந்தரத்தால் ஸந்மாத்ரம் அங்கீகரிக்கப்பட்டதாக வாகும் தர்ம பக்ஷத்தில் முன்போல்; மேலும் 'பிதி' தாதுவுக்கு ¶ விதாரணம் அர்த் தம். ஒரு வஸ்துவுக்கு பேதமாவது இரண்டாக ஆதல் அதன் கண்டத்துக்கும் அவ் வாறாக ஆகும். ஆதலால் வஸ்துவினிடத்தில் பேதத்தை ஒப்புக்கொண்டால் விதார ணபரம்பரையால் நாசமே ஸம்பவிக்கும் என்று இது முதலியவைகள். பிறகு தர்ம பக்ஷத்தை தூஷிக்கிறார்—**நாபி** என்று எதனால் என்றால் சொல்லுகிறார்—**தர்மத்வே** என்று. ஸ்வரூபத்தைவிட தர்மத்திற்கு பேதமில்லை என்றால் அநிஷ்டத்தைக்கூறுகிறார். **அந்யதா** என்று. ஸ்வரூபம் தர்மம் இரண்டுக்கும் பேதம் இருக்கட்டும். அதனால் என்னெனில சொல்லுகிறார்—**பேதே** என்று. தஸ்யாபிபேதஸ்தத்தர்ம:. தஸ்ய - தர்ம மாக ஸ்வீகரிக்கப்பட்டிருக்கிற பேதத்திற்கு, ஸ்வரூபத்தை அபேக்ஷித்து எந்தபேதமுண் டோ அதுவும் அதற்கு தர்மமாகஸ்வீகரிக்கப்பட்டிருக்கிற பேதத்திற்கு தர்மம். அன் றிக்கே, ஸ்வரூபத்தைக்காட்டிலும் தர்மத்திற்கு எந்தபேதம் ஸ்வீகரிக்கப்பட்டிருக்கிறதோ அதற்கு தர்மிபூதமான தர்மத்தைக்காட்டிலும் பேதங்கூட தர்மம். அப்படி இல்லா விட்டால் ஸ்வரூபமேயாகும். அப்படியாகில் ஸ்வரூபபக்ஷத்திலுள்ள தூஷணங்கள் வரும். அந்த பேதமும் தர்மம்; அதற்கும் ஸ்ரூபத்தைக்காட்டிலும் பேதம் என்று அந வஸ்தையென்று பொருள். இவ்வாறாக தர்ம பக்ஷத்தில் அநவஸ்தையைச்சொல்லி அந் யோந்யாச்ரயணத்தைச் சொல்லுகிறார்— **கிஞ்ச** இது முதலியதால். அது மூன்றுவிதம் தர்மியும் ப்ரதியோகியும் க்ரஹிக்கப்பட்டால் பேதக்ரஹணம் - பேதம் க்ரஹிக்கப்பட் டால் தர்மிப்ரதியோகி க்ரஹணம் என்று; தர்மமும் தர்மியும் க்ரஹிக்கப்பட்டால் பேத க்ரஹணம்—பேதம் க்ரஹிக்கப்பட்டால் தர்மதர்மிக்ரஹணமென்று; அயம் கட: என் கிற விடத்தில் இதம் சப்தத்தால் நிர்தேசிக்கப்பட்டிருக்கிற வஸ்துவினுடைய கடஜா தீயத்வ விசிஷ்ட க்ரஹணமானது, படஜாதீயத்தைக்காட்டிலும் பேதக்ரஹணத்தைமுன் னிட்டுக்கொண்டிருக்கிறது. அங்ஙனமில்லாவிடில் கடஜாதீயத்வத்திற்கு விரோதம் வருவதால். படத்தைக்காட்டிலும் பேதக்ரஹணமானது. இதம் சப்த நிர்திஷ்டத்திற்கு கடஜாதீயத்வ க்ரஹணத்தை முன்னிட்டு வருகிறது. அப்படியில்லாவிட்டால் படத்வம் ப்ரஸங்கிக்கவேண்டியதால் என்று. இவ்வண்ணம் தர்மதர்மிக்ரஹணத்திலும், தர்மியாக வும் ப்ரதியோகியாகவும் க்ரஹிக்கப்படுகிற வஸ்து க்ரஹணத்திலும், அந்தந்த வகுப்பைச்

¶ விதாரணம்—பிளத்தல்.

சார்த்த வஸ்து க்ரஹணத்திலும் மூன்று விதமாக அந்யோந்யாச்ரயணம் கூறப்பட்டது.
பாதகப்ரமாணமில்லாமையை முடிக்கிறார்.— அத: என்று. அத ஸ்வரூபதர்ம பக்ஷங்களில் சொல்லப்பட்ட தூஷணங்களால் நிரூபிக்கமுடியாமையா லென்று அர்த்தம். இவ்வனைம் சாஸ்த்ரப்ராமாண்யங்களின் ஹீனமை உரைக்கப்பட்டது. ப்ரம்மயாநுபபத்தி ரூபமான தர்க்கமும் அசாரகும்சஷ்பூதம். பாமகரீ விஷயமாகவோ, அர்த்தஸ்வபாவ விஷயமாகவோ, உள்ள நிரூபணத்திலும் விஷய விசேஷத்தில் ப்ரமாண § வ்யவஸ்தாபகமன்றென்று தாத்பர்யம்.

𑌕𑌿𑌞𑍍𑌚, "𑌸𑌨𑍍 𑌘𑌟𑌃, 𑌸𑌨𑍍 𑌪𑌟𑌃, 𑌘𑌟𑍋𑌽𑌨𑍁𑌭𑍂𑌯𑌤𑍇, 𑌪𑌟𑍋𑌽𑌨𑍁𑌭𑍂𑌯𑌤𑍇" 𑌇𑌤𑌿 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌪𑌦𑌾𑌰𑍍𑌥𑌾𑌃 𑌸𑌤𑍍𑌤𑌾𑌨𑍁𑌭𑍂𑌤𑌿𑌘𑌟𑌿𑌤𑌾 𑌏𑌵 𑌦𑍃𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 । 𑌅𑌤𑍍𑌰 𑌸𑌰𑍍𑌵𑌾𑌸𑍁 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌤𑍍𑌤𑌿𑌷𑍁 𑌸𑌨𑍍𑌮𑌾𑌤𑍍𑌰𑌮𑌨𑍁𑌵𑌰𑍍𑌤𑌮𑌾𑌨𑌂 𑌦𑍃𑌶𑍍𑌯𑌤 𑌇𑌤𑌿 𑌤𑌦𑍇𑌵 𑌪𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑌃 । 𑌵𑌿𑌶𑍇𑌷𑌾𑌸𑍍𑌤𑍁 𑌵𑍍𑌯𑌾𑌵𑌰𑍍𑌤𑌮𑌾𑌨𑌤𑌯𑌾𑌽𑌪𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑌾𑌃, 𑌰𑌜𑍍𑌜𑍁𑌸𑌰𑍍𑌪𑌾𑌦𑌿𑌵𑌤𑍍 । 𑌯𑌥𑌾 𑌰𑌜𑍍𑌜𑍁𑌰𑌧𑌿𑌷𑍍𑌠𑌾𑌨𑌤𑌯𑌾𑌽𑌨𑍁𑌵𑌰𑍍𑌤𑌮𑌾𑌨𑌾 𑌪𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑌸𑌤𑍀 ; 𑌵𑍍𑌯𑌾𑌵𑌰𑍍𑌤𑌮𑌾𑌨𑌾𑌸𑍍𑌸𑌰𑍍𑌪𑌭𑍂𑌦𑌲𑌨𑌾𑌮𑍍𑌬𑍁𑌧𑌾𑌰𑌾𑌦𑌯𑍋𑌽𑌪𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑌾𑌃 । 𑌨𑌨𑍁 𑌰𑌜𑍍𑌜𑍁𑌸𑌰𑍍𑌪𑌾𑌦𑍌 "𑌰𑌜𑍍𑌜𑍁𑌰𑌿𑌯𑌂 𑌨 𑌸𑌰𑍍𑌪𑌃" 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿 𑌰𑌜𑍍𑌜𑍍𑌵𑌾𑌦𑍍𑌯𑌧𑌿𑌷𑍍𑌠𑌾𑌨𑌯𑌾𑌥𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨 𑌬𑌾𑌧𑌿𑌤𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌸𑌰𑍍𑌪𑌾𑌦𑍇𑌰𑌪𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑌤𑍍𑌵𑌮𑍍; 𑌨 𑌵𑍍𑌯𑌾𑌵𑌰𑍍𑌤𑌮𑌾𑌨𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 । 𑌰𑌜𑍍𑌜𑍍𑌵𑌾𑌦𑍇𑌰𑌪𑌿 𑌪𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑌤𑍍𑌵𑌂 𑌨𑌾𑌨𑍁𑌵𑌰𑍍𑌤𑌮𑌾𑌨𑌤𑌯𑌾, 𑌕𑌿𑌂𑌤𑍍𑌵𑌬𑌾𑌧𑌿𑌤𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 । 𑌅𑌤𑍍𑌰 𑌤𑍁 𑌘𑌟𑌾𑌦𑍀𑌨𑌾𑌮𑌬𑌾𑌧𑌿𑌤𑌾𑌨𑌾𑌂 𑌕𑌥𑌮𑌪𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑌤𑍍𑌵𑌮𑍍 ? । 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 — 𑌘𑌟𑌾𑌦𑍌 𑌦𑍃𑌷𑍍𑌟𑌾 𑌵𑍍𑌯𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌸𑍍𑌸𑌾 𑌕𑌿𑌂𑌰𑍂𑌪𑍇𑌤𑌿 𑌵𑌿𑌵𑍇𑌚𑌨𑍀𑌯𑌮𑍍 । 𑌕𑌿𑌂 𑌘𑌟𑍋𑌽𑌸𑍍𑌤𑍀𑌤𑍍𑌯𑌤𑍍𑌰 𑌪𑌟𑌾𑌦𑍍𑌯𑌭𑌾𑌵𑌃 ? । 𑌸𑌿𑌦𑍍𑌧𑌂 𑌤𑌰𑍍𑌹𑌿 𑌘𑌟𑍋𑌽𑌸𑍍𑌤𑍀𑌤𑍍𑌯𑌨𑍇𑌨 𑌪𑌟𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌬𑌾𑌧𑌿𑌤𑌤𑍍𑌵𑌮𑍍 । 𑌅𑌤𑍋 𑌬𑌾𑌧𑌪𑌰𑍍𑌯𑌾𑌯𑌾 𑌵𑌿𑌷𑌯𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌰𑍍𑌵𑍍𑌯𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌃 । 𑌸𑌾 𑌵𑍍𑌯𑌾𑌵𑌰𑍍𑌤𑌮𑌾𑌨𑌾𑌨𑌾𑌮𑌪𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑌤𑍍𑌵𑌂 𑌸𑌾𑌧𑌯𑌤𑌿 । 𑌰𑌜𑍍𑌜𑍁𑌵𑌚𑍍𑌚 𑌸𑌨𑍍𑌮𑌾𑌤𑍍𑌰𑌮𑌬𑌾𑌧𑌿𑌤𑌮𑌨𑍁𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 । 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌸𑌨𑍍𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌤𑌿𑌰𑍇𑌕𑍀 𑌸𑌰𑍍𑌵𑍋𑌽𑌪𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑌃 । 𑌪𑍍𑌰𑌯𑍋𑌗𑌶𑍍𑌚 𑌭𑌵𑌤𑌿 — 𑌸𑌤𑍍 𑌪𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑌃, 𑌅𑌨𑍁𑌵𑌰𑍍𑌤𑌮𑌾𑌨𑌤𑍍𑌵𑌾𑌤𑍍, 𑌰𑌜𑍍𑌜𑍁𑌸𑌰𑍍𑌪𑌾𑌦𑍌 𑌰𑌜𑍍𑌜𑍁𑌵𑌤𑍍 । 𑌘𑌟𑌾𑌦𑌯𑍋𑌽𑌪𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑌾𑌃, 𑌵𑍍𑌯𑌾𑌵𑌰𑍍𑌤𑌮𑌾𑌨𑌤𑍍𑌵𑌾𑌤𑍍, 𑌰𑌜𑍍𑌜𑍍𑌵𑌧𑌿𑌷𑍍𑌠𑌾𑌨𑌸𑌰𑍍𑌪𑌾𑌦𑌿𑌵𑌤𑍍 — 𑌇𑌤𑌿 । 𑌏𑌵𑌂 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌨𑍁𑌵𑌰𑍍𑌤𑌮𑌾𑌨𑌾𑌽𑌨𑍁𑌭𑍂𑌤𑌿𑌰𑍇𑌵 𑌪𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑌃, 𑌸𑍈𑌵 𑌸𑌤𑍀 ॥

ஸ்ரீபாஷ்யம்.—

மேலும் 'கடமிருக்கிறது, படமிருக்கிறது; கடம் அநுபவிக்கப்படுகிறது, படம் அநுபவிக்கப்படுகிறது' என்கிற வ்யவஹாரங்களில் எல்லாப்பதார்த்தங்களும்

§ வ்யவஸ்தாபகம்—நிலைநிறுத்தல்.

ஸத்தை, அநுபூதி இவைகளோடுகூடியவைகளாகவே காணப்படுகின்றன. இங்கு, எல்லாப்ரதிபத்திகளிலும் ஸந்மாத்ரம அநுவர்த்தமானமாகக் காணப்படுகிறதாதலால் அதுவே பரமார்த்தம. விசேஷங்களோ, விலகுவனவாதலால் அபரமார்த்தங்கள்— ரஜ்ஜ்வாதிகளைப்போலவும் ஸர்ப்பாதிகளைப் போலவும். ரஜ்ஜுவானது அதிஷ்டானமாக இருப்பதால், தொடர்ந்து வந்துகொண்டு பரமார்த்தமாயிருக்கிறது. வ்யாவர்த்தமானங்களான ஸர்ப்பம், பூமியின் பிளப்பு, ஜலதாரை முதலியவைகள் அபரமார்த்தங்கள். ஐயா! ரஜ்ஜுஸர்ப்பம் முதலியதில் இது ரஜ்ஜு, ஸர்ப்பமல்ல, இதுமுதலிய ரஜ்வாத்யதிஷ்டானங்களின் யாதார்த்யஜ்ஞானத்தினுல் பாதிதமாதலால், ஸர்ப்பாதிகளுக்கு அபாரமார்த்யமேயொழிய வ்யாவர்தமானத்வத்தாலல்ல ரஜ்ஜ்வாதிகளுக்கும் பாரமார்த்யமானது, அநுவர்தமானத்வத்தாலல்ல. பின்னையோ, அபாதிதத்வத்தாலேதான், இவ்விடத்திலோ அபாதிதங்களான கடாதிகளுக்கு அபாரமார்த்யம் எங்ஙனம்? உத்தரம் சொல்லப்படுகிறது. கடம் முதலியவற்றில் வ்யாவ்ருத்தியானது காணப்பட்டிருக்கிறது. அது எவ்விதமான ஸ்வரூபமுள்ளதென்று விவேசநம் செய்யத்தக்கது. கடோஸ்தி என்கிற விடத்தில் படாதிகளின் அபாவம் இருக்குமேயாகில், அப்பொழுது கடோஸ்தி என்கிற இந்த வ்யவஹாரத்தால் படாதிகளுக்கு பாதிதத்வம் ஸித்தம். ஆதலால் பாதத்திற்கு பலபூதையான விஷய நிவ்ருத்திதான் வ்யாவ்ருத்தி. அது வ்யாவர்த்தமானங்களுக்கு அபாரமார்த்யத்தை ஸாதிக்கிறது. ரஜ்ஜுபோல ஸந்மாத்ரம் அபாதிதமாக அநுவர்திக்கிறது ஆதலால் ஸத் ஒன்றைத்தவிர்த்து அதிகமாக இருக்கிறவை எல்லாம் அபரமார்த்தம் ‡ப்ரயோகமுமிருக்கிறது. ஸத் பரமார்த்தம், நீங்காமல் இருப்பதால் - ரஜ்ஜுஸர்ப்பாதிகளில் ரஜ்ஜு முதலியதுபோல. கடாதிகள் அபரமார்த்தங்கள், விலகுவனவாக இருப்பதால்-ரஜ்ஜ்வாதிகளையதிஷ்டானமாகவுடைய ஸர்ப்பாதிகளைப் போலவென்று-இங்ஙனம் அநுவர்த்தமானையான அநுபூதியே பரமார்த்தம், அதுவே ஸத்பதார்த்தம்.

ச்ருதப்ரகாசிகை:—

இதற்குமேல் பாதக ப்ரமாணத்தை உபந்யஸிக்கிறார்— கிஞ்ச என்று. அவ்விடத்தில் அநுமானத்தைச் சொல்ல விரும்பி வ்யாப்தியை சிக்ஷிக்கிறார்— கடோஸ்தி இது முதலியதால் $ 'வைதர்ம்யாச்சந ஸ்வப்நாதிவத்' என்கிறவிடத்தில், ஸூத்ரகாரராலேயே

$ வைதர்ம்யாச்சநஸ்வப்நாதிவத்—ஜாக்ரிதஜ்ஞாநங்களுக்குங்கூட ஸ்வப்நஜ்ஞாநம் முதலியவைகளை த்ருஷ்டாந்தங்களாகக்கூறி நிராலம்பநத்வம் கூறியது ஸரியன்று. இவைகளுக்கு அவைகளைக்காட்டிலும் வேறுபாடு இருப்பதால்.

‡ ப்ரயோகம்—பக்ஷம் ஸாத்யம் ஹேது என்கிற மூன்று அவயவங்களோடு கூடிய அநுமானம்.

த்ருஶ்யத்வாநுமானம் நிராகரிக்கப்படப் போவதாலும், அதன் நிராஸமானது மித்யாத்வாநுமானங்களனைத்துக்கும் தூஷ்யத்வத்தைக்காட்டுவதற்காக வாதலாலும், பூர்வபக்ஷத்தில் வ்யாவர்த்தமானத்வ ஹேது உபந்யஸிக்கப்படுகிறது. அநுவ்ருத்தத்வத்தைச்காட்டுவதற்காக கடோஸ்தியென்று கூறப்பட்டது. ஸத் அநுபூதியிரண்டுக்கும், இனி சொல்லப்போகிற ஐக்யத்தை மனதில் வைத்துக்கொண்டு அநுபூதிக்சுஅநுவ்ருத்தியைக் காண்பிக்கிறார்— கடோநுபூயதே படோநுபூயதே என்று. அதனாலென்னெனிற் சொல்லுகிறார்-அந்ர என்று வ்யாவர்த்தமானதயா-உத்தரோத்தரப்ரதிபத்திகளில் விஷயமில்லாமலிருப்பதால். ரஜ்ஜுஸர்ப்பாதிவத்-ரஜ்ஜுமுதலியவைகளைப்போலவும் ஸர்ப்பம் முதலியவைகளைப்போலவும் என்று அர்த்தம் அதைவிவரிக்கிறார்-யதா இதுமுதலியதால். பாதிதத்வ அபாதிதத்வங்களால் இரண்டு ஹேதுக்களும் உபாதியோடுகூடியதென்பதைக் காண்பியாநின்றுகொண்டு சோதனம் செய்கிறார்— நநுச என்று. உபாதி நிவ்ருத்தியினால் பக்ஷத்தில் ¶ ஸாத்ய நிவ்ருத்தியைச்சொல்லுகிறார்— அத்ரது என்று. விபரீதமானஉபாதியிருப்பதாலும், வ்யாகாதவிரோதமென்று அபிப்ராயம். பரிஹரிக்கிறார்— உச்யதே என்று இதுமுதலியதால். முதலில் விவாதமின்றியி ஒப்புக்கொள்ளப்பட்ட அம்சத்தைக்கூறுகிறார்— கடா தௌத்ருஷ்டா வ்யாவ்ருத்தி: என்று. பக்ஷங்களெல்லாவற்றிலும் இருக்கிறதும பக்ஷத்திலில்லாமலிருக்கிறது மன்றோ, உபாதி. ஈதில் அந்யனால் உபாதி என்று சொல்லப்பட்ட தர்மத்திற்கு பக்ஷத்தில் இருப்பு கூறப்பட்டபடியால், வ்யாவர்தமானத்வ ஹேதுவுக்கு ஸோபாதிகத்வத்தை தூஷிக்க விரும்பி அதற்கு உபயோகியாக கடாதிகளில் காணப்பட்ட வ்யாவ்ருத்தியானது ஸம்வாதபலபூதமா, அல்லது வ்யாகாதபலபூதமா என்று விவேசிக்கத்தக்கதென்று கூறுகிறார்— ஸா கிம் நபா என்று. பாததிற்கு பலபூதகமாக இருத்தலைக்காண்பிப்பதற்காக வ்யாவ்ருத்திஸ்வரூபத்தைக்கூறுகிறார்— கிம்கடோஸ்தீ இத்யத்ர என்று. கடமானது இருக்கிறதென்றறியப்பட்ட விஷயத்தில் படமில்லாமை யென்று அர்த்தம். ஸிஐம்தர் ஹி என்று. ரஜ்ஜுவில் பூமியின் பிளப்பு முதலியவைகளின் அபாவமன்றோ வ்யாப்ததத்வம் என்று கருத்து. ஆதலால் வ்யாபபலபூதையே என்று கூறுகிறார்— அத: என்று வ்யாமாவது தோஷமற்ற காரணத்தாலுண்டாகிற நிஷேதபுத்தி— அதனால், முன்னிலையிலிருப்பதில் இருக்கும்அபாவம் வ்யாவ்ருத்தி. இவ்வாறாக உபாதியில்லாமையால், வ்யாவர்தமானத்வம் அபாரமார்த்யஸாதகமென்று கூறுகிறார்— ஸா என்று அபாதிதத்வபலபூதமான அநுவ்ருத்தியானது, பரமார்த்தத்வப்ரயோஜகமாயிருப்பதால், அநு

¶ ஸாத்ய வ்யாபகமாகவும் ஸாதனவ்யாபகமாகவுமிருக்கிறது உபாதி— உபாதியானது ஹேதுவைதுஷ்டமாகச்செய்துவிடும் தன்மையுள்ளது. பர்வதம் புகையுள்ளது நெருப்பிருப்பதினால் என்று சொன்னால் ஆர்த்ரேந்தன ஸம்யோகம் (ஈரவிறகு ஸம்பந்தம்) உபாதி-இந்த உபாதி ஸாத்யமானபுகையுள்ளவிடங்களிலெல்லாம் தவராமலிருப்பதால் ஸாத்யத்திற்கு வ்யாபகம். ஸாதனமான நெருப்புள்ள இடங்களில்லாததால் ஸாதனவ்யாபகம். உபாதியானது ஸ்வாபாவவத்வ்ருத்தித்வ ஸம்பந்தத்தினால் ஹேதுவினிடத்திலிருந்துகொண்டு ஹேது ஸாத்யங்களுக்குள்ள வ்யாப்தியைக்கொடுத்து விடுகிறது. அதாவது ஹேதுவுக்கு ஸாத்ய வ்யபிசார உந்நாயகமாக ஆகிறது. வஹ்னியானது தூமவ்யாபிசாரீ - தூமவ்யாபகமான ஆர்த்ரேந்தன ஸம்யோக வ்யபிசாரியாக இருப்பதால் - எது எதின் வ்யாபகவ்யபசாரியோ அது அதற்கு வ்யபிசாரி என்கிற நியாயத்தால் - உபாதியுள்ளஹேதுதுஷ்டஹேதுவாகப்போய்விடுவதால் அப்படிப்பட்ட ஹேதுவினால் ஸாத்யத்தை ஸாதிக்கமுடியாது.

வர்தமானத்தில் பாரமார்த்யத்தைக்காண்பிக்கிறார்— ரஜ்ஜ்வாவத் என்று. அபாதமாவது அவிரோதித்வம். அநுவ்ருத்தியாவது, அதனால் (அவிரோதித்வத்தால் உண்டுபண்ணப் பட்டவிஷயமானசந்நிதி அந்வயம். அன்றிக்கேமுன்னிலையிலிருக்கும்வஸ்துவினிடத்தில் இருப்பு. இங்ஙனமாக வ்யாப்தியானது சிக்ஷிக்கப்பட்டது. தர்க்காகாரமல்ல, அநுகார ஹியமும் இருக்கிறதென்று சொல்லுகிறார்—ப்ரயோகஸ்ய பக்ஷி என்று. மாயாவே தாந்திகளோ ஜ்ஞானமாத்ரத்திற்கு பாரமார்த்யத்தைக்கூறுகின்றனர். ஆதலால் ஸத்துக்கு பாரமார்த்யஸாதனம் எங்ஙனமெனில் கூறுகிறார்.—ஏவம்ஸதி என்று. பாரமார்த்யத்தி லும் அபாரமார்த்யத்திலும் வ்யாவர்தமானத்வம், அநுவர்த்தமானத்வம் இரண்டுக்கும் ப்ரயோஜகத்வம் ஸித்தித்திருக்க என்று ஆசயம். அங்ஙனமாகில் இரண்டு பாமார்த் தங்கள் இருக்கவேண்டியதாக ஏற்படுமே எனில் சொல்லுகிறார்— ஸைவஸதீ என்று.

ननु च सन्मात्रानुभूतेर्विषयतया ततो सिद्ध्येत्? नैवम्; भेदस्य हि प्रत्यक्षाविषयत्वादनिरूपणत्वाच्च पूर्वमेव निरस्तः। अत एव सतोऽनुभूतिविषयभावोऽपि न प्रमाणपदवीमनुसरति। तस्मात् सदनुभूतिरेव। सा च स्वतःसिद्धा, अनुभूतित्वात्। अन्यतः सिद्धौ घटादिवदननुभूतित्वप्रसङ्गः। किञ्च, अनुभवापेक्षा चानुभूतेर्न शक्या कल्पयितुम्; सत्तयैव प्रकाशमानत्वात्। न ह्यनुभूतिर्वर्तमाना घटादिवदप्रकाशा दृश्यते; येन पराधीनप्रकाशाभ्युपगम्येत॥

ஸ்ரீபாஷ்யம்—

மேலும், ஸந்மாத்ரம் அநுபூதிக்குவிஷயமாக இருப்பதால், அதைக்காட் டிலும் வேறானது என்றால், இப்படியல்ல—பேதமானது ப்ரத்யக்ஷத்துக்கு விஷயமாக இல்லாமையாலும் எவ்விதத்தாலும் நிரூபிப்பதற்கு முடியாதகா லும் முன்பே நிரஸிக்கப்பட்டு விட்டது. அதனாலேயே ஸத்துக்கு அநுபூதி விஷயத்வங்கூடப்ரமாணமார்க்கத்தை அநுஸரிக்கிறதில்லை. ஆதலால் ஸத் என் பது அநுபூதியே. அதுவும் ஸ்வதஸ்ஸித்தமாயுள்ளது—அநுபூதியாக இருப் பதால். மற்றொன்றால் ஸித்திக்கும்பக்ஷத்தில் கடமுதலிய வஸ்துக்களைப் போல அநநுபூதித்வம் ப்ரஸங்கிக்கும். மேலும் தனதிருப்பினாலேயேப்ரகா சிக்குந்தன்மையுடையதாதலால் அநுபூதிக்கு இதைக் ப்ரகாசிப்பதற்கு ஸாதன மானமற்றொரு அநுபவாபேக்ஷையகல்பிப்பதற்கு சக்யமாகாது. அநுபூதியா னது தான் இருக்கும்பொழுது(ஜடமான)கடம்முதலிய வஸ்துக்களைப்போல், அப்ரகாசமாகக் காணப்படுகிறதில்லையல்லவா. தான் இருக்கும்பொழுது எப்பொழுதாவது ப்ரகாசியாமலிருந்தாலல்லவோ கடம் முதலிய ஜடவஸ்துக களைப்போல் பராதீனப்ரகாசமென்று சொல்லக்கூடும்.

ச்ருதப்ரகாசிகை.—

பிறகு ஸத் அநுபூதிஇரண்டுக்கும் விஷயவிஷயிபாவரூபமான பேதத்தை வெளியிட்டுக்கொண்டு சோதநஞ் செய்கிறார்— நநுச என்று. பிந்நத்வம்— ஸாத்யம். விஷயதயா என்பது ஹேது. பரிஹரிக்கிறார்— நைவம் என்று. அதில் ஸாத்யாம்சத்தை தூஷிக்கிறார்— பேதோஹி என்று. புரஸ்தாதேவ - ஜ்ஞேயபேத நிஷேதத்தாலேயே ஜ்ஞாநபேதமும் நிரஸிக்கப்பட்டதென்று அர்த்தம். ஹேத்வம்சத்தை தூஷிக்கிறார்— அத: என்று. ந ப்ரமாணபதவீமநுஸரதி என்று. விஷய விஷயிபாவமானது ப்ராந்திஸித்தமென்று கருத்து. பேதம ப்ராந்திஸித்தமென்பது 'அபி' சப்தத்தால் ஸமுச்சயிக்கப்படுகிறது. சுருதியினால் ப்ரதிபாதிக்கத்தக்க அர்த்தங்களை தர்க்கத்தாலும் ஸாதியாநின்றுகொண்டு விஷயவிஷயிபாவம நிரஸிக்கப்பட்டபிறகு, § க்ராஹகமில்லாமையால் சூன்யத்வசங்கையையும் வ்யாவர்த்தித்துக்கொண்டு ஸ்வப்ரகாசத்வத்தை உபபாதிக்கிறார்— ஸா ச என்று. சசாரம் சங்கையின் நிவ்ருத்தியில். அந்த இடத்தில் வ்யதிரேகி ஹேது வைக்கூறுகிறார்.— அநுபூதித்வாத் என்று. விபக்ஷத்தில் பாதத்தைக்காண்பிக்கிறார்— அந்யத:ஸித்தௌ என்று. எது வேறொன்றினால் ஸித்திக்கிறதோ, அது அநுபூதியல்லாததாகக்காணப்பட்டிருக்கிறது. கடம்போல, என்கிற வ்யாப்தியானது அர்த்தத்தாலே காண்பிக்கப்பட்டது. இந்த வ்யதிரேகிக்கு பராபிமதமான ப்ரத்யநுமானம் உபாதியோகூடியதென்று காணபியாநின்றுகொண்டு அர்த்தபலத்தால் அநுமாநாந்தரத்தையும் சொல்லுகிறார்— கிஞ்ச இது முதலியதால். அநுமாநாந்தரம் கண்டோக்தம். அர்த்தபலத்தால் ப்ரத்யநுமான நிராஸமாவது இருக்கலாம. அநுமாநாந்தரம் கண்டோக்தமென்பதில் கிஞ்ச சப்தம ஸ்வரஸம். ப்ரத்யநுமான நிராஸமானது கண்டோக்தமென்பதில் "நசக்யாகல்பயிதும்" என்கிற நிர்தேசமானது ஸ்வரஸம. கிஞ்ச என்று ஸ்வமதோபபத்திமாத்ரமல்ல; பரமதத்தில் அநுபபத்தியுமென்று அர்த்தம். அநுமாநாந்தரமும் என்றாவது அர்த்தம். அநுபவாபேக்ஷா வ என்று. முற்கூறப்பட்டதை ஸமுச்சயிக்கத்தக்க சப்தங்கள் இரண்டில்'கிஞ்ச'சப்தத்தால் ஸமுச்சிதமான அர்த்தத்தைவிட வேறான அர்த்தத்தினுடைய ஸமுச்சயபரம் 'ச' சப்தம. நசக்யாகல்பயிதும் ஜ்ஞாநம்பரப்ரகாசம் - வஸ்துவாயிருத்தலால்; அல்லது ப்ரகாசித்தலால். கடம்முதலியதுபோல் என்று $ப்ரத்யநுமாணம். இவைமுதலியவைகளால் பரப்ரகாசத்வமானது சொல்வதற்குசக்யமல்லவென்று அர்த்தம். எதனால் என்றால் சொல்லுகிறார்— ஸத்தயைவ என்று. "ஸத்தையைவப்ரகாசமானத்வாத்" என்கிற ஹேதுவுக்கு அஸித்திசங்கையைப்போக்குவதற்காக அதை விவரிக்கிறார்— நஹி என்று. இருக்கும் ஸமயத்தில் ஒருஸமயத்தில் ப்ரகாசியாமலிருத்தல் பராதீந ப்ரகாசத்வத்தில் ப்ரயோஜகம். ஆதலால் ப்ரத்யநுமாணம ஸோபாதிகமென்று அர்த்தம். "இருக்கும் ஸமயத்தில் எப்போதும் ப்ரகாசிக்கும் தன்மையுடையதால்" என்று வ்யதிரேகியான அநுமாநாந்தரம் என்பது அதிஸ்புடமாக இருக்கிறது. ஸம்வித்ஸித்தியில் "யத்யப்ரகாசமாநாதீ: கதாசிதவதிஷ்டதே" என்று தொடங்கி "கடாதாவிவ தத்ராபி கல்பநீயம் ப்ரகாசநம்" என்று. இந்த க்ரந்தத்திற் சொல்லிய வண்ணம் "ஸ்வஸத்தையைவ ப்ரகாசமானத்வாத்" என்கிற ஹேதுவுக்கு அஸித்திசங்கை பரிஹரிக்கப்பட்டது. இருக்கும் ஸமயத்தில் எப்பொழுதும் ப்ரகாசித்தல் ஸுகம் முதலியவற்றிலும் இருக்கிறதென்பதால் அநைகாந்த்யம் என்று சொல்லப்படுமானால்

---

§ க்ராஹகம்—விஷயத்தை க்ரஹிக்கிற ப்ரத்யக்ஷம் முதலிய ப்ரமாணஜ்ஞாநம்.

$ ப்ரத்யநுமானம்—வாதி தன்பக்ஷத்தை ஸாதிப்பதற்காக எந்த அநுமானத்தை அவலம்பிக்கிறானோ அதற்கு விருத்தமான அர்த்தத்தை ஸாதிப்பதற்கு ஸாதகமாய் பிரதிவாதியினால் உபந்யஸிக்கப்படும் அநுமானம்—அதாவது ஸத்ப்ரதிபக்ஷம் என்றபடி.

அல்ல— "ஸுகாதிவ்யதிரிக்தத்வேஸதி" என்கிற விசேஷணம் இங்கு சொல்லக் கருதப்பட்டிருப்பதால். ஸித்தாந்திமதத்தில், ஸுகம்முதலியதும் ஜ்ஞாநவிசேஷமாதலால் பக்ஷத்துள்ளடங்குவதால் அநைகாந்த்யமில்லை. இங்ஙனமாக அநுமாநாந்தரம் கூறப்பட்டது. சங்கிக்கப்பட்ட ப்ரத்யநுமாநத்திற்கு ஸோபாதிகத்வமுங் காணபிக்கப் பட்டது.

अथैवं मन्यसे — उत्पन्नायामनुभूतौ विषयमात्रमवभासते । "घटोऽयम्" इति हि कश्चित् "घटोऽयम्" इति जानंस्तदानीमेवाविषयभूतामपि स्वामनुभूतिमनुभवति । तस्माद्घटादिप्रकाशनिष्पत्तौ चक्षुरादिकरणसन्निकर्षवदनुभूतेः सत्तैव हेतुः । तदनन्तरमर्थगतकादाचित्कप्रकाशातिशयलिङ्गेनानुभूतिरनुमीयते । एवं तर्ह्यनुभूतेरजडाया अप्यर्थवज्जडत्वमिति चेत्; किमिदमजडत्वं नाम? न तावत् स्वसत्तायाः प्रकाशाव्यभिचारः, सुखादिष्वपि तत्सम्भवात्; न हि कदाचिदपि सुखादयः सन्तो नोपलभ्यन्ते, अतोऽनुभूतिः स्वयमेव नानुभूयते, अङ्गुल्यग्रं स्वाग्रस्पर्शवदशक्यमिति ॥

ஸ்ரீ பாஷ்யம்.—

(பூர்வபக்ஷாநுவாதம்) பிறகு, இங்ஙனமெண்ணுகிறாயோ ?— அநுபூதி யுண்டானாலும் "இது கடம்" என்று விஷயமாத்ரம் ப்ரகாசிக்கிறது. இது கடமென்று அறிகிறவன் ஒருவனாவது, அப்போதே "கடம் அநுபவிக்கப்படுகிறது" என்று விஷயமாகாததும் இது என்று சொல்லக்கூடாததுமான அநுபூதியையும் அநுபவிக்கிறானில்லையன்றோ ஆதலால், கடம் முதலிய வஸ்துக்களின் ப்ரகாசநிஷ்பத்தியில் கண்முதலிய இந்திரியங்களுடைய ஸந்நிகர்ஷம் ஹேதுவாயிருக்குமாப்போல அநுபூதியின் இருப்பே ஹேது. அதற்குப்பிறகு அர்த்தங்களையடைந்துள்ள, ஏதோ ஒரு ஸமயத்தில் ஸம்பவிக்கின்ற ப்ரகாசாதிசயரூபமான அடையாளத்தினால் அநுபூதியானது அநுமிக்கப்படுகிறது. இங்ஙனமாகில் ஜடமல்லாத அநுபூதிக்கு அர்த்தங்களைப்போல ஜடத்வமும் ஏற்படவேண்டியதாகுமென்றால், அஜடத்வமாவதென்ன? ஸ்வஸத்தைதயினுடைய தவறாதப்ரகாசம்என்பதல்ல-- ஸுகம் முதலியவற்றில் கூட அதுஸம்பவிப்பதால். ஸுகாதிகளிலிருந்துகொண்டிருக்கும்பொழுது ஒருஸமயத்திலாவது அறியப்படாமலிருக்கிறதில்லையன்றோ. ஆதலால் அநுபூதியானது தன்னாலேயே அநுபவிக்கப்படுகிறதில்லை— வேறுபதார்த்தத்தைத்தொடுகிறவிரல்நுனிக்குத் தன்னைத் தொடுவது அசக்யமாயிருப்பதுபோல்— என்று.

சுருதப்ரகாசிகை—

பிறகு ப்ராகட்யாநுமேயபக்ஷத்தை நிராகரிக்க எண்ணங்கொண்டு அநுவதிக்கிறார்— அதைவம் மநுஷே இது முதலியதால். முதலில் "ஸ்வஸத்தயைவ ப்ரகாசமாநத்வாத்" என்கிற ஹேதுவுக்கு அஸித்தியை உபபாதிக்கிறார்—உத்பந்நாயாம் என்று. இதனால் தன்னால் சொல்லப்பட்டிருக்கிற "வஸ்துத்வாத், பாஸமாநத்வாத்" என்கிற ப்ரதயநுமானத்திற்கு ஸோபாதிகத்வவ்யுதாஸம் ஸித்திக்குமென்று கருத்து. "உத்பந்நாயாமப்யநுபூதௌ விஷயமாத்ரமவபாஸதே" என்கிறவிடத்தில் "கடோயமிதி" என்று அத்யாஹாரம் செய்துகொள்ளத்தக்கது. "இது கடம்" என்று விஷயமாத்ரம் அவபாஸிக்கிறதென்று அர்த்தம். "கடோயமிதி ஜாநந்" என்றல்லவோ சொல்லப்படப்போகிறது. (எப்படியென்றால்) ஸம்வித்ஸித்தியில். "கடோயமிதி விஜ்ஞாநே கடமாத்ரம் ப்ரகாசதே-நவித்திரிதி யுஷ்மாகம கோஷ்டீஷு நநு வாஷ்யதே" (இது கடம் என்கிற விஜ்ஞாநத்தில் கடம் மாத்ரம் ப்ரகாசிக்கிறது அறிவானது ப்ரகாசிக்கிறதில்லை என்றல்லவோ உங்களுடைய கோஷ்டிகளில் கோஷிக்கப்படுகிறது என்று) "கடோநுபூயதே இதி" என்பதற்கு மேலே அந்வயம். முந்தினதோடு அந்வயமானால் "விஷயமாத்ரமவபாஸதே" என்கிற இந்தவாக்யத்தோடு விரோதம் உண்டாகும். விஷயமாத்ரத்திற்கு அவபாஸம் எங்ஙனம்?— "கடோநுபூயதே" என்று அநுபவமும் ப்ரகாசிக்கிறது என்கிற சங்கைவரின், விஷயமாத்ரத்திற்கே தோற்றத்தை உபபாதிக்கிறார்— கடோநுபூயதே இதுமுதலியதால். எப்பொழுது, இது கடமென்று அறிகிறானோ, அப்பொழுதே "கடோநுபூயதே" என்று அறிகிறானில்லை. எதனால் எனிற்சொல்லுகிறார்— அவிஷயபூதாம்நிதம்பாவாம் என்று. அவிஷயபூதாம் - கடசப்தார்த்தத்தைக் காட்டிலும் வேறாக இருக்கிற; அநிதம்பாவாம்-அயம் சப்தார்த்தைக்காட்டிலும் வேறாக இருக்கிற; கடத்வ விசிஷ்டமாய் பெருத்த அடிவயிறுள்ள வடிவத்துடன்கூடிய த்ரவ்யம் "கட" சப்தத்தின் அர்த்தம். சமீபித்தவிடத்தில் வர்த்தமானகால விசேஷத்தோடு கூடியிருத்தல் "அயம்" என்கிற சப்தத்தின் அர்த்தம். இரண்டைக்காட்டிலும் வேறாகவல்லவோ இருக்கிறது அநுபவம். அதுவோ "இது கடம்" என்கிற அநுபவவேளையில் அநுபவிக்கப்படுகிறதில்லையென்று அர்த்தம் "அவிஷயபூதாம்" என்கிற பொதுவான நிர்த்தேசமானது, படம் முதலியவைகளையும் காட்டுவதற்காக. அதனாலேதான் "அகடபூதாம்" என்று சொல்லவில்லை. அன்றிக்கே, "கடோநுபூயதே" என்கிற வாக்யத்துக்கு முந்தினதோடு அந்வயம். "இதி" சப்தம ஹேதுவைச்சொல்லுகிறது. யாதொருகாரணத்தால் கடமே அநுபூதியின் செயப்படுபொருளோ; அநுபூதியும் அப்பொழுது அநுபூதியின் செயப்படுபொருளாகிறதில்லையோ; அக்காரணத்தினால் விஷயமாத்ரம் தோன்றுகிறது என்று அர்த்தம். இதற்கே "நஹி" என்பது விவரணம். ப்ரகாசங்களான சப்தம், லிங்கம், வெளிச்சம முதலியவைகள் அறியப்பட்டவைகளாகவே இருந்து ப்ரகாசகங்களாகக் காணப்பட்டிருக்கின்றன. ஆதலால் அநுபூதியானது ப்ரகாசமில்லாதிருக்குமேயானால். ப்ரகாசகத்வமும் ஸம்பவியாமல் போகவேண்டியதாகுமெனில் கூறுகிறார்— தஸ்மாத்கடாதி என்று. ஸத்தையினால் ப்ரகாசகமென்றும், அறியப்படுவதனால் ப்ரகாசகமென்றும் ப்ரகாசகம் இரண்டுவிதம். அவற்றுள் ஜ்ஞாநமானது ஸத்தையினால் ப்ரகாசககோடியில் சேர்க்கைபெற்றது. இங்ஙனம் நியமனம் யார் செய்கிறது? என்றால் சொல்லுகிறார்— தஸ்மாத் என்று. ஸ்வஸத்தையினாலேயே ப்ரகாசித்தல் என்கிற ஹேது ஸித்தியாததாலும், நம்மால்சொல்லப்பட்ட ஹேதுவுக்கு ஸோபாதிகத்வநிராஸத்தாலும் என்று அர்த்தம். அநுபூதியானது தானே ப்ரகாசியாமல் போமேயாகில் அப்பொழுது இதில் எது ப்ரமாணமெனில் கூறுகிறார்:—ததநந்தரம் என்று. அர்த்தக

தகாதார்சித்கப்ரகாசாதிசயலிங்கேந ஏதோ ஒரு ஸமயத்திலுண்டாவதால் கார்யம், கார்யமாக விருப்பதால் ஹேதுவுடன்கூடியதென்று அநுமானத்தாலறியப்படுகிறதென்று அர்த்தம். விஷயத்தையடைந்திருக்கிற ப்ராகட்யலிங்கத்தால் எங்ஙனம் தன்னிடத்திலிருக்கிற ஜ்ஞாநம் அநுமிக்கப்படுகிறது? என்று கேட்கில், தனக்கு ப்ரகாசிக்கிறதாக இருப்பதால் தன்னை அடைந்திருக்கிற ஜ்ஞாநத்தினது அநுமானம் பொருத்தமுள்ளதாக ஆகிறது. ஜ்ஞானத்திற்குப் பிற்காலத்திலுண்டாகிற ப்ராகாசலிங்கத்தால் ஜ்ஞானம் அநுமிக்கப்படுமேயாகில் அப்பொழுது கடம் அநுபவிக்கப்படுகிறதென்று சொல்வது யுக்தமன்று; கடம் அநுபவிக்கப்பட்டதென்று சொல்லுவது யுக்தமென்று சங்கைவரின் கூறப்பட்டது ' ததநந்தரம் " என்று. அதிநெருக்கத்தால் வர்தமானவ்யபதேசம் என்று அர்த்தம். அர்த்தத்திற்கும் இந்திரியத்திற்கும் ஸம்யோகமுண்டானவுடனே கடம் அநுபவிக்கப்படுகிறது என்கிற ப்ரதீதியுண்டாவதால்; ப்ராகட்யலிங்கத்தினால் ஜ்ஞாநாநுமானத்திற்கு அநவகாசத்வ சங்கையும் இதனால் பரிஹரிக்கப்பட்டது. ததநந்தர மென்பது, அநேகம் தாமரை இதழ்களை ஊசியினால் குத்துவதுபோல, அநுமாநத்தின் ‡ சைக்ரயத்தால் அவ்வாறு ஜ்ஞானம் உபபந்நமாகிறது என்று கருத்து. ¶ ம்ருஷாவாதியானவன் தன்னுடைய தர்சநப்ரஸித்தியினால் அநிஷ்டத்தை ப்ரஸ்தாவிக்கிறான்— ஏவம் தர்ஹி என்று. ஜடத்வமாவது, ஜ்ஞானத்தைக்காட்டிலும் வேறாகவிருத்தல்; அசித்த்வம் என்று அர்த்தம். இவ்விடத்திலும் அநுபூதியானது அஜடையென்று † விபர்யயத்தில் பர்யவஸாநம். § ப்ரஸஞ்ஜநீயமான ஜடத்வத்திற்கு அநிஷ்டத்வத்தை நிரஸிப்பதற்காக அஜடத்வத்தை விகல்பித்து தூஷிக்கிறார்— கிமிதம் என்று. கிமிதம்—ஒன்றுமில்லை. எவ்விதத்தாலும் நிரூபிக்கமுடியாததென்று அர்த்தம். அடுத்து இரண்டுபக்ஷத்தையும் காண்பிக்காமையால். மேல்க்ரந்தம் நிரூபிக்கமுடியாததென்பதற்கு விவரணமாக ஆகிறது. அன்றிக்கே, 'கிம்'சப்தமானது விகல்பபரம். ஹேதுவாகக்கூறப்பட்ட அஜடத்வமென்பதுஎன்ன; வித்யமானதசையில் எப்பொழுதும் ப்ரகாசமாநத்வமா? அன்றிக்கே, ஸாத்யமாக அபிமதமான தானே தனக்கு ப்ரகாசமாக விருக்கையா? என்கிற விகல்பம் அபிப்ராயப்படப்பட்டிருக்கிறது. அவற்றுள் முதல் பக்ஷத்தில் உத்பத்திகாலத்திலும் ப்ரகாசத்தின் தவறாமை விவக்ஷிக்கப்பட்டிருக்கிறதா? அல்லது உத்பத்தி க்ஷணத்திற்கு மேல் ப்ரகாசத்தின் அவ்யபிசாரமா? என்கிற விகல்பம் அபிப்ராயப்படப்பட்டிருக்கிறது. அதில் முதற்பக்ஷத்தில், அஸித்தி முன்னமேயே கூறப்பட்டதென்றெண்ணி இரண்டாவதில் வ்யபிசாரத்தைக்கூறுகிறார்— ஸுகாதிஷு என்று. அதை விவரிக்கிறார்— நஹி என்று. வேறுபக்ஷத்தை தூஷிக்கிறார்— அத: என்று. அத: - ஹேதுவுக்கு அஸித்தியினாலும் § அநைகாந்திகத்வததாலும் ஸாத்யமுமில்லை என்று அர்த்தம். இதனால் ஜடத்வமானது அநிஷ்டமல்லவென்று காண்பிக்கப்பட்டது. வேறு அநுமானத்தால் ஸாதிக்கப்படப்போகிறதென்று சொல்லிலகூறுகிறார்— அர்த்தாந்தரம் என்று. வ்யாஹதமாதலால் ஒரு ப்ரமாணமும் இந்த அர்த்தத்தை ஸாதிப்பதற்கு ஸாமர்த்தியமுள்ளதாகாது என்றர்த்தம். இந்த அர்த்தத்தையே கூறுகிறார்கள்— "அங்குள்யக்ரம் யதாத்மானம் நாத்மநா ஸ்ப்ரஷ்டுமர்ஹதி— ஸ்வாம்சேந ஜ்ஞாநமப்யேவம் நாத்மானம்

---

‡ சைக்ரயம்— விளம்பமில்லாமை.

¶ ம்ருஷாவாதி—உலகத்தை அஸத்யமென்று சொல்பவன்.

§ ப்ரஸஞ்ஜநீயம்—இல்லாததை ஏறிட்டுச்சொல்லுதல். † விபர்யயம்—மாறுதல்.

§ அநைகாந்திகத்வம்—வ்யபிசாரம்.

ஜ்ஞாதுமர்ஹதி” (விரல்நுனியானது எப்படி தனதுடைய ஒரு அம்சத்தால் தன்னைத் தானகவே தொடமுடியாதோ, அப்படியே ஜ்ஞானமும் தன்னைத்தானகவே அறிந்து கொள்வதற்குத் தகுதியுள்ளதாகாதென்றபடி) இங்ஙனம், ஜடத்வ ப்ரஸங்கரூபமான தாகத்திற்கு விபர்யயத்தில் பர்யவஸாநமின்மையும், வ்யாப்தியின் இன்மையும், இஷ்டப்ரஸங்கத்வமும், வ்யாகாதஸ்வரூபமான ப்ரதிதர்கத்தால் அடிபடுதலும் காணபிக்கப்பட்டது. இத்யதைவம்மநுஷே, என்று முந்தியதோடு அந்வயம்.

ததிதமநாகலிதாநுபவவிபவஸ்ய ஸ்வமதிவிஜ்ரும்பிதம் | அநுபூதிவ்யதிரேகிணோ விஷயதர்மஸ்ய ப்ரகாஶஸ்ய ரூபாதிவதநுபலப்தே:, உபயாப்யுபேதாநுபூத்யைவ ஸர்வவ்யவஹாரோபபத்தேஶ்ச ப்ரகாஶாக்யதர்மகல்பநாநுபபத்தேஶ்ச | அதோ நாநுபூதிரநுமீயதே | நாபி ஜ்ஞாநாந்தரஸித்தா | அபி து ஸர்வம் ஸாதயந்த்யநுபூதி: ஸ்வயமேவ ஸித்யதி ||

ஸ்ரீபாஷ்யம்:—

இவைகளெல்லாம் அநுபவவிபவத்தை ஆலோசியாமலிருப்பவனது ஸ்வபுத்தியின் $ விஜ்ரும்பணம் - அநுபூதியைக்காட்டிலும் வேறாயும் விஷயதர்மமுமாகவிருக்கிற ப்ரகாசத்திற்கு ரூபாதிகளைபபோல் உபலப்தியில்லாமையால். இருதிறத்தார்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிற அநுபூதியினாலேயே ஒன்றொழியாமல் எல்லாவ்யவஹாரங்களுக்கும் உபபத்திவருவதாகவிருக்க ப்ரகாசமென்கிற பெயருள்ள தர்மத்தை கல்பிப்பது உபபந்நமாகாததாலும். ஆகையால் அநுபூதியானது அநுமிக்கப்படுகிறதில்லை; வேறு ஜ்ஞானத்தாலும் ஸித்திப்பதுமன்று; பின்னையோ, எல்லாவற்றையும் ஸாதிக்கிற அநுபூதியானது தானகவே ஸித்திக்கிறது.

ச்ருதப்ரகாசிகை—

பிறகு, ஸ்வயம்ப்ரகாசத்வவாதி சொல்லுகிறான்— ததிதம் என்று. அநாகலிதாநுபவவிபவஸ்ய, அநுபவத்திற்கு தன்னையொழிந்த மற்ற எல்லாவஸ்துகளுக்கும் ப்ரகாசகமாகவிருந்துகொண்டு தன் ஸ்வரூப ப்ரகாசத்தில் மற்றொன்றையபேக்ஷியாமலிருக்கிறதென்பது ஒருவிபவம். ப்ராகட்யத்தை ஹேதுவாகக்கொண்டு “ப்ரகாசிக்கிறது” என்கிற யாதொரு வ்யவஹாரமுண்டோ, அதையுமுண்டுபண்ணுவதற்கு இதுவே தகுதியுள்ளதென்பது மற்றொருவிபவம். இவ்வாறான இரண்டுவித அநுபவவிபவம் எவனால் ஆலோசிக்கப்படவில்லையோ, அவன் அநுபவவிபவத்தை ஆலோசியாதவன்;— அவனுடைய. ஸ்வமதிவிஜ்ரும்பிதம் ப்ரமாணதர்கத்தை அபேக்ஷியாமல்

$ விஜ்ரும்பணம்—விகாஸம். † ப்ராகட்யம்—ப்ரகாசம்.

தன்னுடைய உத்ப்ரேக்ஷாமாத்ரத்தின் விஜ்ரும்பிதமென்று அர்த்தம் அன்றிக்கே ஸ்வபுத்திமாஹாத்ம்யமென்று அதிக்ஷேபம். பாரிசேஷ்யத்தால் ஸ்வயம்ப்ரகாசத்வத்தை ஒப்புக்கொள்ளும்படி செய்விப்பதற்காக. முதலில் ப்ராகட்யலிங்கத்தை நிரஸனஞ்செய்கிறார்— அநுபூதி இதுமுதலியதால் "அநுபூதிவ்யதிரேகேண" என்கிற இந்த பதத்தால் அஸாதாரண்யப்ரதிக்ஷேபம் பலித்தது. "விஷயதர்ம" சப்தத்தால் ஆத்மதர்மத்திற்கு நிரஸம் பலித்தது. அதனால் ரூபாதிகளோடு ஸாம்யம் பலித்தது. அநுபூதியைக்காட்டிலும் வேறானவிஷயதர்மமான ப்ரகாசமானது, ப்ரத்யக்ஷயோக்யமா? இல்லையா? ப்ரத்யக்ஷயோக்யமில்லையானால் லிங்கஜ்ஞானமில்லாமையால் அநுமான முடியாது. ப்ரத்யக்ஷயோக்யமாகில் பிறர்களாலும் ரூபாதிகளைப்போல் அறியத்தக்கதாகவாகலாம் என்று கருத்து. அபேக்ஷாபுத்தியினால் உண்டாகிற இரண்டு மூன்று முதலிய எண்கள் எவ்வாறு அந்தந்த புருஷனாலேயே அறியத்தக்கதாக விருக்கிறதோ, அதுபோல ப்ராகட்யமும் அந்த புருஷன் ஒருவனாலேயே அறியத்தக்கதாக ஆகிறதென்று சொல்லப்படுமேயானால்; அல்ல; இரண்டு மூன்று முதலிய எண்கள் முந்தியே இருக்கின்றன—எவ்வாறு ஒரு இடத்தில் எல்லாதிக்குகளும் இருக்கின்றனவோ, அந்த திக்குகள் அந்தந்த உபாதிகளின் அபேக்ஷாபுத்தியினால் அறிவிக்கப்படுகிறதோ. இவ்வண்ணம் $ அபேக்ஷாபுத்தியினால்.¶ அபிவ்யங்க்யமான த்வித்வம்முதலியது ‡‡ அபிவ்யஞ்ஜகம் எவனையடைந்திருக்கிறதோ அவனுக்கே ப்ரகாசிக்கிறது. இவ்விடத்திலோ ரூபம்முதலியவைகளைப்போல ஜந்யதர்மமாக ஒப்புக்கொண்டிருப்பதால், எல்லோராலும் அறியப்படவேண்டும். அபிவ்யங்க்யம் என்கிறபக்ஷத்தில் ஸித்தாஞ்ஜனமுள்ளவனுக்கே நிதி தோன்றுவதுபோல, அபிவ்யஞ்ஜகமுள்ளவனுக்கே தோற்றமுண்டாகவேண்டிவரும். ஜந்யமானவஸ்து ஜநகத்துக்கே தோற்றுகிறதென்பதில்லையோ— குயவனுக்கே குடம் ப்ரகாசிக்கிறதென்பது இல்லையோ. மேலும் நுபாதிவத் என்று தர்மத்திற்கு நிராச்ரயமான உத்பத்திகூடாதாதலால் ✠ அதீதங்களாகவும் ¶ அநாகதங்களாகவும் பிறந்துகொண்டிருப்பவைகளுமான அர்த்தங்களுக்கு ப்ராகட்யம் பொருந்தாதாதலால் ப்ராகட்ய மில்லாமலிருந்தாலும் ஜ்ஞானமறியப்படுகிறதென்பதனால். அங்குரூபாதிகளைப்போல் ப்ரகாசத்திற்கு உபலப்தியில்லாமையால் ப்ராகட்யத்தினால் ஜ்ஞாநாநுமானம் ஸம்பவிக்கிறதில்லை என்று கருத்து. இவ்வண்ணம் ஸம்வித்ஸித்தியில் - அதீதேநாகதே சார்த்தே கதம் ப்ராகட்ய ஸம்பவ: । நஹி தர்மிண்யஸத்யேவ தர்மஸ்ஸம்பவம்ருச்சதி (சென்றதும் வரப்போகிறதுமான அர்த்தத்தில் எவ்வாறு ப்ராகட்யம் ஸம்பவிக்கும். தர்மி இல்லாமலிருக்கும்பொழுதே தர்மமானது ஸம்பவியாதன்றோ) (அவ்வாறு) என்றபடி. அதீதாநாகதங்களிலும், த்வித்வாதிகள்போல ப்ராகட்யம் உண்டாகலாமென்றால், அல்ல;—த்வித்வாதிகளுக்கு நிராச்ரயமான உத்பத்தியானதுகூடாமையால்

$ அபேக்ஷாபுத்தி—இது ஒன்று, இது ஒன்று ஆகஇரண்டு இது முதலியது அபேக்ஷாபுத்தி. இவ்விதமானபுத்தியினால் த்வித்வம், த்ரித்வம் முதலிய எண்கள் உண்டாகின்றன. அபேக்ஷாபுத்தியினது நாசத்தால் த்வித்வம் முதலியஎண்கள் நசிக்கின்றன. எல்லா வஸ்துக்களிடத்திலும் ஏகத்வமொன்றே ஸ்வாபாவிகம்.

¶ அபிவ்யங்க்யம்— வ்யஞ்ஜநாவ்ருத்தியினால் அறிவிக்கத்தக்கது.

‡‡ அபிவ்யஞ்ஜகம்— வ்யஞ்ஜனையினால் அர்த்தத்தை உணர்த்தும் தன்மைவாய்ந்தது. ✠ அதீதம்—சென்றது. ¶ அநாகதம்—வரப்போகிறது-

அவவிடத்தில் த்வித்வாதிகளுக்கு உத்பத்தியில்லாமலிருந்தபோதிலும் குடம்முதலியது போல த்வித்வாதிகளும் புத்தியில் நிலை பெற்றிருப்பதால் வ்யவஹாரத்திற்கு உபபத்தியிருப்பதாலும், எவாகள் த்வித்வம்முதலியதை ஒப்புககொள்ளுகிறதில்லையோ அவாகளைககுறித்து த்வித்வாதிகள் § ப்ரதிபந்தியாகச் செய்யததககவைகளல்ல விஷய விஷயிபாவ ஸம்பந்தம, § வித்யமானத்தையே ஆச்ரயமாகக்கொண்டது என்கிற நியமமில்லாமையால் விஷய † விஷயிபாவமே ப்ராகட்யமென்று சொல்லப்படுமேயானல், அது ஸரியல்ல;— ஸம்பந்திகள் இரண்டில்லாவிடில் ஸம்பந்தப்ரதீதி உபபன்னமாகாததால், ஸம்பந்திஜ்ஞானமும் அறியப்படுகிறதென்று அநுமேயமே இல்லாமல் போகுமென்பதனுல் ப்ராகட்யம் லிங்கமாக ஆகிறதில்லை. இவ்வண்ணம் ப்ராகட்யமென்று பெயருள்ள வஸ்துவானது உபலப்திககு விஷயமாகாமலிருந்தபோதிலும், இன்றியமையாயால் கல்பிக்கப்படுகிறதென்று ஆசங்கித்து, கல்பகத்திற்கு அந்யதாஸித்தியைக் காண்பிக்கிருர்—உபய என்று. "அநுபூதியினுல்" என்று சொல்லப்பட்டால் ப்ராகட்யத்திற்குஙாமாந்தரம் சொல்லப்பட்டதாக ஆகும் என்கிற சங்கையை நிரஸிப்பதற்காக "உபயாப்யுபேத" என்கிற சப்தம். எதை ப்ராகட்யஜநகமாகச்சொன்ருயோ அதனுலேயே என்று ஏவகாராபிப்ராயம். அசேஷ்யவ்வவஹார:— $ ஹானம, ¶ உபாதானம் முதலியது. அது அநுபூதியினுலேயே ஸம்பவிப்பதால், ப்ராகட்யம் அதனுல் கல்பிக்கத்தக்கதல்ல. ஜ்ஞாதோகட:, ப்ரகடோகட:, என்கிற வ்யவஹாரமும் இஷ்டோ கட:, * த்விஷ்டோ கட:, என்பதுபோல், அந்யதாஸித்தமென்பது "அசேஷ" சபதாபிப்ராயம். இச்சையினுலுண்டான ஆத்தகதமான இஷ்டத்வத்தினுல், இச்சை அநுமிக்கப்படுகிறதில்லையன்ரே கட: ப்ரகாசதே என்று கட கர்த்ருகமாக ப்ரகாசம் அறியப்படுகிறது "கடமநுபவ மி"என்று. கடகாமகமாயும் அங்யகர்த்ருகமாயும் அநுபவம் அறியப்படுகிறது. இவ்வாறு ஒன்றுக்கே கர்மகர்த்ரு வயவஹாராநுபபத்தயினுல் கல்பிக்கப்படுறதெனருல், அது ஸரிபல்ல ;—தாதுபேதத்தைக்காரணமாகக்கொண்ட காரகபேதத்திற்கு அர்த்தபேத‖நிபந்தனத்வமில்லாமையால் எவ்வாறு பாசுவை (கோடாலியை) எடுத்து மேலே தூக்கி வ்ருக்ஷத்தில் போடுகிற ஒருவன்விஷயத்தில், "பாசுவினுல் விருக்ஷத்தை வெட்டுகிருன்" எனறு சொல்லப்படும் வாக்யத்தில் பாசுவுக்கு கர்மத்வம, காணத்வம் இரண்டும் ச்ருதமாகவிருக்கின்றன. அப்படியிருந்தபோதிலும் அர்த்தபேதமில்லை. வ்ருக்ஷத்திற்கு கர்மத்வம் அதிகாணத்வம் இரண்டும் ச்ருதங்களாக விருக்கின்றன. ஆயினும் அர்த்தபேதமில்லை. அவ்வாறே வ்யவஹாரபேதம தாதுபேதநிபந்தனமாகவில்லாமையால் வ்யவஹாரமானது ப்ராகட்ய கல்பகமாக ஆகாதென்கிற அபிப்பிராயத்தாலும் "அசேஷ வ்யவஹாரோபபத்தெள" என்று கூறப்பட்டது. "கடம் ப்ரகாசிக்கிறது" என்கிற வ்யவஹாரமானது கடத்தை அடைந்திருககிற அதிசயமில்லாவிடில் பொருந்தாது. அப்படியில்லாவிடில் அந்த வ்யவஹாரம் வஸ்திரத்திலும் ப்ரஸங்கிக்கும் அந்த அதிசயந்தான் "ப்ராகட்யம்" என்று கூறப்படுமேயானுல். அல்ல; எநத அதிசயம் வ்யவஹார நிர்ணுபகமோ அது எவ்வாறு கடத்திலேயே இருககும்? படத்திலேயும் ஏன் இருக்கக்கூடாது? இந்திரியஸம்யோகவசத்தாலென்று கூறப்படு

§ ப்ரதிபந்தி—விரோதி உத்தரம். § வித்யமான— சப்தப்ரயோகாதிகாணகாலத்திலிருக்கிற. † விஷயி—ஞானம்.

‡ அநுமேயம்— அநுமிப்பதற்குத்தகுதியுள்ளது.

$ ஹானம்—விட்டு விடுதல். ¶ உபாதானம்—எடுத்துக்கொள்தல்.

* த்விஷ்ட:—த்வேஷிக்கப்பட்டது. ‖ நிபந்தனம் —ஹேது.

மேயானல், அதனல் ஜ்ஞானமே வ்யவஸ்தாபிக்கப்படலாம் ; வேறு அதிசயத்தை ஒப்புக்கொள்வதனல் யாது பயன் ? என்கிற இந்தஅர்த்தமும் "அசேஷவ்யவஹார"சப்தத்தால் அபிப்ராயப்படப்பட்டிருக்கிறது. "இது கடம்" எனகிற அநுபவவேளையில் அநுபூதியின் அநுபவமில்லை என்று எதுகூறப்பட்டதோ; அதுசரியல்ல.—"அநுபூயதே" என்கிற சப்தத்தின் அப்ரயோகமானது அவிவக்ஷையினலேயேயொழிய அநநுபவத்தாலல்ல. உலகம் என்பது, அநுபவிக்கப்பட்ட எல்லா அர்த்தங்களிலும் விவக்ஷையுண்டானல் அவையனைத்தையும் சொல்லுகிறது. ஒருபாகத்தில் விவக்ஷை உண்டானல் அநுபவிக்கப்பட்ட ஏகதேசத்தைச் சொல்லுகிறது. ஏகதேசவிவக்ஷையுமில்லாவிடில் ஒன்றையும் சொல்லுகிறதில்லை. ஆகையால் "அநுபூயதே" என்கிற சப்தத்தின் அப்ரயோகமானது அதின் அப்ரகாசத்திற்கு ஹேதுவாகாது. இதுவும் அசேஷவ்யவஹார சப்தத்தால் அபிப்ராயப்படப்பட்டிருக்கிறது—அபூர்ணமாயும் பூர்ணமாயுமிருக்கிற வ்யவஹாரம், அசேஷ சப்தத்தால் க்ரோடீகரிப்பதற்கு சக்யமாதலால். இவ்வாறுக வ்யவஹாரம் வேறுவிதமாக ஸித்திப்பதால், அந்யதாஸித்தத்திற்கே கல்பகத்வமிருப்பதால் ப்ரகாசம் கல்பிக்கத்தக்கதாக ஆகாதென்று அர்த்தம்.

ப்ராகட்யாநுமேயத்வாநுபபத்தியை நிகமனம் செய்கிறர்— அத: என்று. அத: - அநுபலப்தி, வ்யவஹாராந்யதாஸித்தி இவ்விரண்டு ஹேதுக்களால் ப்ராகட்யமில்லாமையால், அநுபூதியானது ப்ராகட்யத்தால் அநுமிக்கத்தக்கதல்லவென்று கருத்து. மானஸப்ரத்யக்ஷத்தால் அறியத்தக்கதென்பதற்கு அநுபபத்தியை அபிப்ராயப்பட்டு கூறுகிறர்—நாபி * ஜ்ஞாநாந்தரஸித்தா என்று.

இது, இவ்விடத்தில் அந்யனல் சொல்லப்பட்ட அநுமானம்:— " ஜ்ஞானம், மானஸப்ரத்யக்ஷத்தால் க்ரஹிக்கத்தக்கது— க்ஷணிகத்வமிருக்கையில் ஆத்மாவுக்கு விசேஷகுணமாயிருப்பதால். ஸுகம், துக்கம் ப்ரயத்நம்முதலியதுபோல என்று. "ஆத்மவிசேஷகுணத்வாத்" என்று மாத்திரம் சொன்னல் (ஸ்திரமான) தர்மாதிகளில் $ வ்யபிசாரம் வருமென்று அதைவிலக்குவதின் பொருட்டு " க்ஷணிகத்வே ஸதி " என்கிற விசேஷணம் சொல்லப்பட்டது † " க்ஷணிக விசேஷணத்வாத் " என்று சொன்னல் சப்தத்தில் வ்யபிசாரம். " க்ஷணிகாத்மகுணத்வாத் " என்று சொன்னல் ஆத்மமனஸ்ஸம்யோகத்தில் வ்யபிசாரம் வரும்,என்று அதை பரிஹரிப்பதற்காக ஆத்மவிசேஷ சப்தங்கள் இரண்டும்.

இப்படிச்சொல்வது பொருந்தாது. க்ஷணிகத்வம் குணத்வம் இரண்டில் ஒன்று அஸித்தமாதலால் ; த்ருஷ்டாந்தத்திலும் ஹேதுவில்லை. மேலும் எது மானஸப்ரத்யக்ஷவேத்யமோ அது, அறியவேண்டுமென்கிற இச்சை இல்லாமலேயிருக்க க்ராஹ்யமாகக் காணப்பட்டிருக்கிறது. திருஷ்டாந்தம்—ஸுகம் முதலியது. அதனல் மானஸப்ரத்யக்ஷவிஷயமான ஜ்ஞானம் அபுபுத்ஸிதக்ராஹ்யத்வவ்யாப்தமென்று சொல்லவேணும். ஆகையால் கடாதிஜ்ஞானவிஷயமான யாதொருஜ்ஞானமுண்டோ அதுவும் இச்சையின்றிக்கேயிருக்க க்ராஹ்யமாதலால் மானஸப்ரத்யக்ஷவேத்யமாகலாம். தத்விஷயமான ஜ்ஞானமும் அவ்வாறே என்று. அநந்தஜ்ஞானங்களின் பரம்பராஸமுதாயம் விலக்க முடியாததாக ஏற்படுவதால் வேறுஜ்ஞானங்களுக்கு அவகாசமில்லாமல்போகவேண்டிய

* ஜ்ஞாநாந்தரஸித்தா— வேறு ஜ்ஞானத்தால் நிலைபெற்றது.
$ வ்யபிசாரம்—தவறுதல். † க்ஷணிகம்— ஒருக்ஷணகாலமாத்திரமிருப்புள்ளது.

தாகும். மாநஸப்ரத்யக்ஷக்ராஹ்யத்வம் ‡ அபுபுத்ஸிதக்ராஹ்யத்வம் உள்ளவிடத்தில் தான் உண்டு என்கிற நியமம் கிடையாது ; உறககம் முதலியதில் உச்ச்வாஸ நிச்வாஸ ப்ரயத்னமிருந்தபோதிலும், அதின் க்ரஹணமில்லாமையால் என்று சொல்லப்படுமே யானால் அல்ல ; அப்போது ஜீவாத்மாவினிடத்தில் ப்ரயத்னமே இல்லாமையால் தேஹதாரணம் முதலியவைகள் அத்தருணத்தில் பரமாத்ம ஸங்கல்பாதீனங்களென் றல்லவோ வேதாந்திகள். "அந்தராபூதக்ராமவத்" என்கிற அதிகரணத்தில் இவ்வர்த்தம் நன்கு நிர்ணயிக்கப்படுவது. தூங்குந்தருணத்தில் தேஹத்தைப்புரட்டுவது முதலியதோ வெனில், அங்கங்களுடையவும் ¶ ப்ரத்யங்கங்களுடையவும் நோவினாலாவது ஈ கொசு முதலியவற்றால் உண்டான துக்கம் முதலியதாலாவது அதிஸ்வல்ப விழிப்பிருக்கும் போது உண்டாகிறது. அப்போதுங்கூட ப்ரயத்னம் புத்திவிஷயம். ஆகையால் ஹேது வுக்கு வ்யபிசாரமில்லாமையால் மானஸக்ராஹ்ய மெல்லாம் அபுபுத்ஸிதக்ராஹ்ய மென்று ‡அநவஸ்தை வந்தேதீரும். § புபுத்ஸித க்ராஹ்யமாகில் அப்போது அந்யோந்யா ச்ரயணம். ஜ்ஞானமிருந்தாலன்றோ இச்சை, இச்சை இருந்தாலன்றோ ஜ்ஞானமென்று.

மேலும், மானஸப்ரத்யக்ஷத்தாலறியத்தக்கதற்கு புபுத்ஸிதக்ராஹ்யத்வமிருந்த போதிலும் ஸுகாதிகளில் || உபலப்தி நியமம் காணப்படுவதால். புபுத்ஸைநியமேந உள்ளதாக எப்படி கல்பிக்கத்தக்கதோ அவ்வண்ணமே ஜ்ஞானத்திலும் புபுத்ஸாநியமம் ஸித்திப்பதால் உபலப்தியும் தவறாமல் உண்டாகவேண்டிவரும். ஆதலால் அறிய வேண்டுமென்கிற இச்சையை முன்னிட்ட ஜ்ஞானபரம்பரை ஒருநாளும் ஒழிவில்லாத தாக ஏற்படும். ஜ்ஞானமானது புபுத்ஸிதக்ராஹ்யம் ; ஸுகாதிகளோ அப்படி யல்லவென்று சொல்லப்படுமேயாகில் அப்படியல்ல;— இரண்டுக்கும் மானஸப்ரத்யக்ஷ த்வம் ஸமாநமாகவிருக்க ஒன்றைவிட ஒன்றுக்கு பேதகல்பநத்தில் நியாமகமில்லாமை யால். ஸுகாதிகளிலும் கடாதிவிஷயமானமுதல் ஜ்ஞானத்திலும் புபுத்ஸை; இரண்டா வது முதலியவைகளிலோ இல்லை என்று சொல்லப்படுமேயானால் அல்ல—நியா மகமில்லாமையால். மானஸக்ராஹ்யத்வம் இரண்டுக்கும் துல்யமாதலால், வரும் புபுத்ஸையை எவன் தடுக்கலாம். மாநஸக்ராஹ்யத்வமிருக்கும்போதல்லவோ * புபுத்ஸை. ஸுகம் முதலியதும் கடாதி விஷயமான ‡‡ ப்ரதமஜ்ஞானமும் § மாநஸப்ரத்யக்ஷவேத் யமல்லவென்று சொல்லப்படுமேயானால் அவ்வண்ணமல்ல— அவ்விடத்திலும் † நியாமக மில்லாமையால். மேலும் க்ஷணிகாத்மவிசேஷகுணத்வமிருந்த போதிலும் த்விதீயா திஜ்ஞானம் மாநஸக்ராஹ்யமல்லவென்று கூறப்படுமேயாகில் ஹேதுவுக்கு @ அநை காந்த்யம் வருகிறது. எப்போது ப்ரத்யக்ஷத்தால் க்ரஹிக்கப்படுகிறதோ அப்போது

‡ அபுபுத்ஸித க்ராஹ்யம்—நாம் வேண்டுமென்று ஆசைப்படாமலிருக்கையிலும், நாம் வேண்டாமென்று நினைக்கும்போதுங்கூட, அதுவாக நம்மனுபவத்துக்குவருவது. துக்கத்தை நாம் வேண்டாமென்று நினைத்தாலும் அதுவாகவருகிறது.

¶ ப்ரத்யங்கங்கள்—ப்ரதாநாவயவங்களைச்சார்ந்த அம்சங்கள் கைக்குவிரல் முதலியவை கள்போல. ‡ அநவஸ்தை—வரம்பு இல்லாமை.

$ புபுத்ஸிதம்—அறியவேண்டுமென்று இச்சிக்கப்பட்டது. || உபலப்தி—அறிவு.

* புபுத்ஸை—அறியவேண்டுமென்கிற எண்ணம்.

‡‡ ப்ரதமம்—முதலாவது.

§ மாநஸப்ரத்யக்ஷம்— மன இந்திரியத்தால் உண்டாகிற ஜ்ஞானம்.

† நியாமகம்—நிர்ணயத்தை உண்டுபண்ணுகிற ப்ரமாணம்.

@ அநைகாந்த்யம்—வ்யபிசாரம்

மாநஸக்ராஹ்யம் என்று கூறப்படுமேயானால், அப்போது $ பக்ஷம், ஹேது, இரண்டும் ப்ரத்யக்ஷக்ராஹ்ய சப்தத்தால் விசேஷிக்கத்தக்கவைகளாக ஆகும். மேலும் அந்யர்களாலும் சொல்லப்பட்ட வேறு தூஷணங்கள் உரைக்கப்படுகின்றன. இரண்டாவது ஜ்ஞானம் மாநஸக்ராஹ்யமாக ஆகாமல் போமேயாகில் அந்த இரண்டாவதுஜ்ஞானத்திற்கு ப்ரமாணமில்லாமையால் சூந்யத்வமும் உண்டாகும். அதற்குப்பிறகு ப்ரதமத்திற்கும், அதற்குப்பிறகு அதற்குவிஷயமான கடம்முதலிய வற்றுக்கும் சூன்யத்வம் ஏற்படும். த்விதீயாதி ஜ்ஞானம் ஸ்வதஸ்ஸித்தமானால் ப்ரதமஜ்ஞானமும் அவ்வாறாக ஆகலாமென்று இதுமுதலிய அபிப்ராயத்தினால் "நாபி ஜ்ஞாநாந்தரஸித்தா" என்று கூறப்பட்டது.

பிறகு ¶ பாரிசேஷ்யத்தால் ஸ்வயம்ப்ரகாசத்வம் ஸித்தமென்று கூறுகிறார்— அபிது என்று. ஸர்வம் என்று, அங்ஙனமில்லாவிடில் ஸம்வித் சூன்யமானபடியால் அதைச்சார்ந்த ஸித்தியுள்ளதான அனைத்தும் சூன்யமாக ஆகவேண்டியதாக ஏற்படுமாதலால் அதை பரிஹரிப்பதின் பொருட்டு ஸ்வயம் ப்ரகாசத்வம் அவசியம் ஒப்புக்கொள்ளத்தக்கதென்கிற அபிப்ராயத்தால் "ஸர்வம் ஸாதயந்த்யநுபூதி: ஸ்வயமேவ ஸித்யதி" என்று உரைக்கப்பட்டது. இவ்வண்ணமே *"ஸம்வித்ஸித்தியில் "ததேவம் பச்யதாம் ஸர்வசூந்யத்வாத் பிப்யதாம் ஸதாம் । கதிஸ்ஸ்வயம் ப்ரகாசத்வாத் ருதே நாந்யோபலப்யதே" (அதை இவ்வண்ணம் பார்ப்பவர்களும் ஸர்வசூந்யத்வத்தினின்று பயப்படுகிறவர்களுமான வாதிகளுக்கு ஸ்வயம்ப்ரகாசத்வத்தைத் தவிர்த்து வேறு கதி கிடையாது) என்று.

ப்ரயோகஸ்து— அநுபூதி: அநந்யாதீநஸ்வதர்மவ்யவஹாரா, ஸ்வஸம்பந்தாதர்த்தாந்தரே தத்தர்மவ்யவஹாரஹேதுத்வாத், ய: ஸ்வஸம்பந்தாதர்த்தாந்தரே யத்தர்மவ்யவஹாரஹேது: ஸ தயோ: ஸ்வஸ்மிந்நநந்யாதீநோ த்ருஷ்ட:, யதா ரூபாதிச்சாக்ஷுஷத்வாதௌ । ரூபாதிர்ஹி ப்ருதிவ்யாதௌ ஸ்வஸம்பந்தாச்சாக்ஷுஷத்வாதி ஜநயந் ஸ்வஸ்மிந் ரூபாதிஸம்பந்தாதீநச்சாக்ஷுஷத்வாதௌ । அதோ(அ)நுபூதிராத்மந: ப்ரகாஶமாநத்வே ப்ரகாஶத இதி வ்யவஹாரே ச ஸ்வயமேவ ஹேது: ॥

ஸ்ரீபாஷ்யம்.—

அநுமானமும் இருக்கிறது. அது எவ்விதமெனில் கூறுகிறார்— அநுபவமானது மற்றொன்றை அபேக்ஷிக்காமலே தன்னுடைய தர்மமும் வ்யவஹாரமும் உள்ளது. வேறுபதார்த்தங்களில் தன்ஸம்பந்தத்தால் அந்த தர்மத்

$ பக்ஷம்—ஸந்தேஹாஸ்பதமான ஸாத்யத்துடன் கூடியது.

¶ பாரிசேஷ்யம்—வேறுவழி ஒன்றுமில்லாமையால்மிஞ்சி இருத்தல்.

* ஸம்வித்ஸித்தி— இது ஆளவந்தார் அருளிச்செய்த மூன்றுஸித்தி கிரந்தங்களுக்குள் ஒரு கிரந்தம். மூன்று ஸித்திக்ரந்தங்களாவன—ஆத்மஸித்தி, ஸம்வித்ஸித்தி, ஈச்வரஸித்தி.

திற்கும் அந்த வ்யவஹாரத்திற்கும் ஹேதுவாக இருப்பதால், எது தன் ஸம்பந்தத்தினால் § அர்த்தாந்தரத்தில் எந்ததர்மத்திற்கும் எந்த வ்யவஹாரத் திற்கும் ஹேதுவோ அது அந்த தர்மவ்யவஹாரங்களில் தன்விஷயத்தில் ‡ அநந்யாதீனமாகக்காணப்பட்டிருக்கிறது. ரூபம்முதலியது ※சாக்ஷுஷத்வம் முதலியதில் போல. ரூபம்முதலியது§ப்ருதிவீ முதலியதில் தன் ஸம்பந்தத் தால் சாக்ஷுஷத்வம் முதலியதை உண்டுபண்ணுகின்றுகொண்டு தான்புலப் படுவது முதலியதில் (வேறு) ரூபாதிகளை அபேக்ஷிக்கிறதல்ல. ஆகையால் † அநுபூதியானது தன்னுடைய ப்ரகாசமானத்வ தர்மத்திலும் ப்ரகாசிக்கிறது என்கிற வ்யவஹாரத்திலும் தானே ஹேது.

ச்ருதப்ரகாசிகை—

பிறகு ஸ்வயம்ப்ரகாசத்வத்தில் || தர்காநுக்ராஹ்யமான ப்ரமாணத்தை உபந்யஸிக்கிறார்—¶ப்ரயோகஸ்ச என்று. பாரிசேஷ்யத்தால் மாத்திரம் ஸ்வதஸ்ஸித்தத்வமில்லை, ‡ ஸாதகமாக ப்ரமாணமும் இருக்கிறதென்று அர்த்தம். அநுபூதி: இது முதலியதால் இரண்டு அநுமானங்கள் சுருக்கத்திற்காக பிரிக்காமல் ஒன்றுசேர்த்து உரைக்கப்பட்டிருக்கின்றன. அநுபூதியானது அந்யாதீனமாக இல்லாத ஸ்வதர்மமுள்ளது, தன்ஸம்பந்தத்தால் அர்த்தாந்தரத்தில்அந்ததர்மத்திற்கு ஹேதுவாகஇருப்பதால். அநுபூதியானது அந்யாநதீநஸ்வவ்யவஹாரமுள்ளது, தன்ஸம்பந்தத்தால் அர்த்தாந்தரத்தில் அந்தவ்யவஹாரத்திற்கு ஹேதுவாக இருத்தலால் என்று. இவ்வண்ணமாக அநுமாநஸ்வரூபத்தின் பாகுபாடு அறியத்தக்கது. அதினாலேயே தான் வேறுபதார்த்தத்தில் வ்யவஹாரவிசேஷத்திற்கு ஹேதுவாக இருப்பதற்கு தன்னிடத்திலும் அந்த வ்யவஹாரத்தில் ஹேதுத்வமென்று மேலே கூறப்போகிறார். @ப்ராகட்யத்தை ஏற்றுக்கொண்டு அதை ¶உபஜீவித்து ப்ரதமாநுமாநம் உரைக்கப்பட்டது. அதை உபஜீவியாமல்தான் இரண்டாவது. ப்ராகட்யாங்கீகாரம் ஸ்வப்ரகாசதாவிரோதியல்ல. அதற்கு ஜ்ஞாநத்தை அநுமித்துக்கொடுக்கும் சக்தி ஒப்புக்கொள்ளப்படாமையால். தர்மவத்த்வமாவது அநந்யாதீந தர்மவத்த்வமாவது ஸாதிக்கத்தக்கதாகச்சொன்னால் ஸித்த ஸாத்யத்வம் என்கிற தோஷம் வரும். அநுபூதித்வம் முதலியதர்மங்கள் வேறுஹேதுக்களை அபேக்ஷியாமலிருப்பதால். அநுபூதித்வஜாதியானது ஸாத்யமல்ல—நித்யமாகஇருப்பதால் ‡ ஜாதியை ஒப்புக்கொள்ளாமல் போனபோதிலும் அநுபூதித்வத்திற்கு அநுபூதிக்கு அவச்யமான காரணஸமுதாயத்தைத்

---

§ அர்த்தாந்தரம்—வேறுவஸ்து.

‡ அந்யாதீனம்— மற்றொன்றைச்சார்ந்திருக்கிற வஸ்து. அங்ஙனமல்லாதது அநந்யாதீனம். ※ சாக்ஷுஷத்வம்— சக்ஷுரிந்த்ரியத்துக்கு கோசரமாக இருத்தல். அதாவது கண்ணுக்குப்புலப்படுதல். § ப்ருதிவீ—பூமி. † அநுபூதி—ஜ்ஞானம்.

|| தர்கம்—யுக்தி. ¶ ப்ரயோகம்—அநுமானம். ‡ ஸாதகம்—அநுகூலமானது.

@ ப்ராகட்யம்—வெளிப்படுதல், அல்லது பிரகாசித்தல்.

¶ உபஜீவித்து—ஆச்ரயித்து.

‡ ஜாதி—அநேக வ்யக்திகளில் ஒரேவிதமான வ்யவஹாரத்திற்கு ஹேதுவாயும் அவைகளை விட்டுப் பிரிக்கமுடியாதஸம்பந்தத்தால் அவைகளிடத்தில் நிலைபெற்றுயிருக்கிற ஒரு தர்மம்.

தவிர்த்த வேறு ஹேதுவின் அபேக்ஷை இல்லாமையால் ஸித்தஸாத்யதை என்கிற தோஷம் ஏற்படும். அதினால் "அநந்யாதீநஸ்வதர்மா" என்று சொல்லப்பட்டது. தன்னுடைய தர்மம்—தன்னால் உண்டுபண்ணத்தக்கதாக இருப்பதால் தன்ஸம்பந்தம்பெற்ற தர்மம் ஸ்வதர்மம். வேறு இடத்தில் தன்னால் ஸாதிக்கத்தக்க தர்மத்திற்கு மிகவும் ஸஜாதீயமாயிருக்கிற தர்மமென்று அர்த்தம். அர்த்தாந்தரே தத்தர்மஹேதுத்வாத் என்று ஹேதுவைச்சொல்லி இருப்பதால். ஸ்வதர்மசப்தத்தால் சொல்லப்பட்டதர்மமல்லவோ தத்சப்தத்தால் சொல்லப்பட்டிருக்கிறது. வேறு இடத்தில் தன்னால் ஸாதிக்கத்தக்க தர்மத்திற்கு மிகவும்ஸமானமாய் தன்னிடத்தில் அவச்யமாக இருக்கத்தக்க தர்மம் ஸ்வதர்மமாக விவக்ஷிக்கப்பட்டிருக்கிறது. இதனாலேயே தன்னிடத்தில் § ரூபித்வத்தை † ஆபாதனம் பண்ணுமையால் த்ருஷ்டாந்தமான ரூபத்திற்கு ஸாத்யமின்மை என்கிற சங்கை விலக்கப்பட்டதாக ஆகலாம்— வேறு தண்டத்தை அபேக்ஷியாமல் தன்னிடத்தில் தண்டித்வத்தை ஆபாதநஞ்செய்யாமலிருக்கிற தண்டத்தில் வ்யபிசாரமும் பரிஹரிக்கப்பட்டதாக ஆகும். அந்ய சப்தமும் தனக்குமிகவும் ஸமானமான வேறுஒன்றைக் குறிக்கிறது. அப்படி இல்லாமல் ஹேதுமாத்ர நிரபேக்ஷத்வம் கூறப்படுமேயாகில் திருஷ்டாந்தத்தில் ஸாத்யம இல்லையென்று வரும். ரூபத்திற்கு சாக்ஷுஷத்வமானது சக்ஷுஸ்முதலியதை அபேக்ஷித்தன்றோ வருகிறது. தவறாமல் அப்படிப்பட்டஹேதுத்வாபேக்ஷையின்மை அநந்யாதீந சப்தத்தால் விவக்ஷிக்கப்பட்டிருக்கிறது. அந்யாபேக்ஷா ஸாமான்யாபாவம் ஸாத்யமாகில் அயலாருடைய ஜ்ஞாநத்திற்கு ||அநுமேயத்வம் காணப்படுவதால் பாததோஷம் ப்ரஸங்கிக்கும். ஞாநாந்தரத்துக்கு விஷயமாகாமை இந்த அநுமானத்தால் ஸாத்யமல்லவே. பின்னையோ தனக்கு மிகவும் ஸமானமான ஒன்றை அபேக்ஷியாத ப்ரகாசார்ஹத்வமாத்ரம். அது அயலாருடைய ஜ்ஞாநத்திற்கும் ஒட்டுமாதலால்பாதிதவிஷயத்வமில்லை. அநந்யாதீநஸ்வவ்யவஹாரா என்கிற இடத்திலும் வ்யவஹாரமுடைமை ஸாதயமாகில் ‡ ஸித்தஸாத்யத்வம் வரும். அதினால் அநந்யாதீந சப்தம். அந்யசப்தம் அத்யந்த *ஸஜாதீயபரமாதலால் வாக்குமுதலியவற்றின் அபேக்ஷையிருந்து. பாதிதத்வசங்கை பரிஹரிக்கப்பட்டதாக ஆகும் கடம் முதலியவைகளுடைய ஹாநாதி வ்யவஹாரத்தில் தனக்கு மிக்க ஸஜாதீயததை அபேக்ஷியாத ஹேது அநுபூதி என்றதனால் ஸித்தஸாத்யத்வதோஷ நிராகரணத்தின் பொருட்டு ஸ்வசப்தம். அதுவும்வேறு இடத்தில் தன்னால் ஸாத்யமான வ்யவஹாரத்தை மிகவும் ஒத்ததான வ்யவஹாரத்தைக்குறிக்கிறது. வ்யவஹாரத்திற்கு அத்யந்தஸஜாதீயத்வமாவது அபின்னமான ப்ரவ்ருத்தி நிமித்தத்தோடு கூடியிருத்தல். வ்யவஹாராநுகுண்யமாத்ரமன்றோ "ப்ரகாசதே" என்கிற வ்யவஹாரத்திற்கு நிமித்தம். அயலாருடைய ஜ்ஞாநவ்யவஹாரத்தில் பாததோஷபரிஹாரத்திற்காக அபேக்ஷையில் நிர்பந்தமில்லை யென்று விவக்ஷை.

ஹேதுவைச்சொல்லுகிறார்— ஸ்வஸம்பந்தாத் என்று. தர்மஹேதுத்வமும் வ்யவஹாரஹேதுத்வமும் ஹேதுவாக விவக்ஷிக்கப்பட்டால் வ்யபிசாரம் ஸம்பவிக்குமென்று அதைபரிஹரிப்பதற்காக தத்சப்தம்-தன்னுடைய யாதொருதர்மமும் வ்யவஹாரமும் உண்டோ அதற்கு அத்யந்தஸஜாதீயமானதர்மமும் வ்யவஹாரமும் தச் சப்தத்

---

§ ரூபித்வம்—ரூபத்துடன் கூடியிருத்தல். † ஆபாதனம்—ஏறிடுதல்.

‡ ஸித்தஸாத்யதை— ஏற்கனவே ஸித்தித்திருக்கிற ஒன்றைமீண்டும் ஸாதித்தல்; இது ந்யாயசாஸ்திரகாரர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிற ஒரு தோஷம்,

|| அநுமேயம்—அநுமானத்தால் அறியத்தக்கது. * ஸஜாதீயம்—ஒற்றுமையுள்ளது.

தால் விவக்ஷிக்கப்பட்டிருக்கிறது. தனக்கு அக்நி ஸம்பந்தத்தால் தன்னிடத்தில் முந்தின ரூபத்திற்கு ஸஜாதீயமான ரூபாந்தரம், அதின் வ்யவஹாரம் இவைகளுக்கு ஹேது வான கடமானது அக்நிஸாபேக்ஷமாக இருக்கிறதென்று அதில் வ்யபிசாரபரிஹாரத்திற்காக "அர்த்தாந்தர" என்று உரைக்கப்பட்டது.

மேலும் அர்த்தாந்தரசப்தமானது குறிப்பிடப்பட்டிருக்கிற அர்த்தத்தைக்காட்டிலும் விஜாதீயததை ப்ரதிபாதிப்பதில் நோக்குள்ளது. அதனால் வேறு த்ரவ்யத்தில் ஸம்யுக்தத்வமென்ன தத்வ்யவஹாரமென்ன இவைகளுக்கு ஹேதுவான த்ரவ்யத்திற்கு பரத்ரவ்யஸாபேக்ஷத்வமிருப்பதால் அநைகாந்த்ய தோஷம் பரிஹரிக்கப்பட்டதாக ஆகும். த்ரவ்யத்திற்கு த்ரவ்யமன்றோ அத்யந்த ஸஜாதீயம். அய்யா! குடமானது வஸ்திரத்தில் ஸம்யுக்தத்வம் முதலியதை உண்டுபண்ணுகின்றுகொண்டு தனக்கு அப்படிப்பட்ட ஸம்யுக்தத்வத்தை உண்டுபண்ணுவதில் வேறுகுடத்தை அபேக்ஷித்திருப்பதினால் அநைகாந்த்யம் வருமெனில் இவ்வண்ணமல்ல. ஸஜாதீயாபேக்ஷாநியமமில்லாமை என்கிற ஸாத்யதர்மமானது அங்கே இருப்பதால். குடமானது தனக்கு ஸம்யுக்தத்வம் முதலியதில் தனக்கு அத்யந்தஸஜாதீயமான குடத்தையே அபேக்ஷிக்கிறதென்கிற நியமமில்லையன்றோ. புத்ரனிடத்திலுள்ள புத்ரத்வதர்மம் புத்ரத்வவ்யவஹாரம், இவைகளுக்கு ஹேதுவாயும் தனக்கு புத்ரவ்யவஹாரத்தின் பொருட்டு பித்ரந்தர ஸாபேக்ஷமாகவும் இருக்கிற பிதாவினிடத்தில் வ்யபிசாரபரிஹாரத்திற்காக ஸ்வஸம்பந்தாத் என்று சொல்லப்பட்டது. வித்யமாநஸ்வஸம்பந்தம் விவக்ஷிதம். வேறு இடத்தில் ஸ்வஸம்பந்தம் இருக்கும் காலத்திலுள்ள ஸ்வகதர்மாத்யந்த ஸஜாதீயதர்மத்திற்கும் அதை அபேக்ஷித்திருக்கிற வ்யவஹாரத்திற்கும் ஹேதுவாக இருப்பதாலென்று அர்த்தம். பிதாமுதலியவர்கள் தேசாந்தரம் போனாலாவது இறந்துபோனாலாவது புத்ரன்முதலியவர்களிடத்தில் புத்ரத்வதர்மமும் புத்ரத்வதர்மவ்யவஹாரமும் நீங்குகிறதில்லையன்றோ. இதனாலேயேதான் தன்னிடத்தில் அந்யாபேக்ஷமான ‡ த்வைதீபாவத்தை உண்டுபண்ணுமலும் பரத்வைதீபாவத்திற்கு ஹேதுவாகவுமிருக்கிற த்ரவ்யத்தில் வ்யபிசாரமும் தூரத்தில் தள்ளப்பட்டது.

அய்யா! ஸித்தாந்திக்குங்கூட இந்த அநுமானம் அபிமதமானது. சேதனன் தன் ஸம்பந்தத்திற்கு ஸமகாலமான சரீரத்வத்தை சரீரத்தில் உண்டுபண்ணுகின்றுகொண்டு தன்னிடத்தில் சரீரத்வத்திலும் அதின் வ்யவஹாரத்திலும் அந்யாபேக்ஷனாக இல்லை. பின்னையோ எனில். பரமாத்மஸாபேக்ஷனாக இருக்கிறான். பரமாத்மாவோ சேதனனாக இருப்பதால் அத்யந்தம் ஸஜாதீயன். அதனால் அவ்விடத்தில் அநைகாந்த்யம் என்று சொன்னால் இவ்வண்ணமல்ல. ஸ்வவ்யாபகதர்மஹேதுத்வம் விவக்ஷிக்கப்பட்டிருப்பதால். சரீரத்வமானது சேதநத்வவ்யாபகம் அன்று. ஈச்வரன் சேதனனாக இருந்தபோதிலும் அவனுக்கு சரீரமில்லாமையால். ஆகையால் ஸ்வதர்மசப்தத்தால் அபிப்ராயப்படப்பட்டிருக்கிற ஸ்வாவச்யம்பாவத்தால் பரிஹாரம்.

இப்படி சொல்லப்பட்டதாக ஆகிறது—தர்மசப்தம் ப்ரகாசபரமா? அல்லது தர்மமாத்ரபரமா? அந்யசப்தமும் அந்யமாத்ரபரமா? ஸ்வாத்யந்தஸஜாதீயபூதாந்யபரமா? அவற்றுள் ஹேது மாத்ராநபேக்ஷ ப்ரகாசபரத்வம் கூறப்பட்டால் த்ருஷ்டாந்தத்தில் ஸாத்யமில்லாமல்போகும். ரூபமானது கண்முதலியவைகளை அபேக்ஷித்தல்லவோ ப்ரகாசிக்கிறது. தனக்கு மிகவும் ஒற்றுமையுள்ள வேறுப்ரகாசத்தை அபேக்ஷியாமல் ப்ரகாசித்தல் ஸாத்யமாகில் ஹேதுவுக்கு வீணான விசேஷணத்தை ப்ரயோகிக்கிற

‡ த்வைதீபாவம்— இரண்டாகப்போகுதல்.

தோஷம் ஸம்பவிக்கிறது. ஹேதுத்வமாத்ரத்தால் ஸாத்யம் ஸித்திப்பதால் ஏதோ ஒன்றுக்கு ஹேதுவாக இருந்துகொண்டு கடம் முதலியது ஸ்வப்ரகாசத்தில் வேறு கடம் முதலியதை அபேக்ஷிக்கிறதில்லையன்றோ. ஹேதுவை அபேக்ஷியாத தர்மமாக ஒப்புக்கொண்டால் அநுபூதித்வம் முதலியதால் ஸித்தஸாத்யதை ஏற்படும். கோடாலி முதலியதில் வ்யபிசாரமும் வரும். கட்டையை இரண்டாகப்பிளப்பதில் ஹேதுவான கோடாலிக்குத்தான் இரண்டு துண்டாக ஆவதில் ஹேத்வந்தராபேக்ஷை இருப்பதால். ஸ்வாத்யந்தஸஜாதீயாநபேக்ஷதர்மமாகச் சொன்னால் அநுபூதித்வம் முதலியதால் ஸித்தஸாத்யதை ஏற்படும். விஷயப்ரகாசமான அயலார்ஜ்ஞாநத்தில் அநுமானத்தை அபேக்ஷித்திருக்கிற ப்ரகாசத்வம் காணப்படுவதால் பாதமும் வரும். ரூபத்தில் ரூபாந்தரத்தை அபேக்ஷியாத ஸ்வகதரூபித்வஹேதுத்வமில்லாமையால் திருஷ்டாந்தம் ஸாத்யசூன்யம். புத்திரனை அடைந்திருக்கிற புத்ரத்வத்திற்கு ஹேதுவாயும் தன்னிலும் வேறான பிதாவை அபேக்ஷித்த புத்ரத்வதர்மத்துடன் கூடியவனுமான பிதாவினிடத்தில் வ்யபிசாரமும். பரத்ரவ்யமான ஸம்யுக்தத்வத்திற்கு ஹேதுவாயும் த்ரவ்யாந்தரத்தை அபேக்ஷித்திருக்கிற ஸம்யோகத்துடன் கூடியதுமான திரவ்யத்திலும் வ்யபிசாரம்வரும். ஆகையால் இதுமுதலிய தோஷங்களை பரிஹரிப்பதற்காக இவ்வண்ணம் ப்ரயோகிக்கத்தக்கது—†அநுபூதி: ஸ்வஜந்ய பரகததர்மாத்யந்தஸஜாதீயதர்மபாக்த்வே ஸ்வாத்யந்த ஸஜாதீயாபேக்ஷாநியமரஹிதா—என்பது ப்ரதிஜ்ஞை, ஸ்வவிஸஜாதீயே ஸ்வாவச்யம்பாவி தர்மாத்யந்த ஸஜாதீய ஸ்வஸம்பந்த துல்யகால தர்மஹேதுத்வாத் என்பது ஹேது. அவ்வாறே அநுபூதியானது ஸ்வஜந்யபரகதவ்யவஹாராத்யந்த ஸஜாதீயவ்யவஹாரபாக்த்வே ஸ்வாத்யந்த ஸஜாதீயாபேக்ஷா நியமரஹிதா என்று. ப்ரதிஜ்ஞை. ஸ்வவிஸஜாதீயே ஸ்வாவச்யம்பாவி வ்யவஹாராத்யந்தஸஜாதீய ஸ்வஸம்பந்த துல்யகால வ்யவஹாரஹேதுத்வாத் என்பது.ஹேது. வ்யவஹாரத்திற்கு ஸ்வாவச்யம்பாவித்வமாவது, அவச்யம்பாவி தர்மநியந்தநத்வம். வயாப்தியைக்காட்டுவதை முன்னிட்டு த்ருஷ்டாந்ததைக்கூறுகிறார்— ய இதி. ஸாத்யஸாதனதர்மங்கள் இரண்டுகளையும் ஸ்வபக்ஷத்தில் காட்டுகிறார்— நபாதிர்ஹி என்று. பக்ஷதர்மதாபலத்தால் ஸித்தமான தர்மத்தைச்சொல்லுகிறார்— அதோ'நுபூதி: என்று. ப்ரகாசதே இதிவ்யவஹார இதி- அநுபூதி ப்ரகாசிக்கிறதென்கிற வ்யவஹாரத்திலும் அநுபூதி என்கிற வ்யவஹாரத்திலுமென்று அர்த்தம்.

அய்யா! தன் ஸம்பந்தத்தால் வேறுவஸ்துவில் அந்த தர்மத்திற்கும் வ்யவஹாரத்திற்கும் காரணமாக இருக்கை என்கிற ஹேது உபாதியுடன் கூடியது. ஸம்பந்த விசேஷத்தால் வேறு வஸ்துவினிடத்தில் அந்த தர்ம வ்யவஹார ஹேதுத்வமே தன்னிடத்தில் அந்ததர்ம வ்யவஹாரங்களின் அநந்யாதீநத்வத்தில் காரணமாக இருப்பதால்

---

† அநுபூதியானது அதாவது ஜ்ஞானமானது தான் எந்தவஸ்துவுடன் ஸம்பந்தப்படுகிறதோ அந்த வஸ்துவில் பிரகாசிக்கும் தன்மையை உண்டுபண்ணுகிறது. மற்ற வஸ்துக்களில் தான் உண்டுபண்ணும் பிரகாசத்திற்கு அத்யந்தம் துல்யமான ப்ரகாசத்வத்தை தன்னிடத்தில் உண்டுபண்ணிக்கொள்வதில் தன்னைப்போன்றவேறொரு ஜ்ஞானத்தை அபேக்ஷித்துத்தான் செய்துகொள்ளவேண்டுமென்கிற நியமமில்லாதது. அதாவது வேறுஜ்ஞானத்தை அபேக்ஷிக்காமலே தானே தன்னிடத்தில் பிரகாசத்தை உண்டுபண்ணிக்கொள்ளக்கூடியது. இது ப்ரதிஜ்ஞாவாக்யம், தன்னைக்காட்டிலும் வேறு ஜாதியான அதாவது ஜடமான வஸ்துவில் தன்னிடத்தில் கட்டாயம் உண்டாகக்கூடிய தர்மமான ப்ரகாசத்வததிற்கு அத்யந்தம் துல்யமான ப்ரகாசத்வம் என்கிற தர்மத்தை தான் ஸம்பந்தப்பட்டகாலத்தில் உண்டாக்குவதால் என்பது ஹேது.

அர்த்த ஸம்பந்த விசேஷம் ஆச்ரயாச்ரயிபாவரூபம். அது ரூபம் முதலியவற்றிலுமிருக் கிறது. பக்ஷத்திலோ வென்றால் இல்லை என்று ஆக்ஷேபித்தால் இது ஸரியல்ல, இதற்கு ஸாத்யஸமவ்யாப்தி இல்லாமையால் உபாதித்வம் பொருந்தாது. ஆச்ரயாச்ர யிபாவமில்லாவிட்டாலும் ஸம்பந்தமாத்திரத்தால் அர்த்தாந்தரத்தில் ப்ரகாசதே என்கிற வ்யவஹாரஹேதுவான தீபத்திற்கு தன்னிடத்திலும் அந்த வ்யவஹாரத்தில் அத்யந்த ஸஜாதீயாநபேக்ஷத்வம் காணப்பட்டிருக்கிறதன்றோ முந்தி, ஜ்ஞாநத்திற்கு பரப்ரகாச்ய த்வவாதிகளால் தன்னுடைய ஸத்தையினாலேயே ப்ரகாசிப்பதால் என்கிற ஹேதுவுக்கு அஸித்தியும் வ்யாஹதியும் உரைக்கப்பட்டன. அதில் அயம் கட: என்கிற அநுபவ வேளையில் அநுபூயதே என்கிற சப்தம் ப்ரயோகிக்கப்படாமையால் அஸித்தி சொல்லப் பட்டது. சாப்தவ்யவஹாரத்தின் வைகல்யபௌஷ்கல்யங்கள் விவக்ஷாவிசேஷஹேது க்களாதலால், அர்த்தங்களின் அநுபவத்திலும் அநநுபவத்திலும் அவைகளுக்கு ப்ரயோஜகத்வமில்லை யென்று சொன்னதினால் அஸித்தியானது பரிஹரிக்கப்பட்டது. வ்யாஹதியுமில்லை இதையே உபபாதிக்கிறார்— விரல்நுனிக்கு தன் ஸ்வரூபத்தைத் தொடுதல் முதலியதின் வ்யாஹதியானது அநுபவத்தைப்பொறுத்திருக்கிறது. தீபம் முதலியவைகளிலும் ப்ரகாச்யத்வ ப்ரகாசத்வங்கள் காணப்படுகின்றன. நிரூபிக்கும் பொழுது ஒன்றுக்கே கர்மத்வமும் கர்த்ருத்வமும என்கிற விரோதமும் இல்லை. தீபம் இருளை விலக்குகிறது, இருள் விலக்கத்தக்கது தீபம் உத்பாதகம், ஜ்ஞாநம் உத்பாத்யம். ஜ்ஞாநம் உத்பாதகம், வ்யவஹாரம் உத்பாத்யம. கர்மத்வத்திற்கும் கர்த்ருத்வத்திற்கும் இயற்கையாக விரோதமிருப்பதால் பேதகத்வமானது அநுபவஸித்தமாக இருந்த போதிலும் ஜ்ஞாபகங்களில் நியதமாய் விரோதமில்லை என்பதும அநுபவஸித்தம். ஜ்ஞாதாவிடத்திலும் மனதிலும் சப்தத்தை போதிக்கிறசப்தத்திலும் பதத்தைபோதிக்கிற பதத்திலும் என்று. அவ்வாறே இப்படிப்பட்ட அர்த்தாந்தரங்களிலும் அவிரோத மானது காணப்படுகிறதன்றோ. உத்பாதகங்களிலன்றோ விரோத நியமம் உதபாதகங் களிலும் வெவ்வேறு ஆகாரத்தாலென்றால் விரோதமில்லை. அய்யா ! கடம் முதலிய வைகளில் வ்யவஹாரார்ஹத்வமென்கிற தன்மையானது தன்னைவிட வேறான ஜ்ஞாநத் தைக்காரணமாகக்கொண்டதென்று காணப்பட்டிருக்கிறது. ஜ்ஞாநத்தில் வ்யாப்தியானது பங்கம் செய்யப்படுமேயாகில் வ்யவஹாரத்திற்கு ஜ்ஞாநபூர்வகத்வ வ்யாப்தி பங்கத்தினால் அஜ்ஞாதமான ஜ்ஞாநத்திற்கே வ்யவஹாராஸ்பதத்வம உண்டாகும் எனில் இவ்வண்ண மல்ல ; கடம் முதலியவைகளில், அறியத்தக்க வஸ்துக்களைக்காட்டிலும் வேறான ஜ்ஞாதாவினால் காணத்தக்கதன்மை இருந்தபோதிலும் ஜ்ஞாதாவினிடத்தில் த்ருச்யத்வம் தன்ஜ்ஞாத்ருத்வத்தாலேயே என்பது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்படுவதினால் அங்கு பரவாதியாலும் கர்மகர்த்ரு வ்யாப்திபங்கம் ஒப்புக்கொள்ளத்தான்வேண்டும். அவ்வாறே கடாதிகளில் தன்னிலும் வேறான இந்திரியம் மனஸ் இவைகளால் உண்டாகும் ஜ்ஞா நத்தில் த்ருச்யத்வமிருந்தபோதிலும் மனதில் (மனஸ் அறியப்படும்பொழுது) அது பக்னமாய்விட்டது. ஸ்வாநுமானத்தில் மனதுக்கே கரணத்வமிருப்பதால். அவ்வாறே எல்லா வாச்யங்களுக்கும் ஸ்வவ்யதிரிக்தசப்தவாச்யத்வமிருந்தபோதிலும் சப்தமென் கிற சப்தத்திலும் பதம் என்கிற பதத்திலும் அது பக்னமாகிறது. கடாதிகளுக்கு தன் னைக்காட்டிலும வேறான வாக் வ்யவஹார்யத்வமிருந்தபோதிலும் வாகிந்திரியத்தில் அது பக்னம்—ஆகையால் கர்மகர்த்ருபாவத்திற்கு விரோதி வ்யாப்தி இல்லை. வ்யவ ஹாரம் ஜ்ஞாநபூர்வகமென்பது ஒருவராலும் மறுக்கப்பட்டதன்று ஜ்ஞாநவ்யவஹாரத் திற்கு பூர்வம் ஜ்ஞாநகர்மத்வத்தின் இன்மையினது. ப்ரஸங்கம் வருமேயாகில் - அது அநிஷ்டமல்ல. ப்ரகாசபூர்வத்வத்திற்கு வ்யாப்திபங்கமில்லாமையால் அதின் விரஹத் திற்குப்ரஸங்கமில்லை. ஆகையால் அவபாஸிக்கின்ற ஜ்ஞானத்திற்கே வ்யவஹாராஸ்பத த்வம் ஆகையால் ஸ்வவிஷய பரவிஷய வ்யவஹாராநுகுண்யம் ஜ்ஞாநத்திற்கு யுக்தம்.

सेयं स्वयंप्रकाशानुभूतिर्नित्या। प्रागभावाद्यभावात्। तदभावश्च स्वतस्सिद्धत्वादेव। न ह्यनुभूतेः स्वतस्सिद्धायाः प्रागभावः स्वतोऽन्यतो वाऽवगन्तुं शक्यते। अनुभूतिः स्वाभावमवगमयन्ती, सती नावगमयति। तस्याः सत्त्वविरोधादेव तदभावो नास्तीति कथं सा स्वाभावमवगमयति?। एवमसत्यपि नावगमयति, अनुभूतिः स्वयमसती स्वाभावे कथं प्रमाणं भवेत्?। नाप्यन्यतोऽवगन्तुं शक्यते, अनुभूतेरनन्यविषयत्वात्। तस्याः प्रागभावं साधयत् प्रमाणं "अनुभूतिरियम्" इति विषयीकृत्य तदभावं साधयेत्। स्वतःसिद्धेरियमिति विषयीकारानर्हत्वात्, न तत्प्रागभावोऽन्यतश्शक्यावगमः। अतोऽस्याः प्रागभावाभावादुत्पत्तिर्न शक्यते वक्तुमित्युत्पत्तिप्रतिषेधेन सर्वे भावविकारास्तस्या न सन्ति॥

ஸ்ரீபாஷ்யம்—

அப்படிப்பட்ட இந்த ஸ்வயம்ப்ரகாசாநுபூதியானது நித்யை— ஏனெனில், ப்ராகபாவம் முதலியது இல்லாமையால். அந்த முன் இல்லாமையின் அபாவமும் ஸ்வதஸ்ஸித்தமாக இருத்தலாலேயே. ஸ்வதஸ்ஸித்தையான அநுபூதிக்கு ப்ராகபாவமானது தன்னாலாவது மற்றொன்றினாலாவது அறிவதற்கு சக்யமாகாதன்றோ. அநுபூதியானது தன்னுடைய அபாவத்தைத் தெரிவிக்கிறதாக இருக்குமேயாகில் நிச்சயமாகத்தானிருந்துகொண்டு தெரிவிக்கமுடியாது. அது இருக்குமேயாகில் அதில்லையென்றால் விரோதம் வருகையாலே அதற்கு அபாவமில்லை. ஆதலால் எவ்வாறு அந்த அநுபூதியானது தன்னுடைய அபாவத்தை அறிவிக்கும். இவ்வாறே அநுபூதி இல்லாமலிருந்தாலும், தன்னுடைய அபாவத்தை அறிவிக்காது; அநுபூதியானது தானே இல்லாமலிருக்கையில் தன்னுடைய அபாவத்தில் எவ்வாறு ப்ரமாணமாக ஆகும். வேறொன்றினால் அறிவதற்கும் சக்யமன்று— அநுபூதியானது வேறொன்றுக்கு விஷயமாக இல்லாமையால். இதின் ப்ராகபாவத்தை ஸாதிக்கிற ப்ரமாணமானது, "இது அநுபூதி" என்று அநுபூதியை விஷயீகரித்து அதின் அபாவத்தை ஸாதிக்கவேண்டும். அது ஸ்வதஸ்ஸித்தமாதலால் "இயம்" என்று விஷயீகரிப்பதற்கு அநர்ஹமாயிருப்பது பற்றி அதின் ப்ராகபாவமானது வேறொன்றினால் அறிய சக்யமாகாது.

ஆகையால் இதற்கு ¶ ப்ராகபாவமில்லாமையால் உத்பத்திபாவ சொல்வதற்கு அசக்யமாயிருப்பதுபற்றி உத்பத்தியை ஓட்டிவரும் மற்றவிகாரங்களும் அதற்கு இல்லை.

ச்ருதப்ரகாசிகை—

பிறகு ஜ்ஞாத்ரு ஜ்ஞேய நிரஸநமும், ஜ்ஞாநத்தின் ஸ்வயம்ப்ரகாசத்வமும் $பௌத்த பக்ஷத்திலும் ஸமாநமென்று அதை வ்யாவர்த்திப்பதற்காக ஜ்ஞாநத்திற்கு நித்யத்வத்தை ஸாதிக்கிறார்— ஸேயம் என்று. ஸேயம் - பரமார்த்தமாக இருக்கிற ஸந்மாத்ரத்தோடு ஐக்யம் பெற்றதும் ப்ரமாணத்திற்கு அவிஷயமாக இருக்கிறதுமான, என்று அர்த்தம். அன்றிக்கே ஸ்வயம் ப்ரகாசத்வத்திற்கு ஹேதுபூதமான தர்மத்துடன்கூடி இருப்பதால் ப்ரஸித்திபெற்ற என்றும் அர்த்தம் சொல்லலாம். ஸ்வயம்ப்ரகாசத்வத்திற்கு நித்யதா ஹேதுத்வ விவக்ஷையால் 'ஸ்வயம் ப்ரகாசா' என்று உரைக்கப்பட்டது. சகாரம்-ஸாத்யஸமுச்சயத்தில், பௌத்தஸாம்யசங்கையைப் போக்கடிப்பதிலாவது. எதனாலென்றால் சொல்லுகிறார்—ப்ராகபாவாதி என்று அதுவும் எவ்வாறு என்று சங்கைவரின் க்ராஹகமில்லாமையால் என்கிற அபிப்ராயத்தால் சொல்லுகிறார்— ததபாவஸ்ச என்று. ஸ்வதஸ்ஸித்தமாக இருப்பதால் ப்ராகபாவம் முதலியவற்றின் அபாவத்தை விகல்ப முகத்தால் ப்ரதிபாதிக்க எண்ணங்கொண்டவனாக விகல்பகோடிகள் இரண்டிலும் அநுபபத்தியை ப்ரதிஜ்ஞை பண்ணுகிறார்—நஹி என்று. ஸ்வத: என்னும் பக்ஷத்தில்; அநுபூதியானது, தானிருந்துகொண்டு தன்னுடைய இல்லாமையைத்தெரிவிக்கிறதா ? அல்லது இல்லாமலிருந்துகொண்டா ? என்று விகல்பத்தைககருதி, இருந்துகொண்டு என்னும் பக்ஷத்தை தூஷிக்கிறார்— அநுபூதி: என்று. எதனால் என்றால் கூறுகிறார்—தஸ்யா: என்று க்ராஹ்யமான அநுபூதியினுடைய அபாவமில்லாமையாலென்று அர்த்தம். அநுபூதியானது Ψ அநுமித்யாதிரூபையாக இருந்துகொண்டு தன்னுடைய அபாவத்தைத்தெரிவிக்கிறதா? அல்லது ப்ரத்யக்ஷரூபையாகவா என்கிற விகல்பத்தில், லிங்கம் முதலியதில்லாமையால் ப்ரதமகல்பம் ஸம்பவியாதென்று எண்ணி இரண்டாவது கல்பம் க்ராஹ்யாபாவத்தால் தூஷிக்கப்பட்டது. முன் அபிப்ராயப்பட்டிருக்கிற விகல்பகோடிகள் இரண்டினுள் இல்லாமல் என்கிற பக்ஷத்தை க்ராஹகமான ப்ரமாணாபாவத்தால் தூஷிக்கிறார்— ஏவம் என்று. முதலில் உரைக்கப்பட்டுள்ள விகல்பகோடிகள் இரண்டினுள் அந்யத: என்கிற பக்ஷத்தைத்தூஷிக்கிறார்—நாபி என்று. அநுபூதியானது அந்ய §கோசரையாக இருக்கட்டும், அதினால் அபாவத்தை க்ரஹிக்காமைக்கு காரணம் என்ன? அபாவமானது அந்யகோசரத்வத்தை அடைவதற்கு அர்ஹமாகவன்றோ உள்ளது எனில் கூறுகிறார்— அஸ்யா: என்று. அஸ்யா:— வேறொன்றினுடைய ப்ராகபாவம் க்ரஹிக்கத்தக்கதல்லவன்றோ, பின்னையோ அநுபூதியினுடையதே. ஆதலால் அந்த அநுபூதியைவிஷயீகரித்தே அதின் அபாவம் க்ரஹிக்கத்தக்கது. அந்த அநுபூதியானது விஷயமாவதற்கு

¶ அபாவங்கள்— நான்குவிதங்கள் ப்ராகபாவம், ப்ரத்வம்ஸாபாவம், அந்யோந்யாபாவம், அத்யந்தாபாவம் - என்று. ப்ராகபாவமாவது-ஒரு வஸ்து உண்டாவதற்குமுந்தி அதின் இல்லாமையே ப்ராகபாவம், அது உத்பன்ன வஸ்துவால் நாசமடைகிறது வஸ்து உண்டானபிறகு அதின் ப்ராகபாவம், காணப்படாமையால் (இது தார்க்கிக மதம்)

$ பௌத்தபக்ஷம்— புத்தமதஸ்தர்களின் கொள்கை.

Ψ அநுமிதி—அநுமாநத்தாலுண்டாகிற ஜ்ஞாநம், § கோசரம்— விஷயம்.

அநர்ஹமாக இருப்பதால் அதின் ப்ராகபாவக்ரஹணம் சக்யமாகாதென்று பொருள். இவ்வண்ணம் ப்ராகபாவமில்லாமையால் உத்பத்தி இன்மை உரைக்கப்பட்டது. பிறகு பரிணாமம் முதலிய எல்லாவிகாராந்தரங்களின் அபாவத்தையும் உபபாதிக்கிறார்—அதோஸ்யா: என்று. ஆகையால் ஸ்வத:, பரத:, பக்ஷங்களிரண்டிலும் அபாவம் க்ரஹிக்கமுடியாமலிருப்பதாலென்று அர்த்தம். விகாரஸாமாந்யாபாவம் ஸாத்யமாகில் அநுத்பன்னத்வத்திற்கு அந்தமுள்ளதான ப்ராகபாவத்தில் வ்யபிசாரம் வரும். ஆகையால் பாவரூபவிகாரவிரஹத்திற்கு ஸாத்யத்வத்தை ஜ்ஞாபிப்பதின் பொருட்டு "பாவ" சப்தம். அன்றிக்கே பாவஸ்ய விகார: என்று ஷஷ்டீஸமாஸம். அதனால், பாவாபாவரூபவிகாரமாத்ரவிரஹம் ஸாத்யமெனகிறபக்ஷத்தில் ப்ராகபாவத்தில் வ்யபிசாரசங்கையை நிவாரணம் செய்வதற்காக பாவத்வமுமிருக்க அநுத்பன்னத்வம் விகாராந்தராபாவத்தில் ப்ரயோஜகமென்பது பலித்தது. அநுபூதியானது நாசமுள்ளதல்ல, பாவத்வேஸதி அநுத்பன்னத்வாத் எது நாசமுள்ளதோ அது பாவரூபமான அநுத்பன்னவஸ்துவல்ல. உதாஹரணம்—கடம். பௌத்தர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிற க்ஷணிகத்வத்தை வ்யாவ்ருத்திப்பதற்காக நித்யத்வத்தின் பொருட்டு அநுத்பத்தியும் அத்துடன் வ்யாப்தமான விகாராந்தராபாவமும் ஸாதிக்கப்பட்டன.

अनुत्पन्नेयमनुभूतिरात्मनि नानात्वं न सहते, व्यापकविरुद्धोपलब्धेः। न ह्यनुत्पन्नं नानाभूतं दृष्टम्। भेदादीनामनुभाव्यत्वेन रूपादिवदेवानुभूतिधर्मत्वं न संभवति। अतोऽनुभूतेरनुभवस्वरूपत्वादेवान्योऽपि कश्चिदनुभाव्यो धर्मो नास्त्यतः, यतो निर्धूतनिखिलभेदा संवित्। अत एव नास्याः स्वरूपातिरिक्तः आश्रयो ज्ञाता नाम कश्चिदस्ति स्वप्रकाशरूपा सैवात्मा अजडत्वात्। अनात्मत्वव्याप्तं जडत्वं संविदि व्यावर्तमानमनात्मत्वमपि संविदो व्यावर्तयति॥

ஸ்ரீபாஷ்யம்.—

உத்பத்தி இல்லாத இந்த அநுபூதியானது தன்னிடத்தில் பேதத்தையும் ஸஹிக்கிறதில்லை. நாநாத்வவ்யாப்தமான உத்பத்திக்குவிருத்தமான அநுத்பத்தி அறியப்படுவதால். அநுத்பன்னமான வஸ்துவானது நாநாபூதமாகக்காணப்படவில்லை. பேதம் முதலியவைகளுக்கு அநுபாவ்யத்வமிருப்பதாலும் ரூபம் முதலியவற்றுக்குப் போல் அநுபூதி தர்மத்வம் ஸம்பவியாது. ஆகலால் அநுபூதியானது அநுபவ ஸ்வரூபமாக இருப்பதினாலேயே அநுபாவ்யமான வேறு ஓரு தர்மமும் இதற்கு இல்லை. எக்காரணத்தினால் இந்த ஸம்வித்தானது எல்லாபேதங்களையும் நிரஸிக்கும் ஸ்வாபவமுள்ளதோ.

அதனாலேயே இந்த ஸம்வித்தின் ஸ்வரூபத்தைக்காட்டிலும் வேறான ஆச்ரயனான ஜ்ஞாதாவான ஒருவன் இல்லை. ஆகையால் ஸ்வப்ரகாசரூபை

யான அந்தஸம்வித்தே ஆத்மா. அஜடமாக இருப்பதாலும் அநாத்மத்வ வ்யாபகமான ஜடத்வமானது ஸம்வித்தில் இல்லாமல் இருந்துகொண்டு அநாத்மத்வத்தையும்கூட ஸம்வித்திலிருந்து விலக்குகிறது.

சுருதப்ரகாசிகை—

பிறகு அவர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிற அநேகத்வவ்யாவ்ருத்தியின் பொருட்டு ஸஜாதீயபேதத்தை நிரஸநம் செய்கிருர்— அநுத்பன்னேயம் என்று. வ்யாபகவிருத்தோபலப்தே:. நாநாத்வ ழ் வ்யாபகமான உத்பத்திக்கு விருத்தமான அநுத்பத்தி காணப்படுவதால் என்று பொருள். $ வ்யாப்தியைக் காட்டுகிறார்— நஹி என்று. இந்த க்ரந்தத்திற்கு எது அநுத்பன்னமோ அது பலவகைப்பட்டதல்லாததாகக் காணப்பட்டிருக்கிறதென்று அர்த்தம் சொல்வது பொருந்தாது. ப்ரஹ்மத்தத்தவிர்த்து வேறு ஒரு வஸ்துவும் அநுத்பன்னமாகவும் பலவகை பேதமில்லாததாகவுமிருப்பதாக மாயாவேதாந்திகளால் ஒப்புக்கொள்ளப்படாததால், எது அநாநாபூதமோ அது அநுத்பன்னமென்று சொல்லப்பட்டால் வ்யாபகஜந்மநிவ்ருத்தியினால் ‡வ்யாப்யமான நாநாத்வ நிவ்ருத்தியானது சொல்லப்பட்டதாக ஆகாது. ஆகையால் இது அர்த்தம்.—எது நாநாபூதமோ அது அநுத்பன்னமாகக் காணப்படுகிறதில்லை. உத்பத்தியுள்ளதாகவே காணப்படுகிறது என்று உத்பத்திக்கு நாநாத்வ வ்யாபகத்வம் காண்பிக்கப்பட்டது. இந்த உத்பத்தி நிவ்ருத்தியினால் நாநாத்வ நிவ்ருத்தி என்பது அர்த்தஸித்தம். அன்றிக்கே, எவ்வாறு அக்நி இல்லாதது புகையுள்ளதாகக் காணப்படுகிறதில்லை என்று சொன்னால், நெருப்புள்ளதே புகையுள்ளதென்று சொல்லப்பட்டதாக ஆகுமோ அவ்வாறே இவ்விடத்திலும் அநுத்பன்னமான வஸ்து நாநாபூதமாகக் காணப்படவில்லை என்று சொன்னால் உத்பத்தியுள்ளதே நாநாபூதமென்று சொல்லப்பட்டதாக ஆகும். அதினால் உத்பத்தியானது வ்யாபிகை என்று சொல்லப்பட்டதாக ஆகிறது. அநுபூதியானது நாநாவாக ஆகிறதில்லை—அநுத்பன்னமாதலால் எது நாநாபூதமோ அது உத்பத்தியுள்ளதாகக் காணப்பட்டிருக்கிறது. கடத்தைப்போல் என்று † வ்யதிரேக்யநுமானமானது, அநுபூதியைப் பக்ஷமாக்கிச்சொல்லப்பட்டது. ஆகாயம் முதலியதுகளில் வ்யபிசாரம் சொல்லமுடியாது ; அவைகள் உத்பத்தியுள்ளவைகளென்று வேதாந்திகளால் ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதால் என்று கருத்து. இவ்வாறாக ஸஜாதீயபேதம் நிஷேதிக்கப்பட்டது. இந்த உத்பத்தி இல்லாமை என்கிற விஷயத்தையும் மற்ற விகாரங்களில்லாமை என்றும் விஷயத்தையும் நிரூபிப்பதற்காக பேதத்தையும் விகாராந்தரத்தையும் பக்ஷமாகச்செய்து, § அந்வயநுமானத்தைக்கூறுகிறார்— பேதாதீநாம் என்று. ஆதி சப்தத்தால் உத்பத்தி முதலியவைகள் விவக்ஷிக்கப்பட்டன. பேதம் முதலியவைகள் அநுபூதிதர்மங்களல்ல— அநுபாவ்யமாக இருப்பதால்— ரூபாதிவத் என்று. வ்யாவ்ருத்தி

ழ் வ்யாபகம்—அதிக தேசத்தை வ்யாபித்திருக்கும் வஸ்து.

$ வ்யாப்தி—தவறாமல் வ்யாப்யமுள்ள இடத்தில் வ்யாபகவஸ்துவினிருப்பு.

‡ வ்யாப்யம்—வ்யாபகத்தைவிட ஸ்வல்பதேசத்தை அடைந்திருக்கிற வஸ்து.

† வ்யதிரேகி—வ்யதிரேக வ்யாப்தியுள்ளது, வ்யாபகமில்லாமல்போனால் வ்யாப்யம் இராது என்பது.

§ அந்வயி—அந்வய வ்யாப்தியுள்ளது வ்யாப்யமிருந்தால் வ்யாபகமிருந்தேதீரும் என்பது.

ரூபதர்மமும் இல்லை என்று உபபாதிக்கிறார்— அதோऽநுபூதே: என்று. அந்யோபி— வ்யாவ்ருத்தி ரூபோபி என்று கருத்து. அன்றிக்கே, விகாராநாத்வஜடத்வ நிஷேதத் தால் நித்யத்வ ஏகத்வ ஸ்வயம்ப்ரகாசத்வ ரூபதர்மமுடையதாகும் என்றும் சங்கையை நீக்குவதற்காகவும் முற்கூறப்பட்ட நாநாத்வாதிகளை விலக்குவதற்காகவும் வ்யதிரேகயநு மாநத்தைக்கூறுகிறார்— அதோநுபூதே: என்று அந்யோபி - நித்யத்வாதிரூபோபி என்று அர்த்தம். அநுபூதியானது வ்யாவ்ருத்திரூபதர்மத்தையுடையது அன்று. அநு பவஸ்வரூபமாக இருப்பதால், எது வ்யாவ்ருத்தி ரூபமான தர்மத்தையுடையதோ அது அநநுபூதியாகக்காணப்பட்டிருக்கிறது. 'கடம்முதலியதுபோல' என்று வ்யதிரேகி. வ்யா வ்ருத்திரூபமான தர்மத்தை பக்ஷமாக ஆக்கி அநுபூதியின் தர்மத்வாபாவம் ஸாத்யமாக ஆகுமேயாகில், அப்பொழுது @ அநுபாவ்யத்வம் ஹேது. 'யதாரூபாதி'என்று ஸபக்ஷம். இது அந்வயி. இவ்வண்ணம் ஸ்வகதபேதம நிரஸிக்கப்பட்டது. ஜ்ஞேயபேதம் முந்தியே நிரஸிக்கப்பட்டது.

" அத்ராயம் புருஷ: ஸ்வயம்ஜ்யோதிர்பவதி " இது முதலிய வேதாந்தவாக்யங், களில் ஆத்மாவுக்கு நித்யத்வஸ்வயம்ப்ரகாசத்வாதிகள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன, இந்த இடத்திலோவென்றால் ஜ்ஞானத்துக்கு நித்யத்வம் முதலியது உரைக்கப்படுகிறது அது எவ்வாறு பொருத்தமுள்ளதாக ஆகும் எனில் கூறுகிறார்— யத: என்று. நிர்தூத நிகிலபேதா - ஸகலபேதநிஷேதத்தினால் விஜாதீயபேதங்கூட நிரஸிக்கப்பட்டதாத லால் விஜாதீயபேதமான ஜ்ஞாதாவுக்கு மித்யாத்வம் ஸித்திப்பதால் அந்த ஜ்ஞாதா ஆத்மா அன்று. பின்னையோ பரமார்த்தபூதமான ஜ்ஞானமே ஆத்மா—என்று அர்த்தம். அன்றிக்கே; வேதாந்தங்களால் ஆத்மாவுக்கு ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கிற ஸஜாதீய விஜாதீய ஸ்வகதநாநாத்வமில்லாமையானது ஸம்வித்துக்கே உபபன்னமாகிறது என் பதினால் அந்த ஜ்ஞானமே ஆத்மா என்று அர்த்தம். ஸ்வரூப என்று ஸ்வரூபத்தைக்காட் டிலும் வேறானவனும் ஜ்ஞானத்துக்கு ஆச்ரயமாயுமிருப்பவனுமன்றோ ஜ்ஞாதா-அவனோ பரமார்த்தமாக இல்லை- ஸம்வித்ஸ்வரூபத்தைக்காட்டிலும் வேறாக இருப்பதினாலேயே அபரமார்த்தமாதலால்; அவன் ஆத்மா அல்ல, ஸம்வித்தேதான் ஆத்மா என்று அர்த்தம். ஸ்வப்ரகாசரூபா ஸைவாத்மா என்று ।வேதாந்தங்களால் ஆத்மாவுக்கு ப்ரதிபாதிக்கப்பட் டிருக்கிற ஸ்வயம்ப்ரகாசத்வமானது ஸம்வித்துக்கு ஒட்டுவதால் அந்த ஸம்வித்தே ஆத்மா என்று அர்த்தம். அன்றிக்கே சூன்யத்வ சங்கா நிராஸத்திற்காக சொல்லப்பட் டிருக்கிற ஸ்வப்ரகாசரூபா என்கிற ஸ்வயம்ப்ரகாசத்வம் ஸ்வதந்த்ரஸாதகமாகவுமாகிறது என்று சொல்லுகிறார்—அஜடத்வாச்ச என்று. இது வ்யதிரேகி. ஸம்வித் ஆத்மா, அஜ டத்வாத். எது ஆத்மாவன்றோ அதுஜடம் உதாஹரணம் கடம் முதலியது என்று. இதைவிவரிக்கிறார்— அநாத்மத்வ என்று. அநாத்மத்வவ்யாப்தம் - வ்யாப்தமென்பது கர்தரி க்தப்ரத்யயம். வ்யாபகமென்று அர்த்தம். ப்ராப்த: என்பதுபோல.

நநு ச—அஹம் ஜாநாமீதி ஜ்ஞாத்ருதா ப்ரதீதிஸித்தா । நைவம்; ஸா ப்ராந்திஸித்தா, ரஜததைவ ஶுக்திஶகலஸ்ய, அநுபூதே: ஸ்வாத்மநி கர்த்ருத்வாயோகாத் । அதோ மநுஷ்யோऽஹமிதி த்ருத்யத்வே ஹிஹுகுத மநுஷ்யத்வாதிவிஶிஷ்டவிஜ்ஞாத்ருமிதோநவத் ஜ்ஞாத்ருத்வ

@ அநுபாவ்யம்—அநுபவிப்பதற்கு யோக்யம்.

सिद्धम् । ज्ञातृत्वं हि ज्ञानक्रियाकर्तृत्वम् । तच्च विक्रियात्मकं जडं विकारिद्रव्याहङ्कारग्रन्थिस्थमविक्रिये साक्षिणि चिन्मात्रात्मनि कथमिव सम्भवति । दृश्यसाधनविषयत्वादेव रूपादेरिव कर्तृत्वादेर्नात्मधर्मत्वम् । सुषुप्तिमूर्च्छादावहंप्रत्ययापायेऽप्यात्मानुभवान्नात्मनोऽहंप्रत्ययगोचरत्वम् । कर्तृत्वे चाहंप्रत्ययगोचरत्वे चात्मनोऽभ्युपगम्यमाने देहस्येव जडत्वपराक्त्वानात्मत्वादिप्रसङ्गो दुष्परिहरः । अहंप्रत्ययगोचरात् कर्तृतया प्रसिद्धाद्देहात् तत्क्रियाफलभूतस्वर्गादिभोक्तुरात्मनोऽन्यत्वं प्रामाणिकानां प्रसिद्धमेव ॥

ஸ்ரீபாஷ்யம்.—

அய்யா! "அஹம் ஜாநாமி" என்று ஜ்ஞாத்ருத்வம் அநுபவஸித்தம் அல்லவா? **உத்தரம்.** இவ்வண்ணமல்ல, அது ப்ராந்தியால் தோற்றுவது, சிப்பித்துண்டுக்கு ரஜதத்தைபோல. அநுபூதிக்கு தனக்குள்ளேயே தன்னைக் குறித்து கர்த்ருத்வம் பொருந்தாதாகையால். ஆதலால் மநுஷ்யோஹம்என்று ஆத்மாவுக்கு அத்யந்தம் வெளிப்பட்ட மநுஷ்யத்வம் முதலிய தர்மங்களுடன் கூடியதான தேஹத்தில் ஆத்மா என்றும் அபிமானம் போல ஜ்ஞாத்ருத்வமும் ஸம்வித்தில் அத்யஸ்தமாக இருக்கிறது. ஜ்ஞாத்ருத்வமாவது ஜ்ஞாநக்ரியையைச் செய்தல். விகாரமடைவதாயும் ஜடமாயும் விகாரத்தை அடையும் திரவ்யமான அஹங்காரமுடிச்சுக்குள்ளிருப்பதாயுமுள்ள அந்த ஜ்ஞாத்ருத்வமானது விகாரசூன்யமாயும் தான் ஸம்பந்தப்படாமல் பார்த்துக்கொண்டிருக்கும் ஸாக்ஷியாயுமிருக்கிற சிந்மாத்ர ஸ்வரூபியான ஆத்மாவிடத்தில்எவ்வாறு ஸம்பவிக்கும். ரூபம்முதலியதுபோல. கர்த்ருத்வம் முதலியதும் அநுபவாதீனமான ஸித்தியுள்ளதாக இருப்பதினாலேயேஆத்மாவின் தர்மமல்ல— தூக்கம் மூர்ச்சைமுதலிய அவஸ்தைகளில் அஹம் ப்ரத்யயம் முற்றிலுமில்லாமல் போயிருந்தபோதிலும் ஆத்மாநுபவத்தைக்காண்பதால் ஆத்மாவுக்கு அஹம் ப்ரத்யகோசரத்வம் கிடையாது. ஆத்மாவுக்கு கர்த்ருத்வமும் அஹம் ப்ரத்யயகோசரத்வமும் ஒப்புக்கொள்ளப்படுமோயாகில் தேஹத்தைப் போல் ஜடத்வம், $ பராக்த்வம், அநாத்மத்வம் முதலியதின் ப்ரஸங்கம் எவ்விதத்தாலும் பரிஹரிக்கமுடியாது. அஹம்ப்ரத்யக்ஷத்திற்கு கோசரமாயும் கர்தாவென்று ப்ரஸித்திபெற்றிருக்கிறதுமான தேஹத்தைக்காட்டிலும், அதின் செய்கையின் பலமான ஸ்வர்கம் முதலியதை அநுபவிக்கிற ஆத்மாவுக்கு அந்யத்வமானது ப்ராமாணிகர்களுக்கு ப்ரஸித்தமே.

$ பராக்த்வம்—அயலாருக்கு பிரகாசிப்பது, தனக்குத்தானே ப்ரகாசியாதது

ச்ருதப்ரகாசிகை:—

தர்கத்தினால் ஜ்ஞாத்ருத்வம் நிரஸிக்கப்பட்ட பிறகு ஆத்மாவுக்கு அஹம் ப்ரத்யய கோசரத்வமானது தன்னநுபவத்திற்கு ப்ரத்யக்ஷஸித்தமாதலால் அதை § சோதநம்செய்கிறார்—நநுச என்று. சகாரம் சோத்யஸமுச்சயத்தில். ப்ரதீதிஸித்தா° - தன் அநுபவத்தால் ஏற்படுவது என்று அர்த்தம். இந்தவிஷயத்தில் மறுமொழி கூறுகிறார்— நைவம் என்று. அவ்வநுபவம் ப்ராந்தி என்று கூறுகிறார்—ஸாப்ராந்திஸித்தா என்று அநுபவ விஷயமாக பூர்வம் அறியப்பட்ட ரஜதமானது எவ்வாறு சுக்திஜ்ஞாநபாதிதமானதால் ப்ராந்திஸித்தையாக ஆகிறதோ அவ்வாறு என்கிற அபிப்ராயத்தால் கூறுகிறார்— ரஜதமேவ சுக்திசகலஸ்ய என்று. ப்ரமத்திற்கு அவகாசம் கொடுப்பதின் பொருட்டு "சகல" சப்தம். உடையாமல் முழுசாக இருக்கிற சுக்திக்குப்ரமாஸ்பதத்வம் பொருந்தாதலால். அன்றிக்கே ஜ்ஞாத்ருத்வம் அறியப்படாநிற்கையில் அதில் ஜ்ஞாநாம்சத்தினுடைய பாரமார்த்தியத்திலும் கர்த்ராம்சத்தினுடைய அபாரமார்த்யத்திலும் த்ருஷ்டாந்தமாக "ரஜதமேவ சுக்திசகலஸ்ய" என்று கூறப்பட்டது. அந்த இடத்தில் இதமம்சமானது பாமார்த்தம். "ரஜதமேயே அபாரமார்த்தம" என்று ப்ராந்திஸித்தத்வத்தை உபபாதிக்கிறார்— அநுபூதேரிதி—அதினாலென்ன பயனென்றால் சொல்லுகிறார்— அதோமநுஷ்ய என்று. கர்த்ருத்வஸம்பந்தத்தின் இன்மையை உபபாதிக்கிறார்—ஜ்ஞாத்ருத்வம் ஹி என்று. அன்றிக்கே ஜ்ஞாதருத்வமென்பது என்ன—ப்ரஹ்ம ஸ்வரூபபூதஜ்ஜ்ஞாநத்துக்கு ஆச்ரயத்வமா? அல்லது அந்த:கரண க்ரியாரூபமான ஜ்ஞாநத்துக்கு ஆசரயத்வமா? என்று விகல்பத்தை அபிப்ராயப்பட்டு முதலாவது கல்பத்தை தூஷிக்கிறார்— அநுபூதே: என்று முற்கூறப்பட்டுள்ள யுக்திகளால் அநுபூதிக்கே பாரமார்த்யம் ஸித்தித்திருப்பதால் அந்த அநுபூதிக்கு ஜ்ஞாத்ருத்வமானது தன்னிடத்தில் கர்த்ருத்வமாக ஆகலாம்—அதுவோ வ்யாஹதமென்று அர்த்தம். கர்த்ருத்வம் ஆச்ரயத்வம். ஜ்ஞாத்ருத்வமானது ப்ராந்தர்களான புருஷர்களுடைய ப்ரதிதிஸித்தமாதலாலும் அத்யஸ்தம். ஆரோபிக்கப்படுகிறது என்கிற அபிப்ராயத்தால் கூறுகிறார்— அத: என்று. சரீரத்திற்கு உத்பத்திமுதலியவைகளால் ஆத்மபின்னத்வம் எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதால் "அத்யந்த பஹிர்பூத" என்று உரைக்கப்பட்டது. இதற்குமேல் தன்னைக்குறித்து மாத்திரம கர்த்ருத்வம் ஒவ்வாது என்பதில்லை, பின்னையோ தான் பிறன் என்கிற பேதமின்றி கர்த்ருத்வமே அடியோடு ஒவ்வாதென்கிற அபிப்ராயத்தால் இரண்டாவது கோடியை தூஷிக்கிறார்—ஜ்ஞாத்ருத்வம்ஹி என்று. அதினாலென்னவென்றால் கூறுகிறார்— தச்ச என்று. விக்ரியாத்மகம - க்ரியைக்கு உத்பத்தியும் விநாசமும் இருப்பதுபற்றி க்ரியாச்ரயத்வமும் எப்பொழுதாவது ஏற்படுமாதலால் அது ஒரு விகாரமென்று அர்த்தம். ஜடம் அறியப்படுவது - அதினாலேயே விகரிக்கும் த்ரவ்யமான அஹங்காரமுடிச்சில் இருக்கிறது. ஜடத்வ விக்ரியாத்மகத்வ ஸாம்யத்தாலென்று கருத்து. க்ரந்தியாவது கட்டுத்தளராமலிருப்பதற்காகப் போடுகிற ஒருவிதமான முடிச்சு. அஹங்காரம், எல்லாப்ரமங்களுக்கும் மூலமாதலால் க்ரந்தி என்று சொல்லப்பட்டது. இதற்கு எதிர்தட்டான ரூபத்தைச் சொல்லுகிறார்— அவிக்ரியே என்று. ஸாக்ஷித்வத்தை ஒப்புக்கொண்டதினாலேயே ஜ்ஞாத்ருத்வமும் ஒப்புக்கொள்ளப்பட்டதாக ஆகிறதென்கிற சங்கைவரின், ஸாக்ஷித்வமும் ஜ்ஞானஸ்வரூபத்திற்கு ஒத்தது என்கிற அபிப்ராயத்தால் ஸாக்ஷிணி என்று

§ சோத்யம் அல்லது சோதனம்—வினா.

சொல்லப்பட்டது. அவித்யாநுபவரூபத்வமே ஸாக்ஷித்வமென்பதனால் ஜ்ஞாநத்வத்திற்கு விரோதமில்லை என்று கருத்து. சிந்மாத்ராத்மநி ஸ்வயம்ப்ரகாசமானதில் - ஜடமான ஜ்ஞாத்ருத்வமானது அஜடத்திற்கு ஸம்பவிக்கிறதில்லை என்று கருத்து. கர்த்ருத்வம் முதலியது ஆத்மதர்மமல்ல—த்ருச்யத்வ ஸித்தித்வாத் - ரூபாதிவத் என்கிற அந்வயி அனுமானத்தை அபிப்ராயப்பட்டுச் சொல்லுகிறார்— த்ருச்யத்வஸித்தித்வாதேவ என்று. கர்த்ருத்வாதே. என்கிற இடத்திலுள்ள ஆதிசப்தத்தால் அஹம்ப்ரத்யயகோசரத்வம் க்ரஹிக்கப்படுகிறது. பேதாதிகள் அநுபூதியின் தர்மங்களாக ஆகாமையில் எது ஹேதுவோ அதினாலேயே என்பது ஏவகாராபிப்ராயம். அஹமர்த்தம் அல்லவா ஆத்மா; அதோடு ஸமாநாதிகரணமாக அறியப்படுகிற ஜ்ஞாதா ஆத்மாவாக இருக்கலாமே என்றால் கூறுகிறார்—ஸுஷுப்திமூர்ச்சாதௌ என்று "நாஹகலு" இது முதலிய ச்ருதியின் ஆகாரத்தைக்கொண்டு அஹம்ப்ரத்யயம் போனபோதிலும் என்று உரைக்கப்பட்டது. ஆத்மாவுக்கு கர்த்ருத்வம் அஹம்ப்ரத்யயகோசரத்வம் இவைகளில்லை என்பதில் மூன்று வ்யதிரேக்யனுமானங்களை ப்ரஸங்கரூபமாகக்கூறுகிறார்— கர்த்ருத்வே என்று. "ஆத்மா ந கர்தா" "நசாஹம் ப்ரத்யயகோசர:" என்று, இரண்டு ப்ரதிஜ்ஞா வாக்யங்கள், அஜடத்வாத். ப்ரத்யக்த்வாத், ஆத்மத்வாத், என்று மூன்று ஹேதுக்கள். எது கர்தாவோ எது *அஹமென்கிற ஜ்ஞாநத்திற்கு கோசரமோ அது ஜடமாகவும் பராக்காகவும் அநாத்மாவாகவும் காணப்படுகிறது. சரீரம் போலவென்று. அன்றிக்கே; ஆத்மா கர்த்தாவுமல்ல அஹம் ப்ரத்யயகோசரமுமல்ல. ஜடத்வாதிகளுக்கு ப்ரஸங்கம் வருவதால். தேஹத்தைப்போல் என்று. ஜடத்வம் பார்க்கப்படுவதாகவே இருப்பது, பராக்த்வமாவது பிறருக்குத்தோற்றுதல். ஆத்மத்வம் புருஷார்த்தங்களுக்கு ப்ரதிஸம்பந்தியாக இருத்தல். அல்லது தேஹத்தைக்குறித்து நியந்தாவாக வ்யாபித்தல். அவைகளின் அபாவம் அநாத்மத்வம். ஆதிசப்தத்தால் ஜ்ஞேயத்வம் முதலியது விவக்ஷிக்கப்பட்டிருக்கிறது. அஹம்ப்ரத்யயகோசரமான தேஹத்திற்கு அநாத்மத்வம் ஸித்தித்தாலன்றோ அஹம் ப்ரத்யயகோசரனை கர்த்தாவுக்கு அநாத்மத்வப்ரஸக்தி வருமெனில் கூறுகிறார்—அஹம்ப்ரத்யயகோசராத் என்று. க்ரியாபலங்களான ஸ்வர்கம் முதலியவைகளை அநுபவிக்கிறவனென்பதினால் தேஹத்தைக்காட்டிலும் வேற்றுமை ஸித்தித்தது. ப்ராமாணிகர்களுக்கு - சார்வாகர்களைத் தவிர்த்தவர்களுக்கு.

ததாऽஹமர்தாத் ஜ்ஞாதுரபி விலக்ஷண: ஸாக்ஷீ ப்ரத்யகா த்மேதி ப்ரதிபத்தவ்யம் । அவிக்ரியாநுபவஸ்வரூபஸ்யைவ ஸாக்ஷித்வம் । ஜடோऽஹங்கார: ஸ்வரூபதயா ந ஸாக்ஷித்வமர்ஹதி । ஜ்ஞாத்ருத்வம் ஹி ஜ்ஞாநக்ரியாகர்த்ருத்வம் ஸ்வபாவ: । தச்ச விகாரிணோऽசித்ரூபஸ்யாஹங்காரஸ்யைவ ஸ்வரூபதயா ந ஸாக்ஷிண: । தத்ப்ரயோகம் "ஜாநாம்யஹம்" இதி ஸ்யாத் । ஸ்வப்ரகாஶதயா ஜ்ஞாநஸ்வரூபஸ்ய ஸதோ நித்யஸ்ய ஜ்ஞாத்ருத்வம் ந ஸம்பவதி, விகாராஸ்பதஸ்யைவ ஜ்ஞாத்ருத்வம் யுக்தமிதி । ஜாநாமீதி ஜ்ஞாத்ருத்வம் ஜ்ஞாநஸ்வரூபஸ்ய ப்ரகாஶகஸ்யாபி ஸத: ஸம்பவதி ந ஸாக்ஷாத் ப்ரகாஶோ ஹி ஜ்ஞாத்ருத்வாயோக: । யத: "அஹம் ஜாநாமீ"தி ஜ்ஞாத்ரஹமர்தஸ்ய ஜ்ஞாத்ருத்வேநா ந பாரமார்திகோ

யத: । அத ஏவ ஸுஷுப்திமுக்த்யோர்நாஹமர்த்தாந்வய: । தத்ர ஹ்ய
ஹமாகாரோபசமே ஸ்வாபாவிகாநுபவமாத்ரரூபேணாத்மாவ
பாஸதே । அத ஏவ ஸுப்தோத்தித: கதாசிந்மாமப்யஹம் ந ஜ்ஞாத
வாநிதி பராம்ருசதி । தஸ்மாத்பாரமார்த்திகோ நிரஸ்தஸமஸ்தபேதவி
கல்போ நிர்விசேஷசிந்மாத்ரைகரஸ: கூடஸ்தநித்யஸம்விதேவ ப்ராந்த்யா
ஜ்ஞாத்ருஜ்ஞேயஜ்ஞாநாதிவிவிதவிசித்ரபேதா விவர்த்ததே । தந்
மூலபூதாவித்யாநிபர்ஹணாய நித்யசுத்தபுத்தமுக்தஸ்வபாவப்ரஹ்மா
த்மைகத்வவித்யாப்ரதிபத்தயே ஸர்வே வேதாந்தா ஆரப்யந்த இதி ॥
இதி மஹாபூர்வபக்ஷ: ॥

ஸ்ரீ பாஷ்யம் —

அவ்வாறே ஸாக்ஷியான ப்ரத்யகாத்மா அஹமர்த்தமான ஜ்ஞாதாவைக் காட்டிலும் விலக்ஷணன் என்று அறியத்தக்கது. இவ்வண்ணம் விகாரமில்லாத அநுபவஸ்வரூபத்துக்கே அபிவ்யஞ்ஜகமாக இருக்கிற அஹங்காரமானது ஜடமாக இருந்தபோதிலும், தன்னிடத்திலிருப்பதாக அதை அபிவ்யஞ்ஜநம் செய்கிறது. அபிவ்யங்க்யங்களான வஸ்துக்களைத் தன்னிடத்திலிருப்பதாகக்காட்டுவது அபிவ்யஞ்ஜகங்களுக்கு ஸ்வபாவம். கண்ணாடி ஜலம் §கண்டம் முதலியவைகள் முகம், சந்திரபிம்பம், கோத்வம், முதலியவற்றைத் தன்னிடத்திலிருப்பதாகக்காட்டுகின்றன. "அஹம்ஜாநாமி" என்கிற இந்த ப்ரமமானது அதனால் உண்டுபண்ணப்பட்டிருக்கிறது. ஸ்வப்ரகாசையான அநுபூதிக்கு எவ்வாறு தன்னால் அபிவ்யங்க்யமாயும் ஜடரூபமாகவுமிருக்கிற அஹங்காரத்தால் அபிவ்யங்க்யத்வம் கூடுமென்று ஆக்ஷேபியாதே. சூர்யனுடைய கிரணஸமூஹங்களால் அபிவ்யங்க்யமான கரதலத்திற்குச்சூர்ய கிரணாபிவ்யஞ்ஜகத்வம் காணப்படுவதால். ஜன்னலின் சந்துவழியாக வருகிற சூர்யகிரணங்களுக்கு அவைகளால்அபிவ்யங்க்யமான கரதலத்தாலேயும் ஸ்புடதரப்ரகாசம் காணப்பட்டிருக்கிறதன்றோ. யாதொரு காரணத்தினால் "அஹம்ஜாநாமி" என்கிற ப்ரதீதியில் ஜ்ஞாதாவான இந்தஅஹமர்த்தமானது சின்மாத்ராத்மாவுக்கு பாரமார்த்திகதர்மமன்றோ; அக்காரணத்தினாலேயே ஸுஷுப்தி முக்திகளில் அந்வயிக்கிறதில்லை. அந்த ஸுஷுப்தி முக்திகளில் அஹம் என்கிற ஆகாரமில்லாமல் ஆத்மாவானது ஸ்வாபாவிகமான அநுபவமாத்ரரூபமாகத் தோற்றுகிறது.

அதினாலேயே தூங்கி எழுந்திருந்தவன் "சிலவேளையில் என்னையும்நான் அறிந்திலேன்." என்று சொல்லுகிறான். ஆகையால் உண்மையாகவே ஸமஸ்த

§ கண்ட:— ஒரு கொம்பு முறிந்தகாளை.

பேதவிகல்பங்களற்றதான நிர்விசேஷ சின்மாத்ரைகரஸ கூடஸ்த நித்யஜ்ஞானமே ப்ராந்தியினால் ஜ்ஞாத்ருஜ்ஞேயஜ்ஞானரூபமான பற்பல விசித்ர பேதங்களுள்ளதாகத்திரிந்து தோற்றுதலால் அதற்கு மூலபூதமான அவித்யையைப் போக்குவதற்காகநித்யசுத்த புத்தமுக்தஸ்வபாவ ப்ரம்மாத்மைகத்வ வித்யையை அறிவிக்கும்பொருட்டு எல்லாவேதாந்தங்களும் ஆரம்பிக்கப்படுகின்றன— என்று. (மஹாபூர்வபக்ஷம் முற்றிற்று)

ச்ருதப்ரகாசிகை—

ஆத்மபின்னமான அஹங்காரத்திற்கு கர்த்ருத்வம்வரின் எவ்வாறு ஆத்மாவுக்கு ஸம்ஸாரபோக்த்ருத்வம் என்கிற சங்கையானது சரீரப்ரதிபந்தியினால் நிரஸிக்கப்பட்டது. ஸ்வர்காதிகளை அனுபவிக்கிறவனுக்கு ஆத்மத்வம் ஸித்தமாகில் ஜ்ஞாதாவாகவே ஆத்மா இருக்கவேண்டுமெனில் கூறுகிறார்— ததா:என்று. சரீரத்தைக்காட்டிலும் ஆத்மா வேறுபட்டதென்று ஏற்றுக்கொள்ளுதல் ப்ரமாணபலத்தாலன்றோ ஒப்புக்கொள்ளப்படுகிறது. அவ்வாறே ஜ்ஞாதாவும் விலக்ஷணனாக ப்ரமாணஸித்தனாக இருப்பதால் ஒப்புக்கொள்ளத்தக்கதென்று அர்த்தம். அன்றிக்கே, அப்ராமாணிகமான அஹமப்ரத்யயகோசரமாக இருத்தலாலன்றோ சரீரத்திற்கு அநாத்மத்வம் முதலியது ஏற்படுகிறது. ப்ராமாணிகமான அஹம்ப்ரத்யயகோசரத்திற்கு எவ்வாறு அநாத்மத்வம் முதலியது எனில் சொல்லுகிறார்—அஹம்ப்ரத்யயகோசராத் என்ற. தேஹத்திற்குஅப்ராமாணிகாஹம்ப்ரத்யயகோசரத்வம் ப்ரமாணபாதத்தாலேயேயன்றோ.அறியப்படுகிறது. இவ்வாறு கர்மபலத்தை அனுபவிக்கிறவனும் § ஔபாதிகாகாரமுள்ளவனுமான ஜ்ஞாதாவுக்கு ஆத்மத்வம் ப்ரமாணத்தால் பாதிக்கப்பட்டிருக்குமேயாகில் ஆத்மாவுக்கு அதைவிட வேற்றுமை ஒப்புக்கொள்ளத்தக்கதென்று அர்த்தம். ஆதலால் ப்ராமாணிகாப்ராமாணிக * விபாகமின்றி அஹம்ப்ரத்யயகோசரத்வமாத்ரமே அநாத்மத்வஸாதகமென்று கருத்து. அவிக்ரியமான ஆத்மாவுக்கு எவ்வாறு ஜ்ஞாத்ருத்வ ஸம்பவமெனில் கூறுகிறார்— ஏவம் என்று. அன்றிக்கே, ஜ்ஞாத்ருத்வம் அஹங்காரமுடிச்சிலுள்ளதென்று முந்தியே கூறப்பட்டது. எவ்வாறு அஹங்காரத்திற்கு ஜ்ஞாத்ருத்வம ஸம்பவிக்கும எனில் கூறுகிறார்—ஏவம் என்று. அஹங்காரத்திற்கு இந்த ஸம்வித்தைக்குறித்து ஆதாரமாக இருத்தல் அபிவ்யஞ்ஜகத்வ ப்ரயுக்தமென்று கருத்து. அஹங்காரம் அபிவ்யஞ்ஜகமாக இருக்கட்டும், எவ்வாறு இதற்குத்தன்னை ஆச்ரயித்ததாகக் காட்டிக்கொடுத்தல் எனில் கூறுகிறார்— ஆத்மஸ்ததயா என்று. ஸ்வபாவசப்தத்திற்கு $ ஔத்ஸர்கிகம் என்று அர்த்தம். எங்கேயாவது ஓரிடத்தில் ப்ரமாணபாதம் வருமேயாகில் அவ்வாறு அல்லவென்று கருத்து. தர்பணேதி. தன்னிடத்திலிருப்பதாக அபிவ்யஞ்ஜனம் தர்பணத்வப்ரயுக்தமல்ல. ப்ரதிபிம்பத்வப்ரயுக்தமுமல்ல, அபிவ்யஞ்ஜகத்வமாத்ரப்ரயுக்தமென்று காண்பிப்பதற்காக கண்டாதிகளையும் எடுத்தது. ஆதிசப்தத்தால் முண்டம் முதலியது. இவ்வண்ணமாக ஸம்வித்துக்கு ஜ்ஞாத்ருத்வாவபாஸமானது வ்யங்க்ருவ்யங்க்யபாவத்தால் உண்டுபண்ணப்பட்டதென்று சொல்லுகிறார்-ந்த்க்நத:என்று. ஜடத்திற்கு அபிவ்யஞ்ஜகத்வம் தகுதியுள்ளதாக ஆகாது. ஸ்வப்ரகாசவஸ்துவுக்கு மற்றொன்றினால்காட்டப்படுதலும் அயுக்தம்-ஸம்வித்தினால்அபிவ்யஞ்ஜிக்கத்தக்க வஸ்துவுக்கு விசேஷித்து ஸம்விதபிவ்யஞ்ஜகத்வம் அயுக்தமென்கிற இந்தஆசங்கையை தானே எடுத்துக்காட்டி நிரஸநம்செய்கிறார்-ஸ்வப்ரகாசாயா:

§ ஔபாதிகம்— உபாதியால் ஏற்படுகிறது. * விபாகம்—பிரிவு.
$ ஔத்ஸர்கிகம்—ஸாமான்யம்.

என்று. எதனால் என்று சொல்லுகிறார்— ரவிகர என்று. கரதலத்திற்குக்கிரணபிவ்பஞ் ஜகத்வம எங்கே காணப்பட்டிருக்கிறது எனில் கூறுகிறார்— ஜாலக என்று. இவ்வாறாக ஜ்ஞாத்ருத்வத்திற்கு அபாரமார்த்திகத்வம் கூறப்பட்டது. இதையே பரமார்த்த வஸ்து பாஸிக்கும் தருணத்தில் தோன்றாமையை விளக்குவதினால் உபபாதிக்கிறார்— யத: என்று. இதினால் "அஹம்ப்ரத்யயமானது. அழிந்துபோனபோதிலுங்கூட" என்கிற முற்கூறப்பட்ட அர்த்தம் விவரிக்கப்பட்டதாக ஆகிறது. "யத:" என்று ஸாத்யமே ஹேதுவாக நிர்தேசிக்கப்பட்டிருக்கிறது. 'அக்நிமத்த்வேந தூமவத்த்வம் என்பதுபோல. முக்தியோடு சேர்த்துச்சொல்லப்பட்டிருப்பதினால் ஸுஷுப்தியிலும் அஹம்ப்ரத்யயமில்லாமைக்கு ஆகம ப்ரமாணத்தாரம் ஸூசிப்பிக்கப்பட்டது. அப்பொழுது எவ்வாறுதோற்றுகிறதெனில் கூறுகிறார்— தந்த்ரஹி என்று. "நாஹகல்வயமேவம் ஸம்ப்ரத்யாத்மாநம் ஜாநாத்யயமஹமஸ்மி" என்று தூக்கவிஷயமான ச்ருதி. "அஹங்காரம் பலம் தர்பம் காமம் க்ரோதம் பரிக்ரஹம், விமுச்யநிர்மமஶ்ஶாந்தோ ப்ரஹ்மபூயாயகல்பதே" (அஹங்காரம், பலம், தர்பம் காமம் க்ரோதம், பிறரிடத்தினின்று பொருளைப் பெற்றுக்கொள்ளுதல், இவைகளை விட்டு என்னுடையதென்கிற எண்ணமில்லாதவனும் ஒழிவுள்ளவனுமான மனிதன் ப்ரஹ்மபாவத்தைப் பெறுவதற்குத் திறமையுள்ளவனாக ஆகிறான்)— என்று முக்திவிஷயமான ஸ்ம்ருதி. " மஹாபூதாந்ய ஹங்காரோ புத்திரவ்யக்தமேவச " என்று க்ஷேத்ரத்திற்குள் அடக்கமும் அஹங்காரத்திற்கு சொல்லப்படுகிறது. அஹங்கார விமூடாத்மா கர்த்தாஹமிதி மன்யதே " என்று. அதற்கு ப்ராந்திஸித்தத்வமும் சொல்லப்படுகிறது. ஹி சப்தமானது ச்ருதிஸ்ம்ருதிப்ரஸித்தியைக் காட்டுவதற்காக. ஸுஷுப்தி விஷயமான ச்ருதிமாத்ரமல்ல, பராமர்சமும் அவ்வாறு இருக்கிறதென்று சொல்லுகி -- அதஏவ என்று. அதஏவ என்று ஸாத்யத்தை ஹேதுவாக பராமர்சித்திருக்கிறார். ஸாதநங்களுக்கு விபரீத நிர்தேசம் எவ்வாறு என்றால்— இவ்வாறாக; ஜ்ஞப்தியில் எது ஸாத்யமோ அது உத்பத்தியில்ஸாதனம். எது உத்பத்தியில் ஸாதநமோ அது ஜ்ஞப்தியில் ஸாத்யம். ஆகையால் அக்நி இருப்பதினாலேயேயன்றோபுகையின் உத்பத்தி என்பதுபோல. உத்பத்தியில் ஹேதுத்வத்தை அபேக்ஷித்து "அதஏவ" என்று சொல்லப்பட்டது. அதினால் ப்ரஸ்துதபூர்வ வ்ருத்தத்வஸித்திக்கு என்னவெனில் கூறுகிறார்— தஸ்மாத் என்று. தஸ்மாத் என்கிற இந்த பதத்தினால் "யதப்யாஹு: அசேஷ விசேஷ" என்று தொடங்கி சொல்லப்பட்டிருக்கிற ப்ரமாண தர்க்கங்களால் ஸ்வமதோபபாதனம் அபிப்ராயப்பட்டிருக்கிறது. நிரஸ்த ஸமஸ்தபேத விகல்பேதி. பேதவிகல்பசப்தத்தினால் ஜ்ஞாத்ருஜ்ஞேயாதி பேதத்திற்கு அவாந்தரங்களானபற்பல பேதங்கள் விவக்ஷிக்கப்பட்டிருக்கின்றன. நிர்விசேஷசப்தத்தினால் ஸ்வகத நித்யத்வாதிபேதத்திற்கு நீக்குதல் ஏற்படுகிறது. எதனாலென்றால் சொல்லுகிறார்—சிந்மாத்ரைகரஸ என்று. சிந்மாத்ரமாகஇருப்பதால் என்றுஅர்த்தம். இதனால்சூன்யத்வத்திற்கு விலக்கமும் ஏற்பட்டது. கூடஸ்தம்— விகாரமில்லாதது. அல்லது, எல்லாத்தோற்றங்களுக்கும் ஆதாரம். நித்யஸம்விதேவேதி சிந்மாத்ரசப்தம், ஸ்வயம்ப்ரகாசத்வபரம். ஸம்வித் என்கிற சப்தம விசேஷ்ய பரம என்பதினால் பௌநருக்த்யமில்லை. சிந்மாத்ரத்திற்கு எவ்வாறு பேதஸம்பவம் எனில் கூறுகிறார்—ப்ராந்த்யா என்று. ப்ராந்த்யா விவர்ததே என்கிற நிர்தேசமானது ¶ கரிகலப: என்கிற நிர்தேசம் போல. சுத்தம்—

¶ கரிகலப:—யானைக்குட்டி - கலப; என்கிற பதமே யானைக்குட்டியை உணர்த்தும் தன்மை வாய்ந்திருக்க கரிபதம் ப்ரயோஜநமற்றதாக இருந்துகொண்டு கலப பதத்தின் விசிஷ்ட சக்தியைக் குறைத்து விசேஷ்யாம்சமான குட்டி என்கிற அர்த்தத்தை

அவித்யையிலின்று விடுபட்டது. புத்தம் - ஸ்வயம் ப்ரகாசம முக்தம், வாஸ்தவமாக பேதஜ்ஞானம் ஜன்மமுதலியதில்லாதது. இப்படிப்பட்ட ப்ரஹ்மாத்மைகத்வ வித்யாப்ராப்திபின்பொருட்டு எல்லா வேதாந்தங்களும் ஆரம்பிக்கப்படுகின்றனவென்று அர்த்தம். வேதாந்தங்களுக்கு ஆரம்பணீயத்வமாவது, அவைகளின விசாரங்களுக்கு ஆரம்பணீயத்வம் "ஸர்வே வேதாந்தா ஆரப்யந்தே" என்பதற்கு 'யதப்யாஹு,' என்கிற பூர்வ வாக்யத்தோடு அன்வயம் ப்ரஹ்மமீமாம்ஸா சாஸ்திரம் ஆரம்பிக்கத்தக்கதா? ஆரம்பிக்கத் தகுதியுள்ளதா? என்கிற விசாரத்தில் பந்தம் பரமார்த்தமாக இருப்பதுபற்றி அது ஜ்ஞானத்தால் நிவர்த்திக்கத்தக்கதாதலால் ஜ்ஞானத்தை உபாயமாகச்சொல்லும் வேதாந்த வாக்யவிசாரரூபமான சாஸ்திரம ஆரம்பிக்கத்தக்கதில்லையென்று பூர்வபக்ஷத்தைச்செய்து பந்தம் மித்யையானதால் ஜ்ஞானமாத்ரத்திஞல் நிவர்த்யத்வம் அதற்கு ஸம்பவிக்கக்கூடுமாதலால் ஜ்ஞானத்தை அபேக்ஷித்து வேதாந்த விசாரரூபமான சாஸ்திரம ஆரம்பிக்கத்தக்கதென்றல்லவோ ப்ரஹ்மஜ்ஞானபக்ஷத்தில் முதல்அதிகரணத்தின் அர்த்தம் சிக்ஷிக்கப்பட்டது. ஆகையால் பந்தம மித்யையாக இருப்பதால் ஜ்ஞானம ஒன்றினுல் மாத்திரம அதற்கு நிவர்த்திக்கத்தக்கதன்மை ஸம்பவிப்பதால் ஜ்ஞானபிரதானமான சாஸ்திரத்துக்கு கர்மவிசாரம் பூர்வவ்ருத்தமாகாதென்று சொல்லப்பட்டதாக ஆகிறதென்று வைஷம்யம். உபாயம ஆத்மைகத்வ விஜ்ஞானம் உபேயம் நிர்விசேஷ சிந்மாத்ர ப்ரஹ்ம, நிவர்த்யம மித்யாபூதம், என இம்மூன்றும் கர்மவிசாரத்தை அபேக்ஷியாததென்று முன்பு ஸவிஸ்தாரமாக உபபாதிக்கப்பட்டது. அது நிகமனக்ரந்தத்தால் சுருங்கச் சொல்லப்பட்டதாக ஆகிறது.

மகா பூர்வபக்ஷம் முற்றிற்று.

மாத்திரம் உணர்த்தும்படி செய்கிறது. இதற்கு ப்ரமாணம் சாஸ்திரகாரர்கள் வசனம். அதாவது—"விசிஷ்டவாசகாநாம் சப்தாநாம் ஸதிவிசேஷணே விசேஷ்யமாத்ரபர்யவஸாயித்வம்" என்று. இதற்குப்பொருள்—விசேஷணத்துடன் கூடின விசேஷ்யத்தைத் தானுகவே உணர்த்தும் தன்மைவாய்ந்த சப்தங்களுக்கு விசேஷணவாசகபதமும் ப்ரயோகிக்கப்பட்டால் அப்பொழுது தன்னுல் உணர்த்தத்தக்க விசிஷ்டார்த்தத்தில் ஏகதேசமான விசேஷணம்சத்தைவிட்டு விசேஷ்யத்தைமாத்திரம் போதிக்கும் தன்மை ஏற்படுகிறது.

உபஸம்ஹார꞉ ॥

ததிதமௌபநிஷதபரமபுருஷவரணீயதாஹேதுகுணவிஶேஷவிரஹிணாமநாதிபாபவாஸநாதூஷிதாஶேஷஶேமுஷீகாணாமநதிகதபதவாக்யஸ்வரூபததர்தயாதாத்ம்யப்ரத்யக்ஷாதிஸகலப்ரமாணவ்ருத்ததிதிகர்தவ்யதாரூபஸமீசீநந்யாயமார்காணாம் விகல்பாஸஹவிவிதகுதர்ககல்பிதமிதி ந்யாயாநுக்ருஹீதப்ரத்யக்ஷாதிஸகலப்ரமாணவ்ருத்தயாதாத்ம்யவித்பிரநாதரணீயம் ॥

ஸ்ரீபாஷ்யம்—

கீழ்கூறப்பட்டுள்ள இவ்விஷயம், உபநிஷத்துக்களால் ப்ரதிபாதிக்கப் பட்டிருக்கிற பரமபுருஷனுல் வரிக்கத்தக்க தன்மைக்கு ஹேதுவான குண விசேஷங்களில்லாதவர்களாயும் அநாதியான பாபவாஸனையினுல் கெடுக்கப் பட்ட முழு அறிவுடையவர்களாகவும் பதவாக்கியங்களுடைய ஸ்வரூபத்தை யும் அவைகளால் உணர்த்தப்பட்டுள்ள அர்த்தங்களின் உண்மையையும் ப்ரத் யக்ஷம் முதலான ஸகலப்ரமாணங்களின் போதநஸ்வரூபத்தையும் அவை களுக்கு அங்கங்களான சிறந்த ந்யாயமார்க்கங்களையும் அறியாதவர்களு மான சில துர்வாதிகளுடைய விகல்பத்தை ஸஹியாததும் ஸாரமற்றதாக இருப்பதுமான பற்பல குதர்கங்களால் கல்பிதமென்று நியாயங்களால் உதவி புரியப்பட்டிருக்கிற ப்ரத்யக்ஷம் முதலிய எல்லாப்ரமாணங்களுடைய போ தநக்ரமத்தையும் உண்மையையும் அறிந்தவர்களால் ஆதரிக்கத்தக்கதல்ல.

சீருதப்ரகாசிகை.—

பிறகு,மூர்த்தி நடத்தேறிய கர்மவிசாரத்திற்கு விரோதியான வஸ்துஸாமர்த்யத்தை நிரஸிப்பதற்காக அன்யனுல் சொல்லப்பட்டிருக்கிற உபாயங்களுக்கும் உபேயங்களுக்கும் நிவர்திக்கத்தக்கவைகளுக்கும் மூலம் ப்ரமாணதர்காபாஸம் என்பதை ப்ரதிஜ்ஞை செய்கி ருர்- ததிதம்என்று. தமமால் அபிமானிக்கப்பட்டிருக்கிற அவைகளுககேப்ரமாணதர்கங்க ளின் பொருத்தத்தையும் சுருக்கமாக ப்ரதிஜ்ஞை செய்கிருர். அன்யர்கள் அனேக சாஸ்தி ரங்களை அறிந்தவர்களாகவும் அநேக க்ரந்தங்களை இயற்றினவர்களாகவுமிருந்த போதி லும் அவர்களுக்கு ஜ்ஞானமார்க்கத்தில் தவருதல் வாராதென்கிற சங்கையையும் ஸரியான ஜ்ஞானமுண்டாவதற்கு ஹேதுவான காரண ஸமுதாயமில்லாமையைக்காட்டிக்கொண்டு வ்யங்க்யமாக பரிஹரிக்கிருர்—ததிதம் இதுமுதலியதால். பரம§புருஷசப்தத்தால் உபே யத்தையும், ¶ வரணீயதா’இது முதலியதால் உபாயத்தையும்‘அநாதி’ இது முதலியதால்

§ புருஷன்—புரங்களில் - சரீரங்களில் சேதே - வஸிக்கிறவன்.

¶ வரணீயதா—வரிக்கத்தக்க தன்மை.

நிவர்திக்கத்தக்கதையும் Ψ'ஆநதிகத' இது முதலியதால் அன்யனுடைய பக்ஷம் மூலமில்லாதது என்பதையும், ''ந்யாயாநுக்ருஹீத'' இதுமுதலியதால் தன் பக்ஷம மூலமுள்ளது என்பதையும், அர்த்தாத் அனேகவித்வான்களின் அங்கீகாரத்தையும ப்ரதிஜ்ஞை செய்கிறார். ''த்ரிதம்'' என்பதனால். அடுத்தவாக்கியத்தில் ப்ரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறதும அன்யனால் கூறப்பட்டிருக்கிறதுமான உபாயம, உபேயம், நிவர்த்யம், இவை மூன்றும சொல்லக்கருதப்பட்டது. ''ஔபநிஷத பரமபுருஷ'' சப்தத்தால் ''தந்த்வௌபநிஷதம புருஷம் ப்ருச்சாமி'' என்கிற ச்ருதிவாக்யத்தை நினைக்கச்செய்கிறார். இதனால் நமக்கு இஷ்டமான ப்ரமாண, ப்ரமேய, விசேஷ ஸம்பந்தமானது ச்ருதியினாலேயே ஸ்பஷ்டமென்று ஸூசிப்பிக்கிறார். § 'பரம' சப்தத்தினால் ஈசுவரனைவிட வேறு தத்வமில்லை என்பது கூறப்பட்டது. ''வரணீயதா ஹேது குணவிசேஷ விரஹிணம'' என்பதனால் ''யமேவைஷ வ்ருணுதே தேநலப்ய:'' என்று தனக்கு இஷ்டமான உபாயவிசேஷத்தைக்கூறுதல் பலித்தது. இந்த பதத்தினால் அனேகசாஸ்திரங்களை அறிந்தவர்களும் அனேக க்ரந்தங்களை இயற்றினவர்களுமான வேதாந்திகளுக்கு ப்ரமம ஸம்பவிக்கலாமென்பது பொருந்தாது என்கிற சங்கையும் பரிஹரிக்கப்பட்டதாக ஆகிறது. சிறந்த சாஸ்திரார்த்தஜ்ஞானோத்பத்திக்குக் காரணமாக இருக்கும் பதார்த்தங்களுக்குள் பகவத்பக்தியும உள்ளடங்கியதால் அதில்லாத சாஸ்திரப்பயிற்சியானது தகுந்த ஜ்ஞானகாரணமாகாது. இதில் ப்ரமாணம் ''யஸ்யதேவே பராபக்திர்யதாதேவே ததாகுரௌ'' இது முதலிய ச்ருதி. ஸ்ம்ருதியும் ''வித்யாராஜந் நதேவித்யா மமவித்யாநஹீயதே. வித்யாஹீநஸ்தமோத்வஸ்தோ நாபிஜாநாஸி $கேசவம, (ஹேராஜாவே! உம்முடைய * வித்யை வித்யை அன்று, என்னுடைய வித்யை குறைவில்லாதது. வித்யை இல்லாமல் தமோகுணத்தினால் ஜ்ஞானமழிந்தவராகி கேசவனை அறிகிறீரில்லை) த்ருதராஷ்டரர்—காவல்கணே தே கா வித்யா யா தே வித்யா @ ஜநார்தநே - யயா த்வமபிஜாநாஸி ¶ த்ரியுகம் மதுஸூதநம் (கவல்கணகுமார! ஸஞ்ஜய! ஜநார்தனன்விஷயத்தில் எந்த வித்யை உனக்கு இருக்கிறதோ, எதனால் ஷாட்குண்யபரிபூர்ணனான மதுஸூதனனை அறிகிறாயோ, அப்படிப்பட்ட வித்யை உனக்கு எது இருக்கிறது? ஸஞ்ஜயர்— ''மாயாம் ந ஸேவே பத்ரந்தே ந வ்ருதா தர்மமாசரே l சுத்த பாவம கதோ பக்த்யா சாஸ்த்ராத் வேத்மி ஜநார்தனம்'; (நான் கபடத்தை ஆசரிக்கிறதில்லை. உமக்குமங்களம் உண்டாக

Ψ ஆநதிகத—அறியப்படாதது.

§ பரம—எதனைக்காட்டிலும் பர: -மேலானவன், மா-இல்லையோ, அவன்-ஸர்வேசுவரன் என்று அர்த்தம்.

$ கேசவன்—அழகிய கேசங்களை உடையவன். அல்லது கஸ்ச -ஈஸஸ்ச கேசௌ ப்ரஹ்மருத்திரர்கள் - தௌவஹதி அவ்விருவர்களையும வஹிக்கிறவர், அந்தர்யாமியாக இருந்துகொண்டு அவ்விருவர்களையும முறையே உலகங்களை ஸ்ருஷ்டிப்பதிலும் ஸம்ஹரிப்பதிலும ஏவுகிறவர்.

* வித்யை—புருஷார்த்தஸாதநஜ்ஞானம். அன்றிக்கே புருஷார்த்தங்கள் இவைகள் என்று அறிதல்.

@ ஜநார்தநன்—ஜநை: அர்த்யதே—ஜநங்களால் (மோக்ஷத்திற்காக) வேண்டப்படுகிறவர். அல்லது ஜனர்கள் என்கிற அஸுரர்களை நாசஞ்செய்தவர். அல்லது பிறப்பை நாசஞ்செய்பவர், அதாவது மோக்ஷத்தைக்கொடுப்பவர்.

¶ த்ரியுகன்—மூன்று இரட்டை குணங்களுள்ளவன் அவைகளாவன—ஞானம் சக்தி, பலம்-ஐச்வர்யம், வீர்யம்-தேஜஸ்.

வேண்டும். வீணை தர்மத்தை ஆசரிக்கிறதில்லை. பக்தியினால் சுத்தமான சித்தத்தை அடைந்தவனாக சாஸ்திரத்தினால் ஜநார்தனனை அறிகிறேன் என்றபடி)' இந்த விடத்தில் " ²யா சுத்தபாவம் கத, சாஸ்த்ராத் வேத்மி ஜநார்தநம்" என்றதனால் உள்ளபடி .² சாஸ்த்ரார்த்தஜ்ஞாநோதயமானது பக்தியை அபேக்ஷித்திருக்கிறதென்பது ஸித்தம். "ஜாயமாநம் ஹி புருஷம் யம் பச்யேந் மதுஸூதந: । ஸாத்விகஸ் ஸது விஜ்ஞேயஸ்ஸவை மோக்ஷார்த்த சிந்தக: । பச்யத்யேநம் ஜாயமாநம் ப்ரஹ்மா ருத்ரோதவாபுந: । ரஜஸா தமஸா சாஸ்யமாநஸம் ஸமபிப்லுதம்.(ஜனிக்கும்பொழுது எந்த ஜீவனை மதுஸூதனன் கடாக்ஷிக்கிறானோ அவன் ஸாத்விகனென்று அறியத்தக்கவன். அவனே மோக்ஷார்த்தத்தை சிந்திப்பவன். ஜனிக்கும்பொழுது இந்த ஜீவனை ப்ரஹ்மாவோ, ருத்திரனோ, பார்ப்பார்களேயாகில் அவனுடையமனதானது ரஜோகுணத்தினாலும் தமோகுணத்தினாலும் கலப்பட்டுவிடுகிறது) என்கிற வசநத்தாலும் தத்வார்த்தஜ்ஞாநமானது பக்தியினால் உகந்த பகவானுடைய கடாக்ஷத்தை அபேக்ஷித்திருக்கிறதென்று அறியப்படுகிறது.

அய்யா! "யயா த்வமபிஜாநாஸி, பக்த்யா வேத்மி" என்கிற வினாவிடைகளால் வித்யா பக்திசப்தங்கள் இரண்டுக்கும் அர்த்தைக்யம் தோன்றுகிறது. "பக்திரூபையான வித்யை மோக்ஷத்திற்கு ஸாதனமாகிறது" என்று முன்பு உபபாதிக்கப்பட்டது. அதனால் பக்தியானது சாஸ்திரஜ்ஞானத்தை மூலமாகக்கொண்டது, சாஸ்திரஜ்ஞாநம் பக்தியை மூலமாகக்கொண்டதென்று அந்யோந்யாச்ரயம் வருமென்று சொல்லப்படுமேயாகில்; இவ்வண்ணமல்ல— ச்ரவணம் பண்ணும் ஸமயத்திலேயே பரமாத்மாவினுடைய குணாதிகள் பதார்த்தங்களாக அறியப்படுமளவில் அந்த விஷயத்தில் அநுகூலபுத்தியை வித்யாசப்தமும், பக்திசப்தமும் சொல்லுகிறது. அந்த அநுகூலபுத்தியினால் வாக்யார்த்த நிர்ணயம் நன்றாய் ஏற்படும். பூர்வபக்ஷமாக உபந்யஸிக்கப்பட்டிருந்தபோதிலும் பௌத்தர்களுக்கு அபிமதமான வேதாப்ராமாண்யம் முதலியவைகளில் வைதிகர்களுக்கு தீவ்ரமான த்வேஷமல்லவோ உண்டாகிறது. பகவத்குணங்கள் முதலியதில் சித்தத்திற்கு * அநுராகமுண்டாகிறது. இது ஸாக்ஷாத்காரதுல்யமான நிரந்தரத்யானரூபையான பக்தியல்ல. அதனால் அந்யோந்யாச்ரயமில்லை.

பிறகு சாஸ்திரார்த்த ஜ்ஞானோத்பத்திக்கு ஹேதுவாக இருக்கிற பக்திக்கு விரோதியைச் சொல்லுகிறார்— அநாதி என்று. அன்றிக்கே, ஸம்யக்ஜ்ஞாந ஹேதுபூதமான பக்தியில்லாமையால் ஸம்யக்ஜ்ஞாந விரோதியாகிற பாபங்களின் தொடர்ச்சியைப் பகர்கிறார்— அநாதி என்று "வாஸநா" சப்தத்தால் பாபம் திடமான மூலமுள்ளதாக இருப்பதால் எவ்விதத்தாலும் தடுக்கமுடியாமை உரைக்கப்பட்டது. வாஸனையினால் பாபம், பாபத்தால் வாஸனை; அஜ்ஞானத்தால் பாபவாஸனை, பாபவாஸனையினால் அஜ்ஞாநமென்கிற அந்யோந்யாச்ரயதோஷத்தை பரிஹரிப்பதின்பொருட்டு "அநாதி" சப்தம். சேமுஷீ—மோக்ஷத்திற்கு உபயோகமான ஜ்ஞாநம். "அசேஷ" சப்தப்ரயோகத்திற்கு உபாயோபேய நிவர்த்ய விஷயமான எல்லா புத்தியும் தூஷிக்கப்பட்டதென்று கருத்து. இதனால் அர்த்தாத் தன்பக்ஷத்தில் நிவர்த்திக்கத்தக்கதும் சொல்லப்பட்டதாக ஆகிறது— கர்மத்திற்கே மோக்ஷப்ரதிபந்தகத்வமிருப்பதால். கெடுக்கப்பட்ட புத்திக்கு பலமான சிறந்த ஜ்ஞாநத்தின் இன்மையைக் காண்பிக்கிறார்—அநதிகத என்று. ப்ரத்யக்ஷவிரோதம் வரின் சாஸ்திரத்திற்கு ப்ராபல்யமானது அந்யனால் சொல்லப்பட்

* அநுராகம்—அன்பு.

டிருப்பதால், பதம்பதமாகவும் ஸமுதாயத்தாலும ஸவிசேஷபரத்வ ப்ராதான்யததாலும் முதலில் சப்த ப்ரமாணததைச் சொல்லுகிறார்—பத என்று ப்ரக்ருதி ப்ரத்யயங்களின் சேர்க்கையினால்தான் பதம் ஏற்படுகிறதென்பது அறியப்படவில்லை என்று பதசப்தத்தின் கருத்து. வாக்யஸ்வரூபேதி—வாக்யம அநேக பதார்த்தங்களின் ஒரு சேர்க்கையைச்சொல்லுகிற தென்பதும அறியப்படவில்லை என்று கருதது. ததர்ததயாதாதமயம் தாத்பர்யவிஷயம். ப்ரதயக்ஷாதி என்றவிடத்தில் ஆதிபதத்தால் அநுமானம் க்ரஹிக்கப் படுகிறது. 'ஸகல'சப்தததால் ஸ்பார்சநம் சாக்ஷுஷம் முதலிய ப்ரத்யக்ஷத்தின் அவாந்தர பேதம் விவக்ஷிக்கப்பட்டது. அந்வயம் வ்யதிரேகம முதலிய அநுமானத்தின உட்பிரிவும் சொல்லக்கருதப்பட்டது. அன்றிக்கே, அந்தந்த வாதிகளுக்கு இஷ்டமான ‡அர்த்தாபத்திமுதலிய வேறு ப்ரமாணங்களை விஷயமாககொண்டது ஸகலசப்தம். வ்ருததம்—போதநம். தத்திகர்தவ்யதாரூப என்று. தர்கத்தினுலும் ப்ரமாணத்திற்கு பாதமானது அன்யர்களால் கூறப்பட்டிருப்பதால், தர்கம் ப்ரமாணுநுக்ராஹகமென்றுகூட அறியப்படவில்லை என்று கருத்து. நாம் தர்கத்தை ப்ரமாணுநுக்ராஹகமாகவேயன்றோ ஏற்றுக்கொள்ளுகிறோம் எனில் கூறுகிறார்—ஸமீசீநந்யாய என்று. ப்ரமாணுநுக்ராஹக புத்தியினுல் ஸ்வீகரிககப்பட்டிருந்தபோதிலும அவாகளின தர்கம் ப்ரமாணவிருதத மானதால் அது சிறந்ததல்லவென்று கருதது. ¶ அபச்சேதந்யாயம் முதலிய ஸமீசீநந்யாயங்களேதான் எங்களால் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன வெனில் கூறுகிறார்—ந்யாயமார்காணும் என்று. இது அபசசேதநயாயவிஷயம், இது $ ஸாமான்ய விசேஷ ந்யாயவிஷயம் என்று அநதந்த ந்யாயஸஞ்சார விஷயஙகளின் பாகுபாடு அறியப்படவில்லை என்று கருதது.

அங்ஙனமாகில் எதை அவலம்பித்து காந்தங்கள் செயயப்பட்டனவென்று கேட்கில் சொல்லுகிறார்— விகல்பாஸஹ என்று குதர்கஙகள் ப்ரமாண விருத்தங்களாகவும் மூலத்தளர்ச்சி, ஒன்றோடொன்று விரோதம், முதலிய வேறுதோஷங்களால் கவரப்பட்டவைகளாகவுமிருககிற தர்கஙகள். அவைகளும் மூன்று நான்கு பதங்களை உச்சரிக்கும் க்ஷணங்கள் கூட நிலை பெற்றிருககிறதில்லை, பின்னையோ அவைகள் விகல்பிககப்பட்டிருக்கிற இரண்டினுள் ஒரு பக்ஷத்தை அங்கீகரிதத க்ஷணததிலேயே அழிவடைகின்றன என்பதைக்கூறுகிறார்— விகல்பாஸஹ என்று. தர்கததிற்கு விகல்பாஸஹத்வமாவது அதற்கு விஷயமான ஸாதநம முதலியவைகளின் விகல்பங்களை ஸஹியாமையே. விவிதேதி—ப்ரஹ்மத்திற்கு அநுபவவிஷயத்வம் வரும்பக்ஷததில் அநுபூதித்வம்

---

‡ அர்த்தாபத்தி— ப்ரத்யக்ஷம் முதலிய எட்டு ப்ரமாணங்களுக்குள் இது ஒரு ப்ரமாணம். அர்த்தத்தின் ஆபத்தி-அர்த்தாபத்தி. (உதாஹரணம்) பீநோதேவதததஃ, திவா ந புங்க்தே - என்று (தேவதத்தன் பருத்திருக்கிறுன். பகலில் சாப்பிடுகிறதில்லை) சாப்பிடாமல்போனல் தேஹம் பெருக்காதாதலால் தேவதத்தன் நாள்தோறும் இரவில் புஜிக்கவேண்டும் என்று அர்த்தாபததி ப்ரமாணததினுல் ராத்ரிபோஜனம் ஸித்திக்கிறது.

¶ அபச்சேத ந்யாயம்—இது மீமாம்ஸகர்களால் கூறப்பட்டுள்ளது. இந்த ந்யாயத்தினுல் முந்தியதைவிட பிந்தியது ப்ரபலமாக ஏற்படுகிறது.

$ ஸாமாந்யவிசேஷ ந்யாயம்—இதுஎல்லா சாஸ்த்ரகாரர்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. பொதுவாக ஒரு விஷயத்தைச்சொல்லி பிறகு அதில் அடங்கியதை விசேஷித்துச் சொல்லியிருந்தால் அது வேறுவிதமாகப் பொருந்தாதாதலால் அந்த விசேஷத்தில் ஸாமாந்யத்தை ஸங்கோசம் செய்தல்.

இல்லாமல் போகும். ப்ரத்யக்ஷமானது ஸத் ஒன்றையே க்ரஹிக்கிறது. வேதாந்தங்களால் அறியத்தகக ப்ரஹ்மமானது வேறு ப்ரமாணங்களுக்கு கோசரமன்று என்று இவ்விதமான குதர்க்கங்களுடைய அந்யோந்யவ்யாஹதிகளின் பலவகை சொல்லக்கருதப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட குதர்கமே கல்கம் - அஸாரபூதம். பௌத்தர்களால் க்ரஹிக்கப்பட்ட ஸாரத்தை உடையது, ஸாரமற்ற அடிக்கசடு என்று அர்த்தம். இதனால் கல்பிக்கப்பட்டது—உத்ப்ரேக்ஷிக்கப்பட்டது. 'இதி' சப்தம் ஹேதுவை உணர்த்துகிறது. சிலருக்கு ஸமீசீனமான அர்த்தாந்தர விஷயகஜ்ஞாநமில்லாமலிருக்கும் ஸமயத்தில் கூட இதற்கு அஸமீசீநத்வநிச்சயம் எவ்வாறு எனில் கூறுகிறார்—ந்யாயாநுக்ருஹீத ப்ரத்யக்ஷாதி ஸகலப்ரமாணவ்ருத்தயாதாத்ம்ய வித்பி: என்று. இதனால் முற்கூறப்பட்ட விபரீதாகாரம் சொல்லப்பட்டது. பஹுவசநத்தினால் தன் பக்ஷத்திற்கு போதாயனர் முதலிய அநேக மிக்கச்சிறப்புடையவர்களின் அங்கீகாரம் ஸூசிப்பிக்கப்பட்டது. அநாதரணீயமிதி— சிஷ்யர்களுக்கு விஷயங்களை எடுத்துச் சொல்லுங்காலங்களில் பூர்வபக்ஷத்தை நன்கு துலக்கிச் சொல்லுவதில் தனக்கு ஸாமர்த்தியமிருக்கிற தென்பதைக் காட்டுவதற்காகக்கூட ஆதரிக்கத்தக்கதல்ல வென்று அர்த்தம். "அசேஷ விசேஷ ப்ரத்யநீக" என்று தொடங்கி "ஸர்வே வேதாந்தா ஆரப்யந்தே" என்கிறதோடு 'யதப்யாஹு:' "தத் அநாதரணீயம்" என்று அன்வயம்.

𑌤𑌥𑌾 𑌹𑌿 — 𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌶𑍇𑌷𑌵𑌸𑍍𑌤𑍁𑌵𑌾𑌦𑌿𑌭𑌿𑌰𑍍𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌶𑍇𑌷𑍇 𑌵𑌸𑍍𑌤𑍁𑌨𑍀𑌦𑌂 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌮𑌿𑌤𑌿 𑌨 𑌶𑌕𑍍𑌯𑌤𑍇 𑌵𑌕𑍍𑌤𑍁𑌮𑍍, 𑌸𑌵𑌿𑌶𑍇𑌷𑌵𑌸𑍍𑌤𑍁𑌵𑌿𑌷𑌯𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌾𑌨𑌾𑌮𑍍 । 𑌯𑌸𑍍𑌤𑍁 𑌸𑍍𑌵𑌾𑌨𑍁𑌭𑌵𑌸𑌿𑌦𑍍𑌧 𑌇𑌤𑌿 𑌸𑍍𑌵𑌗𑍋𑌷𑍍𑌠𑍀𑌨𑌿𑌷𑍍𑌠𑌃 𑌸𑌮𑌯𑌃, 𑌸𑍋𑌽𑌪𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌸𑌾𑌕𑍍𑌷𑌿𑌕𑌸𑌵𑌿𑌶𑍇𑌷𑌾𑌨𑍁𑌭𑌵𑌾𑌦𑍇𑌵 𑌨𑌿𑌰𑌸𑍍𑌤𑌃 । "𑌇𑌦𑌮𑌹𑌮𑌦𑌰𑍍𑌶𑌮𑍍" 𑌇𑌤𑌿 𑌕𑍇𑌨𑌚𑌿𑌦𑍍𑌵𑌿𑌶𑍇𑌷𑍇𑌣 𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌵𑌿𑌷𑌯𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌮𑌨𑍁𑌭𑌵𑌾𑌨𑌾𑌮𑍍 । 𑌸𑌵𑌿𑌶𑍇𑌷𑍋𑌽𑌪𑍍𑌯𑌨𑍁𑌭𑍂𑌯𑌮𑌾𑌨𑍋𑌽𑌨𑍁𑌭𑌵𑌃 𑌕𑍇𑌨𑌚𑌿𑌦𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑍍𑌯𑌾𑌭𑌾𑌸𑍇𑌨 𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌶𑍇𑌷 𑌇𑌤𑌿 𑌨𑌿𑌷𑍍𑌕𑍃𑌷𑍍𑌯𑌮𑌾𑌣𑌃 𑌸𑌤𑍍𑌤𑌾𑌤𑌿𑌰𑍇𑌕𑌿𑌭𑌿𑌃 𑌸𑍍𑌵𑌾𑌸𑌾𑌧𑌾𑌰𑌣𑍈𑌃 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌵𑌿𑌶𑍇𑌷𑍈𑌰𑍍𑌨𑌿𑌷𑍍𑌕𑍃𑌷𑍍𑌟𑌵𑍍𑌯 𑌇𑌤𑌿 𑌨𑌿𑌷𑍍𑌕𑌰𑍍𑌷𑌹𑍇𑌤𑍁𑌭𑍂𑌤𑍈𑌃 𑌸𑌤𑍍𑌤𑌾𑌤𑌿𑌰𑍇𑌕𑌿𑌭𑌿𑌃 𑌸𑍍𑌵𑌾𑌸𑌾𑌧𑌾𑌰𑌣𑍈𑌃 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌵𑌿𑌶𑍇𑌷𑍈𑌃 𑌸𑌵𑌿𑌶𑍇𑌷 𑌏𑌵𑌾𑌵𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑍇 । 𑌅𑌤𑌃 𑌕𑍈𑌶𑍍𑌚𑌿𑌦𑍍𑌵𑌿𑌶𑍇𑌷𑍈𑌰𑍍𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌸𑍍𑌯𑍈𑌵 𑌵𑌸𑍍𑌤𑍁𑌨𑍋𑌽𑌨𑍍𑌯𑍇 𑌵𑌿𑌶𑍇𑌷𑌾 𑌨𑌿𑌰𑌸𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌇𑌤𑌿 𑌨 𑌕𑍍𑌵𑌚𑌿𑌨𑍍𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌶𑍇𑌷𑌵𑌸𑍍𑌤𑍁𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌃 ॥

ஸ்ரீபாஷ்யம்.—

இந்த அர்த்தம் நிரூபிக்கப்படுகிறது. நிர்விசேஷ வஸ்துவாதிகளால் நிர்விசேஷவஸ்துவிஷயத்தில் இது ப்ரமாணமென்று ஒன்றும் சொல்வதற்கு சக்யமாகாது. எல்லாப்ரமாணங்களும் விசேஷமுள்ளவஸ்துக்களை விஷயீகரிப்பதால்.

தன் அநுபவத்தினால் ஸித்தமென்று தன்னுடைய கோஷ்டியில் நிலைபெற்றிருக்கிற யாதொரு ஸங்கேதமுண்டோ; அதுவும் ஆத்மஸாக்ஷிகமான ஸவிசேஷாநுபவத்தினாலேயே நிராகரிக்கப்பட்டது. எல்லா அநுபவங்

களும் "இதை நான் கண்டேன்" என்று யாதானும் ஒரு விசேஷத்தால் விசிஷ்ட விஷயமுள்ளவைகளாகவே இருப்பதால். அநுபவிக்கப்படுகிற அநுபவமானது ஸவிசேஷமாக இருந்தபோதிலும் ஏதோ ஒரு யுக்தி ஆபாஸத்தால் நிர்விசேஷமென்று நிஷ்கர்ஷிக்கப்பட வேண்டுமாகில் ஸத்தையைவிட வேறாக இருப்பதும் தனக்கு அஸாதாரணங்களாகவுமிருக்கிற ஸ்வபாவ விசேஷங்களால் நிஷ்கர்ஷிக்கத்தக்கதாதலால் நிஷ்கர்ஷத்திற்கு ஹேதுவாயும் ஸத்தையைவிட வேறாக இருப்பதும் தனக்கு அஸாதாரணங்களாகவுமிருக்கிற ஸ்வபாவவிசேஷங்களால் அது ஸவிசேஷமாகவே நிலைபெறுகிறது; ஆகையால் சில விசேஷங்களோடு கூடினதாகவே இருக்கிற வஸ்துவுக்கு மற்ற விசேஷங்கள் நிரஸிக்கப்படுகின்றன வென்பதால் ஓரிடத்திலும் நிர்விசேஷ வஸ்து ஸித்தி பெறாது.

ச்ருதப்ரகாசிகை—

இவ்வண்ணம் சுருக்கச் சொல்லப்பட்டிருக்கிற அர்த்தத்தை விரிவாக எடுத்துரைப்பதற்காகத் தொடங்குகிறார்— ததாஹி என்று.

அய்யா! பூர்வபக்ஷியால் முதலில் வேதாந்த வாக்கியங்கள் உதாஹரிக்கப்பட்டு, அவைகளில் நிரூபிக்கத்தக்கவிஷயங்களை ததும் நிரூபணம் செய்யப்பட்டு, பிறகு வேறு ப்ரமாணதர்க்கங்கள் காண்பிக்கப்பட்டன. ஆகையால் ஸித்தாந்தத்திலும் அந்தக்கிரமத்தினால் அவைகளை நிரஸநஞ்செய்வதுதான பொருத்தமுள்ளது. அவ்வண்ணமிருக்க எவ்வாறு தொடக்கத்தில் ஸகல ப்ரமாண விஷயத்வத்தை நிரூபிப்பது பொருத்தமுள்ளதாக ஆகும்? மேலேயும் எவ்வாறு ப்ரத்யக்ஷம் முதலிய நிர்விசேஷ விஷயத்வத்தின் நிராஸத்தை முன்னிட்டு வேதாந்த வாக்யங்களின் யோஜனை செய்யப்படுகிறது? (உத்தரம்) சொல்லப்படுகிறது— ப்ரத்யக்ஷவிரோதத்தில் சாஸ்திர ப்ராபல்யம் ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதால் அர்யனால் வேதாந்த வாக்யங்கள் முதலில் உதாஹரிக்கப்பட்டு பிறகு அவைகளைக்காட்டிலும் வேறாய் சொல்லத்தக்கவைகளெல்லாம் சொல்லப்பட்டிருக்கின்றன ப்ரபலமென்று அனைவர்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிற ப்ரமாணத்தை முன்னிடுவதல்லவோ உசிதம். ஸித்தாந்தியினாலோ வென்றால் ப்ரத்யக்ஷத்திற்கு விரோதம் வருமிடத்தில் சாஸ்திரத்திற்கு அதிகபலம் ஒப்புக்கொள்ளப்படாமையால் ப்ரத்யக்ஷம் முதலிய நிர்விசேஷவிஷயத்வத்தின் § நிராஸத்தை முன்னிட்டு அதற்கு விரோதமின்றி வேதாந்தவாக்யங்கள் ‡ ஸ்வரஸமாக வியாக்யாநிக்கப் படப்போகின்றன.

அதில் அன்யனால் தொடக்கத்தில் ப்ரதிஜ்ஞை செய்யப்பட்டிருக்கிற நிர்விசேஷ சின்மாத்ர $ பாரமார்த்யத்திற்குப்பொதுவாக எல்லாப்ரமாணங்களாலும் பஹிஷ்கரிக்கப்பட்டிருத்தல் என்கிற தூஷணத்தை முதலில் ப்ரதிஜ்ஞை பண்ணுகிறார்— நிர்விசேஷ

---

§ நிராஸம்—விலக்குதல்.

‡ ஸ்வாரஸமாக கவியின்கருத்தை அனுஸரித்து, அல்லது இயற்கையாக அமைந்துள்ள வாக்யார்த்த ஸ்வபாவத்துக்குத் தக்கவாறு. $ பாரமார்த்யம்—உண்மை,

என்று. அர்த்தாத் ப்ரமாணாபாவமும தன்பக்ஷத்துக்கு அநுகூலமாக உரைக்கப்பட்டதாக ஆகிறது. ஆகாயமலர்கூட எனக்கு அநுபவஸித்தமென்று சொல்வதற்கு சக்யமென்பது பற்றி அதை விலக்குவதற்காக "இதம்" சப்தம். மற்றவர்களின் அங்கீகாரத்திற்கு நியாமகமான ப்ரமாணம் ஒன்றுமில்லை என்பது கருத்து. அன்றிக்கே, ஒரு ப்ரமாணவ்யக்தியும் நிர்விசேஷமான வஸ்துவை விஷயீகரிக்கிறதில்லை என்பது ஏகவசநத்தின் கருத்து. எதனால் எனில் கூறுகிறார்—ஸவிசேஷ என்று

அய்யா ! விசேஷங்கள் நிர்விசேஷங்களன்றோ. அவ்வாறிருக்க நிர்விசேஷ வஸ்துவுக்கு அப்ராமாணிகத்வம எப்படி சொல்லக்கூடும் ? என்றால், மறுமொழி உரைக்கப்படுகிறது—தர்மத்தினால் தர்மியானது விசேஷமுள்ளது - தர்மியினாலும் தர்மம் விசேஷமுள்ளது, ஒன்றுக்கு தர்மமாகவாவது தர்மியாகவாவது எது இருக்கிறதில்லையோ அது ப்ரமாணசூன்யமென்றல்லவோ க்ரந்தத்தின் அர்த்தம். விசேஷம் வ்யாவ்ருத்தியை உண்டுபண்ணுகிற வஸ்து. தர்மியும் தன்னை அடைந்திருக்கிற தர்மத்திற்கு வேறு ஆச்ரயத்தை அடைந்திருக்கிற தர்மத்தினின்று பேதத்தை உண்டுபண்ணுகிறதாதலால் விசேஷசப்தத்தால் சொல்லத்தக்கதாகஆகிறது. மேலும,விசேஷம் நிர்விசேஷமஎன்கிற இந்த இரண்டு சப்தங்களும் ஒரே அர்த்தத்தை உணர்த்துகிற சப்தஙகளா ? அல்லவா ? ஒரே அர்த்தத்தை உணர்த்துகிற சப்தஙகளென்று சொன்னால் இரண்டையும் சேர்த்து ப்ரயோகிக்கக்கூடாது. இரண்டாவது பக்ஷத்திலோ நிர்விசேஷத்வமில்லை; உணர்த்தத்தக்கபொருள்களில் வேற்றுமை இல்லாவிடில் அபர்யாயத்வம் பொருந்தாதாதலால்.

அய்யா ! எல்லா ப்ரமாணங்களுக்கும் ஸவிசேஷ விஷயத்வம் எங்ஙனே ? கந்தம் முதலியவற்றை க்ரஹிக்கிற ப்ரமாணமானது கந்தம் முதலியதை ஆச்ரயத்துடன் கூடியதாகத்தெரிவிக்கிற தில்லையன்றோ வெனில் ; இவ்வண்ணமல்ல, ஆச்ரயமே விசேஷம் என்கிற நியமமில்லாமையால் ஸம்வித்தும் எல்லாவற்றுக்கும் விசேஷணமாக இருப்பதால் அதற்கு எல்லா அர்த்தங்களோடும் சேர்ந்திருத்தல் பொருத்தமுள்ளதாக ஆகிறதன்றோ. "அயம் கந்தோऽநுபூயதே" என்று காலம் முதலிய விசேஷஙகளோடு கூடியதாகவே கந்தம் முதலியவற்றின் ப்ரதீதி வருவதால் ஸவிசேஷவிஷயத்வத்திற்கு உபபத்தி. அவ்வாறே ப்ரதீதியும் உரைக்கப்படப்போகிறது.

அங்ஙனமாகில், நாம் வேறு ப்ரமாணத்தினால் நிர்விசேஷஸித்தியை ஒப்புக்கொள்ளுகிறோம்—எங்கள் அனுபவஸித்தமன்றோ அது, எனில் சொல்லுகிறார்—யஸ்து என்று. "து"சப்தத்தால் ஸமயத்தை விசேஷியாநின்றுகொண்டு. ஸமயவைசிஷ்ட்யத்திற்கு மூலமான ஸ்வாநுபவ ரூபமான ப்ரமாணவைஷம்யத்தை அபிப்ராயப்படுகிறார். "ஸ்வகோஷ்டீநிஷ்ட:" என்பதனால் ப்ரதிவாதியின் அஸம்மதியைக் காண்பிக்கிறார் ஆத்மஸாக்ஷிகாநுபவத்திற்கு ஸவிசேஷத்வத்வத்தைக் காண்பிக்கிறார்—இதமஹம் என்று. விசிஷ்டவிஷயத்வாத்தீதி-விசிஷ்டமான விஷயம் ஸ்வயமநுபவமே. சிலாமயமானபொம்மையின் சரீரம் என்பதுபோல் இந்த நிர்தேசம். அங்ஙனமில்லாவிடில் ஸ்வாநுபவ நிர்விசேஷத்வ நிராஸத்தில் கடம் முதலிய வஸ்துக்களுக்கு ஸவிசேஷத்வஸாதநம் பயன்படாததால் "அநுபூயமாநோப்யநுபவ:" என்கிற மேல் கிரந்தத்திற்கும் இப்படியே அர்த்தம்—"ஸ்வாநுபவஸித்தம்" என்கிற இந்த க்ரந்தத்தோடு அர்த்தைக்யமிருப்பதினால் அநுபவசப்தம் $ அநுவ்யவஸாயபரமல்ல. அநுவ்யவஸாய ரூபமான ப்ரத்யக்ஷம் இஷ்டமல்லவன்றோ.

$ அநுவ்யவஸாயம்—முதலில் உண்டாகிற ஜ்ஞானத்தை அனுஸரித்து அடுத்து

ஏனெனில் கடந்த விஷயமாதலால் ப்ரத்யக்ஷத்வம் பொருந்தாது. அந்யனுடைய ஜ்ஞாநம் ஸம்ஸ்காரகாசமுள்ளது. தன்னுடைய ஜ்ஞாநம அநுமாநத்தாலறியத்தக்கது மற்றதோ ஸ்ம்ருதிக்கு விஷயம். ஸ்ம்ருதிக்கு விஷயமாக* இருத்தல் இங்கே சொல்லக்கருதப்பட்டிருக்கவில்லை ; அநுபவசப்தத்திற்கு அந்த அர்த்தமில்லாமையால். ஆகையால் அநுபூயமானத்வமாவது அவபாஸமாநத்வம் "இதம் அஹம்" என்கிற இரண்டு சப்தங்களால் கர்மாவோடும் கர்தாவோடும் கூடியதாகவே அநுபவமிருக்கிற தென்பது உரைக்கப்பட்டது. "அதர்சம்" என்பதனல் ‡அபரோக்ஷத்வவிசேஷாந்வயம அபிப்ராயப்படப் பட்டிருக்கிறது. அதீதத்வமோவெனில் சொல்லக்கருதப்பட்டிருக்கிறதன்று. அப்படிக் கில்லாவிட்டால் அப்பொழுது§ஸ்வதஸ்ஸித்தத்வம் பொருந்தாமல் போவதால். கேநசித் விசேஷேணேதி சொல்லப்பட்டவைகளுககுள்ளேயும் ஏதாவது ஒரு விசேஷணமானது கடாசிவரையில்சென்றங்கூட விடத்தக்கதல்லவென்று கருதது. அன்றிக்கே, "அதர்சமிதி" என்கிற இடத்தில் ப்ரகாரவசனமான "இதி" சப்தமானது ப்ராக்ருத ஸஜாதீயரூபமான விசேஷத்தில் எவ்வளவுமட்டில ஸம்பவிககுமோ அவ்வளவை க்ரஹிக்கிறது. அதனல் பரோக்ஷத்வம் வர்தமாநத்வம் முதலியது "கேநசித" என்பதனல் விவக்ஷிககப்பட்டதாக ஆகும். விஷயத்தின் வாயிலாக பரோக்ஷத்வம்.

அய்யா ! நாம் 'இதமஹமதர்சம்" என்கிற ஜ்ஞானத்தை இல்லை என்று மறுக்கவில்லையன்றோ; அந்த ஜ்ஞாநமோ வென்றால் தர்கத்தால் விசேஷித்து நிச்சயிக்கப்பட்ட விஷயத்துடன் கூடியதாக நிர்விசேஷத்தில் ப்ரமாணமென்று சொல்லில் கூறுகிறார்— ஸவிசேஷாபி என்று. ஸ்வவ்யாகாதம் காண்பிககப்படப்போகிறபடியால் "யுக்த்யாபாஸை" என்று சொல்லப்பட்டது. நிர்விசேஷ இதி நிஷ்க்ருஷ்யமாண இதி—எப்பொழுது நிர்விசேஷமென்று நிஷ்கர்ஷிக்கப்படுகிறதோ அப்பொழுது இவ்வண்ணமன்றோ நிஷ்கர்ஷிக்கத்தக்கதென்று அர்த்தம். எவ்வாறு நிஷ்கர்ஷிக்கத்தக்கதென்றால் சொல்லுகிறா—ஸத்தாதிரேகிபி: ஸ்வாஸாதாரணை: என்று ஸத்தையைக்காட்டிலும் வேறாக இல்லாமலிருக்குமேயாகில் ஹேதுவானது பக்ஷத்தைக்காட்டிலும் வேற்றுமை இல்லாததாக ஆய்விடும். அதுஸரியன்று. ஹேதுவானது பக்ஷத்தை இதரவஸ்துக்களிடமிருந்து வேறுபடுத்தும் தன்மையுள்ளதன்றோ மேலும் ஒரு வஸ்துவை மற்றொன்றினின்று வேறுபடுத்தும் தர்மத்திற்கே வ்யாவ்ருததிரூபத்வம் ஸம்பவிக்கிறது. ஸ்வரூபம் அறியப்பட்டால் தனக்கும் அன்யவஸ்து ¶ தாதாத்ம்யப்ரமவிரோதிக்கும் ஸ்வரூபமே வ்யாவ்ருத்தி. சுக்தித்வம் முதலியவற்றுக்குப்போல. ப்ரஹ்மத்திற்கோவென்றால் வேறுவஸ்துவை அதைக்காட்டிலும் வேறாக இருக்கிற வஸ்துவினிடத்தினின்று வேறுபடுத்தும் தன்மை வாய்ந்த தர்மத்வமில்லாமையாலும் ஸ்வரூபம் ப்ரகாசித்துக்கொண்டிருக்கையில் ப்ரமத்தை ஸஹிக்கும் தன்மை இருப்பதாலும் ஸ்வரூபமே வ்யாவ்ருத்தியல்லவென்று இனிசொல்லப்போகிற சௌக்ல்யாதி திருஷ்டாந்தவைஷம்யாபிப்ராயத்தால் 'ஸத்தாதிரேகிபி: " என்று உரைக்கப்பட்டது.

உண்டாகும் ஜ்ஞானம்— அதாவது முன்னிலையில் குடத்தைக்கண்ட உடன் இது குடமென்று முதன்மையாக ஒரு ஜ்ஞாநமுண்டாகிறது. பிறகு கடமஹம் ஜாநாமி—குடத்தை நானறிகிறேன் என்கிற மற்றொருஜ்ஞாநம் அடுத்த‡ க்ஷணத்திலுண்டாகிறது. இதுதான் அநுவ்யவஸாயம். இது தார்கிகர்களின்கொள்கை. இந்த அநுவ்யவஸாயத்தால் முந்தி எனக்கு கட விஷயகஜ்ஞாநமுண்டாயிருக்கிறதென்று அறிகிறான்.

§ ஸ்வதஸ்ஸித்தம்—ஸ்வயம் ப்ரகாசமுள்ள வஸ்து. ¶ தாதாத்மயம்—ஐக்யம்

ஹேது *ஸாதாரணமானால் ¶ அநைகாந்திகமாயும் ப்ரமத்துக்கு அவிரோதியாயுமாகும் சௌக்ல்யம் முதலியதுபோல. அஸாதாரணமாயிருக்கிற சுக்தித்வமேயன்றோ ரஜதப்ரமவரோதி. அதனால் ஸ்வாஸாதாரணை: என்று உரைக்கப்பட்டது. ஸ்வசப்தத்தால் வ்யதிகரணாஸித்திக்கு பரிஹாரமேற்பட்டது. ஸ்வபாவவிசேஷை:-தர்மவிசேஷங்களால். இவ்வண்ணம் ஸாமான்யமாக அர்த்தஸ்வரூபம் உரைக்கப்பட்டது. அதனால் உன்னுலும் நிராஸகஹேதுக்களாக அபிமானிக்கப்பட்டிருப்பவைகளுள் ஸத்தாதிரேகித்வம் ஸ்வாஸாதாரணத்வம் இரண்டும் விடத்தகாதவைகளென்கிற அபிப்ராயத்தினால் 'ஸத்தாதிரேகிபி: ஸ்வாஸாதாரணை:' என்று மறுபடி கூறப்பட்டது. எந்தெந்தஹேதுக்கள் விசேஷமுள்ள கடம் முதலியவஸ்துக்களிடமிருந்து வ்யாவ்ருத்தங்களாய் பொதுவாக ஸகல விசேஷாபாவங்களுக்கும் ஸாதகங்களோ அவைகள் அர்த்தஸாமர்த்தியத்தினால் ஸாமான்யத்தில் உள்ளடங்கி இருக்கிற தன்ஸ்வரூபத்தையும் நிச்சயமாக நிவர்த்திப்பிக்கும் எனில் சொல்லுகிறார்—அத:கைஶ்சித் என்று. அத: - அவைகளுக்கு ஸத்தாதிரேகித்வம் ஸ்வாஸாதாரணத்வம் இரண்டும் அவசியம் ஒப்புக்கொள்ளத்தக்கதாக இருப்பதால் என்று அர்த்தம். கைஶ்சித்தி - ஸ்வாஸாதாரணை: - ப்ராமாணிகை: என்று அர்த்தம் விசிஷ்டஸ்யைவேதி என்று. நிர்விசேஷத்வஸாதகத்திற்கு நிவ்ருத்திவரின் நிர்விசேஷத்வம் ஸித்தியாததாலும், அது நிவர்த்திக்காமலிருந்தால் அவைகளாலேயே ஸவிசேஷத்வம் ப்ரஸங்கிப்பதாலும் என்று அபிப்ராயம். அந்யே இதி—நிர்விசேஷத்வஸாதகஹேதுக்கள் எந்த கடாதிகளினின்றும் வ்யாவ்ருத்தங்களோ அந்த கடாதிகளை அடைந்திருக்கின்ற அப்ராமாணிகங்களான ரூபாதிவிசேஷங்கள் இவ்விடத்தில் நிரஸிக்கப்படுகின்றனவே ஒழிய எல்லா விசேஷங்களும் நிரஸிக்கப்படவில்லை. அக்நியில்லாத இடத்தினின்று வ்யாவ்ருத்தமான தூமமானது, பக்ஷத்தில் அநக்நிமத்த்வத்தையன்றோ நிவர்த்திக்கிறது. வேறு ஆகாரத்தை நிவர்த்திக்காது என்று பொருள். நக்வசித்தி-ஸ்வாநுபவத்திலும் ப்ரத்யக்ஷம் முதலிய வேறு ப்ரமாணங்களிலுமென்று அர்த்தம். ஸ்வவ்யாகாதம் ப்ரஸங்கிப்பதால் ஸகலவிசேஷ நிவ்ருத்தி ஸாதிப்பதற்கு அசக்யமாதலின் நிர்விசேஷ வஸ்து ஸித்தி இல்லை என்று சொல்லப்பட்டதாக ஆகிறது.

யேப்யோ ஹி ஹேதுப்ய: ஸ்வவ்யாவ்ருத்ததா ச ஜ்ஞாதா விஶிஷ்டவ்யாவ்ருத்த
ஸ்வாவதயோபேதை: । ஸாதாரணைஶ்ச ஸவிஶேஷ
வஸ்துநோ வா இதி ஸ்வாபஸித்த நிர்விஶேஷதா வ்யாவ்ருத்தா: ।
ஸ்வாஸாதாரணா நிர்விகல்பகாவஸ்தாயாமபி விஶேஷா: ஸந்த்யேவ ।
தே ச ந வஸ்துமாத்ரமிதி ஶக்யா வக்தும் । வஸ்துமாத்ரஸ்ய
ஸத்தே ஸத்யபி விஶேஷவிநாஶதர்ஶநாத் ஸ்வாஸித்ததர்யாதே
ரேவ ஸத்தாவிநாஶ: । அத: ப்ராமாணிகவிஶேஷவிஶிஷ்ட
மேவ வஸ்த்விதி வக்தவ்யம் ॥

---

* ஸாதாரணம்— ஸாத்யமுள்ள இடத்தில்போல ஸாத்யமில்லாத இடத்திலும் இருக்கும் துஷ்டஹேது. இது ப்ரபலமான ஒரு ஹேதுதோஷம்.

¶ அநைகாந்திகம்—இது வ்யபிசாரியான ஹேது.

ஸ்ரீபாஷ்யம்:—

ஜ்ஞானத்திற்கு விஷயங்களை ப்ரகாசப்படுத்தும் தன்மையும் மற்றொன்றினால் ப்ரகாசிப்பிக்கப்படாமல் தனக்குத்தானாகவே ப்ரகாசிக்கும் தன்மையும் இயற்கையாகவே இருக்கிறது. ஏனெனில்; அது தனக்கு ஆச்ரயமாக இருக்கும் ஆத்மாவுக்கு விஷயங்களை ப்ரகாசப்படுத்தும் ஸ்வபாவமுள்ளதாகவே அறியப்படுவதால்; நித்திரை, மதம், மூர்ச்சைகளிலும் அநுபவம் ஸவிசேஷமென்றே அதை நிரூபிக்கும் தருணத்தில் மிக்கத் தெளிவாக உபபாதிக்கப்போகிறோம். தங்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட நித்யத்வம் முதலிய அநேக விசேஷங்கள் நிச்சயமாகவே இருக்கின்றன. அவைகளும் வஸ்துமாத்ரமென்று உபபாதிப்பதற்கு ஸாத்யப்படாது வஸ்து மாத்ரமென்று ஒப்புக்கொண்டாலுங்கூட அதன்ப்ரகாரபேதத்தில் விவாதம் காணப்படுவதாலும் தனக்கு அபிமதமான அந்த ப்ரகாரபேதங்களால் தன்மதத்தை உபபாதனம் செய்யவேண்டியதாக இருப்பதாலும்; ஆதலால் ப்ராமாணிகங்களான விசேஷங்களால் வஸ்து விசிஷ்டமெனறே சொல்லத்தக்கது.

சுருதப்ரகாசிகை—

இவ்வண்ணம் கர்மகர்த்ருவ்யுதாஸத்தை ஒப்புக்கொண்டு ஸவிசேஷத்வம் ஆபாதனம் செய்யப்பட்டது. இதற்கு மேல் கர்மகர்த்ருநிராஸமே அசக்யமென்று கூறுகிறார்.— தியோர்ஹி என்று. தீத்வமாவது விஷயப்ரகாசகத்வம். ஸ்வப்ரகாசதா-அநந்யாதீநப்ரகாசத்வம். இது இரண்டும் ஸ்வப்ரகாசவாதத்தில் ஸாதனமாகவும் ஸாத்யமாகவும், அந்யனால் உபந்யஸிக்கப் பட்டிருக்கிறது. ஜ்ஞாதுர்விஷய ப்ரகாசநஸ்வபாவதயோபலப்தே: என்று. தனக்கு ஆதாரமாக இருக்கிற ஆத்மாவைக்குறித்து விஷயங்களைத்தவறாமல் ப்ரகாசிப்பிக்கும் தன்மையோடு விளங்குகிறபடியால் தீத்வம் ஸ்வப்ரகாசத்வம் இரண்டும் ஸித்திக்கின்றனவென்று அர்த்தம். "தீத்வம், விஷயஸாதநத்வம், அவ்வாறு அவபாஸமானமாக இருப்பதால்" என்பதனால் ஸாத்யவிசிஷ்டதை இல்லை. உபலப்திஸித்தமான ஸகர்மகத்வத்தை அங்கீகரிக்காமல் போவாயேயாகில், அப்பொழுது ஸகர்மகத்வத்தை ஹேதுவாகக்கொண்ட ஸ்வப்ரகாசத்வமும் ஸித்தியாதென்றுகருத்து. அன்றிக்கே, தீத்வம்-திஸ்வரூபமாத்ரம். ஹிசப்தமானது எல்லோருடைய ஒப்புதலையும் உபலப்திக்குக்காண்பிக்கிறது.

அய்யா! கர்மகர்தாக்களோடு கூடினஜ்ஞானம் ஆத்மபூதமல்ல, ஸ்வாபம் முதலிய நிலைமைகளில் அநுபவிக்கப்பட்டுள்ள வேறு ஒருவஸ்துவே நிர்விசேஷமென்று ஸாதிக்கப்படுகிறதென்றால் அதைமறுக்கிறார்—ஸ்வாப என்று அநுபவம்—‡‡ஆத்மஸ்புரணம். அப்பொழுது தர்மபூதஜ்ஞானத்தின் ஸ்புரணமில்லையன்றோ. ஸ்வாவஸரே—அநுமர்த்தத்திற்கே ஆத்மத்வஸமர்த்தனம் செய்யும்ஸமயத்தில். நிபுணதரம் அன்யனால் ப்ரயோகிக்கப்பட்ட யுக்தியினாலேயே என்று கருத்து. "ஸாகமஹமஸ்வாப்ஸம், மாமப்யஹம் ந ஜ்ஞாதவாந்" இதுமுதலிய அன்யனால் கூறப்பட்ட பராமர்சத்தினாலேயே என்று அர்த்தம்.

---

‡‡ ஆத்மஸ்புரணம்—நான் என்கிற தோற்றம்.

அன்றிக்கே, நிபுணதரம், இது சொல்லப்பட்டதாக ஆகிறது—உன்னால் ஸ்வாரூபவாதீக மான நிர்விசேஷத்வமானது கர்மகர்தாக்களை விஷயீகரித்துக்கொண்டிருக்கிற ஜ்ஞானத் திற்கு சொல்லப்படுகிறதா? அப்படிக்கின்றி அஹமென்று பிரகாசிக்கின்ற ஆத்மஸ்வ ரூபபூதமானஜ்ஞானத்திற்கா? அப்படிக்கின்றி அவைகளைத்தாண்டி இருக்கும் வஸ்து வுக்கா? முதல் பக்ஷத்தில் கர்மகர்த்ரு ரூபமான விஷய நியமத்தினாலேயே நிர்விசேஷத் வமில்லை. இரண்டாவதிலோ ப்ரத்யக்த்வம் அனுகூலத்வம் முதலியவைகளால் ஸவிசே ஷத்வம் விலக்கமுடியாதென்று சொல்லப்படப்போகிறது. மூன்றாவது பக்ஷத்தில் சூன்யமாக இருப்பதினாலேயே நிர்விசேஷத்வம் ஸாத்யமில்லை என்று முகாந்தரத்தினால் ஸவிசேஷத்வத்தையே சொல்லுகிறார்— ஸ்வாப்யுபகதாஸ்ச என்று. ஆதிசப்தத்தால் ஸ்வப்ரகாசத்வ ஏகத்வஆநந்தத்வாதிகள் விவக்ஷிக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் வஸ்து மாத்ர மென்றல்லவோ சொல்லப்பட்டிருக்கிறதென்றால், கூறுகிறார்— நேச என்று. உபபாதிக்கிறார்— வஸ்து என்று. பௌத்தர்களால் க்ஷணிகத்வம் சொல்லப்பட்டிருக் கிறது, இவனாலோ வென்றால் நித்யத்வம் கூறப்பட்டது. ‡ வைசேஷிகர்கள் முதலிய வர்களாலோ வென்றால் ஜடத்வபகுத்வங்கள் இவனாலோ வென்றால் ஸ்வப்ரகாசத்வ ஏகத்வங்கள். ஸ்வரூபமோவென்றால் அவர்கள் அனைவர்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்டி ருக்கிறது. ஆகையால் விப்ரதிபத்தி விஷயமும் ஸம்ப்ரதிபத்தி விஷயமும் ஒன்றே என்று சொல்வது யுக்தமல்ல வென்று அர்த்தம். விமதிக்கு அடுத்ததாக இருக்கிற அதினு டைய உபபாதனத்தாலும் ஸ்வரூபத்தைக்காட்டிலும் வேறானது என்பதை திடப்படுத் துகிறார்—ஸ்வாபிமத என்று. க்ஷணிகவாதியைக்குறித்து ப்ரஹ்மத்திற்கு நித்யத்வத்தை ஸாதிக்கிற உன்னால் ஸ்வரூபமாத்ரத்தைக்காட்டிலும் வேறாக இருப்பது ஏதாயினும் ஒன்று ஸாதிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? உண்டானால் ஸதர்மத்வம். இல்லாவிடில், $ஸித்தஸாதநத்வம்—ஸ்வரூபமாத்ரம் அபிமதமாதலால் "ஸம்வித்நித்யை" என்கிற ப்ரதி ஜ்ஞாவாக்கியத்தை அடைந்திருக்கிற தர்ம தர்மி சப்தங்கள் இரண்டும் பர்யாயங்களா? அல்லவா? முதல்பக்ஷத்தில் ஸாதநத்தின் ஆயாஸம் பயனற்றதாக ஆகிறது. இரண்டா வது பக்ஷத்தில் ஸ்வரூபத்தைவிட வேறான தர்மாந்தர ஸ்வீகாரமென்று கருத்து. 'ஸ்வ மதோபபாதநாத் ந வஸ்துமாத்ரமிதி சக்யோபபாதந:' என்று அந்வயம். முன்பு ஸ விசேஷத்வ நிராஸக ஹேதுக்களால் ஸவிசேஷத்வம் உரைக்கப்பட்டது. பிறகு ஸாத் யதர்மங்களால். அதற்குப்பிறகு சில விசேஷ ஸாதகஹேதுக்களால். இந்த நிராஸகமான ஸாத்யஸாதந தர்மங்கள் அபரமார்த்தங்கள் எனில் கூறுகிறார்—அத: என்று. அத:-ஸாத் யமாகவும் ஸாதநமாகவும், சில தர்மங்கள் விசேஷவ்யுதாஸகமாக உன்னால் சொல்லப்பட் டிருப்பதால் பரமார்த்தபூதங்களான அந்த அந்த தர்மங்களோடுகூடியதென்று அர்த்தம். 'ப்ராமாணிகை:'.என்றதினால் "கைஸ்சித்" என்று முந்தி சொல்லப்பட்டிருக்கிற அர்த் தத்திற்குக்கூட விசேஷம் காண்பிக்கப்பட்டது. விசிஷ்டமேவேதி-முற்கூறப்பட்டுள்ள ஸத்தாதிரேகித்வம் ஸ்வாஸாதாரணத்வம் இவைகளில்லாவிடில் ப்ரமத்திற்கு நாசம் உண்டாகாது. நிராஸகதர்மத்திற்கு அபாரமார்த்யம் ஸம்பவிக்குமேயாகில் சுக்தித்வத் திற்கு அபாரமார்த்யம் வரின் ரஜதத்திற்கு ஸத்யத்வம்போல் நிரஸிக்கத்தக்க ஆகாரத் திற்கு ஸத்யத்வம் ப்ரஸங்கிக்கும். ஸாத்யதர்மத்திற்கு அபாரமார்த்யம் கூறப்படுமேயாகில்

$ ப்ரத்யக்த்வம்—தனக்குத்தான் ப்ரகாசித்தல்.

‡ வைசேஷிகர்கள்—கணாதமதத்தை அனுஸரித்தவர்கள்.

$ ஸித்தஸாதநம்— ஏற்கனவே ஸித்தித்திருப்பதை ஹேதுவினால் ஸாதித்தல். இதுப்ரயோஜநமற்றிருப்பதனால் தோஷமென்று தார்கிகர்களால் சாஸ்திரத்தில் சொல் லப்பட்டிருக்கிறது.

நித்யத்வாதிகளுக்கு விபரீதமான ஆகாரமுள்ள அநித்யத்வம் ப்ரஸங்கிக்கும். ஸாதநா பாரமார்த்யத்திலும், ஸாத்யநித்யத்வாதிகளின் விபரீதாகாரத்திற்கு ஸத்யத்வம் வர வேண்டியதாக ஆகும் என்று கருதது. இவ்வண்ணம் ஸ்வாநுபவ ப்ரஸங்கத்தால் அநுகும் ஸவிசேஷத்வம் உபபாதிக்கப்பட்டது.

𑌶𑌬𑍍𑌦𑌸𑍍𑌯 𑌤𑍁 𑌵𑌿𑌶𑍇𑌷𑍇𑌣 𑌸𑌵𑌿𑌶𑍇𑌷𑌵𑌸𑍍𑌤𑍁𑌨𑍍𑌯𑌭𑌿𑌧𑌾𑌨𑌸𑌾𑌮𑌰𑍍𑌥𑍍𑌯𑌮𑍍—𑌪𑌦𑌵𑌾𑌕𑍍𑌯𑌰𑍂𑌪𑍇𑌣 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑍇𑌃 । 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌯𑌯𑍋𑌗𑍇𑌨 𑌹𑌿 𑌪𑌦𑌤𑍍𑌵𑌮𑍍 । 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌯𑌯𑍋𑌰𑌰𑍍𑌥𑌭𑍇𑌦𑍇𑌨 𑌪𑌦𑌸𑍍𑌯𑍈𑌵 𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌾𑌰𑍍𑌥𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑌨𑌮𑌵𑌰𑍍𑌜𑌨𑍀𑌯𑌮𑍍 । 𑌪𑌦𑌭𑍇𑌦𑌶𑍍𑌚𑌾𑌰𑍍𑌥𑌭𑍇𑌦𑌨𑌿𑌬𑌨𑍍𑌧𑌨𑌃 । 𑌪𑌦𑌸𑌙𑍍𑌘𑌾𑌤𑌰𑍂𑌪𑌸𑍍𑌯 𑌵𑌾𑌕𑍍𑌯𑌸𑍍𑌯𑌾𑌨𑍇𑌕𑌪𑌦𑌾𑌰𑍍𑌥𑌸𑌂𑌸𑌰𑍍𑌗𑌵𑌿𑌶𑍇𑌷𑌾𑌭𑌿𑌧𑌾𑌯𑌿𑌤𑍍𑌵𑍇𑌨 𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌶𑍇𑌷𑌵𑌸𑍍𑌤𑍁𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑌨𑌾𑌸𑌾𑌮𑌰𑍍𑌥𑍍𑌯𑌾𑌤𑍍, 𑌨 𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌶𑍇𑌷𑌵𑌸𑍍𑌤𑍁𑌨𑌿 𑌶𑌬𑍍𑌦𑌃 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌮𑍍 ॥

ஸ்ரீபாஷ்யம்—

சப்தத்திற்கோ வென்றால் விசேஷித்து ஸவிசேஷமான வஸ்துவினிடத்திலேயே அபிதானஸாமர்த்யம். பதவாக்யரூபமாக ப்ரவ்ருத்திப்பதால்: ப்ரக்ருதிப்ரத்யயஸம்பந்தத்தாலன்றோ பதத்வம் ஸித்திபெறுகிறது. ப்ரக்ருதி ப்ரத்யயம் இரண்டுக்கும் அர்த்தங்களின் வேற்றுமையினால் பதத்திற்கே விசிஷ்டார்த்தப்ரதிபாதனம் விடத்தக்கதன்று. பதபேதமும் அர்த்தபேதத்தைக் காரணமாகக்கொண்டது. பத§ஸங்காதரூபமான வாக்யத்திற்கு அனேக பதார்த்த † ஸம்ஸர்கவிசேஷத்தைச் சொல்லுகிற ஸ்வபாவமிருப்பதால் நிர்விசேஷவஸ்து ப்ரதிபாதநத்தில் ஸாமர்த்யமில்லாமையால் நிர்விசேஷ வஸ்துவில் சப்தம் ப்ரமாணமாகா.

ச்ருதப்ரகாசிகை:—

அதற்குமேல் முதலில் ப்ரதிஜ்ஞை செய்யப்பட்டிருக்கிற ஸர்வ ப்ரமாணங்களுக்குமுள்ள ஸவிசேஷ விஷயத்வத்தைச் சொல்வதற்குத் தொடங்குகிறார். அதில் அந்யனால் ப்ரத்யக்ஷத்தைவிட அதிகபலமுள்ளதென்று சொல்லப்பட்டிருப்பதாலும் ஸவிசேஷ போதகத்வாதிசயம் தனக்கு அபிமதமாக இருப்பதாலும் முதலில் சப்தத்திற்குஸவிசேஷத்வத்தைக்கூறுகிறார்—சப்தஸ்யது என்று. து சப்தமானது அன்யனால் சொல்லப்பட்ட பலீயஸ்தவத்திற்கு ஸூசகம். "விசேஷேண" என்கிற பதத்தினால் ஸவிசேஷவஸ்து போதகத்வாதிசயம் சொல்லப்படுகிறது. அன்றிக்கே எல்லா ப்ரமாணங்களுக்கும் ஸவிசேஷவஸ்து விஷயகத்வமானது ப்ரதிஜ்ஞை பண்ணப்பட்டிருக்க சித்வஸ்துவினிடம் அந்த ரங்கமாக இருப்பதால் ஸ்வப்ரகாசவ்ருத்தியை நிரூபித்து அதற்குப்பிறகு ஆத்மாவினி

---

§ ஸங்காதம்—கூட்டம். † ஸம்ஸர்கம்—ஸம்பந்தம்.

டதில் ப்ரத்யக்ஷாதிகளைக்காட்டிலும் அந்தரங்கமாக இருப்பதால் உபயவாதிஸம்மதமான சாஸ்திரததிற்கு ஸவிசேஷவிஷயத்வததைச் சொல்லுகிறார்—சப்தஸ்யது என்று. ஸவிசேஷகோசரத்வத்தில் ப்ரமாணாந்தரஙகளைவிட அதிசயமானது 'விசேஷேண' என்பதினால் சொல்லப்படுகிறது. "து" சப்ததகினால் அததற்கு உபயுக்தமான சப்தத்தினுடையஸவிசேஷகோசர ப்ரத்யக்ஷாதிபூர்வகத்வ ரூபமான விசேஷம் சொல்லப்படுகிறது.

ப்ரதிஜ்ஞை செய்யப்பட்டதற்கு ஹேதுவைச்சொல்லுகிறார்— பதவாக்யரூபேண என்று. ஸவிசேஷ விஷயத்திற்கு அதினால் என்ன வென்கிற சஙகவரின்பதரூபத்தினால் ப்ரவ்ருத்தியை விவரிக்கிறார்— "ப்ரக்ருதீதி" அதனால் என்னென்றால் கூறுகிறார்—ப்ரக்ருதிப்ரத்யயயோ: என்று. பதஸ்யைவேதி வாக்யம அப்படியே இருக்கட்டும. பதமே ஸவிசேஷ பரமென்று கருத்து. வாக்யரூபத்தால் ப்ரவ்ருத்தியை விவரிக்கிறார் பதபேதஸ்ச என்று. பதபேதமாவது—பதஙகளுக்கு அந்யோந்யபேதம்- ப்ரக்ருதிப்ரத்யயபேதம் மாத்திரமே அர்ததபேதத்தை ஹேதுவாகக்கொண்டதல்ல. பின்னையோ பதபேதமென்று அர்த்தம. அப்படி இல்லாவிட்டால் வேறுபதம் பயனற்றதாக ஆக வேண்டியதாகுமென்று கருத்து. பதபேதம் அர்த்தபேத நிபந்தனமாக இருந்தபோதிலுங்கூட வாக்யத்தின் ஒற்றுமையினால் நிர்விசேஷத்வம் ஸித்திக்கிறதென்று சஙகைவரின் வாக்யத்திற்கு ஸவிசேஷ விஷயத்வத்தைச் சொல்லா நின்றுகொண்டு நிர்விசேஷத்தில் ப்ரமாணத்தின் இன்மையை உபஸம்ஹரிககிறார்—பதஸங்காத என்று, அந்த அந்த பதாபிதேயங்களின் ஸம்ஸர்கவிசேஷமே வாக்யத்தினால் சொல்லத்தக்கது. அந்த அந்த பதங்களின் அர்த்தத்தை விட்டு வேறு அர்த்தம் வாக்யத்தினால் சொல்லத்தக்கதல்லவென்று அர்த்தம.

அய்யா! நிர்விசேஷ சப்தத்தினால் நிர்விசேஷமான வஸ்து அறியப்பட்டதா? இல்லையா? அல்லது ஸவிசேஷமான வஸ்து அறியப்பட்டதா? முதல் பக்ஷத்தில் நிர்விசேஷவஸ்துவுக்கு சப்தத்தால் ப்ரதிபாதநமிருப்பதால் நிஷேதம் உபபன்னமாகாது. இரண்டாவது பக்ஷத்திலோ நிஷேதிக்சத்தக்க வஸ்துவின் அறிவு இல்லாமையால் நிஷேதம் பொருந்தாது. மூன்றாவது பக்ஷத்திலோ ஸவிசேஷநிராஸம் செய்யப்பட்டதாக ஆகும். இவ்வண்ணமல்ல— ப்ரமப்ரமைகளின் பாகுபாட்டால் நிர்விசேஷவஸ்துவில் சப்தத்திற்கு ப்ராமாண்யம் நிஷேதிக்கப்படுகிறதே ஒழிய . ப்ரமஹேதுத்வம் நிஷேதிக்கப்படுகிறதில்லை. ஆகையால் நிர்விசேஷசப்தத்தால் உண்டுபண்ணைப்பட்டதும் ஒன்றோடொன்று அந்வயிப்பதற்குத்தகாததாக இருக்கிற அர்த்தங்களை விஷயீகரிக்கிறதுமான ப்ராந்தியானது ப்ரமிதிஜநகங்களான சப்தங்களால் பாதிக்கப்படுகிறதென்பது யுகதம். அதிகரணம் அதற்குரிய ப்ரதிபக்ஷததை நிஷேதிக்கதக்க அஸாதாரணதர்மங்கள் இவைகளைக்காட்டிலும் விசேஷசப்தத்திற்கு ஸங்கோசத்தை ஒப்புக்கொள்ளாவிடிலோ$அதிகரணம் ஸித்தியாததினால் நிஷேதசப்தத்திற்கு அந்வயமே

$ அதிகரணத்தின் லக்ஷணம்—விஷயோவிசயஸ்சைவ பூர்வபக்ஷ ஸ்ததோத்தரம். நிர்ணயஸ்சேதி பஞ்சாங்கம் ப்ராஞ்சோதிகரணம் விது:. (ப்ரதிபாதிக்கத்தக்க விஷயம், ஸம்சயம், பூர்வபக்ஷம், அவ்வாறே அந்த பூர்வபக்ஷத்தை நிரஸிப்பதற்குத் தகுதியுள்ள மறுமொழி, தீர்மானமான ஸித்தாந்தம், இவ்வைந்துகளடங்கி இருக்கும் க்ரந்தஸந்தர்ப்பத்தை முன்னோர்கள் அதிகரணமெனப்பெயர் வாய்ந்துள்ளதாக அறிகிறார்கள்).

இல்லாமல்போகவேண்டியதாகும். விபக்தி இல்லாததும் வேறுபதத்தோடு சேர்க்கை பெற்றதாகவும் இல்லாத நிர்விசேஷசப்தமானது, அர்த்தத்தைச் சொல்லாதன்றோ. ஆதலால் ஸங்கோசமில்லாவிடில் வ்யாகாதம். எப்படி இருந்தாலும் விபக்தியின் அர்த்தமானது எவ்விதத்திலும் விவக்ஷிதமன்று. ஆயினும் நிர்விசேஷ பதத்திற்கு $ பஹுவ்ரீஹி ஸமாஸத்தால் அந்யபதார்த்தத்தைச்சொல்லுகை யென்பது விடத்தகாதது. † தத்புருஷப்ரயோகத்திலும் அதிகரணாபிதாநம் விடத்தகாதது. ஆகையால், நிர்விசேஷசப்தமானது ப்ரமாணமாக இருக்கிற வாக்யத்தில் இருக்குமேயாகில் அப்பொழுது விஷயங்களின் பாகுபாடு கண்டுகொள்ளத்தக்கது ஸகலவிசேஷ சூந்யப்ரதிபாதநத்தில் ஸாமர்த்யமில்லாமையால் நகரத்தில என்னவிசேஷமென்கிற வினாவில் ஒரு விசேஷமுமில்லை என்கிற இதுமுதலிய உத்தரங்களில ஸவிசேஷநிஷேதமானது எவ்வாறு ஸங்குசிதவிஷயமாகக்காணப்பட்டிருக்கிறதோ, அப்படியே சாஸ்திரங்களிலும், "அவிசேஷாஸ்தேஹி தே" என்று, ஸத்வம் முதலியகுணங்களோடு கூடியிருந்தபோதிலும ப்ருதிவ்யாதிகளுக்கு சாந்தத்வ கோரத்வ மூடத்வ ரூபமான சிலவிசேஷங்களின இன்மையைச்சொல்லவேண்டிய எண்ணத்தினால் அவிசேஷ சப்தம் ப்ரயோகிக்கப்படுகிறது இவ்வண்ணம், ஜ்ஞாநஸ்வரூபனான ஆத்மாவினிடத்தில் அந்தரங்கமாக இருப்பதால் "ஸ்வாநுபவ" சப்தங்கள் இரண்டும் நிரூபிக்கப்பட்டன.

𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌸𑍍𑌯 𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌕𑌲𑍍𑌪𑌕𑌸𑌵𑌿𑌕𑌲𑍍𑌪𑌕𑌭𑍇𑌦𑌭𑌿𑌨𑍍𑌨𑌸𑍍𑌯 𑌨 𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌶𑍇𑌷𑌵𑌸𑍍𑌤𑍁𑌨𑌿 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌭𑌾𑌵𑌃। 𑌸𑌵𑌿𑌕𑌲𑍍𑌪𑌕𑌂 𑌜𑌾𑌤𑍍𑌯𑌾𑌦𑍍𑌯𑌨𑍇𑌕𑌪𑌦𑌾𑌰𑍍𑌥𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌵𑌿𑌷𑌯𑌤𑍍𑌵𑌾𑌦𑍇𑌵 𑌸𑌵𑌿𑌶𑍇𑌷𑌵𑌿𑌷𑌯𑌮𑍍। 𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌕𑌲𑍍𑌪𑌕𑌮𑌪𑌿 𑌸𑌵𑌿𑌶𑍇𑌷𑌵𑌿𑌷𑌯𑌮𑍇𑌵; 𑌸𑌵𑌿𑌕𑌲𑍍𑌪𑌕𑍇 𑌸𑍍𑌵𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑌨𑍁𑌭𑍂𑌤𑌪𑌦𑌾𑌰𑍍𑌥𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌪𑍍𑌰𑌤𑌿𑌸𑌨𑍍𑌧𑌾𑌨𑌹𑍇𑌤𑍁𑌤𑍍𑌵𑌾𑌤𑍍। 𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌕𑌲𑍍𑌪𑌕𑌂 𑌨𑌾𑌮 𑌕𑍇𑌨𑌚𑌿𑌦𑍍𑌵𑌿𑌶𑍇𑌷𑍇𑌣 𑌵𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑌸𑍍𑌯 𑌗𑍍𑌰𑌹𑌣𑌮𑍍; 𑌨 𑌸𑌰𑍍𑌵𑌵𑌿𑌶𑍇𑌷𑌰𑌹𑌿𑌤𑌸𑍍𑌯। 𑌤𑌥𑌾𑌭𑍂𑌤𑌸𑍍𑌯 𑌕𑌦𑌾𑌚𑌿𑌦𑌪𑌿 𑌗𑍍𑌰𑌹𑌣𑌾𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌦𑌨𑍁𑌪𑌪𑌤𑍍𑌤𑍇𑌶𑍍𑌚। 𑌕𑍇𑌨𑌚𑌿𑌦𑍍𑌵𑌿𑌶𑍇𑌷𑍇𑌣 "𑌇𑌦𑌮𑌿𑌤𑍍𑌥𑌮𑍍" 𑌇𑌤𑌿 𑌹𑌿 𑌸𑌰𑍍𑌵𑌾 𑌪𑍍𑌰𑌤𑍀𑌤𑌿𑌰𑍁𑌪𑌜𑌾𑌯𑌤𑍇। 𑌤𑍍𑌰𑌿𑌕𑍋𑌣𑌸𑌾𑌸𑍍𑌨𑌾𑌦𑌿𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌨𑌵𑌿𑌶𑍇𑌷𑍇𑌣 𑌵𑌿𑌨𑌾 𑌕𑌸𑍍𑌯𑌚𑌿𑌦𑌪𑌿 𑌪𑌦𑌾𑌰𑍍𑌥𑌸𑍍𑌯 𑌗𑍍𑌰𑌹𑌣𑌾𑌯𑍋𑌗𑌾𑌤𑍍। 𑌅𑌤𑍋 𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌕𑌲𑍍𑌪𑌕𑌮𑍇𑌕𑌜𑌾𑌤𑍀𑌯𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑍇𑌷𑍁 𑌪𑍍𑌰𑌥𑌮𑌪𑌿𑌣𑍍𑌡𑌗𑍍𑌰𑌹𑌣𑌮𑍍। 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌾𑌦𑌿𑌪𑌿𑌣𑍍𑌡𑌗𑍍𑌰𑌹𑌣𑌂 𑌸𑌵𑌿𑌕𑌲𑍍𑌪𑌕𑌮𑌿𑌤𑍍𑌯𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ॥

$ பஹுவ்ரீஹி ஸமாஸம்—இது அந்ய பதார்த்தத்தை ப்ரதானமாக உடையது. உதாஹரணம்—பீதாம்பர: மஞ்சளாடையுடையவன். பீத - மஞ்சள்நிறமுள்ள அம்பரம் வஸ்திரம் எவனுக்கு இருக்கிறதோ அவன் பீதாம்பரன்.

† தத்புருஷஸமாஸம்—விபக்தி வேறுபாடுள்ள இரண்டு பதங்களுடன் கூடியது. உதாஹரணம்-பூர்வகாய:- பூர்வ: காயஸ்ய-பூர்வகாய:, சரீரத்தினது முந்தினபாகம்.

ஸ்ரீபாஷ்யம்.—

‡ நிர்விகல்பகம் § ஸவிகல்பகம் என்று வேறுபட்டிருக்கிற ப்ரத்யக்ஷத்திற்கு நிர்விசேஷவஸ்துவிஷயத்தில் ப்ராமாண்யமில்லை ஸவிகல்பகமானது ஜாதிமுதலிய அனேக பதார்த்தங்களுடன்கூடிய வஸ்துக்களை விஷயீகரிப்பதினாலேயே ஸவிசேஷவிஷயம் நிர்விகல்பகமும் ஸவிசேஷவிஷயமேதான். ஸவிகல்பகத்தில் தன்னிடத்தில் அனுபவிக்கப்பட்டிருக்கிற பதார்த்த விசிஷ்டப்ரதிஸந்தானத்திற்கு ஹேதுவாக இருப்பதால். நிர்விகல்பகமாவது ஏதோ சில விசேஷத்தால் விடுபட்டிருக்கிற வஸ்து விஷயகமான ஜ்ஞாநம். ஸர்வ விசேஷங்களாலும் விடுபட்டிருக்கிற வஸ்துவின் க்ரஹணமென்பதல்ல. அப்படிப்பட்ட வஸ்துவுக்கு ஒருபொழுதும் க்ரஹணம் காணப்படாததாலும் அநுபபத்தியிருப்பதினாலும் எல்லா ப்ரதீதியும் ஏதோ ஒரு விசேஷத்தோடே "இதம் இத்தம்" என்றல்லவோ உண்டாகிறது. முக்கோண வடிவம் கழுத்தின் கீழாகத்தொங்கும் கம்பளம்போன்ற சதை முதலிய அவயவங்களின் ‡‡ ஸம்ஸ்தானவிசேஷமில்லாமல் ஒரு பதார்த்தத்திற்கும் க்ரஹணம் வாராததாலால் ஆகையால் நிர்விகல்பகமாவது ஏகஜாதீயத்ரவ்யங்களில முதலாவதான பிண்டத்தின்க்ரஹணம். இரண்டாவது தொடக்கமான பிண்டங்களின் க்ரஹணமானது ஸவிகல்பகமென்று கூறப்படுகிறது.

ச்ருதப்ரகாசிகை:—

இனி வேறுப்ரமாணங்களுள் மூலபூதமாயிருக்கிற ப்ரத்யக்ஷத்திற்கு ஸவிசேஷவிஷயத்வத்தை உபபாதிக்கிறார்—ப்ரத்யக்ஷஸ்ய இது முதலியதால். நிர்விகல்பகத்தில் அனுபவிக்கப்பட்டிருக்கிற அர்த்தத்திற்கு ஸவிகல்பகத்தில்.|| ப்ரதிஸந்தானம் சொல்லப்போவதால் அதற்கு உபயோகியாக ஸவிகல்பகஸ்வரூபம் காண்பிக்கப்பட்டது இதற்குமேல் நிர்விகல்பகத்திற்கு ஸவிசேஷவிஷயத்வத்தை ப்ரதிஜ்ஞைசெய்கிறார். நிர்விகல்பகமபி என்று. ஏகஜாதீயபிண்டங்களில் த்விதீயாதிபிண்டக்ரஹணத்திற்கு ஸவிகல்பகத்வத்தையும் ப்ரதமபிண்டக்ரஹணத்திற்கு நிர்விகல்பகத்வத்தையும் மனதில் வைத்துக்கொண்டு, ஹேதுவைச்சொல்லுகிறார்— ஸவிகல்பக என்று. விசிஷ்டப்ரதிஸந்தானம் என்பது ஷஷ்டீஸமாஸம் - அல்லது. * கர்மதாரயம். ஸ்வஸ்மிந் - நிர்விகல்பகத்தில்,

---

‡ நிர்விகல்பகம்—நிஷ்ப்ரகாரகம் ஜ்ஞாநம். இது தார்கிகர்களின் கொள்கை.

§ ஸவிகல்பகம்—ஸப்ரகாரகம் ஜ்ஞாநம். வேதாந்திகளுடைய ஸித்தாந்தத்தில் நிர்விகல்பகமும்,ஸவிகல்பகம்போல் ஸவிசேஷவிஷயமே. முதல்முதலில் கோ வ்யக்தியைப்பார்த்து இது கோ என்று ஜ்ஞாநமுண்டாவது நிர்விகல்பகம். இந்த ஜ்ஞாநத்தில் கோத்வஜாதி கோரூபமான வ்யக்தி இவ்விரண்டுக்குமுள்ள பிறிக்கமுடியாத ஒருவித ஸம்பந்தம் இம்மூன்றும் விஷயங்கள். இதுஸவிகல் பகத்தில் தன்னிடத்திலனுபவிக்கப்பட்டுள்ள பதார்த்தங்களோடுகூடின வஸ்துவிஷயகஸ்மரணத்திற்கு ஹேதுவாக இருக்கிறது

‡‡ ஸம்ஸ்தானம்—அவயவங்களின் அமைப்பு. || ப்ரதிஸந்தானம்—ஸ்மரணம்.

* கர்மதாரய ஸமாஸம்—ஒரே விபக்தியிலிருக்கிற இரண்டுபதங்களுடன்கூடியது. உதாஹரணம் - நீலோத்பலம், நீலமான கருநெய்தல். இரண்டு பதங்களுக்குள் ஒன்று

அனுபவிக்கப்பட்ட ஜாத்யாதிபதார்த்த விசிஷ்ட வஸ்துவிஷய ப்ரதிஸந்தானமானது ஸவிகல்பகத்தில், ஹேதுவாக இருப்பதால் என்றுஅர்த்தம். ப்ரதமபிண்டமானது விசிஷ்டமாக அறியப்படுகிறதென்பது அர்த்தஸித்தம. ப்ரதமபிண்டமானது ஜாதிவிசிஷ்டமாக அறியப்பட்டாலன்றோ இரண்டாவது தொடக்கமான வ்யக்திகளில் ஜாதியின் அநுவ்ருத்திபுத்திரூபமான $ ப்ரதிஸந்தானம் பொருந்துகிறது. எவ்வாறு ப்ரதிஸந்தானம்? எல்லாவிசேஷங்களாலும் விடுபட்டிருக்கிற விஷயமுள்ளதன்றோ நிர்விகல்பகம்; என்று ஹேதுவின் அஸித்தியை ஆசங்கித்துக்கூறு...ர— நிர்விகல்பகம்நாம என்று. எல்லாவிசேஷங்களாலும் விடுபட்டிருத்தலின் இன்மையை உபபாதிக்கிறார்— ததாபூதஸ்ய என்று. எல்லா விசேஷங்களாலும் விடுபட்டிருக்கிற வஸ்துக்ரஹணமானது தர்சநத்தால் ஒப்புக்கொள்ளப்படுகிறதா? அல்லது அநுபபத்தியினால் கல்பிக்கப்படுகிறதா? என்று. விகல்பித்து தர்சநம் ஸகலவிசேஷ சூன்யக்ரஹணத்திற்கு ஹேதுவல்லவென்று கூறுகிறார்— கதாசிதபி என்று. கல்பநத்தை நிரஸிக்கிறார்— அநுபபத்தே: என்று. அநுபபத்தியானது நிர்விசேஷஜ்ஞாநத்திற்கு பாதகமாகவே காணப்படுகிறது. அந்த நிர்விசேஷ ஜ்ஞானத்திற்கு கல்பகமான அநுபபத்தியோவென்றால் தூரத்தில் நிரஸிக்கப்பட்டதென்று கருத்து. அதர்சநத்தை விவரிக்கிறார்— கேநசித் என்று. ப்ரகாரவிசேஷநியமம் இல்லை என்று கருத்து. மேலே 'க்ரஹணயோகாத்'' என்கிற ஐந்தாம்வேற்றுமையினால் ஹேதுத்வம ஸ்பஷ்டமாக இருக்கிறது. இந்த இடத்தில் பஞ்சமீஸ்தானத்தில் 'ஹி'' சப்தம். இதம் இத்தம் என்கிற ஜ்ஞாநத்தையே விவரித்துக்கொண்டு அர்த்தாத் ஸகலவிசேஷசூன்யக்ரஹணகல்பனையையும் நிராகரிக்கிறார்— த்ரிகோண என்று. அநுபபத்தியை விவரிக்கிறார்—க்ரஹணயோகாத் என்று. †அத்யாஹாரம் செய்துகொள்ளப்பட்டிருக்கிற சங்காவாகிய ததோடு ''க்ரஹணயோகாத்''என்கிற ஐந்தாம்வேற்றுமை உருபை ஈற்றில் கொண்டிருக்கிற பதத்திற்கு அந்வயம், த்ரிகோணம் பசுவின்முகம். க்ரஹணயோகாத்-நேராகக் காணப்பட்டிருக்கிற வ்யாப்தி விரோதத்தால் ஸகலவிசேஷ சூன்யவஸ்துக்ரஹணத்தைக் கல்பிப்பது பொருத்தமுள்ளதல்ல வென்று அர்த்தம். ''அநுபபத்தே:'' என்பதனால் விபக்ஷத்தில் பாதகதர்கமும் கருதப்பட்டிருக்கிறது—ஸவிசேஷவிஷயத்வமில்லாவிடில் ப்ரத்யயத்வமே இல்லாமல் போகவேண்டியதாகும் என்று. இந்த தர்கத்தாலுதவிபுரியத்தக்க ப்ரமாணம் ப்ரத்யக்ஷம் யோக்யாநுபலப்தி இந்த இரண்டும். அன்றிக்கே, ''அநுபபத்தே:'' என்பதனால் ஸவிசேஷவிஷயத்வத்தில் ஸாதகமான ப்ரமாணம் சொல்லக்கருதப்பட்டது. முதலாவதான இந்த்ரிய § ஸன்னிகர்ஷத்தாலுண்டாகிற ஜ்ஞாநம், ஸவிசேஷவிஷயமுள்ளது, ஜ்ஞாநமாக இருப்பதால், ஸம்ப்ரதிபன்னஜ்ஞாநம்போல என்று இவ்வண்ணம் ஸாதகப்ரமாணத்தின் இன்மை பாதகப்ரமாணத்தின் இருப்பு இவைகளால் சொல்லக்கருதப்பட்டிருக்கிற சில விசேஷங்களில்லாத ஜ்ஞாநம் நிர்விகல்பகம் என்பது ஸித்தம. இதனால் நிர்விகல்பக

விசேஷணமாயும் மற்றொன்று விசேஷ்யமாயும் இருக்கலாம் . அன்றிக்கே இரண்டுபதங்களும் விசேஷணங்களாகவுமிருக்கலாம் உதாஹரணம் - சீதோஷ்ணம்-சீதமாயும் உஷ்ணமாயுமுள்ளது. உபமாநோபமேயங்களை உணர்த்துகிற இரண்டு பதங்களும் கர்மதாரயத்திலடங்கியது. (உதா) புருஷவ்யாக்ர: - புலிபோன்ற புருஷன். பத்மமுகம்-தாமரைமலர்போன்ற முகம், இது முதலியது.

$ ப்ரதிஸந்தானம்—முன் அனுபவிக்கப்பட்டிருக்கிற பதார்த்தங்களின்ஸ்மரணம்

† அத்யாஹாரம்— சேர்த்துக்கொள்ளுதல்

§ ஸன்னிகர்ஷம்—விஷயத்துக்கும் இந்திரியத்துக்கும் உண்டாகும் சேர்க்கை.

சப்தத்திற்கு வ்ருத்திஸங்கோசம் பலித்தது. இந்தஸங்கோசமானது எந்தவிஷயத்தில் என்றால் சொல்லுகிறார்—அத: என்று. அத: - சொல்லப்பட்டிருக்கிற அதர்சனம், அநுபபத்தி, இவ்விரண்டுகளால் என்று அர்த்தம்.

𑌤𑌤𑍍𑌰 𑌪𑍍𑌰𑌥𑌮𑌪𑌿𑌣𑍍𑌡𑌗𑍍𑌰𑌹𑌣𑍇 𑌗𑍋𑌤𑍍𑌵𑌾𑌦𑍇𑌰𑌨𑍁𑌵𑍃𑌤𑍍𑌤𑌾𑌕𑌾𑌰𑌤𑌾 𑌨 𑌪𑍍𑌰𑌤𑍀𑌯𑌤𑍇 । 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌾𑌦𑌿𑌪𑌿𑌣𑍍𑌡𑌗𑍍𑌰𑌹𑌣𑍇𑌷𑍍𑌵𑍇𑌵𑌾𑌨𑍁𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌪𑍍𑌰𑌤𑍀𑌤𑌿𑌃 । 𑌪𑍍𑌰𑌥𑌮𑌪𑍍𑌰𑌤𑍀𑌤𑍍𑌯𑌨𑍁𑌸𑌂𑌹𑌿𑌤𑌵𑌸𑍍𑌤𑍁𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌨𑌰𑍂𑌪𑌗𑍋𑌤𑍍𑌵𑌾𑌦𑍇𑌰𑌨𑍁𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌧𑌰𑍍𑌮𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌤𑍍𑌵𑌂 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌾𑌦𑌿𑌪𑌿𑌣𑍍𑌡𑌗𑍍𑌰𑌹𑌣𑌾𑌵𑌸𑍇𑌯𑌮𑌿𑌤𑌿 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌾𑌦𑌿𑌗𑍍𑌰𑌹𑌣𑌸𑍍𑌯 𑌸𑌵𑌿𑌕𑌲𑍍𑌪𑌕𑌤𑍍𑌵𑌮𑍍 । 𑌸𑌾𑌸𑍍𑌨𑌾𑌦𑌿𑌵𑌸𑍍𑌤𑍁𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌨𑌰𑍂𑌪𑌗𑍋𑌤𑍍𑌵𑌾𑌦𑍇𑌰𑌨𑍁𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌰𑍍𑌨 𑌪𑍍𑌰𑌥𑌮𑌪𑌿𑌣𑍍𑌡𑌗𑍍𑌰𑌹𑌣𑍇 𑌗𑍃𑌹𑍍𑌯𑌤 𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌥𑌮𑌪𑌿𑌣𑍍𑌡𑌗𑍍𑌰𑌹𑌣𑌸𑍍𑌯 𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌕𑌲𑍍𑌪𑌕𑌤𑍍𑌵𑌮𑍍; 𑌨 𑌪𑍁𑌨𑌃 𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌨𑌰𑍂𑌪𑌜𑌾𑌤𑍍𑌯𑌾𑌦𑍍𑌯𑌗𑍍𑌰𑌹𑌣𑌾𑌤𑍍 । 𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌨𑌰𑍂𑌪𑌜𑌾𑌤𑍍𑌯𑌾𑌦𑍇𑌰𑌐𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌕𑌤𑍍𑌵𑌾𑌵𑌿𑌶𑍇𑌷𑌾𑌤𑍍, 𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌨𑍇𑌨 𑌵𑌿𑌨𑌾 𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌨𑌿𑌨𑌃 𑌪𑍍𑌰𑌤𑍀𑌤𑍍𑌯𑌨𑍁𑌪𑌪𑌤𑍍𑌤𑍇𑌶𑍍𑌚 𑌪𑍍𑌰𑌥𑌮𑌪𑌿𑌣𑍍𑌡𑌗𑍍𑌰𑌹𑌣𑍇𑌽𑌪𑌿 𑌸𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌨𑌮𑍇𑌵 𑌵𑌸𑍍𑌤𑍍𑌵𑌿𑌤𑍍𑌥𑌮𑌿𑌤𑌿 𑌗𑍃𑌹𑍍𑌯𑌤𑍇 । 𑌅𑌤𑍋 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌾𑌦𑌿𑌪𑌿𑌣𑍍𑌡𑌗𑍍𑌰𑌹𑌣𑍇𑌷𑍁 𑌗𑍋𑌤𑍍𑌵𑌾𑌦𑍇𑌰𑌨𑍁𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌧𑌰𑍍𑌮𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌤𑌾 𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌨𑌿𑌵𑌤𑍍 𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌨𑌵𑌚𑍍𑌚 𑌸𑌰𑍍𑌵𑌮𑍇𑌵 𑌗𑍃𑌹𑍍𑌯𑌤 𑌇𑌤𑌿 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌸𑌵𑌿𑌕𑌲𑍍𑌪𑌕𑌤𑍍𑌵𑌮𑍇𑌵 । 𑌅𑌤𑌃 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌸𑍍𑌯 𑌕𑌦𑌾𑌚𑌿𑌦𑌪𑌿 𑌨 𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌶𑍇𑌷𑌵𑌿𑌷𑌯𑌤𑍍𑌵𑌮𑍍 ॥

ஸ்ரீபாஷ்யம்.—

அங்கு முதலாவதான பிண்டக்ரஹணத்தில் கோத்வம் முதலியவைகள் அநுவ்ருத்தமான ஆகாரங்களுள்ளவைகளாக அறியப்படுகின்றனவில்லை. இரண்டாவது தொடக்கமான பிண்டக்ரஹணங்களிலேயே அநுவ்ருத்திப்ரதீதி உண்டாகிறது. முதலாவதான ப்ரதீதியினால் அநுஸந்திக்கப்பட்ட கோ முதலியவஸ்துக்களின் அவயவ † ஸம்ஸ்தானரூபமான கோத்வம்முதலியவற்றுக்கு அநுவ்ருத்திதர்மவிசிஷ்டத்வமானது இரண்டாவது தொடக்கமான பிண்டக்ரஹணத்தால் நிச்சயிக்கத்தக்கதென்பதனால் இரண்டாவது தொடக்கமான பிண்டக்ரஹணம் ஸவிகல்பகம். ஸாஸ்னை முதலிய வஸ்து ஸம்ஸ்தானரூபகோத்வம் முதலியவற்றின் அநுவ்ருத்தியானது முதலாவதான பிண்டக்ரஹணத்தில் க்ரஹிக்கப்படுகிறதில்லை என்பதனால் முதன்மையான பிண்டக்ரஹணத்திற்கு நிர்விகல்பகத்வமே ஒழிய ஸம்ஸ்தானரூபமான

† ஸம்ஸ்தானம்— அவயவங்களின் அமைப்பு.

ஜாதிமுதலியவற்றின் அக்ரஹணத்தாலல்ல. ஸம்ஸ்தானரூபமான ஜாதிமுதலியவற்றுக்கும் இந்திரியங்களாலுண்டாகிற ப்ரத்யக்ஷத்திற்கு விஷயமாக இருத்தல் ஸமானமாதலாலும், ஸம்ஸ்தானமின்றி Ψ ஸம்ஸ்தாநிக்கு ப்ரதீதி பொருந்தாதாதலாலும் முதன்மையான பிண்டக்ரஹணத்திலும் ஸம்ஸ்தானத்துடன் கூடியதாகவே வஸ்து "இவ்வண்ணமுள்ள"தென்று க்ரஹிக்கப்படுகிறது. ஆகையால் இரண்டாவது தொடக்கமான பிண்டக்ரஹணங்களில் கோத்வம் முதலியவற்றின் அநுவ்ருத்திதர்மவைசிஷ்டயமானது ஸம்ஸ்தாநிபோலவும் ஸம்ஸ்தானம் போலவும் எப்பொழுதுமே க்ரஹிக்கப்படுகிறதென்பதனால், அவைகளில் ஸவிகல்பகத்வமே. ஆகையால் ப்ரத்யக்ஷத்திற்கு ஒருபொழுதும் நிர்விசேஷவிஷயத்வமில்லை.

ச்ருதப்ரகாசிகை—

முதலாவது இரண்டாவது வ்யக்திகளில் ஸவிகல்பக நிர்விகல்பகசப்தங்கள் ஸங்கேதமுள்ளவைகளாக ஏற்படுத்தப்பட்டவைகளல்ல. ஆகையால் அந்த இரண்டு பிண்டங்களிலும் வைஷம்யம் சொல்லத்தக்கதென்கிற சங்கைவரின் க்ரஹிக்கத்தக்கதான உருவத்தின் வேற்றுமையைக்காண்பிக்கிறார்— "தத்ர" இதுமுதலான இரண்டு வாக்யங்களால்.

கோத்வத்தின் அநுவ்ருத்திஜ்ஞானம் அதின் இன்மை இவ்விரண்டும் ஸவிகல்பகநிர்விகல்பகசப்தங்களில் $ப்ரவ்ருத்திநிமித்தங்களென்பதைக்காண்பிக்கிறார்— 'ப்ரதமப்ரதீதி' என்று. தொடங்கப்பட்டுள்ள இரண்டுவாக்யங்களால். முந்தினக்ரந்தத்தால்சொல்லப்பட்டிருக்கிறகோத்வமானது ஸம்ஸ்தானசப்தத்தால்விசேஷிக்கப்பட்டது. அதனால்அன்யனுக்கு இஷ்டமான உருகின நெய்யை அடைந்துள்ள § க்ருதத்வம் முதலியவற்றின் ப்ரத்யக்ஷத்தில்போல வ்யஞ்ஜகத்தின் அபேக்ஷையினால் விளம்பமில்லை என்பது காண்பிக்கப்பட்டது. அதேஸம்ஸ்தானமானது அடுத்தக்ரந்தத்தில் ஸாஸ்நாதிசப்தத்தினால் குறிக்கப்படுகிறது. இவ்வண்ணமாக அநுவ்ருத்தியின் க்ரஹணாக்ரஹணங்களால் ஸவிகல்பகத்வமும் நிர்விகல்பகத்வமும்உரைக்கப்பட்டது. அநுவ்ருத்திமாத்திரத்தை க்ரஹிக்காமையினால் நிர்விகல்பகத்வமென்கிறதில்லை. பின்னையோ ஜாதியைக்ரஹிக்காமையாலும். அநுவ்ருத்தியின் க்ரஹணமில்லாவிடில் ஜாதியே க்ரஹிக்கப்படாததாக ஆகும் என்று சங்கைவர அதற்கு மறுமொழி உரைக்கிறார்—நபுநஸ்ஸம்ஸ்தாநாக்ரஹணாத் என்று. இங்கு "ஸம்ஸ்தானரூப" சப்தமானது ஜாதியின் அக்ரஹணாநுபபத்தியைக் காண்பிக்கிறது. கோத்வாதிகளுக்கு அஸாதாரணதர்மபூதமான அநுவ்ருத்தியின் க்ரஹணமில்லாமையால் கோத்வம் முதலியது க்ரஹிக்கப்படவில்லை என்று சங்கைவரின், அக்ரஹணாநுபபத்தியையே விவரிக்கிறார்— ஸம்ஸ்தாநரூபஜாத்யாதேரபி என்று. க்ரஹணத்திற்குக்காரணமான இந்திரியயோக்யதையிலும் அதே ஹேதுவென்று ஸூசிப்பிப்பதற்காக மீண்டும்"ஸம்ஸ்தான சப்தம்" சொல்லப்பட்டிருக்கிறது. நிர்விகல்பகம் ஸவிசேஷவிஷயமுள்ளது

Ψ ஸம்ஸ்தானி—அவயவங்களின் அமைப்புள்ளதான வ்யக்தி.

$ ப்ரவ்ருத்திநிமித்தம்— அர்த்தத்தை உணர்த்தும் சப்தஸாமர்த்யத்திற்குஹேது

§ க்ருதத்வம்—க்ருதம் நெய், அதின் தர்மம்.

என்பதில் ஸவிகல்பகத்தில் நிர்விகல்பகாநுபூதார்த்தவிசிஷ்டப்ரத்யபிஜ்ஞாநம் ப்ரமாணமாக முந்தி உரைக்கப்பட்டது. பராபிமதமான நிர்விகல்பகத்தின் அபாவத்தில் யோக்யாநுபலப்தி என்கிற ப்ரமாணமும் அவ்விரண்டுக்கும் அநுக்ராஹகமான தர்க்கமும் இதனால் சொல்லப்பட்டதாக ஆகிறது.

வஸ்துமாத்ரக்ரஹணம் என்று ஒப்புக்கொள்வது ப்ரமாணாநுபபத்தியினாலேயா? ப்ரமேயாநுபபத்தியினாலேயா? என்கிற விகல்பத்தை அபிப்ராயப்பட்டு முதலில் ப்ரமாணாநுபபத்தியை விலக்குகிறார்— ஐந்த்ரியகத்வாவிசேஷாத் என்று. இதனால் பூமியோடு பிரிக்கமுடியாமல் ஒன்றுபட்டிருக்கிற கந்தத்திற்கு வ்யாவ்ருத்தி ஏற்பட்டது; எவ்வாறு ஜாதிமுதலியவை இந்திரியங்களால் உண்டாகிற ஜ்ஞாநங்களுக்குக் கோசரங்கள்? ஸமவாயமானது இந்திரியத்தினாலுண்டாகும் ஜ்ஞாநத்திற்கு விஷயமல்லாததால் அது ஸரியல்லவென்று சொல்லப்படுமேயாகில், அப்பொழுது ஸவிகல்பகத்தில் விசிஷ்டக்ரஹணம் பொருந்தாது. ஆதலால் வேறு இந்திரியங்களால் க்ரஹிக்கத்தக்கதன்மை இல்லை என்பதுபற்றி ப்ரமாணாநுபபத்தி இல்லை. ஸந்நிஹிதமாக இல்லாமலிருத்தல் ப்ரமேயாநுபபத்தி, தனியாகப்பிரிக்க முடியாமல் சேர்ந்தே இருப்பதால் அது இல்லை என்று பரிஹரிக்கிறார்—ஸம்ஸ்தாநேந என்று. இதனால் சக்ஷுரிந்திரியத்தினால் உண்டாகிற ஜ்ஞாநத்திற்கு விஷயமாக இருத்தல் என்கிற தன்மை இருந்தபோதிலுங்கூட ப்ருதக்ஸித்தங்களான தண்டம் முதலியவைகளுக்கு வ்யாவ்ருத்தி ஏற்படுகிறது. ஒரு இந்திரியத்தால் க்ரஹிக்கத்தக்கதன்மை இருக்க அப்ருதக்ஸித்தமாக இருத்தல், என்பதனால் ப்ரமாணப்ரமேயாநுபபத்தி இல்லை என்று ஸம்ஸ்தாநத்தோடு கூடியதாகவே வஸ்து க்ரஹிக்கப்பட்டிருக்கிறதென்று அர்த்தம். இவ்வண்ணம் பூர்வம் " ஸம்ஸ்தாநரூப " சப்தத்தால் அபிப்ராயப்படப்பட்டுள்ள பொருள் விஸ்தரிக்கப்பட்டதாக ஆகிறது. அநுவ்ருத்தியின் க்ரஹணமில்லாமையால் ஸம்ஸ்தாநரூபமான ஜாதிமுதலியவற்றின் அக்ரஹணம் சங்கிக்கத்தக்கதல்ல. † ப்ரகாரப்ரகாரிபாவத்தால் க்ரஹணத்திற்கு உபபத்தி இருப்பதாலென்று கருத்து.

முதலாவதான கோமுதலியவ்யக்திகளை க்ரஹிக்கும் ஸமயத்தில் அநுவ்ருத்தியின் க்ரஹணமில்லாமையால் கோத்வமானது க்ரஹிக்கப்படாமல் போகுமேயானால் இரண்டாவது கோவ்யக்தியிலும் கோத்வமானது எவ்விதத்தாலும் க்ரஹிக்கப்படாது— அநுவ்ருத்தியின் க்ரஹணமில்லாமையால். அநுவ்ருத்தியானது அநேகவ்யக்திஸம்பந்தரூபமன்றோ. அதுவும் வ்யக்திகளில் ஸம்பந்தித்திருக்கிற பதார்த்தத்திற்கு முந்திய வ்யக்தியில் நிலைபெற்றிருத்தலின் பராமர்சத்தினாலேயே இரண்டாவது தொடக்கமான எல்லாவ்யக்திகளிலும் க்ரஹிக்கப்படுகிறது. ஆதலால் முதல் கோவ்யக்தியில் கோத்வத்தின் க்ரஹணமில்லாமையால் அதின் அந்வயபராமர்சமில்லாதது பற்றி இரண்டாவது வ்யக்திஸம்பந்தரூபமான அநுவ்ருத்தியானது இரண்டாவதிலும் க்ரஹிக்கமுடியாததென்பதினால், அதிலும் கோத்வம் க்ரஹிக்கப்பட்டதாக ஆகாது. இவ்வண்ணம் முதலாவது இரண்டாவது வ்யக்திகளில் அந்வயபராமர்சமில்லாவிடில் மூன்றாவதிலும் அநுவ்ருத்தியானது க்ரஹிக்கப்பட்டதாக ஆகாது. அதனால் கோத்வம் க்ரஹிக்கப்பட்டதன்று. இவ்வண்ணம் வேறு வ்யக்திகளிலுங்கூட கோத்வமானது எவ்விதத்தாலும் க்ரஹிக்கமுடியாததாக ஆகும். ஆகையால் ப்ரதமபிண்டக்ரஹணத்திலேயே கோத்வக்ரஹணம் ஒப்புக்கொள்ளத்தக்கது. இவ்வண்ணம்‡ ஸகலவிசேஷசூந்யவஸ்துக்ரஹணமானது

† ப்ரகாரம்—விசேஷணம், ப்ரகாரி-விசேஷ்யம்.

நிரஸிக்கப்பட்டது. ஜாதிமுதலியவைகளும் விசேஷ்யமும் தனித்தனியாக நிர்விகல்பகத்தில் க்ரஹிக்கப்படுகின்றன. ஸவிகல்பகத்திலேயே விசிஷ்டக்ரஹணமென்கிற பக்ஷமும் அர்த்தத்தினால் நிரஸிக்கப்பட்டதாக ஆகிறது.

விசேஷணமும் விசேஷ்யமும் தனித்தனியாக க்ரஹிக்கப்பட்டதென்று எவ்வாறு அறியப்பட்டது? தண்டம் குண்டலம் முதலியவைகளில் விசேஷணவிசேஷ்யங்கள் இரண்டுக்கும் தனித்தனியே க்ரஹணம் காணப்படுவதாலென்று கூறப்படுமேயானால்— அந்த விசேஷணவிசேஷ்யங்கள் இரண்டும் வேறுபடாமல் சேர்ந்திருக்கும் ஸமயத்தில் இரண்டுக்கும் தனித்து க்ரஹணமா? அல்லது வேறாக இருக்கும் ஸமயத்திலா? முதல் பக்ஷமானது ஸரியன்று, விசிஷ்டமாகவே க்ரஹணம் வருவதால். தனித்திருக்கும்வேளையிலோ விசிஷ்டக்ரஹணமே இல்லை என்பதனால் அதன் ப்ரதீதிக்கு ஹேதுத்வமில்லை— ஆதலால் தனித்தவஸ்துக்களின் க்ரஹணமானது விசிஷ்டக்ரஹணத்துக்கு ஹேதுவாகாததால் கோத்வம் முதலியதில் ப்ருதக் க்ரஹணத்திற்கு ப்ரஸக்தி இல்லை.

அய்யா! விசேஷண விசேஷ்யபாவமானது ப்ரதியோகியோடு கூடியதாதலால் அந்த ப்ரதியோகியின் ஜ்ஞாநத்திற்கு ப்ரதியோகி ஸ்வரூபஜ்ஞாநம் அபேக்ஷிதமென்பதனால் விசிஷ்டப்ரத்யக்ஷத்தில் ஜாதிமுதலிய பதார்த்தங்களின் ஸ்வரூபமாத்ரத்தின் ப்ரதமக்ரஹணம் ஏற்றுக்கொள்ளத்தக்கது எனில்சொல்லப்படுகிறது. ப்ரதியோகிஜ்ஞாநாபேக்ஷையாவது விசிஷ்டஜ்ஞாநத்தில் ப்ரதியோகியின் தவறுதோற்றமா? அல்லது அந்த ஜ்ஞாநத்திற்கு விசிஷ்டஜ்ஞாநஹேதுத்வமா? முதலாவதை ஒப்புக்கொள்ளுகிறோம். இரண்டாவதிலும் ஜாதிமுதலியபதார்த்தங்கள் முதலில் ஒன்றோடொன்று அநுவ்ருத்தியின்றி விலகினவைகளாக க்ரஹிக்கப்பட்டதா இல்லையா? இல்லை என்கில் வ்யாவ்ருத்தங்களல்லவென்று க்ரஹிக்கப்பட்டிருக்கிற முன்பின் ஜ்வாலைகளுக்குப்போல விசேஷணவிசேஷ்யபாவப்ரதியோகிதாப்ரதீதியானது பொருந்தாது. வ்யாவ்ருத்தங்களாக க்ரஹிக்கப்பட்டிருக்குமேயாகில் அப்பொழுது வ்யாவ்ருத்தியும் பாரதந்த்ர்யாதிரூபமான விசேஷணவிசேஷ்யபாவத்தாலாவது அதற்கு உபயுக்தமான வேறு ஆகாரத்தாலாவது இல்லாமல்போமேயாகில் விசேஷணவிசேஷ்யபாவவ்யத்யாஸப்ரதீதியானது ப்ரஸங்கிக்கும். வஸ்துஸாமர்த்யத்தினால் வாஸ்தவமாகவே விசேஷணவிசேஷ்யபாவம் அறியப்படுகிறதென்றால் அப்பொழுது வஸ்துஸாமர்த்தியமானது விசேஷணவிசேஷ்யபாவரூபமாகவாவது அதற்கு ஸாதகமான வேறு ஆகாரரூபமாகவாவது ஆகும். வஸ்துவினது ஸ்வபாவம் ஸத்தையினால் உபகாரகமெனில் வஸ்துஸ்வபாவத்தினாலேயே விசிஷ்டப்ரதீதி ஸம்பவிப்பதால் ஸ்வரூபமாத்ர க்ரஹணத்தைக்கல்பிப்பது உசிதமன்று. அறியப்படும் தன்மையினால் உபகாரகத்வம் சொல்லப்படுமேயாகில் அந்த ஸ்வபாவத்தால் விசேஷணம் வ்யாவ்ருத்தமென்று முந்தி ஜ்ஞாநம் ஏற்பட்டிருப்பதினால் முதலிலேயே விசிஷ்டப்ரதீதியானது ஒப்புக்கொள்ளப்பட்டதாக ஆகும். ஆதலால் த்ரவ்யத்திற்கே முதலில் விசிஷ்டப்ரதீதியை ஒப்புக்கொள்வது நலம்.

அந்த ஸ்வபாவத்திற்கும் தனக்கு விசேஷ்யபூதமான விசேஷணத்தைக்குறித்து விசேஷணத்வம் முன்பு அறியப்படவில்லை. பின்னை ஸ்வரூபம்மாத்ரம் அறியப்பட்டிருக்கிறதென்று சொல்லப்படுமேயாகில் அப்பொழுது விசேஷணம் அதின்ஸ்வபாவம் இரண்டுக்கும விசேஷண விசேஷ்ய பாவவ்யத்யாஸம் அறியப்படும். அதின் பரிஹாரத்திற்காக அந்தவஸ்துஸ்வபாவத்திற்கு வேறு ஆகாரத்தை ஒப்புக்கொண்டால்

‡ அநவஸ்தை வரும். வ்யத்யாஸ விசிஷ்டப்ரதீதியானது முதன்மையாக ப்ரஸங்கிக்கு மென்பதைப் பரிஹரிப்பதற்காக ஜாதிமுதலியவைகளின் ஸ்வரூபமே விசேஷணபாவ மும்விசேஷ்யபாவமும் ; வேறு ஆகாராந்தரமல்லவென்று ஒப்புக்கொள்ளப்படுமேயாகில் அப்பொழுது முதலாவதான ப்ரதிபத்தியானது விசேஷணமாகவும விசேஷ்யமாகவும் ஆகவேண்டியதாகும். அவைகளின் ப்ரதிபத்தி இல்லாவிடில் ஸ்வரூபத்திற்கு க்ரஹண மில்லாமல் போகுதல் ப்ரஸங்கிப்பதால் அப்படியே ப்ரதீதி ஏற்படுமென்றால் முதலி லேயே விசிஷ்டப்ரதீதி உண்டாகவேண்டியதாக ஆகும்; ஒரு ப்ரதீதியில் விசேஷண மாகவும் விசேஷ்யமாகவும் ஜாதி முதலியவைகள் அறியப்பட்டவைகளாக இருப்பதால். ஆகலால் முதலிலேயே ஒன்றை மற்றொன்று ப்ரதியோகியாகக்கொண்ட விசேஷண விசேஷ்யபாவப்ரதீதியானது ஸம்பவிக்கிறதென்று ஒப்புக்கொள்ளத்தக்கது. இவ்வண் ணம் விசிஷ்டக்ரஹணம்¶ப்ருதக் க்ரஹணபூர்வகமாகில் வெவ்வேறு ஸாமக்ரிகளால் அறி யத்தக்கவஸ்துக்களினது கோசரத்வம் உபாதியாக ஆகும். பக்ஷத்தைவிட வ்யவச்சே திக்கத்தக்க வேறுவஸ்து இல்லாமல் போனபோதிலும் கூறப்பட்டுள்ள தர்கபலத்தால் பக்ஷவ்யவச்சேதகத்வம் ஸித்திப்பதால் உபாதித்வம பொருந்தியுள்ளது. எவ்வாறு ப்ரத்வம்ஸாபாவத்திற்கு ஆதிமத்வஹேதுவினால் அந்தவத்த்வத்தை ஸாதிக்கும் விஷயத்தில் (அபாவாபாவம பாவரூபமாதலால்) பாவபதார்த்த ப்ரஸங்கரூபதர்கபலத் தால் பாவரூப ஆதிமத்த்வம் உபாதியாக ஆகிறதோ எவ்வாறு அக்நிமத்வஹேதுவினால் தூமாநுமானத்தில் அக்னியுள்ள எல்லா இடங்களிலும் தூமோபலம்ப ப்ரஸங்கதர்கபலத் தால் ஆர்த்ரேந்தனஸம்யோகமானது உபாதியாக ஆகிறதோ அவ்வாறு என்றபடி. ஆகையால் ப்ரதமபிண்டக்ரஹணத்திலேயே கோத்வம க்ரஹிக்கப்படுகிறது- த்வி தீயாதிகளில் அநுவ்ருத்திக்ரஹணம் ஒப்புக்கொள்ளத்தக்கது. ஆகையால் நிர்விகல்பகஸவிகல் பகங்கள் இரண்டும் கீழே நிரூபிக்கப்பட்டுள்ள ஸ்வரூபமுள்ளவைகளே.

அநுவ்ருத்தியின் ஜ்ஞாநாஜ்ஞாநங்களன்றோ ஸவிகல்பக நிர்விகல்பகங்களுக்குமுறை யேப்ரயோஜகங்களாகக் கூறப்பட்டன ஆகையால் எவ்வாறு த்விதீயாதிக்ரஹணத்திற்கு ஸவிகல்பகத்வம் என்று கேட்கில் சொல்லுகிறார்— அத: என்று. அத: - முதல் க்ரஹ ணத்திலேயே ஸம்ஸ்தானத்துடன் கூடியதாகவே வஸ்து க்ரஹிக்கப்படுகிறபடியால் அநுவ்ருத்திக்ரஹணமில்லாத ப்ரதமேதரக்ரஹணத்தில்எவ்வாறு ஸவிகல்பகத்வமென்றால் சொல்லுகிறார்—த்விதீயாதி என்று த்விதீயாதிபிண்டக்ரஹணேஷு—இரண்டாவது தொடக்கமான பிண்டக்ரஹணங்களில். இதனால் ஸம்ஸ்காரத்துடன் கூடின க்ரஹணம் ஸவிகல்பகம், மற்றது நிர்விகல்பகம், என்பது ஸித்தம். இதனால் ஜாதிமாத்ரத்தின் அநு வ்ருத்தியினாலேயே ஸவிகல்பகத்வம். ஜாதிகுணாதிகளில் ஏதாவது ஒன்றின் அநுவ்ருத்தி யுள்ளக்ரஹணமும் ஸவிகல்பகமென்று ஸித்தித்தது. ஸர்வவிதாநுவ்ருத்தி சூன்யமான க்ரஹணமே நிர்விகல்பகம். அதாது ஒரு வ்யக்தியில் ப்ரதமத்தில் இந்திரிய ஸன்னி பாதத்தாலுண்டாகும் ஜ்ஞாநம்.

அய்யா! ஒரு வ்யக்தியிலுங்கூட ஸம்ஸ்காரத்தால் உண்டாகிற தேசகாலாதிகளின் அநுவ்ருத்தியுடன் கூடின க்ரஹணம் ஸவிகல்பகமாக ஆகட்டும்—என்றால் ஸம்ஸ்கார ஜந்யத்வம் அநுவ்ருத்திகோசரத்வம் இரண்டும் ஸமானமாக இருப்பதால் ஆகவே

‡ அநவஸ்தை—வரம்பில்லாமல் போகுதல்.   ¶ ப்ருதக்—தனித்து.

§ ப்ரதமேதர—முதலாவதைவிட வேறாக இருக்கிற.

† ஸம்ஸ்காரம்—திடமாக மனதில் நிலைபெற்றிருக்கிற பூர்வாநுபவ வாஸனை.

ஆகலாம். ஏகஜாதீய த்ரவ்யங்களில் ப்ரதமபிண்ட க்ரஹணமென்கிற வசனமோ வெனில் ஜாதியின அநுவ்ருத்தியைக்காட்டுவதற்காக, ஸம்ஸ்தாநிபோலவும ஸமஸ்தாஸம் போலவும் என்று திருஷ்டாந்தத்தைக்காட்டினது ஸ்பஷ்டீகரணத்திற்காக, இரண்டு திருஷ்டாந்தங்களை எடுத்தது பிண்டதர்மம் ஸம்ஸ்தானம் அதின் தர்மம் அநுவ்ருத்தி எனகிற தர்மி தர்மபாவரூப ஸாம்யத்தை ஹேதுவாகக்கொண்டது. இவ்வண்ணம் விகல்பகநிர்விகல்பகங்களில் ஸம்ஸ்காரத்தின் உதவி, அதினது இன்மை, இரண்டும் ஸாமக்ரீவைஷம்யமென்றும, கோத்வம் முதலியவற்றின் அநுவ்ருத்தியும் அதினது அபாவமும் க்ராஹ்யாகாரவைஷம்யமென்றும் சொல்லப்பட்டதாக ஆகிறது. இரண்டுவிதமான ப்ரத்யக்ஷத்திற்கும் ஸவிசேஷவிஷயத்வத்தை நிகமனம செய்கிறார்— அத: என்று.

𑌅𑌤 𑌏𑌵 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌭𑌿𑌨𑍍𑌨𑌾𑌭𑌿𑌨𑍍𑌨𑌤𑍍𑌵𑌮𑌪𑌿 𑌨𑌿𑌰𑌸𑍍𑌤𑌮𑍍 । 𑌇𑌦𑌮𑌿𑌤𑍍𑌥𑌮𑌿𑌤𑌿 𑌪𑍍𑌰𑌤𑍀𑌤𑌾𑌵𑌿𑌦𑌮𑌿𑌤𑍍𑌥𑌂𑌭𑌾𑌵𑌯𑍋𑌰𑍈𑌕𑍍𑌯𑌂 𑌕𑌥𑌮𑌿𑌵 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍇𑌤𑍁𑌂 𑌶𑌕𑍍𑌯𑍇𑌤 । 𑌤𑌤𑍍𑌰𑍇𑌤𑍍𑌥𑌂𑌭𑌾𑌵𑌃 𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌨𑌵𑌿𑌶𑍇𑌷𑌃, 𑌤𑌦𑍍𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌂 𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌮𑌿𑌦𑌮𑌂𑌶 𑌇𑌤𑌿 𑌦𑍍𑌵𑌯𑍋𑌰𑍈𑌕𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌤𑍀𑌤𑌿𑌪𑌰𑌾𑌹𑌤𑌮𑍇𑌵 । 𑌤𑌥𑌾 𑌹𑌿 — 𑌪𑍍𑌰𑌥𑌮𑌮𑍇𑌵 𑌵𑌸𑍍𑌤𑍁 𑌪𑍍𑌰𑌤𑍀𑌯𑌮𑌾𑌨𑌂 𑌸𑌕𑌲𑍇𑌤𑌰𑌵𑍍𑌯𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑌮𑍇𑌵 𑌪𑍍𑌰𑌤𑍀𑌯𑍇𑌤𑍇 । 𑌵𑍍𑌯𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌶𑍍𑌚 𑌗𑍋𑌤𑍍𑌵𑌾𑌦𑌿𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌨𑌵𑌿𑌶𑍇𑌷𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌤𑌯𑍇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌤𑍀𑌤𑍇𑌃 । 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌵𑌿𑌶𑍇𑌷𑌣𑌵𑌿𑌶𑍇𑌷𑍍𑌯𑌭𑌾𑌵𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌤𑍍𑌤𑍌 𑌤𑌯𑍋𑌰𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌭𑍇𑌦𑌃 𑌪𑍍𑌰𑌤𑍀𑌤𑍍𑌯𑍈𑌵 𑌸𑍁𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌃 । 𑌤𑌤𑍍𑌰 𑌦𑌣𑍍𑌡𑌕𑍁𑌣𑍍𑌡𑌲𑌾𑌦𑌯𑌃 𑌪𑍃𑌥𑌕𑍍𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌨𑌸𑌂𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌃 𑌸𑍍𑌵𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌶𑍍𑌚 𑌕𑌦𑌾𑌚𑌿𑌤𑍍 𑌕𑍍𑌵𑌚𑌿𑌦𑍍𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑌰𑌵𑌿𑌶𑍇𑌷𑌣𑌤𑌯𑌾𑌵𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍𑌤𑍇 । 𑌗𑍋𑌤𑍍𑌵𑌾𑌦𑌯𑌸𑍍𑌤𑍁 𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌨𑌤𑌯𑍈𑌵 𑌪𑌦𑌾𑌰𑍍𑌥𑌭𑍂𑌤𑌾 𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌵𑌿𑌶𑍇𑌷𑌣𑌤𑌯𑌾𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌃 । 𑌉𑌭𑌯𑌤𑍍𑌰 𑌵𑌿𑌶𑍇𑌷𑌣𑌵𑌿𑌶𑍇𑌷𑍍𑌯𑌭𑌾𑌵𑌃 𑌸𑌮𑌾𑌨𑌃 । 𑌤𑌤 𑌏𑌵 𑌤𑌯𑍋𑌰𑍍𑌭𑍇𑌦𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌤𑍍𑌤𑌿𑌶𑍍𑌚 । 𑌅𑌯𑌂 𑌤𑍁 𑌵𑌿𑌶𑍇𑌷𑌃 — 𑌪𑍃𑌥𑌕𑍍𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌤𑍍𑌤𑌿𑌯𑍋𑌗𑍍𑌯𑌾 𑌦𑌣𑍍𑌡𑌾𑌦𑌯𑌃, 𑌗𑍋𑌤𑍍𑌵𑌾𑌦𑌯𑌸𑍍𑌤𑍁 𑌨𑌿𑌯𑌮𑍇𑌨 𑌤𑌦𑌨𑌾𑌶𑍍𑌰𑌯𑌾𑌃 — 𑌇𑌤𑌿 । 𑌅𑌤𑍋 𑌵𑌸𑍍𑌤𑍁𑌵𑌿𑌰𑍋𑌧𑌃 𑌪𑍍𑌰𑌤𑍀𑌤𑌿𑌪𑌰𑌾𑌹𑌤 𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌤𑍀𑌤𑌿𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌨𑌿𑌰𑍂𑌪𑌣𑌾𑌦𑍇𑌵𑍋𑌚𑍍𑌯𑌤𑍇 । 𑌪𑍍𑌰𑌤𑍀𑌤𑌿𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑍋 𑌹𑌿 𑌇𑌦𑌮𑌿𑌤𑍍𑌥𑌮𑌿𑌤𑍍𑌯𑍇𑌵 𑌸𑌰𑍍𑌵𑌜𑌨𑌸𑌿𑌦𑍍𑌧𑌃 । 𑌤𑌚𑍍𑌚 𑌸𑍂𑌤𑍍𑌰𑌕𑌾𑌰𑍇𑌣 "𑌨𑍈𑌕𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑌸𑌮𑍍𑌭𑌵𑌾𑌤𑍍" (𑌶𑌾-𑌸𑍂-௨-௨-௩௧) 𑌇𑌤𑌿 𑌸𑍂𑌤𑍍𑌰𑍇𑌣𑍈𑌵𑌾𑌪𑌾𑌕𑍃𑌤𑌮𑍍 ॥

ஶ்ரீபாஷ்யம்.—

அதினாலேயே எல்லா இடத்திலும் பின்னாபின்னத்வமும் நிரஸிக்கப்பட்டது. இதம் இத்தம் எனகிற ப்ரதீதியில் இதமித்தம்பாவமிரண்டுக்கும் ஐக்யம எவ்வாறு அறிவதற்குசக்யமாகும். அதில் "இத்தம்பாவம்" ஸம்ஸ்தா

ஸம்ஸ்தானவிசேஷம். அதற்கு விசேஷ்யத்ரவ்யம் "இதமம்சம்" என்பதனால் இவ்விரண்டுக்கும் ஐக்யம் ப்ரதீதியினால் பாதிக்கப்பட்டதே. இதை உபபாதிக்கிறார்— முதலிலேயே வஸ்து ப்ரதிபிம்பமாக ஆகும் தருணத்தில் ஸகலமான இதரவஸ்துக்களைக்காட்டிலும் பேதமுள்ளதாகவே அறியப்படுகிறது. வ்யாவ்ருத்தியும் கோத்வாதி ஸம்ஸ்தானவிசேஷத்தோடு கூடினதாக "இவ்வண்ணம்" என்று ப்ரதீதிவருவதால், நிச்சயிக்கப்படுகிறது. எல்லா இடத்திலும் விசேஷணவிசேஷ்யபாவப்ரதிபத்தியில், அவ்விரண்டுக்கும் அத்யந்தபேதமானது ப்ரதீதியினாலேயே மிகக ஸ்பஷ்டமாக இருக்கிறது. அதில் தண்டம் குண்டலம் முதலியவைகள் தனித்தனியான ஸம்ஸ்தானத்துடன் கூடியவைகளாகவும் தன்னிடத்திலேயே பர்யவஸாநமுள்ளவைகளாகவும் ஒரு ஸமயத்தில் ஓரிடத்தில் வேறு த்ரவ்யங்களுக்கு விசேஷணங்களாக இருக்கின்றன. கோத்வம் முதலியவைகளோவென்றால் த்ரவ்யங்களின் ஸம்ஸ்தானங்களாகவே பதார்த்தபூதங்களாக இருந்துகொண்டு த்ரவ்ய விசேஷணங்களாக நிற்கின்றன இரண்டு இடத்திலும் விசேஷணவிசேஷ்யபாவம் ஸமானம். அதனாலேயே அவ்விரண்டுக்கும் பேதப்ரதிபத்தியும் இவ்வளவுமாத்திரம் விசேஷம்.—தனித்து இருப்பை விஷயீகரிக்கிற ப்ரதிபத்திக்குயோக்யங்கள் தண்டாதிகள். கோத்வாதிகளோ தவிரமல் அப்படிப்பட்ட ப்ருதக்ஸ்திதிக்கு அநர்ஹங்கள் என்று. ஆதலால்வஸ்து விரோதமானது ப்ரதீதியினால் பாதிக்கப்பட்டதென்று ப்ரதீதி ப்ரகாரத்தின் மறுத்தலால் சொல்லப்படுகிறது. ப்ரதீதியின் ஸ்வபாவமோ இதம் இத்தமென்றே எல்லோருக்கும் ஸம்மதமாக இருக்கிறதன்றோ.

அப்படிப்பட்ட இங்க விஷயம் ஸூத்ரகாரரால் "நைகஸ்மிந்நஸம்பவாத்" என்று மிக்க வ்யக்தமாக உபபாதிக்கப்பட்டிருக்கிறது.

ச்ருதப்ரகாசிகை—

ப்ரஸ்தாவம் வந்தபடியால் பேதாபேதத்தை நிராகரிக்கிறார்— அத ஏவ என்று. அத ஏவ - ப்ரதமபிண்டக்ரஹணத்திற்கு விசிஷ்டவிஷயத்வத்தை ஸமர்த்தித்ததினால் ஸர்வத்ர - இரண்டுபிண்டஙகள் ஜாதிவ்யக்திகள் குணக்ரியைகள் அவைகளைப்போலவே கார்யகாரணங்கள் இவைகளில் என்று அர்த்தம். எவ்வாறு என்று கேட்கில் கூறுகிறார்— இதமித்தமிதி.

பேதாபேதவாதியினால் பிண்டங்களுக்கு அந்யோந்யம் பேதாபேதங்களை ஸமர்த்திப்பதில் "இது இதாக" ஆகாதென்பதினால் பேதம், "இது இதாக" ஆகிறதென்பதினால் ¶ அபேதமென்று, ஒன்றுக்கே ஒரேஸமயத்தில் பாவாபாவரூப வ்யாஹதியைப்பரிஹரிப்பதற்காக ஜாதிஸ்வரூபத்தால் அபேதம் வ்யக்திஸ்வரூபத்தால் பேதமென்கிற இப்படிப்பட்ட இரண்டு ஆகாரஙகளால் பேதாபேதம் உபபாதிக்கப்பட்டது. அபேதம்

¶ அபேதம்—ஐக்யம்.

ஜாதியை அடைந்துள்ளது. பேதம் வ்யக்தியை அடைந்துள்ளது என்று ஒரு வஸ்துவுக்கே இரண்டுவிதமான ஸ்வரூபமில்லை என்கிற சங்கையின் பரிஹாரத்திற்காக ஜாதி வ்யக்தி இரண்டுக்கும் அந்யோந்யம் பேதாபேதம் உரைக்கப்பட்டது அதை நிர்வஹிப்பதற்காக வேறு ஆகார ஸம்பந்தம் காணப்படாமையால் ப்ரதீதியே சரணமென்று ஆச்ரயிக்கப்பட்டது ஆதலால் அதை நிரஸிப்பதின்பொருட்டு முதலில் ஜாதிவ்யக்திகள் இரண்டும் வேறுபட்டவைகளென்றே ப்ரதீதிவருவதால் அபேதத்திற்கு ப்ரதீதி விரோதத்தைக்காட்டுகிறார்— இதமித்தம் என்று இதம்பாவம் விசேஷ்யம். இத்தம்பாவம் விசேஷணம், இத்தம் என்கிற அம்சம் எது? இதம் என்கிற அம்சம் எது ? எனில் கூறுகிறார்—தத்ர என்று

இந்த இடத்தில் ஜாதிவ்யக்திகளுக்கு பேதாபேதவிஷயத்தில் நான்கு ஹேதுக்கள் பிறர்களால் சொல்லப்பட்டன அவைகளாவன—முதலாவதான பிண்டத்தைக்ரஹிக்கும் ஸமயத்தில் ஜாதிவ்யக்திகளின் பேதத்தை க்ரஹியாமலிருத்தல். ஒரு சப்தத்தால் இரண்டையும் சேர்ந்தே அறிதல் *மத்வர்த்தீயமான ப்ரத்யயத்தை அபேக்ஷியாமல் ஸமாநாதிகரணபதங்களின் ப்ரயோகம், † ஸஹோபலம்ப நியமம். என— இவற்றுள் ஸஹோபலம்ப நியமம், $ ஸமாநாதிகரண ப்ரத்யயம், இந்தஇரண்டும் பேதாபேதஸாதகங்கள். மற்றவை இரண்டும் அபேதஸாதகங்கள். இந்த நான்கு ஹேதுக்களையும் ஆசங்கித்து கூறுகிறார்— ததாஹி என்று. அவைகளை மனதில் வைத்துக்கொண்டு ப்ரதம பிண்டக்ரஹணத்தில்அபேதக்ரஹணத்தை நிரஸிக்கிறார்—ப்ரதமம் இதுமுதலியதால் ஸகலேதரவ்யாவ்ருத்தம் —விஜாதீயங்களான எல்லாவஸ்துக்களினின்றும் வ்யாவ்ருத்திக்கப்பட்டது என்றுஅர்த்தம். அதினால் பேதக்ரஹணத்திற்கு என்னவென்று கேட்கில்கூறுகிறார்-வ்யாவ்ருத்திம்ச என்று. கோத்வம் முதலிய ஸம்ஸ்தான விசேஷத்தோடுகூடியதாக "இத்தம்" என்கிற ப்ரதீதிஉண்டாவதால், வ்யாவ்ருத்தியும் நிச்சயிக்கப்படுகிறதென்று அர்த்தம். இதனால் அகண்டவாக்யார்த்த பங்கமும் ஆர்த்திகமாக செய்யப்பட்டதாக ஆகிறது. இந்த இடத்தில் சௌக்ல்யாதிவைதர்ம்யமும் கருதப்பட்டிருப்பதினால் அதுவும் மூந்திகாண்பிக்கப்பட்டது. கோத்வாதி விசிஷ்டமாக ப்ரதீதி இருக்கட்டும் ஆயினும், அபேதமானது ஸ்வப்ரமாணத்தால் ப்ரஸங்கிக்குமேயானால் தடுக்கமுடியாதெனில் கூறுகிறார்— ஸர்வத்ர என்று. ஸர்வத்ர-கோத்வம் அதற்கு ஆச்ரயம் முதலியவைகளிலும், தண்டகுண்டலாதிகளிலும், தண்டதண்டிகள் இரண்டுக்கும்போல ஜாதிவ்யக்திகள் இரண்டுக்குங்கூட விசேஷண விசேஷ்யபாவமே அபேத விரோதி என்று அர்த்தம். விசேஷணவிசேஷ்யபர்வேதி- கோத்வம் வ்யக்தி இவ்விரண்டுக்கும் அநுவ்ருத்தி வ்யாவ்ருத்தி

---

* மத்வர்த்தீயப்ரத்யயங்களாவன—"ததஸ்யாஸ்த்யஸ்மின்னிதிமதுப்" இதுபாணினீ ஸூத்ரம். மதுப்ப்ரத்யயத்தை விதிக்கிறது. உதாஹரணம்-குணவாந், தீமான் புத்திமான் முதலியன இந்த மதுப்ப்ரத்யத்தினால் விதிக்கப்பட்ட அர்த்தம்போன்ற அர்த்தமுடைய ப்ரத்யயங்களெல்லாம் மத்வர்த்தீய ப்ரத்யயங்கள். அதாவது, இன், வின் டன், லச், வலச் மிந்,முதலியன—இந்த ப்ரத்யயங்களெல்லாம் எந்த ப்ரக்ருதிகளின்மீது வருகின்றனவோ அந்த ப்ரக்ருதிகளால் உணர்த்தப்பட்ட அர்த்தங்களை உடையவன் என்கிற அர்த்தத்தைக்காட்டுகின்றன.

† உபலம்பம்—அறிதல். நியமம்—தவறாமை.

$ ஸமாநாதிகரணங்கள்—பேதமின்றி ஒன்றோடொன்று அந்வயிக்கக்கூடிய ஒரே வேற்றுமையிலிருக்கிற பதங்கள்.

க்ரஹமில்லாவிடினும் விசேஷணவிசேஷ்யபாவரூபமான வேறு ஆகாரத்தால் பேதம் க்ரஹிக்கப்பட்டிருக்கிறது. ஒரு ஆகாரத்தினாலேயே பேதக்ரஹணமென்கிற நியமமில்லையென்று கருத்து. இரண்டு இடத்திலும் அத்யந்தபேதம் உளது என்றால் மத்வர்த்தீய ப்ரத்யயத்தை அபேக்ஷியாதஸாமாநாதிகரண்யமும், ஏகசப்தாநுவித்தப்ரத்யயமும், ஸஹோபலம்பநியமமும் எவ்வாறு ஒரு இடத்தில் காணப்படுகிறது, வேறு இடத்தில் காணப்படுகிறதில்லையே என்று கேட்கில் சொல்லுகிறார்—தத்ர என்று. தத்ர-கோத்வ கோத்வாச்ரய தண்டதண்ட்யாதிவர்கத்தில்.

ப்ருதக்ஸம்ஸ்தானவிசிஷ்டமாயும் தன்னிடத்திலேயே பர்யவஸாநமுள்ளதுமான வஸ்துவுக்கு, ஒருஸமயத்தில் ஸம்பவிக்கிற விசேஷணதாவமானது மத்வர்த்தீய ப்ரத்யயஸாபேக்ஷமான ஸாமாநாதிகரண்யப்ரத்யயத்தில் ப்ரயோஜகம். த்ரவ்யத்தின் ஸம்ஸ்தானமாகவே பதார்த்தமாக ஆகித்ரவ்யபர்யந்தபோதஜநகமாக இருப்பதால் த்ரவ்யத்திற்கு விசேஷணமாகவே இருத்தல், மத்வர்த்தீயப்ரத்யயத்தை அபேக்ஷியாத ஸாமாநாதிகரண்யத்தில் காரணம். ஸஹோபலம்பநியமத்திற்கும் அதின் அபாவத்திற்கும் § அப்ருதக்ஸித்தத்வ $ ப்ருதக்ஸித்தத்வங்களே ‡ ப்ரயோஜகங்களே தவிர்த்து பேதாபேதங்கள் ப்ரயோஜகங்களல்லவென்று அர்த்தம். ஸஹோபலம்பநியமத்தில் இரண்டுக்கே சேர்க்கை இருப்பதால் ஸஹோபலம்பமானது த்வித்வத்திற்கு ஸாதகம். அதின் நியமமோவென்றால் பின்னங்களாக இருக்கிற இரண்டுக்குள் ஒன்றிலுமில்லை என்கிற அஸாதாரணைகாந்திகத்வத்தால் இரண்டுக்கும் ஸாதகமல்ல. மேலும் விருத்தமே—த்வித்வத்திற்கு ஸாதகமான ஸஹோபலம்பநியமமல்லவோ த்வித்வத்தினுடைய நியமத்தைக்காண்பிக்கிறது. ஏகசப்தாநுவித்தப்ரத்யயமோ ‘ ஏகோ தண்ட ” இதுமுதலிய இடங்களில் வேறு தண்டிகளின் வ்யாவ்ருத்தி காணப்படுவதுபற்றி வேறுதர்மியின்நிஷேதத்தில் நோக்கமுள்ளதாக இருப்பதால் . தர்மதர்மிகளுக்கு அபேதஸாதகமல்லவென்று கருத்து. இப்படியானல், ஜாதிகுண்டலாதிகளுக்கு வைஷம்யம் வருகிறது. . விசேஷணவிசேஷ்யபாவஸாம்யத்தால் இரண்டிடத்திலும் பேதம் ஸாதிக்கப்படுமேயாகில், அப்பொழுது ஸஹோபலம்ப நியமாதி வைஷம்யம் வருவதால் ஏகத்வமும் உண்டாகலாம் எனில்; சொல்லுகிறார்— உ ப ய த் ர என்று. விசேஷணவிசேஷ்யபாவாதி விசேஷத்தால் அதினுண்டுபணணப்பட்டிருக்கிற பேதப்ரதிபத்தியானது தடுக்கமுடியாதது— விசேஷணவிசேஷ்யபாவமிருந்தால் பேதம அனைவர்களாலும் விவாதமின்றி ஒப்புக்கொள்ளப் பட்டிருப்பதால். ஸஹோபலம்ப நியமத்தில் ஐக்யமல்லவோ அஸம்மதம். அதனல் ஸம்ப்ரதிபன்னமான பேதத்திற்கு விரோதமான அபேதம் கல்பிக்கத்தக்கதல்ல. எவ்வாறு சீதத்வம உஷ்ணத்வம்முதலிய அவாந்தரவைஷம்யமானது த்ரவ்யத்வாதி ஸாதாரணகார விரோதியான அத்ரவ்யத்வகல்பகமன்றன்றே, இவ்வாறே ஸஹோபலம்பநியமமும் பேதவிரோதியான ஆகாரத்திற்கு கல்பகமல்லவென்று கருத்து. அன்றிக்கே, தனித்து இருக்கிறவைகளும் விசேஷணங்களாக இல்லாமலே இருப்பவைகளுமான தண்டாதிகளுக்கு ஒரு ஸமயத்தில் ஸஹபாவமாத்ரத்தினல் விசேஷணத்வமானது கல்பிதமென்பதுபற்றி அத்யந்த பின்னங்களில் விசேஷணத்வமில்லாமையால், விசேஷணத்வமானது அத்யந்தபேதஸாதநஸமர்த்தமல்ல வென்று சொல்லப்படுமேயாகில்; மறுமொழி உரைக்கிறார்— உபயத்ர என்று. வ்யாவ்ருத்தப்ரதீதியில் வ்யாவர்த்தகமாக

§ அப்ருதக்ஸித்தம்—இணை பிரியாமல் சேர்ந்தே இருக்கும் வஸ்து.
$ ப்ருதக்ஸித்தம்—தனித்திருக்கும் வஸ்து.
‡ ப்ரயோஜகங்கள்—ஹேதுக்கள்.

உபயோகப்படுத்துகிறது எதுவோ அது விசேஷணம். அந்த விசேஷணத்வமானது தண்டாதிகளிலும் முக்கியமென்பதுபற்றி விசேஷணமாதலால் அத்யந்தபேதம் யுக்தமென்று கருத்து.

கோத்வம் அதின் ஆச்ரயம் முதலியவைகளிலேயே ஸஹோபலம்பநியமம், வேறு இடத்திலில்லையென்கிற வ்யவஸ்தைஸித்திப்பதின்பொருட்டு ஐக்யம கல்பிக்கத்தக்கதென்று சொல்லப்படுமேயானால் அந்தவிஷயத்தில் கூறுகிறார்-இயாம்ஸ்து என்று. இவ்வளவே, அதிகம் கல்பிக்கவேண்டியதில்லை என்று அர்த்தம். ஸஹோபலம்பநியமவ்யவஸ்தைக்காக ஐக்யம் கல்பிக்கப்படுமேயாகில்; அது யுக்தமல்ல. அவ்விடத்திலேயே ஐக்யம்; வேறு இடத்திலில்லை என்கிற வ்யவஸ்தையின்பொருட்டு அர்த்தாந்தரகல்பனம் ப்ரஸங்கிப்பதால் ஐக்யம் அங்கே ஸ்வாபாவிகமாகில் அப்பொழுது ஸஹோபலம்பநியமமும் ஸ்வாபாவிகமாதலால் எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிற அர்த்தத்திற்கு விருத்தமான வேறு அர்த்தத்தைக் கல்பிக்கிற கௌரவமாச்ரயிக்கத்தக்கதில்லை என்று கருத்து. அன்றிக்கே, விசேஷணவிசேஷ்யபாவத்தால் ப்ரஸித்தமான பேதப்ரதிபத்தியானது எவ்வாறு இரண்டிடத்திலும் துல்யையோ, அவ்வாறே ஸஹோபலம்ப நியமமானது தண்டம் தேவதத்தன் முதலியவற்றிலும் உண்டாகவேண்டியதாகும். ஜாதி வ்யக்திகள் இரண்டுக்காவது அது இல்லாமல்போகவேண்டியதாகும் என்று சொல்லப்படுமேயாகில் கூறுகிறார்—இயாந் என்று. ஸாதாரணமான ஆகாரம் அங்கீகரிக்கப்பட்டவுடன் அவாந்தரபேதம் இழக்கத்தக்கதன்று என்பது அர்த்தம். கடத்தில் படத்தின் அபாவம பேதம் - அந்த இடத்தில் அதினுடைய ஸத்பாவம் அபேதம் என்கிற பாவாபாவவிரோதத்திற்கு "நஹித்ருஷ்டே அநுபபன்னம் நாம" என்கிற நியாயத்தால் ப்ரதிபராஹதியை ஆசங்கித்துச் சொல்லுகிறார்— அத: என்று. அத; - இவ்வண்ணம் பேதஸாமாநாதிகரண்யத்தால் அபேதத்திற்கு ப்ரதீதி இல்லாமையால், ப்ரதீதிப்ரகாரம் எவ்வாறு எனில் சொல்லுகிறார்— ப்ரதீதிப்ரகாரோஹி என்று. விசேஷணவிசேஷ்யங்கள் இரண்டுக்கும் ஐக்யமிருக்குமேயாகில், அப்பொழுது இரண்டிலொன்றே அறியப்படும். இரண்டுக்குள் ஒன்றுக்கு ப்ரதீதியாவது இருக்கட்டும். ஆயினும் ஐக்யமில்லை. எவ்வாறு முன்னனுபவிக்கப்பட்டிருக்கிற இரண்டுபுருஷர்களுக்குள் ஒருவன் பார்க்கப்பட்டால் புருஷர்கள் இருவருக்கும் ஐக்யமில்லையோ. அப்படி ஜாதி வ்யக்தி இரண்டுக்கும் ஸம்பந்த நியமமே ஐக்யம் என்று கூறப்படுமேயானால், பேதத்திற்கு ஸாதகமான ஸம்பந்த நியமமானது பேதநியதஸமபந்தத்தால் நியமிக்கத்தக்கதாக இருப்பதால், இரண்டு வஸ்துக்களுக்கன்றோ ஸம்பந்தம். அதின் நியமமே ஐக்யம் என்று கூறப்படுமேயானால் ஸம்பந்தஸ்வரூபத்திற்கு பங்கம் ப்ரஸங்கிக்கும். இவ்வண்ணம் பேதாபேதநிராஸம் ஸூத்ரகாரருக்கு அபிமதமென்று சொல்லுகிறார்— த தே த த் என்று.

𑌅𑌤𑌃 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌸𑍍𑌯 𑌸𑌵𑌿𑌶𑍇𑌷𑌵𑌿𑌷𑌯𑌤𑍍𑌵𑍇𑌨 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌾𑌦𑌿𑌦𑍃𑌷𑍍𑌟𑌸𑌮𑍍𑌬𑌨𑍍𑌧𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌵𑌿𑌷𑌯𑌤𑍍𑌵𑌾𑌦𑌨𑍁𑌮𑌾𑌨𑌮𑌪𑌿 𑌸𑌵𑌿𑌶𑍇𑌷𑌵𑌿𑌷𑌯𑌮𑍇𑌵 । 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌸𑌙𑍍𑌖𑍍𑌯𑌾𑌵𑌿𑌵𑌾𑌦𑍇𑌽𑌪𑌿 𑌸𑌰𑍍𑌵𑌾𑌭𑍍𑌯𑍁𑌪𑌗𑌤𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌾𑌨𑌾𑌮𑌯𑌮𑍇𑌵 𑌵𑌿𑌷𑌯 𑌇𑌤𑌿 𑌨 𑌕𑍇𑌨𑌾𑌪𑌿 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑍇𑌨 𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌶𑍇𑌷𑌵𑌸𑍍𑌤𑍁𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌃। 𑌵𑌸𑍍𑌤𑍁𑌗𑌤𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌵𑌿𑌶𑍇𑌷𑍈𑌰𑍇𑌵 𑌵𑌸𑍍𑌤𑍁 𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌶𑍇𑌷𑌮𑌿𑌤𑌿 𑌵𑌦𑌨𑍍 𑌜𑌨𑌨𑍀𑌵𑌨𑍍𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌵𑌪𑍍𑌰𑌤𑌿𑌜𑍍𑌞𑌾𑌯𑌾𑌮𑌿𑌵 𑌸𑍍𑌵𑌵𑌾𑌗𑍍𑌵𑌿𑌰𑍋𑌧𑌮𑌪𑌿 𑌨 𑌜𑌾𑌨𑌾𑌤𑌿 ॥

ஸ்ரீபாஷ்யம்—

ஆகையால் ப்ரத்யக்ஷம் ஸவிசேஷவிஷயமுள்ளதாதலால், அநுமானமும் ப்ரத்யக்ஷம் முதலியவற்ருல் காணப்பட்டிருக்கிற ஸம்பந்தத்தோடுகூடின விஷயமுள்ளதாக இருப்பதால் ஸவிசேஷ விஷயமுள்ளதே.

ப்ரமாணஸங்க்யையில் விவாதமிருந்தபோதிலும் எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிற ப்ரமாணங்களுக்கு இதுவே விஷயமென்று (நிச்சயிக்கப்பட்டிருப்பதால்) ஒரு ப்ரமாணத்தாலும் நிர்விசேஷவஸ்து ஸித்தியாது. வஸ்துவை அடைந்திருக்கிற ஸ்வபாவவிசேஷங்களால் அதே வஸ்து நிர்விசேஷமென்று சொல்பவன், தன் தாயார் மலடி என்கிற ப்ரதிஜ்ஞையில் போல தன்சொல்விரோதத்தையும் அறிகிறனில்லை.

ச்ருதப்ரகாசிகை—

பிறகு இதர ப்ரமாணங்களெல்லாம் ப்ரத்யக்ஷ மூலமாக இருப்பதால் அவைகளுக்கும் ஸவிசேஷ விஷயத்வத்தைக்கூறுகிறர்— அத: என்று. ப்ரத்யக்ஷாதிகளால் கண்டறிப்பட்டிருக்கிற தூமாதிஸம்பந்தத்துடன் கூடின அக்நி முதலியவைகளை விஷயமாகக்கொண்டிருப்பதால் என்று அர்த்தம். தனக்குஅபிமதமான மூன்று ப்ரமாணங்களும் உரைக்கப்பட்டன, வேறு ப்ரமாணங்களை ஒப்புக்கொண்டபோதிலும்அவைகளுக்கு ஸவிசேஷவிஷயத்வத்தைக் கூறுகிறர்— ப்ரமாணஸங்க்யா இது முதலியதால். ப்ரமாணங்கள் ஸவிசேஷ விஷயங்களாக இருக்கலாம்; அவைகள் தர்க்கங்களால் பாதிக்கப்பட்டவைகளென்று சங்கைவரின், எல்லாப்ரமாணங்களுக்கும் ஸவிசேஷவிஷயத்வத்தை ஸவிஸ்தாரமாகச் சொல்லும் இந்த ஸமயத்தில்கூட மூர்த்தி அவற்றின் ஸங்க்ரஹோக்தியைப்போல புத்திஸ்தமான ஸ்வஸித்திவாதத்திலும் நிர்விசேஷத்வஸித்தி இல்லை என்பதை ஜ்ஞாபிப்பதற்காக ஸவிசேஷத்வத்திற்கு பாதகமாக அந்யனால் சொல்லப்பட்ட யுக்தியை ஒப்புக்கொண்டபோதிலும் யுக்திரூபவிசேஷங்களால் ஸவிசேஷத்வம் விலக்கத்தகாதது என்று முற்கூறப்பட்டதை ஸ்மரிக்கச்செய்துகொண்டுவிரோதத்தைக்காண்பிக்கிறர்—வஸ்துகத என்று. அன்றிக்கே, மூர்த்தி ஸ்வாநுபவஸித்தமான விசிஷ்டத்தில் நிர்விசேஷத்வ நிஷ்கர்ஷமானது. நிஷ்கர்ஷகர்களால் ஸவிசேஷத்வம் ஆபாதனஞ்செய்யப்பட்டபடியால் தூஷிக்கப்பட்டது; அவை அனைத்தையும் ப்ரமாண நிர்விசேஷ விஷயத்வ நிஷ்கர்ஷத்திலும் அதிதேசிக்கிறர்—வஸ்துகத என்று.

𑌯𑌤𑍍𑌤𑍁 — 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌂 𑌸𑌨𑍍𑌮𑌾𑌤𑍍𑌰𑌗𑍍𑌰𑌾𑌹𑌿𑌤𑍍𑌵𑍇𑌨 𑌨 𑌭𑍇𑌦𑌵𑌿𑌷𑌯𑌮𑍍,
𑌭𑍇𑌦𑌸𑍍𑌯 𑌵𑌿𑌕𑌲𑍍𑌪𑌾𑌸𑌹𑌤𑍍𑌵𑌾𑌨𑍍𑌨𑌿𑌰𑌸𑍍𑌤𑌃 — 𑌇𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌮𑍍 । 𑌤𑌦𑌪𑌿 𑌜𑌾
𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌸𑍍𑌯𑍈𑌵 𑌵𑌸𑍍𑌤𑍁𑌨𑌃 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌵𑌿𑌷𑌯𑌤𑍍𑌵𑌾𑌜𑍍𑌜𑌾𑌤𑍍𑌯𑌾𑌦𑍇𑌰𑍇𑌵
𑌪𑍍𑌰𑌤𑌿𑌯𑍋𑌗𑍍𑌯𑌪𑍇𑌕𑍍𑌷𑌯𑌾 𑌵𑌸𑍍𑌤𑍁𑌨𑌃 𑌸𑍍𑌵𑌸𑍍𑌯 𑌚 𑌭𑍇𑌦𑌵𑍍𑌯𑌵𑌹𑌾𑌰𑌹𑍇𑌤𑍁-
𑌤𑍍𑌵𑌾𑌚𑍍𑌚 𑌉𑌪𑌪𑌾𑌦𑌿𑌤𑌮𑍍 । 𑌸𑌂𑌵𑍇𑌦𑌨𑌵𑌦𑍍𑌬𑍋𑌧𑌵𑌚𑍍𑌚 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯

𑌵𑌹𑌾𑌰𑌵𑌿𑌶𑍇𑌷𑌹𑍇𑌤𑍋𑌃 𑌸𑍍𑌵𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑌪𑌿 𑌤𑌦𑍍𑌵𑍍𑌯𑌵𑌹𑌾𑌰𑌹𑍇𑌤𑍁𑌤𑍍𑌵𑌂 𑌯𑍁𑌷𑍍𑌮𑌾𑌭𑌿𑌰𑌭𑍍𑌯𑍁𑌪𑍇𑌤𑌂 𑌭𑍇𑌦𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌸𑌂𑌭𑌵𑌤𑍍𑌯𑍇𑌵 । 𑌅𑌤𑍋 𑌨𑌾𑌨𑌵𑌸𑍍𑌥𑌾 𑌨𑌾𑌨𑍍𑌯𑍋𑌨𑍍𑌯𑌾𑌶𑍍𑌰𑌯𑌣𑌂 । 𑌏𑌕𑌕𑍍𑌷𑌣𑌵𑌰𑍍𑌤𑌿𑌤𑍍𑌵𑍇𑌽𑌪𑌿 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍍𑌯 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑍇𑌵 𑌕𑍍𑌷𑌣𑍇 𑌵𑌸𑍍𑌤𑍁𑌭𑍇𑌦𑌰𑍂𑌪𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌨𑌰𑍂𑌪𑌗𑍋𑌤𑍍𑌵𑌾𑌦𑍇𑌰𑍍𑌗𑍃𑌹𑍀𑌤𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌕𑍍𑌷𑌣𑌾𑌨𑍍𑌤𑌰𑌗𑍍𑌰𑌾𑌹𑍍𑌯𑌂 𑌨 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌦𑌿𑌹 𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑌿 ॥

ஸ்ரீபாஷ்யம்.—

ப்ரத்யக்ஷம் ஸந்மாத்ரத்தை க்ரஹிக்கிற ஸ்வபாவமுள்ளதாக இருப்பதால் பேதத்தை விஷயீகரிக்கிறதில்லை; பேதமும் விகல்பத்தை ஸஹியாமலிருப்பதால் எவ்விதத்தாலும் நிரூபிக்கமுடியாதது என்று எது உரைக்கப்பட்டதோ, அதுவும்; ஜாதி முதலியவைகளோடு கூடினதாகவே இருக்கிற வஸ்துவானது ப்ரத்யக்ஷவிஷயமாக ஆவதால் ஜாதிமுதலியதே ப்ரதியோகியை அபேக்ஷித்துக்கொண்டு வஸ்துவுக்கும் தனக்கும் பேதவ்யவஹாரஹேதுவாக இருப்பதால் தூரத்தில் ஓட்டப்பட்டது. ஸம்வேதனம் போலவும் ரூபம் முதலியதுபோலவும் தன்னை ஒழிய வேறுவஸ்துவினிடத்தில் வ்யவஹார விசேஷத்திற்கு ஹேதுவாக இருக்கிற ஒரு வஸ்துவுக்கு தன்னிடத்திலும் அப்படிப்பட்ட வ்யவஹாரத்திற்கு ஹேதுத்வம் உண்டென்பது உங்களாலும் ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறது. அது பேதத்திற்கும் நிச்சயமாக ஸம்பவிக்கிறது அதனாலேதான் அநவஸ்தைபாவது அந்யோந்யாச்ரயமாவது இல்லை. ப்ரத்யக்ஷஜ்ஞாநம் ஒருக்ஷணமிருக்கிறதாக இருந்தபோதிலும் அதே க்ஷணத்தில் வஸ்துபேதரூபமான அதின் ஸம்ஸ்தானஸ்வரூபமான கோத்வாதிகள் க்ரஹிக்கப்படுவதால் வேறுக்ஷணத்தில் க்ரஹிக்கத்தக்க தொன்று மிங்கு இல்லை.

சீருதப்ரகாசிகை.—

இவ்வண்ணம் நிர்விசேஷஸிந்மாத்ரத்திற்கு பாரமார்த்யம் மற்றவைகளுக்கு அபாரமார்த்யம் என்கிற ப்ரதிஜ்ஞா பாதமானது ஸாமாந்யமாக ஸர்வப்ரமாண ஸவிசேஷகோசரத்வத்தால் காண்பிக்கப்பட்டது. பிறகு அன்யனுல் கூறப்பட்ட ப்ரமாணதர்க ஸமுதாயத்தைவிசேஷித்து தூஷிப்பதற்குத்தொடங்குகிறார். சாஸ்திரத்திற்கு பலீயஸ்தவத்தை விரும்புகிற அன்யனுல் முதலில் சாஸ்திரம் உபந்யஸிக்கப்பட்டது. அதை விரும்பாதவனும் ப்ரத்யக்ஷத்திற்குஅவிருத்தமான அர்த்தத்தில் சாஸ்திரத்தைப்ரமாணமாக ஒப்புக்கொள்ளுகிறவனுமானவித்தாந்தியினுல் ப்ரத்யக்ஷத்திற்கு ஸந்மாத்ரவிஷயத்வம் நிராகரிக்கப்படுகிறது. அதில் ப்ரத்யக்ஷம் ஸந்மாத்ரத்தை விஷயீகரிக்கிறதென்பதிலும் பேதம் எவ்விதத்தாலும் நிரூபிக்கமுடியாதது என்பதிலும், பூர்வபக்ஷியினுல் சொல்லப்பட்ட குதர்கத்தை அநுவதித்து நிரஸிக்கிறார்—யத்து என்று. 'யதது' இதுமுதலிய இரண்டுக்ரந்தங்களால் ப்ரமாணுநுபபத்தி ப்ரமேயாநுபபத்தி இவைகள் அநுவதிக்கப்படுகின்றன. தத்யீதி. ஸவிசே

ஸவிஷயத்வோப *பாதகம் மாத்ரமல்ல; நிர்விசேஷவிஷயத்வோபபாதகாநுபபத்தியும் என்பது அபிசப்தத்தின் பாவம். அன்றிக்கே பின்ன விஷயத்வம் மாத்திரம் ஸ்தாபிக்கப் பட்டதென்பதில்லை, ஸந்மாத்ர விஷயத்வமும் தூரத்தில் தள்ளப்பட்டதென்பது அபிசப்தத்தின் அர்த்தம். ஜாத்யாதேரேவேதி—ஸ்வபரநிர்வாஹகமாக இருப்பதால், வ்யாவ்ருத்திரூபதர்மாந்தரத்தை அபேக்ஷியாமலும் ப்ரதியோகியை அபேக்ஷியாமலே இருப்பதுமான என்று கருத்து. தூரோத்ஸாரிதம் ப்ரதியோகியின் ஸ்மரணத்தினால் உண்டான விளம்பமிருந்தபோதிலும் ஜ்ஞானத்திற்கு கார்யஸித்திவரையில் ஸத்த்வம் கல் பிக்கத்தக்கது; அப்படி இருந்தபோதிலும் ப்ரதியோகியை அபேக்ஷியாத ஜாதிமுதலிய வைகளே பேதமாதலால் ப்ரத்யக்ஷம் ஒருக்ஷணமிருந்தபோதிலுங்கூட அதனால் பேத மானது ஸ்வரூபமாக க்ரஹிக்கப்படுவதால் தூரத்தில் ஓட்டப்பட்டதென்று கருத்து. "ஜாத்யாதேரேவ" என்பதனால் அபிப்ராயப்பட்டிருக்கிற பேதத்தின் ஸ்வபரநிர் வாஹகத்வத்தை, அந்யனால் சொல்லப்பட்டிருக்கிற யுக்தியினாலேயே காண்பிக்கிறார்— ஸம்வேதநவத் இது முதலியதால், "ஸம்வேதநவத், ரூபாதிவச்ச" என்கிற இந்த பதங்களால் அன்யனால் சொல்லப்பட்டிருக்கிற ‖பக்ஷஸபக்ஷங்கள் இரண்டும் §ஸபக்ஷங் களாக்கப்பட்டன. இதனால் பரோக்த தூஷணம் பரிஹரிக்கப்பட்டதென்பதைக் காண் பிக்கிறார்—அத ஏவ என்று. இந்த இடத்தில் ப்ரதம சசப்தத்திற்கு ஸ்வபரநிர்வாஹக த்வத்தை உபபாதித்ததினால் தூஷணபரிஹாரமும் ஸித்தமென்று கருத்து. இரண்டா வது சசப்தம் தூஷணத்வயஸமுச்சயத்தில். அநவஸ்தைக்குப் பரிஹாரம் ஸித்தித்தால் அநவஸ்தாபரிஹார ப்ரயோஜநமான ஸ்வபரநிர்வாஹகத்வம் ஸித்திக்கிறது. அந்த அந வஸ்தாபரிஹாரத்தை ப்ரயோஜநமாகக்கொண்ட ஸ்வபரநிர்வாஹகத்வம் ஸித்தித்தால் அநவஸ்தா பரிஹாரமென்று அந்யோந்யாச்ரயம் என்று கூறப்படுமேயானால், அல்ல. ப்ரமநிவ்ருத்தியின் அந்வய வ்யதிரேகங்களாலேயே ஸ்வபரநிர்வாஹகத்வம் ஸித்திப்ப தால் அநவஸ்தைக்கு பரிஹாரம் ஏற்படுகிறது. ப்ரத்யக்ஷஜ்ஞானம் மூன்று நான்குக்ஷண காலமாத்ரமிருப்புள்ளதாக இருந்தபோதிலுங்கூட ஒருக்ஷணம் இருத்தலை அங்கீகரித்து பரிஹரிக்கிறார்— ஏகக்ஷணவர்த்திந்யேவேதி என்று.

இந்த இடத்தில் இது அநுஸந்திக்கத்தக்கது. ப்ரதீதியானது அங்கீகரிக்கப் படவில்லையா? அன்றிக்கே, அங்கீகரித்தபோதிலும் மூலமில்லையா? அல்லது மூலம் எவ்விதத்தாலும் நிரூபிக்கமுடியாததா? அல்லது விஷயம் இல்லையா? அல்லது இருந்தும் நிரூபிக்கமுடியாததாக இருக்கிறதா? என்றும். அவற்றுள் முதலில் ப்ரதீதியின் அநங்கீகாரம் உபபன்னமாகிறதில்லை. வேதாந்தங்களுக்கு அநாரம்பணீயத்வம் ப்ரஸங்கிப்பதால் வாதிப்ரதிவாதிகளாக இருந்து வ்யவஹரிக்கிற வர்களுடைய கதைக்கு அநுபபத்திவருவதாலும் மூலமும் இருக்கிறது. கார்யம் விவாதமின்றி உபயவாதிகளாலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கலால் காரணம் கல்பிக் கத்தக்கது. அறியப்பட்டிருக்கிற கார்யமல்லவோ காரணகல்பனையில் ப்ரமாணம். வ்யக்தமாக நிச்சயிக்கப்பட்டிருக்கிற கார்யமானது, காரண நிரூபணத்திற்காக அபலாபம் செய்யத்தக்கதாக ஆகாதென்று நீதியை அறிந்தவர்களின் அபிப்ராயம். எவ்விதத்தாலும்

* பாதகம்—ஸாத்யாபாவமுள்ளபக்ஷம். ப்ரதீதியினால் ப்ரமவிபர்யயஸம்சயங்களுக்கு பாதம் என்று சொல்லுகிற இடங்களில் பாதசப்தத்திற்கு நிவ்ருத்தி என்று அர்த்தம்.

‖ பக்ஷம்—ஸந்தேஹாஸ்பதமான ஸாத்யமுள்ளது.

§ ஸபக்ஷம்—நிச்சிதமான ஸாத்யமுள்ளது,

நிரூபிக்கமுடியாத தன்மையும் இல்லை. காரணத்திற்கு ஸுலபமாக நிரூபிக்கத்தக்க தன்மை கார்யோத்பத்திக்கு அநுரூபமாக இருத்தலன்றோ. கார்யோத்பத்தியினால் காரணத்திற்கு கார்யாநுரூபத்வம் ஸித்தம்; ஆதலால் துர்நிரூபத்வமில்லை. விஷயமும் இருக்கவே இருக்கிறது. விஷயமில்லாவிடில் அப்பொழுது அவனால் வினவப்பட்ட உன்னாலேயே சொல்லத்தக்கது. ப்ரபஞ்சம் பாத்யம் என்கிற ஜ்ஞாநம், விஷயமுள்ளதா அல்லது விஷயமில்லாததா? என்று. ஸவிஷயமாக ஜ்ஞாநத்தை ஒப்புக்கொண்டால் விஷயம் அங்கீகரிக்கப்பட்டதே. இல்லை என்றால் பாத்யத்வமும் இல்லை என்பதினால் ப்ரபஞ்சத்திற்கு பாரமார்த்த்யம் ஸம்பவிக்கும். ஆகையால் விஷயம் இருக்கவே இருக்கிறது. பாத்ய விஷயத்வம் சொல்லக்கூடாது. அங்ஙனம் சொல்லும்பக்ஷத்தில், பேதத்திற்கு பாதகமானப்ரமாணத்தாலுண்டாகிற ப்ரதீதியும் மித்யாவிஷயமாதலால் பேதத்திற்கு பாரமார்த்த்யம் ப்ரஸங்கிக்கும். இவர்களைக்குறித்துச் சொல்லுகிறார்கள்— ஸ்வசாஸ்த்ர நிர்ணயே ஸத்யே ஸத்யாஸ்ஸ்யுர்லோக நிர்ணயா: । (தன்சாஸ்திர நிர்ணயம் ஸத்யமாகில் லோகநிர்ணயங்கள் ஸத்யங்களாக ஆகும்) என்று.

சொல்லப்பட்டிருக்கிற விகல்பங்களுக்குள் முந்திய நான்கு பக்ஷங்கள், அபிச என்று தொடங்கி சொல்லப்போகிற பாஷ்யத்தினால் அபிப்ராயப்படப்பட்டிருக்கின்றனவென்பதினால், அவைகளின் நிராஸம் அங்கு அறியப்படப்போகிறது. இவ்விடத்தில், ப்ரதானமாக இருப்பதால் முதலில் ஐந்தாவதான பாத்யவிஷயத்வ பக்ஷத்தை பரிஹரிக்க எண்ணங்கொண்ட பாஷ்யகாரரால் ப்ரத்யக்ஷபாதம் காணப்படவில்லை, ஆனதுபற்றி யுக்தியடியாகவந்த பாதம் பரிஹரிக்கப்படுகிறது. அதில்ப்ரதியோகியை அபேக்ஷியாத ஜாதிமுதலியதே பேதமாதலால் அந்த ஜாத்யாதி விசிஷ்ட விஷயமாக க்ஷணாந்தரத்தில் க்ராஹ்யமில்லாமையால் க்ரமயௌகபத்ய விகல்பாயோகரூபையான ப்ரமாணாநுபபத்தி பரிஹரிக்கப்பட்டது இவ்வண்ணம் ப்ரமேயாநுபபத்தியில் ஸ்வரூபபக்ஷத்தில் ப்ரதியோகி நிரபேக்ஷ பேதவ்யவஹார ப்ரஸக்தியும் இஷ்டமாகஇருப்பதால் பரிஹரிக்கப்பட்டது; ஹாநோபாதாநாதிரூபமாயும் கோத்வம் முதலிய சப்தத்தை அவலம்பித்திருக்கிறதுமான வ்யவஹாரத்திற்கும் ப்ரதீதிக்கும் ப்ரதியோகியின் அபேக்ஷை இல்லாமையால், சாப்தமான வ்யவஹார விசேஷத்தில் ப்ரதியோகி ஸாபேக்ஷத்வமானது, தாரா: களத்ரம் * ஆப: ''இதுமுதலிய இடங்களில் ஸ்த்ரீத்வம், நபும்ஸகத்வம், பஹுத்வம், முதலியவைபோல சப்தஸ்வபாவத்தைச் சார்ந்திருப்பதால் அர்த்த தூஷணமாகாது. வ்யாவ்ருத்தாதி சப்தப்ரயோகங்களிலேயே ப்ரதியோகியினது அபேக்ஷை காணப்படுவதால். கோத்வம் முதலியவற்றின் ப்ரதீதி வ்யவஹாரங்களில் அது இல்லாமையால் சாப்தவ்யவஹாரவிசேஷத்திற்கு ப்ரதியோகியை அபேக்ஷித்திருத்தல் சப்த விசேஷஸ்வபாவாதீநமென்று அன்வய வ்யதிரேகங்களால் நிச்சயிக்கப்படுகிறது. சப்தஸ்வபாவமானது ப்ரவ்ருத்தி நிமித்தம் ஸாதாரணமாக இருப்பதால் அதற்கு அவச்சேதகமான உபாதியை முன்னிட்டுக்கொண்டு அர்த்த விசேஷ ப்ரதீதிக்கு ஹேதுவாக இருக்கிறது. அஸாதாரணமான கோத்வ சப்தமோ கோத்வத்தை ஸ்வரூபத்தால் காண்பிக்கிறது. பேதசப்தமோ வ்யாவ்ருத்தி புத்திஹேதுத்வரூபமான ப்ரவ்ருத்தி நிமித்த ஸாதாரண்யத்தினால் அதற்கு அவச்சேதகமான மஹிஷம் முதலிய வேறுபதார்த்த ரூபமான உபாதியை முன்னிட்டு கோத்வத்தைக் காண்பிக்கிறது. பர்யாயத்வ ப்ரஸக்தியும் பரிஹரிக்கப்பட்டதாக ஆகிறது. வ்யாவ்ருத்திரூபமான பரப்ரஹ்மத்தினிடத்தில் ப்ரஹ்ம

* ஆப:—ஜலம்,

சப்தத்தோடுகூட ஸ்வரூபசப்தத்தைப்போல அதிகார்த்தத்திற்கு விவக்ஷை இல்லாதிருந்தபோதிலுங்கூட பின்னசப்தத்திற்கு ப்ரயோகம் ஸம்பவிப்பதால் உபாதி. சப்தங்கள் $ வாச்யத்தைக்காட்டிலும் வேறாக இல்லாமலிருந்தபோதிலும் தடஸ்தோபாதி பேதத்தினால் அவைகளுக்கு அபர்யாயத்வம் உபபன்னமாகிறது. அதில் ப்ரயோகாப்ரயோகங்கள் இச்சாவிதங்கள். பேதத்திற்கு வ்யாவ்ருத்யநுவ்ருத்தி விகல்பமும் பரிஹரிக்கப்பட்டது. வ்யாவ்ருத்தமென்று ஒப்புக்கொள்ளப்பட்டால், ஸ்வரூபவ்யாவ்ருத்த சப்தங்களைப்போல பேத சப்தத்திற்கு அநுவ்ருத்த ப்ரயோகம் ஸம்பவிப்பதால் பேதஸம்பந்தமுள்ளது பின்னமன்றோ என்கிற இதுவும், ஸ்வரூபத்துக்கே ஜாத்யாதிபேத விசிஷ்டத்வமிருப்பது பற்றி பின்ன சப்தப்ரயோகம் ஸம்பவிப்பதால் பரிஹரிக்கப்பட்டது. தர்மபூதமான ஜாத்யாதிகளில் பின்ன: என்கிற ப்ரயோகமானது உன்னுடைய மதத்தில் வ்யாவ்ருத்திரூபமான ப்ரஹ்மத்தினிடத்தில் வ்யாவ்ருத்த சப்தம்போல் ஔபசாரிகம் வேறு தர்மங்களில்லாவிடினும் அதின்ஸம்பந்தகார்யமான வ்யாவ்ருத்தி புத்திக்கு ஹேதுவாக இருப்பதால் தர்மபக்ஷத்தில் அநவஸ்தையும் அந்யோந்யாச்ரயணமும் பரிஹரிக்கப்பட்டன— ப்ரதியோகி நிரபேக்ஷமான ஜாதிமுதலியதே பேதமாக இருப்பதாலும் அதற்கே ஸ்வபர நிர்வாஹகத்வம் அங்கீகரிக்கப்படுவதாலும்.

அவித்யையைக்காட்டிலும் ப்ரஹ்மத்துக்கு பேதமிருக்கிறதா? இல்லையா? இல்லையாகில் ப்ரஹ்மத்திற்கு ஜடத்வம் முதலியது ப்ரஸங்கிக்கும். இருக்கிறதானால் அந்த பேதம் ஸ்வரூபமா, தர்மமா என்கிற விகல்பத்தில் தூஷண பரிஹாரஸாம்யம் காணத்தக்கது. மேலும் ஸ்வரூபதர்ம விகல்பதூஷண பரிஹாரங்கள் அபேதத்திலும் துல்யங்கள் அபேதமானது ஸ்வரூபமாகில் ப்ரதியோகியை அபேக்ஷியாத அபேத வ்யவஹாரம் ப்ரஸங்கிக்கும். பரமாத்மநாபவத்யபேதீ கடத்வம்ஸேகடாகாசோ நபிந்நோ நபஸாயதா ॥ (பரமாத்வாவோடு பேதமில்லாதவனாக ஆகிறான்—குடமுடைந்துபோனால் குடத்திலிருந்த ஆகாயமானது ஆகாயத்தோடு எவ்வாறு அபின்னமாக ஆகிறதோ) இது முதலிய இடங்களில் அபேதமானது ப்ரதியோகியுடன் கூடியதென்றல்லவோ தீர்மானிக்கப்படுகிறது. ப்ரஹ்ம, அத்விதீயம், இது முதலிய பதங்கள் பர்யாயங்களாக ஆகவேண்டியதாகும். தர்மமென்று கூறப்படுமேயாகில் ஸவிசேஷத்வம் ஏற்படும், ஆதலால் அபஸித்தாந்தம்.

[illegible]

$ வாச்யம்—பதத்தினது சக்தியினால் உணர்த்தத்தக்கது.

𑌉𑌪𑌰𑌿𑌤𑌨𑌸𑍍𑌯 𑌗𑍃𑌹𑍀𑌤𑌗𑍍𑌰𑌾𑌹𑌿𑌤𑍍𑌵𑌾𑌦𑌿𑌶𑍇𑌷𑌾𑌭𑌾𑌵𑌾𑌚𑍍𑌚 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌵𑍈𑌲𑌕𑍍𑌷𑌣𑍍𑌯𑌂 𑌨 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 । 𑌪𑍍𑌰𑌤𑌿𑌸𑌂𑌵𑍇𑌦𑌨𑌂 𑌵𑌿𑌶𑍇𑌷𑌾𑌭𑍍𑌯𑍁𑌪𑌗𑌮𑍇 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌸𑍍𑌯 𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌾𑌰𑍍𑌥𑌵𑌿𑌷𑌯𑌤𑍍𑌵𑌾𑌭𑍍𑌯𑍁𑌪𑌗𑌮𑌂 𑌭𑌵𑌤𑌿 । 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌸𑌂𑌵𑍇𑌦𑌨𑌾𑌨𑌾𑌮𑍇𑌕𑌵𑌿𑌷𑌯𑌤𑌾𑌯𑌾𑌮𑍇𑌕𑍇𑌨𑍈𑌵 𑌸𑌂𑌵𑍇𑌦𑌨𑍇𑌨𑌾𑌶𑍇𑌷𑌗𑍍𑌰𑌹𑌣𑌾𑌦𑌨𑍍𑌯𑌵𑍈𑌯𑌰𑍍𑌥𑍍𑌯𑌂 𑌚 𑌪𑍍𑌰𑌸𑌜𑍍𑌯𑍇𑌤 । 𑌨 𑌚 𑌚𑌕𑍍𑌷𑍁𑌷𑌾 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌗𑍃𑌹𑍍𑌯𑌤𑍇, 𑌤𑌸𑍍𑌯 𑌰𑍂𑌪𑌰𑍂𑌪𑌿𑌰𑍂𑌪𑍈𑌕𑌾𑌰𑍍𑌥𑌸𑌮𑌵𑍇𑌤𑌪𑌦𑌾𑌰𑍍𑌥𑌗𑍍𑌰𑌾𑌹𑌕𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 । 𑌨𑌾𑌪𑌿 𑌤𑍍𑌵𑌚𑌾, 𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌵𑌦𑍍𑌵𑌸𑍍𑌤𑍁𑌵𑌿𑌷𑌯𑌕𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 । 𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌾𑌦𑍀𑌨𑍍𑌯𑌪𑌿 𑌨 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌵𑌿𑌷𑌯𑌾𑌣𑌿 ; 𑌶𑌬𑍍𑌦𑌰𑌸𑌗𑌨𑍍𑌧𑌲𑌕𑍍𑌷𑌣𑌵𑌿𑌶𑍇𑌷𑌵𑌿𑌷𑌯𑌾𑌣𑍍𑌯𑍇𑌵 । 𑌅𑌤𑌸𑍍𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌸𑍍𑌯 𑌗𑍍𑌰𑌾𑌹𑌕𑌂 𑌨𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌦𑌿𑌹 𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍇 ॥

𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌶𑍇𑌷𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑍇𑌣𑍈𑌵 𑌗𑍍𑌰𑌹𑌣𑍇 𑌤𑌦𑍍𑌵𑌿𑌷𑌯𑌾𑌭𑌾𑌵𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌵𑌿𑌷𑌯𑌕𑍇𑌨𑌾𑌨𑍁𑌵𑌾𑌦𑌕𑌤𑍍𑌵𑌮𑍇𑌵 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 । 𑌸𑌤𑍍𑌤𑌾𑌗𑍍𑌰𑌹𑌣𑌃 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌯𑌾𑌭𑌾𑌵𑌾𑌚𑍍𑌚 । 𑌤𑌦𑍇𑌤𑌜𑍍𑌜𑌕𑌣𑌾𑌶𑌿𑌕𑌾𑌦𑌯𑌸𑍍𑌯𑍈𑌵𑍋𑌕𑍍𑌤𑌾𑌃 ।

ஸ்ரீபாஷ்யம் —

மேலும் ப்ரத்யக்ஷம் ஸத் ஒன்றையே க்ரஹிக்கிறது என்று சொல்லில் 'குடம் இருக்கிறது வஸ்திரம் இருக்கிற'தென்கிற விசிஷ்ட விஷயமான ப்ரதீதியானது விரோதிக்கிறது. ஸத் ஒன்றைத்தவிர வேறானவஸ்துவின் ஸம்ஸ்தானரூபஜாத்யாதி ஸ்வரூபமான பேதமானது ப்ரத்யக்ஷத்தால் க்ரஹிக்கப் படாமல் போமேயாகில் குதிரையில் விருப்பமுள்ளவன் ஏன் எருமைக்கடாவைக்கண்டவுடன் விலகுகிறான். எல்லாஜ்ஞாநங்களிலும ஸத் ஒன்றே விஷயமென்று கூறப்படுமேயாகில் அந்த அந்த § ப்ரதிபத்தியினது விஷயங்களோடுகூட சேர்ந்திருக்கின்ற எல்லாசப்தங்களும் ஒவ்வொரு ப்ரதிபத்தியிலும் ஏன் நினைக்கப்படுகிறதில்லை ? மேலும் குதிரையையும் யானையையும் விஷயீகரித்துக்கொண்டிருககிற இரண்டு ஜஞாநங்களிலும் விஷயம் ஒன்றாகப்போனபடியால் மேல்வருகிற ஜ்ஞாநமானது ஏற்கனவே க்ரஹித்ததைக் க்ரஹிக்கிறதாக இருப்பதாலும் விசேஷமில்லாமையாலும் ஸ்ம்ருதியில்வேறு பாடு உண்டாகாது. ஸம்வேதநந்தோறும் விசேஷம் ஒப்புக்கொள்ளப்படுமேயாகில் ப்ரத்யக்ஷத்திற்கு விசிஷ்டார்த்த விஷயத்வமே ஒப்புக்கொள்ளப்பட்டதாக ஆகிறது. "எல்லா ஸம்வேதநங்களுக்கும் விஷயம் ஒன்றே" என்று கூறப்படுமேயாகில் ஒரு*ஸம்வேதநத்திலேயே எல்லாம் க்ரஹிக்கப்

§ ப்ரதிபத்தி—ஜ்ஞாநம். * ஸம்வேதநம்—ஞாநம்.

படுவதால் குருடன், செவிடன், முதலிய வ்யவஹார பேதங்கள் இல்லாமல்போகவேண்டிவரும். மேலும் கண்ணால் ஸத்தே க்ரஹிக்கப்படுகிறதில்லை. அதற்கு ரூபத்தையும் ரூபமுள்ளவஸ்துக்களையும் ரூபத்துடன்கூட ஒரு வஸ்துவினிடம் பிரிக்கமுடியாத ஸம்பந்தத்தால் நிலைபெற்றிருக்கிற பதார்த்தங்களையும் க்ரஹிக்கும் தன்மை இருப்பதால் ꠸ த்வகிந்த்ரியத்தாலும் ஸத் க்ரஹிக்கப்படுகிறதில்லை. அது $ ஸ்பர்சமுள்ள வஸ்துக்களை விஷயமாகக் கொண்டிருப்பதால். † ச்ரோத்ரம் முதலிய இந்த்ரியங்களும் ஸந்மாத்ரத்தை விஷயீகரிக்கிறதில்லை; பின்னை சப்தம் ரஸம் கந்தம் என்கிற விசேஷவிஷயங்களுள்ளவைகளே. ஆகையால் ஸத் ஒன்றைமாத்திரம் க்ரஹிக்கிற ப்ரமாணம் இங்கு ஒன்றும் காணப்படவில்லை.

நிர்விசேஷமான ஸந்மாத்ரத்திற்கு ப்ரத்யக்ஷத்தினாலேயே க்ரஹணம் வருமேயாகில் அந்த ஸந்மாத்ரத்தை விஷயமாகக்கொண்ட சாஸ்த்ரமானது ப்ராப்தவிஷயமாதலால் * அநுவாதமாகவே ஆகும். ஸந்மாத்ர ப்ரஹ்மத்திற்கு ‡ ப்ரமேயத்வமும் வந்துவிடும். அதனால் ப்ரஹ்மத்திற்கு ஜடத்வம் நாசம் முதலியவைகள் ஸம்பவிக்குமென்று உன்னாலேயே உரைக்கப்பட்டிருக்கின்றன.

ச்ருதப்ரகாசிகை—

இவ்வண்ணம் விஷயம் எவ்விதத்தாலும் நிரூபிக்கமுடியாததென்கிற பக்ஷம் நிரவிக்கப்பட்ட பிறகு பேதப்ரதீதியை ஒப்புக்கொள்ளாமலிருத்தலே ப்ரதிவாதிகளுக்கு சரணம் என்று எண்ணி அதை நிராகரிக்கிறார்—அபிச இது முதலியதால். தொடக்கத்தில் ப்ரதிபத்திவிரோதம் கூறப்படுகிறது. ஸந்மாத்ர என்று. "யதிச" இது முதலியதால் வ்யவஹாரவிரோதம். "ஸர்வாஸ—" இது முதலியதால் சப்தவிரோதம்.

அய்யா! ஓரிடத்தில் எல்லாசப்தங்களும் தவறாமல் ஸ்மரிக்கப்படுகின்றன. எல்லா ப்ரதீதிகளுக்கும் ஸத் ஒன்றே விஷயமென்று ஒப்புக்கொணடிருப்பதால். இவ்வண்ணமல்ல—கடம்அறியப்பட்டவுடன் அதில் கடவ்யவஹாரப்ரஸங்கம் அபிப்ராயப்படப்பட்டிருப்பதால். இதில் பதில் தூஷணம். "ஸந்மாத்ர"என்கிற சப்தத்தின் அநுவ்ருத்தியானது தூஷிக்கத்தக்க அர்த்தம் இதுவே என்பதை ஜ்ஞாபகப்படுத்துவதற்காக. கிஞ்ச இது முதலியதால் ப்ரதீதியின் § அவாந்தரஜாதி விசேஷவிரோதம் கூறப்பட்டது. இந்த இடத்தில் கிஞ்ச என்கிற சப்தத்தால் தூஷிக்கத்தக்க அர்த்தத்தின் அநுஸந்தானத்தால் ஸந்மாத்ரசப்தமானது ப்ரயோகிக்கப்படவில்லை.¶ தாராவாஹிக ஜ்ஞாநங்களில் காலபேத

꠸ த்வக்—தோல். $ ஸ்பர்சம்—தொடுதல். † ச்ரோத்ரம்—காது.

* அநுவாதம்—முந்தி சொல்லப்பட்டிருப்பதை மீண்டும் எடுத்துக்கூறுதல்.

‡ ப்ரமேயத்வம்—ப்ரமைக்கு விஷயமாக இருத்தல்.

§ அவாந்தர—உள்பட்டிருக்கிற அல்லது உள்ளடங்கின.

¶ தாராவாஹிக ஜ்ஞாநம்—ஒரேவஸ்துவை விஷயமாகக்கொண்டு தொடர்ச்சியாக வருகிற ஜ்ஞாநம். ;அதாவது ஸ்தம்பம், ஸ்தம்பம். ஸ்தம்பம், ஸ்தம்பம் என்பதுபோல.

மிருக்கிறபடியால் அதை விலக்குவதற்காக விசேஷாபாவாத் என்று உரைக்கப்பட்டது. ஸ்ம்ருதிவைலக்ஷண்யம் நஸ்யாதிதி—அறியப்பட்டதென்றே பராமர்சம் ப்ரஸங்கிக்க வேண்டியதாகுமென்று அர்த்தம். தாராவாஹிகபுத்திகளில்போல ஜ்ஞாதமென்கிற பராமர்சத்தின் இன்மைக்கு உபபத்தி என்று சொல்லப்படுமேயாகில்— அல்ல. அவ்விடத்தில் அப்ரதிஸந்தானமானது தற்சமயத்திலுண்டான அறியவேண்டுமென்கிற இச்சையின்மையைச்சார்ந்திருப்பதால். இவ்விடத்திலோ அறியவேண்டுமென்கிற இச்சை இருந்தபோதிலும் அறியப்பட்டதென்கிற பராமர்சத்தின் இன்மையானது விஷயபேதத்தையே வ்யவஸ்தாபிக்கிறது. ப்ரதிஸம்வேதமிதி—விசேஷத்தை ஒப்புக்கொண்டால் என்கிற சங்கையானது அன்யனுக்கு வேறு கதி இல்லாமையை ஸூசிப்பிப்பதற்காக "ஸர்வேஷாம்" இதுமுதலியதால் இந்திரியங்களுக்கு வ்யவஸ்தை இன்மை ப்ரஸங்கிக்கும் என்பது கூறப்பட்டது. இந்த்ரியங்களுக்கு வ்யவஸ்தை ஸித்திப்பதற்காக விஷயபேதங்களைச்சொல்லுகிறார்— நச இது முதலியதால். இங்கு முற்கூறப்பட்ட விசிஷ்ட விஷய ப்ரதிபத்திவிரோதவிவரணமும் அகாரணத்வ துர்நிரூபகாரணத்வ நிராஸமும் செய்யப்பட்டதாக ஆகிறது. நசைகார்த்தஸமவேதேதி— ரூபத்துடன்கூட ஒரு ஆச்ரயத்தில் அகலாமலே இருக்கிற என்று அர்த்தம. ஸமவேத சப்தம் விசேஷணமாக இருத்தலே ஸ்வபாவமென்கிறபொருளை உணர்த்துவதில் நோக்குள்ளது. எது விசேஷிக்கப்படுகிறதோ அது விசேஷம்— அதனால் ஸந்மாத்ர விலக்ஷணமாயும் ஒன்றோடொன்று வேறுபட்டதாகவுமிருக்கிற விஷயங்கள் ஸித்திக்கின்றன.

அய்யா! எல்லா ப்ரத்யக்ஷங்களும் ஸவிசேஷ விஷயங்களுள்ளதென்று உரைக்கப்பட்டன. சப்தம், கந்தம், ரஸம், இவைகள் ஆச்ரயத்துடன் கூடியதாகவாவது வேறு தர்மங்களுடன் கூடியதாகவாவது க்ரஹிக்கப்படுகிறதில்லையாதலால் அவைகளை க்ரஹிக்கிற ப்ரத்யக்ஷத்திற்கு எவ்வாறு ஸவிசேஷ விஷயத்வம்? இது இவ்வண்ணமல்ல. குணம், கர்மா, இரண்டும் அந்த அந்த ஸம்ஸ்தானங்களுள்ளதாகவும் காலத்துடன்கூடியதாகவுமிருப்பது பற்றி ஸவிசேஷமாக க்ரஹிக்கப்படுவதால். இதுவும் நிர்விகல்பகத்தை அபேக்ஷித்துக் கூறப்பட்டது. ஸவிகல்பகத்திலோ தேசம் முதலிய அனேகங்களுக்கு விசேஷத்வம் ஸம்பவித்தே இருக்கிறது. உலகத்தில் நிலைபெற்றிருக்கின்ற ஹேதுக்களால் நிரூபிக்கப்பட்டிருக்கிற இந்திரியங்களுடைய ஸந்மாத்ரவிஷயத்வத்தின் நிராஸத்தை முடிக்கிறார்—அத: என்று ப்ரத்யக்ஷத்திற்கு ஸந்மாத்ரவிஷயத்வமானது அன்யனால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிற அர்த்தாந்தரத்திற்கு விருத்தமென்றும் கூறுகிறார்— நிர்விசேஷ என்று. வேறொரு ப்ரமாணத்தால் அறியப்பட்டிராத விஷயத்தை ப்ரதிபாதிப்பதால் சாஸ்திரத்திற்கு அர்த்தவத்த்வம என்பது உலகத்தில் ஸித்தமாயுள்ளபேதத்திற்கு சாஸ்த்ராவிஷயத்வத்தைச் சொல்லுகிற அன்யர்களாலேயே ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. ச்ருதிப்ராமாண்யவிரோதம் கூறப்பட்டது. அந்யனுக்கு அபிமதமான அர்த்தாந்தர விரோதத்தைக்கூறுகிறார்—ஸந்மாத்ரப்ரஹ்மண: என்று. அதனால் பலித்த அநிஷ்டத்தைக்கூறுகிறார்— தத: என்று.

கதா வஸ்துஸம்ஸ்தாநரூபஜாத்யாதிலக்ஷணபேதவிசிஷ்டவிஷய
மேவ ப்ரத்யக்ஷம் । ஸம்ஸ்தாநாதிரேகிணோ ஜாதேரநேகைகாகார [illegible]

$ ஸ்ம்ருதி—பூர்வாநுபவத்தாலுண்டான ஸம்ஸ்காரமாத்ரத்தாலுண்டாகிற ஜ்ஞாநம்.

ரஸ்யாநுபலப்தேஸ் தாவதைவ கோத்வாதிஜாதிவ்யவஹாரோப பத்தே: அதிரேகவாதிநாபி ஸம்ஸ்தாநஸ்ய ஸம்ப்ரதிபந்நத்வாச்ச ஸம்ஸ்தாநமேவ ஜாதி: । ஸம்ஸ்தாநம் நாம ஸ்வாஸாதாரணம் ரூபமிதி யதா வஸ்து ஸம்ஸ்தாநமநுஸந்தேயம் । ஜாதிக்ரஹணேநைவ பிந்ந இதி வ்யவஹாரஸித்தேஸ், பதார்தாந்தராதர்ஶநாத், அர்தாந்தரவாதிநாப்யப்யுபகதத்வாச்ச கோத்வாதிரேவ பேத:॥

ஸ்ரீபாஷ்யம்:—

ஆகையால் ப்ரத்யக்ஷமானது வஸ்துக்களின் ஸம்ஸ்தாநரூபமான ஜாத்யாதிஸ்வரூபபேதங்களோடுகூடிய வஸ்துக்களையே விஷயீகரிக்கிறது. ஸம்ஸ்தாநத்தைக்காட்டிலும் வேறாய் அநேகங்களில் ஏகாகாரபுத்தியினால் அறியத்தக்கவஸ்து காணப்படாமையாலும், அவ்வளவினாலேயே கோத்வாதி ஜாதிவ்யவஹாரம் பொருத்தமுள்ளதாக ஆவதாலும இவைவேறு என்கிற வாதத்திலுங்கூட ஸம்ஸ்தானம் எல்லோராலும் நன்கு அறியப்பட்டிருப்பதாலும், ஸம்ஸ்தாநமே ஜாதி. ஸம்ஸ்தாநமாவது வ்யக்தியின் ஸ்வாஸாதாரணரூபம். வஸ்துவுக்குத்தக்கபடி ஸம்ஸ்தானம் அநுஸந்திக்கத்தக்கது. ஜாதிக்ரஹணத்தினாலேயே "பின்ன:" என்கிற வ்யவஹாரம் ஸம்பவிப்பதாலும் வேறு பதார்த்தம் காணப்படாமையாலும் அர்த்தாந்தரத்தைச் சொல்லுகிற வாதியினாலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதினாலும் கோத்வம் முதலியவைகளே பேதம்.

ச்ருதப்ரகாசிகை—

இவ்வண்ணம் நிரூபிக்கப்பட்டிருக்கிற ப்ரத்யக்ஷத்தினது ஸந்மாத்ரக்ராஹண நிராஸத்தைத் தனக்கு இஷ்டமான வேறு அர்த்ததகதை நன்குஉபபாதிப்பதற்காக ப்ரத்யக்ஷம் விசிஷ்ட விஷயம் என்பதில் பர்யவஸிக்கச்செய்கிறார்— அத: என்று. அத: என்கிறபதத்தால் தொடங்கப்பட்டிருக்கிற பாஷ்யத்தில் ஜாதி என்பது வ்யக்தியினுடைய அவயவ ஸம்ஸ்தானமே. ஜாதி முதலியதே பேதம் என்கிற இரண்டு அர்த்தங்கள் கூறப்பட்டன. அவற்றுள் முதலில் ஸம்ஸ்தானமே ஜாதி என்பதை உபபாதிக்கிறார்— ஸம்ஸ்தாந இது முதலியதால். ஸம்ஸ்தானததைக்காட்டிலும் வேறாக ஜாதியை ஒப்புக்கொள்ளுதல் தர்சநத்தினாலேயா? அல்லது அநுபபத்தியினாலேயா? என்கிற விகல்பத்தைக்கருதி தர்சனமில்லை என்று சொல்லுகிறார்— ஸம்ஸ்தாநாதிரேகிண: என்று. "இது §ஸாஸ்னைமுதலியதுடன் கூடியது, இதுவும் ஸாஸ்னை முதலியதுடன் கூடியது. இது பெருத்த அடிவயிருள்ள ஆகாரமுடையது, இதுவும் அதுபோன்ற ஆகாரமுடையது;"

§ ஸாஸ்னை— மாடுகளுக்குக் கழுத்தின் கீழ் தொங்கும் சதை.

என்று ஸாஸ்னை முதலியது அநுவ்ருத்தபுத்திவ்யவஹாரத்திற்கு விஷயமாகக் காணப்படுகிறது. அதைவிட வேறாக அநுவ்ருத்தபுத்திவ்யவஹார விஷயமாக ஒன்றும் காணப்படவில்லையாதலால் என்று அர்த்தம் அன்றிக்கே, ஜாதி என்று தமக்கு அபிமதமாயுள்ள ஸம்ஸ்தானத்தைக்காட்டிலும் வேறாக பராபிமதஜாதியின் அஸாதாரண ரூபம் "ஏகாகாரபுத்திபோத்யஸ்ய" என்று. உரைக்கப்பட்டது. கல்பனமும் அநுபபன்னமென்று கூறுகிறார்— தாவதா என்று. வ்யுத்பத்தியும் அநுகதமானப்ரயோகமும், வ்யக்தி, ஜாதி விசேஷம் முதலிய சப்தங்களுக்குப்போல கவாதிசப்தங்களுக்கும் மிக்க ஒற்றுமையுள்ள உபாதியைச் சார்ந்திருப்பதால் பொருத்தமுள்ளதாகிறதென்று கருத்து. வேறுபெயரால் பராபிமதஜாதியானது ஒப்புக்கொள்ளப்பட்டது என்கிற சங்கையை நிரஸிப்பதற்காகக் கூறுகிறார்— அதிரேகவாநேபி என்று. பிறர்களால் அவயவிக்கு ஸம்ஸ்தானம் ‡ ஸமவாயிகாரணமாக ஸ்வீகரிக்கப்பட்டிருக்கிறது. ஸம்ஸ்தானமென்பது என்ன? அவயவஸம்யோக விசேஷமா? அல்லது ஸ்வரூபமாத்ரமா? அல்லது வேறு ஏதாவதொன்றா? முதல் பக்ஷத்தில் நிரவயவங்களான ஆத்மாக்களில் ஸம்ஸ்தானமில்லாமையால் ஆத்மத்வஜாதியானது இல்லாமல் போகும். இரண்டாவது பக்ஷத்திற்கு விசிஷ்டவிஷயத்வம் இல்லாமல் போகவேண்டிவரும். தொடர்ச்சியாக ஒரேவிதமான வ்யவஹாரமும் உண்டாகாது. ஜாதி எல்லாவற்றுக்குமே அடியோடுநாசம் உண்டாகும். மூன்றாவது பக்ஷத்தில் கதி இல்லாமையால் நம்முடைய பக்ஷம் அங்கீகரிக்கத்தக்கதென்று சங்கைவரின் அவயவமில்லாமலிருக்கிற பதார்த்தங்களில்கூட ஜாதி வ்யவஹாரம் நிலைபெறுவதின் பொருட்டு, ஜாதி அஜாதி இவை இரண்டுக்கும் பொதுவான ஸம்ஸ்தானமாத்ரத்தைக் காண்பிக்கிறார்— ஸம்ஸ்தானம் நாம என்று. கடத்திற்கு த்ரவ்யத்வம ஸம்ஸ்தானம் ஆகவேண்டாமென்று அஸாதாரணசப்தம். ரூபம் விசேஷ்யமான வ்யக்தியைவிட்டு தனித்து விலகி இராத விசேஷணம். அதினால் §கர்ப்பதாஸன முதலியவாகளுக்கு நிராகரணம ஸித்திக்கிறது.

அய்யா! ஸ்வாஸாதாரணம் என்கிற இடத்தில் ஸ்வசப்தமானது வ்யக்திபரமா? அல்லது ஸஜாதீயபரமா? வ்யக்திபரமென்கிற பக்ஷத்தில் ஏகவ்யக்திபரமா? அல்லது ஸர்வவ்யக்திபரமா? முதல்பக்ஷத்தில் ஒரு வ்யக்தியைத்தவிர மற்றவ்யக்திகளில் கோத்வம் இல்லாமல் போகவேண்டியதாகும். ஸ்வசப்தம் எல்லா வ்யக்திகளையும் குறிக்கிற

---

‡ தார்கிகர்களால் காரணங்கள் மூன்றுவிதங்களாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றன. அவையாவன— (1) ஸமவாயி, (2) அஸமவாயி, (3) நிமித்தம்—என்று. யத்ஸமவேதம் கார்யமுத்பத்யதே தத்ஸமவாயிகாரணம். (எந்த வஸ்துவினிடம் பிரிக்க முடியாத ஸம்பந்தத்துடனிருந்துகொண்டுகார்யமுண்டாகிறதோ) அது ஸமவாயிகாரணம் உதா-வஸ்திரத்திற்கு நூல். கார்யேண ஸஹ ஏகஸ்மின்னர்த்தே ஸமவேதம் ஸத்யத்கார்யமுத்பாதயதி தத் அஸமவாயிகாரணம் (கார்யத்தோடுகூட ஒரு வஸ்துவினிடத்தில் இணைபுரியாத ஸம்பந்தத்தோடு நிலைபெற்றிருந்து எதுகார்யத்தை உண்டுபண்ணுகிறதோ அது அஸமவாயிகாரணம்) உதா-வஸ்திரத்திற்கு தந்துஸம்யோகம். கீழ் கூறப்பட்டுள்ள இரண்டு காரணங்களைக் காட்டிலும் வேறானது. நிமித்தகாரணம். உதா- குடம் முதலியதற்கு குயவன் முதலியவர்கள்.

§ கர்ப்பதாஸன்—பிறப்பிலேயே அடிமைபூண்டவன். இந்த அடிமைத்தனமானது தாய் தந்தைகளுடைய அடிமைத்தனத்தால் கருவிலேயே சிசுவுக்கு உண்டாவதால் கர்ப்பதாஸன் என்று சொல்லப்படுகிறான்.

தென்கிற பக்ஷத்தில் மஹிஷவ்யக்தியிலும் கோத்வம் இருக்கவேண்டியதாகும்; அஸாதாரணசட்தமும் பயனற்றது. ஸஜாதியபரமென்று சொல்லும் பக்ஷத்தில் ஜாதி என்பது ஸம்ஸ்தான விசேஷமாக இருப்பதால், ஸமானமான ஸம்ஸ்தான விசேஷங்களுடைய அஸாதாரணமான ரூபம்ஸம்ஸ்தானமென்று சொல்லப்பட்டதாக ஆகும். அதினால் ஆத்மாச்ரயம். ஸம்ஸ்தாநநிரூபணமானது அந்த அஸாதாரணரூப ப்ரதிபத்தியை அபேக்ஷித்திருப்பதால். இவ்வாறு அல்ல:—ஸ்வசப்தம் ப்ரக்ருத பரமாக இருப்பதால், ப்ரக்ருதத்வமாவது அந்தந்த வ்யவஹாரங்களுக்கு கோசரமாக புத்தியில் நிலை பெற்றிருத்தல். இவ்வண்ணமாகில் ஒருகொம்புமுறிந்த கோவ்யக்தி பத்திஸ்தமாக இருக்கையில் கோத்வம் அதற்கு அஸாதாரணமாக இருப்பதுபற்றி இரண்டு கொம்புகளுமொடிந்த கோவ்யக்தியில் கோத்வம் இராமல் போகவேண்டியதாகும். அல்லது ஒரு கொம்புமுறிந்ததான கோவுக்கு கோத்வம் ஸம்ஸ்தானமாக இராமல் போகவேண்டியதாகும். கோத்வம் இரண்டுகொம்புகளும் முறிந்த கோவ்யக்தியிலுமிருப்பதினால் அதற்கு ஒருகொம்பு முறிந்தகோவ்யக்திக்கே உரித்தென்கிற தன்மை இல்லாமையால் என்று சொல்லப்படுமானால், அப்படியல்ல. ஒரு கொம்புமுறிந்த கோவ்யக்தியைக்குறித்து கோத்வத்திற்கு ஸம்ஸ்தானரூபத்வ மில்லாமையால். * கண்டத்வமேயன்றோ கண்டத்திற்கு ஸம்ஸ்தானம்.

கண்டம் உன்னுடைய புத்தியில் நிலைபெற்றிருக்கிறதா? அல்லது கோவா? அல்லது கண்டமான கோவா? முதல் பக்ஷத்தில் கண்டத்வமே கண்டத்துக்கு அஸாதாரணமானதால் § முண்டத்தினிடத்தில் கோத்வாபாவப்ரஸங்கமில்லை. அதினாலேயேதான் கண்டத்தைக்குறித்து கோத்வத்திற்கு ஸம்ஸ்தான ரூபத்வாபாவமும் அநிஷ்டமன்று இரண்டாவது பக்ஷத்தில் கோவுக்கு கோத்வம ஸாதாரணமாதலால் மஹிஷம் முதலியதில் கோத்வம் நிவர்திக்கிறது. கோக்களிலுமிருக்கிறதென்பதினால் ஒரு தோஷமுமில்லை. மூன்றாவது பக்ஷத்தில் எவ்வாறு நீலோத்பலத்திற்கு நீலத்வ விசேஷிதமான உத்பலத்வம் அஸாதாரணமோ, அவ்வாறே கண்டமான கோவுக்கு கண்டத்வ விசேஷிதமான கோத்வம் அஸாதாரணமாக இருப்பதுபற்றி முண்டத்தில் கண்டத்வ விசேஷித கோத்வமே நிவர்ததிக்கிறது; கோத்வம் மாத்ரமல்லவென்பதினால் ஒரு அனுபபத்தியுமில்லை. நீலத்வ விசேஷிதமான உத்பலத்வமானது இந்தீவரசப்த ப்ரவ்ருத்தி நிமித்தமாதலால் ஒரே ஸம்ஸ்தானம். கண்டத்வ கோத்வங்களோவென்றால் ஒன்றுக்கொன்று விசேஷண விசேஷ்யபாவத்தை அடைந்திருந்தபோதிலும் ஒருஸம்ஸ்தானமல்ல ஏக சப்தப்ரவ்ருத்தி நிமித்தத்வமில்லாமையால் என்று பேதம் ஆகையால் ஸ்வாஸாதாரணரூபம் ஸம்ஸ்தானம்.

அங்ஙனமாகில் ஸ்வபாவத்தில், தாரதம்யமில்லாமையால் ஜாதி, ரூபம், ஸம்ஸ்தானம் இவைகளுக்கு ¶ சௌக்ல்யம் முதலியவைகளைக்காட்டிலும் என்ன பேதம்? எனில் சொல்லுகிறோம். சௌக்ல்யாதிகளிலோவென்றால் சுக்லம் சுக்லதரம் என்று தாரதம்யமிருக்கிறது. சப்தம் முதலியவைகளிலும் உபாதியினாலோ தன்படியாலோ தீவ்ரதரத்வம் முதலிய தாரதம்ய மறியப்படுகிறது ‡ காடின்யம் § மார்தவம் முதலிய ஸ்வபாவ தாரதம்யம் ஸ்பர்சாதிகளிலுமிருக்கிறது. எண்ணிக்கைகளிலும் ஏத்தக்குறைவுகள் அறியப்

---

* கண்டம்—ஒரு கொம்புமுறிந்த காளைமாடு. ¶ சௌக்ல்யம்—வெண்மைநிறம்.
§ முண்டம்—இரண்டு கொம்புமும் முறிந்த காளைமாடு.
பூர்ணச்ருங்கம்— இரண்டு கொம்புகளுடன்கூடின காளைமாடு.
‡ காடின்யம்—கெட்டியாக இருத்தம். § மார்தவம்—மெதுவாக இருத்தல்.

பட்டிருக்கின்றன. ‡ பரிமாணத்திலும் ஸ்புடதரமாக இருக்கிறது. இவ்வண்ணமாக கோத்வாதிகளில் கோதர: கோதம: என்று தாரதம்யம் அறியப்படுகிறதில்லை. இது முதலிய † வைஷம்யம கண்டுகொள்ளத்தக்கது.

இந்த இடத்தில் ஜாதிரூபமாயுள்ள ஸம்ஸ்தானலக்ஷணம் விவக்ஷிக்கப்பட்டிருக்கிற தென்றால் ப்ரக்ருதாகாரத்தோடு மிககஸாத்ருசயமுளள வ்யக்திகளெல்லாம் "ஸ்வ" சப்தத்தால் விவக்ஷிக்கப்பட்டிருக்கின்றன. ப்ரக்ருதாகாரத்தோடு என்பதினால் ஆத்மாச்ரய தோஷம் பரிஹரிக்கப்பட்டது. ஸமஸ்தானத்தின் நிரூபணமானது ஸமஸ்தானவிஷயமான அறிவை அபேக்ஷியாமலிருப்பதால். ஸாத்ருச சப்தத்தால் மஹிஷம் முதலியவைகளில் அதிப்ரஸங்கம் பரிஹரிக்கப்பட்டது. ஸமஸ்த சப்தத்தால் முண்டாதிகளில் அபாவப்ரஸங்கம் பரிஹரிக்கப்பட்டது. கோத்வம கண்டங்களுக்கே அஸாதாரணமாக இல்லாமையால்.

அய்யா! வ்யாவ்ருத்தமான ஸம்ஸ்தானமானது அநுவ்ருத்த வ்யவஹாரத்தை எவ்வாறு உண்டாக்கும்? மறுமொழி சொல்லப்படுகிறது. எவ்வாறு வ்யக்தித்வம் ஜாதி இல்லாமல்போனபோதிலும் அநேக வ்யக்திகளில் வ்யக்திசப்த ப்ரயோகமோ; எவ்வாறு கோத்வம் அச்வத்வம முதலிய ஜாதிகளில் வேறு ஜாதி இல்லாமலிருந்தபோதிலும் ஜாதி சப்தப்ரயோகமோ; பின்னங்களில் பின்னத்வ ஜாதி இல்லாமலிருந்த போதிலுங்கூட பின்ன சப்த ப்ரயோகமோ; கண்டாதிகளில் கண்டத்வஜாதி இல்லாத போதிலும் கண்டாதி சப்தப்ரயோகமோ; எவ்வாறு நித்யத்ரவ்யங்களில் $ விசேஷத்தை விரும்புகிறவர்களுக்கு விசேஷங்களில் விசேஷத்வமில்லாவிட்டாலும் விசேஷசப்த ப்ரயோகமோ; அப்படிப்போல கவாதி சப்தவ்யவஹாரம் உபபன்னமாகிறதென்றபடி.

மேலும், எது அநுவ்ருத்த வ்யவஹார மென்று நிரூபிக்கத்தக்கது. ககார ஒகார விஸர்ஜநீயங்களின் ஒன்றின்பின் ஒன்றாகஅமைக்கப்பட்டிருக்கிறஅக்ஷரங்களின் வரிசை க்ரமமானது எல்லா ஆகாச ப்ரதேசங்களிலும தோன்றுகிற அவைகளுக்கு தேசத்தாலும் காலத்தாலும் பொருந்துகிறதில்லை. அந்த வர்ணாநுபூர்வியானது உச்சாரணத்தைச் சார்ந்திருப்பதாலும், உச்சாரணமும, அழிவுள்ளதாக இருப்பதாலும் வர்ணாநுபூர்வியும் ப்ரதி யோகி விநாசத்துடனகூடி இருப்பதாலும் ஆநுபூர்வியாகிற விசேஷத்துடன் கூடிய சப்தத்திற்கு எவ்வாறு அநுவ்ருத்தி ஸம்பவிக்கும். (ஸௌஸாத்ருச்யமே) மிக்க ஒற்றுமையே சப்தங்களுக்கு அநுவ்ருத்தி என்று சொல்லப்படுமேயாகில்) கோத்வம் முதலிய அர்த்தங்களுக்கும் அப்படிப்பட்ட அநுவ்ருத்தி உண்டென்று அங்கீகரிக்கப்படலாம்.

அய்யா! ஸௌஸாத்ருச்ய மென்பது என்ன? மறுமொழி உரைக்கப்படுகிறது. ஸத்ருசவ்யவஹாரத்திற்கு அஸாதாரண ஹேதுவான விஷய தர்மம ஸாத்ருச்யம். அதுவும் ப்ராதருத்வம்போல ப்ரதியோகியினால் நிரூபிக்கத்தக்கதும் ஒவ்வொரு வ்யக்திதோறும் வ்யாவ்ருத்தமாகவுமிருக்கிற பதார்த்தம் ஆதலால் வ்ருத்தி விகல்பம்முதலியவை

---

‡ பரிமணம்—அளவு.　　† வைஷம்யம்—வ்யத்யாஸம் அதாவது வேறுபாடு.

$ விசேஷம்—இது தார்கிகர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிற ஏழுபதார்த்தங்களுக்குள் ஒன்று. இந்த விசேஷமென்கிற பதார்த்தமானது நித்ய த்ரவ்யங்களில் நிலைபெற்றிருக்கிறதென்றும் அநந்தமென்றும் அவர்கள் கொள்கை. இதில் விசேஷத்வமெனகிற ஒரு ஜாதி கிடையாது. இவ்வாறே ஸாமான்யத்திலும் ஸமவாயத்திலும் அபாவத்திலும் ஜாதி கிடையாது.

களுக்கு (தௌர்கட்யம்) இசைக்கக் கூடாமை இல்லை. ச்ரேதசிக்கப்பட்ட ஆகாரத்தின் § பௌஷ்கல்யத்தால் ஸாத்ருச்யம் ஸௌஸாத்ருச்யமென்று விசேஷத்தைச் சொல்லுகிற சப்த ப்ரவ்ருத்தி நிமித்தபௌஷ்கல்யம் சொல்லப்பட்டிருக்கிறது. பௌஷ்கல்யசப்தத்தினால் † கவயமென்கிற மிருகத்தினிடத்திலிருக்கிற கோஸாத்ருச்யம் ஸௌஸாத்ருச்யமல்லவென்று ஸித்தித்தது. இங்ஙனமாகில் முதல் வ்யக்தியைத்தவிரத்த மற்ற கோவ்யக்திகளில் கோவோடு மிக்க ஸத்ருசமென்றே ப்ரயோகம் வரட்டும்; கௌ: என்கிற ப்ரயோகம் வரக்கூடாது என்று சொல்லப்படுமேயானால்; சொல்லவேண்டுமென்கிற விருப்பமுண்டானால் அப்பொழுது ப்ரயோகிக்கப்படலாம்; அயம் கௌ: இது காளை; அயம் கவா ஸஸத்ருச:, (இது காளையோடு மிக்க ஒற்றுமையுள்ளது) என்கிற ப்ரயோகத்தில் அர்த்தபேதமில்லாமையால். அப்படியானால் ஏன்ப்ரயோகிக்கப்படுகிறதில்லை என்று கேட்கில் வ்யவஹாரகௌரவத்தாலன்று சொல்லுகிறோம். கௌ: என்கிற வ்யவஹாரத்திலன்றோ லாகவத்தால் ஸௌகர்யம் இருக்கிறது. அப்படியானால் அதற்கு துல்யமான வஸ்துவினிடத்தில் அந்த சப்தப்ரயோகமானது @ மாணவகனிடத்தில் அக்நி சப்தம்போல் ¶ ஔபசாரிகமாக ஆகும். அல்ல- ஔபசாரிகத்வமானது ஸௌஸாத்ருச்யரூபமான அநுவ்ருத்தியின் இன்மையைக் காரணமாகக்கொண்டிருத்தலால். மாணவகன் அக்நி இரண்டுக்கும் ஸௌஸாத்ருச்ய மில்லையன்றோ; பின்னை ஸாத்ருச்ய லேசமாத்ரமே. பக்ஷத்திலோ ஸௌஸாத்ருச்ய லக்ஷணமான அநுவ்ருத்தியானது அறியப்படுகிறது. அதற்கு முக்யதா ஹேதுத்வமானது ஜாத முதலிய சப்தங்களுக்குப்போல வ்யவஹாரத்தினால் ஸித்தமாக இருக்கிறது. ஆகையால் அநுவ்ருத்த ப்ரயோகம் பொருத்தமுள்ளது. ஒரு அர்த்தத்தில் ஒரு சப்தத்திற்கு வ்யுத்பத்தியானது அதற்கு மிகவும் ஒற்றுமையுள்ள அர்த்தத்தில் மிக்க ஸத்ருசமான அநேக சப்தத்தின் ப்ரயோகத்தில் ஹேதுவென்று §உபலப்திக்குத்தக்கபடி ஒப்புக்கொள்ளத்தக்கது. அறியப்பட்டிருக்க வேறு ஒருஅர்த்தத்தை புதிதாக கல்பித்து வ்ருத்தி விகல்பம் முதலியதோஷங்களுக்கு * ப்ரதிதிசரணதையினால் பரிஹாரம் சொல்வதைவிட எல்லா இடங்களிலும் காணப்பட்டதாகவே இருக்கிற வஸ்துவில் ப்ரதீதிபலத்தால் சோத்ய பரிஹாரமானது லாகவந்யாயத்தால் பொருத்தமுள்ளதாக ஆகிறது. வ்யாப்திக்ரஹணமும் ஸௌஸாத்ருச்யரூபமான அநுவ்ருத்தியினாலேயே பொருத்தமுள்ளதாகிறதென்பதினால் அதுவும் உனக்கு அபிமதமான ஜாதியை கல்பிக்கத்திறமையுள்ளதன்று. ஆகையால் ஸம்ஸ்தானத்தைக்காட்டிலும் ஜாதி என்பது வேறுபட்டதன்று.

“அய்யா! ஸம்ஸ்தானமானது அஸாதாரணமான ஆகாரமானதாலும் அதன்றி ஸம்ஸ்தானிக்கு ப்ரதீதி உபபன்னமாகாததாலும் சிப்பிமுதலியதில் வெள்ளி முதலியப்ரமம் உண்டாகக்கூடாது, அஸாதாரணாகாரம் ப்ரகாசிக்குங்கால் ப்ரமம் ஸம்பவியாது என்று சொல்லப்படுமேயானால், அல்ல ஏதோ ஒரு ஸம்ஸ்தானவிசேஷத்துடன் கூடியதாக அறியப்பட்டிருக்கிற வஸ்துவில் அறியப்பட்டுள்ள ஸம்ஸ்தானத்திற்கு விரோதியல்லாத ஆகாரவிஷய ப்ரமம் உபபன்னமாவதால். நன்கு அறியப்பட்டுள்ள ஸம்ஸ்தானத்திற்கு விரோதியான ஆகாரப்ரமத்துக்கேயன்றோ உத்பத்தியின் அஸம்பவம். இது

$ பௌஷ்கல்யம்—நிறைவு, அல்லது பரிபூர்த்தி.

† கவயம்— பசுபோன்ற காட்டுமிருகம்.

@ மாணவகன்—சிறுவன். ¶ ஔபசாரிகம்—உபசாரத்தால் ப்ரயோகிக்கப்படுவது. அதாவது - கௌணப்ரயோகம். § உபலப்தி—ஜ்ஞானம்.

* ப்ரதிதிசரணதா—ஜ்ஞானத்தையே தனக்கு கதியாகக்கொண்டிருத்தல்.

வெளுப்பு என்கிற ப்ரதீதி இருக்கையால் கருப்பு முதலிய வர்ணவிஷயமான ப்ரமம் உண்டாகிறதில்லை. சௌக்ல்யமன்றோ சுக்லத்திற்கு அஸாதாரணம். சுக்திக்கு அஸாதாரணமல்ல. ஆகையால் அஸாதாரணாகாரப்ரதீதியும ப்ராந்தியும் உபபன்னமாகிறது. "இவ்வண்ணம் அஸாதாரண்யம் ஆபேக்ஷிகமாகில் அப்பொழுது அஸாதாரணசப்தம் பயனில்லாமல்போகவேண்டியதாக ஆகும். ஒரு வஸ்துவுக்கு ஏதோ ஒரு ரூபம் அஸாதாரணமாக இராமலிருக்கா"தென்று, கூறப்படுமேயானால் அல்ல. அஸாதாரண சப்தமானது சுக்தியை அபேக்ஷித்து சௌக்ல்யம் ஸம்ஸ்தானமென்பதை நிராகரிப்பதற்காக இருப்பதால். ஆதலால் ஸ்வாஸாதாரணரூபம் ஸம்ஸ்தானம், அதைக்காட்டிலும் ஜாதி என்பது வேறு பதார்த்தம் அல்ல வென்று ஸித்தித்தது.

இவ்வண்ணம் ஸம்ஸ்தானமே ஜாதி என்று உபபாதித்து முந்தி ப்ரஸ்தாவிக்கப்பட்டுள்ள கோத்வம் முதலியதே பேதமென்பதைஉபபாதிக்கிறார்—**ஜாதிக்ரஹணே** என்று. "ப்ரதியோகியை அபேக்ஷியாத கோத்வம் முதலியது ப்ரதியோகியை அபேக்ஷிக்கிற பேதமாவதற்குத் தகுதியுள்ளது அன்று. ஆதலால் ப்ரதியோகிஸாபேக்ஷமான இதரேதராபாவம் கோதவாதிகளைவிட வேறானபேதமென்று ஒப்புக்கொள்வதற்குத்தகுந்தது" என்கிற சங்கைசவரின் உத்தரம் சொல்லப்படுகிறது; **ஜாதிக்ரஹணேநைவ பின்ந இதி வ்யவஹாரஸம்பவாத்** என்று. இது பொருள்—கோத்வம் முதலியவைகளைக்காட்டிலும் வேறாக பேதத்தை அங்கீகரிக்கிறவனால் கூட அபாவாபாவவிஷயத்தில் ப்ரதியோகியை அபேக்ஷியாத பாவரூப பதார்த்தத்திற்கே வேறுவிதமாக இருப்பில்லாமையாலும் உபலப்தி இல்லாமையாலும் ப்ரதியோகியை அபேக்ஷித்துக்கொண்டிருக்கிற அபாவத்வம் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. அப்படிப்போல இவ்விடத்திலும் ஸம்பவிக்கிறது. ப்ரதியோகியை அபேக்ஷித்திருத்தலென்கிற தன்மை ப்ரதியோகியினால் நிரூபிக்கப்பட்ட வேஷமுள்ள ப்ரவ்ருத்தி நிமித்தத்துடன் கூடின சப்தஸ்வபாவத்தைச் சார்ந்திருப்பதால் அர்த்த ஸ்வரூபபேத ஹேதுத்வமில்லை. இவ்வண்ணம் அநுபபத்தி இல்லை என்று உரைக்கப்பட்டது. தர்சநமும் இல்லைஎன்று கூறுகிறார்—**பதார்த்தாந்தராதர்சநாத்** என்று. நாமாந்தரத்தினால் அந்யோந்யாபாவம் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள தென்கிற சங்கையை நிரஸிக்கிறார்— **அர்த்தாந்தர** என்று. அர்த்தாந்தரவாதிநா- இதரேதராபாவரூபமான பேதமுமிருக்கிறதென்று சொல்லுகிறவனாலென்று அர்த்தம்.

நநு ச ஜாத்யாதிரேவ பேதஶ்சேத், தர்ஹி க்ருஹீதே தஸ்மிந் தத்வ்யவஹாரவத்பேதவ்யவஹாரஸ்ஸ்யாத் । ஸத்யம், பேதஸ்ய வ்யவஹார்யதைவ, கோத்வாதிவ்யவஹாரவத் । கோத்வாதிரேவ ஹி ஸகலேதரவ்யாவ்ருத்தி:, கோத்வே க்ருஹீதே ஸகலேதரஸஜாதீயபுத்திவ்யவஹாரயோர்நிவ்ருத்தே: । பேதக்ரஹணேநைவ ஹ்யபேதநிவ்ருத்தி: । "அயம் பிந்ந:" இதி து வ்யவஹாரே ப்ரதியோகிநிர்தேஶஸ்ய ததபேக்ஷத்வாத் ப்ரதியோக்யபேக்ஷா பிந்ந இதி வ்யவஹார இத்யுக்தம் ॥

ஸ்ரீபாஷ்யம்.—

அய்யா ! ஜாதிமுதலியவைகளே பேதமாகில் அவைகள் க்ரஹிக்கப்பட்டால் அந்த ஜாதி வ்யவஹாரம்போல் பேதவ்யவஹாரமும் வரவேண்டும் ?

ஸத்யமே—கோத்வம்முதலியதின் வ்யவஹாரத்தால் பேதமும் வ்யவஹரிக்க வேபடுகிறது. கோத்வம் முதலியதேயன்றோ ஸகலேதர வஸ்துவ்யாவ்ருத்தி. கோத்வம் முதலியது க்ரஹிக்கப்பட்டால் ஸகலேதரஸஜாதீயபுத்தி, வ்யவஹாரம், இரண்டும் நிவ்ருத்தி அடைவதால் பேதக்ரஹணத்தினாலேயன்றோ அபேத நிவ்ருத்தி வருகிறது. "இது இதைக்காட்டிலும் வேறுபட்டது" (பின்ன:) என்கிற வ்யவஹாரத்திலோவென்றால் ப்ரதியோகியின் நிர்தேசமானது அந்த பேத வ்யவஹாரத்தை அபேக்ஷித்திருப்பதால் ப்ரதியோகியின் அபேக்ஷையினால் 'பின்ன:' என்கிற வ்யவஹாரம் என்று சொல்லப்பட்டது.

ச்ருதப்ரகாசிகை:—

முந்தி ப்ரதியோகியின் அபேக்ஷையினால் பேதவ்யவஹாரமென்று உரைக்கப்பட்டது. இங்கு அதை அபேக்ஷியாத கோத்வம் முதலியது பேதம் என்று சொல்லப்பட்டது. அங்ஙனமாகில் பேதவ்யவஹாரமும் ப்ரதியோகியின் அபேக்ஷை இல்லாததாகவே ப்ரஸங்கிக்கலாமென்கிற அபிப்ராயத்தால் சோதனம் பண்ணுகிறான்— நநு ச என்று. இப்படிப்பட்ட "ச" சப்தமானது ஒரு அர்த்தத்தை விஷயமாகக்கொண்ட அநேக சோத்யங்களில் நோக்குள்ளது—ஸத்யமீதி. ப்ரதியோகியை அபேக்ஷியாத பேதஸ்வரூப வ்யவஹாரத்தில் அங்கீகாரம். பேதப்ரதீதி வ்யவஹார விசேஷத்திலோ அங்கீகாரம். **பேதச்ச வ்யவஹ்ரியத ஏவேதி**—க்ரஹிக்கப்படுகிறது மாத்திரமில்லை, ப்ரதியோகியை அபேக்ஷியாமலே வ்யவஹரிக்கவும் படுகிறதென்று அர்த்தம். உபபாதிக்கிறார்—**கோத்வாதிவ்யவஹாராத்** என்று. எவ்வாறு கோத்வாதிவ்யவஹாரமிருக்குங்கால் பேதவ்யவஹாரம் எனில் கூறுகிறார்—**கோத்வாதி:** என்று. கோத்வாதியே எவ்வாறு வ்யாவ்ருத்தி என்றுகேட்கில் கூறுகிறார்—**கோதவாதேஸ** என்று. சொல்லப்பட்டிருக்கிறகோத்வரூபமான அபர ‡‡ஸாமான்யத்தில் உள்படாத பரஸாமான்யத்தை அபேக்ஷித்து அதின்விசேஷங்களுக்கு ஸஜாதீயத்வம் சொல்லக்கருதப்பட்டிருக்கிறது. இந்தஇடத்தில் திர்யக்காக இருப்பது பற்றி ஸஜாதீயமானமஹிஷம் முதலியவைகள் கோத்வத்தால் விலக்கத்தக்கது. வ்யாவ்ருத்திக்கு ஸஜாதீய புத்தி வ்யவஹார நிவ்ருத்தி ஹேதுத்வமிருக்கட்டும். அதினால் வ்யாவ்ருத்திக்கு பேதத்வ விஷயத்தி லென்ன வெனில் சொல்லுகிறார்—**பேதக்ரஹணேநைவஹ்யபேத நிவ்ருத்தி:** என்று. அபேதநிவ்ருத்தி: அபேதபுத்தியின் நிவ்ருத்தி. இவ்வாறாக கோத்வம் முதலியதின் ப்ரதீதியிலும், ஹாநோபாதாநாதியிலும் கோத்வம் முதலிய சப்த வ்யவஹாரத்திலும், ப்ரதியோகியின் அபேக்ஷை இல்லை என்று உரைக்கப்பட்டது. அப்படியாகில் இது இதைவிட வேறு என்கிற இடத்தில் எவ்வாறு ப்ரதியோகியினது அபேக்ஷை, என்று சங்கைவரின் சொல்லுகிறார்— **அயமஸ்மாத்** என்று. ‡ ஹாநாதிவ்யவஹாரத்திலுமல்ல, சாப்தவ்யவஹார மாத்ரத்திலுமல்ல, பின்னை சாப்த வ்யவஹார விசேஷத்திலேயே என்று ஜ்ஞாபிக்கிறது "து" சப்தம்.

"பேதஸ்ச வ்யவஹ்ரியத ஏவ" என்று தொடங்கி "பேதக்ரஹணேநைவஹ்ய பேதநிவ்ருத்தி:" என்பதை ஈறுககொண்ட க்ரந்தத்தால் ஒரு வஸ்துவை மற்றொரு

‡‡ ஸாமான்யம்—ஜாதி. இது பரம் அபரம் என இரண்டு வகைப்படும். அதிக தேசத்தை வ்யாபித்திருப்பது பரம். ஸவல்பதேசத்தை வ்யாபித்திருப்பது அபரம்.

‡ ஹாநம்—விட்டுவிடுதல். § உபாதானம்—க்ரஹித்துக்கொள்ளுதல்.

வஸ்துவினிடத்திலிருந்துவேறுபடுத்துகிற தர்மத்திற்கே ஸவ்யாவ்ருத்திரூபத்வம் தானாகவே ஸம்பவிக்கிறது. பரநிர்வாஹகத்வமில்லாவிடில் ஸ்வநிர்வாஹகத்வம ஸம்பவியாததலால்.' ஸ்வரூபம் ப்ரகாசிக்குங்கால் ப்ரமவிரோதிக்கு வ்யாவ்ருத்திரூபதர்மாந்தராபேக்ஷை இல்லையென்று சொல்லப்பட்டதாக ஆகிறது. ஆகவே ப்ரஹ்மத்திற்கு ஒருவஸ்துவைக்காட்டிலும் மற்றொரு வஸ்துவை வேறுபடுத்துகிற தர்மரூபத்வமில்லாமையாலும் ஸ்வரூபம் ப்ரகாசிக்கும்பொழுது * அத்யாஸத்தை ஸஹிக்கும் தன்மை இருப்பதாலும் ஸ்வரூபமே வ்யாவ்ருத்தி என்பது ஸித்தி பெறாது. அய்யா! தர்மியின்ஸ்வரூபமே அதைஅடைந்திருக்கிற பாவாபாவரூபமான ஸகலதர்மாந்தரங்களை அபேக்ஷித்து பேதமென்று கடாக்ஷியாக ஒப்புக்கொள்ளத்தக்கது. பேதாந்தரத்தை ஒப்புக்கொள்ளும் பக்ஷத்தில் அதைக்காட்டிலும் ஸ்வரூபத்துக்கு பேதாபேக்ஷையின் $ அநவஸ்தை ப்ரஸங்கிக்கும். ஸத்யம். அந்த ஸ்வரூபபேதமானது அத்யாஸ விரோதியன்று. அதின் நிவ்ருத்தியில் வேறு தர்ம ஸம்பந்தத்தை அபேக்ஷித்திருப்பதால். படத்ரவ்யத்தினுடைய ரூபாவ்யதிரேகப்ரமமன்றோ ஸ்பர்ச ஸாமாநாதிகரண்ய புத்தியினால் நிவாரிக்கத்தக்கது. ஆகையால் தர்மி ஸ்வரூபத்திற்கு தன்னிடத்திலுள்ள தர்மத்தை அபேக்ஷித்து ப்ரமவிரோதி பேதமானது தர்மாந்தர ஸம்பந்தம். ஆதலால் தன்னை ஆச்ரயித்திருக்கிற தர்மங்களுடைய ஸ்வரூபத்துக்கே, தனக்கு விருத்தமான வேறு தர்மங்களுள்ள வேறு தர்மியை அபேக்ஷித்து அத்யாஸவிரோதிபேதத்வம் ஸம்பவிக்கிறது. விசிஷ்ட வஸ்துவுக்கோ ஸ்வரூபமே விசிஷ்டம், தனக்கு விருத்தமான விசேஷணங்களுடன்கூடின வஸ்துவைக்காட்டிலும் வ்யாவ்ருத்தி என்பதும் யுக்தம். அர்த்தாந்தரைக்ய ப்ரமவிரோதியாக இருப்பதால். அங்கு விசேஷணத்தை அபேக்ஷித்து விசேஷ்யத்தின் ஸ்வரூபமே பேதம். விசேஷ்யத்தை அபேக்ஷித்து விசேஷணத்தின் ஸ்வரூபமேபேதம். அவை இரண்டையுமபேக்ஷித்தும் ஸம்பந்தத்தின் ஸ்வரூபமே பேதம் விசிஷ்டவஸ்துவுக்கு வேறுவிசிஷ்ட வஸ்துவை அபேக்ஷித்து ஸ்வரூபமேபேதம் ஸ்வரூபஸ்யபேத: என்கிற நிர்தேசமோ பதார்த்த ஸ்வரூபமென்பது போல வேறு அர்த்தமுள்ளதன்று. அதற்கு அஸாதாரணமாக இருக்கிற சப்தத்தால் சொல்லத்தக்கது ஸ்வரூபம். அந்த சப்தமும் வ்யுத்பத்தியினால் ஸித்தம். அன்றிக்கே ப்ரதியோகியாக அபிமானிக்கப்பட்டிருக்கிற அர்த்தாந்தரைக்யபுத்தி விரோதி ஸ்வரூபமாகிறது. ஆகையால் ஒன்றினுடைய தர்மமாக இருக்குந் தன்மை இல்லாமையாலும் தர்மத்துடன்கூடி இருத்தலென்கிற தன்மை இல்லாமையாலும் ஸ்வரூபம் ப்ரகாசிக்கும்பொழுதுகூட ப்ரமத்தை ஸஹிப்பதாலும் ப்ரஹ்மத்தின் ஸ்வரூபமே ஜடத்வம் முதலிய அத்யாஸத்திற்கு விரோதியான வ்யாவ்ருத்தியாக ஆவதற்குத் தகுதியுள்ளதல்லவென்பது ஸித்தம். ப்ரமாணப்ரமேயாநுபபத்திகள் பரிஹரிக்கப்பட்டன.

யத்த்வநுபூதீநாம் விஶேஷாணாம் வ்யாவர்த்தக[illegible]
[illegible], [illegible]
வ்யக்திவிஶேஷஸ்ய [illegible] ॥

---

* அத்யாஸம்—ப்ரமம். சிப்பியைப்பார்த்து வெள்ளியென்று எண்ணுதல்முதலியது.

$ அநவஸ்தை—மேல் மேல் அபேக்ஷை.

ஸ்ரீ பாஷ்யம்.—

கடம் முதலிய விசேஷங்கள் வ்யாவர்த்தமானங்களாதலால் மீளவும் அவைகளுக்கு அபாரமார்த்த்யம் சொல்லப்பட்டதென்பது யாதொன்றுண்டோ; அது பாத்யபாதகபாவத்தையும் வ்யாவ்ருத்தி அநுவ்ருத்தி விசேஷங்களையும் ஆலோசியாதவனுடைய ப்ராந்திஜ்ஞாநத்தால் கல்பிக்கப்பட்டுள்ளது.

ச்ருதப்ரகாசிகை.—

பிறகு அர்யனால் சொல்லப்பட்டிருக்கிற அநுமானத்தை அநுவாதம் செய்து தூஷிக்கிறார்—யத்புந: இது முதலிய க்ரந்தத்தினால். புந: என்கிற சப்தமானது கேவலதர்க்கத்தைககாட்டிலும அநுமானததிற்கு வேறுபாட்டை ஸூசிப்பிக்கிறது. த்ருச்யத்வாநுமானமானது ஸூத்ரகாரராலேயே தூஷிக்கப்படப்போகதாலும சொல்லப்போகிற தூஷணமானது மித்யாத்வ விஷயமான எல்லா அநுமானங்களுக்கும் தூஷிக்கத்தக்கதன்மையைக் காட்டுவதையே ப்ரயோஜநமாகக் கொண்டிருப்பதாலும் வ்யாவர்த்தமானத்வாநுமானம் இங்கு தூஷிக்கப்படுகிறது. ஸாதாரணதூஷணங்கள் @ காலாத்யயாபதேசமும் ‡‡ ஸோபாதிகத்வமும் ℞ வ்யாகாதமும்.

அதில் ஆச்ரயம் அறியப்பட்டதா? இல்லையா? இல்லை என்கில் § ஆச்ரயாஸித்தி. அறியப்பட்டது என்றால் ப்ரதீதியும் ப்ரத்யக்ஷம் முதலிய ப்ரமாணங்களால் ஸத்யமாக இருப்பதால் அதற்கு மித்யாத்வஸாதனம தர்மிக்ராஹக ப்ரமாணத்தால் பாதிக்கப்பட்டதாக ஆகிறது. ப்ரதிபன்னோபாதியில் பாதிதத்வம் மித்யாத்வததில் ப்ரயோஜகமாதலால் ஸோபாதிகத்வமும் சொல்லப்படப்போகிறது. அதில் தேசகாலவிஷய ப்ரமங்களில்கூட வஸ்த்வந்தரங்கள் உபாதிகளாக இருப்பதாலும் பாதசஜ்ஞானோதயமில்

@ காலாத்யயாபதேசம்— எந்த ஹேதுவுக்கு ஸாத்யாபாவமுள்ள பக்ஷமிருக்கிறதோ அது காலாத்யயாபதேச தோஷமுள்ளது. உதாஹரணம் - அக்நி ஔஷ்ண்யமில்லாதது—பதார்த்தமாதலால்-ஜலம்போல - இது ப்ரத்யக்ஷத்தால் உஷ்ணத்வ நிச்சயமேற்படுவதால் பாதிதமானது.

. ‡‡ ஸோபாதிகத்வம இதுவும் ஹேதுதோஷம் (உதா) பர்வதம், புகையுள்ளது நெருப்புள்ளதாதலால். இந்த ஹேதுவினால் புகையை ஸாதிக்க முயற்சித்தால் ஆர்த்ரேந்தனஸம்யோகம், உபாதியாக ஏற்படுகிறது. இந்த உபாதியானது ஹேதுவில் ஸாத்ய வ்யபிசாரத்தை ஊஹிக்கச்செய்கிறது. ஸாத்யஸாதனங்களுக்குள்ள வ்யாப்தியைக் கெடுத்து ஹேதுவை துஷ்டமாகச்செய்கிறது. இதையே வ்யாப்யத்வாஸித்தமென்றும் சொல்லுவார்கள். ℞ வ்யாகாதம்— விருத்த தோஷம்.

§ ஆச்ரயாஸித்தி— இதுவும் ஹேதுவினது தோஷம். உதாஹரணம் - ககநாரவிந்தம்-வாஸனையுள்ளது - அரவிந்தமாதலால் (ஆகாயத்தாமரை - மணம்பொருந்தியது. தாமரை மலராகஇருத்தலால்) என்று இந்த அரவிந்தத்வஹேதுவால் வாஸனையை ஸாதிக்க முடியாது. வாஸனைக்கு ஆச்ரயமான ககநாரவிந்தம் உலகத்தில் இல்லாததால்.

¶ பாதம்—இதுவும் ஹேதுவின் தோஷம். எந்த ஹேதுவின் ஸாத்யாபாவம் ப்ரமாணாந்தரத்தால் நிச்சயிக்கப்பட்டிருக்கிறதோ அது பாதிதஹேது. (உதா) நெருப்பு ஔஷ்ண்யமில்லாதது. த்ரவ்யமாகஇருத்தலால். என்று. இங்கு உஷ்ணத்வமானது ஸ்பர்சனப்ரத்யக்ஷத்தால் க்ரஹிக்கப்படுகிறது.

லாத ப்ராந்திகளில்கூட சோதயிதாவான புருஷனுடைய ஜ்ஞானத்தால் பாதிதமாக இருப்பதாலும் விசேஷணவிசேஷ்யாம்சஸித்தியினால் விசிஷ்டோபாதி ஸித்தி என்று ஸவிஸ்தாரமாக சொல்லப்போகிறோம். ஸாத்யதர்மம் பாரமார்த்தமா ? அபாரமார்த்தமா? என்கிற விகல்பத்தில் பாரமார்த்யமானால் § அத்வைதத்திற்கு ஹாநிவருகிறது. த்ருச்யத்வ ரூபமானஹேதுவுக்கு வ்யபிசாரமும் ஸம்பவிக்கிறது. பாரமார்த்யத்திலும் அது இருப்பதால், மித்யாத்வம் அபாரமார்த்தயமென்றால் ப்ரபஞ்சத்துக்கு ஸத்யத்வம் வந்துவிடும். பாதகத்துக்கு பாதம்வரின் பாத்யஸ்வரூபத்துக்கு அபாதம் என்கிற நியாயத்தால். அதினாலேயே யன்றோ இரண்டு $ நஞ்கள் ப்ரக்ருதார்த்தத்தை ஸூசிப்பிக்கின்றனவென்று சாப்த ப்ரஸித்தி. மித்யாத்வதர்மத்தில் தர்மாந்தரத்தை ஆரோபித்து ‡‡ ப்ரத்யவஸ்தானம் செய்வதால் இது நித்யஸமையான ஜாதி என்று சொல்லத்தக்கதல்ல. அப்ராமாணிகமான தர்மபரம்பரையின் ஆபாதனத்தினால் தூஷணமன்றோ நித்யஸமை. மித்யையாக இருக்கும்தன்மைக்கு மித்யாத்வம் ப்ராமாணிகம். † மாத்யமிகனால் சொல்லப்பட்டிருக்கிற ஜ்ஞானத்தினாலுண்டாகிற * பாத்யத்வத்திற்கு உன்னால் பாத்யத்வம் ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதால். பரமார்த்த || ரஜ்ஜுவிலுள்ள ரஜ்ஜுபுத்திக்கு ஸர்ப புத்தியினால் யாதொருபாத்யத்வமுண்டோ அதற்கு பாத்யத்வம காணப்படுவதாலும். அங்ஙனமாகில் ஸத்யத்வத்திலும் ஸத்யத்வமிருக்கிறதா ? இல்லையா ? இல்லை என்றால் ஜகத்தானது அஸத்யமாக ஆகவேண்டியதாகும். இருக்கிறதென்றால் அதற்கும் ஸத்யத்வம் என்று அநவஸ்தை வரும் என்று கூறப்படுமேயாகில். அப்படியல்ல. ஸ்வபரநிர்வாஹகத்வம் ஒப்புக்கொள்ளப்படுவதால். உன்னால் மித்யாத்வத்திலுங்கூட ஸ்வபர நிர்வாஹகத்வம் அங்கீகரிக்கப்படுகிறதேயானால் அப்பொழுது மித்யாத்வத்திற்கே ஸ்வமித்யாத்வ நிர்வாஹகத்வமிருப்பதால் மித்யாத்வமானது வேறுமித்யாத்வத்தை அபேக்ஷியாமல் ஸ்வயமே மித்யையென்பதினால் ப்ரபஞ்சம் ஸத்யமாக ஆகவேண்டியதாகும். ஸாதநம் பாரமார்த்யமா? அபாரமார்த்தமா? என்கிற விகல்பத்தில் பாரமார்த்யத்தை ஒப்புக்கொண்டால் அத்வைதத்திற்கு ஹாநிவருகிறது. அபாரமார்த்யம் சொல்லப்பட்டால் தூமம் என்கிற புத்தியினால் க்ரஹிக்கப்பட்டிருக்கிற ஆவியைப்போல அஸாதகத்வமேற்படுவதால் வ்யாகாதம் வருகிறது. பேதவாதியினாலுங்கூட ப்ரபஞ்ச ஸத்யத்வத்திற்குஹேதுவான ஸத்யத்வஸாதநத்தை முன்னிட்டு அநுமானங்கள் உபந்யஸிக்கப்படுகின்றனவில்லை. அப்படி இருந்தபோதிலும் அது உபபன்னமாகிறது; அப்படியே எனக்கும் என்றுசொல்லப்படுமேயாகில் ; அப்படியல்ல. ஸத்யத்வ ஸாதனமில்லாமலிருந்தபோதிலும் எங்களுக்கு நாங்கள் ஒப்புக்கொண்டதில் வ்யாஹதி இல்லை. உனக்கோவென்றால் மித்யாத்வாப்யுபகமஸாதகத்வாப்யுபகமங்களிரண்டுக்கும் வ்யாஹதி என்று வைஷம்யமிருப்பதால். அய்யா ! ஸாதனதர்ம பாரமார்த்யம் அபேக்ஷிக்கப்படவில்லை. நாசகமான முத்கரம் நஷ்டமாகப்போனபோதிலுங்கூட முந்திநஷ்டமான கடம்நஷ்டமாகவேகாணப்படுகிறது. உத்பன்னமாக காணப்படவில்லை. அப்படிப்போல பாதகஜ்ஞானம்

§ அத்வைதம்— த்வயோ: பாவ:த்விதா, த்விதைவ த்வைதம், ஐக்யம் என்று. பொருள். இரண்டு சைதந்யஸ்வரூபங்களுக்கு ஐக்யம் என்று மாயாவாதிகளின் நிர்வசனம்.

$ நஞ்—இது இன்மையை உணர்த்தும் சப்தம்.

‡‡ ப்ரத்யவஸ்தானம்— எதிர்த்தல்.

† மாத்யமிகன்—இவன் பௌத்தமதப்ரவர்த்தகர்களான நால்வருள் சிறந்தவன். இவன் ஸர்வசூன்யவாதி.

* பாத்யம்— அதுஷ்டகாரணஜந்யமான நிர்தோஷபுத்தியினால் பாதிக்கத்தக்கது.

|| ரஜ்ஜு—கயிறு.

மித்யையாக இருந்தபோதிலும் அதினால் பாதிக்கப்பட்டிருக்கிறதற்கு மித்யாத்வமானது இருக்கவே இருக்கிறது என்று சொல்லப்படுமேயானால், அல்ல காரகத்திற்கும் § ஜ்ஞாபகத்திற்கும் வைஷம்யமிருப்பதால். நாசகமன்றோ காரகம் ஆதலால். அதினால் நாசமாக்கப்பட்ட வஸ்துவுக்கு அது நஷ்டமானபோதிலும் நாசமே. அப்படி காணப்படுவதால் பாதகம் ஜ்ஞாபகம். அது பாதிக்கப்பட்டால் அதினால் பாதிக்கப்பட்டதும் ஸத்யமாகவே ஆகவேண்டியதாகும். ஒருவனால் சொல்லப்பட்டிருக்கிற * அபவரகத்திலிருந்த கடத்தினது அபாவமானது அஸ்தி என்கிற வசநத்தால் பாதிக்கப்பட்டஅளவில் கடஸத்யத்வம் காணப்படுவதால் பாதகத்துக்கு பாதம் வரின் பூர்வம் பாதிக்கப்பட்டதற்கு ஸத்யத்வம் சொல்வது யுக்தமல்ல. மலரின்காம்பைப்பார்த்து உண்டான வண்டு என்கிற ப்ரமத்துக்கு பாதம் வந்தபோதிலும் வண்டு என்கிற புத்தியால் பாதிக்கப்பட்டிருக்கிற பலாசபுஷ்பவிஷயமான அக்ப்ரமத்துக்கு அபாதித்வம் காணப்படுவதாலென்று சொல்லப்படுமேயாகில்; ஸித்தாந்தம் கூறப்படுகிறது. அந்த இடத்தில் வஸ்து நிவ்ருத்தி சொல்லப்படுகிறதா? புத்தி நிவ்ருத்திசொல்லப்படுகிறதா? முதலாவது ஸரியல்ல. $ தாவத்வத்திற்கு பரமார்த்தபூதமாயுள்ள ¶ வ்ருந்தத்தால் பாத்யத்வம் காணப்படுவதால். புத்தி நிவ்ருத்தி என்றால் அது பாதகாதீனையல்ல. ஜ்ஞாநங்கள் க்ஷணிகங்களாதலால் தானே நிவ்ருத்திப்பதால். வண்டு என்கிற புத்தியோ வென்றால் பிற்காலத்திலுண்டாகக்கூடிய தாவபுத்தியின் உத்பத்திக்குப்ரதிபந்திகை. அந்த ப்ரதிபந்தகத்வமும் ப்ரமா பாரமார்த்ய புத்திக்கே. அப்படி இல்லாவிடில் முந்தின ப்ரம நிவ்ருத்யபாவம் காணப்படுவதால். ஆகலால் உன்மதத்தில் ஒருபொழுதும் மிருதிஇன்றி பரம நிவ்ருத்தி ஸித்தியாது. புத்தி நிவ்ருத்தியானது பாதகவிஜ்ஞாநத்தினாலுண்டாகிறதென்கிற பக்ஷத்தில்கூட நிவர்த்தக ஜ்ஞாநங்கள் அனைத்துக்கும் ப்ராந்திரூபோத்தரோத்தர நிவர்த்தகஜ்ஞாநாபேக்ஷை இருப்பதால் ப்ரமபரம்பரை உபபன்னமாகிறது. மேலே வருகிற ஒரு ஜ்ஞாநத்துக்கு தானே நாசம்வரின் கால்பநிக கடாதி நாசம்போல அந்த ஜ்ஞாநநாசமும் கால்பநிகமாதலால் நாசக்லுப்தி ரூபப்ராந்தியானது ஸ்திரையானதால் மிருதியின்றி ப்ரமநிவ்ருத்திரூபமான மோக்ஷம் அநுபபன்னமென்று † க்ருத்ஸ்நமித்த்யாத்வ நிச்சேஷாவித்யா நிவ்ருத்திக்கு வ்யாகாதம் வருகிறது— இது முதலான வ்யாகாதங்கள் அநுஸந்திக்கத்தக்கன.

ஸோபாதிகத்வமும் அடுத்தே உரைக்கப்படப்போகிறது. த்ருச்யத்வ வ்யாவர்தமானத்வங்களுக்கு அஸாதாரண தூஷணம் ப்ரஹ்மத்தினிடத்தில் வ்யபிசாரம் அத்யஸ்தம் ‡ ஸ்வாதிஷ்டான ஸமானாதிகரணமாக அறியத்தக்கது. உதாஹரணம். இது ரஜதம் என்று. இவ்வண்ணம் கடம் இருக்கிறது படமிருக்கிறது என்று அதிஷ்டாநமான ஸத்துக்கும் ப்ரபஞ்சத்துக்கும் ஏகபுத்தியினால் அறியத்தக்க தன்மை இருப்பதால் த்ருச்யத்வம் அநைகாந்திகம், என்றாலும் ஆகாயம் கருப்புநிறமுள்ளது என்கிற அத்யாஸத்தில் ஆகாயம் சக்ஷுரிந்த்ரியக்ராஹ்ய மல்லாததால் ஏகபுத்தி வேத்யத்வம் @ அத்யஸ்தாதிஷ்டானம்

|| காரகம்—க்ரியையை உண்டுபண்ணுகிற வஸ்து.

§ ஜ்ஞாபகம்—ஞானத்தை உண்டுபண்ணுகிறவஸ்து, * அபவரகம்—காமரா உள்ளு.

$ தாவம்—கானகத்து நெருப்பு.   ¶ வ்ருந்தம்— மலர்களின் காம்பு.

† க்ருத்ஸநம்—முழுவதும்.   ‡ ஸ்வாதிஷ்டானம்—தனக்கு ஆச்ரயம்.

@ அத்யஸ்தாதிஷ்டானம்— ப்ரமத்துக்கு விஷயமாக இருக்கும் வஸ்து. சிப்பியைப்பார்த்து இதுவெள்ளி என்று உண்டாகும் ப்ரமத்தில் அத்யஸ்தமான ரஜதத்திற்கு அதிஷ்டானம் (ஆதாரம்) சிப்பி.

இரண்டுக்கும் நியதமன்று. ஆயினும் ஸந்மாத்ரத்திற்கு ப்ரத்யக்ஷக்ராஹ்யத்வம் அன்யனால் ஒத்துக்கொள்ளப்பட்டிருப்பதால் அநைகாந்த்யம் ஸித்தம்.

அய்யா! இங்கு த்ருச்யத்வநியமமானது ஹேதுவாக விவக்ஷிக்கப்பட்டிருக்கிறது. ஸத்தானது ஸ்வயம ப்ரகாசமானதால் ஸத்துக்கு த்ருச்யத்வ நியமமில்லை. அதுவும் தான் எப்படி? ஸத்துக்கும் அநுபூதிக்கும் பேதமில்லாமையால் என்று சொல்லப்படுமேயானால் அது ஸரியல்ல. ஸத் அநுபூதி இரண்டுக்கும் பேதாபாவம் ஸித்தித்தால் ஸத்துக்கு ஸ்வயம் ப்ரகாசத்வமிருப்பதால் த்ருச்யத்வ நியமாஸித்தியினால் த்ருச்யத்வ ஹேதுவுக்கு ¶ அநைகாந்த்யபரிஹாரம்; அநைகாந்த்யம் பரிஹரிக்கப்பட்டால் பேதாபாவமென்று அந்யோந்யாச்ரயண தோஷம் வருவதால். வேறு அநுமானத்தால் பேதநிஷேதம் ஸித்திக்குமேயானால் அப்பொழுது இதில் ஸித்தஸாதயதாதோஷம் வருகிறது. இவ்வாறாக பரமதத்தில் அநைகாந்தயம் பகரப்பட்டது. மேலும் ப்ரஹ்மத்துக்கு த்ருச்யத்வமானது ச்ருதிஸித்தம் "த்ருச்யதேத்வக்ர்யயாபுத்யா, ஆத்மாவாரேத்ரஷ்டவ்ய:" என்று. அநுபூதித்வாத் இது முதலான அநுமானத்தால் த்ருச்யத்வாபாவத்தை ஸாதிக்குங்கால் காலாத்யயாபதேசதோஷம் வரும். அதாவது §பாததோஷம்— 'யத்தத்த்ரேச்யம்' என்கிற வாக்யத்தால் தருச்யதவ ச்ருதியானது பாதிக்கத்தக்கதென்று கூறப்படுமேயானால் அது ஸரியல்ல; அது த்ருச்யத்வஸாமான்ய நிஷேதபரம். Ψ த்ருச்யதேத்வக்ர்யயாபுத்த்யா ஸூக்ஷ்மயா ஸூக்ஷ்மதர்சிபி:, என்கிற இந்த ச்ருதிவசனம் த்ருச்யத்வ விசேஷவிதான விஷயமாக இருப்பதாலும் † நசக்ஷுஷா க்ருஹ்யதே நாபிவாசா நான்யைர் தேவை: மநஸாதுவிசுத்தேந, இது முதலியதில் தருச்யத்வ விசேஷ நிஷேதம் காணப்படுவதாலும் அத்ரேச்யம் இது முதலிய ஸாமான்ய நிஷேதம் அதில் பர்யவஸிப்பதாலும் அத்ரேச்யம் இது முதலிய ஸாமான்ய ச்ருதியினாலும் த்ருச்யத்வாபாவ ஸாதகாநுமானத்தாலும் ப்ரஹ்மத்துக்கு த்ருச்யத்வமில்லை என்று கூறப்படுமேயானால், அது ஸரியல்ல அங்ஙனமாகில், * நஹிம்ஸ்யாத் ஸர்வாபூதாநி என்கிற ஸாமாந்ய நிஷேத ச்ருதியினாலும் ஹிம் ஸாத்வாத் என்கிற அநுமானத்தாலும் § அக்நீஷோமீயபசுஹிம்ஸா நிவ்ருத்தி ப்ரஸங்கம வருவதால். ஆகையால் த்ருச்யத்வம் அநைகாந்திகம். அநைகாந்திகமானது பரிஹரிக்க விரும்பப்படுமேயாகில் ப்ரஹ்மத்துக்கு மித்யாத்வமாவது ஒப்புக்கொள்ளத்தக்கதாக ஆகும். த்ருச்யதைகஸ்வபாவத்வமன்றோ ஹேதுவாக அபிமானிக்கப்பட்டிருக்கிறதென்பதினால் அநைகாந்த்யம் இல்லை. ப்ரஹ்மமானது ஸ்வயம் ப்ரகாசமாதலால் த்ருச்யதைகஸ்வபாவமுள்ளதல்லவென்று சொல்லப்படுமேயானால், அல்ல. அப்பொழுது ஹேதுவுக்கு ¶ பாகாஸித்திவரும். சிதசிதாதமக ப்ரபஞ்சத்தில்

---

§பாதம்—ஸாத்யா பாவவத்தானபக்ஷம். ¶ அநைகாந்த்யம்—வ்யபிசாரம்.

‡ காலாத்யயாபதேசம்—பாததோஷம்.

$ ஸித்தஸாத்யத்வம் — ஏற்கனவே ஸித்தமான ஒரு வஸ்துவை ஹேதுவினால் மீண்டும் ஸாதித்தல். இது ப்ரபலமான அநுமானதோஷம்.

Ψ த்ருச்யதேத்வக்ர்யயா — ஸூக்ஷ்மதர்சிகளால் ஸூக்ஷ்மமாயும் சிறந்ததாயுமிருக்கிற புத்தியினால் காணப்படுகிறான்.

† நசக்ஷுஷாக்ரு—கண்ணாலும் பார்க்கப்படுகிறதில்லை, வாக்கினால் க்ரஹிக்கப்படுகிறதில்லை, மற்ற இந்த்ரியங்களாலும் க்ரஹிக்கப்படுகிறதில்லை. பரிசுத்தமான மனதினாலோவென்றால் க்ரஹிக்கப்படுகிறான்.

¶ பாகாஸித்தி—ஒரு அம்சத்தில் நிலை பெற்று மற்றதில் விலகுதல்.

ஜீவாம்சம் ஸ்வயம் ப்ரகாசமாக இருப்பதால். அசித்யசமாத்ரத்வத்தை அங்கீகரிக்கில் ஹேதுவுக்கு ஜீவனை அடைந்திருக்கிற நித்யத்வாதி தர்மங்களில் அனைகாந்திகத்வம். அவைகள் § தர்மபூதஜ்ஞாநத்தால் அறியத்தக்கவைகளே. பரமார்த்தபூதங்களும வ்யாவர்த்தமாநத்வமும ப்ரஹ்மத்தினிடத்தில் அனைகாந்திகம். அந்ருதாதிகளைக்காட்டிலும வ்யாவ்ருத்தமாக ஒப்புக்கொண்டிருப்பதால் அதுவும் ஸ்வரூபமாத்ர மென்று சொல்வதற்கு சக்யமல்ல. ப்ரஹ்மமானது ஒரு வஸ்துவினுடையவும் தர்மமாக இல்லாமையாலும் அத்யாஸஸஹமாக இருப்பதாலும் வ்யாவர்த்தமானத்வம ஸ்வரூபமாக இருந்தபோதிலும் அநுபூதித்வம்போல அது ஸ்வகார்யகரம். ஹேதுவுக்கு ஸ்வரூபத்தைக்காட்டிலும் வேறுபாடு இல்லாமலிருந்தபோதிலும் அதற்கு ஸாதநதசையில் கார்ய கரத்வமே தவிர்த்து தூஷண தசையில் இல்லை என்று சொல்வதற்கு நியாமகமில்லாமையால். மேலும் ப்ரஹ்மத்தினிடத்தில் ஸ்வரூபம் வ்யாவ்ருத்தியாகில் கடம் முதலியவைகளிலும் அப்படி ஆகட்டும் ப்ரஹ்மத்தினிடம் ஸ்வரூபத்தைவிட வேறாக இருக்கிறதானால் அப்பொழுது கடம் முதலியவைகளிலும் அப்படி இருக்கவேண்டியதாக ஆகும். எவ்விதத்தாலும் அனைகாந்த்யம விலக்கத்தகாதது. ப்ரஹ்மத்திற்கு ஜடாதிவ்யாவ்ருத்தத்வம் அபரமார்த்தமாகில் உள்ளபடியே ப்ரஹ்மம் ஜடமாகவே ஆகவேண்டி வரும். கடம் முதலியதில் வ்யாவர்த்தமானத்வம் மித்யையாதலால் வ்யாவர்த்திக்கத்தக்கதில்லை என்பது பற்றி அபரமார்த்த சப்தமும் பயனற்றது. அதினாலும் அனைகாந்த்யம் மிக்க ஸ்பஷ்டமாக இருக்கிறது. அபரமார்த்தமே ஹேதுவென்று உன்னால் அங்கீகரிக்கப்பட்டிருப்பதால். அது விபக்ஷத்திலும் இருப்பதால். மேலும் அநுவர்த்தமானமாக இருக்கிற ஸந்மாத்ரத்திற்கு வ்யாவர்த்தமானங்களான கடாதிகளினின்று வ்யாவ்ருத்தி இருக்கிறதா? இல்லையா? இருக்கிறதென்று சொல்வாயேயாகில் அதினாலேயே வ்யாவர்த்தமானத்வ ஹேதுவானது ப்ரஹ்மத்தினிடத்தில் $ அனைகாந்திகம இல்லை என்றால் கடம் முதலியவைகளில் போல வ்யாவர்த்தமாநத்வம ப்ரஹ்மத்தினிடத்தில் வரும். வ்யாவர்த்தமானங்களைக் காட்டிலும் வ்யாவர்த்தமாநத்வ மில்லாமையால். எப்படி ரஜதம ரஜதத்தினிடத்தினின்று அவ்யாவ்ருத்தமோ, அப்படியே வ்யாவர்த்தமான வஸ்துவினிடத்தினின்று அவ்யாவ்ருத்தமும வ்யாவர்த்தமானமாகவே ஆகிறது. ஆகையால் இரண்டுவிதத்தாலும ப்ரஹ்மத்தினிடத்தில் அனைகாந்த்யம். அய்யா! ப்ரஹ்மமானது ஜடாதிவ்யாவ்ருத்தமே. வ்யாவர்தமானத்வமும் ஸத்யம். அதுவும் ஸ்வரூபமாதலால் அத்வைதஹாநி இல்லை. அதுவும ஸத்யமாக இருப்பதால் ப்ரஹ்மத்துக்கு ஜடத்வம் முதலியதில்லை ஆகையால் அனைகாந்த்யமில்லை. பரமார்த்தமில்லாததும கடாதிகளை அடைந்திருப்பதுமான வ்யாவர்த்தமாநத்வமன்றோ ஹேது என்று கூறப்படுமேயானால் அபரமார்த்தபூதமான வ்யாவர்த்தமானத்வம் ஹேதுவாக சொல்லக்கருதப்படுமேயாகில் அப்பொழுது ஹேது அஸித்தம். கடாதிகளுடைய அன்யோன்ய வ்யாவ்ருத்திக்கு அஸத்யத்வம ஒப்புக்கொள்ளப் பட்டிருப்பதால்.

உயொஜ்ஞாநயொவிரொயெஹி ஸாய்யஸாயக்ஷாவ: । ஸா
யிதவெஸ்ய வ்யாவ்ருத்தி: । கத்ர யடயடாதிஷு ஜெமகாஸெஜெந

$ அனைகாந்திகம்—வ்யபிசாரமுள்ளது, ஸாத்யமில்லாத இடத்தில் இருக்கிறது.

§ தர்மபூதஜ்ஞாநம்—ஜ்ஞாநஸ்வரூபனான ஜீவனிடத்திலிருக்கிற ஜ்ஞாநரூபமான அஸாதாரண தர்மம்.

விரோதாபாவாந்நாஸ்தி । யஸ்மிந்தேசே யஸ்மிந்காலே யஸ்ய ஸத்பாவ: ப்ரதிபந்ந:, தஸ்மிந்தேசே தஸ்மிந்காலே தஸ்யாபாவ: ப்ரதிபந்நஸ்சேத் தத்ர விரோதாத் பலவதோ பாதகத்வம் பாதிதஸ்ய ச நிவ்ருத்தி: । தேசாந்தரகாலாந்தரஸம்பந்திதயாநுபூதஸ்யாந்யதேசகாலயோரபாவப்ரதீதௌ ந விரோத இதி கதமத்ர பாத்யபாதகபாவ: । அந்யத்ர நிவ்ருத்தஸ்யாந்யத்ர நிவ்ருத்திர்வா கதமுச்யதே । ரஜ்ஜுஸர்பாதிஷு து தத்தேசகாலஸம்பந்திதயைவாபாவப்ரதீதேர்விரோதோ பாதகத்வம் வ்யாவ்ருத்திஸ்ச । தேசகாலாந்தரவ்யாவர்தமாநத்வம் மித்யாத்வவ்யாப்தம் ந த்ருஷ்டமிதி ந வ்யாவர்தமாநத்வமாத்ரம் மித்யாத்வஹேது: ॥

யத்து—அநுவர்தமாநத்வாத் ஸந்மாத்ரம் பரமார்த: இதி, தத்ஸதேவேதி ந ஸாத்யஸாதகமிதி । அதோ ந ஸந்மாத்ரமேவ வஸ்து । அநுபூதி ஸவிஶேஷயோஸ்ச விஷயவிஷயிபாவேந கடஸ்ய ப்ரத்யக்ஷஸித்தத்வாதபாதிதத்வாச்ச அநுபூதிரேவ ஸதீத்யபி நிரஸ்தம் ॥

ஸ்ரீபாஷ்யம்.—

இரண்டு ஜ்ஞாநங்களுக்கும் விரோதம் வந்தாலன்றோ பாத்யபாதகபாவம். பாதிக்கப்பட்டது எதோ அதற்கே வ்யாவ்ருத்தி. இந்த இடத்தில் கடபடாதிகளில் தேச பேதத்தாலும் காலபேதத்தாலும் விரோதமே இல்லை.' எந்த இடத்தில் எந்த காலத்தில் எந்த வஸ்துவின் இருப்பு அறியப்பட்டிருக்கிறதோ அந்த இடத்தில் அந்த காலத்தில் அந்த வஸ்துவின் இன்மை அறியப்படுமேயாகில் அங்கு விரோதம் ஏற்படுவதால் பலமுள்ளதற்கு பாதகத்வமும் பாதிக்கப்பட்டதற்கு நிவ்ருத்தியும் வருகிறது வேறு இடத்திலும் வேறு காலத்திலும் ஸம்பந்தித்ததாக அநுபவிக்கப்பட்டிருக்கிற வஸ்துவுக்கு அதைக்காட்டிலும் வேறான இடத்திலும் காலத்திலும் அதின் இன்மை அறியப்படுமேயாகில் விரோதம் கிடையாது ஆதலால் எவ்வாறு இவ்விடத்தில் பாத்யபாதகபாவம் ? விரோதபாதஸ்தலத்தில் நிவ்ருத்தமானவஸ்துவுக்கு விரோத பாதங்களில்லாத இடத்தில் எவ்வாறு நிவ்ருத்தி சொல்லக்கூடும் ? ரஜ்ஜுஸர்பாதிகளிலோ வென்றால் எந்த தேசத்தில் எந்த காலத்தில் எந்த வஸ்துவின் இருப்பு அறியப்பட்டிருக்கிறதோ அந்த தேசத்தில் அக்காலத்தில் அந்தவஸ்துவின் அபாவமே ஜ்ஞாநவிஷயமாதலால் விரோதமும் பாதகத்வமும் வ்யாவ்ருத்தியும் ஸம்பவிப்பதுபற்றி தேசகாலாந்தர வ்யாவர்தமாநத்வம் மித்யாத்வ வ்யாப்தமாகக் காணப்படாமையால் வ்யாவர்தமாநத்வம் மாத்திரம்

அபாரமார்த்யத்தில் ஹேதுவாகாது. அநுவர்தமானமாக இருப்பதால் ஸத் பரமார்த்தம், என்று எது சொல்லப்பட்டதோ அது ஸித்தமாகவே இருப்பதால் ஸாதிப்பதற்குத் தகுதியுள்ளதல்ல. ஆதலால் ஸந்மாத்ரமே வஸ்துவல்ல. அநுபூதிக்கும் ஸத்ரூபமான விசேஷத்துக்கும் விஷயவிஷயிபாவத்தால் பேதம் ப்ரத்யக்ஷஸித்தமாக இருப்பதாலும் பாதிக்கப்படாமலிருப்பதாலும் அநுபூதியே ஸதீ என்பதும் நிரஸிக்கப்பட்டது.

ச்ருதப்ரகாசிகை—

மூர்த்தி அந்யனால் பாதத்துக்குங்கூட பக்ஷத்தினின்று வ்யாவ்ருத்தியின் உபபாதனத்தினால் உபாதித்வம் மறுக்கப்பட்டது. அதைநிராகரிக்கப்பதற்காக பக்ஷத்தில் பாதாபாவத்தைக் காண்பிக்க எண்ணங்கொண்டு பாதத்தை சிக்ஷிக்கிறார்—த்வயோ: என்று. விரோதமிருந்தால்தான் பாத்யபாதகபாவமே ஒழிய அஸ்திநாஸ்தி என்கிற இரண்டு ப்ரத்யயமாத்திரங்களுக்கு பாத்யபாதகபாவம் இல்லை என்று அர்த்தம். பாதிதஸ்யைவ வ்யாவ்ருத்திரிதி—ப்ரதிபன்னோபாதியில் பாதிதத்திற்கே மித்யாத்வஸாதகமான வ்யாவ்ருத்தியே ஒழிய அக்ருஹீதத்வமாத்ரம் மித்யாத்வத்திற்கு ஸாதகமாகாதென்று அர்த்தம். இங்குவ்யாவ்ருத்திவிசேஷம் வ்யாவ்ருத்தி சப்தத்தால் சொல்லப்பட்டிருக்கிறது. மேலே வ்யாவர்தமாநத்வமாத்ரம்— மாத்ரச்ப்ரத்யமிருப்பதால். அதனால் பக்ஷத்தில் பாதாபாவத்திற்கு என்னவென்று கேட்கில் கூறுகிறார்—அத்ர என்று. இரண்டுதேசங்களுக்கும் இரண்டுகாலங்களுக்கும்பேதமிருக்குமேயாகில் அவிரோதத்தைக்காண்பிப்பதற்காக அவைகள் இரண்டுக்கும் ஐக்யமிருக்குமேயாகில் விரோத பாதங்களைக் காண்பிக்கிறார்—யஸ்மிந் என்று. பாவாபாவங்கள் இரண்டுக்கும் விரோதம் இருப்பதால் இரண்டுக்குள் ஒன்றுக்கு பாத்யத்வம்சொல்லியேதீரவேண்டியதாக இருக்கிறபடியால் பலமுள்ளதற்குபாதகத்வமும் மற்றதுக்கு பாதிதமாக இருப்பதால் நிவ்ருத்தியுமென்று அர்த்தம். சகாரம் ஏவகாரார்த்தத்தில். பாதிதத்திற்கே உன்னால் ஸம்மதிக்கப்பட்டிருக்கிற வ்யாவ்ருத்தி விசேஷமென்று அர்த்தம். ஸாமாநாதிகரண்யாநர்ஹத்வம் விரோதம். தோஷமற்றகாரணத்தினால் உண்டான நிஷேதபுத்தி பாதம். தோஷமற்றகாரணத்தினால் உண்டானதாயும் நிஷேத ரூபமாயுமிருப்பது பாதகம். முன்னிலையிலிருக்கும் வஸ்துவில் அபாவமாவது அநவபாஸமாவது ஸத்யத்வாவபாஸாபாவமாவது நிவ்ருத்தி-பக்ஷமாகிய கடம்முதலியதில் தேசகாலபேதத்தால் விரோதம் பாதம் இவைகளின் இன்மையை உபபாதிக்கிறார்— தேசாந்தர என்று.விரோதபாதங்களின் இன்மையால் அவைகளுக்கு பலபூதமானநிவ்ருத்தியுமில்லை என்று சொல்லுகிறார்—அந்யத்ர என்று. அந்யத்ர நிவ்ருத்தஸ்ய-விரோதபாதஸ்தலத்தில் நிவ்ருத்தமான வஸ்துவுக்கு, அந்யத்ர-விரோதபாதமில்லாத இடத்தில்,அல்லது அந்யத்ர ஸ்வதேசகாலவ்யதிரிக்த தேசகாலங்களில். அந்யத்ர ஸ்வதேசகாலங்களில். இந்த வைதர்ம்யத்தை த்ருஷ்டாந்தத்தால் விவரிக்கிறார்—ரஜ்ஜு ஸர்பாதிஷு என்று. து சப்தம் கடாதிவைஷம்யத்தை ப்ரதானமாகக்குறிக்கிறது. இந்தப்ரகாரமாக தூஷணோபயோகியான வ்யாப்தியானது சிக்ஷிக்கப்பட்டது;பிறகுஅநுமான தூஷணஸித்தியைக் காண்பிக்கிறார்— இதிதேசகாலாந்தர என்று. இதிசப்தம் ஹேதுவில். மித்யாத்வம் வ்யாபகம், வ்யாவர்தமானத்வம் வ்யாப்யம். வ்யாவர்தமாநத்வமாத்ரமென்கிற மாத்ர சப்தத்தால் விரோதபாதஹேதுகமான வ்யாவ்ருத்தியானது வ்யாவர்திக்கப்படுகிறது. அன்றிக்கே, வ்யாவர்த்தமானத்வ ஹேதுவின் அஸித்தியை ப்ரதிஜ்ஞை செய்கிறார்—யத்புந: இதுமுதலியதால். அதற்காக பாதமூலம்விரோதமென்று சொல்லுகிறார்—த்வயோ:

ரீத்யர்தி—பக்ஷத்தில் அதின் அபாவத்தைக் காண்பிக்கிறார்— அத்ர என்று. விரோதத்தினின்மையை உபபாதிக்கிறார்-யஸ்மிந் என்று. அதின் பலநிவ்ருத்தியைக்கூறுகிறார்-அந்யத்ர என்று. த்ருஷ்டாந்தத்தில் அதின் வைதர்ம்யத்தைக்காண்பிக்கிறார்—ரஜ்ஜு என்று. இவ்வண்ணமாக அஸித்தியைச் சொல்வதற்காக பாகுபாடு காண்பிக்கப்பட்டது. பிறகு அஸித்தியைக்கூறுகிறார்—இதி தேசகாலாந்தர என்று. ஸோபாதிகத்வம் அர்த்தத்தால் ஸித்திக்கிறது. இது ஆததம், படமிருக்கிறது என்கிற இடத்தில் படாபாவம் ஸாதிக்கவிரும்பப்பட்டிருக்கிறதா ? அல்லது கடோZஸ்தி என்கிற இடத்திலுங்கூட அதின் அபாவம் ஸாதிக்கவிரும்பப்பட்டிருக்கிறதா ? முதல் பக்ஷத்தில் ஸித்தஸாத்யதை தோஷம். இரண்டாவதில் வ்யாவர்தமாநத்வ சப்தத்தால் வ்யாவ்ருத்திபுத்தி போத்யத்வம் மித்யாத்வத்திற்கு ஹேதுவாக விவக்ஷிக்கப்பட்டதா ? அல்லது ப்ரதிபன்னோபாதியில் பாதிதத்திற்கு வ்யாவ்ருத்தியா ? முதல் பக்ஷத்தில் ஸோபாதிகத்வம். இரண்டாவதில் ஹேதுவின் அஸித்தியால் கடாதிகளுக்கு ஸத்யத்வம் என்று.

அய்யா ! பாதார்ஹதைக்கு உபாதித்வம் கூறப்பட்டால் ஸாத்யாவிசிஷ்டத்வம் ஏற்படும். ஆதலால் பாதிதத்வமே உபாதியாக இருக்கலாம். அதற்கு ஸாத்யஸமவ்யாப்தி இல்லை ஸஹாயமில்லாமல் செல்லுகினறவனால் வழியில்காணப்பட்டிருக்கிற ரஜ்ஜுஸர்பமானது ஒன்றினாலும் பாதிதமாகாததால் என்று சொல்லப்படுமேயானால், இவ்வண்ணமல்ல. ஈச்வரன் முதலியவர்களின் ஜ்ஞாநத்தினால் தவறாமல் பாதிக்கப்பட்டிருப்பதால் ஈச்வரனை ஒப்புக்கொள்ளாதவர்களுடைய பக்ஷத்திலும் இது உபாதியே உன்னால் வழியில்காணப்பட்டிருக்கிற அந்த ரஜ்ஜுஸர்பத்திற்கு மித்யாத்வமானது ப்ரமாணத்தாலறியப்பட்டதா? இல்லையா ? இல்லை என்று கூறப்படுமேயானால் நல்லஸர்பமே என்பதினால் அந்த இடத்தில் அவ்ருத்தியானது ஸாத்யஸமவ்யாப்த்யபாவத்தின் பொருட்டாகாது. அறியப்பட்டிருக்குமேயாகில் அந்த ஜ்ஞாநத்தினாலேயே அதற்கு பாதித்வம் ஸித்தமென்பதினால் ஸாத்யஸமவ்யாப்தி ஸித்திக்கிறது. அய்யா! ப்ரதிபன்னோபாதியில் பாதம் மித்யாத்வத்தில் ப்ரயோஜகமா ? அல்லது கேவலபாதமா? முதல் பக்ஷத்தில் தேசகாலங்கள் உபாதியானதால் தேசகாலப்ரமத்திற்கு தேசகாலோபாதிகத்வமில்லாமையாலும் ஸர்வபக்ஷாநுயாயித்வமில்லாமையாலும் ஸாத்யஸமவ்யாப்தி இல்லாமையால் ப்ரதிபன்னோபாதியில் பாதமானது உபாதியாக ஆகாது. இரண்டாவது பக்ஷத்தில் க்ருத்ஸ்ந மித்யாத்வம் என்று. இங்கே கூறப்படுகிறது. தேசகாலங்களே உபாதியென்று நியமமில்லையன்றோ. பின்னையோ வஸ்த்வந்தரமும் உபாதி— உபாதியானது அவச்சேதகம் அதினாலேயேயன்றோ தேசகாலாதிப்ரதிபன்னோபாதியில் அபாதிதத்வாத் என்கிற இடத்தில் ஆதி சப்தத்தால் வஸ்த்வந்தரத்திற்கும் உபாதித்வத்தை பாஷ்யகாரர் உரைக்கப்போகிறார். ஆகையால் தேசகாலப்ரமத்தில் வஸ்த்வந்தரம் உபாதி. தேசகாலப்ரமத்துக்கு வஸ்த்வந்தரோபாதிகத்வமிருந்தபோதிலும் வஸ்து ப்ரமத்திற்கு தேசகாலோபாதிகத்வம் வரின் அந்யோந்யாச்ரயதோஷமில்லை, ப்ரமவ்யக்தி பேதததால். ஆகையால் எந்தவஸ்துவானது எந்த அவச்சேதகத்தால் அவச்சின்னமாக அறியப்பட்டிருக்கிறதோ அந்த அவச்சேதகத்தால் அவச்சின்னவஸ்துவுக்கு பாதம் மித்யாத்வத்தில் ப்ரயோஜகம். அன்றிக்கே, ஆரோபிக்கப்பட்டிருக்கிற ஸாயந்த்வம் அதற்கு நிவர்தகமான திவாத்வம் முதலியவைகளை விட்டு க்ரியாந்தராவச்சின்னமான காலத்திற்கு ப்ராந்த்யுபாதித்வம். இவ்வண்ணம் தேசத்திலுமென்பதனால் ஒரு தோஷமுமில்லை. இவ்வாறு விசிஷ்டோபாதியில் விசேஷண விசேஷ்யாம்சம் இரண்டுக்கும் அநுபபத்திபரிஹாரம் ஏற்பட்டிருக்கிறபடியால் விசிஷ்டோபாதி ஸித்திக்கிறது. ஆகையால் வ்யாவர்தமானத்வமாத்ரம் அபாரமார்த்யத்தில் ஹேதுவல்ல. சிலர்களால் இவ்வண்ணம் சொல்லப்பட்டது டோZஸ்தி என்கிற இடத்தில் கடசப்தம் அஸ்திசப்தம் இரண்டும் பர்யாயங்களா ?

அல்லவா? பர்யாயங்களாக இருக்குமேயாகில் சேர்ந்து இரண்டுக்கும் ப்ரயோகம் கூடாது. இல்லையாகில் ஸத்தைக்காட்டிலும் கடம் விலக்ஷணம் என்று. இவ்வண்ணமல்ல. "அஸ்தி ப்ரஹ்மேதிசேத்வேத" இது முதலிய இடத்தில் அஸ்திப்ரஹ்மசப்தங்கள் இரண்டும் பர்யாயங்களானால் பௌநருக்த்ய தோஷம் வரும். இல்லையென்றால் ப்ரஹ்மத்துக்கும் ஸத்விலக்ஷணத்வம் என்று. இரண்டிடத்திலும் இந்தபரிஹாரம் ஸ்வசப்த ப்ராப்தமான ஸ்வபாவத்திற்கே நிஷேதார்த்தாநுவாத சங்கையின் பரிஹாரத்தின் பொருட்டு அஸ்தி சப்தத்தால் நியமம் செய்யப்படுகிறது என்று. பிறகு பாரமார்த்த்யத்திற்கு ஸாதகமாகச் சொல்லப்பட்டிருக்கிற அநுவர்தமானத்வ ஹேதுவை தூஷிக்கிறார்— யத்து இதுமுதலிய க்ரந்தத்தினால். ஸத்சப்தவாச்யமான ப்ரமாண ஸம்பந்தார்ஹமான அந்தந்த கடாதி ஸ்வரூபத்திற்கு பாரமார்த்த்யம ஸாதிக்கப்படுகிறதா? அல்லது அதிஷ்டானமாக அநுவர்திக்கப்பட்டிருக்கிற அர்த்தாந்தரத்திற்கா? என்கிற விகல்பத்தில் இரண்டாவது பக்ஷத்தில் ஆச்ரயாஸித்தியை அபிப்ராயப்பட்டு முதல் பக்ஷத்தில் ஸித்தஸாதநத்வம் தூஷணமாக உரைக்கப்பட்டது.

அய்யா! ஸத் ஒன்றே பரமார்த்தமென்றல்லவோ க்ரந்தகாரருடைய அபிப்ராயம், அவ்வாறு இருக்கஸித்தஸாதநத்வம் எவ்வாறு எனில், உத்தரம் சொல்லப்படுகிறது— இந்த அநுமானமானது ஸத்துக்கு பாரமார்த்யஸாதகமா? அல்லது ஸத்தைக்காட்டிலும் வேறான மற்றவஸ்துக்களின் அபாரமார்த்தயத்திற்கா? அல்லது இரண்டுக்குமா? முதலில் ஸித்தஸாத்யதை, இரண்டாவதில் வ்யதிகரணாஸித்ததை. மூன்றாவதில் அம்சத்தில் ஸித்தஸாத்யதை. அம்சத்தில் வ்யதிகரணாஸித்தியும். நிகமனம் செய்கிறார்—அத: என்று. அந்யனால் ப்ரமாணப்ரமேயாநுபபத்தியினால் செய்யப்பட்டிருக்கிற பேததூஷணத்தை ஆச்ரயித்து அநுபூதியைக்காட்டிலும் ஸத்துக்குபேதம் நிரஸிக்கப்பட்டது. இந்த இடத்தில் பேததூஷணஹேத்வாபாஸ நிராஸத்தை ஆச்ரயித்து அநுபூதிக்கும் ஸத்துக்கும் அபேதமும் நிரஸிக்கப்படுகிறது— அநுபூதி இதுமுதலியதால். அநுபூதி ஸத்விசேஷயோ: என்கிற இடத்தில் விசேஷசப்தத்தால் அநுவர்தமானத்வ ஹேதுவுக்கு ஆச்ரயாஸித்தி ஸூசிப்பிக்கப்படுகிறது. ஸத்சப்தத்தால் வாச்யமான வஸ்துவுக்கு வ்யாவ்ருத்தத்வத்தாலும் அநுவ்ருத்தமான அர்த்தாந்தரபாவத்தாலும். ஸத்சப்தமானது ப்ரமாண ஸம்பந்தார்ஹமான வஸ்துவினிடத்திலன்றோ இருக்கிறது. கடஸ்ஸந், படஸ்ஸந் என்கிற அநுவ்ருத்த வ்யவஹாரமானது வ்யாவ்ருத்தசப்தம்போல் உபபன்னமாகிறதாதலால் ப்ரமாணஸம்பந்தார்ஹங்களான பதார்த்தங்கள் பரஸ்பரவ்யாவ்ருத்தங்களாக இருந்து கொண்டு ஸச்சப்தவாச்யங்களாக இருக்கின்றன.

யத்து — அநுபூதே: ஸ்வயம்ப்ரகாசமாநத்வேந; தத்விஷயப்ரகாசநமேவாஸ்யா: ஜ்ஞாதவ்யாந்தரஸ்யைவ, ந து ஸத்த்வம் ஸத்த்வா தஸ்யைவேதி நியமோऽத்ர ஸித்த: । ப்ராந்தஸம்வஸ்த்ர ஹாநோபாதாநாதிவ்யவஹாராநுகூலாநஜ்ஞாநவிஷயத்வாத் । ஸ்வாந்தஸம்வஸ்த்ராவஸ்தித ஸ்ய "அஜ்ஞாதவிஷயத்வ" இதி ஜ்ஞாநவிஷயத்வஸாத்யநாத் । அநேகாந்த ஸம்பந்திநோ ஸத்வஸித்தேரிதி வக்தும் ந ஶக்யதே ॥

ஸ்ரீபாஷ்யம்—

அநுபூதிக்கு ஸ்வயம் ப்ரகாசத்வம் சொல்லப்பட்டதென்பது யாதொன்றுண்டோ அது விஷயப்ரகாசன வேளையில் ஜ்ஞாதாவான ஆத்மாவுக்கு அப்படியே ஒழிய எல்லோருக்கும் எப்பொழுதும் அப்படியே என்கிற நியமமில்லை. பராநுபவமானது ஹாநம் உபாதாநம் முதலியதை லிங்கமாகக்கொண்ட அநுமாந ஜ்ஞாநவிஷயமாவதால் சென்றுபோன ஸ்வாநுபவத்துக்கும் 'அறிந்தேன்' என்று ஜ்ஞாநவிஷயத்வம் காணப்படுவதாலும். ஆதலால் அநுபூதியாயிருக்குமேயாகில் அது ஸ்வதஸ்ஸித்தை என்று சொல்வதற்கு சக்யமாகாது.

ச்ருதப்ரகாசிகை:—

பிறகு அந்யனால் சொல்லப்பட்டிருக்கிற ஸ்வயம் ப்ரகாசத்வமானது அபிமதிக்கப்பட்டிருக்க அதில் சிக்ஷிக்கத்தக்க அம்சம் இருக்கிறது என்கிற அபிப்ராயத்தால் கூறுகிறார்— யத்த்வநுபூதே: என்று ''து'' என்பது பக்ஷவைஷம்யத்தை உணர்த்துகிறது. சொல்லத்தக்க அம்சத்தைச்சொல்லுகிறார்—தத்விஷயப்ரகாசநவேளாயாம் என்று. மேலே வர்த்தமானதசாயாம் என்றல்லவோ சொல்லப்படப்போகிறது. அந்த ஜ்ஞாநம் நித்ய த்ரவ்யமானதுபற்றி எப்பொழுதுமிருப்பதால் வர்த்தமாநதசாயாம் என்கிற பதம் ப்ரயோஜனமற்றதென்கிற சங்கையைப் போக்கடிப்பதின் பொருட்டு விஷயப்ரகாசநவேளாயாமென்று பகரப்பட்டது. வர்தமானதசா சப்தத்தால் விஷயஸம்பந்தப்ரஸரத்திற்கு வர்தமாநத்வம் விவக்ஷிக்கப்பட்டிருக்கிறதென்று அறியப்படுகிறது. ந து ஸர்வேஷாம் என்பதை உபபாதிக்கிறார்—பராநுபவஸ்ய என்று ஸர்வதா என்கிற பதத்தினது அர்த்தத்தை உபபாதிக்கிறார்—ஸ்வாநுபவஸ்யாபி என்று அநுபூதிஶ்சேத் என்கிற இந்தவாக்யத்தால் ஸ்வாசரயத்தைக் குறித்து விஷயப்ரகாசநவேளாயாம் என்று சொல்லப்பட்ட வைஷம்யத்தின் இன்மையானது உள்ளடக்கப்பட்டிருக்கிறது.

அநுபூதேரநுபாவ்யத்வே அநநுபூதித்வமிதி சாயுக்தம் | ஸ்வகதாதீதாநுபவாநாம் பரகதாநுபவாநாஞ்சாநுபாவ்யத்வேந அநநுபூதித்வப்ரஸங்காத் | [illegible] ச [illegible] ஹாநோபாதாந [illegible] ப்ரஸங்க: | [illegible] க்ரியதே | [illegible] அநுபூதித்வம் | அநுபூதித்வம் நாம வர்த்தமாநதஶாயாம் ஸ்வஸத்தயைவ ஸ்வாஶ்ரயம் ப்ரதி ப்ரகாஶமாநத்வம், ஸ்வஸத்தயைவ ஸ்வவிஷயஸாதநத்வம் வா | தே சாநுபவாந்தராநுபாவ்யத்வேऽபி ஸ்வாநுபவஸித்தே நாபகச்சத இதி நாநுபூதித்வமபகச்சதி | கடாதேஸ்த்வநநுபூதித்வம் தத்ஸ்வபாவவிர

ஹாராத், நாநுபா4வ்யத்வாத் । யதா2நுபூ4தேரநுபா4வ்யத்வே பி அநநுபூ4தித்வப்ரஸங்கோ3 து3ர்வார: । க3க3நகுஸுமாதே3ர நநுபா4வ்யஸ்யாநுபூ4தித்வாத் । க3க3நகுஸுமாதே3ரநநுபூ4 தித்வமஸத்த்வப்ரயுக்தம் , நாநநுபா4வ்யத்வப்ரயுக்தமிதி சேத் ; ஏவம் தர்ஹி க4டாதே3ரஜ்ஞாநாவிரோதி4த்வாதே3வாநநுபூ4தித்வமஸ்து, நாநுபா4வ்யத்வநிப3ந்த4நம் । அநுபூ4தேரநுபா4வ்யத்வே அஜ்ஞாநாவிரோதி4த்வே தஸ்யா: க4டாதே3ரிவ ப்ரஸஜ்யத இதி சேத்; அநநுபா4வ்யத்வேऽபி க3க3நகுஸுமாதே3ரிவாஜ்ஞாநாவிரோதி4த்வம் ப்ரஸஜ்யதாமேவ । அதோऽநுபா4வ்யத்வே அநுபூ4தித்வ ம்யவஹார்யம் ॥

ஸ்ரீபாஷ்யம்.—

அநுபூதிக்கு அநுபாவ்யத்வம் வரும்பக்ஷத்தில் அநுபூதித்வமில்லாமல் போகவேண்டிவரும் என்பதும் துஷ்டோக்தி. தன்னை அடைந்துள்ள அநுபவங்களுக்கும் அனயர்களை அடைந்திருக்கிற அநுபவங்களுக்கும் அநுபாவ்யத்வமிருப்பதுபற்றி அநநுபூதித்வம் ப்ரஸங்கிப்பதால்—பராநுபவாநுமானத்தை ஒப்புக்கொள்ளாதபக்ஷத்தில் சப்தார்த்தங்களுடைய ஸம்பந்தக்ரஹணமில்லாமையால் ஸமஸ்தசப்தவ்யவஹாரங்களுக்கும் அழிவுவரவேண்டியதாகும். ஆசார்யனிடத்திலிருக்கும் சிறந்த ஜ்ஞாநத்தை அநுமானத்தால் கண்டறிந்து அவருடைய பக்கலில் சிஷ்யர்கள் அணுகுகிறார்கள். அதுவும் பொருந்தாது. மற்றொன்றுக்கு விஷயமாக ஆனதினாலேயே அநுபூதிக்கு அநநுபூதித்வம் வந்துவிடுகிறதென்பதும் ஸரியல்ல. அநுபூதித்வமாவது வர்தமானதசையில் தன் ஸத்தையினாலேயே தனக்கு ஆச்ரயமான ஆத்மாவுக்கு ப்ரகாசித்தல், அல்லது தன் ஸத்தையினாலேயே தன்னுடைய விஷயத்தைஸாதித்தல், வேறு அநுபவத்தால் அநுபாவ்யத்வமிருந்தபோதிலுங்கூட ஸ்வாநுபவஸித்தங்களான அவைகள் இரண்டும் அகலுகிறதில்லை. ஆதலால் அநுபூதித்வம் போகாது. கடாதிகளுக்கோவென்றால் இந்த ஸ்வபாவமில்லாமையால் அநநுபூதித்வமே ஒழிய அநுபாவ்யத்வத்தாலல்ல. அவ்வாறே அநுபூதிக்கு அநுபாவ்யத்வமில்லாமலிருந்தபோதிலுங்கூட அநநுபூதித்வப்ரஸங்கம் தடுக்கமுடியாதது. அநநுபாவ்யமான ககந குஸுமாதிகளுக்கு அநநுபூதித்வம் இருப்பதால். ககநகுஸுமாதிகளுக்கு அநநுபூதித்வமானது அஸத்வத்தாலே ஏற்படுகிறதே ஒழிய அநநுபாவ்யத்வத்தாலல்லவென்று சொல்லப்படுமேயானால், இவ்வண்ணமாகில் கடம்முதலியவைகளுக்கு அஜ்ஞாநாவிரோதித்வமே அநநுபூதித்வத்திற்கு ஹேதுவே ஒழிய அநுபாவ்யத்வமல்லவென்று நிசசயித்துக்கொள்ளலாம். அநுபூதிக்கு அநுபாவ்யத்வம் வரும்

பக்ஷத்தில் அதற்கு கடாதிகளுக்குப்போல அஜ்ஞாநாவிரோதித்வம் ப்ரஸங்கிக்கும் என்று சொல்லப்படுமேயானால் அநநுபாவ்யத்வம் இருந்தபோதிலுங்கூட ககனகுஸுமம் முதலியவைகளுக்குப்போல அஜ்ஞாநாவிரோதித்வமும் தவறாமல் ப்ரஸங்கிக்கும். ஆதலால் அநுபாவ்யத்வம் வரின் அநநுபூதித்வம் வருமென்பது பரிஹஸிக்கத்தக்கது.

ச்ருதப்ரகாசிகை—

இவ்வண்ணம் அநுபூதிக்கு அநுபாவ்யத்வஸம்பவத்தை உபபாதநம்செய்து அதின் அஸம்பவத்தில் பரோக்தமான அநுமானத்தை தூஷிக்கிறார்— **அநுபூதே:** என்று. எதினால் எனில் கூறுகிறார்— ஸ்வகத என்று. பராநுபவாநுமேயத்வத்தை ஒப்புக்கொள்ளாத பக்ஷத்தில் அநிஷ்டமான லௌகிக வ்யவஹாரவிரோதத்தைக் கூறுகிறார்— பர என்று. அதற்குமேல் வைதிக வ்யவஹாரவிரோதத்தைக்கூறுகிறார்— **ஆசார்யஸ்ய** என்று. பராநுபவாநுமாந என்கிற பதத்தை முதலில் கொண்டவாக்யத்தால் சார்வாக நிராஸமும் பலித்தது. அநுமானத்தை ஒப்புக்கொள்ளாதபக்ஷத்தில் சப்தார்த்தங்களுக்கு பரஸ்பரம் ஸம்பந்தக்ரஹணம் ஸம்பவியாமல் போகும் இவ்வண்ணம் பாதகம் கூறப்பட்டது. பிறகு வ்யாப்தியை தூஷிக்கிறார்— **நசாந்ய** என்று. தர்மிக்ராஹகப்ரமாண ஸித்தமான அஸாதாரணாகாரமானது ஸாதாரணமான ஆகாரம் இருக்குங்கால் விலகுகிறதில்லை என்கிற அபிப்ராயத்தால் அநுபூதிஸ்வரூபத்தை சிக்ஷிக்கிறார்—**அநுபூதித்வம்** என்று. இந்த இடத்தில் அநுபூதிசப்தம் ஜ்ஞாநமாத்ரத்தை உணர்த்துகிறதே ஒழிய ஸ்ம்ருதிவிலக்ஷணபரமல்ல. ப்ரகாசமாநத்வமென்று சொல்லப்பட்டால் கடாதிகளுக்கும் அநுபூதித்வம் வரவேண்டியதாகுமாதலால் அதை வ்யாவர்திப்பதின்பொருட்டு ஸ்வாச்ரயம் ப்ரதி என்று கூறப்பட்டது. அணுத்வம் நித்யத்வம் முதலிய ஆத்மதர்மங்கள் ஜ்ஞாநாந்தரத்தால் ப்ரகாசிக்கத்தக்கவைகளாதலால் அவைகளை வ்யாவர்திப்பதற்காக ஸ்வஸத்தயைவ என்று உரைக்கப்பட்டது. சென்றுபோன அநுபவத்தின் வ்யாவ்ருத்தியைக்கருதி வர்தமாநதசாயாம் என்று உரைக்கப்பட்டது எப்படி இருந்தபோதிலும் அதீதாநுபவத்திற்கு, ஜ்ஞாநாந்தரமில்லாவிடில் ப்ரகாசம் பொருந்தாதாதலால் ஆர்த்திகமாக வ்யவச்சேதம் வருகிறது. ஆயினும் பராநபிமதமான சென்றகாலத்திய அநுபவ அதீதத்திற்கு ஜ்ஞாநாந்தரத்தால் ஸித்தியை வ்யுத்பாதநம செய்வதற்காக இந்த விசேஷணம். விஷயஸம்பந்தத்துக்கு வர்தமானதசையில் என்று அர்த்தம். வர்தமானதசையில் தன்ஸத்தையினாலேயே ப்ரகாசமாநத்வம் என்று சொன்னால் பராநுபவத்தில் அது ஸம்பவியாதாதலால் அதை வ்யாவ்ருத்திப்பதற்காக ஸ்வாச்ரயம் ப்ரதி என்று உரைக்கப்பட்டது. இந்த லக்ஷணமானது ஸ்வயம் ப்ரகாசத்வ வாதிகளுக்கே இஷ்டமென்பதினால் ஸர்வஸம்ப்ரதிபன்னமான லக்ஷணத்தைக் கூறுகிறார்— **ஸ்வஸத்தயைவ** என்று. ஸ்வாச்ரயம் ப்ரதிவர்தமானதசாயாம் என்கிற இரண்டு பதங்களுடைய அநுகர்ஷத்திற்கு உபலக்ஷணம் ஸ்வஸத்தயைவ என்கிற பதம். ஸாதநமென்று சொன்னால் தண்டம் சக்ரம் முதலியவைகளுக்கும் அத்தன்மை இருப்பதால் அவைகளை வ்யாவ்ருத்திப்பதற்காக ஸ்வாச்ரயம் ப்ரதி என்று கூறப்பட்டது. சாக்ஷுஷஜ்ஞாநமானது ச்ராவண விஷயத்தை ஸாதிக்கிறதில்லையாதலால் ஸர்வவிஷயஸாதநத்வாஸம்பவத்தை வ்யாவ்ருத்திப்பதற்காக ஸ்வசப்தம. இந்த்ரிய வ்யாவ்ருத்தியின் பொருட்டு ஸ்வஸத்தயைவ என்கிற பதம் இந்த்ரியம் முதலியவைகள் தன்னுடைய ஸத்தையினால் மாத்திரம் ப்ரகாசத்தை உண்டுபண்ணுகிறதென்பதில்லை. பின்னையோ

ஜ்ஞாநோத்பாதநத்தின் வாயிலாகவும் ப்ரகாசத்தை உண்டு பண்ணுகின்றன. வர்தமாநதசாயாம் என்பதினால் காலம் கடந்துபோன அநுபாவத்திற்கு வ்யாவ்ருத்தி வருகிறது ஸ்வாச்ரயம் ப்ரதி என்பதினால் பராநுபவத்திற்கு வ்யாவ்ருத்தி வருகிறது. அதினாலென்னவென்றால் சொல்லுகிறார்—தேச என்று இவ்வண்ணம் அநுபாவ்யத்வ ரூபமான ஸாத்யதர்ம நிராஸத்தால் அநுபாவ்யத்வத்தோடுஅநநுபூதித்வத்திற்கு ஸாமாநாதிகரண்யம் காணப்படுவதால் அநுபாவ்யத்வத்தோடு வ்யாப்தியானது நிராஸிக்கப்பட்டது. அங்ஙனமாகில் அநுபாவ்யத்வமிருந்தால் அநநுபூதித்வதர்சனம் எவ்வாறு என்று சங்கைவரின் ஸோபாதிகத்வத்தைக் கூறுகிறார்—கடாதேஸ்து என்று. அநநுபூதித்வம் அநுபூதிசப்தத்தால் வ்யவஹரிக்கத்தக்க தன்மையின் இன்மை என்பதினால் ஸாத்யாவிசிஷ்டதை இல்லை. அன்றிக்கே கூறப்பட்டுள்ள இரண்டுலக்ஷணங்களுக்குள் ஒன்று அநுபூதித்வம் ஸமுச்சயிக்கப்பட்ட இரண்டுமல்ல.ஒன்றை ஒன்று அபேக்ஷித்து இருததாலும் வாசப்தப்ரயோகத்தாலும். ச சப்தம் ப்ரயோகிக்கப்படவில்லையன்றோ அவ்விரண்டினுள் ஒரு லக்ஷணத்துடன் சேர்ந்து இருமையாகிற அநநுபூதித்வமானது இரண்டினுள் ஒரு ஆகாரத்தின் இன்மையினால் ஏற்படுத்தப்பட்டிருப்பதால் ஸோபாதிகத்வமென்று அர்த்தம்.

பிறகு ப்ரதிதர்கபராஹதியைக் கூறுகிறார்—ததாநுபூதே: என்று. அன்றிக்கே ஆபாஸமாநயோக க்ஷேமத்வத்தைக்கூறுகிறார். ககநகுஸுமம் முதலியதின்அநநுபூதித்வத்திற்கு அஸத்த்வத்தை வேறுஉபாதியாக சங்கிக்கிறார்—ககந என்று. கடாதியின் அநநுபூதித்வத்திற்கும் வேறு உபாதி அஜ்ஞாநாவிரோதித்வம் என்று கூறுகிறார்—ஏவந்தர்ஹி என்று. ப்ரகாசநியமாபாவாவிரோதித்வம் அஜ்ஞாநாவிரோதித்வம் ஸுகம் முதலியதில் இல்லாமையால் ஸாத்யஸமவ்யாப்தியின் இன்மை சங்கிக்கத்தக்கதல்ல. ஸுகம் முதலியது ஜ்ஞாநவிசேஷமாதலால் அநநுபூதியாகாது. அஜ்ஞாநா விரோதித்வத்திற்கு உபாதித்வத்தை நிரஸிப்பதின் பொருட்டு பக்ஷத்தில் அதை ப்ரஸங்கிக்கச்செய்கிறார்— அநுபூதே: என்று. அது உன்பக்ஷத்திலும் துல்யமென்று சொல்லுகிறார்— அநநுபாவ்யத்வேபி என்று. அநுபூதிக்கு அநுபாவ்யத்வம் வரும்பக்ஷத்தில் அநநுபூதித்வத்திற்கு உபாதியாகக் கூறப்பட்டிருக்கிற அஜ்ஞாநாவிரோதித்வமானது அநநுபாவ்யத்வ பக்ஷத்திலும் ப்ரஸங்கிக்குமென்று பொருள். அநுபாவ்யத்வம் வரும்பக்ஷத்தில் அநநுபூதித்வமும் அஜ்ஞாநாவிரோதித்வமும் வரும் என்று யாதொன்று கூறப்பட்டதோ அது ககந குஸுமாதிகளுக்கும்போல அநுபாவ்யத்வபக்ஷத்திலும் ப்ரஸங்கிக்குமென்று கூறப்பட்டது. ககந குஸுமம்முதலியதில் அநநுபூதித்வமும் அஜ்ஞாநாவிரோதித்வமும் அஸத்த்வப்ரயுக்தமேதவிர்த்து அநநுபாவ்யத்வ ப்ரயுக்தமல்லவென்று கூறப்படுமேயாகில் அநநுபாவ்யத்வ பக்ஷத்தில் அப்படிப்போல அஸத்த்வமும் ப்ரஸங்கிக்கும். ககந குஸுமாதிகளின் அஸத்த்வமானது அநநுபாவ்யத்வமாத்ர ப்ரயுக்த மல்ல. பின்னையோ ஸ்வயம் ப்ரகாசத்வமிருக்க அநநுபாவ்யத்வமில்லாமையினாலுண்டுபண்ணப்பட்டது. அநுபூதிக்கு அநநுபாவ்யத்வ மாத்ரத்தினால் அஸத்த்வப்ரஸக்தி இல்லை என்று சொல்லப்படுமேயானால் அநநுபாவ்யத்வம் வரும்பக்ஷத்தில் அப்படிப்போல அஸ்வயம் ப்ரகாசத்வமும் வரவேண்டியதாகும். ஆகையால் அஸ்வயம்ப்ரகாசத்வமிருக்க அநநுபாவ்யத்வ ப்ரயுக்தமான அஸத்த்வமானது அநுபூதிக்கு எவ்விதத்தாலும் தடுக்கமுடியாதது. அஸத்த்வமோ வென்றால் தர்மிக்ராஹகப்ரமாணத்திற்கு விருத்தமென்று சொல்லப்படுமேயாகில், அநுபாவ்யத்வம் வரும்பக்ஷத்தில் அநநுபூதித்வமும் அப்படியே என்று இவ்விதமனுஸந்திக்கத்தக்கதென்று பாஷ்யாபிப்ராயம். ஆகாயமலர் உதாஹரணத்திலோ ஆச்ரயவைகல்யதோஷம் சங்கிக்கத்தக்கதல்ல. க்யாதிக்கு "நாஸத்" என்று வ்யதிரேகதிருஷ்டாந்தத்வமானது அன்யர்களால் அங்கீகரிக்கப்பட்டிருப்பதால். சப்தஜ்ஞாநாநுபாதீ

வஸ்து சூன்யோऽவபாஸோ விகல்ப:—ஸ்வவபாவஸ்த்வவபாஸப்ரதீதி:, என்றல்லவோ அவர்களால் சொல்லப்படுகிறது. அவற்றுள் ஆபாஸப்ரதீதிவிஷயமான வஸ்துவுக்குங்கூட நிஷேதாதிகரணத்வம் யுக்தமென்பது பாட்டர்களாலும் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் பரமதப்ரக்ரியையினால் கபுஷ்பம் உதாஹரிக்கப்பட்டது. உபஹாஸ்யம்- ஸமீபத்திலிருப்பவர்களால்கூட சிறிக்கத்தக்கதென்று அர்த்தம்.

यत्तु—संविदः स्वतःसिद्धायाः प्रागभावाद्यभावादुत्पत्तिनिरस्यते; तदन्धस्य जात्यन्धेन यष्टिः प्रदीयते। प्रागभावस्य ग्राहकाभावादभावो न शक्यते वक्तुमिति चेत्, न; अनुभूत्यैव ग्रहणात्। कथमनुभूतिः सती तदानीमेव स्वाभावं विरोधिनमवगमयतीति चेत्; न ह्यनुभूतिः स्वसमकालवर्तिनमेव विषयीकरोतीत्यस्ति नियमः, अतीतानागतयोरविषयत्वप्रसङ्गात्॥

ஸ்ரீபாஷ்யம்.—

ஸ்வதஸ்ஸித்தையாக இருக்கிற ஸம்வித்துக்கு ப்ராகபாவம் முதலியது இல்லாமையால் உத்பத்தியானது நிராகரிக்கப்படுகிற தென்பது யாதொன்றுண்டோ; அது குருடனுக்கு பிறவிக்குருடனால் கோல் கொடுக்கப்படுவது போல். ப்ராகபாவத்தை க்ரஹிக்கிற ப்ரமாணமில்லாமையால் அபாவமானது சொல்வதற்கு சக்யமாகாதென்று கூறப்படுமேயாகில் அல்ல; அநுபூதியினாலேயே க்ரஹிக்கப்படுவதால். அநுபூதியானது தானிருந்துகொண்டு அப்பொழுதே தனக்கு விருத்தமான தன்னுடைய அபாவத்தை எவ்வாறு அறிவிப்பிக்கும் என்று சொல்லப்படுமேயானால்; அநுபூதியானது தன்னோடு ஸமகாலத்திலிருக்கிற பதார்த்தத்தையே விஷயீகரிக்கிறது என்கிற நியமமில்லையன்றோ—அங்ஙனமாகில் சென்றதும் இனிவரப்போகிறதுமான அநுபவங்களுக்கு அவிஷயத்வம் ப்ரஸங்கிக்கும்.

ச்ருதப்ரகாசிகை—

இதற்குமேல் பிறர்களால் சொல்லப்பட்ட நித்யத்வத்தை நிரஸநம் செய்கிறார்— யத்து இது முதலியதால். அய்யா! ஜ்ஞாநத்திற்கு நித்யத்வத்தை ஒப்புக்கொள்ளுகிறவர்களுக்கு எவ்வாறு அதை நிரஸனம் செய்வது பொருத்தமுள்ளதாக ஆகும்—(உத்தரம்) சொல்லப்படுகிறது. ஜ்ஞாநத்திற்கு ஆதாரமாக இருப்பவன் ஆத்மா. அந்த ஆத்மாவை ஆச்ரயித்திருப்பதும் ஸங்கோச விகாஸங்களுக்குத் தகுதியுள்ளதும் நித்யமாயுமுள்ள ஜ்ஞாநத்ரவ்யம் அந்யனுக்கு அபிமதமல்லாதது. ப்ரஸ்துதமானதும் இந்த்ரிய ஸம்யோகாதிகளின் அந்வய வ்யதிரேகங்களை அநுஸரிக்கின்றதும் ப்ரத்யக்ஷத்வாபரோக்ஷத்வ ப்ரமாணத்வா ப்ரமாணத்வாவஸ்தையுடன் கூடியதுமான லோகஸித்தமான

யாதொரு ஜ்ஞாநமுண்டோ அதற்கு அநித்யத்வம் உபபாதிக்கப்படுகிறதோ, அது நிர, ஸிக்கப்படுகிறது. விஷயஸம்பந்தி ஜ்ஞாநத்திற்கன்றோ ஸ்வயம் ப்ரகாசத்வம அந்யனால் ஸமர்த்திக்கப்பட்டது. ஸ்வயம்ப்ரகாசத்வஸமாநாதிகரணமான நித்யத்வம் அன்யனுக்கு இஷ்டம். ஸ்வதஸ்ஸித்தமாக இருப்பதுபற்றி நித்யத்வம் ஸமர்த்திக்கப்பட்டிருப்பதால். அதனால் அதினுடைய நிராஸம் யுக்தமானது. அதிலும் ம்ருத்த்ரவ்யம் ஸித்தமாக இருந்தபோதிலும் கடத்வம் முதலிய அவஸ்தையுள்ள ம்ருத்த்ரவ்யத்திற்கு அநித்யத்வம்போல ஜ்ஞாநமென்கிற த்ரவ்யத்திற்கு நித்யத்வமிருந்தபோதிலும் ஸ்ம்ருதித்வம் அநுபூதித்வம் முதலிய அவஸ்தையுள்ள ஜ்ஞாநத்திற்கு அநித்யத்வம் யுக்தமென்பதினால் ஸ்வபக்ஷவிரோதமில்லை. ஸ்வயம் ப்ரகாசத்வமிருந்தபோதிலும் உபாதேயத்வம் ஒன்றிருப்பதினால் அதை வ்யாவ்ருத்திப்பதற்காக துசப்தம். "அந்தஸ்ய ஜாத்யந்தேந யஷ்டி: ப்ரதீயதே இதி. அஸித்தமானது அத்யந்தாஸித்தமான ஹேதுவினால் ஸாதிக்கப்படுகிறது, என்று அர்த்தம். அந்த இடத்தில் க்ராஹகமில்லாமையாலும் க்ராஹ்யமில்லாமையாலும் ப்ராகபாவத்திற்கு அபாவம் உரைக்கப்பட்டது. அதை ஆசங்கித்து †க்ராஹகமிருக்கிறதென்று சொல்லுகிறார்-ப்ராகபாவஸ்ய என்று. அங்கு விகல்பம் பூர்வபக்ஷியினால் கூறப்பட்டிருந்தாலேதான் அறியப்படுகிறதென்றுபக்ஷத்தை ஸ்தாபிப்பதற்காக அங்கு சொல்லப்பட்டிருக்கிற விரோதத்தை சங்கிக்கிறார்—கதம் என்று. கதம் என்பது அபாவவிசேஷணம். க்ரியாவிசேஷணமல்ல. பரிஹரிக்கிறார்—நஹி என்று. ஸ்வஸமகாலவர்த்தித்வ நியமமானது * க்ராஹ்யஸாமான்ய ப்ரயுக்தமா? அல்லது க்ராஹ்யவிசேஷ ப்ரயுக்தமா? என்கிற விகல்பாபிப்ராயத்தால் முதலில் க்ராஹ்ய ஸாமாந்ய ப்ரயுக்தத்வபக்ஷத்தை மறுத்துக் கூறுகிறார்—நஹ்யநுபூதி: என்று. அன்றிக்கே, வர்தமானக்ரஹண நியமமானது க்ராஹகாநுபூதிஸ்வபாவத்தினாலா? அல்லது க்ராஹ்யாநுபூதியின் அபாவ ஸ்வபாவத்தினாலா? என்கிற விகல்பத்தை அபிப்ராயப்பட்டு முதல் பக்ஷத்தை தூஷிக்கிறார்—நஹி என்று. "ஹி" சப்தம் ஹேதுவைச்சொல்லுகிறது. "ந" என்று ப்ரதிஜ்ஞை அத்யாஹாரம் செய்துகொள்ளத்தக்கது.

[illegible]

---

† க்ராஹகம்— அறிவதற்கு ஸாதநம்.

* க்ராஹ்யம்—ஜ்ஞாநத்தினால் அறியத்தக்கது.

ஸம்பந்திதயா யோऽர்தோऽவபாஸதே, தஸ்ய ததாவிதாகாரமித்யா த்வப்ரத்யநீகதா । அத இதமபி நிரஸ்தம் — ஸ்ம்ருதிர்ந பாஹ்யவிஷயா, நஷ்டேऽப்யர்தே ஸ்ம்ருதிதர்சநாத் — இதி ॥

அதோச்யேத — ந தாவத்ஸம்வித்ப்ராகபாவ꞉ ப்ரத்யக்ஷாவஸேய꞉, அவர்தமாநத்வாத் । ந ச ப்ரமாணாந்தராவஸேய꞉, லிங்காத்யபாவாத் । ந ஹி ஸம்வித்ப்ராகபாவவ்யாப்தம் லிங்கமுபலப்யதே । ந சாகமஸ்தத்விஷயோ த்ருஷ்டசர꞉ । அதஸ்ஸம்வித்ப்ராகபாவ꞉ ப்ரமாணாபாவாதேவ நாஸ்தி — இதி ; யத்யேவம் ஸ்வதஸ்ஸித்தஸம்விதம் பரித்யஜ்ய ப்ரமாணா[illegible] ; யோக்யாநுபலப்த்யா [illegible] இத்யபிப்ராயேண [illegible] ॥

ஸ்ரீபாஷ்யம்.—

ஸித்திக்கிற அநுபூதி ப்ராகபாவம் முதலியதற்கு அந்த அநுபூதியின் ஸ்திதிகாலத்திற்கு ஸமமானகாலத்தில் ஸ்திதிநியமம் இருக்கவேண்டுமென்று எண்ணுகிறாயோ, உன்னால் எந்த இடத்திலாவது இவ்வண்ணம் காணப்பட்டிருக்கிறதா ? எதனால் நியமத்தைக்கூறுகிறாயோ. ஸந்தோஷம், அங்ஙனமாகில் அந்தஅநுபூதிகாலத்தில் ஸ்திதிதர்சநத்தினாலேயே ப்ராகபாவம்முதலியது ஸித்திப்பதால் அதற்குஅபலாபங்கூடாது. அதின்ப்ராகபாவம் அதோடு ஸமகாலத்திலிருக்கிறதென்று பைத்யமில்லாதவன் எவன்தான் சொல்லுவான். ஸமகாலவர்த்தியானபதார்த்தத்தை க்ரஹித்தல் என்கிற யாதொரு தன்மையுண்டோ இந்த ஸ்வபாவநியமமானது இந்த்ரியங்களால் உண்டாகிற ப்ரத்யக்ஷத்திற்கல்லவோ, எல்லாஜ்ஞாநங்களுக்கும் ப்ரமாணங்களுக்கும் இந்தஸ்வபாவமில்லை. ஸ்மரணம் அநுமானம் ஆகமம் ப்ரயோகம் யோகிப்ரத்யக்ஷம்முதலியவைகளில் காலாந்தரங்களிலிருப்பதைக்கூட க்ரஹிக்கும் திறமை காணப்படுவதால், இதனாலேதான் ப்ரமாணங்களுக்குப்ரமேயங்களுடன்சேர்க்கை. ப்ரமாணத்திற்கு தனக்குஸமகாலத்திலிருக்கிற ப்ரமேயத்தோடு விலகாமல் சேர்ந்திருத்தல் அர்த்தஸம்பந்தமல்ல, பின்னேயோ எந்ததேசம் காலம் முதலியதோடு ஸம்பந்தமுள்ளதாக எந்த அர்த்தம் தோன்றுகிறதோ அந்த அர்த்தத்தினுடைய அப்படிப்பட்ட ஆகாரத்தின் மித்யாத்வத்திற்கு ப்ரத்யநீகதைதான் அர்த்த ஸம்பந்தம் ஆதலால் இதுவும் நிரஸிக்கப்பட்டது. ஸ்ம்ருதியானது பாஹ்யவிஷயங்களுள்ளதல்ல அர்த்தம் நஷ்டமாக இருக்கும்பொழுதுகூட ஸ்ம்ருதி காணப்படுவதால்.

அப்படிக்கின்றி ஸம்வித்ப்ராகபாவமானது ப்ரத்யக்ஷத்திஞல் நிச்சயிக்கத்தக்கதல்ல. நிகழ்காலத்திலில்லாமையால். வேறு ப்ரமாணங்களாலும் நிச்சயிக்கத்தக்கதல்ல. லிங்கம் முதலியவைகளில்லாமையால். ஸம்வித் ப்ராகபாவவ்யாப்தமான லிங்கம் இங்கு அறியப்படுகிறதில்லை யன்றே. அந்த ப்ராகபாவவிஷயமான சப்தப்ரமாணமும் இதற்குமுன் காணப்பட்டிருக்கவில்லை. ஆகையால் அந்த அநுபூதியின் ப்ராகபாவமானது ப்ரமாணமில்லாமையாலேயே ஸித்திபெருது என்று சொல்லப்படுமேயாகில், இவ்வண்ணம் ஸ்வதஸ்ஸித்தத்வவிபவத்தை விட்டு விட்டு ப்ரமாணுபாவத்தில் இரங்குவாயேயாகில் * யோக்யாநுபலப்தியிஞலேயே அபாவம் ஸமர்த்திக்கப்பட்டபடியால் நீ தணிதலை அடைவாயாக.

ச்ருதப்ரகாசிகை—

க்ராஹ்ய விசேஷபக்ஷத்தைத் தூஷிப்பதற்காகச் சங்கிக்கிருர்— அத மந்யஸே என்று. க்ராஹ்ய விசேஷதத்திற்கு ஸமகாலவர்தித்வ நியமவசனமானது தர்சநபூர்வகமாகவே இருக்கவேண்டுமென்கிற அபிப்ராயத்தால் சொல்லுகிருர்— கிம்த்வயா என்று. க்வசித் - அநுபூதியில். வ்யாப்திக்ரஹண பூமியாக அபாவம் காணப்பட்டிருப்பதால் ப்ராகபாவம் எவ்விதத்தாலும் மறுக்கமுடியாததென்று கூறுகிருர்—ஹந்த தர்ஹி என்று. ப்ராகபாவத்திற்கு ஸமகாலஸித்தியோடு வ்யாப்தியானது, அநுபூதிப்ராகபாவரூபமான தர்மியானது க்ராஹிக்கப்பட்டாலன்றே ஸித்திக்கிறது என்று அர்த்தம். ஆதி சப்தம் ப்ரத்வம்ஸாபாவத்தைக் குறிக்கிறது. ஸமகாலவர்தித்வ நியமத்தை அங்கீகரித்துக்கொண்டு தூஷணமுரைக்கப்பட்டது. ஸமகாலவர்தித்வமும் அநுபபன்னமென்று கூறுகிருர்— தத்ப்ராகபாவஞ்ச என்று. ஸ்வஸமகாலவாதிக்ரஹண நியமம் அநுபூதிக்கு இல்லையாகில் அப்பொழுது கடமில்லாமலிருந்தபோதிலுங்கூட சாக்ஷுஷ ஜ்ஞாநம் ஸம்பவிக்கலாம் என்று கேட்கில் அதற்கு மறுமொழிகூறுகிருர் இந்த்ரியஜந்மந:என்று. ப்ரத்யக்ஷசப்தத்தால் ப்ரத்யக்ஷஜ்ஞாநம் சொல்லப்படுகிறது. இது அபிப்ராயம்—ஸ்வஸமகாலவர்திகராஹகத்வ நியமமானது ஜ்ஞாநஸாமான்யத்திற்கும் இல்லை, அதின்

* அநுபலப்தி ப்ரமாணம்— பதார்த்தங்களின் இன்மையை நிச்சயமாக அறிவதற்கு ஸாதனமாக இருப்பதுபற்றி அநுபலப்தியானது ஒருப்ரமாணம். பதார்த்தமிருந்தால் காணப்படும். காணப்படாமையால் பதார்த்தமில்லை என்று. இந்த தூணில் பிசாசு இருந்தால் காணப்படும். காணப்படாமையால் பிசாசு இல்லை, என்று சொல்வதற்குசக்யமில்லாமையால். அநுபலப்தி எவ்வாறு அபாவக்ராஹகப்ரமாணமாகலாமென்று கேழ்க்கப்படுமேயாகில், கேவலாநுபலப்தி இவ்விஷயத்தில் ப்ரமாணமாகா, பின்னேயோ யோக்யாநுலப்தியே ப்ரமாணம். அநுபலப்திக்கு யோக்யத்வமாவது ப்ரதியோகி ஸத்வ ப்ரஸஞ்ஜக ப்ரஸஞ்ஜித ப்ரதியோகிகத்வம். கடமிருந்தால் காணப்படும் காணப்படாமையால் கடமில்லை என்கிற இடத்தில் ப்ரதியோகி கடம் அதின் ஸத்வமாவது இருப்பு- அதின் ப்ரஸஞ்ஜனத்தால் உபலப்திபானது ப்ரஸஞ்ஜிக்கப்படுவதால் இப்படிப்பட்ட உபலப்தியை ப்ரதியோகியாகக்கொண்டிருக்கிறது. (உபலப்தியினுடைய அபாவரூபமான) அநுபலப்தி. இவ்விதமான யோக்யாநுபலப்தி இல்லாமையால் தூணில் பிசாசாபாவம் க்ராஹிக்கப்படுகிறதில்லை.

அவாந்தரபேத ப்ரமாண ஜ்ஞானத்திற்கு மில்லை, அதின் அவாந்தரபேத ப்ரத்யக்ஷத்திற்கு மில்லை, பின்னேயோ ப்ரத்யக்ஷ விசேஷரூபமான ஐந்த்ரியக ஜ்ஞானத்திற்கே என்று. நஹ்யர்வேஷாம் ஜ்ஞாநாநாம் ப்ரமாணநாஞ்ச என்று. ச சப்தத்தால் ப்ரத்யக்ஷத்திற்கு என்று சொல்லப்பட்டதாக ஆகிறது. உபபாதக க்ரந்தத்தின் ஒற்றுமையினால், எதினுலென்று கேட்கில் சொல்லுகிருர்— ஸ்மரணநுமாந என்று. ஸ்மரண சப்தத்தால் எல்லாஜ்ஞானங்களுக்கும் ஸமகாலவர்த்தி விஷயத்வ நியமவ்யுதாஸம் ஸித்தித்தது. அநுமானசப்தத்தால் ப்ரமாணமாத்ரத்திற்கு அந்த நியமவ்யுதாஸம் ஏற்படுகிறது. யோகி ப்ரத்யக்ஷாதி சப்தத்தால் ப்ரத்யக்ஷமாத்ரத்திற்கு அந்த நியமவ்யுதாஸம் ஏற்படுகிறது. ஆதிசப்தத்தால் ஈச்வர ப்ரத்யக்ஷம் க்ரஹிக்கப்படுகிறது. ப்ரமேயஸத்பாவம் இல்லாமல் போமேயானால் ப்ரமாணப்ரமாணஜ்ஞானங்கள் இரண்டுக்கும் எவ்வாறு வைஷம்யம் என்று கேட்கில் கூறுகிருர்—அத ஏவ என்று அதனால் ஜ்ஞானமாத்ரத்திற்கு ஸமகால வர்த்திக்ராஹகத்வ நியம மில்லாமையால் ப்ரமேயாவிநாபாவமும் ஸித்தமென்று அர்த்தம். அப்படி இல்லாவிட்டால் வர்த்தமான விஷயாலாபத்தினுல் அஸமகாலவர்த்தி க்ராஹிகளான அந்த அந்த ப்ரமாணங்களுக்கு ப்ரமேயாவிநாபாவம் ஸித்தியாமல்போகுமென்று கருத்து. அதின் ஸித்தி எவ்வாறு என்று அபேக்ஷிக்கும்கால் அதே அவிநாபாவத்தை விவரிக்கிருர்— நஹிப்ரமாணஸ்ய என்று. ப்ரமாணத்திற்கு அர்த்தஸம்பந்தம் என்று அந்வயம். அப்படியானுல் ப்ரமேயாவிநாபாவம் எது என்று வினவ உத்தரமளிக்கிருர்—அபிது என்று யத்தேசகாலாதி என்கிற இடத்திலுள்ள ஆதிசப்தத்தால் ஸம்ஸ்தாரம் சொல்லப்படுகிறது. மித்யாத்வ‡ப்ரத்யநீகதா, மித்யாத்வத்திற்கு ப்ரமாணம் ப்ரத்யநீகமாக இருக்கிறது. அதின் தன்மை என்று கருத்து. அன்றிக்கே. அர்த்தம் மித்யாத்வ ப்ரத்யநீகமாக இருக்கிறது. அதின் தன்மை மித்யாத்வ ப்ரத்யநீகதா. அது ப்ரமாணத்திற்கு அர்த்தஸம்பந்தம் என்று அந்வயம். "அதஏவ" இது முதலிய பாஷ்யத்திற்கு இப்படியாவது அர்த்தம்—இதினுலேயே ப்ரமாணங்களாக ஸம்ப்ரதிபன்னங்களுக்கு காலாந்தராதி க்ராஹகத்வம் காணப்படுவதால் அவ்விடத்திலும் ப்ரமேயாவிநாபாவம் கல்பிக்கப்படுகிறதென்று அர்த்தம் அங்கு அவிநாபாவ ப்ரகாரம் எவ்வாறு என்று கேட்கில் சொல்லுகிருர்— நஹீத்யாதி. இந்த ப்ரமாண ப்ரமேயாவிநாபாவரூப விஷயவிஷயிபாவ சிக்ஷணத்தினுலேயே பௌத்த ஏகதேசிகளால் சொல்லப்பட்டிருக்கிற ஸ்ம்ருதிக்கு நிர்விஷயத்வம் நிரஸிக்கப்படுகிறதென்று அவசியம் ஒப்புக்கொள்ளத்தக்கது என்கிற அபிப்ராயத்தால் சொல்லுகிருர்— அத: இதமபி என்று. இவ்வண்ணம் அநுபூதியே ப்ராகபாவத்தை க்ரஹிப்பதில் திறமையுள்ளதென்று உபபாதனம் செய்யப்பட்டது. பிறகு அதை க்ரஹிக்கிற அநுபவமானது ப்ரத்யக்ஷம் முதலியவற்றுள் ஒன்ருக இருக்கத்தக்கது. அது ஸம்பவியாததுபற்றி ப்ரமாணமில்லாமையால் ப்ராகபாவத்தின் அபாவத்தை சங்கிக்கிருர்— அதோ ச்யேத என்று. விகாதயபாவாத் என்கிற இடத்திலிருக்கிற ஆதி சப்தத்தால் அநுமானம் சப்தம் இரண்டும் சொல்லக்கருதப்பட்டிருக்கின்றன. அதை விவரிக்கிருர்— நஹி இது முதலியதால். நிகமனம் பண்ணுகிருர்— அத: என்று. உபமானமானது அறியப்பட்டுள்ள வஸ்து ஸாத்ருச்யம், ஸஞ்ஜ்ஞாஸம்ஜ்ஞி ஸம்பந்தம், இவ்விரண்டினுள் ஒன்றுக்கு மாத்ரம் கோசரமாக இருப்பதால் அறியப்பட்டிருக்கிற பதார்த்த ப்ரதிபாதனத்தில் ஸாமர்த்த்யமில்லாமையால் உபந்யஸிக்கப்படவில்லை. பரிஹரிக்கிருர்—யதி என்று. யதி சப்தமானது கிம் சப்தத்தின் அர்த்தமுள்ளது. சேத் சப்தமானது யதி சப்தத்தின் அர்த்தமுள்ளது. தன் வழியைவிட்டு சாஸ்த்ர மர்யாதையில் இறங்கி இருக்கிருயோ அப்படியானுல், என்று அர்த்தம்.

‡ ப்ரத்யநீகம்—எதிர் அணி, அல்லது விரோதி.

ப்ரமாணத்தைச் சொல்லுகிறர்— யோக்யாநுபலப்த்யேவ என்று. எதிரி அபாவப்ரமாணத்தை ஒப்புக்கொண்டிருப்பதால் யோக்யாநுபலப்தியினலேயே என்று உரைக்கப்பட்டது. தன் பக்ஷத்தின் பாயாலோசனையிலும் ஜ்ஞாநத்திற்கு யோக்யாநுபலப்தியாவது பாவரூபமான அவஸ்தாந்தரத்தின் உபலப்தி. பிண்டத்வாத்யுபலப்தியேயன்றே கடத்திற்கு யோக்யாநுபலப்தி. அதனல் அநிநகாலாவச்சின்ன ஜ்ஞாநாபாவமாவது ஜ்ஞாநத்தின் ஸங்கோசம், அல்லது அர்த்தாந்தரஜ்ஞாநம் பூர்வகாலீனமான கட ஜ்ஞாநமானது அறியவிரும்பப் பட்டிருக்குமேயாகில்; அக்காலத்திலுள்ள ஸ்வாபாதி ப்ரதிஸந்தானமோ, கடாதிஜ்ஞாநப்ரதிஸந்தானமோ, கடஜ்ஞாநத்திற்கு யோக்யாநுபலப்தி. அதுவும் லிங்கமாயிருப்பதால் பூர்வகாலீனமான ஜ்ஞாநாபாவத்தை நிச்சயப்படுத்துகிறது. ஸம்வித்தானது இதென்று விஷயீகரிப்பதற்குத்தகுதி இல்லாததலால் அபாவம் க்ரஹிக்கமுடியாதது என்று எது சொல்லப்பட்டதோ அது ஸரியன்று. அப்படி இருக்குமேயானல் ப்ராகபாவநிராஸம் பொருந்தாது. வேறுனகடம் முதலியதின் ப்ராகபாவம் நிரஸிக்கப்படுகிறதில்லை. பின்னையோ அநுபூதியினுடைய ப்ராகபாவம் நிரஸிக்கப்படுகிறது. ஆகையால் அநுபூதியை இயம் என்று விஷயீகரித்து அதின் ப்ராகபாவம் நிராகரிக்கத்தக்கது. இயமென்று விஷயீகாரமில்லாமல்போனபோதிலும அதின் ப்ராகபாவம் நிராகரிப்பதற்கு சக்யமென்று கூறப்படுமேயாகில் அதில்லாமலிருந்தபோதிலுங்கூட ப்ராகபாவம் ஸாதிப்பதற்கு சக்யமாகும். உன்னல் விஷயீகரிக்கப்பட்டிருக்கிறதேயானல் அப்படிப்போல நம்மாலும் விஷயீகரிக்கப்பட்டிருக்கிறதென்று அதின் அபாவம் ஸுலபமாகஸாதிக்கத்தக்கதென்று அநுஸந்திக்கத்தக்கது. மேலே 'நித்யஞ்சேத்' என்கிற க்ரந்தத்தில் இந்த ஆசயமேயன்றே அபிப்ராயப்படப்பட்டிருக்கிறது.

கிஞ்ச— ப்ரத்யக்ஷஜ்ஞாநம் ஸ்வவிஷயம் கடாதிகம் ஸ்வஸத்தாகாலே ஸந்தம் ஸாதயத்தஸ்ய ந ஸ்வேதரஸத்தாவைலக்ஷண்யம் ப்ரஸஜ்யத இதி கடாதே: பூர்வோத்தராகாரஸத்தா ந ப்ரதீயதே । தத்ப்ரதீதிஸ்து ஸம்வேதநஸ்ய காலபரிச்சிந்நதயா ப்ரதீதே: । கடாதிவிஷயஸ்யைவ ஸம்வேதநம் ஸ்வயம் காலாநவச்சிந்நம் ப்ரதீதமிதிசேத்; ஸம்வேதநவிஷயோ கடாதிரபி காலாநவச்சிந்ந: ப்ரதீயேத இதி நித்யஸ்ஸ்யாத் । நித்யஞ்ச ஸ்வதஸ்ஸம்வேதநம் ஸ்வதஸ்ஸித்தம் நித்யமித்யேவ ப்ரதீயேத । ந ச ததா ப்ரதீயதே ॥

ஏவமநுபூதாநாதிஸம்வேதநாந்யபி காலாநவச்சிந்நா: ப்ரதீதாஸ்ஸ்யு: ஸ்வவிஷயாநபி காலாநவச்சிந்நாந் ப்ரகாசயந்தீதி தே ச ஸர்வே காலாநவச்சிந்நா நித்யாஸ்ஸ்யு:; ஸம்வேதநாநந்தர்யேண ஸர்வார்த்தவிஷயாணாம் । ந ச நிர்விஷயா காசித்ஸம்வித்தஸ்தி; அநுபலம்பாத் । விஷயப்ரகாசநதயைவோபலப்தேரேவ ஹி ஸம்வித்ஸ்வயம்ப்ரகாசதா வ்யவஸ்திதா; ஸம்வித: விஷயப்ரகாசநதாஸ்வபாவவிரஹே ஸதி

𑌸𑍍𑌵𑌯𑌂𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌤𑍍𑌵𑌾𑌸𑌿𑌦𑍍𑌧𑍇𑌃 𑌅𑌨𑍁𑌭𑍂𑌤𑍇𑌰𑌨𑍁𑌭𑌵𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌨𑌨𑍁𑌭𑌾𑌵𑍍𑌯𑌤𑍍𑌵𑌾𑌚𑍍𑌚 𑌸𑌂𑌵𑌿𑌦𑌸𑍍𑌤𑍁𑌚𑍍𑌛𑌤𑍍𑌵𑌮𑍇𑌵 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 । 𑌨 𑌚 𑌸𑍍𑌵𑌾𑌪𑌮𑌦𑌮𑍂𑌰𑍍𑌛𑌾𑌸𑍁 𑌸𑌰𑍍𑌵𑌵𑌿𑌷𑌯𑌶𑍂𑌨𑍍𑌯𑌾 𑌕𑍇𑌵𑌲𑍈𑌵 𑌸𑌂𑌵𑌿𑌤𑍍𑌸𑍍𑌫𑍁𑌰𑌤𑍀𑌤𑌿 𑌵𑌾𑌚𑍍𑌯𑌮𑍍; 𑌯𑍋𑌗𑍍𑌯𑌾𑌨𑍁𑌪𑌲𑌬𑍍𑌧𑌿𑌪𑌰𑌾𑌹𑌤𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 । 𑌤𑌾𑌸𑍍𑌵𑌪𑌿 𑌦𑌶𑌾𑌸𑍍𑌵𑌨𑍁𑌭𑍂𑌤𑌿𑌰𑌨𑍁𑌭𑍂𑌤𑌾 𑌚𑍇𑌤𑍍; 𑌤𑌸𑍍𑌯𑌾𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌬𑍋𑌧𑌸𑌮𑌯𑍇𑌽𑌨𑍁𑌸𑌨𑍍𑌧𑌾𑌨𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍; 𑌨 𑌚 𑌤𑌦𑌸𑍍𑌤𑌿 ॥

ஸ்ரீபாஷ்யம்:—

மேலும் ப்ரத்யக்ஷஜ்ஞாநமானது தனக்கு விஷயமான கடம் முதலியவற்றை தானிருக்கும் ஸமயத்தில் இருப்புள்ளதாக ஸாதியாநின்றுகொண்டு அதினுடைய ஸத்தையை எப்பொழுதும் அறிவிக்கின்றதாகக் காணப்படுகிறதில்லை என்பதினால் கடாதிகளுடைய பூர்வோத்தர காலஸத்தையானது அறியப்படுகிறதில்லை. அதின் அப்ரதீதியும் ஸம்வேதநத்திற்கு காலபரிச்சின்னமாக ப்ரதீதி வருவதால். கடாதிகளை விஷயமாகக்கொண்ட ஸம்வேதநமே காலாநவச்சின்னமாக அறியப்படுமேயானால் ஸம்வேதநத்துக்கு விஷயமான கடம் முதலியதும் காலாநவச்சின்னமாக அறியப் படவேண்டும். ஆகவே கடம் முதலியது நித்யமாக ஆக வேண்டியதாகும். ஸ்வதஸ்ஸித்தமான ஸம்வேதநம் நித்யமாக இருக்குமேயாகில் நித்யமென்றே அறியப் படவேண்டும். அவ்வாறு அறியப்படுகிறதில்லை.

இவ்வண்ணமாக அநுமாநாதி ஸம்வித்துக்களும் காலாநவச்சின்னங்களாக அறியப்படுமேயாகில் தன்விஷயங்களையும் காலாநவச்சின்னங்களாக ப்ரகாசிப்பிக்குமென்பதனால் அவைகளெல்லாம் காலாநவச்சின்னங்களாகவும் நித்யங்களாகவும் ஆகவேண்டிவரும். விஷயங்கள் ஸம்வித்துக்கு அநுரூபமான ஸ்வரூபமுள்ளவைகளாக இருப்பதால். நிர்விஷயையான ஒரு ஸம்வித்துமில்லை. உபலப்தியில்லாமையால் விஷயப்ரகாசநஸ்வபாவமுள்ளதாகவே உபலப்தி வருவதினாலேயேயன்றோ ஸம்வித்துக்கு ஸ்வயம்ப்ரகாசத்வம் ஸமர்த்திக்கப்பட்டது. ஸம்வித்துக்கு விஷயப்ரகாசநஸ்வபாவமில்லாவிடில் ஸ்வயம்ப்ரகாசத்வம் ஸித்தியாததலாலும் அநுபூதியானது அநுபவாந்தரத்தால் அநுபவிக்கத்தக்கதாக இல்லாததாலும் ஸம்வித்துக்கு துச்சத்வமே ஸம்பவிக்கும். நித்திரை, மதம், மூர்ச்சை முதலியவைகளில் ஸர்வவிஷய சூன்யையானதனித்த ஸம்வித்தே ஸ்புரிக்கிறதென்று சொல்லக்கூடாது. யோக்யாநுபலப்தியினால் பாதிக்கப்பட்டிருப்பதால். அந்த தசைகளிலுங்கூட அநுபூதி அநுபவிக்கப்பட்டிருக்குமேயானால் அதற்கு ப்ரபோத ஸமயத்தில் அநுஸந்தானம் வரவேண்டும். அப்படி அநுஸந்தானம்வரக்கண்டிலோம்.

ச்ருதப்ரகாசிகை—

இவ்வண்ணம் ப்ராகபாவத்திற்கு யோக்யாநுபலப்தியினால் ஸித்தியைக்கூறி* அர்த்தாபத்தியையும் கூறுகிறார்—கிஞ்ச இது முதலியதால். ஜ்ஞாநதிற்கு தன்னுடைய ப்ரகாசத்தின் அஸ்திரத்வரூபமான யோக்யாநுபலப்தியினால் அநித்யத்வம் கூறப்பட்டது. இதற்குமேல் விஷயப்ரகாச நிரூபண முகத்தாலும் அது உபபாதிக்கப்படுகிறது. விசேஷமின்றி ஜ்ஞாநாபாவத்தினுடைய க்ரஹணம் உபபன்னமென்று உரைக்கப்பட்டது. அதற்குமேல் உன்னால் நித்யத்வமானது ஸவிஷயமான ஜ்ஞாநத்திற்கு ஸாதிக்க விரும்பப்பட்டிருக்கிறதா? அல்லது நிர்விஷயத்திற்கா? என்கிற விகல்பத்தை எண்ணி ஸவிஷயபக்ஷத்தை தூஷிக்கிறார்— ப்ரத்யக்ஷ இது முதலியதால். ஸர்வதா எல்லா கடஸத்தாகாலத்திலும் அறியப்படுகிறதில்லை என்று அர்த்தம். கடம் முதலியவற்றுக்கு பூர்வோத்தர காலஸத்தை அறியப்படவேண்டாம். அதினால் என்னவென்றுகேட்கில், சொல்லுகிறார்—தத்ப்ரதீதிஸ்ச என்று. அப்ரதீதி:—ஜ்ஞாநத்திற்கு கடவ்யவஹாராநுகுண்யாபாவம். அதினால் ஸாத்யாவிசிஷ்டதை இல்லை. தவறாமல் தன்னோடு ஸமகாலத்திலிருக்கிற வஸ்துவை க்ரஹிக்கிற ப்ரத்யக்ஷஜ்ஞாநத்திற்கு முந்தியும் பிந்தியும் கடமிருந்தபோதிலும் அதை ப்ரகாசிப்பியாமலிருப்பது அப்பொழுது தன்னுடைய அபாவத்தினாலேயே என்று அர்த்தம்.

இவ்வண்ணம் விஷயவ்யவஹாராநுகுண்யகாதாசித்கத்வத்தின் இன்றியமையாமையால் ஜ்ஞாநாநித்யத்வம உரைக்கப்பட்டது. வேறு அர்த்தாபத்தியைக்கூறுகிறார்—கடாதிவிஷயமேவ என்று. விஷயத்தோடு ஸமகாலவர்த்தியான ப்ரத்யக்ஷ, ஜ்ஞாநத்திற்கு நித்யத்வம் சொல்லப்படுமேயாகில் கடம் முதலியதும் நித்யமாக ஆகவேண்டி வரும், ஆகையால் கடாதிகளுக்கு அநித்யத்வாந்யதாநுபபத்தியினால் ஜ்ஞாநாநித்யத்வமென்று அர்த்தம். வேறு அர்த்தாபத்தியைக்கூறுகிறார—நித்யஞ்ச என்று. ஸம்வித்துக்கு நித்யத்வஸாதனமானது இது ஸம்வித் என்று ஸமவித்தை விஷயீகரித்தே செய்யத்தக்கது. ஸ்வதஸ்ஸித்தமாகஇருப்பது இயம் என று விஷயீகரிப்பதற்கு அநர்ஹமாதலால் தானாகவே நித்யமென்று அறியப்படவேண்டும். அப்படி அறியப்படுகிறதில்லை. ஆதலால் அநித்யத்வமே என்று அர்த்தம். இவ்வாறாக நித்யமாக ப்ரகாசியாமலிருத்தலின் ¶ அந்யதாநுபபத்தியினால் ஜ்ஞாநாநித்யத்வமகூறப்பட்டது. அநித்யமாக அவபாஸிக்காமையால் நித்யத்வம் என்று சொல்லப்படுமேயானால் அல்ல. முன் பின் இரண்டு எல்லைகளை அபேக்ஷித்திருக்கிற அநித்யத்வமிருந்தபோதிலும் பூர்வோத்ர$அவதித்வயத்திற்கு ஸ்வயம் ப்ரகாசத்வமில்லாமையாலேயே அநித்யத்வம் அப்ரகாசத்வம் இவைகளுக்கு § உபபத்திவருவதால். அன்றிக்கே கடம் முதலியவைகளுக்கு நித்யத்வப்ரஸங்கம் நித்யமான ஃ அவபாஸப்ரஸங்கம் இரண்டும் காதாசித்கமான விஷய வ்யவஹாராநுகுண்யத்தின் அந்யதாநுபபத்தியினால் அநுக்ராஹகதர்க்கங்களாக சொல்லப்பட்டவைகளாக ஆகின்றன.

---

* அர்த்தாபத்தி— இது ஒரு ப்ரமாணம். (உதாஹரணம்) தேவதத்தன் பருத்திருக்கிறான். பகலில் இவன் போஜநம் செய்கிறதில்லை, என்று சொனனால், போஜநமில்லாவிடில் பருத்திருத்த லென்கிற தன்மை பொருந்தாதாதலால் இரவில் இவன் போஜநம் செய்துவருகிறானென்று ராத்ரி போஜனரூபமான அர்த்தம் ஆபாதானம் பண்ணப்படுகிறது ¶ அந்யதாநுபபத்தி—இன்றியமையாமை. $ அவதி—எல்லை. § உபபத்தி—பொருத்தம். ஃ அவபாஸம்—ப்ரகாசம்.

இதற்குமேல் அநுமாநாதிவிஷயங்களுக்குங்கூட அநிஷ்டமான நித்யத்வத்தை ப்ரஸஞ்ஜநம் பண்ணுகிறார்— ஏவம் என்று. இவ்வண்ணம் ப்ரத்யக்ஷ ஜ்ஞாநத்திற்கு நித்யத்வம் வரின் விஷயத்திற்கும நித்யத்வப்ரஸக்தியானது வரும் என்பது அர்த்தம். எதனால் நித்யத்வமென்று கேட்கில் சொல்லுகிறார்— ஸம்விதநுபூதிரீய என்று. எவ்வாறு ஸம்வித்தானது தன்விஷயத்தைக்காண்பிக்கிறதோ அப்படி இருப்பதாலென்று அதின் அர்த்தம்.

அய்யா ! ப்ரத்யக்ஷத்திற்கு தானிருக்கும் காலத்திற்கு ஸமானமான காலத்திலிருக்கிற விஷயங்களை க்ரஹிக்கும் தன்மை தவறாமலிருப்பதால் அது நித்யமாகில் விஷயத்திற்கு நித்யத்வ ப்ரஸங்கம் உபபன்னமாகிறது. அநுமானம் முதலிய ஸம்வித்துக்களுக்கு அதீதாநாகதவிஷயத்வம் ஸம்பவிப்பதால் எவ்வாறு அந்த ஸம்வித்துக்கு நித்யத்வம் வந்தால் விஷயங்களுக்கு நித்யத்வம் ப்ரஸங்கிக்கும்? மறுமொழி உரைக்கப்படுகிறது. § அதீதத்வம் * அநாகதத்வம் இரண்டும் ஆபேக்ஷிகங்களாக வன்றோ இருக்கின்றன. ஆகையால் ஸம்வித்தை அபேக்ஷித்தன்றோ விஷயங்களுக்கு அதீதத்வாநாகதத்வங்கள். ஸம்வித் நித்யமாகில் அந்த ஸம்வித்தை அபேக்ஷித்து விஷயத்தின் அதீதத்வாநாகதத்வங்களை ஸம்வித்தானது காண்பிக்கிறதில்லை என்பதினால் காலாநவச்சின்னங்களாக ப்ரதீதி வரின் விஷயங்கள் நித்யங்களாக ஆகும். காலாநவச்சின்னத்வமே அநுகதமான நித்யத்வலக்ஷணம் என்கிற அபிப்ராயத்தினால் காலாநவச்சின்னா:நித்யா: என்று சொல்லப்பட்டது. அய்யா ! ஸம்வித்தை அபேக்ஷித்து விஷயத்திற்கு அதீதத்வாகாமித்வங்களில்லை, பின்னையோ லிங்கம் முதலிய அர்த்தாந்தரங்களை அபேக்ஷித்து. ஆகையால் விஷயத்திற்கு லிங்காதிகளை அபேக்ஷித்து அதீதத்வமும் ஆகாமித்வமும் ஸம்பவிக்கிறது. ஆதலால் நித்யத்வ ப்ரஸங்கம் இல்லை. உத்தரம் சொல்லுகிறோம். லிங்கம் முதலியது ப்ரத்யக்ஷஜ்ஞாநவிஷயமானதால் அந்த ஜ்ஞாநம் நித்யமானதுபற்றி அதற்கு விஷயபூதமான லிங்கம் முதலியவற்றுக்கும் நித்யத்வம் வருவதால் அதை அபேக்ஷித்து அநுமானவிஷயத்திற்கு அதீதத்வத்தையும் ஆகாமித்வத்தையும் ஸம்வித்தானது காண்பிக்கிறதில்லை என்பதினால் விஷயம் காலாநவச்சின்னமாகவும் நித்யமுமாகவே ஆகும்— என்று. இவ்வண்ணம முற்கூறப்பட்ட தோஷத்தை ஆச்ரயித்து அநுமான விஷயத்திற்கு நித்யத்வ ப்ரஸக்தி என்கிற அபிப்ராயத்தால் ‘ஏவம்’ என்று உரைக்கப்பட்டது.

இவ்வண்ணம் முற்கூறப்பட்டுள்ள விகல்பத்தில் ஸவிஷயமான அநுபவத்திற்கு நித்யத்வம் நிராகரிக்கப்பட்டது. அதற்குமேல் நிர்விஷயாநுபவத்திற்கு நித்யத்வபக்ஷத்தை நிராகரிக்கிறார்— ந ச என்று. எதனால் என்று கேட்கில் மறுமொழி ‡ கூறுகிறார்— அநுபலப்தே: என்று. நிர்விஷயமான ஸம்விதநுபலப்தி மாத்ரமே அல்ல. ஸவிஷய ஸம்வித்துக்கே அன்யனால் ஸ்வயம் ப்ரகாசத்வம் ஸமர்த்திக்கப்பட்டிருப்பதால் அவனுடைய அங்கிகார ப்ரகாரத்தாலுங்கூட நிர்விஷயையான ஸம்வித் இல்லை என்று கூறுகிறார்— விஷய என்று. அதினாலென்னவென்று கேட்கில் கூறுகிறார்— ஸம்விதோ நிர்விஷய என்று. ஸவிஷயஜ்ஞாநத்தை விட்டு விலகிச்சென்றிருக்கிற ஸம்வித்துக்கு ஒருபொழுதும் விஷய ஸம்பந்தமில்லாமையால் ஸ்வயம்ப்ரகாசத்வம் ஸித்தியாமையாலும் ஜ்ஞாநாந்தரத்தால் வேத்யமாக இல்லாமையாலும் $ துச்சதை என்று அர்த்தம.

---

§ அதீதம்—சென்றது. * அநாகதம் —வரப்போகிறது.

‡ ப்ரபோதம்—விழிப்பு. $ துச்சதை— ஸ்வரூபத்தின் இன்மை.

அய்யா! விஷயப்ரகாசகமாக இருப்பதால் ஸ்வயம் ப்ரகாசத்வம் உபபாதிக்கப்படுகிறதேயாகில் அப்பொழுது இந்த தோஷம் வரும். விஷய ஸம்பந்தமில்லாமலிருந்தபோதிலுங்கூட "அநுபூதித்வாத்" என்கிற இந்த ஹேதுவினால் ஸாதிக்கத்தக்க ஸ்வப்ரகாசத்வ ஸித்தி என்று சொல்லப்படுமேயானால், இந்த அநுபூதித்வமென்பது என்ன? ஸ்வத ஸ்ஸித்தத்வமா? அங்ஙனமாகில் § ஸாத்யாவிசிஷ்டதை வரும். அநுபூதித்வம் விஷய ப்ரகாசகத்வமென்று சொல்லப்படுமே யாகில், அப்பொழுது கூறப்பட்ட தோஷம் நிச்சயமாக வரவே வரும். இருக்கிற ஸமயத்தில் எப்பொழுதும் ப்ரகாசித்தலென்பதும் உன்னால் ஹேதுவாகச்சொல்லத்தக்கதல்ல. ஜடமாக நீ ஒப்புக்கொண்டிருக்கிற ஸுகம் துக்கம் இச்சைமுதலியதில் ¶ வ்யபிசாரம் வருவதால். ஆகையால் விஷயப்ரகாசகத்வத்தை ஆச்ரயிக்காமல் ஸ்வயம்ப்ரகாசத்வம் எவ்விதத்தாலும் ஸாதிக்கமுடியாதது என்பதினால் முற்கூறப்பட்ட தோஷமானது தாண்டப்பட்டதாக ஆகாது. ஸ்வப்ரகாசத்வ ரூபமான ஸாத்யதர்மம் நிவ்ருத்திக்கும் பக்ஷத்தில் தர்மிபூதமான ஸம்வித்துக்கு எவ்வாறு அஸித்தி என்று கேட்கில்சொல்லுகிறார்— **அநுபூதேரநுபவாந்தராநநுபாவ்யத்வாச்ச** என்று.

அய்யா! ஒரே ஸம்வித்துக்கு அந்தக்கரணவ்ருத்தியின் வாயிலாக விஷயஸம்பந்தம் ஏதோ ஒரு ஸமயத்திலுண்டாகிறது, அதில்லாமலிருந்தபோதிலும் ஸ்வாபாதிதசைகளில் ஸம்வித்தானது ஸ்வப்ரகாசையாக ப்ரகாசிக்கிறது. ஆகையால் துச்சதா ப்ரஸக்தி இல்லை என்று சொல்லப்படுமேயாகில் சொல்லுகிறார்— **நச** என்று. கேவல சப்தத்தால் நிராச்ரயத்வம் சொல்லப்படுகிறது. எதினாலெனில் கூறுகிறார்— **யோக்யா** என்று. அதையே உபபாதிக்கிறார்— **தாஸ்வபி** என்று. $ விபர்யயத்தில் பர்யவஸானத்தைக்காண்பிக்கிறார்- **நச ததஸ்தி** என்று.

𑌨𑌨𑍍𑌵𑌨𑍁𑌭𑍂𑌤𑌸𑍍𑌯 𑌪𑌦𑌾𑌰𑍍𑌥𑌸𑍍𑌯 𑌸𑍍𑌮𑌰𑌣𑌨𑌿𑌯𑌮𑍋 𑌨 𑌦𑍃𑌷𑍍𑌟𑌚𑌰𑌃 । 𑌅𑌤𑌃 𑌸𑍍𑌮𑌰𑌣𑌾𑌭𑌾𑌵𑌃 𑌕𑌥𑌮𑌨𑍁𑌭𑌵𑌾𑌭𑌾𑌵𑌂 𑌸𑌾𑌧𑌯𑍇𑌤𑍍? । 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇; 𑌨𑌿𑌖𑌿𑌲𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌤𑌿𑌰𑌸𑍍𑌕𑍃𑌤𑌿𑌕𑌾𑌰𑌣𑌵𑌿𑌹𑍀𑌨𑌤𑍀𑌵𑍍𑌰𑌾𑌨𑍁𑌭𑌵𑌜𑌨𑌿𑌤𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌜𑌨𑍍𑌯𑌸𑍍𑌮𑌰𑌣𑌨𑌿𑌯𑌮𑍋𑌽𑌨𑍁𑌭𑌵𑌾𑌭𑌾𑌵𑌮𑍇𑌵 𑌸𑌾𑌧𑌯𑌤𑌿 ; 𑌨 𑌕𑍇𑌵𑌲𑌂 𑌸𑍍𑌮𑌰𑌣𑌨𑌿𑌯𑌮𑌾𑌦𑌨𑍁𑌭𑌵𑌾𑌭𑌾𑌵𑌃, 𑌸𑍁𑌪𑍍𑌤𑍋𑌤𑍍𑌥𑌿𑌤𑌸𑍍𑌯 "𑌇𑌯𑌨𑍍𑌤𑌂 𑌕𑌾𑌲𑌂 𑌨 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌦𑌹𑌮𑌜𑍍𑌞𑌾𑌸𑌿𑌷𑌮𑍍" 𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌵𑌮𑌰𑍍𑌶𑍇𑌨𑍈𑌵 𑌸𑌿𑌦𑍍𑌧𑌃 । 𑌨 𑌚 𑌤𑌸𑍍𑌯 𑌸𑍍𑌵𑌾𑌨𑍁𑌭𑌵𑍇 𑌤𑌦𑌸𑍍𑌮𑌰𑌣𑌨𑌿𑌯𑌮𑍋 𑌵𑌿𑌷𑌯𑌾𑌵𑌚𑍍𑌛𑍇𑌦𑌵𑌿𑌰𑌹𑌾𑌦𑌹𑌙𑍍𑌕𑌾𑌰𑌵𑌿𑌗𑌮𑌾𑌚𑍍𑌚𑍇𑌤𑌿 𑌶𑌕𑍍𑌯𑌤𑍇 𑌵𑌕𑍍𑌤𑍁𑌮𑍍 । 𑌅𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌨𑍁𑌭𑌵𑌸𑍍𑌯𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑌾𑌕𑍍𑌷𑌸𑍍𑌯 𑌵𑌾𑌨𑍁𑌭𑍂𑌤𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍍𑌮𑌰𑌣𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌤𑍍 । 𑌤𑌾𑌵𑌤𑍍𑌸𑍁𑌷𑍁𑌪𑍍𑌤𑌾𑌵𑌪𑍍𑌯𑌹𑌮𑍇𑌵𑌾𑌹𑌙𑍍𑌕𑌾𑌰𑍋𑌽𑌨𑍁𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 𑌇𑌤𑌿 𑌚 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍇 ॥

ஸ்ரீபாஷ்யம்.—

அய்யா! அனுபவிக்கப்பட்டிருக்கிற பதார்த்தங்களுக்கு தவறாமல் ஸ்மரணம் காணப்பட்டிருக்கவில்லை. ஆதலால் ஸ்மரணத்தினது இன்மை எவ்வாறு

§ ஸாத்யாவிசிஷ்டத்தை—ஸாத்யத்தைக்காட்டிலும் ஸாதனத்திற்கு வேற்றுமை இல்லாமை. ¶ வ்யபிசாரம்.—தோஷம். $ விபர்யயம்—மாறாட்டம் அல்லது இன்மை.

அநுபவத்தின் இன்மையை ஸாதிக்கத்திறமையுள்ளதாக ஆகும். உத்தரம் கூறப்படுகிறது.- எல்லா @ஸம்ஸ்காரங்களுக்கும் நாசத்தை உண்டுபண்ணுகிற தேஹாபாயம் முதலிய ப்ரபலமான ஹேதுக்களில்லாமலிருக்கும் ஸமயத்தில் கூட தவறாமலிருக்கும் அஸ்மரணமானது அநுபவத்தின் அபாவத்தையே ஸாதிக்கிறது. அஸ்மரணநியமத்தினால் மாத்திரம் அநுபவாபாவ மென்பதில்லை "இவ்வளவுகாலம் நான் ஒன்றையும் அறிந்திலேன" என்கிற தூங்கி எழுந்திருந்தவனுடைய † ப்ரத்யவமர்சத்தினாலேயே ஸித்திப்பதால். அநுபவமிருந்தபோதிலும் விஷயஸம்பந்தமில்லாமையாலாவது அஹங்காரம் நீங்குதலாலாவது அந்த அஸ்மரண நியமம் என்று சொல்வதற்கு சக்யமாகாது. அர்த்தாந்தராநுபவமும் அர்த்தாந்தராபாவமும் அநுபவிக்கப்பட்டிருக்கிற அர்த்தாந்தரத்தின் அஸ்மரணத்திற்கு ஹேதுக்களாகாதாதலால். அந்த தசைகளில்கூட அஹமர்த்தமானது தொடர்ந்து வருகிறதென்று சொல்லப்போகிறோம்.

ச்ருதப்ரகாசிகை—

வ்யாபகாபாவமன்றோ வ்யாப்யாபாவத்திற்கு ஸாதகம். ஸ்மரணம் அநுபவவ்யாபகமல்ல. ஆதலால் அந்த ஸ்மரணாபாவமானது அநுபவாபாவத்திற்கு ஸாதகமாகாதென்று கூறுகிறார்— நநு என்று. வழிநடப்பவனால் தொடப்பட்டிருக்கிற * த்ருணம் முதலியவைகளுக்கும் முன் ஜந்மங்களில் அநுபவிக்கப்பட்டிருக்கிற வஸ்துக்களுக்கும் ஸ்மரணமில்லாமையால் என்று கருத்து. பரிஹரிக்கிறார்— உச்யதே இது முதலியதால். விஷயாந்தர ¶ வ்யாஸங்கம் முதலியது அஸ்மரணமாத்ரத்திற்கு ஹேது. விஷயங்களின் வைசித்ரியாபாவம், ப்ரயோஜநமில்லாமையால் தாத்பர்யாபாவம், அச்சமயத்திலுண்டான தீவ்ரமான வேறுஸம்வேதநம், அநுபவத்தின் அநப்யாஸம், இவைகள் அஸ்மரணமாத்ரத்திற்கு ஹேதுக்களென ப்ரஸித்தங்கள். அதினால் நியமசப்தம். "அஸ்மரணநியம:" என்று சொன்னதினால் ஜந்மாந்தரங்களில் அநுபவிக்கப்பட்டிருக்கிற அர்த்தத்திற்குக்கூட அநுபவாபாவம் ப்ரஸங்கிப்பதால் அதை வ்யாவர்திப்பதற்காக "நிகிலஸம்ஸ்கார" என்று சொல்லப்பட்டது. "தேஹவிகமாதி" என்கிற வாக்யத்திலுள்ள ஆதிசப்தத்தால் நாரக துக்கம், ப்ரஸவ வ்யஸநம், கால § விப்ரகர்ஷம், இவைகள் விவக்ஷிக்கப்பட்டன. இதற்கு ப்ரமாணம் ஸம்வித்ஸித்தியில் "ப்ராயணாத் நரகக்லேசாத் ப்ரஸூதிவ்யஸநாதபி । சிராதிவ்ருத்தா: ப்ராக் ஜந்மபேதா ந ஸ்ம்ருதிகோசரா:" (மரணத்தாலும் நரக க்லேசத்தாலும் ப்ரஸவக்லேசத்தாலும் நெடுங்காலம் கிடந்துசென்ற பூர்வஜந்மபேதங்கள் ஸ்ம்ருதிக்குவிஷயங்களாகஆகிறதில்லை)என்று) தேக ‡ வியோகம் முதலியவைகளுக்கு எல்லா ஸம்ஸ்காரங்களுக்கும் திரஸ்காரத்தைச் செய்தல்

@ ஸம்ஸ்காரம்—ஒன்றின் அநுபவத்தால் மனதில் திடமாகஉண்டாகும்வாஸனை.

† பரத்யவமர்சம்—வ்யவஹாரம். * த்ருணம்—துரும்பு அல்லது புல்.

¶ வ்யாஸங்கம்—நிரந்தரமான பயிற்சி, அல்லது அப்யாஸம், பற்றுதல்.

§ விப்ரகர்ஷம்—மிக்க விலக்கம்.

‡ வியோகம்— பிரிதல்.

ஸ்வபாவம். புண்யவிசேஷரூபமான ¶ அபவாதத்தால் ஏதோஒருவனுக்கு ஜாதிஸ்மரணம். ப்ரபலசப்தமானது வ்யாஸங்கம் முதலியதை அபேக்ஷித்து ப்ராபல்யத்தைச்சொல்லுகிறது சொல்லப்பட்டதிரஸ்காரகமில்லாவிடில் ஏதோ ஒரு ஸமயத்தில் உண்டாகிறஸ்மரணம் அநுபவத்திற்கு வ்யாபகம். ஆகையால் அந்த ஸ்மரணாபாவம் அநுபவாபாவஸாதகமே என்று கருத்து. அநுபவஸாதகாபாவம் மாத்திரமல்ல. பாதகப்ரமாணாந்தரமும் இருக்கிறதென்று சொல்லுகிறார்—ந கேவலம் என்று. ஸித்தேரிதி. அநுபவாபாவஸ்ய என்கிற பதம் சேர்த்துக்கொள்ளத்தக்கது. இதற்குமேல் அஸ்மரணநியமத்திற்கு அந்யதாஸித்தியை ஆசங்கிக்கிறார்—நச என்று. அஹங்காரவிகம-அஹம் ப்ரத்யயத்தின் விலக்கம். பரிஹரிக்கிறார்—அர்த்தாந்தர என்று. கடத்தின் அநநுபவமும் படத்தின் விநாசமும் அநுபவிக்கப்பட்டிருக்கிற $ குட்யாதிகளின் அஸ்மரணகாரணமாகக் காணப்படவில்லை என்று அர்த்தம்.

அய்யா! குட்யம் முதலியவற்றின் ஸ்மரணத்தைக் குறித்து கடம் முதலியவற்றுக்கு காரணத்வமில்லாமையால் அந்த கடம் முதலியவற்றின் அபாவம் இதின் ஸ்மரணஹேதுவல்ல. இந்த இடத்திலோ ஸ்மரணகாரணத்தின் அபாவமானது அஸ்மரணத்துக்கு ஹேதுவே. இவ்வண்ணமல்ல குட்யம் முதலியவற்றின் ஸ்மரணத்தைக் குறித்து கடம் முதலியவற்றுக்குப் போல் ஜ்ஞாத்ருஜ்ஞேயங்களுடையவும் ஸ்மரணத்தைக் குறித்து அகாரணத்வமானது விருப்பமில்லாமலிருப்பவனாலுங்கூட ஏற்றுகொள்ளத்தக்கதென்கிற அபிப்ராயத்தினாலன்றோ அர்த்தாந்தர சப்தம் ப்ரயோகிக்கப்பட்டிருக்கிறது. இது அர்த்தம்— ஜ்ஞாத்ருஜ்ஞேயங்கள் இரண்டுக்கும் ஸ்மரணத்தைக்குறித்து காரணத்வமானது காணப்பட்டிருப்பதால் அங்கீகரிக்கப்படுகிறதேயாகில் காணப்பட்டிருப்பதினாலேயே அநுபவத்திலும் ஜ்ஞாத்ருஜ்ஞேயங்களுக்கு காரணத்வம் அங்கீகரிக்கத்தக்கது. ஜ்ஞாத்ருஜ்ஞேயம் இரண்டுகளும் நேரில் காணப்பட்டதாக இருந்தபோதிலுங்கூட அநுபவகாரணத்வமானது அங்கீகரிக்கப்படாமல் போமேயாகில் ஸ்ம்ருதியிலும் காரணத்வம் உண்டாகாது. ஆகையால் அதிலலாமையால் ஸ்மரணாபாவமென்று. இந்த தூஷணமானது அஹமர்த்தாபாவத்தை ஒப்புக்கொண்டு சொல்லப்பட்டது. அஹமர்த்தாபாவமுமில்லை என்று உபபாதிக்கப்படப்போகிறதென்று சொல்லுகிறார்— தாஸ்வபி என்று. அநுவர்ததே-ப்ரகாசிக்கிறது. அதினால் ஹேது அஸித்தமுமென்று அர்த்தம்.

நநு ஸ்வாபாதி³ஷ்வபி ஸவிஶேஷாநுப⁴வோऽஸ்தீதி
பூர்வமுக்தம் | ஸத்யமுக்தம் ; ஸ ஜ்ஞாதாநுப⁴வ: | ஸ ச
ஸவிஶேஷ ஏவேதி ஸ்தா²பயிஷ்யதே | இஹ து ஸகலவிஷயவிர
ஹிணீ நிராஶ்ரயா ச ஸம்விந்நிஷித்⁴யதே | கேவலைவ ஸம்வித³ர்தா²
ந்தர இதி சேத்; ந, ஸா ச ஸாஶ்ரயேதி ஹ்யுபபாத³யிஷ்யதே |
உத்தா²நாந்தரஸ்ம்ருதிஸ்து ஸ்வயம் ஸ்வாபமஹாவஸ்தா²ம் ந ஸாத⁴யதீதி ப்ராக்³
ஏவாபாதி³தம் ஶக்யதே வக்தும் | உத்தா²நாந்தரபா⁴வ்யக²ண்ட³
ஜ்ஞோ ஏவாபாதி³தநாந்யதாவ்யபதி³ஷ்டம் | தஸ்மாத் ப்ராக்³பா⁴
வாத்³யபி⁴ந்நா ஸம்வித³நுபூ⁴திரிதி ||

¶ அபவாதம்— விசேஷவிதி. $ குட்யம்—செவர்.

ஸ்ரீபாஷ்யம்—

அய்யா ! ஸ்வப்நம் முதலிய தசைகளில்கூட ஸவிசேஷாநுபவம் இருக்கிறதென்று முந்தி சொல்லப்பட்டது. உரைத்தது உண்மை. அதுவோ ஆத்மாநுபவம். அதுவும் ஸவிசேஷமென்றே ஸ்தாபிக்கப்படப்போகிறது. இவ்விடத்திலோ வெனில்; ஸகலவிஷயங்களாலும் விடுபட்டதும் நிராச்ரயமாகவும் இருக்கிறஸம்வித்தானது நிஷேதிக்கப்படுகிறது. தனித்தஸம்வித்தே ஆத்மாநுபவமென்று கூறப்படுமேயானால் ; அல்ல அதுவும் ஆச்ரயத்தோடு கூடியதே என்று உபபாதிக்கப்படப்போகிறது ஆகையால் அநுபூதியானது தான் இருந்துகொண்டு தான் தன்னுடைய ப்ராகபாவத்தை ஸாதிக்கிறதில்லை என்பதினால் ப்ராகபாவத்தின் அஸித்தியானது சொல்வதற்கு சக்யமாகாது- அநுபூதிக்கு அநுபவிக்கத்தக்கதன்மையின் ஸம்பவத்தை உபபாதித்ததினால் மற்றதினாலும் அஸித்தியானது நிரஸிக்கப்பட்டது. ஆகையால் ப்ராகபாவாதிகளின் அஸித்தியினால் ஸம்விதினுடைய அநுத்பத்தியானது உபபத்தியுள்ளதாகவாகாது.

ச்ருதப்ரகாசிகை—

முந்தி ஸவிசேஷமான அநுபவமானது ஸ்வப்நம் முதலிய தசைகளில் இருக்கிறதென்று சொல்லப்பட்டிருக்கிறதென்பதினால் அதை ஆலம்பித்து வ்யாகாதாபிப்ராயத்தால் வினவுகிறார்— நநு என்று. இந்த விஷயத்தில் மறுமொழி கூறுகிறார்—ஸத்யமுக்தம் என்று. அதோ ஆத்மாநுபவம், அநுபூத்யநுபவமல்லவென்று அர்த்தம். அநுபூதி இல்லாவிடில் அந்த ஆத்மா நிர்விசேஷமாக ஆகுமென்றுகேட்கில் கூறுகிறார்—ஸ்ச என்று. ப்ரத்யக்த்வ அநுகூலத்வ தர்மங்களோடு கூடியதென்று அர்த்தம். இந்த இடத்தில் எது நிஷேதிக்கப்படுகிறதென்கிற வினவுக்கு மறுமொழி கூறுகிறார்— இஹ து என்று. சப்தபேதத்தால்நம்முடையமதமங்கீகரிக்கப்பட்டதென்று சங்கிக்கிறார்— கேவலைவ ஸம்விதாத்மாநுபவ இதிசேத் என்று. ஆத்மாநுபவே— தனித்த ஆத்மாநுபவதசையில். ஸ்வாபம் முதலிய தசையில் எந்த ஸம்வித்தானது உண்டானால் நித்யமாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறதோ அது ப்ரஸரமில்லாமையால் விஷய ஸம்பந்தமில்லாததுபற்றி அப்பொழுது ஸம்வித்தானது கேவலையாயும் நிர்விசேஷையாயும் நம்மால் சொல்லப்பட்டபடியே ஆகும் என்று பரிஹரிக்கிறார்— ஸா ச என்று. ஸாச - தர்மபூதையான ஸம்வித். விஷயவிரஹிதா வா - ஆச்ரயத்தோடுகூடியதென்று அர்த்தம். " கேவலைவ " இது முதலியதற்கு இவ்விதமாவது அர்த்தம். ஆத்மாநுபவரூபா—ஆத்மஸ்புரணரூபையாக இருக்கிற யாதொரு ஸம்வித்துண்டோ ஸாகேவலைவேதிசேத் - நம்மால் சொல்லப்பட்ட ஸகல விஷயாதி விசேஷசூன்யையாகவே என்று சொல்லப்படுமேயானால் என்று அர்த்தம். பரிஹரிக்கிறார்—ஸா ச என்று. ஸா தர்மிஸ்புரணரூபையான எந்த ஸம்வித்துண்டோ அது ஸாச்ரயை என்று சொல்லப்படப்போகிறது. ஸ்புரணமன்றோ ப்ரகாசிக்கின்ற தர்மியின் தர்மம். ப்ரபைக்கு ஆச்ரயமாக இருக்கிற தீபரூபமான தர்மிக்கு எப்படி ஔஜ்ஜ்வல்யமானது தீபமென்கிற தர்மியின் தர்மமோ அவ்வாறு என்று அர்த்தம்.

தர்மிஸ்வரூபபூதமான ஜ்ஞாநத்திற்கு ஸ்புரணம் நித்யம். அதாவது பாஸமாநதை, அதாவது வ்யவஹாராநுகுண்யம். விஷய ஸம்பந்தத்தாலுண்டாகிற தர்மபூதஜ்ஞாநத்தின் ஸ்புரணம் அப்பொழுதே ஒழிய வேறுஸமயததிலில்லை. அதினுலேதான் 'விஷய ப்ரகாசவேளையில்' என்று முன்பு உரைக்கப்பட்டது. 'பும்ஸ்த்வாதிவத்த்வஸ்ய' என்கிற இடத்தில் சொல்லப்படப்போகிறது. ஸ்வாபம் முதலியதசையிலோ வென்றுல் அதற்கு ஸர்வவிஷய ஸம்பந்தார்ஹதையானது நெருப்புக்குள்ள தாஹகத்வசக்திபோல் தடைபட்டிருக்கிறது. அதனுல் அப்பொழுது ஸ்புரணமில்லை. இதற்குமேல் ‡ ப்ராஸங்கிகமான ஆத்மாநுபவத்தை முடித்து விட்டு ப்ரஸ்துதமான ப்ராகபாவஸித்தியை நிகமனம் செய்கிருர்— அத: என்று. அத: நிர்விஷயமான ஜ்ஞாநம் அபராமாணிகமாதலாலும் அதுடன் சேர்ந்த ஜ்ஞாநத்தின் நித்யத்வமானது கூறப்பட்டுள்ள அநுபபத்தியினுல் பாதிக்கப்பட்டிருப்பதாலும் ப்ராகபாவத்திற்கு க்ராஹகத்தை ஸமர்த்தித்ததினுலும் என்று அர்த்தம். எவ்வாறு அநுபூதியானது தானிருந்துகொண்டே தன் ப்ராகபாவத்தை ஸாதிக்கும். இவ்வண்ணமாக நினைக்கத்தக்கவஸ்துக்களின் அஸ்மரணலிங்கமாயும் ஜ்ஞாநஸாமாந்யாபாவத்தை விஷயீகரிக்கிற இவ்வளவு காலம் வரையிலும் நான் ஒன்றையும் அறிந்திலேன் என்கிற ஸௌஷுப்தயவஸ்தா பராமர்சத்தால் அதிலுள்ளடங்கி இருக்கிற தன்னுடைய அபாவமும் தன்னுலேயே விஷயீகரிக்கப்பட்டதென்று ஸ்வத:பக்ஷத்தில் ப்ராகபாவஸித்தியானது கூறப்பட்டது. பரத: பக்ஷத்திலும் ஸித்திக்கிறதென்று சொல்லுகிருர்.— அநுபூதே: என்று. இதற்குமேல் ப்ராகபாவாபாவத்தை ஹேதுவாகக்கொண்ட அநுதபத்தியின் தூஷணத்தை உபஸம்ஹரிக்கிருர்— தஸ்மாத் என்று.

𑌯𑌦𑌪𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌮𑍍 𑌅𑌨𑍁𑌤𑍍𑌪𑌨𑍍𑌨𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌵𑌿𑌕𑌾𑌰𑌾𑌨𑍍𑌤𑌰𑌨𑌿𑌰𑌸𑌨𑌮𑍍 ; 𑌤𑌦𑌪𑍍𑌯𑌨𑍁𑌪𑌪𑌨𑍍𑌨𑌮𑍍 । 𑌪𑍍𑌰𑌾𑌗𑌭𑌾𑌵𑍇 𑌵𑍍𑌯𑌭𑌿𑌚𑌾𑌰𑌾𑌤𑍍 । 𑌤𑌸𑍍𑌯 𑌹𑌿 𑌜𑌨𑍍𑌮𑌾𑌭𑌾𑌵𑍇𑌽𑌪𑌿 𑌵𑌿𑌨𑌾𑌶𑍋 𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍇 । 𑌭𑌾𑌵𑌤𑍍𑌵𑍇𑌤𑌿 𑌵𑌿𑌶𑍇𑌷𑌣𑍇, [illegible] 𑌭𑌵𑌤𑌿 । 𑌤𑌥𑌾 𑌚 𑌭𑌵𑌦𑌭𑌿𑌮𑌤𑌾𑌽𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌽𑌨𑍁𑌤𑍍𑌪𑌨𑍍𑌨𑍈𑌵 𑌵𑌿𑌵𑌿𑌧𑌵𑌿𑌕𑌾𑌰𑌾𑌸𑍍𑌪𑌦𑌂 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌜𑍍𑌞𑌾𑌨𑍋𑌦𑌯𑌾𑌦𑍁𑌚𑍍𑌛𑍇𑌦𑌵𑌤𑍀 𑌚𑍇𑌤𑌿, 𑌤𑌸𑍍𑌯𑌾𑌮𑌨𑍈𑌕𑌾𑌨𑍍𑌤𑍍𑌯𑌮𑍍 । 𑌤𑌦𑍍𑌵𑌿𑌕𑌾𑌰𑌾𑌸𑍍𑌪𑌦𑌤𑍍𑌵𑍇𑌽𑌪𑌿 𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌸𑌙𑍍𑌗𑌤𑌾 𑌇𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍 ; 𑌕𑌿𑌂 𑌭𑌵𑌤𑌃 𑌪𑌾𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑍍𑌯𑌸𑌙𑍍𑌗𑌤𑍋𑌽𑌪𑍍𑌯𑌸𑍍𑌤𑌿 𑌵𑌿𑌕𑌾𑌰𑌃 ? 𑌯𑍇𑌨𑍇𑌦𑌂 𑌵𑌿𑌶𑍇𑌷𑌣𑌮𑌰𑍍𑌥𑌵𑌦𑍍𑌭𑌵𑌤𑌿 । 𑌨 𑌹𑍍𑌯𑌭𑌾𑌵𑌸𑍍𑌯 𑌵𑍍𑌯𑌾𑌵𑌰𑍍𑌤𑍍𑌯𑌤𑍇 ॥

ஸ்ரீபாஷ்யம்—

இந்த அநுபூதிக்கு உத்பத்தி இல்லாமையால் ஒருவிதமான விகாரமும் இல்லை யென்பது யாதொன்றுண்டோ அதுவும் பொருந்தாது. ப்ராகபாவத்தில் வ்யபிசாரம் வருவதால். அந்த ப்ராகபாவத்திற்கு உத்பத்தி இல்லா

‡ ப்ராஸங்கிகம்— ப்ரதானமல்லாதது. அல்லது அமுக்யம். அல்லது ப்ரஸ்தாவத்தால் எடுத்துக்கொள்ளப்பட்டது.

மலிருந்தபோதிலுங்கூட விநாசம் காணப்படுகிறதன்றே. "பாவேஷு" என்கிற விசேஷணம் கொடுக்கும் பக்ஷத்தில் தர்கபாண்டித்யம் வெளிப்படுத்தப்பட்டதாக ஆகிறது. அப்பொழுது உன்னால் அபிமானிக்கப்பட்டிருக்கிற அவித்யையானது உத்பத்தி இல்லாததாகவே பற்பல விகாரங்களுக்கு ஆஸ்பதமாகவும் தத்வஜ்ஞாநத்தின் உதயத்தினால் நாசமுடையதாகவும் இருக்கிறதுபற்றி அந்த அவித்யையில் வ்யபிசாரம் வருகிறது. அதின் விகாரங்கள் அனைத்தும் மித்யாபூதங்களென்று சொல்லப்படுமேயாகில் உனக்கு பாமார்த்தபூதமாகவும் ஓர் விகாரமிருக்கிறதா? எதனால் இந்த விசேஷணம் ப்ரயோஜநமுள்ளதாக ஆகுமோ, அது ஒப்புக்கொள்ளப்படுகிறதில்லையன்றே.

ச்ருதப்ரகாசிகை—

இதற்கு மேல் அநுத்பத்தியினால் விகாராந்தரநிரஸனத்தைத் தூஷிக்கிறார் — **யதபி** இதுமுதலியதால். அநுத்பத்திரூபமான ஹேது ஸித்தியாமையால் விகாராந்தர நிராஸம் அநுபபன்னம். அதை ஒப்புக்கொண்டபோதிலும் ஹேதுவுக்கு வ்யபிசாரத்தைச்சொல்லுகிறார்—**ப்ராகபாவே** என்று. அதை விவரிக்கிறார்—**தஸ்ய ஹி** என்று. பாவசப்தத்தின் உபபாதனத்தால் அதில்லாமலிருந்தபோதிலுங்கூட வ்யபிசாரஸாம்யாபிப்ராயத்தால் பாவசப்தோபாதானத்தை நிந்திக்கிறார்— **பாவேஷ்விதி** என்று. இந்த இடத்தில் ப்ரதிஜ்ஞாந்தரம் தூஷணமாக சொல்லப்படவில்லை. அதன்றோ உக்திதூஷணம், அர்த்த தூஷணமன்று. பாவரூபத்வம் சொல்லுகிறபக்ஷத்தில் வ்யபிசாரத்தைக்காட்டுகிறார்— **ததாச** என்று. ததா சப்தத்தால் பாவரூபத்வம் விவக்ஷிக்கப்பட்டிருக்கிறது. அவைகளால் பாவரூபமான அஜ்ஞாநம் ஸமர்த்திக்கப்பட்டிருப்பதால், அதில் பரிஹாரத்தைச் சங்கிக்கிறார்— **தத்விகாரா:** என்று. இந்த விசேஷணத்தினால் வ்யாவர்திக்கத்தக்கதில்லாமையால் ப்ரயோஜநமின்மையைக் கூறுகிறார்— **கிம் பவத:** என்று. வ்யாவர்திக்கத்தக்கதிருக்குமேயாகில் அத்வைதத்திற்கு ஹாநிவரும், அங்ஙனமில்லாவிடில் விசேஷணம் ப்ரயோஜநமற்றது என்று பொருள் விகாரமாதரத்திற்கு அபாவம் ஸாதிக்கப்படுகிறதா? அல்லது பரமார்த்த விகாராபாவமா? முதல் பக்ஷத்தில் ‡அநைகாந்த்யம் இரண்டாவது பக்ஷத்தில் அநுபூதியானது பரமார்த்த விகாரமில்லாதது? அஜத்வாத், என்று சொல்லப்பட்டதாக ஆகும். எது பரமார்த்தவிகாரமுள்ளதோ அது உத்பன்னமானது, யதா கட:? என்று § வ்யதிரேகோதாஹரணம் சொல்லத்தக்கது. கடத்துக்கு பரமார்த்த விகாரத்தை ஒப்புக்கொள்ளாததால் திருஷ்டாந்தம் ஸாத்யாவ்யாப்தமென்கிற காரணத்தால் ஹேதுவுக்கு வ்யாப்யத்வாஸித்தியானது வருமென்று கருத்து.

யதபி — அநுபூதேரஜத்வாத் ஸவிகாரத்வம் ந ஸஹதே —
இதி। ததபி நோபபத்யதே, அஜஸ்யாப்யாத்மநோ தேஹேந்த்ரியாதி

‡ அநைகாந்த்யம் — வ்யபிசாரம். $ அநைகாந்திகம்—வ்யபிசாரமுள்ளஹேது.

§ வ்யதிரேகவ்யாப்தி— ஸாத்யாபாவத்திற்கும் ஸாதநாபாவத்திற்கும் உள்ள வ்யாப்தி. எங்கு எங்கு வஹ்ந்யபாவமோ ஆங்காங்கு தூமாபாவம் என்பதுபோல.

ஷ்டா விஷயத்வாத்। அநாதித்வேநாப்யுபகதயா அவித்யயா ஆத்மநோ வ்யதிரேகஸ்யாவஸ்யாச்ரயணீயத்வாத்। ஸ சேந்மித்யாரூப இதி சேத்; உத்பத்திவ்யாப்த: பாரமார்த்திகவிபாக: கிம் க்வசித்த்ருஷ்டசரஸ்த்வயா?। அவித்யயா ஆத்மந: பாரமார்த்திகே விபாகாபாவே வஸ்துதோ ஹ்யவித்யைவ ஸ்யாதாத்மா। அபாதிதப்ரதிபத்திஸித்தத்ருச்யபேதஸமர்த்தநேந தர்சநபேதோऽபி ஸமர்த்தித ஏவ, ச்சேத்யபேதேந ச்சேதநபேதவத் ॥

ஸ்ரீபாஷ்யம்.—

அநுபூதியானது உத்பத்தி இல்லாமையால் தன்னிடத்தில்வேறுபாட்டை ஸஹிக்கிறதில்லை என்று யாதொன்றுகூறப்பட்டதோ அதுவும் பொருந்தாது. உத்பத்தி இல்லாததாகவே இருக்கிற ஆன்மாவானது தேஹம் இந்த்ரியங்கள் முதலியவைகளைக்காட்டிலும் வேறுபட்டதாக இருப்பதால். அநாதி என்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிற அவித்யைக்கு ஆத்மாவைக்காட்டிலும் வேறுபாடு அவச்யம் ஆச்ரயிக்கத்தக்கதாக இருப்பதால். அந்த வேறுபாடானது மித்யாரூபமென்று சொல்லப்படுமேயானால் உத்பத்திவ்யாப்தமான உண்மையான விபாகமானது ஓரிடத்திலாவது உன்னால் காணப்பட்டிருக்கிறதா? அவித்யையைக்காட்டிலும் ஆத்மாவுக்கு உண்மையாக விபாகமில்லாவிடில் உள்ளபடியே அவித்யையே ஆத்மாவாக ஆகும். பாதிக்கப்படாத ப்ரதிபத்தியினால் ஸித்தமான த்ருச்யபேதங்களின் ஸமர்த்தனத்தால் தர்சனபேதமும் நிச்சயமாக ஸமர்த்திக்கப்பட்டது சேதிக்கத்தகுந்த வஸ்துக்களின் பேதத்தால் சேதந பேதம் போல.

ச்ருதப்ரகாசிகை—

இதற்கு மேல் உத்பத்தி இல்லாமையால் நாநாத்வ நிஷேதத்தைப்பற்றி பதில் சொல்லுகிறார்—**யதபி** என்று. இந்த இடத்தில் பேதஸாமான்யம் தூஷிக்க விரும்பப்பட்டிருக்கிறதா? அல்லது விஜாதீயபேதமா? அல்லது ஸஜாதீயபேதமா? அல்லது ஸ்வகதபேதமா? என்கிற பக்ஷங்கள் ஹேதுவின் அஸித்தியினால் நிரஸிக்கப்பட்டிருந்தபோதிலும் ஹேதுத்வத்தை ஒப்புக்கொள்வதால் முதலாவது சிரஸையும் இரண்டாவது சிரஸையும் தூஷியாநின்றுகொண்டு சார்வாகனை ஒழிந்த மற்ற எல்லாவாதிகளுக்கும் ஸம்மதமான ஸ்தலத்தில் வ்யபிசாரத்தைக் காண்பிக்கிறார்—**அஜஸ்யைவ** என்று. $ ம்ருஷாவாதிக்கு அபிமதமான ஸ்தலத்திலேயே ஹேதுவுக்கு அநைகாந்த்யத்தைக்கூறுகிறார்—**அவித்யாயா** என்று. ''இருள்ப்ரகாசங்கள்போல் விருத்த ஸ்வபாவமுள்ள

$ ம்ருஷாவாதி—அத்வைதி.

வஸ்துக்கள் இரண்டுக்கும் இதரேதராபாவாநுபபத்தியானது இருக்குமளவில்" என்றல்லவோ அக்ரந்தம். அந்த விபாகத்திற்கு மித்யாத்வத்தை ஆசங்கித்து அதின் அங்கீகாரத்தால் பரிஹரிக்கிறார்—ஸவிபாக: இதுமுதலியதால். ஜந்மப்ரதிபத்த:- உத்பத்தி வ்யாப்தம். கடம் முதலியவைகளில் பரமார்த்தவிபாகத்திற்கே உத்பத்தி வ்யாப்யத்வம் ஒப்புக்கொள்ளப்பட்டால் கடாதிவிபாகத்திற்கு பாரமார்த்யம் ப்ரஸங்கிப்பதால், அதற்கு அபாரமார்த்யம் சொன்னால் விசேஷணவையர்த்யத்தால் சொல்லப்பட்டதோஷம் நிச்சயமாக வரும் என்று அர்த்தம். ஹேதுதூஷணத்தை அறியவேண்டுமென்று இச்சையின் த்ருஷ்டாந்தத்திற்கு ஸாத்ய வ்யாவ்ருத்தியின் வாயிலாக‡‡வ்யாப்யத்வாஸித்தியானது அபிப்ராயப்படப்பட்டிருக்கிறதென்று அநுஸந்திக்கத்தக்கது. எது பரமார்த்த விபாகமுள்ளதோ அது உத்பத்தியுள்ளது— யதா கட: என்றல்லவோ வ்யதிரேக த்ருஷ்டாந்தம். கடத்துக்கு உண்மையான விபாகத்தை ஒப்புக்கொள்ளாமையால் ஸாத்ய வ்யாவ்ருத்தத்வம் ஸ்பஷ்டமன்றோ— விபாகம் மித்யை என்று சொல்லும் பக்ஷத்தில் வேறு தூஷணத்தைச்சொல்லுகிறார்—அவித்யாயா: என்று. இதற்குமேல் ஸஜாதீய பேதாபாவத்தை விலக்கித்தள்ளுகிறார்— அபாதித என்று மூந்தி ப்ரமாணப்ரமேயாநுபபத்தி மித்யாத்வாநுமானநிராஸமுகத்தால் த்ருச்யபேதம் ஸமர்த்திக்கப்பட்டது. அதோடு துல்யந்யாயமுள்ளதாக இருப்பதால் தர்சனபேதமும் ஸித்தமென்று அர்த்தம். பேதம் அவச்சேதகத்தை அடைந்திருக்கிறது. அவச்சேத்யத்தை அடைந்ததல்லவென்று கட கரக ஆகாச த்ருஷ்டாந்தத்தை ஆசங்கித்துச்சொல்லுகிறார்—ஹேத்யபேதாத் என்று.

ப்ரமாணம் ஸம்வித் ஸித்தியில் காண்க—"ப்ரதி ப்ரமாத்ரு விஷயம் பரஸ்பரவிலக்ஷணா: । அபரோக்ஷம் ப்ரகாசந்தே ஸுகதுக்காதிவத் தியः॥ ஸம்பந்திவ்யங்க்யபேதஸ்ய ஸம்யோகேச்சாதி கஸ்யது—நஹிபேதஸ்ஸதோ நாஸ்தி நாப்ரத்யக்ஷப்ச ஸம்மத:" (ஜ்ஞாநங்கள் ஸுகதுக்காதிகள் போல் ஒவ்வொரு ப்ரமாத்ரு விஷயந்தோறும் பரஸ்பர விலக்ஷணங்களாக ப்ரத்யக்ஷமாக ப்ரகாசிக்கின்றன. இருக்கிற ஜ்ஞாத்ருஜ்ஞேய ரூபமான ஸம்பந்தி வ்யங்க்ய பேதத்திற்கும் ஸம்யோகம் இச்சை முதலியதற்கும் பேதமானது இல்லை என்பதில்லை. அது அப்ரத்யக்ஷமென்பதும் ஸம்மதமன்று) ஒவ்வொரு ப்ரமாத்ருவிஷயந்தோறும் ஜ்ஞாநபேதம் ப்ரத்யக்ஷம். அந்யனுடைய ஜ்ஞாநம் பரோக்ஷமாக பாஸிக்கிறது. தன் ஜ்ஞானம் அபரோக்ஷமாக பாஸிக்கிறது. கடாதிவிஷய ஜ்ஞாநங்களுக்கு பரஸ்பரவைலக்ஷண்யமும் ப்ரத்யக்ஷம். ஆகையால் அந்த ஜ்ஞாநங்களின் பேதாபலாபமானது தன்னுடைய அநுபவ ப்ரத்யக்ஷத்தால் பாதிக்கப்பட்டது. என்பது முதலாவ துக்ரந்தத்தின் அர்த்தம். எல்லா ஜ்ஞாநங்களும் ஒன்று, ஜ்ஞாத்ருஜ்ஞேயரூபாவச்சேதக ஸம்பந்தபேதத்தால் பின்னமாக அறியப்படுகிறதென்று சொல்லப்படுமேயாகில் சொல்லுகிறார்— ஸம்பந்தி என்று. 'ஸம்பந்திவ்யங்க்ய பீஜஸ்ய' என்று சங்காபீஜத்தின் அநுவாதம். ஜ்ஞாத்ருஜ்ஞேயரூபமான ஸம்பந்திவ்யங்க்யத்வமாத்ரத்தினால் ஜ்ஞாநத்துக்கு பேதமானது ஸம்பந்திபேதத்தால் உண்டுபண்ணப்பட்டதென்பதினால் ஔபாதிகமாக ஆகாது. ஸம்யோகம் முதலியதற்குக்கூட ஸம்பந்தி வ்யங்க்யத்வமாத்ரத்தினால் கடகரகாவச்சின்ன ஆகாசத்திற்குப்போல் ஏகத்வம் ப்ரஸங்கிப்பதால். ஸத்தாஹேதுவென்றும் வ்யக்தி ஹேதுவென்றும் ஸம்பந்தியான வஸ்து இரண்டுவிதமன்றோ, எந்த ஸம்யோகம் முதலியதற்கு ஸம்பந்தியைத்தவிர்த்து ஸ்வரூபத்தில் ப்ரமாணமில்லையோ அதற்கு ஸம்பந்தியானது ஸத்தாஹேது. சப்தம் ஆகாசம்

‡‡ வ்யாப்யத்வாஸித்தி—வ்யாப்தி இன்மை.

முதலிய எந்த வஸ்துவுக்கு இருக்கிறதோ அதற்கு தநுபாதிகமான பேதாவபாஸமே ஒழிய ஸ்வயமாகக்கிடையாது. ஆகையால் ஜ்ஞாத்ருஜ்ஞேயமில்லாவிடில் ஸத்பாவத்தை அடையாத ஜ்ஞாநத்திற்கு பேதம் ஸ்வாபாவிகமே—ஆகையால் ஸஜாதீய பேதாபல, மில்லை என்று அர்த்தம். இதைக்கருதி ¶சேத்யபேதாத் என்று கூறப்பட்டது.

யதபி—நாஸ்யா த்ருஶேர்த்ருஶிரூபாயா த்ருஶ்ய: கஶ்சிதபி தர்மோ(அ)ஸ்தி ; த்ருஶ்யத்வாதேவ தேஷாம் ந த்ருஶிதர்மத்வம்— இதி ததபி ஸ்வாப்யுபகதை: ப்ரமாணஸித்தைர்நித்யத்வஸ்வயம்ப்ரகாஶத்வாதிபிர்தர்மைரநைகாந்திகம் । ந ச தே ஸம்வேதநமாத்ரம் ஸ்வரூபபேதாத் । ஸ்வஸத்தயைவ ஸ்வாஶ்ரயம் ப்ரதி கஸ்யசித்விஷயஸ்ய ப்ரகாஶநம் ஹி ஸம்வேதநம் । ஸ்வயம்ப்ரகாஶதா து ஸ்வஸத்தயைவ ஸ்வாஶ்ரயாய ப்ரகாஶமாநதா । ப்ரகாஶஶ்ச சிதசிதஶேஷவஸ்துஸாதாரணம் வ்யவஹாராநுகுண்யம் ॥

ஸ்ரீபாஷ்யம்.—

த்ருசிரூபையான இந்த ஸம்வித்துக்கு த்ருச்யதர்மமொன்றும் இல்லை, த்ருச்யங்களாக இருப்பதிறைலேயே அவைகளுக்கு த்ருசி தர்மத்வமில்லை என்றும் யாதொன்று கூறப்பட்டதோ அந்த இரண்டும் தம்மால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறதும் ப்ரமாணஸித்தங்களுமான நித்யத்வ ஸ்வயம்ப்ரகாசத்வம் முதலிய தர்மங்களால் வ்யாப்திசூன்யம். அவைகள் ஸம்வேதநமாத்ரமல்ல, ஸ்வரூபபேதமிருப்பதால். தன்னுடைய ஸத்தையினாலேயே தனக்கு ஆச்ரயமாக இருக்கிற ஆத்மாவைக் குறித்து ஒரு விஷயத்தைப் ப்ரகாசிக்கச்செய்வதன்றோ ஸம்வேதநம். ஸ்வயம் ப்ரகாசதையோவென்றால் ஸ்வஸத்தையினாலேயே ஸ்வாச்ரயத்தின் பொருட்டு ப்ரகாசித்தல். ப்ரகாசமென்பது சேதநாசேதந ரூபங்களான பதார்த்தங்களனைத்துக்கும் ஸாதாரணமான வ்யவஹாராநுகுண்யம்.

ச்ருதப்ரகாசிகை—

இதற்கு மேல் தன்னை அடைந்திருக்கிற நித்யத்வம் ஏகத்வம் முதலியவற்றின் பேதத்தை நிரஸிப்பதற்காக பூர்வபக்ஷியினால் அநுபூதியை பக்ஷமாக்கி உரைக்கப்பட்டிருக்கிற அநுபூதித்வாத் என்கிற Ψ வ்யதிரேகியையும், த்ருச்யத்வாத் பக்ஷமாக ஆக்கி சொல்லப்பட்டிருக்கிற த்ருச்யத்வாத் என்கிற @ அந்வயியையும் தூஷிக்கிறார்—யத பி

$ சேதநம்—வெட்டுதல், தண்டாடுதல்.　　¶ சேத்யம்—வெட்டத்தக்கது.

Ψ வ்யதிரேகி—வ்யதிரேக வ்யாப்தியுள்ளது.　　@ அந்வயி—அந்வயவ்யாபதியுள்ளது.

இது முதலியதால். அ ஸை ந க ா . ந் ஹ் க மி தி. அநியதம்— வ்யாப்தி சூன்யமென்று அர்த்தம். த்ருச்யத்வாத் என்கிற அந்வயிக்கு பக்ஷத்ரயவ்ருத்தித்வரூபமான அநியதத்வம். த்ருச்யத்வாத் என்கிற வ்யதிரேகிக்கு ஸாத்யவ்யாவ்ருத்தி இருந்தபோதிலுங்கூட ஸாதநாவ்யாவ்ருத்தி ஸ்வரூபமான அநியதத்வம்— த்ருசித்வாத் என்கிற வ்யதிரேகிக்கு ஸாத்ய வ்யாவ்ருத்தி இருந்தபோதிலுங்கூட ஸாதநாவ்யாவ்ருத்தி ஸ்வரூபமான அநியதத்வமாத்ரம்—அநுபூதி:, ந த்ருச்யதர்மவதீ, த்ருசித்வாத். யத்த்ருச்யதர்மவத், தத் ந த்ருசி:, யதா கட:. என்றல்லவோ அநுமானசரீரம். இங்கு த்ருச்யதர்மவத்த்வத்திற்கு அத்ருசித்வ வ்யாப்தியானது அநுபூதியில் பக்னையாய்விட்டது. அந்த அநுபூதிக்கு த்ருச்யத்வம் நித்யத்வம் முதலிய தர்மங்களிருப்பதால் என்று கருத்து. நித்யத்வாதிகளுக்கு மித்யாத்வம் சொல்லும் பக்ஷத்தில் நித்யத்வாதிகளுக்கு விபரீதமான ஆகாரத்துடன்கூடிய அநித்யத்வம் ப்ரஸங்கிக்குமே என்று அதை பரிஹரிப்பதற்காக அவைகளுக்கு ஸ்வரூபமாத்ரத்வத்தை ஆசங்கித்து பரிஹரிக்கிறார்— ந ச இது முதலியதால். அவைகளுக்கு ஸ்வரூப மாத்ரத்வம் அந்வய ரூபங்களுக்கா? அல்லது வ்யதிரேக ரூபங்களுக்கா? என்று விகல்பத்தை அபிப்ராயப்பட்டு அந்வயமுகத்தால் ஸ்வரூபமாத்ரத்வம் ஸம்பாவிதமான சிரஸ் என்று தூஷிக்கப்பட்டது. அன்யனுடைய ஒப்புதலாலல்ல. ஹேதுவைச்சொல்லுகிறார்— ஸ்வரூபபேதாத் என்று. ஸ்வரூபத்தைக்காட்டிலும் பேதமும் அவைகளின் பரஸ்பர பேதமும் சொல்லவிரும்பப்பட்டிருக்கிறது. இதனால் முன்பு “விதாபேதவிவாத தர்சநாத்” என்று சொன்னது விவரிக்கப்பட்டதாக ஆகிறது. ஸம்வேதநத்வ ஸ்வயம் ப்ரகாசத்வங்கள் இரண்டுக்கும் ஸ்வரூபபேதத்தைக்கூறுகிறார்— ஸ்வஸத்தயா என்கிறபதத்தை முதலில்கொண்ட இரண்டு வாக்யங்களால். ப்ரகாச்யதே அநேந என்கிற காரணவ்யுத்பத்தியினால் ப்ரகாசனசப்தம் நிஷ்பன்னமாயிருக்கிறது. வ்யவஹாரத்திற்கு அநுகுணமாக இருக்கும் தன்மையை உண்டுபண்ணுகிறது என்று அர்த்தம். இரண்டிடத்திலும் அநுகதமான ப்ரகாசசப்தார்த்தத்தைச் சொல்லுகிறார்— ப்ரகாசஶ்ச என்று. சேதநாசேதநரூபங்களான எல்லா பதார்த்தங்களும் அப்பொழுதன்றோ வ்யவஹாராநுகுணங்கள். எப்பொழுது அந்த வ்யவஹார ஹேதுக்களில் ஜ்ஞானம் ஸான்னித்யம் செய்கிறதோ அதில் அசிதம்சத்திற்கு ஸ்வவ்யவஹாரஸாமக்ரிகளில் உள்ளடங்கியிருக்கிற ஜ்ஞாநவத்த்வம் வ்யவஹாராநுகுண்யம் வேத்யத்வத்தில் சிதம்சத்திற்கும் இவ்வண்ணமே— ஸ்வப்ரகாசத்வத்திலோவென்றால் ஸ்வவ்யவஹாரஸாமக்ரீயில் வேறு ஜ்ஞாநாந்தரத்தின் அபேக்ஷை இல்லாமையால் தனக்கு அந்தர்பாவம்.

அன்றிக்கே இவ்வண்ணமும் கூறுகின்றனர். வ்யவஹாராநுகுண்யம் - வ்யவஹாரப்ரதிஸம்பந்தித்வம், ப்ரகாசமென்று அர்த்தம். அதுவும் ஜ்ஞப்திக்கும் ஜ்ஞாதாவுக்கும் தானாகவே இருக்கிறது ஜ்ஞேயமான வஸ்துவுக்கோ வெனில் ஜ்ஞாநத்தால் உண்டுபண்ணத்தக்கது. ஆகையால் முன்னிலையிலிருக்கிற கடம் முதலியவற்றுக்கும் அதே ப்ரகாசம். ப்ராகட்யமல்ல. அதைக்காட்டிலும் வேறாக ஒப்புக்கொண்டபோதிலும் ஜ்ஞாநத்திற்கு ஸ்வயம் ப்ரகாசத்வ விரோதமில்லை. அது அதை அபேக்ஷியாமல் ஸித்திப்பதால். ப்ராகட்யத்திற்கு ஜ்ஞாநாநுமாபகத்வத்தை ஒப்புக்கொள்ளாமையால்.

அன்றிக்கே ஜ்ஞாநத்தைஅடைந்திருக்கிற ப்ரகாசத்திற்கு அஸாதாரணமான லக்ஷணத்தைக்கூறுகிறார்—சிதசித் என்று. சேதநாசேதநரூபங்களான எல்லா பதார்த்தங்களை அபேக்ஷித்து ஸாதாரணமாயுள்ளதும் ஜ்ஞாநகதமாயுமிருக்கிற சித்வ்யவஹாராநுகுண்யமும் அசித்வ்யவஹாராநுகுண்யமும் ப்ரகாசம்—ஸ்வபரவ்யவஹாராநுகுண்யம் ப்ரகாசம் என்று அர்த்தம். அய்யா! அசித்துக்கு விஷயத்வம் எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது, அந்த விஷயத்வமும் பாஸமாநத்வம், அசித்தினுடைய வ்யவஹாராநுகுண்யமான

ஜ்ஞாதமாக இருக்குமேயாகில் "கட: ப்ரகாசதே" என்கிற வ்யவஹாரத்திற்கு அமுக்ய தவம வரும் ஜ்ஞாநகதமான ப்ரகாசமானது அதுடன் ஸம்பந்தமுள்ள வஸ்துவிளிடத்தில் உபசரிககப்பட்டிருப்பதால— ஜ்ஞாநஸம்பந்தமே கடாதிகளின் வ்யவஹாராநுகுணயமல்ல. வ்யவஹாராநுகுண்யாபாதனஸ்வபாவம் ஜ்ஞாநத்திற்குலக்ஷணம் என்று சொல்வது பொருந்தாதாதலால். ஸம்பந்தமென்பது இரண்டு வஸ்துககளை ஆச்ரயித்திருக்கிற ஸ்வபாவமுள்ளதாதலால் முன்னிலையிலிருக்கிற கடாதிகளுக்கும் அநத ஸம்பந்தில் ஹேதுத்வமிருப்பதால் ஸம்பந்தரூப வ்யவஹாராநுகுண்யாபாதகத்வம் ஜ்ஞாநஜ்ஞேயஸாதாரணமாகவன்றோ ஆகும ? கூறப்படுகிறது— வ்யவஹாரகர்மத்வரூபமான வ்யவஹாராநுகுண்யம் ஸமானமானது. அதன்றோ வ்யவஹாரப்ரதிஸம்பந்தித்வம, அதேதான் பாஸமாநத்வம், கட: ப்ரகாசதே என்கிற வ்யவஹாரமும் அதைக்காரணமாகக்கொண்டிருத்தலால் முககியமானது. வ்யவஹாரப்ரதிஸம்பந்தித்வத்தைக்குறித்து ஹேதுத்வ ரூபமான வ்யவஹாராநுகுண்யம் ஜ்ஞாநத்திற்கே. அதில் ப்ரத்யக்தவ அநுகூலத்வ ஏகத்வலக்ஷணமான தனனுடைய வ்யவஹார ப்ரதிஸம்பந்தியைக் குறித்து ஹேதுத்வரூபமான வ்யவஹாராநுகுண்யமானது ஜ்ஞாத்ரு ஸ்வரூபபூதமான ஜ்ஞாநத்திற்கே தன ஸ்வரூபம் தன்னை அடைந்திருக்கிற ஏகத்வம், பராக்த்வம், அநுகூலத்வம் முதலிய ஆகாரம் ஸ்வாச்ரயம, அதின் ஸம்பந்தம் ஸ்வ விஷயம், அதின் ஸம்பந்தம இவைகளுக்கு வ்யவஹார ப்ரதிஸம்பந்தித்வத்தில். ஹேதுத்வரூபமான வ்யவஹாராநுகுண்யமோ வெனில் தர்மபூதஜ்ஞாநததிற்கே. ஆகையால் ஸ்வபரவ்யவஹாராநுகுணயம் ஜ்ஞாநததின் அஸாதாரணமான ப்ரகாசத்திற்கு லக்ஷணமென்பது தகுதியுள்ளது.

ஸர்வகாலவர்தமாநத்வம் ஹி நித்யத்வம் । ஏகஸங்க்யாவிசிஷ்டதா சைகத்வம் । தேஷாம் ஜடத்வாத்யபாவரூபத்வேऽபி ததாபூதைரபி சைதந்யதர்மபூதைஸ்தைரநைகாந்த்யம் துஷ்பரிஹரம் । ஸம்விதி தத்ஸ்வரூபாதிரேகேண ஜடத்வப்ரத்யநீகத்வாத்யபாவரூபோ வா பாவரூபோ வா தர்மோ நாப்யுபகம்யதே சேத் தத்தந்நிஷேதோக்த்யா கிமபி நோக்தம் பவேத் ॥

ஸ்ரீபாஷ்யம்—

எக்காலத்திலுமிருத்தலன்றோ நித்யத்வம். ஏகத்வம் ஒன்று என்கிற எண்ணிக்கையினால் ஒரு வஸ்துவைக்குறித்தல் அவைகள் ஜடத்வாத்யபாவரூபங்களாக இருந்தபோதிலுங்கூட அப்படிப்பட்ட சைதந்ய தர்ம பூதங்களான அவைகளால் அநைகாந்த்யம் பரிஹரிக்கத்தகாதது.

ஸம்வித்திலோ வென்றால் ஸ்வரூபத்தைத் தவிர்த்து வேறாக ஜடத்வாதி ப்ரத்யநீகத்வம் என்கிற அபாவரூபமாகவோ பாவரூபமாகவோ உள்ள ஒரு தர்மம் ஒப்புக்கொள்ளப்படாவிட்டால் அந்த அந்த வஸ்துக்களின் நிஷேதவசநத்தினால் ஒன்றும் சொல்லப்பட்டதாக ஆகாது.

ச்ருதப்ரகாசிகை:—

அதற்குமேல் நித்யத்வத்தைச்சொல்லுகிறார்— ஸர்வ என்று. காலாநவச்சின்னத்வம் என்பது அநாகதமான நித்யத்வலக்ஷணமென்று முன்பு உரைக்கப்பட்டது ஸத்தாக வும் காரணமில்லாததாகவுமிருத்தல் நித்யத்வமென்பது ப்ரஸித்தம். அப்படி இருந்த போதிலும் ஸம்வித்தானது காலத்தைவிட வேறானதால் காலத்தைக்காட்டிலும் வேறாக இருக்கிற வஸ்துக்களின் நித்யத்வமானது ஸ்ருத்ஸ்நகாலஸம்பந்த வ்யாப்தமாதலால் அதி னாலும் ஸவிசேஷத்வாபாதநத்திற்காக காலத்தைதவிர்த்த மற்ற வஸ்துக்களுக்கு நித்ய த்வலக்ஷணம் இங்கு கூறப்பட்டது. தர்மங்களுக்கு அபாவரூபத்வமிருந்தபோதிலும் அனைகாந்த்யத்தைக்கூறுகிறார்— தேஷாம் என்று.

அபாவரூபங்களாக இருந்தபோதிலும் தர்மங்கள் ஸ்வரூபத்தைக்காட்டிலும்வேறல்ல வென்கிற பக்ஷத்தில் தூஷணத்தைச்சொல்லுகிறார்—ஸம்வித்து என்று. து'சப்தத்தால் முற்கூறப்பட்டுள்ள சௌக்ல்யம் முதலிய த்ருஷ்டாந்தவைஷம்யமிங்கு கருதப்பட் டிருக்கிறது. அது ஒன்றின் தர்மமாக இருந்துகொண்டு ஸ்வபர நிர்வாஹகமாக இருப் பதாலும் ஸ்வரூபம் ப்ரதிபன்னமாக இருக்குமளவில் ப்ரமவிரோதியாக இருப்பதாலும் ஸ்வரூபமே வ்யாவ்ருத்தி.ப்ரஹ்மத்தை ஒருவஸ்துவின் தர்மமாக ஒப்புக்கொள்ளாததால் ஸ்வரூபம் ப்ரதிபன்னமாக இருந்தபோதிலுங்கூட ப்ரமஸஹமாக இருப்பதாலும் முன் னிலையிலிருக்கிற சுக்லபாஸ்வர சகலத்திற்குப்போல ஸ்வரூபமே வ்யாவ்ருத்தி அல்ல வென்று ஸம்வித், அஸ்தி, என்கிற சப்தங்களும் நித்ய, ஸ்வயம் ப்ரகாச முதலியசப்தங் களும் அர்த்த பேதமுள்ளதுகளா? அல்லது ஒரே அர்த்தமுள்ளதுகளா? அதி கார்த்தத்வம் சொல்லும் பக்ஷத்தில் ஸவிசேஷத்வம். அங்ஙனமில்லாவிடில் பதாந்தர வையர்த்த்யம். ஸ்வரூபமாத்ரம் எல்லோராலும் ஒப்புக்கொள்ளப் பட்டிருப்பதால். நித்யத்வாதிஸாதகங்களான ஹேதுக்களால் ஸம்வித்மாத்ரம ஸாதிக்கப்படுகிறதா? அல் லது அதைவிடவேறு ஒன்றா? முதல் பக்ஷத்தில் ஸித்தஸாத்யத்வதோஷம்வருகிறது. இரண்டாவது பக்ஷத்தில் ஸவிசேஷத்வம். இவ்வண்ணமாக ஸமாநாதிகரணபத ப்ரயோகத்திற்கு அநுபபத்தியும் நித்யத்வாதிஸாதக ஹேதுக்களுக்கு ஸித்தஸாதகத்வ மும் அபிப்ராயப்படப்பட்டிருக்கிறது. ப்ரமாணம் ஸம்வித்ஸித்தியில்— நவேத்யம் வித்திதர்மஸ்ஸ்யாதிதியத்ப்ராகுதீரிதம் -தேநாபிஸாதிதம் கிஞ்சித் ஸம்விதோஸ்தி நவா த்வயா அஸ்திசேத் பக்ஷபாதஸ்ஸ்யாத் நசேத்தே விபலச்ச்ரம:— (வேத்யம வித்திதர்ம மாக ஆகாதென்று முந்தி எது உரைக்கப்பட்டதோ. அதினாலும் ஸம்வித்துக்கு ஏதா வதொன்று உன்னால் ஸாதிக்கப்பட்டதாக இருக்கிறதா? இல்லையா? இருக்கிறதென்று சொன்னால் பக்ஷபாதம் வரும்- இல்லை எனில் உன் சிரமம் பயனற்றது) நித்யத்வம முதலியதர்மங்களுக்கு ஒன்றோடொன்று பேதத்தை ஒப்புக்கொள்ளாவிட்டால் ஸாதிக் கப்பட்ட ஒரு தர்மமே போரும். வேறு தர்மம ஸாதிக்கத்தக்கதல்ல. அது முன்பு நன்கு ஸாதிக்கப்பட்டிருக்கிற தர்மத்தைவிட வேறாக இல்லாததால். நித்யத்வம் நன்கு ஸாதிக்கப்பட்டபிறகு காலாபரிச்சேதமானது மீண்டும் ஸாதிக்கத்தக்கதாக இராதன்றோ. இவ்வண்ணமாக நித்யத்வம் முதலியவைகளுக்கு ஸ்வரூபத்தைக்காட்டிலும் பேதமும் பரஸ்பரபேதமும் ஸித்தம்.

𑌕𑌿𑌂𑌚 𑌸𑌂𑌵𑌿𑌤𑍍 𑌸𑌿𑌦𑍍𑌧𑍍𑌯𑌤𑌿 𑌵𑌾 𑌨 𑌵𑌾 ? । 𑌸𑌿𑌦𑍍𑌧𑍍𑌯𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍 ; 𑌸𑌧𑌰𑍍𑌮𑌤𑌾 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 । 𑌨 𑌚𑍇𑌤𑍍 ; 𑌤𑍁𑌚𑍍𑌛𑌤𑌾, 𑌗𑌗𑌨𑌕𑍁𑌸𑍁𑌮𑌾𑌦𑌿𑌵𑌤𑍍 । 𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌰𑍇𑌵 …

ஸித்திஶ்சேத்; கஸ்ய கம் ப்ரதீதி வக்தவ்யம்; யதி ந கஸ்யசித் கஞ்சித், ஸா தர்ஹி ந ஸித்தி꞉ । ஸித்திர்ஹி புத்ரத்வவத் கஸ்யசித் கஞ்சித் பவதி । ஆத்மந இதி சேத்; கோ(அ)யமாத்மா?; நநு ஸம்விதேவேத்யுக்தம் । ஸத்யமுக்தம்; அயுக்தம் து தத் । ததா ஹி; கஸ்யசித்புருஷஸ்ய கிஞ்சித்விஷயஜ்ஞாநம் ப்ரதி ஸித்திரூபதயா தத்ஸம்பந்திநீ ஸா ஸம்வித் ஸ்வயம் கதமாத்மத்வமநுபவேத் ? ॥

ததுக்தம் பவதி — அநுபூதிரிதி ஸ்வாச்ரயம் ப்ரதி ஸ்வஸத்தயைவ கஸ்யசித்விஷயஸ்ய வ்யவஹாராநுகுண்யாபாதநஸ்வபாவோ ஜ்ஞாநாவகதிஸம்விதாத்யபரநாமா ஸகர்மகோ(அ)நுபவிதுராத்மநோ தர்மவிசேஷ꞉ “கடமஹம் ஜாநாமி, இமமர்த்தமவகச்சாமி, படமஹம் ஸம்வேத்மி” இதி ஸர்வேஷாமாத்மஸாக்ஷிக꞉ ப்ரஸித்த꞉ । தஸ்ய ஸ்வஸத்தயா ஹி தஸ்யாச்ரயப்ரகாசதா ஸ்வவிஷயவ்யவஹாரிதா । தஸ்ய ஸகர்மகஸ்ய கர்த்ருப்ரயத்நவிசேஷஸ்ய கர்மத்வக்ருதேரிவ தர்மபூதி꞉ ॥

ஸ்ரீபாஷ்யம்—

மேலும் ஸம்வித் ஸித்திக்கிறதா இல்லையா? ஸித்திக்கிறதேயானால் ஸதர்மத்வம் வரும், இல்லாவிடில் ஆகாசபுஷ்பம் முதலியவைகளுக்குப் போல் துச்சதை ஏற்படும். ஸித்தியே ஸம்வித் என்றால் அது யாருக்கு எதைப் பற்றி என்று சொல்லத்தக்கது. ஒருவனுக்கும் ஒன்றைப்பற்றியுமில்லை என்று சொல்லப்படுமேயாகில் அப்பொழுது அது ஸித்தியாகாது. ஸித்தியோவென்றால் புத்ரத்வம்போல் ஒருத்தனுக்கு ஒருவனைக்குறித்து உண்டாகிறது. ஆத்மாவுக்கென்று சொல்லப்படுமேயானால், இந்த ஆத்மா யார்? அய்யா! ஸம்வித்தே ஆத்மா என்று உரைக்கப்பட்டதன்றோ, உண்மை, உரைக்கப்பட்டது. ஆனால் அந்தவசனம் தோஷமுள்ளது, அதை உபபாதிக்கிறோம். ஒரு புருஷனுக்கு ஒரு அர்த்தத்தைக்குறித்து ஸித்திரூபையாக இருப்பதால் அந்த புருஷஸம்பந்தமுள்ள அந்த ஸம்வித்தானது தானே எவ்வாறாக ஆத்மபாவத்தை அனுபவிக்கும்?

இது சொல்லப்பட்டதாக ஆகிறது. அநுபூதி என்பது தனக்கு ஆச்ரயமான ஆத்மாவைக்குறித்து தன்னுடைய ஸத்பாவத்தினாலேயே ஒருவஸ்துவின் வ்யவஹாராநுகுண்யாபாதன ஸ்வபாவமுள்ளதாகவும் ஜ்ஞானம், அவகதி,

ஸம்வித், என்று வழங்கப்படுவதும் கர்மாவோடுகூடியதும், கடமஹம் ஜாநாமி,இமமர்த்தம் அவகச்சாமி, படமஹம் ஸம்வேத்மி,என்று எல்லோருக்கும் ஆத்மஸாக்ஷிகமாகவும் ப்ரஸித்தமாகவுமிருக்கிற அநுபவிதாவான ஆத்மாவின் தர்மவிசேஷம். இந்த ஸ்வபாவமுள்ளதாக இருப்பதினாலன்றோ அதற்கு ஸ்வயம் ப்ரகாசத்வம் உன்னாலும் உபபாதிக்கப்பட்டது. கர்மாக்களோடுகூடியதான இந்த கர்த்ரு தர்மவிசேஷத்திற்குகர்மத்வம்போல கர்த்ருத்வமும் இசையாது.

ச்ருதப்ரகாசிகை—

அந்யனால் ஸம்வித்துக்கு நிர்பேதத்வாபாதநமுகத்தால் அதற்கு ஆத்மத்வம் ஸாதிக்கப்பட்டது. இந்த இடத்தில் நிர்பேதத்வ நிராகரண முகத்தால் ஸம்விதாத்மத்வத்தை நிராகரிப்பதற்குத தொடங்குகிறார்— அபிச இது முதலியதால். அதில் ஸவிசேஷத்வத்தை ஆபாதநஞ்செய்வதற்காக விகல்பிக்கிறார்—ஸம்வித் ஸித்யதிவா நவா என்று- அறியப்பட்டதா? அல்லது அறியப்படவில்லையா? என்று அர்த்தம். முதல் பக்ஷத்தை தூஷிக்கிறார்— ஸித்யதி சேத் என்று. எல்லா ப்ரமாணங்களும் ஸவிசேஷவிஷயங்களென்று முந்தி உபபாதிக்கப்பட்டிருப்பதால் என்று கருத்து. அனறிக்கே, ஸித்திக்கிற வஸ்துவானது ஸித்திககு ஆச்ரயமாதலால் ஸவிசேஷமாக ஆகும். ஸித்தி:-ப்ரகாசம்—வ்யவஹாராநுகுண்ய தர்மஸம்பந்தமுள்ளதாக ஆகும் எனறு அர்த்தம். இரண்டு சிரஸ்களாலுமாபாதநம் செய்யப்பட்டிருக்கிற தோஷபரிஹாரத்திற்காக அந்யனால் சொல்லப்பட்டதை சங்கிக்கிறார்——ஸித்திரேவ என்று. ஸித்தியானது வேறு ஸித்தியை அபேக்ஷியாததலால் ப்ரமிதிவிஷயத்வ ப்ரயுக்தமான ஸித்திஸம்பந்தித்வரூபமான ஸவிசேஷத்வம் வராமல்போகும். அப்படி இருந்தபோதிலும் துச்சத்வமும் ஏற்படாது. முயல்கொம்பு ஸித்திரூபமல்லவென்று கருத்து. அதிலும் ஸவிசேஷத்வத்தைச் சொல்லுகிறார்-கஸ்ய என்று. ப்ரதீதியோவென்றால் ஒரு ஆச்ரயத்திற்கு ஒரு விஷயத்தைக்குறித்து உண்டாகிறதாதலால் என்று அந்தஇரண்டும் சொல்லத்தக்கதென்று அர்த்தம். விருத்த கக்ஷியில் பாதகத்தைககூறுகிறா— யதி என்று. அதை விவரிக்கிறார்—ஸித்தாஹி என்று. பிதாவின் ஸ்தாநததில் விஷயம். புத்ரனுடைய ஸ்தாநத்தில் ஆச்ரயம். புத்ரத்வஸ்தாநத்தில் ஸித்தி. புத்ரத்வத்திற்கன்றோ புத்ரன் ஆச்ரயன். கஸ்யசித் என்று சொல்லப்பட்ட ஜ்ஞாதாவினது அபேக்ஷையின் ப்ரதிக்ஷேபத்தை சங்கிக்கிறார்—ஆத்மந இதி சேத் என்று. ஆதமாவைக்குறித்து என்று அர்த்தம். ஆத்மசப்தம் தன்னைச்சொல்லுகிறது. இதனால் ப்ரதயக்த்வம் பலித்தது. ஸித்திக்கு ப்ரதிஸம்பந்தியான தன்னுடைய ஆத்மாவன்றோ ப்ரதயக்-தனக்கு ப்ரகாசிததல் ப்ரத்யக்த்வமென்றல்லவோ சொல்லப்படப்போகிறது. அதுவும் ஸம்வித்துக்கு அநுபபன்னமென்கிற அபிப்ராயத்தால் சொல்லுகிறார்— கோயமாத்மா என்று. அயம் சப்தமானது ஸித்திப்ரதிஸம்பந்தித்வத்தைச் சொல்லுகிறது. ஸித்திப்ரதிஸம்பந்தியான ஆத்மா எவன்- கிம்சப்தம் நிந்தையைப்பொருளாகக் கொண்டது. ஸம்வித்தானது ஸித்திப்ரதிஸம்பந்தியான ஆத்மாவன்று. ஸம்வித்துக்கு ப்ரத்யக்த்வமானது உபபன்னமாகாதென்று அர்த்தம். ஸம்வித்துக்கு ஆத்மத்வம் உபபாதிக்கபட்டிருப்பதால் அநுபபன்னமல்லவென்று வினவுகிறார்- நநு என்று. பரிஹரிக்கிறார்—ஸத்யமுக்தம் என்று. ஸம்விதாத்மத்வத்திற்கு துருக்தத்வத்தை ஸம்விததுக்கு ஆத்மத்வ நிராகரண முகத்தால் உபபாதநம் செய்யத்தொடங்குகிறார்— ததாஹி என்று. கர்மநிர்தேசம் திருஷ்டாந்தமாக. அர்த்தஜாதம்

என்று தர்மதர்மிரூப ¶ புஞ்ஜமே ப்ரமிதிவிஷயமென்று கருத்து. ஸித்திரூபா, ப்ரகாச ரூபா. அதிலுலேயே அந்த இரண்டு ஸம்பந்தமுள்ளது. கயமிதி—ஆகமதர்மபூதையான ஸம்வித்தானது தான் எவ்வாறு ஆத்மாவாகும் என்று அாததம். ஸித்திசப்தமானது உத்பத்திக்கும் ஜ்ஞப்திக்கும் பொதுவானது. இது அர்த்தம்—ப்ரகாசம் இங்கு விவக்ஷிக் கப்பட்டிருக்குமேயாகில் அது எது, அதற்கு கர்த்ருகர்ம ஸம்பந்தித்வத்தில் ப்ரமாணம் யாது ? வ்ருத்திஜ்ஞானமானது கர்மகர்தாக்களோடு கூடியதன்றோ. ஸம்வித்தோ வென்றால் தனித்து இருக்கிறது. இங்கு தர்ம நிர்தேசத்தில் யாது பயன் என்று சங்கை வரின் சொல்லுகிறார்— ஏததுக்தம்பவதி என்று. அநுபூதி: என்பதினால் ஜ்ஞப்தி பரத்வம் சொல்லப்பட்டது. தன்னுடைய ஆச்ரயத்தைக் குறித்து தன்னிருப்பினாலே யே ஒரு வஸ்துவின் வ்யவஹாராநுகுண்யாபாதன ஸ்வபாவமுள்ளது என்பதனால் அதின் ஸ்வரூபம் கூறப்பட்டது. இவ்வாறாக ஸித்தி சப்தார்த்தம் சொல்லப்பட்டது. ‘ஜ்ஞாநாவகதிஸம்விதாத்யாபரநாமா’என்பதினால் ஜ்ஞாநசப்தம் ஸம்வித்சப்தம் இரண்டும் பர்யாயமாதலால் வ்ருத்திஜ்ஞாநம் ஸம்வித இவ்விரண்டின் வியாகத்திற்கு ப்ரமா ணத்தினது இன்மை பலிததது. ‘கடமஹம் ஜாநாமி’ என்பது முதலாக ‘‘ஆத்மஸாக்ஷிக: ப்ரஸித்த:, என்பதை ஈறாகக்கொண்டிருக்கிற கிரந்தத்தால் கர்மகர்த்ரு ஸம்பந்தத்திற்கு ஸ்வாநுபவஸித்தத்வமும் ஜ்ஞாநம் ஸம்வித் இரண்டுக்கும் பர்யாயத்வமும் சொல்லப் பட்டது. அதில் அன்யனுடைய அங்கீகாரத்தைச் சொல்லுகிறார்— ஏதத்ஸ்வாபவத யா என்று. ஆத்மஸ்வயம்ப்ரகாசத்வத்தை ஸாதிக்கிறவனால் கர்மகர்த்ரு ஸம்பந்தி ஜ்ஞா நத்திற்கு ஸ்வயம் ப்ரகாசத்வம் ஸாதிக்கப்பட்டதென்று. ஸகர்மகம்ஜ்ஞாநம் ஜடரூபம் ஆத்மபூதஜ்ஞாநத்தைக்காட்டிலும் வேறானது வ்ருத்திரூபம் என்று ஒத்துக்கொள்ளுதல் அநுபபன்னமென்றுகருத்து. ‘அஸ்ய’ இதுமுதலியதால் கர்மநிர்தேசத்திற்கு பலம்காண பிக்கப்பட்டது.

அய்யா ! நாம் ஸம்வித்துக்கு கர்த்ருத்வத்தை விரும்புகிறோமில்லை. ஆகையால் எவ்வாறு இந்த ப்ரஸங்கம் ? சொல்லப்படுகிறது ஸம்வித்துக்கு ஆத்மத்வத்தைச்சொல் பவனால் ப்ரத்யக்த்வம் ஒப்புக்கொள்ளத்தக்கது. ப்ரத்யக்த்வமும் ஜ்ஞாநாச்ரயத்துக்கே என்பதனால் ஸம்வித்துக்கு ஜ்ஞாத்ருத்வம் விடத்தக்கதல்ல. அது எவ்விதத்தாலும் இசையாது என்று பொருள். காத்ருத்வம், ஆச்ரயத்வம் தாதுவின் அர்த்தமானவ்யா பாரத்திற்கு ஆச்ரயனன்றோ கர்தா. இவ்வண்ணம் தர்மதர்மிபாவத்தால் ப்ரதீதிவரு வதால் ஸம்வித்துக்கு ஆத்மத்வம் நிராகரிக்கப்பட்டது.

𑌤𑌥𑌾𑌹𑌿 ; 𑌅𑌸𑍍𑌯 𑌕𑌰𑍍𑌤𑍃𑌸𑍍𑌵𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌂 𑌕𑌰𑍍𑌤𑍃𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑍍𑌯𑌸𑍍𑌯𑌸𑌂𑌵𑍇𑌦𑌨𑌾
𑌪𑍍𑌰𑌸𑍍𑌯𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌾𑌵𑌿𑌰𑍍𑌭𑌾𑌵𑍋𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑌿𑌨𑌿𑌰𑍋𑌧𑌾𑌶𑍍𑌚 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑍀𑌕𑍍𑌰𑌿𑌯𑌨𑍍
𑌤𑍇 । 𑌕𑌰𑍍𑌤𑍃𑌤𑍍𑌵𑌮𑌪𑍍𑌯𑌸𑍍𑌯 𑌤𑌾𑌵𑌤𑍍 “𑌸 𑌏𑌵𑌾𑌯𑌮𑌰𑍍𑌥𑍋 𑌮𑌯𑌾
𑌽𑌨𑍁𑌭𑍂𑌤𑌃” 𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌭𑌿𑌜𑍍𑌞𑌾𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌸𑌿𑌦𑍍𑌧𑌂 । “𑌘𑌟𑌮𑌹𑌂 𑌜𑌾
𑌨𑌾𑌮𑌿, 𑌘𑌟𑌮𑌹𑌮𑌜𑍍𑌞𑌾𑌸𑌿𑌷𑌂, 𑌜𑍍𑌞𑌾𑌤𑍁𑌰𑍇𑌵 𑌮𑌮𑍇𑌦𑌾𑌨𑍀𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌨𑌷𑍍𑌟𑌮𑍍”
𑌇𑌤𑌿 𑌚 𑌸𑌂𑌵𑌿𑌦 𑌉𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑍍𑌯𑌾𑌦𑌯𑌃 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌸𑌿𑌦𑍍𑌧𑌾 𑌇𑌤𑌿 𑌕𑌥𑌮𑌸𑍍𑌯𑍈
𑌕𑍍𑌯𑌂 । 𑌏𑌵𑌂 𑌕𑍍𑌷𑌣𑌧𑍍𑌵𑌂𑌸𑌿𑌨𑍍𑌯𑌾𑌃 𑌸𑌂𑌵𑌿𑌦𑌃 𑌕𑍂𑌟𑌸𑍍𑌥𑌾𑌤𑍍𑌮𑌭𑌾𑌵𑍋 𑌨 𑌸𑌂𑌭𑌵𑌤𑌿

¶ புஞ்ஜம்— ஸமுதாயம், கூட்டம்.

த்³ருஷ்டவைரோத்⁴யாத்: "இத³மஹமத்³ராக்ஷம்" இதி ப்ரத்யபி⁴ஜ்ஞா ச ந க⁴டதே; அந்யேநாநுபூ⁴தஸ்ய ந ஹ்யந்யேந ப்ரத்யபி⁴ஜ்ஞாந ஸம்ப⁴வ: ॥

ஸ்ரீபாஷ்யம்—

உபபாதிக்கிறார்—இந்தகர்தாவுக்கு ஸ்திரத்வமும் கர்தாவின் தர்மமான ஸம்வேதநத்திற்கு ஸுகதுக்காதிகளுக்குப்போல உத்பத்தி ஸ்திதி விநாசங்களும் நேரில் காணப்படுகின்றன. கர்தாவின் ஸ்தைர்யமோ வென்றால்"அதே இந்த வஸ்து முந்தி என்னால்அநுபவிக்கப்பட்டிருக்கிற" தென்கிற@ப்ரத்யபிஜ்ஞாப்ரத்யக்ஷத்தால் ஸித்தம். "நான் அறிகிறேன். நான் அறிந்தேன் ஜ்ஞாதாவாகவே இருக்கிற எனக்கு இப்பொழுது ஜ்ஞாநம் நஷ்டமாகப் போயிற்று" என்றும் ஸம்வித்துக்கு உத்பத்தி முதலியவைகள் ப்ரத்ய[க்ஷ] ஸித்தங்களாக இருப்பதால் எதினால் அவைகளுக்கு ஐக்யம். இவ்வண்ணம் [க்ஷ]ண பங்குரமான ஸம்வித்தை ஆத்மாவென்று ஒப்புக்கொள்ளும்பக்ஷத்தில் 'முதல் தினத்தில் என்னால் இது பார்க்கப்பட்டது, மறுதினத்திலும் இதை நான் கண்டேன்" என்கிற ப்ரத்யபிஜ்ஞையும் இசையாது அந்யனாலனுபவிக்கப் பட்டவஸ்துவுக்கு வேறு ஒருவனுடைய @ப்ரத்யபிஜ்ஞா கோசரத்வம் ஸம்பவியாதன்றோ.

ச்ருதப்ரகாசிகை.—

இதற்குமேல் ஸ்திரத்வாஸ்திரத்வ $ வைதர்ம்யத்தினால் அது நிரஸிக்கப்படுகிறது. ததா என்று "ஹி" என்பது ஹேதுவில், சகாரத்தின் அர்த்தமுள்ள "ததா" என்கிற சப்தத்தால் வேறு ஹேது சொல்லப்படுகிறது. கர்த்ருஸ்தைர்யத்தை உபபாதிக்கிறார்— **கர்த்ருஸ்தைர்யம் தாவத்** என்று. ப்ரத்யபிஜ்ஞையினால் விஷயீகரிக்கப்படுவதால் கடம் முதலியவைகளுக்கு ஸ்திரத்வம் ஸித்திக்கிறது—அப்படிப்போல அந்த கடப்ரத்யபிஜ்ஞாகாலத்தில் முன் என்னால் இது அநுபவிக்கப்பட்டதென்று கர்தாவும் ப்ரத்யபிஜ்ஞைக்கு விஷயமாவதால் ஸ்திரனாக ஸித்திக்கிறான் என்று அர்த்தம். அதற்குமேல் ஜ்ஞாநத்தின் உத்பத்திஸ்திதிவிநாசங்களைக் காண்பிக்கிறார்— **அஹம்** இது முதலியதால். **ஜாநாமி** என்பதனால் உத்பத்திஸ்திதி இரண்டும் ஸித்தம். **அஜ்ஞாஸிஷம்** என்பதனால் அதீதத்வ ப்ரதீதியானது எற்படுகிறது. இதின் தெளிவின் பொருட்டு அடுத்த பூர்வகாலத்திலுண்டான ஜ்ஞாநவிசிஷ்டத்வ பராமர்சத்யோதநத்திற்காக "ஜ்ஞாதுரேவ மம" என்று உரைக்கப்பட்டது. 'உத்பத்யாதய:' என்கிற இடத்திலுள்ள ஆதிசப்தத்தால் ஸ்திதிநிரோதங்கள் க்ரஹிக்கப்படுகின்றன. மூன்று நான்கு க்ஷணங்களில் நிலைபெற்றிருக்கிற ஸம்வித்துக்கு முதலாவது க்ஷணத்தோடு ஸம்பந்தம் † உத்பத்தி அதற்குப்பிற்பட்ட க்ஷணங்களோடு ஸம்பந்தம் § ஸ்திதி—ஸம்வித் ஸ்வயம் ப்ரகாசமாதலால்,

@ ப்ரத்யபிஜ்ஞை—ஸம்ஸ்காரத்தால் உதவிபுரியப்பட்டிருக்கிற இந்த்ரிய ஜன்யமான ஜ்ஞாநம். $ வைதர்ம்யம்—ஒற்றுமை இன்மை. † உத்பத்தி—தத்கால ஸம்பந்தம். § ஸ்திதி—உத்தரகாலாநுவ்ருத்தி.

அவைகள் இரண்டும் ப்ரத்யக்ஷங்கள். கடஸம்வித்துக்கு விரோதமாவது படஸம்வித், அது ப்ரத்யக்ஷமாக இருக்கிறது. இச்சப்தம ஹேதுவில். ஸ்திரகாஸ்திரத்வவைதர்ம்யத்தினுல அவைகளுக்கு ஐக்யமில்லை என்று ஆகூதம். இவ்வண்ணம் ப்ரத்யபிஜ்ஞைக்கு விஷயமாக இருப்பதால ஆன்மாவுக்கு ஸ்தைர்யம் கூறப்பட்டது. மேலே ப்ரதயபிஜ்ஞைக்கு ஆச்ரயமாக இருப்பதால ஸ்தைர்யம் உரைக்கப்படுகிறது- ஏவம் என்று. முந்தி ப்ரத்யபிஜ்ஞா ப்ரத்யக்ஷஸித்தமென்று கூறப்பட்டது. இந்த இடத்தில் ப்ரத்யபிஜ்ஞைபொருந்தாமென்று சொல்லப்பட்டது இது அபிப்ராயம்-ப்ரத்யபிஜ்ஞைக்கு விஷயமான ஜ்வாலை முதலியதில் எந்தஇடத்தில் அந்யதாஸித்தி ஸம்பவிக்குமோ அங்கு ஸ்தைர்யஸித்தி இல்லை. இங்கு ப்ரத்யபிஜ்ஞா விஷயத்வத்திற்கு அந்யதாஸித்தி இருந்தபோதிலும் ப்ரத்யபிஜ்ஞாச்ரயத்வம அநந்யதாஸித்தமாதலால் ப்ராந்திரூபப்ரத்யபிஜ்ஞையில் கூட அந்த ப்ரத்யபிஜ்ஞாச்ரயத்திற்கு ஸ்தைர்யமானது அநந்யதாஸித்தமாதலால ப்ரத்யபிஜ்ஞாச்ரயத்வப்ரயுக்தமான ஸ்தைர்யமானது எவ்விதத்தாலும் அசைக்கமுடியாதது. ப்ரத்யபிஜ்ஞைக்கு ஆச்ரயமாக இருக்தலால ஸ்தைர்யத்தை விவரிக்கிறார்— அந்யேந என்று. இவ்வண்ணம் ஸ்திரமான ஜ்ஞாதாவினுடைய தர்மமாகவும் அஸ்திரமாகவும் அறியப்படுவதாலும் அஸ்திரத்வநிமித்தமான ப்ரதிஸந்தானத்தின் அஸம்பவத்தாலும ஸம்வித்துக்கு ஆத்மத்வம் நிரஸிக்கப்பட்டது.

𑌕𑌿𑌞𑍍𑌚 𑌅𑌨𑍁𑌭𑍂𑌤𑍇𑌰𑌾𑌤𑍍𑌮𑌤𑍍𑌵𑌾𑌭𑍍𑌯𑍁𑌪𑌗𑌮𑍇 𑌤𑌸𑍍𑌯𑌾𑌃 𑌨𑌿𑌤𑍍𑌯𑌤𑍍𑌵𑍇𑌽𑌪𑌿 𑌪𑍍𑌰𑌤𑌿𑌸𑌨𑍍𑌧𑌾𑌨𑌾𑌸𑌮𑍍𑌭𑌵𑌶𑍍𑌚 । 𑌪𑍍𑌰𑌤𑌿𑌸𑌨𑍍𑌧𑌾𑌨𑌂 𑌹𑌿 𑌪𑍂𑌰𑍍𑌵𑌾𑌪𑌰𑌕𑌾𑌲𑌸𑍍𑌥𑌾𑌯𑌿𑌨𑌮𑌨𑍁𑌭𑌵𑌿𑌤𑌾𑌰𑌮𑍁𑌪𑌸𑍍𑌥𑌾𑌪𑌯𑌤𑌿 ; 𑌨𑌾𑌨𑍁𑌭𑍂𑌤𑌿𑌮𑌾𑌤𑍍𑌰𑌮𑍍 । 𑌅𑌹𑌮𑍇𑌵𑍇𑌦𑌂 𑌪𑍂𑌰𑍍𑌵𑌮𑌪𑍍𑌯𑌨𑍍𑌵𑌭𑍂𑌵𑌮𑌿𑌤𑌿 । 𑌸𑍍𑌵𑌤𑍋𑌽𑌨𑍁𑌭𑍂𑌤𑍇𑌰𑍍𑌨 𑌹𑍍𑌯𑌨𑍁𑌭𑌵𑌿𑌤𑍃𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌃 । 𑌅𑌨𑍁𑌭𑍂𑌤𑌿𑌰𑌨𑍁𑌭𑍂𑌤𑌿𑌮𑌾𑌤𑍍𑌰𑌮𑍇𑌵 । 𑌸𑌂𑌵𑌿𑌨𑍍𑌨𑌾𑌮 𑌕𑌾𑌚𑌿𑌨𑍍𑌨𑌿𑌰𑌾𑌶𑍍𑌰𑌯𑌾 𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌷𑌯𑌾 𑌵𑌾𑌽𑌦𑍃𑌷𑍍𑌟𑌾𑌨𑍁𑌭𑌵𑌮𑌭𑍍𑌯𑍁𑌨𑍁𑌸𑌂𑌭𑌵𑌤𑍀𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌮𑍍 । 𑌉𑌭𑌯𑌾𑌨𑍍𑌵𑌯𑍇𑌤𑌾 𑌸𑌂𑌵𑌿𑌦𑍇𑌵𑌾𑌽𑌽𑌤𑍍𑌮𑍇𑌤𑍍𑌯𑌭𑍍𑌯𑍁𑌪𑌪𑌰𑌾𑌹𑌤𑌮𑍍 । 𑌅𑌨𑍁𑌭𑍂𑌤𑌿𑌮𑌾𑌤𑍍𑌰𑌮𑍇𑌵 𑌪𑌰𑌮𑌾𑌰𑍍𑌥 𑌇𑌤𑌿 𑌨𑌿𑌷𑍍𑌕𑌰𑍍𑌷𑌕𑌹𑍇𑌤𑍍𑌵𑌾𑌭𑌾𑌸𑌾𑌶𑍍𑌚 𑌨𑌿𑌰𑌾𑌕𑍃𑌤𑌾𑌃 ॥

ஸ்ரீபாஷ்யம்:—

மேலும் அநுபூதிக்கு ஆத்மத்வம் ஒப்புக்கொண்டால் அது நித்யமாக இருந்த போதிலும் ✻ப்ரதிஸந்தானத்தின் இன்மை அந்த நிலைமையுள்ளதே. ப்ரதிஸந்தானமோ வெனில் முற்காலத்திலும பிற்காலத்திலும் ஸ்திரமாக இருக்கிற ¶ அநுபவிதாவை உறுதிப்படுத்துகிறது. நானே இதை முந்தியும் அநுபவித்தேன் என்று. அநுபூதி மாத்ரத்தை உபஸ்தாபிக்கிறதில்லை.

✻ ப்ரதிஸந்தானம்—ஸ்மரணம். ¶ அநுபவிதா—அநுபவிக்கிறவன்.

உனக்குக்கூட அநுபூதிக்கு அநுபவிதாவாக இருத்தல் இஷ்டமல்ல. அநுபூதி அநுபூதிமாத்ரமே. நிராச்ரயையாகவும் நிர்விஷயையாகவுமிருக்கிற ஸம்வித்தென்கிற ஒரு பதார்த்தம் அத்யந்தா $ நுபலப்தியினால் ஸம்பவியாதென்று உரைக்கப்பட்டது. இருவர்களாலுமொப்புக் கொள்ளப்பட்டிருக்கிற ஸம்வித்தே ஆத்மா என்கிற விஷயம் உபலப்தியினால் அடிக்கப்பட்டுவிட்டது. அநுபூதிமாத்ரமே யதார்த்தமென்பதற்கு ‡‡ நிஷ்கர்ஷகங்களான § ஹேத்வாபாஸங்களும் நிராகரிக்கப்பட்டன.

ச்ருதப்ரகாசிகை—

அதற்குமேல் ஸ்திரத்வத்தை ஒப்புக்கொண்டாலும் ப்ரதிஸந்தாநம் ஸம்பவியாமையால் ஆத்மத்வத்தை நிரஸிக்கிறார்— கிஞ்ச என்று. “அநுபூதே ராத்மத்வாப்யுமகமே தஸ்யாநித்யீத்வேபீ”தி. ஆத்மத்வத்தை ஒப்புக்கொள்வதற்கு ஸாதகமாக ஸம்வித்துக்கு நித்யத்வத்தை ஒப்புக்கொண்டபோதிலும் என்று அர்த்தம். அநித்யத்வபக்ஷத்தில் மாத்திரம் ஸம்விதாத்மத்வாநுபபத்தி என்பதில்லை. நித்யத்வபக்ஷத்திலும் என்பது அபிசப்தத்தின் அர்த்தம். ஆத்மாவன்றோ ப்ரதிஸந்தானம் செய்கிறான். ப்ரதிஸந்தானம் இங்கு ஸம்பவிக்கிறதில்லை என்று அர்த்தம். அதின் அஸம்பவத்தை உபபாதிக்கிறார்—ப்ரதிஸந்தாநம் என்று. அதை உதாஹரிக்கிறார்—அஹம் என்று. அதினாலென்னவென்கிற சங்கைவரின் அது அன்யனுக்கு அநிஷ்டம் என்பதைக்கூறுகிறார்—பவத: என்று. உன்னுடைய அநங்கீகாரம்மாத்திரமல்ல. அநுபூதிக்கு அநுபவித்ருத்வமானது கமநக்ரியைக்கு * கந்த்ருத்வம் போல் உபபன்னமாகாதென்கிற அபிப்ராயத்தால் சொல்லுகிறார்—அநுபூதி: என்று. மாத்ரச் ப்ரத்யயத்தால் அநுபவித்ருத்வத்திற்கு வ்யாவ்ருத்தி விதிக்கப்பட்டது.

அய்யா! தர்மத்வத்தாலும் அஸ்திரத்வத்தாலும் $ அப்ரதிஸந்தாத்ருத்வத்தாலும் ஸம்வித்துக்கு யாதொரு அநாத்மத்வமுரைக்கப்பட்டதோ அது சொல்லத்தக்கதல்ல. அநுபவித்ருத்வத்தை ஆத்மாகாரமாக ஒப்புக்கொள்ளாததாலும், விஷயாச்ரய சூன்யையான ஸம்வித்துக்கு குணபாவமில்லாமையாலும், அவைகளிரண்டின் ஸம்பந்தத்தாலுண்டுபண்ணப்பட்ட அநித்யத்வ ப்ரஸங்கமில்லாமையாலும், என்று சொல்லப்படுமேயாகில் கூறுகிறார்— ஸம்விந்நாம என்று. அய்யா! எவ்வாறு விஷயாச்ரயசூன்யஜ்ஞாநாபாவம். ஸ்வரூபபூதமான ஜ்ஞாநமானது உன்மதத்தில் விஷயாச்ரய சூன்யம். மறுமொழி சொல்லப்படுகிறது. இந்த ஆக்ஷேபம் மிக்கஸ்தூலமானது. உன்னால் ஜ்ஞாநசப்தவாச்யனான ஜ்ஞாதாவுக்கே அஜடத்வம் நித்யத்வம்முதலியதும் விஷயாச்ரய சூன்யத்வமும் ஆத்மத்வமும் ஸாதிக்கப்படுகிறதா? அதுஸித்தஸாதனம். ஜ்ஞாதாவைக்காட்டிலும் வேறானஜ்ஞாநத்திற்காகில் அப்பொழுது ஜ்ஞாதாவைக்காட்டிலும் வேறானதும் விஷயாச்ரயவிரஹிதமாயுமுள்ள ஜ்ஞாநத்தை சூன்யமென்றுசொல்லுகிறோம். ஜ்ஞாத்ருஜ்ஞேயம்

$ அநுபலப்தி—ஜ்ஞாநாபாவம். § ஹேத்வாபாஸங்கள்—துஷ்டஹேதுக்கள்.
‡‡ நிஷ்கர்ஷகம்—நிர்ணயத்தை உண்டுபண்ணுகிற வஸ்து.

* கந்த்ருத்வம்— கந்தா-நடப்பவன். அவனுடை தர்மம். கந்த்ருத்வம்-அதாவது நடை. $ ப்ரதிஸந்தாதா— ப்ரதிஸந்தாநமுள்ளவன். அதாவது நினைவுள்ளவன் ஸ்மரிக்கிறவன்.

இவைகளை விஷயீகரித்துக்கொண்டிருக்கிற ஜ்ஞாநஸ்வரூபம் இம்மூன்றைக்காட்டிலும் வேறான ஜ்ஞாநமானது அநுபலப்தியினால் நிரஸிக்கப்பட்டதென்று அர்த்தம். பௌத்த ஏகதேசிகளால § "தர்மிகல்பநாதோவரமதர்மகல்பநா" என்கிற லாகவந்யாயத்தால் ஜ்ஞாதாவை ஆத்மாவென்று சொல்பவனாலும் ஜ்ஞாநத்தை ஆத்மாவென்று சொல்பவனாலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிற ஸம்விததே ஆத்மாவென்று உரைக்கப்பட்டது. அதை ஆசங்கித்துப் பரிஹரிக்கிறார்—உபய என்று கல்பனையிலேதான் லாகவந்யாயம், உபலப்தியிலில்லை. அப்படி இல்லாவிட்டால் அத்யந்தலாகவத்தின் பொருட்டு மாத்யமிகனுடைய மதாநுஸாரத்தால் ஜ்ஞாநமும் இழக்கப்படும். கல்பநத்திலன்றோ லாகவந்யாயம் ஸம்விததோவென்றால் அறியப்படுகிறது என்று சொல்லப்படுமேயாகில ஜ்ஞாதாவும் அப்படியே அறியப்படுகிறான். ஆகையால் உபலப்திபராஹதமாதலால் ஸம்விததுக்கு ஆத்மத்வம் அநுபபன்னம் என்று அர்த்தம் ஆச்ரயத்துடன் கூடியதாகவே ஸம்வித் அறியப்படுகிறது. அப்படி இருந்தபோதிலுங்கூட யுக்திகளால் நிர்விசேஷத்வம் ஸாதிக்கப்பட்டது என்று கூறப்படுமேயாகில் சொல்லுகிறார்— அநுபூதிமாத்ரம் என்று. அன்றிக்கே ஸம்வித பரமார்த்தமென்று உபயவாதிகளாலும் ஸம்மதிக்கப்பட்டிருப்பதால் அந்த ஸம்வித்தே ஆத்மாவென்று உரைக்கப்பட்டிருக்கிறதென்று ஆசங்கித்து தூஷிக்கிறார்— உபய என்று. உபலப்திபராஹதம்— ப்ரத்யக்ஷலக்ஷணமான ஆத்மத்வமானது அஹம்ஜாநாமி என்று ஜ்ஞாத்ருத்வ ஸமாநாதிகரணமாக உபலப்திக்கு விஷயமாவதால் பராஹதமென்று அர்த்தம். ஜ்ஞாதாவுக்கே ப்ரத்யகாத்மத்வமானது உபலப்திஸித்தமென்று சொல்லப்பட்டது அந்த உபலப்திக்கு நிர்விசேஷ ஸம்விதாத்மத்வஸாதக யுக்திகளால் பாதத்தை ஆசங்கித்து சொல்லுகிறார்—அநுபூதி மாத்ரம் என்று.

ननु च — "अहं जानामि" इत्यस्मत्प्रत्यये योऽनिदमंशः प्रकाशैकस्वभावश्चिदर्थः स आत्मा। तस्मिंस्तु ज्ञानबलावसिततया युष्मदर्थलक्षणोऽहं जानामीति सिद्धोऽहमर्थश्चिन्मात्रातिरेकी युष्मदर्थ एव। नैतदेवम्, "अहं जानामि" इति धर्मिस्वरूपतया प्रत्यक्षप्रतीतिविरोधादेव॥

ஸ்ரீபாஷ்யம்.—

"அஹம்ஜாநாமி" என்கிற அஸ்மத்ப்ரத்யயத்தில் யாதொரு அநிதமம்சமுண்டோ ப்ரகாசத்தையே ஸ்வபாவமாகக்கொண்ட சித்பதார்த்தம்— அது ஆத்மா. அதில் ஜ்ஞாநபலத்தால் ப்ரகாசிக்கப்பட்டிருப்பதால் யுஷ்மதர்த்த லக்ஷணமான "அஹம் ஜாநாமி" என்று ஸித்திக்கிற அஹமர்த்தமானது சிந்மாத்ரத்தைவிட அதிகமாக இருப்பதால் யுஷ்மதர்த்தமே— இது இவ்வண்ணமல்ல. "அஹம் ஜாநாமி" என்கிற தர்மி ஸ்வரூபமான ப்ரத்யக்ஷப்ரதீதியின் விரோதத்தாலேயே.

---

§ தர்மீகல்பநாதோ—புதிதாக ஒரு வஸ்துவை கல்பிப்பதைக்காட்டிலும் ஏற்கனவே இருக்கிற தர்மியினிடம் தர்மத்தைக் கல்பிப்பது ந்யாய்யமானது.

ச்ருதப்ரகாசிகை—

ப்ரத்யக்த்தமன்றோ ஆத்மா— ப்ரத்யக்த்வமானது அஹமர்த்தத்திற்கு ஆத்மத்வம் சொன்னால் ஸித்தியாது. ஸம்விதாத்மத்வபக்ஷத்திலேயே ஸித்திக்கும் என்று வினவுகிறார்— நநுச என்று. அஸைத் ப்ரத்யயமாக அனைவரால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிற அஹம்ஜாநாமி என்கிற அஸ்மத் ப்ரத்யயத்தில் ஏது ப்ரத்யக்த்வமோ அதுதான் ஆத்மா—ஏதனாலென்று கேட்கில் கூறுகிறார்— அநிதமம்ச என்று. இதமம்ச வ்யதிரிக்த:—பராக்த்தத்தைக்காட்டிலும் வேறுபட்டதான ப்ரத்யக்ஷாம்சம். இது ஹேதுவை உள்ளடக்கிக்கொண்டிருக்கிறது ப்ரத்யக்த்தமாக இருப்பதாலென்று அர்த்தம். ப்ரத்யக்த்வம் ஏதனாலெனில் கூறுகிறார்—ப்ரகாசைகரஸ: என்று ஸ்வயம்ப்ரகாசமாக இருப்பதாலென்று அர்த்தம். சித்சப்தம் ஹேத்வபிப்ராயமுள்ளது ஜ்ஞானமாக இருப்பதால் ஸ்வயம் ப்ரகாசத்வமென்று அர்த்தம் ப்ரத்யக்த்வமாவது தனக்குத்தான் ப்ரகாசித்தல். ஸ்வயம் ப்ரகாசத்வம்—அநந்யாதீன ப்ரகாசத்வம், அஹமர்த்தமோவென்றால் யுஷ்மதர்த்தலக்ஷணம். யுஷ்மதர்த்தலக்ஷணமானதால் பராக்த்தவிசேஷம அஹமர்த்தமென்று அர்த்தம். யுஷ்மதர்த்தலக்ஷணத்வம் ஏதனால் என்று கேட்கில் கூறுகிறார்— தத்பல என்று. தத்பல நிர்ப்பாஸிதத்வாத்- ஜ்ஞாநாதீந ப்ரகாசமுள்ளதாக இருப்பதால் அதுவும் சின்மாத்ரத்தைவிட அதிகமாக இருப்பதாலென்று அர்த்தம இந்த சோத்ய க்ரந்தத்தில் ஸம்வித்துக்கு ஆத்மத்வஸாதநபக்ஷத்தில் வ்யதிரேகித்ரயமும் அஹமர்த்தத்திற்கு அநாத்மத்வ விஷயத்தில் அந்வயித்ரயமும் அபிப்ராயப்படப்பட்டிருக்கிறது. அதில் வ்யதிரேகிகளுக்கு வ்யதிரேகி த்ருஷ்டாந்தமும் அந்வயிகளுக்கு ஸபக்ஷமும் யுஷ்மதர்த்த சப்தத்தால் ஸூசிப்பிக்கப்பட்டது. அநுபூதியானது ஆத்மா, ப்ரத்யக்காக இருப்பதால். எது ஆத்மாவன்றோ அது ப்ரத்யக் அன்று. உதாஹரணம் —கடம். அநுபூதியானது, ப்ரத்யக்பூதை- ஸ்வயம ப்ரகாசமாக இருப்பதால். எது ப்ரத்யக்கன்றோ, அது ஸ்வயம் ப்ரகாசமன்று. கடம் போல. அநுபூதியானது ஸ்வயம் ப்ரகாசமுள்ளது, அநுபூதியாக இருப்பதால். எது ஸ்வயம் ப்ரகாசமுள்ளதன்றோ அது அநுபூதியல்ல. உதாஹரணம், கடம். என்று வ்யதிரேகித்ரயம் அஹமர்த்தமானது ஜ்ஞாநாதீநப்ரகாசமுள்ளது.—சித்தைக்காட்டிலும் வேறாக இருப்பதால், கடம்போல அஹமர்த்தமானது பராக், ஜ்ஞாநாதீநமான ப்ரகாசமுள்ளதாக இருப்பதால் கடம் போல. அஹமர்த்தமானது, ஆத்மாவல்லாதது பராக்காக இருப்பதால், கடம் போல, என்று அந்வயித்ரயம் - ஸ்வயம் ப்ரகாசத்வமே ஸம்விதாத்மத்வத்தில் ப்ரத்யக்ஷஹேதுவாக முந்தி உரைக்கப்பட்டது பூர்வபக்ஷோபந்யாஸத்தில், இவ்விடத்திலோவென்றால் அதினால் ப்ரத்யக்த்வத்தை ஸாதித்து அதினால் ஆத்மத்வம ஸாதிக்கப்பட்டது இதை பரிஹரிக்கிறார்— நைதத்தேவம் என்று. ஸம்வித்துக்கு ஸ்வயம் ப்ரகாசத்வம இஷ்டம் சிக்ஷிக்கத்தக்க அம்சமும் உரைக்கப்பட்டது. ஆகையால் ஸ்வதஸ்ஸித்தத்வ ஸாதகஹேதுவுக்கு ஸித்தஸாத்யதை ஜ்ஞாதாவுக்கு ஸ்வதஸ்ஸித்தத்வாபாவ ஸாதக ஹேதுவான சிதந்யத்வத்திற்கு அஸித்தி சொல்லப்படபோகிறது. வேறுநான்கு அநுமானங்கள் இங்கு நிரஸிக்கப்படுகிறது ஸம்விதாத்மத்வம் முதலியது ப்ரதீதியினால் ஒப்புக்கொள்ளப்பட்டதா? அல்லது ப்ரத்யக்த்வஸித்தியின் அநுபபத்தியினலா? அல்லது சுருத்யர்த்தாபத்தியினலா ? அல்லது ச்ருதிஸ்ம்ருதிஸூத்ரங்களின் ஸ்வாரஸ்யத்தினலா ?என்று விகல்பத்தை அபிப்ராயப்பட்டு முதல் பக்ஷத்தில் ப்ரத்யக்ஷ ப்ரதீதி விரோதத்தைச் சொல்லுகிறார்— அஹம்ஜாநாமி என்று. இதனால் அன்யனால் கூறப்பட்டுள்ள ஜ்ஞாந ப்ரத்யக்த்வாத்மத்வ, ஜ்ஞாத்ரு பராக்த்வாநாத்மத்வஸாதகங்களான அந்வயவ்யதிரேகயநுமானங்களுக்கு காலாத்யயாபதேசம் உரைக்கப்பட்டது. "அஹம்ஜாநாமி" என்கிற இடத்தில் அஹமர்த்தமானது ஸ்வாவபாஸத்திலும் கூட கடாவபாஸத்தில் போல் ப்ரதிஸம்பந்தியாக அஹமென்று அறியப்படுகிறது.

தாமியாக அபை ஸதக்லேஶப ஜ்ஞானைசேஷத்வமாஸமிலகெ ஆகையால் அது ப்ரத்யக ஆத்மாவும் [illegible] மானது ஏர்மாசக அறியப்படாநின்றுகொண்டு ஸாகாதிகள்போல ப்ரக்ருதிக்கு பரப்பட்டதனால் ப்ரத்யக்கல்ல ஆத்மாவுமல்ல, பின்னேயோ பராக் - அர்த்த ம் ஆகையால் நானென்கிற ஸாதுக்களுக்கும் ப்ரத்யக்ஷபாதம் சொல்லப்பட்டதாக ஆகிறது.

கிஞ்ச — அஹமர்தோ ந சேதாத்மா ப்ரத்யக்த்வம் நாத்மநோ பவேத் |
அஹம்புத்த்யா பராகர்தாத் ப்ரத்யகர்தோ ஹி பித்யதே || நிரஸ்தாகிலது:கோऽஹமநந்தாநந்தபாக் ஸ்வராட் | பவேயமிதி மோக்ஷார்தீ ஶ்ரவணாதௌ ப்ரவர்ததே || அஹமர்தவிநாஶஶ்சேந்மோக்ஷ இத்யத்யவஸ்யதி | அபஸர்பேதஸௌ மோக்ஷகதாப்ரஸ்தாவகந்தத: || மயி நஷ்டேऽபி மத்தோऽந்யா காசிஜ்ஜ்ஞப்திரவஸ்திதா | இதி தத்ப்ராப்தயே யத்ந: கஸ்யாபி ந பவிஷ்யதி || ஸ்வஸம்பந்திதயா ஹ்யஸ்யா: ஸத்தா விஜ்ஞப்திதாபி ச | ஸ்வஸம்பந்தவியோகே து ஜ்ஞப்திரேவ ந ஸித்த்யதி || சேத்துஶ்சேத்யஸ்ய சாபாவே சேதநாதேரஸம்பவ: | தஸ்மாதஹமர்தோ ஜ்ஞாதைவ ப்ரத்யகாத்மேதி நிஶ்சிதம் || "விஜ்ஞாதாரமரே கேந விஜாநீயாத்" இதி ச ஶ்ருதி: | "ஏதத்யோ வேத்தி தம் ப்ராஹு: க்ஷேத்ரஜ்ஞ" இதி ச ஸ்ம்ருதி: || "நாத்மா ஶ்ருதே:" இத்யாரப்ய ஸூத்ரகாரோऽபி வக்ஷ்யதி | "ஜ்ஞோऽத ஏவ" இத்யதோ நாத்மா ஜ்ஞப்திமாத்ரமிதி ஸித்தம் ||

ஸ்ரீபாஷ்யம்—

மேலும் அஹமர்த்தமானது ஆத்மாவாக இல்லாவிடில் ஆத்மாவுக்கு ப்ரத்யக்த்வம் ஸம்பவியாது அஹம் புத்தியினலே ப்ரத்யகர்த்தமானது பராகர்த்தத்தினின்று வேறுபடுத்தப்படுகிறதன்றோ--நான் விலக்கப்பட்டிருக்கிறது ஸமஸ்த துக்கங்களுடனேகூடியவனுகவும் முடிவில்லாத ஆநந்தத்தை அடைந்தவனுகவும் கர்மத்துக்கு வசப்படாதவனுகவும் ஆகக்கடவேனென்று மோக்ஷத்தில் விருப்பமுள்ளவன ச்ரவணம் முதலியவற்றில் ப்ரவ்ருத்திக்கிருன்—அஹமர்த்தவிநாசமே மோக்ஷமென்று ஒருவன் எண்ணுவனேயாகில் அவன் மோக்ஷகதாப்ரஸ்தாவகந்தத்தினின்றும் விலகி விடுவான். நான் நாசமடைந்தபோதிலும் என்னைக்காட்டிலும் வேறுக் ஜ்ஞப்தி என்று ஒரு வஸ்து இருக்கிறது என்று எண்ணி அதை அடைவதின்பொருட்டு ஒருவனுக்கும் முயற்சி உண்டாகாது. இந்த ஜ்ஞப்திக்கு தன் ஸம்பந்தத்தினலே யன்றோ

ஸத்தையும் விஜ்ஞப்திறைத முதலியதும். தன் ஸம்பந்தமே விலகிவிடுமேயாகில் ஜ்ஞப்தியே ஸித்தியாது. வெட்டுகிறவன், வெட்டத்தக்கவஸ்து, இவ்விரண்டும் இல்லாவிடில் வெட்டுதல்முதலியது எவ்வாறு ஸித்தியாதோ அவ்வாறாக ஆகையால் அஹமர்த்தமான ஜ்ஞாதாவே ப்ரத்யகாத்மாவென்று நிச்சயிக்கப்பட்டது. 'அரே விஜ்ஞாதாவை எதனால் நிச்சயமாக அறிகிறான்' என்று ச்ருதி. 'இதை எவன் அறிகிறானோ அவனை க்ஷேத்ரஜ்ஞனென்று அதை அறிந்தவர்கள் சொல்லுகிறார்கள்' என்று பகவத்கீதை. ஸூத்ரகாரரும் 'நாத்மாச்ருதே.' என்று தொடங்கி "ஜ்ஞோऽதஏவ" என்று ஜ்ஞாநாச்ரயன் தான் ஆத்மாவென்று சொல்லப்போகிறார். ஆகையால் ஜ்ஞப்திமாத்ரம் ஆத்மா அல்லவென்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

ச்ருதப்ரகாசிகை—

இதற்குமேல் ப்ரத்யக்த்வம் விபரீதத்துக்கும் ஸாதகமென்று சொல்லுகிறார்—கிஞ்ச என்று. ப்ரத்யக்த்வம் தனக்குத்தான் ப்ரகாசித்தல். பிறனுக்கு ப்ரகாசித்தல் பராக்த்வம் இவ்விரண்டும் அஹம் இதம் என்கிற இரண்டு புத்திகளால் பிரிக்கப்படுகிறதன்றோ. ஆகையால் அஹம்புத்திபோய்விட்டால் ப்ரத்யக்த்வமே ஸித்தியாதாதலால் ப்ரத்யக்த்வம் அஹமர்த்தத்திற்கே ஆத்மத்வஸாதகமென்று அர்த்தம். ஸம்வித்தில் ப்ரத்யக்த்வமில்லாமையால் ஆத்மத்வஸாதக ஹேதுவுக்கு அஸித்தியும் பலித்தது. அஹமர்த்தத்திற்கு பராக்த்வமில்லாமையால் அநாத்மத்வஸாதக ஹேதுவினுடைய அஸித்தியும் பலித்தது. அஹம்புத்யா என்பதினால் "யுஷ்மதஸ்மத்ப்ரத்யயகோசரயோ:" என்கிற தன்னுடைய உக்திவிரோதமும் வருகிறது. "கோऽஹமித்யேவநிபுண:" "சப்தோஹமிதிதோஷாய நாத்மந்யேஷ:" இதுமுதலிய ஆகமவிரோதமும் உள்ளடங்கி இருக்கிறது. ஹிசப்தம் ப்ரஸித்திபரமாதலால் ஹேதுவிலாவது, அநுபூதி: - பராசீ - அஹமர்த்தத்தைக்காட்டிலும் வேறாக இருப்பதால். கடம்போல என்று. ப்ரத்யக்த்வ ஹேதுவுக்கு அஸித்திதார்ட்யமும் அந்த ப்ரத்யக்த்வஸாதகமான ஸ்வயம் ப்ரகாசத்வ ஹேதுவுக்கு ஸத்ப்ரதிபக்ஷத்வமும் அநுபூதி:, அநாத்மா, அஹமர்த்தவ்யதிரிக்தத்வாத். கடாதிவத் என்று. ஸம்விதாத்மத்வஸாதகமான ப்ரத்யக்த்வ ஹேதுவுக்கும் ஸத்ப்ரதிபக்ஷத்வமும் அபிப்ராயப்படப்பட்டிருக்கிறதென்று அறியப்படுகிறது. அஹம்புத்தியினால் பராகர்த்தத்தைக் காட்டிலும் ப்ரத்யகர்த்தத்திற்கு பேதத்தை ஸமர்த்தித்திருப்பதால். ஹி சப்தத்தாலுமிவ்விடத்தில் ஸம்வித்ப்ரத்யகத்வஹேதுவுக்கு அஸித்தியும் ஸித்தித்தது. ச்ருத்யர்த்தாபத்தியைச்சொல்வதற்காக முமுக்ஷுவினுடைய அபிஸந்தியைக் கூறுகிறார்— நிரஸ்த என்று. அதினால் என்னவென்றுகேட்கில் கூறுகிறார்— அஹமர்த்தவிநாச: என்று. எதின் ஸம்பந்தமுள்ளதாக துக்கஜ்ஞாநமும் எதின் ஸம்பந்தமுள்ளதாக துக்கநிவ்ருத்தியும், எதின் ஸம்பந்தமுள்ளதாக ஸுகப்ராப்தியும், அடைய விரும்பப்படுகிறதோ அதின் விநாசம் மோக்ஷமானால் அதிகாரமில்லாமையால் அப்ராமாண்யம் வரும். ப்ரமிதியை உண்டுபண்ணுதலல்லவோ சாஸ்திரத்திற்கு ப்ராமாண்யம், அறிய விரும்பப்பட்டிருக்கிறதும் க்ரஹிக்கத்தக்கதுமான சாஸ்திரத்திற்கு புருஷார்த்த பர்யவஸாநமில்லாவிடில் ச்ரவணமநநாதிகளுக்கு அதிகாரியானவன் ஸித்தியான். சாஸ்திரம் ச்ரவணம் முதலியதை அபேக்ஷியாமல் ஒருவனுக்கும் ப்ரமிதியை உண்டுபண்ணுகிறதில்லை. ஆகையால் அதிகாரி இல்லாமையால் ப்ராமாண்யமுண்டாகாதென்று சாஸ்திரப்ராமாண்யாந்யதாநுபபத்திரூப ச்ருத்யர்த்தாபத்தி உரைக்கப்பட்டது. அஹ

மர்த்தம் நஷ்டமானபோதிலும் ஜ்ஞப்தியானது ஸித்யையாக நிலைபெற்றிருக்கிறதென்று சொல்லப்படுமேயாகில் கூறுகிறார்— மயி நஷ்டேபி என்று. நான் நஷ்டமானபோதிலுங்கூட ஜ்ஞானஸ்திரமாக இருக்கிறதென்பதனால் தன்னுடைய மண்டையை உடைத்துக் கொள்ளுதல் புருஷார்த்தமாக ஆகமாட்டாதென்று கருத்து. தனித்த ஸம்வித்துக்கு ச்ரவணாதிகளில் ப்ரவ்ருத்தி இல்லை யன்றோ பின்னையோ அஹமர்த்தத்திற்கே. ஆதலால் ப்ரவ்ருத்திக்கிறஇவன் தன்நாசத்திற்கு ப்ரவ்ருத்திக்கிறானில்லை. அஹமர்த்தம் போனபோதிலும் ஜ்ஞப்தியின் இருப்பை ஒப்புக்கொண்டு தூஷணம் கூறப்பட்டது. அதற்குமேல் அதின் இருப்பே இல்லை என்றகூறுகிறார்—ஸ்வஸம்ப்ந்தியா என்று. ஸாமாந்யாகாரம் ஸத்தை, விஜ்ஞப்திதையானது விஷயப்ரகாசத்வரூப விசேஷாகாரம். ஆதிசப்தத்தால் ஸ்வயம் ப்ரகாசத்வம் விவக்ஷிக்கப்பட்டது. ஸத்தை ஆச்ரய ஸம்பந்தாதீனமாதலால் ஸ்வரூபலாபம் இருக்கும்பொழுது ஜ்ஞப்தித்வம் முதலியது ஸம்பவிப்பதாலும் எல்லாம் அதற்கு அதீனமென்று அர்த்தம். ஆகையால் ஸத்தையானது எதின் ஸம்பந்தத்தைச்சார்ந்திருக்கிறதோ அந்த ஸம்பந்திவியோகத்தில் ஜ்ஞப்தியின் ஸத்தையே இல்லை என்று சொல்லுகிறார்—ஸ்வஸம்பந்த என்று. கட ஞ்கரகா காச திருஷ்டாந்தங்களை விலக்குவதற்காக விஷயாச்ரய ஸம்பந்தத்திற்கு ஸத்தாஹேதுத்வ விஷயத்தில் த்ருஷ்டாந்தத்தைச்சொல்லுகிறார்— சேத்து:என்று. ஹேதநாதே: என்கிறஇடத்திலிருக்கிற ஆதி சப்தத்தால் ஸத்தை அதின்பலம் ¶ த்வைதீபாவம் இதுமுதலியது விவக்ஷிக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு ப்ரத்யக்ஷவிரோதத்தாலும் அஸித்தத்வத்தாலும் விபரீதஸாதகத்வத்தாலும் § ஸத்ப்ரதிபக்ஷத்வத்தாலும் ஸம்விதாத்மத்வாநுபபத்தியினாலும் ச்ருத்யர்த்தாபத்தியினாலும் அஹமர்த்தத்திற்கு ஆத்மத்வத்தைச் சொல்லுகிறார்—அத: என்று. இது பூர்வோத்தரஹேதுக்களுடைய ப்ரதிஜ்ஞை. ச்ருதிஸ்மிருதி ஸூத்ரங்களைக்காண்பிக்கிறார் — விஜ்ஞாதாரம் என்று. அறியத்தக்க ஆத்மாவுக்கு ஜ்ஞாத்ருத்வம் உரைக்கப்பட்டது.“$ விஜ்ஞாதாரம்ரேகேந விஜாநீயாத்”என்று, ஜ்ஞாத்ருத்வம் ஸ்வாபாவிகமாதலால் முக்தியிலும் விஜ்ஞாத்ருத்வம் இருக்கிறதென்பதைக் காண்பிக்கிறார்—ஜ்ஞாநாத்யேவ என்று. ‘ஜ்ஞோऽத ஏவ” என்கிற இடத்தில் ஜ்ஞசப்தத்தால் குறிக்கப்பட்டவன் ஆத்மா, என்று தெரியப்படுத்துவதற்காக “நாத்மா ச்ருதே:” என்கிற ஸூத்ரம் எடுக்கப்பட்டது. உன்னால் அநித்யமாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிற அஹமர்த்தத்திற்கு நித்யத்வத்தைச் சொல்வதும் அதற்கே ஆத்மத்வஸாதகமென்றும் ஜ்ஞாபிப்பதற்காக. ஆகையால் “நாத்மா” என்று ஸமவிதாத்மத்வ ப்ரதிக்ஷேப நிகமநத்தால் முற்கூறப்பட்டுள்ள அஹமர்த்தாத்மத்வப்ரதிஜ்ஞையிலும ஸம்விதாத்மத்வப்ரதிக்ஷேபத்திலும் அததற்குத்தக்கபடி கூறப்பட்ட ஹேதுக்கள் அநுஸந்திக்கத்தக்கவைகள்.

அஹம் ப்ரத்யயவிஷயோ ஹ்யஸ்மதர்த:; யுஷ்மத்ப்ரத்யயவிஷயோ
யுஷ்மதர்த: । ததாஹம் ஜாநாமீதி விஷயோ ஜ்ஞாதா யுஷ்மதர்த
இதி வசநம் ஜநநீ மே வந்த்யேதிவத் வ்யாஹதார்தம் । ந சாஸௌ
ஜ்ஞாதாऽஹமித்யநந்யார்தவிஷயப்ரகாஶ: । ஸ்வயம்ப்ரகாஶமாநஸ்ய । வெ

ஞ் கரகம்— கிண்டி. ¶ த்வைதீபாவம்— இரண்டாக ஆகுதல்.

§ ஸத்ப்ரதிபக்ஷம்—ஸாத்யாபாவஸாதகமான விபரீத ஹேது எதற்கு இருக்கிறதோ அது. $ விஜ்ஞாதாரம்—அடே விஜ்ஞாதாச்ரயனை எதினால் அறியக்கூடும்.

𑌤𑌨𑍍𑌯𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌤𑌾 𑌹𑌿 𑌸𑍍𑌵𑌯𑌂𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌤𑌾 । 𑌯𑌃 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌃 𑌸𑍋𑌽𑌨𑌨𑍍𑌯𑌾𑌧𑍀𑌨𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌃 । 𑌦𑍀𑌪𑌵𑌤𑍍 । 𑌨 𑌹𑌿 𑌦𑍀𑌪𑌾𑌦𑍇𑌸𑍍𑌸𑍍𑌵𑌪𑍍𑌰𑌭𑌾𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑌿𑌸𑌿𑌦𑍍𑌧𑍇𑌽𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌤𑍍𑌵𑌮𑌨𑍍𑌯𑌾𑌧𑍀𑌨𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌤𑍍𑌵𑌂 𑌵𑌾 । 𑌕𑌿𑌂 𑌤𑌰𑍍𑌹𑌿 ? 𑌦𑍀𑌪𑌸𑍍𑌸𑍍𑌵𑌯𑌂𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌸𑍍𑌸𑍍𑌵𑌯𑌮𑍇𑌵 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌤𑍇 ; 𑌅𑌨𑍍𑌯𑌾𑌨𑌪𑌿 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌯𑌤𑌿 (𑌸𑍍𑌵) 𑌪𑍍𑌰𑌭𑌯𑌾 ॥

ஸ்ரீபாஷ்யம்.—

அஸ்மதர்த்தமானது அஹம்ப்ரத்யயத்தால் ஸித்தமன்றோ. யுஷ்மதர்த்தம் யுஷ்மத்ப்ரத்யய விஷயம் அதில் அஹம்ஜாநாமி என்கிற வ்யவஹார பலத்தால் ஸித்தித்திருக்கிற ஜ்ஞாதாவானவன் யுஷ்மதர்த்தம் என்று சொல்லுகிற வசநமானது என் தாயார் மலடி என்பதுபோல் வ்யாஹதமான அர்த்தமுள்ளது. இந்த ஜ்ஞாதாவான அஹமர்த்தம் அந்யாதீநப்ரகாசமுள்ளதன்று. ஸ்வயம்ப்ரகாசமாக இருப்பதால். சைதன்யஸ்வபாவதையன்றோ ஸ்வயம்ப்ரகாசதை எது ப்ரகாசஸ்வபாவமுள்ளதோ அது தீபம்போல் அநந்யாதீனப்ரகாசமுள்ளது தீபம் முதலியவற்றிற்கு தன்னுடைய ஒளியின் பலத்தினால் ப்ரகாசிப்பிக்கப் பட்டிருத்தலால் அப்ரகாசத்வமாவது அந்யாதீநப்ரகாசத்வமாவது இல்லையன்றோ. பின்னேயோ ப்ரகாசஸ்வபாவமுள்ள தீபம் தானே ப்ரகாசிக்கிறது. மற்றவைகளையும் தன்னுடைய ஒளியினால் ப்ரகாசிக்கச்செய்கிறது.

ச்ருதப்ரகாசிகை—

வேறுதூஷணமும் வ்யாஹதியும் இருக்கிறதென்று சொல்லுகிறார்— **அஹம்ப்ரத்யய** இதுமுதலியதால் (அஹம்ப்ரத்யயஸித்த இதி) ஸித்தசப்தத்தால் ஸ்வதஸ்ஸித்தியானது ஸூசிப்பிக்கப்பட்டது அதினாலேயே யன்றோ வேறு இடத்தில் யுஷ்மத்ப்ரத்யயவிஷய என்று உரைக்கப்பட்டது. அஹம்ப்ரத்யயஸித்தோஹி என்கிற இடத்திலுள்ள "ஹி:" சப்தத்தினாலும் அஸ்மதர்த்த யுஷ்மதர்த்த சப்தங்களாலும் யுஷ்மதஸ்மத்ப்ரத்யயகோசரயோ: என்கிற அந்த க்ரந்த ப்ரஸித்தியைக்காண்பிக்கிறார். ஜ்ஞாநமே ஸ்வயம் ப்ரகாசம் - அதைவிட வேறாக இருப்பதால் அஹமர்த்தம் அந்யாதீனப்ரகாசமுள்ளது. அதனால் ஆத்மா அல்ல; என்கிற சங்கைவாதியின் ஹேதுவுக்குஅஸித்தியை அபிப்ராயப்பட்டான்றுகொண்டு அஹமர்த்தத்திற்கு வேறுப்ராகாசத்தினது அபேக்ஷையின்மையை ப்ரதிஜ்ஞைசெய்கிறார்—**நசா** ஸௌ என்று ஏதனாலென்று கேட்கில் கூறுகிறார்— **ஸ்வயம்ப்ரகாசத்வாத்** என்று. ப்ரகாச: வ்யவஹாராநுகுண்யம், தானாகவே வ்யவஹாராநுகுண்ய சக்தியுடன்கூடி இருத்தலால், அஹமர்த்தமானது வேறு ப்ரகாசத்தை அபேக்ஷியாமலிருக்கிறதென்று அர்த்தம். அது எங்ஙனமெனில் கூறுகிறார்—**சைதந்யஸ்வபாவதாஹிஸ்வயம்ப்ரகாசதா** என்று. சேதநா-ஜ்ஞாநம், அதின் தன்மை சைதந்யம்—ஜ்ஞாநத்வம். தத்ஸ்வபாவத்வம் ஜ்ஞாநத்வத்தை குணமாகக்கொண்டிருத்தல் என்று பொருள். ஜ்ஞாநத்வமே யன்றோ ஜ்ஞாநத்திற்கு ஸ்வயம் ப்ரகாசத்வம்.

அப்படிப்போல் இவ்விடத்திலும் ஜ்ஞாநத்வம் ப்ராமாணிகமாக இருக்குமேயாகில் அதே ஸ்வயம் ப்ரகாசத்வம் இருக்கிறதென்று சொல்லப்பட்டதாக ஆகிறது. அஹமர்த்தத்திற்கு சைதந்ய ஸ்வபாவத்வத்தில் ச்ருதியை ப்ரமாணமாக சொல்லப்போகிறவராய்க் கொண்டு அதற்கு அநுக்ராஹகதர்க்கத்தை உபந்யஸிக்கிறார்— **ய: ப்ரகாசஸ்வபாவ:** இது முதலியதால். ஆத்மா தீபம் இவ்விரண்டுகளின் தர்மபூதஜ்ஞாநம் ப்ரபை இவைகளுக்கு நேராகவோ அல்லது பரம்பரையாகவோ எவ்விதமான வ்யவஹாராநுகுண்யமோ அவ்விதமானது ஈங்கு ப்ரகாச சப்தத்தால் விவக்ஷிக்கப்பட்டது.

தீபத்தைச்சார்ந்த இருட்டுக்கு விரோதிரூபமான ஔஜ்வல்யம் ப்ரகாசம். ஜ்ஞாநத்திற்கோ வெனில் ஸ்புரணம். எது அதை ஸ்வபாவமாகக்கொண்டதாகவும் அதுதர்மமாக உடையதாகவும் ஸ்வவ்யவஹாராநுகுண்யாபாதந சக்தியுள்ளதாகவுமிருக்கிறதோ அது அநந்யாதீந ப்ரகாசம். ஸ்வதர்மத்தை அபேக்ஷியாத ப்ரகாசமுள்ளதென்று அர்த்தம். ப்ரகாசஸ்வபாவத்தின் அஸித்தியானது சங்கிக்கத்தக்கதல்ல. எவ்வாறு ப்ரபாச்ரயமான தீபத்திற்கு ஔஜ்வல்யம் ப்ரத்யக்ஷஸித்தமோ, அவ்வாறே ஜ்ஞாதாவுக்கும் தானாகவே தன்னுடைய வ்யவஹாராநுகுண்யத்தை உண்டுபண்ணுதல் இனி சொல்லப்போகிற ச்ருதியின் ஸ்வாரஸ்யத்தால் அறியப்பட்டிருப்பதால், ப்ரகாசஸ்வபாவமுள்ளவஸ்துவுக்கு தனக்கு தாமமாக இருக்கிற ப்ரகாசத்தை அபேக்ஷியாமல் ப்ரகாசிப்பது பொருத்தமுள்ளதென்று இவ்வளவேதான் இந்த க்ரந்தத்தால் சொல்லப்படுகிறது இதற்குமேல் கண்ணால் க்ரஹிக்கத்தக்கதன்மை இருக்க ப்ரபையைவிட வேறாக இருப்பதால் தீபமானது கடம் முதலியதுபோல் ப்ரபையின்பலத்தால் பிரகாசிப்பிக்கத்தக்கதென்பதினால் த்ருஷ்டாந்தத்திற்கு ஸாத்யவைகல்யத்தை ஆசங்கித்துக்கூறுகிறார்— **நஹி** என்று. கண்ணால் க்ரஹிக்கத்தக்கதன்மை இருக்க ப்ரபையைவிட வேறாக இருப்பதால். குடம் முதலிய வஸ்துக்களைப்போல் தீபமானது ப்ரபையினால் ப்ரகாசிப்பிக்கத்தக்கதென்று சொல்வது கூடாது. அந்தகாரத்தில் வ்யபிசாரம் வருவதால். ஆகையால் தீபத்திற்கு ப்ரபையினது அபேக்ஷை இல்லையென்று அப்ப்ராயம். **அப்ரகாசத்வம் அந்யாதீநப்ரகாசத்வஞ்சேதி.** தனக்கு ♈ ஔஜ்வல்யரூபமான தர்மத்தின் இல்லாமையும் அதினாலுண்டுபண்ணப்பட்ட வேறு ப்ரகாசத்தின் அபேக்ஷையும் இல்லை என்று அர்த்தம். அர்த்தஸித்தத்தை சொல்வதற்காக ¶ ஆகாங்க்ஷையைக் காண்பிக்கிறார்— **கிந்தர்ஹி** என்று. உத்தரம் கூறுகிறார்— **தீப:** என்று.

தீபமானது தன்னை மாத்திரம் ப்ரகாசிப்பிக்கிறதென்பதில்லை. பின்னையோ தன் பரிகரங்களால் மற்றவைகளையும் ப்ரகாசிப்பிக்கிறது என்று அதிசயத்தைக் கூறுகிறார்— **அந்யாநபி** என்று. இவ்வண்ணமாவது பொருள். தீபமானது ப்ரபையை அபேக்ஷியாமல் ப்ரகாசிக்கிறதானால் ப்ரபையைப்போல் விஷயங்களையும் ப்ரகாசிக்கச்செய்யட்டும் என்று கேட்கில் சொல்லுகிறார்— **அந்யாநபி** என்று. விஷயப்ரகாசநஸமர்த்தமாக இருந்தபோதிலும் ஸ்வரூபமானது ஒரு ஸமயத்திலுண்டாவதுபற்றி விஷயஸம்பந்தமில்லாமையால் ஸ்வரூபத்தால் ப்ரகாசிப்பிக்கிறதில்லை. பின்னையோ விஷயஸம்பந்தமுள்ளதும் இதின்பரிகரமாகவுமிருக்கிற ப்ரபையினாலென்று அர்த்தம். யதா ப்ரகாசயத்யேக:க்ருத்ஸ்நம் லோகமிமம் ரவி: (எவ்வாறு ஸூர்யன் ஒருவனாகவே உலகமனைத்தையும் ப்ரகாசிப்

♈ ஔஜ்வல்யம்—ப்ரகாசம்.

¶ ஆகாங்க்ஷை—எந்த பதத்திற்கு எந்தபதமில்லாவிட்டால் அந்வயாநுபாவகத்வம் இராதோ அந்தபதத்திற்கு அந்த மற்றொருபதத்தோடு உள்ள ஸம்பந்தம்.

பிக்கிறனே) இதுமுதலிய நிர்தேசம் அபிப்ராயப்படப்பட்டிருக்கிறது. அன்றிக்கே, அநுமானவிவக்ஷயினல் சொல்லுகிருர்—சைதந்ய ஸ்வபாவதாஹி என்று. சைதந்ய ஸ்வபாவதா - ஜ்ஞாநத்தை தர்மமாகக்கொண்டிருத்தல். இதேயன்றே ஸ்வயம் ப்ரகாசத்வம். ஜ்ஞாநத்தை தர்மமாகக்கொண்டிருப்பதால் ஸ்வயம் ப்ரகாசத்வம் என்று சொல்லப்பட்டதாக ஆகிறது. புகையுடன் சேர்ந்திருத்தலன்றே அக்நியுடன் சேர்ந்திருத்தலென்று சொல்லப்பட்டால் புகையுள்ளதாக இருப்பதால் அக்நியுள்ளது என்று எவ்வாறு சொல்லப்பட்டதாக ஆகுமோ அப்படிப்போல. இதுவும் அந்வயியானஹேது. வ்யாப்தியைக் காண்பிக்கிருர்—ய: என்று. ப்ரகாசஸ்வபாவ: - ப்ரகாசத்தை தர்மமாகக்கொண்டது. எது வேறு தர்மியினுடைய ப்ரத்யக்ஷத்தில் நேராகவோ பரம்பரையாகவோ ப்ரகாசித்துக் கொண்டிருப்பதினலேயே ஹேதுவோ அது அநந்யாதீன ப்ரகாசசப்தத்தால் சொல்லக் கருதப்பட்டிருக்கிறது. ரூபமுள்ள வஸ்து. அந்த ரூபித்ரவ்யத்தில் இணைபுறியா ஸம்பந்தத்தால் நிலைபெற்றிருக்கிற ஜாதிகுணம் முதலியது, இவைகளின் சாக்ஷுஷப்ரத்யக்ஷத்திற்கு நிமித்தமான ரூபத்திற்கும் தனக்கு எது ஆச்ரயமோ அதற்கும் மற்ற த்ரவ்யங்களுக்கும் அநுமாபகமான (தூமம்) புகை முதலியவற்றுக்கும் ப்ரகாசத்வத்தை விலக்குவதற்காக தர்மயந்தர அபரோக்ஷசப்தங்கள். பாஸமான சப்தமானது இந்த்ரியங்களை விலக்குவதற்காக. பக்ஷம ஸபக்ஷம் இரண்டுக்கும் பொருத்தமுள்ளதாக இருப்பதற்காக ஸாக்ஷாத்வாபரம்பரயாவா என்று கூறப்பட்டது. ஜ்ஞாதாவான ஆத்மா தனக்கு தர்மமாக இருக்கிற ப்ரகாசத்தை அபேக்ஷியாமலே ஸித்தியுள்ளவன். ப்ரகாசத்தை தர்மமாகக்கொண்டிருப்பதால், தீபம்போல, என்று அநுமான ஸ்வரூபம் ப்ரகாசிக்கிற ஸ்வபாவமுள்ளதாக இருப்பதால் நேராகவோ பரம்பரையாகவோ வேறு தர்மியின் ப்ரத்யக்ஷாவபாஸத்திற்கு ஹேதுவான தர்மத்துடன்கூடி இருப்பதால் என்பது ஹேதுவாசியான சப்தத்தினது அர்த்தம். தீபத்துக்குத் தன்னுடைய தர்மமாக இருக்கிற ப்ரபையை அபேக்ஷியாத ப்ரகாசத்வம்போல ஜ்ஞாதாவுக்கும் தன்னுடைய தர்மமாக இருக்கிற ஜ்ஞாநத்தை அபேக்ஷியாமல் ப்ரகாசித்தல் ஸித்தமாக இருப்பதுபற்றி பக்ஷதர்மதாபலத்தால் ஸ்வயம் ப்ரகாசத்வம் ஸித்திக்கிறது. த்ருஷ்டாந்தத்தில் ஸாத்ய ஸம்பந்தத்தைக்காண்பிக்கிருர்—நஹி என்று. ஸாதநஸம்பந்தத்தைக்காண்பிக்கிருர்— அந்யாநபி என்று. அநுமானபரத்வத்தைக்காட்டிலும் க்ரந்தத்திற்கு ச்ருத்யநுக்ராஹகதர்க பரத்வம் தகுதியுள்ளது. மேலே "ததாஹி ச்ருதய:" என்று சொல்லப்போவதால். முந்தின அநுமானம் சொல்லக்கருதப்பட்டிருக்குமேயாகில், ததாச என்றல்லவோ சொல்லத்தக்கது. தொடக்கத்தில் "சைதந்யஸ்வபாவதாஹி ஸ்வயம்ப்ரகாசதா" என்று ஸமாநாதிகரண நிர்தேசஸ்வாரஸ்யத்தாலும் பஞ்சமயர்த்தத்வம சொல்லும்பக்ஷத்தில் ஸ்வாரஸ்யம் அழிந்துபோய் விடுகிறது. நிகமநத்திலும் "சித்ரூபதாஹி ஸ்வயம் ப்ரகாசதா" என்று கூறப்பட்டது.

சித்ரூபசப்தம் ஜ்ஞாநஸ்வரூபத்வத்தைக் குறிக்கிறது. ஜ்ஞாநததை தர்மமாகக் கொண்டிருத்தலென்கிற அர்த்தததை உணர்த்துவதில் நோக்குள்ளதல்ல. அடுத்த முன் க்ரந்தத்தில் சித்ரூபனே சைதந்யகுணமுள்ளவனென்று ஜ்ஞாந தர்மத்வத்தைத் தனித்துச்சொல்லி இருப்பதால். இவ்வணணம் முடிவில் ஸ்வயம ப்ரகாசதாபதத்தோடு ஸமாநாதிகரணமான சித்ரூபதா சப்தத்திற்கு ஜ்ஞாநஸ்வரூபதா பரத்வம் காணப்படுவதாலும் முந்தியும் ஸ்வயம் ப்ரகாசதாபதத்துடன் ஸமாநாதிகரணமான சைதந்ய ஸ்வபாவதா என்கிற பதத்திற்கு ஜ்ஞாநஸ்வரூபதையைக்குறித்தல் மிக்கத்தகுதியுள்ளதாக இருப்பதாலும சைதந்யஸ்வபாவதா இதுமுதலிய பாஷ்யக்ரந்தமானது ச்ருதிக்கு அநுக்ராஹகதர்க்கத்தை ப்ரதானமாகக்கொணடது. இவ்வண்ணம் அநுக்ராஹகதர்கத்திற்கு ச்ரௌதத்வம் இருக்க அநுமாநமும் அர்த்தஸித்தம்.

𑌤𑌦𑍁𑌕𑍍𑌤𑌂 𑌏𑌕𑌮𑍇𑌵 𑌤𑍇𑌜𑍋𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌭𑌾𑌰𑍂𑌪𑍇𑌣 𑌪𑍍𑌰𑌭𑌾𑌵𑌦𑍍𑌰𑍂𑌪𑍇𑌣 𑌚𑌾𑌵𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑍇 । 𑌯𑌦𑍍𑌯𑌪𑌿 𑌪𑍍𑌰𑌭𑌾 𑌪𑍍𑌰𑌭𑌾𑌵𑌦𑍍𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌗𑍁𑌣𑌭𑍂𑌤𑌾 । 𑌤𑌥𑌾𑌪𑌿 𑌤𑍇𑌜𑍋𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌮𑍇𑌵, 𑌨 𑌶𑍌𑌕𑍍𑌲𑍍𑌯𑌾𑌦𑌿𑌵𑌦𑍍𑌗𑍁𑌣𑌃 । 𑌸𑍍𑌵𑌾𑌶𑍍𑌰𑌯𑌾𑌦𑌨𑍍𑌯𑌤𑍍𑌰𑌾𑌪𑌿 𑌵𑌰𑍍𑌤𑌮𑌾𑌨𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌶𑍌𑌕𑍍𑌲𑍍𑌯𑌾𑌦𑌿𑌵𑍈𑌲𑌕𑍍𑌷𑌣𑍍𑌯𑌾𑌤𑍍, 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌵𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌤𑍍, 𑌤𑍇𑌜𑍋𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌮𑍇𑌵; 𑌨𑌾𑌯𑌂 𑌗𑍁𑌣𑌃 । 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌵𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌚 𑌸𑍍𑌵𑌸𑍍𑌯 𑌪𑌰𑌸𑍍𑌯 𑌚 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌕𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 । 𑌅𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑍁 𑌗𑍁𑌣𑌤𑍍𑌵𑌵𑍍𑌯𑌵𑌹𑌾𑌰𑍋 𑌨𑌿𑌤𑍍𑌯𑌤𑌦𑌾𑌶𑍍𑌰𑌯𑌤𑍍𑌵𑌤𑌚𑍍𑌛𑍇𑌷𑌤𑍍𑌵𑌨𑌿𑌬𑌨𑍍𑌧𑌨𑌃 ॥ 𑌨 𑌚𑌾𑌶𑍍𑌰𑌯𑌾𑌵𑌯𑌵𑌾 𑌏𑌵 𑌵𑌿𑌶𑍀𑌰𑍍𑌣𑌾𑌃 𑌪𑍍𑌰𑌭𑌾𑌃 𑌪𑍍𑌰𑌤𑍀𑌯𑌨𑍍𑌤𑍇, 𑌮𑌣𑌿𑌦𑍍𑌯𑍁𑌮𑌣𑌿𑌪𑍍𑌰𑌭𑍃𑌤𑍀𑌨𑌾𑌂 𑌵𑌿𑌨𑌾𑌶𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗𑌾𑌤𑍍 ॥

ஸ்ரீபாஷ்யம்.—

இது சொல்லப்பட்டதாக ஆகிறது நிரூபிக்கிறார்—ஒரே தேஜஸ்ஸ்வரூப த்ரவ்யமானது ப்ரபாரூபமாகவும் ப்ரபையுள்ளதாகவுமிருக்கிறது. என்றாலும் ப்ரபையானது ப்ரபையுள்ள த்ரவ்யத்திற்கு அதீநமாக இருக்கிறது. ஆயினும் அது தேஜோமயமானத்ரவ்யமே, சௌக்ல்யம் முதலியதுபோல குணமல்ல. தனக்கு ஆதாரமாயிருக்கிற வஸ்துவைவிட்டுவிலகி வேறு இடத்திலும் இருப்பதாலும் ரூபமுள்ளதாக இருப்பதாலும் சௌக்ல்யம் முதலியகுணங்களோடு வேற்றுமை இருப்பதாலும ப்ரகாசமுள்ளதாக இருப்பதாலும் தேஜோத்ரவ்யமே. வேறுவஸதுவல்ல. தன் ஸ்வரூபத்திற்கும மற்றவைகளுக்கும் ப்ரகாசகமாக இருப்பதால் ப்ரகாசவத்த்வமும். இந்தப்ரபைக்கு குணத்வவ்யவஹாரமானது எப்பொழுதும் அதை ஆச்ரயித்திருத்தல், அதற்கு சேஷமாக இருத்தல், இவைகளடியாக உண்டானது. ஒளிக்கு ஆச்ரயமான மணி முதலியவைகளின் அவயவங்களே நாற்புறங்களிலும் சிதறி ஸஞ்சரியா நின்றவைகளாகப்ரபை எனவழங்கப்படுகின்றனவென்று சொல்வதுஸரியல்ல. மணி சூர்யன்முதலியவைகளுககு நாசம் வரவேண்டி வருவதால்.

ச்ருதப்ரகாசிகை—

ஜ்ஞாநத்தை தர்மமாகக்கொண்டிருத்தலும் ஜ்ஞாநஸ்வரூபத்வமும் சொல்லப் பட்டிருப்பதாலும ஏக ஜாதீயத்ரவ்யங்கள இரண்டுக்கும் தவறாத தர்மதர்மிபாவத்தில் ப்ரபை ப்ரபையுள்ளவஸ்து இவ்விரண்டையுமே த்ருஷ்டாந்தமாகச் சொல்லி இருப்பதாலும். ஜ்ஞாநம் த்ரவ்யமாகில் இரண்டு ஜ்ஞாநங்களுக்கு தவறாமல் தர்ம தர்மிபாவம் பொருந்தாது. வேறு இடத்தில் காணப்படாமையால். குணமெனறு சொல்லப்படுமேயாகில் ஜ்ஞாநாச்ரயத்வம் ஸம்பவியாது. குணங்களுக்கு குணமில்லாமையால். த்ரவ்யமாக இருந்தபோதிலும் ப்ரபைக்கும் ப்ரபையுள்ள வஸ்துவுக்கும்

தவறாமல் ஆச்ர்யாச்ரயிபாவம்‡ காணப்படுகிறதென்று சொல்லக்கூடாது. ப்ரபை என்பது சிதறிப்பரவுகின்ற தீபத்தின் அவயவங்களாதலால் என்று ஆசங்கித்துக் கூறுகிறார்— ஏததுக்தம் என்று. எவ்வாறு ஒரே தேஜோத்ரவ்யம் ப்ரபாரூபமாகவும் ப்ரபையுள்ளவஸ்து ரூபமாகவும் இருக்கிறதோ இவ்வண்ணம் ஆத்மா சித்ரூபனாகவே இருந்துகொண்டு சைதந்யகுணமுள்ளவனாகவும் இருக்கிறான். யதாசப்தத்திற்கு மேலே அந்வயம். முதலில் ப்ரபைக்கு சிதறிப்போய் இருக்கிற தீபம் முதலியவைகளின் அவயவங்களைக்காட்டிலும் வேறுபாட்டை ப்ரதிஜ்ஞைசெய்கிறார்—ஏகமேவ என்று. ஏகம் ஸஜாதீயமானது. தவறாமல் தர்மியை ஆச்ரயிததிருக்கிற தர்மத்திற்கு எவ்வாறு த்ரவ்யத்வம் என்றுகேட்கில் கூறுகிறார்—யந்யபி என்று. குணபூதா பாரதந்த்ரமாயுள்ளது. இணைபிரியாமல் சேர்ந்தே இருக்கும் விசேஷணம் என்று அர்த்தம். தேஜஸ் த்ரவ்யமே என்று ப்ரதிஜ்ஞைபண்ணப்பட்ட த்ரவ்யவிசேஷத்வஸித்தியின்பொருட்டு முதலில் த்ரவ்யத்வத்தை உபபாதனம் பண்ணுகிறார்-ஸ்வாச்ரயாத் என்று. த்ரவ்யத்வம் இருக்கட்டும், அதிலும் தேஜஸ்த்வத்தில் ப்ரமாணம் என்னவென்றுகேட்கில் கூறுகிறார்—ப்ரகாசவத்வாத் என்று. ப்ரகாச:-இருட்டுக்கு விரோதியாக இருக்கிற ஆகாரவிசேஷம். ஔஜ்வல்யம்-ப்ரகாசத்துடன் சேர்ந்திருத்தல். உபபாதிக்கிறார்—ப்ரகாசவதீத்வஞ்ச என்று. ஸ்வவிஷய பரவிஷய ஜ்ஞாநவிரோதியான இருளைப்போக்குதல் என்கிற கார்யம் காணப்படுவதால் என்று அர்த்தம். அங்ஙனமாகில் எவ்வண்ணம் இதற்கு குணமென்கிறவ்யவஹாரம் என்று கேட்கில் கூறுகிறார்— அஸ்யா: என்று "து" சப்தம் சௌக்ல்யாதிவைஷம்யத்தில் நோக்குள்ளது. இதற்குமேல் சிதறுகின்ற அவயவங்கள் ப்ரபைஎன்பதை நிராகரிக்கிறார்— நச என்று. ஏதனாலெனில் சொல்லுகிறார்— மணி என்று. ஒவ்வொரு க்ஷணந்தோறும் விநாசம் ப்ரஸங்கிப்பதால் என்று அர்த்தம். அப்படிப்பட்ட சிதறுதலை ஒப்புக்கொண்டால் மணி முதலியவைகள் கண்ணுக்குப்புலப்படாமல் போகவேண்டியதாகுமென்கிற ப்ரஸக்தியை பரிஹரிப்பதற்காக ஒவ்வொரு க்ஷணத்திலும் உத்பத்தி ஒப்புக்கொள்ளத்தக்கது. ஒவ்வொரு க்ஷணத்திலும் உத்பத்தி விநாசம் இவ்விரண்டையும் ஒப்புக்கொள்ளுதல் பொருத்தமுள்ளதாகாது. தீபத்திற்குபோல் உத்பத்தி விநாசங்களுக்குரியகாரணகலாபங்களின் தொடர்ச்சி இல்லாமையால். அதில்லாமலிருந்தாலும் தேஜஸ்த்வஸாமாந்யத்தால் தீபத்தில்போல் ப்ரத்யபிஜ்ஞையின் பாதத்தால் ஒவ்வொருக்ஷணத்திலும் விநாசம் முதலியவைகளை கல்பிக்கும்பக்ஷத்தில் ஸத்வாத் த்ரவ்யத்வம் முதலியவைகளால் கடம் முதலியவற்றில்கூட க்ஷணிகத்வ ப்ரஸங்கம் வருமென்று கருத்து. ரத்நங்களில் க்ஷணிகத்வமானது ரத்நசாஸ்த்ரவிருத்தம். காலவிசேஷத்தில் அதின் உத்பத்தி முதலியது அறியப்படுகிறபடியால் ஸூர்யன் முதலிய தேஜோத்ரவ்யங்களிலும் க்ஷணிகத்வமானது ச்ருதிவிருத்தம். "ஸூர்யாசந்த்ரமஸௌ தாதாயதா பூர்வமகல்பயத்" (ஸூர்யசந்திரர்களை பிரஹ்மதேவன் முன்போல படைத்தார்) "நாக்நிர்ந சந்த்ரமா ந ஸூர்ய:" (அக்நியும் சந்திரனும் இல்லை ஸூர்யனுமில்லை) என்று காலவிசேஷததில் அவைகளின் உத்பத்தி விநாசஙகள் அறியப்படுவதால் ஸூர்யன் முதலியவற்றின் ஸ்ருஷ்டியையும ப்ரளயத்தையும் ப்ரதிபாதிக்கிற வாக்யங்களுக்கு தொடர்ச்சியாக ¶ உபக்ரமோச்சேத பாதகம் சொல்லத்தக்கதல்ல. ரத்நம் ஸூர்யன் முதலிய வஸ்துமாத்திரத்திற்கு க்ஷணிகத்வத்தில் ப்ரமாணமில்லாமையால். தேஜஸ்த்வமோ வென்றால் தேஜஸின் பரமாணுக்களை இச்சிக்கிறவர்களால்

‡ அயுதஸித்தங்கள்— எந்த இரண்டு வஸ்துக்களுக்குள் ஒன்று மற்றொன்றை ஆச்ரயித்தே இருக்குமோ அவ்விரண்டும் அயுதஸித்தங்கள். அதாவது பிரிக்கமுடியாத ஸம்பந்தத்துடன் கூடியவைகள். ¶ உபக்ரமம்— ஆரம்பம். உச்சேதம்—அழிவு.

ஹேதுவாக சொல்லத்தக்கதல்ல. தேஜஸின் பரமாணுக்களில் வ்யபிசாரம் வருவதால் ஸத்வாதிகளால் க்ஷணிகத்வம் சொல்லப்படுமேயாகில் ஜகத்துக்கு க்ஷணிகத்வம் ஏற்பட வேண்டியதாகும் என்று சொல்லப்பட்டது.

அய்யா! தூரத்திலிருந்தே அறியப்பட்டிருக்கிற கந்தத்துடன்கூடின கர்பூரம் முதலியவைகளுக்கு கந்தத்துக்கு ஆச்ரயமாக இருக்கிற அவயவங்களின் சிதறுதல் விடத்தகாததலாலும் பிற்காலத்தில் உபலம்பமிருப்பதாலும் ஒவ்வொரு க்ஷணந்தோறும் உத்பத்தி விநாசங்கள் ஒப்புக்கொள்ளத்தக்கவைகள். அவ்வண்ணமே மணி முதலியவைகளிலும் என்று—இவ்வண்ணமல்ல. காற்றில்லாத குடுக்கை ஸம்புடம் முதலியவைகளில் வைக்கப்பட்டு திடமாக மூடப்பட்டிருக்கிற பச்சைக்கர்பூரம் முதலியவற்றிற்கு தூரத்தில் வாஸனையின் உபலம்பமில்லாததுபற்றி ஆச்ரய வஸ்துக்களின் அவயவங்களுடைய விசரணமில்லாமையால் முன்போல் ஸ்திதியின் $ உபலம்பத்திற்கு உபபத்தி ஏற்படுவதால்ப்ரதிக்ஷணோத்பத்தி விநாசங்கள் கல்பிக்கத்தக்கவைகளல்ல தூரத்திலறியப்படாநின்றவாஸனையுடையதான காற்றுள்ளஇடத்திலிருக்கிற பச்சைக்கர்பூரம் முதலியவைகளுக்கு அவயவங்களின் சிதறுதல் இருக்கவே இருக்கிறது. அவயவியிடத்திலும் ஸூக்ஷ்மமான குறைவு இருக்கவே இருக்கிறது. தராசினால் நிறுத்து பரீக்ஷபண்ணும்போதும் அல்பால்பமான பரிமாணத்தின் குறைவு காணப்படுவதால். ஆகையால் ப்ரதிக்ஷணம்வெவ்வேறாக வந்துசேருகின்ற அவயவாந்தரவிசேஷங்களை ஹேதுவாகக்கொண்ட உத்பத்தி விநாசங்கள் கல்பிக்கத்தக்கவைகளல்ல. கல்பநத்திலும் அறியப்படுகிற கந்தத்துக்கு ஆச்ரயமாக உபயவாதி † ஸம்ப்ரதிபன்னமாகவே இருக்கிற நாலாபக்கத்திலும் சிதறுகின்ற சிலஅவயவங்களுக்குஸ்திதிமாத்ரம் கல்பிக்கத்தக்கது. அவ்வளவுமாத்திரத்தினால் கந்தோபலப்திக்கு உபபத்தி வருவதால். அநேகதர்மிகள் அவைகளின் உத்பத்தி விநாசங்கள் முன் காணப்பட்டிருத அவ்விரண்டின் ஸாமக்ரிகள் இவைகளை கல்பிப்பதில் கௌரவமேற்படுவதாலும். அன்றிக்கே கண்ணுக்குப்போல் மூக்குக்கும் ரச்மியின்வழியாக ஸம்பந்தமிருப்பதால் தூரத்திலிருக்கிற பதார்த்தங்களை அடைந்திருக்கிற கந்தத்தை க்ரஹிக்கும் தன்மை கல்பிக்கத்தக்கது. கௌரவமில்லாமையால் ரச்மிமத்வம் கல்பிக்கத்தக்கதென்பது மாத்திரமல்ல. பாரதத்தில் சொல்லப்பட்டுமிருக்கிறது. "நஹ்யாத்மா சக்யதேத்ரஷ்டுமிந்த்ரியை:காமகோசரை:| ப்ரவர்தமானைரநயைர்துர்தர்ஷைரக்ருதாத்மபி:- தேஷாந்துமநஸா ரசமீந் யதாஸம்பங்நியச்சதி" ததாப்ரகாசதேஹ்யாத்மா தீபோதீப்யந்நிராக்ருதி:" என்று. (காமங்களுக்கு கோசரங்களாக இருப்பவைகளும் செல்லுகின்றவைகளும் நீதியைவிட்ட கன்றவைகளும் மனோதார்ட்யமில்லாதவர்களால் எவ்விதத்தாலுமடக்கமுடியாதவைகளுமான இந்த்ரியங்களால் ஆத்மா பார்க்க சக்யமன்று. அந்த இந்த்ரியங்களுடைய ரச்மிகளை மனதினால் எப்பொழுது நன்றாக அடக்குகிறானோ அப்பொழுது ஆத்மா ஜ்வலிக்கிற தீபம்போல் நிஷ்க்ருஷ்ட ஆக்ருதியுள்ளவனாக பிரகாசிக்கிறான்) இந்த்ரியங்களுக்கு ‡ பஞ்சீக்ருதபூதாப்யாயநங்களான வாயுதேஜஸ் முதலியவைகளோடு ஸம்பந்தத்தால் ரச்மிமத்வமும் பொருத்தமுள்ளதாக ஆகிறது.

$ உபலம்பம்—அறிதல் அல்லது ஞானம்.

† ஸம்பரதிபன்னம்—விவாதமின்றி ஒப்புக்கொள்ளப்பட்டது.

‡ பஞ்சீக்ருதம்—கலக்கப்பட்ட ஐந்து பூதங்களுடைய அம்சங்களின் ஸமுதாயம். பஞ்சீகரணப்ரக்ரியையாவது— பகவான் பூதங்களை ஸ்ருஷ்டித்து ஒவ்வொரு பூதத்தையும் இரண்டாகச்செய்து இரண்டு பாகங்களுக்குள் அந்த அந்த பூதத்தைச்சார்ந்த பாகம் ஒன்றைவைத்துக்கொண்டு மற்ற ஒருபாகத்தை நான்காகப்பங்கிட்டு அந்த நான்கு

அப்யா! அக்னி வெய்யல் இவைகளின் ஸம்பந்தத்தால் ஜலம் கல் முதலியவற்றுக்கு உண்டாகிற சுடுகையின் தாரதம்ய ஜ்ஞானமானது நெருப்பு வெய்யல் முதலியவைக ளின் அவயவங்களின் ஸம்பந்தமின்றி பொருத்தமுள்ளதாக ஆகாது. ஜலம் முதலிய வற்றிற்கு ஸ்வத: ஔஷ்ண்யமில்லாததாலும் நிராசரயமான தர்மத்திற்கு ஸங்க்ரமணம் பொருந்தாததாலும் ஔஷ்ண்யத்திற்கு ஆச்ரயபூதமான அக்னியினுடையவும் வெய்ய லுடையவும் அவயவத்திற்கு ஸம்பந்தம் ஒப்புக்கொள்ளத்தக்கது. இவ்வண்ணம் அவ யவஸங்க்ராந்தியும் சிதறுதலில்லாவிடில் உபபன்னமாகாது. சொல்லுகிற தன்மையுள்ள ரச்மிகளுக்கு சரணதலங்களுக்குப்போல எவ்வாறு சிதறுதலில்லாமல் ஓரிடத்தில் ஸம் பந்தம் ஏற்படும்? அவயவங்களுடைய தாரதம்யத்தால் ஔஷ்ண்யதாரதம்யம் என்று சொல்லப்படுகிறது. நெருப்பினால் காச்சப்பட்டவஸ்துக்களில் அக்னியினுடைய அவய வங்களின் ஸம்பந்தத்தினாலேயே ஔஷ்ண்யம் அறியப்படுகிறது. ஜலம்முதலியவற் றில் ஸங்க்ரமித்திருக்கின்ற அக்னியின் அவயவங்களே ப்ரபை என்று சொல்லத்தக்கதல்ல. தீபத்தின் ப்ரபையினால் பகலிலும் இரவிலும் கவரப்பட்டிருந்தபோதிலும் ஜலம் பூதலம் முதலியவற்றில் ஔஷ்ண்யம் அறியப்படாததால்-வெய்யலால் தபிக்கப்பட்டிருக்கிற வஸ்துக்களிடத்திலும் கிரணங்களுடைய சிதறுதலால் அவயவங்களின் ஸங்க்ரமணம் கிடையாது. பனித்துளிகளுடையதுபோல ஸூர்யகிரணங்களால் க்ரஹித்துவிடப்பட்டி ருக்கிற அக்னியின் அவயவங்களுடைய ஸங்க்ரமணத்தால் உஷ்ணோபலப்திக்கு உபபத்தி வருவதால் இங்கு கல்பகமும் தேடத்தக்கதல்ல கல்பநாகௌரவமும் ப்ரஸங்கிக்கிற தில்லை. ஏனெனில் இந்த அர்த்தம் சாஸ்த்ர ஸித்தமாதலால் உபபாதிக்கிறார்— மாத்ஸ்ய புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. வஸந்தே * க்ரீஷ்மகே ரச்மிசதைஸ் ஸந்தபதி த்ரிபி: சரத்யபிச வர்ஷாஸு சதுர்பி: ஸம்ப்ரவர்ஷதி ¶ஹேமந்தே சிசிரேசைவ ஹிமமுத்ஸ்ருஜதே த்ரிபி: (வஸந்தத்திலும க்ரீஷ்மத்திலும் ஸூர்யன் முன்னூறு கிரணங்களால் தபிக்கிறான். சரத்திலும் $ வர்ஷாஸமயத்திலும் நானூறு கிரணங்களால் மழைபொழிகிறான். ஹேமந்த காலத்திலும் § சிசிருதுவிலும் முன்னூறு கிரணங்க ளால் பனியை வெளியில் விடுகிறான், என்று) எவ்வாறு வர்ஷாகாலத்திலும் ஹேமந்த காலத்திலும் ஸூர்ய கிரணங்களால் விடப்பட்ட ஜலகணங்களும் பனித்துளிகளும் சித றின கிரணங்களின் அவயவங்களன்றோ, கிரணங்களால் க்ரஹித்துவிடப்பட்டிருக்கிற ஜலத்தின் அவயவங்களோ. இவ்வாறே க்ரீஷ்மத்திலும் ஸூர்யகிரணங்களாலுண்டா கும் ஸந்தாபனம் சிதறின அதின் அவயவங்களின் கார்யமல்ல. பின்னேயோ அவைக

பாகங்களையும் வேறுநான்கு பூதங்களிலும் சேர்ப்பிக்கிறார்—இவ்வாறாக எல்லா பூதங்களும் உண்டுபண்ணப்படும் ஸமயத்தில் ஒவ்வொருபூதத்தினுடைய நான்கு அரைக்கால் அம் சங்களையும் தன்னுடைய ஒரு அர்த்தாம்சத்தையும் சேர்த்து பகவான் ஒவ்வொரு பூதத்தையும் பூரணமாகச்செய்கிறார்— ஆதலால் ஒவ்வொருபூதத்திலும் ஐந்து பூதங்க ளின் அம்சங்களும் கலந்திருக்கின்றன. எந்த வஸ்துவை எந்தபெயரால் வ்யவஹரிக்கி றோமோ அந்த வஸ்துவில் அதின் அம்சம் ஸரிபாதி, மற்றவஸ்துக்களின் நான்கு அரைக்கால் அம்சங்கள். தன் அம்சம் அதிகமாக இருப்பதால் தன் வ்யவஹாரம் நிலை பெற்றுவருகிறது. த்ருவ்ருத்கரணம் வேதத்தில் சொல்லப்பட்டிருப்பது பஞ்சீகரணத் திற்கு உபலக்ஷணம். பஞ்சபூதங்களோடும் மஹத் அஹங்காரம் இரண்டையும் சேர் த்து ஸப்தீகரணம் என்றும் சொல்லுவார்கள். இருபத்திநான்கு தத்வங்களில் பஞ்சபூதங் களும் ப்ரக்ருதி மஹத் அஹங்காரங்களும் சரீரத்திற்கு உபாதானங்கள்.

¶ ஹேமந்தம்—பனிகாலம். $ வர்ஷாகாலம்—மாரிகாலம்.

§ சிசிருது—மாசிபங்குனிமாதங்கள். * க்ரீஷ்மம்—வெய்யிற்காலம்.

ளால்க்ரஹித்துவிடப்பட்டிருக்கிற அக்நி அவயவங்களின் கார்யமென்று அறியப்படுகிறது. அவ்வாறே அக்நிம் வா வாதித்யஸ்ஸாயம்ப்ரவிசதி- உத்யந்தம் வா வாதித்யமக்நி ரநு ஸமாரோஹதி. (ஸூர்யன் ஸாயங்காலத்தில் அக்நியில் ப்ரவேசிக்கிறான். உதிக்கிற ஸூர்யனிடம் அக்நியானவன் அநுப்ரவேசம் செய்கிறான்) என்று. ச்ருதியில் கூறப்படு கிறது இந்த ச்ருதியில் ஸாயம்ப்ராதர் சப்தங்கள் ஆதித்யனுடைய || திரோதானதர்ச னயுக்தமான காலவிசேஷ பரங்கள். இதற்கு ஸாயம் பாவப்ராதர்பாவங்கள் ஸூர்ய னுக்குப்பக்கதிலும் தூரத்திலுமிருக்கிற அந்த அந்த இடத்திலுள்ள புருஷர்களின் அபேக்ஷயினால் எப்பொழுதும் பொருத்தமுள்ளதாக ஆகின்றன. இந்த அர்த்தமானது புவநகோசத்தில் மிக்க ஸ்புடமானது. ஆதலால் ப்ரவிசதி என்பதினால் தூரத்திலிருக்கிற ஆதித்யனுக்கு அக்நியில் சொல்லப்படுகிற வ்யாப்தியானது ஸ்வரூபத்தால் உபபன்ன மாகிறதில்லை. ஆதலால் கிரணங்களின் வழியாக ஏற்படுகிறது. "அக்நி: அநுஸமாரோ ஹதி" என்பதினால் ஆதித்யனால் அக்நியினது அவயவங்களின் ¶ உபாதானம் சொல்லப் படுகிறது. இந்த வாக்யமானது அக்நிக்கு அதிஷ்டாதாவான தேவதையின் ஆரோஹ ணபரமல்ல. "தஸ்மாத்தூம ஏவாக்நேர்திவா தத்ருசே" (ஆகலால் பகலில் அக்நிக்கு புகையே காணப்படுகிறது.) என்கிற அடுத்த வாக்யத்தினால் அக்நிக்கு ஆதித்யனுடைய பக்கத்தில் நெருங்குவதாலுண்டான தேஜோமாந்த்யம் சொல்லப்பட்டிருப்பதால். அப் படி இல்லாவிட்டால் ஸாயம் ப்ராதஸ்ஸமயங்களுக்கு எப்பொழுதும் ஸம்பவமிருப்பதால் அக்நிக்கு ஆதித்யனிடத்தில் எப்பொழுதும் ஆரோஹணமும் ஆதித்யனுக்கு அக்நியில் எப்பொழுதும் ஆரோஹணமும் ப்ரஸங்கிக்கும். அதினால் அக்நி, ஆதித்யன், இருவர்க ளுக்கும் ஸ்தாநவிநிமயத்தால் எப்பொழுதும் ஸ்திதியானது சொல்லப்பட்டதாக ஆகும். அப்படிசொல்வது ப்ரமாணாந்தர விருத்தம். ஆதலால் ஆதித்யனுக்கு அக்நியில் கிரணங் களின் வாயிலாக வ்யாப்தியும் கிரணங்களால் அக்நியின் அவயவங்களின் கிரஹணமும் இரண்டு வாக்யங்களால் சொல்லப்பட்டது. அதினால் க்ரஹிக்கப்பட்டிருக்கிற அக்நி யின் அவயவங்களுடன் கூடினவர்ஷத்தினால் தாபசமானது மாத்ஸ்யபுராணத்தில் சொல் லப்பட்டிருக்கிறது. உத்ஸர்ஜநப்ரகரணஸ்வாரஸ்யத்தால். ஆகையால் பனித்துளிகளுக்குப் போல் ஸூர்ய கிரணங்களால் விடப்பட்டிருக்கிற ஆக்நேயாவயவங்களுக்கு சிதறின கிர ணங்களின் அவயவத்வமில்லாமையால் ரவிகிரணங்களில் ரவிமண்டலத்தில் ப்ரதிக்ஷ ணவிநாசோத்பத்தி கல்பநமானது பொருந்தாது. அதினால் சிதறுகிற அவயவங்கள் ப்ரபையல்ல.

தீபே ஸ்வாவயவவிஸ்ருதிவத்ஸ்ருதி: கதாசிதபி ந ஸ்யாத். । ந ஹி விஶ ரணஸ்வபாவாவயவா தீபாஶ்சந்த்ரஸூர்யௌ வா தத்ஸ்வம் நியமேந விஶ்லிஷ்யந்தா உபலப்யேரந் ததஃ பஶ்சாத்ஸ்வமேவ நியமேநாவயவவிஶ்லேஷா ரத்வா விஶீர்ணா: ஸ்ருதாஶ்சேதி ஶக்யம் வக்தும் ॥

அதஸ்ஸ்வாஹாகாரவஶா தீபா: ப்ரதிக்ஷணமுத்பந்நா விநஶ்யந்தீதி பக்ஷஏவ காரணக்ரமோபபாதிதாத்விநாஶேऽவிநாஶாஸ்வாவஶ்யகதே ।

|| திரோதானம்—மறைதல்.

¶ உபாதானம்—வாங்கிகொள்ளுதல் அல்லது ஏற்றுக்கொள்ளுதல்.

§ விநிமயம்—மாற்றிக்கொள்ளுதல்.

𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌾𑌶𑍍𑌰𑌯𑌤𑍍𑌵𑍇 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌮𑌾𑌣𑌿𑌕𑍍𑌯𑌦𑍇𑌶𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑌮𑌾𑌣𑌿𑌕𑍍𑌯𑌾𑌦𑌿𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌯𑌾 𑌵𑍈𑌶𑌿𑌷𑍍𑌟𑍍𑌯𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌾𑌵𑌤𑍍, 𑌅𑌨𑍍𑌯𑍂𑌨𑌾𑌧𑌿𑌕𑌦𑍇𑌶𑍋𑌰𑍍𑌧𑍍𑌵𑌾𑌦𑌿𑌵𑌤𑍍 । 𑌏𑌵𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌹𑌿 𑌜𑍍𑌞𑌾𑌤𑍃𑌤𑍍𑌵𑍇 𑌏𑌵 𑌸𑍍𑌵𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌕 𑌇𑌤𑌿 । 𑌜𑍍𑌞𑌾𑌤𑍃𑌤𑍍𑌵𑌤𑌾 𑌹𑌿 𑌸𑍍𑌵𑌯𑌂𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌤𑌾 ॥

𑌤𑌥𑌾 𑌹𑌿 𑌶𑍍𑌰𑍁𑌤𑌯𑌃— (𑌬𑍃-௪-௫-௧௩) ‘‘𑌸 𑌯𑌥𑌾 𑌸𑍈𑌨𑍍𑌧𑌵𑌘𑌨𑍋𑌽𑌨𑌨𑍍𑌤𑌰𑍋𑌽𑌬𑌾𑌹𑍍𑌯𑌃 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑍋 𑌰𑌸𑌘𑌨 𑌏𑌵, 𑌏𑌵𑌂 𑌵𑌾 𑌅𑌰𑍇𑌽𑌯𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌽𑌨𑌨𑍍𑌤𑌰𑍋𑌽𑌬𑌾𑌹𑍍𑌯𑌃 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌃 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾𑌨𑌘𑌨 𑌏𑌵’’ (𑌬𑍃-௪-௪-௧௨) ‘‘𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌘𑌨 𑌏𑌵’’ (𑌬𑍃-௪-௩-௯) ‘‘𑌅𑌤𑍍𑌰𑌾𑌯𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 𑌸𑍍𑌵𑌯𑌂𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌰𑍍𑌭𑌵𑌤𑌿’’ ‘‘𑌨 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌤𑍁𑌰𑍍𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌤𑍇𑌰𑍍𑌵𑌿𑌪𑌰𑌿𑌲𑍋𑌪𑍋 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇’’ (𑌬𑍃-௪-௩-௩௦) ‘‘𑌅𑌥 𑌯𑍋 𑌵𑍇𑌦𑍇𑌦𑌂 𑌜𑌿𑌘𑍍𑌰𑌾𑌣𑍀𑌤𑌿 𑌸 𑌆𑌤𑍍𑌮𑌾’’ (𑌛𑌾-௮-௧௨-௪) ‘‘𑌕𑌤𑌮 𑌆𑌤𑍍𑌮𑌾 𑌯𑍋𑌽𑌯𑌂 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌯𑌃 𑌪𑍍𑌰𑌾𑌣𑍇𑌷𑍁 𑌹𑍃𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑍍𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃’’ (𑌬𑍃-௪-௩-௭) ‘‘𑌏𑌷 𑌹𑌿 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌾 𑌶𑍍𑌰𑍋𑌤𑌾 𑌰𑌸𑌯𑌿𑌤𑌾 𑌘𑍍𑌰𑌾𑌤𑌾 𑌮𑌨𑍍𑌤𑌾 𑌬𑍋𑌦𑍍𑌧𑌾 𑌕𑌰𑍍𑌤𑌾 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌤𑍍𑌮𑌾 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃’’ (𑌪𑍍𑌰𑌶𑍍𑌨-௨.௪-௯) ‘‘𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌤𑌾𑌰𑌮𑌰𑍇 𑌕𑍇𑌨 𑌵𑌿𑌜𑌾𑌨𑍀𑌯𑌾𑌤𑍍’’ (𑌬𑍃-௪-௪-௧௪) ‘‘𑌜𑌾𑌨𑌾𑌤𑍍𑌯𑍇𑌵𑌾𑌯𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃’’ ‘‘𑌨 𑌪𑌶𑍍𑌯𑍋 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌂 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 𑌨 𑌰𑍋𑌗𑌂 𑌨𑍋𑌤 𑌦𑍁𑌃𑌖𑌤𑌾𑌮𑍍’’ (𑌛𑌾-௭-௨௪-௨) ‘‘𑌸 𑌉𑌤𑍍𑌤𑌮𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃’’ (௪-𑌛𑌾-௮-௧௨-௩) ‘‘𑌨𑍋𑌪𑌜𑌨𑌂 𑌸𑍍𑌮𑌰𑌨𑍍𑌨𑌿𑌦𑌂 𑌶𑌰𑍀𑌰𑌮𑍍’’ (𑌪𑍍𑌰𑌶𑍍𑌨-௨-௪-௫) ‘‘𑌏𑌵𑌮𑍇𑌵𑌾𑌸𑍍𑌯 𑌪𑌰𑌿𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌰𑌿𑌮𑌾𑌃 𑌷𑍋𑌡𑌶 𑌕𑌲𑌾𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌯𑌣𑌾𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑌂 𑌗𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑌿’’ (𑌤𑍈-௪-௧) ‘‘𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌵𑌾 𑌏𑌤𑌸𑍍𑌮𑌾𑌨𑍍𑌮𑌨𑍋𑌮𑌯𑌾𑌦𑌨𑍍𑌯𑍋𑌽𑌨𑍍𑌤𑌰 𑌆𑌤𑍍𑌮𑌾 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌯𑌃’’— 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑍍𑌯𑌾𑌃 । 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑌿 𑌚 (𑌶𑌾𑌰𑍀-௨-௩-௧௯-𑌸𑍂) ‘‘𑌜𑍍𑌞𑍋𑌽𑌤 𑌏𑌵’’ 𑌇𑌤𑌿 ॥

ஸ்ரீபாஷ்யம்—

தீபத்திலும் அவயவிப்ரதிபத்தியானது ஒருபொழுதும் உண்டாகாது. சிதறுதலை ஸ்வபாவமாகக்கொண்ட அவயவங்களுடன்கூடின தீபங்கள் நான்கு அங்குலங்கள் அளவு தவறாமல் பிண்டாகாரங்களாக இருந்துகொண்டு மேலே கிளம்பி அதற்குப்பிறகு ஒரே ஸமயத்திலேயே குறுக்காகவும் மேலாகவும் கீழாகவும் ஒரே மாதிரியாக சிதறி நின்றுகொண்டு நாற்புறங்களிலும் பரவுகின்றனவென்று சொல்வதற்கு சக்யமல்ல. ஆகையால் சிறந்த காரணங்கள் வரிசைக்ரமமாகத் தோன்றுந்தருணத்தில் உண்டாவதாலும் அவைகள்

நாசமடையும்ஸமயத்தில் நசிப்பதாலும் ப்ரபையோடு கூடியவைகளாகவே தீபங்கள் க்ஷணந்தோறும் தோன்றி விநாசமடைகின்றனவென்று அறியப்படுகிறது. அக்நி முதலியதற்கு ஔஷ்ண்யம் முதலியதுபோல ப்ரபைக்கு தனக்கு ஆச்ரயவஸ்துஸமீபத்தில் ப்ரகாசாதிக்யம் உஷ்ணாதிக்யம் இது முதலியது உபலப்தியினால் வ்யவஸ்தை செய்யத்தக்கது. இவ்வண்ணம் ஆத்மா சித்ரூபனாகவே இருந்துகொண்டு சைதன்யகுணமுள்ளவன். சித்ரூபனாதயன்றோ ஸ்வயம்ப்ரகாசனை.

உபபாதக ச்ருதிகளாவன—எவ்வாறு உப்புக்கட்டியானது உள்ளிலும் வெளியிலும ரஸத்தில் அல்லது ருசியில் வ்யத்யாஸமின்றி எல்லாம்ரஸகனமாகவே இருக்கிறதோ இவ்வண்ணமே * இந்த ஆத்மா உள்ளங்கம் வெளியங்கமின்றி முழுமையும ப்ரஜ்ஞாநகனனே, விஜ்ஞாநகனனே. இந்த இடத்தில் இந்த புருஷன ஸ்வயம் ஜ்யோதிஸாக இருக்கிறான். விஜ்ஞாதாவான ஆத்மாவின் ஜ்ஞாநத்திற்கு அழிவில்லை எவன் இதை முகர்கிறேனென்று எண்ணுகிறானோ அவனஆத்மா. எவன் ஆத்மா—யாதொருவன் விஜ்ஞாநமயனாக பிராணனகளிலும் ஹ்ருதயத்திினுள்ளும் ஜ்யோதிர்மய புருஷனாக இருக்கிறானோ. இவனன்றோ பார்ப்பவன, கேழ்ப்பவன், ருசிபார்ப்பவன், முகர்கிறவன், மநநஞ் செய்பவன், அறிகிறவன், செய்கையுடையவன், விஜ்ஞாநஸ்வரூபியான புருஷன். விஜ்ஞாதாவான ஆத்மாவை எதினால அறியலாம் இந்தப்புருஷன் அறியவே அறிகிறான் பரமபுருஷனைப் பார்ப்பவன் ஸம்ஸாரத்தைப் பார்க்கிறதில்லை ரோகத்தைபும் பார்க்கிறதலல. துக்கத்தையும் பார்க்கிறதில்லை. அவன் உத்தமனான புருஷன். உத்பத்தி ஸ்திதி விநாசங்களுள்ள இந்தசரீரத்தை நினைக்கிறதில்லை. இவ்வண்ணமே பரமபுருஷ ஸாக்ஷாத்காரம்பெற்று இருப்பவனான இந்த முக்தாத்மாவுக்கு முக்திதசையில் பரமபுருஷனை அடைந்து ஜீவனுடைய ஸங்கல்பத்தைச் சார்ந்த ஸ்வரூப, ஸதிதி, ப்ரவ்ருத்திகளுடன்கூடின இந்த § பதினாறுகலைகள் நாசமடைகினறன. அந்தஇந்த மஹிமையனைக்காட்டிலும் விஜ்ஞாநமயனாகவும் ஹ்ருதயமத்யத்திலிருப்பவனுமான ஜீவாத்மா வேறாக இருக்கிறான் இதுமுதலியவைகள். ஸூத்ரகாரரே சொல்லப்போகிறார் "ஜ்ஞோzத ஏவ" என்று.

---

* அநந்தர—அபாஹ்ய:, என்கிற இடத்தில் அர்த்தமிவ்வாறு சொல்லத்தக்கது. அதாவது— ரஸகனமாக இல்லாத அந்தரங்கங்களில்லாதவன. ரஸகனமாக இல்லாத பாஹ்யாங்கங்களிலலாதவன. முற்றிலும் ரஸகனன் என்று பொருள். இரண்டிடத்திலும் விசேஷிக்கத்தக்கவைகள ரஸசூன்யாங்கங்கள.

§ பதினாறுகலைகளாவன—(1) ப்ராணன், (2) ச்ரத்தை, (3) ஆகாயம், (4) வாயு, (5) ஜ்யோதிஸ், (6) ஜலம், (7) பூமி; (8) இந்த்ரியம், (9) மனஸ், (10) அன்னம் (11) வீர்யம், (12) தபஸ (13) மந்திரங்கள், (14) கர்மங்கள், (15) உலகங்கள் (16) உலகத்திலுள்ளபெயர்கள். இவைகளுடைய விஸ்தாரங்களை ப்ரச்னோபநிஷத்தில் காண்க.

ச்ருதப்ரகாசிகை—

வேறு தூஷணத்தை உரைக்கிறார்— தீபேபி என்று. அவயவி ப்ரதிபத்தியின் அநுபபத்தியை உபபாதிக்கிறார்—நஹி என்று தீபமானது சிதறுதலை ஸ்வபாவமாகக் கொண்டதா? அல்லது ஸ்திரஸ்வபாவமுள்ளதா ? சிதறுதல் ஸ்வபாவமென்று சொல்லும் பக்ஷத்தில் பிண்டீபாவமானது $ மூர்த த்ரவ்யத்தை ப்ரதிபந்த காரணமாகக்கொண்டதாக ஆகும். ஸ்திரஸ்வபாவமுள்ளதென்று சொல்லுமபக்ஷத்தில் சிதறுதலானது மூர்த த்ரவ்யத்தின் விநாசத்தை ஹேதுவாகக்கொண்டதாக ஆகும். இங்கு இரண்டும் அநுபலம்பத்தால் அடிபட்டது. விசரணம் ஸ்வபாவ ஸித்தமாக இருக்க பிண்டாகாரமானது வாயுவினால் உபபன்னமாகிறதென்று சொல்லப்படுமேயாகில் அப்பொழுது காத்தில்லாத இடத்தில் பிண்டீபாவமானது இல்லாமல் போகவேண்டியதாக ஆகும். அசைவற்ற ஸூக்ஷ்மவாயுவினால் பிண்டீபாவமென்று சொல்லப்படுமேயாகில் சிதறுதல் உண்டாகாது. அதுவும் ஸூக்ஷ்மவாயுவினாலென்று கூறப்படுமேயாகில் ஒன்றுக்கே விருத்தமான இரண்டு ஸ்வபாவங்கள் பொருந்தாதாதலால் பிண்டீபாவத்திற்கும் விசரணத்திற்கும் ஹேதுவான இரண்டு வாயுக்கள் ஒப்புக்கொள்ளத்தக்கவைகள். அவ்விரண்டுகளும் அந்யோந்யகாதுகங்களாதலால் இரண்டுக்குள் ஒன்றுபோனால் பிண்டீபாவமேயோ விசரணமேயோ உண்டாகவேண்டியதாகும். அதை பரிஹரிப்பதின் பொருட்டு ஒன்றினால் மற்றொன்று தடைபட்டு விருத்தஸ்வபாவங்களுள்ள இரண்டு வாயுக்களின் பரம்பரையினால் ஸாமீப்யம் விலக்கம் இவைகள் கல்பிக்கப்படுமேயாகில் கௌரவம் உண்டாகும். அப்படி கல்பித்தபோதிலும் குறுக்காகச்செல்லுகிற ஸ்வபாவமுள்ளவைகளும் * ப்ரேரணமாத்ரத்திற்கு ஹேதுக்களாகவுமிருக்கிற வாயுவின் அவயவங்களுக்கு நாற்புறங்களிலும் ப்ரதிபந்தகத்வமில்லாமையால் பிண்டீபாவம இல்லாமல்போகவேண்டியதாகும்.

அய்யா ! வெப்பத்தினால் உருகிப்போயிருக்கிற பார்த்திவாயவங்களின் திடமான ஸம்யோகத்தால் பிண்டீபாவம். அதினால் அதின் அவயவங்களை அடைந்திருக்கிற பசையின் அழிவினால் பிடிப்பு இல்லாமையால் அக்நியின் அவயவங்களின் ¶ விசரணம் என்று சொல்லப்படுமேயாகில்கூறுகிறார்—நஹி விசரண என்று. அக்நியின் அவயவங்கள் மேலே செல்வதை ஸ்வபாவமாக உடையவைகளாக இருக்குமேயாகில் அப்பொழுது சிதறும்பொழுது; குறுக்காகச் செல்லுதலுண்டாகாது அந்த அகனியின் அவயவங்கள் குறுக்கானகதியை ஸ்வபாவமாக உடையவைகளாக இருக்குமேயாகில் அப்பொழுது முதலில் மேல்நோக்கிச்செல்லுதல் இல்லாமல்போகவேண்டியதாக ஆகும். ஏகஜாதீயமான த்ரவ்யத்திற்கு உபாதி இல்லாவிடில் விருத்த ஸ்வபாவங்கள் பொருந்தாதாதலால். உபாதியோ காணப்படவில்லை. தீபம ப்ரபை இவைகள் இரண்டும் வெவ்வேறான அவயிவகளென்று சொல்லப்படும்பக்ஷத்திலோவென்றால் விருத்த ஸ்வபாவத்வம் உபபன்னமாகிறது. மேலும் நான்கு அங்குலம் முதலிய அளவினது தாரதம்யத்திற்கு நியாமகமும் இல்லை. சிதறுதலில் பக்கத்திலும் சிதறுதல் ஸம்பவிக்கிறது. நாலாபக்கங்களிலும் ஒரேஸமயத்தில் சிதறுவதற்கு நியாமகமில்லாமையால் என்று அபிப்ராயம். மேலும் சிதறுகின்ற அவயவங்களுக்கு புழுதிகளுக்குப்போல தவறுதல் நேரான ப்ரஸாணத்தில் ஹேதுவில்லை. ப்ரஸாணத்திற்கு Ψ ஆர்ஜவநியமமானது மறைக்கிற பதார்த்தத்தைக்குறித்து ருஜுவான தேசத்திலேயே சாயையின் ஸம்பந்தத்தால் அறியப்படுகிறது. சாயையின் விஸ்தாரமோவென்றால் தடுக்கப்படுகிற ரச்மிகளின் பெரிதான

$ மூர்தம்—க்ரியாச்ரயமாக இருப்பது. * ப்ரேரணம்—தள்ளுதல் அல்லது தூத்துதல். ¶ விசரணம்—சிதறுதல். Ψ ஆர்ஜவம்—நேராக இருத்தல், நியமம்—தவறாமலிருத்தல்.

அக்ரபாகங்களால் உண்டுபண்ணப்படுகிறது. அநார்ஜவத்தால் உண்டுபண்ணப்பட்டதல்ல. சாயையின் ¶ கௌடில்யமோ வென்றால் மறைக்கிறவஸ்துவின் கௌடில்யத்தினால் உண்டுபண்ணப்பட்டிருக்கிறதே ஒழிய ப்ரஸாணத்தின் † அநார்ஜவத்தால் செய்யப்பட்டதல்ல- அதுவும் ருஜுவான ப்ரஸரணத்திற்கு ஸாதகம். அவயவங்கள் சிதருகின்றன வென்கிற பக்ஷத்தில் ரச்மிகளுக்கு புழுதிகளுக்குப்போல காத்தினால் அடித்துக்கொண்டுபோகப்படாமலிருத்தல் பொருந்தாது. கிழக்கு ஜாலகத்தினால் வெளிப்பட்டிருக்கிற ப்ரபையானது தென்றல் காற்றினால் அடித்துக்கொண்டுபோகப்படுகிறதில்லை யன்றோ. அப்படி இல்லாவிட்டால் புழுதிகளுக்கும் அதில்ப்ரேரணமில்லாமை ப்ரஸங்கிக்கும். ஜன்னலின்வழியாய் வெளிப்பட்டிருக்கிற ப்ரபையானது காத்தினால் அடித்துககொண்டுபோகப்படாமலிருக்கிறதெனபது அதற்கு அப்புறத்திலுள்ள சுவர் முதலியதில் ப்ரபையின் சேர்க்கையினாலேயே அறியப்படுகிறது. ஆகையால் வில்லில் இழுத்துக் கட்டப்பட்டிருக்கிறநாண்கயிர்போல ப்ரபையானது சிதருகிற அவயவமல்ல.

அதினாலென்னவென்று கேட்கில் சொல்லுகிறார்—அதஸ்ஸப்ரபாகா ஏவ தீபா: ப்ரதிக்ஷணமுத்பன்னா: என்று. தேஜஸானதால் மணி முதலியதின் விநாசததை ஒப்புக்கொள்ளில் அதிப்ரஸங்கம வருவதால். விசரணத்தைவற்றுக்கொண்டால் பிண்டபாவம் ஒரேஸமயத்தில் நாலாபக்கஙகளிலும் விசரணம், ருஜுப்ரஸரணம், முதலிய அனேக நியமவ்யவஸ்தாபகமில்லாமையாலும எப்படி காணப்பட்டதோ அப்படி ஒப்புக்கொள்வதில் விரோதமில்லாமையாலும. தீபஙகள் ப்ரபையோடுகூடியவைகளாகவே ப்ரதிக்ஷணம் உண்டாகின்றனவென்று அர்த்தம். அப்படியாகில், எவ்வாறு ஒவ்வொரு க்ஷணத்திலும் உத்பத்திவிநாசஙகள் என்று அபேக்ஷைவரின் எவ்வாறு மணிமுதலியவைகளுக்கும் ப்ரதிக்ஷணவிநாசமானது ப்ரஸஙகியாதோ அவ்வாறு தீபக்ஷணிகத்வத்தில் இரண்டுஹேதுக்களைச்சொல்லுகிறார்—புஷ்கலகாரணக்ரமோபநிபாதாத் தத்விநாசே விநாசாச்ச என்று. சேராமலிருககிற தண்டசகராதிகளின் வ்யாவ்ருத்தியின் பொருட்டு புஷ்கல சப்தம். வத்தியின் அவயவததோடு அக்நியின் ஸம்பந்தம் தீபஸாமக்ரீ என்பது முதன்மைவாய்ந்த வத்தியின் அவயவத்தோடு அக்நிஸம்பந்தத்தால் காணப்பட்டிருக்கிறது. ப்ரதமமானவத்தியின் அவயவத்தோடு அக்நி ஸமயோகத்திற்கே காரணத்வம என்று சங்கிக்கத்தககதல்ல. கடாசியிலும நடுவிலுமுள்ள வத்தியின் அவயவங்களுக்குக்கூட அக்நி ஸம்பந்தமுள்ளஸமயததில் தீபத்தின் உத்பத்தி காணப்படுவதால். ஆகையால் ஒவ்வொரு அவயவத்திலும் அக்நி ஸம்பந்தத்தால் புஷ்கலமான காரண பரம்பரை காணப்பட்டிருக்கிறதென்பதினால் ஒவ்வொரு அவயவந்தோறும் அக்நிஸம்யோகத்தால் தீபம் உண்டாகிறது. அதில ப்ரதிக்ஷணம் உத்பத்தி இருக்குஙகால் ஒரே ஸமயத்தில் அனேக தீபங்கள் காணப்படாததால் விநாசமும் ஸித்தம். ப்ரதிக்ஷண விநாசத்திற்கு தனித்து அநுமாபகம் கூறப்படுகிறது. தத்விநாசே விநாசாச்ச என்று வத்தியினது அவயவவிநாசத்திற்கு தீபவிநாச ஸாமக்ரீத்வமானது கடாசியான வத்தியின் அவயவவிநாசத்தில் காணப்பட்டிருககிறது இவ்வண்ணமாக விநாசகாரணாநுவ்ருத்திதர்சனத்தினால் ப்ரத்யவயவ விநாசத்தோடு தீபம் நசிக்கவே நசிக்கிறது. இவ்வாறாக உத்பத்தி விநாசஸாமக்ரிகளின் அநுவ்ருத்திகளால் ஒவ்வொரு க்ஷணத்திலும் அநுமிக்கப்படுகிறது என்று அர்த்தம்.

ப்ரபையானது சிதரின தீபம்முதலியவைகளின் அவயவங்களல்லாதபக்ஷத்தில் தீபஸமீபத்தில் அந்த ப்ரபைக்கு ஔஷ்ண்யத்தின் ஆதிக்யம் முதலியது எவ்வாறு?

¶ கௌடில்யம்—கோணலாக இருத்தல். † அநார்ஜவம்—கோணுதல்.

அவயவங்கள் சிதறுகின்றன வென்கிற பக்ஷத்திலேயன்றோ அவயவங்களின் * பாஹுள்ய ‡ வைரள்யங்களால் ஔஷ்ண்யாதிக்யம் மாந்த்யம் முதலியது பொருந்துகிறது என்று சொல்லப்படுமேயாகில் சொல்லுகிறார்—ப்ரபாயா: என்று. 'ப்ரகாசாதிக்யம் ஔஷ்ண்யாதிக்யம் இத்யாதி'' என்கிற வாக்யத்திலுள்ள ஆதிசப்தத்தால் ஆச்ரய வஸ்துவுக்கு தூரதேசத்தில் ப்ரகாசமாந்த்யமும் ஔஷ்ண்யமாந்த்யமும் விவக்ஷிக்கப் பட்டிருக்கிறது. உபலப்தியினால் வ்யவஸ்தாபிக்கத்தக்க விஷயத்தில் த்ருஷ்டாந்தத்தைச் சொல்லுகிறார்—அக்ந்யாதீநாம் என்று. சொல்லப்பட்டதை தார்ஷ்டாந்திகத்தில் அதிதேசிக்கிறார்—ஏவம் என்று. சித்ருபஏவ என்று ரூபசப்தம் தாமிஸ்வரூபபரம் அதினால் ஸ்வயம் ப்ரகாசத்வத்திற்கு என்னவென்று அபேக்ஷையின் சித்ரூபத்வத்தை விவரிக்கிறார்—சித்ரூபதாஹி என்று. இதனால் சொல்லப்போகிற ச்ருதிவாக்யத்தில் ஜ்ஞானாதிசப்தம் விவரிக்கப்பட்டதாக ஆகிறது.

இவ்வண்ணம் அநுக்ராஹக தர்க்கத்தை உபந்யஸித்து ப்ரமாணத்தைக் கூறுகிறார்—ததாஹி ச்ருதய: என்று. 'ஸயதா ஸைந்தவகந:' என்று. அநந்தர: அந்தரங்கவ்யதிரிக்தன் அபாஹ்ய: பஹிரங்கவ்யதிரிக்தன். இவ்வாறு வ்யதிரேக நிர்தேசத்தால் நிச்சேஷ க்ரஹணம் செய்யப்பட்டது. அதையே சொல்லுகிறார—க்ருத்ஸ்ந: என்று தார்ஷ்டாந்திகவிஷயமான பாஹ்யசப்தம் தர்மிபரம். அநந்தரசப்தம் தர்மபரம். க்ருத்ஸ்நசப்தம் அவ்விரண்டுகளில் ஒரு அம்சம் ஜடமாக இருக்குமோ என்கிற ஸந்தேஹத்தை விலக்குவதற்காக. இங்கு எல்லா இடத்திலும் ஏகரூபமே த்ருஷ்டாந்தோப ந்யாஸம் வேறு அல்ல த்ருஷ்டாந்த தார்ஷ்டாந்திக விஷய வாக்யங்கள் இரண்டிலும் அநந்தர: அபாஹ்ய: என்றல்லவோ கூறப்பட்டது. சரீரித்வாவஸ்தையிலும் ஜ்ஞானாத்மகத்வபரமான வாக்யத்தை உதாஹரம் செய்கிறார — விஜ்ஞாநகந ஏவ என்று. கநசப்தத்தால் சொல்லப்பட்டிருக்கிற நைரந்தர்யத்திற்கு ஜடாம்சத்தின் கலப்பை ஏவகாரம் வ்யாவ்ருத்திக்கிறது. ஜ்ஞானத்வமாவது ஸ்வயம் ப்ரகாசத்வம் என்று ஜ்ஞாபிப்பதற்காக இந்த இடத்தில் அயமென்று வாக்யமெடுக்கப்பட்டது. தர்மதாமிபாவத்தை ஜ்ஞாபிக்கிறார்—நவிஜ்ஞாது: என்று. ஜ்ஞாத்ருஸம்பந்தியான ஜ்ஞானத்திற்கு நித்யத்வம் சொல்லப்பட்டால் ஜ்ஞானஸாமாந்யத்திற்கு நித்யத்வசங்கைவர அதைப் போக்குவதற்காக ஜ்ஞாதாவுக்கே ஆத்மத்வத்தைக் காண்பிக்கிறார்—அத்ரு அயம் புருஷ: என்று. ஜ்ஞானகுணகத்வம் ஸ்வயம்ப்ரகாசத்வம் இரண்டையும் சேர்த்து ப்ரதிபாதிக்கிற வாக்யத்தைக் கூறுகிறார்—கதம: என்று. ஜ்ஞானகுணகத்வ ஜ்ஞானஸ்வரூபத்வ ப்ரதிபாதக வாக்யத்தைக்கூறுகிறார்—ஏஷஹி என்று அறியத்தக்க நிஷ்க்ருஷ்டமான ஆத்மஸ்வரூபத்திற்கு ஜ்ஞாத்ருத்வத்தைச்சொல்லுகிறார்—விஜ்ஞாதாரம் என்று. இதனால் ஜ்ஞாத்ருத்வம் ஸ்வாபாவிகமென்று பலித்தது. ஸம்ஸாரதசையில் மாத்திரமல்ல. முக்தியிலும் ஜ்ஞாத்ருத்வத்தை ஜ்ஞாபிக்கிறார்—ஜாநாத்யேவாயம் என்று. அவதாரணத்தின் ஸங்கோசமில்லாமையால் முக்தியிலும் ஜ்ஞாத்ருத்வம் ஸித்திக்கிறது. முக்தியில் ஜ்ஞானத்தை நிஷேதிக்கிற ச்ருதிகளுக்கு விஷயங்களின் பாகுபாட்டைக் காண்பிக்கிறார்—ந பச்ய. என்றும் ஸ உத்தம: என்றும் புருஷனை அடைந்திருக்கிற முக்தனுக்கு ஜ்ஞாத்ருத்வமானது அனுவர்த்தித்துக்கொண்டிருக்கும்பொழுதே தேஹேந்த்ரியங்களுடைய நாசத்தைக் காண்பிக்கிறார்— ஏவம் என்று. அந்தக்கரணத்தைக்காட்டிலும் மேலானவனுக்கு ஜ்ஞாத்ருத்வத்தைக் காண்பிக்கிறார்—தஸ்மாத் வா என்று.

---

* பாஹுள்யம்—அதிகமாயிருத்தல். ‡ வைரள்யம்—ஸ்வல்பமாகயிருத்தல் அல்லது இடைவெளியோடு கூடியிருத்தல்.

இந்த அர்த்தம் ஸூத்ரகாரரால் கருதப்பட்டிருக்கிறதென்பதைக்கூறுகிறார்— வக்ஷ்யதி ச என்று. மூந்தி ஸூத்ரத்தை எடுத்தது அஹமர்த்தத்திற்கு ஆத்மத்வம் ஸூத்ரகாராபிமதமென்பதைத் தெரிவிப்பதற்காக. இந்த இடத்தில் உபாதானமானது ஜ்ஞாநகுணகத்வ ஜ்ஞாநஸ்வரூபத்வங்களைச் சொல்லுகிற சுருதிகளுக்கு அவிரோதம் ஸூத்ரகாராபிமதமென்று தெரிவிப்பதற்காக ஜ்ஞாநமாக இருத்தலால் ஜ்ஞாநம் ஜ்ஞாநாந்தராச்ரயம் அல்லவென்று சொல்லப்படுமேயானால் வ்யாப்த்யநுரோதத்தால் இவ்வாறு சொல்லப்படுமேயாகில் அப்பொழுது தர்மமாக ஸ்வீகரிக்கத்தக்கது. சுருதிபலத்தினால் ஸ்வதந்த்ரமாக ஸ்வீகரிக்கப்படுகிறதேயாகில் அப்பொழுது ச்ருதிபலத்தினாலேயே ஜ்ஞாநாச்ரயத்வம் அங்கீகரிக்கப்படலாம். ஜ்ஞாநாச்ரயத்வமானது தர்மபூத ஜ்ஞாநத்வ ப்ரயுக்தமாதலால் வியாப்தி விரோதமில்லை.

அத: ஸ்வயம்ப்ரகாஶோऽயமாத்மா ஜ்ஞாதைவ, ந ப்ரகாஶமாத்ரம்।
ப்ரகாஶஸ்யைவ கஸ்யசிதேவ ஸதஃ ப்ரகாஶ:, தீபாதிப்ரகாஶவத்।
தஸ்மாந்நாத்மா ஸம்வித்மாத்ரமர்ஹதி ஸம்வித்। ஸம்வித நுபூதிஜ்ஞாநா
திஶப்தாஸ் ஸம்பந்திஶப்தா இதி ச ஶப்தார்த்தவித:। நஹி லோகே வேதே
ச ஜாநாத்யாதேரகர்மகஸ்யாகர்த்ருகஸ்ய ச ப்ரயோகோ த்ரு
ஷ்ட:॥

ஸ்ரீபாஷ்யம்—

ஆகையால் ஸ்வயம் ப்ரகாசனான இந்தஆத்மா ஜ்ஞானாச்ரயனே ப்ரகாச மாத்திரமல்ல ப்ரகாசஸ்வரூபனாக இருப்பதினாலேயே தீபம் முதலியவற்றின் ப்ரகாசம்போல் ஒரு வஸ்துவினுடையதாகவே ப்ரகாசம் இருக்கவேண்டும். ஆதலால் ஸம்வித்தானது ஆத்மாவாக இருப்பதற்குத் தகுதியுள்ளதல்ல. ஸம்வித், அநுபூதி, ஜ்ஞாநம், முதலிய சப்தங்கள் ஸம்பந்தி சப்தங்களென்றும் சப்தார்த்தங்களை அறிந்தவர்கள் நிர்ணயித்திருக்கிறார்கள். உலகத்திலும் வேதத்திலும் கர்ம கர்த்தாக்களில்லாத "ஜாநாதி" முதலிய தாதுக்களின் ப்ரயோகம் முன்காணப்பட்டதில்லை.

ச்ருதப்ரகாசிகை.—

ச்ருதியினால் ஜ்ஞாத்ருத்வ ஸ்வயம்ப்ரகாசத்வ ஸித்தியை நிகமனம் செய்கிறார்—அத: என்று. அய்யா! நான் குடத்தை அறிகிறேன், என்கிற இடத்தில் ஜ்ஞாநத்திற்கு ஜ்ஞாதாவினுடைய ஸம்பந்தம் கொடுக்கப்படுகிறதென்று ஒப்புக்கொள்ளத்தக்கது. அப்படி இல்லாவிட்டால் ஸ்வஜ்ஞாந பரஜ்ஞாந விபாகத்திற்கு துர்க்ரஹத்வ ப்ரஸங்கம் வருவதால். தன்ஸம்பந்தமுள்ளதாக அறியப்பட்டிருக்கிற ஜ்ஞாநமானது ஸம்பந்தத்தின்

---

* அநுரோதம்—அநுஸரித்தல்.

ப்ரதீதியில்லாவிடில் எவ்வாறு ஸ்வஜ்ஞாநமென்று வ்யவஹரிக்கப்படும்? அதனால் தன் ஸம்பந்தம் அறியப்படவே அறியப்படுகிறது. அந்த ப்ரதீதியானது அஹமர்த்தத்தால் உண்டாகிறதில்லை. அஹமர்த்தமானது ப்ரத்யக்காகவும் அநுகூலமாகவும் ஏகமாகவும் தானாக ப்ரகாசிக்கிறது. அஹமர்த்தமானது அர்த்தாந்தரத்தை விஷயீகரிப்பதற்கு ஸாமர்த்திய முள்ளதல்லவென்றலலவோ உங்களுடைய கொள்கை. ஆகையால் தர்மபூத ஜ்ஞாநத்தினாலேயே ஸம்பந்தத்தின் ப்ரதீதி. ஸம்பந்தமும் ஸம்பந்தி வஸ்துத்வயமில்லாவிடில் அறியப்படுகிறதில்லை என்பதினால் ஜ்ஞாத்ருஜ்ஞாநங்கள் இரண்டுக்கும் ஸம்பந்த ப்ரகாசகமான ஜ்ஞாநாந்தர வேத்யத்வம் வரும். அதனால் ஸ்வதோவபாஸம் ஜ்ஞாநாந்தரத்தால் அவபாஸமென்கிற இரண்டு அவபாஸங்களில்லாமையால் ஜ்ஞாநாந்தரத்தாலேயே ப்ரகாசிக்கத்தக்கதாக இருப்பதால் ஸ்வப்ரகாச்யத்வம் ஸித்தியாமையால் ஜ்ஞாதாவுக்கும் ஜ்ஞாநத்திற்கும் ஜடத்வம் வரும். மேலும் ஜ்ஞாநாந்தரத்தினால் ஸம்பந்த ப்ரதீதியானது அவச்யம் வரததக்கதாக ஆகுமேயானால் ஸமபந்த விஷயஜ்ஞாநத்தோடுகூட ஜ்ஞாத்ரு ஸம்பந்தத்திற்கும் ஜ்ஞாநாந்தரத்தால் ப்ரதீதியின் அவச்யம் பாவத்தால் ஸம்பந்த ஜ்ஞாநபம்பரை ப்ரஸங்கிக்கும். அவச்யம்பாவாபாவத்தில் எல்லாஜ்ஞாநங்களிலும் அஹம ஜாநாமி என்று ஜ்ஞாநஜ்ஞாத்ரு ஸமபந்த ப்ரதீதியானது உண்டாகாது. இவ்வண்ணமல்ல. ஸ்வயம்ப்ரகாசப்ரத்யக்ஷத்தினாலேயே ஸமபந்தப்ரதீதி வருவதால் நியதமான விசேஷணவிசேஷ்யபாவமல்லவோ ஸம்பந்தம். அஹமர்த்தமானது தன் விசேஷ்யதையையே ஸ்வபாவமாகக்கொண்டதாக ப்ரகாசிப்பிக்கிறது. தர்மபூதஜ்ஞாநமும் தன் ஸ்வரூபத்தை விசேஷணதையையே ஸ்வபாவமாகக்கொண்டதாக ப்ரகாசிப்பிக்கிறது விசேஷண விசேஷ்யபாவததிற்கு பரஸ்பர ப்ரதியோகித்வமும் ஜ்ஞாதா ஜ்ஞானம் இவ்விரண்டினுடைய சேர்ந்திருததலாலேயே அறியப்படுகிறது.

அய்யா! ஸம்பந்த ப்ரதீதியில் ஸம்பந்திகளுடைய ஸஹாவபாஸமும் ஒரு ஜ்ஞாநத்தினால் அறியத்தக்கதென்கிற தன்மை இல்லாவிடில் பொருந்துகிறதில்லை. ஆதலால் ஜ்ஞாத்ரு ஜ்ஞாநங்கள் இரண்டுக்கும் ஜ்ஞாநாந்தரவேத்யத்வம் ஸம்பவிக்கவேண்டிவரும். ஸுரபி புஷ்பம், இது முதலிய ஸதலத்தில் வேறான ஸாமக்ரிகளால் அறியத்தக்கதாக இருந்தபோதிலுங்கூட கந்தம் புஷ்பம் இரண்டும் ஸம்பந்த ப்ரதீதிவேளையில் ஒரு ஜ்ஞாநத்தினால் அறியத்தக்கதன்மையல்லவோ காணப்படுகிறது என்று சொல்லப்படுமேயாகில், அல்ல. அந்த இடத்தில் ஸம்பந்திகளுக்கு ஸம்பந்தத்தோடுகூட ஏக ஜ்ஞாநகம்யத்வத்திற்கு ஸஹாவபாஸ ப்ரயுக்தத்வமில்லாமையால் ஸம்பந்திகளுக்கு அந்த இடத்தில் ஏக ஜ்ஞாந கம்யத்வம் ஜடதவ ப்ரயுக்தமன்றோ, இந்த இடத்தில் ஸ்வப்ரகாசத்வத்தால் தானாகவே சேர்ந்து அவபாஸிக்கின்ற ஜ்ஞாதருஜ்ஞாநங்கள் இரண்டுக்கும் விசேஷண விசேஷ்யதைகஸ்வபாவத்வரூப ஸம்பந்தக்ரஹமானது ஜ்ஞாநாந்தரத்தை அபேக்ஷியாமல் உபபன்னமாகிறது. ஆதலால் ஸம்பந்தாக்ரஹஸ்வபர ஜ்ஞாநவிபாகாபாவ ஸம்பந்தஜ்ஞாநபரம்பராப்ரஸங்கங்கள் தூரததில் ஓட்டப்பட்டன. இவ்வாறாக ஜ்ஞாத்ருத்வஸ்வயம்ப்ரகாசத்வோபபாதனத்தினால் "சின்மாத்ர வ்யதிரிக்தத்வாத்" என்கிற ஜடதவ ஸாதகஹேதுவானது நிரஸிக்கப்பட்டதாக ஆகிறது. ஜ்ஞாநவ்யதிரிக்தமாதலால் ஜடத்தைச் சொல்பவனால் ஸ்வயம் ப்ரகாச வ்யதிரிக்ததவம் ஹேதுவாக சொல்லப்பட்டதா? அல்லது விஷயப்ரகாசாந்யத்வமா? முதல் பக்ஷத்தில் ஸாத்யாவிசிஷ்டத்வம் இரண்டாவது பக்ஷத்தில் பிரஹ்மததினிடத்தில் வ்யபிசாரம், ச்ருதிமுதலியதின் @ பாதமும்.

@ பாதம்— ஸாத்யாபாவமுள்ள பக்ஷம்.

அப்படிக்கின்றி ஸாச்ரயத்வ விஷயத்தில் தர்கத்தைக்கூறுகிறுர்— ப்ரகாசத்வா தேவ என்று. ப்ரகாசத்வாத் - விஷயத்தோடு நேராக ஸம்பந்தித்து நேராகவோ பரம் பரையாகவோ அறியப்படாநின்றிருப்பது பற்றி § அபரோக்ஷ வ்யவஹாராநுகுண்யத் திற்கு ஹேதுவாக இருப்பதாலென்று பொருள். இதனுல் ஸ்வரூபபூதமான ஜ்ஞா நேந்த்ரியலிங்காதிகளுக்கு வ்யாவ்ருத்தி ஸித்தித்தது. வேறுஹேதுவையும் சொல்லு கிறுர்—ஸம்விதநுபூதி என்று. ஸம்பந்திசப்தத்வம் சப்தஸ்வபாவாதீநமென்று ஸந்தே ஹித்துச் சொல்லுகிறுர்—நஹி லோகவேதயோ: என்று. எந்த இடத்தில் அர்த்த ஸ்வரூபத்திற்கு வேறுபாடு காணப்படுகிறதோ அந்த இடத்தில் சப்தஸ்வபாவத்திற்கு அதீனமாக இருத்தல் ஆச்ரயிக்கத்தக்கது. ‘ தாரா:” இது முதலிய இடங்களில் பஹுத்வம் முதலியவற்றுக்குப்போல. எங்கே வேறுபாடில்லையோ அந்த இடத்தில் அர்த்த ஸ்வபாவா யத்தத்வமே. எப்படி பார்யா இது முதலியவைகளில் ஏகத்வம் முதலிய வற்றுக்கோ, அப்படியே லோகவேதஙகளில் ஸகர்மகர்த்ருத்வம் காணப்படுவதால் ஸம்ப ந்திசப்தத்வமானது அர்த்த ஸ்வபாவாயத்தமே என்று அபிப்ராயம். அன்றிக்கே கர்ம கர்த்ருஸம்பந்தித்வம் வ்யுத்பத்தி நிமித்தமாக இருக்கட்டும்,ப்ரவ்ருத்திநிமித்தமல்ல,அதோ ஜ்ஞப்திமாத்ரமென்று சொல்லப்படுமேயாகில் கூறுகிறுர்—நஹிலோக என்று. ப்ரவ்ருத்தி நிமித்தாந்தர கல்பனம் ப்ரயோகாதீனமன்றே. ப்ரயோகமும் ஸம்பந்தியிலேயே ஆகத மென்பதினுல் அர்த்தாந்தர கல்பனை ஸம்பவியாது. ஸ்வரூபபூதஜ்ஞாநவாசி சப்தங்க ளுக்கு ஸம்பந்தி சப்தத்வமானது உன்மதத்திலும் உபபன்னமாகாதென்று சொல்லப் படுமேயானுல் அல்ல. ஸ்வரூபகோசரஙகளும் ஸ்வயம்ப்ரகாசத்வத்தில் ரூடங்களுமான ஜ்ஞாநாதிசப்தங்கள் அநுபூதி முதலிய சப்தங்களைக்காட்டிலும் வேறு சப்தங்களா தலால். ஆகையால் ஸம்பந்தி சப்தத்வோபதேசமோ வென்றுல் தர்மபூதஜ்ஞாநத்தில் அவகாசமுள்ளது. நம்முடைய மதத்தில் விஷயாச்ரய ஸம்பந்திஜ்ஞாநத்திற்கே விஷ யாச்ரய ஸம்பந்தபாதத்தால் நிராச்ரயத்வமும் நிர்விஷயத்வமும் ஒப்புக்கொள்வதால் உன்மதத்தில் ஸம்பந்தி சப்தத்வோபதேசம் ப்ரயோஜநமற்றதென்று கருத்து.

யச்சாஜட³த்வாத்ஸம்விதே³வாத்மேதி ; தத்ரேத³ம் ப்ரஷ்டவ்யம். அஜட³த்வமிதி கிமித³முச்யதே ?; ஸ்வஸத்தாப்ரயுக்தப்ரகாஶமானத்வமிதி சேத்; ததா² ஸதி தீ³பாதி³ஷ்வநைகாந்த்யம் । ஸம்வித³திரிக்தப்ரகாஶ்யமானா நஹ்யபமதேநாவஸிதிவிஷயோ ராயஶ்ச । அவ்யபி⁴சரிதப்ரகாஶஸத்தாகத்வமிதி சேத் ஸம்வாதி³ஷ்வ வ்யபி⁴சாராநிரஸ்த: ॥

ஸ்ரீபாஷ்யம்:—

அஜடமாதலால் ஸம்வித்தே ஆத்மாவென்று எது சொல்லப்பட்டதோ அந்த விஷயத்தில் இது கேழ்க்கத்தக்கது. எது அஜடத்வமென்று எண் ணப்பட்டிருக்கிறது ? தன்னுடைய ஸத்தையினுல் உண்டுபண்ணப்பட்ட ப்ரகாசத்துடன்கூடி இருத்தலென்று சொல்லப்படுமேயானுல் அப்பொழுது

---

§ அபரோக்ஷம் — ப்ரத்யக்ஷம்.

தீபம் முதலியவைகளில் வ்யபிசாரம் வரும். ஸம்வித்தைக்காட்டிலும்வேறான ப்ராகாசதர்மத்தை ஒப்புக்கொள்ளாமையால். அஸித்தியும் விரோதமும் தவறாத ப்ரகாசமுள்ளஸத்தையோடுகூடி இருத்தலும் ஸுகம் முதலியவைகளில் வ்யபிசாரம் வருவதால் நிரஸிக்கப்பட்டது.

ச்ருதப்ரகாசிகை—

அதற்குமேல் ஜடமாக இருப்பதால் ஸம்வித்துக்கு ஆத்மத்வ ஸமர்த்தனத்தை தூஷிப்பதற்காக அநுவதிக்கிறார்—யச்சோக்தம் என்று. அஜடத்வமென்பது தன்னுடைய ஸத்தையினால் உண்டுபண்ணப்பட்ட ப்ரகாசத்வமா ? அல்லது தவறாத ப்ரகாச ஸத்தையோடுகூடி இருத்தலா ? அல்லது தனக்கு ப்ரகாசித்தலா? அல்லது தனக்குத் தான் ப்ரகாசித்தலா ? அல்லது ஸ்வயம்ப்ரகாசத்வமா ? என ஐந்து விதமான விகல்பத்தை அபிப்ராயப்பட்டு கூறுகிறார்—அஜடத்வம். என்று. கிமபிப்ரேதம் என்று. 'அஹம்ஜாநாமி' என்கிற ப்ரத்யக்ஷபாதம் எல்லோருக்கும்பொதுவானதூஷணம்.முதலில் ஸ்வஸத்தையினால் உண்டுபண்ணப்பட்ட ப்ராகாசத்வபக்ஷத்தை தூஷிப்பதற்காக சொல்லுகிறார்— ஸ்வஸத்தா என்று. ஸ்வஸத்தா ப்ரயுக்த: ப்ரகாச: யஸ்ய என்று பஹுவ்ரீஹிஸமாஸம் - சொல்லப்போகிற அஸித்தியின் தூஷணத்திற்கு உபயோகியான பேதத்தை ஜ்ஞாபிப்பதற்காக ஸ்வஸத்தாப்ரயுக்தசப்தம். அநைகாந்த்யத்தைச்சொல்லுகிறார்— ததாஸதி என்று. தன்பக்ஷத்தில் ஜ்ஞாதா ஆத்மாவாதலால் ‡ ஸபக்ஷமாக இருக்கிற அதிலும் $ விபக்ஷமாக இருக்கிற ஆத்மாவல்லாத தீபத்தினிடத்திலும் இருப்பதால். பக்ஷத்ரய வ்ருத்தித்வரூபமான அநைகாந்த்யம் கூறப்பட்டது. அந்யபக்ஷத்தில் அநிய தத்வமே அநைகாந்த்யம் ஸபக்ஷமில்லாமையால் வேறு இரண்டு தூஷணங்களைக்கூறுகிறார்—ஸம்விததிரிக்த என்று. ஸம்வித் ப்ரயோஜிகை - ப்ராகாசம் ப்ரயோஜ்யம். அதைவிட அதிகமாக ஒன்றையும் ஒப்புக்கொள்ளாததால் அஸித்தி. ஒப்புக்கொள்ளில் நிர்விசேஷத்வ விரோதம். இந்த அஸித்தி விரோதங்கள் இரண்டும் விகல்பஸர்வசிரஸ் ஸாதாரணங்களாக அநுஸந்திக்கத்தக்கவைகள். அன்றிக்கே பக்ஷவிபக்ஷங்களிலேயே வர்தமானத்வம் விரோதம். பக்ஷமாக ஆய் இருக்கிற ஸம்வித்திலும் விபக்ஷமானதீபம் முதலியதிலும் இருப்பதால். அன்யனுடைய மதத்தைமாத்ரம் பர்யாலோசனை செய்யுங்கால் விரோதம் கூறப்பட்டது. இந்த ஸ்வஸத்தாப்ரயுக்த ப்ரகாசத்வமென்கிற இடத்தில் ப்ராகாசசப்தத்தினால் நேராகவோ பரம்பரையாகவோ வ்யவஹாராநுகுண்யம் விவக்ஷிக்கப்பட்டிருக்கிறதா ? பரம்பரையினாலேயோ? அல்லது நேராகவேயா? என்று விகல்பம் அபிப்ராயப்படப்பட்டிருக்கிறது. முதல் பக்ஷமானது ஸ்வபரதர்சன பர்யாலோசனையினால் கூறப்பட்டிருக்கிற அநைகாந்த்ய விரோதங்களுள் ஒன்றினால் நிரஸிக்கப்பட்டதாக ஆகிறது. இரண்டாவதிலோவென்றால் அஸிததிபரம்பரையினாலேயே வ்யவஹாராநுகுண்யமானது ஜ்ஞப்தியில் உபயவாதிகளுக்கும் அநபிமதமாதலால், மூன்றாவதில் ஸத்தையைவிட வேறான ப்ரகாசத்தின் அநங்கீகாரத்தை க்காரணமாகக்கொண்ட அஸித்தியும் நிர்விசேஷத்வ விரோதமும் வருமென்று அபிப்ராயம். இரண்டாவது பக்ஷத்தை நிரஸிக்கிறார்—அவ்யபிசரித என்று. ந வ்யபிசரதி ப்ரகாச:யஸ்ய ஸத்தாயாம் ஸ: அவ்யபிசரித ப்ரகாச ஸத்தாக: -ப்ரயோஜ்ய ப்ரயோஜகத்வமில்லாமலிருந்த போதிலும் வித்யமானதசையில் எப்பொழுதும் ப்ராகாசித்தல் என்று அர்த்தம். அதற்கு ஆத்மத்வமில்லாமையால் ஸம்ப்ரதிபன்னங்களான ஸுகதுக்காதிகளில் வ்யபிசாரம் சொல்லப்பட்டது.

‡ ஸபக்ஷம்— நிச்சிதமான ஸாத்யமுள்ளது.
$ விபக்ஷம்— நிச்சிதமான ஸாத்யாபாவமுள்ளது.

யத்³யுச்யேத — ஸுகா²தி³ரப்யாஹிதப்ரகாஶமாநத்வேந ஸ்வேந ப்ரகாஶமாநதயா க⁴டாதி³வஜ்ஜட³த்வேநாநாத்மா — இதி । ஜ்ஞாநம் வா கிம் ஸ்வஸ்மை ப்ரகாஶதே ? ததபி ஹ்யந்யஸ்யைவாஹமஸ்ய ஜ்ஞாது: ப்ரகாஶதே, ஸுக²ம் ஸுகீ²தி ஜ்ஞாநாத்³ப்ரஸித்³தி: । அத: ஸ்வஸ்மை ப்ரகாஶமாநத்வாத³ஜாட்³யம் ஸம்விதோ³ அஸித்³த⁴ம் । ஸ்வாத்மாநம் ப்ரதி ஸ்வஸத்தயைவ ஸித்⁴யந்நஜடோ ஹ்யஹமர்த²: । ஜ்ஞாநஸ்யாபி ப்ரகாஶதா தத்ஸம்ப³ந்தா⁴யத்தா । தத்க்ருதைவ ஹி ஜ்ஞாநஸ்ய ஸுகா²தே³ரிவ ஸ்வாஶ்ரயசேதநம் ப்ரதி ப்ரகடத்வம் ப்ரத்யப்ரகடத்வஞ்ச । அதோ ந ஜ்ஞப்திமாத்ராத்மா அபி து ஜ்ஞாதைவாஹமர்த²: ॥

ஸ்ரீபாஷ்யம்.—

ஸுகம் முதலியது தவறுத ப்ரகாசத்துடன் கூடியதாக இருந்தபோதி லும் அந்யனுக்கு ப்ரகாசிக்கிற ஸ்வபாவமுள்ளதாக இருப்பதால், கடம்முத லியதுபோல் ஜடமாதலால் ஆத்மாவல்லவென்று சொல்லப்படுமேயாகில்; ஜ்ஞா நம் தானாகட்டும் தனக்கு ப்ரகாசிக்கிறதா ? அதுவும் நான ஸுகமுள்ளவன் என்பதுபோல நான் அறிவுள்ளவனாக இருக்கிறேன என்று தன்னைக்காட்டி லும் வேறாக இருக்கிற அஹமர்த்தமான ஜ்ஞாதாவுக்கே ப்ரகாசிக்கிறது. ஆகையால் தனக்கு ப்ரகாசித்தலென்கிற அஜடத்வமானது ஸம்வித்தில் அஸித்தம். ஆதலால் தன் ஆத்மாவைக்குறித்து தன் ஸத்தையினாலேயே ஸித்திக்கிற அஜடமான அஹமர்த்தமே ஆத்மா. ஜ்ஞானத்திற்கும் ப்ரகாசதையானது அந்த ஆத்ம ஸம்பந்தத்தைச்சார்ந்திருக்கிறது. ஸுகம் முதலி யவற்றுக்குப்போல ஜ்ஞானத்திற்கு தனக்கு ஆச்ரயமான சேதனனைக்குறித்து ப்ரகடத்வமும் மற்றவனைக்குறித்து அப்ரகடத்வமும் அந்த ஆத்மஸம்பந் தத்தாலன்றோ உண்டு பண்ணப்பட்டிருக்கிறது. அதனல் ஜ்ஞப்திமாத்ரமா த்மா வல்ல. பின்னையோ ஜ்ஞாதாவான அஹமர்த்தமே.

சுருதப்ரகாசிகை—

பிறகு அதின் பரிஹாரமுகத்தால் தனக்குத்தான் தோன்றுதலென்கிற பக்ஷத்தைத் தொடங்குகிறார்—யத்யுச்யேத என்று. பரிஹரிக்கிறார்—ஜ்ஞானம்வா என்று. யாருக்கு என்று கேட்கில் கூறுகிறார்—ததபி என்று. பிறருக்குத்தோற்றுதலை உபபாதிக்கிறார்—அஹம்என்று. ஆகையால் இவ்விதஸ்வரூபமுள்ள அஜடத்வம அஸித்தமென்று சொல்லு கிறார்—அத: என்று. அதற்குமேல் நான்காவது பக்ஷத்தைதூஷியாநின்றுகொண்டு அஸி த்தியைக்கூறுகிறார்—துல்யமாத் என்று. ஸ்வயம்ப்ரகாசதவபக்ஷத்திலும் ஸ்வயம்ப்ரகாசத் வமாவது ஜ்ஞானகர்மதை இன்றி வ்யவஹாரத்திற்கு அநுகுணமாக இருத்தலா அல்லது

ஜ்ஞானாந்தரத்தை அபேக்ஷியாததப்ரகாசத்வமா? என்று அபிப்ராயப்படப்பட்டிருக்கிற விகல்பத்தில் முதன்மையான பக்ஷமானது 'தஸமாத்'' என்கிற க்ரந்தத்தால் தூஷிக்கப்பட்டது. இதர ஆத்மாக்களை விலக்குவதின் பொருட்டு ஸ்வாத்மாநம் என்று சொல்லப்பட்டது 'ஸ்வஸத்தயைவஸித்யந்' என்பதினால் ஸ்வயம் ப்ரகாசத்வம் சொல்லப்பட்டது. தனக்குத் தான் ப்ரகாசித்தல் அஹமர்த்தத்திற்கு அதிகம். தன பொருட்டு பாஸிக்கிற வஸ்துவுக்கு தானாக பாஸிக்கிற தன்மை இருக்கிறது என்கிற அபிப்ராயத்தால் ''ஸ்வாத்மாநம் ப்ரதிஸ்வஸத்தயைவ'' என்று கூறப்பட்டது. அதனால் ஜ்ஞானகர்மதை இன்றி வ்யவஹாரானுகுணத்வம் ஜ்ஞாதாவினிடத்திலுமிருக்கிறதாதலால அது ஸ்வபக்ஷத்தில் வ்யபிசாரமுள்ளது. விபக்ஷபூதமான ஆனாத்மாவான ஜ்ஞாதாவினிடத்திலும இருப்பதாலென்று காண்பிக்கப்பட்டது. ஜ்ஞானாந்தரத்தை அபேக்ஷியாத ப்ரகாசம ஸம்வித்தில் அஸித்தம். அது ஸ்வரூபபூதஜ்ஞானாதீனமாதலால் அஹமர்த்தத்திற்கே அது என்கிற அபிப்ராயமானது ''ஸத்தயைவ'' என்றதனால் ஸூசிப்பிக்கப்பட்டது. அதையே விவரிக்கிறார்— ஜ்ஞாநஸ்யாபி எனறு. அதின் ஸமபந்தாதீனத்தைய உபபாதிக்கிறார்— தத்க்ருதமேவஹி என்று ஜ்ஞானஸ்புரணத்திற்கு ஆச்ரய ஸம்பந்தங்கூட ஸாமக்ரியில் உளளடங்கியது அஜடமாக இருப்பதால். ஸம்விததுக்கு ஆதமதவாஸித்தியை நிகமிக்கிறார்—அத: என்று.

அத² யது³க்தம் அநுபூ⁴தி: பரமார்த²தோ நிர்விஷயா நிராஶ்ரயா ச ஸதீ ப்⁴ராந்த்யா ஜ்ஞாத்ருதயாऽவபா⁴ஸதே, ரஜததயேவ ஶுக்தி:, நிரதி⁴ஷ்டா²நப்⁴ரமாநுபபத்தே:— இதி । தத³யுக்தம்; ததா² ஸத்யநுப⁴வஸாமாநாதி⁴கரண்யேநாநுபூ⁴தாऽஹமிதி ப்ரதீயேத, 'அநுபூ⁴திரஹம்' இதி, சைதந்யஸ்ய ஜ்ஞாத்ருத்வாகாரதயா ரஜதா ஶுக்திரிவ । அத்ர து ப்ரத்யயஸாமாநாதி⁴கரண்யேநைவாநுபூ⁴த்யாஶ்ரயத்வேநாத்மாநம் விஶிநஷ்டி, அஹம் ஜாநே இதி ப்ரத்யக்ஷம் । ததா²ஹி ''அநுப⁴வாம்யஹம்'' இதி ப்ரதீதி: । ததே³வம் ஸ்தி²தேऽநுபூ⁴திவிஶிஷ்டம் ப்ரகாஶமநுப⁴வாம்யஹமிதி ப்ரத்யயோ ஜ்ஞாதாரம் ''அஹம் ஜாநே'' இதி ப்ரத்யயவிஶேஷணபூ⁴தாநுபூ⁴திராத்மாவிநா கத²மிவ ப்ரதிபா⁴யேத ? ॥

ஸ்ரீபாஷ்யம்—

அதற்குமேல் அநுபூதியானது உண்மையாகவே விஷயமில்லாததாகவும் ஆச்ரயமில்லாததாகவுமிருந்துகொண்டு § நிரதிஷ்டான ப்ரமம் பொருந்தாததாலால் சிப்பியானது வெள்ளியாகத் தோன்றுவதுபோல் ஜ்ஞாதாவாகத் தோன்றுகிறதென்று எது சொல்லப்பட்டதோ; அது ஸரியல்ல.

---

§ அதிஷ்டானம்— ஆதாரம்.

அப்படியாகில் அநுபவத்தோடு ஸமாநாதிகரணமாக அநுபவிதாவான அஹமர்த்தமானது முன்னிலையிலிருக்கிற ப்ரகாசமுள்ள த்ரவ்யஸ்வரூபமாக வெள்ளி முதலியதுபோல "அஹம் அநுபூதி:" என்று அறியப்பட வேண்டியதாக ஆகும். இவ்விடத்திலோ வென்றால் இந்த அநுபூதியானது வேறாகத்தோன்றுகிறதாகவே இருந்துகொண்டு தண்டமானது தேவதத்தனைப்போல அர்த்தாந்தரமான அஹமர்த்தத்தை விசேஷிக்கிறது. இதை நிரூபிக்கிறார்—நான் அநுபவிக்கிறேன் என்றல்லவோ ப்ரதீதி உண்டாகிறது. ஆதலால் இவ்வண்ணம் அநுபூதியுடன் கூடியதாக அஸ்மதர்த்தத்தை ப்ரகாசிப்பிக்கிற "நான் அநுபவிக்கிறேன்" என்கிற ஜ்ஞாநமானது தண்டமாத்ரத்தில் 'தண்டீ தேவதத்த:' என்கிற ஜ்ஞாநம் போல விசேஷணமாக இருக்கிற அநுபூதிமாத்ரத்தை அவலம்பித்து எவ்வாறு ப்ரதிஜ்ஞை பண்ணப்படலாம்.

ச்ருதப்ரகாசிகை:—

பிறகு அஹமர்த்தத்திற்கு ப்ராந்திஸித்தத்வத்தை ஆக்ஷிப்பதற்கு அநுவதிக்கிறார்— அநயதுக்தம் என்கிற இது முதலியதால். ஸம்வித்தும் மிதயையாக ஏன் இருக்கக்கூடாது என்று கேட்கில் கூறுகிறார்— நிரதிஷ்டாந என்று. அநுபூதியைத்தவிர்தத வஸ்துக்களுக்கு அபாரமார்த்ய நிச்சயத்தால் இந்த ஹேது உரைக்கப்பட்டது. ஆக்ஷிக்கிறார்— ததயுக்தம் இது முதலிய க்ரந்தத்தால். அதிஷ்டாந ஸாமாநாதிகரண்யத்தால அத்யஸதப்ரதீதியை த்ருஷ்டாந்தத்தினால் உபபாதிக்கிறார்— புரோவஸ்தித என்று. ¶ பக்ஷத்தில் அதன் மாறாட்டத்தைக் காண்பிக்கிறார்—அத்ர து என்று. ப்ருதகவபாஸமாநா - வ்யதிகரணமாக அவபாஸிக்கின்ற. அப்படி ப்ரதீதியைக் காட்டுகிறார்—ததாஹி என்று அதனால் என்னவென்று கேட்கில் சொல்லுகிறார்—ததேவம் என்று. ததேவம் - ஆதலால் இங்கு சொல்லிய வண்ணம்.

தர்மதர்மிபாவப்ரதீதியில் விசேஷணமாக ப்ரதிபன்ன வஸ்துவில் அந்தவிசேஷண விசிஷ்ட வஸ்துவின் அத்யாஸம் பொருந்தாது என்று அர்த்தம். அதில் ஸம்பந்தமாத்ராத்யாஸம் இல்லை அப்படி ஆனால் ஸம்பந்தியான ஜ்ஞாதாவுக்கு பாரமார்த்யம் ப்ரஸங்கிப்பதால. அப்படி ஒப்புககொள்ளப்பட்டிருக்கவில்லை. அய்யா! விசேஷணததில் விசிஷ்டாத்யாஸம காணப்படுகிறது. ப்ரபையில் மணியினது அத்யாஸம்போல இந்த ஆக்ஷேபமானது ப்ருதகவபாஸமாநா என்கிற க்ரந்தத்தால் பரிஹரிக்கப்பட்டது. அப்படி ப்ரபையானது வையதிகரண்யத்தால் விசேஷணமாக இருககவில்லையன்றே. பின்னையோ, அயம மணி:, என்று மணியின் அத்யாஸத்திற்கு அதிஷ்டாநமாக இருக்கிற ப்ரபையானது மணியோடு ஸமாநாதிகரணமாகவன்றே ப்ரகாசிக்கிறது.

அய்யா! அநுபவஸாமாநாதிகரண்யத்தினால் ப்ரதீதிப்ரஸஞ்ஜநம் யுக்தமல்ல. திக்குக்களில் அழுக்கு, ஆகாயததில் சிவப்புநிறம், என்று வையதிகரண்யத்தாலும் அத்யாஸம் காணம்படுவதால். இவ்வணணமல்ல, இரண்டு பதங்களின் ப்ரவ்ருத்தி நிமித்தஙகளுக்கு ஒரு ஆதாரத்தில் இருப்பல்லவோ ஸாமாநாதிகரண்யம். இந்த இடத்தில்

¶ பக்ஷம்—ஸந்தேஹத்திற்கு ஆஸ்பதமான ஸாத்யமுள்ளது.

$ திக்த்வம் § மாலின்யம் * நபஸ்த்வம் † ஆருண்யம், இந்த இரண்டுக்கும் ஒரே ஆச்ரயத்தில் இருப்பதால் அர்த்தத்தால் ஸாமாநாதிகரண்யமிருக்கிறது. || வையதிகரண்யமோவென்றால் சப்தத்தை அணுகி இருக்கிறது. திக்குக்கள் மலினைகள் திக்குக்களில் மாலின்யம் என்கிற ப்ரயோகத்தில் அர்த்தபேதமென்ன. அத்யாஸங்களில் தர்மைக்ய ப்ரதீதியானது விடத்தகாதது ஆதலால் அதே இந்த இடத்தில் ஆபாதிக்கப்படுகிறது அநுபூதிரஹமிதி ப்ரதீயேத என்று. அய்யா! அநுபூதி:, அஹம் என்கிற ப்ரஸங்கம் எவ்விதத்தாலும் சொல்லமுடியாது. அநுபூதித்வமாவது அதிஷ்டாநத்தின் ¶ அஸாதாரணாகாரமன்றோ. அதின் $ அஸ்புரணமானது ப்ரமத்திற்கு அநுகுணமே. *சிப்பியானது, வெள்ளி என்று அறியப்படுகிறதில்லையன்றோ என்று. இங்ஙனமாகில் அநுபூதிக்கு விசேஷமில்லாமையால் வேறுரூபத்தால் ஸ்புரணமில்லாமையாலும் அநுபூதியாக ஸ்புரிப்பதில் விரோதத்தாலும் அதின் அதிகாரணையாஸத்திற்கு உதயமில்லை. விரோதமின்றி க்ருத்ஸ்நாத்யாஸம் சொல்லப்படுமேயாகில் க்ரந்தத்தில் சொல்லப்பட்ட ஸாமாநாதிகரண்ய ப்ரதீதிப்ரஸங்கமானது எவ்விதத்தாலும் தடுக்கமுடியாது. இந்த அபிப்ராயத்தினாலன்றோ முன்னிலையிலிருக்கிற ‡ பாஸ்வர த்ரவ்யாகாரமாக ரஜநம் முதலியது போலென்று உரைக்கப்பட்டது. அய்யா! அத்யாஸத்தின் || அநுதயம் சொல்ல சக்யமன்று. விஷயத்தோடு ஸம்பந்தித்த அநுபூதியானது அஹம்ஜாநாமி என்கிற இடத்தில் ஜ்ஞாத்ரு அத்யாஸத்தில் ப்ரதீதி விஷயமாகிறது, அதோவென்றால் அதிஷ்டானமல்ல. நிர்விஷயையாயும் நிராச்ரயையாயும் இருக்கிற அநுபூதியே அதிஷ்டானம். அதின் அப்ரகாசத்தால் அத்யாஸத்தின் உதயம் என்று சொல்லப்படுகிறது. அந்த இடத்தில் * ப்ரதிபன்ன வஸ்துவுக்கு அதிஷ்டாநத்வம் பொருந்தாததாலும் விஷயாச்ரய சூன்ய ஸம்வித்தானது யோக்யாநுபலப்தியினால் நிரஸிக்கப்பட்டிருப்பதாலும் விஷய ப்ரகாசகஸம்வித்துக்கே ஆத்மத்வத்தை அங்கீகரித்து ஸ்வயம் ப்ரகாசத்வம் உன்னால் ஸமர்த்திக்கப்பட்டிருப்பதாலும் அந்த ஸம்வித்தே அதிஷ்டானமென்று அதின் அவபாஸத்தில் அதற்கு சுக்தித்வம் போல் ப்ரமவிரோதித்வம் இருக்குமேயாகில் அத்யாஸத்திற்கு அநுதயம் என்று.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ஜ்ஞாத்ருத்வமேவ ந ஸித்யேத் ॥

$ திக்த்வம்— திசையின் தர்மம். § மாலின்யம்— அழுக்கு.
* நபஸ்த்வம்— ஆகாயத்தின் தர்மம். † ஆருண்யம்— சிவப்பு நிறம்.
|| வையதிகரண்யம்— வெவ்வேறான ஆதாரங்களில் நிலைபெற்று இருத்தல்.
¶ அஸாதாரணம்— மற்றவைகளுக்கு இல்லாமல் ஒன்றுக்கே உரித்தது.
$ அஸ்புரணம்— ப்ரகாசத்தின் இன்மை. * சிப்பி— கிளிஞ்சல்.
‡ பாஸ்வர— ப்ரகாசமுள்ள வஸ்து. || அநுதயம்— தோன்றாமை.
** ப்ரதிபன்ன— விவாதமின்றி உபயவாதிகளாலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிற.

यदप्युक्तम्—अविक्रियस्यात्मनो ज्ञानक्रियाकर्तृत्वरूपं ज्ञातृत्वं न सम्भवति। अतो ज्ञातृत्वं विक्रियात्मकं जडं विकारास्पदाव्यक्तपरिणामाहङ्कारग्रन्थिस्थमिति न ज्ञातृत्वमात्मनः; अपि त्वन्तःकरणरूपस्याहङ्कारस्य। कर्तृत्वादि हि रूपादिवद् दृश्यधर्मः। कर्तृत्वे साहंप्रत्ययगोचरत्वे चात्मनोऽभ्युपगम्यमाने देहस्येवानात्मत्वपराक्त्वादि प्रसज्येत— इति। नैतदुपपद्यते। देहस्येवाचेतनस्य प्रकृतिपरिणामस्य दृश्यस्वभावस्य पराक्त्वादियोगादन्तःकरणरूपस्याहङ्कारस्य। चेतनासाधारणस्वभावत्वाज्ज्ञातृत्वस्य।

एतदुक्तं भवति—यथा देहादिषु दृश्यत्वपराक्त्वादिहेतुभिः सिद्धत्वनिष्कर्षः प्रत्यक्त्वादेरपि विषयत्वेन, एवमन्तःकरणाहङ्कारोऽपि तद्वत्त्वादेव पराक्त्वादिहेतुसिद्धिमिष्यते— इति॥

अतो विरोधादेव न ज्ञातृत्वमहङ्कारस्य, दृश्यत्वात्। यथा दृश्यत्वं तद्गुणत्वमहङ्कारस्य नाभ्युपगम्यते, तथा ज्ञातृत्वमपि न तद्गुणत्वमभ्युपगन्तव्यम्॥

न च ज्ञातृत्वं विक्रियात्मकम्; ज्ञातृत्वं हि ज्ञानगुणाश्रयत्वम्। ज्ञानस्य नित्यस्य स्वाभाविकधर्मत्वेन नित्यम्। नित्यत्वं चात्मनो "नात्मा श्रुतेः" (ब्र-२-३-१७) इत्यत्र वक्ष्यति। "ज्ञोऽत एव" (ब्र-२-३-१८) इत्यत्र "ज्ञ" इति व्यपदेशेन ज्ञानाश्रयत्वं स्वाभाविकमिति वक्ष्यति। अस्य ज्ञानस्वरूपस्यैव मणिप्रभृतीनां प्रभाश्रयत्ववज्ज्ञानाश्रयत्वमप्यविरुद्धमित्युक्तम्।

ஸ்ரீபாஷ்யம்—

'நான் பருத்தவன்' என்கிற இது முதலிய வ்யவஹாரங்களில் தேஹத்தில் ஆத்மாபிமான முள்ளவனுக்கே ஜ்ஞாத்ருத்வம் ப்ரதிபாஸிப்பதால் ஜ்ஞாத்ருத்வங்கூட மித்யை என்று எது சொல்லப்பட்டதோ அது ஸரியல்ல. ஆத்மாவாக அபிமானிக்கப்பட்டிருக்கிற அநுபூதிக்குங்கூட மித்யாத்வம் வரவேண்டியதாகும்; அநுபூதியுள்ளவனுக்கே ப்ரதீதிவருவதால்.

தன்னைத்தவிர்த்த மற்ற எல்லாவற்றையும் நாசம்செய்கிற தத்வஜ்ஞாநத்தால் பாதிக்கப்படாமலிருப்பதால் அநுபூதிக்கு மித்யாத்வமில்லை என்று சொல்லப்படுமேயாகில ஸந்தோஷம் இங்ஙனமாகில் அதனுல் பாதமில்லாமையாலேயே ஜ்ஞாத்ருத்வமும் மித்யையன்று ¶ விக்கிரியை இல்லாத ஆத்மாவுக்கு ஜ்ஞாநக்ரியாகர்த்ருத்வரூபமான ஜ்ஞாத்ருத்வம் ஸம்பவிக்கிறதில்லை. ஆகலால் ஜ்ஞாத்ருத்வம் விக்ரியாத்மகம், ஜடம், விகாராஸ்பதமான அவ்யக்தபரிணாமாஹங்காரக்ரந்தியில் நிலைபெற்றது. ஆதலால் ஜ்ஞாத்ருத்வம் ஆத்மாவுக்கு இல்லை. பின்னையோ அந்தக்கரணரூபமான அஹங்காரத்திற்கு கர்த்ருத்வம் முதலியது ரூபம் முதலியதுபோல த்ருச்யதர்மமன்றோ. ஆத்மாவுக்கு கர்த்ருத்வமும் அஹம்ப்ரத்யயகோசரத்வமும் ஒப்புக்கொள்ளப்படும் பக்ஷத்தில் தேஹத்திற்குப்போல அநாத்மத்வமும் § பராக்த்வம், ஜடத்வம், முதலியதும் ப்ரஸங்கிக்கும், என்று யாதொன்று கூறப்பட்டதோ; இது பொருந்ாது அந்தக்கரணரூபமான அஹங்காரதிற்கு தேஹத்திற்குப்போல அசேதநத்வம் ப்ராக்ருதி பரிணாமத்வம், த்ருச்யத்வம், $ பராக்த்வம், பரார்த்தத்வம், முதலியவற்றின் ஸம்பந்தந்தாலும் ஜ்ஞாத்ருத்வம் சேதநஸாதாரணஸ்வபாவமாதலாலும்.

இது சொல்லப்பட்டதாக ஆகிறது— எவ்வாறு தேஹம் முதலியது ‡‡ த்ருச்யத்வம் பராக்த்வம் முதலிய ஹேதுக்களால் அவைகளுக்கு விரோதிகளான @ த்ரஷ்ட்ருத்வம் ப்ரத்யக்த்வம் முதலியதைக் காட்டிலும் வேறானதென்று அறியப்படுகிறதோ, இவ்வண்ணம் அந்தக்கரண ரூபாஹங்காரமும் அந்த ‡ த்ரவ்யமாக இருத்தலாலேயே அதே ஹேதுக்களால் அதைக் காட்டிலும் வேறுபட்டதென்று அறியப்படுகிறது என்று ஆதலால் த்ருசித்வத்திற்குப்போல் அஹங்காரத்திற்கு விரோதத்தாலேயே ஜ்ஞாத்ருத்வமில்லை. எவ்வாறு த்ருசித்வமானது அதன கர்மாவான அஹங்காரத்திற்கு ஒப்புக்கொள்ளப்படுகிறதில்லையோ அவ்வாறே ஜ்ஞாத்ருத்வமும் அதின் கர்மாவுக்கு ஒப்புக்கொள்ளத்தக்கதல்ல. ஜ்ஞாத்ருத்வம் விக்ரியாத்மகமல்ல, ஜ்ஞாத்ருத்வமென்பது ஜ்ஞாநகுணாச்ரயத்வமன்றோ. நித்யனான இந்த ஆத்மாவுக்கு ஸ்வாபாவிகதர்மமாதலால் ஜ்ஞாநம் நித்யம். ஆத்மாவுக்கு நித்யத்வத்தை "நாத்மா ச்ருதே:" இது முதலிய ஸ்தலங்களில் கூறப்போகிறார். "ஜ்ஞோத ஏவ" எனகிற இடத்தில் "ஜ்ஞ:" என்கிற வ்யபதேசத்தால் ஜ்ஞாநாச்ரயத்வமும் ஸ்வாபாவிகமென்று சொல்லப்போகிறார் ஜ்ஞாந

¶ விக்ரியை—விகாரம், வேறுபாடு, மாறுதல்.

$ பராகதவம்—பிறருக்கு ப்ரகாசித்தல். ‡‡ த்ருச்யம்—காணததக்கது.

@ த்ரஷ்டா— பாரக்கிறவன். ‡ த்ரவ்யம்— குணங்களுக்கு ஆச்ரயம் அல்லது அவஸ்தையுள்ளது. ஜடம்— அமிச்ரஸத்வமில்லாதது. இது ப்ரக்ருதி-காலம் என இருவகைப்பட்டுளளது முக்குணங்களுக்கு ஆச்ரயமானது. ப்ரக்ருதி, இது நித்யை, அக்ஷரை, அவித்யை, மாயை, என வழங்கப்படுகிறது. காலம்—இது முக்குணங்களில்லாதது. இது நித்யம்-விபு. அகண்டகாலம் நித்யம, கார்யமானகாலம அநித்யம்.

ஸ்வரூபனாகவே இருக்கிற இந்த ஆத்மாவுக்கு மணி முதலியவைகளுக்கு ப்ரபாச்ரயத்வம்போல ஜ்ஞானாச்ரயத்வமும் அவிருத்த மென்று உரைக்கப் பட்டது.

ச்ருதப்ரகாசிகை—

தேஹாத்மாபிமானமுள்ளவனுக்கு ஜ்ஞாத்ருத்வம் ப்ரதிபாஸிப்பதால் அது மித்யை என்று சொல்லப்பட்டதை ‡‡ அநுவதித்து தூஷிக்கிறார்— யதப்யுக்தம் இதுமுதலியதால். தத்பாஸ்தா தேவேதி. ஜ்ஞாத்ருத்வத்திற்கு அபாதித்வமானது முக்தியில்கூட ஜ்ஞாத்ருத்வபரச்ருதிவாக்யத்தால். ஜ்ஞாத்ருத்வத்திற்கு விக்ரியாத்மகத்வத்தை நிராகரிப்பதற்காக அதை அநுவதிக்கிறார்—யதப்யுக்தமவிக்ரியஸ்ய என்று. ஜ்ஞாநம் தாத்வர்த்தமாதலால் க்ரியை - தத்கர்த்ருத்வம் விகாரரூபம். அதினாலேயே ஜடம். விகாரமில்லாததும் அஜடமாக இருக்கிறதுமான ஆத்மாவுக்கு இது ஸம்பவிக்கிறதில்லை. விக்ரியாத்மகமாகவும் ஜடமாகவும இருப்பதால். அப்படிப்பட்ட அஹங்கார க்ரந்தியிலிருக்கிறதென்று அர்த்தம். எல்லா அத்யாஸங்களுக்கும் மூலமாக இருப்பதால் அந்த அஹங்காரம் க்ரந்தி அதற்குமேல் வேறு ஹேதுவாலும் ஜ்ஞாத்ருத்வம் அந்தக்கரணதர்மம் என்பதை உபபாதிக்கிறார்— கர்த்ருத்வாதி: என்று. த்ருச்யமாக இருப்பதால் என்று அர்த்தம். ஆத்மாவுக்கு ஜ்ஞாத்ருத்வம் சொல்லப்படுமேயாகில் அநிஷ்டத்தை ப்ரஸஞ்ஜநம் செய்கிறார்—.கர்த்ருத்வே என்று இந்த இடத்தில் § வ்யதிரேகி அனுமானங்கள் அபிப்ரேதங்களென்று முந்தியேசொல்லப்பட்டிருக்கிறது. பரிஹரிக்கிறார்—நைதத் என்று.

"தேஹஸ்ய" இது முதலியதால் அந்தக்கரணத்திற்கு ஜ்ஞாத்ருத்வாபாவம் உபபாதிக்கப்பட்டது. ஆதிசப்தத்தால் அந்தவத்த்வக்ரஹணம். "சேதநாஸாதாரண" இதுமுதலியதால் ஆத்மாவுக்கு ஜ்ஞாத்ருத்வோபபாதனம். ஜ்ஞாத்ருத்வாபாவம் ஸாத்யமாக அபிப்ரேதம் - அந்தக்கரணம் தர்மி அசேதநத்வாதிகள் ஹேதுக்கள். "தேஹஸ்யேவ"என்று ஸபக்ஷம் காண்பிக்கப்பட்டது- ஜ்ஞாத்ருத்வமானது சேதநாஸாதாரணமென்று சொன்னதினால் ‡ வ்யதிரேகவ்யாப்தியும் சொல்லப்பட்டது. இவ்வண்ணம் பரோக்த வ்யதிரேகிகளுக்கு ப்ரத்யநுமானங்கள் கூறப்பட்டவைகளாக ஆகின்றன. அந்தக்கரணமானது ஜ்ஞானாச்ரயமல்ல. அசேதநமாகவும் ப்ரக்ருதி பரிணாமமாகவும் த்ருச்யமாகவும் பராக்காகவும் பரார்த்தமாகவும் இருப்பதால் தேஹம்போல என்று. அய்யா! அசேதநமாக இருப்பதால் அஜ்ஞாத்ருத்வம ஸாத்யமாகில் ஸாத்யா விசிஷ்டதை. இவ்வண்ணமல்ல. அசேதநசப்தத்தால் அநாத்மத்வம் விவக்ஷிக்கப்பட்டிருப்பதால். புருஷார்த்த ப்ரதிஸம்பந்தித்வம் தேஹத்தைக்குறித்து நியந்தாவாக உள்ளே ப்ரவேசித்திருத்தலாவது ஆத்மத்வம். அதின் அபாவம் அநாத்மத்வம். ப்ரக்ருதிபரிணாமத்வம் ப்ரக்ருதி கார்யத்வம். த்ருச்யத்வம் தவறாமல் ஜ்ஞானாந்தராதீநமான ஸித்தியுடன்கூடி இருத்தல் பராகத்வம் பிறருக்கு பிரகாசித்தல். பரார்த்தத்வம் அன்யனுடைய ப்ரயோஜனத்தையே பலமாகக்கொண்டிருத்தல். ஜீவோபகரணத்வமென்று பொருள். ஆத்மாவுககு ஜ்ஞாத்ருத்வம ஸாதிக்

---

‡‡ அநுவதித்து—முற்கூறப்பட்டிருப்பதை மீண்டும் எடுத்து உரைத்து.

@ வ்யாப்தி— தவறாத ஸம்பந்தம் § வ்யதிரேகி—வ்யதிரேக வ்யாப்தியுள்ளது.

‡ வ்யதிரேகவ்யாப்தி—வ்யாபகாபாவத்தால் வ்யாப்யாபாவத்தை ஸாதித்தல் உதாஹரணம்எது அக்நி இல்லாததோ அது புகை இல்லாதது என்று.

கத்தக்கதாகில் இந்த ஹேதுக்களின் ஸம்பவத்திற்குத்தக்கபடி தர்கங்கள் சேர்ப்பிக்கத்தக்கவைகள். $ ஆத்மாவுக்கு ஜ்ஞாத்ருத்வமில்லாவிடில தேஹததுக்குப்போல அநாத்மத்வமும் பாரார்த்தத்வமும் ப்ரஸங்கிக்கும். என்று.

அய்யா! எவ்வாறு குடம் தேஹம் இந்த இரண்டுக்கும் அசேதநத்வம் முதலியது துல்யமாக இருந்தபோதிலுங்கூட இந்த்ரியங்களுக்கு ஆச்ரயமாக இருத்தல் முதலியது தேஹத்துக்கு அஸாதாரணமாக இருக்கிறதோ அவ்வாறே தேஹாந்தககரணங்கள் இரண்டுக்கும் அசேதநத்வம் முதலியது துல்யமாக இருந்தபோதிலுங்கூட ஜ்ஞாத்ருத்வமானது அந்தக்கரணத்திற்கு அஸாதரண தர்மமாக இருக்கும். ஆகையால் இந்தரியாச்ரயத்வாபாவத்திற்குப்போல ஜ்ஞாதருத்வாபாவத்திற்கும் அசேதநத்வம் முதலியது ப்ரயோஜகமல்ல. அசித்விசேஷத்வமே ப்ரயோஜகம் அப்படியே ஆத்மாவுக்கு ஜ்ஞாத்ருத்வம்இல்லாமலிருந்தபோதிலுங்கூட ப்ரத்யக்த்வம் முதலியது பொருந்தமுள்ளதாக ஆகலாமென்று இரண்டிடத்திலும விபக்ஷத்தில் பாதகாபாவத்தை ஆசங்கித்து பரிஹரிக்கிறார்—ஏதநுக்தம் என்று. எந்த த்ருச்யத்வம் முதலிய விருத்த தர்மங்களால் தேஹத்திற்கு த்ரஷ்ட்ருத்வம் முதலிய தர்மங்கள் அநுபபன்னங்களோ, அந்த தருச்யத்வம முதலிய விருத்த தர்மங்களால் அந்தக்கரணத்திற்கும் அந்த ஜடசரவ்யமாக இருப்பதுபற்றி த்ரஷ்ட்ருத்வம் முதலிய தர்மங்கள் உபபன்னங்களாகா என்று அர்த்தம். ஜ்ஞாதருத்வாபாவத்தைக் குறித்து அசேதநத்வம் முதலியது ப்ரயோஜகமல்லவென்று சொல்லப்படுமேயாகில் தேஹத்துக்கு ஜ்ஞாத்ருத்வம் ப்ரஸங்கிக்கும் அதனல் §சார்வாகனைக்குறித்து தேஹாத்மபேதமானது உன்னுலும் உபபாதிக்கமுடியாது தேஹத்திற்கு தேஹத்வரூபதர்மத்தால் அஜ்ஞாத்ருத்வம் என்பது ஸரியல்ல. கடம் முதலியதில் தேஹத்வமில்லாமலிருந்தபோதிலுங்கூட ஜ்ஞாத்ருத்வாபாவமிருப்பதால். ஆதலால் அங்கு அசித்த்வம் முதலியதற்கு ஜ்ஞாத்ருத்வாபாவப்ரயோஜகத்வ மொப்புக்கொள்ளததக்கதென்பதனுல் ஓரிடத்தில் ஜ்ஞாத்ருத்வாபாவ ப்ரயோஜகமான அந்த அசித்த்வம் முதலியதற்கு ஓரிடத்தில் அப்ரயோஜகத்வம் தகுதியுள்ளதன்று. ஆதலால் அசித்த்வம் முதலிய தர்மங்களால் தேஹத்திற்குப்போல் அந்தக்கரணததிற்குதரஷ்ட்ருத்வாதிகள் உபபன்னங்களாகாஎன்று அர்த்தம். ப்ரத்யக்த்வாதே: என்று ஆதிசப்தத்தால் அஜடத்வத்திற்கு க்ரஹணம். விவிச்யதே.—ப்ரத்யக்த்வம் முதலிய தர்மங்களோடு ஸம்பந்தமில்லாததாக அறியப்படுகிறது என்று அர்த்தம். தைரேவஹேதுபி:தஸ்மாத் விவிச்யதே என்று பராக்த்வம் முதலிய தர்மங்களால் தேஹத்திற்கு ஜ்ஞாத்ருத்வாபாவம் சொல்லப்பட்டால் பராக்த்வம் வ்யாப்யம். ஜ்ஞாத்ருத்வபாவம் வ்யாபகம் என்று ஸித்திக்கிறது. அதனுல் ஸ்வாபாவ வ்யாப்தங்களான பராக்குக்களில் அவகாசமில்லாத ஜ்ஞாத்ருத்வமானது ப்ரத்யக்வஸ்துவினிடத்திலுமில்லாமல் போமேயானுல், அப்பொழுது நிராச்ரயமாக ப்ரஸங்கிக்கவேண்டியதாகுமென்று முற்கூறப்பட்டுள்ள வ்யாப்தியை ஸ்தாபிப்பதற்காக விபக்ஷத்தில் பாதகமான † தர்கம் இந்த இடத்திலும் அபிப்ராயப்படப்பட்டிருக்கிறது. தஸ்மாத்

$ ஆத்மா ஆப்நோதி—சராசரங்களனைத்தையும் வ்யாபித்திருக்கிறுன் என்பதினுல் ஆத்மசப்தவாச்யன் பரமாத்மா. § சார்வாகன்—வேதத்தை ப்ரமாணமாக ஒப்பாதவன் ப்ரத்யக்ஷப்ரமாணமொன்றையே ஒப்புகிறவன்.

† தர்கம்—வ்யாப்யத்தை அங்கீகரித்து வ்யாபகாபாவத்தை ப்ரஸஞ்ஜனம் செய்தல். உதாஹரணம் பர்வதம் - நெருப்புள்ளது, புகையுள்ளதாக இருப்பதால் என்கிற ஸ்தலத்தில் புகை இருக்கட்டும் நெருப்பு இருக்கவேண்டாம் என்று சொன்னுல் நெருப்பு இல்லாமல் போனுல் புகையும் இராது என்று சொல்லுதல். இது ப்ரமாணநுக்ராஹகமானதால் அநுகூல தர்கம்

விவிச்யதே இ போதகம் என்று அந்வயம். ஆனகயால் அசேதநத்வ ஜடத்வாதி ஸ்வபாவ விரோதத்தால் அஹங்காரத்திற்கு ஜ்ஞாதருத்வமில்லை என்று கூறுகிறார்—அத: என்று. நாம் த்ரஷ்ட்ருத்வம் முதலிய தர்மங்களின் அநுபபத்தியினால் தேஹாத்ம விவேகத்தைக்கூறுகிறோமில்லை. அதோ அந்யமதாநுஸாரத்தால் செய்யப்பட்டது. நாமோவென்றால் த்ருசித்வாநுபபத்தியினால் என்கிற சங்கைவரின் த்ருஷ்ட்ருத்வா பாவம் அசேதநத்வாதி ப்ரயோஜ்யம் என்பதில் ம்ருஷாவாதீ அஸாதாரணமான $ ப்ரதி பந்தியைக்கூறுகிறான்— த்ருசித்வவத் என்று. அதையே விவரிக்கிறார்—யதா என்று.

த்ருச்யத்வம் முதலியது ஸமாநமாக இருந்தபோதிலும் கடாதி விலக்ஷணமான தேஹத்திற்கு இந்த்ரியாச்ரயத்வம்போல அந்தக்கரணத்திற்கு த்ருசித்வம் உபபன்னமாகலாம் அந்தக்கரணத்திற்கு த்ருச்யத்வம் முதலியதால் தேஹத்திற்குப்போல த்ருசித்வம் உபபன்னமாகிறதில்லை என்று கூறப்படுமேயானால் அப்படி த்ருச்யமான அந்தக்கரணத்திற்கு த்ருச்யத்வம் முதலியதாலேயே தேஹத்திற்குப்போல த்ரஷ்ட்ருத்வமும் உபபன்னமாகிறதில்லை ஆகையால் த்ருசித்வாபாவத்தில் போல த்ரஷ்ட்ருத்வாபாவத்திலும் அசேதநத்வம் முதலியது ப்ரயோஜகம் அந்வய வ்யதிரேகங்கள் துல்யங்களாக இருப்பதாலும் வேறு உபாதி காணப்படாமையாலுமென்று கருத்து. அஹம் ப்ரத்யயகோசரத்வம் தேஹத்திற்குப்போல் அநாத்மத்வ ஸாதகமென்று எது உரைக்கப் பட்டதோ அது யுக்தமன்று பாதிதமான அஹம்ப்ரத்யயகோசரத்வத்திற்கு பக்ஷத்தில் வ்ருத்யபாவத்தாலும் அபாதிதமான அஹம் ப்ரத்யயகோசரத்வமானது ஸபக்ஷமான தேஹம் முதலியதில் இல்லாமையாலும். அஹம்ப்ரத்யயகோசரத்வமாத்ரத்தால் ஆத்மா வினிடத்தில் அநாத்மத்வம் முதலியது ப்ரஸங்கிக்குமேயாகில் அப்பொழுது ரஜதப்ரத்ய யகோசரத்வமாத்ரத்தினால் ப்ரமவிஷயமாக இருக்கிற ரஜதத்தில்போல ஸத்ய ரஜதத் திலுங்கூட ரஜதத்வாபாவமும் † அங்குளீயகநிர்மாணோபயோகித்வமும் ப்ரஸங்கிக்கவேண் டியதாக ஆகும் என்பதனால் அஸங்கதம். ச்ருதிகளாலும் ப்ரத்யக்ஷத்தாலும் * காலாத் யாபதேசமும்—அதாவது பாதமும் அநாத்மத்வாதி ப்ரஸஞ்ஜகமான கர்த்ருத்வம் ப்ரய த்நாதாரத்வமா? அல்லது, ஸ்பந்தரூபக்ரியாச்ரயத்வமா? அல்லது தாத்வர்த்தமாத் ராச்ரயத்வமா? முதல் பக்ஷத்தில் வ்யாப்தியின் அபாவம் ப்ரயத்நாதாரத்வம் அநாத் மத்வம் இவ்விரண்டுக்கும் ஓரிடத்தில் சேர்ந்து தாசனமில்லாமையால் பரமாத்மாவினி டத்தில் அநாத்மத்வம் முதலியது ப்ரஸங்கிக்கும் என்று சொல்லப்படுமேயாகில் "கர்த்தார மீசம் புருஷம்" இது முதலியதால் காலாத்யாபதேசமும், ஜீவனிடத்தில் அநாத்மத்வாதி ப்ரஸங்கம் பகரப்படுமேயாகில் 'ஸாதுகாரீ ஸாதுர்பவதி'' நல்ல காரியங்களைச்செய்பவன் தார்மிகனுகைநற்குலத்தில் தோன்றுகிறான், சர்தாசாஸத்ரார்த்தவத்த்வாத்' விதிநிஷேதப்ரதி பாதகசாஸ்திரங்கள் ஸ்வர்கம், மோக்ஷம் முதலிய பலன்களை அனுபவிக்கிற போக்தாக் களையே கர்த்தாக்களாக சொல்வதால். ஜீவாத்மாவே கர்த்தா குணங்கள் கர்த்தாக்களல்ல. 'யதஸ்ஸ்வக்ருதபுக்புமாங்' புருஷன் தான் செய்தவினைப்பயனைப் புஜிக்கிறான்) இது முத லியவைகளாலும் ப்ரத்யக்ஷத்தாலும் காலாத்யாபதேசமும். இரண்டாவது பக்ஷத்தில் பரமாத்மாவினிடத்தில் அஸித்தி. ஜீவனிடத்திலோ வென்றால் உத்க்ராந்த்யாதிச்ருதி

$ ப்ரதிபந்தி— விரோதியான உத்தரம்　　† அங்குளீயகம்—மோதிரம்.

* காலாத்யயாபதேசம்—காலஸ்ய ஸாதனகாலத்தினுடைய அத்யய: அபாவம் - காலாத்யயம். காலாத்யயே அகாலத்தில், அபதேசம்-ப்ரயோகம்-காலாத்யயாபதேசம். இதுதான் பாததோஷம். (வேறது— காலாத்யயாபதிஷ்டம்) தோஷம்-காலாத்யய யாபதேசம். காலாத்யயத்தில்—அகாலத்தில், அபதிஷ்டம்—ப்ரயோகிக்கப்பட்டது.

களால் காலாத்யயாபதேசம். மூன்றாவதுபக்ஷத்தில் ப்ரமாச்ரயமாக இருப்பதால் அபி மதமான ஆத்மாவினிடத்தில் அநாத்மத்வம் ப்ரஸங்கிக்கும் பேததர்சனமும் அதற்கு ஆச்ரயத்வமும் அபாரமார்த்திகமென்று சொல்லப்படுமேயாகில் பரமார்த்தபூதமான தாத்வர்த்தாச்ரயத்வம் அநாத்மத்வத்திற்கு ஸாதகமா? அல்லது அபரமார்த்தபூதமான தாத்வர்த்தாச்ரயத்வமா? முதல் பக்ஷத்தில் கடம் முதலியவற்றில்கூட பரமார்த்த பூததாத்வர்த்தாந்வயத்தை ஒப்புக்கொள்ளாமையால் வ்யாப்த்யபாவம். இரண்டாவதிலோ வென்றால் அபிமதமாயும் ப்ரமாச்ரயமாயு மிருக்கிற ஆத்மாவுக்குக்கூட அநாத்மத்வம் ப்ரஸங்கிக்கும்.

அதற்கு மேல் விக்ரியாத்மகத்வம் இல்லை என்று கூறுகிறார்— நச என்று. அதை உபபாதிக்கிறார்—ஜ்ஞாத்ருத்வம் ஹி என்று. குணக்ரியாச்ரயத்வ மிருந்தபோதிலும் அது ஏதோ ஒருஸமய விசேஷத்தில ஸம்பவிக்கிறதாக இருக்குமேயாகில் க்ரியாச்ரயத்வம்போல் விக்ரியாத்மகமாக ஆகும் என்று கேட்கில் கூறுகிறார்— ஜ்ஞாநத்ருத்வஸ்ய என்று தர்மம் ஸ்வாபாவிகமாக இருந்தபோதிலும் தர்மீ அநித்யமாக இருக்குமேயாகில் தர்மமும் அநித்யமாக ஆகும். தர்மீ நித்யமாகில் தர்மம் உபாதியுடன் சேர்ந்திருக்குமே யானால் உபாதிபோனவுடன் தர்மம் நசிக்கவேண்டியதாதலால் அநித்யமாகும் இரண்டையும் வ்யாவர்த்திப்பதற்காக நித்ய ஸ்வாபாவிக சப்தங்கள். அவஸ்தா விசேஷத்தால் * காதாசித்கத்வம் ப்ராமாணிகமாதலால் இஷ்டமானது இந்த இரண்டு பதங்களால் 'நஹி ஜ்ஞாதுர்விஜ்ஞாதேர்விபரிலோபோ வித்யதே, அவிநாசித்வாத் தர்ம" என்கிற ச்ருதி யின் அர்த்தம் சொல்லப்பட்டதாக ஆகிறது இந்த ச்ருதிக்கு இது அர்த்தம். ஜ்ஞாத்ரு ஸம்பந்தியான விஜ்ஞாநம் நித்யம். ஏனெனில் ஆத்மா அவிநாசியாக இருப்பதால். ¶விசிஷ்டம் நித்யமாதலால் விசேஷணமாக இருக்கிற ஜ்ஞாநத்திற்கும் நித்யத்வம் ஸித்திக் கிறது. அன்றிக்கே தர்மீ நித்யமாதலால் அதற்கு ஸ்வபாவஸித்தமான தர்மத்திற்கு நித்யத்வம் ஸித்திக்கிறது. ஆத்மா நித்யமென்பதிலும் ஜ்ஞாநம் அதற்கு ஸ்வாபாவிக தர்ம மென்பதிலும் ப்ரமாணத்தை ஸ்மரிக்கும்படி செய்துகொண்டு ச்ருதிவாக்யோபாதானத் திற்கு முந்தியே ஸூத்ரத்தை உதாஹரிக்கிறார்—நித்யத்வஞ்ச என்று. ஸூத்ரோதாஹ ரணத்தால் அதற்கு விஷயபூதமான ச்ருதியும் அர்த்தத்தினால் காண்பிக்கப்பட்டதாக ஆகும். ஸூத்ரமும் முந்தி ஜ்ஞாநகுணகத்வத்தைக் காண்பிப்பதின் பொருட்டு எடுக்கப் பட்டது. இப்பொழுது நித்யத்வ ஜ்ஞாபநத்திற்காக உபாதானம் செய்யப்பட்டது. "ஜ்ஞோதஏவ" என்கிற ஸூத்ரத்தில் 'ஜ்ஞ:" என்று வ்யபதேசத்தின் விவரணம் "யாவதாத்மபாவித்வாச்ச ந தோஷ:" என்று ஸூத்ரம் இந்த இடத்தில் ஸ்வாபாவிகத்வ ஸித்தி என்று பாவம். ஜ்ஞாநஸ்வரூபத்திற்கு ஜ்ஞாநாச்ரயத்வம் எவ்வாறு என்று கேட்கில் கூறுகிறார்—அஸ்ய என்று.

𑌸𑍍𑌵𑌯𑌮𑌪𑌰𑌿𑌚𑍍𑌛𑌿𑌨𑍍𑌨𑌮𑍇𑌵 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌸𑌙𑍍𑌕𑍋𑌚𑌵𑌿𑌕𑌾𑌸𑌾𑌰𑍍𑌹𑌮𑌿𑌤𑍍𑌯𑍁𑌪𑌪𑌾𑌦𑌯𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌃 ॥

𑌅𑌸𑍍𑌯 𑌜𑍍𑌞𑌾𑌤𑍁𑌃 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌾𑌵𑌸𑍍𑌥𑌾𑌯𑌾𑌂 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 𑌸𑌙𑍍𑌕𑍁𑌚𑌿𑌤𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌂 𑌤𑌤𑍍𑌤𑌤𑍍𑌕𑌰𑍍𑌮𑌾𑌨𑍁𑌗𑍁𑌣𑌤𑌾𑌰𑌤𑌮𑍍𑌯𑍇𑌨 𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 । 𑌤𑌚𑍍𑌚𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌦𑍍𑌵𑌾𑌰𑍇𑌣 𑌵𑍍𑌯

---

* காதாசித்கம்— ஒருஸமயத்திலுண்டானது.
¶ விசிஷ்டம்—விசேஷணத்துடன் சேர்ந்தது.

[illegible]

ஸ்ரீபாஷ்யம்—

ஸ்வயம் * அபரிச்சின்னமாகவே இருக்கிற ஜ்ஞாநமானது ஸங்கோச விகாஸங்களுக்குத்தகுதியுள்ளதென்று உபபாதிக்கப்போகிறோம். ஆகையால்க்ஷேத்ரஜ்ஞாவஸ்தையில் கர்மாவினால் ஸ்வரூபமொடுங்கி அந்தஅந்த கர்மாநுகுணமான தாரதமயபாவத்தோடு இருக்கிறது அதுவும் இந்த்ரியங்களின் வாயிலாக வ்யவஸ்தை பண்ணப்பட்டிருக்கிறது. அந்த இந்த இந்த்ரியங்கள் வழியாக உண்டாகிற ஜ்ஞாநப்ரஸரத்தை அபேக்ஷித்து உதயாஸ்தமயவ்யபதேசம் ப்ரவ்ருத்திக்கிறது ஜ்ஞாநப்ரஸரத்திலோவென்றால் கர்த்ருத்வமிருக்கவே இருக்கிறது அதுவும் ஸ்வாபாவிகமல்ல. பின்னையோ கர்மாவினால் உண்டுபண்ணப்பட்டிருக்கிறது. ஆதலால் ஆத்மா விகாரமற்ற ஸ்வரூபமுள்ளவனே. இப்படிப்பட்ட ஸ்வரூபமுள்ள விக்ரியாத்மகமான ஜ்ஞாத்ருத்வமானது ஜ்ஞாநஸ்வரூபனான ஆத்மாவுக்கே என்பதினால் ஒருபொழுதும் ஜடமான அஹங்காரத்திற்கு ஜ்ஞாத்ருத்வம் ஸம்பவியாது

அஹங்காரம் ஜடஸ்வரூபமாக இருந்தபோதிலுங்கூட சித்தினுடைய ஸாமீப்யமிருப்பதுபற்றி அதன சாயையானது இதில் தாக்குவதினால் அந்த ஜ்ஞாத்ருத்வத்திற்கு ஸம்பவமென று கூறப்படுமேயானால் இந்த சிச்சாயாபத்தி என்பது யாது? ஸம்வித்துக்கு அஹங்காரச்சாயாபத்தியா? அல்லது அஹங்காரத்திற்கு ஸம்விச்சாயாபத்தியா? ஸமவித்துக்கு அஹங்காரச்சாயாபததி எனபது இல்லை. ஸம்வித்தில் ஜ்ஞாத்ருத்வமொப்புக்கொள்ளாததால் அஹங்காரத்திற்கும் ஸம்விச்சாயாபத்தி இல்லை. முற்கூறப்பட்ட ஜடமான அதறகு ஜ்ஞாத்ருத்வமில்லாமையாலும் இரண்டும் $ சக்ஷுரிந்த்ரியகோசரங்களாக இல்லாமையாலும் அசாக்ஷுஷங்களுக்கு சாயைகாணப்பட்டதில்லையன்றோ. அப்படிக்கின்றி அக்நியின் சேர்க்கையால் இரும்பு உண்டையில் ஔஷ்ண்யம்போல் சித்ஸம்பர்க்கத்தால் ஜ்ஞாத்ருத்வத்திற்கு உபலப்தி என்று சொல்லப்படுமேயாகில், இது ஸரியல்ல. ஸம்வித்தில் வாஸ்தவமான ஜ்ஞாத்ருத்வத்தை ஒப்புக்கொள்ளாததினாலேயே அதின் ஸம்பந்தத்தால் அஹங்காரத்தில் ஜ்ஞாத்ருத்வமோ அதின் உபலப்தியோ ஒன்றுமில்லை. அசேதநமான அஹங்காரததிற்கு ஜ்ஞாத்ருத்வாஸம்பாவத்தாலேயே அதன ஸம்பர்க்கத்தால் ஸம்வித்தில் ஜ்ஞாதருதவமோ அதின் உபலப்தியோ ஒன்றும் இல்லவே இல்லை இரண்டினிடத்திலும் வாஸ்தவத்தில் ஜ்ஞாத்ருத்வமில்லை. அஹங்காரமோவென்றால் அநுபூதிக்கு அபிவ்யஞ்ஜகம் கண்ணாடி முதலியதுபோல அநுபூதியை தன்னிடத்திலிருக்கிறதாகவே அபிவ்யஞ்ஜநம் செய்கிறது, என்று எது உரைக்கப்பட்டதோ அது யுக்தமல்ல. ஸ்வயம் ஜ்யோதிஸான ஆத்மாவுக்கு ஜடரூபமான அஹங்காராபிவ்யங்க்யத்வம பொருந்தாததலால் அது சொலலப்பட்டிருக்கிறது "சாந்தாங்கார

* அபரிச்சின்னம்—அளவிடப்படாதது. $ சக்ஷுஸ்—கண்.
† அங்காரம்—தணல். ‡ சாந்தாங்காரம்—கரி.

இவாதித்யம் அஹங்காரோ ஜடாத்மக: ஸ்வயம் ஜ்யோதிஷமாத்மாநம் வ்யநக்தீதி நயுக்திமத்" (எரிந்து அணிந்த தணல் ஆதித்யனை ப்ரகாசிப்பிக்கிறது என்பதுபோல் ஜடஸ்வரூபியான அஹங்காரமானது ஸ்வயம் ஜ்யோதிஸான ஆத்மாவை ப்ரகாசிக்கச்செய்கிறது என்பது யுக்தியுள்ளதல்ல) எல்லாபதார்த்தங்களும் ஸ்வயம் ப்ரகாசாநுபவாதீனஸித்தி யுள்ளவைகளன்றோ. அதில் அநுபவாதீன ப்ரகாசமுள்ள அசித்தான அஹங்காரமானது உதயாஸ்தமயமில்லாத ப்ரகாசமுள்ளதும் அசேஷார்த்தஸித்திக்கு ஹேதுவாகவுமிருக்கிற அநுபவத்தை அபிவ்யஞ்ஜநம் செய்கிறதென்பதை ஆத்மவித்துக்கள் பரிஹஸிக்கின்றார்கள்.

ச்ருதப்ரகாசிகை—

ஜ்ஞாநம் ஸ்வாபாவிக நித்யதர்மமானால் எப்பொழுதும் எல்லாவற்றையும் அறிதல் ப்ரஸங்கிக்கும் என்று கேட்கில் கூறுகிறார்—ஸ்வயம் என்று. ஸ்வயம் ஸ்வத:. "ஸம்பத்யாவிர்பாவ:" இது முதலிய ஸூத்ரத்தில் உபபாதிக்கப்போகிறோமென்று அர்த்தம். அடுத்தே என்றாவது அர்த்தம். அங்ஙனமாகில் இப்பொழுதுகூட ஒருக்கால் ஸர்வஜ்ஞத்வம் முக்தியிலும் ஒரு காலத்தில் ஜ்ஞானஸங்கோசம் ஏன் உண்டாகக்கூடாது.

§ க்ஷேத்ரஜ்ஞாவஸ்தையில் ஸங்கோசமாகில் அப்பொழுது எல்லோரும் அஜ்ஞர்களாக ஆகவேண்டுமென்று சொல்லப்படுமேயாகில்கூறுகிறார்—அத: க்ஷேத்ரஜ்ஞ என்று. அத: ஸங்கோசவிகாஸத்திற்குத் தகுதியுள்ளதாக இருப்பதால். கர்மணா என்பது ஸங்கோசத்தை உண்டுபண்ணுகிற உபாதி. க்ஷேத்ரஜ்ஞாவஸ்தாயாம் என்று. அப்பொழுதே தான் ⸸ ஸங்கோசமென்று பொருள். எல்லோருக்கும் அஜ்ஞத்வப்ரஸக்தியானது கர்மங்களின் $ தாரதம்யத்தால்பரிஹரிக்கப்பட்டது. தாரதம்யசப்தத்தினால் 'தயாதிரோஹிதத்வாச்ச சக்தி: க்ஷேத்ரஜ்ஞஸம்ஜ்ஞிதா- ஸர்வபூதேஷு பூபால தாரதம்யேந வர்ததே' (ஹேபூமியைரக்ஷிப்பவனே! அதனால் மறைக்கப்பட்டிருப்பதால் க்ஷேத்ரஜ்ஞனென்கிற பெயருள்ள சக்தியானது எல்லா ப்ராணிகளிடங்களிலும் தாரதம்யத்தால் நிலைபெற்று இருக்கிறது) என்கிறவசநம் நினைக்கும்படி செய்விக்கப்பட்டதாக ஆகிறது. கர்மணா என்கிற பதத்தினால் தயா என்கிற ச்லோகத்திலுள்ள பதம் வ்யாக்யானிக்கப்பட்டதாக ஆகிறது. தயா- கர்மரூபாவித்யையினால் என்று அர்த்தம். அவித்யாகர்மஸம்ஜ்ஞாந்யா த்ருதீயா சக்திரிஷ்யதே- யயா க்ஷேத்ரஜ்ஞசக்தி ஸ்ஸாவேஷ்டிதா ந்ருப ஸர்வகா. ஸம்ஸாரதாபாநகிலா நவாப்நோத்யதி ஸந்ததாந். அரசே! அவித்யை கர்மாவென்கிற பெயரை உடைய வேறு மூன்றாவது சக்தி விரும்பப்படுகிறது. எந்தசக்தியினால் எல்லோரையும் அடைந்திருக்கிற அப்படிப்பட்ட க்ஷேத்ரஜ்ஞசக்தியானது சுத்தப்பட்டிருக்கிறதோ. மிகவும் தொடர்ச்சியாக வந்துகொண்டிருக்கிற எல்லா ஸம்ஸாரதாபங்களையும் அடைகிறான் என்றல்லவோ ப்ரக்ருதம். ஜ்ஞாநம் நித்யமாக இருப்பதுபற்றி உத்பத்தி இல்லாமையால் இந்த்ரியாபேக்ஷை உண்டாகாது என்று சொல்லப்படுமேயாகில் கூறுகிறார்—தச்ச என்று. அன்றிக்கே, ஸ்தாவரங்களில்கூட ஜ்ஞாநவிகாஸம் உண்டாகலாம்

⸸ ஸங்கோசம்—மூடுதல், சுருங்குதல். $ தாரதம்யம்—ஏத்தத்தாழ்ச்சி.

§ க்ஷேத்ரஜ்ஞன்—ஜீவன்.

என்று கூறப்படுமேயாகில் அது விஷயத்தில் உரைக்கிறார்— தச்ச என்று இந்த்ரியங்களை த்வாரமாகக்கொண்டிருத்தல் ஸங்கோசவிகாஸங்களுக்கா மென்று அர்த்தம். அங்ஙனமாகில் உத்பத்திவிநாச $ வ்யபதேசமுண்டாகாமல் போகவேண்டி வரும் என்றுகேட்கில் சொல்லுகிறார்—தர்மம் என்று ‡ ப்ரஸரத்தின் அந்வய வ்யதிரேகங்களை அபேக்ஷித்து உதயாஸ்தமய வ்யபதேசமென்று அர்த்தம் அன்றிக்கே, ப்ரஸரிக்கிற அம்சம ப்ரஸரம் அதின் ப்ரஸரண † ஸங்கோசங்கள் இரண்டும் உதயாஸ்தமயங்கள் என்று அர்த்தம். ஸங்கோசவிகாஸங்களை ஒப்புக்கொண்டால் * விக்ரியாத்மகத்வம் உண்டாகவேண்டி வரும் என்று சொல்லப்படுமேயாகில் கூறுகிறார்—ஜ்ஞாநப்ரஸரோ என்று அப்படிப்பட்ட விக்ரியாத்மகத்வம் ப்ராமாணிகமாதலால் இஷ்டமென்று அர்த்தம். அசேதநத்திற்குப் போல பரிணாமமானது ஒப்புக்கொள்ளப்படவில்லையன்றோ என்பது எவகாராபிப்ராயம் இதனால் அவிகாரச்ருதிகளுக்கு விஷயம் காட்டப்பட்டது வேறுவிதத்தாலும் அவிகாரச்ருதிகளுக்கு நிர்வாஹத்தைக் காண்பிக்கிறார்— தச்ச என்று

அவிகாரச்ருதிகள் ஸ்வாபாவிகவிகார நிஷேதத்தில் தாத்பர்யமுள்ளவைகள் என்று பொருள். ஸ்வாபாவிகமான ரூபம் எவ்வாறு உள்ளது என்று கேட்கில் பகருகிறார்—அவிக்ரிய என்று ஸ்வரூபம்—ஸ்வாபாவிகரூபம், அவிகாரித்வ வாக்யங்கள் உபாதியின்றி விடுபட்ட ஸ்வாபாவிக ரூபபரங்கள் என்று அர்த்தம். ப்ரஸரணகர்த்ருத்வமும் விகாரரூபமாதலால் அந்தக்கரணத்திற்கே என்று கூறப்படுமேயானால் அது விஷயத்தில் மறுமொழி கூறுகிறார்— ஏவம்ரூபவிக்ரியாத்மகம் என்று. ஏவம் ரூபசப்தத்தால் தன்னுடைய தர்மபூத ஜ்ஞாநப்ரஸரண கர்த்ருத்வ ஸ்வரூபமான விகாரித்வம் சொல்லக்கருதப்பட்டது. ஜ்ஞாநஸ்வரூபனுக்கு ஜ்ஞாநமே எவனுக்கு ஸ்வாபாவிகமான தர்மமோ அவன் ஜ்ஞாநஸ்வரூபன். தன்னுடைய தர்மபூதமான ஜ்ஞாநத்தின ப்ரஸரண கர்த்ருத்வலக்ஷணவிகாரமானது அதை தர்மமாகக்கொண்ட ஆத்மாவுக்கே ஸம்பவிக்கிறதே ஒழிய ஜடமாக இருப்பதால் அந்த தர்மமில்லாத அஹங்காரத்துக்கு இல்லை என்று அர்த்தம். அன்றிக்கே ஸ்வரூபசப்தம் தர்மிபரம். ஜ்ஞாநஸ்வரூபனுக்கே தான் ஜ்ஞாநதர்மகத்வம் ஸம்பவிக்கிறதே ஒழிய கடம் முதலியவைகளுக்குப் போல ஜடரூபத்துக்கு ஸம்பவியாது என்று ஜ்ஞாநஸ்வரூபனாக இருப்பதால் ஜ்ஞாநத்தை தர்மமாகக்கொண்டவனுக்கே ஸ்வதர்மபூதஜ்ஞாந ப்ரஸரண கர்த்ருத்வரூபமான விகாரஸம்பவமே ஒழிய ஜடஸ்வரூபனாக இருப்பதால் ஜ்ஞாநத்தை தர்மமாக உடைத்தாயிராத அஹங்காரத்திற்கு இல்லை என்று அர்த்தம். இவ்வண்ணம் விக்ரியாத்மகமாக இருப்பதால் ஜ்ஞாதருத்வத்திற்கு ஆத்மதர்மத்வானுபபத்தியானது நிரஸிக்கப்பட்டது. இதற்குமேல் அந்யனால் சொல்லப்பட்டுள்ள ஜ்ஞாத்ருத்வ நிர்வாஹப்ரகாரங்களை நிரஸிக்கிறார்— ஜ்ஞாத்ருத்வமானது சிச்சாயாபத்தியினால் உண்டுபண்ணப்பட்டது. சித்ஸம்பர்கத்தாலுண்டுபண்ணப்பட்டது. சிதபிவ்யஞ்ஜகத்வத்தால் உண்டுபண்ணப்பட்டது என்கிற மூன்று பக்ஷங்கள். அவற்றுள் முதலாவதான சிச்சாயாபத்தி பக்ஷத்தை ஆசங்கிக்கிறார்—ஜட என்று தூஷிக்கிறார்— கேயம் என்று. கேயம் எவ்விதத்தாலும் நிரூபிக்கமுடியாததென்று அர்த்தம். விகல்பிக்கிறார்—கிம் என்று. சிச்சாயா சப்தங்கள் இரண்டுக்கும் அந்தர்கதையான விபக்தி ஸமானமானது. ஷஷ்டியோ அல்லது ஸப்தமியோ என்று கருத்து. அஹங்காரச்சாயாபத்திஸ்ஸம்வித:—அஹங்காரத்தில் ஸம்வித்தை அடைந்திருக்கிற ஜ்ஞாத்ருத்வச்

$ வ்யபதேசம்— வ்யவஹாரம். ‡ ப்ரஸரம—வெளிப்படுதல்.

† ஸங்கோசம்—சுருங்குதல் அல்லது அடக்கம். * விக்ரியா—மாறுதல்.

§ விகாஸம்—மலர்ச்சி.

சாயாபத்தி என்று அர்த்தம். **ஸம்விச்சாயாபத்தி ரஹங்காரஸ்ய** என்று ஸம்வித்தில் அஹங்காரத்தை அடைந்திருக்கிற ஜ்ஞாத்ருத்வச்சாயாபத்தி என்று அர்த்தம். முதலாவதை தூஷிக்கிறார்— **நதாவத்** என்று. வேறு சிலரை நிரஸநஞ் செய்கிறார்— **நாபி** என்று. முதலில் அசேதநத்வம் ப்ரக்ருதி பரிணாமத்வம் முதலியவைகளால் அஹங்காரத்திற்கு ஜ்ஞாத்ருத்வவ்யுதாஸத்தை அபிப்ராயப்பட்டு சொல்லுகிறார்— **உக்தரீத்யா** என்று. வேறு தூஷணத்தைச் சொல்லுகிறார்— **த்வயோரபி** என்று. அதை விவரிக்கிறார்— **நஹி** என்று.

சித்ஸம்பர்கத்தை தூஷிப்பதற்காக சங்கிக்கிறார்— **அத** என்று. முன்போல விகல்பித்து தூஷிக்கிறார்—**நைதத்** என்று இது பொதுவான ப்ரதிஜ்ஞை. அஹங்காரத்தில் ஸம்வித்தினுடைய ஸம்பர்கத்தால் ஜ்ஞாத்ருத்வத்தை நிரஸிக்கிறார்— **ஸம்வித்** என்று. அஹங்காரஸம்பர்கத்தால் ஸம்வித்தில் ஜ்ஞாத்ருத்வத்தை தூஷிக்கிறார்— **அஹங்காரஸ்யது** என்று (ஸ்வதாமிதி) ஜ்ஞாநம் அஜடமானதால் ஜ்ஞாநாச்ரயத்வம் ஸ்வமதத்தில் ஸம்பவிக்கிறது. அஹங்காரம் ஜடமாதலால் வஸ்துத: ஜ்ஞாநாச்ரயத்வமானது ஸ்வபக்ஷம் பரபக்ஷம் இரண்டிலும் ஸம்பவியாதாதலால் அதின் ஸம்பர்கத்தால் ஸம்வித்தில் ஜ்ஞாத்ருத்வம் இல்லை என்று கருத்து. உப்பளத்திலுள்ள கட்டை முதலியவைகளுக்கு உப்பின் ஸம்பந்தத்தால் லவணத்வத்தின் உபலப்தி காணப்படுகிறது. இரும்புண்டையில் அக்நியின் ஸம்பர்கத்தால் ஔஷ்ணயம் அறியப்படுகிறது. அதனால் ஜ்ஞாத்ருத்வம் அதினுபலப்தியாவது என்று தனித்து சொல்லப்பட்டது. ஐயா! முற்கூறப்பட்ட இரண்டு பக்ஷங்களில் ஜ்ஞாத்ருத்வத்திற்கு சாயாபத்தி ஸம்பர்கங்கள் நிரஸிக்கப்பட்டன ஜ்ஞாநச்சாயாபத்தி ஸம்பர்கங்கள் ஏன் நிரஸிக்கப்படவில்லை. சொல்லப்போகிற அபிவ்யக்தி பக்ஷாந்தர்ப்பாவத்தாலென்றுசொல்லுகிறோம், ஜ்ஞாநத்திற்கு அஹங்காரத்தில் சாயாபத்தியாவது கண்ணாடியில் முகத்துக்குப்போல அஹங்காராதேயமாக அபிவ்யக்தியே. ஸம்பர்கபக்ஷத்திலும் அதிஷ்டாநதயா ஸம்பர்கமானது ஜ்ஞாத்ருத்வ ப்ரதீதிக்கு உபயோகமில்லாதது. ஆகையால் ஆதேயமாக இருப்பதால் ஸம்பர்கம் சொல்லத்தக்கது. அதுவும் அதிலிருப்பதால் அபிவ்யக்தியில் அந்தர்கதம், அதனால் அங்கு உபந்யஸிக்கப்படவில்லை. மேலும் § சாயாபத்தியானது ஸம்வித்துக்கு சாக்ஷாஷமாக இருப்பதினாலேயே நிரஸிக்கப்பட்டது ஸம்பர்கமும் உபலம்பத்திற்கு அநுகுணமாக சொல்லத்தக்கதாக இருப்பதால் $ அப்ருதக்ஸித்தமான தர்ம தர்மிபாவத்தால் சொல்லத்தக்கது, அதோ பொருந்தாது. அசேதனத்திற்கும்சைதந்யத்திற்கும் அப்படிப்பட்ட தர்மதர்மிபாவம் பொருந்தாததலால் தண்டம் தேவதத்தன் இவர்களுக்குப்போல் ஜ்ஞாநம் ஜ்ஞாதா இருவர்களுக்கும் தனித்திருத்தல் காணப்படாமையால் தனித்திருத்தலில்லாத வஸ்துக்களுக்கு ஸம்பர்கமும் அநுபபன்னமென்று அநுஸந்திக்கத்தக்கது. அதற்மேல் அபிவ்யக்தி பக்ஷத்தை அநுபாஷிப்பதற்காக சாயாபத்திஸம்பர்க பக்ஷங்களுக்கும் அபிவ்யக்தி பக்ஷத்திற்கும் ஒன்றோடொன்று ஒற்றுமையில்லாமையைக் காண்பிக்கிறார்—**உபயத்ர** என்று. **வஸ்துத இதி**- சாயாபத்தி முதலியதால் ஆபாதநஞ்செய்யப்படாநின்ற அதயாஸத்திற்கு முந்தியே ஸித்தத்வம் விவக்ஷிக்கப்பட்டிருக்கிறதே யொழிய பாரமார்த்திகத்வம் விவக்ஷிக்கப்படவில்லை. வட்டமாகச்சுத்தப்படாநின்ற கொள்ளிக்கட்டை முதலியதற்குக்கூட ப்ரதிபிம்பம் காணப்படுவதாலும் உஷ்ணஜலஸம்பர்கத்தால் அநுஷ்ணமான வஸ்துவினிடத்திலும்உஷ்ணோபலம்பமிருப்பதாலும்

§ சாயாபத்தி— ஒளிவீசுதல். அல்லது நிழல்தாக்குதல்.

$ அப்ருதக்ஸித்தம்— தனித்திராதது. புறியாமல் சேர்ந்தே இருக்கும் வஸ்து.

ஓரிடத்தில ப்ரூவ ஸித்தமான ஜ்ஞாத்ருத்வாதயாஸத்திஞல வேறிடத்தில் ஜ்ஞாத்ருத்வ நிர்வாஹம் முந்தின இரண்டு பக்ஷங்களிலும் அபிவ்யக்தி பக்ஷத்திலோ வென்றால ஜ்ஞாத்ருத்வத்தினுடைய பூர்வஸித்தியை அபேக்ஷியாமல் ஜ்ஞாநாதயாஸத்திஞல் ஜ்ஞாத்ருத்வ நிர்வாஹம் என்று. ¶ வைஷம்யம். அபிவ்யக்தி பக்ஷத்தைக் கூறுகிறார்—அஹங்காரஸ்து என்று. தூஷிக்கிறார்—தத்யுக்தம் என்று. எதனுல என்று அபேக்ஷிக்குங்கால் ஆத்மாவுக்கு அபிவ்யஞ்ஜகாபேக்ஷையுமில்லை, அஹங்காரத்திற்கு அபிவ்யஞ்ஜகத்வசக்தியுமில்லை, என்று கூறுகிறார்— ஆத்மா இது முதலியதால் தன்னால் சொல்லப்பட்ட அர்த்தத்திற்கு ஸாம்ப்ரதாயிகத்வத்தைக்காட்டுவதற்காக த்ருஷ்டாந்தத்திஞலஅதை விசதப்படுத்துவதற்காகவும் ஆகமஸித்தி காந்தத்தைச் சொல்லுகிறார்— ததுக்தம் என்று.

“சாந்தாகார:” இதுமுதலிய ச்லோகத்தை விவரிக்கிறார்—ஸ்வயம் என்று. ஸ்வயம் ப்ரகாச சப்தத்தால் அபிவ்யஞ்ஜகாபேக்ஷையின் அபாவம் கூறப்பட்டது. அநுபவாதீநஸித்தய:என்பதிஞல் அஹங்காரத்திற்கு அபிவ்யஞ்ஜகத்வாபாவம் உரைக்கப்பட்டது. “அசிதஹங்கார” என்பதிஞல சித்தைக் காட்டிலும் வேருக இருப்பதால அந்த சித்துக்கு அதீனமான ப்ரகாசத்துடன் கூடியது என்று அர்த்தஞல் சொல்லப்பட்ட ஹேது ஸூசிப்பிக்கப்பட்டது. அநுதிதாநஸ்தமிதஸ்வநுபப்ரகாசம்—ஒருஸமயத்தில் அப்ரகாசமாக இருக்குமேயாஞல் அப்பொழுது அபிவ்யஞ்ஜகாபேக்ஷை உண்டாகும். அதில்லாமையால் ஒருபொழுதும அபிவ்யஞ்ஜகாபேக்ஷை இல்லை என்று கருத்து. அபேக்ஷார்த்த ஸித்தி ஹேதுபூதம—உனஞல் விஷயப்ரகாசகத்வத்தாலன்றே ஸ்வயம்ப்ரகாசத்வம ஸமர்த்திக்கப்பட்டது, என்று கருத்து. பரிஹஸந்தீதி—இப்படிப்பட்ட அநுபவத்தை இப்படிப்பட்ட அஹங்காரம் அபிவ்யஞ்ஜநம் செய்கிறது என்பதை உன்னைச் சேர்ந்தவர்களே உன்ஸமீபத்திலிருப்பவர்களே சிரிக்கிறார்கள் என்று கருத்து.

किञ्च — अहङ्कारानुभवयोस्सहभावविरोधादनुभवे [illegible] न व्यङ्ग्यव्यञ्जकभावः । यथोक्तम् —

“व्यङ्ग्यव्यञ्जक[illegible] न च स्यात् ... । व्यङ्ग्येतरानुभवाभिव्यक्तिः ... ॥” इति ॥

नच रविकरनिकराणां साधिव्यक्तकरतलाभिव्यञ्जकत्ववत् संविदभिव्यञ्जकत्वं ... ; तत्रापि रविकरनिकराणां करतलाभिव्यञ्जकत्वाभावात् । करतलसन्निहिततेजोवयवानां ... इति ...॥

किञ्चास्य संविदभिव्यञ्जकत्वं ... किंरूपा ? न तावदुत्पत्तिः, संविदस्त्वयानुत्पन्नत्वाद्

¶ வைஷம்யம்—வேற்றுமை.

𑌭𑍍𑌯𑍁𑌪𑌗𑌮𑌾𑌤𑍍 । 𑌨𑌾𑌪𑌿 𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌨𑌮𑍍, 𑌤𑌸𑍍𑌯𑌾𑌨𑍁𑌭𑌵𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌨𑌨𑍁𑌭𑌾𑌵𑍍𑌯𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 । 𑌅𑌤 𑌏𑌵 𑌨 𑌤𑌦𑌨𑍁𑌭𑌵𑌸𑌾𑌧𑌨𑌾𑌨𑍁𑌗𑍍𑌰𑌹𑌃 ॥

𑌸 𑌹𑌿 𑌦𑍍𑌵𑌿𑌧𑌾; 𑌜𑍍𑌞𑍇𑌯𑌸𑍍𑌯𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌸𑌂𑌬𑌨𑍍𑌧𑌹𑍇𑌤𑍁𑌭𑌾𑌵𑍇𑌨 𑌵𑌾, 𑌯𑌥𑌾 𑌜𑌾𑌤𑌿𑌮𑍁𑌖𑌾𑌦𑌿𑌗𑍍𑌰𑌹𑌣𑍇 𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌿𑌦𑌰𑍍𑌪𑌣𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌨𑌯𑌨𑌾𑌦𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌸𑌂𑌬𑌨𑍍𑌧𑌹𑍇𑌤𑍁𑌭𑌾𑌵𑍇𑌨; 𑌬𑍋𑌦𑍍𑌧𑍃𑌗𑌤𑌕𑌲𑍁𑌷𑌾𑌪𑌨𑌯𑍇𑌨 𑌵𑌾, 𑌯𑌥𑌾 𑌪𑌰𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌵𑌬𑍋𑌧𑌨𑌸𑌾𑌧𑌨𑌸𑍍𑌯 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌸𑍍𑌯 𑌶𑌮𑌦𑌮𑌾𑌦𑌿𑌨𑌾 । 𑌯𑌥𑍋𑌕𑍍𑌤𑌮𑍍—"𑌕𑌰𑌣𑌾𑌨𑌾𑌂 [illegible] 𑌤𑌤𑍍𑌸𑌂𑌬𑌨𑍍𑌧𑌹𑍇𑌤𑍁𑌤𑌾"—𑌇𑌤𑌿 ॥

ஸ்ரீபாஷ்யம்.—

மேலும், அஹங்காரம் அநுபவம் இரண்டுக்கும் ஸ்வபாவவிரோதத்தினாலும் அநுபூதிக்கு அநநுபூதித்வம் ப்ரஸங்கிப்பதாலும் வ்யங்க்த்ருவ்யங்க்ய பாவமில்லை இது சொல்லப்பட்டிருக்கிறது "வ்யங்க்த்ருவ்யங்க்யத்வமந்யோந்யம் நசஸ்யாத்ப்ராதிகூல்யத:, வ்யங்க்யத்வேநநுபூதித்வம் ஆத்மநி ஸ்யாத்யதா கட:" (ப்ரதிகூல ஸ்வபாவமுள்ளதாக இருப்பதால் பரஸ்பரம் வ்யங்க்த்ரு வ்யங்க்யபாவம் ஸம்பவியாது. வ்யங்க்யத்வத்தை ஒப்புக்கொண்டால் கடத்தில போல ஆத்மாவினிடத்தில் அநநுபூதித்வம் ஏற்படும்) ஸூர்யகிரணங்களுக்கு தன்னால் அபிவ்யஞ்ஜிக்கத்தக்க கரதலத்தினால் அபிவ்யங்க்யத்வம் போல ஸம்வித்துக்கும் ஸம்வித்தினால் அபிவ்யங்க்யமான அஹங்காராபிவ்யங்க்யத்வம் என்று சொல்வது ஸரியன்று. அங்கேயும் ஸூர்யகிரண ஸமூஹங்களுக்கு கரதலாபிவ்யங்க்யத்வமில்லாமையால் கரதலத்தால் தடுபட்டகதிகளுடன் கூடியவைகளாக வன்றோ ஸூர்யரச்மிகள் பருளங்களாக தானே அதி ஸ்பஷ்டமாக அறியப்படுகின்றன. ஆதலால் கரதலம் அந்த கிரணங்களின் பாஹுள்யமாத்ர ஹேதுவே ஒழிய கிரணாபிவ்யஞ்ஜகமல்ல மேலும், இந்த ஸம்வித்ஸ்வரூபமான ஆத்மாவுக்கு அஹங்காரத்தினால் ஏற்படுத்தத்தக்க அபிவ்யக்தியானது எவ்விதமானது? உத்பத்தியன்று. ஸ்வதஸ்ஸித்தமாக இருப்பதுபற்றி மற்றொன்றினால் உண்டுபண்ணத்தக்க தன்மையினது இன்மை ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதால். அதின் ப்ரகாசநமுமல்ல. அந்த ஸம்வித்தானது அநுபவாந்தரங்களால் அநுபாவ்யமல்லாததால். அதனாலேயே அஹங்காரத்திற்கு ஸம்விதநுபவஸாதநாநுக்ரஹமில்லை, அந்த அநுக்ரஹம் இரண்டுவிதமன்றோ. ஜ்ஞேயத்திற்கு இந்த்ரியஸம்பந்தத்தில் ஹேதுவாக இருத்தலாலாவது எப்படி ஜாதி முகம் முதலியவற்றை க்ரஹிக்கும் விஷயத்தில் வ்யக்தி தாபணம் முதலியவைகளுக்கு நயநம் முதலிய இந்த்ரிய ஸம்பந்த ஹேதுத்வமோ போத்தாவினிடத்திலுள்ள கல்மஷத்தைப் போக்குவதாலாவது, எவ்வாறு பரதத்வாவபோதனத்திற்கு ஸாதநமான சாஸ்திரத்திற்கு சமதமாதியினால். இப்படியே சொல்லப்பட்டிருக்கிறது.—"கரண

நாமபூமித்வாந்ந தத்ஸம்பந்தஹேதுதா" (இந்த்ரியங்களுக்கு விஷயமில்லாததால் அந்த இந்திரியஸம்பந்த ஹேதுத்வம் இல்லை) என்று.

ச்ருதப்ரகாசிகை—

அஹங்காரம் அநுபவம் இரண்டுக்கும் முறையே அபிவ்யஞ்ஜகத்வத்தையும் அபிவ்யங்க்யத்வத்தையும் ஏற்றுக்கொள்ளாமையால் தூஷணம் கூறப்பட்டது. அவ்விரண்டுக்கும் அபிவ்யஞ்ஜகத்வமும் அபிவ்யங்க்யத்வமும் இருக்கட்டும். அது ஒன்றோடொன்று பொருந்துகிறதில்லை என்று கூறுகிறார்— கிஞ்ச என்று. ஸ்வபாவவிரோதாத்—அனுபவத்தினிடத்திலுள்ள எல்லா அர்த்தங்களுடைய ஸித்திகாரணத்வமும் அந்த அனுபவத்தைக்காட்டிலும் வேறாக இருப்பதால் இந்த அஹங்காரத்திற்கு அந்த அநுபவாதீனமான ஸித்தித்வமும் விரோதம். பிதாபுத்ரன் இருவருக்கும் அன்யனைக் குறித்து புத்ரத்வம் அன்யனைக்குறித்து பித்ருத்வம் இரண்டுமிருந்தபோதிலும் இவ்விருவர்களுக்குமே பரஸ்பரம் பித்ருத்வ புத்ரத்வங்களின் $ வ்யத்யயம் எவ்வாறு பொருந்துகிறதில்லையோ. இவ்வண்ணம் மற்றொன்றை அபேக்ஷித்து அவ்விரண்டுக்கும் வ்யங்க்த்ரு வ்யங்க்யபாவமிருந்தபோதிலுங்கூட பரஸ்பரம் பொருத்தமுள்ளதாக ஆகிறதில்லை என்று அர்த்தம். வேறு தூஷணதையும் சொல்லுகிறார்—அநுபூதேரநுபூதித்வ ப்ரஸங்காச்ச என்று. இந்த அர்த்தத்திலும் ஆத்மஸித்தி க்ரந்தத்தைக்காண்பிக்கிறார்— ய தே ர் க் த ம் என்று.

ப்ராதிகூல்யத: - முற்கூறப்பட்ட ஸ்வபாவவிரோதசப்தத்தால் ப்ராதிகூல்யசப்தம் வ்யாக்யாநிக்கப்பட்டது. தன்னாலே வ்யங்க்யமான பதார்த்தத்திற்கே தன்னை வ்யஞ்ஜிப்பிக்கிற தன்மை இருக்கிறதென்பதில் அந்யனால் சொல்லப்பட்ட த்ருஷ்டாந்தத்தை தூஷிக்கப்போகிறவராகச்சொல்லுகிறார்— ந ச என்று. த்ருஷ்டாந்தத்திற்கு ஸாத்ய ‡‡ வைகல்யத்தைக்கூறுகிறார்— தத்ராபி என்று. அங்கு அப்படிப்பட்டதன்மைக்கு அந்யதாஸித்தியைக் காண்பிக்கிறார்— க ர த ல என்று. ப்ராஹ்மமானது ப்ரஸரண ஸ்வபாவமுள்ள த்ரவ்யமல்லவன்றோ. ஆகையால் அதின் பாகுள்ய ஹேதுத்வம் அஹங்காரத்திற்கு பொருத்தமுள்ளதல்லவென்று பொருள்.

அப்படி அஹங்காரத்தால் இதின் அபிவ்யக்தியை மூன்றாக விகல்பித்து தூஷிக்கிறார்— கிஞ்ச இது முதலியதால். கிம்ரூபா - கிம்சப்தத்திற்கு நிந்தை அர்த்தம் எவ்விதத்தாலும் நிரூபிக்கமுடியாததென்று அர்த்தம். எதிராளியென்று அபேக்ஷைவாரின் அபிவ்யக்தி என்பது உத்பத்தியா? அல்லது ப்ரகாசநமா? அல்லது அநுபவத்திற்கு ஸாதநாநுக்ரஹமா? என்று மூன்றாக விகல்பத்தைக்கருதி உத்பத்தி பக்ஷத்தை தூஷிக்கிறார்—ந தா வ த் என்று. உண்டாகாத கடம் முதலியதற்கு அபிவ்யக்தி ஸம்பவியாததலால் உத்பாதகமான தண்டம் சக்கிரம் முதலியவைகளுக்குக்கூட உத்பாதநமுகத்தால் அபிவ்யக்தி ஹேதுத்வமிருப்பதால் உத்பத்தியும் விகல்பகோடியில் வைக்கப்பட்டது. மேலும் வ்யங்க்யத்திற்கு ப்ரகாசத்தை உண்டுபண்ணுதல் வ்யஞ்ஜநம்-ஸம்வித்தானது தானே ப்ரகாசரூபமாக இருப்பதுபற்றி அதின் உத்பத்தியே அதின் ப்ரகாசோத்பத்தி ரூபையான அபிவ்யக்தியாதலால் விகல்பகோடியில் உதபத்தி சேர்க்கப்

$ வ்யத்யயம்—மாற்றிக்கொள்ளுதல்.

‡‡ வைகல்யம்— குறைவு, அல்லது இன்மை.

பட்டது. ஸ்வதஸ்ஸித்தத்வேதி— அவ்விதமாகவன்றோ ப்ராகபாவத்தின அபாவம் கூறப்பட்டது. அநாதியாக இருப்பதினுலென்றுவது அர்த்தம். அதற்குமேல் இரண்டாவதை நிரஸநம் செய்கிறார்—ந ச பி என்று. ப்ரகாசநம் அனுபவவிஷயமான ப்ரகாசத்தின் உத்பத்தி. அதற்குப்பிறகு மூன்றாவதைப் பற்றி மறுமொழி உரைக்கிறார்—தத: என்று. தத ஏவ - ப்ரகாசத்தின் அநுபபத்தியினாலேயே. அய்யா! அடுத்த க்ரந்தத்தின் உத்தானம் பொருந்தாது. அநுக்ரஹஸாதநங்களின் இரண்டுவகைகளும் அதின் நிராஸத்திற்கு உபயோகமில்லாமலிருப்பதால். மேலே ஆத்மஸித்தி க்ரந்தோதாஹரணமும் ஸங்கதமாகிறது. இந்த்ரியாஸம்பந்தவாசியாக இருப்பதுபற்றி அநுக்ராஹகத்வைவித்யத்தில் உபயோகமில்லாமையால். இங்கு கூறப்படுகிறது. முந்தி அநுக்ராஹ்யத்தால் உண்டுபண்ணத்தக்க ப்ரகாசத்திற்கு விஷயமான அநுபூதியின் பர்யாலோசனையினால் அந்த அநுபவஸாதநாநுக்ரஹம் தூஷிக்கப்பட்டது.

இப்பொழுது அநுக்ரஹ ப்ரகாரவிசேஷங்களின் பர்யாலோசனையினால் தூஷணத்தைக்கூறுகிறார்——ஸஹி என்று. இரண்டுவிதமும் பொருந்ாதென்பதைக்காட்டுவதற்காக தொடக்கத்தில் இரண்டுவிதத்தையும் கூறுகிறார்—ஜ்ஞேயஸ்ய என்று. சமமதமம் முதலியவைகள் சாஸ்திரத்திற்கு அநுக்ராஹகங்களென்று சொன்னது அந்ய மதத்தினால். அது உபாஸநத்திற்கன்றோ அநுக்ராஹகம்.

அய்யா! அது இரண்டுவிதமென்று சொல்வது யுக்தமன்று, அநுக்ரஹம் இரண்டு கோடிகளிலும் உள்படாததால். அநுமானம் முதலியதற்கு வ்யாப்திக்ரஹம் முதலிய அநுக்ரஹமும் இருக்கிறதென்று? கூறப்படுகிறது. காரணாநுக்ரஹமென்றும் கர்த்ரு அநுக்ரஹமென்றும் இரண்டுகோடிகளே. வ்யாப்திக்ரஹமும் காரணாநுக்ரஹத்தில் உள்ளடங்கினது. அன்றிக்கே அநுக்ரஹம் த்ருஷ்டமுகத்தாலும் அத்ருஷ்ட முகத்தாலும் என இருவகைப்பட்டுள்ளது. வ்யாப்திக்ரஹணமும் த்ருஷ்டமுகத்தால் அநுக்ரஹம். ஆகையால் இந்த்ரியஸம்பந்த ஹேதுவாக இருத்தலால் என்று சொன்னது காரணாநுக்ரஹத்திற்கும் த்ருஷ்டமுகத்தால் அநுக்ரஹத்திற்கும் உபலக்ஷணம். அவ்விடத்தில் அஹங்காரத்தால் அபிவ்யங்க்யையான ஸம்வித்துக்கு அநுமாந விஷயத்வம் ஸம்பவியாதாதலால் "இந்த்ரியஸம்பந்த ஹேதுவாக இருப்பதால்" என்று உரைக்கப்பட்டது. போத்தாவினிடத்திலுள்ள பாபத்தைப்போக்கடிப்பதினால் என்பது கர்த்ரு அநுக்ரஹத்திற்கும் அத்ருஷ்டத்தின் வாயிலாக ஏற்படுகிற அநுக்ரஹத்திற்கும் உபலக்ஷணமாகக் கூறப்பட்டது. ஆத்மஸித்தி க்ரந்தத்திலும் இதே கருத்து.

இவ்விதமாக இரண்டுவிதத்தைக்காட்டினதால் அநுக்ரஹம் இரண்டுவிதமாக இருந்தபோதிலும் அது அஹங்காரத்திற்கு ஸுலபமாக சொல்லமுடியாது என்று ψ அநுஷங்கத்தால் யோஜனைசெய்துகொள்ளத்தக்கது. எவ்வாறு இவ்விடத்தில் இரண்டுவிதமான அநுக்ரஹத்திற்கும் அநுபபத்தி? என்கிற ஸந்தேஹத்தில் ஆத்மஸித்தி க்ரந்தத்தைக் கூறுகிறார்— யதோக்தம் என்று காரணாமபூமித்வாத் நதத்ஸம்பந்த ஹேதுதா (இந்த்ரியங்களுக்கு அவிஷயமாதலால் அந்த இந்த்ரியங்களின் ஸம்பந்தத்திற்கு காரணமாக இருத்தல் ஸம்பவியாது.) என்று ஹேதுத்வரூபமான அநுக்ரஹம் பொருந்தாதென்று காண்பிக்கப்பட்டது. ¶ போத்தாவினிடத்திலுள்ள கல்மஷத்தைப்போக்கடித்தலென்

ψ அநுஷங்கம்—முந்தி சொல்லப்பட்டிருப்பதை வேறொரு இடத்தில் வாக்யார்த்த பூர்த்திக்காக சேர்த்துக்கொள்ளுதல். ¶ போத்தா— அறிகிறவன்.

கிற அநுக்ரஹத்தின் அநுபபத்தியானது க்ரந்தத்திலுள்ளதல்ல. இந்த இடத்தில் சில ஆசார்யர்கள் இவ்வாறு வியாக்யானம் செய்கிறார்கள். சமம் முதலியதற்கு அநுக்ராஹகத்வம் சாஸ்திரஸித்தம். அவ்வாறாக அஹங்காரத்திற்கு அநுக்ராஹகத்வம் சாஸ்த்ரஸித்தமல்லவென்பது வ்யக்தமாக இருப்பதால் க்ரந்தத்தில் $ கண்டோக்தியினால் நிராஸமில்லை என்று. பூர்வார்த்தத்தின் உதாஹரணத்தினால் ச்லோகத்தினுடைய § உத்தரார்த்தத்தில் போத்தாவை அடைந்திருக்கிற கல்மஷத்தைப்போக்குதல் என்கிற அநுக்ரஹாநுபபத்தியானது காணத்தக்கதென்று ஆசார்யர்கள் அந்த உத்தரார்த்தம் இது தான். "அஹமர்த்தஸ்ய போத்ருத்வாத் நஸம்ஸ்கார்யைவசோத்யதே" (அஹம் சப்தத்திற்கு வாச்யமான அர்த்தமானது போத்தாவாக இருப்பதால் அது அதினாலேயே சோதிக்கப்படுகிறதில்லை) என்று. ஒன்றுக்கே ஸ்வப்ரதியோகிதா ஸ்வபாவத்தால் சோத்யத்வமும் சோதகத்வமும் பொருத்தமுள்ளதாக ஆகாதென்று பொருள். இதல்லவோ பாஷ்யத்தின் அபிப்ராயம். அஹமர்த்தத்திற்கு போத்தாவை அடைந்திருக்கிற கல்மஷத்தைப்போக்கும் விஷயத்தில் கர்த்ருத்வம ஸ்வரூபத்தாலேயா? அல்லது அத்ருஷ்டத்தினாலுண்டுபண்ணப்பட்ட உபகாரத்தின் வாயிலாலேயா? முதலில கர்மகர்த்ருவிரோதம். ஒன்றுக்கே தன்னை அபேக்ஷித்து சோதகத்வம் சோத்யத்வம் இரண்டும் பொருந்தாததலால். இரண்டாவதில் ப்ரமாணங்களின் இன்மை. அந்தக்கரணத்திற்கு அத்ருஷ்டவசத்தால் அந்தக்கரணசுத்தி என்பதில் ப்ரமாணமில்லை யன்றோ. மூன்றி இந்த்ரியகோசரத்வத்தை ஒப்புக்கொள்ளாததால் தூஷணம் உரைக்கப்பட்டது.

கிஞ்ச அநுபூதேரநுபாவ்யத்வாப்யுபகமேऽப்யஹமர்த்தேந ததநுபவஸாதநாநுக்ரஹோ து³ர்வச:; ஸ ஹ்யநுபாவ்யாநுபவோத்பத்திப்ரதிப³ந்த⁴நிரஸநேந ப⁴வேத்। யதா² ரூபாதி³க்³ரஹணோத்பத்திவிரோதிஸந்தமஸநிரஸநேந சக்ஷுஷோ தீ³பாதி³நா। ந சேஹ ததா²வித⁴ம் நிரஸநீயம் ஸம்பா⁴வ்யதே। ந தாவத்ஸம்விதா³த்மகஜ்ஞாநோத்பத்திவிரோதி கிஞ்சித்³வ்யக்த்யாகாரம்ப⁴வேத்; அஸ்தி ஹ்யஜ்ஞாநநிவ்ருத்திர்வா; ந, அஜ்ஞாநஸ்யாஹங்காரவிநாஶ்யத்வாநப்⁴யுபக³மாத்। ஜ்ஞாநமேவ ஹ்யஜ்ஞாநஸ்ய நிவர்த்தகம்॥

ஸ்ரீபாஷ்யம்.—

மேலும், அநுபூதிக்கு அநுபாவ்யத்வத்தை ஒப்புக்கொண்ட போதிலும் அஹமர்த்தத்தினால் அதின் அநுபவஸாதநாநுக்ரஹம் எளிதில்சொல்ல முடியாது; அந்தஅநுக்ரஹமோவென்றால் அநுபாவ்யமான வஸ்துவின் அநுபவத்தின்உத்பத்திக்குப்ரதிபந்தத்தை நிரஸிப்பதினால் உண்டாகவேண்டும். எப்படி தீபம் முதலியவற்றால் கண்ணுக்குரூபம்முதலியவற்றின் ஜ்ஞாநோத்பத்திக்கு

$ கண்டோக்தி— ஒரு அர்த்தத்தை அதை உணர்த்துகிற சப்தத்தால் தெளியச் சொல்லுதல். § உத்தரார்தம்—ஒரு ச்லோகத்தின் பிற்பாதி.

விரோதியான இருள்விலக்கத்தாலோ. இந்த இடத்தில் விலக்கத்தக்க அப்படிப்பட்ட வஸ்து ஒன்றும் ஸம்பவிக்கிறதில்லை. ஸம்விதாத்மாவை அடைந்திருக்கிறதும் அந்த ஜ்ஞாநோத்பத்தியைத் தடுக்கிறதும் அஹங்காரத்தால் போக்கடிக்கத்தக்கதுமான வஸ்து ஒன்றுமில்லை. அஜ்ஞாநமிருக்கிற தன்றோ வென்று சொல்லப்படுமேயாகில், இல்லை; அஜ்ஞாநத்திற்கு அஹங்காரத்தால் விலக்கத்தக்கதன்மை ஏற்றுக்கொள்ளப் படாததலால். ஜ்ஞாநமன்றோ அஜ்ஞாநத்தைவிலக்கும் தன்மை வாய்ந்துள்ளது.

ச்ருதப்ரகாசிகை—

அதற்குமேல் அநுபாவ்யத்வத்தை ஒப்புக்கொள்வதிலுல் தூஷணத்தைக்கூறுகிறார்— கிஞ்ச என்று. அநுக்ரஹஸ்வரூபத்தை சிக்ஷிக்கிறார்—நஹி என்று. வ்யக்தி ‡ தர்பணம் முதலியதில் அநுக்ரஹ ¶ ப்ரகாராந்தரம் காணப்பட்டிருந்தபோதிலுங்கூட எவ்வாறு ‡‡ ப்ரதிபந்த நிரஸனரூபமான அநுக்ரஹமே $ பரிசேஷமாக்கப்பட்டது? கூறப்படுகிறது. ஜாதிவ்யக்தி இரண்டுக்கும் தவறுமலிருக்கிற தர்ம தர்மிபாவத்தினுல் வ்யக்தியானது ஜாதிக்கு வ்யஞ்ஜிகையாக இருக்கிறது. அவ்வாறுக அஹங்காராநுபவங்கள் இரண்டுக்கும் நியதமான தர்மதர்மிபாவமில்லை. அதோஅந்யனுலேயே நிரஸிக்கப்பட்டது. மூர்த்தத்ரவ்யமாகவும் கண்ணிணது ரச்மிகளைத்திருப்பி அடிப்பதற்குக் காரணமாகவுமிருக்கிற கண்ணுடியானது மூர்த்தத்ரவ்யமாக இருக்கிற சாக்ஷுஷரச்மியை முகத்தோடு சேரும்படி செய்விக்கிறது- அவ்வாறு அஹஙகாரமானது ஒன்றை திருப்பி அடிப்பதற்கு ஹேதுவாக இருக்கிற மூர்த்தத்ரவ்யமல்லவென்று இஙகு சொல்லப்படப்போகிற வேறு அநுக்ரஹப்ரகாரத்தினுடைய அநுபபத்தியை எண்ணிப்ரதிபந்தநிரஸநரூபாநுக்ரஹமே பரிசேஷமாக்கப்பட்டது இப்படிப்பட்ட அநுக்ரஹத்தில் த்ருஷ்டாந்தத்தைக் கூறுகிறார்— ய தா ந ப ா தி என்று. அதினுல் என்னவென்று வினவப்படுமேயானுல் சொல்லுகிறார்— ந சே ஹ என்று. அதை நிரூபணம் செய்கிறார்— ந தா வ த் என்று. அஜ்ஞாநம் ப்ராகபாவரூபமா? அல்லது பாவரூபமா? அல்லது நிரஸிக்கத்தக்கதான வேறென்றுக சொல்லப்படுகிறதா? என்கிற மூன்று பக்ஷங்களைக்கருதி தாவத் சப்தம் ப்ரயோகிக்கப்பட்டது. "ந தாவத்" என்கிற க்ரந்தத்தால் விலக்சத்தக்கதான வேறு வஸ்து விலக்கப்பட்டது. அன்றிக்கே அஹங்காரத்திற்கு அஜ்ஞாந நிராஸகத்வம் அஜ்ஞாநத்திற்கு ஸம்வித் ஸம்பந்தித்வம் இரண்டும் பொருந்தாதென்று அபிப்ராயப்பட்டு முதலில் அஜ்ஞாநத்திற்கு அஹங்காரத்தினுல் விலக்கத்தக்க தன்மையை நிரஸிக்கிறார்— நதாவத் என்று. அஹங்காரத்தால் போக்கடிக்கத்தக்க அஜ்ஞாநமிருக்கிறதென்று சஙகிக்கிறார்—அஸ்திஹி என்று. தூஷிக்கிறார் ந என்று. அஜ்ஞாநசப்தமானது பாவரூபத்துக்கும் அபாவரூபத்துக்கும் பொதுவானது. தூஷணமும் பொதுவானது இரண்டுவிதமான அஜ்ஞாநத்திற்கும் அஹங்காரத்தால் விலக்கத்தக்கதன்மை இல்லாமையால். எது நிவர்தகம் என்றுல் சொல்லுகிறார்—ஜ்ஞா நமேவஹி என்று. ப்ராகபாவத்தையும் ஜ்ஞாநோதபத்தியானது நிவர்திக்கச் செய்கிறது. பாவரூபத்திற்கும் ஜ்ஞாந நிவர்த்யத்வம் அந்யனுல் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

---

‡ தர்பணம்—கண்ணுடி.
‡‡ ப்ரதிபந்தம்—தடை.
¶ ப்ரகாரம்— ரீதி அல்லது மாதிரி.
$ பரிசேஷம்—மிகுதி.

இவ்வண்ணம் அஜ்ஞாநத்திற்கு ஸம்விதாச்ரயத்வமிருப்பினும் அஹங்காரத்தினால் விலக்கத்தக்க தன்மை இல்லாமையால் அதின் நிரஸநரூபமான அநுக்ரஹம் ஸம்பவிக்கிறதில்லை என்று கூறப்பட்டது.

ந ச ஸம்விதாஶ்ரயமஜ்ஞாநஸ்ய ஸம்பவதி; ஜ்ஞாநஸமாநாஶ்ரயத்வாத் ஸமாநவிஷயத்வாச்ச ஜ்ஞாத்ருத்வவிஷயத்வவிரஹிதே ஜ்ஞாநமாத்ரே ஸாக்ஷிணி நாஜ்ஞாநம் ஸ்தாதுமர்ஹதி; யதா ஜ்ஞாநாஶ்ரயத்வப்ரஸக்த்யபாவேந கடாதேர்நாஜ்ஞாநாஶ்ரயத்வம்। ததா ஜ்ஞாநமாத்ரேऽபி ஜ்ஞாநாஶ்ரயத்வாபாவேந நாஜ்ஞாநாஶ்ரயத்வம் ஸ்யாத்। ஸம்விதோऽஜ்ஞாநாஶ்ரயத்வாப்யுபகமேऽபி ஜ்ஞப்திதயாऽப்யுபகதாயாஸ்ஸ்யாத் ஜ்ஞாநவிஷயத்வாபாவேந ஜ்ஞாநேந ந தத்கதாஜ்ஞாநநிவ்ருத்தி:। ஜ்ஞாநம் ஹி ஸ்வவிஷயமேவாஜ்ஞாநம் நிவர்தயதி, யதா ரஜ்ஜ்வாதௌ। அதோ ந கேநாபி ஸம்விதாஶ்ரயாஜ்ஞாநநிவ்ருத்தி:। அஸ்ய ச ஸதஸதநிர்வசநீயஸ்யாஜ்ஞாநஸ்ய ஸ்வரூபேணைவ துர்நிரூபத்வபரிஹாராஶக்யதே। ஜ்ஞாநவ்யாமோஹாவரோதஸ்ய சாஜ்ஞாநஸ்ய ஜ்ஞாநேநாதத்த்வவிரோதித்வாபாவேந ந தந்நிரஸநேந தஜ்ஜ்ஞாநஸாத்யநாநந்த்யம்। அதோ ந கேநாபி ப்ரகாரேணாஜ்ஞாநஸ்யாநாதேர்நிவ்ருத்தி:॥

ஸ்ரீபாஷ்யம்—

அஜ்ஞாநத்திற்கு ஸம்வித்தை ஆச்ரயித்திருத்தல் ஸம்பவியாதன்றோ. ஜ்ஞாநத்தோடு ஸமாநமான ஆச்ரயமுள்ளதாக இருப்பதாலும் அந்த ஜ்ஞாநத்தோடு ஸமானவிஷயமுள்ளதாக இருப்பதாலும் ஜ்ஞாத்ருபாவம் விஷயபாவம் இவ்விரண்டுகளால் விடுபட்டு ஸாக்ஷியாக இருக்கிற ஜ்ஞாநமாத்ரத்தில் அஜ்ஞாநமானது உண்டாவதற்குத் தகுதியுள்ளதாகாதன்றோ. எவ்வாறு ஜ்ஞாநாச்ரயத்வ ப்ரஸக்தி இல்லாமையால் கடம் முதலியவற்றுக்கு அஜ்ஞாநாச்ரயத்வமில்லையோ அவ்வாறே ஜ்ஞாநமாத்ரத்திலும் ஜ்ஞாநாச்ரயத்வமில்லாமையால் அஜ்ஞாநாச்ரயத்வம் ஸம்பவியாது ஸம்வித்துக்கு அஜ்ஞாநாச்ரயத்வத்தை ஒப்புக்கொண்டபோதிலும் ஆத்மாவாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிற அந்த ஸம்வித்திற்கு ஜ்ஞாநவிஷயத்வமில்லாமையால் ஜ்ஞாநத்தால் அதை அடைந்திருக்கிற அஜ்ஞாநத்திற்கு நிவ்ருத்தி இல்லை. ஜ்ஞாநமோவென்றால் தனக்கு எது விஷயமோ அதிலேயே அஜ்ஞாநத்தை நிவர்திப்பிக்கிறது ரஜ்ஜு முதலியதில்போல. ஆகையால் ஸம்விதாச்ரயமான அஜ்ஞாநமானது ஒன்றினாலும் ஒருக்காலும் நாசம் செய்யப்படுகிறதில்லை. ஸத்

என்றும் அஸத் என்றும் நிர்வசனம் செய்யத்தகாததான இந்த அஜ்ஞானத்தினுடைய ஸ்வரூபமே நிரூபிக்கமுடியாததென்று மேலே சொல்லப்போகிறோம். ஜ்ஞானப்ராகபாவரூபமான அஜ்ஞானத்திற்கு ஜ்ஞானோத்பத்தி விரோதித்வமில்லாமையால் அதின் நிரஸநத்தினால் அந்த அநுபவஸாதநாநுக்ரஹமில்லை. ஆகையால் ஒருவிதத்தாலும் அஹங்காரத்தால் அநுபூதிக்கு அபிவ்யக்தி இல்லை.

ச்ருதப்ரகாசிகை—

இதற்குமேல் ஜ்ஞானத்திற்கு ஸம்விதாச்ரயத்வமும் பொருந்துகிறதில்லை என்று சொல்லுகிறார்— **நச** என்று. ஸம்விதாச்ரயத்வம்-ஸம்வித் ஸம்பந்தித்வமென்று அர்த்தம். ஆச்ரயணம் ஸம்பந்தம் - ஸம்பந்தமும் கர்மத்வ ரூபமாகவும் ஆச்ரயத்வ ரூபமாகவுமிருப்பதினால் ஆச்ரயசப்தம் இரண்டுவிதமான ஸம்பந்தத்தையும் குறிக்கிறது. ' ஆச்ரயஸ்சேதஸோப்ரஹ்ம ''இதுமுதலிய ப்ரயோகத்தாலும் ஆச்ரயசப்தத்தால் விஷயத்திற்கும் உபஸ்தாபனம் யுக்தம். ஸம்வித்துக்கு அஜ்ஞானஸம்பந்தமானது ஆச்ரயதையினாலா? விஷயதையினாலா? இரண்டு விதத்தாலும ஸம்பந்தம் பொருந்தாதென்று அர்த்தம். ஏதனாலென்று சொல்லப்படுமேயாகில் கூறுகிறார்——**ஜ்ஞாந** என்று. அதினால் என்னவென்றால் சொல்லுகிறார்— **ஜ்ஞாத்ருபாவ** என்று. ஸாக்ஷிணி - பார்ப்பவனுக்கேஸாக்ஷித்வம். ஜ்ஞப்திக்கோவென்றால் ஸாக்ஷித்வமும வ்யாஹதமாக ஆகிறதென்று அபிப்ராயம். ''பவிதுமர்ஹதி'' என்கிற நிர்தேசத்தினால் ஆச்ரயதையாலாவது விஷயதையாலாவது ஸம்பந்தமாத்ரம் விவக்ஷிக்கப்பட்டது. இதினால் வ்யதிரேக வ்யாப்தி காண்பிக்கப்பட்டதாக ஆகிறது. ஸம்விதாச்ரயத்வா பாவததில் அந்வயவ்யாப்தியைக் காண்பிக்கிறார்—**யதா** என்று. அஜ்ஞானாச்ரயதவமாவது ஜ்ஞானத்தின் ப்ராகபாவத்திற்கு ஆச்ரயமாக இருத்தல். அல்லது அநிர்வசநீயமாந அஜ்ஞானத்திற்கு ஆச்ரயமாக இருத்தல். அது கடம் முதலியவற்றில் இல்லை என்று அர்த்த . **ஜ்ஞாநாச்ரயத்வப்ரஸக்தித்** ஜ்ஞாதாவுக்கும் அஜ்ஞானாச்ரயத்வமும் ஜ்ஞானாச்ரயத்வமும் காலபேதத்தால் விருத்தமன்று என்பது கருத்து. கடம் முதலியவற்றுக்கு ஜ்ஞானாத்யந்தாபாவாச்ரயத்வமன்றோ. ஜ்ஞானம் அஜ்ஞானத்திற்கு ஆச்ரயமல்ல. அஜ்ஞானததிற்கு விஷயமுமல்ல அஜ்ஞானாச்ரயத்வமும் அஜ்ஞானவிஷயத்வமும் ஒப்புக்கொள்ளப்படுமேயாகில் ஜ்ஞாத்ருத்வம் ஜ்ஞேயத்வம் இரண்டும் ப்ரஸங்கிக்குமென்று ப்ரதிகூலதர்கம் சொல்லப்பட்டதாக ஆகிறது. இவ்வண்ணம் அஜ்ஞானாச்ரயத்வத்தை ஒப்புக்கொள்ளாமல் தூஷணம் உரைக்கப்பட்டது. அதை ஒப்புக்கொண்டு தூஷணத்தை உரைக்கிறார்—**ஸம்வித:** என்று. அவச்சின்னஜ்ஞானத்திற்கு அநுபாவ்யத்வமொத்துக் கொண்டபோதிலும் அநவச்சின்னமாயும் ஆத்மபூதமாயுமிருக்கிற ஜ்ஞானத்திற்கு அநுபாவ்யத்வத்தை ஒப்புக்கொள்ளாமையாலென்கிற அபிப்ராயத்தால் சொல்லுகிறார்— **ஆத்மதயா அப்யுபகதாயா:** என்று. ஜ்ஞான விஷயத்திற்கே அஜ்ஞான நிவ்ருத்தியை திருஷ்டாந்ததோடு கூறுகிறார்—**ஜ்ஞாநம்ஹி** என்று. அவிஷயத்தில்கூட அஜ்ஞான நிவ்ருத்தி ஸம்பவிக்குமேயாகில் அப்பொழுது சுக்தி ஜ்ஞானத்தினால் எல்லா ப்ரம நிவ்ருத்தியும் உண்டாகுமென்று அபிப்ராயம். இவ்வண்ணம் ஜ்ஞானத்தால் நிவர்திக்கத்தக்க அஜ்ஞானாச்ரயத்வத்தை ஒப்புக்கொண்டால் ஜ்ஞானவிஷயத்வம் ப்ரஸங்கிக்கும் என்று சொல்லப்பட்டதாக ஆகிறது. ஆச்ரயத்வத்தை ஒப்புக்கொள்வதினால் சொல்லப்பட்ட தூஷணத்தை நிகமனம் பண்ணுகிறார்— **அத:** என்று.

உன்றால் அஹங்காரத்தால் விலக்கத்தக்கதாகச் சொல்லப்பட்ட அஜ்ஞாநமானது ஸதஸத்நிர்வசநீயமா? அல்லது ஜ்ஞாநப்ராகபாவரூபமா? என்று விகல்பித்துக்கூறுகிறார்— அஸ்ய என்று. இரண்டாவதைப்பற்றி விடை அளிக்கிறார்—ஜ்ஞாநப்ராகபாவ என்று. விரோதிசப்தத்தால் ப்ரதிபந்தகத்வம் விவக்ஷிக்கப்பட்டது. § ஸஹாநவஸ்தாநமாத்ரமல்ல அபிவ்யக்தி எவ்விதத்தாலும் நிரூபிக்கமுடியாதென்பதை நிகமனம் செய்கிறார்—அத. என்று கேநாபிப்ரகாரேண - உத்பாதகத்வத்தாலோ ப்ரகாசகத்வத்தாலோ அந்த அநுபவஸாதநாநுக்ராஹகத்வத்தினாலோ வென்று அர்த்தம்.

ந ச ஸ்வாஶ்ரயதயாऽபிவ்யங்க்யாபிவ்யஞ்ஜகாநாம் ஸ்வபாவ:, ப்ரதீபாதிஷ்வதர்ஶநாத், யதாவஸ்திதவஸ்துப்ரதீத்யநுகுணஸ்வபாவத்வஞ்ச ஜ்ஞாநஜ்ஞாநஸாதநாநுக்ராஹகஸ்ய ச । தச்ச ஸ்வத: ப்ராமாண்யந்யாயஸித்தம் ॥

ந ச தர்பணாதிர்முகாதேரபிவ்யஞ்ஜக:, அபி து சாக்ஷுஷதேஜ:ப்ரதிபலநரூபதோஷஹேது: । தத்தோஷக்ருதஶ்ச தத்ராந்யதாவபாஸ: । அபிவ்யஞ்ஜகஸ்த்வாலோகாதிரேவ ॥

ந சேஹ ததாஹங்காரேண ஸம்விதி ஸ்வப்ரகாஶாயாம் தாத்ருஶதோஷாவஹநம் ஸம்பவதி । வ்யக்தேஸ்து ஜாதிராகார இதி ததாஶ்ரயதயா ப்ரதீதி:; ந து வ்யக்திவ்யங்க்யத்வாத் । அதோऽஜ்ஞ: கரணஸம்பந்தா ஹங்காரஸ்ததயா ஸம்விதோऽவ்யக்தத்வே தோஷதோ வா ந கிமிஹ காரணமிதி நாஹங்காரஸ்ய ஜ்ஞாத்ருத்வம் ததைவோபபத்யதே ॥

ஸ்ரீபாஷ்யம்.—

அபிவ்யஞ்ஜகங்களுக்குத் தன்னிடத்திலிருப்பதாக அபிவ்யங்க்யங்களை அபிவ்யஞ்ஜநம் செய்தல் ஸ்வபாவமல்ல. ப்ரதீபம் முதலியவைகளில் காணப்படாமையால். ஜ்ஞாநம் ஜ்ஞாநஸாதனம் அநுக்ராஹகம் இம்மூன்றுக்கும் உள்ளபடி இருக்கிற, பதார்த்தஜ்ஞாநத்திற்கு அநுகுணமான ஸ்வபாவமிருப்பதால் அதுவும் ஸ்வத:ப்ராமாண்ய ந்யாயத்தால் ஸித்தம். கண்ணாடி முதலியது முகம் முதலியவற்றுக்கு அபிவ்யஞ்ஜகமல்ல, பின்னையோ சாக்ஷுஷதேஜஸின் ப்ரதிபலன ரூபதோஷத்திற்கு ஹேது. அதில் விபரீதமான தோற்றமானது அந்த ப்ரதிபலனரூபதோஷத்தால் உண்டுபண்ணப்பட்டிருக்கிறது. * ஆலோகம் முதலியதே அபிவ்யஞ்ஜகம். ஸ்வப்ர

§ ஸஹாநவஸ்தாநம்—கூடசேர்ந்து இராமை. * ஆலோகம்—ஸூர்யப்ரகாசம்.

காசையாக இருக்கிற இந்த ஸம்வித்தில் அவ்வண்ணம் அஹங்காரத்தால் அப்படிப்பட்ட தோஷத்தைப் போக்குதல் ஸம்பவிக்கிறதில்லை வ்யக்திக கோவென்றால் ஜாதியானது ஆகாரமாதலால் அந்த வ்யக்தியை ஆச்ரயித்த தாகவே ஜாதியானது அறியப்படுகிறதே ஒழிய வ்யக்தி வ்யங்க்யமாக ஆகிற தில்லை. ஆகையால் வாஸ்தவத்தாலோ தோஷத்தாலோ அந்தக்கரணரூபமான அஹங்காரத்திலிருப்பதாக ஸம்வித்தின் உபலப்திக்கு ஒருகாரணமும் மிங்கு இல்லை. ஆதலால் அஹங்காரத்திற்கு ஜ்ஞாத்ருத்வமாவது அவ்வாறாக உப லப்தியாவது இல்லை.

ச்ருதப்ரகாசிகை—

அதற்குமேல் தன்னிடத்தில் இருப்பதாகக் கூறப்பட்ட அநுபூதியின் அபிவ்யக்தி யை தூஷிக்கிறார்—நச என்று வ்யபிசாரத்தைச்சொல்லுகிறார்— ப்ரதீபாதிஷு என்று. வேறு ஹேதுவையும் சொல்லுகிறார் — யதாவஸ்தித என்று. ப்ரக்ருதி: - வ்யவஹா ராநுகுண்யம் அதற்கு அநுகுணமான ஜ்ஞாநம் முதலியவைகளின் ஸ்வபாவத்தாலெ ன்று அர்த்தம்.

தச்ச என்று. அதையே உபபாதிக்கிறார்— ப்ராமாண்யாப்ராமாண்ய விஷயங்களாக நான்கு பக்ஷங்கள். ப்ராமாண்யா ப்ராமாண்யங்கள் இரண்டும் பரத:, இரண்டும் ஸ்வத:, ப்ராமாண்யம் பரத:, வேறு ஸ்வத:. ப்ராமாண்யம் ஸ்வத:, மற்றது பரத:, என்று முதலாவது பக்ஷம்பொருந்தாது, நிஸ்வபாவத்வம் முதலியது ப்ரஸங்கிப்பதால். ப்ராமாண்யா ப்ராமாண்யங்கள இரண்டும் வேறு இடத்தி லிருக்கிறதுகளேயானல் அவை களின் ஸம்பந்தததால் ஜ்ஞாநததிற்கு அவ்விதமான தன்மையும் அதின் ஸம்பந்த மில்லாவிடில் அநுத்பன்னம் போல அநுபயத்வமும் பொருந்தியதாக ஆகும். வேறி டத்தில் அவ்விரண்டுமிலலாமலிருப்பதால் பரதஸ்த்வம் பொருந்தாது. ப்ராமாண்ய புபுத்ஸா பரம்பரையால் அநவஸ்தை ப்ரஸங்கத்தலாலும் இரண்டுக்கும் ஸ்வதஸ்த்வம் பொருந்தாது. விருத்த தர்மங்களாக இருப்பதுபற்றி வ்யாகாதம் வருவதால். வ்யக்தி பேதத்தால் அபாதமென்பது கூடாது. இது ப்ராமாண்யாச்ரயமான வ்யக்தி. இது அப்படிப்பட்டதல்லவென்பதில் நியாமகமில்லாமையால். அப்ராமாண்யத்திற்கே ஸ்வத ஸ்த்வம பொருத்தமுள்ளதாக ஆகாது ப்ராமாண்யமே அதிகமாக இருப்பதாலும் மற்றது அதிகமாக இலலாமலிருப்பதாலும் பகுவாக இருப்பவைகளுக்கு ஸ்வதஸ்த்வ மும் அல்பமாக இருப்பதற்கு ஔபாதிகத்வமுமனறோ யுக்தம். கடபடாதி ஜ்ஞாநங் களில் சுக்திரஜதாதி ஜ்ஞாநங்களுக்கு இதம்சங்களில்கூட ப்ராமாண்யம் காணப்படுவ தால் அதற்கு பாஹுள்யம். ஆகையால் ஸ்வத: ப்ராமாண்யம் - பரத: அப்ராமாண்யம் என்று. ஓரிடத்தில் தன்னிடத்திலிருப்பதாக அபிவ்யஞ்ஜநத்தை ஒப்புக்கொண்டு வ்ய பிசாரம் கூறப்பட்டது.

அதற்குமேல் ஓரிடத்திலும் அது இல்லை என்று சொல்லுகிறார்— நச என்று. அங்ஙனமாகில்; முகத்தைப் பார்ப்பதற்காகக் கண்ணாடி முதலியது அங்கீகரிக்கக்கூடா தெனில் கூறுகிறார் அபிது என்று. அந்த ஜ்ஞாநத்திற்கு ஹேதுவாக இருப்பதால் ப்ரதிபலநத்திற்கு [illegible] என்று பகர்கிறார் தந்தோஷ என்று. எது அந்த இடத்தில் அபிவ்யஞ்ஜகமென்று சொல்லுகிறார்— அபிவ்யஞ்ஜகஸ்து என்று. அஹங

காரமானது ¶ மூர்த்தமாகவும் $ ஸ்வச்சமாகவும் ஸ்தூலமாகவுமிருக்கிற த்ரவ்யமல்லாததாலும் ஸம்வித்துக்கு ஜ்ஞேயத்வமில்லாமையாலும் அசாக்ஷுஷமாக இருப்பதாலும் அஹங்காரத்தால் அவிஷயபூதமான ஸம்வித்தில் அந்த ஸம்வித்தை க்ரஹிக்கிற வஸ்துவினுல் உண்டுபண்ணப்பட்ட ப்ரதிபலனரூபமானதோஷம் ஸம்பவியாதென்று சொல்லுகிறுர்—நசேஹ என்று. வ்யக்தியில் ஜாதிப்ரதீதியானது நியதமான தர்மதர்மிபாவததால் உண்டாகிறது. வ்யங்கயத்வததாலல்லவென்று சொல்லுகிறுர்—வ்யக்தே: என்று. இந்த தர்பணவ்யக்தி நிர்வாஹத்வயததை மனதில் வைத்துக்கொண்டு முந்தி ப்ரதிபந்த நிரஸநரூபமான அநுக்ரஹம் தூஷிக்கப்பட்டது. தர்மதாமிபாவததால் உள்ளபடி ஜாதியானது வ்யக்தியிலிருப்பதினுல் அதற்கு உபலப்தி உண்டாகிறது. கண்ணுடியிலோவென்றுல் ப்ரதிபலனரூப தோஷததினுல். இவ்வண்ணம் அந்யபக்ஷததில் ஸம்பவிக்கிறதில்லை என்று சொல்லுகிறு—அந: என்று. வாஸ்தவத்தில் தர்ம தர்மிபாவம் காரணம், தோஷமோவென்றுல் அதிலிருப்பதாக உண்டாகும் உபலப்திககுக் காரணம். மூர்த்த ஸ்வச்சஸ்தூல த்ரவ்யத்வம இரண்டும் அஹங்காரததிலில்லை என்று அர்த்தம். வஸ்துத: காரணுபாவத்தால் ஜ்ஞாத்ருத்வம இல்லை. தோஷரூபமானகாரணமில்லாமையால் அறியப்படுகிறதுமில்லை என்று சொல்லுகிறுர்—நாஹங்காரஸ்ய ஜ்ஞாத்ருத்வம் ததோபலப்திர்வேதி.

தஸ்மாத் ஸ்வத ஏவ ஜ்ஞாத்ருதயா ஸித்யந்நஹமித்யேவ ப்ரத்யகாத்மா | ந ஜ்ஞப்திமாத்ரம் | அஹம்பாவவிகமே து ஜ்ஞப்தேரபி ந ப்ரத்யக்த்வஸித்திரித்யுக்தம் | தமோகுணாபிபவாத் ஸ்வாபமூர்ச்சாதிஷ்வஹமர்தஸ்ய விவிக்தஸ்புடப்ரதிபாஸாபாவேऽபி ஆப்ரபோதாதஹமித்யேகாகாரேணாத்மாநுஸந்தாநாத் ஸ்வரூபாவஸ்தாநேऽபி நாஹம்பாவவிகம: | அவஸிஷ்டதயா அநுஸந்தேரபி ததேவ ப்ரத்யேதி வக்தவ்யம் ||

ந ஹி ஸந்ததோதித: கஶ்சிதஹம்பாவியோக்தாயதநப்ரத்யக்ஷாகாரஜ்ஞப்திரஹம்ஜ்ஞாநஸாக்ஷிதயாऽவதிஷ்டே ஐத்யவம்பியாம் ஸ்வாநுபவைகவேத்யம் அநுஸந்தத்தம் ப்ராப்யோதி | ஏவம் ஹி ஸந்ததோதிதஸ்ய ப்ராப்யோऽஹம்பாவ ஸ்வாநுபவஸித்திரிதி ||

அதேந ப்ரத்யக்ஷேண தாதாத்ம்யாதஹமித்யேவ ஸ்வத: ஸித்தம் ஜ்ஞாத்ருஸ்வரூபம் ஜ்ஞாயதே | ந ச வாச்யம், யதோபாதிம் ஸத்வம் பவதி; ததா தாதாத்ம்யாதீதிதத்வா ப்ரதிபந்திரிதி; அத உபலக்ஷிதவத்தே: ||

¶ மூர்த்தம்—க்ரியாச்ரயம். $ ஸ்வச்சம்—நிர்மலம்.

ஸ்ரீபாஷ்யம்—

ஆகையால் தானாகவே ஜ்ஞாதாவாக ஸித்திக்கிற அஹமர்த்தமே ப்ரத்ய காத்மா. ஜ்ஞப்திமாத்ரமன்று அஹமபாவம போய்விடுமேயாகில் ஜ்ஞப்திக்குங்கூட ப்ரத்யக்த்வஸித்தி இல்லை என்று சொல்லப்பட்டது. தமோகுணம் அதிகரித்து ஆக்ரமிப்பதாலும் பராகர்த்தாநுபவமில்லாமையாலும் அஹமர்த்தத்திற்கு தனித்து வ்யக்தமான ப்ரகாசமிலலாமலிருந்தபோதிலும் விழிக்கிறவரையில் அஹம் என்று ஒரேவிதமாக ஆன்மாவுக்கு ஸ்பூர்த்தி இருப்பதால் ✽ ஸுஷுப்தியில்கூட அஹம்பாவனை விலகுகிறதில்லை. உனக்கு அபிமதையான அநுபூதிக்கும் அவ்வாறே ப்ரஸக்தி என்று சொல்லத்தக்கது. தூங்கி எழுந்திருந்தவன் ஒருவனுவது அஹம்பாவத்தினின்று விடுபட்டதும் அர்த்தாந்தரங்களுக்கு விரோதியான ஆகாரத்துடன் கூடியதுமான ஜ்ஞப்தியாகிய நான் அஜ்ஞாநஸாக்ஷியாக இருக்கிறேன் என்று இவ்விதமான ஸ்வாபஸமகாலையான அநுபூதியை பராமர்சிக்கிறானில்லை. ஸுகமாக நான் தூங்கினேன்என்று இப்படியல்லவோ தூங்கி எழுந்திருந்தவனுக்குபராமர்சம் வருகிறது. இந்த பராமர்சத்தால் அப்பொழுதுங்கூட அஹமர்த்தமாக. இருக்கிற ஆத்மாவுக்கே ஸுகித்வமும் ஜ்ஞாத்ருத்வமும் அறியப்படுகிறது எவ்வாறு இப்பொழுது ஸுகமுண்டாகிறதோ அவ்வாறு அப்பொழுது உறங்கினேன் என்பது இந்த ப்ரதிபத்தி என்று சொல்லத்தக்கதல்ல ப்ரதிபத்திக்கு அந்த ஸ்வரூபமில்லாமையால்.

ச்ருதப்ரகாசிகை—

ஜ்ஞாதாவுக்கு ஆத்மத்வத்தை நிகமனம் பண்ணுகிறார்—தஸ்மாத் என்று. ஜ்ஞப்திக்கு ஆத்மத்வம் அயுக்தம். அஹந்தையில்லாவிடில் ப்ரத்யக்த்வம் பொருந்தாதாதலால். என்று சொல்லுகிறார்—அஹம்பாவவிகமே என்று. அஹம் என்கிற வ்யவஹாராநுகுணமான பாஸமில்லாவிடில் தனக்குத் தான் தோற்றுதலானது இல்லாமல் போகும். ஆகையால் ப்ரத்யக்த்வமும் அஹமர்த்தத்திற்கே ஆத்மத்வஸாதகம் என்று அர்த்தம். அதற்குமேல் ஸுஷுப்தியில் அஹமர்த்தத்திற்கு ஸ்புரணமிருக்கிறதென்பதை ஸாதிப்பதற்கு வேதாந்தத்தை அவலம்பித்தவர்களான அனைவர்களாலும் ஸ்வயம் ஜ்யோதிஷ்ட்வ ச்ருதிகளை அநுஸரித்து ஸுஷுப்தியில் ஆத்மஸ்புரணம் அங்கீகரிக்கத்தக்கது. அந்த

✽ (தசைகள்) ஜாகரை, ஸ்வப்நம், ஸுஷுப்தி, என மூவகைப்பட்டுள்ளன. அவற்றுள் விழிப்புடன் செய்யும் வ்யவஹாரங்கள் அனைத்தும் ஜாகரதசாகார்யம். வெளி இந்த்ரியவ்யாபாரங்கள் முற்றிலுமொடுங்கி மனோவ்யாபாரமாத்திரத்தினால் பூர்வகர்மாநுகுணமாகவும் வாஸநாநுகுணமாகவும் அத்ருஷ்டாநுகுணமாகவும் ஈசனால் கல்பிக்கப்பட்டிருக்கிற தத்காலமாத்ராநுபாவ்யமான பதார்த்தங்களை அநுபவிக்கும் நிலைமை ஸ்வப்நதசை. பாஹ்யேந்த்ரிய வ்யாபாரங்களும் மன இந்த்ரியவ்யாபாரங்களும் முற்றிலுமொடுங்கி நிர்வ்யாபாரனை ஜீவாத்மா பரமாத்மாவினிடத்தில் சேர்க்கைபெற்று விஷயாநுபவக்லேசத்தை இழந்து இணையற்ற நிரதிசயப்ரமோதாநந்தத்தை அநுபவிக்கும் தசை ஸுஷுப்தி.

ஸுஷுப்தியில் "நாஹகல்வயமேவம் ஸம்ப்ரத்யாத்மாநம் ஜாநாத்யயமஹமஸ்மி" என்கிற ச்ருதியினாலும் "என்னையுங்கூட நான் அறிந்தேனில்லை" என்கிற பராமர்சத்தாலும் அஹமர்த்தானுபவமில்லை ஆகையால் அநுபூதியின் ஸ்புரணமே அப்பொழுது என்கிற சங்கையில் அஹமர்த்தத்திற்கு அவிசதஸ்புரணமிருக்கிறதென்று உபபத்தியுடன் ப்ரதிஜ்ஞை செய்கிறார்—தம: இது முதலியதால். சகாரம் "து" சப்தத்தினர்த்தமுள்ளது. சங்காநிவ்ருத்தியில் வர்த்திக்கிறது. தமோகுணாபிபவத்தை ஹேதுவாகக் கொண்ட பராகர்த்தாநுபவாபாவத்தால் ஸ்புடமான அவபாஸமில்லை. விவிக்த ப்ரதிபாஸம் வ்யாவ்ருத்த ப்ரதிபாஸம். அனேக விசேஷணங்களோடு கூடிய அவபாஸம் ஸ்புடாவபாஸம், வ்யாவர்தக ப்ராஹ்மணத்வம் முதலிய பாஹ்யதர்மங்களோடு கூடியதாகவும் புத்தி ஸுகம் முதலிய ஆந்தரதர்மங்களோடு கூடியதாகவும் ப்ரதிபாஸமில்லாமையால் ஸகலேதர வ்யாவ்ருத்தமாகவும ஸ்புடமாகவும் ப்ரதிபாஸத்தின்மை. எந்த ஆகாரத்தால் ஸ்புரிக்கிறதென்றால் சொல்லுகிறார்— அஹமித்யேகாகாரேண ஸ்புரணத் என்று. அஹமென்று சப்தாநுகாரமல்ல. பின்னையோ இதின வாச்யார்த்தாநுகாரம் - ப்ரத்யக்த்வாகாரத்தோடு ஸ்புரிப்பதாலென்று அர்த்தம். ஏகசப்தத்தால் அஹம்பாவத்தின் நீங்காமை சொல்லக்கருதப்பட்டிருக்கிறது. அன்றிக்கே, ஏகாகாரேண ஸர்வாத்மஸாதாரணமான ஆகாரத்தாலென்று அர்த்தம். ப்ரத்யக்த்வம் முதலியதோவென்றால் ஸர்வாத்ம ஸாதாரணம் ஸுகம் துக்கம் முதலியவைகளும்தேவத்வம் முதலியவைகளும் ஸர்வாத்ம ஸாதாரணங்களல்லவன்றோ. ஸுஷுப்தியில் பாஸிக்கின்ற அஹம்பாவம் ஆத்மாவினிடத்தில ஸாத்யம் அவ்வாறு ஸ்புரணம், ஹேது விசதாவபாஸமில்லாமையால் அஹமர்த்த ஸ்புரணமில்லை என்று சொல்லப்படுமேயாகில் கூறுகிறார்— பவத்பியதாயா அநுபூதேரபி என்று. அஹமர்த்தஸ்புரணத்தில் மாத்ரம் அவைசத்யதோஷம் என்பதில்லை அநுபூதி ஸ்புரணத்திலும் அது துல்யமாக உண்டால் சொல்லத்தக்கது. ஆகையால் விசதாவபாஸமில்லாமையால் நாஸ்தித்வம கூறப்படுமேயாகில் ஜ்ஞப்திரூப ஆத்மாவுக்கும் அப்பொழுது ஸ்புரணம் உண்டாகாமல் போகவேண்டியதாகும். ஜ்ஞாதா ஜ்ஞேயம் இவைகளுக்கு ஸம்பந்தமில்லாமையால் ஸ்புடமான அவபாஸமில்லை என்றல்லவோ அவனுடையகொள்கை என்று அபிப்ராயம்.

ம்ருஷாவாதிகளாலும் மற்றவாதிகளாலும் ஜாகராவஸ்தையிலேயே அவிசதமான அவபாஸம் நிர்விகல்பகத்தில் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள விசதாவபாஸமில்லாமையால் அஹமர்த்தத்தின் அஸ்புரணத்தைக்கூறுவார்கள். அந்த நிர்விகல்பத்திலும் தனித்தனியாக வஸ்துமாத்ரத்தினுடைய அவபாஸத்தின் அங்கீகாரமானது பொருத்தமுள்ளதாக ஆகிறதில்லை அவிசதவஸ்துமாத்ராவபாஸமானது அன்யர்களால் அப்ராமாணிகமாக நிர்விகல்பகத்தில் ஸ்வீகரிக்கப்பட்டிருக்கிறது. இந்த இடத்திலோவென்றால் "அத்ராயம் புருஷ: ஸ்வயம் ஜ்யோதிர்பவதி" இது முதலிய ச்ருத்யனுஸாரத்தினால் அவிசதமான அவபாஸமானது ப்ராமாணிகமாக ஸ்வீகரிக்கப்பட்டிருக்கிறதென்று பேதம். ஆகையால் ஸுஷுப்தியில் ஆத்மஸ்புரணத்தை ஒப்புக்கொள்வதும் அவிசதமான அவபாஸத்தை ஒப்புக்கொள்வதும் துல்யமாக இருக்க ம்ருஷாவாதிமதத்தைவிட தன் பக்ஷத்தில் ப்ரமாணாநுகுண்யத்தைச் சொல்லவேண்டுமென்கிற எண்ணமுள்ளவனுகை பரபக்ஷத்தில் ப்ரமாணாநுகுண்யாபாவத்தைக் காட்டுகிறார்— நஹி என்று. அஹம்பாவ வியுக்தார்த்தாந்தர ப்ரத்யநீகாகாரா—ஜ்ஞாத்ரு ஜ்ஞேயம் முதலிய ஸமஸ்தவிசேஷங்களாலும் விடுபட்டதென்று அர்த்தம். ப்ரத்யக்த்வஸித்தியின்பொருட்டு ஜ்ஞப்தி அஹம் என்கிற இடத்தில் அஹம்சப்தத்திற்கு உபாதானம். தன் பக்ஷத்தில் பராமர்சாநுகுண்யத்தைககூறுகிறார்—ஏவம் ஹி என்று. இந்த பராமர்சமானது ஸுஷுப்திகாலத்தில் ஸுகரூபமாக அனுபவிக்கபபட்ட ஆத்மாவுக்கு கோசரம். அதீதகாலஸம்பந்தம் ஸ்வரூபம் இவ்விரண்டுகளுமோவென்றால் பூர்வகாலத்திலனுபவிக்கப்பட்ட அர்த்

தத்தின் ப்ரத்யபிஜ்ஞையிலும் யோக்யாநுபலப்தியிலும் அநுமிக்கத்தக்கவைகள் தானுகவே அநுகூலமாக பாஸிக்கின்ற அஹமாத்தத்திற்கு ஸுகமஹமஸ்வாப்ஸம் என்கிற இந்த பராமர்சமானது அநுமானத்தால் அறியத்தக்க காலம் ஸ்வாபம இவைகளோடு கூடின ஜீவாத்மாவுக்கு கோசரமான ப்ரத்யபிஜ்ஞா விசேஷம். இவ்வண்ணமாக தன் மதத்திற்கும் புறமதத்திற்கும் அடைவிலே பராமர்சத்தின் ஆநுகுண்யம் அதின் அபாவம், என்கிற வைஷம்யம் கூறப்பட்டது ச்ருதியின் ஸ்வாரஸ்யமும் நம்முடையமதத்தில் "அத்ராயம புருஷ: ஸ்வயம் ஜ்யோதி:" என்று புருஷசப்தத்திற்கு ச்ரவணமிருப்பதால். புருஷசப்தமானது ஸம்விந்மாத்ரபரமன்று. "ஏஷஹி த்ரஷ்டா ச்ரோதா ரஸயிதா க்ராதா மந்தா போத்தா கர்தா விஜ்ஞாநாத்மா புருஷ:" என்று ஜ்ஞாதாவுக்கே புருஷத்வ ச்ரவணமிருப்பதால் உலகத்தில் ஜ்ஞாதாவினிடத்தில் புருஷசப்தத்திற்கு ப்ரஸித்தி இருப்பதினாலும் ப்ரத்யக்த்வஸித்தியானது நம்முடைய மதத்திலேயே என்று சொல்லப்படப்போகிறது. கூறப்பட்ட பராமர்சத்தினால் பலித்த அர்த்தத்தைக்கூறுகிறார்—அதேந என்று. 'ஸுகமஹமஸ்வாப்ஸம' என்கிற பராமாசத்தில் ஸுகம் என்பதினால் அப்பொழுது அநுகூலமாக பாஸித்தல் அநுஸந்திக்கப்பட்டதாக ஆகிறது. அஹம் என்பதினால் தனக்குத்தான் தோற்றுதல் என்கிற ப்ரத்யக்த்வமும் அநுஸந்திக்கப்பட்டதாக ஆகிறது எப்படி மெதுவாகச்சென்றேன். மதுரமாக கானம் பண்ணினேன், என்கிற பராமர்சத்தால் முந்தின கமநத்தோடும் காநத்தோடுங்கூட அக்காலத்திலுள்ள மாந்த்யமும் மாதுர்யமும் அநுஸந்திக்கப்பட்டதாக ஆகிறதோ அப்படிப்போலென்று அர்த்தம்.

ஸ்வஸ்மை ஸ்வயம் அநுகூலம் என்று ஆநுகூல்ய ப்ரதியோகித்வாபிப்ராயத்தால் ஸுகித்வமென்று சொல்லப்பட்டது. ஸ்வஸ்மை பாஸதே என்று பாஸப்ரதிஸம்பந்தித்வரூப ப்ரத்யக்த்வாபிப்ராயத்தினால் ஜ்ஞாத்ருத்வமென்று கூறப்பட்டது. தர்மபூதஜ்ஞாநஸ்புரணத்தினாலன்று அதோ வென்றால் விஷயப்ரகாசநவேளையில் ஜ்ஞாதாவான ஆத்மாவுக்குஅப்படியே,எல்லோருக்கும் எப்பொழுதும் அப்படியேயல்லவென்பது பாஷ்யஸ்வாரஸ்யவிருத்தம். 'பும்ஸ்த்வாதிவத்த்வஸ்யஸதோபி வ்யக்தியோகாத'என்கிற ஸூத்ர ஸ்வாரஸ்யத்திற்கும் விருத்தம். அஸ்மரணநியமாத்யுபபத்திக்கும் விருத்தம். ஸம்ஸாரதசையில் மனதின் வ்யாபாரமில்லாவிட்டாலும் ஜ்ஞாநத்திற்கு ஆத்மவிஷயத்வம அதுவும் இந்த்ரியங்களின் வாயிலாக வ்யவஸ்திதம் என்கிற பாஷ்ய ஸ்வாரஸ்யத்திற்கும் விருத்தம் அப்படி இல்லாவிட்டால் இந்த ஸூத்ரபாஷ்ய வசனங்களுக்கு ஸங்கோசம உண்டாகும். ஸங்கோசத்தைக்காட்டுகிற ப்ரமாணமில்லாமையால் அதுவும் பொருந்தாது. ஆகையால் அப்பொழுது ஆன்மா ப்ரத்யக்காகவும் அநுகூலனுகவும் அநுஸந்திக்கப்பட்டானென்பது பராமர்சத்தால் பலித்த அர்த்தம். "ஸுகமஹமஸ்வாப்ஸம்" என்று ஸுகத்திற்கு ஸ்வாபக்ரியா விசேஷணத்வம் அறியப்படுந்தருணத்தில் எவ்வாறு ஆத்மவிசேஷணத்வம் சொல்லப்படுகிறதென்று வினவப்படுமேயாகில், இவ்வண்ணமல்ல க்ரியைக்கு ஸுகாச்ரயத்வமில்லாமையால் புருஷன் வாயிலாக க்ரியாவிசேஷணத்வம் யுக்தமாக இருப்தால் என்று. ஆத்மாவுக்கு அப்பொழுது நாம் ஒன்றுமறிந்திலேனென்று அஜ்ஞாநஸாக்ஷியாக இருப்பைச் சொல்பவனால் அஜ்ஞாநாச்ரயபூதமான அஹமர்த்தானுபவமானது ஒப்புககொள்ளத்தக்கது. எப்படி காலையில் நற்சந்தி வீதியில் யானை இல்லை என்கிற பராமர்சத்தில் முந்திகஜாபாவத்திற்கு ஆச்ரய பூதமான ‡ சத்வரம் அநுஸந்திக்கப்பட்டதாக ஆகிறதோ அப்படியல்ல. 'அஸ்வாப்ஸம்' என்கிற

‡ சத்வரம்—நற்சந்தி வீதி.

பராமர்சத்திஞல் மந்தமகச்சம் என்கிற இடத்தில் கமநம்போலஸ்வாபமும் அப்பொழுது அநுஸந்திக்கப்பட்டதாக ஆகவேண்டியதாகும்' என்று. சொல்லப்படுமேயாஞல் அல்ல. காலையில் சதவாததில கஜமில்லை என்கிற இடத்தில் முந்தி கஜாபாவத்தின் அநுஸந்தானமில்லாமலிருந்தபோதிலுங்கூட இவ்விதமான பராமர்சததிற்கு எவ்வாறு உபபத்தியோ அப்படிபபோல ஸகலஜ்ஞாந நிவ்ருத்திரூபஸ்வாபத்திற்கு அப்பொழுது அநுஸந்தானமில்லாமலிருநதபோதிலுங்கூட இவ்விதமான பராமர்சத்திற்கு உபபத்திவருவதால் அந்த இடததில் காலையில் சத்வரமே அனுபவிககப்பட்டது, கஜாபாவம் அனுபவிக்கப்படவில்லை. ப்ரதியோகியாக இருக்கிற கஜத்தின் ஸ்மரணமில்லாமையால். பிறகு கஜமானது இருககிறதா என்று வினவப்பட்டவஞல் யோக்யார்த்தாநநுஸ்மரணலிங்கததிஞல் அபாவம் அநுமிக்கப்படுகிறது. அப்படிப்போல ஸகல ஜ்ஞாநநிவ்ருத்திரூப ஸ்வாபமும் யோக்யாநநுஸ்மரணலிஙகததிஞல் அநுமிக்கப்படுகிறது.

அய்யா! "ஸுகமாக நான் உறங்கினேன்" என்கிற பராமர்ச ஸ்வரூபம் இருக்க அத்தருணத்தில் ஸ்வாபம் முதலியவற்றின் அநநுபவமும் ஸுகித்வம் முதலியவற்றின் அநுபவமும எவ்வாறு சொல்லப்படுகிறது? எல்லாம் அநுபவிக்கப்பட்டதாக இருக்குமா? அல்லது அனுபவிககப்படாமலிருக்குமா? இதல்ல. ஸுகமாக நான் உறஙகினேன். என்கிற வ்யவஹாரததில் எநத அம்சத்தில் ப்ரதீதி ஸ்வாரஸ்யத்திற்கு அபவாதமிருக்கிறதோ அந்த விஷயமான ப்ரதிபத்தி ஸ்வாரஸ்யததிற்கு பங்கமிருந்தபோதிலும அபவதிககப்படாமலிருககிற அம்சவிஷய ப்ரதிபத்தி ஸ்வாரஸ்யத்திற்கு பஙகம் கூடாதாதலால். அந்த இடத்தில் ஸ்வாபதசையில் எந்த அர்த்தம் அநுபவிப்பதற்கு அசக்யமோ அந்த விஷயமான ப்ரதிபத்தி. ஸ்வாரஸ்யமானது பக்னமாக்கப்படுகிறது. எது எப்பொழுது அனுபவயோக்யமோ அந்த விஷயமான ப்ரதிபத்தி ஸ்வாரஸ்யம் இருக்கவே இருககிறது. பாஹ்யமான அந்தக்கரண ஜந்யமான ஸமஸ்த ஜ்ஞாநாபாவரூபமாதலால் ஸ்வாபம் அப்பொழுது அநுஸந்திப்பதற்கு சக்யமாகா. அநுஸந்தானம் இருக்கிறதென்று சொல்லப்படுமேயாஞல் ஸ்வாபமே உண்டாகக்கூடாது. ஐந்த்ரியகங்களான ஸமஸ்தஜ்ஞாநஙகளின் நிவ்ருதது இல்லாமையால், இவ்வண்ணமல்ல. ஸுகம் முதலியவற்றுககு ப்ரதிபத்தியின அநுபபத்தி: என்று சொல்லப்பட்டபடியே அர்த்தம். பிறகு இந்த பராமர்சததிற்கு அனயஞல் சொல்லப்பட்ட அந்யதாஸித்தியை அநுவதித்து பரிஹரிககிஞர்—நச இது முதலியதால். அநந்நுபவாத் என்று. இப்படி அர்த்தம். ப்ரதிபததி ஸ்வாரஸ்யத்தாலா? அல்லது அநுபபததியிஞல் ஒப்புக்கொள்ளப்படுகிறதா? என்று விகல்பிதது அததரூபதவாத ப்ரதிபத்தே என்று ப்ரதிபத்தி ஸ்வாரஸ்யம் பரிஹரிக்கப்பட்டது எவ்வாறு மெதுவாகசசென்றேன். மதுரமாக காளம் செய்தேன். என்கிற பராமர்சவசநத்திற்கு அங்கு எப்படி இப்பொழுது மாந்த்யமும் மாதுர்யமும் இருக்கிறதோ அப்படிச்சென்றேன, பாடினேன் என்கிற அர்த்தம் பொருந்துகிறதில்லையன்றோ, பின்னையோ சதிகாந ஸமகாலதவமே மாந்த்யமாதுர்யங்களுக்கு பொருத்தமுள்ளதாக ஆகிறது. அப்படிப்போல ப்ரத்யகத்வ ஸுகித்வங்களும் ஸ்வாபஸமகாலிகஙகள் என்று அர்த்தம.

நசாஹமேவம் ஸ்வாப்தேநாவஸ்திதோ ந ஜாநீம ஏவமேவாஸ்ய ஸ்வ
ரூபாநுஸந்தாநாநுவ்ருத்தி:; யதஸ்ஸுஷுப்திதஶாயாம் ப்ரத்யக்ஷா
ஸித்தம் வஸ்து ஸம்ப்ரதிபந்நம் «அஹம் ஸுகம், அஹம் ஸ்வாப்ஸம்
ந கிஞ்சிதவேதிஷம்» இதி ப்ரத்யவமர்ஶ: । «ஏதாவந்தம் காலம் ந

𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌦𑌹𑌮𑌜𑍍𑌞𑌾𑌸𑌿𑌷𑌮𑍍” 𑌇𑌤𑌿 𑌚 𑌪𑌰𑌾𑌮𑍃𑌶𑍍𑌯𑌤𑍍𑌵𑌾𑌚𑍍𑌚 ; 𑌤𑌤𑌃 𑌕𑌿𑌮𑍍? 𑌨 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌦𑌿𑌤𑌿 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍇𑌧 𑌇𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍; 𑌨, “𑌨𑌾𑌹𑌮𑌵𑍇𑌦𑌿𑌷𑌮𑍍” 𑌇𑌤𑌿 𑌵𑍇𑌦𑌿𑌤𑍁𑌰𑌹𑌮𑌰𑍍𑌥𑌸𑍍𑌯𑌾𑌨𑍁𑌵𑍃𑌤𑍍𑌤𑍇𑌃 ; 𑌵𑍇𑌦𑍍𑌯𑌵𑌿𑌷𑌯𑍋 𑌹𑌿 𑌸 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍇𑌧𑌃 । 𑌨 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌦𑌿𑌤𑌿 𑌨𑌿𑌷𑍇𑌧𑌸𑍍𑌯 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌵𑌿𑌷𑌯𑌤𑍍𑌵𑍇 𑌸 𑌚 𑌅𑌹𑌮𑌿𑌦𑌾𑌨𑍀𑌮𑌪𑌿 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌤𑍍𑌤𑌾𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 । 𑌸𑍌𑌷𑍁𑌪𑍍𑌤𑌿𑌕𑌸𑌮𑌯𑍇 𑌚𑌾𑌨𑍁𑌸𑌂𑌧𑍀𑌯𑌮𑌾𑌨𑌮𑌹𑌮𑌰𑍍𑌥𑌂 𑌜𑍍𑌞𑌾𑌤𑌾𑌰𑌮𑌹𑌮𑌿𑌤𑌿 𑌪𑌰𑌾𑌮𑍃𑌶𑍍𑌯 𑌨 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌦𑌵𑍇𑌦𑌿𑌷𑌮𑌿𑌤𑌿 𑌵𑍇𑌦𑌨𑍇 𑌤𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑌿𑌧𑍍𑌯𑌮𑌾𑌨𑍇 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌕𑌾𑌲𑍇 𑌨𑌿𑌷𑌿𑌧𑍍𑌯𑌮𑌾𑌨𑌾𑌯𑌾 𑌵𑌿𑌤𑍍𑌤𑍇𑌸𑍍𑌸𑌾𑌕𑍍𑌷𑌿𑌤𑍍𑌵𑍇𑌨𑌾𑌨𑍁𑌵𑌰𑍍𑌤𑌮𑌾𑌨𑌸𑍍𑌯 𑌜𑍍𑌞𑌾𑌤𑍁𑌰𑌹𑌮𑌰𑍍𑌥𑌸𑍍𑌯 𑌭𑌾𑌸𑌿𑌤𑌤𑍍𑌵𑍇𑌨𑍈𑌵 “𑌨 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌦𑌹𑌮𑌵𑍇𑌦𑌿𑌷𑌮𑍍” 𑌇𑌤𑌿 𑌪𑌰𑌾𑌮𑌰𑍍𑌶𑍋𑌪𑌪𑌤𑍍𑌤𑍇𑌸𑍍𑌸𑌾𑌮𑍍𑌯𑌂𑌸𑍍𑌥𑌿𑌤𑍍𑌯𑌂 𑌜𑍀𑌵𑌾𑌨𑌾𑌮𑍇𑌵 𑌸𑌾𑌧𑌯𑌤𑌿 ॥

“𑌮𑌾𑌮𑌪𑍍𑌯𑌹𑌂 𑌨 𑌜𑍍𑌞𑌾𑌤𑌵𑌾𑌨𑍍” 𑌇𑌤𑌿 𑌅𑌹𑌮𑌰𑍍𑌥𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌤𑌦𑌾𑌨𑍀𑌮𑌨𑌨𑍁𑌸𑌂𑌧𑌾𑌨𑌂 𑌪𑍍𑌰𑌤𑍀𑌯𑌤 𑌇𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍; 𑌸𑍍𑌵𑌾𑌨𑍁𑌭𑌵𑌸𑍍𑌵𑌵𑌚𑌨𑌯𑍋𑌰𑍍𑌵𑌿𑌰𑍋𑌧𑌮𑌪𑌿 𑌨 𑌜𑌾𑌨𑌨𑍍𑌤𑌿 𑌭𑌵𑌨𑍍𑌤𑌃 । “𑌅𑌹𑌂 𑌮𑌾𑌂 𑌨 𑌜𑍍𑌞𑌾𑌤𑌵𑌾𑌨𑍍” 𑌇𑌤𑌿 𑌹𑍍𑌯𑌨𑍁𑌭𑌵𑌵𑌚𑌨𑍇 । 𑌮𑌾𑌮𑌿𑌤𑌿 𑌕𑌿𑌂 𑌨𑌿𑌷𑌿𑌧𑍍𑌯𑌤 𑌇𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍; 𑌸𑌾𑌧𑍁 𑌪𑍃𑌷𑍍𑌟𑌂 𑌭𑌵𑌤𑌾 । 𑌤𑌦𑍁𑌚𑍍𑌯𑌤𑍇, 𑌅𑌹𑌮𑌰𑍍𑌥𑌸𑍍𑌯 𑌜𑍍𑌞𑌾𑌤𑍁𑌰𑌨𑍁𑌵𑍃𑌤𑍍𑌤𑍇𑌰𑍍𑌨 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌂 𑌨𑌿𑌷𑌿𑌧𑍍𑌯𑌤𑍇 ; 𑌅𑌪𑌿 𑌤𑍁 𑌵𑍍𑌯𑌾𑌵𑌰𑍍𑌤𑌕𑌸𑌮𑌯𑍇𑌽𑌨𑍁𑌸𑌂𑌧𑍀𑌯𑌮𑌾𑌨𑌸𑍍𑌯𑌾𑌹𑌮𑌰𑍍𑌥𑌸𑍍𑌯 𑌵𑌰𑍍𑌣𑌾𑌶𑍍𑌰𑌮𑌾𑌦𑌿𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌤𑌾 । 𑌅𑌹𑌂 𑌮𑌾𑌂 𑌨 𑌜𑍍𑌞𑌾𑌤𑌵𑌾𑌨𑌿𑌤𑍍𑌯𑌤𑍍𑌰 𑌵𑌿𑌷𑌯𑍋 𑌵𑌿𑌵𑍇𑌚𑌨𑍀𑌯𑌃 । 𑌜𑌾𑌗𑌰𑌿𑌤𑌾𑌵𑌸𑍍𑌥𑌾𑌨𑍁𑌸𑌂𑌹𑌿𑌤𑌜𑌾𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌾𑌹𑌂𑌦𑍇𑌹𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌹𑌮𑌿𑌤𑍍𑌯𑌂𑌶𑌸𑍍𑌯 𑌵𑌿𑌷𑌯𑌃 । 𑌸𑍍𑌵𑌾𑌪𑍍𑌯𑌾𑌵𑌸𑍍𑌥𑌾𑌵𑍍𑌯𑌤𑌿𑌰𑌿𑌕𑍍𑌤𑌵𑌿𑌶𑍇𑌷𑌸𑍍𑌵𑌾𑌨𑍍𑌤𑌃𑌕𑌰𑌣𑌸𑍍𑌥𑌾𑌹𑌂𑌦𑍇𑌹𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌹𑌮𑌿𑌤𑍍𑌯𑌂𑌶𑌸𑍍𑌯 𑌵𑌿𑌷𑌯𑌃 । 𑌅𑌤𑍍𑌰 𑌸𑍌𑌷𑍁𑌪𑍍𑌤𑌾𑌹𑌂𑌦𑍇𑌹𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌹𑌮𑌿𑌤𑌿 𑌚 𑌮𑌾𑌮𑌪𑌿 𑌨 𑌜𑍍𑌞𑌾𑌤𑌵𑌾𑌨𑌹𑌮𑌿𑌤𑍍𑌯𑌤𑍍𑌰 𑌚 𑌨𑌾𑌨𑍁𑌭𑌵𑌵𑍍𑌯𑌤𑌿𑌕𑌰𑌃 ॥

ஸ்ரீபாஷ்யம்—

அஹமர்த்தமான ஆத்மா அஸ்திரமாதலால் அப்பொழுது அஹமர்த்தத்திற்கு ஸாக்ஷித்வாநுஸந்தானத்திற்கு அநுபபத்தி என்பதில்லை. யாதொருகாரணத்தினால் ஸுஷுப்திதசைக்கு முன் அனுபவிக்கப்பட்ட வஸ்துவை தூங்கி எழுந்திருந்தவன் என்னுலிது செய்யப்பட்டது, என்னுல் இது அனுபவிக்கப்பட்டது நான் இதைச்சொன்னேன் என்று பராமர்சிக்கிறுனே— இவ்வளவுகாலம் வரையில் நான் ஒன்றையும் அறிந்திலேன் என்றும் பராமர்சிக்கிறுனென்று கூறப்படுமேயானுல்; அதினுலென்ன? ந "கிஞ்சித்"

என்று எல்லாவற்றுக்கும ப்ரதிஷேதம் என்று சொல்லப்படுமேயானல் நானறிந்தேனென்று வேதிதாவான அஹமர்த்தத்திற்கே அநுவ்ருத்தி இருப்பதால் அறியத்தக்கவஸ்துவிஷயகமல்லவோ அங்க ப்ரதிஷேதம். ந கிஞ்சித் என்கிற நிஷேதம் க்ருத்ஸ்நவிஷயமாக இருக்குமேயாகில் உனக்கு அபிமதமான அநுபூதியும் நிஷேதிக்கப்பட்டதாக ஆகும் ஸுஷுப்தி ஸமயத்திலோ வென்றால் அநுஸந்திக்கப்படா நின்ற அஹமர்த்தமாகவும் ஜ்ஞாதாவாகவுமிருக்கிற ஆத்மாவை அஹமென்று பராமசித்து 'ந கிஞ்சிதவேதிஷம்' என்று அவனுடைய வேதநம் நிஷேதிக்கப்படா நின்றிருக்க அச்சமயத்தில் நிஷேதிக்கப்படா நின்றவித்தியின் ஸித்தியையும் அநுவர்தியா நின்ற ஜ்ஞாதாவான அஹமர்த்தத்தினுடைய அஸித்தியையும் 'ந கிஞ்சிதஹமவேதிஷம்' என்கிற இந்த பராமர்சத்தினாலேயே ஸாதிக்கிறவன் அந்த இந்த் அர்த்தத்தை தேவாகளுக்கே ஸாதிக்கட்டும். என்னைக்கூட நானறிந்திலேன், என்று அஹமர்த்தத்திற்குக் கூட அப்பொழுது அநநுஸந்தானம் அறியப்படுகிறதென்று சொல்லப்படுமேயாகில் தன அநுபவத்திற்கும் தனவசநத்திற்குமுள்ள விரோதத்தைக்கூட நீங்கள் அறிகிறீர்களில்லை. அஹம்மாம் நஜ்ஞாதவான், என்றல்லவோ அநுபவவசநங்கள். மாம் என்பதினால் எது நிஷேதிக்கப்படுகிறதென்று வினவப்படுகிறதேயானல் உன்னால் நன்கு வினவப்பட்டது. அதற்கு உத்தரம் உரைக்கப்படுகிறது. அஹமர்த்தமான ஜ்ஞாதாவுக்கு அநுவ்ருத்தியிருப்பதனால் ஸ்வரூபம் நிஷேதிக்கப்படுகிற தில்லை. பின்னையோ விழித்துக்கொண்டிருக்கிற ஸமயத்தில் அநுஸந்திக்கப்படா நின்ற அஹமர்த்தத்தினுடைய வாணச்ரமம் முதலியவைகளோடுகூடி இருத்தல் அஹம் மாம் ந ஜ்ஞாதவான என்கிற வசநத்தில் விஷயம் விவேசிகத்தக்கது. ஜாகரிதாவஸ்தையில் அநுஸந்திக்கப்பட்டிருக்கிற ஜாதி முதலியவைகளோடு கூடின அஸ்மதர்த்தமானது மாம் என்கிற அம்சத்திற்கு விஷயம். ஸ்வாப்யயாவஸ்தையில் ப்ரஸித்தமானதும் அவிசதமான ஸ்வாநுபவத்தையே முக்கியமாகக்கொண்டதுமான அஹமர்த்தமானது அஹம் என்கிற அம்சத்திற்கு விஷயம். இங்கு தூங்கினவன் 'இப்படிப்பட்டவன் நான்' என்று என்னையும் நானறிந்திலேன இப்படியே யன்றோ. அநுபவத்தின் மாதிரி.

ச்ருதப்ரகாசிகை:—

பிறகு அநுபபத்தியை பரிஹரிக்கிறார்— ந்ச இது முதலியதால். அநுபபத்தியும் ஆன்மாவினுடைய அஸ்திரத்வமாவது அல்லது அநுபவாபாவமாவது அவ்விடத்தில் பராமர்சத்தினால் ஆத்மாவின் ஸ்திரத்வத்தைககூறுகிறார்— யத: என்று. "என்னால் இது செய்யப்பட்டது" என்கிற இதுமுதலியவைகள் மாநஸிகங்களாகவும் வாசிகங்களாகவும் காயிகங்களாகவுமுள்ள மூன்றுவித வ்யாபாரங்களை விஷயமாகக்கொண்ட பராமர்சத்தை ப்ரதானமாகக்கொணடவைகள். பிறகு அஹமர்ததாநுபவத்திற்கு ஸாதகமான நிஷேத ஸாமான்ய விஷயமான பராமர்சத்தை சங்கிக்கிறார்—ஐ த ர வ ந் த ம் என்று. அஹமர்த்தத்திற்கு நிஷேதவிஷயதவமில்லை என்கிற அபிப்ராயத்தால்

சொல்லுகிருர்—ந நகிம் என்று. அன்யனுடைய விவக்ஷிதத்தை சங்கிக்கிருர்—நகிஞ்சித் என்று பரிஹரிக்கிருர் ந என்று வேத்ய விஷய: வேத்யட்ரதிபாஸ விஷயம முழுதும் விஷயம என்னும் பக்ஷத்தில அவஷ்டம்பத்தைச் சொல்லுகிருர்—ந கிஞ்சித் என்று. அநநுபூதி நிஷேதமில்லை அதற்கு அநுவ்ருத்தி இருப்பதால் என்று ஆசங்கித்துக்கூறுகிருர்—ஸுஷுப்தி ஸமயேது என்று. உன பக்ஷத்துக்கு இந்த பராமர்சம் விபரீதமென்று அர்த்தம். எவ்வாறு காலேயில் ராஜவீதியில் யானையின அனுபவத்தைப் பற்றி வினவப்பட்டவனும் பிறகு யோக்யாநுஸமரண லிங்கத்தால் ராஜவீதியில் யானையின் இன்மையை சொல்லாநின்றவனுமான புருஷனுலெ பூர்வகாலத்திலுண்டாயிருந்த சத்வரவிஷயமான அநுபவமின்றி கஜாபாவமானது சொல்வதற்கு சக்யமாகாதோ அவ்வாறே அஜ்ஞாநாச்ரயமாக அஹமாத்மத்தைச் சொல்பவனுல் ஸ்வப்ந ஸமயத்தில் அஹமர்த்தாநுபவமானது ஒப்புக்கொள்ளத்தக்கது. அப்படி இருந்தபோதிலும் அஹமாத்த நிவ்ருத்தி ஜ்ஞாநத்தின் தொடர்ச்சியைச் சொல்லுதல் சத்வரநிவ்ருத்தி, கஜாவஸ்தானம, இவைகளைச் சொல்லுகிற வசநத்தோடு துல்யமென்று கருத்து. தேவாநாம்ப்ரியஸ்ததேயது அர்சாரூபிகளென்றோ தேவர்கள். ப்ரதிவசநம் சொல்லாதவர்களென்று அர்த்தம். பொருமையுள்ளவர்களென்றுவது. பிரதிவாதியின் அஸன்னிதியில் என்றுவது உலகமர்யாதையைமீறி சொல்லப்பட்டதென்றுவது, அர்த்தம.

பிறகு நிஷேத விசேஷவிஷயமான பராமர்சத்தைச் சொல்லுகிருர்—மாமஹி என்று. பரிஹரிக்கிருர்—ஸ்வாநுபவ என்று ஸ்வாநுபவம் வசநம இவ்விரண்டுக்கும் அந்யோன்யம் விரோதமில்லை பின்னேயோ இரண்டுக்கும அஹமாத்தாநுவ்ருத்தி நிஷேதசப்தத்தோடு விரோதமென்று அர்த்தம். அனுபவைகதேசங்களுக்கும் வசனைகதேசங்களுக்கும் பரஸ்பரம் விரோதமென்றுவது அர்த்தம். விரோதத்தையே காண்பிக்கிருர்— அஹம் என்று நாஜ்ஞாஸிஷமஹம் என்கிற இடத்தில் அஜ்ஞாநஸாக்ஷியாக அஹமர்த்தாநுவ்ருத்திக்கு ஸ்வாநுபவம் ஸித்தித்திருக்க வசனமும் அதற்கு அநுகுணமென்பதினுல் அநுபவ வசனங்களோடு அஹமாத்தாநுவ்ருத்தி நிஷேதவாக்ய விரோதமென்று அர்த்தம் நிஷேதசப்தம் அந்த அர்த்தாநுபவம் இரண்டுக்கும் விரோதமென்றுவது அர்த்தம் அதில் ''மாம்'' என்கிற பதத்தினுடைய அர்த்தத்தைச் சொல்வதற்காக அன்யனுடைய விருத்தை அநுவதித்துபேசுகிருர்— மாமிதி என்று. முதலில் விருத்தமான அர்த்தத்தைச்சொன்னது அஸாது அர்த்த தத்வத்தின் ப்ரச்னம ஸாது என்கிற அபிப்ராயத்தால் சொல்லுகிருர்—ஸாது என்று நிஷேதம் அநுவ்ருத்தி இவ்விரண்டுக்கும விஷயங்களின் பாகுபாட்டைக்காண்பிக்கிருர் ததுச்யதே இதுமுதலியதால். அஹம மாம் என்ற இரண்டு பதங்களுக்கும் விசிஷ்ட விஷயத்வமே உசிதம். நிதிபேதம் ப்ரஸங்கிப்பதால் எனில் கூறுகிருர்—அஹம் மாம் என்று. விதிநிஷேதங்களுக்கு விஷயமொன்ருக இருக்குமேயாகல் வ்யாகாத முண்டாகுமென்று அதின் நிவ்ருத்தியின் பொருட்டு விஷய விபாகம் செய்யத்தக்கதென்று அர்த்தம் விஷயவிபாகத்திற்கு மாராட்டம் வருமென்று சங்கைவர உசிதமான விஷயவிபாகத்தைக்காண்பிக்கிருர்— ஜாகரித என்று. எந்த ஸாமக்ரியின இன்மையினுல் அப்பொழுது ப்ரகாசிக்கிறதில்லேயோ அதே நிஷேதத்திற்கு விஷயம் எது மற்றது ஒன்றையும் அபேக்ஷியாமல் தானுக ப்ரகாசிக்கிறதோ அதே தொடர்ந்துவருகிறதென்பதினுல் ப்ரகாசியாததற்கு அநுவ்ருத்தியும் ப்ரகாசிக்கிறதற்கு நிஷேதமும் பொருத்தமுள்ளதாக ஆகாதென்று அர்த்தம். இவ்வண்ணம் விஷயவிபாகாநுகுணமாக அநுபவத்தைக் காட்டுகிருர்— அத்ர என்று. சப்தப்ரயோகம் விவக்ஷையைசார்ந்திருப்பதால் புத்தஸ்தமான அனைத்தையும் சொல்லுகிறதா? அல்லது அதில ஏகதேசத்தைச் சொல்லுகிறதா? ஒன்றையும் சொல்லாமலிருக்கிறதா ? ஆகையால சப்தப்ரயோகம் விவக்ஷையைச் சார்ந்து

இருந்தபோதிலுங்கூட அநுபவம ஏகரூபம் அதுவும் இவ்விஷய விஷயவிபாகத்திற்கு அநுகுணமே என்று அர்த்தம். இதினால், "நாஹகல்வய மேவம் ஸம்ப்ரத்யாத்மாநம் ஜாநாத்யயமஹமஸ்மி" என்கிற ச்ருதிவாக்யத்திலிருக்கிற அயமசப்தம் வியாக்யானிக்கப் பட்டது.

𑌕𑌿𑌞𑍍𑌚, 𑌸𑍁𑌷𑍁𑌪𑍍𑌤𑌾𑌵𑌾𑌤𑍍𑌮𑌨𑍋𑌽𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑌾𑌕𑍍𑌷𑌿𑌤𑍍𑌵𑍇𑌨𑌾𑌽𑌸𑍍𑌤𑌿 𑌇𑌤𑌿 𑌹𑌿 𑌭𑌵𑌦𑍀𑌯𑌾 𑌪𑍍𑌰𑌕𑍍𑌰𑌿𑌯𑌾 । 𑌸𑌾𑌕𑍍𑌷𑌿𑌤𑍍𑌵𑌞𑍍𑌚 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌜𑍍𑌜𑍍𑌞𑌾𑌤𑍃𑌤𑍍𑌵𑌮𑍇𑌵 । 𑌨 𑌹𑍍𑌯𑌜𑌾𑌨𑌤𑌃 𑌸𑌾𑌕𑍍𑌷𑌿𑌤𑍍𑌵𑌮𑍍 । 𑌜𑍍𑌞𑌾𑌤𑍈𑌵 𑌹𑌿 𑌲𑍋𑌕𑍇 𑌵𑍇𑌦𑍇 𑌚 𑌸𑌾𑌕𑍍𑌷𑍀𑌤𑌿 𑌵𑍍𑌯𑌪𑌦𑌿𑌶𑍍𑌯𑌤𑍇; 𑌨 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌾𑌤𑍍𑌰𑌮𑍍 । 𑌸𑍍𑌮𑌰𑌤𑌿 𑌚 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌪𑌾𑌣𑌿𑌨𑌿𑌃 "𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌦𑍍𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌰𑌿 𑌸𑌂𑌜𑍍𑌞𑌾𑌯𑌾𑌮𑍍" 𑌇𑌤𑌿 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌜𑍍𑌜𑍍𑌞𑌾𑌤𑌰𑍍𑌯𑍇𑌵 𑌸𑌾𑌕𑍍𑌷𑌿𑌶𑌬𑍍𑌦𑌮𑍍 । 𑌸 𑌚𑌾𑌯𑌂 𑌸𑌾𑌕𑍍𑌷𑍀 𑌜𑌾𑌨𑌾𑌮𑍀𑌤𑌿 𑌪𑍍𑌰𑌤𑍀𑌯𑌮𑌾𑌨𑍋𑌽𑌸𑍍𑌮𑌦𑌰𑍍𑌥 𑌏𑌵𑍇𑌤𑌿 𑌕𑌥𑌮𑌸𑍌 𑌤𑌦𑌾𑌨𑍀𑌮𑌹𑌮𑌰𑍍𑌥𑍋 𑌨 𑌪𑍍𑌰𑌤𑍀𑌯𑍇𑌤 । 𑌅𑌤𑍋 𑌨 𑌸𑍍𑌵𑌯𑌮𑌵𑌭𑌾𑌸𑌮𑌾𑌨𑍋𑌽𑌹𑌮𑌿𑌤𑍍𑌯𑍇𑌵𑌾𑌵𑌭𑌾𑌸𑌤 𑌇𑌤𑌿 𑌸𑍍𑌵𑌾𑌪𑌾𑌦𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌾𑌸𑍍𑌵𑌪𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌾 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌮𑌾𑌨𑍋𑌽𑌹𑌮𑌿𑌤𑍍𑌯𑍇𑌵𑌾𑌵𑌭𑌾𑌸𑌤 𑌇𑌤𑌿 𑌸𑌿𑌦𑍍𑌧𑌮𑍍 ॥

ஸ்ரீபாஷ்யம்.—

மேலும் ஆன்மா ஸுஷுப்தியில் அஜ்ஞாநஸாக்ஷியாக இருக்கிறானென்றல்லவோ உங்களுடைய ப்ரக்ரியை. ஸாக்ஷித்வமாவது ஸாக்ஷாத் ஜ்ஞாத்ருத்வமே. அறியாதவனுக்கு ஸாக்ஷித்வமில்லையன்றோ. ஜ்ஞாதாவேயன்றோ உலகத்திலும் வேதத்திலும் ஸாக்ஷி என்று சொல்லப்படுகிறான். ஜ்ஞாநமாத்ரமல்ல. பகவானுன பாணினியும் கூறி இருக்கிறார். அந்த இந்த ஸாக்ஷியானவன் ஜாநாமி என்று அறியப்படா நின்ற அஸ்மதர்த்தமே என்பதினால் எதினாலப்பொழுது அஹமர்த்தமானது அறியப்படமாட்டாது? தனக்குத்தானாக பாஸிக்கிற ஆத்மாவானது அஹமென்றே பாஸிக்கிறதாதலால் ஸ்வாபம் முதலிய அவஸ்தைகளில்கூட ப்ரகாசிக்கிற ஆத்மா அஹமென்றே பாஸிக்கிறதென்பது ஸித்தம்.

ச்ருதப்ரகாசிகை—

அன்யமதத்தினால் இந்த அர்த்தத்தை உபபாதிக்கிறார்— கிஞ்ச இது முதலியதால். ஸாக்ஷியாக ஆத்மா ஒப்புக்கொள்ளப்படட்டும் அதினாலென்னவென்றுகேட்கில் சொல்லுகிறார்— ஸாக்ஷித்வஞ்ச என்று. ஸாக்ஷாத் ஜ்ஞாத்ருத்வம் - ஸாக்ஷாத்காரரூப ஜ்ஞாநத்திற்கு ஆச்ரயமாக இருத்தல். ஸாக்ஷாத்காரமில்லாதவனிடத்தில் ஸாக்ஷி சப்தம் ப்ரயோகிக்கப்பட்டால் அந்த பிரயோகம் கௌணமானது. உபபாதிக்கிறார்— நஹி என்று. அஜாநத: - அறியாதவனுக்கு என்று அர்த்தம். எதனாலென்றால் சொல்லுகிறார்— ஜ்ஞாதைவ ஹி என்று. சப்தப்ரயோகத்திற்கு நியாமகமான

லக்ஷணத்தைக்கூறுகிறார்— ஸ்மரதி என்று ஸாக்ஷி சப்தம ஸ்மரதி என்று அன்வயம்.

அதினால் அஹமர்த்தத்திற்கு ஆத்மத்வத்தில் என்னவென்று கேழ்க்கப்படுமேயாகில்; கூறுகிறார்— ஸச என்று இந்த அர்த்தத்தில் அநுமானமானது மேலே விஸ்தாரமாகச் சொல்லக்கருதப்பட்டிருக்கிறது. இங்கு சுருக்கமாகச்சொல்லுகிறார்—ஆத்மனே ஸ்வயம் என்று. தன் பொருட்டுத்தானாக அவபாஸிக்கிறவன் அஹமென்றே அவபாஸிக்கிறான் என்று வ்யாப்திவசனம் - ஜாக்ரத்தான ஆத்மா ஸபக்ஷம் ஸ்வஸ்மை ப்ரகாசமானத்வாத் என்பது ஹேது. நிகமனம் செய்கிறார்—ஸ்வாபாதி என்று. அவிசத்மான அவபாஸம் எல்லோர்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதாலும் ச்ருதிஸ்வாரஸ்யத்தாலும் பராமர்சஸ்வாரஸ்யத்தாலும் ஸாக்ஷிகவேபயதியினாலும் ப்ரத்யக்ஷவிருத்தியினாலும் ஸுஷுப்தியில், ஆத்மா அஹமென்று ஸ்புரிக்கிறதென்று சொல்லப்பட்டதாக ஆகிறது.'

[illegible]

[illegible]

யஃ ஸந்நஹமிதி ந ப்ரகாஶதே; நாஸௌ ஸ்வஸ்மை ப்ரகாஶதே யதா கடாதி: । ஸ்வஸ்மை ப்ரகாஶமாநஶ்சாயம் முக்தாத்மா; தஸ்மாதஹமித்யேவ ப்ரகாஶதே ॥

ஸ்ரீபாஷ்யம். —

மோக்ஷதசையில் அஹமர்த்தம் அநுவர்த்திக்கிறதில்லை என்று எது கூறப்பட்டதோ அது அழகல்ல. அப்படியானல் ஆத்மநாசமே மோக்ஷமென்று வேறு விதத்தால ப்ரதிஜ்ஞை செய்யப்பட்டதாக ஆகும். அஹமர்த்தம் தர்மமாத்ரமல்ல. எதனல் அது போனபோதிலும் அவித்யா நிவ்ருத்தியில்போல ஸ்வரூபம் மிஞ்சி இருக்குமோ. விபரீதமாக அஹமர்த்தமானது ஆத்மாவுக்கு ஸ்வரூபமே ஜ்ஞாநமோவென்றல் அதனுடைய தர்மம். நான் அறிகிறேன் ஜ்ஞாநம் எனக்கு உண்டாயிற்று, என்றும் அஹமர்த்தத்திற்கு தர்மமாக ஜ்ஞாநப்ரதீதி வருவதாலேயே.

மேலும் எவன் பரமார்த்தமாகவோ ப்ராந்தியினலேயோ ஆத்யாத்மிகம் முதலிய துக்கங்களால் தன்னை துக்கமுள்ளவனாக அஹம் துஃகீ என்று அநுஸந்தானம் செய்கிறனே, அவனே இந்த எல்லா துக்க ஸமுதாயங்களையும் மறுபடி உண்டாகாமல் துலைத்து எவ்வாறு நான் கவலையற்றவனாகவும் ஸ்வஸ்தனாகவும் ஆவேன் என்று மோக்ஷேச்சை பிறந்தவனாக அதை ஸாதிப்பதில் ப்ரவ்ருத்திக்கிறன். அவன ஸாதநாநுஷ்டானத்தால் நானே இருக்கப்போகிற தில்லை என்று எண்ணுவானேயாகில் அவன மோக்ஷகதாப்ரஸ்தாவத்தினின்று விலகவே விலகுவான். பிறகு அதிகாரி இல்லாமையாலேயே மோக்ஷசாஸ்திரம் முற்றிலும் அப்ரமாணமாக ஆகும், அஹமுபலக்ஷிதமான ப்ரகாசம் மாத்ரம் மோக்ஷதசையில் நிற்கிறதென்று சொல்லப்படுமேயாகில் இதினலென்ன. நான் நஷ்டமாய்போன போதிலுங்கூட ஓரொரு ப்ரகாசம் மாத்ரம் இருக்கிறதென்றெண்ணி புத்திபூர்வகமாக கார்யம் செய்பவன் ஒருவனவது ப்ரயத்நம் செய்யமாட்டான். ஆகையால் ஜ்ஞாதாவாக ஸித்திக்கிற அஹமர்த்தமே ப்ரத்யகாத்மா. அந்த ப்ரத்யகாத்மா முக்தியிலும் அஹமெனறே ப்ரகாசிக்கிறன். தன்பொருட்டு ப்ரகாசிப்பதால் எவன் எவன் தன்பொருட்டு ப்ரகாசிக்கிறனே அவன் எல்லோரும் அஹம் என்றே ப்ரகாசிக்கிறன. ஸம்ஸாரியான ஆத்மா எதோ ஒருவிதமாக ப்ரகாசிப்பவனகவே இருப்பதாக உபயவாதிகளாலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறன்.

எது நானென்று ப்ரகாசிக்கிறதில்லையோ அது தன்பொருட்டு ப்ரகாசிக்கிறதில்லை கடம் முதலியதுபோல இந்த முக்தாத்மா தன்பொருட்டு ப்ரகாசிக்கிறன். ஆகையால் அவன் அஹமெனறே ப்ரகாசிக்கிறன்.

ச்ருதப்ரகாசிகை—

இதற்குமேல் முக்தியில் அஹமர்த்தாநுவ்ருத்தியை அநுவதித்து தூஷிக்கிறார்— யத்து இது முதலியதால் "து" சப்தம் அர்த்த கௌரவவிசேஷத்தில். அபேசலம் - அஸாது என்று அர்த்தம் எதனாலென்று கேட்கில் சொல்லுகிறார்— தத்ராஸதி என்று ஸந்ததியின் உச்சேதத்தை மோக்ஷமாகச்சொல்லுகிற பௌத்தர்களை ஸ்வரூபநாசம் அபுருஷார்த்தமென்று தூஷிக்கிற உன்னால் வேறு சப்தத்தால் ஸ்வரூபநாசம சொல்லப்பட்டதாக ஆகும் என்று அர்த்தம். நையாயிகன் முதலியவர்களால் சொல்லப்பட்டிருக்கிற மோக்ஷத்திலும் அபுருஷார்த்தத்வம் துல்யம். துக்க நிவ்ருத்தி ஸுகப்ராப்தி இரண்டும் புருஷார்த்தம். இங்கு அபுருஷார்த்தபூதமான துக்கமில்லாமையால் புருஷார்த்த ஸம்பந்தம். ஸுகமில்லாமையால் அபுருஷார்த்த ஸம்பந்தமும் என்பதினால் முக்திக்கு புருஷார்த்தாபுருஷார்த்தமிச்ரத்வமன்றோ உண்டாகும். அஹமர்த்தமாரோபிதமன்றோ. ஆகையால் அது போய்விட்டால் ஸ்வரூபநாசம் ப்ரஸங்கியாதென்று சொல்லப்படுமேயாகில் சொல்லுகிறார்— ந ச என்று. எதினாலென்றுகேட்கில் கூறுகிறார்— அஹம் என்று. அஹமர்த்த தர்மமாக ஜ்ஞாநத்திற்கு ப்ரதீதி இருப்பதினாலேயே. முற்கூறப்பட்டுள்ள ஹேதுவினாலேயே என்று அர்த்தம். அஹமர்த்தத்திற்கு ஆத்மத்வ ஸமர்த்தநோபஜீவநத்தினால் ஸ்வரூபநாச ப்ரஸங்கம் உரைக்கப்பட்டது இவ்வண்ணம் தர்ம தர்மிபாவத்தால் ப்ரதீதியின் அநுவ்ருத்தி உபபாதிக்கப்பட்டது.

பிறகு சருத்யர்த்தாபத்தியைச் சொல்லுகிறார்—அபிச இது முதலியதால் முந்தி அஹமர்த்தத்திற்கு ஆத்மத்வஸமர்த்தநத்திற்காக ச்ருத்யர்த்தாபத்தி உரைக்கப்பட்டது. இப்பொழுது அஹமர்த்தத்திற்கு முக்தியிலும அநுவ்ருத்தியின் உபபாதனத்தின்பொருட்டு அதே ச்ருத்யர்த்தாபத்தியை விஸ்தாரமாக உரைக்கிறார் எவன் தன் ஆத்மாவை துக்கி என்று எண்ணுகிறானோ அவனே அதின் நிவ்ருத்திஸாதநத்தில் ப்ரவ்ருத்திக்கிறான் அவன் அஹமர்த்தமே துக்கித்வம ப்ராந்திஸித்தமென்று சொல்லப்படுமேயாகில் எவன் தன்னாத்மாவை ப்ரமமுள்ளதாக நினைத்துக்கொள்ளுகிறானோ அவனே ப்ரம நிவ்ருத்தி ஸாதநத்தில் ப்ரவ்ருத்திக்கிறான். அவனும் அஹமர்த்தம் சந்தரன் இரண்டு என்கிற ஜ்ஞாநம் முதலிய ப்ராந்தியுள்ளவனுக்குங் கூட தன்னுடைய ப்ராந்தி நிவ்ருத்தியே அபேக்ஷிக்கப்பட்டிருக்கிறதே ஒழிய தன்விநாசம் அபேக்ஷிக்கப்பட்டதல்ல ஆகையால் அஹமர்த்தவிநாசம் அபுருஷார்த்தமென்கிற அபிப்ராயத்தால் பரமார்த்தத்தினாலோ ப்ராந்தியினாலோவென்று சொல்லப்பட்டது 'அநுஸந்தத்தே" என்கிற பதத்தை ஈற்றிலுடைய க்ரந்தத்தினால் "நிரஸ்தாகிலதுக்கோZஹம்" என்கிற இடத்தில் அபேக்ஷிக்கப்பட்டிருக்கிற சொல்லத்தக்கவிஷயம சொல்லப்பட்டது. "நிரஸ்த" என்கிறபதத்தை முதலிலுடைய ச்லோகத்தை விவரிக்கிறார்—ஸர்வமேதத் இதுமுதலியதால் அநாகுல:ஸ்வஸ்தோ பவேயமிதி அபுநர்பவமபேக்ஷ்ய என்று இதின் பலம் கூறப்பட்டது அநாகுல: என்று வரப்போகிற துக்கசங்கையினால் மனதுக்கு உண்டாகும் கொந்தளிப்பு ஆகுலத்வம், அதின் இன்மை அநாகுலத்வம். ஸ்வஸ்த: ஸ்வஸ்மிந் ஸ்தித: - ஸ்வபாவத்தில் நிலைபெற்றவன். யதாவஸ்திதமான ஆத்மானுபவத்தில் நோக்கமுடையவன் - அநந்தாநந்தபாக் என்பது பலம். ஸஏவ - முன் துக்கமுள்ளவனே எவன் உண்டான அநிஷ்ட நிவ்ருத்தி - இஷ்டப்ராப்திகளில் அபிலாஷமுள்ளவனோ அவனே என்று அர்த்தம், "ச்ரவணாதௌ" என்று முந்தி சொல்லி இருப்பதால் இந்த இடத்தில் "தத்ஸாதந:" என்று இவ்வளவுமாத்திரம் சொல்லப்பட்டது. "அபவர்கேபஸௌ" என்கிற க்ரந்தத்தினால் பலித்த அர்த்தத்தைக்கூறுகிறார் — தத்ராதிகாரி என்று. ச்ரவணம் முதலிய ஆயாஸத்தால் ஸாத்யமான சாஸ்த்ரத்திற்கு

புருஷார்த்தபர்யவஸாயித்வமில்லாவிடில் ச்ரவணாதிகளில் அதிகாரி இல்லாமையால் ச்ரவணம் முதலியதை அபேக்ஷிக்கிற சாஸ்திரத்திற்கு ப்ரமிதிஜநகத்வ லக்ஷணமான ப்ராமாண்யம் உண்டாகாதென்று அர்த்தம். "மயி நஷ்டேபி" என்கிற க்ரந்தத்தை விவரிக்கிறார்—அஹமுபலக்ஷிதம் இதுமுதலியதால். புத்திபூர்வகாரீ என்பதினால் 'கஸ்யாபி' என்கிறபதம் விவரிக்கப்பட்டது ச்ருத்யர்த்தாபத்தியை நிகமனம் செய்கிறார்— அத: என்று. அஹமர்த்தம் போகும்பக்ஷத்தில் ஜ்ஞப்தியின் அஸித்தியும அநுஸந்திக்கத்தக்கது அநுமானத்தைக் கூறுகிறார்—ஸச என்று. மேலும் அநுமாநமும இருக்கிறதென்று அர்த்தம் அந்வய வ்யாப்தியைக்கூறுகிறார்—யோ ய: என்று. ததாவபாஸமாநதவோ-தன்பொருட்டு ப்ரகாசிப்பதால். வ்யதிரேக வ்யாப்தியைக்காட்டுகிறார்— ய:புந: என்று. உபநயத்தைச்சொல்லுகிறார்— ஸ்வஸ்மை என்று. நிகமனத்தைக்கூறுகிறார்—தஸ்மாத் என்று தன் பொருட்டு ப்ரகாசித்தல் ஹேது. அஹமென்று வ்யவஹாரார்ஹத்வம் ஸாத்யமென்பதினால் ஸாத்யாவிசிஷ்டதை இல்லை. அஹமென்றே ப்ரகாசிக்கிறது. அஹம என்கிற வ்யவஹாரார்ஹமாக ப்ரகாசிக்கிறதென்று அர்த்தம்.

நவாஹமிதி ப்ரகாஶமாநத்வேந தஸ்யாஜ்ஞத்வஸம்ஸாரித்வாதி ப்ரஸங்க: | மோக்ஷவிரோதாச்ச, அஜ்ஞத்வாத்யஹேதுத்வாச்சாஹம்ப்ரத்யயஸ்ய | அஜ்ஞாநம் நாம ஸ்வரூபாஜ்ஞாநம் அந்யதாஜ்ஞாநம் விபரீதஜ்ஞாநம் வா | அஹமித்யாத்மஸ்வரூபப்ரகாஶேதி ஸ்வரூபஜ்ஞாநரூபோऽஹம்ப்ரத்யயோ நாஜ்ஞத்வமாவஹதி; குத: ஸம்ஸாரித்வம் | அபி து தத்விரோதித்வாந்நாஶயத்யேவ ||

ப்ரஹ்மாத்மாவாபரோக்ஷ்யநிபுணத்நிரவஶேஷாவித்யாநாஶி ஸாதகமாத்மஸ்வரூபமஹமித்யாத்மாநமுபதேஶாதர்ஶநாச்ச | ஶ்ரூயதே ஹி—"தத்தைதத் பஶ்யந்ருஷிர்வாமதேவ: ப்ரதிபேதே, அஹம் மநுரபவம் ஸூர்யஶ்ச" (ப்ரு-௩-௪-௧௦) இதி, "அஹமேக: ப்ரதமமாஸம், வர்தாமி ச பவிஷ்யாமி ச" (அ-ஶி-௧) இத்யாதி| ஸகலேதராஜ்ஞாநவிரோதிநஸ்ஸர்வப்ரத்யக்ஷஸ்யாத்மந: பரஸ்ய ப்ரஹ்மணோ வ்யவஹாரோऽப்யேவமேவ— "ஹந்தாஹமிமாஸ்திஸ்ரோ தேவதா:" (சா-௬-௩-௨) "பஹு ஸ்யாம் ப்ரஜாயேய" (தை-௬-௨) "ஸ ஈக்ஷத லோகாந்நு ஸ்ருஜா இதி"; (ஐ-௧-௧-௧) ததா— "யஸ்மாத்க்ஷரமதீதோऽஹமக்ஷராதபி சோத்தம: | அதோऽஸ்மி லோகே வேதே ச ப்ரதித: புருஷோத்தம:" (கீ-௧௫-௧௮) "அஹமாத்மா குடாகேஶ" (கீ-௧௦-௨௦) "ந த்வேவாஹம் ஜாது நாஸம்" (கீ-௨-௧௨) "அஹம் க்ருத்ஸ்நஸ்ய ஜகத: ப்ரபவ: ப்ரலயஸ்ததா" (கீ-௭-௬) "அஹம் ஸர்வ

ஸ்ய ப்ரபவோ மத்தஸ்ஸர்வம் ப்ரவர்த்ததே" (கீ-ய-அ) "தேஷாமஹம் ஸமுத்தர்தா ம்ருத்யுஸம்ஸாரஸாகராத்" (கீ-கஉ-எ) "அஹம் பீஜப்ரத: பிதா" (கீ-கச-ச) "வேதாஹம் ஸமதீதாநி" (கீ-எ-உசு)—இத்யாதிஷு ॥

யத்யஹமிதி ப்ரத்யகாத்மந: ஸ்வரூபம்; கதம் தர்ஹ்யஹங்காரஸ்ய க்ஷேத்ரஜ்ஞஸ்வரூபாந்தர்பாவோ ஹேயதயோபதிஶ்யதே? "மஹாபூதாந்யஹங்காரோ புத்திரவ்யக்தமேவ ச" (கீ-கங-ரு) இதி। உச்யதே, ஸ்வரூபோபதேஶேஷு ஸர்வேஷ்வஹமிதி ப்ரத்யகாத்மோபதேஶஸ்ஸ்வரூபப்ராதிபதேஶ்யாஹமிதி ப்ரத்யகாத்மந: ஸ்வரூபம் ॥

ஸ்ரீபாஷ்யம்:—

அஹமென்று ப்ரகாசிப்பதினால் அவனுக்கு அஜ்ஞத்வம், ஸம்ஸாரித்வம் முதலியவேறய தர்மங்கள் ப்ரஸங்கியாது. மோக்ஷவிரோதத்தால், அஹம்ப்ரத்யயமானது அஜ்ஞத்வாதிகளுக்கு ஹேதுவல்ல அஜ்ஞானமென்பது ஸ்வரூபாஜ்ஞானம் அந்யதாஜ்ஞானம், அல்லது விபரீதஜ்ஞானம் அஹமென்றே ஆத்மஸ்வரூபம் பாஸிப்பதால் ஸ்வரூபஜ்ஞானரூபமான அஹம்ப்ரத்யயமானது அஜ்ஞத்வத்தை உண்டுபண்ணுகிறதில்லை அவ்வாறு இருக்க ஸம்ஸாரியாக இருக்குந்தன்மையை எவ்வண்ண முண்டாக்கும். பின்னேயோ அதற்கு விரோதியாக இருப்பதால் அதை நாசமே செய்யும், ப்ரஹ்மாத்மபாவாபரோக்ஷயத்தினால் விலக்கப்பட்ட மிச்சமில்லாத அவித்யையையுடையவர்களான வாமதேவர் முதலியவர்களுக்கு அஹமென்றே ஆத்மானுபவம் காணப்பட்டிருப்பதாலும், ச்ருதியை இது விஷயத்தில் ப்ரமாணமாக உபந்யஸிக்கிறார். "தத்தை தத்பச்யந்ருஷிர்வாமதேவ: ப்ரதிபேதே" அஹம் மநுரபவம் ஸூர்யச்ச" என்று, "அஹமேவச வர்தாமி பவிஷ்யாமி" இது முதலிய வசந ஸமூஹம்— ஸமஸ்தமான இதராஜ்ஞாந விரோதியும் 'ஸத்' என்கிற சப்தத்தாலுண்டாகிற ப்ரத்யயமாத்ரத்திற்கு கோசரமாகவுமிருக்கிற பரப்ரஹ்மத்தின் வ்யவஹாரமும் இவ்வண்ணமே. "ஹந்தாஹமிமாஸ்திஸ்ரோதேவதா:" (ஸ்ருஷ்டியில் நோக்கமுள்ளவனை நான் இந்த ப்ருதிவி அப், தேஜஸ், என்கிற மூன்று தேவதைகளை) 'பஹுஸ்யாம் ப்ரஜாயேய'(நான் உலகத்திலுள்ள அனேக வஸ்துக்களாக பரிணமிக்கக்கடவேன்) "ஸ ஈக்ஷத லோகான்னுஸ்ருஜா" (உலகங்களை நான் ஸ்ருஷ்டிக்கக்கடவேனென்று அவன் ஸங்கல்பித்தான்.) அவ்வாறே. "யஸ்மாத்க்ஷரமதீதோஹம் அக்ஷராதபி சோத்தம: அதோஸ்மிலோகே வேதேச ப்ரதித: புருஷோத்தம:" (யாதொரு காரணத்தால் நான் அசேதந பதார்த்தங்களை அதிக்ரமித்தவனாகவும் அக்ஷரசப்தத்தால் வாச்யர்களானஜீவர்களைக்காட்டிலும் உத்தமனாகவும் இருக்கிறேனோ. அதனால் நான் உலகத்திலும் வேதத்திலும் புருஷோத்தமனென்று ப்ரஸித்தி பெற்றிருக்கிறேன்)"அஹமாத்மா குடாகேச"(குடில குந்தலங்களை

உடையவனை ஹே! அர்ஜுனா! நான் உலகமனைத்தையும் வ்யாபித்திருப்பவன்) "நத்வேவாஹம் ஜாது நாஸம்" (நான் ஒருபொழுதும் இல்லாமலிருந்தேனென்பதில்லை) "அஹம் க்ருத்ஸ்நஸ்ய ஜகத: ப்ரபவ: ப்ரளயஸ்ததா- அஹம் ஸர்வஸ்ய ப்ரபவோ மத்தஸ்ஸர்வம் ப்ரவர்த்ததே தேஷாமஹம் ஸமுத்தர்த்தா ம்ருத்யுஸம்ஸாரஸாகராத் அஹம் பீஜப்ரத: பிதா வேதாஹம் ஸமதீதாநி" (நான் எல்லா உலகங்களுடையவும் உத்பத்திக்குக்காரணமாக இருப்பவன் அவ்வாறே லயத்திற்கும்காரணம். நான் எல்லாவற்றுக்கும் காரணம் என்னிடத்தினின்று எல்லாம் உண்டாகிறது நான் அவர்களை ம்ருத்யுவாக இருக்கிற ஸம்ஸாரஸமுத்ரத்தினின்று நன்கு மேலே தூக்கிவிடுபவன் நான் விதை போடுகிற தகப்பன்—சென்றவைகளை நான் அறிவேன்) இது முதலியவைகளில் அஹமென்றே ஆத்மாவினுடைய ஸ்வரூபமாகில் எவ்வாறு அஹங்காரத்திற்கு க்ஷேத்திரத்தில் அந்தர்பாவமானது பகவானால் உபதேசிக்கப்படுகிறது "மஹாபூதாந்யஹங்காரோ புத்திரவ்யக்தமேவச" (ஐந்து மஹாபூதங்கள். அஹங்காரம், மஹத்தத்வம், மூலப்ரக்ருதி) என்று சொல்லப்படுகிறது. ஸ்வரூபோபதேசங்களனைத்திலும் அஹமென்றே உபதேசத்தாலும் அப்படியே ஆத்மஸ்வரூபப்ரதிபத்தியினாலும் அஹமென்றே ப்ரத்யகாத்மாவின் ஸ்வரூபம்.

ச்ருதப்ரகாசிகை—

ஸாத்ய விபரீதங்களுக்கு விசேஷஸாதகமாக இருப்பதால். விசேஷவிருத்தத்வத்தை சங்கிக்கிறார்—நச என்று ஆதிசப்தத்தால் ராகம் த்வேஷம் துக்கம் முதலியது விவக்ஷிக்கப்பட்டிருக்கிறது. அய்யா! வ்யாபகமன்றோ ப்ரஸஞ்ஜநஞ் செய்யத்தக்கது. கார்யம் காரணத்திற்கு வ்யாபகமல்ல உண்மை. காரணஜாதீயத்திற்கோ வென்றால ஒரு ஸமயத்தில் கார்யப்ரஸக்தியானது வ்யாபிகை. ஆகையால அஹம் ப்ரத்யயத்தினால் ஆத்மாவுக்கு அஜ்ஞத்வம் முதலியவற்றுக்கு ப்ரஸஞ்ஜநம அஜ்ஞத்வாதி ப்ரஸக்தியானது ச்ருதி விருத்தை என்று சொல்லுகிறார்— மோக்ஷ என்று. "நபச்யோ ம்ருத்யும் பச்யதி, ந ரோகம் நோத துக்கதாம்" என்றல்லவோ ச்ருதி (ஆத்மாவை ஸாக்ஷாத்கரிக்கிறவன் ஸம்ஸாரத்தையாவது ரோகத்தையாவது துக்கத்தையாவது பார்க்கிறானில்லை). ஆகையால் சேர்ந்துகண்ட மாத்திரத்திலே பாவத்திலே பாண்டம் முதலியவற்றின் ப்ரஸக்தியானது ப்ரத்யக்ஷ பாதத்தால் எவ்வாறு நிராகரிக்கப்படுகிறதோ. அவ்வாறாக ¶ காலாத்யயாபதேசமென்று அர்த்தம். ஸோபாதிகத்வத்தைச் சொல்லுகிறார்-அஜ்ஞத்வாதி என்று ஸம்ஸாரித்வாஹமர்த்தங்கள் இரண்டுக்கும் ஸஹதர்சனமாதரத்தினால் முக்தியிலகூட ஸம்ஸாரித்வம் முதலியது ப்ரஸங்கிக்குமேயாகில் அனுபவத்திற்கும் அதோடு ஸஹபாவதர்சனத்தால் உன் பக்ஷத்திலும் முக்தியில் ஸம்ஸாரித்வம் ப்ரஸங்கிக்கும். அது மோக்ஷக்ராஹி ப்ரமாண விரோதத்தால் பாதிதம. ஸம்ஸாரித்வம் முதலியது அநுபவ ப்ரயுக்தமல்லாமையால் ஸோபாதிகத்வமென்று சொல்லப்படுமேயாகில் அது நம்ம பக்ஷத்திலும ஸமானமென்று அபிப்ராயம். இதனால் அஹமென்கிற தோற்ற

¶ காலாத்யயாபதேசம்—பாதம்.

மானது தன்பொருட்டுத் தோற்றுதலால் உண்டுபண்ணப்பட்டதல்ல. பின்னேயோ அஜ்ஞத்வத்தால் உண்டுபண்ணப்பட்டது என்பதனுல் ஹேதுவுக்கு ஸோபாதிகத்வமும் ச்ருதிபலத்தால் வ்யாப்தியானது பக்னமானபடியால் ஸஹதர்சனமாத்ரமே என்பது பரிஹரிக்கப்பட்டதாக ஆகிறது.

இவ்வண்ணம் காலாத்யயாபதேசம் ஸோபாதிகத்வம் இரண்டும் கூறப்பட்டன. அதில் ஸோபாதிகத்வத்தை உபபாதிப்பதற்கு அஜ்ஞாநத்வத்தால் ஸம்பாவிதங்களான பக்ஷங்களை விகல்பிக்கிறுர்—அஜ்ஞாநம் நாம என்று. தாமி ஒன்ருக இருக்க அதில் வேறு தர்மத்தை ஆரோபிப்பதினுல் உண்டாகிற ஜ்ஞாநம் அந்யதாஜ்ஞாநம. உதாஹ ரணம் சங்கு மஞ்சள் நிறமுள்ளதென்று - இது ரஜோகுணத்தின் கார்யம். வேறுதர்மி யை வேறு தர்மியாக அறிவது விபரீதஜ்ஞாநம். உதாஹரணம-சிப்பியைப்பார்த்து இது வெள்ளி என்று எண்ணுதல். இது தமோகுணத்தின் கார்யம் “அயதாவத் 'ப்ரஜாநாதி புத்திஸ்ஸாபார்த்த ராஜஸீ । அதர்மம் தர்மமிதியா மந்யதே தமஸா வ்ருதா! ஸர்வார்த்தாந் விபரீதாம்ச்சபுத்திஸ்ஸாபார்த்த தாமஸீ” (அர்ஜுநு ! எந்தபுத்தி வஸ்துக்களை உள்ளபடி அறிகிறதில்லையோ அது ராஜஸபுத்தி. பார்த்த ! தமஸினுல் கவரப்பட்டதாக இருந்து கொண்டு எந்த புத்தியானது அதர்மத்தை தர்மமென்று எண்ணுகிறதோ எல்லாவஸ்துக் களையும் விபரீதங்களாகவும் எண்ணுகிறதோ அது தாமஸபுத்தி) என்று ஸ்ம்ருதி இருப்பதால் அஹம்ப்ரத்யயம் ஸ்வரூபஜ்ஞாநரூபமாதலால் அதின் ப்ராகபாவம் அந் யதா ஜ்ஞாநம், விபரீதஜ்ஞாநம், இவைகள் விரோதத்தினுலேயே விலகிவிட்டனவென்று கூறுகிறுர்— அஹமித்யேவ என்று. அஹமென்றே ஆத்மாவினுடைய ஸ்வரூபம். அஹம் என்கிற வ்யவஹார புத்திக்கு அர்ஹமே ஆத்மஸ்வரூபமென்று அர்த்தம். அஹம் ப்ரத்யயத்திற்கு அஜ்ஞத்வாதி ப்ரயோஜகத்வ தூஷணத்தினுல் அஜ்ஞத்வம் முதலியவற் றுக்கு அவித்யாந்வயமே உபாதி என்று அர்த்தத்தால் சொல்லப்பட்டதாக ஆகிறது. அன்றிக்கே கார்யகாரணபாவத்தால் வ்யாப்தியை அங்கீகரித்து அன்யனுல் அஜ்ஞத்வம் முதலியவற்றின் ப்ரஸங்கம் சொல்லப்பட்டதென்று வ்யாப்தியை நிராகரிப்பதற்காக கார் யகாரணபாவத்தை நிராகரிக்கிறுர்—அஜ்ஞத்வாத்ய ஹேதுத்வாச்ச இதுமுதலியதால், அஜ்ஞத்வபலமுமில்லை என்று சொல்லுகிறுர்—ததஸ்ஸம்ஸர்த்வம் என்று. அவித் யை நீங்கினவர்களுக்குங்கூட அஹமென்று ஆத்மப்ரதிபத்தி காணப்படுவதால் அஹம் ப்ரத்யயதிற்கு முக்தாத்மாவினிடத்தில் அநுவ்ருத்தியைக் கூறுகிறுர்— ப்ரஹ்மாத்ம பாவ என்று. “தத்வைததத்பச்யந்” என்று ப்ரஹ்மாத்மகத்வஸாக்ஷாத்காரவசனத்தினுல் மிகுதி இன்றி அவிதயையின் விலக்கம் அறியப்படுகிறது. ப்ரஹ்மததிற்கும் அவ்வி தப்ரதிபததியைச் சொல்லுகிறுர்—ஸகலேதர என்று. ஸகலேதராஜ்ஞாந விரோதிந: ஸகலமான இதரவிஷயங்களைப் போககும ஸாமர்த்தியமுள்ள கருடனுக்கு விஷத் திற்கு வசப்படுதல் ஸம்பவியாதென்று கருத்து. ஸச்சப்த ப்ரசயயமாத்ரபாஜ: - ஸச்சப் தஸ்ய - ஸத் என்கிற ப்ரத்யயத்துக்கும் விஷயமாக ஆகி இருககிற. மாத்ரச் ப்ரத்யயத் தினுல் பிற்காலத்திய நாமரூபபாக்த்வ வ்யாவ்ருத்தி ஏற்பட்டிருக்கிறது. இதனுல் அஹங்கார ஸ்ருஷ்டிக்கு முந்தியும் அஹம்ப்ரத்யயத்தை ஜ்ஞாபிக்கிறுர— அஹம்ப்ரத் யயதனை ப்ரகாசப்படுத்துவதற்காக “அஹமிமா.” என்கிற வாகயத்தை முந்தி உபாதாநம் செய்கிறுர். பகுஸ்யாம் என்கிற வாக்யத்தில் அஸ்மத் யுத்தம: என்கிற ஸூத்ர விஹிதமான உத்தம புருஷபலத்தால் அஹமென்றும் ப்ரத்யயம் ஸித்தித்தது. “அஹமி மாஸ்திஸ்ர:” என்கிற இடத்தில் அஹம் சப்தமானது கண்டோக்தமாக இருக்கிறது. அஹங்காரத்திற்கு நாமரூப வ்யாகர்த்ருத்வம் இல்லையன்றோவென்று கருத்து. அனேக உபநிஷத்துக்களில் அஹமென்கிற நிர்தேசத்தை ஜ்ஞாபிப்பதற்காக எடுக்கிறுர்— ஸ நக்ஷத்ர என்று. 'ஸ்ருஜா' என்கிற உத்தமபுருஷனுல் அஹம்சப்தா கர்ஷஸித்தி என்று

கருத்து. ஸ்ம்ருதியைக் காண்பிக்கிறார்— ததா யஸ்மாத் என்று. யஸ்மாத் என்கிற வசனம் க்ஷராக்ஷரங்களைத்தாண்டி இருக்கிற ஸ்வாபாவிக ரூபத்தால் அஹம்ப்ரத்யயத்தை ஜ்ஞாபிப்பதற்காக உபாதானம் செய்யப்பட்டது. அஹங்காரம் க்ஷராக்ஷராதீதமல்லவன்றே. ஆகையால் அஸ்மி என்கிற உத்தமபுருஷனாலும் அஹமர்த்தம் ஸித்திக்கிறது, ஆத்மாவுக்கு அஹம் ப்ரத்யயத்தை ஜ்ஞாபிக்கிறார்—அஹமாத்மா என்று. அஹங்காரமானது சிதசித்தந்த்ராத்மா அல்லவன்றே. ஸ்வாபாவிக நித்யரூபத்தில் அஹம் ப்ரத்யயத்தைக்காண்பிக்கிறார்—நத்வேவாஹம் என்று. அஹங்காரம் நித்யமல்ல. ம்ருத்யுவிரோதியான முக்தியைக்கொடுப்பதாக இருந்தபோதிலும் அஹம் ப்ரத்யயவிஷய மென்று கூறுகிறார்—தேஷாம் என்று. அஹங்காரம் முக்தியைக்கொடாதன்றே. இவ்வண்ணமாக அநேக ச்ருதி ஸ்ம்ருதிவசனங்களை எடுத்தது அன்யனால் சொல்லக்கருதப்பட்ட அப்படிப்பட்ட இரண்டு மூன்று வசனங்களை நிராகரிப்பதற்காக. இந்த அஹம் சப்தங்களால் சின்மாத்ரம் உபலக்ஷிக்கப்படுகிறதேயாகில் அநேக வாக்யங்களிலுள்ள அஹம் சப்தத்திற்கு லக்ஷணையே தோஷம். மஹாபூதான்யஹங்கார: என்று க்ஷேத்ராந்தர்பாவ வசனம் ஒன்று. அஹங்காரம், பலம், தர்பம், காமம், க்ரோதம், பரிக்ரஹம். விமுச்ய நிர்மமச்சாந்தோ ப்ரஹ்மபூயாய கல்பதே'' (''அஹங்காரம் பலம் கொழுப்பு ஆசை கோபம் க்ருஹம் ஆராமம் க்ஷேத்ரம் முதலிய போக்யவஸ்துக்கள். இவைகள் அனைத்தையும்விட்டு மமகாரத்தை இழந்து சாந்தியுள்ளவன் ப்ரஹ்மபாவத்தை அடைவதற்கு ஸமர்த்தனாக ஆகிறான்.) என்று. இழக்கத்தக்க தன்மையில் நோக்கங்கொண்டது இரண்டாவது வசனம். அஹங்கார விமூடாத்மா என்பது மற்றொன்று. இவை மூன்றும் உதாஹரிக்கப்படாமலிருந்தபோதிலுங்கூட அபிப்ராயப்படப்பட்டதே. ஏனெனில் மேலே பரிஹாரமிருப்பதால். முந்தி இந்த வசநாபிப்ராயத்தால் ஸுஷுப்தி முக்தி இவ்விரண்டிலும் அந்வயிக்கிறதில்லை என்று. கூறப்பட்டது. இந்த அர்த்தத்தை அவலம்பித்து வினவுகிறார்— கதம் தர்ஹி என்று. பரிஹரிக்கிறார்—உச்யதே என்று. அஹமர்த்தாஹங்காரங்கள் இரண்டுக்கும் அபேதபுத்தியினால் அந்யனால் வினவப்பட்ட ப்ரக்ருதி ப்ரத்யயங்களுக்கு அர்த்தவிபாக வ்யுத்பாதனத்தின் பொருட்டு ப்ரக்ருதிக்கு அர்த்தமாக இருக்கிற ஆத்மாவினிடத்தில் அஹம் புத்திக்கு ப்ராமாணிகத்வஸ்தைர்யத்தைக் காண்பிக்கிறார்—ஸ்வாநுபோபதேசேஷு என்று.

அவ்யக்தபரிணாமவிஶேஷஸ்யாஹங்காரஸ்ய க்ஷேத்ரஜ்ஞாந்தர்பாவோ ஸம்பவதேவாவஶிஷ்யதே । ஸ சாநாத்மநி தேஹேऽஹம்பாவகரணேந ஹேதுகேந அஹங்கார இத்யுச்யதே । அஸ்ய அஹங்காரஶப்தஸ்ய ஔப [illegible] । அய மேவ அஹங்கார உக்த [illegible] ஸ்வரூபாநாம் ஸா [illegible] । [illegible] ஶரீரமேவாத்மா அஹம்பாவாஶ்ரயமித்யேவ । யதோக்தம் பகவதா பராஶரேண—அநா [illegible] '' — இதி । யதி ஜ்ஞப்திமாத்ரமேவாத்மா, ததா ஜ்ஞாநாஶ்ரயத்வாதி

ஏதேந ஶரீரே ஆத்மத்வப்ரதிபாஸ: ஸ்யாத்; ந ஜ்ஞாத்ருத்வப்ரதிபாஸ:। தஸ்மாத் ஜ்ஞாதாऽஹமர்த்த ஏவாத்மா। ததுக்தம்—

"அத: ப்ரத்யக்ஷஸித்தத்வாதுக்தந்யாயாகமாந்வயாத்। அவித்யாயோகதஶ்சாத்மா ஜ்ஞாதாऽஹமிதி பாஸதே" இதி ॥

யதாஹ— "தேஹேந்த்ரியமந:ப்ராணதீப்யோऽந்யோऽநந்யஸாதந:। நித்யோ வ்யாபீ ப்ரதிக்ஷேத்ரமாத்மா பிந்ந: ஸ்வத: ஸுகீ" இதி ॥

அநந்யஸாதந:—ஸ்வப்ரகாஶ:। வ்யாபீ—அதிஸூக்ஷ்மதயா ஸர்வாசேதநாந்த:ப்ரவேஶநஸ்வபாவ: ॥

ஸ்ரீபாஷ்யம்—

மூலப்ரக்ருதியின் பரிணாமபேதமாகிய அஹங்காரத்திற்கு க்ஷேத்ரத்தில் அந்தர்பாவமானது பகவானாலேயே உபதேசிக்கப்படுகிறது. அது ஆத்மா அல்லாத தேஹத்தில் அஹம்பாவத்தைச்செய்வதற்கு ஹேதுவாக இருப்பதால் அஹங்காரமென்று சொல்லப்படுகிறது இந்த அஹங்காரசப்தத்திற்கோ வென்றால் ¶ அபூததத்பாவத்தில் (ச்வி) ப்ரத்யயத்தைக்கல்பித்து வ்யுத்பத்தி காணத்தக்கது. இதே அஹங்காரமானது மேன்மைதங்கியபெரியோர்களின் அவமானத்திற்கு ஹேதுவாய் கர்வமென்கிற வேறுபெயர்வாய்ந்ததாக சாஸ்திரங்களில் பெரும்பான்மையாக விடத்தக்கதாக ப்ரதிபாதிக்கப்படுகிறது. ஆகையால் பாதகமில்லாத அஹம்புத்தியானது ஸாக்ஷாத் ஆத்மகோசரையாகவே இருக்கிறது. சரீரகோசரையான அஹம்புத்தியோ வென்றால் அவித்யையே. பராசரபகவானால் இதுவிஷயமான ப்ரமாணவசனம் கூறப்பட்டிருக்கிறது "ச்ருயதாஞ்சாப்யவித்யாயாஸ்ஸ்வரூபம் குலநந்தந அநாத்மந்யாத்மபுத்திர்யா" (வம்சத்திற்குப்பெருமையை உண்டுபண்ணுகிறவனே! அவித்யையின்ஸ்வரூபமும் கேழ்க்கப்படலாம். ஆத்மாவல்லாத வஸ்துவில் ஆத்மபுத்தி யாதொன்றுண்டோ) என்று. ஜ்ஞப்திமாத்ரம் ஆத்மாவாக இருக்குமேயானால் அப்பொழுது ஆத்மாவல்லாத ஆத்மாபிமானவிஷயமான சரீரத்

¶ அபூததத்பாவம்— இது வையாகரணர்கள் வழங்கும் இலக்கணச்சொற்களுள் ஒன்று—இதற்கு அர்த்தம் மேல்வருமாறு— அபூதஸ்ய - தத்பாவ:— ,அபூததத்பாவ:— முன் எவ்வண்ணமாக ஒரு வஸ்து இருந்ததில்லையோ அது பிற்காலத்தில் அவ்வண்ணமாக ஆகுதல். இந்த அர்த்தத்தில் (ச்வி) என்கிற ப்ரத்யயம் ப்ரயோகிக்கப்படுகிறது. இது முற்றிலும் லோபித்துப்போகிறது, உதாஹரணம்— அசுக்ல: சுக்ல: பவதி -சுக்லீபவதி. முந்தி வெளுப்பாக இல்லாமலிருந்தது இப்போது வெளுப்பாக ஆய் இருக்கிறது. இது முதலியது.

தில் ஜ்ஞப்திமாத்ரத்திற்கு ப்ரதிபாஸம் உண்டாகவேண்டும். ஜ்ஞாதாவுக்கு ப்ரதிபாஸம் கூடாது, ஆகையால் ஜ்ஞாதாவான அஹமர்த்தமே ஆத்மா. இது சொல்லப்பட்டிருக்கிறது. "அத: ப்ரத்யக்ஷஸித்தத்வா துக்தந்யாயா கமாந்வயாத். அவித்யா யோகதஸ்சாத்மா ஜ்ஞாதாஹமிதி பாஸதே. (ஆகையால் ப்ரத்யக்ஷஸித்தமாக இருப்பதாலும், முற்கூறப்பட்டிருக்கிற நியாய ஸம்பந்தத்தாலும், சாஸ்திர ஸம்பந்தத்தாலும், அவித்யா ஸம்பந்தத்தாலும் ஆத்மாவானது, "நான் ஜ்ஞாதா" என்று பாஸிக்கிறது என்று.) அவ்வாறே ப்ரமாணங்களும் "தேஹேந்த்ரியமந: ப்ராணதீப்யோ அந்யோ அநந்யஸாதந: நித்யோ வ்யாபீப்ரதிக்ஷேத்ரமாத்மா பிந்நஸ்ஸ்வதஸ்ஸுகீ. (தேஹம் இந்த்ரியங்கள் மனது ப்ராணன் புத்தி இவைகளைக்காட்டிலும் வேறாக இருப்பவனும் ஸ்வப்ரகாசமாகயிருப்பவனும் அழிவற்றவனும் எங்கும் நடையற்று வ்யாபிக்குந்தன்மையுள்ளவனும் சரீரந்தோறும் வேறுபட்டிருப்பவனும் தானே ஸுகமுள்ளவனுமாகவுமிருப்பவன் ஆத்மா) என்று. அநந்யஸாதந:— ஸ்வயம் ப்ரகாசன். வ்யாபீ. அதி ஸூக்ஷ்மமாக இருப்பதினால் எல்லா அசேதநங்களுக்குள்ளும் ப்ரவேசிக்கும் ஸ்வபாவமுள்ளவன்.

ச்ருதப்ரகாசிகை—

அந்யதாஸித்தியைக்காட்டிக்கொண்டு அதில் அஹங்காரசப்தத்தால் சொல்லக்கருதப்பட்டிருப்பதைக்கூறுகிறார் — அவ்யக்த என்று. (அவ்யக்த பரிணாம பேதஸ்ய) என்று. அஹமர்த்தத்திற்கு இல்லை என்று அர்த்தம். "அதாதோ அஹங்காராதேச:" இது முதலியவைகளில் சுத்தஸ்வரூபத்துக்கு அஹங்காரசப்தத்தால் அபிதானத்தை ஒப்புக்கொண்டிருந்தபோதிலும் விரோதமில்லை. அந்த அஹங்காரசப்தமோ அஹமர்த்த விஷய புத்திபரம். அஹங்காரசப்தவாச்யத்வ மாத்ரத்தினால் ப்ரத்யகாத்மாவும் க்ஷேத்ர பேதமாக ஆகுமேயாகில் அப்பொழுது ஹரிசப்தவாச்யத்வ ஸாம்யத்தினால் ஸிம்ஹம் தவளையாக ஆகவேண்டிவரும். அநேகார்த்தங்களைச்சொல்லுகிற ஸ்வபாவமுள்ள சப்தங்களின் ஐக்யமானது அர்த்தபேதம்கொள்வதற்கு விரோதமாகாதென்று கருத்து. இதற்கு ப்ரமாணம். ஆகமப்ராமாண்யத்தில். "ததாச ஹரி சப்தஸ்ய த்ருஷ்டா மண்டூகவாசிதா, இதி தச்சப்தவாச்யத்வாத் ஸிம்ஹோ மண்டூக ஏவகிம். ததாகோ சப்தவாச்யத்வாத் சப்தஸ்சாபி விஷாணவாந்." (ஹரிசப்தத்திற்கு தவளையை உணர்த்தும் தன்மை காணப்பட்டிக்கிறது அப்படி ஹரி சப்தவாச்யத்வமிருப்பதனாலேயே ஸிம்ஹமானது தவளையாகவே ஆகுமா? அவ்வண்ணமே கோசப்தத்தினால் சொல்லததக்கதன்மை இருப்பதினால் "கோ" என்கிற சப்தமும் கொம்புள்ளதாகஆகுமா? என்று.) பிறகு அஹங்காரசப்தத்திற்கு அவ்யக்தபரிணாமவிசேஷ வாசகத்வ ப்ரகாரத்தைக்காண்பிக்கிறார்—ஸது என்று. அஹம்பாவ:-அஹமென்கிற புத்தி. பாவசப்தத்திற்கு புத்திவாசகத்வமானது அபிப்ராயபரமாக ப்ரயோகமிருப்பதால் அறியப்படுகிறது. எல்லாவிடத்திலும் அஹம் சப்தார்த்தத்தை ஏகரூபமாய் அங்கீகரித்து அஹங்காரசப்தத்திற்கு அவ்யக்தபரிணாமவாசகத்வத்தை வ்யாகரணப்ரக்ரியை உபபாதனஞ்செய்கிறார்— அஸ்யது என்று. ச்விப்ரத்யயம் முற்றிலும் லோபித்துக்கிடக்கிறது. க்ருஞ் தாதுவுக்கு காரணார்த்தத்தில் வஞ்ப்ரத்யயம். க்ஷேத்ராந்தர்பாவோபதேசத்திற்கு நிர்வாஹஞ்செய்யப்பட்டது. அஹங்காரம் பலம் தர்பம் என்று அஹங்காரத்தை விடத்தக்கதாகச்சொல்

லப்பட்டிருக்கிற உபதேசத்திற்கு நிர்வாஹஞ்செய்யப்படுகிறது. அயமேவது என்று. "அயம்" என்கிற சப்தத்திஞல் ப்ரஸ்துதமான அஹம்பாவம் விவக்ஷிக்கப்பட்டிருக்கிறதே ஒழிய அஹம்பாவகாரணத்திற்கு ஹேது விவக்ஷிக்கப்படவில்லை, ஏனெனில்; கர்வமென்கிற வேறுபெயர் இதற்குண்டென்று சொல்லியிருப்பதஞல். மஹத் அஹங்காரமென்கிறஇரண்டு தத்வங்களுள்ஒன்ருன அஹங்காரமானது கர்வமென்கிற வேறுபெயருள்ளதல்லவன்ரே. ஆதலால் இவ்விடத்தில் அஹம்பாவமே அயம் சப்தத்தால் விவக்ஷிக்கப்பட்டது. சிறப்புற்றதேஹத்தில் அஹம்புத்தியானது உத்க்ருஷ்ட ஜனங்களின் அவமானத்திற்கு ஹேது. அஹங்கார:அஹம் என்கிற புத்தி. மானஸவ்யாபாரத்தைச் சொல்லுகிற "க்ரு" என்கிற தாதுவுக்கு புத்திபரத்வம் தகுதியுள்ளது. எவ்வாறு எனில், "ததேகாவயவம் தேவம் சேதஸாஹி புநர்புத: குர்யாத்இதி" (அதையேமுக்கியமான அவயவமாகக்கொண்ட பரமாத்மாவை ஜ்ஞானியானவன்மீண்டும் மனதிஞலேயே அறியவேண்டுமன்ரே) என்று. மனதிஞல் த்யானஞ்செய்வதன்ரே வேதநம். ஆதலால் அஹம்புத்தி என்பது " அஹங்காரம். ச்விப்ரத்யயத்தால் உணர்த்தப்பட்ட அர்த்தத்தை தன்னுள்ளடக்கிக்கொண்டிருப்பதஞல் அஹம்சப்தார்த்தமல்லாத சரீரத்தினிடத்தில் ப்ரயோகிக்கப்படுகிற இந்த "அஹம்பாவ, அஹங்கார"என்கிற இரண்டுசப்தங்களும் அஹம் புத்தியைத் தன்னுள்ளடக்கிக்கொண்டிருக்கின்றன. இந்த இடத்தில் பாவார்த்தத்தில் வ்யுத்பத்தி. முந்தி காஞர்த்தத்தில் வ்யுத்பத்தி. "கர்வோzபிமாஞேzஹங்கார:" என்று நிகண்டு செய்தவர்கள்.

அய்யா! (பாவே) தாத்வர்த்தத்தில் வ்யுத்பத்தியுள்ள அஹங்காரசப்தத்திற்கு உபாதேயவஸ்துபரமாக ப்ரயோகமானது எவ்வாறு பொருந்தும்? "அதாதோ அஹங்காராதேச:" என்று. மறுமொழி கூறப்படுகிறது. அந்த அஹங்காரசப்தமோவென்ருல் நேராக அஹமர்த்தமான புத்தியைச் சொல்லுகிறதேயொழிய ஆத்மாவல்லாத சரீரத்தினிடத்தில் ஆத்மபுத்தியைக்குறிக்கிற "ச்வி" ப்ரத்யயத்தின் அர்த்தத்தை அடக்கிக்கொண்டிருக்கிற அஹங்காரமல்ல. விடத்தக்கது க்ரஹிக்கத்தக்கது என்கிற ஸ்வரூபத்தால் சப்தத்திஞல் ஏற்படுகிற அஹம் புத்தி இரண்டுக்கும் விஷயங்களின் பாகுபாட்டை நிகமனஞ்செய்கிருர்— தஸ்மாத் என்று. இந்த அர்த்தத்தில் ப்ரமாணம் கூறுகிருர்—யதோக்தம் என்று. அதே புராணத்தில் அநாத்மவிஷயமான அஹம் புத்திவசனங்களிரண்டுக்கும் ப்ராந்தத்வமும் ஆத்மவிஷயத்தில் அப்ராந்தத்வமும் ஸ்பஷ்டமாக கூறப்பட்டிருக்கிறது. எவ்வாறெனில்; "ஆகாசவாய்வக்நிஜலப்ருதிவீப்ய: ப்ருதக்ஸ்திதே । ஆத்மந்யாத்ம மயம்பாவம் க:கரோதிகளேபரே, பஞ்சபூதாத்மகே தேஹே தேஹீ மோஹதமோ வ்ருத: அஹம் மமைததித்யுச்சை: குருதே குமதிர்மதிம்" ஆகாயம், காற்று, நெருப்பு, ஜலம், பூமி, இவைகளைக்காட்டிலும் வேறுபட்டிருக்கிற ஆத்மா இருக்க, சரீரத்தில் எவன் ஆத்மமயமான பாவத்தை பண்ணுவான்? பஞ்சபூதமயமான தேஹத்தில் அஜ்ஞானமாகிற இருளால் மூடப்பட்டு துர்புத்தியையுடையவஞன தேஹியானவன் "நான் என்றும், "இது என்னுடையது" என்றும் எண்ணத்தை திடமாகப்பாராட்டுகிருன் என்று.) ஆதி பரதசரிதத்தில்; ஆத்மந்யேஷ ந தோஷாய யப்தோஹமிதி யோத்விஜ, 'அநாத்மந்யாத்மவிஜ்ஞானம் சப்தோவா ப்ராந்திலக்ஷண:' (ப்ராஹ்மணரே! ஆத்மாவினிடத்தில் அஹம் என்று உபயோகப்படுத்தப்படுகிற யாதொரு இந்த சப்தமுண்டோ, இது தோஷத்தின் பொருட்டாகா; ஆத்மாவல்லாத சரீரத்தினிடத்தில் ஆத்மா என்கிற ஜ்ஞாநமோ, சப்தமோ, இரண்டும் ப்ராந்தியிஞலுண்டாகிறது.) இந்த வசநார்த்தத்தையுங்கூட அஹமர்த்தாத்மத்வத்திற்கு ஹேதுவாகச் சொல்லுகிருர்—யதி என்று. அநாத்மநி என்று. ஆத்மாவல்லாததில் அஹம்

ப்ரதீதியானது எவ்வாறு ஆத்மாபிமானம் என்று அர்த்தம. அஹமாத்ரத்திற்கு ஆத்ம த்வத்தை நிகமனஞ் செய்கிருர்—தஸ்மாத் என்று. இந்த அர்ததத்தில் ஆத்மஸித்தி க்ரந்தத்தை உதாஹரிக்கிருர்—ததுக்தம் என்று. தர்மதர்மிபாவதநால் ப்ரதீதிவருவது ப்ரத்யக்ஷஸிததி. ஸ்திரத்வம் அஸ்திரதவம் முதலியவைவஷம்யமும் ச்ருதயர்த்தாபத்தியும் ந்யாயம் ஆகமம் என்பது உதாஹரிககப்பட்டிருககிற உபநிஷத்துக்களிலுள்ளவாகயஙகள். அவித்யாஸமபந்தமானது அடுத்து சொல்லப்பட்டிருக்கிற ப்ராந்தியோகம அஹமர்தத மானது ஆத்மாவல்லாதபக்ஷததில நான பெருத்தவன் என்கிற ப்ராந்தி பொருந்தாது எனறுவது அர்த்தம். ஜ்ஞாதாவானவன் ஆதமா என்கிற விஷயத்தில் ஸம்வாதமுள்ள க்ரந்தம் காண்பிக்கப்பட்டது. ஜ்ஞப்திமாத்ரம ஆதமாவல்லவென்கிற விஷயத்தி லும ஆத்மஸித்தி க்ரந்தத்தை உதாஹரிககிருர்—தத்ரச என்று. நீப்ய அன்ய:, என் கிறது இந்த இடத்தில் உபயோகிக்கப்பட்டிருக்கிறது. ஸாதனசப்தமானது உத்பாத கத்திற்கும் ஜ்ஞாபகத்திற்கும் பொதுவாக இருப்பதால் அதை வ்யாக்யாநம் பண்ணு கிருர்— அதந்ய என்று. ஜீவஸ்வரூபம் விபு என்கிற சஙகையை விலககுவதற்காக "வ்யாபீ" என்கிற சப்ததததை வ்யாக்யானம் பணணுகிருர்—அதிஸூக்ஷ்ம என்று. புராணம் முதலிய க்ரந்தஙகளில் வ்யாப்திசப்த ப்ரயோகமிருப்பதால் அதுவே இந்த ச்லோகத்தில் ப்ரயோகிககப்பட்டிருக்கிறது. எந்த எந்த இடததில் ஜீவனுடைய வ்யா ப்தியைசசொல்லுகிற சப்தஙகள் காணப்படுகின்றனவோ ஆஙகாஙகு இதே அர்ததம் காணத்தக்கதென்று கருத்து. ஜீவனுக்கு தர்மபூதஜ்ஞானததால் வயாப்தியானது ஆத்ம ஸிததியிலேயே சொல்லப்படுகிறது. வ்யாப்தியும் சைதந்யமாத்ரததாலேயொழிய ரூபத் தாலில்லையென்று. ஆதலால் சொல்லப்பட்டதே ஸரியான அர்த்தம்.

𑌯𑌦𑍁𑌕𑍍𑌤𑌂—𑌦𑍋𑌷𑌮𑍂𑌲𑌤𑍍𑌵𑍇𑌨𑌾𑌨𑍍𑌯𑌥𑌾𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌸𑌮𑍍𑌭𑌾𑌵𑌨𑌯𑌾𑌸𑌕𑌲𑌭𑍇𑌦𑌾𑌵𑌲𑌮𑍍𑌬𑌿𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌸𑍍𑌯 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌬𑌾𑌧𑍍𑌯𑌤𑍍𑌵𑌮𑍍—𑌇𑌤𑌿 ॥

𑌕𑍋𑌽𑌯𑌂 𑌦𑍋𑌷 𑌇𑌤𑌿 𑌵𑌕𑍍𑌤𑌵𑍍𑌯𑌮𑍍, 𑌯𑌨𑍍𑌮𑍂𑌲𑌤𑌯𑌾 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌯𑌥𑌾𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌃 । 𑌅𑌨𑌾𑌦𑌿𑌭𑍇𑌦𑌵𑌾𑌸𑌨𑍈𑌵 𑌹𑌿 𑌦𑍋𑌷 𑌇𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍; 𑌭𑍇𑌦𑌵𑌾𑌸𑌨𑌾𑌯𑌾𑌸𑍍𑌤𑌿𑌮𑌿𑌰𑌾𑌦𑌿𑌵𑌦𑍍𑌯𑌥𑌾𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌵𑌸𑍍𑌤𑍁𑌵𑌿𑌪𑌰𑍀𑌤𑌜𑍍𑌞𑌾𑌨𑌹𑍇𑌤𑍁𑌤𑍍𑌵𑌂 𑌕𑌿𑌮𑌨𑍍𑌯𑌤𑍍𑌰 𑌜𑍍𑌞𑌾𑌤𑌪𑍂𑌰𑍍𑌵𑌮𑍍? 𑌅𑌨𑍇𑌨𑍈𑌵 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌵𑌿𑌰𑍋𑌧𑍇𑌨 𑌜𑍍𑌞𑌾𑌸𑍍𑌯𑌤 𑌇𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍; 𑌨, 𑌅𑌨𑍍𑌯𑍋𑌨𑍍𑌯𑌾𑌶𑍍𑌰𑌯𑌣𑌾𑌤𑍍, 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌸𑍍𑌯 𑌨𑌿𑌰𑌸𑍍𑌤𑌨𑌿𑌖𑌿𑌲𑌵𑌿𑌶𑍇𑌷𑌵𑌸𑍍𑌤𑍁𑌬𑍋𑌧𑌿𑌤𑍍𑌵𑌨𑌿𑌶𑍍𑌚𑌯𑍇 𑌸𑌤𑌿 𑌭𑍇𑌦𑌵𑌾𑌸𑌨𑌾𑌯𑌾 𑌦𑍋𑌷𑌤𑍍𑌵𑌨𑌿𑌶𑍍𑌚𑌯𑌃, 𑌭𑍇𑌦𑌵𑌾𑌸𑌨𑌾𑌯𑌾𑌃 𑌦𑍋𑌷𑌤𑍍𑌵𑌨𑌿𑌶𑍍𑌚𑌯𑍇 𑌸𑌤𑌿 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌸𑍍𑌯 𑌨𑌿𑌰𑌸𑍍𑌤𑌨𑌿𑌖𑌿𑌲𑌵𑌿𑌶𑍇𑌷𑌵𑌸𑍍𑌤𑍁𑌬𑍋𑌧𑌿𑌤𑍍𑌵𑌨𑌿𑌶𑍍𑌚𑌯 𑌇𑌤𑌿 ॥

ஸ்ரீபாஷ்யம் —

தோஷ மூலமாக இருப்பதுபற்றி அந்யதாஸித்தி ஸம்பாவனையினுல் ஸகலபேதங்களையும் அவலம்பித்து வருகிற ப்ரத்யக்ஷமானது சாஸ்திரத்தி ஞல் பாதிக்கத்தக்கதென்று எது சொல்லப்பட்டதோ அந்ததோஷம் எது என்று சொல்லத்தக்கது. எந்த தோஷத்தை நீ மூலமாகக்கொள்வதனுல்

ப்ரத்யக்ஷத்திற்கு அந்யதாஸித்தி ஏற்படுகிறதோ. அநாதிபேதவாஸனை யே தோஷமென்று சொல்லப்படுமேயாகில் பேதவாஸனைக்கு திமிரம் முத லிய தோஷங்களுக்குப்போல உள்ளபடி இருக்கிற வஸ்துக்களின் விபரீத ஜ்ஞாந ஹேதுத்வமானது வேறுஇடத்தில் இதற்குமுன் உன்னால் அறியப் பட்டிருக்கிறதா? இந்த சாஸ்த்ர விரோதத்தினாலேயே அறியப்படப்போகி றதென்று சொல்லப்படுமேயாகில் அது ஸரியன்று, அந்யோந்யாச்ரய தோ ஷம் வருவதால், சாஸ்திரத்திற்கு ஒரு விசேஷமுமில்லாத வஸ்துவை உண ர்த்தும் தன்மை நிச்சயிக்கப்பட்டால் பேதவாஸனைக்கு தோஷத்வ நிச்சயம் ஏற்படுகிறது. பேதவாஸனைக்கு தோஷத்வ நிச்சயம் ஏற்பட்டால் தான் சாஸ்திரத்திற்கு எல்லா விசேஷங்களோயுமிழுந்திருக்கிற வஸ்துவை உணர்த் தும் தன்மை நிச்சயிக்கப்படுகிறது.

ச்ருதப்ரகாசிகை:—

அதற்குமேல் சாஸ்த்ரத்திற்கும் ப்ரத்யக்ஷத்திற்கும் ஏற்பட்டிருக்கிற விரோதத்தில் சாஸ்த்ரத்தின் ††ப்ராபல்யத்தை அநுவதித்து நிரஸிக்கிறார்— யதுக்தம் இது முதலிய தால். அங்ஙனல் முன்பு ¶ மூல § மூலிபாவம், ஃ பரோக்ஷா $ பரோக்ஷரூபத்வம் முதலியது ‡ பாத்ய * பாதகபாவத்தில் காரணமன்று, ஜ்வாலாபேதாநுமானத்தில் வ்யபிசாரம் வருவதால். "||ஆதித்யோ $யூப:" இது முதலான இடங்களில்கூட யூபத் திற்கும் ஆதித்யனுக்கும் ஐக்யம் முதலியவற்றைச் சொல்லாமலொழிவது @தௌர்பல் யத்தினாலன்று. பின்னேயோ, யூபாஞ்ஜந விதிசேஷமாயிருப்பதுபற்றி ஐக்யத்தில் தாத் பர்யமில்லாமையால்" என்று கூறப்பட்டிருக்கிறது. அந்த இடத்தில் ஜ்வாலாபேதாநு மானத்தைக்காட்டிலும் சாஸ்த்ரத்திற்கு மூன்றுவிதமாக வைஷம்யமிருக்கிறது. வேறு ப்ரமாணத்தாலே தோஷமூலத்வ நிச்சயமில்லாமையால் அந்யோந்யாச்ரயம், பாத்யம் பாத கம் இரண்டுக்கும் ஸமானதோஷத்வம், மூலத்தை அடியோடு நாசஞ்செய்தல், என்கிற இம்மூன்றும் ஜ்வாலாபேதாநுமானத்தில் கிடையாது. அதே விவரிக்கப்படுகிறது. (1) ஒரு திரியில் இருத்தலைக்காரணமாகக் கொண்ட ஸாத்ருச்யம் என்கிற தோஷத் திற்கு ஐக்யமில்லாமலிருந்தபோதிலும், ஐக்யப்ரதீதிக்குக் காரணமாயிருத்தலானது அப் பொழுது அணைக்கப்பட்டு ஏத்தப்பட்டிருக்கிற விளக்கில் காணப்பட்டிருப்பதுபற்றி கண் ணால் க்ரஹிக்கப்படுகிற ஜ்வாலைக்ய ப்ரதிபத்திக்கு ஓரிடத்தில் தோஷமூலத்வ நிச்சயத் தால் வேறுஇடத்தில் ஐக்யப்ரதிபத்தியிலும் தோஷமூலத்வம் ஸம்பவிப்பதால், சங்கைக்கு ஃ ஆஸ்பதமான ஜ்வாலைக்யப்ரத்யக்ஷமானது பரீக்ஷகனுக்கு நிச்சயத்தை உண்டு பண்ணுவதில் ஸாமர்த்யமுள்ளதாக ஆகாது. ஜ்வாலையிலுள்ள $ ஸாத்ருச்யரூப தோ ஷத்திற்கு ஐக்யமில்லாமலிருந்தபோதிலும் ஐகயப்ரதீதிஹேதுத்வமானது வேறு ப்ர

---

†† ப்ராபல்யம்—அதிக பலத்துடன்கூடி இருத்தல்.
¶ மூலம்—காரணம், § மூலி—கார்யம். ஃ பரோக்ஷம்—ப்ரத்யக்ஷமல்லாதது.
$ அபரோக்ஷம்—ப்ரத்யக்ஷம். ‡ பாத்யம்—பாதிக்கத்தக்கது.
* பாதகம்—மற்றொன்றை பாதிக்கிற சாஸ்திரம் முதலியது.
|| ஆதித்யன்— ஸூர்யன். $யூபம்— யாகத்தில் பசுவைக்கட்டும் தூண்.
@ தௌர்பல்யம்—பலமற்றிருத்தல், பலத்தில் குறைந்திருத்தல்.
ஃ ஆஸ்பதம—ஆதாரம். $ ஸாத்ருச்யம்—ஒற்றுமை.

மாணத்தாலே காணப்படாமல் போகுமேயாகில் அந்யோந்யாச்ரய தோஷமுண்டாகும், அநுமாநம் ப்ரபலமானதால் ப்ரத்யக்ஷத்திற்கு அந்யதாஸித்தி, அந்த ப்ரத்யக்ஷத்திற்கு அந்யதாஸித்தி வருவதனால் அனுமானத்திற்கு ப்ராபல்யமென்று ஐக்யப்ரதீதிக்கு அந்யதாஸித்தி ஸம்பவமானது வேறு ப்ரமாணத்தால் காணப்பட்டிருப்பதால் அந்யோந்யாச்ரயமில்லை. இந்த இடத்தில் அவ்வாறு ப்ரமாணாந்தரத்தினால் பேதவாஸனைக்கு தோஷத்வம் காணப்பட்டிருக்கவில்லை. (2) மேலும் தீபத்தில் பாதிக்கத்தக்க ஜ்வாலைக்ய ஜ்ஞானத்திற்கு ஸாத்ருச்யம் என்கிற தோஷமூலத்வம் இருந்தபோதிலும் பாதகமான ஜ்வாலாபேதாநுமானத்திற்கு ஸாத்ருச்யமூலத்வம் காணப்பட்டிருக்கவில்லை. இவ்விடத்திலோ பாதிக்கத்தக்கப்ரத்யக்ஷம் பாதகமானசாஸ்த்ரம் இவையிரண்டுக்கும் அந்யனால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிற தோஷமூலத்வமானது ஸமானமாக இருக்கிறதென்பதனால் தோஷஸாம்யம். (3) மேலும் அந்த இடத்தில் ஜ்வாலை என்கிற * தர்மியை க்ரஹிக்கிற ப்ரத்யக்ஷத்திற்கும், முதலிலுள்ள வத்தியின் அவயவத்தோடு அக்நிஸம்பந்தத்திலும் கடாசியிலுள்ள ‡‡ வத்தியின் அவயவத்தின் விநாசத்திலும் உத்பத்திவிநாசங்கள் இரண்டிலும் § வ்யாப்தியை க்ரஹிக்கிற ப்ரத்யக்ஷத்திற்கும், ஒவ்வொரு அவயவந்தோறும் அக்நிஸம்யோகம் வத்தியின் அவயவங்களின் விநாசமெனப்பெயருள்ள லிங்கத்தைக்ரஹிக்கிற ப்ரத்யக்ஷத்திற்கும் பேதாநுமானத்தால் பாதிக்கக்கூடிய விஷயத்வமில்லை. அது ஐக்யப்ரதிபத்திக்கே. இவ்விடத்திலோ சப்தமெனப் பெயர்கொண்ட தர்மியையும் அதற்கு நிர்தோஷத்வ ஸாதகமான லிங்கத்தையும் அந்த லிங்கத்திற்கு வ்யாப்தியையும் @ஆறுவிதமான தாத்பர்ய லிங்கங்களையும் க்ரஹிக்கின்றதுமான ப்ரத்யக்ஷத்திற்கும் அவைகளின் தாத்பர்யலிங்கங்களுக்கும் சாஸ்த்ரத்தினாலேயே பாதகம் வருவதால் ‡மூலோச்சேதித்வம் என மூன்றுவிதமான *வைஷம்யம். இந்த மூன்றுவிதமான வைஷம்யத்தை உபபாதிக்கபோகிறவராய் கொண்டு பூர்வபக்ஷத்தை அநுவாதம் பண்ணுகிறார்—தோஷமூலத்வேந என்று. ஸகலபேதாவலம்பிப்ரத்யக்ஷஸ்ய என்று. இவ்விடத்தில் இது கருத்து. தத்வசுத்திகாரர் முதலிய சிலர்களால் காசம் திமிரம் முதலியதே ப்ரத்யக்ஷத்திற்கு தோஷமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அது பொருத்தமுள்ளதன்று. ❦காசம் $திமிரம் முதலியது ஒரு ஸமயத்திலிருப்பதால். இதனால் ப்ரத்யக்ஷாந்தரங்களுக்கு தோஷமூலத்வம் ஊஹிக்கப்படுகிறதேயாகில் சப்தரூபமாயிருப்பதால் சாஸ்த்ரத்திற்கும தோஷமூலத்வம் ஊஹிக்கப்படலாம். சாஸ்த்ரவிஷயத்தில் தோஷத்திற்கு யோக்யாநுபலப்தியினால் நிராஸம் வருமேயாகில் ப்ரத்யக்ஷத்திலும் அப்படியே ஆகலாம.

மேலும், §ஆயுர்வேதத்தில் தோஷங்களின் ஸ்வரூபமும் அவைகளின் நிவ்ருத்யுபாயம் முதலியதும் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. எல்லா ப்ரத்யக்ஷத்திற்கும் தோஷமூலத்வாநுமானமும் அதற்கு விருத்தமும் கூறப்பட்டிருக்கிறது. மேலும் எல்லா ப்ரத்யக்ஷங்களுக்கும் தோஷமூலத்வம் ஸந்மாத்ரக்ராஹியான ப்ரத்யக்ஷத்திற்கும்தோஷ

---

* தர்மி—வஸ்து. ‡‡ வத்தி—திரி.

§ வ்யாப்தி—கார்யகாரணங்கள் இரண்டுக்கும் தவறாமலிருக்கிற ஸம்பந்தம். அதாவது-எங்கே புகை இருக்குமோ அங்கே தவறாமல் நெருப்பு இருத்தல், இதை நியதஸாஹசர்யம் என்று தார்கிகர்கள் கூறுவார்கள். இந்த வ்யாப்தியானது பல இடங்களில் பலதடவை காண்பதால் நிச்சயிக்கப்படுகிறது.

@ஆறுவிதமான தாத்பர்யலிங்கங்களாவன — உபக்ரமோபஸம்ஹாரங்கள், அப்யாஸம, அபூர்வதா, பலம, அர்த்தவாதம், உபபத்தி.

‡ மூலோச்சேதித்வம்— அடியோடு அழித்தல். *வைஷம்யம்— வேறுபாடு.

❦ காசம்—மஞ்சக்காமாலை. $ திமிரம்—மெல்லியதான சதையினால் கண்ணை மறைக்கும் ஓர் விநோதமான நேத்ரரோகம்

§ ஆயுர்வேதம்— வைத்தியசாஸ்திரம்.

மூலத்வமிருப்பதால் ஸர்மாத்ரமும் மித்யையாக ஆகும். தூஷிக்கிறார்— கோயம் இது முதலியதால். கோயம் தோஷ இதி வக்தவ்யமிதி, 'கோயம் தோஷ:' என்கிற இந்த வசனவ்யக்தியினால் தோஷரூபமான மூலம் உரைக்கப்பட்டதோ அது எதுவென்று வினவப்பட்டால் இது தோஷமென்று சொல்லத்தக்கது என்று அர்த்தம். அன்றிக்கே, யத்சப்த ஸாமர்த்யத்தினால் தத்ர என்கிற சப்தம் ஆக்ஷேபத்தால் ஸித்தம். "தோஷ மூலத்வேந" இது முதலிய க்ரந்தத்தினால் எந்த அர்த்தங்கள் உரைக்கப்பட்டனவோ அங்கு எது தோஷமென்று வினவின் சொல்லத்தக்கது என்று அர்த்தம். எதனால் சொல்லத்தக்கது எனில் கூறுகிறார்—யந்மூலதயா என்று. தோஷத்தைக்கூறாமல் அந்யதாஸித்தியானது ஸுலபமாக சொல்லமுடியாதன்றோ வென்று அர்த்தம். தோஷத்தை உரைக்கிறார்— அநாதி என்று. வகாரமானது ஸ்வரூபத்தின் ¶ஸம்ப்ரதிபத்தியை ப்ரதானமாகக்கொண்டது. 'ஹி' சப்தத்தால் வேறு தோஷங்களின் அஸம்பவம ஸித்திக்கிறது. தன் மதத்தில் தோஷத்வஸம்ப்ரதிபத்தி அபிமானததாலாவது 'ஹி' சப்தம். தோஷத்வமாவது விபரீதஜ்ஞான ஹேதுத்வம். ஆதலால் விபரீதஜ்ஞான ஹேதுவாக வ்யாப்தியானது காணப்பட்டிருததால் பேதவாஸனையின் ஸ்வரூபத்திற்கு ஸம்ப்ரதிபத்தி வந்திருந்தபோதிலும் தோஷத்வஸம்ப்ரதிபத்தியில்லாமையால் வினவுகிறார்— **பேதவாஸநாயா:** என்று. திமிராதிவத் என்கிற இடத்திலுள்ள ஆதிசப்தத்தினால் ஸாத்ருச்யம் முதலியது $விவக்ஷிக்கப்பட்டிருக்கிறது. அந்த ஸாதருச்யமல்லவோ ஜ்வாலையில் ஐக்ய ப்ரமத்திற்கு ஹேதுவாக இருக்கிறது. வேறு இடத்தில் முன்பு அறியப்பட்டிருக்கிறதென்று எவ்விதததாலும் சொல்லமுடியாமையால் சங்கிக்கிறார் அநேநைவ என்று. தூஷிக்கிறார்—ந என்று. இவ்வண்ணம ப்ரமாணாந்தரத்தால் தோஷத்வ நிச்சயமில்லாமையால் அந்யோந்யாச்ரயண தோஷாபாதன ரூபவைஷம்யம் உரைக்கப்பட்டது.

கிஞ்ச—யதி பேதவாஸநாமூலத்வேந ப்ரத்யக்ஷஸ்ய விபரீதார்த்தத்வம்; ஶாஸ்த்ரஸ்யாபி தந்மூலத்வேந ததேவ ஸ்யாத் ॥

அதோச்யேத—தோஷமூலத்வேঽபி ஶாஸ்த்ரஸ்ய ப்ரத்யக்ஷாவகதஸகலபேதநிரஸநஜ்ஞாநஹேதுத்வேந பாதகத்வாத் ப்ரத்யக்ஷஸ்ய பாதகம்—இதி । தந்ந; தோஷமூலத்வே ஜ்ஞாதே ஸதி பாதகத்வாஸித்தே: । ரஜ்ஜுஸர்பஜ்ஞாநநிமித்தபயே ஸதி ப்ராந்தோऽயமிதி பரிஜ்ஞாதேந கேநசித் "நாயம் ஸர்ப்ப:, மா பைஷீ:" இத்யுக்தே பயாநிவ்ருத்திதர்ஶநாத் । ஶாஸ்த்ரஸ்ய ச தோஷமூலத்வம் ஶ்ரவணவேலாயாமேவ ஜ்ஞாதம் । ஶ்ரவணாவகதநிர்விஶேஷாத்வைதஸித்தி ப்ரஹ்மாத்மைகத்வவிஜ்ஞாநஸ்யாஸத்யத்வாநுஸந்தாநாத் ॥

ஸ்ரீபாஷ்யம்—

மேலும், பேதவாஸனையைக் காரணமாகக் கொண்டிருப்பதனால், ப்ரத்யக்ஷத்திற்கு விபரீதார்த்தத்தோடு கூடி இருத்தல் கூறப்படுமேயாகில், சாஸ்த்

¶ ஸம்ப்ரதிபத்தி—ஒப்புக்கொள்ளுதல். $ விவக்ஷிதம்—சொல்லக்கருதப்பட்டிருப்பது.

ரமும் அந்த பேதவாஸனை மூலமாக இருப்பதால் அவ்வாறேயாகும். அப்படிக்கின்றி சாஸ்த்ரம்தோஷமூலமாக இருந்தபோதிலும் ப்ரத்யக்ஷமாக அறியப்பட்டிருக்கிறஸகலபேத நிரஸனஜ்ஞானத்திற்கு ஹேதுவாக இருப்பதுபற்றி பிந்தியதாயிருப்பதனால் அந்த சாஸ்த்ரம் ப்ரத்யக்ஷத்திற்கு பாதகமாக ஆகக்கூடுமென்று உரைக்கப்படுமேயாகில், அதுஸரியன்று. தோஷமூலத்வம் அறியப்பட்டிருககையில் பாத்வம் (பிறபட்டிருக்தல்) என்பது பயனற்றது. ரஜ்ஜுவில் ஸர்பஜ்ஞாநத்தால் பயம் உண்டாயிருக்கையில் இவன் $ ப்ராந்தனென்று நன்கு அறிந்தவனான ஒருவனால் "இது ஸர்பமல்ல, பயப்படாதே" என்று சொல்லப்பட்டபோதிலும் பயத்தின் நீங்காமை காணப்படுவதால். சாஸ்த்ரத்திற்கும் தோஷமூலத்வமானது ச்ரவணவேளையிலேயே அறியப்பட்டிருக்கிறது. மனனம் முதலியது ச்ரவணத்காலறியப்பட்டிருக்கிற ஸமஸ்தமான பேதங்களையும் போக்குகின்ற ப்ரஹ்மாத்மைகத்வவிஜ்ஞாநத்தின் ஆவ்ருத்தி ரூபமாயிருப்பதால்.

ச்ருதப்ரகாசிகை.—

பிறகு பாத்யபாதகம் இரண்டுக்கும் துல்யதோஷத்தைக்கூறுகிறார்— கிஞ்ச என்று. இதற்குமேல் தோஷமூலத்வம் ஸமானமாக இருந்தபோதிலும், "பிறபட்டிருத்தல்" என்பதனால் பாதகத்வத்தை சங்கிககிறார்--அத என்று அபச்சேதம் முதலியவைகளிலும் இது ரஜதம், "இது ரஜதமல்ல" எனகிற இது முதலியவைகளிலும் பிந்தினது பாதகமாகக் காணப்பட்டிருக்கிறது. ஆகையால் நிஷேதிககப்படத்தககதை உபஸ்தாபிககிற ப்ரமாணத்தை அபேக்ஷித்து நிஷேதிக்கிற சாஸ்தரம் பிந்தியிருப்பதால் பலவத்தரமென்று அர்த்தம்.

இவ்வண்ணம் ப்ரஹ்மத்தைப்ரதிபாதிக்கிற சாஸ்தரத்திற்கும் வ்யுத்பத்தி முதலியவற்றுக்கு ப்ரதயக்ஷம் முதலியது மூலமாயிருப்பதால் அந்த ப்ரத்யக்ஷபூர்வகமான அந்த சாஸ்த்ரத்திற்கு ப்ரத்யக்ஷம் முதலியவைகளை அபேக்ஷித்து பாத்வமிருப்பதால் ப்ரதிபாதிக்கப்படத்தக்க நிர்விசேஷ வஸ்துவின் ஸத்பத்வமும் துல்ய ந்யாயத்தால் ஸித்திக்கிறது. அதை தூஷிக்கிறார்—தந்ந என்று பாத்வம் ப்ரயோஜனமற்றதென்பதை உபபாதிக்கிறார்—ரஜ்ஜுஸர்ப என்று. பிந்தின ஜ்ஞாநத்திற்கு தோஷமூலத்வமிருப்பதுபற்றி ப்ராமாண்ய நிச்சயமில்லாமையால் பயம் நிவ்ருத்திக்கிறதில்லை.

அய்யா! ப்ராந்தத்வம் அறியப்பட்டதினால் பாத்வமானது பயனற்றதாயிருக்கட்டும், இவ்விடத்திலேயோ ப்ராந்தத்வ ஜ்ஞானமில்லையென்று சொல்லப்படுமேயாகில் கூறுகிறார்—சாஸ்த்ரஸ்ய என்று. ஜ்ஞாநத்வத்தை உபபாதிககிறார்—ச்ரவணவேளாயாம் என்று. சாஸ்த்ரத்திற்கு பேதவாஸனாமூலத்வமானது முற்றிலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. அந்தவாஸனைக்கு தோஷத்வமானது பேதவிஷயகமான மித்த்யாத்வஜ்ஞானத்தாலறியப்படுகிறது. அந்த மித்த்யாத்வ ஜ்ஞாநமும் ஜ்ஞாநததால் நிவர்திக்கத்தக்கதென்று அறியப்படுதலால். ஜ்ஞாநத்தால் நிவர்திக்கத்தக்கதென்கிற ஜ்ஞாநமும் ப்ரஹ்மாத்மைகத்வ ஜ்ஞாநத்திற்கு ஸமஸ்தமான பேதங்களையும் உபமர்திக்கும் தன்மையுள்ளதென்கிற

$ ப்ராந்தன்—ப்ரமமுள்ளவன்.

கரணத்தினால் என்று அறியப்படுவதால். ஆதலால் இப்படிப்பட்ட நிவர்த்தகஜ்ஞா நத்தின் அப்யாஸரூபமான மனனத்தைச்செய்கிறவனால் சாஸ்த்ரத்திற்கு தோஷமூல த்வம் அறியப்பட்டிருக்கிறதென்று அர்த்தம். இவ்வண்ணம் பாத்ய பாதகம் இரண்டுக் கும் துல்யதோஷத்வரூபமான வைஷம்யம உரைக்கப்பட்டது.

அபி ச — இதம் ஶாஸ்த்ரம்; அஸம்பாவ்யமாநதோஷம்; ப்ரத்ய க்ஷம் ஸம்பாவ்யமாநதோஷமிதி கேநாவகம்யதே? ஸ்வதஸ்ஸி த்தா நிரஸ்தநிகிலவிஶேஷாநுபூதிரிதி ஸித்தமேவமிதி; தஸ்யா ஸ்ஸர்வவிஷயவிரஹாத், ஶாஸ்த்ரபக்ஷபாதவிரஹாச்ச । நாப்யை ந்த்ரியிகம் ப்ரத்யக்ஷம், தோஷமூலத்வேந விபரீதார்த்தத்வாத் । தத ஏ வ சைவ நாந்யாந்யபி ப்ரமாணாநி । அதஸ்ஸ்வபக்ஷஸாதநப்ரமாணா நப்யுபகமாத் ஸ்வாபிமதாஸித்தி: ॥

நநு வ்யாவஹாரிகப்ரமாணப்ரமேய வ்யவஹாரோऽஸ்மாகமேவ்ய ஸ்த்வ்ய; கோऽயம் வ்யாவஹாரிகோ நாம? ஆபாதப்ரதீதிஸித்தோ யுக்திநிரூபணேऽதோ ந ததாऽவஸ்தித இதி சேத்; கிம் தேந ப்ர யோஜநம்? ப்ரமாணதயா ப்ரதிபந்நஸ்ய யௌக்திகாபாயாதேவ ப்ரமாணகார்யாபாவாத் ॥

ஸ்ரீபாஷ்யம்.—

மேலும், இது சாஸ்த்ரம்; இது தோஷ ஸம்பாவனையற்றது; ப்ர த்யக்ஷமோ ஸம்பவிக்கத்தக்க தோஷத்துடன்கூடியதென்று உன்னால் எந்த காரணத்தால் அறியப்பட்டது? * ஸ்வதஸ்ஸித்தையாயும் ஸகல விசேஷங் களுமற்றதான அநுபூதியானது இந்த அர்த்தத்தை உணர்த்தத்திறமையுள் ளதாக ஆகாது; ஏனெனில், அது எல்லா விஷயங்களினின்றும் விலகியிருப்ப தாலும் சாஸ்த்ரபக்ஷபாதமில்லாமையாலும். இந்த்ரியங்களாலுண்டாகிற ப்ர த்யக்ஷமும் இந்த அர்த்தத்தை உணர்த்தத்திறமையுள்ளதாக ஆகாது. தோஷ மூலமாயிருப்பதுபற்றி விபரீதார்த்தத்தையுடையதாகையால் அந்த தோஷத் தை மூலமாகக்கொண்டிருப்பதினாலேயே மற்றவைகளும் ப்ரமாணங்களாகா. ஆகையால் தன் பக்ஷத்தை ஸாதிக்கத்தக்கத் திறமையுள்ள ப்ரமாணத்தை ஒப்புக்கொள்ளாமையால் தனக்கு சம்மதமாக இருக்கிற அர்த்தம் ஸித்தி பெருகிறதில்லை

---

* ஸ்வதஸ்ஸித்தம்—தானாகவே ஸித்திபெற்றிருக்கிற வஸ்து. அல்லது-நித்யமாய் இருப்பது. அல்லது ஸ்வயம்ப்ரகாசமுள்ளது.

அய்யா! வ்யாவஹாரிகமான ப்ரமாணப்ரமேய வ்யவஹாரம் எங்களுக்கும் இருக்கவே இருக்கிறது. இந்த வ்யாவஹாரிகமென்பது யாது? ஆபாதப்ரதீதியினால் ஸித்திபெற்றதும் யுக்திகளால் நிரூபிக்கப்படுமேயாகில் அவ்வாறு நிலைபெற்றிராததுமென்று சொல்லப்படுமேயாகில்; அதனால் யாது பயன்? ப்ரமாணமாக ஒப்புக்கொள்ளப்பட்டாலும் யுக்தியினாலுண்டான பாதத்தாலேயே ப்ரமாண கார்யமில்லாமையால்

ச்ருதப்ரகாசிகை—

அதற்குமேல் மூலோச்சேதித்வத்தைச் சொல்லுகிறார்— அபிச என்று. இது சாஸ்த்ரம் என்பதினால் சபதாரி விலக்கப்படுகிறது. அஸம்பாவ்யமான தோஷமென்பதனால் பௌத்தாகமம் முதலியது விலக்கப்பட்டது. த்வயா—ப்ரமாணம் ப்ரமேயம் முதலியவற்றை உள்ளது உள்ளபடியே ஒப்புக்கொள்ளாதவனால் ந தாவத் இதி ஸ்வதஸ்ஸித்தமாக இருப்பதால் நிரஸிக்கப்பட்ட ஸமஸ்தமான விசேஷங்களோடு கூடியிருத்தல். இந்த விசேஷணமானது நிர்விஷயத்வத்தைக் காட்டுவதற்காக. யாது காரணத்தால் அறிவிக்கப்படுகிறதில்லை எனில் கூறுகிறார்— தஸ்யா: என்று. ஸர்வவிஷய விரக்தத்வாத்-நிர்விஷயத்வாத் என்று அர்த்தம். விஜ்ஞானமானது விஷயத்துடன் ஸம்பந்திக்காமல் ப்ரகாசப்படுத்தாதன்றோ. அநுபூதியானது உள்ளபடி நிர்விஷயையாக இருந்தாலும் ப்ராந்தியினால் இல்லாததாகஇருந்தபோதிலுங்கூட சாஸ்த்ர ப்ராபல்யத்தைஉணர்த்திவைக்கிறது என்று சொல்லப்படுமேயாகில் கூறுகிறார்——சாஸ்த்ரபக்ஷபாத விரஹாச்ச என்று. அஸம்பந்தமும் அவித்யமானத்வமும் விசேஷமின்றி இருப்பதால் பௌத்தாதி சாஸ்த்ராந்தரங்களுக்கு ப்ராமாண்யத்தையுமறிவிப்பிக்கும் என்று அர்த்தம். ப்ரத்யக்ஷம் முதலியது அறியும்படிசெய்வியாது என்று கூறுகிறார்-நாபி என்று யோகிப்ரத்யக்ஷம்முதலியதும் ஐந்த்ரியமான ப்ரத்யக்ஷத்தை மூலமாககொண்ட சாஸ்த்ரத்தாலுண்டாகிற ஜ்ஞானத்தைககாரணமாகக் கொண்ட அத்ருஷ்டகார்யமாதலால் $ஐந்த்ரியிக ப்ரத்யக்ஷம் முதலில் எடுக்கப்பட்டது. தந்மூலத்வாத - பேதவாஸனைக்கு மூலமான ப்ரத்யக்ஷத்தைமூலமாகக்கொண்டிருப்பதால். இவ்வண்ணம் ப்ரக்ருதகோசரமாய் சொல்லப்பட்ட ப்ரமாணாபாவத்தை அந்யனுக்கு அபிமதமான ஸர்வகோசர விஷயமாக உபஸம்ஹாரம் செய்கிறார்— அத: என்று. ந ஸ்வாபிமதார்த்தஸித்தி:— ஸ்வாபிமதம ப்ரத்யக்ஷதௌர்பல்யம் சாஸ்த்ரப்ராபல்யம் முதலியது. இது ‡‡ கண்டனகாரர் முதலியவர்களால் சொல்லப்பட்டிருக்கிற குதர்க்கங்களின் நிரஸனத்திற்கு உபலக்ஷணார்த்தமாக உரைக்கப்பட்டது. அதில் ப்ரமாண வ்யாப்தி முதலியவற்றின் பங்கம் செய்யப்படுகிறது. அதில் இது விளைவித்தக்கது. தனக்கு ஸம்மதமல்லாத அர்த்தங்களை ப்ரமாணமாக ப்ரதிபாதிக்கின்ற சாஸ்த்ராந்

$ ஐந்த்ரியிகம்—இந்த்ரியங்களால் உண்டானது.

‡‡ கண்டனகாரர்—இவர் ஸ்ரீஹர்ஷன் என்கிற கான்யகுப்ஜதேசீய ப்ராமஹ்மணன். இவர் செய்த க்ரந்தங்கள் இரண்டு அவைகளாவன—நைஷதம், அநிர்வசநீயதாஸர்வஸ்வம் இரண்டாவது க்ரந்தத்தை கண்டந கண்டநகாத்யம் என்றும கண்டன காத்யம் என்றும கண்டகாத்யமென்றும் கண்டனமென்றும் அறிஞர்கள் கூறுகின்றனர். இவர் சிந்தாமணி மந்திரத்தின் புரச்சரணத்தினால்வாக்தேவதையின ஸான்னித்யத்தைப்பெற்று அமாநுஷமான வாக்கையும் பிறகு அந்த தேவதையின் ப்ரஸாதத்தினாலேயே மாநுஷமான வாக்வைகரியையும் பெற்றவரென்று அறிஞர்கள் கூறுவார்கள்.

தாமானது அபாமார்த்தமான அர்த்தத்தோடுகூடியது என்கிற இந்த அர்த்தத்தில் உனக்கு ப்ரமிதியாவது அல்லது அதற்கு ஸாதனமாவது இருக்கிறதா ? அல்லது இல்லையா ? இருக்கிறதேயானால் ப்ரமாணம் முதலியவைகளுக்கு பங்கமில்லை. இல்லையானால் அதனாலேயே ப்ரமாணம் முதலியவைகளுக்கு பங்கமில்லை. ப்ரமிதி அதன் ஸாதனம் முதலியது இருக்கவே இருக்கிறது. அது ¶வ்யாவஹாரிகம் என்று கூறப்படுமேயாகில் வ்யாவஹாரிகத்வம் என்பது என்ன ? பரமார்த்தத்வமா ? அல்லது அபரமார்த்தத்வமா ? அபரமார்த்தமாயிருக்கிற ப்ரமாணமானது ஸாதகமா ? அல்லது அஸாதகமா ? அபரமார்த்தஸம்ஜ்ஞையுள்ள ஸாதகமானது மற்றவைகளுக்கும் ப்ரமாணமாக ஆகுமேயானால் அந்த அந்த பக்ஷங்களுக்கு ஸாதகமாகவேயாகும். அப்படிக்கின்றி அஸாதகமானால் அதனால் மிகவும் அந்யவாதிகளால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிற ப்ரமாணம் முதலியதும் ஸாதகமாகும் உன்னால் சொல்லப்பட்டிருக்கிற ப்ரமாணம் முதலியது பரமார்த்தமாக ஆகுமேயாகில் *த்வைதியானவன் விஜயம் பெற்றவனக ஆவான் என்று. ஸ்வபக்ஷபரபக்ஷபேதம் பரமார்த்தமா ? அபரமார்த்தமா ? பரமார்த்தமானல் பேதத்துக்கு மித்யாத்வமில்லை. அபரமார்த்தமானல் பரபக்ஷமே உன்னால் அங்கீகரிக்கப்பட்டதாக ஆய்விடும் என்பதனால் உன்னால் பேதத்துக்குபாரமார்த்யம் சொல்லப்பட்டதாக ஆகுமென்று. இது முதலிய வ்யாகாதங்கள் எல்லா இடத்திலும் அனுஸந்திக்கத்தக்கது என்று கருத்து.

இதற்குமேல் தன்பக்ஷத்தை ஸாதிக்கக்கூடிய ப்ரமாணத்தின் இன்மையைப்பற்றி உத்தரஞ்சொல்ல எண்ணங்கொண்டவராக சோதனஞ்செய்கிறார்— நநு என்று. மறுக்கிறார்-கோயம் என்று. வ்யாவஹாரிகஸ்வரூபத்தைக்காட்டுகிறார்-ஆபாத என்று தூஷிக்கிறார்— கிம்தேந என்று. ஸாத்ய நிச்சயரூபமான ப்ரயோஜனமில்லையென்று அர்த்தம். எதனால் என்று வினவப்படுமேயாகில் கூறுகிறார்—ப்ரமாணதயா என்று. யுக்தியினால் வருகிற பாதம் யௌக்திகபாதம் - புகை என்கிற புத்தியினால் க்ரஹிக்கப்பட்டிருக்கிற ஆவி முதலியவற்றிக்கு ஸாத்ய நிச்சயத்தைக் குறித்து ஹேதுத்வத்தின் இன்மை காணப்படுவதால் என்று அர்த்தம இவ்வண்ணமாக மூலோச்சேதித்வ வைஷம்யம் உபபாதிக்கப்பட்டது. இவ்வாறாக முந்தி அந்யனால் சொல்லப்பட்டிருக்கிற பாத்வாத்வை ஷம்யம் தூஷிக்கப்பட்டது.

[illegible] — ஶாஸ்த்ரப்ரத்யக்ஷயோ: [illegible]
[illegible] ப்ரத்யக்ஷவிஷயஸ்ய ஶாஸ்த்ரேண பாதோ த்ருஶ்யதே;
ஶாஸ்த்ரவிஷயஸ்ய [illegible]
[illegible] — இதி।
[illegible]
[illegible] ॥

* த்வைதிகள்—ப்ரஹ்மத்தைத்தவிர்த்து வேறாக சேதநாசேதநாத்மகமான ப்ரபஞ்சத்தை ஒப்புகொள்ளுகிறவர்கள். இந்த பெயர் ராமாநுஜ ஸித்தாந்திகளுக்கும் ஆநந்ததீர்த்தியர்களுக்கும் பொதுவாக இருந்தபோதிலும் பெரும்பான்மையாக பிந்தியவர்களே இந்த சப்ததால் வழஙகப்படுகிறார்.

¶ வ்யாவஹாரிகம்— வ்யாவஹாரத்திற்காக கல்பிக்கப்படும் வஸ்து அதாவது உள்ளபடி இல்லாதது.

𑌸𑌨𑍍𑌨𑌿𑌹𑌿𑌤𑌂 𑌭𑌵𑌤𑌿 — 𑌯𑌥𑌾 𑌸𑌕𑌲𑍇𑌤𑌰𑌕𑌾𑌚𑌾𑌦𑌿𑌦𑍋𑌷𑌰𑌹𑌿𑌤 𑌚𑌕𑍍𑌷𑍁𑌷𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑍍𑌯𑌗𑍍𑌰𑌾𑌵𑌷𑍍𑌟𑌮𑍍𑌭𑌾𑌦𑌿𑌸𑌹𑌾𑌸𑍍𑌯 𑌸𑌕𑌲𑌤𑍈𑌮𑌿𑌰𑌿𑌕𑌜𑌨𑌸𑍍𑌯𑌾𑌜𑍍𑌞𑌾𑌤𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌤𑌿𑌮𑌿𑌰𑌸𑍍𑌯 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌤𑌿𑌮𑌿𑌰𑌦𑍋𑌷𑌵𑌿𑌶𑍇𑌷𑌣 𑌦𑍍𑌵𑌿𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌂 𑌜𑌾𑌯𑌤𑍇 । 𑌨 𑌤𑌤𑍍𑌰 𑌬𑌾𑌧𑌕𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌯𑍋𑌽𑌸𑍍𑌤𑍀𑌤𑌿 𑌨 𑌤𑌨𑍍𑌮𑌿𑌥𑍍𑌯𑌾 𑌨 𑌭𑌵𑌤𑍀𑌤𑌿 𑌤𑌦𑍍𑌵𑌿𑌷𑌯𑌭𑍂𑌤𑌂 𑌦𑍍𑌵𑌿𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌤𑍍𑌵𑌮𑌪𑌿 𑌮𑌿𑌥𑍍𑌯𑍈𑌵 । 𑌦𑍋𑌷𑍋 𑌹𑍍𑌯𑌯𑌥𑌾𑌰𑍍𑌥𑌜𑍍𑌞𑌾𑌨𑌹𑍇𑌤𑍁𑌃 । 𑌤𑌥𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌮𑍂𑌲𑌤𑍍𑌵𑍇𑌨 𑌬𑌾𑌧𑌕𑌜𑍍𑌞𑌾𑌨𑌰𑌹𑌿𑌤𑌮𑌪𑌿 𑌸𑍍𑌵𑌵𑌿𑌷𑌯𑍇𑌣 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌾 𑌸𑌹 𑌮𑌿𑌥𑍍𑌯𑍈𑌵𑍇𑌤𑌿 । 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 𑌚𑌾𑌤𑍍𑌰 𑌪𑍍𑌰𑌯𑍋𑌗𑌾𑌃। 𑌵𑌿𑌵𑌾𑌦𑌾𑌧𑍍𑌯𑌾𑌸𑌿𑌤𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮, 𑌮𑌿𑌥𑍍𑌯𑌾, 𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌵𑌤 𑌉𑌤𑍍𑌪𑌨𑍍𑌨𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌿𑌷𑌯𑌤𑍍𑌵𑌾𑌤𑍍, 𑌪𑍍𑌰𑌪𑌞𑍍𑌚𑌵𑌤𑍍। 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌮𑌿𑌥𑍍𑌯𑌾, 𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌿𑌷𑌯𑌤𑍍𑌵𑌾𑌤𑍍, 𑌪𑍍𑌰𑌪𑌞𑍍𑌚𑌵𑌤𑍍, 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌮𑌿𑌥𑍍𑌯𑌾, 𑌅𑌸𑌤𑍍𑌯𑌹𑍇𑌤𑍁𑌜𑌨𑍍𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌿𑌷𑌯𑌤𑍍𑌵𑌾𑌤𑍍, 𑌪𑍍𑌰𑌪𑌞𑍍𑌚𑌵𑌦𑍇𑌵 ।

ஸ்ரீ பாஷ்யம்—

மேலும், (அப்படிக்கின்றி) சாஸ்த்ரம் ப்ரத்யக்ஷம் இரண்டுக்கும் அவித்யாமூலத்வமிருந்தபோதிலும் ப்ரத்யக்ஷவிஷயத்திற்கு சாஸ்த்ரத்தால் பாதமானது காணப்படுகிறது. சாஸ்த்ரவிஷயமான ஸத்ரூபமான அத்விதீயப்ரஹ்மத்திற்கு பிந்தின சாஸ்த்ரத்தினுல் பாதம் காணப்படாமையால் நிர்விசேஷமான அநுபூதிமாத்ரமான ப்ரஹ்மமே பரமார்த்தமென்று சொல்லப்படுமேயாகில், அது ஸரியல்ல. அபாதிதமாக இருந்தபோதிலுங்கூட தோஷமூலமான சாஸ்த்ரத்திற்கு அபாரமார்த்த்யம் நிச்சயிக்கப்பட்டிருப்பதால். இது சொல்லப்பட்டதாக ஆகிறது. எவ்வாறு காசம் முதலிய கண்ரோகமற்ற ஸகல இதாபுருஷர்களுக்கு எட்டாத மலையினுடைய குஹைகளில் வாஸம் பண்ணுகிறவர்களும் தம் கண்ணிலுள்ள திமிரரோகத்தை அறியாதவர்களுமான திமிரரோகமுள்ள எல்லா ஜனங்களுக்கும் திமிரதோஷம் ஸமானமாக இருப்பதனுல் சந்த்ரன் இரண்டு என்கிற ஜ்ஞாநமானது பேதமின்றி உண்டாகிறது, அந்த இடத்தில் பாதக ஜ்ஞாநமானது இல்லை, என்பதுபற்றி அந்த த்விசந்த்ரஜ்ஞாநமானது மித்யையாகாமல் போகாது, என்பதினுல் அந்த ப்ரமாத்மகஜ்ஞாநத்திற்கு விஷயமாயுள்ள த்விசந்த்ரத்வமும் மித்யையே. தோஷமன்றோ அயதார்த்தஜ்ஞாநத்திற்கு ஹேது. அவ்வாறு ப்ரஹ்மஜ்ஞாநம் அவித்யையை மூலமாகக்கொண்டிருப்பதனுல் பாதகஜ்ஞாநமில்லாவிடினும், தனக்கு விஷயமாயிருக்கிற ப்ரஹ்மத்தோடுகூட மித்த்யையே என்று. இந்த விஷயத்தில் அநுமானங்களுமிருக்கின்றன. விவாதவிஷயமான ப்ரஹ்மம் மித்யை, அவித்யை உள்ளவனுக்கு உண்டாயிருக்கிற ஜ்ஞாநத்திற்கு

விஷயமாயிருப்பதால் ; §ப்ரபஞ்சம்போல. ப்ரஹ்மமானது மித்யை, ஜ்ஞாந விஷயமாயிருப்பதால்; ப்ரபஞ்சம் போல. ப்ரஹ்மமானது மித்யை, அஸத்ய ஹேதுக்களால் உண்டான ஜ்ஞாநத்திற்கு விஷயமாயிருப்பதால் ப்ரபஞ்சம், போலவே.

ச்ருதப்ரகாசிகை—

இதற்குமேல் ப்ரஹ்மப்ரதிபாதக சாஸ்த்ரத்திற்கு இதைவிடப்பிறபட்ட பாதகசாஸ்த்ரம் ஒன்றுமில்லையென்று ப்ரத்யக்ஷத்தைககாட்டிலும் வைஷம்யத்தைச் சங்கிக்கிறார்—அதோச்யேத இது முதலியதால். சாஸ்த்ரத்திற்கு பாததர்சனுபாவரூபவைஷம்யத்தைச் சொல்லுவதற்காக ப்ரத்யக்ஷவிஷயத்திற்கு பாததர்சனததைக்கூறுகிறார்— சாஸ்த்ர என்று. ப்ரத்யக்ஷ விஷயத்தைக் காட்டிலும் சாஸ்த்ரவிஷயததிற்கு வைஷம்யத்தைக் கூறுகிறார்—சாஸ்த்ரவிஷயஸ்ய என்று. பிந்தியதால் பாதம் காணப்படாமையை ஒப்ப்புக்கொண்டு தூஷிக்கிறார்—தத் அயுக்தம் என்று. எதனுல் என்று கேட்கில் சொல்லுகிறார்—அபாதிதஸ்ய என்று. எதற்குக்காரணம் துஷ்டமோ, எதற்கு மித்யை என்கிற ப்ரத்யயமிருக்கிறதோ அதுவே $ அஸமீசீனமான ஜ்ஞாநமென்று நீதியையறிநதவர்கள் கூறுகின்றனர். ஆதலால் துஷடமூலதவம் பாதகப்ரதயயம் இரண்டும் தனித்தனியாக மிதத்யாதவத்திற்கு ஸாதகங்கள். பாதிககப்படாமலிருப்பதற்குஙகூட அபாரமார்ததய நிச்சயமென்பது வ்யாகாததோஷமுள்ளது. அபரமார்த்தமென்று நிச்சயிக்கப்பட்டிருத்தலன்றே பாதிதத்வம் என்று வினவப்படுமேயாகில், கூறுகிறார்—ஏததுக்தம் என்று. அஜ்ஞாதஸ்வதிமிரஸய என்று சில இடத்தில் காணப்படுகிறது. தோஷஜ்ஞாநத்தைக் காரணமாகக்கொண்ட பரோக்ஷமான பாதக ஜ்ஞானேதயத்தின் நிராஸம் ப்ரயோஜனம். ஜ்ஞாதஸ்வதிமிரஸ்ய என்கிற பாடமோவெனில் எழுதுகிறவர்களுடைய தடுமாற்றத்தால் ஏற்படுத்தப்படுததப்பட்டிருக்கிறது. அது புருஷாந்தராகோசரம் என்கிற சொல்லுக்கு விருத்தமன்றே. பாதகமில்லாவிடில் எவ்வாறு மித்யாத்வமென்றுகேட்கில் கூறுகிறார்—தோஷோஹி என்று. எவனுக்கு ப்ராந்தியுண்டாயிற்றே அவனிடத்திலேயே பாதக ஜ்ஞானமுண்டாகாமல் போனபோதிலுங்கூட வேறுமனிதனுடைய ஜ்ஞாநத்திஞல் மித்யாதவ நிச்சயமானது வ்யாஹதமாகாது என்று அர்த்தம். திர்யக்ஜந்துக்களுக்கு உயிருள்ளவரையில் பாதக ஜ்ஞாநம் உண்டாகாமலிருந்தபோதிலுங்கூட தேஹாத்மஜ்ஞானமானது மித்யையாயிருககிற அர்த்தத்தை விஷயமாகக்கொண்டிருக்கிறது. அந்த புத்தியானது ஸம்ஸர்கரூபதோஷத்தை மூலமாகக்கொண்டிருப்பதால் பாஹ்யப்ரமங்களில் தெளிவான உதாஹரணங்கள் விவக்ஷிக்கப் பட்டிருப்பதினுலேயே அவைகள் இங்கு உரைக்கப்படவில்லை.

அய்யா ! திர்யக்குக்களுக்கு உண்டாயிருக்கிற தேஹாத்மப்ரமமானது நமக்கு ப்ரத்யக்ஷமல்ல ; கார்யம் அறியப்படாமையால். ப்ரமகாரணதோஷமும் எவ்விதத்தாலும் அறியமுடியாதது. ஆதலால் எவ்வண்ணம் தோஷமூலத்வஸம்பாவநாஜ்ஞாநமாத்ரத்தால் மித்யாத்வநிச்சயம்? உத்தரம் சொல்லப்படுகிறது; நம் முதலானேர்க்கு சாஸ்த்ரங்களைக்கேட்டு அறிவதற்கு முன்பு தேஹாத்ம ப்ரமம் காணப்படுவதால்அவை

§ப்ரபஞ்சம்—உலகம்.

$ அஸமீசீனம்—மேன்மையற்றது.

களுக்கும் சாஸ்த்ரத்தில் அதிகாரமில்லாமையால் தேஹாத்மப்ரமமும் அதடியாகவுண்டான தேஹஸம்ஸர்கரூபமான தோஷவத் அனுமானிக்கப்படுகிறது. தோஷமூலத்வ நிச்சயத்தால் மித்யாத்வ நிச்சயம். இவ்வண்ணம் திமிரதோஷமுள்ள ஜனங்களுக்கு திமிரதோஷஸம்பந்தத்தில் ஆப்தவாக்யம் முதலியது தேடத்தக்கது. அதனால் மித்யாத்வ நிச்சயம். இவ்வாறு ஸபக்ஷத்தில் ஸித்தமான அர்த்தத்தை தார்ஷ்டாந்திகத்தில் நிகமனஞ்செய்கிறார்— தத: என்று. ஜ்ஞானத்துக்கு மித்யாத்வமானது அந்யமதத்தை ஒப்புக்கொள்வதனால் உரைக்கப்பட்டது. பிறகு உண்டாகிற ஜ்ஞானத்தினால் ஏற்படக்கூடிய பாதத்தின் அநாதரமானது மேலே நிரஸிக்கப்படப்போகிறது. சாஸ்த்ரத்திற்கு அவித்யாமூலத்வம் ஒப்புக்கொள்ளப்படுமேயாகில் அநிஷ்டத்தை ப்ரஸஞ்ஜனம்செய்கிறார்— **பவந்தி** இது முதலியதால் வ்யாப்திகளைக்காட்டுகிற வசனங்களிருப்பதால் "ப்ரயோகா:" என்று உரைக்கப்பட்டது. ப்ரதிஜ்ஞாத்ருஷ்டாந்த ஹேதுரூபமாக சொல்லுதல் அநிஷ்ட ப்ரஸங்கமானது இப்படியும் ந்யாயமாகும் என்று ஜ்ஞாபிப்பதற்காக, ஜ்ஞானவிஷயத்வம் மாத்ரம் ஒரு ஹேது. துஷ்ட புருஷஜ்ஞானவிஷயத்வம் ஒன்று மித்யாபூதமான காரண § கலாபங்களாலுண்டாகிற ஜ்ஞானத்துக்கு விஷயத்வம் ஒன்று என்று பேதம். முன்பு ஸபக்ஷமாகவே இருந்திருக்கிற அர்த்தம் இந்த இடத்தில் ஸபக்ஷம் என்பது ஏவகாரார்த்தம்.

ந ச வாச்யம்— ஸ்வாப்நஸ்ய ஹஸ்த்யாதிஜ்ஞாநஸ்யாஸத்யஸ்ய ஸத்ய ஶுபாஶுபப்ரதிபத்திஹேதுபாவவதவித்யாமூலேநாஸ த்யஸ்யாபி ஶாஸ்த்ரஸ்ய ஸத்யப்ரஹ்மவிஷயப்ரதிபத்திஹே துபாவோ ந விரோத:— இதி, ஸ்வாப்நஜ்ஞாநஸ்யாஸத்யத்வாபாவாத் । தத்ர ஹி விஷயாணாமேவ மித்யாத்வம்; தேஷாமேவ ஹி பாதோ த்ருஶ்யதே; ந ஜ்ஞாநஸ்ய; ந ஹி யாத்ருஶம் ஸ்வாப்நவேலாயாமநுபூதம் ஜ்ஞாநமபி ந வித்யத இதி கஸ்யசிதபி ப்ரத்யயோ ஜாயதே । அநுபூதம் ஜ்ஞாநம் வித்யதே கஜா ந ஸந்தி ஹி பாதகப்ரத்யய: । மாயாவிநோ மந்த்ரௌஷதாதிமூலம் மாயாமயம் ஜ்ஞாநம் ஸத்யமேவ ப்ரீதிபயஸ்ய ச ஹேது:; தத்ராபி ஜ்ஞாநஸ்யாபாதிதத்வாத் । விஷயேந்த்ரியாதிதோஷஜந்யம் ரஜ்ஜ்வாதௌ ஸர்பாதிஜ்ஞாநம் ஸத்யமேவ பயாதிஹேது: । ஸர்பதஷ்டேऽபி ஸ்வாத்மநி ஸர்பஶங்கயா நாஷ்டபாதி:, ஸதைவ ஶங்காவிஷபாதிர்மரணஹேதுர்த்ருஷ்டா । வஸ்துஹேதவ ஜலாதௌ ப்ரதிபிம்பதர்ஶநமபி வஸ்துஹேதவிஶேஷநிஶ்சயஹேது: । அத: ஸம்வேதநாநாம் ஸத்யத்வாதர்த்தக்ரியாகாரித்வாச்ச ஸத்யத்வமவஸீயதே । ஹஸ்த்யாதீநாம்

---

§ கலாபம்— ஸமூஹம்.

[illegible]

ஸ்ரீபாஷ்யம்—

ஸ்வப்நாவஸ்தையிலுண்டாகிற அஸத்யமான கஜம் முதலியவற்றின் விஜ்ஞாநத்திற்கு பரமார்த்தமான சுபாசுப ப்ரதிபத்தி ஹேதுத்வம் போல, அவித்யாமூலத்வமிருப்பதால் அஸத்யமான சாஸ்த்ரத்திற்கும் பரமார்த்தமான ப்ரஹ்மவிஷயப்ரதிபத்தி ஹேதுத்வமானது விருத்தமல்லவென்று உன்னால் சொல்லத்தக்கதல்ல ஸ்வப்நஜ்ஞாநமானது அஸத்யமல்லாததாகலால். அந்த ஸ்வப்நத்தில் விஷயங்களுக்கேயன்றோ மித்யாத்வம். அவைகளுக்கேயன்றோ பாதம் காணப்படுகிறது ஜ்ஞாநத்திற்கு பாதம் காணப்படவில்லை "என்னால் ஸ்வப்நவேளையில் அநுபவிக்கப்பட்ட ஜ்ஞாநங்கூட இல்லை' என்று ஒருவனுக்காவது ஜ்ஞாநமுண்டாகிறதில்லையன்றோ. தர்சனமோ இருக்கிறது, அர்த்தங்களில்லை, என்றல்லவோ பாதகப்ரத்யயம் மாயாவியினுடைய மந்த்ரம், ஔஷதம், முதலியவைகளால் ஸம்பவிக்கிற மாயாமயமான ஜ்ஞாநமானது ஸத்யமாகவே இருந்துகொண்டு ப்ரீதிக்கும் பயத்திற்கும் காரணமாகிறது அவ்விடத்திலும் ஜ்ஞாநத்திற்கு பாதகமில்லாமையால். விஷயம் இந்த்ரியங்கள் முதலியவற்றின் தோஷத்தாலுண்டாகிற ரஜ்ஜு முதலியவற்றில் ஸர்பாதி விஜ்ஞாநமானது ஸத்யமாகவே இருந்துகொண்டு பயம் முதலியவற்றுக்கு ஹேதுவாகவிருக்கிறது. தான் ஸர்பத்தால் கடிக்கப்படாமலிருந்தபோதிலுங்கூட ஸர்பத்தின் ஸந்நிதானத்தால் "நான் கடிக்கப்பட்டேன்" என்கிற புத்தியானது ஸத்யமாகவே உண்டாகிறது ஸத்யமாகவேயிருக்கிற § சங்காவிஷபுத்தியானது மரணஹேதுவாகிறது ஜலம் முதலியவற்றில் வாஸ்தவமாகவேயிருக்கிற முகம் முதலியவற்றின் ப்ரதிபனையானது வாஸ்தவமாய் முகத்தை யடைந்திருக்கிற விசேஷங்களை நிச்சயிப்பதற்கு ஹேதுவாகவிருக்கிறது. இந்த ‡ ஸம்வேதனங்கள் அனைத்துக்கும் உத்பத்தி இருப்பதாலும் அர்த்தக்ரியா காரித்வமிருப்பதாலும் ஸத்யத்வம் நிர்ணயிக்கப்படுகிறது. ஸ்வப்னத்தில் அநுபவிக்கப்படுகிற யானை முதலியவைகளில்லாமலிருந்தபோதிலும் எவ்வண்ணம் அவைகளின் புத்திகள் ஸத்யங்களாக ஆகின்றனவென்று வினவப்படுமேயாகில் அது அப்படியன்று புத்திகளுக்கு ஆலம்பநமாத்ரம் தவறாமல் இருக்கவேண்டியதாதலால்.

---

§ சங்காவிஷபுத்தி - ஸர்பம் தீண்டி இருக்குமோ எனகிற எண்ணம்.
‡ ஸம்வேதனம்—ஜ்ஞாநம்.

இக

அர்த்தத்திநுடைய ப்ரதிபாஸமானத்வமே ஆலம்பனவிஷயத்தில் அபேக்ஷிக்கப்பட்டிருக்கிறதன்றோ. தோற்றமோ வெனில் தோஷவசத்தால் இருக்கவே இருக்கிறது. அது தத்வஜ்ஞானத்தால் பாதிக்கப்படுங்காலத்தில் அஸத்யமென்று நிச்சயிக்கப்படுகிறது. அபாதிதையான புத்தியானது ஸத்யமென்றே உரைக்கப்பட்டதன்றோ.

ச்ருதப்ரகாசிகை—

அய்யா! அஸத்யமான ஹேதுவினால் உண்டாகிற புத்திக்கு விஷயமாயிருத்தல் அந்யத்ராஸித்தம். ப்ரபஞ்சவத் என்கிற த்ருஷ்டாந்தமும் ஸாத்யவிகலம், எவ்வாறு இவ்வண்ணம ப்ரஸங்கம்? எனில் கூறப்படுகிறது. "ப்ரஹ்மத்துக்கு அநநுபூதித்வம் உன்னுடைய உக்தியினாலேயே ப்ரஸங்கிக்கிறது" என்பதுபோல் ப்ரஸஞ்ஜக ப்ரஸஞ்ஜநீய தர்மங்களின் வ்யாப்தியை அந்யமததால் ஒப்புக்கொண்டு தூஷணம் உரைக்கப்பட்டதென்பதினால் விரோதவில்லை. அஸத்யமான ஹேதுவினாலுண்டாகிற ஜ்ஞானத்திற்கு விஷயமாக இருப்பதால் ப்ரஹ்மத்துக்கு அஸத்யத்வமில்லை.

அஸத்யத்தினால்கூட ஸத்யப்ரதிபத்தியானது காணப்படுகிறதென்கிற சங்கையை அநுவதித்துப் பரிஹரிக்கிறார்—நச இதுமுதலியதால. அஸத்யத்திற்கு ஸத்யோத்பத்தி ஹேதுத்வாநுபபத்தியா? அல்லது அதின் ஜ்ஞப்தி ஹேதுத்வாநுபபத்தியா? என்கிற விகல்பத்தைக் கருதி உத்பத்திஹேதுத்வத்திலும் ஜ்ஞப்தி ஹேதுத்வத்திலும் உதாஹரணங்கள் காண்பிக்கப்பட்டன. அவற்றுள் ஸ்வப்நஸமயத்திலநுபவிக்கப்படுகிற வஸ்துக்களுக்கு ஸத்யத்வம் ஸம்மதமாயிருந்தபோதிலும் விஷயங்களுக்கு அஸத்யத்வத்தை ஏற்றுக்கொண்டு பரிஹரிக்கிறார்— ஸ்வாப்ந என்று. ஜ்ஞானம் ஸத்யமென்பதை உபபாதிக்கிறார்—தத்ர ஹி என்று. நிச்சயம் எவ்வாறு என்று கேட்கில் கூறுகிறார்—தேஷாமேவ என்று. ஜ்ஞானத்திற்கு பாதத்தினது இன்மையைக் காண்பிக்கிறார்— நஹி என்று. எவ்வாறு உண்டாகிறது எனில் கூறுகிறார்—தர்சநந்து என்று. வேறு ஒன்றை விஷயமாகக்கொண்ட பாதமானது மற்றொரிடத்தில் ஸஞ்சரிக்கச்செய்வதற்குத் தகாதது என்று அர்த்தம். இங்கு அநேக உதாஹரணங்களைக்காட்டுவது, அந்தந்த ஜ்ஞானஸாமக்ரீவிசேஷங்களுக்கு ஸத்யத்வத்தை ஜ்ஞாபிப்பதற்காக. அதுவும் ஜ்ஞானஸத்யத்வத்தை நிர்வஹிப்பதற்காக. ஸ்வப்நத்துக்குக் காரணமான பூர்வாநுபவஸம்ஸ்காரம் ஸத்யம். ப்ரஸித்தமாயிருப்பதால் அது சொல்லப்படவில்லை. மாயாவிந: என்று. இந்த இடத்தில் 'மந்த்ரௌஷதாதி ப்ரபவம்" என்று சொன்னதனால் காரணத்திற்கு ஸத்யத்வம் உரைக்கப்பட்டது. மாயாமயம்-மித்யாவிஷயமென்று அர்த்தம்; அல்லது விசித்ர விஷயம். விஷயேத்யாதி. விஷயதோஷம் ஸாத்ருச்யம் முதலியது. இந்த்ரிய தோஷம் - காசம் முதலியது ஆதிசப்தத்தால் தேசத்தைச் சார்ந்துள்ள தூரத்வம் முதலிய தோஷம் உரைக்கப்படுகிறது தோஷமும் ஸத்யம் ஸத்யைவ என்று. ஸர்பத்தின் ஸந்நிதானரூபமான காரணம் ஸத்யம், கடிக்கப்பட்டேன் என்கிற புத்தியும் ஸத்யம், சங்காவிஷபுத்தியிலும் ஸாமக்ரீ ஸத்யமாகவே இருக்கிறது. விஷமில்லாத ஸர்பத்தினுடைய கடியோ அல்லது இருளில் கல் மண்கட்டி முதலியவைகளால் காலுக்கு ஹிம்ஸைஉண்டாவதோ ஸத்யமாகவே இருக்கிறதன்றோ, வஸ்த்வீதி— ஜலம் முதலியது ஸத்யம். அவைகளால் கண்ணொளி திருப்பியடிக்கப்படுவதும் ஸத்யம். ஸம்வேதநங்களுக்கு ஸத்யத்வமானது நிச்சயிக்கப்பட்டாலன்றோ

சொல்லப்பட்ட உதாஹரணங்களில் ஸத்யத்தினின்று ஸத்யப்ரதிபத்தி ஏற்படும் என்று கேட்கில் கூறுகிறார் — ஏஷாம் என்று. உத்பத்தியுடன் கூடியிருத்தல் அர்த்தக்ரியா காரித்வம் இவ்விரண்டும் தனித்தனியாக ஸத்பத்வத்திற்கு ஸாதகம். சுக்தியில் வெள்ளியானது உத்பத்தியுடையதாக ஆகாதன்றோ. கார்யகரமும் ஆகாது. அதற்குமேல்ஜ்ஞாந ஸத்யத்வமானது விஷயஸத்யதையின் வ்யாப்தியுள்ளது என்பதுபற்றி அந்த விஷய ஸத்யத்வ நிவ்ருத்தியினால் ஜ்ஞாநஸத்யத்வ நிவ்ருத்தி என்று ஸந்தேஹிக்கிறார்—ஹஸ்த்யாதீநாம் என்று. அபாவே-ப்ரதிபந்நமான உபாதியில் அத்தன்மையின் இன்மை. ஜ்ஞாநஸத்யத்வமானது ஸாலம்பநத்வமாத்ர வ்யாப்தியுள்ளது ; பாதிக்கப்படாமையால் என்று பரிஹரிக்கிறார்—நைதத் என்று. ஸாலம்பநத்வமாத்ரசப்தத்தினால் ஸத்யாலம்பநத்வம் வ்யாவ்ருத்திக்கப்பட்டது. மித்யையாயிருப்பதற்கு ஆலம்பநத்வம் எவ்வாறு எனில கூறுகிறார்—அர்த்தஸ்ய என்று. ஆலம்பநம் - விஷயம். ப்ரதிபாஸமாநத்வமேவ ஹி ஆலம்பநத்வே அபேக்ஷிதம் என்று. ப்ரதிபாஸமானத்வமே விஷயத்வம் என்று அர்த்தம்.

‡ அதீதங்கள் †அநாகதங்கள் முதலியவை இல்லாமலிருந்தபோதிலும் அவைகளின் ப்ரதிபாஸத்திற்கு ஆலமபநத்வம் காணப்படுகிறபடியாலும், இருந்துங்கூட ப்ரதிபாஸமில்லாதவற்றுக்கு ஆலமபநத்வம் காணப்படாமையாலும் என்று கருத்து. பக்ஷத்தில் ப்ரதிபாஸமாநத்வமுங்கூட இருக்கிறதென்று கூறுகிறார்—ப்ரதிபாஸ என்று. ப்ரதிபாஸமானதையாவது ஸம்வித்தை அபேக்ஷித்து ப்ரதிஸம்பந்தியாயிருத்தல். இல்லாமலிருக்கிற வஸ்துவுக்கு இருப்பதாகத தோற்றமுண்டாவதால் அந்தரூபத்தால் அதற்கு ஸத்யதவம் அப்படி ஸாக்ஷாத் அவபாஸிக்கின்ற விஷயங்கூட ஜ்ஞாநஹேதுவாக ஆகலாம். விவாதமின்றி எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிற வித்யமானவிஷயம்போல, இருப்பதாக பாவிததல் இரண்டுக்கும் விசேஷமின்றி இருப்பதால். அப்படி ஒப்புக்கொள்ளும் பக்ஷததில் அஸத்யத்தினின்று ஸத்யோத்பத்தி உண்டாக வேண்டிவருமெனில் சொல்லுகிறார்—தோஷவசாத் என்று. இல்லாதவஸ்து இருப்பதாகத்தோற்றுவதில காரணம் தோஷமே யொழிய அவித்யமான விஷயமல்ல. அவித்யமான விஷயமானது ஜ்ஞாநத்திற்கு ஹேதுவாக அபேக்ஷிக்கப்படவில்லை. விஷயமாக மாத்திரம் அபேக்ஷிக்கப்படுகிறது. வித்யமான வஸ்துவோ வென்றால் அத்தன்மையோடு பாஸியாநின்றுகொண்டு விஷயமாகவும ஹேதுவாகவும் அபேக்ஷிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் உள்ளபடி விஷயததினது இருப்பே ஜ்ஞாநஹேதுத்வத்தில் உபாதி. தவறாமல் (கார்யோத்பத்திக்கு) முந்தின க்ஷணத்தில் இருக்கிற வஸ்துவுக்கன்றோ ஹேதுத்வம் காணபபட்டிருககிறது. ஆதலால் அவித்யமானவிஷயத்துக்குஹேதுதவம பொருந்தாமையால் தோஷமே ஹேதுவாக இருப்பதுபற்றி அஸதயத்தினின்று ஸத்யோத்பத்திஇலலை என்று அர்த்தம். $ ப்ரதிபாஸமாநதவம் இரண்டுக்கும் ஸமானமாக இருக்க எவ்வாறு ஒன்றுக்கு அஸத்யதவநிச்சயம எனில் கூறுகிறார்—ஸது என்று. புத்தியும் அஸத்யையாக ஏன் ஆகக்கூடாது எனில் கூறுகிறார்—அபாதிதா என்று. விஷயத்தின் இன்மையினாலே ஜ்ஞாநத்துக்கு அஸத்யத்வம் கூறுதல் § காலாத்யயாபதிஷ்டம் என்று அர்த்தம்.

ஐயா ! ஸ்வாப்நாதிவிஷய ஜ்ஞானத்தில், ஜ்ஞானமாத்ரம் சுபாசுபப்ரதிபத்திக்கு ஹேதுவா ? அல்லது ஜ்ஞானவிசேஷமா ? ஜ்ஞானமாத்ரமென்கிற பக்ஷத்தில்

‡ அதீதம்—சென்றது. †அநாகதம்— இனி வரப்போகிறது.
$ ப்ரதிபாஸமாநத்வம்—தோன்றுதல். § காலாத்யயாபதிஷ்டம்—பாததோஷமுள்ளது

அதிப்ரஸங்கம் வரும் ஜ்ஞானவிசேஷமென்று கூறப்படுமேயானால் எது அந்த ஜ்ஞான விசேஷத்துக்கு §அவச்சேதகம்? விஷயம் அவச்சேதகமென்று கூறப்படுமேயானால் அந்த விஷயமானது ஆஉபலக்ஷணமாக இருந்துகொண்டு அவச்சேதகமாகிறதா? அல்லது விசேஷணமாக இருந்துகொண்டா? விசேஷணமாக இருந்துகொண்டு அவச்சேதகம் ஆகிறதென்று கூறப்படுமேயாகில் விசேஷ்யத்தோடுகூட கார்யத்தில் அந்வயிக்கிற ஸ்வபாவமுள்ளதன்றோ விசேஷணம். ஆகையால் யானை முதலியவைகளுக்குங்கூட சுபாசுப †ப்ரதிபத்தி ஹேதுத்வமிருப்பதால் [illegible] ஸத்யப்ரதிபத்தியுண்டாகிறது. உபலக்ஷணமாக இருந்துகொண்டு விஷயமானது ஜ்ஞானவிசேஷாவச்சேதகமென்று கூறப்படுமேயானால் @உபலக்ஷிக்கத்தக்க வஸ்துவுக்கு வெளியிலிருந்துகொண்டு உபலக்ஷிக்கத்தக்க வஸ்துவின் ப்ரதீதிக்கு உபாயமாயிருக்கிறதன்றோ உபலக்ஷணம்; ஆகலால் விஷயத்திற்கு ஜ்ஞானப்ரதிபத்தி ஹேதுத்வமிருப்பதால் அஸத்யத்தினின்றும் ஸத்யப்ரதிபத்தியுண்டாகிறது. ஜ்ஞானங்களுக்கு அந்தந்த வ்யவஹாராநுகுணமான ரூபமான ஸ்வபாவ விசேஷங்களால் வ்யாவ்ருத்தியிருப்பதால் அதிப்ரஸங்கமில்லையென்று சொல்லக்கூடாது. வ்யவஹாராநுகுண்யமாத்திரத்திற்கு †வ்யாவர்தகத்வம் சொல்லில் அதிப்ரஸங்கம்வருவதால். வ்யவஹாரவிசேஷாநுகுண்யத்திற்கு வ்யாவர்தகத்வம் சொல்லில் அதின் விசேஷமும் அதை ஸங்க்ரஹிக்கிற விஷயத்தைச்சார்ந்திருப்பதுபற்றி வ்யவஹாரத்திற்கு அவச்சேதகமாயிருப்பதால் ‡அந்ருதத்திற்கு ஸத்ஹேதுத்வம் என்று மறுமொழிகூறப்படுகிறது:—வ்யாவ்ருத்தமாகவேயிருக்கிற ஜ்ஞானம் சுபம் அசுபம் முதலியவைகளுக்கு *அநுமாபகமாக இருக்கிறது - வ்யாவ்ருத்தியும் தனனுடைய ஆலம்பநத்திலே இல்லாமலிருக்கிற வஸ்துவுக்குங்கூட ஆலம்பநத்வமானது "யோகைசத்வால்" என்று முன்னமே கூறப்பட்டிருக்கிறது ¶அந்யதாக்யாதி பக்ஷத்திலும் ஆலம்பநத்வமானது எல்லா ஜ்ஞானங்களுக்கும் விருபடவே விரும்பப்படுகிறது. விசேஷணம் விசேஷ்யம் அவைகளின் ஸம்ஸர்கம் இவைகள் ஓரிடத்தில் ஸத்யமாக இருப்பதால். விசேஷணம் விசேஷ்யம் இரண்டுக்கும் அந்தத்தன்மைக்கு நிர்வாஹகம் ஸம்ஸர்கமே. அது தனக்குள்ள விசேஷணவிசேஷ்ய ஸம்பந்தித்வவிஷயத்தில் வேறு ஸம்ஸர்கத்தை அபேக்ஷியாமலிருக்கிறது. அந்த ஸம்ஸர்கமோ முன்னிலையிலிருக்கிற ப்ரமாதிஷ்டானத்தில் அறியப்படாநின்றுகொண்டு முன்னிலையிலிருக்கிற பதார்த்தத்தை அபேக்ஷித்து தான் தன்னுடைய ஸம்ஸர்கரூபத்வத்தை நிர்வஹிப்பதில் ஸாமர்த்தியமில்லாமையால் முன்னிலையிலுள்ள வஸ்துவினிடத்தில நாஸ்தி என்று புரோவர்தியான பதார்த்தத்தை அபேக்ஷிப்பதால் ஸம்ஸர்கம் அபரமார்த்தமே ஒழிய ஸ்வரூபத்தால் அல்ல. ஆலம்பநத்வத்திலும் ஸந்நிஹிதஸ்வரூபமான ஸம்ஸர்கம் அபேக்ஷிதமல்ல, பக்கத்திலில்லாததற்கும்கூட ஆலம்பநத்வம் காணப்படுவதால். ஆகையால் ஸத்தாயுள்ள ரூபத்தினால் ஆலம்பநத்வமிருப்பதுபற்றி கஜாரோஹணம் முதலியவைகளை விஷயமாகக்கொண்ட ஜ்ஞானங்களுக்

---

§ அவச்சேதகம்—நியாமகம். † ப்ரதிபத்தி—ஜ்ஞானம்.

ஆ உபலக்ஷணம்— ஜ்ஞானஸாதநம.

@ உபலக்ஷிக்கத்தக்க—விசேஷித்து அறிவிக்கத்தக்க.

† வ்யாவர்தகம்—மற்றதினின்று ஒரு வஸ்துவை வேறுபடுத்துகிற குணம் தர்மம் முதலியது.

‡ அந்ருதம்—அஸத்யம் * அநுமாபகம் —அநுமிதியை உண்டுபண்ணுகிற வஸ்து.

¶ அந்யதாக்யாதி— ஒரு வஸ்துவை மற்றொரு வஸ்துவாக க்ரஹித்தல், வெள்ளியை சிப்பி என்பதுபோல

கூட ஸத்யபூதமான ‡ஹஸ்தி முதலிய ஆலம்பந வஸ்துக்களோடுகூடியவைகளாக பரமார்த்தபூதமாயிருக்கிற ஸ்வப்னாவஸ்தையோடு சேர்ந்திருப்பதால், ஜாகராவஸ்தையிலுண்டாகிற ஜ்ஞானத்தைக்காட்டிலும் விலக்ஷணங்களாக இருந்துகொண்டு சுபாசுபப்ரதிபத்திக்கு நிமித்தங்களாக ஆகின்றன. ஆகலால் அதிப்ரஸங்கமில்லை அஸத்யத்தினின்று ஸத்யவஸ்து ப்ரதிபத்தியுமில்லை. ப்ரதிபிம்பத்தினால பிம்பத்தை அநுமிப்பதில் அஸத்யத்தால் ஸத்யப்ரதிபத்தி உண்டாகிறதென்று சொல்லக்கூடாது. ப்ரதிபிம்பத்தினுடைய ப்ரதிபாஸமானது ஸத்யமாகவேயிருந்துகொண்டு பிம்பத்திற்கு அநுமாபகமாகஇருப்பதால் உண்மையிலேயென்றால் அந்த இடத்தில் அநுமாபகம் அநுமேயம் இவை இரண்டுக்கும் பாகுபாடுகிடையாது. $தர்பணம் முதலியவைகளால் திருப்பி அடிக்கப்பட்டிருக்கிற கண்ணொளிகளால் பிம்பமே கண்ணாடிக்குள்ளிருப்பதாக க்ரஹிக்கப்படுவதால். ஆதலால் சிலவிடத்தில் உள்ளபடியிருக்கிற வஸ்துவினால் ஜ்ஞானமுண்டாகிறது; சிலவிடத்தில் அந்த வஸ்துவின் ப்ரதிபாஸத்தால் அந்தந்த அர்த்தங்களின் ப்ரதிபத்தியுண்டாவது பற்றி அஸத்யத்திற்கு ஹேதுத்வம் கிடையாது. மேலும், அஸத்யத்தினால் ஸத்யப்ரதிபத்தி என்பது உன் பக்ஷத்தினால் கூறப்படுகிறதா? நம்முடைய பக்ஷத்தினாலா? உன் பக்ஷத்தில் அது முற்றிலும் ஸித்திபெறாது. சுபாசுபங்கள் இரண்டும் மித்யையானபடியால், அஸத்யத்தினால் அஸத்யப்ரபத்தியே உண்டாகவேண்டியதாகும். நம்முடைய பக்ஷத்தில் அந்த தோஷங்கிடையாது—யதார்த்தக்யாதியை ஒப்புக்கொண்டிருப்பதினால் ஸத்யத்தினாலேயே ஸத்ய ப்ரதிபத்தியுண்டாவதால் சுபாசுப ப்ரதிபத்தி முதலியவைகளுக்கு ஹேதுவாக இருக்கிற இந்த ஸ்வப்னத்தில் ஹஸ்தி முதலிய வஸ்துக்களை விஷயீகரிக்கிற ஜ்ஞானம் முதலியவைகளுக்கும் ஆறு உதாஹரண ஜ்ஞானங்களுக்கும் ஸம்ஸ்காரம் முதலிய ஸத்யமான ஸாமக்ரிகளோடு கூடியிருத்தல் ஸ்பஷ்டம். ஜ்ஞானங்களுக்கு ஸத்யத்வம் நிரூபிக்கப்பட்டது. ஆதலால் உத்பத்தியிலும் ஜ்ஞப்தியிலும் ஹேதுக்களுக்கு ஸத்யத்வம் ஸித்தித்தது.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

---

‡ ஹஸ்தி—யானை. $ தர்பணம்—கண்ணாடி.

𑌵𑌿𑌶𑍇𑌷𑍋 𑌵𑌰𑍍𑌣𑌵𑌿𑌶𑍇𑌷𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌹𑍇𑌤𑍁𑌰𑌿𑌤𑌿 । 𑌅𑌤𑌃 𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌸𑍍𑌯 𑌸𑌤𑍍𑌯𑌸𑍍𑌯𑍈𑌵 𑌸𑌤𑍍𑌯𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌤𑍍𑌤𑌿𑌃; 𑌰𑍇𑌖𑌾𑌯𑌾𑌶𑍍𑌚 𑌗𑌵𑌯𑌸𑍍𑌯 𑌚 𑌸𑌤𑍍𑌯𑌤𑍍𑌵𑌾𑌤𑍍, 𑌰𑍇𑌖𑌾𑌗𑌵𑌯𑌾𑌦𑌾𑌵𑌪𑌿 𑌸𑌤𑍍𑌯𑌗𑌵𑌯𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌸𑍍𑌸𑌾𑌦𑍃𑌶𑍍𑌯𑌨𑌿𑌬𑌨𑍍𑌧𑌨𑌾, 𑌸𑌾𑌦𑍃𑌶𑍍𑌯𑌂 𑌚 𑌸𑌤𑍍𑌯𑌮𑍇𑌵 ॥

ஸ்ரீபாஷ்யம்—

மேலும், கோட்டினால் அக்ஷரஜ்ஞானம் வருகிற இடத்திலும் அஸத்யத்தினால் ஸத்யபுத்தி உண்டாகிறதில்லை ரேகையானது உண்மையாக இருப்பதால். ஐயா! வர்ணஸ்வரூபமாக அறியப்பட்டிருக்கிற ரேகையானது வர்ணபுத்திக்கு ஹேதுவாக ஆகிறது வர்ணஸ்வரூபமாக இருக்குந்தன்மையோவெனில் அஸத்யம். இவ்வண்ணமல்ல — அஸத்யமாக இருக்கிற வர்ணஸ்வரூபத்துக்கு உபாயத்வம் கூடாததால் ப்ரமிதிக்கு அவிஷயமாயிருக்கிற அஸத்துக்கு உபாயத்வமானது காணப்பட்டதுமில்லை; பொருத்தமுள்ளதுமல்ல — அப்படிக்கின்றி அதில் (ரேகையில்) ஏறிடப்பட்டிருக்கிற வர்ணபுத்திக்கு உபாயத்வம் கூறப்படுமேயாகில் அப்பொழுது அஸத்யத்தினால் ஸத்யபுத்தி உண்டாகாது. ஏறிடப்பட்டிருக்கிற புத்திக்கு ஸத்யத்வமிருப்பதினாலேயே. உபாயம் உபேயமிரண்டுக்கும் ஏகத்வமும் ப்ரஸங்கிக்கும். இரண்டுக்கும் வர்ணபுத்தித்வம் விசேஷமின்றியிருப்பதால். ரேகைக்கு அவித்யமானமான வர்ணஸ்வரூபத்தால் உபாயத்வம் சொல்லும்பக்ஷத்தில் ஒரே ரேகையில் அவித்யமானமான ஸர்வ வர்ணாத்மகத்வம் ஸுலபமாக இருப்பதால் ஒரு ரேகையின் தர்சனத்தினால் எல்லா வர்ணங்களின் ப்ரதிபத்தியும் உண்டாகலாம். அப்படிக்கின்றி பிண்ட விசேஷத்தில் தேவதத்தாதி சப்தங்களுக்கு ஸங்கேதமேற்பட்டிருப்பதுபோல, கண்ணால் க்ரஹிக்கத்தக்க வர்ணவிசேஷ ஸங்கேதவசத்தால் ரேகாவிசேஷம், வர்ணவிசேஷ புத்திக்குக்காரணமென்று சொல்லப்படுமேயாகில் அப்பொழுது ஸத்யத்தினாலேயே ஸத்யப்ரதிபத்தியுண்டாகிறது. ரேகைக்கும் ஸங்கேதத்திற்கும் ஸத்யத்வமிருப்பதால் சித்திரத்தில் வரையப்பட்டிருக்கிற ரேகாரூபமான கவயத்தினால்கூட ஸத்யமான \$ கவயமிருகபுத்தி உண்டாவதும் ஸாத்ருச்யத்தைக்காரணமாகக்கொண்டது ஸாத்ருச்யமும் ஸத்யமே.

ச்ருதப்ரகாசிகை—

பிறகு ஜ்ஞானத்தைக்காட்டிலும் வேறான அஸத்ய ஹேதுவினால் ஸத்யவஸ்து ப்ரதிபத்தியில் ஹேது ஸத்யமாயிருக்குந்தன்மை உபபாதிக்கப்படுகிறது — ரேகயா இது முதலியதால். ஹேதுவுக்கு அஸத்யத்தைக்காண்பித்துக்கொண்டு சோதநஞ்செய்கிறார்-

\$ கவயம்—பசுவைப்போலிருக்கிற ஓர் மிருகம்.

நு என்று. பரிஹரிக்கிறார்—நைவம் என்று. வர்ணாத்மதையானது வர்ணப்ரதிபத்திக்கு தனஸத்தையினால் உபாயமாகிறதா? அல்லது பரமாவிஷயமாக இருப்பதினாலா? அல்லது ப்ரதீதமாயிருப்பதனாலா? என்கிற விகல்பத்தை அபிப்ராயப்பட்டு கூறுகிறார்—அஸத: என்று. அஸத்யமாகவிருப்பதுபற்றி தன்ஸத்தையினால் உபாயத்வம் அநுபபந்நம் என்பது 'அஸத:' என்கிற பதத்தின் அபிப்ராயம். அஸத-ஸத்தைக்காட்டிலும் வேறாகஇருப்பதற்கு என்று அர்த்தம். அஸத இருப்பதினாலேயே ப்ரமாவிஷயமாக இருந்துகொண்டு உபாயமாக ஆகுதலும் பொருந்தாதென்பது நிருபாக்ய சப்தத்தின் அபிப்ராயம். உபாக்யை-ப்ரமிதி. அதற்கு விஷயமில்லாமலிருத்தல் நிருபாக்யத்வம். ப்ரதீதி விஷயமாயிருந்துகொண்டு உபாயத்வம் என்பதற்கு அநுபபத்தியோவென்றால் இனி கூறப்படப்போகிறது. ஸத்தை, ப்ரமிதி இவ்விரண்டுமில்லாதபோதிலும் வர்ணாத்மதைக்கு உபாயத்வமிருக்கிறதென்று கல்பிக்கப்படுமேயானால் அது உபபந்நமாகாது வ்யாப்தி விரோதத்தால். வ்யாப்திக்கு அநுகுணமாகவல்லவோ கல்பநம் ப்ரவ்ருத்திக்கிறது என்கிற அபிப்ராயத்தால் கூறுகிறார்—அநுபபந்நஞ்ச என்று. அதற்குமேல் ப்ராந்தியினால் அறியப்பட்டிருக்கிற வர்ணாத்மதைக்கு வர்ணப்ரதிபத்தி ஹேதுத்வம் உண்டு என்கிற பக்ஷத்திலும் புத்தி அம்சத்திற்கு ஹேதுத்வத்தில் பிறனுக்கு அனுபபத்தி காண்பிப்பதற்காகக் கூறுகிறார்—அத: என்று. தூஷிக்கிறார்—ஏவம்தர்ஹி என்று. ஏதனால் எனில் சொல்லுகிறார்—புத்தே: என்று. வேறு தூஷணத்தையுஞ்சொல்லுகிறார்—உபாய என்று. அதை உபபாதிக்கிறார்—உபயோ: என்று. புத்தி அம்சத்தை ஹேதுவாகக்கூறும் விஷயத்தில் தூஷணம் உரைக்கப்பட்டது. வர்ணாத்மதா என்கிற அம்சத்திற்கு ஹேதுத்வ விஷயத்தில் ஸிம்ஹாவலோக ந்யாயத்தாலே தூஷணம் கூறுகிறார்—ரேகாயா என்று அவித்யமான வர்ணாத்மதா-அவித்யமான வர்ணாத்மத்வேந என்று அர்த்தம் அதிப்ரஸங்க பரிஹாரத்தின்பொருட்டு சங்கிக்கிறார்—அத என்று. அதிலும் தன் மதத்தின் ஸித்தியைக்கூறுகிறார்—ஹந்த என்று. அதை உபபாதிக்கிறார்—ரேகாயா: என்று. வேறு உதாஹரணத்தைப் பரிஹரிக்கிறார்—ரேகாகவயாதபி என்று.

ந சைகரூபஸ்யைவ ஶப்³த³ஸ்ய நாத³விஶேஷாத³ர்த²பே⁴த³பு³த்³தி⁴ஹேதுத்வேऽப்யஸத்யாத் ஸத்யப்ரதிபத்தி:, நாநாநாதா³பி⁴வ்யங்க்³யஸ்யைகஸ்யைவ ஶப்³த³ஸ்ய தத்தந்நாதா³பி⁴வ்யங்க்³யஸ்வரூபேணார்த²விஶேஷஸம்ப³ந்த⁴க்³ரஹணஸாபேக்ஷஸ்யார்த²ப்ரதீதிஹேதுத்வாத் । ஶப்³த³ஸ்யைகரூபத்வேऽபி ந ஸாமீய:, ஶகாராதே³ர்வர்ணஸ்யைவ ஶ்ரோத்ரக்³ராஹ்யத்வேந ஶப்³த³த்வாத் । கதா³சித் ஸத்யாத³ஸத்யாத் ஸத்யவிஷயப்ரதிபத்திர்ப⁴வது நாம ॥

ஸ்ரீபாஷ்யம்—

ஏகரூபமான சப்தத்திற்கு நாத விசேஷத்தால் அர்த்தபேத புத்தி ஹேதுத்வம் கூறப்படும்பக்ஷத்திலும் அஸத்யத்தினால் ஸத்யப்ரதிபத்தி உண்டாவதென்பது கிடையாது. நாநாவித நாதங்களாலே ப்ரகாசிக்கின்ற ஒரே சப்

த்த்திற்கு, அந்தந்த நாதங்களால் அபிவ்யஞ்ஜநஞ்செய்யத்தக்க ஸ்வரூபத்தால் அர்த்தவிசேஷங்களோடுகூட ஸம்பந்த க்ரஹணமிருப்பதால், அர்த்த பேதவிஷயகமான புத்தியின் உத்பத்திக்கு காரணத்வமிருப்பதால் சப்தத்திற்கு ஏகரூபத்வமும் அவ்வளவுசிறந்ததல்ல; ககாரம் முதலிய போதக வர்ணமே காதினால க்ரஹிக்கத்தக்கதாக இருப்பதுபற்றி சப்தமாகிறபடியால். ஆதலால் அஸத்யமான சாஸ்த்ரத்தினால ஸத்யப்ரஹ்மவிஷய ப்ரதிபத்தியானது எவ்விதத்தாலும் உபபாதிக்கமுடியாது.

ச்ருதப்ரகாசிகை—

ஃஸ்போட வாதத்தைஅவலம்பித்துச்சொல்லப்படுகிற உதாஹரணத்தைப் பரிஹரிக்கிறார்—நசைகரூபஸ்ய இதுமுதலியதால் நாதங்களால் ஸ்போட்யதே - அர்த்தம் வெளியிடப்படுகிறது, என்கிற வ்யுத்பத்தியினால் ஸ்போடம என்பது ஏகரூபமான சப்தம். அதற்கு §அபிவ்யஞ்ஜகங்களாக இருக்கிற நாதவிசேஷங்கள் அநேகங்கள்—கத்வம வத்வம முதலிய பேதம், $வ்யஞ்ஜகத்தை அடைந்திருக்கிறது-சப்தத்தில் ஏறிடப்பட்டு அர்த்தவிசேஷங்களின ப்ரதிபத்திக்கு ஹேதுவாக இருக்கிறது. அதில் அஸத்யத்தினால் ஸத்யோத்பத்தி என்பதும் ஸரியல்லவென்று அர்த்தம். ஏனென்று கேட்கில் கூறுகிறார் — நாநாநாத என்று கத்வம் வத்வம் முதலிய விசேஷணங்களோடு கூடின அந்தந்த நாதங்களால் உண்டுபண்ணப்பட்டிருக்கிற அபிவ்யக்தி விசேஷம் ஸத்யம் அந்த அபிவ்யக்தி விசேஷத்தோடுகூடின ஸத்யமான சப்தம் அர்த்தப்ரதிபத்திக்குக்காரணமென்று அர்த்தம். ஆனாலும கத்வம் வத்வம் முதலிய வ்யஞ்ஜக தர்மங்களோடுகூடியிருத்தல் சப்தத்திற்கு ஆரோபிதம். அப்படியிருந்தபோதிலும் அந்த ஜ்ஞானம் ஸத்யமே அர்த்தப்ரதிபத்திக்கு ஹேதுவாகிறது. ஜ்ஞானத்துக்கும ஸத்யமாகவேயிருக்கிற ஆலம்பநத்தினால் ஸ்வாப்நமான ஜ்ஞானம்போல்

ꠃ நாதம்—ஒலி. § அபிவ்யஞ்ஜனம்—ஸூசனம். $ வ்யஞ்ஜகம்— ஸூசகம்.

ஃ ஸ்போடம் — வையாகரணர்களால் மாத்திரம் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிற அநேக வ்யக்திகளால் அபிவ்யங்க்யமாகிற ஒரு ஜாதி.

ஸ்போட ஸ்வரூப நிரூபணம்.—ஸ்புடதி அர்த்த: அஸ்மாத் என்கிற வ்யுத்பத்தியினால் ஸ்போட சப்தம் அர்த்தங்களை போதிக்கிற ஸ்வபாவமுள்ளதென்று ஏற்படுகிறது - குடம வஸ்திரம் முதலிய வஸ்துக்களுக்கு கடபடாதி சப்தங்கள் வாசகங்களல்ல. ஸ்போடமே வாசகம் அந்த ஸ்போடம எட்டுவிதம். வர்ணஸ்போடம், பதஸ்போடம், வாக்யஸ்போடம், அகண்டபதஸ்போடம, அகண்டவாக்யஸ்போடம் வர்ணஜாதிஸ்போடம், பதஜாதிஸ்போடம், வாக்யஜாதிஸ்போடம் என்று. ஒரு வர்ணத்தின் வேறுபாடு முதலியதால் சக்ததாவச்சேதகாநுபூர்விக்கு பங்கம் வருவது ஒவ்வொரு பதத்திலும் ஔத்ஸர்கிகமாக இருப்பதால் ஒரு வர்ணஸங்காதரூபமான பதத்தால் ஒரு அர்த்தத்தில் சக்திக்ரஹம் வந்துவிடுவதால் எதனால் எதற்கு ஸ்மரணமென்கிற விஷயத்தில் யுக்தி இல்லாமையால் ருக்ஷப:, வ்ருக்ஷப: வ்ருக்ஷ:, இதுமுதலியவைகளுக்குபோல ப்ரயோகத்தில் நிலைபெற்றிருக்கிற கர், கார், குா, சகர். முதலிய அந்தந்த வரிசைக்ரமத்துடன்கூடின எல்லா வர்ணங்களுக்குமே வாசகத்வம் என்பது, வர்ணஸ்போடம்-இந்தஇடத்தில் கர் முதலியவைகள் வாசகங்களா இல்லையா என்பது விப்ரதிபத்திசரீரம. ராமம், ராமேண, ராமாய, ஹராமே

ஹரௌ. ஹரீந், இ - முதலியவை பெற்ற ரூபத்தில் எவ்வளவு அம்சம் த்ரவ்யம் முதலியவை களுக்கு வாசகங்கள் எவ்வளவு காமத்வாதிகளுக்கு வாசகங்கள் என்பது நிச்சயிப்பதற்கு சக்யமில்லாததால் ராம:' இது முதலிய பரிநிஷ்டிதமான பதமே, கர்மத்வம் முதலியவைகளுடன் கூடினதற்கு வாசகம் என்பது பதஸ்போடம் ததீம் ஹரே ஸவிஷ்ணோ, இது முதலிய இடங்களிலும் வாக்யமானது ஸமானமாதலால் வாக்யார்த்தவிசிஷ்டார்த்தத்தில் சக்தம் என்பது வாக்யஸ்போடம். ஒரு படம் என்பதுபோல் ஒரு பதம் அல்லது ஒரு வாக்யம் என்கிற ப்ரதீதியானது பாதமின்றி வருவதால் வர்ணங்களைக்காட்டிலும் வேறான பதமோ வாக்யமோ அகண்டம் வர்ணவ்யங்க்யம் என்பது அகண்டபதஸ்போடம் அகண்ட வாக்யஸ்போடம். இந்த ஸ்போடமென்பது என்ன பதார்த்தமென்று கேழ்க்கப்படுமேயாகில்; பாவம். இது இன்னது என்று நிரூபிக்கமுடியாத ஸ்வபாவமுள்ளது. ப்ரமாணஸித்தமாதலால் தள்ளுவதற்கு சக்யமன்று. முந்த பக்ஷத்தில் வர்ணங்களும் அநாவச்யகங்கள் - அவைகள் அநுபலஸித்தங்களென்று சொல்லப்படுமேயாகில் வ்யஞ்ஜகத்வவிசேஷாபன்னமான ஸ்போடமே ககார முதலிய வர்ணரூபமாக வ்யவஹரிக்கப்படுகிறதென்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. பர்த்ருஹரியும் சொல்லுகிறார்-'பதே நவர்ணா வித்யந்தே வர்ணேஷ்வவயவா நச. வாக்யாத் பதாநாமத்யந்தம் ப்ரவிவேகோ நகச்சந'—என்று. ஆகையால் அகண்டமானபதமோ வாக்யமோ இவ்வாறு ஐந்தும் வ்யக்திஸ்போடத்தின் அவாந்தரபேதங்கள். ஜாதிஸ்போடவாதிகளோவென்றால் முதலாவதான மூன்று பக்ஷங்களிலும் வகாரத்திற்கு பிந்தியிருக்கிற வடத்வம் முதலியது சக்ததாவச்சேதகமாக அந்தந்த ப்ரயோகத்துக்குத்தக்கபடி சொல்லத்தக்கது அங்ஙனம் சொல்லாவிடில் ஸர:, ரஸ:, இது முதலிய சப்தப்ரயோகங்களால் அர்த்தவிசேஷ ப்ரதீதியானது ஸித்தியாமல் போகவேண்டியதாகும். அந்த ஸ்போடமானது உபாதி. உபாதிஎன்பது பரம்பரையாக எல்லா வ்யக்திகளிலும் இணைபுறியாமல் சேர்ந்திருக்கிற ஜாதியே. அது ஸர்வாதிஷ்டாநப்ரஹ்மஸ்வரூபாத்மிகை. அவித்யையோ ஆவித்யகதர்மவிசேஷமோ ஜாதி என்கிற பக்ஷத்தில் அதேவாசிகையாக இருக்கலாமென்று அறிஞர்கள் சொல்லுகிறார்கள் இந்த எட்டு பக்ஷங்களும் ஸித்தாந்த க்ரந்தங்களில் ஆங்காங்கு ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஸ்போடமானது மஹாபாஷ்யகாரரான பதஞ்ஜலியினாலும் அதற்கு விவரணகாரரான கையடராலும் பற்பல இடங்களில் க்ரந்தங்களில் உபந்யஸிக்கப்பட்டிருக்கிறது.

ஜாதியானது ப்ரஹ்மாத்மகமென்று பர்த்ருஹரி சொல்லுகிறார்—"ஸம்பந்திபேதாத் ஸத்தைவ பித்யமாநா கவாதிஷு-ஜாதிரித்யுச்யதே தஸ்யாம்ஸர்வே சப்தா வ்யவஸ்திதா:- தாம் ப்ராதிபதிகார்த்தஞ்ச தாத்வர்த்தஞ்ச ப்ரசக்ஷதே-ஸா நித்யா ஸா மஹாநாத்மா தாமாஹுஸ்த்வதலாதய:" என்று - இந்த எட்டு பக்ஷங்களிலும் வாக்யஸ்போட பக்ஷத்திலேயே க்ரந்தகாரர்களுக்கு தாத்பர்யம் அதிலும் ஜாதி ஸ்போடத்திலேயே பரமதாத்பர்யம். இவ்வண்ணம் பக்ஷபேதத்தால் அவித்யையாவது ப்ரஹ்மமாவது ஸ்போடமென்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் உபாதியோ ஜாதியோ அவித்யையோ ப்ரஹ்மமோ இவற்றுள் ஒன்று ஸ்போடமென்று வையாகரணர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. இதில் ப்ரமாணங்கள் அநேகவ்யக்த்யபிவ்யங்க்யா ஜாதி: ஸ்போட இதி ஸம்ருதா. கைஸ்சித்வ்யக்தய ஏவாஸ்யா த்வநித்வேந ப்ரகல்பிதா. ॥ சாஸ்த்ரேஷு ப்ரக்ரியாபேதைரவித்யைவோபவர்ண்யதே - ஸமாரம்பாத்து பாவாநாமநாதிப்ரஹ்ம சாச்வதம். கிம்கர்ப்ப ஜந்யே கிம்கர்ப்ப: கீத்ருக்பாதீதிநோமதே — விசார: பலிதஸ்ஸர்வ: ப்ரக்ருதி ப்ரத்யயாச்ரய: - தத்ரயந்முக்யமேகேஷாம் தத்ரைதேஷாம் விபர்யய:. ப்ராஹ்மணார்த்தே யதா நாஸ்தி கஸ்சித் ப்ராஹ்மணகம்பளே - தேவதத்தாதயோ வாக்யே ததைவஸ்யுரநர்த்தகா: ! அடாதீநாம் வ்யவஸ்தார்த்தம் ப்ருதக்த்வேந ப்ரகல்பநம். தாதூபஸர்கயோ: சாஸ்த்ரே தாதுரேவது தாத்ருச:" என்று.

வேறுபாடு அநுஸந்திக்கத்தக்கது. கத்வம் முதலிய தர்மங்களை ஆலம்பநமாகக்கொண்ட அபி வ்யக்தியோடுகூடின ஸ்வரூபத்தால் ஸ்போடத்துக்கு அர்த்தப்ரதிபத்திஹேதுத்வம் ஸம்பவிப்பதால், கத்வம் முதலிய தர்ம வைசிஷ்ட்யரூபமான அபேக்ஷிதார்த்தத்திற்கு அர்த்தப்ரதிபத்தி விஷயத்தில் உபயோகமில்லை இவ்வண்ணம் சப்தத்திற்கு ஏகரூபத்வத்தை ஒப்புக்கொண்டு பரிஹாரங்கூறப்பட்டது. இதற்குமேல் அதை ஒப்புக்கொள்ளாமல் பரிஹரிக்கிறார்—சப்தஸ்ய ஏகரூபத்வம் என்று. எதனால் என்று கேட்கில் கூறுகிறார்—ககாராதே: என்று. ஏகாரத்தால் ஏகரூபமான சப்தம் வ்யாவர்திக்கப்படுகிறதேயொழிய துந்துபிவாத்யத்தின் சப்தம் முதலியது வ்யாவர்திக்கப்படுகிறதில்லை. அதோ அபிவ்யக்தமில்லாதவிசேஷஆகாரத்தோடுகூடின ககாரம் முதலியதே. "அதற்குமேல் கௌ: என்கிற வ்யவஹாரத்தில் எது சப்தம்? ககார ஔகார விஸர்ஜநீயங்கள் என்றல்லவோ பகவானுன உபவர்ஷர்" என்று. ககாரம் முதலியவற்றுக்கே போதகத்வத்தை வ்யாக்யானம் செய்தார்கள்.

அய்யா, "தஸ்மிம்ஸ்தஸ்மிம்ஸ்து தந்மாத்ரம் தேந தந்மாத்ரதா ஸ்ம்ருதா" என்கிற சாஸ்த்ரவசத்தால் ஏகரூபமான சப்தம் மாத்ரம ஒப்புக்கொள்ளத்தக்கது. அவ்வாறிருக்க எவ்வண்ணம் அது நிரஸிக்கப்படுகிறது. இவ்வண்ணமல்ல - தந்மாத்ராவஸ்தையுடன் கூடின ஸூக்ஷ்மபூதகாரணகுணங்களுக்கு இந்த்ரியங்களால் க்ரஹிக்கப்படும் தன்மைபொருந்தாததால், பஞ்சீக்ருதமான பூதகுணங்களுக்கேயன்றோ இந்த்ரியத்திலுண்டாகிற ப்ரத்யக்ஷவிஷயத்வம் மேலும்தயிர் அவஸ்தையில் பால் அவஸ்தைபோல தந்மாத்ராவஸ்தை. ஸூக்ஷ்மஆகாசகுணபூதமான சப்ததந்மாத்ரமானது ஸ்தூலாகாச ஸ்ருஷ்டிக்குப்பிறகு இருக்கிறதில்லை. எவ்வண்ணம் மஹாபூதங்களில் மூன்றாவதான தேஜஸ்ஸில் வெளுப்பு கறுப்பு முதலிய நிறங்களின்றி ரூபதந்மாத்ரம் ஒன்று இருக்கிறது. வெளுப்பு கறுப்பு முதலிய நிறங்கள் அபிவ்யஞ்ஜகத்தை அடைந்தவைகளாக ஏகரூபமான தேஜஸ்ஸினிடத்தில் ஆரோபிக்கப்பட்டிருக்கின்றனவென்றும் சொலவதற்கு பொருந்தாதோ, இவ்வண்ணம் இப்போது ஏகரூபமான சப்தத்திற்கு நித்யமாநத்வமும் அதில் அபிவ்யஞ்ஜகத்தையடைந்திருக்கிற கத்வம் கத்வம முதலியவைகளுக்கு ஆரோபிதத்வமும் ஸ்ருஷ்டியைச்சொல்லுகிற சாஸ்த்ரத்தை அநுஸரிப்பவர்களாலே ஒப்புக்கொள்ளத்தகாதது. இந்த இடத்தில் இது வாஸ்தவமான கருத்து—வர்ணங்களைக்காட்டிலும் வேறாயிருக்கிற ஏகரூபசப்தமானது தெளிவாக அறியப்படுதலினால் ஒப்புக்கொள்ளப்படுகிறதா? அல்லது கல்பநாவசத்தாலேயா? முதலாவது ஸரியன்று—ககாரம் முதலிய வர்ணங்களைக்காட்டிலும் வேறாக ஒன்றுக்கும் உபலம்பமில்லாமையால். இரண்டாவதுமன்று—கல்பகமில்லாமையால்.

ஆக்ஷேபணை வர்ணங்களுக்கு வாசகத்வம் பொருந்தாததால் 'ஒரு பதம்' இது முதலிய ஜ்ஞானத்திற்கு வர்ணங்களின் உபபத்தி இல்லாமையாலும் வேறுபட்டிருக்கிற வர்ணங்களில் சப்தம் சப்தம் என்று தொடர்ந்த புத்திவருவதாலும் வர்ணங்களைககாட்டிலும் வேறான பதஸ்போடம் ஸித்திக்கிறது. அந்த ந்யாயத்தினாலேயே பதங்களின் ஸங்காதத்தைக்காட்டிலும வேறான வாக்யஸ்போடமும் ஸித்திக்கிறது என்று சொல்லப்படுமேயாகில் உத்தரம் சொல்லுகிறார்—ககாராதே: என்று. ஒன்று சேர்ந்திருக்கிற ககாரம் முதலிய வர்ணங்களுக்கே வாசகத்வம். ஒரு பதம், ஒரு வாக்யம், என்கிற ஜ்ஞானமும் வர்ணங்களுடைய ஸமுதாயவிஷயம் சப்தம், சப்தம, என்கிற அநுவ்ருத்தி புத்தியும் ச்ரோத்ரக்ராஹ்யத்வரூபமான உபாதியைக்காரணமாகக்கொண்டது. ஆகையால் கல்பகங்கள் அந்யதாஸித்தங்களானபடியால் ஏகரூபமான சப்தத்திற்கு ஸித்தி இல்லை என்று அர்த்தம்.

ஆக்ஷேபனை-ஸௌம்ய! கல்பகங்களுக்கு அந்யதாஸித்தி இல்லை அதை உபபாதிக்கிறேன்-ஒவ்வொரு வர்ணத்திற்கும் வாசகத்வமில்லை அங்ஙனம் உண்டானால் மற்ற வர்ணங்களுக்கு $ வையர்த்யம் வருவதால். சப்தமாத்ரத்தினால் கோ, ‡ கவயம், கஜம், முதலிய வஸ்துக்களின் ப்ரதீதி இல்லாமையாலும் வர்ண § ஸமுதாயமும் வாசகமல்ல - க்ரமமாக உச்சரிக்கப்பட்டுக் காதால் கேட்கப்பட்டிருக்கிற வர்ணங்களுக்கு ஒரே ஸமயத்திலேயே தோன்றும் ஸ்வபாவம் இல்லாமையால் * வ்ருக்ஷம் முதலியவைகளுக்குப்போல ஸமுதாயபாவம் உபபன்னமாகாததால் பூர்வபூர்வ வர்ணங்களைக்கேட்பதினால் உண்டுபண்ணப்பட்ட ஸம்ஸ்காரத்தை உதவியாகக்கொண்ட கடைசிவர்ணம் வாசகம் என்பது பொருத்தமுடையதல்ல. வர்ணங்களுடைய அநுபவத்தினாலுண்டாகிற ஸம்ஸ்காரங்களுக்கு அநுபவிக்கப்பட்டிருக்கிற வர்ணங்களின் ஸ்மரணஹேதுத்வமிருப்பதாலும் அநுபவிக்கப்படாமலிருக்கிற வேறு அர்த்தங்களின் ஜ்ஞானத்திற்கு ஹேதுத்வமில்லாமையாலும் ப்ரயோஜனமற்றதாதலால் அவைகளின் உதவியில்லாத கடைசி வர்ணத்துக்கும் அர்த்தங்களை உணர்த்தும் தன்மை பொருந்தாமையால். அவ்வாறு வர்ணங்கள் வெவ்வேறாக இருப்பதால் ஒரு பதம் என்கிற ஜ்ஞானமும் அந்த வர்ணங்களைக்காட்டிலும் வேறான அர்த்தத்தை விஷயமாகக்கொண்டதாக ஆவதற்கு உரித்ததாக ஆகிறது. வனம், ஸேனை, முதலியதன் ஜ்ஞானத்தைப்போல ஒன்று என்கிற ஜ்ஞானத்திற்கு ஸமுதாய விஷயத்வம் தகுதியுள்ளதாக ஆகாது. ஓரிடத்தில் ஸம்பந்தம்பெற்றிருத்தல் முதலியதுபோல ஏகாகாரத்திற்கு நிமித்தமான உபாதி இல்லாமையால்-ஒரு ஸ்ம்ருதியில் ஏறி இருத்தல் உபாதி என்று சொல்லப்படுமேயாகில் அல்ல. இரண்டு பதங்கள் மூன்றுபதங்கள் அநேக வாக்யங்கள் என்று அநேகங்களுக்கு ஏகப்ரத்யயாரூடத்வம் காணப்படுவதால். ஒரு அர்த்தத்தோடுகூடின வர்ணங்களின் ஸமுதாயம் ஒரு பதமென்று சொல்லத்தக்கதல்ல. வர்ணங்களுக்கு வாசகத்வம் பொருந்தாதபடியினாலேயே ஒரு அர்த்தத்தை உணர்த்தும் தன்மை இல்லாமையால். மேலும் அநேக வர்ணங்களில் இது சப்தம் இது சப்தம் என்று தொடர்ந்துவருகிற சப்தம் என்கிற சப்தமானது வர்ணத்தைக்காட்டிலும் வேறான அர்த்தத்தை விஷயமாக உடையதாகக்கூறுவது யுக்தம். கடம், ¶ கரகம் ‖ அபவாரகம் இவை முதலியவைகளாலே பேதமிருந்தபோதிலும் ஏகார்த்த விஷயமான ஆகாச சப்தத்திற்கு கடகராதி வஸ்துக்களைக்காட்டிலும் வேறான அர்த்தங்களை விஷயமாகக் கொண்டிருத்தல் காணப்பட்டிருக்கிறதன்றோ. ச்ரோத்ரத்தினால் க்ராஹிக்கத்தக்கதாக இருத்தல் என்கிற உபாதியினாலே "சப்த" சப்தத்திற்கு அநுவ்ருத்தியென்பது யுக்தமாகாது ச்ரோத்ரத்திற்கு ச்ரோத்ர க்ராஹ்யத்வம் பொருந்தாததால். ச்ரோத்ரக்ராஹ்யதையையும் ச்ரோத்ரத்தால க்ராஹிப்பதற்கு சக்யமில்லாமையால். ப்ரமாணாந்தரத்தாலே ச்ரோத்ரக்ராஹ்யதாப்ரதீதி வருமேயாகில் விளம்பமில்லாத சப்தஸாக்ஷாத்காரம் பொருந்தாது. ஆதலால கல்பகத்துக்கு அந்யதாஸித்தியில்லாமையால் வர்ணங்களைக்காட்டிலும் வேறாக இருக்கிற சப்தம் ஸ்போடம் என்று.

இந்த இடத்தில் மறுமொழி கூறப்படுகிறது —வர்ணங்களுக்கு வாசகத்வத்தின் அநுபபத்தியினால் ஸ்போடம் ஸித்திபெறாது. அந்த வர்ணங்களுக்கு ஸ்போடாபிவ்யஞ்ஜகத்வம் இருந்தபோதிலும், சோத்யம், பரிஹாரம் இரண்டும் துல்யமாயிருப்பதுபற்றி லாகவந்யாயத்தால் வர்ணங்களுக்கே வாசகத்வத்தை ஆசரயிப்பது ந்யாயமாயிருப்பதால்.

---

§ ஸமுதாயம்—கூட்டம். $ வையர்த்யம்—பயனில்லாமை.

‡ கவயம்—பசுபோன்ற ஒரு மிருகம். *வ்ருக்ஷம்—மரம்.

¶ கரகம்—கிண்டி. ‖ அபவாரகம்—தாழி.

இந்த விஷயத்தை உபபாதிக்கிறார்—ஒவ்வொரு வர்ணமும் ஸ்போடவ்யஞ்ஜகமாகாது — இரண்டாவது வர்ணம் பயனில்லாமல் போகவேண்டிவருமாதலால். ப்ரதமவர்ணமாத்ரத்தி னாலேயே — யம் முதலிய பதஸ்போடத்தின் அபிவ்யக்தி ப்ரஸங்கிக்கவேண்டிவருமாதலா லும் வர்ணஸமுதாயமும் வ்யஞ்ஜகமல்ல. க்ரமமாக உச்சரிக்கப்பட்டு கேட்கப்பட்டிருக் கிற வர்ணங்களுக்கு ஒரே ஸமயத்தில் உத்பத்தி இல்லாததைப் பற்றி ஸமுதாயமாவது பொ ருந்தாமையால். பூர்வபூர்வவர்ணங்களால் உண்டுபண்ணப்பட்ட ஸம்ஸ்காரத்தோடு கூடின கடைசி வர்ணம் வ்யஞ்ஜகமாகாது. அநுபவத்தால் உண்டான ஸம்ஸ்காரங் களுக்கு அநுபவிக்கப்பட்டுள்ள வர்ணங்களின் ஸ்ம்ருதிமாத்ரத்திற்கு ஹேதுத்வமிருப் பதால் அநுபவிக்கப்பட்டிராத ஸ்போடப்ரதீதிக்கு ஹேதுத்வமில்லாமையால் அந்த ஸம்ஸ்காரத்தாலே உபகரிக்கப்பட்டிராத கடைசிவர்ணத்துக்கும் அந்த ஸ்போட வ்யஞ்ஜகத்வம் பொருந்தாமையால் — பதம் முற்றிலும் அறியப்படுகிறது ஆதலால் அந்த பதத்திற்கு அநுரூபமான காரணம் கல்பிக்கத்தக்கது. வரிசையாக உண்டாகிறதாக இருந்தபோதிலும் ஸம்ஸ்காரங்களுக்கு ஒரே ஸமயத்தில் கார்யகரத்வமையுக்தம். வரிசை யாகக்காணப்பட்டிருந்தபோதிலும் இரண்டு கடங்களுக்கு அவைகள் கடங்கள் என்று ஸ்மரணம் காணப்படுவதால் ஆதலால் ஒரே ஸமயத்தில் உண்டாகிற பூர்வவர்ணத்தின் ஸ்ம ரணத்தின் உதவிபெற்ற அந்த வர்ணமோ அல்லது ஒரே ஸமயத்தில் நினைக்கப்படுகிற எல் லா வர்ணங்களுடைய ஸமுதாயமோ ஸ்போடத்திற்கு அபிவ்யஞ்ஜகமாகிறதென்று சொல் லப்படுமேயாகில் அப்போது ஸ்போடத்திற்கு அபிவ்யஞ்ஜகமாக ஒப்புக்கொள்ளப்பட்டி ருக்கிற ஸாமக்ரிக்கு அர்த்தாபிவ்யஞ்ஜகத்வமானது இருக்கலாம். சோத்யம் பரிஹாரம் இரண்டும் துல்யமாக இருப்பதால் அந்யதாஸித்தத்திற்கு அர்த்தாந்தரகல்பநம் பொருந் தாமையாலும், வர்ணங்களுக்கே வாசகத்வம் ஸம்பவிப்பதாக இருக்க அவைகளைக்காட்டி லும் வேறான ஒரு தர்மியை கல்பிப்பது பொருந்தாததாலும் லாகவந்யாயமானது அதிக பலமுள்ளதாயிருப்பதாலும் வர்ணங்கள் பிந்நங்களாயிருந்தபோதிலும் ஒரே ஸமயத்தில் புத்தியில் தோன்றின ஏகவிபக்த்யந்தங்களான அநேக வர்ணங்களுடைய ஸமுதாயத்தை விஷயமாகக்கொண்டிருப்பதால் ஒருபதம் என்கிற புத்தியும் வேறு அர்த்தத்தைக்கல்பிக்கிற தாகவாகாது. அர்த்தம் ஒன்றாயிருப்பதால் பதங்களுக்கு ஐக்யம். பதத்தின் ஐக்யத் தால் அர்த்தைக்யமென்று அந்யோந்யாச்ரயதோஷமில்லை. ஏகவிபக்த்யந்தங்களான வர்ணஸமுதாயத்துக்கு ஏகபதத்வம் நிச்சயிக்கப்பட்டிருப்பதால். $ 'ஸுப்திங்ந்தம்பதம்' என்றல்லவோ பதநிஷ்கர்ஷம் அதற்கும் முற்கூறப்பட்ட அபிப்ராயகோசரத்வம் இருக்குமேயாகில் அவ்யாப்திதோஷம் ஸம்பவியாது. ஏகவ்யுத்பத்தியினால் ஸித்த மான ஏகார்த்தப்ரதீதிக்கு உபயுக்தமான வர்ணஸமுதாயத்துக்காவது பதத்வம். அநேக வர்ணங்களில் 'இது சப்தம் இது சப்தம்' என்கிற ப்ரத்யயம் கூட காதினால் க்ராஹிக் கத்தக்கதாயிருத்தல் என்கிற உபாதியைக்காரணமாகக்கொண்டிருப்பதால் அந்யதாஸித்த மென்பதுபற்றி அர்த்தாந்தரஸித்தியில்லை. ச்ரோத்ரத்தால் க்ராஹிக்கத்தக்கதாக இருத் தல் என்கிற தன்மைக்குங்கூட ச்ரோத்ரத்தினால் க்ரஹணமபேக்ஷையில்லை எவ்வாறு

$ ஸுப்திங்ந்தம்பதம்—ஸுப் என்று மும்மூன்று வசநங்களடங்கிய எழு விபக்தி களுக்கும் பெயர். திங்-என்பது மும்மூன்று வசநங்களடங்கியதும் தாதுக்களுக்குப்பிந்தி ப்ரயோகிக்கப்படுவதுமான பரஸ்மைபதம் ஆத்மநேபதம் என்று பெயர்பூண்ட இரண்டு விதமான ப்ரத்யயங்களுக்குப்பெயர் இந்த இரண்டு ப்ரத்யயங்களையும் ஈற்றில்கொண்ட சப்தங்கள் பதம் என்று கூறப்படுகின்றன உதாஹரணம்— 'ராமன-க்ருஷ்ணன்-கோவிந்தன-பசதி யஜதி-கமதி' முதலியது.

சாக்ஷுஷங்களான வெண்மை கருப்பு, மஞ்சள் நிறம் மூன்றுக்கும் சாக்ஷுஷத்வ ஜ்ஞானத்தில் சக்ஷுஸ்ஸின் அபேக்ஷையில்லையோ ஆதி சாக்ஷுஷம் இது சாக்ஷுஷம் என்கிற வ்யவஹாரமும் சாக்ஷுஷத்வ ஜ்ஞானத்தைக்காரணமாகக்கொண்டதே. சாக்ஷுஷத்வம் ச்ராவணத்வம் முதலியவற்றின ஜ்ஞானமானது வேறு ப்ரமாணங்களால் அறியப்பட்டிருக்கிற † சக்ஷுஸ் ச்ரோத்ரம முதலியவற்றின அந்வயவ்யதிரேகங்களை அநுஸரித்திருக்கிற ஜ்ஞானகோசரமாயிருப்பதால. தத்க்ஷணத்திலேயே "இது சப்தம" என்று அறிகிறார்களில்லையன்றோ முதலில் ககாரம முதலிய வர்ணரூபத்தாலேயே சப்தம் நிச்சயிக்கப்பட்டபிறகு, வ்யுத்பந்நமான சப்தத்தின் ஸ்மரணத்தை முன்னிட்டே சப்தம் என்று அறியப்படுகிறது. ஆகையால் சப்தஸ்மரணத்தினுல் உண்டான விளம்பம்போல ச்ரோத்ராநுமான விளம்பமும அப்யாஸபாடவத்தாலுமுண்டுபண்ணப்பட்ட சைக்ரயத்தினுல் பகுத்தறியப்படுகிறதில்லை ஆகையால் வர்ணஸமுதாயமே பதம, பதஸமுதாயமே வாக்யம் என்று நிலைபெற்றது. அஸத்யத்தால் ஸத்யவஸ்துவின ப்ரதிபத்திஸிராகரணத்தை உபஸம்ஹாரம் செய்கிறார்—அத: என்று.

நநு ச ந ஶாஸ்த்ரஸ்ய க³க³நகுஸுமவத³ஸத்யத்வம்; ப்ராகே³வ தத்த்வஜ்ஞாநாத் ஸத்³பு³த்³தி⁴போ³த்⁴யத்வாத் । உத்பந்நே தத்த்வஜ்ஞாநே ஹ்யஸத்யத்வம் ஶாஸ்த்ரஸ்ய । ந ததா³ ஶாஸ்த்ரம் நிரஸ்தநிகி²லபே⁴த³ப்³ரஹ்மஜ்ஞாநோபாய꞉ । யதோ³பாயஸ்ததா³ ஸத்யமேவ ஶாஸ்த்ரம், ஸதி³தி போ³தா⁴த் । நைவம், அஸதி ஶாஸ்த்ரே ஸதி ஶாஸ்த்ரமிதி பே⁴த³பு³த்³த்⁴யயோகா³த் । தத꞉ கிம்? இத³ம் தத꞉; பா³தா⁴ஸித்³த⁴ஶாஸ்த்ரஜந்யஜ்ஞாநஸ்ய பா³தே⁴ ந தத்³விஷயஸ்யாபி ப்³ரஹ்மணோ பா³த⁴꞉; யதா² து³ஷ்டசக்ஷுர்க்³ருஹீதபா³ஷ்பஜந்யாக்³நிஜ்ஞாநஸ்ய பா³தே⁴ ந தத்³விஷயஸ்யாக்³நேரபி பா³த⁴꞉ । பஶ்சாத்தநபா³த⁴ஜ்ஞாநாபா⁴வாத்; ஸம்ப⁴வதி தத்³விஷயஸ்யாக்³நே꞉ ந தஸ்யாபி பா³த⁴கஜ்ஞாநம் । தத்ர ஹ்யக்³நிரஸ்தீதி வேத³; ஸதோ(அ)பி ஹ்யக்³நேரஸ்தித்வம் ப்ரதீயதே । பஶ்சாத்தநபா³த⁴ஜ்ஞாநம் ச தத்³ப்³ரஹ்மஜ்ஞாநஸ்ய ந ஸம்ப⁴வதீதி பரிஹர்தவ்யம் ॥

ஸ்ரீபாஷ்யம்—

அய்யா! சாஸ்த்ரமானது ஆகாயத்தாமரை மலர்போல் அஸத்யமல்ல- அத்வைத ஜ்ஞானமுண்டாவதற்குமுன்பு ஸத் என்று புத்தியினுல் அறியத்தக்கதாயிருப்பதால்-தத்வஜ்ஞானமுண்டானலன்றோ சாஸ்த்ரத்திற்கு அஸத்யத்வம் - அப்போது சாஸ்த்ரமானது எல்லா பேதங்களும் நிரஸிக்கப்பட்டு

---

† சக்ஷுஸ்—கண்.

ஸிந்மாத்ரமாயிருக்கிற ப்ரஹ்மஜ்ஞானத்திற்கு உபாயமல்ல. எப்பொழுது உபாயமோ அப்பொழுது சாஸ்த்ரம் உளதே—உண்டு என்கிற புத்தியினால். இவ்வண்ணமல்ல—அஸத்தான சாஸ்த்ரத்தில் "அஸ்தி சாஸ்த்ரம்" என்கிற புத்தியானது மித்யையாயிருப்பதால் அதனாலென்ன? அதனால் இதுதான். மித்யாபூதமான சாஸ்த்ரத்தினாலுண்டாகிற ஜ்ஞானமும் மித்யையானதால், அந்த ஜ்ஞானத்திற்கு விஷயமாயிருக்கிற ப்ரஹ்மத்திற்கு மித்யாத்வம் ஸித்திக்கிறது - எவ்வாறு புகை என்கிற புத்தியினால் க்ரஹிக்கப்பட்டிருக்கிற பனிப்புகையினாலுண்டாகிற வஹ்நிஜ்ஞானம் மித்யையானதால் அந்த ஜ்ஞானத்திற்கு விஷயமாயிருக்கிற வஹ்நிக்கும் மித்யாத்வம் ஸித்திக்கிறதோ அவ்வாறென்றபடி. பிற்காலத்திய பாதத்தின் அதர்சனமும் ஸித்தியாது; சூந்யமே தத்வமென்கிற (சில பௌத்தர்களின்) வாக்யத்தாலே அதற்கும் பாதம் காணப்படுவதால். அது ப்ராந்தியடியாக வருகிறதென்று கூறப்படுமேயாகில் இதுவும் (நிர்விசேஷ ப்ரஹ்மாத்மைகத்வஜ்ஞானமும்) ப்ராந்திமூலமென்று உன்னாலேயே உரைக்கப்பட்டது. பிற்காலத்திலுண்டாகிற ஜ்ஞானத்தினால் பாதம் காணப்படாமலிருந்தாலோவெனில், (சூந்யம் தத்வம் என்று சொல்லுகிற) அந்த ஜ்ஞானத்திற்கே என்று, நிலைபெறுத்துதல் கொண்டு பரிஹஸிப்பது போதும்.

ச்ருதப்ரகாசிகை—

ஸத்யமென்று அபிமானிக்கப்பட்டிருக்கிற ஸத்யப்ரதிபத்திஹேதுக்களில் எவ்விதமான ஸத்யத்வமோ அவ்விதமான ஸத்யத்வம் சாஸ்த்ரத்திற்கும் இருக்கிறதென்கிற அபிப்ராயத்தினால் சோதனம் செய்கிறார்—நநு என்று ககநகுஸுமவத் என்று யுக்திபாதமல்லவோ கூறப்பட்டது லௌகிக புருஷர்களால் அப்பொழுதே தான் நாஸ்தி என்று அறியப்பட்டிருத்தல் கூறப்படவில்லை - ஆதலால் அவ்விதமான அஸத்யத்வம் இல்லையென்று அர்த்தம் - ஹேதுவைக் கூறுகிறார்—ஸத்புத்திபோத்யத்வாத் என்று. ஸத் என்று அறியத்தக்கதன்மையே கார்யகாரித்வத்திற்கு அநுகுணமே ஒழிய ஸத்யத்வம் அநுகுணமல்லவென்று அர்த்தம். அங்ஙனமாகில் ஸத்தாயுள்ள அத்வைதத்திற்கு பங்கமுண்டாகுமென்கிற கேள்வியின் மறுமொழி கூறுகிறார்— உத்பன்னே என்று. அங்ஙனமாகில அதுபோதகமாகாது என்று கேட்கில் கூறுகிறார்—நதத்ர என்று.

பரிஹரிக்கிறார்—நைவம் என்று. நைவம் - உபாயகாலத்திலும் ஸத்யத்வம் இல்லை என்று அர்த்தம். மித்யையான அர்த்தத்தை விஷயீகரிப்பதால் ஜ்ஞானத்திற்கு மித்யாத்வம் ஜ்ஞானம் தோஷமூலமாதலால் விஷயமித்யாத்வத்தில் நிதர்சனத்தைக் கூறுகிறார்—யதா என்று. முன்பு பிற்காலத்திலுள்ள வ்யாதாதர்சனத்தை ஒப்புக்கொண்டு தூஷணம் கூறப்பட்டது. இப்பொழுது அதே இல்லை என்று கூறுகிறார்—பரப்சாத்ய என்று. அதை உபபாதிக்கிறார்—சூன்யம் என்று. அந்த வாக்யமும் அதின் ப்ராமண்யமும் ப்ராந்திஸித்தமென்று சங்கிக்கிறார்—தத்து என்று. ஸாம்யத்தைக்கூறுகிறார்—

ஏதத்பி என்று. பிந்நியதான ஸ்வாதத்தின் அதாசநத்தற்கு ப்ராமாண்ய ஹேதுத்வம் சொல்லுதல், ஸர்வசூந்யவாதிக்கே ஸாதகம். அதற்குமேல் நிஷேதிக்கத்தக்க வஸ்து வில்லாமையால் நிஷேதத்துக்கு உதயமில்லாமையால் என்று கேட்கில் கூறுகிறார்— பாஹ்யார்த்ய என்று ப்ராமாண்யம் முதலியவைகளுக்கு தோஷமூலத்வம் இரண்டுபேருக்கும் துல்யம். பாஹ்யார்த்யபாதாதர்சனமோவெனில் சூன்யவாதிக்கு அதிகமென்று கருத்து. “ஸர்வசூன்யவாதிக்குங்கூட பிந்நின நிஷேதமிருக்கிறது; எல்லாமிருக்கிறது என்கிற வசனமல்லவோ அதற்கு நிஷேதம்;” என்று கூறப்படுமேயானால் அப்போது ப்ரபஞ்சமித்யாத்வ வசநத்திற்கும் $ப்ரபஞ்ச ஸத்யதாவசனமானது நிஷேதமாக ஆகலாம். நாஸ்தி என்கிற வசநமே நிஷேதம் என்று கூறப்படுமேயாகில் அது ¶ சூன்யவாதிக்கே என்று கருத்து. இந்த வேதாப்ராமாணயம் † மாயாவாதிகளுக்கும் பௌத்தர்களுக்கும் ஸமானம் இதுவிஷயமாகக்கூறுகிறார்கள். வேதோ஽ந்ருதோ புத்திக்ருதாகமோ஽ந்ருத: ப்ராமாண்யமேதஸ்யச தஸ்யசாந்ருதம். போத்தாந்ருதோ புத்திபலே ததாந்ருதேயூயஞ்ச பௌத்தாஶ்ச ஸமாநஸம்ஸத: ” - வேதம் அந்ருதம் - பொய் மனிதனுடைய புத்தியினால் செய்யப்பட்டுள்ள ஆகமமும் அந்ருதம் பொய் - இதற்கும் அதற்குமுள்ள ப்ராமாண்யமும் அந்ருதம் பொய் - அறிகிறவன் அந்ருதம் பொய் - அவ்வாறே புத்தி பலம் இரண்டும் அந்ருதங்கள் பொய் - நீங்களும் பௌத்தர்களும் ஒரே கோஷ்டியில் சேர்ந்தவர்கள் — என்று. அய்யா! விஷயஸத்யத்வரூபமான சாஸ்த்ர ப்ராமாண்யமிருக்கிறதாதலால் இந்த விஷயத்தில் எங்களுக்கு பௌத்தர்களைவிட அதிக வேறுபாடு இருக்கிறதென்று கூறப்படுமேயாகில், அல்ல சில விஷயங்களுக்கு ஸத்யத்வம் உன்னால் சொல்லவேண்டுமென்று விரும்பப்பட்டிருக்கிறதா? அல்லது எல்லா விஷயங்களுக்குமே ஸத்யத்வம் விரும்பப்பட்டிருக்கிறதா? சில விஷயங்களுக்கு ஸத்யத்வம் புத்தாகமத்துக்குமுண்டு - ஸம்வித்தின் ஸ்வயம்ப்ரகாசத்வம் முதலியது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதால் - எல்லா விஷயங்களுக்கும் ஸத்யத்வமோவென்றால் உன்னால் ச்ருதிக்கும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் விஷயத்திற்கு ஸத்யத்வம் எவ்விதத்தாலும் சொல்லமுடியாது. ஸத்யமாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிற ப்ரஹ்மத்திற்கு ப்ரமாண விஷயத்வம் ஒப்புககொள்ளப்படாமையால். “§ ஆதித்யோ ‡யூப:” என்கிறவிடத்தில் யூபத்துக்கும் ஆதித்யனுக்கும் ஐக்யத்தை ப்ரதிபாதியாமலிருப்பது தாத்பர்யலிங்கமில்லாமையாலே ஒழிய ப்ரத்யக்ஷத்தின் ப்ராபல்யத்தாலல்லவென்று யாதொன்று உரைக்கப்படுகிறதோ அந்த இடத்தில் தாத்பர்யலிங்காபாவமானது ஒப்புக்கொள்ளப்பட்டே இருக்கிறது. அதனால் ※ப்ரத்யக்ஷ விருத்தமான அர்த்தத்தை ப்ரதிபாதிப்பதில் அஸாமர்த்யமானது விலக்கத்தகாததாக வந்து சேருகிறது - வேதாந்திகளாலே || அர்த்தவாதம் முதலியவற்றுக்கு வேறு அர்த்தத்தை உணர்த்துவதில் நோக்கமிருப்பதினாலே ஸ்வார்த்தத்தில் ப்ராமாண்யம் இழக்கப்படுகிறதில்லையன்றோ - @ மந்த்ரங்களுக்கும் அர்த்த வாதங்களுக்கும் ஸ்வார்த்தத்தில் ப்ரா

¶ சூன்யவாதி—மாத்யமிகன். அதாவது புத்தனுடைய தத்வோபதேசத்தை ஸரியாக க்ரஹித்த உத்தம சிஷ்யன் - பௌத்தர்களுள் தலைமைவாய்ந்தவன்.

$ ப்ரபஞ்சம்—உலகம். † மாயாவாதி—அத்வைதி.

§ ஆதித்யன்—ஸூர்யன். ‡ யூப:—யாகத்தில் பசுவைக்கட்டும் ஸ்தம்பம்.

※ ப்ரத்யக்ஷம்—இந்த்ரியார்த்த ஸந்நிகர்ஷத்தாலுண்டாகிற ஜ்ஞானம்.

|| அர்த்தவாதம்—விதிவாக்யார்த்தத்தை துதிக்கிற வசனஜாலம்.

@ மந்த்ரங்கள்—அனுஷ்டிக்கத்தக்க அர்த்தங்களை ப்ரகாசப்படுத்துகிற ச்ருதி வாக்யங்கள்

மண்டம் உங்களாலேயே சொல்லப்பட்டிருப்பதால் ஆகலால் ஸ்து பரமாபி பரி ஞல் யூபம் ஆதித்யன் இரண்டுக்கும் * ஸம்பந்தத ப்ரதிபாதியாமலிருந்தும் ‡ அபஸித்தாந்தம். அர்த்தவாதங்களுக்கு ஸ்வார்த்த ப்ராமாண்யமிருக்கிறபடியால் வ்வாறு அந்த யூபம் ஆதித்யன் இரண்டுக்கும் ஐக்யாப்ரதிபாதநம் என்று சொல்லப்படுமே யாஞல் மறுமொழி கூறப்படுகிறது. ப்ரமாணத்திற்கு விரோதமில்லாமலிருந்தும் தாத்பர்யலிங்கம். $ உபக்ரமம் † உபஸம்ஹாரம் முதலியவைகளில் அபூர்வத்வமும் தாத்பர்யலிங்கமாகக்கூறப்பட்டிருக்கிறதன்றே—" அப்பாஸோऽபூர்வதாபலம் " என்று. அபூர்வத்வமாவது @ ஸாதக ¶ பாதக ப்ரமாணங்களுக்கு கோசரமாக இல்லாமலிருத்தல். இதில் ப்ரமாணங்களைக் கூறுகிறார்கள் — " * அஸந்நிக்ருஷ்டவாசாச த்வயமத்ர ‡ ஜிஹாஸிதம் - தாத்பர்யேண பரிச்சிததி: தத்விபர்யயதோऽபிவா. " என்று-அதஞல் வேறு ப்ரமாணங்களுக்கு விஷயமாகாமையாகிற தாத்பர்யலிங்கம் இங்கில்லாததால் யூபம் ஆதித்யன் இரண்டுக்கும் ஐக்யம் சொல்லப்படவில்லையே ஒழிய அர்த்தவாதமாக இருப்பதுபற்றி ஸ்வார்த்தத்தில் ப்ராமண்யத்தின் இன்மையால் அல்ல - ஆகையால் தாத்பர்யலிங்காபாவமென்பது ப்ரத்யக்ஷாதி விரோதத்தில் நிலைபெற்றிருக்கிறதென்பதஞல் சாஸ்த்ரமானது அதற்கு விருத்தமான அர்த்தத்தை ப்ரதிபாதிப்பதில் ஸாமர்த்தியமுள்ளதாக ஆகாது - சாஸ்த்ர ப்ராபல்ய நிரஸநத்தை முடிவடையச்செய்கிறார்— அலம் என்று. அன்றிக்கே 'யத்து ப்ரத்யக்ஷம்' இது முதலான ந்யாயமுகத்தால் செய்யப்பட்டிருக்கிற ♆ பரபக்ஷ ‡‡ ப்ரதிக்ஷேபத்தை முடிக்கிறார்—அலம் என்று ப்ரமாண விருத்தமான தர்கம் குதர்கம் - அதஞலேயே நிலைபெருமை - தனக்கு விருத்தமான பௌத்தமதத்திற்கு உபயுக்தங்களான யுக்திகளைச்சொல்வதஞல் பரிஹஸிக்கத்தக்க தன்மை - ப்ரத்யக்ஷத்தைக்காட்டிலும் சாஸ்த்ரத்திற்கு ப்ராபல்யத்தைச்சொல்லுகிற அந்யஞல் ப்ரபலமென்று அபிமானிக்கப்பட்டிருக்கிற சாஸ்த்ரத்தைமுன்னிட்டு பிந்தி தர்கம் கூறப்பட்டது - ஸித்தாந்ததிலோவெணில் ப்ரபலமென்று அபிமானிக்கப்பட்ட §லௌகிக ப்ரமாணங்களின் கதியை முதலில் நிரூபித்து அந்யஞல் கூறப்பட்டுள்ள துஷ்ட தர்கங்களை நிரஸநம் பண்ணி லௌகிக ப்ரமாணத்தில் சாஸ்த்ர † ப்ராபல்யமும் நிரஸிக்கப்பட்டது. சாஸ்த்ரத்திற்கு லௌகிக ப்ரமாணங்களுக்கு விருத்தமான அர்த்தங்களை ப்ரதிபாதிப்பதில் அஸாமர்த்யத்தை உபபாதிப்பதிஞல் சாஸ்த்ரத்திற்கு ஸவிசேஷ பரத்வம் ஸாமாந்யமாக ஸாமர்த்தியத்திஞல் ஸித்தித்தது விசேஷண சப்தத்திற்கு பதவாக்யரூபமாக ப்ரவ்ருத்தியிஞலும் ஸவிசேஷ பரத்வத்தைத்தெளிவாகக் கூறியதிஞலும் சாஸ்த்ரத்திற்கு ஸவிசேஷபரத்வம் ஸாமாந்யமாக ஸித்தித்தது.

---

* ஐக்யம்—ஒன்றுபட்டிருத்தல்.

§ அபஸித்தாந்தம்-யுக்திகளாலும் ந்யாயங்களாலும் நிலைபெருத போலிஉறுதிமொழி.

$ உபக்ரமம்—தொடக்கம். † உபஸம்ஹாரம்—முடிவு.

@ ஸாதகம்—உபகாரகமான வஸ்து. ¶ பாதகம்—விருத்தமானது.

* அஸன்னிக்ருஷ்டம்—விலகியிருக்கிறது அல்லது தூரத்திலிருக்கிறது.

‡ ஜிஹாஸிதம்—விடுவதற்கு விரும்பப்பட்டிருக்கிறது.

♆ பரபக்ஷம்—அயலான் கக்ஷி. ‡‡ ப்ரதிக்ஷேபம்—நிராகரித்தல்.

§ லௌகிக—உலகத்தில் வழங்கப்பட்டுள்ளது.

† ப்ராபல்யம்—அதிக பலமுள்ளதாக இருத்தல்.

𑌯𑌦𑍁𑌕𑍍𑌤𑌮𑍍 — 𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌵𑌾𑌕𑍍𑌯𑌾𑌨𑌿 𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌶𑍇𑌷𑌜𑍍𑌞𑌾𑌨𑍈𑌕𑌰𑌸𑌵𑌸𑍍𑌤𑍁𑌮𑌾𑌤𑍍𑌰𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑌨𑌪𑌰𑌾𑌣𑌿, “𑌸𑌦𑍇𑌵 𑌸𑍋𑌮𑍍𑌯𑍇𑌦𑌮𑌗𑍍𑌰 𑌆𑌸𑍀𑌤𑍍” 𑌇𑌤𑍍𑌯𑍇𑌵𑌮𑌾𑌦𑍀𑌨𑌿 — 𑌇𑌤𑌿; 𑌤𑌦𑌯𑍁𑌕𑍍𑌤𑌮𑍍. 𑌏𑌕𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨 𑌸𑌰𑍍𑌵𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌪𑍍𑌰𑌤𑌿𑌜𑍍𑌞𑌾𑌵𑌾𑌕𑍍𑌯𑍋𑌪𑌕𑍍𑌰𑌮𑍇 𑌸𑌚𑍍𑌛𑌬𑍍𑌦𑌵𑌾𑌚𑍍𑌯𑌸𑍍𑌯 𑌪𑌰𑌸𑍍𑌯 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋 𑌜𑌗𑌦𑍁𑌪𑌾𑌦𑌾𑌨𑌤𑍍𑌵𑌮𑍍, 𑌜𑌗𑌨𑍍𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌤𑍍𑌵𑌮𑍍, 𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌤𑌾, 𑌸𑌰𑍍𑌵𑌶𑌕𑍍𑌤𑌿𑌯𑍋𑌗𑌃, 𑌸𑌤𑍍𑌯𑌸𑌙𑍍𑌕𑌲𑍍𑌪𑌤𑍍𑌵𑌮𑍍, 𑌸𑌰𑍍𑌵𑌾𑌧𑌾𑌰𑌤𑍍𑌵𑌮𑍍, 𑌸𑌰𑍍𑌵𑌨𑌿𑌯𑌨𑍍𑌤𑍃𑌤𑍍𑌵𑌾𑌦𑍍𑌯𑌨𑍇𑌕𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌗𑍁𑌣𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌤𑌾𑌮𑍍, 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌸𑍍𑌯 𑌜𑌗𑌤𑌸𑍍𑌤𑌦𑌾𑌤𑍍𑌮𑌕𑌤𑌾𑌞𑍍𑌚 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑍍𑌯, 𑌏𑌵𑌮𑍍𑌭𑍂𑌤𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌤𑍍𑌮𑌕𑌤𑍍𑌵𑌮𑌸𑍀𑌤𑌿 𑌶𑍍𑌵𑍇𑌤𑌕𑍇𑌤𑍁𑌂 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍁𑌪𑌦𑍇𑌶𑌾𑌯 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌕𑌰𑌣𑌸𑍍𑌯 । 𑌪𑍍𑌰𑌪𑌞𑍍𑌚𑌿𑌤𑌶𑍍𑌚𑌾𑌯𑌮𑌰𑍍𑌥𑍋 𑌵𑍇𑌦𑌾𑌰𑍍𑌥𑌸𑌙𑍍𑌗𑍍𑌰𑌹𑍇 । 𑌅𑌤𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌾𑌰𑌮𑍍𑌭𑌣𑌾𑌧𑌿𑌕𑌰𑌣𑍇 𑌨𑌿𑌪𑍁𑌣𑌤𑌰𑌮𑍁𑌪𑌪𑌾𑌦𑌯𑌿𑌷𑍍𑌯𑌤𑍇 ॥

ஸ்ரீபாஷ்யம்.—

வேதாந்தவாக்யங்கள் விசேஷங்களற்றதும் ஜ்ஞாநத்தையே ஸ்வபாவமாகக்கொண்டதுமான வஸ்து ஒன்றையே ப்ரதிபாதிப்பதில் நோக்குள்ளவைகள், “ஸதேவ, ஸோம்யேதமக்ர ஆஸீத்” இது முதலியவைகள் என்று எது சொல்லப்பட்டதோ அது பொருத்தமுள்ளதல்ல. ஒரு வஸ்துவை அறிவதனால் எல்லா வஸ்துக்களும் அறியப்படுகின்றனவென்கிற ப்ரதிஜ்ஞோபபாதனமடியாக ஸத் என்கிற சப்தத்திற்கு வாச்யமான பரப்ரஹ்மத்திற்கு ஜகதுபாதாநத்வம், ஜகந்நிமித்தத்வம், ஸர்வஜ்ஞத்வம், ஸர்வசக்தியோகம், ஸத்யஸங்கல்பத்வம், ஸர்வாந்தரத்வம், ஸர்வாதாரத்வம், ஸர்வநியந்த்ருத்வம், இவை முதலிய அநேக கல்யாணகுணங்களுடன் சேர்ந்திருத்தலையும், உலகமனைத்துக்கும் அந்த ப்ரஹ்மாத்மகத்வத்தையும் ப்ரதிபாதித்து இப்படிப்பட்ட $ ப்ரஹ்மாத்மகனாய் நீ இருக்கிறாய் என்று ச்வேதகேதுவைக்குறித்து உபதேசிப்பதின்பொருட்டு ப்ரகரணம் ப்ரவ்ருத்தித்திருப்பதால். இந்த அர்த்தம் வேதார்த்த ஸங்க்ரஹத்தில் விரித்து உரைக்கப்பட்டிருக்கிறது. இந்த க்ரந்தத்திலும் ஆரம்பணாதிகரணத்தில் நன்கு மிக்க தெளிவாக உபபாதிக்கப்படப்போகிறது.

$ ப்ரஹ்மாத்மகன்—ப்ரஹ்மத்தை அந்தர்யாமியாகக்கொண்டவன்.

ச்ருதப்ரகாசிகை:—

அப்படி இருந்தபோதிலும் எந்த வாக்யவிசேஷங்கள் அந்யனால் நிர்விசேஷபரமாக உதாஹரிக்கப்பட்டனவோ அவைகளுக்கு ஸவிசேஷபரத்வத்தை வாக்யதாத்பர்யத்தின் பர்யாலோசனையினால் ப்ரதிபாதிக்கத்தொடங்குகிறார்—யதுக்தம் இது முதலியதால். அதில் நிர்விசேஷபரத்வத்தை சுருக்கமாக அநுவாதம் செய்கிறார்—யதுக்தம் என்று. சோதகவாக்யங்களில் ப்ரஹ்மம் ஜ்ஞானைகரஸமாய் அறியப்பட்டிருப்பதால் அதற்குநிர்விசேஷத்வம அதுவும் காரணவாக்யங்களில் ப்ரதிபந்நம். 'வஸ்துமாத்ரம்'' என்கிற சப்தத்தினால் வேறிடத்தில் ஸகுணப்ரஹ்மத்தினிடத்தில் தாத்பர்யமின்மை ஸூசிப்பிக்கப்படுகிறது. "இதயாதீதி" என்று சொன்னால் அதே உபநிஷத்தில் பர்யவஸிக்கிறது என்பதுபற்றி அதை விலக்குவதற்காக இத்யேவமாதீநி என்று உரைக்கப்பட்டது. அதை தூஷிக்கிறார் — தத்யுக்தம் என்று. ஏதனால் என்று கேட்கில் கூறுகிறார்—ஏகவிஜ்ஞாநேந என்று. "யேநாச்ருதம்" இது முதலிய வாக்யத்தால் ஏகவிஜ்ஞானத்தால் ஸர்வவிஜ்ஞானம் ப்ரதிஜ்ஞை பண்ணப்படுகிறது. இதற்கு இது அர்த்தம் - கேட்கப்பட்டதும, மனனம்பண்ணப்பட்டதும, நன்கு அறியப்பட்டதுமான எந்த வஸ்துவினால் கேட்கப்பட்டிராததும் மனனம் செய்யப்பட்டிராததும் அறியப்பட்டிராததுமான வஸ்துவானது கேட்கப்பட்டதாகவும் மனனம்செய்யப்பட்டதாகவும் அறியப்பட்டதாகவும் ஆகிறதோ என்று. ப்ரஹ்மத்தினுடைய ஸத்தையினால் அனைத்தும் அறியப்பட்டதாக ஆகிறதில்லை. தார்ஷ்டாந்திக ஸாமர்த்யத்தினாலும ம்ருத்த்ருஷ்டாந்த ஸாமர்த்யத்தாலும் அறியப்பட்டதாக ஆகிறது ப்ரஹ்மத்தின் ஸத்தையினாலாவது ம்ருத்பிண்டத்தின்ஸத்தையினாலாவது அதின் கார்யமான ப்ரபஞ்சமாவது கடம் முதலியதாவது அறியப்படுகிறதில்லையன்றோ. "கஸ்மிந்நு பகவோ விஜ்ஞாதே ஸர்வமிதம விஜ்ஞாதம்பவதி" என்று முண்டகோபநிஷத்தில், ஆத்மநிகலுஅரே த்ருஷ்டே ச்ருதே மதே விஜ்ஞாதே இதம் ஸர்வம் விதிதம" என்று ப்ருஹதாரண்யகத்திலும் கேட்கப்படுவதாலும். அதனால் ப்ரதிஜ்ஞாவாக்யார்த்தமானது எவ்வாறு உரைக்கப்பட்டதோ அவ்வாறு என்றபடி. கடஜ்ஞானத்தாலே படஜ்ஞானம் ஸம்பவிக்கிறதில்லை என்பதனால். ஏகவிஜ்ஞானத்தால் ஸர்வவிஜ்ஞானம் உண்டாவதில்லை என்று சங்கைவரின் கார்ய காரணங்களுக்கு அது காணப்பட்டிருக்கிறதென்று கூறுகிறார்—"யதாஸோமய" என்று. அதிலும் அஸத்கார்யவாதத்தின்வாயிலாக ஏகவிஜ்ஞானத்தால் ஸர்வவிஜ்ஞானாநுபபத்தி சங்கையைப் பரிஹரிக்கிறார்—வாசாரம்பணம் என்று. வாசா-வாசகசப்தமானது § அஜஹல்லக்ஷணையினால் வாக்பூர்வகமான வ்யவஹாரத்தை உணர்த்துகிறது. வாசா என்ற மூன்றும் வேற்றுமையினால், ப்ரயோஜனமாயிருப்பதுபற்றி ஹேதுத்வம் சொல்லக் கருதப்பட்டது ஆரம்பணமென்று கர்மார்த்தத்தில் ல்யுட். ஆரப்யதே ஆலப்யதே இதி ஆரம்பணம் "ஆலம்பஸ்பர்சஹிம்ஸயோ." என்று நிகண்டு. ம்ருத்பிண்டோ என்பது அர்த்தத்தால் ஸித்திக்கிறது. விகார: என்பது கடத்வசராவத்வாதி அவஸ்தை

§ அஜஹல்லக்ஷணையாவது — விடாதலக்ஷணை - அதாவது ஸ்வார்த்தத்தைவிடாமல் அர்த்தாந்தரத்தையும் உணர்த்தும் சப்தசக்தி. உதாஹரணம்.—சத்ரிணோ கச்சந்தி என்று. கொடைக்காரர்கள் போகிறார்கள் என்று அர்த்தம். இந்த வாக்யமானது அபிதாவ்ருத்தியினால் சத்ரிகளின் கமனத்தைச்சொல்வதுடன் ச்சத்ரமில்லாதவர்களுடைய கமனத்தையும் சொல்லுகிறது என்பது அஜஹல்லக்ஷணையின் மகிமை.

கள் - வாக்பூர்வகமான ஹாநம் த்யாகம் @ உபாதானம் முதலிய வ்யவஹாரத்தின் பொருட்டு ம்ருத்பிண்டத்தினுல் நாமரூபங்கள் தொடப்படுகின்றன (வஹிக்கப்படுகின்றன). மண்ணுருண்டையானது வேறு பெயரையும் ரூபத்தையும் அடைந்ததாக ஆகிறது என்று அர்த்தம். கார்ய காரணங்களிரண்டும் ஒரு † த்ரவ்யம் என்கிற விஷயத்தில் ப்ரமாணத்தைக்கூறுகிருர்— (ம்ருத்திகேத்யேவஸத்யம) என்று. ' இந்த குடம் மண் ' என்கிற ப்ரத்யபிஜ்ஞையால் ம்ருண்மயமான குடம் முதலியதுங்கூட ம்ருத்த்ரவ்யமாகவே இருப்பது ப்ராமாணிகம் என்று அர்த்தம். கடாதிகளில் உண்டாகிற புத்தி சப்தாதிபேதங்கள், த்ரவ்யபேதத்திலும் காணப்பட்டிருக்கின்றன. ''இருக்கிருன், படுக்கிருன், நான் ஸுகமுள்ளவன், நான் துக்கமுள்ளவன்'' இது முதலியவைகளில் த்ரவ்யைக்யத்திலும் காணப்பட்டிருக்கின்றன. ஆதலால் அவைகள் ¶ ஸாதாரணங்கள். அதில் '' ஆஸ்தே சேதே ஸுக்யஹம் து:க்யஹம் '' இது முதலியவைகளில் த்ரவ்ய ஐக்யத்துக்கு ‡ நிர்ணயகமான ஸாமக்ரீ ப்ரத்யபிஜ்ஞை - அந்த ப்ரத்யபிஜ்ஞையே இந்தவிடத்திலும த்ரவ்ய ஐகயத்துக்கு நியாமிகை என்று கருத்து. இந்தவிடத்தில் ம்ருத்திகாமாத்ரத்திற்கு பாரமார்தயமும் விகாரங்களுக்கு அஸதயத்வமும விவக்ஷிக்கப்பட்டிருக்குமேயாகுல் ' இதி ' என்கிற சப்தம் ப்ரயோஜனமற்றதாகும். அப்பொழுதும் '' ம்ருத்திகைவ ஸதயா '' என்றலலவோ சொல்லத்தக்கது விகாரங்களுக்கு அஸத்யத்வம் ஒப்புக்கொள்ளும பக்ஷத்தில் த்ருஷ்டாந்தமானது ஸாத்யவிகலமாகவாகும். ஸத்யத்வம் அறியப்படுவதால். குடம் முதலியவற்றுக்கு ஸத்யத்வமானது || வ்யாவஹாரிகம் என்று கூறப்படுமேயாகுல் ம்ருத்பிண்டத்திற்கும் ஸத்யத்வமானது வ்யாவஹாரிகமாக இருப்பதுபற்றி காரணத்திற்கு ஸதயத்வஸித்தியில்லை. காரணத்திற்கு வ்யாவஹாரிகமான ஸத்யதவமே ஸம்மதமாயிருக்குமேயாகில் அது குடம் முதலியவற்றுக்கும் துல்யமாகவாகும். கார்ய காரண த்ரவ்யஙக்ளுக்கு ஐகயமிருப்பதால் காரண விஜ்ஞானத்தாலே கார்ய விஜ்ஞானமானது பொருத்தமுள்ளதாக ஆகட்டும். அப்படி இருந்துங்கூட உலகத்தில் பற்பல கார்ய வஸ்துக்களுக்குப்பற்பல உபாதானங்களோடுகூடி இருத்தல் காணப்படுவதால் ஏகவிஜ்ஞானத்தாலே ஸர்வவிஜ்ஞானமானது பொருந்தாது என்கிற சங்கைவரின், ஜகத்துக்கு ப்ரஹ்மத்தையே காரணமாகக்கொண்டிருத்தலைக்கூறுகிருா—ஸதேவஸோம்யேதமக்ரே என்று. சுருதியிலுள்ள '' ஸத '' சப்தார்த்தத்தைக்கருதி இந்தவிடத்தில் '' ஸத் சப்தவாச்யஸ்ய '' என்று உரைக்கப்பட்டது. இது ஸகுண ப்ரஹ்ம விஷயமென்று அந்யதாஸித்தியானது எவ்விதத்தாலும் சொல்லமுடியாது என்கிற அபிப்பிராயத்திஞல் ''பரஸய ப்ரஹமண:'' என்று உரைக்கப்பட்டது. அக்ரே ஸ்ருஷ்டிக்கு முந்தியகாலத்தில என்று அர்த்தம். பிறகு ஸ்ருஷ்டிசொல்லப்படப்போவதால். விஜாதீய ஸஜாதீய ஸ்வகத நாநாத்வ வ்யாவ்ருத்தியானது இவ்விடத்தில் விவக்ஷிக்கப்பட்டிருக்குமேயாகுல் அக்ரே என்று சொல்வது பொருந்தாது ப்ரஹ்மத்திற்கு ஒரு காலவிசேஷத்தில் நிர்விசேஷத்வம் என்கிறதில்லையன்றோ — $ வைஷம்ய ꙮ நைர்க்ருணய பரிஹாரத்தின்பொருட்டு ஜீவர்களுடைய பஹுத்வமென்ன அவர்க

@ உபாதானம்—எடுத்துக்கொள்ளுதல்.

† த்ரவ்யம்—வஸ்து அல்லது பதார்த்தம். ¶ ஸாதாரணம்—பொதுவானது.

‡ நிர்ணயகம்—நிச்சயத்தை உண்டுபண்ணுகிற வஸ்து.

|| வ்யாவஹாரிகம்—உலகவழக்கத்திலுள்ளது.

ꙮ வைஷம்யம்—எல்லா ப்ராணிகளிடத்திலும் ஸமபாவனை இல்லாமை.

$ நைர்க்ருண்யம்—தயையற்றிருத்தல்.

ருடைய கர்மங்களின் ப்ரவாஹமென்ன அவைகளின் அநாதித்வமென்ன இவைகள் ஒப்புக்கொள்ளத்தக்கதாக இருப்பதாலும் அந்த ஜீவர்களின் பஹுத்வமானது அபாரமார்த்திகமென்று சொல்லப்படுமேயாகில், அல்ல;— பாரமார்த்யபஹுத்வம் இப்பொழுதுமில்லாமையால் அத்ர [illegible] அத்ர சப்தத்துக்கு அவ்வதாரார்த்தத்வமென்பதுகூடாது. அந்த ஸ்ருஷ்டிக்கு முற்பட்டதால் - அதனால் காலரூபமான விஜாதீயபேதமும் சேதநாசேதனஸஜாதீய பேதமும் ஸர்வஜ்ஞத்வம் முதலான ஸ்ருஷ்டிக்கு அநுகுணமான குணரூபமான ஸ்வகதபேதமும் அப்போதிருக்கின்றதாதலால் விஜாதீயம் முதலிய மூன்றுவிதபேதங்களின் நிராஸபரத்வம் விருத்தம் - காரணவாக்யமாயிருப்பதால். இது காரணவாக்யமாக இல்லாவிடில் இப்படிப்பட்ட வாக்யங்களுக்கு ஸர்வசாகாப்ரத்யயந்யாயத்தால் விஜாதீயம் முதலியதின் பேதநிராஸத்தில் நோக்கு இருப்பதுபற்றி காரணபரத்வமில்லாமையால் ப்ரஹ்மகாரணத்வம் அப்ரமாணமாகவேண்டிவரும். நிச்சயப்பொருளை உணர்த்துகின்றதும் தன்னாலே விலக்கத்தக்க வஸ்துவிசேஷத்தை உபஸ்தாபிப்பதில் ஸாமர்த்தியமுள்ளதாகவுமிருக்கிற ஏவகாரத்திற்கு சேர்ந்து ப்ரயோகிக்கப்பட்டிருக்கிற மற்றொரு பதத்தின் அர்த்தத்திற்கு விருத்தமான அர்த்தத்தை விலக்கும் தன்மை தவறாமல் காணப்படுவதால் ‘ஸதேவ’ என்கிற அவதாரணமானது அஸத்கார்யவாதத்தைத் தள்ளுவதில் நோக்குள்ளது. ‘இவன் கற்றறிந்தவனே’ என்கிற வாக்யப்ரயோகத்திலிருக்கிற ஏகாரமானது ப்ராஹ்மணத்தன்மையை விலக்காதன்றோ. பின்னையோ கற்றறியாமையையே வ்யாவர்திக்கிறது. ஆதலால் சப்தஸ்வாரஸ்யத்தால் ஸதேவ என்பதனால் நிரஸிக்கத்தக்கது அஸத்த்வமே ஒழிய விஜாதீயபேதமல்ல. என்றாலும் அஸத்தானது ஸத்தைக்காட்டிலும் விஜாதீயம். ஆயினும் அதற்கு வ்யாவர்திக்கத்தக்கதன்மையானது விஜாதீயத்வாகாரத்தாலல்ல. பின்னையோ ஸத்துக்கு விரோதியாக இருந்ததலால் - ஸதேவ - ஒருபொழுதும் அஸத்தில்லை என்று அர்த்தம். ஸத் சப்தமானது ப்ரமாணஸம்பந்தயோக்யதாரூபமான ஸத்வத்தை ப்ரவ்ருத்தி நிமித்தமாகக்கொண்டு பரமாத்மாவினிடத்தில் நிலைபெற்றிருக்கிறது. இந்த ஸத் சப்தமானது விசேஷ்யமாக இருக்கிற பரமாத்மாவைச்சொல்லுகிறதாக இருந்தபோதிலும் காரணவிஷயத்வ ஸாமர்த்யத்தினால் காரணத்வத்திற்கு உசித்த குணங்களோடு கூடியவனும ப்ரக்ருதி புருஷன் காலம் இம்மூன்றையும் சரீரமாகக்கொண்டவனுமான பரமாத்மாவை உணர்த்துவிக்கிறது. ஏகமேவ என்பது நாமரூப விபாகமில்லாத காரணாவஸ்தையுடன்கூடின ப்ரஹ்மத்தைச் சொல்லுகிறது. காரணத்வாவஸ்தையில் ஏகத்வ நிச்சயமானது ‘பஹுஸ்யாம்’ என்று பஹுபவந ஸங்கல்பத்தால் ஸ்ருஷ்டிக்கப்போகிற கார்யவர்க்கங்களின் பஹுத்வத்திற்கு ப்ரதியோகியான வஸ்துவின் ஏகத்வத்தை ப்ரதானமாகக்கொண்டிருப்பதாலும் ஒரு ம்ருத்பிண்டத்தினால் மண்மயமான கார்யவர்க்கம் அறிந்ததும் என்று உரைக்கப்பட்ட திருஷ்டாந்த ஸாமர்த்யத்தினாலும் “தத்தேதம் தர்ஹ்யவ்யாக்ருதமாஸீத், தந்நாமரூபாப்யாம் வ்யாக்ரியத” என்கிற ச்ருத்யந்தரத்தோடு அர்த்தைக்யமிருப்பதாலும் இதுவே அர்த்தம். வைசேஷிகன் முதலியவர்களால் நித்யம் என்று கூறப்பட்டிருக்கிற ஆகாசம் முதலியவற்றுக்குங்கூட ஸம்ஹாரம் உண்டு என்கிற அபிப்ராயத்துடன் கூடியது. ஏவகாரம் இவ்வண்ணம் நாமரூபவிபாகமில்லாமையால் ப்ரஹ்மத்திற்கு உபாதாநத்வம் ஸித்தித்தது. இனிவரப்போகிற அவஸ்தா விசேஷத்தோடுகூடியதான ஒரு வஸ்துவுக்கு முந்திய அவஸ்தை (நிலைமை) யின் ஸம்பந்தமல்லவோ உபாதாநத்வம் ‘அத்விதீயம்’ என்கிற பதத்தினால் நிமித்தாந்தரம் நிஷேதிக்கப்பட்டது. உபாதாநம் ப்ரஸ்துதமாக இருப்பதுபற்றி நிமித்தகாரணம் புத்தியில் நிலைபெற்றிருப்பதாலும் பாரதந்த்ர ரூபமான விசேஷங்கள் விதிக்கப்பட்டிருப்பதாலும், நிஷேதமானது விதிக்கப்பட்டிருப்பதைவிட மற்றதை விஷயமாகக்கொண்டிருப்பதாலும்

மேலுள்ள வாக்யத்திற்கு ஸங்கதி அபேக்ஷிக்கப்பட்டிருப்பதாலும். "ஏகமேவ" என்கிற சப்தத்திற்கு அவிபக்தநாமரூபதா பரத்வமானது "பஹுஸ்யாம்" என்கிற வாக்யத்தால் அறியப்படுகிறது. "ததைக்ஷத தத்தேஜோऽஸ்ருஜத" என்கிற இந்த சுருதி வாக்யங்களால் அத்விதீயபதத்திற்கு நிமித்தாந்தராபாவத்தில் நோக்கு அறியப்படுகிறது. பரப்ரஹ்மமானது எப்போதுமிருப்பதால் "ஸதேவ" என்கிற அவதாரணமானது அஸத்கார்யவாதநிரஸனத்தில் தாத்பர்யமுள்ளதாயிருக்கிறதென்று மேலேயிருக்கிற "கதமஸத: ஸஜ்ஜாயேத" இது முதலிய வாக்யத்தால் அறியப்படுகிறது. "கதம்அஸத:" இது முதலான வாக்யமானது வைசேஷிகனுடைய மதநிராஸத்தில் கருத்துள்ளதேயொழிய க்ஷணிகவாதிகளை நிரஸிப்பதில் நோக்குள்ளதுமல்ல, சூன்யவாதிகளை நிரஸிப்பதில் நோக்கமுள்ளதுமல்ல. க்ஷணிகவாதி, சூன்யவாதி, இவ்விருவர்கள் விஷயமாக நிராஸம்செய்யப்பட்டிருந்தபோதிலும ஏகவிஜ்ஞானத்தால் ஸர்வவிஜ்ஞானமானது வைசேஷிகமதநிராஸத்தை அபேக்ஷித்திருப்பதாலும "தத்தைகஆஹு: அஸதேவேதமக்ர ஆஸீத" என்று ஆரம்பிக்கப்பட்டிருப்பதாலும். க்ஷணிகத்வமும் சூன்யத்வமும் காலவிசேஷத்தில் உண்டாகிறதில்லையன்றோ. ஆதலால் "தத்தைகஆஹு:" இது முதலிய வாக்யம் அஸத்கார்யவாதநிராஸத்தில் நோக்குள்ளது. "குதஸ்துகலு ஸோம்யைவம் ஸ்யாத்" என்பதனால் ம்ருத்தினின்றுமுண்டான கடம் முதலியவைகளுக்கு ம்ருத்ஸ்வரூபத்வம்போல அஸத்தினின்றுமுண்டான வஸ்துவுக்கு அஸத்ஸ்வரூபத்வம்ப்ரஸங்கிக்குமென்று கருத்து. உத்பத்தியாவது திரவ்யத்திற்கு உண்டாகிற ஓர் அவஸ்தை என்கிற இந்த அர்த்தமானது, "வாசாரம்பணம்" என்கிற இந்த வாக்யத்தால் சிக்ஷிக்கப்பட்டிருக்கிறது - அதை அவலம்பித்து 'கதம்அஸத: ஸஜ்ஜாயேத" என்று உரைக்கப்படுகிறது எவ்வாறு நிராச்ரயவஸ்துவுக்கு ஸம்பவமென்று அர்த்தம். "ததைக்ஷத" என்பதினால் ஸர்வஜ்ஞத்வமும "அஸ்ருஜத" என்பதினால் நிமித்தத்வமும 'பஹுஸ்யாம்" என்பதினால் உபாதானத்வமும அந்த நிமித்தத்வ உபாதானத்வமிரண்டுக்கும் அநுகுணமான ஸர்வசக்தித்வமும ஸத்யஸங்கல்பத்வமும் "அநேநஜீவேந ஆத்மநா அநுப்ரவிச்ய" என்று ஸர்வாந்தரத்வமும சொல்லப்பட்டதாக ஆகிறது. ஜீவேந ஆத்மநா—ஜீவனை சரீரமாகக்கொண்ட என்றால் என்று அர்த்தம். "ஸிம்ஹேந பூத்வா ஹவோமயா தத்தா: வ்யாக்ரேண பூத்வா ஹவோ மயாத்தா:" என்பதுபோல. ஸர்வஜ்ஞத்வம் முதலிய குணங்களையுடைய பரமாத்மாவுக்கு அதற்கு விபரீதமான ஸ்வரூபத்தோடுகூடின ஜீவனோடு ஐக்யம் ஸம்பவியாததாலும, "யஸ்யாத்மாசரீரம்" இது முதலிய வசனத்தாலும "ததநுப்ரவிச்ய" என்று அசேதநத்தைப்போல ஜீவனிடத்திலும அநுப்ரவேசச்ரவணமிருப்பதாலும், சரீரவாசக சப்தத்திற்கு சரீரிபர்யந்தத்வமானது முக்யமென்பது பொருந்துதலாலும இதுவே அர்த்தம் - "ஸதாயதநா:" என்பதனால் ஸர்வாதாரத்தையும் அதனாலேயே ஸர்வநியமனமும ஸித்தித்தது. "ஏதஸ்யவா அக்ஷரஸ்ய ப்ரசாஸநே கார்கி த்யாவாப்ருதிவ்யௌ வித்ருதே திஷ்டத:" என்று ப்ரசாஸனத்தினால் தாரகத்வம் கேட்கப்படுதலால். இவ்வண்ணமாக சரீரிக்கு லக்ஷணங்களாக இருக்கிற ஸர்வாதாரத்வ ஸர்வநியமன ஸர்வாந்தரத்வங்களாலே ப்ரஹ்மம் ஜகத்தையே சரீரமாகக்கொண்டது என்பது சொல்லப்பட்டது. ஆதிசப்தத்தால் ஸ்ருஷ்டிக்கு உபயுக்தங்களாயிருக்கிற வேறு ச்ருதிகளால் ஸித்தித்திருக்கிற குணங்கள் க்ரஹிக்கப்படுகின்றன. "ஐததாத்ம்யம்" என்பதினால் உலகமனைத்துக்கும ப்ரஹ்மாத்மகத்வமும் அறியப்படுகிறது. "தத்ஸத்யம்" என்பதனால் அந்த ப்ரஹ்மாத்மகமாயிருத்தலாலேயே ஜகத்துக்கு ப்ராமாணிகத்வம - ஜகத் தன்னிடத்தில் நிலைபெற்றிருப்பதாக உண்டாகிற எண்ணம் ப்ராந்தி என்று அர்த்தம். ஆகையால் எல்லா உலகத்துக்கும் அவன் ஆத்மா "ஐததாத்ம்யம இதம ஸர்வம ஸ ஆத்மா" என்கிற நிர்தேசமானது

“ ராமாநுஜம் லக்ஷ்மண பூர்வஜஞ்ச ” என்பதுபோல் அந்யோந்ய ஸம்பந்தித்வ தாத்பர்யாதிசயத்தால் செய்யப்பட்டிருக்கிறது. அன்றிகே “ ஸத ஆத்மா அந்தர்யாம்யம்ருத: ” என்பதுபோல எல்லா உலகத்துக்கும அந்தர்யாமியாயிருப்பதால் உனக்கு ஆத்மா அவன என்று அர்த்தம். ஆகையால் “ த்வம் ” சப்தமென்ன, அதினர்த்தமென்ன, அது விஷயமான புத்தியென்ன இம்மூன்றும் ‘ தத ’ சப்தவாச்யமான ப்ரஹ்ம பரியந்தங்களாக இருக்கின்றனவென்று “ தத்வமஸி ” என்ற வாக்யத்திற்கு பொருள் என்று கூறுகிறார்—ஏவம்பூத என்று ‘ ஏவம்பூத ’ சப்தத்தினல் ‘ தத் ’ பதத்துக்கு ப்ரக்ருத பராமர்சித்வம் ஸூசிப்பிக்கப்பட்டது. இந்த ஸத்வித்யைக்கு ஸவிசேஷமான வஸ்துவினிடத்திலேயே ஆறுவிதமான தாத்பர்யலிங்கங்களிருக்கின்றன. தொடக்கத்தில் “ உத்தமாதேசம ப்ராக்ஷ்ய: ” என்கிற ஆக்ஷேபசப்தத்தினுல் ப்ரசாஸிதா கூறப்படுகிறுன். இந்த விஷயத்தில் இரண்டு ச்லோகங்கள் ஆசார்யபாதாளால் அநுக்ரஹிக்கப்பட்டிருக்கின்றன “ சாந்தோக்யே கேசிதாஹுராதிசதிருத்தமாதேசம ப்ராக்ஷ்ய இத்யத்ராங்பூர்வஸ்துபதேசம ப்ரகடயதி ஸதோநப்ரசஸ்திமவஜ்ஞாந்த: | நோகர்தர்யஸ்தி கர்மண்யகணிவஜ்ஞிஹ ஸதகர்த்ருசாஸ்தெள ந கர்மஸ்யாத் ஸ்யாத்கர்மோபதேசே ததிசமுத்தமாதேசவாசோபதேச்யம் || அத்ரப்ரூம: ப்ரசாஸ்திம் வததிதிசிரஸாவாங்முகோநோபதேசம சாஸ்தெள ஸோऽதிப்ரஸித்தோ நஹிபரஇஹசாபேக்ஷிதார்த்த ப்ரஸங்க: | யுக்தோஸாதாரணேக்த்யா வஜ்ஞகணிகரணேப்யத்ர வைவக்ஷிகத்வம் சாப்தோக்தம் காரகாணுமநுகரணதயாகர்தரிஸ்யாத்விவக்ஷா || என்று. (இதன் அர்த்தம் - சாந்தோக்யத்தில் “ உத்தமாதேசம ப்ராக்ஷ்ய.” என்கிறவிடத்திலுள்ள ஆங என்கிற உபஸர்கத்தை முந்திவைத்துக்கொண்டிருக்கிறதும வஜ்ஞ ப்ரத்யயத்தை ஈற்றில்கொண்டதுமான திஶ என்கிற தாதுவானது உபதேசம் என்கிற அர்த்தத்தை வெளிப்படுத்துகிறது. ஸச்சப்தவாச்யமான பரமாத்மாவினுடைய சாஸனத்தை வெளிப்படுத்துகிறதில்லை. வஜ்ஞ ப்ரத்யயமானது கர்த்தா என்கிற அர்த்தத்தில் சப்தசாஸ்த்ரத்தில் கிடையாது. கர்மத்வ ரூபார்த்தத்தில் வஜ்ஞ பாணினியினுல் விதிக்கப்பட்டிருக்கிறது. இந்தவிடத்தில ஸச்சப்தவாச்யமான பரமாத்மா என்கிற கர்த்தாவினுடைய சாஸனத்தில் கர்மணிவிஹிதமான வஜ்ஞ வாராது. கர்மோபதேசத்தில் வஜ்ஞ ப்ரத்யயமிருக்குமேயானுல் உத்தமாதேச என்கிற சுருதிவாக்யத்தினுல் அந்த கர்மத்வரூபமான அர்த்தமே உபதேசிக்கத்தக்கதாகுமென்று சொல்லத்தகாது என்று சிலர் கூறுகிறார்கள். இந்த விஷயத்தில் மறுமொழி கூறுகிறோம—முதலில ஆங என்கிற உபஸர்கத்தையுடைய இந்த திஶி என்கிற தாதுவானது ப்ரசாஸ்தியைக்கூறுகிறது. உபதேசத்தைக் கூறுகிறதில்லை அந்த ஆதேச சப்தமானது சாஸனரூப அர்த்தத்தில் மிக்க ப்ரஸித்தி பெற்றிருக்கிறது - இங்கேயும வேறிடத்திலும அபேக்ஷிக்கப்பட்ட அர்த்தத்துக்கு ப்ரஸங்கமில்லையன்றோ - அஸாதாரணேக்தியினுல் வஜ்ஞ ப்ரத்யயமானது இங்கு கரணத்வரூபார்த்தத்திலும விதிக்கப்பட்டிருக்கிறது என்பது யுக்தம காரகங்களுக்கு வைவக்ஷிகத்வம் சாப்திகர்களால் உரைக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் கரணத்வரூபார்த்தத்தில் விதிக்கப்பட்டிருந்தபோதிலும் இந்தவிடத்தில் வஜ்ஞ ப்ரத்யயத்துக்கு கர்தரிவிவக்ஷை இருக்கலாம் என்பதனுல் இஷ்டஸித்தி)

ஆதேச சப்தத்தால் உபதேசிக்கத்தக்க வஸ்து கூறப்படுகிறது. உபதேசம் என்பது ப்ரக்ருதியினது அர்த்தம். ப்ரத்யயார்த்தம் கர்மத்வம்:— “ அகர்தரிசகாரகேஸம்ஜ்ஞாயாம் ” என்கிற பாணினி ஸூத்திரத்தினுல் கர்த்தாவைக்காட்டிலும் வேருன காரகங்களில் வஜ்ஞ ப்ரத்யயம விதிக்கப்பட்டிருப்பதால் உபதேசத்தில் ப்ரஹ்மத்துக்கு கர்மத்வம் உபபந்நமாவதாலும். ப்ரசாஸனத்திலோவென்றுல் பிரஹ்மமானது கர்மாவல்ல.

பின்னையோ கர்த்ரு கர்தாவைக்காட்டிலும் வேருக இருக்கிற காரகங்களிலன்றோ ல்யுட் ப்ரத்யயம் விதிக்கப்பட்டிருக்கிறது. இந்த இடத்தில் "கர்தரிச ப்ரத்யயம்" என்பது பொருந்தாது—"கிஙிதிச" என்று குணத்தை நிஷேதித்திருப்பதால் ஆதேச சப்த ரூபம் ஸித்திபெருது. "பசாத்யச் ப்ரதயயம் என்பதும் பொருந்தாது. திசி தாதுவானது இக்ப்ரத்யாஹார கடகமான இ என்கிற அக்ஷரத்தை ஈற்றுக்கு முந்தின எழுத்தாகக்கொண்டிருப்பதால். "இகுபதாத்க:" என்கிற அபவாத ஸூத்ரத்தினுல் ப்ரத்யயம் வருவதால் குணம்வாராது—ஆதலால் இந்த ஆதேசசப்தமானது ல்யுட் ப்ரத்யயாந்தமே - அந்த ப்ரத்யயமோ கர்தா என்ற அர்த்தத்தாலே விதிக்கப்பட்டிராததினுல் கர்மார்த்தத்வமே யுக்தமாதலால் உபதேசிக்கத்தக்கதே ஆதேச சப்தத்திற்கு வாச்யமென்று. இந்த விஷயத்தில் மறுமொழிசொல்லப்படுகிறது. ப்ரஸித்தி ப்ராசுர்யத்தால் சாஸனம் ப்ரக்ருதியின் அர்த்தம். அங்ஙனமில்லாவிடில் ஸ்வாரஸ்ய பங்கம் வருவதால். முதலில் ஆ என்கிற உபஸர்கத்தையுடைய திசி தாதுவானது நியோக்தாவினுடைய ப்ரயோஜனத்தைக்கூறுகிறது. முதலில் உப என்கிற உபஸர்க்கத்தையுடைய திசி தாதுவானது நியோஜ்யனுடைய ப்ரயோஜனத்தைக் கூறுகின்றதல்லவோ என்று ந்யாஸகாரர் சொல்லுகிறுர் - நியோக்தரி ப்ரயோஜனம் யஸ்ய - எந்த அர்த்தத்துக்கு நியோக்தாவினிடத்தில் ப்ரயோஜனமிருக்கிறதோ, அர்த்தத்துக்கு வாசகம் என்று அர்த்தம். இவ்வண்ணம் மற்றவிடத்திலும் - மேலும் உபதேச்யதவமென்பது லௌகிகமான கர்மபாகார்த்தத்துக்கும் அலௌகிகமான ப்ரஹ்மபாகார்த்தத்துக்கும் பொதுவானது - சாஸித்ருத்வமோவெனில் ப்ரஹ்மத்துக்கு அஸாதாரணம். "அந்த: ப்ரவிஷ்டச்சாஸ்தாஜ நாநாம்", "ஏதஸ்யவா அக்ஷரஸ்யப்ரசாஸநே கார்கி" இது முதலிய ச்ருதிகளால் நிருபாதிகமான ப்ரசாஸனமானது ப்ரஹ்மத்துக்கே உரித்ததென்று ச்ருதி சொல்லுவதால். நிருபாதிகமான உபதேச்யத்வமானது ப்ரஹ்மத்துக்கே உரித்தது என்று சொல்லப்படுமேயானுல் அல்ல. இஷ்டப்ராப்தி, அநிஷ்ட நிவ்ருத்தி, அவைகளுக்கு ஸாதனங்கள் இவைகளுக்கு பொதுவாயிருப்பதால். என்றாலும் அபரிமிதமான ஸுகப்ராப்திது:கநிவ்ருத்தி முதலியது ப்ரத்யக்ஷமாக உபதேசிக்கத்தக்கதாக இருக்கலாம். ஆயினும் ஸம்ஸார நிவ்ருத்தி, ப்ரஹ்மம், ப்ரஹ்ம உபாஸனங்கள் இவை அனைத்துக்கும் உபதேச்யத்வமென்பது ஸாதாரணம் - ப்ரச்நம் செய்யத்தக்க வஸ்துவுக்கு உபதேச்யத்வம் அர்த்தத்தால் ஸித்தித்தது. ஆதலால் உபதேச்யத்வகதநம் ப்ரயோஜனமற்றது. "யேநாச்ருதம் ச்ருதம்" இந்த ச்ருதிவசநத்தோடு ஏகவாக்யத்வமிருப்பதால். தன்னை கற்றறிந்தவரோ அறிந்ததனுல் மற்றவைகளின் அறிவுக்குக்காரணமாயிருத்தல் என்கிற தன்மையினுல் விசேஷிக்கப்பட்டிருக்கிற உபதேச்யத்வமானது அஸாதாரணமென்றுசொல்லப்படுமேயானுல், அப்படியிருந்தபோதிலும் அப்படிப்பட்ட உபதேச்யத்வமானதுப்ரதிஜ்ஞா வாக்யத்தாலும் ப்ரஷ்டவ்யத்வயுக்தியினுலும் அர்த்தஸித்தமாயிருப்பதுபற்றி அநபேக்ஷிதமான உபதேச்யத்வத்தைச்சொல்வதைக்காட்டிலும் அபேக்ஷிதமாயிருக்கிற ப்ரசாஸித்ருத்வமே சொல்லத்தக்கது என்பது பொருத்தமுள்ளது. "யேநாச்ருதம்" என்பதினுல் உபாதாநத்வம் ஸித்தித்திருக்க. ப்ரசாஸித்ருத்வத்தினுலன்றோ நிமித்தத்வம் ஸித்திக்கும்—ப்ரபஞ்சத்திற்கு ப்ரஹ்மத்தைத்தவிர்த்து வேறு நிமித்தமிருக்குமேயானுல் ஏகவிஜ்ஞானத்தால் ஸர்வவிஜ்ஞானத்வம் பொருந்தாது. ஆதலால் ப்ரதிபாதிக்கவேண்டுமென்று விரும்பப்பட்டிருக்கிற வஸ்துவை விவக்ஷிதமான அஸாதாரண ஆகாரத்தோடு கூடியதாகவே ப்ரதிபாதிப்பது தகுதியுள்ளது. ல்யுட் ப்ரத்யயமானது காணரூபார்த்தத்தில் வ்யுத்பந்நமாக இருப்பதால் விவக்ஷாத:காரகாணும் ப்ரவ்ருத்தி:" என்கிற சாப்திகர்களால் கூறப்பட்ட ந்யாயத்தாலே கர்தாவினிடத்திலேயே வேறு காணத்தை அபேக்ஷியாமல் ஸாதகதமத்வத்தை விவக்ஷிப்பதினுல் அவ்வாறு ப்ரயோகம் உபபந்ந

மாகிறது. அகாரி என்கிற ஸூத்ரத்துக்கு காரணத்வ விவக்ஷையில்லாவிடில் கர்த்தாவி னிடத்தில் அஸாக்ஷாதலால நிவ்ருத்தி ப்ரயோஜனம உபதேச பக்ஷத்தில் ப்ரக்ருத்யர்த்தத்தின் அஸ்வாரஸ்யமும் ப்ரத்யயத்தின் ஸ்வாரஸ்யமும வருகிறது. ப்ராசாஸன பக்ஷத்திலோவென்றால் ப்ரத்யயத்தின அஸ்வாரஸ்யமும் ப்ரதாநபூதமான ப்ரக்ருத்யர்த்த ஸ்வாரஸ்யமும் அர்த்தத்தின ஔசித்யமும் என்பதினுல் வைஷம்யம். ஆதலால் ப்ரசாஸ்த்தாவே ஆதேச சப்தத்தால் சொல்லத்தக்கவனென்று ஸ்வீகரிப்பது யுக்தம். இவ்வண்ணம் உபக்ரமத்தில் நிருபாதிகமான ப்ரசாஸனகுணஸம்பந்தம உரைக்கப்பட்டது. அவ்வண்ணமே ஜகதுபாதாநத்வமும் நிமித்தத்வமும் அதற்கநுகுணமான ஸர்வஜ்ஞத்வம் ஸர்வசக்தித்வம் முதலியன அறியப்பட்டது. உபஸம்ஹாரத்திலும் தத்த்வமஸி என்கிற ஸாமாநாதிகரண்யத்தால் ஜீவாந்தர்யாமித்வம் என்கிற குணவிசேஷம் உரைக்கப்பட்டது. இதே அர்த்தமானது அநேகம் தடவை ஆவ்ருத்திக்கப்பட்டிருப்பதால் அப்பியாஸமுமிருக்கிறது இவ்வண்ணம ப்ரஹ்மத்தினுடைய ஜகத்காரணத்வம, ஜகதந்தராத்மத்வம் முதலிய குணங்கள் ப்ரமாணாந்தரத்தால் அப்ராப்தமாயிருப்பதால் அபூர்வதையும் ஸித்தித்தது. இவ்வண்ணம் உபாஸகனுக்கு “ தஸ்ய தாவதேவ சிரம் யாவந்ந விமோக்ஷ்யே அத ஸம்பத்ஸ்யே ” என்று சரீரம கழிந்த உத்தரக்ஷணத்தில் மோக்ஷம் கேட்கப்படுவதால் பலனுமிருக்கிறது புத்ரனைக்குறித்து பிதாவினுடைய ப்ரதிவசன ரூபமாகயிருப்பதால் அர்த்தவாதமும் அடையப்பட்டது ம்ருத்பிண்டம் முதலிய த்ருஷ்டாந்தத்தின் உபபாதனத்தினுல் உபபத்தியும் ஸித்தித்தது. இந்த மூன்று த்ருஷ்டாந்தத்திலும் விவர்த பக்ஷத்துக்கநுகுணமான ஒரு த்ருஷ்டாந்தமும் காணப்படவில்லை, பின்னையோ பரிணாமபக்ஷத்துக்கநுகுணமாகவே காணப்படுகிறது. தார்ஷ்டாந்திக விஷயவாக்யத்திலும் “ ததேஜோऽஸ்ருஜத ” என்று உரைக்கப்பட்டதேயொழிய “ ததப்ரமத் ” என்று உரைக்கப்படவில்லை - ஆதலால் இந்த ச்ருதியில் விவர்தபக்ஷ ப்ரஸங்கமுமில்லை. ச்ருத்யந்தரங்களிலும் “ததாத்மாநம்ஸ்வயம் அகுருத” இது முதலியவை கேட்கப்படுகிறதே ஒழிய “ வ்யவர்த ” என்று கேட்கப்படவில்லை. ஸூத்திரமும் பரிணாமாத் என்று இருக்கிறதேயொழிய விவர்தாத என்று இல்லை ஸ்ம்ருதிகளிலும் “ கடகமகுடகர்ணிகாதிபேதை: கநகமபேதமபீஷ்யதேயதைகம் - க்ஷிதிதலபரிணாமதோ நிலாந்த: ”—(அர்த்தம் ஒரு ஸ்வர்ணமானது கடகம மகுடம் செவிப்பூ முதலிய பற்பல ஆபரண பேதங்களாலே வேறுபாடுள்ளதாக எண்ணப்படுகிறது - பூமியினது பரிணாமத்தாலே.) இது முதலியவைகளில் பரிணாமபக்ஷங்களே காணப்படுகின்றன. ஆதலால் ச்ருதிஸ்ம்ருதி ஸூத்ரங்களின் ஸ்வாரஸ்யத்தால் பரிணாமமே ஒப்புக்கொள்ளத்தக்கது அந்த பரிணாமமும அத்வாரகமாகவே இருப்பதற்குத்தகுதியுள்ளதாக இருக்கிறது—நிர்விகாரத்வ நிர்தோஷத்வ, அநுப்ரவேச சரீர சரீரிபாவாதிகளை விஷயமாகக்கொண்ட அநேக ச்ருதிஸ்வாரஸ்யத்தாலும், அப்படியிலலாவிடில் அவைகளுக்கு விரோதம் ப்ரஸங்கிப்பதாலுமென்று ஏகவிஜ்ஞானத்தால் ஸர்வவிஜ்ஞான ப்ரதிஜ்ஞா வாக்யம் எது ? அதின உபபாதநம் எவ்வாறு ? என்று ஆசங்கைவரின இதின் விஸ்தாரம் வேதார்த்த ஸங்க்ரஹத்தில என்று கூறுகிறார்—ப்ரபஞ்சித: என்று. இந்தவிடத்தில் அபேக்ஷிக்கப்பட்ட அர்த்தமானது எவ்வாறு அறியப்படப்போகிறதென்று கேட்கப்படுமேயாகில் கூறுகிறார்—அத்ராபி என்று. நிபுணதரம் - அந்த அதிகரணமானது இந்த அர்த்தத்தையே விஷயாகக்கொண்டிருப்பதால் என்று கருத்து.

“ யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே ” (தை-௩-௧-௧) இத்யத்ர ஸந்தேஹ:
கிமஸ்மாத் வாக்யாத் ப்ரஹ்ம லக்ஷணத:

ஸூக்ஷ்மத்வஸர்வகதத்வாவ்யயத்வபூதயோநித்வ ஸர்வஜ்ஞத்வாதிகல்யாண குண யோகஃ பரஸ்ய ப்ரஹ்மணஃ ப்ரதிபாதிதஃ ।

ஸ்ரீ பாஷ்யம்.—

"அதபரா யயா" என்கிற ச்ருதியிலும், ப்ராக்ருதங்களான ஹேய குணங்களை நிஷேதித்து பரப்ரஹ்மத்திற்கு நித்யத்வம், விபுத்வம் ஸூக்ஷ்மத்வம், ஸர்வகதத்வம், அவ்யயத்வம், பூதயோநித்வம் ஸர்வஜ்ஞத்வம் முதலிய கல்யாணகுணங்களின் ஸம்பந்தம் ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கிறது.

ச்ருதப்ரகாசிகை.—

அநந்தரம் உதாஹரிக்கப்பட்டிருக்கிற ப்ரவித்யைக்கு ஸவிசேஷபரத்வத்தைக்கூறுகிருர்-அதபராயயா இது முதலியதால். "அபாணிபாதம்" என்பதை ஈற்றிலுள்ள பதங்களுக்கு விஷயத்தைக்கூறுகிருர்—ப்ராக்ருதாந் என்று. ப்ராக்ருதா: - ப்ரக்ருதி ஸம்பந்தம்பெற்றவைகள - இதனுல் ஓரிடத்தில் ஸித்தித்திருப்பதற்கன்றோ ஓரிடத்தில் நிஷேதம் என்பதனுல் நிஷேத்யங்களுக்கு ஓரிடத்தில் ஸித்தியானது காண்பிக்கப்பட்டதாக ஆகிறது. ப்ரக்ருதியை அடைந்தவைகளும், ப்ரக்ருதிஸம்பந்தத்தால் உண்டுபண்ணப்பட்ட ஜீவர்களை அடைந்திருக்கிற தோஷங்களும் ப்ராக்ருதங்கள். "அத்ரேச்யம் அக்ராஹ்யம்" — ப்ரத்யக்ஷப்ரமாணத்துக்கும் அகோசரம் - அநுமானம்முதலிய ப்ரமாணங்களுக்கும் அகோசரம். அன்றிக்கே கண்ணுக்கும் அகோசரம். கண்ணைத்தவிர்த்து மற்ற இந்திரியங்களுக்கும் அகோசரம். அகோத்ரம் அவர்ணம் - ப்ராக்ருதமான நாமரூபங்களால் விடுபட்டது. அசக்ஷுஃச்ரோத்ரம் - இந்த்ரியாதீன ஜ்ஞானமுள்ளதல்ல. அபாணிபாதம் - இந்திரியங்களுக்கு அதீனமான சேஷ்டையோடுகூடினதல்ல. "அபாணிபாதோ ஜவநோக்ருஹீதா" "பச்யத்யசக்ஷுஃஸ ச்ருணோத்யகர்ண:" என்று சுருதியிருப்பதால். இந்த இரண்டு பதத்தால் ஜீவனை அடைந்திருக்கின்ற ஹேயநிஷேதம் கூறப்பட்டது. இந்த்ரியாதீனமான ஞானத்வமும் அந்த ஜ்ஞானத்திற்கு அதீனமான ப்ரவ்ருத்தித்வமும ஜீவகத தர்மம "ஸர்வகதம் ஸுஸூக்ஷ்மம்" என்று பாடக்ரமம். அப்படியிருந்தபோதிலும் அர்த்தக்ரமத்தாலே ஸூக்ஷ்மத்வ ஸர்வகதத்வ என்று வ்யாக்யானம் பண்ணப்பட்டது. ஸூக்ஷ்மமாயிருப்பதனுலன்றோ வ்யாப்தி ஏற்படுகிறது. நித்யமாயிருப்பதால் காலபரிச்சேதமின்மை விபும்-ப்ரபும் ப்ரபுத்வமாவது நியந்த்ருத்வம் - ஜகத்தை சரீரமாகக்கொண்டிருத்தல் பலித்தது. இதனுல் வஸ்துக்களால் பரிச்சேதிக்க ஒண்ணுமை ஸித்தித்தது ஸர்வகதத்வத்தால தேசபரிச்சேதத்தின்மை அவ்யயத்வமாவது - வ்யயசப்தத்தால் உபலக்ஷிதமான தோஷங்களுக்கு விரோதித்வரூப குணம் என்கிற அபிப்ராயத்தால் கல்யாணகுணங்களோடுகூட அவைகளின் நிர்தேசம். அன்றிக்கே அவ்யயத்வமாவது ஏகரூபத்வம—ஜகத்காரணத்வம் இந்த ப்ரகரணத்திலுள்ள "யஃஸர்வஜ்ஞஸ் ஸர்வவித்" என்கிற இந்த வாக்யத்தால ஸர்வஜ்ஞத்வம் உரைக்கப்பட்டது. ஸர்வஜ்ஞ:, ஸர்வவித - எல்லாவற்றையும ஸ்வரூபத்தால் அறிகிருன்-ப்ரகாரத்தால் அறிகிருன் என்று அர்த்தம். பரஸ்ய ப்ரஹ்மண: என்பதற்கு முனபோல அர்த்தம்.

"𑌸𑌤𑍍𑌯𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌨𑌨𑍍𑌤𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮" 𑌇𑌤𑍍𑌯𑌤𑍍𑌰𑌾𑌪𑌿 𑌸𑌾𑌮𑌾𑌨𑌾𑌧𑌿𑌕𑌰𑌣𑍍𑌯𑌸𑍍𑌯𑌾𑌨𑍇𑌕𑌵𑌿𑌶𑍇𑌷𑌣𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑍈𑌕𑌾𑌰𑍍𑌥𑌾𑌭𑌿𑌧𑌾𑌨𑌵𑍍𑌯𑍁𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑍍𑌯𑌾 𑌨 𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌶𑍇𑌷𑌵𑌸𑍍𑌤𑍁𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌃। 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌭𑍇𑌦𑍇𑌨𑍈𑌕𑌾𑌰𑍍𑌥𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌤𑍍𑌵𑌂 𑌸𑌾𑌮𑌾𑌨𑌾𑌧𑌿𑌕𑌰𑌣𑍍𑌯𑌂 𑌹𑌿 । 𑌤𑌤𑍍𑌰 𑌸𑌤𑍍𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌦𑌿𑌪𑌦𑌾𑌨𑌾𑌂 𑌮𑍁𑌖𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑍈𑌰𑍍𑌗𑍁𑌣𑍈𑌸𑍍𑌤𑌤𑍍𑌤𑌦𑍍𑌗𑍁𑌣𑌵𑌿𑌰𑍋𑌧𑍍𑌯𑌾𑌕𑌾𑌰𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌨𑍀𑌕𑌾𑌕𑌾𑌰𑍈𑌰𑍇𑌵𑍈𑌕𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑌰𑍍𑌥𑍇 𑌪𑌦𑌾𑌨𑌾𑌂 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌭𑍇𑌦𑍋𑌽𑌵𑌶𑍍𑌯𑌾𑌶𑍍𑌰𑌯𑌣𑍀𑌯𑌃। 𑌇𑌯𑌾𑌂𑌸𑍍𑌤𑍁 𑌵𑌿𑌶𑍇𑌷𑌃— 𑌏𑌕𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌪𑌕𑍍𑌷𑍇 𑌪𑌦𑌾𑌨𑌾𑌂 𑌮𑍁𑌖𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑌤𑌾 । 𑌅𑌪𑌰𑌸𑍍𑌮𑌿𑌂𑌸𑍍𑌤𑍇𑌷𑌾𑌂 𑌲𑌕𑍍𑌷𑌣𑌾 । 𑌨 𑌚𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌨𑍀𑌕𑌤𑌾 𑌵𑌸𑍍𑌤𑍁𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌮𑍇𑌵 । 𑌏𑌕𑍇𑌨𑍈𑌵 𑌪𑌦𑍇𑌨 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌨𑍍𑌨𑌮𑌿𑌤𑌿 𑌪𑌦𑌾𑌨𑍍𑌤𑌰𑌪𑍍𑌰𑌯𑍋𑌗𑌵𑍈𑌯𑌰𑍍𑌥𑍍𑌯𑌾𑌤𑍍 । 𑌤𑌥𑌾 𑌸𑌤𑌿 𑌸𑌾𑌮𑌾𑌨𑌾𑌧𑌿𑌕𑌰𑌣𑍍𑌯𑌾𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌶𑍍𑌚 । 𑌏𑌕𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌵𑌸𑍍𑌤𑍁𑌨𑌿 𑌵𑌰𑍍𑌤𑌮𑌾𑌨𑌾𑌨𑌾𑌂 𑌪𑌦𑌾𑌨𑌾𑌂 𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌭𑍇𑌦𑌾𑌨𑌾𑌶𑍍𑌰𑌯𑌣𑌾𑌤𑍍 । 𑌨 𑌚𑍈𑌕𑌸𑍍𑌯𑍈𑌵𑌾𑌰𑍍𑌥𑌸𑍍𑌯 𑌵𑌿𑌶𑍇𑌷𑌣𑌭𑍇𑌦𑍇𑌨 𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌤𑌾𑌭𑍇𑌦𑌾𑌦𑌨𑍇𑌕𑌾𑌰𑍍𑌥𑌤𑍍𑌵𑌂 𑌪𑌦𑌾𑌨𑌾𑌂 𑌸𑌾𑌮𑌾𑌨𑌾𑌧𑌿𑌕𑌰𑌣𑍍𑌯𑌵𑌿𑌰𑍋𑌧𑌿 ; 𑌏𑌕𑌸𑍍𑌯𑍈𑌵 𑌵𑌸𑍍𑌤𑍁𑌨𑍋𑌽𑌨𑍇𑌕𑌵𑌿𑌶𑍇𑌷𑌣𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌤𑌾 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑌨𑌪𑌰𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌸𑌾𑌮𑌾𑌨𑌾𑌧𑌿𑌕𑌰𑌣𑍍𑌯𑌸𑍍𑌯 ; "𑌭𑌿𑌨𑍍𑌨𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌶𑌬𑍍𑌦𑌾𑌨𑌾𑌮𑍇𑌕𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑌰𑍍𑌥𑍇 𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌸𑍍𑌸𑌾𑌮𑌾𑌨𑌾𑌧𑌿𑌕𑌰𑌣𑍍𑌯𑌮𑍍" 𑌇𑌤𑌿 𑌹𑌿 𑌶𑌾𑌬𑍍𑌦𑌿𑌕𑌾𑌃 ॥

ஸ்ரீ பாஷ்யம்—

ஸத்யம் ஜ்ஞானம் அனந்தம் ப்ரஹ்ம, என்கிறவிடத்திலும் ஸாமாநாதிகரண்ய பதத்திற்கு, அநேக விசேஷணங்களோடுகூடின ஒரு அர்த்தத்தைக் குறிப்பிட்டுச்சொல்லுதல் என்கிற வ்யுத்பத்தியினால் நிர்விசேஷ வஸ்துவுக்கு ஸித்தியில்லை - ஏனெனில் ப்ரவ்ருத்தி நிமித்தங்களின் பேதத்தால் பதங்களுக்கு ஒரு அர்த்தத்தில் வ்ருத்தித்வமல்லவோ ஸாமாநாதிகரண்யம் - அதில் ஸத்ய ஜ்ஞான முதலிய பதங்களுக்கு முக்யார்த்தங்களான குணங்களாலேயோ அந்தந்த குணங்களுக்கு விரோதிகளான ஆகாரங்களுக்கு ப்ரத்யநீகாகாரங்களாலேயே ஒருஅர்த்தத்தில் பதங்கள்ப்ரவ்ருத்திக்கும்பொழுது அவைகளுக்கு நிமித்தபேதம் அவச்யம் ஆச்ரயிக்கத்தக்கது. இவ்வளவு மாத்திரம் விசேஷம் - ஒரு பக்ஷத்தில் பதங்களுக்கு முக்யார்த்தத்வம், வேறு பக்ஷத்திலோ அவைகளுக்கு லக்ஷணை. அஜ்ஞானம் முதலியவைகளைக்காட்டிலும் வேறாயிருத்தல் வஸ்துவின் ஸ்வரூபமேயல்ல - ஒரே பதத்தால் ஸ்வரூபமானது அறியப்பட்டிருப்பதுபற்றி பதாந்தர

களின் ப்ரயோகத்துக்கு வையர்த்த்யம் வருவதால். அப்படியாகில் ஸாமாநாதிகரண்யத்துக்கு அஸித்தி வருகிறது:—ஒரு வஸ்துவில் வர்த்திக்கின்ற பதங்களுக்கு நிமித்தபேதாச்ரயணமில்லாமையால். ஒரே அர்த்தத்திற்கு விசேஷணபேதத்தால் விசிஷ்டதாபேதம் வருவதால் பதங்களுக்கு அநேகார்த்தத்வமானது ஸாமாநாதிகரண்ய விரோதியல்ல—ஸாமாநாதிகரண்யமானது ஒரு வஸ்துவுக்கே அநேக விசேஷணங்களோடு கூடியிருத்தலை ப்ரதிபாதிப்பதில் நோக்குள்ளதாகையால் "பிந்நப்ரவ்ருத்திநிமித்தாநாம் சப்தாநாம் ஏகஸ்மிந் அர்த்தே வ்ருத்திஸ்ஸாமாநாதிகரண்யம்" என்றல்லவோ சாப்திகர்கள் கூறுகின்றனர்.

ச்ருதப்ரகாசிகை—

பிறகு சோதகவாக்யங்களில் ஸத்யஜ்ஞாநாதி வாக்யங்களுக்கு அகண்டார்த்ததையை நிரஸனஞ்செய்கிறார் — ஸத்யஜ்ஞாநம் இதுமுதலியதால். ஆசார்யபாதர்களால் ஸுலபமாக அறியும்பொருட்டு அது இவ்வாறல்லவோ உபந்யஸிக்கப்பட்டிருக்கிறது அது உபபாதிக்கப்படுகிறது. ஸத்யாதி வாக்யம், ப்ரஹ்மமானது ஸத்யாதிகுண விசிஷ்டமென்றே ப்ரதிபாதிக்கின்றது—நீலம் உத்பலம் இதுமுதலிய ஸாமாநாதிகரண வாக்யங்களில் விசிஷ்டைகார்த்த பரத்வவ்யுத்பத்தியினாலும், ஸத்யாதி வாக்யத்திற்கும் ஸமாநாதிகரண்யமிருப்பதாலும். அவ்வாறே ஸாமாநாதிகரண்ய லக்ஷணமும் சாப்திகர்களாலே "பிந்நப்ரவ்ருத்தி நிமித்தாநாம்" என்று தொடங்கின வாக்யத்தாலே உரைக்கப்பட்டிருக்கிறது. அங்கு, ஸாமாநாதிகரண்யத்திற்கு ஐகார்த்த்ய பரத்வவ்யுத்பத்தியிருப்பதால் பதங்களுக்கு விசேஷணமாத்ர பரத்வமும் விசிஷ்ட பரத்வமும் ஒப்புக்கொள்ளப்பட்டால் ஐகார்த்யம் ஸித்தியில்லாமல்போவதால் ஸத்யாதிஸாமாநாதிகரணபதங்களுக்கு ஸ்வரூபமாத்ர ஐக்யபரத்வம் ஒப்புக்கொள்ளத்தக்கதென்று எது கூறப்பட்டதோ அது யுக்தமன்று விகல்பத்தை ஸஹியாதபடியினால். ஸத்யாதிபதங்கள் அந்தந்த பதார்த்தங்களுக்கு விரோதிகளான அர்த்தங்களின் வ்யாவ்ருத்தி மாத்ரபரங்களா? அல்லது ஸ்வரூபமாத்ர பரங்களா? அல்லது விரோதிகளான அர்த்தங்களின் வ்யாவ்ருத்திகளோடுகூடின ப்ரக்ருத அர்த்த ஸ்வரூபபரங்களா? என்று பகுத்தறியத்தக்கது. அவைகளில் முதலாவதான விரோதி வ்யாவ்ருத்திமாத்ர பரங்களென்று சொல்வது ஸரியல்ல. ஏனெனில், வ்யாவ்ருத்திகள் அநேகங்களாயிருப்பதுபற்றி ஏகார்த்தத்வம் ஸித்திபெறாததால்—வ்யாவர்திக்கப்படத்தக்க வஸ்துக்கள் அநேகங்களாயிருப்பதால் வ்யாவ்ருத்திகளும் அநேகங்களாகவேண்டிவரும் - ஸத்யாதிபதங்கள் ஸ்வரூபபரங்களுமல்ல—அங்ஙனம் ஒப்புக்கொள்ளில் பதங்களுக்கு பர்யாயத்வம் ப்ரஸங்கிப்பதாலும் ப்ரவ்ருத்திநிமித்தபேதமில்லாமையால், ஸாமாநாதிகரண்ய லக்ஷணத்திற்கு ஹாநிவருவதாலும்; (நீலம் உத்பலம் இவற்றுள்) ஒரு பதத்திற்கு வையர்த்த்யம் ப்ரஸங்கிப்பதாலும். வ்யாவ்ருத்தியோடுகூடின ஸ்வரூப பரங்களுமல்ல — விகல்பத்தை ஸஹியாததால். விரோதிவ்யாவ்ருத்திகளுக்கு ஸ்வரூபாவச்சேதகத்வமானது உபலக்ஷணதையினாலா? அல்லது, விசேஷணதையினாலா? அவற்றுள் முதல் கல்பம ஸரியல்ல. ஒரு உபலக்ஷணத்தினால் ஸ்வரூபமானது அறியப்பட்டுவிட்டபடியால் உபலக்ஷணாந்தரங்களுக்கு வையர்த்த்யம் வருவதால். உபலக்ஷிக்கத்தக்க வஸ்துவைக்காட்டிலும் வெளிப்பட்டதாயிருந்துகொண்டு உபலக்ஷிக்கத்தக்க வஸ்துவின் ப்ரதீதிக்கு உபாயமாயிருக்கிற தர்மமல்லவோ உபலக்ஷணமென்று உப

லக்ஷணமறிந்தவர்கள் சொல்லுகிறார்கள் அவ்வண்ணமே சாகை முதலியவைகளில் காணப்படுகிறது ஆகையால் தூரண்டல் ஒன்றுக்கு வையாத்த்யமும் ப்ரக்ருதிநிமித்த பேதமில்லாமையால் ஸாமாநாதிகரண்ய லக்ஷணத்திற்கு ஹாநியும் வருகிறது அங்ஙனமாகில் உன் பக்ஷத்தில் ஒரே ப்ரஹ்மவிஷயத்தில் ஜந்மாதிகளான அநேகங்களுக்கு உபலக்ஷணத்வம் எவ்வாறு ஒப்புக்கொள்ளப்படுகிறதென்று சொல்லப்படுமேயாகில் உத்தரம் கூறப்படுகிறது அந்தவிடத்தில் உபலக்ஷிக்கத்தக்க தர்மியான ப்ரஹ்மம் ஒன்றாயிருந்தபோதிலும் ஒவ்வொரு உபலக்ஷணந்தோறும் ஜந்மஸ்திதி முதலியவற்றுக்கு அநுகுணமான ஜ்ஞானசக்த்யாதி ரூபமான உபலக்ஷிக்கத்தக்க தர்மபேதமானது நம்மால் ஒப்புக்கொள்ளப்படுகிறது. அப்படியில்லாவிட்டால் அந்தவிடத்திலும் அநேக உபலக்ஷணங்களுக்கு வையாத்த்யம் ப்ரஸங்கித்தேவிடும். உன் பக்ஷத்தில் அநேக உபலக்ஷணங்களாலே உபலக்ஷிக்கத்தக்க தர்மபேதங்களை ஒப்புக்கொள்ளாமையால் முற்கூறப்பட்ட தோஷத்தை எவ்விதத்தாலும் தடுக்கமுடியாது. அந்த உபலக்ஷ்ய தர்மபேதத்தை ஒப்புக்கொள்ளும்பக்ஷத்தில் ப்ரஹ்மத்துக்கு ஸவிசேஷத்வம் ப்ரஸங்கிக்குமன்றோ. இரண்டாவது கல்பமும் ஸரியல்ல - விசேஷண பூதங்களாயிருக்கிற வ்யாவ்ருத்திகள் அநேகங்களாயிருப்பதால் ஏகார்த்தத்வம் ஸித்தியாததால். விசேஷ்யத்தில் அந்தர்பூதமாயும் விசேஷ்யப்ரதிபத்திக்கு உபாயமாயுமிருக்கிற தர்மம் விசேஷணம் விசேஷ்யாந்தரவ்யாவ்ருத்தமாவது ஜ்ஞாபிக்கப்பட்ட வஸ்துவினிடத்திலிருத்தல். விசேஷண பூதமான அர்த்தங்களுக்கு பேதங்களிருந்தபோதிலும் விசேஷ்யபூதமான ப்ரதானார்த்தத்துக்கு ஐக்யமிருப்பதால் ஏகார்த்த ஸித்திவருகிறது என்று கூறப்படுமேயானால் அது ஸகண்டவாக்யார்த்தவாதிக்கும் துல்யம். அங்ஙனமாகில் நம்மிருவர்களுக்கும் என்னவிசேஷமென்று கேட்கப்படுமேயாகில் ஒருவனுடைய மதத்தில் பதங்களுக்கு லாக்ஷணிகத்வம்; மற்றவனுடைய பக்ஷத்தில் அவைகளுக்கு முக்யத்வம் என்கிற இதுதான் விசேஷம்.

வேறு விசேஷணத்துடன்கூடின வஸ்துவினிடத்தில் மற்றொரு விசேஷணம் அந்வயித்தால் விசேஷணங்களுக்கு * அந்யோந்யஸமவாயம் ப்ரஸங்கிக்குமென்று யாதொன்று கூறப்பட்டதோ, அது ஸரியன்று விகல்பத்தை ஸஹியாமையால். "பதஜாதம் ச்ருதம் ஸர்வம் ஸ்மாரிதாநந்விதார்த்தகம் ந்யாயஸம்பாதித வ்யக்தி பச்சாத் வாக்யார்த்தபோதகம்". (அர்த்தம் ஸ்மரிக்கும்படி செய்விக்கப்பட்டதும் பரஸ்பரம் அந்வயமில்லாதவைகளுமான அர்த்தங்களோடுகூடின பதஸமூஹம் அனைத்தும் முதலில் கேட்கப்பட்டதாய்க்கொண்டு ந்யாயங்களால் ஸம்பாதிக்கப்பட்ட அந்வய வ்யக்தியோடுகூடியதாய் பிறகு வாக்யார்த்தத்தை போதிக்கிறது என்கிற ப்ரக்ரியையினாலன்றோ வாக்யம் அர்த்தத்தை உணர்த்துகிறது. அதில் பதங்களுக்கு பதார்த்தங்களை ஸ்மரிப்பிக்கிற தசையில் அந்யோந்யஸமவாய ப்ரஸங்கமா? அல்லது பராமர்ச தசையிலா? அல்லது வாக்யார்த்தத்தைச்சொல்லுகிற தசையிலா? அவற்றுள் முதல் கல்பம் ஸரியல்ல—ஸ்மரண தசையில் தனித்தனியாக பதார்த்தங்களின் ஸ்மரணத்தால் ஒன்றோடொன்று அந்வயிப்பதற்கு ப்ரஸங்கமில்லாமையால். இரண்டாவதுமல்ல—ப்ரத்யக்ஷாதிகளால் அறியப்பட்டிருக்கிற ஒரு வஸ்துவிலுள்ள விருத்தங்களாக இல்லாத அநேக விசேஷணங்களின் ஸமவாயமானது உள்ளபடி இருக்கிற வஸ்துவின் பராமர்ச தசையில் பராமர்சிக்கப்படுவதால். மூன்றாவதுமல்ல—வாக்யார்த்தத்தைச்சொல்லும் தசையில் எல்லா பதங்களாலும் ஒரே ஸமயத்தில் அநேக விசேஷணங்களோடுகூடின ஏகவஸ்துவிஷயமான ஏகஜ்ஞானத்தை உண்டு

---

* அந்யோந்யஸமவாயம்—இது ஒருவிதமான வாக்யார்த்ததோஷம்.

பண்ணுவதால், க்ரமாபிதானத்தால் உண்டாகிற அந்யோந்யஸமவாயத்துக்கு ப்ரஸங்கமில்லாமையால். எவ்வாறு இரண்டு கண்கள், ஜாதி குணம் முதலிய அநேக விசேஷணங்களோடுகூடின ஏகவஸ்துவிஷயமான ஒரு புத்தியை ஒரே ஸமயத்தில் உண்டுபண்ணுகின்றனவோ அவ்வாறே அநேக பதங்கள் ஒரு ஸமயத்திலேயே அர்த்த விசேஷணங்களோடுகூடின ஒரு வஸ்துவை விஷயீகரிக்கிற ஒரு ஜ்ஞானத்தை உண்டுபண்ணுகின்றனவைகளாகின்றன க்ரமமாகச்சொன்னபோதிலும் அந்யோந்யஸமவாய ப்ரஸங்கமில்லை. பதாந்தரத்தினால் எடுக்கப்பட்டிருக்கிற விசிஷ்டத்தில் விசேஷ்யாம்சத்துக்கே பதாந்தரத்தால் எடுக்கப்பட்டிருக்கிற விசேஷணத்தினால் விசேஷிக்கப்படத்தக்க தன்மையிருப்பதால். அதுவும் பதங்களின் வ்யுத்பத்திக்கு யதாத்ருஷ்ட விஷயத்வமிருப்பதால். அங்ஙனமில்லாவிடில் உன்னுடைய பக்ஷத்தில் வ்யாவ்ருத்திரூபவிசேஷணங்களுக்கு க்ரமாபிதானத்தால் உண்டுபண்ணப்பட்ட அந்யோந்ய விசேஷ்ய விசேஷணபாவம் எவ்விதத்தாலும் தடுக்கமுடியாது. ஆகையால் எவ்வண்ணம் கூறப்பட்டதோ இந்த பரிஹாரமே உனக்கும் சரணம். க்ரமமாக அபிதானத்தை ஒப்புக்கொள்ளாத பக்ஷத்தில் உத்தேச்யோபாதேயவிபாக வ்யக்தி எவ்வண்ணம் ஏற்படுமென்று கேள்வியுறின மறுமொழி உரைக்கப்படுகிறது ஜ்ஞாதாஜ்ஞாத விபாகமன்றோ உத்தேச்ய, உபாதேய, விபாகம். அதுவும் ஒரே ஸமயத்தில ப்ரதிபாதித்தபோதிலும் விலகுகிறதில்லை. ஒரு வாக்யத்தால் ஒரு வஸ்துவுக்கு ஒரே ஸமயத்தில் ப்ரதிபாதிக்கத்தக்கதாக இருக்கிற அநேக விசேஷணங்களில் ஒரு விசேஷணாந்வயம் முந்தியே அறியப்பட்டிருக்கிறது.

வேறு விசேஷணாந்வயமோ அறியப்படாமலிருக்கிறதுபற்றி ஜ்ஞாதாஜ்ஞாத விபாகபராமர்சமானது பராமர்சதசையில் உண்டாகியே தீருகிறது விசிஷ்டத்திற்கு ஐக்யம் ப்ரதிபாதிக்கப்பட்டால் விசேஷ்யத்துக்கு ஐக்யம்போல விசேஷணங்களுக்கும் ஐக்யம் ப்ரஸங்கிக்குமென்று யாதொன்று கூறப்பட்டதோ அதுவும் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல — ஸமானமான விபக்திக்கு விசேஷ்யமாத்ரத்தினுடைய ஐக்யத்தில் நோக்கு இருப்பதால். அதுவும் வ்யுத்பத்தி ஸித்தமாயிருக்கிறது. வ்யுத்பத்தியும் ப்ரத்யக்ஷத்தை மூலமாகக்கொண்டது. ப்ரத்யக்ஷமும் விசேஷ்யங்களுடைய ஐக்யத்தை உணர்த்துகிறதேயொழிய விசேஷணங்களுடைய ஐக்யத்தை உணர்த்துகிறதில்லை. எவ்வாறு கௌ: இது முதலிய ஏகபத ப்ரயோகத்திலும், அதை அடைந்திருக்கிற ஏகவசனமானது ப்ராதிபதிகத்தால் அறியப்பட்டிருக்கிற விசேஷண விசேஷ்ய ஐக்யத்தை அறிவிக்கிறதில்லையோ; பின்னையோ விசேஷ்ய ஐக்யத்தையே அறிவிக்கிறதோ ப்ரத்யக்ஷமூலமான வ்யுத்பத்தியல்லவோ அதில் காரணம். அவ்வாறே ஸமாநாதிகரண்யத ‡ ஸங்காதத்திலுள்ள ஸமானவிபக்தியும் விசேஷ்யங்களுடைய ஐக்யமாத்ர பரத்வத்தாலேயே நியாமிகை. அப்படி இல்லாவிடில் உன பக்ஷத்திலும் அஸத்யம் முதலான ப்ரதியோகி வ்யாவ்ருத்தி ரூபமான விசேஷணங்களுக்கு ஐக்யம் ப்ரஸங்கிப்பதால் § ப்ராதிபதிகங்களுக்கு அந்தந்த ப்ரதியோகிகளின் வ்யாவ்ருத்தி விசிஷ்ட ஸ்வரூப பரத்வமிருந்தபோதிலும், ஸமானவிபக்திக்கு ப்ராதிபதிகார்த்தத்தின் ஏகதேசமாயிருக்கிற விசேஷ்யமாத்ர

‡ ஸங்காதம் — கூட்டம்

§ ப்ராதிபதிகமாவது — தாது, ப்ரத்யயம், ப்ரத்யயாந்தம் இவையல்லாததும் அர்த்தத்தோடு கூடியதுமான சப்தஸ்வரூபம். க்ருத்ப்ரத்யயாந்தமும் தத்திதப்ரத்யயாந்தமும ஸமாஸமும்.

ஸூ — "அர்த்தவததாதுரப்ரத்யய: ப்ராதிபதிகம்".

ஸூ — 'க்ருத்தத்திதஸமாஸாச்ச' · பாணினிஸூத்ரங்கள்.

ஐக்யபரத்வ வ்யுத்பத்தியினால் விசேஷண ஐக்யமானது ப்ரஸங்கிக்கிறதில்லையென்று கூறப்படுமேயானால் அது நம்முடைய பக்ஷத்திலும் ஸமானம். நம்மிருவர்களுக்குமுள்ள விசேஷமேதெனில் முன்பே உரைக்கப்பட்டிருக்கிறது.

விசேஷணங்கள் பின்னங்களாயிருந்தால் விசேஷ்யபேதம் ப்ரஸங்கிக்குமென்று யாதொன்று கூறப்பட்டதோ அது ஸரியன்று-விசேஷணபேதமாத்ரத்துக்கு விசேஷ்யத்தை பேதிக்கும் தன்மை இல்லாமையால்-அதுவும் தேவதத்தன், ச்யாமன், யுவா, இது முதலியவைகளில் விசேஷணபேதமிருந்தபோதிலும் விசேஷ்ய ஐக்யம் காணப்படுவதால். விசேஷண பேதத்திற்கு ஸ்வத: ப்ராப்தமான விசேஷ்ய பேதகத்வமென்கிற தன்மையானது, ப்ரத்யக்ஷத்தால் அந்தஇடத்தில்விலக்கப்படுகிறதென்று சொல்லப்படுமேயாகில் அதல்ல தர்மியைச்சொல்லுகிற பத ஐக்யத்தினாலும் ஸமான விபக்தி நிர்தேசத்தாலும் ஐக்ய ப்ரதீதி உண்டாவதால். கண்ட:, முண்ட: பூர்ணச்ருங்க:, கௌ:, என்கிற இடத்தில் தர்மிவாசகபதத்தின் ஐக்யமும் ஸமானவிபக்தி நிர்தேசமுமிருந்தபோதிலும், விசேஷணங்களின் பேதத்தால் விசேஷ்யபேதமானது அறியப்படுகிறதென்று சொல்லப்படுமேயானால் இவ்வண்ணமல்ல - ஏனெனில் அவ்விரண்டுக்கும் ஸ்வத: ப்ராப்தமாகஇருக்கிற விசேஷ்ய ஐக்ய † ப்ரத்யாயகத்வமானது ப்ரத்யக்ஷத்தாலே அந்தவிடத்தில் விலக்கப்பட்டது; பரோக்ஷவிஷயமான கண்ட:, முண்ட:, பூர்ணச்ருங்க:, கௌ:, இது முதலிய வாக்யமானது ப்ரயோகிக்கப்படுங்கால் கண்டத்வம் முதலான விசேஷணங்களின் பேதத்தால் விசேஷ்ய பேதப்ரதீதியானது காணப்படுவதென்று உரைக்கப்படுமேயாகில், பரோக்ஷ விஷயமாக ப்ரயோகிக்கப்பட்டிருக்கிற தேவதத்த: ச்யாமோ யுவா, இது முதலிய வாக்யத்திலும், விசேஷணபேதமிருந்தபோதிலும் விசேஷ்ய ஐக்ய ப்ரதீதியானது காணப்படுகிறதென்று விவாதம் ஸமானம். எது § நிர்ணயகம் எனில்? சொல்லப்படுகிறது. எவ்விதமான விசேஷணங்களுக்கு ஆச்ரயபேதமானது ப்ரத்யக்ஷத்தால் தவறாமல் காணப்பட்டிருக்கிறதோ அவ்விதமான விசேஷணங்களுக்கு பரோக்ஷதவயிருந்தபோதிலும் கண்டத்வம் முதலிய தர்மங்களுக்குப்போல விசேஷ்யபேதத்தை உண்டுபண்ணுவது ஸித்தம். எவ்வித ஸ்வபாவமுள்ள விசேஷணங்களுக்கு ஆச்ரயபேத நியமம் காணப்பட்டிருக்கவில்லையோ, அவ்வித விசேஷணங்களுக்கு தர்மிவாசகபதைக்யத்திலும் ஸமான விபக்தி நிர்தேசத்திலும் ஏகவிசேஷ்ய நிஷ்காஷகத்வமானது நீலத்வாதிகளுக்குப்போல தகுதியுள்ளது.

ஸமானவிபக்தியினால் அறியப்பட்டிருக்கிற ஐக்யத்துக்கு விரோதம் வருவதால் விசேஷணங்கள் பரித்யாகம்செய்யத்தக்கவைகள் என்று யாதொன்று கூறப்பட்டதோ அதுவும் ஸரியல்ல. ப்ராதிபதிகங்களால் சொல்லப்பட்டிருக்கிற விசேஷணங்களின் அந்வயத்துக்கு விரோதம்வருவதால் ஐக்யத்தை பரித்யாகம்பண்ணவேண்டிவருமாதலால். இது உபபாதிக்கப்படுகிறது - ஸமானவிபக்தி அந்வயத்தால் அறியப்பட்டிருப்பதால் ஐக்யமானது விடுவதற்குமுடியாதென்றுகூறப்படுமேயானால் அப்போது ப்ராதிபதிகபதத்தால் நிச்சயிக்கப்பட்டிருக்கிற விசேஷணாந்வயமானது நீலம் உத்பலம் என்கிற இடத்தில் போல எவ்வாறு விடமுடியும். அந்த இடத்தில் ப்ரத்யக்ஷஸித்தமாயிருப்பதால் அங்கீகரிக்கப்படுகிறது என்று சொல்லப்படுமேயானால், அந்த இடத்தில ஐக்ய ப்ரதீதியும் அவ்

† ப்ரத்யாயகத்வம்—ப்ரதயயத்தை உண்டுபண்ணும் தன்மை.

§ நிர்ணயகம் —நிச்சயத்தை உண்டுபண்ணுகிற ந்யாயம் முதலியது.

வண்ணமே' என் ஆகக்கூடாது. ஸமானவிபக்தி நிர்தேசமானது பரோக்ஷமாயிருந்த போதிலும் ஐக்யப்ரதீதியானது காணப்படுகிறதென்று கூறப்படுமேயாகில் அவ்வாறே ப்ரயோகம் பரோக்ஷமாயிருந்தபோதிலும் ப்ராதிபதிகத்தாலே அறியப்பட்டிருக்கிற விசேஷணுந்வய ப்ரதீதியானது காணப்படுகிறதாகவே இருக்கிறது. ஆகலால் ஐக்ய ப்ரதீதியானது சப்தத்தால் நேரே உண்டுபண்ணப்படுகிறதென்று சொல்லப்படுமேயாகில் விசிஷ்ட ப்ரதீதியும் சப்தத்தால் உண்டுபணணப்படுகிறதென்பதனுல் அந்யவிஷயத்தில் பிடிவாதத்தைத்தவிர்த்து வேறு ஒரு விசேஷமுமில்லை. மேலும, ப்ராதிபதிகத்வத்தால் அறியப்பட்டிருக்கிற விசேஷணுந்வய பரித்யாகத்துக்கு ஹேதுவாக இருப்பதும் ஸமான விபக்தியினுலறியப்பட்டிருக்கிறதுமான ஐக்யமானது ஸ்வரூபமா அல்லது அதைக்காட்டிலும் வேருனதா? வேறு என்கிற பக்ஷத்தில் ஸவிசேஷத்வம் ப்ரஸங்கிக்கும் ஸ்வரூபத்தைக்காட்டிலும் வேறன்று என்னும் பக்ஷத்தில் ஹேதுவுக்கு அஸித்தி ஏற்படுகிறது. ப்ராதிபதிகத்தால் அறியப்பட்டிருக்கிற ஸ்வரூபத்தைக்காட்டிலும் வேருக ஸமான விபக்தியினுல் எந்த ஐக்யமும் ப்ரதிபாதிக்கப்படாததால். ஸ்வரூப மாத்ரத்தில் விரோதம்வருவதால் விசேஷணபரித்யாகமென்பதும் ஸரியல்லவன்ருே. வ்யதிகரண வாக்யங்களிலும் அந்த விசேஷணங்களுக்கு த்யாகப்ரஸங்கம்வருவதால், ப்ராதிபதிகத்தாலறியப்பட்டிருக்கிற ஸ்வரூபமானது நிர்விசேஷம் என்று ப்ரதிஜ்ஞை பண்ணி ஸமான விபக்தியினுல் ஐக்யம் அறியப்படுவதால்'' என்றுசொல்லில் 'ஸ்வரூபாவகமாத்' என்று சொல்லப்பட்டதாக ஆகிறது. அதனுலும் ஐக்யஜ்ஞானவிரோத ரூபமான ஹேதுவுக்கு அஸித்தி ஏற்படுகிறது. ஸ்வரூபமோவெனில் விசேஷணுந்வயத்திற்கு அவிருத்தமானது. வ்யதிகரணவாக்யங்களில் விசேஷணுந்வயத்தால் என்று சொல்லப்படுகிறது.

மேலும், ஸமாந விபக்தியினுல்]அறியப்பட்டிருக்கிற ஐக்யமானது, ப்ராதிபதிகார்த்தத்தில் ஏகதேசமாயிருக்கிற விசேஷ்யமாத்ரத்தைப்பற்றியது என்று சொல்லப்பட்டிருப்பதாலும் அதற்கு விசேஷணபேத விரோதமில்லாமையாலும், அவ்விரோதமடியாக உண்டாகிற விசேஷணபரித்யாகமானது யுக்தமன்று. அதனுல் வஸ்துவுக்கு நிர்விசேஷத்வமில்லை "கார்ஷ்ண்ய வ்யாவ்ருத்தம் சௌக்ல்யம்" இதுமுதலிய இடங்களில் ப்ரதியோகிபேதமும் அந்தந்த வ்யாவ்ருத்த ஸ்வரூபமும் சப்தத்தால் எடுக்கப்பட்டிருப்பதால் லக்ஷணைக்கு ப்ரஸக்தியில்லை. ஸத்யாதி வாக்யஙகளில் அவ்வாறில்லை என்று விசேஷம். இவ்வண்ணமாக சௌக்ல்யாதி த்ருஷ்டாந்த வாக்யத்தைக்காட்டிலும் ஸத்யாதிதார்ஷ்டாந்திக வாக்யத்திற்கு சப்தத்தின்வாயிலாக வைஷம்யம் கூறப்பட்டது. அர்த்தத்வாரகமாகவும் வைஷம்யமானது முன் சொல்லப்பட்டதாகக்காணத்தக்கது. அது எவ்வாறு என்று கேட்கில் இவ்வண்ணமாக - சௌக்ல்யம் முதலியது ஒரு த்ரவ்யத்திற்கு தரவ்யாந்தரத்தைக்காட்டிலும் வ்யாவர்தகதர்மமாக இருப்பதால் சௌக்ல்யம் முதலியவற்றுக்கு வேறு தர்மங்களை அபேக்ஷியாமலிருத்தல் பொருத்தமுள்ளது-ப்ரஹ்மத்துக்கோவெனில் அப்படிப்பட்ட தன்மையில்லாததுபற்றி ஸ்வரூபத்தைக்காட்டிலும் வேருன வ்யாவர்தக தர்மாந்தராபேக்ஷை இருக்கவேஇருக்கிறது. அந்யநிர்வாஹகதவம் ஒப்புக்கொள்ளப்படாமல்போமேயாகில் ஸ்வநிர்வாஹகத்வம் ஸம்பவியாதன்ருே. மேலும் சௌக்ல்யாதி ஸ்வரூபத்துக்கு ப்ரகாசம் இருக்கும்போது § கார்ஷ்ண்யம் முதலிய தர்மத்தின் அத்யாஸத்திற்கு ப்ரஸங்கமில்லை—ஆதலால் அந்த இடத்தில் ஸ்வரூபமே வ்யாவ்ருத்தி என்று ஒப்புக்கொள்வது யுக்தம். ப்ரஹ்மதநின் ஸ்வரூபஸ்புரணத்தில் அதை

---

§ கார்ஷ்ண்யம்—கருப்பு சௌக்ல்பம்—வெளுப்பு.

விட மற்றவைகளின் அத்யாஸத்தை ஒப்புக்கொள்வதினால், ரஜதாதிகளுக்கு வ்யாவர்த்தகமாக § அதிஷ்டான ஸ்வரூபத்தைக்காட்டிலும் வேறான சுக்தித்வ முதலியவற்றைப் போல. ஸர்வாத்யாஸங்களுக்கும் அதிஷ்டானமான ப்ரஹ்மஸ்வரூபத்தைக்காட்டிலும் வேறானஸகல இதரவ்யாவ்ருத்திரூபமான தர்மமானது அவச்யம் ஒப்புக்கொள்ளத்தக்கது.

வாச்யத்தில் ப்ரதானாம்சம்ப்ரதிபாதிக்கப்படுவதால் லக்ஷணையில்லை என்று எது கூறப்பட்டதோ அதுவும் ஸரியன்று—விசேஷணத்வாரமாக விசேஷ்யத்தில் பர்யவஸிக்கிற சப்தத்திற்கு, த்வாரம் கூறப்படாவிடில் § த்வாரியின் அபிதானம ஸித்தியாது ததால். லாக்ஷணிகத்வமில்லாவிடினும் விசிஷ்டத்தைச்சொல்லுகிற ஸ்வபாவமுள்ள சப்தத்திற்கு விசேஷ்யமாத்ரபரத்வம் கூறப்பட்டால் ஸ்வாரஸ்யத்துக்கு ஹானியானது விடத்தகாததாக ஆகிறது. அந்த ஸ்வாரஸ்யஹானியும் விரோதமில்லாதிருக்கும் ஸமயத்தில் யுக்தமன்று—'விஷம் † புங்க்ஷ்வ' இது முதலிய இடங்களில் ஸர்வபதங்களுக்கும் லக்ஷணையானது காணப்பட்டிருக்கிறது என்று யாதொன்றுண்டோ அதுவும் விதிப்ரத்யயாம்சத்துக்கு முக்யார்த்தத்வமிருப்பதால் அயுக்தம் - அந்த இடத்தில் விதிப்ரத்யயத்தைக்காட்டிலும் வேறான சப்தத்துக்கு லக்ஷணையும் முக்யார்த்தத்தில் ப்ரமாணாந்தர விரோதத்தால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. ¶ ப்ரஸ்துதத்தில் விரோதமில்லாமையால் அப்படிப்பட்ட லக்ஷணையானது யுக்தமன்று — "விமதம் வாக்யம் அகண்டார்த்தம், ஸமாநாதிகரணவாக்யத்வாத் ஸம்ப்ரதிபந்நவத்" என்கிற இப்படிப்பட்ட அநுமானமும் பொருந்தாது. வாக்யம் அகண்டார்த்தம் என்கிற இரண்டு பதங்களுக்கு அர்த்தபேதம் இருக்கிறதா இல்லையா? இருக்கிறதானால் ப்ரதிஜ்ஞாவாக்யத்திலேயே ஹேதுவுக்கு வ்யபிசாரம் வருகிறது. இல்லையெனில் அகண்டார்த்தமானது ப்ரதிஜ்ஞை பண்ணப்பட்டதாகவே ஆகும் - த்ருஷ்டாந்தத்திற்கும் ஸாத்யவைகல்யரூபமான தோஷமானது வர்ஜிக்கத்தகாததாக ஆகிறது. எல்லா வாக்யங்களும் ப்ரக்ருதி ப்ரத்யயாத்மகமான பதஸமூஹமாயிருப்பதால். பாவரூபகண்டார்த்த ப்ரதிபாதனமாத்ரம் என்பது ப்ரதிஜ்ஞையாயிருக்குமேயானால், அப்போது ஸாத்யதர்ம வசனத்தில் உள்ளடங்கினவைகளாகவுமிருக்கின்ற இரண்டு பாவரூப சப்தங்களில் அநைகாந்த்யம் வருகிறது. ஆதலால் ஸத்யாதிவாக்யமானது ஸத்யத்வாதி விசிஷ்டமாகவே ப்ரஹ்மத்தை ப்ரதிபாதிக்கிறதென்பது ஸித்தம்

அப்படியுள்ள இந்த அம்சம் உரைக்கப்படுகிறது "ஸத்யம் ஜ்ஞானம்" இது முதலியதால். அதில் நிர்விசேஷபரத்வாபாவத்தை @ உபபத்தியோடுகூட ப்ரதிஜ்ஞைசெய்கிறார்—ஸத்யம் ஜ்ஞானம் என்று. ஸாமாநாதிகரண்ய லக்ஷணத்திற்கு ப்ரத்யபிஜ்ஞாபகங்களான சப்தங்களாலே ஹேது அம்சத்தை விவரிக்கிறார்—ப்ரவ்ருத்தி என்று. அதனால் என்? என்று அபேக்ஷிக்குங்கால் அந்வயமுகத்தாலாவது, ப்ரவ்ருத்தி நிமித்தபேதமானது அவச்யம் ஆச்ரயிக்கத்தக்கது என்பதைக்கூறுகிறார்—தத்ர என்று. அதில் என்ன விசேஷம் என்று கேட்கில் கூறுகிறார்—இயாந் என்று வ்யாவ்ருத்திகள் ஸ்வரூபமாத்ரம் என்கிற விஷயத்தில் "அவச்யாச்ரயணீயே" என்கிற இடத்தில் அபிப்ராயப்பட்டுள்ள தூஷணத்தைக்கூறுகிறார்— நச என்று ஸாமாநாதிகரண்யத்தின் அஸித்தியை உபபாதிக்கிறார்—ஏகஸ்மிந் என்று. பர்யாயத்வம் என்கிற தூஷணம் ஸ்பஷ்டமாயிருப்பதுபற்றி சப்தத்தால் தெளிவாக எடுத்து உரைக்கப்படவில்லை - விசேஷணபேதத்தால்

$ அதிஷ்டானம்—ஆதாரம். § த்வாரி—த்வாரத்துடன் கூடியது.

† புங்க்ஷ்வ—சாப்பாடு. ¶ ப்ரஸ்துதம்—ப்ரக்ருதம். @ உபபத்தி—தகுந்த யுக்தி.

அநேகார்த்தத்வம் வருவதால் ஸாமாநாதிகரண்ய லக்ஷணத்திற்கு ஸம்பவிக்கும் ஹாநியை நிரஸனம் செய்கிறார் — நசைகஸ்ய என்று. விசிஷ்டதாபேதாத்—அந்தந்த விசேஷணாந்வயபேதத்தால். அப்படிப்பட்டஅநேகார்த்தத்வமானது விரோதியல்ல; பின்னையோ அநுகூலமேஎன்று அர்த்தம். எதனால் என்றுகேட்கில் கூறுகிறார்-ப்ரவ்ருத்தி என்று. விசேஷணங்களால் அர்த்தபேதமும் விசேஷ்யத்தால் அர்த்தைக்யமும் இருக்குமிடத்திலன்றோ ஸாமாநாதிகரண்ய லக்ஷணத்திற்கு ¶ ஸாத்குண்யமென்று அர்த்தம். ஸாமாநாதிகரண்ய வாக்யமானது, விசேஷண விசேஷ்ய ஸம்பந்தபரமா? அல்லது விசேஷ்ய ஐக்யபரமா? அல்லது உபயபரமா? முதல் பக்ஷத்தில் விசேஷ்யம் ஒன்று என்பதில் ப்ரமாணமில்லாமல்போகும். இரண்டாவது பக்ஷத்தில் விசேஷணாந்வயமானது ப்ரமாணமற்றதாக ஆகும். மூன்றாவது பக்ஷத்தில் ஸம்பந்தத்வயமானது ஒரு வாக்யத்தால் தெரிவிக்க சக்யமில்லாமையால் வாக்யபேதம் ப்ரஸங்கிக்குமென்று சிலர் வினவுகின்றனர். அது ஸரியன்று—ப்ராதிபதிகத்தாலேயே விசேஷணாந்வயம் போதிக்கத்தக்கதாயிருப்பதால் ஸமாநவிபக்தி நிர்தேசத்தினால் விசேஷ்யைக்யத்தை ப்ரதிபாதிப்பதில் வாக்யபேத ப்ரஸங்கமில்லாமையால்.

𑌯𑌦𑍁𑌕𑍍𑌤𑌮𑍍—“𑌏𑌕𑌮𑍇𑌵𑌾𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌮𑍍” 𑌇𑌤𑍍𑌯𑌤𑍍𑌰𑌾𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌪𑌦𑌂 𑌗𑍁𑌣𑌤𑍋𑌽𑌪𑌿 𑌸𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌤𑌾𑌂 𑌨 𑌸𑌹𑌤𑍇। 𑌅𑌤𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌶𑌾𑌖𑌾𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌯𑌨𑍍𑌯𑌾𑌯𑍇𑌨 𑌕𑌾𑌰𑌣𑌵𑌾𑌕𑍍𑌯𑌾𑌨𑌾𑌮𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌵𑌸𑍍𑌤𑍁𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑌨𑌪𑌰𑌤𑍍𑌵𑌮𑌭𑍍𑌯𑍁𑌪𑌗𑌮𑌨𑍀𑌯𑌮𑍍। 𑌕𑌾𑌰𑌣𑌤𑌯𑍋𑌪𑌲𑌕𑍍𑌷𑌿𑌤𑌸𑍍𑌯𑌾𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌸𑍍𑌯 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋 𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑌿𑌦𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇—“𑌸𑌤𑍍𑌯𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌨𑌨𑍍𑌤𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮” 𑌇𑌤𑌿। 𑌅𑌤𑍋𑌽𑌤𑍍𑌰𑍋𑌪𑌲𑌕𑍍𑌷𑌯𑌿𑌷𑌿𑌤𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌨𑌿𑌰𑍍𑌗𑍁𑌣𑌮𑍇𑌵; 𑌅𑌨𑍍𑌯𑌥𑌾 “𑌨𑌿𑌰𑍍𑌗𑍁𑌣𑌂, 𑌨𑌿𑌰𑌞𑍍𑌜𑌨𑌮𑍍” 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌵𑌿𑌰𑍋𑌧𑌶𑍍𑌚—𑌇𑌤𑌿। 𑌤𑌦𑌨𑍁𑌪𑌪𑌨𑍍𑌨𑌮𑍍, 𑌜𑌗𑌦𑍁𑌪𑌾𑌦𑌾𑌨𑌸𑍍𑌯 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌃 𑌸𑍍𑌵𑌵𑍍𑌯𑌤𑌿𑌰𑌿𑌕𑍍𑌤𑌾𑌧𑌿𑌷𑍍𑌠𑌾𑌤𑍍𑌰𑌨𑍍𑌤𑌰𑌨𑌿𑌵𑌾𑌰𑌣𑍇𑌨 𑌵𑌿𑌚𑌿𑌤𑍍𑌰𑌶𑌕𑍍𑌤𑌿𑌯𑍋𑌗𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑌨𑌪𑌰𑌤𑍍𑌵𑌾𑌦𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌪𑌦𑌸𑍍𑌯। 𑌤𑌥𑍈𑌵 𑌵𑌿𑌚𑌿𑌤𑍍𑌰𑌶𑌕𑍍𑌤𑌿𑌯𑍋𑌗𑌮𑍇𑌵𑌾𑌵𑌗𑌮𑌯𑌤𑌿—“𑌤𑌦𑌐𑌕𑍍𑌷𑌤 𑌬𑌹𑍁 𑌸𑍍𑌯𑌾𑌂 𑌪𑍍𑌰𑌜𑌾𑌯𑍇𑌯” (𑌛𑌾-௬-௨-௩) 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿। 𑌅𑌵𑌿𑌶𑍇𑌷𑌣𑌾𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌤𑍍𑌵𑍋𑌕𑍍𑌤𑍇 𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌾𑌨𑍍𑌤𑌰𑌨𑌿𑌷𑍇𑌧𑌃 𑌕𑌥𑌂 𑌜𑍍𑌞𑌾𑌯𑌤 𑌇𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍; 𑌸𑌿𑌸𑍃𑌕𑍍𑌷𑍋𑌰𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣 𑌉𑌪𑌾𑌦𑌾𑌨𑌕𑌾𑌰𑌣𑌤𑍍𑌵𑌂 “𑌸𑌦𑍇𑌵 𑌸𑍋𑌮𑍍𑌯𑍇𑌦𑌮𑌗𑍍𑌰 𑌆𑌸𑍀𑌤𑍍, 𑌏𑌕𑌮𑍇𑌵” 𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑌿𑌤𑌮𑍍. 𑌕𑌾𑌰𑍍𑌯𑍋𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑌿𑌸𑌾𑌮𑍍𑌯𑍇𑌨 𑌬𑌾𑌹𑍍𑌯𑌂 𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌾𑌨𑍍𑌤𑌰𑌮𑌿𑌤𑌿 𑌤𑌦𑍇𑌵𑌾𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌪𑌦𑍇𑌨 𑌨𑌿𑌷𑌿𑌧𑍍𑌯𑌤 𑌇𑌤𑍍𑌯𑌵𑌗𑌮𑍍𑌯𑌤𑍇। 𑌸𑌰𑍍𑌵𑌨𑌿𑌷𑍇𑌧𑍇 𑌹𑌿 𑌸𑍍𑌵𑌾𑌭𑍍𑌯𑍁𑌪𑌗𑌤𑌾𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌯𑌿𑌷𑌿𑌤𑌾 𑌨𑌿𑌤𑍍𑌯𑌤𑍍𑌵𑌾𑌦𑌯𑌶𑍍𑌚 𑌨𑌿𑌷𑌿𑌦𑍍𑌧𑌾𑌸𑍍𑌸𑍍𑌯𑍁𑌃। 𑌸𑌰𑍍𑌵𑌶𑌾𑌖𑌾𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌯𑌨𑍍𑌯𑌾𑌯𑌶𑍍𑌚𑌾𑌤𑍍𑌰 𑌭𑌵𑌤𑍋 𑌵𑌿𑌪𑌰𑍀𑌤𑌫𑌲𑌃, 𑌸𑌰𑍍𑌵𑌶𑌾𑌖𑌾𑌸𑍁 𑌕𑌾𑌰𑌣𑌾𑌨𑍍𑌵𑌯𑌿𑌨𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌤𑍍𑌵𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌗𑍁𑌣𑌾𑌨𑌾𑌂

¶ ஸாத்குண்யம்—தடையற்ற பலத்தோடுகூடி இருத்தல்.

த்ரோபஸம்ஹாரஹேதுத்வாத் । அத꞉ காரணவாக்யஸ்வபாவாதபி "ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம" இத்யத்ராபி ஸவிசேஷமேவ ப்ரஹ்ம ப்ரதிபாத்யத இதி விஜ்ஞாயதே ॥

ஸ்ரீபாஷ்யம்—

ஏகமேவாத்விதீயமென்கிறவிடத்தில், அத்விதீயபதமானது, குணத்தி னுலுங்கூட இரண்டாவது வஸ்துவோடுகூடியிருத்தல் என்கிற தன்மையை ஸஹிக்கிறதில்லை. ஆகையால் ஸர்வசாகாப்ரத்யய நியாயத்தால் காரணவாக் யங்களுக்கு அத்விதீயவஸ்துவை ப்ரதிபாதிப்பதில் நோக்கு ஒப்புக்கொள் ளத்தக்கது. காரணமாக உபலக்ஷிக்கப்பட்டிருக்கிற அத்விதீயமான ப்ரஹ் மத்திற்கு "ஸத்யம்ஜ்ஞானமநந்தம்" என்கிற இது லக்ஷணமாகக்கூறப்படு கிறது. ஆகையால் உபலக்ஷணத்தாலே குறிப்பிடவேண்டுமென்று விரும்பப் பட்டிருக்கிற ப்ரஹ்மமானது நிர்குணமே. அங்ஙனமில்லாவிடில் நிர்குணம் நிரஞ்ஜனம் இதுமுதலிய வாக்யங்களோடு விரோதம் வருமென்று யாதொ ன்று கூறப்பட்டதோ; அது பொருத்தமுள்ளதாகாது. அத்விதீயபதமானது, ஜெகதுபாதாநமான ப்ரஹ்மத்திற்கு தன்னைக்காட்டிலும் வேறான வேறு அதி ஷ்டாதாவை நிவாரணம்செய்வதினால், விசித்ரசக்தியோகத்தை ப்ரதிபாதிப்ப தில் நோக்கமுள்ளதாயிருப்பதால். அவ்வண்ணமே "ததைக்ஷத, பஹுஸ்யாம் ப்ரஜாயேய,தத்தேஜோ அஸ்ருஜத" இது முதலிய சுருதிவாக்யங்கள் விசித் திர சக்தியோகத்தையே உணர்த்திவைக்கின்றன. விசேஷமின்றி அத்விதீயம் என்று சொல்லப்பட்டால் நிமித்தாந்தர மாத்ரத்திற்கு நிஷேதம் எவ்வண் ணம் அறியப்படுகிறது என்று கேட்கப்படுமேயானால், உலகத்தை படைக்க எண்ணங்கொண்டிருக்கிற ப்ரஹ்மத்திற்கு, உபாதாந காரணத்வமானது "ஸதேவஸோம்யேதமக்ர ஆஸீத், ஏகமேவ" என்பதினால் ப்ரதிபாதிக்கப் பட்டிருக்கிறது. கார்யோத்பத்தி ஸ்வபாவத்தால் நிமித்தாந்தரம் புத்தியில் நிலைபெற்றிருப்பதுபற்றி அந்த நிமித்தாந்தரமே அத்விதீய பதத்தினால் நிஷே திக்கப்படுகிறதென்று அறியப்படுகிறது. எல்லாவற்றையும் நிஷேதிக்கிறது என்று சொல்லில் தன்னால் ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பவைகளும் ஸாதிக்க வேண்டுமென்று விரும்பப்பட்டவைகளுமான நித்யத்வம் முதலியவைகளும் நிஷித்தங்களாக ஆகும். இந்த இடத்தில் ஸர்வசாகாப்ரத்யயநியாயமும் உன க்கு விபரீதபலத்தையே தரும். எல்லா சாகைகளிலும் காரணத்தில் அந்வயித் திருக்கிற ஸர்வஜ்ஞத்வம் முதலிய குணங்களுக்கு இங்கு உபஸம்ஹார ஹேதுத்வமிருப்பதால். ஆதலால் காரணவாக்ய ஸ்வபாவத்தாலும், "ஸத்

யம் ஜ்ஞானமனந்தம் ப்ரஹ்ம" என்பதினால் ப்ரஹ்மமானது ஸவிசேஷமென்றே ப்ரதிபாதிக்கப்படுகிறதென்று அறியப்படுகிறது.

ச்ருதப்ரகாசிகை—

இவ்வண்ணம் ஸாமாநாதிகரண்யத்திற்கு வேறுவிதமாகவே உபபத்தி ஏற்படுவதால் ஸத்யஜ்ஞானாதி வாக்யங்களுக்கு நிர்விசேஷ பரத்வம் நிரஸிக்கப்பட்டது. பிறகு காரணவாக்யத்தோடு அர்த்த ஐக்யமிருப்பதால் நிர்விசேஷத்வ பரத்வத்தை நிராகரணம் பண்ணுவதற்கு அதை அநுவாதம் செய்கிறார்—**யதுக்தம் இதி** முதலியதால். ஸதேவ ஏகமேவ என்று விஜாதீயஸஜாதீயபேத வ்யாவர்தகமான அவதாரணத்வயத்தோடு சேர்ந்துள்ள அத்விதீய பதமானது பாரிசேஷ்யததாலே ஸ்வகத பேதாபாவத்தில் நோக்குள்ளதென்று, குணத்தாலும் ஸத்விதீயதையை ஸஹிக்கிறதில்லை என்று அர்த்தம். "யஸ் ஸர்வஜ்ஞஸ்ஸர்வவித், யஸ்யஜ்ஞானமயம்தப:, தஸ்மாதேதத் ப்ரஹ்ம நாமரூபமந்நஞ்ச ஜாயதே" இதுமுதலான ஸகுணவிஷயமான காரணவாக்யங்களோடு ஐகார்த்த்யமிருக்கிறதென்று சொல்லில் கூறுகிறார்—**அத இதி**. ஸர்வசாகாப்ரத்யய ந்யாயத்தால் நிர்குண காரண வாக்யங்களில் ஸகுணத்வமும ஸகுணகாரண வாக்யங்களில் நிர்குணத்வமும் சொல்லப்பட்டதாக ஆகும். அங்கு, அபச்சேத ந்யாயத்தாலே நிர்குண வாக்யங்களுக்கு ப்ராபல்யமிருப்பதால் எல்லா காரணவாக்யங்களும் நிர்குண பரமென்று அர்த்தம். காரணவாக்யங்களோடு ஐகார்த்த்யமானது எதற்காக அபேக்ஷிக்கப்பட்டிருக்கிறதென்று கேட்கில் கூறுகிறார்—**காரணதயா** உபலக்ஷிதஸ்ய என்று. ஜகத்காரணத்வம் என்பது தடஸ்தலக்ஷணம், ஸ்வரூபலக்ஷணமல்ல என்கிற அபிப்பிராயத்தால் "உபலக்ஷிதஸ்ய" என்று உரைக்கப்பட்டது. காரணமென்று சங்கிக்கப்பட்டிருக்கிற தோஷத்திற்கு வ்யாவர்தகமாயிருப்பதால் ஐகார்த்த்யமானது வர்ஜிக்கததகாதது என்று தாத்பர்யம். பிறகு சோதகவாக்யாந்தரங்களோடு ஐகார்த்த்யத்தால் நிர்விசேஷ பரத்வ உபபாதநத்தை நிராகரிக்க எண்ணங்கொண்டவராக அதை அநுவதிக்கிறார்—**அந்யதா** என்று.

அநுவதிக்கப்பட்ட அர்த்தத்தை தூஷிக்கிறார்—**ததநுபபந்நம் இதி** முதலியதால். அதில் முதலில் காரணவாக்யைகார்த்த்யமானது ஸவிசேஷ விஷயத்வமிருந்தால் ஸம்பவிக்கிறது என்று கூறுகிறார்—ஜகத் என்று. **ததைவ** என்று. அத்விதீயபதம் வேறு அதிஷ்டாதாவின் நிவாரணத்தில். நோக்குள்ளதாகவே எவ்வாறு ஆகிறதோ அவ்வாறே என்று அர்த்தம். **விசித்ர சக்தியோகமேவ** என்று. உத்தரவாக்யமானது உபாதாந காரணமாகவிருக்கிற ப்ரஹ்மத்திற்கே அதிஷ்டாத்ருத்வ சக்திஸம்பந்தத்தையே உணர்த்துகிறதேயொழிய நிர்குணத்வத்தை உணர்த்துகிறதில்லை என்று அர்த்தம். சங்கிக்கிறார்—அபிசேஷேண என்று. அத்விதீய பதமானது ஸர்வநிஷேதத்திற்கும் நிமித்தாந்தர நிஷேதத்திற்கும் பொது, உபபதமில்லாமலிருப்பதால். மேலும், உபக்ரமத்தில் "ஸதேவ, ஏகமேவ" என்று ஸஜாதீய விஜாதீயபேதங்கள் இரண்டும் நிஷேதிக்கப்பட்டிருப்பதாலும், ஏகவிஜ்ஞானத்தாலே ஸர்வவிஜ்ஞானபிரதிஜ்ஞையானது, ஸஜாதீய விஜாதீய பேதமாத்திரத்திற்கு மித்யாத்வம் வரும்பக்ஷத்தில் பொருந்தாமல் போவதாலும், அத்விதீய பதமானது உபக்ரமாநுகுண்யத்தினால் தன்னை அடைந்திருக்கிற பேதத்தை நிஷேதிப்பதில் நோக்குள்ளதாக ஆகுமேயொழிய உத்தரவாக்யத்திற்கு அநுகுணமாக ஆகாது. உபக்ரமப்ராபல்யத்தாலென்பது நேரான பூர்வபக்ஷியினுடைய சோத்யம். நிமித்தத்வம் உபாதாநத்வம் இரண்டும் மேலே சுருதியினால் கூறப்படுகின்றன. அதில் ப்ரஹ்மத்தைத்தவிர்த்து வேறு உபாதாந காரணமானது அத்விதீய பதத்தால் நிஷே

திக்கப்படலாமே ஒழிய நிமித்தாந்தரம் நிஷேதிக்கப்படமாட்டாது என்பது பக்ஷத்திலி ருப்பவனுடைய சோத்யம். அந்த விஷயத்தில் கூறுகிறார்— ஸிஸ்ருக்ஷா: என்று. இதனால் இரண்டு சங்கைகளும் பரிஹரிக்கப்பட்டதாக ஆகின்றன. 'தைக்ஷத'' என் பது அடுத்து உரைக்கப்பட்டிருப்பதால் இந்த வாக்யத்திற்கு காரணபரத்வமானது அப லாபம் செய்யமுடியாதென்கிற அபிப்பிராயத்தால் ஸிஸ்ருக்ஷா: என்று உரைக் கப்பட்டது. 'ஸதேவ' இத்யாதிவாக்யத்திற்கு காரணபரத்வம் நிர்ணயிக்கப்பட்டிருக்க 'அக்ர' சப்தத்தினால் விஜாதீயமான காலத்திற்கு ஸத்பாவம் ஸித்திப்பதாலும், ஜீவன்க ளுக்கு அநாதித்வமானது ச்ருதிஸித்தமாயிருப்பதாலும், அக்ருதாப்யாகமம் க்ருதவிப்ரா ணாசம் முதலிய சுருதி அர்த்தாபத்தியினால் ஈச்வரனுக்கு உண்டாகிற வைஷம்ய நைர்க்ருண்யங்களை பரிஹரிப்பதின்பொருட்டு அனந்த ஜீவர்களையும் ஸூக்ஷ்ம கர்ம பேதங்களையும் ப்ரளயதசையில் ஒப்புக்கொள்ளவேண்டியதாலும் ஏகத்வாவதார ணமும் ஜீவஸூக்ஷ்மபேத ஸஹத்வமும் பிறர்களால் ஒப்புக்கொள்ளத்தக்கதாயிருப்பதாலும் ஸர்வஜ்ஞத்வம் ஸர்வ சக்தித்வம் முதலிய குணங்கள் ஸ்ருஷ்டிக்கு உபயோகமாக இருப்ப தாலும், விஜாதீயஸஜாதீய ஸ்வகதபேதங்களின் அபாவமானது எவ்விதத்தாலும் சொல்ல முடியாமலிருப்பதாலும், ஏகவிஜ்ஞானத்தால் ஸர்வவிஜ்ஞான ப்ரதிஜ்ஞையும் முற்கூறப் பட்ட அர்த்தத்தில் விரோதமின்றி நிர்வஹிக்கத்தக்கதாயிருப்பதாலும், பாரதந்த்ர பேதம் விதிக்கப்பட்டிருப்பதினாலும் நிஷேதமானது விபரீதவ்யதிரிக்த விஷயமாகலாலும், ஸ்வதந்த்ரமான ப்ரஹ்மத்தினுடைய ரூபபேதவிசேஷமானது "நநந்ஸமம்சாப்யதி கஞ்ச த்ருச்யதே" இது முதலிய வாக்யங்களால் நிஷேதிக்கப்பட்டிருப்பதாலும், ஸாமான்யமான நிஷேதத்திற்கும் அந்த விசேஷ நிஷேதத்தில் பர்யவஸானஞ்செய்வது நியாயமாயிருப்பதாலும், அத்விதீய பதத்திற்கு வேறு ஸ்வதந்த்ர பேதத்தை நிஷேதிப் பதில் கருத்து ஏற்பட்டிருக்க அவிபக்தநாமரூபத்வத்தை ப்ரதிபாதிக்கிற ஏகமென்கிற பதத்தால் உபாதானத்வம ஸித்தமாயிருப்பதாலும், நிமித்தாந்தரம் புத்திஸ்தமாயிருப்பதா லும், அத்விதீய பதமானது நிமித்தாந்தரரூபமான ஸ்வதந்த்ர வஸ்து நிஷேதத்தில் நோக்கமுள்ளது என்று அர்த்தம். எல்லாவற்றையும் நிஷேதித்தால் அநிஷ்டத்தை கூறு கிறார்— ஸர்வ என்று. ஸர்வசாகாப்ரத்யய நியாயத்திற்கு நிர்விசேஷத்வவாதவைபரீத்ய த்தைக்கூறுகிறார்— ஸர்வசாகா என்று. அத்ர- நிர்குணவாதத்தில். அத்ரபவத: என்பது நிந்தையையாவது குறிக்கிறது. ஸர்வசாகாப்ரத்யயநியாயமானது கூறப்பட்டிராத குணங்களின் ஸ்வீகாரத்தை பலமாகக்கொண்டதே ஒழிய சொல்லப்பட்ட குணங்களின் த்யாகத்தைப் பலமாகக்கொண்டதல்ல என்பதினால் உன் பக்ஷத்துக்கு விபரீதமான பலத் துடன் கூடியதே என்று அர்த்தம் ஸவிசேஷபரத்வம் ஒப்புகொள்ளில் காரணவாக்யத் துடன் ஐகார்த்த்யத்தை நிகமனஞ்செய்கிறார்— அத: என்று. ஸாமாநாதிகரண்யத்தின் அந்யதாநுபபத்தியினால் மாத்திரமல்ல; காரணவாக்யத்தோடு ஐகார்த்த்யத்தாலும் ஸவி சேஷபரமென்பது அபி சப்தத்தின் கருத்து.

ந ச நிர்குணவாக்யவிரோத:, ப்ராக்ருதஹேயகுணவிஷயத்வா த் தேஷாம் "நிர்குணம்", "நிரஞ்ஜநம், நிஷ்கலம், நிஷ்க்ரியம், சாந்தம்" இத்யாதீநாம் । ஜ்ஞாநைகஸ்வரூபவாதிந்யோऽபி ச்ருதய: ப்ரஹ்ம ணோ ஜ்ஞாநஸ்வரூபதாமபிதததி । ந தாவதா நிர்விசேஷ ஜ்ஞாந மாத்ரமேவ தத்த்வம், ஜ்ஞாதுரேவ ஜ்ஞாநஸ்வரூபத்வாத் । ஜ்ஞாநஸ்வ

रूपेणैव तस्य ज्ञानाश्रयत्वं चित्त्वं दीपादिवदित्युक्त-
मेवेत्युक्तम् । ज्ञातृत्वमेव हि सर्वाः श्रुतयो वदन्ति—
"यः सर्वज्ञः सर्ववित्" (मु-१-१-९) तदैक्षत, सेयं देवतै-
क्षत (छा-६-३-२) स ईक्षत लोकान्नु सृजा इति (ऐ-१-१)
नित्यो नित्यानां चेतनश्चेतनानामेको बहूनां यो विद-
धाति कामान् (क-२-५-१३) ज्ञाज्ञौ द्वावजावीशनीशौ (श्वे-
१-९) तमीश्वराणां परमं महेश्वरं, तं दैवतानां परमं च
दैवतम् । पतिं पतीनां परमं परस्ताद्विदाम देवं भुवनेश-
मीड्यम् । न तस्य कार्यं करणं च विद्यते न तत्समश्चाभ्यधिकश्च
दृश्यते । पराऽस्य शक्तिर्विविधैव श्रूयते स्वाभाविकी ज्ञान-
बलक्रिया च (श्वे-६-७,८) एष आत्माऽपहतपाप्मा विजरो विमृत्यु-
र्विशोको विजिघत्सोऽपिपासः सत्यकामः सत्यसङ्कल्पः"
(छा-८-१-५) इत्याद्याः श्रुतयो ज्ञातृत्वादिकल्याणगुण-
गणान् ज्ञानस्वरूपस्यैव ब्रह्मणः स्वाभाविकान् वदन्ति, सक-
लहेयरहिततां च । निर्गुणवाक्यानां सगुणवाक्यानां च
विषयभेदमपहतपाप्मेत्यादिना "अपहतपाप्मा" इत्यारभ्य "विपिपासः"
प्रतिषिध्य "सत्यकामः सत्यसङ्कल्पः" इति ब्रह्मणः कल्या-
णगुणान् विदधतीयं श्रुतिरेव विविनक्ति सगुणनिर्गुण-
वाक्ययोर्विरोधाभावादन्यतरस्य मिथ्याविषयताश्रयणमपि
नाशङ्कनीयम् ॥

ஸ்ரீபாஷ்யம்—

நிர்குண வாக்யங்களுக்கும் விரோதமில்லை—நிர்குணம், நிரஞ்ஜனம் நிஷ்களம், நிஷ்க்ரியம், சாந்தம், இது முதலியதான அந்த வாக்யங்கள் ப்ராக்ருதங்களாயும் ஹேயங்களுமாயுமுள்ள குணங்களை விஷயமாகக்கொண்டிருப்பதால் - ஜ்ஞானமாத்ரம் ஸ்வரூபமெனக் கூறுகின்ற ச்ருதிகளும் ப்ரஹ்மத்திற்கு ஜ்ஞானஸ்வரூபத்தைச் சொல்லுகின்றன. அவ்வளவினால் நிர்விசேஷ ஜ்ஞானமாத்ரமே தத்வமாகாது. ஜ்ஞானத்திற்கு ஆச்ரயமாயிருப்பவனே ஜ்ஞானஸ்வரூபனாயிருப்பதால். ஜ்ஞானத்தையே ஸ்வரூபமாகக்கொண்டிருக்

கிற அந்த ப்ரஹ்மத்திற்கு ஜ்ஞாநாச்ரயத்வமானது ரத்னம், ஸூர்யன், தீபம், முதலிய வஸ்துக்களுக்கு இருப்பதுபோல யுக்தமே என்று உரைக்கப்பட்டது. ஜ்ஞாத்ருத்வத்தையன்றோ எல்லா ச்ருதிகளும் கூறுகின்றன—“யஸ்ஸர்வஜ்ஞஸ் ஸர்வவித்” “ததைக்ஷத” “ஸேயம்தேவதைக்ஷத” “ஸ ஈக்ஷத லோகாந்நுஸ்ருஜா இதி” “நித்யோநித்யாநாம் சேதநஸ்சேதநாநாம் ஏகோ பஹூநாம்யோவிததாதி காமாந் ஜ்ஞாஜ்ஞௌத்வாவஜாவீசநீசௌ” “தமீச்வராணாம் பரமம் மஹேச்வரம் தம்தைவதாநாம் பரமஞ்சதைவதம். பதிம் பதீநாம பரமம் பரஸ்தாத் விதாமதேவம் புவநேசமீட்யம்” “நதஸ்யகார்யம் கரணஞ்ச வித்யதே ந தத்ஸமஸ்சாப்யதிகஸ்சத்ருஸ்யதே” “பராஸ்யசக்திர்விவிதைவத்ருச்யதே ஸ்வாபாவிகீ ஜ்ஞானபல க்ரியாச” “ஏஷ ஆத்மா அபஹதபாப்மா + ஸத்யஸங்கல்ப:” இவை முதலிய ச்ருதிகள், ஜ்ஞானஸ்வரூபமாகவே இருக்கிற ப்ரஹ்மதிற்கு ஜ்ஞாதருத்வம் முதலிய கல்யாணகுணங்கள் ஸ்பாவஸித்தங்களென்று கூறுகின்றன. ஸமஸ்தஹேயகுணராஹித்யத்தையும் சொல்லுகின்றன. அபஹதபாப்மா என்கிற பதத்தை முதலிலும, அபிபாஸ: என்கிற பதத்தை ஈற்றிலும்கொண்ட வாக்யத்தால் ஹேயகுணங்களை நிஷேதித்து, ஸதயகாம: ஸத்யஸங்கல்ப: என்று ப்ரஹ்மதிற்கு கல்யாணகுணங்களை விதிக்கிற இந்த ச்ருதியே நிர்குணவாக்யங்களுக்கும், ஸகுணவாக்யங்களுக்கும் விஷயத்தை விவேசனம் செய்கிறதுபற்றி ஸகுண நிர்குண வாக்யங்கள் இரண்டிற்கும் விரோதமில்லாமையால் இரண்டிலொன்று பொய்யான பொருளை உணர்த்துவதில் நோக்குள்ளதென்று ஸந்தேகப்படத்தக்கதல்ல.

ச்ருதப்ரகாசிகை—

பிறகு இதுவும் மற்ற சோதகவாக்யங்களும் ஒரு பொருளையே உணர்த்துவதனால் சுருதிகள் நிர்விசேஷ ப்ரஹ்மத்தை ப்ரதிபாதிப்பதில் நோக்குள்ளன என்பதை நிரஸிக்கிறார்-நச என்று. அந்யனல அபச்சேத நியாயத்தாலன்றோ நிர்குண ஸகுண வாக்கியஙகளிரண்டிற்குமுள்ள விரோதம் பரிஹரிக்கப்பட்டது. இந்தவிடத்தில் விஷயபேதமிருப்பதால் விரோதமேயில்லையென்று கூறுகிறார — ப்ராக்ருத என்று. நிர்குணமென்று குணஸாமாந்யததை நிஷேதித்தபடி, நிஷ்களம என்று, சரீரஸாமாந்யத்தை நிஷேதித்தபடி; நிஷ்கரியம என்று க்ரியாஸாமாந்யத்தை நிஷேதித்தபடி; குணநிஷேதமானது ஸங்கோசிப்பிக்கத்தக்கதல்ல; ஆர்த்தமான குணஙகளின நிஷேதபலத்தாலே ஸர்வ குணங்களினுடையவும் இன்மையறியப்படுவதால். ஞானத்திற்கு ஜ்ஞானம் முதலிய குணஙகளுககு ஆதாரமாயிருததல் காணப்படாமையால் ப்ரஹ்மத்திற்கு ஜ்ஞானமாத்ரத்வததை ப்ரதிபாதிப்பதினல் நிர்க்குணதவமன்றோ பலித்ததென்கிற சஙகைவரின், அர்த்த பலத்தால் வருகிற குணநிஷேதததைப் பரிஹரிப்பதற்காக சுருதியினலறியப்பட்ட

அர்த்தத்தை அநுஸரித்துப்பேசுகிறார்—ஜ்ஞானமாத்ர என்று. அதனால் என்? எனில்; கூறுகிறார்—நதாவதா என்று. எதனாலென்று அபேக்ஷிக்குங்கால் ஜ்ஞானஸ்வரூபமாயிருப்பதால் ஜ்ஞாநாச்ரயத்வத்தின் இன்மை கூறப்படுகிறதா? அல்லது ஏகஜாதீயங்களான இரண்டு த்ரவ்யங்களுக்கு நியதமான தர்மதர்மிபாவம் உபபந்நமாகாது என்று கூறப்படுகிறதா? என்கிற விகல்பத்தில் முதலாவது விஷயத்தைக்குறித்து மறுமொழிகூறுகிறார்-ஜ்ஞாதுரேவஜ்ஞானஸ்வரூபத்வாத் என்று. இது அர்த்தம்-ஜ்ஞாநத்திற்கு ஜ்ஞானம் முதலிய குணங்களுக்கு ஆச்ரயமாயில்லாமலிருத்தல் வ்யாப்தியினால் கூறப்படுகிறதா? அல்லது ச்ருதிபலத்தாலா? வ்யாப்தியினாலெனில், ஜ்ஞானத்திற்கு ஆச்ரயமில்லாமலும் விஷயங்களுக்கு ப்ரகாசகமாயுமிருக்கிற ஜ்ஞானமானது ஒருவனுக்கு தர்மபூதமாகவே காணப்பட்டிருப்பதினால் தர்மமாகவே அங்கீகரிக்கப்படலாம். சுருதி பலத்தினால் ஸ்வதந்த்ரமாக ஜ்ஞானமானது அங்கீகரிக்கப்படுமேயானால் அப்பொழுது சுருதி பலத்தினாலேயே ஜ்ஞானாச்ரயத்வமும் அங்கீகரிக்கப்படலாம் என்று. ஜ்ஞானஅநாச்ரயத்வமானது தர்மபூத ஜ்ஞானத்வப்ரயுக்தமேயொழிய ஜ்ஞானத்வமாத்ரப்ரயுக்தமன்று, என்பதனால் ஸோபாதிகத்வம் ஸித்தம். ஆகையால் வ்யாப்தி விரோதம் கிடையாது. அன்றிக்கே பதார்த்தத்திற்கு கடமுதலிய வஸ்துவுக்குப்போல ஜ்ஞாத்ருத்வம் பொருந்தாமையால் ஜடஜ்ஞாத்ருத்வரூப தர்மத்தாலேயே ஜ்ஞானஸ்வரூபத்வமும் அர்த்தஸித்தமாகின்றது. இரண்டாவது விகல்பத்தைப்பற்றி மறுமொழி கூறுகிறார்—ஜ்ஞாநஸ்வரூபஸ்ய என்று. ஏகஜாதீயமான இரண்டு த்ரவ்யங்களுக்கு நியதமான தர்மதர்மி பாவம் உபபந்நமாகிறதென்று அர்த்தம். சுருதியினால் ஜ்ஞாநாச்ரயத்வம் ஸித்தித்தாலன்றோ அவ்வாறு ஒப்புக்கொள்ளத்தக்கது என்று கேட்கில் கூறுகிறார்—ஜ்ஞாத்ருத்வமேவஹி என்று. அன்றிக்கே ஜ்ஞாதுரேவ ஜ்ஞாநஸ்வரூபத்வாத் இதி. ஜ்ஞாதாவுக்கு ஜ்ஞாநஸ்வரூபத்வத்தோடு விரோதமில்லாமையாலென்று அர்த்தம். ஏகஜாதீயங்களான இரண்டு த்ரவ்யங்களுக்கு நியததர்மதர்மிபாவங்களின் அநுபபத்தியினால் வருகிற விரோதத்தைப் பரிஹரிக்கிறார்— ஜ்ஞாநஸ்வரூபஸ்யைவ என்று. ஜ்ஞானமாயிருப்பதினால் ஜ்ஞாநாநாச்ரயத்வத்தைப் பரிஹரிக்கிறார்—ஜ்ஞாத்ருத்வமேவஹி என்று. முன்போல் அபிப்ராயம். ஜ்ஞாத்ருத்வம் எவ்வாறு பலிதமாக ஆகிறதோ அப்படிப்பட்ட குணங்களில் நோக்குள்ளவைகளும் ஜ்ஞாத்ருத்வத்தை தெளிவாய் சொல்லுகின்றவைகளுமான சுருதிகள் 'ஸர்வ' சப்தத்தால் விவக்ஷிக்கப்பட்டன. பஹுவசனத்தினால் அநேக உபநிஷத் வாக்யங்கள் விவக்ஷிக்கப்பட்டன. ஏவகாரத்தால் ஜ்ஞாத்ருத்வத்திற்கு அநந்யதாஸித்தியானது (இன்றியமையாமை) அபிப்ராயப்படப்பட்டிருக்கிறது. ஹி சப்தமானது ஹேதுவைக்குறிக்கிறது. ஜ்ஞாத்ருத்வம் சுருதி ஸித்தமானதால் ஒரு அநுபபத்தியுமில்லையென்று அர்த்தம். சுருதிகள் எவைகளென்று அபேக்ஷிக்குங்கால் ஆர்த்தமானகுண நிஷேத பரிஹாரத்திற்காகவும், நிர்குண சுருதிகளின் ஸங்கோசம் ஸித்திப்பதற்காகவும், ஸகுண ச்ருதிகளுக்கு ஆவித்யகுணவிஷயத்வசங்கையைப் போக்கடிப்பதற்காகவும் ச்ருதிகளை காண்பியா நின்றுகொண்டு அந்த ச்ருதிகளாலே இந்த மூன்று ப்ரயோஜனங்களின் ஸித்தியையும் காட்டுகிறார். யஸ்ஸர்வஜ்ஞ: இதுமுதலியதால் - "யஸ்ஸர்வஜ்ஞஸ்ஸர்வவித" எல்லாவற்றையும் ஸ்வரூபத்தாலும் ப்ரகாரத்தாலும் அறிகிறார் என்று அர்த்தம். ஜ்ஞாநத்திற்கு ஸர்வவிஷயத்வத்தையும் அதற்கு ஸமஷ்டிவ்யஷ்டி ஸ்ருஷ்டிகளில் உபயோகத்தையும், ஆத்மஸம்பந்தித்வத்தையும் காண்பிக்கிறார்- "ததைக்ஷத" இது முதலிய மூன்று ச்ருதிவாக்யத்தால் "நித்யோநித்யாநாம்" என்கிற இடத்தில் சேதநர்களுடைய பஹுத்வம் கூறப்பட்டது. சேதநர்களுக்கு அபீஷ்டங்களைக்கொடுக்கும் தன்மை கூறப்பட்டது "ஜ்ஞா" என்கிற ச்ருதியில் ஜ்ஞாத்ருத்வமும், ஈச்வரத்வமும் கூறப்பட்டது. "தமீச்வராணாம்" என்கிற ச்ருதியில் ஈச்வரத்வம், தேவதாத்வம், பதித்வம், மூன்றும் கூறப்பபட்டன. ஈச்வரத்வமாவது-நியந்த்ருத்

வம - நியாம்ய விஷயகமான ஜ்ஞாநத்தையுடையவனுக்கே நியந்த்ருத்வமிருப்பதாலும் நியமனமானது ஜ்ஞானவிசேஷ ரூபமாயிருப்பதாலும் நியந்த்ருத்வத்தால் ஜ்ஞாத்ருத்வம் ஸித்தித்தது தேவதாத்மாவது - காமஙகளால் ஆராதிக்கப்படும் தன்மை. பதித்வமாவது-சேஷித்வம. நதஸ்யஇதி. கார்யம் சரீரம, கரணம, இந்திரியம்முதலியவை கார்ய காரண கர்த்ருதவே என்று ப்ரயோகமிருப்பதால்-இந்த இடத்தில் ஒத்தாரும் மிக்காரும் இல்லை என்று கூறப்படுகிறது. அதனல் அத்விதீயமென்கிற ஸாமாந்யநிஷேதத்திற்கு "$ சாங்காவா மந்தரவர்ணத்" என்கிற நியாயத்தாலே ஈச்வரத்வ லக்ஷணமுள்ள இரண்டாம பலனில்லையென்கிற விசேஷார்த்ததில் பர்யவஸானம ஸூசிப்பிக்கப்பட்டது. "பராஸ்ய" என்று ஜ்ஞானசகதி முதலியவைகளுக்கு ஸ்வாபாவிகத்வம் கூறப்பட்டது. க்ரியா - நியமநம. "ஏஷ ஆதமா" என்கிற சருதியினல் விசேஷவிதாநமும் விசேஷ நிஷேதமும். ஆர்த்தமானகுண நிஷேதமானது பரிஹரிக்கத்தக்கதென்று கருதி "ஜ்ஞாநஸ்வரூபஸ்யைவ" என்று கூறப்பட்டது. அவித்யாகல்பிதமென்கிற தன்மையை விலக்குவதின் பொருட்டு ஸ்வாபாவிகீ என்று உரைக்கப்பட்டது—ஸமஸ்தஹேய ரஹிததாஞ்ச என்பதனல் ஆவித்யகத்வசஙகை அர்த்தத்தால் பரிஹரிக்கப்பட்டது.

மேலும், "ஜ்ஞாத்ருத்வபரமுகாநகல்யாணகுணைந், ஸமஸ்தஹேயரஹிததாஞ்ச" என்பதனல், நிர்குண வாக்யத்திற்கு வ்ருத்தி ஸங்கோசமும உபபாதிக்கப்பட்டதாக ஆகிறது. இதை ஸவிஸ்தாரமாக உபபாதிககிருர். கல்யாணகுணாந் என்பதற்கு இது அபிப்ராயம். குணவிசேஷவிதானத்தை குணஸாமாந்ய நிஷேதமானது பாதிப்பதற்கு ஸாமர்த்தியமுள்ளதாக ஆகாது. பின்னையோ அதைததவிர்த்த மற்றவிஷயத்திலேயே ஸாமர்த்தியமுள்ளதாக ஆகிறது. அப்படியில்லாவிட்டால், நஹிம்ஸ்யாத் ஸர்வாபூதாநி என்கிற ஸாமாந்ய நிஷேதததினல் "அக்நிஷோமீயம்பசுமாலபேத" என்கிற ஹிம்ஸா விசேஷவிதாநத்திற்கு பாதம் ப்ரஸங்கிப்பதால் என்று. ஸமஸ்தஹேயரஹிததாஞ்ச என்பதற்கு இது அர்த்தம். எவ்வாறு "பசுநா யஜேத"—"சாகஸ்யவபாயா:" இது முதலிய ச்ருதிவாக்யஙகளில் "சாசோவாமந்த்ரவர்ணத்" என்கிற ஜைமிநீய ஸூத்ரத்தில் சொல்லப்பட்ட நியாயத்தாலே ஸாமாந்ய சப்தமானது விசேஷம் காணப்பட்டவிடத்தில் அந்த விசேஷத்தில் பர்யவஸிக்கிறதோ, அவ்வாறு குணஸாமாந்யநிஷேதமானது விசேஷகுண நிஷேதத்தில் பர்யவஸிக்கிறதென்று. மேலும், ஸாமாந்ய சப்தங்களுக்கு விசேஷத்தில் பர்யவஸானம் வ்யுத்பத்தியினல் ஸித்தமாயிருக்கிறது. எவ்வாறு "காமாநய" காம் வஜாந, பசுவைக்கொணடுவா, பசுவைக்கட்டு, இதுமுதலிய வாக்யங்களில் ஸாமாந்ய சப்தமானது விசேஷத்தில் நோக்கமுள்ள ப்ரயோஜகவ்ருத்தனல் பிரயோகிக்கப்படுகிறதோ அதனலன்றே அந்தவிடத்தில் ஏவப்படுகிறவன் எல்லா கோவ்யக்திகளையும் கொண்டுவருகிறதில்லை. பின்னையோ குறிப்பிட்ட வ்யக்திவிசேஷத்தையே கொண்டுவருகிறுனே அப்படியேயன்றே அவ்விடத்தில் வ்யுத்பத்தி ஏற்படுகிறது. இவ்வண்ணம் "ஜ்ஞாத்ருத்வப்ரமுகாந் கல்யாணகுணைந்" என்பதினலும், "ஸமஸ்தஹேயரஹிததாஞ்ச" எனபதினலும் உத்ஸாக அபவாத நியாயமும் ஸாமாந்ய விசேஷ நியாயமும் அபிப்ராயப்பபடபட்டிருககிறது - எடுக்கப்பட்ட விசேஷத்தைக்காட்டிலும் வேறன விஷயத்தில் ஸாமாந்ய சப்தத்திற்கு விரோத பரிஹாரத்தை உத்தேசித்து ஸங்கோசஞ்செய்தல் உதஸர்காபவாத ந்யாயம். விரோதமில்லாமலிருந்தபோதிலுங்கூட ப்ரயோஜனத்தின் இன்மையைப் பரிஹரிப்பதின்பொருட்டு ஸங்கோசம செய்யப்படுமேயாகில்

$ சாகோவா—இது ஜைமினீயின் பூர்வமீமாம்ஸா ஸூத்ரம்.

கோபலீவர்த நியாயம். எடுக்கப்பட்டிருக்கிற விசேஷ விஷயத்தில் அதற்கு ஸங்கோசம் ஏற்படுவது ஸாமான்ய விசேஷநியாயம் - எனப்பாகுபாடு அறியத்தக்கது.

மேலும், "நஹி தஸ்யகுணாஸ்ஸர்வே ஸர்வைர்முநிகணைரபி - வக்தும் சக்யா வியுக்தஸ்ய ஸத்வாத்யைரகிலைர்குணை: - ஸத்வம்ரஜஸ்தம இதி குணா: ப்ரக்ருதி ஸம்பவா:- நிர்குணஸ்யாப்ரமேயஸ்ய - குணாகுணேஷுவர்தந்தே - காரணம் குணஸங்கோஸ்ய - நிர்குணம குணபோக்த்ருச - நாந்யம் குணேப்ய: கர்தாரம் - தைவீஹ்யேஷா குணமயீ மமமாயாதுரத்யயா - விநா ஹேயைர்குணாதிபி: - குணாதிதோஷாம்ஸ்ச முநேவ்யதீத: - குணகலுஷஸ்ய ஸதாதநஸ்யந்தா" இது முதலிய அத்யாத்ம சாஸ்த்ரங்களில் குணசப்தமானது ஸத்வரஜஸ்தமஸ்களில் ப்ரஸித்தியுள்ளதாக இருக்கிறது. இவ்வண்ணம் கேவலகுண சப்தத்திற்கு ஸத்வாதிகுண த்ரயத்தில் ப்ரஸிததி ப்ராசுர்யத்தால் நிர்குண சப்தங்கள் ஸத்வாதிகுணநிஷேதபரங்கள். இந்த விஷயவிபாகமானது நம்மால் பின்னங்களாக இருக்கிற உபநிஷத் வாக்யங்களில் குணவிசேஷவிதானம் குணவிசேஷ நிஷேதம் இவைகள் காணப்படுவதனால் மாத்திரம் நிச்சயிக்கப்படுகிறதில்லை - பின்னையோ ஒரே வாக்யத்தில் விஷயவிபாகம் காணப்பட்டிருக்கிறதென்பதைக்கூறுகிறார் — நிர்குண என்ற. குணஸாமான்யநிஷேதம்போல குணஸாமான்யமாத்ர விதானத்தை ஒப்புக்கொள்வதனால் "நிர்குண வாக்யங்களுக்கும் ஸகுணவாக்யங்களுக்கும்" என்று உரைக்கப்பட்டது. ச்ருதிகளில் குணஸாமாந்யவிதானம் ஓரிடத்திலும் காணப்படுகிறதில்லை. குணவிசேஷங்களேயன்றோ ச்ருதியினால் விதிக்கப்படுகின்றன - தோஷத்துடன்சேர்ந்து ப்ரயோகிக்கப்பட்ட குணசப்தமோவென்றால், உபாதேயங்களான குணங்களைக்குறிக்கிறது. "வர்ஷாயுதைர் யஸ்யகுணா: நசக்யா நதேகுணாநாமயுதைகதேசம், நாந்தம் குணாநாம்கச்சந்தி" இதுமுதலிய ஸ்ம்ருதி வசனங்களின் அபிப்ராயத்தால் "ஸகுணவாக்யாநாம"என்று கூறப்பட்டது. அவ்விடங்களில் குணசப்தமானது தோஷங்களின் எதிர்தட்டைச் சொல்லுகிறது - உலகத்தில் அப்படி ப்ரஸித்தியிருப்பதால் - ப்ரகரணவசத்தாலும் சாகபசு நியாயத்தாலே கல்யாணகுண ரூபமான விசேஷத்தில் பர்யவஸாநம்செய்வது நியாயமாயிருப்பதாலும். கீழ்சொல்லப்பட்ட இரண்டு நியாயத்தால் விரோதமின்மையால் அபச்சேதநியாயத்திற்கு அவிஷயத்வத்தைக் கூறுகிறார் — இதி ஸகுணநிர்குணவாக்யயோ: என்று. இதி சப்தத்தினால் முற்கூறப்பட்ட எல்லா ஹேதுக்களும் விவக்ஷிக்கப்பட்டிருக்கின்றன. உத்ஸர்காபவாத நியாயத்தாலும் ஸாமாந்ய விசேஷ நியாயத்தாலும், அத்யாத்ம சாஸ்த்ரங்களில் குணசப்தத்திற்கு ஸத்வாதிகுணங்களில் ப்ரஸித்திப்ராசுர்யத்தாலும் என்று அர்த்தம். ஸகுணநிர்குணவாக்யயோரிதி இந்த இடத்திலோவென்றால் விஷயவிபாகமிருப்பதால் விரோதமில்லை. ஆதலால் அபச்சேத நியாயமானது ப்ரவ்ருத்திக்கிறதில்லை என்று கருத்து. "அந்யதாஸ்யமித்யா விஷயதாச்ரயணமபி நாசங்கநீயம்" என்று ஸகுணவாக்யத்திற்கென்று கூறப்பட்டிருக்கவில்லையன்றோ. பின்னையோ "அந்யதாஸ்ய" என்று கூறப்பட்டிருக்கிறது. ஸகுணவாக்யத்தால் நிர்குணவாக்யத்திற்கோ, நிர்குணவாக்யத்தால் ஸகுணவாக்யத்திற்கோ பாதத்தை ஆச்ரயிப்பது அநுபபந்நமென்று பொருள். இந்த இடத்தில் இது அபிப்பிராயம்-முன்பு விரோதமில்லையென்று பரிஹாரங்கூறப்பட்டது. இப்பொழுது விரோதத்தை ஒப்புக்கொண்டபோதிலும் இது அபச்சேத நியாயவிஷயமன்று. பின்னையோ விரோதாதிகரணநியாயத்திற்கே விஷயமென்பதை உபபாதிக்கிறார். அபச்சேத ந்யாயமானது நியதவிரோதமில்லாத பூர்வாபரமானதை விஷயமாகக்கொண்டது — உத்காதா, ப்ரதிஹர்தா இருவருக்கு அபச்சேதநியமங்கிடையாது. அங்கேயும் க்ரமேண அபச்சேதம் ந்யதமல்ல — அதற்கு நியமம் கூறப்படின் ஸர்வஸ்வத்தையும் தக்ஷிணையாகக்கொடுத்து யாகத்தை

முடித்தல் என்பதற்கும், தக்ஷிணைகொடாமல் யாகத்தை நிருத்திவிடுதல் என்கிற இவ்விரண்டிற்கும் விரோதம் நியதமாயிருக்கிறது. இருவருக்கும் அபச்சேதம் நேரிடும் பக்ஷத்தில், அந்த அபச்சேதமானது ஒன்றின்பின் ஒன்றாக ஆகததக்கதாக இருப்பதில் § உத்காதாவின் அபச்சேதம் முந்தி ஸமபவிக்கக்கூடியதென்றாவது மற்றவனுடைய அபச்சேதம் பிந்தி ஸம்பவிக்கத்தக்கதென்றாவது கீழ்சொன்னதற்கு மாறுதலாகவாவது ஸம்பவிக்கவேண்டுமென்பதில் நியமமுமில்லை. ஆகையால் அபச்சேத ந்யாயத்திற்கு ப்ரயோகத்தளவிலுள்ள விரோதமே விஷயம். ‡ ஸகுண † நிர்குணவாக்ய விரோதமோவென்றால் ஸ்வரூபத்தாலுண்டுபண்ணப்பட்டிருக்கிறது. $ விதி || நிஷேதரூபமாக இருப்பதால் நியதமான பௌர்வாபர்யமுள்ளதாகவுமிருக்கிறது. ஆதலால் விரோதத்தை ஒப்புக்கொண்டபோதிலுங்கூட நியதவிரோதமற்ற பௌர்வாபர்யத்தை விஷயமாகக்கொண்ட அபச்சேத ந்யாயமானது இங்கு ப்ரவ்ருத்திக்கிறதில்லை. பின்னையோ விரோதாதிகரண ந்யாயமே ப்ரவ்ருத்திக்கிறது. இந்த ந்யாயத்திற்கு எதுவிஷயமோ அவ்விடத்திலல்லவோ @ பௌர்வாபர்ய நியமமும் விரோதமுமிருக்கிறது. அதை உபபாதிக்கிறார் - "ஔதும்பரீம் ஸ்ப்ருஷ்ட்வா § உத்காயேத்" (யஜ்ஞவாடத்தில் நாட்டி இருக்கும் அத்திக்கட்டையைத் தொட்டுக்கொண்டு வேத மந்திரத்தை உரக்க உச்சரித்து ஸ்வரத்துடன் கானம் செய்யவேண்டும) என்று ப்ரத்யக்ஷ சருதி இருக்கிறது. "ஔதும்பரீ ஸர்வா வேஷ்டயிதவ்யா" (கீழ்சொன்ன ஔதும்பரியை தெரியாமல் வஸ்திரத்தினால் சுத்திவிடவேண்டும்) என்று ஸ்ம்ருதி இருக்கிறது. அவற்றுள் ச்ருதி வேறு ப்ரமாணத்தை அபேக்ஷியாமையால் முதலிலேயே ஜ்ஞாநத்தை உண்டுபண்ணிவிடுகிறது. ஸ்ம்ருதியோவென்றால் தனக்கு மூலபூதமான சருதியின் அநுமாநத்தை அபேக்ஷித்திருப்பதால் விளம்பித்திருக்கிற ப்ரவ்ருத்தியோடுகூடியதாக இருக்கிறது. ஆதலால் இந்த இடத்தில் பௌர்வாபர்யம் நியதமாக இருக்கிறது. ஔதும்பரியின் ஸ்பாசனம் அதின் ψ வேஷ்டனம் இரண்டுக்கும் விரோதம் நியதமாக இருக்கிறது. அந்த இடத்தில் முந்தியே ப்ரமிதியானது உண்டாயிருப்பதால் அதற்கு விருத்தமான அர்த்தம் காலாத்யயாபதிஷ்டமாக ஆகலாம். ஆகையால் விளம்பிதமான புத்திக்கு ஹேதுவைக்காட்டிலும் சீக்கிர புத்திக்கு ஹேது எதோ அது அதிக பலத்தை உடையது - என்கிற ந்யாயத்தாலே முந்தின ச்ருதி அதிக பலமுள்ளதாக இருப்பதுபற்றி பிந்தின சாஸ்திரம் உதிக்கிறதே இல்லை. அய்யா! இங்கு உத்தரசாஸ்திரமானது அத்யயனம் செய்யப்பட்டே இருக்கிறதென்று கூறப்படுமேயாகில் அதனால் என்? ப்ரமிதியின் அநுதயமல்லவோ ¶ அநுதயம். சப்தத்தின் அநுதயம் அநுதயமல்ல—"ஆதித்யோ யூப:" (பசுவைக் கட்டும் தூண் சூர்யன்) என்பதுபோல். அய்யா! அந்த இடத்தில் ஸ்ம்ருதித்வம் ச்ருதித்வம் இரண்டும் பாத்ய பாதகப்ரயோஜகங்கள். இவ்வண்ணமல்ல—ஸ்ம்ருதித்வம் ச்ருதித்வம் இரண்டுக்கும் பௌர்வாபர்யங்களில் ஹேதுத்வமிருப்பதால் அதனால் ஸித்தமான பௌர்வாபர்யமே பாத்யபாதக பாவத்தில் ஹேதுவென்கிற ந்யாயஸாம்யத்தால் ஸகுணவாக்யம் அதிக பலமுள்ளது. அன்றிக்கே விரோதாதிகரண ந்யாயம்வேண்டாம். இந்த இடத்தில் உபக்ரமாதிகரண ந்யாயமே ப்ரவ்ருத்திக்கிறது - பௌர்வாபர்ய விரோத

‡ ஸகுணம்—குணங்களுடன் கூடியது. † நிர்குணம்—குணங்களில்லாதது.

$ விதி—ஏவல். || நிஷேதம்—மறுப்பு. § உத்காதா—ஸாமகானம் செய்பவன்.

@ பௌர்வாபர்யம்—முன்பின்னாக இருத்தல். * ஸ்பர்சனம்—தொடுதல்.

ψ வேஷ்டனம்—சுற்றுதல். ¶ அநுதயம்—தோன்றாமை, அல்லது உண்டாகாமை.

நியமத்தால். ஆகையால் ஸகுணவாக்யத்தினால் தடைபட்டிருப்பதால் நிர்குண சாஸ்த்ரத்திற்கு உதயமே இல்லை.

அய்யா! முதலில் ப்ரவ்ருத்தித்த சாஸ்த்ரமானது விளம்பிக்கிற சாஸ்த்ரத்தின் உத்பத்திற்கு ப்ரதிபந்தகம் எனில்; "இதம் - ரஜதம்" (இது வெள்ளி) என்கிற ஜ்ஞானமானது "நேதம் ரஜதம்" (இது வெள்ளியல்ல) என்கிற ஜ்ஞானத்தின் உதயத்தை ப்ரதிபந்திக்கவேண்டுமென்று கூறப்படுமேயாகில், அல்ல - ஸத்தையினாலும் ஜ்ஞாயமானதையினாலும் உண்டாகிற ஜ்ஞாபகங்கள் இரண்டுக்கும் மிக்க வேற்றுமைப்பாடு இருப்பதால். ஸத்தையினாலே ஜ்ஞாபகமான ப்ரமாணமானது பூர்வாபரபராமர்சத்தை அபேக்ஷியாமலே ஜ்ஞானத்தை உண்டுபண்ணுகிறதன்றோ - அந்த இடத்தில் உண்டான ஜ்ஞானமானது "பூர்வாபரயோ: பூர்வதௌர்பல்யம் ப்ரக்ருதிவத்" (முந்தினதைப் பாதியாமல் பிந்தினதற்கு உத்பத்தி ஸித்திக்கிறதில்லையன்றோ) என்கிற ந்யாயத்தால் முந்தினதை பாதித்தே உதிக்கிறது. ஜ்ஞாயமானதையினாலுண்டாகிற ஜ்ஞாபகமோவெனில் யோக்யதாபராமர்சம் முதலியதை அபேக்ஷித்துக்கொண்டு ப்ரமிதியை உண்டுபண்ணுகிறது. அதில் பராமர்சதசையில் பூர்வப்ரமாணத்தால் விருத்தார்த்தப்ரமிதியுண்டாகில் அந்த ப்ரமிதியானது உத்தரோத்பத்தியை ப்ரதிபந்திக்கிறது. இங்ஙனமாகில் 'நேதம் ரஜதம்' என்கிற ஜ்ஞானம் 'இதம் ரஜதம்' என்கிற பராமர்சத்தை அபேக்ஷித்திருப்பதால் பூர்வஜ்ஞானத்தால் ப்ரதிபந்திக்கப்பட்ட 'நேதம் ரஜதம்' என்கிற ஜ்ஞானத்திற்கு அநுதயம் ப்ரஸங்கிக்குமென கூறப்படுமேயாகில், அல்ல—இந்த்ரியம் ப்ரத்யபிஜ்ஞையைத்தவிர்த்த மற்ற ஜ்ஞானத்தை உண்டுபண்ணும் விஷயத்தில் பூர்வபராமர்சத்தை அபேக்ஷியாமலிருப்பதால் - இந்த இடத்திலும் "சுக்தி: இயம்" என்கிற உத்தர ப்ரமிதியானது சுக்தித்வத்தை விஷயமாகக்கொண்டதன்றோ. சுக்தித்வப்ரதீதிக்கும் ரஜத ப்ரதிபத்தியின் அபேக்ஷையில்லை. சுக்தித்வமானது க்ரஹிக்கப்பட்டவளவில் அந்த சுக்தித்வக்ரஹணத்திற்கு பலபூதமாயிருக்கிற 'நேதம் ரஜத'' மென்கிற வ்யவஹாரமானது நஞ்ஞாலே உள்ளடக்கப்பட்டிருப்பதால் ப்ரதியோகியை அபேக்ஷித்துக்கொண்டு ப்ரவ்ருத்திக்கிறது. அப்படி ப்ரதியோகியை அபேக்ஷித்துக்கொண்டிருத்தல் சப்த ஸ்வபாவத்தைச்சார்ந்திருக்கிறது. ஆதலால் ரஜதஜ்ஞானத்தை அபேக்ஷியாமலுதிக்கிற சுக்திஜ்ஞானமானது முந்தின ரஜத ஜ்ஞானத்தை பாதித்தே உதிக்கிறது. ஆதலால் நியதவிரோதமுள்ள பௌர்வாபர்யத்தை விஷயமாகக்கொண்ட விரோதாதிகரண ந்யாயமே இவ்விடத்தில் ப்ரவ்ருத்திக்கிறது. அபச்சேத ந்யாயம் ப்ரவ்ருத்திக்கிறதில்லை. அந்த அபச்சேத ந்யாயமானது இப்படிப்பட்டவிடத்தில் ப்ரவ்ருத்திக்கிறதேயானால் பிந்திவரப்போகிற 'ந ஹிம்ஸ்யாத்' என்கிற நிஷேதமானது ப்ரபலமாயிருப்பதால் பச்வாலம்பநம் செய்யத்தகாததாக ஏற்படும். ஆகவே அநுஷ்டான விரோதம். ஸகுண நிர்குண வாக்யங்கள் இரண்டிற்கும் விரோத பௌர்வாபர்ய நியமமானது அந்யனாலேயே கூறப்பட்டிருக்கிறது. அதனாலும் விரோதாதிகரண ந்யாயத்திற்கு விஷயமாயிருப்பதுபற்றி இந்தவிடத்தில் அபச்சேத ந்யாயத்திற்கு அவகாசமில்லாமையால் ஸகுண வாக்யங்களுக்கு பலீயஸ்த்வம் ஸித்தம். இந்த அபிப்ராயத்தால்—அந்யதரஸ்ய என்று உரைக்கப்பட்டது. முந்தி உபாதியைச்சொல்லாமல் ச்ருதியினால் கூறப்பட்டிருக்கிற குணங்களுக்கு நிருபாதிகத்வம் ஸ்வத: ப்ராப்தமாதலாலும், ஸ்வாபாவிகத்வ ச்ருதியினாலும் "ஈசங்யோ ஹேதுர்வித்யதே நாபராய" என்று $ ஈசநத்திற்கு ஹேதுச்ரவணமில்லாதிருப்பதால் அந்த ஈச்வரத்வத்

$ ஈசனம்—ப்ரபுத்வம் அல்லது நியமனசக்தி.

திற்கு உபயுக்தமான குணங்களுக்கும் நிருபாதிகத்வம் ஸித்திப்பதாலும் ஜ்ஞானசக்த்யாதி தாரதம்யங்களுக்கு உபாதியாயிருக்கிற கர்மஸம்பந்தத்தின் நிஷேதத்தைமுன்னிட்டு ஸத்யகாமத்வாதிகள் கூறப்பட்டிருப்பதாலும், "தஇமே ஸத்யா: காமா:" என்று ஸ்வரூபத்திற்குப்போல குணங்களுக்கும் ஸத்யத்வ ச்ருதியினாலும், "பராஸ்ய சக்தி:, தேயேசதம்" இது முதலான ச்ருதிவாக்யங்களால், குணங்களுக்கு அபரிச்சின்னத்வம் ப்ரதிபாதிக்கப்பட்டிருப்பதால் கர்மஸம்பந்தவ்யாபகமான பரிச்சேதத்தின் நிவ்ருத்தியினால் வ்யாப்யமான கர்மஸம்பந்த நிவ்ருத்தியானது அர்த்த ஸித்தமாயிருப்பதாலும், ஸ்வாபாவிகத்வத்தை நேராகச்சொல்லாமலிருக்கிற குணபரவாக்யங்களிற்கூட ஸர்வசாகா ப்ரத்யயந்யாயத்தால் குணங்களுக்கு ஸ்வாபாவிகத்வம் ஸித்திப்பதாலும், "ஆநந்தம் ப்ரஹ்மண:" இது முதலிய தாத்பர்யலிங்க ப்ராசுர்யத்தாலும் உத்ஸர்காபவாத ந்யாயம், ஸாமாந்யவிசேஷ ந்யாயம் இவ்விரண்டால் ஏற்படும் விஷய § விபாகத்தால் ஒரு ச்ருதியிலேயே விஷயவிபாகம் காணப்பட்டிருப்பதாலும், விரோதமில்லாமையால் அபச்சேத ந்யாயத்திற்கு அவிஷயமாயிருப்பதாலும், விரோதம் ஏற்பட்டபோதிலும் விரோதாதிகரண ந்யாயத்தால் ஸகுணவாக்கியங்களுக்கு ப்ராபல்யமிருப்பதாலும், ' யஸ்ஸர்வஜ்ஞ:" இது முதலிய உபாஸனவிதியில்லாத வாக்யங்களில் ஸ்வரூபம்போல ப்ரதிபந்நமாயிருப்பதால் † ப்ரமாணாந்தரங்களுக்கு || அகோசரமாயிருப்பதுபற்றி அநுவாத விஷயத்வம் ஸம்பவியாததால் நிஷேதிப்பதற்கு அசக்யமாயிருப்பதாலும், "ஆத்மாவாரே த்ரஷ்டவ்ய:, ஸத்யம் ஜ்ஞானமநந்தம் ப்ரஹ்ம, யோவேத, ஆத்மாநமநுவித்ய, வ்ரஜந்த்யேதாம்ஸ்ச ஸத்யாந் காமாந்" என்று ஓரிடத்தில் உபாஸ்யத்வ ச்ரவணமானது ஸ்வரூபத்திலும் துல்யமாயிருப்பதாலும், அத்யாத்ம சாஸ்த்ரங்களில் குணசப்தத்திற்கு ஸத்வாதிப்ரஸித்தி ¶ ப்ராசுர்யத்தாலும, நிர்குணவாக்ய விஷயதவமில்லாமையாலும், பாஹ்யதாகங்கள் காலாத்யயாபதிஷ்டங்களாதலாலும், இரண்டு * அவதாரணங்களோடுகூடின அநவதிய ச்ருதி, ஜ்ஞானாநந்த ஸ்வரூபத்வம், வாங்மனஸ் நிவ்ருத்தி ஜ்ஞேயத்வ நிஷேதரூப அர்த்தகுண நிஷேதங்கள் பரிஹரிக்கப்பட்டிருப்பதாலும் நிருபாதிகங்களென்று முற்கூறப்பட்டும், கூறப்படப்போகிறதாகவுமுள்ள அர்த்தங்களின் § ஸங்க்ரஹமானது ப்ரவ்ருத்தி ஸௌகர்யத்திற்காகக் காணபிக்கப்பட்டது. ' ஸத்யம ஜ்ஞானம் ' என்கிற ஜ்ஞானபதத்தால் ஸித்திக்கிற $ ஆர்த்தகுண நிஷேதமானது முன்பு பரிஹரிக்கப்பட்டது.

"ஸைஷாऽऽநந்த³ஸ்ய மீமாம்ஸா ப⁴வதி" (தை-ஆ-௮-௧) இத்யாரப்⁴ய ப்³ரஹ்மாநந்த³ஸ்ய "தே யே ஶதம்" (தை-ஆ-௮-௧) இத்யுத்தரோத்தர ஶதகு³ணிதத்வேந ஆநந்தா³திஶயமுக்த்வா "யதோ வாசோ நிவர்தந்தே। அப்ராப்ய மநஸா ஸஹ। ஆநந்த³ம் ப்³ரஹ்மணோ வித்³வாந்" (தை-ஆ-௯-௧) இதி ப்³ரஹ்மணோ கு³ணாநந்த்யம் ஸாத³ரமாமநந்தீ ஶ்ருதி:॥

---

§ விபாகம்—பாகுபாடு அல்லது பிரிவு.

† ப்ரமாணாந்தரம்—வேறு ப்ரமாணம். || அகோசரம்—விஷயமல்லாதது.

¶ ப்ராசுர்யம்—ஆதிக்யம். * அவதாரணம்—நிச்சயம். § ஸங்க்ரஹம்—சுருக்கம்.

$ ஆர்த்தம்—அர்த்தத்தினால் ஏற்படுவது. ‡ அநுவாதம்—வேதத்தினது ஓர் உட்பிரிவு

ஸ்ரீபாஷ்யம்—

"பீஷா" இது முதலிய ச்ருதியினால் ப்ரஹ்மகுணங்களைத்தொடங்கி 'தே யே சதம்' என்று தொடர்ந்து க்ரமமாக க்ஷேத்ரஜ்ஞர்களுடைய ஆநந்தாதிசயத்தைக்கூறி 'யதோ வாசோ...விதவான்' என்று இந்த ச்ருதி ப்ரஹ்மத்தினுடைய கல்யாண குணங்களின் அளவிறந்த தன்மையை அதிக ஆதரத்துடன் கூறுகிறது.

ச்ருதப்ரகாசிகை—

பிறகு இந்த ‡ அநுவாகத்தின் முடிவில் "யதோவாசோ ... ஸஹ" என்கிற ச்ருதியினால் வாக்குக்கும மனதிற்கும் நிவ்ருத்திசொல்லி இருப்பதால் நிர்குணத்வம் பலித்தது. ஆகையால் அந்த ச்ருதியுடன் @ ஐகார்த்த்யமிருப்பதால் ஸத்யஜ்ஞாநாதி வாக்யம நிர்விசேஷபரமென்று சங்கைவரின் ஆர்த்தமான குணநிஷேதபரமாக அங்யனால் கூறப்பட்டிருக்கிற இந்த வாக்யத்திற்கு சொலலப்பட்ட அர்த்தம் அநுகுணமாக இருப்பதை § உபபாதிக்கிறார்—'பீஷாஸ்மாத்' இது முதலியதால். 'பீஷாஸ்மாத்' என்கிற இந்த ச்ருதியினால் கட்டளை இடுபவனுடைய ஸ்வபாவம கூறப்படுகிறது. ♆ 'க்ஷேத்ரஜ்ஞாநந்தாதிசயமுக்த்வா இதி' இந்த இடத்தில் * நிர்விசேஷத்வம் ப்ரதிபாதிக்கப்படவேண்டுமென்று விரும்பப்பட்டிருக்குமேயானால் வரிசையாக குணங்களினுடைய குறைவைக்கூறி ஸர்வாபாவத்தில் பர்யவஸித்தல் பொருத்தமுள்ளதாக ஆகும். இந்தவிடத்திலேயோ க்ரமமாக குணங்களினுடைய ஆதிக்யத்தைக்கூறி வாக்குக்கும் மனதிற்கும் நிவ்ருத்தியைச்சொன்னது ஆநந்த்யத்தினாலே என்று அபிப்ராயம். அதை உபபாதிக்கிறார்— "ஸங்க்யாதும நைவ சக்யந்தே குணாதோஷாஸ்ச சார்ங்கிணி. ஆநந்த்யாத் ப்ரதமோராசி: அபாவாதேவ பச்சிம:" என்று. (எம்பெருமானிடத்திலுள்ள குணங்களும் தோஷங்களும் கணக்கிடுவதற்கு முடியவேமுடியாது, முதன்மையான குணராசியானது முடிவில்லாமையாலும், பிந்தின தோஷராசியானது இலலாமையாலும் முதலில் மநுஷ்யாநந்தத்தைத்தொடங்கி க்ரமமாக அதிசயங்காண்பிககப்பட்டது. 'யுவா ஸ்யாத் ஸாது யுவாத்யாயக:' ஸாது-விதியை மீறாமல். அன்றிக்கே. நல்ல ஸம்ப்ரதாயத்தால் ஸித்தித்திருப்பதால், ஸ்வர, வர்ணம், முதலியவைகளின் தவறுதலில்லாதது. யுவசப்தத்தால் புதிதாயிருக்கும் தன்மை விவக்ஷிக்கப்பட்டது. மறதியின்மையால் எவ்வாறு நித்யம் புதிதாயிருக்குமோ அவ்வண்ணமாக அத்யயநமுள்ளவன் என்று அர்த்தம். அன்றிக்கே, தனனோடு ஸமவயதுள்ளவர்களான எல்லோருக்கும் $அத்யாபகன் - அவர்களைக்காட்டிலும் அதிக ஜ்ஞாநமுள்ளவனென்று அர்த்தம். ஆசிஷ்ட: - மிக்கவிரைவுடன் கார்யம்செய்கிறவன். அன்றிக்கே, நன்றாய் ஆஹாரத்தை உட்கொள்வதில் திறமையுள்ளவன்-ரோகமில்லாதவனென்று அர்த்தம். அல்லது ஆசீர்வாததிற்குவிஷயமாயிருப்பவன்.

‡ அநுவாகம்—பேதத்தினது ஓர் உள்பிரிவும்.

@ ஐகார்த்த்யம்—ஒரே பொருளை உணர்த்தும் தன்மை.

§ உபபாதனம்—தெளிவாகக்கூறுதல். ♆ க்ஷேத்ராஜ்ஞன்—ஜீவன்.

*நிர்விசேஷத்வம் — விசேஷங்களில்லாமலிருத்தல்.

$ அத்யாபகன்—படிப்பிக்கிறவன்.

ஸர்வஜனங்களையும் ரஞ்ஜிக்கச்செய்பவன் என்று அர்த்தம். "ஸர்வாந்தேவாந் நமஸ்யந்தி" என்பதுபோல, பலிஷ்ட:- மனோபலமுள்ளவன். த்ரடிஷ்ட: என்று சரீரபலம் கூறப்பட்டிருப்பதால். அனந்திக்கே த்ரடிஷ்ட:, மிக்கதிடமுள்ளவன் - நிலைதவறின ஸ்வபாவமில்லாதவன் என்று அர்த்தம். பலிஷ்ட: சாரீரமானஸ ஸர்வவித பலங்களுமுள்ளவன் வித்தஸ்யபூர்ணா-ஐச்வர்யத்தால் நிறைந்தது "பூரணகுணஸுஹிதார்த்த ஸத்வ்யயதவ்ய ஸமாநாதிகரணேந", எனகிற ஸூத்திரத்திஞல் ‡பாணிநியிஞல் ஆறும்வேற்றுமை உறுபுவருவதற்கு அநுமதிகொடுக்கப்பட்டிருப்பதஞல் ஸஏகோமாநுஷ ஆநந்த: - இவ்வாறு குணஸமுதாயத்தையும் விபூதியின் நிறைவையும சொல்லிவிட்டு "ஸஏகோமாநுஷஆநந்த: என்கிற ச்ருதியிஞல் ஸ்வரஸமாக அவனுக்கே ஆநந்தத்வம் கூறப்பட்டிருக்கிறது. அநுகூலத்வமன்றே ஆநந்தத்வம். || நிவாத்திக்கத்தக்க அநிஷ்டத்தை இஷ்டஸாதனத்தை இரண்டையும் அபேக்ஷியாமலிருக்கிற இஷ்டத்வமே அநுகூலத்வம். முற்கூறப்பட்ட லக்ஷண ஸம்பந்தத்திஞல் குணவிபூதிகளிரண்டிற்கும ஆநந்தத்வம் உபபந்நமாகிறது. அதை விஷயீகரிக்கிற ஜ்ஞாநத்திற்கும அநுகூலத்வமானது விஷயாநுகூலத்வத்தால செய்யப்பட்டதென்பது அந்வயவ்யதிரேகங்களால் ஸித்திக்கிறது. இப்படிச் சொல்வதில் ச்ருதிஸ்வாரஸ்யமும் ஸித்திக்கிறது. குணவிபூதிகளுடைய மேன்மையைக்கூறி அது ஆநந்தமென்றல்லவோ உரைக்கப்பட்டிருக்கிறது. அதை விஷயமாகக்கொண்ட ஜ்ஞானமானது ஆனந்தமென்று கூறப்படவில்லை. * யுவத்வம் முதலிய அநேக குணங்களையும் விபூதியையும் சொல்லிவிட்டு அவைகளின் ஸமுதாயத்தை ஆநந்தசப்தத்தால் நிர்தேசித்து அந்த ஆநந்தத்திற்கு நிரதிசயத்வத்தை ப்ரதிபாதித்திருப்பதால் எல்லா குணங்களுக்கும் விபூதிக்கும் † அநவதிகாதிசயத்வம ப்ரதிபாதிக்கப்பட்டதாக ஆகிறது. அநுகூலஜ்ஞாநத்வமே ஆ ந ந் த த் வ ம் என்றதஞல் குணவிபூதிவிஷயமான ஜ்ஞாநத்திற்கு ஆநந்தத்வமிருந்தபோதிலும அந்த ஆநந்தத்திற்கு நிரவதிகாதிசயத்வத்தைக்கூறினதிஞல் குணவிபூதிகளுக்கும அநவதிகாதிசயத்வம அர்த்தத்தால் சொல்லப்பட்டதாக ஆகிறது. அந்த ஆநந்தத்திஞுடைய அளவிறந்த தன்மை குணவிபூதிகளிஞுடைய அளவிறந்த தன்மையைக்காரணமாகக்கொண்டிருப்பதால். ஆரப்ய என்று. உபக்ரம வாக்யத்திற்குஅநுகுணமாக உபஸம்ஹார வாக்யமானது அர்த்தத்தில் சேர்ப்பிக்கத்தக்கதென்று கருத்து. "ச்ரோத்ரியஸ்ய சாகாம ஹதஸ்ய" என்கிற வாக்யங்களால் முகதாநந்தத்திற்கு பகவதாநந்தஸாம்யம் உரைக்கப்பட்டதாக ஆகிறது. பத்ததசையில் நிரதிசயமான ஆநந்தத்திற்கு ஸம்பவமில்லாமையால் ச்ரோத்ரிய: ப்ரஹ்மநிஷ்டன். அகாமஹத:- அவித்யை முற்றிலும் நசித்தபடியிஞல் ஸமஸ்தமான ஸாம்ஸாரிக போகங்களால் கெடுக்கப்படாதவன். "ஸஏக: ப்ரஜாபதேராநந்த:" என்கிற வாக்யத்தை ஈற்றில்கொண்ட ச்ருதியிஞல் க்ஷேத்ரஜ்ஞனுடைய ஆநந்தாதிசயம் கூறப்பட்டது. "ஸ ஏகோ ப்ரஹ்மண ஆநந்த:" என்று பகவதாநந்தம் கூறப்படுகிறது. இந்த வாக்யத்திலுள்ள ப்ரஹ்மாநந்தத்தை நான்முகனுடைய @ ஆநந்த பரமாகக்கூறுமபக்ஷத்தில் ப்ரஹ்ம சப்தத்திற்கு ஸ்வாரஸ்யமில்லாமல் போகிறது. "பரம்ஜைமினிர் முக்க்யத்வாத்" "ஸ்யாச்சைக

|| நிவர்திக்கத்தக்க—விலக்கத்தக்க.

‡ பாணிநி—இவர் 3982 ஸூத்ரங்களடங்கிய எட்டு அத்தியாயங்களுள்ள வ்யாகரண ஸூத்ரங்களைச்செய்தவர். இவருக்கு 'ஸாலாதுரீயர்' என்று மற்ருெரு பெயருமுண்டு.

$விபூதி—நியாம்யவஸ்து. * யுவத்வம—யௌவநம.

† அநவதிகம்—எல்லை இல்லாதது. ¶ உபக்ரமம்—தொடக்கம்.

‡ உபஸம்ஹாரம்—முடிவு. @ ஆநந்தம—அனுகூல ஜ்ஞானம்.

ஸ்யப்ராஹ்ம சப்தவத்" என்று ப்ராஹ்ம சப்தத்திற்கு அந்த ப்ராஹ்மத்தினிடத்திலேயே முக்யவ்ருத்தி இருப்பதாக ஸூத்ரகாரரால் கூறப்பட்டிருப்பதாலும், பாஷ்யத்தில்முதல் ஸூத்ரத்திலிருக்கும் ப்ராஹ்மசப்த வியாக்கியான ஸமயத்தில் விஸ்தரிக்கப்பட்டிருப்பதாலும் "ப்ராஹ்மவிதாப்நோதிபரம் ப்ராஹ்மணோவிபஶ்சிதா. ஆநந்தம் ப்ராஹ்மண:, அஸத் ப்ராஹ்மேதிவேதசேத், அஸ்திப்ராஹ்மேதிசேத்வேத" என்கிற ப்ரகரணத்திலிருக்கிற ப்ராஹ்ம சப்தங்களுக்கு ப்ராஹ்மபரத்வமிருப்பதால் ப்ரகரணவிரோதமும் "ஆநந்தம் ப்ராஹ்மணோ வித்வான்" என்று முந்தியும் பிந்தியும் ஆநந்தப்ரதியோகியான ஷஷ்ட்யந்தமான ப்ராஹ்ம சப்தத்தின் ஸ்வாரஸ்ய விரோதமும், "ஸைஷாநந்தஸ்ய" என்று தொடங்கப்பட்ட ப்ராஹ்மாநந்தத்திற்கு நான்முகனுடைய ஆநந்தத்தால் உபஸம்ஹாரம்செய்திருப்பதும், "ததப்யேஷ ச்லோகோபவதி" என்று ப்ராஹ்மாநந்தத்தைத் தொடங்கி இனி கூறப்படப்போகிற ச்லோகத்திற்கு முற்கூறப்பட்ட விஷயத்வத்திற்கு விரோதமும் "ஸ ஏக: ப்ராஜாபதே:" என்கிற உபபதமில்லாத ஏகவசநாந்தமான ப்ராஜாபதி சப்த ஸ்வாரஸ்யபங்கமும். அதுஜாத்யேகவசனம் என்பது கூடாது. பஹுத்வத்தையும் ஏகத்வத்தையும் விவக்ஷிக்குங்கால் பஹுவசநமும் ஏகவசநமும் வரக்கூடிய ப்ரகரணமாயிருப்பதால். "தேவாநாம், தேவகந்தர்வாணாம், மநுஷ்யகந்தர்வாணாம், இந்த்ரஸ்ய, ப்ருஹஸ்பதே:, ப்ராஜாபதே:", என்றல்லவோ நிர்தேசிக்கப்படுகிறது. ஆகையால் ப்ராஜாபதி சப்தமானது நான்முகனையே உணர்த்துகிறது. "ஸ ஏகோ ப்ருஹ்மண:" என்கிற இடத்தில் ப்ராஹ்ம சப்தம் பகவானைச்சொல்லுகிறது. "தேயேசதம், ஸ ஏக:" என்று பகவதாநந்தத்திற்கு பரிச்சிந்நத்வம் எவ்வண்ணம் என்று கூறப்படுமேயானால் பரிச்சிந்நத்வமில்லை "ஒரு அரைக்ஷணத்தில் அநேக யோஜனை தூரம் செல்லுகின்ற சூர்யனுக்கு எய்யப்பட்ட அம்புபோல் செல்கின்றான்" என்கிற இது முதலிய வாக்யங்களில் ஸாம்யத்தைச் சொல்லுதலானது எவ்வாறு கதியின் மாந்த்யநிவ்ருத்தியில் நோக்குள்ளதோ பரிச்சிந்நத்வபரமன்றோ, அவ்வாறே "தேயே சதம் ஸ ஏக:" என்கிற நிர்தேசமும் சதுர்முகனுடைய ஆநந்தத்தைக்காட்டிலும் ப்ராஹ்மாநந்தத்திற்கு ஆதிக்யத்தைச் சொல்லுவதில் அபிப்ராயமுள்ளதேயொழிய பரிச்சேதத்தில் நோக்குள்ளதல்ல. அன்றிக்கே "தேயே சதம், ஸ ஏக:" என்கிற நிர்தேசத்திற்கு ஸங்க்யாவிசேஷத்தில் நோக்கு இருந்தபோதிலும் ஆநந்தத்திற்கு அபரிச்சிந்நத்வம் பலித்தது. "அண்டாநாம் து ஸஹஸ்ராணாம் ஸஹஸ்ராண்யயுதாநிச-ஈத்ருஶாநாம் ததா தத்ர கோடி கோடி ஶதாநிச-ரோமகூபேஷ்வநந்தாநி ப்ராஹ்மாண்டாநி ப்ரமந்தி தே" (உம்முடைய ரோமகூபங்களில் இப்படிப்பட்ட ஆயிரக்கணக்கான அண்டங்களுடைய ஆயிரங்களும் பதினாயிரங்களும், அவ்வாறே அந்த ரோமகூபங்களில் கோடிகளும் நூறு கோடிகளும் அநந்தங்களான ப்ராஹ்மாண்டங்களும் சுழலுகின்றன) இதுமுதலிய வசநங்களால் அண்டங்கள் அநந்தங்களாயிருப்பதால் அந்தந்த அண்டங்களில் சதுர்முகர்களும் அநந்தமாயிருப்பதால் மூன்று காலங்களிலுள்ள ஸமஸ்த ப்ராஹ்மாண்டங்களையும் அடைந்திருக்கிற சதுர்முகர்களுடைய ஆநந்தத்தை அபேக்ஷித்து நூறு மடங்காயிருப்பதால் "மேரோரிவாணுர் யஸ்யைதத் ப்ராஹ்மாண்டமகிலம் முநே" (மஹர்ஷே $ மஹாமேரு பர்வதத்திற்குப் பரமாணுபோல

$ மஹாமேரு—இது ஸ்வர்ணமயமான ஒரு மலை. இதில் சிம்சுமாரசக்கிரம் ஒன்று நாட்டப்பட்டிருப்பதாகவும் அந்த சக்கிரத்தில் எல்லா ஜ்யோதிர்க்ரஹங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றனவென்றும் அதை நடத்துகிற த்ருவன் உயர்ந்த ஸ்தானத்திலிருப்பதாகவும் இந்த மலையை ஸூர்யசந்திரர்கள் சுற்றிவருவதால் உதயாஸ்தமய வ்யவஹாரமென்றும் பூகோளககோளதத்வங்களை அறிந்த பெரியோர்கள் உரைக்கின்றனர்.

னந்த ப்ரஹ்மத்திற்கு இந்த ப்ரஹ்மாண்டமனைத்தும்) என்று கூறப்பட்ட த்ரிபாத்விபூதியோடுகூடியிருத்தலாலும் பகவதாநந்தத்திற்கு அத்யந்தம முடிவின்மை ஸித்திப்பதால் என்று. கல்யாணகுணாநந்த்யமிதி க்ரமமாக குணங்களின அபகர்ஷம் கூறப்பட்டிருக்கவில்லையன்றோ. பின்னையோ குணங்களின் மேன்மையே கூறப்பட்டிருக்கிறது. ஆகையால் குண † ப்ரகர்ஷத்திற்கு நிரதிசயத்வம் இருப்பதால் வாக்குக்கும் மனதிற்கும் நிவ்ருத்தி என்று கருத்து. அத்யாதரேண இதி-ப்ரஹ்ம ஸ்வரூபத்தைக் காட்டிலும அந்த ப்ரஹ்மத்தினுடைய குணஙகளில ஆதராதிசயம் கூறப்பட்டது. "ஆநந்தம் ப்ரஹ்மணோ வித்வாந்" என்றல்லவோ ச்ருதி. ஆநந்தாந்விதம ப்ரஹ்ம வித்வாந் என்று ச்ருதி வசநமில்லையென்று கருத்து. இயம் ச்ருதி: என்று. நிர்குணபரமென்று உன்னால் கூறப்பட்டிருக்கிற சருதி வசநங்களில் இந்த ப்ரகரணத்திலுள்ள ச்ருதியும் நம்மால் கூறப்பட்டிருக்கிற அர்த்தத்திற்கு அநுகுணமானதே என்று கருத்து.

"ஸோऽஶ்நுதே ஸர்வாந்காமாந்த்ஸஹ ப்ரஹ்மணா விபஶ்சிதா" இதி ப்ரஹ்மவேதநஃபலமவாப்யமாநம் பரஸ்ய விபஶ்சிதோ ப்ரஹ்மணோ குணாநந்த்யம் ப்ரவீதி। விபஶ்சிதா ப்ரஹ்மணா ஸஹ ஸர்வாந் காமாந் ஸமஶ்நுதே। காம்யந்த இதி காமா:—கல்யாணகுணா:। ப்ரஹ்மணா ஸஹ தத்குணாந் ஸர்வாந் அஶ்நுத இத்யர்த:। தஹரவித்யாயாம் "தஸ்மிந் யதந்தஸ்ததந்வேஷ்டவ்யம்" (சா-அ-க-க) இதிவத் குணப்ராதாந்யம் வக்தும் ஸஹஶப்த:। ஃபலோபாஸநயோ: ப்ரகாரைக்யம் "யதா க்ரதுரஸ்மிந் லோகே புருஷோ பவதி ததேத: ப்ரேத்ய பவதி" (சா-ங-கச-க) இதி ஶ்ருத்யைவ விதிதம்॥

ஸ்ரீபாஷ்யம்.—

"அவன் ஸர்வஜ்ஞனாயிருக்கிற ப்ரஹ்மத்தோடுகூட எல்லா கல்யாண குணங்களையும் அநுபவிக்கிறான்" என்று ப்ரஹ்மவேதந பலத்தை அறிவிக்கிற வாக்கியமானது ஸர்வஜ்ஞனான பரப்ரஹ்மத்தின் குணங்களுடைய ஆநந்த்யத்தைச்சொல்லுகிறது. எல்லாமறிந்த ப்ரஹ்மத்தோடுகூட எல்லா காமங்களையும்நன்றாக அநுபவிக்கிறான். காமங்களாவன:- காமிக்கப்படுபவைகள், கல்யாண குணங்கள். ப்ரஹ்மத்துடன்கூட அதன் குணங்களனைத்தையும் நன்

---

† ப்ரகர்ஷம்—மேன்மை.

ரூய் அநுபவிக்கிருன் என்று அர்த்தம். தஹரவித்யையில், “தஸ்மிந் யதந்த: ததந்வேஷ்டவ்ய” என்கிற வாக்கியத்தில் போல் குணப்ராதாந்யத்தைச் சொல்வதற்காக ஸஹ ச ... ல உபாஸநம் இரண்டுக்கும் ப்ரகாசைகியம் “யதாக்ரதுரஸ்மிந்லோகே புருஷோபவதி ததேத: ப்ரேத்யபவதி” என்கிற சுருதியினுலேயே ஸித்தம்.

ச்ருதப்ரகாசிகை.—

இவ்வண்ணம் ஆர்த்தமான குணநிஷேத நிராஸத்தின் வாயிலாக குணாநந்த்யத்தைப் ப்ரதிபாதிக்கிற ப்ரகரணத்திலுள்ள வாக்யாந்தரத்தோடு அர்த்தைக்யமிருப்பதால ஸத்யஜ்ஞாநாதிவாக்யத்திற்கு ஸவிசேஷவிஷயத்வம் கூறப்பட்டது. பிறகு, தன் வாக்யத்தின் ஏகதேசத்தாலுங்கூட ஸவிசேஷ பரத்வத்தை உபபாதிக்கிருர்—ஸோச்நுதே இதுமுதலியதால். பலம்வட்மயத் வாக்யம் ப்ரஹ்மவிதாப்நோதிபரம” என்கிற ப்ராஹ்மணத்தில் ப்ரஹ்மம், அதினைவேதநம், ப்ராப்தி, ப்ராப்யம், இந்நான்கும உரைக்கப்பட்டது. இதன விவரணமானது ‘ஸத்யம் ஜ்ஞாநமநந்தம்’ முதலிய மந்த்ரத்தினுல் செய்யப்படுகிறதென்று ச்ருதியே கூறுகிறது—‘ததேஷாப்யுக்தா’ என்று. அந்த ப்ரஹ்மத்தையே நோக்கி இந்த ருக்கானது அத்யயனம் செய்பவர்களால் சொல்லப்பட்டிருக்கிறதென்று அர்த்தம். மந்த்ரங்களுக்கு ப்ராஹ்மண விவரணரூபத்வம் காணப்பட்டிருக்கிறதாலும், உபக்ரமாதிகரண விஷய வாக்யங்களைப்போல, மேலெழ விரோத ப்ரதீதியில்லாமையாலும், மந்த்ர ப்ராஹ்மணங்கள் இரண்டுக்கும் நித்யநிர்தோஷத்வம் விசேஷமின்றி இருப்பதாலும், மந்த்ரத்தை அபேக்ஷித்து ப்ராஹ்மணத்திற்கு ப்ராபல்யம் கூறுவது பொருந்தாது தெளிவாய் அறிவதற்கு ஹேதுவாயிருத்தல் அதின் இயமை இவ்விரண்டுமே ப்ராபல்ய தௌர்பல்ய சப்தங்களால் விவக்ஷிக்கப்பட்டிருக்கின்றனவென்று சொல்லப்படுமேயாகுல் விரோதமில்லை. “ஸத்யம் ஜ்ஞானமநந்தம் ப்ரஹ்ம” என்கிற வாக்யத்தால் ப்ரஹ்ம சப்தம் விவரிக்கப்பட்டது. “யோவேத நிஹிதம் குஹாயாம்” என்பதனுல் வித்சப்தம் விவரிக்கப்பட்டது. “பரமே வ்யோமந் ஸோச்நுதே” என்பதனுல் ப்ராப்தி விவரிக்கப்பட்டது. “ஸர்வாந் காமாந்” இதுமுதலியதால் ப்ராப்யம் விவரிக்கப்பட்டது. அவற்றுள் இது பரசப்தார்த்தத்தின் விவரணமென்று காண்பிப்பதற்காக **பரஸ்யவிபச்சிதோ ப்ரஹ்மண:** என்று கூறப்பட்டது. விபச்சித்வமும் போக்யகுணமாக உரைக்கப்பட்டிருக்கிறது. வாக்யத்தின் அர்த்தத்தை கூறுவதற்காக பதங்களுடைய அந்வயத்தைக்காட்டுகிருர்—**விபச்சிதா** என்று. இந்த வாக்யத்தில் குணவாசியான பதம் எது என்று சங்கைவர “யதாஸர்வே ப்ரமுச்யந்தே காமா யேஸ்ய ஹ்ருதி ஸ்திதா:” என்று விடத்தக்கதாகக் கூறப்பட்டிருக்கிற காமங்களை விலக்குவதின்பொருட்டு அவயவசக்தியினுல் வ்யாக்கியானம் செய்கிருர்—**காம்யந்தே** என்று. ப்ரஹ்மவேதநபலமாக இருப்பதுபற்றி முக்தர்கள் அநுபவிக்கத்தகாததாயிருப்பதால் இந்த இடத்தில் விடத்தக்கதான காமபரத்வம் உபபந்நமாகாததாலும், காம்யத்வரூபதர்மத்திற்கு ப்ரஹ்மஸ்வரூபத்திலும் ஸம்பவமிருந்தபோதிலும் வ்யதிரேகநிர்தேசத்தாலும், பஹுவசநாந்தமாக இருப்பதாலும், அவயவசக்திக்கும் அந்த அவயவசக்தியினுல் கூறப்பட்டிருக்கிற போக்யதவத்திற்கும் குணங்களில் ஸம்பவமிருப்பதாலும், “ஸவா ஏதேந திவ்யேந சக்ஷுஷா மனஸா ஏதாந்காமாந் பச்யந் ரமதே யஏதே ப்ரஹ்மலோகே” - “யஇஹ ஆத்மாநம்

அநுவித்ய வ்ரஜந்த்யேதாம்ஶ்ச ஸத்யாந் காமாந்" - "தஇமே ஸத்யா:காமா:" என்கிற ச்ருத்யந்தரங்களோடு ஐகார்த்த்யமிருப்பதாலும் கல்யாணகுணங்கள் காமசப்த வாச்யங்களென்று அர்த்தம். இது யாருடைய குணங்கள்? ப்ரஹ்மத்துக்கு § ஸஹபாவமும் "புத்ரேணஸஹ $ ஓதநம் புங்க்தே" என்கிற இடத்தில் புத்ரனுக்குப்போலே ¶ போக்தாவாயிருப்பதினாலேயா? அல்லது @ க்ஷீரத்தைப்போல ‡‡ போக்யதையினாலேயா? என்கிற சங்கையையும் பரிஹரித்துக்கொண்டு வாக்யார்த்தத்தைக்கூறுகிறார்—ப்ரஹ்மணா என்று. இந்த வாக்யமானது ப்ராப்யத்தைக்கூறுகிற 'பர' சப்தத்தின் விவரணரூபமாயிருப்பதாலும், "ஸர்வாந் காமாந் ஸஹப்ரஹ்மணா" என்று போக்யவாசியான பதத்தோடு இடைவிடாத ப்ரயோக ஸ்வாரஸ்யத்தாலும் 'ஸஹ' சப்தமானது ‡‡ போக்யஸாஹித்யத்தில் நோக்குள்ளது. ‡ ஸந்நிஹிதமான ப்ரஹ்மமே குணங்களுக்கு ஆச்ரயம். ஆகையால் அனந்தகுணவிசிஷ்டமான ப்ரஹ்மத்தை அநுபவிக்கிறான் என்று அர்த்தம். "ஸஹயுக்தேऽப்ரதாநே" என்கிற சப்தாநுசாஸனத்திற்கு உடன்பட்டிருப்பதால் 'ஸஹ' சப்தத்தாலே ப்ரஹ்மத்துக்கு அப்ராதாந்யத்தை ஆசங்கித்து அதை பரிஹரிப்பதின்பொருட்டு 'ஸஹ' சப்தப்ரயோஜனத்தைக்கூறுகிறார்—தஹர என்று. "யோவேத" என்று விஹிதமான வேதாந்தத்தில் ஸஹசப்தமானது குண ப்ராதாந்யத்தை ஸூசிப்பிக்கிறது. தஹர வித்யையில் உபாஸனத்தில் குணப்ராதாந்யமன்றோ கூறப்பட்டிருக்கிறது. அப்படியே இந்த இடத்திலும் உபாஸனத்தில் குணப்ராதாந்யத்தைச்சொல்லுவதற்காக "ஸஹ" சப்தம் என்று அர்த்தம். பலதசையில் குண ப்ராதாந்யம் கேட்கப்பட்டிருப்பதால், உபாஸனத்தில் எவ்வாறு குணப்ராதான்யம் ஸித்திக்கிறதென்று கேட்கில் கூறுகிறார்—பலோபாஸநயோ: என்று. பலம் உபாஸனம் இரண்டுக்கும் ஸகுணத்வமும் குணப்ராதாந்யமும் துல்யஸ்வபாவமுள்ளதென்ற அர்த்தம். 'குணப்ராதாந்யம் வக்தும்' என்கிற இந்த வாக்யத்தாலும் ஸஹசப்தத்திற்கு போக்ய ஸாஹித்யபரத்வம் ஸித்தம். அங்ஙனமில்லாவிடில் போக்தரு ப்ராதாந்யமல்லவோ ஸித்திக்கும். போக்யகுண ப்ராதாந்யம் ஸித்திபெறாது. ச்ருத்யைவ என்கிற ஏவகாரத்தால் கூறப்பட்டிருக்கிற ந்யாயத்துக்கு புருஷ புத்தியினால் கல்பிக்கத்தக்க உத்ப்ரேக்ஷையை எதிர்பாராமலிருக்கிற ச்ருதியினால் கண்டோக்தத்வம் அபிப்பிராயப்படப்பட்டிருக்கிறது.

"யஸ்யாமதம் தஸ்ய மதம், அவிஜ்ஞாதம் விஜாநதாம்" (கே-௨-௩) இதி ப்ரஹ்மணோ ஜ்ஞாநாவிஷயத்வஶ்ரவணாச்ச; "ப்ரஹ்மவிதாப்நோதி பரம்" (தை-ஆ-௧-௧) "ப்ரஹ்மவேத ப்ரஹ்மைவ பவதி" (மு-௩-௨-௯) இதி ஜ்ஞாநாதேவ மோக்ஷாவகமாச்ச। "அஸந்நேவ ஸ பவதி। அஸத் ப்ரஹ்மேதி வேத சேத்। அஸ்தி ப்ரஹ்மேதி சேத்வேத। ஸந்தமேநம் ததோ விது:" (தை-ஆ-௬-௧) இதி ப்ரஹ்மவிஷய

---

§ ஸஹபாவம்—சேர்ந்திருத்தல். $ ஓதநம்—சோறு. ¶ போக்தா—புஜிக்கிறவன்.
@ க்ஷீரம்—பால். ‡‡ போக்யம்—அநுபவிக்கத்தக்க வஸ்து.
‡ ஸந்நிஹித—பக்கத்திலிருக்கிற.

𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌸𑌜𑍍𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑌜𑍍𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌭𑍍𑌯𑌾𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌾𑌶𑌮𑌾𑌤𑍍𑌮𑌸𑌤𑍍𑌤𑌾𑌂 𑌚 𑌵𑌦𑌤𑌿 । 𑌅𑌤𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌷𑌯𑌵𑍇𑌦𑌨𑌮𑍇𑌵𑌮𑍋𑌕𑍍𑌷𑍋𑌪𑌾𑌯𑌂 𑌸𑌰𑍍𑌵𑌾𑌶𑍍𑌰𑍁𑌤𑌯𑍋 𑌵𑌿𑌦𑌧𑌤𑌿 । 𑌜𑍍𑌞𑌾𑌨𑌞𑍍𑌚 𑌉𑌪𑌾𑌸𑌨𑌾𑌤𑍍𑌮𑌕𑌮𑍍 । 𑌉𑌪𑌾𑌸𑍍𑌯𑌂 𑌚 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌸𑌗𑍁𑌣𑌮𑌿𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌮𑍍 । “𑌯𑌤𑍋 𑌵𑌾𑌚𑍋 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇 । 𑌅𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌮𑌨𑌸𑌾 𑌸𑌹” (𑌤𑍈-𑌆-𑌅-௧) 𑌇𑌤𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋𑌽𑌨𑌨𑍍𑌤𑌸𑍍𑌯𑌾𑌪𑌰𑌿𑌚𑍍𑌛𑌿𑌨𑍍𑌨𑌗𑍁𑌣𑌸𑍍𑌯 𑌵𑌾𑌙𑍍𑌮𑌨𑌸𑌯𑍋𑌰𑍇𑌤𑌾𑌵𑌦𑌿𑌤𑌿 𑌪𑌰𑌿𑌚𑍍𑌛𑍇𑌦𑌾𑌯𑍋𑌗𑍍𑌯𑌤𑍍𑌵𑌶𑍍𑌰𑌵𑌣𑍇𑌨 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣 𑌏𑌤𑌾𑌵𑌦𑌿𑌤𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌪𑌰𑌿𑌚𑍍𑌛𑍇𑌦𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌤𑌾𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌤𑌮𑌮𑌤𑌮𑌿𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌮𑍍 ; 𑌅𑌪𑌰𑌿𑌚𑍍𑌛𑌿𑌨𑍍𑌨𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌃 । 𑌅𑌨𑍍𑌯𑌥𑌾 “𑌯𑌸𑍍𑌯𑌾𑌮𑌤𑌂 𑌤𑌸𑍍𑌯 𑌮𑌤𑌮𑍍”, “𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌤𑌮𑌵𑌿𑌜𑌾𑌨𑌤𑌾𑌮𑍍” 𑌇𑌤𑌿 𑌮𑌤𑌤𑍍𑌵 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌤𑌤𑍍𑌵 𑌵𑌚𑌨𑌂 𑌤𑌤𑍍𑌰𑍈𑌵 𑌵𑌿𑌰𑍁𑌧𑍍𑌯𑍇𑌤 ॥

ஸ்ரீ பாஷ்யம்—

“எவனால் ப்ரஹ்மமானது புத்திக்கு விஷயமாகாததென்று அறியப்பட்டிருக்கிறதோ அவனால்தான் ப்ரஹ்மம் அறியப்படுகிறது; ப்ரஹ்மம் ஞான விஷயமென்று அறிந்தவர்களால் அறியப்படுகிறதில்லை,” என ப்ரஹ்மத்துக்கு ஜ்ஞானவிஷயத்வம் கூறப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுமேயானால் “ப்ரஹ்மத்தை அறிந்தவன் உத்தமமான பதவியை அடைகிறான்,” “ப்ரஹ்மத்தை அறிந்தவன் ப்ரஹ்மமே ஆகிறான்,” என்று ஜ்ஞானத்தாலே மோக்ஷோபதேசமானது உண்டாகாமல் போகும். ‘ப்ரஹ்மமில்லையென்று அறிவானேயாகில் அவன் இல்லாதவனாகவே ஆகிறான்; ப்ரஹ்மிருக்கிறதென்று அறிவானேயானால் அவனை அந்த ப்ரஹ்ம ஜ்ஞானத்தாலே ஸத்தையுள்ளவனாக அறிகிறார்கள்” என்று ப்ரஹ்ம விஷயமான ஜ்ஞானத்தின் ஸத்பாவாஸத்பாவங்களால் ஆத்மநாசத்தையும் ஆத்ம ஸத்தையையும் சுருதி கூறுகிறது. ஆதலால் ப்ரஹ்ம விஷயமான வேதனமே மோக்ஷோபாயமென்று எல்லா ச்ருதிகளும் விதிக்கின்றன. ஜ்ஞானமும் உபாஸனரூபம்; உபாஸிக்கத்தக்க ப்ரஹ்மமும் ஸகுணமென்று கூறப்பட்டிருக்கிறது. “யதோவாசோ நிவர்த்தந்தே-அப்ராப்ய மநஸா ஸஹ” என்று முடிவற்றதும் அபரிச்சிந்நமான குணங்களோடு கூடியதுமான ப்ரஹ்மத்திற்கு இவ்வளவுதான் என்று வாக்காலும் மனதாலும் அளவிடுவதற்குத்தகாமை கேட்கப்படுவதினால் ‘ப்ரஹ்மமானது இவ்வளவெ’ன்று ப்ரஹ்மவிஷயகமான பரிச்சேத ஜ்ஞானமுள்ளவர்களுக்கு ப்ரஹ்மமானது ‘அறியப்படாததும்’ ‘எண்ணப்

படாததுமாக ஆகிறதென்று கூறப்பட்டது, ப்ரஹ்மமானது அபரிச்சிந்நமாயிருப்பதால். அங்ஙனமில்லாவிடில் "யஸ்யாமதம் தஸ்யமதம்"—"விஜ்ஞாதமவிஜாநதாம்" என்று மதத்வவிஜ்ஞாதத்வ வசநங்கள் அவ்விடத்திலேயே விரோதிக்கும்.

ச்ருதப்ரகாசிகை—

பிறகு, ஸகுணங்களுக்கே ஜ்ஞேயத்வம் காணப்பட்டிருப்பதால் ஜ்ஞேயத்வத்தை நிஷேதித்ததினால் நிர்குணத்வம் பலித்தது என்று ஜ்ஞேயத்வ நிஷேதபரமாக அந்யரால் சொல்லப்பட்ட வாக்யத்தை எடுக்கிறார்—யஸ்ய என்று. ஜ்ஞானமாத்ரத்திற்கு அவிஷயத்வமா? அல்லது உபாஸநாத்மகமான ஜ்ஞானத்திற்கு அவிஷயத்வமா? அல்லது ஸகுணோபாஸனாத்மகமான ஜ்ஞானத்திற்கு அவிஷயத்வம் விவக்ஷிக்கப்பட்டிருக்கிறதா? என்கிற மூன்று விகல்பத்தை அபிப்ராயப்பட்டு முதலாவதான ஜ்ஞானமாத்ராவிஷயத்வத்தை தூஷிக்கிறார்—ப்ரஹ்மவித் என்று. ப்ரஹ்மத்தை அறிவதில் ச்ருதியினுடைய ஆதராதிசயத்தைக் காண்பிக்கிறார்—அஸந்நேவ என்று. ப்ரஹ்மவேதநம் மோக்ஷோபாயமன்று; பின்னை ப்ரபஞ்சவிஷயமான மித்யாத்வஜ்ஞானமே அந்த மோக்ஷத்திற்கு உபாயமென்று அந்யர்களால் கூறப்படுகிறது. குறிப்பிடப்பட்டிராத விசேஷ விஷயங்களோடுகூடியதான "வித்யயா அம்ருதமச்நுதே"—"ததா வித்வாந் நாமரூபாத்விமுக்த:"—"ததோ ஜ்ஞானம் ப்ரவர்த்ததே"—"ஜ்ஞாநாக்நிஸ்ஸர்வகர்மாணி" என்கிற இது முதலிய வாக்யங்களில் மோக்ஷத்திற்கு உபாயமாகக் கேட்கப்படுகின்ற ஜ்ஞானத்திற்கு ப்ரஹ்மவிஷயத்வம் ப்ரபஞ்சமித்யாத்வ விஷயத்வம் இரண்டும் பொதுவாயிருப்பதால் அதை ஆசங்கித்துக் கூறுகிறார்— அத: என்று. அத: - சில வாக்யங்களில் மோக்ஷோபாய ஜ்ஞானத்திற்கு ப்ரஹ்ம விஷயத்வம் காணப்படுவதால், ஸர்வா: ச்ருதய: - நிர்தேசிக்கப்படாமலிருக்கிற விஷய விசேஷங்களையுடைய "வித்யயா அம்ருதமச்நுதே" இது முதலிய ச்ருதிகளுங்கூட ஸாமாந்யவிசேஷ ந்யாயத்தாலே ப்ரஹ்மவிஷயமானவேதநத்தையே அபவர்க்கத்திற்கு உபாயமாக விதிக்கின்றனவென்று அர்த்தம். அன்றிக்கே, சிலவாக்யங்களில் ப்ரஹ்மவிஷயத்வமானது கேட்கப்படில் ஜ்ஞானமாத்ரத்தை உபாயமாகச்சொல்லுகிற ச்ருதிகளும் ஸாமான்யவிசேஷ ந்யாயத்தாலே அந்த ப்ரஹ்மத்தினிடத்திலே பர்யவஸிக்கின்றனவென்று அபிப்ராயம். அதற்குமேல் உபாஸநாத்மக ஜ்ஞாநாவிஷயத்வ பக்ஷத்தை தூஷிக்கிறார்—ஜ்ஞாநஞ்ச என்று. "ததேவ ப்ரஹ்மத்வம் வித்தி - நேதம் யதிதம் உபாஸதே" என்கிற ச்ருதியானது உபாஸனாத்மகமான ஜ்ஞானத்திற்கு அவிஷயத்வ சங்கைக்கு பீஜம். இது வாக்யார்த்த ஜ்ஞானத்திற்கு உபாயத்வாநுபபத்தியை உபபாதிப்பதனால் பரிஹரிக்கப்பட்டது என்று அர்த்தம:—"நேதம்யதிதமுபாஸதே" என்பதற்கு இது அர்த்தம். யாதொரு இந்த § ப்ரதீகத்தை உபாஸிக்கிறார்களோ அதல்ல - அந்த ப்ரஹ்மத்தையே நீ உபாஸிப்

---

§ ப்ரதீகோபாஸநமாவது:—(1) நாமாதிகளை ப்ரஹ்ம த்ருஷ்டியால் உபாஸித்தல். (2) ப்ரக்ருதியுடன்சேர்த்து ஜீவனை உபாஸித்தல். (3) ப்ரக்ருதியைவிட்டகன்ற கேவல ஜீவாத்மாவை உபாஸித்தல். (4) ப்ரஹ்ம சரீரபூதனை ஜீவாத்மாவை உபாஸித்தல். இந்த ப்ரதீகோபாஸ்தி பண்ணுகிறவனுக்கு அர்ச்சிராதிகதியினால் ப்ரஹ்ம ப்ராப்தி கிடையாது.

பாயாக என்று. இதற்குமேல் ஸகுணோபாஸநவிஷயத்வ பக்ஷத்தை நிரஸிக்கிறார்—உபாஸ்யஞ்ச என்று. நிர்குணபரமாக அந்யனால் கூறப்பட்டிருக்கிற ஸத்விதனயக்கே ஸகுணவிஷயத்வத்தை உபபாதிப்பதனால் என்று கருத்து. அன்றிக்கே 'ஜ்ஞானஞ்ச உபாஸநாத்மகம்' என்று ஜ்ஞானவிசேஷ விஷயத்வத்தைக் கண்டோக்தியாகச்சொல்லி இருப்பதால் ஜ்ஞேயத்வமாத்ர நிஷேதமானது முற்றிலும் நிரஸிக்கப்பட்டதென்று கருத்து. உபாஸ்யஞ்ச என்று. ஜ்ஞேயத்வநிவ்ருத்தியினால் ஸாதிக்கப்படவேண்டுமென்று விரும்பப்பட்ட குண நிவ்ருத்தியானது குணவிதாநத்தால் பாதிக்கப்பட்டது. ஆதலால் அஜ்ஞேயத்வத்தை பாதித்து ஜ்ஞேயத்வத்தை ஆக்ஷேபிக்கிறார் என்று கருத்து. அங்ஙனமாகில் அவிஜ்ஞாதத்வ அமதத்வ ச்ருதிகளிரண்டுக்கும் அர்த்தமென்னவென்று கேட்கில் கூறுகிறார்—யதோவாச: என்று. "அனந்த" சப்தத்தால் 'ஸத்யம் ஜ்ஞானம்' இது முதலிய வாக்யம் ஸ்மரிப்பிக்கப்பட்டது. அநந்தஸ்ய என்பதினால் ஸ்வரூபானந்த்யம் கூறப்பட்டது. அபரிச்சிந்நகுணஸ்ய என்று குணானந்த்யம் கூறப்பட்டது. இந்த அர்த்தத்தில் "ஸத்வம முதலிய எல்லா குணங்களாலும் விடுபட்டிருக்கின்ற அந்த பரமாத்மாவினுடைய ஸர்வ குணங்களும் ஸர்வ ருஷிகணங்களாலும் சொல்லுவதற்கு சக்யமாகாதன்றோ" (துதிப்பவர்கள்) குணங்களின் முடிவை அடைகிறதில்லை; அதனால் இந்த பரமபுருஷன் அனந்தன் என்று கூறப்படுகிறான். அநந்தகுணமுள்ளவனாய் இருந்தபோதிலும் உமக்கு ஆறுகுணங்களே முக்கியங்கள்-மஹாத்மாவும் சங்கு சக்கிரம் நந்தகம் இவைகளை கையில்கொண்டவரும் எங்கும்வியாபித்து இருக்கிறவரும் ஜயசீலரும் வஸுதேவ புத்திரராயுமிருக்கிற யாதொரு உம்முடைய குணங்களுண்டோ அவைகள் எல்லா உலகங்களும் ஒருங்குசேர்ந்து பதினாயிரக்கணக்கான வருஷங்களாலும் சொல்வதற்கு ஸாத்யமன்று. ஹே தேவசிரேஷ்ட! நான்முகனுடைய ஆயுள் உடையவனாயும் கோடி முகங்களுள்ளவனாயும் மிக்கபரிசுத்த மனதோடுகூடினவனாயும் ஒரு மனிதன் ஒரு ஸமயத்தில் இருப்பானேயாகில் அந்த மனிதன் உம்முடைய குணங்களின் பதினாயிரத்தில் ஒரு அம்சத்தை சொல்லுவனோ சொல்லமாட்டானோ, க்ருபை செய்வீராக. ஹே! குழந்தாய் எவ்வாறு ஸமுத்திரத்திலுள்ள ரத்னங்கள் கணக்கிடமுடியாதோ அவ்வாறே மஹாத்மாவான அனந்தனுடைய குணங்கள் எண்ணிறந்தவை. பாணப்ரயோகஞ்செய்பவர்கள் அம்பில்லாமையால் எய்யாமல் திரும்புகிறார்களே ஒழிய ஆகாயத்தில் இடமில்லாமையாலல்ல - அவ்வண்ணமே துதிக்க ஆரம்பிப்பவர்கள் புத்தியில்லாமையால் துதிப்பதில் நிவ்ருத்திக்கிறார்களேயொழிய கோவிந்தனுடைய குணங்களின் இன்மையிலல்ல" இது முதலியது காணத்தக்கது. பரிச்சிந்நத்வ ஜ்ஞானத்தாலே தர்மியான ப்ரஹ்மத்துக்கு எவ்வாறுஅஜ்ஞாதத்வம் ஸம்பவிக்கும்? என்று கேட்கில் கூறுகிறார்-அபரிச்சிந்நத்வாத் ப்ரஹ்மண: என்று. ப்ரஹ்ம சப்தத்தால் வாச்யமாக இருக்கிற பரமாத்மாவுக்கு ஸ்வரூபத்தாலும் குணங்களாலும் அபரிச்சிந்நத்வம் இருப்பதால் என்று அர்த்தம். வேறு ச்ருதிகளுக்கு விரோதமில்லாமலிருப்பதற்காக மாத்திரம் இவ்வாறு அர்த்தம் கூறப்பட்டதென்பதில்லை. இங்ஙனமன்றி வேறுவிதமாகக்கூறின் தன் வாக்யங்களுக்கு வ்யாஹதி ப்ரஸங்கிப்பதாலும் என்று கூறுகிறார்-அந்யதா என்று. தத்ரைவ - தன் வாக்கியததிலேயே.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

தயாऽऽத்மாநம் ந பஶ்யே:, ந மந்வீதா², அபி து த்³ரஷ்டாரம் மந்தாரமப்யா-
த்மாநம் த்³ருஷ்டிமதிரூபமேவ பஶ்யேரித்யபிப்ராயாத் பரிஹ்ரியதே ॥
யத்³வா த்³ருஷ்டேர்த்³ரஷ்டாரம் மதேர்மந்தாரம் ஜீவாத்மாநம் ப்ரதிஷித்⁴ய
ஸர்வபூ⁴தாந்தராத்மாநம் பரமாத்மாநமேவோபாஸீதா² இதி வாக்யார்த²:;
அந்யதா² “ விஜ்ஞாதாரமரே கேந விஜாநீயாத் ” (ப்³ரு-௪-௪-௧௪)
இத்யாதி³ ஜ்ஞாத்ருத்வஶ்ருதிவிரோத⁴ஶ்ச ॥

ஸ்ரீபாஷ்யம் —

‘ ந த்ருஷ்டேர்த்ரஷ்டாரம், நமதேர்மந்தாரம் ’ என்கிற ச்ருதியானது த்ருஷ்டி மதி இவ்விரண்டைக்காட்டிலும் வேறான த்ரஷ்டாவையும் மந்தாவையும் நிஷேதிக்கிறதென்று யாதொன்று கூறப்பட்டதோ அது ஆகந்துகமான சைதந்யகுண ஸம்பந்தமுள்ளதாக இருப்பதால் ஜ்ஞாதாவான ஆத்மாவுக்கு குதர்கத்தால் ஸித்திக்கிற அஜ்ஞாந ஸ்வரூபதையை நினைத்து அவ்வாறு ஆத்மாவைப்பாராதே, எண்ணாதே பின்னையோ த்ரஷ்டாவாயும் மந்தாவாயுமிருக்கிற ஆத்மாவை த்ருஷ்டி மதி ரூபமாகவே பார், நினை என்று சொல்லுகிறதென்று பரிஹரிக்கப்பட்டது. அல்லது, த்ருஷ்டியினால் பார்ப்பவனும், மதியினால் எண்ணுகிறவனுமான ஜீவாத்மாவை நிஷேதித்து ஸர்வபூதாந்தராத்மாவான பரமாத்மாவையே உபாஸிப்பாயாக என்று வாக்யார்த்தம். அப்படிச்சொல்லாவிடில் ‘ விஜ்ஞாதாரம் அரேகேநவிஜாநீயாத் ’ இதுமுதலிய ஜ்ஞாத்ருத்வ ப்ரதிபாதக ச்ருதி விரோதமும் வரும்.

ச்ருதப்ரகாசிகை—

ஜ்ஞேயத்வ நிஷேதம் பரிஹரிக்கப்பட்டபிறகு ஜ்ஞாத்ருத்வ நிஷேதத்தை பரிஹரிக்கிறார்—யத்து இது முதலியதால். த்ருஷ்டே: மதே: என்கிற இரண்டு பதங்களும் ஐந்தாம வேற்றுமைப்பதங்கள் என்கிற அபிப்பிராயத்தால் ‘ வ்யதிரிக்த ’ என்கிற பதத்தை அத்யாஹாரம செய்துகொண்டு வாக்யயோஜனை செய்கிறதா? அல்லது ஷஷ்டயந்தமாயிருப்பதாலே வ்யதிரிக்த பதத்தை சேர்த்துக்கொள்ளாமலே உன்னால் வாக்ய யோஜனை செய்யப்படுகிறதா? என்கிற விகல்பத்தை அபிப்பிராயப்பட்டு முதலில் அத்யாஹார பக்ஷத்தை அநுவதிக்கிறார்—நத்ருஷ்டே: என்று. பரிஹரிக்கிறார்—தத்து என்று. ப்ரஸக்தத்துக்கு அல்லவோ ப்ரதிஷேதம், என்கிற சங்கைவரின் ப்ரஸங்கத்தைக்காண்பிக்கிறார்— குதர்க ஸித்தாம் என்று. குதர்கம் எவ்வாறு உபந்யஸிக்கப்பட்டது என்று அபேக்ஷிக்குங்கால் ப்ரஹ்ம ஸ்வரூபம் ஜடம் என்கிற விஷயத்தில் அந்யனாலே உபந்யஸிக்கப்பட்டிருக்கிற இரண்டு ஹேதுக்களையும் ஸங்க்ரஹமாக உபபாதிக்கிறா — ஆகந்துக சைதந்யகுணயோகிதயா என்று. வந்தேறியாயிருப்

பதாலும் குணமாக இருப்பதாலும் என்று இரண்டு ஹேதுக்கள். † ஆகந்துகத்வாத் - அநித்யமாயிருப்பதால். நித்யமான ஆத்மாவிற்கு அநித்யமான ஜ்ஞானமானது ஸ்வரூபமாக ஆவதற்குத்தகுதியுள்ளதல்ல. குணமாயிருப்பதாலும் ஜ்ஞாநம் ஸ்வரூபமல்ல. அன்றிக்கே சைதந்யமாவது விஷயப்ரகாசம் - அது நித்யமான ஸ்வரூபமாக இருக்குமேயாகில் எப்பொழுதும் விஷயப்ரகாசம் ப்ரஸங்கிக்கும் என்று கருத்து. த்ருஷ்டி ச்ருதி மதி நிதித்யாஸநரூபமான ஜ்ஞானவிசேஷங்களுக்கு ஆச்ரயனாயிருக்கிற கர்தாவான ஆத்மாவினுடைய ஸ்வரூபத்திற்கு த்ருஷ்டி முதலியதே ஸ்வரூபமாக விதிக்கப்படின் ஆத்ம ஸ்வரூபத்திற்கு ஜ்ஞாநாவாந்தரபேதம் சங்கிக்கதக்கதல்ல. ஜ்ஞானவிசேஷரூபங்களான அந்த த்ருஷ்ட்யாதிகளுக்கு ஸ்வயம்ப்ரகாசத்வ லக்ஷணமான ஜ்ஞாநத்வம் பேதமின்றிஇருப்பதுபற்றி அவ்வளவு மாத்ரமே ஸ்வரூபத்திற்கு விவக்ஷிக்கப்பட்டதாக ஆகிறது. இந்த பரிஹாரம் அந்யபக்ஷத்திலும் ஸமானம். நேரான வாக்ய யோஜனையைக் கூறுகிறார்—**அதவா** என்று. த்ருஷ்டி, ச்ருதி, மதி, நிதித்யாஸநங்களுக்கு கர்தாவான ஜீவாத்மாவை நிஷேதித்து, பரமாத்மாவையே உபாஸிப்பாயாக என்கிற இந்த அர்த்தம் சொல்லப்பட்டதென்று அர்த்தம். அன்றிக்கே 'அபித்தாதி' என்கிற பதம் சேர்த்துக் கொள்ளத்தக்கது. ஜீவாத்மாவை விலக்கி பரமாத்மாவை உபாஸி, என்று ச்ருதி கூறுகிறதென்று வாக்யார்த்தம என வாக்யாந்தரம். அன்றிக்கே ப்ரதிஷித்தய-பரித்யாகம்செய்து என்று அர்த்தம். அதனால் ஸமாநகர்த்ருகத்வம் உபபந்நமாகிறது. "ய: ப்ராணேநப்ராணிதி, யோஅபாநேந அபாநிதி, ஏஷத ஆத்மா ஸர்வாந்தர:" என்கிற ச்ருதி ப்ரஸ்துதமாயிருப்பதால், ப்ராணனாலே ப்ராணித்ருத்வம் முதலிய த[ர்ம]ங்கள் ஜீவாத்மாவுக்கு ஸம்பவிக்கிறதாதலால் அந்த ஜீவாத்மாவுக்கு உபாஸ்யதவமுண்டு என்கிற சங்கையை வ்யாவ்ருத்திப்பதின்பொருட்டு. "நத்ருஷ்டேர் த்ரஷ்டாரம்பச்யே:"இதுமுதலியது கூறப்படுகிறதென்பதனால் இதுவே அர்த்தம். அங்ஙனமன்றாகில் ச்ருத்யந்தர விரோதத்தைக் கூறுகிறார்—**அந்யதா** என்று. ஜ்ஞாநத்திற்கு குணத்வம் அஸித்தம் - ஜ்ஞாநம் ஸ்வரூபமென்று ச்ருதியினாலறியப்பட்டிருப்பதால். ஜ்ஞாநமாகில் † ஆகந்துகமென்று சொல்லத்தகாது. ஏனெனில் ஈச்வரஜ்ஞாநத்தில் வ்யபிசாரம்வருவதால். நம்முதலானவர்களுடைய ஜ்ஞாநத்திற்கும் ஆகந்துகத்வமானது பாதிதமாயிருக்கிறது. "‡ நவிஜ்ஞாதுர்விஜ்ஞாதேர் விபரிலோபோ வித்யதே" என்று ச்ருதி இருப்பதனால். இவ்வண்ணம் இரண்டு ஹேதுக்களுக்கும் பரிஹாரம் கூறப்பட்டது. விஷயப்ராவண்யம் தர்மபூத ஜ்ஞாநத்திற்கே ஸர்வஸாதாரணமான ஜ்ஞாநத்வம் ஸ்வப்ரகாசத்வரூபம். அதனால் எப்பொழுதும் விஷயப்ரகாசத்திற்கு ப்ரஸங்கமில்லை.

"ஜ்ஞோऽத ஏவ" (௨-௩-௧) இதி ஜ்ஞாத்ருத்வமேவ ஸ்வரூபத்வம் வ்யஜ்யத இதி பக்ஷாந்தரம்; தஸ்ய ஜ்ஞாநாச்ரயஸ்ய ஸ்வரூபேண ஜ்ஞாநம் ஸ்வரூபமிதி விவக்ஷிதமிதி பரிஹாரஃ। ஜ்ஞாநமேவ ஹ்யநாகந்துகமநந்தம் இத்யுச்யதே। "விஜ்ஞாநமாநந்தம் ப்ரஹ்ம" (ப்ரு-௩-௨-௮) இத்யாநந்தஸ்வரூபமேவ ஜ்ஞாநம் ப்ரஹ்மேத்யுக்தேஃ। அத ஏவ ஸர்வதா ஏகரஸதா। அஸ்ய ஜ்ஞாநஸ்வரூபஸ்யைவ ஜ்ஞாத்ருத்வமபி

---

† ஆகந்துகம்—அநித்யம். ‡ விஜ்ஞாதா—அறிகிறவன்.

𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌸𑌿𑌦𑍍𑌧𑌸𑍍𑌯𑌾𑌪𑍍𑌰𑌤𑌿𑌕𑍍𑌷𑍇𑌪𑌾𑌤𑍍 । 𑌤𑌥𑍈𑌵 " 𑌸 𑌏𑌕𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣 𑌆𑌨𑌨𑍍𑌦𑌃 " (𑌤𑍈-௮-௧) " 𑌆𑌨𑌨𑍍𑌦𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍 " (𑌤𑍈-௯-௧) 𑌇𑌤𑌿 𑌵𑍍𑌯𑌤𑌿𑌰𑍇𑌕𑌨𑌿𑌰𑍍𑌦𑍇𑌶𑌾𑌚𑍍𑌚 𑌨𑌾𑌨𑌨𑍍𑌦𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮, 𑌅𑌪𑌿 𑌤𑍍𑌵𑌾𑌨𑌨𑍍𑌦𑌿 । 𑌜𑍍𑌞𑌾𑌤𑍃𑌤𑍍𑌵𑌮𑍇𑌵 𑌹𑍍𑌯𑌾𑌨𑌨𑍍𑌦𑌿𑌤𑍍𑌵𑌮𑍍 ।

ஸ்ரீபாஷ்யம்—

ஆநந்தோ ப்ரஹ்ம, என்கிற ச்ருதியினால் ஆநந்தமாத்ரமே ப்ரஹ்ம ஸ்வரூபமாக அறியப்படுகிறது என்று எதுகூறப்பட்டதோ அது ஜ்ஞாநாச்ரயமான ப்ரஹ்மத்திற்கு ஜ்ஞானம் ஸ்வரூபமென்று சொல்லுகிறதென்று பரிஹரிக்கப்பட்டது. அநுகூலமான ஜ்ஞாநமே ஆநந்தமென்று கூறப்படுகிறது. (விஜ்ஞாநம் ஆநந்தம் ப்ரஹ்ம) என்கிற ச்ருதியினால் ஆநந்தரூபமாகவே இருக்கின்ற ஜ்ஞாநம் ப்ரஹ்மமென்று அர்த்தம். அதனாலேதான் ஜ்ஞாநம் ஆநந்தம் இரண்டிற்கும் விஷயைக்யமிருப்பதினாலேயே உங்களுக்கு ஏகரஸதை ஸித்திக்கிறது. ஜ்ஞாநஸ்வரூபமான இந்த ப்ரஹ்மத்திற்கே ஜ்ஞாத்ருத்வமும் அநேக ச்ருதிகளாலே நன்றாயறியப்பட்டிருக்கிறதென்று கூறப்பட்டது. அப்படிப்போலவே "ஸ ஏகோ ப்ரஹ்மண ஆநந்த:" - "ஆநந்தம் ப்ரஹ்மணோ வித்வாந்" என்கிற வ்யதிரேக நிர்தேசத்தாலும் ஆநந்தம் மாத்ரம் ப்ரஹ்மம் அல்ல. பின்னையோ ஆநந்தமுள்ளது வ்ரஹ்மம் - ஜ்ஞாத்ருத்வமேயன்றோ ஆநந்தித்வம்.

ச்ருதப்ரகாசிகை—

ஜ்ஞேயத்வநிஷேத பரிஹாராநந்தரம் புத்திஸ்தமாயிருப்பதால் ஜ்ஞாத்ருத்வநிஷேதம் பரிஹரிக்கப்பட்டது. பிறகு வேறு ஆர்த்தமான குண நிஷேதாந்தரம் பரிஹரிக்கப்படுகிறது—ஆநந்த இது முதலியதால். முன்கூறப்பட்ட பரிஹாரத்தை இங்கு ஏறிடுகிறார்—தத்ஜ்ஞாநாச்ரயஸ்ய என்று. எவ்வாறு அதனாலே இது பரிஹரிக்கப்பட்டது எனில் கூறுகிறார்—ஜ்ஞாநமேவஹி என்று. அங்ஙனமாகில ச்ருதிகளில் விஜ்ஞாநம் ஆநந்தம் இரண்டு சப்தங்களுக்கு ப்ரயோகததில் சேர்க்கையானது பொருந்தாது என்று கேட்கப்படுமேயாகில் மறுமொழிகூறுகிறார்—விஜ்ஞாநம் என்று. ஸ்வப்ரகாசத்வமும் அநுகூலத்வரூபமுமான ப்ரவ்ருத்தி நிமித்தபேதத்தாலே உபபந்நமாகிறதென்று கருத்து. அவ்வாறே உங்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறதென்று கூறுகிறார்—அதஏவ என்று. அதஏவ - ஜ்ஞாநம் ஆநந்தம் என்கிற இரண்டு சப்தங்களுக்கும் விஷயைக்யத்தினாலேயே என்று அர்த்தம். ஆநந்தத்திற்கு ஆநந்தாச்ரயத்வாபாவமானது ச்ருதியினாலா ? வ்யாப்தியினாலா ? — வ்யாப்தியினால் என்று கூறப்படுமேயானால் ஒரு வஸ்துவின் தர்மமாகவிருந்து தீரவேண்டும். ச்ருதிபலத்தினாலே ஸ்வதந்த்ரம் என்று கூறப்

படுமேயானால் அந்த ச்ருதியினாலே ஆநந்தாச்ரயத்வம் ஒப்புக்கொள்ளப்படலாம். தர்ம பூதமான ஆநந்தத்திற்கன்றோ ஆநந்தாச்ரயத்வாபாவம் காணப்பட்டிருக்கிறது) ஆகையால் வ்யாப்தி விரோதமுமில்லை. அதனால் ஸ்வதந்த்ரத்வம்போல் குணாச்ரயத்வமும் ச்ருதி ஸித்தமானதால் ஸ்வீகரிக்கத்தக்கதென்று கருத்து. இரண்டிடத்திலும் ப்ரமாணமிருந்தாலன்றோ ந்யாயஸஞ்சாரம் என்கிற ஆசங்கைக்கு த்ருஷ்டாந்த பூமியில் ப்ரமாணமானது காண்பிக்கப்பட்டிருக்கிறதென்பதைக் கூறுகிறார்—அஸ்ய என்று. தார்ஷ்டாந்திகத்திலும் கண்டோக்தியைக்காண்பிக்கிறார் — தத்வத் என்று. ஜ்ஞாத்ருத்வம் போல ஆநந்தித்வமும் கண்டோக்தமென்று அர்த்தம் ஜ்ஞாத்ருத்வ ச்ருதியும் ஆநந்தித்வத்தில் ப்ரமாணமென்று அபிப்ராயப்பட்டு கூறுகிறார்—ஜ்ஞாத்ருத்வமேவஹி ஆநந்தித்வம் என்று. ஏவகாரமானது ஜ்ஞாத்ருத்வத்தைக்காட்டிலும் ஆநந்தித்வம் வேறு என்பதை நிரஸிப்பதில் நோக்குடையது. ஹி சப்தமானது அதில் உபபத்தியை ஸூசிப்பிக்கிறது. அநுகூல ஜ்ஞாநாச்ரயத்வமேயன்றோ ஆநந்தித்வமென்று அர்த்தம். ஜ்ஞாத்ருத்வ ச்ருதியானது ஜ்ஞாநாச்ரயத்வ விசேஷத்திற்கும் ஆநந்தாச்ரயத்வவிசேஷத்திற்கும் விரோதி என்று அர்த்தம்.

𑌯𑌦𑌿𑌦𑌮𑍁𑌕𑍍𑌤𑌂—"𑌯𑌤𑍍𑌰 𑌹𑌿 𑌦𑍍𑌵𑍈𑌤𑌮𑌿𑌵 𑌭𑌵𑌤𑌿। (𑌬𑍃-௪-௪-௧௪) "𑌨𑍇𑌹 𑌨𑌾𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌕𑌿𑌞𑍍𑌚𑌨। 𑌮𑍃𑌤𑍍𑌯𑍋𑌸𑍍𑌸 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌮𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌯 𑌇𑌹 𑌨𑌾𑌨𑍇𑌵 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿" (𑌬𑍃-௬-௪-௧௯) "𑌯𑌤𑍍𑌰 𑌤𑍍𑌵𑌸𑍍𑌯 𑌸𑌰𑍍𑌵𑌮𑌾𑌤𑍍𑌮𑍈𑌵𑌾𑌭𑍂𑌤𑍍 𑌤𑌤𑍍𑌕𑍇𑌨 𑌕𑌂 𑌪𑌶𑍍𑌯𑍇𑌤𑍍" (𑌬𑍃-௪-௪-௧௪) 𑌇𑌤𑌿 𑌭𑍇𑌦𑌨𑌿𑌷𑍇𑌧𑍋 𑌬𑌹𑍁𑌧𑌾 𑌶𑍍𑌰𑍂𑌯𑌤 𑌇𑌤𑌿 𑌤𑌤𑍍𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌸𑍍𑌯 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌕𑌾𑌰𑍍𑌯𑌤𑌯𑌾 𑌤𑌦𑌾𑌤𑍍𑌮𑌕𑌤𑍍𑌵𑍇𑌨𑍈𑌕𑍍𑌯𑌾𑌤𑍍, 𑌤𑌦𑍍𑌵𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑌨𑌾𑌨𑌾𑌤𑍍𑌵𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑌿𑌧𑍍𑌯𑌤𑍇। 𑌨 𑌪𑍁𑌨𑌃 "𑌬𑌹𑍁 𑌸𑍍𑌯𑌾𑌂 𑌪𑍍𑌰𑌜𑌾𑌯𑍇𑌯" 𑌇𑌤𑌿 𑌬𑌹𑍁𑌭𑌵𑌨𑌸𑌙𑍍𑌕𑌲𑍍𑌪𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋 𑌨𑌾𑌨𑌾𑌤𑍍𑌵𑌂 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌸𑌿𑌦𑍍𑌧𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑌿𑌧𑍍𑌯𑌤 𑌇𑌤𑌿 𑌪𑌰𑌿𑌹𑍃𑌤𑌮𑍍। 𑌨𑌾𑌨𑌾𑌤𑍍𑌵𑌨𑌿𑌷𑍇𑌧𑌾𑌦𑌿𑌵𑌾𑌕𑍍𑌯𑌸𑍍𑌯 𑌵𑌿𑌷𑌯 𑌇𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍; 𑌨, 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌾𑌦𑌿𑌸𑌕𑌲𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌾𑌨𑌵𑌗𑌤𑌂 𑌨𑌾𑌨𑌾𑌤𑍍𑌵𑌂 𑌦𑍁𑌰𑌾𑌰𑍋𑌹𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑍍𑌯 𑌤𑌦𑍇𑌵 𑌬𑌾𑌧𑍍𑌯𑌤 𑌇𑌤𑍍𑌯𑌸𑌾𑌮𑌞𑍍𑌜𑌸𑍍𑌯𑌾𑌦𑍍॥

ஸ்ரீபாஷ்யம்—

“எந்த நிலைமையில் (ப்ரஹ்மத்தைக்காட்டிலும்) பேதம் இருப்பது போல் ஏற்படுகிறதோ - இந்த ப்ரபஞ்சத்தில் (ப்ரஹ்மத்தைத்தவிர்த்து) வேறான ஒரு வஸ்துவுமில்லை. எவன் இந்த ப்ரபஞ்சத்தில் (ப்ரஹ்மத்தைவிட) வேறாக வஸ்துகளிருப்பதுபோல் காண்கிறானோ அவன் அவித்யையினின்று

அவித்யையை நாடுகிறான் - எப்பொழுது இவனுக்கு எல்லாம் ஆத்மாவாகவே ஆயிற்றோ அப்பொழுது எவன் எதனால் எதைப்பார்ப்பான்'' என்று பேத நிஷேதம் பலவாறாகக்காணப்படுகிறது, என்று யாதொன்று கூறப்பட்டதோ; அது உலகம் அனைத்தும் ப்ரஹ்மகார்யமாக இருப்பதாலும் ப்ரஹ்மத்தை அந்தர்யாமியாகக் கொண்டிருப்பதாலும் ப்ரஹ்மாத்மகமாக இருப்பதுபற்றி ஒன்றாக இருப்பதால் அதற்கு விருத்தமான நாநாத்வம் நிஷேதிக்கப்படுகிறது. ஸுரநரதிர்யக் ஸ்தாவரரூபமாக பல வஸ்துக்களாக ஆகக்கடவேன், அதற்காக ஆகாசாதிரூபமாக நான் உண்டாகக்கடவேன் என்று பகுபவந ஸங்கல்பத்தைமுன்னிட்ட ச்ருதிஸித்தமான ப்ரஹ்மத்தின் நாநாபாவமானது நிஷேதிக்கப்படுகிறதில்லையென்று பரிஹரிக்கப்பட்டது. நாநாத்வநிஷேதத்தினால் இந்த ச்ருதியானது அபரமார்த்தவிஷயை என்று சொல்லப்படுமேயாகில் - அல்ல; ப்ரத்யக்ஷம் முதலிய ஸகல ப்ரமாணங்களால் அறியப்படாததும் எவ்விதத்தாலும் ஏறமுடியாததுமான நாநாத்வத்தை ப்ரஹ்மத்திற்கு ப்ரதிபாதித்து அதே பாதிக்கப்படுகிறதென்கிற இந்த வசனம் பரிஹஸிக்கத் தக்கது.

ச்ருதப்ரகாசிகை—

பிறகு, பேதநிஷேதத்தில் நோக்கமுள்ளவைகளென்று அன்யனால் சொல்லப்பட்டுள்ள சுருதிகளை ப்ரமாணங்களால் நிலைபெற்ற அர்த்தங்களுடன் சேர்ப்பிப்பதின்பொருட்டு அநுவாதம் செய்கிறார்—யதிதம் என்று. யத்ரஹி இது முதலியதால் பேதநிஷேதம் செய்யப்பட்டது. பேதஜ்ஞாநம்வரின அநர்த்தத்தைக்காண்பிக்கிறார் — ம்ருத்யோ: என்று. ' தமஸோவாஏஷதம: ப்ரவிசதி ' என்கிறதுபோல், எப்பொழுதும் தொடர்ச்சியாகவந்துகொண்டிருக்கிற பேதசதிற்கு எவ்வாறு ப்ராந்தியினால் ஸித்தி? என்று கேட்கில் கூறுகிறார்—யத்ரது என்று. சொல்லப்பட்ட வாக்யங்களிலுள்ள பற்பலவிதங்களான வசனபங்கிகளின் அபிப்ராயத்தால் 'பகுதா' என்று உரைக்கப்பட்டது. 'பகுச:' என்கிற பாடத்தில் நிஷேதித்தலென்கிற க்ரியையின் ஆவ்ருத்தி அர்த்தம். பரிஹரிக்கிறார்-தத் என்று. தத் என்கிற சப்தத்திற்கு ' பரிஹ்ருதம் ' என்கிற பதத்தில் $ அன்வயம். ஹேயகுணங்களனைத்திற்கும் விரோதியாகவும் எல்லா கல்யாணகுணாத்மகனாகவும் ச்ருத்யந்தங்களில் ப்ரஸித்தமான ப்ரஹ்மத்திற்கு விகாரங்களுக்கு ஆதாரமாயும் ‡ க்லேசம் கர்மம் முதலிய §ஹேயங்களுக்கு உடன்பட்டுமிருக்கிற ஜகத்தோடு ஐக்யம் வ்யாஹதமாதலால் சுருதியானது ப்ரதிபாதிக்கிறதில்லை. ஹேயங்கள் அபாரமார்த்திகங்களாதலால் வ்யாஹதி இல்லை என்று சொல்லப்படுமேயானால்; ¶ அபாரமார்த்திகமென்று சொல்லும் பக்ஷத்தில் அது நிரஸனம் செய்யத்தக்கதா இல்லையா? நிரஸிக்கத்தக்கதல்லவென்று சொல்லப்படுமேயாகில் அதின் நிவ்ருத்தியின்பொருட்டு எற்

$ அன்வயம்—ஸம்பந்தம். ‡ க்லேசம்—துன்பம்.
§ ஹேயம்—இகழத்தக்கது. ¶ அபார்மார்த்திகம்—வாஸ்தவமல்லாதது.

பட்டுள்ள சாஸ்திரம் ப்ரயோஜநமில்லாததாக ஆகும். நிரஸிக்கத்தக்கதென்று கூறப்படு மேயாகில் நிரஸிக்கத்தக்கதின் ஸம்பந்தமே ஹேயஸம்பந்தம என்பதனுல் அதற்கு விரோதியான வஸ்துவுக்கு அதின் ஸம்பந்தம்பெற்றிருத்தல் விருத்தம்.

மேலும், 'பஹுஸ்யாம்' என்று ஸங்கல்பத்தை முன்னிட்டு † பகுபவநமானது ச்ருதியினுல் கூறப்படுகிறது - எல்லாவற்றையுமறிகிற தன்மைவாய்ந்திருக்கிற பரமாத்மாவுக்கு தனனிச்சையினுல் தன்னிடத்தில் ஹேயங்களை ஏற்றுக்கொள்ளுதல் இசையாதாதலால் அப்படிப்பட்ட ஹேயங்களை ப்ரதிபாதிப்பது சக்யமல்ல. ஸர்வஜ்ஞனல்லவென்று சொல்லும்பக்ஷத்தில் "பச்யத்யசக்ஷுஸ்ஸச்ருணோத்யகர்ண:" "ஸ்வாபாவிகீ ஜ்ஞாநபலக்ரியாச" "யஸ்ஸர்வஜ்ஞ:" (கண்ணில்லாமலிருந்துகொண்டே ரூபஸாக்ஷாத்காரமுள்ளவனுக இருக்கிறுன். காதில்லாமலே சப்தத்தை ஸாக்ஷாத்கரிக்கிறுன். ஜ்ஞாநம் பலம் க்ரியை இவைகள் ஸ்வபாவத்திலேயே இருக்கின்றன - எவன் எல்லாமறிந்தவனே) இதுமுதலிய சுருதிகளின் விரோதம். ஹேயங்கள் அபரமார்த்தங்களாக இருந்தபோதிலும் தன் ஸங்கல்பத்தால் தனக்கு முடிவில்லாத அபுருஷார்த்த ப்ரமததை ஏற்படுத்திக் கொள்வது ஸர்வஜ்ஞனுக்குப்பொருந்தாதன்றே. ஸர்வஜ்ஞத்வமானது அவித்யையினுல் உண்டுபண்ணப்பட்டிருக்கிறதென்று ஒப்புக்கொண்டிருப்பதால் அவித்யையை முன்னிட்டே பஹுபவந ப்ரமரூபமான ஸர்வஜ்ஞத்வம் என்று சொல்லக்கூடாது. (ஸ்வாபாவிகீ) என்று ச்ருதிவசனமிருப்பதால். "ததிமே ஸத்யா: காமா:" என்கிற ஸத்யதவ ப்ரதிபாதக சுருதியினுலும். தன்னுடைய ஸர்வஜ்ஞத்வமானது அவித்யையினுல் உண்டுபண்ணப்பட்டிருப்பதால் மித்யை என்று அறிகிறுனில்லை என்றுசொல்லப்படுமேயானுல், எல்லாவற்றையுமறிந்திருத்தல் என்கிற தன்மை இல்லாமல்போக வேண்டியதாகும். அறிகிறுனென்று கூறப்படுமேயாகில் அந்த ஜ்ஞாநத்தினுலேயே பாதிக்கப்பட்டிருப்பதால் ஸர்வஜ்ஞத்வமுண்டாகாது. அதனுல் முன்னிருந்த உலகத்தின் வடிவத்தை நன்கு பர்யாலோசனஞ்செய்து தன் ஸங்கல்பத்தை முன்னிட்டு ஜீவவர்க்கங்களுடைய கன்மங்களுக்குத்தக்கவாறு பரமாத்மா ஸ்ருஷ்டிசெய்கிறுன் என்பது பொருந்தாது. அதனுல் ஸர்வஜ்ஞதைக்கு ஆவித்யகத்வம் பொருந்தாததுபற்றி ஸர்வஜ்ஞனுக்குத் தன்னை அடைந்திருக்கிற ஹேயோபாதானம் இசையாது.

மேலும், ஹேயங்கள் தன்னை அடைந்திருக்கிறதென்று அறிகிறவனும் எல்லா வல்லமைகளுமுள்ளவனும் ஸத்யஸங்கல்பனுமான அந்த பரமாத்மாவுக்கு உடனே தன்னை அணுகியிருக்கிற ஹேயஙகளை நீக்காமலிருப்பதும் பொருத்தமுள்ளதாகாது. அவன் சக்தியற்றவனென்று சொல்லும்பக்ஷத்தில் "பராஸ்ய சக்திர் விவிதைவ ச்ரூயதே ஸ்வாபாவிகீ" இதுமுதலிய ச்ருதிகளின் விரோதம் வருகிறது. இப்படிப்பட்ட விரோதம் கிடையாது, ச்ருதிபலத்தால் விரோதத்தினின்மைக்கொள்ளத்தக்கதாக இருப்பதால் என்று சொல்லப்படுமேயானுல் அப்பொழுது "விஜ்ஞாநகநஏவைதேப்யோபூதேப்யஸ்ஸமுத்தாயதாந்யேவாநுவிநச்யதி - நஜாயதேம்ரியதேவாவிபஶ்சித் - வாயுஶ்சாந்தரிக்ஷஞ்சைததமருதம் - ஆத்மநஆகாசஸ்ஸம்பூத: - நநபோநபூமிர்நேமே த்யாவாப்ருதிவீ - அந்தவதே வாஸ்யதத்பவதி - நாஸ்யேஷ்டாபூர்தே க்ஷீயேதே" (ஜீவசரீரகளுகவே இருந்துகொண்டு சரீராதி ரூபமாக உண்டாகிற இந்த பூதங்களினின்று தானுமுண்டாகி அந்த பூதங்கள் நாசமடையும் தருணத்தில் அவைகளை அநுஸரித்து பிறகு தானும் நாசமடைகிறுன். ஜ்ஞாதாவாகவும் ஜ்ஞாநஸ்வரூபனுகவுமிருக்கிற ஜீவாத்மா உண்டாகிறது

† பகுபவனம்—பலவாறுக ஆகுதல்.

ஆவித்யகத்வம்—அவித்யா ஸம்பந்தத்தால் ஏற்படுத்தப்பட்டிருத்தல்.

மில்லை. இறக்கிறதுமில்லை. இந்த காத்ரம் ஆகாயமும் அழிவற்றது, ப்ரஹ்மத்தினிடத்தினின்று ஆகாசம் உண்டாயிற்று - ஆகாயமுமில்லை, பூமியுமில்லை. த்யாவாப்ருதிவிகளுமில்லை-இவனுக்கு அது முடிவுள்ளதாகவே ஆகிறது. இவனுக்கு ச்ரௌதஸ்மார்த்த கர்மாக்கள் குறைவடைகிறதில்லை.) இது முதலிய ச்ருதிகளாலுரைக்கப்பட்ட ஆத்மா முதலியவைகளின் நித்யத்வாநித்யத்வம் முதலியதும் ச்ருதிகளாலறியப்பட்டிருப்பதால் விரோதமில்லாமையால் இரண்டும் ஏற்றுக்கொள்ளத்தக்கது. ஆகையால் எல்லா இடத்திலும் சப்தத்தால் உணர்த்தப்பட்டவண்ணம அர்த்தத்தை ஒப்புக்கொள்ளும்பக்ஷத்தில் மீமாம்ஸாரம்பம் ப்ரயோஜனமற்றதாக ஆகும். ப்ரஸ்துதங்களான பேதாபேத ச்ருதிகள் இரண்டுக்கும் பாரமார்த்திகாபாரமார்த்திகங்களேயோ ‡ ஸோபாதிக $ நிருபாதிகங்களேயோ விஷயங்களாகக்கொண்டிருப்பதுபற்றி பாகுபாட்டை ஏற்படுத்துவது பொருந்தாது. அந்த பாகுபாட்டை ஏற்படுத்துவது விரோத பரிஹாரத்திற்காக. விரோதமோ இல்லை. ஆகையால் பேதத்திற்கு பாரமார்த்யம் ஸித்தித்தது. இதனால் விரோதம் ஒப்புக்கொள்ளத்தக்கது. இங்கே விரோதம் அறியப்படுகிறது. ‘ம்ருத்யோஸ்ஸம்ருத்யுமாப்நோதிய இஹநாநேவபச்யதி’ (எவன் ப்ரஹ்மத்தைத்தவிர்த்து வேறான அநேக வஸ்துக்கள் இருக்கிறதென்று காண்கிறானோ அவன் அவித்யையினின்று அவித்யையை அடைகிறான்.) என்கிற ச்ருதியினால் பேதஜ்ஞாநம் ஸம்ஸாரஹேதுவென்று அறியப்படுகிறது. ‘ப்ருதகாத்மாநம் ப்ரேரிதாரஞ்ச மத்வாஜுஷ்டஸ்ததஸ்தேநாம்ருதத்வமேதி - ஜுஷ்டம்யதாபச்யத்யந்யமீசமஸ்யமஹிமாநமிதி வீதசோக:’ (ப்ரேரணஞ்செய்கிற பரமாத்மாவையும் தன்னையும் வேறாயிருப்பவர்களாக எண்ணி அந்த ஜ்ஞாநத்தினால் ப்ரீதியடைந்தவனை பரமாத்மாவினால் ப்ரீதிக்கு விஷயமாக்கப்பட்டவன் மோக்ஷத்தை அடைகிறான். எப்பொழுது இந்த ஜீவன் ப்ரக்ருதியில் மூழ்கியிருக்கிற தன்னைக்காட்டிலும் தாரகத்வாதி குணங்களால் விலக்ஷணனாகவும் தன் கர்மங்களால் ப்ரீதியடைந்தவனாகவும் பரமாத்மாவையும் அவன் மகிமையையும் அறிகிறானோ அப்பொழுது சோகத்தை இழந்தவனாக ஆகிறான்) என்று பேதஜ்ஞாநத்திற்கு மோக்ஷோபாயத்வம் ச்ருதிகளால் கூறப்படுகிறது. ‘த்வைதிநோZதத்பதர்சிந:” இது முதலிய ஸ்ம்ருதிகளுக்கு விருத்தம். த்வாவிமௌபுருஷௌ (இந்த இரண்டு புருஷர்கள்) ஆவிச்ய பிபர்த்யவ்யய ஈச்வர: (அழிவற்றவனான ஸர்வேச்வரன் உள்ளே ப்ரவேசித்து சேதநாசேதநங்களை) தரித்திருக்கச் செய்கிறான்) யஸ்மாத்க்ஷரமதீதோஹம் - (யாதொரு காரணத்தினால் நான் அசேதநங்களைத் தாண்டியிருக்கிறேனோ) இதுதொடங்கி “யோமாமேவமஸம்மூடோஜாநாதி புருஷோத்தமம் - (எவன் மயக்கமற்றவனாக என்னை இவ்வண்ணம் புருஷோத்தமனென்று அறிகிறானோ) என்று பேதஜ்ஞாநமுள்ளவனுக்கு அஸம்மூடத்வம் கூறப்படுகிறது - இது முதலிய வசநங்களால் அறியப்பட்டிருக்கிற பேதம் உலகத்தில் ஸித்தமாக இருப்பதால் அதை நிஷேதிப்பதற்காக பேதமானது அநுவதிக்கப்படுகிறது என்கிற வாதம் பொருத்தமுள்ளதன்று.

மேலும், பேதமென்கிற உலகத்தில் ஸித்தமாகயிருப்பதால் ‘‘அப்ராப்தே ஹி சாஸ்த்ரம் அர்த்தவத்’’ வேறு ப்ரமாணங்களால் ஸித்தியாதவஸ்து விஷயத்திலன்றோ சாஸ்த்ரம் ப்ரயோஜநமுள்ளது, என்கிற நியாயத்தால் அபேதமே சாஸ்த்ரத்தாலறியத்தக்கதென்று கூறப்படுகிறது, அங்ஙனமாகில் - ஸோயம் தேவதத்த: (அந்த தேவதத்தன்தான் இவன்) இதுமுதலிய வ்யவஹாரங்களில் அபேதம்மாத்ரம் உலகத்தில் ஸித்தமாக இருப்பதாலும் அப்ராப்த விஷயத்தில் சாஸ்த்ரம் ப்ரயோஜநமுள்ளதாக இருப்பதாலும் சாஸ்த்ரத்தினால் அபேதத்தை ப்ரதிபாதிப்பது யுக்தமன்று. தேவதத்தன் முதலியவர்களுடைய ஐக்யமன்றோ லோகஸித்தம், ஜீவபரமாத்மாக்களுடைய ஐக்யம் ஸித்தமன்று.

ஆகையால் அந்த ஜீவபரமாத்மாக்களுடைய அபேதம் சாஸ்த்ரத்தாலறியத்தக்கது என்று சொல்லப்படுமேயானால் அங்ஙனமாகில் கடபடாதிகளுடைய பேதமே லோகஸித்தம். ஜீவன் பரமாத்மா இருவர்களுக்குமுள்ள $ நியாம்யத்வம் ‡ நியந்த்ருத்வம், @ தார்யத்வம் § தாரகத்வம் ¶ சேஷத்வம் ╤ சேஷித்வம் ‡‡ வ்யாப்யத்வம் * வ்யாபகத்வம் முதலிய லக்ஷணபேதமானது உலகத்தில்ஸித்தமல்லாததால் அந்தபேதம் சாஸ்த்ரத்தால் ப்ரதிபாதிக்கத்தக்கதே. ஆசார்யபாதர்களால் கூறப்பட்டிருக்கிறது—"நத்வைதம் ப்ரதிபாதயந்த்யுபநிஷத்வாச: ப்ரஸித்தம் ஹித்த் கிந்த்வத்வைதமநந்ய கோசரதயா தத்வேத்யமாஸ்தியதாம் - அப்ராப்தகலு சாஸ்த்ரமர்த்தவதிதி வ்யர்த்த: ப்ரயாஸோ யத: ப்ரக்யாதாதபரஸ்து சாஸ்த்ரவிஷயோபேதஸ்த்வதத்வைதவத்" (உபநிஷத்வாக்குக்கள் த்வைதத்தை ப்ரதிபாதிக்கிறதுகளில்லை, அது ப்ரஸித்தமன்றோ, பின்னையோ வேறு ப்ரமாணங்களுக்கு கோசரமில்லாததால் அத்வைதமே அந்த உபநிஷத்துக்களால் அறியத்தக்கதென்று நிச்சயிக்கப்படலாம். சாஸ்த்ரம் அப்ராப்தவிஷயத்திலன்றோ ப்ரயோஜநமுள்ளது - என்கிற ப்ரயாஸம் பயனற்றது. ஏனென்றால் ப்ரஸித்தமான பேதத்தைக்காட்டிலும் விலக்ஷணமாக இருக்கிற பேதமானது உன்னுடைய அத்வைதம்போல் சாஸ்த்ரத்திற்கு விஷயம். என்று) இந்த அர்த்தம் பாஷ்யத்தில் அநேகத் சொல்லப்படப்போகிறது. ஆதலால் அநுவாதமென்று நிர்வாஹம்செய்வது பொருத்தமில்லாதது. பேதச்ருதியானது உபாஸனத்தை ப்ரயோஜநமாகக்கொண்டது, தத்வப்ரதானமல்ல "ப்ருதகாத்மாநம் ப்ரேரிதாரஞ்ச மத்வா-ஜுஷ்டம் யதாபச்யத்யந்யமீசம, (ஜீவாத்மாவையும் ஏவுகிறவனான பரமாத்மாவையும் வெவ்வேறாக இருப்பவர்களென்று எண்ணி ப்ரீதி அடைந்திருப்பவனும் தன்னைக்காட்டிலும வேறாக இருப்பவனுமான ப்ரபுவை எப்பொழுது பார்க்கிறானோ) என்கிற வாக்யங்களில் உபாஸனத்தைச்சொல்லுகிற பதங்கள் கேழ்க்கப்படுவதால் என்றுசொல்லப்படுமேயானால் அப்படி இருந்தபோதிலும் பேதம் வாஸ்தவமே - அந்த பேதஜ்ஞாநத்திற்கு மோக்ஷோபாயத்வம் கூறப்பட்டிருப்பதால். தத்வஜ்ஞாநத்தாலன்றோ மோக்ஷம். பேதச்ருதிகள் பலவிசேஷத்தைக்கருதி உபாஸநத்தைச்சொல்லியிருப்பதால் பேதம் வாஸ்தவமல்லவென்று சொல்லத்தக்கதல்ல. ஐக்யமும் உபாஸநார்த்தமாக இருப்பதால் அஸத்யத்வம் ப்ரஸங்கிக்கும். அபேதம் உபாஸநார்த்தமென்று சுருதியினால் சொல்லப்படுகிறதன்றோ "அத யோऽந்யாம் தேவதாமுபாஸ்தே, அந்யோஸாவந்யோஹமஸ்மீதி நஸவேத-ஆத்மேத்யேவோபாஸீத - (எவன் அவன்வேறு நான்வேறு என்று தேவதையை தன்னைக்காட்டிலும் வேறாக நினைத்து உபாஸிக்கிறானோ அவன் அறியாதவன். ஆத்மா என்றே உபாஸிக்கக்கடவன்) என்பதனால் ஐக்யத்திற்கே உபாஸநார்த்தத்வமும் பேதத்திற்கு $ தாத்விகத்வமும் யுக்தம் - † வைநதேயத்யாநத்தில் ஐக்யம் ஆரோபிதமாகக் காணப்பட்டிருக்கிறது. § மாந்திரிகன் வைநதேயன் இருவர்களுக்கும் பேதமே தாத்விகம் - விதிசேஷ

$ நியாம்யன்—ஸேவகன். ‡ நியந்தா—ப்ரபு. @ தார்யம்—தரிக்கத்தக்கது.

§ தாரகன்—தரிக்கிறவன்.

¶ சேஷன்—தன் ப்ரயோஜனத்தைக்கருதாமல் தன் எஜமானனுடைய பெருமையை உண்டுபண்ணுவதிலேயே பற்றுதலுள்ளவன்.

╤ சேஷி—அன்யனால் உண்டுபண்ணப்பட்ட அதிசயத்தை ஏற்றுக்கொள்பவன்.

‡‡ வ்யாப்யம்—வியாபிக்கப்படும்.

* வ்யாபகம்—வியாபிக்கும் தன்மை பொருந்தியது

$ தாத்விகம்—உண்மையானது. † வைநதேயன்—கருடன்.

§ மாந்த்ரிகன்—மந்த்ரங்களை உள்ளபடி அறிந்தவன்.

மாக இருக்கிற வாக்கியங்களைக்காட்டிலும் வேறாக இருக்கிற வாக்கியங்களில்கூட அபேதம அறியப்படுகிறதென்பதுபற்றி அதற்கு தாத்விகத்வம் என்று சொல்லப்படுமேயாகில் அப்பொழுது—''க்ஷரம் ப்ரதானம மருதாக்ஷரம் ஹர:, ப்ராகாநேக்ஷத்ரஜ்ஞபதிர்குணேச:, ஜ்ஞாஜ்ஞௌ த்வௌ, ருதம்பிபந்தௌ. தயோரன்ய: பிப்பலம்—நித்யோநித்யாநாம்'', (ப்ரதானம க்ஷரம். ஜீவன் நாசமில்லாதவனாதலால் அக்ஷரன்-ப்ரகருதிக்கும ஜீவாத்மாவுக்கும நியந்தாவாக இருப்பவன் குணங்களால் நிறைந்தவன பரமாத்மா - ஸர்வஜ்ஞன அஜ்ஞன் என இருவர்கள் - காமபலத்தை அனுபவிப்பவர்கள் - இரண்டு பக்ஷிகள் - நித்யனாக இருக்கிற பரமாத்மா நித்யர்களுக்கு) இது முதலிய விதி சேஷமல்லாத வாக்கியங்களாலுமறியப் பட்டிருப்பதால் பேதத்திற்கும் தாத்விகத்வம விடத்தகாதது - உபாஸநத்திற்கு பலமாக இருக்கிற முக்திதசையில் அபேதமிருப்பதால் அபேதத்திற்கு பாரமார்த்யம் சொல்லப் படுமேயானால் முக்திதசையில் பேதம ச்ருதியினால் கூறப்பட்டிருப்பதால் பேதத்திற்கு தாத்விகத்வம் ஸித்திக்கிறது. ஆகையால் உபாஸநார்த்தமாக இருப்பதால் விஷயம பாரமார்த்தமாக இல்லாததுபற்றி பேதச்ருதி நிர்வாஹமானது உபபன்னமாகாது. பேதா பேதங்கள இரண்டுக்கும் நியதபௌர்வாபர்யம விரோதம் இவ்விரண்டுமிருப்பதால் ஸகுணநிர்குணத்வங்களுக்குப்போல் அபச்சேதநியாய விஷயத்வம ஸம்பவியாததாலாவ். விரோதநியாயத்தாலாவது உபக்ரமநியாயத்தாலாவது பிந்நினதான பேதத்தின நிஷேதோத்பத்திக்குப்ரதிபந்தகமே உண்டாகலாம். இதுவும் முந்தியே விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது.

இவ்வண்ணம் வேறு இடத்தில் சொல்லப்பட்டிருக்கிற நியாயத்தால் உதவிபுரியப்பட்டுள்ள சருத்யந்தர விரோதத்தின் விடத்தகாமையையும் இந்த நிர்வாஹங்களின் அநுபபத்தியையும் இங்கே எண்ணி நல்ல நிர்வாஹத்தைக் காண்பிக்கிறார்—தத் என்று. ஜகத: என்கிற பதம் ப்ரஹ்மபர்யந்தமானது அதற்கு ப்ரஹ்மகார்யதயா என்கிற பதத்தோடும் ஐக்யாத் என்கிற பதத்தோடும் அன்வயம. ததந்தர்யாமிகதயா என்கிற இடத்தில் ஸாமர்த்தியத்தால் 'ஜகத:' என்கிற பதம் சேர்த்துக்கொள்ளத்தக்கது. அதனால் ஒரு தடவை ப்ரயோகிக்கப்பட்டிருக்கிற ஜகத் சப்தத்திற்கு நிஷ்கர்ஷகத்வாநிஷ்கர்ஷகத்வ விரோத பரிஹாரம ஸித்திக்கிறது. ''ஸர்வம் கல்விதம ப்ரஹ்ம - தஜ்ஜலான், (இதெல்லாம் ப்ரஹ்மமன்றோ - ஜகததானது அந்த ப்ரஹ்மத்தினிடத்தினின்று உண்டாகிறது அதினிடத்தில் ஒடுங்குகிறது - அதனால் ஜீவித்திருக்கிறது) என்று கூறப்பட்டது. ஜகத்தானது அந்த ப்ரஹ்மத்தினிடத்தில் உண்டாகிறது அதினிடத்தில் லயமடைகிறது என்பதை ஆதாரமாகக்கொண்டு கூறுகிறார்—ப்ரஹ்மகார்யதயா என்று. ப்ரஹ்ம சப்தமானது காரணாவஸ்தையிலிருக்கிற சிதசித்விசிஷ்ட ப்ரஹ்மத்தைச்சொல்லுகிறது. அந்த ப்ரஹ்மத்தால் காப்பாற்றப்படுதலை ஆச்ரயித்துச்சொல்லுகிறார்—ததந்தர்யாமிகதயா என்று. தத் என்கிற சப்தமானது விசேஷ்யத்தை பராமர்சிக்கிறது. விசிஷ்டம் ப்ரக்ருதமாக இருக்குந்தருணத்தில் விசேஷ்யாம்சமும் ப்ரக்ருதமாக இருப்பதால் எவ்வாறு 'ஸந்மூலா: ஸதாயதநா:' என்கிற இடத்தில் ஸத் என்கிற சப்தத்திற்கு விசிஷ்டபரத்வமும் விசேஷ்யபரத்வமுமோ அப்படிப்போல - தத் ப்ரஹ்மம் எதற்கு அந்தர்யாமியோ அது ததந்தர்யாமிகம் - தத்பாவோ என்று அர்த்தம் - ததாத்வத்தால் எவ்வாறு ததந்தர்யாமிகத்வம் ஸித்திக்கும்? மறுமொழி உரைக்கப்படுகிறது - அநுமாவது ஸ்திதி - ப்ரஹ்மத்திற்கு ஜகத்தின் ஸ்திதிஹேதுத்வமும் உள்ளே அநுப்ரவேசித்து ப்ரசாஸநம் செய்ததால் தாரகத்வமும் ஸந்மூலா: ''ஸோம்யேமா: ஸர்வா: ப்ரஜா: ஸதாயதநா: ஸத்ப்ரதிஷ்டா:'' என்கிற வாக்கியத்திலுள்ள ''ஸந்மூலா: ஸத்ப்ரதிஷ்டா:'' என்கிற இரண்டு பதங்களும் ஸத் சப்தத்தால் சொல்லப்படுகிற ப்ரஹ்மாதீநமான உத்

பத்தி லயங்களைக்கூறுகின்றன — ப்ரதிஷ்டா - நிஷ்டா - பர்யவஸானம - லயம் - ஸத்தான ஆதாரத்துடன் கூடியிருத்தல் அர்த்தமல்ல. அங்ஙனம் பொருள் கொண்டால் ஸதாயதநா: என்று ¶ புநருக்திதோஷம ப்ரஸங்கிக்கும. இவ்வண்ணம் ப்ரஹ்மத்திற்கு உத்பத்திலய ஹேதுதவததைச் சொல்லுகிற இரண்டு பதஙகளின் இடையிலுள்ள ஸ்திதி ஹேதுதவத்தைச்சொல்லுகற ஸதாயதநா: எனகிற பதத்திஞல் தாரகத்வம் ஸித்திப்பதால் "ஏதஸயவா அக்ஷரஸய ப்ரசாஸநேகார்கி த்யாவாப்ருதிவ்யௌவித்ருதே திஷ்டத:" என்கிற இடத்தில் 'ஸ்தா' தாதுவிஞல் சொல்லப்பட்டிருக்கிற ஸ்திதிக்கு ப்ரசாஸநத்திஞல் தாரணுதீநத்வம் அறியப்படுவதால் - 'அந்த: ப்ரவிஷ்டச்சாஸ்தாஜநாநாம்' என்று தாரணத்திற்கு ஹேதுவான ப்ரசாஸநத்திற்கு உளளே ப்ரவேசிதது செய்யப்படுதல் கேழ்க்கப்படுவதால் 'ததயதா அரேஷுநேமிரர்பிதா நாபாவரா அர்பிதா: ஏவமேவைதா பூதமாத்ரா: ப்ரஜ்ஞாமாத்ரா ஸ்வர்பிதா: ப்ரஜ்ஞாமாத்ரா: ப்ராணே அர்பிதா: - மயிஸர்வமிதம் ப்ரோதம் ஸூத்ரேமணிகணுஇவ - (எவ்வாறு ஆரக்காலகளில் சக்கரத்தின் வட்டைகள் இசைககப்பட்டிருக்கின்றனவோ ஆரக்கால்கள் நேமியில் இசைக்கப்பட்டிருக்கின்றனவோ இவ்வண்ணமே இந்த அசேதந பதார்த்தங்கள் ஜீவவாக்கங்களிடத்திலும் ஜீவவர்க்கங்கள் பரமாத்மாவினிடத்திலும் ஆபணஞ்செய்யப்பட்டிருக்கின்றன - நூலில் மணிகணஙகள்போல் என்னிடததில் இவை அனைத்தும் இசைக்கப்பட்டிருக்கிறது) என்கிற சுருதி ஸ்ம்ருதிகளால் அரநாபிமணிகண ஸூத்ர திருஷ்டாந்தங்களால் உள்ளே ப்ரவேசித்திருப்பவனுக்கு தாரகத்வம அறியப்படுவதால் - 'தத்ஸ்ருஷ்ட்வா - ததேவாநு ப்ராவிசத்' (அதை உண்டுபண்ணி - அதிலேயே அநுப்ரவேசித்தான்) என்று சொல்லப்பட்டிருக்கிற அநுப்ரவேசமானது ஸ்ருஷ்டிக்குப்பிறகு உண்டாயிருப்பதாலும் உதாஹரிக்கப்பட்டிருக்கிற சுருதியோடு அர்த்தைக்யத்தாலும் ஸ்திதிக்காகவே ஏற்பட்டிருக்கிறது - 'ஸப்தப்ராணா: ப்ரபவந்தி' (ஏழு ப்ராணன்கள் உண்டாகின்றன) இது முதலிய வாக்யஙகளால் சொல்லப்பட்ட ப்ரக்ரியையிஞல் ஸ்ருஷ்டிக்கப்பட்டிருக்கிற ஜகத்துக்கு 'தேநேதம்பூர்ணம் புருஷேண ஸர்வம்' (அந்த புருஷஞல் இவை அனைத்தும நிறைந்திருக்கிறது) என்கிற வாக்யத்தால் ஸ்திதி ஸமயத்தில் வ்யாபகஞன பரமபுருஷஞல் பூர்ணத்வம் அறியப்படுவதால். ஸர்வசாகாப்ரத்யய ந்யாயத்தால் வ்யாபநம் நியமநம் தாரணம் இவைகளில் ஏதாவது ஒன்றைச்சொனஞல் மற்ற மூன்று ஸித்திப்பதாலும அநுப்ரவேசித்து செயயப்படுகிற ப்ரசாஸநத்திஞல் தாரகத்வமானது ஸ்திதி ஹேதுத்வமென்றல்லவோ அறியப்படுகிறது. இவ்வண்ணம் தஜ்ஜலாந் என்கிற வாக்யததை ஆதாரமாகக்கொண்டு 'ப்ரஹ்மகார்யதயா ததந்தர்யாமிகதயாச' என்று ஜகத்திற்கு சொல்லப்பட்டிருக்கிற பரமாத்மாந்தர்யாமிகத்வமானது ஹேயப்ரத்யநீகத்வ கல்யாணகுணைகாயத்வ ரூபமான உபயலிங்கமுள்ள ப்ரஹ்மத்திற்கு பாமார்த்தமான ஜகதுபாதானத்வாந்யதாநுபபத்தியிஞலும் கடகச்ருதியிஞலும் ஸித்தம். ச சப்தத்திற்கு மேலே இருககிற ததந்தர்யாமிகதயா ததாத்மகத்வேநச என்கிற பதஙகளோடு அன்வயம். ஸ: ஆத்மாயஸ்யதத் ததாத்மகம்-ததந்தர்யாமிகத்வ ரூபேண ததாத்மகத்வேந என்று அர்த்தம். உள்ளே ப்ரவேசித்து நியமனம் செய்பவனல்லவோ ஆத்மா. ப்ரஹ்மகார்யதயா ததந்தர்யாமிகதயா ததாத்மகத்வேநச என்று சொல்லப்பட்டால் மூன்று ஹேதுக்களென்கிற சங்கை உண்டாகும் என்று அதை விலக்குவதற்காக ச சப்தத்திற்குமுந்தி ப்ரயோகம். இரண்டுவித ஐக்யம் விதிக்கப்பட்டிருப்பதாலென்று அர்த்தம்.

அய்யா, ஐக்யமானது கார்யகாரண நிபந்தனமென்று சொல்லப்படுமேயாகில் கார்யாவஸ்தையுள்ள ஜகத் விசிஷ்ட ப்ரஹ்மத்திற்கு காரணவஸ்தையுடன்கூடின சித

¶ புநருக்தி — இரட்டித்துக்கூடுதல்.

சித்விசிஷ்ட ப்ரஹ்மத்தோடு ஸ்வரூபைக்யம் யுக்தம். அந்த ப்ரஹ்மத்தை அந்தர்யாமியாகக்கொண்டிருத்தல் ஐக்யத்திற்குக் காரணம் என்று சொல்லப்படுமேயாகில் ப்ரஹ்மத்தோடு ஜகத்துக்கு ஐக்யம் ஸம்பவியாது - பின்னையோ ப்ரகாரவிசிஷ்டமான ப்ரஹ்மத்திற்கு ஏகத்வ ஸங்க்யாந்வயமே உருவதால ஐக்யசப்தத்திற்கு அர்த்தபேதம் உண்டாகும், அங்ஙனமாகில் ஜகத்துக்கு ததாத்மகத்வேந ஐக்யாத் என்று சொல்வது யுக்தமாகாது - ப்ரகாரம் ப்ரகாரி இரண்டும் வேறுபாடுள்ளதாக இருப்பதால் - எனில் இவ்வண்ணமல்ல- ஜகத் ப்ரஹ்மம் இரண்டும் வேறுபட்டதாக இருந்தபோதிலும் இந்த இடத்தில் ஜகத்சப்தமானது ஜகத் விசிஷ்டமான ப்ரஹ்மபரமென்று சொல்லப்பட்டிருப்பதால ஐக்யசப்தத்திற்கும் அர்த்தபேதமில்லை. இரண்டுவிததாலும் விசிஷ்டைக்யபரதவமிருப்பதால்- (இதை உபபாதிக்கிறார்) கார்யகாரணபாவநிபந்தன ஐக்யமாவது, இரண்டு அவஸ்தைகளுள்ள சிதசித்விசிஷ்டவஸ்துவுக்கு ஐக்யம். எவ்வாறு ரூபம் ஸ்பாசம் முதலியவைகளோடு கூடின கடத்திற்கு அப்படிப்பட்ட ம்ருத்த்ரவ்யத்தோடு ஐக்யமோ. சிதசிதாத்மக ஜகத்விசிஷ்டத்திற்கும் ஸ்வரூபத்தாலும குணங்களாலும நிரதிசயப்ருஹத்த்வ விசிஷ்டத்திற்கும ஐக்யம ப்ரகாரைக்யம் எவ்வாறு நைல்யவிசிஷ்டத்திற்கும உத்பலத்வ விசிஷ்டத்திற்கும் ஐக்யமோ-விசேஷணம்சங்களுக்கு ஐக்யமில்லாமையால் வஸ்துக்களின் ஐக்யத்திற்கு ஹாநி இல்லை. மண் கடம் முதலியதிலகூட ஸ்வரூபத்திற்கும் ரூபஸ்பர்சாதிகளுக்கும் கார்யத்வகாரணத்வாவஸ்தைகள் இரண்டுக்கும் ஏகத்வமில்லாமையால - இவ்வளவு மட்டிலும் விசேஷம - கார்யகாரணபாவத்தில் பின்னகாலங்களில் உள்ள அவஸ்தாரூபமான ஏத்வாரக விசேஷணாசரயமாக இருக்கிற தர்மிக்கு ஐக்யம். ''அவனே இந்த தருணனாக ஆனான்'' என்பதும்போல. மற்றஇடத்தில் ஸமகாலஸம்பந்தி அத்வாரகாநேக விசேஷணாச்ரயதர்மிக்குஐக்யம். ''இவன் வேதவித்தான ப்ராஹ்மணன்'' என்பதுபோல். பால்யயௌவனம் இரண்டும வெவ்வேறு காலங்களில் உண்டாகிற ஸத்வாரகாவஸ்தைகள்-வேதநமும் ப்ராஹ்மண சரீரமும் ஒரே காலத்திலுள்ள அத்வாரகவிசேஷணம். இவ்விதமாக இரண்டுவிதமான விசேஷணங்களோடுகூடின தர்மியின் ஐக்யம் ஐக்யசப்தார்த்தம் அதனால் 'ஜகத் சப்தவாச்யதர்மைக்யாத ஜகத ஐக்யாத்' என்கிற நிர்தேசம் உபபன்னமாகிறது. அன்றிக்கே ''க்ருத்ஸ்நஸ்ய ஜகத:'' என்பது நிஷ்கர்ஷகசப்தம். ப்ரஹ்மசப்தமும் விசேஷ்யமாத்ரத்தைக் குறிக்கிறது கார்யாவஸ்தையைக்குறித்து ஆதாரமாக இருப்பதால் - ஆதாரத்வமும நேராகவோ பரம்பரையாகவோ முக்கியமே. அதனால் ஜகத ப்ரஹ்மகார்யம். ததந்தர்யாமிகசப்தம் வ்யாக்கியானிக்கப்பட்டது. இவ்வண்ணம் ப்ரஹ்மகார்யமாக இருப்பதாலும் ப்ரஹ்மத்தை அந்தர்யாமியாகக்கொண்டிருத்தலாலும் ஜகத் ப்ரஹ்மாத்மகம். ப்ரஹ்மாத்மகத்வமாவது ஜகத்தானது ப்ரஹ்மத்திற்கு ப்ரகாரமாகவே இருக்கிற ஸ்வபாவத்தோடுகூடியிருப்பதால் ப்ரஹ்மத்தைவிட்டுத் தனித்து இருத்தல் இல்லாமையால் ப்ரஹ்மாந்தர்கதம் அந்த ப்ரகாரத்தால் ஐக்யம் - ஸ்வரூபைக்யம் இல்லை. விசிஷ்டத்தில் அந்தர்பாவமே ஐக்யமென்று அர்த்தம். ந த்வப்ரத்யநீக நாநாத்வமிதி. விதிக்கப்பட்டிருக்கிற இரண்டுவித ஐக்யத்திற்கு ப்ரதிபடமான நாநாத்வம் நிஷேதிக்கப்படுகிறதென்று அர்த்தம். கார்யகாரணபேதம் குதர்கமூலமான ப்ராந்திக்கு விஷயம்-தன்னிடத்திலிருக்கிற பேதமானது லௌகிக ப்ரதீதிமூலமான ப்ராந்திக்கு விஷயம். அதனால் ப்ராந்திமூலத்வம ஸமானமாக இருப்பதாலும் விஹிதமான ஐக்யத்திற்கு ப்ரத்யநீகத்வமும் ஸமானமாக இருப்பதாலும அந்த ஆகாரத்தால் இரண்டுவித பேதத்தையும நாநாசப்தத்தால் பராமர்சித்து நிஷேதிக்கப்படுகிறதென்பதினால் வாக்யபேதமில்லை. த த் ப்ர த் ய நீ கே தி. பேதநிஷேதமானது ஐக்யவிதிக்கு சேஷபூதம். அந்வயமுகத்தால் கூறப்பட்டிருக்கிற அர்த்தத்தை ஸ்திரப்படுத்துவதற்காகவே வ்யதிரேகோக்தி இருப்பதால், ஐக்யவிதியானது 'நேஹநாநாஸ்தி கிஞ்சந' என்கிற

ப்ரகரணத்தில் ச்ருதியினுல் கூறப்படுகிறது. ஏகனைத்வாநுத்ரஷ்டவ்ய மிதி. ஏகதா - ஏகதயா - பரமாத்மாவிற்கு சரீரமாக இருத்தலாகிற ஒரு ப்ரகாரத்தாலென்று அர்த்தம். அவ்வாறே, "அஹமேவ பரஸ்தத்வம் பவிஷ்யாமிச நாந்ய: கஸ்சிந்மத்தோ வ்யதிரிக்த:. ஆத்மா ... காகந்யத்கிஞ்சநமிஷத்" அவ்வாறே "பராமாத்ம ஸ்துவமேக: ... ந்யோஸ்தி ஜகத: பதே - அஹம்ஹரிஸ் ஸர்வமிதம் ஜநார்தநோ நாந்யத்தத: காரணகார்யஜாதம் - தத்ஸ்வரூபம் நாஸ்தி பரம்தேதோந்யத்" (நானொருவன் முதலிலிருந்தேன் - இருக்கிறேன், இருக்கப்போகிறேன் - என்னைவிட வேறானவன் ஒருவனுமில்லை - காணப்படுகிற ப்ரபஞ்சம் ஸ்ருஷ்டிக்குமுன் ஒரு ஆத்மாவாகவே இருந்தது, வேறு ஒருவஸ்துவும இருந்ததில்லை - உலகங்களுக்கு நாதனுக இருப்பவரே! நீர் ஒருவரே பரமார்த்தமாக இருப்பவர். மற்றொருவன் உலகத்துக்கு நாதனல்ல - இந்த ப்ரபஞ்சம் அனைத்தும ஜநார்த்தனனென்றும் ஹரி என்றும் சொல்லப்படுகிற நானே - என்னைத்தவிர்த்து வேறான கார்ணகார்யவர்க்கங்கள் இல்லை. சித சித்ரூபமான அந்த ஜகத்தானது அச்யுதஸ்வரூபமாகவே இருக்கிறது. அப்படிப்பட்ட அச்யுதனைத்தவிர்த்து வேறு வஸ்துவில்லை) இதுமுதலிய வாக்கியங்களில் ஐக்யவிதிக்குச் சேஷமாக பேத நிஷேதம் காணப்படுகிறது. சேஷத்வமானது விதிக்கப்பட்டிருக்கிற ஏகத்வத்திற்கு ஸ்திரீகரணரூபமான உபகாரத்தால் உண்டாகிறது. எப்படிப்பட்ட ஐக்யம் விதிக்கப்பட்டிருக்கிறதோ நிஷேதத்திற்கு அப்படிப்பட்ட ஐக்யவிரோதியான பேதவிஷயத்வமிருந்தால அதுவே பதார்த்தத்வம் ஸித்திக்கும். அந்த ஐக்யத்திற்கு அவிரோதியான ஆகாராந்தர நிஷேதம் அதற்கு உபயுக்தமாகா - மண்ணே கடம் என்று சொல்லப்பட்டால் கட த்வித்வநிஷேதமானது மண் கடம் இவ்விரண்டுகளுக்கும் ஏகத்வோபகாரகமாகாதன்றோ - கட த்வித்வமானது ம்ருத்கடம் இவைகளின் ஏகத்வத்திற்கு விரோதியாக இல்லாததால். ஏகோ கட: என்று சொல்லப்பட்டாலும் கடத்தை அடைந்திருக்கிற ரூபபரிணமாதிபேத நிஷேதமானது கடமென்று பெயருள்ள தர்மியின ஐக்யவிதிக்கு உபகாரகமாகா - ரூபபரிணமாதிபேதத்திற்கு கடவ்யக்தியின் ஐக்யத்தைககுறித்து விரோதித்வமில்லாமையால் - விதேயத்திற்கு விரோதியான அர்த்த நிஷேதமேயன்றோ விதிக்கு உபகாரகம். மேலும் உபகாரகாபாவமாத்ரமல்ல. எல்லா பேதங்களையும் நிஷேதிப்பதில் கருத்து என்பது ஐக்யவிதிக்கு விருத்தம். ஸமாநாதிகரணவாக்யத்தோடு ஐக்யவிதானத்தால், வெவ்வேறான விசேஷணங்களைச்சொல்லுகிற சப்தங்களுக்கு ஒரு விசேஷ்யத்தில் வ்ருத்தித்வமன்றோ ஸாமாநாதிகரண்யம் - ப்ரகார பேதம் இருக்கும்பொழுதே ஸமஸ்தபேதநிஷேதம் உபபன்னமாகாதன்றோ - ஆகையால் பேதநிஷேதம் ஐக்யவிதிசேஷமாதலால் கார்யகாரணபேதமும் தன்னிடத்திலிருக்கிற பேதமும் நிஷேதிக்கப்படுகிறதென்று அபிப்ராயம். மேலும், "நசாஸ்யகஸ்சிஜ்ஜநிதாந சாதிப: - நதத்ஸமஸ்சாப்யதிகஸ்சத்ருச்யதே. நத்வத்ஸமோஸ்த்யப்யதிக:குதோந்யோ லோகத்ரயே ப்யப்ரதிமப்ரபாவ" (இவனுக்கு பிதா ஒருவனும் கிடையாது, இவனுக்கு மேலதிகாரியுமில்லை, அந்த ப்ரஹ்மத்தோடு எவன்போட்டிபோடுவதற்குத் தகுதியுள்ளவன், நிகரற்ற ப்ரபாவமுள்ளவரே! மூன்றுலகங்களிலும் உமக்கு ஸமானன் இல்லை - அவ்வாறு இருக்க மேலானவன் அன்யன் எவ்வாறு இருப்பான்.) இதுமுதலியவைகளால் ஸஜாதீயரூப வஸ்துவிசேஷ விஷய நிஷேதம் காணப்படுதலால் ஸாமான்யமாக ... பேதநிஷேதமானது அந்த இடத்தில் ஸாமான்ய ந்யாயத்தால் பர்யவஸிக்கிறதென்பது அர்த்த ஸித்தம். அதற்கு ப்ரத்யநீகாகாரத்வமென்று சொல்லப்பட்டிருப்பதாலும் சில வாக்கியங்களில் அது கண்டோக்தமாக இருப்பதாலும்.

பிறகு, உத்ஸர்காபவாத ந்யாயத்தை அபிப்ராயப்பட்டுக் கூறுகிறார்—நபுந: என்று. ப்ரஹ்மத்திற்கு கார்யரூபத்தால் நாநாத்வவிஷயமான ச்ருதி வாக்யோதாஹரணமானது ப்ரகாரநாநாத்வ விஷயக வாக்யங்களையும் காட்டிக்கொடுப்பதற்காக. "ஏகஸ்ஸந் பஹுதாவிசார:, ஏகோதேவோபஹுதாவிஷ்ட:, த்வமேகோஸி பஹூநநுப்ரவிஷ்ட:, யோவ்யக்தமந்தரே ஸஞ்சரந் யஸ்யாவ்யக்தம் சரீரம், யோக்ஷரமந்தரே ஸஞ்சரந் - யஸ்யாக்ஷரம் சரீரம், யோ ம்ருத்யுமந்தரே ஸஞ்சரந் யஸ்ய ம்ருத்யு: சரீரம், ஏஷ ஸர்வபூதாந்தராத்மா அபஹதபாப்மா திவ்யோ தேவ ஏகோ நாராயண:" (ஒருவனாக இருந்துகொண்டு பலவாறாக ப்ரகாசிக்கிறான். ஸ்ருஷ்டி முதலிய கார்யங்களை லீலையாக உடையவனான பரமாத்மா ஒருவன் பலவாறாக சிதசித்வஸ்துக்களில் ப்ரவேசித்திருக்கிறான். நீர் ஒருவனாக இருக்கிறீர், அநேக வஸ்துக்களில் அநுப்ரவேசித்திருக்கிறீர். எவன் அவ்யக்தத்தின் உள்ளே ஸஞ்சரியா நின்றுகொண்டு அவ்யக்தத்தைச் சரீரமாகக்கொண்டிருக்கிறானோ, எவன் அக்ஷரசப்தவாச்யர்களான க்ஷேத்ரஜ்ஞர்களுக்குள் ஸஞ்சரித்துக்கொண்டிருக்கிறானோ எவனுக்கு அக்ஷரம் சரீரமோ, எவன் ம்ருத்யு சப்தவாச்யமான ப்ரக்ருதிக்குள் ஸஞ்சரிக்கிறானோ, எவனுக்கு ம்ருத்யு சரீரமோ, இவன் எல்லா பிராணிகளுக்கும் அந்தராத்மாவாக இருப்பவன் - தோஷமற்றவன். அப்ராக்ருதமான ஸ்தாநவிசேஷத்திலிருப்பவன், ஸ்ருஷ்டி முதலிய செய்கைகளால் க்ரீடிப்பவன், நாரசப்தவாச்யங்களான ப்ராணிவர்க்கங்களுக்கு அடையத்தக்க ஸ்தானமாக இருப்பவன்) என்று ப்ரகாரநாநாத்வமும் ப்ரகாரியின் ஐக்யமும் ஸ்பஷ்டமாகவல்லவோ ச்ருதியினால் கூறப்பட்டிருக்கிறது. அன்றிக்கே, சாந்தோக்யத்திலும் தைத்திரீயத்திலும் 'பஹுஸ்யாம்' என்கிற ப்ரகரணத்தில் "அநேந ஜீவேநாத்மநாநுப்ரவிச்ய, தததநுப்ரவிச்ய, ஸச்சத்யச்சாபவத், நிருக்தஞ்சாநிருக்தஞ்ச, நிலயநஞ்சாநிலயநஞ்ச, விஜ்ஞாநஞ்சாவிஜ்ஞாநஞ்ச" (இந்த ஜீவசரீரகனான தன் ஸ்வரூபத்தால் அநுப்ரவேசித்து, சேதநரூபமாகவும் அசேதநரூபமாகவுமாயிற்று, ஜாதிகுணக்ரியைகளுடன் கூடியிருத்தலால் ஜாதிகுணக்ரியைகளைச்சொல்லுகிற சப்தங்களால் வாச்யமான அசேதநமாகவும் சேதநமாகவும், சேதநவர்க்கத்தை ஆச்ரயித்திருக்கிற அசேதநஜாதமாகவும் அசேதநஜாதத்திற்கு ஆதாரமாக இருக்கிற சேதநஜாதமாகவும், அஜடஸ்வரூபமாகவும் ஜடஸ்வரூபமாகவும்) என்று சிதசித்துக்களில் அநுப்ரவேசத்தைமுன்னிட்டு நாமரூபங்களைப்பெறுதல் கேட்கப்படுவதால் ஹேயப்ரத்யநீகத்வ கல்யாணகுணைகதாநத்வரூபமான உபயலிங்கங்களோடுகூடியதாக இருந்தாலும் ப்ரஹ்மத்திற்கு இடையின்றி நேராக ஜகதுபாதாநத்வம் பொருந்தாததாலும். 'பஹுஸ்யாம்' என்கிற இடத்திலும் ப்ரஹ்மத்திற்கு பஹுநாமரூபபாக்த்வமானது ஸத்வாரகமென்று ஸித்திப்பதால் சரீரமாதலால் ப்ரகாரபூத சிதசிந்நாநாத்வம் அர்த்தஸித்தமென்கிற அபிப்ராயத்தால் "பஹுஸ்யாம்" என்கிற வாக்யம் உதாஹரிக்கப்பட்டது. இவ்வண்ணம் கார்யநாநாத்வமும் ப்ரகாரநாநாத்வமும் விதிக்கப்பட்டிருப்பதாலும் ஸாமாந்யநிஷேதமானது விதிக்கப்பட்டிருக்கிறதைவிட வேறாக இருப்பதை விஷயமாகக்கொண்டிருப்பதாலும் பேதச்ருதிகள் குதர்க்கஸித்தமான கார்யகாரணபேதவிஷயங்களென்றும் லௌகிக ப்ரதிஸித்தமான ஸ்வவிஷ்டபேத விஷயங்களென்றும் அர்த்தம்.

நாநாத்வநிஷேதத்தால் அபரமார்த்த விஷயத்வத்தைச் சங்கிக்கிறார்—நநுநாநாத்வ என்று. இது ச்ருதி. பேதம்பொய்யென்பால் நிஷேதத்தினின்றும் பொருட்டு அநுவதிக்கப்படுகிறதென்று கருத்து. பரிஹரிக்கிறார்—ந என்று. அப்ராப்தத்திற்கு அநுவாதம் கூடாததலால் விஷயங்களின் பாகுபாட்டால் விரோதமின்மையே ந்யாய்யம். இது ஆசார்ய பாதர்களால் அருளிச்செய்யப்பட்டிருக்கிறது—'யத்ப்ரஹ்மணோ குணசரீர விகாரபேத கர்மாதிகோசர விதிப்ரதிஷேதவாச:-அந்யோந்யபின்ன விஷயா ந விரோதகந்தமர்ஹந்தி

தந்நவிதய: ப்ரதிஷேதபாத்யா:. (ப்ரஹ்மத்திற்கு குணம் சரீரம் விகாரம் பேதம் கர்மம் முதலியவற்றை விஷயமாகக்கொண்டிருக்கிற யாதொரு விதிநிஷேத வசநங்களுண்டோ அவைகள் பரஸ்பரம் பிந்நவிஷயங்கள், விரோதலேசத்தை அடையத்தகுதியுள்ளவைகளல்ல. ஆதலால் விதிகள் ப்ரதிஷேதத்தால் பாதிக்கத்தக்கவைகளல்ல) என்று. ஹேயங்களனைத்தாலும் விடுபட்டிருப்பவனுக்கு ஹேயஸ்வரூபமுள்ள வஸ்துக்களோடு ஐக்யம் ஸம்பவியாததலாலும், ஹேயம் அபரமார்த்தமாக இருந்தபோதிலும் அது நிரஸிக்கத்தக்கதாக இருப்பதால் ஹேயத்வமானது விடத்தகாததாக இருப்பதாலும், அதற்கு எதிரிடையாக உரைக்கப்பட்டதற்கு அதின் ஸம்பந்தத்திற்குத்தகுந்ததான வஸ்துவினது ஐக்யத்திற்கு வ்யாகாதமில்லாமையாலும், ஸர்வஜ்ஞருமான ப்ரஹ்மத்திற்கு தன் ஸங்கல்பத்தால் தன்னை அடைந்திருக்கிற ஹேயமும் அந்த ஹேயவிஷயமான ப்ரமாபாதநமும் பொருந்தாதலாலும், ப்ரஹ்மத்திற்கு ஸர்வஜ்ஞத்வத்தை ஒப்புகொள்ளாவிடில் ஸார்வஜ்ஞ்ய ச்ருதிவிரோதத்தாலும், ஸர்வசக்திகளுடன் கூடியவனுக்குத்தன்னை அணுகி இருக்கிற ஹேயங்களைநிவர்த்திக்கிறசக்தி இல்லை என்பது பொருந்தாததலாலும், சக்தியற்றவனென்று சொல்லும்பக்ஷத்தில் ஸர்வசக்தி ச்ருதிவிரோததாலும், ச்ருதிபலத்தால் இப்படிப்பட்ட விரோதமில்லை என்கில், " தாந்யேவாநுவிநச்யதி, நஜாயதேம்ரியதேவா " (அவைகளையே அநுஸரித்து விநாசமடைகிறான், பிறக்கிறதுமில்லை இறக்கிறதுமில்லை) இதுமுதலிய வாக்யங்களால் அறியப்பட்டிருக்கிற நித்யத்வம் அநித்யத்வம் நிர்குணத்வம் ஸகுணத்வம் முதலியதற்கு ச்ருதிபலத்தால் விரோதமில்லாமையால் ஓரிடத்திலும் நியாயஸஞ்சாரம் அபேக்ஷிக்கப்படாததுபற்றி மீமாம்ஸா சாஸ்திரத்திற்கு வையர்த்யம் வருவதாலும், பிந்நத்வா பிந்நத்வங்களுக்கு விரோதமில்லாமையால் பாரமார்த்திகம் அபாரமார்த்திகமென்கிற விபாகம் ஒப்புக்கொள்ளத்தகாததாக இருப்பதாலும், " ப்ருதகாத்மாநம் ப்ரேரிதாரஞ்ச மத்வா ஜுஷ்டஸ்ததஸ்தேநாம்ருதத்வமேதி " (ஜீவாத்மாவையும் நியந்தாவான பரமாத்மாவையும் தனித்திருப்பவர்களாக எண்ணி அந்த பரமாத்மாவினால் ப்ரீதிக்கு விஷயமாக்கப்பட்டவனாக மோக்ஷத்தை அடைகிறான்) " ஜுஷ்டம் யதாபச்யத்யந்யமீசம்" என்று ப்ருதக்த்வஜ்ஞாநத்திற்கு மோக்ஷோபாயத்வம் ச்ருதியினால் சொல்லப்பட்டிருப்பதாலும், " யஸ்மாத் க்ஷரமதீதோஹம் " இது முதலியதால் பேதஜ்ஞாநமுள்ளவனுக்கு அஸம்மூடத்வம் ஸ்ம்ருதியினால் கூறப்பட்டிருப்பதாலும், ஜீவன் பரமாத்மா இருவர்களுக்கும் நியாம்யத்வ நியந்த்ருத்வ ரூபபேதத்திற்கு கடபடபேதத்திற்குப்போல ப்ரமாணாந்தரகோசரத்வமில்லாமையால் அநுவாதம் ஸம்பவியாததலாலும், விதிக்கப்பட்டதற்கு நிஷேதம் கூடாததலாலும், உபாஸநார்த்ததத்வாச்ரயணமானது " அத யோந்யாம்தேவதாமுபாஸ்தே " இதுமுதலிய வாக்யங்களாலறியப்பட்டிருக்கிற ஐக்யத்திலும் ப்ரஸங்கிப்பதால், ஐக்யம் விதிசேஷமல்லாத வாக்யங்களால் அறியப்படுகிறதென்று சொல்லும்பக்ஷத்தில் பேதமும் துல்யமாதலாலும்; பௌர்வாபர்ய விரோதம் நியதமாக இருப்பதுபற்றி அபச்சேதநியாயத்திற்கு அவிஷயமாக இருப்பதாலும்; விரோதாதிகரண நியாயத்தால் பேதச்ருதிக்குப்பின்பு இருக்கிற நிஷேதோத்பத்தி ப்ரதிபந்தகத்வமிருப்பதாலும்; ஐக்யவிதிசேஷமான பேதநிஷேதத்திற்கு விஹிதமான ஐக்யத்திற்கு விரோதியான பேதநிஷேதகத்வம் பொருந்துவதாலும்; அங்ஙனமில்லாவிடில், ஸமாநாதிகரணவாக்யங்களாலறியப்பட்டும் தனக்கு சேஷிபூதமாகவுமிருக்கிற ஐக்யத்திற்கு விரோதித்வம் ப்ரஸங்கிப்பதாலும்; உத்ஸர்காபவாத நியாயத்தால் நிஷேதமானது விதிக்கப்பட்டிருக்கிற பேதத்தைத்தவிர்த்த மற்றதை விஷயமாகக்கொண்டிருத்தலாலும்; சாகபசுந்யாயத்தால் ஸாமான்யமான பேதநிஷேதமானது ஸ்வதந்த்ர பேத விசேஷ நிஷேதத்தில் பர்யவஸிப்பதாலும், பேதநிஷேத ச்ருதிகள் அப்ரஹ்மாத்மக

ஸங்க்ரஹிக்[illegible] [illegible] நிஷே[illegible] [illegible] ஸாவகம், பேதமாத்ரநிஷேத பரங்கள் அல்லவென்று ஸ்மரிக்கிறோம்.

“ யத்ரஹி ” [illegible] [illegible] [illegible] [illegible] அர்த்தம் - யத்ர - எப்பொழுது, த்வைதமிவ [illegible] [illegible] தன்னிடத்தில் பேதமுள்ளதுபோல் ஆகிறதோ, இவ சப்தமானது [illegible] [illegible] [illegible] [illegible] என்பதைக் காட்டுகிறது. அல்லது “ ஹமிவ ” என்கிற வாக்யத்திற்போல இவ சப்தம் அவிவக்ஷிதமான அர்த்த முள்ளது. [illegible] - [illegible], [illegible] [illegible]வஸ்துவை இதரத்தினால் பார்க்கிறான். ‘ [illegible] ’ என்ற [illegible] [illegible] ‘ [illegible] ’ என்று அத்யாஹாரஞ்செய்து கொள்ளத்தக்கது. [illegible] [illegible] [illegible]மான த்ரஷ்டவ்யத்தை ஸ்வ நிஷ்டமான தர்ச[illegible] [illegible] [illegible]. ‘ யத்ர - எப்பொழுது, அஸ்ய - இந்த [illegible], [illegible] [illegible] - [illegible] [illegible] காரணத்தால் எல்லாம் ஸாக்ஷாத்[illegible], [illegible] ஆத்மாவாக இல்லாதது எல்லாம் இப்பொழுது ஆத்மாவாக ஆகிறதில்லையன்றோ; ஆகையால் அஸ்ய ’ என்ற [illegible]மானது [illegible]பாயமுள்ளது, ‘ அஸ்ய ’ என்று சொல்லியிருப்பதால். ‘ ஸ: ’ என்று சேர்த்துக்கொள்ள, [illegible] [illegible] என்று சொல்லப்பட்டிருப்பதால். தத் - அப்பொழுது. ஸ்வவிஷ்[illegible] [illegible] த்ரஷ்டா, ஸ்வநிஷ்டமான [illegible] [illegible] ஸாதனத்தினால் ஸ்வநிஷ்டமான [illegible] த்ரஷ்டவ்யத்தைப்பார்ப்பான். ஜ்ஞாத்ருஜ்ஞேயஜ்ஞாந ஸாதநங்களுக்குள் ஸ்வநிஷ்டம் ஒன்றும் இல்லை என்று அர்த்தம். ப்ரதிநிஷேதம் கூடாததாலும், அபாதப்ரதிபத்தியினால் ஸித்தமான பதார்த்தத்திற்கே நிஷேத்யதையிருப்பதாலும், லௌகிக ப்ரதீதிக்கு ஸ்வநிஷ்டதை விஷயமாதலாலும் அந்த ரூபத்தாலேயே நிஷேத விஷயத்வம் பொருத்தமுள்ளதாக ஆகிறது.

§ த்ரஷ்டா † த்ருச்யம் முதலியது மாத்ரம் நிஷேதிக்கப்படுமேயானால், அப்பொழுது “ தத்தைதத்பச்யந்ருஷிர்வாமதேவ: ப்ரதிபேதே, அஹம்மநுரபவம் ஸூர்யச்ச ” (அந்த இந்த ப்ரஹ்மத்தை ஸாக்ஷாத்கரியாநின்ற வாமதேவர் நான் மநுவாக ஆனேன், ஸூர்யனுமானேன் என்றல்லவோ அறிந்தார்) என்று பரமாத்ம ஸாக்ஷாத்கார தசையில் த்ரஷ்டாவான ஆத்மாவுக்கும் மநு ஸூர்யன் முதலிய த்ருச்யபதார்த்தங்களுக்கும் ஸாக்ஷாத்கார ச்ரவணம் விரோதிக்கும். ஆதலால் லௌகிகப்ரதீதியில் த்ரஷ்டா, த்ருச்யம், முதலியது ப்ரகாரியாக இருக்கிற பரமாத்மாவின் ப்ரதிபத்தி இல்லாமையால் அந்த பரமாத்மஸாமாநாதிகரண்யமின்றி தன்னிடத்திலிருப்பதாகத் தோன்றுகிறது. யோகதசையிலோவென்றால் ப்ரகாரியான பரமாத்மா அறியப்படுகிறவனாக இருப்பதால் அஹம் சப்தவாச்யனை பரமாத்மாவுடன் ஸாமாநாதிகரண்யத்தால் ப்ரகாசிக்கிறது என்று வைஷம்யம். த்ரஷ்டா த்ருச்யம் முதலியவைகளோவென்றால் ப்ரதிஷேதிக்கப்படுகிறதுகளில்லை என்று ஒப்புக்கொள்ளத்தக்கது. அப்படி இல்லாவிடில் வாமதேவாதிகளின் தர்சனம் ப்ராந்தி என்று ஏற்படவேண்டியதாகும். நேஹநாநாஸ்தி-இஹ ப்ரபஞ்சத்தில், உலகத்தில் காணப்படுகிறமாதிரியாக நாநாபூதம், தன்னிடத்திலிருப்பதான வேறுபட்ட வஸ்து ஒன்றுமில்லை என்று அர்த்தம். தன்னிடத்தில் இருப்பதாகக்காண்பதினால் ப்ரத்யவாயத்தைக்கூறுகிறார்—ம்ருத்யோ: என்று. “ தமஸோவாஏஷதம: ப்ரவிசதி” என்பதுபோல் நிர்தேசம். ஸ்வேந-தன்னிடத்திலிருப்பதுபோல. அஜ்ஞாநத்திலிருந்து அஜ்ஞாநத்தை அடைகிறான் என்று அர்த்தம். தேஹத்தைவிட வேறுவஸ்துவை

§ த்ரஷ்டா—பார்ப்பவன். † த்ருச்யம்—பார்க்கத்தக்கது.

விஷயமாகக்கொண்ட அஜ்ஞாநம் மூர்த்தியே ஸித்தமாக இருக்கிறது. தன்னிடத்தில் அர்த்த வஸ்து இருப்பதான தர்சனமானது அதைக்காட்டிலும் அநிசயிதமான அஜ்ஞான மென்று கருத்து.

"𑌯𑌦𑌾 𑌹𑍍𑌯𑍇𑌵𑍈𑌷 𑌏𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑍁𑌦𑌰𑌮𑌨𑍍𑌤𑌰𑌂 𑌕𑍁𑌰𑍁𑌤𑍇, 𑌅𑌥 𑌤𑌸𑍍𑌯 𑌭𑌯𑌂 𑌭𑌵𑌤𑌿" (தை-ஆ-எ-உ) 𑌇𑌤𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌿 𑌨𑌾𑌨𑌾𑌤𑍍𑌵𑌂 𑌪𑌶𑍍𑌯𑌤𑍋 𑌭𑌯𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌿𑌰𑌿𑌤𑌿 𑌯𑌦𑍁𑌕𑍍𑌤𑌮𑍍; 𑌤𑌦𑌸𑌤𑍍। "𑌸𑌰𑍍𑌵𑌂 𑌖𑌲𑍍𑌵𑌿𑌦𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌤𑌜𑍍𑌜𑌲𑌾𑌨𑌿𑌤𑌿 𑌶𑌾𑌨𑍍𑌤 𑌉𑌪𑌾𑌸𑍀𑌤" (சா-௩-௧௪-௧) 𑌇𑌤𑌿 𑌤𑌾𑌦𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌾𑌨𑍁𑌸𑌨𑍍𑌧𑌾𑌨𑌸𑍍𑌯 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌹𑍇𑌤𑍁𑌤𑍍𑌵𑍋𑌪𑌦𑍇𑌶𑌾𑌤𑍍। 𑌤𑌥𑌾 𑌹𑌿 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌜𑌗𑌤𑌸𑍍𑌤𑌦𑍁𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑌿𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌲𑌯𑌕𑌰𑍍𑌮𑌤𑌯𑌾 𑌤𑌦𑌾𑌤𑍍𑌮𑌕𑌤𑍍𑌵𑌾𑌨𑍁𑌸𑌨𑍍𑌧𑌾𑌨𑍇𑌨 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌰𑍍𑌵𑌿𑌧𑍀𑌯𑌤𑍇। 𑌅𑌤𑍋 𑌯𑌥𑌾𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌦𑍇𑌵𑌤𑌿𑌰𑍍𑌯𑌙𑍍𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌸𑍍𑌥𑌾𑌵𑌰𑌾𑌦𑌿𑌭𑍇𑌦𑌭𑌿𑌨𑍍𑌨𑌂 𑌜𑌗𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌤𑍍𑌮𑌕𑌮𑌿𑌤𑍍𑌯𑌨𑍁𑌸𑌨𑍍𑌧𑌾𑌨𑌸𑍍𑌯 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌹𑍇𑌤𑍁𑌤𑌯𑌾𑌽𑌭𑌯𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌿𑌹𑍇𑌤𑍁𑌤𑍍𑌵𑍇𑌨 𑌨 𑌭𑌯𑌹𑍇𑌤𑍁𑌤𑍍𑌵𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗𑌃। 𑌏𑌵𑌂 𑌤𑌰𑍍𑌹𑌿 "𑌅𑌥 𑌤𑌸𑍍𑌯 𑌭𑌯𑌂 𑌭𑌵𑌤𑌿" 𑌇𑌤𑌿 𑌕𑌿𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇; 𑌇𑌤𑍍𑌯𑌤𑍍𑌰𑍋𑌚𑍍𑌯𑌤𑍇, "𑌯𑌦𑌾 𑌹𑍍𑌯𑍇𑌵𑍈𑌷 𑌏𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑌦𑍃𑌶𑍍𑌯𑍇𑌽𑌨𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑍇𑌽𑌨𑌿𑌰𑍁𑌕𑍍𑌤𑍇𑌽𑌨𑌿𑌲𑌯𑌨𑍇𑌽𑌭𑌯𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌂 𑌵𑌿𑌨𑍍𑌦𑌤𑍇, 𑌅𑌥 𑌸𑍋𑌽𑌭𑌯𑌂 𑌗𑌤𑍋 𑌭𑌵𑌤𑌿" (தை-ஆ-எ-உ) 𑌇𑌤𑍍𑌯𑌭𑌯𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌿𑌹𑍇𑌤𑍁𑌤𑍍𑌵𑍇𑌨 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌿 𑌯𑌾 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌽𑌭𑌿𑌹𑌿𑌤𑌾; 𑌤𑌸𑍍𑌯𑌾 𑌵𑌿𑌚𑍍𑌛𑍇𑌦𑍇 𑌭𑌯𑌂 𑌭𑌵𑌤𑍀𑌤𑌿। 𑌯𑌥𑍋𑌕𑍍𑌤𑌂 𑌮𑌹𑌰𑍍𑌷𑌿𑌭𑌿𑌃— "𑌯𑌨𑍍𑌮𑍁𑌹𑍂𑌰𑍍𑌤𑌂 𑌕𑍍𑌷𑌣𑌂 𑌵𑌾𑌪𑌿 𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑍋 𑌨 𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯𑌤𑍇। 𑌸𑌾 𑌹𑌾𑌨𑌿𑌸𑍍𑌤𑌨𑍍𑌮𑌹𑌚𑍍𑌛𑌿𑌦𑍍𑌰𑌂 𑌸𑌾 𑌭𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌿𑌃 𑌸𑌾 𑌚 𑌵𑌿𑌕𑍍𑌰𑌿𑌯𑌾" (𑌗𑌾𑌰𑍁𑌡𑌪𑍁𑌰𑌾𑌣𑌮𑍍) 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿। 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌿 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌯𑌾 𑌅𑌨𑍍𑌤𑌰𑌮𑌵𑌕𑌾𑌶𑌃 𑌵𑌿𑌚𑍍𑌛𑍇𑌦𑌃॥

𑌯𑌦𑍁𑌕𑍍𑌤𑌮𑍍— "𑌨𑍇𑌹 𑌨𑌾𑌨𑌾𑌽𑌸𑍍𑌤𑌿" 𑌇𑌤𑌿 𑌸𑌰𑍍𑌵𑌵𑌿𑌶𑍇𑌷𑌰𑌹𑌿𑌤𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑌿; 𑌤𑌨𑍍𑌨, 𑌸𑌵𑌿𑌶𑍇𑌷𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌕𑍍𑌯𑌵𑌿𑌹𑌿𑌤𑌂 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑌿। "𑌮𑌾𑌯𑌾𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌤𑍁" 𑌇𑌤𑌿 𑌚 𑌸𑍍𑌵𑌾𑌪𑍍𑌨𑌾𑌨𑌾𑌮𑌰𑍍𑌥𑌾𑌨𑌾𑌂 𑌜𑌾𑌗𑌰𑌿𑌤𑌵𑌸𑍍𑌤𑍁𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌨𑌵𑌿𑌧𑍈𑌰𑍍𑌮𑍍𑌯𑍇𑌣 𑌮𑌾𑌯𑌾𑌮𑌾𑌤𑍍𑌰𑌤𑍍𑌵𑌮𑍁𑌪𑌪𑌾𑌦𑍍𑌯 𑌇𑌤𑌿 𑌜𑌾𑌗𑌰𑌿𑌤𑌵𑌸𑍍𑌤𑍁𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌨𑌾𑌨𑌾𑌮𑍇𑌵 𑌪𑌾𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑍍𑌯𑌮𑍇𑌵 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑌿॥

ஸ்ரீபாஷ்யம்—

'யதா ஹ்யேவைஷ ஏதஸ்மிந்நுதர மந்தரம் குருதே - அத தஸ்ய பயம் பவதி' (எப்பொழுது இவன் இந்த ப்ரஹ்மத்தினிடம் கொஞ்சம் பேதத்தைப் பாராட்டுகிறானோ அப்பொழுது அவனுக்கு பயம்ஸம்பவிக்கிறது) என்று ப்ரஹ்மத்தினிடத்தில் நாநாத்வத்தைப்பார்க்கிறவனுக்கு பயம் ஸம்பவிக்கிறதென்று யாதொன்று உரைக்கப்பட்டதோ அது சரியல்ல. 'ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம - தஜ்ஜலாநிதி சாந்த உபாஸீத' (ப்ரத்யக்ஷமாகக்காணப்படுகிற இந்த ப்ரபஞ்சமெல்லாம் ப்ரஹ்மமன்றோ - இவ்வுலகம் அந்த ப்ரஹ்மத்தினிடத்தினின்று உண்டாயிருக்கிறது, அதினிடம் லயமடைகிறது, அதனால் ரக்ஷிக்கப்படுகிறது, என்று அநுஸந்தித்து சாந்தனாக உபாஸிக்கக்கடவான்.) என்று அதன் நாநாத்வாநுஸந்தானமானது சாந்திக்கு ஹேதுவென்று உபதேசிக்கப்பட்டிருப்பதால், இதை உபபாதிக்கிறார்—ததாஹி என்று அப்படியன்றோ- உலகம் அனைத்தும் அந்த ப்ரஹ்மத்தின் ஸ்ருஷ்டி ஸ்திதி லயங்களுக்கு கர்மாவாக இருப்பதால் அந்த ப்ரஹ்மாத்மகத்வாநுஸந்தானத்தால் சாந்தி விதிக்கப்படுகிறது. ஆகையால் உள்ளபடி தேவர்கள் திர்யக்குகள் மனுஷ்யர்கள் ஸ்தாவரங்கள் என வேறுபட்டிருக்கிற ஜகத்தானது ப்ரஹ்மாத்மகமென்கிற அநுஸந்தானமானது சாந்திக்கு ஹேதுவாக இருப்பதுபற்றி அபயப்ராப்திக்கு ஹேதுவாக இருப்பதால் பயஹேதுத்வத்திற்கு ப்ரஸங்கமில்லை.

இங்ஙனமாகில் அதற்குப்பிறகு அவனுக்கு பயம் உண்டாகிறது என்று ஏன் சொல்லப்படுகிறது? இதோ மறுமொழி உரைக்கப்படுகிறது கண் முதலிய இந்திரியங்களால் க்ரஹிக்கத்தகாதவனும் - சரீரமில்லாதவனும் ஜாதி குணம் முதலியவைகளைச்சொல்லுகிற தேவாதிபதங்களால் வாச்யனல்லாதவனும் ஆதாரமில்லாதவனுமான இந்த பரமாத்மாவினிடத்தில் எப்பொழுது இவன் பயமில்லாமலிருப்பதற்காக இடைவெளி இல்லாத ஸ்ம்ருதிரூபமான நிஷ்டையை அடைகிறானோ, அப்பொழுது அபயத்தைப்பெற்றவனாக ஆகிறான் என்று அபயப்ராப்திக்கு ஹேதுவாக ப்ரஹ்மத்தினிடத்தில் எந்த நிஷ்டை உரைக்கப்பட்டதோ, அதற்கு ‡ விச்சேதம்வரின் பயம் உண்டாகிறது என்று மஹர்ஷிகளால் இதற்கு ஸம்வாதம் கூறப்பட்டிருக்கிறது. "ஒரு முகூர்த்தகாலமோ அல்லது 'க்ஷணகாலமோ வாஸுதேவன் சிந்திக்கப்படாமல் போவானேயாகில் அது இஷ்டஹானி, அது பெரிதான அநிஷ்டப்ராப்திக்கு அணுகிவருவதற்கு சந்து. அது அந்த பரமாத்மாவினால் உண்டு பண்ணப்பட்ட சித்த ஸ்கலனம் - அது ஸ்வாதீனதை இல்லாமையால் உள்ள

படி இருத அங்கங்களின் வ்யாபாரம்" இது முதலியது. ப்ரஹ்மத்தினிடத்தில் ப்ரதிஷ்டைக்கு அந்தரம் அவகாசம் விச்சேதமே.

'நஸ்தாநதோபி' என்கிற ஸூத்ரத்தில் ப்ரஹ்மமானது எல்லா விசேஷங்களாலும் விடுபட்டதென்று சொல்லப்போகிறார் - என்று யாதொன்று உரைக்கப்பட்டதோ; அது அப்படி அல்ல, ப்ரஹ்மமானது விசேஷங்களுடன் கூடியதென்றே அங்கு கூறப்போகிறார்—"மாயாமாத்ரந்து" எனகிற ஸூத்ரத்தினால் ஸ்வப்நகாலத்திலனுபவிக்கப்படுகிற பதார்த்தங்களுக்கு ஜாகரிதாவஸ்தையிலனுபவிக்கப்பட்டிருக்கிற பதார்த்தங்களோடு ஒற்றுமையில்லாமையால் மாயாமாத்ரத்வம் சொல்லப்படுகிறது என்பதினால் ஜாகரிதாவஸ்தையில் அநுபவிக்கப்பட்ட பதார்த்தங்களுக்குப்போல பாரமார்த்திகத்வத்தையே சொல்லப்போகிறார்.

ச்ருதப்ரகாசிகை—

"யதாஹ்யேவைஷ:" இதுமுதலிய ச்ருதியை எடுத்துக்கொண்டு 'தத்ரப்ரஹ்மணி' இதுமுதலியதால் பூர்வபக்ஷியினால சொல்லப்பட்டிருக்கிற அர்த்தத்தை அநுவதித்துத் தூஷிக்கிறார் - ந்தஸத் என்று. தஸத - பயப்ராப்தி ஹேதுத்வம் இல்லை என்று அர்த்தம். எதனாலென்று கேட்கில் சொல்லுகிறார்—ஸர்வம் என்று. ப்ரஹ்மத்திற்கு கார்யமான ஜகத்ரூபமாக நாநாத்வாநுஸந்தாநம் மூக்திஹேதுவெனபது ஸித்தாந்தார்த்தம். இப்பொழுது அங்யனல் சொல்லப்பட்டிருக்கிற சாந்திஹேதுத்வத்தை ஒப்புக்கொணடு கூறப்பட்டது. எவ்வாறு அவ்விடத்தில் நாநாத்வாநுஸந்தானப்ரதீதி? எவ்வாறு அதற்கு பயப்ராப்திஹேதுதாவிரோதித்வம் என்று சங்கைவரின் இதை விவரிக்கிறார்—தத்ராஹி என்று. இந்த இடத்தில நாநாத்வாநுஸந்தானப்ரதீதியைக் காணபிக்கிறார்—ஸர்வஸ்ய என்று. ப்ரஹ்மம் என்று மாத்ரம் சொல்லப்பட்டிருக்கவில்லையன்றோ; பின்னையோ 'இவை அனைத்தும் ப்ரஹ்மம்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஸர்வ சப்தமானது பற்பலபேதமுள்ள ப்ரபஞ்சத்தைக்குறிக்கிறது. ஆதலால் நாநாத்வ விசிஷ்ட ப்ரஹ்மாநுஸந்தானம் ப்ரஸித்தமென்று அர்த்தம். அதனாலென்னவென்று கேட்கில் கூறுகிறார்— அத: என்று. நாநாத்வாநுஸந்தானமானது சாந்திஹேதுத்வம் வாயிலாக ஸமஸ்தபய நிவ்ருத்திரூபமான மோக்ஷோபாயமாக இருப்பதால் பேதபுத்திக்கு பயப்ராப்தி ஹேதுத்வோக்தியானது அதற்கு விருத்தமென்று அர்த்தம். மணி, கத்தி, கண்ணாடி முதலியவைகளை அடைந்திருக்கிற ப்ரதிபிம்பங்களில் போல தேஹங்களில் ராகம் த்வேஷம் முதலியது நிவ்ருத்தியின்பொருட்டு எல்லாம் ப்ரஹ்மத்தினிடத்தில் அத்யஸ்தம் என்கிற அநுஸந்தான விதியானது ஏன் இருக்கக்கூடாது? இவ்வண்ணமல்ல - ப்ரவ்ருத்திநிமித்தங்களின் பேதத்தால் ஒருஅர்த்தத்தில் வ்ருத்தித்வமல்லவோ ஸாமாநாதிகரண்யம் என்று உபபாதிக்கப்பட்டிருப்பதாலும், பதார்த்தத்வத்திற்கு இனி கூறப்போகிற தூஷணத்தால் உபஹதிவருவதாலும்.

இதற்குமேல சோத்யத்தை முன்னிட்டு இந்த ச்ருதியினது அர்த்தத்தைக் கூறு கிறார்—இது சொல்லப்படுகிறது என்று. ' அத்ருச்யே ' என்பதினால் அசித்வ்யா வ்ருத்தி ஏற்பட்டது. ' அநாத்ம்யே ' என்றதனால் பத்த ஜீவர்கள் வ்யாவ்ருத்திக்கப் பட்டார்கள். அவர்கள் பரமாத்மாவினால் வ்யாப்யாகளன்றோ. அன்றியிலே, ஆத்ம்யம் வ்யாப்யமான கர்மக்ருத சரீரம், அதில்லாதவன் அநாத்மியன. ' அநிருக்தே ' என்பதி னால் முக்த வ்யாவ்ருத்தி ஸித்திக்கது. அந்த முக்தாத்மா பத்ததசையில் தேவாதி சப் தங்களால் சொல்லப்பட்டிருந்தான். ' அநிலயநே ' என்று நித்யமுக்த வ்யாவ்ருத்தி ஸித்தித்தது. அவர்களுக்கும பகவான் ஆதாரமன்றோ - தன்னால் சொல்லப்பட்டிருக் கிற அர்த்தவிஷயமான உபப்ரும்ஹணத்தைக் காட்டுகிறார் — யதோக்தம் என்று. ஹாநி: - இஷ்டஹாநி:, நிதாம் - அநிஷ்ட ப்ராப்திரந்தரம். ப்ரஸக்தி: - அதினால் உண்டு பணணப்பட்ட சித்தஸ்கலனம. விக்ரியா - அதினால் உண்டான அஸ்வாதீநதையினால் அவயவங்களின் இருக்கவேண்டியபடி இல்லாத செய்கை. " ஏகஸ்மிந்நப்யதிக்ராந்தே முஹூர்த்தே த்யாநவர்ஜிதே-தஸ்யுபிர்முஷிதேநேவ யுக்தமாக்ரந்திதும் ப்ருசம் ", "வரம் ஹுதவஹஜ்வாலாபஞ்ஜராந்தர்வ்யவஸ்திதி:, ந சௌரிசிந்தாவிமுகஜநஸம்வாஸவைச ஸம் " (பகவத் த்யானமில்லாமல் ஒரு முகூர்த்த காலம் சென்றாலுங்கூட திருடர்களால் கொள்ளையிடப்பட்டு சொத்தை இழந்தவனைபோல் மனிதனுக்கு அதிகமாக அலறுதல்பொ ருத்தமுள்ளதாக ஆகும், ஸ்ரீகண்ணபிரானை தியானிப்பதில் நோக்கில்லாத ஜனங்களோடு சேர்ந்து வாஸம்செய்வதைவிட நெருப்பு ஜ்வாலைகளால் ஏற்படுத்தப்பட்ட கூட்டின் நடுவில இருப்பது சிறந்தது) இது முதலிய வசனங்கள் ஆதிசப்தத்தால் சொல்லக்கருதப் பட்டிருக்கிறது. அந்தர சப்தத்திற்கு விட்டுப்போகுதலென்கிற அர்த்தமெவ்வாறு என்று கேட்கில் கூறுகிறார்—ப்ரஹ்மணி என்று. இடைவெளி இலலாத தியானமன்றோ நிரந்தரம் என்று சொல்லப்படுகிறது. ஆதலால் அந்தரம் - என்றால் விட்டுப்போகுதல். அது எதற்கு என்று அபேக்ஷை வருங்கால் ப்ரதிஷ்டை ப்ரக்ருதமாக இருப்பதால் அதற்கு விச்சேதம். ப்ரக்ருத ப்ரஹ்ம விஷயமான ' ததப்யேஷ: ' என்று உதாஹரிக்கப்பட் டிருக்கிற ' பீஷாஸ்மாத்வாத: ' என்கிற அடுத்த ச்லோகத்தில வாயு, ஸூர்யன், முத லிய எல்லா சேதநர்களுக்கும் ப்ரசாஸிதாவாக இருத்தல் சொல்லப்பட்டிருப்பதால் அந்தர சப்தத்திற்கு உபாஸநவிச்சேதபரத்வமே யுக்தமே ஒழிய பேதபரத்வம் யுக்தமல்ல. ஆகை யால் இந்த அர்த்தமானது முன்பின்னிருக்கிற வாக்கியங்களுக்கும் ச்ருத்யந்தரத்திற்கும் உபப்ருஹ்மணத்திற்கும் அநுகுணம். அங்ஙனால் சொல்லப்பட்டதோவென்றால் அவை இரண்டுக்கும் விருத்தமென்று கருத்து.

ஐயா ! ' யதாஹ்யேவைஷ: ' என்கிற இடத்தில் ப்ரதிஷ்டையின் விச்சே தம் அர்த்தமானால் ' ஏதஸ்யாம் ' என்று ஸ்த்ரீலிங்கமாகவன்றோ ஏதச்சப்தம் ப்ரயோ கிக்கப்பட்டிருக்கவேண்டும், ' அதிதி: பாசாந் ' என்கிற ந்யாயத்தால் விபக்தியினால் அறியப்பட்டிருக்கிற நபும்ஸகலிங்கத்திற்கு விவக்ஷை இன்மை என்று கூறப்படுமேயா னால், அப்படி இருந்தபோதிலும் அஸ்வாரஸ்யம் விலக்கத்தகாதது. ஸ்வரஸமாக அர்த் தம் ஸம்பவிக்கிறதாக இருக்க அப்படிப்பட்ட அஸ்வாரஸ்யம் பொருத்தமுள்ளதாக ஆகாது. ஸப்தமியும் அஸ்வரஸம். தஸ்யா: விச்சேத: என்று சொல்வதன்றோ ஸ்வர ஸம். ' தஸ்யாம் விச்சேத: ' என்று கூறுவது ஸ்வரஸமன்று - ப்ரதிஷ்டாபரமாகச் சொல்லும்பக்ஷத்தில் ப்ராதிபதிகாஸ்வாரஸ்யமும உண்டாகும். முந்தின வாக்கியத்தில் ' யதாஹ்யேவைஷ ஏதஸ்மிந்நத்ருச்யே அநாத்ம்யே ' என்று ப்ரஹ்மபரமாக ப்ரயோ கிக்கப்பட்டிருக்கிற ' ஏதஸ்மிந் ' என்கிற பதத்திற்கு அடுத்த பிந்தின வாக்கியத்திலும்

புத்தியில் விபரிவ்ருத்தி இருப்பதால் என்று வினவப்படுமேயாகில; ஸமாதானம் கூறப்படுகிறது. § லிங்கததுக்கும் ஸப்தமிக்கும் ப்ராதிபதிகத்துக்கும் அஸ்வாரஸ்யமில்லை, ஏதச்சப்தம் ப்ரஹ்மத்தை பராமர்சிப்பதால். அந்தர சப்தம் அவகாசத்தைச்சொல்லுகிறது; '$நிரந்தர ¶ஸாந்தர' என்று ப்ரயோகங்கள் இருப்பதால். அந்தரமானது தேசத்தாலும் காலத்தாலும் உண்டாகிறது. காலத்தாலுண்டுபண்ணப்பட்ட அந்தரமானது விச்சேதமே. அய்யா! இங்ஙனமாகில் எதற்கு விச்சேதம் என்கிற அபேக்ஷை வரின் ப்ரதிஷ்டாயா: அந்தரமென்று அத்யாஹாரம் ஸம்பவிக்கலாம், அதோ யுக்தமன்று, அத்யாஹாரமில்லாமலே நிர்வாஹம ஸம்பவிப்பதால் என்றுகூறப்படுமேயாகில்; அப்படியல்ல; - அருகாமையினால் கிடைத்த அர்த்தத்திற்கு அத்யாஹாராபேக்ஷை இல்லாமையால். ஆயினும், அஸ்வாரஸ்யம் என்று சொல்லப்படுமேயானால் பக்ஷாந்தரத்தில் அனேக அஸ்வாரஸ்யங்கள் வருவதால் அவைகளைக்காட்டிலும் இது கொஞ்சம் சிறந்தது. அப்படியன்றோ, பயஹேதுவானது அபயஹேது ப்ரதியோகியாதலால் அபயஹேதுபரமான ப்ரதிஷ்டா பதத்திற்கு ஐக்யவாசித்வமில்லாமையால் வாக்யவ்ருத்திக்கு அஸாமஞ்ஜஸ்யம் வருகிறது. அதனது ஸாமஞ்ஜஸ்யத்திற்காக ப்ரதிஷ்டா சப்தத்திற்கு ஐக்யபரத்வம் சொல்லில் முக்யமான அர்த்தத்திற்கு ஹானிவருகிறது. திடமான ஸம்பந்தமன்றோ ப்ரதிஷ்டை - 'ராஜ்யே ப்ரதிஷ்டித:' - (ராஜ்யத்தில் திடமான ஸம்பந்தம் பெற்றவன்) என்கிற லௌகிகவசனம் இந்த அர்த்தத்தில் ப்ரமாணம். முதன்மையாக அறியப்பட்டிருக்கிற ப்ரதிஷ்டாபதத்திற்கு அர்த்தபங்கமும் பொருந்தமுள்ளதாகாது - முந்தி விதித்திருக்கிற ஐக்யத்தை அறிவிப்பதில் நோக்குள்ளதாக இருத்தலால் விந்ததிதாதவாதத்ததிற்கு அஸ்வாரஸ்யமும். ஸப்தமியும் அஸ்வரஸை - பேதப்ரதியோகித்வ @ அவதித்வ ஸம்பந்த விவக்ஷையில் த்ருதீயை பஞ்சமி ஷஷ்டிகளுக்கே ஸ்வாரஸ்யமிருப்பதால். க்ருதாதுவுக்கு ப்ரதிபத்தியை அர்த்தமாகக்கொள்வதால் அஸ்வாரஸ்யமும். 'மநஸ்குருதே' என்கிற யோஜனையில் அத்யாஹாரமும், 'ஏஷ ஹ்யேவாநந்தயாதி' என்கிறமுந்தினவாக்கியத்தாலறியப்பட்டிருக்கிற பேதவிரோதமும்(வருகிறது)அடுத்து 'பீஷாஸ்மாத்' என்று ||ப்ரசாஸித்ருத்வத்தால் பேதம் கூறப்படுகிறது. ஆகையால் மத்யத்தில் பேதநிஷேதமும் உபபன்னமாகாது. 'ஆநந்தம் ப்ரஹ்மணோ வித்வாந் நபிபேதி குதஸ்சந'—'கதாசந' என்று முன்பின் வாக்கியத்தில் குணங்களோடுகூடின ப்ரஹ்மவேதநத்திற்கு அபயஹேதுத்வம் சொல்லப்பட்டிருப்பதால் ப்ரஹ்மத்தினிடம் பேதநிஷேதத்திற்கு அபயஹேதுத்வம் சொல்லுதல் விருத்தம். 'ப்ரஹ்மவிதாப்நோதி' என்று வேதநத்தில் தொடங்கியிருப்பதால் ப்ரஹ்மத்தினிடம் ப்ரதிஷ்டையின் வேதநரூபத்வமே தகுதியுள்ளது. ஐக்யரூபத்வம் யுக்தமன்று. ஐக்யம் ஐக்யபுத்தி இவ்விரண்டுக்கும் ப்ரதிஷ்டா சப்தவாச்யத்வமில்லையன்றோ. திடமான ஸம்பந்தத்தைச்சொல்லுகிற ப்ரதிஷ்டா சப்தத்திற்கோவென்றால் உபாஸிக்கத்தக்க பரஹ்மத்தைக்குறித்து உபாஸகனுக்கு இருப்பதினால் உபாஸ்யோபாஸக பாவரூபமான ஸம்பந்தத்தில் பர்யவஸானம் யுக்தம். ப்ரஹ்மம் நிர்விசேஷமென்பதிலும் அதைத்தவிர்த்தமற்றது மித்யை என்பதிலும் அன்யனால் சொல்லப்பட்டிருக்கிற இரண்டு ஸூத்ரங்களைப் பரிஹரிக்கிறார்—யதுக்தம் என்று.

§ லிங்கம்—பால். $ நிரந்தரம்—இடைவெளி இல்லாதது.

¶ ஸாந்தரம்—இடைவெளி உள்ளது.

@ அவதி—எல்லை.

|| ப்ரசாஸித்ருத்வம்—ஆளுகிறவனுடைய தன்மை.

𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌪𑍁𑌰𑌾𑌣𑌯𑍋𑌰𑌪𑌿 𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌶𑍇𑌷𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌾𑌤𑍍𑌰𑌮𑍇𑌵 𑌪𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑍋𑌽𑌨𑍍𑌯𑌦𑌪𑌾𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑌿𑌕𑌮𑌿𑌤𑌿 𑌪𑍍𑌰𑌤𑍀𑌯𑌤 𑌇𑌤𑌿 𑌯𑌦𑍁𑌕𑍍𑌤𑌂 । 𑌤𑌦𑌸𑌤𑍍—“𑌯𑍋 𑌮𑌾𑌮𑌜𑌮𑌨𑌾𑌦𑌿𑌂 𑌚 𑌵𑍇𑌤𑍍𑌤𑌿 𑌲𑍋𑌕𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌮𑍍” (கீ-க௦-௩) “𑌮𑌤𑍍𑌸𑍍𑌥𑌾𑌨𑌿 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌨 𑌚𑌾𑌹𑌂 𑌤𑍇𑌷𑍍𑌵𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 । 𑌨 𑌚 𑌮𑌤𑍍𑌸𑍍𑌥𑌾𑌨𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌪𑌶𑍍𑌯 𑌮𑍇 𑌯𑍋𑌗𑌮𑌐𑌶𑍍𑌵𑌰𑌮𑍍 ॥ 𑌭𑍂𑌤𑌭𑍃𑌨𑍍𑌨 𑌚 𑌭𑍂𑌤𑌸𑍍𑌥𑍋 𑌮𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌭𑍂𑌤𑌭𑌾𑌵𑌨𑌃” (கீ-௯-௪௫) 𑌅𑌹𑌂 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌸𑍍𑌯 𑌜𑌗𑌤𑌃 𑌪𑍍𑌰𑌭𑌵𑌃 𑌪𑍍𑌰𑌳𑌯𑌸𑍍𑌤𑌥𑌾 ॥ 𑌮𑌤𑍍𑌤𑌃 𑌪𑌰𑌤𑌰𑌂 𑌨𑌾𑌨𑍍𑌯𑌤𑍍𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌦𑌸𑍍𑌤𑌿 𑌧𑌨𑌞𑍍𑌜𑌯 । 𑌮𑌯𑌿 𑌸𑌰𑍍𑌵𑌮𑌿𑌦𑌂 𑌪𑍍𑌰𑍋𑌤𑌂 𑌸𑍂𑌤𑍍𑌰𑍇 𑌮𑌣𑌿𑌗𑌣𑌾 𑌇𑌵 ॥ (கீ-எ-௬-எ) “𑌵𑌿𑌷𑍍𑌟𑌭𑍍𑌯𑌾𑌹𑌮𑌿𑌦𑌂 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌮𑍇𑌕𑌾𑌂𑌶𑍇𑌨 𑌸𑍍𑌥𑌿𑌤𑍋 𑌜𑌗𑌤𑍍” (கீ-க௦-௪௨) “𑌉𑌤𑍍𑌤𑌮𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌸𑍍𑌤𑍍𑌵𑌨𑍍𑌯𑌃 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑍇𑌤𑍍𑌯𑍁𑌦𑌾𑌹𑍃𑌤𑌃 । 𑌯𑍋 𑌲𑍋𑌕𑌤𑍍𑌰𑌯𑌮𑌾𑌵𑌿𑌶𑍍𑌯 𑌬𑌿𑌭𑌰𑍍𑌤𑍍𑌯𑌵𑍍𑌯𑌯 𑌈𑌶𑍍𑌵𑌰𑌃 । 𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌕𑍍𑌷𑌰𑌮𑌤𑍀𑌤𑍋𑌽𑌹𑌮𑌕𑍍𑌷𑌰𑌾𑌦𑌪𑌿 𑌚𑍋𑌤𑍍𑌤𑌮𑌃 । 𑌅𑌤𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 𑌲𑍋𑌕𑍇 𑌵𑍇𑌦𑍇 𑌚 𑌪𑍍𑌰𑌥𑌿𑌤𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌤𑍍𑌤𑌮𑌃 ॥ (கீ-கரு-கஎ-கஅ)

ஸ்ரீபாஷ்யம்.—

ஸ்ம்ருதிபுராணங்களில்கூட நிர்விசேஷ ஜ்ஞாநமாத்ரமே பரமார்த்தம், மற்றது அபார மார்த்திகம் என்று அறியப்படுகிறதென்று எது சொல்லப் பட்டதோ; அது ஸரியல்ல— ‘எவன் என்னை பிறப்பில்லாதவனென்றும், ஆதியில்லாதவனென்றும் உலகங்களுக்கு மஹேச்வரனென்றும் அறிகிறானோ’ “சராசரங்களனைத்தும் என்னிடத்தில் நிலைபெற்றிருக்கின்றன நான அவைகளிடத்தில் அவைகளை ஆதாரமாகக் கொண்டிருப்பவனல்ல, சராசரங்கள் என் ஸங்கல்பமாத்திரத்தினால் நிலைபெற்றிருக்கிறதேயொழிய என்னிடத்தில் நிலைபெற்றிருக்கவில்லை. ஈச்வரனுக்கு அஸாதாரணமாக இருக்கிற என்னுடைய ஸர்வ சக்தியோகத்தைப்பார் என் ஸங்கல்ப்பமானது சராசரங்களைபரிக்கிறது (தாங்குகிறது) அவைகளில் நிலைபெற்றிருக்கவில்லை. பூதங்களுடைய ஸத்தாநுவர்த்தகம்”, “நான் எல்லாஉலகங்களும் உண்டாவதற்குக்காரணம், அவ்வாறே நாசத்துக்கும் காரணம், தநஞ்ஜய! என்னைவிடமிக்கச்சிறப்புள்ள வேறுவஸ்து ஒன்றும் கிடையாது. இவை அனைத்தும் நூலில் மணிகணங்கள் போல என்னிடத்தில் இசைக்கப் பட்டிருக்கிறது”, “நான் இந்த ப்ரபஞ்சம் அனைத்தையும் ஸங்கல்பத்தின் ஏகதேசத்தால் அதிஷ்டாநமாக்கிக்கொண்டு

நிலைபெற்றிருக்கிறேன்", க்ஷராக்ஷர சப்தவாச்யங்களான சேதநாசேதநங்களைக்காட்டிலும் வேருக இருப்பவனுன உத்தமபுருஷனேவென்ருல் பரமாத்மாவென்று சொல்லப்பட்டிருக்கிருன். குறைவற்றவனும் நியந்தாவாகவும் இருக்கிற எவன் மூவுலங்களையும் உள்ளே ப்ரவேசித்து தரிக்கிருனே, யாதொரு காரணத்திருல் நான் அழிதலை ஸ்வபாவமாகக்கொண்ட அசேதநங்களை தாண்டினவனுகவும் அழிவற்றவைகளான சேதநவர்க்கங்களைக் காட்டிலும் உத்தமனுகவுமிருக்கிறேனே அதனுல் உலகத்திலும் வேதத்திலும் புருஷோத்தமனென்று ப்ரஸித்திப்பெற்றிருக்கிறேன்.

ச்ருதப்ரகாசிகை—

இதற்குமேல் ஸ்ம்ருதிபுராணங்களுக்கு ஸவிசேஷ வஸ்து ப்ரதிபாதநத்திலுள்ள முக்கியக்கருத்தை உபபாதிக்கிருர்—**ஸ்ம்ருதிபுராணயோ:** என்று. 'ஸ்ம்ருதி' இது முதலியவற்ருல் ஸாமான்யமாய் ப்ரமாணத்திற்கும் அதற்கு அவாந்தர ரூபமான சப்தத்திற்கும் ஸவிசேஷவஸ்துப்ராதான்யத்தை உபபாதித்ததாலும், சாஸ்த்ரத்திற்கு ப்ரத்யக்ஷவிருத்தமான அர்த்தத்தை ப்ரதிபாதிப்பதில் ஸாமர்த்தியமில்லாமையை உபபாதிப்பதாலும், விசேஷித்து வேதாந்தவாக்கியங்களுக்கு ஸவிசேஷபரத்வத்தை உபபாதித்ததினுல் ஸ்ம்ருதிபுராணம இரண்டுக்கும் ச்ருதிகளுக்கு விருத்தமான அர்த்தத்தில் ப்ராமாண்யமில்லாமையாலும், அவ்விரண்டுகளுக்கும் ஸவிசேஷ பரத்வம் ஸித்தித்தது; இப்பொழுது ஸ்ம்ருதிபுராணங்களிலும் அந்யனுல் உதாஹரிக்கப்பட்டிருக்கிற வசநங்களுக்கு முன்பின் பர்யாலோசனையினுல் ஸவிசேஷபரத்வம் உபபாதிக்கப்படுகிறது. எவ்வாறு லௌகிக ப்ரமாண ச்ருதிவிருத்தங்களான அர்த்தங்களை இந்த சாஸ்திரம் ப்ரதிபாதிக்கிறதில்லையோ, இவ்வாறே பூர்வாபரவாக்கியங்களுக்கு விருத்தமான அர்த்தத்தையும் ஸ்ம்ருதி புராணங்கள் ப்ரதிபாதிப்பதற்கு சக்தியுள்ளவைகளல்லவென்று கருத்து. அந்யனுல் எல்லாவற்றுக்கும் அவித்யையினுல் ஸம்பவித்திருத்தல் ஸமானமாக இருப்பதால் ஸ்வாபாவிகமான வக்த்ருவைஷம்யத்தை ஒப்புக்கொள்ளாமையாலும், அத்வைதம் ஸ்பஷ்டமென்கிற ப்ரமத்தாலும், முந்தி புராணவசநங்களை உபந்யஸித்து, பிறகு பகவத்கீதாவசநங்கள் உதாஹரிக்கப்பட்டன. இவ்விடத்திலோவென்ருல் ஸ்வாபாவிகமான வக்த்ருவைஷம்யத்தை ஒப்புக்கொள்வதாலும், அநந்தகுணவிபூதிமத்த்வம் ஸ்பஷ்டமாக இருப்பதாலும், பகவத்கீதாவசநங்களை முந்தி உபந்யஸித்து, பிறகு புராணவசநங்கள் துலக்கமாகக்காட்டப்படுகின்றன. அதனுல் "ஸ்ம்ருதிபுராணயோ:" என்று உரைக்கப்பட்டது. அந்யனுல் தன்னுல் உதாஹரிக்கப்பட்டிருக்கிற வசநங்களுக்கு ப்ரதிபாத்யமாக எந்த அர்த்தம் சொல்லப்பட்டதோ, அதற்கு விபரீதமான அர்த்தத்தில் தாத்பர்யத்துடன்கூடின மிக்க ஸ்பஷ்டங்களான வசநங்கள் முதலில் காண்பிக்கப்படுகின்றன; பிறகு அவைகளுக்கு விரோதமின்றி அந்யனுல் சொல்லப்பட்டிருக்கிற வசநங்களுக்கு அர்த்தத்தை ப்ரதிபாதிப்பதற்காக.

யோமாமிதி - இந்த இடத்தில் 'அஜம்' என்கிற பதத்தால் அசித்தோடு சேர்க்கைபெற்றிருக்கிற சேதநர்களுக்கு வ்யாவ்ருத்தி ஏற்பட்டது. 'அநாதிம்' என்பதனுல் முக்தர்களுக்கு விலக்கம் ஏற்பட்டது. அந்த முக்தாத்மாவுக்குள்ள அஜத்வமானது ஆதியுள்ளது. லோகமஹேச்வரம் என்பதனுல் நித்ய முக்த வ்யாவ்ருத்தி நிலை

பௌ. லோக்யதே காணப்படுகிறது என்கிற வ்யுத்பத்தியினால் லோக சப்தமானது, ப்ரமாணங்களால ஸித்திபெற்றிருக்கிற மூன்றுவிதமான சேதநா சேதநர்க்கம் லோகசப்தத்தால் சொல்லப்படுகிறது. இந்த இடத்தில் "அஸம்மூடஸ்ஸ மர்த்யேஷு" என்பது மேலே ப்ரதிபாதிக்கப்போகிற விஷயத்திற்காகவும், அநுஸந்தேயமாக அபிப்பிராயப்படப்பட்டிருக்கிறது. சேதநாசேதநங்களைக்காட்டிலும் விலக்ஷணனாக அறிகிறவன் அஸம்மூடன் என்று சொன்னதனால் ஸாவயதார்த்தங்களைக் காட்டிலும் வைலக்ஷண்யம் தாத்விகம் என்பது சொல்லப்பட்டதாக ஆகிறதென்று அபிப்ராயம். தாரகத்வம் முதலியவைகளால் வைலக்ஷண்யத்தை வைசத்யத்திற்காக 'மத்ஸ்தானி' என்று எடுக்கிறார். இந்த இடத்தில் சரீரலக்ஷணம் ஸூசிப்பிக்கப்பட்டதாக ஆகிறது. எல்லா வஸ்துக்களும் எனக்கு அதீனமான ஸ்திதியுடன் கூடி இருக்கின்றன, நான் அவைகளைச்சார்ந்த ஸ்திதியுள்ளவனல்லவென்று அர்த்தம். உலகத்தில் காணப்பட்டிருக்கிறமாதிரி நான் ஆதாரமல்ல, பின்னையோ ஸங்கல்பமாத்திரத்தினலென்றுசொல்லுகிறார்—ந ச என்று. நிஷேதமானது எது விஹிதமோ அதைவிடவேறாக இருப்பதை விஷயமாகக்கொண்டிருப்பதால் இதே அர்த்தம். **யோகம் ஐச்வரம்** - ஈச்வரனுக்கு அஸாதாரணமாக இருக்கிற சக்திஸம்பந்தத்தை என்று அர்த்தம். 'ந ச மத்ஸ்தானி' என்று, தாரகத்வத்தின் பாரமார்த்தியம் நிஷேதிக்கப்படுமேயாகில் 'யோகமைச்வரம் பச்ய' என்பது விருத்தம். அப்பொழுது 'என் ப்ராந்தியைப்பார்' என்றல்லவோ சொல்லத்தக்கது. 'யோகமைச்வரம்' என்பதை விவரியாநின்றுகொண்டு இதே அர்த்தத்தைச் சொல்லுகிறார்—பூதப்ருத் என்று. மம ஆத்மா - என்னுடைய ஸங்கல்பமென்று அர்த்தம். ஆத்மசப்தம் மதியையன்றோ சொல்லுகிறது. "யத்நோऽர்கேऽக்நௌ மதாவாத்மா" என்று நிகண்டு. ஆகையால் இவ்விடத்தில் ஆத்மசப்தம் ஸங்கல்பரூபமான ஜ்ஞாநத்தைச் சொல்லுகிறது. 'மமாத்மா பூதபாவந:' என்கிற இந்த வசநத்தினலும 'மத்ஸ்தானி பூதானி' என்கிற வாக்கியத்தின் அர்த்தம் ஸ்பஷ்டமாக்கப்பட்டது. **பூதபாவந:** - பூதங்களுடைய ஸத்தையை அநுவர்த்திக்கிறவன். கீழ்ப்பட்டிருக்கிற ஈச்வரனுக்கன்றோ ஸகுணத்வம் என்கிறசங்கைவரின் காரணத்தைக்காட்டிலும வேறான வஸ்துவின் நிஷேதத்தைக் காண்பிப்பதற்காகவும், லக்ஷணத்தைக் காண்பிப்பதற்காகவும் ஜகத்காரணத்வத்தைச் சொல்லுகிறார்— **அஹம்** என்று, உத்பத்தியும் ப்ரளயமும் சொல்லப்பட்டது. ஸ்திதியோவென்றால் தாரகத்வத்தைச் சொன்னதனால் ஸித்தி பெறுகிறது என்று தாரகத்வத்தை விசேஷிக்கிறார்—மயி என்று, **விஷ்டப்யாஹம்** என்பதனால் நியந்த்ருத்வம் கூறப்பட்டது. விஷ்டப்ய - அதிஷ்டாநஞ்செய்து, ஏகாம்சேந - ஸங்கல்பத்தின் ஏகதேசத்தால். தத் சரீரத்வ லக்ஷணம், "யோமாமஜம்" இது முதலியதால் அபிப்ராயப்படப்பட்டிருக்கிற சிதசித்வைலக்ஷண்ய கண்டோக்தியைக் காண்பிக்கிறார்—உத்தம: என்று. முந்தின வசநத்தில் பத்தமுக்தர்கள் இருவர்களும் க்ஷராக்ஷர சப்தங்களால் சொல்லப்பட்டார்கள். கூடஸ்த: - விகாரமில்லாதவன். முக்தனுக்கு ஜ்ஞாநஸங்கோசரூபமான விகாரமில்லாமையால், அல்லது கூடஸ்தசப்தம ஸாதாரண வஸ்துவைச்சொல்லுகிறது. எல்லா உலகங்களிலும் தன்னிஷ்டப்படி ஸஞ்சாரமுள்ளவனாக ஆகிறான் என்பதுபற்றி முக்தாத்மாவுக்கு உபயவிபூதி ஸாதாரண்யத்தால் கூடஸ்தத்வம். "பரமாத்மேத்யுதாஹ்ருத:" என்கிற வசநத்தினால் "பரமாத்மா வ்யவஸ்தித:" என்கிற வாக்கியத்தோடு அந்வயித்த நாராயணாநுவாகம் ஸ்மரிப்பிக்கப்பட்டது. 'அக்ஷராதபிசோத்தம:' என்பதனாலும் அந்த இடத்திலேயே "ஸோऽக்ஷர: பரம: ஸ்வராட்" என்று கூறப்பட்டிருக்கிறது. ஜ்ஞாநஸங்கோசரூபமான க்ஷரணமில்லாமையால் அக்ஷரசப்தவாச்யன் முக்தன். ஸ்வராட்-ஸ்வதந்த்ரன், கர்மத்திற்கு வசப்படாதவன் பரம: - ஜீவாத்மாக்களை அடைந்திருக்கிற அவஸ்தைக்களுக்குள் இதற்குமேல்பட்ட அவ

ஸ்தாவிசேஷமில்லாமையால் பாரம்யம். ‘ஸர்வாணி’ என்கிற பதம் ப்ரஹ்மா சிவன் முதலியவர்களைக்குறிக்கிறது. அந்த அநுவாகத்தில் ‘ஸ ப்ரஹ்மா ஸ சிவ: ஸேந்த்ர: ஸோக்ஷர: பரமஸ்ஸ்வராட்’’ என்கிற ஸமாநாதிகரணங்களான பத்தமுக்த ஜீவவாசி பதங்களால் பகவானன்றோ சொல்லப்பட்டிருக்கிறார். அந்த அநுவாகத்தில் ‘விச்வமேவேதம் புருஷ:’ என்று ஸாமாநாதிகரண்யவாக்கியம் கேழ்க்கப்படுகிறது. ஸாமாநாதிகரண்யத்திற்கு ஹேதுவும் அந்த அநுவாகத்தில் ஸ்பஷ்டம். ‘‘தத்விச்வமுபஜீவதி; பதிம் விச்வஸ்யாத்மேச்வரம், வ்யாப்ய நாராயண:ஸ்தித:,’’ என்றும் இருக்கிற வாக்கிய ஜாலத்தில் தார்யத்வம் தாரகத்வம் நியந்த்ருத்வம் நியாம்யத்வம் சேஷித்வம் சேஷத்வம் வ்யாப்யத்வம் வ்யாபகத்வம் முதலியதே ஸாமாநாதிகரண்யத்துக்குக் காரணமே ஒழிய அவைகளின் ஐக்யம் அல்லவென்பது ஸ்பஷ்டம். அது இங்கு சொல்லப்படுகிறது. ‘ஆவிச்ய’ என்கிற பதத்தினால் ‘வ்யாப்ய நாராயண: ஸ்தித:’ என்கிற வாக்கியத்தின் அர்த்தம் கூறப்பட்டது. ‘பதிம்விச்வஸ்ய’ எனபதின் அர்த்தமானது ஈச்வர சப்தத்தால் சொல்லப்பட்டது. ஈச்வர சப்தம சேஷிவாசகமன்றோ. அதனாலேயே ‘பதிம் விச்வஸ்யாத்மேச்வரம்’ என்கிற இடத்தில் வேறு பதியின் இன்மையைச்சொல்லக் கருதி ஆத்மேச்வரம் என்று உரைக்கப்பட்டிருக்கிறது. ‘‘தத்விச்வமுபஜீவதி’’ என்கிற வாக்கியத்தின் அர்த்தமானது ‘பிபர்தி’ என்கிற பதத்தால் சொல்லப்பட்டது. அப்படியே ‘‘வ்யாபநாத் பாரணாத்ஸ்வாம்யாதந்ய: பஞ்சதசோதித:’’ என்பதினாலும், ‘யோ மாமேவமஸம்மூட:’ என்பதினாலும் உலகத்திலுள்ள எல்லா வஸ்துக்களைக்காட்டிலும் பரமாத்மா விலக்ஷணன் என்கிற ஜ்ஞாநமுள்ளவனுக்கு அஸம்மூடத்வம் சொல்லப்பட்டிருக்கிறது. ‘‘இதி குஹ்யதமம் சாஸ்த்ரம்’’ எனபதனால் அந்த அர்த்தம நிரம்பகூடமாக வைத்துப்பாதுகார்க்கத்தக்கதென்று சொல்லப்பட்டது. ஆகையால் இந்த அர்த்தத்தில் தாத்பர்யம் என்பது ஸ்பஷ்டம். புருஷோத்தம சப்தத்திற்கு ஸமாஸவிஷயத்தில் சப்தாநுசாஸநவிரோதம சங்கிக்கத்தக்கதல்ல - ‘‘நாஸோத்தமாதி ச ஸித்தம் பவதி’’ என்கிற மஹாபாஷ்ய வசநத்தாலும், பாணிநியைப்போல புருஷோத்தம சப்தத்தின் நிர்வாஹத்தைச்செய்தவர்களான ரிஷிகள் ஆப்ததமர்களாக இருப்பதாலும். அன்றிக்கே புருஷோத்தம: என்று பஞ்சமீஸமாஸம் - ‘அக்ஷராதபிசோத்தம:’ என்றல்லவோ சொல்லப்பட்டிருக்கிறது. பூர்வநிபாதமோவென்றால் ஸாமாநாதிகரண்யம் சொல்லக்கருதப்பட்ட இடத்திலேயே ஒழிய அதின் அவிவக்ஷையுள்ள இடத்திலுங்கூட அநுசாஸநவிரோத சங்கைக்கு ப்ரஸக்தி இல்லை. இவ்வண்ணம் இந்த வசநங்களால் சிதசித்வை லக்ஷண்யம் ப்ரதிபாதிக்கப்பட்டிருப்பதால் ‘க்ஷேத்ரஜ்ஞஞ்சாபிமாமவித்தி’ இது முதலிய வசநங்களுக்கு அதற்கு விரோதமின்றி அர்த்தம் வர்ணிக்கததக்கது. ‘யோலோகத்ரயமாவிச்ய பிபர்தி’ இது முதலியதால் அனைத்துக்கும் பகவச்சேஷத்வம் தார்யத்வம் நியாம்யத்வம் வ்யாப்யத்வம் சரீரத்வம் முதலியது விதிக்கப்பட்டிருப்பதால், அது நிஷேதிப்பதற்குத்தகாததாதலால் - ‘ந ததஸ்தி விநா யத் ஸ்யாத்’ இது முதலியதால் பாஹ்மாத்மகமாக இல்லாத வஸ்துக்கு நாஸ்தித்வம் சொல்லப்படுகிறது. அவிநாபாவ சப்தத்திற்கு மித்யாத்வபரமாக ப்ரஸித்தி இல்லாமையாலும் அவ்வாறு ஒப்புக்கொள்ளத்தக்கதென்று அபிப்பிராயம். விநாசப்தமானது ஸம்பந்தத்தின் இன்மையைச்சொல்லுகிறது, அவிநாபாவ சப்தம் ஸம்பந்தநியமத்தைச்சொல்வதால்.

‘‘ 𑌸 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌂 𑌵𑌿𑌕𑌾𑌰𑌾𑌨𑍍 𑌗𑍁𑌣𑌾𑌦𑌿𑌦𑍋𑌷𑌾𑌂𑌶𑍍𑌚
𑌮𑍁𑌨𑍇 𑌵𑍍𑌯𑌤𑍀𑌤𑌃 । 𑌅𑌤𑍀𑌤𑌸𑌰𑍍𑌵𑌾𑌵𑌰𑌣𑍋𑌽𑌖𑌿𑌲𑌾𑌤𑍍𑌮𑌾 𑌤𑍇𑌨𑌾𑌸𑍍𑌤𑍃𑌤𑌂
𑌯𑌦𑍍𑌭𑍁𑌵𑌨𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌲𑍇 ॥ 𑌸𑌮𑌸𑍍𑌤𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌗𑍁𑌣𑌾𑌤𑍍𑌮𑌕𑍋𑌽𑌸𑍌 𑌸𑍍𑌵𑌶𑌕𑍍𑌤𑌿𑌲𑍇

𑌶𑌾𑌦𑍍𑌧𑍃𑌤𑌭𑍂𑌤𑌸𑌰𑍍𑌗𑌃 । 𑌇𑌚𑍍𑌛𑌾𑌗𑍃𑌹𑍀𑌤𑌾𑌭𑌿𑌮𑌤𑍋𑌰𑍁𑌦𑍇𑌹𑌃 𑌸𑌂
𑌸𑌾𑌧𑌿𑌤𑌾𑌶𑍇𑌷𑌜𑌗𑌦𑍍𑌧𑌿𑌤𑍋𑌽𑌸𑍌 ॥ 𑌤𑍇𑌜𑍋𑌬𑌲𑍈𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌮𑌹𑌾
𑌵𑌬𑍋𑌧𑌸𑍁𑌵𑍀𑌰𑍍𑌯𑌶𑌕𑍍𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌗𑍁𑌣𑍈𑌕𑌰𑌾𑌶𑌿𑌃 ॥ 𑌪𑌰𑌃 𑌪𑌰𑌾𑌣𑌾𑌂
𑌸𑌕𑌲𑌾 𑌨 𑌯𑌤𑍍𑌰 𑌕𑍍𑌲𑍇𑌶𑌾𑌦𑌯𑌃 𑌸𑌨𑍍𑌤𑌿 𑌪𑌰𑌾𑌵𑌰𑍇𑌶𑍇 ॥ 𑌸 𑌈𑌶𑍍𑌵𑌰𑍋 𑌵𑍍𑌯𑌷𑍍𑌟𑌿
𑌸𑌮𑌷𑍍𑌟𑌿𑌰𑍂𑌪𑍋𑌽𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌃 𑌪𑍍𑌰𑌕𑌟𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌃 । 𑌸𑌰𑍍𑌵𑍇𑌶𑍍𑌵𑌰𑌃 𑌸𑌰𑍍𑌵
𑌦𑍃𑌕𑍍 𑌸𑌰𑍍𑌵𑌵𑍇𑌤𑍍𑌤𑌾 𑌸𑌮𑌸𑍍𑌤𑌶𑌕𑍍𑌤𑌿𑌃 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌾𑌖𑍍𑌯𑌃 । 𑌸𑌂𑌜𑍍𑌞𑌾𑌯𑌤𑍇
𑌯𑍇𑌨 𑌤𑌦𑌸𑍍𑌤𑌦𑍋𑌷𑌂 𑌶𑍁𑌦𑍍𑌧𑌂 𑌪𑌰𑌂 𑌨𑌿𑌰𑍍𑌮𑌲𑌮𑍇𑌕𑌰𑍂𑌪𑌮𑍍 । 𑌸𑌨𑍍𑌦𑍃
𑌶𑍍𑌯𑌤𑍇 𑌵𑌾𑌪𑍍𑌯𑌧𑌿𑌗𑌮𑍍𑌯𑌤𑍇 𑌵𑌾 𑌤𑌜𑍍𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌤𑍋𑌽𑌨𑍍𑌯𑌦𑍁𑌕𑍍𑌤𑌮𑍍 ॥

ஸ்ரீபாஷ்யம்—

'ரிஷியே! அவன் ஸர்வபூதங்களுக்கும்மூலகாரணமாக இருக்கிற ப்ரதானத்தையும் மஹதஹங்காராதிகளையும ஸத்வரஜஸ்தமோ குணங்களாலுண்டாகிற தோஷங்களையும் தாண்டினவனாகவும் எல்லாவிஷய ஜ்ஞாநஸங்கோசத்தைக் கடந்தவனாகவும எல்லா வஸ்துக்களுக்கும் அந்தராத்மாவாகவும இருக்கிறான் உபயவிபூதி மத்தியத்தில் எது இருக்கிறதோ அது எல்லாம் அவனால் வ்யாபிக்கப்பட்டிருக்கிறது''

அந்த பரம புருஷன் ஸமஸ்தகல்யாண குணங்களை தர்மிஸ்வரூபமாக உடையவன். தன்னுடைய ஸாமர்த்திய லேசத்தாலேயே தரிக்கப்பட்டிருக்கிற கார்யவஸ்து ஸமூஹத்தையுடையவன் இச்சையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டும் தனக்கு அநுரூபமாகவுமிருக்கிற பெரிதான தேஹங்களுடன் கூடியவன். உலகங்களுக்கு ஹிதமான கார்யங்களை நன்றாகச்செய்து முடிப்பவன். தேஜஸ், பலம், ஐச்வர்யம், அபரிச்சின்னமானஜ்ஞானம், நல்லவீர்யம் சக்தி முதலிய குணங்களுடைய ஒரு குவியலாக இருப்பவன்; சிறப்புடையவர்களான ப்ரஹ்மருத்ராதிகளைக் காட்டிலும் மேன்மை பெற்றவன் பராபர வஸ்துக்களுக்கு நியந்தாவாக இருக்கிற எந்தபரம புருஷனிடத்தில் ஸமஸ்தங்களானக்லேசம் முதலியவைகள் இல்லையோ அவன் எல்லாஉலகங்களுக்கும் நியந்தா. கார்யகாரண பாவாவஸ்தையுடன்கூடின சேதநவர்க்கங்களை சரீரமாக உடையவன், அவ்யக்தமான ஸ்வரூபத்துடன்கூடியவன், ப்ரகாசிக்கிற ஸ்வரூபமுடையவன் எல்லாவற்றுக்கும், நியந்தா ஸ்வரூபத்தாலும் ப்ரகாரத்தாலும் எல்லாவற்றையும் அறிந்தவன், அவாப்த ஸமஸ்தகாமன்- எல்லாவற்

றையும் அப்ருதக்ஸித்தவிசேஷணங்களாகக் கொண்டவன், தனக்குமேலான ஒருவனுமில்லாத ஈச்வரனென்று பெயருள்ளவன். எந்த சாஸ்த்ரஜந்ய ஜ்ஞாநத்தினால் தோஷமற்றதும் சுத்தமாகவும் மிக்க நிர்மலமாயும் ஸதிர ஸ்வபாவமுள்ளதுமான அந்த ப்ரஹ்மம் அறியப்படுகிறதோ; எந்த உபாஸநாத்மக ஜ்ஞாநத்தால் நன்றாக ஸாக்ஷாத்கரிக்கபபடுகிறதோ; எந்த பரபக்தி ரூபமாகவும் அநுபவ ரூபமாகவுமிருக்கிற ஜ்ஞாநத்தால் அனுபவிக்கப்படுகிறதோ அது ஜ்ஞாநம், அதைக்காட்டிலும் வேறானது அஜ்ஞாநம் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ச்ருதப்ரகாசிகை—

இதற்குமேல் புராணவசநங்கள் உபந்யஸிக்கப்படுகின்றன; அவற்றுள் 'ப்ரத்யஸ்தமிதபேதம்' என்கிற வசநத்தினுடைய அர்த்தத்தை வ்யாக்கியாநஞ்செய்ய எண்ணங்கொண்டவராக அதற்கு உபயோகியாக இருப்பதால் அதின் உபக்ரமத்திலும் உபஸம்ஹாரத்திலும் ஸவிசேஷபரத்வத்தைக் காண்பிக்கப்போகிறவராக உபக்ரமவாக்யங்களை எடுக்கிறார்—ஸர்வ என்று. அவற்றுள் முதல் கிரந்தமானது ஹேயப்ரத்யநீகத்வத்தை ப்ரதிபாதிக்கிறது. ஸர்வபூத ப்ரக்ருதிம் - ப்ரதானத்தை, விகாராந் - மஹத்தத்வம் முதலியவைகளை, குணாதிதோஷாந்-ஸத்வரஜஸ்தமஸ்களை ஹேதுவாகக்கொண்டதோஷங்களை, அந்ததோஷங்கள் க்லேசம்முதலியவைகள், வ்யதீத:-விசேஷித்துத்தாண்டினவன். தவறாமல் அவைகளுக்கு அதீநனாக இல்லாமையால் ஸம்பந்தத்திற்கு அநர்ஹன் என்று அர்த்தம். அதீதஸர்வாவரண:-ஆவரணம்-ப்ரக்ருதி ஸம்பந்தம் கர்மவாஸனை முதலியது. அவைகளனைத்தும் எவனால் தாண்டப்பட்டதோ அவன் என்று பொருள். அன்றிக்கே ஸர்வவிஷயஜ்ஞாநாவரணம் ஸர்வாவரணம்-ஸர்வவிஷயஜ்ஞாந ஸங்கோசத்தை அதிக்ரமித்தவன் என்று அர்த்தம். ஜ்ஞாநசக்திமுதலிய எல்லா குணங்களின் ஸங்கோசத்தை அதிக்ரமித்தவனென்றாவது அர்த்தம். அகிலாத்மத்வத்தை விவரிக்கிறார்—தேந என்று. ம்ருதாத்மகோகட: என்பதுபோலில்லை என்றாவது அர்த்தம். புவநாந்தராளே - உபய விபூதிகளின் மத்தியத்தில்.

இதற்குமேல் திவ்யாத்ம ஸ்வரூபம் மங்களங்களுக்கே ஆஸ்பதமென்பதைக்கூறுகிறார்—ஸமஸ்த என்று. 'ஸமஸ்தகல்யாணகுணாத்மக:' என்பதினால் கல்யாணகுணவத்த்வம் சொல்லப்படுகிறதேயானால் ஆத்மசப்தம் ஸ்வபாவவாசியாக ஆகும. இவ்வண்ணம் சுருக்கப்பட்டிருக்கிற அர்த்தததிற்கு 'தேஜோபலைச்வர்ய' இது முதலியதால் விஸ்தாரம் செய்யப்படுகிறதென்று நிர்வாஹம. இந்த நிர்வாஹத்தாலும் திவ்யாத்ம ஸ்வரூபபரத்வம் யுக்தம்; அபேக்ஷிக்கப்பட்டிருப்பதை விதியாமல் அபேக்ஷிக்கப்படாமலிருப்பதை விதிப்பது துர்பலம் என்கிற நியாயத்தால். அப்பொழுது கல்யாண சப்தம் பாவப்ரதாநம்; ஸமஸ்த கல்யாணத்வம் குண: ஸ்வபாவ: யஸ்யஸ: ஸமஸ்தகல்யாண குண: 'த்வ்யேகயோர்த் விவசநை கவசநே' என்கிற ஸூத்திரத்தில்போல். அந்த ஸூத்திரத்திலிருக்கிற 'த்வ்யேகயோ:' என்கிற பதம் த்வித்வஏகத்வபரமாக வ்யாக்கியாநம் செய்யப்பட்டிருக்கிறது. அப்படி இல்லாவிட்டால் 'த்வ்யேகேஷு' என்று சொல்லத்தக்கதே ஒழிய 'த்வ்யேகயோ:' என்று சொல்லக்கூடாது. அந்த த்விவசநவிபக்தி நிர்தேசமானது பாவப்ரதாந நிர்தேசத்திற்கு ஸாதுத்வத்தைத் தெரிவிப்பதற்காகச் செய்

யப்பட்டிருக்கிறது. அதனாலேயே “ குணேஸ்ஸம்யஜ்ஞாநப்ரஸ்ருதய: ” என்று அபியுக்தர்களால் சொல்லப்பட்டிருக்கிறது. ஸமஸ்த கல்யாண குணா: ஆத்மா தர்மிஸ்வரூபம் யஸ்ய ஸ: ஸமஸ்தகல்யாணகுணாத்மக: - ‘ சிலாபுத்ரகஸ்ய சரீரம் ’ என்கிற நிர்தேசம்போல பஹுவ்ரீஹியானது ஔபசாரிகம். திவ்யாத்மஸ்வரூபத்தை ஸ்துதிக்கிறார் — ஸ்வசக்தி என்று தன்னுடைய அம்சலேசத்தால் தரிக்கப்பட்ட பூதஸாகத்துடன் கூடியவர். அன்றிக்கே; சக்தி: - ஸாமர்த்தியம், தன்னுடைய குணங்களின் லவத்தினால் தரிக்கப்பட்ட பூதஜாதத்துடன் கூடியவர் என்று அர்த்தம். பூதஸர்க - பூதஸம்ஹார. அன்றிக்கே ஸ்ருஜ்யதே உண்டுபண்ணப்படுகிறது என்று ஸர்கம் - கார்யவஸ்துஜாதமென்று அர்த்தம்; அபிப்ராயவிசேஷத்தால் ஷாட்குண்யத்தை பிந்தி உரைக்கப்போகிறவராக முதலில் திவ்யவிக்ரஹத்தைக்கூறுகிறார் — இஷ்டரூப என்று. அபிமததவம் - அபிமதிக்குத்தக்கதாக இருக்கல். ஸாநுரூபதவமென்று அர்த்தம். அர்ஹார்த்தத்தில் * நிஷ்டை - உதாஹரணம் - ‘ அத்ருஷ்டோ த்ரஷ்டா, அச்ருத: ச்ரோதா ’ என்று. அந்த இடத்தில் தப்ரத்யயமானது அர்ஹார்த்தத்தில் வந்திருக்கிறது. ‘ அத்ரேச்யம் அக்ராஹ்யம் ’ இது முதலியதோடு அர்த்தைக்யமிருப்பதால். உலகத்தில் அபிமதவஸ்துவுக்கு அநநுரூபத்வமும் அநநுரூபவஸ்துவுக்கு அநபிமதத்வமும் காணப்படுகிறது. அதை விலக்குவதற்காக இச்சாக்ருஹீதாபிஸ்மத சப்தங்கள். உபபதமில்லாத இச்சாசப்தமானது நித்யேச்சைக்கும் அவதாரஸமயத்திலுண்டாகிற இசசைக்கும் பொதுவானது; ஸங்கோசமில்லாமையால். பிறகு அவதாரத்தின் வாயிலாக ஸாதிக்கத்தக்க விக்ரஹப்ரயோஜநத்தைக் கூறுகிறார் — ஸம்ஸாதித என்று.

அதற்குமேல் ஷாட்குண்யத்தைச்சொல்லுகிறார் — தேஜ: என்று. இந்த இடத்தில் க்ரமவிவக்ஷை இல்லை. மஹாசப்தம் ஸூசப்தம இரண்டும் எல்லா குணங்களுக்கும் ஸாதாரணங்கள். மஹத்த்வம் - அபரிச்சின்னத்வம்-உதாஹரணம் - ‘ மஹோத்ஸாஹோமஹாபல:, மஹாபுத்திர் மஹாவீர்யோ மஹாசக்திர் மஹாத்யுதி: ’ என்று ‘ ப்ரக்ருஷ்டம் விஜ்ஞாநம்பலமதுலம் ’ இது முதலியதும். ஸூசப்தத்தால் அவைகளுக்கு மங்களத்வம் சொல்லப்படுகிறது. இவ்வாறாக ஸ்வரூபத்தாலும் விக்ரஹத்தாலும் குணங்களாலும் மேன்மைபெற்றவனென்று சொல்லுகிறார் — பர: என்று. ‘குணேஷுதோஷாந்’ என்கிற பதத்திலுள்ள தோஷசப்தார்த்தத்தை விவரிக்கிறார் — நயந்த்ர என்று. க்லேசாதய: - க்லேசகர்மவிபாகாசயங்கள், அவித்யை, அஸ்மிதை, ராகம், த்வேஷம், க்லேசம் இவைகள் க்லேசங்கள். கர்ம - புண்யாபுண்ய ஸ்வரூபமாக இருப்பது. ஜாதி ஆயுஸ் போகங்கள் விபாகங்கள், ஆசய:, வாஸனை ஸம்ஸ்காரம் - “க்லேசகர்மவிபாகாசயைரபராம்ருஷ்ட: புருஷவிசேஷ ஈச்வர: ” என்கிற யோகஸூத்ரத்தை ஸ்மரிக்கச்செய்கிறார் — ஸ ஈச்வர: என்று. யோகசாஸ்திரத்தைக்காட்டிலும் வேதாந்தார்த்தத்திற்கு வைஷம்யத்தைக்கூறுகிறார் — வ்யஷ்டி என்று. முந்திபேதச்ருதியின் அர்த்தம் உரைக்கப்பட்டது. அதற்குமேல் ஐக்யச்ருதியின நிர்வாஹத்தின்பொருட்டு கடகச்ருதியின் அர்த்தம் உரைக்கப்படுகிறது. ‘ வ்யஷ்டி ” என்று. வ்யஷ்டிஸமஷ்டி சப்தங்களால் கார்யகாரணபாவாவஸ்தைகளுள்ள சேதநவர்கம சொல்லப்படுகிறது. ரூபம் - சரீரம், ஸ்வரூபம் ஸ்வாஸாதாரணம் சரீரம், சரீரிலக்ஷணத்தை ஸூசிப்பிக்கிறார் — ஸர்வேச்வர: என்று. ஈச்வர:-நியந்தா, இதனால் நியாம்யத்வம் சரீரத்வமென்பது ஸித்தித்தது. நியாம்யவிசேஷமன்றோ சரீரம். ஸர்வத்ருக் - ஸர்வத்தையும் அறிந்தவன், ஸ்வரூபத்தாலும் ப்ரகாரத்தா

* நிஷ்டா — என்று தப்ரத்யயத்திற்குப்பெயர் - “ க்தக்தவதூநிஷ்டா ” என்று பாணினி ஸூத்ரம்.

னும் எல்லாவற்றையும் அறிகிறானென்று அர்த்தம், அன்றிக்கே “விச்வதஶ்சக்ஷு:” இது முதலிய ச்ருதி ப்ரக்ரியையினால் நாற்புரங்களிலும் கண்களுள்ளவனாக இருந்துகொண்டு எல்லாவற்றையும் அறிகிறான் என்று அர்த்தம். அன்றிக்கே; எல்லோருக்கும் கண்- எல்லாவற்றையுமறிந்தவனும்-“சக்ஷுர்தேவாநாமுதமர்த்யாநாம்” மென்று ச்ருதி இருப்பதினால். சக்ஷு:-ஜ்ஞானத்தைக்கொடுப்பவன்-அல்லது எல்லாவற்றையும் அடைகிறானென்பதினால் ஸர்வவேத்தா. அவாப்தஸமஸ்தகாமன் என்று அர்த்தம். ஸமஸ்தசக்தி:, சக்தி: கார்யோபயோகியான அப்ருதக்ஸித்த (ஒருபொழுதும் தனித்திராத) விசேஷணம். மேல் சொல்லப்பட்ட ப்ரகாரமாக எல்லாவற்றையும் சரீரமாகக்கொண்டிருப்பதால் இவனுக்கு எல்லாம் அப்ருதக்ஸித்த விசேஷணமென்று பொருள். “பரமேச்வராக்ய:” என்கிற இடத்தில் பரமசப்தத்தால் இவனுக்குமேல்பட்ட ஈச்வரன் ஒருவன் இருக்கிறான் என்பது நிஷேதிக்கப்பட்டது. பர:மா அஸ்ய என்கிற வ்யுத்பத்தியினாலன்றோ பரமசப்தம் நிஷ்பன்னமாகிறது.

இப்படிப்பட்ட ஈச்வர விஷயஜ்ஞானத்திற்கே மோக்ஷோபாய வேதாந்தத்வத்தைக் கூறுகிறார்—ஸஜ்ஞாயதே என்று. ஸம்ஜ்ஞாயதே என்கிற பாடத்தில் ‘அஸ்ததோஷம்’ இது முதலியது ப்ரஹ்மத்துக்கு விசேஷணம். யேந எந்த சாஸ்த்ரஜந்யஜ்ஞானத்தால், விஜ்ஞாயதே அறியப்படுகிறதோ, யேந எந்த உபாஸநாத்மக ஜ்ஞானத்தால் நன்கு காணப்படுகிறதோ, யேந எந்த பரபக்தி ரூபமாகவும் அநுபவரூபமாகவுமிருக்கிற ஜ்ஞானத்தால் அடையப்படுகிறதோ அநுபவிக்கப்படுகிறதோ என்று அர்த்தம். “பக்த்யாத்வநந்யயா சக்ய: அஹமேவம்விதோऽர்ஜுந (- ஜ்ஞாதும் த்ரஷ்டுஞ்ச தத்வேந ப்ரவேஷ்டுஞ்ச பரந்தப’ (சத்துருக்களைத்தபிக்கச்செய்கிற அர்ஜுந! இப்படிப்பட்ட நான் என்னைத்தவிர்த்து மற்றொன்றையும் விஷயீகரிக்காமலிருக்கிற பக்தியினால் அறிவதற்கும் பார்ப்பதற்கும் அடைவதற்கும் சக்யன்) என்று வசநமிருப்பதால். ஸஜ்ஞாயதே என்கிற பாடத்தில் அஸ்ததோஷம் இது முதலியது ப்ரஹ்மஜ்ஞானவிசேஷணம். ‘அர்த்தேநைவவிசேஷோஹி நிராகாரதியாம்’ (ஆகாரமில்லாத புத்திகளுக்கு அர்த்தத்தினாலேயே விசேஷமன்றோ) வசநத்தினால் ஜ்ஞானத்திற்கு அஸ்ததோஷத்வம் முதலியது விஷயத்தின் வாயிலாக. அஸ்ததோஷம் என்பதினால் தோஷாஸ்பதமான அசித்விஷயஜ்ஞானத்தினின்று வ்யாவ்ருத்தி ஸித்தித்தது. பரம்நிர்மலம் இதனால் ஒரு ஸமயத்தில் கர்மஸம்பந்தார்ஹதாரூபமான மலத்தோடுகூடின முக்தவிஷய ஜ்ஞானத்தினின்று வ்யாவ்ருத்தி ஏற்படுகிறது. ‘ஏகரூபம்’ என்பதனால் நித்யமுக்த விஷயானேகரூபஜ்ஞானத்தினின்று வ்யாவ்ருத்தி ஏற்படுகிறது. இம்மாதிரியாக ப்ரஹ்மவிசேஷணத்வ பக்ஷத்திலும் வ்யாவ்ருத்தி காணத்தக்கது. ப்ரஹ்மத்திற்கு விசேஷணமென்று சொல்லும்பக்ஷத்தில் ஏகரூபம் என்பது ஆச்ரயிக்க தன்மைக்கு உபயுக்தமான விசேஷணமாகவுமாகிறது. ஸ்திரஸ்வபாவம் - ஆச்ரிதர்களின் ஸம்ரக்ஷணம் முதலியதை விஷயமாகக்கொண்ட ப்ரதிஜ்ஞையில் மிக்க தார்ட்யமுள்ளவனென்று அர்த்தம். அஜ்ஞானம் மோக்ஷோபயோகியான ஜ்ஞானத்தைக்காட்டிலும் வேறானது. அல்லது அதற்கு விரோதி - ‘ஸாவித்யா யா விமுக்தயே’ (எது முக்தியின்பொருட்டு ஸாதனமாக இருக்கிறதோ அதுதான் வித்யை) என்று வசநமிருப்பதால். அன்றிக்கே, அஜ்ஞானம் ஜ்ஞானாபாவம் - ப்ரஹ்ம பர்யந்தத்வமில்லாமையால் உள்ளது உள்ளபடி வஸ்துக்களை விஷயீகரியாமலிருப்பதுபற்றி. ப்ரஹ்மவிசேஷணத்வபக்ஷத்தில் ஒரு வாக்யம். ஜ்ஞானத்திற்கு விசேஷணமாகில் இரண்டு வாக்யங்கள். ப்ரத்யஸ்தமிதம் இது முதலிய ச்லோகத்தில் ப்ரத்யஸ்தமிதபேதம் என்கிற பதத்தை உள்ளத்தில் வைத்துக்கொண்டு ஸவிசேஷம் ப்ரஹ்ம என்கிற விஷயத்தில் வசநங்கள் காண்பிக்கப்பட்டன.

𑌶𑍁𑌦𑍍𑌧𑍇 𑌮𑌹𑌾𑌵𑌿𑌭𑍂𑌤𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑍇 𑌪𑌰𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌿 𑌶𑌬𑍍𑌦𑍍𑌯𑌤𑍇 । 𑌮𑍈𑌤𑍍𑌰𑍇𑌯 𑌭𑌗𑌵𑌚𑍍𑌛𑌬𑍍𑌦𑌃 𑌸𑌰𑍍𑌵𑌕𑌾𑌰𑌣𑌕𑌾𑌰𑌣𑍇 ॥ 𑌸𑌂𑌭𑌰𑍍𑌤𑍇𑌤𑌿 𑌤𑌥𑌾 𑌭𑌰𑍍𑌤𑌾 𑌭𑌕𑌾𑌰𑍋𑌽𑌰𑍍𑌥𑌦𑍍𑌵𑌯𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌃 । 𑌨𑍇𑌤𑌾 𑌗𑌮𑌯𑌿𑌤𑌾 𑌸𑍍𑌰𑌷𑍍𑌟𑌾 𑌗𑌕𑌾𑌰𑌾𑌰𑍍𑌥𑌸𑍍𑌤𑌥𑌾 𑌮𑍁𑌨𑍇 ॥ 𑌐𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌸𑍍𑌯 𑌸𑌮𑌗𑍍𑌰𑌸𑍍𑌯 𑌵𑍀𑌰𑍍𑌯𑌸𑍍𑌯 𑌯𑌶𑌸𑌃 𑌶𑍍𑌰𑌿𑌯𑌃 । 𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑍈𑌰𑌾𑌗𑍍𑌯𑌯𑍋𑌶𑍍𑌚𑍈𑌵 𑌷𑌣𑍍𑌣𑌾𑌂 𑌭𑌗 𑌇𑌤𑍀𑌰𑌣𑌾 ॥ 𑌵𑌸𑌨𑍍𑌤𑌿 𑌤𑌤𑍍𑌰 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌭𑍂𑌤𑌾𑌤𑍍𑌮𑌨𑍍𑌯𑌖𑌿𑌲𑌾𑌤𑍍𑌮𑌨𑌿 । 𑌸 𑌚 𑌭𑍂𑌤𑍇𑌷𑍍𑌵𑌶𑍇𑌷𑍇𑌷𑍁 𑌵𑌕𑌾𑌰𑌾𑌰𑍍𑌥𑌸𑍍𑌤𑌤𑍋𑌽𑌵𑍍𑌯𑌯𑌃 ॥" (வி-பு-௬-௫-௭௫) "𑌜𑍍𑌞𑌾𑌨𑌶𑌕𑍍𑌤𑌿𑌬𑌲𑍈𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌵𑍀𑌰𑍍𑌯𑌤𑍇𑌜𑌾𑌂𑌸𑍍𑌯𑌶𑍇𑌷𑌤𑌃 । 𑌭𑌗𑌵𑌚𑍍𑌛𑌬𑍍𑌦𑌵𑌾𑌚𑍍𑌯𑌾𑌨𑌿 𑌵𑌿𑌨𑌾 𑌹𑍇𑌯𑍈𑌰𑍍𑌗𑍁𑌣𑌾𑌦𑌿𑌭𑌿𑌃 ॥" (வி-பு-௬-௫-௭௯) "𑌏𑌵𑌮𑍇𑌵 𑌮𑌹𑌾𑌶𑌬𑍍𑌦𑍋 𑌮𑍈𑌤𑍍𑌰𑍇𑌯 𑌭𑌗𑌵𑌾𑌨𑌿𑌤𑌿 । 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌭𑍂𑌤𑌸𑍍𑌯 𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑌸𑍍𑌯 𑌨𑌾𑌨𑍍𑌯𑌗𑌃 । 𑌤𑌤𑍍𑌰 𑌪𑍂𑌜𑍍𑌯𑌪𑌦𑌾𑌰𑍍𑌥𑍋𑌕𑍍𑌤𑌿𑌪𑌰𑌿𑌭𑌾𑌷𑌾𑌸𑌮𑌨𑍍𑌵𑌿𑌤𑌃 । 𑌶𑌬𑍍𑌦𑍋𑌽𑌯𑌂 𑌨𑍋𑌪𑌚𑌾𑌰𑍇𑌣 𑌤𑍍𑌵𑌨𑍍𑌯𑌤𑍍𑌰 𑌹𑍍𑌯𑍁𑌪𑌚𑌾𑌰𑌤𑌃 ॥" (வி-பு-௬-௫-௭௬,௭௭)

ஸ்ரீபாஷ்யம்.—

"ஹே மைத்ரேய! சுத்தனாகவே இருப்பவனும் உபயவிபூதிநாதனென்று பெயருள்ளவனும் ஸர்வகாரணங்களுக்கும் காரணமாக இருப்பவனும் பரப்ரஹ்மமென்று சொல்லப்படுகிறவனுமான பரமாத்மாவினிடத்தில் பகவத் சப்தம் யோகரூடமாக இருக்கிறது. பகாரமானது ப்ரக்ருதிபுருஷகாலங்களை கார்யோத்பத்தி யோக்யங்களாகச்செய்கிறான், அப்படியே ஸ்வாமியாகவுமிருக்கிறான் என்கிற இரண்டு அர்த்தங்களோடு கூடியதாக இருக்கிறது. சிஷ்யே! அவ்வாறாகவே ஸ்திதிகர்த்தா, ஸம்ஹாரகர்த்தா, ஸ்ருஷ்டிகர்த்தா இந்த மூன்றும் ககாரத்தின் அர்த்தம். ஸமக்ரமான ஐச்வர்யம், வீர்யம், கீர்த்தி, ச்ரீ, ஜ்ஞாநம், வைராக்யம், இந்த ஆறுக்கும் பகம் என்று பெயர். பூதங்களுக்கு ஆத்மாவாக இருப்பவனும் எல்லாவற்றையும் சரீரமாகக்கொண்டவனுமான அந்த பரமாத்மாவினிடத்தில் சேதநங்களும் அசேதநங்களும் வஸிக்கின்றன. அவனும் எல்லா வஸ்துக்களிடத்திலும் வஸிக்கிறான், என்பதினால் குறைவற்றவனான பரமாத்மா வகாரத்தால் உணர்த்தப்படுகிறான். ஹேயகுணங்களின் ஸம்பந்தமில்லாத ஜ்ஞாநம், சக்தி, பலம், ஐச்வர்யம், வீர்யம், தேஜஸ், இவைகளனைத்தும் பகவத் சப்தத்திற்கு வாச்யங்கள்,

ஹே மைத்ரேய! இவ்வித ஸ்வபாவமுள்ள பகவானென்கிற இந்த மஹா சப்தமானது பரப்ரஹ்மமாக இருக்கிற வாஸுதேவனைத்தவிர்த்து வேறு ஒரு தேவதையையும் அணுகாது. பூஜ்யங்களான அவயவார்த்தங்களின் சக்தி, ரூடி, இவைகளோடுகூடிய இந்த சப்தமானது அந்த ப்ரஹ்மத்தினிடத்தில் முக்கியமாக வழங்கப்படுகிறதே ஒழிய ஔபசாரிகமல்ல. அந்த ப்ரஹ்மத்தைத்தவிர்த்த மற்றவர்கள் பக்கலில் உபசாரத்தாலன்றோ ப்ரயோகிக்கப் படுகிறது.

ச்ருதப்ரகாசிகை—

இதற்குமேல் 'அகோசரம்வசஸாம்' என்பதை வ்யாக்யாநம்செய்ய விருப்பத்தினால் சப்தகோசரனென்பதில் வசநங்களைக்காண்பிக்கிறார்—சுத்தே இது முதலியதால். ஆங்கு 'அசப்தகோசரஸ்ய' இதுமுதலிய முந்தின ச்லோகத்தில் பகவத் சப்தம் முக்தாத்மாவினிடத்தில் ஔபசாரிகம் என்று உரைக்கப்பட்டது. அது எங்ஙனமென்று வினவுகின் முக்தாத்மாக்களை வ்யாவர்த்திக்கிற பகவத்சப்த ப்ரவ்ருத்தி நிமித்தத்தைக்கூறுகிறார்—சுத்தே என்று. எந்த இடத்தில் ப்ரவ்ருத்திநிமித்த பௌஷ்கல்யமோ, அவ்விடத்திலேயேயன்றோ முக்யத்வம், வேறு இடத்திலில்லை என்று கருத்து. சுத்தே - 'ஸித்தே சப்தார்த்த ஸம்பந்தே' என்கிற இடத்தில் ஸித்தசப்தம்போல சுத்த சப்தம் அவதாரணத்தை தனக்குள் அடக்கிக்கொண்டிருக்கிறது. சுத்தனே - நித்ய சுத்தன் என்று அர்த்தம். அப்பக்ஷ:, வாயுபக்ஷ:, (ஜலத்தையே குடிப்பவன் - காற்றையே சாப்பிடுகிறவன்) என்பதுபோல. ஸித்த சப்தம் அவதாரணத்தை உள்ளே அடக்கிக்கொண்டிருப்பதால், ஸித்தசப்தமானது நித்யபரமாகவன்றோ வ்யாக்கியாநிக்கப்பட்டிருக்கிறது. அப்படிப்போல இந்த நித்யசுத்தத்வத்தால் ஸகலசேதந வ்யாவ்ருத்தி ஏற்பட்டது. நித்யஸித்தர்களுக்குங்கூட நித்யசுத்தத்வமானது பகவானுடைய நித்யேச்சாதீநமாக இருப்பதால். மஹாவிபூத்யாக்யே - விபூதியாக இருப்பதற்கு மஹாவிபூதித்வம் பொருந்தாததலால் உபயவிபூதிசேஷித்வம் ஸமஸ்தசேதந வ்யாவர்தகம். 'பரே ப்ரஹ்மணி' என்றதனால் சேதந வ்யாவ்ருத்தி ஸித்தித்தது. கீழ்பட்டதாக இருக்கிற ஆத்மா தனித்த ப்ரஹ்ம சப்தத்தால் சொல்லப்பட்டது. 'அசப்தகோசரஸ்யாபி தஸ்யவை ப்ரஹ்மணோ த்விஜ' (ப்ராஹ்மணனே! சப்தங்களுக்குக் கோசரமாக இராமலிருந்தாலும் அந்த ப்ரஹ்மத்திற்கே) என்று. மேலேயும் 'பரப்ரஹ்மபூதஸ்ய' என்றல்லவோ பரமாத்மாவைச் சொல்லப்போகிறார். வேறு இடத்திலும் பரப்ரஹ்ம சப்தமானது பரமாத்ம பரமாகவே காணப்படுகிறது. ஆதலால் அபரமான ஆத்மாக்களை வ்யாவர்த்திப்பதற்காக "மஹாவிபூத்யாக்யே, பரேப்ரஹ்மணி" என்று உரைக்கப்பட்டது. ஸர்வகாரணகாரணத்வமும் பகவானுக்கே. ஜகத்வ்யாபாரத்தால் விடுபட்டவனன்றோ முக்தாத்மா இவ்வண்ணமாக உரைக்கப்பட்ட ப்ரவ்ருத்திநிமித்த பௌஷ்கல்யத்தால் ஸர்வேச்வரனிடத்திலேயே பகவத் சப்தம் முக்கியவ்ருத்தியுள்ளது, வேறு இடத்திலில்லை என்ற அர்த்தம். இந்த அர்த்தத்தை விவரணம்செய்துகொண்டு அக்ஷரம் அக்ஷரமாகவும் ஸமுதாயம் ஸமுதாயமாகவும் பகவத் சப்தார்த்தத்தைச் சொல்லுகிறார்—ஸம்பர்த்தா இது முதலியதால். சுத்தத்வமானது 'விகாஹேயை:' என்பதனால் விவரிக்கப்பட்டது. போக்யஸம்பத்வாசகமான 'ஐச்வர்யஸ்ய' என்கிற சுலோகத்திலிருக்கிற ஸ்ரீ சப்தத்தால் போகவிபூதியும், ஸம்பரணம் முதலியதின் உக்தியினால் லீலாவிபூதியும், காண்பிக்கப்பட்டதினால் மஹா

விபூதித்வம் விவரிக்கப்பட்டது. ஸர்வகாரண காரணத்வமும் மேலே ஸ்பஷ்டம். அதனாலும் ஜ்ஞானசக்தி முதலியவைகளாலும் நிரதிசய ப்ருஹத்த்வமிருப்பதால் பரப்ருஹ்மத்வம் நன்கு ப்ரகாசிக்கிறது. இதற்குமேலிருக்கிற க்ரந்தங்களுக்கு 'ஸம்பே' இது முதலிய ச்லோகங்களின் விவரண ரூபத்வம் யுக்தம். 'ஹம்ஸ ப்ரம்ச வம்ச' என்று பிரித்துப் பொருள் உரைக்கப்படுகிறது. இந்த பதங்களுக்கு அந்தந்த தாதுக்களில் 'அந்யேஷ்வபி த்ருச்யதே" என்கிற ஸூத்ரத்தினால் ப்ரத்யயமும், டிலோபமும் செய்யப்பட்ட பிறகு இவ்விதம் ரூபம் ஏற்படுகிறது என்று. ஹகாரத்தின அர்த்தத்தைச்சொல்லுகிறார்-ஸம் என்கிற ச்லோகத்தினது ஓர் பாதியினால். ஸம்பர்தா-ஸம்பரணம் - உபகரணங்களின் ஸம்விதானம் ப்ரக்ருதிபுருஷகாலங்களை கார்யோத்பத்தியோக்யங்களாகச் செய்கிறார் என்று அர்த்தம். அண்டரூபகார்யோத்பத்திக்கு உபயுக்தையான மஹதாதிகளின் ஸ்ருஷ்டியானது ஸம்பரணமென்றுவது விவக்ஷிக்கப்பட்டிருக்கிறது. பர்தா ஸ்வாமீ - தாரணம் வகாரவாச்யமாதலாலும் போஷகத்வமானது பகாரவாச்யமான நேத்ருத்வத்தில் உள்ளடங்கி இருப்பதாலும் அபேக்ஷிக்கப்பட்டிருப்பதை விடுப்பதைவிட அபேக்ஷிக்கப்பட்டிராததை விடுப்பது லகுவானதாலும், ஸ்வாமித்வமிங்கு விவக்ஷிக்கப்பட்டிருக்கிறது. என்றாலும் ப்ரத்யயவிசேஷத்தோடு சேர்ந்திருக்கிற தாதுவுக்கு ஸ்வாமியிடத்தில் ரூடி. அப்படியிருந்தபோதிலும் முற்கூறப்பட்டுள்ள யுக்தியுடன் கூடின ¶ ஆர்ஷ வசன பலத்தால் தாதுமாத்திரத்திற்கு ஸ்வாமிவாசித்வம் நிச்சயிக்கப்படுகிறது. இதி சப்தத்தைச்சேர்த்ததினால் ஸமபர்த்ருத்வம் ப்ரத்ருத்வம் இரண்டும் ப்ரவ்ருத்தி நிமித்தங்களாக நிச்சயித்துக் கூறப்படுகின்றன. அதனாலேயே 'ஆத்தத்வயாந்வித:' என்று சொல்லப்பட்டது. மேலேயோவென்றால் மூன்று ப்ரவ்ருத்தி நிமித்தங்கள் இருந்தபோதிலுங்கூட இதிகரணத்தினால் அவைகள் நிஷ்க்ருஷ்டங்களல்லாததால் மூன்று ப்ரவ்ருத்தி நிமித்தங்களோடுசேர்ந்த இந்த ஒரே அர்த்தம் கூறப்பட்டது. பகாரார்த்தத்தைச்சொல்லுகிறார்—நேதா என்று. @ உபஸர்கத்தினால் ஸ்புடமாக்கப்பட்ட அர்த்தங்கள் தாதுக்களில் உள்ளடங்கியிருப்பதால் 'உத்கமயிதா, கமயிதா, ஸங்கமயிதா' என்கிற இவ்வித ரூபமுள்ள பதங்களுடைய அர்த்தத்தைச் சொல்லுகிறார்—நேதா என்று 'ஸ்ரஷ்டா' என்பதினால் உத்கமயித்ரு சப்தத்தின் அர்த்தம் உரைக்கப்பட்டது. நேதா என்பதனால் கமயித்ரு சப்தத்தின் அர்த்தம் உரைக்கப்பட்டது. 'ஸ்திதிகர்தா' என்று அர்த்தம். கமயித்ருசப்தத்தால் ஸங்கமயித்ரு சப்தார்த்தம் கூறப்பட்டது. அது ஸம்ஹாரம். உதாஹரணம் 'யஸ்மிந்நிதம் ஸஞ்சவிசேதிஸர்வம' (எந்த பரமாத்மாவினிடத்தில் இந்த ப்ரபஞ்சம் அனைத்தும் உண்டாகிறதோ லயமடைகிறதோ) என்கிற ச்ருதியில் 'வ்யேதிஸமேதி' என்கிற பதங்களால் ஸ்ருஷ்டியும் ஸம்ஹாரமும் கூறப்படுகின்றன; அப்படிப்போல். அன்றிக்கே காரணபூதமான ஸவஸ்வரூபத்தை அடையச்செய்கிறவர். தன்னிடத்தில் கார்யவர்க்கங்களுக்கு லயத்தை உண்டு பண்ணுகிறவர் என்று அர்த்தம். உபஸர்க்கங்களின் ப்ரயோகமில்லாவிடினும் அர்த்தங்கள் தாதுவில் ஒடுங்கி இருப்பதால் இவ்வண்ணம் பராசர பகவானால் வியாக்கியானிக்கப்பட்டது.

அதற்குமேல் வகாரவ்யாக்கியானத்திற்கு முந்தியே ஹகார பகார ஸமுதாயத்தின் பொருளை உரைக்கிறார்—ஐச்வர்யஸ்ய என்று. ஸமக்ரசப்தம் எல்லாவிடத்தி

¶ ஆர்ஷம்—ரிஷியின் வசனம், அல்லது வேதவாக்கு.

@ உபஸர்கம்—தாதுக்களுக்கு முந்தி ப்ரயோகிக்கப்படும் 'ப்ர' முதலிய நிபாதங்கள்.

னும் அந்வயிக்கிறது. பரிச்சின்னனான நான்முகனைக்காட்டிலும் ஐச்வர்யத்தினால் வ்யாவ்ருத்தியின் பொருட்டு ஸமக்ரசப்தம் யச: - ஞானசாலி என்று உலகத்திலுண்டாகும் ப்ரஸித்தி, ஸ்ரீ: - போக்யமான ஸம்பத்து, வைராக்யம் - விரக்தி, பரிபூர்ணனாக இருப்பதால் ஒன்றிலும் ஆதரமில்லாமல் இருத்தல் என்று அர்த்தம். அவாகீ, அநாதர:, என்பது எப்படியோ - மதுப்ப்ரத்யயமானது ப்ரஸித்தார்த்தமுள்ளதாதலால் அது வ்யாக்கியானிக்கப்படவில்லை. பிறகு வகாரார்த்தத்தைக்கூறுகிறார்—வஸந்தி என்று. 'அந்யேஷ்வபித்ருச்யதே' என்று ட்ப்ரத்யயத்திற்கு அநேகார்த்தங்களிருப்பதால் அதிகரணத்திலும் கரணத்திலும் வ்யுத்பத்தி. பூதாத்மநி-பூதங்களுக்கு ஆத்மாவாக இருப்பவர். அகிலாத்மநி-எல்லா வஸ்துக்களையும் சரீரமாகக்கொண்டவர். அன்றியும், பூதசப்தத்தால் கார்யம் சொல்லப்படுகிறது. அதற்கு ஆத்மாவாக இருப்பவர். அகிலாத்மநி கார்யத்தில் அந்தர்பூதர்களாக இராத நித்யமுக்தர்களுக்கும் ஆத்மாவாக இருப்பவர் என்று அர்த்தம். இதற்குமேல் ஸமுதாயசக்தி விஷயமான அர்த்தத்தைக்கூறுகிறார் — ஜ்ஞாநசக்தி என்று. பாடக்ரமத்திலோவென்றால் 'ஏவமேஷ:' இதுமுதலிய இரண்டு ச்லோகங்களுக்குப்பிறகு 'ஜ்ஞாநசக்திபலைச்வர்ய' இதுமுதலிய ச்லோகம் படிக்கப்படுகிறது; ஆயினும் ப்ரவ்ருத்திநிமித்தவாசித்வ ரூபமான ஸங்கதிவசத்தால் 'ஏவமேஷ:' இதுமுதலிய இரண்டு ச்லோகங்களுக்குமுந்தி 'ஜ்ஞாநசக்தி' இதுமுதலிய ச்லோகம் இங்கு எடுக்கப்பட்டது. 'உத்பத்திம் ப்ரளயஞ்சைவ' இதை முதன்மையாகக்கொண்ட ச்லோகம் ப்ரக்ருதத்திற்கு அநுபயுக்தமாதலாலும் இவ்வாறு உபாதானம் செய்யப்பட்டது. பகவச்சப்தவாச்யாநி - ப்ரவ்ருத்தி நிமித்தமாகச் சொல்லத்தக்கவைகளென்று அர்த்தம். அசேஷத: - தனித்துத்தனித்தல்ல, பின்னையோ எல்லாம் ஒன்றுசேர்ந்து என்று அர்த்தம். அசேஷ சப்தத்தால் ஷாட்குண்யத்தின் அவாந்தரபேதரூபமாக இருக்கிற சீலம் முதலிய குணஜாதமும் க்ரோடீகரிக்கப்பட்டது ஆனால் ஐச்வர்யவீர்ய ஜ்ஞாநங்கள் முன்பு ஸ்பஷ்டமாக சொல்லப்பட்டிருக்கின்றன. அப்படியிருந்தபோதிலும் சில ‡ஸமுதாயியினுடைய ஆவாபோத்வாபங்களால் ஏற்படுத்தப்பட்ட †ஸமுதாயபேதத்தால் சொன்னத்தை மறுபடியும் சொல்லுதல் என்கிற தோஷமில்லை. எதனால் சொல்லப்படாமலிருக்கிற குணஸாமாந்யகோசரத்வம் ஏற்படுமோ அப்படிப்பட்ட ஸமுதாய சக்தியானது இந்த இடத்தில் கல்பிக்கப்படுகிறதில்லை. வசநபலத்தினாலேயே சக்தியானது அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. முந்தி அக்ஷரார்த்தங்களைச்சொன்னதனால் பகார ஹகார வகாரங்கள் வ்யாக்யாநிக்கப்பட்டன. அதற்குமேல் 'அந்' என்கிற அம்சத்திற்குப்பொருள் கூறுகிறார்—விநா என்று. 'கச்யப:பச்யகோ ஹவதி' என்கிற ந்யாயத்தால் 'அந்' என்பதனால் ஈ என்று சொல்லப்பட்டதாக ஆகிறது. ஹேயம் நிஷேதிக்கத்தக்கது என்று அர்த்தம். இவ்வண்ணம் ப்ரவ்ருத்தி நிமித்த §பௌஷ்கல்யத்தினால் பகவானிடத்திலேயே முக்கிய விருத்தத்வத்தைச்சொல்லுகிறார்—ஏவம் என்று. மஹார்த்தங்களை கர்பீகரித்துக்கொண்டிருப்பதால் மஹாசப்தத்வம். முக்தாத்மாக்களை வ்யாவ்ருத்திப்பதின்பொருட்டு பரமப்ரஹ்ம என்று கூறப்பட்டது. எங்ஙனம் அந்த பரமாத்மாவினிடமே முக்யவ்ருத்தத்வம். வேறு இடத்திலும் அதின் ப்ரயோகம் காணப்படுகிறதே என்று வினவப்படுமேயாகில் ஸமாதானம் கூறுகிறார்—தத்ர என்று. பூஜ்யங்களான அவயவார்த்தங்களின் உக்தி - பரிபாஷா - ரூடி - அவ்விரண்டுகளுடனும் கூடி

‡ ஸமுதாயி—ஒரு கூட்டத்தில் உள்ளடங்கியிருக்கிற பதார்த்தம்.

† ஸமுதாயம்—கூட்டம்.

§ பௌஷ்கல்யம்—நிறைவு.

னது. இதனாலேயே இந்த சப்தப்ரயோகம் ஔபசாரிகமல்ல, முக்கியவ்ருத்தமென்று அர்த்தம். வேறு இடத்தில் அமுக்கியத்வமென்று சொல்லுகிறார். அந்யத்ர ஹி என்று. முக்தாத்மாவினிடத்தில் ஔபசாரிகமென்று சொன்னதனால் அர்த்தாந்தர ப்ரயோகங்களில் ஔபசாரிகத்வம் அர்த்ததத்தினால் காண்பிக்கப்பட்டதாக ஆகிறதென்பதல்லவோ ஹி சப்தத்தை ப்ரயோகித்தவருடைய அபிப்ராயம். பகவத்சப்த ப்ரயோகத்திற்கு விஷயங்களான எல்லாவற்றிலும ப்ரயோகம் அந்யதாஸித்தமாவதால் சக்திபேத கல்பநம் தகுந்ததல்லவன்றோ. எவனிடத்தில் ஜ்ஞாநம முதலியவைகள் தடையற்றவைகளோ அவனே முக்யார்த்தம். குணலேச ஸம்பந்தத்தாலும் ப்ரயோகம் ஸம்பவிப்பதால் பரமாத்மாவைத் தவிர்த்து மற்ற இடங்களில் வ்ருத்தியானது ஔபசாரிகீ என்று அர்த்தம்.

“ ஸமஸ்தா: சக்தயச்சைதா ந்ருப யத்ர ப்ரதிஷ்டிதா: । தத்விச்வரூபவைரூப்யம் ரூபமந்யத்தரேர்மஹத் ॥ ஸமஸ்தசக்திரூபாணி தத்கரோதி ஜநேச்வர । தேவதிர்யங்மநுஷ்யாக்யசேஷ்டாவந்தி ஸ்வலீலயா ॥ ஜகதாமுபகாராய ந ஸா கர்மநிமித்தஜா । சேஷ்டா தஸ்யாப்ரமேயஸ்ய வ்யாபிந்யவ்யாஹதாத்மிகா ॥ ” (வி-பு-௬-௭-௭௰-௭௨) “ ஏவம்ப்ரகாரமமலம் நித்யம் வ்யாபகமக்ஷயம் । ஸமஸ்தஹேயரஹிதம் விஷ்ண்வாக்யம் பரமம் பதம் ॥ ” (வி-பு-௧-௨௨-௫௩) “ பர: பராணாம் பரம: பரமாத்மாऽऽத்மஸம்ஸ்தித: । ரூபவர்ணாதிநிர்தேசவிசேஷணவிவர்ஜித: ॥ அபக்ஷயவிநாசாப்யாம் பரிணாமர்த்திஜந்மபி: । வர்ஜித: சக்யதே வக்தும் ய: ஸதாஸ்தீதி கேவலம் ॥ ஸர்வத்ராஸௌ ஸமஸ்தம் ச வஸத்யத்ரேதி வை யத: । தத: ஸ வாஸுதேவேதி வித்வத்பி: பரிபட்யதே ॥ தத் ப்ரஹ்ம பரமம் நித்யமஜமக்ஷய்யமவ்யயம் । ஏகஸ்வரூபம் ச ஸதா ஹேயாபாவாச்ச நிர்மலம் ॥ ததேவ ஸர்வமேவைதத் வ்யக்தாவ்யக்தஸ்வரூபவத் । ததா புருஷரூபேண காலரூபேண ச ஸ்திதம் ॥ ” (வி-பு-௧-௨-௧௰-௧௪)

ஸ்ரீபாஷ்யம்—

ராஜனே! எந்த ரூபத்தினிடத்தில் இந்த சக்திகளனைத்தும் நிலை பெற்றிருக்கின்றனவோ அது எல்லா ரூபங்களைவிட விலக்ஷணமான ஸந்நிவேசத்துடன் கூடியதும் வேறானதும் இவ்விதமுள்ளதென்று அளவிட நிச்சயிக்கமுடியாததுமான ஹரியின் ரூபம். (அதாவது திவ்யமங்களவிக்ர

ஹம்) ஜநங்களுக்கு நியந்தாவாக இருப்பவனே! அந்த பரமபுருஷன் தேவன் $ திர்யக் மனுஷ்யன் என்கிற பெயர்களுடனும் ¶ சேஷ்டைகளுடனுங்கூடின ஸமஸ்தசக்தி ரூபங்களையும் லோகோபகாரத்திற்காக தன் லீலையினால் செய்கிறான். (லௌகிக) ப்ரமாணங்களால் கண்டறிவதற்கு அசக்யனாக இருக்கிற அந்த பரமாத்மாவினுடையதான தேசநியமமில்லாததும் ப்ரதிபந்தகமில்லாததுமான அந்த் சேஷ்டையானது கர்மரூபமான ஹேதுவினால் உண்டாகிறதன்று. இவ்விதமான ஸ்வபாவத்துடன் கூடினதும் விஷ்ணுவென்கிற பெயருள்ளதுமான திவ்யாத்மஸ்வரூபமானது மலத்திற்கு § ப்ரதிபடமானது-அழிவில்லாதது. ஸ்வரூபத்தால் வ்யாபகமாயிருக்கிறது. தன்படியாகவே தர்மத்தினாலும் விகாரமில்லாதது. எல்லா ஹேயங்களாலும் விடுபட்டது. எவன் காலத்தினால் சிறந்த ப்ரஹ்மாதிகளைக்காட்டிலும் சிறப்புள்ளவனோ எவனைக்காட்டிலும் காலத்தினால் மேன்மைபெற்ற வஸ்து ஒன்றுமில்லையோ, எவன் எல்லா தேசங்களையும் வ்யாபித்திருப்பவனோ; எவன் எல்லா வஸ்துக்களுக்கும் ஆத்மாவாக இருப்பதால் எல்லா வஸ்துக்களுடனும் இணையின்றியாமலிருப்பவனோ; எவன் ஜாதி, ரூபம், ரஸம், கந்தம் முதலியவைகளைச் சொல்லுகிற சப்தரூபவிசேஷத்தால் விடுபட்டவனோ; எவன் உண்டாகிறது, இருக்கிறது, பரிணமிக்கிறது, விருத்தி அடைகிறது, அவயவங்களின் குறைவை அடைகிறது, நசிக்கிறது, என்கிற ஆறு பாவவிகாரங்களற்று எப்பொழுதும் ஸத்தாச்ரயனென்று சொல்வதற்குமாத்திரம் சக்யமாக இருக்கிறானோ; யாதொரு காரணத்தினால் எல்லா இடத்திலும் இவன் வஸிக்கிறானோ; எல்லா வஸ்துக்களும் இவனிடத்தில் வஸிக்கிறதோ, அக்காரணத்தினால் அவன் வாஸுதேவன் என்று கற்றறிந்தவர்களால் எங்கும் கூறப்படுகிறான். அந்த வாஸுதேவனே நிகரில்லாததும் தனக்குமேல்பட்ட வஸ்துவில்லாததும் ஸ்வரூபத்தாலும் குணங்களாலும் எல்லையில்லாத மேன்மைவாய்ந்ததாகவுமிருக்கிற ப்ரஹ்மம். சாச்வதமாக இருப்பவன்-பிறப்பில்லாதவன்-அழிவற்றவன்-குறைவில்லாதவன் - வ்ருத்திபரிணாமங்களின்றி ஓரேவிதமான ஸ்வரூபத்துடன் கூடியவன், ஹேயகுணங்களில்லாமையால் எப்பொழுதும் நிர்மலனாக இருப்பவன், வ்யக்தாவ்யக்த ஸ்வரூபமாக இருக்கிற இந்த ப்ரபஞ்சமனைத்தும் அந்த ப்ரஹ்மமே. அவ்வாறே அந்த ப்ரஹ்மமானது புருஷரூபமாகவும் காலரூபமாகவுமிருக்கிறது.

$ திர்யக்—பசுபக்ஷி முதலியது. ¶ சேஷ்டை—செய்கை.

§ ப்ரதிபடம்—எதிரி.

ச்ருதப்ரகாசிகை—

அதற்குமேல் அதே யோகப்ரகரணத்தில் உபஸம்ஹாரமிருந்தபோதிலுங்கூட ஸவிசேஷபரவாக்யங்களைக்காண்பியாநின்றுகொண்டு திவ்யவிக்ரஹவத்வத்தையும் கூறுகிறார்—ஸமஸ்தா: என்று. பத்தன் முக்தன் கர்மரூபையான அவித்யையும் சக்திகனென்று சொல்லப்படுகின்றனன். அந்தந்த அபிமாநி தேவதைகள் வாயிலாக அவைகளுக்கு அந்த ப்ரஹ்மத்தினிடத்தில் இருப்பு 'யத்ர' என்கிற அநுவாதம் புரோவாதத்தை அபேக்ஷித்திருப்பதால் அஸ்த்ரபூஷணாத்யாயத்தில் இங்கு சொல்லப்பட்டவண்ணம் இருக்கும் புரோவாதம் இருக்கிறதென்பது கவனிக்கத்தக்கது. 'தத்விச்வரூபவைரூப்யம்' என்பதனால் ஸந்நிவேசவைலக்ஷண்யம் கூறப்பட்டது. அந்யத் என்பதனால் வேறு த்ரவ்யமென்பது கூறப்பட்டது. மஹத்என்பதனால் பரிச்சேதிக்கவொண்ணாமை ஸகலேதரவிஸஜாதீயமாயும் விலக்ஷணஸந்நிவேசத்துடனுங்கூடிய வஸ்துவுக்கு எவ்வாறு சிந்திப்பதற்குத்தகுந்ததன்மை என்றுகேட்கில் கூறுகிறார்—ஸமஸ்த என்று. யாதுகாரணத்தினால் என்று வினவப்படுமேயாகில் சொல்லுகிறார்—ஸ்வலீலயா என்று. லீலை (விளையாட்டு) ப்ரயோஜனமானதால் அந்த லீலாபிஸந்திதான் ஹேது - கர்மாவினையில்லை என்று அர்த்தம். யாது பயன் என்றுகேட்கில் கூறுகிறார்—ஜகதாம் என்று. தன் கர்மபலபோகத்தின்பொருட்டு அல்லவென்று அர்த்தம். இதை விவரிக்கிறார்— நஸ என்று. வ்யாபிநீ-தேசநியமமில்லாதது. வைதிகனுடைய புத்திரர்களின் ஆநயநம் முதலியவைகளிற்போல. வ்யாபகசக்தமாக இருந்தபோதிலும் ப்ரதிபந்தம் ஸம்பவிக்கலாமென்று சொல்லப்படுமேயாகில் சொல்லுகிறார் 'அவ்யாஹதாத்மிகா' அதற்கு ப்ரதிஹதி இல்லை என்று பொருள். அன்றிக்கே வ்யாபிநீ, எல்லா அவதாரங்களுக்கும் அநுகுணை. அவ்யாஹதா-தேசகாலவஸ்துக்களாலுண்டுபண்ணப்பட்ட ப்ரதிபந்தமில்லாதது, இவ்வண்ணம் 'ப்ர்த்யஸ்தமித' என்கிற ச்லோகத்திற்கு பரமாத்ம பரத்வம் ஒப்புக்கொள்ளப்பட்டபோதிலும் நிர்விசேஷபரத்வத்தை நிராகரிக்கவேண்டுமென்கிற விருப்பத்தால் உபக்ரமோபஸம்ஹாரங்களில் அதே ப்ரகரணத்தில் ஸவிசேஷபரத்வம் காண்பிக்கப்பட்டது. அதற்குமேல் இந்த ச்லோகத்திற்கு பரிசுத்த ஜீவாத்ம ஸ்வரூபவிஷயத்வத்தையும் ப்ரத்யஸ்தமித பேதாதிபதங்களுக்கு கதிபயவிஷயத்வத்தையும்சொல்ல எண்ணமுள்ளவராக, அதற்காக பரமாத்மவிஷய பேதநிஷேதம் முதலியவைகளுக்கு சிற்சிலவிஷயத்வத்தைச்சொல்லுகிற வாக்கியங்களைக் காண்பிக்கப்போகிறவராய்கொண்டு, பரமாத்மவிஷய கதிபயபேதநிஷேதபரவசநோதாஹரணத்தினால் முக்தாத்மவிஷயத்தில் என்ன வந்தது என்கிற சங்கையில் முக்தனுக்கு பரமாத்ம ஸாம்யப்ரதிபத்தியின்பொருட்டு முக்தகுணங்களைப் பரமாத்மாவினிடத்தில் அதிதேசிக்கிற ச்லோகத்தைக் காண்பிக்கிறார்—ஏவம் ப்ரகாரம் என்று. இந்த ச்லோகோதாஹரணத்தினால் 'ப்ரத்யஸ்தமித' இது முதலிய ச்லோகங்களுக்குப்பிறகு பூர்வபக்ஷத்தில் படிக்கப்பட்டிருக்கிற ஜ்ஞாநஸ்வரூபம் என்கிற பதத்தை முதலில்கொண்ட ப்ரதமாம்சோபக்ரம ச்லோகத்திற்கும் சது ச்லோகிக்கும் ஸவிசேஷபரத்வத்தை ப்ரதிபாதிப்பதின்பொருட்டு ப்ரதமாம்சோபஸம்ஹாரத்திலும் ஸவிசேஷபரத்வம் காண்பிக்கப்பட்டதாக ஆகிறது. உபஸம்ஹாரம் புத்திஸ்தமாக இருப்பதால் உபஸம்ஹாரவசநோபாதாநம் செய்யப்படுகிறது. இவ்விதமான ரீதியையுடைய முக்தாத்மாவைக்குறித்து 'நிர்வ்யாபாரமநாக்யேயம்' இதுமுதலியதால் எந்த ப்ரகாரம் உரைக்கப்பட்டதோ அதேதாடுகூடினவனென்று அர்த்தம். இவ்வண்ணம் பகவானிடத்

---

* அபிஸந்தி—எண்ணம்.

தில் முக்தகுணேதிதேசம் செய்யப்பட்டது. நிர்வ்யாபாரம் என்கிற பதத்தை முதன்மையாகக்கொண்ட ச்லோகத்தால் சொல்லப்பட்டிருக்கிற பேதராஹித்யம் ஸத்தாமாத்ரத்வம் வசஸாமகோசரத்வம் எனகிற முக்தகுணங்கள் பகவானிடத்திலநுதேசிக்கப்பட்டிருப்பதாலும் பகவானிடத்திலும் அந்த நிஷேதங்களுக்கு கதிபயவிஷயத்வம் ப்ராமாணிகமாதலாலும் அந்த நிஷேதங்கள் முக்தாத்மாவினிடத்திலும் அதேமாதிரியுள்ளவைகளென்பது பற்றி கதிபயவிஷயத்வம் ஸித்தமென்று கருத்து. அதற்குமேல் பரமாத்மாவுக்கு அதிக குணங்களைக்கூறுகிறார்—அமலம-மலப்ரதிபடம்-ஸோபாதிகமான ஹேயவிரோதி என்று அர்த்தம். நித்யம்-சொல்லபபட்ட ஆகாரததால் நித்யம். மலப்ரதிபடத்வம்நித்யமென்று அர்த்தம் வ்யாபகம் ஸ்வரூபத்தால் வ்யாபகம், அக்ஷயம்தானுகவேதர்மத்தால் விகாரமற்றது. முக்தனுக்கு பூர்வாவஸ்தையிலஜ்ஞான ஸங்கோசவிகாஸரூபமான விகாரமிருக்கிறது - நித்யஸித்தாகளுக்கும் அப்படிப்பட்ட தன்மை பராயத்தமாக இருப்பதினுல் அவர்களின் ||வ்யவச்சேதம் ஏற்படுகிறது. ஸமஸ்தஹேயாஹிதம்-முன்பு ஹேயப்ரத்யநீகத்வம் கூறப்பட்டது. இங்கு ஹேயகுணராஹித்யம் உரைக்கப்பட்டது-ஸ்வத: ஹேயாபாவமும் முக்தனுககு இல்லை - அது அவனுக்கு பரமாத்மாவின் ¶ப்ரஸாதாதீநமாக இருப்பதால். பத்பதே என்கிற வ்யுத்பத்தியினுல் பதசப்தம் ஏற்படுகிறது. அது திவ்யாத்மஸ்வரூபம. பரமபத சப்தத்திற்கு திவ்யலோகத்திலும் முக்தாத்மாவினிடத்திலும் ப்ரயோகமிருப்பதால் அவைகளை வ்யாவ்ருத்திப்பதின்பொருட்டு விஷ்ணவாக்யமென்று சொல்லப்பட்டது.

பிறகு ப்ரதமாம்சோபக்ரமத்திலும் ஸவிசேஷபரத்வத்தைக்காண்பிக்கிறார்—பர: பராணும் என்று. இதனுல் சாஸ்த்ரோபக்ரமத்திற்குக்கூட ஸவிசேஷபரத்வம் சொல்லப்படடதாக ஆகிறது. இதனுல் 'ப்ரத்யஸ்தமிதபேதம்' இது முதலிய பதங்களுக்கு கதிபயபேத நிஷேதபரத்வமும் ஸித்தம் என்று மூன்றுவிதமான ப்ரயோஜனங்கள். இதனுல 'பர: பராணும்' இதுமுதலிய க்ரந்தஸமுதாயமானது 'அவிகாராய' இதுமுதலியஸங்க்ரஹ ச்லோகவிவரண ரூபமாதலால் ஜ்ஞாநஸ்வரூபம் இது முதலிய ச்லோகத்தைக்குறித்து உபக்ரமத்வமானது அர்த்த க்ரமத்தால் ஸித்தமென்பதுபற்றி அதற்கும் ஸவிசேஷபரத்வம் ஸித்திக்கிறது. அன்றிக்கே ப்ரதமாம்சோபக்ரமோபஸம்ஹாரங்கள் இரண்டும் ஸவிசேஷபரமாதலால் உபக்ரமோபக்ரமபூதமாக இருந்தபோதிலும் ஜ்ஞாநஸ்வரூபம் என்கிற ச்லோகததிற்கு மஹாவாக்யஸ்வாரஸ்யவிரோதம் ந்யாய்யமல்லாததால் அதற்கும் ஸவிசேஷபரதவம் ஸித்திக்கிறது. அன்றிக்கே நமஸ்கார ச்லோகம் சாஸ்த்ர ‡உபக்ரமத்திற்கு § சேஷபூதமாக இருப்பதால் அதற்கு சேஷபூதமாக இருப்பது அதற்கு அநுகுணமான அர்த்தமுள்ளதாக வர்ணிக்கத்தக்கதென்று ஸித்திக்கிறது. உபக்ரமோபக்ரமபூதமான நமஸ்கார ச்லோகார்த்தாநுகுணமாக 'பர: பராணும்' இதுமுதலியவற்றின் அர்த்தம் வர்ணிக்கத்தக்கதென்று சொல்லப்படுமேயாகில், அப்படியல்ல. அதற்கும் உபக்ரமமாக இருக்கிற ப்ரச்நோத்தரவாலாபத்தைச் சொல்லுகிற ச்லோகாநுகுணமாக அதின் அர்த்தம் சொல்லத்தக்கதாக இருப்பதால் என்று அபிப்பிராயம். இங்கு ப்ரஹ்மத்திற்கு எல்லா ஜகத்துக்களுக்கும் காரணமாக இருத்தல் என்றும் தன்மையின் ஸித்தியின்பொருட்டு வேதாந்தங்களில் 'ஸத்யம் ஜ்ஞாநமநந்தம்' இது முதலிய வாக்கியஙகளால் ஆநந்த்யம் கூறப்பட்டது. அது மூன்றுவிதமான பரிச்சேதமில்லாமை. தேசம்காலம் முதலியவைகளால் பரிச்சின்னங்களான கடம் முதலியவைகளுக்கு எல்லா வஸ்துக்களையும் குறித்து ஸர்வவித காரணத்வம் காணப்பட்டிருக்கவில்லையன்றே. முக்காலங்களிலுமுள்ள கார்ய

|| வ்யவச்சேதம்—விலக்கம் ¶ ப்ரஸாதம்—அநுக்ரஹம்.

‡ உபக்ரமம்—தொடக்கம். § சேஷம்—உபகாரகம்.

வர்க்கங்களுக்கு காரணத்வம் சொல்லப்பட்டாலும் ஸர்வதேசகத கார்யங்களுக்கு காரணத்வம் சொல்லப்பட்டாலும் தேசத்தாலும் காலத்தாலும அபரிச்சேதங்கள் அபேக்ஷிக்கப்பட்டிருக்கின்றன. உபாதாநத்வம் ஸித்திப்பதற்காக வஸ்த்வபரிச்சேதம் அபேக்ஷிக்கப்பட்டிருக்கிறது. வஸ்துவினால் பரிச்சின்னனான ¶ குலாலன் உபாதானகாரணமாக ஆகிறானில்லையன்றோ. ம்ருத்பிண்டம் குலாலன் இரண்டுக்கும் ஸாமாநாதிகரண்யமில்லாமையால். ஆதலால் க்ருத்ஸ்நகாரணத்வ ஸித்தியின்பொருட்டு த்ரிவித பரிச்சேதராஹித்யத்தை ஸவிஸ்தாரமாகச்சொல்லப்போகிறவராக 'பர: பராணாம்' என்கிற பாதி ச்லோகத்தால் அதை சுருக்கமாக ப்ரதிஜ்ஞைசெய்கிறார் - பர:பராணாம்பரம: என்று. இதனால் காலத்தினால் பரிச்சேதமில்லாமை ஸித்தித்தது. நீண்டகாலமாக இருத்தல் பரசப்தவாச்யமாதலால். பரமாத்மா என்பதினால் தேசாபரிச்சேதம் கூறப்பட்டது. ஆப்நோதி (வ்யாபிக்கிறான்) என்றல்லவோ ஆத்மசப்தத்தின் வ்யுத்பத்தி. ஆத்மஸம்ஸ்தித:-எல்லா வஸ்துக்களுக்கும் ஆத்மாவாக இருப்பதால் ஸர்வ வஸ்துவிசிஷ்டன். அன்றிக்கே, ஆத்மாவாக அனைத்தையும் தான் வ்யாபித்திருப்பதால் ஸர்வசரீரகனாக இருப்பதுபற்றி தன்னிடத்தில்தான் நிலைபெற்றிருப்பவன. ஸ்வநிஷ்ட:- மற்றதெல்லாம் சரீரமாக இருப்பதுபற்றி விசேஷணமாதலால் அந்த ப்ரஹ்மத்தினிடத்திலிருக்கிறது. ஆதலால் எல்லாவற்றுக்கும் பர்யவஸாநபூமி. 'ஸ்வநிஷ்ட:' என்பதனால் வஸ்துவினால் அபரிச்சேதம் கூறப்பட்டது. ஸர்வவஸ்து ஸாமாநாதிகரண்யார்ஹத்வமன்றோ வஸ்த்வபரிச்சேதம். இந்த வஸ்து இந்த வஸ்துவாக ஆகிறதில்லை என்பதல்லவோ வஸ்துபரிச்சேதம். அன்றிக்கே நித்யத்வ விபுத்வ குணங்களைவிட வேறு குணங்களால் நிகரானவனும் மேலானவனுமில்லாமலிருத்தல் வஸ்த்வபரிச்சேதம். தன் ஸ்வரூபத்தில் தான் நிலைபெற்றிருக்கிற பரமாத்மாவை அபேக்ஷித்து அந்த பரமாத்மாவினிடத்திலிருக்கிற மற்றவைகளுக்கு ஸமத்வம் அப்யதிகத்வம ஸம்பவியாமையால் 'ஆத்ம ஸம்ஸ்தித:' என்கிற இந்த பதத்தினால் வஸ்த்வபரிச்சேதஸித்தி. இவ்வண்ணம் சுருக்கமாகச்சொன்ன அர்த்தத்தை உபபாதநஞ்செய்கிறார்—ரூப இதுமுதலியதால். அவற்றுள் காலாபரிச்சேதத்தை முதலில் சொல்லவேண்டுமென்கிற எண்ணங்கொண்டவராக காலத்தால் பரிச்சின்னமான வஸ்துக்களிடத்திலுள்ள ஐந்து கல்பனைகளின் நித்யத்வம் ப்ரஹ்மத்தினிடத்திலில்லை என்று சொல்லுகிறார்—ரூப என்று. ரூப சப்தத்தால் ஜாதி கூறப்படுகிறது. ரூபித்ரவ்யங்களுக்கு ஜாதி குணம இரண்டும் ரூபங்களென்றல்லவோ நீதியை அறிந்தவர்கள் கூறுகின்றனர். வர்ணசப்தமானது ரூபமென்று பெயருள்ள குணவிசேஷத்தைச்சொல்லுகிறது. ஆதி சப்தத்தால் கந்தம் ரஸம் முதலியது குறிக்கப்படுகிறது. ஆஸநசயநாதி க்ரியைகளும் $ விஷாணம் முதலிய அவயவங்களோடு கூடி இருத்தலும் விவக்ஷிக்கப்பட்டிருக்கிறது. 'ரூபவர்காதி' என்கிற பாடத்தில் ரூப சப்தம் நீலம்பீதத்வம் முதலிய குணங்களைச்சொல்லுகிறது. வர்கசப்தமானது தேவ மனுஷ்யாதி வர்க்கங்களைக்குறிக்கிறது. ஜாதிபரமென்று அர்த்தம். அதைக்காரணமாகக் கொண்டது. அது விஷயமான நிர்தேச சப்தம் சப்தவாச்யங்களான அவைகளே விசேஷணம். அவைகளால் விடுபட்டவன் - அன்றிக்கே (ரூபவர்ணாதி) ரூபவர்ணாதிகளைச்சொல்லுகிற சப்தரூபங்களான விசேஷணங்களால் விடுபட்டவன். இவ்வண்ணம் அநித்யத்வ வ்யாபகமாகவும் கர்மக்ருதமாகவுமிருக்கிற ரூபாதிமத்த்வம் ப்ரஹ்மத்தினிடத்திலில்லையாதலால் கர்மக்ருதமான ரூபாதிகளின் நிவ்ருத்தியினால் அந்த ரூபாதிகளுக்கு வ்யாப்யமான காலபரிச்சேதத்தின் நிவ்ருத்தி என்று அர்த்தம். அன்றிக்கே அநித்யத்வத்திற்கு வ்யாப்யமான கர்மக்ருதரூபாதிகளின் இன்மையினால் அநித்யத்வம் ப்ரஹ்மத்தினி

¶ குலாலன்—குயவன்.　　$ விஷாணம்—கொம்பு.

டத்தில் அநும்ப்பதற்கு அசக்யமென்று அர்த்தம். இதனால் 'ப்ரத்யஸ்தமிதபேதம்' என்கிற பதத்திற்கு விஷயம் காண்பிக்கப்பட்டது.

அதற்குமேல் விகாரங்கள் அநித்யத்வ வ்யாபகங்களாதலால் அநித்யத்வ நிவ்ருத்தியின்பொருட்டு அதற்கு வ்யாபகமாக இருக்கிற விகாராஹித்யத்தைக் கூறுகிறார்—அபக்ஷய என்று. 'ஜாயதே, அஸ்தி' என்கிற இரண்டு அவஸ்தைகள் ஜந்மசப்தத்தால் விவக்ஷிக்கப்பட்டிருக்கிறது. உத்பத்தி ஸ்திதி நாசங்களுக்கு ஒவ்வொன்றிலும் இரண்டு (வியா) ப்ரகாரங்களால் விகாரஷட்கம் ஸித்திக்கிறது, அவைகளால் விடுபட்டிருப்பதால் எப்பொழுதும் இருக்கிறது என்று சொல்வதற்கு சக்யமாக இருக்கிறது. ஸதாசப்தத்தால் ஏதோ ஒரு ஸமயத்திலுள்ள அஸ்திதவத்திற்கு நிவ்ருத்தி ஏற்படுகிறது, 'நதூத்பத்யதே இத்யாதி சப்தை:, என்பது கேவல சப்தாப்பிராயம். இதனால் ஸத்தாமாத்ரம் என்பதற்கு விஷயம் காண்பிக்கப்பட்டது. 'அகோசரம் வசஸாம்' என்பதற்கும் விஷயம் காண்பிக்கப்பட்டதாக ஆகிறது. ரூபவர்ணாதி ப்ரவ்ருத்தி நிமித்தமில்லாமையாலும் உத்பத்யாதி ப்ரவ்ருத்தி நிமித்தமில்லாமையாலும் கல்பனையானது விகாரவாசி சப்தங்களால் சொல்வதற்கு சக்யமாகாதென்பது அந்த பததிற்கு அர்த்தம் என்பது அபிப்ராயம். 'அகோசரம் வசஸாம்' என்பதனால் ஸர்வசப்த கோசரதவம் சொல்லப்படுகிறதென்று கூறப்படுமேயர்கில் 'வசஸாமகோசரம் ஸததாமாத்ரம்' என்று சொல்வதற்கு சக்யமாகாது.

இதற்குமேல் தேசாபரிச்சேதத்தை நாமநிர்வசநமுகத்தால் சொல்லுகிறார்—ஸர்வத்ர என்று. ப்ரஹ்மம் ஈச்வரனைக்காட்டிலும் வேறாக இருக்கிறதென்பதை நிஷேதிப்பதற்காகவும் தேவதாந்தரவ்யுதாஸத்திற்காகவும் நாமநிர்வசநமுகத்தால் அதின் உக்தி. § ஔணாதிகப்ரத்யயம் அநேகார்த்தங்களுள்ளதாக இருப்பதால் வாஸுதேவ சப்தத்திற்கு அதிகரணத்திலும் கர்தாவிலும் வ்யுதபத்தி கூறப்படுகிறது—ஸர்வத்ர என்று. வேதாந்தங்களில் பரப்ரஹ்மத்திற்கு நிர்விகாரத்வம் முதலியது கூறப்பட்டிருக்கிறதன்றோ அவ்வாறு இருக்க எப்படி வாஸுதேவனுக்குச் சொல்லப்படுகிறதென்றுகேட்கில் கூறுகிறார்- தத் ப்ரஹ்ம என்று. 'சைத்யம் ஹி யத் ஸா ப்ரக்ருதிர்ஜலஸ்ய' என்பதுபோல் தத் என்கிற நிர்தேசம் - †"நிர்திச்யமாந ப்ரதிநிர்திச்யமாநயோரேகத்வமாபாதயந்தி ஸர்வநாமாநி பர்யாயேண தத்தல்லிங்கமுபாததே" என்றல்லவோ சாப்திகர்கள். நித்யம் என்பதனால்கார்யமாத்ர வ்யாவ்ருத்திக்கப்பட்டது. 'அஜம் அக்ஷரம் அவ்யயம் ஏகஸ்வரூபம்' என்பதனால் ஸவிகார நிதயப்ரதாநங்கள் வ்யாவ்ருத்திக்கப்பட்டன - ஏகஸ்வரூப சப்தத்தால் வ்ருத்திபரிணாமங்களின் இன்மை விவக்ஷிக்கப்பட்டிருக்கிறது. 'ஹேயாபாவாச்ச நிர்மலம்' என்பதனால் § பத்தர்கள் வ்யாவ்ருத்திக்கப்பட்டார்கள். ஸதா என்பதனால் முக்தர்கள் வ்யாவ்ருத்திக்கப்பட்டார்கள். ப்ரஹ்மம் என்பதனால் நித்யஸித்

§ ஔணாதிகம் — உணாதிஸூத்ரங்களால் விதிக்கப்பட்டுள்ளது. இந்த ஸூத்ரங்கள் சாகடாயன மஹரிஷியினால் செய்யப்பட்டுள்ள சப்தாநுசாஸனங்கள் - ப்ரஸித்தர்களான ஒன்பது வையாகரணர்களுக்குள் இவர் ஒருவர்.
அவர்களாவன:—இந்திரன், சந்திரன், காசக்ருத்ஸனர், ஆபிசலி, சாகடாயனர், பாணினி, அமரஸிம்மன், ஜைநேந்திரன், ஸரஸ்வதி.

† நிர்திச்ய — அநுவதிக்கப்படுவதையும் விதிக்கப்படுவதையும ஒன்றுபடுத்துகிற ஸர்வநாமசப்தங்கள் அநுவாதக சப்தத்தினுடையவும் விதாயக சப்தத்தினுடையவும் லிங்கங்களை மாறிமாறி ஏற்றுக்கொள்ளுகின்றன.

§ பத்தர்கள்—ஸம்ஸாரிகள்.

தர்கள் வ்யாவ்ருத்திக்கப்பட்டார்கள். அன்றிக்கே ஏகஸ்வரூபம் என்பதனுல் பத்தவ்யாவ்ருத்தி ஸித்தித்தது. ஸதா இதுமுதலியதால் முக்தவ்யாவ்ருத்தி ஸித்தித்தது. இவ்வண்ணம் தன்னைத்தவிர்த்த எல்லா வஸ்துக்களைக்காட்டிலும் விலக்ஷணமாக உபநிஷத்துக்களில் சொல்லப்பட்ட ப்ரஹ்மம் வாஸுதேவனென்றே அர்த்தம். ஸ்வரூபவித் அபரிச்சேதத்தைச்சொல்லுகிற ச்ருதியும் அநந்தம் என்று. தேவதாவிசேஷத்தை நிச்சயம் செய்தது. அநந்த சப்தம் யோகரூடம். ஆதலால் நாராயணுதிசப்தங்களுக்கு பர்யாயமாக த்ரிவிதமான ஆநந்த்யமுள்ள பகவானிடத்தில் முக்கியமாக இருக்கிறது. ஸத்யஜ்ஞாநாதிவாக்யத்தில் அநந்தம் என்கிற பதம் ஆண்பால் இரண்டாம்வேற்றுமை. 'யோ வேத' என்கிற வாக்கியத்திலுள்ள வேதநசப்தத்தோடு அந்வயிப்பதால் முதல்வேற்றுமையாகச்சொன்னுல் 'தத்யோவேத' என்று தத் என்கிற பதம் அத்தியாஹாரம் செய்து கொள்ளவேண்டியதாக ஆகும் - வாக்யபேதமும் உண்டாகும். ஆகையால் அந்த இடத்தில் சொல்லப்பட்ட அர்த்தமே பொருத்தமுள்ளது. ஆதலால் அதை அநுஸரித்து இங்கும் அபரிச்சேதத்தைச்சொல்லும் ஸமயத்தில் தேவதாவிசேஷம் நிர்ணயிக்கப்பட்டது. வஸ்த்வபரிச்சேதத்தைச்சொல்லுகிறூர்—ததேவ என்று. ஸர்வமேவைதத் என்பதனுல் வ்யக்தாவ்யக்த புருஷகால ஸமுதாயம் கூறப்படுகிறது. வ்யக்தாவ்யக்த ஸ்வரூபமான இவை அனைத்தும் அந்த ப்ரஹ்மம் என்று பொருள். இதனுல் வஸ்த்வபரிச்சேதம் உரைக்கப்பட்டது. ஸர்வவஸ்துஸாமாநாதி கரண்யார்ஹத்வமன்றே வஸ்த்வபரிச்சேதம். ஸர்வவஸ்துஸாமாநாதிகரண்யார்ஹதையினுலேயே சிதசித் சரீரகத்வத்திற்கு ஹேதுவான வ்யாபநம் பரணம் முதலிய குணங்களால் ஸாமாநாதிகராண்யம் ஸித்திப்பதாலும் வஸ்த்வபரிச்சேதம் ஸித்திபெருகிறது. ப்ரஹ்மத்தைத்தவிர்த்த வேறு ஒரு வஸ்துவுக்கும் ஸமஸ்தசிதசித்சரீரகத்வம் ஸம்பவியாதன்றே.

ப்ரக்ருதிர்யா மயாऽऽக்யாதா வ்யக்தாவ்யக்தஸ்வரூபிணீ । புருஷஶ்சாப்யுபாவேதௌ லீயேதே பரமாத்மநி ॥ பரமாத்மா ச ஸர்வேஷாமாதார: பரமேஶ்வர: । விஷ்ணுநாமா ஸ வேதேஷு வேதாந்தேஷு ச கீயதே ॥" (வி-பு-௬-௪-௩௮,௩௯) த்வே ரூபே ப்ரஹ்மணஸ்தஸ்ய மூர்த்தஞ்சாமூர்த்தமேவ ச । க்ஷராக்ஷரஸ்வரூபே தே ஸர்வபூதேஷ்வவஸ்திதே ॥ அக்ஷரம் தத்பரம் ப்ரஹ்ம க்ஷரம் ஸர்வமிதம் ஜகத் ॥ ஏகதேஶஸ்திதஸ்யாக்நேர்ஜ்யோத்ஸ்நா விஸ்தாரிணீ யதா ॥ பரஸ்ய ப்ரஹ்மணஶ்ஶக்திஸ்ததேதமகிலம் ஜகத் ॥" (வி-பு-௧-௨௨,௫௫,௫௭)

"விஷ்ணுஶக்தி: பரா ப்ரோக்தா க்ஷேத்ரஜ்ஞாக்யா ததாऽபரா । அவித்யாகர்மஸம்ஜ்ஞாऽந்யா த்ருதீயா ஶக்திரிஷ்யதே ॥ யயா க்ஷேத்ரஜ்ஞஶக்திஸ்ஸா வேஷ்டிதா ந்ருப ஸர்வகா । ஸம்ஸாரதாபாநகிலாநவாப்நோத்யதிஸந்ததாந் ॥ தயா திரோஹிதத்வாச்ச ஶக்தி: க்ஷேத்ரஜ்ஞஸம்ஜ்ஞிதா । ஸர்வபூதேஷு பூபால தாரதம்யேந வர்த்ததே ॥" (வி-பு-

கூ-ள்-கூக, கூஉ) "ப்ரதாநஞ்ச புமாம்ஶ்சைவ ஸர்வபூதாத்மபூதயா। விஷ்ணுஶக்த்யா மஹாபுத்தே வ்ருதௌ ஸம்ஶ்ரயதர்மிணௌ॥ தயோஸ்ஸைவ ப்ருதக்பாவகாரணம் ஸம்ஶ்ரயஸ்ய ச॥ யதா ஸக்தம் ஜலே வாதோ பிபர்தி கணிகாஶதம்। ஶக்திஸ்ஸாபி ததா விஷ்ணோ: ப்ரதாநபுருஷாத்மந:॥ (வி-பு-உ-எ-உகூ, ஙக) "ததேததக்ஷயம் நித்யம் ஜகந்முநிவராகிலம்। ஆவிர்பாவதிரோபாவ ஜந்மநாஶவிகல்பவத்॥ (வி-பு-க-உஉ-கூ௰)

இத்யாதிநா பரம்ப்ரஹ்ம ஸ்வபாவத ஏவ நிரஸ்தநிகிலதோஷகந்தம் ஸமஸ்தகல்யாணகுணாத்மகம் ஜகதுத்பத்திஸ்திதிஸம்ஹாராந்த: ப்ரவேஶநியமநாதிலீலம் ப்ரதிபாத்ய க்ருத்ஸ்நஸ்ய சிதசித்வஸ்துந: ஸர்வாவஸ்தாவஸ்திதஸ்ய பரமாத்மநஶ்சைவ பரஸ்ய ப்ரஹ்மண: ஶரீரதயா ரூபத்வம், ஶரீரரூபதயாம்ஶஶக்திவிபூத்யாதி ஶப்தைஸ்தத்தத் ஸ்வஸாமாநாதிகரண்யேநாபிதாய தச்சக்திதச்சக்தஸ்ய விஷ்ணோ: ஸ்வரூபேணாவஸ்திதிம் நிரூப்யதயா க்ஷேத்ரஜ்ஞரூபேண ஸ்திதிஞ்சோக்த்வா, க்ஷேத்ரஜ்ஞாவஸ்தாயாம் புண்யபாபாத்மககர்மரூபாவித்யாவேஷ்டிதத்வேந ஸ்வாபாவிகஜ்ஞாநரூபத்வாநவபாஸநம் ஸர்வமயத்வாகாரதயாऽநவபாஸநம் ச ப்ரதிபாதிதமிதி பரம் ப்ரஹ்ம ஸவிஶேஷம், தச்சக்திகம் ஜகதபி பாரமார்த்திகமேவேதி விஜ்ஞாயதே॥

ஸ்ரீபாஷ்யம்.—

வ்யக்தமான ப்ரபஞ்ச ஸ்வரூபிணியாகவும் அவ்யக்தமான தமஸ்ஸ்வரூபிணியாகவுமிருப்பதாக எந்த ப்ரக்ருதி என்னால் முன்பு கூறப்பட்டதோ, அந்த ப்ரக்ருதி, புருஷன், இவ்விரண்டும் பரமாத்மாவினிடத்தில் லயிக்கின்றன; பரமாத்மாவோவென்றால் எல்லா வஸ்துக்களுக்கும் ஆதாரமாயிருப்பவன்; மேலதிகாரி இல்லாதவனான ஈச்வரன். அவன் வேதங்களிலும் வேதாந்தங்களிலும் விஷ்ணுவென்கிற பெயருள்ளவராகக் கோஷிக்கப்படுகிறார். அந்த ப்ரஹ்மத்திற்கு மூர்த்தமென்றும் அமூர்த்தமென்றும் சொல்லப்படுகிற இரண்டு ரூபங்கள் உள. அவ்விரண்டு ரூபங்களும் எல்லா பூதங்களிடங்களிலும்

க்ஷராக்ஷர ஸ்வரூபங்களாக நிலைபெற்றிருக்கின்றன. கர்மபந்தத்தினின்று விடுபட்டதான அந்த முக்தாத்ம ரூபமானது அக்ஷரமென்று சொல்லப்படுகிறது. இவ்வுலகமனைத்தும் க்ஷரமென்று சொல்லப்படுகிறது. ஓரிடத்திலிருக்கிற அக்நியின் ஒளியானது எவ்வாறு நாலாபக்கங்களிலும் பரவிச்செல்லுகிறதோ அவ்வாறு ப்ரஹ்மத்தின் சக்தியானது இந்த உலகமனைத்தையும் வ்யாபித்திருக்கிறது. விஷ்ணு சக்தியானது 'பரா' என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவ்வாறே, க்ஷேத்ரஜ்ஞ ஸம்ஜ்ஞையுள்ள சக்தியானது அபரா என்று சொல்லப்பட்டிருக்கிறது. கர்மாவென்று பெயருள்ளதான அவித்யையானது மூன்றாவது சக்தியாக இச்சிக்கப்படுகிறது. ராஜனே! எல்லா வஸ்துக்களையும் அடைந்திருக்கிற அந்த க்ஷேத்ரஜ்ஞ சக்தியானது எதனால் சுற்றப்பட்டதாக இருந்துகொண்டு மிகவும் தொடர்ச்சியாயுள்ள எல்லா ஸம்ஸாரதாபங்களையும் அடைகிறதோ. பூமியைப் பாதுகாப்பவனே! அந்த க்ஷேத்ரஜ்ஞ சக்தியானது அவித்யையினால் மூடப்பட்டிருப்பதினால் கர்மதாரதம்யத்திற்கு அனுகுணமாக ஜ்ஞாநதாரதம்யத்துடன் இருக்கிறது. மஹாபுத்தியுள்ளவனே! ஸர்வபூதங்களையும் வ்யாபித்திருக்கிற விஷ்ணுசக்தியினால் பகவானைவிட்டு விலகி தனித்திருத்தலை ஸ்வபாவமாகக்கொண்டிராத ப்ரதாநம் புருஷன் இவ்விரண்டும் கவரப்பட்டிருக்கின்றன. அந்த சக்தியே ப்ரதாநம் புருஷன் இவ்விரண்டுகளையும் சேர்ப்பதிலும் (ஸம்ஸாரத்திலும்) தனித்தனியாகப் பிரிப்பதிலும் (மோக்ஷத்திலும்) காரணமாக இருக்கிறது. காற்று எவ்வாறு அநேகஜலபிந்துக்களை ஜலத்தில் பற்றுதலின்றி வஹிக்கிறதோ அவ்வாறு அந்த விஷ்ணுவினுடைய சக்தியும் பத்தாத்மாக்களையும் முக்தாத்மாக்களையும் தாங்கிக்கொண்டிருக்கிறது. முனிவர்களுக்குள் சிறப்புற்றவரே! க்ஷயமில்லாததும் ப்ரவாஹத்தால் நித்யமாயுமிருக்கிற அந்த இந்த உலகமனைத்தும் தோன்றுதல் மறைதல் என்கிற ஜன்மநாச விகல்பங்களுள்ளது.

இது முதலியதால் பரப்ரஹ்மமானது ஸ்வபாவத்தினாலேயே ஸமஸ்த தோஷங்களையும் நிரஸித்ததென்றும் ஸமஸ்தகல்யாணகுணாத்மகமென்றும் ப்ரபஞ்சத்தின் ஸ்ருஷ்டிஸ்திதிஸம்ஹாரம் உள்ளுக்குள் ப்ரவேசம் நியமனம் இவைகள் முதலியவற்றை லீலையாகக் கொண்டதென்றும் ப்ரதிபாதித்து எல்லா நிலைமைகளுடனும்கூடி நிலைபெற்றிருக்கிற சிதசித் வஸ்துக்களனைத்தும் பாரமார்த்திகமென்றும் அப்படி பாரமார்த்திகமாக இருக்கிற சிதசித்துக்களே பரப்ரஹ்மத்திற்கு சரீரமாக இருப்பதால் அவைகளுக்கு ரூபத்வத்தை சரீர, ரூப, தநு, அம்ச, சக்தி, விபூதி முதலிய சப்தங்களாலும் தத்சப்த ஸாமாநாதிகரண்யத்தாலும் சொல்லி அந்த பரப்ரஹ்மத்திற்கு விபூதியாக

இருக்கிற சித்பதார்த்தத்திற்கு ஸ்வரூபத்தோடு இருப்பையும் அசித்துடன் சேர்ந்திருப்பதால் க்ஷேத்ரஜ்ஞ ரூபமாக இருப்பையும் சொல்லி க்ஷேத்ரஜ்ஞாவஸ்தையில் புண்யபாபாத்மக கர்மரூபா வித்யையினால் சுத்தப்பட்டிருப்பதால் ஸ்வாபாவிகமான ஜ்ஞாநரூபத்வாநுஸந்தாநமும் அசித்ரூபார்த்தாகாரமாக அநுஸந்தாநமும் ப்ரதிபாதிக்கப்பட்டதினால் பரப்ரஹ்மமானது ஸவிசேஷமென்றும் அதின் விபூதியாக இருக்கிற ஜகத்தும் பாரமார்த்திகமென்றே அறியப்படுகிறது.

ச்ருதப்ரகாசிகை—

இவ்வாறாக சாஸ்த்திரத்தின் தொடக்கத்தில் வாஸுதேவனெனப்பெயர்வாய்ந்ததும் உபயலிங்கங்களுடன்கூடியதுமான வஸ்து ப்ரதிபாதிக்கத்தக்கதென்று உரைக்கப்பட்டது. சாஸ்த்ரத்தின் முடிவிலும் அவ்வண்ணமே சொல்லப்பட்டிருக்கிறதென்பதைக்காண்பிக்கிறார்—ப்ரக்ருதிர்யா என்று. பரமாத்ம சப்தத்திற்கு சில இடத்தில் ஜீவனிடத்திலும ப்ரயோகம காணப்பட்டிருப்பதால் அதை வ்யாவ்ருத்திப்பதற்காக ஸாக்ஷாத் பரமாத்ம லக்ஷணமான ஜகத்காரணத்வம் கூறப்பட்டது 'லீயதே பரமாத்மநி' என்று. அவன் ஈச்வரனைவிட வேறல்ல என்பதைத்தெரிவிப்பதற்காக பரமேச்வர சப்தம். ஈச்வரனும் தேவதாந்தரமல்லவென்பதைத் தெரிவிப்பதற்காக 'விஷ்ணுநாமா' என்று சொல்லப்பட்டது. இந்த இடத்தில் 'பரமாத்மா ஆதார: பரமேச்வர:' என்கிற பதங்களால் சரீரிலக்ஷணம் ஸ்பஷ்டமாயிற்று.

இவ்வண்ணம் சாஸ்த்ரத்தின் தொடக்கத்திலும்முடிவிலும் இடையிலுமுள்ள ப்ரகரணங்களின் உபக்ரமோபஸம்ஹாரங்களிலும் ஹேயப்ரத்யநீகமாயும் கல்யாணகுணைகஸ்பதமாயுமிருக்கிற நாராயணனே பரப்ரஹ்மமென்று ப்ரதிபாதிக்கப்படுகிறதென்பது காண்பிக்கப்பட்டது. அதற்குமேல் அவித்பாஸம்பந்தம் முதலியவைகளுங்கூட ப்ரஹ்மத்திற்கேயன்றோ ப்ரதிபாதிக்கப்படுகின்றன, அது எவ்வண்ணம் உள்ளபடி உரைக்கப்பட்ட ஸ்வரூபமுள்ள ப்ரஹ்மத்திற்குப்பொருந்துகிறது என்கிற சங்கைவரின், 'காடிந்ய வாந்யோபிபர்தி' என்பதுபோல த்வாரித்வாரபாவத்தால் பொருந்துகிறது என்றுசொல்வதற்காக' பரமாத்மாவுக்கும் ஜீவர்களுக்கும் ஆத்மசரீரபாவத்தால் ஸம்பந்தத்தையும் அந்த ஜீவாத்மாக்களுக்கு வித்யா ஸம்பந்தம் முதலியதையும் சொல்லப்போகிறவராய்க்கொண்டு முதலில் ஜீவனுக்கும் ப்ரஹ்மத்திற்கும் சரீரசரீரிபாவரூபமான ஸம்பந்தத்தைக்காண்பிக்கிறார்-த்வேரூபே இதுமுதலியதால். 'மூர்த்தஞ்சாமூர்த்தமேவச' என்று. பத்தனும் முக்தனுமென்று அர்த்தம். இதை விவரிக்கிறார்—க்ஷராக்ஷரரூபே என்று. ஜ்ஞாநஸங்கோசரூபமான க்ஷரணமுள்ளது ஸங்கோசமில்லாத ஜ்ஞாநமுள்ளதென்றும் அர்த்தம். ஸர்வபூதேஷுச ஸ்திதே - அர்ஹம் (தகுதியுள்ளது) என்கிற அர்த்தத்தில் க்தப்ரத்யயம் வந்திருக்கிறது. எல்லா பூதங்களிடங்களிலும் ஸ்திதிக்கு அர்ஹங்கள். அதிக ஸூக்ஷ்மமாக இருப்பதனால் வ்யாபிப்பதில் யோக்யங்களென்று அர்த்தம். அன்றிக்கே பத்தனுக்கு ஸ்வரூபத்தினால் ஸர்வபூதஸ்திதி. முக்தனுக்கோவென்றால் தர்மபூதமாயும் விபுவாயுமிருக்கிற ஜ்ஞாநத்தின் வாயிலாக என்று. அக்ஷரம்தத்பரம் ப்ரஹ்மேதித் முக்த ஸ்வரூபம்-அக்ஷரம் ; க்ஷரம் ஸர்வமிதம் ஜகத் - இதம் - பத்தனுடைய ரூபம் - க்ஷரமென்று அர்த்தம். ரூபத்வத்தை விசேஷிக்கிறார்—ஏகதேச என்று. சக்தி என்பது வேறாக பிறிக்கமுடியாத கார்யோபயோகியான விசேஷணம். 'ஏகதேசஸ்திதஸ்ய

விஸ்தாரிணீ' என்கிற விசேஷணத்வயத்தால் அஸங்கீர்ணஸ்வபாவத்வம் சொல்லப்பட்டது. இந்த ச்லோகத்தில் அகிலம் ஜகத் என்பதனால் சிதசிதாத்மகமான ஜகத் சொல்லப்படுகிறது. ந்யாயஸாம்யத்தினால் அக்ஷரத்திற்கும் சக்தித்வம் ஸித்திக்கிறது. அன்றிக்கே அகிலஜகத் சப்தத்தால் அக்ஷரத்திற்கும் க்ரோடீகாரம் - த்ரிபாத்விபூதியும் லோகசப்தவாச்யமாக இருப்பதாலும் ஜகத் சப்தம் அதற்கு ஸமாநமான அர்த்தத்துடன் கூடியிருப்பதாலும் அகிலசப்தத்திற்கு ஸங்கோசகமில்லாமையாலும் 'க்ஷரம் ஸர்வம்' என்கிற இடத்தில் க்ஷரஸாமாநாதிகரண்யம் அபவாதம். இங்கு அதில்லாமையால் அக்ஷரத்திற்கும் அபிதாநம் பொருத்தமுள்ளதாக ஆகிறது. இதம் சப்தமானது ப்ரக்ருதத்தைச்சொல்லும் ஸ்வபாவமுள்ளதாதலால் க்ஷராக்ஷரபரத்வம் இதற்குப்பொருத்தமுள்ளதாக ஆகிறது. அய்யா! க்ஷராக்ஷர சப்தங்கள் கார்யகாரணரூபமாக இருக்கிற பரப்ரஹ்ம பரங்கள். பரப்ரஹ்ம சப்தத்திற்கு முக்யார்த்தம் ஸித்திப்பதால். அப்படி இல்லாவிட்டால் ஒரு ப்ரகரணத்திலிருக்கிற ப்ரஹ்ம சப்தங்களுக்கு அர்த்தவைரூப்யமும் உண்டாகும். ஜகத்துக்கு ஜ்யோத்ஸ்நாஸ்தாநீயத்வமும் பொருத்தமுள்ளதாக ஆகிறது. ப்ரபை என்பது தேஜோத்ரவ்யத்தின் சிதருதலுள்ள அவயவமாதலால் அதற்கு அக்நிகார்யத்வம் பொருந்துவதால். இவ்வண்ணமல்ல - 'ப்ரஹ்மணோரூபே' என்கிற வ்யதிரேகநிர்தேசஸ்வாரஸ்யத்திற்கு பங்கம் ப்ரஸங்கிப்பதால், அதுவும் கார்யகாரணங்கள் இரண்டுக்கும் ப்ரஹ்மவ்யதிரிக்தத்வமில்லாமையால் - ஷஷ்டீஸ்வாரஸ்யத்திற்காக மூர்த்தாமூர்த்தங்கள் விவக்ஷிக்கப்பட்டிருக்குமேயாகில் அப்பொழுது மூர்தாமூர்தசப்த ஸ்வாரஸ்யத்திற்கு பங்கம். பாவப்ராதான்யத்தை விவக்ஷியாமலிருக்கும் பக்ஷத்தில் ரூபசப்த ஸாமாநாதிகரண்யம் இசையாது. ப்ரஹ்மத்திற்கு இரண்டு ரூபங்கள் - மூர்த்தமாகவும் அமூர்தமாகவும் ப்ரஹ்மமன்றோ இருக்கிறதென்று சொல்லப்படுமேயானால் அப்பொழுது ப்ரதமாந்தமான ப்ரஹ்ம சப்தாத்யாஹாரதோஷம் ஸம்பவிக்கும். ஆறாம் வேற்றுமையுருபுடன்கூடின ப்ரஹ்மசப்தத்திற்கு மூர்தாமூர்த சப்தஸாமாநாதிகரண்யம் பொருந்தாததலால். மேலும், 'ஸர்வபூதேஷு சஸ்திதே' என்பதும் பொருந்தாது. ஸர்வபூத சப்தம் கார்யவாசியாதலால் அதில் கார்யஸ்திதியானது சொல்லப்படுமேயாகில் தன்னிடத்தில் தன்னுடைய வ்ருத்தி ப்ரஸங்கிப்பதாலும் காரணத்திற்கும் கார்யத்தைக்காட்டிலும் வேற்றுமையில்லாமையால் ஸ்வவ்ருத்திப்ரஸிங்கிப்பதாலும். அவஸ்தாத்வயத்திற்கு ஸர்வபூதஸ்திதி என்றும் சொல்லத்தக்கதல்ல, தர்மிபர்யந்தமான க்ஷராக்ஷரசப்த ஸாமாநாதிகரண்யம் பொருந்தாததலாலும் அவைகளுக்கும் அவஸ்தாபரத்வம் சொல்லில் ஸ்வாரஸ்யத்திற்கு பங்கம் வருவதாலும் அவஸ்தாவத்வாசியான ஜகத்சப்த ப்ரஹ்மசப்த ஸாமாநாதிகரண்யம் பொருந்தாததலாலும் - அது ஸஹிக்கப்பட்டபோதிலுங்கூட காரணாவஸ்தைக்கு கார்யத்தில் இருத்தல் பொருந்தாததலாலும் சக்தி சப்ததிற்கு கார்யவாசித்வம் பொருந்தாததலாலும் ச்லோகத்திற்கு இது அர்த்தமல்ல, உபசாரத்தாலுங்கூட கார்யோபயோகி விசேஷணமானது சக்தி சப்தத்தால் வ்யபதேசிக்கத்தகுதியுள்ளது, கார்யோபயோகி விசேஷணத்வமானது ஸமாநமாக இருப்பதால் சக்தியாவது சக்தியுள்ள வஸ்துவைக்குறித்து ஒருபொழுதும் வேறுபட்டிராத கார்யோபயோகி விசேஷணம் - கார்யமோவென்றால் காரணத்திற்கு அப்ருதக்பூதவிசேஷணமாகவும் கார்யோபயோகியாகவுமாகிறதில்லை. கார்யம் காரணம் இரண்டும் வேறு வஸ்து அல்லாததால் தனக்குத்தானே விசேஷணமாகஇருப்பது என்பது பொருந்தாததலால், கார்யத்வம் விசேஷணமென்று சொல்லப்படுமேயானால் அதை பாதிஏற்றுக்கொள்ளுகிறேன். ஆயினும், தர்மிவாசியான ஜகத் சப்தத்திற்கு கார்யதாவாசித்வமில்லாமையால் சக்திசப்தஸாமாநாதிகரண்யம் உபசரிதமாக இருந்தபோதிலும் பொருத்தமுள்ளதாக ஆகாது. கார்யோபயோகி அப்ருதக்பூதவிசேஷணம் சக்தி என்கிற முக்யத்வமானது நம்முடைய மதத்திலேயே ஸம்பவிக்கும். க்ஷரசப்தத்தை கார்யபரமாகச்சொல்லில் த்ருஷ்டாந்தம் இசையாமல்

போகும். அதுவும் ஒளியானது சிதறுகின்ற தீபம் முதலிய தேஜஸ்வியான த்ரவ்யத்தின் அவயவமல்லாமையால் அக்நிகார்யத்வமில்லாமையால. "க்ஷரம்ப்ரதாநமம்ருதாக்ஷரம் ஹர:" என்கிற ப்ரயோகத்தை அநுஸரித்து சேதநாசேதநபரத்வம் யுக்தமன்று அசிதம்சத்திற்கு தன்னிடத்தில் தன்னுடைய வ்ருத்தி பரஸங்கிப்பதால் ஸர்வபூதஸ்திதியானது பொருந்தாது. சிதசித் ‡ ஸங்காதரூபமான பூதங்களில் இரண்டுக்கும் இருப்புபொருத்தமுள்ளதாக ஆகாதென்று சொல்லப்படுமேயானால், அல்ல. இரண்டு ஸமுதாயிகளுக்கு ஸமுதாய வ்ருத்தித்வம் உபபன்னமாகாததால். ஸமுதாயமன்றோ ஸமுதாயிகளிடத்தில் நிலைபெற்றிருக்கிறது. மேல் கிரந்தத்திற்கு § வைரூப்யமும் உண்டாகும். மேலே "பூபமூர்தமமூர்தஞ்ச" என்று மூர்தாமூர்த சப்தங்களால் இரண்டு ரூபங்களை ப்ரஸ்தாவித்து ஹிரண்யகர்ப்பன் முதலியவர்களை நிர்தேசித்து "மூர்தமேதத்ஹரேரூபம் பாவநாத்ரிதயாந்விதம்" என்று மூர்தசப்தவாச்ய ரூபத்திற்கு பாவநாத்ரயாந்வயம் சொல்லப்பட்டிருப்பதால். அசேதநத்திற்கு கர்மப்ரஹ்மபாவநாந்வயமில்லையன்றோ. "ஸோऽக்ஷர: பரம: ஸ்வராட்" என்கிற இடத்தில் இந்திரன்முதலிய பத்தர்களைவிட விலக்ஷணனைச் சொல்லியிருப்பதால், "ஸஸ்வராட்பவதி" என்பதுபோல் முக்தனைச்சொல்லுகிற ஸ்வராட் சப்த ஸாமாநாதிகரண்யத்தாலும் அக்ஷரசப்தமானது முக்தாத்மாவைக்குறிக்கிறது. ஆகையால் அதை அநுஸரித்து அக்ஷரசப்தம் இந்த இடத்திலும் முக்தாத்மாவைச்சொல்லுகிறது. ப்ரஹ்மசப்தார்த்தவைரூப்யமோவென்றால் 'தபஸாசீயதே ப்ரஹ்ம-தஸ்மாதேதத் ப்ரஹ்ம நாமரூபமன்னஞ்சஜாயதே' என்கிற ச்ருதியில்போல அநேக உபபத்திகளின் பலத்தினால் பொருந்துகிறது, ஆகையால் கீழ்எவ்வாறு அர்த்தம் உரைக்கப்பட்டதோ அதே ஸரி. ப்ரஹ்மத்தினது அவித்யாஸம்பந்தத்திற்கு த்வாரபூதமான ஜீவாத்மாவினிடத்தில் அவித்யா ஸம்பந்தத்தைக்காணபிக்கிறார்—விஷ்ணுசக்தி: இது முதலியதால். ஸர்வகா - நான்முகன் முதலாக எறும்பு ஈறாக உள்ள எல்லா சரீரங்களிலும் நிலைபெற்றிருக்கிற இந்த வசநமானது ஜாதியைக்குறிப்பிடுகிறது. அன்றிக்கே தர்மபூதஜ்ஞாநத்தால் தானாகவே எல்லாவற்றையும் வ்யாபிப்பதற்குத்தகுதியுள்ளது. கர்மணவேஷ்டிதா - கர்மாவினால் ஸங்கோசத்தை அடைந்திருக்கிற ஜ்ஞாநமுள்ளது என்று பொருள். அங்ஙனமாகில் எல்லோரும் அஜ்ஞர்களாக ஆகட்டுமென்று வினவப்படுமேயாகில் சொல்லுகிறார்- தயா என்று. க்ஷேத்ரஜ்ஞசக்தியானது கர்மதாரதம்யத்திற்குத்தக்கபடி ஜ்ஞாநதாரதம்யமுள்ளதென்று அர்த்தம். எல்லோருக்கும் ஜ்ஞாநநித்யத்வமும் முக்தியில் ஸர்வவிஷயகத்வமும ப்ராமாணிகமாதலால் ஸங்கோசவிகாஸங்கள் இரண்டும் பத்தாவஸ்தையில் ஸித்தங்கள். அந்த தாரதம்யமும் "பும்ஸஃஸ்ருக்த்யுபலக்ஷித:" "தச்சக்த்யாபசயோऽதிகா:" (புருஷனுடைய சக்தியினால் காட்டிக்கொடுக்கப்பட்டிருக்கிறது, அந்த சக்தியினால் பசுக்கள் மேன்மையுள்ளவைகள்) என்று வெளியிடப்பட்டிருக்கிறது. ஜாதிகளும் அப்ருதக்ஸித்ததர்மங்களாதலால் ரூபசப்தத்தால் சொல்லத்தக்கதாகலாமென்பதுபற்றி அதை விலக்குவதற்காக ப்ரஸ்துதரூபத்வமானது நியாம்யத்வ ரூபமென்பதைப்பகர்கிறார்— ப்ரதாநஞ்ச என்று. சிதசித் இரண்டுக்கும் உளள பாமாத்மநியாம்யத்வம் தார்யத்வம் வ்யாப்யத்வம் நித்யத்வம் முதலியவைகள் ப்ரமாணாந்தரங்களுக்கு அகோசரங்களாக இருப்பதுபற்றி விதிக்கப்பட்டிருப்பதால் விசேஷத்யத்வம் அவைகளுக்குத்தகாதது என்று நியாம்யத்வாதிதர்மங்கள பரமார்த்தங்களாக இருப்பதாலும் அவைகளுக்கு ஆச்ரயங்களாக இருக்கிற சிதசித்துக்களும் பரமார்த்தங்களாக இருப்பதுபற்றி நித்யத்வம் சொல்லப்பட்டிருப்பதாலும் அவ்விரண்டுகளுக்கும் ப்ரமவிஷயத்வாஸம்பவ

‡ ஸங்காதம் — சேர்க்கை அல்லது கூட்டம்.

§ வைரூப்யம்—ஒற்றுமையின்மை.

மும் காட்டப்பட்டதாக ஆகிறது. தர்மி ஸத்யமாக இல்லாவிடில் தர்மத்திற்கு ஸத்யத்
வம் யுக்தமாகாது- பாதிக்கத்தக்கதற்கு நித்யத்வமும் யுக்தமன்று. ஸர்வபூதாத்மபூதயா-
ஸர்வபூதங்களையும் வ்யாபிக்கிற என்று அர்த்தம். விஷ்ணு சக்த்யா - விஷ்ணுவின நியு
மன சக்தியினுல்-அப்படி இல்லாவிட்டால் 'சக்திஸ்ஸாபிததாவிஷ்ணோ:' (விஷ்ணுவி
னுடைய அந்த சக்தியும் அப்படி) என்கிற அடுத்த வசநம் விரோதிப்பதால். அந்த சக்தி
யினுல் சூழப்பட்டும் வ்யாப்தங்களாகவுமிருக்கின்றன - தவறாத தாரணமானது ச்ருதி
ஸித்தம், "ஏதஸ்யவா அக்ஷரஸ்ய ப்ரசாஸநே கார்கித்யாவாப்ருதிவ்யௌ விதருதே
திஷ்டத:" (ஹேகார்கி! அழிவற்றவனும் சாச்வதனுக இருப்பவனுமான இந்த பர
மாத்மாவின் ஆஜ்ஞையில் ஆகாயம் பூமி இவ்விரண்டும் விசேஷித்து தரிக்கப்பட்டிருக்
கின்றன) என்றல்லவோ ச்ருதிசொல்லுகிறது - ஆகையால் பிபர்தி என்கிற மேல்ச்லோ
கத்திற்கு ஸாமஞ்ஜஸ்யம். ஸம்ச்ரயதர்மிணௌ - பகவானோடு அப்ருதக்ஸித்தி தர்ம
முள்ளவைகள். ப்ருதக்பாவ: - உபகாரோபகாரணி பாவரூபமான ஸம்பந்தமில்லாமை
ஸம்ஹாரம் - அந்த ஸமயத்தில் கரணகளேபரம் இல்லை ஸம்ச்ரய: - கரணகரணி பாவ
ரூபமான ஸம்பந்தம் - ஸ்ருஷ்டி என்று அர்த்தம். அன்றிக்கே ஸம்ச்ரய: அவ்விரண்டு
க்கும் ஸம்பந்தம். ஸம்ஹாரம் ப்ருதக்பாவம் மோக்ஷம். அவை அனைத்தும் பகவந்நியம
நத்தைச் சார்ந்திருக்கிறதென்று அர்த்தம். இதில் த்ருஷ்டாந்தம் கூறுகிறார்—யதா
என்று. காரணத்தினின்று கார்யத்தினது பிரிவில் (விபாகத்தில்) த்ருஷ்டாந்தம்.
வாயுவானது ஜலத்தின் துளிகளை அதினிடத்தினின்று வேறுபடுத்தி சுமக்கிறது.
ஸம்யோஜகத்வ வியோஜகத்வங்களிலாவது த்ருஷ்டாந்தம். வாயுவானது ஒன்றோடொ
ன்று சேர்க்கையுற்றதும் சேராமலிருப்பவைகளுமான நீர் துளிகளை சுமக்கிறது. அன்
றிக்கே ப்ரக்ருதியையும் புருஷர்களையும் அடைந்திருக்கிற தோஷலேசமில்லை என்பதில்
த்ருஷ்டாந்தம் - வாயுவோவென்றால் அநேக ஜலகணங்களை அந்த ஜலகணிகைகளின்
ஸ்வபாவத்தால் தொடப்படாததாக இருந்துகொண்டு பரிக்கிறது. ப்ரதாநபுருஷாத்
மந: - ப்ரதாநம் புருஷன் இவ்விரண்டுக்கும் ஆத்மாவாக இருக்கிற - ஸமஸ்த சிதசித்
வஸ்துஜாதம் என்று சர்மா அத்யாஹாரம்செய்துகொள்ளத்தக்கது. அன்றிக்கே ப்ரதாந
சப்தத்தை அடுத்திருக்கிற புருஷசப்தம் பத்தஜீவர்களைச்சொல்லுகிறது. ஆத்மசப்தமா
னது ப்ரக்ருதி ஸம்ஸர்கமில்லாத முக்தாத்மாவைச்சொல்லுகிறது. அவர்களை பரிக்கி
றான் என்று. இப்படிப்பட்ட ஜகத்துக்கு பாரமார்த்யத்தைக்கூறுகிறார்-ததேதத் என்று.
மித்த்யையானது பாதிக்கத்தக்கதாக இருப்பதால் அநித்யமன்றோ - பாரமார்த்யமிருந்தா
லன்றோ நித்யத்வம் ஸம்பவிக்கும்

உதாஹரிக்கப்பட்டிருக்கிற வசநார்த்தங்களை சுருக்கமாகச்சொல்லுகிறார்— இத்
யாதிநா என்று. நிரஸ்தநிகிலதோஷத்வமும - கல்யாணகுணைகத்வமும் 'ஸஸர்வபூத
ப்ரக்ருதிம், ஸமஸ்தகல்யாண' இதுமுதலிய ச்லோகங்களின் அர்த்தம். ஜகத்துக்களின்
உத்பத்தி முதலியவைகளை லீலையாகக்கொண்டிருத்தல் பகவத்சப்த நிர்வசநத்தினுல்
ஸித்தித்தது. 'அந்த: ப்ரவேசநியமநாதி' என்கிற இடத்திலிருக்கிற ஆதிசப்தத்தால்
அதயக்ஷத்வம் அநுமந்த்ருத்வம் இவ்விரண்டும் சொல்லப்படுகின்றன. 'இத்யாதிநா' என்
கிற இடத்திலுள்ள ஆதிசப்தத்தால் 'க்ரீடதோபாலகஸ்ய' இதுமுதலிய வசநம் விவ
க்ஷிக்கப்பட்டது. அந்த அர்த்தம் லீலாசப்தத்தால் விவக்ஷிக்கப்பட்டது. ஸர்வாவஸ்
தாவஸ்திதஸ்ய - கார்யகாரணாவஸ்தைகளில் இருக்கிற பத்தனுகவும் முக்தனுகவுமிருக்
கிற என்று அர்த்தம். ப்ரமாணாந்தரகோசரமான அர்த்தத்தை நிஷேதிப்பதற்காக
வன்றோ ப்ராந்தி ஸித்தமென்று அநுவாதத்திற்கு ஸம்பவம். பரமாத்மநியாம்யத்வம்
முதலியதோவென்றால் ப்ரமாணாந்தரங்களுக்கு அகோசரமாதலால் விதிப்பதற்கே இச்
சிக்கப்பட்டிருக்கிறது, ஆகையால் விஹிதத்திற்கு நிஷேதம் அநுபபன்னமென்கிற

அபிப்ராயத்தால், 'பாரமார்த்திகஸ்யைவ' என்று உரைக்கப்பட்டது. நியந்த்ருத்வ நியாம்யத்வாதி ப்ரதிபாதநத்தால் ஸித்தமான அர்த்தமானது சரீரமாக இருப்பதால் அதற்கு ரூபத்வம் 'ததேவஸர்வமேவைதத்' என்கிற இடத்தில் தத் என்கிற சப்தத்தோடு ஸாமாநாதிகரண்யம். 'த்வேரூபே ப்ரஹ்மணஸ்தஸ்ய' இது முதலியதால் சொல்லப்பட்ட அர்த்தத்தைக் கூறுகிறார் — சரீரரூபதத்வம்ச என்று. (ப்ரதிபாதிதமிதி) இவ்வண்ணம் சாஸ்த்ரோபக்ரமோபஸம்ஹாரங்களிலும் அவாந்தர ப்ரகரணோபக்ரமோப ஸம்ஹாரங்களிலும் ப்ரதிபாதிக்கப்பட்டிருப்பதாலென்று அர்த்தம். 'ஜ்ஞாயதே' என்கிற பதத்தை ஈற்றில்கொண்ட க்ரந்த ஸந்தர்ப்பத்தால் கூறப்பட்ட வசநங்களின் அர்த்த ஸங்க்ரஹம் செய்யப்பட்டது. உதாஹரிக்கப்பட்ட வசநங்களால் வஸ்துவுக்குஸவிசேஷத்வமும் ஜகத்திற்கு ஸத்யத்வமும் நிலைத்தது.

[illegible]

ஸ்ரீபாஷ்யம்—

'ப்ரத்யஸ்தமிதபேதம்' என்கிற இடத்தில் தேவமநுஷ்யாதி ப்ரக்ருதிபரிணாம விசேஷங்களோடுசேர்ந்திருந்தபோதிலும் ஆத்மாவின் ஸ்வரூபமானது அந்த ப்ரக்ருதிபரிணாம விசேஷங்களை அடைந்திருக்கிற பேதமில்லாமையால்

அந்தபேதத்தைச்சொல்லுகிற தேவாதிசப்தங்களுக்கு அகோசரம் ஜ்ஞாநஸத்தையையே லக்ஷணமாகக்கொண்டது-தன்னாலேயே அறியத்தக்கது ப்ரக்ராந்தயோகமுள்ளவனுடையமனதிற்குகோசரமன்று எனக்கூறப்படுகிறதென்கிற இந்த க்ரந்தஸந்தர்ப்பத்தால் ப்ரபஞ்சாபலாபமில்லை. இது எப்படி அறியப்படுகிறது என்று வினவப்படுமேயாகில் அது சொல்லப்படுகிறது-இந்தப்ரகரணத்தில் ஸம்ஸாரமாகிற ரோகத்திற்கு முக்கியமான மருந்தாக யோகத்தைச் சொல்லி @ ப்ரத்யாஹாரத்தை ஈறாகக்கொண்ட யோகாவயவங்களையும் சொல்லி Ψ தாரணை ஸித்திப்பதின்பொருட்டு சுபாச்ரயத்தைச்சொல்லுவதற்கு பரப்ரஹ்மமான விஷ்ணுவினுடைய சக்தி சப்தத்தால் சொல்லத்தக்க இரண்டு ரூபங்களையும் மூர்த்தம் அமூர்த்தம் என்கிற பாகுபாட்டுடன் ப்ரதிபாதித்து மூன்றாவது சக்திரூபமான கர்மா என்கிற அவித்யையினால் சுத்தப்பட்டிருக்கிற அசித்விசிஷ்டனை மூர்த்தமெனப்பெயருள்ள க்ஷேத்ரஜ்ஞனை மூன்று பாவனைகளின் ஸம்பந்தத்தால் அசுபனென்று சொல்லி இரண்டாவதாக இருப்பதும் கர்மாவென்கிற பெயருள்ள அவித்யையைவிட்டு விலகியதும் அசித்ஸம்பந்தமற்றதும் ஜ்ஞாநத்தையே தன் ஸ்வரூபமாகக்கொண்டதுமான அமூர்த்தமென்கிற விபாகமானது நிஷ்பந்நயோகமுள்ளவர்களால் தியானிக்கத்தக்கதாக இருப்பதாலும் ப்ரக்ராந்தயோகனுடைய மனதிற்கு ஆலம்பநமல்லாததாலும் ஸ்வத: சுத்தி இல்லாமையாலும் (அதற்கு) சுபாச்ரயத்வத்தை நிஷேதித்து பரசக்தி ரூபமான இந்த அமூர்த்தமென்ன அபரசக்தி ரூபமான க்ஷேத்ரஜ்ஞனெனப்பெயர்வாய்ந்த மூர்த்தமென்ன பரசக்தி ரூபனான ஆத்மாவுக்கு க்ஷேத்ரஜ்ஞதாப்ராப்திக்கு ஹேதுவாக இருக்கிற த்ருதீய சக்தி என்று பெயருள்ள கர்மரூபாவித்யை என்ன இப்படிப்பட்ட இந்த மூன்று சக்திகளுக்கும் ஆச்ரயமாக இருப்பதும் 'ஆதித்யவர்ணம்' இதுமுதலிய வேதாந்த வாக்கியங்களால் ப்ரதிபாதிக்கப்பட்டு ஸித்திபெற்றிருப்பதுமான மூர்த்தரூபமானது சுபாச்ரயமென்று கூறப்பட்டது.

ச்ருதப்ரகாசிகை—

அதற்குமேல் அந்யனால் உதாஹரிக்கப்பட்ட வசநங்களை முன் உதாஹரிக்கப்பட்டிருக்கிற வசநங்களின் அர்த்தத்திற்கு அநுகுணமாக வ்யாக்கியாநம்செய்ய விருப்பமுள்ளவராக முதலில் 'ப்ரத்யஸ்தமிதபேதம்' என்கிற பதத்தை தொடக்கத்தில் கொண்ட ச்லோகத்தை வ்யாக்கியாநம் செய்கிறார் — **ப்ரத்யஸ்தமித** என்று

@ ப்ரத்யாஹாரம்—வெளி இந்திரியங்களை விஷயங்களிலிருந்து அடக்குதல்.

Ψ தாரணை—தியானிக்கத்தக்க வஸ்துவினிடம் மனதை நிலைநிறுத்துதல்.

''துக்கா ஜ்ஞாநமலா தர்மா: ப்ரக்ருதேஸ்தே நசாத்மந:''(துக்கம் அஜ்ஞாநம் மலம் இவைகள் ப்ரக்ருதி தர்மங்கள், அவைகள ஆத்மதர்மஙகளல்ல)என்றும், புமாந்நதேவோநநரோநபசுர்ந சபாதப:| சரீராக்ருதிபேதாஸ்து பூபைதே கர்மயோநய:| (ராஜனே ! இந்த ஜீவாத்மா தேவனுமல்ல, மனிதனுமல்ல, பசுவுமல்ல, மரமுமல்ல, இந்த சரீரஙகளின் ஆகாரபேதங்களோவென்றால் கர்மஸம்பந்தத்தாலுண்டாயிருக்கின்றன)இது முதலியவைகளில் ப்ரக்ருதியும் தேவாதி சரீரமும் உபாதிகளென்று அறியப்படுகிறபடியால் இரண்டுவிதங்களான வசநங்களின் அர்த்தங்களை நன்றாகப்பொருத்துவதற்காக 'தேவமனுஷ்யாதி ப்ரக்ருதி பரிணம விசேஷ' என்று சொல்லப்பட்டது. 'ப்ரக்ருதே:' என்கிற இடத்தில் ப்ரக்ருதி சப்த நிர்தேசமானது சரீரமானது ப்ராக்ருதி பரிணமரூபமாக இருப்பதாலென்கிற அபிப்ராயமுள்ளது. தேவமநுஷ்யாதி சப்தத்தால் ப்ரதிஷேதிக்கத்தக்க பேதத்திற்கு சரீரத்தில் இருப்பு ;காண்பிக்கப்பட்டது. அய்யா ! முக்தாத்மாக்களுக்கு $ உபாஸ்யத்வமில்லாமையாலும் உபாஸக ஸ்வரூபமானது அசித்துடன் சேர்க்கைபெற்றிருப்பதால் ப்ரத்யஸ்தமித பேதத்வமில்லாமையாலும் அப்படிப்பட்ட தன்மையின் உபதேசம் பொருந்தாதாதலாலும் இந்த ச்லோகத்திற்கு பரிசுத்தாத்ம விஷயத்வம் பொருந்தாதாதலால் பரமாத்ம விஷயத்வம் ஸம்பவிக்கலாமென்கிற சங்கையின் பரிஹாரத்தின்பொருட்டு கூறப்பட்டது - 'தேவமநுஷ்யாதி ப்ரக்ருதி பரிணமவிசேஷ ஸம்ஸ்ருஷ்டஸ்யாபி' என்று. இப்பொழுது ஸம்ஸரிக்கிறவனுக்கும் ஸ்வாபாவிகமான ஆகாரம மறைபட்டிருப்பதால் ஆவிர்பவிக்கப்போகிற அந்த ஆகாரத்தின் அப்படிப்பட்ட அநுஸந்தாநத்திற்காக உபதேசமென்று கருத்து. 'த்ஸ்யாத்மபரதேஹேஷு ஸதோபி' என்கிற இதை ஸ்மரிப்பிப்பதற்காக 'ஸம்ஸ்ருஷ்டஸ்யாபி' என்று உறைக்கப்பட்டது. அபிசப்தம் விரோதத்தில்- பாதகியின் ஸம்ஸர்கத்தால் பாதகித்வம் உண்டாகிறது. உப்பளத்தின் ஸம்பந்தத்தால் பதார்த்தங்களுக்கு உப்புக்கரிக்கும் தன்மை உண்டாகிறது. அதனுல் விரோதம. தத்கதபேதாஹிதத்வேந - பேதம் ரூபம் வர்ணம் முதலியது. இதனுல் ப்ரத்யஸ்தமிதபேத சப்தமானது வ்யாக்கியாநிக்கப்பட்டது. ப்ரதயஸ்தமிதபேத சப்தத்தால் பேதத்திற்கு மீண்டும் உதயம் விநாசம் இவைகளின் இன்மை அபிப்பிராயப்படப்பட்டிருக்கிறது. அதனுல் ப்ரளயகால வ்யாவ்ருத்தி ஏற்பட்டது.'தத்பேதவாசிதேவாதி சப்தாகோசரம்' என்பதனுல் 'அகோசரம்வசஸாம' என்பது வ்யாக்கியாநிக்கப்பட்டது. ஜ்ஞாநஸத்தைகலக்ஷணமென்பதனுல் ஜ்ஞாநபதமும் ஸத்தாமாத்ரமென்கிற பதமும் வ்யாக்கியாநிக்கப்பட்டது. ஸத்தாமாத்ரமென்கிற பதத்திலிருக்கிற மாத்ரச்ப்ரத்யயத்தின் அர்த்தத்தை விவரிக்கின்ற ஸத்தைகலக்ஷணமென்கிற இடத்திலிருக்கிற ஏகசப்தத்தால் ஜாயதே அஸ்தி இதுமுதலிய விகாரங்கள் வ்யாவ்ருத்திக்கப்பட்டன. ஸத்தாமாத்ரமென்று சொல்லப்பட்டால் எந்த.ஆகாரத்தால் ஸத்தை என்று அபேக்ஷைவரின் ஜ்ஞாநஸத்தைகலக்ஷணமென்று உறைக்கப்பட்டது. ஜ்ஞாநத்வாகாரத்தால் ஸத்தை என்று அர்த்தம். வசஸ்ஸுகளுக்கு அவிஷயமாகில் ஸத்தா வ்யாகாத பரிஹாரத்திற்காகவும் † ந்யாய § வைசேஷிகர்களால் சொல்லப்பட்டிருக்கிற ஜடஸ்வரூபதையை நிரஸிப்பதற்காகவும் ஆத்மஸம்வேத்யம் என்கிற பதத்தின் அர்த்தத்தைக்கூறுகிருர்—ஸ்வஸம்வேத்யம் என்று. அன்றிக்கே-அகோசரம் வசஸாம் என்கிற பதங்களை ஈற்றில்கொண்டிருக்கிற பதங்களால் கல்பநாவிகாரத்தினது இன்மையும் அவைகளைச்சொல்லுகிற சப்தங்களுக்கு கோசரமாக இல்லாமையும் சொல்லப்பட்டிருக்க பேதத்தை உண்டுபண்ணு

$ உபாஸ்யன்—உபாஸிக்கத்தக்கவன்.

† ந்யாயம்—கௌதமரிஷியினுல் சொல்லப்பட்ட தர்கமதம்.

§ வைசேஷிகம்—கணுதரிஷியினுல் சொல்லப்பட்ட தர்கமதம்.

கிற தர்மமில்லாமையால் எவ்வாறு ஸ்வவ்யாவ்ருத்தி க்ரஹணமென்கிற சங்கைவரச்சொல்லுகிறார்-ஆத்மஸம்வேத்யம் என்று. ப்ரத்யக்காக பாஸித்தல் ஸ்வவ்யாவர்தகம்-மற்றவைகள் இதுவென்றல்லவோ பாஸிக்கின்றனவென்று அர்த்தம். ஜ்ஞாநபதமானது தர்ம தர்மிகள் இரண்டுக்கும் விசேஷமின்றி அஜடத்வத்தைச்சொல்லுகிறது. தர்மபூதஜ்ஞாநமான்து ப்ருஹத்தாக இருப்பதால் பரிசுத்தாத்மஸ்வரூபம் ப்ரஹ்மசப்தத்திற்கு வாச்யமாகிறது. 'ப்ருஹ்மணோஹி ப்ரதிஷ்டாஹம்' இதுமுதலிய இடங்களில்போல உபபன்னமாகிறது. யோகயுக்-யோகத்தைத்தொடங்கினவன-'ஏவம் ப்ரகாரமமலம்' என்கிற வசநத்தினால் பரமாத்மாவினிடத்தில் முக்தஸ்வபாவம் அதிதேசிக்கப்பட்டிருப்பதால் முக்தனுக்கு பரமாத்மஸாம்யம அறியப்படுகிறது. ப்ரமாத்மாவுக்கும் 'அபக்ஷயவிநாசாப்யாம்' 'ரூபவர்ணாதி நிர்தேச' இதுமுதலிய வசநங்களால் சில பேதங்களின் இன்மையும் ஆறுவிதங்களான பாவவிகாரங்களின் இன்மையும் ஸ்பஷ்டமாகயிருப்பதால் அதற்கு அநுகுணமாக அதிவிஸ்தாரமின்றி ச்லோகம் வ்யாக்யாநிக்கப்பட்டது.

இந்த ச்லோகம்முக்தாத்மவிஷயமென்பதும் அதுயோகத்தைத்தொடங்கினவனுக்கு அகோசரம் என்பதும் எவ்வாறு அறியப்படுகிறது என்கிற அபிப்ராயத்தால் கூறுகிறார்—என்று. ப்ரகரணத்தினாலேயே அறியப்படுகிறதென்று பரிஹரிக்கிறார் — தது்ச்யதே கதமிதம் இதுமுதலியதால். இந்த ப்ரகரணத்தில் இது $முக்தகசலோகமன்று, பின்னையோ ப்ரபந்தத்திலுள்ளது - ஆகையால் 'பூர்வாபராபராம்ருஷ்ட: சப்தோந்யாம்குருதேமதிம்'(முன்பின் ஸம்பந்தமில்லாவிடில் சப்தமானது வேறுபுத்தியைஉண்டு பண்ணுகிறது) என்று அதை பரிஹரிப்பதினபொருட்டு முன்பின் ஸம்பந்தத்தினாலேயே அர்த்தம் வர்ணிக்கத்தக்கதென்று கருத்து. ஸம்ஸாரைகபேஷஜதயா யோகமபிதாயதி ஏகசப்தத்தால் 'க்லேசாநாஞ்சக்ஷயகரம் யோகாதந்யந்நவித்யதே' (க்லேசங்களுக்கு க்ஷயத்தை உண்டுபண்ணுகிற வஸ்துவானது யோகத்தைவிட வேறு இல்லை, என்கிற ச்லோகத்தின் அர்த்தம் அபிப்ராயப்படப்பட்டிருக்கிறது. வாக்யார்த்த ஜ்ஞாநமாத்திரத்திற்கு மோக்ஷோபாயத்வ நிராஸமும் ஸ்போரணம் செய்யப்பட்டது. யோகாவயவாந் ப்ரத்யாஹாரபர்யந்தாநிதி 'ப்ராணாயாமேநபவநே ப்ரத்யாஹாரேணசேந்த்ரியே-வசீக்ருதே தத: குர்யாத் ஸ்திதஞ்சேதச்சுபாச்ரயே' (ப்ராணாயாமத்தால் காற்றும் ப்ரத்யாஹாரத்தால் இந்த்ரியங்களும வசீகரிக்கப்பட்டபிறகு மனதை சுபாச்ரயமான பகவானுடைய திவ்ய மங்களவிக்ரஹத்தில் நிலைபெற்றதாகச்செய்யவேண்டும்) இது முதலிய வசநங்களின் அர்த்தம் சுருங்கக்காட்டப்பட்டது. பரஸ்யப்ரஹ்மணோ விஷ்ணோ: சக்திசப்தாபிதேயமிதி 'விஷ்ணுசக்தி: பராப்ரோக்தா' என்கிற இடத்தில் விஷ்ணுவே ப்ரஹ்மத்தின் சக்தி என்று சிலர் கூறுகின்றனர். அதை வ்யாவ்ருத்திப்பதின்பொருட்டு விஷ்ணோ: என்று பிரித்துக்காட்டப்பட்டது - 'பரஸ்ய ப்ரஹ்மண: சக்தி:' 'பரமப்ரஹ்மபூதஸ்ய வாஸுதேவஸ்ய - ததஸ்ஸவாஸுதேவேதி, தத்ப்ரஹ்ம பரமம்நித்யம் - பரமாத்மாச ஸர்வேஷாம் - விஷ்ணுநாமாஸவேதேஷு வேதாந்தேஷுச, பரப்ரஹ்மஸ்வரூபஸ்ய விஷ்ணோச்சக்தி ஸமந்விதம் - சக்திஸ்ஸாபிததாவிஷ்ணோ:, (பரப்ரஹ்மத்துடன் சக்தி-பரப்ரஹ்மமாக இருக்கிற வாஸுதேவனுடைய - அதனால் அவன் வாஸுதேவனென்று-அந்தப்ரஹ்மமானது தனக்குமேற்பட்டவஸ்துவில்லாதது. சாச்வதமாகஇருக்கிறது. பரமாத்மாவும் எல்லாவற்றுக்கும்-அவன் வேதங்களிலும் வேதாந்தங்களிலும்விஷ்ணுவென்று பெயருள்ளவனென்று-பரப்ரஹ்மஸ்வரூபியான விஷ்ணுவினுடைய சக்தியோடுசேர்ந்திருக்கிறவிஷ்ணுவினுடைய அந்த சக்தியும் அப்படியே) இது முதலியவைகளால் விஷ்

$ முக்தகம்—ஒரு கிரந்தத்திலும் சேராமல் தனித்திருக்கும் சுலோகம்.

ணுவுக்கே பரப்ரஹ்மத்வமும் ஜகத்திற்கு அந்த ப்ரஹ்ம சக்தித்வமும் அவன் சக்தியினுல் நியமநஞ்செய்யத்தக்கதன்மையும் சொல்லப்பட்டிருக்கிற பற்றி அவதார பாதிக்கிற அர்தந்தவசநவிரோதத்தால் அது அயுக்தமென்று அபிப்ராயம். சக்திசப்தாபிதேயம்-அப்ருதக்ஸித்தவிசேஷணமன்றே சக்தி-ப்ரஹ்மமோ ஒன்றுக்கும் விசேஷணமல்ல - ஆகையால் விஷ்ணுவினுடையதே சக்தி - அவனன்றே பரஹ்மசப்தவாச்யன் என்று அபிப்ராயம். இந்த இடத்தில் "நாராயண: பரம் ப்ரஹ்ம, விஷ்ணுஸ்ததாஸீத்ஹரிரேவ நிஷ்கள:, பதிம்விச்வஸ்யாத்மேச்வரம், நதஸ்யேசேசஹ்ச, நதத்ஸமச்சாப்யதிகச்சத்ருச்யதே, யஸ்மாத்பரம் நாபரமஸ்தி கிஞ்சித், நதத்ஸமோஸ்த்யப்யதிக: குதோந்யோ லோகத்ரயே (நாராயணன் பரப்ரஹ்மம் - எங்கும் வ்யாபித்து இருக்கும் ஸ்வபாவமுள்ளவரும் அவயவங்களில்லாதவருமான ஹரி ஒருவரே அந்த ஸமயத்திலிருந்தார் - அனைத்துக்கும் நாதனும் தனக்குத்தான் பிரபுவும் - ஒருவனும் அவனுக்கு நாதனல்ல - அவனுக்கு ஸமானனும் மேலானவனும் காணப்படுகிறானில்லை. எவனைக்காட்டிலும் மேன்மை பெற்ற வஸ்து வேறொன்றுமில்லையோ - மூவ்வுலகங்களிலும் அவனுக்கு நிகரான வஸ்துவே இல்லை - அவ்வாறு இருக்க மேலான மற்றொருவன் ஏது) இதுமுதலிய ச்ருதி ஸ்ம்ருதிகள் அநுஸந்திக்கத்தக்கவைகள். மூன்று சக்திகளுக்கும் ஆச்ரயமாக இருக்கிற திவ்ய விக்ரஹமானது உபாஸிக்கத்தக்கதெனக் கூறப்படுகிறது - விஷ்ணுவே சக்தி என்று சொன்னால் எவ்வாறு விஷ்ணுவின் விக்ரஹத்தினுடைய ஏகதேசமானது விஷ்ணுவுக்கே ஆச்ரயம்? அதற்கு ஆச்ரயபூதமான விக்ரஹம் ப்ரஹ்மத்திற்கு இல்லையன்றோ என்றதனுல் இதுவும் தூஷணமாக பலித்தது-சக்திசப்தாபிதேயம்ரூபத்வயம் என்று, பரம் அபரம் எனப்பெயர்வாய்ந்துள்ள இந்த இரண்டு ரூபங்களுக்கும் மேலே பராபர சப்தஸமாநாதிகரணமான சக்தி சப்தத்தால் பராமர்சமிருப்பதால் பரமென்கிற ரூபகோசரமான சக்தி சப்தமானது பரமாத்மவிஷயமல்லவென்று அபிப்ராயம். தச்சவிஷ்ணோ: பரம் ரூபம். (அது விஷ்ணுவின் பரரூபம்) விஷ்ணுசக்தி: பராப்ரோக்தா (விஷ்ணுசக்தியானது 'பரா' என்று சொல்லப்படுகிறது) எனறல்லவோ கூறப்படுகிறது. 'பூபமூர்த்தமமூர்த்தஞ்ச' இதுமுதலிய வசநங்களின் அர்த்தத்தைக்கருதிச் சொல்லுகிறார்—மூர்த்த மூர்த்தவிபாகேந என்று. 'அவித்யாகர்ம ஸம்ஜ்ஞாந்யா த்ருதீயா சக்திரிஷ்யதே' என்கிற இந்த ச்லோகத்தின் அர்த்தத்தைக்கூறுகிறார்—த்ருதீயா என்று மூர்த்தாமூர்த்த விபாகேந' என்று சொல்லப்பட்டிருப்பதனுல் 'மூர்தாக்யவிபாகம்' என்று பிரித்து நிர்தேசம் செய்யப்பட்டது. (க்ஷேத்ரஜ்ஞயோகித்யேயத்யேதி) க்ருத்யப்ரத்யயமானது விதிரூபமான அர்த்தத்தில் விதிக்கப்பட்டிருக்கவில்லை, பின்னையோ சக்யம் என்கிற அர்த்தத்தைக்கருதுகிறது - 'யோகித்யேயம் பரம்பதம்' என்கிற இடத்திலும் அதே அர்த்தம். நிஷ்பன்னயோகமுடையவர்களால் தியானிப்பதற்குச் சக்யமாதலால் ப்ரக்ராந்தயோகனுக்குத்தியானிப்பதற்கு அசக்யமென்று பலித்தது- ஸ்வதச்சுத்திவிரஹாத் என்று. இங்கு சுத்திக்கு அஸ்வாபாவிகத்வம் சொல்லப்படுகிறதில்லை-பின்னையோ ஔபாதிகமான தோஷத்தை நீக்கிக்கொள்வதில் தான சக்தியற்றவனாக இருப்பதால் பகவத்ப்ரஸாதத்தை அபேக்ஷித்திருத்தல் விவக்ஷிக்கப்பட்டது—சுபாச்ரயத்வம் ப்ரதிஷித்ய என்று. 'ஸ்வத: சுத்திவிரஹாத்' என்பதனுல் சுபத்வம் நிஷேதிக்கப்பட்டது. 'அநாலம்பநதயா' என்பதனுல் ஆச்ரயத்வம் நிஷேதிக்கப்பட்டது. இதனுல் சுபாச்ரயத்வப்ரதிஷேதம் ஸித்தித்தது. சுபத்வம் ஹேயவிரோதித்வம் - ஹேயங்களில்லாமலிருத்தல் மாத்திரமல்ல - 'சிந்த்யமாத்மவிசுத்த்யர்த்தம் ஸர்வகில்பிஷநாசநம்' எல்லா பாபங்களையும் நாசம்செய்கிற பகவத் திவ்யமங்கள விக்ஹரமானது ஆத்மசுத்தியின் பொருட்டு சிந்திக்கத்தக்கது என்று) சொல்லப்பட்டிருப்பதால் மூன்று சக்திகளுக்கும் ஆச்ரயமாக இருத்தலைச்சொல்வதற்காக மூன்று சக்திகளையும் அநுவதிக்கிறார்—பர என்று. இந்த

இடத்தில் 'ஸமஸ்தாச்சக்தயச்சைதா:' என்கிற வசநத்தின் அர்த்தம் விவக்ஷிக்கப்பட்டது. 'ஏதா: சக்தய:' என்று பஹுவசநமிருந்தபோதிலும் ஸமஸ்த பதம் அநேக வ்யக்திகளை க்ரோடீகரிப்பதற்காக - பரசக்தியே பரமாத்மாவினுடைய ரூபமாதலால் பரசக்தி ரூபம் - அல்லது பரசக்த்யாத்மகம் - மேலேயும் இவ்வண்ணமாக பகவத் ஸாதாரணமென்பதனுல் சதுர்முகாதி சரீரங்களுக்கு வ்யாவ்ருத்தி ஏற்பட்டது. அந்த சரீரங்கள் பகவானுல் அதிஷ்டிதங்களாக இருந்தபோதிலும் அந்தந்த ஜீவவிசேஷாபிமான விஷயமாக இருப்பதால். ச்ருதிமூலத்தையைககாண்பிக்கிறூர் — ஆதித்ய என்று. மூர்த்த ரூபம் என்பதினுல் 'மூர்த்தேபகவதோரூபே' என்கிற வசநார்த்தம் சொல்லப்பட்டது.

அத்ர பரிஶுத்தாத்மஸ்வரூபஸ்ய ஶுபாஶ்ரயதாநர்ஹத்வம் வக்தும் "ப்ரத்யஸ்தமிதபேதம் யத்" இத்யுச்யதே | ததாஹி— "ந தத்யோகயுஜா ஶக்யம் ந்ருப சிந்தயிதும் யத: || த்விதீயம் விஷ்ணுஸம்ஜ்ஞஸ்ய யோகித்யேயம் பரம் பதம் | ஸமஸ்தாஶ்ஶக்தயஶ்சைதா ந்ருப யத்ர ப்ரதிஷ்டிதா: || தத்விஶ்வரூபவைரூப்யம் ரூபமந்யத்தரேர்மஹத் |" (வி - பு - ௬ - ௭ - ௫௫ - ௬௯ - ௭௰) இதி வததி | ததா ப்ரஹ்மாதிஸநந்தநாந்தாநாம் ஜகதந்தர்வர்திநாம் அவித்யாவேஷ்டிதத்வேந ஶுபாஶ்ரயதாநர்ஹத்வோக்த்யா, ஸநாநாமேவ பஶ்சாதுத்பூதபோதாநாம் ஸ்வஸ்வரூபாவரணாநாம் ஸ்வதஶ்ஶுத்திவிரஹாத் பகவதா ஶௌநகேந ஶுபாஶ்ரயதா நிஷித்தா— "ஆப்ரஹ்மஸ்தம்பபர்யந்தா ஜகதந்தர்வ்யவஸ்திதா: | ப்ராணிந: கர்மஜநிதஸம்ஸாரவஶவர்திந: || யதஸ்ததோ ந தே த்யாநே த்யாநிநாமுபகாரகா: | அவித்யாந்தர்கதாஸ்ஸர்வே தே ஹி ஸம்ஸாரகோசரா: || பஶ்சாதுத்பூதபோதாஶ்ச த்யாநே நைவோபகாரகா: | நைஸர்கிகோ ந வை போதஸ்தேஷாமப்யந்யதோ யத: | தஸ்மாத்ததமலம் ப்ரஹ்ம நிஸர்காதேவ போதவத் ||" (ஸ்ரீவிஷ்ணுபுராணே ௧௬-௨௩-௨௯) இத்யாதிநா பரஸ்ய ப்ரஹ்மணோ விஶேஷ: ஸ்வரூபம் ஸாதாரணமேவ ஶுபாஶ்ரய இத்யுக்தம் | அதோऽத்ர ந ஶுபாஶ்ரய: ப்ரதீயதே ||

ஸ்ரீபாஷ்யம்—

இந்த இடத்தில் பரிசுத்தாத்மஸ்வரூபத்திற்கு சுபாச்ரயதாநர்ஹதையைச் சொல்லுவதற்காக 'ப்ரத்யஸ்தமிதபேதம்யத்' என்று சொல்லப்படுகிறது. இதை நிரூபிக்கிறூர்—'ததாஹி' என்று தொடங்குகிற க்ரந்தத்தினுல், ராஜனே! யோகிகளால் தியாநிக்கத்தக்கதும் எல்லாவற்றையும்விட

சிறந்ததும் எல்லோராலும் அடையத்தக்கதுமான விஷ்ணுவென்கிற பெய ருள்ள பரமாத்மாவினுடைய இரண்டாவதான யாதொரு ரூபமுண்டோ அது யோகத்திலிழிகிறவனால் சிந்திப்பதற்குச் சக்யமல்ல. ராஜனே! எந்த ரூபத்தில் இந்த எல்லா சக்திகளும் நிலைபெற்றிருக்கின்றனவோ அது எல்லா ரூபங்களைக்காட்டிலும் விஜாதீயமானதும் வேறானதுமான ஹரியினுடைய மஹத்தான ரூபமென்றும்சொல்லுகிறது. அப்படியே ஜகத்திற்குள்ளிருக்கிற சதுர்முகன் ஸனகன் ஸநந்தனன்முதலியவர்கள் அவித்யையினால் சுற்றப்பட் டிருப்பதால் அவர்களுக்கு சுபாச்ரயதாநர்ஹதையைச்சொல்லி பத்தர்களாக வே இருந்து பிறகு யோகத்தினால் போதமுண்டாகி தன்ஸ்வரூபத்தை அடை ந்தவர்களுக்கும் ஸ்வத: சுத்தி இல்லாமையால் 'சுபாச்ரயத்வம் பகவானை சௌ நகரால் நிஷேதிக்கப்பட்டது. ஜகத்திற்குள் இருக்கிற ப்ரஹ்மதேவன்முதல் த்ருணம்ஈறாக இருக்கிற ப்ராணிகள் யாதொருகாரணத்தினால் கர்மாவினாலுண்டு பண்ணப்பட்டிருக்கிற ஸம்ஸாரத்திற்கு வசப்பட்டிருக்கிறார்களோ அதனால் அவர்கள் தியாநஞ்செய்பவர்களுக்கு தியாநவிஷயத்தில் உபகாரகர்களல்ல. அவர்கள் அனைவர்களும் அவித்யைக்கு உட்பட்டவர்களாகவும் ஸம்ஸாரகோ சரர்களாகவுமிருக்கிறார்களன்றோ. பிற்காலத்தில் உண்டாயிருக்கிற போதமுள் ளவர்களாக இருந்தபோதிலுங்கூட தியாநவிஷயத்தில் உபகாரகர்களே அல்ல. அவர்களுக்குங்கூட யாதொரு காரணத்தினால் போதமானது வேறு இடத்தி னின்று உண்டாகிறதோ அக்காரணத்தினால் ஸ்வபாவஸித்தமான போதம் கிடையாது. ஆதலால்நிர்மலமான அந்தப்ரஹ்மமானது இயற்கையாகவே ஞான முள்ளது.' இதுமுதலியதால் பரப்ரஹ்மரூபியான விஷ்ணுவின்தனக்கு அஸா தாரணமான ஸ்வரூபமே சுபாச்ரயமென்று கூறப்பட்டது. ஆதலால் இங்கு பேதாபலாபமானது அறியப்படுகிறதில்லை.

ச்ருதப்ரகாசிகை—

கூறப்பட்டுள்ள அர்த்தங்களில் இந்த ச்லோகம் எந்த அர்த்தத்தை விஷய மாகக்கொண்டது என்று வினாவினால் கூறுகிறார்—அதீ்ர என்று சுபாச்ரயதைக்குத் தகுதி இல்லாமையைச்சொல்வதற்காக கூறப்படுகிறதென்றால் வேறு இடத்தில் இதற்கு அநர்ஹத்வகதநமும மற்ற வஸ்துக்களுக்கு ததர்ஹத்வகதநமும் காணத்தக்கது என்று கேட்கில் கூறுகிறார்— ததாஹி என்று. இந்த இரண்டு அர்த்தங்களிலும் இரண்டு வசநங்களை எடுக்கிறார்— ந த த் என்று. யோகயுஜா ப்ராக்ராந்தயோகமுடைய வனால். இதனால் அநாலம்பநத்வம் கூறப்பட்டது. ஸ்வத: சுத்தி இன்மையும் ப்ரகரண ஸித்தமென்று அபிப்ராயப்படப்பட்டிருக்கிறது. ' அந்யேது புருஷ வ்யாக்ரசேதஸோ யேப்யவ்யபாச்ரயா: அசுத்தாஸ்தே ஸமஸ்தாஸ்து தேவாத்யா: கர்மயோநய:' (ஹே புருஷ ச்ரேஷ்ட! பகவத்திவ்யமங்கள விக்ரஹத்தைத்தவிர்த்த மற்ற தேவாதிகள் எவர்கள்

மனதிற்கு ஆதாரங்களாக ஆகிறார்களோ கர்மவச்யர்களான அவர்கள் அனைத்தும் அசுத்தர்கள்) இதுமுதலியதால் பகவானுடைய விக்ரஹங்களைத்தவிர்த்த மற்ற எல்லா வஸ்துக்களுக்கும் சுத்தி இல்லாமை கூறப்பட்டிருக்கிறதன்றோ. மற்ற ரூபத்திற்கு அர்ஹதையைச்சொல்வதும் இந்தரூபத்திற்கு அனர்ஹத்வவிவக்ஷைக்கு ஸூசகம் என்பதும் 'ச' சப்தார்த்தம். அங்யேது என்கிற க்ரந்தத்தால் கர்மஸம்பந்தரூபமான அசுத்தியைச்சொன்னதினால் கர்மஸம்பந்தத்தினின்று விடுபட்டவர்களுக்கும் ஸ்வத: சுத்தி இல்லாமையானது ஸூசிப்பிக்கப்பட்டது. அவர்களுக்குங்கூட சுபாச்ரயபதத்திலிருக்கிற சுபசப்தத்தால் வ்யவச்சேதிக்கத்தக்கத் தன்மையை வெளிப்படுத்துவதற்காகக் கூறுகிறார் — ததா என்று. ஸ்வஸ்வரூபாபந்நாநாம் என்கிற பதத்தினால் 'பர்ஸாதத்பூதபோதாம்ச' என்கிற பதம் வ்யாக்கியாநிக்கப்பட்டது. 'ஆப்ரஹ்ம ‡ஸ்தம்பபர்யந்தா:' என்கிற இடத்திலுள்ள ஆங் அபிவிதியை உணர்த்துகிறது-ஸ்தம்பசப்தத்தின் சேர்க்கையால். ஸ்தம்பம் கர்மவச்யமன்றோ. 'புமாந்நதேவ:' என்று தொடங்கி 'பூபைதே கர்மயோநய:' என்று சொல்லியிருப்பதால். 'தேஷாமப்யந்யதோ யத:' எனபதை ஈறாகக்கொண்டிருக்கிற க்ரந்தத்தின் அர்த்தம் முந்தி உறைக்கப்பட்டது. அதற்குமேல் 'தஸ்மாத்ததமலம் ப்ரஹ்ம' இதுமுதலியதின் அர்த்தத்தைச்சொல்லுகிறார் - பரஸ்ய என்று ஸ்வா ஸாதாரணம் என்கிற கிரந்தத்திற்கு முன்போலவே அர்த்தம் 'ப்ரத்யஸ்தமித' இதுமுதலிய ச்லோகத்திற்கு பேதநிஷேதத்தில் தாத்பர்யமில்லாமையை முடிவுசெய்கிறார் — அத: என்று.

"ज्ञानस्वरूपं च" इत्युक्त्यापि ज्ञानव्यतिरिक्तस्यात्म-
जातस्य कृत्स्नस्य न मिथ्यात्वं व्यावर्त्यते । ज्ञानस्वरूपमेव
[illegible]
[illegible] । नहि शुक्तिकाया रजततया [illegible]
भ्रान्ति[illegible] जगति कृत्स्नं रजतजातं मिथ्या भवति । [illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥

---

‡ ஸ்தம்பம்—குத்துச்செடி. (சிலர் ஒருவிதமான மிக்கச்சிறியதான புழுவென்று சொல்லுகிறார்கள்.)

ஸ்ரீபாஷ்யம்—

ஜ்ஞானஸ்வரூபம் என்கிற இடத்திலும் ஜ்ஞானத்தைக்காட்டிலும் வேறாக இருக்கிற அர்த்தங்களனைத்திற்கும் மித்யாத்வம் ப்ரதிபாதிக்கப்படுகிறதில்லை. ஜ்ஞானஸ்வரூபியான ஆத்மாவுக்கு தேவன் மனுஷ்யன் முதலிய அர்த்தங்களின் ஆகாரத்தோடு தோற்றம் ப்ராந்தி என்று இவ்வளவு மாத்திரம் சொல்லப்பட்டிருப்பதால். சிப்பியானது ரஜதமாகத் தோன்றுவது ப்ராந்தி என்று சொல்லப்பட்ட மாத்திரத்தில் உலகத்திலுள்ள எல்லா ரஜதஸமூஹமும் மித்யையாக ஆகிறதில்லையன்றோ. ஜகத் ப்ரஹ்மம் இரண்டுக்கும் ஸாமாநாதிகரண்யத்தால் ஐக்யம் தோன்றுவதால் ஜ்ஞானஸ்வரூபமான ப்ரஹ்மத்திற்கு அர்த்தாகாரதையானது ப்ராந்தி என்று சொன்னால் அர்த்தஜாதம் அனைத்துக்கும் மித்யாத்வம் சொல்லப்பட்டதாக ஆகுமென்று வினவப்படுமேயாகில் அது ஸரியல்ல. இந்த சாஸ்த்திரத்தில் பரப்ரஹ்மமாக இருக்கிற விஷ்ணுவானவர் அஜ்ஞானம் முதலிய ஸமஸ்த தோஷஸமூஹங்களையும் நிரஸனம் செய்தவரென்றும் ஸமஸ்த கல்யாண குணாத்மகரென்றும் மஹாவிபூதியுள்ளவரென்றும் அறியப்பட்டிருப்பதால் அந்த பரப்ரஹ்மரூபியான விஷ்ணுவுக்கு ப்ராந்திதர்சனம் ஸம்பவியாததலால் ஸாமாநாதிகரண்யத்தால் ஐக்யப்ரதிபாதகமும் வாக்யத்தை ஸஹியாததென்றும் விருத்தமல்லவென்றும் அடுத்தே உபபாதிக்கப்படப் போகிறது. ஆதலால் இந்த ச்லோகமும் அர்த்தஸ்வரூபத்திற்கு பாதகமன்று.

ச்ருதப்ரகாசிகை—

அதற்குமேல் 'ஜ்ஞானஸ்வரூபம்' இது முதலிய ச்லோகத்திற்கு பேதமித்யாத்வத்தில் தாத்பர்யாபாவத்தைக் கூறுகிறார்— ஜ்ஞாநஸ்வரூபமிதீதி. அபிசப்தம் ஸமுச்சயார்த்தமுள்ளது. எல்லாவற்றுக்கும் மித்யாத்வப்ரதிபாதநாபாவத்தை உபபாதிக்கிறார்— ஜ்ஞாந என்று. ஜ்ஞானஸ்வரூபனுக்கு (தேவமனுஷ்யாதி) அர்த்தாகாரமாகத்தோன்றுவது ப்ரமமாக இருக்குமேயாகில் அர்த்தாகாரத்திற்கு ஜ்ஞானஸ்வரூபமாகத் தோற்றம் ப்ரமமாக ஆகிறதில்லை என்று அர்த்தம். அதையே திருஷ்டாந்தத்தால் உபபாதிக்கிறார்— நஹி என்று. திருஷ்டாந்தத்தினால் வைஷம்யமுகத்தால் சோத்யத்தை சங்கிக்கிறார்— ஜகத்ப்ரஹ்மணோ: என்று. அந்த இடத்தில் எல்லா ரஜத§ஜாதமும் சுக்திகா$சகலத்தோடு ஸாமாநாதிகரணமாகக்காணப்பட்டிருக்கவில்லை - பின்னையோ வ்யதிகரணமாக ப்ரமாணங்களால் அறியப்பட்டதாக இருக்கிறது. ஆதலால் எல்லா ரஜதஜாதத்திற்கும் சுக்தித்வத்தோடு விரோதமில்லை. பின்னையோ ஸமாநாதிகரணரஜதத்திற்கே விரோதம் அங்கு விரோதத்தால் ஸமாநாதிக்ருதரஜதத்திற்கு மித்யாத்வமும் அவிருத்தமாயும் அஸமாநாதிக்ருதமாயுமிருக்கிற ரஜதத்திற்கு அமித்யாத்வமும். இந்தஇடத்திலோ

§ ஜாதம்—ஸமூஹம். $சகலம்—துணுக்கு.

வென்றால் ப்ரஹ்மத்தைத்தவிர்த்த அனைத்தும் ப்ரஹ்ம ஸமாநாதிகரணமாகத் தோன்றுகிறது. ஆகையால் ஜ்ஞாநாகாரத்திற்கும் அர்த்தாகாரத்திற்கும் விரோதம் வரின் அர்த்தஜாதம் அனைத்துக்கும் மித்யாத்வம் பலித்தது என்று. இதைப்பரிஹரிக்கிறார்— தத்ஸ்ரீஞ் என்று. அங்குமுதலில் அந்யனால்சொல்லப்பட்டிருக்கிற அர்த்தத்திற்கு ப்ரபந்தவாக்யார்த்த விரோதத்தைக்கூறுகிறார்— அஸ்மிந் என்று. ப்ரஹ்மத்திற்கு அவித்யாஸம்பந்தமும் ஜகத்திற்கு மித்யாத்வமும் இங்கு விருத்தம். 'ஸமஸ்தஹேயாஹிதம் விஷ்ண்வாக்யம் பரமம்பதம் - தத்ஸ்வாஸுதேவேதி - தத்ப்ரஹ்மபரமம் நித்யம் - ஹேயாபாவாச்ச நிர்மலம் - தாநிஸர்வாணி தத்வபு:-விபூதயோ ஹரேரேதா:- (ஸமஸ்தசேதநாசேதநவர்க்கங்களாலடையத்தக்கதாக விஷ்ணுவெனப்பெயருள்ள ப்ரஹ்மமானது எல்லா ஹேயகுணங்களினின்றும் விடுபட்டிருக்கிறது. அதனால் அவன் வாஸுதேவனென்று, அந்த பரப்ரஹ்மமானது சாச்வதமாயுள்ளது. ஹேயகுணங்களில்லாமையால் நிர்மலமானது - அவைகள் அனைத்தும் அவன் சரீரம - இவைகள் ஹரியின் விபூதிகள்) இதுமுதலிய வசநத்தினுலென்று அர்த்தம். 'ப்ராந்திதர்சநத:ஸ்திதம் - விஷ்ணும் க்ரஸிஷ்ணும' (ப்ராந்திதர்சநத்தினால் நிலைபெற்றிருக்கிறது - சராசரங்களனைத்தையும் பக்ஷிக்கின்ற விஷ்ணுவை) என்று குணங்களுடன்கூடின விஷ்ணுவுக்கு ப்ரமாச்ரயத்வம் உரைக்கப்படுகிறது, ஆகலால் அதுயுக்தம், பரப்ரஹ்மமோவென்றால் தோஷம் என்கிற சங்கையை விலக்குவதற்காக 'பரஸ்யப்ரஹ்மணோர்விஷ்ணோ:' என்று உரைக்கப்பட்டது 'நிரஸ்தாஜ்ஞாநாதிநிகிலதோஷகந்தஸ்ய ஸமஸ்தகல்யாணகுணாத்மகஸ்ய' என்கிற இந்த இரண்டு பதங்களாலும் அவித்யா ஸம்பந்தத்திற்கு அநுபபத்தியானது கூறப்பட்டது. அவித்யாஸம்பந்தமிருக்குமேயாகில் நிரஸ்தஸமஸ்த ஹேயத்வமும், ஸமஸ்தகல்யாணகுணாத்மகத்வமும்பொருந்தாதன்றோ 'மஹாவிபூதே:' என்பதனால்ஜகந்மித்யாத்வாநுபபத்திகூறப்பட்டது ஜகத்திற்கு பகவத் விபூதித்வமானது பரமாணாந்தரஸித்தமல்லவன்றோ-எதனால் நிஷேதத்திற்காக அநுவாதம் ஏற்படுமோ-ஆதலால் விதிக்கவே விதிக்கப்படுகிறது. விதியோவென்றால் ப்ரமத்தையுண்டுபண்ணுகிறதில்லை - அப்படி ப்ரமத்தை உண்டுபண்ணும் தன்மை சொல்லப்படும்பக்ஷத்தில் நிஷேதவசநத்திற்குங்கூட ஸத்தாநபேக்ஷத்திற்கு அஸத்வவிஷயபுத்திரூப ப்ராஹ்மபாக்யம் தடுக்கமுடியாததாக ஆகும். ப்ராமாண்யம் இரண்டுவாக்கியங்களுக்கும் ஸமானமன்றோ - ஆகையால் விதிக்கப்பட்ட அர்த்தம் பரமார்த்தமே என்பதனால் ஜகந்மித்யாத்வமில்லை என்று அர்த்தம் ஸாமாநாதிகரண்யத்தினால் ஐக்யப்ரதீதி உண்டாகுங்கால் ஜ்ஞாநாகாரார்த்தாகாரங்கள் இரண்டுக்கும் விரோதம்வருவதால் இரண்டுக்குள் ஒன்றுக்கு மித்யாத்வம் ஏற்படவேண்டும். சிப்பியே வெள்ளி என்கிற இடத்தில் போல என்கிற சங்கைவரின் கூறுகிறார்—ஸாமாநாதிகரண்யேந என்று பாதாஸஹம் - இரண்டு ஆகாரங்களில் மாத்ரம் இரண்டுக்குள் ஒன்றின்டாதத்தை அபேக்ஷியாமல்கூட ஸாமாநாதிகரண்யம் ஸம்பவிக்கிறதென்பதில்லை - பின்னையோ பாதத்தை ஸஹிக்கிறதில்லை - இரண்டு ஆகாரங்கள் ஸித்தியாமல்போமேயாகில் ஸாமாநாதிகரண்ய லக்ஷணம் ஸித்தியாதாதலாலென்று பொருள். அங்ஙனமாகில் ஒருவஸ்துவில் இரண்டு ஆகாரங்களின் விரோதம் எவ்வாறு பரிஹரிக்கப்படுகிறது? என்று கேட்கில் சொல்லுகிறார்—அவிருத்தஞ்சேதி என்று.

இரண்டு ஆகாரங்களை ஒப்புக்கொண்டபோதிலும் ஸத்வாரகமாக இருப்பதால் ஐக்யப்ரதிபாதநம் அவிருத்தம் என்று கருத்து. அநந்தரமேவ - வேறு அதிகரணத்திலல்லவென்று அர்த்தம். முதலாவதான 'ச' சப்தம் சங்காநிவ்ருத்தியைக் குறிக்கிறது. இரண்டாவது ஸமுச்சயத்தைச்சொல்லுகிறது. மித்யாத்வ பாத்வாபாவத்தை நிகமநம் செய்கிறார்—அதேர்யம் என்று. இவ்வண்ணம் ஜ்ஞாநஸ்வரூபம் என்கிற ச்லோகத்திற்கு ப்ரபஞ்சமித்யாத்வமானது பொருந்தாமையை வெளிப்படுத்தினதினால் தள்ளப்பட்டது

𑌤𑌥𑌾 𑌹𑌿 — “ 𑌯𑌤𑍋 𑌵𑌾 𑌇𑌮𑌾𑌨𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌜𑌾𑌯𑌨𑍍𑌤𑍇 । 𑌯𑍇𑌨 𑌜𑌾𑌤𑌾𑌨𑌿 𑌜𑍀𑌵𑌨𑍍𑌤𑌿 । 𑌯𑌤𑍍𑌪𑍍𑌰𑌯𑌨𑍍𑌤𑍍𑌯𑌭𑌿𑌸𑌂𑌵𑌿𑌶𑌨𑍍𑌤𑌿 𑌤𑌦𑍍𑌵𑌿𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑌸𑍍𑌵 𑌤𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 ” (𑌤𑍈-𑌉-𑌭𑍃-௧) 𑌇𑌤𑌿 𑌜𑌗𑌜𑍍𑌜𑌨𑍍𑌮𑌾𑌦𑌿𑌕𑌾𑌰𑌣𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍇𑌤𑍍𑌯𑌵𑌗𑌤𑍇 𑌸𑌤𑌿 “ 𑌇𑌤𑌿𑌹𑌾𑌸𑌪𑍁𑌰𑌾𑌣𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌵𑍇𑌦𑌂 𑌸𑌮𑍁𑌪𑌬𑍃𑌂𑌹𑌯𑍇𑌤𑍍 । 𑌬𑌿𑌭𑍇𑌤𑍍𑌯𑌲𑍍𑌪𑌶𑍍𑌰𑍁𑌤𑌾𑌦𑍍𑌵𑍇𑌦𑍋 𑌮𑌾𑌮𑌯𑌂 𑌪𑍍𑌰𑌤𑌰𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 ” । (𑌭𑌾-𑌆-௧-௨௭௬) 𑌇𑌤𑌿 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇𑌣𑌾𑌸𑍍𑌯 𑌇𑌤𑌿𑌹𑌾𑌸𑌪𑍁𑌰𑌾𑌣𑌾𑌭𑍍𑌯𑌾𑌮𑍁𑌪𑌬𑍃𑌂𑌹𑌣𑌂 𑌕𑌾𑌰𑍍𑌯𑌮𑌿𑌤𑌿 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌯𑌤𑍇 । 𑌉𑌪𑌬𑍃𑌂𑌹𑌣𑌂 𑌨𑌾𑌮 𑌵𑌿𑌦𑌿𑌤𑌸𑌕𑌲𑌵𑍇𑌦𑌤𑌦𑌰𑍍𑌥𑌾𑌨𑌾𑌂 𑌸𑍍𑌵𑌯𑍋𑌗𑌮𑌹𑌿𑌮𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌤𑍍𑌕𑍃𑌤𑌵𑍇𑌦𑌤𑌦𑌰𑍍𑌥𑌾𑌨𑌾𑌂 𑌵𑌾𑌕𑍍𑌯𑍈𑌃 𑌸𑍍𑌵𑌾𑌵𑌗𑌤𑌵𑍇𑌦𑌵𑌾𑌕𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑌵𑍃𑌤𑍍𑌤𑍀𑌕𑌰𑌣𑌮𑍍 । 𑌸𑌕𑌲𑌶𑌾𑌖𑌾𑌗𑌤𑌸𑍍𑌯 𑌵𑌾𑌕𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑌸𑍍𑌯𑌾𑌲𑍍𑌪𑌭𑌾𑌗𑌶𑍍𑌰𑌵𑌣𑌾𑌦𑍍𑌦𑍁𑌰𑌵𑌗𑌮𑌤𑍍𑌵𑍇𑌨 𑌤𑍇𑌨 𑌵𑌿𑌨𑌾 𑌨𑌿𑌶𑍍𑌚𑌯𑌾𑌯𑍋𑌗𑌾𑌦𑍁𑌪𑌬𑍃𑌂𑌹𑌣𑌂 𑌹𑌿 𑌕𑌾𑌰𑍍𑌯𑌮𑍇𑌵 ॥

ஸ்ரீ பாஷ்யம்—

இதை உபபாதிக்கிறார்-‘யதோ வா இமாநி பூதாநிஜாயந்தே, யேநஜாதாநி ஜீவந்தி யத்ப்ரயந்த்யபிஸம்விசந்தி, தத்விஜிஜ்ஞாஸஸ்வ, தத்ப்ரஹ்ம’ என்கிற ச்ருதிவசநங்களால் ஜகஜ்ஜந்மாதிகாரணம் ப்ரஹ்மம் என்று நிச்சயிக்கப்பட்டிருக்க“ இதிஹாஸபுராணாப்யாம் வேதம் ஸமுபப்ரும்ஹயேத்-பிபேத்யல்பச்ருதாத்வேதோமாமயம்ப்ரதரிஷ்யதி” (இதிஹாஸம் புராணம் இவ்விரண்டுகளாலும் வேதத்தை நன்றாக உபப்ரும்ஹணம் செய்யவேண்டும். வேதமானது என்னை இவன் ஏமாற்றிவிடுவானென்று ஸ்வல்பப்படிப்புள்ளவனிடத்தினின்று பயப்படுகிறது) என்கிற சாஸ்த்ரத்தினால் அர்த்தத்திற்கு இதிஹாஸ புராணங்களால் உபப்ரும்ஹணம் செய்யத்தக்கதென்று அறியப்படுகிறது. உபப்ரும்ஹணமாவது ஸகலவேதங்களையும் அந்த வேதங்களின் அர்த்தங்களையும் அறிந்தவர்களும் தன் யோகமஹிமையினால் நேரில் வேத தத்வார்த்தங்களைக் கண்டறிந்தவர்களுமான மஹான்களுடைய வாக்கியங்களால் தன்னாலறியப்பட்டிருக்கிற வேதவாக்கியார்த்தங்களை ஸம்சயம்தீர தெளியச்செய்வது, எல்லா சாகைகளையும் அடைந்திருக்கிற வாக்கியார்த்தமானது ஸ்வல்ப பாகத்தை செவியுற்றதனால் அறிவதற்கு அசக்யமாதலால், அதன்றி நிச்சயமுண்டாகாதாதலால் உபப்ரும்ஹணம் செய்யத்தக்கதே.

ச்ருதப்ரகாசிகை—

ஃ தற்குமேல் ச்லோகத்தை தன்பக்ஷத்தில் வ்யாக்கியானம்செய்வதற்காகத்தொடங்குகிறார்—ததாஹ என்று. இந்த இடத்தில் எதற்காக முதலாவதான ச்லோகத்தின் வியாக்கியானம்; சொல்லப்படுகிறது—'ஜ்ஞாநஸ்வரூபம்' என்கிற ச்லோகத்தில் இரண்டாமவேற்றுமைப்பதங்களுக்கு விசேஷ்யமானது விஷ்ணுவென்று அறியப்படுகிறதில்லை. அவைகளுக்கு 'ப்ரணம்ய' என்கிற பதத்தோடு அந்வயமும் அறியப்படுகிறதில்லை. ச்லோகத்திற்கு விசிஷ்டார்த்த பரத்வமும், ப்ரகரணத்திற்கு விசிஷ்டார்த்தபரத்வமின்றி அறியப்படுகிறதில்லை. ஆகையால் நமஸ்கார ச்லோகங்கள் வ்யாக்கியானிக்கத்தக்கவைகள். வ்யாக்கியானிக்கத்தக்க அந்த ச்லோகங்களில் இரண்டாவது அத்தியாயத்தின் தொடக்கத்தில் நமஸ்காரஞ்செய்தல் யாதுகாரணத்திற்காக, முதலிலேயன்றோ அது செய்யத்தக்கது என்கிற சங்கை உண்டாகிறது. சாஸ்த்ரமானது வினாவிடை ரூபமாகத்தோன்றியிருப்பதால் முதலில் வினாக்களுக்கு சுருக்கமாக மறுமொழியைக்கூறி விஸ்தாரமாகச் சொல்லவேண்டுமென்கிற எண்ணமுண்டான ஸமயத்தில் இரண்டாவது அத்தியாயத்தின் தொடக்கத்தில் நமஸ்காரம்செய்யப்பட்டது. அப்படி இல்லாவிட்டால் வினாவுக்கு அடுத்தே நமஸ்காரம்செய்யப்படாநின்றிருக்கும் ஸமயத்தில் நம்முடைய வினாவுக்கு யாது மறுமொழி உரைக்கப்படுகிறதோ என்று சிஷ்ய புத்திக்கு ¶ வ்யாகுலதை உண்டாகும் என்கிற முற்கூறப்பட்ட சங்கையின் நிரஸநம் வாயிலாக நமஸ்காரச்லோகத்தின் ‡ ஸங்கதியைக்காட்டுவதற்காக ப்ரச்நச்லோகங்கள் வ்யாக்கியானிக்கப்பட்டன. 'ஜ்ஞாநஸ்வரூபம்' என்கிற ஆரம்பக்ரந்தத்தில் நிர்விசேஷ வஸ்துவைத்தவிர்த்த மற்றவை அனைத்துக்கும் ப்ராந்தி ஸித்தத்வம் காணப்படுவதால் அதற்கு அநுகுணமாகவே அர்த்தம் மேலே வர்ணிக்கத்தக்கதென்கிற சங்கையின் பரிஹாரத்தின்பொருட்டு தொடக்கத்தில் உபக்ரமிக்கப்பட்டிருக்கிற ப்ரச்நோத்தரவாலாப ச்லோகங்களால் சாஸ்த்ரத்தால் ப்ரதிபாதிக்கத்தக்கது. விபூதிகளுடன்கூடின தேவதாவிசேஷமே ஒழிய ஜ்ஞப்திமாத்ரமல்லவென்கிற சாஸ்த்ரதாத்பர்ய ஜ்ஞாபநத்திற்காகவும் முதலாவதான ச்லோகத்தின் வ்யாக்கியானம். வ்யாக்கியானம்செய்ய விரும்பப்பட்டிருக்கிற ச்லோகத்தில் சொல்லப்பட்டிருக்கிற ப்ராந்தியின் அந்வயத்திற்கு ஸத்வாரகத்வஸித்தியின்பொருட்டு ஸாமாநாதிகரண்யம் சரீரசரீரிபாவநிபந்தநமென்பது 'யந்மயம்' என்கிற 'மயட்' ப்ரத்யயத்தால் ஜ்ஞாபிப்பதற்காகவும் ப்ரச்நச்லோகங்கள் வ்யாக்கியானிக்கப்படுகின்றன. அந்த இடத்தில் இது வேதாந்த ச்ரவணம் பண்ணினவனுடைய வினாவா? அல்லது வேதாந்த ச்ரவணம் செய்யாதவனுடைய வினாவா? என்கிற விகல்பத்தில் வேதாந்தத்தைக் கேளாதவனுக்கு விசேஷித்துவினவுதல் பொருந்தாது. வேதாந்தத்தைக்கேட்டவனுக்கு கேட்கத்தக்கது இல்லாமையால் வினாபொருத்தமுள்ளதாக ஆகாது என்கிற சங்கையின் வேதாந்த ச்ரவணம் செய்தவனுடைய வினாவென்று சொல்லுகிறார்—யதோவா இமாநி இது முதலியதால். 'அவலிதேஸதி' என்பதனால் ப்ரஹ்மமீமாம்ஸா ச்ரவணம்செய்யப்பட்டதென்பது உரைக்கப்பட்டது. வேதாந்த ச்ரவணம்பண்ணினவனுக்கு எவ்வாறு வினாபொருத்தமுள்ளதாகும் என்கிற சங்கையில் வேதாந்த ச்ரவணம் பண்ணினவனுக்கு இதிஹாஸபுராண விதியைக்காண்பிக்கிறார்—இதிஹாஸ என்று. இதிஹாஸ என்கிற பதத்தை முதன்மையாகக்கொண்ட ச்லோகத்தில் வேதசப்தம் வேதார்த்தத்தை உணர்த்துகிறது. வேதத்திற்கு உபப்ருஹ்மணங்களாக இருக்கிற தர்மசாஸ்த்திர இதிஹாஸபுராணங்களில் தர்மசாஸ்த்திரங்கள் பூர்வபாகோபப்ருஹ்மணங்கள், இதிஹாஸபுராணங்கள் மேல்பாகத்திற்கு

¶ வ்யாகுலதை—கொழப்பம். ‡ ஸங்கதி—ஸம்பந்தம்.

உபப்ரும்ஹணங்கள் என்று பாகுபாடு அறியத்தக்கது. அதுவும் ஸ்ம்ருத்யதிகரணத்தில் வெளிப்படப்போகிறது. அவற்றுள் தர்மசாஸ்திரங்களில் ப்ரஹ்ம ப்ரதிபாதகமானது கர்மாக்கள் அந்த ப்ரஹ்மாராதனரூபங்களென்பதை ஜ்ஞாபிப்பதற்காக. இதிஹாஸபுராணங்களில் கர்ம ப்ரதிபாதநமானது கர்மாக்களுக்கு ப்ரஹ்மோபாஸநாங்கத்வ ப்ரதிபாதநத்திற்காக. இதிஹாஸத்திற்கு புராணங்களைவிட †அப்யர்ஹிதத்வம் விசேஷம். 'அல்பாச்தரம்' என்கிற சப்தாநுசாஸநத்தினால் புராணசப்தத்திற்கு பூர்வ §நிபாதம் வருவதாக இருக்க அப்யர்ஹிதம் பூர்வம் " என்கிற $வார்த்திகத்தினால் ப்ரயோகத்தில் முதன்மைவாய்ந்திருக்கிற இதிஹாஸத்திற்கு அப்யர்ஹிதத்வம் அறியப்படுவதால். இந்த ச்லோகத்தினுடைய முதலாவது அர்த்தத்தை வியாக்கியானிக்கிறார்—உபப்ரும்ஹணம்நாம என்று. ஆறும்வேற்றுமையிலிருக்கிற இரண்டுவிசேஷணங்களால் ஆகமத்தாலும் விவேகத்தாலும் உண்டான ஜ்ஞாநமிருக்கிறதென்று சொல்லப்பட்டது. 'தத்வார்த்தாநாம்' என்கிற பஹுவசனமானது கபிலமதத்தைக்காட்டிலும் இதிஹாஸம் முதலியவைகளுக்கு ப்ராபல்யத்தைக்காண்பிப்பதற்காக. வ்யக்தீகரணம் - அஜ்ஞாதவிசேஷங்களோடுகூட தன்னால் அறியப்பட்டிருக்கிற அர்த்தங்களின் நிஷ்கர்ஷம். எவ்வாறு வேதத்தினால் செய்யத்தக்கதாக விதிக்கப்பட்டிருக்கிற ஸந்த்யோபாஸநம முதலியதற்கு சரீரசுத்திப்ரகாரம் தந்ததாவனம் ஸ்நாநம் முதலிய விசேஷங்களுடன்கூட நிஷ்கர்ஷமோ. இவ்வாறே உபநிஷத்பாகத்திலும் அர்த்தநிஷ்கர்ஷம் ஸம்பாதிக்கத்தக்கது. உபநிஷதர்த்த நிஷ்கர்ஷம் ப்ரஹ்மவிசாரத்தால் ஸித்தம் - ஆகையால் உபப்ரும்ஹணாபேக்ஷை இல்லை என்கிற சங்கைவரின் ச்லோகத்தின்பின் பாதியை வ்யாக்கியாநம் செய்கிறார்—ஸகல என்று. பூர்வார்த்தத்தில் விதிக்கப்பட்டிருக்கிற உபப்ரும்ஹண கார்யதைக்கு உபபாதகம் உத்தரார்த்தம் - உபப்ரும்ஹணமாவது அத்யயநம்செய்யப்பட்டிராத சாகாந்தரங்களிலுள்ள அர்த்தங்களோடுகூட அத்யயநம்செய்யப்பட்டிருக்கிற சாகைகளின் அர்த்த நிஷ்கர்ஷம் - ஆதலால் உபப்ரும்ஹண விசாரணைரபேக்ஷ்யமில்லை என்று அர்த்தம.

அய்யா! எவ்வாறு ¶ஆபாதப்ரதீதியினால் பலவாறான அர்த்தங்களை தெரிந்துகொள்வதனால் கர்மவிசாரத்திலும் அதற்கு அடுத்த ப்ரஹ்மவிசாரத்திலும் $ராகத்தால் ப்ரவ்ருத்தி உண்டாகிறதோ அவ்வாறு அத்யயநம்செய்யப்படாகின்ற *சாகையில் அடங்கி இருக்கிற "அநந்தாவைவேதா:" என்கிற வாக்கியத்தினால் வேதங்களுக்கு ஆநந்த்யம் அறியப்படுவதாலும் அத்யயநம்செய்யப்பட்டிருக்கிற சாகைகளால் அறியப்படாததும் அவைகளுக்கு அவிருத்தங்களாயும் விருத்தங்களாயுமிருக்கிற அர்த்தங்களுக்கு ஸம்பவமிருப்பதாலும் "ஸம்ருதேஸ்ச, அபிஸ்மர்யதே" இது முதலிய ஸூத்ரங்களில் வேதாந்தார்த்தத்தின் நிர்ணயத்திற்கு உபப்ரும்ஹணத்தை அபேக்ஷித்திருத்தல் காணப்படுவதாலும் உபப்ரும்ஹணச்ரவணத்தில் ராகத்தால் ப்ரவ்ருத்தி பொருத்தமுள்ளதாக ஆகிறது, அங்கு பூர்வபாகத்திற்கு உபப்ரும்ஹணங்களான தர்மசாஸ்த்திரங்களிலும் கேழ்க்கப்பட்டிருக்கிற உபநிஷத்பாகோபப்ரும்ஹணரூபமான இதிஹாஸபுராணங்களிலும் ராகத்தினால் ப்ரவ்ருத்தி உண்டாவதால் விதிக்கு வையர்த்த்யம் வருகிறது. அப்ராப்தவிஷயத்தி

---

† அப்யர்ஹிதத்வம்—மேன்மை. § நிபாதம்—ப்ரயோகம்.

$ வார்திகம் — ஸூத்ரகாரரால் சொல்லப்பட்டிராத சிலலக்ஷ்யஸித்தியைக்கருதி காத்யாயண மஹரிஷியினால் சொல்லப்பட்டிருக்கும் ஸூத்திரம்போல் கம்பீரார்த்தமுள்ள வசனம்.

¶. ஆபாதப்ரதீதி—ஸம்சயம் விபர்யயம் இவைகளை ஸஹிக்கும் புத்தி.

$ ராகம்—இச்சை. * சாகை—வேதத்தினிடைய ஓர் பாகம்.

லன்றோ சாஸ்த்திரத்திற்கு அர்த்தவத்த்வம். குருவினிடத்தினின்றே கேழ்க்கத்தக்கது என்கிற நியமவிதியுமல்ல, இந்த வசனத்தில் அதைச்சொல்லுகிற சப்தமில்லாமையால், இதிஹாஸ புராணங்களில் ச்ரவணார்த்தம் ப்ரவ்ருத்தித்தவனுக்கு இந்த வசநத்தின் அர்த்த ஜ்ஞாநம் - அந்த வசநார்த்த ஜ்ஞாநத்தால் இதிஹாஸபுராணச்ரவணத்தில் ப்ரவ்ருத்தி என்று அந்யோந்யாச்ரயதோஷமும - ஆகலால் "உபப்ரும்ஹயேத்" என்கிற விதி பொருத்தமுள்ளதாக ஆகாது என்று ஸாத்யம், பாரதம் முதலிய ப்ரபந்தவிசேஷ ச்ரவணத்தின்பொருட்டு அதின் நடுவிலிருக்கிற இந்த வசநத்தினால் நியாயஸித்தமான உபப்ரும்ஹணத்தின அபேக்ஷையானது ஸாமான்யமாக அநுவதிக்கப்படுகிறது. உபப்ரும்ஹணம்செய்யத்தக்கதென்று அறியப்படுகிறது என்கிற இந்த வசநத்திற்கு இது அர்த்தம். நியாயஸித்தமான உபப்ரும்ஹணம் செய்யத்தக்கதென்பது இந்த வசநத்தாலும் அறியப்படுகிறது என்று 'உபப்ரும்ஹணம்நாம' இது முதலிய பாஷ்யத்தினால் ந்யாயப்ராப்தியே காட்டப்படுகிறது. அன்றிக்கே - ஸமந்வயவிரோதபரிஹார லக்ஷணங்களாலேயே தத்வஸ்திதி நிச்சயிக்கப்பட்டிருப்பதாலும் வஸ்துவில் விருத்தாகாரம் ஸம்பவியாததலால் அத்யயநம செய்யப்படாநின்ற ச்ருதியினால் நிர்ணயிக்கப்பட்டிருக்கிற அர்த்தத்திற்கு விருத்தமான அர்த்தத்தை ப்ரதிபாதிக்கிற வேறு ப்ரதேசம் ஸம்பவிக்கிறதாகில் வேதத்திற்கு ப்ராந்தி ஜல்பிதத்வம் ப்ரஸங்கிப்பதாலும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிற தத்வத்திற்கு விருத்தமான அர்த்தத்தை ப்ரதிபாதிக்கிற ஒன்றின் ப்ரஸங்கத்திற்கு ஸம்பவமில்லாமையாலும் ப்ரஹ்மத்தினிடத்தில் அறியப்படாத குணவிபூதிவிசேஷமிருந்தபோதிலுங்கூட உபப்ரும்ஹண ஸஹஸ்ரங்களால்கூட அதின் (இயத்தா) பரிமாணத்தின் ப்ரதிபாதநம் பொருந்தாததலாலும் அறியப்பட்டிருக்கிற சில குணவிசேஷோபாஸநங்களுள் ஏதாவது ஒரு குணவிசேஷோபாஸநத்தினாலேயே புருஷார்த்த ஸித்திக்கு உபபத்திவருவதாலும் உபப்ருமஹண ச்ரவணத்தில் அபேக்ஷை இல்லாதவனைக்குறித்து உபப்ரும்ஹயேத் என்கிற விதியானது தகுதியுள்ளது.

அய்யா! இங்ஙனமாகில் நியாயங்களால் அநுக்ரஹிக்கப்பட்டிருக்கிற வாக்கியங்களால் அறியப்பட்டிருக்கும் வாக்யார்த்தங்களில் உபப்ரும்ஹணங்களால் நிர்ணயிக்கத்தக்கது இல்லாமையாலும், நிஷ்கர்ஷிக்கத்தக்க அம்சமானது ஸூத்ரங்களில் உதாஹரிக்கப்பட்டிருக்கிற வசநங்களாலேயே நிஷ்கர்ஷிக்கப்பட்டிருப்பதாலும், உபப்ரும்ஹணவிதியானது அத்ருஷ்டார்த்தமாக இருக்கலாம். த்ருஷ்டம் ஸம்பவிக்கிற இடத்தில் அத்ருஷ்டத்தை கல்பிப்பது ந்யாய்யமல்ல வசநம் த்ருஷ்டார்த்தத்வத்தையும காண்பிக்கிறது. 'மாமயம ப்ரதரிஷ்யதி' என்று. வேதத்திற்கு ப்ரதாரணமானது அந்தவேதத்தின் அபிப்ரேதார்த்த விபரீதமான அர்த்தத்தைவர்ணிப்பதே. ஆதலால் அந்த விபரீதார்த்த நிவ்ருத்தி ரூபமான த்ருஷ்டபலம் வாசநிகம் அது இருக்க அத்ருஷ்டத்தை கல்பிப்பது உசிதமல்ல. அங்ஙனமாகில் அதேத்ருஷ்டமானபலமென்று கூறப்படுமேயானால் அதுவும் யுக்தமல்ல. தத்வத்தின் மாறாட்டத்தைப்பற்றிய ப்ரதிபாதநத்தின் அஸம்பவத்தை நீயே சொல்லியிருப்பதாலும் ப்ரஹ்மத்தின் விபூதியை முழுமையும் அறியாமையும் அதின் எல்லா அவாந்தர விசேஷங்களை அறியாமையும் வேத ✠ ப்ரதாரணரூபமல்லாததால் அதின் நிவ்ருத்தியானது பலம் என்பது தகாததாலும். மறுமொழி கூறப்படுகிறது. பரதத்வ விஷயத்திலும் அதின் உபாஸநப்ரதிபாதநங்களிலும் @ விபர்யாஸத்திற்கு ஸம்பவமில்லே. ஆகிலும் "கிந்தேக்ருண்வந்திகடேஷு காவோ நாசிரம்துஹ்ரேந்த பந்தி வர்மம், ஆநோபரப்ரமகந்தஸ்யவேதோநைவாசாவம் மகவந்ரந்தயாந:" இது முதலிய வாக்கியங்களால் அறியப்பட்டிருக்கிற ப்ரமகந்தாதி வ்ருத்தாந்தம்போல பர

✠ ப்ரதாரணம்—ஏமாற்றுதல் அல்லது வஞ்சித்தல். @ விபர்யாஸம்—மாறாட்டம்.

மாத்மாவினால் ஸ்ருஷ்டிக்கத்தக்க தேவமனுஷ்யதிர்யகாதி விசேஷங்களும் அவைகளின் உத்பத்தியும் அவைகளின் வ்ருத்தவிசேஷங்களும் சருதிஸாமான்யத்தால் அறியப்பட்டு இருப்பதால் வாக்கியாவிவக்ஷிதத்வத்தை எண்ணிக்கொண்டு அஹல்யாஜாராதி வாக்கியங்களுக்குப் பண்டிதர்களென்கிற எண்ணங்கொண்ட மற்றவர்களால் சொல்லப்பட்ட அர்த்தத்தைப்போல் வேதத்தின் பூர்வபாகத்தையும் உபநிஷத் பாகத்தையும் அடைந்திருக்கிற மந்த்ரார்த்த வாதங்களுக்கும் வேறு விதமாக அர்த்தம எண்ணப்படுமேயானால் உபப்ரும்ஹணங்களைக்கேளாதவனாதலால் இவன் வேதத்தை வஞ்சிக்கவே வஞ்சிப்பான்; ஆனதுபற்றியே அதைப்பரிஹரிப்பதின்பொருட்டு உபப்ரும்ஹணவிதியானது உபபந்நமாகிறது. அந்யோந்யாச்ரயமுமில்லை. § ஸ்வாத்யாயவிதி வாக்யத்திற்கு ஸ்வாத்யாயத்தில் அந்தர்பாவமிருந்தபோதிலும் அத்யயநத்தினால் விதிஜ்ஞானம் - விதிஜ்ஞாநத்தினால் அத்யயநம் என்று எவ்வாறு அந்யோந்யாச்ரயமில்லையோ அப்படிப்போல அந்த இடத்தில் விதியை அறிந்த புருஷனுடைய ப்ரேரணத்தினாலாவது அதின் அநுஷ்டாநதர்சநத்தினாலாவது † மாணவகனுக்கு ப்ரவ்ருத்தி உண்டாகிறது. இவ்வண்ணமாக உபப்ரும்ஹண விதியை அறிந்த ‡ சிஷ்டஜநவாதப்ரஸித்தியாலாவது அதை அறிந்திருக்கிற தன்னுடைய குருவசநத்தினாலாவது அதனால் உபப்ரும்ஹணத்தை அறிவதில் ப்ரவ்ருத்தித்த வேறு புருஷனைப்பார்ப்பதனாலாவது உபப்ருமஹண ஜ்ஞாநம் ஸம்பாதிக்கத்தக்கதெனகிற ஜ்ஞாநத்தால் சிஷ்யனுடைய வினா பொருத்தமுள்ளதாக ஆகிறது. அதனால் உபப்ரும்ஹண விதியானது பொருத்தமுள்ளதாக ஆகாது. அந்த இடத்தில் தனக்கு குருவான பராசரருக்கு ஸர்வஜ்ஞத்வப்ரஸித்தியாலும் அதனாலேயே எல்லா வித்யாஸ்தலங்களிலும் தான் தகுந்த சிக்ஷைபெற்றவராக இருப்பதாலும் மைத்ரேயருக்கு அவரால் செய்யப்பட்டிருக்கிற புராணச்ரவணத்தில் ப்ரவ்ருத்தி உபபந்நமாகிறது.

வேறு புராணங்களைவிட இந்தப்புராணத்திற்கு மேன்மையைசொல்லப்போகிறவராக வினாக்களை அவதரிப்பிக்கிறார்—த்ந்த்ர என்று கீழ்நாட்டார் வடநாட்டார் முதலிய எல்லா வித்வஜ்ஜநங்களாலறியப்பட்டிருக்கிற இந்த புராணரத்நத்திற்கு மற்றப்புராணங்களைவிட ப்ரஸித்தி அதிகமாக இருப்பதால் தர்மசாஸ்திரத்தில் மாநவதர்மத்திற்குப்போலவும் வ்யாகரணங்களில பாணிநீயத்திற்குப்போலவும் ஸஜாதீயப்ரபந்தங்களைக்காட்டிலும் அதிக மேன்மையானது அபலாபம் செய்வதற்கு சக்யமன்று. அதினாலேயே ப்ரஸித்தி ப்ராசுர்யத்தால் கௌர்ம முதலியதற்குப்போல நஷ்டகோசத்வ சங்கையானது தூரத்தில் இடப்பட்டது. அதிக விஸ்தாரமாக இல்லாததாலும் § ப்ரக்ஷேபமென்கிற சங்கை அவதரிக்கிறதில்லை அந்யபரையான உக்தி ப்ரஸித்த பரிக்ரஹாதிசயமுள்ளது - இது "படய பராசரேதம்" என்று அக்நே:சிவஸ்யமாஹாத்ம்யம் தாமஸேஷு ப்ரகீர்த்யதே, ராஜஸேஷுசமாஹாத்ம்யமதிகம் ப்ரஹ்மணோவிது: - ஸாத்விகேஷ்வதகல்பேஷுமாஹாத்ம்யமதிகமஹரே:- தேஷ்வேவயோகஸம்ஸித்தா: கமிஷ்யந்தி பராங்கதிம் - யஸ்மிந்கல்பேதுயத்ப்ரோக்தம் புராணம் ப்ரஹ்மணாபுரா - தஸ்யதஸ்யது மாஹாத்ம்யம் தத்ஸ்வரூபேண வர்ண்யதே-' தாமஸகல்பங்களில் அக்கியினுடையவும் சிவனுடையவும் மாஹாத்ம்யம நன்குசொல்லப்படுகிறது. ராஜஸங்களில் ப்ரஹ்மாவுக்கு மாஹாத்மயம் அதிகமென்று அறிகிறார்கள். ஸாத்விககல்பங்களில் ஹரியினுடைய மாஹாத்ம்யம் அதிகம். அந்த ஸாத்

§ ஸ்வாத்யாயம்—வேதம்.

† மாணவகன்—வேதாத்யயனம் செய்கிற ப்ரஹ்மசாரி.

‡ சிஷ்டர்கள்—வேதத்தில் கூறப்பட்டுள்ள கர்மங்களை உள்ளபடி அனுஷ்டிப்பவர்கள்.

§ ப்ரக்ஷேபம்—க்ரந்தத்திலில்லாத விஷயங்களை, தாங்கள இஷ்டப்படி பண்ணி இடையில் சேர்த்துவிடுதல்.

விகல்பங்களிலேயே யோகத்தால் நல்லஸித்திபெற்றவர்கள் உத்தமகதியை அடைவார்கள். முற்காலத்தில் ப்ரஹ்மாவினால் எந்த கல்பத்தில் எந்த புராணம் சொல்லப்பட்டதோ அதின் அதின் மாஹாத்ம்யமானது அதின் ஸ்வரூபத்தால் வர்ணிக்கப்படுகிறது) என்று ஸம்யக்ஜ்ஞாநநிஷ்பாதகஸத்வமூலமாக இருப்பதாலும அந்யதாஜ்ஞாநவிபரீதஜ்ஞாநங்களுக்கு ஹேதுபூதங்களான ராஜஸ்தமஸ்ஸுகளை மூலமாகக்கொண்டிராததாலும் துஷ்டகாரணங்களுள்ள புராணாந்தரங்களோடு ஸாம்யம் எண்ணத்தக்கதன்று - ஸத்வத்திற்கு யதார்த்தஜ்ஞாநஹேதுதவமும் ரஜஸ்தமஸ்ஸுகளுக்கு அந்யதாஜ்ஞாந விபரீதஜ்ஞாநஹேதுத்வமும் "ஸத்வாத் ஸஞ்ஜாயதே ஜ்ஞாநம" (ஸத்வகுணத்தினின்று ஜ்ஞாநம் உண்டாகிறது.) "அயதாவத்ப்ரஜாநாதி புத்திஸ்ஸா பார்த்தராஜஸீ" (ஹே குந்தீபுத்ர! எது உள்ளபடி அறிகிறதில்லையோ அது ராஜஸபுத்தி) "ஸர்வார்த்தாந் விபரீதாம்ஸ்ச புத்திஸ்ஸாபார்த்ததாமஸீ" (பார்த்த! எல்லா அர்த்தங்களையும் விபரீதங்களாக எது க்ரஹிக்கிறதோ அந்த புத்தியானது தாமஸமானது.) என்கிற வசநத்தால் ஸித்தம். "ஸத்வம் லகுப்ரகாசகம் இஷ்டம்" "உபஷ்டம்பகம்சலஞ்சரஜ:"; "குருவரணகமேவதம:" "ஸர்வாஸ்தாநிஷ்பலா: ப்ரேத்யதமோநிஷ்டாஹி தா: ஸ்ம்ருதா:" (ஸத்வகுணமானது லேசானது, ப்ரகாசத்தை உண்டுபண்ணுந்தன்மையுள்ளது. எல்லோருக்குமிஷ்டமானது-ரஜஸானது கர்வத்தை உண்டுபண்ணும் ஸ்வபாவமுள்ளது சாஞ்சல்யத்தை உண்டுபண்ணும் தன்மைவாய்ந்தது. தமோகுணமானது குருத்வமுள்ளது. ப்ரகாசத்தை மறைத்தலே அதற்கு ஸ்வபாவம் - அவைகளைத்தும் லோகாந்தரத்தை அடைந்து பயனற்றவைகள் - அவைகள் தமஸ்ஸில் நிலைபெற்றவைகளென்று எண்ணப்பட்டிருக்கின்றன;என்றும் பிரஸித்தம்.

அய்யா! நான்முகன் சிவன்முதலியவர்களை ப்ரதிபாதிக்கிற புராணங்கள் ரஜஸ்தமஸுக்களை மூலமாகக்கொண்டவைகள் என்கிற வசநமும் ரஜஸ் தமஸ்ஸுக்களைமூலமாகக்கொண்டிருப்பதுபற்றி அவைகளுக்கு ப்ராமாண்யமில்லாமையால ஸாத்விக புராணங்களுக்கு ப்ராபல்யம் ஸித்திக்கிறதில்லை. இந்த வசநம் ஸத்வமூலமென்பதில் ப்ரமாணம் கிடையாது - அதனாலேயே அந்த வசநமாத்ரத்திற்கு அப்ராமாண்யம் சொல்வது யுக்தமே ஒழிய பஹுபுராணங்களுக்கு அப்ராமாண்யம் சொல்வது யுக்தமல்ல - ஒருங்கு சேர்ந்த அநேகங்கள் அதிக பலமுள்ளதாதலால். (மறுமொழி) சொல்லப்படுகிறது. இந்த வசநத்திற்கு ப்ராமாண்யத்தில் விவாதம் ந்யாயமல்ல. பாதகம் காணப்படாமையாலும் தானாகவே ஸித்தித்திருக்கிற ப்ரமாண்யமானது மறுக்கப்படாமையாலும் "யோஹகலுவா அஸ்யராஜஸோம்ச: ஸோஸௌ ப்ரஹ்மசாரிணோயோயம் ப்ரஹ்மா - யோஹகலுவா அஸ்ய ஸாத்விகோம்ச: ஸோஸௌ ப்ரஹ்மசாரிணோயோயம் விஷ்ணு: - யோஹகலுவா அஸ்யதாமஸோம்சஸ்ஸோஸௌ ப்ரஹ்மசாரிணோயோயம்ருத்ர:" (இந்த ப்ரஹ்மசாரியினுடைய யாதொரு ராஜஸாம்சமுண்டோ அந்த அம்சந்தான் ப்ரஹ்மா - இந்த ப்ரஹ்மசாரியினுடைய ஸாத்விகாம்சம் எது உண்டோ அதுதான் விஷ்ணு - இந்த ப்ரஹ்மசாரியினுடைய யாதொரு தாமஸாம்சமுண்டோ அதுதான் ருத்திரன்) என்றும். "மஹாப்ரபுர்வைபுருஷ: ஸத்வஸ்யைஷ ப்ரவர்த்தக:" (புருஷசப்தத்தால் சொல்லத்தக்க ஸ்ரீமந்நாராயணன் எல்லாவற்றையும் வ்யாபித்துக்கொண்டிருப்பவர் (விபு எல்லாவற்றுக்கும் நியந்தாவாக இருப்பவர் - இவர் ஸத்வத்திற்கு ப்ரவர்தகர்) என்றும் ச்ருதிகளின் ஒற்றுமையினால் அந்தந்த குணமயமாக அறியப்பட்டிருக்கிற அந்தந்த தத்வங்களின் அந்தந்த கல்பத்தில் அந்தந்த குணமயனான ப்ரஹ்மதேவனால் அந்தந்த புராணங்களில் ப்ரதிபாதநத்தை ப்ரதாநமாகக்கொண்டிருக்கிற வசநத்திற்கு அர்த்தம் பொருத்தமுள்ளதாக இருப்பதாலும் - ஸகலசாஸ்த்ரார்த்தங்களையும் நிலைநிறுத்துகின்ற மஹாபார

தத்தில் மோக்ஷதர்மத்தில் "ஜாயமாநம்ஹி புருஷம் யம் பச்யேந்மதுஸூதந:। ஸாத்விக ஸஸது விஜ்ஞேய: ஸவைமோக்ஷார்த்தநிச்சய:" (மதுஸூதநனான ஸ்ரீமந்நாராயணன் எந்த புருஷனை பிறக்கும் தருணத்தில் கடாக்ஷிக்கிறானோ அவன் ஸாத்விகனென்று அறியத்தக்கவன். அவனே மோக்ஷார்த்த நிச்சயமுள்ளவன்) இதுமுதலியதால் பகவத் கடாக்ஷத்தால் ஸத்வகுணமூலஸம்யக்ஜ்ஞாந நிச்சயத்தைச்சொல்லி "பச்யத்யேநம்ஜாயமாநம் ப்ரஹ்மாருத்ரோதவாபுந:। ரஜஸா தமஸாசாஸ்யமாநஸம்ஸமபிப்லுதம்" (பிறக்கிற ஸமயத்தில் எந்தசேதநனை ப்ரஹ்மதேவனாவது ருத்ரனாவது பார்க்கிறானோ அப்பொழுது அவனுடைய மனதானது ரஜோகுணத்தாலும் தமோகுணத்தாலும் முறையே நன்கு கவரப்படுகிறது) என்று நானமுகன் சிவன் இவர்களுடைய கடாக்ஷத்தினால் ரஜஸ்தமஸ் அடியாக உண்டாகிற காலுஷ்யப்ரதிபாதநத்தாலும் நான்முகனையும் சிவனையும் ப்ரதிபாதிக்கிற ப்ரபந்தங்களுக்கு ரஜஸ் தமஸ்ஸுகளை அடியாகக்கொண்டிருத்தல் பொருத்தமுள்ளதாக ஆகிறது. இந்த வசநமானது ரஜஸ் தமஸ்களை மூலமாகக்கொண்ட புராணத்திலிருந்தபோதிலும் அப்ராமாண்யம் சங்கிக்கத்தக்கதல்ல, ப்ரஹ்மா சிவன் முதலியவர்களைப் புகழ்வதில் அதிக ஆவலுள்ள ப்ரபந்தத்திற்கு பகவானுடைய மேன்மையைச் சொல்வதில் ஆக்ரஹமில்லாமையால் இந்த வசநத்திற்கு தத்வபரத்வம் உபபன்னம் சொல்லுகிறவனுக்கு தன்னால் ப்ரதிபாதிக்கத்தக்க தேவதையினிடத்திலன்றோ ஆக்ரஹம் ஸம்பவிக்கிறது. வேறு தேவதையினிடத்திலுண்டாகாது. ஆகையால் இந்த வசநத்திற்கு காரணதோஷஸம்பவமில்லை. அனேக புராணங்களுக்கு அப்ராமாண்யம் சொல்வதைவிட இந்த வசநமாத்திரத்திற்கு அப்ராமாண்யம் தகுதியுள்ளது. ஒன்றுசேர்ந்திருக்கிற அனேகங்கள் அதிக பலமுள்ளதாதலால் என்று எது உரைக்கப்பட்டதோ அதுயுக்தமன்று. நேராக அர்த்தவிரோதமில்லாமையால் ப்ரஹ்மாவையும் சிவனையும் ப்ரதிபாதிக்கிற ப்ரபந்தங்களுக்கு ரஜோகுண தமோகுண மூலத்வமில்லை என்று அந்த புராணங்களில் அறியப்படுகிறதில்லையன்றோ. அந்தந்த ப்ரபந்தங்களிலேயே ப்ரமாணங்களாக நிச்சயிக்கப்பட்டிருக்கிற அவைகளுக்கு ப்ராமாண்யமும் ரஜோகுணதமோகுண மூலத்வமும் விருத்தமென்பதினால் பரம்பரையினால் விரோதம் பலித்தது. அங்கு பூயஸாம்பலீயஸ்த்வம் என்று சொல்லப்படுமேயானால், தனித்த இந்த வசநமாத்ர விரோதத்தால் அவைகளுக்கு அப்ராமாண்யம் ஏற்படுமாகில் அப்பொழுது இந்த தோஷமுண்டாகலாம். புராணங்களுக்கு ஒன்றோடொன்று விரோதமிருப்பதனால் எல்லாவற்றுக்கும் விசேஷமின்றி ப்ராமாண்யமானது அநுபபந்நமாக இருக்க எல்லாவற்றுக்கும் அப்ராமாண்யம் சொல்வதைவிட சிலவற்றின் ப்ராமாண்ய ஸித்திக்கு அநுகுணமான நிர்வாஹம் ந்யாய்யமாக இருக்க எதற்கு ப்ராமாண்யம் என்று அபேக்ஷையின் இந்தவசநமானது விஷயங்களின் வ்யவஸ்தையை மாத்திரம் செய்கிறது. ஆகையால் இதனால் ஸத்வாதிமூலத்வம் ஜ்ஞாபிக்கப்பட்ட அளவில் அதுஷ்டமூலங்களான ப்ரபந்தங்களால் துஷ்டமூலப்ரபந்தங்களுக்கு பாதம் ஸித்திக்கிறது. ஆகையால் பூயஸாம் பலீயஸ்த்வந்யாயத்தால் அந்த வசநத்திற்கு பாதமில்லை. பகவானை ப்ரதிபாதிக்கிற புராணங்களைவிட ப்ரஹ்மாவையும் சிவனையும் ப்ரதிபாதிக்கிற புராணங்கள் அதிகமாக இருப்பதால் அவைகளுக்கு ப்ராமாண்யமென்று சொல்லப்படுமேயானால் இந்த வசநமேவென்றால் அபாதிதமானது. இங்கே பூயஸாம்பலீயஸ்த்வ ந்யாயத்திற்கு அவதாரமில்லாமையால் இவ்வண்ணம் பாதகமில்லாத இந்த வசநத்தினால் புராணங்களுக்கு ஸத்வாதிமூலத்வம் அறியப்பட்டிருக்குமளவில் துஷ்டமூலபுராணபாகுள்யம் அதுஷ்டமூலமான ஒரு புராணத்தைக்கூட பாதிப்பதற்கு ஸாமர்த்தியமுள்ளதாக ஆகாது. ப்ராந்தியுள்ள ஆயிரம் மனுஷ்யர்களுடைய வசநங்களால் ப்ராந்தி இல்லாத ஒரு மனிதனுடைய வசநம் பாதிக்கப்படுகிறதில்லையன்றோ; ஆகையால் பகவானை ப்ரதிபாதிக்கிற தன்மைவாய்ந்திருப்பதுபற்றி ஸத்வமூல

மாகஇருப்பதால் காரணதோஷமில்லை. அவ்வாறே புராணாந்தரங்களுக்குப்போல இதற்கு பாதகப்ரத்யயம் காணப்படுகிறதில்லை. நாராயணனுக்கே பரமகாரணத்வத்தை ப்ரதிபாதிப்பதால் ப்ரத்யக்ஷ ச்ருதிகளிலோ நாராயணனுக்கே ஸாமாந்ய சப்தவிசேஷ சப்தங்களால் காரணத்வத்தை உரைத்து "நசாஸ்யகஶ்சித்ஜநிதா நசாதிப:" 'நதத்ஸமஶ்சாப்யதிகஶ்ச த்ருச்யதே" "நஹ்யேதஸ்மாதிதிநேத்யந்யத பரமஸ்தி" "யஸ்மாத் பரம்நாபரமஸ்திகிஞ்சித்" (இவனை ஒருவனும் உண்டுபண்ணவில்லை, இவனுக்கு மேலதிகாரி கிடையாது, அவனுக்கு ஸமனானவனும் மேலானவனும் காணப்படுகிறானில்லை. இவ்வித மகிமைபொருந்தியவன், இவனைக்காட்டிலும் மற்றொருவனில்லை, இவனைவிடச் சிறப்புடையது ஒன்றுமில்லை, எவனைவிட பெருமைவாய்ந்தது வேறு ஒரு வஸ்துவுமில்லையோ) என்று காரணபூதனான அவனைத்தவிர்த்த வேறு வஸ்துவுக்கு பரத்வமும் நிஷேதிக்கப்படுகிறது. "நப்ரஹ்மா நேசாந:" "தத்ரப்ரஹ்மாசதுர்முகோஜாயத, 'த்ர்யக்ஷ: சூலபாணி: புருஷோஜாயத' 'ததோஜஜ்ஞ உக்ரஸ்த்ரிலக்ஷக்ருந்மண:' 'விரூபாக்ஷாய ப்ரஹ்மண: புத்ராய,' அஜஸ்யநாபாவத்யேகமர்பிதம் - ஸப்ராஜாபதிரேக: புஷ்கரபர்ணே ஸமபவத் - யந்நாபிபத்மாதபவந் மஹாத்மாப்ரஜாபதி: (ப்ரஹ்மாவுமில்லை, ஈசாநனென்கிற ருத்திரனுமில்லை, அந்த நாராயணனிடத்தில் நான்கு முகமுள்ளவனாக ப்ரஹ்மா உண்டானார். முக்கண்களுள்ளவனும் சூலாயுதத்தை கையில் ஏந்தினவனுமான புருஷன் பிறந்தான். அவனிடத்தினின்று கோபத்தால் ஜ்வலிக்கிற உக்ரன் பிறந்தான். பற்பல ரூபங்களுள்ள கண்களுடன்கூடியவனும் நான்முகனுக்குப்புதல்வனாகவுமிருக்கிற சிவனின்பொருட்டு - பிறப்பில்லாதவனான ஸ்ரீய:பதியினுடைய நாபியின்மீது ஒருதாமரைமலர் வைக்கப்பட்டிருந்தது. அந்த ப்ரஜாபதி என்கிற ஒருபுருஷன் தாமரைமலரில் உண்டானான். எவனுடைய நாபிக்கமலத்தினின்று மஹாத்மாவான ப்ரஜாபதி உண்டானாரோ) என்று ப்ரஹ்மா சிவன் இரண்டுபேர்களுக்கும் நாராயணனிடத்தினின்று உத்பத்தியானது கேட்கப்படுகிறது. லிங்கபுராணத்தில் ப்ரஹ்மா விஷ்ணு இருவர்களைக் குறித்து "யுவாம்ப்ரஸூதௌகாத்ரேப்யோ மம பூர்வம் ஸநாதநௌ" (சாச்வதர்களான நீங்கள் இருவர்களும் என் அங்கங்களினின்று முன்பு உண்டானீர்கள்) என்கிற ருத்ரனுடைய வசநத்தால் ருத்ரனிடத்தினின்று ஹரி, சதுர்முகன் இவர்களுக்கு உத்பத்தி அறியப்படுவதால் புராணாந்தரங்களுக்கு ச்ருதி விரோதம் மிகவும் ஸ்பஷ்டமாக இருக்கிறது. ஆனால் சிலர்களால் மூன்று தேவர்களுக்கும் ஸாம்யமும் ஐக்யமும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆயினும் இந்த விரோதம் எவ்விதத்தாலும் பரிஹரிக்க முடியாதது. ஸாம்யத்தைப்பெற்றவர்களும் ஒன்றாக ஆகி இருப்பவர்களாகவுமுள்ள அந்த மும்மூர்த்திகளுடைய உத்பத்தி ப்ரதிபாதநத்தில் பகவானிடத்தினின்று நான்முகனுக்கும் சிவனுக்கும் உத்பத்தி கேட்கப்படுவதாலும் ருத்ரனிடத்தினின்று மற்றவர்கள் இருவர்களுக்கும் ஒரு வாக்கியத்திலும் உத்பத்திக்கு ச்ரவணமில்லாமையாலும்காரணவாசிகளான சிவாதிசப்தங்களுக்கு ஆகாசாதிகளுக்குப்போல சார்யமென்று அறியப்பட்டிருக்கிற ப்ரஸித்தருத்ராதிபரத்வமில்லாமையாலும் 'ஸர்வேவிஷ்ணுமயாவேதா: ஸர்வேவிஷ்ணுமயாகுணா:' நஹிவிஷ்ணுஸமா காசித் கதிரந்யா விதீயதே - இத்யேவம்ஸததம்வேதா காயந்தேநாத்ரஸம்சய: (எல்லா வேதங்களும் விஷ்ணுமயங்கள். எல்லா குணங்களும் விஷ்ணுமயங்கள். விஷ்ணுவுக்கு ஸமானமான வேறு ஒரு கதியும் விதிக்கப்படவில்லை. இவ்வண்ணம் எப்பொழுதும் வேதங்கள் சொல்லுகின்றன. இதில் ஸம்சயமில்லை) என்று லைங்கம் முதலியதில்கூட வேதங்களுக்கு பகவத்பரத்வ ப்ரதிபாதகத்வம் ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதாலும் ஆகையால் நாராயணனுக்கே பரமகாரணத்வத்தைச்சொல்லுகிற ப்ரத்யக்ஷ ச்ருதிகளால் பாதகப்ரத்யயமுள்ள வேறு புராணங்களைக்காட்டிலும் வைலக்ஷண்யம் ஸ்பஷ்டம். அவ்வாறே நாராயணனையே பரமகாரணமாக ப்ரதிபாதிக்கிற மாநவாதி தர்மசாஸ்த்திரங்க

னோடும் அர்த்தைக்யம் ஸ்பஷ்டம். "ஆபோநாரா இதிப்ரோக்தா:, தத்விஸ்ருஷ்டஸ்ஸ புருஷ:, வித்யாத்து புருஷம்பரம், நாராயண: பரோऽவ்யக்தாத்" (ஜலம் நாரமென்று சொல்லப்பட்டிருக்கிறது, அவனால் உண்டுபண்ணப்பட்ட அந்த புருஷன், பரமபுருஷனென்று அறியவேண்டும். அவ்யக்த சப்தவாச்யமான மூலப்ரக்ருதியைக்காட்டிலும் வேறாகவும் மேன்மையுள்ளவனாகவுமிருப்பவன் நாராயணன்.) இது முதலிய வசநங்களால் நாராயணனுக்கன்றோ காரணத்வம் அவைகளில் கூறப்படுகிறது. புராணாந்தரங்களோவென்றால் தர்மசாஸ்த்ர விருத்தங்கள். அவ்வாறு $ வக்த்ருவைலக்ஷண்யமும் ப்ரத்யக்ஷச்ருதி ஸித்தமாக இருக்கிறது. "ஸஹோவாச வ்யாஸ: பாராசர்ய:" என்று, இந்த இடத்தில் பராசருடைய புத்திரனாக இருப்பதால் வ்யாஸருக்கு மேன்மை கூறப்படுகிறது. அவ்வாறே லிங்கத்திலும் பராசருக்கு வைலக்ஷண்யம் அறியப்படுகிறது, எப்படி என்றால் அந்த கிரந்தத்தில் இரண்டாவது அத்தியாயத்தில் "பராசரஸ்யாவதாரோவ்யாஸஸ்ய ச சுகஸ்யச - விநாசம் ராக்ஷஸாநாந்து க்ருதம்வை சக்திஸூநுநா" (பராசருடையவும, வ்யாஸருடையவும், சுகருடையவும், அவதாரம் (உரைக்கப்பட்டது) சக்தியின் புதல்வரான பராசரரால் அரக்கர்களுடைய விநாசம்செய்யப்பட்டது.) என்று. இந்த இடத்தில் 'பராசரஸ்ய அவதார:' என்கிற வசநமானது அதிக மேன்மையைக் காட்டுவதற்காக. அப்படி இல்லாவிட்டால் 'பராசரஸ்யசோத்பத்திர்வ்யாஸஸ்ய ச சுகஸ்யச' என்றும் சொல்வதற்கு சக்யமன்றோ. § புலஸ்த்ய வஸிஷ்ட மகரிஷிகளுடைய வரதாநத்தாலடையப்பட்ட தேவதாபாரமார்த்யஜ்ஞாநவத்த்வமும் மஹத்தான வைலக்ஷண்யம். வரதானம் ஸித்தித்தால் இந்த புராணத்திற்கு ப்ராமாண்யம், புராண ப்ராமாண்யம் ஸித்தித்தால் அந்தப் புராணத்தாலறியப்பட்டிருக்கிற வரலாபத்திற்கு ஸத்யத்வம்என்று அந்யோந்யாச்ரயதோஷம்வருகிறதென்று சொல்லத்தக்கதல்ல வரலாபவசநத்திற்குப்பராசரர் வரலாபத்தைப்பெற்றவரல்லர் என்கிறபாதகப்ரத்யயமில்லாமையால் ஸ்வதஸ்ஸித்தமான ப்ராமாண்யத்திற்கு அபவாதமில்லை. பராசருக்கு தேவதாபாரமார்த்யஜ்ஞாநலாபம் லிங்கத்திலும் அறியப்படுகிறது. எப்படி என்றால் அந்த லிங்கத்தில் இரண்டாவது அத்யாயத்தில் "தேவதாபாரமார்த்யஞ்ச விஜ்ஞாநஞ்ச ப்ரஸாதத: புராணகரணஞ்சைவ புலஸ்த்யஸ்யாஜ்ஞயா குரோ:" (குருவான புலஸ்த்யருடைய ஆஜ்ஞையினால் தேவதாபாரமார்த்யஜ்ஞாநமும் அந்த குருவினுடைய ப்ரஸாதத்தினால் புராணம் செய்யும் சக்தியும் (ஸித்தித்தது) என்றும். அதிலேயே அறுபத்துமூன்றாவது அத்தியாயத்தில் 'அத தஸ்ய புலஸ்த்யஸ்யவஸிஷ்டஸ்யசதீமத:, ப்ரஸாதாத் வைஷ்ணவம் சக்ரேபுராணம்வைபராசர:(பிறகு சிறந்தபுத்தியுள்ளவர்களானபுலஸ்த்யவஸிஷ்டமஹரிஷிகளுடைய ப்ராஸதத்தினால் பாராசரர்விஷ்ணுபுராணததைச்செய்தார் என்றும், அதற்கடுத்து "ஷட் ப்ரகாரம் ஸமஸ்தார்த்த ஸாதகஜ்ஞாந ஸம்ச்ரயம். தசஸாஹஸ்ரமமிதம் ஸர்வவேதார்த்த ஸம்யுதம (ஆறு அம்சங்களுள்ளதும் ஸமஸ்த புருஷார்த்தஸாதகஜ்ஞாநத்திற்கு ஆதாரமாக இருப்பதும் பதினாயிரம் க்ரந்தங்களடங்கியதும் அபரிமிதமான கௌரவமுள்ளதும் எல்லா வேதங்களின் அர்த்தங்களோடு சேர்ந்ததுமான) என்கிற இந்த ச்லோகத்தால் இந்த புராணரத்நத்திற்கு எல்லா வேதாந்தங்களோடும் சேர்ந்திருத்தலும் அதனாலேயே ஸமஸ்த புருஷார்த்த ஸாதகஜ்ஞாந ப்ரஸாதகத்வமும் சொல்லப்படுகிறது. ஆகையால் வக்த்ருவைலக்ஷண்யமும் ப்ரபந்த வைலக்ஷண்யமும புராணாந்தரத்தால் ஸித்தமாக இருப்பதினால் அது எவ்விதத்தாலும் மறுக்கமுடியாது. இதுவும் வேறு மிகவும் மஹத்தான வைலக்ஷண்யமிருக்கிறது, அதாவது-ப்ரபந்தத்தின் தொடக்கத்தில் பொதுவாக வினா

$ வக்தா—க்ரந்தங்களை இயற்றுகிறவன்.

§ புலஸ்த்தியர்—ராக்ஷஸவர்க்கங்களுக்கு கூடஸ்தர்.

இருக்க அதற்கு விசேஷத்தை ஆதாரமாகக்கொண்டு மறுமொழிகூறி இருத்தல்தான். "ஸோऽஹமிச்சாமி தர்மஜ்ஞ ! ச்ரோதும் த்வத்தோ யதா ஜகத், பபூவ பூயச்ச யதா மஹாபாக பவிஷ்யதி - யந்மயஞ்ச ஜகத் ப்ரஹ்மந் யதச்சைதச்சராசரம். (தர்மங்களை அறிந்தவரே ! மகாபாக்கியமுள்ளவரே அப்படிப்பட்ட நான் ஜகத் எப்படி உண்டாயிற்று, மறுபடியும் எப்படி உண்டாகப்போகிறது, ப்ரஹ்மந் ஜகத்தானது எவனால் வியாபிக்கப்பட்டிருக்கிறது. இந்த சராசரங்கள் அனைத்தும் எவனிடத்தினின்று உண்டாகிறது, இவைகளை உம்மிடத்தினின்று கேழ்க்கவிருப்பமுற்றிருக்கிறேன்) இது முதலியதால் பொதுவாக வினவப்பட்டிருக்க 'விஷ்ணோஸ்ஸகாசாதுத்பூதம்' (விஷ்ணுவின் பக்கத்திலிருந்து ஜகத் உண்டாயிற்று) என்று விசேஷத்தை அவலம்பித்தன்றோ மறுமொழி என்று அறியப்படுகிறது. விசேஷம் வினவப்பட்டிருந்தால் ப்ரதிவசநமானது வினவப்பட்டிருக்கிற விசேஷத்தில் பக்ஷபாதத்தால் அதற்கு மேன்மையைச்சொல்வதில் நோக்கமுள்ளது ப்ரசம்ஸாமாத்ரம், தத்வபரமல்லவென்று ஸந்தேஹிக்கதக்கதாக ஆகலாம். (ஸாமாந்யமாக) பொதுவாக வினவப்பட்டிருக்கும் ஸமயத்தில் ப்ரதிவசநமானது அர்த்தவசத்தால் விசேஷத்தில் பர்யவஸாநத்தை அடைகிறதாதலால் தத்வபரத்வமே இருக்கலாம். ஆதலால் 'தஸ்மாத்பவந்தம் ப்ருச்சாம: ஸூதபௌராணிகாத்யது, புராணஸம்ஹிதாம் புண்யாம் லிங்கமாஹாத்ம்யஸம்யுதாம் (ஹே ஸூதபௌராணிக ! ஆதலால் இப்பொழுது பாவநமானதும் லிங்கமாஹாத்ம்யத்துடன் கூடியதுமான புராணஸம்ஹிதையை உம்மிடத்தினின்று கேழ்க்கிறோம்) என்று விசேஷத்தை ஆச்ரயித்து ப்ரச்நத்தின் தொடக்கமும் அதற்கு ப்ரதிவசநரூபமாயுமுள்ள புராணாந்தரங்களைக்காட்டிலும் மிக்கமேன்மை நன்கு ஸ்பஷ்டமாக இருக்கிறது. இந்த புராணத்தினுடைய அர்த்தமும் லைங்கம் முதலியவைகளில் சிற்சில இடத்தில் அங்கீகரிக்கப்படுகிறது. எப்படி என்றால் லைங்கத்தில் இரண்டாவதான புராணார்த்தாநுக்ரமணத்தில் "ஸர்வாவர்தேஷு விஷ்ணோச்ச ஜநநம் லீலையவது, விஷ்ணோ: ப்ரஸாதாஜ்ஜிஷ்ணோச்ச விஷ்ணோச்சைவாதுஸம்பவ: (எல்லா ஜாதிகளிலும் விஷ்ணுவினுடைய ஜநநமானது லீலாமாத்ரத்தினாலேயே ஏற்படுகிறது. விஷ்ணுவினுடைய ப்ரஸாதத்தினால் அர்ஜுனனுக்கும் விஷ்ணுஸ்வரூபியான க்ருஷ்ணனுக்கும் உத்பத்தி) அதில் "லீலயைவச க்ருஷ்ணேந ஸ்வகுலஸ்யச ஸம்ஹ்ருதி: - ஜராகாஸ்த்ரச்சலேநைவ கமநம் ஸ்வேச்சயைவது (க்ருஷ்ணனால் தன் வம்சத்தின் ஸம்ஹாரமானது லீலையினாலேயே செய்யப்பட்டது. ஜரகனென்கிற வேடனால் கண்ணனுடைய திருவடியைக்குறிவைத்து எய்யப்பட்டிருக்கிற அம்பினால் உண்டுபண்ணப்பட்ட ஹிம்ஸா வியாஜத்தினாலேயே தனிச்சையினாலேயே வைகுண்டகமநம்) என்று பகவதவதாரம் பூலோகபரித்யாகம் இரண்டும் லீலாமாத்ரத்தையன்றோ ஹேதுவாக உடையதென்று அங்கு சொல்லப்படுகிறது அதனாலேயே இந்த புராணார்த்தமானது வேறு கிரந்தங்களில் ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதால் அசைக்க ஒண்ணாமை அறியப்படுகிறது. அங்ஙனமாகில் இத்தோடு அர்த்தைக்யமிருப்பதால் அந்த புராணங்களும் ப்ரமாணங்களாக ஆகட்டுமென்று சொல்லப்படுமேயாகில் அல்ல. முற்றிலும் அவிரோதமில்லாமையால் பகவானுக்கு மேன்மையை ப்ரதிபாதிக்கிற அம்சமோவென்றால் ஆக்ரஹமில்லாமையால் ஆதரிக்கத்தக்கதென்று முன்னமே சொல்லப்பட்டிருக்கிறது. இந்த புராணம் முழுமையும் ஆக்ரஹமடியாகப்பிறக்கவில்லை என்பதும் தொடக்கத்திலிருக்கிற ப்ரச்நஸ்வபாவத்தால் அறியப்படுகிறதென்றும் சொல்லப்பட்டது. அதனால் வேறு இடத்தில் திடமான ஆக்ரஹத்தை கைக்கொண்டவர்களால்கூட ஆதரிக்கத்தக்கதாக இருக்கிற தன்னால் சொல்லப்பட்டிருக்கிற அர்த்தத்துடன்கூடி இருத்தலே அசைக்க ஒண்ணாமைக்குக் காரணம்.

மேலும் புராணாந்தரங்களில்போல இந்தப்புராணத்திற்குத்தன்னால் வ்யாஹதமான அர்த்த ப்ரதிபாதகத்வம் காணப்படுகிறதில்லை. முழு க்ரந்தத்தினாலும் பகவானுடைய மேன்

மையே அறியப்படுவதால் - புராணாந்தரங்களில் வ்யாகாதம் அறியப்படுகிறது. எங்ஙனமெனில், லைங்கத்தில் " யுவாம்ப்ரஸூதௌ காத்ரேப்யோமமபூர்வம் ஸநாதனௌ ! அயம் மே தக்ஷிணேபார்ச்வே ப்ரஹ்மாலோகபிதாமஹ: வாமபார்ச்வேசமேவிஷ்ணுர்விச்வாத்மா ஹ்ருத்யோத்பவ: ! (முற்காலத்தில் சாச்வதர்களான நீங்கள் இருவர்களும் என்னுடைய அங்கங்களினின்று தோன்றினீர்கள். உலகங்களுக்கு பிதாக்களான தக்ஷாதிகளுக்கும் பிதாவான இந்த ப்ரஹ்மா என்னுடைய வலது விலாப்புறத்திலிருந்து உண்டானான் உலகங்களை தன் சரீரமாகக்கொண்டவரும் அல்லது சராசராத்மகமான உலகங்களை வ்யாபித்திருப்பவரும் ஸர்வப்ராணிகளுடைய ஹ்ருதயகமலங்களில் தஹரரூபியாய் இருப்பவருமான விஷ்ணுவானவர் என்னுடைய வலது விலாப்புறத்திலிருந்து பிறந்தார்) என்றும அதே க்ரந்தத்தில் " தத: ப்ரஹ்ருஷ்டஸ்ஸுமநா: ப்ரணிபத்யமஹேச்வரம், ப்ராஹ நாராயணோதேவ:ஸலிங்கம் லிங்கவர்ஜிதம், யதிப்ரீதிஸ்ஸமுத்பந்நா யதிதேயோவராஉசனௌ பக்திர்பவதுநௌ நித்யம் த்வயிசாவ்யபிசாரிணீ (பிறகு காந்தியுள்ளவரான அந்த நாராயணன் மிக்க மனக்களிப்புள்ளவராகவும் நல்ல மனதுடன் கூடியவராகவும் லிங்கமில்லாதவரும் லிங்கரூபியாக இருப்பவருமான மஹேச்வரனை நன்குபணிந்து (எங்களிடத்தில்) ப்ரீதியானது நன்கு உண்டாயிருக்குமேயானாலும் எங்கள் இருவர்களுக்கும் வரம் கொடுக்கத்தக்கதென்று(உள்ளத்தில் தோன்றியிருந்தாலும் எங்கள் இருவர்களுக்கும் எப்பொழுதும் உம்மிடத்தில் தவறுதலில்லாத பக்தியானது உண்டாகட்டும்) என்று ஹரிப்ரஹ்மா இருவர்களுக்கும் சிவனிடத்திலிருந்து உத்பத்தியும் சிவனுடைய ஆராதநமும் அவரிடத்தினின்று வரன்களைப்பெறுதல் முதலியதும் கூறப்பட்டிருக்கிறது. அந்த க்ரந்தத்தில் ஓரிடத்தில் " த்வத்கோபஸம்பவோ ருத்ரஸ்தமஸாச ஸமாவ்ருத:, த்வத்ப்ரஸாதாஜ்ஜகத்தாதாரஜஸாச பிதாமஹ: (தமோகுணத்தால் நன்கு சூழப்பட்டவனை ருத்திரன் தேவரீருடைய கோபத்தினின்று பிறந்தான். உலகத்தைப்படைக்கிறவரும் ரஜோகுணத்துடன்கூடியவருமான பிதாமகன் தேவரீருடைய ப்ரஸாதத்தினின்று பிறந்தார்) என்று சதுர்முகன் சிவன் இருவர்களுக்கும் பகவானுடைய கோபத்தினின்றும் ப்ரஸாதத்தினின்றும் உத்பத்திசொல்லப்பட்டிருப்பதினால் பூர்வோத்தரவிரோதமேற்படுவதுபற்றி ஸ்வவ்யாகாததோஷம் ஸம்பவிக்கிறது. உஸுதேவர்முதலியவர்களிடத்தினின்று உத்பத்தியைப்போலவும் கைலாஸயாத்திரை முதலியதுபோலவும் ருத்திரனிடத்தினின்றுஉத்பத்தியும் அந்தருத்திராராதநமும் லீலையென்றுசொல்வதால் விரோதமில்லை என்றுசொல்லக்கூடாது. புராணரத்னமான விஷ்ணுபுராணத்திலும் பாரதம் முதலியதிலும் " மநஸைவ ஜகத்ஸ்ருஷ்டிம் ஸம்ஹாரஞ்சகரோதிய:, தஸ்யாரிபக்ஷக்ஷபணே கியாநுத்யமவிஸ்தர: ததாபியோமநுஷ்யாணாம் தர்மஸ்ததநுவர்த்தநம், குர்வந்பலவதாஸந்திம்ஹீநைர்யுத்தம் கரோத்யஸௌ, ஸாமசாபிப்ரதாநஞ்சததாபேதப்ரதர்சநம்-கரோதிதண்டபாதஞ்சகவசிதேவ பலாயநம்-மநுஷ்யதேஹிநாம் சேஷ்டாமித்யேவமநுவர்த்ததே-லீலாஜகத்பதேஸ்தஸ்ய சந்ததஸ்ஸம்ப்ரவர்த்ததே - ஈசங்கபிமஹாயோகீ ஸர்வஸ்யஜகத:ப்ரபு: - கர்மாண்யாரபதே சர்தும்கிநாசஇவ துர்பல: - தேநவஞ்சயதே லோகாந்மாயாயோகேநகேசவ: யேதமேவ ப்ரபத்யந்தே நதே முஹ்யந்திமாநவா: (எவர் மனதினாலேயே ஜகத்ஸ்ருஷ்டியையும் ஸம்ஹாரத்தையும் செய்கிறாரோ - அவருக்கு சத்துருபக்ஷத்தை நாசம்செய்யும் விஷயத்தில் எவ்வளவு முயற்சிவேண்டும்? அப்படி இருந்தபோதிலும் எது மநுஷ்ய தர்மமோ அதின் அநுவர்தநத்தைச்செய்துகொண்டு பலவானோடு ஸந்தியையும் பலஹீநர்களோடு யுத்தத்தையும் அவர்செய்கிறார். ஸாமதானங்களையும் அவ்வாறே பேதத்தையும் காட்டுகிறார். தண்டபாதத்தையும் செய்கிறார் ஒரு ஸமயத்தில் ப்லாயநத்தையும் செய்கிறார். இவ்வண்ணம் மநுஷ்யதேஹமுள்ளவர்களுடைய சேஷ்டையை அநுஸரிக்கிறார். ஜகத்பதியான ஸ்ரீமந்நாராயணனுடைய லீலையானது தன் அபிப்பிராயப்படி ப்ர

வ்ருத்திக்கிறது. மஹாயோகியாயும் எல்லா ஜகத்துக்களுக்கும் பிரபுவாகவுமிருக்கிற விஷ்ணுவானவர் நியந்தாவாக இருந்தபோதிலும் பலஹீனனான அல்பன்போல் கர்மாக்களைச்செய்ய ஆரம்பிக்கிறார். கேசவன் அந்த மாயாயோகத்தினால் உலகங்களை வஞ்சிக்கிறார். எவர்கள் அவனையே சரணமடைகிறார்களோ அந்த மனிதர்கள் மோஹமடைகிறார்களில்லை) இதுமுதலிய வசநங்கள்போல ஆங்காங்கு ப்ரஸித்தமான § அபகர்ஷத்தின் பரிஹாரத்தில் நோக்குள்ள க்ரந்தம் காணப்படாமையாலும் பாரதம் முதலியவைகளில் தசரதன் வஸுதேவர் முதலியவர்களுக்கு ராமக்ருஷ்ணாதிகளை அபேக்ஷித்து பரத்வமானது ஜகத்காரணத்வம் முதலியவற்றின் வாயிலாக ப்ரதிபாதிக்கப்படாமையாலும் இந்த கிரந்தத்தில் பகவானை அபேக்ஷித்து ருத்ரனுக்கு பரத்வம் ப்ரதிபாதிக்கப்பட்டிருப்பதாலும், அதினால் ஸ்வவ்யாகாதமானது எவ்விதத்தாலும் பரிஹரிக்கமுடியாதது. அவ்வாறு இந்த க்ரந்தத்தில் ஸ்வவ்யாஹதி அறியப்படுகிறதில்லை என்பது யாதொன்றுண்டோ இதுவும் மஹத்தான வைலக்ஷண்யம். கீழ்சொல்லப்பட்ட லக்ஷண †ப்ரகர்ஷத்துடன் கூடினவைஷ்ணவபுராணத்திற்கும் காரணதோஷம் பாதகஜ்ஞானம் ஸ்வவ்யாஹதி இவைகளுடன்கூடிய வேறு ப்ரபந்தத்திற்கும் விரோதம்வரின் புராணரத்னத்திற்கு ப்ராபல்யமும் மற்றவைகளுக்கு தௌர்பல்யமும் மிகவும் ஸ்பஷ்டம். இவ்வாறாக ப்ரஸித்தியின் அதிசயத்தால் அடையப்பட்ட ஸஜாதீயப்ரபந்த ப்ரகர்ஷத்துடன்கூடி இருப்பதாலும் அதினாலேயே கஷ்டகோசத்வமில்லாமையாலும் அதிக விஸ்தாரமாக இல்லாததினால் ப்ரக்ஷேபசங்கையில்லாமையாலும் அந்யபரமான உக்தியினால் ப்ரஸித்தமான $ பரிக்ரஹாதிசயமுள்ளதாக இருப்பதாலும் ஸாமாந்யப்ரச்நத்தை முன்னிட்ட ப்ரதிவசநரூபமாதலால் ஆக்ரஹமூலத்வமில்லாமையாலும் அதனாலேயே இப்படிப்பட்ட வைலக்ஷண்யமில்லாததும காரணதோஷம் பாதகப்ராப்யம் ஸ்வவ்யாஹதி இவைகளோடுகூடியதுமான வேறு ப்ரபந்தங்களுக்கு இத்தோடு விரோதம்வரின் தௌர்பல்யம் விடத்தகாததாக இருப்பதாலும் மேன்மைபொருந்திய வைஷ்ணவபுராணமானது ப்ரமாணங்களுள் மிகவும் சிறப்புற்றது.

தத்ர புலஸ்த்யவஸிஷ்டவரப்ரதாநலப்த பரதேவதா பாரமார்த்யஜ்ஞாநவதோ பகவத: பராஶராத் ஸ்வாவகதவேதார்த்தோபப்ருஂஹணமிச்சந் மைத்ரேய: பரிப்ருச்சதி—“ஸோऽஹமிச்சாமி தர்மஜ்ஞ ஶ்ரோதும் த்வத்தோ யதா ஜகத்। பபூவ பூயஶ்ச யதா மஹாபாக பவிஷ்யதி ॥ யந்மயம் ச ஜகத் ப்ரஹ்மந் யதஶ்சைதச்சராசரம்। லீநமாஸீத்யதா யத்ர லயமேஷ்யதி யத்ர ச ॥” (வி-பு-க-க-ச,ரு) இத்யாதிநா ॥

ஸ்ரீபாஷ்யம்—

அதில் புலஸ்த்ய வஸிஷ்ட மகரிஷிகளின் வரப்ரதானத்தாலடையப்பட்டிருக்கிற பரதேவதாபாரமார்த்யஜ்ஞானமுள்ளவரான பகவானான பராசரரிடத்தினின்று தன்னாலறியப்பட்டிருக்கிற வேதார்த்தத்தின் உபப்ரும்ஹணத்

---

§ அபகர்ஷம்—தாழ்மை.

$ பரிக்ரஹம்—ஏற்றுக்கொள்ளுதல். † ப்ரகர்ஷம்—மேன்மை.

ஞை விரும்புகிறவராக மைத்ரேயர் [illegible]ஞர் '[illegible]மஹமிச்ச[illegible] ஜ்ஞ ச்ரோதும் த்வத்தோ யதாஜகத் பபூவ பூயச்சயதா மஹாபாக பவிஷ்யதி - யந்மயஞ்ச ஜகத் ப்ரஹ்மந் யதச்சைதச்சராசரம் - லீநமாஸீத் யதா யத்ர லயமேஷ்யதி யத்ர ச. (தர்மங்களை அறிந்தவரே! எவ்வாறு உலகம் உண்டாயிற்று. மஹாபாக்கியமுள்ளவரே! மறுபடியும் எவ்வாறு உண்டாகப் போகிறது. ஹே ப்ரஹ்மந்! உலகமானது எதனால் வ்யாபிக்கப்பட்டிருக்கிறது (அல்லது) எதனுடைய ப்ராசுர்யமுள்ளது. ஜங்கமஸ்தாவராத்மகமான இந்த உலகம் எதனிடத்திநின்று உண்டாகிறது. எதனிடத்தில் எவ்வாறு ஒடுங்கி இருந்தது. எந்த இடத்தில் லயத்தை அடையப்போகிறது. இவை அனைத்தையும் தேவரீரிடத்திநின்று நான் கேட்க விருப்பமுள்ளவனாக இருக்கிறேன்.) இது முதலியதால்.

ச்ருதப்ரகாசிகை—

இந்த எல்லா ஹேதுக்களுடைய ஸமூகத்தை அபிப்பிராயப்பட்டு ப்ரதாநபூதயுக்தியை கண்டோக்தியினால் காட்டாநின்று கொண்டு அதன் [illegible] ப்ர[illegible]தலைலக்ஷண்யத்தைச்சொல்லுகிறவராக ப்ரச்நங்களை அ[illegible]க்கிறா[illegible] என்று 'புலஸ்த்ய வஸிஷ்டவரப்ரதாநலப்தபரதேவதா பாரமார்த்ய ஜ்ஞாநவ[illegible]:' என்[illegible] முதல் தேவதாபாரமார்த்ய சப்தத்தால் தம: கார்யமான ஒரு தர்மிளைய [illegible] அறிதலாகிற விபரீத ஜ்ஞாநம் வ்யாவர்திக்கப்பட்டது. இதனால் தேவதாபா[illegible]மா[illegible]த்யஞ்ச [illegible] [illegible]னது ஸ்புரிக்கும்படி செய்யப்பட்டது. ப்ரசம்ஸார்த்தகமான மதுப்ப்ரத்யயத்தினால் ரஜஸ்ஸின கார்யமான வேறுப்ரகாரத்தோடுகூடி இருக்கிற வஸ்துவை அதற்கு [illegible]மான வேறு ப்ரகாரத்தோடுகூடி இருப்பதாக [illegible] அந்யதாஜ்ஞாநமும் [illegible]திக்கப்பட்டது. இதனால் யதாவத் என்பதின் அ[illegible] தம் [illegible]சிப்பிக்கப்பட்ட[illegible]றது. தேவதாசப்தத்தினால் கர்மாவி[illegible]வது உ[illegible]த்தினாலாவது ஆராதிக்கத[illegible]மையும் பலத்தைககொடுக்கும் திறமையு[illegible]சொல்ல[illegible]ருதப்பட்டிருக்கிறது. இ[illegible] ஸவிசேஷத்வம் ஸித்தித்தது. 'யதாவத்' என்று ப்ரகா[illegible]த்தைச் சொன்னதனாலும் ஸவிசேஷத்வஸித்தி என்பதனால் [illegible]னது ஸவிசேஷத்வத்திற்கு உபபாதகம் என்று அபிப்ராயம். பதவத் சப்தத்தால் ஜ்ஞாநவத்த்வ[illegible] கூறப்பட்டது. [illegible]லாபத்தால் அதின் அதிசயம் ஸித்தித்தது [illegible]ஹமித்யாதி [illegible]ஹம் தேவரீராலேயே எல்லா வி[illegible]களிலும் முன்பேசிக்ஷிக்கப்பட்டிருக்கிற நான் என்ற கருத்து [illegible] 'விசேஷ[illegible] [illegible]தாம் சிஷ்யபுத்ரயோ:' ([illegible]ளுக்கு சிஷ்ய[illegible] புத்திரன் இவ்விருவர்களிடங்களிலும் விசேஷமில்லை) என்கிற [illegible]ர்மத்தை அறிந்தவரே! அ[illegible]க்கே 'ஆந்ருசம்ஸ்யம் பரோ தர்ம:' ஆச்ரி[illegible] ரக்ஷணம் என்பது [illegible] தர்மம்) என்கிற தர்மத்தை அறிந்தவரே! ஆந்ருசம்ஸ்யம் ஆச்ரிதர்களை ரக்ஷிப்பதில் [illegible]க்கு. 'ஆச்ரிதேத்யாந்ருசம்ஸ்யத:' என்கிற வசநத்தினால். மஹாபாக - பரிபூர்ணக்ருத்[illegible] [illegible]ணம். ஸ்வல்ப ப்ரயோஜநத்தையும் அபேக்ஷியாமல் ரக்ஷிப்பவன [illegible] என்[illegible] [illegible]. யதாய[illegible] பூவ-ப்ரஹ்மருத்ராதிகளுக்குள் எவன் காரணமென்று அறிவதற்காக யத: என்று ப்ரச்நம்.

‡ விவர்தாதிஷ்டாநத்வம் காரணத்வமா? அல்லது § பரிணாமித்வமா? அதிலும் ஸத்வாரக பரிணாமித்வமா? அல்லது அத்வாரக பரிணாமித்வமா? என்கிற ப்ரகாரபேதங்களை அறியவேண்டுமென்கிற எண்ணத்தினால் யதா என்று ப்ரச்நம். கல்பபேதத்தினால் ஸ்ருஷ்டி பேதம் என்கிற சங்கையினால் பவிஷ்யதி என்கிற ப்ரச்நம். தேளுக்கு பசுவின் சாணமும் தேளும் உபாதாநகாரணங்களாகக்காணப்பட்டிருப்பதால் கல்பபேதத்தால் உபாதாநாதிபேத சங்கை உபபந்நமாகிறதன்றோ. அதிலும் யத: யதா என்கிற பதங்களுக்கு முன்போல அர்த்தம். யதோயதாபூவ என்று ஒரே ப்ரச்நம் என்கிற சங்கையானது யந்மயம் என்கிற ப்ரச்நாந்தரவ்யவதாநத்தால் நிரஸநம் செய்யப்படுகிறது. எவ்வாறு காரணம் அறியத்தக்கதோ அவ்வாறு ஸ்ருஷ்டிப்ரகாரமும் தனியாக அறியத்தக்கதென்று ஜ்ஞாபிப்பதற்காக அறியத்தக்கதன்மை இருந்தபோதிலும் ப்ராதாந்யத்தை த்யோதநம் செய்வதற்காக ப்ரகாரப்ரச்நமானது முந்தியே செய்யப்பட்டது. யத: என்று பஞ்சமியானது ஹேதுவை உணர்த்துகிறது. அதனால் நிமித்தோபாதாநங்கள் இரண்டுக்கும் தந்திரத்தினால் ப்ரச்நம். உள்ளுக்குள் இருப்பு முதலியதற்கு உபயுக்தமான ஆத்மசரீரபாவ ப்ரச்நம் யந்மயம் என்று. மயட்ப்ரத்யயம் ப்ராசுர்யத்தை அர்த்தமாகவுடையது. இதனால் வ்யாப்தி காட்டப்பட்டது. வ்யாப்யத்தைவிட வ்யாபகத்திற்கு ப்ராசுர்யமானது கடாகாசம் முதலியவற்றில் காணப்பட்டிருக்கிறதன்றோ. ஆத்மாவாக இருத்தலாலன்றோ வ்யாப்தி. ஆத்மத்வமாவது தாரகத்வம். அதனால் அந்தர்யாமியால் செய்யப்பட்டிருக்கிற ஸத்தா அநுவ்ருத்தி ரூபமான ஸ்திதி ப்ரச்நம் பலித்தது. யந்மயம் தாரகனான எந்த அந்தர்யாமியினால் ப்ரசுரமாக ஜகத் நிலைபெற்றிருக்கிறதென்கிற அர்த்தம் சொல்லப்பட்டதாக ஆகிறது. உள்ளே ப்ரவேசித்து ப்ரசாஸநத்தினால் தாரகத்வம் ஸ்திதிஹேதுத்வமென்று முந்தியே விசதமாக்கப்பட்டிருக்கிறது. ச சப்தத்தால் வெளிப்பட்டவர்களான போஷகர்கள் முதலியவர்களால் செய்யப்பட்டிருக்கிற போஷணாதிரூபமான ஸ்திதியும் மாதா பிதாக்கள் முதலியவர்களால் செய்யத்தக்க இஷ்டப்ராப்தி அநிஷ்டநிவாரணரூபையான ஸ்திதியும் வினவப்பட்டதாக ஆகிறது. யத: என்று உபாதாநமும் வினவப்பட்டிருப்பதால் மயட் ப்ராசுர்யார்த்தத்திலேயே கோபலீவர்த ந்யாயத்தால். யத: என்கிற ஐந்தாம்வேற்றுமைப்பொருளானது சுருக்கத்தக்கதல்ல. பலீவர்தசப்தத்திற்குப்போல் மயட்டுக்கு அநந்யதாஸித்தத்வமில்லாமையால் ஸங்கோசகத்வம் பொருந்தாது. பதாந்தரத்திற்கு ஏற்பட்டிருக்கிற வையர்த்யத்தை பரிஹரிக்கவேண்டுமென்கிற எண்ணத்தினால் பதாந்தரத்தின் அர்த்த ஸங்கோசம் கோபலீவர்த ந்யாயமென்று ந்யாயவித்துக்கள் கூறுகின்றனர். இங்கு மயட்டுக்கு அர்த்தாந்தரம் ஸம்பவிப்பதால் இது ஸங்கோசகமாகாது. யத: என்கிற பதமானது நிமித்தத்தையும் உபாதாநத்தையும் போதிப்பதற்கு சக்தியுள்ளது. ஸ்திதிப்ரச்நமபேக்ஷிக்கப்பட்டுமிருக்கிறது. ஆகலால் அபேக்ஷிதவிதியைவிட அநபேக்ஷிதத்தை விதிப்பது துர்பலம். யதோவா இமாநி இதுமுதலிய ச்ருதியில்கூட யத: என்கிற பதத்தினாலேயே நிமித்தோபாதாநங்கள் சொல்லப்பட்டிருப்பதாலும் ச்ருதியின் சாயையை அநுஸரித்து விதாநத்தாலும் யத: என்று தந்த்ரத்தினால் ப்ரச்நமாதலால் யந்மயமென்று

‡ விவர்தம்—ஒரு வஸ்துவை மற்றொரு வஸ்துவாக ப்ரமத்தால் எண்ணுதல், சிப்பியைப்பார்த்து வெள்ளி என்று. இந்த இடத்தில் சிப்பியில் தோன்றும் வெள்ளி ப்ராதிபாஸிகம். இந்த ரஜதத்திற்கு சிப்பியானது விவர்தோபாதானம்.

§ பரிணாமம்— ஒருவஸ்து மற்றொன்றாக மாறுதல் - மண் குடமாகமாறுவதுபோல் இங்கு மண்ணானது தன் நிலைமையைவிட்டு குடமாக மாறியிருக்கிறது. இங்கு குடத்திற்கு மண் பரிணாமி உபாதானம்.

ஸ்திதி ப்ரச்நம் செய்யப்படுகிறது. வேறு அர்த்தத்தை ஒப்புக்கொள்ளும்பக்ஷத்தில் அபேக்ஷிதத்தின் அவசநமும் அநபேக்ஷிதவசநமும் உண்டாகும். ஸ்வார்த்திகமான மட்டுமல்ல. ப்ரத்யயத்திற்கு அர்த்தம் ஸம்பவிப்பதாக இருக்கையில் அதை இழப்பது ந்யாய்யமாகாததால். ஆகையால் எவ்வாறு இங்கு பொருள்கூறப்பட்டதோ இதே ஸரியானது. லயஸ்தாநப்ரச்நமும் லயப்ரகாரப்ரச்நமும் அத்யயநம் செய்யப்பட்டிராத வேறு சாகைகளில் ஸ்தாநபேத ப்ரகாரபேத சங்கையினுல் செய்யப்பட்டது. தேவகாந்தரத்திற்கு லயஸ்தாநத்வமும் அதிலும் ஸத்வாரகத்வ அத்வாரகத்வ கார்ய ப்ரமநிவ்ருத்திரூபதை என்கிற பெயருள்ள ப்ரகாரபேதமுமன்றோ சங்கைக்கு ஆஸ்பதமாக இருக்கிறது. பூத பவிஷ்யத்ப்ரச்நமும் கல்பபேதத்தால் லயஸ்தாநப்ரகாரபேத சங்கையினுல் செய்யப்பட்டது. சகாரத்தினுல் லயகர்த்ரு ப்ரச்நமும் ஸூசிப்பிக்கப்பட்டது. அதுவும் கர்த்ருபேத சங்கையைக் காரணமாகக்கொண்டது. ஸ்வரூப ப்ரச்நபரமான இரண்டு ச்லோகங்களையும் வ்யாக்கியாநம்செய்ய விரும்பப்பட்டிருக்கிற ச்லோகத்தாலபேக்ஷிக்கப்பட்டிருப்பது பற்றி உதாஹரித்து ஆதி சப்தத்தால் வேறு ப்ரச்நங்களில் ப்ரதாநநோக்கமுள்ள ச்லோகங்கள் க்ரோடீகரிக்கப்பட்டன.

[illegible]

ரூபவிசேஷஸ்ய விபூதேஸ்ய நிவிஷ்டஸ்ய ஆராதநாதேஸ்ச ஃபலஸ்ய ச
ப்ரசேந ஏகைகோத்தரம் ஸ்யாத் । ஜகச்ச ஸ இதி ஸாமாநாதிகரண்யஸ்ய
ஸாமாநாதிகரண்ய ஸத்யஸம்ஜ்ஞா வ்யாப்திக்ருதம் [illegible]
நிவிஷயவ்யக்தி நீதா ப்ரமாணேந [illegible] ஸம்பந்தம் [illegible]
ஹேது । க்ருத்ஸ்நஸ்ய ஜகதஶ்சரீரத்வேந ஸாமாநாதிகரண்யம் உபபத்யத
இதி வ்யாக்யாதே ॥

ஸ்ரீபாஷ்யம்—

இந்த இடத்தில் ப்ரஹ்மத்தின் ஸ்வரூபவிசேஷம் அதின் விபூதி பேதங்களின் ப்ரகாரங்கள் அதின் ஆராதநஸ்வரூபம் பலவிசேஷம் இவைகள் வினவப்பட்டிருக்கின்றன. ப்ரஹ்ம ஸ்வரூபவிசேஷ ப்ரச்நங்களில் "யதஶ்சைதச்சராசரம்" என்று நிமித்தம் உபாதாநம் இரண்டும் வினவப்பட்டிருப்பதால் 'யந்மயம்' என்பதனால் ஸ்ருஷ்டிஸ்திதிலயங்களுக்கு கர்மாவாக இருக்கிற ஜகத்தானது எதை ஆத்மாவாகக்கொண்டிருக்கிறதென்று வினவப்பட்டது. 'ஜகச்சஸ:' என்று அதற்கு உத்தரம். இந்த தாதாத்ம்யமானது அந்தர்யாமிரூபனாக ஆத்மாவாக இருப்பதால் வ்யாப்தியினால் உண்டுபண்ணப்பட்டிருக்கிறதே ஒழிய வ்யாப்யவ்யாபகங்கள் இரண்டுக்குமுள்ள வஸ்துக்களின் ஐக்யத்தால் உண்டுபண்ணப்பட்டதன்று. 'ஜகச்சஸ:' என்கிற ஸாமாநாதிகரண்யமானது யந்மயம் என்கிற வினாவுக்கு விடையாக இருப்பதால், யந்மயம் என்கிற மயட் டானது இந்த இடத்தில் விகாரத்தை அர்த்தமாகக்கொண்டதன்று. தனித்து ப்ரச்நம் ப்ரயோஜனமில்லாமல் போகவேண்டி வருவதால் - ப்ராணமயம் முதலிய இடங்களில்போல ஸ்வார்த்திகமுமன்று. 'ஜகச்சஸ:' என்கிற உத்தரம் பொருந்தாதலால்-அப்பொழுது விஷ்ணுவென்றல்லவோ உத்தரம் இருந்திருக்கும். ஆகையால் ப்ராசுர்யார்த்தத்திலேயே "தத்ப்ரக்ருதவசநே மயட்" என்கிற சப்தாநுசாஸநஸூத்ரத்தால் மயட் ப்ரத்யயம். உலகமனைத்தும் அந்த பரமாத்மாவுக்குச் சரீரமாக இருப்பதால் அந்த பரமாத்மப்ரசுரமே. ஆகையால் யந்மயம் என்பதற்கு ப்ரதிவசநமாக இருக்கிற ஜகச்சஸ: என்கிற ஸாமாநாதிகரண்யமானது ஜகத்திற்கும் ப்ரஹ்மத்திற்குமுள்ள சரீராத்மபாவத்தைக் காரணமாகக்கொண்டது என்று நிச்சயிக்கப்படுகிறது. அப்படிக்கின்றி நிர்விசேஷ வஸ்துவைப்ரதிபாதிப்பதில் ப்ரதாநநோக்கமுள்ளதாக சாஸ்த்ரம் ஒப்புக்கொள்ளப்படுகிறதேயாகில் இந்த எல்லா ப்ரச்நப்ரதிவசநங்களும் பொருந்தாது. அதின் விவரணரூபமான

முழுசாஸ்த்ரமும் இசையாது. அப்படி இருக்கும்பக்ஷத்தில் ப்ரபஞ்ச ப்ரமத்திற்கு அதிஷ்டானம் எது என்கிற இவ்வித ரூபமுள்ள ஒரு ப்ரச்நத்திற்கு நிர்விசேஷ ஜ்ஞாநமாத்ரம் என்கிற இவ்வித ரூபமுள்ள ஒரே உத்தரம் இருக்கவேண்டும். ஸாமாநாதிகரண்யமானது ஜகத் ப்ரஹ்மம் இரண்டும் ஒரே த்ரவ்யமென்று சொல்வதில் கருத்துள்ளதாக இருக்குமேயாகில் ஸத்ய ஸங்கல்பத்வம் முதலிய கல்யாணகுணைகதாநதையும் அகிலஹேய ப்ரத்யநீகதையும் பாதிக்கப்படும். ப்ரஹ்மமானது எல்லா அசுபங்களுக்கும் ஆஸ்பதமாகவும் ஆகவேண்டியதாகும்-இந்த ஸாமாநாதிகரண்யமானது ஆத்மசரீர பாவத்திலேயே முக்யவ்ருத்தமென்று ஸ்தாபிக்கப்படப்போகிறது.

ச்ருதப்ரகாசிகை.—

'விஷ்ணோஸ்ஸகாசாத்' என்கிற ச்லோகத்திற்கு அர்த்தாந்தர ப்ரச்நோத்தரரூபத்வ சங்கையின் நிராஸத்திற்காக அந்த ச்லோகங்களுடைய அர்த்தத்தை ஸங்க்ரஹமாகக் கூறுகிறார் — அத்ர என்று. ப்ரஹ்மஸ்வரூப என்கிற ஸ்வரூபசப்தமானது விபூதிமுதலியவைகளை வ்யாவர்த்திக்கிறது. ஸ்வரூபவிசேஷ சப்தம் ப்ரஹ்மாதிகளை வ்யாவர்த்திக்கிறது. விபூதிபேதங்களின் ப்ரகாரம் விபூதிபேத ப்ரகாரம். அது ஜ்யோதிச்சக்ரம் புவநகோசம் முதலிய ப்ரச்நத்தில் உள்ளடங்கியது. வர்ணாச்ரம தர்மம் முதலியவற்றின் ப்ரச்நத்தினால் அவனுடைய ஆராதநஸ்வரூபம் வினவப்பட்டது ப்ரதிவசநத்தில் பலவிசேஷத்தின் உக்தியானது காணப்படுவதால் மறுமொழியின் ரீதியினால் வினாவின் பொருள் அறியப்படுகிறதென்கிற ரீதியினால் பலவிசேஷமும் இங்கு வினவப்பட்டதாக ஆகிறதென்று முற்கூறப்பட்டிருக்கிற ப்ரச்நங்களில் உள்ளடக்கச் செய்விக்கப்பட்டிருக்கிறதென்கிற அபிப்பிராயத்தினால் பலவிசேஷங்களும் வினவப்பட்டனவென்று உரைக்கப்பட்டது. ப்ரயோஜனத்துடன்கூடின ஆராதநம வினவப்பட்டதென்பதினால் அதில் அது உள்ளடங்கியது. இதே அர்த்தம் ஸகல ச்ருதிகளுக்கும் இதிஹாஸபுராணங்களுக்கும் ப்ரதிபாத்யமென்பது கருத்து. அதனால் ப்ரஸ்துத ச்லோகார்த்தத்திற்கு என்னவென்று அபேக்ஷை உண்டாகில் யந்மயம் என்கிற பதத்தினுடைய அர்த்தத்தை உபபத்தியுடன்கூட சொல்லுகிறார்—ப்ரஹ்மஸ்வரூப என்று. ஸ்ருஷ்டி ஸ்திதி லய கர்மபூதம் என்கிற பதமானது ஸ்ருஷ்டி ப்ரளயங்கள் சொல்லப்பட்டபடியால் ஸ்திதியைச்சொல்லுதல் அபேக்ஷிதமென்று ஜ்ஞாபிப்பதற்காக ஸ்திதிலய சப்தங்கள் இரண்டுகளாலும் ரக்ஷாஸம்ஹாரங்கள் விவக்ஷிக்கப்பட்டன. ஸ்திதி லயங்கள் இரண்டும் ப்ரயோஜ்ய கர்தாவினுடைய செய்கையாதலால் அவைகளுக்கு ஆச்ரயமாக இருப்பதுபற்றி ஜகத்துக்கு அந்த ஸ்திதிலய கர்மத்வமில்லாமையால் ஸ்ருஷ்டிஸ்திதிலய கர்மபூதமான ஜகத்தானது ஸ்திதியின்பொருட்டு எந்த ரூபமுள்ளதாக இருக்கிறதென்பது ப்ரச்நத்தின் அர்த்தம். அதனுலென்னவென்று கேட்கில் சொல்லுகிறா—தஸ்யச என்று. ஜகச்சஸ: என்கிற ஸாமாநாதிகரண்யத்தால் அறியப்பட்டிருக்கிற தாதாத்ம்யமானது ஸ்வரூபைக்ய ரூபமென்று ஆசங்கித்துப்பரிஹரிக்கிறார்-இதஞ்ச என்று. இதம்—ஸாமாநாதிகரண்யத்தால் அறியப்பட்டிருக்கிறதென்று அர்த்தம். ஆகாயம முதலியதில் வ்யாப்தி மாத்திரத்தினால் தாதாத்ம்யமானது காணப்படாததுபற்றி அதை வ்யாவர்திப்பதற்காக ஆத்மத்வத்தை விவரிக்கிறார்—அந்தர்யாமிரூபேண என்று. உள்ளே ப்ரவேசித்து நியமநம் செய்தலன்றோ ஆத்மத்வம் வ்யாப்யவ்யாபகயோ: என்று. ஜகத்

ப்ரஹ்மம் இரண்டுக்கும் வ்யாப்யத்வமும் வ்யாபகத்வமும் ச்ருதிஸித்தமாக இருப்பதா லென்று கருத்து. 'நதுவஸ்த்வைக்யக்ருதம்' என்கிற ப்ரதிஜ்ஞையை உபபாதிக்கிறார்— யந்மயம் என்று. விகாரமென்கிற அர்த்தத்தை ஸந்தேஹித்துப் பரிஹரிக்கிறார்—யந்மயமிதிமயட் என்று. ஏதனல் என்று வினவப்படுமேயாகில் கூறுகிறார்— ப்ருதக் என்று விகாரம் பொருள் எனக்கொண்டால் உபாதானம் வினவப்பட்டதாக ஆகும். அது வினவத்தக்கதல்ல, யத: என்கிற பஞ்சம்யந்தபதத்தினல் உபாதானமும் வினவப்பட்டிருப்பதால். ஆகலால் தனி ப்ரச்நதிற்கு வையர்த்யம் ஸம்பவிக்கும். வேறு அர்த்தம் ஸம்பவிப்பதால் கோபலீவர்த நியாயமும் ஸம்பவிக்கிறதில்லை. அபேக்ஷித விதியை விட அநபேக்ஷிதவிதாநம் துர்பலம் என்கிற ந்யாயமும் அபிப்ராயப்படப்பட்டிருக்கிறது. ப்ரஹ்மாஜ்ஞாநவாதிக்கு அபிமதமான ஸ்வார்த்திக பக்ஷத்தைத் தூஷிக்கிறார்— நாபி என்று. பேதாபேதபக்ஷத்தால் ஒப்புக்கொள்ளப்பட்டதை தூஷிக்கிறாரில்லை அது மேலே தூஷிக்கப்படப்போகிறது. பொருள் ஸம்பவிக்கிறதாக இருக்க அதை ஆச்ரயிக்காமலிருப்பது பொருந்தாதென்று சப்ததாலுணர்த்தப்பட்டிருக்கிற அர்த்தத்தை ஸ்வீகரித்து அச்ருதத்தை கல்பிப்பதல்லவோ உசிதமானது. ச்ருதபரித்யாகம் உசிதமன்று. ப்ரஹ்மஜ்ஞாநவாதியினல் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிற ஸ்வார்த்திகத்வத்திற்கு அஸாதாரணமான தூஷணத்தைக்கூறுகிறார்— ஜகத் என்று ஸ்வார்த்திகத்வபக்ஷத்தில் 'யதிதம் ஜகத்தத்ஸம' என்று சொல்லப்பட்டிருந்தால் அறியப்பட்டிருக்கிற ஜகத்ரூபமாத்ரத்திற்கு வினவத்தக்க தன்மை பொருந்தாதாதலால் ப்ரச்நத்திற்கு வையர்த்யம் வாராமைக்காக அது ஸத்யமா? அல்லது மித்யையா என்று வினவப்பட்டதாக ஆகிறதென்று ஒப்புக்கொள்ளத்தக்கது. அப்பொழுது மித்யா என்று உத்தரம் சொல்லத்தக்கது அங்கு இரண்டில் ஒன்றின் ஆகாரத்தை ஸ்தாபிக்கின்றதும் ஆகாராந்தர நிஷேதகமாயுமிருக்கிற சப்தம் சொல்லத்தக்கதாக இருக்க இரண்டு ஆகாரங்களுக்கு உபஸ்தாபகமான ஸாமாநாதிகரண்யம் உபபன்னமாகாதென்று அர்த்தம். பாதார்த்தம் ஸாமாநாதிகரண்யம் என்று சொல்லப்படுமேயானல் அதில்லை. என் தாயார் மலடி என்பதுபோல் ஸாமாநாதிகரண்யம் பாதார்த்தம் என்பது வ்யாஹதமாக இருப்பதாலென்று கருத்து. அப்படியாகில் எவ்வாறு உத்தரம் இருக்கலாமென்றுகேட்கில் சொல்லுகிறார்—தத்ர்ஹி என்று. விஷ்ணுவென்பது அந்யதராகாரோபஸ்தாபக சப்தம். ஆகாராந்தரத்தை நிஷேதிக்கிற சப்தம் ஏவகாரம். நேரான அர்த்தத்தைச்சொல்லுகிறார்— அத: என்று. அத: ஸ்வார்த்திகத்வம் விகாரார்த்தம் இரண்டும் அநுபபன்னமாதலாலென்று அர்த்தம். சப்தாநுசாஸநாநுமதியைக்காண்பிக்கிறார்— தத் என்று. ப்ரகர்ஷத்தால் செய்யப்பட்டது. ப்ரக்ருதம் ப்ரபூதம். ப்ரசுரமென்று அர்த்தம். 'அந்நமயோயஜ்ஞ: சகடமயீயாத்ரா' என்றல்லவோ அதற்கு உதாஹரணம்.

இதில் என்ன ப்ராசுர்யமிருக்கிறதென்று கேட்கில் சொல்லுகிறார்— க்ருத்ஸ்நஞ்ச என்று. 'அந்தர்பஹிஸ்ச வ்யாப்ய' இதுமுதலிய ச்ருதியினல் அது உபபன்னமென்று கருத்து. ஸாமாநாதிகரண்யத்திற்கு ப்ரதிபாதிக்கவேண்டுமென்று விரும்பப்பட்டிருக்கிற சரீராத்மபாவநிபந்தநத்வத்தை உபஸம்ஹரிக்கிறார்— தஸ்மாத் என்று. யந்மயம் என்கிற ப்ரச்நமானது ப்ராசுர்யத்தை அர்த்தமாகக்கொண்டிருப்பதால் ஜகச்சஸ: என்பது அதற்கு உத்தரமாதலால் ஸாமாநாதிகரண்யத்திற்கு சரீராத்மபாவநிபந்தநத்வம் ஸித்தம். அந்த சரீராத்மபாவநிபந்தநஸாமாநாதிகரண்யத்தால் ஸ்வார்த்திகத்வ நிவ்ருத்தி. அதனல் யந்மயம் என்கிற மயட் ப்ரத்யயத்திற்கு ப்ராசுர்யம் அர்த்தம் என்று அந்யோந்யாச்ரயம் என்று சொல்லப்படுமேயானல் இவ்வண்ணமல்ல. மயட் ப்ரத்யயத்தின் ஸ்வார்த்திகத்வ நிவ்ருத்தியும் ப்ராசுர்யார்த்த நிர்ணயமும் ஸாமாநாதிகரண்யத்தினுடைய சரீராத்மபாவ நிபந்தநத்வத்தை அபேக்ஷியாமலிருப்பதால். அர்த்தவத்த்வம் ஸம்பவிக்கிறதாக இருக்க

விராத்தத்வத்தை ஸ்வீகரிக்கக்கூடாதாதலால் ஸ்வார்த்திகத்வம் மூன்றிலும் வ்லக்ஷப்பட்டது. ஜகச்சஸ: என்கிற ஸாமாநாதிகரண்யத்தாலும் நிரஸிக்கப்பட்டது. ஸ்வார்த்திகத்வமிருக்குமேயாகில் ஆகாரத்வயோபஸ்தாபகமான ஸாமாநாதிகரண்யத்திற்கு உசிதத்வம் கூடாதாதலால் - சரீராத்மபாவநிபந்தநத்வம் கூடாதாதலாலல்ல. ஸாமாநாதிகரண்யத்தினுடைய ப்ரவ்ருத்திநிமித்த பூதாகாரத்வயோபஸ்தாபகத்வமானது மயட் ப்ரத்யயத்தினுடைய ஸ்வார்த்திகத்வ நிவ்ருத்தியை அபேக்ஷிக்கிறதில்லை. ஸாமாநாதிகரண்யத்தின் லக்ஷணஸ்வபாவத்தினாலேயே அதற்கு ஆகாரத்வயோபஸ்தாபகத்வம் ஸித்திப்பதால். ஆகையால் மயட் ப்ரத்யயத்திற்கு ஸ்வார்த்திகத்வ நிவ்ருத்தி. ஸாமாநாதிகரண்யமானது ஆகாரத்வயோபஸ்தாபகமாதலால். என்பதினால் இங்கு அந்யோந்யாச்ரயமில்லை. இவ்வண்ணமாக ஸ்வார்த்திகத்வம் நிரஸிக்கப்பட்டிருக்க தனியாக ப்ரச்நத்திற்கு ப்ரயோஜநமில்லாமையால் விகாரார்த்தத்வம் பொருந்தாமல்போக பாரிசேஷ்யத்தால் ஸ்திதிக்கு ப்ரச்நம் செய்யத்தக்க தன்மை இருக்க ஸ்திதிஸ்வபாவத்தாலும் அநுசாஸநாநுஸாரணத்தாலும் மயட் ப்ரத்யயத்திற்கு ப்ராசுர்யரூபார்த்த விசேஷபரத்வம் ஸித்திக்கிறது. அதனால் ஜகச்சஸ: என்கிற ஸாமாநாதிகரண்யத்திற்கு சரீராத்மபாவரூப ப்ரவ்ருத்திநிமித்த விசேஷ ஸித்தி என்பதனால் அந்யோந்யாச்ரயமில்லை இவ்வண்ணம் ஸாமாநாதிகரண்யத்திற்கு ம்ருஷாவாதிக்கு அபிமதமான ஐக்யபரத்வம் சொல்லும்பக்ஷத்தில் மயட்டுக்கு ஆநர்த்தக்யம் ஸாமாநாதிகரண்யத்திற்கு அநுபபத்தி என்கிற இரண்டு தூஷணங்களும் ஸ்வரூபைக்யபரம் என்கிற பக்ஷத்தில் அர்த்தவிரோதம் யந்மயம் என்று சொல்லப்பட்ட ப்ரச்நோத்தரத்வாநுபபத்தி என்கிற இரண்டு தூஷணங்களும்காண்பிக்கப்பட்டதாக ஆகிறது. தன்னால் சொல்லப்பட்ட அர்த்தத்தை ஒப்புக்கொள்ளாத பக்ஷத்தில், தூஷணத்தைக் கூறுகிறார்—அந்யதா என்று. அப்படி இல்லாவிட்டால் எவ்வாறு ப்ரச்நப்ரதிவசநங்கள் இருக்கலாமென்று கேட்கில் சொல்லுகிறார்—தத்ராஹி ஸதி என்று. ஸாமாநாதிகரண்யத்திற்கு பேதாபேதவாதியால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிற ஏகத்ரவ்யதாபரத்வத்தை தூஷிக்கிறார்—ஜகத் என்று. இந்த பக்ஷத்திலும் ஜகத்தானது யந்மயம், ஜகத்தானது யத்த்ரவ்யம் என்று கேட்கப்பட்டிருக்கவேண்டும். அப்பொழுது மயட்வையர்த்த்யமிருக்கிறதென்று காணத்தக்கது. யத: என்று உபாதாநமகேட்கப்பட்டிருப்பதால். அந்த தூஷணம் கூறுகிறார்—ஸத்ய இது முதலியதால். ஸத்யஸங்கல்ப இது முதலியதால ஜீவன்களை அடைந்துள்ள தோஷமும ஸர்வாசப இதுமுதலியதால் ப்ரக்ருதியை அடைந்திருக்கிற தோஷமும் ப்ரஹ்மத்தினிடம் ப்ரஸங்கிக்கிறதென்று சொல்லப்பட்டது அதற்கே உபயலிங்கத்வஹாநியும் விபரீதாகார ப்ராப்தியுமென்று அர்த்தம். சரீரத்தைச் சொல்லுகிற பதத்திற்கு சரீரிபரத்வம் சொல்லப்பட்டால் முக்யத்வம ஸம்பவியாதே என்று வினவப்படுமேயானால் சொல்லுகிறார்—ஆத்மசரீர என்று. 'ஸ்தாப்யதே' ஸ்தாபிக்கப்படப்போகிறது என்று பொருள். அடுத்துவரப்போவதால் ஸ்தாப்யதே என்று சொல்லப்பட்டது.

அத: “விஷ்ணோஸ்ஸகாஶாதுத்பூதம் ஜகத்தத்ரைவ ச ஸ்தி்தம் ஸ்திதிஸம்யமகர்த்தாஸௌ ஜகதோஸ்ய ஜகச்ச ஸ:” (வி-பா-க-க-ருக) இதி ஸமஸ்தேனாத்யாயேந “பர:பராணாம்” இத்யாரப்ய விஸ்தரேண வர்ணிதம் பரப்ரஹ்மபூதம் ஸர்வஜ்ஞம் விஷ்ணும் ஸதைவைக ஸ்வரூபேணாவஸ்திதம் “அவிகாராய” இதிஶ்லோகேந ப்ரணம்ய

𑌪𑍍𑌰𑌣𑌮𑍍𑌯, 𑌤𑌥𑍈𑌵 𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌗𑌰𑍍𑌭𑌸𑍍𑌵𑌾𑌵𑌤𑌾𑌰𑌶𑌙𑍍𑌕𑌰𑌰𑍂𑌪𑌤𑍍𑌰𑌿𑌮𑍂𑌰𑍍𑌤𑌿
𑌪𑍍𑌰𑌧𑌾𑌨𑌕𑌾𑌲𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌸𑌮𑌷𑍍𑌟𑌿𑌵𑍍𑌯𑌷𑍍𑌟𑌿𑌰𑍂𑌪𑍇𑌣𑌾𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌂 𑌚 𑌨𑌮𑌸𑍍-
𑌕𑌰𑍋𑌤𑌿 । 𑌤𑌤𑍍𑌰 “𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌮𑍍” 𑌇𑌤𑍍𑌯𑌯𑌂 𑌶𑍍𑌲𑍋𑌕𑌃 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞-
𑌵𑍍𑌯𑌷𑍍𑌟𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑌾𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌸𑍍𑌯 𑌪𑌰𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌮𑌾𑌹 । 𑌤𑌸𑍍𑌯 𑌜𑍍𑌞𑌾𑌤𑍃-
𑌤𑍍𑌵𑌾𑌨𑍍𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌶𑍇𑌷𑌵𑌸𑍍𑌤𑍁𑌵𑍍𑌯𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌃 ॥

ஸ்ரீபாஷ்யம்—

ஆதலால் “ விஷ்ணோஸ்ஸகாசாதுத்பூதம் ஜகத்தத்ரைவச ஸ்திதம், ஸ்திதிஸம்யமகர்தாஸௌ ஜகதோஸ்ய ஜகச்சஸ: ” (உலகமானது விஷ்ணு வின் பக்கத்திலிருந்து உண்டாயிற்று. அவரிடத்திலேயே நிலைபெற்றிருக் கிறது. இந்த ஜகத்துக்கு ஸ்திதியையும் நாசத்தையும் செய்பவர் அவர் ஜகத் தும் அவர்) என்று சுருக்கமாகச்சொல்லப்பட்ட அர்த்தத்தை ‘ பர:பரா ணாம் ’ என்று தொடங்கி விஸ்தாரமாகச்சொல்வதற்காக பரப்ரஹ்மமாக இருப்பவரும் ஆறு குணங்களால் நிறைந்தவரும் தன்னுடையதாகவே இருக் கிற ரூபத்தோடு இருப்பவருமான விஷ்ணுவை ‘அவிகாராய’ என்கிற ச்லோ கத்தினால் முதலில் ப்ரணாமம் செய்து ஹிரண்யகர்ப்பன் தன்னுடைய அவ தாரமாக இருக்கிற மஹாவிஷ்ணு சங்கரன் என்கிற த்ரிமூர்த்தி ரூபமாகவும் ப்ரதாநம்காலம் க்ஷேத்ரஜ்ஞர்களுடைய ஸமஷ்டிரூபமாகவும் வ்யஷ்டிரூப மாகவுமிருக்கிற அவரையே நமஸ்கரிக்கிறார்.

ச்ருதப்ரகாசிகை—

இவ்வண்ணமாக ப்ரக்ருத ச்லோக வ்யாக்கியாநத்திற்கு உபயுக்தமான அர்த் தம் விஸ்தரிக்கப்பட்டது. அதற்குமேல் சாஸ்த்ரார்த்த ஸங்க்ரஹமானவுடன் விஸ்தாரத் தின் தொடக்கத்தில் நமஸ்காரவிஷயமான ஏழு ச்லோகங்களையும் அவதரிப்பித்து வ்யா க்யாநிக்கத்தக்க ச்லோகத்திற்கு நமஸ்கார ச்லோகாந்தரங்களோடு ஸங்கதியைக்காண்பிப்ப தற்காக ‘அவிகாராய’ இது முதலிய ஆறு ச்லோகங்களுடைய வாக்யார்த்தத்தைக்கூறுகி றார்—அத: என்று. ‘அத:’ ப்ரச்நப்ரதிவசநம் முதலியவைகளால் சாஸ்த்ரமானது விபூதிகளுடன்கூடின ஸகுணவஸ்து ப்ரதிபாதகமென்று அறியப்படுவதாலும், ஸாமாநாதி கரண்யத்திற்கு விசிஷ்ட வஸ்துவில் முக்கியவ்ருத்தத்வம் இருப்பதாலுமென்று கருத்து. அத: என்கிற பதத்திற்கு வ்யஷ்டிரூபேண அவஸ்திதஞ்ச நமஸ்கரோதி என்பதோடு அந் வயம். அன்றிக்கே சாஸ்த்ரவாக்யார்த்தம் இவ்விதமாக இருப்பதால் விஷ்ணோஸ்ஸகா சாத் என்பதற்கு ஸங்க்ரஹ ரூபதவமும், பர: பராணாம் இதுமுதலியவைகளுக்கு விஸ் தாரரூபத்வமும் ஸித்தமென்று அர்த்தம். விஷ்ணோ:ஸகாசாத் என்கிற இடத்தில் ஸகா சாத் என்கிற பதமானது ஷஷ்டிக்கு பஞ்சமியின் அர்த்தத்தை ஸம்பாதிப்பதற்காக எவ்

வாறு அன்யக்ருதே என்று சொல்லப்பட்டால் க்ருதே என்கிற சப்தத்திற்கு சதுர்த்தியின் அர்த்தத்தை ஸம்பாதிப்பதில் நோக்கமோ அப்படிப்போல. அன்றிக்கே ஸகாசாத் ஸஸங்கல்பாத், காசநம் ப்ரகாசநம் ஸங்கல்பரூபஜ்ஞாநம். அந்த ஸங்கல்பரூபமான ஜ்ஞாநத்துடன் கூடியவரிடத்திலிருந்து என்று அர்த்தம். இதனால் நிமித்தத்வம் ஸித்தித்தது. அன்றிக்கே ஸகாச சப்தம பார்ச்வத்தைச்சொல்லுகிறது. அதனால் சரீரம் உபலக்ஷிக்கப்பட்டது. 'ஸோபித்யாயசரீராத்ஸ்வாத்' என்கிற மநுஸ்ம்ருதி ச்லோகத்தில் போல சரீரத்தினின்று என்றுபொருள். தத்ரைவசஸ்திதம் என்பது லயஸ்தாநப்ரச்நத்திற்கு உத்தரம். 'தத்ராஸ்திதமிதி' ஸ்திதம் நிஷ்டையை அடைந்திருக்கிறது. இதனால் ஜகத்திற்கு நித்யத்வமும்அவஸ்தைகளுக்கு தோன்றுதலும் அழிதலும் ஸூசிப்பிக்கப்பட்டது. லயஸ்தாநப்ரச்நத்திற்கு உத்தரம் கூறப்பட்டது. பிறகு லயத்தைச்செய்கிறவன் எவன் என்கிற வினாவுக்கும் பாஷ்யகாரான வஸ்துக்களின் ஸ்திதி விஷயமான வினாவுக்கும் உத்தரமளிக்கிறார்—ஸ்திதி என்று. ஜகச்சஸ: என்பது யந்மயம் என்பதனால் பலித்திருக்கிற ஸர்வாந்தர்யாமி ரூபத்தால் செய்யப்பட்டிருக்கிற ஸத்தை அநுவ்ருத்திரூபமான ஸ்திதி ப்ரச்நத்திற்கு உத்தரம். அன்றிக்கே, யந்மயம் என்று பலித்த ஸ்திதி ப்ரச்நத்திற்கும் ஸ்திதி ஸம்யம கர்த்தா என்பதே உத்தரம். ஜகச்சஸ: என்பதோவென்றால் யந்மயம்

அய்யா ! சௌக்ல்யம் முதலிய நிஷ்கர்ஷக சப்தங்களுக்கு தாத்பர்யந்தபோதகத்வம் காணப்பட்டிருக்கவில்லை. யந்மயம் ஜகத் என்பதனால் ஜகத் சப்தத்திற்கு நிஷ்கர்ஷக சப்தத்வம் காணப்பட்டிருக்கிறதுபற்றி தாத்பர்யதாபிதாயகத்வமில்லாமையால் ஜகச்சஸ: என்கிற ஸாமாநாதிகரண்யம் உபபந்நமாகாதென்று வினவப்படுமேயாகில் மறுமொழி சொல்லப்படுகிறது. நிஷ்கர்ஷக சப்தங்கள் இரண்டுவிதங்களன்றோ - நியத நிஷ்கர்ஷகங்களென்றும் வைகல்பிக நிஷ்கர்ஷகங்களென்றும். அவற்றுள் சௌக்ல்யம் முதலிய சப்தங்கள் நியதநிஷ்கர்ஷகங்கள். மநுஷ்ய சுக்ல முதலிய சப்தங்கள் வைகல்பிக நிஷ்கர்ஷகங்கள். ப்ரயோகம் இவைகளுக்கு நியாமகமாக இருப்பதால். அங்ஙனமில்லாவிடில் நிஷ்கர்ஷகம் அநிஷ்கர்ஷகம் என்கிற விபாகமும் பொருந்தாது. அப்படியே ஜகத் சப்தமும் வைகல்பிக நிஷ்கர்ஷகம். அதனாலேயே யந்மயம் என்று வையதிகரண்யத்தால் பிறந்த ப்ரச்நத்திற்கு ஜகச்சஸ: என்று ஸாமாநாதிகரண்யத்தினால் உத்தரமானது அர்த்தபேதமில்லாமையால் பொருத்தமுள்ளதாக ஆகிறது. சுக்ல குணத்திற்கு ஆச்ரயம் எது என்கிற வினாவுக்கு சுக்ல: பட: என்கிற உத்தரம்போல், இவ்வண்ணம் சுருக்கமாகச் சொல்லப்பட்டிருப்பதும், இனி விஸ்தாரமாக சொல்லப்படப் போகிறதுமான அர்த்தத்திற்கு கொஞ்சம் விஸ்தாரரூபமாக ச்லோகங்களால் நமஸ்காரம் செய்யப்படு

ஆச்ரயம் எது என்கிற வினாவுக்கு சுக்ல: பட: என்கிற உத்தரம்போல், இவ்வண்ணம் சுருக்கமாகச் சொல்லப்பட்டிருப்பதும், இனி விஸ்தாரமாக சொல்லப்படப் போகிறதுமான அர்த்தத்திற்கு கொஞ்சம் விஸ்தாரரூபமாக ச்லோகங்களால் நமஸ்காரம் செய்யப்படு

கிறதென்று நமஸ்காரச்லோக ஸங்கதி. ஸ்வேதைகரூபேண அவஸ்திதம் - ப்ராக்ருதமுதலியவைகளோடு கூடியதல்லவென்று அர்த்தம். பரப்ரஹ்மத்திற்கன்றோ ஹேயஸம்பந்தத்தின் இன்மை. விஷ்ணுவுக்கோவென்றால் ஹேயஸம்பந்தத்தின் இன்மை கிடையாது என்கிற ஸந்தேஹம்வரின் 'விஷ்ணுநாமாஸவேதேஷு, ஸமஸ்தவேதாந்தேஷு விஷ்ணுர்வாக்யம் பரமம்பதம்' என்கிற வசநங்களால் ப்ரஹ்மமே விஷ்ணுசப்தவாச்யமாதலாலும் விஷ்ணுவுக்கே பகவச்சப்தவாச்யத்வமிருப்பதாலும், விஷ்ணுவுக்கு ஹேயஸம்பந்தம் அநுபபன்னமென்கிற அபிப்ராயத்தால் பரப்ரஹ்மத்தினிடமுள்ள விசேஷணம் உரைக்கப்பட்டது. அவிகாராய விகாரசப்தம் தாழ்மையையும் தர்மத்தையும் உணர்த்துகிறது.

ஷோடசகஸ்ச விகார: இதுமுதலிய ப்ரயோகத்தால். தான் ஒன்றின் விகாரமாக இருந்து கொண்டு கார்யமாக ஆகிறதில்லை. என்பதனால் அவிகார: இதனால் கார்யமான அசித்தின் வ்யாவ்ருத்தி ஏற்பட்டது. அன்றிக்கே விகார: = அவஸ்தை, மஹத்த்வம் அஹங்காரத்வம் முதலியது. எப்பொழுதும் அவைகளின் ஸம்பந்தமில்லாமையால் அவிகாரன்-அதனால் விகாரமுள்ள ப்ரக்ருதியானது அவிகார பதத்தால் வ்யாவ்ருத்திக்கிறது. இவ்வண்ணம் தத்புருஷபஹுவ்ரீஹி ஸமாஸங்களால் அவிகாராய என்கிற பதத்தினால் கார்யகாரண ரூபா வஸ்தாத்வயத்துடன் கூடின அசித்தின் வ்யாவ்ருத்தி ஸித்திக்கிறது. சுத்தாய என்பதனால் பத்தவ்யாவ்ருத்தி ஏற்படுகிறது. நித்யாய சுத்ததையோடு நித்யனாக இருக்கிற - அர்த்தமில்லாவிடில் அவிகாராய என்பதனால் புநருக்தி உண்டாகும். நித்யபதமானது சுத்தியை விசேஷியாகின்றுகொண்டே சுத்திமத்தான வஸ்துவுக்கு விசேஷணம் எவ்வாறு மஹோதார: என்கிறவிடத்தில் மஹத்சப்தமானது ஔதார்யத்தை விசேஷித்துக் கொண்டே தாதாவுக்கு விசேஷணமோ அப்படிப்போல. அதினால் முக்தவ்யாவ்ருத்தி ஸித்தித்தது. பரமாத்மநே: என்பதனால் நித்யமுக்தவ்யாவ்ருத்தி ஏற்பட்டது. அவர்கள் பராதீனர்களே ஒழிய பரமர்களல்ல. 'ப்ரதாநம் புருஷன் அவ்யக்தம் காலம் இவைகளுக்கெல்லாம் பரமம்' என்று சொல்லப்போவதால் அவிகாராய இதுமுதலிய நான்குபதங்களால் ப்ரதாநபுருஷ அவ்யக்தகாலங்களுக்கு வ்யாவ்ருத்தி என்று சிலர். நிமேஷம் முதலிய அவஸ்தைகளுடன்கூடின காலமானது வ்யக்தமாக இருந்தபோதிலுங்கூட அவிகாரபதத்தால் வ்யாவர்த்திக்கப்பட்டிருப்பதாலும் புருஷர்களுக்கு மூன்றுவகைப்பட்டிருத்தலே ப்ராமாணிகமாதலாலும் விசேஷணங்களுக்கு அந்த புருஷபேத வ்யாவர்த்தநத்தில் ஸாமர்த்யத்தினாலும் எவ்வாறு இங்குசொல்லப்பட்டிருக்கிறதோ அப்படிப்பட்ட இந்த அர்த்தங்களுக்கே வ்யாவர்திதத்வம் உசிதம். விலக்ஷணமான விக்ரஹத்தோடுகூடி இருந்தலாலும் எல்லா வஸ்துக்களைக்காட்டிலும் வைலக்ஷண்யத்தைக்கூறுகிறார்—ஸதைகரூபரூபாய என்று. முதலாவதான ரூபசப்தம் ஸ்வபாவத்தைச் சொல்லுகிறது. ஒரே ஸ்வபாவமுள்ளவனென்று அர்த்தம். ப்ரவ்ருத்திவ்யாபாரங்களான எல்லா அவஸ்தைகளிலும் ஸகலஹேய ப்ரத்யநீகத்வம் மங்களாஸ்பதத்வம் த்யேயத்வம் முதலிய ஸ்வபாவம் நழுவாமலிருக்கிறதென்று அர்த்தம். அன்றிக்கே ரூபம் திவ்யாத்ம ஸ்வரூபத்தோடு ஸமாநஸ்வபாவமுள்ளது. அதனாலும் ஹேயப்ரத்யநீகத்வம் முதலியது ஸித்தித்தது. இந்த பதங்களால் சக்ஷுராநந்தமயாதிகரணங்களுடையவும அந்தராதித்யவித்யையினுடையவும் அர்த்தங்கள் விவக்ஷிக்கப்பட்டன. முற்கூறப்பட்ட ஆத்மத்வமானது ம்ருதாத்மகோகட: என்பதுபோல் ஆகிறதில்லை என்று அதின் வைசத்யமானது அவயவசக்தியினால் விஷ்ணு சப்தத்தினாலும் ஸர்வஜிஷ்ணவே என்கிற பதத்தாலும் செய்யப்படுகிறது. இரண்டு பதங்களால் * ந்ருபன் † நபஸ் இரண்டும் வ்யாவர்த்திக்கிறது. உள்புகுந்து நியமநம் செய்வதன்றோ சரீரித்வம். இதனாலேயே ஆத்மத்வம் விவரிக்கப்பட்டதாக ஆகிறது. விஷ்ணுசப்தம் ரூடமான பதமாதலால் தேவதாவிசேஷநிர்ணயமும் ஸித்தித்தது. அன்றிக்கே விஷ்ணுசப்தத்தினாலேயே நியமநபர்யந்தமான வ்யாப்தி கூறப்பட்டது. வ்யாப்தியினால் உண்டுபண்ணப்பட்டிருக்கிற வ்யாப்யவஸ்துவினுடைய தோஷஸம்பந்த சங்கையை விலக்குகிறார்—ஸர்வஜிஷ்ணவே என்று. விஷ்ணுவுக்கு எவ்வாறு காரணத்வம். ஹிரண்யகர்ப்பன் முதலியவர்களுக்கன்றோ ஸ்ருஷ்டி முதலியதில் காரணத்வமறியப்படுகிறதென்று வினவப்படுமேயாகில் சொல்லுகிறார்—நம: என்று. அந்தந்த ஹிரண்யகர்ப்பன் முதலானவர்களை சரீரமாக உடையவரான விஷ்ணுவே ஸ்ருஷ்டி முத

* ந்ருபன்—அரசன். † நபஸ்—ஆகாயம்.

வியதைச் செய்கிருர் என்று அர்த்தம். 'ரக்ஷார்த்தம் ஸர்வபூதாநாம் விஷ்ணுத்வமுப ஜக்மிவாந்' (எல்லா பிராணிகளையும் காப்பாற்றுவதற்காக அந்த பரமபுருஷன் விஷ்ணு ரூபத்தைப்பெற்ருர்)— என்று பகர்ந்திருக்கிற விஷ்ணுவெனப் பெயர்வாய்ந்த அவதார விக்ரஹத்தின் வாயிலாக ஹரிசப்தம் பகவானிடத்தில் பர்யவஸிக்கிறது. ஹிர ண்யகர்ப்ப சங்கர சப்தங்கள் ஜீவனை த்மாமாகக்கொண்டு [illegible] லாக இருக்கின்றன. 'ப்ரஹ்மாத்யா: ஸகலாதேவா: மநுஷ்யா: பசவஸ்ததா விஷ்ணு மாயாமஹாவர்த்தமோஹாந்த தமஸாவ்ருதா:' (நான்முகன் முதலான எல்லாதேவர்களும் மனிதர்களு! அப்படியே பசுக்களும் விஷ்ணுவின் மாயையாகிற பெருஞ்சுழலில் அகப் பட்டு மோஹமாகிற பெரட்டை இருட்டினுல் மூடப்பட்டிருக்கின்றன) என்றும். 'ஹிர ண்ய கர்ப்பாதிஷு ச ப்ரஹ்மகர்மாத்மிகாத்விதா' 'ஹிரண்யகர்ப்போபகவாந்' (மகிமை தங்கியவரான ஹிரண்யகர்ப்பன்) என்றும் தொடங்கி 'மூர்த்தமேதத்தரே ரூபம் பாவ நாத்ரிதயாத்மகம்-அசுத்தாஸ்தேஸமஸ்தாஸ்து தேவாத்யா: கர்மயோநய:' (பாவநாத்ரய ஸ்வரூபமாக இருக்கிற இது ஹரியினுடைய மூர்த்தமான ரூபம். கர்மபரவசர்களாக இருக்கிற தேவாதிகளான அவர்கள் அனைவர்களும் அசுத்தர்கள்.) இது முதலிய இந்த ப்ரபந்தத்திலுள்ள ச்லோகங்களின் தாத்பர்யத்தை அனுஸரித்தலால் 'ஏதௌத்வௌ விபுதச்ரேஷ்டௌ ப்ரஸாதக்ரோதஜௌஸ்ம்ருதௌ, ததாதர்சிதபந்தாநௌ ஸ்ருஷ்டி ஸம்ஹாரகாரகௌ, தவாந்தராத்மா மமச யேசாந்யே தேஹிஸம்ஜ்ஞிதா: 'ஸர்வே ஷாம் ஸாக்ஷிபூதோ வௌக்ராஹ்ய:கேநசித்க்வசித்' தேவர்களுக்குள் சிறப்புற்றவர்க ளான இவ்விருவர்களும் (முறையே) அந்த வாஸுதேவனுடைய ப்ரஸாதத்தினின்றும் கோபத்தினின்றும உண்டானவர்களாக எண்ணப்பட்டிருக்கின்ருர்கள். அந்தப்பரமபுருஷ ஞல் காட்டப்பட்டவழியுடன் கூடியவர்களாக ஸ்ருஷ்டிஸம்ஹாரங்களைச் செய்கின்ருர்கள். உனக்கும் எனக்கும் தேஹிகளென்கிற பெயருள்ளவர்கள் மற்றவர்கள் எவர்களுண்டோ அவர்களுக்கும் அவன் அந்தராத்மாவாக இருப்பவன். எல்லோருக்கும் அவன்ஸாக்ஷியாக இருப்பவன், ஒருவனுலும் ஒருபொழுதிலும் அறியத்தகாதவன் என்கிற பாரதம் முதலிய க்ரந்த வசநங்களோடு அர்த்தைக்யத்தாலும் நிச்சயிக்கப்படுகிறது. ஹிரண்யகர்ப்பன் முத லியவர்களோடு ஸாமாநாதிகரண்யமானது (அபேத நிர்தேசமானது) வ்யாப்தியினுல் உண்டுபண்ணப்பட்டதென்பதை ஸூசிப்பிக்கிருர்—ஸர்வஸ்ய தேஹிந: என்று. ப்ரஹ் மா சிவன் இவ்விருவர்களுக்கும் இடையிலிருந்தபோதிலுங்கூட குறைவுபடாத ஸ்வபாவ முள்ளவர் என்று சொல்லுகிருர்—தார்க்ஷ்ய என்று. அன்றிக்கே அம்மூவர்களுள் இவரே மோக்ஷத்தைக்கொடுப்பவர் என்று அர்த்தம். 'அதகஸ்மாதுச்யதே தாரம்-யஸ்மாதுச்சார் யமாணஏவ கர்ப்பஜந்மஜராமரண ஸம்ஸாரமஹாபயாத்தாரயதி தஸ்மாதுச்யதே தாரம்' "யாதுகாரணத்தால் தாரமென்று ப்ரஹ்மம் கூறப்படுகிறது? யாதொரு காரணத்தால் உச்சரிக்கப்படாநின்றதாகவே கர்ப்பவாஸம் பிறப்பு, மூப்பு, இறப்பாகிற ஸம்ஸாரபயத்தி னின்று சேதநவர்க்கங்களைத் தாட்டிவைக்கிறதோ அக்காரணத்தினுல் தாரமென்று சொல் லப்படுகிறது என்கிற ச்ருதியினுலும். 'ப்ரஹ்ம விஷ்ணு சிவா ப்ரஹ்மந் ப்ரதாநாப்ரஹ்ம சக்தய:' ஹே ப்ரஹ்மந்! ப்ரஹ்மா, விஷ்ணு, சிவன் இம்மூவர்களும் ப்ரதானமான ப்ர ஹ்மசக்திகள் இதுமுதலியவைகளால் விஷ்ணுவைக்காட்டிலும் மேலான தத்வமும் விஷ் ணுவுக்கு நான்முகன் முதலியவர்களோடு ஸாம்யமும் சங்கிக்கத்தக்கதல்ல. சக்தி என்பது (அப்ருதக்ஸித்த) வேறுபடாமல் என்றுமே சேர்ந்திருக்கின்றவிசேஷணம். அதில் தர்மீ விசேஷ்யமானது விசேஷணவாசகத்தினது விபக்தியோடு அஸமாநமான விபக்தியினுல் சொல்லப்படுமேயாகில் தர்மிபர்யந்தமாக அர்த்தத்தை உணர்த்தும் தன்மைவாய்ந்துள்ள சப்தத்திற்குங்கூட படஸ்ய சுக்ல: (வஸ்திரத்தின் வெண்மை) இதுமுதலிய இடங்களில்

தர்மமாத்ரத்தை போதிக்கும் தன்மை காணப்படுகிறது. அவ்வாறாக விஷ்ணு சப்தமான்து விசேஷணமாக இருக்கிற விக்ரஹமாத்திரத்தை உணர்த்துகிறது. ஸமானவிபக்தியுடன் சேர்ந்திராத ப்ரஹ்ம சப்தத்தால் தர்மிக்குத்தனித்து நிர்தேசமிருப்பதால் ப்ரஹ்மத்தினுடைய சக்திகளும் ப்ரஹ்மசக்திகள். அதனால் அஸமான விபக்தியினால் நிர்தேசிக்கப் பட்டிருத்தல் என்று. அன்றிக்கே பகவானுக்கு தேவன் மநுஷ்யன் முதலிய சப்தங்களால் வ்யபதேசம்போல ப்ரக்ருதி முதலிய சப்தங்களால் வ்யபதேசமும் விபூதிகளோடு ஸாஜாத்யரூபத்தால் ஏற்படுகிறது. இந்த அர்த்தத்தை ஸ்ரீவத்ஸாங்கமிச்ராள் (கூரத்தாழ்வான்) பகர்ந்திருக்கின்றனர். "ஸஜாதீயஸ்தேஷாமிதி தவிபவாக்யாமபியஜந்" (அந்த விபூதிவர்க்கங்களுக்கு ஸஜாதீயனாக இருந்துகொண்டு இவ்வண்ணமாக ராமக்ருஷ்ணாதிவிபவாமதேயங்களையும் அடையாநின்றவனாக) என்று. ஆகையால் எப்படி அர்த்தம் கூறப்பட்டதோ இதுதான் ஸரியானது. அதற்குமேல் ப்ரக்ருதி காரணத்தை வ்யாவ்ருத்திப்பதற்காக ப்ரக்ருதியுடன்கூடின பரமாத்மாவை நமஸ்கரிக்கிறார்—ஏகாநேக என்று. காரணாவஸ்தையில் ஒருவர், கார்யாவஸ்தையில் அநேகர். அதற்குமேல் மனத்தில் இருக்கிற கார்யாவஸ்தையைக் கூறுகிறார்—ஸ்தூல என்று. அப்படியே புத்திஸ்தையான காரணாவஸ்தையைக்கூறுகிறார்—அவ்யக்த என்று. அந்த அவஸ்தையாலும் தழுவாத ஸ்வாபாவத்தோடுகூடி இருத்தலைச் சொல்லுகிறார்—முக்திஹேதவ: என்று. அதற்குமேல் காலவிசிஷ்டமாகச்சொல்லுகிறார்—ஸர்க என்று. காலத்திற்கு கூறப்போகிய விசேஷணோபபத்தியினால் ப்ரகரணம் விசிஷ்டபரமாக இருப்பதால். வேறு விசேஷணங்களோடுகூடியிருத்தல் ப்ரதிபாதிக்கப்பட்டிருப்பதினால் காலவைசிஷ்ட்ய தனத்தினது பாரிசேஷ்யத்தாலும் அது பாதிக்கப்படாமற்போனால் அபேக்ஷித விதிகளின் அபாவம் ப்ரஸங்கிப்பதாலும் தனித்த ப்ரஹ்மஸ்வரூபத்துக்கு காரணபரத்வம் சொல்லில் அண்டத்திற்குஉள்ளடங்கியிருக்கிற ஸ்ருஷ்டிமுதலியது சொல்லப்பட்டிருப்பதாலும் அண்டத்திற்கு வெளிப்பட்டிருக்கிற தத்வஸ்ருஷ்டிமுதலியது கூறப்படப்போகிறதாக இருப்பதாலும் பௌநருக்த்யம் ப்ரஸங்கிப்பதால் விஸ்தாரத்திலும் ப்ரதாநபுருஷவ்யக்த காலங்கள் "வ்யக்தம் விஷ்ணுஸ்ததாவ்யக்தம புருஷ: காலஏவச, ததாபுருஷரூபேண காலரூபேணசஸ்திதம் ப்ரஹ்மாதக்ஷாதய: கால:" (வ்யக்தமான ப்ரபஞ்சமும் அவ்வாறே அவ்யக்தமான பூதஸூக்ஷ்மமும் புருஷனும் காலமும் விஷ்ணுவே. அவ்வண்ணமே விஷ்ணுரூபியான ப்ரஹ்மமானது புருஷரூபியாகவும காலரூபியாகவும் இருக்கிறது. ப்ரஹ்மா தக்ஷன் முதலியவர்கள் காலம்.) இது முதலியவைகளால் வ்யக்தாவ்யக்தாதிகளுடன்கூட சொல்லப்படப்போவதாக இருப்பதால் இந்த ச்லோகம் காலபரமே. அசித்விசிஷ்டவாசியான ச்லோகத்தை அடுத்திருப்பதால் இந்த ச்லோகத்திற்கும் காலபரத்வம் தகுந்தது. மேல்ச்லோகம் ஸமஷ்டி ஸ்திதி விநாசமூலபூத ஜீவபரச்லோகத்துடன் சேர்ந்திருப்பதால். காலம் ஸ்ருஷ்டி ஸ்திதி விநாசமூலபூதமென்பது "ப்ரஹ்மாதக்ஷாதய: கால:, விஷ்ணுர்மந்வாதய: கால:, ருத்ர:காலாந்தகாத்யச" இதுமுதலியவைகளால் ஸித்தம் ஜகந்மய:, அவச்சேதகதையினாலும் அவச்சேத்யதையினாலும் ஜகத்ப்ரசுரன். அதற்குமேல் க்ஷேத்ரஜ்ஞஸமஷ்டி ரூபமாக இருக்கிற பரத்மாவை நமஸ்கரிக்கிறார் — ஆதாரபூதம் என்று. அசேதநங்களுக்கு சேதநன் ஸ்வரூபத்தால், ஆதாரமாக இருப்பவன். "ஏவமேவைதாபூதமாத்ரா: ப்ரஜ்ஞாமாத்ராஸ்வர்பிதா:, ஜீவபூதாம்மஹாபாஹோயயே தம்தார்யதே ஜகத்" (இவ்வண்ணமாகவே இந்த அசேதநபதார்த்தங்கள் சேதநங்களாகிற ஆதாரங்களில் வைக்கப்பட்டிருக்கின்றன. ஹே மஹாபாகுபலமுள்ளவனே! எதனால் இந்த உலகம் தரித்திருக்கும்படிசெய்யப்படுகிறதோ அப்படிப்பட்ட ஜீவஸ்வரூபமான) என்கிறவசநத்தினால் அணீயஸ்தவம் ப்ரக்ருதி

யைக்கூட வ்யாபிப்பதற்கு யோக்யமான ஸௌக்ஷ்மஸ்வபாவத்தோடுகூடியிருத்தல், அன்றிக்கே விகாஸாணுஸ்வரூபைஶ்ச என்று சொல்லப்பட்ட ப்ரகாரம் ஸ்ருஷ்டி தசையிற் போல ஜ்ஞானவிகாஸமில்லாமையால் அணீயஸ்த்வமே என்று அர்த்தம். ஸர்வபூதஸ்தம்-பவதி உண்டாகிறது என்கிற வ்யுத்பத்தியினால் பூதம் என்று தத்வங்கள் சொல்லப்படுகின்றன. பூமிபர்யந்தங்களான எல்லா தத்வங்களிலும் நிலைபெற்றிருக்கிற - அதற்குப் பிறகு க்ஷேத்ரஜ்ஞவ்யஷ்டி விசிஷ்டனை உபஸ்கரிக்கிறார்—ஜ்ஞாந என்று.

யதி³ நிர்விஶேஷஜ்ஞாநமாத்ரமேவ ப்³ரஹ்மாதி⁴ஷ்டா²ந ஸூத்ரப்ரதிபாத³நபரம் ஶாஸ்த்ரம், தர்ஹி — "நிர்கு³ணஸ்யாப்ரமேயஸ்ய ஶுத்³த⁴ஸ்யாப்யமலாத்மந: । கத²ம் ஸர்கா³தி³கர்த்ருத்வம் ப்³ரஹ்மணோऽப்⁴யுபக³ம்யதே" (வி-பு-௧-௩-௧) இதி சோத்³யம், "ஶக்தய: ஸர்வபா⁴வாநாமசிந்த்யஜ்ஞாநகோ³சரா: । யதோऽதோ ப்³ரஹ்மணஸ்தாஸ்து ஸர்கா³த்³யா பா⁴வஶக்தய: ॥ ப⁴வந்தி தபதாம் ஶ்ரேஷ்ட² பாவகஸ்ய யதோ²ஷ்ணதா" (வி-பு-௧-௩-௨) இதி பரிஹாரஶ்ச ந க⁴டதே । ததா²ஹி — நிர்கு³ணஸ்ய ப்³ரஹ்மண: கத²ம் ஸர்கா³தி³கர்த்ருத்வம், ந ப்³ரஹ்மண: பாரமேஷ்ட்²யாதி³க்ஸ்த²ர்ய:, குவிதர்ஹ்யாஶ்ரிதபரிக்லுப்த: இதி சோத்³யபரிஹாரௌ ஸ்யாதாம் । உத்தம்ஸத்த்வாதி³காரணம் ஸகலாதி³கு³ணயுக்தா பரிபூர்ண-கர்மவஶ்யேஷு த்³ருஷ்டமிதி ஸத்த்வாதி³கு³ணரஹிதஸ்ய பரிபூர்ணஸ்ய அகர்மவஶ்யஸ்ய கர்மஸம்பந்த⁴ரஹிதஸ்ய கத²ம் ஸர்கா³தி³கர்த்ருத்வமப்⁴யுபக³ம்யத இதி சோத்³யம், த்³ருஷ்டஸகலவிஸஜாதீயஸ்ய ப்³ரஹ்மணோ யதோ²தி³த ஸ்வபா⁴வ ஸ்யைவ ஜலாதி³விஸஜாதீயஸ்யாக்³நேரௌஷ்ண்யாதி³ ஶக்தியோக³வத் ஸர்வஶக்தியோகோ³ ந விருத்⁴யத இதி பரிஹார: ॥

ஸ்ரீபாஷ்யம்—

அதில் ஜ்ஞானஸ்வரூபம் என்கிற இந்த ச்லோகமானது க்ஷேத்ரஜ்ஞ வ்யஷ்டிரூபமாக இருக்கிற பரமாத்மாவினுடைய ஸ்வபாவத்தைக்கூறுகிறது. ஆதலால் இந்த இடத்தில் நிர்விசேஷ வஸ்துவுக்கு ப்ரதீதி இல்லை.

சாஸ்த்ரமானது நிர்விசேஷ ஜ்ஞானரூப ப்ரஹ்மாநிஷ்டாப்ரஹ்மத்தைப் பகர்வதில் நோக்குள்ளதாக இருக்குமேயாகில் அப்பொழுது 'நிர்குணஸ்யா ப்ரமேயஸ்யசுத்தஸ்யாப்யமலாத்மந: கதம்ஸர்காதிகர்த்ருத்வம் ப்ரஹ்மணோஹ்

யுபகம்யதே' என்கிற சோத்யமும், 'சக்தய: ஸர்வபாவாநாமசிந்த்ய ஜ்ஞாநகோசரா:- யதோ(அ)தோ ப்ரஹ்மணஸ்தாஸ்து ஸர்காத்யாபாவசக்தய:' பவந்தி தபதாம் ச்ரேஷ்ட பாவகஸ்ய யதோஷ்ணதா என்கிற பரிஹாரமும் எவ்வாறு பொருந்தும். அப்படி இருக்குமேயாகில் நிர்குணமான ப்ரஹ்மத்திற்கு எவ்வாறு ஸர்கம் முதலியவற்றில் கர்த்ருத்வம்? ப்ரஹ்மத்திற்கு பாரமார்த்திகமான ஸர்கமில்லை பின்னேயோ ப்ராந்தியினால் கல்பிக்கப்பட்டிருக்கிறதென்று சோத்யபரிஹாரங்கள் இரண்டும் இருந்திருக்கும்.

உத்பத்தி முதலிய கார்யமானது ஸத்வம் முதலிய குணங்களோடு கூடியவர்களும் அபரிபூர்ணர்களும் கர்மவச்யர்களுமாக இருக்கிற சேதநர்களிடம் காணப்பட்டிருப்பதால் ஸத்வாதி குணங்களால் விடுபட்டவனும் பரிபூர்ணனும் கர்மவச்யனாக இராதவனும் கர்மஸம்பந்தத்திற்கு அநர்ஹனாகவுமிருக்கிறவனுக்கு எவ்வாறு ஸர்காதி கர்த்ருத்வம் ஒப்புக்கொள்ளப்படுகிறதென்று சோத்யம். நேரில் காணப்படுகிற எல்லா வஸ்துக்களைக்காட்டிலும் விஜாதீயமாக இருப்பதும் கூறப்பட்டவண்ணமான ஸ்வபாவத்துடன்கூடியதுமாகவே இருக்கிற ப்ரஹ்மத்திற்கு ஜலம் முதலியவற்றைவிட வேறுபட்டிருக்கும் தன்மைவாய்ந்திருக்கிற அக்நி முதலிய வஸ்துக்களுக்கு ஔஷ்ண்யம் முதலிய சக்திஸம்பந்தம்போல எல்லா சக்திகளோடும் ஸம்பந்தமானது விருத்தமாகாதென்று பரிஹாரம்

ச்ருதப்ரகாசிகை—

'ஹிரண்யகர்ப்ப' இது முதலிய பாஷ்யத்தில் சொல்லப்பட்டிருக்கிற அர்த்தங்களில் இந்த ச்லோகமானது எதோடுகூடியிருக்கிற பரமாத்மாவினிடத்தில் சேர்க்குன்றது என்கிற சங்கைவரின் § ஸமாஸத்தில் உள்ளடங்கி இருக்கிற ப்ரஸ்துத ச்லோகார்த்தத்தை விவேசித்துகாண்பிக்கிறார்—தத்ர என்று. பரமாத்மாவுக்கு ப்ரமஸம்பந்தம் ஸத்வாரகமே என்று அர்த்தம். அதனால் என்னவென்றுகேட்கில் கூறுகிறார்—தஸ்மாத் என்று. நிர்விசேஷ ஜ்ஞாநபரமென்று சொல்லும்பக்ஷத்தில் ப்ரச்நோத்தரவாலாபகதநத்தின் அநுபபத்தி முகத்தால் உபக்ரமவிரோதம் சொல்லப்பட்டது.

அதற்குமேல் மேலத்தியாயத்திலுள்ள சோத்யபரிஹாரங்களின் ஒற்றுமையின்மை கூறப்படுகிறது—யதி என்று. அன்றிக்கே சாஸ்த்ராரம்பத்திற்கு உபயோகியான ப்ரச்நோத்தராநுபபத்தியானது உரைக்கப்பட்டது. இப்பொழுது இந்த ப்ரச்நோத்தர விசேஷாநுபபத்தியானது கூறப்படுகிறது—யதி என்று. முந்தின அத்தியாயத்தில் 'ஜுஷ்டம் ந்ரஜோகுணம்' இதுமுதலியதால் குணஸம்பந்தம் சொல்லப்பட்டிருந்தபோதிலும் 'நிர்கு

---

§ ஸமாஸம்—அநேக ஸுபந்தபதங்களை உள்ளடக்கிக்கொண்டிருக்கிற ஒரு அகண்டபதம்

ணஸ்ய ' என்று சோதகம் செய்கிறவனுக்கு இது அபிப்பிராயம். குணஸ்வயம் ஸத்வாரக மாக இருப்பதால் ஸ்வயம் நிர்குணம் நிர்விசேஷ பக்ஷத்தில் அப்ரமேயஸ்ய இதுமுதலிய பதங்கள் பயனற்றவைகள். நிர்குணஸ்ய என்கிற பதத்தினாலேயே நிர்விசேஷத்வம் ஸித்திப்பதால். பரிபூர்ணத்வம் முதலியகுணங்கள் ஒப்புக்கொள்ளப்படாமையாலும் அப்ர மேயாதி பதாந்தரங்களின் சேர்க்கையே நிர்குணபதத்தால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிற நிஷேதத்தினது விஷயஸங்கோசத்திற்கு ஸாதகம். நகட தேஇதி. ' ஸர்காத்யாபாவசக் தய:' என்று ஸர்வசக்தியோகத்தால் சோத்யத்திற்கு பரிஹாரம் வருவதால் நிர்விசேஷ பக்ஷத்திற்குப் பொருத்தமில்லை என்று கருத்து. அங்ஙனமாகில் எவ்வாறு சோத்யபரி ஹாரங்கள் இரண்டும் ஸம்பவிக்கலாம் என்று கேட்கில் சொல்லுகிறார் — ததாஹிஸதி என்று. நிர்குணஸ்ய ப்ரஹ்மண: என்பதினால் பதாந்தரங்களுக்கு வையர்த்யம் அபிப்ரா யப்படப்பட்டிருக்கிறது. நிர்விசேஷத்திற்கு கர்த்ருத்வாநுபபத்திசோத்யம் செய்யப்பட் டால் கர்த்ருத்வம் பரமார்த்தமாக இருந்தாலன்றோ அவற்றின் அநுபபத்தி, அபரமார்த்த மாக இருப்பதால் எவ்விதத்தாலும் கடியாமல்போவதே பூஷணமென்று பரிஹாரம்சொல் லத்தக்கதென்று அர்த்தம். இந்த சோத்யபரிஹாரங்கள் இரண்டும் எதற்காக-இந்த அர்த் தம் ப்ரதிபாதிக்கப்படாமல் போமேயானுலென்று சங்கைவரின் தானே அந்தசோத்யபரி ஹாரசரீரத்தைச் சொல்லுகிறார்—உத்பத்யாதி என்று. நிர்குணஸ்ய இதுமுதலிய விசே ஷணங்களுக்கு விபரீதாகாரங்களால் கதமென்பதினால் அபிப்ராயப்படப்பட்டிருக்கிற கர்த்ருத்வத்தினுடைய வ்யாப்தியைக்காண்பிக்கிறார்—ஸத்வாதிகுணயுக்த இதுமுதலிய தால். ஸத்வாதிகுணயுக்தா பரிபூர்ண கர்மவசயத்வங்கள் நிர்குணத்வாதிகளுக்கு யதா க்ரமமான விபரீதாகாரங்கள் - அமலாத்மந: என்பதற்கு விபரீதாகாரமும் கர்மவச்ய என்ப தினால் அர்த்தஸித்தம். அமலாத்மத்வம் அமலஸ்வபாவத்வம், கர்மஸம்பந்தாநர்ஹத்வம்- அதற்கு விபரீதமான ஆகாரம் கர்மஸம் பந்தார்ஹத்வம் அதுவும் கர்மவச்ய சப்தத்தால் அர்த்தஸித்தம். கர்மஸம்பந்தார்ஹத்வ காரியமன்றோ கர்மவச்யத்வம், நிர்குணஸ்ய இது முதலிய பதங்களுக்கு வரிசை தவறாமல் அர்த்தம் கூறுகிறார்.—ஸத்வாதிகுணரஹிதஸ்ய இதுமுதலிய பதங்களால்.

'கர்மஸம்பந்தாநர்ஹஸ்ய' என்கிற இந்த பதத்தினால் அமலாத்மந :என்கிற பதம் வ்யாக்யானிக்கப்பட்டதாக ஆகிறது. கர்மாவுக்கு வசப்படாமலிருத்தல் முக்தனுக்கும் இருக்கிறது. அவன் முக்தினிலமையில் கர்மஸம்பந்தமுள்ளவனாக இருந்தால் அதற்குத் தகுதியுள்ளவன். ஆதலால் அதற்கு வ்யாவர்தகமான கர்மஸம்பந்தாநர்ஹத்வமே அம லாத்மத்வம்-அகர்மவச்யத்வம்-கர்மாக்களால் உண்டுபண்ணப்பட்டிருக்கிற சகுனங்களை அடையாமை கர்மவச்யர்களுக்கு விஸஜாதீயனாக இருத்தல் கர்மஸம்பந்தார்ஹத்வம் ஸ்ரு ஷ்டி முதலியவற்றில் கர்த்ருத்வம் ஒப்புக்கொள்ளப்பட்டால் முக்குணங்களுக்கு வசப்பட் டிருத்தல் அபேக்ஷையுள்ளவனாக இருத்தல் கர்மாதீனமான பலன்களை அடைதல், கர்ம ஸம்பந்தத்திற்குத் தகுதியுள்ளவனாக இருத்தல் இவைகள் ப்ரஸங்கிக்குமென்று விசேஷ விரோத ப்ரஸஞ்ஜனத்தினால் சோத்யம். அக்னியை த்ரவ்யமென்று சொல்லில் அநுஷ்ண த்வம் ப்ரஸங்கிக்கும் என்பதுபோல இந்த தர்கமானது தர்மிக்ராஹக ப்ரமாணத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் விஸஜாதீயதர்மிக்கு விஸஜாதீயமான தர்மத் தோடு சேர்ந்திருத்தல் தகுதியுள்ளது. அக்நித்வம் இருந்தபோதிலுங்கூட நெருப் புக்கு ஜலத்தினாலணைக்கப்படத்தக்க தன்மை இல்லாததுபோல. ஆகையால் எல்லா வஸ் துக்களையும்விட வேறுபட்டிருக்கிறதான ப்ரஹ்மத்திற்கு எல்லா சக்திகளுடைய ஸம்பந் தம் உபபன்னமாகிறதென்று பரிஹாரமென்று அர்த்தம். " சக்தயஸ்ஸர்வபாவாநாம் "

என்கிற க்ரந்தத்திற்கு இது அக்ஷரார்த்தம். அசிந்த்யஜ்ஞாநகோசரா: தர்க்கத்ததாக ப்ரமிதி ஸித்தங்கள். ஸர்காத்யா: ஸர்காதிகோசரங்கள். பாவசக்தய: - வஸ்துசக்திகள். 'ப்ரஹ்மணோ வஸ்துசக்தய:' என்கிற நிர்தேசமானது ப்ரஹ்மதாதாத்மயம் என்பது போல. அன்றிக்கே ப்ரஹ்மத்தினுடைய பாவசக்திகள் வஸ்து சக்திகள் ப்ரஹ்மத்தினுடைய வஸ்துத்வப்ரயுக்தங்கள். ஸத்தாப்ரயுக்தங்களான நிருபாதிகசக்திகள் என்றர்த்தம்.

"परमार्थस्त्वमेवैकः" इत्यादावपि न कृत्स्नस्यापारमार्थ्यमुच्यते । अपितु कृत्स्नस्य तदात्मकतया तद्व्यतिरेकेण अवस्थितस्यापारमार्थ्यम् । तदेवोपपादयति — "तवैष महिमा येनव्याप्तमेतच्चराचरम्" (वि. पु. १-४-३८) इति । येनात्मना चराचरं व्याप्तं तदात्मकमेतत् सर्वमिति अतोऽन्यः कोऽपि नास्ति । अतस्सर्वात्मतया त्वमेवैकः परमार्थः । अत एव चोक्तं तवैष महिमा या सर्वव्याप्तिः, इति । अन्यथा तवैषा शक्तिरिति वक्तव्यम् । जगतः परतन्त्रत्वादीनां प्रधानं लक्षणा च स्यात् । श्रीपराशरमहर्षेः परब्रह्मविदो महापुरुषस्य तात्पर्यविरोधश्च । यतः कृत्स्नं जगत् ज्ञानात्मनात्मतया व्याप्तमेव न तन्मोहितम् । तस्मात्स्वात्मकस्यात्मनः समस्तनयोऽविरहिणस्तत्तद्देवमनुष्यादिरूपमिति ज्ञानज्ञानेनवयस्थित्या यथेदमृश्यत इति ॥ नयेवं सर्वस्वात्मकं जगद्देवमनुष्याद्यात्मकमिति दृश्यते । कथम् । ज्ञानाकारेणात्मनां देवमनुष्याद्याकारेण दृश्यत्वेऽपि कथमेतत् — ज्ञानस्वरूपमेवेति ॥

ஸ்ரீபாஷ்யம்—

" பரமார்த்தஸ்த்வமேவைக: " இது முதலியதுங்கூட ப்ரஹ்மத்தைத் தவிர்த்த மற்றது அனைத்துக்கும் அபாரமார்த்த்யத்தைச் சொல்லுகிறதில்லை. பின்னையோ எல்லாம் ப்ரஹ்மாத்மகமாக இருப்பதால், ப்ரஹ்மாத்மகமாக இராமல் ப்ரஹ்மத்தைவிட தனித்திருக்கிறவஸ்துக்களுக்கு அபாரமார்த்த்யத்தைச்சொல்லுகிறது. அதையே உபபாதிக்கிறார். "தவைஷமஹிமா யேநவ்யாப்தமேதச்சராசரம்" (எதனால் இந்த ஜங்கம ஸ்தாவராத்மகமான ப்ரபஞ்சம்

வ்யாபிக்கப்பட்டிருக்கிறதோ இது உம்முடைய மஹிமைதான்) என்று யா தொரு உன்னால் இந்த சராசரமனைத்தும் வ்யாபிக்கப்பட்டிருக்கிறதோ அத னால் இவை அனைத்தும் உன்னை ஆத்மாவாகக்கொண்டதே - உன்னைவிட வேறு ஒன்றும் கிடையாது, ஆகையால் எல்லாவற்றிற்கும் ஆத்மாவாக இருப்பதால் நீ ஒருவனே பரமார்த்தமாக இருப்பவன். அதனால் இதுகூறப் படுகிறது- "தவைஷ மஹிமா யா ஸர்வவ்யாப்தி:" என்று. அப்படி இல்லா விட்டால் தவைஷ ப்ராந்தி: என்று சொல்லத்தக்கது.'ஜகத:பதே த்வம்' இது முதலிய பதங்களுக்கு லக்ஷணையும் ஏற்படவேண்டியதாகும். லீலையினால் பூமியை ஸமுத்திரஜலத்தினடியிலிருந்து மேலே தூக்கிக்கொண்டு வாநின்ற மஹாவராஹரூபியான பகவானுடைய ஸ்துதிப்ரகரண விரோதமும் வரும். யாதொரு காரணத்தால் உலகம் முழுவதும் ஜ்ஞான வடிவுள்ளவரான உம்மால் ஆத்மாவாக இருந்துகொண்டு வ்யாபிக்கப்பட்டிருப்பதால் உமக்குமூர்த்தமா அதனால் ஜகத்முழுவதும் த்வதாத்மகமென்கிற அநுபவத்திற்கு ஸாதநமா யுள்ள யோகமில்லாதவர்கள் இதை கேவலதேவமனுஷ்யாதி ரூபமென்று ப்ரா ந்தி ஜ்ஞானத்தினால் பார்க்கிறார்களென்று சொல்லுகிறார் - "யதேதத் த்ருச் யதே" என்று. உள்ளபடி உன்னை ஆத்மாவாகக்கொண்டிருக்கிற ஜகத்தை தேவமநுஷ்யாத்யாத்மகமாகப் பார்ப்பதுமாத்ரமே ப்ரஹ்மமல்ல ஜ்ஞானாகா ரர்களான ஆத்மாக்களை தேவன் மனுஷ்யன் முதலிய அர்த்தாகாரமுள்ளவர் களாகப் பார்ப்பதும் ப்ரமம் என்று சொல்லுகிறார் - "ஜ்ஞானஸ்வரூபமகிலம்" என்று.

ச்ருதப்ரகாசிகை—

அதற்குமேல் நான்கு ச்லோகங்களையும் வ்யாக்யானம்பண்ணுகிறார்-பரமார்த்த: என்று. எல்லாவஸ்துக்களும ப்ரஹ்மபர்யந்தமாக இருப்பதுபற்றி அந்த ப்ரஹ்மத்திற்குச் சரீரமாதலால் எல்லாவற்றையும் சரீரமாகக்கொண்ட ப்ரஹ்மமே பரமார்த்தம். அந்த ப்ரஹ்ம பர்யந்தமல்லாதது மித்ய்யை என்ற அர்த்தம். ஜகத:பதே என்பதினால் ஆகாசத் திற்கு வ்யாவ்ருத்தி ஏற்பட்டது. 'யேந வ்யாப்தம்' என்பதனால் அரசனுக்கு வ்யா வ்ருத்தி உண்டாயிற்று. இதனால் ஜகத்திற்கு சரீரலக்ஷணம் காண்பிக்கப்பட்டதாக ஆகிறது. வ்யாப்யத்வதர்மத்தோடுகூடச் சேர்ந்திருக்கிற நியாம்யத்வதார்யத்வசேஷத்வங் களுக்குள் ஒன்றல்லவோ சரீரலக்ஷணத்திற்கு த்யோதகம். ஜகத்தைச் சரீரமாகக்கொண் டிருக்கிற உன்னைத்தவிர்த்து மற்றது மித்யை என்று சொன்னால் அந்த ப்ரஹ்மபர்யந்த மாக இராத ஸ்வதந்த்ரமான வஸ்த்வந்தரத்திற்கே மித்யாத்வம் ஏற்படுமே ஒழிய அந்த ப்ரஹ்மத்திற்குச் சரீரமாக இருக்கிற ஜகத்திற்கு மித்யாத்வம் ஏற்படாது. எவ்வாறு ஹே பூபதியே! உன்னைக்காட்டிலும் வேறு ஒருவனில்லை என்று சொன்னால் பூமியானது மித்ய்யையாக ஆகிறதில்லையோ அவனுக்கு தல்யனாக வேறு அரசனுக்கே மித்யாத்வம்

ஏற்படுகிறதோ அப்படிப்போல. அன்றிக்கே ஏகசப்தம் ப்ராதாந்யத்தைச் சொல்லுகிறது. ''ஏகாதாகிநிச்சாஸஹாயே'' என்கிற ஸூத்திரத்திலுள்ள அஸஹாயபதத்தினால் வ்யவச்சேதிக்கத்தக்கது ப்ராதான்யமன்றோ ப்ரஹ்மத்திற்கு ப்ராதான்யமானது ஜகத்தைக் குறித்து விசேஷ்யத்வரூபம். அப்பொழுது 'நாந்யோऽஸ்தி' என்பதனால் ப்ரதானனாக இருக்கிற அன்யன் நிஷேதிக்கப்படுகிறானேயொழிய அப்ரதானமான அர்த்தாந்தரம் நிஷேதிக்கப்படுகிறதில்லை கூறப்பட்டுள்ள அர்த்தத்திற்கு உபபாதகமாக இருப்பது வ்யாப்யத்வ ப்ரதிபாதகமான உத்தரார்த்தம் என்று சொல்லுகிறார்; தேதேவ என்று அதில்தீர்மானமாகக்கிடைத்த அர்த்தத்தைச் சொல்லுகிறார்—யேந என்று யேந யஸ்மாத் என்று அர்த்தம். த்வதந்ய:-த்வதாத்மகமல்லாதது. உன்னால் ஆத்மாவாக வ்யாபிக்கப்பட்டிருப்பதால் எல்லாம் த்வதாத்மகமாக இருப்பதுபற்றி உனக்குச் சரீரம். ஆகலால் த்வதாத்மகமாக இல்லாத உன்னைத்தவிர்த்த பதார்த்தம் வேறு இல்லை. ஆகையால் எல்லாவற்றையும் சரீரமாகக்கொண்டிருக்கிற நீ ஒருவனே பரமார்த்தமென்று அர்த்தம். 'தவைஷ மஹிமா' என்கிற ச்லோகத்தினது பாதியின் ஒரு அம்சமும் கூறப்பட்டுள்ள அர்த்தத்திற்கு உபபாதகமென்று சொல்லுகிறார்—அத: என்று. மகிமையானது வ்யாப்திரூபமாக இருப்பதால் 'யா ஸர்வவ்யாப்தி:' என்று உரைக்கப்பட்டது. வ்யாப்தியில் தாத்பர்யத்தால் அல்ல. வ்யாப்திக்கு மஹிமத்வத்திலன்றோ தாத்பர்யம். அன்றிக்கே வ்யாப்திக்கு கூறப்பட்டிருக்கிற அர்த்தத்தை உபபாதிக்கும் தன்மையானது மஹிமஸம்பிவ்யாஹாரத்தாலென்று சொல்லுகிறார்—அத இத்யுச்யதே என்று. அது அன்யனுக்கு ப்ரதிகூலமென்பதைக்காண்பிக்கிறார்—அந்யதா என்று. வ்யாபிக்கத்தக்க வஸ்துக்கள் வ்யாப்தி இவைகள் மித்யையாக இருக்கும் பக்ஷத்தில் எல்லாவற்றிலும் வ்யாப்தியானது உன் மகிமை என்று சொல்லத்தக்கதல்ல, பின்னையோ ப்ராந்தி என்று சொல்லத்தக்கதென்று கருத்து. எல்லாம் அபரமார்த்தம என்று சொல்லும்பக்ஷத்தில் வேறு இரண்டு தூஷணங்களை உபந்யஸிக்கிறார் — ஜகத்பதே என்று லக்ஷணே - அதிஷ்டாநலக்ஷணே - வஸ்துக்கள் அப்ரஹ்மாத்மகமாக இருப்பதுபற்றி ஸ்வதந்த்ரங்களென்று ப்ரத்யக்ஷத்தால் அறியப்பட்டிருப்பதால் அந்த ப்ரத்யக்ஷத்திற்கு விருத்தமான ப்ரஹ்மபர்யந்தத்வத்தை சாஸ்த்ரம் ப்ரதிபாதிக்கிறதில்லை. ஆதித்யோயூப: என்பதுபோலென்கிற சங்கையின் அபரோக்ஷரூபையாக இருந்தபோதிலுங்கூட அந்யதாஸித்தையான ஸ்வாதந்த்ர்ய ப்ரதீதியைவிட பரோக்ஷரூபையாக இருந்தபோதிலும் அநந்யதாஸித்தையான பாரதந்த்ர்ய ப்ரதிபத்தியானது அதிக பலமுள்ளதென்கிற அபிப்பிராயத்தால் ச்லோகத்தை அவதாரிப்பிக்கிறார்—யத: என்று. பாரதந்த்ரிய ப்ரதிபத்தியானது பரமாத்மப்ரதீதியை அபேக்ஷித்துக்கொண்டிருக்கிறது. அந்த பரமாத்மப்ரதீதி இல்லாவிடில் பாரதந்த்ரிய ப்ரதிபத்தி ஸம்பவிக்கிறதில்லை. ஆதலால் ஸ்வாதந்த்ரிய ப்ரதிபத்தி அந்யதாஸித்தை என்று அர்த்தம். 'கேவலதேவமனுஷ்யாதிரூபமிதி' பரமாத்மாவுக்குச் சரீரமாக இருத்தலென்கிறதன்மையை விட்டொழிந்த ஜகத்ரூபமாத்ரமென்று அர்த்தம். இது அர்த்தம் எவ்வாறு தேஹாத்மப்ரமமானது ப்ரத்யக்ஷமாக இருந்தபோதிலும் பரோக்ஷமான சாஸ்த்ரஜ்ஞாநத்தால் பாதிக்கப்படுகிறதோ அவ்வாறே ஸ்வாதந்த்ரியப்ரமமும் தேஹத்தைக்காட்டிலும் வேறாகயிருக்கிற தன் ஆத்மாவைக்கூட அறியாதவனுக்கு பரமாத்ம பாரதந்த்ர்யத்தின் அப்ரதிபத்தியானது எவ்வாறு உண்டாகும் என்பதையும் ந்யாயஸித்தை என்பதையும் காண்பிப்பதற்காக மூன்றாவது ச்லோகத்தின் ஆரம்பம். அதை வ்யாக்கியானம் செய்கிறார்—நகேவலம் என்று. சேதநாசேதநாத்மகமான ஜகத்தில் 'ஜ்ஞாநஸ்வரூபமகிலம் ஜகத்' என்கிற ஜகத் சப்தத்தினால் சேதநரூபமான ஜகத்தானது சொல்லக்கருதப்பட்டிருக்கிறது. எவ்வாறு 'த்ரிபிர்குணமயைர்பாவைரேபிஸ் ஸர்வமிதம் ஜகத், மோஹிதம்நாபிஜாநாதிமாமேப்ய:

பரமவ்யயம்' (இந்த குணமயங்களான மூன்றுபாவங்களால் மோஹிதமிருக்கின்ற இந்த உலகமனைத்தும் என்னை இந்த குணமயபாவங்களைக்காட்டிலும் வேறுபட்டவனென்றும் அழிவற்றவனென்றும் அறிகிறதில்லை) என்கிற இந்த ச்லோகத்தில் ஜ்ஞானஸ்வரூபனான பரமாத்மாவை ஜடரூபமான அர்த்த ஸ்வரூபனாக எண்ணுதல் ப்ரமம் என்று சொன்னதனால் அர்த்த ஸ்வரூபத்தை அர்த்த ஸ்வரூபமாக எண்ணுதல் ப்ரமமாகாதென்பதும் ஸித்தமே தேஹாத்ம ப்ரமமானது ஸம்ஸர்கத்தால் உண்டுபண்ணப்பட்டிருக்கிறது. ஜலம் உஷ்ணம் என்பதுபோல ஆத்மாவின் அஸாதாரண தர்மமாக இருக்கிற ஜ்ஞானத்தின் ப்ரகாசமிருந்தபோதிலும் அந்த தர்மபூத ஜ்ஞானத்தினது அஸாதாரணதையை அறியாமையால் ப்ரமத்திற்கு உபபத்தி அன்றிக்கே பாவசப்தம் ஸ்வபாவபரம். ஸ்வபாவஸித்தங்களானசக்திகள் என்று அர்த்தம்

न केवलं वस्तुस्वरूपात्मकस्य जगतो देवमनुष्याद्यात्मकत्वेनोपलम्भनमेव भ्रमः । ज्ञानाकाराणामात्मनां देवमनुष्याद्याकारत्वोपलम्भनमपि भ्रम इत्याह — "ज्ञानस्वरूपमखिलम्" इति ॥

ये [illegible] ज्ञानस्वरूपात्म[illegible] [illegible] देवमनुष्यादिव्यक्तिवर्णनात् विशेषशरीररूपेण [illegible] जगच्छरीरातिरिक्तं ज्ञानस्वरूपात्मकं [illegible] पश्यन्तीत्याह "भेदं ज्ञानविदः" इति । अन्यथा श्लोकानां पौनरुक्त्य[illegible] [illegible], [illegible]विरोधः, [illegible]विरोधश्च ॥ "तस्यात्मपरदेहेषु सतोऽप्येकमयं हि यत्" इत्यत्र सर्वेष्वात्मसु ज्ञानैकाकारतया समानेषु देवमनुष्यादि व्यक्तिवर्णनात् विशेषरूपेण [illegible] देवाद्याकारेण भेददर्शनमतथ्यमित्युच्यते । [illegible] आत्मभेदोऽपि भेदं न प्रतिषिध्यते । देवमनुष्यादि विविधविचित्रविग्रहेषु वर्तमानं सर्वात्मसु [illegible] समदृष्टयः । यथोक्तं भगवता "शुनि चैव श्वपाके च पण्डिताः समदर्शिनः" (गी-५, १८) "निर्दोषं हि समं ब्रह्म" (गी-५, १९) इत्यादिषु ; "तस्यात्मपरदेहेषु सतोऽपि" इति देहातिरिक्ते वस्तुनि सर्वविधसाम्यस्योक्तत्वात् ॥

"यद्यन्योऽस्ति परः कोऽपि" इत्यत्रापि नात्मैक्यं प्रतिपाद्यते ; यदि मत्तः परः कोऽप्यन्य इत्येकविषये पर

ஸ்வாந்யஸ்வயோ꞉ வ்யோமாயோமாஜ ததா பாரஸ்வ꞉ ஸ்வவ்ருத்திஸித்தா ஸ்வவசந꞉ । அந்யஸ்வஸ்யாபி ஜ்ஞாநைகாகாரத்வாத் அந்யாகாரவ்யாவ்ருத்திவிஷயா꞉ ॥

ஸ்ரீபாஷ்யம் —

சிறந்த புத்தியுள்ளவர்களாகவும் ஆத்மாவை ஞாநஸ்வரூபனாக அறியாநின்றவர்களாகவும் எல்லாம் பகவதாத்மகமென்கிற அநுபவத்திற்கு ஸாதநமான யோகத்திற்கு யோக்யமாயும் பரிசுத்தமாயுமிருக்கிற மனதை உடையவர்களாகவுமிருக்கிறார்களோ அவர்கள் தேவன் மனுஷ்யன் முதலிய ப்ரக்ருதியின் பரிணாமவிசேஷமான எல்லா ஜகத்தையும் சரீரத்தைவிட வேறாக இருக்கிற ஜ்ஞாநஸ்வரூபாத்மகமாகவும் உன் சரீரமாகவும் பார்க்கிறார்கள் என்று சொல்லுகிறார் (யேது ஜ்ஞாநவித:) என்று அங்ஙனமில்லாவிடில் ச்லோகங்களுக்கு பௌநருக்தயமும் பதங்களுக்கு லக்ஷணையும் அர்த்தவிரோதமும் ப்ரகரணவிரோதமும் ஸம்பவிக்கும். ‘தஸ்யாத்மபரதேஹேஷு ஸதோபயே கமயம்’ என்கிற இடத்தில் எல்லா ஆன்மாக்களும் ஜ்ஞாநைகாகாரர்களாக இருக்க தேவமனுஷ்யாதி ப்ரக்ருதிபரிணாம விசேஷ ரூபமான பிண்டங்களின் ஸம்ஸர்கத்தால் உண்டுபண்ணப்பட்டிருக்கிறதான ஆத்மாக்கள் தேவாத்யாகாரத்தால் வேறுபட்டவர்கள் என்கிற பேததர்சநமானது அதத்யம் என்று சொல்லப்படுகிறது. பிண்டத்தையும் ஆத்மாவையும் அடைந்திருக்கிறதில்லை த்வைதம் மறுக்கப்படுகிறதில்லை. தேவமநுஷ்யாதி ரூபமாகவும் பற்பலவிதங்களாகவுமிருக்கிற பிண்டங்களிலிருக்கிற ஆத்மவஸ்துக்கள் அனைத்தும் ஸமமானவை என்று அர்த்தம். ‘சுநி சைவ ச்வபாகேச பண்டிதாஸ்ஸமதர்சிந:’ (நாயினிடத்திலும் சண்டாளனிடத்திலும் பண்டிதர்கள் ஸமத்ருஷ்டியுள்ளவன்) ‘நிர்தோஷம் ஹிஸமம் ப்ரஹ்ம’ (தோஷமில்லாத ப்ரஹ்மமானது எங்கும் ஸமமாகவன்றோ இருக்கிறது) இது முதலிய இடங்களின் பகவானான ஸ்ரீ க்ருஷ்ணனால் இவ்வண்ணம் கூறப்பட்டது. ‘தஸ்யாத்மபரதேஹேஷு ஸதோபி’ என்று தேஹத்தைவிட வேறாகயிருக்கிற வஸ்துவினிடத்தில் தான் அந்யன் என்கிற விடாகம் கூறப்பட்டிருப்பதால். “யத்ந்யோஸ்தி பர: சோபி’ என்கிற இடத்தில்கூட ஆத்மைக்யமறியப்படுகிறதில்லை. ‘யதி மத்த:பர: கோப்யந்ய:’ என்று ஒரு அர்த்தத்தில் பரசப்தம் அந்யசப்தம் இரண்டிக்கும் ப்ரயோகம் கூடாதாதலால் அங்கு ‘பரசப்தமானது தன்னைத் தவிர்த்த ஆத்மாவைச்சொல்லுகிறது அந்யசப்தமானது அதற்கும் ஜ்ஞாநைகாகாரத்வமிருப்பதால் வேறு ஆகாரத்தின் ப்ரதிஷேதத்தை பலமாகக் கொண்டிருக்கிறது.

ச்ருதப்ரகாசிகை—

நான்காவதை வ்யாக்கியானிக்கிறார்—யேபுந: என்று. "விஜ்ஞாநஞ்சாவிஜ்ஞாநஞ்ச" என்கிற இடத்தில் விஜ்ஞாநசப்தமானது ஆத்மாவைச்சொல்லும் ஸ்வபாவமுள்ளதாக இருப்பதால் ஜ்ஞாநஸ்வரூபாத்மவித: என்று உரைக்கப்பட்டது. அபுத்தய: என்று முன் ச்லோகத்தில் சொல்லப்பட்ட அர்த்தத்திற்கு ப்ரதியோகியாக சுத்தசேதஸ: என்று சொல்லப்பட்டதென்பதை ஸூசிப்பிக்கிறார்—யோகயோக்ய பரிசுத்தமநஸ: என்று. யோகயோக்யத்வத்தில் ஹேது பரிசுத்தத்வம் விசுத்தமான மனதிறைலன்றோ பகவத் ஸாக்ஷாத்காரரூபமான உபாஸநத்தின் நிஷ்பத்தியானது ச்ருதியில் கூறப்படுகிறது. மனதிற்கு சுத்தி கர்மயோகத்தாலுண்டாகிறது. யோகத்தால யோக்யதா பரிசுத்தி என்றாவது அர்த்தம். முன்ச்லோகத்தில் அகிலஜகத் சப்தத்தால் சேதநரூபமான ஜகத்தானது சொல்ல எண்ணப்பட்டிருக்கிறது. இந்த ச்லோகத்தில் அகில ஜகத் சப்தத்தால் அசித்ரூபமான ஜகத்தானது சொல்ல எண்ணப்பட்டிருக்கிறது. எல்லாவற்றுக்கும் அபாரமார்த்யம் சொல்ல எண்ணப்பட்டிருக்கிறதென்கிற பக்ஷத்தில் முதல் ச்லோகத்தால் சுருக்கமாக உரைக்கப்பட்டுள்ள தூஷணத்தை சொல்லப்படாத தூஷணத்தோடுகூட விஸ்தாரமாக எல்லா ச்லோகங்களுக்கும் ஸாதாரணமாகக்கூறுகிறார்—அந்யதா என்று. ஸ்வாதந்த்ர்ய ப்ரமம் தேஹாத்ம ப்ரமம் என்கிற பிரிவினை இல்லாவிடில் பௌநருக்த்யமென்று அர்த்தம். லக்ஷணை - 'பரமேச்வர-ஜகத:பதேதவமஹிமாத்வம்' இதுமுதலிய சப்தங்களுக்கு லக்ஷணை. த்வம சப்தமானது அபிமுகமாக இருக்கிறவேறு அஹமர்த்தத்தைச்சொல்லுகிறது. அதனுல் அதற்கு லாக்ஷணிகத்வம் - அர்த்தவிரோத: ப்ரத்யக்ஷம் முதலியவைகளால் பாதிக்கப்படாததாக ஸித்திக்கிற பதார்த்தத்திற்கு அஸத்யத்வம சொல்லப்படுமேயாகில் ப்ரமாண விரோதம். திரோதாநாநுபபத்தி முதலியது தர்கவிரோதம், உபயலிங்கத்வ விரோதமும். ப்ரகரணவிரோத:-ஸ்துதிவிரோதம். ரோமாந்தரங்களிலிருக்கிற முனிகள் ஸ்துதிக்கிறார்களென்பதல்லவோ ப்ரக்ருதம். துதிக்கிறவர்கள அத்வைத ஜ்ஞாநமுளளவர்களாக இருக்கும்பக்ஷத்தில் துதித்தல் பொருந்தாது. அத்வைத ஜ்ஞாநமில்லை என்று சொல்லில் மிகவும் பொருந்தாது. சாஸ்த்ர தாத்பர்யவிரோத: உபக்ரமோபஸம்ஹாராவாந்தர ப்ரகரணம் உபக்ரமோப ஸம்ஹாரம முதலியவற்றின் விரோதம. அதற்குமேல் ஒன்றோடொன்று வ்யவதாநமுள்ளவைகளான ஆதிபரதருடைய ஸம்வாதபரமான நான்கு ச்லோகங்களை வ்யாக்யாநம்செய்கிறார்—த்வயா இதுமுதலியதால்.

ப்ரஹ்மாத்வைதம் ஜீவாத்வைதம் என்றும் இரண்டுவிதமான அத்வைதம் சாஸ்திரத்திறைல் ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கிறது. அவற்றுள் ப்ரஹ்மாத்வைதமென்பது ப்ரகார்யத்வைதம் ஜீவாத்வைதமென்பது ப்ரகாராத்வைதம். இதில் எது நியாமகமென்று வினவப்படுமேயாகில் கூறப்படுகிறது. ப்ரஹ்ம ப்ரகரணங்களில் ஸாமாநாதிகரண்யத்தால் ப்ரஹ்மாத்வைதம் ப்ரதிபாதிக்கப்பட்டிருப்பதாலும ஸாமாநாதிகரண்யமும் ப்ராகாரமே பதங்களுடன்கூடின ப்ரகாரியின் ஐக்யத்தை ப்ரதாநமாக ப்ரதிபாதிப்பதாலும், ஏகஸ்ஸந்பகுதாவிசார: என்று ப்ரகாரபகுத்வம் கண்டோக்தமாக இருப்பதாலும், ஐக்யவிதிசேஷமான 'நேஹ நாநாஸ்தி' இதுமுதலிய பேதநிஷேதமானது விதிக்கப்பட்டிருக்கிற ஐக்யத்திற்கு விரோதியான பேதத்தை விஷயமாகக்கொண்டிருப்பதாலும் ஸாமாந்ய நிஷேதமானது விஹிதவ்யதிரிக்த விஷயமாக இருப்பதால் ப்ரகாரியின் பகுத்வத்தை நிஷேதிப்பதில் நோக்குள்ளதாக இருந்தாலும் 'நதத்ஸமச்சாப்யதிகச்ச த்ருச்யதே' என்று ப்ரஹ்மத்திற்கு துல்யமான வேறு ப்ரகாரியின் நிஷேதமானது தெளிவாக வாசக சப்தத்தால் சொல்லப்பட்டிருப்பதாலும் ப்ரகார்யத்வைதமே ப்ரஹ்மாத்

வைதம். ஜீவாத்மாக்களுடைய பகுத்வம் ச்ருதிஸித்தமாக இருப்பதாலும் அங்ஙனமில்லாவிடில் பத்தர்கள் முக்தர்கள் என்கிற வ்யவஸ்தை பொருந்தாததாலும், உபதேசம் பொருத்தமில்லாமல் போவதாலும், ஸுகம் முதலியவற்றின் வ்யவஸ்தை பொருந்தாமல் போவதாலும். ‘ புமாந்நதேவோ நநரோ ந பசுர்நச பாதப:. சதுர்விதோபி, பேதோயம் மித்யாஜ்ஞாநநிபந்தந: ’ (ஜீவன் தேவனுமல்ல மனிதனுமல்ல பசுவுமல்ல, மரமுமல்ல இந்த நான்கு விதபேதமும் மித்யாஜ்ஞாநத்தைக் காரணமாகக்கொண்டது.) ‘ தேவாதிபேதேZபத்வஸ்தே ’ (தேவன் முதலிய பேதமானது நாசம்செய்யப்பட்டிருக்க) இது முதலியவைகளால் பேதவிசேஷ நிஷேதமானது தெளிவாகச் சொல்லப்பட்டிருப்பதாலும், முக்தர்களுக்கு ஸாம்யம் சொல்லி இருப்பதாலும். ‘ அஹம் த்வஞ்ச ததாந்யேச ’ (நானும் நீயும் அப்படியே மற்றவர்களும்) ‘ தத்ர த்வமஹமப்யத்ர ’ (அந்த இடத்தில் நீயும் இந்த இடத்தில் நானும்,) ‘ தந்மநஸ்ஸமதாலம்பி ’ (அந்த மனதானது ஸாம்யத்தை அவலம்பித்ததாக) இது முதலிய ப்ராமணிகர்களுடைய வசநங்களை அநுஸரிப்பதாலும் ‘ ஏகோ வ்ரீஹி: ’ என்கிற இடத்தில்போல ஏகவசனத்திற்கு ஏகஜாதீய வஸ்துக்களை உணர்த்துவதில் கருத்து என்பது பொருந்துவதாலும், இனி சொல்லப்படப்போகிற ச்லோகத்தினுடைய சப்தஸ்வபாவத்தாலும், ஜீவாத்மைக்யம் ப்ரகாராத்வைதமே ‘ நித்யோநித்யாநாம் சேதநச்சேதநாநாம் ஏகோ பஹூநாம் யோ விததாதி காமான் ’ (சாச்வதனாகவும் நிகரில்லாதவனாகவுமிருக்கிற ஒரு சேதநன் நித்யர்களான அநேக சேதநர்களுக்கு அபீஷ்டங்களை உண்டுபண்ணுகிறான்) என்கிற பொருளுள்ள இந்த வாக்யமானது சேதநர்களுக்கு இஷ்டத்தை விதிப்பதில் முக்கியமான நோக்குள்ளதாக இருப்பதால் நித்யத்வ பஹுத்வங்களில் தாத்பர்யமில்லை. இருக்கிறதானால் வாக்யபேதம் ஏற்படவேண்டிவரும் என்று கூறப்படுமேயாகில் அல்ல. ‘ யதாக்நேயோZஷ்டாகபால: ’ (எட்டு கபாலங்களால் பக்குவம் செய்யப்பட்டதும் அக்னியை தேவதையாகக்கொண்டதுமான புரோடாசம்) என்கிற இடத்தில் அஷ்டாகபாலத்வ குணத்துடன் கூடிய ஆக்நேயபுரோடாசவிதிபோல. வாக்யமானது விசிஷ்டவிதியில் நோக்குள்ளதாக இருப்பதால். இந்த வாக்யமானது நித்ய பஹுசேதந விசிஷ்டகாம ப்ரதானவிதியை ப்ரதானமாகக்கொண்டதாகவன்றோ அறியப்படுகிறது. அநித்யர்களாகவும் ஸ்வல்பர்களாகவுமிருக்கிற சேதநர்களுக்கு அபீஷ்டத்தைக் கொடுப்பதைக்காட்டிலும் நித்யர்களாகவும் அநேகர்களாகவுமிருக்கிற சேதநர்களுக்கு அபீஷ்டதானம் சொல்லப்பட்டாலன்றோ காமப்ரதானத்திற்கு அதிசயம் ஏற்படுகிறது. ஜீவர்களுடைய பஹுத்வம் உலகத்தில ஸித்தமாக இருப்பதால் அந்த விஷயத்தில சாஸ்திரத்திற்கு தாத்பர்யம் இல்லை. வேறு ஒன்றினால் (ப்ரமாணாந்தரங்களால்) கிடைக்காத அர்த்தத்தை உணர்த்துவதாலல்லவோ சாஸ்த்ரம் பயனுள்ளதாக ஆகிறது என்று சொல்லப்படுமேயாகில் அல்ல ப்ரக்ருதி ஸம்பந்தமுள்ள ஜீவாத்மாக்கள் அநேகர்கள் என்கிற ஜ்ஞாநம் உலகத்தில் நிலைபெற்றுள்ளது. ப்ரக்ருதியின் சேர்க்கையற்ற பரிசுத்தாத்மஸ்வரூபங்களின பஹுத்வமானது உலகத்தில் ஸித்தமல்லாததால் அதிலல்லவோ சாஸ்திரத்திற்கு தாத்பர்யம் ஸம்பவிக்கிறது. உபாதியின் ஸம்பந்தத்தால் ஏற்படுத்தப்படுகிற ஆகாரம் அநித்யமாதலாலும் நிஷ்க்ருஷ்ட ஸ்வரூபம் நித்யமாக இருப்பதாலும் நித்யத்வ தர்மத்தோடு ஸாமாநாதிகரண்யமான பஹுத்வமானது சொல்லப்பட்டால் பரிசுத்தாத்ம ஸ்வரூபமல்லவோ உரைககப்பட்டதாக ஆகிறது. உபதேசமும ஸம்பவிக்

குறிப்பு :—அச்சாபீஸ் மாறுதலினால் பக்கம் தவறுதலாய் விழுந்துவிட்டது. இந்த விஷயம் ஒன்றும் விடவில்லை.

கிறதில்லை. குரு ப்ராந்தியுள்ளவராக இருப்பாரேயாகில் உபதேசத்திற்கு ப்ரஸக்தி இல்லை. ப்ராந்தி இல்லாதவராக இருப்பாரேயாகில் த்வைத ப்ரதீதி இல்லாததனுல் உபதேசத்திற்கு ப்ரஸக்தி முற்றிலும் இல்லை. த்வைதப்ரதீதி இருந்தபோதிலுங் கூட கண்ணுடியிலிருக்கிற தன் ப்ரதிபிம்பத்தைக் குறித்து சொல்லக்கருதப்பட்டதை உபதேசிப்பது என்பது ஸம்பவியாதன்றே. ஸுகம் துக்கம் முதலியவற்றின் வ்யவஸ்தையினுலும் ஆத்மபேதம் ஸித்திக்கிறது.

ஸௌம்ய! ஸுக துக்க வ்யவஸ்தை என்பது என்ன? ஸுக துக்க வ்யக்திகளின் பகுத்வமா? அல்லது சுகதுக்கங்களுக்கு ஆச்ரயமாக இருக்கிற வ்யக்திகளின் பகுத்வமா? ஒருவனுக்கே அனேக ஸுகதுக்க வ்யக்தி தர்சனத்தினுல் ஸுகாதி ஸ்வரூப பகுத்வமானது ஆன்மாக்களின் ஐக்யத்திற்கு விரோதியல்லவென்பதுபற்றி வ்யவஸ்தை இல்லை. ஆச்ரயபேதமெனில் ஹேதுவானது ஸாத்யத்தைவிட வேறுபடாததாக ஆகிறதென்று சொல்லப்படுமேயாகுல் அல்ல. வ்யவஸ்தையானது உன்னுல் சொல்லப்பட்டிருக்கிற இரண்டு ப்ரகாரங்களைக் காட்டிலும் வேறுபட்டதாக இருப்பதால். எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிற ஒரு ஆச்ரயத்திலிருக்கிற ஸுக துக்காதிகளில் ப்ரதிஸந்தானம் காணப்பட்டிருக்கிறது. பிரதிபந்தகமில்லாமலிருக்கையில் ஒரு ஆச்ரயத்துடன் கூடியதாக ஸுகதுக்கங்கள்விஷயமான ப்ரதிஸந்தானத்தினது இன்மை வ்யவஸ்தை என்று பரிஹாரம். 'ஏகமயம்' என்கிற இடத்தில் மயட் ப்ரத்யயமானது † ஸ்வார்த்திகம். அன்றிக்கே ஏக சப்தமானது * பாவ ப்ரதானமானது ஐக்யமென்று அர்த்தம். அதனுல் ப்ரசுரமாக இருப்பது ஏகமயம். சுத்தாவஸ்தையுள்ள ஆத்மாவுக்கல்லவோ ஐக்யப்ராசுர்யம். ப்ரக்ருதிஸம்ஸர்கமுள்ள ஆத்மாவுக்கோ வென்றுல் அது இல்லை. அவனுக்கு புத்தி ஸுகம் துக்கம் முதலிய ஆந்தரபேதத்தாலும் தேவத்தன்மை முதலிய வெளியிலுள்ள பேதத்தாலும் ஐக்யப்ராசுர்யமில்லாமையால். ஏகசப்தமானது ஸமானன் என்கிற அர்த்தத்தை உணர்த்துகிறது. 'ஏகோவ்ரீஹி: ஸு நிஷ்பன்ன: ஸு புஷ்டம் குருதேப்ரஜா:' இது முதலியவாக்கியங்களில் அவ்வண்ணமாக ப்ரயோகம் காணப்படுவதால். 'தேவமநுஷ்யாதிப்ரக்ருதிபரிணமவிசேஷரூப' என்பதனுல் 'துக்காஜ்ஞாநமலா தர்மா: ப்ரக்ருதேஸ்தே நசாத்மந:. புமான் ந தேவோ ந நரோ ந பசுர் நச பாதப: - சரீராக்ருதி பேதாஸ்து பூபைதே கர்மயோநய:-' என்கிற இரண்டு வசநங்களுக்கும் ஒரே அர்த்தத்துடன் கூடி இருத்தல் காட்டப்பட்டது. பிண்ட சப்தமானது 'பிண்ட:ப்ருதக்யத: பும்ஸ:' என்கிற ப்ரகரணத்திலுள்ள வசனத்தைநினைக்கச்செய்கிறது. "ஏகமயம்" என்று ஆத்மாவினிடத்தில் ஏகத்வத்தை விதித்து பேதம் நிஷேதிக்கப்படுமேயாகில்ஆத்மஸ்வரூப பேதமே நிஷேதிக்கத்தக்கதாக ஆகும் என்று சொல்லப்படுமேயாகில்; விதிக்கப்படுகிற

---

† ஸ்வார்த்திகம்— தனித்து வேறுபொருளை உணர்த்தாமல் தன்னுடைய ப்ரக்ருதியின் பொருளையே தானும் சேர்ந்து உணர்த்தும் தன்மையுள்ள ப்ரத்யயம்.

* பாவப்ரதானம்—பாவமென்று தர்மத்துக்குப்பெயர். அந்த தர்மத்துடன் சேர்ந்த தர்மியை உணர்த்தும் ஸ்வபாவமுள்ள சப்தமானது ஸந்தர்ப்பத்திற்குத்தக்கபடி தர்மியைச்சொல்லாமல் அதின் ஏகதேசமான தர்மத்தை மாத்திரம் உணர்த்துவதில் நோக்குற்றது.

ஏகத்வமானது வ்யக்தியின் ஐக்யமாக இருக்குமேயாகில் இவ்வண்ணமாகலாம். அதோ ப்ரகாரங்களின் ஐக்யம். ஆகையால் பேத நிஷேதமானது வைஜாத்ய நிஷேதமே என்று கருத்து. 'த்வைதிநோऽதத்த்ய தர்சிந:' என்று பொதுவாக சொல்லப்பட்டிருக்க எவ்வாறு தேவாதி த்வைத நிஷேதம் என்று கூறப்படுகிறதென்று சொல்லப்படுமேயாகில் எவ்வாறு ஸாமான்யமாக த்வைத நிஷேதம் அறியப்பட்டிருக்க ஆத்ம த்வைத நிஷேத மென்று கூறப்படுகிறது ? பிண்டம் ஆத்மா இவ்விரண்டின் பேத நிஷேதம் கூறப்படுகிறதில்லை ? பிண்டம் ஆத்மா இவ்விரண்டுக்கும் பேதமானது ப்ரமாணஸித்தமாக இருத்தலாலென்று கூறப்படுமேயாகில் ஆத்மபேதமும் ப்ராமாணிகமாதலால் அர்த்தபேதநிஷேதம் கூறப்படுகிறதில்லை. பின்னையோ தேவாதிபேத நிஷேதம் கூறப்படுகிறதென்று கருத்து. ஆத்மாவை அடைந்திருக்கிற த்வைதமானது நிஷேதிக்கப்படாமலிருக்குமேயாகில் 'ஆத்மா சுத்தோக்ஷர ஸ்ரீாந்த:' 'விஜ்ஞாநம் யஜ்ஞம் தநுதே' என்கிற ஏகவசனம் பொருந்தாது. இந்த ஏகவசனம் ஜாதியைக்குறிக்கிறதென்று சொன்னால் தேஹசப்தத்திலும் ஏகவசனம் வரலாமென்கிற சங்கையும் தேவமனுஷ்யாதி பதத்தால் பரிஹரிக்கப்பட்டது. தேவாதிகளில் உட்பிரிவுபேதங்களைச் சொல்லவேண்டுமென்கிற எண்ணத்தினால் விவித சப்தம். அதிலும் அனேக விதங்களைச்சொல்லவேண்டுமென்கிற எண்ணத்தால் விசித்ர சப்தம். ஆத்மாக்களிடத்தில் ஜாதி ஒன்றாக இருத்தலால் ஏகவசனம். பிண்டங்களில் அவாந்தரஜாதிகள் பலவாறாக இருப்பதால் பஹுவசனமென்று அபிப்ராயம்.

ஸாம்யத்தில் ப்ரமாணத்தைக் கூறுகிறார் **யதோக்தம்** என்று. பஹுத்வம் விதிக்கப்பட்டிருப்பதாலும் ஸாம்யம் ப்ரதிபாதிக்கப்பட்டிருத்தலாலும் ஆத்மவ்யக்தி பேதநிஷேதம் இசையாது என்று கருதது. வேறு ஹேதுவையும் கூறுகிறார்-**தஸ்ய** என்று. வேறுவிதமாக அர்த்தம் சொல்லப்படுமேயாகில் இந்த ச்லோகத்திலுள்ள பதங்களுக்கு வ்யாகாதம் உண்டாகுமென்று அர்த்தம். **உக்தத்வாத்** என்று. 'ஸமம் இத்யர்த்த:' என்று அன்வயம்— ஏகவசனம் சொல்லப்பட்டிருந்தால் வ்யக்திகள் அனேகங்களாக இருந்தபோதிலும் ஜாதி ஒன்றாதலால் அதைக்கருதி ஏகவசனம் என்று நிர்வாஹம். அன்யநிஷேதத்தில் தாத்பர்யமுள்ளவசனத்திற்கு வேறு விதமாக நிர்வாஹம் கூடாதாதலால் ஆத்மைகத்வம் ஸித்திக்கிறதென்கிற சங்கை ஸம்பவிக்க '**யத்யந்யோஸ்தி**' இது முதலிய சுலோகத்தின் அர்த்தத்தைச் சொல்லுகிறார்—**யதி** என்று. ஒரு அர்த்தத்தில் இரண்டு இரண்டு சப்தங்கள் ப்ரயோகிக்கப்பட்டிருக்கின்றன மூன்று இடங்களில்.அதனால் இரண்டில் ஒரு சப்தமானது ஆகாரபரமாக இருப்பதால் ஆத்மபேதநிஷேதமில்லை என்று பரிஹரிக்கப்படுகிறது. அந்த இடத்தில் இரணடு சப்தங்களுக்கு என்ன அர்த்தம் என்று வினவப்படுமேயாகில் கூறுகிறார்—**தத்ர** என்று. பரசப்தத்தினால் தர்மியை அநுவதித்து அதற்கு வேறு சப்தத்தால் உணர்த்தப்பட்டிருக்கிற ஆகாராந்தரத்தோடு அன்வயம் நிஷேதிக்கப்படுகிறதென்று அர்த்தம். இவன் நான் இவன் அயலான் என்று சொல்வதற்கு முடியாமை எவ்வாறு ? ப்ரத்யக்தவம் பராக்த்வம் என்கிற பேதகதர்மங்கள் இருக்கின்றனவன்றோ வென்று கூறப்படுமேயாகில் இவ்வண்ணமல்ல. ப்ரத்யக்த்வம் பராக்த்வம் இரண்டும் தன்னையும் பிறனையும் அபேக்ஷித்து எல்லா ஆத்மாக்களுக்கும் பொதுவாக இருப்பதுபற்றி வ்யாவர்த்தகங்களல்லாமையால். முன்பு தேவாதிகளில் இவன் ஒருவன் என்கிற அபிப்பிராயத்தினால்அவர்களுக்குள் விசேஷத்தைஅறிந்துகொள்ள

வேண்டுமென்கிற எண்ணத்தாலன்றோ ஸௌவீரராஜனால் ஜடபரதர் வினவப்பட்டார். அதனால் இந்தசப்தங்கள் தேவாதிகளுடைய ஆகாரவிஷேதத்தில் நோக்குள்ளவைகளென்று கருத்து.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

ஸ்ரீபாஷ்யம்—

இது சொல்லப்பட்டதாக ஆகிறது. என்னைக்காட்டிலும் வேறான ஒரு ஆத்மாவானவன் என்னுடையதான ஜ்ஞாநாகாரத்தைக் காட்டிலும் வேறு ஆகாரமுள்ளவனாக இருப்பானேயாகில் அப்பொழுது நான் இப்படிப் பட்ட ஆகாரமுள்ளவன், இவன் வேறுவிதமான இவ்வித ஆகாரமுள்ளவன் என்று எடுத்து உரைப்பதற்குத் தகுதியுள்ளவன். இவ்வண்ணமில்லை. எல்லோரும் ஜ்ஞாநாகாரமுள்ளவர்களாக இருப்பதுபற்றி ஸமானர்களாக இருப்பதால் என்று. 'வேணுரந்த்ரவிபேதேந' என்கிற இடத்திலும் ஆத்மாக்களுக்கு ஆகாரங்களின் வேறுபாடானது ஸ்வரூபத்தால் உண்டுபண்ணப் பட்டதல்ல. பின்னையோ தேவமனுஷ்யாதி சரீரங்களில் ப்ரவேசத்தாலுண்டு பண்ணப்பட்டதென்று உபதேசிக்கப்படுகிறது. ஆத்மைக்யமுபதேசிக்கப்பட வில்லை. திருஷ்டாந்தத்திலும் அனேக ஓட்டைகளில் புறப்படுகிற வாயுவின் அம்சங்களுக்குஸ்வரூபைக்யமில்லை-பின்னையோ ஆகாரங்களின்ஸாம்யமே---. வாயுத்தன்மையினால் ஒரே ஆகாரமுள்ளதான அவைகளுக்கு பற்பல ஓட்டைகளினின்று வெளிப்படுதலாலன்றோ ஷட்ஜம்முதலான பற்பல பெயர் ஏற்படுகிறது. இவ்வண்ணமாக ஆன்மாக்களுக்கும் தேவன் மனுஷ்யன் முதலிய பற்பல பெயர் ஸம்பவிக்கிறது. எவ்வாறு தேஜோமயமாயும் ஜலமயமாயும் ப்ருதிவீமயமாயுள்ள த்ரவ்யங்களின் அம்சங்களாக இருக்கிற பதார்த்தங்களுக்கு அந்தந்த த்ரவ்யத்தன்மையினால் ஐக்யமே ஒழிய ஸ்வரூபைக்யங்கிடையாதோ; அவ்வாறேவாயுவைச்சார்ந்ததாயுள்ள அம்சங்களுக்கும் ஸ்வரூபபேதமானது விடத்தகாதது. 'ஸோஹம் ஸசத்வம்' என்று எல்லா ஆத்மாக்களுக்கும் முற்கூறப்பட்டுள்ள ஜ்ஞாநாகாரத்தை தத்சப்தத்தால் பராமர்சித்து அதற்கு ஸமாநாதிகரணங்களாக இருக்கிற அஹம், த்வம், இதுமுதலிய அர்த்தங்களுக்கு ஜ்ஞாநமே ஆகாரம் என்று உபஸம்ஹரியா நின்றுகொண்டு தேவாதி சரீராகாரபேதத்தால் ஆத்மாக்களிடத்தில் பேதமோஹத்தை இழந்து விடுஎன்று சொல்லுகிறார். அங்ஙனமில்லாவிடில் தேஹத்தைவிட வேறாக உபதேசிக்கத்தக்க ஸ்வரூபத்தில் நான் நீ இவை எல்லாம் ஆத்மஸ்வரூபம் என்கிற பேதநிர்தேசமானது இசைகிறதில்லை. நான் நீ என்கிற இதுமுதலிய சப்தங்களால் உபலக்ஷிக்கத்தக்கதான 'ஸர்வமேததாத்மஸ்வரூபம்' (இவை அனைத்தும் ஆத்மஸ்வரூபம்) என்கிற இதோடு ஸாமாநாதிகரண்யத்தால் உபலக்ஷணத்வமும் இசைகிறதில்லை. அவனும் உபதேசித்த வண்ணம்செய்தானென்று சொல்லுகிறார்—"தத்யாஜபேதம் பரமார்த்தத்ருஷ்டி:" என்று

எதனால் இந்த நிர்ணயமென்று வினவப்படுமேயாகில் (உத்தரம்) உபதேசமானது தேஹாத்ம விஷயமாக இருப்பதால். அதுவும் "பிண்ட: ப்ருதக் யத: பும்ஸ: சிர: பாண்யாதி லக்ஷண:" என்று தொடக்கத்தினால்.

ச்ருதப்ரகாசிகை—

இவ்வண்ணம் பதார்த்தம் இருக்க ச்லோகத்திலுல் என்னசொல்லப்பட்டதாக ஆகிறது என்கிற சங்கைவரின் வாக்கியார்த்தத்தை யோஜனம் செய்கிருர்—ஏததுக்தம் என்று. ஏஷ: என்கிற சப்தத்தின் அர்த்தத்தைக் கூறுகிருர்—ஏவமாகார: என்று. அர்யசப்தத்தின் பொருளைக்கூறுகிருர்—அந்யாத்ருசாகார: என்று ஆகாரங்களுக்கு ஐக்யமாவது ஆகாரங்களுடைய நல்ல ஒற்றுமைஎன்கிற அபிப்ராயத்தால் ஏவமாகார:- வேறுவிதமாக இருக்கிற ஆகாரமுள்ளவனென்று உரைக்கப்பட்டது. அப்படி இல்லாவிட்டால் ஸ்வரூபமாத்திரத்திற்கு ப்ரதிபத்தியானது ஒரு பதத்திலுலேயே ஸித்திப்பதால் வேறு பதங்களுக்கு ப்ரயோஜன மின்மை ப்ரஸங்கிப்பதால் வேறு பதம் ஆகாரபரம் என்று அர்த்தம். இந்த அர்த்தத்திற்கு விபர்யயத்தில் நிலைபெறுதல் மேல் ஶ்லோகத்தால் கூறப்பட்டிருக்கிறது. அது இங்கு உதாஹரிக்கப்படவில்லை. அதற்காகச்சொல்லுகிருர்-நசைவம்என்று.இதல்லவோ அந்த ஶ்லோகம்—'யதாஸமஸ்தபூதேஷு புமாநேகோவ்யவஸ்தித: ததாஹி கோபவான் ஸோஹம் இத்யேதத் விபலம்வச:. (எப்பொழுது எல்லா வஸ்துக்களிடத்திலும் புருஷன் ஒருவன் நிலைபெற்றிருக்கிருனே அப்பொழுது நீ யார் தான் அப்படிப்பட்டவன் என்கிற இந்தவசனம் பயனற்றது,) இங்கு ஏகசப்தமானது ஆகாரத்தின் ஐக்யத்தில்நோக்குள்ளது. ஸ்வயம் ப்ரகாசத்வம்-நித்யத்வம், அணுத்வம் முதலியது எல்லா ஆத்மாக்களுக்கும் பொதுவாயுள்ளது—பேதஜ்ஞானத்தை உண்டுபண்ணுகிற தேவமனுஷ்யாதி ஆகாரமோவென்றுல் ஆத்மாவினிடத்திலில்லை. வ்யாவர்த்தகமில்லாமையால் அதைச்சொல்லுகிற சப்தத்தால் நிர்தேசிப்பது பொருத்தமுள்ளதாக ஆகாது. ‡ ப்ரத்யக்த்வம் † பராக்தவம் ¶ பரோக்ஷத்வம் § அபரோக்ஷத்வம் முதலியவைகள் வ்யாவர்த்தகங்களென்பதுபற்றி 'கோபவான்' என்கிற ப்ரச்னமானது அதைவிட வேருன ஆகாரத்தில் அபிப்ராயமுள்ளது. 'கஹி பவான்' என்று ப்ரச்நமில்லை. பவத் என்கிற சப்தமானது தர்மிமாத்திரத்தை உணர்த்துகிறது. கிம் சப்தமானது வ்யாவர்தகதேவாத்யாகாரங்களைக் குறித்துச் சொல்லுகிறது. ஆதலால் அதைக்காட்டிலும் வேருன ஆகாரமில்லாமையால் அதைச்சொல்லுகிற சப்தத்தால் நிர்தேசம் பொருந்துகிறதில்லை என்று அர்த்தம். ஜ்ஞானைகாகாரத்வேந ஸமாநத்வாதேவ என்று.முற்கூறப்பட்டுள்ள ஸமாநத்வத்திலுலேயே என்று கருத்து. சொல்லப்பட்ட நிர்வாஹத்திற்கு அநேகாசரமான திருஷ்டாந்தமுகத்தால் அத்வைத பரமாக அந்யனுல் சொல்லப்பட்டிருக்கிற ஶ்லோகத்தினுடைய அர்த்தத்தைக் கூறுகிருர்—வேணுரந்த்ர என்று.இயற்கையாக ஏகாகாரங்களாக இருப்பவைகளுக்கு உபாதிவசத்திலுல் அவாந்தரபேதங்கள் இருப்பதில் த்ருஷ்டாநதோபந்யாஸம். அப்படிக்கின்றி எல்லாவிதங்களாலும் ஸாதர்ம்யத்தை ஒப்புக்கொள்ளும் பக்ஷத்தில் ஆத்மாவுக்கு அசித்த்வம் ஆகாசகார்யத்வம் முதலியதும் உண்டாகவேண்டியதாகும். அது வேறுப்ரமாணங்களின் விரோதத்தால் இழக்கப்படுகிறதன்றே, அவ்வாறே திருஷ்டாந்தத்தை அடைந்திருக்கிற ஆகாராந்தர

‡ ப்ரத்யக்த்வம்-தனக்குத்தான் ப்ரகாசித்தல்.
† பராக்த்வம்—பிறருக்கே ப்ரகாசித்தல்.
¶ பரோக்ஷத்வம்—கண் முதலிய இந்திரியங்களுக்கு விஷயமாகாமலிருத்தல்.
§ அபரோக்ஷத்வம்-கண்முதலிய இந்திரியங்களுக்கு எதிர்பட்டிருத்தல்.

மும் என்று கருத்து. ‘ ததாஸௌ பரமாத்மந: ’ என்று சொல்லில் * ஷட்ஜம் முதலிய நாமபேதம்உண்டாகவேண்டாம்என்கிறஅபிப்பிராயத்தால் சொல்லுகிருர்— **ஏவமாத்மநாம் தேவாதிஸம்ஜ்ஞாபேத:** என்று. ‘ பேதஷ்ஷட்ஜாதிஸம்ஜ்ஞித: ’ என்கிற பாடமிருப்பினும்ஷட்ஜாதிஸம்ஜ்ஞாபேத:என்றுவியாக்கியானிக்கப்பட்டது. அறிவதற்கு மிக்கப்ரயாஸமான ஷட்ஜாதிரூபபேதப்ரதிபத்திஸௌகர்யமானது ஸம்ஜ்ஞாபேதாதீன மாயிருத்தலால் என்று கருத்து. தார்ஷ்டாந்திகத்திலும் அப்படியே. திருஷ்டாந்தத்தில் வ்யக்திகளின் பஹுத்வமானது இருக்கிறதா என்கிற ஸந்தேஹம்வரின் வாயுவின் அம்சங்களுக்கு அனேகத்வத்தை தர்கத்தால் ஸாதிக்கிருர்—**தைஜஸ** என்று. ஸ்பர்சத்துடன்கூடிய திரவ்யமாக இருத்தலால் என்று கருத்து. எந்த இடத்தில் ஆகாசதிருஷ்டாந்தம் சொல்லப்பட்டிருக்கிறதோ அந்த இடத்திலும் ஒரு ஆத்மாவுக்கு திருஷ்டாந்தமாக ஆகாசத்தைச்சொல்லி வேறு ஆத்மாவினிடத்தில்அத்தன்மைவாய்ந்திருத்தல் எண்ணத்தக்கது. “ஸிதநீலாதிபேதேநயதைகம்த்ருச்யதேநப: ப்ராந்தத்ருஷ்டிபிராத்மாபி ததைகஸ்ஸந்ப்ருதக்ப்ருதக்” (ஒரே ஆகாயமானது எவ்வாறு வெளுப்பு கருப்புமுதலிய நிறங்களால் வேறுபாடுள்ளதாகக் காணப்படுகிறதோ அவ்வாறே ஆத்மாவும் ஒன்ருக இருந்தபோதிலுங்கூட ப்ரமஜ்ஞாநமுள்ளவர்களால் வெவ்வேருக க்ரஹிக்கப்படுகிறது.) ஆகாயத்திற்கு வெளுப்பு கருப்புமுதலிய நிறங்களின் வேறுபாடானது சரத்காலத்திலும் வர்ஷாகாலத்திலுமுள்ள ஸந்த்யாஸமயங்களில் மேகங்களின் ஸம்பந்தத்தால் முறையே உண்டாகிறது. அவ்வாறு ஒரே ஆத்மாவுக்கும் தேவமனுஷ்யாதி பேதம் ஒன்றின்பின் ஒன்ருக வரிசையாக உண்டாகிறது. அன்றிக்கே அதிலும் ப்ரதேசபேதங்களை ஏற்றுக்கொள்வதனுல் எல்லா ஆத்மாக்களுக்கும் திருஷ்டாந்தமாகலாம். ஆகாசத்தில் ப்ரதேசபேதங்களை ஒப்புக்கொள்ளாவிடில் கடம் முதலியதற்கு விபுத்மாவது ஆகாசத்திற்கு அல்பத்வமாவது ப்ரஸங்கிக்கும்; கடம் முதலியவற்றுக்கு முழு ஆகாசத்தோடு ஸம்பந்தமா? அல்லது ப்ரதேசபேதத்துடனு? முதல்பக்ஷத்தில் கடம்முதலியவற்றுக்கு விபுத்வமாவது ஆகாசத்துக்கு அல்பபரிமாணத்வமாவதுஏற்படவேண்டியதாக ஆகும். இரண்டாவது பக்ஷத்தில் ப்ரதேசபேதம் அங்கீகரிக்கப்பட்டதாக ஆகும். வேதாந்திகள் ஆகாசத்திற்கு அவயவங்களில்லை என்று சொல்வது அபஸித்தாந்தம். வேதாந்தங்களில் அதற்கு அம்சபேதத்தால் பஞ்சீகரணம் உபதேசிக்கப்பட்டிருப்பதாலும் ஒரு அம்சத்தால் வாயுவாக பரிணமம் கூறப்பட்டிருப்பதாலும் உத்பத்திலயங்கள் காணப்படுவதாலும் என்று.அதினுலேதான் ‘ கடத்வம்ஸேகடாகாசோந பின்னோபஸோயதா- ப்ரஹ்மணோஹேயவித்வம்ஸே விஷ்ணவாக்யே ந ததாபுமான்.” (கடம் உடைந்துபோனுல் எவ்வாறு கடாகாசம் ஆகாசத்தைவிட வேறுபடுகிறதில்லையோ அவ்வாறே ஜீவன் ஹேயங்கள் நாசமடைந்தவுடன் விஷ்ணுவென்கிற பெயருள்ள ப்ரஹ்மத்தோடு பேதமில்லாதவனுக ஆகிருன்) என்கிற சௌநகருடைய வசனமும் ஆகாசத்தில்அம்சபேதங்கள் உண்டு என்கிறஅபிப்பிராயத்தால் ஜீவனுக்கு பரமாத்மாவைக்காட்டிலும் ஔபாதிக பேதமில்லாவிடில் திருஷ்டாந்த ஸமர்ப்பணபரமாக அறியத்தக்கது. ‘ யதாக்நிரக்நௌஸம்க்ஷிப்த: ஸமாநத்வமனுவ்ரஜேத் ” (எவ்வாறு நெருப்பு நெருப்பில் போடப்பட்டதாய்கொண்டு ஸாம்யத்தை அடைகிறதோ) என்று அந்த இடத்திலேயே ஸாம்யதிருஷ்டாந்தத்தைச் சொல்லி இருப்பதனுல்.

* ஷட்ஜம்-கண்டம் முதலிய ஆறுஸ்தானங்களிலிருந்து உண்டாவதால் அந்த நாதத்திற்கு இந்தப்பெயர்.

அதற்கு ஆதி பாதருடைய நிகமந ச்லோகத்தைச்சொல்லுகிறார்—ஸோஹம் என்று. பூர்வோக்தம்—நான்கு அத்தியாயங்களாலுரைக்கப்பட்டிருக்கிற ஸ: என்கிறபதம் ஜ்ஞாநாகாரத்துடன் கூடின வஸ்துவைச் சொல்வதாக இருந்தபோதிலும் விசேஷணம்சத்தில் தாத்பர்யத்தைக்காண்பித்துக் கொடுப்பதற்காக ஸர்வாத்மாநாம் ஜ்ஞாநாகாரம் என்று விசேஷணம்சத்துக்கு நிஷ்கர்ஷித்து நிர்தேசம். அப்படி இல்லாவிட்டால் "தத்ஸாமாநாதிகரண்யேந" என்கிற அடுத்த வசனத்திற்கு விரோதம் வருவதால். ஜ்ஞாநமேவாகாரமித்யுப ஸம்ஹாரன் என்று. ஸோஹம் இதுமுதலிய ச்லோகங்களுக்கு அடுத்த மூன்றின ச்லோகத்தில் - "ஏசம் ஸமஸ்தம் யதிஹாஸ்தி கிஞ்சித் ததச்யுதோ நாஸ்தி பரந்தநோந்யத்" (இந்த ப்ரபஞ்சத்தில் எது ஒன்றிருக்கிறதோ அவை அனைத்தும் அச்யுதனே. அச்யுதனால் வ்யாபிக்கப்பட்டதேஅதைக்காட்டிலும் வேறு இல்லை) என்கிற அர்த்தத்தால் எல்லா ஆத்மாக்களும் பகவானுடைய சரீரமென்று சொல்லி இருப்பதால் ஸோஹம் இதுமுதலிய சலோகமானது பகவதாத்மகத்வநிகமனபரம் என்கிற ஸந்தேஹம் உண்டாகலாம். அது ஸரியன்று—ப்ரகரணம் சரீராத்மவிவேகபரமாக இருப்பதாலும் அதின் நிகமனமும் அபேக்ஷிக்கப்பட்டிருப்பதாலும் அதின் நிகமன பரமான வேறு ச்லோகமில்லாமையாலும் அபேக்ஷித விதியைவிட்டு அபேக்ஷிக்கப்படாததை விதிப்பது பொருந்தாததாலும் இந்த சலோகமானது ஆத்மாக்களுக்கு தேஹவ்யாவர்த்தகமான ஏகாகாரத்வ நிகமனத்தில் கருத்துள்ளதென்று அபிப்பிராயம். 'த்யஜபேதமோஹம்' என்கிற அம்சத்திற்கு அர்த்தம் சொல்லுகிறார்—தேவாத்யாகார பேதேந ஆத்மஸு பேதமோஹம் பரித்யஜ என்று. தேவாதிசப்தமானது பேதசப்தவிவரணரூபமாயுள்ளது. தேஹத்தை அடைந்திருக்கிற தேவத்வாத்யாகார பேதமானது ஆத்மாவினிடத்தில் பேத மோஹத்திற்கு ஹேது. அந்த பேதமோஹத்தை விட்டுவிடு என்று அர்த்தம். பேதங்கள் முழுமையையும் நிஷேதிப்பதில் கருத்துள்ளதென்று சொல்லும்பக்ஷத்தில் அநிஷ்டத்தைக்கூறுகிறார்—அந்யதா என்று. அஹம், த்வம், முதலியசப்தங்கள் தேஹத்தை உணர்த்துகிறவைகளல்ல? தத்சப்தத்தால் ஆத்மாவை பராமர்சித்து அந்த ஆத்மாவோடு தேஹங்களுக்கு ஐக்யம் உபதேசிக்கப்படுகிறதில்லை யன்றோ. அந்தக்கரணத்தையும் பொருளாகக் கொண்டவைகளல்ல. அந்தக்கரணங்களுக்கு பரமாத்மாவினிடத்தில் ஐக்யமோ பரஸ்பரம் ஐக்யமோ உபதேசிக்கப்படுகிறதில்லையன்றோ. தேஹத்துடன்கூடி இருக்கிற அந்தக்கரணத்தையும் இந்தசப்தங்கள் உணர்த்துகிறதில்லை. தேஹவிசிஷ்டங்களான அந்தக்கரணங்களுக்கு ஐக்யம் உபதேசிக்கப்படுதில்லையன்றோ. ஆதலால் அஹம் த்வம் முதலியசப்தங்கள் தேஹத்தைவிட வேறான ஆத்மாவைச்சொல்லுகின்றன வென்கிற அபிப்பிராயத்தினால் 'தேஹாதிரிக்த' என்று சொல்லப்பட்டது. அஹம்த்வம் முதலிய பதங்கள் உபலக்ஷணங்களாக இருப்பதால் உபலக்ஷிக்கப்படத்தக்க வஸ்துவில் பேதமில்லை என்று ஆசங்கித்து பரிஹரிக்கிறார்—அஹம் என்று 'அஹம்த்வமாதி' என்கிற இடத்திலுள்ள ஆதிசப்தத்தால் ஸர்வசப்தம் சொல்லக்கருதப்பட்டிருக்கிறது. 'உபலக்ஷயேண' என்று ஔபசாரிகநிர்தேசம். உபலக்ஷ்யத்தைச்சொல்லுகிற பதத்தோடென்று அர்த்தம். ஸர்வமேததாத்ம ஸ்வரூபமித்யநேந என்று. அஹம் த்வம்ஸர்வம் என்கிற மூன்று பதங்களுக்கும் ஆத்மஸ்வரூப சப்தத்தோடு ஸாமாநாதிகரண்யம் பலித்தது. அம்மூன்று சப்தங்களுக்குள் ஒன்றான அஹம் த்வம் என்கிற சப்தங்களால் உணர்த்தப்படாநின்ற அர்த்தங்களுக்கு ஸஜாதீயமான அர்த்தத்தை உணர்த்துகிற 'ஸர்வமேதத்' என்கிற பதத்தோடு ஆத்மஸ்வரூப

சப்தத்திற்கு ஸாமாநாதிகரண்ய நிர்தேசத்தாலென்பதைத் தெரிவிப்பதற்காக 'ஸர்வமேததாத்மஸ்வரூபம்' என்று உபாதாநம் செய்யப்பட்டது பாஷ்யத்தில். ச்லோகத்தில் 'ஸர்வமேததாத்மஸ்வரூபம்' என்று காண்பிப்பதற்காகக் கூறப்பட்டது. ஆதலால் அஹம் த்வம் முதலிய சப்தங்களுக்கு உபலக்ஷ்யவாசகமாக அபிமானிக்கப்பட்டிருக்கிற ஆத்மஸ்வரூப சப்தத்தோடு ஸாமாநாதிகரண்யத்தினால் அஹம் த்வம் முதலிய சப்தங்களால் வாச்யங்களான அர்த்தங்களுக்கு உபலக்ஷணத்வமானது இசையாது. சந்திரன், கிளை § ஸாரஸபக்ஷி. ¶ கேதாரம், இப்படிப்பட்ட உபலக்ஷணவாசிகளாயும் உபலக்ஷ்யவாசிகளாகவுமிருக்கிற சப்தங்களுக்கு ஸாமாநாதிகரண்யம் முக்கியமாகக் காணப்பட்டிருக்கவில்லை என்று அர்த்தம். லக்ஷணையினால் ஆகட்டுமென்று கூறப்படுமேயாகில் லக்ஷணையே தோஷமென்று கருத்து. அன்றிக்கே அநேக என்கிற பதம் உபலக்ஷ்யவிசேஷணம். ஸர்வமேததாத்ம ஸ்வரூபம் என்கிற வாக்கியத்திலுள்ள ஆத்ம சப்தத்தால் நிர்தேசிக்கப் பட்டிருக்கிற இந்த உபலக்ஷ்யத்தோடு அஹம் த்வம் முதலிய சப்தங்களுக்கு ஸாமாநாதிகரண்யத்தினால் உபலக்ஷணத்வம் அஸங்கத மென்று அர்த்தம்.

இந்த யோஜனையில் அஹம் த்வம் முதலிய ஸஜாதீயார்த்தங்களைச் சொல்லுகிற ஸர்வபத ஸாமாநாதிகரண்ய நிர்தேசத்திற்கு ஹேதுத்வம் அர்த்தத்தால் ஸித்தித்தது. அஹம் த்வம் முதலியசப்தங்கள் உபலக்ஷ்ய பர்யந்தமான வ்ருத்தியுள்ளவைகளாக இருக்குமேயாகில் அப்பொழுது இவ்விதமான பொருளுள்ளதாக இருப்பதுபற்றி உபலக்ஷ்யவாசியான ஆத்ம ஸ்வரூபம் என்கிற பதத்தோடு ஸ: என்று தனித்து ஸாமாநாதிகரண்யம் காணப்படுவதால் உபலக்ஷணவாசகங்களான அஹம் த்வம் முதலிய சப்தங்களுடைய ஸாமாநாதிகரண்யம் பயனற்றது. அஹம் சப்தத்திற்கு ஆபேக்ஷிகமான ப்ரத்யக்த்வம் ப்ரவ்ருத்தி நிமித்தம். த்வம் சப்தத்திற்கு சேதநத்வமும் அபிமுகத்வமும். ஆத்ம சப்தத்திற்கு வ்யாபநத்தில் ஸமர்த்தமாக இருத்தல் ப்ரவ்ருத்தி நிமித்தம். ஸ: என்கிற பதத்திற்கு ப்ரக்ருதஜ்ஞாநாகாரம். கற்றுணர்ந்தவரே! 'ஸசஸர்வமேததாத்மஸ்வரூபம்' என்கிற இடத்தில் ஆத்மஸ்வரூப விசேஷணமான தத் சப்தமானது எவ்வாறு பும்லிங்கமாக இருக்கக்கூடும்? மறுமொழி உரைக்கப்படுகிறது— 'ஆத்மா சுத்தோக்ஷர: சாந்த:' இது முதலிய இடங்களில் பரஜ்ஞாநமயனாக இருத்தலால் ப்ரக்ருதனான ஆத்மாவன்றோ தத் சப்தத்தால் பராமர்சிக்கப்படுகிறான். அதனால் விரோதமில்லை. அசித்தோடு சேர்க்கை பெற்றதும் தேவாதிரூபத்தால் அறியப்படுகிறதுமான இந்த ஆத்மஸ்வரூபம் அனைத்தும் ஜ்ஞாநத்தையே ஆகாரமாகக்கொண்ட அந்த ஆத்மா என்று அர்த்தம். நான்காவது பாதத்தை வியாக்கியானிக்கிறார்—ஸோ௨பி என்று. இந்த ப்ரகரணமானது ஜீவாத்மா பரமாத்மாக்களுக்கு அத்வைதத்தை ஸாதிப்பதில் நோக்குள்ளதுமல்ல. ஆத்மஸ்வரூபங்களுடைய பகுத்வத்தை நிஷேதிப்பதிலும் நோக்குள்ளதல்ல. ப்ரகாசைக்யத்தில் கருத்துள்ளதென்று எவ்வாறு அறியப்படுகிறது? என்கிற அபிப்பிராயத்தால் சொல்லுகிறார்— **தத்பஞ்ச** என்று பரிஹரிக்கிறார்— **தேஹாத்மா** என்று. அதுவும் எதனால் என்று கேட்கில் கூறுகிறார்— **தச்ச** என்று, **தேஹம், ஆத்மா** இவைகளின் ஸ்வரூபஸ்வபாவ விவேசனத்தில் நோக்குள்ளதென்பதை உபபாதிப்பதனால் ஜீவாத்மபரமாத்மாக்களுடைய ஐக்யத்தைக் கூறுதலில் நோக்குள்ளதென்பதும் ஆத்மாக்களின் பகுத்வநிஷேதத்தில் நோக்குள்ளதென்பதும் உத்தாமளிக்கப்பட்டதே.

¶ ஸாரஸம்—ஓர்விதமான ஜலபக்ஷி § கேதாரம் நெல்விளையும் வயல்

"விசேஷஜநகே ஜ்ஞாநே" இதி ச நாத்மைக்யபரம் | நாபி ஜீவபரயோ: | க்ஷேத்ரஜ்ஞைக்யஸ்யோக்தரீத்யா நிஷித்தத்வாத் | ஜீவபரயோரபி ஸ்வரூபைக்யம் தேஹாத்மநோரிவ ந ஸம்பவதி | ததா ச ஶ்ருதி: "த்வா ஸுபர்ணா ஸயுஜா ஸகாயா ஸமாநம் வ்ருக்ஷம் பரிஷஸ்வஜாதே | தயோரந்ய: பிப்பலம் ஸ்வாத்வத்த்யநஶ்நந்நந்யோ அபிசாகஶீதி" (மு-௩-௧-௧) "ருதம் பிபந்தௌ ஸுக்ருதஸ்ய லோகே குஹாம் ப்ரவிஷ்டௌ பரமே பரார்த்தே | சாயாதபௌ ப்ரஹ்மவிதோ வதந்தி பஞ்சாக்நயோ யே ச த்ரிணாசிகேதா:" (க௦-௩-௧) "அந்த: ப்ரவிஷ்ட: ஶாஸ்தா ஜநாநாம்" (தை-ஆ-௩-௨௦) இத்யாத்யா ||

ஸ்ரீபாஷ்யம் :—

'விசேஷஜனகே ஜ்ஞானே' என்பதும் ஆன்மாக்களுடைய ஸ்வரூபைக்யத்தைச்சொல்வதில் கருத்துள்ளதல்ல. ஜீவனுக்கும் பரவஸ்துவுக்கும் ஐக்யத்தைச் சொல்வதிலும் தாத்பர்யமுள்ளதல்ல. ஆன்மாக்களுடைய ஸ்வரூபைக்யமானது முற்கூறப்பட்ட வண்ணம் நிஷேதிக்கப்பட்டது. தேஹத்திற்கும் ஆன்மாவுக்கும் போல் ஜீவாத்மா பரமாத்மா இரண்டுக்கும் ஸ்வரூபைக்யம் ஸம்பவிக்கிறதில்லை. அவ்வண்ணம் சுருதி கூறுகிறது. "த்வா ஸுபர்ணா ஸயுஜா ஸகாயா ஸமாநம் வ்ருக்ஷம் பரிஷஸ்வஜாதே. தயோரன்ய: பிப்பலம் ஸ்வாத்வத்தி அனச்னன்னன்யோ அபி சாகசீதி. (அபஹத பாப்மத்வம் முதலிய குணங்களால் அன்யோன்யம் ஸமானர்களும் சேர்ந்தே ஸஞ்சரிப்பவர்களும் இரண்டுபக்ஷிகள்போன்றவர்களுமான ஜீவாத்மாபரமாத்மா இருவர்களும் மரம்போல் வெட்டத்தகுதியுள்ள ஒரு சரீரத்தை ஆச்ரயித்திருக்கிறார்கள். அவ்விருவர்களுக்குள் ஒருவனான ஜீவன் அதிபக்வமான கர்மபலத்தை அனுபவிக்கிறான். மற்றொருவனான பரமாத்மாவோ வென்றால் கர்மபலத்தை அனுபவியாதவனாகவே எதிரில் ப்ரகாசிக்கிறான்) "ருதம் பிபந்தௌ ஸுக்ருதஸ்யலோகே,குஹாம்ப்ரவிஷ்டௌ பரமேபரார்த்யே சாயாதபௌ ப்ரஹ்ம விதோவதந்தி பஞ்சாக்நயோ யே ச த்ரிணாசிகேதா:" (எவர்கள் ஐந்து அக்னிகளின் சுச்ரூஷையினால் பரிசுத்தமான அந்தக்கரணமுள்ளவர்களோ "அயம் வாவய:பவதே" என்று தொடங்கப்பட்டிருக்கிற மூன்று அநுவாகங்களை அத்தியயனம் செய்திருக்கிறார்களோ அப்படிப்பட்ட ப்ரஹ்மவித்துக்கள் ஜீவாத்மா பரமாத்மா இருவர்களையும் அவசியம் ஸம்பவிக்கத்தக்க கர்ம பலத்தை அனுபவிக்கிறவர்களென்றும் ஸுக்ருதத்தால் ஸாதிக்கத்தக்க இந்த உலகத்தில் (பிராணிகளுடைய) ஹ்ருதயத்தில் ப்ரவேசித்திருப்பவர்களென்றும் அந்த ஹ்ருதய கமலத்திலுள்ள சிறந்ததான ஹார்தாகாசத்திலிருப்பவர்களென்றும் சொல்லுகிறார்கள். 'அந்த:ப்ரவிஷ்ட:சாஸ்தாஜனானாம் ஸர்வாத்மா' (எல்லாவஸ்துக்களுக்

கும் அந்தராத்மாவாக இருக்கிற பரமபுருஷன் பிராணிகளுக்குள்ளே ப்ர வேசித்தவனாக இருந்துகொண்டு நியமனம் பண்ணுகிறான்) இது முதலிய சுருதிகள்.

சுருதப்ரகாசிகை—

இதற்குமேல் சாஸ்திரத்தின் முடிவிலிருக்கிற "விபேதஜாதே" இது முதலிய ஸ்லோகங்களுக்குப் பொருளைக் கூறப்போகிறவராய்க் கொண்டு அவை ளுக்கு வேறு அர்த்தத்தை உணர்த்துவதில் கருத்துள்ளதாக இருத்தலை நிர ஸம் செய்கிறார்—**வி பேத** இது முதலியதால். முதலில் ஆத்மஸ்வரூபைக்ய பரமா? ஜீவபரமாத்மைக்ய பரமா? என்று விகல்பித்துத் தூஷிக்கப்படுகிறது இந்த இடத்தில் ச சப்தமில்லாததினால் ஆத்மப்ரஹ்ம சப்தங்கள் இரண்டு கும் ஸாமாநாதிகரண்யம் ஸம்பாவிதமானது. அப்படியாகில் ப்ரஹ்ம சப்தமா னது சுத்தாவஸ்தையுள்ள ஆத்மபரமாக ஆகும். இவ்வண்ணம் சுத்தாவஸ்தையுட ன்கூடின ஆன்மாவைக்காட்டிலும் ஜீவனுக்கு பேதமானது இல்லை என்பதனால்ஜீவ ஸ்வரூபைக்யம் சொல்லப்பட்டதாக ஆகும். ஆதலால் சங்கைக்கு ஆஸ்பதமாக ஆக நின்றஆத்மைக்ய பரத்வத்தைத் தூஷிக்கிறார்.—**ஆத்மா** என்று. உக்தரீத்யா—சுருதி ஸ்மிருதி அர்த்தாபத்தி லௌகிகார்த்தாபத்தி முதலியவைகளால் என்று அர்த்தம் இரண்டாவது பக்ஷத்தை தூஷிக்கிறார். **ஜீவ** என்று. தேஹாத்மனோரிவ என்று விருத்ததர்மத்துடன்கூடி இருத்தலாலென்று அர்த்தம். ப்ரத்யக்த்வம் பராக்த்வ ஜடத்வம் அஜடத்வம் நித்யத்வம் பரிணாமித்வம் முதலிய விருத்ததர்மங்களால் எப்ப தேஹத்துக்கும் ஆத்மாவுக்கும் பேதமிருக்கிறதோ அவ்வண்ணம் ஜீவனுக்கும் ப மாத்மாவுக்கும் ஹேயார்ஹத்வம் உபயலிங்கத்வம் நியாம்யத்வம் நியந்த்ருத்வம் மு லிய விருத்த தர்மங்களால் ஐக்யம் உபபன்னமாகிறதில்லையன்றோ. விருத்ததர்ம களோடு சேர்ந்திருத்தலில் ப்ரமாணத்தைக் கூறுகிறார்-**த்வா ச** என்று. ததா-விரு த்ததர்மஞ்ச என்று அர்த்தம். சகாரமானது ஹி சப்தத்தின் அர்த்தமுள்ளது ஹேத்வர்த்தத்தைச் சொல்லுகிறது. சொல்லப்படப்போகிற ஹேதுக்களுக்கெல்லாம் பஞ் சமீ ப்ரயோகிக்கப்பட்டிருக்கிறது. அந்த பஞ்சமீ ஸ்தானத்தில் இந்த சப்தம் ப் யோகிக்கப்பட்டிருக்கிறது. ஸமானம் வருக்ஷம்- சரீரம். பிப்பலம்— கர்மபல அபிசாகசீதி—தான் புஜிக்காமலிருத்தலாலும அன்யனை புஜிக்கச் செய்வித்தல லும் மிக்க ப்ரகாசிக்கிறான் என்று அர்த்தம்.

கற்றறிந்தவரே! இந்த மந்திரத்திற்கு எவ்வாறு ஜீவபரமாத்மாக்களின் பேதப்ரதிபாதனத்தில் கருத்து? அந்தக்கரண ஜீவபரமல்லவோ இந்த மந்திர பைங்கிரஹஸ்ய ப்ராஹ்மணத்தால் இந்த மந்திரம் அவ்வாறு அந்தக்கரண ஜீவ மென்று வியாக்கியானிக்கப்பட்டிருப்பதால். எவ்வாறெனில்—"தயோரந்ய: பிப் லம் ஸ்வாத்வத்தி" என்பதனால் ஸத்த்வம், அநச்நன்னன்யோபிசாகசீதி" என் தனால் ஜ்ஞன. அந்த இவர்கள் இருவர்களும், ஸத்த்வ க்ஷேத்ரஜ்ஞர்கள் என் 'ஸ்வாத்வத்தி' என்கிற பதங்களை ஈற்றிலுடைய மந்திரத்தினால் ஸத்த்வம் கூற பட்டது. அபிசாகசீதி என்கிற பதத்தை ஈற்றில்கொண்ட வாக்கியத்தினால் கர் பலத்தை புஜியாதவன் மற்றொருவன் ஜ்ஞன் என்கிற க்ஷேத்ரஜ்ஞன் அபிபச்ய என்று உரைக்கப்பட்டதென்று அறியப்படுகிறது. ஸத்த்வசப்தம் ஜீவனைச் சொ கிறது. க்ஷேத்ரஜ்ஞ சப்தம் பரமாத்மாவைச் சொல்லுகிறதென்று சொல்

கூடாது. ஸத்த்வசப்தம் க்ஷேத்ரஜ்ஞ சப்தம் இரண்டும் முறையே அந்தக்கரணத்தையும் ஜீவனையும் உணர்த்தும் தன்மை வாய்ந்துள்ளதாக ப்ரஸித்தி இருப்பதால். 'ததேதத் ஸத்த்வம் யேந ஸ்வப்நம் பச்யதி—அதயோயம் சரீர உபத்ரஷ்டா ஸ க்ஷேத்ரஜ்ஞ:—தாவேதௌ ஸத்த்வ க்ஷேத்ரஜ்ஞௌ' என்கிற வாக்கியத்திலுள்ள ஸத்த்வ க்ஷேத்ரஜ்ஞ சப்தங்கள் முறையே அந்தக்கரணத்தையும் ஜீவனையும் உணர்த்துகிறதென்று அவ்விடத்திலேயே வ்யாக்யானிக்கப்பட்டிருப்பதாலும், யேநபச்யதி எதனால் பார்க்கிறானோ என்கிற பொருளுடன்கூடின வாக்கியத்தினால் தர்சனத்திற்கு ஸாதகதமமாக இருப்பது அந்தக்கரணமென்று அறியப்படுவதால் ஸத்த்வமன்றோ அந்தக்கரணம். ஸ்வப்நத்தைக் காண்பவனானதால் அந்தக்கரணத்தைக்காட்டிலும் வேறாக இருக்கிற க்ஷேத்ரஜ்ஞனன்றோ ஜீவன். ஆகையால் 'த்வா ஸுபர்ணா' என்கிற இந்த மந்திரமானது அந்தக்கரணத்தையும் ஜீவனையும் உணர்த்துகிறதே ஒழிய, ஜீவ பரமாத்மாக்களை உணர்த்துகிறதில்லை என்று. மறுமொழி உரைக்கப்படுகிறது. இந்த மந்திரம் ஜீவ பரமாத்மாக்களை ப்ரதிபாதிப்பதில் தாத்பர்யமுள்ளது என்கிற விஷயம் மறுக்கவொண்ணாது. ஏனெனில் இந்த மந்திரத்தின் அர்த்தத்தோடு ஸமானமான அர்த்தத்துடன்கூடி இருத்தலால் ப்ரத்யபிஜ்ஞைக்கு விஷயமாகிற 'ஸமானே வ்ருக்ஷே புருஷோநிமக்ந:' என்கிற அடுத்த மந்திரத்தில் ஜீவபரமாத்மாக்கள் உணர்த்தப்பட்டிருப்பதாலும் இந்த மந்திரமானது அந்த மந்திரத்தோடு ஸமானார்த்தமுள்ளதாக இருப்பதாலும், 'ஸமானம் வ்ருக்ஷம் பரிஷஸ்வஜாதே' 'ஸமானே வ்ருக்ஷே புருஷோ நிமக்ந:' என்கிற அந்த இரண்டு மந்திரங்களுக்கு அர்த்தைக்யமன்றோ அறியப்படுகிறது. 'ஸமானே வ்ருக்ஷே' என்கிற மந்திரத்திலும் புருஷன் ஜீவன். அந்தக்கரணத்துக்கு புருஷ சப்தத்தால் சொல்லத்தக்க தன்மை இல்லாததால், 'சோசதி முஹ்யமாந:, பச்யதி வீதசோக:' என்கிற பதங்களுக்கு அஸ்வாரஸ்யம் ப்ரஸங்கித்தலாலும். அன்யன் பரமாத்மா. ஈச சப்தத்தினால் சொல்லத்தக்கவனாக இருப்பதாலும் தன்னை விஷயீகரிக்கிற ஞானத்தினால் சோகநாசத்திற்குக் காரணமாக இருப்பதாலும். மேலே அடுத்துவரப்போகிற மந்திரத்தோடு அர்த்தைக்யமிருப்பதினால் மாத்திரம் 'த்வா ஸுபர்ணா' என்கிற மந்திரத்திற்கு ஜீவபரமாத்ம பரத்வமென்பதில்லை, பின்னையோ அதே மந்திரத்தில் 'ஸ்வாத்வத்தி, அநச்நன்னந்ய:' என்று போக்த்ருத்வ அபோக்த்ருத்வ ச்ரவணத்தாலும் அது நிச்சயிக்கப்படுகிறது. கண் காது முதலியவைகளுக்கு முறையே பார்க்கும்சக்தி கேட்கும் திறமை முதலியவைகள்போல் அந்தக்கரணத்துக்கும் காரணமாக இருப்பதுபற்றியே போக்த்ருத்வம் ஸம்பவிக்கிறதில்லை. ஜீவனுக்கும் வ்ருக்ஷ சப்தத்தால் சொல்லப்பட்ட தேஹஸம்பந்தமுள்ள தசையிலேயே கர்மபலத்தை புஜிக்காமலிருத்தலும் பொருந்துகிறதில்லை.

அங்ஙனமாகில் பைங்கிரஹஸ்ய ப்ராஹ்மணத்திற்கு யாது பொருள்? உரைக்கப்படுகிறது. ஸத்த்வம்-பத்தஜீவன். 'த்ரவ்யாஸு வ்யவஸாயேஷு ஸத்வமஸ்த்ரீ து ஜந்துஷு' என்று நிகண்டுகாரர்களின் பாடத்தினால் ஸத்த்வ சப்தம் ஜந்து வாசகமென்று அறியப்படுவதால், ஜந்து-சேதனன், "ப்ராணீ து சேதநோஜன்மீ ஜந்துஜன்ய சரீரிண:' என்று சேதந பர்யாயமாக ஜந்து சப்தம் படிக்கப்பட்டிருப்பதால், 'ந ததஸ்தி ப்ருதிவ்யாம்வா திவிதேவேஷு வாபுந: - ஸத்த்வம் ப்ரக்ருதிஜைர்முக்தம் யதேபிஸ் ஸ்யாத்த்ரிபிர் குணை:' என்று ப்ரயோகமிருப்பதால், 'வக்யான் சேஷ்யன்னிவ துஷ்ட ஸத்வான்' என்று பிற்காலத்திலுள்ள கவிகளின் ப்ரயோகத்

தாலும். க்ஷேத்ரஜ்ஞ சப்தமானது இந்த இடத்தில் பரமாத்மாவைச் சொல்லுகிறது. வேறு அர்த்தங்களில் ப்ரஸித்தமான ஆகாச ப்ராண சப்தங்கள்போல அர்த்தம் பொருந்தாததனால் பரமாத்ம பரத்வம் பொருத்தமுள்ளதாக ஆகிறது. 'விஷ்ணோர் நாமஸஹஸ்ரம்மே' என்று தொடங்கி 'க்ஷேத்ரஜ்ஞோக்ஷர ஏவச' என்று ப்ரயோகமிருப்பதால். 'க்ஷேத்ரம் ஜாநாதி' என்கிற அவயவார்த்தத்திற்கு அந்த பரமாத்மாவினிடத்திலேயே நன்குபொருத்தமிருப்பதாலும். மோக்ஷதர்மத்தில் 'ததஸ்த்ரைகுண்யஹீநாஸ்தே பரமாத்மாநமஞ்ஜஸா — ப்ரவிசந்தி த்விஜச்ரேஷ்ட க்ஷேத்ரஜ்ஞம் நிர்குணாத்மகம்—ஸர்வாவாஸம் வாஸுதேவம் க்ஷேத்ரஜ்ஞம் வித்தி தத்வத: —விச்வமூர்த்தா விச்வபுஜோ விச்வபாதாக்ஷி நாஸிக:—ஏகச்சரதி க்ஷேத்ரேஷு ஸ்வைரசாரீயதாஸுகம்— க்ஷேத்ராணிச சரீராணி பீஜாநிச சுபாசுபே தாநிவேத்தி ஸயோகாத்மா தத:க்ஷேத்ரஜ்ஞ உச்யதே—என்று ப்ரயோகமிருப்பதாலும், 'யோஸ்யாத்மந: காரயிதா தம்க்ஷேத்ரஜ்ஞம் ப்ரசக்ஷதே — ய:கரோதிச கர்மாணி ஸ பூதாத்மேதி சோச்யதே' என்று ப்ரயோகமிருப்பதாலும். 'யேந ஸ்வப்நம் பச்யதி' என்கிறவாக்கியத்திலிருக்கிற யேந என்றகிபதமானது இத்தம்பாவரூபமான அர்த்தத்தை உணர்த்துகிற த்ருதீயாவிபக்தியை ஈற்றில்கொண்டது. எதோடு கூடினவனாக இருந்து கொண்டு பரமாத்மா ஸ்வப்நம் காண்கிறானோ என்று சொல்லப்படுகிறது. ஆகவே 'காடின்யவான் யோபிபர்தி' என்கிற இடத்தில் ப்ருதிவியின் வாயிலாக காடின்யம் போல ஸ்வப்நத்ரஷ்ட்ருத்வமானது ஜீவாத்மாவைத்துவாரமாகக்கொண்டு பரமாத்மாவுக்கு விசேஷணமாகிறதாதலால் விரோதமில்லை. சாரீரசப்தமும் 'தஸ்யைஷஏவ சாரீர ஆத்மா' என்கிற வாக்கியத்தில்போல தன்னைவிட வேறான ஸமஸ்த சிதசித் வஸ்துக்களையும் சரீரமாகக்கொண்ட பரமாத்மாவினிடத்தில் உபபன்னமாகிறது. 'உபத்ரஷ்டா' என்கிற சுருதிவாக்கியத்திலடங்கி இருக்கிற பதத்தால் ஏற்படுகிற நிருபாதிகமான த்ரஷ்ட்ருத்வமும் ஸர்வஜ்ஞனான அவனுக்கே பொருத்தமுள்ளதாக ஆகிறது. ஆகையால் 'த்வாஸுபர்ணா'என்கிற மந்திரமானது ஜீவபரமாத்மாக்கள் இருவர்களையே சொல்லுகிறது.'ருதம் பிபந்தௌ'என்கிற இடத்தில்பாநக்ரியையில் ஜீவபரமாத்மா இருவர்களுக்கும் ப்ரயோஜ்ய ப்ரயோஜக பாவத்தால் அன்வயம். பிபந்தௌ என்கிற பதத்திலுள்ள சத்ருப்ரத்யயமானது கர்தாவைமாத்திரம் சொல்லுகிறது, கர்த்ரு விசேஷத்தைக் குறிக்கிறதில்லை. ஆதலால் ப்ரயோஜ்யனாகவும் ப்ரயோஜகனாகவும் இருக்கிற இருவர்களும் கர்த்ரு விசேஷங்களாக இருப்பதுபற்றி அவர்கள் இருவர்களும் வேற்றுமை இன்றி க்ரோடீகரிக்கப்பட்டவர்களாக ஆகிறார்கள். அப்படி இல்லாவிட்டால் அநச்நந் இதுமுதலியவைகளின் விரோதம் ஸம்பவிக்கும். அன்றிக்கே 'சத்ரிணோ கச்சந்தி' என்கிற வாக்கியத்தில்போல அஜஹல்லக்ஷணை. ஸுக்ருதஸ்ய-புண்ணியத்தினுடைய, ருதம்-பலத்தை,அன்றிக்கே,ஸுக்ருதஸ்ய என்கிற பதத்திற்கு லோகே என்கிற பதத்தோடு அன்வயம். அப்பொழுது, ருதம் ஸுக்ருதம், லக்ஷணையினால் அதன் பலம் சொல்லப்படுகிறது. ஏவம் 'புண்யஸ்யகர்மண ஆராத்வாதி' என்கிற இடத்தில் 'ஏவம், அந்ருதாதாத்மாநம் ஜுகுப்ஸேத் 'என்கிற இடத்தில் புண்ணியத்திற்கு ப்ரதியோகியாக அந்ருத சப்தம் ப்ரயோகிக்கப்பட்டிருப்பதால்.குஹாம்—ஹ்ருதயகுஹையை. பரமே, பரார்த்யே, என்பது லோகத்திற்கு விசேஷணங்கள். ஜீவபர விசேஷணங்களாகவாவது இந்த பதங்களை அன்வயிக்கலாம். அப்பொழுது லிங்கம் மாறிஇருப்பது சாந்தஸமாதலால் தோஷமில்லை என்று ஸமாதானம் சொல்லத்தக்கது. சாயாதபௌ அஜ்ஞஸர்வஜ்ஞர்கள் இருவர்கள்— 'ஜ்ஞாஜ்ஞௌத்வாவஜாவீசநீசௌ' என்கிற வாக்கியத்தோடு ஏகார்த்தமாக இருப்பதால். ப்ரஹ்மவித: - அத்யாத்ம சாஸ்த்ர

ரத்தை நன்கு உணர்ந்தவர்கள். பஞ்சாக்நிகளும் த்ரிணாசிகேதர்களும் கர்மவிசேஷ நிஷ்டர்களான ப்ரஹ்மவித்துக்கள் எவர்களோ அவர்கள் சொல்லுகிறார்கள். எவ்வாறு எனில், 'யேசவேதவிதோ விப்ரா யேசாத்யாத்மவிதோஜநா:, தே வதந்தி மஹாத்மாநம் க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம்' என்று.

'ருதம்பிபந்தௌ' என்கிற மந்திரத்தின் வைசத்யத்தின்பொருட்டுக் கூறுகிறார். அந்தப்ரவிஷ்ட: என்று, இத்யாத்யா என்கிறபதத்திற்கு ச்ருதி: என்கிற பதத்தோடு அன்வயம்—

அஸ்மிந்நபி ஶாஸ்த்ரே 'ஸ ஸர்வபூதப்ரக்ருதிம் விகாராந் குணாதி தோஷாம்ஶ்ச முநே வ்யதீத: | அதீத ஸர்வாவரணோऽகிலாத்மா தேநாஸ்த்ருதம் யத்புவநாந்தராளே || ஸமஸ்தகல்யாணகுணாத்மகோऽஸௌ பர: பராணாம் ஸகலா ந யத்ர க்லேஶாதய: ஸந்தி பராவரேஶே |' (வி-பு-௬-௫-௮௩-௮௪-௮௫) அவித்யாகர்மஸம்ஜ்ஞாந்யா த்ருதீயா ஶக்திரிஷ்யதே | யயா க்ஷேத்ரஜ்ஞஶக்தி: ஸா வேஷ்டிதா ந்ருப ஸர்வகா (வி-பு-௬-௭-௬௧) இதி தேஹவ்யபதேஶாத், 'ஏஹஸ்யேऽவிதி தேஹே தேந ஶ்ரீயதே, தேஹவ்யபதேஶாந்ந:' (ஶா-ஸ-௧-௨-௨௧,௨௨) 'அதிகஞ்சநேஹநிதேபாஸ' (ஶா-ஸ-௨-௧-௨௨) இத்யாதிஸூத்ரேஷ்வபி 'ய ஆத்மநி திஷ்டந்நாத்மநோऽந்தரோ யமாத்மா ந வேத யஸ்யாத்மா ஶரீரம் ய ஆத்மாநமந்தரோ யமயதி' (ப்ரு-௫-௭-௨௨) ப்ராஜ்ஞேநாத்மநா ஸம்பரிஷ்வக்த: (ப்ரு-௬-௩-௨௧) ப்ராஜ்ஞேநாத்மநாऽந்வாரூட:' (ப்ரு-௬-௩-௩௫) இத்யாதிபிர்ஹேயோபாதேயப்ரத்யநீககாரேண ஸர்வபதிரண்யாத் | நாபி ஸாயநாநத்ஷ்டேந நிர்த்யுக்தாவித்யஸ்யரேண ஸர்வஸ்வேத்யஸ்தவ:, அவித்யாஶ்ரயத்வயோக்யஸ்ய தஜ்ஞஹே: க்ஷாரஸ்தவாத் | யதோக்தம்— 'பராத்பராத்மநோ யோऽஸௌ பராய இதீஷ்யதே | நித்யோ நித்யாநாம் ஹி சேதநச்சேதநாநாம்' (வி-பு-௨-௧௪-௨௧) இதி

ஸ்ரீபாஷ்யம்—

இந்த சாஸ்திரத்திலும் "ப்ரஹ்மஸ்வரூபத்தை மனனம்செய்பவனே! அந்தப் பரமபுருஷன் ஸர்வபூதங்களுக்கும் காரணமாக இருக்கிற அவ்யக்தத்தையும் மஹத்தத்வம் முதலிய விகாரங்களையும் ஸத்வம் முதலிய குணங்க

களையும் அவைகளின் கார்யங்களாக இருக்கிற லோகம் ஞானம் முதலியவற்றையும் தாண்டி இருப்பவன்—அவித்யைமுதலிய எல்லா ஆவரணங்களையும் தாண்டி இருப்பவன்-சேதநாசேதநங்கள் அனைத்துக்கும் ஆத்மாவாக இருப்பவன்-உலகத்தினுள் எந்தவஸ்து இருக்கிறதோ அவை அனைத்தும் அந்தப்பரமபுருஷனால் வியாபிக்கப்பட்டிருக்கிறது, அந்த பரமபுருஷன் எல்லா கல்யாணகுணங்களாலும் நிறைந்தவன். சிறப்புற்றவர்களுக்குள் சிறப்புற்றவன்-பராவரதத்வங்களுக்கு நியந்தாவாக இருக்கிற எந்த பரமாத்மாவினிடத்தில் க்லேசம்முதலியவை அனைத்தும் இல்லையோ, அவித்யை என்பது கர்மாவென்கிற பெயருள்ள வேறு ஒரு மூன்றாவது சக்தியாக விரும்பப்படுகிறது. அரசே! எந்தசக்தியினால் எல்லாவற்றையும் அடைந்திருக்கிற அந்த க்ஷேத்ரஜ்ஞசக்தியானது சுற்றப்பட்டிருக்கிறதோ' என்று பேதம் கூறப்பட்டிருப்பதாலும், 'உபயேபி ஹி பேதேநைநமதீயதே' 'பேதவ்யபதேசாச்சாந்ய:' 'அதிகந்துபேதநிர்தேசாத்' இதுமுதலிய ஸூத்ரங்களிலும், 'ய ஆத்மநி திஷ்டந்நாத்மநோந்தரோ யமாத்மா நவேத யஸ்யாத்மா சரீரம், ய ஆத்மாநமந்தரோ யமயதி (எவன் ஆத்மாவினிடத்தில் இருக்கிறானோ ஆத்மாவுக்குள்ளே நிலைபெற்று இருக்கிறானோ, எவனை ஆத்மா அறிகிறானில்லையோ, எவனுக்கு ஆத்மா சரீரமோ, எவன் ஆத்மாவின் ஹ்ருதயாகாசத்திலிருந்து அவனை நியமனம்செய்கிறானோ,) 'ப்ராஜ்ஞேநாத்மநா ஸம்பரிஷ்வக்த:' (ஸுஷுப்தியில்) ஸர்வஜ்ஞனான பரமாத்மாவினால் ஆலிங்கனம் பண்ணிக்கொள்ளப்பட்டவனாக ஆகிறான். 'ப்ராஜ்ஞேநாத்மநா அந்வாரூட:' (உத்க்ராந்திஸமயத்தில்) (ப்ராஜ்ஞனான பரமபுருஷனால் எடுத்துக்கொண்டு போகப்பட்டவனாக ஆகிறான்) இதுமுதலிய வசநங்களால் ஜீவாத்மா பரமாத்மா இருவர்களுக்கும் பரஸ்பரம் விருத்தங்களான ஆகாரங்களால் ஸ்வரூபம் நிர்ணயிக்கப்பட்டிருப்பதால். ஸாதநாநுஷ்டானத்தினால் அவித்யையினின்று விடுபட்ட ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவோடு ஸ்வரூபைக்யம் ஸம்பவிக்கிறதில்லை. அவித்யைக்கு ஆச்ரயனாக இருத்தலென்கிற தன்மைக்குத் தகுதியுள்ள ஜீவனுக்கு அத்தன்மையை வஹிப்பதற்குத் தகுதிஇல்லாமை ஸம்பவியாதாலால். இந்த விஷயத்தைப்பற்றி அபியுக்தர்கள் கூறி இருக்கின்றனர். அதாவது-" பரமாத்மாவுக்கும் ஜீவாத்மாவுக்கும் ஐக்யம் பாரமார்த்தமென்று (சில அறிஞர்களால்) விரும்பப்படுகிறது. இது முற்றிலும் பிசகு- ஏனெனில் வேறுவஸ்துவானது அதைக்காட்டிலும் வேறானவஸ்துவின் தன்மையை அடைகிறதில்லையன்றோ" என்று.

ச்ருதப்ரகாசிகை—

ஸ்ருதிஸ்வாரஸ்யத்தால் மாத்திரமல்ல. இந்தப் பிரபந்தத்திலும் காணப்படுகிறதென்று சொல்லுகிறார்—அஸ்மின்னபி என்று. 'ஸ ஸர்வபூத' இது முதலியதால் ஹேயப்ரத்யநீகத்வமும் கல்யாணகுணாகரத்வமும் சொல்லப்பட்டன. ஜீவனுக்கு ஹேயாஸ்பதத்வமானது 'அவித்யா' இது முதலியதால் உரைக்கப்பட்டது.

𑌕𑌿𑌞𑍍𑌚, 𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌯𑌾 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑍈𑌕𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌤𑌿𑌰𑍋𑌹𑌿𑌤𑌮𑌿𑌤𑌿 𑌵𑌦𑌤𑌾 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌨𑌾𑌶 𑌏𑌵𑍋𑌕𑍍𑌤𑌃 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 । 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌤𑌿𑌰𑍋𑌧𑌾𑌨𑌂 𑌨𑌾𑌮 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑍋𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑌿𑌪𑍍𑌰𑌤𑌿𑌬𑌨𑍍𑌧𑍋 𑌵𑌿𑌦𑍍𑌯𑌮𑌾𑌨𑌸𑍍𑌯 𑌵𑌿𑌨𑌾𑌶𑍋 𑌵𑌾 । 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌸𑍍𑌯𑌾𑌨𑍁𑌤𑍍𑌪𑌾𑌦𑍍𑌯𑌤𑍍𑌵𑌾𑌭𑍍𑌯𑍁𑌪𑌗𑌮𑍇𑌨 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌤𑌿𑌰𑍋𑌧𑌾𑌨𑌂 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌨𑌾𑌶 𑌏𑌵 ।

ஸ்ரீபாஷ்யம்—

அப்படிக்கின்றி ப்ரஹ்மத்தைத்தவிர்த்த மற்ற எல்லா வஸ்துக்களும் மித்யை என்கிற ஜ்ஞானம் அஜ்ஞானவிரோதி என்று சொல்லப்படுமேயானால்,—அல்ல. ப்ரஹ்மத்தைத்தவிர்த்த மற்ற வஸ்துக்களனைத்தும் மித்யை என்கிற இந்த ஜ்ஞானமானது ப்ரஹ்மத்தின் யாதாத்ம்யாஜ்ஞானவிரோதியா? அல்லது ப்ரபஞ்சத்தின் ஸத்யத்வரூபமான அஜ்ஞானத்திற்கு விரோதியா? என்று பகுத்தறியத்தக்கது. அது ப்ரஹ்மயாதாத்ம்யாஜ்ஞானவிரோதியல்ல. இந்த ஜ்ஞானமானது அதை விஷயீகரிக்காததால் ஜ்ஞானம் அஜ்ஞானம் இரண்டுக்கும் விஷயம் ஒன்றாக இருந்தாலல்லவோ விரோதம். ப்ரபஞ்சமித்யாத்வஜ்ஞானமானது அந்த ப்ரபஞ்சஸத்யத்வரூபாஜ்ஞானத்தோடு விரோதமுள்ளது. அந்த ப்ரபஞ்சமித்யாத்வஜ்ஞானத்தால் ப்ரபஞ்சஸத்யத்வரூபமான அஜ்ஞானமே பாதிக்கப்பட்டதாக ஆகிறதாதலால் ப்ரஹ்மஸ்வரூபாஜ்ஞானம் இருக்கவே இருக்கிறது. ப்ரஹ்மஸ்வரூபாஜ்ஞானமாவது அது இரண்டாவதோடுகூடி இருத்தலே அதோ அந்த ப்ரஹ்மத்தைத்தவிர்த்து மற்ற வஸ்துக்கள் அனைத்தும் மித்யை என்கிற ஜ்ஞானத்தால் நிவ்ருத்தித்து விட்டது, ஸ்வரூபமோவென்றால் ஸ்வாநுபவஸித்தம் என்று சொல்லப்படுமேயானால் அது ஸரியல்ல:—ப்ரஹ்மத்தினுடைய அத்விதீயத்வஸ்வரூபமானது ஸ்வாநுபவஸித்தமாக இருப்பதால் அதற்கு விரோதியான ஸத்விதீயத்வரூபாஜ்ஞானமும் அதின் பாதமும் உண்டாகாது. அத்விதீயத்வம் தர்மமென்று கூறப்படுமேயானால் அது ஸரியல்ல. அநுபவஸ்வரூபமான ப்ரஹ்மத்திற்கு அநுபாவ்யமாக இருக்கிற தர்மத்தின் இன்மையானது உன்னாலேயே சொல்லப்பட்டிருப்பதால், ஆகையால் ஜ்ஞானரூபமான ப்ரஹ்மத்திற்கு விரோதத்தாலேயே அஜ்ஞானாச்ரயத்வமில்லை.

மேலும் ப்ரகாசத்தையே ஸ்வரூபமாகக்கொண்ட ப்ரஹ்மமானது அவித்யையினால் மறைக்கப்பட்டிருக்கிறதென்று சொல்லுகிறவனால் ஸ்வரூப

வஸ்துவுக்கும் அஜடமாகஇருக்கிற வஸ்துவுக்கும் ஸ்வரூபைக்யம் ப்ரஸங்கிக்கும். 'ருக் யஜுஸ்ஸாம நிஷ்பாத்யம் யஜ்ஞகர்மமதம் தவ' என்பதுபோல் இஷ்யதே என்கிற பதப்ரயோகத்தினால் பூர்வார்த்தத்தில் சொல்லப்பட்டிருக்கிற அர்த்தம் அன்யனுடைய மதம் என்று வெளியிடப்பட்டது. அங்ஙனமில்லாவிடில் இஷ்யதேஎன்கிற பதம் பயனற்றதாக ஆகும்.

மேலும், ப்ரகரணமானது, பரமார்த்தஸ்து பூபால ஸம்க்ஷேபாச்ச்ரூயதாம்' என்று இனி கூறப்போகிற பக்ஷத்தைத் தவிர்த்த மற்ற எல்லாபக்ஷங்களின் நிராகரணத்தில் நோக்குள்ளதாக இருத்தலால். உத்தரார்த்தத்திற்கு இந்த ஶ்லோகத்தினது பூர்வார்த்தத்தில் சொல்லப்பட்டிருக்கிற அர்த்தைக்ய ஸமர்த்தனத்தில் நோக்கமானது பொருந்துகிறதில்லை. 'தர்மாய த்யஜத :' இது முதலிய க்ரந்தங்களால் அந்தந்த அர்த்தங்களுக்கு பாரமார்த்தியமல்லவோ நிரஸிக்கப்படுகிறது. தானகவே ப்ரக்ருதார்த்தத்தில் ஸ்வரஸமாக இருக்கிற ஏதத் சப்தத்திற்கு ப்ரக்ருதார்த்த மிருக்கும்பொழுதுகூட இனிகூறப்போகிற பொருளில் நோக்கத்தை ஆஶ்ரயிப்பதும் தகுதியுள்ள தன்று. மேலும், அந்யத்த்ரவ்யம் தத்த்ரவ்யம்தாம் நைதி இதியத் ஏதத்மித்த்யா-வேறு ஒருவஸ்துவானது மற்றொரு வஸ்துவின் தன்மையை அடைகிறதில்லை என்பது யாதொன்றுண்டோ இது மித்த்யை என்றல்லவோ அப்பொழுது பொருள். அங்ஙனமாகில் யதஶப்த ஸ்வாரஸ்யத்திற்கு பங்கம் வருகிறது. யதஶப்தத்திற்கு ஹேதுபரத்வமன்றோ ஸ்வரஸஸித்தமானது. யச்சப்தத்திற்குப்போல் ப்ரக்ருதார்த்தமான சரீரமாத்ர பராமர்சித்வம் ஸ்வரஸஸித்தமல்ல. 'அந்யத் த்ரவ்யம் தத் த்ரவ்யதாம் நைதீத்யேதத் ந மித்த்யேதி யத:தத: ஐக்யம் பாரமார்த்த: ' என்று அன்வயித்தால் இரண்டு இதி சப்தங்களின் அத்தியாஹாரம் ப்ரஸங்கிக்கும். அத்தியாஹாரமில்லாமலே நிர்வாஹம் ஸம்பவிப்பதாக இருக்க அத்தியாஹாரம் பொருத்தமுள்ளதாக ஆகாது. முன்பு தனித்தே இருந்து கொண்டிருந்த பரமாத்மா ஜீவாத்மா இருவர்களுக்கும் ஐக்யம் பாரமார்த்தமென்று விரும்பப்படுகிறது என்று கூறப்படுமேயானால் இது மித்த்யை, எந்தக்காரணத்தினால் வேறு திரவ்யமானது மற்றொரு திரவ்யத்தின் தன்மையை அடைகிறதில்லையோ ஆதலால் முந்தியும் பரமாத்மா ஜீவாத்மா இருவர்களுக்கும் பேதம் இல்லை என்று சொல்லப்படுமேயாகில் இவ்வண்ணமல்ல. முந்தி ப்ராந்தியினால் தனித்திருப்பவர்களான இருவர்களுக்கும் என்கிற இந்த அர்த்தமானது கேழ்க்கப்படாமலிருத்தலால் அத்தியாஹாரம் ப்ரஸங்கிக்கும். அந்த அத்தியாஹாரமானது அத்தியாஹாரமில்லாமலே நிர்வாஹம் ஸம்பவிக்கிற இடத்தில் பொருத்தமுள்ளதாக ஆகிறதில்லை.

மேலும் 'தஸ்மாத் பூர்வமபி பேதோ நாஸ்தி ' என்று முன்பு காதால் கேட்கப்படாத ஒரு வாக்கியாந்தரத்தின் அத்தியாஹாரத்தினால் வாக்கியம் நிரப்பத் தக்கதாக ஆகும். அது அதை அபேக்ஷியாமலே நிர்வாஹம் ஸம்பவிக்கிற இடத்தில் பொருந்தாது. ஆகையால் ' முந்தியும் பேதம் கிடையாது' என்கிறவாக்கியமானது அத்யாஹாரம் செய்துகொள்ளத்தக்கதல்ல. இந்த கிரந்தமானது முன்பு வேறுபட்டிருக்கிற பரமாத்மா ஜீவாத்மா இருவர்களுக்கும் பிறகு அபேதமென்கிறபக்ஷத்தின் நிராகரணமாத்திரத்தில் அபிநிவேசமுள்ளதாக இருப்பதால் என்று கூறப்படுமேயாகில் அதனால் யாது பயன். முந்தியும் ஐக்யம் ஸித்தித்திருக்கிறதென்று சொல்லப்படுமேயாகில் அல்ல. முன்பு வேறுபட்டிருந்த இரண்டு வஸ்துக்களுக்கு பின்பு ஐக்யத்தின் பொருந்தாமை சொல்லப்பட்டிருக்குமளவில் பிறகும் பேதம்ஸித்தித்திருப்பதால்.ஆதலால் ஸ்வரஸஸித்தமான அர்த்தமே ஏற்றுக்கொள்ளத்தக்கது.

[illegible]

ஸ்ரீபாஷ்யம்—

முக்தனுக்கு ப்ரஹ்மத்தினுடைய தர்மம் போன்ற தர்மத்தை ஆச்ர யித்தலே முக்தியென்று பகவத்கீதைமுதலியவைகளில் கூறப்பட்டிருக்கிறது- ‘இதம்ஜ்ஞாநமுபாச்ரித்ய மமஸாதர்ம்யமாகதா:, ஸர்கேபி நோபஜாயந்தே ப்ரளயே நவ்யதந்திச’ (இனிகூறப்போகிற ஞானத்தை ஆச்ரயித்து என்னு டன் ஸாம்யத்தை அடைந்தவர்கள் ஸ்ருஷ்டி ஸமயத்தில்கூட பிறக்கிறார் களில்லை—ப்ரளயஸமயத்தில்கூட ஸம்ஹாரவிஷயமாகஆகிறார்களில்லை) என்று. இந்த யோகப்ரகரணத்திலும், ‘ஆத்மபாவம் நயத்யேநம் தத் ப்ரஹ்மத்யாயி நம்முநே-விகார்யமாத்மந: சக்த்யாலோஹமாகர்ஷகோயதா ’(ஹே ப்ரஹ்ம

ஸ்வரூபத்தை மனனம்செய்பவனே! வேறுபாட்டை அடையத்தக்கவனும் தியானம் செய்பவனுமான இவனை அந்த ப்ரஹ்மமானது தன்சக்தியினால் விகாரத்தை அடைவிக்கத்தக்க உலோகத்தை நெருப்புபோல தன்ஸ்வபாவத்தை (தோஷமற்றிருத்தலை) அடையச்செய்கிறது.) என்று. ஆத்மபாவத்தை-தன்னுடைய ஸ்வபாவத்தை-இழுக்கப்படுகிற வஸ்துவுக்கு இழுக்கும் ஸ்வபாவமுள்ள வஸ்துஸ்வரூபைக்யம் ஸம்பவியாதன்றோ—இந்த விஷயத்தை ஸாக்ஷாத்ஸூத்ரகர்தாவான ஸ்ரீவேதவ்யாஸ மஹரிஷியே கூறப்போகிறார்-'ஜகத்வ்யாபாரவர்ஜம் ப்ரகரணாதஸன்னிஹிதத்வாச்ச' 'போகமாத்ரஸாம்யலிங்காச்ச' 'முக்தோபஸ்ருப்யவ்யபதேசாச்ச' என்று. 'ஜகத்வ்யாபாரவர்ஜம் ஸமானோ ஜ்யோதிஷா' (உலகங்களை ஆக்கல் அளித்தல் அழித்தல் இவைகளைத்தவிர்த்து மற்ற எல்லாவிதங்களாலும் பரமாத்மாவோடு ஸமனாக இருப்பவன்) என்று வ்ருத்தி கிரந்தமும். த்ரமிடபாஷ்யகாரரும், 'தேவதாஸாயுஜ்யாதசரீரஸ்யாபி தேவதாவத்ஸர்வார்த்தஸித்திஸ்ஸ்யாத்' (தேவதையோடு ஸாயுஜ்யப்ராப்தியினால் சரீரமில்லாதவனாக இருந்தபோதிலுங்கூட ஜீவாத்மாவுக்கு பரமாத்மாவுக்குப்போல எல்லா அபீஷ்டார்த்தங்களின் ஸித்தியானது உண்டாகலாம்) என்று கூறுகிறார். சுருதிகளும் 'யஇஹாத்மாநமனுவித்ய வ்ரஜந்த்யேதாம்ஸ்ச ஸத்யாந்காமாம்ஸ்தேஷாம் ஸர்வேஷுலோகேஷு காமசாரோபவதி' (எவர்கள் இவ்வுலகத்தில் பரமாத்மாவையும் நித்யங்களான இந்த அபஹதபாப்மத்வம் முதலிய கல்யாணகுணங்களையும் உபாஸித்துப்பரலோகத்தை அடைகிறார்களோ அவர்களுக்கு எல்லா உலகங்களிலும் இஷ்டப்படி ஸஞ்சாரம் ஏற்படுகிறது) "ப்ரஹ்மவிதாப்நோதிபரம்' (நிரதிசயப்ருஹத்த்வாச்ரயமான வஸ்துவை உபாஸிப்பவன் எல்லாவஸ்துக்களைக்காட்டிலும் உத்க்ருஷ்டமான பரப்ரஹ்மத்தை அடைகிறான்) ஸோச்நுதே ஸர்வான்காமான்ஸஹ-ப்ரஹ்மணாவிபசிதா' (அவன் ஸர்வஜ்ஞமான ப்ரஹ்மத்தோடுகூட எல்லாகல்யாணகுணங்களையும் அனுபவிக்கிறான்) 'ஏதமாநந்தமயமாத்மாநமுபஸங்க்ரம்ய' (ஆநந்தமயனான இந்தஆத்மாவை அனுபவித்து) 'இமாந்லோகாந்காமான்னீ காமரூப்யநுஸஞ்சரந்' (முக்தாத்மாவானவன் ஸுக்ருதஸாத்தியங்களான இந்தஉலகங்களில் இஷ்டரூபத்துடன் தன்இஷ்டப்படி ஸஞ்சரித்துக்கொண்டு வேண்டியபோகங்களை அனுபவியாநின்றவனாகவும்) 'ஸ தத்ர பர்யேதி' அந்த முக்தாத்மா அந்தபரமாத்மாவை அனுபவிக்கிறான்.) 'ரஸோவைஸ: ரஸம்ஹ்யேவாயம் லப்த்வாநந்தீபவதி' (அந்தப்பரமாத்மாவே ரஸசப்தத்திற்கு வாச்யன்-ரஸசப்தத்திற்கு முக்கியவாச்யனாக இருக்கிறபரமாத்மாவை அடைந்தன்றோ இந்த ஜீவாத்மா ஆநந்தமுள்ளவனாக ஆகிறான்) 'யதாநத்யஸ்ஸ்யந்தமாநாஸ்ஸமுத்ரே அஸ்தம்கச்சந்திநாமரூபேவிஹாய-ததாவித்வாந்நாமரூபாத்விமுக்த: பராத்பரம் புருஷமுபைதிதிவ்யம்.' ததாவித்வாந் புண்யபாபேவிதூயநிரஞ்ஜந: பரமம்ஸாம்யமுபைதி' (உத்பத்திஸ்தானங்களான மலைகளினின்று பெருகிவரும் நதிகள் எவ்வாறு தன்னிடமமைந்

துள்ள கங்கை யமுனை ஸரஸ்வதி என்கிற பெயர்களையும் வெளுப்பு கருப்பு சிகப்பு நிறங்களையும் இழந்து ஸமுத்திரத்தில் வீழ்ந்து அந்த கடல் நீரோடு ஒன்றுகலந்து அதோடு ஒன்றுபட்டவைகள் போலாகின்றனவோ அவ்வாறே பரப்ரஹ்மோபாஸகன் புண்யபாபரூபங்களான கர்மாக்களின் நாசத்தினால் தேவன் மனுஷ்யன் திர்யக் ஸ்தாவரம் என்கிற பெயர்களாலும் சுக்லம் க்ருஷ்ணம் முதலிய ரூபங்களாலும் விடுபட்டவனாக ப்ரஹ்மாதிகளைக் காட்டிலும் சிறப்புற்றவனும் ஸர்வப்ராணிகளுடையவும் ஹ்ருதயாகாசத்தில் வஸிப்பவனுமான திவ்ய புருஷனை அடைகிறான். அவ்வாறு பரப்ஹ்மோபாஸகன் புண்யபாபங்களை உதறிவிட்டு ஹேயகுணங்களை இழந்தவனாக (பரப்ரஹ்மத்தோடு) பரமஸாம்யத்தை அடைகிறான்.

சீருதப்ரகாசிகை

இதற்குமேல் 'ப்ரஹ்மவேத ப்ரஹ்மைவ பவதி' இது முதலிய வாக்கியங்களின் நிர்வாஹத்தை அனேக ச்ருதிவாக்கியங்களுக்கு விரோதமன்றி சொல்லப் போகிறவராக முக்தனுக்கு பரப்ரஹ்மத்தோடு ஸாம்யாபத்தியைக் கூறுகிறார்— முக்தஸ்ய என்று. அங்கு ஐக்ய ச்ருதிக்கு ப்ரதிகூலமான அர்த்தத்துடன் கூடின ஸாம்யச்ருதியானது காண்பிக்கப்படப்போகிறதென்று எண்ணி வியாக்கியானிக்கத்தக்கதாக இருத்தலால் ப்ருகிருதமாக இருக்கிற உபப்ரும்ஹணவசனத்திற்கு ஸஜாதீயமாக இருப்பதும் ப்ரதிவாதிக்கு அபிமதமான அர்த்தத்திற்கு ப்ரதிகூலமான அர்த்தத்துடன்கூடினதுமான ஸ்ம்ருதிவசனத்தைக் காட்டுகிறார்— இதம் என்று. முக்த பரம் என்பதைத்தெளிவாகத் தெரிவிப்பதற்காக ஸர்கேபி என்று எடுக்கப்பட்டது. சாஸ்த்ராந்தரத்தில் மாத்திரமல்ல. இந்தசாஸ்திரத்திலும் முக்தனுக்கு பேதப்ரதிபத்தியானது இருக்கிறதென்று கூறுகிறார்— இஹாபி என்று. இஹ - யோகப்ரகரணத்தில். சுருக்கமான சொல்லின் தொடக்கத்தில் என்று அர்த்தம். ¶ ஸங்க்ஷேபம் விஸ்தாரம் இவ்விரண்டுகளைக்காட்டிலும் வேறு எது செய்யப்படலாம். 'உனக்கு' என்றல்லவோ சொல்லப்பட்டிருக்கிறது. ஆத்மந: - தன்னுடைய சக்த்யா - ஸாமர்த்தியத்தினால், விகார்யம் - வேறு அவஸ்தையை அடைவிக்கச்செய்யத்தக்கது. தியானம் செய்கிற இந்த உபாஸகனை அந்த ப்ரஹ்மமானது தன்னுடையஸ்வபாவத்தை அடையச்செய்கிறது. 'ஆத்மந: சக்த்யா விகார்யம் லோஹம் ஆகர்ஷகோயதா' என்று அன்வயம். ஆகர்ஷக: - நெருப்பு.தோஷத்தை இழுக்குகிறது என்கிற வ்யுத்பத்தியினால் நெருப்புக்கு இந்தப்பெயர். 'யதாக்நிருத்ததசிக: கக்ஷம் தஹதி ஸாநில:-ததாசித்தஸ்திதோ விஷ்ணுர்யோகிநாம் ஸர்வகில்பிஷம்' (எழுந்து ஜ்வலிக்கின்ற ஜ்வாலைகளுடன்கூடின நெருப்பானது காத்துடன் சேர்ந்துகொண்டு எவ்வாறு உலர்ந்தகாட்டை எரிக்கிறதோ அவ்வாறேயோகிகளுடைய உள்ளத்தில் நிலை பெற்றிருக்கிற விஷ்ணுவானவர் எல்லாபாபங்களையும் நாசம் செய்கிறார். என்றல்லவோ மேலே சொல்லப்போகிறார். ஸ்ரீவிஷ்ணுதர்மத்திலும் 'யதாக்நிஸங்காத் கநகமபதோஷம் ப்ராஜாயதே' (எவ்வாறு) நெருப்பின்

¶ ஸங்க்ஷேபம்—சுருக்கம்

சேர்க்கையால் ஸ்வர்ணம் தோஷமற்றதாக ஆகிறதோ?) என்று. அந்த அக்னியானது ஆத்மபாவம்-தன்னுடைய ஸ்வபாவத்தை நிர்தோஷத்தன்மையை உலோஹத்தை எவ்வாறு அடையச்செய்கிறதோ அப்படி என்றுபொருள். இது நல்ல பொருள். அன்றிக்கே ஆத்மசப்தமானது தான் என்கிற அர்த்தத்தைச் சொல்லா நின்றுகொண்டு அன்யயோகவ்யவச்சேதத்தில் தாத்பர்யத்தைக் காண்பிக்கிறது. எப்படி அக்னியானது உலோகத்தை ஆத்மபாவத்தை அதாவது ஸ்வபாவத்தை இயற்கையாக இருக்கிற ரூபத்தை அடையச்செய்கிறதோ அப்படிப்போலவென்று அர்த்தம்.

அன்றிக்கே ஆகர்ஷகம், அயஸ்காந்தம். உலோகத்தை தன்ஸ்வபாவத்தை அடையச்செய்கிறது. உலோகத்தை தன் வியாபாரத்தைச்செய்விக்கிறது. தன்னை அனுகரிக்கும்படி செய்விக்கிறது. 'ஸ்திதஃஸ்திதா முச்சலிதஃப்ரயாதாம்' என்பதுபோல். அயஸ்காந்தம் அசைவற்று நிற்குமேயாகில் உலோஹம் அசைவற்று நிற்கிறது. காந்தம் விரைவாகச்செல்லுங்கால் உலோகம் அதை அனுஸரித்தே தானும் விரைவாகச் செல்லுகிறது. இவ்வண்ணம் 'காமான்னீ காமரூப்யநுஸஞ்சரந், ஸர்வேஷு லோகேஷு காமசாரோபவதி' இதுமுதலிய சுருதிகளுக்கு அனுகுணமாக பரமாத்மா உபாஸகனைத் தன்சேஷ்டையை அனுகரிக்கும்படி செய்விக்கிறான். தன்னோடு ஸமாநசேஷ்டையுள்ளவனாகச் செய்கிறான் என்று பொருள். அன்றிக்கே ஆத்மசப்தம் தன்னைச்சொல்லுகிறது. நிச்சயிக்கப்பட்டிருக்கிற ஸ்வரூபத்தை உணர்த்துவதில் நோக்குள்ளது.உபாஸகனைப் பரமாத்மா ஆத்மபாவத்தை அடையச்செய்கிறான். ப்ரக்ருதிஸம்பந்தமின்றிச்சுத்தனாக இருக்கும்தன்மையை அடையச்செய்கிறான். கேவலதையை அதாவது தனித்திருத்தலை அடையச்செய்கிறது. எவ்வாறு அயஸ்காந்தமானது கட்டையில் அமிழ்ந்திருந்த உலோகத்தை அந்த கட்டையினின்று மேலே பிடுங்கிஎடுத்து தனித்திருக்கும் தன்மையை அடையச்செய்கிறதோ அப்படிப்போல் என்று அர்த்தம். அன்றிக்கே 'யூப்ராப்தெள ஆத்மநேபதம்' என்கிற வசநபலத்தால் பாவசப்தம் ப்ராப்தியைச்சொல்லுகிறது. ஆத்மப்ராப்தியை அடையச்செய்விக்கிறது. எப்படி அயஸ்காந்தமானது உலோகத்தை ஸ்வப்ராப்தியை அடையச்செய்கிறதோ என்று அர்த்தம். 'ப்ராப்திம்நயதி' என்கிற நிர்தேசமானது 'ஓதநபாகம்பசதி' என்பதுபோல. ஜீவனுக்குப்பரமாத்மாவின் சக்தியினால் வேறுபாட்டையடையத்தகுதியுள்ளவனாக இருத்தல் பொருத்தமுள்ளது. ஜீவனுக்கு பந்தத்திலும் மோக்ஷத்திலும் ஜ்ஞாநஸங்கோச விகாஸரூபமான விகாரததிற்குத்தகுதி இருப்பதால்,

இந்த ச்லோகத்தில் * தாதாத்ம்ய ப்ரதிபத்தியின் இன்மையைக் காண்பிக்கிறார்—நஹி என்று. 'ஆகர்ஷகஸ்வரூபாபத்திராக்ருஷ்யமாணஸ்ய' என்கிற நிர்தேசமானது சொல்லப்பட்டுள்ள எல்லா அர்த்தங்களுக்கும் பொதுவானது. அக்னி ஸுவர்ணம் இவைகளை திருஷ்டாந்தமாக எடுத்து உரைக்க விரும்புங்கால் ஆக்ருஷ்யமாண சப்தமானது விகாரார்ஹமான வஸ்துவை உணர்த்துகிறது. ஸமாநோ ஜ்யோத்ஷா என்று. ஜ்யோதிஃ—பரப்ரஹ்மம். 'பரம்ஜ்யோதிருபஸம்பத்ய' 'அதயததஃபரோதிவோ ஜ்யோதிர் தீப்யதே' என்கிற ச்ருதி இருப்பதினால். அசரீர என்று. அசரீரஃ சரீரமில்லாதவன்-அதாவது முக்தன், கர்மாவினால் உண்டுபண்ணப்பட்ட சரீரமில்லாமையால். ஸ்ரீதி-அநுபவம், முக்தியில் ஜீவாத்மா பரமாத்மா இருவர்

* தாதாத்ம்யம்—அபேதம்.

களுக்கும் பேதத்தைச்சொல்லுகிற சுருதியைக்காட்டுகிறார்—நிருஞ்ஜனபரம என்று. ஆப்னோதி, பரப்ரஹ்மத்தை அனுபவிக்கிறான் என்று பொருள். இதற்கு விவரண ரூபமான வாக்கியத்தைக்காண்பிக்கிறார்—ஸோச்நுதே என்று. அநுஸஞ்சரந் என்பதினால் பேதம் காண்பிக்கப்பட்டது. 'ரஸோவைஸ:' என்கிற இந்தச்சுருதிவசனத்தினால் ஆநந்தித்வாகாரத்தினால் ஸாம்யம் என்று சொல்லப்பட்டதாக ஆகிறது. பரமஸாம்யத்திற்கு உபயோகியான வைதர்ம்ய நிவ்ருத்தியைக் காண்பிக்கிறார்—யதாநத்ய: என்று. நதிகள் நதீஸ்வரூபத்தை இழந்து ஸமுத்திரத்துடன் சேர்க்கை பெறுவதால் வைதர்ம்யத்தை இழந்து சேர்க்கை பெறுதல் த்ருஷ்டாந்தத்தில் ¶ உபஜீவ்யம். ப்ராக்ருதங்களான நாமரூபங்களின் $ ப்ரஹாணத்தை முன்னிட்டதன்றோ பரமாத்மப்ராப்தி. அவ்வளவு மாத்திரத்தினால் பேத நிவ்ருத்தி இல்லை. 'புருஷமுபைதி' என்று கர்மகர்த்ருதாபாவ மறியப்படுவதால். ஸாம்யாபத்தியைக்காண்பிக்கிறார்-ததா என்று.

அறிவில் சிறந்தவரே! 'பரமம் ஸாம்ய முபைதி' என்று ஐக்யாபத்தி சொல்லப்படுகிறது. ஸமசப்தமானது ஸமான சப்த பர்யாயமாதலாலும் ஸமானசப்தத்திற்குப்போல ஐக்யத்தில் ப்ரயோகமிருப்பதாலும் ஸம சப்தத்திற்கு 'ஸமகாலவர்தி' இது முதலிய இடங்களில் ஐக்கியத்தில் ப்ரயோகம் காணப்படுகிறது. அவ்வாறே ஸமசப்த பர்யாயமாக அறியப்பட்டிருக்கிற ஸமான சப்தமும் ஐக்கியத்தில் ப்ரயோகிக்கப்படுகிறது. "ஸமாநம் வ்ருக்ஷம் பரிஷஸ்வஜாதே" என்று. "ஏகஸ்மின்னர்த்தே வ்ருத்தி ஸ்ஸாமாநாதிகரண்யம்" என்றும், ஒரு அதிகரணத்திலிருத்தலன்றோ ஸாமாநாதிகரண்யம். 'ஏகஸ்மின்னர்த்தே' என்று சொல்லி இருப்பதால் அதற்கு பர்யாயம் ஸமசப்தம். என்றாலும் ஸம சப்தம் ஸாத்ருஶ்யத்திற்கும் வாசகம். ஆயினும் முக்திவாக்கியத்திலுள்ள ஸாம்ய சப்தமானது ஐக்கியத்தை உணர்த்துவதில் கருத்துள்ளது. 'ப்ரஹ்மவேத ப்ரஹ்மைவபவதி' இது முதலிய வேறு சுருதிவாக்கியங்களோடு அர்த்தைக்கியத்தினாலும், லயஸாயுஜ்ய சப்தஶ்ரவணத்தினாலும், நதீ ஸமுத்திரம் கடாகாசம் மடாகாசம் முதலிய த்ருஷ்டாந்த ஶ்ரவணத்தாலும். "ஸாதர்ம்ய மாகதா:" என்கிற ஸ்ம்ருதியோ வென்றால் ஸகுணப்ரஹ்ம ப்ராப்தியை விஷயமாகக்கொண்டது. அங்ஙனமில்லாவிடில் ப்ரத்யக்ஷ சுருதிவிரோதத்தாலும் ஸ்வரூபைக்ய விஷயமான பஹுச்ருதி விரோதத்தாலும் அதற்கு பலக்குறைவு ஏற்படுவதால் ஐக்யாபத்தியே இந்த வாக்கியத்தால் ப்ரதிபாதிக்கப்பட்டது. ஐக்யத்திற்கு † பாரம்யமாவது மறுபடி பேத ப்ரமத்தின் அங்குரமற்றிருத்தல். இந்தவிஷயத்தில் மறுமொழி கூறப்படுகிறது. இந்த இடத்தில் ஸாம்ய சப்தமானது ‡ ஸாத்ருச்யத்தையே சொல்லுகிறது. ஐக்யத்தைச் சொல்லுகிறதில்லை. ஐக்யம் முக்கியார்த்தமென்று ஒப்புக்கொண்டபோதிலும் ஸ்வாரஸ்யமில்லாமையால் ஸமசப்தத்திற்கு ஸாத்ருச்யத்திலே யன்றோ ❋ ப்ராசுர்யம். அதற்கு அபவாதமில்லாமலிருக்கும் தருணத்தில் அஸ்வாரஸமான அர்த்தத்தை ஏற்றுக்கொள்ளுதல் பொருத்தமுள்ளதாக ஆகாது. உன்னால் சொல்லப்பட்ட அபவாத ஹேதுக்களும் அடுத்தே பரிஹரிக்கப்படுகின்றன. ஸமம் முதலிய சப்தங்களுக்கு

¶ உபஜீவ்யம் - ப்ரதானம். $ ப்ரஹாணம் - இழத்தல்

† பாரம்யம்—மேன்மை, சிறப்பு. ‡ ஸாத்ருச்யம்— ஸமமாக இருத்தல்.

❋ ப்ராசுர்யம்—ஆதிக்யம்.

ஐக்யம் முக்கியார்த்தமல்ல. ஏகத்வத்தை சொல்லவேண்டுமென்கிற விருப்பமிருக்குந்தருணத்தில் ‘ ஏகோகட: ’ இதுமுதலிய இடங்களில் ப்ரயோகமில்லாமையால், ஸமம்முதலிய சப்தங்களுக்கு ஐக்யம்முக்கியார்த்தமாக இருக்கிறபோதில் ஏகசப்தத்திற்குப்போல ஸமாதிசப்தங்களுக்கும் ¶ ப்ரதியோகியை அபேக்ஷியாதப்ரயோகம் வரவேண்டியதாகும். ஸாமாநாதிகரண்யம், ஸமகாலவர்த்தீ, இதுமுதலிய இடங்களில் யாதொரு ஸமாதிசப்த ப்ரயோகமுண்டோ, அது ஸாதாரண்யமென்கிற அர்த்தமுள்ளது, ஐக்யார்த்தமுள்ளதன்று. ஸாதாரண்யரூபமான அர்த்தத்திலும் ப்ரயோகம் அமுக்கியமானது, ப்ரயோகம் வேறுவிதத்தால் உபபன்னமாகும் ஸ்தலத்தில் சக்திகல்பனம் பொருந்தாததலால். அப்படியன்றோ அனேகப்ரதியோகிகளுடன்கூட ஏகரூபமான ஸம்பந்தத்துடன்கூடி இருத்தலன்றோ, ஸாதாரண்யம். எவ்வண்ணம் தனமானது தேவதத்தன் யஜ்ஞதத்தன் இருவர்களுக்கு சேஷமாக இருப்பதால் (இருவர்களுடைய) ஸம்பந்தம் பெற்றிருப்பதுபற்றி ஸாதாரணமோ அவ்விருவர்களுக்கும் தனத்தைக்குறித்து சேஷித்வமிருப்பதால் ஸாத்ருச்யமோ, அவ்விருவர்களுடைய ஸம்பந்தமுள்ளதாக தனம் ஆகிறதோ, அவ்வாறே நீலத்வம் உத்பலத்வம் என்கிற இவ்விரண்டு தர்மங்களையும் அபேக்ஷித்து ஆதாரமாக இருத்தலால் † ஸம்பந்தி த்ரவ்யம் ஸாதாரணம் அவ்விரண்டு தர்மங்களுக்கும் த்ரவ்யத்தைக்குறித்து ஆதேயத்வமிருப்பதால் ஸாத்ருச்யமிருக்கிறது. அந்த இரண்டு தர்மங்களின் ஸம்பந்தம்பெற்றது திரவ்யம். அவ்வாறே இரண்டுகளோடு ஸம்யோகமுள்ளதாக இருப்பதாலாவது அவச்சேத்யாவச்சேதக பாவத்தாலாவது ஸம்பந்தமுள்ள காலமானது அவ்விரண்டுக்கும் ஸாதாரணம். அந்தகாலத்தோடு ஸம்பந்தம் பெற்றிருத்தலென்கிற ஆகாரத்தால் அவ்விரண்டுக்கும் ஸாத்ருச்யமிருக்கிறது. அவ்விரண்டுகளோடு ஸம்பந்தமுள்ளது காலம். ஆதலால் ஒன்றோடொன்று ஸத்ருசங்களான வஸ்துக்களின் ஸம்பந்தமுள்ளதாக இருத்தலால் திரவ்யம் காலம் முதலியவைகளில் ஸமம் ஸமானம்முதலிய சப்தங்கள் லக்ஷணையினால் ப்ரயோகிக்கப்படுகின்றனவென்பதுபற்றி முக்கியங்களல்ல. ஆதலால் ஐக்யத்தில் ப்ரயோகமில்லாமையால் ஸமசப்தத்திற்கு ஐக்யம் முக்கியார்த்தமல்ல. முக்கியமான அர்த்தம் ஸம்பவிக்கிறதாக இருக்க லாக்ஷணிகமான அர்த்தத்தை ஸ்வீகரிப்பது பொருத்தமுள்ளதாக ஆகாது. ஆகையால் ஸாம்யசப்தமானது ஸாத்ருச்யத்தையே சொல்லுகிறது. முக்தாத்மகோசரமான ஸாமாநாதிகரண்யத்திற்கு உபபத்தியும் அடுத்தே பாஷ்யத்தில் உரைக்கப்படப்போகிறது. ஸாயுஜ்ய சப்தத்தால் முக்தியில் அபேதமென்று யாதொன்று கூறப்பட்டதோ அது யுக்தமன்று. ஸாயுஜ்ய சப்தமானது ஸமானகுணஸம்பந்தத்தைச் சொல்லும் சக்தியுள்ளதாக இருத்தலால், யுஜ்யதே என்கிற வ்யுபத்தியினால் யுக் சப்தம் குணபரமானது. தர்மியிலன்றோ குணம் ஸம்பந்தித்திருக்கிறது. ஸமானகுணமுள்ளவன் ஸயுக்—அவனுடைய தன்மை ஸாயுஜ்யம் என்றல்லவோ ⁕ வ்யுத்பத்தி. ப்ரயோக விரோதத்தாலும் ஸாயுஜ்யம் ஐக்யபரமல்ல. ‘ ஏதாஸாமேவ தேவதாநாம் ஸாயுஜ்யம்—ஸார்ஷ்டிதாம் ஸமானலோகதாமாப்நோதி’ என்று அநேக தேவதைகளோடு ஒருவனுக்கு ஸாயுஜ்யாபத்தியானது கேழ்க்கப்படு

¶ ப்ரதியோகி—ஒன்றோடு நித்யஸம்பந்தமுள்ள மற்றொரு வஸ்து. அல்லது ஒன்றினால் தவறாமல் அபேக்ஷிக்கப்படும் வஸ்து.

† ஸம்பந்தி—ஸம்பந்தமுள்ள வஸ்து.

⁕ வ்யுத்பத்தி—அவயவார்த்தத்தினால் பொருளை உணர்த்தும் சப்தசக்தி.

கிறது. அவயவமில்லாததும் வெட்டத்தகாததுமான ஒரு ஆத்மாவுக்கு அனேக தேவதைகளோடு ஐக்யம் பொருந்தாததன்றோ. க்ரமமாய் பலவாக இருந்தலால்விரோதமில்லை என்று கூறப்படுமேயாகில், அங்ஙனமாகில் அக்னியுடன் ஏகீபூதனான ஒருவனுக்கு வருணஸாயுஜ்யம் வரின் அக்னித்வரூபமான உபாதியின் பரித்யாகத்தால் அக்நி தேவதைக்கு அபாவமானது உண்டாக வேண்டியதாகும். அக்நித்வரூபமான உபாதி இருக்கும் தருணத்தில் வருணனோடு ஐக்யமடைவது பொருந்தாது. ஔபாதிகமான பேதத்தை இழத்தல் ஐக்யாபத்தியே ஒழிய முக்தி இருக்கிற ஐக்யம் உண்டாகிறதில்லை. அக்நி இருக்கும்பொழுதே அதினின்று வேறுபட்டிருக்கிறவனுக்கு வருணஸாயுஜ்யமென்று சொல்லப்படுமேயாகில் ஒன்றாகப்போனவனுக்கு வேறுபடுதலென்பது உபாதியினாலுண்டாகத் தக்கது. உபாதியானது தேஹம் அந்தக்கரணம் முதலியது, அவைகளின் ஸம்பந்தம் காரணமல்லவென்று சொல்லப்படுமேயாகில் அதிப்ரஸங்கம் வருவதால் ஹேது சொல்லத்தக்கது. கர்மாவே ஹேதுவென்று கூறப்படுமேயாகில் அக்நி ஸாயுஜ்யதசையில் அந்த கர்மாமானது நஷ்டமாய்விட்டதா? இல்லையா? நஷ்டமாகப்போய் விட்டதேயாகில் மறுபடி உபாதியின் உதயமில்லாமல் அக்நியினிடத்தினின்று வேறுபாடடைதல் பொருந்தாதாதலால் அக்நித்வோபாதியின் அபரித்யாகத்தால் முக்தின உபாதியின் பரித்யாகரூபமான வருணஸாயுஜ்யாபத்தியானது அடைவிலே வருகிறதென்பதும்பொருத்தமுள்ளதாக ஆகாது. கர்மாவானது நஷ்டமாகவில்லை என்று சொல்லப்படுமேயாகில் அதனால் உண்டுபண்ணப்பட்ட உபாதியானது நஷ்டமாகாததனால் அக்நியோடு ஐக்யாபத்தி ஸம்பவிக்கிறது. ஔபாதிகபேதமானது பேதபரித்யாக ரூபமான ஐக்யாபத்திக்கு விரோதியாதலால் அந்த கர்மாவானது நசிக்காமலிருந்த போதிலுங்கூட அக்நிஸாயுஜ்யாபத்தி தசையில் அதினிடத்தினின்று பேதத்தை உண்டுபண்ணுகிற உபாதியை உண்டுபண்ணுகிறதில்லை. கர்மாக்களுக்கு கார்யகாரித்வமானது காலவிசேஷ நியதமாக இருப்பதாலென்று சொல்லப்படுமேயானால் அப்படி இருந்தபோதிலுங்கூட வ்யவஸ்திதமான கர்மவிசேஷத்தால் கட்டப்பட்டிருக்கிற ஜீவனுக்கு அந்த கர்மாவினால் கட்டப்பட்டிராத அக்நியினிடத்தினின்று அதே கர்மாவானது பேதத்தை உண்டுபண்ணுகிறதென்பதனால் அக்னியோடு ஐக்யாபத்தியானதுபொருத்தமுள்ளதாக ஆகா.

மேலும் * ப்ருதிவியோடு ஒன்றாக இருந்து தனித்திருக்கிற கடத்திற்குப்போல அக்னியோடு ஒன்றாக இருந்து வேறாக ஆய் இருக்கிற ஜீவனுக்கு அஜத்வமும் நித்யத்வமும் பொருந்தாது. ஆதலால் பேதம் இருக்கையிலேயே அக்னி முதலியவைகளோடு ஸாயுஜ்யம். ஸமாநலோகதா ஸாஹசர்யத்தாலும் ஸாயுஜ்யம் ஐக்யமல்ல. ஒரு வஸ்துவுக்கு தான் இருக்கும் உலகத்தோடு ஸமானமான உலகத்தில் வஸித்தல் ஸம்பவியாதன்றோ. ஆகையால் ஸமாநலோகத்வம் போல் பேதம் ஸித்தமாக இருக்கையிலேதான் ஸாயுஜ்யம் உண்டாகிறது. ஸமாநலோகதையை அடைந்த பிறகு ஸாயுஜ்ய ப்ராப்தியே ஒழிய ஒரே ஸமயத்திலேயே முற்கூறப்பட்டிருக்கிற இரண்டும் ஸம்பவிக்கிறதில்லை. ஆதலால் அவ்விரண்டுகளுக்கும் விரோதமில்லை என்று சொல்லப்படுமேயாகில் அல்ல ஸாயுஜ்யம் ஸார்ஷ்டிதாம் ஸமானலோகதாம் என்று ஸாயுஜ்யம் முக்தி கேழ்க்கப் பட்டிருப்பதால்.

---

* ப்ருதிவீ—பூமி.

அர்த்தக்ரமத்தால் பாடக்ரமத்திற்குப்பாதம் என்று கூறப்படுமேயானால் அல்ல. அவயவசக்தியினால் உபஸ்தாபிக்கப்பட்ட அர்த்தமானது பாடக்ரமத்திற்கு அனுகுணமாக இருப்பதாலும் வேறு அர்த்தங்களை கல்பிப்பது காரணமில்லாததாக இருத்தலாலும். பாடக்ரமத்தை பாதிப்பதற்காக ஸாயுஜ்ய சப்தத்திற்கு ஐக்யாபத்தி லக்ஷணார்த்த விஷயையான ரூடி சக்தியானது கல்பிக்கப்படுமேயாகில் அப்பொழுது அன்யோன்யாச்ரயதோஷம் ஏற்படும்:— ஸாயுஜ்யத்திற்கு ஐக்யாபத்தி லக்ஷணத்வ நிச்சயம் வரின் பாடக்ரமத்திற்கு பாதம்-பாட கிரமத்திற்கு பாதம் வரின் ஸாயுஜ்யத்திற்கு ஐக்யாபத்தி லக்ஷணத்வ நிச்சயம் என்று. 'ஏதேஷாமேவ ஸலோகதாம் ஸாயுஜ்ய மச்நுதே' என்கிற வாக்கியத்திற்கு முந்தி உதாஹரிக்கப்பட்டிருக்கிற வாக்கியத்திலிருக்கிற க்ரமத்திற்குப் பாதமென்று சொல்லப்படுமேயானால் அல்ல. விருத்தார்த்த விஷயையான ரூடி சக்தியானது நிச்சிதமாக இல்லாததுபற்றி விரோதம் ஸ்புரிக்காமல் போவதால்.

மேலும் "அக்னேர்வா ஏதாநி நாமதேயாநி அக்னே ரேவ ஸாயுஜ்யம் ஸலோகதா மாப்நோதி, வாயோரேவ, இந்த்ரஸ்யைவ, ப்ருஹஸ்பதேரேவ, ப்ரஜாபதேரேவ, ப்ரஹ்மண ஏவ, ஸாயுஜ்யம் ஸலோகதா மாப்நோதி" என்று அனேக வாக்கியங்களுக்கு அதிக பல மிருப்பதால் உன்னால் சொல்லப்பட்ட க்ரமமே பாதிக்கத்தக்கது. மேலும் 'ஏதேஷாமேவ ஸலோகதாம் ஸாயுஜ்யமச்நுதே. அக்னேரேவ ஸாயுஜ்யம் ஸலோகதா மாப்நோதி' இது முதலிய வாக்கியங்கள் கர்ம விதிசேஷமாக இருக்கிற அர்த்தவாத ரூபங்கள் கர்மபலமாக இருத்தலால் அக்நி ஆதித்யன் முதலிய தேவதைகளோடு ஸாயுஜ்யம் அநித்யம். ஆதலால் கர்மபலத்தின் முடிவில் அக்நி முதலியதேவதைகளிடத்தினின்று அந்த தேவதைகளோடு ஸாயுஜ்யத்தை அடைந்தவர்களுக்கு வேறுபடுதல் வர்ஜிக்கத்தகாததாக இருத்தலால் மோக்ஷம் வரையில் ஜீவபேதஸ்திதி உங்களுக்கும் இஷ்டமாக இருப்பதால் அக்நி முதலிய தேவதைகளோடு ஸாயுஜ்யதசையிலுங்கூட பேதஸ்திதியானது வர்ஜிக்கத்தக்கதல்ல. அக்நி முதலிய தேவதைகளோடு ஸாயுஜ்யத்தை அடைந்தவர்களுக்கு அந்த தேவதைகளிடமிருந்து மீண்டும் வேறுபாடு ஏற்படுதல் உபாதியினாலென்று கூறப்படுமேயானால் உத்தரம் முந்தியே கொடுபட்டிருக்கிறது. அக்னி முதலிய தேவதைகளோடு ஸாயுஜ்யத்தைச்சொல்லி இருத்தல் அர்த்தவாதமாதலால் ஆதரிக்கத்தக்கதல்லவென்று சொல்லத்தக்கதல்ல. வேதாந்திகள் அர்த்தவாதங்களுக்கு சப்தத்தால் உணர்த்தப்படுகிற அர்த்தத்தில் ப்ராமாண்யத்தை ஒப்புக்கொண்டிருப்பதால். ஆகையால் ஸாயுஜ்யம் ஐக்யமல்ல. பின்னேயோ ஸமானகுண ஸம்பந்தமே. லயமும் ஸ்வரூபைக்யமல்ல. லய சப்தத்திற்கு அந்த அர்த்தமில்லாமையால் சப்தங்களுக்கு அர்த்தங்களில் ¶ வ்யவஸ்தாபனமானது ப்ரயோகங்களுக்கு அநுகுணமாக செய்யத்தக்கது. நித்யநைமித்திக மஹா ப்ரளயங்களிலும் லயசப்தம் ப்ரயோகிக்கப்படுகிறது. அந்த இடங்களில் ஸ்வரூபைக்யாபத்தி கிடையாது, நித்யப்ரளயத்திலுமில்லை. ஸ்வர்க்கம் நரகம் முதலிய ஸ்தானங்களைக்குறித்துப் போக்குவரவைச்சொல்லுகிற சாஸ்திரத்தால் நைமித்திக ப்ரளயத்திலும் இல்லை. முந்தின

¶ வ்யவஸ்தாபனம்—இந்தப்பொருளைத்தான் இந்தசப்தம் சொல்லுமென்று குறிக்கப்பட்ட ஒருபொருளிலோ பலபொருள்களிலோ சப்தங்களுக்கு ரூடிசக்தியைக்கல்பித்தல்-இதைத்தான் அபிதாவ்ருத்தியென்று லக்ஷணகாரர்கள் கூறுகின்றனர்.

கல்பத்தில் ப்ரளயமடைந்தவர்களான நாரதர் முதலியவர்கள் முந்தின ஜன்ம வ்ருத்தாந்த ஸ்மரணமுள்ளவர்களாகவே மறுபடியும் பிறக்கிறார்களென்று அறியப்படுவதால். புராணங்களில் நாரதரால் முந்தின $ கல்பத்திலுள்ள தன் பிறப்பு நடத்தை முதலியது இந்த கல்பத்தில் சொல்லப்பட்டிருக்கிறதென்று அறியப்படுகிறது. மஹாப்ரளயத்திலுமில்லை. ₰ வைஷம்ய § நைர்க்ருண்யங்கள் பரமபுருஷனை அணுகாமலிருப்பதற்காக ஜீவாத்மாக்களின் நித்யத்வமும் பஹுத்வமும் கர்மவாஸனைகளும் இருப்பதாக ஒப்புக்கொள்ளத்தக்கதாக இருப்பதால். அப்படியே 'ப்ரக்ருதிர்யா மயா க்யாதா வ்யக்தாவ்யக்தஸ்வரூபிணீ. புருஷஸ்சாப்யுபாவேதௌ லீயேதே பரமாத்மநி' (வ்யக்தமான ப்ரபஞ்ச ஸ்வரூபிணியாகவும் அவ்யக்தமான மஹதஹங்காரதன்மாத்ர ஸ்வரூபிணியாகவுமிருக்கிற யாதொரு ப்ரக்ருதியானது என்னால் சொல்லப்பட்டதோ அந்த ப்ரக்ருதி, புருஷன், இந்த இருவர்களும் பரமாத்மாவினிடம் லயிக்கின்றார்கள்) என்று சொல்லுகிற பாராசரபகவானுடையவே 'ஹிம்ஸ்ராஹிம்ஸ்ரே ம்ருதுக்ரூரே தர்மாதர்மாவ்ருதாந்ருதே - தத்பாவிதா: ப்ரபத்யந்தே தஸ்மாத் தத் தஸ்ய ரோசதே, ப்ரதான காரணீபூதாயதோ வைஸ்ருஜ்ய சக்தய: - தேஷாம் யேஹ்யாநி கர்மாணி ப்ராக்ஸ்ருஷ்டா: ப்ரதிபேதிரே' (ஹிம்ஸையை உண்டுபண்ணுகிறதும் உண்டுபண்ணாததுமான இரண்டு வஸ்துக்களையும், மெதுவாயும், க்ரூரமாயுமுள்ள இரண்டு வஸ்துக்களையும், தர்மாதர்மங்களையும், ஸத்யாந்ருதங்களையும்) (அதனால் ப்ரேரணம் செய்யப்பட்டவர்களாக அடைகிறார்கள். ஆதலால் அது அவனுக்கு ருசிக்கிறது) (யாதொரு காரணத்தினால் ஸ்ருஷ்டிக்கத் தக்க வஸ்துக்களிடமிருக்கிற சக்திகள் ப்ரதானகாரணங்களாக இருக்கின்றனவோ; அவைகளுக்குள் முந்தி ஸ்ருஷ்டிக்கப்பட்டவைகள் யேயங்களான கர்மாக்களை அடைந்தன) இது முதலியவைகளால் அப்பொழுது வாஸனையுடன்கூடின தர்ம ஸம்பந்தம் பெற்றஜீவர்களுடைய பஹுத்வமானது காட்டப்பட்டது. அதனாலேயே பேதத்தை இழத்தலும் லய சப்தார்த்தமன்று. ப்ராக்ருத ‡ ப்ரதிஸஞ்சரத்தையும் மோக்ஷத்தையும் விஷயமாகக்கொண்ட ப்ரளய சப்தங்கள் இரண்டுக்கும் அர்த்தவைரூப்யம் சொல்வது உசிதமன்று. சக்திபேதகல்பனம் அமுக்யத்வம் இவ்விரண்டினுள் ஒன்று ப்ரஸங்கிப்பதால். அவ்விடத்திலும் மஹாப்ரளயாதிகளில் லய சப்தத்திற்கு அமுக்கியத்வம் சொல்லத்தக்கதல்ல. அனேக அர்த்தங்களில் அமுக்கியத்வத்தை ஆச்ரயிப்பதைவிட முக்தி மாத்திரத்தை விஷயமாகக்கொண்ட ப்ரளயசப்தத்திற்கே அமுக்யத்வாச்ரயணம் பொருத்தமுள்ளதாக இருப்பதால். ஆதலால் எல்லா ப்ரயோகங்களுக்கும் அனுகுணமான அர்த்தம் ஸ்வீகரிக்கத்தக்கது. ஆகையால் விஜாதீயமான அவஸ்தையை இழப்பதனால் பிரிதலுக்கு † அபாதானமாக இருக்கிற காரணத்வ தர்மியான திரவ்யத்துடன் சேருதலே லயம். ஆகையால் ஐக்யம் லயசப்தார்த்தமல்ல.

$ கல்பம்—ப்ரளயகாலம், உலகமழியும் காலம்.

₰ வைஷம்யம்—ஸமமாக இல்லாமலிருத்தல்.

§ நைர்க்ருண்யம்—கருணை இல்லாமை. ‡ ப்ரதிஸஞ்சரம்—லயம்.

† அபாதானம்—விபாகம் எந்த வஸ்துவினிடத்திலிருந்து உண்டாகிறதோ அந்த(விபாகத்திற்கு அவதியாக இருக்கும்) வஸ்து. இந்த அபாதான ஸ்வரூபத்தை "த்ருவமபாயேऽபாதாநம்"(க-ச-உச) என்று பாணினிமஹரிஷி கூறி இருக்கிறார்.

ஆகாசம் முதலிய திருஷ்டாந்தோபந்யாஸமானது ஔபாதிகமான வைஷம்யத்தினின்மையைக் காரணமாகக்கொண்டது ஆகாசம் முதலிய தத்வங்கள்கூட அம்சங்களுடன் சேர்ந்திருப்பதால் பஞ்சீகரண வசனத்தினால் அவைகளுக்கு ப்ரதேச பேதங்களோடு கூடி இருத்தல் வேதாந்திகளால் அங்கீகரிக்கத்தக்கது. ஆகையால் மோக்ஷ விஷயச்ருதிகளில் ஸ்வரூபைக்யமானது ஓரிடத்திலும் அறியப்படுகிறதில்லை, நிர்குண ப்ராப்தி விஷயகமான ச்ருதியானது ஒன்றுகூட இல்லை என்கிற இந்த அர்த்தம் அடுத்தே உபபாதிக்கப்படப்போகிறது. ஆதலால் ஸாதர்ம்யஸ்மரணமானது ஸகுணப்ராப்தி விஷயமாக இருத்தலால் அதற்குப்பரமமோக்ஷ விஷயத்வமில்லை. அப்படிக்கு இல்லாவிட்டால் நிர்குண ப்ராப்திவிஷயமான ச்ருதி விரோதம் வருவதால் ஸ்ம்ருதிக்கு தௌர்பல்யம் ப்ரஸங்கிக்குமென்று சொன்னதும் துருக்தமாக ஏற்படும். ஆகையால் 'யதா பஶ்ய:' என்கிற வாக்கியத்தில் ஸாம்ய சப்தம் ஸாத்ருச்யத்தை உணர்த்துவதில் கருத்துள்ளது. எந்த ஆகாரத்தால் ஸாம்யமோ அந்த ஆகாரத்தின் நிரவதிகத்வம் பரம சப்தத்தால் அபிப்ராயப்படப்பட்டிருக்கிறது. ஆகையால் இந்த வாக்கியமானது பரப்ரஹ்ம ப்ராப்திரூபமான பரமமோக்ஷத்தை பரப்ரஹ்மஸாம்யாபத்தி லக்ஷணமாகவே ப்ரதிபாதிக்கிறது.

सर्वासां परविद्यानां सगुणमेव ब्रह्मोपास्यम्। फलमप्येकरूपमेव। अतो विकल्प इति सूत्रकारेणैव "आनन्दादयः प्रधानस्य, विकल्पोऽविशिष्टफलत्वात्" इत्यादिषूक्तम्। वाक्यकारेण च सगुणस्यैवोपास्यत्वं विद्याविकल्पश्चोक्तः— "युक्तं तद्गुणकोपासनात्" इति। भाष्यकृता व्याख्यातञ्च— "यद्यपि सच्चित्तः" इत्यादिना। "ब्रह्म वेद ब्रह्मैव भवति" इत्यत्रापि "नामरूपाद्विमुक्तः परात्परं पुरुषमुपैति दिव्यम्, निरञ्जनः परमं साम्यमुपैति, परं ज्योतिरुपसम्पद्य स्वेन रूपेणाभिनिष्पद्यते" इत्यादिभिरेकार्थ्यात् प्राकृतनामरूपाख्यं विनिर्मुक्तस्य निरस्तसमस्तहेयस्य ज्ञानैकाकारतया ब्रह्मप्रकारतोच्यते। प्रकारैक्ये तत्त्ववहारो भेदस्य सत्त्वे; परसाम्यं श्रुतिरिति॥

अत्रापि "विज्ञानं प्रापकं प्राप्ये परे ब्रह्मणि पार्थिव। प्रापणीयस्तथैवात्मा प्रक्षीणाशेषभावनः" (वि-पु ६-७-९३) इति परब्रह्मध्यानाधाता परब्रह्मवत् प्रक्षीणाशेषभावनः कर्मभावना ब्रह्मभावनोभयभावनेति भावनात्रयरहितः प्रापणीय इत्यभिधाय "क्षेत्रज्ञः करणीज्ञानं

காரணம் தஸ்யைவேதி | நிஷ்ப்ராத்யுத்க்ருஷ்டகாயம் ஹி க்ருதக்ருத்யம் நிவர்த்த-யேத்; (வி-பா-சா-எ-கூச) இதிகாரணஸ்ய பரப்ரஹ்மயாதாத்ம்யஜ்ஞாந-ஸ்ய ப்ரக்ஷீணாஶேஷபாபநாத் ஸ்வரூபப்ராப்த்யா க்ருதக்ருத்யதோ-நிவ்ருத்திவசநாச் ச பாவஜ்ஞஸ்ய நாஶேயமித்யர்த்த:, "தத்பாவபாவமாப-ந்நஸ்ததாஸௌ பரமாத்மநா | பவத்யபேதீ பேதஶ்ச தஸ்யாஜ்ஞாநக்ருதோ பவேத்" (வி-பா-சா-எ-கூரு) இதி உக்தஸ்ய ஸ்வரூபபேதஸ்ய | தத்பாவ: ப்ரஹ்மணோ பாவ:, ஸ்வபாவ: ந து ஸ்வரூபைக்யம், | தத்பாவபா-வம் இதி த்விதீயபாவஶப்தாந்வயாத், ஏதேவாத்மநோ விரோ-தாத் | யதா ப்ரஹ்மண: ப்ரக்ஷீணாஶேஷபாபத்வம் ததாவத் ஸ்வ-பாவாபத்தி: | யத்தேவாதிபேதஸ்யாஜ்ஞாநக்ருதோ பவேத் அநேந-தி ஶேஷாஹிதோ பவதி ||

ஸ்ரீ பாஷ்யம்.

பரவித்யைகளில் எல்லாவற்றிலும் ஸகுணப்ரஹ்மமே உபாஸ்யமென்று நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. பலமும் ஒரேவிதம். ஆகையால் வித்யா விகல்ப-மென்று ஸூத்ரகாரராலேயே 'ஆநந்தாதய: ப்ரதானஸ்ய' 'விகல்போவி-சிஷ்ட பலத்வாத்' இது முதலியவைகளில் சொல்லப்பட்டிருக்கிறது. வாக்-கியகாரராலும் ஸகுணத்திற்கே உபாஸ்யத்வமும் வித்யா விகல்பமும் கூறப்ப-ட்டிருக்கிறது. 'யுக்தம் தத்குணகோபாஸநாத்' என்று பாஷ்யகாரரால் வியாக்கியானம் செய்யப்பட்டிருக்கிறது. 'யத்யபி ஸச்சித்த:' இது முதலிய-தால். 'ப்ரஹ்மவேத ப்ரஹ்மைவபவதி' என்கிற இடத்திலுங்கூட 'நாம-ரூபாத் விமுக்த: பராத்பரம் புருஷமுபைதி திவ்யம்' 'நிரஞ்ஜந: பரமம் ஸாம்யமுபைதி' 'பரம்ஜ்யோதிருபஸம்பத்ய ஸ்வேநரூபேண அபிநிஷ்பத்-யதே' இதுமுதலியவைகளோடு அர்த்தைக்யத்தினால் ப்ராக்ருதங்களான நாமரூபங்களால் விடுபட்டவனும் அந்த நாமரூபங்களால் உண்டுபண்ணப்-பட்ட பேதத்தை இழந்தவனுமான ஜீவாத்மாவுக்கு ஜ்ஞாநைகாகாரமுள்ளவ-னாக இருத்தலால் ப்ரஹ்மப்ரகாரத்வம் (ப்ரஹ்மஸாத்ருச்யம்) கூறப்படுகிறது. ப்ரகாரைக்யமுள்ள இடத்தில் ப்ரகாரித்ரவ்யைக்ய வ்யவஹாரம் முக்கியமே. 'ஸோயம் கௌ:' ஒரு பசுபோன்ற வேறு பசுவைப்பார்த்து இது 'அதே பசு' என்று இந்த இடத்திலும் 'அரே! அடையத்தக்கதான பரப்ரஹ்மத்தி-னிடத்தில் விஜ்ஞானம் ஜீவாத்மாவுக்கு ப்ராப்தி ஸாதனமாக இருக்கிறது. அப்படியே முற்றிலும் அழிந்துபோன பாவனைகளை உடையவனான ஜீவா-த்மா (ப்ரஹ்மத்தை அடைவிப்பிக்கத்தக்கவன். பரப்ரஹ்ம தியானத்தினால் ஆத்மா பரப்ரஹ்மம்போல் முற்றிலுமழிந்துபோன எல்லாபாவனைகளோடு

கூடியவனாக ஆகிறான். கர்மபாவனை, ப்ரஹ்மபாவனை, உபயபாவனை என்கிற மூன்று பாவனைகளாலும் விடுபட்டவன் ப்ராபணீயன் (அதாவது ப்ரஹ்மத்தை அடைவிப்பிக்கத்தக்கவன்) என்று சொல்லி 'க்ஷேத்ரஜ்ஞ: கரணீ ஜ்ஞாநம் கரணம் தஸ்யவைத்விஜ - நிஷ்பாத்யமுக்திகார்யம்ஹி க்ருதக்ருத்யம் நிவர்தயேத்' (ப்ராஹ்மணா! க்ஷேத்ரஜ்ஞன் உபாஸகன். ஞானம் அவனுக்கு ஸாதநம். அந்த ஞானமானது முக்திகார்யத்தை உண்டுபண்ணிவிட்டு க்ருதக்ருத்யமாக ஆகி நிவர்த்திக்கிறது. அதாவது செய்யவேண்டிய கார்யத்தைச் செய்ததாக ஆகி திரும்பிவிடும்.) என்று பரப்ரஹ்மத்யானரூபமான கரணத்திற்கு ப்ரகாரசேஷபாவநாத்மஸ்வரூப ப்ராப்தியினால் க்ருதக்ருத்யமாக ஆகி நிவ்ருத்தித்தல் சொல்லி இருப்பதனால் ஸித்திவரையில் அனுஷ்டிக்கத்தக்கதென்று சொல்லி 'தத்பாவ பாவமாபன்ன ஸ்ததாஸௌ பரமாத்மனா - பவத்யபேதீ பேதஸ்ச தஸ்யாஜ்ஞாந க்ருதோபவேத்' (அந்த ஜீவாத்மா அந்த ப்ரஹ்மத்தினிடத்திலுள்ள ப்ரகாரசேஷபாவநத்வ ரூபமான ஸ்வபாவத்திற்கு ஸமானமான ஸ்வபாவத்தை அடைந்தவனாக அப்பொழுது பரமாத்மாவோடு பேதமில்லாதவனாக ஆகிறான். அவனுக்கு பேதமானது அஜ்ஞானத்தாலுண்டுபண்ணப்பட்டதாக ஆகும்.) என்று முக்தனுடைய ஸ்வரூபத்தைக் கூறுகிறார். தத்பாவம்-ப்ரஹ்மத்தினுடைய பாவம்-ஸ்வபாவம்-ஸ்வரூபைக்யமல்ல. 'தத்பாவ பாவமாபன்ன:' என்கிற வாக்கியத்திலுள்ள இரண்டாவது பாவ சப்தத்திற்கு அன்வயமில்லாமல் போவதாலும் முற்கூறப்பட்ட அர்த்தத்திற்கு விரோதம் வருவதாலும். ப்ரஹ்மத்தினுடைய யாதொரு ப்ரகாரசேஷபாவனத்வ ரூபமான பாவமுண்டோ, அதன் ஆபத்திதான் தத்பாவபாவாபத்தி. எப்பொழுது இவ்வண்ணமாக ப்ரஹ்மத்தினுடைய ப்ரகாரசேஷபாவநத்வரூபமான பாவத்தை அடைகிறானோ அப்பொழுது அந்த ஜீவாத்மா பரமாத்மாவோடு அபேதமுள்ளவனாக ஆகிறான். பேதமற்றவனாக ஆகிறான்.

ச்ருதப்ரகாசிகை—

அதற்குமேல் ஸகுணப்ரஹ்மோபாஸகனுக்கு ஸகுணப்ரஹ்மப்ராப்தியை இந்தசுருதிகள் சொல்லுகின்றனவே ஒழிய பரப்ரஹ்மோபாஸகனுக்கு பரப்ரஹ்மப்ராப்தியைச் சொல்லுகிறதில்லை என்கிற சங்கைவரின் சொல்லுகிறார். பரவித்யாஸு என்று. ப்ரஹ்மவித்யைகளிலென்று அர்த்தம். ஸர்வாஸு, அன்யனால் ஸகுணவிஷயமாகவும் நிர்குணவிஷயமாகவும் சொல்லப்பட்டிருக்கிற தஹரவித்யை ஸத்வித்யை அக்ஷரவித்யை முதலிய எல்லாவித்யைகளிலும் என்று பொருள். 'அத்ருச்யத்வாதிகுணக:' என்கிற பரவித்யா வாக்யவிஷயஸூத்ரஸ்வாரஸ்யத்தால் அதற்கு ஸகுணவிஷயத்வம் அறியப்படுகிறது. 'ஆநந்தாதய: ப்ரதாநஸ்ய' என்கிற ஸூத்ரமானது உபாஸ்யனுக்கு ஸகுணத்வத்திற்காக உதாஹரிக்கப்பட்டது. 'விகல்போऽவிசிஷ்டபலத்வாத்' என்கிற ஸூத்ரமானது ப்ராப்யமான ப்ரஹ்மத்திற்கு ஸகுணத்வத்திற்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. இது பொருள். அன்யனால்

நிர்குணவிஷயமென்று அபிமானிக்கப்பட்டிருக்கிற 'ஸத்யம் ஜ்ஞானம், ஆநந்தோ ப்ரஹ்ம' இதுமுதலிய வாக்கியங்களுக்கு ஆநந்தம் முதலியகுணங்களோடு கூடின பரப்ரஹ்ம விஷயத்வத்தையும் அந்த குணங்கள் எல்லா வித்யைகளிலும் தொடர்ந்து வருகின்றன வென்பதையும் சொல்லி அவைகளுக்குள் ஒரு வித்யையே பலத்தை அடையச் செய்வதின் பொருட்டு போதுமான திறமையுள்ள தென்று வித்யா விகல்பமும் கூறப்பட்டது. ஆகையால் அன்யரால் நிர்குணவிஷயம் ஸகுணவிஷய மென்று அபிமானிக்கப்பட்டிருக்கிற ஸத்வித்யை தஹர வித்யை முதலியவைகளில் உபாஸிக்கத்தக்க வஸ்துவும் பலமும் ஸகுணமாக இருப்பதால் ஸகுண ப்ராப்தியை விட வேறாக நிர்குணப்ராப்தி உண்டு என்று சொல்வது ப்ரமாணமில்லாதது. ஆதலால் முக்தியில் பேதபரங்களான சுருதிகளுக்கு அந்யதாஸித்தியானது உப பன்னமாகாது. அடையத்தக்கவஸ்து விஷயத்தில் வேற்றுமை இல்லாமையால். ஸூத்ரகாரருடைய அபிப்பிராயத்தை அறிந்தவர்களுடைய வசனத்தைக் காண் பிக்கிறார்— வாக்ய என்று. யுக்தம் தத்குணோபாஸநாத் என்று. யுக்தம்-குணங் களோடு கூடிய ப்ரஹ்மமே அடையத்தக்கது. ஏனெனில் அந்த குணங்களோடு கூடின ப்ரஹ்மத்தை உபாஸிப்பதாலென்று அர்த்தம். வித்யாவிகல்பமும் அவ்வி டத்திலே காணத்தக்கது. ஸச்சித்தன்— ஸத்வித்யாநிஷ்டன், அப்படியானால் முக்தியில் அபேத சுருதிக்கு என்ன அர்த்த மென்று கேட்கில் கூறுகிறார்— ப்ரஹ்ம என்று. 'ஸயோ ஹவை தத்பரம் ப்ரஹ்மவேத ப்ரஹ்மைவ பவதி' என்று. ப்ரக்ருதனை ப்ரம்ஹவேதனமுள்ளவனுக்கு ப்ரஹ்மபர்யந்த ஸ்வரூபாவிர்ப்பாவத் தைச் சொல்வதில் முக்கிய நோக்கமுள்ளது இந்த வாக்கிய மென்று எப்படிவித் திக்குமோ அப்படி மேலே சொல்லப்படப்போகிறது. இவ்விடத்திலோ வென்றால் வேறு அர்த்தம் உரைக்கப்படுகிறது. ப்ராக்ருத நாமரூபங்களின் த்யாகத்தை ஜ்ஞாபிப்பதற்காக 'நாமரூபாத் விமுக்த:' என்கிற ஶ்ருதி உதாஹரிக்கப்பட்டது ஸாம்ய ப்ரதிபத்தியின் பொருட்டு 'நிரஞ்ஜந:' என்கிற வாக்கியம் எடுக்கப்பட்டது. 'பரம்ஜ்யோதி:' என்கிற வாக்கியமானது அதே ஸாம்யம் ஸ்வாபாவிக மென்பதற்கு ஜ்ஞாபகம். அங்ஙனமாகில்அமுக்க்யத்வம் ஏற்படுமென்று சொல்லப்படுமேயாகில் கூ றுகிறார்— ப்ரகாரைக்யேச என்று. இந்த உதாஹரணமானது "ஸோயம் வ்ரீஹி:" இது முதலியதற்கு உபலக்ஷணம். 'யதர்துஷ்வ்ருது லிங்காநி நாநாரூபாணி பர்யயே. த்ருஶ்யந்தே தாநி தாந்யேவ ததா பாவா யுகாதிஷு' (§ ருதுக்களில் அந்தந்த ருதுவுக்கு உரித்ததான தளிர் புஷ்பம் காய்கனிமுதலிய பற்பலவிதங்களான ருது சின்னங்கள் அந்தந்த ருதுக்கள்மாறி மாறிவரும் தருணத்தில் அந்தந்த சின்னங் களே எவ்வாறு காணப்படுகின்றனவோ அவ்வாறே ❋ யுகம்முதலியவைகளும் முறை யேமாறி மாறிவருங்கால் அந்தந்தயுகம் முதலியவைகளுக்கு உறித்ததான அதே வஸ்துக்கள் அப்படியே காணப்படுகின்றன) இது முதலிய ப்ரயோகம் பாரதம் முதலிய கிரந்தங்களில் காணத்தக்கது. திருஷ்டாந்தத்தில் ப்ரகாரைக்யத்தில் கூட ப்ரகாரிகளை ஒன்று படுத்திச்சொல்வது முக்கியமாக இருந்தபோதிலும்கூட ஸ்வரஸமன்று. முன் பார்க்கப்பட்ட கோவினிடத்தில் வ்யக்த்யம்சத்தை விட்ட

---

§ ருதுக்கள்—இரண்டு இரண்டுமாதங்களடங்கிய கால விசேஷங்கள். இவை கள் ஔஷதிகளையும் விருக்ஷங்களையும் பக்குவப்படுத்தி தளிர்க்கவும் புஷ்பிக்கவும் பலிக்கவும் செய்யும் பருவகாலங்கள். இவைகள் வஸந்தம் க்ரீஷ்மம் வர்ஷை சரத்-ஹேமந்தம் சிசிரம் என அறுவகைப்பட்டிருக்கின்றன.

❋ யுகம்—தேவமானத்தால் பன்னீராயிரம் வருஷம் கொண்ட காலம். இது க்ருதம், த்ரேத, த்வாபரம், கலி, என நாலுவகைப்பட்டுள்ளது.

தனால் அஸ்வாரஸ்யம், ஜாத்யம்சத்திற்கு மிக்க ஒற்றுமையுள்ளதாக இருத்தல் என்கிற தன்மையின் ஐக்யத்தால் முக்கியத்வம். தார்ஷ்டாந்திகத்திலேயெனில் 'கங்கையில் எடைச்சேரி' என்கிற வாக்கியத்திலுள்ள கங்காபதத்திற்குப் போல முற்றிலும் ப்ரவ்ருத்தி நிமித்தத்தின் பரித்யாகமில்லாமையாலும் பரமாத்மாவினி டத்தில்போல பரவ்ருத்தி நிமித்தபௌஷ்கல்ய மில்லாமையாலும் ப்ரவருத்தி நிமித் தத்தின் ஏகதேசத்தில் அன்வயிக்கிற முக்தாத்மாவினிடத்தில் முக்கியகோடி என்கிற அபிப்பிராயத்தினால் முக்கியமென்றே உரைக்கப்பட்டது. லாக்ஷணிகமான கங்காபதம்போல அத்யந்த அமுக்கியமல்ல வென்றுபொருள். முக்தனுக்கு அப ரிச்சின்ன ஞானாநந்தங்களிருந்தபோதிலும் ஜகத்காரணத்வத்திற்கு அனுகுணமான குணப்ருஹத்தவமும் ஸ்வரூப ப்ருஹத்தவமுமில்லை யன்றோ, ஆகாரைக்கியமுள்ள இடத்தில்கூட ஆகாரியான வஸ்துவோடு மற்றொன்றை ஒன்றுபடுத்தி வ்யவஹ ரிப்பது அத்யந்தம் அமுக்கியமன்று என்பதில் 'ஸோயம்கௌ:' என்பது திருஷ் டாந்தம். யோகஸங்க்ரஹாரம்பத்தில் மாத்திரமல்ல. விஸ்தாரத்தில்கூட ¶ வ்ய வதானமில்லாத மூன்றினசுலோகங்களில் பேதப்ரதிபத்தியானது இருக்கிறதென்று சொல்லுகிறார்—அத்ராபி என்று. முக்தாத்மாவை விஷயமாகக்கொண்ட ப்ரகர ணாந்தரங்களில் மாத்திரமல்ல. இந்த ப்ரகரணத்திலுமென்று பொருள். இந்தசுலோ கத்தில் அப்படியே என்று ப்ரஹ்மஸாதர்ம்யோபதேசம் உபயோகிக்கப்படுகிறது. பரப்ரஹ்மவத் என்கிறபதத்தை முதலில்கொண்ட கிரந்தமானது ததைவ என்கிற இந்தபதத்திற்கு வியாக்கியானம். ப்ரக்ஷீணாசேஷபாவந சப்தத்தை வியாக்கியா னம் செய்கிறார்—கர்மபாவநா என்று, 'பரப்ரஹ்மவத் ப்ரக்ஷீணாசேஷகர்மபாவந:' என்கிற பாடத்தில் கர்மசப்தமானது யாகம்முதலிய க்ரியைகளுக்கும் உபாஸநங் களுக்கும் பொதுவாக அனுஷ்டிக்கத்தக்க மந்திரமாத்திரத்தில் கருத்துள்ளது. அப்பொழுது கர்மசப்தத்தால் 'த்ரிவிதாபாவபாவநா' என்கிற இடத்திலுள்ள பா வசப்தமானது வியாக்கியானிக்கப்பட்டதாக ஆகிறது. இந்த இடத்தில் இது பொருள். அடையத்தக்க பரப்ரஹ்ம விஷயஜ்ஞானமானது ப்ராப்தியை உண்டு பண்ணுகிறதாதலால் சுத்தஸ்வரூபமும் ப்ராப்யமென்று அதுஅனுஸந்திக்கத்தக்கது.

இந்த வ்யதிரேகமானது தத்பாவபாவித்வாத் என்கிற அதிகரணத்தின் அர்த் தம். அவ்விடத்தில் பத்தஸ்வரூபம் சிந்திக்கத்தக்கதென்று பூர்வபக்ஷம் செய்து கொண்டு முக்தஸ்வரூபம் சிந்திக்கத்தக்கதென்று ஸித்தாந்தம் செய்யப்பட்டிருக் கிறது. இந்த சுலோகம் ஒரு ப்ரகரணத்திலிருக்கிற தென்பதைத் தெரிவிப்பதற் காக அடுத்தச்லோகமும் வியாக்கியானிக்கப்படுகிறது. க்ஷேத்ரஜ்ஞ: என்று. எவ்வளவுவரையில் க்ஷேத்ரஜ்ஞாவஸ்தையுள்ளவனோ அவ்வளவுவரையில் காணி உபாஸகன், அவனுக்கு ஜ்ஞானம் காணம், காணமாகஇருக்கிற ஞானமானது முக்தி கார்யத்தை உண்டுபண்ணிவிட்டு திரும்பிவிடுமேயொழிய முக்திக்கு முந்தியே திரும் பாது என்று கருத்து, முக்தனுக்கு உபாஸனத்தினின்று நிவ்ருத்தியானது விதிக் கத்தக்கதல்லவன்றோ. ஆகையால் மோக்ஷம்வரையில் அனுஷ்டிக்கத்தக்கதாக இருத்தல் சொல்லப்பட்டது என்று கருத்து. தத்பாவபாவசப்தத்தால் ப்ரஹ்ம ஸாம்யாபத்தி ஜ்ஞாபநத்திற்காகவும் 'விபேதஜநகேஜ்ஞானே' என்கிற இடத்தில்,

---

¶ வ்யவதானம். விலக்கம்.

ஜ்ஞாநேஎன்று பதம் பிறிக்கப்படவேண்டுமென்கிற சங்கையை விலக்குவதற்காகவும் 'தத்பாவபாவம்' என்கிற சுலோகம் வியாக்கியானிக்கப்படுகிறது. 'தத்பாவ' என்கிற சுலோகத்தில் தத்பாவஎன்று உபமான பூர்வபத பகுவ்ரீஹி, தஸ்யபாவஇவ பாவ: யஸ்யஸ: தத்பாவ:, தத்பாவஸ்யபாவ: தத்பாவபாவ:, என்று விக்ரஹம் சொல்லத் தக்கது. 'தத்பாவ' என்கிற பதத்திலுள்ளடங்கி இருக்கிற தச்சப்தபாவசப்தங்கள் இரண்டையும் வியாக்கியானம் செய்வதற்காகச் சொல்லுகிருர்—**தத்பாவ** என்று. பாஷ்யத்திலிருக்கிற தத்பாவசப்தம் பகுவ்ரீஹியல்ல, பின்னேயோ தத்புருஷஸமாஸம்-ஸமாஸமான துவியாக்கியானிக்கப்படவேண்டுமென்றுவிரும்பப்பட்டிருக்கும் தருணத்திலன்றே பகுவ்ரீஹிவிசிஷ்டரூபத்தால் பதத்தை எடுக்கவேண்டும். தச்சப்த மாத்திரங்கள் வியாக்கியானிக்கப் படவேண்டுமென்றுவிரும்பப்பட்டிருப்பதால்பகுவ்ரீஹி விசிஷ்டரூபத்தால் பதமெடுக்கப்படவில்லை. தச்சப்தத்தால் ப்ரஹ்மம் சொல்லப்படுகிறது. முதன்மைவாய்ந்திருக்கிற பாவசப்தத்தால் ஸ்வபாவம் கூறப்படுகிறது என்று பொருள். 'பாவோலீலாக்ரியாசேஷ்டா பூத்யபிப்ராயஜந்துஷு-பதார்த்தமாத்ரே ஸத்தாயாமாத்மயோநிஸ்வபாவயோ:' என்று நிகண்டுகாரர்கள் கூறுகின்றனர். அன்றிக்கே பாஷ்யத்திலிருக்கிற தத்பாவசப்தமும் பகுவ்ரீஹி விசிஷ்டமானது. தத்பாவோப்ரஹ்மணோபாவ: ஸ்வபாவ: இதி 'தத்பாவ' என்கிறபதத்தில் தச்சப்தத்தால் சொல்லத்தக்க ப்ரஹ்ம ஸம்பந்தம் பெற்றதாக அறியப்பட்டிருக்கிற பாவம் ஸ்வபாவம் என்று அர்த்தம். அல்லது ஶ்லோகத்திலும் தத்பாவ சப்தம் தத்புருஷம் இரண்டாவது பாவசப்தம் ஸத்தையைச்சொல்லுகிறது. வ்யாவர்த்திக்கத்தக்கதைச் சொல்லுகிருர்—**நது** என்று. எதனுலென்று கேட்கில் கூறுகிருர்—**தத்பாவ** என்று.வேறுஹேதுவைச்சொல்லுகிருர்—**பூர்வோக்தகர்த்ருவிரோதாச்ச** என்று.ஹேயப்ரத்யநீகத்வம் ஹேயார்ஹத்வம் முதலிய விரோதம் அர்த்தவிரோதம்.இவ்வண்ணம் சப்தபர்யாலோசனத்தாலும் அர்த்தபர்யாலோசனத்தாலும் பாவசப்தத்திற்கு ஸ்வபாவவாசித்வம் உபபாதிக்கப்பட்டது. ஸ்பாவசப்தத்தால் சொல்லத்தக்கது முன்சுலோகத்தில் சொல்லப்பட்ட ப்ரக்ஷீணசேஷபாவனத்வம் என்று சொல்லுகிருர்—**யத்** என்று. தச்சப்தத்தின் ஸாமர்த்தியத்தினுல் யத்வ்ருத்தத்தை ஆக்ஷேபித்து வியாக்கியானிக்கிருர்—**யதைவம்** என்று. அபேதீ என்கிற இடத்தில் பேதசப்தத்தின் வியாக்கியானத்திற்காக பேதசப்தத்தை இரண்டுரெஞ்ப்ரத்யயங்களால் பிரித்து நிர்தேசிக்கிருர்—**பேதாஹிதோபவதீ** என்று.அன்றிக்கே பேதமில்லாதவனுக ஆகிருன் தாதாத்ம்ய முள்ளவனுக ஆகிருனில்லை என்று பொருள். அப்படிஇல்லாவிட்டால் 'பேதஶ்சதஸ்யாஜ்ஞாநக்ருத:' என்று அடுத்த நிர்தேசம் பொருந்துகிறதில்லை.

ஜ்ஞாநைகாகாரதயா பரமார்த்ததோ நைகப்ரகாரஸ்யாகாரஸ்ய தஸ்யாநே
கதா நேகாகாரப்ரதீதி: । தது க்தம் ப்ரத்யக்ஷாதிபிர்ஜ்ஞாநஸ்வரூப: ந ஸ்வ
ரூபேவக்தவ்ய: । ஸத்தாமாத்ரமேவ: பரப்ரஹ்மஸ்வரூபே நிர்விசேஷ-தா
ஜ்ஞாநரூபேண கர்மணி விநஷ்டே ஸங்கல்பாவாஸநிவர்த்த ஜந்மமோக்ஷ
வதி । யதோக்தம் ஸகலஸ்வரூபே லோகேஷு பாஹ்யகர்மவ்ருத்திப்ரஜ: । ஜ்ஞா
நமோக்ஷஜ்ஞாநஸ்வரூபே நாஸ்த்யந்யாவரணோபஹிதம் (வி-பு-௨-௧௨-௩௩)
இதி । ஸதேவ விஶேஷணாதி—'விஶேஷ ஜநகம் ஜ்ஞாநம் நாஸ்தீத்ய

षिकं प्रते । अतएव ब्रह्मणा सहैक्यं करिष्यति” इति । विदेहः - विविधो देहः - देवतिर्यङ्मनुष्यस्थावरात्मकः । यथोक्तं पौराणिकैरपि, “पतत्यविद्ययाऽपि देहाद्यं विद्याज्ञानति बन्धनम्” इति । अतनि ज्ञानस्वरूपेण देवादिरूपविविधदेहेतस्सम्बन्धात्कर्मावाप्ताज्ञाने परब्रह्मण्यनेनात्यैक्यकनादं प्रते सति देहसम्बन्धाभावसङ्गं पाषाणब्रह्मणाऽतेन देवादिरूपैः कर्मिष्यतीत्यर्थः । “अविद्या कर्मसंज्ञान्या” इत्युक्तेर्देवोक्तम् ॥

“क्षेत्रज्ञं चापि मां विद्धि” इत्यादिनाऽऽक्यादिरूपेण सर्वस्यात्मतयैक्याभिधानम् । अन्यथा “क्षरः सर्वाणि भूतानि कूटस्थोऽक्षर उच्यते । उत्तमः पुरुषस्त्वन्यः” इत्यादिभिर्विरोधः । ऐक्यादिरूपेण सर्वशेषित्वं तदेव सहचारविहितम् “ईश्वरः सर्वभूतानां हृद्देशेऽर्जुन तिष्ठति” (ஸ்ரீ-கஅ-சுக) “सर्वस्य चाहं हृदि सन्निविष्टः” (ஸ்ரீ-கரு-கரு) इति च । “अहमात्मा गुडाकेश सर्वभूताशयस्थितः” इति च तत्रैवोच्यते । सर्वशब्दात्मभावस्यात्मवस्तुत्वे वचनः । यतस्सर्वेषामात्मा तत एव सर्वेषां तच्छरीरतया व्याप्यत्वं प्रतिपाद्यते “न तदस्ति विना यत्स्यात्” इति; सर्वविभूतिमत्त्वं साररूपायतीति तदेवावगम्यते । तत उपपाद्यते “यद्यद्विभूतिमत्सत्त्वं श्रीमदूर्जितमेव वा । तत्तदेवावगच्छ त्वं मम तेजोंऽशसम्भवम् ॥ विष्टभ्याहमिदं कृत्स्नमेकांशेन स्थितो जगत्” (ஸ்ரீ-க௦-௪க-௪௨) इति ॥

अतः शास्त्रेषु न निर्विशेषवस्तुप्रतिपादनशक्तिः । नाप्यजातस्य भ्रान्तिप्रतिपादनम् । नापि वेदविदां प्रमाणानां स्वरूपभेदनिषेधः ॥

ஸ்ரீபாஷ்யம் :—

ஞானத்தையே வடிவமாகக்கொண்டிருத்தலால் பரமாத்மாவோடு ஏகப்ரகாரனாக இருக்கிற இந்த ஜீவாத்மாவுக்கு தேவமனுஷ்யாதி ரூபங்களால் அந்த பரமாத்மாவைக்காட்டிலும் வேறுபாடு இருக்கிறது. அந்த

பேதஸம்பந்தமானது இவனுக்கு கர்மரூபமான அஜ்ஞானத்தை மூலமாகக் கொண்டது. ஸ்வரூபத்தாலுண்டுபண்ணப்பட்டதல்ல. அந்த தேவாதி பேதமோவென்றால் பரப்ரஹ்மத்யானத்தினால் மூலபூதமான அஜ்ஞானரூபமான கர்மாவானது நஷ்டமானவுடன் காரணமில்லாமையால் நிவர்த்திக்கிறதாதலால் அபேதமுள்ளவனாக ஆகிறான். அவ்வாறே கூறப்பட்டிருக்கிறது. ஏகஸ்வரூபபேதஸ்து பாஹ்யகர்மவ்ருதிப்ரஜ: — தேவாதிபேதேऽபத்வஸ்தே நாஸ்த்யநாவரணோ ஹி ஸ: - (ஜ்ஞானைகாகாரனாக இருப்பதுபற்றி ஏகஸ்வரூபனான ஜீவனுக்கு தேவாதிபேதமானது பாஹ்யமான கர்மாவரணத்தினாலுண்டாகிறது. கர்மாவினாலுண்டுபண்ணப்பட்டிருக்கிற தேவாதிபேதம் நாசம் செய்யப்பட்டுவிட்டதேயாகில் பேதமே கிடையாது. ஏனெனில், அவன் கர்மரூபமான ஆவரணமில்லாதவன்) என்று. இதையே விவரிக்கிறார்- 'விபேதஜனகேऽஜ்ஞாநே நாசமாத்யந்திகம் கதே - ஆத்மநோ ப்ரஹ்மணோ பேதமஸந்தம் க: கரிஷ்யதி' (தேவாதிரூபமான பற்பல பேதத்தை உண்டுபண்ணுகிற அஜ்ஞானமானது முற்றிலும் நாசமடைந்த பிறகு ஜீவாத்மாவுக்கு இல்லாததான ப்ரஹ்மபேதத்தை எவன் உண்டுபண்ணுவான்) என்று. விபேத:- தேவதிர்யங் மனுஷ்யஸ்தாவராத்மகமான பற்பலபேதம். சௌநகரும் சொல்லி இருக்கிறார்—'சதுர்விதோऽபி பேதோऽயம் மித்யா ஜ்ஞாந நிபந்தன:' (தேவதிர்யங் மனுஷ்யஸ்தாவராத்மகமான நான்குவிதமான இந்த பேதமானது மித்யாஜ்ஞாநத்தை காரணமாகக்கொண்டது). ஜ்ஞாநரூபனான ஆத்மாவினிடத்திலுள்ள தேவாதிரூபமான பற்பல பேதங்களுக்கு ஹேதுவாக ஆகாநின்ற கர்மாவென்றுபெயருள்ளதான அஜ்ஞானமானது பரப்ரஹ்ம த்யானத்தினால் முற்றிலும் நாசமடைந்தவளவில் ஹேதுவில்லாமையால் பரப்ரஹ்மத்தைக் காட்டிலும் ஜீவாத்மாவுக்கு இல்லாமலிருக்கிற தேவாதிரூபமான பேதத்தை எவன் உண்டுபண்ணப்போகிறான் என்று அர்த்தம். 'அவித்யாகர்மஸம்ஜ்ஞாந்யா' என்று இவ்விடத்திலேயே கூறப்பட்டிருக்கிறதன்றோ. 'க்ஷேத்ரஜ்ஞஞ்சாபி மாம் வித்தி' இதுமுதலியதால் அந்தர்யாமி ரூபத்தால் எல்லோருக்கும் ஆத்மாவாக இருப்பதுபற்றி ஐக்யம் கூறப்பட்டிருக்கிறது. அங்ஙனமில்லாவிடில் 'க்ஷர ஸ்ஸர்வாணி பூதாநி கூடஸ்தோக்ஷர உச்யதே - உத்தம: புருஷஸ்த்வந்ய:' இதுமுதலிய வசனங்களோடு விரோதம். அந்தர்யாமி ரூபத்தால் எல்லாவற்றுக்கும் ஆத்மாவாக இருத்தல் அந்த இடத்திலேயே பகவானால் உரைக்கப்பட்டிருக்கிறது. ஈச்வரஸ்ஸர்வபூதாநாம் ஹ்ருத்தேசேऽர்ஜுன திஷ்டதி' என்றும் 'ஸர்வஸ்ய சாஹம் ஹ்ருதி ஸன்னிவிஷ்ட:' என்றும் 'அஹமாத்மா குடாகேச ஸர்வ பூதாசயஸ்ஸ்தித:' என்றும் அதே கூறப்படுகிறது. பூத சப்தமானது ஆத்மபர்யந்தமான தேஹத்தைச் சொல்லுகிறது. எக்காரணத்தால் எல்லாவஸ்துக்களுக்கும் இவன் ஆத்மாவாக இருக்கிறானோ அக்காரணத்தினாலேயே எல்லாம் அந்த பரமபுருஷனுக்கு சரீரமாக இருப்பதுபற்றி அவைகளுக்கு தனித்து இருப்பு நிஷேதிக்கப்படுகிறது. 'நதத³ஸ்தி விநாயத்ஸ்யாத்'

(அவனின்றி எந்த வஸ்து உண்டோ அந்த வஸ்து (எங்கும்) இல்லை) என்று. இது பகவானுடைய விபூதியின் உபஸம்ஹாரமென்று அவ்வாறே ஒப்புக் கொள்ளத்தக்கது. அதனால் இது கூறப்படுகிறது. 'யத்யத் விபூதிமத்ஸத்வம் ஸ்ரீமதூர்ஜித மேவவா - தத்ததேவாவகச்ச த்வம் மமதேஜோம்சஸம்பவம். ஈசிதவ்யங்களான வஸ்துக்களுடன்கூடிய எந்த எந்த ஜந்துவானது காந்தியுள்ளதாகவாவது, தனதான்யங்களால் நிறைந்ததாகவாவது, மங்களகார்யங்களில் முயற்சியுள்ளதாகவாவது இருக்குமோ அந்தந்த ஜந்துவை என்னுடைய (நியமனசக்தியின்) ஏகதேசத்தால் உண்டானதென்று நீ தெரிந்து கொள்வாயாக. 'விஷ்டப்யாஹமிதம் க்ருத்ஸ்நமேகாம்சேந ஸ்திதோஜகத்'. (நான் காரணாவஸ்தையிலும் கார்யாவஸ்தையிலும் முறையே ஸூக்ஷ்மமாகவும் ஸ்தூலமாகவுமிருக்கிற சிதசிதாத்மகமான இந்த ப்ரபஞ்சமனைத்தையும் என் மஹிமையினுடைய ஒரு அம்சத்தால் தரித்துநிற்கும்படி செய்து கொண்டு இருக்கிறேன்) என்று. ஆகையால் சாஸ்த்ரங்களில் நிர்விசேஷ வஸ்துவின் ப்ரதிபாதனமில்லை. உலகத்திலுள்ள எல்லாபதார்த்தங்களும் ப்ராந்திஸித்தங்கள் என்றும் சொல்லப்பட்டிருக்கவில்லை. சித் அசித் ஈச்வரன் இந்தமூன்று தத்வங்களுக்கும் ஸ்வரூபபேத நிஷேதமும் இல்லை.

ச்ருதப்ரகாசிகை

தேவமனுஷ்யாதி பேதத்தின் இன்மையானது எவ்வாறு என்று சங்கைவரின் "பேதச்ச தஸ்ய" இது முதலிய வியாக்கியானம் செய்கிறார்— ஜ்ஞாநைகாகாரதயா என்று.பரமாத்மாவோடு அபேதமுள்ளவனாக ஆகிறானென்று பரமாத்மா ப்ரஸ்துதனாக இருப்பதாலும் ஆத்மந: ப்ரஹ்மண: என்கிற இடத்திலும் பஞ்சமீ விவக்ஷையினாலும் அவனிடத்தினின்று பேதமென்று உரைக்கப்பட்டது. ப்ரஹ்மத்துக்கும் முக்தாத்மாவுக்கும் வேறு ஆகாரத்தால் பேதமானது பிரமாணஸித்தமாக இருப்பதாலும் நிரஸிக்கத்தக்க பேத விசேஷமானது வேறுவசனங்களால் ஸித்தமாக இருப்பதாலும் பேதம் தேவாதி ரூபமென்று உறைக்கப்பட்டது. கர்ம ரூப சப்தத்தால் அஜ்ஞான சப்தம் வியாக்கியானிக்கப்பட்டது. ஜ்ஞான விரோதி என்று வ்யுத்பத்தி என்று அர்த்தம். "அவித்யயா ம்ருத்யும் தீர்த்வா" என்றல்லவோ ச்ருதி இருக்கிறது. இந்த இடத்திலும் "அவித்யா கர்மஸம்ஜ்ஞாந்யா"என்றல்லவோ படிக்கப்படுகிறது. அதனால் பேதராஹித்யத்திற்கு என்ன வென்று சங்கைவரின் "பேதச்ச தஸ்யாஜ்ஞானக்ருதோ பவேத்" என்கிற இந்த கிரந்தத்தால் அர்த்தஸித்த மென்று அபிப்ராயப்படப்பட்டிருக்கிற காரணாபாவத்தை விளக்கிக் கொண்டு கார்யா பாவத்தை உபபாதிக்கிறார்—ஸது என்று. பேதம் தேவாதிரூபம் என்பதிலும் அஜ்ஞானசப்தம் கர்ம பரம் என்பதிலும் ப்ரமாணத்தைக்கூறுகிறார்— யதோக்தம் என்று. ஆதி பரத சரித்திரத்தில் இந்த சுலோகமிருக்கிறது. அதில் மூர்த்தி தேஹம் இந்திரியங்கள் முதலிய பாஹ்யவஸ்துக்களோடு பேதமின்மை ஆத்மாவுக்கு உரைக்கப்பட்டது. 'ஸிதநீலாதி' இது முதலியதால் இந்த ச்லோகத்தில் புத்தி சுகம் துக்கம் இச்சை முதலிய ஆந்தரவஸ்துக்களோடு பேதமுமில்லை என்று சொல்லப்படுகிறது.ஏகஸ்வரூப என்று.கர்மாவே வ்ருதி ஆவரணம்-கர்மவ்ருதி-கர்மாவானது பாஹ்யம் ஆந்தரம் என இரு வகைப்பட்டுள்ளது.ஆந்தரமான

கர்மாவானது ஆத்ய ப்ராவண்யத்திற்கு ஹேதுவாக இருக்கிறது. பாஹ்யமான கர்மாவானது வெளியிலிருக்கிற ரூபரஸகந்த ஸ்பர்ஸ சப்தங்களாகிற விஷயங்களில் ¶ ப்ராவண்ய முண்டாவதற்குக் காரணமாக இருக்கிறது. அன்றிக்கே பாஹ்யம் ஸ்வாபாவிகமாக இல்லாத கர்ம. அதே வ்ருதி-அதனால் அதிகமாக உண்டாயிருக்கிறது ஏகஸ்வரூபபேதம். பாஹ்ய கர்மாவானது சரீரத்தை த்வாரமாகக்கொண்டு ஏகஸ்வரூபமான ஆத்மாவுக்கு ஆந்தரமான பேதத்தை உண்டுபண்ணுகிறதென்று அர்த்தம். த்வாரபூதமான தேவாதி சரீரபேதம் நஷ்டமாகப்போனவளவில் ஆந்தர பேதமில்லை. தேவாதிபேதம் நஷ்டமாகில் எவ்வாறு கர்மவ்ருதியை ஹேதுவாகக்கொண்ட ஆந்தரபேத நாசம் உண்டாகும்? என்று வினவப்படுமேயாகில் சொல்லுகிறார்— அநாவரணேஹி ஸ: என்று. ஸ: தேவாதி பேதத்தை இழந்த ஆத்மா. கர்மாவரணத்தினின்று விடுபட்டவனல்லவோ வென்று பொருள். அன்றிக்கே கர்மவ்ருதி: கர்மாவினாலுண்டாகிற வ்ருதி. தேவாதி சரீரம். அந்த ஸம்பந்தத்தினாலுண்டானது ஆந்தரபேதம். தேவாதிபேதம் நஷ்டமாயின் அது இல்லை. கர்மாவினாலுண்டாகிற ஆவரணத்தை ஹேதுவாகக்கொண்ட ஆந்தரபேதமானது தேவாதிபேதம் நாசமடைந்தால் எவ்வாறு உண்டாகிறதில்லை என்று கேட்கில் கூறுகிறார்—அநாவரணேஹி ஸ: என்று. கர்மஜாயவ்ருதி: தேவாதிசரீர ரூபை என்று அர்த்தம். ஏததேவ- 'பேதப்ச நஸ்யா ஜ்ஞாநக்ருதோ பவேத்' என்று சொல்லப்பட்டதாகவே இருக்கிற அர்த்தத்தை 'விபேதஜநகே' என்கிற பதத்தை முதலில் கொண்டிருக்கிற ச்லோகத்தினால் "அநாவ்ருத்திஸ்ஸப்தாத்" என்கிற அதிகரணார்த்தம் சொல்லப்படுகிறது. பரப்ரஹ்மத்தினால் நாசமடையும்படி செய்யப்பட்டிருக்கிற ஜீவாத்மாவினிடத்திலிருந்த தேவாதி பேதத்திற்கு மீண்டுவருதலை எவன் செய்யப்போகிறான் என்று சொல்லப்படுகிறது. விபேதசப்தத்தை வியாக்கியானம் செய்கிறார்- விபேதோ விதோ விபேத: என்று. பேதம் தேவாதி ரூபமென்பதில் ப்ரமாணாந்தரத்தைக் கூறுகிறார்—யதோக்தம் என்று மித்யாஜ்ஞாந நிபந்தன:- மித்யாஜ்ஞாநம் ஆத்மவிஷயமான ப்ராந்திஜ்ஞாநம், அது கர்மத்தின் வாயிலாக மேல் மேல் வருகிற தேவாதி பேதத்திற்கு ஹேதுவென்று அர்த்தம். இதற்கு உத்தரார்த்தம்- "தேவதிர்யங்மனுஷ்யாக்யஸ்தைவர்ருப நாரக:" என்று. வியாக்கியானிக்கத்தக்க ச்லோகத்தின் வாக்கியார்த்தத்தை சொல்லுகிறார்— ஆத்மநி என்று. ப்ரஹ்மண: என்கிற பதம் பஞ்சம்யந்த மென்பதைக் காட்டுவதற்காக பரஸ்மாத் என்று கூறப்பட்டது. இரண்டு பதங்களுக்கும் வையதிகரண்யத்தால் ஷஷ்ட்யர்த்தத்வம் யுக்தமல்ல, சசப்தமல்லாமையால். அடுத்த முந்தின ச்லோகத்தில் 'பரமாத்மாபவத்யபேதி' என்று பரமாத்மா ப்ரதியோகியாக நிர்தேசிக்கப்பட்டிருப்பதாலும் அதனாலேயே ஸமாநாதிகரணமான ஷஷ்ட்யந்தத்வமும் யுக்தமல்ல. முன விஸ்தரிக்கப்பட்டிருக்கிற அர்த்த விரோதத்தாலும் ஐந்தாம் வேற்றுமை உருபை ஈற்றில் கொண்டிருத்தலும் ஆறும் வேற்றுமை உருபை ஈற்றில் கொண்டிருத்தலும் விபர்யயத்தினால் இருக்கலாமென்று சொல்லப்படுமேயாகில் அல்ல. பரப்ரஹ்மத்துக்குக்கூட ஹேயகுணார்ஹத்வாபாதகமானது ஸ்வாபாவிகமாக ஆக வேண்டியதாக ப்ரஸங்கிக்கும். அதனால் "பரஸ்மாத் ப்ரஹ்மண:" என்று கூறப்பட்டது. அஸந்தம் — ஸத்சப்தமானது பரமார்த்த பர்யாயம். "அநாசி பரமார்த்தப்ச" என்கிற இடத்திலேயே சொல்லப்பட்டிருக்கிறதன்றோ. அஸித்யமென்று

¶ ப்ராவண்யம்—பற்றுதல்.

பொருள். அதனால் ஸ்வாபாவிகமான நித்யபேதத்திற்கு வ்யாக்ருத்தி ஏற்பட்டது. அநித்யத்வம். ஒரு ஸமயத்தில் உண்டாகுதல். அநித்யமாக இருபபதால் தேவாதிபேதமானது ஹேதுவை அபேக்ஷித்திருக்கிறது. அதை எவன் செய்யப்போகிறான்? ஒருவனும் செய்யப்போகிறதில்லை. ஹேத்வபாவாத்-கர்மரூபமானஹேது இல்லாமையால் என்று அர்த்தம். ஏகார்த்த விஷயத்தில் மாத்திரமல்ல. ''பாஹ்ய கர்மவ்ருதி ப்ரஜ:' 'அஜ்ஞாநக்ருதோ பவேத்' என்கிற இடங்களில் அஜ்ஞாநசப்தம் கர்ம சப்தம் இவ்விரண்டும் ப்ரயோகிக்கப்பட்டிருப்பதனால் அஜ்ஞாந சப்தமானது கர்மாவென்கிற பொருளை உணர்த்துந்தன்மை வாய்ந்துள்ளது. இந்த ப்ரகரணத்திலும் ஸ்பஷ்டமாக சொல்லப்பட்டிருக்கிறதென்று சொல்லுகிறார்— **அவித்யா கர்ம ஸம்ஜ்ஞாந்யேசிஷ்யத்ரைவோக்தம்** என்று. ஆத்மாவுககு உண்டாயிருக்கிற ஔபாதிக பேதமானது உபாதி விலகினவுடன் அழிந்து விடுகிறதென்று சுலோகத்தின் அர்த்தம்.

உபாதி இல்லாமையால் இல்லாதபேதத்தை எவன் உண்டு பண்ணக்கூடுமென்றுவது அர்த்தம். இந்த சுலோகம் ம்ருஷாவாதிகளுக்கு அத்யந்தம் அஸ்வரஸம். அப்படியன்றோ— 'விபேதஜநகே'என்கிற இடத்தில் ஜநகசப்தமானது உத்பாதகனிடத்தில் ஸ்வரஸம்-அத்யாஸஹேதுவில் ஸ்வரஸமன்று. அஜ்ஞாநசப்தத்திற்கு உலகத்தாலும் சாஸ்த்ரத்தினாலும் அநிர்வசனீயமென்கிற அர்ந்தத்தை உணர்த்தும் தன்மையானது அறியப்பட்டிருக்கவில்லை. கர்மாவைச் சொல்லும் திறமையுள்ளதாக இருத்தல் என்கிற வ்யுத்பத்தியானது இந்தப்ரபந்தத்திலேயே காண்பிக்கப்பட்டிருக்கிறது. நாசசப்தத்திற்கு பாதத்தைச் சொல்லும் தன்மையானது முக்கியமல்ல. அஸந்தம் என்கிற பதமும் வ்யவச்சேதிக்கத்தக்கது இல்லாமையால் பயனற்றது. இருக்கிற பேதத்தை ஒப்புக்கொள்ளாமையால். அதை ஒப்புக்கொண்டாலல்லவோ அதற்கு ஸாபல்யம். கரிஷ்யதி என்கிற பதமும் அஸ்வரஸம்-அத்யாஸவாசித்வ மில்லாமையால். இதற்குமேல் அத்வைத பரமாக அன்யனால் கூறப்பபட்டிருக்கிற கீதாவசனத்தை வியாக்கியானிக்கிறார்— **க்ஷேத்ரஜ்ஞஞ்சாபி** என்று. அன்யனுக்கு அபிமதமான அர்த்தம் ஏதோ அதற்கு முன்பின் விரோதத்தைக்காட்டுகிறார்—**அன்யதா** என்று. ''உத்தம:புருஷஸ்த்வந்ய:'' என்று பேதத்தை ஸ்பஷ்டமாகச்சொல்லி இருப்பதனால் அதின் விரோதத்தால் ஸ்வரூபைக்யபரத்வமில்லை என்பது மாத்திரமல்ல, ஸாமாநாதிகரண்யத்திற்கு உபபாதகமான அந்தர்யாமித்வம் கண்டோக்தமாகவுமிருக்கிறதென்று சொல்லுகிறார்— **அந்தர்யாமி** என்று. 'ஈச்வரஸ்ஸர்வபூதாநாம் ஹ்ருத்தேசேர்ஜுன திஷ்டதி' என்கிற சுலோகத்தில் பூத சப்தத்திற்கு ஆத்மபர்யந்த தேஹ பரத்வமானது ''ப்ராமயன் ஸர்வபூதாநி' என்கிற இந்த சுலோகத்தினுடைய உத்தரார்த்தத்தால் அறியப்படுகிறது. 'ஈஹிம்ஸ்யாத் ஸர்வாபூதாநி' என்கிற இதுமுதலிய ப்ரயோகத்தாலும். 'ஸர்வஸ்யசாஹம் ஹ்ருதி ஸன்னிவிஷ்ட:' என்கிற சுலோகத்திலும் ஸர்வ சப்தத்திற்கு ஆத்மபர்யந்தத்வமானது ''மத்தஸ்ஸ்ம்ருதிர்ஜ்ஞாநமபோஹனஞ்ச'' என்கிற வசனத்தாலறியப்படுகிறது. ஹ்ருத்தேசே - ஹ்ருதயதேசத்திலிருக்கிற ஆத்மாவினிடத்திலென்று அர்த்தம். ''ஸர்வஸ்யசாஹம் ஹ்ருதி'' என்கிற இடத்திலும் அப்படியே. அவ்வாறே ''அஹமாத்மா குடாகேச'' என்கிற இடத்திலும் அந்தர்யாமித்வபரதையைக் கூறுகிறார்—**அஹம்** என்று. எதனையென்று கேட்கில் கூறுகிறார்—**பூதசப்தேர்ஷு** என்று. முன்காட்டப்பட்டிருக்கிற ஸர்வசப்தத்தோடு அர்த்தைக்யத்தாலும் என்று கருத்து.

எல்லாம் பகவதாத்மகமென்று அன்வயரூபத்தால் கூறப்பட்டிருப்பதற்கு இது சேஷபூதமானது. 'நததஸ்தி' என்கிற வ்யதிரேகநிர்தேசமானது அதற்கு அனுகுணமே என்கிற அபிப்பிராயத்தால் சொல்லுகிறார்—யதஸ்ஸர்வேஷாம் என்று. அவிநாபாவசப்தமானது ஸம்பந்தநியமத்தைச்சொல்லுகிற தன்மைவாய்ந்திருப்பதால் என்று கருத்து. வேறு ஹேதுவையும் கூறுகிறார்—பகவத் என்று, 'ஏதாம்விபூதிம்யோகஞ்ச' என்று தொடங்கிஇருப்பதால் விபூதிபரத்வமறியப்படுகிறது. ஆதலால் உபக்கிரமத்திற்கு அனுகுணமே உபஸம்ஹாரமென்று பொருள். விபூதியை விதித்துவிட்டு அதையே மறுப்பது சக்யமல்லவென்று அர்த்தம். ப்ரகரணம் விபூதிபரமென்பதைக் காண்பிக்கிறார்—யத்யத் என்று. விபூதிமத், நியாம்யவஸ்துக்களுள்ளது. ஸ்ரீமத், போக்யஸம்ருத்தியுள்ளது. ஊர்ஜிதம் பலமுள்ளது. கல்யாணகுணாரம்பங்களில் முயற்சியுள்ளது. தேஜ: சத்துருக்களை அவமதிக்கிற ஸாமர்த்தியம், ப்ரசாஸனம். தேஜோம்சஸம்பவம் நியமனசக்திரூபமான என்னுடைய ஆஜ்ஞையின் பேசத்தைச் சார்ந்திருக்கிறதென்று அர்த்தம்.

சாஸ்திரத்திறகு பிறர்களால் கூறப்பட்டிருக்கிற அர்த்தத்தில் கருத்தில்லாமையை உபஸம்ஹாரம் செய்கிறார்—அத: என்று. அத:, ச்ருதியோஜனை முதலியதால் ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கிற நியாயங்களால் என்று அர்த்தம். பாரந்தத்வம், ப்ராந்தியினுல் ஸித்தித்தல். ஜகத் ப்ரஹ்மம் இரண்டும் ஒரேத்ரவ்யம் என்கிற பக்ஷத்தில் ப்ரஹ்மத்திற்கு ஸவிசேஷத்வமும் ஜகத்திற்கு ஸத்பத்வமும் பொருத்தமுள்ளதாக ஆகிறது என்கிற சங்கைவரின் அதைவிலக்குவதற்காக சொல்லுகிறார்—நாபி என்று. சேதநர்களிடங்களில் அசித்தர்மங்களை எண்ணுதலும் பரதந்த்ரங்களான வஸ்துக்களிடங்களில் ஸ்வதந்த்ரங்களென்கிற எண்ணமும் ப்ரமமேயொழிய ஸவரூபபேதபுத்தியானது ப்ரமமல்லவென்கிற அபிப்பிராயத்தால் 'நஸ்வரூபபேத: நிஷேத:' என்று கூறப்பட்டது. அன்றிக்கே § ம்ருஷாவாதியையே உத்தேசித்து ஜீவன் பரமாத்மா இவ்விருவர்களுடைய ஸவரூபபேதநிஷேதத்தின் இன்மையைக்கூறுகிறார்—நாபி என்று. அசித்தை எடுத்தது திருஷ்டாந்தமாக,

§ ம்ருஷா—பொய்.

யதுவ்ருத்யுதே—நிவிஷ்டமேஷ ஸ்வப்ரகாசே ஸ்வதர்மி தோஷவர்ஜிதஸ்வதீர்க்கமேவதிதவ்யாதிருத்தவிஸ்வம் ஸவத்ம் ஜகத் । தோஷஸு ஸ்வரூபவதிரோதானவிஷயவிவித்ரவிசேஷகர் ஸதஸதநிர்வசநீயாநாதிவித்யா । ஸாவாவஸ்யாஸ்யூவஹநீயா ।—“ அந்ருதேந ஹி ப்ரத்யூடா:” இத்யாதிபி: ஸ்ருதிபி:, ப்ரஹ்மணஸ்தத்வஸ்யாதிவாக்யஸா தானாயிகரண்யாவகத ஜீவைக்யாநுபபத்யாவ। ஸாதநஸதிஹ்ய திபாயயோரயோகாத்। நாவ்யஸதிவ்யாதிபாயயோஸ்யயோகாத் அத: கோபிஉயவிநிஹூபக்ஷேயஸ்வேஷ்யதி தத்விது:- இதி । தஷயாக்ஷ ஸாஹி கிஆஸ்ரித்ய ஆஹம் ஜநயதி? ந தாவஜ்ஜீவாஸ்ரித்ய- அவித்யாவர்திக்ஷ தக்வாஜ்ஜீவஸாவஸ்ய! நாவி ப்ரஹ்மாஸ்ரித்ய தஸ்ய ஸ்வப்ரகாசஜ்ஞாநஸ்வரூபகேநாவித்யாவிரோதிக்வாத் । ஸாஹி ஜ்ஞாநபாயாநிவர்த்யா । ‘ஜ்ஞாநரூபம் பரம்ப்ரஹ்ம தந்நிவர்த்யம் ம்ருஷாத்மகம் । அஜ்ஞாநம்சேத்தீரஸ்க யாதக்: ப்ரஹ்மஸ்வந்நிவர்த்தகா: ॥ ஜ்ஞாநம் ப்ரஹ்மேதி சேத் ஜ்ஞாநாஜ்ஞாநஸ்ய நிவர்த்தகம் । ப்ரஹ்மவத்ஸ் ப்ரகாசக்வாத்தவி ஹ்யநிவர்த்தகம் ॥ ஜ்ஞாநம் ப்ரஹ்மேதி விஜ்ஞாநஸ்யேத் ஸ்யாத் ப்ரமாதா । ப்ரஹ்மணோ நந்தரூபத்வம் கவ்யதேக்ஷ்வ ப்ரஸஜ்யதே ॥ ” ஜ்ஞாநஸ்வரூபம் ப்ரஹ்மேதிஜ்ஞாநம் தஸ்ய அவித்யாயா பாயகம், ந ஸ்வரூபமாத்ரம் ஜ்ஞாநமிதி சேத்; ந- உபயோரபி ப்ரஹ்மஸ்வரூபப்ரகாசகேவஸதி அந்யதரஸ்யாவித்யாவிரோதித்வேந்யதரஸ்ய நேதி விசேஷாநவகாத் । யத்தத்வம் ஸதி- ஜ்ஞாநரூபம் ப்ரஹ்மேத்யேந ஜ்ஞாநேந ப்ரஹ்மணி ய: ஸ்வாவபோஸ்ஸத்யதே, ஸ ப்ரஹ்மண: ஸ்வயம் ப்ரகாசகேந ஸ்வயமேவ ப்ரகாசத இத்யவித்யாவிரோதிகேந ந கஸ்ரிசிவிசேஷ: ஸ்வரூபதவிஷயஜ்ஞாநயோரிதி । கிஞ்ச, அநந்தஸ்வரூப ஸ்ய ப்ரஹ்மணோரநந்தஸ்வாதாநந்தஸாவ்யகேந ஸகதா ந தத் விஷயஜ்ஞாநத்வஸித்தி । அதோ ஜ்ஞாநத்ஜ்ஞாநவிரோதித்வம் ஸ்வயமேவ விரோ தி ஸம்ததி நாஸ்யா ப்ரஹ்மாஸ்ரயகவஸம்பவ: । ஸாக்ஷ்யாஸ்யத்ஸ்வ ஸ்வயா யாத்ம்யப்ரகாசே ஸ்வயம்ஸம்யக்த: ஸ்வாஜ்ஞாநவிரோதிநஸ்ஸ்வநிவர்த்த கேந் ஜ்ஞாநாந்தரம்வேக்ஷதே । ப்ரஹ்மத ஸ்வாநந்தஸவஸிஸஸ்வயாதா த்ம்யமிதி ஸ்வாஜ்ஞாநவிரோதித்வ, தத ஏவ நிவர்த்தகாஜ்ஞாநம் நா பேக்ஷதே ॥

ஸ்ரீபாஷ்யம்—

விசேஷமற்றதும் ஸ்வயம்ப்ரகாசமாகவுமிருக்கிற வஸ்துவினிடத்தில் ஈச்வரன் ஈசிதவ்யங்கள் முதலிய அளவிறந்த விகல்பங்களுடன் கூடின இந்த உலகம் அனைத்தும் தோஷத்தால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. தோஷமென்பது ஸ்வரூபத்தை மறைக்கிறதும், பற்பலவிதங்களாகவும் விசித்திரங்களாகவுமிருக்கிற விக்ஷேபங்களை உண்டுபண்ணுகிற தன்மைவாய்ந்துள்ளதும், ஸத்தென்றாவது அஸத்தென்றாவது நிர்வசனம் செய்யத்தகாததுமான அநாதியாக இருக்கிற அவித்யை. அந்த அவித்யை அவசியம் ஒப்புக்கொள்ளத்தக்கது; "அந்ருதேந ஹி ப்ரத்யூடா:" இது முதலிய ச்ருதிகளாலும், ப்ரஹ்மத்திற்கு 'தத் த்வமஸி' இது முதலிய வாக்யஸாமாநாதிகரண்யத்தினால் அறியப்பட்டிருக்கிற ஜீவைக்யத்தினது அனுபபத்தியினாலும். அந்த அவித்யையேவென்றால் ஸத்தல்ல, ப்ராந்தி பாதம் இரண்டும் பொருந்தாமல்போகவேண்டுவதால். அது அஸத்துமல்ல, க்யாதி பாதம். இந்த இரண்டும் பொருந்தாமல்போகவேண்டுவதால். ஆகையால் இரண்டு கோடிகளினின்றும் விடுபட்டது இந்த அவித்யை என்று தத்வத்தை உணர்ந்தவர்கள் கூறுகின்றனர் என்று யாதொன்று உரைக்கப்படுகிறதோ, அது யுக்தமன்று; அந்த அவித்யையானது எதை ஆச்ரயித்து ப்ரமத்தை உண்டுபண்ணுகிறது? ஜீவனை ஆச்ரயித்து ப்ரமத்தை உண்டுபண்ணுகிறதில்லை. ஜீவபாவமானது அவித்யையினால் ஏற்படுத்தப்பட்டிருப்பதால். ப்ரஹ்மத்தை ஆச்ரயித்தும் ப்ரமத்தை உண்டுபண்ணுகிறதில்லை; அந்த ப்ரஹ்மமானது தனக்குத்தானாகவே ப்ரகாசிக்கிற ஜ்ஞாநஸ்வரூபமாக இருப்பது பற்றி அவித்யாவிரோதியாக இருப்பதால். அந்த அவித்யையானது ஜ்ஞாநத்தினால் பாதிக்கத்தக்கதென்றல்லவோ (உன்னால்) அபிமானிக்கப்பட்டிருக்கிறது. "ஜ்ஞாநரூபம் பரம்ப்ரஹ்ம தந்நிவர்த்யம் ம்ருஷாத்மகம், அஜ்ஞாநஞ்சேத் திரஸ்குர்யாத் க: ப்ரபுஸ்தந்நிவர்தக:. ஜ்ஞாநம் ப்ரஹ்மேதி சேத் ஜ்ஞாநமஜ்ஞாநஸ்ய நிவர்தகம். ப்ரஹ்மவத் தத்ப்ரகாசத்வாத் ததபி ஹ்யநிவர்த்தகம், ஜ்ஞாநம் ப்ரஹ்மேதி விஜ்ஞாநமஸ்தி சேத் ஸ்யாத் ப்ரமேயதா, ப்ரஹ்மணோऽநநுபூதித்வம் த்வதுக்த்யைவ ப்ரஸஜ்யதே". (அந்த ப்ரஹ்மத்தினால் நிவர்த்திக்கத்தக்க ம்ருஷாத்மகமான அஜ்ஞாநமானது ஜ்ஞாநரூபமான பரப்ரஹ்மத்தையே மறைக்குமேயானால் அதை விலக்கத்திறமையுள்ளவன் எவன்? ப்ரஹ்மம் ஜ்ஞாநஸ்வரூபமாயுள்ளது என்கிற ப்ரமாணஜ்ஞாநம் அஜ்ஞாநத்தைப்போக்கடிக்கும் திறமையுள்ளது, ஸ்வரூபஜ்ஞாநம் அஜ்ஞாநநிவர்த்தகமல்லவென்று கூறப்படுமேயானால், ப்ரஹ்மம்போல் அந்த ப்ரமாணஜ்ஞாநமானது அந்த ப்ரஹ்மத்

தின் ஸ்வரூபத்தைவிட வேறான ப்ரகாசமல்லாததாலால்? அதுவும் அஜ்ஞாநத்திற்கு நிவர்த்தகமாகா. ப்ரஹ்மமானது ஜ்ஞாநம் என்கிற விஜ்ஞாநமிருக்கிறதேயாகில் ப்ரஹ்மத்திற்கு ப்ரமாவிஷயத்வம் ஸம்பவித்துவிடும். உன்னுடைய சொல்லினாலேயே அநுபூதிஸ்வரூபமான ப்ரஹ்மத்திற்கு அநநுபூதித்வம் ப்ரஸங்கிக்கிறது) ப்ரஹ்மமானது ஜ்ஞாநஸ்வரூபம் என்கிற ஞாநமே அந்த அவித்யைக்கு பாதகம், ஸ்வரூபபூதமான ஜ்ஞானம் பாதகமல்லவென்று கூறப்படுமேயானால், அல்ல; இரண்டும் ப்ரஹ்மஸ்வரூபப்ரகாசமாக இருக்க ஒன்று அவித்யாவிரோதி மற்றொன்று அவித்யாவிரோதியல்லவென்கிற விசேஷம் அறியப்படாமையால். இது சொல்லப்பட்டதாக ஆகிறது—'ப்ரஹ்மமானது ஜ்ஞானரூபம்' என்கிற இந்த ஜ்ஞாநத்தினால் ப்ரஹ்மத்தினிடத்தில் எந்த ஸ்வபாவம் அறியப்படுகிறதோ, அது ப்ரஹ்மமானது ஸ்வயம்ப்ரகாசமாதலால் தானே ப்ரகாசிக்கிறது. ஆகையால் ப்ரஹ்மஸ்வரூபஜ்ஞாநம் அந்த ப்ரஹ்மவிஷயஜ்ஞாநம் இவ்விரண்டும் அவித்யாவிரோதிகளென்கிற விஷயத்தில் விசேஷம் யாதொன்றுமில்லை. மேலும், ஸ்வயம் அநுபவஸ்வரூபமான ப்ரஹ்மமானது வேறு அநுபவத்தினால் அநுபவிக்கத்தகாததாக இருப்பதுபற்றி உனக்கு அந்த ப்ரஹ்மவிஷயஜ்ஞாநம் உண்டாகிறதில்லை. ஆகையால் ஜ்ஞாநம் அஜ்ஞாநவிரோதியாக இருக்கிறதேயானால் தானேவிரோதியாக இருக்கிறது, ஆதலால் இந்த அவித்யைக்கு ப்ரஹ்மத்தை ஆச்ரயித்திருத்தல் ஸம்பவியாது. சிப்பி முதலியவைகளோவென்றால் தன்னுடைய உண்மையான ஸ்வரூபத்தை ப்ரகாசப்படுத்துவதில் தான் ஸாமர்த்தியமில்லாதவைகளாகவும், ஸ்வாஜ்ஞாநாவிரோதிகளாகவும் இருந்துகொண்டு, ஸ்வவிஷயமான அஜ்ஞாநத்தை விலக்குவதில் ஜ்ஞாநாந்தரத்தை அபேக்ஷிக்கின்றன. ப்ரஹ்மமோவெனில் ஸ்வாநுபவத்தால் ஸித்தமான ஸ்வயாதார்த்த்யமுள்ளதாக இருப்பது பற்றி ஸ்வாஜ்ஞாநவிரோதியே. அதனாலேயே வேறு நிவர்த்தகஜ்ஞாநத்தை அபேக்ஷிக்கிறதில்லை.

ச்ருதப்ரகாசிகை—

இதற்கு மேல் அவித்யையைத் தூஷிப்பதற்காக அது விஷயத்தில் அன்யனால் கூறப்பட்டுள்ள அர்த்தத்தை அநுவதிக்கிறார்—யதஸ்ரீ என்று. நிர்விசேஷத்திற்கு எவ்வாறு ப்ரமம் ஸம்பவிக்கலாமென்று கேட்கின், கூறுகிறார்— தோஷ என்று. ப்ரஹ்மத்தைத்தவிர்த்து தோஷமென்கிற ஒரு வஸ்து தனித்து இருக்குமேயாகில் அத்வைதத்திற்கு ஹாநி வருகிறதென்று கேட்கப்பட்டால் சொல்லுகிறார்—தோஷஃச என்று இந்த அர்த்தத்தில் அந்யனால் சொல்லப்பட்டிருக்கிற ச்ருதிகளையும் ஸ்ம்ருதிகளையும் அர்த்தாபத்திகளை

யும் காண்பிக்கிறார்—அந்ருதேந என்று. ஸதஸத்விலக்ஷணத்வத்தை உபபாதிக்கிறார்—ஸாது என்று, ப்ராந்திபாதயோராயோகாத் ப்ராந்திவிஷயத்வமும் பாதவிஷயத்வமும் இல்லாமல்போகவேண்டியதாக வருவதால். ப்ரமிதி ப்ராந்தி பாதங்களின் இன்றியமையாமையினால் ஸதஸதநிர்வசனீயத்வமென்று அர்த்தம் 'ஸதயாவ ஏவம பவ தா மயோக்த:'' என்பதுபோல பரமதமல்லவென்பதைக் காண்பிப்பதற்காக தத்வவித: என்று சொல்லப்பட்டது. தூஷிக்கிறார்—ததயுக்தம் என்று. ஆச்ரயாநுபபத்தி, திரோதாநாநுபபத்தி, ஸ்வரூபாநுபபத்தி, அநிர்வசநீயத்வாநுபபத்தி, ப்ரமாணாநுபபத்தி, நிவர்த்தகாநுபபத்தி, நிவ்ருத்யநுபபத்தி இவைகளால் தூஷிக்கப்போகிறவராக, முதலில் ஆச்ரயாநுபபத்தியைக் கூறுகிறார்—ஸாஹி என்று கிமாச்ரித்ய ஒன்றையும் ஆச்ரயித்து ப்ரமத்தை உண்டுபண்ணுகிறதில்லை என்று அர்த்தம், ஜீவனை ஆச்ரயித்தா? அல்லது ப்ரஹ்மத்தை ஆச்ரயித்தா? என்கிற விகல்பாபிப்ராயத்தால் கூறுகிறார்— நதாவத் என்று. ஜீவன் ஸித்தித்தால் அவித்யை ஸித்திக்கிறது. அவித்யை ஸித்தித்தால் ஜீவன் ஸித்திக்கிறான் என்பதனால அந்யோந்யாச்ரய தோஷமென்று அர்த்தம். ஜீவாஜ்ஞாநவாத * நிராஸமானது மேலே (ஆரம்பணாதிகரணத்தில்) விரிவாகக் கூறப்படப்போகிறதாதலால் இங்கு சுருக்கமாக உபந்யஸிக்கப்பட்டது. இதற்கு மேல் ப்ரஹ்மாச்ரயபக்ஷத்தைத் தூஷிக்கிறார்— நாபி என்று விரோதித்வம் எவ்வாறென்று கேட்கின் கூறுகிறார்—ஸாஹி என்று பரஹ்மவிஷயாஜ்ஞாநத்திற்கு அந்த ப்ரஹ்மப்ரகாசத்தால் பாதிக்கத்தக்கதன்மை இருப்பதால் விரோதம். இந்த இடத்தில் ஸ்ரீமந்நாதமுனிகளால் சொல்லப்பட்டுள்ள சுலோகங்களைச் சொல்லுகிறார் —ஜ்ஞாநநூபம் என்று ஸ்வப்ரகாசத்வம் சொல்லக் கருதப்பட்டிருக்கிறது ஜ்ஞாநத்தினால் விலக்கத்தக்குதியுள்ளதென்பதில் ஹேதுவைக் கூறுகிறார்—மிருஷாத்மகம் என்று ஸ்வரூபஜ்ஞாநம் அஜ்ஞாநவிரோதியல்லவன்றோ. பின்னையோ ப்ரமாணஜ்ஞாநமே விரோதி என்கிற பக்ஷத்தை அநுவதித்துத் தூஷிக்கிறார்—ஜ்ஞாநம் என்று, ப்ரஹ்மவத்தத்ப்ரகாசத்வாத் ஸ்வரூபத்தைவிட வேறுபடாத ப்ரகாசமாக இருத்தலால் என்று அர்த்தம் வெண்ணிறமுள்ளதும் காந்தியுள்ளதுமான திரவ்யமானது க்ரஹிக்கப்பட்டிருக்கும் தருணத்தில், ஆப்தவாக்கியம் முதலியவைகளால் திவ்யம் சுக்லபாஸ்வரம் என்று இவ்வளவுமாத்திரம் நூறுதடவை அறிவிக்கப்பட்டிருந்தபோதிலுங்கூட ப்ரமநிவ்ருத்தி உண்டாகிறதில்லையன்றோ. வேறு தூஷணத்தையும் சொல்லுகிறார்— ஜ்நாநம் என்று. அதனாலென்னவென்று கேட்கில் கூறுகிறார் ப்ரஹ்மண: என்று. இந்த சுலோகங்களுக்குள் முதலாவது சுலோகத்தினுடைய அர்த்தமானது முன்பு 'ஜ்ஞாநபாத்யாபிமதா' என்கிற கிரந்தத்தை ஈற்றில்கொண்ட பாஷ்யத்தினால் சொல்லப்பட்டது. இரண்டாவது சுலோகத்தை வியாக்கியானிக்கிறார்—ஜ்ஞாநஸ்வரூபம் என்று. ப்ரஹ்மஸ்வரூபப்ரகாசத்வேஸதி ஸ்வரூபவிஷயஜ்ஞாநத்வம் இருக்கையில் என்று அர்த்தம. விசேஷாநவகமாத் விஷயவைஷம்யமில்லாமையால் என்று அர்த்தம். ஏன் விசேஷம் அறியப்படுகிறதில்லை? ஜ்ஞாநத்திற்கு ப்ரமாணஜந்யத்வம் என்கிற விசேஷமிருக்கிறதென்று சொல்லப்படுமேயானால்? அதனால் என்ன? விஷயவைஷம்யம் இல்லையன்றோ, ஸ்வரூபபூதமான ஜ்ஞாநத்தைக் காட்டிலும் நிவர்த்தகஜ்ஞாநத்திற்கு விஷயவைஷம்யமிருக்கிறதா? இல்லையா? இருக்கிறதென்று சொல்வாயேயாகில் ஸவிசேஷத்வம் வந்துவிடுகிறது. இல்லை என்று சொன்னால் ஸ்வரூபமே நிவர்த்தகமாக ஆகலாம். ப்ரமாண

* நிராஸம்—விலக்குதல்.

ஐக்யஜ்ஞானமானது அநிவர்த்தகமானவாவது ஆகலாம். முன்னிலையிலிருக்கிற பாஸ்வர வஸ்துவை விஷயீகரிக்கிற ஜ்ஞானம்போல். ப்ரமாணஜந்ய ஜ்ஞானதவம் நிவர்த்தகத் வத்தில் ப்ரயோஜகம். இது * சுக்ல † பாஸ்வரத்ரவ்யம் என்கிற வாக்யத்தினலுண்டாகிற ஜ்ஞானத்திற்கு ‡ நிவர்த்தகத்வமில்லாமையால். ஆதலால் ப்ரமத்தை ஸஹிக்கிற ஆகாரத்தைக்காட்டிலும் வேறான $ ஆகாரத்தை விஷயமாகக்கொண்டிருத்தல் நிவர்த்தகத்வத்தில் ¶ ப்ரயோஜகம். அறிவுடையவர்களால் புகழத்தக்கவரே! விஷய § வைஷம்யமில்லாவிட்டாலும் ஒரு ஜ்ஞானத்திற்கு ப்ரமாவிரோதித்வமும் ஒரு ஜ்ஞானத்திற்கு ப்ரமவிரோதித்வமும அபிஜ்ஞை ℣ ப்ரத்யபிஜ்ஞைகளிரண்டிலும் காணப்பட்டிருக்கிறது. "இவன் ஒரு தேவதத்தன்" என்கிற அபிஜ்ஞைக்கு விஷயம் ஒன்றாக இருந்தபோதிலும, முன் பார்க்கப்பட்டவனைக் காட்டிலும் இவன் அந்யனென்று புருஷத்வித்வ ப்ரமம் காணப்பட்டிருக்கிறது. ப்ரத்யபிஜ்ஞைக்கோவென்றால் 'ஸோயமேவ தேவதத்த:' (அன்று நான் கண்ட தேவதத்தனும் இவனும் ஒருவனே) என்று தேவதத்தைக்யம் விஷயமாயிருந்தபோதிலுங்கூட த்வித்வவிரோதித்வம் காணப்பட்டிருப்பதால், விஷயவைஷம்யமில்லாமலிருந்தபோதிலும் ப்ரமாணஜ்ஞானத்திற்கு ப்ரமநிவர்த்தகத்வம் யுக்தம் என்கிற சங்கைவரின் கூறுகிறார்—ஏததுக்தம் என்று. ஸத்பத்வம் ஜ்ஞானத்வம் முதலிய ஸ்வபாவமிருக்கிறதென்று கூறப்படுமேயானல், அது ஸ்வரூபத்தைக்காட்டிலும் வேறுபடாதது என்பதைக் காண்பிப்பதற்காக ஸ்வபாவ சப்தம். இதனுல் அபிஜ்ஞை ப்ரத்யபிஜ்ஞை இவ்விரண்டுக்கும் விஷயவைஷம்யம் உரைக்கப்பட்டதாக ஆகிறது. அபிஜ்ஞையில் ஒரு தர்மிக்கு ஒரு தேசத்துடனும் ஒரு காலத்துடனும் ஸம்பந்தம் அறியப்பட்டிருக்கிறது. இரண்டு காலங்களோடும் இரண்டு தேசங்களோடும் ஸம்பந்தம் அறியப்பட்டிருக்கவில்லை. ப்ரத்யபிஜ்ஞையிலோவென்றால் அது அறியப்பட்டிருக்கிறது. இது ஒரு தேசத்தோடும் ஒரு காலத்தோடும் ஸம்பந்தம் பெற்றுள்ளது என்கிற ஜ்ஞானமானது த்வித்வவிரோதியல்ல, ஒரு ‖ தர்மிக்கு இரண்டு காலங்களோடும் இரண்டு தேசங்களோடும் ஸம்பந்தமல்லவோ ஐக்யம. அதோ த்வித்வவிரோதியென்பதனுல், அந்த ஜ்ஞானமானது த்வித்வப்ரமத்தை விலக்குகிறது ஆகையால் அங்கும் விஷயவைஷம்யமிருக்கிறதென்று பலித்தது. இதற்கு மேல் மூன்றாவது சுலோகார்த்தத்திற்கு விசாரத்தில் பர்யவஸானத்தைக்கூறுகிறார்— கிஞ்ச என்று. ப்ரமாணஜ்ஞானத்வம் நிவர்த்தகத்வ வ்யாபகமாம். ஆகையால் அதிஷ்டானபூதமான ப்ரஹ்மஸ்வரூபத்திற்கு ப்ரமாணஜ்ஞானத்வமில்லாமையால் ப்ரமத்தைப்போக்கடிக்கும் திறமை இல்லை. அதிஷ்டானமாக இருப்பதால் சிப்பி முதலியதுபோல் ப்ரஹ்மஸ்வரூபமானது ப்ரமவிரோதியல்லாததால் ப்ரமாணாந்தரஜ்ஞானத்தை அபேக்ஷிக்கிறதென்கிற சங்கை வரின்? சொல்லுகிறார்—சுக்த்யாதயஸ்து என்று. அதிஷ்

* சுக்லம்—வெண்ணிறமுள்ளது. † பாஸ்வரம்—நல்ல ஒளியுள்ளது.

‡ நிவர்தகம்—விலக்கத்திறமையுள்ளது. $ ஆகாரம்—உருவம்.

¶ ப்ரயோஜகம்—ஸாதகம். § வைஷம்யம்—ஒற்றுமை இல்லாமை.

℣ ப்ரத்யபிஜ்ஞை—முந்தி அனுபவித்தவஸ்துவை நேரில் கண்டவுடன் அதுதான் இது என்று எண்ணுதல். ‖ தர்மி—தர்மங்களுடன் கூடியவஸ்து.

டானத்வத்திற்கு ஜ்ஞாநாந்தரவிஷயத்வம் * வ்யாபகம், ஆகலால் வ்யாபகநிவ்ருத்தியால் அதிஷ்டாநத்வத்தின் நிவ்ருத்தி, அதிஷ்டாநமாக இருத்தலாலேயே ப்ரஹ்மமானது ஸ்வரூபத்தின் ப்ரகாசமிருந்தபோதிலுங்கூட வேறு ப்ரமாணத்தை அபேக்ஷிக்கும். இவ்வண்ணமல்ல:-‡ ஜடமாக இருத்தலாலேயே யன்றோ சிப்பி முதலியவற்றுக்கு ஸ்வரூப $ ஸ்புரணமிருக்கும்பொழுதுகூட ப்ரமாணாந்தராபேக்ஷை, அதிஷ்டாநத்வத்தாலல்ல ஆதலால் அதிஷ்டாநத்வம் உபாதியோடுகூடியது. இந்த இடத்தில் அஜடமாக இருப்பதால் ஸ்வரூபஸ்புரணத்தில் ப்ரமாணாந்தராபேக்ஷை இல்லை என்று சொல்லப்படுமேயாகில் அப்பொழுது ஜடமாக இருத்தலாலேயே ப்ரம நிவ்ருத்தியில் சிப்பி முதலியவற்றுக்கு ஜ்ஞாநாந்தராபேக்ஷை அதிஷ்டாநத்வத்தாலல்ல ஆகையால் அது உபாதியோடுகூடியது, ஆதலால் அஜடத்திலேயென்றால் ப்ரமாணாந்தராபேக்ஷை ப்ரம நிவ்ருத்திவிஷயத்திலுங்கூட உண்டாகாது என்று அபிப்ராயம். "சுக்த்யாதயஸ்து" என்கிற இடத்திலுள்ள "து" சப்தமானது ப்ரஹ்மத்திற்கு சிப்பி முதலியவற்றைக்காட்டிலும் வேற்றுமையை உணர்த்துவதில் கருத்துள்ளது. ப்ரஹ்மவிஷயப்ரமாணஜ்ஞாநமும் ப்ரமத்தை நீக்குகிறது. ப்ரபஞ்சமித்யாத்வவிஷயஜ்ஞாநமும் ப்ரமத்தை நீக்குகிறதென்று அத்வைதிகளின் கதி இரண்டுவிதமன்றோ. அவற்றுள் முதலாவது பக்ஷம் தூஷிக்கப்பட்டது.

अत्रोच्यते- ब्रह्मव्यतिरिक्तस्य मिथ्यात्वज्ञानमज्ञानविरोधीति। तदिदं ब्रह्मव्यतिरिक्तमिथ्यात्वज्ञानं किं ब्रह्मयाथात्म्यज्ञानविरोधि, उत ब्रह्मणः सत्यत्वपरमार्थज्ञानविरोधीति विवेचनीयम्। न तावत् ब्रह्मयाथात्म्यज्ञानविरोधि- अतद्विषयत्वात्- ज्ञानाज्ञानयोरेकविषयत्वे हि विरोधः। ब्रह्मणो मिथ्यात्वज्ञानं तत्सत्यत्वपरमार्थज्ञानेन विरुध्यते। तेन ब्रह्मणः सत्यत्वपरमार्थज्ञानमेव बाध्यत इति ब्रह्मस्वरूपज्ञानं तिष्ठत्येव। ब्रह्मस्वरूपज्ञानं नाम तस्य सद्वितीयत्वेन तत्त्वं, तद्व्यतिरिक्तस्य मिथ्यात्वज्ञानेन निवृत्तौ स्वरूपञ्च स्वानन्दावसित्तिरिति चेत्, न ब्रह्मणोऽद्वितीयत्वं स्वरूपं स्वानन्दावसित्ति तद्विरोधि सद्वितीयत्वस्वरूपज्ञानं तत्त्वाय च नस्यातां। अद्वितीयत्वं यद्यपि चेत्, न- अनन्तस्वरूपस्य ब्रह्मणोऽनन्तस्य यद्विरुद्धस्य सत्त्वेन व्याहतत्वात्। अतो ज्ञानस्वरूपस्य ब्रह्मणो विरोधादेव नाज्ञानाश्रयत्वम्॥

---

* வ்யாபகம்—அதிக தேசத்தில் இருக்கிறவஸ்து.
வ்யாப்யம்—ஸ்வல்பதேசத்திலிருக்கிற வஸ்து.
‡ ஜடம்—ஜ்ஞானமில்லாதது. $ ஸ்புரணம்—ப்ரகாசம்.

𑌕𑌿𑌞𑍍𑌚, 𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌯𑌾 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌐𑌕𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌤𑌿𑌰𑍋𑌹𑌿𑌤𑌮𑌿𑌤𑌿 𑌵𑌦𑌤𑌾 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌨𑌾𑌶 𑌏𑌵𑍋𑌕𑍍𑌤𑌃 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 । 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌤𑌿𑌰𑍋𑌧𑌾𑌨𑌂 𑌨𑌾𑌮 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑍋𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑌿𑌪𑍍𑌰𑌤𑌿𑌬𑌨𑍍𑌧𑍋 𑌵𑌿𑌦𑍍𑌯𑌮𑌾𑌨𑌸𑍍𑌯 𑌵𑌿𑌨𑌾𑌶𑍋 𑌵𑌾 । 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌸𑍍𑌯𑌾𑌨𑍁𑌤𑍍𑌪𑌾𑌦𑍍𑌯𑌤𑍍𑌵𑌾𑌭𑍍𑌯𑍁𑌪𑌗𑌮𑍇𑌨 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌤𑌿𑌰𑍋𑌧𑌾𑌨𑌂 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌨𑌾𑌶 𑌏𑌵 ।

ஸ்ரீபாஷ்யம்—

அப்படிக்கின்றி ப்ரஹ்மத்தைத்தவிர்த்த மற்ற எல்லா வஸ்துக்களும் மித்யை என்கிற ஜ்ஞாநம் அஜ்ஞாநவிரோதி என்று சொல்லப்படுமேயானால்,--அல்ல. ப்ரஹ்மத்தைத்தவிர்த்த மற்ற வஸ்துக்களனைத்தும் மித்யை என்கிற இந்த ஜ்ஞாநமானது ப்ரஹ்மத்தின் யாதாத்ம்யாஜ்ஞாநவிரோதியா? அல்லது ப்ரபஞ்சத்தின் ஸத்யத்வரூபமான அஜ்ஞாநத்திற்கு விரோதியா? என்று பகுத்தறியத்தக்கது. அது ப்ரஹ்மயாதாத்ம்யாஜ்ஞாநவிரோதியல்ல. இந்த ஜ்ஞாநமானது அதை விஷயீகரிக்காததால் ஜ்ஞாநம் அஜ்ஞாநம் இரண்டுக்கும் விஷயம் ஒன்றாக இருந்தாலல்லவோ விரோதம். ப்ரபஞ்சமித்யாத்வஜ்ஞாநமானது அந்த ப்ரபஞ்சஸத்யத்வரூபாஜ்ஞாநத்தோடு விரோதமுள்ளது. அந்த ப்ரபஞ்சமித்யாத்வஜ்ஞாநத்தால் ப்ரபஞ்சஸத்யத்வரூபமான அஜ்ஞாநமே பாதிக்கப்பட்டதாக ஆகிறதாதலால் ப்ரஹ்மஸ்வரூபாஜ்ஞாநம் இருக்கவே இருக்கிறது. ப்ரஹ்மஸ்வரூபாஜ்ஞாநமாவது அது இரண்டாவதோடுகூடி இருத்தலே அதோ அந்த ப்ரஹ்மத்தைத்தவிர்த்து மற்ற வஸ்துக்கள் அனைத்தும் மித்யை என்கிற ஜ்ஞாநத்தால் நிவ்ருத்தித்து விட்டது, ஸ்வரூபமோவென்றால் ஸ்வாநுபவஸித்தம் என்று சொல்லப்படுமேயானால் அது ஸரியல்ல:—ப்ரஹ்மத்தினுடைய அத்விதீயத்வஸ்வரூபமானது ஸ்வாநுபவஸித்தமாக இருப்பதால் அதற்கு விரோதியான ஸத்விதீயத்வரூபாஜ்ஞானமும் அதின் பாதமும் உண்டாகாது. அத்விதீயத்வம் தர்மமென்று கூறப்படுமேயானால் அது ஸரியல்ல. அநுபவஸ்வரூபமான ப்ரஹ்மத்திற்கு அநுபாவ்யமாக இருக்கிற தர்மத்தின் இன்மையானது உன்னாலேயே சொல்லப்பட்டிருப்பதால், ஆகையால் ஜ்ஞாநரூபமான ப்ரஹ்மத்திற்கு விரோதத்தாலேயே அஜ்ஞாநாச்ரயத்வமில்லை.

மேலும் ப்ரகாசத்தையே ஸ்வரூபமாகக்கொண்ட ப்ரஹ்மமானது அவித்யையினால் மறைக்கப்பட்டிருக்கிறதென்று சொல்லுகிறவனால் ஸ்வரூப

நாசமே சொல்லப்பட்டதாக ஆகும், ப்ரகாசத்தின் * திரோதானமாவது ப்ரகாசத்தினுடைய உத்பத்தியின் பாதிபந்தம், அல்லது இருக்கிற ப்ரகாசத்தின் நாசம். ப்ரகாசத்திற்கு உண்டுபண்ணப்படத்தக்க தன்மை ஒப்புக்கொள்ளப்படாததால் ப்ரகாசத்தின் திரோதானம் ப்ரகாசத்தின் நாசமே.

ச்ருதப்ரகாசிகை—

இதற்கு மேல் இரண்டாவது பக்ஷத்தைத் தூஷிப்பதற்காகச் சங்கிக்கிறார்—அதோச்யேத என்று. தூஷிக்கிறார்— ந இதி முதலியதால். இதமித்தி, அய்யா! எவ்வாறு ப்ரபஞ்சஸத்யத்வம் அஜ்ஞாநமென்று சொல்லப்படுகிறது? அஜ்ஞாநமென்பது ஜ்ஞாநப்ரதிபந்தகமன்றோ. ப்ரபஞ்சஸத்யத்வமானது ஒருவனுடைய ஜ்ஞாநத்தையும் ப்ரதிபந்திக்கிறதில்லையன்றோ. வாஸ்தவம் தான். † ஆச்சாதகாஜ்ஞாநம் இப்படிப்பட்ட ஸ்வபாவமுள்ளது. ப்ரபஞ்சஸத்யத்வமும் அதன் ‡ ப்ரதிபாஸமும் விக்ஷேபரூபாஜ்ஞாநமென்று அந்யன் ஒப்புக்கொண்டிருப்பதால் இவ்வண்ணம் உரைக்கப்பட்டது. முதலாவது பக்ஷத்தைத் தூஷிக்கிறார்—அத்ர என்று. அதை விஷயமாகக்கொண்டிராததால் எவ்வாறு ப்ரஹ்மஸ்வரூபாஜ்ஞாநவிரோதித்வம்? என்று கேட்கில் கூறுகிறார்—ஜ்ஞாநாஜ்ஞாநயோ: என்று. விரோதம் வருகிற இடத்திலன்றோ நிவ்ருத்தி என்று அர்த்தம். இரண்டாவது பக்ஷத்தைத் தூஷிக்கிறார்— ப்ரபஞ்ச என்று. ப்ரபஞ்சமித்யாத்வஜ்ஞாநத்தால் ப்ரஹ்மஸ்வரூபாஜ்ஞாநநிவ்ருத்தி பலித்ததென்று ஆசங்கிக்கிறார்—ப்ரஹ்மஸ்வரூப என்று. ஸத்விதீயத்வம் ஸத்விதீயத்வஜ்ஞாநமென்று அர்த்தம். § ஸத்தையினால் ஸத்விதீயத்வம் ப்ரஹ்மஸ்வரூபாஜ்ஞாநமாக ஆகாதன்றோ. பாரமார்த்த்யமில்லாததால். ஸத்விதீயத்வ விசிஷ்ட ப்ரஹ்மகோசராஜ்ஞாநமானது நிவ்ருத்தித்தவுடன் விசேஷ்யாம்சகோசரமான ஜ்ஞாநமும் நிவ்ருத்தித்துவிட்டபடியால் ஸ்வரூபஸித்தி எவ்வாறு என்று வினவப்படுமேயாகில் கூறுகிறார்—ஸ்வரூபம் து என்று. தூஷிக்கிறார்—ந என்று. அத்விதீயத்வமென்பது ஸ்வரூபமா? அல்லது தர்மமா? என்கிற விகல்பாபிப்ராயத்தால் முதலாவதான ஸ்வரூபபக்ஷத்தைத் தூஷிக்கிறார்—ந என்று. தர்மபக்ஷத்தில் அபஸித்தாந்தத்தைக் கூறுகிறார்—அத்விதீயத்வம் என்று. ஆச்ரயாநுபபத்தியை முடிக்கிறார்—அத: என்று. விரோதாதேவ முன் சொன்ன விரோதத்தாலேயே என்று அர்த்தம். இவ்வாறாக ஆச்ரயாநுபபத்தியானது நிரூபிக்கப்பட்டது.

இதற்கு மேல் திரோதாநாநுபபத்தியைக் கூறுகிறார்—கிஞ்ச என்று. கற்றுணர்ந்தவரே! உம்முடைய பக்ஷத்திலும் ஜீவாத்மாக்களுக்கு நித்யமாக ஸ்புரணமிருக்கிறது, ஆயினும் அவர்களுக்கு ஸ்வரூப திரோதானமின்றி தேஹாத்மப்ரமமுண்டாகிறதில்லை; ஆதலால் அநுபபத்தியானது ஸமானம். உண்மை. ஸ்வரூபஸ்புரணமிருக்கவே இருக்

π திரோதானம்—மறைவு. † ஆச்சாதகம்—மறைக்கிறஸ்வபாவமுள்ளது.
‡ ப்ரதிபாஸம்—ப்ரகாசம். * ஸத்தை—ஸ்வரூபத்தின் நிலை.

கிறது. அதற்குத் திரோதானம் ஒப்புக்கொள்ளப்படுகிறதில்லை. ஸ்வரூபஸ்புரணம் ப்ரமவிரோதியல்ல பின்னேயோ நித்யவத்வம் அணுத்வம் நிரவயவத்வம் முதலியவைகளே ப்ரமவிரோதிகள். அவைகள் சாஸ்திரத்தினலறியத்தக்கவைகள். அவைகளுக்கு திரோதானமாவது அது விஷயமான ஜ்ஞாநப்ரஸராபாவரூபமான ஸங்கோசம் ஆகையால் ஸ்வரூபத்தைக்காட்டிலும் வேறான ஆகாராந்தரத்தின் திரோதானத்தை ஒப்புக்கொள்ளாததால் ஆத்மநாசத்திற்கு ப்ரஸக்தி இல்லை ஆத்மாவின் அஸாதாரணமான ஜ்ஞாநத்தினுடைய ஸ்புரணத்தினல் ப்ரமம் உபபன்னமாகாதென்று சொல்லப்படுமேயானுல் அல்ல. அதற்கு அஸாதாரணத்வம் ஸ்புரிக்காததால், அஸாதாரணமாக ஸ்புரிக்கின்ற தர்மத்திற்கன்றோ ப்ரமவிரோதம் காணப்பட்டிருக்கிறது. சுக்தித்வம் முதலியதற்குப்போல, சுக்தித்வமோவென்றால் சுக்தியின் அஸாதாரணதர்மமாக முந்தி அறியப்பட்டதாக இருந்துகொண்டு பிறகு ப்ரமத்தைப் போக்கடிக்கிறது. ஜ்ஞாநமானது தேஹத்தைக்காட்டிலும் வேறான ஆத்மாவின் அஸாதாரண தர்மமாக ஓரிடத்திலும் முந்தி பார்க்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால் ப்ரமம் ஸம்பவிக்கிறது. ஜ்ஞானம் ஆத்மாவினுடைய அஸாதாரணதர்மமாகக் காணப்பட்டிராததால் * அத்யாஸம், அத்யாஸத்தால் அஸாதாரணதர்மமாக க்ரஹிக்கப்படாமை என்று அந்யோந்யாச்ரயதோஷமானது அநாதியாக இருத்தலால் பரிஹரிக்கப்பட்டது, தர்மபூதஜ்ஞாநத்திற்கு நித்யத்வமும் திரோதானமும உங்களால் ஒப்புக்கொள்ளப்படுகிறது. அப்பொழுது ஜ்ஞாநநாசம் ப்ரஸங்கிக்குமென்று சொல்லப்படுமேயானுல். அல்ல, ஜ்ஞாநம் த்ரவ்யமன்ரோ- அதற்கு ஸ்வரூபத்தைத் தவிர்த்து வேறாக ஸங்கோசம் விகாஸமென்கிற இரண்டு அவஸ்தைகள் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆகையால் அதன் திரோதானமாவது கர்மாவினுல் அதன் ஸங்கோசம் அதன் நிவ்ருத்தியோவெனில் ஜ்ஞாநத்தின் விகாஸம், அதே ப்ரகாசம். அதுவும் அநித்யம், அது அநித்யமாக இருந்தபோதிலும் நித்யமான ஜ்ஞாநத்ரவ்யத்திற்கு ஸ்வப்ரகாசத்வமானது ஸ்வப்ரகாசரூபப்ரஸரணர்ஹதையை ஹேதுவாகக் கொண்டது, ஆதலால் இரண்டு அவஸ்தைகளும் தோன்றுவதும் அழிவதுமாக இருப்பது பற்றி த்ரவ்யம் நித்யமே, நமமுடைய அவஸ்தைகளின் ஸ்தானத்திலன்ரோ உம்முடைய ப்ரகாசம். அதே ஸ்வரூபம், அதனுல் திரோதானம் அதன் நிவ்ருத்தியே. இவ்வாறாக இந்த அர்த்தத்தை மனதில் கருதி ‘ப்ரகாசைகஸ்வரூபம் ப்ரஹ்ம’ என்று கூறப்பட்டது, ஆதலால் ஸ்வரூபத்தைவிட வேறான ப்ரகாசம் திரோதானம் என்கிற இரண்டு அவஸ்தைகளை ஒப்புக்கொள்ளாததால் ஸ்வரூபநாசமே திரோதானமாக ஆகுமென்று அர்த்தம்,

---

अपि च निर्विषया निराश्रया स्वप्रकाशमानानुभूतिः
स्वाश्रयदोषवशादनन्ताश्रयानन्तविषयाकारानुभवतीत्य-
त्र किंरूपं स्वाश्रयदोषः सर्वासामनुभूतीनां च सर्वासामनुभूती-
नामिति विवेचनीयम् । न तावद्ब्रह्मानुभूतिः, अनन्यानुभवसाक्षिकत्वात् । नाप्य-
न्यानुभूतिः, तयासति हि ज्ञातृत्वज्ञेयत्वे ज्ञातरि

---

* அத்யாஸம்—ஒன்றின் மீது மற்றென்றை ஏறிடுதல்.

த்வேநாஸ்யாநுபபத்தே:। ந தாவத்த்ருசி:- த்ருசிஸ்வரூபபேதாநப்யு-
பகமாத்। த்ருசேரதிஷ்டாநத்வேநாபாஸ்ய ஸாக்ஷாத்த்ருசே: ச்ராயமாணத்வ
க்ஷ்யஸ்ய ஸம்ஸ்தாநாபாரமார்த்யா நஹ்யுபகமாச்ச த்ருஷ்டத்ருச்யபோ ஸ்த்
வஹிஷ்காயா த்ருசேஸ்ச காஞ்சித்கல்ப்ய தத்தோஷாஞ்ஞாநாபேக்ஷயா ந
ஸம்பா ஸ்யாத்। கல்பேதத்க்ருதிஜிஹீர்ஷயா பாரமார்த்யஸத்யநாபத்தி
ரேவ ப்ரஹ்மபேபோ தோஷ இதி சேத்। ப்ரஹ்மவேதோஷ:
ப்ரபஞ்சஸ்யாநபேக்ஷ்ய தத்பேதம் ஸ்யாத்। கிம் ப்ரபஞ்சத்ருஷ்யாலி
த்ருஷ்டாஞாரவலிக்ஷ் நேந। ப்ரஹ்மணோ தோஷகேவலதி தஸ்யநித்யகேவ
நாமிதேராக்ஷ்யஸ்யாத்। கதாயாவத் ப்ரஹ்மவ்ருத்திஸ்வாராயிதக
தோஷாநஸ்யாபகே:, ந தாவத் ப்ராஹிபாவபாதிதா ஸகதி।

ஸ்ரீபாஷ்யம்—

மேலும், விஷயமில்லாததும் ஆச்ரயமில்லாததும் தானாக ப்ரகாசிக்கிற ஸ்வபாவமுள்ளதுமான இந்த அநுபூதியானது தன்னை ஆச்ரயித்திருக்கிற தோஷவசத்தினால் முடிவற்ற ஆச்ரயங்களுள்ளதாகவும் முடிவற்றவிஷயங்களுள்ளதாகவும் தன்னை அனுபவிக்கிறதென்கிற விஷயத்தில் இந்த அநுபூதியை ஆச்ரயித்திருக்கிற தோஷமானது உண்மையாக இருக்கிறதா? அல்லது அஸத்யமாக இருக்கிறதா? என்று விவேசனம் செய்யத்தக்கது. அது உண்மையானதல்ல—அப்படி ஒப்புக்கொள்ளாமையால். அஸத்யமுமல்ல, அப்படி அஸத்யமாக ஒப்புக்கொள்ளும்பக்ஷத்தில் அது * த்ரஷ்ட்ருரூபமாகவாவது ‡ த்ருச்யரூபமாகவாவது ¶ த்ருசிரூபமாகவாவது ஒப்புக்கொள்ளத்தக்கது. அது த்ருசியல்ல—த்ருசியின் ஸ்வரூபபேதம் ஒப்புக்கொள்ளப்படாமையால், ப்ரமத்துக்கு அதிஷ்டானமாக ஆகியிருக்கிற ஸாக்ஷாத் த்ருசிக்கு $ மாத்யமிகபக்ஷப்ரஸங்கத்தால் அபாரமார்த்யம் ஒப்புக்கொள்ளப்படாமையாலும், த்ரஷ்டா, த்ருச்யம் அவைகளோடுகூடின த்ருசி இவை மூன்றும் கால்பநிகங்களாதலால் இந்த கல்பனைக்கு மூலமான வேறு தோஷமபேக்ஷிக்கப்படுவ

* த்ரஷ்டா—பார்ப்பவன் ‡ த்ருச்யம்—பார்க்கத்தக்கது

¶ த்ருசி—ஞானம் அல்லது தர்சனம்

$ மாத்யமிகன்—புத்தனுடைய சிஷ்யர்கள் நால்வருள் ஒருவன். இவன் ஸர்வசூன்யவாதி,

தால் அநவஸ்தை உண்டாகும். அதற்கு மேல் இதைப்பரிஹரிக்கவேண்டுமென்கிற விருப்பத்தினுல் பரமார்த்தமாக இருக்கிற ப்ரஹ்மஞானமயான அநாதியை தோஷமென்று கூறப்படுமேயானுல், ப்ரஹ்மமே தோஷமானுல் ப்ரபஞ்சதர்சநத்திற்கே அது மூலமாக ஆகவேண்டியதாக ஆகும். ப்ரபஞ்சத்திற்கு ஸமாநமான வேறு ஒரு அவித்யையை கல்பிப்பதால் யாது பயன்? ப்ரஹ்மமே தோஷமானுல் அது நித்யமாதலால் அதற்கு அவித்யையினின்று விடுதலை ஒருக்காலும் உண்டாகாது. ஆதலால் எவ்வளவு வரையில் ப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறான பாரமார்த்திகமான தோஷம் ஒப்புக்கொள்ளப் படவில்லையோ, அவ்வளவு வரையில் ப்ராந்தியானது உபபாதிக்கப்பட்டதாக ஆகிறதில்லை.

ச்ருதப்ரகாசிகை —

இதற்கு மேல் ஸ்வரூபாநுபபத்தியைக் கூறுகிறூர்—அபிச என்று. * ஜ்ஞாத்ருத்வம் முதலியவைகள் அபாமார்த்தங்களாக இருப்பதினுலன்றோ வேறு தோஷம் அபேக்ஷிக்கப்படுகிறது. அப்படிப்போலிவ்விடத்திலுமென்று த்ருஷ்டாந்தமாக இனி கூறப்போகிற அநவஸ்தைக்கு ஸாதகமாக "நிர்விஷய" என்கிற பதத்தைத்தொடக்கத்தில் கொண்டவாக்ய $ பரிபாடியின் ப்ரகடனம் செய்யப்பட்டது, அன்றிக்கே, விஷயாச்ரய பேதங்களுக்கு அஸத்த்வம் ப்ரதிபாஸம் இவை இரண்டுகளின் உக்தியானது தோஷ கல்பனைக்குக் காரணமாகச் செய்யப்பட்டிருக்கிறது. அநப்யுபகமாத் இதி. பரமார்த்தமென்று சொல்லும்பக்ஷத்தில் அத்வைதத்திற்கு ஹானிப்ரஸங்கிக்கும் என்று கருத்து, அபாமார்த்தபக்ஷத்தைத் தூஷிப்பதற்காக மூன்றுகோடிகளை ஸம்பாவிதங்களென்று சொல்லுகிறூர்— த்ருஷ்டி என்று. பரமார்த்தமல்லாததாக இருப்பது பற்றி மூல தோஷாந்தரம் அபேக்ஷிக்கப்படுவதால் அநவஸ்தை என்கிற தூஷணமானது மூன்று கோடிகளுக்கும் பொதுவானது த்ருஷித்வபக்ஷத்தில் அதிக தூஷணமிருக்கிறதென்பதைக் காண்பிக்கிறூ— நதாவத் என்று, த்ருஷியானது அநவச்சின்னையா? அவச்சின்னையா? த்ருஷி அநவச்சின்னை என்று சொல்லின் அது ஸ்வரூபத்தைக் காட்டிலும் வேறானதா? அல்லது ஸ்வரூபமேயா? என்கிற விகல்பத்தை எண்ணி அநவச்சின்னபக்ஷத்தில் ஸ்வரூபத்தைக்காட்டிலும் வேறு என்கிறபக்ஷத்தை தூஷிக்கிறூர்— த்ருஷிஸ்வரூபபேதாநப்யுபகமாத் என்று. அநவச்சின்னையான இரண்டு த்ருஷிகளை ஒப்புக்கொள்ளாமையாலென்று அர்த்தம். அநவச்சின்னபக்ஷத்தில் ஸ்வரூபத்ருஷிபக்ஷத்தை தூஷிக்கிறூர்— ப்ரம என்று, அவச்சின்ன த்ருஷிக்கு தூஷணமாக இனி கூறப்போகிற அநவஸ்தையானது அநவச்சின்னபக்ஷத்திலும ஸமாநமானது. இந்த இடத்தில் அதிகமாக இரண்டு தூஷணங்களிருப்பதால் அது சொல்லப்படவில்லை. அவச்சின்ன த்ருஷியாகவும்

---

* ஜ்ஞாத்ருத்வம்—ஜ்ஞாதாவினுடைய தன்மை　　$ பரிபாடி—ரைலி

த்ரஷ்டாவாகவும், த்ருச்யமாகவும் ஒப்புக்கொள்ளுதலை தூஷிக்கிறார்— த்ரஷ்ட்ருத்ருச்யயோ: என்று. கால்பநிகத்வேந- அபரமார்த்தமாக இருப்பதாலென்று அர்த்தம் இந்த கால்பனிகத்வமானது தோஷாந்தராபேக்ஷைக்கு ஹேது. அவச்சிந்நத்ருசிபக்ஷத்திலுங்கூட ஸ்வரூபமா? அதைக்காட்டிலும் வேறானதா? என்கிற விகல்பத்திலும், ஸ்வரூபபக்ஷத்திலும * அநப்யுபகமரூப தூஷணம் துல்யம். ப்ரஹ்மஸ்வரூபமானது அவச்சிந்நமென்றும் அபரமார்த்தமென்றும ஒப்புக்கொள்ளப்படாததால், ஆகையால் அவச்சிந்நபக்ஷத்தில் விகல்பிக்கப்படவில்லை. ஸ்வரூபத்தைக்காட்டிலும் வேறு என்கிற, பக்ஷத்தில் அநவஸ்தை கூறப்பட்டது— அநந்த் என்று. அபாமார்த்திகமென்று சொன்னால் அநவஸ்தை, பரமார்த்தமென்று சொனனால் அத்வைதத்திற்கு ஹானி வருகிறது என்கிற இந்த தோஷங்களை பரிஹரிக்கவேண்டுமென்கிற எண்ணத்தினலென்று அர்த்தம். அநுபூதியே தோஷமாதலால் அத்வைதத்திற்கு ஹானி இல்லை. அது பரமார்த்தமாதலால் அநவஸ்தையுமில்லை என்று கருத்து. இதை தூஷிக்கிறார்—ப்ரஹ்மைவ என்று. அபரமார்த்தமாக இருப்பதனலேயே தோஷாந்தரத்தை அபேக்ஷித்தலென்கிற ஸாம்யத்தைக்கருதி ப்ரபஞ்சதுல்யசப்தம் கூறப்பட்டது. அத:--ப்ரதிபக்ஷத்தில் கூறப்பட்டிருக்கிற தூஷணங்களாலென்று அர்த்தம தோஷத்தினின்று விடுபடாமை ப்ரஸக்தமாகவே அதைப் பரிஹரிப்பதற்காக ப்ரஹ்மவ்யதிரிக்தத்வம். அநவஸ்தையை பரிஹரிபபதற்காக பாரமார்த்திகத்வம்.

அந்யர்களால் அநவஸ்தையானது மூன்றுவிதமாக பரிஹரிக்கப்பட்டது. ஜீவாஜ்ஞாநவாதியினல் § பீஜாங்குர ந்யாயத்தால் ப்ரவாஹாநாதியாக இருத்தலாலென்று பரிஹரிக்கப்பட்டது. அவித்யையினல் ஜீவன் ஜீவனல் அவித்யையென்றல்லவோ அவர்களின் மதம். ப்ரஹ்மாஜ்ஞாநவாதியினல் ஸ்வரூபம் அநாதி என்று பரிஹரிக்கப்பட்டது. இருவர்களாலும் துர்கடத்வமென்கிற தன்மையினல் பரிஹரிக்கப்பட்டது. துர்கடத்வம் அவித்யைக்கு பூஷணம் தூஷணமல்லவென்று பரமார்த்தத்திற்கல்லவோ உபபத்தியின் அபேக்ஷை. பெரியமாளிகைகளை விழுங்குதல் முதலிய செய்கைகளில் ''சிறியவாயுள்ள மனிதன் பெரியமாளிகையை விழுங்குவதென்பது பொருந்தா''தென்கிற யுக்தி ப்ரவ்ருத்திக்கிறதில்லை. ஆதலால் உபபத்தியை அபேக்ஷியாமலிருத்தல் அபாரமார்த்யத்திற்கு ஸாதகம். தோஷத்திற்கு ஸ்வபரநிர்வாஹகத்வம் இருப்பதாலும், வேறுதோஷத்தை அபேக்ஷித்தலில்லாமையாலும் அநவஸ்தை இல்லை. இந்த விஷயத்தில் மறுமொழி உரைக்கப்படுகிறது. ப்ரவாஹாநாதித்வமானது ப்ரஹ்மாஜ்ஞாநவாதியினல் முன்பே அறிவிக்கப்பட்ட உத்தரத்துடன் கூடியது: ஜீவன்களுக்கு நித்யத்வத்தைச் சொல்லுகிற சுருதிகளாலும், செய்யப்பட்டிராத வினைப்பயன்களின் வரவு செய்யப்பட்டிருக்கிற வினைப்பயன்களின் அழிவு முதலியவைகளை உணர்த்துகிற ச்ருத்யர்த்தாபத்தியினலும் மோக்ஷம் வரையில் ஜீவன்களுக்கு இஷ்டமான ஸ்தாயித்வமானது இழக்கப்படவேண்டியதாக ஆகும். அபாரமார்த்யத்தில் ஸ்வரூபாநாதித்வமும அநவஸ்தைக்குப் பரிஹாரமில்லை, அங்ஙனமாகில், மாத்யமிகனுடைய பக்ஷத்திற்கு விஜயம் ப்ரஸங்கிப்பதால்; அவ்விடத்தில் அதிஷ்டானமானது ப்ராந்தியினல் நிலை பெற்றிருக்கிறதென்று சொல்லப்படுமேயானல், அந்த ப்ராந்திக்கு வேறு அதிஷ்டானபேக்ஷை உண்டாகவேண்டிவரும், அதிஷ்டாநாந்தரமும் ப்ராந்தி ஸித்தமென்று சொல்லப்படும்பக்ஷத்

* அநப்யுபகமம்—அங்கீகாரம்

§ பீஜம்—வித்து அங்குரம்—முளை,

தில் அநவஸ்தை ஏற்படுமென்பது பற்றி, அநவஸ்தையினுல் அதிஷ்டான பாரமார்த்யமன்றோ ஸாதிக்கப்பட்டதாயிற்று. மாத்யமிகனுல் அபாரமார்த்தாதிஷ்டானத்திற்கு ஸ்வரூபாநாதித்வம் ஏற்றுக்கொள்ளப்பட்டால் அநவஸ்தை பரிஹரிக்கப்பட்டதாக ஆகிறதாதலால், அதிஷ்டாநாபாரமார்த்யமே ஏற்படும். மேலும் ஸ்வரூபாநாதித்வம் ஒப்புக்கொள்ளப்பட்டபோதிலும், மூலதோஷாபேக்ஷை இருக்கவே இருக்கிறது. ஜீவன் அநாதியாயிருக்கையிலும் அந்த அநாதித்வமானது அவித்யையினுல் கல்பிக்கப்பட்டதென்று உங்களால் ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதால். துர்கடத்வமும் பொருத்தமுள்ளதன்று; துர்கடத்வமாவது உபபத்தியை அபேக்ஷியாமை, அது அபாரமார்த்யஸாதகமாக ஆகுமேயானுல், அபரமார்த்தமான ப்ரபஞ்சம் துர்கடமாக இருப்பது பற்றி உபபத்தியை அபேக்ஷியாமலிருப்பதால் மூலதோஷாபேக்ஷையும் உண்டாகாது. நிவர்தகஜ்ஞாநமிருக்கும் பொழுதுகூட அது இருக்கலாம். விரோதத்தால் அது இருக்கிறதில்லை என்று சொல்லப்படுமேயானுல், அங்ஙனமாகில், அவித்யையானது உபபத்தியை அநுவர்திக்கிற தன்மைவாய்ந்ததாக ஆய்விடும். உபபத்தியானது பரமார்த்தத்வப்ரயுக்தமென்றும், அபரமார்த்தத்வப்ரயுக்தமென்றும் இரண்டுவிதமானது. அதில் துர்கடத்வமாவது பரமார்த்தத்வப்ரயுக்தமான உபபத்தியை அபேக்ஷியாமலிருத்தல், அபரமார்த்தத்வப்ரயுக்தமான உபபத்தியல்லவோ தோஷாபேக்ஷை, ஆதலால் ப்ரபஞ்சத்திற்கு மூலதோஷபரிகல்பனம் யுக்தமென்று சொல்லப்படுமேயானுல்—அங்ஙனமாகில், அபரமார்த்தத்வப்ரயுக்தமான உபபத்திரூபதோஷாபேக்ஷையானது அபரமார்த்தபூததோஷத்திற்கும் இருக்கலாம், ஆதலால் அநவஸ்தையானது அந்த நிலைமையுள்ளதே; துர்கடத்வம் அநவஸ்தாபரிஹாரமாகுமேயானுல், அதிஷ்டாநாபாரமார்த்யத்திலும் அநவஸ்தை பரிஹரிக்கப்பட்டதாக ஆகலாம். அங்கு அபாரமார்த்யப்ரயுக்தமான உபபத்தியானது விடத்தகாததாக இருப்பது பற்றி, அதிஷ்டாநாபேக்ஷை உண்டாகவே உண்டாகலாம் என்பதனுல் அநவஸ்தை என்று சொல்லத்தக்கது, அது இதத தோஷத்திலும் துல்யமாதலால் அநவஸ்தை எவ்விதத்தாலும் பரிஹரிக்கமுடியாதது. ப்ரவாஹாநாதித்வபக்ஷத்திலும், அதிஷ்டானம் அபரமார்த்தமாக இருந்தபோதிலுங்கூட அநவஸ்தையானது எளிதில் பரிஹரிக்கத்தக்கது, பிதா புத்திரன் முதலியவர்களுடைய பரம்பரைபோல் அதிஷ்டாநபரம்பரைக்கு அநாதித்வம் ஒப்புக்கொள்வதால், ஜீவாஜ்ஞாநவாதியைக் குறித்து பரஹ்மாஜ்ஞாநவாதியினுல் துர்கடத்வ விஷயத்தில் எந்த தூஷணம் கூறப்பட்டதோ, அது ப்ரஹ்மாஜ்ஞாநவாதத்திலும் ஸமானம். அவித்யைக்கு துர்கடத்வமிருக்குமேயானுல், முக்தர்களையும் பரப்ரஹ்மத்தையும் அவித்யைதானது ஆச்ரயிக்கும். சுத்தஸ்வரூபமான ப்ரஹ்மத்தை அசுத்தரூபையான அவித்யையானது விரோதத்தால் ஆச்ரயிக்கிறதில்லை என்று சொல்லப்படுமேயானுல், அங்ஙனமாகில் அவித்யையானது உபபத்தியுடன் கூடியது. ஆதலால் முற்கூறப்பட்டுள்ள அந்யோந்யாச்ரயணம் முதலிய தூஷணங்கள் வந்துவிழுந்துவிடுமென்றல்லவோ உரைக்கப்பட்டது. அது உனக்கும் துல்யம். மோக்ஷத்தில்கூட அவித்யையானது ப்ரஹ்மத்தை ஆச்ரயிக்கும், பாதகஜ்ஞாநமிருக்கையில் அபரமார்த்தமான அவித்யையானது இருக்கிறதில்லை யன்றோவென்று சொல்லப்படுமேயானுல், பாதகமிருக்கும்பொழுது அதன் பக்கத்தில் பாதிக்கத்தக்கவஸ்து நிலைபெற்றிருஜெதன்கிற இவ்விதமான உபபத்தியுள்ளதே அவித்யை என்பதனுல் நம்மால் சொல்லப்பட்டிருக்கிற அநவஸ்தை முதலிய தூஷணங்கள் வந்துவிடுமென்று சொல்வதற்கு சக்யமானது. தோஷம் ஸ்வபாநிர்வாஹகமாகுமாகில் அதிஷ்டானமும் அவ்வாறு ஆகலாம். வேறொன்றைக் குறித்து அதிஷ்டாநத்வம் ஸித்தமானுலன்றோ ஸ்வநிர்வாஹகத்வம் என்று கூறப்படுமேயானுல் வேறொன்றைக் குறித்து தோஷத்வம் ஸித்தித்

தாலன்றோ ஸ்வநிர்வாஹகத்வம், அதே இல்லை என்பதனால் துல்யமாக ஆய்விடலாம். அதிஷ்டாநத்திற்கும் ஆரோபிக்கத்தக்கதற்கும் பேதமானது காணப்பட்டிருக்கிறது. அங்கு அதிஷ்டாநத்திற்கு ஸ்வபரநிர்வாஹகத்வம் சொல்லும்பக்ஷத்தில், அதிஷ்டானம் அத்யஸ்தம் இரண்டுக்கும் ஐக்யம் ப்ரஸங்கிக்குமென்று சொல்லப்படுமேயானால், தோஷமாகவும் தோஷகார்யமாகவும் இருக்கிற * திமிரம் த்விசந்த்ரத்வம் இவ்விரண்டுக்கும் பேதம் காணப்பட்டிருக்கிறது. தோஷத்திற்கு ஸ்வபரநிர்வாஹகத்வம் சொல்லும்பக்ஷத்தில் தோஷம் அத்யஸ்தம் இரண்டுக்கும் ஐக்ய ப்ரஸங்கம் வருவதால் துல்யம், இந்த அபிப்ராயத்தினால் "எவ்வளவுவரையில் ப்ரஹ்மத்தைத்தவிர்த்து வேறான பாரமார்த்திக தோஷமொப்புக்கொள்ளப்படவில்லையோ அவ்வளவுவரையில் ப்ராந்தியானது உபபாதிக்கப்பட்டதாக ஆகாதென்று" உரைக்கப்பட்டது. ஆசார்யர்களால் இவ்வாறு கூறப்பட்டிருக்கிறது—"ஸ்வரூபாநாதித்வஸ்வபரகடனே துர்கடநதா, ப்ரவாஹாநாதித்வம் புநரிதி சதஸ்ரோஹிகதய: அஸத்யாவித்யாயா கதிதுமநவஸ்தாபரிஹ்ருதௌ மதாஸ்த்வேதாஸ்துல்யா: ஸ்புடமஸததிஷ்டாநகலநே" என்று.

அநிர்வசநீயத்வஞ்ச கிமபி⁴ப்ரேதம் । ஸத³ஸத்³விலக்ஷணத்வமிதி சேத் । தத²ாவித⁴ஸ்ய வஸ்துந: ப்ரமாணஶூந்யத்வாந்நாநிர்வசநீயதைவ ஸ்யாத் । ந தத³க்ஷம் ப⁴வதி । ஸர்வம் ஹி வஸ்துஜாதம் ப்ரதீதிவ்யவஸ்தா²ப்யம் । ஸர்வா ப்ரதீதி: ஸத³ஸதா³காரா । ஸத³ஸதா³காராயாஸ்து ப்ரதீதே: ஸ்ஸத³ஸத்³விலக்ஷணம் விஷய இத்யப்⁴யுபக³மே ஸர்வம் ஸர்வப்ரதீதிவிஷயஸ்ஸ்யாதி³தி ।

ஸ்ரீபாஷ்யம்—

அநிர்வசநீயத்வம் என்னவென்று அபிப்ராயப்படப்பட்டிருக்கிறது? ஸத்தையும் அஸத்தையும் விட விலக்ஷணமாக இருத்தல் அநிர்வசநீயத்வம் என்று சொல்லப்படுமேயானால், அப்படிப்பட்ட வஸ்து ஒன்று உண்டு என்பதில் ப்ரமாணமில்லாமையால் அநிர்வசநீயதையே இராது இது சொல்லப்பட்டதாக ஆகிறது. எல்லாவஸ்துக்களும் ப்ரதீதியினால் வ்யவஸ்தாபிக்கத் தக்கவைகள். எல்லா $ ப்ரதீதிகளும் ஸதஸதாகாரமாக இருக்கின்றன. ஸதஸதாகாரமானஜ்ஞாநத்திற்கு ஸதஸத்விலக்ஷணம் விஷயமென்று ஒப்புக்கொ

---

* திமிரம்—கண்ரோகம் $ ப்ரதீதி—ஜ்ஞாநம்

ள்ளப்படும்பக்ஷத்தில் எல்லாம் எல்லாப்ரதீதிகளுக்கும் விஷயமாக ஆகவேண்டியதாக ஆகும்

ச்ருதப்ரகாசிகை—

இதற்குமேல் அநிர்வசநீயத்வாநுபபத்தியைச்சொல்லுகிறார்— அநிர்வசநீயத்வஞ்ச என்று. அநிர்வசநீயதா வித்வான்களுடைய ஸந்நிதியில் எவ்விதத்தாலும் உபபாதிக்கமுடியாமலிருத்தல். எவ்வாறு ப்ரமாணசூந்யமென்று வினவப்படுமேயாகில் சொல்லுகிறார்— ஏததுக்தம் என்று. ஸர்வம் ஸர்வப்ரதீதேர்விஷயஸ்ஸ்யாத் இதி, ஸதஸத்விலக்ஷணமென்று யாதொரு ப்ரதீதியுண்டோ அந்த ப்ரதீதியிலும் ஸதஸத்தே விஷயமாக ஆகலாமென்று பொருள். நீலம் பீதம் முதலியது ப்ரதீதிக்கு அநுகுணமாக வல்லவோ வ்யவஸ்தாபிக்கப்படுகிறது. ஆகையால் ஸதஸதாகாரையான ப்ரதீதிக்கு ஸதஸதாகாரமே விஷயம் ஸதஸத்விலக்ஷணமாக இருக்கிற வஸ்து விஷயமல்ல. இந்த விஷயம் க்யாதி விவேகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது— ''நஹ்யந்யதவபாஸ்யம், அந்யோவிஷய: அவபாஸநவ்யவஸ்தாப்யத்வாத் விஷயஸ்ய'' (ஒன்று விஷயமாக இருக்க மற்றொன்று அவபாஸிக்கத்தக்கதில்லையன்றோ, விஷயங்கள் அவபாஸத்தால் வ்யவஸ்தாபிக்கத்தக்கதாக இருப்பதால்) என்று. ஒரே விஷயத்திற்கு ஸத்தாயும் அஸத்தாயுமிருக்கும் தன்மை பொருத்தமுள்ளதாக ஆகாது. வ்யாகாதவிரோதத்தாலென்று சொல்லப்படுமேயானால், ஸதஸத்விலக்ஷணத்வமும் வ்யாப்திவிரோதத்தால் பொருந்தாது. ஸத்துக்கு அஸத்விலக்ஷணத்வமும் அஸத்துக்கு ஸத்விலக்ஷணத்வமுமல்லவோ காணப்பட்டிருக்கிறது, ஒன்றுக்கு ஸத் அஸத் இந்த இரண்டைக்காட்டிலும் விலக்ஷணமாக இருத்தல் காணப்பட்டிருக்கவில்லை என்று வ்யாப்திவிரோதம். இது விசேஷ— ஸதஸத்விலக்ஷணத்வம் ஒரிடத்திலும் காணப்பட்டதில்லை. ஸதஸதாத்மகத்வம் காணப்பட்டிருக்கிறது—என்று. இந்த விஷயமானது ஸம்வித்ஸித்தி என்கிற க்ரந்தத்தில் உரைக்கப்பட்டிருக்கிறது—'நாஸத்ப்ரதீதேர்ப்பீதாச்ச ஸத்திப்பியந்த தத. ப்ரதீதேர்வ ஸத்வய ந பாதாந்நாஸத் குதோஜகத்'' என்று. உள்ளபடி பொருள்களை பராமர்சிக்கும்பொழுது ஸத்தாக இருத்தல் அல்லது அஸத்தாக இருத்தல் என்கிற இவ்விரண்டு குணங்களுக்குள் ஒன்றுதான் இருக்கவேண்டும். இப்படியன்றி ஸத் அஸத் இவ்விரண்டைவிட வேறாக இருத்தல் ஒருபொழுதும் கூடாது. ஸத்தாக இருக்கிறகடம் முதலியவஸ்துக்களுக்கு ஸத் அஸத் இவ்விரண்டுகளையும் விட விலக்ஷணமாக இருத்தல் என்னும் தன்மை காணப்பட்டிருக்கிறதே என்றால், அல்ல அப்படியானால் ப்ரஹ்மத்துக்குங்கூட ஸத்தாகவும் அஸத்தாகவுமிருக்கிற வஸ்துக்களைக்காட்டிலும் விலக்ஷணமாக இருத்தல் என்னும் தன்மை ப்ரஸங்கிப்பதால் இரண்டினுள்ளொன்றாக இருத்தல் என்பதை ஸஹிக்கிற ஸதஸத்விலக்ஷணத்வம இஷ்டமே என்று கூறப்படுமேயானால், அது இருவருக்கும் துல்யம். இப்படிப்பட்ட ஸதஸத் வைலக்ஷண்யத்தைச் சொல்லுகிற உன்னால் வேறு சப்தத்தால் ஸத்வமே அங்கீகரிக்கப்பட்டதாக ஆகிறது. ஆகையால் உனக்கு இஷ்டமாக இருக்கிற ஸதஸத்விலக்ஷணமாக இருத்தல் என்னும் தன்மையானது விரோதத்தால் தூரத்தில் விலக்கித்தள்ளப்பட்டது. ஸத்வமாவது இருக்கிறதென்று அறியப்பட்டிருத்தல், இல்லை என்கிற புத்திக்கு விஷயமாக இருப்பது அஸத்வம் அதாவது பாதிதத்வம் என்று. ஒன்றுக்கே இருக்கிற ஸத்வாஸத்வவிரோதமானது ஸதஸத்விலக்ஷணமாக இருக்கும்

தன்மையை ஏற்படுத்துகிறதென்று சொல்லப்படுமேயானால், எல்லா இடங்களிலும் பூர்வபக்ஷஸித்தாந்தஜ்ஞானங்கள் இரண்டுக்கும் அன்யோன்யம் விருத்தங்களான ஆகாரங்கள் விஷயமாக இருப்பதால் இரண்டு ஆகாரங்களை காட்டிலும் விலக்ஷணமாகவே இருக்கிற அர்த்தம் ஸாதிக்கத்தக்கதென்கிற ஸித்தாந்தத்தை ஸமர்த்திப்பது பயனற்றதாக ஆகும். அவ்வாறான பிறகு பேதம் எளிதில் நிரூபிக்கக்கூடியதென்பதை பூர்வபக்ஷமாகச்செய்து, பேதம் எவ்விதத்தாலும் நிரூபிக்கமுடியாததென்று உன்னால் ஸித்தாந்தம் செய்யப்பட்டிருப்பதில் இரண்டு ப்ரதீதிகளின் விரோதத்தினால் பேதமானது எளிதில் நிரூபிக்கத்தக்கதும் எவ்விதத்தாலும் நிரூபிக்கத்தகாததுமான பேதத்தைக்காட்டிலும் விலக்ஷணமாக ஆகவேண்டியதாகும். இவ்விதம் ஸம்வித்தின் ஸத்யத்வம் மித்யாத்வம் ஜடத்வம் அஜடத்வம் நித்யத்வம் அநித்யத்வம் முதலியவாதங்களில் ஸம்வித்துக்கு பூர்வபக்ஷஸித்தாந்தாகாரவிலக்ஷணமான ஆகாரத்துடன் சேர்ந்திருத்தல் ஏற்படவேண்டியதாக ஆகும், அதோ (உனக்கு) ஸம்மதமல்லாதது. ஆகையால் ஒன்றோடொன்று விருத்தங்களான ஆகாரப்ரதீதிகள் இரண்டிற்கும் ஏற்கனவே முந்தி அறியப்பட்டுள்ள ஆகாரங்களைவிட விலக்ஷணமான ஆகாரத்தை கல்பித்தல் வ்யாப்திவிருத்தமாதலால் ஸதஸத்வைலக்ஷண்யஸித்தி இல்லை, அப்படியானால் இன்றியமையாதவைகளான * க்யாதி $ பாதம் இவ்விரண்டுக்கும் யாது பரிஹாரம் கூறப்பட்டது என்று வினவப்படுமேயாகில், வேறுவிதமாகவே உபபத்தியானது சொல்லப்பட்டதாக ஆகிறது. ஸத்வம் இருக்க அந்தந்த வாதிகளுக்கு அபிமதங்களாக இருக்கிற அன்யதாக்யானம் முதலியவைகளாலேயே க்யாதி பாதம் இவ்விரண்டுக்கும் உபபத்தி ஏற்படுவதால். ஸத்தான வஸ்துவுக்கு எவ்வாறு பாதம்? வேறு இடத்தில் ப்ரஸித்தமாயிருத்தலால் அய்யா! வேறு இடத்தில் ஸத்தாக இருக்குமேயானால் பாதமில்லை ஸத்தில்லாமல்போகுமேயானால் அஸத்க்யாதியானது ப்ரஸங்கிக்குமென்று உரைக்கப்படுமேயானால் அல்ல- வேறு இடத்தில் ஸத்தாக இருப்பதால், ஓரிடத்தில் ஸத்தாக இருக்கிற வஸ்துவுக்கு மற்றோரிடத்தில் ப்ரஸித்தமாக இருத்தலன்றோ அந்யதாக்யாதத்வம். வேறு ஓரிடத்தில் ஸத்தாக இருக்கிற ஒரு வஸ்துவுக்கு மற்றோரிடத்தில் க்யாதியானது தோஷத்திற்கு அதீனமாக இருப்பதால் உண்டாகிறது. வேறு இடத்தில் க்யாதி உண்டாவதற்கு தோஷம் காரணமா என்பது காணப்பட்டதில்லை என்று கேட்கப்படுமேயானால், தோஷத்திற்கு இது இவ்விதமென்று நிச்சயமாகச் சொல்வதற்கு யோக்யமல்லாத வஸ்துவின் தோற்றத்திற்கு தோஷம் காரணம் என்பது விவாதாஸ்பதமாக இருக்கிற பதார்த்தத்தைத்தவிர்த்து வேறு ஒரு இடத்திலும் காணப்பட்டதில்லை என்பதால் துல்யம். ஒன்றோடொன்று விருத்தங்களென்ற அறியப்பட்டிருக்கிற இரண்டு ஆகாரங்களைக் காட்டிலும் விலக்ஷணமாக இருத்தல் ஒன்றுக்கு விருத்தமன்று என்கிற இந்த அம்சம் உனக்கு அதிகம். § அக்யாதி பக்ஷத்தில் ஸத்வம் இருக்கையில் பேதக்ரஹணமில்லாமையால்

---

* க்யாதி—ஜ்ஞானம். $ பாதம்—தோஷமில்லாத காரணத்தினாலுண்டாகிற நிஷேத புத்தி.

§ ஆத்மக்யாதி: அஸத்க்யாதி, அக்யாதி, அந்யதாக்யாதி, அநிர்வசநீயக்யாதி என்று ஐந்து க்யாதிகளை பகவத் ராமானுஜஸித்தாந்திகளைத் தவிர்த்து மற்றவர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். பகவத் ராமானுஜஸித்தாந்தத்தில் ஸத்க்யாதி ஒன்றே ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

"ஆத்மக்யாதி ரஸத்க்யாதிரக்யாதி: க்யாதிரந்யதா। ததாऽநிர்வசன க்யாதிரித்யேதத்க்யாதி பஞ்சகம்" என்று அவைகளை ஸங்க்ரஹித்துக்காட்டுகிற சுலோகம். இந்த க்யாதிகளை முறையே யோகாசாரன், மாத்யமிகன், மீமாம்ஸகன், நையாயிகன், மாயாவாதி இவர்கள் ஒப்புக்கொள்ளுகிறார்கள்:

யோகாசாரா மாத்யமிகாஸ்ததா மீமாம்ஸகா அபி। நையாயிகா மாயிநஶ்ச ப்ராய: க்யாதீ: க்ரமாஜ்ஜகு:॥ என்று முற்கூறப்பட்டுள்ள விஷயத்தைக் காட்டுகிற ப்ரமாண சுலோகம்.

1. ஆத்மக்யாதியாவது— ஆத்மாவுக்கு அதாவது புத்திக்கு விஷயரூபமாக ப்ரதிபாஸம. இது ரஜதம் என்கிற புத்தியே ரஜதரூபமாக பாஸிக்கிறது. இது யோகாசார மதம்.

2. அஸத்க்யாதியாவது—அஸத்தான அதாவது இல்லாததான ரஜதம் முதலியவற்றுக்கு க்யாதி, அதாவது ப்ரதீதி என்று சூன்யவாதிகளான பௌத்தர்கள், அதாவது மாத்யமிகர்கள். வாசஸ்பதி மிச்ரர்களும இதை அங்கீகரித்தார்கள். சிப்பியில் இது வெள்ளி என்று ஜ்ஞாநம் உண்டாகும் தருணத்தில் ப்ராஸித்தங்களான சுக்தித்வம் ரஜதத்வம் என்கிற இரண்டு தர்மங்களுக்கும் ஸமவாயமானது பொய்யாகவே பாஸிக்கிறது. ஆதலால் இது அஸத்க்யாதி.

3. அக்யாதியாவது— ந க்யாதி: அக்யாதி:— அப்ரதீதி. சுக்திரஜதஸ்தலத்தில் இது. இதம் ரஜதம் என்கிற இடத்தில் இதமம்சமே ப்ரத்யக்ஷப்ரதீதிக்கு விஷயம், ரஜதாம்சம் விஷயமல்ல. அதற்கு அதாவது அந்த ரஜதாம்சத்துக்கு க்கண் முதலியவைகளின் ஸந்நிகர்ஷமில்லாமையால். ரஜதம் என்கிற ப்ரதீதியோவென்றால் ஸ்ம்ருதியின் ஆகாரத்தைக் காட்டுகிறது. இது மீமாம்ஸகனுடைய மதம்.

4. அந்யதாக்யாதியாவது— ஒரு வஸ்துவானது மற்றொருவஸ்துவாக அறியப்படுதல். தேசாந்தரத்தையும் காலாந்தரத்தையும் அடைந்திருக்கிற ரஜதமே சுக்தியுடன் சேர்க்கை பெற்றதாக தோஷத்தால் கெடுக்கப்பட்டிருக்கிற இந்திரியத்தினுல் சுக்தியாக க்ரஹிக்கப்படுகிறது. அங்ஙனமாகில் முன் அனுபவிக்கப்பட்டிராததற்கும் க்ரஹணம் வரட்டுமென்று சொல்லத்தக்கதல்ல. வஸ்துக்களின் ஸாத்ருச்யம் முதலியது நியாமகமாக இருப்பதால். இது நையாயிக மதம். கௌதமமஹரிஷியால் ப்ரவர்த்திக்கப்பட்ட தர்க்க சாஸ்த்ரம் நியாயமதமென்று சொல்லப்படுகிறது.

5. அநிர்வசநீயக்யாதியாவது— ஸத் என்றாவது அஸத் என்றாவது நிர்வசநம் செய்யத்தகாத ரஜதம முதலியவற்றின் க்யாதி, ப்ரதீதி, சுக்திரஜதஸ்தலத்திலோவென்றால் ரஜதமானது ஸத்தன்று. ப்ராந்தியும் பாதமும் ஸம்பவியாமல் போகவேண்டிவருவதால், அந்த ரஜதம் அஸத்துமன்று. க்யாதியும் பாதமும் ஸம்பவியாமல் போகவேண்டிவருவதால். பாதம் ப்ரதியோகியை முன்னிட்டுக்கொண்டிருப்பது பற்றி அஸத்துக்கு அது ஸம்பவியாததலால். பின்னேயோ சுக்தியினது அஜ்ஞாநபரிணமமாக இருப்பதும் ஸத்தென்றாவது அஸத்தென்றாவது நிர்வசனம் செய்யத்தகாததுமான அபூர்வமான ரஜதம் உண்டாகிறது. அந்த ரஜதமே அந்த இடத்தில் ரஜதஜ்ஞானத்திற்கு விஷயம்.

இந்த விஷயம் ச்லோகத்தால் ஸங்க்ரஹிக்கப்பட்டிருக்கிறது.

ஸத்த்வே ந ப்⁴ராந்திபா³தௌ⁴ ஸ்யாதாம் நாஸத்த்வே க்²யாதிபா³த⁴நே ।
ஸத³ஸத்³ப்⁴யாமநிர்வாச்யாவித்³யாவேத்³யம் ஸஹ ப்⁴ரமஃ ॥ என்று.
ஜ்ஞப்திரேவ க்ஷணிகாவச்சின்னாகாரேண பரமார்த²ஃ ரஜதாதி³ஷ்வபி ।

இது மாயாவாதிகளின் மதம்.

6\. ஸத்க்யாதியாவது— ஜ்ஞானவிஷயத்திற்கு ஸத்யத்வம். இது ஸ்ரீ பகவத் ராமாநுஜ மதம்.

க்யாதி பாதம் இவ்விரண்டுக்கும் உபபத்தி ஏற்படுகிறது. ஸத்துக்கே பேதம் க்ரஹிக்கப்படாமையால் க்யாதி- பேதத்தின் க்ரஹணம் பாதம். ப்ரவ்ருத்திக்கு பாத்யத்வமும் யதார்த்தக்யாதிபக்ஷத்திலேயென்றால், சுக்தி ரஜதம் ஸ்வப்நாவஸ்தையில் காணப்படுகிறவஸ்து இது முதலியவற்றில் இருப்பதாலும் அதிகமாயில்லாமை, நிலையாயில்லாமை, அவனொருவனாலேயே அனுபவிக்கத்தக்கதாக இருத்தல் இவைகளின் க்ரஹணத்தாலும் க்யாதி பாதம் இவைகளுக்கு உபபத்தி. முன்னிலையில் இருக்கிறவஸ்துவில் ஸத்தாகவே இருக்கிற ரஜதத்திற்கு க்யாதி. சுக்தியின் ப்ராசுர்யத்தின் க்ரஹம் பாதம். அந்த ப்ராசுர்யக்ரஹத்தால் (ரஜத விஷய) ப்ரவ்ருத்தியானது பாதிக்கத்தக்கதாக ஆகிறது. அந்த பாதம் ப்ரவ்ருத்தியின் அநுத்பத்தி. * அலாதசக்கிரம் முதலியதிலேயென்றால் அக்யாதிபக்ஷத்தில் போல் அதற்கு உபபத்தி. ஆகையால் வேறுவிதமாகவே உபபத்தியானது ஸித்தமாக இருப்பதால் அநிர்வசநீயத்வத்தை கல்பிப்பது யுக்தமல்ல. இவ்வண்ணம் ஆச்ரயாநுபபத்தி திரோதாநாநுபபத்தி ஸ்வரூபாநுபபத்தி அநிர்வசநீயத்வாநுபபத்திகள் கூறப்பட்டன.

* அலாதசக்கிரம்— வட்டமாக கொள்ளிக்கட்டையைச் சுற்றுதல்.

க்ஷயஸ்ய ச -- வஸ்துஸ்வரூபமேவ திரோதா⁴நகரஞ்ச பா³ஹ்யரூபவிவிதயாப்யாதோ³ஷாதா³நம் ஸத³ஸத³நிர்வசநீயாவித்³யாஜ்ஞாநாதி³வத்³வாச்யம் வஸ்துயாதா²த்ம்யஜ்ஞாந நிவர்த்யம் ஜ்ஞாநப்ராமாண்யவாதி³பி⁴ரேகை ஸர்வஸம்மதமேவ கிஞ்ச வஸ்து ப்ரத்யக்ஷாநுமாநாப்⁴யாம் ப்ரதீயதே । தத³ஸ்ய ஸித்³தௌ⁴ ஸத்யோபாதா³நஸ்யாவிகாரே ஸப்ரகாஶவிந்யாத்ப்ரவ்ருத்திரேவ தேநைவ திரோஹிதஸ்வரூபமேவ ப்ரத்யகா³த்மஸ்வாதந்த்ர்யஜ்ஞாநஜ்ஞேயவிஷயமாத்ரமேவாத்⁴யாஸஃ, ததே³வ ஸ்வாத்மஸ்வரூபஸம்வேத்³யாஸத்ரூபமேவ ஜக³தி ஜ்ஞாநபா³த்⁴ய ஸர்வரஜதாதி³வஸ்துதத்³ஜ்ஞாந ரூபமேவாத்⁴யாஸோ(அ)பி ஜாயதே । க்ஷுத்³ரஸ்ய தீ³ர்க⁴ரூபஸ்ய தத்³வா

𑌜𑌨𑌕𑌤𑍍𑌵𑌂, 𑌤𑌿𑌰𑍋𑌧𑌾𑌨𑌕𑌸𑍍𑌯𑌾𑌪𑍍𑌯𑍁𑌭𑌯𑌸𑍍𑌯 𑌤𑌿𑌰𑍋𑌧𑌾𑌨𑌹𑍇𑌤𑍁𑌕𑌾𑌰𑌣𑌂 𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌕𑌾𑌰𑍍𑌯𑌤𑍍𑌵𑌮𑌿𑌤𑌿 𑌹𑍇𑌤𑍁𑌭𑌾𑌵𑌾𑌭𑌿𑌪𑍍𑌰𑍇𑌤𑍇 । 𑌕𑌾𑌰𑌣𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌿𑌷𑌯𑌂 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌂 𑌤𑌾𑌵𑌤𑍍 “𑌅𑌹𑌮𑌜𑍍𑌞𑍋 𑌮𑌾𑌮𑌨𑍍𑌯𑌞𑍍𑌚 𑌨 𑌜𑌾𑌨𑌾𑌮𑌿” 𑌇𑌤𑍍𑌯𑌪𑌰𑍋𑌕𑍍𑌷𑌾𑌵𑌭𑌾𑌸𑌃 । 𑌅𑌯𑌞𑍍𑌚 𑌨 𑌜𑍍𑌞𑌾𑌨𑌪𑍍𑌰𑌾𑌗𑌭𑌾𑌵𑌵𑌿𑌷𑌯𑌃 । 𑌸𑌹𑌿 𑌷𑌷𑍍𑌠𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌗𑍋𑌚𑌰𑌃 । 𑌅𑌯𑌞𑍍𑌚 𑌅𑌹𑌂 𑌸𑍍𑌵𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌵𑌦𑌪𑌰𑍋𑌕𑍍𑌷𑌃 । 𑌅𑌭𑌾𑌵𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌗𑍍𑌰𑌾𑌹𑍍𑌯𑌤𑍍𑌵𑌮𑌭𑍍𑌯𑍁𑌪𑍇𑌤𑍍𑌯𑌾𑌪𑌿 𑌅𑌯𑌮𑌨𑍁𑌭𑌵𑍋 𑌨𑌾𑌤𑍍𑌰 𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌭𑌾𑌵𑌵𑌿𑌷𑌯𑌃 । 𑌅𑌨𑍁𑌭𑌵𑌵𑍇𑌲𑌾𑌯𑌾𑌮𑌪𑌿 𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍍𑌯 𑌵𑌿𑌦𑍍𑌯𑌮𑌾𑌨𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 । 𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌮𑌾𑌨𑌤𑍍𑌵𑍇 𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌭𑌾𑌵𑌪𑍍𑌰𑌤𑍀𑌤𑍍𑌯𑌨𑍁𑌪𑌪𑌤𑍍𑌤𑍇𑌶𑍍𑌚 ।

ஸ்ரீபாஷ்யம்—

அன்றிக்கே இவ்விதமிருக்கலாம். வஸ்துவின் ஸ்வரூபத்திற்கு * திரோதானத்தைச் செய்கிறதும் உள்ளுக்குள்ளிருப்பவைகளும் வெளியிலிருப்பவைகளுமான பற்பலவஸ்துக்களின் $ அத்யாஸத்திற்கு உபாதானகாரணமாக இருப்பது ஸத் என்றாவது அஸத் என்றாவது நிர்வசனஞ்செய்யத்தகுதியற்றதும், அவித்யை அஜ்ஞாநம் முதலியபதங்களால் சொல்லத்தக்கதும், வஸ்துவின் உண்மையை அறிதலால் விலக்கத்தக்கதும் ஜ்ஞாநத்தின் ‡ ப்ராகபாவத்தைவிட வேறான பாவரூபமாகவே இருக்கிற ஒருவஸ்துவானது ப்ரத்யக்ஷம் அநுமானம் என்கிற இரண்டு ப்ரமாணங்களால் அறியப்படுகிறது. அந்த வஸ்துவினால் மறைக்கப்பட்ட ப்ரஹ்மத்தை உபாதானமாக உடையதும், விகாரமில்லாததும், தானே ப்ரகாசிக்கின்றதும், ஜ்ஞாநமாத்ரத்தையே உருவாகக்கொண்டதும், அந்த அத்யாஸஹேதுவினாலேயே மறைக்கப்பட்ட ஸ்வரூபத்துடன் கூடியதுமான ப்ரத்யகாத்மாவினிடத்தில் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டிருக்கிற அஹங்காரம் ஜ்ஞாநம் ஜ்ஞேயமென்கிற யாதொரு அத்யாஸமுண்டோ, அந்த தோஷத்தினுடையதாகவே இருக்கிற ஒரு ஸமயத்திலுண்டாகிற அவஸ்தாவிசேஷத்தினால், அத்யாஸரூபமான ஜகத்

* திரோதானம்—மறைவு. $ அத்யாஸம்—கல்பனை அல்லது ஆரோபம்.

‡ ப்ராகபாவம்— ஒரு வஸ்து உண்டாவதற்கு முந்தின க்ஷணத்திலிருக்கிற அவ்வஸ்துவின் இன்மை.

தில் ஜ்ஞாநத்தினால் பாதிகத்தக்க ஸர்ப்பம் ரஜதம் முதலியவஸ்துக்களும், அந்தந்த வஸ்துவிஷயகஜ்ஞாநரூபமான அத்யாஸமும் உண்டாகிறது. மித்யாரூபமான அவை அனைத்துக்கும் அந்த தோஷமே உபாதானம். மித்யாபூதமான அர்த்தத்திற்கு மித்யாபூதமே காரணமாக ஆவதற்குத்தகுதியுள்ளதென்பது ஹேதுபலத்தாலறியப்படுகிறது. காரணமாக இருக்கிற அஜ்ஞாநவிஷயகமான ப்ரத்யக்ஷமோவென்றால் ‘அஹமஜ்ஞ:’ (நான் ஜ்ஞாநமில்லாதவன்) ‘மாமந்யம் ச ந ஜாநாமி’ (நான் என்னையும் மற்றவனையும் அறிகிறேனில்லை) என்கிற ப்ரத்யக்ஷஜ்ஞாநம். இந்த ப்ரத்யக்ஷாவபாஸமோவென்றால் ஜ்ஞாநப்ராகபாவத்தை விஷயமாகக்கொண்டதல்ல. அந்த ஜ்ஞாநப்ராகபாவமோவென்றால் ஆறாவது ப்ரமாணத்திற்கு கோசரமானது. இந்த காரணஜ்ஞாநமோவென்றால் ‘நான் ஸுகியாக இருக்கிறேன்’ என்பதுபோல் அபரோக்ஷமாக இருக்கிறது. அபாவத்திற்கு ப்ரத்யக்ஷத்வம் ஒப்புக்கொண்டபோதிலுங்கூட இந்த அநுபவமானது ஆத்மாவினிடத்தில் ஜ்ஞாநாபாவத்தை விஷயீகரிக்கிறதில்லை. அநுபவவேளையிலுங்கூட ஜ்ஞாநமிருப்பதால் ஜ்ஞாநமில்லை என்று சொல்லின் ஜ்ஞாநாபாவப்ரதீதியானது பொருந்தாமல் போகவேண்டிவருதலால்.

ச்ருதப்ரகாசிகை—

அதற்குமேல் நஹி த்ருஷ்டே அநுபபந்நம் நாம (ஒரு வஸ்துவானது இவ்விதமான ஸ்வரூபஸ்வபாவமுள்ளதென்று நேரில் பார்க்கப்பட்டிருக்க, அந்த வஸ்து அவ்விதமான ஸ்வரூபஸ்வபாவமுள்ளதல்லவென்று சொல்வது ஸரியல்லவன்றோ) என்கிற நியாயத்தினால், ப்ரமாணத்தினால் நிலைபெற்றிருக்கிற ஒருவஸ்துவுக்கு தர்க்கத்தினால் பாதம் சொல்வது யுக்தமல்ல என்கிற அபிப்ராயமுள்ள அன்யனால் ப்ரமாணப்ரதிஜ்ஞை சங்கிக்கப்படுகிறது—அத ஸ்யாத் என்று. முன்பு தூஷிக்கப்பட்டிருக்கிற ஆகாரங்களை ஸாதிப்பதற்காகச் செல்லுகிறார்— வஸ்துஸ்வரூப என்று. இதனால் திரோதானம் கூறப்பட்டது— ஆந்தர பாஹ்ய என்று ஸ்வரூபம் உரைக்கப்பட்டது அத்யாஸத்தை உபாதானமாகக் கொண்டிருப்பதனாலே மித்யாத்வம் பலித்துவிட்டதன்றோ அவித்யைக்கு ஸத் என்றாவது அஸத்து என்றாவது நிர்வசனம்பண்ணுவதற்குத் தகுதி இல்லாமலிருத்தல் உரைக்கப்பட்டது. சாஸ்திரங்களில் இந்த அவித்யையை ப்ரதிபாதிக்கிற சப்தங்களை ஞாபகப்படுத்துவதற்காக அவித்யை அஜ்ஞானம் முதலிய பதங்களால் சொல்லத்தக்கதென்று பகரப்பட்டது. ஸித்தாந்தியினால் தூஷிக்கப்படப்போகிற ஆகாராந்தரத்தையும் ஸாத்தியமாகச் சொல்லுகிறார்— வஸ்துயாதாத்ம்யஜ்ஞாந என்று. தது பஹித என்று ஆச்ரயமும். ஆந்தரமான அத்யாஸம் எது? பாஹ்யமான அத்யாஸம் எது?

ப்ரபஞ்சமானது அவித்யையை உபாதானமாகக் கொண்டிருக்க எவ்வாறு ப்ரபஞ்சத்தைக்குறித்து ப்ரஹ்மத்திற்கு உபாதான காரணத்வம் என்று கேட்கப்பட்டால், கூறுகிறார்— தத்துபஹித என்று. நிஷ்கர்ஷிக்கப்பட்டிருக்கிற ப்ரஹ்மத்திற்கு உபாதானகாரணத்வரூபமான தர்மம் பொருந்தாதென்பதை ஸூசனம் பண்ணுகிறார்— அவிகாரே ஸ்வப்ரகாசசின்மாத்ரவபுஷிப்ரத்யகாத்மநி என்று விகாரமில்லாமையாலும் மற்றொருவஸ்துவின் ப்ரகாசத்தை அபேக்ஷியாமல் தானே ப்ரகாசிப்பதாலும், ப்ரத்யக்காக இருப்பதாலும் அதாவது தன்பொருட்டுத தானாகவே பிரகாசிப்பதாலும், வேறொருத்தற்கு ஆஸ்பதமாகவும் ஜடமாகவும் பராகரூபமாகவும் இருக்கிற பரிணாமம் பொருந்துகிறதில்லை என்று பொருள், தானாகவே பிரகாசித்துக் கொண்டிருக்கிற வஸ்துவுக்கு எவ்வண்ணம் அவித்யையினால் உண்டுபண்ணப்பட்ட ப்ரபஞ்சாத்யாஸம் ஸம்பவிக்கலாம் என்று வினவப்படுமேயாகில், அதற்கு உத்தரம் கூறுகிறார்—திரோஹிதஸ்வரூப என்று. மறைகிற பதார்த்தம் ஏது என்று வினவப்படுமேயாகில் சொல்லுகிறார்— தேநைவ என்று. தேநைவ அத்யாஸத்திற்கு ஹேதுவினாலேயே என்று அர்த்தம். அஹங்காரமும் ஜ்ஞாநமும ஆந்தரமான ஆத்யாஸம். ஜ்ஞேயம் அதாவது அறியத்தக்கது பாஹ்யாத்யாஸம். அத்யாஸரூபே, அத்யஸ்தரூபே என்று அர்த்தம்: கர்மார்த்தத்தில் கப்ரத்யயம் வந்திருக்கிறது. தஸ்யைவ தோஷத்தினுடையவே. அவஸ்தாவிசேஷேண ஏதோ ஒரு ஸமயத்திலுண்டான ஒருவித நிலைமையினால், ரஜ்ஜுவில் ஸர்ப்பம் முதலியவற்றின் அத்யாஸம். இவ்வண்ணம் நிஷ்கர்ஷிக்கப்பட்டுள்ள ப்ரஹ்மத்திற்கு உபாதானத்வம் என்பதில் அனுபபத்தி சொல்லப்பட்டது, தோஷமே உபாதானம் என்கிற விஷயத்தில் யுக்தி சொல்லுகிறார்—கிருத்ஸ்நஸ்ய என்று. ஸுவர்ணத்தின் வகுப்பைச் சார்ந்த ஆபரணங்களுக்கு ஸ்வாணமே உபாதானமாகக் காணப்பட்டிருக்கிறதன்றோ, அப்படிப்போலென்று கருத்து, ஹேதுபலாத் கார்யகாரணம் இரண்டுக்கும் ஸஜாதீயத்வதர்சனரூபமான ஹேதுபலத்தினால், அதற்குமேல் ப்ரத்யக்ஷத்தைக் கூறுகிறார்— காரண என்று "அஹம் அஜ்ஞ:" எனபதற்கு "மாம் அந்யஞ்ச ந ஜாநாமி" என்பது விவரணம். "அஹம் அஜ்ஞ:" என்று அஜ்ஞாநஸ்வரூபத்தைக் கீர்த்தனம் செய்தபடி. "மாம் அந்யஞ்ச ந ஜாநாமி" என்று அதனுடைய மறைத்தலென்கிற கார்யத்தைக் கூறியபடி. காரணசபதத்தினால் கார்யரூபமான அஜ்ஞாநத்தை விலக்கியபடி. ஆகையால் ஸுஷுப்திகாலத்திலுள்ள அஜ்ஞாநம சொல்லக்கருதப்பட்டது. * ஜாகரணம் முதலிய அவஸ்தையில் ஸவிகல்பகப்ரத்யக்ஷத்தினால் கடம் முதலிய வஸ்துக்களை விஷயீகரித்துக்கொண்டிருக்கிற அஜ்ஞாநம் அறியப்படுகிறது. † ஸுஷுப்தியிலோவென்றால் ஒரு வஸ்துவையும் விஷயீகரிக்காத அஜ்ஞாநத்தின் ப்ரதீதி என்று ‡ தத்வசுத்திகாரர் முதலியவர்களால் உரைக்கப்பட்டது, ஜாகரிதாவஸ்தையிலேயே இந்த அஜ்ஞாநானுபவமென்பது ஸம்ப்ரதாயம். மற்றவனையும் நானறிகிறேனில்லை என்று சொல்லப்பட்டிருப்பதால், ஸ்வப்னத்தில் அன்யவஸ்துவின் பராமர்சம் இல்லையன்றோ, (ந ஜாநாமி) நான் அறிகிறேனில்லை என்று ஆச்சாதகமாக அறியப்படாநின்ற அஜ்ஞாநம் காரணமாக இருப்பதால் காரணாஜ்ஞாநவிஷயம் என்று கூறப்பட்டது, அப்ரத்யக்ஷரூபமான அனுமானம்

---

* ஜாகரணம்—விழித்திருத்தல், ‡ தத்வசுத்தி—ஒரு வேதாந்த கிரந்தம்,

† ஸுஷுப்தி— ஜீவாத்மா பரமாத்மாவினிடம் லயித்து ஆநந்தவெள்ளத்திலமிழ்ந்து பாஹ்யமான ப்ரபஞ்சத்தை மறந்திருக்கும் நிலைமை.

முதலிய ப்ரமாணங்களை விலக்குவதற்காக அபரோக்ஷாவபாஸம் என்று சொல்லப்பட்டது. ஜ்ஞாநப்ராகபாவத்தை விஷயீகரித்துக்கொண்டிருக்கலென்பதை ஆசங்கித்து பரிஹரிக்கிறார்—அயந்து என்று. இதுவும் ஆறாவது ப்ரமாணத்திற்கு விஷயமாக இருக்கலாமென்று ஸம்ப்ரஹித்தது கூறுகிறார்—அயம் து என்று. ப்ரத்யக்ஷப்ரமாணத்தைக் காட்டிலும் வேறுபட்டிருப்பவைகள் பரோக்ஷப்ரமாணங்கள், ஆகையால் பரோக்ஷப்ரமாணத்திறகு விஷயமான ப்ராகபாவமானது அபரோக்ஷப்ரமாணத்திற்கு விஷயமாக இருக்கிற அஜ்ஞாநமாக ஆவதற்குத்தகுதியுள்ளதல்லவென்று பொருள். பாவபதார்த்தங்களை க்ரஹிக்கிற ப்ரமாணத்தினால் அபாவம் அறியத்தக்கதாக ஆகலாமென்பதிலும் தூஷணம கூறுகிறார்—அபாவஸ்ய என்று. ஹேதுவைச் சொல்லுகிறார்— அநுபவ என்று. அபாவத்தினுடைய அநுபவவேளையில் ஜ்ஞாநமிருக்கிறதா? இல்லையா? இருக்கிறதேயானால் க்ரஹிக்கத்தக்க பதார்த்தமில்லாமையால் அபாவப்ரதீதி இல்லை, இல்லை என்றால் க்ரஹிக்கிற வஸ்து இல்லாமையால் அதனுடைய அபாவப்ரதீதி இல்லை என்று பொருள்.

ஏதது³க்தம் ப⁴வதி— அஹமஜ்ஞ இத்யஸ்மிந்நநுப⁴வே அஹமித்யாத்மநோऽஜ்ஞாநாஶ்ரயதயா ஜ்ஞாநஸ்ய ச ப்ரதியோகி³தயா அவக³திரஸ்தி வா ந வா, அஸ்தி சேத்³விரோதா⁴தே³வ ந ஜ்ஞாநாபா⁴வாநுப⁴வஸ்ஸம்ப⁴வ:। நோ சேத்ப்ரதியோகி³ஜ்ஞாநஸாபேக்ஷ: ஜ்ஞாநாபா⁴வாநுப⁴வ: ஸுதராம் நஸம்ப⁴வதி। ஜ்ஞாநாபா⁴வஸ்யாநுமேயத்வே ச அபா⁴வப்ரமாணவிஷயத்வே ச ஜ்ஞேயாநுபபத்திஸ்ஸமாநா। அஸ்யாஜ்ஞாநஸ்ய பா⁴வரூபத்வே ச யதி³ ப்ரதியோகி³ஜ்ஞாந ஸத்³பா⁴வேऽபி விரோதா⁴பா⁴வாத³நுப⁴வ: பா⁴வரூபாஜ்ஞாநவிஷய ஸமாநஸ்யாநுப⁴வமத்வ இதி। நநு ச பா⁴வரூபமஜ்ஞாநம் வஸ்துயாதா²த்ம்யாவபா⁴ஸரூபேண ஸாக்ஷிசைதந்யேந விஷய்யதே, நைவம்। ஸாக்ஷிசைதந்யம் ந வஸ்துயாதா²த்ம்ய விஷயம்। அபி து அஜ்ஞாநவிஷயம், அந்யதா² நித்யநிவ்ருத்திஸாதநப்ரஸங்க³:। நஹ்யஜ்ஞாநவிஷயேண ஜ்ஞாநேநாஜ்ஞாநம் நிவர்த்யத இதி நவிரோத⁴:। நநு சைவம் பா⁴வரூபமஜ்ஞாநம் விஷயவிஶேஷவ்யாவ்ருத்தமேவ ஸாக்ஷிசைதந்யஸ்ய விஷயோ ப⁴வதி; ஸவிஷய: ப்ராமாணிகநிர்விஶிஷ்டமிதி கத²மிவ ஸாக்ஷிசைதந்யாநுபா⁴ஸ்யவ்யாவ்ருத்தமஜ்ஞாநம் விஷயீக்ரியதே। நைஷ தோ³ஷ:- ஸர்வமேவ வஸ்துஜாதம் ஜ்ஞாததயா அஜ்ஞாததயா வா ஸாக்ஷிசைதந்யஸ்ய விஷயபூ⁴தம்। தத்ர ஜ்ஞாததயா ஸித்³த⁴ ஸர்வ ப்ரமாணவ்யவஹாரா

பேக்ஷா । அஜ்ஞஸ்ய து ப்ரத்யஸ்தமிதஸ்வாந: ஸ்வயம் ஸித்யதோ ந ப்ர-
காஶவ்யவதாநாபேக்ஷித்வம் ஸச்சைவாஜ்ஞாநஸ்ய வ்யாவர்த்தகத்வேந
நாவஸாயோ யுஜ்யதே । தஜ்ஞாநாவிஷயாவஸ்தாம்ஹிதேந ப்ரத்ய-
க்ஷேண பாவரூபமேவாஜ்ஞாநம் ப்ரதீயதே ।

ஸ்ரீபாஷ்யம்—

இது சொல்லப்பட்டதாக ஆகிறது.—அஹம் அஜ்ஞ: என்கிற இந்த அநுபவத்தில் அஹம் என்று ஆத்மா அபாவதர்மியாகவும், ஜ்ஞாநம் ப்ரதியோகியாகவும் அறியப்படுகிறதா? இல்லையா? அறியப்படுகிறதேயானால் விரோதத்தினாலேயே ஜ்ஞாநாபாவாநுபவம் ஸம்பவிக்கிறதில்லை. இல்லையேயானால் தர்மிஜ்ஞாநத்தையும் ப்ரதியோகிஜ்ஞாநத்தையும் அபேக்ஷிக்கிற ஜ்ஞாநாபாவாநுபவமானது மிகவும் ஸம்பவிக்கிறதில்லை. ஜ்ஞாநாபாவம் அநுமாநப்ரமாணத்தினால் அறியத்தக்கது என்று பதிலும், அபாவமென்கிற பெயருள்ள ப்ரமாணத்திற்கு விஷயமென்பதிலும் இந்த அநுபபத்தியானது ஸமானமாது. இந்த அஜ்ஞாநம் பாவரூபமாகில் தர்மிப்ரதியோகிகளின் ஜ்ஞாநமிருந்தபோதிலும் விரோதமில்லாமையால் இந்த அநுபவமானது பாவரூபமான அஜ்ஞாநவிஷயமென்றே ஒப்புக்கொள்ளத்தக்கது என்று. வாதத்தில் வலிமை வாய்ந்தவரே! பாவரூபமாக இருந்தபோதிலும் அஜ்ஞாநமானது வஸ்துவினுடைய யதார்த்தஸ்வரூபப்ரகாசரூபமான ஸாக்ஷிசைதந்யத்தோடு விரோதப்படுகிறது. இப்படியல்ல. ஸாக்ஷிசைதந்யமானது வஸ்து யாதாத்ம்யத்தை விஷயமாகக்கொண்டதன்று. பின்னையோ அஜ்ஞாநத்தைவிஷயமாகக்கொண்டது. அப்படி இல்லாவிட்டால் மித்யாரூபமான அர்த்தத்தின் தோற்றம் பொருந்தாமல் போகவேண்டியதாக ஏற்படுவதால் அஜ்ஞானத்தை விஷயமாகக்கொண்ட ஜ்ஞாநத்தினால் அஜ்ஞாநமானது நிவர்த்திக்கப்படுகிறதில்லையன்றோ, ஆதலால் விரோதமில்லை. அய்யா! இந்த அஜ்ஞாநம் பாவரூபமாக இருந்தபோதிலுங்கூட விஷயவிசேஷத்தினின்று விலகினதாகவே ஸாக்ஷிசைதந்யத்திற்கு விஷயமாக ஆகிறது. அந்த விஷயமானது ப்ரமாணத்திற்கு அதீனமல்லாதஸித்தியுடன் கூடியதாக இருக்கிறதாதலால் எவ்வாறாக ஸாக்ஷிசைதந்யத்தினால் அஸ்மதர்த்தத்தினின்றும் வேறுபட்டிருக்கிற அஜ்ஞாநம் விஷயீகரிக்கப்படலாம்? இது தோஷமல்ல, எல்லா வஸ்துக்களும் அறியப்பட்டதாகவோ அறியப்படாததாகவோ ஸாக்ஷிசை

தன்யத்திற்கு விஷயமாக ஆகின்றன, அவற்றுள் ஜடமாக அறியப்படுவதினால் ஸித்திக்கிற வஸ்துவுக்கே ப்ரமாணத்தால் * வ்யவதானம் அபேக்ஷிக்கப்படுகிறது. தானாகவே ஸித்திக்கிற அஜடமான ப்ரத்யக் வஸ்துவுக்கோவென்றால் ப்ரமாணவ்யவதானாபேக்ஷை இல்லை. ஆதலால் எப்பொழுதுமே அஜ்ஞானத்திற்கு எல்லாவஸ்துக்களைக்காட்டிலும் வேறுபாடுள்ளதாக ப்ரகாசித்தல் பொருத்தமுள்ளதாக ஆகிறது. ஆதலால் நியாயத்தினால் அதாவது பரமாணததிற்கு ஸாதகமாக இருக்கிறதர்க்கத்தால் போஷிக்கப்பட்டுள்ள ப்ரத்யக்ஷத்தினால் அஜ்ஞானம் பாவரூபமாகவே அறியப்படுகிறது.

ச்ருதப்ரகாசிகை—

பாவாபாவங்கள் இரண்டுக்கும் விஷயம் ஒன்றாக இருந்தாலன்றோ விரோதம், இங்கு விரோதமில்லை, அபாவததை விஷயீகரித்துக்கொண்டிருக்கிற ஜ்ஞான க்ராஹகமாதலால், வேறுவஸ்துக்களை விஷயீகரிக்கிற ஜ்ஞானமானது அபாவப்ரதியோகியாக நிலைபெற்றிருமையால் என்கிற சங்கையை பரிஹரியாநின்றவராக. அனுபவவேளையில் ஜ்ஞானத்தினுடைய இருப்பையும், இல்லாவிடில் ஜ்ஞானாபாவப்ரதீதியின் அநுபபத்தியையும், அஜ்ஞானம் பாவரூபமென்று சொல்லும்பக்ஷத்தில் விரோதத்தின் இன்மையையும் விவரிக்கிறார்— ஏதத்துக்தம்பவதி என்று. ஜ்ஞானப்ராகட்யமானது க்ராஹகம் என்று சொன்னால் விருப்பமில்லாமலிருந்தாலுங்கூட பாவாபாவம் இரண்டுக்கும் விஷயைக்யமானது வந்துவிடுகிறதென்கிற அபிப்ராயத்தால் சொல்லுகிறார்— அஹம் என்று, 'ஜ்ஞானஸ்பர்ச' என்கிற இடத்திலுள்ள ஜ்ஞானசப்தமானது ஆத்மா கடம் முதலியவற்றை விஷயீகரிக்கிற ஜ்ஞானத்தோடு ஸமானமானது. "இஹபூதலே கடோநாஸ்தி" (இந்த தரையில் குடம் இல்லை) என்கிற இது முதலிய சப்தப்ரயோகஸ்தலங்களில் அபாவத்தை க்ரஹிக்கையில் ப்ரதியோகிஜ்ஞானம் தர்மிஜ்ஞானம் இவைகளின் அபேக்ஷை காணப்பட்டிருக்கிறது. ஆகையால் இந்தவிடத்திலும். அபாவத்திற்கு தர்மியாக ஆத்மாவினுடையஜ்ஞானம் இருக்கிறதென்று சொல்லத்தக்கது. ஆத்மா அபாவத்தைக்காட்டிலும் வேறுபட்டிருக்கிறதன்றோ, ஆகையால் அந்த அபாவவிஷயஜ்ஞானம் இருக்கும் தருணத்தில் கூட அபாவத்தைத்தவிர்த்து வேறுவஸ்துக்களை விஷயீகரித்துக்கொண்டிருக்கிற ஜ்ஞானம் அபாவத்திற்கு ப்ரதியோகி என்கிற வசனம் விருத்தமாக ஆகும். அபாவம், தர்மி, ப்ரதியோகி, இம்மூன்றைத்தவிர்த்து வேறாக இருக்கிற பதார்த்தங்களை விஷயமாகவுடைய ஜ்ஞானம் அபாவத்திற்கு ப்ரதியோகி என்று சொல்லப்படுமேயானால், அப்பொழுது அபாவத்திற்கு ப்ரதியோகியாக ஜ்ஞானத்திற்கும் ப்ரதீதி இருக்கிறதென்று சொல்லத்தக்கது, அறியப்படுகிற ஜ்ஞானமானது தன்னுடைய விஷயத்துடன் கூடியதாக அறியப்படுகிறதாதலால் விஷயங்களுக்கும் ப்ரதீதி இருக்கிறது. இவ்வண்ணம் அபாவத்திற்கு ப்ரதியோகியான ஜ்ஞானத்திற்கு அவச்சேதகமாக விஷயங்கள் அறியப்படுந்தருணத்தில் அந்த விஷயங்களை விஷயீகரிக்கிற ஜ்ஞானத்தினுடைய அபாவம்

---

* வ்யவதானம்—விலக்கம்

பொருந்தாதென்று கருத்து. அபாவம் வேறு * ப்ரமாணங்களுக்கு விஷயமென்கிறபக்ஷத்திலும் முற்கூறப்பட்ட தூஷணத்தை § அதிதேசம் செய்கிறார்—ஜ்ஞாநாபாவஸ்ய என்று. வேறு ப்ரமாணங்களுக்கு விஷயங்கள் இருக்கவேண்டுமென்கிற நியமமில்லாவிடினும் இருக்கிறதாகக் காணபிப்பதற்கு சக்யமல்லவென்று கருத்து. நான் அஜ்ஞன் என்கிற வ்யவஹாரத்தில் அஜ்ஞாநமானது இருக்கிறதாகவன்றோ அறியப்படுகிறது. இந்த பக்ஷத்தில் அதிகமான வேறு தூஷணம் முன்பு உரைக்கப்பட்டது. அபரோக்ஷத்திற்கு பரோக்ஷரூபமான ப்ரமாணத்திற்கு விஷயமாக இருத்தலின் அநுபபத்திரூபமானது அர்த்தத்தினால் ஸித்தித்துவிட்டது. அஜ்ஞாநத்திற்கு பாவரூபத்வம் சொன்னால் முற்கூறப்பட்ட தூஷணம் இல்லை என்று சொல்லுகிறார்—அஸ்ய என்று. தர்மிப்ரதியோகியை விஷயீகரிக்கிற ஜ்ஞாநம் தர்மிப்ரதியோகிஜ்ஞாநம். அதனாலே பாவரூபாஜ்ஞாநத்திற்கு விரோதமில்லை கடத்தை மறைக்கிற அஜ்ஞாநம் கடஜ்ஞாநத்தோடன்றோ விரோதிக்கிறது. கடஜ்ஞாநவிஷயமான ஜ்ஞாநத்தோடும் தர்மிஜ்ஞாநத்தோடும் விரோதப்படுகிறதில்லை என்று பொருள். வஸ்துக்களின் யதார்த்தஸ்வரூபத்தை விஷயீகரிக்கிற ஜ்ஞாநத்தினால் நிவர்த்திக்கத்தக்க அஜ்ஞாநமானது வஸ்துக்களின் யதார்த்தஸ்வரூப ப்ரகாசரூபமான ஸாக்ஷிசைதன்யத்தோடு விரோதிக்கிறதென்று வினவுகிறார்—நநு ச என்று பரிஹரிக்கிறார்—மைவம் என்று. யாதாத்ம்ய சப்தத்தினால் நிச்சயிக்கப்பட்டிருக்கிற தனக்குச் சமானமான இரண்டாவது வஸ்துவில்லாமலிருத்தலென்கிற ஸ்வரூபம் சொல்லக் கருதப்பட்டது, ப்ரபஞ்சத்தினுடைய மித்யாத்வத்தின் ஸித்தவத்காரத்தால் ஹேதுவைக் கூறுகிறார்— அந்யதா என்று. அந்யதா ஸ்வஸாக்ஷிஸ்வரூபப்ரகாசமாத்திரத்திற்கே வஸ்துயாதாத்ம்யவிஷயத்வம் சொன்னால் என்று அர்த்தம். அஜ்ஞாநவிஷயத்வம் இருக்கட்டும். அதனால் என்னவென்று கேட்கப்படுமேயாகில் சொல்லுகிறார்— நஹி என்று. ரஜதவிஷயகமான ஜ்ஞாநத்தினால் ரஜதம் நிவர்த்திக்கத்தக்கதல்லவன்றோவென்று அர்த்தம். கண்ணால் பார்க்கத்தக்க கடம் படம் முதலிய வஸ்துக்களுக்கு விசேஷணமாக இருக்கிற ரூபம் முதலியவற்றுக்குக்கூட கண்ணால் பார்க்கத்தக்க தன்மை காணப்பட்டிருக்கிறது. த்ருச்யமான அஜ்ஞாநத்திற்கு அவச்சேதகமான அஸ்மதர்த்தத்திற்கு கண்ணால் பார்க்கத்தக்கதாக இருக்கும் தன்மையை ஒப்புக்கொள்ளப்படாததால் அஸ்மதர்த்தாவச்சிந்நமான அஜ்ஞாநம் விஷயீகரிக்கப்படுகிறதில்லை என்கிற அபிப்பிராயத்தால் மறுபடியும் சோதனஞ்செய்கிறார்—நநு சேதம் என்று. விஷயவிசேஷம். அவச்சேதகவிசேஷம. 'ஸ:' என்று அந்த விஷயவிசேஷமே பராமர்சிக்கப்படுகிறது. பரிஹரிக்கிறார்—நைஷ தோஷ: என்று. அஸ்மதர்த்தமும் ஸர்வசப்தத்திற்கு வாச்யங்களாக இருக்கிற வஸ்துக்களில் உட்பட்டிருக்கிறது. ஜ்ஞாததயா அஜ்ஞாததயா வா— வேறுஜ்ஞாநத்தை அபேக்ஷிக்கிறதாகவாவது அல்லது அதை அபேக்ஷியாமலிருக்கிறதாகவாவது. ஸாக்ஷிசைதந்யஸ்ய விஷயபூதம்—ஸாக்ஷிசைதந்யத்தினால் ப்ரகாசிக்கிறதென்று பொருள். அஸ்மதர்த்தத்திற்கு ஸாக்ஷிசைதந்யவிஷயத்வம் உபசாரத்தால் கூறப்பட்டது, தானாகவே ப்ரகாசிக்கிற ஸ்வயம் ப்ரகாசவஸ்துவுக்கு விஷயத்வம் பொருந்தாததால், ஜடவஸ்துவுக்கு ஸ்வயம் ப்ரகாசத்வமில்

---

* ப்ரமாணம்—ப்ரமையை உண்டுபண்ணுகிற வஸ்து.

§ அதிதேசம்—ஓரிடத்தில் சொல்லி இருப்பதை மற்றொருடத்தில் எடுத்தல்.

$ ப்ரமை—யதாவஸ்திதவஸ்துவ்யவஹாராநுகுணமான ஜ்ஞாநம்.

லாமையால் அது ப்ரமாணாதீனமான ஸித்தியுள்ளதாக இருந்துகொண்டு த்ருச்யத்திற்கு விசேஷணமாக ஆகிறது. அஸ்மதர்த்தமோவென்றால் தனக்குத்தானாக ப்ரகாசிக்கும் தன்மை வாய்ந்ததாக இருப்பதால் தானே ஸித்தியாகின்றுகொண்டு அஜ்ஞாநாவச்சே தகமாக ஆகிறதென்று பொருள். த்ருச்யத்திற்கு அவச்சேதகமாக இருப்பதால் த்ருச்ய மென்று கேள்வி. அது ஜடத்வத்தால் உண்டுபண்ணப்பட்டதாக இருக்கிறதாதலால் (ஸோபாதிகம்) உபாதியோடுகூடியதென்று பரிஹாரம். ஆகையால் அஜ்ஞாநம் அபா வரூபமென்கிற பக்ஷத்தில் முற்கூறப்பட்ட விரோதத்தாலும் அது பாவரூபமென்கிற பக்ஷத்தில் அந்த விரோதமில்லாமையாலும் என்று அர்த்தம். **ந்யாயோபப்ரும்ஹிதேந** என்று. இரண்டுபக்ஷங்களிலும் விரோதம் விரோததின் இன்மை என்கிற நியாயத்தினால் உதவிபுரியப்பட்டிருக்கிற என்று அர்த்தம். இவ்வாறாக நியாயத்தினால் உபகரிக்கப்பட்டிருக்கிற ப்ரத்யக்ஷத்தினால் அஜ்ஞானத்திற்கு பாவரூபத்வமும் "நஜாநாமி" என்பதனால் ஆத்மாச்ரயத்வமும் ஸித்தித்தது. சாஸ்திரங்களில் அஜ்ஞாநசப்தத் திற்கு வாச்யமாக இருப்பதால் அந்யனுக்கு அபிமதமான கர்மாவின் விலக்கமானது ப்ரத்யக்ஷமாக ஸித்தித்தது, இதற்குச் சாஸ்திரங்களில் அஜ்ஞாநம் முதலிய சப்த ங்களால் சொல்லத்தக்கதாக இருப்பதானது ஜ்ஞாநவிரோதியாக இருப்பதாலும் நான் அஜ்ஞன் ஜ்ஞாநமில்லாதவனென்று ஸ்பஷ்டமாக அறியப்பட்டிருப்பதாலும் ஸித்தம்.

ததிதம் பாவரூபமஜ்ஞாநம் அநுமாநாதபி ஸித்யதி । விவாதாத்யாஸிதம் ப்ரமாணஜ்ஞாநம் ஸ்வப்ராகபாவவ்யதிரிக்த ஸ்வவிஷயாவரண ஸ்வநிவர்த்ய ஸ்வதேசகத வஸ்த்வந்தரபூர்வகம் । அப்ரகாசிதார்த்த ப்ரகாசகத்வாத் । அந்தகாரே ப்ரதமோத்பந்ந ப்ரதீபப்ரபாவதிதி । ஆலோகாபாவமாத்ரம் வா ரூபதர்சநாபாவமாத்ரம் வா தமோ ந த்ரவ்யம் । தத் கதம் பாவரூபாஜ்ஞாந ஸாதநே நிதர்சநதயா உபந்யஸ்யத இதி சேத்; உச்யதே — பஹலவிரளக்ருஷ்ணாத்யவஸ்தா யோகேந ரூபவத்தயா ப்ரதீயமாநத்வாத் த்ரவ்யாந்தரமேவ தம இதி நிரவத்யமிதி ।

ஸ்ரீபாஷ்யம்—

அப்படிப்பட்ட இந்த பாவரூபமான அஜ்ஞாநமானது அநுமானத்தா லும் ஸித்திக்கிறது. விவாதத்திற்கு ஆஸ்பதமாக இருக்கிற ப்ரமாணஜ்ஞாந மானது தன்னுடைய ப்ராகபாவத்தைக் காட்டிலும் வேறாக இருக்கின்றதும் தன்னுடைய விஷயத்தை மறைக்கிறதும் தன்னால் போக்கடிக்கத்தக்கதும் தன்னுடைய தேசத்தை அடைந்திருப்பதுமான வேறு வஸ்துவை முன்னிட் டுக்கொண்டிருக்கிறது. ப்ரகாசிக்கப்பட்டிராத அர்த்தத்தை ப்ரகாசிக்கச்

செய்வதால், இருட்டில் முதலிலுண்டான ப்ரதீபத்தின் ஒளிபோல் என்று, இருட்டென்பது ப்ரகாசத்தின் இன்மையே, அல்லதுரூபதர்சனத்தின் இன்மையே இவ்விரண்டுவித அபாவங்களைக்காட்டிலும் வேறான ஒரு த்ரவ்யமல்ல, இவ்வாறிருக்க எவ்வண்ணம் பாவரூபமான அஜ்ஞானத்தை ஸாதிப்பதில் திருஷ்டாந்தமாக சொல்லப்படுகிறது என்று கேட்கப்பட்டால், உத்தரம் கூறப்படுகிறது. அதிகமாக இருத்தல் ஸ்வல்பமாக இருத்தல் இது முதலிய நிலைமைகளின் ஸம்பந்தத்தினுலும் ரூபத்துடன் கூடி இருப்பதாகவும் அறியப்படுவதால் தமஸ்வேறு ஒரு திரவ்யமே என்பதனுல் முற்கூறப்பட்டுள்ள அநுமானம் தோஷமற்றது என்று.

ச்ருதப்ரகாசிகை—

அதற்கு மேல் தன்னுடைய விஷயத்தை மறைத்தல், தன்னுல் போக்கடிக்கத்தக்கதாக இருத்தல் என்கிற ஸ்வபாவங்களோடுகூட உபபாதிக்கப்பட்டிருக்கிற ஆகாரத்தோடுகூடியுமிருக்கிற அஜ்ஞானமானது அநுமானத்தாலும் ஸாதிக்கப்படுகிறது. விவாதாத்யாஸிதம் இது முதலியதால். ஜ்ஞானம் என்று சொன்னுல் ப்ரஹ்மஸ்வரூபத்திற்கு தனக்கு முற்காலத்தில் நிலையுள்ள வேறு வஸ்துவுடன் சேர்ந்திருத்தல் ஸம்பவியாததலால் அதை விலக்குவதற்காக ப்ரமாணஜ்ஞானமென்று சொல்லப்பட்டது. அப்படிச் சொன்னபோதிலும் * தாராவாஹிகஜ்ஞானத்தில் மேல் மேல் வருகிற விஜ்ஞானங்களுக்கு ஸாதிக்கவேண்டுமென்று விரும்பப்பட்டிருக்கிற வேறு வஸ்துவை முன்னிட்டுக்கொண்டிருத்தலென்கிற தன்மை இல்லாமையால், அதை விலக்குவதற்காக விவாதாத்யாஸிதம் என்று சொல்லப்பட்டது அந்த ஜ்ஞானம் எது என்று அபேக்ஷிக்குங்கால் ஸ்பஷ்டமாகத்தெறிந்துகொள்வதின் பொருட்டு ப்ரமாணஜ்ஞானமென்று உரைக்கப்பட்டது. இது தர்மீ காண்பிக்கப்பட்டது. இதற்கு மேல் ஸாத்தியதர்மத்தைச் சொல்லுகிருர்—ஸ்வப்ராகபாவ என்று. வஸ்த்வந்தரபூர்வகம் என்று சொன்னுல் கடம் முதலிய ஸ்வவிஷயங்களை தனக்கு முந்தினவைகளாகக் கொண்டிருப்பதனுல் ஸித்தஸாதநமாகுமென்று அதை வ்யாவர்த்திப்பதற்காகக் கூறுகிருர்—'ஸ்வதேசகத' என்று. 'ஸ்வாச்ரயகத' என்று சொன்னுல் த்ருஷ்டாந்தத்திற்கு ஸாத்யவைகல்யம் வரும், இருட்டானது தீபத்தை ஆச்ரயித்ததல்லவன்றே, அதனுல் 'ஸ்வதேசகத' என்று சொல்லப்பட்டது. தர்மாதர்மங்களை விலக்குவதற்காகக் கூறுகிருர்— 'ஸ்வநிவர்த்ய' என்று. கற்றறிந்தவரே! ஸ்வநிவர்த்ய சப்தத்தால் எவ்வாறு தர்மாதர்மங்களுக்கு வ்யாவ்ருத்தி ஏற்படுகிறது ? ஜ்ஞானோத்பத்திக்கு ஹேதுவாக இருக்கிற அத்ருஷ்டம் ஜ்ஞானோத்பத்தியினுலன்றே நாசமடைகிறது. இவ்வண்ணமல்ல. எல்லா தர்மாதர்மங்களுக்கும் ஜ்ஞானத்தை ட்லமாகக் கொண்டிருத்தலில்லாமையால். ஜ்ஞானத்தை உண்டுபண்ணுகிற

* தாராவாஹிகஜ்ஞானம்—ஸ்தம்பம் ஸ்தம்பம் என்று ஒரே விஷயத்தை தொடர்ச்சியாக விஷயீகரித்துக்கொண்டுவருகிற ஜ்ஞானம்.

வஸ்துக்களைக் காட்டிலும் வேறாக இருக்கிற தர்மம் முதலியவைகளுக்கு முந்தினக்ஷணத்தில் தானிருக்குமிடத்தில் இருத்தலாலும். அன்றிக்கே ஸ்வநிவர்த்ய என்கிற பதத்தினால் ஸம்ஸ்காரத்தை விலக்கியபடி. ஸம்ஸ்காரமானது ஜ்ஞாநத்தால் நிவர்த்திக்கத்தக்கதல்லவன்றோ. பயம் முதலியவற்றை வ்யாவ்ருத்திப்பதற்காகக் கூறுகிறார்— 'ஸ்வவிஷயாவரண' என்று. ப்ராகபாவம் இவ்வித ஸ்வபாவமுள்ளதாக இருப்பதால் அதை விலக்குவதற்காகச் சொல்லுகிறார்— 'ஸ்வப்ராகபாவவ்யதிரிக்த' என்று. இது ப்ரதிலோம வ்யாவ்ருத்தி. வஸ்த்வந்தர பூர்வகம் என்று சொன்னால் அபாவமும் யதார்த்தமாக இருப்பது பற்றி வஸ்துசப்தவாச்யமாக இருப்பதால் அதை விலக்குவதின்பொருட்டுக் கூறுகிறார்— 'ஸ்வப்ராகபாவவ்யதிரிக்த என்று. கடம் முதலிய ஸ்வவிஷயங்களை விலக்குவதற்காகக் கூறுகிறார்— ''ஸ்வவிஷயாவரண'' என்று. சுவர் முதலியவற்றை விலக்குவதற்காகச் சொல்லுகிறார்—'ஸ்வநிவர்த்ய' என்று. அறியத்தக்க வஸ்துவை அடைந்திருக்கிற (வித்தியின்) ஜ்ஞாநத்தினுடைய அபிவ்யக்தியின் ப்ராகபாவத்தை விலக்குவதற்காகக் கூறுகிறார்— 'ஸ்வதேசகத' என்று. ப்ரமாணஜ்ஞாநத்தால் அஜ்ஞானமானது விலக்கப்பட்டவுடன் அறியத்தக்கவஸ்துவை அடைந்திருக்கிற சைதன்யமானது நன்கு அபிவ்யக்தமாக ஆகிறதென்றல்லவோ அவர்களின் மதத்தினது கொள்கை. அபிவ்யக்தியின் ப்ராகபாவத்திற்கு விஷயத்தை மறைத்தலாவது ப்ரகாசவிரோதியாக இருத்தலே ஒழிய அதற்கு ப்ரதிபந்தகமாக இருத்தலன்று. இவ்வாறாக அநுலோம வ்யாவ்ருத்தி. ஹேதுவைச்சொல்லுகிறார்—'அப்ரகாசித' என்று. நேராகவோ பரம்பரையாகவோ பாதிக்கத்தகாத வ்யவஹாராநுகுண்யத்திற்குக் காரணமாக இருத்தலாகிற ப்ரகாசகத்வம் இங்கு சொல்லக் கருதப்பட்டிருக்கிறது, நேராகவோ அல்லது பரம்பரையினாலோ என்று சொல்லப்பட்டாலன்றோ தீபப்ரபையிலும் ஜ்ஞாநத்திலும் ஹேதுவின் ஒற்றுமை ஸித்திக்கிறது. இது வெள்ளி என்கிற ஜ்ஞாநத்தில $ அதிவ்யாப்திதோஷத்தைப்பரிஹரிப்பதற்காக 'அபாத்யவ்யவஹாராநுகுண்யஹேதுத்வம்' என்று சொல்லப்பட்டது. ஹேது சரீரத்தில் விசேஷணமின்றி தனித்து 'ப்ரகாசகத்வாத' என்று மாத்திரம் சொன்னால், தாராவாஹிகஜ்ஜ்ஞாநத்தில் மேல் மேல் வருகிற ஜ்ஞாநங்களுக்கு ப்ரகாசகத்வமிருந்தாலும் ஸாதிக்கவேண்டுமென்று விரும்பப்பட்டிருக்கிற தர்மமில்லாதகாரணத்தால் வ்யபிசாரம் வருமென்று அதை விலக்குவதற்காகக் கூறுகிறார்— 'அப்ரகாசிதார்த்தப்ரகாசகத்வாத்' என்று. இந்திரியங்களில் வியபிசாரதோஷத்தை வ்யாவ்ருத்திப்பதற்காக ஹேதுவானது 'பாஸமானத்வேஸதி' என்று விசேஷிக்கப்படுகிறதென்று எண்ணத்தக்கது. திருஷ்டாந்தத்தைச் சொல்லுகிறார்— 'அந்தகாரே' என்று. தீபப்ரபைபோல் என்று சொன்னால் மேல்மேல் உண்டாகிற ப்ரபைகளுக்கு ப்ரகாசிக்கப்பட்டிராத அர்த்தங்களை ப்ரகாசிக்கச் செய்தலென்கிற தன்மை இல்லாமையால் ஸாதன $ வைகல்யம் உண்டாகும். தன்னால் விலக்கத்தக்க வேறுவஸ்துவைதான் நிலைபெற்றிக்கும் க்ஷணத்திற்கு முந்தினக்ஷணத்தில் உடைத்தானதாக இருத்தல் என்கிற தன்மை இல்லாமையால் ஸாத்யவிகலதையும் உண்டாகுமென்று அந்த தோஷங்களை விலக்குவதற்காக முதலிலுண்டான ப்ரதீபத்தின் காந்திபோலென்று கூறப்பட்டது. அப்படிச் சொன்னாலும் பகலிலிருக்கும் தீபத்தின் ப்ரபைக்கு அவ்விதமான தன்மை, காணப்படாமை

$ அதிவ்யாப்தி—அலக்ஷ்யத்தில் லக்ஷணமிருத்தல்,

* ப்ரபை—ஒளி. $ வைகல்யம்—இன்மை.

யால் அதை விலக்குவதற்காக அந்தகாரே என்று சொல்லப்பட்டது. திருஷ்டாந்தத்திற்கு ஸாத்யத்தின் இன்மையை ஸந்தேஹித்து பரிஹாரம் செய்கிறார்—* ஆலோகம் இது முதலியதால். ப்ரகாசமிருந்தால் கோட்டான் முதலிய பக்ஷிகளுக்கு இருள்ஸம்பவிப்பதால், எல்லா இடங்களிலும் ஒன்றுபோல் தொடர்ந்து வருகிற ஆகாரத்தைக் கூறுகிறார்—நுபதர்சனுபாவமாத்ரம் வா என்று. அன்றிக்கே கண்ணை மூடிக்கொண்டவனுக்கு இருட்டுவிஷயமான ஜ்ஞாந நிர்வாஹத்திற்காகக் கூறுகிறார்— நுபதர்சன என்று.

இந்த இடத்தில் கௌதமமதாநுஸாரிகளான தார்க்கிகர் முதலியவர்கள் சொல்லுகிற தூஷணத்தை அநுஸந்தானம் செய்கிறார். அந்த தமஸ்விஷயத்தில் $ உத்பாதக * ஜ்ஞாபகாநுபபத்தியினுல் வேறு திரவ்யமென்பது தூஷிக்கப்பட்டது. ரூபமுள்ளதாக இருந்தபோதிலும் † பரமாணுக்களுக்கே உண்டுபண்ணத்தகாததாக இருத்தலென்கிற தன்மை. இருட்டுக்கோவென்றால் ரூபமுள்ளதாக இருத்தலாலும் பெரிதாக இருப்பதாலும் உண்டுபண்ணத்தக்க தன்மை இருக்கலாம். அதில் ரூபமுள்ளதாக இருப்பதால் அந்த ரூபமில்லாத வாயு ஆகாசம் முதலிய வஸ்துக்கள் உத்பாதகங்களாக ஆகிறதில்லே. ஸ்பர்சம் ரஸம் கந்தம் என்கிற குணங்களில்லாமையால் மற்ற திரவ்யங்களும் உத்பாதகங்களாக ஆகிறதில்லே. காரணவஸ்துவில் குணுரம்பத்திலன்றோ கார்யத்தில் வைசேஷிககுணத்தின் தொடக்கம். இது உத்பத்தியின் அநுபபத்தி. பாஹ்யங்களான தீபப்ரபை ஸௌர்யகாந்தி சந்திரகாந்தி இவைகளால் உதவிபுரியப்படாமலிருப்பதால் கண்ணுனது விஷயங்களை க்ரஹிக்கும் சக்தியுள்ளதாக ஆகிறதில்லே. ப்ரகாசத்தின் ஸமீபத்தில் இல்லாமையால் இதற்கு க்ரஹிக்கப்படத்தக்க தன்மையுமில்லே. ரூபத்தோடுகூடி இருக்கிறதென்கிற ப்ரதீதியோ வென்றால் ப்ராந்தியே. கண்களை மூடிக்கொள்ளுகிற ஸமயத்தில் கருப்பு நிறத்தின் தோற்றம் போல். இவ்வாருக ஜ்ஞப்தியின் அநுபபத்தி. இந்த விஷயத்தில் பரிஹாரமானது வார்த்திககாரர்களால் உரைக்கப்பட்டிருக்கிறது, "தம: கலு சலம் நீலம் பராபரவிபாகவத்--ப்ரஸித்த தர்மவைதர்ம்யாத் நவப்யோ பேத்துமர்ஹதி" என்று, இந்த சுலோகத்தின் பொருள்- இருளானது சலனமுள்ளது. கருப்புநிறமுள்ளது. அதிகம் கொஞ்சம் என்று சொல்லக்கூடிய பாகுபாடுள்ளது, ப்ரஸித்த த்ரவ்யங்களுக்குள்ள தர்மங்களைக் காட்டிலும் விருத்ததர்மங்களுள்ளதாக இருப்பது பற்றி ப்ரஸித்தமான ஒன்பது த்ரவ்யங்களைக் காட்டிலும் வேறுபடுத்துவதற்குத் தகுதியுள்ளது—என்று. அதே இவ்விடத்தில் சொல்லப்படுகிறது. அங்கே * பகுளத்வ § விரளத்வசப்தங்களால் பராவரசப்தார்த்வம் சொல்லப்பட்டது. ஆதிசப்தத்தால் சலிக்கும் தன்மை கூறப்பட்டது. "ரூபவத்தயா" என்பதனுல் நீலசப்தார்த்தம் சொல்லப்பட்டது. த்ரவ்யாந்தரசப்தத்திறும் பத்

---

* ஆலோகம்—ப்ரகாசம், $ உத்பாதகம்—உண்டுபண்ணுகிற வஸ்து.

* ஜ்ஞாபகம்—ஜ்ஞாநத்தை உண்டுபண்ணுகிற வஸ்து.

† பரமாணு— அதிநுட்பமான அணு. இந்தபரமாணுக்கள் அநேகங்கள் ஒன்றுகூடி வரிசையாக த்வ்யணுகம் த்ரயணுகம் முதலியபெயர்களைப் பெற்று ஸ்தூலமான கார்யங்களாக ஆகின்றனவென்று நையாயிகர்களின் கொள்கை. இதற்கு பீலுவென்று அவர்கள் பெயரிட்டிருக்கிறார்கள்.

* பகுளத்வம்— ஆதிக்யம், § விரளத்வம்—ஸ்வல்பமாக இருத்தல்.

தாவது த்ரவ்யமாக இருத்தல் கூறப்பட்டது, ‡ த்ரவ்யங்கள் ஒன்பது என்று சொல்வதற்குக் காரணம் அந்த ப்ருதிவீ முதலிய த்ரவ்யங்களிலுள்ள அன்யோன்யவிருத்தங்களான தர்மங்களே. அப்படி இல்லாவிட்டால் ப்ருதிவீ ஒன்றே த்ரவ்யம். வேறு ஒன்றும் த்ரவ்யமல்ல கந்தகுணமில்லாமையால் என்று சொல்வதற்கு சக்யம். இவ்வண்ணம் த்ரவ்யங்கள் இரண்டே இது முதலியது சொல்வதற்கு சக்யம். அதோ அபிமதமல்லாதது த்ரவ்யங்களுக்கு ஒன்றோடொன்று விருத்தங்களான தர்மங்கள் இருப்பதால். இவ்வண்ணம் ஒன்பது த்ரவ்யங்களிலுள்ள தர்மங்களைவிட விருத்தங்களான தர்மங்களிருப்பதால் தமஸ் பத்தாவது த்ரவ்யமென்று ஒப்புக்கொள்ளத்தக்கதென்று வார்த்திகத்தின் பொருள்.

கண்ணை மூடிக்கொள்ளுகிற தருணத்தில் நீலரூபத்தின் தோற்றமானது பாதிதவிஷயம். இதோவென்றால் அபாதிதமாக இருப்பதால் அப்பொழுது இருப்பதற்குத் தகுயுதிள்ளதன்று. அப்படி இருந்தபோதிலும் ரூபத்தை நன்கு கண்டறிகிற வேளையில் ஜ்ஞானம் இல்லாமையால் ப்ரத்யக்ஷமானது கண்மூட்டம் போலவும் ஸம்பவிக்கிறதென்று ஸந்தேஹிக்கப்படுகிறதென்று சொல்லப்படுமேயானால், நம் முதலியவர்களுக்கு ரூபத்தின் உபலப்தி உண்டாகும் ஸமயத்தில் கோட்டான் முதலிய பக்ஷிகளுக்கு ரூபத்தின் உபலப்தி இல்லாமலிருக்கையால் அந்த கோட்டான் முதலியவற்றின் ரூபோபலப்திக்குங்கூட ஸந்தேஹாஸ்பதமாயிருத்தல் என்ற சங்கை வந்துவிடுவதால், கோட்டான் முதலியபக்ஷிகளுக்கு ரூபத்தின் உபலப்தி உண்டாகும் தருணத்தில் நம் முதலியவர்களுக்கு ரூபத்தின் உபலப்தி இல்லாமையால் நம் முதலியவர்களுடைய ரூபோபலப்திக்குங்கூட சங்கைக்கு ஆஸ்பதமாக இருத்தல் ப்ரஸங்கிப்பதால். § ஆகம ஸ்வாரஸ்யத்தாலும் சங்கையானது விலக்கப்பட்டிருப்பதால் தமஸ்ஸானது பத்தாவது த்ரவ்யமென்று நிச்சயிக்கப்படுகிறது. "தமஸ்ஸைப் பகவான் படைத்தார். பகலுமில்லை, இரவுமில்லை, ஆகாயமுமில்லை, பூமியுமில்லை- இருளுமில்லை. ஜ்யோதிஸ் இருந்தது- மற்றொன்றுமிருக்கவில்லை. எவனுக்கு தேஜஸ் சரீரமோ- எவனுக்கு தமஸ் சரீரமோ" என்று ஸ்ருஷ்டிக்கத்தக்கதாகஇருத்தல், ஸம்ஹரிக்கத்தக்கதாக இருத்தல், சரீரமாக இருத்தல் முதலியவைகளன்றோ சுருதியில் கூறப்படுகின்றன. ப்ரகாசத்தை அபேக்ஷியாமலிருத்தல் எவ்வாறு அறிகிற பிராணிவிசேஷத்தைப் பொருத்திருப்பதாகக் காணப்படுகிறதோ, அவ்வாறே அறியத்தக்க வஸ்துவிசேஷத்தைப் பொருத்திருப்பதும் பொருத்தமுள்ளதாக இருக்கிறது. உலகத்தில் கார்யமானது எவ்விதமாக அறியப்பட்டதாக ஆகிறதோ அவ்வண்ணம் காரணத்தை கல்பிப்பதில் பிரமாணமாக ஆகிறதே ஒழிய நன்கு ஸ்பஷ்டமாக நிச்சயிக்கப்பட்டிருக்கிற கார்யமானது காரணநிரூபணத்தின் பொருட்டு அபலாபத்தை அடைவதற்குத் தகுதியுள்ளதாக ஆகிறதில்லை என்கிற நியாயத்தினால் பாதிக்கப்பட்டிராத ப்ரதீதியினால் ஸித்தித்திருக்கிற தமஸ்ஸுக்கு உத்பாதகவஸ்துவானது கல்பிக்கத்தக்கதாதலால் உத்பாதகாநுபபத்தியாவது ஜ்ஞாபகாநுபபத்தியாவது இல்லை. எப்படிஎன்றால்- "தமோ நாம த்ரவ்யம் பகுள விரளம் மேசகசலம் ப்ரதீதம் கேநாபி க்வசிதபிந பாதச்சததிருசே அத: கல்ப்யோ ஹேது: ப்ரமிதிரபிசாப்தீ விஜயதே நிராலோகம் சக்ஷு: ப்ரதயதிஹித த்தர்சனவசாத்", இந்த ச்லோகத்துக்குப் பொருள்- நெருக்கமுள்ளதாகவும் இடைவெ

‡ த்ரவ்யம்—குணத்துக்கு ஆசிரயமாக இருக்கிற வஸ்து.

§ ஆகமம்—சாஸ்த்ரம்.

ளியுள்ளதாக அங்குமிங்கும் ஸ்வல்பமாக இருப்பதாகவும் கருத்த நிறமுள்ளதாகவும் சலி க்கிறதாகவும் அறியப்படுவதால் இருள் ஒரு த்ரவ்யம் ஒருவராலும் ஓரிடத்திலும் இந்த ப்ரதீதிக்கு பாதம் காணப்பட்டிருக்கவில்லை. ஆகையால் ஹேதுவானது கல்பிக்கத்தக் கது இவ்விஷயத்தில் சப்தப்ரமாணத்தால் உண்டான ப்ரமிதியும் விளங்குகிறது. ஸூர்யன் சந்திரன் தீபம் முதலியவைகளின் ப்ரகாசத்தினல் போஷிக்கப்பட்டிருக்கிற ஸஹஜப்ரகாசத்தை இழந்திருக்கிற கண்ணனது அந்த இருளை தர்சனவசத்தால் வெ ளிப்படுத்துகிறதன்றோ, தமஸ் த்ரவ்யம் என்பதே பாஷ்யகாரருடைய மதம். ஸித்தா ந்தத்தில் அது தூஷிக்கப்படாததாலும் உண்டுபண்ணத்தக்கதாக இருத்தல் ஸம்ஹ ரிக்கத்தக்கதாக இருத்தல் சரீரத்வம் இவைகள் கேட்கப்பட்டிருப்பதால் ஸ்வச்ச த்ரவ்ய மாக இருப்பதால் இருள் ஆகாசத்தினுடைய கார்யம். பஞ்சீகரணத்தினல் இருட்டில் ரூபத்தோடுகூடியிருத்தல் பொருத்தமுள்ளதாக ஆகிறது. அன்றிக்கே ரூபமுள்ளதாக இருப்பதால் தமஸ்ஸானது தேஜஸ்ஸின் கார்யம். ஸ்வச்ச த்ரவ்யமாக இருப்பதால் ஸ்பர்சத்தினது உபலப்தி இல்லை. இதி நிரவத்யம் என்று. ப்ரமாணத்தினல் ஸித் தித்திருப்பதால் ப்ரமாணவிருத்தமான தர்க்கம் அதடியாக ஸம்பவிக்கக்கூடிய பாதம் இவைகள் பொருந்தாததலால் தோஷமில்லை என்று அர்த்தம்.

अत्रोच्यते — अहमज्ञो मामन्यञ्च न जानामीत्यत्रापि प्र
तीतिसिद्धेन केवलेन च प्रत्यक्षेण न भावरूपमज्ञा
नं प्रतीयते। यस्तु ज्ञानप्रागभावविषयत्वे विरोध उक्तः —
स हि भावरूपाज्ञानेऽपि तुल्यः। विषयत्वेनाश्रयत्वेन
चाज्ञानस्य व्यावर्तकतया प्रत्यगर्थः प्रतिपन्नो वा अप्रति
पन्नो वा — प्रतिपन्नश्चेत् तत्स्वरूपज्ञाननिवर्त्यं तदज्ञा
नं तस्मिन् प्रतिपन्ने कथमिव तिष्ठति। अप्रतिपन्नश्चेद्व्यावर्त
काश्रयविषयज्ञानशून्यमज्ञानं कथमनुभूयेत। अथ विशद
स्वरूपावभासोऽज्ञानविरोधी — अविशदस्वरूपश्च प्रत्य
त आश्रयविषयज्ञाने सत्यपि नाज्ञानानुभवविरोध
इति — हन्त तर्हि ज्ञानप्रागभावेऽपि विशदस्वरूपविषयः —
आश्रयप्रतियोगिज्ञानमविशदस्वरूपविषयमिति न कश्चिद्विशे
षोऽन्यत्राभिनिवेशात्। भावरूपस्याज्ञानस्यापि ज्ञान
सिद्धिः सिद्धः प्रागभावसिद्धाविव सापेक्षत्वेऽस्त्येव।

ஸ்ரீபாஷ்யம்—

இந்த விஷயத்தில் ஸித்தாந்தம் கூறப்படுகிறது. "அஹமஜ்ஞ:, மாம ந்யஞ்ச ந ஜாநாமி" என்கிற இடத்தில் உபபத்தியுடன் கூடியதாயும் தனித்

துமிருக்கிற ப்ரத்யக்ஷத்தினால் பாவரூபமான அஜ்ஞானம் அறியப்படவில்லை. 'அஹமஜ்ஞ: மாமந்யஞ்ச ந ஜாநாமி'' என்கிற வாக்யஜந்யஜ்ஞாநத்திற்கு ஜ்ஞாநப்ராகபாவம் விஷயமென்கிற பக்ஷத்தில் யாதொரு விரோதம் சொல்லப்பட்டதோ, அது பாவரூபாஜ்ஞாநத்திலும் ஸமானம். விஷயமாகவும் ஆச்ரயமாகவும் இருந்துகொண்டு அஜ்ஞாநத்திற்கு வ்யாவர்த்தகமாக ப்ரத்யக் வஸ்துவானது நன்கு பாஸிக்கிறதா? பாஸிக்கவில்லையா? பாஸிக்கிறதென்று சொல்லப்படுமேயாகில், அந்த ப்ரத்யக்வஸ்துவின் ஸ்வரூபஜ்ஞாநத்தினால் நிவர்த்திக்கத்தக்க அந்த அஜ்ஞாநமானது அது பாஸிக்கும் தருணத்தில் எவ்வாறு நிலை பெற்றிருக்கும். ப்ரத்யக் வஸ்துவானது பாஸிக்கவில்லை என்று கூறப்படுமேயானால், வ்யாவர்த்தகாச்ரயவிஷயமாக ஜ்ஞாநசூந்யமான அஜ்ஞானமானது எவ்வாறு அநுபவிக்கப்படலாம் அப்படிக்கின்றி விசதமான ஸ்வரூபத்தினுடைய ப்ரகாசமே அஜ்ஞாநவிரோதி. அவிசதமான ஸ்வரூபமோவென்றால் அறியப்படுகிறதாதலால் ஆச்ரயவிஷயஜ்ஞாநமானது இருக்கும்பொழுதுகூட அஜ்ஞாநாநுபவவிரோதமில்லை என்று. ஸந்தோஷம், அப்படியானால் ஜ்ஞாநப்ராகபாவங்கூட விசதஸ்வரூபத்தை விஷயமாக உடையது, ஆச்ரயப்ரதியோகிஜ்ஞாநமோவென்றால் அவிசதமான ஸ்வரூபத்தை விஷயமாகக் கொண்டதென்பது பற்றி வேறு இடத்தில் பிடிவாதத்தைத் தவிர்த்து ஒரு விசேஷமுமில்லை. அஜ்ஞாநமென்று ஸித்திக்கிற பாவரூபமான அஜ்ஞாநத்திற்கும் ப்ராகபாவஸித்தியில் போல் ஸாபேக்ஷத்வம் இருக்கவே இருக்கிறது.

ச்ருதப்ரகாசிகை—

பிறகு ஸித்தாந்தம் சொல்வதற்குத் தொடங்குகிறார்— அத்ரோச்யதே என்று. கேவலேநசப்ரத்யக்ஷேண என்பது திருஷ்டாந்தமாக எடுத்துக் கூறப்பட்டது. உபபத்தியும் தூஷணமும் செய்யப்பட்டன, தனித்ததான ப்ரத்யக்ஷ ஸாதகமல்லவென்று பொருள். ஜ்ஞாநப்ராகபாவம் விஷயமென்று சொல்வதில் உபபத்தியன்றோ விரோதம். அது அஜ்ஞாநம் பாவரூபமென்று சொல்லுகிற தருணத்திலும் துல்யமென்று சொல்லுகிறார்—யஸ்து என்று, துல்யத்வத்தை உபபாதனம் செய்கிறார்— விஷயத்வேந என்று. ப்ரதிபன்னசப்தத்தால் பாஸனம் அதாவது ப்ரகாசம் கூறப்படுகிறது— தத்ஸ்வரூபஜ்ஞாநநிவர்த்யம் என்று. ஸ்வரூபஜ்ஞாநம், ஸ்வரூபத்தின் அவபாஸம் அதாவது ப்ரகாசம். தன்னாலேயோ வேறு ப்ரமாணத்தினாலேயோ ஸ்வரூபத்தின்

* ஸாபேக்ஷத்வம்—ஒன்றின் அபேக்ஷையோடு கூடி இருத்தல்.

அவபாஸத்தினால் போக்கத்தக்கது அல்லது விலக்கத்தக்கதென்று அர்த்தம். இது வெள்ளி என்கிற ஜ்ஞாநமுண்டாயிருக்கிற இடத்தில் இது வெண்மைநிறத்துடன் கூடின ப்ரகாசமுள்ள வஸ்து என்கிற இப்படிப்பட்ட நூறுப்ரமாணஜ்ஞாநங்கள் உண்டாயிருந்தபோதிலுங்கூட ப்ரமநிவ்ருத்தியினது இன்மை காணப்படுவதால், ப்ரமாணஜ்ஞாநம் ப்ரயோஜனமற்றதென்று *ஸித்தவத்காரத்தால், அது ஸ்வரூபஜ்ஞாநத்தால் நிவர்த்திக்கத்தக்கதென்று உரைக்கப்பட்டது. வ்யாவர்தகாச்ரய விஷயஜ்ஞாநசூந்யம். ஆச்ரயமாகவும் விஷயமாகவும் இருத்தலால் ப்ரத்யகர்த்தம் $ வ்யாவர்த்தகம் என்ற பொருள். தத- †அவபாஸமில்லாதது. விஷயத்வேந என்கிற பதத்தை முதன்மையாகக் கொண்டிருக்கிற பாஷ்யத்தால் ஸ்வாத்மவிஷய அஜ்ஞாந ப்ரதிபத்தியில் விரோதத்தின் ஸாம்யம் காண்பிக்கப்பட்டது. கடம் முதலியவஸ்துக்களை விஷயமாகக் கொண்டிருக்கிற ஜ்ஞாநத்தின்ப்ரதிபத்தியிலுங்கூட அஜ்ஞாநம் விஷயமாகஇருப்பதால் வ்யாவர்த்தகமாக கடம் பாஸிக்கிறதா, இல்லையா? பாஸிக்கிறதானால் கடஸ்வரூபஜ்ஞாநத்தினால் விலக்கத்தக்க கடாஜ்ஞாநமானது அந்த கடம் பாஸித்துக்கொண்டிருக்கையில் எவ்விதமாக நிலைபெறும். கடம் பாஸியாமலிருக்குமேயாகில் வ்யாவர்தகவிஷயஜ்ஞாநசூன்யமான அஜ்ஞாநமானது எவ்வாறு அனுபவிக்கப்படலாம் என்று அர்த்தஸித்தமான விரோதம் காணத்தக்கது. இவ்வண்ணமாக அன்யனால் பாவாபாவங்களுடைய விரோதமானது காண்பிக்கப்படவே, அதற்கு ப்ரதிபந்தியாக நிவர்த்ய நிவர்தகவிரோதம் சொல்லப்பட்டது. அதற்குமேல் விசதம் அவிசதம் என்கிற பாகுபாட்டினால் விரோதத்தினின்மையை சங்கிக்கிறார்— அத என்று. ப்ரத்யகர்த்தத்திற்கு ப்ரமாணஜ்ஞாநத்தால் அவபாஸம் விசதாவபாஸம். அது தன்பக்ஷத்திலும் துல்யம் என்று சொல்லுகிறார்— ஹந்ததர்ஹி என்று. விசதஸ்வரூபமானது எதற்கு அவச்சேதகமாகஇருக்கிறதோ அது விசதஸ்வரூபவிஷயம். விசதஸ்வரூபத்திற்கு ஸ்வவிஷயமான ஜ்ஞாநத்தின் வாயிலாக ப்ராகபாவாவச்சேதகத்வம். ஜ்ஞாநப்ராகபாவமும் விசதஸ்வரூபஜ்ஞாநாவச்சின்னம் என்று அர்த்தம். ஜ்ஞாநத்திற்கு அபாவாவச்சேதகத்வம் ப்ரதியோகியாக இருத்தலால். விசதஸ்வரூபஜ்ஞாநம் ப்ராகபாவத்திற்கு ப்ரதியோகி என்று தாத்பர்யம். விரோதத்தின் இன்மை ஸித்திப்பதின்பொருட்டு இருக்கிறஜ்ஞாநமானது அதைக்காட்டிலும் வேறு பதார்த்தம் என்று சொல்லுகிறார்— ஆச்ரய என்று. ஆச்ரயம் ப்ரதியோகி இவ்விரண்டுகளின் ஜ்ஞாநம் ஆச்ரயப்ரதியோகிஜ்ஞாநம். அவிசதஸ்வரூபவிஷயம் என்று. ஆச்ரயஜ்ஞாநத்திற்கு அவிசதஸ்வரூபவிஷயத்வமாவது அவிசதமானப்ரத்யகர்த்தத்திற்கு விஷயமாக இருத்தல் ப்ரதியோகிஜ்ஞாநத்திற்கு அவிசதஸ்வரூபவிஷயத்வமாவது அபாவத்திற்கு ப்ரதியோகியாக இருக்கிற அவிசதமான ஜ்ஞாநத்திற்கு விஷயமாக இருக்கை. விஷயத்துடன் கூடின நிவர்த்தகஜ்ஞாநமானது அபாவத்திற்கு ப்ரதியோகியாக இருத்தலால் இப்பொழுது ஜ்ஞாநத்தை அவலம்பிக்கிறது. அதில் நிவர்தகஜ்ஞாநவிஷயமான ப்ரத்யகர்த்தத்திற்கு இப்பொழுது விசதபாவமில்லாமையாலும் நிவர்தகஜ்ஞாநம் இப்பொழுது இல்லாமையாலும் ப்ரதியோகிஜ்ஞாநத்திற்கு அவைசத்யம். ஆச்ரயத்துடன் கூடிய ஜ்ஞாநமானது இருந்துகொண்டன்றோ அபரோக்ஷாவபாஸரூபமாக ஆகிறது. ஆதலால் அத

---

* ஸித்தவத்காரம்—நிச்சயம்,

$ வ்யாவர்தகம்—வேற்றுமையை உண்டுபண்ணுகிற வஸ்து.

† அவபாஸம்—ப்ரகாசம்.

* ப்ரதியோகி—தவறாமல் ஒருவஸ்துவினால் அபேக்ஷிக்கப்படுகிற வஸ்து.

ற்கு நிகழ்காலத்தில் இல்லாமையினால் வைசத்யத்தின் இன்மை ஏற்படுகிறது. இவ்வண்ணம் ஆச்ரயமாகப்ரகாசிக்கிறஸ்வரூபம் அவிசதமானது. ப்ரதியோகியாக ஸ்மரிக்கப்படுகிறஜ்ஞானமானது இப்பொழுது அவிசதவிஷயமாக இருப்பதாலும் தத்காலத்திலில்லாததாலும் அவிசதம் என்பதுபற்றி அந்த இரண்டுவிஷயமான ஜ்ஞானமும் அவிசதஸ்வரூபவிஷயமானது. அதோ இருக்கிறது. விசதஜ்ஞானமோவென்றால் இல்லாததாக அபாவத்திற்கு ப்ரதியோகி என்பதனால் விரோதமில்லை என்று அர்த்தம். இது அர்த்தம்—அஜ்ஞானநிவர்தகமாக அபிமானிக்கப்பட்டிருக்கிற ப்ரமாணஜ்ஞானத்தின் அபாவமானது முற்றிலும் உன்னாலும் ஒப்புக்கொள்ளத்தக்கது. அப்படி ஒப்புக்கொள்ளாவிட்டால் ப்ரமாணஜ்ஞானத்தினால் விலக்கத்தக்க அஜ்ஞானாநுபவம் ஸம்பவியாமல் போவதாதலால், அப்படியானபிறகு உன்னாலொப்புக் கொள்ளப்பட்டிருக்கிற ப்ரமாண ஜ்ஞானாபாவமே அஹம் அஜ்ஞ: என்கிற ஜ்ஞானத்திற்கு விஷயமாக ஆவதற்குத்தகுதியுள்ளதாக ஆகிறதென்பதுபற்றி அபாவக்ரஹணாநுபபத்தியினால் பாவரூபத்வம் கல்பிக்கத்தக்கதல்லவென்று பூர்வபக்ஷத்தில் சொன்ன விரோதம் எவ்வண்ணம் பரிஹரிக்கப்பட்டதாக ஆகிறது என்று வினவப்படுமேயானால் இவ்வாறாக பரிஹரிக்கப்பட்டது. அவ்விடத்தில் எந்த அர்த்தத்தை விஷயீகரித்துக்கொண்டிருக்கிற ஜ்ஞானம் அபாவத்துக்கு ப்ரதியோகியாக சொல்லப்படுகிறதோ அபாவத்துக்கு ப்ரதியோகியாக இருக்கிற ஜ்ஞானத்திற்கு விஷயமாக இருக்கிற அந்த அர்த்தத்தினது ப்ரதிபத்தி இருக்கும் தருணத்தில் அந்த ஜ்ஞானத்தின் அபாவமானது உபபன்னமாகிற தில்லையென்றல்லவோ விரோதம். அந்த விஷயத்தில் இது பரிஹாரம். ஸ்ம்ருதியில் வந்து உதித்திருக்கிற அபாவப்ரதியோகிஜ்ஞானமன்றோ நிஷேதிக்கப்படுகிறது. எப்படி என்றால், கடத்தின் $ ஸாக்ஷாத்காரம் இல்லை என்று நிஷேதமிருக்குந்தருணத்தில் கடத்தின் ஸாக்ஷாத்காரம் ஸ்மரிக்கப்படுகிறது. நினைக்கப்படுகிற வஸ்துவுக்கு நினைவு எந்தகாலததிலுண்டாகிறதோ அதே காலத்திலிருத்தலென்கிற நியமமில்லாமையால் நிஷேத வேளையில் நினைக்கப்படுகிற பதார்த்தத்திற்கு அபாவப்ரதியோகித்வ விரோதமில்லை. உன்னாலும் ஸ்ம்ருதியில் உதித்திருக்கிற நிவர்தக ஜ்ஞானத்திற்கு * ஸ்ம்ருதி ஸமான காலத்தில் இருத்தலில்லாமையால் அஜ்ஞானத்திற்கு அவச்சேதகமாக ப்ரதிபத்தி இருந்தபோதிலுங்கூட, ஸ்ம்ருதியில் வந்து உதித்திருக்கிற நிவர்தக ஜ்ஞானமானது அஜ்ஞான விரோதியல்லவென்று சொல்லத்தக்கது. ஆகையால் தன்னை விஷயீகரிக்கிறதும் கடம் முதலிய வஸ்துக்களை விஷயீகரிக்கிறதுமான ப்ரமாணஜ்ஞானமானது தனக்கு விஷயமான ஆத்மாவோடு கூடவும், கடம் முதலிய வஸ்துக்களோடுகூடவும் ஸ்ம்ருதியில் ஆரூடமாய் அவிசதமாகத் தோன்றிக்கொண்டு அபாவத்திற்கு ப்ரதியோகியாக ஆகிறதாதலால் மிகவும் பொருத்தமுள்ளதாக ஆகிறதென்று. அனுபவிக்கப்பட்டிருக்கிறதற்கன்றோ ஸ்மரணம் உண்டாகும். ப்ரமாண ஜ்ஞானம் யாரால் அனுபவிக்கப்பட்டதென்று வினவப்படுமேயானால், உன்னுடைய நிவர்தக ஜ்ஞானம் யாரால் அனுபவிக்கப்பட்டது. ஆகமத்தினாலென்று சொல்லப்படுமேயானால் நமக்கும் ஆத்மஸாக்ஷாத்காரம் அதை விதிக்கிற வாக்கியத்தாலறியப்பட்டிருக்கிறது. கடம் முதலிய வஸ்துக்களின் ஸாக்ஷாத்காரமோவென்றால் ப்ரத்யக்ஷம் முதலியவைகளில் யாரோ ஒருவனால் அனுபவிக்கப்பட்டிருக்கிறது. மேரு பர்வதத்தின் ஸாக்ஷாத்காரம் எவ்வாறு நிஷேதிக்கப்படுகிறது ? அதோவென்றால் ஒரு ப்ர

$ ஸாக்ஷாத்காரம்—ப்ரத்யக்ஷம்

* ஸ்ம்ருதி — பூர்வாநுபவத்தாலுண்டான ஸம்ஸ்காரமாத்திரத்தினாலுண்டாகிற ஜ்ஞானம்.

மாணத்தாலும் முன்பு அனுபவிக்கப்பட்டதன்று சொல்லப்படுகிறது. இந்த இடத்தில் முன்பு யானையைக் கண்டிராத மனிதனால் எவ்வாறு இந்த நற்சந்நிதியில் யானை இல்லையென்று சொல்லப்படுகிறது. ஸம்ஸர்க்கத்தின் அனுபவமில்லாவிடினும் ஸம்ஸர்கிகளான இரண்டு வஸ்துக்களின் அனுபவமாத்திரத்தினால் வேறு இடத்தில் இரண்டில் ஒன்றின் நிஷேதம் பொருத்தமுள்ளதாக ஆகிறதென்று கூறப்படுகிறதேயானால், இன்னமாகில் ஸுமேருவின் ஸாக்ஷாத்கார ஸம்ஸர்காநுபவமில்லாவிடினும் மேருவினுடையவும் ஸாக்ஷாத்காரத்தினுடையவும் ஸ்வரூப ஜ்ஞானம் யாரோ ஒருவனுக்கு வந்திருப்பதினால் அவைகளின் ஸம்ஸர்க நிஷேதமானது பொருத்தமுள்ளதாக ஆகிறது. ப்ரமாண ஜ்ஞானங்கள் அபாவ ப்ரதியோகிகளாக இருப்பதால் அபாவத்திற்கு அப்பொழுது க்ராஹக வஸ்துவில்லையென்று எது கூறப்பட்டதோ அது எல்லாப்ரமாண ஜ்ஞானாபாவங்களுக்கும் ஒரே ஸமயத்தில் அனுபவம் ஸம்பவியாததாலால் சில ஜ்ஞானாபாவத்திற்கு வேறு ப்ரமாணத்தினால் க்ரஹணம் உபபன்னமாவதாலும் பரிஹரிக்கப்பட்டுவிட்டது. இவ்வண்ணம் பாவரூப பக்ஷத்தில் விரோத பரிஹாரஸாம்யம் காண்பிக்கப்பட்டது. ஐயா! விரோதஸாம்யம் சொல்வதற்கு ஸாத்தியப்படாது. அஜ்ஞானமானது நஞர்த்தமான அபாவத்திற்கு ப்ரதியோகியான ஜ்ஞானத்துடன் கூடியதாகவே அறியத்தக்கதாக இருந்தாலன்றோ நஞர்த்த ப்ரதியோகியான அந்த ஜ்ஞானமானது தனக்கு விஷயமாகவும் ஆச்ரயமாகவுமிருக்கிற ப்ரத்யகர்த்தத்துடன் கூடியதாக ப்ரகாசிப்பதால் விஷயமாகவும் ஆச்ரயமாகவுமிருக்கிற ப்ரத்யகர்த்தஜ்ஞானமிருக்கும்பொழுது அதனால் போக்கடிக்கத்தக்க அஜ்ஞானத்தின் ஸ்திதி என்று சொன்னால் விரோதம். பாவரூபமான அஜ்ஞானத்திற்கு ஜ்ஞானப்ரதிபத்தியின் அபேக்ஷை இல்லையன்றோ, ஸ்வரூபத்தினாலேயே ப்ரதிபத்தி ஸம்பவிப்பதால், பாவரூபமான கடத்திற்கு ஆச்ரய ஜ்ஞானம் ப்ரதியோகி ஜ்ஞானம் இவைகளை அபேக்ஷித்துக்கொண்டிருத்தல் காணப்பட்டதில்லையன்றோ என்று சொல்லுகிறார்-பாவரூபஸ்ய என்று.

[illegible]

ப்ரகாசிதஸ்வரூபஸம்ஸ்ருஷ்டத்வமிதி சேத், ஸ்வாநுபவஸ்வரூபஸ்ய கதமப்ரகாசிதஸ்வரூபத்வம்। ஸ்வாநுபவஸ்வரூபஸ்யாபி ஜ்ஞாத்ரந்யப்ரகாசிதஸ்வரூபஸம்ஸ்ருஷ்டத்வமிதி சேத், ஸம்ஸாரதசாயாமபி ஜ்ஞாநஸ்வரூபஸ்ய ப்ரகாசஸ்வரூபஸ்ய ஜ்ஞாநஸ்வரூபநாசப்ரஸங்க இதி பாவ:।

ஸ்ரீபாஷ்யம்—

உபபாதிக்கப்படுகிறது—அஜ்ஞானமென்பது ஜ்ஞாநாபாவமா? அதைக்காட்டிலும் வேறு ஒன்றா? அல்லது அதற்கு விரோதியா? மூன்றுகளுக்கும் அதன் ஸ்வரூப ஜ்ஞாநாபேக்ஷை அவசியம் ஆச்ரயிக்கத்தக்கது. என்றாலும், தமஸ்ஸின் ஸ்வரூபத்தை அறியும்விஷயத்தில் ப்ரகாசத்தின் அபேக்ஷை இல்லை. ஆயினும் ப்ரகாசத்திற்கு விரோதிஎன்கிற ஆகாரத்தால் ப்ரதிபத்தி ஏற்படும் ஸமயத்தில் அந்த ப்ரதிபத்தியில் ப்ரகாசத்தினுடைய அபேக்ஷை இருக்கவே இருக்கிறது. உமக்கு அபிமதமான அஜ்ஞானமானது ஒருபொழுதும் ஸ்வரூபத்தால் ஸித்திபெறுகிறதில்லை. பின்னேயோ அஜ்ஞானமென்றே ஸித்திக்கிறது. அப்படியாகில் ஜ்ஞாநாபாவத்திற்குப்போல் அதை அபேக்ஷித்தல் ஸமானம். ஜ்ஞானத்தின் ப்ராகபாவமோ வென்றால் உன்னாலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. ப்ரதீதிக்கு விஷயமாகவுமாகிறதாதலால் இருவர்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிற ஜ்ஞாநப்ராகபாவமே அஹம் அஜ்ஞன், அதாவது நான் அறிவில்லாதவன், என்னையும் மற்றவனையும் நான் அறிகிறேனில்லை என்று அனுபவிக்கப்படுகிறதென்று ஒப்புக்கொளளத்தக்கது. எப்பொழுதுமே தோஷத்தால் விடுபட்டதும் தனக்குத்தானாகவே ப்ரகாசிக்கின்றதுமான சைதன்யத்தையே தன் உருவாகக்கொண்டிருக்கிற ப்ரஹ்மத்திற்கு அஜ்ஞாநானுபவமானது ஸம்பவிக்கிறதில்லை. ஸ்வானுபவ ஸ்வரூபமாக இருத்தலால், ஸ்வாநுபவஸ்வரூபமாயிருந்த போதிலும் அவித்யையினால் மறைக்கப்பட்ட ஸ்வரூபத்தோடு கூடியதாக இருந்துகொண்டு அஜ்ஞானத்தை அனுபவிக்கிறதென்று சொல்லப்படுமேயானால் மறைக்கப்பட்டிருக்கிற தன் ஸ்வரூபத்துடன் கூடியிருத்தல் என்பது என்ன? அது ப்ரகாசப்படுத்தப்படாத ஸ்வரூபத்துடன் கூடி இருத்தல் என்று சொல்லப்படுமேயானால், தன்னுடையதான அனுபவஸ்வரூபத்திற்கு எவ்வாறு ப்ரகாசப்படுத்தப்படாத ஸ்வரூபத்வம் ஸம்பவிக்கும்? தன்னுடையதான அனுபவ ஸ்வரூபத்திற்குங்கூட மற்றொன்றினால் ப்ரகாசிக்கப்படாத ஸ்வரூபத்தோடுகூடி இருத்

தல் பொருத்தமுள்ளதாக ஆகிறதென்று சொல்லப்படுமேயானல் இப்படியாகில் ப்ரகாசம் என்கிற பெயருள்ள தர்மத்தை ஏற்றுக்கொள்ளாததினுல் ப்ரகாசமே ஸ்வரூபமாதலால் மற்றொன்றினுல் ஸ்வரூபநாசமே ஏற்படுமென்று முக்தியே சொல்லப்பட்டது.

ச்ருதப்ரகாசிகை—

எவ்வாறு அபேக்ஷையோடு கூடி இருத்தல் என்று வினவினுல் கூறுகிருர்—ததாஹி என்று. அபாவம் நஞ்ஞுக்கு அர்த்தமாக ஸம்பவிப்பதால் அப்படி சொல்லப்பட்டது. ப்ராமாண்ஜ்ஞாநத்தைவிட வேறு என்ருவது அல்லது ப்ரமாணஜ்ஞாநத்திற்கு விரோதி என்ருவது அந்த ப்ரதிபத்தி. அப்பொழுது அந்த ஜ்ஞானமானது தன்னுடையதான விஷயத்தால் அவச்சின்னமாகவே அறியப்பட்டிருப்பதால் ப்ரத்யகர்த்தத்தினுடையவோ கடம் முதலிய வஸ்துக்களுடையவோ ஜ்ஞாநம் இருக்கும் தருணத்தில் அந்த ஜ்ஞாநத்தால் போக்கத்தக்க அஜ்ஞானம் க்ரஹிக்கப்படமாட்டாதென்று அர்த்தம். எப்படி இருட்டுக்கு ப்ரகாசவிரோதமிருந்தபோதிலும் அந்த இருட்டு விஷயமான ஜ்ஞாநத்தில் ப்ரகாசாபேக்ஷை இல்லேயோ அப்படிப்போல் இங்கேயுமென்று கூறப்படுமேயானுல் அதற்கு உத்தரம் சொல்லுகிருர்—யத்யபி என்று. பாவரூபமான அஜ்ஞானமும் ஸ்வரூபத்தால் ஸித்திக்கிறதென்கிற விஷயத்தில் மறுமொழி உரைக்கிருர்—பவதபிமத என்று. ‘ முக்யோஸ்மி - மூடோஸ்மி ’ மோஹமுள்ளவனுக இருக்கிறேன், மூடனுக இருக்கிறேனென்று ப்ரயோகபலத்தால் அஜ்ஞானம் ஸ்வரூபத்தால் ஸித்திக்கிறதென்று சொல்லப்படுமேயானுல், அல்ல; ஒருமனிதனுக்கு ஏதோ ஒரு விஷயத்திலல்லவோ மோஹம். நிர்மலமான மதியையுடையவன் எவனே அவன் ஆத்மமோஹத்தை அடைகிறுனில்லே. ‘ திங்மோஹாலாதசக்ராதி ப்ராந்தயஞ்சகதம்புந: ’ இது முதலிய இடங்களில் மோஹமானது விஷயத்துடனும் ஆச்ரயத்துடனும் கூடியதாகவன்ரே அறியப்படுகிறது. முக்யோஸ்மி நான் மோஹமுள்ளவனுக இருக்கிறேன், என்பதனுல் ஆச்ரயத்துடன்கூடி இருத்தல் அறியப்படுகிறது. விஷயமும் அர்த்தத்திற்கு அதீனமாக இருத்தலால் ஸித்தித்திருக்கிறது. இந்த தூஷணமானது ‘ஸம்வித் ஸித்திக்கிறதா இல்லேயா?’ என்கிற இடத்தில் சொல்லப்பட்டிருக்கிற வழியினுல் பலித்தது. ஆகையால் ஸ்வாத்மவிஷயமான அஜ்ஞானமானது விஷயமாகவும் ஆச்ரயமாகவுமிருக்கிற ப்ரத்யகர்த்தத்தினுடைய ப்ரதிபத்தியின் இருப்பினுல் நாசம் பண்ணப்பட்டுவிட்டது. கடம் முதலியவற்றின் அஜ்ஞானமோவென்ருல் விஷயமாகஇருக்கிற கடம் முதலியவற்றின் ஜ்ஞாநத்திற்கு விருத்தம். மாயாசப்தம் முதலியவைகளால் அஜ்ஞானப்ரதிபத்தி உண்டாகும் தருணத்தில் விஷயம் ஆச்ரயம் இவைகளின் அபேக்ஷை இல்லே என்று சொல்லப்படுமேயானுல், இல்லே. மாயைமுதலிய சப்தங்களுக்கும் வ்யுத்பத்தியை அபேக்ஷியாமல் அர்த்தத்தை உணர்த்துவிக்கும் தன்மைஸம்பவியாததால் அஜ்ஞானம் முதலிய பதங்களுக்கு பர்யாயமாகவும் வ்யுத்பன்னமாக இருப்பதால் ஸ்வரூபத்தால் ஸித்தியானது எவ்விதத்தாலும்சொல்லமுடியாதென்கிற அபிப்பிராயத்தால் ஒருக்காலும் ஸ்வரூபத்தால் ஸித்திக்கிறதில்லேயென்று சொல்லப்பட்டது. ஐயனே ! ஸ்வரூபாவச்சின்னமான அஜ்ஞானப்ரதீதியானது ஙஞர்த்தத்திற்கு ப்ரதியோகியாதலால் ஜ்ஞாநாவச்சின்னமாகஸித்தித்தபோதிலும் நிவர்த்ய நிவர்தகவிரோதமில்லே. ஸ்வரூபபூதமான ஞாநத்தைக்காட்டிலும் வேருக அதுஸித்திப்பதால், ஸ்வரூபஜ்ஞானமானது அவித்யைக்கு நிவர்த்தகமல்லவன்

றே, பின்னையோ ப்ரமாண ஜ்ஞாநமே அவித்யா நிவர்த்தகம். ஆகையால் விரோதமில்லை என்று. இப்படியல்ல ; என்னையும் மற்றவனையும் நானறிகிறேனில்லை என்று விஷயம் ஆச்ரயம் இவைகளுடன் ஸம்பந்தித்த ஜ்ஞானத்துடன் கூடியதாக ப்ரதீதிவருவதால். ஸ்வரூபபூதமான ஜ்ஞானமானது ஆச்ரயத்துடனும் விஷயத்துடனும்கூடியதென்பது உன்னுடைய மதமல்லவன்றே. ஸ்வரூபமானது ஆச்ரயமாக இருப்பதாலேயே அஜ்ஞானத்திற்கு அவச்சேதகமா? அல்லது விஷயமாக இருத்தலாலுங் கூடவா? முதல் பக்ஷத்தில் உன்னுடைய அபிமதம் ஸித்திக்கிறதில்லை. அப்பொழுது ப்ரத்யகர்த்தத்திற்குத் தன்னைக்காட்டிலும் வேறாகஇருக்கிற ஏதோ ஒன்றோடுசேர்ந்திருத்தலேயன்றோ ஸித்திக்கிறது. விஷயமாக இருப்பதால் அவச்சேதகமாகும் பக்ஷத்தில் ப்ரதயகர்த்தத்திற்கு அஜ்ஞானம் ஆவரணமாக ஆகும். ஆவரணமாக இருத்தலாவது ப்ரத்யகர்த்த விஷயகமான ஜ்ஞானத்திற்கு ப்ரதிபந்தகமாக இருத்தல். ஆகையால் அதை விஷயமாகக்கொண்டிருக்கிற ப்ரமாண ஜ்ஞானததின் ப்ரதீதியானது அவசியமாக இருக்கவேண்டியதாதலால் முற்கூறப்பட்டுள்ள விரோதமானது தாண்டப்பட்டதாக ஆகவில்லை. ஆகையால் ஸ்வரூபபூதஜ்ஞான விஷயகமான ப்ரதீதியை ஒப்புக்கொள்வது பொருத்தமுள்ளதன்று. இரண்டு பக்ஷங்களிலும் ஸாதனம் தூஷணம் இரண்டும் துல்யமாக இருப்பதால் பாவரூபமான அஜ்ஞானம் ஏற்றுக்கொள்ளப்படலாம் என்று ஆசங்கித்து லாகவந்யாயத்தால் பரிஹரிக்கிறார்—ஜ்ஞானப்ராகபாவஸ்து என்று. ஒப்புக்கொள்ளப்படுகிறது. அஹம் அஜ்ஞ: என்கிற ஜ்ஞானம் அபாவரூபம் என்றுசொல்வதிலன்றோ * விப்ரதிபத்தி. அபாவத்தின் அங்கீகாரமோ இல்லை. அப்படி இல்லாவிட்டால் ப்ரமாண ஜ்ஞானத்திற்கு ப்ராகபாவமில்லாமையால் அநாதியாக இருப்பதுபற்றி அதனால் நிரஸனம் செய்யத்தக்க பாவரூபாஜ்ஞாநத்திற்கு உதயமில்லாமை ப்ரஸங்கிப்பதால். ஆகையால் ஜ்ஞாநாபாவம் உன்னால் ஒப்புக்கொள்ளப்பட்டுவிட்டது என்று பொருள் அறியவும்படுகிறது. உலகத்தில் அந்தஅந்த ஜ்ஞானத்தினது இன்மையைச்சொல்லவேண்டுமென்கிற விருப்பத்தால் ஜ்ஞானம் நாஸ்திஎன்கிற வ்யவஹாரம் காணப்படுவதால். ப்ரதிபத்தி இல்லாவிடில் சொல்லவேண்டுமென்கிற விருப்பம் பொருந்தாததலால் ஜ்ஞாநாபாவப்ரதீதியானது இருக்கவே இருக்கிறதென்று அர்த்தம். ஆகையால் எல்லோராலும் விவாதமின்றி ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிற ஜ்ஞாநாபாவத்தினாலேயே அஹம் அஜ்ஞ: என்கிற ப்ரதீதியானது பொருந்துகிறதாதலால் இதைவிட வேறான ஒன்றைக்கல்பிப்பதில் ஹேதுவில்லாமையால் லாகவத்தினால் அதே ‘அஹம் அஜ்ஞ:’ என்கிற ப்ரதீதிக்குவிஷயமாக ஒப்புக்கொள்ளத்தக்கது என்று பொருள். அறிஞர்களால் புகழத்தக்கவரே ! இரண்டுபேர்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்ட அபாவமென்கிற ஒருபதார்த்தம் கிடையாது நம் மதத்தில்அபாவமென்பதுவேறு ஒரு பாவரூபமானவஸ்து. அன்யனுடைய மதத்திலோ பாவத்தைக்காட்டிலும் வேறானது. ஆதலால் எவ்வாறு இரண்டுபேர்களுடையஸம்மதியினால் ‘அஹம்அஜ்ஞ:’ என்கிற ப்ரதீதிக்கு உபபத்திஏற்படுகிறது? உத்தரம்கூறப்படுகிறது. இரண்டுபேர்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்டதென்று கூறப்பட்டிருக்கவில்லையன்றோ. பின்னையோ உன்னால் ஒப்புக்கொள்ளப்படுகிறதென்று உரைக்கப்பட்டது. அபாவசப்தத்திற்கு வாச்யமாக ஒரு அர்த்தம் இருவர்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. அது பாவரூபமானது அல்ல. அதைக்காட்டிலும்வேறானது என்று இவ்வளவே அதில் விவாதம். இந்தஇடத்தில் எது பாவரூபமாக தன்னால் அபிமானிக்கப்பட்டிருக்கிறதோ, எது அதைக்காட்டிலும் வேறாக அபாவசப்தத்திற்கு வாச்யமாக அன்யனால் அபிமானிக்கப்பட்டிருக்கிறதோ, அவ்விரண்டி

* விப்ரதிபத்தி—விவாதம்.

னுள்ஒன்றினுல் அஹம் அஜ்ஞ: என்கிற ப்ரதீதிக்கு உபபத்திவருவதால் அவ்விரண்டைக் காட்டிலும் வேறான ஒரு அர்த்தத்தை கல்பிப்பது பொருத்தமுள்ளதாகஆகாதென்று கூறப்பட்டதாக ஆகிறது என்பதனுல் விரோதமில்லை. ஐயனே! அபாவத்தை பாவாந்தரமாக விரும்புகிற உன்னுல் ஜ்ஞானப்ராகபாவ சப்தத்தால் பாவரூபமான அஜ்ஞானமானது அங்கீகரிக்கப்பட்டதாக ஆகும். இப்படி அல்ல. இந்த ஆக்ஷேபமானது இரண்டு ஸித்தாந்தங்களையும் அறியாமையினுலன்றோ செய்யப்பட்டிருக்கிறது ஸ்வயம்ப்ரகாசமாகவே இருக்கிற ஜ்ஞாநத்தினுடைய ‡ ஸங்கோசரூபமான ஒரு நிலைமை ப்ராகபாவ சப்தத்தால் சொல்லப்படுகிறதென்பது நமக்கு அபிமதம். ஸ்வப்ரகாசமானஜ்ஞானமல்லாமையால் அஜ்ஞானம் பாவரூபமென்பது அன்யனுக்கு அபிமதம். ஆகையால் அவ்விரண்டுக்கும் எவ்வாறு ஐக்யம். அங்ஙனமாகில் ஜ்ஞானஸங்கோச ரூபமான நிலைமையை விட்டு அஜ்ஞானசப்தத்தால் சொல்லத்தக்கதென்று அன்யருல் சொல்லப்பட்டிருக்கிற பாவரூபமான அஜ்ஞானம் ஸ்வீகரிக்கப்படலாம். பாவரூபத்வம் என்கிற அம்சத்தில் இருவருக்கும் வேற்றுமைப்பாடு இல்லாமையால் என்று வினவப்படுமேயானுல் *ப்ராமாணிகபதார்த்தத்தை விட்டுவிட்டு அப்ராமாணிகம் ஸ்வீகரிக்கப்படலாமென்கிற இந்தவிஷயம் பொருத்தமில்லாதது (நவிஜ்ஞாதுர்விஜ்ஞாதேர்விபரிலோபோவித்யதே) விஜ்ஞாதாவினுடைய விஜ்ஞானத்திற்கு அழிவில்லை எக்காலத்திலுமிருக்கிறது. ஸாக்ஷாத்கரிக்கிற வல்லமையுள்ளவன் எல்லாவற்றையும் பார்க்கிருனன்றோ. வேந்தனே! அந்த அவித்யையினுல் மறைக்கப்பட்டிருப்பதனுல் க்ஷேத்ரஜ்ஞன் என்கிறபெயரையுடைய சக்தியானது எல்லா ப்ராணிகளிடங்களிலும் ஏத்தத்தாழ்த்தியுள்ளதாக இருக்கிறது. அது ப்ரசஸ்தப்ராணனில்லாத வஸ்துக்களிடத்தில் ஸ்வல்பமாகஇருக்கிறது என்கிற அர்த்தமுள்ள (அப்ராணிமத்ஸு ஸ்வல்பாஸா) என்று தொடங்கி (ஹிரண்யகர்ப்போதிதராம்பும்ஸ: சக்த்யுபலக்ஷித:) நான்முகன் புருஷர்களுக்குள் அதிகமான சக்தியுடன்கூடியவராகக் காணப்பட்டிருக்கிறார் என்று ச்ருதிகளாலும் ஸம்ருதிகளாலும் ஸித்தமாக இருப்பதால் ப்ராமாணிகமான ஜ்ஞான நித்யத்வமும் அதன் ஸங்கோசம் முதலியதும் எவ்வாறு இழக்கக்கூடியதாக ஆகும். பாவரூபமான அஜ்ஞானமோ கல்பிக்கத்தக்கது. கல்பனைக்கு ஸாதகமான வஸ்து அன்யதாஸித்தமாக இருப்பதால் அப்ராமாணிகமான அந்த வஸ்து எவ்வாறு ஸ்வீகரிக்கப்படலாம். கல்பனையிலோவென்றால் லாகவந்யாயம் ப்ரவர்த்திக்கிறது. ப்ரமாணத்தினுல் ஸித்தித்த அர்த்தத்திலோவென்றால் அந்த லாகவந்யாயம் ப்ரவ்ருத்திக்கிறதில்லை. ஆகையால் ‘ அஹம் அஜ்ஞ: ’ என்று ஜ்ஞாநப்ராகபாவமே ப்ரதீதிவிஷயமாகிறது. இவ்வண்ணமாக ‘ அஹம்அஜ்ஞ: ’ என்கிற ப்ரத்யக்ஷமானது பாவரூபமான அஜ்ஞானத்திற்கு விஷயமென்பதில் பாவரூபமான பக்ஷத்திற்கு உபபத்தி, அபாவரூபமான பக்ஷத்திற்கு அனுபபத்தி ரூபமான அனுகூலதர்க்கத்தினது அபாவம் கூறப்பட்டது. அதற்கு மேல் ப்ரதிகூல தர்க்கத்தினுல் பாதஹுதி கூறப்படுகிறது—நித்ய என்று. ‘நித்யமுக்த ஸ்வப்ரகாசசைதன்யைக ஸ்வரூபஸ்ய’ என்கிற பதம் ஹேதுவை உள்ளடக்கிக்கொண்டிருக்கிறது. நித்யமுக்தத்வமாவது பரமார்த்தமாகவே தோஷத்தால் தொடரப்படாமலிருத்தல், ஆதலால் பரமார்த்ததோஷம் ஸம்பவிக்கிறதில்லை. ஸ்வாநுபவஸ்வரூபமாக இருப்பதால் அபரமார்த்தமானபாநுபவம் ஸம்பவிக்கிறதில்லை என்று பொருள். அந்யாநுபவரூபமானப்ரதேசபேதமில்லாமையாலும் என்பது ஏகசப்தாபிப்ராயம். ஏகசப்தத்தால் அறியத்தக்கதன்மையின் இன்மையும்சொல்ல

‡ ஸங்கோசம்—சுருங்குதல்

* ப்ராமாணிகம்—ப்ரமாணத்தினுல் ஸித்தித்த வஸ்து

விரும்பப்பட்டிருக்கிறது. அபிப்ராயப்படப்பட்டிருக்கிற ஹேதுகர்ப்பத்வத்தை விவரிக்கிறார்-ஸ்வாநுபவஸ்வரூபத்வாத் என்று. அவித்யையினது நிவ்ருத்திதசையில் தொடர்ந்துவருகின்ற அவித்யாவபாஸவிரோதியான ஸ்வாநுபவத்தையே ஸ்வபாவமாகக்கொண்டிருத்தலென்கிற தன்மைஹேதுவாகச்சொல்லக்கருதப்பட்டிருக்கிறதேயொழிய ப்ரமமுண்டாகிற வேளையிலுங்கூட இருக்கிற ஸ்வயம்ப்ரகாசத்வம் மாத்ரம்சொல்லக்கருதப்பட்டிருக்கவில்லை. ஆகையால் ஸ்வாநுபவத்தையே ஸ்வபாவமாகக்கொண்டிருத்தல் மூந்தியுமிருப்பதால் என்றுபொருள். ஸ்வாநுபவ ஸ்வரூபத்திற்குங்கூட திரோதானத்தால் அஜ்ஞாநாநுபவம்ஸம்பவிக்கிறதென்று சங்கிக்கிறார்-ஸ்வாநுபவஎன்று. தன்னபிப்பிராயத்திற்கு இசைந்த அர்த்தத்தை விவரிப்பதற்கு திரோதான சப்தத்திற்கு வேறு அர்த்தமில்லை என்கிறதை ஜ்ஞாபிப்பதற்காக வினவுதலை முன்னிட்டுக்கொண்டு திரோதான சப்தார்த்தத்தைச் சொல்லுகிறார்—கிமிதம்திரோஹிதஸ்வஸ்வரூபத்வம் அப்ரகாசித ஸ்வரூபத்வமிதி சேத் என்று. ஸ்வாநுபவஸ்வரூபத்திற்கு ப்ரகாசிக்கப்படாமலிருத்தல் வ்யாஹதமென்கிற புத்தியால் தூஷிக்கிறார்—ஸ்வாநுபவ என்று. அன்யத: என்று பரிஹாரத்தை சங்கிக்கிறார்—ஸ்வாநுபவ என்று. வேறு வஸ்துவினால் ப்ரகாசிப்பிக்கப்படாத ஸ்வரூபத்துடன்கூடியிருத்தல் என்று சொல்லும்பக்ஷத்தில் முற்கூறப்பட்டுள்ள தூஷணத்தை அதிதேசிக்கிறார்— ஏவம்தர்ஹி என்று.

கிஞ்ச — ப்ரஹ்மஸ்வரூபே திரோதாநஹேதுபூதமேதத் அஜ்ஞாநம் ஸ்வயமநுபூதம் ஸத் ப்ரஹ்ம திரஸ்கரோதி, ப்ரஹ்ம திரஸ்க்ருத்ய ஸ்வயம் தத் அநுபவவிஷயோ பவதீத்யந்யோந்யாஶ்ரயணம்। அநுபூதமேவ திரஸ்கரோதீதி சேத், யதி அதிரோஹிதஸ்வரூபமேவ ப்ரஹ்ம அஜ்ஞாநமநுபவதி ததா திரோதாநகல்பநா நிஷ்ப்ரயோஜநா ஸ்யாத்। அஜ்ஞாநஸ்வரூபகல்பநா ச। ப்ரஹ்மணோऽஜ்ஞாநதர்ஶநவத் ஜ்ஞாநகார்யதயாபிமதப்ரபஞ்சதர்ஶநஸ்யாபி ஸம்பவாத்। கிஞ்ச, ப்ரஹ்மணோऽஜ்ஞாநாநுபவ: கிம் ஸ்வதோऽந்யதோ வா? ஸ்வதஶ்சேத் அஜ்ஞாநாநுபவஸ்ய ஸ்வரூபப்ரயுக்தத்வேநாநிர்மோக்ஷ: ஸ்யாத்। அநுபூதிஸ்வரூபஸ்ய ப்ரஹ்மணோऽஜ்ஞாநாநுபவஸ்வரூபேணைவ மித்யாரூபத்வாய அஜ்ஞாநேந ரூபதாநுபவஸ்யாபி நிவ்ருத்திர் அநிவர்த்யஜ்ஞாநேந அஜ்ஞாநாநுபூதிரூபப்ரஹ்மஸ்வரூபநிவ்ருத்திர்வா। அந்யதஶ்சேத், கிம் தத் அந்யத்? அஜ்ஞாநாநுபூதிரிதி சேத், அநவஸ்தா ஸ்யாத்। ப்ரஹ்ம திரஸ்க்ருத்யைவ ஸ்வயமநுபவவிஷயோ பவதீதி சேத், ததா ஸதி ஜ்ஞாநம் காசாதிவத் ஸ்வஸத்தயா ப்ரஹ்ம திரஸ்கரோதீதி ஜ்ஞாநவாத்யஜ்ஞாநஸ்ய ஜ்ஞாநம் ந ஸ்யாத்। அதோ ஜ்ஞாநம் ஸ்வயநாஶி ப்ரஹ்மண: ஸ்வஸாக்ஷிகம் ப்ரஹ்மஸ்வரூபதிரஸ்க்ருதிம் ச யதா பவத்யேவ கரோதி,

[illegible]

[illegible]

ஸ்ரீபாஷ்யம்—

மேலும் ப்ரஹ்மஸ்வரூபத்தை மறைப்பதற்குக் காரணமாக இருக்கிற இந்த அஜ்ஞானமானது தான் அநுபவிக்கப்பட்டதாக இருந்துகொண்டு ப்ரஹ்மத்தை மறைத்துத்தான் அதன் அநுபவவிஷயமாகிறது என்பதனுல் ஏக

அந்யோந்யாச்ரயதோஷம் வருகிறது. அனுபவிக்கப்பட்டதாகவே இருந்து கொண்டு அஜ்ஞானம் ப்ரஹ்மத்தை மறைக்கிறதென்று சொல்லப்படுமேயாகில் மறைக்கப்படாத ஸ்வரூபத்துடன்கூடியதாகவே ப்ரஹ்மமானது அஜ்ஞானத்தை அனுபவிக்கிறதேயாகில், அப்பொழுது திரோதான கல்பனை ப்ரயோஜனமற்றதாக ஆகும். அஜ்ஞாநஸ்வரூபகல்பனையும், ப்ரஹ்மத்துக்கு அஜ்ஞானதர்சனம்போல அஜ்ஞாநத்தின் கார்யமாக அபிமதிக்கப்பட்டிருக்கிற ப்ரபஞ்ச தர்சனமும் ஸம்பவிப்பதால். மேலும், ப்ரஹ்மத்துக்கு அஜ்ஞாநாநுபவமானது தானாகவே இருக்கிறதா? வேறொன்றினால் ஏற்படுகிறதா? தன்னாலேயே உண்டாகிறதென்று சொன்னால் ப்ரஹ்மத்துக்கு அஜ்ஞாநாநுபவமானது தன் ஸ்வரூபத்தினாலுண்டுபண்ணப்பட்டதாதலால், ப்ரஹ்மத்துக்கு அஜ்ஞானத்தினின்று விடுதலை இல்லாமல் போகவேண்டியதாகும். அநுபூதி ஸ்வரூபமான பரஹ்மமானது அஜ்ஞாநாநுபவ ஸ்வரூபமாக இருப்பதால் மித்யாரஜதபாதக ஜ்ஞானத்தால் ரஜதாநுபவத்திற்குங்கூட நிவ்ருத்தி உண்டாவதுபோல், நிவர்தகஜ்ஞாநத்தால் அஜ்ஞாநாநுபூதிரூபமான ப்ரஹ்ம ஸ்வரூபத்தின் நிவ்ருத்தியாவது உண்டாகலாம். வேறொன்றினாலென்றால் அந்த வேறான வஸ்து எது? வேறொரு அஜ்ஞாநமென்று கூறப்படுமேயானால் அநவஸ்தை உண்டாகும். ப்ரஹ்மத்தை மறைத்தேதான் அனுபவவிஷயமாக ஆகிறதென்று சொல்லப்படுமேயாகில், அங்ஙனமாகில் இந்த அஜ்ஞானமானது காசம்முதலிய நேத்திரரோகம்போல், தன்னுடைய இருப்பினாலே ப்ரஹ்மத்தை மறைக்கிறதாதலால் அஜ்ஞாநத்திற்கு ஜ்ஞாநத்தால் பாதிக்கத்தக்க தன்மை உண்டாகாமல்போகும். அப்படிக்கின்றி இந்த அஜ்ஞாநமானது தான் அநாதியாகஇருந்துகொண்டு ப்ரஹ்மத்திற்கு தனக்குச்சாக்ஷியாக இருக்கும் தன்மையையும் ப்ரஹ்ம ஸ்வரூபத்தின் மறைத்தலையும் ஒரு ஸமயத்திலேயே செய்கிறது, அதனால் அநவஸ்தை முதலிய தோஷங்களில்லை என்று. இதல்ல, ஸ்வாநுபவ ஸ்வரூபமான ப்ரஹ்மத்துக்கு ஸ்வரூபத்தின் திரஸ்காரமின்றி ஸாக்ஷியாக இருக்கச்செய்தல் பொருந்தாததால். வேறு காரணத்தால் மறைக்கப்பட்டுவிட்டதென்று சொல்லப்படுமேயானால், அப்பொழுது அநாதியாக இருத்தல் என்கிற தன்மையானது விலக்கித்தள்ளப்பட்டுவிட்டது, அநவஸ்தையும் முன்புகூறப்பட்டது. அஜ்ஞாநத்தினால் மறைக்கப்படாத ஸ்வரூபத்துடன் கூடின ப்ரஹ்மத்துக்கே ஸாக்ஷித்வத்தை கல்பித்தால் ப்ரஹ்மத்திற்கு ஸ்வாநுபவத்தையே முக்கியமாகக் கொண்டிருத்தலும் இல்லாமல்போகும்.

மேலும் அவித்யையினால் ப்ரஹ்மம் மறைக்கப்பட்டால் அந்த ப்ரஹ்மமானது கொஞ்சங்கூட ப்ரகாசிக்கிறதில்லையா? அல்லது கொஞ்சம் ப்ரகாசிக்கிறதா? முதலாவது கல்பத்தில் ப்ரகாசமாத்திரத்தை ஸ்வரூபமாகவுடைய ப்ரஹ்மத்துக்கு ப்ரகாசமில்லாவிடில் துச்சதை ஏற்படுமென்று அடிக்கடி நம்மால் சொல்லப்பட்டிருக்கிறது. பிந்தின கல்பத்திலோவென்றால் ஸச்சிதாநந்தத்தையே ஸ்வரூபமாகக்கொண்ட ப்ரஹ்மத்தினிடத்தில் எந்த அம்சம் மறைக்கப்படுகிறது? எந்த அம்சம் ப்ரகாசிக்கிறது? அம்சங்களில்லாததும் விசேஷங்களில்லாததும் ப்ரகாசமாத்ரத்தை ஸ்வரூபமாகவுடைய வஸ்துவினிடத்தில் இரண்டு ஆகாரங்கள் ஸம்பவியாததலால் ப்ரகாசத்தினுடைய மறைதலும் ப்ரகாசமும் ஒரே ஸமயத்தில் பொருந்தாது. அப்படிக்கின்றி ஸச்சிதாநந்தத்தையே ஸ்வரூபமாகக்கொண்ட ப்ரஹ்மமானது அவித்யையினால் மறைக்கப்பட்டிருக்கிற ஸ்வரூபத்துடன்கூடியதாக இருந்துகொண்டு அப்ரகாசம்போல் காணப்படுகிறதென்று சொல்லப்படுமேயாகில் ப்ரகாசமாத்திரத்தை ஸ்வரூபமாகக்கொண்ட ப்ரஹ்மத்திற்கு வைசத்யமாவது அவைசத்யமாவது எவ்விதமாயுள்ளது? இது சொல்லப்பட்டதாக ஆகிறது, எது அம்சங்களோடும் விசேஷங்களோடுங்கூடியதாக இருந்துகொண்டு ப்ரகாசத்திற்கு விஷயமாக ஆகிறதோ அப்படிப்பட்ட அம்சங்களுடனும் விசேஷங்களுடனும்கூடிய அந்த வஸ்துவின் ஸம்பூர்ணமான அவபாஸம் விசதாவபாஸம். சிலவிசேஷங்களால் விடுபட்டிருக்கிற வஸ்துவின் அவபாஸம் அவிசதாவபாஸம். அதில் எந்த ஆகாரமானது அறியப்பட்டிருக்கவில்லையோ அந்த அம்சத்தில் ப்ரகாசமில்லாமையினாலேயே ப்ரகாசாவைசத்யமில்லை. எந்த அம்சம் அறியப்பட்டிருக்கிறதோ அந்த அம்சத்தில் அது விஷயமான ப்ரகாசம் விசதமே. ஆகையால் எல்லா இடத்திலும் ப்ரகாசாம்சத்தில் அவைசத்யமானது ஸம்பவிக்கிறதில்லை. விஷயத்திலும் ஸ்வரூபம் அறியப்படாநின்றிருக்கும் தருணத்தில் அதிலுள்ள சில விசேஷங்களின் அப்ரதீதியே அவைசத்யம். ஆகையால் விஷயமல்லாததும் விசேஷங்களில்லாததும் ப்ரகாசமாத்ரமாகவுமிருக்கிற ப்ரஹ்மத்தினிடத்தில் ஸ்வரூபம் ப்ரகாசிக்கும்பொழுது சில விசேஷங்களின் ப்ரதீதிரூபமான அவைசத்யமென்கிற அஜ்ஞாந கார்யம் ஸம்பவிக்கிறதில்லை.

ச்ருதப்ரகாசிகை—

வேறு தூஷணத்தை சொல்லுகிறார் — கிஞ்ச என்று. அபரமார்த்தமாதலால் தானிருந்துகொண்டு தன் ஸத்தையினால் மறைக்கிறதில்லை. பின்னையோவென்றால் அறியப்படாநின்றுகொண்டு ப்ரஹ்மஸ்வரூபத்தை மறைக்கிறது. ஆதலால் திரஸ்கார

மானது அனுபவத்தை முன்னிட்டுக்கொண்டிருக்கிறது, அனுபவமும் திரஸ்காரத்தை முன்னிட்டுக் கொண்டிருக்கிறது. மறைக்கப்படாமலிருக்கிற ஸ்வானுபவ ஸ்வரூபமான ப்ரஹ்மத்திற்கு அஜ்ஞாநாநுபவம் ஸம்பவியாததலால் அந்யோந்யாச்ரயணமென்றுபொருள். இதைப் பரிஹரிக்கவேண்டியவிருப்பதால் திரஸ்காரத்தை அனுபவபூர்வகமென்று சங்கிக்கிறார்—அநுபூதமேவ என்று அதில் தூஷணம் சொல்லுகிறார்—யதி என்று. மறைக்கப்படாமலிருந்தபோதிலுங்கூட அஜ்ஞாநானுபவம் ஸம்பவிப்பதால். அதற்காக திரோதான கல்பனையும், அதற்காக ஆச்சாதகமான அவித்யாகல்பனையும் பயனற்றதென்று பொருள். அதை உபபாதிக்கிறார்—ப்ரஹ்மண: என்று. எவ்வாறு மறைக்கப்படாத ஸ்வரூபத்துடன் கூடியதாக இருந்தபோதிலுங்கூட ப்ரஹ்மத்துக்கு பரமார்த்தமல்லாத அஜ்ஞானத்தின் அனுபவம் ஸம்பவிக்கிறதோ, அவ்வாறே அபரமார்த்தமாக இருக்கிற ப்ரபஞ்சாநுபவமும் மறைக்கப்படாத ப்ரஹ்மஸ்வரூபத்துக்கு ஸம்பவிக்கிறதென்று. அதற்காக திரோதானகல்பனையும் அதற்காக ஆச்சாதகவித்யாகல்பனையும் பயனற்றதென்று அர்த்தம். அநுபவபூர்வகமாகவே திரஸ்காரம் ஸம்பவிக்கிறதென்கிற பக்ஷத்திலேயே விகல்பமுகத்தால் தூஷணம்கூறுகிறார்—கிஞ்ச என்று. ஸ்வத: பக்ஷத்தில் ப்ரஹ்மத்துக்கு அஜ்ஞானத்தினின்று விடுமுறைஇல்லாமை, ப்ரஹ்மஸ்வரூபநிவ்ருத்தி என்கிற இரண்டு தூஷணங்கள். ரஜதாநுபவஸ்யாபி என்கிறஇடத்திலுள்ள அபிசப்தத்தினால் ரஜதத்திற்கும் நிவ்ருத்தியானது ஸூசிப்பிக்கப்பட்டது. அந்யத: பக்ஷத்தில் அநவஸ்தை. திரஸ்காரத்தைமுன்னிட்டுக்கொண்டிருக்கிற அநுபவபக்ஷத்தைச்சங்கிக்கிறார்-ப்ரஹ்ம என்று ப்ரஹ்மஸ்வரூபத்தை மறைத்து அநுபவவிஷயமாகிறதென்றுசொன்னால் ஸத்தையினால் ப்ரஹ்மஸ்வரூப திரஸ்காரமென்று சொல்லப்பட்டதாகஆகும். அறியப்படாநின்றதாக இருந்துகொண்டு ப்ரஹ்மஸ்வரூபத்தை மறைக்கிறதென்று சொல்லப்பட்டதாக ஆகாது அப்பொழுது $ காசம் முதலியதுபோல் பரமார்த்தமாக இருப்பதால் ஜ்ஞானத்தால் நிவர்த்திக்கத்தக்கதாக இருத்தல் ஸித்தியாதென்று அர்த்தம். அதற்குமேல திரஸ்காரம் அனுபவம் இரண்டுக்கும் ஒரே ஸமயத்திலிருத்தல் சங்கிக்கப்படுகிறது—அதேதம் என்று. நைதத் இதுமுதலிய கிரந்தத்தினால் தூஷிக்கிறார். ஸ்வாநுபவஸ்வரூபஸ்ய என்பது ஹேதுகர்ப்பமான விசேஷணம். ஸ்வாநுபவஸ்வரூபமானது ஸ்வபாவஸித்தமாக இருக்கிறது. பரானுபவமானது ஹேதுவில்லாமல் பொருந்துகிறதில்லை என்று அர்த்தம். வேறுஹேதுவினால் திரஸ்காரத்தை ஆசங்கித்து தூஷிக்கிறார்—ஹேது என்று. திரஸ்காரம் அநுபவம் இரண்டும் ஒரே ஸமயத்தில் ஸம்பவிக்கிறது என்கிற பக்ஷத்தில் முன்சொல்லப்பட்ட இரண்டு பக்ஷதூஷணமும் வருகிறது. என்கிற அபிப்ராயத்தினால் சொல்லுகிறார்—அநவஸ்தா ச பூர்வோக்தா என்று. இந்த அநவஸ்தையானது, ஜ்ஞாநத்தினால் நிவர்த்திக்கத்தகாததாக இருத்தலென்கிற தூஷணத்திற்கும் உபலக்ஷணம். அடுத்துமுந்தி கூறியிருப்பதனுல், ஸ்வரூபத்தின் திரஸ்காரமில்லாமல் ப்ரஹ்மத்திற்கு ஸாக்ஷித்வத்தை ஏற்படுத்துவதில் அநிஷ்டத்தைக்கூறுகிறார்—அதிரஸ்க்ருத என்று

முன்பு விசதா விசதாவபாஸத்தை ஒப்புக்கொண்டு தூஷணம் உரைக்கப்பட்டது. இப்பொழுதோவென்றால் அதையே தூஷிப்பதற்குத் தொடங்குகிறார்—அபிச என்று. விகல்பிக்கிறார்-அவித்யயா என்று. முற்கூறப்பட்டுள்ள தூஷணத்தை அதிதேசிக்கிறார்- பூர்வஸ்மின் என்று. உத்தரஸ்மின் என்று. கிம்சப்தமானது நிந்தையில். பொருந்தாதென்று கருத்து. ஸச்சித்ஆநந்தம் முதலிய சப்தங்களுங்கூட ஸ்வரூப மாத்ரபரமென்று

$ காசம்—நேத்ரரோகம்.

ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதால் மறைக்கப்பட்டுள்ளது மறைக்கப்பட்டிருந்தது என்கிற பிரிவான்து பொருந்தமுள்ளதாக ஆகாது என்று கருத்து கோயமம்ச திரஸ்க்ரிய தே கோவாப்ரகாசதே என்று. இது எந்த விசேஷம் மறைக்கப்படுகிறது. எந்த விசேஷம் ப்ரகாசிக்கிறது என்பதற்குங்கூட உபலக்ஷணார்த்தமாக இருக்கிறது 'நிரம்சே நிர்விசேஷே' என்று. அடுத்து உரைத்திருப்பதனுல்-கோயமம்ச: என்று. அம்சபேதமானது சொல்வதற்கு சக்யமல்லவென்று அபிப்பிராயம். அதை உபபாதனம் செய்கிறார்—நிரம்சே என்று. ப்ரகாசமாத்ரே - மாத்ரச்ப்ரத்யயத்தினுல் அவிஷயத்வம் சொல்லக்கருதப்பட்டது. அவிஷயமாக இருக்கிற என்று பொருள் யுகபத் நஸங்கச்சேதே என்று. ஏன்னுல் காலபேதத்தால் ப்ரகாசமும் அதன் திரஸ்காரமும் சொல்லப்படுகிறதில்லையன்றோ. பின்னேயோவென்ருல் ஒரு ஸமயத்திலேயே அப்பொழுது அம்சபேதமில்லாமையாலும் ஆகாரபேதமில்லாமையாலும் அவ்விரண்டும் ஸங்கதங்களாக ஆகிறதில்லை என்று கருத்து. இவ்வண்ணம் ப்ரகாசம் திரஸ்காரம் இரண்டுக்கும் ஒரே ஸமயத்திலிருத்தலுக்கு அனுபபத்தி இருந்தபோதிலுங்கூட அவிசத சப்தத்தினுல் எதிர்த்து விவாதம செய்கிருன்—அத என்று. அத என்கிற சப்தமானது அனுமதிகொடுத்தலென்கிற அர்த்தத்தில் இருக்கிறது. தூஷிக்கிருர்—பாகாச என்று. கிம்ரூபா-பொருந்தாதென்று அர்த்தம். அனுபபத்தி எவ்வாருக வருகிறதென்கிற சங்கையின் வைசத்யா வைசத்யஸ்வரூபத்தைச் சிக்ஷிப்பதற்காக இங்கே அதின் அனுபபத்தியையும் காண்பிப்பதற்காகச் சொல்லுகிருர்— ஏததுக்தம் என்று. வைசத்யா வைசத்யஸ்வரூபத்தை சிக்ஷிக்கிருர். யஸ்ஸாம்ச: இது முதலியதால். ஜ்ஞானத்தில் அதினது அனுபபத்தியைக்கூறுகிருர்-தத்ர என்று. ப்ரகாசாபாவதேவ ப்ரகாசாவைசச்யம்நவித்யதே என்று. தர்மி இல்லாமையால் தர்மமில்லை என்று பொருள். அறியத்தக்கவஸ்துவினிடத்திலும் அறியப்பட்ட அம்சமானது விசதமாக இருப்பதாலும் அறியப்பட்டிராத அம்சமானது அறியப்படாமலிருப்பதாலும் ஓரிடத்திலும் அவைசத்யம் ஸம்பவிக்கிறதில்லை என்று சொல்லுகிருர்—விஷயேபி என்று. ஒரு வஸ்துவில் சில அம்சத்திறகாவது சில ஆகாரத்திற்காவது ப்ரகாசத்தின் இன்மையானது ஸமுதிதரூபத்தினுடைய அவைசத்யமேஒழிய அந்த இடத்திலும் ப்ரகாசிக்கிற அம்சத்திற்கு அவைசத்யமென்பதில்லை என்று பொருள். தஸ்மாத் என்று. ஸ்வரூபே ப்ரகாசமாத்ரே என்பதற்கு ப்ராஹ்மணி என்கிற முந்தின பதத்தோடு அன்வயமில்லை, பின்னேயோவென்ருல் பிந்தி இருக்கிறதில் அன்வயம். ஸ்வரூபம் ப்ரகாசித்துக்கொண்டிருக்கையில் சிலவிசேஷங்களின் அப்ரதிபத்திரூபமான அவைசத்யம் ப்ரஹ்மத்தினிடத்தில் ஸம்பவிக்கிறதில்லை என்று அர்த்தம். சில விசேஷங்களின அப்ரதிபத்தி என்கிற சப்தமானது சில அம்சங்களின் அப்ரதிபத்தி என்பதற்கும் உபலக்ஷணமாக இருக்கிறது.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

ஸ்ரீபாஷ்யம்—

மேலும், இந்த அவித்யையின் கார்யமாக இருக்கிற அவைசத்யமானது தத்வஜ்ஞானத்தின் உதயத்தால் விலகுகிறதா இல்லையா? விலகுகிறதில்லை என்று சொன்னால் மோக்ஷமில்லை. விலகுகிறதென்று சொல்வாயேயாகில் வஸ்துவானது எவ்விதமான ஸ்வரூபமுள்ளதென்று பகுத்தறியத்தக்கது. விசதஸ்வரூபமென்று சொல்வாயானால் அந்த விசதஸ்வரூபமானது முன் இருக்கிறதா இல்லையா? இருக்கிறதென்று சொல்லப்படுமேயானால் அவித்யையின் கார்யமான அவைசத்யமும் அதின் நிவ்ருத்தியும் உண்டாகமாட்டாது. இல்லை என்று சொல்வாயேயாகில் மோக்ஷமானது கார்யமாக ஆவதால் அந்த மோக்ஷத்திற்கு அநித்யத்வம ஏற்படும் இந்த அஜ்ஞானத்திற்கு ஆச்ரயத்தை நிரூபணம் செய்யாமையினாலேயே அஸம்பவம் முந்தியே உரைக்கப்பட்டிருக்கிறது. மேலும், பரமார்த்தமாக இராத தோஷத்தினடியாக ப்ரமத்தைச்சொல்பவனால் ஆச்ரயமில்லாத ப்ரமத்தின் அஸம்பவமும் எவ்விதத்தாலும் உபபாதிக்கமுடியாதது ப்ரமத்துக்கு ஹேதுவாக இருக்கிற தோஷம் போலவும் தோஷாச்ரயத்வம் போலவும் அதிஷ்டானம் அபரமார்த்தமாக இருந்தபோதிலுங்கூட ப்ரமம் பொருத்தமுள்ளதாக இருப்பதால். அதனால் ஸர்வசூன்யத்வமே உண்டாகும்.

ச்ருதப்ரகாசிகை—

வேறுவிதத்தா. தூஷணம் கூறுகிறார்—அபிச என்று. அவித்யாகார்யம் தந்நிவ்ருத்தி ப்ரஸக்ஸ்யாதாம் என்று விசதஸ்வரூபமுள்ள வஸ்துவானது அவித்யைக்கு விரோதியாக இருப்பதால் என்று கருத்து - மோக்ஷஸ்யகார்யதயா என்று மோக்ஷஸ்ய-முக்தஸ்வரூபத்திற்கு. பாவரூபத்வமிருக்கையில் கார்யமன்றோ அநித்யம் வைசத்யமோ பாவரூபமானது. ஆகையால் அன்யமதத்தில் உன்னால் சொல்லப்பட்ட தூஷணம் உனக்கே வந்துசேருகிறது என்று அர்த்தம். முந்தி இல்லாதிருந்து பிந்தி உண்டாய் இருக்கிற வைசத்யத்திற்கு அநித்யத்வ ப்ரஸங்கம் பாதிதமானது. சாஸ்திரத்தினால் அது நித்யமென்று ப்ரதிபாதிக்கப்பட்டிருப்பதால் என்று சொல்வாயேயானால் அப்பொழுது ப்ரஹ்மத்திற்கு விசேஷங்களோடு சேர்ந்திருத்தலுண்டாகுமென்று அபிப்

ராயம். முற்கூறப்பட்டுள்ள ஆச்ரயாநுபபத்தியை அன்யனால் சொல்லப்பட்டிருக்கிற ப்ரத்யக்ஷப்ரமாணத்திற்கு ப்ரதிகூல தர்க்கமாகச்சொல்லுகிறார்—அஸ்ய என்று. ஸ்வரூபா நாதித்வம் முதலிய வழிகளால் பரிஹாரங்களுக்கு ப்ரதிபந்திபாவத்தை உள்ளத்தில் வைத்துக்கொண்டு வேறு தூஷணம் கூறுகிறார்—அபிச என்று. எப்படி தோஷம் தோஷாச்ரயத்வம் முதலியது அபரமார்த்தமாக இருந்தபோதிலுங்கூட ப்ரமம ஸம்பவிக்கிறதோ அப்படிப்போலவே அதிஷ்டானம் அபரமார்த்தமாக இருந்தபோதிலுங்கூட ப்ரமம் ஸம்பவிக்கிறது. அதிஷ்டானம அபரமார்த்தமாகில் அதுவும் ப்ரபஞ்சம்போல அபாரமார்த்யமாகப்போய்விட்டதுபற்றி வேறு அதிஷ்டானாபேக்ஷை உண்டாவதால் அநவஸ்தை உண்டாகுமென்று சொல்வாயேயானால் அங்ஙனமாகில் தோஷத்திற்கும் ப்ரபஞ்சத்திற்குப்போல் பாரமார்த்யமில்லாமையால் தோஷாந்தராபேக்ஷையினால் அநவஸ்தை உண்டாகும். தோஷம் அபரமார்த்தமாக இருந்தபோதிலும் ஸ்வரூபம் அநாதியாக இருப்பதால் அநவஸ்தை இல்லை என்று சொல்லப்படுமேயானால் அங்ஙனமாகில் அதிஷ்டானம் அபரமார்த்தமாக இருந்தபோதிலும் ஸ்வரூபம் அநாதியாக இருப்பதால் அனவஸ்தை இல்லை. ப்ரவாஹம்போல் அநாதியாக இருப்பதாலும் துர்கடமாக இருப்பதாலும் பரிஹாரம் என்பதும் துல்யம். தோஷமானது ப்ரபஞ்சதர்சனத்திற்கும் ஸ்வதர்சனத்திற்கும்தானே நிர்வாஹகமாக இருப்பதுபற்றி தோஷாந்தராபேக்ஷையினால் அநவஸ்தை இல்லை என்று சொல்லப்படுமேயானால் அல்ல, அபரமார்த்தமாக இருக்கிற இதற்கு ஸ்வபர நிர்வாஹகத்வம் ஸம்பவியாததலால். ஸ்வப்நத்தில் த்விசந்த்ரஜ்ஞாநத்திற்கு ஹேதுவாக இருக்கிற விரல்களின் வின்யாஸ விசேஷமானது ஸ்வகல்பநததில் தோஷத்தை அபேக்ஷியாததாக இல்லையன்றோ. அபரமார்த்த வஸ்துவுக்கு ஸ்வபரநிர்வாஹகத்வம் ஸம்பவிக்கட்டும். அப்படியானால் அதிஷ்டானாபாரமார்த்யமிருந்தபோதிலும் ஸ்வபரநிர்வாஹத்வமிருப்பதால் அநவஸ்தை உண்டாகாது. அபரமார்த்த வஸ்துவுக்கு வேறு ஒருவஸ்துவைக்குறித்து அதிஷ்டானதவம் ஸித்தித்திருந்தாலன்றோ ஸ்வநிர்வாஹகத்வம் ஸித்திக்குமென்று சொல்லப்படுமேயானால், அபரமார்த்தத்திற்கு மற்றொன்றைக்குறித்து தோஷதவம் ஸித்தித்திருந்தாலன்றோ ஸ்வநிர்வாஹகத்வம் என்பதினால் துல்யம். மித்யையாக இருக்கிற ஜகத்தினுடைய தோற்றத்தினால் தோஷத்வம் ஸித்தமென்று கூறப்படுமேயானால் அப்பொழுது அதனாலேயே அதிஷ்டானத்வமும் ஸித்தமாதலால் அதிஷ்டாநத்துக்கு ஸ்வபர நிர்வாஹகத்வம் ஸித்திக்கிறது அதிஷ்டானம் அபாரமார்த்தமாக இருந்தால் ப்ரமம் எங்கும் காணப்பட்டதில்லை என்று சொல்லப்படுமேயானால் தோஷதோஷாச்ரயத்வங்கள் அபரமார்த்தங்களாக இருந்தபோதிலும் ப்ரமம் காணப்பட்டதில்லை என்பதனால் சர்சைதுல்யமென்று அபிப்ராயம் அதனால் என்னவென்று கேட்கின் கூறுகிறார்—தத்ருச என்று. இவ்வண்ணம் நான் அஜ்ஞன் என்னையும் மற்றவனையும் அறிகிறேனில்லை என்கிற ப்ரத்யக்ஷத்திற்கு ப்ரதிகூல தர்க்கத்தினால் அழிவு சொல்லப்பட்டது.

இந்த இடத்தில் சிலர் கூறுகிறார்கள்—தூங்கி எழுந்திருப்பவனுடைய ‘நான் ஒன்றையும் அறிந்தேனில்லை’ என்கிற பராமர்சத்தின் இன்றியமையாமையே பாவரூபாஜ்ஞாநத்தில் ப்ரமாணம். எவ்வாறு இன்றியமையாமை? இவ்வாறாக, நான் ஒன்றையும அறிந்தேனில்லை என்கிற பராமர்சமானது ஜ்ஞாநாபாவத்தை விஷயமாகக்கொண்டதல்ல. ஸ்வாபததில் ஜ்ஞாநாபாவமானது அனுபவிக்கப்பட்டிருததால், ஜ்ஞாநாபாவாநுபவத்தில் விஷயாவச்சின்னமான ப்ரதியோகியாக இருக்கிற ஜ்ஞானத்தினுடைய அபவாஸமன்றோ ஒப்புக்கொள்ளத்தக்கது. அதை ஒப்புக்கொண்டால் ஸுஷுப்திக்கு வ்யாகாதம் வருகிறது. இது அஸ்மரணலிங்கத்தினால் உண்டாகிறதும் ஜ்ஞாநாபாவ

த்தை விஷயமாக உடையதுமான அனுமிதிரூபமான ஜ்ஞானமென்று சொல்லத்தக்கதல்ல. அஸ்மரணத்திற்கு அநநுபவவ்யாப்யத்வமில்லாமையால், வழியில் செல்லுகிறவனால் தொடப்பட்ட த்ருணம் முதலியது ஸ்மரிக்கப்படுகிறதில்லையன்றோ ஆகையால் ஸுஷுப்தியில் அனுபவிக்கப்பட்டிருக்கிற பாவரூபமான அஜ்ஞானமானது நான் ஒன்றையுமறியேன் என்கிற ப்ரத்யவமாசத்தால் ஸ்மரிக்கப்படுகிறது. ஆதலால் அந்த ஸ்மரணத்தின் இன்றியமையாமையால் பாவரூபமான அஜ்ஞானம் ஸித்திக்கிறது-என்று. இது பொருந்துகிறதில்லை. அஜ்ஞானம் பாவரூபமாக இருந்தபோதிலுங்கூட அதற்கு ப்ரதியோகியின் அபேக்ஷையானது உபபாதிக்கப்பட்டிருப்பதால். ப்ரதியோகிக்கு ஸுஷுப்தியில் அவபாஸமில்லாமையால் அதின் ஸ்மரணம் பொருந்தாததலால் ப்ரதியோகியான ஜ்ஞாநத்தினுடைய அவபாஸமவரின் ஸுஷுப்திவ்யாகாதம் உன்னாலேயே உரைக்கப்பட்டது. அதைக்காட்டிலும் வேறாக இருக்கிற வஸ்துவைச்சொல்லுகின்ற நஞர்த்தத்திற்கு ப்ரதியோகிஸ்வரூபமாக இருக்கிற ஜ்ஞாநமானது அப்பொழுது ப்ரகாசிக்கிறதென்று சொல்லத்தக்கதல்ல. நான் ஒன்றையும் அறிந்திலேன். என்னையும் மற்றவனையும் அறிகிறேனில்லை என்று விஷயங்களோடுகூடிய ஜ்ஞாநத்திற்கு ப்ரதியோகித்வம் அறியப்படுவதால். ஆதலால் அது அவபாஸிக்காவிடில் அஜ்ஞாநாநுபவமில்லாமையால் அதின் ஸ்மரணம்பொருந்தாது. மேலும் ஸுஷுப்தியில் பாவரூபமான அஜ்ஞானத்தின் அனுபவமானது நிர்விகல்பமனோவ்யாபாரத்தினாலா? ஸவிகல்பகமனோவ்யாபாரத்தினாலா? முதல் பக்ஷத்தில் தனக்கு அபிமதமாக இருக்கிற ஸாக்ஷிசைதன்யாவபாஸரூபமான நிர்விகல்பத்திற்கு ஸம்ஸ்காரத்தை உண்டுபண்ணும் திறமை ஒப்புக்கொள்ளப்படாததால் ப்ரதிஸந்தானமானது பொருந்தாது இரண்டாவது பக்ஷமும் ஸரியல்ல. ஸுஷுப்திவிரோதத்தினால் அப்பொழுது மனோவ்யாபாரம் ஸம்பவியாததால். அதனால் நகிஞ்சிதவேதிஷம் என்கிற ஜ்ஞானம் ஸ்மரணமல்ல. பின்னையோ அஸ்மரணத்தை * லிங்கமாக உடையதும் ஜ்ஞாநாபாவத்தை விஷயமாக உடையதுமான அனுமிதிரூபம். வழியில் செல்லுகிறவனால் தொடப்பட்டிருக்கிற த்ருணம் முதலிய வஸ்துக்களின் அஸ்மரணத்தினால் † வ்யபிசாரமில்லை வேறு வ்யாஸங்கம் முதலிய ஸம்ஸ்காரவிரோதிகளின் அபாவத்தால் விசேஷிக்கப்பட்டிருக்கிற அஸ்மரணத்திற்கு வ்யபிசாரமில்லாமையால். 'ததந்யதீரதாத்பர்யம்படுத்வவிரஹோதிய: | துக்காதிதீவ்ரமுந்மாதோநப்யாஸோதீர்க்ககாலதா, ஏதைஶ்சாத்ருஷ்டவைகுண்யமகல்ப்யம் ஸம்ஸ்காரரோதிஷு, ஏதேஷ்வஸத்ஸ்வ ஸ்மரணாத்ஜ்ஞாநாபாவோநுமீயதே' இந்த சுலோகங்களுக்குப் பொருள், எந்த வஸ்து ஸ்மரிக்கத்தக்கதோ அதைவிட்டு வேறு வஸ்துவினிடம் புத்தியைச்செலுத்துதல், தாத்பர்யத்தின் இன்மை, புத்தியின் அபாடவம், தீவ்ரமான துக்கம் முதலியது. சித்தவிப்ரமம், அடிக்கடி பழக்கமில்லாமை நீண்டகாலம்-இவைகள் ஸம்ஸ்காரத்தை தலையெடுக்கவிடாமல் செய்யும் சக்தியுள்ளவைகள். இவைகளோடு அத்ருஷ்டத்தின் வைகுண்யமும் ஏற்படுத்தத்தக்கது. ஸம்ஸ்காரத்தைத் தடுக்கிற இவைகள் இல்லாமலிருக்கும் தருணத்தில் ஸ்மரணமில்லாமையால் ஜ்ஞானத்தின் இன்மை அதாவது ஜ்ஞாநாபாவமானது அநுமிக்கப்படுகிறது. மார்க்கத்தில் செல்பவனால் தொடப்பட்ட தருணம் முதலியது படுதரமான ஸம்ஸ்காரோதயத்திற்கு விரோதிகளிருப்பதால் ஸ்மரிக்கப்படுகிறதில்லை. வழியில் செல்பவன் நடந்து அனுகத்தக்க இடத்தில் ஸாதிக்கத்தக்க கார்யவிஷயமான சிந்தை முதலியதால் கவரப்பட்ட

---

* லிங்கம்—ஹேது. † வ்யபிசாரம்—தவறுதல்.

மனதுடன்கூடியவனாக ஆகிறானன்றோ. த்ருணம் முதலியவற்றில் ஆதாரமுமில்லை; ப்ரயோஜனமில்லாமையால், ப்ரயோஜனமில்லாமலிருந்தபோதிலுங்கூட யானைமுதலியவஸ்துக்களின் காக்ஷிபோல் த்ருணம்முதலியவற்றின் ஜ்ஞானமானது படுதரமன்று. விஷயத்தின் வைபுல்யம் வைசித்ரியம்முதலியது இல்லாமையால். ஜன்மாந்தராநுபவத்தாலுண்டான $ ஸம்ஸ்காரமோவென்றால் வெகுவாய் நரகாநுபவங்களாலும் பிறப்பினாலுமுண்டான தீவ்ரமான துக்கங்களின் ஆக்ரமணத்தினால் அஸ்பஷ்டமாக இருக்கிறது. ‡ உன்மாதமும் ஸம்ஸ்காரத்தின் உத்போதத்திற்கு விரோதி. அசப்யாஸமும் அப்படியே. அதற்கு விஸ்மரணஹேதுத்வம் காணப்பட்டிருப்பதால்--காலத்தின் தைர்க்யமும் ஸம்ஸ்காரத்தை அடியோடு போக்கும்திறமையுள்ளதாகக் காணப்பட்டிருக்கிறது. இளமைப்பர்வத்தில் அநுபவிக்கப்பட்ட விஷயங்களுக்கு வார்த்தகத்தில் ஸ்மரணமில்லாமல் போவதால்—இந்த ஹேதுக்கள் ஸுஷுப்தியில் இல்லை. ஸம்ஸ்காரத்தின் உத்போதத்திற்கு விரோதியான ஓரொன்று அதிர்ஷ்டம் கல்பிக்கத்தக்கதல்ல; கல்பகமில்லாமையால்- ஸௌஷுப்திக ஜ்ஞானத்திற்கும் அது விஷயமான அர்த்த ஸ்மரணத்திற்கு விரோதியான அத்ருஷ்டத்திற்கும் கல்பனை கூடாததலால்-ஏதாவது ஒன்று கல்பகமாக உத்ப்ரேக்ஷிக்கப்படுமேயாகில் அப்பொழுதும் கல்பனை இல்லாமலே நிர்வாஹம் ஸம்பவிக்கிறதாக இருக்க கல்பனம் உபபன்னமாகிறதில்லை. நான் ஒன்றையும் அறிந்திலேன் என்கிற இந்த ஜ்ஞாநமானது இவ்வண்ணம் அன்யபரத்வம முதலிய ஸம்ஸ்கார நிரோதக ஹேதுக்களின் இன்மையினால் விசேஷிக்கப்பட்டிருக்கிற அஸ்மரணரூப ஹேதுவினால் உண்டாகிற ஜ்ஞாநாபாவாநுமிதிரூபமாயுள்ளது. உன்னாலும் ஜ்ஞாநாபாவமானது ஸுஷுப்தியில் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதுவும் சொல்லப்பட்டிருக்கிற லிங்கத்தினால் அநுமிக்கத்தக்கதே என்று ஒப்புக்கொள்ளத்தக்கது. அது நமக்கும் துல்யம். ஆகையால் ஸ்ம்ருதித்வாநுபபத்தியினாலும் அநுமிதிரூபத்வோபபாதனத்தாலும், ‘ந கிஞ்சிதவேதிஷம்’ என்கிற ஜ்ஞாநமானது வேறுவிதமாகவே உபபன்னமாவதால்- அதனால் பாவரூபாஜ்ஞாநஸித்தி இல்லை—என்று. இப்படிப்பட்ட துர்வாதங்கள் பொருத்தமில்லாதவைகள் என்பது பாவரூபாஜ்ஞாநவிஷயகமான ப்ரத்யக்ஷத்தின் நிராகரணத்தால் ஸித்தம்.

[illegible]

$ ஸம்ஸ்காரம்—வாஸனை. ‡ உன்மாதம்—பைத்தியம் அல்லது சித்தப்ரமம்.

𑌤𑍍𑌰 𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍍𑌯𑍈𑌵 𑌹𑌿 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌕𑌤𑍍𑌵𑌮𑍍 । 𑌸𑌤𑍍𑌯𑌪𑌿 𑌦𑍀𑌪𑍇 𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨 𑌵𑌿𑌨𑌾 𑌵𑌿𑌷𑌯𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌾𑌭𑌾𑌵𑌾𑌤𑍍 । 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌾𑌮𑌪𑌿 𑌜𑍍𑌞𑌾𑌨𑍋𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑌿𑌹𑍇𑌤𑍁𑌤𑍍𑌵𑌮𑍇𑌵, 𑌨 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌕𑌤𑍍𑌵𑌮𑍍 । 𑌪𑍍𑌰𑌦𑍀𑌪𑌪𑍍𑌰𑌭𑌾𑌯𑌾𑌸𑍍𑌤𑍁 𑌚𑌕𑍍𑌷𑍁𑌰𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌸𑍍𑌯 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍁𑌤𑍍𑌪𑌾𑌦𑌯𑌤𑍋 𑌵𑌿𑌰𑍋𑌧𑌿𑌤𑌮𑍋𑌨𑌿𑌰𑌸𑌨𑌦𑍍𑌵𑌾𑌰𑍇𑌣 𑌉𑌪𑌕𑌾𑌰𑌕𑌤𑍍𑌵𑌮𑌾𑌤𑍍𑌰𑌮𑍇𑌵 । 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌕𑌜𑍍𑌞𑌾𑌨𑍋𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑍌 𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌰𑌿𑌯𑌮𑌾𑌣𑌚𑌕𑍍𑌷𑍁𑌰𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑍋𑌪𑌕𑌾𑌰𑌕𑌹𑍇𑌤𑍁𑌤𑍍𑌵𑌮𑍇𑌵 𑌦𑍀𑌪𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌕𑌤𑍍𑌵𑌵𑍍𑌯𑌵𑌹𑌾𑌰𑌃 । 𑌨𑌾𑌸𑍍𑌮𑌾𑌭𑌿𑌰𑍍[illegible] 𑌦𑍀𑌪𑌪𑍍𑌰𑌭𑌾 𑌨𑌿𑌷𑍇𑌧𑌿𑌤𑌾 । 𑌕𑌿𑌞𑍍𑌚 𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍍𑌯𑍈𑌵 𑌸𑍍𑌵𑌵𑌿𑌷𑌯𑌾𑌵𑌰𑌣𑌨𑌿𑌰𑌸𑌨𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌕𑌤𑍍𑌵𑌾𑌙𑍍𑌗𑍀𑌕𑍃𑌤𑍍𑌯𑌿𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍; 𑌨 - 𑌨𑌹𑌿 𑌵𑌿𑌰𑍋𑌧𑌿𑌨𑌿𑌰𑌸𑌨𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌕𑌤𑍍𑌵𑌮𑍍 । 𑌕𑌿𑌞𑍍𑌚 [illegible] । 𑌵𑍍𑌯𑌵𑌹𑌾𑌰𑌯𑍋𑌗𑍍𑌯𑌤𑌾𑌪𑌾𑌦𑌨𑌮𑌿𑌤𑌿 𑌯𑌾𑌵𑌤𑍍; 𑌤𑌚𑍍𑌚 𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍍𑌯𑍈𑌵 । 𑌯𑌦𑍍𑌯𑌪𑍍𑌯𑍁𑌪𑌕𑌾𑌰𑌕𑌾𑌣𑌾𑌮𑌪𑌿 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌿𑌤𑌾𑌰𑍍𑌥𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌕𑌤𑍍𑌵𑌾𑌙𑍍𑌗𑍀𑌕𑍃𑌤𑌮𑍍, 𑌤𑌥𑌾𑌪𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌾𑌮𑍁𑌪𑌕𑌾𑌰𑌕𑌤𑍍𑌵𑍇𑌨𑌾𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌿𑌤𑌾𑌰𑍍𑌥𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌕𑌤𑍍𑌵𑌾𑌙𑍍𑌗𑍀𑌕𑌰𑌣𑍀𑌯𑌮𑍍 । 𑌤𑌥𑌾 𑌸𑌤𑌿 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌸𑍍𑌵𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑍍𑌯[illegible] ।

ஸ்ரீபாஷ்யம்—

அனுமானத்தாலுங்கூட பாவரூபமான அஜ்ஞானம் ஸித்திக்கிறதென்று யாதொன்று கூறப்பட்டதோ அது யுக்தமல்ல. அனுமானம் ஸம்பவியாமையால், அய்யா! அனுமானம் கூறப்பட்டதன்றோ, கூறப்பட்டதென்பது உண்மை. ஆனால் அது தோஷமுள்ளதாகக் கூறப்பட்டிருக்கிறது. அஜ்ஞாநத்திலும் அபிமதமல்லாத வேறு அஜ்ஞாநத்தை ஸாதிப்பதுபன்றி ஹேதுவானது † விருத்தமாக இருப்பதால். அவ்விடத்தில் வேறு அஜ்ஞானத்தை ஸாதிக்காவிடில் ஹேதுவுக்கு * அநைகாந்த்ய தோஷம். ஸாதித்தால் அந்த அஜ்ஞானமானது அஜ்ஞான ஸாக்ஷித்வத்தை நிவாரணம் செய்கிறது. அதனால் அஜ்ஞாநகல்பனையானது பயனற்றதாக ஆகும். த்ருஷ்டாந்தமும் ஸாதநத்தால் விடுபட்டதாக ஆகிறது. தீபத்தினுடைய ஒளிக்கு ப்ரகாசிக்கப்பட்டிராத வஸ்துவை ப்ர

† விருத்தம்-விரோதமென்கிற தோஷமுள்ளஹேது. அதாவது ஸாத்யாபாவ வ்யாப்யமாக இருக்கிற ஹேது வென்று கருத்து. * அநைகாந்த்யம்—வ்யபிசாரம்.

காசப்படுத்தும் தன்மை இல்லாமையால். எல்லாவிடத்திலும் ஜ்ஞாநத்திற்கே யன்றோ வஸ்துக்களை ப்ரகாசிக்கச்செய்யும் தன்மை. தீபமிருக்கும் ஸமயத்திலுங்கூட ஜ்ஞாநமில்லாவிடில் விஷயப்ரகாசமில்லாமையால். ‡ இந்த்ரியங்களுக்குங்கூட ஜ்ஞாநோத்பத்தியில் ஹேதுத்வம் மாத்திரமே, ப்ரகாசகத்வம் கிடையாது. தீபத்தின் ஒளிக்கோவென்றால் ஜ்ஞாநத்தை உண்டுபண்ணுகிற § சக்ஷுரிந்த்ரியத்திற்கு விரோதியான இருளை ஓட்டுதலின் வாயிலாக உபகாரத்தைச் செய்தல் மாத்ரமே- $ விஷயப்ரகாசகமான ஜ்ஞாநத்தின் உத்பத்தியில் வ்யாபரிக்கின்ற சக்ஷுரிந்த்ரியத்திற்கு உபகாரகஹேதுவாக இருத்தலை அபேக்ஷித்து தீபத்திற்கு ப்ரகாசகத்வ வ்யவஹாரம். நாம் ஜ்ஞானத்திற்குத்துல்யமான ப்ரகாசகத்வத்தை ஒப்புக்கொண்டு ஜ்ஞானத்திற்கு நிதர்சனமாக தீபப்ரபையைக்காட்டினோமில்லை, பின்னையோ ஜ்ஞாநத்திற்கே தன் விஷயங்களை மூடுகின்ற வஸ்துக்களின் நிராஸத்தை முன்னிட்டுக்கொண்டிருக்கிற ப்ரகாசகத்வத்தை ஒப்புக்கொண்டு என்று சொல்லப்படுமேயானால், அல்ல. விரோதியின் நிராஸமே ப்ரகாசகத்வமல்லவன்றோ, பின்னையோ அர்த்தங்களின் பரிச்சேதம். அதாவது வ்யவஹாரத்திற்கு யோக்யமாக இருத்தலை ஏற்படுத்துதலென்று அர்த்தம். அந்த வ்யவஹாரயோக்யதாபாதனமோ ஜ்ஞானத்திற்கே. உபகாரம் செய்கிற வஸ்துக்களுக்குங்கூட ப்ரகாசிக்கப்பட்டிராத வஸ்துக்களை ப்ரகாசப்படுத்தும் தன்மை ஒப்புக்கொள்ளப்படுமேயாகில் அப்பொழுது இந்த்ரியங்களுக்கும் ஜ்ஞாநோத்பத்தியில் அதிகமாக உபகாரகத்வ சக்தி இருப்பதால் அப்ரகாசிதார்த்த ப்ரகாசகத்வம் ஒப்புக்கொள்ளத்தக்கது. அப்படி ஒப்புக்கொண்டால் அந்த இந்த்ரியங்களுக்குத்தன்னால் நிவர்த்திக்கத்தக்க வேறு வஸ்துக்களை முன்னிட்டுக்கொண்டிருத்தல் இல்லாமையால் ஹேதுவுக்கு அநைகாந்த்ய தோஷம் வருகிறது. ஆதலால் இந்த விசாரம் வேண்டாம் போதும்.

ச்ருதப்ரகாசிகை—

அதற்குமேல் அனுமானத்தை தூஷிக்கிறார். யதுக்தம் இது முதலிய க்ரந்தத்தினால். அனுமாநாஸம்பவாத் என்று. உன்னால் சொல்லப்பட்ட அனுமானமானது *ஆபாஸமென்று கருத்து. நான் சொன்ன அனுமானமானது எவ்வாறு உம்மால் ¶துருக்தமென்று சொல்லப்படலாம் என்று கேழ்க்கப்பட்டால் சொல்லுகிறார்—அக்ஞாநேபி என்று. வேறு அஜ்ஞானத்தை ஸாதித்தலென்பது எவ்வாறு அவச்யமாக ஸம்பவிக்கும்?

---

‡ இந்த்ரியம்—இந்த்ரன் ஜீவன், அவனுடைய ஸத்தைக்கு லிங்கம் ஜ்ஞாபகமான சின்னம் அதாவது அடையாளம். § சக்ஷுரிந்த்ரியம்—கண்.
$ விஷயம்—இந்த்ரியங்களால் க்ரஹிக்கப்படும் வஸ்து. * ஆபாஸம்—துஷ்டம்.
¶ துருக்தம்—தோஷத்துடன் கூடிய சொல்.

அந்த அஜ்ஞாநாந்தரஸாதனமானது எவ்வாறு இஷ்டமல்லாதது என்கிற சங்கைவரின், அதனுடைய அவச்யம்பாவத்தை உபபாதனம் செய்கிறார்— தத்ர என்று. அஜ்ஞானம் அநபிமதம் என்பதை உபபாதிக்கிறார்—ஸாதநேச என்று. அதனால் என்னவென்று கேட்கின் சொல்லுகிறார்—தத்ருச என்று இந்த ப்ரமாண ஜ்ஞானத்திற்கு ப்ரகாசிக்கப்பட்டிராத வஸ்துக்களை ப்ரகாசிக்கச் செய்யுந்தன்மை இருப்பதால், ஸ்வ விஷயங்களை மறைக்கிற அஜ்ஞாநாந்தரத்திற்கு ஸாதகத்வமிருக்க அந்த அஜ்ஞானமானது, ப்ரஹ்மஸ்வரூபததை மறைக்கிறதும் ஸாதிக்கவேண்டுமென்று விரும்பப்பட்டிருப்பதுமான அஜ்ஞானத்தை மூடுகிறது. அதனால் மூடப்பட்டிருப்பதால் அந்த அஜ்ஞானம் ப்ரஹ்மத்தினால் ஸாக்ஷாத் கரிக்கப்படுகிறதில்லை. பரமார்த்தமல்லாததும் ப்ரதீதிவிஷயமாக ஆகாமலுமிருக்கிற பதார்த்தத்திற்கு கார்ய கரத்வம் பொருந்தாததலால் அஜ்ஞானத்தின் கல்பனை பயனில்லாதது. திரோதான ரூபமானகார்யார்த்தமாக அல்லவோ அந்த அஜ்ஞானத்தின் கல்பனை. ஸாக்ஷாத்கரிக்கப்படாமலே அது கார்யகரமாக ஆகுமேயானால் அப்பொழுது ஸத்தையினால் கார்யகரமாக இருப்பதுபற்றி $ காசம் முதலியதுபோல் ஸத்யமாக இருப்பதால் ஜ்ஞானத்தினால் நிவர்த்திக்கத்தக்கதாக ஆகாது. இவ்வண்ணம் அஜ்ஞானத்திற்கு ஜ்ஞானத்தினால் நிவர்த்திக்கத்தகாமையும் பயனில்லாமையும் காரணமாக அபிமதிக்கப்பட்டிராத அஜ்ஞாநாந்தர ஸாதகத்வமும் அதை ஸாதிக்காவிடில் அநைகாந்த்யமும் சொல்லப்பட்டது.

அய்யனே! கூறப்பட்டுள்ள ஹேதுவினால் உண்டாகிற ஜ்ஞானமானது நன்குநிச்சய ரூபமாக இருக்குமேயானால் அதன்விரோதத்தினாலேயே ஹேதுவுக்கு அநைகாந்த்யதோஷம் வருகிறதில்லை. நன்கு நிச்சயரூபமாக இல்லாமலிருந்தபோதிலும் அப்படியும் ஹேதுவுக்கு அநைகாந்த்யதோஷமில்லை. அப்ரகாசிதார்த்த ப்ரகாசகத்வம் என்கிற ஹேதுவானது அங்கு நிலைபெற்றிராததால். மறுமொழி உரைக்கப்படுகிறது—ஹேதுவின் அநைகாந்த்யதோஷபரிஹாரமானது ஸாத்யவிஷய ஜ்ஞானத்திற்கு ப்ரமிதிரூபத்வத்தை விலக்குகிறது. ஜ்ஞானத்தின் ஸம்யக்த்வமோவென்றால் ஹேதுவின் அநைகாந்த்யதோஷ பரிஹாரத்தை விலக்குகிறது. ஆகலால் ஜ்ஞானத்திற்கு ஸம்யக்த்வமிருந்தால் அதற்கு சொல்லப்பட்டுள்ள ஹேதுவினால் உண்டாயிருத்தல் வ்யாஹதம். ஹேதுவுக்கு அநைகாந்த்ய தோஷமிருப்பதால். நல்ல ஜ்ஞானமானது துஷ்ட ஹேதுவினால் உண்டானதல்லவன்றோ. முற்கூறப்பட்டுள்ள ஹேதுவுக்கு அநைகாந்த்யமில்லையானால் அதற்கு அஸம்யங் நிச்சயரூபமான ஜ்ஞானத்தை உண்டுபண்ணும் தன்மையானது வ்யாஹதமாகிறது. அதுஷ்டமான ஹேதுவுக்கு அஸம்யக் ஜ்ஞானத்தை உண்டுபண்ணும் தன்மை பொருந்தாததால். இவ்வண்ணம் ஹேதுவின் அநைகாந்த்ய பரிஹாரம் ஜ்ஞானத்தின் ஸௌஷ்டவம் இவ்விரண்டுகளுக்கும அன்யோன்ய விரோதத்தால் அவ்விரண்டுகளுக்கும் இந்த இடத்தில் சேர்ந்து ஸித்தி இல்லாமையால் இரண்டுக்குள் ஒன்று இல்லாமலிருந்தபோதிலும் ஸாத்யஸித்தி இல்லாமையால் அநுமானம் அஸமஞ்ஜஸம் என்று அபிப்ராயம். அய்யா! ஹேதுவுக்கு அநைகாந்த்யமில்லை. ஸாத்யவிஷயஜ்ஞாநத்தில் ஹேதுவுக்கு வ்ருத்தி இல்லாமையால். அப்ரகாசிதமான அஜ்ஞானமானது இதனால் ப்ரகாசிக்கப்படுகிறதில்லையன்றோ. ஆனால் என்ன? ஸாக்ஷிசைதன்யத்தினால் ஸித்தமாகவே இருக்கிற அஜ்ஞானத்தின் இன்மையால் விவே

$ காசம்—நேத்திரரோகம்.

சனம் மாத்ரம் செய்யப்படுகிறது. இப்படி அல்ல. அநுமர்த்தத்திற்கு தர்மபூதமான ப்ரகாசத்தினின்று வெளிப்பட்டிருக்கிற ஸ்வரூப சைதன்யத்தினால் அஜ்ஞான ஸித்தி வரின் அனுமானத்திற்கு ப்ராமாண்யம். அந்த ப்ராமாண்யத்தால் பாவரூபமான அஜ்ஞானத்தின் ஸித்தி. அது ஸித்தித்தால் ஜ்ஞாதாவும் அதனால் கல்பிதமானதால் அதனின்று வெளிப்பட்டிருக்கிற ஸாக்ஷிசைதன்யத்தினால் அஜ்ஞாநாநுபவஸித்தி என்று தாண்டமுடியாததான சக்ரகதோஷம் வரவேண்டியதாக ஏற்படுவதால்.

வேறு தூஷணத்தைச் சொல்லுகிறார்—த்ருஷ்டாந்தம்ச இது முதலியதால். அந்த இடத்தில் (அதற்கு)ஸாக்ஷாத்தாக ப்ரகாசகத்வமா? அல்லது பரம்பரையினலா? அல்லது ஸாக்ஷாத்தாகவோ பரம்பரையினலோ ப்ரகாசகத்வம் மாத்திரமா? அல்லது தன்னுடைய விஷயங்களை மறைக்கிற பதார்த்தத்தை விலக்குதல் ப்ரகாசகத்வமா? என்று நான்கு கல்பங்கள் ஏற்படுகின்றன. அவற்றுள் முதலாவது கல்பத்தில் திருஷ்டாந்தமானது ஸாதனத்தினால் விடுபட்டது. இரண்டாவது பக்ஷத்திலோ வென்றால் அஸித்தி. மூன்றாவதிலோ வென்றால் இந்த்ரியங்களில் அநைகாந்த்யம். அந்த இந்த்ரியங்களுக்கு தங்களால் விலக்கத்தக்க வேறு வஸ்துவை முன்னிட்டுக்கொண்டிருத்தலில்லாமையால். அந்த இந்த்ரியங்கள் நேராகவோ பரம்பரையினலோ ப்ரகாசங்களாக இருக்கிற இரண்டு வஸ்துக்களுக்குள் ஒன்றாக இருப்பதால். இந்த்ரியங்களையும் $ பக்ஷங்களாகச் செய்துகொண்டு அவைகளுக்கும் அப்படிப்பட்ட வஸ்த்வந்தர பூர்வகத்வத்தை கல்பிப்பது யுக்தமன்று. * அஹங்கார தத்வத்தினின்று உண்டாயிருக்கிற இந்த்ரியங்களுடைய உத்பத்திக்கு ¶ ஸ்வவிஷயாவரணஸ்வதேசகதவஸ்த்வந்தர பூர்வகத்வமில்லாமையால். § ஆலோகமேயன்றோ அப்படிப்பட்டது. நான்காவது பக்ஷத்திலோவென்றால் ஸாத்யாபாவ விசிஷ்டதை என்று அபிப்பிராயப்பட்டு முதலாவது கல்பத்தில் தூஷணம் சொல்லுகிறார்— த்ருஷ்டாந்தம்ச ஸாதன விகல: என்று. எவ்வாறு ஜ்ஞானத்திற்கே ஸாக்ஷாத் ப்ரகாசகத்வம் என்கிற ஸந்தேஹம் வரின் அதை ♆ உபபாதனம் செய்கிறார்—ஸத்யபி என்று. ஜ்ஞானத்திற்கே ப்ரகாசகத்வம் என்பதனால் இரண்டாவது கல்பத்தில் ஹேதுவுக்கு பக்ஷத்தில் அஸித்தியானது பலித்தது. இந்த்ரியாணும் என்று சொன்னதினால் மூன்றாவது பக்ஷத்தில் இந்த்ரியங்களில் அநைகாந்த்யம் சொல்ல விரும்பப்பட்டிருக்கிறது. தீபத்தினுடைய ஒளிக்கு பரம்பரையினாலுங்கூட வஸ்துக்களை ப்ரகாசிக்கச்செய்யும் தன்மையானது தூரத்திலிருக்கிறதென்று சொல்லுகிறார்—ப்ரதீப என்று. தீபப்ரபை ப்ரகாசிக்கச்செய்கிறதென்கிற வ்யவஹாரம் எப்படி என்று கேட்கப்படுமேயானால் கூறுகிறார்— ப்ரகாசக என்று. நான்காவது பக்ஷத்தைச் சங்கிக்கிறார்—நாஸ்மாபி: என்று. நிரஸநபூர்வக என்று. நிரஸனத்தை

$ பக்ஷம்—ஸந்தேஹாஸ்பதமான ஸாத்யத்துடன் கூடியது.

* அஹங்காரம்— மஹத்தத்வத்தின் விக்ருதி - இது ஸாத்விகம் ராஜஸம் தாமஸமென்று மூன்று வகைப்பட்டுள்ளது. ஸாத்விகாஹங்காரத்தினின்று இந்த்ரியங்கள் உண்டாகின்றன. தாமஸாஹங்காரத்தினின்று தன்மாத்ரங்களென்று சொல்லப்படுகிற பூதஸூக்ஷ்மங்கள் உண்டாகின்றன. அந்த பூதஸூக்ஷ்மங்களிடமிருந்து பஞ்ச மஹாபூதங்கள் உண்டாகின்றன. ¶ ஆவரணம்—மறைத்தல். § ஆலோகம்—ப்ரகாசம்.

♆ உபபாதனம்—நிரூபணம்.

ஆவாரமாகக்கொண்டிருக்கிற என்று அர்த்தம். ஸாத்யாவிசிஷ்டதையைச் சொல்லுகிறார்—ந ஹி என்று. ஜ்ஞானத்திற்கு விஷயாவரண நிரஸனரூபமான ப்ரகாசகத்வமில்லையன்றோ. அது ஸாதிக்கத்தக்கதன்றோ. ஸம்ப்ரதிபன்னமல்லவென்று அர்த்தம். மாத்ரச்ப்ரத்யயத்தினால் அர்த்தபரிச்சேதத்தின் வ்யுதாஸம் செய்யப்பட்டது. ஹி சப்தத்தால் விஷயாவரண நிராஸகத்வத்திற்கு ஸாத்யத்வம் பலித்தது. அதில் உபயவாதிகளாலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிற ப்ரகாசகத்வத்தைக் கூறுகிறார்—அபி து என்று. பரிச்சேதசப்தமானது பரிமிதி என்கிற அர்த்தமுள்ளது என்கிற ஸந்தேஹத்தை நீக்குவதற்காகக் கூறுகிறார்—வ்யவஹார என்று. வ்யவஹாரயோக்யதா - வ்யவஹாரத்திற்கு ப்ரதிஸம்பந்தியாக இருத்தல். அய்யா! ஹேதுவுக்கு ஸாத்யாவிசிஷ்டத்வமில்லை. ஸ்வவிஷயாவரண நிரஸன சப்தத்தால் ஸ்வப்ராகபாவ நிராஸகத்வம் சொல்லக்கருதப்பட்டிருக்கிறது, அதனால் பாவரூபமான நிரஸனீய பூர்வகத்வம் ஸாத்யம் என்று. அல்ல. ஸ்வப்ராகபாவ நிராஸகத்வரூபமான ஹேதுவுக்கு இந்த்ரிய ஸம்யோகத்தில் அனைகாந்த்ய தோஷம் ஸம்பவிப்பதால். ஹேதுவானது பாஸமானத்வமிருக்க அப்ரகாசிதார்த்த ப்ரகாசகத்வாத் என்று விசேஷிக்கப்பட்டபோதிலும் முன்போல் விகல்பம் உண்டாகும். அவற்றுள் ஸாக்ஷாத் பக்ஷத்தில் திருஷ்டாந்தம் ஸாதனவிகலம். பரம்பரையினால் என்கிற பக்ஷத்தில் ஹேதுவுக்கு அஸித்தி. மூன்றாவதில் * லிங்கம் முதலியதில் வ்யபிசாரம், நான்காவதில் ஸாத்யா விசிஷ்டதை. பாஸமானத்வ சப்தத்தால் விசேஷிக்கப்பட்டிருக்கிற விஷயாவரணநிராஸகத்வத்திற்கு ஸம்ப்ரதிபத்தி இல்லாமையால்.

ப்ரதிப்ரயோகாஸ்து, விவாதாத்யாஸிதமஜ்ஞாநம் ந ஜ்ஞாநமாத்ர
ப்ரஹ்மாஶ்ரயம்; அஜ்ஞாநத்வாத்; ஶுக்திகாத்யஜ்ஞாநவத். ஜ்ஞாத்ராஶ்ர
யம் ஹி தத். விவாதாத்யாஸிதமஜ்ஞாநம் ந ஜ்ஞாநமாத்ரப்ரஹ்மாவர
ணம், அஜ்ஞாநத்வாத், ஶுக்திகாத்யஜ்ஞாநவத். விஷயாவரணம் ஹி
தத். விவாதாத்யாஸிதமஜ்ஞாநம் ந ஜ்ஞாநநிவர்த்யம்; ஜ்ஞாந விஷ
யாநாவரணத்வாத்; யத் ஜ்ஞாநநிவர்த்யமஜ்ஞாநம் தத் ஜ்ஞாநவிஷயாவ
ரணம், யதா ஶுக்திகாத்யஜ்ஞாநம். ப்ரஹ்ம நாஜ்ஞாநாஶ்ரயம்; ஜ்ஞா
த்ருத்வவிரஹாத்; கடாதிவத். ப்ரஹ்ம நாஜ்ஞாநாவரணம்; ஜ்ஞாநா
விஷயத்வாத். யதஜ்ஞாநாவரணம் தத் ஜ்ஞாநவிஷயபூதம்; யதா
ஶுக்திகாதி. ப்ரஹ்ம ந ஜ்ஞாநநிவர்த்யாஜ்ஞாநம்; ஜ்ஞாநாவிஷய
த்வாத். யத் ஜ்ஞாநநிவர்த்யாஜ்ஞாநம்; தத்ஜ்ஞாநவிஷயபூதம்; யதா
ஶுக்திகாதி. விவாதாத்யாஸிதம் ப்ரமாணஜ்ஞாநம் ஸ்வப்ராகபாவாதி

---

* லிங்கம்—ஹேது.

ரிக்தஜ்ஞாநவர்த்தகம் ந பவதி; ப்ரஹ்மணோஜ்ஞாநத்வாத்; பவது ஹி பூதா
ஜ்ஞாநஸ்யாபி ப்ரஹ்மணோஜ்ஞாநவத் ||

ஜ்ஞாநம் ந வஸ்துநோ விநாஶகம்; ஶுக்திவிஶேஷாவபாஸா
ணவிரோதி பவதி ஜ்ஞாநத்வாத் | யத்³வஸ்துநோ விநாஶகம் தச்சுக்தி
விஶேஷாவபாஸஹித ஜ்ஞாநாஜ்ஞாநஞ்ச த்³ருஷ்டம் | யதேஶ்வரயோ
ர்விப்ரஹ்ருதிஜ்ஞாநம்; யதா ச ஶூத்³ராதி | பாவரூபாஜ்ஞாநம் ந
ஜ்ஞாநவிநாஶ்யம்; பாவரூபத்வாத், கடாதிவதிதி | கதம் தர்ஹி—
பாதகஜ்ஞாநேந பூர்வஜ்ஞாநோத்பந்நாநாம் பயாதீநாம் விநா
ஶோ த்³ருஶ்யதே—இதி | நைவம்—ந ஹி ஜ்ஞாநேந தேஷாம் விநா
ஶ:; க்ஷணிகத்வேந தேஷாம் ஸ்வயமேவ விநாஶாத்; காரணநிவ்ருத்த்யா
ச பஶ்சாதநுத்பத்தே: | க்ஷணிகத்வஞ்ச தேஷாம் ஜ்ஞாநவத்³ருத்திகார
ணஸந்நிதாந ஸமவாயஸமவாய்ய:; அந்த்யாதிஸமவாயஸமவாய்யத்வே |
க்ஷணிகத்வம் ச பயாதீநாம் பயாதிஹேதுபூதஜ்ஞாநஸந்தாநவி
ஶேஷண ஸர்வேஷாம் ஜ்ஞாநாநாம் பயாத்³ருத்திஹேதுக்ஷணா
நேகஸமவாயஸமவாயித்வ ஸஞ்சாத் ||

ஸ்வப்ராகபாவவ்யதிரிக்தஸ்வஸஜாதீயவர்த்தகமிதி வ்யர்த்தவிஶேஷ
ணோபாதாநேந ப்ரயோகஸ்ய ஸ்பஷ்டா பாதவிக்ஷிப்தா | அதோऽநு
மாநேநாபி ந பாவரூபாஜ்ஞாநஸித்தி: ||

ஸ்ரீபாஷ்யம்—

ப்ரத்யனுமானங்களும்—விவாதத்திற்கு ஆஸ்பதமாக இருக்கிற அஜ்ஞானமானது ஜ்ஞானமாத்ரமான ப்ரஹ்மத்தை ஆச்ரயித்ததல்ல. அஜ்ஞானமாக இருப்பதால். சுக்திகைமுதலியவற்றின் அஜ்ஞானம்போல். அது ஜ்ஞாதாவையன்றோ ஆச்ரயித்திருக்கிறது. விவாதாஸ்பதமான அஜ்ஞானமானது ஜ்ஞானமாத்ர ஸ்வரூபமுள்ள ப்ரஹ்மத்தை மறைக்கிற திறமையுள்ளதல்ல; அஜ்ஞானமாக இருப்பதால், சுக்திகை முதலியவற்றின் அஜ்ஞானம்போல. அந்த அஜ்ஞானமானது விஷயத்தையன்றோ மறைக்கும் திறமையுள்ளது. விவாதாஸ்பதமான அஜ்ஞானமானது ஜ்ஞானத்தால் நிவர்த்திக்கத்தக்கதல்ல, ஜ்ஞானவிஷயங்களை மறைக்காமலிருப்பதால், எந்த அஜ்ஞானம் ஜ்ஞானத்தால் விலக்கத்தக்கதோ அது ஜ்ஞானவிஷயங்களுக்கு ஆவரணம். சுக்திகை முதலியவற்றின் அஜ்ஞானம்போல. ப்ரஹ்மமானது அஜ்ஞானத்திற்கு

ஆஸ்பதமல்ல, ஜ்ஞாத்ருத்வ மில்லாமையால், கடம் முதலியதுபோல். ப்ரஹ்மமானது அஜ்ஞானாவரணமுள்ளதல்ல ஜ்ஞானத்திற்கு விஷயமாக இல்லாததால், எது அஜ்ஞானாவரணமுள்ளதோ அது ஜ்ஞானவிஷயமாக இருக்கும். சுக்திகை முதலியதுபோல ப்ரஹ்மமானது ஜ்ஞானத்தினால் நிவர்த்திக்கத்தக்க அஜ்ஞானமல்ல, ஜ்ஞானத்திற்கு விஷயமாக இராததால். எது ஜ்ஞானத்தினால் நிவர்த்திக்கத்தக்க அஜ்ஞானமோ அது ஜ்ஞானத்திற்கு விஷயமாக இருக்கும், சுக்திகை முதலியதுபோல். விவாதத்திற்கு இருப்பிடமான ப்ரமாண ஜ்ஞானமானது தன்னுடைய ப்ராகபாவத்தைக்காட்டிலும் வேறான அஜ்ஞானத்தை முன்னிட்டுக் கொண்டதாக இருக்கிறதில்லை. ப்ரமாண ஜ்ஞானமாதலால். உன்னால் அபிமானிக்கப்பட்டுள்ள அஜ்ஞானத்திற்கு ஸாதனமாக இருக்கிற ப்ரமாண ஜ்ஞானம்போல. ஜ்ஞானமானது வஸ்துவுக்கு விநாசகமல்ல. சக்தி விசேஷத்தினால் போஷணையில்லாமை இருக்க ஜ்ஞானமாக இருப்பதால், எது வஸ்துக்களுக்கு விநாசகமோ அது சக்தி விசேஷத்தால் உபப்ரும்ஹணம் செய்யப்பட்டிருக்கிற ஜ்ஞானமாகவும் அஜ்ஞானமாகவும் பார்க்கப்பட்டிருக்கிறது. ஈச்வரன் யோகிகள் முதலியவர்களின் ஜ்ஞானம் போல. $ முத்கரம் முதலியதுபோலவும். பாவரூபமான அஜ்ஞானமானது ஜ்ஞானத்தினால் அழியச் செய்யத்தக்கதல்ல, பாவரூபமாக இருத்தலால், கடம் முதலியதுபோல. அப்படிக்கின்றி பாதகஜ்ஞானத்தினால் முந்தின ஜ்ஞானத்தினால் உண்டுபண்ணப்பட்டிருக்கிற பயம் முதலியவைகளுக்கு விநாசம் காணப்படுகிறதென்று சொல்லப்படலாம். இவ்வண்ணமல்ல. ஜ்ஞானத்தினால் அவைகளுக்கு விநாசம் இல்லையன்றோ, அவைகள் ஒரு க்ஷணகாலம் இருப்புள்ளவைகளாக இருப்பதுபற்றி தானே விநாசமடைவதால் காரணமில்லாமையால் பிறகு உண்டாவதில்லை. ஜ்ஞானம்போல் உத்பத்திக்குக் காரணமாக இருக்கிற வஸ்துவின் ஸன்னிதானத்திலேயே உபலப்தி வருவதால் அவைகளுக்கு க்ஷணிகத்வம் ஸித்திக்கிறது. மற்றகாலங்களில் உபலப்தி இல்லாமையாலும் க்ஷணிகத்வமறியப்படுகிறது. பயம் முதலியவைகளுக்கு க்ஷணிகத்வத்தை ஒப்புக்கொள்ளாதபக்ஷத்தில் பயம் முதலியவற்றுக்குஹேதுவாக இருக்கிற ஜ்ஞான ஸந்ததியில் விசேஷமின்றி எல்லா ஜ்ஞானங்களும் பயம் முதலியவைகளின் உத்பத்திக்கு ஹேதுவாக இருப்பதால் அனேக பயங்களின் உபலப்தியானது ப்ரஸங்கிப்பதாலும். தன் ப்ராகபாவத்தைவிட வேறான வஸ்துவை முன்னிட்டுக் கொண்டிருக்கிற என்கிற பயனற்ற விசேஷணத்தை எடுத்துக்கொள்வதனால் ப்ரயோக விஷயத்தில் ஸாமர்த்த்யம் வெளியிடப்பட்டது. ஆகையால் அநுமானத்தாலும் பாவரூபமான அஜ்ஞானம் ஸித்தி பெறுகிறதில்லை.

$ முத்கரம்—உருட்டுத்தடி.

ச்ருதப்ரகாசிகை—

அதற்குமேல் இந்த அனுமானத்திற்கு ப்ரதிகூல தர்க்கத்தால் பராஹதியைக்கூறுகிறார்—ப்ரதிப்ரயோகாஸ்ச என்று. தர்க்கமும் வ்யாப்திமூலமாக இருப்பதால் ப்ரயோகா: என்று பகரப்பட்டது. ஸ்வதேசகத்வ, ஸ்வ விஷயாவரணத்வ, ஸ்வநிவர்த்யத்வங்களுக்கு ப்ரதிகூலமாக வரிசையாக மூன்று அனுமானங்களும் அஜ்ஞானத்தை பக்ஷமாக வைத்துக்கொண்டு சொல்லப்படுகின்றன. விவாதாத்யாஸிதமான-அஜ்ஞானமானது ப்ரஹ்மத்தை ஆச்ரயித்தது ஆச்ரயித்திராதது என்கிற விவாதத்தால் ஆச்ரயிக்கப்பட்டிருக்கிறதென்று அர்த்தம். அதனால் சுக்திமுதலியதின் அஜ்ஞானத்திற்கு விலக்கம் ஏற்படுகிறது. அது ஜீவனையல்லவோ ஆச்ரயித்திருக்கிறது. அப்ராமாணிகமாக இருந்தபோதிலும் பாவரூபமான அஜ்ஞானத்தையும் ஜ்ஞானமாத்ர ப்ரஹ்மத்தையும் ஒப்புக்கொண்டு ப்ரதிகூல தர்க்கங்கள் சொல்லப்படுகின்றன. சுக்தி முதலியவற்றின் அஜ்ஞானத்திற்கு ஜ்ஞானத்தை ஆச்ரயித்திராமை எவ்வண்ணமென்று கேட்க்கப்படுமேயாகில் கூறுகிறார்—ஜ்ஞாத்ராச்ரயம் என்று. இவ்விதம் வ்யாப்தியானது காண்பிக்கப்பட்டது. அஜ்ஞானமென்று சொல்லும்பக்ஷத்தில் ஜ்ஞாநாச்ரயத்வம் ப்ரஸங்கிக்கும் என்று சொல்லப்பட்டதாக ஆகிறது. வேறு ப்ரதிகூல தர்க்கத்தைக்கூறுகிறார்—விவலத என்று வ்யாப்தியைக்காண்பிக்கிறார்—விஷயாவரணம் என்று. அஜ்ஞானமென்று சொல்லும் பக்ஷத்தில் ஜ்ஞாநாவரணத்வம் ப்ரஸங்கிக்குமென்று அர்த்தம். மூன்றாவது ப்ரயோகத்தில் அறியத்தக்க வஸ்துக்களை மறைக்கிற ஸ்வபாவமுள்ளதல்லவென்று சொன்னால் ஜ்ஞானத்தால் நிவர்த்திக்கத்தகாமை ப்ரஸங்கிக்குமென்று அர்த்தம். இதற்குமேல் ப்ரஹ்மத்தைப் பக்ஷமாகச் செய்துகொண்டு மூன்று ப்ரதிகூல தர்க்கங்கள் உரைக்கப்படுகின்றன—ப்ரஹ்ம இதி முதலியதால். அஜ்ஞானத்திற்கு ஆச்ரயமென்று சொன்னால் ப்ரஹ்மத்திற்கு ஜ்ஞாத்ருத்வம் ப்ரஸங்கிக்குமென்று பொருள். இரண்டாவது ப்ரயோகத்திலும் ப்ரஹ்மத்திற்கு அஜ்ஞாநாவரணத்வம் சொல்லின் ஜ்ஞேயத்வம் ப்ரஸங்கிக்குமென்று பொருள். மூன்றாவதிலும் ப்ரஹ்மமானது ஜ்ஞாநத்தினால் நிவர்த்திக்கத்தக்க அஜ்ஞாநமென்று சொல்லப்படுமேயாகில் ஜ்ஞேயத்வம் ப்ரஸங்கிக்குமென்று அர்த்தம். அதற்குமேல் ப்ரமாணஜ்ஞானத்தை பக்ஷமாக்கி ப்ராகபாவவ்யதிரிக்தத்வத்திற்கு ப்ரதிதர்க்கத்தைச் சொல்லுகிறார்— விவாதாத்யாஸிதம் என்று. ப்ரமாணஜ்ஞானம் பக்ஷமென்று சொல்லும்பக்ஷத்தில் ப்ராகபாவத்தைக்காட்டிலும் வேறாக இருக்கிற அஜ்ஞானத்தை முன்னிட்டுக் கொண்டிருத்தலின் அபாவம் ப்ரஸங்கிக்குமென்று அர்த்தம். அன்றிகே இது அனுமானமே, தாராவாஹிக ஜ்ஞானங்களில் முதலில் உண்டாயிருக்கிற ஜ்ஞானத்திற்கு பக்ஷத்வமும் மேல்மேல் வருகிற ஜ்ஞானங்களுக்கு ஸபக்ஷத்வமுமல்லவோ பொருத்தமுள்ளதாக ஆகிறது. ஜ்ஞானம் நவஸ்துநோ விநாசகம் இதுமுதலியதால். வ்யதிரேகி அனுமானம் கூறப்பட்டது. வ்யதிரேக வ்யாப்தியை இரண்டுவிதமாகக் காட்டுகிறார்— யத்வஸ்துந: என்று. 'சக்திவிசேஷோப ப்ரும்ஹண விரஹேஸதி ஜ்ஞாநத்வாத' என்று விசிஷ்டமன்றோ ஹேது. அதில் சக்திவிசேஷத்தினால் வ்ருத்திபண்ணப்பட்டிராத ஜ்ஞாநத்தைக் காட்டிலும் வேறுபட்டிருத்தல் என்னும் தன்மையானது விசேஷமின்றி இருப்பதால் சக்திவிசேஷத்தால் உபப்ரும்ஹிதமான ஜ்ஞானம் சக்தி விசேஷத்தால் உபப்ரும்ஹணம் செய்யப்பட்டிராத அஜ்ஞானம் இவ்விரண்டும் வ்யதிரேக வ்யாப்திக்கு பூமி என்று இரண்

டத்திலும் வ்யாப்தி காண்பிக்கப்பட்டது. பாவரூபமான அஜ்ஞானத்தை பக்ஷமாக வைத்துக்கொண்டு கூறுகிறார்—பாவரூபம் வன்று. அஜ்ஞானமானது பாவரூபமென்று சொல்லப்பட்டால் ஜ்ஞானமாத்ரத்தால் நிவர்த்திக்கத்தக்க தன்மை அதற்கு உண்டாகாதென்று கருத்து. பாவரூபத்வம ஜ்ஞாந நிவர்த்யத்வம் இவ்விரண்டுகளுக்கும் வ்யாப்தி இல்லை. பாவரூபமான பயம் முதலியவற்றுக்கு ஜ்ஞான நிவர்த்யத்வம் காணப்படுவதால் என்று வ்யாப்தி பங்கத்தை ஆசங்கிக்கிறார்— அதோச்யேத என்று. பூர்வ ஜ்ஞாநோத்பந்நாநாம்-முந்தினதான ப்ராந்தி ஜ்ஞாநத்தினால் உண்டாயிருக்கிற என்று அர்த்தம். பாதகஜ்ஞானத்தின் உதயத்தாலும முந்தின பயம தொடர்ந்து அனுவர்த்திப்பதாலும் அதின் உத்பத்திக்குப் பிறகு பயம் முதலியவைகள் நிவர்திப்பதாலு மென்று கருத்து. பரிஹரிக்கிறார்— நைவம் என்று. தனக்கு ஆச்ரயமாக இருக்கிற வஸ்துவின் விநாசாதீனமான விநாசமுள்ள நச்வரங்களைவிட வேறாக இருக்கிற க்ஷணிகங்கள் பலத்தால் விநாச்யங்களன்றோ. சொல்லப்பட்டுள்ள விசேஷணத்தால் ஜ்வாலைக்கு வ்யாவ்ருத்தி ஏற்படுகிறது. அப்படியே பயம் முதலியதும் நடுக்கம் முதலிய கார்யத்தை உண்டுபண்ணிவிட்டு தான் அழிகிறது என்று அர்த்தம். பயம் முதலியதற்கு க்ஷணிகத்வமில்லை. நெடுங்காலம் உபலப்தி இருப்பதாலென்று சொல்லப்படுமேயானால், அல்ல—காரணபூதமான ப்ராந்திஜ்ஞானம் முதலியதின் அனுவ்ருத்தியினால் பயம் முதலியதின் ஸந்ததியின் உத்பத்தியினாலன்றோ நெடுங்காலம் உபலப்தி உண்டாகிறது. அங்ஙனமாகில் எப்பொழுதும் பயஸந்ததியானது உபலப்திக்கு விஷயமாக ஆகவேண்டியதாகுமே என்று கேழ்க்கப்பட்டால் இந்தவிஷயத்தில் சொல்லுகிறார்—காரணநிவ்ருத்யாசபுஞ்சாதநுத்பத்தே: என்று. காரணபூதமான ப்ராந்திஜ்ஞானம் முதலியதின் நிவ்ருத்தியினால் கார்யபூதமான பயம் முதலியவற்றின் ஸந்ததியானது உண்டாகாததால் எப்பொழுதும் உபலப்தி இல்லை என்று அர்த்தம். 'புஞ்சாதநுத்பத்தே:' என்கிற பஞ்சமிக்கு முந்தி இருக்கிற 'க்ஷணிகத்வேந' என்கிற பதத்தோடு அந்வயம். காரண நிவ்ருத்தியினாலும் பிறகு உத்பத்தி இல்லாமையால் ஸித்தமான க்ஷணிக ஸ்வபாவத்தால் தானே அழிவதாலென்று அர்த்தம். அன்றிக்கே க்ஷணிகத்வமில்லை என்கிற சங்கைவரின் க்ஷணிகத்வம் உபபன்னமென்று அர்த்தவசத்தால் இழுக்கப்பட்டிருக்கிற வாக்கியத்தோடு அன்வயம். இவ்வண்ணமாக க்ஷணிகத்வத்தை ஒட்டிவந்த வினவுக்கு பரிஹாரம் செய்யப்பட்டது. அன்றிக்கே இவ்வாறு அல்லவென்று தூஷணப்ரதிஜ்ஞையை உபபாதனம் செய்வதற்காக பாதமேற்படும் வரையில் பயஸ்வரூபத்தின் தொடர்ச்சி இருப்பதால் அஸித்தியைக் கூறுகிறார்— க்ஷணிகத்வேநஎனறு. பாதக ஜ்ஞானத்திற்கு அடுத்தக்ஷணத்தில் நிவ்ருத்திவருவதால் அந்யதாஸித்தியைச் சொல்லுகிறார்—காரண நிவ்ருத்யாச என்று. அந்த க்ஷணிகத்வம் எதனால் ஸித்தித்ததென்கிற சங்கைவரின் அதை உபபாதிக்கிறார்—க்ஷணிகத்வஞ்ச என்று. ஸ்தாயிகளான கடம்முதலியவைகளன்றோ தண்டம் சக்கிரம் முதலிய காரணங்களின் நிவ்ருத்தியிலுங்கூட உபலப்தி விஷயங்களாக ஆகின்றன. ஜ்ஞானம் தீபஜ்வாலை முதலியது அவ்வாறாக அறிவுக்கு விஷயமாகிறதில்லை. அவ்வாறாகவே பயம் முதலியது காரணங்களின் ஸன்னிதானத்தையும் அவைகளின் நிவ்ருத்தியையும் அனுஸரித்து வருகிற ஸத்பாவாஸத்பாவங்களுள்ளதாக இருப்பதாக க்ஷணிகத்வம் நிச்சயிக்கப் பட்டிருக்கிறதென்று அர்த்தம். விபக்ஷத்தில் பாதத்தைக்கூறுகிறார்— அக்ஷணிகத்வேச என்று. ஸ்திரமான கடம் முதலியவைகளன்றோ ஒவ்வொரு க்ஷணந்தோறும் உண்டாகின்றவைகளாகவும், அநேகங்களாகவும் ஒரே ஸமயத்தில் அறியப்படுகின்றன. அவ்வண்ணம் இங்கும் ப்ரஸங்கிக்கும் என்று கருத்து. ஆதலால் பயம் முதலியது ஜ்ஞானத்தினால் நிவர்த்திக்கத்தக்கதல்ல. க்ஷணிகமாக இருப்பதால் தானாகவே நசித்

துவிடுகிறது. ப்ராக்திஜ்ஞான பரம்பரா ரூபமான காரணத்தின் நிவ்ருத்தியினால் பயஸந்ததியின் நாசமுண்டாகிறது. தோஷத்தின் நிவ்ருத்தியினால் அதன் நிவ்ருத்தி ஸம்பவிக்கிறது. இது ஸர்ப்பமல்ல, இது கயிர் என்கிற ஜ்ஞானமானது தன்னை விஷயமாகக்கொண்டிருக்கிற வ்யவஹாரத்திற்கு ஹேதுவே ஒழிய நேராக பயம் முதலியவற்றின் நிவ்ருத்திக்கு ஹேதுவல்ல. ரஜ்ஜுத்வமன்றோ ஸர்ப்பவ்யாவ்ருத்தி. ஆகையால் ஸர்ப்பவ்யாவ்ருத்திரூப ரஜ்ஜுத்வஜ்ஞானத்தினது இன்மையினால் ஸர்ப்பபுத்தியின் தொடர்ச்சி இருப்பதுபற்றி பிற்காலத்தில் பயத்தின் தொடர்ச்சி ஸர்ப்பவ்யாவ்ருத்திரூபமான ரஜ்ஜுத்வ ஜ்ஞானத்தினால் பரமார்த்த ஸர்ப்பாபிமான நிவ்ருத்தியினால் பயநிவ்ருத்தி என்று எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிற ரீதியினால் தூஷணம் கூறப்பட்டது. தன்பக்ஷத்திலோவென்றால் ஜ்ஞானவிசேஷமாகவே இருக்கிற பயம் முதலியது க்ஷணிகமாக இருத்தலால் தானாக நசிக்கிறது. பயாதிரூபமான ஜ்ஞானத்தின் அனுவ்ருத்தியோவென்றால் தோஷத்தினால் உண்டான ஸர்ப்பாதி ப்ரமத்தின் தொடர்ச்சியை மூலமாகக்கொண்டது. அந்த ப்ரம நிவ்ருத்தியினாலும் அந்த பயஸந்ததியின் நிவ்ருத்தி என்று பரிஹாரம். இவ்வண்ணம் அர்த்ததூஷணமானது கூறப்பட்டது. அதற்குமேல் ப்ரயோக தூஷணத்தைக் கூறுகிறார்— ஸ்வப்ராகபாவ என்று, ஸ்வ என்கிற சப்தமும், ப்ராக் சப்தமும், பாவவ்யதிரிக்த சப்தமும், அர்தாசப்தமும் ப்ரயோஜனமற்றவைகள். வஸ்து சப்தம் பாவவாசியன்றோ. அனுமானத்தால் பாவரூபமான அஜ்ஞானத்தின் அஸித்தியை நிகமனம் செய்கிறார்—அத: என்று

[illegible]

स्यादन्यथाऽनवस्थानविरोधे हि प्रतीतिविरोधप्रतीतिबाधयोः सावकाशत्वेन तत्त्वस्याविरोधाय च वाच्यम्, शुक्त्यादिरेव रजताद्याकारेण भासत इति भवताऽभ्युपगन्तव्यम् ॥

ஸ்ரீபாஷ்யம்—

ச்ருதியினாலும். சுருக்யர்த்தாபத்தியினாலும் அஜ்ஞானத்தின் அஸித்தி யானது அடுத்தே சொல்லப்படப்போகிறது. மித்த்யையாக இருக்கிறவஸ்து வுக்கு மித்த்யையான வஸ்துவே உபாதானமாக ஆவதற்குத் தகுதியுள்ளதாக இருக்கிறது என்கிற இந்த விஷயமும் 'ந விலக்ஷணத்வாத்' என்கிற அதி கரண ந்யாயத்தால் பரிஹரிக்கப்படுகிறது. ஆகையால் அநிர்வசநீயமான அஜ்ஞானத்தை விஷயமாகவுடைய ஒரு ப்ரதீதியும் இல்லை. ப்ரதீதி ப்ராந்தி பாதங்களாலுங்கூட அப்படி ஒப்புக்கொள்ளத்தக்கதல்ல, அறியப்படுகிறவ ஸ்துவேயன்றோ ப்ரதீதி ப்ராந்தி பாதங்களுக்கு விஷயம். இந்த ப்ரதீதிக ளாலும் வேறுப்ரதீதியினாலும் எது அறியப்பட்டதன்றோ அது இந்தப்ரதீதி களுக்கு விஷயமென்று கல்பிப்பது யுக்தமன்று. சுக்தி முதலியவைகளில் ரஜ தம் முதலியவற்றின் ப்ரதீதி வருவதால், ப்ரதீதிகாலத்திலுங்கூட அது இல்லை என்கிற பாதத்தாலும் வேறு வஸ்துவுக்கு வேறு வஸ்துவாகத்தோற்றம் பொ ருந்தாததாலும் ஸத் என்றாவது அஸத் என்றாவது நிர்வசனஞ் செய்யத்தகா ததான அபூர்வமாகவே இருக்கிற இந்த ரஜதமானது தோஷவசத்தால் அறிய ப்படுகிறதென்று கல்பிக்கத்தக்கதென்று சொல்லப்படுமேயானால், அல்ல. அந்த கல்பனையினாலுங்கூட வேறு வஸ்துவுக்கு வேறுவிதமாகத் தோற்றம் விடத்தகாததாக இருப்பதால் வேறுவிதமாக பானத்தை ஒப்புக்கொண்டதினா லேயே க்யாதி, ப்ரவ்ருத்தி, பாதம், ப்ரமம், இவைகள் உபபன்னங்களாவ தால் ஒருக்காலும் காணப்பட்டிராததும் காரணமில்லாததுமான வஸ்துவின் கல்பனை பொருத்தமுள்ளதாக ஆகாது. கல்பிக்கப்படாநின்றபோதிலுங்கூட இந்த அநிர்வசனீயம், அநிர்வசநீயமென்று அறியப்படுகிறதில்லையன்றோ. பின்னையோ பாமார்த்த ரஜதமென்றே அறியப்படுகிறது. அநிர்வசநீயம் என்றே அறியப்படுமேயானால் ப்ராந்திபாதம் இவ்விரண்டின் ப்ரவ்ருத்தி க்குங்கூட ஸம்பவமிராது. ஆகையால் வேறு வஸ்துவுக்கு வேறுவிதமாக பானமில்லாவிடில் ப்ரதீதி, ப்ரவ்ருத்தி, பாதம், ப்ரமம் இவைகளுக்கு உப பத்தி இல்லாததாலும் அது பரிஹரிக்கத்தக்கதாக இராததாலும் சுக்தி முத லிய வஸ்துக்களே ரஜதம் முதலிய வஸ்துக்களின் உருவத்தால் விளங்கு கிறதென்று உன்னால் ஒப்புக்கொள்ளத்தக்கது.*

ச்ருதப்ரகாசிகை—

ச்ருதியிருைம் அர்த்தாபத்தியிருைம அதன் ஸக்தியை ஆசங்கித்துச் சூடுகிருர்—ச்ருதி என்று அநிர்வசனீயமென்கிற விஷயத்தில் அந்நியால் சொல்லப்பட்டிருக்கிற ஹேதுவை விஸ்தாரமாக தூஷிக்கிருர்—ப்ரதீதி என்று. ப்ரதீதியென்பது—ப்ராந்தி அப்ராந்தி இவ்விரண்டுக்கும பொதுவான ரூபத்துடன் கூடியது. ப்ரதீதியாவது—இருக்கிற பேதத்தை உள்ளபடி அறியாமையை முன்னிட்டுக்கொண்டிருக்கிற பொதுவான ஆகாரத்தை மாத்திரம் காட்டுவதால் உண்டானதும் தனக்கு விஷயமாக இருக்கிற வஸ்துவின் அந்யதாபாவத்தால் விசேஷிக்கப்பட்டதும் ப்ரவ்ருத்தி முதலியவற்றுக்கு ஹேதுவாயுமிருக்கிற ஸ்வபாவத்துடன் கூடியது. பாதமாவது—ஆரோபிக்கப்பட்டிருக்கிற வஸ்துஸ்வபாவத்திற்கு விருத்தமான அதிஷ்டானகாரத்தை அவகாஹிக்கிறபுத்தி. அப்படி ஒப்புக்கொள்ளத்தக்கதல்ல—அநிர்வசநீயமென்று ஒப்புக்கொள்ளத்தக்கதல்லவென்று அர்த்தம். ப்ரதீதி ப்ராந்தி பாதங்களுக்கு அநிர்வசநீய ஸித்தியானது ஸ்வவிஷயோல்லேக மாத்திரத்தினலேயா அந்யதாநுபபத்தியினலேயா வென்கிற விகல்பத்தை எண்ணி முதல் பக்ஷத்தை தூஷிக்கிருர்—ப்ரதீயமாநம் என்று. ப்ரதீயமானம்—ப்ரதீதியினல் உல்லேகிக்கப்படுகின்ற. நிஷேதால்லேகமானது ப்ரதேசால்லேகமாக அங்கீகரிக்கத்தக்கதல்லவன்ருே. அவ்வாருக அங்கீகரிக்கப்பட்டால் எல்லாவற்றுக்கும் உபப்லவம் ப்ரஸங்கிப்பதாலென்று கருத்து. இரண்டாவதை தூஷிக்கிருர்—ஆபி: என்று. ஆபி: - ப்ரதீதிப்ராந்தி பாதசப்தங்களால் எடுக்கப்பட்டிருக்கிற ப்ரத்யக்ஷப்ரதீதிகளால். ப்ரதீத்யந்தரேண-ப்ரமாணுந்தரத்தினல் உண்டான. அன்றிக்கே ஆபி: -லௌகிகப்ரதீதிகளால். ப்ரதீத்யந்தரேண - ஆகமத்தினலுண்டான அன்றிக்கே. ஆபி: ப்ரதீதிபி:- ரஜ்ஜுரூபமான ஒரு அதிஷ்டானத்தில் ப்ரதீயமானமாக இருக்கிற ஸர்ப்பம்- பூமியின் பிளவு ஜலதாரை முதலிய வஸ்துக்களிலுள்ள பஹுத்வத்தைக் கருதி ப்ரதீதியில் பஹுவசனம். ப்ரதீத்யந்தரேண - பாதஜ்ஞானத்தால் சுருக்கமாகச்சொல்லப்பட்டதூஷணத்தை விரிவாகச்சொல்வதற்காக அந்யனுடைய மதத்தை அனுவதிக்கிருர்—சுக்த்யாதிஷு என்று. அந்யஸ்ய அந்யதாபாநாயோகாச்ச என்று. அய்யனே! வேறுவிதமாக பானம் பொருந்தாதென்பது எவ்வண்ணம்? கூறப்படுகிறது. தர்மதர்மிகள் இரண்டுக்கும் ஒன்ருேடொன்று தாதாத்ம்ய பானம் அந்யதாக்யாநமல்ல. முன்னிலையிலிருக்கிற வெண்ணிற முள்ளதும் பளபளப்புள்ளதுமான ஒரு வஸ்துவின் துண்டானது ரஜதத்வஜாதியாக அறியப்படுகிறதில்லை ரஜதத்வமும் பளபளப்புள்ள ஒரு துணுக்காக அறியப்படுகிறதில்லை. சகலம் சகலமாகவும் ஜாதி ஜாதியாகவுமறியப்படுகிறது. ஆகையால் இவ்விரண்டினுள் ஒன்றுக்கு மற்ருென்றுவஸ்துவாக பானமில்லை. வேறு தர்மிக்கு வேறு தர்மியோடு * தாதாத்ம்யமும் அன்யதாத்வமன்று. அது விஷயத்தை நாடி இருக்கிறதா? அல்லது ஜ்ஞானத்தை நாடி இருக்கிறதா? விஷயத்தில் அந்த அந்யதாத்வமிருக்குமே யாகில் ப்ரதீதியானது யதார்த்தமே. இல்லையென்று சொல்வாயேயாகில் அஸத்க்யாதி ப்ரஸங்கிக்கும். ஜ்ஞானத்தையே அடைந்திருக்கிறதேயாகில், விஷயம் வேறு ஜ்ஞானம் வேறு என்பது பொருந்துகிறதில்லை. கடவிஷயகமான ஜ்ஞானத்திற்கு படவிஷயகமான ஜ்ஞானத்வம் ஸம்பவியாதன்ருே. ஆத்மக்யாதி ப்ரஸக்தமும், ரஜதம் முதலியது ஜ்ஞானாகாரமாக இருப்பதால். தன்னிடத்திலில்லாமலிருக்கிற ஆகாரத்தால் ப்ரகாசம் க்யானம் அன்

---

* தாதாத்ம்யம்—ஐக்யம்.

யதாக்யானமென்று சொல்லப்படுமேயாகில்—அல்ல. அஸத்க்யாதி ப்ரஸங்கிப்பதால். வேறு இடத்தில் இருப்பதற்கு வேறுஇடத்தில் க்யானம் தான் க்யானத்திற்கு அன்யதாத்வம் என்று சொல்லப்படுமேயாகில் அல்ல—ஒரு கொம்புமுறிந்த பசுவினிடம் காணப்பட்டிருக்கிற அவயவஸம்ஸ்தான ரூபமான கோத்வத்திற்கு இரண்டுகொம்பும் முறிந்திருக்கிற பசுவினிடம் காண்குகலும் ப்ரமமாக வேண்டிவருவதால். வேறுஇடத்திலேயே இருக்கிற வஸ்துவுக்கு வேறு இடத்தில் க்யானம் பாநம் அந்யதாதவம் என்று சொல்லப்படுமேயாகில் வேறு இடத்திலேயே இருப்பு எவ்வாறு நிச்சயிக்கப்படுகிறது. இங்கு பாதத்தினால் என்று. கூறப்படுமேயாகில், அல்ல—ப்ராந்தி ஜ்ஞானத்தினால் பாதிக்கப்பட்டிருக்கிற ஸத்ய ரஜதத்திற்குங்கூட இந்த இடத்தில் அஸத்வ நிச்சயம் ப்ரஸங்கிப்பதால். ப்ரவ்ருத்தி பாதத்தால் வேறு இடத்திலேயே ஸத்வ நிச்சயமென்று சொல்லப்படுமேயாகில் அல்ல. மந்திரம் ஔஷதம் முதலிய வஸ்துக்களால் தடைபட்டிருக்கிற சக்தியுள்ள அக்னிக்கும் ஔஷ்ண்யத்தினால் கொப்பளத்தை உண்டுபண்ணுதல் முதலியவற்றில் சக்தி இல்லாமையால் மித்யாதவ நிச்சயம் ப்ரஸங்கிப்பதால். துஷ்டகாரண ஜந்யமான ஜ்ஞானதிற்கு விஷயமாக இருப்பதால் இங்கே பாதிக்கப்படுகிறதென்று சொல்லப்படுமேயாகில், எவ்வாறு துஷ்டகாரண ஜந்யத்வ நிச்சயமுண்டாயிற்று, பாதகமான ஜ்ஞானத்தினது உதயத்தினாலென்று சொல்லப்படுமேயாகில் முந்தினஜ்ஞானமே பாதகமாக ஆகலாம். பிந்தி இருத்தலென்கிற தன்மைக்கு ஒன்றும் செய்யத்திறமை இல்லாமையானது காட்டப்பட்டிருக்கிறதன்றோ. முந்தின ஜ்ஞானம் துஷ்டகாரணத்தினாலுண்டானதென்று நிச்சயிக்கப்பட்டால் பிந்திஉண்டாகிற ஜ்ஞானத்திற்கு பாதகத்வநிச்சயம் வரும். அதற்கு பாதகத்வம் நிச்சயிக்கப்பட்டால் முந்தின ஜ்ஞானதிற்கு துஷ்டகாரணத்தினாலுண்டாயிருத்தல் நிச்சயிக்கப்படுகிறதென்பதனால் அந்யோந்யாச்ரயமும் உண்டாகும் மேலும் முன்னிலையிலிருக்கிற சுக்தியில் எந்த ரஜதம் பாஸித்ததோ அதேரஜதம் வேறிடத்திலிருக்கிறதென்பதில் என்னப்ரமாணம். முந்தின ஜ்ஞானம் ப்ரமாணமல்ல. இந்த இடத்திலிருப்பதாகவன்றோ அதை அறிவிக்கிறது. பாதகஜ்ஞானமும் ப்ரமாணமன்று. அந்த பாதக ஜ்ஞானமோவென்றால் முன்னிலையிலிருக்கும் வஸ்துவின்கண் அதின் அஸத்வத்தை அறிவிக்கிறது. ரஜதக்ராஹக ப்ரமாணமும் இதில் ப்ரமாணமல்ல. அது கடையில் ரஜதஸத்தையையன்றோ அறியும்படி செய்விக்கிறது. கடையிலிருக்கிற அந்த ரஜதத்திற்கும் முன்னிலையில் பாஸித்திருக்கிற ரஜதத்திற்கும் ஐக்யமில்லையன்றோ. ஓரிடத்திலுமில்லாத வஸ்துவுக்குத்தோற்றமென்பது பொருந்தாதலால். வேறு இடத்தில் இருப்புள்ளவஸ்துவுக்கே பானம் தோற்றம் நிச்சயிக்கப்படுகிறதென்று கூறப்படுமேயாகில், அல்ல--இல்லாத வஸ்துவுக்கு க்யானம் கூடாதென்பது ஸம்பந்தத்தில் இழக்கப்பட்டிருப்பதால். முன்னிலையிலிருக்கிற வஸ்துவில் அறியப்படாநின்ற ரஜதரூபமான $ தர்மிஸம்பந்தமோ ரஜதத்வரூபஜாதி ஸம்பந்தமோ வேறு இடத்திலில்லை யன்றோ. அய்யா! வேறு இடத்தில் ஸம்பந்தமாத்ரமிருக்கிறது, அது இங்கே பிரகாசிக்கிறதாதலால் வேறு இடத்திலுள்ளதற்கே வேறுஇடத்தில் க்யானமென்று சொல்லப்படுமேயாகில் அல்ல-இரண்டு ஸம்பந்தங்களுக்கு அவபாஸமில்லாமையால். வேறு இடத்தில் இருக்கிற ஸம்பந்தத்துக்கு வேறு இடத்தில் க்யானமென்று சொல்லின் ஸம்பந்திக்குப்போல ஸம்பந்தத்திற்கும் வேறு ஸம்பந்தம் அபேக்ஷிக்கப்படும். வேறு ஸம்பந்தம் அவபாஸிக்கிறதென்று சொல்லும் பக்ஷத்தில் வேறு இடத்திலிருப்பதற்கு க்யானம் உண்டாகாது. இரண்டாவது ஸம்பந்தமானது ஓரிடத்திலுமில்லாததால். ஸம்பந்தம் வேறுஸம்பந்தத்தை

$ தர்மி—தர்மங்களுடன் கூடிய வஸ்து.

அபேக்ஷியாமல் வேறு ஸம்பந்தமில்லாமல் "போனபோதிலுங்கூட முன்னிலையிலிருக்கும் வஸ்துவில் பானமானது யுக்தமென்று சொல்லப்படுமேயானால்; இங்ஙனமாகில், வேறு ஸம்பந்தியின் ஸம்பந்தமும் முன்னிலையிலுள்ள வஸ்துவும் இடைவெளி இன்றி தொடர்ச்சியாக ப்ரகாசிக்கிறதாதலால் யதார்த்த க்யாதியே சொல்லப்பட்டதாக ஆகும். க்யாதிக்கு விஷயமாக இருக்கிற அமசமிருப்பதாலும் அஸத்தான ஒன்றுக்காவது க்யாதி விஷயத்வமில்லாமையாலும். மேலும் சிப்பித்துண்டுக்கே ரஜதஜ்ஞானவிஷயத்வம். ரஜதோபாயத்தைக்காட்டிலும் வேறாக இருக்கையில் ரஜதார்த்தமான ப்ரவ்ருத்திக்கு விஷயமாக இருத்தலால் என்று ஸாதிப்பதும் யுக்தமாகாது. இது நிரூபிக்கப்படுறது— இதம்சப்தத்தால் சொல்லப்படுகிற வஸ்துவுக்கு ரஜதத்வஜாதி விசிஷ்டதாஜ்ஞானவிஷயத்வமன்றோ ஸாத்யம். அது பாதிக்கப்பட்டிராத ப்ரவ்ருத்திக்கு விஷயமாக இருததல் என்பதனால் உண்டுபண்ணப்பட்டிருக்கிற தென்கிற காரணத்தினால் ஹேது உபாதியுடன்கூடியதாக ஆகிறது. சுக்தியானது ரஜதமாக ப்ரகாசிக்கிறதில்லை. சுக்தியாக இருப்பதால். ஸம்ப்ரதிபன்னம்போல், என்றும் பாதம் இதுமுதலிய தூஷணாபிப்ராயத்தால் வேறுவஸ்துவுக்கு வேறுவிதமாக பானம பொருந்தாததலாலுமென்று கூறப்பட்டது. தூஷிக்கிறார்—ந என்று. முன்னிலையிலிருக்கிற வஸ்துவுக்குவேறு இடத்திலேயே இருக்கிற ஆகாரத்தோடு கூடியதாக ஜ்ஞானம் அன்யதாபானம். ப்ரதிபன்னாகாரத்திற்கு முன்னிலையிலிருக்கிற பதார்த்தத்தில் அபாவ நிச்சயமும் ப்ரவ்ருத்திபாதத்திற்குத் துணையாக இருக்கிற இல்லை எனகிற ப்ரத்யயத்தால் மந்த்ரத்தினாலும் ஔஷதிகளாலும் தடைபட்டிருக்கிற ஔஷ்ண்யசக்தியுடன் கூடின அக்னிக்கு அக்னித்தன்மை இல்லை என்கிற ஜ்ஞானம் உண்டாகாதென்பது ப்ரஸித்தமன்றோ. அதைகல்பித்தாலுங்கூட வேறுவிதமாக பாஸிப்பது எவ்வாறு விலக்கத்தகாதது என்கிற அபேக்ஷைவரின் சொல்லுகிறார்— கல்ப்யமாநம் ஹி என்று. அநிர்வசநீய மென்றே ப்ரதீதிவருகிற தென்று ஒப்புக்கொண்டால் ப்ரதீதிக்குப்ரமரூபத்வமும் பாதமும் ஏற்படுவதுடன் ப்ரவ்ருத்தியும் உண்டாகாமல்போகும் அநிர்வசநீயமான வஸ்துவானது நிர்வசநீயமென்று அறியப்படுமேயானால் வேறு வஸ்துவுக்கு வேறுவிதமாகத் தோற்றமானது விலக்கத்தகாததாக ஆகுமென்று பொருள்—தஸ்யாபரிஹார்யத்வாச்ச என்று. தஸ்ய அந்யதாபாநத்திற்கு. இது அபிப்ராயம—வேறு வஸ்துவுக்கு வேறு விதமாக பாநம் கிடையாது. இருக்கிற வஸ்துவுக்கே ப்ரதீதி வருவதால். அலௌகிகமானஸத்தென்றும் லௌகிகமான ஸத்தென்றும் ஸத்தானது இரண்டுவிதம். அநிர்வசநீயத்திலும் அலௌகிகமான ஸத்வமிருக்கிறது. இந்த இடத்தில் அந்த அலௌகிக ஸத்தான ரஜதம் ப்ரதீதி விஷயமாகிற தென்று சொல்லப்படுமேயானால அலௌகிக ஸத்தானது அலௌகிக ஸத்தாகவே அறியப்படுகிறதா? அல்லது லௌகிக ஸத்தாக அறியப்படுகிறதா? முதல் பக்ஷத்தில் ப்ரமத்வம் பாதம் ப்ரவ்ருத்தியின் அஸம்பவம் இவைகள் ஸம்பவிக்கின்றன- அலௌகிக ஸத்தானது லௌகிக ஸத்தென்று அறியப்படுமேயானால் வேறு வஸ்துவுக்கு வேறுவிதமாகத் தோற்றமேற்படும். அலௌகிக ஸத்துக்கு லௌகிகஸத்தோடு பேதம் க்ரஹிக்கப்படாததால் ப்ரவ்ருத்தி முதலியவைகளுக்கு ஸம்பவமென்று மறுமொழி உரைக்கப்படுமேயானால் அப்பொழுது அந்த இடத்தில் அநிர்வசநீயமான வஸ்துவை கல்பித்து அதில் பேதக்ரஹணமில்லாமையால் ப்ரவ்ருத்திபாதம் ப்ரமம் இவைகளை உபபாதிப்பதைவிட முதலிலேயே ஸம்ப்ரதிபன்ன ரஜதத்தைக் காட்டிலும் சுக்தித்வ ரூபபேதக்ரஹணமில்லாமையால் ப்ரவ்ருத்தி பாதம் ப்ரமம் இவைகளை உபபாதிப்பதில் கல்பநாலாகவத்தால் அநிர்வசநீயமான வஸ்துவானது உபபன்னமாகாது. இது முதலிய பதங்களுடன் கூடிய பதக பரம்பரையை அபிப்ராயப்பட்டு அது அபரிஹார்யமாக இருப்பதாலுமென்று சொல்லப்பட்டது

ख्यात्यन्तरवादिना दूरं गत्वाप्यन्यथाख्यातिरेव
ऽवश्यमाश्रयणीयः — असत्ख्यातिपक्षे सदात्मना; आत्मख्यातिपक्षे
ऽर्थात्मना; अख्यातिपक्षेऽपि अन्यविशेषणस्यान्यविशेषण-
त्वेन ज्ञानद्वयस्यैकत्वेन च — विषयासद्भावपक्षेऽपि विद्यमान-
त्वेन ॥

किञ्च — अनिर्वचनीयस्यापि रजतस्य जातमिति वदता तस्य
जन्मकारणं वक्तव्यम्; न तावत् तद्बुद्धिः; तस्यास्तद्विषयत्वेन
तदुत्पत्तेः प्रागभावादयोगात् । निर्दुष्टा जाता तदुत्पा-
द्य तदेव विषयीकरोतीति [illegible] । [illegible]
[illegible] दोषाः, तत्र — तस्य [illegible]
कार्यस्य [illegible] योगात् । नापीन्द्रियाणि, तेषां ज्ञान-
कारणत्वात् । नापि दोषेन्द्रियाणि, तेषामपि स्वकार्य-
भूते ज्ञाने एव शक्तिविशेषकरत्वात् । अनादिमिथ्याज्ञानेनापि
ज्ञानत्वं पूर्वमेव निरस्तम् ॥

किञ्च — अनिर्वचनीयत्वं [illegible] रजतादिवद्
विशेषणाश्रयमपि विषयीकुर्यात्, न [illegible] विशेषणाश्रयम् ।
रजतादिसादृश्यादिति चेत्; [illegible]
[illegible] । रजताद्याकारेति चेत्; सा किं परमा-
र्थविषया अपरमार्थविषया वा; न तावत् परमार्थविषया,
तस्या अपरमार्थत्वाभ्युपगमात् । नाप्यपरमार्थविषया,
परमार्थत्वाभावप्रसङ्गात्; अपरमार्थे परमार्थविशेषणा-
[illegible] निरस्तमेतत् ॥

ஸ்ரீபாஷ்யம்—

யதார்த்தக்யாதியை விட்டு வேறு க்யாதியைச் சொல்லுகிறவர்களுக்கும் வெகுதூரம் சென்றும் அந்யதாக்யாதியானது அவச்யமாச்ரயிக்கத் தக்கது. அஸத் க்யாதி பக்ஷத்தில் அதாவது * மாத்யமிக பக்ஷத்தில் ஸத்ரூபத்தாலும். ஆத்மக்யாதி பக்ஷத்தில் அதாவது யோகாசாரபக்ஷத்தில் அர்த்த ஸ்வரூபத்தாலும் அக்யாதி பக்ஷத்திலும் அந்ய விசேஷணம் அந்யவிசேஷணமாக ப்ரதீதி விஷயமாவதாலும் இரண்டு ஜ்ஞானங்களும் ஒன்றாக

* மாத்யமிகன்—பௌத்தன்.

அறியப்படுவதாலும் விஷயாஸத்பாவ பக்ஷத்திலும் விஷயம் இருப்பதாக க்ரஹிக்கப்படுவதாலும் அன்யதாக்யாதி அவச்ய மாச்ரயிக்கத்தக்கது. மேலும் ‡ அநிர்வசநீயமான அபூர்வ ரஜதம் இங்கு உண்டாயிற்று என்று சொல்பவனால் அந்த அபூர்வ ரஜதத்தின் உத்பத்திக்கு காரணம் சொல்லத்தக்கது. அதற்கு அந்த ரஜதவிஷய ப்ரதீதியானது காரணமாகாது. அந்த ப்ரதீதியானது அந்த ரஜத விஷயகமாதலால். அந்த ரஜதோத்பத்திக்கு முந்தி ப்ரதீதிக்கு ஸ்வரூபலாப மில்லாததால். விஷயமில்லாததாகவே ப்ரதீதியானது பிறந்து அந்த ரஜதத்தை உண்டுபண்ணி அதையே விஷயீகரிக்கிறதென்கிற இந்த உபபாதனம் § மகான்களுடையது. அப்படிக்கின்றி இந்த்ரியம் முதலியவைகளை அடைந்திருக்கிற தோஷம் அந்த ரஜதத்திற்கு $ உத்பாதகமென்று உரைக்கப்படுமோ அதல்ல- அந்த தோஷம் புருஷனை ஆச்ரயித்திருப்பதால் அர்த்தத்தை அடைந்திருக்கிற கார்யத்தைக்குறித்து அதற்கு உத்பாதகத்வம் ஸம்பவியாதாதலால். இந்த்ரியங்களும் அந்த ரஜதத்திற்கு உத்பாதகங்களாகா. அவைகள் ஜ்ஞானகாரணங்களாக இருப்பதால். துஷ்டங்களான இந்த்ரியங்களும் அந்த ரஜதத்திற்கு உத்பாதகங்களல்ல. அந்த துஷ்டேந்த்ரியங்களுக்கும் தன்னுடைய கார்யமாக இருக்கிற ஜ்ஞானத்திலேயேயன்றோ விசேஷத்தை உண்டுபண்ணும் திறமை அநாதியானமித்யா ஜ்ஞானம் அதற்கு உபாதானகாரணமென்பது முந்தியே நிரஸனம் செய்யப்பட்டிருக்கிறது. மேலும் இதற்கு முன்னில்லாததும் அநிர்வசநீயமாகவுமிருக்கிற இந்த வஸ்துவானதுதோன்றி ரஜதம் முதலிய வஸ்துவிஷயகமான புத்தியினாலும் சப்தத்தாலும் எவ்வாறு விஷயீகரிக்கப்படுகிறது? கடம் முதலிய வஸ்துவிஷயகமான புத்தியினாலும் சப்தத்தாலும் ஏன் விஷயீகரிக்கப்படுகிறதில்லை. ரஜதம் முதலிய வஸ்துக்களின் ஒற்றுமை இருப்பதால் ரஜதபுத்தி சப்தங்களால் விஷயீகரிக்கப்படுகிறதென்று சொல்லப்படுமேயானால் அப்பொழுது ரஜதஸத்ருசமென்றே ப்ரதீதியும் சப்தமும் உண்டாகவேண்டும். ரஜதம் முதலிய ஜாதியின் ஸம்பந்தத்தாலென்று சொல்லப்பட்டால் அந்த ஜாதியானது பரமார்த்தமாக இருக்கிறதா? அல்லது அபரமார்த்தமா? அது பரமார்த்தமல்ல. அதற்கு அபரமார்த்தவஸ்து ஸம்பந்தம் பொருந்தாதாதலால். அபரமார்த்தமுமன்று; பரமார்த்த வஸ்துவோடு அன்வயம் கூடாததாலும் அப்ரமார்த்தத்தில் பரமார்த்தபுத்திசப்தம் இவ்விரண்டுகளுக்கும் நிர்வாஹகத்வம் கூடாததாலும். இவ்வாறாக அபரிபக்வமான குதர்க்கங்களின் நிரஸனத்தினால் யாது பயன். இவ்வளவோடு போரும்.

‡ அநிர்வசநீயம்—ஸத்தென்றாவது அஸத்தென்றாவது சொல்லத்தகாதது.

§ மஹதாம்—ஜ்ஞானமில்லாதவர்களுடைய இந்த பதமானது இங்கு விருத்தமான அர்த்தத்தை உணர்த்துகிறது. $ உத்பாதகம்—கார்யத்தை உண்டுபண்ணுகிற வஸ்து

ச்ருதப்ரகாசிகை—

யதார்த்தக்யாதி பக்ஷத்தைத்தவிர்த்த பக்ஷங்களில் அன்யதாக்யாதி பக்ஷம் ப்ரபலம் என்கிற அபிப்ராயத்தால் சொல்லுகிறார்— க்யாத்யந்தர என்று. ஸாம்ப்ரதிகத்வா - பதகபரம்பரையைச் சொல்லியுமென்று பொருள். அதை உபபாதிக்கிறார்— அஸத் என்று. இது * மாத்யமிகனுடைய பக்ஷம். அஸத்தென்றே ப்ரதீதி விஷயமாகிறதா? அல்லது ஸத்தென்று அறியப்படுகிறதா? அஸத்தென்று ப்ரதீதி விஷயமாகிறதென்று சொல்லப்படுமேயாகில், ப்ரமத்வம் பாதம் ப்ரவ்ருத்தி இவைகளுக்கு ஸம்பவமில்லை. ஸத் என்று ப்ரதீதி விஷயமாகிறதென்று சொல்லப்படுமேயாகில் வேறு வஸ்துவுக்கு வேறுவிதமாக பானமுண்டாகலாமென்று பொருள். ஆத்மா என்று. இது ¶ யோகாசாரனுடைய பக்ஷம். ஆத்மசப்தம் ஜ்ஞானத்தை உணர்த்துவதில் முக்கிய நோக்கமுள்ளது ஜ்ஞானமென்றே ப்ரதீதி விஷயமாகிறதா? அல்லது அர்த்தமென்று ப்ரதீதி விஷயமாகிறதா? முதல் பக்ஷத்தில் ப்ரவ்ருத்தி பாதம் ப்ரமத்வம் இவைகளுக்குஸம்பவமில்லை. இரண்டாவது பக்ஷத்தில் அன்யவஸ்துவுக்கு அன்யதாவாக பானமென்று அர்த்தம். அக்யாதிபக்ஷே என்று. 'இது ரஜதமென்பது' ஒரு ஜ்ஞானமா? அல்லது இரண்டு ஜ்ஞானமா? என்கிற விகல்பத்தை மனதில் கருதி ஏகஜ்ஞானம் என்கிற பக்ஷத்தில் $ ஜ்ஞேயத்தில் அக்யாத்யாதியை ப்ரஸஞ்ஜிக்கச் செய்கிறார்— அந்யவிசேஷணமன்ய விசேஷ்யத்வேந என்று. இது ரஜதம் என்று ஒன்றாக எல்லோராலும் விவாதமின்றி ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிற ஸத்ய ரஜதம்போல ஆரோபிக்கத்தக்கமித்யா ரஜத ஸ்தலத்தை அனுஸரித்து வருகிற ப்ரயோகானுகுணமான ஸாமாநாதிகரண்யத்தால் ப்ரஸித்தமாக இருப்பது பற்றி அன்ய விசேஷணம் அன்யவிசேஷணமாக ப்ரதீதி விஷயமாகிறதென்று ஆபாதனம் செய்யப்பட்டதே ஒழிய அந்த பக்ஷம் உபன்யஸிக்கப்படவில்லை. இரண்டு ஜ்ஞானங்கள் என்கிற பக்ஷத்தில ஜ்ஞானத்தில் அக்யாத்யாதியை ப்ரஸஞ்ஜனம் செய்கிறார்—ஜ்ஞாந என்று. ஜ்ஞானத்வயம் ஜ்ஞானத்வயமென்றே ப்ரதீதி விஷயமாகிறதா? அல்லது ஏகமென்று ப்ரதீதி விஷயமாகிறதா? வென்கிற விகல்பத்தில் முன்போல் தூஷணம்—விஷயாஸத்பாவ என்று. இல்லை என்று அறியப்படுகிறதா? அல்லது இருக்கிறதாக அறியப்படுகிறதா? முதல் பக்ஷத்தில் ப்ரவ்ருத்தி முதலியதற்கு அஸம்பவமேற்படுகிறது. இரண்டாவது பக்ஷத்தில் வேறு வஸ்துவுக்கு வேறுவிதமாக பானமென்று அர்த்தம். அதற்குமேல் காரணத்வத்தை உபபாதனம் செய்கிறார்—ஸந்தச என்று. தஸ்யா: - ப்ரத்யக்ஷப்ரதீதிக்கு. தத்விஷயத்வே- இருக்கிற விஷயத்தைக் காரணமாகக்கொண்டிருத்தலால். காரணமானது கார்யத்திற்கு; முந்தினக்ஷணத்தில் தவறாத இருப்புடன் கூடியதல்லவோ என்று கருத்து. மஹநீயமித்யுபபாதனம் என்று. அந்த வ்ருத்திஜ்ஞானத்திற்கு விஷயங்களால் விடுபட்டிருக்கிற நிலைமையை ஸ்வீகரித்தலால் காரணத்வத்தை ஒப்புக்கொள்ளில் அபஸித்தாந்தம் வந்து விழுவதால். நிர்விஷய க்யாதிவாதிகளுக்கு

* மாத்யமிகன்—புத்தனுடைய சிஷ்யர்களுக்குள் சிறப்புற்றவன். இவன் ஸர்வசூன்யவாதி.

¶ யோகாசாரன்—இவன் பௌத்த ஏகதேசி. வைபாஷிகனுலும் ஸௌத்ராந்திகனுலும் முறையே க்ஷணிக மென்றும் அநுமேயமென்றும் சொல்லப்பட்டிருக்கிற ப்ரபஞ்சத்தை மித்யை என்று சொல்பவன். $ ஜ்ஞேயம்—அறியத்தக்க வஸ்து.

ப்போல் அதன் ப்ரபாவத்தால் ப்ரக்ருதி முதலியவற்றின் ஸித்தி வரின் அநிர்வச நீய கல்பனை பயனற்றதாக ஆவதாலும், விஷயரூபமான காரணமில்லாமல் உத்பத்தி சொல்லப்பட்டிருப்பதாலும் சப்தங்களுக்கு ஒரு அர்த்தத்தை உணர்த்தி ஓய்ந்து மறு மடி மற்றொரு அர்த்தத்தை உணர்த்துவதற்காக வ்யாபாரம் சொல்லப்படுவதாலும் மிக வும் அநுபபன்னமென்று அர்த்தம். அதேந்த்ரியாதி என்று. ஆகிசப்தத்தால் விஷ யத்தை அடைந்திருக்கிற தோஷமோ புருஷனுடைய * அநவதானமோ க்ரஹிக்கப்ப டுகிறது. தஸ்ய புருஷாச்ரயத்வேத என்று. தூரத்திலிருத்தல் முதலிய தோஷ மானது விஷயங்களை அடைந்ததாக இருந்தபோதிலுங்கூட அந்த தோஷத்திற்கு புரு ஷனை நாடி இருத்தலும் ஸம்பவிப்பதால் இரண்டு இடங்களிலும் கார்யமானது உண்டு பண்ணத்தக்கது. விஷயமாத்திரத்தில் அல்ல. நியமமில்லாமையால். ஆகையால் புரு ஷனிடத்தில் போல் விஷயத்திலும் ஸம்பவிக்கிறதில்லையென்று கருத்து. அப்பனே! கண் புருஷனை ஆச்ரயித்திருந்தபோதிலும் வெளியில் ப்ரஸரித்து விஷயத்தில் ஸம்பந்தித்தி ருக்கிற கண்ணின் ஒளிக்கு அதிலகார்யகரத்வம் காணப்பட்டிருக்கிறது, அல்ல. அதன் கார்யமான ஜ்ஞானமானது புருஷனை ஆச்ரயித்திருப்பதால் தோஷாம்சத்திற்கு கார்யகர த்வமில்லாமையால். அப்பனே! † ஸாத்ருச்யம் முதலிய தோஷங்கள் விஷயமாத்ரத்தை அடைந்தவைகளாக இருக்கின்றன. அவைகளுக்கு அந்த விஷயங்களிலேயே கார்ய கரத் வமானது உபபன்னமாகிறது. இவ்வண்ணமல்ல. த்ரவ்யஸ்வரூபத்தை யுள்ளவரை யில் அந்த த்ரவ்யத்தை விட்டு விலகாததான ஸாத்ருச்யம் முதலியவற்றுக்கு எப்பொழுதும் உத்பாதகத்வம் ப்ரஸங்கிப்பதால். புதியதாக வந்திருக்கிற மற்றொன்று அங்கு காணப் படாததால். இந்த்ரிய ஸம்யோகத்திற்குப் புருஷனிடத்திலிருக்கிற ஜ்ஞானத்தைத்தவிர் த்த மற்றதற்கு ஹேதுத்வம் ஸித்தியாததால். த்ருஷ்டிவிஷம் முதலிய ந்யாயம் இங்கு ஸம்பவியாததாலும், ஸம்பவித்தபோதிலும் எல்லோராலும் § உபலம்பம் ப்ரஸங்கிப்பதாலும். அறிவில் சிறந்தவரே! இந்த்ரியங்கள் எப்படி புருஷவிசேஷ ஸம் பந்தத்தால் அந்த புருஷ விசேஷத்திலேயே கார்ய விசேஷத்தை உண்டுபண்ணுகின்ற னவோ இப்படியே விஷயவிசேஷ ஸம்பந்தத்தால் அந்த விஷய விசேஷத்திலேயே ஏதோ விசேஷத்தை உண்டுபண்ணட்டும். அது விஷயத்தில் சொல்லுகிறார்—நாபீ ந்த்ரியாணி என்று. புருஷனை அடைந்திருக்கிற ஜ்ஞானமென்கிற கார்யத்தை உண்டுபண்ணுதல் ‡ அன்வய வ்யதிரேகங்களால் நிலைபெற்றிருக்கிறது. விஷயேந்த்ரி யஜன்யமான கார்யாந்தரம் காணப்பட்டிருக்கவில்லை. அதன் கல்பனையானது வேறு விதத்திலேயே ஏற்படுகிற உபபத்தியினால் விலக்கப்பட்டுவிட்டது என்று கருத்து. அப்படி இருந்தபோதிலுங்கூட அத்ருஷ்டபுருஷனுடைய ஸந்நிதானத்தினால் எவ்வாறு தேசம் முதலியவைகளில் தோஷங்கள் தோன்றுகின்றனவோ அவ்வாறே அத்ருஷ்டங்க ளாக இருக்கிற இந்த்ரியங்களின் ஸந்நிதானத்தால் விஷயத்தில் கார்ய விசேஷம் உண்டாகலாமென்று சொல்லப்படுமேயானால் சொல்லுகிறார்—நாபி த்ருஷ்டாதி என்று அன்வய வ்யதிரேகங்கள் முதலியவற்றைத் தாண்டி த்ருஷ்டாகதமாத்திரத்தினால் ஒன் றும் ஸாதிப்பதற்கு சக்யமாகாதென்று கருத்து. இந்த விஷயத்தில் வேறுஹேதுவைத் தேடுவதனால் யாது பயன்- அநாதியாக இருக்கிற பாவரூபமான அஜ்ஞானமே எல்லா

* அநவதானம்—கவனமில்லாமை.

† ஸாத்ருச்யம்—ஒற்றுமை.　　§ உபலம்பம்—அறிவு.

‡ அன்வயவ்யதிரேகங்கள்—இது இருந்தால் அது இருக்கவேண்டுமென்பது அன் வயம். இது இல்லாவிட்டால் அது இராது என்பது வ்யதிரேகம்.

வற்றுக்கும் உபாதானமாக இருந்துகொண்டு சுக்திரஜதம் முதலிய விசித்ரமான கார்யத்தையும் உண்டாக்கலாமென்று கூறப்படுமேயாகில் சொல்லுகிறார்கூ-அநாதி என்று. அது ஸ்வரூபாநாதியாக இருப்பதால் அதன் கார்யமும் முந்தியே உண்டாகலாம். இணைக் காரணமென்று ஸந்தேஹிக்கத்தக்க இந்த்ரியம் முதலியதோ வென்றால் நிரஸனம் செய்யப்பட்டது. § மித்யாபூதமான வஸ்துவுக்கு அர்த்தக்ரியாகாரித்வமானது யுக்தமன்று. ஆச்ரயாநுபபத்தி முதலியவைகள் முந்தியே உரைக்கப்பட்டுவிட்டனவென்றுகருத்து.

இவ்விதமாக அநிர்வசனீயமான ரஜதம் முதலியவற்றுக்கு உதபாதகாநுபபத்தியைச் சொல்லி அதன் உத்பத்தியில் கூட ரஜதாதி புத்தி சப்தான்வய நியமாநுபபத்தியைச் சொல்லுகிறார்—கிஞ்ச என்று. அது விஷயத்தில் வ்யவஸ்தையை உண்டுபண்ணுகிற பதார்த்தத்தை சங்கிக்கிறார்—ரஜதாதி என்று.* ப்ராதிபாஸிகமான ரஜதம் முதலியதற்கு அர்த்தக்ரியாகாரியான வ்யாவஹாரிகரஜதம் முதலியதோடு ஒற்றுமை இருப்பதால் என்று அர்த்தம். சொல்லப்பட்டதற்கு வ்யவஸ்தாபகத்வாபாவத்தை எண்ணி ஸாத்ருச்யத்திற்குக்காணப்பட்டிருக்கிற வேறு ஸாத்யத்தைக்கூறுகிறார்—தர்ஹி என்று அந்த வஸ்துவுக்கு துல்யமாக இருக்கிற வஸ்துவினிடம் அந்த வஸ்துபுத்தி உண்டாகுமேயாகில் அப்பொழுது ¶ கவயத்தினிடம் கோபுத்திபோல் அன்யதாக்யாதியானது உண்டாகலாமென்பது ஏவகாராபிப்ராயம். ஸாத்ருச்யத்திற்கு நிர்வாஹகத்வமில்லாவிடினும் அந்த ஜாதி ஸம்பந்தத்திற்கு அந்த புத்தி விஷயத்தில் நிர்வாஹகத்வம் காணப்பட்டிருக்கிறதென்று சங்கிக்கிறார்—ரஜதாதி என்று ஸா - அந்த ரஜதம் முதலிய ஜாதியானது. அபாமார்த்தாந்வயாயோகாத் - அப்ரமார்த்தமான வ்யக்தியுடன் அன்வயம் பொருந்தாததலால் என்று அர்த்தம். வ்யக்திபாதம் வந்தபோதிலும் ஜாதிக்குஅபாதிதத்வம் ப்ரஸங்கிக்கிறதென்று கருத்து. ஜாதியுமன்றோ பாதிக்கப்படுகிறது வ்யக்தி கிடையாது. ஜாதியோவென்றால் இருக்கிறதென்று ப்ரதீதி உண்டாகிறதில்லையன்றோ. ஜாதியுமில்லை என்றே யல்லவோ ப்ரதிபத்தி வருகிறது ஜாதியானது முந்தி அறியப்பட்டதாக இருந்தபோதிலும் அபிவ்யஞ்ஜக வ்யக்தி இல்லாமையால் அதற்குப்பிற்பாடு ப்ரதீதி இல்லையே ஒழிய ஜாதி இல்லாமையாலல்லவென்று சொல்லத்தக்கதல்ல. ஜாதியானது அபிவ்யஞ்ஜகத்துடன் கூடின பூர்வகாலத்தில் அறியப்பட்டிருந்தபோதிலும் அது அக்காலத்தோடு ஸம்பந்தம் பெற்றதாகவே பாதக ப்ரத்யயத்தின் நாஸ்திதைக்கு கோசரமாக இருப்பதால். ப்ரதிபன்னமான உபாதியில் நாஸ்தி என்கிற ப்ரத்யமன்றோ பாதம். அபாமார்த்த பக்ஷத்தை தூஷிக்கிறார்—நாபி என்று. பரமார்த்தாந்வயாயோகாத் - கடையிலிருக்கிற ரஜத வ்யக்தியோடு ஸம்பந்தம் பொருந்தாததலால் என்று அர்த்தம். வ்யக்தி இருந்தபோதிலுங்கூட ஜாதிக்கு ஏதாவது ஒரு ஸமயத்தில் பாதிதத்வம் ப்ரஸங்கிக்கிறதென்று கருத்து. ஒரு ஸமயத்திலாவது கடையிலிருக்கிற ரஜதத்தில் ரஜதத்வம் பாதிக்கப்படுகிறதில்லையன்றோ. பரமார்த்த வ்யக்தியுடன் அன்வயமில்லை என்று சொல்லின் பாதகத்தைக் கூறுகிறார்— அபாமார்த்த என்று. பரமார்த்த புத்தி சப்தயோ: - பரமார்த்த விஷயமான புத்தி சப்தம் இவ்விரண்டுகளுக்கும். பரமார்த்தமான வ்யக்தியில் ஜாதியானது அன்வயிக்காமல் போமேயா

§ மித்யா.. அஸத்யம்.

* ப்ராதிபாஸிகம்—ப்ரமத்தினால் ஒருவஸ்துவினிடம் தோன்றுகிற மற்றொரு வஸ்து. அதாவது சுக்தியில் ப்ராந்தி ஸித்தமான ரஜதம். ¶ கவயம்—பசுபோன்ற மிருகம்.

ஞல் அதற்கு ஓரிடத்திலாவது பரமார்த்த புத்தி சப்தம் இவைகளில் ஹேதுத்வம் காணப்படாமையால் ப்ராந்திஸ்தலத்தில்கூட பரமார்த்த புத்தி சப்தம் இவைகளின் விஷயத்தில் நிர்வாஹகத்வம் உண்டாகாதென்று அர்த்தம். அன்றிக்கே, ஜாதியின் அபாரமார்த்யத்திலேயே வேறு தூஷணத்தையும் புத்தி சப்தங்களின் அன்வயாநுபபத்தியையும் கூறுகிறார்—அபாரமார்த்ந என்று. பரமார்த்த புத்தி சப்தயோ:-பரமார்த்தமாக இருக்கிற புத்தி சப்தம் இவ்விரண்டுகளுக்கும் என்று அர்த்தம். அஸத்யத்தினிடத்தினின்று ஸத்யவஸ்துவினுடைய உத்பத்தியின் நிராஸத்தை உபஜீவித்து இந்த தூஷணம் உரைக்கப்படுகிறது. வ்யக்திக்கு அந்த புத்தி சப்த நிர்வாஹகத்வத்தின் அஸம்பந்தத்தைக் காண்பிப்பதற்காக அபாரமார்த்த என்று சொல்லப்பட்டது. அபாரமார்த்த ஜாதிக்கு பரமார்த்தபூதமான புத்திசப்த நிர்வாஹகத்வம் பொருந்தாததால் ஜாதியின் அபாரமார்த்யம் அயுக்தமென்று அர்த்தம். புத்தி, சப்தம் இவ்விரண்டுகளுக்கும் பாரமார்த்யமானது அவைகளுக்கு பாதக தர்சனமில்லாமையாலேயே ஸித்தம்.

அத²வா— யதா²ர்த²ம் ஸர்வவிஜ்ஞாநமிதி வேத³விதா³ம் மதம் | ஶ்ருதிஸ்ம்ருதிப்⁴ய: ஸர்வஸ்ய ஸர்வாத்மத்வப்ரதீதித: || ப³ஹு ஸ்யாமிதி ஸங்கல்ப்ய தேஜோऽப³ந்நஸ்ருஷ்ட்யுபக்ரமே | 'தாஸாம் த்ரிவ்ருதமேகைகா'மிதி ஶ்ருத்யைவ சோதி³தம் || த்ரிவ்ருத்கரணமேவம் ஹி ப்ரத்யக்ஷேணோபலப்⁴யதே | யத³க்³நே ரோஹிதம் ரூபம் தேஜஸஸ்தத³பாமபி || ஶுக்லம் க்ருஷ்ணம் ப்ருதி²வ்யாஶ்சேத்யக்³நேரேவ த்ரிரூபதா | ஶ்ருத்யைவ த³ர்ஶிதா தஸ்மாத் ஸர்வம் ஸர்வத்ர ஸம்ஸ்தி²தம் || புராணே சைவமேவோக்தம் வைஷ்ணவே ஸ்ருஷ்ட்யுபக்ரமே | நாநாவீர்யா: ப்ருத²க்³பூ⁴தாஸ்ததஸ்தே ஸம்ஹதிம் விநா || நாஶக்நுவந் ப்ரஜா: ஸ்ரஷ்டுமஸமாக³ம்ய க்ருத்ஸ்நஶ: | ஸமேத்யாந்யோந்யஸம்யோக³ம் பரஸ்பரஸமாஶ்ரயா: || மஹதா³த்³யா விஶேஷாந்தா ஹ்யண்ட³மித்யாதி³நா தத: | ஸூத்ரகாரோऽபி பூ⁴தாநாம் த்ரைரூப்யம் ததா²ऽவத³த் || த்ர்யாத்மகத்வாத்து பூ⁴யஸ்த்வாதி³தி தேநாபி பா⁴ஷிதா | ஸோமாபா⁴வே ச பூதீக்³ரஹணம் ஶ்ருதிசோதி³தம் | ஸோமாவயவஸத்³பா⁴வாதி³தி ந்யாயவிதோ³ விது³: || வ்ரீஹ்யபா⁴வே ச நீவாரக்³ரஹணம் வ்ரீஹிபா⁴வத: | ததே³வ ஸத்³ருஶம் தஸ்ய யத்தத்³த்³ரவ்யைகதே³ஶபா⁴க் || ஶுக்த்யாதௌ³ ரஜதாதே³ஶ்ச பா⁴வ: ஶ்ருத்யைவ போ³தி⁴த: | ரூப்யஶுக்த்யாதி³ நிர்தே³ஶபே⁴தோ³ பூ⁴யஸ்த்வஹேதுக: || ரூப்யாதி³ஸத்³ருஶஶ்சாயம் ஶுக்த்யாதி³ருபலக்ஷ்யதே | அதஸ்தஸ்யாத்ர ஸத்³பா⁴வ: ப்ரதீதேரபி நிஶ்சித: || கதா³சிச்சக்ஷுராதே³ஸ்து தோ³ஷாச்சு²க்த்யம்ஶ

𑌵𑌰𑍍𑌤𑌿𑌤𑌃 । 𑌰𑌜𑌸𑌾𑌂𑌶𑍋 𑌹𑍍𑌯𑌶𑍀𑌤𑍋𑌽𑌤𑍋 𑌰𑌜𑌸𑌾𑌯𑍀𑌤 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 ॥ 𑌶𑍌𑌕𑍍𑌲𑌾𑌹𑌾𑌰𑍇𑌣 𑌤𑍁 𑌸𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌂𑌶𑍇 𑌹𑍍𑌯𑌶𑍀𑌤𑍇 𑌤𑌨𑍍𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 । 𑌕𑍃𑌤𑍋 𑌯𑌥𑌾𑌯𑌥𑌂 𑌸𑌰𑍍𑌵𑌵𑍍𑌯𑌾𑌪𑌿𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌶𑌾𑌕𑍍𑌤𑌿𑌕𑌾𑌦𑌿𑌷𑍁 ॥ 𑌬𑌾𑌹𑍍𑌯𑌬𑌾𑌧𑌕𑌾𑌪𑍇𑌕𑍍𑌷𑌿 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯𑌾𑌵𑌭𑌾𑌸𑍍𑌯𑌤𑍇 । 𑌶𑌕𑍍𑌤𑌿𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯𑍇𑌵𑌕𑌶𑌾𑌸𑌕𑍃𑌤𑌸𑌾𑌰𑍍𑌵𑌤𑍍𑌰𑌿𑌕𑌃 ॥ 𑌨𑌾𑌤𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌸𑌸𑌤𑍍𑌯𑌾𑌸𑌵𑌿𑌷𑌯𑌕𑌲𑍍𑌪𑌨𑌾𑌯𑌃 ।

ஸ்ரீபாஷ்யம்—

முற்கூறப்பட்டுள்ள பற்பல க்யாதிபக்ஷங்களை ஆக்ஷேபித்து ஸாம்ப்ரதாயிகமான ஸ்வமதத்தை அதாவது யதார்த்த க்யாதியை இங்கு ஸ்பஷ்டமாக அருளிச்செய்கிறார்— எல்லா ஜ்ஞானங்களும் யதார்த்தங்களென்பது பகவத்போதாயனநாதமுனிமிச்ரர் முதலிய வேதார்த்த தத்வதர்சிகளான பரமாசார்யர்களுக்கு அபிமதம். ச்ருதிகளாலும் ஸ்ம்ருதிகளாலும் எல்லா வஸ்துக்களிடத்திலும் எல்லா வஸ்துக்களின் அம்சங்களிருப்பதாக அறியப்படுகிறது. தேவ திர்யங் மனுஷ்ய ஸ்தாவராத்மக ப்ரபஞ்சரூபமாக நான் பஹுவாக ஆகக்கடவேனென்கிற பல ஸங்கல்பத்தை முன்னிட்ட ஸ்ருஷ்டி, நாமரூபவ்யாகரணம், முதலியவைகளை தொடக்கத்தில் கொண்டிருக்கிற ப்ரகரணத்தில் "தாஸாம் த்ரிவ்ருத மேகைகாம்" என்கிற ச்ருதியினாலேயே த்ரிவ்ருத்கரணம் சொல்லப்பட்டிருக்கிறது. த்ரிவ்ருத்கரணமென்பது பஞ்சீகரணத்திற்கு உபலக்ஷணம். இந்த த்ரிவ்ருத் கரணமானது இந்த ச்ருதியில் சொல்லியிருக்கிற வண்ணமாகவே ப்ரத்யக்ஷத்தாலறியப்படுகிற தன்றோ. அக்னியினிடத்தில் யாதொரு சிவப்புநிறம் காணப்படுகிறதோ அது தேஜஸ்ஸினுடையது. வெண்மை நிறம் யாதொன்றுண்டோ அது ஜலத்தினுடையது. கருப்பு நிறம் ப்ருதிவியினுடையது, என்று இவ்வாறாக அக்னியிலேயே மூன்று ரூபங்கள் ச்ருதியினாலேயே காட்டப்பட்டிருக்கின்றன. ஆகையால் எல்லா வஸ்து ஸ்வரூப ஸ்வபாவங்களும் எல்லா வஸ்துக்களிலும் சேர்ந்திருக்கின்றன. விஷ்ணு புராணத்திலும் ஸ்ருஷ்டியின் தொடக்கத்தில் இவ்விதமாகவே சொல்லப் பட்டிருக்கிறது. பற்பல வீர்யமுள்ளவைகளான அந்த மஹத்முதலிய தத்வங்கள் சேர்க்கை இன்றி தனித்தனியாக வேறுபட்டிருந்தன பிறகு அவைகள் முழுமையும் சேர்க்கை பெறாமல் ப்ரஜைகளை உண்டுபண்ணுவதற்கு சக்தியற்றவைகளாக ஆயின. மஹத் தத்வம் முதலாக விசேஷங்களை ஈறாகக்கொண்டிருக்கிற இருபத்துமூன்று தத்வங்களும் அன்யோன்யம் சேர்க்கையைப் பெற்று ஒன்றை மற்றொன்று ஆச்ரயித்தவைகளாக இருந்துகொண்டு அண்டத்தை உண்டுபண்ணுகின்றன, இது முதலியதால் அப்படியே ஸூத்ரகாரரும் பூதங்களுக்கு மூன்று வஸ்து

ஸ்வரூபஸ்வபாவத்துடன் சேர்ந்திருத்தலைக்கூறி இருக்கிறார். மூன்று என்று சொன்னது ஐந்துக்கு உபலக்ஷணமாகக் கொள்ளத்தக்கது. எல்லா வஸ்துக்களும் பஞ்சீகரணத்தினால் ஐந்து பூத ஸ்வரூபங்களாக இருப்பதனால் எல்லா வஸ்துக்களிடத்திலும் எல்லா வஸ்துக்களின் வ்யவஹாரம் பொருத்தமுள்ளதாக ஆகும். பஞ்சபூத ஸங்காதாத்மகங்களான வஸ்துக்களிடத்தில் எந்த பூதாம்சம் எதில் அதிகமாக இருக்கிறதோ, அதை அநுஸரித்து அந்த வஸ்துவினிடம் அந்த வ்யவஹாரமென்று வ்யவஸ்தை அறியத்தக்கது. இவ்வண்ணம் முதலில் பூதங்களில் பூதாந்தர ஸத்பாவம் சொல்லப்பட்டது. இனிமேல் ஸத்ருசமான வஸ்துவினிடம் ஸத்ருசாந்தர வஸ்து ஸத்பாவத்தைச்சொல்லுகிறார்— ஸோமலதை இல்லாவிடில் பூதீகமென்று வழங்கப்படுகிற சிந்துக்கொடியானது யாகங்களில் உபயோகிக்கத்தக்கதென்று ச்ருதியினால் சொல்லப்பட்டிருக்கிறது. ஸோமலதையின் அவயவாம்சமானது பூதீகத்திலிருப்பதால் ஸோமமில்லாவிட்டால் அந்த ஸோமலதாஸ்தானத்தில் பூதீகத்தை உபயோகிக்க வேண்டுமென்று ச்ருதி கூறி இருக்கிறதென்று ப்ரமாணாநுகுணமான நியாயத்தை அறிந்தவர்கள் அறிகிறார்கள். நெல் இல்லாவிட்டாலும் நெல்லின் அம்சம் இருப்பதால் நீவாரம் க்ரஹிக்கத்தக்கதென்றும் ச்ருதி சொல்லுகிறது. எந்த த்ரவ்யம் எந்த திரவ்யத்தின் ஒரம்சத்தை அடைந்திருக்கிறதோ, அந்த த்ரவ்யமே அதற்கு ஸத்ருசம். சிப்பி முதலியதில் ரஜதம் முதலிய வஸ்துவின் ஸத்தையானது ச்ருதியினாலேயே அறிவிக்கப்பட்டிருக்கிறது. வெள்ளி சிப்பி முதலிய வஸ்துக்களின் வ்யவஹாரபேதமானது அந்த அந்த வஸ்துக்களின் ஆதிக்யத்தை ஹேதுவாகக்கொண்டது. நேரில் காணப்படுகிற சிப்பி முதலியது வெள்ளி முதலிய வஸ்துக்களுக்கு ஸத்ருசமாயும் அறியப்படுகிறது. ஆகையால் அந்த ரஜதத்திற்கு இந்த சிப்பியில் இருப்பானது ப்ரதீதியினாலும் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. ஒரு ஸமயத்தில் கண் முதலியவற்றின் தோஷத்தால் சிப்பியின் அம்சத்தால் விடுபட்ட ரஜதாம்சம் க்ரஹிக்கப்படுகிறது. அதனால் ரஜதத்தில் விருப்பமுள்ளவன் ப்ரவ்ருத்திக்கிறான். கண்ணின் தோஷம் நசித்து ரஜதாம்சம் க்ரஹிக்கப்பட்டால் அதினிடத்தினின்று நிவ்ருத்திக்கிறான். ஆகையால் சிப்பி முதலியவைகளில் வெள்ளி முதலிய வஸ்துக்களிருப்பதாக அறியப்படுவது யதார்த்தம். இது சிப்பி என்கிற ஞானத்தால் முந்தி உண்டான வெள்ளி என்கிற ப்ரமாத்மக ஜ்ஞானம் பாதிக்கப்படுகிறதென்பதும் சிப்பி அம்சத்தின் ஆதிக்ய க்ரஹணத்தால் பொருத்தமுள்ளதாக ஆகிறது. இது வெள்ளி என்கிற முதன்மையான ஜ்ஞானமும் இது வெள்ளியல்ல, சிப்பிதான் என்கிற பிந்தினகாலத்திலுண்டாகிற ஜ்ஞானமும் சிப்பியினுடைய அதிகாம்சத்தின் குறைவு நிறைவுகளை க்ரஹிக்காமையால் ஏற்படுகிறதே ஒழிய, ரஜதம் பொய், சிப்பியானது மெய்ப்பொருள் என்கிற ஜ்ஞானத்தினாலுண்டாகிறதன்று.

ச்ருதப்ரகாசிகை—

அதற்குமேல் சொல்லப்படப் போகிற யதார்த்த க்யாதியே தன் ஸித்தாந்தமென்பதைக்காட்டுகிறார்—**அதவா** என்று. அந்த யதார்த்தக்யாதியே குருபரம்பரோபதேசக்ரமத்தால் ப்ராப்தமாயிருக்கிறதென்பதைக்காண்பித்துக் கொண்டு அதை ப்ரதிஜ்ஞை செய்கிறார்—**யதார்த்தம்** என்று. வேதவிதாம் - பகவத்போதாயனர் நாதமுனிமிச்ரர் முதலியவர்களுடைய என்று அர்த்தம். எதனாலென்று கேழ்க்கப்படுமேயாகில் சொல்லுகிறார்—**ச்ருதிஸ்ம்ருதிப்ய:** என்று சுருதியைக் காண்பிக்கிறார்—**பஹுஸ்யாம்என்று.** ஆதி சப்தத்தால் நாமரூப வ்யாகரணம் சொல்லப்படுகிறது. அப்படிக்கின்றி; ஸங்ப்லவா: இது முதலான வாக்யங்களால் சொல்லப்பட்டிருக்கிற ஸ்திதி ப்ரளயம் முதலியது க்ரஹிக்கப்படுகிறது, ஸ்ருஷ்டி முதலியது தொடக்கம் எந்த ப்ரகரணத்திற்கோ அது ஸ்ருஷ்ட்யாத்யுபக்ரமம். இந்த ச்லோகார்த்தம் எதற்காக வென்று வினவப்படுமேயானால் சொல்லப்படுகிறது. பாடக்ரமத்தால் அண்டஸ்ருஷ்டிக்குப் பிறகு த்ருவ்ருத்கரணம் ஏற்படுகிறது. அண்டஸ்ருஷ்டிக்கு முந்தியும் த்ருவ்ருத்கரணமிருக்கிறது. அண்டஸ்ருஷ்டிக்காகவே த்ருவ்ருத்கரணம் பரமாத்மாவினால் செய்யப்பட்டிருப்பதால் த்ருவ்ருத்கரணம் உபாயம். அண்ட ஸ்ருஷ்டியானது அந்த த்ருவ்ருத்கரணரூபமான உபாயத்திற்குப்பலம். உத்பத்தியில் பலம் பிந்தி உண்டாகிறது, ஸஙகல்பத்திலோ அதாவது அதுவிஷயமான மனோபாவத்திலோ முந்தி உண்டாகிறது. உபாயமோ வென்றால் உத்பத்தியில் முந்தி உண்டாகிறது. ஸங்கல்பத்தில் பிந்தி உண்டாகிறதென்பது எது எதனால் எவ்விதம், இது முதலியதில் லோகப்ரஸித்தம். ஆதலால் ‘நாமரூபே வ்யாகரவாணி தாஸாம் த்ருவ்ருதமேகைகாம் கரவாணி’ என்கிற இந்த வ்யஷ்டி ஸ்ருஷ்டிஸங்கல்ப வாக்கியத்தில் அண்ட ஸ்ருஷ்டிக்கு உபாயமாக இருக்கிற த்ருவ்ருத்கரணமானது பிற்பாடு சொல்லப்பட்டிருக்கிறது. ‘நாமரூபே வ்யாகரோத், தாஸாம் த்ருவ்ருதமேகைகாம கரோத்’ என்கிற உத்பத்திவாக்கியத்தில் நாமரூபவ்யாகரணமானது முந்திசொல்லப்பட்டிருந்தபோதிலுங்கூட பலமாக இருப்பதால் த்ருவ்ருத்கரணமானது பல ரூபமான ஸ்ருஷ்டிக்கு முந்தினதென்று நிச்சயிக்கப்படுகிறது. அர்த்தக்ரமத்தால்பாடக்ரமத்திற்கு பாதம் ந்யாய்யமாக இருப்பதால். அக்னிஹோத்ரம் ஜுஹோதி, யவாகூம் பசதி என்பதுபோல—இந்த அர்த்தத்தில் நிதர்சனம் தொடக்கத்தில் பஹுஸ்யாம் ப்ரஜாயேய’என்கிற வாக்கியம். இந்த இடத்தில் பஹுஸ்யாம் என்று பலஸங்கல்பம். அதற்காக ‘ப்ரஜாயேய’ என்று அந்த பலத்தினுடைய உபாய ஸங்கல்பம். இதனால் ‘எது எதனால் எதற்காக’ இது முதலிய உலகப்ரஸித்தியினால் மாத்திரம் இந்த இடத்தில் த்ருவ்ருத்கரணத்திற்கு பலபூத ஸ்ருஷ்டிக்கு முந்தின காலத்திலிருத்தல் நிச்சயிக்கப்படவில்லை. ‘தொடக்கத்திலிருக்கிற ஸங்கல்ப வாக்கியத்தின் ஆனுகுண்யத்தாலும் இவ்வாறு ஜ்ஞாபிக்கப்பட்டது. இவ்விதமாகத்ருவ்ருத்கரணத்திற்கு அண்ட ஸ்ருஷ்டிக்கு முந்தி இருத்தலை ஜ்ஞாபிப்பதற்காக தொடக்கத்திலிருக்கிற ஸ்ங்கல்ப வாக்கியம் அதற்கு அநுகுணமென்பதை தெரிவிப்பதற்காக பஹுஸ்யாம் இது முதலியதற்காக எடுக்கப்பட்டது. அண்டத்திற்குள்ளடங்கி இருக்கிற அக்னிமுதலிய வஸ்துக்களில் த்ருவ்ருத்கரணம் காட்டப்பட்டிருப்பதால் அண்ட ஸ்ருஷ்டிக்குப்பிறகு த்ருவ்ருத்கரணம் என்கிற சங்கைவர ச்ருதியின் அர்த்தத்தைக்கூறுகிறார்—**ஏவம்ஹி ப்ரத்யக்ஷேண உபலப்யதே** என்று. அக்னிமுதலிய சில வ்யக்திகளில் மூன்று ரூபங்களைக்காட்டினது இவ்வளவுதானென்கிற புத்தியினாலன்று- பின்னையோ அண்டத்திற்குள்ளடங்கி இருக்கிற வஸ்துவே ப்ரத்யக்ஷமாகக் காண்பதற்கு யோக்யமாக இருப்பதால் முற்கூறப்பட்டிருக்கிற த்ருவ்ருத்கரண ஸம்பாவனையைக்காண்பிப்பதற்காக வென்று கரு

த்து அண்டஸ்ருஷ்டிக்கு முந்தியே த்ருவ்ருத்கரணமிருக்கிறதென்பதை ஸ்பஷ்டமாக
ஜ்ஞாபிக்கிறார்—புராணோ என்று. இந்த உபநிஷத்தில் மூன்றுபூதங்களுக்கு ஸ்ருஷ்டி
சொல்லப்பட்டிருப்பதால் ஸ்ருஷ்டிக்கப்பட்டதாகக்கூறப்பட்டிருக்கிற வஸ்துக்களுக்குகல
வை உரைக்கப்பட்டது இது வேறு தத்வங்களின் ஸ்ருஷ்டியை எடுத்துக் கூறும் ப்ரகர
ணமையில் அவைகளுக்கும் மிச்ரணத்தைக் காண்பிப்பதற்காக வென்பதை ஜ்ஞாபிப்ப
தற்காக புராணவசனங்கள் உதாஹரிக்கப்பட்டன. 'வைஷ்ணவே' என்று சொன்னதனு
ல் ஈஜஸதாமஸ புராணங்களைக்காட்டிலும் ஸத்வோத்தரமாகஇருப்பதால் விஷ்ணுபுராண
த்திற்கு ப்ராமாண்யம் ஸூசிப்பிக்கப்பட்டது. 'ஸாத்விகேஷு ச ஸர்வேஷு விஷ்ணோர்
மாஹாத்ம்யமிஷ்யதே'ஸத்வகுண ப்ரதானங்களான எல்லாப்புராணங்களிலும் விஷ்ணுவு
க்குமாஹாத்ம்யம் பகரப்படுகிறது என்று சொல்லப்பட்டிருப்பதால். ஸம்ஹததத்வம்,ஸமாக
தத்வம் என்று இரண்டு அவஸ்தைகளைச் சொல்கின்றன. ஸம்ஹத தத்வமாவது--தனியாகப்
பிரிந்து இருப்பதற்குத்தக்கதான ஸம்யோகமாத்ரம். ஸமாகதத்வமாவது-தனித்துஇருப்
பதற்குத் தகாததான ஸம்ச்லேஷ விசேஷம். இந்த இரண்டு தன்மைகளுமில்லாமையால்
ஸ்ருஷ்டிப்பதற்கு சக்தியற்றவைகளாக ஆயினவென்று சொல்லுகிறார்— நாநாவீர்யா:
என்று. இவைகள் இரண்டையும் அடைந்ததனால் ஸ்ருஷ்டித்தனவென்று சொல்லுகி
றார்—ஸமேத்ய என்று. ஒவ்வொரு பூதத்தினிடத்திலும எல்லாபூதங்களும் இருக்கின்ற
தாகவேயானால் எல்லாசப்தங்களும் எல்லாவஸ்துக்களிடங்களிலும் ப்ரயோகிக்கப்படவா
மே என்று கேட்கப்படுமேயாகில் சொல்லுகிறார்--பரஸ்பரஸமாச்ரயா: என்று. ஆச்ர
யிக்கின்ற மற்றபூதங்களுக்கு ஒருபூதமானது ஆதாரம். ஆச்ரிதாச்ரய பாவமானது குறை
ந்திருத்தல் அதிகமாக இருத்தல் என்கிற தன்மையைக்காரணமாகவுடையது—சப்த வ்ய
வஸ்தை அதனால் உண்டுபண்ணப்பட்டிருக்கிறதென்று கருத்து. எடுக்கப்பட்டிருக்
கிற வசநத்திற்குப் பிறகு "ஸம் ப்ராப்யைக்யமசேஷத:" என்று. முழுமையும் ஸமா
கதத்வம் கூறப்பட்டது. "மஹதாத்ய:" என்கிற பாடமிருக்கும்பொழுதே வ்ருத்தபங்
கத்தைப்பரிஹரிப்பதற்காக தன் க்ரந்தத்தில் பாஷ்யகாரர்களால் 'மஹதாத்யா:' என்று
சொல்லப்பட்டது. இதுதான் ச்ருதியின் அபிப்ராயம் என்பதை உறுதிப்படுத்துவதற்
காகஸூத்ரகாரருடைய வசனத்தைக் காண்பிக்கிறார்— ஸூத்ர: என்று. 'தத:ஸூத்ர
காரோபி அவதத்' என்று அந்வயம். தத: -- இந்த அர்த்தம் ச்ருதி ஸ்ம்ருதி ஸித்த
மாக இருப்பதால் என்று அர்த்தம். இவ்விதமாக முதலில் பூதத்தில் வேறு பூதங்க
ளின் இருப்பு கூறப்பட்டது. ஸத்ருச வஸ்துவில் இனிமேல் சொல்லப்படப்போகிற
ஸத்ருசாந்தர வஸ்துவின் ஸத்பாவத்திற்கு உபயோகியாக இருப்பதால். தேநாபிதா
பிதா-ஆதிக்யத்தால் அபிதான வ்யவஸ்தை என்று அர்த்தம். துல்ய வஸ்துவினிடம்
துல்யமான வேறு வஸ்துவின் ஸத்பாவத்தைச்சொல்லுகிறார்—ஸோம என்று. ந்யாய
வித: - பரீக்ஷகர்கள். "ஸோமாபாவே பூதிகாநபிஷுணுயாத்" என்கிற இந்த விதி
யானது நியமத்தின் பொருட்டு ஏற்பட்டிருக்கிறது. ஸோமமில்லாவிட்டால் அதற்கு
ஸமானமாக இருக்கிற வேறு வஸ்துக்களிடத்தில் தானாக ப்ரவ்ருத்தி வருவதால்-
இதற்கு துல்யமான ந்யாயஸித்தார்த்தத்தைச் சொல்லுகிறார்— வ்ரீஹி என்று. வ்ரீஹி
பாவத: - வ்ரீஹியின் அவயவங்களிருப்பதால். அப்படியானால் எவ்வாறு ஸத்ருச வஸ்
துவினிடம் ஸத்ருசமான வேறு வஸ்துவின் இருப்பு என்று சொல்லப்பட்டால் கூறு
கிறார்—ததேவ என்று. இதனால் சிப்பி முதலியவற்றில் ரஜதம் முதலிய வஸ்துக்க
ளுடைய அவயவங்களின் இருப்பு பலித்ததென்று சொல்லுகிறார்—சுக்த்யாதௌ
என்று. ச்ருத்யைவ போதித:-ப்ரதிநிதி ச்ருதியினாலேயே அபிமதமாக பலித்து விட்
டது. அன்றிக்கே த்ருவ்ருத்கரண ச்ருதியினாலேயே அறிவிக்கப்பட்டிருத்தல் பலித்
தது. சிப்பியில் தேஜஸ்ஸினால் ப்ரசுரமான ரூப்யாம்சமானது த்ருவ்ருத்கரணத்தினால்

ஸித்திக்கிறதென்று அர்த்தம். எவ்வாறு சப்தப்ரயோகத்திற்கு வ்யவஸ்தை என்று கேட்கில் கூறுகிறார்—நுப்ய என்று, சிப்பிவெள்ளி இவ்விரண்டுகளுக்கும் ஸாத்ருச்யமிருந்தாலன்றோ சிப்பியில் வெள்ளியின் ஸத்பாவஸித்தியும் சப்த வ்யவஸ்தைக்கு பூயஸ்த்வஹேதுகத்வஸித்தியுமென்று கேழ்க்கப்படுமேயானல் சொல்லுகிறார்— நுப்யாதி என்று. இல்லையேல், சிப்பியில் வெள்ளியைச்சார்ந்த ஓரம்சமிருப்பதில் வேறு ப்ரமாணத்தைக் கூறுகிறார்—நுப்யாதி என்று. அதனுலென்ன வென்றுகேட்கில் சொல்லுகிறார்—அத: என்று. ப்ரதீதே: - வெள்ளிக்கு ஸமானமென்று ப்ரதீதி வருவதால். சிப்பி முதலியவற்றில் வெள்ளிமுதலிய வஸ்துக்களின் அவயவஸத்தையானது எப்பொழுதும க்ரஹிக்கப்படுமேயானல் ப்ரவ்ருத்தியும் எப்பொழுதுமுண்டாகும். பாதமும் பொருந்தாமல் போகுமென்று சொல்லப்படுமேயானல் கூறுகிறார்—கதாசித் என்று. சுக்தியின் அம்சத்தை க்ரஹியாமலிருப்பதற்குதோஷம் காரணம். சிப்பியின் ப்ராசுர்யஜ்ஞானத்திருல் அபிபவமில்லாமையாலும் அத்ருஷ்டவசத்தாலும் ரஜதம் க்ரஹிக்கப்படுகிறது. அத்ருஷ்டவசத்தாலும் அந்த சிப்பியில் ஜலம் என்கிற க்ரஹணமில்லாமையாலென்று சொல்லப்படப்போகிற தன்றோ. வேறு உதாஹரணங்களில்கூட உபஜீவ்யத்வத்தின் பொருட்டன்றோ அந்த இடத்தில் அது சொல்லப்பட்டிருக்கிறது. பூயஸ்த்வேந பாத்யபாதகபாவ: என்று. சிப்பியின் ஆதிக்யத்தால் அந்த சிப்பி விஷயமான ஜ்ஞானத்திற்கு பாதகத்வம். அதனுலேயே ஜாதத்திற்கு அல்பத்வம் ஸித்தம். அதனுல் ரஜத ஜ்ஞானத்திற்கு பாத்யத்வமென்று கருத்து. பூயஸ்த்வேந என்று சொன்னதனுல் ப்ராந்தி ஜ்ஞானத்திற்கு ரஜத பூயஸ்த்வமிருப்பதால் அதனுல் சிப்பிஎன்கிற ஜ்ஞானத்திற்கு பாத்யத்வ சங்கைவர அதை விலக்குவதின் பொருட்டு பூயஸ்த்வத்தால் பாத்யபாதகபாவத்தை உபபாதிக்கிறு—சுக்தீ என்று.

அப்படியே ! நிறைவு இருக்கையில் குறைவு க்ரஹிக்கப்பட்டதே யானுல் அந்யதாக்யாதியன்றோ— இவ்வண்ணமல்ல. குறைவின் க்ரஹம் அதாவது வைகல்யத்தின் க்ரஹம் வைகல்யக்ரஹமல்லவன்றோ-பின்னையோ சிப்பியின் அதிகாம்ச வைகல்யத்தால் க்ரஹம். அதாவது அந்த அதிகாம்சத்தை விட்டு க்ரஹம்- அதன் அக்ரஹமென்று பலித்தது. பூயஸ்த்வத்தை முழுமையும் க்ரஹித்தல். அந்த பூயஸ்த்வஸாகல்யத்துடன் கூடியதாக க்ரஹம். அந்த இரண்டு க்ரஹங்களுடைய ரூபாத்-ஸ்வபாவத்தால். அப்படிப்பட்ட க்ரஹணத்மகமாக இருப்பதாலென்று அர்த்தம். அல்லது பகுவ்ரீஹி ஸமாஸம். பாவப்ரதானமான நிர்தேசம். முற்பட்டும் பிற்பட்டுமிருக்கிற இரண்டு ஜ்ஞானங்களும் அப்படிப்பட்ட ரூபத்துடன்கூடி இருப்பதால் பாத்யபாதகபாவம் என்று பொருள். ஜ்ஞானத்துக்கு பாதிக்கப்படத்தக்க தன்மையானது ஸ்வரூபத்தாலன்று, விஷயத்தாலுமன்று, பின்னையோ பாதிக்கப்படத்தக்க ப்ரவ்ருத்தியுடன் கூடி இருத்தல். பிந்தி உண்டாகிற ஜ்ஞானத்திற்கு பாதகத்வமாவது முந்தின ஜ்ஞானத்தினுல் உண்டாகிற ப்ரவ்ருத்தியைத் தடுத்தல். அந்யதாக்யாதிவாதத்திலும் ஜ்ஞானத்திற்கு ஸ்வரூபத்தால் பாதிக்கப்படத்தக்கதன்மையானது அபிமதமல்லாதது. பின்னையோ விஷயபாத்யத்வமே அபிமதம். நமக்கோவென்றுல் ஜ்ஞானத்திற்கு பலபூதமான ப்ரவ்ருத்திக்கு பாத்யத்வமென்றுபேதம். ப்ரவ்ருத்திக்கு பாதிதத்வமாவது தடை செய்யப்பட்டிருக்கிற உத்பத்தியுடன் கூடிஇருத்தல், அல்லது பயனில்லாமலிருத்தல். நார்த: என்று மித்யார்த்த ஸத்யார்த்த சப்தங்களால் அன்யனுக்கு அபிமதமான மித்யாத்வ ஸத்யத்வங்கள் சொல்லக்கூடப்பட்டிருக்கின்றன.

𑌏𑌵𑌂 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌵𑍇 𑌵𑍍𑌯𑌵𑌹𑌾𑌰𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌃 ॥ 𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑍇 𑌚 𑌪𑍍𑌰𑌾𑌣𑌿𑌨𑌾𑌂 𑌪𑍁𑌣𑍍𑌯𑌪𑌾𑌪𑌾𑌨𑍁𑌗𑍁𑌣𑌂 𑌭𑌗𑌵𑌤𑍈𑌵 𑌤𑌤𑍍𑌤𑌤𑍍𑌪𑍁𑌰𑍁𑌷𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌨𑍁𑌭𑌾𑌵𑍍𑌯𑌾𑌃 𑌤𑌤𑍍𑌤𑌤𑍍𑌕𑌾𑌲𑌾𑌵𑌸𑌾𑌨𑌾𑌃 𑌤𑌥𑌾𑌭𑍂𑌤𑌾𑌶𑍍𑌚𑌾𑌰𑍍𑌥𑌾𑌃 𑌸𑍃𑌜𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 । 𑌤𑌥𑌾 𑌹𑌿 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌃 𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑌵𑌿𑌷𑌯𑌾 “𑌨 𑌤𑌤𑍍𑌰 𑌰𑌥𑌾 𑌨 𑌰𑌥𑌯𑍋𑌗𑌾 𑌨 𑌪𑌨𑍍𑌥𑌾𑌨𑍋 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 । 𑌅𑌥 𑌰𑌥𑌾𑌨𑍍 𑌰𑌥𑌯𑍋𑌗𑌾𑌨𑍍 𑌪𑌥𑌃 𑌸𑍃𑌜𑌤𑍇 । 𑌨 𑌤𑌤𑍍𑌰𑌾𑌨𑌨𑍍𑌦𑌾 𑌮𑍁𑌦𑌃 𑌪𑍍𑌰𑌮𑍁𑌦𑍋 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 । 𑌅𑌥𑌾𑌨𑌨𑍍𑌦𑌾𑌨𑍍 𑌮𑍁𑌦𑌃 𑌪𑍍𑌰𑌮𑍁𑌦𑌃 𑌸𑍃𑌜𑌤𑍇 । 𑌨 𑌤𑌤𑍍𑌰 𑌵𑍇𑌶𑌾𑌨𑍍𑌤𑌾𑌃 𑌪𑍁𑌷𑍍𑌕𑌰𑌿𑌣𑍍𑌯𑌃 𑌸𑍍𑌰𑌵𑌨𑍍𑌤𑍍𑌯𑍋 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 । 𑌅𑌥 𑌵𑍇𑌶𑌾𑌨𑍍𑌤𑌾𑌨𑍍 𑌪𑍁𑌷𑍍𑌕𑌰𑌿𑌣𑍀𑌃 𑌸𑍍𑌰𑌵𑌨𑍍𑌤𑍀𑌃 𑌸𑍃𑌜𑌤𑍇 । 𑌸 𑌹𑌿 𑌕𑌰𑍍𑌤𑌾” 𑌇𑌤𑌿 । 𑌯𑌦𑍍𑌯𑌪𑌿 𑌸𑌕𑌲𑍇𑌤𑌰𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌨𑍁𑌭𑌾𑌵𑍍𑌯𑌤𑌯𑌾 𑌤𑌦𑌾𑌨𑍀𑌂 𑌨 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 । 𑌤𑌥𑌾𑌪𑌿 𑌤𑌤𑍍𑌤𑌤𑍍𑌪𑍁𑌰𑍁𑌷𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌨𑍁𑌭𑌾𑌵𑍍𑌯𑌤𑌯𑌾 𑌤𑌥𑌾𑌵𑌿𑌧𑌾𑌨𑌰𑍍𑌥𑌾𑌨𑍀𑌶𑍍𑌵𑌰𑌃 𑌸𑍃𑌜𑌤𑌿 । 𑌸 𑌹𑌿 𑌕𑌰𑍍𑌤𑌾 — 𑌤𑌸𑍍𑌯 𑌸𑌤𑍍𑌯𑌸𑌙𑍍𑌕𑌲𑍍𑌪𑌸𑍍𑌯𑌾𑌶𑍍𑌚𑌰𑍍𑌯𑌶𑌕𑍍𑌤𑍇𑌸𑍍𑌤𑌥𑌾𑌵𑌿𑌧𑌂 𑌕𑌰𑍍𑌤𑍃𑌤𑍍𑌵𑌂 𑌸𑌮𑍍𑌭𑌵𑌤𑍀𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 । “𑌯 𑌏𑌷 𑌸𑍁𑌪𑍍𑌤𑍇𑌷𑍁 𑌜𑌾𑌗𑌰𑍍𑌤𑌿 𑌕𑌾𑌮𑌂 𑌕𑌾𑌮𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋 𑌨𑌿𑌰𑍍𑌮𑌿𑌮𑌾𑌣𑌃 । 𑌤𑌦𑍇𑌵 𑌶𑍁𑌕𑍍𑌰𑌂 𑌤𑌦𑍍 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌤𑌦𑍇𑌵𑌾𑌮𑍃𑌤𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 । 𑌤𑌸𑍍𑌮𑌿𑌂𑌲𑍍𑌲𑍋𑌕𑌾𑌃 𑌶𑍍𑌰𑌿𑌤𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌤𑌦𑍁 𑌨𑌾𑌤𑍍𑌯𑍇𑌤𑌿 𑌕𑌶𑍍𑌚𑌨” 𑌇𑌤𑌿 𑌚 । 𑌸𑍂𑌤𑍍𑌰𑌕𑌾𑌰𑍋𑌽𑌪𑌿 “𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑍇 𑌸𑍃𑌷𑍍𑌟𑌿𑌰𑌾𑌹 𑌹𑌿, 𑌨𑌿𑌰𑍍𑌮𑌾𑌤𑌾𑌰𑌂 𑌚𑍈𑌕𑍇 𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌦𑌯𑌶𑍍𑌚” 𑌇𑌤𑌿 𑌸𑍂𑌤𑍍𑌰𑌦𑍍𑌵𑌯𑍇𑌨 𑌸𑍍𑌵𑌾𑌪𑍍𑌨𑍇𑌷𑍍𑌵𑌰𑍍𑌥𑍇𑌷𑍁 𑌜𑍀𑌵𑌸𑍍𑌯 𑌸𑍍𑌰𑌷𑍍𑌟𑍃𑌤𑍍𑌵𑌮𑌾𑌶𑌙𑍍𑌕𑍍𑌯 “𑌮𑌾𑌯𑌾𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌤𑍁 𑌕𑌾𑌰𑍍𑌤𑍍𑌸𑍍𑌨𑍍𑌯𑍇𑌨𑌾𑌨𑌭𑌿𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌤𑍍𑌵𑌾𑌤𑍍” 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌨𑌾 𑌨 𑌜𑍀𑌵𑌸𑍍𑌯 𑌸𑌙𑍍𑌕𑌲𑍍𑌪𑌮𑌾𑌤𑍍𑌰𑍇𑌣 𑌸𑍍𑌰𑌷𑍍𑌟𑍃𑌤𑍍𑌵𑌮𑍁𑌪𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 । 𑌜𑍀𑌵𑌸𑍍𑌯 𑌸𑍍𑌵𑌾𑌭𑌾𑌵𑌿𑌕𑌸𑌤𑍍𑌯𑌸𑌙𑍍𑌕𑌲𑍍𑌪𑌤𑍍𑌵𑌾𑌦𑍇𑌃 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌸𑍍𑌯 𑌸𑌂𑌸𑌾𑌰𑌦𑌶𑌾𑌯𑌾𑌮𑌨𑌭𑌿𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑍇𑌣𑍈𑌵 𑌤𑌤𑍍𑌤𑌤𑍍𑌪𑍁𑌰𑍁𑌷𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌨𑍁𑌭𑌾𑌵𑍍𑌯𑌤𑌯𑌾 𑌆𑌶𑍍𑌚𑌰𑍍𑌯𑌭𑍂𑌤𑌾 𑌸𑍃𑌷𑍍𑌟𑌿𑌰𑌿𑌯𑌮𑍍 । “𑌤𑌸𑍍𑌮𑌿𑌂𑌲𑍍𑌲𑍋𑌕𑌾𑌃 𑌶𑍍𑌰𑌿𑌤𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌤𑌦𑍁 𑌨𑌾𑌤𑍍𑌯𑍇𑌤𑌿 𑌕𑌶𑍍𑌚𑌨” 𑌇𑌤𑌿 𑌪𑌾𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑍇𑌵 𑌤𑌤𑍍𑌰 𑌸𑍃𑌷𑍍𑌟𑌿𑌰𑌾𑌮𑍍𑌨𑌾𑌯𑌤𑍇 — 𑌇𑌤𑌿 𑌚 𑌪𑌰𑌿𑌹𑌰𑌤𑌿 । 𑌅𑌪𑌵𑌰𑌕𑌾𑌦𑌿𑌷𑍁 𑌶𑌯𑌾𑌨𑌸𑍍𑌯 𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑌦𑍃𑌶𑌃 𑌸𑍍𑌵𑌦𑍇𑌹𑍇𑌨𑍈𑌵 𑌦𑍇𑌶𑌾𑌨𑍍𑌤𑌰𑌗𑌮𑌨𑌰𑌾𑌜𑍍𑌯𑌾𑌭𑌿𑌷𑍇𑌕𑌶𑌿𑌰𑌶𑍍𑌛𑍇𑌦𑌾𑌦𑌯𑌶𑍍𑌚 𑌪𑍁𑌣𑍍𑌯𑌪𑌾𑌪𑌫𑌲𑌭𑍂𑌤𑌾𑌃 𑌸𑌮𑌾𑌨𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌨𑌦𑍇𑌹𑌾𑌨𑍍𑌤𑌰𑌸𑍃𑌷𑍍𑌟𑍍𑌯𑌾 𑌉𑌪𑌪𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 ॥

ஸ்ரீபாஷ்யம்—

இவ்வண்ணமாக எல்லா வஸ்துக்களுக்கும் எல்லாவஸ்துக்களின் அம்சங்களோடு சேர்ந்திருத்தலென்கிற தன்மை இருந்தபோதிலும் அந்தந்த வஸ்துக்களுடைய அம்சங்களின் பூயஸ்த்வ ஸாகல்ய வைகல்ய க்ரஹங்களால் அந்தந்த வஸ்து விஷயமான வ்யவஹாரம் உலகத்தில் நிலை பெற்றிருக்கிறது. ஸ்வப்நத்திலும் ப்ராணிகளின் புண்யபாபாநுகுணமாக பரம புருஷனாலேயே அந்தந்த புருஷனால் மாத்திரம் அனுபவிக்கத்தக்கதாயும் அந்தந்த காலத்திலே முடிவுள்ளவைகளுமான அப்படிப்பட்ட வஸ்துக்கள் ஸ்ருஷ்டிக்கப்படுகின்றன. இந்த விஷயத்தில் ச்ருதி ப்ரமாண ஸம்வாதமிருக்கிறது. ஸ்வப்ந விஷயமான ச்ருதியாவது. அந்த ஸ்வப்நத்தில் நேராக ஜாக்ரத்தசையில் காணப்பட்டிருக்கிற ரதம் முதலியவைகளுக்கு ஸஜாதீயங்களான ரதங்களும் ரத்யங்களான அச்வங்களும் மார்க்கங்களும் இல்லை. அந்த ஸமயத்தில் விஜாதீயங்களான ரதங்களையும் ரத்யங்களான அச்வங்களையும் மார்க்கங்களையும் உண்டுபண்ணுகிறார். அந்த ஸ்வப்நத்தில் ப்ரத்யக்ஷமாக ஜாக்ரத் தசையிலனுபவிக்கப்பட்டிருக்கிற * ஆநந்தம் முதலியவைகளுக்கு ஸஜாதீயங்களான ஆநந்தங்களுமில்லை. § முத்துக்களுமில்லை ‡ ப்ரமுத்துக்களுமில்லை. அந்த ஸமயத்தில் விஜாதீயங்களான ஆநந்தங்களையும் முத்துக்களையும் ப்ரமுத்துக்களையும் ஸ்ருஷ்டிபண்ணுகிறான். அந்த ஸ்வப்நத்தில் த்ருஷ்ட ஸஜாதீயங்களான சிறு குட்டைகளும் புஷ்கரிணிகளும் நதிகளுமில்லை. விஜாதீயங்களான சிறியகுட்டைகளையும் புஷ்கரிணிகளையும் நதிகளையும் ஸ்ருஷ்டிக்கிறான். அந்த பரமபுருஷனல்லவோ கர்த்தா என்று. ஸ்வப்நாவஸரத்தில் ஸ்வப்தனாலனுபவிக்கப்படுகிற வஸ்துக்கள் அவனைத் தவிர்த்து மற்றவர்கள் எல்லோராலும் அனுபவிக்கத்தக்கவைகளாக ஆகிறதில்லை. ஆயினும் அந்த ஸ்வப்தனான புருஷனால் மாத்திரம் அனுபவிக்கத்தக்கதாக அப்படிப்பட்ட வஸ்துக்களை ஈச்வரன் ஸ்ருஷ்டிக்கிறான். அந்த பரமபுருஷனல்லவோ ஸ்வாபகாலிக வஸ்துக்களை ஸ்ருஷ்டிப்பவன். ஸத்ய ஸங்கல்பனாகவும் ஆச்சர்யகரமான சக்தியுள்ளவனாகவுமிருக்கிற அந்த பரம புருஷனுக்கு அப்படிப்பட்ட கர்த்ருத்வம் ஸம்பவிக்கிறதென்று அர்த்தம். எந்த புருஷன் இந்த ப்ராணிகள் உறங்கிக்கொண்டிருக்கும்பொழுது தானாகவே ஸங்கல்பித்து ஸங்கல்பித்து விசித்திரமான பதார்த்தங்களை உண்டுபண்ணி நின்றுகொண்டு விழித்துக்கொண்டிருக்கிறானோ அந்த பரமபுருஷனே ஜ்யோதிர்மயன். அவனே ப்ரஹ்மசப்தத்தால் சொல்லத் தக்கவன். அவனே அழிவில்லாதவன் அல்லது மோக்ஷத்தை அளிப்பவன் என்று சொல்லப்படுகிறான். அந்த பரம புருஷனை எல்லா உலகங்களும் அடைந்தி

* ஆநந்தம்—விஷயோகத்தினாலுண்டாகும் ப்ரீதி.

§ முத்—ப்ரியவஸ்துவான போக்ய வஸ்துவைப் பார்ப்பதனாலுண்டாகிற ப்ரீதி.

ப்ரமுத்—அஸாதாரணமான போக்யத்வ ஜ்ஞானத்தினாலுண்டாகிற ப்ரீதி.

ருக்கின்றன. அந்த பரம புருஷனை ஒருவனும் ஜ்ஞானத்தினாலும் பலத்தினாலும் சக்தியினாலும் அதிக்ரமிக்கிறானில்லை என்றும். ஸூத்ரகாரரும் 'ஸந்த்யேஸ்ருஷ்டிராஹஹி - நிர்மாதாரஞ்சைகே புத்ராதயஶ்ச-என்கிற' இரண்டு ஸூத்ரங்களால ஸ்வப்ந ஸமயத்தில் அபிவ்யக்தங்களாகிற வஸ்துக்கள் விஷயத்தில் ஜீவனுக்குஸ்ரஷ்ட்ருத்வத்தை ஆசங்கித்து 'மாயாமாத்ரந்துகார்த்ஸ்ந்யேநா நபிவ்யக்தஸ்வரூபத்வாத்' இது முதலியதால் ஜீவனுக்கு ஸங்கல்பமாத்திரத்தினால் ஸ்ரஷ்ட்ருத்வம் பொருந்துகிறதில்லை. ஜீவனுடைய ஸ்வாபாவிகமான ஸத்யஸங்கல்பத்வம் முதலிய எல்லாகுணங்களும் ஸம்ஸாரதசையில் அபிவ்யக்த ஸ்வரூபமாக இல்லாததால், அந்த ஜீவனுக்கு விசித்ர பதார்த்த ஸ்ருஷ்டியானது பொருந்தாது. உறங்கிக் கொண்டிருக்கிற அந்தந்த புருஷனால் மாத்ரமனுபவிக்கத்தக்கதாக ஏற்பட்டிருக்கும் இந்த ஆச்சர்யகரமான இந்தப்பதார்த்த ஸ்ருஷ்டியானது ஈச்வரனுடையதே. தஸ்மின்லோகாச்ரிதாஸ் ஸர்வே தது நாத்யேதி கச்சந=என்பதனால் பரமாத்மாவே அந்த ஸ்வாப்ந பதார்த்தங்களுக்கு ஸ்ரஷ்டாவென்று அறியப்படுகிறானென்று பரிஹரிக்கிறார்— § அபவரகம் முதலிய இடங்களில் படுத்துக்கொண்டிருக்கிறவனும் ஸ்வப்நம் காண்பவனுமான மனிதனுக்கு அவன் செய்திருக்கிற புண்ய பாபங்களுக்கு பலமாக இருக்கிற தேசாந்தரகமனம் ராஜ்யாபிஷேகம் சிரச்சேதம் முதலியவைகள். தன் தேஹத்தாலேயே அனுபவிக்கத் தகாதவைகளாக இருப்பதால் படுத்திருக்கிற தேஹத்திற்கு ஸமானமான ரூபம் அவயவங்களின் அமைப்பு இவைகளுடன் கூடிய வேறு தேகத்தின் ஸ்ருஷ்டியினால் பொருத்தமுள்ளதாக ஆகின்றன.

ச்ருதப்ரகாசிகை—

ஏவம் என்று. ஸர்வஸ்ய ஸர்வத்வேபி வ்யவஹார வ்யவஸ்திதி: - ஜ்ஞானம் உபாதானம் முதலிய நியமம். இவ்வண்ணம் பூயஸ்த்வ ஸாகல்ய வைகல்யங்களாலென்று அர்த்தம். ஸாதாரணாகார க்ரஹணம, பேதாக்ரஹ தோஷம், அத்ருஷ்டம் இவைகள் எல்லாவாதிகளாலும் ஒப்புக்கொள்ளத்தக்கவைகள், அவ்வளவினாலே ப்ரவ்ருத்தி முதலியவற்றுக்கு ஸம்பவமிருக்கையிலுங்கூட அதிக கல்பனையில் அன்யர்களுக்கு கௌரவம் ஏற்படும். அதில் இஷ்டமான ரூபரூபிகளின் தொடர்ச்சியான பாநத்தால் ப்ரவ்ருத்தி த்வேஷிக்கப்பட்ட ரூபரூபிகளின் நிரந்தர பாநத்தால் நிவ்ருத்தி. ரூபம் ரூபி இவ்விரண்டுகளுக்கும் வேறு தர்மியினிடமிருந்தலுக்கு விரோதியான வேறு தர்மத்தாலாச்ரயிக்கப்பட்டிருத்தலின் பாநவிரஹத்தால் பாநம் நிரந்தரபாநம், அதனாலேயே பேதத்தின் க்ரஹணமில்லாமையால் ப்ரவ்ருத்தி சொல்லப்படுமேயானால் ரஜ்ஜு ஸர்ப்பங்களின். பேதத்தை க்ரஹிக்காமலிருக்கும ஸமயத்தில் நிவ்ருத்தி உண்டாகக்கூடாது என்கிற இது முதலிய கேள்விகள் அவகாசத்தை அடைகிறதில்லை. ஏது அன்ய

---

§ அபவரகம்—தாழ்வாரம்.

மதத்தில் வேறுக்யாதிக்கு ஹேதுவாக ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறதோ, அதே நமக்கும் ப்ரவ்ருத்தி முதலியவற்றுக்கு ஹேது. ப்ராபாகரர்களால் மந்த்ரார்த்தவாதங்களுடைய அர்த்தங்களின் தாத்பர்யத்தை ஒப்புக்கொள்ளாமையால் பேதக்ரஹமொன்றினாலேயே நிர்வாஹம் செய்யப்பட்டது. இந்த இடத்திலோவென்றால், மந்த்ரார்த்த வாதங்களுக்கு ப்ரதீயமானமான அர்த்தத்தில் ப்ராமாண்யத்தை ஒப்புக்கொள்வதால் உபநிஷத் பாகங்களால் அறியப்பட்டிருக்கிற த்ருவ்ருத்கரணத்தையும் அதனால் காண்பிக்கப்பட்டிருக்கிற பஞ்சீகரணத்தையும் ஈச்வரனால் செய்யப்படும் ஸ்ருஷ்டி விசேஷத்தையும் அவ்வாறே ப்ரதிநிதி ந்யாயத்தையும் பேதத்தினது அக்ரஹத்தையும் ஆதாரமாகக்கொண்டு நிர்வாஹம் செய்யப்பட்டிருக்கிறதென்று வைஷம்யம். அந்த இடத்தில் ஒரு பூதத்தில் வேறு பூதப்ரமமுண்டாவதற்கு த்ருவ்ருத்கரணத்தால் நிர்வாஹம் ஸ்பஷ்டமாக செய்யப்பட்டிருக்கிறது. துல்யமான வஸ்துவினிடம் துல்யமான வேறுவஸ்து ப்ரமமுண்டாவதற்கோவென்றால் நிர்வாஹமானது ப்ரதிநிதி ந்யாயத்தினாலேயே செய்யப்பட்டிருக்கிறது. த்ருவ்ருத்கரணத்தினாலோவென்றால் உபயோகமில்லை என்று சில ஆசார்யர்கள். த்ருவ்ருத்கரணமும் விஜாதீயமான பூதங்களாலாரம்பிக்கப்பட்டிருக்கிற ஸத்ருசவஸ்துவில் விஜாதீய பூதங்களாலாரம்பிக்கப்பட்டிருக்கிறஸத்ருசாந்தர வஸ்து ப்ரம நிர்வாஹத்திற்கு உபாயமென்றும் ஸம்ப்ரதாயம். ச்ருதிகளாலும் ஸ்ம்ருதிகளாலும் ஸர்வஸ்ய என்கிற பதத்தை தொடக்கத்தில் கொண்டிருக்கிற க்ரந்தங்களின் ஸ்வாரஸ்யத்தால் அவ்வாறு அறியப்படுகிறது. ஆதலால் த்ருவ்ருத்கரண ச்ரவணத்தாலும் பஞ்சீகரண ஸ்மரணத்தாலும் ப்ரதிநிதிந்யாயத்தாலும் ஸத்ருச வஸ்துவில் ஸத்ருசாந்தர வஸ்து புத்தியின் யாதார்த்யம் நிரூபிக்கப்படுகிறது. அறிஞரே! ஸத்ருசவஸ்துவில் ஸத்ருசமான வேறுவஸ்து ப்ரமமுண்டாவதற்கு எவ்வாறு த்ருவ்ருத்கரணத்தான் உபயோகம்? த்ருவ்ருத்கரணத்திற்கு முந்தி ரஜதம் முதலிய வஸ்துக்களின் அவயவங்களில்லை யன்றோ—அப்படி இருந்தாலன்றோ த்ருவ்ருத்கரணமடியாக சிப்பியில் ரஜதம் முதலிய வஸ்துக்களின் சேர்க்கை உண்டாகலாம், அதோ இல்லை, த்ருவ்ருத்கரணம் அண்ட ஸ்ருஷ்டிக்கு முந்தியதாக இருப்பதால். சொல்லப்படுகிறது. பாஞ்ச பௌதிகங்களான பதார்த்தங்களில்கூட ஒரு கார்யமானது பரிணாம விசேஷமுள்ளதும் ப்ராசுர்யத்துடன் கூடியதுமான ஒவ்வொரு பூதத்தால் ஆரம்பிக்கப்படுகிறது. அதில் எந்த கார்யமானது எவ்வித பரிணாமமுள்ள எந்த பூதத்தின் அதிகாம்சமுள்ளதோ அவ்விதமான பரிணாமமுள்ள அந்த பூதமானது வேறு கார்யங்களிலுங்கூட இருப்பதால் அவைகளில் அப்படிப்பட்ட அந்த பூதத்தினுடைய அதிகாம்சங்களுள்ள அந்த கார்ய விஷயமானபுத்தி உபபன்னமாகிறது. என்றாலும் அவாந்தரமான ஆகார விசேஷமானது த்ருவ்ருத்கரணதசையிலில்லை. அப்படி இருந்தபோதிலும் த்ருவ்ருத்கரணத்தினால் கார்யத்தில் அனுப்ரவிஷ்டமான அந்த பூதத்திற்கு கார்யாந்தரங்களின் அவயவங்களுக்கு ஸமானமான பரிணாமம் ஸம்பவிப்பதால் வேறு பௌதிகத்தில் உண்டாகிற வேறு பௌதிக புத்திக்கு யாதார்த்தயம் பொருந்துகிறது. அவ்வாறே சிப்பியில் உள்ளடங்கி இருக்கிறதும் சுக்லபாஸ்வர ரூபமாக பரிணமித்திருக்கிறதுமான தேஜோம்சத்திற்கு ரஜதத்தோடு நன்கு ஒற்றுமை இருப்பதால் ரஜதாவயவங்களோடு சேர்ந்திருத்தல் த்ருவ்ருத்கரணத்தினால் பொருத்தமுள்ளதாக ஆகிறது. ரஜதம் முதலிய வஸ்துக்கள் அவ்விதமான ஆகாரத்துடன்கூடிய அந்தந்த பூதவிசேஷங்களோடு கூடியவைகளாகவே யன்றோ நன்கு காணப்படுகின்றன. அதனால் சிப்பிமுதலிய வஸ்துக்களித்தில் வெள்ளி முதலிய வஸ்துக்களுடைய அவயவங்களின் ஸத்பாவும் இசைவுற்றதாக ஆகிறது. ஐயா! சிப்பி முதலிய வஸ்துக்களில் அறியப்படுகிற

அவயவங்களுக்கு எவ்வாறு வெள்ளி முதலிய வஸ்துக்களின் அவயவமாக இருத்தல் ஸம்பவிக்கும்? அந்த சிப்பியிலுள்ள அவயவங்கள் வெள்ளி முதலிய வஸ்துக்களிடத்திலிருந்து இழுகதுக்கொண்டு வந்து வைக்கப்பட்டதல்லவன்றோ. உத்தரம் கூறப்படுகிறது. சிப்பியிலிருக்கும் அந்த அவயவங்களுக்கு ஸம்ப்ரதிபன்னமான வெள்ளி முதலிய வஸ்துக்களின் அவயவங்களுடன் மிக்க ஒற்றுமையுள்ள ஆகாரத்தோடுகூடி இருத்தலே ரஜதாத்யவயவத்வமே ஒழிய ரஜதம்முதலிய வஸ்துக்களிடத்திலிருந்து எடுத்துக்கொண்டு வந்து வைக்கப்பட்டிருத்தலல்ல ஸம்ப்ரதிபன்னமான வெள்ளி முதலிய வஸ்துக்களின் அவயவங்களுக்குப்போல. கடையிலிருக்கிற வெள்ளி முதலிய பதார்த்தங்களின் அவயவங்கள் வேறு ஒரு வெள்ளி முதலிய வஸ்துக்களினிடத்தினின்றுகொண்டு வந்து வைக்கப்பட்டவைகளல்லவன்றோ-இவ்வண்ணமாகவே பூதிகை முதலிய கொடிகளிடங்களில் அறியப்படாநின்ற ஸோமலதை முதலியவற்றின் அவயவங்களுக்கும் ஸோமாத்யவயவத்வமாவது ஸம்ப்ரதிபன்னமான ஸோமலதை முதலியவற்றின் அவயவங்களுக்குமிக்க ஒற்றுமையுள்ளதாக இருத்தலே. அதுவும் மிக்க ஸ்பஷ்டமான ப்ரதீதியினால் ஸித்தம் அபாதிதமாகவுமிருக்கிறது. சிப்பித்துண்டு பூதிகைமுதலியவைகளில் முறையே வெள்ளி ஸோலதை முதலியவற்றின் ஒற்றுமை இல்லையென்று பாதகப்ரத்யயமானது உண்டாகிறதில்லையன்றோ. அந்த ரஜதாவயவங்கள் விஜாதீயங்களான சிப்பியின் அவயவங்களின் ப்ராசுர்யத்தால் அதிக பாலில் கலந்த ஸ்வல்பஜலம்போலவும் அதிக ஸ்வர்ணத்தில் கலந்த ஸ்வல்ப வெள்ளி போலவும் கார்யகரங்களாக ஆகிறதில்லை. ஐயா! இங்ஙனமாகில் சிப்பி என்று அபிமானிக்கபட்டிருக்கிற சிப்பிக்குவியலுக்கு சிப்பித்தன்மையானது புருஷம்ருகத்தில் புருஷத்வம்போல விஜாதீயங்களான அவயவங்களின் சேர்க்கையினால் பரிபூர்ணமல்லாததாக ஆகவேண்டும். புருஷ ம்ருகத்வமாவது புருஷத்வம் ம்ருகத்வம் இவைகளைக்காட்டிலும் விலக்ஷணமான வேறு ஜாதியே ஒழிய குறைவுள்ளபுருஷத்வமுமன்று ம்ருகத்வமுமன்று என்றுசொல்லப்படுமேயானால் அப்பொழுது சுக்தி என்று அபிமானிக்கப்பட்டிருக்கிற சுக்தி ஸமூஹத்திற்கும் சுக்தித்வம் ரஜதத்வம் என்கிற ஜாதிகளைக்காட்டிலும் விலக்ஷணமான வேறு ஜாதியோடுகூடி இருத்தல் உண்டாகலாம். அங்ஙனமான பிறகு புருஷம்ருகத்தில் புருஷவ்யவஹாரம்போல சிப்பி என்கிற வ்யவஹாரமானது முக்கியமல்லாததாக ஆகலாம். விஜாதீய வஸ்துவின் அவயவங்களோடு சேர்க்கை பெற்றதும் ப்ரமத்துக்கு அதிஷ்டானமாகவுமிருக்கிற சுக்திக்கு புருஷனோடு புருஷம்ருகத்துக்குப்போல வேறு சுக்தியோடு மிக்கநெருங்கின ஒற்றுமை இல்லாமையால். ஸௌஸாத்ருச்யமிருந்தாலன்றோ அந்தந்த வ்யவஹாரங்களுக்கு முக்யத்வம் ஏற்படுகிறது. அதில்லாமையாலன்றோ 'ஸிம்ஹோ தேவதத்த:' என்கிறவ்யவஹாரம் அமுக்கியமாக ஆகிறது. சுக்தியினுடைய அவயவங்களின் ப்ராசுர்யத்தால்சுக்தித்வம் புஷ்கலமாக இருக்கிறது. அதனாலேயே அந்த சுக்திஎன்கிற வ்யவஹாரமும் முக்கியமென்று சொல்லப்படுமேயானால் அப்பொழுது ரஜதாம்சம் ப்rசுரமாக இல்லாமையினாலேயே ரஜதத்வமில்லை என்கிற ரஜதபுத்திக்கு யாதார்த்யம் உண்டாகாமல் போகட்டும். சொல்லப்படுகிறது. புருஷத்வத்திற்குப்போல சுக்தித்வத்திற்குஅவயவஸங்காத விசேஷத்தில் இருப்பில்லாமையால் அணுப்ரமாணமுள்ள சுக்தியினிடத்திலும் சுக்தித்வம் புஷ்கலமாக இருக்கிறது. புருஷத்வத்திற்கோ வென்றால் ஸங்காத விசேஷத்தில் நிலைபெற்றிருக்கும் ஸ்வபாவமிருப்பதால் ஸங்காதத்திற்கு வைகல்ய முண்டாகில் அந்த புருஷத்வத்திற்கு அபௌஷ்கல்யம். அல்லது அந்த இடத்தில் வேறு ஜாதி இருக்கலாம்—சுக்தித்வமோ வென்றால் அவ்வாறல்லவென்று சொல்லப்பட்டது. ஆகையால் சுக்தியின்

அவயவங்களில் சுக்தித்வமும் அந்த சுக்தி வ்யவஹாரமும் உபபன்னங்களாக ஆகின்றன. அந்த இடத்தில் விருத்த ஜாதியின் ஸம்பந்தமில்லாமையால், சுக்தி என்று நிச்சயிக்கப்பட்டிருக்கிற ஸங்காதகதிலோவென்றால் சுக்தியின் அவயவங்களுடைய ப்ராசுர்யத்தால் அர்த்த க்ரியையின் வ்யவஸ்தையும் சப்த வ்யவஸ்தையும் பொருத்தமுள்ளதாக ஆகின்றன. அதிகமான சிப்பியின் அம்சங்களால் கலப்பட்டிருப்பதுபற்றி ரஜதாம்சம் க்ரஹிக்கப்படாததால் க்ரஹிக்கப்பட்டிருக்கிற சுக்தியைச் சொல்லவேண்டுமென்கிற இச்சையினால் அந்த சுக்தி விஷயமாக ப்ரயோகிக்கப்பட்டிருக்கிறசப்தமானது முக்கியமென்று உபபன்னமாகிறது. ப்ரமத்திற்கு அதிஷ்டானமாக இருக்கிற சுக்திக்கு விஜாதியமான ரஜதத்தின் அவயவங்களோடு சேர்க்கை உண்டாயிருப்பதால் வேறு சுக்தியோடு ஸௌஸாத்ருச்யத்திற்கு ஹானி ஏற்படுகிறது. சுக்த்யந்தரத்திற்கும் அல்பரஜதாம்சத்தோடு கலந்திருப்பதினால் ரஜதாம்சத்தின் *திரோதானத்தால் சுக்த்யந்தர ஸௌஸாத்ருச்ய ப்ரதீதியானது உபபன்னமாகிறது. சிப்பியின் அவயவங்களுக்கோவென்றால் பரஸ்பரம ஸௌஸாத்ருச்யமானது மிக்கப் பொருத்தமுள்ளது. கூறப்பட்டுள்ளரீதியினால் ரஜதாம்சத்திற்கும் ரஜதத்வம் முக்கியம். அந்த அம்சத்தில் விருத்தஜாதி ஸம்பந்தமில்லாமையால் வேறு ரஜதத்தின் அவயவங்களுடைய ஸௌஸாத்ருச்யமும் ப்ரமமுண்டாகிறதசையில் க்ரஹிக்கப்படாநின்ற அந்த ரஜதாம்சத்திற்கு ப்ரசுர சுக்தி க்ரஹணத்தால் மறைக்கப்பட்டிருத்தலில்லாமையால் ரஜதாவயவ ஸௌஸாத்ருச்ய ப்ரதீதியானது பொருத்தமுள்ளதாக ஆகிறது. அதனாலேயே ரஜதவ்யவஹாரமும் முக்கியம். ஆகலால் சுக்திமுதலியதில் ரஜதம் முதலிய வஸ்து விஷயகபுத்திக்கு யாதார்த்யம் பொருத்தமுள்ளது— அல்பமாக இருக்கிற ரஜதத்தை அதிகமென்று க்ரஹிக்கும் பக்ஷத்தில் அந்யதாக்யாதி ப்ரஸங்கிக்குமென்று சொல்லப்படுமேயானால் அல்ல. ப்ராசுர்ய க்ரஹணமில்லாமையால். அல்பத்வத்தின் அக்ரஹணமேயன்றோ அந்த இடத்திலிருக்கிறது. ப்ராசுர்யமானது ப்ரதியோகியை அபேக்ஷித்திருப்பதாலும் ப்ரதியோகியாக இருக்கிற சுக்தியின் க்ரஹணமில்லாமையால் அந்த ப்ராசுர்ய க்ரஹணத்தில் ப்ரவ்ருத்தி ஸம்பவியாமையாலும் சுக்தியைவிட ரஜதாம்சத்தின் ப்ராசுர்யம் க்ரஹிக்கப்படவில்லை என்பதனால் அந்யதாக்யாதி இல்லை. அய்யா! அல்பத்வத்தின் க்ரஹணாபாவமானது ப்ரசுரத்வக்ரஹணமாக ஆகலாம். உன்னுடைய மதத்தில் அபாவம் பாவாந்தரமன்றோ. அதனால் அந்யதாக்யாதி என்று சொல்லப்படுமேயானால் அல்ல- அல்பத்வாக்ரஹணமானது ப்ராசுர்யக்ரஹணமல்ல. பின்னேயோ அல்பத்வ விஷயஜ்ஞான ஸங்கோசமென்பதனால் அந்யதாக்ரஹமில்லாமையால்—'நேதம் ரஜதம், இது ரஜதமல்ல வென்கிற இடத்தில் நஞ்ஞுக்கு என்ன பொருளென்று வினவப்படுமேயானால் சுக்தித்வமென்றே சொல்லுகிறோம். எந்த ஆகாரக்ரஹணத்தினால் முந்தின ஜ்ஞானத்திலுண்டான ப்ரவ்ருத்திக்கோ நிவ்ருத்திக்கோ நிவாரணம் உண்டாகிறதோ அந்த ஆகாரமே நஞ்ஞுக்கு அர்த்தம். அந்த ஆகாரமானது ப்ரதியோகியை அபேக்ஷிக்கிற 'நேதம் ரஜதம்' இது முதலிய சப்தங்களாலும் அந்த * ப்ரதியோகியை அபேக்ஷியாமலிருக்கிற சுக்தி முதலிய சப்தங்களாலும் வ்யவஹரிக்கப்படுகிறது. இவ்வண்ணம் பூதத்தில் வேறுபூதங்களிருப்பதாலும் ஸமானவஸ்துவினிடம் ஸமானமான வேறு வஸ்துக்களிருப்பதாலும் சுக்தி ரூப்யாதிபுத்திக்கு யாதார்த்யம் உபபாதிக்கப்பட்டது. ஸ்வப்நகாலத்தில் காணப்படுகிற வஸ்துக்களுக்கு ஸமானமானவஸ்துவினிடத்தில் ஸமானமான வேறுவஸ்துவின் $ ஸத்பாவமோ பூத

---

* ப்ரதியோகி—ஒரு வஸ்துவினால் தவறாமல் அபேக்ஷிக்கப்படுகிற ப்ரதி ஸம்பந்தமுள்ள வஸ்து. $ ஸத்பாவம்—இருப்பு.

த்தில் வேறு பூதத்தின் ஸத்பாவமோ சொல்வதற்கு முடியாதன்றோ வென்று சொல்ல ப்படுமேயாகில் சொல்லுகிறார்—ஸ்வப்நேச என்று. எவ்வாறு சில வஸ்துக்கள் ஸுக ரூபங்களாகவும் சில வஸ்துக்கள் துக்கரூபங்களாகவும் இருக்கின்றனவென்று கேட்கப்ப டுமேயாகில் சொல்லுகிறார—புண்யபாபாநுகுணம் என்று. பகவானை- உலகத்தை ஸ்ருஷ்டிக்கிற பரம புருஷனாலேயே, அவனையல்லாமல் மற்றவர்களாலும் அறியப்படலாம். எப்பொழுதுமறியப்படலாம் என்று கேட்கில் சொல்லுகிறார்— தத்தத்என்று. எவ்வாறு நேரில் கண்டனுபவிக்கப்பட்டிருக்கிற வஸ்துக்களைவிட வேறுபாடுள்ளவைகளாக இருக் கின்றனவென்று கேட்கப்படுமேயாகில் சொல்லுகிறார்— ததாபூதா: என்று. ச்ருதி யைக்காட்டுகிறார்—ததாஹீ என்று. இந்த வாக்யத்திற்கு ஸ்வப்நவிஷயத்வம் எப்படி ஸம்பவிக்கிறதென்று ஸந்தேஹமவரின் 'ஸ்வப்நம் பஶ்யதி' என்கிற பூர்வ வாக்கியத்தை நினைக்கும்படி செய்விக்கிறார்—ஸ்வப்நவிஷய என்று. ரதயோகா: - குதிரை முதலிய வைகள், ந பவந்தி - ஜாகரதசையில் பார்க்கப்பட்டிருக்கிற வஸ்துக்களுக்கு ஸமானங்க ளாக இருக்கிறதில்லை என்று அர்த்தம். ஆநந்தா:முத:ப்ரமுத: என்று. §ஸாதாரணமான ♆ போக்ய வஸ்துக்களைப்பார்ப்பதினாலுண்டாகிற ப்ரீதியானது முத் என்று சொல்ல ப்படுகிறது. $ அஸாதாரண போக்யத்வ ஜ்ஞாநத்தாலுண்டாகிற ப்ரீதியானது ப்ர முத் என்று சொல்லப்படுகிறது. * விநியோகத்தாலுண்டாகிற ப்ரீதியானது ஆநந்தம். அன்றிக்கே. † விலக்ஷணமான விஷயத்தைப் பார்ப்பதனாலுண்டாகிற ப்ரீதியானது முத், அதற்கு தன்னுடைய விநியோகத்திற்குத்தக்கதாக இருந்தலென்கிற ஜ்ஞாநத்தி னாலுண்டாகிற ப்ரீதியானது ப்ரமுத், விநியோகத்தாலுண்டாகிற ப்ரீதியானது ஆநந்தம் என்று. இந்த சப்தங்களால் விஷயங்கள் ‡ லக்ஷணாவ்ருத்தியினால் அறிவிக்கப்படுகின்றன. இவைகளுக்கு முக்கிய வ்ருத்தியினால் அர்த்தபோதகத்வத்தை ஒப்புக்கொண்டால் ஜாகர தசையில் நேரில் கண்டனுபவிக்கப்பட்டிருக்கிற வஸ்துக்களுக்கு ஸமானங்களாக இரு த்தல் என்பதுபொருந்தாதலால். 'வேசந்தா:' க்ருஹங்கள் அல்லது சிறுகுட்டைகள்என்று பொருள். எவ்வாறு பொருந்துகிறதென்று கேட்க்கப்படுமேயானால் கூறுகிறார்—ஸஹி கர்த்தாஎன்று. எல்லாசக்திகளும் வாய்ந்தவனன்றோ கர்த்தா-எதுபொருந்தாமல் போகு மென்று கருத்து. தத் என்கிற சப்தமானது ப்ரக்ருதனான ஜீவனை போதிக்கிறதில்லை. பின்னையோ ப்ரஸித்தமான பரமாத்மாவை உணர்த்துகிறது. வ்யாகாதம் ¶ பௌந ருக்த்யம் என்கிற தோஷங்கள் வருகிறதென்கிற சங்கையை பரிஹரிப்பதற்காக இந்த ச்ருதிக்கு அர்த்தம் கூறுகிறார்—யத்யபிஸகல என்று. ஸ்ருஜதே என்கிற பதவிரோ தபரிஹாரத்தின் பொருட்டு ந பவந்தி என்கிற நிஷேதத்திற்கு ஸங்கோசமன்றோ உத்

---

§ ஸாதாரணம்—பொதுவானது. ♆ போக்யம்—அனுபவிக்கத்தக்கது.
$ விநியோகம்—உபயோகம். * அஸாதாரணம்—பொதுவாக இல்லாமல் ஒருவனுக்கே உரித்ததாகத் தனித்திருக்கிற வஸ்து.
† விலக்ஷணம் —வேறுபாடுள்ளது.
‡ லக்ஷணாவ்ருத்தி—சக்யஸம்பந்தத்தால் வேறு அர்த்தத்தை உணர்த்தும் சப்தசக்தி. உதாஹரணம்-கங்கையில் இடைச்சேரி என்கிற ப்ரயோகம். இந்த இடத்தில் கங்கா என்கிற பதமானது ப்ரவாஹமென்கிற அர்த்தத்தை உணர்த்துவதில் பாததோஷ ள்ளதாக இருப்பதால் ப்ரவாஹரூபமான சக்யார்த்தத்திற்கு ஸமீபித்திருத்தலென்கிற ஸம்பந்தத்தை முன்னிட்டு கங்காபதம் கங்காதீரத்திலிருக்கிற இடைச்சேரியை உணர் த்துகிறது. ¶ பௌநருக்த்யம்—சொன்னதை மறுபடியும் சொல்லுதல்.

ஸர்காபவாத நியாயத்தால் செய்யப்பட்டது. ஆதலால் வருங்காலத்தில் ஸ்திரமாக இருத்தல் வேறு புருஷனால் அனுபவிக்கத்தக்கதாக இருத்தல் என்கிற ஆகாரவிஷயமாக நிஷேதமேயொழிய அக்காலத்திலுள்ள அந்த புருஷனால் மாத்திரம் அனுபவிக்கத்தக்கதாக இருத்தலால் ஸ்வரூப நிஷேதமில்லை. ஆதலால் ஜாகராவஸ்தையிலனுபவிக்கப்பட்ட வஸ்துக்களுக்கு ஸமானங்களாகவும் அனேக புருஷர்களாலனுபவிக்கத்தக்கவைகளாகவும் காலாந்தரத்தில் ஸ்திரங்களாக இருப்பவைகளாகவும் ஆகிறதுகளில்லை என்று அர்த்தம். 'ஸஹிகர்த்தா' என்கிற வாக்கிய கண்டத்தை கூறப்பட்டிருக்கிற அர்த்தத்திற்கு உபபாதகமாக வியாக்கியானம் செய்கிறார்—தஸ்ய என்று. ஸ்வப்நகாலத்திலுள்ள வஸ்துக்களின் ஸ்ருஷ்டியானது ஈஸ்வரனுடையதே என்பதை வெளிப்படுத்துவதற்காக வேறு ச்ருதியை எடுத்துக்கூறுகிறார்— யஏஷ ஸுப்தேஷு என்று. ஸ்வப்நகாலத்திலுள்ள பதார்த்தங்கள் பரமார்த்தங்களென்பதை பூர்வபக்ஷமாக்கி ஸூத்ரகாரரால் அபாரமார்த்த்யம் ஸித்தாந்தம் செய்யப்பட்டிருக்கிறதென்கிற வ்யாக்கியாதாக்களுடைய மதபேதத்தால் இந்த ச்ருதிக்கு இது அர்த்தமல்லவென்கிற சங்கையைவிலக்குவதற்காக சொல்லப்பட்டிருக்கிற அர்த்தமானது ஸூத்ரகாரருக்கு ஸம்மதமென்பதைக்கூறுகிறார்—ஸூத்ர என்று. ஸூத்ரார்த்தத்தைச்சொல்லுகிறார்—ஸ்வாப்நேஷு என்று. ஜீவனுக்குங்கூட ஸவப்நதசையில் ஸத்ய ஸங்கல்பத்வம் முதலிய குணங்களின் ஆவிர்பாவமானது கல்பிக்கப்படுகிறதென்று சொல்லப்படுமேயானால் சொல்லுகிறார்- தஸ்மிந்லோகா: என்று. எது * அநந்யதாஸித்தமோ அது தான் கல்பகம். பரமாத்மலிங்கம் கேழ்க்கப்படுவதனால். ஸ்வப்நகாலத்திலனுபவிக்கப்படுகிற வஸ்துக்களின் ஸ்ருஷ்டியானது பரமாத்மாவினாலேயே செய்யப்பட்டிருக்கவேண்டுமென்பது பொருத்தமுள்ளதாக இருப்பதால் ஜீவனுக்கு ஸ்வரூபாவிர்ப்பாவம் கல்பிக்கப்படுகிறதில்லை என்று அர்த்தம். தாழ்வாரத்தில் படுத்திருக்கிறவனுக்கு தேசாந்தரகமனம் முதலியசெய்கைகள் யதார்த்தங்களாக ஆகின்றனவென்பது எவ்வாறு பொருத்தமுள்ளதாக ஆகுமென்று கேட்கப்படுமேயாகில் சொல்லுகிறார்— அபவாரகாதிஷு என்று. தனக்கு துக்கத்தை உண்டுபண்ணக்கூடிய வஸ்துக்களைத்தானே உண்டுபண்ணிக்கொள்வதென்பது பொருந்தாததால் அப்பொழுது ஜீவனுக்கு ஸ்வரூபாவிர்ப்பாவமானது கல்பிக்கப்படுகிறதில்லை என்பதும் அர்த்தத்தால் ஸித்திக்கிறது. தலை வெட்டுதல் முதலியவை சொல்லப்பட்டிருப்பதால். ஸமானமான வேறு தேஹத்தில் படுத்திருக்கிற தேஹவ்யவஹாரமானது இரண்டுக்குமுள்ள பேதத்தை க்ரஹியாமையால் உண்டுபண்ணப்பட்டிருக்கிறதே ஒழிய அந்யதாக்யாதியினால் செய்யப்பட்டதல்ல. இவ்வண்ணம் ஸ்வப்நாவஸ்தையில் தோன்றுகிற பதார்த்தங்களிடத்தில் அந்தந்த புருஷனாலனுபவிக்கத்தக்கதாக இருத்தல், அக்காலத்தோடு முடிவுள்ளதாக இருத்தல், என்கிற பேதக்ரஹமில்லாமையால் ப்ரவ்ருத்தி முதலியது ஸம்பவிக்கிறது.

[illegible]

---

* அநந்யதாஸித்தம்—வேறுவிதத்தால் நிலைபெறாதது.

𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌸𑍍𑌥𑍈𑌰𑍍𑌨 𑌗𑍃𑌹𑍍𑌯𑌤𑍇 । 𑌪𑌿𑌤𑍍𑌤𑍋𑌪𑌹𑌤𑍇𑌨 𑌤𑍁 𑌸𑍍𑌵𑌨𑌯𑌨𑌨𑌿𑌷𑍍𑌠𑌤𑌯𑌾𑌽𑌤𑌿𑌸𑌾𑌮𑍀𑌪𑍍𑌯𑌾𑌤𑍍 𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌮𑌪𑌿 𑌗𑍃𑌹𑍍𑌯𑌤𑍇 । 𑌤𑌦𑍍𑌗𑍍𑌰𑌹𑌣𑌜𑌨𑌿𑌤𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌸𑌚𑌿𑌵𑌨𑌯𑌨𑌰𑌶𑍍𑌮𑌿𑌭𑌿𑌰𑍍𑌦𑍂𑌰𑌸𑍍𑌥𑌮𑌪𑌿 𑌗𑍃𑌹𑍍𑌯𑌤𑍇 ॥

𑌜𑌪𑌾𑌕𑍁𑌸𑍁𑌮𑌸𑌮𑍀𑌪𑌵𑌰𑍍𑌤𑌿𑌸𑍍𑌫𑌟𑌿𑌕𑌮𑌣𑌿𑌰𑌪𑌿 𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌭𑌾𑌭𑌿𑌭𑍂𑌤𑌤𑌯𑌾 𑌰𑌕𑍍𑌤 𑌇𑌤𑌿 𑌗𑍃𑌹𑍍𑌯𑌤𑍇 । 𑌜𑌪𑌾𑌕𑍁𑌸𑍁𑌮𑌪𑍍𑌰𑌭𑌾 𑌵𑌿𑌤𑌤𑌾𑌪𑌿 𑌸𑍍𑌵𑌚𑍍𑌛𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌤𑌯𑌾 𑌸𑍍𑌫𑍁𑌟𑌤𑌰𑌮𑍁𑌪𑌲𑌭𑍍𑌯𑌤 𑌇𑌤𑍍𑌯𑍁𑌪𑌲𑌬𑍍𑌧𑌿𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌾𑌪𑌿𑌤𑌮𑌿𑌦𑌮𑍍 । 𑌮𑌰𑍀𑌚𑌿𑌕𑌾𑌜𑌲𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌽𑌪𑌿 𑌤𑍇𑌜𑌃𑌪𑍃𑌥𑌿𑌵𑍍𑌯𑍋𑌰𑌬𑍍𑌭𑌾𑌗𑌸𑍍𑌯 𑌵𑌿𑌦𑍍𑌯𑌮𑌾𑌨𑌤𑍍𑌵𑌾𑌦𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌦𑍋𑌷𑍇𑌣 𑌤𑍇𑌜𑌃𑌪𑍃𑌥𑌿𑌵𑍍𑌯𑍋𑌰𑌗𑍍𑌰𑌹𑌣𑌾𑌦𑌦𑍃𑌷𑍍𑌟𑌵𑌶𑌾𑌚𑍍𑌚𑌾𑌪𑌾𑌂 𑌗𑍍𑌰𑌹𑌣𑌾𑌦𑍍𑌯𑌾𑌥𑌾𑌰𑍍𑌥𑍍𑌯𑌮𑍍 । 𑌅𑌲𑌾𑌤𑌚𑌕𑍍𑌰𑍇𑌽𑌪𑍍𑌯𑌲𑌾𑌤𑌸𑍍𑌯 𑌦𑍍𑌰𑍁𑌤𑌤𑌰𑌗𑌮𑌨𑍇𑌨 𑌸𑌰𑍍𑌵𑌦𑍇𑌶𑌸𑌂𑌯𑍋𑌗𑌾𑌦𑌨𑍍𑌤𑌰𑌾𑌲𑌾𑌗𑍍𑌰𑌹𑌣𑌾𑌚𑍍𑌚𑌕𑍍𑌰𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑍁𑌪𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 । 𑌚𑌕𑍍𑌰𑌬𑍁𑌦𑍍𑌧𑌾𑌵𑌪𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑌾𑌲𑌾𑌗𑍍𑌰𑌹𑌣𑌵𑌦𑌲𑌾𑌤𑌸𑍍𑌯 𑌤𑌤𑍍𑌤𑌦𑍍𑌦𑍇𑌶𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌸𑍍𑌯 𑌗𑍍𑌰𑌹𑌣𑌮𑍇𑌵 । 𑌕𑍍𑌵𑌚𑌿𑌦𑌨𑍍𑌤𑌰𑌾𑌲𑌾𑌭𑌾𑌵𑌾𑌦𑌨𑍍𑌤𑌰𑌾𑌲𑌾𑌗𑍍𑌰𑌹𑌣𑌂, 𑌕𑍍𑌵𑌚𑌿𑌚𑍍𑌛𑍈𑌘𑍍𑌰𑍍𑌯𑌾𑌦𑌗𑍍𑌰𑌹𑌣𑌮𑌿𑌤𑌿 𑌵𑌿𑌶𑍇𑌷𑌃 । 𑌅𑌤𑌸𑍍𑌤𑌦𑌪𑌿 𑌯𑌥𑌾𑌰𑍍𑌥𑌮𑍍 । 𑌦𑌰𑍍𑌪𑌣𑌾𑌦𑌿𑌷𑍁 𑌨𑌿𑌜𑌮𑍁𑌖𑌾𑌦𑌿𑌪𑍍𑌰𑌤𑍀𑌤𑌿𑌰𑌪𑌿 𑌯𑌥𑌾𑌰𑍍𑌥𑌾 । 𑌦𑌰𑍍𑌪𑌣𑌾𑌦𑌿𑌪𑍍𑌰𑌤𑌿𑌹𑌤𑌗𑌤𑌯𑍋 𑌹𑌿 𑌨𑌯𑌨𑌰𑌶𑍍𑌮𑌯𑍋 𑌦𑌰𑍍𑌪𑌣𑌾𑌦𑌿𑌦𑍇𑌶𑌗𑍍𑌰𑌹𑌣𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌂 𑌨𑌿𑌜𑌮𑍁𑌖𑌾𑌦𑌿 𑌗𑍃𑌹𑍍𑌣𑌨𑍍𑌤𑌿 । 𑌤𑌤𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌤𑌿𑌶𑍈𑌘𑍍𑌰𑍍𑌯𑌾𑌦𑍍𑌦𑌰𑍍𑌪𑌣𑌦𑍇𑌶𑌾𑌗𑍍𑌰𑌹𑌣𑌾𑌤𑍍𑌤𑌥𑌾𑌪𑍍𑌰𑌤𑍀𑌤𑌿𑌃 ॥

𑌦𑌿𑌙𑍍𑌮𑍋𑌹𑍇𑌽𑌪𑌿 𑌦𑌿𑌗𑌨𑍍𑌤𑌰𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌯𑌾𑌂 𑌦𑌿𑌶𑌿 𑌵𑌿𑌦𑍍𑌯𑌮𑌾𑌨𑌤𑍍𑌵𑌾𑌦𑌦𑍃𑌷𑍍𑌟𑌵𑌶𑍇𑌨 𑌤𑌦𑍍𑌦𑌿𑌗𑌂𑌶𑌵𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑍋 𑌦𑌿𑌗𑌨𑍍𑌤𑌰𑌾𑌂𑌶𑍋 𑌗𑍃𑌹𑍍𑌯𑌤𑍇 । 𑌅𑌤𑍋 𑌦𑌿𑌗𑌨𑍍𑌤𑌰𑌪𑍍𑌰𑌤𑍀𑌤𑌿𑌰𑍍𑌯𑌥𑌾𑌰𑍍𑌥𑍈𑌵 ।

ஶ்ரீபாஷ்யம்—

மஞ்சள் நிறமுள்ள சங்கு முதலியதிலோ வென்றால் கண்ணிலிருக்கிற பித்தவஸ்துவுடன் கலந்த கண்ணொளிகள் சங்கு முதலியவைகளோடு சேர்க்கை பெறுகின்றன. அச்சமயத்தில் பித்தத்தைச் சார்ந்த மஞ்சள் நிறத்தால் கவரப்பட்ட சங்கினிடத்தி லுள்ள வெண்மை நிறம் க்ரஹிக்கப்படுகிறதில்லை. அதனால் தங்கத்தினால் பூசப்பட்ட சங்குபோல் சங்கானது மஞ்சள் நிறமுள்ளதாக அறியப்படுகிறது. பித்த த்ரவ்யமும் அதை அடைந்திருக்கிற

மஞ்சள் நிறமும் மிகவும் நுட்பமாக இருப்பதால பக்கத்திலிருப்பவர்களால் க்ரஹிக்கப்படுகிறதில்லை. பித்தத்தால் கெடுக்கப்பட்ட த்ருஷ்டியையுடையவனாலோ வென்றால் அந்த மஞ்சள் நிறமானது தன் கண்ணினின்றே வெளிப்பட்டிருப்பதனால் மிக்க அருகாமையால் ஸூக்ஷ்மமாக இருந்தபோதிலும் க்ரஹிக்கப்படுகிறது. அதை க்ரஹிப்பதனால் உண்டுபண்ணப்பட்டிருக்கிற ஸம்ஸ்காரத்துடன் கூடிய கண்ணினது ஒளிகளால் தூரத்திலிருந்தபோதிலுங்கூட க்ரஹிக்கப்படுகிறது.

செம்பருத்திப்பூவின் பக்கத்திலிருக்கிற ஸ்படிகமணியுங்கூட அதன் ஒளியினால் கவரப்பட்டிருப்பதால் சிவப்பு நிறமுள்ளதென்று அறியப்படுகிறது. செம்பருத்திப்பூவின் ஒளியானது விஸ்தீர்ணமாக நாலாபக்கங்களிலும் பரவி இருந்தபோதிலுங்கூட நிர்மலமான த்ரவ்யத்துடன் சேர்க்கை பெற்றிருப்பதால் அதிஸ்பஷ்டமாக அறியப்படுகிறது என்கிற இந்த விஷயமானது உபலப்தியினால் வ்யவஸ்தை செய்யத்தக்கது. கானலினுண்டாகும் ஜலஜ்ஞானத்திலுங்கூட தேஜஸ்ஸிலும் ப்ருதிவியிலுங்கூட ஜலமிருப்பதனால் இந்திரிய தோஷத்தினால் தேஜஸ்ப்ருதிவீ இவைகள் இரண்டும் க்ரஹிக்கப்படாமலிருப்பதாலும் அத்ருஷ்ட வசத்தாலும் ஜலமே க்ரஹிககப்படுவதால் அந்த ஜ்ஞானம் யதார்த்தம். வட்டவடிவமாகச் சுற்றப்படுகிற கொள்ளிக்கட்டையிலும் அந்த கொள்ளிக்கட்டையின் அதிவேகமுள்ள கதியினால் எல்லாப்ரதேசங்களோடும் சேர்க்கை ஏற்படுவதனால் இடைவெளியை க்ரஹிக்காமையால் அவ்வாறு ப்ரதீதி பொருத்தமுள்ளதாக ஆகிறது. சக்ரப்ரதீதியிலுங்கூட இடைவெளியை க்ரஹியாமலிருப்பதை முன்னிட்டு அந்த அந்த இடத்தோடு சேர்க்கை பெற்றிருக்கிற அந்த அந்த வஸ்துவின் க்ரஹணமே. சிலஸமயத்தில் அல்லது சில இடததில் இடைவெளி இல்லாமையால் இடைவெளி க்ரஹிக்கப்படுகிறதில்லை. சில இடத்தில் அல்லது சில ஸமயத்தில் சைக்ரயத்தால் இடைவெளி க்ரஹிக்கப்படுகிறதில்லை என்று விசேஷம்- ஆதலால் அதுவும் யதார்த்தம்- கண்ணாடி முதலிய வஸ்துக்களில் தன் முகத்தை அறிதலும் யதார்த்தமே- கண்ணாடி முதலியவைகளால் திருப்பியடிக்கப்பட்ட கதியுடன் கூடியவைகளான நயநரச்மிகள் கண்ணாடி முதலிய வஸ்து ப்ரதேசங்களின் க்ரஹணத்தை முன்னிட்டு தன் முகம் முதலியதையும் க்ரஹிக்கின்றன, அவ்விடத்திலும் அதிசைக்ர்யத்தினால் இடைவெளியை க்ரஹிக்காமையால் அவ்வாறு ப்ரதீதி உண்டாகிறது. திக்ப்ரமத்திலுங்கூட வேறு திசைகள் இந்த திசையிலிருப்பதால் அத்ருஷ்டவசத்தால் இந்த திசையினது அம்சத்தால் விடுபட்டிருக்கிற வேறு திசைகளின் அம்சம் க்ரஹிக்கப்படுகிறது. ஆதலால் ஒரு திசையில் மற்றொருதிசையை க்ரஹிப்பதும் யதார்த்தமே.

ச்ருதப்ரகாசிகை—

மஞ்சள் நிறமுள்ள சங்கு முதலியதில் ஈச்வரனுல் ஸ்ருஷ்டிக்கப்பட்டவஸ்துவென்று சொல்லுகிற ச்ருதிவசனமானது எடுத்துரைக்கமுடியாதென்று கேழ்க்கப்படுமேயாகில் சொல்லுகிருர்— 'பீத: என்று. மஞ்சள் நிறம்போல் வெண்மை நிறமும் க்ரஹிக்கப்படலாமே என்று கேட்கில் சொல்லுகிருர்— தத்ர என்று. அங்ஙனமாகில் பக்கத்திலிருப்பவர்களால் கூட பித்த த்ரவ்யமானது க்ரஹிக்கத்தக்கதாக ஆகலாமென்று கேழ்க்கப்படுமேயாகில் சொல்லுகிருர்—பித்த. என்று. அங்ஙனமாகில் ஸூக்ஷ்மமாக இருத்தலால் அவனுலும் பித்தமானது க்ரஹிக்கத்தகாததாக ஆகலாமென்று கேட்கில் சொல்லுகிருர்— பித்தோபஹதேநது என்று. தூரத்திலிருக்கும் சங்குக்கு மிக்க ஸாமீப்யமில்லாமையால் எவ்வாறு அந்த சங்கில் இருக்கிற பித்தத்ரவ்யம் க்ரஹிக்கப்படுகிறதென்று கேழ்ககப்படுமேயாஞல் சொல்லுகிருர்— 'தத்க்ரஹண' என்று. வெகுதூரம் எழுந்து ஆகாயத்தில் பறக்கிறபறவை எவ்வண்ணம் பார்க்கஇயலாதோ, அவ்வாறு இருந்தபோதிலுங்கூட பக்கத்திலிருந்துமேலே எழும்பிப்பறக்கிற காலந்தொடங்கி இடைவெளி இன்றி தொடர்ச்சியாகப்பார்க்கப்படா நின்ற அந்த பக்ஷியானது அந்த தர்சனத்திஞலுண்டான வாஸனையுடன் கூடின கண்களால் எவ்வாறு தூரத்திலும் க்ரஹிக்கப்படுகிறதோ அப்படிப்போலென்று அர்த்தம். ப்ரபாகரர்களால் பித்தத்தினது பீதவர்ணமும் சங்கும் இடைவெளி இல்லாமல் க்ரஹிக்கப்படுகின்றனவென்று கூறப்பட்டது. இந்த இடத்திலோ வென்ருல் ரூபத்தினிடத்தில் போல த்ரவ்யத்தில் கண்ணுக்கு ஸாமர்த்தியமிருப்பதால் பித்த த்ரவ்யம் க்ரஹிக்கப்படுகிறதென்று கூறப்பட்டிருக்கிறதென்பது விசேஷம். தங்கத்தால் பூசப்பட்டிருக்கிற சங்குபோலென்கிற த்ருஷ்டாந்தத்திலும் இது கருத்து. ஐயா ! பித்த த்ரவ்யம் சங்கு இவ்விரண்டுகளுக்குமுள்ளபேதம் க்ரஹிக்கப்படாமலிருப்பதால் பீதசங்க வ்யவஹாரம் ஏற்படுகிறதென்று சொல்லப்படுமேயாகில் அப்பொழுது வஸ்த்ரத்தில் பீதவ்யவஹாரம் ஏன் உண்டாகக் கூடாது. அந்யதா க்யாதியிலாவது வஸ்திரத்தில் எவ்வாறு பீத வ்யவஹாரத்தினது இன்மை ? ப்ரமமிருக்கும்பக்ஷத்தில் அந்த ப்ரமத்திற்கு எது மூலமோ அதன் நிரூபணம் செய்யத்தக்கதே ஒழிய எல்லா இடத்திலும் ப்ரம மிருக்கவேண்டு மென்பதில்லை என்று சொல்லப்படுமேயாகில் துல்யம்.

ஜபாகுஸுமம் செம்பருத்திப்பூ ஸ்படிகம் முதலியதில் கண்ணினது தோஷத்தின் சேர்க்கை எவ்விதத்தாலும் சொல்ல முடியாததென்று வினவப்படுமேயாகில் சொல்லுகிருர்— ஜபா என்று ஜபாகுஸுமம் ஸ்படிகம், மரீசிகாஜலம், அலாத சக்ரம். திங்மோஹம், இவைகளில்·வேறு த்ரவ்யத்தோடு ஸம்பந்தத்தால் ப்ரதீதி யதார்த்தமென்று நிர்வாஹம். செம்பருத்திப்பூவினது ஒளியின் ஸம்பந்தத்தால் ஸ்படிகம் சிவப்பு நிறமுள்ளதென்கிற ப்ரதீதி வருகிறதென்ருல் அந்த புஷ்பத்தின் ஸம்பந்தத்தால் கல் முதலியவைகளிலும் அவ்வாறு ஜ்ஞானமுண்டாகலாமென்று கேட்கப்படுமேயாகில் கூறுகிருர்—ஸ்வச்ச என்று. மரீசிகா என்று. க்யாத்யந்தரவாதிகள் அனைவர்களாலும் அத்ருஷ்டத்துக்கு நியாமகத்வம் ஒப்புக்கொள்ளப்படத்தக்கது. அங்ஙனமில்லாவிடில் எல்லோருக்கும் எல்லா இடத்திலும் எப்பொழுதும் எல்லா வஸ்துவிஷயகமான ப்ரமம் ப்ரஸங்கிப்பதால். ஒரு ஸமயத்திலாவது ப்ரமாபாவதிற்கு ப்ரஸங்கமில்லாமல் போகவேண்டி வருவதாலும். அலாத என்று. அந்தராளாக்ரஹணுத்-முன்பின் ஸமயங்களில் உண்டாகிற அந்த அந்த ப்ரதேச விசேஷங்கள் அலாத ஸம்யோகம் இவைகளின் இடைவெளியை க்ரஹியாமையால். க்ரமத்தை க்ரஹியாமையால் என்று அர்த்தம். அந்த ராளத்தைக் க்ரஹியாமலிருக்கும் தருணத்தில் எவ்விதம் யாதார்த்யம்

என்று கேட்கில் சொல்லுகிறார்— சக்ர என்று. சக்ரப்ரதீதி: - நல்ல சக்ராகார ஜ்ஞானம். என்ன விசேஷமென்று வினவப்படுமேயாகில் கூறுகிறார்—க்வசித் என்று. தர்பணு தீஷு என்று. இடம் வலம் மாருதல் எவ்வாறு என்று கேழ்க்கப்படுமேயாகில் சொல்லப்படுகிறது. இடது பாகம் வலது பாகம் என்கிற வ்யவஹாரமெல்லாம் குறிப்பிடுகிற ஒரு இடத்தைக்கருதியன்றோ ஏற்படுகிறது. அதில் தனக்கு எதிருக இருப்பதனுல் மாறி இருக்கிற இடதுவலதுபாகஙகளையுடைய கண்ணுடியினுடையவும் முகத்தினுடையவும் இடைவெளியின் அக்ரஹணமே. மாராட்டமானது கண்ணுடியை அடைந்திருக்கிறது. அதனுல் முகமானது க்ரஹிக்கபபட்டிராத இடைவெளிடன் கூடியதாக இருப்பதுபற்றி அபிமுகமாக இருக்கிற கண்ணுடியினுடையவும் முகத்தினுடையவும இடைவெளியை க்ரஹியாமையால் ஆபிமுக்யப்ரதீதியானது யதார்த்தம இவ்வண்ணம் மாலின்யமும் அல்பத்வம் முதலியதும். திங்மோஹ என்று. எல்லா திக்குகளும், ஒரே இடத்திலிருந்தபோதிலும் கிழக்குமேற்கு முதலிய திசைகளின் வ்யவஹாரம் ப்ரதிஸம்பந்தியான வஸ்துவை அபேக்ஷித்துவருகிறது. அந்த இடததில் திகந்தா ப்ரதியோகிக்கும் திகந்தரத்துக்கும் இடை வெளி இன்றி பாரம், அதனுல் யதார்த்த விஷயத்வம் என்று. திசைகள் அனேகஙகளென்பது 'பதப்யாம் பூமிர்திஸ ஸ்ரோத்ராத்' என்கிற ஸ்ருதிவசனத்தால் அறியப்படுகிறது.

[illegible]

பவதி ப்ரத்யய: । தோஷக்ருதம் ஸாமக்ரீத்வித்வம் தத்க்ருதம் க்ரஹணத்வித்வம் தத்க்ருதம் க்ராஹ்யாகாரத்வித்வமிதி நிரவத்யம் ॥
அதஸ்ஸர்வம் விஜ்ஞாநஜாதம் யதார்த்தமிதி ஸித்தம் ॥

ஸ்ரீ பாஷ்யம்—

சந்திரன் இரண்டு என்கிற ஜ்ஞானம் முதலியதிலும் விரல்களை கண்ணொளிபோகும் இடத்தில் வைத்து அதின் ப்ரஸரணத்தைத் தடுத்தல். திமிரம் முதலியவைகளால் கண்களினுடைய ஒளிகளின் கதிபேதம் ஏற்படுவதால் ஸாமக்ரிகளின் பேதத்தால் இரண்டு ஸாமக்ரிகளும் ஒன்றை மற்றொன்று அபேக்ஷியாமல் சந்திர க்ரஹணத்வயத்திற்கு ஹேதுவாக ஆகிறது. அவற்றுள் ஒரு ஸாமக்ரியானது தானிருக்குமிடத்தோடுசேர்ந்திருக்கிற சந்திரனை க்ரஹிக்கிறது. இரண்டாவதோவென்றால் கொஞ்சம் கோணின கதியுடன் கூடியதாக இருந்துகொண்டு சந்திரனிருக்கிற இடத்திற்கு ஸமீபத்திலிருக்கிற இடத்தின் க்ரஹணத்தை முன்னிட்டு சந்திரனை தானிருக்குமிடத்தை விட்டு விலகினதாக க்ரஹிக்கிறது. அதனால் ஸாமக்ரிகளின் இரட்டையினால் ஒரே ஸமயத்தில் இரண்டு ப்ரதேசங்களோடு கூடின சந்திரன் க்ரஹிக்கப்படுவதில் க்ரஹண பேதத்தால் க்ரஹிக்கத்தக்க வஸ்துவின் ஆகார பேதத்தாலும், ஏக க்ரஹண மில்லாமையாலும், சந்திரன் இரண்டு என்கிற ப்ரதிதிவிசேஷமுண்டாகிறது. தேசாந்தரத்திற்கு அந்த சந்த்ரவிசேஷணத்வமானது தேசாந்தரத்தினுடையவும் க்ரஹிக்கப்பட்டிராத ஸ்வதேசத்தையுடையதான சந்திரனுடையவும் நிரந்தர க்ரஹணத்தாலுண்டாகிறது. அந்த இடத்தில் இரண்டு ஸாமக்ரிகளிருப்பது உண்மை. அதனால் இரண்டு தேசங்களுடன் கூடின இரண்டு சந்த்ர க்ரஹணமும், பாரமார்த்திகம்-க்ரஹணத்வித்வத்தினால் சந்திரனுக்கு ஸம்பவிக்கிற க்ராஹ்யாகாரத்வித்வமும் பாரமார்த்திகம். அந்த இடத்தில் விசேஷண த்வயத்துடன் கூடின சந்த்ர க்ரஹணத்வயத்திற்கு ஒரே சந்திரன் க்ரஹிக்கத்தக்கவன் என்கிற க்ரஹணத்தில் ப்ரத்யபிஜ்ஞானத்தில்போல் கேவலமான கண்ணுக்கு ஸாமர்த்தியமில்லாமையால் சாக்ஷுஷஜ்ஞானம் அவ்வண்ணமே நிலைபெற்றிருக்கிறது. இரண்டு கண்களுக்கும் ஒரு ஸாமக்ரியின் அந்தர்ப்பாவமிருந்தபோதிலும் திமிரம் முதலிய தோஷங்களால் வேறுபட்டிருக்கிற கண்களின் ஒளியே இரண்டு ஸாமக்ரிகளாக ஆகின்றனவென்று கார்யத்தினால் கல்பிக்கத்தக்கது. தோஷம் விலகின தருணத்திலோவென்றால் தானிருக்குமிடத்துடன்கூடின சந்திரன் ஒன்று என்கிற ஜ்ஞானத்தால் அறியத்தக்கதாக இருத்தலால் சந்திரன் ஒன்று என்கிற ஜ்ஞானம் வருகிறது ஸாமக்ரிகளின் த்வித்வமானது தோஷத்தாலுண்டுபண்ணப் பட்டிருக்கிறது. அந்த ஸாமக்ரிகளின்

த்வித்வத்தினால் க்ரஹணத்வித்வம் ஸம்பவிக்கிறது அந்த க்ரஹண த்வித்வத்தினால் க்ராஹ்யாகார த்வித்வம் ஸம்பவிக்கிறதென்று யதார்த்த க்யாதி ஸமர்த்திக்கப்பட்டது. ஆதலால் விஜ்ஞான ஜாதமனைத்தும் யதார்த்தமென்று ஸித்தித்தது.

ச்ருதப்ரகாசிகை—

த்விசந்த்ர என்று. அதனால் என்னவென்று கேட்கில் கூறுகிறார். தத்ரைக என்று. இயற்கையில் நேராக ப்ரஸரிக்கிற ஸ்வபாவமுள்ளதாக இருந்தபோதிலும் கண்ணொளிக்கு வக்ரமாக இருத்தல் ஸம்பவிக்கிறது. கண்ணாடி முதலியதால் அது காணப்படுகிறபடியால். இவ்விடத்திலும் விரல்களால் தடுத்தல் அத்ருஷ்டம் முதலியதால் அதற்கு உபபத்தி ஏற்படுகிறது. அதனால் என்னவென்று கேட்கில் கூறுகிறார்- அத: என்று. சந்திரனிடத்திலுள்ள ஏகத்வாக்ரஹணமானது சந்திரனிருக்கிற இடங்கள் இரண்டு என்கிற ப்ரதீதியின் இன்மைக்குக் காரணம். தேசாந்தரத்தை அடைந்திருக்கிற சந்தரனுக்கு அந்த தேசத்தை விசேஷணமாகக் கொண்டிருத்தல் எவ்வாறு ஸம்பவிக்குமென்று கேழ்க்கப்படுமேயாகில் சொல்லுகிறார்—தேச என்று. அதனால் ப்ரதீதியின் யாதார்த்யத்திற்கு என்னவென்றுகேட்கில் சொல்லுகிறார்—தத்ரஸாமக்ரீ என்று தேநதேச த்வயவிசிஷ்ட சந்த்ரக்ரஹணத்வயஞ்ச பாரமார்த்திகம் என்று. சைக்ர்யத்தினால் பௌர்வாபர்யக்ரமம் க்ரஹிக்கப்படாதது பற்றி க்ரஹணத்வயம் என்கிறது அதனாலேயே க்ரஹிக்கப்படாத பரஸ்பர பேதத்துடன்கூடியதாகவுமிருக்கிறதென்று கருத்து. விசேஷணத்வயத்துடன் கூடின விஷயக்ரஹணம் இரண்டாக இருந்தபோதிலும் விசேஷ்யைக்யமானது எவ்வாறு அறியப்படுகிறதென்று வினவப்படுமேயாகில் சொல்லுகிறார்—தத்ர என்று. தேவதத்தன் முதலியவர்களிடங்களில் தனித்திருக்கிற கண்ணானது ஐக்ய ப்ரதிபத்தி ஸமர்த்தமாகக்காணப்பட்டிருக்கவில்லையன்றோ. பின்னையோவென்றால் ஸம்ஸ்காரத்தால் ஸம்ஸ்கரிக்கப்பட்டதாகவே ஸமர்த்தமாகக் காணப்பட்டிருக்கிறது. ஸம்ஸ்காரமானது விலம்பித்து உண்டாகப்போவதால் அப்பொழுது ஐக்ய ப்ரதிபத்தி என்று அர்த்தம். சாக்ஷுஷஜ்ஞானம் தத்தைவாவதிஷ்டதே என்று. க்ரஹிக்கப்படாத ஏகத்வத்துடன் கூடின சந்திரனை மாத்திரம் விஷயமாகக்கொண்ட சாக்ஷுஷஜ்ஞானம் இருக்கிறதென்று அர்த்தம். தஸ்யைவ என்கிற பாடத்தில் சந்திரமாத்திரத்திற்கே க்ராஹகமாக இருக்கிறதென்று அர்த்தம். ஒரு ஸாமக்ரியாக இருக்கிற இரு கண்களுக்கும் எவ்வாறு இரண்டு ஸாமக்ரிகளாக இருக்கும் தன்மை என்று கேட்கப்படுமேயானால் சொல்லுகிறார்—த்வயோஸ் சக்ஷுஷோ: என்று. இயற்கையில் தோஷமில்லாத இந்த்ரியத்திற்கு தோஷத்துடன்கூடி இருத்தல் கார்யத்தினால் கல்பிக்கத்தக்கதன்றோ. அவ்வாறாகவே ஸாமக்ரீ த்வித்வமும் என்று கருத்து.

அங்ஙனமாகில் எப்பொழுதுமே சந்த்ர த்வித்வம் க்ரஹிக்கப்படலாமென்று வினவப்படுமேயாகில் கூறுகிறார்— அபகதே து என்று. தோஷம போனபிறகுஎவ்வாறு ஐக்ய ப்ரதிபத்தி ஸம்பவிக்கலாமென்கிற சங்கைவரின் த்வித்வ ப்ரதிபத்தியானது உபாதியினால் உண்டாகிறதென்று சொல்லுகிறார்—தோஷக்ருதம் என்று. க்ராஹ்யாகாரத்வித்வம் என்று. தன் தேசத்தோடு கூடி இருத்தல் ஒரு ஆகாரம். க்ரஹிக்கப்பட்டிராத இடைவெளியுடன்கூடின வேறு ப்ரதேசம் ஒரு ஆகாரம். அதற்கு ஆகார

த்வமாவது விசேஷணத்வம் ஆகாரமல்லாததை ஆகாரமாக க்ரஹிப்பதால் ஸம்பவிக்கிற அன்யதாக்யாதி இல்லை. க்ரஹிக்கப்பட்டிராத இடைவெளியுடன் கூடி இருத்தலென்கிற தன்மை இருக்க அப்ரதானமாக பாஸிக்கிற வஸ்துவுக்கே விசேஷணத்வமிருப்பதால். ப்ராபாகரர்கள் நேத்ரவ்ருத்தியானது விததியை அடைந்திருக்கிற த்வித்வத்தையும் க்ரஹிக்கப்பட்டிராத பேதத்துடன்கூடின சந்திரனையும் க்ரஹிக்கிறதென்று பகர்கின்றனர். ஸம்வித் ஸித்தியில் ப்ராபாகரமதத்தை உபந்யஸிக்கும் ஸந்தர்ப்பத்தில் "நேத்ரவ்ருத்திர் த்விதாபூதா த்வேது விததீ - விதந்வதீ த்வித்வம் சந்த்ரஞ்ச யுகபத் க்ராஸயதி தத்ர ச ॥" என்று சொல்லப்பட்டிருக்கிறது. தேசத்தை அடைந்திருக்கிற த்வித்வத்தையும் க்ரஹிக்கப்பட்டிராத பேதத்துடன் கூடின சந்திரனையும் க்ரஹிக்கிறதென்று அதைக்காட்டிலும் இவ்விடத்தில் வைஷம்யம். சாக்ஷுஷ தேஜஸ்ஸின் கதிபேத ரூபமான இரண்டு ஸாமக்ரிகளால் உண்டாயிருக்கிறதும் அதிசைக்ரியத்தினால் க்ரஹிக்கப்பட்டிராத க்ரமத்துடன் கூடியதும் க்ரஹிக்கப்பட்டிருக்கிற பேதத்துடன் கூடியதுமான இரண்டு ஜ்ஞானங்கள் க்ரஹிக்கப்பட்டிராத ஏகத்வத்துடன் கூடின சந்திரனையும் க்ரஹிக்கப்பட்டிராத இடைவெளியுடன் கூடியதான தேசாந்தரத்தையும் தொடர்ச்சியாக க்ரஹிக்கிறது. அதனால் சந்திரன் இரண்டென்கிற வ்யவஹாரம் என்று பொருள். இதி நிரவத்யம். யதார்த்தக்யாதி ஸமர்த்தனமென்று பொருள்.

க்யாத்யந்தராணாம் தூஷணாநி தைஸ்தைர்வாதிபிரேவ ப்ர-
பஞ்சிதாநீதி ந தத்ர யத்ந: க்ரியதே । அந்யதா கிமநேந பஹு-
நோபபாதந ப்ரகாரேண । ப்ரத்யக்ஷாநுமாநாகமாக்யம் ப்ரமாண
ஜாதமாகமகம்யம் நிரஸ்தநிகிலதோஷகந்தமநவதிகாதிசயாஸங்க்யே-
யகல்யாணகுணகணம் ஸர்வஜ்ஞம் ஸத்யஸங்கல்பம் பரம் ப்ரஹ்மாப்யு-
பகச்சதாம் கிம் ந ஸேத்ஸ்யதி । கிம் நோபபத்யதே । பகவதா ஹி பரே-
ண ப்ரஹ்மணா க்ஷேத்ரஜ்ஞபுண்யபாபாநுகுணம் தத்போக்யத்வாய
வியதாதிஜகத் ஸ்ருஜதா ஸுகது:கோபேக்ஷாஸாதநாநி ஸாதநாந்யா:
ஸர்வஸாதாரணாநுபவவிஷயா:, கேசந தத்தத்புரு-
ஷமாத்ராநுபவவிஷயாஸ்தத்தத்காலாவஸாநாஸ்ச ஸ்ருஜ்யந்தே । தத்ர பாத்யபாதகஸர்வஸாதாரணாநுபவவிஷயதயா
தத்ஸ்ருஷ்டதயா வ்யவஹ்ருத இதி ஸர்வம் ஸமஞ்ஜஸம் ॥

ஸ்ரீபாஷ்யம்—

வேறு க்யாதிக்கு தூஷணங்கள் அந்த அந்த வாதிகளாலேயே விஸ்தரிக்கப்பட்டிருக்கிறபடியால் அந்த விஷயத்தில் யத்னம் செய்யப்படுகிறதில்லை. இல்லையேல் அனேகமான இந்த உபபாதனப்ரகாரத்தால் யாதுபயன்? ப்ரத்ய

க்ஷம் அநுமானம் ஆகமம் என்கிற ப்ரமாணவர்க்கங்களையும், சாஸ்த்ரத்தாலேயே அறியத்தக்கதும், விலக்கித்தள்ளப்பட்ட ஸமஸ்த தோஷகந்தங்களுமுள்ளதும் எல்லை இல்லாத அதிசயத்துடன் கூடியதும், எண்ணமுடியாததுமான கல்யாணகுணஸமூஹங்களுடன் கூடியதும், எல்லாவற்றையும் அறிந்ததும், ஸத்யஸங்கல்பத்துடன் கூடியதுமான பரப்ரஹ்மத்தை ஒப்புக்கொள்ளுகிறவர்களுக்கு எதுதான் ஸித்தியாது? எதுதான் பொருத்தமுள்ளதாக ஆகிறதில்லை? க்ஷேத்ரஜ்ஞர்களுடைய புண்யபாபங்களுக்கு அநுகுணமாக அந்த க்ஷேத்ரஜ்ஞர்களின் போகத்திற்காகவே எல்லா உலகங்களையும் உண்டுபண்ணுகிறதும் ஆறு குணங்களால் நிறைந்திருப்பதுமான பரப்ரஹ்மத்தினால் சுகதுக்கபலாநுபவத்தின் பொருட்டும் உபேக்ஷாபலாநுபவத்தின் பொருட்டும் அனுபவிக்கப்படத்தக்கவைகளும் எல்லோருக்கும் பொதுவான அனுபவத்திற்கு விஷயமாக இருப்பவைகளுமான பதார்த்தங்களும் அந்தந்த புருஷர்களின் அனுபவமாத்திரத்திற்கு விஷயமாக இருப்பவைகளும் அந்த அந்தகாலத்தோடுமுடிவுடையவைகளுமான சிலபதார்த்தங்களும் அப்படி அப்படி அனுபவிக்கப்படத்தக்கவைகளாக உண்டுபண்ணப்படுகின்றன. அதில் பாத்யபாதகபாவமானது எல்லோருடைய அனுபவத்திற்கும் விஷயமாக இருப்பதாலும் எல்லோருடைய அனுபவத்திற்கும் விஷயமாகாமலிருப்பதாலும் பொருத்தமுள்ளதாக ஆகிறதென்பதனால் எல்லாம் ஸமஞ்ஜஸமாக ஆகிறது.

ச்ருதப்ரகாசிகை—

ஒருவர் ஒருவர்மீது கூறப்பட்டுள்ள க்யாத்யந்தர தூஷணங்கள் தனக்குஅபிபதமாக இருப்பதால் அந்த விஷயத்தில் தன்னுடைய முயற்சியினது இன்மையைக்கூறுகிறார்- க்யாதி என்று. ‘அதவா கிமநேந’ என்கிற பதாநுபூர்வியை முன்னிட்டவாக்கியத்தின் பாடமானது அநேக கோசங்களில் காணப்படுகிறது. வ்யாக்யாதாக்களால் வ்யாக்கியானம் செய்யப்பட்டுமிருக்கிறது. அதில் பராகர்த்த விஷயமான அபரோக்ஷப்ரமங்களில் ஒவ்வொரு உத்தரத்தினாலேயே பரிஹாரம் செய்யப்பட்டிருப்பதாக ஆகிறது. ‘கிம் ந ஸேத்ஸ்யதி’என்கிற வாக்கியத்தினால் ப்ரமாணத்தில் அஸ்தித்வம்கூறப்பட்டது. “கிம் நோபபத்யதே” என்பதனால் உபபத்தி கூறப்பட்டது. ப்ரமாணம் எது? எவ்வாறு உபபத்தி என்று வினவப்படுமேயாகில் சொல்லுகிறார்- பகவதாஹி என்று. அகிலம் ‘ஜகத் ஸ்ருஜதா’ என்கிற பதங்களால் இந்த அர்த்தத்திற்கு ச்ருதி மூலத்வம் ஸூசிப்பிக்கப்பட்டது. ப்ரஹ்மமானது எல்லா கார்யங்களுக்கும் காரணமாக இருப்பதால். ‘இதம் ஸர்வமஸ்ருஜத’ என்றல்லவோ ச்ருதி வசனம். ப்ரதீயமானத்வம் விசேஷமின்றி இருப்பதால் இதுவும் அந்த ப்ரஹ்மத்தால் ஸ்ருஷ்டிக்கப்பட்டதென்று அர்த்தம். அங்ஙனமாகில் பாத்ய பாதகபாவத்திற்கு வ்யவஸ்தை எவ்வாறாகவென்று கேட்கப்படுமேயாகில் கூறுகிறார்— தத்ர என்று, அந்தந்த புருஷனால் அனுபவிக்கப்படத்தக்கவைகளும் அந்தந்த காலத்தோடு முடிவடைகிறவைகளுமான ஸ்வப்நம் முதலியவைகளுக்கு மித்யாத்வமில்லையன்றோவென்று கருத்து.

𑌯𑌤𑍍𑌤𑍁 𑌸𑌦𑌸𑌦𑍍𑌭𑍍𑌯𑌾𑌮𑌨𑌿𑌰𑍍𑌵𑌚𑌨𑍀𑌯𑌮𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌸𑌿𑌦𑍍𑌧𑌮𑌿𑌤𑌿, 𑌤𑌦𑌸𑌤𑍍, "𑌅𑌨𑍃𑌤𑍇𑌨 𑌹𑌿 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍂𑌢𑌾𑌃" 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌷𑍍𑌵𑌨𑍃𑌤𑌶𑌬𑍍𑌦𑌸𑍍𑌯𑌾𑌨𑌿𑌰𑍍𑌵𑌚𑌨𑍀𑌯𑌾𑌨𑌭𑌿𑌧𑌾𑌯𑌿𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 । 𑌋𑌤𑍇𑌤𑌰𑌵𑌿𑌷𑌯𑍋 𑌹𑍍𑌯𑌨𑍃𑌤𑌶𑌬𑍍𑌦𑌃 । 𑌋𑌤𑌮𑌿𑌤𑌿 𑌕𑌰𑍍𑌮𑌵𑌾𑌚𑌿 । "𑌋𑌤𑌂 𑌪𑌿𑌬𑌨𑍍𑌤𑍌" 𑌇𑌤𑌿 𑌵𑌚𑌨𑌾𑌤𑍍 । 𑌋𑌤𑌂 — 𑌕𑌰𑍍𑌮 𑌫𑌲𑌾𑌭𑌿𑌸𑌨𑍍𑌧𑌿𑌰𑌹𑌿𑌤𑌂 𑌪𑌰𑌮𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌰𑌾𑌧𑌨𑌵𑍇𑌷𑌂 𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌿𑌫𑌲𑌮𑍍 । 𑌅𑌤𑍍𑌰 𑌤𑌦𑍍𑌵𑍍𑌯𑌤𑌿𑌰𑌿𑌕𑍍𑌤𑌂 𑌸𑌾𑌂𑌸𑌾𑌰𑌿𑌕𑌫𑌲𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌅𑌨𑍃𑌤𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌿𑌵𑌿𑌰𑍋𑌧𑌿, '𑌏𑌤𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌲𑍋𑌕𑌂 𑌨 𑌵𑌿𑌨𑍍𑌦𑌨𑍍𑌤𑌿 𑌅𑌨𑍃𑌤𑍇𑌨 𑌹𑌿 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍂𑌢𑌾𑌃' 𑌇𑌤𑌿 𑌵𑌚𑌨𑌾𑌤𑍍 ॥

"𑌨𑌾𑌸𑌦𑌾𑌸𑍀𑌨𑍍𑌨𑍋 𑌸𑌦𑌾𑌸𑍀𑌤𑍍" 𑌇𑌤𑍍𑌯𑌤𑍍𑌰𑌾𑌪𑌿 𑌸𑌦𑌸𑌚𑍍𑌛𑌬𑍍𑌦𑍌 𑌚𑌿𑌦𑌚𑌿𑌦𑍍𑌵𑍍𑌯𑌷𑍍𑌟𑌿𑌵𑌿𑌷𑌯𑍌 । 𑌉𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑌿𑌵𑍇𑌲𑌾𑌯𑌾𑌂 𑌸𑌤𑍍𑌤𑍍𑌯𑌚𑍍𑌛𑌬𑍍𑌦𑌾𑌭𑌿𑌹𑌿𑌤𑌯𑍋𑌃 𑌚𑌿𑌦𑌚𑌿𑌦𑍍𑌵𑍍𑌯𑌷𑍍𑌟𑌿𑌭𑍂𑌤𑌯𑍋𑌰𑍍𑌵𑌸𑍍𑌤𑍁𑌨𑍋𑌰𑌪𑍍𑌯𑌯𑌕𑌾𑌲𑍇 𑌅𑌚𑌿𑌤𑍍𑌸𑌮𑌷𑍍𑌟𑌿𑌭𑍂𑌤𑍇 𑌤𑌮𑌃𑌶𑌬𑍍𑌦𑌾𑌭𑌿𑌧𑍇𑌯𑍇 𑌵𑌸𑍍𑌤𑍁𑌨𑌿 𑌪𑍍𑌰𑌲𑌯𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑌨𑌪𑌰𑌤𑍍𑌵𑌾𑌦𑌸𑍍𑌯 𑌵𑌾𑌕𑍍𑌯𑌸𑍍𑌯 । 𑌨𑌾𑌤𑍍𑌰 𑌕𑌸𑍍𑌯𑌚𑌿𑌤𑍍 𑌸𑌦𑌸𑌦𑌨𑌿𑌰𑍍𑌵𑌚𑌨𑍀𑌯𑌤𑍋𑌚𑍍𑌯𑌤𑍇; 𑌸𑌦𑌸𑌤𑍋𑌃 𑌕𑌾𑌲𑌵𑌿𑌶𑍇𑌷𑍇 𑌅𑌸𑌦𑍍𑌭𑌾𑌵𑌵𑌚𑌨𑌾𑌤𑍍 । 𑌅𑌤𑍍𑌰 𑌤𑌮𑌃𑌶𑌬𑍍𑌦𑌾𑌭𑌿𑌹𑌿𑌤𑌸𑍍𑌯𑌾𑌚𑌿𑌤𑍍𑌸𑌮𑌷𑍍𑌟𑌿𑌤𑍍𑌵𑌂 𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑌾𑌦𑌵𑌗𑌮𑍍𑌯𑌤𑍇 — "𑌅𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌮𑌕𑍍𑌷𑌰𑍇 𑌲𑍀𑌯𑌤𑍇 । 𑌅𑌕𑍍𑌷𑌰𑌂 𑌤𑌮𑌸𑌿 𑌲𑍀𑌯𑌤𑍇" 𑌇𑌤𑌿 । 𑌸𑌤𑍍𑌯𑌮𑍍 — 𑌤𑌮𑌃𑌶𑌬𑍍𑌦𑍇𑌨𑌾𑌚𑌿𑌤𑍍𑌸𑌮𑌷𑍍𑌟𑌿𑌰𑌭𑌿𑌧𑍀𑌯𑌤𑍇 । 𑌤𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑍁 "𑌮𑌾𑌯𑌾𑌂 𑌤𑍁 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌂 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌤𑍍" 𑌇𑌤𑌿 𑌮𑌾𑌯𑌾𑌶𑌬𑍍𑌦𑍇𑌨𑌾𑌭𑌿𑌧𑌾𑌨𑌾𑌦𑌨𑌿𑌰𑍍𑌵𑌚𑌨𑍀𑌯𑌤𑍍𑌵𑌮𑌿𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍; 𑌨𑍈𑌤𑌦𑍇𑌵𑌮𑍍 — 𑌮𑌾𑌯𑌾𑌶𑌬𑍍𑌦𑌸𑍍𑌯𑌾𑌨𑌿𑌰𑍍𑌵𑌚𑌨𑍀𑌯𑌵𑌾𑌚𑌿𑌤𑍍𑌵𑌂 𑌨 𑌦𑍃𑌷𑍍𑌟𑌮𑌿𑌤𑌿 । 𑌮𑌾𑌯𑌾𑌶𑌬𑍍𑌦𑌸𑍍𑌯 𑌮𑌿𑌥𑍍𑌯𑌾𑌪𑌰𑍍𑌯𑌾𑌯𑌤𑍍𑌵𑍇𑌨𑌾𑌨𑌿𑌰𑍍𑌵𑌚𑌨𑍀𑌯𑌵𑌾𑌚𑌿𑌤𑍍𑌵𑌮𑌿𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍; 𑌤𑌦𑌪𑌿 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿; 𑌨 𑌹𑌿 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌮𑌾𑌯𑌾𑌶𑌬𑍍𑌦𑍋 𑌮𑌿𑌥𑍍𑌯𑌾𑌵𑌿𑌷𑌯𑌃; 𑌅𑌸𑍁𑌰𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌦𑌿𑌷𑍁 𑌸𑌤𑍍𑌯𑍇𑌷𑍍𑌵𑍇𑌵 𑌮𑌾𑌯𑌾𑌶𑌬𑍍𑌦𑌪𑍍𑌰𑌯𑍋𑌗𑌾𑌤𑍍 । 𑌯𑌥𑍋𑌕𑍍𑌤𑌮𑍍 — "𑌤𑍇𑌨 𑌮𑌾𑌯𑌾𑌸𑌹𑌸𑍍𑌰𑌂 𑌤𑌚𑍍𑌛𑌮𑍍𑌬𑌰𑌸𑍍𑌯𑌾𑌶𑍁𑌗𑌾𑌮𑌿𑌨𑌾 । 𑌬𑌾𑌲𑌸𑍍𑌯 𑌰𑌕𑍍𑌷𑌤𑌾 𑌦𑍇𑌹𑌮𑍇𑌕𑍈𑌕𑌶𑌸𑍍𑌯 𑌸𑍂𑌦𑌿𑌤𑌮𑍍" ॥ 𑌇𑌤𑌿 । 𑌅𑌤𑍋 𑌮𑌾𑌯𑌾𑌶𑌬𑍍𑌦𑍋 𑌵𑌿𑌚𑌿𑌤𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌸𑌰𑍍𑌗𑌕𑌰𑌾𑌭𑌿𑌧𑌾𑌯𑍀 ॥

ஸ்ரீபாஷ்யம்—

ஸத் என்றாவது அஸத் என்றாவது நிர்வசனம் செய்யத்தகாததான அஜ்ஞானமானது ச்ருதியினால் ஸித்தித்திருக்கிறதென்று யாதொன்று கூறப்பட்டதோ அது முற்றிலும் பிசகு. 'அந்ருதேநஹிப்ரத்யூடா:' என்கிற

ச்ருதிவசனம் முதலியவைகளிலுள்ள அந்ருத சப்தமானது அநிர்வசநீயமென்கிற பொருளை உணர்த்துந் தன்மையுள்ளதாக இராததால்- அந்ருத சப்தமானது ருதேதர விஷயமன்றோ. ருதமென்கிற பதம் கர்மாவைச் சொல்லுகிறது- 'ருதம் பிபந்தௌ' என்கிறவசனத்தினால். காமபலத்திலபிஸந்தி இல்லாததும் பரமபுருஷனுடைய ஆராதனரூபமாக இருப்பதும் பரமபுருஷப்ராப்தியை பலமாகக்கொண்டதுமான கர்மாவானது ருதமென்று சொல்லப்படுகிறது. இந்த இடத்தில் அதைக்காட்டிலும் வேறாக இருப்பதும் ஸாம்ஸாரிகபோகங்களையே பலமாகக்கொண்டதும் ப்ரஹ்மப்ராப்திக்கு விரோதியாகவுமிருக்கிற கர்மாவானது அந்ருதமென்று சொல்லப்படுகிறது- 'ஏதம் ப்ரஹ்மலோகம் ந விந்தந்தி, அந்ருதேந ஹிப்ரத்யூடா:' என்கிற வசனத்தினால்- 'நாஸதாஸீந்நோஸதாஸீத்' என்கிற ச்ருதி வசனத்திலும் ஸதஸத் சப்தங்கள் இரண்டும் வ்யஷ்டிதசையிலுள்ள சிதசித்துக்களை விஷயமாகக்கொண்டவைகள். இந்தவசனமானது உத்பத்தி ஸமயத்தில் ஸத் த்யத் சப்தங்களால் சொல்லப்பட்டிருக்கிற சிதசித் வ்யஷ்டிபூதங்களான வஸ்துக்கள் இரண்டுகளுக்கும் லயஸமயத்தில் அசித்ஸமஷ்டிபூதமானதும் தமஸ்சப்தத்தால் சொல்லத்தக்கதுமான வஸ்துவினிடத்தில் ப்ரளயத்தை ப்ரதிபாதிப்பதில் நோக்கமுள்ளதாக இருப்பதால். இந்த இடத்தில் ஒன்றுக்காவது ஸ்தஸதநிர்வசநீயத்வம் சொல்லப்படுகிறதில்லை. ஸத் அஸத் இரண்டிக்கும் காலவிசேஷத்தில் அஸத்பாவமாத்திரம் சொல்லப்பட்டிருப்பதால். இந்த இடத்தில் தமஸ் சப்தத்தால் சொல்லப்பட்டிருக்கிற வஸ்துவுக்கு அசித் ஸமஷ்டித்வம் 'அவ்யக்தமக்ஷரே லீயதே. அக்ஷரம் தமஸி லீயதே' என்று ச்ருதியினால் அறியப்படுகிறது. அர்த்தாங்கீகாரத்துடன் தமஸ் சப்தத்தினால் அசித் ஸமஷ்டிரூபையான ப்ரக்ருதியினுடைய ஸௌக்ஷ்மாவஸ்தை உரைக்கப்படுகிறது. அந்த ப்ரக்ருதிக்கோ வென்றால் 'மாயாந்து ப்ரக்ருதிம் வித்யாத்' என்று மாயா சப்தத்தால் அபிதானமிருப்பதால். அநிர்வசநீயத்வம் என்று சொல்லப்படுமேயானால் இது இவ்வண்ணமல்ல. மாயா சப்தத்திற்கு அநிர்வசநீயமென்கிற அர்த்தத்தை உணர்த்தும் தன்மை காணப்பட்டிருக்கவில்லை. மாயா சப்தம் மித்யாபர்யாயமானதால். இதற்கு அநிர்வசநீயத்வம் தான் பொருளென்று சொல்லப்படுமேயானால் அதுவுமில்லை. எல்லா இடத்திலும் மாயா சப்தமானது மித்யை என்கிற அர்த்தத்தை உணர்த்தும் தன்மையுள்ளதல்லவன்றோ. உண்மையாகவே இருக்கிற அஸுரர்களுடையவும் ராக்ஷஸர்களுடையவும் அஸ்த்ரம் முதலியவைகளில் மாயா சப்தத்திற்கு ப்ரயோகமிருப்பதால். 'தேநமாயாஸஹஸ்ரந்தச்சம்பரஸ்யாசுகாமிநா— பாலஸ்ய ரக்ஷதா தேஹமைகைகச்யேந ஸூதிதம்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகலால் மாயாசப்தமானது விசித்திரங்களான வஸ்துக்களை ஸ்ருஷ்டிசெய்கிறதென்கிற பொருளை உணர்த்துகிறது.

ச்ருதப்ரகாசிகை—

இதற்குமேல் ச்ருதிஸ்மிருதிகளாலும் அர்த்தாபத்தியினாலும் அநிர்வசநீய ஸித்தியை தூஷிப்பதற்காக முதலில் ச்ருதிவாக்கியங்களை யோஜனம் செய்கிறார்— யத்புந: என்று. அந்ருதேந என்கிற பதத்தை முதலில் வைத்துக்கொண்டிருக்கிற ச்ருதியை வ்யாக்கியானிக்கிறார் **அந்ருதேந** என்று. முன் நிரஸனம் செய்யப்பட்ட ப்ரகாரத்தால் அநிர்வசநீய மென்கிறபொருள் அப்ராமாணிகமானதால் அந்த அர்த்தத்தில் வ்யுத்பத்தி இல்லை என்று அர்த்தம். அந்ருத சப்தத்தை வ்யாக்கியானிக்கிறார்— **ருதேதரவிஷயோஹ்யந்ருதசப்த:** என்று. ஹி என்கிற சப்தத்தினால் ருதேதரவிஷயத்வத்தில் ஸம்ப்ரதிபத்தியானது ஸூசிப்பிக்கப்பட்டது. ருதாபாவத்திற்கும் ருதவிரோதிக்கும் ருதபூதமான ப்ரஹ்மாச்ரயத்வம் உபபன்னமாகாததால் அதைக்காட்டிலும் வேறாகவே இருக்கிற நஞர்த்தமானது உன்னாலும் சொல்லத்தக்கதென்று கருத்து. அந்ருத சப்தார்த்தத்தை நிஷ்கர்ஷிப்பதற்காக ருத சப்தார்த்தத்தைக் கூறுகிறார்—**ருதமிதி** என்று. கர்மவாசி - புண்யகர்மாவைச்சொல்லுகிற ஸ்வபாவமுள்ளதென்று பொருள். ஸத்யம் என்கிற பொருளை உணர்த்துகிற ஸ்வபாவமுள்ளதல்லவென்று கருத்து. எதனாலென்று கேட்கப்படுமேயாகில், கூறுகிறார்— **ருதம்பிபந்தௌ** என்று. இந்த வாக்கியத்தில் ஸுக்ருதஸ்ய லோகே என்றல்லவோ சொல்லப்பட்டிருக்கிறதென்றுகருத்து. இவ்விதமான வாக்யாந்தரங்களில் ப்ரஸித்தியும் அபிப்ராயப்படப்பட்டிருக்கிறது. யதா வ்ருக்ஷஸ்ய ஸம்புஷ்பிதஸ்ய தூராத்கந்தோ வாதி ஏவம் புண்யஸ்ய கர்மணோ தூராத்கந்தோ வாதி' என்று சொல்லிவிட்டு 'ஏவமந்ருதாதாத்மாநம் ஜுகுப்ஸேத்' என்று புண்யத்திற்கு ப்ரதியோகியாக அந்ருதசப்தம் ப்ரயோகிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் ருத சப்தம் புண்யத்தைச் சொல்லுகிறது. புண்யமும் மோக்ஷத்திற்கு விரோதியாகையால் எவ்வாறு அந்ருத சப்தத்தால் சொல்லப்பட்டிருக்கிற பாபமாத்திரத்திற்கு க்ரஹணம் என்கிற சங்கைவரின் மோக்ஷப்ரகரணத்தில் சொல்லப்பட்டிருக்கிற புண்யத்தை விவரித்துக்கூறுகிறார்— **ருதம் கர்ம** என்று. மோக்ஷத்தை அடையவிருப்பமுள்ளவனுக்கு புண்யம் பாபம் இரண்டும் மோக்ஷவிரோதியன்றோ. ஆகையால் அந்த இரண்டும் பாபமென்று பகரப்படுகிறது. ஆகையால் நஞ் ஸமாஸத்தில் உள்ளடங்கி இருக்கிற ருத சப்தமானது கருதப்படாமலிருக்கிற பலத்துடன் கூடின கர்மாவை உணர்த்துகிறது என்று பொருள். 'பரமபுருஷாராதநவேஷம் தத்ப்ராப்திபலம்' என்கிற இந்த வாக்கியத்தினால் 'ஸ்வகர்மணா தமப்யர்ச்ய ஸித்திம் விந்ததி மாநவ:' என்கிற இந்த வசனம் ஸூசிப்பிக்கப்பட்டது. அந்ருத சப்தத்திற்கு ப்ரஹ்மப்ராப்திவிரோதி பரத்வமிருந்தால்தான் ருத சப்தத்திற்கு பந்தகமல்லாத கர்மாவை உணர்த்துந்தன்மை ஸித்திக்கிறதென்பது பற்றி அதன் அர்த்தத்தை அதற்கு முந்தின வாக்கியத்தினால் உபபாதிக்கிறார்— **ஏதம்** என்று. ருதாந்ருத சப்தம் இரண்டுக்கும் 'ஏவமந்ருதாதாத்மாநம் ஜுகுப்ஸேத்' இதுமுதலிய ச்ருதிகளில் புண்யபாப ரூபங்களான அர்த்தங்களை உணர்த்தும் தன்மை ப்ரஸித்தமாக இருப்பதால்- 'நஸுக்ருதம் நதுஷ்க்ருதம் ஸர்வே பாப்மாநோதோ நிவர்தந்தே, க்ஷீயந்தே சாஸ்ய கர்மாணி' இது முதலியச்ருதி வாக்கியங்களில் ஸுக்ருதம் துஷ்க்ருதம் இரண்டுக்கும் மோக்ஷவிரோதித்வம் கேழ்க்கப்படுவதாலும் மோக்ஷப்ரகரணங்களில் முக்தி அடைய விருப்பமுள்ள சேதநனுக்கு ஸம்ஸாரமென்கிற பெயரை உடைய அநிஷ்டபலத்தைக்கொடுக்கும் ஸ்வபாவமுள்ளதாதலால் இரண்டும் பாப சப்தத்தால் சொல்லத்தக்கதாக இருப்பதாலும், இந்த அந்ருத சப்தத்திற்கு இந்தவாக்யத்திலேயே ப்ரஹ்ம ப்ராப்தி விரோதித்வம் கேழ்க்கப்படுவதாலும், 'தஸ்யாந்தராயோ

மைத்ரேய' இது முதலிய வாக்கியங்களில் புண்யம் பாபம் இரண்டு கர்மாக்களுக்கும் மோக்ஷத்திற்கு விரோதியான பலத்தைப் பயக்கும் தன்மை கேழ்க்கப்படுவதாலும், அந்ருதசப்தம் அநிர்வசநீய மென்கிற பொருளை உணர்த்தும் தன்மையுள்ளதென்பதாக வ்யுத்பத்தி இல்லாமையாலும், அந்ருத சப்தமானது அதைவிட வேருன வ்யுத்பத்தியினல் மோக்ஷ விரோதியான கர்மாவை உணர்த்துவதிலேயே நோக்கமுள்ளதென்று பொருள்.

நாஸதாஸீத்த்யாதி—இந்த இடத்தில் "அநாதிமத் பரம் ப்ரஹ்ம ந ஸத்தந்நா ஸதுச்யதே' என்று ப்ரஹ்மசப்தவாச்யமான சுத்தாத்மஸ்வரூபவிஷயமான ஸத ஸத் சப்த ப்ரயோகமானது ப்ரதிபந்தியாக அநுஸந்திக்கத்தக்கது. ஸத்அஸத் என்கிற இரண்டு சப்தங்களுக்கும் சிதசித் வ்யஷ்டிவிஷயத்வத்தை உபபாதிக்கிருர்—உத்பத்தி என்று. உண்டான வஸ்துவுக்கன்ரோ ப்ரளயம். சிதசித் வ்யஷ்டிகளுக்கு உத்பத்தியோ ச்ருதி ஸித்தமாயுள்ளது. ஆகையால் அந்த வஸ்துக்கள் இரண்டுக்கும் ப்ரளயம் சொல்லப்படுகிறதென்று அர்த்தம். ஸத் த்யத் என்கிறசப்தங்களால் 'ஸச்ச த்யச்சாபவத்' என்கிற வாக்யம் நினைக்கப்படும்படி செய்யப்பட்டது. கார்யாவஸ்த சேதநத்ரவ்யமானது ஸத் சப்தத்தால் சொல்லப்பட்டிருப்பதால். இந்த இடத்தில் ஸச் சப்தத்தாலும் அதைவிட விலக்ஷணமாக இருக்கிற வஸ்துவை உணர்த்துகிற அஸத்சப்தத்தாலும் கார்யாவஸ்த சேதநாசேதந நிஷேதம் செய்யப்பட்டது. வேறு வாக்கியத்தோடு அர்த்தைக்யத்தால் என்று அர்த்தம். 'தமஆஸீத் தமஸாகூடம்' என்கிற அதற்கு அடுத்த வாக்யாபிப்ராயத்தால் அசித் ஸமஷ்டிபூதமாயும் தமஸ்சப்தத்தால் சொல்லத்தக்கதுமானவஸ்து வென்று கூறப்பட்டது. வேறு ஹேதுவைக்கூறுகிருர்— ஸதஸதோ: என்று. காலவிசேஷத்தில் அநிர்வசநீய மங்கீகரிக்கப்படுகிறதில்லையன்ரோ. அசித்ஸமஷ்டிக்கு தமஸ்சப்தவாச்யத்வத்தை உபபாதனம் செய்கிருர்—அத்ர என்று. தமஆஸீத், 'மாயாந்து ப்ரக்ருதிம்' என்கிற இந்த இரண்டு வாக்கியஙகளுக்கு முந்தி வரிசையாக உபாதாந விவக்ஷையை சோத்ய ரூபத்தால் காண்பிக்கிருர்—ஸத்யம் என்று, ப்ரக்ருதி சப்தத்தால் சொல்லத்தக்கது மாயை என்று அர்த்தம். பரிஹரிக்கிருர்—நைததேவம் என்று. எதனலென்று கேட்கப்படுமேயாஞல் சொல்லுகிருர்— மாயா என்று. இதி சப்தம் ஹேதுவில். மாயாசப்தத்தால் சொல்லத்தக்கது ப்ரக்ருதி என்பது அபிப்ராயம். ஐந்த்ரஜாலிகன் முதலியவர்களிடங்களில் மாயாவீ என்கிற பதத்திற்கு ப்ரயோகம் காணப்படுவதால் மாயா மித்யா சப்தங்கள் இரண்டும் பர்யாயங்களானதால் அநிர்வாச்யத்திற்கும் மித்யாத்வ மிருப்பதால் மாயாசப்த வாச்யத்வம் என்கிற அபிப்ராயத்தால் சங்கிக்கிருர்—மாயா என்று. பரிஹரிக்கிருர்—ததபி நாஸ்தி என்று. மாயா சப்தத்திற்கு மித்யாபர்யாயத்வமே கிடையாது. அப்படி ஒப்புக்கொண்டபோதிலும் அந்யதா க்யாதி பேதாக்ரஹம் இவ்விரண்டுக்குள் ஒன்றினலேயே உபபத்தி வருவதால் மித்யார்த்த விஷயத்வம் யுக்தமல்லவென்பதனல் அநிர்வசனீயவாசித்வம் இல்லை என்று கருத்து. அதை உபபாதிக்கிருர்—நஹி என்று. மாயா சப்தப்ரயோக விஷயங்களாக இருக்கிற எல்லா அர்த்தங்களிலும் மித்யாத்வத்திற்கு அநுவ்ருத்தி இல்லாமையால் என்று அர்த்தம். ஸத்யமாக இருக்கிற வஸ்துக்களில் மாயாசப்தப்ரயோகத்தைக்காண்பிக்கிருர்—யதோக்தம் என்று. ஜ்ஞாநத்தால் பாதிக்கத்தக்கவைகளுக்கு ஒவ்வொன்ருக சாஸ்திரத்திஞல் சேதிக்கத்தக்க தன்மை இல்லையன்ரோ. ஆகையால் ஒவ்வொன்ருக மாயைகளுக்கு சேத்யத்வம் கூறப்பட்டிருப்பதால் மாயாசபதம் ஸத்யமான அர்த்தத்தையே உணர்த்துவதில் கருத்துள்ளது. எங்கும் தொடர்ந்து வருகிறதர்ம

த்திற்கே ப்ரவ்ருத்தி நிமித்தத்வம் சொல்லப்படவேண்டுமாதலால் மாயாசப்தப்ரயோக விஷயங்களான எல்லா அர்த்தங்களிலும் தொடர்ந்துவருகிற ஆச்சர்யத்வமே மாயாசப்தப்ரவ்ருத்தி நிமித்தமென்று சொல்லுகிறார்--அத: என்று. ஆச்சர்யத்வம்-ஆச்சர்யப்படத்தக்க தன்மை. அது விசித்திரமான அர்த்தங்களை உண்டுபண்ணும் திறமையுள்ளதாக இருப்பதால். விசித்ர சப்தமானது பற்பல பாகுபாடுள்ள வஸ்துக்களை உணர்த்துகிறது. நாநாவிதமான கார்யங்களை உண்டுபண்ணுகிற ஸ்வபாவமுள்ளதாதலால் ப்ரக்ருதிக்கு ஆச்சர்யப்படத்தக்க தன்மை. மாயாசப்தமானது ஆச்சர்யப்பொருளை உணர்த்தும் தன்மையுள்ளதென்றல்லவோ சொல்லப்படப்போகிறது. ஆதலால் ஆச்சர்யத்வமே ப்ரவ்ருத்தி நிமித்தம். மாயாசப்தப்ரயோக விஷயங்களான அஸத்வஸ்துக்களிடங்களிலும் ஸத்யவஸ்துக்களிடங்களிலும் ஆச்சர்யப்படத்தக்கதன்மை இருக்கிறது.

ப்ரக்ருதேஶ்ச மாயாஶப்³தா³பி⁴தா⁴நம் விசித்ரார்த²ஸர்க³கரத்வாதே³வ । 'அஸ்மாந்மாயீ ஸ்ருஜதே விஶ்வமேதத்தஸ்மிம்ஶ்சாந்யோ மாயயா ஸந்நிருத்³த⁴:' இதி மாயாஶப்³த³வாச்யாயா: ப்ரக்ருதேர்விசித்ரார்த²ஸர்க³கரத்வம் த³ர்ஶயதி । பரமேஶ்வரஸ்ய ச தத்³வத்தாமாத்ரேண மாயித்வமுச்யதே; நாஜ்ஞத்வேந । ஜீவஸ்யைவ ஹி மாயயா நிரோத⁴: ஶ்ரூயதே — "தஸ்மிம்ஶ்சாந்யோ மாயயா ஸந்நிருத்³த⁴:" இதி, 'அநாதி³மாயயா ஸுப்தோ யதா³ ஜீவ: ப்ரபு³த்⁴யதே' இதி ச । 'இந்த்³ரோ மாயாபி⁴: புரூரூப ஈயதே' இத்யத்ராபி விசித்ரா: ஶக்தயோ(அ)பி⁴தீ⁴யந்தே । அத ஏவ ஹி "பூ⁴ரி த்வஷ்டேவ ராஜதி" இத்யுச்யதே । ந ஹி மித்²யாபூ⁴த: கஶ்சித்³ராஜதே । "மம மாயா து³ரத்யயா" இத்யத்ராபி கு³ணமயீதி வசநாத்ஸைவ த்ரிகு³ணாத்மிகா ப்ரக்ருதிருச்யத இதி ந ஶ்ருதிபி⁴ஸ்ஸத³ஸத³நிர்வசநீயாஜ்ஞாநப்ரதிபாத³நம் ॥

நாப்யைக்யோபதே³ஶாந்யதா²நுபபத்த்யா; நஹி 'தத்த்வமஸி' இதி ஜீவபரயோரைக்யோபதே³ஶே ஸதி ஸர்வஜ்ஞே ஸத்யஸங்கல்பே ஸகலஜக³த்ஸர்க³ஸ்தி²திவிநாஶஹேதுபூ⁴தே தத³பா⁴வமதே ப்ரக்ருதே ப்³ரஹ்மணி விரோதா⁴ஜ்ஞாநப்ரஸங்கா³ நாஹேதுபூ⁴தா காசித³நவஸ்தி²திர்த்³ருஶ்யதே । ஐக்யோபதே³ஶஸ்து 'த்வம்' ஶப்³தே³நாபி ஜீவஶரீரகஸ்ய ப்³ரஹ்மண ஏவாபி⁴தா⁴நாத³வக³த: । 'அநேந ஜீவேநாத்மநாநுப்ரவிஶ்ய நாமரூபே வ்யாகரவாணி' இதி ஸர்வஸ்ய வஸ்துந: பரமாத்மபர்யந்தஸ்யைவ ஹி நாமரூபே ஸாக்ஷாத் । அதோ ந ப்³ரஹ்மாஜ்ஞாநப்ரஸங்க³: ॥

ஸ்ரீபாஷ்யம்—

விசித்திரமான வஸ்துக்களை ஸ்ருஷ்டிக்கும் வல்லமையுள்ளதாக இருப்பதினாலேயே ப்ரக்ருதியானது மாயாசப்தத்தால் சொல்லப்படுகிறது, 'அஸ்மாந் மாயீ ஸ்ருஜதே விச்வமேதத் தஸ்மிம்ஸ்சாந்யோ மாயயா ஸந்நிருத்த:' என்று மாயாசப்தத்திற்கு வாச்யையான ப்ரக்ருதிக்கு விசித்திரங்களான பதார்த்தங்களை ஸ்ருஷ்டி செய்யும் தன்மையைக் காண்பிக்கிறார். பரமபுருஷனுக்கும் அப்படிப்பட்ட விசித்ரார்த்த ஸர்க்ககரமான மாயா சப்தவாச்யமான ப்ரக்ருதியுடன் கூடி இருத்தல் மாத்திரத்தினால் மாயித்வம் சொல்லப்படுகிறது. அஜ்ஞதையாலல்ல. ஜீவனுக்கே அன்றோ மாயையினால் திரோதானம் ச்ருதியினால் கூறப்படுகிறது. 'தஸ்மிம்ஸ்சாந்யோ மாயயாஸந்நிருத்த:' என்றும் 'அநாதிமாயயா ஸுப்தோ யதாஜீவ: ப்ரபுத்யதே' என்றும். 'இந்த்ரோ மாயாபி: புருரூப ஈயதே' என்கிற இடத்திலுங்கூட விசித்ரங்களான சக்திகள் கூறப்படுகின்றன. அதனாலேயேதான் 'பூரி த்வஷ்டேவ ராஜதி' என்று சொல்லப்படுகிறது. மித்யாபூதமான ஒருவஸ்து ப்ரகாசியாதன்றோ- 'மம மாயா துரத்யயா' என்கிற இடத்தில் கூட குணமயீ என்கிற வசனத்தால் மூன்று குணங்களுக்குமாஸ்பதமான அதே ப்ரக்ருதி சொல்லப்படுகிறதுஎன்பதனால், ச்ருதிகளால் ஸத் என்றாவது அஸத் என்றாவது சொல்லத்தகாததான அஜ்ஞானமானது ப்ரதிபாதிக்கப்படவில்லை. ஐக்யோபதேசத்தின் அநுபபத்தியினாலுமல்ல. 'தத்த்வமஸி' என்று ஜீவாத்மா பரமாத்மா இருவர்களுக்கும் ஐக்யோபதேசமிருப்பதால் எல்லாவற்றையும் அறிந்ததும் ஸத்யஸங்கல்பத்துடன் கூடியதும் எல்லா உலகங்களின் ஸ்ருஷ்டி ஸ்திதி விநாசங்களுக்குக்காரணமாக இருக்கிறதும் தத் என்கிற சப்தத்தாலறியப்பட்டதுமான ப்ரக்ருத ப்ரஹ்மத்தினிடத்தில் விருத்தமான அஜ்ஞான பரிகல்பனைக்கு ஹேதுவாக இருக்கிற ஒருவித அநுபபத்தியும் காணப்படுகிறதில்லையன்றோ. ஐக்யோபதேசமோவென்றால் த்வம் சப்தத்தாலும் ஜீவனை சரீரமாகக்கொண்டிருக்கிற ப்ரஹ்மமே சொல்லப்படுவதால் மிகவும் பொருத்தமுள்ளது. 'அநேந ஜீவேநாத்மநாநுப்ரவிச்ய நாமரூபே வ்யாகரவாணி' என்கிற ச்ருதியினால் எல்லா வஸ்துககளுக்கும் பரமாத்மா ஈறாகவே நாமரூபங்களைப் பெற்றிருத்தல் கூறப்பட்டிருக்கிறது. ஆதலால் ப்ரஹ்மத்திற்கு அஜ்ஞானபரிகல்பனமில்லை.

ச்ருதப்ரகாசிகை—

ப்ரக்ருதிக்கு ஆச்சர்யத்தன்மையே மாயா சப்தத்தால் சொல்லத்தக்கதாக இருத்தலை காரணமாகக்கொண்டதென்று சொல்லுகிறார்—ப்ரக்ருதே: என்று. அதை உபபாதிக்கிறார்—அஸ்மாந் என்று. விசித்ரங்களான கார்யங்களை உண்டு பண்ணும் வல்லமை

யுள்ளதாக இருப்பதால் ப்ரக்ருதிக்கு ஆச்சர்யரூபத்வமென்பதனுல் ‘மாயாமாத்ரம்’ என்கிற ஸூத்ர விஷயமான பாஷ்யத்திற்கு விரோதமில்லை. இவ்விதமாக மாயாசப்தார்த்தம் உரைக்கப்பட்டது. இதற்குமேல் பகவானுக்கு மாயாஸம்பந்தம் ச்ருதியினுலேயே கூறப்பட்டிருப்பதால் அந்த மாயைக்கு அந்த பரமபுருஷனும வச்யனே வென்கிற ஸந்தேஹத்தை விலக்குவதற்காக மாயீ என்கிற பதத்திலிருக்கிற மத்வர்த்திய ப்ரத்யயத்தின் அர்த்தத்தைக் கூறுகிறார்—பரமபுருஷஸ்ய ச என்று. மாயீ என்கிற பதத்தால் சொல்லப்பட்ட மாயா ஸம்பந்தமானது அதனுல் அந்த பரமபுருஷனுக்குமறைக்கப்படத்தக்க தன்மையைச்சொல்லவந்ததன்று. பின்னையோவென்றால், அந்தமாயைக்கு அந்தப்பரமபுருஷன் சேஷி என்பதை உணர்த்துகிறது. அந்த மாயையினுல் மறைக்கப்படத்தக்க தன்மையோ வென்றால் ஜீவனுக்கே. அந்த ஜீவனுக்கே அப்படிப்பட்ட தன்மை ச்ருதிகளால் கூறப்பட்டிருப்பதால் என்று அர்த்தம். மாயையினுல் ஆக்ரமிக்கப்படுதல் ஜீவனுக்கே என்கிற இந்த அர்த்தத்தில் அன்யனுல்ஸந்நிருத்த:வொல்லப்பட்டிருக்கிற வசனத்தைக் கூறுகிறார்—அநாதி என்று. ‘இந்த்ரோ மாயாபி:’ என்கிற இடத்திலுள்ள மாயாசப்த பஹுவசனத்தால் அநேக விசித்ர சக்திகளைச்சொல்லும் தன்மை அறியப்படுகிறது. மம என்று வ்யக்தமாக இருக்கிறது. முடிவுபெறச் செய்கிறார்— இதி என்று. மாயா சப்தத்திற்கு மித்யாபூத விஷயங்களில் ப்ரயோகம் காணப்படுகிறதென்று சொல்லப்படுமேயானுல் அந்த இடத்தில் லாக்ஷணிகமாக இருக்கலாம். அர்த்தத்திற்கு ஸத்யத்வமில்லாததுபற்றி அதற்கு ஆச்ரயத்வமில்லாமையால். ப்ரதிபாஸமோ வெனில் த்வித்வம் முதலிய எண்ணிக்கைகளை விஷயமாகக்கொண்டிருப்பதால் ஆச்சர்ய ரூபமானது. மந்த்ரம் ஔஷதம் முதலியது ஆச்சர்யரூபமாக இருப்பதுபற்றி அந்த அர்த்த ஸம்பந்தத்தால் அதற்கு லாக்ஷணிகத்வம். அதற்குமேல் ச்ருத்யர்த்தாபத்தியினுல் அநிர்வசநீயஸித்தியை தூஷிக்கிறார்—நாபி என்று. ப்ரதிஜ்ஞையை உபபாதனம் செய்கிறார்— நஹி என்று. அஜ்ஞானத்தை கல்பிக்காவிடில் அநுபபத்தியில்லை, அதைக்கல்பிப்பதிலேயே தான் அநுபபத்தி, விருத்தர்மங்களின் ச்ரவணத்தாலென்கிற அபிப்ராயத்தால் தத் சப்தத்தால் அறியப்பட்டிருக்கிற விசேஷணங்கள் கூறப்பட்டன. ஸமானவிபக்திகளுள்ள பதங்களுடன்கூடின ச்ருதிவசன ஸித்தமாதலால் ஐக்யம் இழக்கப்படத்தக்கதல்ல. அவ்வாறு ச்ருதியினுல் உணர்த்தப்பட்டுள்ள அர்த்தத்தை இழப்பது அன்யாய்யமானதால் தத் சப்தத்தால் அறியப்பட்டிருக்கிற விசேஷணங்கள் ஸ்வீகரிக்கத்தக்கவைகளென்று கருத்து. ஐக்யோபதேசமானது உபபன்னமாகாதென்று கேட்கப்படுமேயாகில் கூறுகிறார்— ஐக்ய என்று. ஜீவன் பரப்ரஹ்மம் இவ்விரண்டுக்கும் ஹேய குணங்களின் ஸம்பந்தத்திற்குத் தகுதியுள்ளதாக இருத்தல் தகுதியற்றதாக இருத்தல் என்கிற இரண்டு விருத்தஸ்வபாவங்களாலன்றோ ஐக்யவிரோதம். ஜீவனைசரீரமாகக்கொண்ட பரமாத்மாவுக்கு ஐக்யம் சொல்லப்பட்டால் ப்ரஹ்மத்திற்கு ஹேய ஸம்பந்தம் ஜீவன் வாயிலாக ஏற்படுவதால் விரோதம் பரிஹரிக்கப்பட்டதென்று அர்த்தம். உபபன்னதர:—முக்கியமாக இருப்பதால் உபபன்னம் என்று கருத்து. ஜீவனைச் சொல்லுகிற சப்தத்தால் ஜீவசரீரகமான பரப்ரஹ்மத்தைக்கூறுதல் முக்கியமென்றுசொல்லப்படுமேயானுல் அந்த விஷயத்தில் சொல்லுகிறார்— அநேந என்று. ச்ருத்யர்த்தாபத்த்யஸித்தியை நிகமனம் செய்கிறார்— அத: என்று.

[illegible] ॥

𑌨𑌨𑍁 “𑌜𑍍𑌯𑍋𑌤𑍀𑌂𑌷𑌿 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌃” 𑌇𑌤𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌕𑌮𑍇𑌵 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑌿𑌤𑌿 𑌪𑍍𑌰𑌤𑌿𑌜𑍍𑌞𑌾𑌯 “𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑍋 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍𑌯𑌤𑍋𑌽𑌸𑍌” 𑌇𑌤𑌿 𑌶𑍈𑌲𑌾𑌬𑍍𑌧𑍍𑌯𑌾𑌦𑌿𑌭𑍇𑌦𑌭𑌿𑌨𑍍𑌨𑌸𑍍𑌯 𑌜𑌗𑌤𑍋 𑌜𑍍𑌞𑌾𑌨𑍈𑌕𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌿𑌜𑍃𑌮𑍍𑌭𑌿𑌤𑌤𑍍𑌵𑌮𑌭𑌿𑌧𑌾𑌯 “𑌯𑌦𑌾 𑌤𑍁 𑌶𑍁𑌦𑍍𑌧𑌂 𑌨𑌿𑌜𑌰𑍂𑌪𑌿” 𑌇𑌤𑌿 𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌸𑍍𑌯𑍈𑌵 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌃 𑌸𑍍𑌵𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌾𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌵𑍇𑌲𑌾𑌯𑌾𑌂 𑌵𑌸𑍍𑌤𑍁𑌭𑍇𑌦𑌾𑌭𑌾𑌵𑌦𑌰𑍍𑌶𑌨𑍇𑌨 𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌿𑌜𑍃𑌮𑍍𑌭𑌿𑌤𑌤𑍍𑌵𑌮𑍇𑌵 𑌸𑍍𑌥𑌿𑌰𑍀𑌕𑍃𑌤𑍍𑌯, “𑌵𑌸𑍍𑌤𑍍𑌵𑌸𑍍𑌤𑌿 𑌕𑌿𑌂” “𑌮𑌹𑍀 𑌘𑌟𑌤𑍍𑌵𑌂” 𑌇𑌤𑌿 𑌶𑍍𑌲𑍋𑌕𑌦𑍍𑌵𑌯𑍇𑌨 𑌜𑌗𑌦𑍁𑌪𑌲𑌬𑍍𑌧𑌿𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑍇𑌣𑌾𑌪𑌿 𑌵𑌸𑍍𑌤𑍁𑌭𑍇𑌦𑌾𑌨𑌾𑌮𑌸𑌤𑍍𑌯𑌤𑍍𑌵𑌮𑍁𑌪𑌪𑌾𑌦𑍍𑌯, “𑌤𑌸𑍍𑌮𑌾𑌨𑍍𑌨 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌦𑍃𑌤𑍇” 𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌤𑌿𑌜𑍍𑌞𑌾𑌤𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑍍𑌯𑌤𑌿𑌰𑌿𑌕𑍍𑌤𑌸𑍍𑌯𑌾𑌸𑌤𑍍𑌯𑌤𑍍𑌵𑌮𑍁𑌪𑌸𑌂𑌹𑍃𑌤𑍍𑌯, “𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍇𑌕𑌂” 𑌇𑌤𑌿 𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌿 𑌭𑍇𑌦𑌦𑌰𑍍𑌶𑌨𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍂𑌲𑌂 𑌨𑌿𑌜𑌕𑌰𑍍𑌮𑍈𑌵𑍇𑌤𑌿 𑌸𑍍𑌪𑌷𑍍𑌟𑍀𑌕𑍃𑌤𑍍𑌯, ‘𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌵𑌿𑌶𑍁𑌦𑍍𑌧𑌂’ 𑌇𑌤𑌿 𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌸𑍍𑌯 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌃 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌂 𑌵𑌿𑌶𑍋𑌧𑍍𑌯, “𑌸𑌦𑍍𑌭𑌾𑌵 𑌏𑌵𑌂 𑌭𑌵𑌤𑍋 𑌮𑌯𑍋𑌕𑍍𑌤𑌃” 𑌇𑌤𑌿 𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌸𑍍𑌯 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣 𑌏𑌵 𑌸𑌤𑍍𑌯𑌤𑍍𑌵𑌂 𑌨𑌾𑌨𑍍𑌯𑌸𑍍𑌯; 𑌅𑌨𑍍𑌯𑌸𑍍𑌯 𑌤𑍍𑌵𑌸𑌤𑍍𑌯𑌤𑍍𑌵𑌮𑍇𑌵; 𑌤𑌸𑍍𑌯 𑌭𑌾𑌵𑌨𑌾𑌧𑍇𑌯𑌸𑌤𑍍𑌯𑌤𑍍𑌵𑌂 𑌵𑍍𑌯𑌾𑌵𑌹𑌾𑌰𑌿𑌕𑌮𑌿𑌤𑌿 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑍋𑌪𑌦𑌿𑌷𑍍𑌟𑌿𑌰𑌿𑌤𑌿 𑌹𑍍𑌯𑌵𑌶𑍇𑌷𑌾 𑌉𑌪𑌬𑍃𑌂𑌹𑍍𑌯𑌤𑍇 ॥

ஸ்ரீபாஷ்யம்—

இதிஹாஸபுராணங்களிலும் ப்ரஹ்மாஜ்ஞானவாதமானது ஓரிடத்திலாவது காணப்படுகிறதில்லை.

கற்றறிந்தவரே ? ‘ஜ்யோதீம்ஷி விஷ்ணு:’ என்று ப்ரஹ்மம் ஒன்றே தத்வமென்று ப்ரதிஜ்ஞைசெய்து, ‘ஜ்ஞாநஸ்வரூபோ பகவான் யதோஸௌ’ என்று மலைகள் ஸமுத்திரங்கள் பூமி முதலிய பேதங்களால் வேறுபட்டிருக்கிற உலகத்திற்கு ஜ்ஞானத்தையே ஸ்வரூபமாகக்கொண்ட ப்ரஹ்மத்தினது அஜ்ஞானத்தின் விஜ்ரும்பணத்வத்தைக்கூறி, ‘யதாது சுத்தம் நிஜரூபி’ என்று ஜ்ஞாநஸ்வரூபமாக இருக்கிற ப்ரஹ்மத்திற்கே தன் ஸ்வரூபத்திலிருப்புள்ள வேளையில் வஸ்துபேதங்களின் இன்மையினது தர்சனத்தால் அஜ்ஞான விஜ்ரும்பணத்வத்தையே உறுதிப்படுத்தி, “வஸ்த்வஸ்தி கிம், மஹீகடத்வம்’ என்கிற சுலோகங்களால் ஜகத்தின் உபலப்தி ப்ரகாரத்தாலும் வஸ்துபேதங்களுக்கு அஸத்யத்வத்தை உபபாதித்து, ‘தஸ்மாந்ந விஜ்ஞானம்ருதே’ என்று ப்ரதிஜ்ஞை பண்ணப்பட்டிருக்கிற ப்ரஹ்மத்தைத் தவிர்த்த வஸ்துக்களின் அஸத்யத்வத்தை உபஸம்ஹாரம் செய்து விஜ்ஞாநமேகம் என்று ஜ்ஞாநஸ்வரூபமாக இருக்கிற ப்ரஹ்மத்தினிடத்தில் பேத

தர்சனத்திற்கு நிமித்தமாக இருக்கிற அஜ்ஞானத்திற்கு மூலம் தன்னுடைய கர்மாவென்றே வெளிப்படுத்தி, 'ஜ்ஞானம் விசுத்தம்' என்று. ஜ்ஞானஸ்வரூபமான ப்ரஹ்மத்தினுடைய ஸ்வரூபத்தை விசோதித்து 'ஸத்பாவ ஏவம் பவதோ மயோக்த:' என்று ஜ்ஞானஸ்வரூபமான ப்ரஹ்மத்திற்கே ஸத்யத்வம் மற்ற வஸ்துக்களுக்கு ஸத்யத்வமில்லை. மற்ற வஸ்துக்களுக்கு அஸத்யத்வமே - அந்த புவநம் முதலியதற்கு ஸத்யத்வம் வ்யாவஹாரிகம். தத்வம் உனக்கு உபதேசிக்கப்பட்டதென்றல்லவோ உபதேசம் காணப்படுகிறது.

ச்ருதப்ரகாசிகை—

இதிஹாஸபுராணங்களுக்கு ப்ரஹ்மாஜ்ஞானத்தைக் குறிப்பிட்டு அறிவிப்பதில் கருத்தில்லாமையை ப்ரதிஜ்ஞை செய்கிறார்—இதிஹாஸ என்று. நந்வித்யாதி - ப்ரஹ்மைக்யமேவ தத்வமிதி ப்ரதிஜ்ஞாயேதி-ஜடம்அஜடம்இரண்டுக்கும ஸ்வரூபைக்யம்பொருந்தாததாலும் ஸாமாநாதிகரண்யமானது பாதிதார்த்தமாக இருப்பதாலும் மேல் வரப்போகிற ச்லோகங்களில் அதைத் தவிர்த்தமற்ற வஸ்துக்களுக்கு மித்யாத்வம் சொல்லப்பட்டிருப்பதாலுமென்று கருத்து. விஜ்ஞாநவிஜ்ரும்பிதாநி-எதனால் பற்பல விதங்களாக அறியப்படுகிறதோ அல்லது எதனால் விபரீதமாகஅறியப்படுகிறதோஎன்று கரணவ்யுத்பத்தி. விஜ்ஞாநம்-அவித்யை-யதா துசுத்தம் இதுமுதலியதால் அதற்கு வ்யதிரேகமன்றோ உரைக்கப்படப்போகிறது 'விஜ்ஞாநேந விஜ்ரும்பிதாநி' என்கிற யோஜனையோவென்றால் யுக்தமல்லாதது. அஸ்வாரஸ்யத்தாலும் விஜ்ரும்பிதாநி என்கிற நபும்ஸகலிங்கார்த்தமான பதத்திற்கு பும்லிங்கபேதசப்தத்திற்கு விசேஷணமாக இருத்தல் பொருந்தாததால் விஜ்ரும்பித சப்தம் பாவார்த்த ப்ரத்யயாந்த மாதலால் ஷஷ்டீஸமாஸம் யுக்தமாக இருப்பதாலும், ப்ரஹ்மத்தைத்தவிர்த்த மற்ற வஸ்துக்கள் அவித்யையினால் கல்பிப்பட்டிருக்கின்றன வென்பதை வ்யதிரேக முகத்தால் ஸ்திரப்படுத்துகிறார் என்று கூறுகிறார்—யதா துஎன்று. சுத்தம் அவித்யைஇல்லாதது.நிஜரூபி-அதனால் உண்டுபண்ணப்பட்ட பேததர்சனமில்லாதது. அபாஸ்ததோஷம்-ராகம்முதலிய தோஷங்களில்லாதது. ஸங்கல்ப தரோ:- இதனால் நாலாபக்கங்களிலும் உண்டுபண்ணப்படுகிறது என்கிற வ்யுத்பத்தியினால் ஸங்கல்பசப்தம் தோஷத்தை உணர்த்துகிறது. 'வஸ்துஷு வஸ்துபேதா:' என்கிற இடத்தில் வஸ்துஷு என்கிற பஹு வசனத்தில் தாத்பர்யமில்லை- ஜடமாகக் காணப்பட்ட வஸ்துக்களிடத்தில் ஜடவஸ்துக்களை அடைந்திருக்கிற பேதங்கள் ஸம்பவிக்கிறதில்லை என்று அர்த்தம். அன்றிக்கே ஒரு வஸ்து சப்தமானது ஆகாரத்தை உணர்த்துகிறது. ஜடவஸ்துவை அடைந்திருக்கிற ஆகார பேதங்கள் இல்லை என்று அர்த்தம். 'வஸ்த்வஸ்திகிம், மஹீகடத்வம்'என்கிற இரண்டு ச்லோகங்களில் முதல் ச்லோகத்தால் அர்த்தஸ்வபாவம் உரைக்கப்பட்டது. இரண்டாவது ச்லோகத்தால் உதாஹரணம் காண்பிக்கப்பட்டதென்று பேதம். அந்த இடத்தில் எதனால் தத்வம்- இப்படி இருக்கையில் பரமார்த்தம் எது என்று அர்த்தம். முழுமையும் அபரமார்த்தமாக அறியப்பட்டிருக்குமேயாகில் எவ்வாறு அதில் ப்ராமாண்யம் என்கிற சங்கைவரின் சொல்லப்படுகிறது. ஸ்வகர்மஸ்திமிதாத்ம நிஸ்சயை: என்று, தத்வார்த்த நிச்சயத்திற்கு விரோதியான கர்மவசத்தாலென்று அர்த்தம்,

அன்றிக்கே ஆத்மவித்துக்களால் மாத்திரம் அஸத்யத்வம் அறியப்படுகிறதில்லை. பின்னையோ அஜ்ஞர்களாலும் கூட அறியப்படுகிறதென்று கருத்து. சாஸ்திரப்ரமாணத்தால் மாத்திரமல்ல, லௌகிகமான ஜடவஸ்துக்களை க்ரஹிக்கிற ப்ரமாணத்தாலும் கூட அதற்கு மித்யாத்வம் ஸித்திக்கிறதென்று சொல்லப்பட்டதாக ஆகிறது. 'தஸ்மாந்ந விஜ்ஞாநாத்ருதே' என்கிற ச்லோகார்த்தமான அநாத்மபூத விஜாதீயபேத நிஷேதத்தை உப ஸம்ஹரிக்கிறார் என்று கூறுகிறார்— தஸ்மாத் என்று 'விஜ்ஞாநமேகம்' என்கிற ச்லோகமானது ஸஜாதீயரூபமான ஆத்மபேத நிஷேதத்தில் நோக்கமுள்ளது. பேததர்சந நிமித்தாஜ்ஞாந மூலம் நிஜகர்மைவேதி. பேததர்சனம் - ஸஜாதீயபேததர்சனம். அது மேல்மேல் வரப்போகிற கார்யாஜ்ஞாநத்திற்கு காரணமானது, அதற்கும் முந்தின கர்மாவே என்று அர்த்தம். ஏது தேவாதி சரீரபேதத்திற்கு ஹேதுவோ அதே என்பது ஏவகாராபிப்ராயம். அன்றிக்கே தேவாதி சரீரபேத பிரதீதியை ஹேதுவாகக்கொண்ட அஜ்ஞானமானது ஆத்மாவினிடத்தில் தேவத்வம் முதலிய ஆகாரங்களின் ஆரோபண ரூபமாயுள்ளது. அதற்கு ஹேது கர்மாவென்று பொருள். ஆத்மபின்னமான வஸ்துவில் உண்டாகிற ஆத்மபுத்திக்கும் அஜ்ஞாந சப்தவாச்யத்வம் தகுதியுள்ளது. அந்த புத்தியும் மூலாஜ்ஞாந கார்யமாதலால். 'ச்ரூயதாஞ்சாப்யவித்யாயா: ஸ்வரூபம் குலநந்தன — அநாத்மந்யாத்மபுத்திர்யா' என்று அந்த புத்திக்கு அஜ்ஞாந பர்யாயமாக இருக்கிற அவித்யா சப்தவாச்யத்வம் இருப்பதாலும்- 'ஜ்ஞாநம் விசுத்தம் என்பதனால் ஸ்வகதபேதம் நிஷேதிக்கப்பட்டது. விசுத்தம் விமலம் என்பதனால் அவித்யை, அந்த அவித்யையினால் உண்டுபண்ணப்பட்டபேததர்சனம் இவைகளில்லாதது என்று அர்த்தம் அதனால் உண்டுபண்ணப்பட்ட சோகம் முதலியவைகளில்லாதது என்று சொல்லுகிறார்— விசோகம் என்று. இவ்வண்ணமாக ஸைநகம் என்று. ஸஜாதீய பேத நிஷேதம் அநுவதிககப்பட்டது. ஸைதகம் என்று சொல்லப்பட்ட ப்ரகாரத்தால் ஸ்வகதபேதராஹித்யம் சொல்லப்படுகிறது. பரம பரேச முதலியசப்தங்களால் சொல்லத்தக்கது சின்மாத்ரமே என்று கூறுகிறார்—பரம:என்று. இது அன்யனுடைய மதமல்ல. தத்வமே உரைக்கப்பட்டதென்று சொல்லுகிறார்— ஸத்பாவ: என்று. ஸம்வ்யவஹாரபூதம்-நாலாயக்கங்களிலும் வ்யவஹரிப்பதற்குத் தகுதியுள்ளபேதத்துடன் கூடியது. புவநாச்ரிதம் - புவநத்தினால் அதிஷ்டானமாக ஆச்ரயிக்கப்பட்டதாகவே இது இருககிறது. அதிலும் அஜ்ஞாநமே ஹேதுவென்று உரைக்கப்பட்டிருக்கிறதென்று. அர்த்தம். அன்றிக்கே புவநாச்ரிதம் — புவநத்தை அடைந்திருக்கிற, ஸம்வ்யவஹாரபூதம்-வ்யாவஹாரிகமாக இருக்கிற இந்த லோகஸித்தமானயாதொருஸத்யத்வ முண்டோ அதிலும் காரணம் அவித்யை என்று சொல்லப்பட்டதென்று அர்த்தம். இந்த அபிப்ராயத்தினாலன்றோ அந்த புவனம் முதலியவற்றுக்கு ஸத்யத்வம் வ்யாவஹாரிகமென்று உரைக்கப்பட்டது. இதிஹ்யுபதேசோத்ருச்யதே என்று. ஆதலால் இதிஹாஸபுராணங்களில் ப்ரஹ்மஜ்ஞாநவாதமானது காணப்படவில்லை என்று சொல்வதற்கு சக்யமாகாதென்று அர்த்தம்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

ப்ராக்ருதபே⁴தா³விநாஶித்வேந சாஸ்திஶப்³த³வாச்ய: । அசித³ம்ஶஸ்து சி-த³ம்ஶகர்மநிமித்தபரிணாமபே⁴த³வத்த்வேந விநாஶித்வாச்ச நாஸ்திஶப்³தா³பி⁴தே⁴ய: । உப⁴யஞ்ச பரப்³ரஹ்மபூ⁴தவாஸுதே³வஶரீரதயா ததா³த்மகமிதி தத்³ரூபம் ஸம்க்ஷேபேணாத்ராபி⁴ஹிதம் ॥ ததா²ஹி— "யத³ம்பு³ வைஷ்ணவ: காயஸ்ததோ விப்ர வஸுந்த⁴ரா । பத்³மாகாரா ஸமுத்³பூ⁴தா பர்வதாப்³த்⁴யாதி³ஸம்யுதா ॥" இத்யநேந விஷ்ணுஶரீரபூ⁴தாம்பு³பரிணாமபூ⁴தம் ப்³ரஹ்மாண்ட³மபி விஷ்ணோ: காய:; தஸ்ய விஷ்ணுஶரீரத்வேந ஸகலப்ரக்ருதிமத்தாதா³த்ம்யாவஶ்யம்பா⁴வ: காரணபூ⁴தஸ்ய ஸாமாநாதி⁴கரண்யஸ்ய "ஜ்யோதீம்ஷி விஷ்ணு:" இத்யாதே³ர்வக்ஷ்யமாணஸ்ய ஶரீராத்மபா⁴வ ஏவ நிப³ந்த⁴நமித்யாஹ: । அஸ்மிந் ஶாஸ்த்ரே ப்ரதே³ஶாந்தரேஷ்வஸக்ருது³க்தம்— "தாநி ஸர்வாணி தத்³வபு:" "தத்ஸர்வம் வை ஹரேஸ்தநு:" "ஸ ஏவ ஸர்வபூ⁴தாத்மா விஶ்வரூபோ யதோऽவ்யய:" இதி । தஸ்மாச்ச²ரீராத்மபா⁴வாயத்தம் தாதா³த்ம்யம் ஸாமாநாதி⁴கரண்யேந வ்யபதி³ஶ்யதே "ஜ்யோதீம்ஷி விஷ்ணு:" இதி ॥

ஸ்ரீபாஷ்யம்—

இது இவ்வண்ணமல்ல. இந்த இடத்தில் புவநகோசத்தினுடைய விஸ்தீர்ணமான ஸ்வரூபத்தைச்சொல்லி முன் சொல்லப்பட்டிராத ரூபாந்தரமானது சுருக்கமாக 'ச்ரூயதாம்' என்று ஆரம்பித்து சொல்லப்படுகிறது. சித்துக்களோடும் அசித்துக்களோடும் சேர்க்கையுற்றிருக்கிற உலகத்தில் சிதம்சமானது வாக்குக்கும் மனதுக்கும் எட்டாததும் தன்னாலேயே அறியப்படத்தக்க ஸ்வரூபத்துடன்கூடியதும் ஜ்ஞாநத்தையே வடிவமாகக்கொண்டிருத்தலால்ஸ்பர்சிக்கப்படாத ப்ராக்ருதபேதத்துடன் கூடியதாகவும் விநாசமில்லாமலிருப்பதால் அஸ்திஎன்கிற சப்தத்தால் சொல்லத்தக்கதாகவும் இருக்கிறது. அசிதம்சமோவென்றால் சிதம்சத்தின் கர்மாவை நிமித்தமாகக் கொண்ட பரிணாமபேதமுள்ளதாகவும், விநாசமுள்ளதாக இருப்பதால் நாஸ்திசப்தத்தால் சொல்லத்தக்கதாகவும் இருக்கிறது. இரண்டும் பரப்ரஹ்மமாக இருக்கிற வாஸுதேவனுக்கு சரீரமாக இருப்பதால் வாஸுதேவாத்மகமென்று இதன் ரூபம் இங்கு சுருக்கமாக உரைக்கப்பட்டது. 'யதம்புவைஷ்ணவ: காய:ததோ விப்ரவஸுந்தரா-பத்மாகாரா ஸமுத்பூதா பர்வதாப்த்

யாதி' ஸம்யுதா என்கிறச்லோகங்களில் சொல்லியவண்ணம் ஜலமானது விஷ்ணுவின் சரீரமாதலால் அந்த ஜலத்தின் பரிணாமமாக இருக்கிற ப்ரஹ்மாண்டமும் விஷ்ணுவின் சரீரம், அதற்கு விஷ்ணு ஆத்மா என்று 'ஜ்யோதீம்ஷி விஷ்ணு:' என்று தொடங்கி உரைக்கப்படப்போகிற ஸகலச்ருதிகளிலும் ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கிற தாதாத்ம்யோபதேசாப ப்ரும்ஹண ரூபமான ஸாமாநாதிகரண்யத்திற்கு சரீராத்மபாவமே காரணமென்கிறார். இந்த சாஸ்த்ரத்தில் முன்பும் இந்தவிஷயம் அடிக்கடி சொல்லப்பட்டிருக்கிறது. 'தாநி ஸர்வாணி தத்வபு:, தத்ஸர்வம் வை ஹரேஸ்தநு:, ஸ ஏவ ஸர்வபூதாத்மா விச்வரூபோ யதோவ்யய:' என்று. அப்படிப்பட்ட இந்த சரீராத்மபாவத்தைச் சார்ந்திருக்கிற தாதாத்ம்யமானது 'ஜ்யோதீம்ஷி விஷ்ணு:', என்கிற ஸாமாநாதிகரண்யத்தால் சொல்லப்படுகிறது.

ச்ருதப்ரகாசிகை—

இதை நிரஸனம் செய்கிறார்—நைததேவம் இது முதலியதால். நைதத்-சின்மாத்ரப்ரஹ்மத்திற்கு அவித்யாஸம்பந்தமும் அவித்யையினால் ஏற்படுத்தப்பட்டிருப்பதால் ப்ரபஞ்சமித்யாத்வமும் கூறப்பட்டிருப்பது அப்ராமாணிகமென்று அர்த்தம். அப்படியானால் அர்த்த விரோதத்தாலும் ப்ரகரண விரோதத்தாலும் சாஸ்த்ர தாத்பர்ய விரோதத்தாலும் 'அசேஷ மூர்திர்பகவான்' இது முதலிய பதங்களுக்கு லக்ஷணாவ்ருத்தியினால் அர்த்தங்களை உணர்த்தும் தன்மை கல்பிக்கவேண்டியதாதலாலும் ப்ரபஞ்சதர்மிக்ராஹக ப்ரமாண விரோதத்தாலும் ச்ருதியானது விசேஷங்களுடன் கூடின வஸ்துவை ப்ரதிபாதிப்பதில் நோக்கமுள்ளதென்கிற உபபாதனத்தால் ஸ்ம்ருதிகளுக்கு அந்த ச்ருதி விருத்தமான அர்த்தத்தை உணர்த்துவதில் கருத்து வந்து விழுவதாலும் முன்பு கூறப்பட்ட தர்க்க விரோதத்தாலும் அதின் இன்மை. இந்த இடத்தில் அர்த்தவிரோதமாவது ஸர்வஜ்ஞத்வம் முதலிய குணங்களுடன் கூடிய ப்ரஹ்மத்திற்கு அஜ்ஞாநம் முதலியவற்றின் ப்ரஸக்தியின் விரோதம். அவித்யைக்கு ஆச்ரயதிரோதாநம் முதலியதின் அநுபபத்தியும் விஸ்தாரமாக ப்ரபஞ்சத்தின் ப்ரதிபாதநவையர்த்த்யம் பிரகரண விரோதம், மற்றதோவென்றால் ஸ்பஷ்டம் தசச்லோகியில் அஸ்தி நாஸ்தி, ஸத்யம்,அஸத்யம் ஜ்ஞாநம் அஜ்ஞானம் முதலிய சப்தங்கள் முறையே ஆத்மாக்களையும் அநாத்மாக்களையும் விஷயமாகக் கொண்டவைகளாலதால் இங்கு தோஷமில்லை. அதில் நாஸ்தி அஸ்தி என்கிற இரண்டு சப்தங்களுக்கும் ஜ்ஞாநபாத்யத்வம் ப்ரவ்ருத்தி நிமித்தமா? அல்லது பரிணாமித்வம் ப்ரவ்ருத்தி நிமித்தமா? என்கிற விசாரத்தில் பரிணாமித்வபக்ஷத்தில் ஸ்வாரஸ்யமிருக்கிறது. மஹீகடத்வம் என்று உபபாதநத்தினால் அஜ்ஞாந சப்தத்திற்கும் அநிர்வசநீயம் என்கிற பொருளை உணர்த்துவதில் கருத்தில்லை. பின்னையோ கர்மபரத்வமே - யஜ்ஞ: பசு: இது முதலியவற்றின் ஸ்வாரஸ்யத்தாலும் வேறு இடத்தில் " சரீராக்ருதிபேதாஸ்து பூபைதே கர்மயோநய: அவித்யாகர்மஸம்ஜ்ஞாந்யா " " பாஹ்யகர்ம வ்ருதிப்ராஜ: " இது முதலிய வசனத்தாலும். சிதசித் வஸ்துக்களின் விவேசனம் இங்கு செய்யப்படுகிறதென்று அபிப்ராயப்பட்டு அதற்கு அனுகுணமான ஸங்கதியைக் கூறுகிறார்— அத்ர என்று. அத்ர - இந்த இரண்டாவதான அம்சத்தில். விஸ்தீர்ணம் என்பது ஸ்வரூப விசேஷணம்

விஸ்தீர்ண சப்தத்தால் பெருக்கிருக்தல் சொல்லக் கருதப்பட்டிருக்கிறது. சேர்ந்திருக்கிற ஸ்தூலரூபத்தைச் சொல்லிவிட்டு பிரிந்திருக்கிற ஸூக்ஷ்மரூபம் சொல்லப்படுகிறதென்று கருத்து. அன்றிக்கே விஸ்தீர்ணமென்பது க்ரியா விசேஷணம். மேலே இந்த இடத்தில் மித்யாத்வமானது சொல்லக்கருதப்பட்டிருக்குமேயானால் முந்தி விஸ்தாரமாகச்சொன்னது பொருத்தமுள்ளதாக ஆகாது. முந்தியே ப்ராந்தியுள்ளவனுக்கு வேறு ப்ரமத்தை உண்டுபண்ணுதல் செய்யத்தக்கதல்லவன்றோ. ஆதலால் முந்தி ஸவிஸ்தரமாக புவநகோசம் சொல்லப்பட்டிருப்பதால் மித்யாத்வமானது சொல்லப்படப்போகிறதில்லை என்று கருத்து. இனி கூறப்போகிற உள்ளத்திலுள்ள ஆதிபரதசரிதமானது விஸ்தார ரூபமாயுள்ளது. இது அதின் ஸங்க்ஷேபம். இனிசொல்லப்படப்போகிற ஸங்க்ஷேபமும் முற்கூறப்பட்ட ஸங்க்ஷேபமும் காணப்படுகிறது. ஆகையால் முற்கூறப்பட்டுள்ள ஸங்க்ஷேபமென்கிற ஸந்தேஹத்தை நீக்குவதற்காகக் கூறுகிறார்—அநுக்தம் என்று முன்சொல்லப்பட்டிராத ஸம்ஸ்ருஷ்டமான வேறுரூபம் சொல்லப்படுகிறதென்கிற சங்கையைப் போக்குவதற்காகக் கூறுகிறார்— ரூபாந்தரம் என்று. பிரிக்கப்பட்டதென்று அர்த்தம். மித்யாத்வத்தைத் தவிர்த்து சொல்லத்தக்கது எல்லாம் சொல்லப்பட்டது. ஆகையால் சொல்லப்பட்டிராததும் சொல்லத்தக்கதுமான ரூபாந்தரமன்றோ மித்யாத்வம். வேறு அல்ல என்கிற சங்கைவரின் மித்யாத்வத்தைத்தவிர்த்து சொல்லப்பட்டிராத ரூபாந்தரத்தைக் கூறுகிறார்— சிதசிந்மிச்ரஎன்று. சிதசிந்மிச்ரே ஜகதி என்பதனால் 'ஸங்க்ஷேபச்ச்ரூயதாம் புந:'என்கிற இடத்தில் புந: என்கிற சப்தமானது வியாக்கியானம் செய்யப்பட்டதாக ஆகிறது. சிதசிதாத்மகமான ஜகத்தில் ஸ்தூலரூபம் உரைக்கப்பட்டது. அதே ஜகத்தில் இந்த ரூபாந்தரமும் மீண்டும் உரைக்கப்படுகிறது என்று அதற்கு அர்த்தம். ஸத்தாமாத்ரமகோசரம்-வசஸாமாத்ம ஸம்வேத்யம். இது முதலிய வாக்கியங்களால் சொல்லப்பட்டிருக்கிற விசேஷணத்தைச்சொல்லுகிறார்— சிதம்சே ஏவாங்மநஸ என்று. பேதத்தை நிஷேதிப்பதில் நோக்குள்ள 'த்வைதிநோதத்ய தர்சிந:' இது முதலிய வாக்கியங்களுடைய அர்த்தத்தை உள்ளதில் வைத்துக்கொண்டு சொல்லுகிறார்—அஸ்ப்ருஷ்ட என்று. சிதம்சத்திற்கு ஜ்ஞானைகாகாரத்வமும் அசிதம்சத்திற்கு பரிணமாஸ்பதத்வமும் சொல்லக்கருதப்பட்டிருக்குமேயாகில் அப்பொழுது அஸ்தி நாஸ்தி ஸத்யம் அஸத்யம் முதலிய சப்தங்களுக்கு ப்ரவ்ருத்தி நிமித்தமாக எதற்காகக் கூறப்படுகிறது என்று வினவப்படுமேயானால் மறுமொழி உரைக்கப்படுகிறது. சாகாவிசேஷங்களில் 'ஸச்சத்யச்சாபவத்' 'விஜ்ஞாநஞ்சாவிஜ்ஞாநஞ்ச' ஸத்யஞ்சாந்ருதஞ்ச ஸத்யமபவத்' இது முதலிய வாக்கியங்களில் ச்ரூயமாணங்களாக இருப்பவைகளும் அத்யயனம் செய்யப்பட்டிருக்கிற சாகைகளை அடைந்திருப்பவைகளுமான ஸத்ய அஸத்யாதி சப்தங்களுக்கு ஜ்ஞாநபாத்யத்வாபாத்யத்வங்கள் ப்ரவ்ருத்தி நிமித்தங்களா? அல்லது பரிணமித்வ அபரிணமித்வங்கள் ப்ரவ்ருத்தி நிமித்தங்களா? என்கிற சங்கையை நிராகரிப்பதற்காக பரிணமித்வாபரிணமித்வங்களே நாஸ்தி அஸத்யாதி சப்தார்த்தம் ஜ்ஞாநபாத்யத்வாபாத்யத்வங்கள் அல்லவென்று அதீதங்களாயும் அநதீதங்களாயுமிருக்கிற சாகைகளின் அர்த்தங்களை ஜ்ஞாபிப்பதின் பொருட்டு என்று. ப்ருதிவீமுதலிய தத்வங்களுக்கு ஸங்காதவிசேஷாவஸ்தையிலேயே ஜீவனைக்குறித்து சரீரத்வம் காணப்பட்டிருக்கிறது. தனித்தனியாக இருக்கிற ஒவ்வொரு தத்வத்திற்கும் ஜீவனைக்குறித்து சரீரத்வம் காணப்பட்டிருக்கவில்லை. மனுஷ்யாதிசரீரங்களுக்கும் அப்படிப்பட்ட பிண்டாவஸ்தையிலேயே

சரீரத்வம் காணப்பட்டிருக்கிறது. சாம்பல் முதலிய வஸ்துவாக இருக்கிற நிலைமையிலில்லை என்று சித் அசித் இரண்டும் தனித்தனியாக இருக்கிற அவஸ்தா விசேஷங்களில் பகவானுக்கு சரீரமல்லவென்கிற சங்கையைப்போக்குவதற்காகச் சொல்லுகிறார்—உபயம் என்று. சித் அசித் இரண்டுகளின் ஸ்வரூபமானது அந்யோன்யம் சேர்க்கை பெற்றதாகவும் தனித்ததாகவும் பகவானுடைய சரீரமென்று அர்த்தம். நிஷ்க்ருஷ்டமான சிதசித்ரூபமானது பகவச்சரீரமென்பது ப்ரதிபாதிக்கப்பட்டிருப்பதால் பகவானைக்குறித்து சரீரத்வம் நிருபாதிகமாக இருப்பதுபற்றி ஸ்வரூபப்ரயுக்தத்வம்பலித்ததாதலால் முக்தாவஸ்தையிலுங்கூட ஜீவனுக்கு பகவச்சரீரத்வம் ஸித்தித்தது. ஏதத்ரூபம்-இந்த ஆகாரமென்று அர்த்தம். இதை உபபாதிக்கிறார்—தத்ராஹி இது முதலியதால். தசச்லோகியில் அஸாதாரணமான பகவதாத்மகத்வம் ப்ரதிபாத்யமல்ல. அதோ எல்லாப்ரகாணங்களுக்கும் பொதுவானது. அஸாதாரணமாகப்ரதிபாதிக்கத்தக்க வஸ்துவோ வென்றால் ப்ரக்ருதிபுருஷ விவேகமே. சாஸ்த்ரமானது உபநிஷதர்த்தத்தின் உபப்ரும்ஹணத்தில் நோக்கமுள்ளதாக இருப்பதால் ஸாங்க்யம் முதலிய மதங்களை வ்யாவ்ருத்திப்பதின்பொருட்டு எல்லா ப்ரகரணங்களிலும் பகததாத்மகத்வம் சொல்லப்படுகிறது. இந்த இடத்தில் அஸாதாரணமாக ப்ரதிபாதிக்கத்தக்கது ப்ரக்ருதிபுருஷவிவேகமே என்கிற அபிப்ராயத்தினாலேயன்றோ முந்தி அநுக்தம்ரூபாந்தரமென்று உரைக்கப்பட்டது. பகவதாத்மகத்வத்திற்கு ஸர்வப்ரகரணஸாதாரண்யமன்றோ- முந்தியும் இது அடிக்கடி சொல்லப்பட்டிருக்கிறதென்று மேலே சொல்லப்படப் போகிறது. தசச்லோகியிலிருக்கிற ஸாமாநாதிகரண்யம் சரீராத்மபாவ நிபந்தனமென்று ஜ்ஞாபிப்பதற்காக முன் ச்லோகத்தை எடுக்கிறார்—யதம்பு என்று. ரிஷியினால் அபிப்ராயப்படப்பட்டிருக்கிற பலித்த அர்த்தத்தைச் சொல்லுகிறார்—அம்புநோவிஷ்ணோ: என்று. பால்யாவஸ்தையில் சரீரமாக இருந்த வஸ்துவுக்கு வேறு அவஸ்தை வந்திருக்கும் தருணத்தில் சேதநனோடு ஸ்வரூபைக்யம் இல்லை அன்றோ பின்னையோவென்றால் எந்த அவஸ்தையுடனிருந்தாலும் அந்த வஸ்து சரீரமே என்று கருத்து. தஸ்யைவவிஷ்ணோராத்மேதி என்று. அபிப்ராயப்பட்டு என்று அர்த்தம். சரீராத்மபாவம் இப்படிப்பட்ட ஸ்வரூபமுள்ளதென்று கருத்து. ஸகலச்ருதிகததாதாத்ம்யோபதேசோபப்ரும்ஹண ரூபஸ்ய என்று அத்தியயனம் செய்யப்பட்டிராத சாகைகளில் கூட தாதாத்ம்யோபதேசமிருக்கிறது. அதற்கு இதே அர்த்தமென்று ஜ்ஞாபனமானது தாதாத்ம்யோபதேசத்திற்கு உபப்ருஹ்மணம் அல்லது ப்ரத்யக்ஷமாக இருக்கிற எல்லா ச்ருதிகளிலுமுள்ள தாதாத்ம்யோபதேசோபப்ருஹ்மணமாவது அத்தியயனம் பண்ணப்பட்டிராத சாகைகளில் அதற்கு விருத்தமான அர்த்தத்தின் ப்ரதிபாதன மில்லையென்று ஜ்ஞாபகம். இந்த இடத்தில் மூன்று இதி சப்தங்களுக்கு அநேந ச்லோகேந பகவான் இமமர்த்தபபிப்ரேத்ய அயமர்த்த இத்யாஹ என்று அன்வயக்ரமம். இந்த இடத்தில் ஸமஷ்டி ஸ்ருஷ்டியைச் சொல்லுகிற ச்லோகத்திலிருக்கிற வ்யதிகரண நிர்தேசத்தினால் வ்யஷ்டி ஸ்ருஷ்டி ப்ரதிபாதகமான ச்லோகத்திலுள்ள ஸாமாநாதிகரண்யமானது சரீரசரீரிபாவத்தைக் காரணமாகக்கொண்டது என்பது மாத்திரம் அறியப்படுகிறதில்லை.

பின்னையோ வேறு ப்ரதேசங்களில் வ்யஷ்டயவஸ்தையுடன் கூடிய எல்லா வஸ்துக்களுக்கும் பகவானைக்குறித்து சரீரத்வமும் ஸாமாநாதிகரண்யத்திற்கு சரீரசரீரிபாவ நிபந்தநத்வமும் அடிக்கடி கண்டோக்தமென்று சொல்லுகிறார் அஸ்மிந் என்று. சரீராத்மபாவத்திற்கு ஸாமாநாதிகரண்ய ஹேதுத்வம் கண்டோக்தமாக இருக்

கிறது. விச்வரூபோயதோ வ்யய; என்று. அவ்வாறே வேறு இடத்திலும் ''ஸர்வகத்வாத நந்தஸ்ய ஸ ஏவாஹம், ஸர்வம் ஸமாப்நோஷி ததோஸி ஸர்வ:'' இது முதலியது கண்டு அறியத்தக்கது. நத்திநம் இது முதலியதால் ஜ்யோதீம்ஷி என்கிற பதத்தை தொடக்கத்தில் கொண்டிருக்கிற ச்லோகத்தில் மூன்று பாதங்களின் அர்த்தம் உரைக்கப்படுகிறது. ஸம்ஸ்ருஷ்ட வஸ்துவுக்கு பகவதாத்மகத்வம் சொல்லப்பட்டிருக்கிறதென்று அர்த்தம் ப்ராணாநதி விசேஷாந்தம்சேதநாசேதநாத்மகம் என்று சொல்லப்பட்டிருப்பதனால் ஜ்யோதி: இது முதலிய சப்தங்கள் ஸம்ஸ்ருஷ்ட ஜீவனை உணர்த்துகின்றன.

[illegible]

ஸ்ரீபாஷ்யம்—

இந்த இடத்தில் அஸ்த்யாத்மகமாகவும் நாஸ்த்யாத்மகமாகவுமிருக்கிற உலகத்திலுள்ள வஸ்துக்களனைத்தும் விஷ்ணுவின் சரீரமாதலால் விஷ்ணவாத்மகமென்று கூறப்பட்டது. இது அஸ்த்யாத்மகம் இது நாஸ்த்யாத்மகம் என்பதில் இது ஹேது என்று சொல்லுகிறார்—

ஜ்ஞாநஸ்வரூபோ பகவான் யதோஸௌ என்று. ஸமஸ்தமான க்ஷேத்ரஜ்ஞ ஸ்வரூபமாக இருக்கிற பகவானுக்குஜ்ஞானமே ஸ்வாபாவிகமான உருவம். தேவன் மனுஷ்யன் முதலிய வஸ்துக்களின் ஸ்வரூபம் உருவமல்ல. எந்த காரணத்தினால்இவ்வண்ணமிருக்கிறதோ அக்காரணத்தினாலேயே அசித்ரூபமான தேவன் மனுஷ்யன் மலை ஸமுத்திரம் பூமி முதலியவைகள் அந்த க்ஷேத்ரஜ்ஞ ஸ்வரூபனானபகவானுடைய பற்பலவிதமான அனுஸந்தானத்தால் உண்டானவைகளாக இருக்கின்றன. தேவமனுஷ்யாதிகள் ஜ்ஞானத்தையே வடிவமாகக் கொண்டதும் ஸத் என்கிற சப்தத்தால் வ்யவஹரிக்கத்தக்கதுமான அந்த பரமாத்மாவினுடைய தேவன் மனுஷ்யன் முதலிய வஸ்து ஸ்வரூபமாக தன் ஸ்வரூபத்தை பற்பலவிதமாக அனுஸந்தித்தலை மூலமாகக்கொண்டவைகள். தேவன் மனுஷயன் முதலிய ப்ராணிகளின் ஆகாரத்தினுடைய அனுஸந்தானத்திற்கு மூலமான கர்மாவை மூலமாகக் கொண்டவைகள் என்று அர்த்தம். எக்காரணத்தினால் அசித் வஸ்துவானது க்ஷேத்ரஜ்ஞர்களுடைய கர்மாக்களுக்கு அனுகுணமான பரிணமத்துக்கு ஆபஸ்தமாக இருக்கிறதோ அதனால் அந்த அசித் வஸ்துவானது நாஸ்திசப்தத்தால் சொல்லத்தக்கதாக இருக்கிறது. மற்றது அஸத் என்கிற சப்தத்தால் சொல்லத்தக்கதாக இருக்கிறதென்பது இதனால் சொல்லப்பட்டதாக ஆகிறது அதையே விவரிக்கிறார்—யதாது சுத்தம் நிஜரூபி என்று. எப்பொழுது ஜ்ஞானத்தையே தன் வடிவமாகக்கொண்ட இந்த ஆத்ம வஸ்துவானது தேவன் மனுஷ்யன் முதலிய பிராணிகளின் ஆகாரமுள்ளவன் நான் என்று தன்னிடத்தில் பற்பல ப்ராணிகளின் ஆகாரானுஸந்தானத்திற்கு மூலங்களான கருமங்களின் நாசத்தால் தோஷமற்றதாகவும் பரிசுத்தமாகவும் வாஸ்தவமான தன்னுடைய ரூபமுள்ளதாக ஆகிறதோ, அப்பொழுது தேவமனுஷ்யாதிகளின் ஆகாரத்தோடு ஒன்றுபடுத்தி ஆத்மாவை எண்ணுதலுக்கு மூலமான கர்மாக்களுக்கு பலபூதங்களாகவும் அந்த ஆத்மபோகார்த்தங்களாகவுமிருக்கிற வஸ்துபேதங்கள் வஸ்துக்களில் உண்டாகிறதில்லை.

ச்ருதப்ரகாசிகை—

இதற்குமேல் மேலே வரப்போகிற ச்லோகத்தின் ஸங்கதியின் பொருட்டு விசிஷ்டவாக்யார்த்தாநுவாதத்தால் நான்காவது பாதத்தின் அர்த்தத்தைக் காண்பிக்கிறார்—அத்ர அஸ்த்யாத்மகம் என்று. யதம்பு என்று தொடங்கி இருக்கிற ச்லோகத்தால் ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கிற வையதிகரண்யதத்தினால் ஸமஷ்டி அவஸ்தையிலுள்ள சிதசித் வஸ்துக்கள் இரண்டுகளுக்கும் பகவதாத்மகத்வம் சொல்லப்பட்டது. வ்யஷ்ட்யவஸ்தையை அடைந்திருக்கிற சேர்க்கையற்றதும் சேர்க்கையுற்றதுமான அந்த சிதசித் வஸ்துக்கள் இரண்டுக்கும் ஸாமாநாதிகரண்யத்தினால் பகவதாத்மகத்வம் கூறப்படுகிறது. ஜ்யோதீம்ஷி என்கிற பதத்தை தொடக்கத்தில் கொண்ட ச்லோகத்தால். அந்த சுலோகத்தில் மூன்று பாதங்களால் வ்யஷ்ட்யவஸ்தையை அடைந்திருக்கிற சேர்க்கையுற்றிருக்கிற சிதசித்வஸ்துக்கள் இரண்டுக்கும் பகவதாத்மகத்வம் உரைக்கப்பட்டது

நான்காவது பாதத்தாலோ வென்றால் நிஷ்க்ருஷ்டங்களான அவ்விரண்டு வஸ்துக்களுக்கும் கூட பகவதாத்மகத்வம் உரைக்கப்பட்டது என்று அர்த்தம். அடுத்த ச்லோகத்தை அவதாரிப்பிக்கிறார்—இதம் என்று. அசிதம்சத்திற்கு நாஸ்த்யாத்மகத்வ நிபந்தனமே தாதபர்ய விஷயம். அசிதம்சத்திற்கு மித்யாத்வ சங்கையன்றோ விலக்கத்தக்கது. ஆகலால் அது பரிணாமமுள்ளதாக இருப்பதால் நாஸ்த்யாத்மகத்வத்திலேயே தாத்பர்யம் சிதம்சமோ வென்றால் பரிணாமமில்லாததால் அதற்கு அஸ்த்யாத்மகத்வம் பலித்ததாக ஆகலாமென்கிற அபிப்ராயத்தால் இதற்கும் நாஸ்த்யாத்மகத்வத்தில் இது ஹேதுவென்று சொல்லுகிறாரென்று கூறப்பட்டது. வ்யாக்கியானிக்கத்தக்க க்ரந்தத்தில் ப்ரதீகத்தை எடுக்கிறார்—ஜ்ஞாநஸ்வரூப என்று. இந்த இடத்திலுள்ள ஜ்ஞாநஸ்வரூபோ பகவான் என்கிற ஸாமாநாதிகரண்யம் சரீரசரீரிபாவ நிபந்தனமென்பது முந்தின ச்லோகத்தில் யதம்புவைஷ்ணவ: காய: என்று சொல்லப்பட்டிருப்பதால் மாத்ரம் அறியப்படுகிறதெனபதில்லை. பின்னையோ இந்த சுலோகத்திலும அசேஷமூர்த்தி: என்பதனாலுமறியப்படுகிறதென்கிற அபிப்ராயத்தால் வ்யாக்கியானம் பண்ணுகிறார்—அசேஷ என்று. அசேஷ என்கிற சப்தத்தால் அசித்தும் சொல்லக்கருதப் பட்டிருக்குமேயாகில் பகவானைக்குறித்து அதற்கு மூர்த்தித்வம் விதிக்கப்பட்டதாக ஆகும். அப்ராப்தமாக இருப்பதால். அப்பொழுது நதுவஸ்துபூத: என்று தேவன் மனுஷ்யன் மலை ஸமுத்திரம் பூமி முதலிய வஸ்துக்களாக இருத்தலின் நிஷேதமானது பொருத்தமுள்ளதாக ஆகாது. அதனால் அசேஷசப்தமானது க்ஷேத்ரஜ்ஞவிஷயமென்கிற அபிப்ராயத்தினால் அசேஷ க்ஷேத்ர ஜ்ஞாத்மநா என்று சொல்லப்பட்டது. இந்த இடத்தில் ஜ்ஞாநஸ்வரூப முதலிய சப்தங்களுக்கு பரம விசேஷ்ய பர்யந்தமாக அர்த்தத்தை உணர்த்தும் தன்மை இருந்தபோதிலும் வாக்கியத்திற்கு விசேஷண விசேஷணத்தில் தாத்பர்யம். அதனால்ஜ்ஞானஸ்வரூபத்வமானது விசேஷணமாக இருக்கிற ஜீவனுக்கே விதிக்கப்படுகிறது. எவ்வாறு * 'லோஹிதோஷ்ணீஷா ருத்விஜப்ரசரந்தி' என்கிற இடத்தில் விசேஷணமான உஷ்ணீஷத்தை அடைந்திருக்கிற சிவப்பு நிறமே விதேயமாக இருந்துகொண்டு பரம்பரையாக ருத்விக்குகளின் ப்ரசார கர்ம விசேஷணமாகிறதோ அப்படிப்போல. 'காடின்யவான் யோ பிபர்தி' 'ந்ருஸிம்ஹமூர்திர் பகவான் ச்வேத;' இதுமுதலியது உதாஹரணமாகக் காணத்தக்கது. 'ஜ்ஞாநஸ்வரூப:' என்கிற இடத்தில் திவ்யாத்ம ஸ்வரூபத்வம் சொல்லப்படுகிறதென்று சங்கிக்கத்தக்கதல்ல; எல்லா கருமங்களும் நசித்த பிறகு ஜ்ஞானம் தோஷமற்றதாக ஏற்படுகிறது என்கிறவிவரணம் பொருந்தாததலால் திவ்யாத்மஸ்வரூபத்திற்கு காமாக்களும் அவைகளாலுண்டுபண்ணப்பட்டிருக்கிற ராகம் த்வேஷம்முதலிய ஹேய ஸம்பந்தஙகளின் ப்ரஸங்கமுமில்லையன்றோ--'நதுவஸ்துபூத:' என்பதற்கு அர்த்தம் சொல்லுகிறார்—நதேவ மனுஷ்யாதி என்று. மலைமுதலியஸ்தாவரங்களைச் சொனனது எல்லா சரீரங்களுக்கும் உபலக்ஷணமென்பதை ஜ்ஞாபிப்பதற்காக தேவமனுஷ்ய முதலிய சப்தம். உத்தரார்த்தத்தை வ்யாக்கியானிக்கிறார்—யத ஏவம் என்று. 'சைலாப்திதராதிபேதான் விஜ்ஞாநவிஜ்ரும்பிதாநி ஜாநீஹி' என்பதனால் பலித்த ஹேதுஹேதுமத்பாவத்தை விவரிக்கிறார்— தத்விஜ்ஞான இதமுதலியதால். விஜ்ஞாந சப்தத்தை வ்யாக்கியானிக்கிறார்—தஸ்ய என்று. விஜ்ஞானம்-பற்பல ஜ்ஞாநம். 'நிஜகர்மபேதவிபின்ன சித்தை:-ஸர்வகர்மக்ஷயே,' என்று கர்மமூலமென்று

---

* உஷ்ணீஷம்—தலைப்பாகை.

சொல்லப்படப்போவதால் மலைகள் ஸமுத்திரங்கள் பூமிமுதலிய வஸ்துக்களின்பேதம் எவ்வாறு வைவித்யானுஸந்தான மூலம் - கர்மாவன்றோ மூலமென்று கேழ்க்கப்படுமேயாகில் சொல்லுகிறார்—தேவாதி என்று. வைவித்யானுஸந்தானத்திற்குதேவாதிபேத ஹேதுத்வமானது மேல்க்ரந்தத்தோடு அர்த்தைக்யத்தாலும் 'அவித்யா ஸஞ்சிதம் கர்ம பாஹ்ய கர்மவ்ருப்தி ப்ரஜ:'' 'பூமைதே கர்மயோநய :' இது முதலிய வேறு வசநங்களாலும் ஸத்வாரகமாக இருக்கிறது என்று பொருள். மூர்த்தி இதமஸ்த்யாத்மகம் இது முதலியதால் கூறப்பட்ட ச்லோக வாக்யார்த்தமானது எவ்வாறு பொருந்துகிறதென்று கேழ்க்கப்பட்டால் சொல்லுகிறார்—யதர்மச என்று. ஜ்ஞாநஸ்வரூப: 'விஜ்ஞாநவிஜ்ரும்பிதாநி என்பதனுல் பலித்ததென்று அர்த்தம். ததேவ என்று பூர்வபக்ஷயோஜனையில் சொல்லப்பட்டிருக்கிற அர்த்தங்களில் அபேக்ஷிக்கபட்டிருக்கிற அம்சத்தை உபஜீவித்து ஸித்தாந்தயோஜனை செய்யப்படுகிறது. விஜ்ஞாந விஜ்ரும்பிதத்வத்தையே வ்யதிரேக முகத்தால் விவரிக்கிறார் என்று அர்த்தம். முந்தினச்லோகத்தில் தேவாதி பேதங்களுக்கு ஸ்வாத்ம வைவித்யானுஸந்தான மூலத்வம் ஸத்வாரகமென்கிற "வ்யாக்கியானமானது அடுத்த ச்லோகத்தில் வ்யதிரேக முகத்தால் விவரணத்தில் கர்மஹேதுத்வ ச்ரவண நிபந்தனமென்பதை ஸ்பஷ்டமாகச் செய்துகொண்டு சொல்லுகிறார்—தேவாத்யாகாரேண என்று. நிர்தோஷம் இது முதலிய பதங்களுக்கு அர்த்த விபாகமானது 'ஜ்ஞானம் விசுத்தம்' இது முதலிய ச்லோக வ்யாக்கியானத்தில் விசதமாகக்கூறப்படப்போகிறபடியால் க்ரந்தலாகவத்திற்காக இந்த இடத்தில் அது விஸ்தரிக்கப்படவில்லை. நிர்தோஷம் - சரீர ஸம்பந்தமில்லாதது. பரிசுத்தம் அந்த சரீரஸம்பந்தத்தால் உண்டுபண்ணப்பட்ட ராகம் த்வேஷம் ஸுகம் துக்கம் முதலியவைகளால் விடுபட்டது. நிஜரூபி-ஆவிர்ப்பவித்திருக்கிற ஸ்வரூபத்துடன் கூடியது. ஸங்கல்பசப்தத்தை வ்யாக்கியானம் செய்கிறார்— ஏகீக்ருத்யாத்மகல்பநா என்கிறசப்தத்தால். ஸம் என்கிற சப்தத்திற்கு ஏகீகாரம் அர்த்தமென்று வையாகரணர்கள் கூறுகின்றனர். முற்கூறியதுபோல் ஸத்வாரகமென்று வ்யாக்கியானம் பண்ணுகிறார்— ஆத்மகல்பநா மூலகர்ம பலபூதா:' என்று. தன்னுடைய ஆத்மஸ்வரூபமேதேவமனுஷ்யாதிகளின் ஆகாரத்தால் பலவகைப்பட்டிருக்கிறதென்கிற அனுஸந்தானமானது தேஹத்தையும் ஆத்மாவையும் ஒன்று சேர்த்து அனுஸந்தானத்தின் பலம். அவ்விரண்டுக்குள் ஒவ்வொன்றும் விஜ்ஞாந சப்தத்திலும் ஸங்கல்ப சப்தத்திலும் அர்த்தஸித்தமாக இருக்கிறது. ஸுகதுக்கங்களன்றோ கர்மபலன், அவ்வாறு இருக்க வஸ்துபேதம் கர்மபலமென்பது எவ்வாறு பொருத்தமுள்ளதாக ஆகுமென்கிற சங்கைவரின் 'தத்போகார்த்தா:'என்று கூறப்பட்டது. சுகம் முதலிய போகங்களுக்கு வழியாக இருப்பதால் தேவாதிபேதங்கள் கர்மபலமென்று பொருள். 'போக்தாபோக்யம் ப்ரேரிதாரஞ்சமத்வா' இது முதலியவைகளில் தத்போகார்த்தா: என்கிற வசனத்திலைல் போக்ய சப்தத்தின் அர்த்தமானது நன்கு வெளியிடப்பட்டதாக ஆகிறது. போகஸ்தானங்களுக்கும் போகோபகரணங்களுக்கும் போகஸித்திக்கு ப்ரயோஜகமாக இருத்தலேபோக்யத்வமென்று அர்த்தம்—எழாம்வேற்றுமையிலுள்ள வஸ்து சப்தமானது ஜீவபர்யந்தமான தேஹத்தை அர்த்தமாகக்கொண்டிருக்கிறது. இரண்டாவதான வஸதுசப்தமானது தேவாதிகளின் சரீரமாத்திரத்தைச் சொல்லுகிறது. வஸ்துபேதா: - தேவாதி சரீரபேதங்கள். இந்த இடத்தில் வஸ்துபேத சப்தத்திைல் பேதமானது வஸ்துரூபமாக இருப்பதால் பாரமார்த்யமும் பலித்தது.

யே தே³வாதி³ஷு வஸ்துஷ்வாத்மதயாபி⁴மதேஷு போ⁴க்³யபூ⁴தா: தே³வமநுஷ்யஶைலஸாக³ராதி³வஸ்துபே⁴தா³: ; தே தத்³பா⁴வஹேதுபூ⁴தகர்மஸு விநஷ்டேஷு ந ப⁴வந்தீத்யஸ்ய காலாத்³யவஸ்தா²விஶேஷயோகி³தயா நாஸ்திஶப்³தா³பி⁴தே⁴யத்வம், உத்தரஸ்ய ஸர்வதா³ நிர்விகாரஜ்ஞாநைகாகாரஸ்யைவ அஸ்திஶப்³தா³பி⁴தே⁴யத்வமித்யர்த²: । ப்ரதிக்ஷணவிநாஶிதயா காலாத்³யவஸ்தா²யோகி³நோऽபி வஸ்துநோ நாஸ்திஶப்³தா³பி⁴தே⁴யத்வமேவேத்யாஹ — "வஸ்த்வஸ்தி கிம்" இதி । அஸ்திஶப்³தா³பி⁴தே⁴யோ ஹ்யாதி³மத்⁴யபர்யந்தஹீநஸ்ஸததைகரூப: பதா³ர்த²: । தஸ்ய குத்ரசித³பி நாஸ்தித்வப்ரஸங்கா³பா⁴வாத் । அசித³பி வஸ்து கிஞ்சித் க்வசித³பி ததா²பூ⁴தம் ந த்³ருஷ்டசரம் । தத: கிமித்யத்ராஹ — "யச்சாந்யதா²த்வம்" இதி । யத்³வஸ்து ப்ரதிக்ஷணவிநாஶித்வம் யாதி; தத்தத்³ரூபாந்தராவஸ்தா²ப்ராப்த்யா பூர்வபூர்வாவஸ்தா²ம் ஜஹாதீதி தஸ்ய பூர்வபூர்வாவஸ்தா²ரூபாவஸ்தா²யாம் ந ப்ரதிஸந்தா⁴நமஸ்தி । அதஸ்ஸர்வதா³ தஸ்ய நாஸ்திஶப்³தா³பி⁴தே⁴யத்வமேவ । ததா²ஹ்யந்வயாஹ்யத இத்யாஹ — "மஹீ க⁴டத்வம்" இதி । ஸ்வகர்மணா தே³வமநுஷ்யாதி³பா⁴வேந ஸ்தி²தாத்மநஸ்ஸம்ப³த்³த⁴போ⁴க்³யபூ⁴தமபி அசித்³வஸ்து ப்ரதிக்ஷணவிநாஶித்வமாக்ருதே — "அநாஶ்யத" இத்யர்த²: । ஏவம் ஸதி கிமேஷு அஸ்திஶப்³தா³பா⁴வாதி³ப்ரயோக³பீ³ஜம் ஸததைகரூபமாத்ரமஸ்தி கிம்? ந ஹ்யஸ்தீத்யபி⁴ப்ராய: । யஸ்மாதே³வம், தஸ்மாத் ஜ்ஞாநஸ்வரூபாத்மவ்யதிரிக்தமஸ்தி காலாதி³தயா கேவலாஸ்திஶப்³த³வாச்யம் ந ப⁴வதீத்யாஹ — "தஸ்மாந்ந விஜ்ஞாநம்ருதே" இதி ॥

ஸ்ரீபாஷ்யம்—

ஆத்மாக்களாக அபிமானிக்கப்பட்டிருக்கிற தேவன் மனுஷ்யன் முதலியவஸ்துக்களில் போக்யங்களாக இருக்கிற யாதொரு தேவன் மனுஷ்யன் மலை ஸமுத்திரம் பூமி முதலிய வெவ்வேறு வஸ்துக்களுண்டோ அவைகள் அந்த தேவன் மனுஷ்யன் முதலிய வஸ்துக்களாக ஆவதற்குக் காரணமாயிருந்த கர்மாக்கள் முற்றிலும் நாசமடைந்தபிறகு இருப்புடையவைகளாக ஆகிறதில்லை. ஆதலால் அசித்வஸ்துவானது ஏதோ ஒரு ஸமயத்திலுண்டாகிற ஒருவித நிலைமையுடன் சேர்க்கைபெருவதால் நாஸ்தி சப்தத்தால்

சொல்லப்படுகிறது. மற்றதோ எப்பொழுதுமே தன்னிடத்தில் நிலைபெற்றிருக்கிற ஜ்ஞாநத்தையே வடிவமாகக்கொண்டிருப்பதால் அஸ்தி என்கிறசப்தத்தால் சொல்லப்படுகிறது என்று பொருள். ஒவ்வொரு நொடிப்பொழுது தோறும் வெவ்வேறாக மாறுதலடைகிறபடியால் ஏதோ ஒரு ஸமயத்திலுண்டாகிற நிலைமையுடன் கூடிய அசித்வஸ்துவானது நாஸ்தி என்கிற சப்தத்தாலேயே சொல்லத்தக்கதாக ஆகிறது என்று சொல்லுகிறார்--வஸ்த்வஸ்திகிம்-- என்று. தொடக்கம் மத்யகாலம முடிவு இவைகளால் விடுபட்டு எப்பொழுதும் ஒருவிதஸ்வரூபத்துடன் கூடி இருக்கிற பதார்த்தமானது அஸ்தி சப்தத்தால் சொல்லத்தக்கதன்றோ- அது ஒருபொழுதும் நாஸ்தி என்கிற புத்திக்கு விஷயமாகத் தகுதியில்லாமலிருப்பதால். அசித் வஸ்து ஒன்றாவது ஒரு ஸமயத்திலாவது அவ்வித ஸ்வபாவமுள்ளதாக முன்புகாணப்பட்டிருக்கவில்லை. அதனாலென்னவென்று கேட்கப்பட்டால் சொல்லுகிறார்—'யச்சாந்யதாத்வம்' என்று. எந்த வஸ்துவானது ஒவ்வொருக்ஷணந்தோறும் வேறுபாட்டை அடைகிறதோ அந்தவஸ்துவானது மேல்மேல் ஏற்படுகிற நிலைமைகளை அடைந்து முந்தி முந்தி இருந்த நிலைமைகளை இழந்துவிடுகிறதாதலால் முந்தின நிலைமையை அடைந்திருந்த அந்த வஸ்துவுக்கு பிந்தின நிலைமை ஏற்பட்டிருக்கும் ஸமயத்தில் * ப்ரதிஸந்தானமில்லை. ஆதலால் அது எப்பொழுதும் நாஸ்தி என்கிற சப்தத்தால் சொல்லத்தக்கதே. அவ்வண்ணமேயன்றோ அறியப்படுகிறதென்று சொல்லுகிறார்--'மஹீ கடத்வம்' என்று. தன்னுடைய கர்மாவினால் தேவன் மனுஷ்யன் முதலிய ப்ராணிகளின் தேஹஸம்பந்தமேற்பட்டிருப்பதினால் தடைசெய்யப்பட்டிருக்கிற ஆத்ம நிச்சயத்துடன்கூடிய மனிதர்களால் தனக்குபோக்யமாக இருக்கிற அசித் வஸ்துவானது ஒவ்வொரு க்ஷணந்தோறும் வேறுபாடுள்ளதாகக் காணப்படுகிறது- அனுபவிக்கப்படுகிறதென்று பொருள். வஸ்துஸ்திதி இவ்வாறாக இருக்கையில் ஏதாவது ஒரு அசித் வஸ்துவானது அஸ்தி நாஸ்தி என்கிற சப்தத்தால் வ்யவஹரிப்பதற்குத் தகுதியுள்ளதாயும் ஆதிமத்யாந்தமில்லாததாயும் எப்பொழுதும் ஒரே ஸ்வரூபமுள்ளதாகவும் காணப்பட்டிருக்கிறதா? இல்லவே இல்லையென்று அபிப்ராயம். எக்காரணத்தால் இவ்வண்ணமிருக்கிறதோ அதனாலே ஜ்ஞாநஸ்வரூபியான ஆன்மாவைக்காட்டிலும் வேறான அசித் வஸ்துவானது ஒருபொழுதும் ஓரிடத்திலும் தனித்த அஸ்தி சப்தத்தால் சொல்லத்தக்கதாக ஆகிறதில்லை என்று கூறுகிறார்— 'தஸ்மாத் ந விஜ்ஞானம்ருதே' என்று.

ச்ருதப்ரகாசிகை—

இந்த இடத்தில் அன்வயிக்கப்பட்டிருக்கிற பதங்களில் வ்யாக்கியானிக்கத்தக்க பதங்களை வ்யாக்கியானிப்பதற்காகச் சொல்லுகிறார்—யேதேவாதிஷு— என்று. தேவா

---

* ப்ரதிஸந்தானம் = ஸ்மரணம.

திஷ்ட வஸ்துஷ்வாத்மதயாபி மதேஷ்ட முதலிலிருக்கிற வஸ்து சப்தமானது ஜீவபர்யந்தமான தேஹத்தையே குறிக்கிறதென்று அபிப்ராயம். சேர்க்கைபெற்றிருக்கிற ஆகாரத்திலன்றோ ஆத்மாபிமானம். 'ததபோகார்த்தா:' என்று முந்தி சொல்லப்பட்டிருக்கிற பதத்தைச்சார்ந்த வ்யாக்கியானிக்கத்தக்க பதத்தை உதாஹரிக்கிறார்— போக்யபூதா: என்று. போக்யபூதா: என்கிற இந்த பதப்ரயோகத்தால் வஸ்துபேதா: என்கிற பதத்துக்கு அசிதம்சமாதரத்தில் தாதபர்யம் உரைக்கப்பட்டது. நதுவஸ்துபூதா: என்று சொல்லப்பட்டிருப்பதால் முந்தின ச்லோகத்தில் சொல்லப்பட்ட பேதஙகளே இங்கு சொல்லக்கருதப்பட்டிருக்கின்றன வென்று சொல்லுகிறார்-தேவமனுஷ்ய என்று. காரணமில்லாமையால் காரயமில்லாமல் போவதன்றோ வ்யதிரேகம். அதை ஸ்பஷ்டமாகச்சொல்லுகிறார்—தந்மூலபூத என்று ப்ரதானமான ப்ரக்ருதார்த்தம் பலித்ததென்றுசொல்லுகிறார்—இத்யசித் வஸ்துந: என்று. முந்தினச்லோகத்தின் பலிதார்த்தத்தைச்சொல்லும் தருணத்தில் ஆத்மா அஸ்தி சப்தத்தால் சொல்லத்தக்கதென்பதில் ஹேதுவானது கூறப்படவில்லை. இந்த .இடத்திலோவென்றால் அதற்கும் பலிதத்வத்தைக் கூறுகிறார்—இதரஸ்ய: என்று. உலகம் எவ்வாறாக அறியப்படுகிறதோ அவ்விதத்தாலும் வஸ்துபேதங்களுக்கு பரிணாமித்வத்தை இரண்டு ச்லோகங்களால் உபபாதித்து அவற்றுள் முதன்மைவாய்ந்துள்ள ச்லோகத்தினது வாக்கியார்த்தத்தைக் கூறுகிறார்—ப்ரதிக்ஷணம் என்று. ச்லோகத்திற்கு நாஸ்தி சப்தத்தால் சொல்லத்தக்க அர்த்தத்தில் நோக்கானது 'யதஸ்தி நாஸ்தி' என்கிற தொடக்கததால் அறிப்பட்டிருக்கிறது. இந்த ச்லோகததில் ப்ரயோஜகசிகைஷ. 'வஸ்த்வஸ்தி கிம்' என்கிற அர்த்தயோஜனைக்குத் தகுந்த வண்ணமாக இந்த இடத்தில் சொல்லத்தக்கதான யதஸ்தியந்நாஸ்தி என்று தொடக்கததினால் ஸித்தமான அர்த்தத்தைகூறுகிறார்—அஸ்திசப்த என்று. எப்பொழுதும் ஒரே ஸ்வரூபத்துடன்கூடி இருப்பதால் அஸ்தி சப்தத்தால் சொல்லத்தக்க தன்மை இருந்தாலன்றோ ச்லோகத்தின் முந்தினபாதியில் சொல்லப்பட்டிருக்கிற அதன் அபாவததிற்கு நாஸ்தி சப்தத்தால் சொல்லத்தக்க தன்மையில் ஹேதுத்வம் ஸித்திபெருகிறது. ச்லோகததின் முற்பாதியை வ்யாக்கியானம் செய்கிறார்— அசித்வஸ்து என்று. நாஸ்தி சப்தத்தால் சொல்லத்தக்கதன்மைக்கு இதனுலென்ன வென்கிற சங்கைவரின் ச்லோகத்தின் பிந்தினபாதியை அவதரிப்பிக்கிறார்— தத: கிமித்யத்ராஹ என்று. யாதி என்று நிகழ்காலத்தைக் குறிப்பிட்டுச் சொனனதற்கு அபிப்ராயத்தைச்சொல்லுகிறார்— ப்ரதிக்ஷணம் என்று. 'பூயோ ந தத் ததா' என்பதற்கு அர்த்தத்தைகூறுகிறார்—ந்து என்று. மேல் மேல் வருகிற நிலைமையை அடைவதனுல் என்பது பூய: என்கிற சப்தத்தின் அர்த்தம். 'ந தத்ததா' என்பதற்கு அர்த்தத்தைக் கூறுகிறார் பூர்வபூர்வாவஸ்தாம் ஜஹாதி என்று. தத்ர என்பதற்கு அர்த்தம் சொல்லுகிறார்-பூர்வாவஸ்தஸ்யோத்தராவஸ்தாயாம் என்று. குதஸ்தத்வம் என்பதற்கு அர்த்ததைக்கூறுகிறார்—நப்ரதிஸந்தாணம் என்று. தத்த்வம்-அந்த வஸ்துவின் பாவம். அது இது என்கிற நினைவுக்குத் தகுதியற்றிருத்தல் பலித்ததென்று அர்த்தம். அய்யனே! தத்த்வம் எதனுல் பூர்வாவஸ்தத்வம் எதனுலென்று சொல்லப்பட்டது. எவ்வாறு ப்ரஸிந்தான நிஷேதம்? சொல்லப்படுகிறது. குத: என்கிற சப்தமானது ப்ரமாணத்தின் ப்ரதிக்ஷேபத்தில் முக்கியநோக்குள்ளது. பர்வதம் நெருப்புள்ளது என்று சொல்லப்பட்டால் குத:என்கிற சப்தப்ரயோகத்தால் ப்ரமாணகாங்க்ஷயல்லவோ த்யோதனம் செய்யப்படுகிறது. ஆதலால் ப்ரதிக்ஷேபபரமான குதச்சப்தமும் ப்ரமாண ப்ரதிக்ஷேபத்தில் முக்கியமான கருத்துள்ளது 'குத: ப்ரமாணாத்' எந்த ப்ரமாணத்தாலென்று அர்த்தம். முந்தின நிலமையுள்ள வஸ்துவுக்கு மீண்டும் அவ்வித நிலமையோடுசேர்ந்திருத்தலென்கிற தன்மையில் ப்ரமாணம் ப்ரத்யபிஜ்ஞை-அதனுல் ப்ரமாணம்ப்ரதிக்ஷிப்தமானவுடன்

ப்ரதிஸந்தானம் நிஷேதிக்கப்பட்டதாக ஆகிறதென்று கருத்து. அப்படி இல்லாவிட்டால் ந தத்ததா என்பதனுல் † பௌநருக்த்யம் ஏற்படும். ஹி சப்தத்தால் பலித்த அர்த்தத்தைச்சொல்லுகிருர்—அத: என்று. நாஸ்தி சப்தத்தால சொல்லத்தக்கதென்பதில் ப்ரயோஜகசிக்ஷையானது செய்யப்பட்டது. சிக்ஷிக்கப்பட்ட அர்த்தத்தை உதாஹரணததால் அடுத்த ச்லோகம் காண்பிக்கிறதென்கிற அபிப்ராயத்தால் சொல்லுகிருர்— ததாஹி என்று. மஹீகடத்வ மென்கிற ச்லோகத்தை வ்யாக்கியானிக்கிருர்—ஸ்வகர்மணு இது முதலியதால். ''மஹீகடத்வம்'' என்கிற ச்லோகத்தில் யாதி என்கிற பதத்தைமுந்தினச்லோகத்திலிருந்து எடுத்துச்சேர்த்துக்கொள்ளவேண்டும். கர்மாவுக்கு ஆத்மநிச்சய விஷயத்தில் விரோதமானது நேரிலில்லை. பின்னையோ பரம்பரையாக ஏற்படுகிறதென்று சொல்லுகிருர்—தேவமனுஷ்யாதிபாவேந என்று. தேவாதி தேகஸம்பந்தத்தாலென்று அர்த்தம். ஸ்திமிதம-தடைசெய்யப்பட்ட மிக்கஸ்திரமாயும் ஸ்வரூபமாகவுமிருக்கிற ஆத்ம நிச்சயமானது தடுக்கப்பட்டிருப்பதனுல் அஸ்திரமான அசேதந வஸ்துக்களில் போக்யதா புத்தி உண்டாகிற தென்று கருத்து. அன்றிக்கே ஆத்ம ஜ்ஞாநமில்லாதவர்களால் கூட அசித் வஸ்துவுக்கு அஸ்திரத்வம் காணப்படுகிறதென்றுகூறுகிருர்—ததாஹி என்று. 'ஆலக்ஷ்யதே' என்கிற சப்தத்திற்கு சாக்ஷாத்ஜ்ஞாநத்தை உணர்த்தவேண்டிய விஷயத்தில் ப்ரயோகம் ஏராளமாக இருப்பதால் அதை விலக்குவதற்காக அனுபவிக்கப்படுகிற தென்று பொருள் கூறப்பட்டது. ச்லோகவ்யாக்கியானத்தின் முடிவை த்யோதனம் செய்கிருர்—இத்யர்த்த: என்று. ப்ருஹி இது முதலியதற்குப்பொருள் கூறுகிருர்—ஏவம் ஸதி என்று: இதனுல் அத்ர என்கிற பதம் வ்யாக்கியானிக்கப்பட்டது. அசித்வஸ்து என்கிற பதத்தால் ச்லோகத்திலிருக்கிற வஸ்துசப்தம் வியாக்கியானிக்கப்பட்டது. அஸ்தி சப்தார்ஹம் இது முதலிய விசேஷணம் ஸாமர்த்திய ஸித்தமாக இருத்தலால் சொல்லப்பட்டது. அல்லது இரண்டு ச்லோகங்களின் அபிப்ராயத்தைக் கூறுகிருர்—ஏவம்ஸதி என்று. நது வஸ்துபூத: என்று· புராணக்ரந்தத்தில் கிமப்யசித் வஸ்து, அசித் வஸ்து ஏதாவது ஒன்று. பாஷ்யத்திலும் அசித் விஷயமான வஸ்துசப்தப்ரயோகமிருப்பதால். ‘தத்வஸ்து ந்ருப தச்ச கிம்’ என்கிற க்ரந்தத்திலிருக்கிற வஸ்து சப்தத்தோடு துல்யத்வம் சங்கிக்கத்தக்கதல்ல, அஸ்தி கிம் என்பதனுல் ச்லோகத்திலிருக்கிற அஸ்தி சப்தத்திற்கு ‘பவதி’ என்கிற சப்தத்தின் அர்த்தம உரைக்கப்பட்டது. அதனுலேயே ‘யதஸ்தி’ என்கிற இடத்திலுள்ள அஸ்தி சப்தத்திற்குப்போல் ஆத்ம ஸ்வரூப பரத்வம் சங்கிக்கத்தக்கதல்ல. பலித்ததைச்சொல்லுகிருர்— நஹி என்று. அஸ்தி கிம் நஹ்யஸ்தி என்கிற பாஷ்யஸ்வாரஸ்யத்தினுல் இரண்டு ச்லோகங்களுக்கும் தொடக்கத்திலிருக்கிற அஸ்தி கிம் என்கிறப்ரத்யபிஜ்ஞான வாக்கியமானது பவத்யர்த்தமாக வ்யாக்கியானம் செய்யப்பட்டதாக அறியப்படுகிறது. அன்றிக்கே ‘அஸ்திசப்தாபிதேய:’ என்பதனுல் வஸ்த்வஸ்தி கிம் என்கிற இடத்திலிருக்கிற அஸ்தி சப்தமானது வியாக்கியானிக்கப்பட்டது. ‘யதஸ்தி தஸ்மாந் ந விஜ்ஞாநம்ருதேஸ்தி’ இது முதலியதோடு ஐகரூப்யத்தால். இவ்வண்ணம் வஸ்த்வஸ்திகிம், மஹீகடத்வம், என்கிற இரண்டு ச்லோகங்களுக்கும் தனித்தனியாக உறைக்கப்பட்டிருக்கிற வாக்கியார்த்தமானது பூர்வபக்ஷயோஜனையில் ஆச்ரயிக்கத்தக்கது. மேல் ச்லோகத்தினுடைய முதல் பாதியை வ்யாக்கியானிக்கிருர்— யஸ்மாத் என்று. யஸ்மாதேவம் தஸ்மாத் பரிணுமமுள்ளதாக இருத்தலாலேயே ஒழிய ஜ்ஞாநத்தால் பாதிக்கத்தக்கதாக இருத்தலாலல்லவென்று அர்த்தம். அசித் வஸ்து சப்தத்தால் வஸ்துஜாத சப்தார்த்தம் உரைக்கப்பட்டது. ஜாதசப்தத்தை மேலேவைத்து

---

† பௌநருக்த்யம்—சொன்னதை திருப்பிச்சொல்லுதல்.

க்கொண்டிருக்கிற வஸ்து சப்தமானது நித்யமென்கிற பொருளை உணர்த்துகிற 'ஸ்வ பாவமுள்ளதல்லவென்று பொருள். 'கேவலாஸ்தி சப்தவாச்யம் என்று. இந்த ச்லோகத்திலிருக்கிற அஸ்தி சப்தமானது பவத்யர்த்தகமல்ல 'ததேதத் அக்ஷயம் நித்யம்' இது முதலியதால் நித்யமாக சொல்லப்பட்டிருக்கிற ஜ்ஞாநத்தைக்காட்டிலும் வேறுபட்டிருக்கிறவஸ்துவுக்கு நிஷேதிக்கத்தக்கத்தன்மை பொருந்தாதலாலும் யதஸ்தி என்றுதொடங்கப்பட்டிருக்கிறதற்கு அநுகுணமாக உபஸம்ஹாரம் செய்வது உசிதமாதலாலுமென்றுகருத்து. ப்ராகபாவ ப்ரத்வம்ஸாபாவங்களுக்குள்ள அசித் வஸ்துவுக்கு நாஸ்திசப்ததால் சொல்லப்படத்தக்க தன்மையும் அவச்சின்னமான அஸ்திசப்தத்தால் உணர்த்தப்படும் தன்மை இருப்பது பற்றி அதை விலக்குவதற்காக கேவலசப்தம். இவ்வண்ணம் ஆத்மாவைத்தவிர்த்த வஸ்துவுக்கு நாஸ்திசப்தத்தால் உணர்த்தப்படத்தக்கதன்மை உபஸம்ஹரிக்கப்பட்டது.

ஆத்மந: ஸ்வஸ்ய ஜ்ஞாநைகாகாரதயா தேவாதிதேஹவ்யாவ்ருத்த்ய நிஜஸ்வரூபேணாபி தேவாதிஶரீரவ்யபதேஶஹேதுபூதகர்மக்ருதவிவிதகர்மபிர்தேவாதிதேஹஸம்பந்தாநாம் ஸித்தேஷு கேந ரூபேண ணாபேக்ஷயா அநாதிஸம்பந்த இதி தத்ஹாநஸாதநம் நாத்மஸ்வரூபத்யாங்கமித்யாஹ — 'விஜ்ஞாநமேகம்' இதி ॥

ஆத்மஸ்வரூபஸ்ய கர்மரஹிதம், தத ஏவ கோரூபேண ப்ரக்ருதிஸம்பந்தரஹிதம் । தஸ்ய தத்த்யாகஶோகமோஹலோபாத்யஶேஷஹேயகுணாஸ்ப்ருஷ்ட, உபாயாபாயாநஹேதுத்வேந, தத ஏவ ஸதைகரூபம் । தச்ச பாஷாணாதிஶரீரேஷ்வபி ததாத்மகம், அதஏவ அஸ்ய விஶுத்தாத்வாதித்யாஹ — "ஜ்ஞாநம் விஶுத்தம்" இதி । நித்யஸ்வரூபைகரூபதயா ஸதா'ஸ்திஶப்தவாச்ய: । அசிதம்ஶஸ்ய க்ஷணபரிணாமித்வேந ஸர்வதா நாஶமயத்வ இதி ஸர்வதா நாஸ்திஶப்தாபிதேய: । ஏவம்ரூபவிஶிஷ்டாத்மகம் ஜகதாகாரேண தேவஶரீரம் ததாத்மகமிதி ஜகத்யாதாத்ம்யம் ஸங்க்ஷிப்யாஹ — 'ஸத்பாவ ஏவம்' இதி । அத 'ஸத்யம், அஸத்யம்' இதி, 'யதஸ்தி யந்நாஸ்தி' இதி வ்யக்தோ வ்யாக்யோபஸம்ஹார: । ஏதச்ச ஜ்ஞாநைகாகாரதயா ஸதைகரூபஸ்யாபி ஆத்மநோ அநாதிகர்மநிமித்தம் ஸர்வாநாஶ்ரிதம் தேவாதிரூபேண ஸர்வத்ர ஸம்ஸாரஹேதும் யத்கர்ம தத் ஹேது: கர்மேத்யாஹ — "ஏதத்து யத்" இதி । ததேவ விவ்ருணோதி — "யஜ்ஞைர்பேதா:" இதி ॥

ஸ்ரீபாஷ்யம்—

ஆத்மாவோ வென்றால் எல்லா இடத்திலும் ஜ்ஞாநத்தையே தன் வடிவமாகக்கொண்டிருத்தலால் தேவன் மனுஷ்யன் முதலிய பேதங்களுக்கு விரோதியான ஸ்வரூபத்துடன்கூடியதாக இருந்தபோதிலும் தேவாதி சரீரங்களில் ப்ரவேசிப்பதற்கு ஹேதுவாக இருக்கிறதும் தன்னாலேயே முன் ஜன்மங்களில் செய்யப்பட்டிருப்பதும் பற்பலவிதமாகவுமிருக்கிற கர்மாக்களை மூலமாகக்கொண்டிருக்கிற தேவ மனுஷ்யாதி பேதத்தால் ஆத்மா வேறுபட்டவனென்கிற புத்தியையுடையவர்களால் அந்தந்த தேவாதிரூபத்தால் பலவாறாக அநுஸந்திக்கப் பட்டவனாக இருப்பதுபற்றி அந்த பேதாநுஸந்தானமானது ஆத்மாவின்ஸ்வரூபத்தா லேற்படுத்தப்பட்டதல்லவென்று சொல்லுகிறார்— “விஜ்ஞாநமேகம்” என்று. ஆத்மஸ்வரூபமோ வென்றால் கர்ம ஸம்பந்தமில்லாதது. அதனாலேயே மலரூபமான ப்ரக்ருதியின் ஸ்பர்சமற்றது. அப்படிப்பட்ட ப்ராக்ருதி ஸ்பர்சமில்லாமையால் அதனாலுண்டுபண்ணப்படுகிற சோகம், மோஹம், லோபம்முதலிய ஸமஸ்தமான ஹேய குணங்களின் ஸம்பந்தமில்லாதது. வ்ருத்தி க்ஷயங்களுக்கு அநர்ஹமாக இருப்பதால் ஒன்றாக இருக்கிறது. அதனாலேயே எப்பொழுதும் ஏகரூபமாக இருக்கிறது. அந்த ஆத்மஸ்வரூபமும் வாஸுதேவனுக்கு சரீரமாக இருப்பதுபற்றி அந்த வாஸுதேவனை ஆத்மாவாகவுடையது அதாவது வாஸுதேவாத்மகம் வாஸுதேவாத்மகமாக இல்லாத ஒரு வஸ்துவும் உலகத்திலில்லாமையால் என்று சொல்லுகிறார்— ‘ஜ்ஞானம் விசுத்தம்’ என்று. சிதம்சமானது எப்பொழுதும் ஏகரூபமாக இருப்பதால் எப்பொழுதுமே அஸ்திசப்தத்தால் உணர்த்தத்தக்கதாக இருக்கிறது. அசிதம்சமோ வென்றால் க்ஷணந்தோறும் வெவ்வேறு பரிணமங்களோடுகூடி இருத்தலால் எப்பொழுதும் நாசத்தை உள்ளடக்கிக்கொண்டிருப்பது பற்றி எக்காலத்திலும் நாஸ்தி சப்தத்தால் சொல்லத்தக்கது. இவ்விதமான ஸ்வரூபத்துடன் கூடின சிதசிதாத்மகமான உலகமானது வாஸுதேவனுக்கு சரீரம், வாஸுதேவனை அந்தராத்மாவாகக்கொண்டது என்று ஜகத்தின் யதார்த்த ஸ்வரூபமானது நன்கு உரைக்கப்பட்டதென்று சொல்லுகிறார்— ‘ஸத்பாவ ஏவம்’ என்று. இந்த இடத்தில் ஸத்யம், அஸத்யம், என்று ‘யதஸ்தி யந் நாஸ்தி’ என்று தொடங்கப்பட்டிருக்கிறதற்கு உபஸம்ஹாரம் செய்யப்பட்டிருக்கிறது. ப்ரத்யக்ஷமாகக் காணப்படுகிறதும் ஜ்ஞாநத்தையே உருவமாகக்கொண்டிருத்தலால் எங்கும் ஸமமாக இருப்பதும் தேவன்மனுஷ்யன் முதலிய சப்தங்களால் வ்யவஹரிப்பதற்கே விஷயமல்லாத ஸ்வரூப பேதத்துடன் கூடியதாகவே இருந்துகொண்டு அசித் பதார்த்தங்களுடன் கலந்ததும் அண்டங்களுக்குள்ளடங்கியதும் தேவன் மனுஷ்யன் திர்யக் ஸ்தாவரமென்று நன்கு வ்யவஹரிப்பதற்குத்தகுந்த பேதமுள்ளதாகவும் யா

தொரு வஸ்து இருக்கிறதோ அதில் கர்மாவே ஹேதுவென்று சொல்லப்பட்டிருக்கிறதென்று கூறுகிறார். 'ஏதத்து யத்' என்று. அதையே விவரிக்கிறார்—'யஜ்ஞ:பசு:' என்று.

ச்ருதப்ரகாசிகை—

விஜ்ஞானம் இது முதலியதை வ்யாக்கியாநம் பண்ணுகிறார்— ஆத்மாது என்று. து சப்தமானது அசித் பதார்த்தத்தைக்காட்டிலும் வேற்றுமையில் கருத்துள்ளது. ஸர்வத்ர எல்லாசரீரங்களிலும் ஏகசப்தத்தை வ்யாக்கியானிக்கிறார்-ஜ்ஞானைகாகாரதயா என்று. 'ஏகோவ்ரீஹிஸஸ்ஷிஷ்பந்நஸ்ஸ புஷ்டம் குருதே ப்ரஜா:'என்கிற இடத்தில் போல இந்த ஏக சப்தமானது ஆகார ஐக்யத்தில் முக்கியமான கருத்துள்ளது. அந்த ஆகாரமானது விஜ்ஞான சப்தத்தால் சொல்லப்பட்ட ஜ்ஞாநத்வமென்கிற அபிப்ராயத்தால் கூறப்பட்டது 'ஜ்ஞானைகாகாரதயா'என்று. நிர்தேசமானது பாவப்ராதான்யத்தில் கருத்துள்ளது. ஜ்ஞாநத்வம் ஒன்றையே ஆகாரமாகக்கொண்டிருத்தலாமென்று பொருள். ஸ்வரூபத்தாலும் தர்மத்தாலும் ஜ்ஞாநத்வமானது விசேஷமின்றி ஸத்வாரகமாகவும் அத்வாரகமாகவும் ஆகாரமாகவல்லவோ இருக்கிறது. ஜ்ஞானைகாகாரதயா என்கிற இடத்தில் ஏகசப்தத்தால் ஸங்கோசம் விகாஸம் துக்கரூபத்வம் முதலியது விலக்கித் தள்ளப்பட்டது. 'தேவாதி பேதப்ரத்யநீகஸ்வரூபோபி' என்று. ஏகரூபமாக இருப்பதால் பேதத்திற்கு ப்ரத்யநீகமாக இருத்தல். 'நிஜகர்ம'முதலியபதத்தை வ்யாக்கியானம் செய்கிறார்—தேவாதி என்று. பேதசப்தத்தின் அர்த்தத்தைச் சொல்லுகிறார்—விவித என்று. புத்தி சப்தத்தால் சித்த சப்தார்த்தம் சொல்லப்பட்டது. புத்தியின் பேதமும் ஆத்மாவினிடத்தில் ஆரோபிக்கப்படாநின்ற தேவன் மனுஷ்யன் முதலியவர்களின் ஆகாரரூபமான விஷயபேதத்தால். பகுதா-தேவத்வம்முதலிய பற்பல ப்ரகாரங்களுடன்கூடி இருப்பதாக ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறதென்று அர்த்தம். பகுதா சப்தத்தால் ஏக சப்தத்திற்கு ஆகாரைக்யத்தில் கருத்து நனகுவெளியிடப்பட்டது. பலித்த அர்த்தத்தைக் கூறுகிறார்—நாத்மஸ்வரூப ப்ரயுக்தம் என்று. ஔபாதிகமென்று அர்த்தம். உபாதியானது நீங்கிய ஸமயத்தில் ஸ்வரூபம எவ்விதமாயுள்ளதென்று அபேக்ஷைவரின் அடுத்த ச்லோகத்தை வ்யாக்கியானம் செய்கிறார்-ஆத்மா என்று. விசுத்த பதத்தை வ்யாக்கியானம் பண்ணுகிறார்—கர்மரஹிதம் என்று. விமல பதத்தை வ்யாக்கியானம் பண்ணுகிறார்—தத ஏவ என்று. விமலபத வ்யாக்கியானமென்பதை ஸ்பஷ்டமாகச் செய்வதற்காக மலரூப சப்தம்-மலரூபமான ப்ரக்ருதியின் ஸம்பந்தமில்லாததென்பதனால்''ஸர்வகர்மக்ஷயே ஜ்ஞாநமபாஸ்த தோஷம்'' என்பதின் அர்த்தம் அறிவிக்கப்பட்டது. கர்மக்ஷயத்தைச் சொல்லுகிற பதத்திற்கு அடுத்ததாக இருக்கிற பதமானது சரீரஸம்பந்தமில்லாததென்கிற அர்த்தததை உணர்த்துவதில் முக்கியமான நோக்கமுள்ளதென்று வ்யாக்கியானம் செய்யப்பட்டிருப்பதால். அப்படியே ச்ருதி இருக்கிறது 'அச்வ இவ ரோமாணி விதூய பாபம்சந்த்ர இவராஹோர்முகாத் ப்ரமுச்ய தூத்வா சரீரம க்ருதம் க்ருதாத்மா ப்ரஹ்மலோகமபி ஸம்பவாமி'' என்று. இந்த ச்ருதியின் பொருள், 'குதிரை தன் தேஹத்திலுள்ள மயிர்களை உதறுவதுபோல், பாபத்தை உதறி ராகுவின் முகத்திலிருந்து சந்திரன்போல் பாபத்தினிடத்திலிருந்து விடுபட்டு பாஞ்சபௌதி

கமாகவும் கர்மபலபோகார்த்தமாகவுமிருக்கிற சரீரத்தை விலக்கித்தள்ளிவிட்டு க்ருதார்த்தனுக இருக்கிற நான் சாச்வதமான ப்ரஹ்மலோகத்தை அடைந்து அந்த ப்ரஹ்மலோக நித்யவாஸ சுகத்தை அனுபவிக்கக்கடவேன்." இந்த இடத்தில் பாபம்விதூய என்று சொல்லிவிட்டு தூத்வா சரீரம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மேலேஇருக்கிற பதங்களை வ்யாக்கியானிக்கிருர்—ததஸ்ச என்று, அதனுலேதான் என்று அர்த்தம். ச என்கிறசப்தமானது ஹேதுவின் நிரபேக்ஷமான ஸ்வபாவத்தை ஸூசிப்பிக்கிறது- விலக்கப்பட்ட ஸமஸ்தலோபம் முதலியதின் ஸம்பந்தமுள்ளதென்று பொருள். ஏகம் என்கிற பதத்தை வ்யாக்கியானம் செய்கிருர்— உபசயாபசயார்ஹநிரைகம் என்று. உபசயாபசயௌ வ்ருத்திக்ஷயங்கள். அவைகளுக்குத்தகுதியுள்ளதாக இருத்தல் அவயவங்களுடன்கூடி இருத்தல்' அவயவங்களுடன் சேர்ந்திராமலிருத்தலாலேயே ஏகசப்தத்தால் சொல்லத்தக்க தன்மை. நிரவயவதவம்-ஏகத்வமென்று அர்த்தம். தத ஏவ ஸதைகரூபம் என்று. அவயவங்களில்லாமையினுலே அவயவங்களிருந்தால் ஸம்பவிக்கக்கூடிய வ்ருத்திக்ஷயங்களில்லாததென்று அர்த்தம். ஸாமாநாதிகரண்யத்தை வ்யாக்கியானம் செய்கிருர்— தச்ச என்று யதம்பு வைஷ்ணவ: காய: - அசேஷமூர்த்தி:, என்று சொல்லப்பட்டிருப்பதனுல் இதே அர்த்தம். 'ந யதோந்யதஸ்தி' என்பதை வ்யாக்கியானிக்கிருர்—அதந் என்று. யத: - யாதொரு வாஸுதேவனைக்காட்டிலும். அந்யத்-தன்னிடம் பர்யவஸானமுள்ள வஸ்துவானது இல்லையென்று' அர்த்தம். அன்றிக்கே வாஸுதேவாத் என்கிற பதத்தை அத்யாஹாரம செய்துகொண்டு யோஜனை. எக்காரணத்தால் வாஸுதேவனைக்காட்டிலும் வேறு வஸ்துவில்லையோ அக்காரணத்தினுலென்று அர்த்தம். இந்த யோஜனையில்'தத்'என்கிற சப்தமானது ப்ரஸித்தார்த்தத்தை பராமர்சிக்கிறது. இதைக்காட்டிலும் முந்தின யோஜனையானது மிகவும் சிறப்பு வாய்ந்தது. தத் என்கிற சப்தத்தால் எடுக்கப்பட்டிருக்கிற வாக்யமானது யத் என்கிற சப்தத்தால் துவக்கப்பட்டிருக்கிற வாக்யத்திற்கு ப்ரதி நிர்தேசரூபமாக இருக்கிறதென்கிற ஸ்வாரஸ்யத்தாலும் பஞ்சமீவிபக்தியை ஈற்றில் கொண்டிருக்கிற பதத்தின் அத்யாஹாரத்தை அபேக்ஷியாமலிருப்பதாலும். 'ஜ்ஞாநஸ்வரூப: 'யதா து' என்கிற இரண்டு ச்லோகங்களும் சிதசித் ஸாதாரணங்கள். வஸ்த்வஸ்தி என்கிற சப்தாநுபூர்வியை முதலில் கொண்டிருக்கிற இரண்டரை ச்லோகஙகள் அசித்ஸாதாரணங்கள். விஜ்ஞாநம் என்கிற பதத்தை தொடக்கத்தில் கொண்டிருக்கிற ஒன்றரைச்லோகம் சித்ஸாதாரணமென்று பாகுபாடு அறியத்தக்கது. அன்யனுடையமதம் சொல்லப்படவில்லை, தத்வமே உரைக்கப்பட்டதென்கிற அபிப்ராயத்தால் ஸத்பாவ என்கிற பதத்தை தொடக்கத்தில் கொண்ட ச்லோகத்தின் முற்பாதி உரைக்கப்பட்டது. அதில், யதாசப்தத்தின் அர்த்தத்தைச் சொல்லுகிருர்—சிதம்சு: என்று. யதா - எந்த ப்ரகாரத்தால் பரிணமத்துடன்கூடி இருத்தல் பரிணமமில்லாதிருத்தல் என்கிற. எந்த ப்ரகாரத்தால். ஜ்ஞாநத்தால் பாதிக்கத்தக்கதாக இருத்தல் பாதிக்கத்தகாததாக இருத்தல் என்கிற ப்ரகாரததாலல்லவென்று அர்த்தம். ஏவம்நுப என்று. சரீரசரீரிபாவரூபமான எந்த ப்ரகாரத்தால் பகவதாத்மகத்வமோ ஸ்வரூபைக்யத்தாலல்லவென்று அர்த்தம். ச்லோகத்தில் ஏவம் சப்தமானது யதா சப்தத்திற்குப்ரதியோகி-ஸத்யம் ஜ்ஞாநம் அஸத்யம் அந்யச்ச யதாவஸ்திதம் 'ஏவம் ஸத்பாவ; உக்த: என்று அன்வயமானது அபிப்ராயப்படப்பட்டிருக்கிறது. ஆதலால் ஸத்யம் அஸத்யம் என்கிற சப்தங்களால் சொல்லத்தக்க தன்மைக்கு நிர்வாஹகங்களான பரிணமித்வா பரிணமித்வங்களும் பகவதாத்மகத்வமும் யதா சப்தத்தால் சொல்லக்கருதப்பட்டதாக இருக்கிறது. வேறு விஷயம் தொடங்கப்பட்டது, வேறுவிஷயம் முடிவுபெறும்படி செய்யப்பட்டதாக ஆகிறது.

அஸ்திநாஸ்தி சப்தத்தால் தொடங்கிஸத்யா ஸத்ய சப்தத்தால் முடிக்கப்பட்டிருப்பதா லென்றுகேழ்க்கப்பட்டால் சொல்லுகிறார்—அத்ர என்று. தொடக்கத்திலும் முடிவிலும் வேறுசப்தங்களால் நிர்தேசத்திற்கு இது அபிப்ராயம். மற்ற சப்தங்களும் ஒரிடத்தில் இவ்விதமாக கேழ்க்கப்பட்டிருந்தால் அவைகளுக்கும் இதேப்ரவ்ருத்தி நிமித்தமென்று ச்லோகத்தின் பின்பாதிக்குபொருள் கூறுகிறார்-ஏதத்என்று. ப்ரத்யஸ்தமிதபேதம், அகோசரம் வசஸாம், என்கிறஇந்த இரண்டு வசனங்களுடையவும் அர்த்தத்தை அபிப்ராயப்பட்டு கூறுகிறார்-'ஜ்ஞானைகாகாரதயா ஸமசப்தகோசரஸ்வரூபபேதம் என்கிறவாக்யத்திலிருக்கிற ஏவகாரத்தால்விரோதம் ஸூசிப்பிக்கப்பட்டது. புவனாச்ரிதத்வத்திற்குகடகமானபதத்தைச் சொல்லுகிறார்-அசிந்மிச்ரம் என்று. புவனாச்ரிதம் அண்டத்திற்குள்ளடங்கினது. போகஸ்தானத்தை அடைந்திருக்கிறதென்று அர்த்தம். ஸம்வ்யவஹாரசப்தத்தை வ்யாக்யானம் பண்ணுகிறார்—ஸம்யக்வ்யவஹாரார்ஹபேதம் என்று. ஸம்யக் சப்தமானது ஸ்பஷ்டதையை முக்கியமாகச் சொல்லுகிறது. அந்த கர்மா எதுவென்று ஆகாங்க்ஷைவரின் மேல்ச்லோகம் அதின் விவரணமென்பதைச் சொல்லுகிறார்—த் தேவவிவ்ருணோதி என்று. ஸ்வர்க்கமயஃசகாம:-ஸ்வர்க்க விஷயமான இச்சைஎன்று அர்த்தம். பலமானது இனிமேல் சொல்லப்படப்போவதாக இருப்பதால் தேவதைக்கும் பலத்திற்கும் யஜிக்கத்தககதாக இருப்பதாலும் ஸாதிக்கத்தக்கதாக இருப்பதாலும் கர்மாவில் அந்தர்ப்பாவமேற்படுகிறது.. இத்யாதி சப்தத்தால் தானம் ஹோமம் முதலியதும் பாபமும் சொல்லப்பட்டதாக ஆகிறது. பூ: முதலிய சப்தத்தால் பாபத்தின்பலமும் சொல்லப்பட்டதாக ஆகிறது. பசு முதலிய உபகரணங்களுடன் கூடின யஜ்ஞம் ஒரு கர்ம- இப்படிப்பட்ட யஜ்ஞாத்மகமாகவும் தானஹோமாத்யாத்மகமாகவு மிருக்கிற கர்மாவானது அதில் ஹேது. ஆச்ரிதமார்க்க த்ருஷ்டம். அவரவர்களால் ஆச்ரயிக்கப்பட்டிருக்கிற மார்க்கங்களுடன் கூடியவைகள் வர்ணாச்ரமங்கள். அவைகளில் காணப்பட்டிருக்கிறதென்று அர்த்தம்.

[illegible] ஜ்ஞாநப்ரயோஜநம் [illegible]
[illegible] இதி । அத்ர நிர்விஶேஷே பரே ப்ரஹ்மணி [illegible]
[illegible]
[illegible] ந த்ருஶ்யதே । அஸ்திநாஸ்தி [illegible]
[illegible]
[illegible] । ஜ்ஞாநைகாகாரஸ்ய [illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

𑌕𑍍𑌷𑌿𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌕𑌪𑌰𑍇𑌣 𑌵𑍍𑌯𑌯𑌾𑌨𑍍𑌤𑍇𑌨; 𑌕𑍍𑌵𑌚𑌿𑌤𑍍𑌤𑍁 𑌵𑌿𑌨𑌾𑌶𑌿𑌤𑍍𑌵𑌪𑌰𑍇𑌣 ।
“𑌵𑌸𑍍𑌤𑍍𑌵𑌸𑍍𑌤𑌿 𑌕𑌿𑌮𑍍” “𑌆𑌦𑌿𑌮𑌤𑍍𑌕𑌿𑌮𑍍” 𑌇𑌤𑍍𑌯𑌤𑍍𑌰𑌾𑌪𑌿 𑌵𑌿𑌨𑌾𑌶𑌿𑌤𑍍𑌵𑌮𑍇𑌵
𑌵𑌿𑌵𑌕𑍍𑌷𑌿𑌤𑌮𑍍; 𑌨 𑌨𑌿𑌷𑍍𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌕𑌤𑍍𑌵𑌂, 𑌜𑍍𑌞𑌾𑌨𑌬𑌾𑌧𑍍𑌯𑌤𑍍𑌵𑌂 𑌵𑌾; 𑌯
𑌯𑍇𑌨𑌾𑌕𑌾𑌰𑍇𑌣 𑌸𑍍𑌥𑌿𑌤𑌸𑍍𑌯 𑌕𑌾𑌲𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌨𑍁𑌵𑍃𑌤𑍍𑌤𑌸𑍍𑌯 𑌕𑌾𑌲𑌾𑌨𑍍𑌤𑌰𑍇𑌣 𑌪𑌰𑌿
𑌣𑌾𑌮𑌵𑌿𑌶𑍇𑌷𑍇𑌣𑌾𑌨𑍍𑌯𑌥𑌾𑌭𑌾𑌵𑍍𑌯𑌾 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿𑌤𑍍𑌵𑌾𑌪𑌵𑌾𑌦𑌨𑌾𑌤𑍍 । 𑌤𑌤𑍍
𑌤𑍍𑌵𑌂 𑌹𑌿 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌨𑌨𑍍𑌯𑌥𑌾𑌤𑍍𑌵𑌮𑍍 । 𑌪𑌰𑌮𑌾𑌰𑍍𑌥— 𑌯𑌦𑍇𑌵
𑌕𑌾𑌲𑌾𑌦𑌿𑌪𑌰𑌿𑌚𑍍𑌛𑌿𑌨𑍍𑌨𑌤𑌯𑌾 𑌯𑌦𑍍𑌵𑌸𑍍𑌤𑍁𑌤𑍍𑌵𑌵𑍍𑌯𑌪𑌦𑍇𑌶𑌃; 𑌤𑌸𑍍𑌯 𑌤𑌦𑍇𑌵𑌕𑌾𑌲𑌾𑌦𑌿
𑌪𑌰𑌿𑌚𑍍𑌛𑌿𑌨𑍍𑌨𑌤𑌯𑌾 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿𑌤𑍍𑌵𑌵𑍍𑌯𑌪𑌦𑍇𑌶𑌃; 𑌨 𑌤𑍁 𑌕𑌾𑌲𑌾𑌨𑍍𑌤𑌰𑍇 𑌅𑌨𑍁𑌵𑍃𑌤𑍍
𑌤𑌸𑍍𑌯 𑌕𑌾𑌲𑌾𑌨𑍍𑌤𑌰𑍇 𑌪𑌰𑌿𑌣𑌾𑌮𑌿𑌨𑍋 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿𑌤𑍍𑌵𑌵𑍍𑌯𑌪𑌦𑍇𑌶𑌃; 𑌕𑌾𑌲𑌭𑍇
𑌦𑍇𑌨 𑌵𑌿𑌰𑍋𑌧𑌾𑌭𑌾𑌵𑌾𑌤𑍍 । 𑌅𑌤𑍋 𑌨 𑌵𑌿𑌰𑍋𑌧𑌃 ॥

𑌸𑍍𑌵𑌾𑌰𑍍𑌥𑌂 𑌭𑌵𑌤𑌿— 𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌿 𑌕𑍍𑌷𑌿𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌵𑌿𑌶𑍇
𑌷𑌹𑍀𑌨𑌂 𑌸𑌤𑍍𑌤𑍇𑌤𑌿 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑍇𑌣𑌾𑌸𑍍𑌤𑌿 𑌸𑌤𑍍 𑌪𑌰𑌂 𑌸𑌦𑌾𑌶𑍍𑌰𑌯𑌤𑍍𑌵𑌮𑍍𑌪𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌮𑍍 ।
𑌅𑌚𑍇𑌤𑌨𑌂 𑌤𑍁 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌪𑍍𑌰𑌾𑌣𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌕𑌂 𑌤𑌤𑍍𑌕𑍍𑌷𑌣𑌪𑌰𑌿𑌣𑌾
𑌮𑌿 𑌵𑌿𑌨𑌾𑌶𑍀𑌤𑌿 𑌸𑌪𑌦𑍍𑌯𑍇𑌵 𑌨𑌾𑌸𑍍𑌤𑍀𑌤𑍍𑌯𑌭𑌿𑌧𑍀𑌯𑌤𑍇 𑌨𑌾𑌸𑍍𑌤𑍍𑌯𑌸𑌤𑍍𑌯𑌶𑌬𑍍𑌦𑌾𑌭𑌿
𑌧𑍇𑌯𑌮𑍍— 𑌇𑌤𑌿 ॥ 𑌯𑌥𑍋𑌕𑍍𑌤𑌮𑍍— ‘𑌯𑌤𑍍𑌤𑍁 𑌕𑌾𑌲𑌾𑌨𑍍𑌤𑌰𑍇𑌣𑌾𑌪𑌿 𑌨𑌾𑌨𑍍𑌯𑌸𑌂𑌜𑍍𑌞𑌾
𑌮𑍁𑌪𑍈𑌤𑌿 𑌵𑍈 । 𑌪𑌰𑌿𑌣𑌾𑌮𑌾𑌦𑌿𑌸𑌂𑌭𑍂𑌤𑌾𑌂 𑌤𑌦𑍍𑌵𑌸𑍍𑌤𑍁 𑌨𑍃𑌪 𑌤𑌚𑍍𑌚 𑌕𑌿𑌮𑍍 ॥’
“𑌅𑌨𑌾𑌶𑍀 𑌪𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑌶𑍍𑌚 𑌪𑍍𑌰𑌾𑌜𑍍𑌞𑍈𑌰𑌭𑍍𑌯𑍁𑌪𑌗𑌮𑍍𑌯𑌤𑍇 । 𑌤𑌤𑍍𑌤𑍁 𑌨𑌾𑌶𑌿
𑌨 𑌸𑌨𑍍𑌦𑍇𑌹𑍋 𑌨𑌾𑌶𑌿𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑍋𑌪𑌪𑌾𑌦𑌿𑌤𑌮𑍍” 𑌇𑌤𑌿 ॥

ஸ்ரீபாஷ்யம்—

உலகத்தின் வாஸ்தவ ஸ்வரூப ஜ்ஞாநத்திற்கு ப்ரயோஜனம் மோக்ஷோபாயத்தில் யத்னமென்று சொல்லுகிறார்—''யச்சைதத்'' என்று. இந்த இடத்தில் விசேஷங்களனைத்தாலும் விடுபட்டிருக்கிற பரப்ரஹ்மமென்கிற விஷயத்திலாவது அந்த பரப்ரஹ்மத்தை ஆச்ரயித்திருக்கிற ஸத்தென்றாவது அஸத்தென்றாவது சொல்வதற்கு ஸாத்தியப்படாத அஜ்ஞானவிஷயத்திலாவது ஜகத்தானது அந்த அஜ்ஞானத்தால் உண்டுபண்ணப்பட்டிருக்கிறதென்கிறவிஷயத்திலாவது அனுகுணமான ஒருபதமும் காணப்படவில்லை. அஸ்தி நாஸ்தி சப்தங்களால் சொல்லப்படத்தக்கதான சேதநா சேதநாத்மகமான உலகமனைத்தும் தன்னைவிட சிறப்புற்றவஸ்துவில்லாததும் உத்க்ருஷ்டர்களான ப்ரஹ்ம ருத்ராதிகளுக்குங்கூட நியந்தாவாகவுமிருக்கிற பரப்ரஹ்மஸ்வரூபியான விஷ்ணுவுக்கு சரீரமாக இருப்பதால் அந்த ப்ரஹ்மாத்மகமாக இருக்கிறது.

ஜ்ஞாநத்தையே தன்னுருவாகக்கொண்டிருக்கிற ஆத்மாவுக்கு தேவன் மனுஷ்யன் முதலிய பற்பலவிதமான ஆகாரங்களின் அனுபவத்திலும் அசித்பரிணாமத்திலும் ஹேதுவானது வஸ்துயாதாத்ம்ய ஜ்ஞாநவிரோதியான க்ஷேத்ரஜ்ஞர்களுடைய கர்மாவே என்று ப்ரதிபாதித்திருப்பதாலும் அஸ்திநாஸ்தி ஸத்யம் அஸத்யம் என்கிற சப்தங்களுக்கும் ஸத்தென்றாவது அஸத்தென்றாவது சொல்லமுடியாததான வஸ்துவைச் சொல்வதில் ஸாமர்த்தியமில்லாமையாலும், நாஸ்தி அஸத்ய என்கிற இரண்டு சப்தங்களும் அஸ்தி ஸத்ய என்கிற சப்தங்களுக்கு விரோதிகள். அதனால் அவ்விரண்டு சப்தங்களால் அஸத்த்வமல்லவோ அறியப்படுகிறது, அநிர்வசநீயத்வமறியப்படுகிறதில்லை. இந்த இடத்தில் அசித் வஸ்துவினிடத்தில் நாஸ்தி அஸத்ய என்கிற சப்தங்கள் ப்ரயோகிக்கப்பட்டிருக்கின்றன அச்சதை, மித்யாத்வரூபமான அர்த்தத்தைஉணர்த்துவதில் கருத்துள்ளவைகளாக ப்ரயோகிக்கப்பட்டிருக்க வில்லை, பின்னையோ விநாசித்வரூபமான அர்த்தத்தை உணர்த்துவதில்இவைகள் ப்ரதானமான நோக்கமுள்ளவைகள். வஸ்த்வஸ்திகிம் மஹீகடத்வம் என்கிற இடத்தில் விநாசித்வமேயல்லவோ உபபாதிக்கப்பட்டிருக்கிறது. ப்ரமாணமில்லாமலிருத்தலாவது ஜ்ஞாநத்தால் பாதிக்கத்தக்கதாக இருத்தலாவது உபபாதிக்கப்பட்டிருக்கவில்லை. ஒரு ஆகாரத்தோடு ஒருகாலத்தில் அனுபவிக்கப்பட்டிருக்கிற வஸ்துவுக்கு மற்றொருகாலத்தில் பரிணாமவிசேஷத்தால்வேறுவிதமாக உபலப்தி வருவதால் நாஸ்தித்வம் உபபாதிக்கப்பட்டிருக்கிறது. அச்சத்வமாவது ப்ரமாணஸம்பந்தத்திற்குத் தகுதியற்றதாக இருத்தல். பாதமுங்கூட எந்தவஸ்துவானது எந்தஸம்பந்தம்பெற்றிருப்பதனால் அஸ்தி என்று அறியப்பட்டிருக்கிறதோ அதே வஸ்துவானது அந்த தேசம் காலம் முதலியதுடன் ஸம்பந்தம் பெற்றதாக இல்லை என்கிற உபலப்தியே ஒழிய ஒரு காலத்தில் அனுபவிக்கப்பட்டிருக்கிற வஸ்துவுக்கு மற்றொரு காலத்தில் பரிணாமம் முதலியதால் நாஸ்தி என்கிற உபலப்தியல்ல. காலபேதத்தால் விரோதமில்லாமையால். அதனால் மித்யாத்வமில்லை. இது சொல்லப்பட்டதாக ஆகிறது. ஜ்ஞாநஸ்வரூபமான ஆத்மவஸ்துவானது ஆதிமத்யாந்தமில்லாததாக எப்பொழுதும் ஒரேஸ்வரூபத்துடன் கூடி இருப்பதனால் தன் ஸ்வரூபத்தாலேயே எப்பொழுதும் அஸ்தி என்கிற சப்தத்தால் சொல்லத்தக்கதாக இருக்கிறது அசேதநமோ வென்றால் க்ஷேத்ரஜ்ஞனென்று சொல்லப்படுகிற ஜீவாத்மாவுக்கு போக்யமாக இருப்பதுடன் அந்த போக்தாவான ஜீவனுடைய கர்மாக்களுக்கு அனுகுணமான பரிணாமவிநாசங்களோடு சேர்ந்திருப்பதனால் எப்பொழுதும் நாஸ்த்யர்த்தகர்ப்பமாக இருப்பதுபற்றி நாஸ்தி சப்தத்தாலும் அஸத்ய சப்தத்தாலும் சொல்லத்தக்கதாக இருக்கிறது. அவ்விதமே சொல்லப்பட்டிருக்கிறது. "யத்துகாலாந்தரேணாபி நாந்ய ஸம்ஜ்ஞாமுபைதிவை. பரிணாமாதி ஸம்பூதாம் தத்வஸ்து ந்ருப தச்ச கிம் அநாசிபரமார்த்தஸ்ச ப்ராஜ்ஞை ரப்யுபகம்யதே-- தத்து நாஸ்தி ந ஸந்தேஹோ நாசித்ரவ்யோப பாதிதம்" என்று.

ச்ருதப்ரகாசிகை—

அடுத்த ச்லோகத்தின் பொருளைக்கூறுகிறார்—ஜகத் என்று. கர்மாவுக்கு வசப்பட்டவன் எங்கும் செல்லுகிறானன்றோ. அன்றிக்கே கர்மவச்யனன்றோ எல்லாவிடத்திலும் செல்லுகிறான். ஆதலால் இவ்வாறு செய்யக்கடவானென்று அர்த்தம் விலங்கிடிக்கப் பட்டவனே யன்றோ எங்கும் சிறைச்சாலையில் ஸஞ்சரிக்கிறான். ஆதலால் அதினின்று விடுவிப்பதற்காக முயற்சிக்கக்கடவானென்று கருத்து. த்ருவம்-சலனமில்லாமலிருக்கிறது. ஸதைகரூபம்-ஸ்வரூபத்தாலும் ரூபத்தாலும் குணத்தாலும் ஏகரூபமாயிருக்கிறதென்று அர்த்தம். அன்றிக்கே ஸ்வரூபத்தாலும் குணத்தாலும் ரூபத்தாலும் ஏகரூபம் என்று அர்த்தம். 'தஸ்மாத்ஸைததேவம்' என்று முந்தினதோடு அன்வயம்.

இவ்வண்ணம் ச்லோகங்களுக்கு தன்னால் கூறப்பட்டுள்ள அர்த்தங்களுக்கு அனுகுணமாக இருத்தலை உபபாதித்து அன்யனால் கூறப்பட்டுள்ள அர்த்தங்களுக்கு அனுகுணமாக இல்லாமலிருப்பதை உபபாதிக்கிறார்— அத்ர இது முதலியதால். ஒரு பதமும் காணப்படுகிறதில்லை என்று சொல்லத்தக்கதல்ல. நாஸ்தி முதலிய சப்தங்களும் ஸாமாநாதிகரண்யமும் அஜ்ஞாநத்தை உணர்த்துகிற பதங்களின் ஸமூஹமும் அனுகுணமென்று சொல்லப்படுமேயானால் அந்த விஷயத்தில் மறுமொழி உரைக்கிறார்-அஸ்தி என்று. பரமஸ்யஇத்யாதி-பரம பரேச முதலிய சப்தங்களுக்கெல்லாம் உன்னுடையபக்ஷத்தில் முக்யார்த்தங்களுக்கு ஸித்திஇல்லை என்று கருத்து. வேறு ஹேதுவையும் சொல்லுகிறார்—அஸ்திநாஸ்தி ஸத்யாஸத்ய என்று முதலிலிருக்கிற ச சப்தமானது து என்கிற சப்தத்தினுடைய அர்த்தமுள்ளது. தன்னால் சொல்லப்பட்டிருக்கிற யோஜனையில் அனுகுணமான சப்தத்திற்கு அன்யபக்ஷத்தில் அனுகுணமாக இல்லாமலிருத்தலென்கிற வைஷம்யமிருக்கிறதென்று கருத்து. அஸ்தி ஸத்ய என்கிற இரண்டு சப்தங்களும் த்ருஷ்டாந்தார்த்தங்கள். எவ்வாறு அஸ்திஸத்ய சப்தங்கள் ஸத்விலக்ஷணபரங்களன்றோ அவ்வாறே நாஸ்தி அஸத்ய சப்தங்களும் அஸத்விலக்ஷண பரங்களல்லவென்று அர்த்தம் நிர்வசனம் பண்ணத்தகாத வஸ்துவைச்சொல்வதில் எவ்வாறு அஸாமர்த்தியம் என்று கேட்கில் சொல்லுகிறான்—நாஸ்தி என்று. விரோதமானது அர்த்தத்தின் வழியாக ஏற்பட்டிருக்கிறது. அதனால் என்னவென்று கேழ்க்கப்படுமேயாகில் சொல்லுகிறார்—அதஶ்ச என்று அன்றிக்கே அநிர்வசநீயவஸ்த்வபிதாநாஸாமர்த்யாத் என்பதனால் வ்யுத்பத்தியின் இன்மை உரைக்கப்பட்டது. அந்யோந்யம் விருத்தங்களாக இருக்கிற அர்த்தங்களுடன் கூடிஇருத்தல் இங்கு வேறுஹேதுவாக உரைக்கப்பட்டது. ச, என்கிற சப்தம் ♆ ஸமுச்சயத்தில். அங்ஙனமிருந்தபோதிலும் ஸத்த்வமில்லாமையால் துச்சத்வமாவது மித்யாத்வமாவது சொல்லப்பட்டதாக ஆகிறதென்று கேழ்க்கப்படுமேயானால் அந்த விஷயத்தில் சொல்லுகிறார்—அத்ர என்று. அவ்விரண்டுகளும் எவ்வாறுவிநாசித்வத்தை முக்கியமாக உணர்த்துகின்றனவென்று வினவப்படுமேயாகில் மறுமொழி கூறுகிறார்— வஸ்து என்று, விநாசித்வமேயன்றோ மித்த்யாத்வமென்கிற சங்கைவரின் விநாசிதவத்தின் ஸ்வரூபத்தை $ சோதிக்கிறார்—ஏகேந என்று. வேறு ஸமயங்களில் ஒரு ‡ ஆகாரத்துடன் அனு

♆ ஸமுச்சயம்—கூட்டுதல்.
$ சோதிக்கிறார்—நன்கு விசாரிக்கிறார்.
‡ ஆகாரம்—உருவம்.

பவிக்கப்பட்டிருக்கிற வஸ்துவுக்கு மற்றொரு ஸமயத்தில் வேறுவிதமான ஆகாரத்துடன் உபலப்தியுண்டாகட்டும். அதனால் எவ்வாறு விநாசித்வமானது துச்சத்வ மித்யாத்வங்களைக்காட்டிலும் வேறுபட்டதாக ஆகுமென்கிற சங்கைவர துச்சத்வம் முதலியதின் ஸ்வரூபத்தை சோதிக்கிறார்—துச்சத்வம் ஹி என்று. பரிணாமாதிநா என்று. பரிணாம சப்தமானது பரிணாமஸாமான்யத்தையும் அந்த பரிணாமத்தின் விசேஷத்தையும் உணர்த்துவதில் நோக்குள்ளது. எவ்வாறு † வாத சப்தமானது எல்லாக்கதைகளையும் பொதுவாகச் சொல்வதாக இருந்தபோதிலும் வீதராகனுடைய கதாமாத்ரத்தை உணர்த்துவதில் விசேஷ நோக்கமுள்ளதோ அப்படிப்போல. இவ்விடத்தில் இந்த பரிணாமசப்தமானது விருத்தி அடைகிற அவஸ்தையைச் சொல்லுகிறது. பரிணாமர்த்தி ஜன்மபி: என்று ப்ரயோகமிருப்பதால். 'யத்து காலாந்தரேணாபி நாந்யஸம்ஜ்ஞாமுபைதி வை' பரிணாமாதி ஸம்பூதாம்'என்று சொல்லப்படப்போகிற வசனத்தில் கண்வைத்து இவ்வண்ணம் கூறப்பட்டது. பரிணாமசப்தமானது வேறுபாட்டை மாத்திரம் உணர்த்துகிறதென்று சொல்லும் பக்ஷத்தில் ஆதிசப்தமானது வேறுப்ரதேசத்தை நாடுதலென்கிற அர்த்தத்தைக் குறிக்கிறது. வேறு ஒரு ஸமயத்தில் அனுபவிக்கப்பட்டிருக்கிற வஸ்துவுக்கு வேறு ஒரு ஸமயத்தில் இல்லை என்கிற ஜ்ஞானமானது என் பாதமாகாதென்று கேழ்க்கப்படுமேயாகில் அதற்கு மறுமொழி உரைக்கிறார்- காலபேதேந என்று. விரோதமிருந்தாலன்றோ பாதம், பாதிக்கப்படத்தக்கதன்மை யல்லவோ மித்யாத்வம், என்கிற அபிப்ராயத்தால் சொல்லுகிறார்—அத: என்று. பரிணாமித்வம் அபரிணாமித்வமென்கிற இரண்டு அர்த்தங்களிலும நாஸ்தி அஸ்திமுதலிய சப்தங்கள் * பாரிபாஷிகங்களல்லவன்றோ. ஆதலால் எவ்வண்ணம் அவ்வர்த்தங்களை உணர்த்தும்விதம்? பரிணாமங்களுக்கு ஆச்ரயமாக இருந்தபோதிலுங்கூட வஸ்து நித்யமாக இருப்பதால் நாஸ்தி சப்தத்தால் சொல்லத்தக்கதாக இருத்தலுங்கூட பொருந்ாதென்று வினவப்படுமேயாகில் மறுமொழி அளிக்கிறார்—ஏதத்துக்தம் பவதி என்று. எப்பொழுதுமிருக்கிற ஒரு ரூபத்துன்கூடி இருத்தல் அஸ்தி சப்தத்தின் ப்ரவ்ருத்திநிமித்தம். விநாசத்தை உள்ளடக்கிக்கொண்டிருததல் நாஸ்தி சப்த ப்ரவ்ருத்திநிமித்தம் என்று பொருள். குடமாக இருக்கிற நிலைமையில் ‡ பிண்டம் இல்லை. § கபாலங்களாக இருக்கும் நிலைமையில் குடம் இல்லை, பொடியாக இருக்கும் நிலைமையில் கபாலங்களின் ஸத்தை இல்லை என்பதனால் எப்பொழுதும் நாசத்தை உள்ளடக்கிக்கொண்டிருடிக்கிறது. முந்தின அவஸ்தையுடன்கூடிய வஸ்துவுக்கு மேல்வருகிற நிலைமையை யடைதலல்லவோ விநாசம். அந்த அவஸ்தையுடன் கூடிய வஸ்துவுக்கு அந்த உத்தராவஸ்தாப்ராப்தியே உத்பத்தி. ஆகையால் நாஸ்தி சப்தத்தால் சொல்லத்தக்கதன்மை அசித்வஸ்துவுக்கு. சித்வஸ்துவுக்கோவென்றால் வேறொரு அவஸ்தையை அடைவதும் அடைந்திருந்த அவஸ்தையை இழப்பதுமில்லாமையால் ஒரே ரூபமாக இருப்பதுபற்றி விநாசகர்ப்பத்வமில்லை. ஆதலால் அது அஸ்தி சப்தத்தால் சொல்லத்தக்கதே. எது எப்பொழுதுமிருக்கிறதோ அது அஸ்தி சப்தத்தால் சொல்லத்தக்கது. 'ஸித்தே சப்தார்த்த ஸம்பந்தே' என்கிற இடத்தில் ஸித்த சப்தம்போல் இந்த சப்தம் நிச்சயத்தை உள்ளடக்கிக்கொண்டிருக்கிறது. அந்த இடத்தில் ஸித்தே ஏவ என்று வியாக்கியானம்செய்யப்பட்டிருக்கிறது.

---

† வாதம்—தத்வத்தை அறிந்துகொள்வதில்நோக்கத்துடன் கூடினவாதியின்கதை.

* பாரிபாஷிகம்—அவயவார்த்தங்களின்றி ஸங்கேதத்தால் ஒரு அர்த்தத்தை உணர்த்துகிற சப்தம். ‡ பிண்டம்—மண்ணுருண்டை. § கபாலம்—மண்ஓடு.

‡ அப்பக்ஷ:, வாயுபக்ஷ: இது முதலியபதங்களை த்ருஷ்டாந்தமாகக் காட்டி. அப்படியே இவ்விடத்திலுமென்று பொருள். அஸ்தி நாஸ்தி என்கிற சப்தங்களுக்கு ப்ரவ்ருத்தி நிமித்தம் இதே என்கிற இந்த அர்த்தத்தில் ப்ராமாணத்தைக் கூறுகிறார்— யதோக்தம் என்று.

தேஶகாலகர்மவிஶேஷாபேக்ஷயா அஸ்தித்வநாஸ்தித்வயோகிநி வஸ்துநி கேவலாஸ்தித்வபுத்திபோத்யத்வாபரமார்தத்வம் இத்யுக்தம்। ஆத்மா து ந ததா கேவலாஸ்தித்வபுத்திபோத்ய இதி ஸ பரமார்த இத்யுக்தம்। ஶ்ரோதஸ்ய ஸேதுத்வஸ்ய— «விஷ்ணுமாயம் யதா வேதவேதாந்தமூர்த்தி ஸம்ஸ்தித:। பராத்மஸ்ய ஸ ஸர்வாத்மா யதாஜ்ஞாநம் ப்ரயாந்த:॥» இத்யநுபாஷணாச்ச। «ஜ்யோதீம்ஷி விஷ்ணு:» இத்யாதி ஸாமாநாதிகரண்யஸ்யாபி ப்ரஹ்மஶரீரபாவ ஏவ நிபந்தநம்। விதிநிஷேதஶாஸ்த்ரஸ்யாஸ்தித்வநாஸ்தித்வஸம்பந்தப்ரயோகநிபந்தநம் ஜ்ஞாநஸ்ய கர்மநிமித்தஸ்வாபாவிகத்வேந ப்ரயாநாத்। கர்மநிமித்தஸ்ய ததர்மநிமித்தபரிணாமிகேநாப்ரயாநாதிதி ப்ரதீயதே॥

யதுக்தம்— நிர்விஶேஷப்ரஹ்மவிஜ்ஞாநாதேவாவித்யாநிவ்ருத்திம் வதந்தி ஶ்ருதய:— இதி। தத்ஸத், «வேதாஹமேதம் புருஷம் மஹாந்தம் ஆதித்யவர்ணம் தமஸ: பரஸ்தாத்। தமேவம் வித்வாநம்ருத இஹ பவதி। நாந்ய: பந்தா வித்யதேऽயநாய», «ஸர்வே நிமேஷா ஜஜ்ஞிரே வித்யுத: புருஷாததி» «ந தஸ்யேஶே கஶ்சந, தஸ்ய நாம மஹத்யஶ:» «ய ஏநம் விதுரம்ருதாஸ்தே பவந்தி» இத்யாதிவாக்யவிரோதாத்॥

ஸ்ரீபாஷ்யம்—

தேசகாலங்களையும் கர்மவிசேஷங்களையும் அபேக்ஷித்து இருப்புடையதென்றும் இருப்புடையதல்லவென்றும் வ்யவஹரிக்கக் கூடிய வஸ்துவினிடம் தனித்து அஸ்தி என்கிற புத்தியினால் அறியத்தக்கதன்மையானது அபரமார்த்தமென்று உரைக்கப்பட்டது. ஆத்மா ஒன்றுக்கே

‡ அப்பக்ஷ:—ஜலத்தையே சாப்பிடுபவன்.

* வாயுபக்ஷ:—காற்றையே ஆஹாரமாக உட்கொள்பவன்.

தனித்து அஸ்தி என்கிற புத்தியினால் அறியத்தக்க தன்மை இருப்பது பற்றி, அந்த ஆத்மா பரமார்த்தவஸ்துவென்று உரைக்கப்பட்டது. விஷ்ணவாதாரம் யதாசைதத் த்ரைலோக்யம் ஸமவஸ்திதம். பரமார்த்தஸ்ச மே ப்ரோக்தோயதாஜ்ஞாநம் ப்ரதாநத:" [இந்த ச்லோகத்துக்குப்பொருள். சிதசிதாத்மகங்களான இந்த மூவ்வுலகங்களும் எவ்விதம் விஷ்ணுவை அந்தராத்மாவாகக் கொண்டு நிலைபெற்றிருக்கின்றனவோ அவ்விதம் சொல்லப்பட்டது. எப்படி சிதம்சமானது ஸ்வதஸ்ஸித்தமான ஜ்ஞாநத்தையே தன்னுருவாகக்கொண்டிருப்பது பற்றி அழிவற்றதாக இருப்பதால் பரமார்த்தமோ, அப்படியே தலைமைபற்றி எனக்குக்கூறப்பட்டது.] என்று ச்ரோதாவான மைத்ரேயர் ஸ்ரீபராசரமஹரிஷியினுடைய உபதேசத்தை அநுஸரித்துச்சொல்லியிருப்பதாலும், 'ஜ்யோதீம்ஷி விஷ்ணு:' இது முதலிய ஸாமாநாதிகரண்ய நிர்தேசத்திற்குக் காரணம் ஈச்வரனுக்கும் ஜகத்துக்கும் இருக்கிற சரீராத்மபாவஸம்பந்தமே. சித்வஸ்து அசித்வஸ்து இவ்விரண்டினிடம் முறையே அஸ்திநாஸ்தி என்கிற சப்தங்களின் ப்ரயோகத்திற்குக்காரணம் யாதெனில், ஜ்ஞாநமென்பது ஆத்மாவுக்கு கர்ம ஸம்பந்தத்தாலுண்டாகாமல் ஸ்வாபாவிக ரூபமாக இருப்பதால் அதனுடைய ப்ராதான்யமும் அசித்வஸ்துவுக்கு அது கர்ம நிமித்தமான பரிணாமத்துடன்கூடி இருப்பதால் அப்ராதான்யமுமென்று அறியப்படுகிறது. விசேஷங்களால் விடுபட்டிருக்கிற ப்ரஹ்மவிஜ்ஞாநத்தினாலேயே ச்ருதிகள் அவித்யையின் நிவ்ருத்தியைச் சொல்லுகின்றனவென்று எது உரைக்கப்பட்டதோ அது ஸரியல்ல "வேதாஹமேதம் புருஷம் மஹாந்தம் ஆதித்யவர்ணம்தமஸ: பரஸ்தாத், தமேவம் வித்வா நம்ருத இஹபவதி, நாந்ய:பந்தா வித்யதேயநாய, ஸர்வேநிமேஷா ஜஜ்ஜிரே வித்யுத: புருஷாததி, ந தஸ்யேசே கச்சந, தஸ்யநாம மஹத்யச:, ய ஏவம் விதுரம்ருதாஸ்தே பவந்தி" இது முதலிய அநேக வாக்கியங்களின் விரோதத்தால்.

ச்ருதப்ரகாசிகை—

அஸத், அஸத்ய, ஸத்; ஸத்ய முதலியசப்தங்களுக்கு மித்த்யாத்வத்திலும் அமித்த்யாத்வத்திலும் ப்ரஸித்தி ஸ்வாரஸ்யமிருக்கிறதென்கிற சங்கைவரின், மித்யார்த்த

ச்ருதியின்பொருள்—'வேதாஹம்" சூர்யன்போல் ஜ்வலிப்பவனும் ப்ரக்ருதி மண்டலத்துக்கு அப்புறத்திலிருக்கிற த்ரிபாத்விபூதி ஸ்தானத்திலிருப்பவனுமான இந்தமஹாபுருஷனை நான் அறிகிறேன். "தமேவம்" இவ்வண்ணம் அந்த பரம புருஷனை அறிபவன் இங்கேயே முக்தனுக்கு துல்யனாக ஆகிறான். "நாந்ய:" மோக்ஷத்தை அடைவதற்கு (அவனைவிட) வேறு வழிகிடையாது. "ஸர்வே" மின்னல் வர்ணமுள்ள புருஷனிடத்தினின்று நொடி க்ஷணம் கலை காஷ்டை முதலிய எல்லாகால கலைகளும் உண்டாயின. "நதஸ்ய" அவனுக்கு ஒருவனும் தலைவனல்ல. 'தஸ்ய' அவனுக்கல்லவோ பெரும் கீர்த்தி. "ய ஏவம்" எவர்கள் இவ்வண்ணம் அறிகிறார்களோ அவர்கள் முக்தர்களாக ஆகிறார்கள்.

போதந ஸாமர்த்தியமுள்ளடங்கி இருக்கிறதென்பதையும் காண்பிக்கிறார்-- தேச என்று. கர்ம விசேஷாபேக்ஷயா என்று. கார்க்குதல், ஆநந்திக்கச்செய்தல்,முதலிய செய்கைகளின் ஸத்பாவாஸத்பாவங்களால் ராஜத்வம் பிதருத்வம் முதலிய தர்மரூபத்தால், அஸ்தித்வமும் நாஸ்தித்வமும் கர்மாவை அபேக்ஷித்து வருகிறது. உபாதியினுல் அதாவது ஒரு காரணத்தால் ஏற்படுகிற அஸ்தித்வ தர்மஸம்பந்தம் பெற்ற வஸ்துவுக்கு ஸ்வாபாவிகமான அஸ்தித்வ ஸம்பந்தமுள்ளதென்கிற புத்திக்கு விஷயமாக இருத்தல் பரமார்த்தமல்லவென்று பொருள். அபாரமார்த்ய கர்ப்பமான அஸ்த்யர்த்ததோடு சேர்ந்திருப்பதால் அசித்துக்கு நாஸ்தி அஸத்யம முதலிய சப்தங்களால் சொல்லத்தக்க தன்மை என்று உரைக்கப்பட்டது. ஆத்மாவுக்கு ஸ்வாபாவிகமான அஸ்தித்வஸம்பந்தத்தினுல் அந்த ஆத்மாவினிடம் அந்த அஸதித்வபுத்திவிஷயத்வம் பரமார்த்தமென்று கூறுகிறார்—ஆத்மந ஏவ என்று. தசச்லோகி க்ரந்தத்தில் பதம் பதமாக கூறப்பட்டுள்ள அர்த்தத்தை கேழ்ப்பவனுடைய ᵠ அனுவாத ப்ரகாரத்தால் திடப்படுத்துகிறார்—ச்ரோதுஸ்ச என்று. ப்ராதாந்த: - 'த்வ்யேகயோ:' என்கிற வ்யாகரண ஸூத்ரத்தில் போல் பாவப்ரதானமான நிர்தேசம் - ப்ராதான்யேந என்று அர்த்தம். ப்ராதான்யம், உத்கர்ஷம், மேன்மை- அனுபாஷணே ச்லோகத்தைச் சார்ந்த முன் பாதியினுல் பலித்த அர்த்தத்தைக்கூறுகிறார்—ஜ்யோதீம்ஷி என்று. அதொன்றினுலேயே தரிக்கத்தக்கத்ரவ்யமாக இருத்தலன்றோ சரீரலக்ஷணம். அதனுல்'விஷ்ணவாதாரம் என்பதனுல் ஆத்மசரீரபாவம் ஸித்தித்தது. அந்த ச்லோகத்தின் பிற்பாதியினுல் பலித்த பொருளைக்கூறுகிறார்—சித்சித் என்று. ஜ்ஞாநப்ராதான்யம் சப்தத்தால் நன்கு கூறப்பட்டிருக்கிறது. அதனுல் அசித்வஸ்துவுக்கு அப்ராதான்யம் அர்த்த ஸித்தமாதலால் சொல்லுறார்—அசித்வஸ்து நம்ச என்று. ப்ராதாந்யா ப்ரதாந்யே—மேன்மையும் தாழ்வும், அவ்விரண்டும் பரிணமித்வா பரிணமித்வ ஸ்வரூபங்கள்,அமித்யாத்வ மிதயாத்வ ஸ்வரூபங்களல்ல. ¶ தர்மியானது இருந்தாலன்றோ ப்ராதாந்யாப்ராதான்யங்கள். ப்ரதீதிமாத்ரத்தால் ஸித்திக்கிறதன்றோ மித்யை, ஆதலால் அதில் அப்ராதாந்ய சப்தம் ஸ்வரஸமல்லவென்று அபிப்ராயம். அப்படிக்கின்றி விசேஷங்களில்லாத ப்ரஹ்மாத்மைக்யஜ்ஞாநமானது நிவர்த்தகத்வபரமாக இருப்பதால் அன்யனுல் கூறப்பட்டுள்ள ச்ருதிகளுக்கு அந்த அர்த்தமில்லை என்பதைச் சொல்வதற்காக அன்யனுல் சொல்லப்பட்டிருப்பதை அனுவதிக்கிறார்—யதுக்தம் என்று. பரிஹரிக்கிறார்-ததஸத் என்று.

அந்த இடத்தில் ஜ்ஞாநத்திற்கு நிர்விசேஷ வஸ்துவிஷயத்வத்தையும் அதனுல் ஆத்மைக்யவிஷயத்வத்தையும் பரிஹரிக்கப்போகிறவராய்க்கொண்டு முதலில் நிர்விசேஷ வஸ்துவிஷயத்வத்தை விலக்குவதற்காக எடுக்கிறார்—வேதாஹம் என்று. இதனுல் விக்ரஹம் முதலியவைகளோடுகூடிய வஸ்துவிஷய ஜ்ஞாநமே உபாயம். வேறு வஸ்து உபாயமல்லவென்று சொல்லப்பட்டது. இதோடு ஸமானமான அர்த்தத்துடன் கூடி இருத்தலால் கூறுகிறார்— ஸர்வே நிமேஷா: என்று. அந்த இடத்திலோவென்றால் "அத்ப்யஸ்ஸம்பூதோ ஹிரண்யகர்ப்ப: இத்யஷ்டௌ" என்று ப்ரதீகோபாதாநம் செய்யப்பட்டிருக்கிறது. இதனுல் 'வித்யுத்' என்கிற சப்தம் வ்யாக்கியானிக்கப்பட்டதாக ஆகிறது. வித்யுத: - மின்னல்போன்ற நிறமுள்ளவனை என்று அர்த்தம். "ஆதித்யவர்ணம்" என்பதோடு அர்த்தைக்யத்தால். "ந தஸ்யேசேகஸ்சந" என்பத

ᵠ அனுவாதம்—ஏற்கனவே சொல்லப்பட்டிருப்பதை மீண்டும் உரைத்தல்.

¶ தர்மி—அஸாதாரணதர்மத்தால் நிரூபிக்கத்தக்க வஸ்து.

னால் உபாயமாக இருக்கிற வேறு ஜ்ஞாநமில்லை. என்பது பலித்தது. அதிகமாக அறியத்தக்கவேறு வஸ்து இல்லாமையால் உரைக்கப்பட்டுள்ள ஆகாரத்துடன்கூடின புருஷனை அறிதலே உபாயமென்று காண்பிக்கிறார்—ய ஏநம் விது: என்று. இந்த வாக்யங்களையும் ஆதி சப்தத்தால் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிற மற்ற வாக்யங்களையும் எடுத்தது அநேக வாக்ய விரோதங்களைக் காட்டுவதற்காக.

ब्रह्मणः सविशेषत्वादेव सर्वाण्यपि वाक्यानि सविशेषज्ञानादेव मोक्षं वदन्ति; शोधकवाक्यान्यपि सविशेषमेव ब्रह्म प्रतिपादयन्तीत्युक्तम् ॥

तत्त्वमस्यादिवाक्येषु सामानाधिकरण्यं न निर्विशेषवस्त्वैक्यपरम्, तत्त्वम्पदयोः सविशेषब्रह्माभिधायित्वात् । तत्पदं हि सर्वज्ञं सत्यसङ्कल्पं जगत्कारणं ब्रह्म परामृशति — "तदैक्षत, बहु स्याम्" इत्यादिषु तस्यैव प्रकृतत्वात् । तत्समानाधिकरणं त्वम्पदं च अचिद्विशिष्टजीवशरीरकं ब्रह्म प्रतिपादयति, प्रकारद्वयावस्थितैकवस्तुपरत्वात्सामानाधिकरण्यस्य प्रकारद्वयपरित्यागे प्रवृत्तिनिमित्तभेदासम्भवेन सामानाधिकरण्यमेव परित्यक्तं स्यात्; द्वयोः पदयोर्लक्षणा च । "सोऽयं देवदत्तः" इत्यत्रापि न लक्षणा, भूतवर्तमानकालसम्बन्धितयैक्यप्रतीत्यविरोधात् । देशभेदविरोधश्च कालभेदेन परिहृतः । "तदैक्षत, बहु स्याम्" इत्युपक्रमविरोधश्च । एकविज्ञानेन सर्वविज्ञानप्रतिज्ञानं न घटते । ज्ञानस्वरूपस्य निरस्तनिखिलदोषस्य सर्वज्ञस्य समस्तकल्याणगुणात्मकस्याज्ञानं तत्कार्यानन्तापुरुषार्थाश्रयत्वं च भवति । बाधार्थत्वे च सामानाधिकरण्यस्य तत्त्वम्पदयोरधिष्ठानलक्षणा निवृत्तिलक्षणा चेति लक्षणाद्वयस्य सर्वदोषाः ॥

ஸ்ரீபாஷ்யம்—

ப்ரஹ்மமானது விசேஷங்களோடு கூடி இருத்தலாலேயே எல்லா வாக்கியங்களும் ஸவிசேஷஜ்ஞாநத்தாலேயே மோக்ஷத்தைச் சொல்லுகின்றன. சோதகவாக்கியங்களும் ப்ரஹ்மத்தை விசேஷங்களோடுகூடியதென்றே ப்ரதிபாதிக்கின்றனவென்று சொல்லப்பட்டது. தத்வமஸி முதலிய வாக்கியங்

களில் ஸாமாநாதிகரண்யமானது நிர்விசேஷ வஸ்துக்களின் ஐக்யத்தைச் சொல்வதில் கருத்துள்ளதல்ல. தத் த்வம் என்கிற இரண்டுபதங்களும் விசேஷங்களுடன் கூடின ப்ரஹ்மத்தையே சொல்வதால். தத் என்கிற பதமானது எல்லா மறிந்ததும் ஸத்யஸங்கல்பத்துடன் கூடியதும் ஜகத்காரணமாகவுமிருக்கிற ப்ரஹ்மத்தைச் சொல்லுகிறது. "தைக்ஷத-பஹுஸ்யாம்" இது முதலிய ச்ருதிவாக்கியங்களில் அந்த ப்ரஹ்மமே ப்ரஸ்தாவிக்கப்பட்டிருப்பதால். அந்த தத் பதத்தோடு ஸமாநாதிகரணமாக அதாவது அபேதாந்வய யோக்யமாக ப்ரயோகிக்கப்பட்டிருக்கிற த்வம் பதமும் அசித்தோடு சேர்ந்திருக்கிற ஜீவனை சரீரமாகக்கொண்டிருக்கிற ப்ரஹ்மத்தைப்ரதிபாதிக்கிறது. ஸாமாநாதிகரண்யத்திற்கு இரண்டு ப்ரகாரங்களுடன் கூடி இருக்கிற ஒரு வஸ்துவை ப்ரதிபாதிப்பதில் தாத்பர்யமிருப்பதால். இரண்டு ப்ரகாரங்களையும் விட்டுவிட்டால் ப்ரவ்ருத்திநிமித்தபேத மில்லாமையால் ஸாமாநாதிகரண்யமே இழக்கப்பட்டதாக ஆகும்- இரண்டு பதங்களுக்கும் லக்ஷணாவ்ருத்தி சொல்லவேண்டியதாக ஏற்படுகிறது. 'ஸோயம் தேவதத்த:' [இவன் தான் முன்பு கண்ட அந்த தேவதத்தன்] என்கிற ப்ரத்யபிஜ்ஞாப்ரகாசக வாக்கியத்திலுங்கூட லக்ஷணை இல்லை. ஒரு வஸ்துவானது இறந்தகாலத்தோடும் நிகழ்காலத்தோடும் ஸம்பந்தம் பெற்றிருப்பதுபற்றி ஐக்யப்ரதீதிக்கு விரோதமில்லாததால் - தேசபேத விரோதமானது காலபேதவிரோதத்தால் பரிஹரிக்கப்பட்டது 'தைக்ஷத, பஹுஸ்யாம்' என்கிற தொடக்கத்திற்கு விரோதமும் ஒன்றை அறிந்ததனால் எல்லாம் அறியப்பட்டதாக ஆகிறது என்கிற ப்ரதிஜ்ஞையும் இசைகிறதில்லை. ஜ்ஞாநத்தையே தன் உருவமாகக்கொண்டவனும் விலக்கித்தள்ளப்பட்ட ஸமஸ்ததோஷங்களுடன்கூடியவனும் எல்லாவற்றையு மறிந்தவனும் எல்லா கல்யாணகுணஸ்வரூபனுமாக இருக்கிற பரமபுருஷனுக்கு அஜ்ஞாநமும் அஜ்ஞாநகார்யங்களாகவும் முடிவில்லாதவைகளாகவுமிருக்கிற அபுருஷார்த்தங்களுக்கு ஆச்ரயமாக இருப்பதும் ஸம்பவிக்கிறது. பாதார்த்த ஸாமாநாதிகரண்ய மொப்புக்கொள்ளப்பட்டால் தத்த்வம் என்கிற இரண்டு பதங்களுக்கும் அதிஷ்டான லக்ஷணையும் நிவ்ருத்திலக்ஷணையும் கல்பிக்கவேண்டியதாக இருப்பதால் அந்த லக்ஷணை முதலியவைகளே தோஷங்கள்.

ச்ருதப்ரகாசிகை—

ஆய்யனே ! 'ஸதேவஸோம்ய, ஏகமேவ' இது முதலிய காரணவாக்கியங்களில் ப்ரஹ்மம் நிர்விசேஷ மென்று அறியப்பட்டிருப்பதால் அந்த நிர்விசேஷப்ரஹ்மஜ்ஞாநமே நேராக மோக்ஷத்திற்கு உபாயமாக இருக்கிறது. ஆதலால் ஸகுணஜ்ஞாநத்திற்கு உபாயத்வமானது அந்த நிர்விசேஷ ப்ரஹ்மஜ்ஞாநத்தின் வாயிலாக ஆகலாம். அன்றிக்கே ஸகுணஜ்ஞாநத்திற்கு மோக்ஷோபாயத்தை ப்ரதிபாதிக்கிற வாக்கியத்திலுங்கூட ஸகுணத்வத்தில் தாத்பர்யம் கிடையாது வஸ்து மாத்ரமே காணப்படுகிறதென்று

வினவப்படுமேயானல், அந்த விஷயத்தில் சொல்லுகிருர்-ப்ரஹ்மண: என்று. ஸத்வி த்யைமுதலிய வித்யாப்ரதிபாதகச்ருதி வாக்கியங்களிலுங்கூட ஸகுண விஷயத்வத்தை உபபாதநம் செய்திருப்பதால், ப்ரமாணஸித்தமாயும் வாஸ்தவமாகவுமிருக்கிற ப்ரஹ்ம ஸ்வரூபவிஷயஜ்ஞானமே மோக்ஷோபாயமாதலால், அவைகளும் ஸவிசேஷஜ்ஞாநத் வத்தை ப்ரதிபாதிப்பதிலேயே கருத்துள்ளவைகளென்று பொருள். அங்ஙனமாகில், சோதகவாக்கியங்களோடு விரோதம் வருகிறதென்று சொல்லப்பட்டால் சொல்லுகிருர்- சோதக என்று.

இவ்வண்ணமாக ஜ்ஞாநத்திற்கு நிர்விசேஷ விஷயத்வமானது அதற்கு விருத்த ங்களான வசனங்களின் உதாஹரணத்தால் நிரஸிக்கப்பட்டது. அதற்குமேல்''தத்த்வம ஸி'' இதுமுதலிய வாக்கியங்களிலுள்ள ஸாமாநாதிகரண்யத்திற்கு வேறு விதத்தால் பொருத்தமில்லாமையால் நிர்விசேஷஜ்ஞாநமே உபாயமென்கிற சங்கைவரின் அந்தஸா மாநாதிகரண்யமானது ஜீவாத்மாபரமாத்மா இவ்விரண்டுக்கும் ஐக்யத்தைச்சொல்லவந்த தென்பதை நிராகரிக்கிருர்— தத்த்வமஸ்யாதி என்று. சோதகவாக்கியங்களில் ஸா மாநாதிகரண்யமானது அந்த ப்ரஹ்மததைவிட வேருன வஸ்துவினது வ்யாவ்ருத்தி யின் வாயிலாக வஸ்துக்களின் ஐக்யத்தைச் சொல்வதில் கருத்துள்ளது. 'தத்த்வமஸி' இது முதலிய வாக்கியங்களில் ஜீவனுக்கும் ப்ரஹ்மத்துக்கும் ஸாமாநாதிகரண்யமானது அன்வயமுகத்தால் உபலக்ஷிக்கப்பட்டுள்ள வஸ்துக்களின் ஐக்யததில் கருத்துள்ளது. அசித் ப்ரஹ்மம் இது இரண்டுகளுக்குமோ வென்ருல், 'ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம' இதுமுதலியதில் வாஸ்தவமல்லாத ரூபத்தை ஏறிடுவதனுல் ஸாமாநாதிகரண்யம். 'ஜ்யோதீம்ஷி விஷ்ணு:' இதுமுதலிய வாக்யங்களில் ஸாமாநாதிகரண்யமானது பா தார்த்தமுள்ளதென்று நான்குவிதமாகவன்ரே அங்யர்களால் ஸாமாநாதிகரண்யம் ஆ ங்காங்கு ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. அவற்றுள் ''தத்த்வமஸி' இதுமுதலிய வாக் கியங்களில் அந்வயமுகத்தால் வஸ்துமாத்ரம் அறிவிக்கப்படுகிறதென்பதையும் கதி இல்லாமையால் பாதார்த்தத்தையும் ஆசங்கித்து அது நிராகரிக்கப்படுகிறது. அவற் றுள் முதன்மைவாய்ந்துள்ள வஸ்துக்களின் ஐக்ய பரத்வத்தை தூஷிப்பதற்காகச் சொ ல்லுகிருர்——நநிர்விசேஷ வஸ்த்வைக்யபரம் என்று. எதனுல் என்று கேட்கில் சொல்லுகிருர்— தத்த்வம் என்று. அது எவ்வண்ணமென்று கேழ்க்கப்படுமேயானுல் சொல்லுகிருர்—தத்பதம்ஹி என்று. 'ஹி'என்கிறசப்தம் ஹேதுவை உணர்த்துகிறது. ஸர்வஜ்ஞத்வம் முதலிய குணங்களுடன்கூடின ப்ரஹ்மப்ரதிபாதனம் எவ்வாறு என்று வினவப்படுமேயானுல் உத்தரமளிக்கிருர்—ததைக்ஷத என்று. தத் என்கிறசப்தத்தி ற்கு ப்ரக்ருதமான எல்லாஆகாரங்களுடன் கூடின வஸ்துவை பராமர்சிப்பதென்பது வ்யு த்பத்தியினுல் ஸித்தமாக இருக்கிறது. வெண்ணிறமுள்ளதும் மங்களகரங்களான கண்களுடன் கூடியதும் நிறைந்த கொம்புகளுடன் கூடியதும் குடம்போன்ற மடி யுடன் கூடியதுமான யாதொரு என்னுடைய பசுவுண்டோ அதை ஓட்டிக்கொண்டு வா என்பது எப்படியோ.

ஐயா! பசு இருக்கிறது, அதை ஓட்டிவா இது முதலிய வாக்கியங்களில் கொ ண்டுவருதல் முதலிய செய்கைகளுக்குத்தகுதியற்றதான ஸ்திதிமுதலிய விசேஷங்க ளால் விடுபட்டிருக்கிற வஸ்துவை பராமர்சித்தல் காணப்படுகிறது. அதுவும்முக்கியம், இவ்வண்ணமல்ல— ஆநயனக்ரியையோடு ஸமகாலான்வயத்திற்கு யோக்யமல்லாததாக இருந்தபோதிலுங்கூட ஸ்தித்யாதி விசேஷணத்தோடு முந்தினகாலத்தோடு சேர்ந்திருத் தல் சொல்லக்கருதப்பட்டிருப்பதால். அப்படி இல்லாவிட்டால் ஓடிக்கொண்டிருக்கிற கோ பிண்டத்திற்குங்கூட ஓட்டிக்கொண்டு வருதல் என்பதுப்ரஸங்கிக்கும். விசேஷண

மானதுவிசேஷ்ய வஸ்துவினிடம் எவ்வாறுஅன்வயிப்பதற்குத்தகுதியுள்ளதோ அவ்வாறு அன்வயிக்கப்பட்டிருக்கிறஅந்த விசேஷணத்தின் அபரித்யாகமன்றோ விவக்ஷிதத்வம் ப்ரக்ருதமாகஇருக்கிற எல்லா விசேஷணங்களிலும் ஒன்றுக்காவது பரித்யாகம்ஏற்படுமேயாகில் ப்ரக்ருதத்வமே இழக்கப்படவேண்டியதாக ஆகும். வெண்ணிறமுள்ளதும் மங்களகரமான கண்களுடன்கூடியதும் பூர்ணமான கொம்புகளுடன்கூடியதும் குடம்போன்ற மடியுடன் கூடியதுமான யாதொரு என்னுடையபசுவுண்டோ அதைக்கொண்டுவா என்று சொன்னால் வெண்ணிறமொன்றைத்தவிர்த்த மற்ற எல்லா விசேஷணங்களுடன் கூடின கோவ்யக்தியை ஓட்டிக்கொண்டுவந்தபோதிலுங்கூட ப்ரக்ருதமான கோ வ்யக்தி ஓட்டிக்கொண்டுவரப்படாமல் போவதால். ஆதலால் எல்லா விசேஷங்களும் ப்ரக்ருதமாக இருக்க நிர்விசேஷ வஸ்துதான் ப்ரக்ருதம் என்பது தூரத்தில் ஓட்டப்பட்டது, ப்ரக்ருதமாக இருக்கிற எல்லா விசேஷணங்களையும் பரித்யாகம் செய்தபோதிலும் தர்மங்களின் ஐக்யததால் ப்ரக்ருதத்வம் ஸித்திக்கிறது. எல்லாஆகாரங்களும் இல்லாவிட்டால் ப்ரதிஸந்தாநத்திற்கே தகுதியற்றதாகப்போகவேண்டிவருவதால். தாழ்வாரத்தில் குடமிருக்கிறது. அதைக்கொண்டுவா" என்கிற வாக்கியத்தில் கடத்வத்தை சொல்லககருத்தில்லாத காரணம் பற்றி மணலை மாத்திரம் ஒருவன்கொண்டு வந்தால் அதனால் ப்ாக்ருதகார்யஸித்தி உண்டாகாதன்றோ. ஒரு ஆகாரமானது முற்றிலுமிழக்கப்பட்ட போதிலுங்கூட ஸம்பவியாத ப்ரக்ருதத்வமானது எல்லா ஆகாரஙகளுமிழக்கப்பட்டிருக்கும் தருணத்தில் எவ்வாறு ஸம்பவிக்கும். மோதிரமாக இருந்தலென்கிற தன்மை நீஙகியபோதிலுங்கூட தங்கம் நினைக்கப்படுகிறதென்று சொல்லப்படுமேயானல், ப்ரத்யக்ஷத்கால் உண்மை, 'தத்' என்கிற சப்தமோவென்றால் ப்ரக்ருதமான ஆகாரமில்லாவிடில் ப்ரதிஸந்தானத்தையே உண்டுபண்ணச் சக்தியற்றதாக இருக்கிறது. அதனாலேயே எந்த மோதிரமோ. அதைக்கொண்டுவா என்று சொன்னால் தங்கம் மாத்திரம் தனித்துக்கொண்டு வரப்படுகிறதில்லை. ஆதலால் ப்ரக்ருதங்களான எல்லா ஆகாரங்களையும் இழந்துவிடும் பக்ஷத்தில் ப்ரதிஸந்தானத்திற்கே தகுதியற்றதான வஸ்துவுக்கு ப்ரக்ருதத்வமே இல்லை என்பதனால், 'தத்' என்கிறசப்தத்திற்கு வஸ்துமாத்ர பரத்வம் லாக்ஷணிகமாக ஆகும்.

'தத்' என்கிற பதத்தால் உணர்த்தப்பட்டிருக்கிற ஸர்வஜ்ஞத்வம் முதலிய குணங்களுக்கும் 'த்வம்' என்கிற பதத்தால் உணர்த்தப்பட்டுள்ள அஜ்ஞத்வம் முதலிய குணங்களுக்கும் விரோதத்தால் 'தத்த்வமஸி' என்கிற வாக்கியம் விசேஷங்களைத்தாலும் விடுபட்டிருக்கிற சுத்த சைதன்யத்தை மாத்திரம் உணர்த்துகிறதென்று சொல்லப்படுமேயானல் அந்த விஷயத்தில் சொல்லுகிறார்—**தத்ஸமாநாதிகரணம்** என்று. 'கடஸ்ய சுக்ல:' என்கிற வாக்யத்தை முதன்மையாகக்கொண்ட வ்யதிகரணவாக்யங்களில் தர்மத்தைச்சொல்லும் திறமைவாய்ந்துள்ள சப்தத்திற்கு தர்மி பர்யந்தமாக அர்த்தத்தை உணர்த்திவைக்கும் தன்மை இல்லாததால் அதை விலக்குவதற்காக 'தத்ஸமாநாதிகரணம்' என்று கூறப்பட்டது. **அசித் விசிஷ்டஜீவசரீரகம்** என்று. அஜ்ஞத்வம் முதலிய குணங்களுக்கு ஸர்வஜ்ஞத்வம் முதலியகுணங்களுடன்கூடின பரமாத்மாவினிடத்தில் விரோதமானது நேராக இல்லாமல் ஒன்றின்வாயிலாக ஏற்பட்டிருப்பதால் பரிஹரிக்கப்பட்டதென்று அர்த்தம், த்வம் பதத்தின் ப்ரவ்ருத்தி நிமித்தமாக இருக்கிற ஸம்போதநீயார்த்தத்வ ரூபமான ஆபி முக்கியத்திற்கு ப்ரயோஜகமுபலக்ஷணமென்கிற அபிப்ராயத்தால் 'அசித் விசிஷ்டஜீவ' என்று. உரைக்கப்பட்டது

ஸாமாநாதிகரண்யமிருக்கையில் எவ்வாறு த்வம் பதமானது ஜீவவிசிஷ்டமான ப்ரஹ்மத்தை உணர்த்தும் திறமையுள்ளதென்று கேழ்க்கப்படுமேயாகில் சொல்லுகிறார்—ப்ரகாரத்வம் என்று. ப்ரகாரத்வயாவஸ்திதம்- இரண்டு ப்ரகாரங்களோடுகூடியது. ப்ரக்ருதங்களான தத் த்வம் பதங்களின் ப்ரவ்ருத்திநிமித்தபரமான ப்ரகாரத்வயசப்தமானது $ ந்யூநதையை வ்ருத்திக்கச் செய்கிறதே ஒழிய ப்ரகாரங்களின் த்ரித்வம் முதலியதை விலக்குவதில் கருத்துள்ளதல்ல. அதை உபபாதனம் செய்கிறார்—ப்ரகாரத்வயபரித்யாகே என்று. வேறு தூஷணத்தைக் கூறுகிறார்—த்வயோ: என்று. விரோதமில்லாமலே முக்கியமாக நிர்வாஹம் ஸம்பவிக்கிறதாக இருக்க ஒருபதத்திற்குகூட லக்ஷணையை கல்பிப்பது யுக்தமன்று. விரோதம் வந்தபோதிலுங்கூட ஒரு பதத்திற்கு லக்ஷணையைக் கல்பிப்பதனாலேயே விரோதத்தினது இன்மை ஸித்திப்பதாக இருக்க இரண்டு பதங்களுக்கு லக்ஷணையை கல்பிப்பது பொருந்தாதென்று அர்த்தம்.

அய்யா! இரண்டு பதங்களுக்கு லக்ஷணையை கல்பிப்பது தூஷணமாகா. ‘ஸோயம் தேவதத்த:’ இது முதலிய வாக்கியங்களில் காணப்பட்டிருப்பதால். அந்தஇடத்திலோ வென்றால், தேசவிசேஷத்தோடும் கால விசேஷத்தோடுங்கூடிய ஆகாரத்தில் தேசாந்தர காலாந்தரங்களுக்கு அன்வய விரோதத்தால் இரண்டு பதங்களும்லாக்ஷணிகங்களே. அதுவிஷயத்தில் பகர்கிறார்—ஸோயமி என்று. ஒரு வஸ்துவுக்கு இரண்டு தேசங்களோடு ஸம்பந்தம் ஏற்படுவதில் விரோதமா? அல்லது இரண்டு காலங்களோடு ஸம்பந்தம்வரின் விரோதமா? என்கிற விகல்பத்தை அபிப்ராயப்பட்டுக்கூறுகிறார்—பூத என்று விசிஷ்டாகாரத்தில் விசேஷணாந்தரங்கள் அன்வயிக்காதன்றோ. பின்னையோ விசேஷ்யமாத்திரத்தில் விசேஷணாந்தரான்வய முண்டு, அதனால் இரண்டு காலங்களின் ஸம்பந்தம் விருத்தமன்று. விருக்தமாக இருக்குமேயாகில் அப்பொழுது பௌத்தர்களால் சொல்லப்பட்டிருக்கிற க்ஷணிகத்வமே வந்து சேரும். அநேக காலங்களால் ஸாதிக்கத்தக்க தர்மங்களைச் செய்தலும் பலப்ராப்தியும் பொருந்தாமல் போகவேண்டியதாக ஆகுமென்று கருத்து. தேசபேத என்று. ஒரு வஸ்துவுக்கு இரண்டு தேசங்களின் ஸம்பந்தம் விரோதமாகில் அப்பொழுது விஷ்ணு ப்ரதக்ஷிணம் தீர்த்தஸ்நானம் முதலிய விதியானது பொருந்தாமல் போகவேண்டும். ப்ரத்யபிஜ்ஞாவிரோதமு மென்றுகருத்து. ஒரே ஸமயத்தில் இரண்டு இடங்களிலும் இரண்டுகாலங்களிலும் இருத்தலெவ்வாறு ஸம்பவிக்குமென்று வினவப்படுமேயானால் உத்தரம்கூறப்படுகிறது. இரண்டுதேசங்களின் ஸம்பந்தத்திற்காவது இரண்டு காலங்களின் ஸம்பந்தத்திற்காவது ஒரேஸமயத்திருத்தல் கிடையாது. அந்த தேசகால ஸம்பந்தங்களின் ப்ரதிபத்திக்கன்றோ யௌகபத்யம். ப்ரதிபத்தியோவென்றால் முறையே ஸம்பவிக்கிற தேசத்வய ஸம்பந்தத்தையும் காலத்வய ஸம்பந்தத்தையுமே காண்பிக்கிறது, அதனால் விரோதமில்லை. அப்படி இல்லாவிட்டால் சென்றுபோனதையும் இனிவரப்போகிறதையும் விஷயீகரித்துக்கொண்டிருக்கிற ஜ்ஞாநங்களில் விஷயமாக இருக்கிற † அதீதவிஷயத்திற்கும் § அநாகத விஷயத்திற்கும் ¶ வர்த்தமானத்வமாவது ஜ்ஞாநத்திற்கு அதீதத்வமாவது அநாகதத்வமாவது ப்ரஸங்கிக்கும் என்று, வேறு தூஷணத்தையும் சொல்லுகிறார்—தைக்ஷித என்று. ‡ உபக்ரமாதிகரணத்திலன்றோ உபக்ரமப்ராபல்ய முரைக்கப்பட்டதென்று கருத்து. உபக்ரமத்தின் தொடக்கத்திலேயே ஐக்யம் அறியப்பட்டு விட்டபடியால் உபக்ரமவிரோ

$ ந்யூநதை—குறைவு. † அதீதம்—சென்றுபோனது. § அநாகதம்—வரப்போகிறது.
¶ வர்த்தமானம்— நிகழ்காலம். ‡ உபக்ரமம்—தொடக்கம்.

தமில்லை. ஒன்றை அறிந்ததனால் எல்லாமறியப்பட்டதாக ஆகுமென்கிற அர்த்தத்துடன் கூடின ஏக விஜ்ஞாநத்தால் ஸர்வவிஜ்ஞான ப்ரதிஜ்ஞா வாக்யமோவென்றால் ததைக்ஷத, பஹுஸ்யாம், என்கிற வாக்கியத்திற்கு முந்தியதென்று கேழ்க்கப்படுமேயாகில் சொல்லுகிறார்—ஏக விஜ்ஞாநேந என்று. அந்த ச்ருதிவசனத்தில் ப்ரஹ்மத்திற்கு ஜகத்தைக்குறித்து நிமித்தத்வம் * உபாதானத்வம் அவைகளுக்கு அனுகுணங்களான ஸர்வஜ்ஞத்வம் ஸர்வசக்தத்வம் முதலிய குணங்கள் ஸித்திப்பதாலென்று அர்த்தம். ஸூக்ஷ்மாவஸ்தையை அடைந்திருக்கிற சிதசித் விசிஷ்ட ப்ரஹ்மமே காரணம், ஸ்தூலாவஸ்தையைப்பெற்றிருக்கிற அந்த ப்ரஹ்மமே கார்யமாக இருப்பதுபற்றி வேறுத்ரவ்யமில்லாமையால் காரணஜ்ஞாநத்தால் கார்யஜ்ஞாநமென்பது பொருத்தமுள்ளதாக ஆகிறது. ‡ ம்ருஷாவாதிக்கோவென்றால் காரணஜ்ஞாநத்தில் கார்யம் விஷயமாக இருப்பதனால் § அந்தர்ப்பாவமபிமதமாக இருக்குமேயானால் விரோதம். ஸத்யபதார்த்தத்தை விஷயமாகக்கொண்டிருக்கிற ஜ்ஞாநத்தில் மித்யையாக இருக்கிற அர்த்தத்திற்கு விஷயத்வம் பொருந்தாததால்- மித்யாத்வேந என்று ஒரு பதத்திற்கு || அத்யாஹாரமும் ஏற்படவேண்டியதாக ஆகும். அந்தர்ப்பாவமில்லை என்கிற பக்ஷத்திலோவெனில் அறியப்பட்டிராத ஒரு வஸ்துவினிடத்தில் அறியப்பட்டதென்கிற வ்யவஹாரமானது முக்கியமாக உண்டாகாது. அதனால் நம்ம பக்ஷத்திலேயே ப்ரதிஜ்ஞாவாக்கியம் ஸ்வரஸம். வேறு ச்ருதிவசன விரோதத்தைக் கூறுகிறார்— ஜ்ஞாநஸ்வரூபஸ்ய என்று. ‘ஜ்ஞாநஸ்வரூபஸ்ய ஸர்வஜ்ஞஸ்ய’ என்கிற இந்த இரண்டு விசேஷணங்களால் தர்மிபூதஜ்ஞாநமும் தர்மபூத ஜ்ஞாநமும் விவக்ஷிக்கப்பட்டிருக்கின்றன. ஸர்வஜ்ஞனுக்கு அஜ்ஞத்வமும் எல்லா தோஷங்களையும் விலக்கினவனும் ஸமஸ்தகல்யாணகுணைகமகனுமான பரமபுருஷனுக்கு அளவிறந்த அபுருஷார்த்தமும் ஸம்பவிப்பதால் விரோதம்- ஜ்ஞாநஸ்வரூபஸ்ய என்கிற பதத்தால் திரோதாநாநுபபத்தியும் ஸூசிப்பிக்கப்பட்டது.

இவ்வண்ணமாக ஸாமாநாதிகரண்யத்திற்கு நிர்விசேஷவஸ்த்வைக்யத்தை அறிவிப்பதில் கருத்தென்பது தூஷிக்கப்பட்டது. அதற்குமேல் பாதார்த்தத்வத்தை தூஷிக்கிறார்— பாதார்த்தத்வேச என்று. கயிர் ஸர்ப்பம் என்கிற இவ்வித ஸ்வரூபமுள்ள பாதார்த்தத்துடன்கூடின ஸாமாநாதிகரண்யமே கிடையாது. ஸாமாநாதிகரண்யத்திற்கு ஒரு விசேஷ்யத்தில் இரண்டு ப்ரகாரங்களை உபஸ்தாபிக்கிற ஸ்வபாவமுள்ளதாக இருப்பதுபற்றி பாதார்த்தத்வ விரோதமிருப்பதால். ஆதலால் இரண்டு பதங்களுக்கும் முக்கியார்த்தத்தை உணர்த்தும் திறமை அபிமதமாக இருக்க பாதார்த்தமான ஸாமாநாதிகரண்யம் ஸித்தியாது. ஸர்ப்ப சப்தத்தால் நஞர்த்தத்தை லக்ஷணாவ்ருத்தியினால் உணர்த்தி அஸர்போ ரஜ்ஜு: என்கிற நிர்வாஹத்தை த்ருஷ்டாந்த வாக்கியத்திற்கு ஆசங்கித்து தார்ஷ்டாந்திக வாக்கியத்திற்கு அதைவிட அதிக தூஷணத்தைக்கூறுகிறார்—பாதார்த்தத்வேச என்று. ‘த்வம் தத்பதயோ:’ என்கிற இடத்தில் க்ரமவிவக்ஷை இல்லை. தத் என்கிற பதமானது * அதிஷ்டாந மாத்திரத்தை லக்ஷணாவ்ருத்தியினால்

---

* உபாதானம்—கார்யமாக மாறுகிற காரணம். ‡ ம்ருஷாவாதி—உலகமனைத்தையும் பொய்யென்று சொல்லுகிற அத்வைதி. § அந்தர்பாவம்—உள்ளடக்கம்.

|| அத்யாஹாரம்—சேர்த்துக்கொள்ளுதல். * அதிஷ்டானம்—ஆதாரம்.

உணர்த்திவைக்கிறது. த்வம் பதமானது ஜீவபாவ நிவ்ருத்தியை லக்ஷணையினுல் அறிவிக்கிறது. அல்லது த்வம் பதத்தால் அதிஷ்டானலக்ஷணை-தத்பதத்தால் நிவ்ருத்திலக்ஷணை-ஆதிசப்தத்தால் ஸாமாநாதிகரண்ய லக்ஷணத்திற்கு ஹாநியும் உபக்ரமவிரோதமும் ஏக விஜ்ஞாநத்தால் ஸர்வ விஜ்ஞாந ப்ரதிஜ்ஞையின் பொருந்தாமையும் வேறுச்ருதிவசனங்களின் விரோதமுமென்கிற தூஷணங்கள் சொல்லக்கருதப்பட்டிருக்கின்றன.

[illegible]

[illegible]

ஸ்ரீபாஷ்யம்—

இவ்வளவு மாத்திரமன்றோ விசேஷம். சிப்பியைப்பார்த்து இது வெள்ளி யல்ல என்கிற வ்யவஹாரத்தில் போல அறியப்பட்டிராத பாதத்தை

கதி இல்லாமல் ஏற்படுத்துவதும் தத் என்கிற பதத்தினுல் அதிஷ்டானத்தை த்தவிர்த்து வேறு ஒரு தர்மம் உணர்த்தப்படாததால் பாதத்தின் அனுபபத்தியும். அதிஷ்டானமோ வென்றல் ப்ராந்தி மறைக்கப்பட்டிருந்தது. மறைக்கப்பட்டிராத ஸ்வரூபமானது தத் என்கிற பதத்தால் உணர்த்தப்படுகிறதென்று சொல்லப்படுமேயானுல் அல்ல. ப்ராந்தி அதிஷ்டானத்தின் ப்ரகாசமில்லாவிடில் அதை ஆதாரமாகக் கொண்டுவரும் ப்ரமம் பாதம் இவ்விரண்டுக்கும் ஸம்பவமில்லாமையால். ப்ரமத்துக்கு ஆச்ரயமான அதிஷ்டானமானது மறைக்கப்பட்டிராமலிருந்ததென்று சொல்லப்படுமேயானுல் அதே அதிஷ்டான ஸ்வரூபம் ப்ரமத்திற்கு விரோதியாக இருப்பதுபற்றி அது ப்ரகாசிக்கும் தருணத்தில் அந்த அதிஷ்டானத்தை ஆச்ரயித்துப்ரமம் பாதம் இவ்விரண்டும் ஒருக்காலும் உண்டாகாது. ஆதலால் அதிஷ்டானத்தைவிட வேறான பாரமார்த்திக தர்மம் அதன் மறைதல் இவைகளை ஒப்புக்கொள்ளாவிட்டால் ப்ராந்தி பாதம் இவ்விரண்டும் எவ்விதத்தாலும் உபபாதிக்கமுடியாதவைகள். அதிஷ்டானமாக ஒரு புருஷவடிவமாத்திரமறியப்படாநின்றிருக்க அதைவிட அதிகமாயுள்ளதும் பாரமார்த்திகமாக இருப்பதுமானராஜத்வமானது மறைபட்டிருக்கையிலன்றோ இவன் வேடன் என்கிற ப்ரமம் வருகிறது. இவன் அரசன் என்கிற ஆப்தோபதேசத்தாலும் அந்த ப்ரம நிவ்ருத்தி உண்டாகிறது. அதிஷ்டான மாத்திரத்தின் உபதேசத்தால் ப்ரம நிவ்ருத்தி உண்டாகிறதில்லை. அது ப்ரகாசித்துக் கொண்டிருப்பதால் உபதேசிக்கத்தகாததாக இருப்பதாலும் ப்ரமத்தை நாசம் செய்யக்கூடிய தன்மையுள்ளதாக இல்லாததாலும். ஜீவனை சரீரமாகக் கொண்ட ப்ரமத்தையும் ஜகத்துக்கு காரணமாக இருக்கிற ப்ரஹ்மத்தையும் முக்கியவ்ருத்தியினுல் முறையே இரண்டு பதங்களும் உணர்த்துகின்றன. இரண்டு ப்ரகாரங்களுடன் கூடிய ஒரு வஸ்துவை ப்ரதிபாதிப்பதால் ஸாமாநாதிகரண்யமும் ஸித்தித்தது. எல்லா தோஷங்களாலும் விடுபட்டதும் எல்லா கல்யாணகுணங்களாலும் நிறைந்ததுமான ப்ரஹ்மத்திற்கு ஜீவாந்தர்யாமியாக இருத்தலென்கிற வேறு ஒரு ஐச்வர்யமும் உபக்ரமத்திற்கு ஆனுகூல்யமும் ப்ரதிபாதிக்கப்பட்டதாக ஆகிறது. ஏக விஜ்ஞாநத்தால் ஸர்வவிஜ்ஞான ப்ரதிஜ்ஞையும் ஸூக்ஷ்மசிதசித் வஸ்துக்களை சரீரமாகக்கொண்ட ப்ரஹ்மமாகிற காரணமே ஸ்தூல சிதசித்வஸ்துக்களை சரீரமாகக்கொண்டு ஜகத்ரூபகார்யமாக இருப்பதால் உபபன்னமாகிறது.

ச்ருதப்ரகாசிகை—

சொல்லப்பட்டிருக்கிற த்ருஷ்டாந்தத்தாலும் உபலக்ஷிக்கத்தக்க ஸாமாநாதிகரண்யத்தாலும் தூஷணமிதில் அதிகமென்று சொல்லுகிருர்— இயாம்ஸ்து விசேஷ; என்று. பாதார்த்த விஷயத்தில் முற்கூறப்பட்டுள்ள தூஷணஹாநி விசேஷமல்ல

பின்னை அவைகளோடு கூட சொல்லப்படப்போகிற அதிகமான இரண்டு தூஷணங்கள் வந்துவிழுவதே விசேஷமென்று பொருள். அதிக தூஷணத்தைச் சொல்லுகிறார்— நேதம் ரஜதமிதி வதப்ரதிபன்னஸ்யைவ பாதஸ்யாகத்யா பரிகல்பநம் என்று. சிப்பியே வெள்ளி என்கிற இடத்தில் வேறு ப்ரமாணத்தால் இது வெள்ளியல்லவென்று பாதமறியப்படுவதால் பாதம் கல்பிக்கப்படுகிறது. இந்த இடத்தில் பாதம் அறியப்பட்டிராதிருந்த போதிலுங்கூட வெறு வழி இல்லாமையால் பாதம் கல்பிக்கப்படுகிறதென்று அர்த்தம். தத்பதேநாதிஷ்டாநாதிரேகிதர்மாநுபஸ்தாபநேந பாதாநுபபத்திஸ்ச என்று. சிப்பியே வெள்ளி என்கிற இடத்தில் சுக்தித்வ ரூபமான விருத்த தர்மத்தை சப்தமே உபஸ்தாபிக்கிறது. ஆதலால் அங்கே பாதம் கல்பிக்கப்படுகிறது. இவ்விடத்திலோ வென்றால் அதிஷ்டான மாத்திரத்தை லக்ஷணையினால் உணர்த்துகிற தத் என்கிற பதத்தினால் சுக்தித்வம் போல் விருத்த தர்மத்தில் உபஸ்தாபனமில்லாததால் பாதத்தை கல்பிப்பது பொருந்தாதென்று அர்த்தம். விரோதத்தை பரிஹரிப்பதற்காக லக்ஷணை என்று சொல்லப்படுமேயானால் இரண்டு பதங்களுக்குள் ஒரு பதத்தின் லக்ஷணையே விரோத பரிஹாரத்தின் பொருட்டுப் போதுமானது. அப்பொழுது விசேஷங்களோடு கூடி இருத்தலென்பது ப்ரஸங்கிக்குமென்பதும் அர்த்தத்தால்ஸித்தம். வேறு ப்ரமாணத்தால் பாதம் அறியப்பட்டிருப்பதாலும் சப்தத்தால் விருத்ததர்மங்களின் உபஸ்தாபநத்தாலும் பாதம் கல்பிக்கப்படுகிறது. இந்த இடத்திலோவென்றால் இரண்டுமில்லாமையால் அது பொருந்தாதென்று உரைக்கப்பட்டது.

அந்த இடத்தில் விருத்தங்களான ஆகாரங்களின் உபஸ்தாபநத்தை சங்கிக்கிறார்-- அதிஷ்டாநந்து என்று. அந்த அதிஷ்டாநமானது மறைக்கப்பட்டிராத ஸ்வரூபத்துடன் கூடியதாக எப்படி ஆகுமோ அப்படி உபஸ்தாபிக்கப்படுகிறதென்பது க்ரியா விசேஷணம். ப்ரகாசிக்கப்பட்டிராத விரோதியின் ப்ரகாசமல்லவோ பாதகல்பனம். தர்மங்களை உபஸ்தாபிப்பதே பாதகல்பனமென்கிற நியமமில்லையன்றோ. ஆதலால் தத் பதத்தால் முந்தி ப்ரகாசிக்கப்பட்டிராத விரோதியான அதிஷ்டாநத்தின் ஸ்வரூபத்தின் ப்ரகாசநத்தினால் பாதகல்பனமென்று அர்த்தம்.. இந்த இடத்தில் கூறுகிறார்—நஎன்று. விரோதி ரூபமான அதிஷ்டாநம் ப்ரகாசிக்கிறதா? அல்லது இல்லையா? என்று விகல்பித்து ப்ரகாசிக்கிறதில்லை என்கிற பக்ஷத்தில் தூஷணத்தைக்கூறுகிறார்—அதிஷ்டாந என்று. ததாச்ரய என்கிற பதத்திலிருக்கிற ஆச்ரய சப்தம் விஷயத்தைக்குறிக்கிறது. அல்லது அதை அதிஷ்டாநமாகக்கொண்ட ப்ரமம் பாதம் இவ்விரண்டுகளுக்கும் என்று அர்த்தம். ப்ரகாசபக்ஷத்தை சங்கிக்கிறார்—ப்ரம என்று. ப்ரமாச்ரயம் அதிஷ்டானம் என்கிற இடத்தில் பாடம் நன்கு பராமர்சிக்கத்தக்கது. ஆச்ரயசப்தமானது விஷயத்தை உணர்த்துகிறது. ப்ரமாச்ரயம் என்கிற இடத்தில் ப்ரமத்துக்கு ஆச்ரயணம் விஷயீகாரணம் அத்ர என்று வையதிகரண்யத்தாலாவது-ப்ரமமானது ஆச்ரயிக்கத்தக்கது அதாவது ஸம்பந்திக்கத்தக்கது எதனால் என்று ஸாமாநாதிகரண்யத்தாலாவது கஷ்டப்பட்டு பகுவ்ரீஹி ஸமாஸமும் நிர்வஹிப்பதற்கு சக்யம், ஆரோபிக்கத்தக்க ஆகாரத்திற்கு எது அதிகரணமோ அது அதிஷ்டானம் என்றாவது பொருள். ப்ரமாச்ரயத்வத்திற்காக அதிரோஹிதமென்று சொல்லப்படுமேயானால் என்று அர்த்தம். தூஷிக்கிறார்— ததேவ என்று. இந்த அதிஷ்டானம் விரோதிரூபமா ? அல்லது அவிரோதியா ? என்கிற விகல்பாபிப்ராயத்தால் விரோதி என்கிறபக்ஷத்தில் தூஷணம் கூறப்பட்டது. அவிரோதித்வ பக்ஷத்தில் பாதகல்பநத்தின் அநுபபத்தி ப்ரமத்தினது ஸத்தை

என்கிற தூஷணம் ஸ்பஷ்டமென்பதனால் அது சொல்லப்படவில்லை. அத: என்று பாரமார்த்திக சப்தத்திற்கு இது அபிப்ராயம். ப்ரமவிரோதியான ஆகாரம் அபாரமார்த்திகமாக இருக்குமேயாகில் அக்யஸ்தரூபமே ஸத்யமாக ஆகவேண்டியதாகும். எப்படி சுக்தித்வம் அபரமார்த்தமாக இருக்கையில் ரஜதத்வம் ஸத்யமாக ஆகிறதோவென்று. விரோதியான ஆகாரம் அபரமார்த்தமாக இருந்தபோதிலும்கூட ப்ரம நிவ்ருத்தி பொருத்தமுள்ளதாக ஆகிறது. எப்படி பலாசவ்ருக்ஷத்தின் புஷ்பத்தில் காட்டுத்தீ என்கிற ப்ரமமுள்ளதும் புஷ்பத்தின் காம்பினிடத்திலுண்டான வண்டு என்கிற ப்ரமத்தால்பலாசபுஷ்பத்தைத் தழுவுகின்றதுமான வண்டுக்கு பலாசபுஷ்ப விஷயமான காட்டுத்தீ ப்ரமமும் புஷ்பத்தின் காப்புவிஷயமாக உண்டான வண்டு என்கிறப்ரமமும் விலகுகிறதோ இவ்வண்ணமே கூறுகிறார்கள். யாதொருகாரணத்தால் பெண்வண்டானது காம்பிலுண்டான ஆண் வண்டு என்கிற ப்ரமத்தால் காட்டுத்தீ என்கிற ப்ரமத்தை இழந்து பலாசபுஷ்பத்தைக் கட்டிக்கொள்ளுகிறதோ வென்று என்கிற யாதொரு சோத்யமுண்டோ அது யுக்தமல்ல. அவ்விடத்திலும் பரமார்த்தமாயுள்ள விரோதியான ஆகாரத்தினாலேயே ப்ரமவிஷய நிவ்ருத்தி ஏற்படுவதால். காட்டுத்தீயாக இருத்தலென்கிற தன்மைக்கு விரோதியாக இருக்கிற பலாசபுஷ்பத்வாகாரம் பரமார்த்தம். ப்ரமரத்வவிரோதியான * வ்ருந்தத்வாகாரமும் பரமார்த்தம். பரமார்த்தமல்லவென்று சொல்லும் பக்ஷத்தில், அபரமார்த்தமான சுக்தித்வத்தில் ரஜத்வம்போல § தாவத்வமும் Ψ ப்ரமரத்வமும் ஸத்யமாக ஆகவேண்டியதாகும். புஷ்பத்தினது காம்பிலுண்டான ப்ரமர ப்ரமத்தால் காட்டுத்தீ என்கிற ப்ரமம் நிவ்ருத்திக்கிறதென்று சொல்லப்படுமேயானால் அதனாலென்ன. ப்ரமரத்திற்கு காட்டுத்தீ என்கிற புத்தியின் நிவ்ருத்தியானது ஸத்யத்வ ப்ரதிபத்தியினாலுண்டுபண்ணப்பட்டிருக்கிறது. ஆதலால் அஸத்யத்தில் ஸத்யத்வ விஷயமான வேறு ப்ரமமிருக்கிறது; அதன் நிவ்ருத்தியும் வேறு அஸத்ய விஷயமான ஸத்யத்வ ப்ரமத்தாலென்று ப்ரம பரம்பரையினால் மிச்சமின்றி அவித்யா நிவ்ருத்தியானது பொருந்துகிறதில்லை. மேலும் தாவத்வ விஷயமான புத்திநீங்கினபோதிலும் தாவத்வ நிவ்ருத்தியானது ப்ரமர ப்ரமத்தாலுண்டாகிறதல்ல. பின்னை யதார்த்தமான புஷ்பத்வாகாரத்தாலேயே. அப்படி இல்லாவிட்டால் பரமார்த்தமான வெள்ளியில் அப்ரமார்த்தமான சிப்பி என்கிற புத்தியினால் வெள்ளி என்கிற புத்தியின் நிவ்ருத்திவருதால் வெள்ளிக்கும் சிப்பித்தன்மை ப்ரஸங்கிப்பதால். வேறு ஒரு ப்ரமத்தால் வேறு ஒரு ப்ரமம்நிவ்ருத்திக்கிறதென்று சொல்லும்பக்ஷத்தில் அநவஸ்தையும் உண்டாகும். கயிற்றிலுண்டாகிற ஸர்ப்பம் பூமியின் பிளவு ஜலதாரை என்கிற பரம்பரைக்குப்போலப்ரமத்தை நீக்குகிற வேறு ப்ரமத்துக்கும் நிவர்த்தகமான மற்றொரு ப்ரமாபேக்ஷை இருப்பதால்.

மேலும் வண்டு என்கிற ப்ரமம்போனவுடன் நிவர்த்தகமான அபாரமாரத்யஜ்ஞானத்தினால் வருகிற காட்டுத்தீ என்கிற ப்ரமமானது யதார்த்தமான பலாசபுஷ்பஜ்ஞானத்தாலேயே நீங்குகிறது. ஆகையால் மிச்சமில்லாமல் அவித்தையின் நிவ்ருத்திதான் மோக்ஷமென்று சொல்பவர்களால் ப்ரமங்களின் வருசைமுடிவு பெறுவதற்காக கடாசிவரையில் சென்றும் யதார்த்தாகாரம் ஒப்புக்கொள்ளத்தக்கது- ரஜ்ஜுத்வம்போல. கடாசியில் வந்த ப்ரமம்தானே நிலைபெற்றிராதென்று கூறப்படுமேயானால் அல்ல,

* வ்ருந்தம்—புஷ்பத்தின் காம்பு. § தாவம்—காட்டுத்தீ. Ψ ப்ரமம்—வண்டு

தானே தன்னுடைய பாதத்திற்குகர்மாவென்று சொல்லும் பக்ஷத்தில் $ கர்மகர்த்ரு விரோதம் ப்ரஸங்கிப்பதால். மேலும் பாதகம் ஸத்யமாக இருப்பதால் பாதிக்கத்தக்கது மித்யையாக இருப்பதால் ஒன்றுக்கே நிவ்ருத்திக்கப்படத்தக்க தன்மை நிவ்ருத்தியைச் செய்கிற தன்மை இவ்விரண்டையும்ஒப்புக்கொள்வதில் அதற்கேமித்யாத்வமும் அதற்கே ஸத்யத்வமும் என்பதனுல் விரோதமுண்டாகும். மேலும் ப்ரபஞ்சமுங்கூட பாதகத்தை எதிர்பாராமல் தானே தன்னை நிவர்த்திக்கும்படி செய்துகொள்ளலாம். நிர்ஹேதுகமாக தானுகவே நாசம் ஸம்பவிக்கும் பக்ஷத்தில், விநாசமென்பதுவேறு அவஸ்தா ரூபமாதலால் அவித்யையானது ஸூக்ஷ்மரூபத்தோடு நிலைபெற்றதாக ஆகும். நாசத்துக்குக்காரணமான வேறு ஒரு அவித்யையும் இருக்கலாம். பரமார்த்தங்களான தர்மங்கள் அவைகளின் † திரோதானம் இவைகளில்லாவிடில் ‡ ப்ரமம் பாதம் இவ்விரண்டின் அஸம்பவத்தை த்ருஷ்டாந்தத்தால் உபபாதிக்கிருர்— அதிஷ்டானே ஹி என்று. இந்த இடத்தில் ராஜகுமாரஸமாதி பகவானுன பாஷ்யகாரருக்கு. இவ்வண்ணம் பதார்த்தத்வம் தூஷிக்கப்பட்டது. அதற்குமேல் தன்பக்ஷத்தில் இந்த தூஷணங்கள் இல்லை என்கிருர்—ஜீவசரீரக என்று. முக்கியவ்ருத்தமென்பதனுல் லக்ஷணையின் ஹானியானது கூறப்பட்டது. §ப்ரகாரத்வய என்று. இதனுல் * ஸாமாநாதிகரண்யம் ஸித்தித்தது நிரஸ்தநிகிலதோஷஸ்ய இதுமுதலியதால் தத் என்கிற பதத்தால் சொல்லப்பட்ட குணங்களுக்கு விரோதமின்மை காட்டப்பட்டது. ¶ உபக்ரமாநுகூலதாச என்று. ஸதேவஸோம்யேதம்-தைக்ஷத என்கிற தொடக்கத்திற்கு விரோதமின்மை உரைக்கப்பட்டது. ஏகவிஜ்ஞாநத்தால் ஸர்வவிஜ்ஞாந ப்ரதிஜ்ஞைக்கு பொருத்தமானது எவ்வாறென்று கேட்கில் கூறுகிருர்—ஸூக்ஷ்ம என்று. சிதசித்துக்களுடன் சேர்ந்த ப்ரஹ்மம் காரணம், தனித்த ப்ரஹ்மம் மாத்திரம் காரணமல்ல, அந்த விசிஷ்டப்ரஹ்மமே கார்யமென்பதனுல் ஸர்வவிஜ்ஞாந ப்ரதிஜ்ஞைக்கு உபபத்தி என்று அர்த்தம்.

“𑌤𑌮𑍀𑌶𑍍𑌵𑌰𑌾𑌣𑌾𑌂 𑌪𑌰𑌮𑌂 𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌮𑍍” “𑌪𑌰𑌾𑌽𑌸𑍍𑌯 𑌶𑌕𑍍𑌤𑌿𑌰𑍍𑌵𑌿𑌵𑌿𑌧𑍈𑌵 𑌶𑍍𑌰𑍂𑌯𑌤𑍇” ‘𑌸𑍍𑌵𑌾𑌭𑌾𑌵𑌿𑌕𑍀.....𑌸𑌤𑍍𑌯𑌕𑌾𑌮𑌃 𑌸𑌤𑍍𑌯𑌸𑌙𑍍𑌕𑌲𑍍𑌪𑌃’ 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌯𑌨𑍁𑌰𑍋𑌧𑌾𑌚𑍍𑌚 ॥

“𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑌸𑌿 𑌇𑌤𑍍𑌯𑌤𑍍𑌰𑍈𑌕𑍍𑌯𑌪𑌰𑌾𑌮𑌰𑍍𑌶𑌵𑌿𑌰𑍋𑌧𑌃 𑌕𑌥𑌮𑌿𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍; 𑌨𑌾𑌤𑍍𑌰 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌦𑌪𑍂𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌵𑌿𑌧𑍀𑌯𑌤𑍇; “𑌐𑌤𑌦𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌮𑌿𑌦𑌂 𑌸𑌰𑍍𑌵𑌮𑍍” 𑌇𑌤𑍍𑌯𑌨𑍇𑌨𑍈𑌵 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 । 𑌸𑌰𑍍𑌵𑌾𑌤𑍍𑌮 𑌹𑌿 𑌪𑍍𑌰𑌶𑌾𑌸𑍍𑌤𑍃𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 । 𑌇𑌦𑌂 𑌸𑌰𑍍𑌵𑌮𑌿𑌤𑌿 𑌸𑌜𑍀𑌵𑌂 𑌜𑌗𑌨𑍍𑌨𑌿𑌰𑍍𑌦𑌿𑌶𑍍𑌯 𑌐𑌤𑌦𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌮𑌿𑌤𑌿 𑌤𑌸𑍍𑌯𑍈𑌵 𑌶𑍍𑌰𑍁𑌤𑍇𑌤𑌿 𑌤𑌤𑍍𑌰 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑌿𑌤𑌮𑍍 । 𑌤𑌤𑍍𑌰 𑌚 𑌹𑍇𑌤𑌵𑌃—

$ கர்ம—கர்த்தாவினிடத்திலிருக்கிற வ்யாபாரத்தால் உண்டாகிற பலத்துக்குஆச்ரயமானது. † கர்த்தா—வியாபாரத்திற்கு ஆச்ரயமாக இருப்பவன்.

† திரோதனம்—மறைதல். ‡ ப்ரமம்—ஒரு தர்மியில் அறிவில்லாத வேறு தர்மத்தை அவகாஹிக்கிற ஜ்ஞாநம். § ப்ரகாரம்—விசேஷணம். * ஸாமாநாதிகரண்யம்—இரண்டு பதங்களை ஒரே விபக்தியில் ப்ரயோகித்தல். ¶ உபக்ரமம்—தொடக்கம்.

𑌸𑌨𑍍𑌮𑍂𑌲𑌾𑌃 𑌸𑍋𑌮𑍍𑌯𑍇𑌮𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑌾𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌃 𑌸𑌦𑌾𑌯𑌤𑌨𑌾𑌃 𑌸𑌤𑍍𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌃" 𑌇𑌤𑌿; 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌖𑌲𑍍𑌵𑌿𑌦𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌤𑌜𑍍𑌜𑌲𑌾𑌨𑌿𑌤𑌿 𑌶𑌾𑌨𑍍𑌤𑌃 " 𑌇𑌤𑌿 𑌚 ॥

𑌤𑌥𑌾 𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑌾𑌣𑌿 𑌚 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌸𑍍𑌤𑌦𑍍𑌵𑍍𑌯𑌤𑌿𑌰𑌿𑌕𑍍𑌤𑌸𑍍𑌯 𑌚𑌿𑌦𑌚𑌿𑌦𑍍𑌵𑌸𑍍𑌤𑍁𑌨𑌃 𑌶𑌰𑍀𑌰𑌾𑌤𑍍𑌮𑌭𑌾𑌵𑍇𑌨 𑌤𑌾𑌦𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌂 𑌵𑌦𑌨𑍍𑌤𑌿— "𑌅𑌨𑍍𑌤𑌃 𑌪𑍍𑌰𑌵𑌿𑌷𑍍𑌟𑌃 𑌶𑌾𑌸𑍍𑌤𑌾 𑌜𑌨𑌾𑌨𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌾" 𑌯𑌃 𑌪𑍃𑌥𑌿𑌵𑍍𑌯𑌾𑌂 𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍 𑌪𑍃𑌥𑌿𑌵𑍍𑌯𑌾 𑌅𑌨𑍍𑌤𑌰𑌃 𑌯𑌂 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀 𑌨 𑌵𑍇𑌦 𑌯𑌸𑍍𑌯 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀 𑌶𑌰𑍀𑌰𑌂 𑌯𑌃 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀𑌮𑌨𑍍𑌤𑌰𑍋 𑌯𑌮𑌯𑌤𑌿 𑌸 𑌤 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑍍𑌤𑌰𑍍𑌯𑌾𑌮𑍍𑌯𑌮𑍃𑌤𑌃" "𑌯 𑌆𑌤𑍍𑌮𑌨𑌿 𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍𑌨𑌾𑌤𑍍𑌮𑌨𑍋𑌽𑌨𑍍𑌤𑌰𑍋 𑌯𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌨 𑌵𑍇𑌦 𑌯𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌾 𑌶𑌰𑍀𑌰𑌂 𑌯 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑌨𑍍𑌤𑌰𑍋 𑌯𑌮𑌯𑌤𑌿 𑌸 𑌤 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑍍𑌤𑌰𑍍𑌯𑌾𑌮𑍍𑌯𑌮𑍃𑌤𑌃" "𑌯𑌃 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀𑌮𑌨𑍍𑌤𑌰𑍇 𑌸𑌂𑌚𑌰𑌨𑍍" 𑌇𑌤𑍍𑌯𑌾𑌰𑌭𑍍𑌯 "𑌯𑌸𑍍𑌯 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌃 𑌶𑌰𑍀𑌰𑌮𑍍 । 𑌯𑌂 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌰𑍍𑌨 𑌵𑍇𑌦 । 𑌏𑌷 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌤𑍍𑌮𑌾𑌽𑌪𑌹𑌤𑌪𑌾𑌪𑍍𑌮𑌾 𑌦𑌿𑌵𑍍𑌯𑍋 𑌦𑍇𑌵 𑌏𑌕𑍋 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌃" "𑌤𑌤𑍍𑌸𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 । 𑌤𑌦𑍇𑌵𑌾𑌨𑍁𑌪𑍍𑌰𑌾𑌵𑌿𑌶𑌤𑍍 । 𑌤𑌦𑌨𑍁𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑍍𑌯 । 𑌸𑌚𑍍𑌚 𑌤𑍍𑌯𑌚𑍍𑌚𑌾𑌭𑌵𑌤𑍍" 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑍀𑌨𑌿 ॥

ஸ்ரீபாஷ்யம்—

தமீச்வராணாம் பரமம் மஹேச்வரம்-ஜகந்நியந்தாக்களான ப்ரஹ்மருத்ராதிகளுக்குங்கூட மஹேச்வரனாக இருப்பவனும் தனக்கு மேற்பட்டவனில்லாதவனுமான அந்த பரமபுருஷனை பராஸ்ய சக்திர்விவிதைவச்ரூயதே-அந்த பரமபுருஷனுக்கு பற்பலவிதமாகவே இருக்கிற, சிறந்த சக்தியானது ச்ருதியினாலறியப்படுகிறது. அபஹதபாப்மா - கர்மஸம்பந்தமில்லாதவன். ஸத்யகாம: ஸத்ய ஸங்கல்ப:, ஸத்யமான காமனையுடன் கூடியவன். ஸங்கல்பித்தவண்ணம் கார்யங்களை முடிவுபெறச் செய்ய வல்லமைபொருந்தியவன். இது முதலிய ச்ருதிவசனங்களுக்கு விரோதமில்லை. 'தத்த்வமஸி' என்கிற இடத்தில் உத்தேச்யம் விதேயம், இவைகளின் பாகுபாடு எவ்வாறு என்று கேழ்க்கப்படுமேயானால் இந்த இடத்தில் ஒன்றைக்குறித்து ஒன்றும் விதிககப்படுகிறதில்லை. ஐததாத்ம்ய மிதம் ஸர்வம் ப்ரத்யக்ஷமாகக் காணப்படுகிற சேதநாசேதநங்களோடு கூடி இருக்கிற இந்த உலகமனைத்தும் ப்ரஹ்மாத்மகம் என்கிற ச்ருதியினாலேயே ப்ராப்தமாக இருப்பதால், சாஸ்திரமானது அப்ராப்தமான விஷயத்திலல்லவோ ப்ரயோஜனமுள்ளது. இதம் ஸர்வம் என்று சேதநா சேதநங்களுடன்கூடின உலகத்தை நிர்தேசித்து 'ஐததாத்ம்யம்' என்று அந்த ஜகத்திற்கே இந்த ப்ரஹ்மம் ஆத்மாவென்று அங்கு ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கிறது. அதில் ஹேதுவும் கூறப்பட்டி-

ருக்கிறது. "ஸந்மூலாஸ்ஸோம்யேமாஸ்ஸர்வா: ப்ரஜாஸ்ஸதாயத நாஸ்ஸத் ப்ரதிஷ்டா:" ஹே ஸோமபாநத்திற்குத் தகுதியுற்றவனே! இந்த சேதநாசேதநங்களனைத்தும் ஸத் என்கிற சப்தத்தால் சொல்லப்படுகிற ப்ரஹ்மத்தை மூலமாகக்கொண்டவைகள். அதாவது அந்த ப்ரஹ்மத்தினிடமிருந்து உண்டானவைகள். அந்த ப்ரஹ்மத்தால் ரக்ஷிக்கப்படுகின்றன. அந்த ப்ரஹ்மத்தினிடம் ப்ரளய ஸமயத்தில் லயமடைகின்றன. 'ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம, தஜ்ஜலாநிதிசாந்த உபாஸீத' எல்லாம் அந்த ப்ரஹ்மத்தினிடத்தினின்று உண்டாகின்றன; அந்த ப்ரஹ்மத்தினிடம் லயமடைகின்றன, அந்த ப்ரஹ்மத்தால் பாதுகாக்கப்படுகின்றன, என்பதனால் ப்ரத்யக்ஷமாகக் காணப்படும் இந்த சேதநாசேதநாத்மகமான, ப்ரபஞ்சமனைத்தும் ப்ரஹ்மாத்மகமென்றல்லவோ அறிந்து சாந்தியுடையவனாக அந்த ப்ரஹ்மத்தை உபாஸிக்கக்கடவான். என்பதுபோல. அப்படியே 'அந்த:ப்ரவிஷ்டஶ்ஶாஸ்தா ஜநாநாம் ஸர்வாத்மா' எல்லா வஸ்துக்களுக்கும் ஆத்மாவாக இருக்கிற பரமபுருஷன் ப்ராணிகளுடைய ஹ்ருதய குகையில் ப்ரவேசித்து நியமனம் செய்கிறான். 'ய:ப்ருதிவ்யாம் திஷ்டந், ப்ருதிவ்யா அந்தர:, யம்ப்ருதிவீ நவேத, யஸ்ய ப்ருதிவீ சரீரம், ய: ப்ருதிவீமந்தரோ யமயதி, ஸத ஆத்மாந்தர்யாம்ய்யம்ருத:" எவன் ப்ருதிவியிலிருக்கிறானோ, ப்ருதிவிக்குள் ப்ரவேசித்திருக்கிறானோ, எவனை ப்ருதிவீ அறிகிறதில்லையோ, எவனுக்குப்ருதிவீ சரீரமோ, எவன் ப்ருதிவிக்குள் ப்ரவேசித்து நியமனம் பண்ணுகிறானோ, அவன் உனக்கு ஆத்மா. உனக்குள் புகுந்து உன் இந்திரியங்களை நியமனம் செய்கிறான் மோக்ஷத்தை அளிப்பவன் அல்லது அழிவற்றவன். 'ய ஆத்மநி திஷ்டந், ஆத்மனோந்தரோ யமாத்மா ந வேத, யஸ்யாத்மா சரீரம், ய ஆத்மாநமந்தரோ யமயதி, ஸத ஆத்மாந்தர்யாம்ருத:' எவன் ஆத்மாவினிடமிருக்கிறானோ ஆத்மாவின் உள்ளே ப்ரவேசித்திருக்கிறானோ எவனை ஆத்மா அறிகிறதில்லையோ எவனுக்கு ஆத்மா சரீரமோ எவன் ஆத்மாவுக்கு உள்ளே இருந்துகொண்டு நியமனம் செய்கிறானோ; அவன் உனக்கு ஆத்மா. அந்தரிந்திரியத்தையும் பஹிரிந்திரியங்களையும் நியமனம் பண்ணுகிறவன். மோக்ஷத்தை அளிப்பவன் அல்லது அழிவற்றவன். 'ய: ப்ருதிவீமந்தரே ஸஞ்சரந்' என்று தொடங்கி' யஸ்யம்ருத்புச்சரீரம் — யம் ம்ருத்புர் ந வேத. ஏஷ ஸர்வபூதாந்தராத்மா அபஹதபாப்மா திவ்யோ தேவ ஏகோ நாராயண:, தத் ஸ்ருஷ்ட்வா, ததேவாநு ப்ராவிசத், தததநுப்ரவிச்ய, ஸச்சத்யச்சாபவத்' எவன் ப்ருதிவிக்குள் ஸஞ்சரியா நின்றவனாக இருந்துகொண்டு. எவனுக்கு தமஸ்சப்தவாச்யமான ப்ரக்ருதி சரீரமோ, எவனைப்ரக்ருதி அறியாதோ. இவன் ஸர்வபூதங்களுக்கும் அந்தராத்மா, கர்ம ஸம்பந்தமற்றவன் அத்புத ஸ்வபாவமுள்ளவன். ஸ்ருஷ்டி முதலிய கார்யங்களால் க்ரீடிப்பவன், நிகரற்றவன். ப்ரளயஸமயத்தில் சிதசித்வஸ்துக்கள் எல்லாவற்றாலும் அடையத்தக்கவன். அதைப்படைத்து அதையே அநுப்ரவேசித்தான். அதற்குள்

ப்ரவேசித்து சித்துக்களாகவும் அசித்துக்களாகவுமானுன்-என்கிற இது முதலிய வேறு ச்ருதிகளும் ப்ரஹ்மத்திற்கும் அதைத்தவிர்த்த சிதசித் வஸ்துக்களுக்கும் சரீராத்மபாவத்தையே தாதாத்ம்ய மென்று கூறுகின்றன

ச்ருதப்ரகாசிகை—

வேறுச்ருதிகளின் விரோதத்தைக் கூறுகிருர்—தமீச்வராணும் என்று. வாக்கியமானது உத்தேச்யோபாதேய விபாகமுள்ளதாக இருக்குமேயாகில் உத்தேச்யம் அறியப்பட்டதன்ருே. உபாதேயம் அதாவது விதேயமானது அறியப்படவில்லை. இந்த வாக்கியத்தில் தத் என்கிற பதமானது உத்தேச்யத்தைக் குறிக்கவந்ததல்ல, ஸர்வஜ்ஞத்வம் முதலிய குணங்களோடு கூடி இருத்தலென்கிற தன்மையானது ப்ரத்யக்ஷம முதலிய ப்ரமாணங்களுக்கு கோசரமல்லாததால் த்வம் என்கிற சப்தமானது அந்தர்யாமியை உணர்த்துகிறதென்று சொல்லும் பக்ஷத்தில் அதற்கு உத்தேச்ய ஸமர்பகத்வம் பொருந்தாது. அந்தர்யாமியாக இருப்பவன் ப்ரத்யக்ஷம் முதலியதற்கு, விஷயமல்லாததால். ஆகையால் த்வம் சப்தத்தால் ஜீவஸாமான்யத்தை உத்தேசித்து அதற்கு தத் என்கிற பதத்தால் ப்ரஹ்மபாவம் விதிக்கப்படுகிறதென்று ஒப்புக்கொள்ளத்தக்கது. அதில் விரோதத்தால் ஸமாநாதிகரண்யமானது விசேஷணகளொன்றுமில்லாத வஸ்துக்களின் ஐக்யத்தை உணர்த்துகிறதென்கிற அபிப்ராயத்தால் சோதனம் செய்கிருர்—‘ தத்த்வமஸீத்யத்ர உத்தேச்யோபாதேய விபாக:கதமிதி சேத் ” என்று. பரிஹரிக்கிருர்—நாத்ர என்று. வேறு ப்ரமாணங்களுக்கு கோசரமல்லாத அர்த்தத்திற்கு எவ்வாறு விதானமென்று கேள்வை வரின், ப்ரத்யக்ஷம் முதலிய ப்ரமாணங்களாலறியப்பட்டிருக்கிற அர்த்தத்தை விஷயமாகக் கொண்டிருக்கிற வாக்கியம் மாத்திரம் அனுவாதகமல்ல. பின்னேயோ வேறுவாக்கியங்களால் அறியப்பட்டிருக்கிற அர்த்தத்தை விஷயமாகவுடைய வாக்கியமும் அநுவாதக மென்கிற அபிப்ராயத்தால் வாக்கியாந்தர ப்ராப்தியைக் காண்பிக்கிருர்—ஐததாத்மயம் என்று. இதே ப்ரகரணத்தில் முதலிலறியப்பட்டிருக்கிற நாமரூப வ்யாகரண ச்ருதியிலேயே பரமாத்மாவுக்கு சரீரமாக இருக்கிற சிதசித் வாசக சப்தங்களுக்கு பரமாத்ம பர்யந்தமாக அர்த்தத்தை உணர்த்தும் தன்மை அறியப்பட்டிருக்கிறதென்று கருத்து. அதனுலென்ன வென்று கேழ்க்கப்பட்டால் சொல்லுகிருர்— அப்ராப் தேஹி என்று. அறியப்பட்டிராத அர்த்தத்தை விஷயமாகக்கொண்ட சாஸ்த்ரமானது தெரியாத விஷயத்தைத் தெறிவித்தலென்கிற ப்ரயோஜனமுள்ளதென்று பொருள். ஆதலால் அதே உத்தேச்யோபாதேய விபாகமுள்ளதே ஒழிய ப்ரக்ருதமான நிகமன வாக்கியமானது உத்தேச்யோ பாதேய விபாகமுள்ளதன்று. ஆகையால் இந்த நிகமந வாக்கியமானது நன்கு அறியப்பட்டிருக்கிற அர்த்தத்தை விஷயமாகக்கொண்டிருப்பதால் இதற்கு உத்தேச்யோபாதேய விபாகத்தோடு சேர்ந்திருத்தலில்லை என்று கருத்து.

ஐயா ! நிகமன வாக்கியத்திற்குங்கூட உத்தேச்யோபாதேயங்களின் பாகுபாட்டுடன்கூடி இருத்தல் அறியப்படுகிறது. எப்படி என்ருல். ஆதலால் சப்தம் அநித்யம். ஆதலால் ‘இது நெருப்புள்ளது’ என்று. இந்த இடத்தில் சப்தம் பர்வதம் இவைகளை உத்தேசித்து அநித்யத்வம் அக்னிமத்த்வம் முதலியது விதிக்கப்படுகிறது. இது

யுக்தமல்ல- ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கிற அர்த்தத்தை விஷயமாகக்கொண்டிருக்கிற நிகமன வாக்கியத்திற்கு அறியப்பட்டிராத அர்த்தத்தை விஷயமாகக் கொண்டிருத்தல் சொல்லப்பட்டால் வ்யாகாத தோஷம் வருகிறது. ப்ரீதியோ வென்றால், விதாயக வாக்கியத்திலிருக்கிற உத்தேச்ய விதேய ஸமர்பக பதங்களின் ப்ரத்யபிஜ்ஞானத்தினுலும் நிர்தேசவாக்கியத்தில் முன் பின்னுக இருக்கிற பதங்களின் ஸாரூப்யத்தாலும் உத்தேச்யவிதேய ப்ராந்தியே. "யத் வ்ருத்தயோக:ப்ராதம்ய மித்யாத்யுத்தேச்யலக்ஷணம்" என்று நீதியை அறிந்தவர்கள். அய்யா! எல்லா இடங்களிலும் உத்தேச்யத்திற்கு அநுகுணமாகவல்லவோ *திங் விபக்தி இருக்கிறது. அதனுலே யன்றோ யுஷ்மத் அஸ்மத் என்கிற இரண்டு சப்தங்களும் வேறு பதங்களோடாவது ஒன்றோடொன்றுவது ஸமாநாதிகரணங்களாக ப்ரயோகிக்கப்படும் தருணத்தில் உத்தேச்யத்திற்கு அநுகுணமாக மத்யமபுருஷத்தினுடையவும் உத்தம புருஷத்தினுடையவும் வ்யவஸ்தை காணப்படுகிறது. "த்வம் பூதாநாமதிபதிரஸி, அஹமஸ்மி ப்ரதம ஜாருதஸ்ய". அவ்வாறே"யதக்நே ஸ்யாமஹம் த்வம், த்வம் வாஸ்யா அஹம், ஸ்யுஷ்டே ஸத்யா இஹாசிஷ:" இது முதலியவைகளில். (இந்த ச்ருதி வாக்யங்களின பொருள் ஹே அக்னியே! நான்நீயாக ஆவேனேயாகில், உன்னைப்போல் தேவதையாக ஆவேனேயாகில், நீ நானுக ஆவாயேயாகில், என்னைப்போல் ப்ரார்த்தனையுள்ளனுக ஆவாயேயாகில் அப்பொழுது உன்னுடைய ப்ரார்த்தனைகள் யதார்த்தங்களாக ஆகும் என்று. ஆகையால் தத்த்வமஸி என்கிற இடத்திலும் மத்தியம புருஷப்ரயோகமிருப்பதால் த்வம் என்கிற பதத்திற்கு உத்தேச்ய ஸமர்பகத்வமும் தத் என்கிற பதத்திற்கு விதேய ஸமர்ப்பகத்வமும் விருப்பமில்லாதவனுல் கூட அங்கீகரிக்கத்தக்கது. இவ்வண்ணமல்ல—இரண்டு பதங்களாலறியப்பட்டிருக்கிற அர்த்தம் முன் வாக்கியத்தால் ப்ராப்தமாக இருப்பதால். அங்ஙனமாகில் மத்யம புருஷ நிர்தேசமானது எவ்வாறு பொருத்தமுள்ளதாக ஆகுமென்று கேட்கப்படுமேயானுல் மறுமொழி உரைக்கப்படுகிறது. தத் த்வம் என்கிற இரண்டு பதங்களும் ப்ரயோகிக்கப்பட்டிருப்பதாலும் உத்தேச்ய விதேய விபாகமில்லாமையாலும ப்ரதம புருஷம் மத்யம புருஷம் இரண்டும் விசேஷமின்றி வருவதாக இருக்க நிகமந வாக்கியத்திற்கு ப்ராபக வாக்கியத்தை அனுஸரிப்பது ந்யாய்யமாதலாலும் அதிலும் 'இதம ஸர்வம்' என்று நிர்தேசிக்கப்பட்டிருக்கிற ஜகத்திற்குள்ளடங்கின சித் விசேஷங்களோடுகூடின பரமாத்மாவைச் சொல்லுகிற த்வம் என்கிறபதத்திற்கு ப்ராபக வாக்கியத்திலிருக்கிற உத்தேச்ய வாசிபதத்தால் வாச்யமான அர்த்தத்தின் ஏகதேசம் விஷயமாக இருப்பதால், அதை அனுஸரித்து மத்யமபுருஷ நிர்தேசம். வாதத்தில் வல்லவரே! 'ஐததாத்ம்ய மிதம் ஸர்வம்'என்று அசேதநத்தில் ப்ரஹ்மத்தின் அநுப்ரவேசத்தைச் சொல்லி, "தத்த்வமஸி" என்று ஜீவன் ப்ரஹ்மம் இரண்டுக்கும் ஸ்வரூபைக்ய முரைக்கப்படுகிறதென்கிற சங்கைவரின் கூறுகிறார்— இதம் ஸர்வமிதி ஸ ஜீவம் ஜகந் நிர்திச்ய என்று. ஸர்வசப்தமானது அசேதநங்களை மாத்திரம உணர்த்துகிறதல்ல. ஸங்கோசம் செய்வதற்கு ப்ரமாணமில்லாமலிருப்பதுடன ஸ்வாரஸ்யத்திற்கு பங்கம் கூடாதாதலால். "ஸந்மூலாஸ்ஸோம்யேமாஸ் ஸர்வா: ப்ரஜாஸ்ஸதாயதநாஸ்ஸத் ப்ரதிஷ்டா:" என்கிற முன் வாக்கியத்தில், ஸர்வசப்தத்தால் ப்ரஜைகள் விசேஷிக்கப்பட்டிருப்பதாலும், ப்ரஜா சப்தமானது அசித்தோடு கலந்திருக்கிற சேதந விசேஷங்களைச் சொல்வதனுலும் 'இதம் ஸர்வமஸ்ருஜத'

* திங்—தாதுக்களின் மீது வரும் ப்ரத்யயம்.

இதுமுதலிய வேறுவாக்கியங்களில் விஜ்ஞாநாவிஜ்ஞாந சப்தங்களால் சொல்லத்தக்க சிதசிதாத்மகமான ஜகத்தை ஸர்வசப்தத்தால் நிர்தேசித்திருப்பதாலுமென்று கருத்து.

'ஐததாத்ம்யம்' என்கிற பதத்தை வ்யாக்யானம் பண்ணுகிறார்— தஸ்யைஷ ஆத்மா என்று. 'இதம் ஸர்வம்' என்கிற இரண்டு பதங்களும் உத்தேச்யத்தை உணர்த்துகின்றன- ஐததாத்ம்யம்—ஏததாத்மகத்வம் விதேயம். சிதசித் விசிஷ்ட ப்ரஹ்மம் காரணமாதலால் ப்ரக்ருதமாக இருந்தபோதிலுங்கூட ஏதத் சப்தமானது சித்துக்களையும் அசித்துக்களையும் காட்டிலும் விலக்ஷணமாக இருக்கிற விசேஷ்யாம்சத்தைச் சொல்லுகிறது. அர்த்தவசத்தால ப்ரஹ்மாத்மகத்வமானது ம்ருதாத்மகோ கட: என்கிற ப்ரயோகம்போல் ஸ்வரூபைக்யத்தால் உண்டுபண்ணப்பட்டதாக இருக்கலாமென்று சொல்லப்படுமேயானால் சொல்லுகிறார்—தத்ர ச ஹேதுருக்த: என்று. 'ஸதாயதநா:' என்பதனால் ஆதாராதேயபாவம் கூறப்பட்டது. இதனால் சரீரசரீரிபாவம் ஸித்தித்தது. சேதநனால் தன் ஸத்தையுள்ளவரையில் தரிக்கத்தக்க த்ரவ்யமன்றோ சரீரம். இந்த வாக்கியத்தில் ஹேதுத்வமானது ப்ரகாசமில்லாமலிருப்பதால் அதன் வைசத்யத்தின்பொருட்டு சொல்லுகிறார்—ஸர்வம் கலு என்று இந்த இடத்திலும் ப்ரமாணத்தினால் ஸதாயதநத்வம் பலித்தது. ஸந்மூலா: என்கிற பதத்தைத்தொடக்கத்தில் கொண்டிருக்கிற வாக்கியத்தோடு அர்த்தைக்யத்தால் அந்த இடத்தில் ஸந்மூலா: என்பதனால் அந்த ப்ரஹ்மத்தினிடத்தினின்று உத்பத்தி கூறப்பட்டது. ஸத்ப்ரதிஷ்டா: என்பதனால் அந்த ப்ரஹ்மத்தினிடம் லயம் கூறப்பட்டது. ஸதாயதநா: என்பதனால் அந்த ப்ரஹ்மத்தால் ரக்ஷணமும் சொல்லப்பட்டது. அதுவும் உள்ளே ப்ரவேசித்து ப்ரசாஸநத்தால், தாரகனாக இருப்பதால் ஸ்திதிஹேதுத்வம்— "அந்த:ப்ரவிஷ்டச்சாஸ்தா ஜநாநாம், ஏதஸ்ய வா அக்ஷரஸ்ய ப்ரசாஸநே கார்கி ஸர்வமிதம் வித்ருதம் திஷ்டதி" இதுமுதலியச்ருதிகளால் இவ்விதமாக நிச்சயிக்கப்பட்டுள்ள ப்ரஹ்மஸ்வரூபத்திற்கு உபாதாநத்வ லயஸ்தாநத்வங்கள் பொருந்தாதாதலால் எல்லாவற்றுக்கும் அந்த ப்ரஹ்மத்தால் ப்ராணநம் சொல்லப்பட்டிருப்பதாலும், சிதசித்துக்களை சரீரமாகக்கொண்டிருத்தல் ஸித்தித்தது. அதனால் ஸர்வசப்தமானது கார்யாவஸ்தையிலுள்ள சிதசித் சரீரகமான பரமாத்மாவைச் சொல்லுகிறது, ப்ரஹ்ம சப்தத்திற்கு ஸங்கோசமில்லாமையால் ஸ்வரூபத்தாலும் ரூபத்தாலும் குணங்களாலும் எல்லை இல்லாத பெருக்கத்தைச் சொல்வதாலும் நிஷ்க்ருஷ்டமான ப்ரஹ்மத்திற்கு காரணத்வாநுபபத்தி ரூபமான அர்த்த ஸாமர்த்தியத்தாலும் ப்ரஹ்ம சப்தமானது காரணாவஸ்தையிலுள்ள சிதசித் விசிஷ்ட ப்ரஹ்மத்தைச் சொல்லுகிறது. இவ்வண்ணம் இரண்டு அவஸ்தைகளுடன் கூடியதும் சிதசித்துக்களை ப்ரகாரங்களாக உடையதுமான ப்ரஹ்மத்திற்கு ஏகத்வமானது ஸாமாநாதிகரண்யத்தால் ப்ரதிபாதிக்கத்தக்கதாக இருப்பதால் கார்ய காரணாவஸ்தைகளுள்ள ப்ரகாரியின் ஏகத்வம் இந்த வாக்கியத்திற்கு அர்த்தம். சிதசித் ப்ரகார விசிஷ்டத்வம் ப்ராதிபதிகத்தால் அறியத்தக்கது. இரண்டு அவஸ்தைகளுடன் கூடின வஸ்துவின் ஐக்யம் ஸாமாநாதிகரண்யத்தால் அறியத்தக்கதென்பதனால் வாக்கியபேதமில்லை. அதனால் எவ்வாறு அர்த்தம் சொல்லப்பட்டிருக்கிறதோ இதே ஸரியானது. அதற்குமேல் 'ஸர்வம் கலு' என்கிற வாக்கியத்தால் அறியப்பட்டிருக்கிற தாதாத்ம்யத்திற்கு சரீர சரீரிபாவ நிபந்தநத்வத்தை நியந்த்ருத்வம் நியாம்யத்வம் முதலியதாலும் சரீர சப்தத்தாலும் விசதமாக்குவதற்காக ச்ருதி வாக்கியங்களைக் காண்பிக்கிறார்—தத்ர என்று. 'அந்த:ப்ரவிஷ்டச்சாஸ்தா' என்பது ஸர்வாத்ம சப்தத்திற்கு வ்யாக்யானரூபமாயுள்ளது. இதனால் சரீராத்மபாவம் கூறப்பட்டது. உள்ளே ப்ரவேசித்து நியமனஞ்செய்யத்தக்கதாக இருத்தலன்றோ சரீரத்வம். அதை நன்கு வெளிப்படுத்துவதற்

காக உதாஹரிக்கிறார்— யः ப்ருதிவ்யாம் என்று. யः ப்ருதிவ்யாம் ய ஆத்மநி என்கிற இரண்டு பர்யாயங்களால் சேதநா சேதநங்கள் இரண்டுக்கும் பகவானை உத்தேசித்து சரீரத்வம் கூறப்பட்டது. ஆத்மநி திஷ்டந் என்று சொல்லப்பட்டால் யஜ்ஞவேதியில் நெருப்பு இருக்கிறது, எள்ளில் எண்ணெய் இருக்கிறது, என்பதுபோல ஸ்திதியானது வெளியிலிருத்தல் உள்ளே இருத்தலென்கிற இரண்டுக்கும் பொதுவாக இருத்தலால் அதை ஸ்பஷ்டமாக்குவதற்காகச் சொல்லுகிறார்—ஆத்மநோந்தர: என்று. அந்த ரோயமயதி என்பதனால் சரீரலக்ஷணம் கூறப்பட்டது. ஆதலால் அவனால் நியமிக்கத் தக்கது அவனுக்கு சரீரமென்று அர்த்தம். § சிலாபுத்ரகஸ்ய சரீரம் என்பதுபோல் இந்த நிர்தேசமல்ல. அபவாதகமில்லாமலிருக்கையில வ்யதிரேக நிர்தேச ஸ்வாரஸ்யத்திற்கு பங்கம் கூடாததால். யஸ்ய ப்ருதிவீ சரீரம் என்று. வ்யதிரேக நிர்தேச ஸ்வாரஸ்யத்திற்கு பங்கமில்லாமையானது ப்ரகாண ஸித்தமாக இருப்பதாலும் அதற்கு அபவாதமில்லாமலிருக்கையில் அந்த இடத்திலும் ஔபசாரிகத்வத்தை ஆச்ரயிக்கக்கூடாததாலும் விருத்த தர்மங்களாக இருக்கிற $ அதிகரணாதிகர்தவ்யபாவம் வ்யாப்ய வ்யாபகபாவம அஜ்ஞப்ராஜ்ஞபாவம் நியாம்ய நியந்த்ருபாவம் இவைகளால் ஸ்வாரஸ்ய பங்கமானது மிக்க மறுக்கப்பட்டிருப்பதாலும். யம் ப்ருதிவீ நவேத' என்பது திருஷ்டாந்தத்திற்காக சொல்லப்பட்டிருக்கிறது. எப்படி அசேதநம் அறியாதோ அப்படி சேதநனுமென்று கருத்து. ய ஆத்மநி என்கிற பர்யாயத்தினால் பரிசுத்தமான ஆத்மா பகவானுக்கு சரீரமென்று சொல்லப்படுகிறது. அசித்துடன் கலந்த சேதநவிசேஷங்களான நக்ஷத்திரங்கள், சந்திரன், சூர்யன் முதலியவைகள் பரமாத்மாவுக்கு சரீரங்களென்று தனித்துச் சொல்லப்பட்டிருப்பதால் 'யஸ் ஸர்வேஷு பூதேஷு திஷ்டந்' என்று சொல்லப்பட்டிராத அசித்துடன் கலந்த ஜீவனகளும பரமாத்மாவுக்கு சரீரமென்று வேறாக சொல்லப்பட்ருப்பதாலும் பூதசப்தமானது ப்ருதிவீ முதலிய அசித்துக்களை மாத்திரம் உணர்த்துவதில் நோக்கமுள்ளதல்ல. யஸ்ய ப்ருதிவீ சரீரம், யஸ்ய பசு சரீரம் இது முதலிய வாக்யங்களால் ப்ருதிவீ முதலிய பூதங்கள் தனித்துச்சொல்லப்பட்டிருப்பதால். 'யமாத்மா நவேத என்று. இவ்வளவுள்ளதென்கிற அறிவின் நிஷேதம் கூறப்பட்டது. பகவானுடைய ப்ரஸாதமில்லாவிடில அந்த பகவத் ஸ்வரூப விஷயஜ்ஞானமானது அடைவதற்கு சக்யமானதென்பதாவது சொல்லப்படுகிறது. காரணாவஸ்தையிலிருப்பதும பகவானுடைய சரீரம், சரீரியும் நாராயணனென்கிற பெயருள்ளதேவதா விசேஷமென்று ஜ்ஞாபிப்பதற்காகச்சொல்லுகிறார்—ய: ப்ருதிவீமந்தரே ஸஞ்சரந் என்று, ம்ருத்யு: தமஸ் சப்தத்தால் சொல்லப்படுகிற ஃ ப்ரக்ருதி-அந்த வாக்கியத்திலேயே தமஸ் சப்த ஸ்தானத்தில் ம்ருத்யுசப்தபாடமிருப்பதால், பரமாத்மாவுக்கு சரீர சரீரிபாவமானது அந்தந்த சேதநா சேதந வஸ்துக்களின் பெயரை அடைதலுக்கு ஹேதுவாக இருக்கிறதென்று சொல்லுகிறார்—தத்ஸ்ருஷ்ட்வா என்று.

ஸூத்ராவலீ— "அநேந ஜீவேநாத்மநாநுப்ரவிஶ்ய நாமரூபே வ்யாகரவாணி" இதி ப்ரஹ்மாத்மகஜீவாநுப்ரவேஶேநைவ ஸர்வேஷாம் வஸ்தூநாம் ஸ்வரூபம் ஸ்வவ்யாபாரஶ்ச ப்ரதிபாதித: । "தத்ஸ்ரு

---

§ சிலாபுத்ரகம்—கல்லினால் செய்யப்பட்டிருக்கிற பாவை.

$ அதிகர்தவ்யம்—ஒன்றை ஆதாரமாக உடையவஸ்து. ஃ ப்ருக்ருதி—ஸத்வ ரஜஸ்தமோ குணங்களுக்கு ஆதாரமாக இருக்கிற ஜகத்காரணமான அசித் வஸ்து.

[illegible]

ஸ்ரீபாஷ்யம்—

இந்த இடத்திலும் அநேந ஜீவேநாத்மநாநுப்ரவிச்யநாமரூபே வ்யாகரவாணி, என்கிற ச்ருதியினுல் ப்ரஹ்மத்தை ஆத்மாவாகக்கொண்ட ஜீவன்வாயிலாக உள்ளுக்குள் ப்ரவேசத்தாலேயே எல்லாவற்றுக்கும் வஸ்துத்வமும் அந்தந்த வாசக சப்தங்களால் உணர்த்தப்படத்தக்கதன்மையும் ப்ரதிபாதிக்கப்பட்டது. ததநுப்ரவிச்ய, ஸச்சத்யச்சாபவத், என்கிற ச்ருதிவசனத்தினுல் சொல்லப்பட்டிருக்கிற அர்த்தத்தோடு துல்யமான அர்த்தமுள்ளதாக இருப்பதால் ஜீவனுக்கும் ப்ரஹ்மாத்மகத்வமென்கிற தன்மையானது ப்ரஹ்மத்தின் அநுப்ரவேசத்தாலேயே என்று அறியப்படுகிறது. அதனுல் சிதசிதாத்மகமான எல்லா வஸ்துக்களுக்கும் பரஹமத்தோடு தாதாத்ம்யமானது சரீராத்ம பாவத்தாலேயே என்று அறியப்படுகிறது. ஆகையால் ப்ரஹ்மத்தைத் தவிர்த்த மற்ற எல்லா வஸ்துக்களுக்கும் ப்ரஹ்மத்துக்கு சரீரமாக இருத்தலாலேயே வஸ்துத்வம் ஸித்திப்பதால் அந்த வஸ்துவை ப்ரதிபாதிக்கிற சப்தமும் அந்த ப்ரஹ்மபர்யந்தமாகவே தன்னுடைய அர்த்தத்தை உணர்த்துகிறது. ஆகையால் எல்லா சப்தங்களுக்கும் உலகத்தில் அர்த்தவிசேஷங்களில் சப்தங்களை வழங்குகின்ற ஸாமான்ய ஜநங்களுடைய வ்யுத்பத்தியினுலறியப்பட்டிருக்கிற அந்த அந்த பதங்களின் அர்த்தங்களோடுகூடின ப்ரஹ்மத்தைச்சொல்லுதல் ஸித்தமாக இருப்பதுபற்றி 'ஐததாத்ம்யமிதம் ஸர்வம்' என்று ப்ரதிஜ்ஞை செய்யப்பட்டிருக்கிற (ஸாமாந்யமான) அர்

த்தத்திற்கு 'தத்த்வமஸி' என்கிற ஸாமாநாதிகரண்யத்தினால் விசேஷத்தில் உபஸம்ஹாரம் செய்யப்பட்டிருக்கிறது.

ஆதலால் (அதாவது) ஜகத்துக்கும் ப்ரஹ்மத்துக்கும் ச்ருதிகளால் சரீரசரீரிபாவம் சொல்லப்பட்டிருப்பதாலும் அந்த சரீரசரீரிபாவமானது நாமரூபங்களை ப்ரஹ்மமடைவதற்கு நிர்வாஹகமாக இருப்பதாலும் நிர்விசேஷ வஸ்துவுக்கு ஐக்யத்தைச் சொல்பவனுக்கும் ஔபாதிகமாகவும் ஸ்வாபாவிகமாகவுமிருக்கிற பேதாபேதவாதிக்கும் பேதத்தை மாத்திரம் சொல்பவனுக்கும் வையதிகரண்யத்தாலும் ஸாமாநாதிகரண்யத்தாலும் ப்ரஹ்மாத்மபாவோப தேசங்கள் அனைத்தும் இழக்கப்பட்டவைகளாக ஆகும்.

ச்ருதப்ரகாசிகை—

*ச்ருத்யந்தரங்களை அனுஸரிப்பதனால் மாத்திரம் ஐததாத்ம்ய சப்தார்த்தம் நிச்சயிக்கப்படுகிறதில்லை, தன் ப்ரகரணத்திலிக்கிற வாக்யத்தாலுமென்று சொல்லுகிறார்— அத்ராபி என்று. இதனால் ஜீவனைச் சொல்லுகிற சப்தத்திற்கு பரமாத்ம பர்யந்தமாக அர்த்தத்தை உணர்த்தும் திறமையும் ச்வேதகேதுவாலறியப்பட்டிருக்கிறதென்பது ஸித்தித்தது. ஜீவேநாத்மநா·ஜீவராசிகளை சரீரமாகவுடைய என்றால் 'வ்யாக்ரேணபூத்வாபஹவோமயாத்தா:' என்கிற ப்ரயோகத்தில்போல நாமரூபே என்கிறபதத்தை வ்யாக்யாநம் பண்ணுகிறார்— வஸ்துத்வம் சப்தவாச்யத்வஞ்ச என்று. அந்தந்த தேவன் மனுஷ்யன் முதலிய வஸ்துவாக இருத்தல்- தேவன் மனுஷ்யன் முதலிய சப்தங்களால் உணர்த்தப்படத்தக்க தன்மையுமென்று பொருள். அசித்ப்ரஹ்மம் இரண்டுக்கும் தாதாத்ம்யமானது அனுப்ரவேசத்தாலுண்டுபண்ணப்பட்டதாக இருக்கட்டும். ஜீவனுக்கும் ப்ரஹ்மத்துக்குமோ வென்றால் ஸ்வரூபைக்யத்தாலுண்டுபண்ணப்பட்டதாகவே இருக்கலாம். ஜீவேந மயா என்று சப்தங்கள் கேழ்க்கப்படுவதனாலென்று வினவப்படுமேயாகில் சொல்லுகிறார்—ததநுப்ரவிச்ய என்று. அறிஞர்களுக்குள் சிறப்புற்றவரே! ஜீவனுக்குள் ப்ரவேசித்திருந்தபோதிலும ப்ரஹ்மத்துக்கு நாமவாச்யதவமானது வ்யாகரணத்தால் ஸித்தியாது. நாமரூபவ்யாகரண ச்ருதிக்கு நாமாக்களால் உணர்த்தப்படத்தக்க தன்மையை ப்ரதிபாதிப்பதில் கருத்தில்லாமையால். எப்படி ரூபவ்யாகரணமென்றால் ரூபநிஷ்பாதனமாத்ரமே ஒழிய தனக்கு அந்த ரூபசப்தத்தால் உணர்த்தப்படத்தக்கதன்மையை உண்டுபண்ணுதலர்த்தமாகாதோ அப்படியே நாமவ்யாகரணமும் சப்தஸ்ருஷ்டியே ஒழிய அந்த சப்தத்தால் அறிவிக்கப்படத்தக்க தன்மையை தனக்கு ஏற்படுத்திக்கொள்ளுதலென்பதைச் சொல்லாது. இப்படியல்ல. 'தத்தேதம் தர்ஹ்யவ்யாக்ருதமாஸீத்தந்நாம ரூபாப்யாம் வ்யாக்ரியத' என்கிற ஸமாந வாக்யத்தில் ப்ரளயதசையில் உபஸம்ஹாரம் செய்யப்பட்டிருக்கிற நாமரூபங்களுடன் கூடின இதம் சப்தத்தால் சொல்லப்படத்தக்க ஜகதாத்மகமான ப்ரஹ்மத்துக்கு ஸ்ருஷ்டிதசையில் நாம ரூபங்களால் வ்யவஹரிக்கப்பட்டிருத்தல் கேழ்க்கப்படுவதால். நாமரூபாப்யாம் என்பது இத்தம் பாவத்தில் த்ருதீயை-நாமரூபங்களோடுகூடியதாக செய்யப்பட்டதென்று அர்த்தம். நாமாவோடுகூடி இருத்தலாவது நாமகர்த்ருத்வமே ஒழிய *நாமவாச்யத்வமல்லவென்று சொல்வது யுக்தமல்ல. $ ஸம்ஜ்ஞாஸம்ஜ்ஞிஸம்பந்தத்தை*

---

* நாம—சப்தம். $ ஸம்ஜ்ஞி—பெயருள்ளது.

வ்யுத்பாதனம் பண்ணுகிற சப்தத்திலும் சப்தத்தை உச்சரிக்கிற புருஷனிடத்திலும் குடம் முதலிய வஸ்துக்களுக்கு போதகங்களான கடம் முதலிய சப்தங்களோடுகூடி இருத்தலென்கிற தன்மைக்கு ப்ரஸித்தி இல்லாமையால். சப்தத்தால் வாச்யமாக இருக்கிற வஸ்துவுக்கே சப்தத்துடன் சேர்ந்திருத்தலென்கிற ப்ரஸித்தி இருக்கிறது. சப்தத்தை உச்சரிக்கிறவனுக்கு சப்தத்தைக்குறித்து ‡ உபாதானத்வமில்லாமையால் நாமவிசிஷ்டத்வ ப்ரஸித்தி இல்லை எல்லாவற்றுக்கும் உபாதானமாக இருக்கிற ப்ரஹ்மத்துக்கோ வென்றால் சப்தத்தைக்குறித்து உபாதானத்வமிருப்பதால் ரூபவிசிஷ்டத்வம்போல் நாமவிசிஷ்டத்வமானது பொருத்தமுள்ளதாகஆகுமென்று சொல்லப்படுமேயானால், அல்ல- ஆகாயத்தில் கடம் முதலிய சப்தங்களோடு சேர்ந்திருத்தலென்பதற்கு ப்ரஸித்தி இல்லாமையால்- கடம் முதலிய சப்தங்களோடுகூடி இருத்தல் சொல்லப்பட்டால் ஆகாயத்திற்கு நாமித்வம் ஸ்வரஸமாக அறியப்படுகிறதில்லையன்றோ. வாச்யமாக இருப்பதால் சப்த ஸம்பந்தமுள்ள வஸ்துவினிடத்திலேயே யன்றோ ¶ நாமித்வ ப்ரதீதிக்கு ஸ்வாரஸ்யமிருக்கிறது, லக்ஷணாவ்ருத்தியினாலுங்கூட அந்த அந்த சப்தங்களால் உணர்த்தப்படத்தக்க தன்மை ப்ரஹ்மத்துக்கு ஸம்பவிக்கிறதென்று சொல்லத்தக்கதல்ல. லக்ஷணாவ்ருத்தி கௌணவ்ருத்திகளுக்கு க்ரமமாக விஷயங்களாக இருக்கிற $ கூலம் † மாணவகன் இவ்விரண்டுக்கும் முறையே கங்காபதம் அக்னிபதம் இவைகளை அபேக்ஷித்து நாமித்வ ப்ரஸித்தி இல்லாமையால். அறிஞரே! § ச்யேந சப்தத்திற்கு யாக விசேஷத்தைக்குறித்து * கௌணநாமத்வம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது, உண்மை. அது கதி இல்லாமல் ஆச்ரயிக்கப்பட்டிருக்கிறது. உயிரைவாங்குதலென்கிற குணம் ஸமமாக இருப்பதுபற்றி ப்ரயோகம் வேறுவிதமாக ஸித்தித்திருப்பதால். ‘யதாவை ச்யேநோ நிபத்யாதத்தே’ என்றல்லவோ ச்ருதி முக்கியமான சப்தத்திற்கேயன்றோ நாமத்வப்ரதீதியானது தானாகவே வந்திருக்கிறது. இந்த இடத்திலோ வென்றால் தானாகவே ப்ராப்தமாக இருக்கிற முக்கியத்வத்திற்கு அபவாதமில்லாமையால் அதை இழப்பது யுக்தமன்று. ஆதலால் இந்த வாக்கியத்தினால் நாமவாச்யத்வமானது சப்த ஸ்வாரஸ்யத்தாலறியப்படுகிறது. இத்தோடு ஒரே அர்த்தமுள்ளதாக இருப்பதால் “நாமரூபே வ்யாகரவாணி” என்கிற இடத்திலும் ப்ரஹ்ம பாயந்தமாக நாமரூபவ்யாகரணமே சொல்லக்கருதப்பட்டிருக்கிறது. மேலும் அக்ஷரங்களின் ஸ்ருஷ்டியை ப்ரதிபாதிக்கிறதென்கிற சங்கையும் உண்டாவதற்குத் தகுதியுள்ளதல்ல. நாமசப்தமானது அக்ஷரமாத்ரத்திற்கு பர்யாயமல்லாததால். ப்ரஹ்மத்தைத் தவிர்த்து மற்ற ஸமஸ்தமான அந்த அந்த பதார்த்த ஸ்வரூபவ்யாகரணோக்தியினாலேயே ஸித்தமாக இருப்பதால் ஆகாயத்திற்கு மாத்திரமுறித்ததானரூப சப்த நிஷ்பாதனமும் ரூபவ்யாகரணோக்தியினாலேயே ஸித்தமாக இருப்பதுபற்றி அதை

---

‡ உபாதானம்—அஸாதாரண காரணம்.
(அதாவது கார்ய த்ரவ்யமாக பரிணமிக்கிற காரணம்)

¶ நாமித்வம்—வாசக சப்தத்தோடு சேர்ந்திருத்தல்.

$ கூலம்—நதியின் கரை. † மாணவகன்—சிறுவன்.

§ ச்யேநம்—கோழிக்குஞ்சு முதலியதின்மீது வந்து விழுந்து கொத்திக்கொண்டு போய் அவைகளைக்கொன்று தின்கிற பறவை., அதாவது ஓர்வித கழுகு. இதை லகுடு என்பார்கள்.

* கௌணம்—குணத்தை நிமித்தீகரித்து ஏற்படும் பெயர்.

ப்ரதிபாதித்தது பயனற்றதாகவுமாகும். ரூபசப்தத்திற்கு † கோபலீவர்தந்யாயத்தால் ஸங்கோசங்கூடாது. $ ஸங்கோசத்தை உண்டுபண்ணுகிற நாம வ்யாகரண நிர்தேச மானது வேறு விதமாக ஸித்தி பெற்றிருப்பதால். ஆகையால் உண்டுபண்ணப்படுகிற அந்த அந்த ரூபங்களுக்கு வாசகங்களான சப்தங்களின் வ்யுத்பாதநமே நாமவ்யாகரண மாக ஆகலாம். அதில் "பகுஸ்யாம்" என்பதனால் ஸ்ருஷ்டிக்கப்படப்போகிற வஸ்து க்களின் பகுத்வமானது ப்ரஹ்ம விசேஷணமென்று அறியப்படுவதாலும். இந்த வாக் கியத்திலும் அநுப்ரவேசத்தை முன்னிட்டு வ்யாகரணம் ப்ரதிபாதிக்கப்பட்டிருப்பதா லும் வயாகரணம் செய்யப்படுகிற ரூபம் ப்ரஹ்ம விசேஷணமென்று அறியப்படுகிறது. ஆதலால் ப்ரஹ்மத்துக்கு விசேஷணமான ரூபத்துடன் சேர்க்கையுள்ளதாக இருப்ப தால நாமாவும ப்ரஹ்மவிசேஷணமென்று அறியப்படுகிறது. நாமாவுக்கு விசேஷண பாவமானது வாசகமாக இருத்தலாலென்றே உபபாதிக்கப்பட்டது. எல்லா ரூபங்களும் ப்ரஹ்ம விசேஷணங்களென்று அறியப்படுவதாலும் நாமாக்கள் அந்தந்த ரூபங்களின் ப்ரவ்ருத்தி நிமித்தங்களுடன்கூடி இருப்பதாலும் விசேஷணதவம் அதற்கு வாசகமாக இருப்பதாலென்றே அறியப்படுகிறது. ஸ்ருஷ்டிக்கப்படப்போகிற வஸ்துக்களின் பகு த்வத்தை விஷயமாகக் கொண்டிருக்கிற பகுசப்தததிற்குத் தொடக்கத்தில் ப்ரஹ்மபர்ய ந்தமாக ப்ரயோகம் காணப்படுவதால் தொடக்கத்தில் சொல்லி இருககிற பகுத்வத்தின் அவாந்தரபேதரூபமான அந்தந்தரூபங்களைச்சொல்லுகிற நாமாக்கள் ப்ரஹ்மவாசகங்களாக இருப்பதால் அந்தப்ரஹ்மத்துக்கு விசேஷணங்களென்று அறியப்படுகிறது. "தத்தேஜ ஐக்ஷத, தா * ஆபஐக்ஷந்த," என்கிற ப்ரகரணத்தில் தேஜஸ் முதலிய சப்தங்களுக்கு பரமாதம விஷயமாக ப்ரயோகம் காணப்பட்டிருப்பதாலும நாமாக்கள் ப்ரஹ்மவிசேஷ ணங்களென்பது அந்த ப்ரஹ்மததுக்கு வாசகங்களாக இருப்பதாலென்று அறியப்படுகி றது. 'வசஸாம் வாச்யமுத்தமம்' ஹரிரகிலாபிருதீர்யதே ததைக:, நதாஸ்ஸம ஸர்வ வசஸாம் ப்ரதிஷ்டாயத்ர சாச்வதீ'. [இவைகளுக்குப் பொருள். வாசகங்களுக்குச்லாக்கிய மான வாச்யம். ஹரியானவர் எல்லா ச்ருதிகளாலும் அப்படி நிகரற்றவராக சொல்ல ப்படுகிறார். எல்லாவேத வாக்குக்களுக்கும் எந்த ப்ரஹ்மத்தினிடத்தில் சாச்வதமான இருப்போ அந்த ப்ரஹ்மத்தை வணங்கினவர்களாக இருக்கிறோம்.] இது முதலிய ஸ்ம்ருதி வசனங்களின் ஸ்வாரஸ்யத்தாலும் நாமாக்களால் வாச்யத்வமறியப்படுகிறது. ஆகையால் 'நாமரூபேவ்யாகரவாணி' என்கிற ச்ருதியானது சித்துக்களோடும் அசித் துக்களோடும்கூடின ப்ரஹ்மததுக்கு அந்த சிதசித்துககளுடைய நாமாக்களால் வாச்ய த்வத்தையே ப்ரதிபாதிக்கிறதென்பது ஸித்தித்தது. ஐததாத்ம்ய சப்தார்த்த வ்யாக்கி யானத்தை நிகமனம் செய்கிறார்— அத: என்று. சரீரத்தைச்சொல்லுகிற சப்தங்களு க்கு சரீரிபர்யந்தமாக அர்த்தத்தை போதிக்கும் திறமை ஸ்வாபாவிக மென்பதை முடி வுபெறச்செய்கிறார்—தஸ்மாத் என்று. தஸ்மாத்-உதாஹரிக்கப்பட்ட வாக்கியங்களால்

† கோபலீவர்தந்யாயம்— 'காம் ஆநய-பசுவைக்கொண்டுவா. பலீவர்தஞ்ச ஆநய- காளைமாட்டையும் கொண்டுவா' என்று சொன்னால் கோபதத்தாலேயே காளையும் உண ர்த்தப்பட்டிருக்க மீண்டும் பலீவர்தபதம் எதற்காக? பயனற்றதே என்று சொல்லப்படு மேயானால் அல்ல.கோபதம் காளையைத்தவிர்த்த மற்றபசுக்களை உணர்த்துகிறது என்ப தில் கருத்தினால் பலீவர்த்தஞ்சாநய என்று சொல்லப்பட்டிருக்கிறது என்று அபிப் ராயபேதம் கல்பிக்கத்தக்கது. இந்த ந்யாயம் ஸாமான்யவிசேஷ ந்யாயத்தில் பர்யவ ஸிக்கிறது. $ ஸங்கோசம்—சுருக்கம். * ஆப:—ஜலம்.

சரீரசரீரிபாவத்தை ப்ரதிபாதனம் செய்ததாலும் அந்த சரீரசரீரிபாவமானது அந்தந்த நாமாக்களை அடைவதற்கு நிர்வாஹகமாக இருப்பதாலும் என்று அர்த்தம்,

ஐயனே ! ப்ரஹ்மபர்யந்தம் சொல்லுகிற தென்பது பொருந்தாது. உலகத்தில் அந்தந்த வஸ்து மாத்திரத்தையே அந்தந்த வாசக சப்தம் உணர்த்துகிறதென்று எல்லோராலுமறியப்பட்டிருக்க அப்படிப்பட்ட வ்யுத்பத்திக்கு பங்கம் ப்ரஸங்கிப்பதாலும் ப்ரஹ்மம் ஒன்றாதலால் த்வித்வ பகுத்வங்கள் பொருந்தாமல் போவதாலுமென்றுசொல்லப்படுமேயாகில் கூறுகிறார்—அதஸ்ஸர்வசப்தாநாம் என்று. உலகவ்யுத்பத்திசப்தத்திற்கு இது கருத்து— இந்த இடத்தில் வ்யுதபத்தி விரோதமில்லை. வ்யுதபன்னங்களான அர்த்தங்களை இழக்காமையால். ப்ரஹ்மமானது லௌகிக பமாணத்திற்குவிஷயமல்லாததால் அந்த ப்ரஹ்மபர்யந்தமாக வ்யுத்பத்தி ஏற்படுகிறதில்லையே ஒழிய ப்ரஹ்மத்துக்கு வாசகமாக இல்லாததாலன்று. ஆதலால் அது வேறுவிதமாக ஸித்திபெற்றிருக்கிறது. எப்படி கார்ய வாக்கியார்த்தவாதிகளால் லிஞ்லோட்தவ்ய ப்ரத்யயங்களுக்கு அபூர்வ மென்கிற அர்த்தத்தைச் சொல்லும் திறமையை வேதவ்யுத்பத்தியினு லறிந்து உலகத்தில் அப்படி வ்யுத்பத்தி இல்லாததற்குப் பரிஹாரம் கூறப்படுகிறதோ; அப்படிப்போல அந்தந்த பதார்த்தங்களை உணர்த்துகிற விசிஷ்ட சப்தத்தால் ப்ரஹ்மத்துக்குங்கூட த்வித்வம் பகுத்வம் முதலியது ஸாக்ஷாத்தாக இல்லாமலிருந்தபோதிலும் என்றும விட்டுப்பிரியாமலிருக்கிற விசேஷணங்களான சிதசித்வஸ்துவாயிலாகப் பொருத்தமுள்ளதாக ஆகிறதென்று சொல்லப்பட்டதாக ஆகிறது. 'தத்த்வமஸி' என்பது உபஸம்ஹார வாக்யமென்று சொல்லுகிறார்-இத்யைததாத்ம்யம் என்று ஸாமாநாதிகரண்யேநவிசேஷே உபஸம்ஹார:'என்று. வையதிகரண்யத்தால் ப்ரதிஜ்ஞை செய்யப்பட்டதற்கு ஸாமாநாதிகரண்யத்தால் உபஸம்ஹாரம் செய்யப்பட்டிருக்கிறது. ஸாமான்யமாக ப்ரதிஜ்ஞை செய்யப்பட்டிருப்பதற்கு விசேஷத்தில் உபஸம்ஹாரமென்று அர்த்தம்.

'ததைக்ஷத' இது முதலிய ச்ருதிவசனங்களால் தத் என்கிற சப்தத்தின் அர்த்தம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. 'ஐததாத்ம்யம்' இதுமுதலியதால் ஜீவனுக்குப்ரஹ்மாத்மகத்வம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அநேநஜீவேந இதுமுதலியதால் ஜீவனைச்சொல்லுகிற சப்தங்களுக்கு ப்ரஹ்மபர்யந்தமாக அர்த்தபோதகத்வமும் அறிவிக்கப்பட்டிருக்கிறதாதலால் இந்த இடத்தில் உத்தேச்ய விதேயங்களில் பாகுபாடில்லை. இது கிடைக்காத அர்த்தத்தை ப்ரதிபாதிக்கிற வாக்கியங்களுக்கேயன்றி நிகமனவாக்கியங்களுக்குக் கிடையாது. அவைகள் ஏற்கனவே ப்ராப்தமாக இருக்கிற அர்த்தங்களை விஷயமாகக்கொண்டிருப்பதால். நிகமனத்துக்கு சொல்லப்பட்டுள்ள அர்த்தத்தை நிலைநிறுத்துவது முக்கிய ப்ரயோஜனமாதலால் நிகமனமபேக்ஷிக்கப்பட்டதாகக் காணப்படுகிறது. ஆதலால் இந்த நிகமன வாக்கியத்தில் உத்தேச்ய விதேயங்களின் பிரிவை முன்னிட்டு ப்ரச்நத்திற்கு இடமில்லை என்று பரிஹாரம் சொல்லப்பட்டதாக ஆகிறது. எந்த இடத்தில் அபூர்வமான அர்த்தத்தை உணர்த்துவதில் தாத்பர்யமுள்ளவாக்யத்தில் ஜகத்துக்கும் ப்ரஹ்மத்துக்கும் ஸாமாநாதிகரண்யமிருக்கிறதோ அந்த இடத்தில் ப்ரஹ்மத்துக்கு நாமரூப பாக்த்வம் விதேயமாக அறியத்தக்கது.

இவ்வண்ணமாக பேதச்ருதிகளுக்கும் கடகச்ருதிகளுக்கும் விரோதம் வாராமலிருப்பதற்காக 'தத்த்வமஸி' என்கிறவாக்கியத்திலுள்ள ஸாமாநாதிகரண்யமானது சரீரசரீரிபாவத்தால் உபபாதிக்கப்பட்டது. சரீரத்தைச்சொல்லுகிற சப்தங்களுக்கு சரீரிபர்யந்தமாக அர்த்தத்தை உணர்த்துதலானது ஜாதிவாசக பதங்களுக்கும் குணவா

சகபதங்களுக்கும் முறையே வ்யக்திபர்யந்தமாகவும் குணிபர்யந்தமாகவும் அர்த்தத்தை உணர்த்துதல் போல் ஸம்பவிக்கிற தென்பதை ஆக்ருத்யதிகரணந்யாயத்தால் உபபாதிக்க எண்ணங்கொண்டவராக சரீரத்தைத் சொல்லுகிற சப்தங்கள் ஆக்ருத்யதிகரண ந்யாயத்திற்கு விஷயங்கள் என்பதை நிரூபிக்கிறதான 'அம்சோ நாநாவ்யபதேசாத்'என்கிற அதிகரணத்திற்கு பூர்வபக்ஷங்களாக இருக்கிற அர்த்தங்களில் தூஷணத்தைக்கூறுகிறார்—அத: என்று. அத: ஜகத் ப்ரஹ்மம் இரண்டுக்கும் ச்ருதிகளால் சரீர சரீரிபாவம ப்ரதிபாதிக்கப்பட்டிருப்பதாலும் அது அந்தந்த சிதசித்வஸ்துக்களின் நாமருபங்களை ப்ரஹ்மமடைவதற்கு நிர்வாஹகமாக இருப்பதாலுமென்று அர்த்தம். பேதாபேதவாதிசப்தத்தால் ஔபாதிகமாயும ஸ்வாபாவிகமாயுமிருக்கிற பேதாபேதவாதிகள் இருவர்களும் || தந்த்ரததால் சொல்லப்பட்டிருக்கிறார்கள். கேவலபேத சப்தத்தால் தன்னிடத்தில் பர்யவஸித்திருக்கிற பேதம் சொல்லக்கருதப்பட்டிருக்கிறது. அதைச்சொல்பவர்கள் $வைசேஷிகர்கள். உபதேசமானது,'அஸ்யைஷ ஆத்மா'என்று இருப்பதால் வையதிகரண்யமும்.

[illegible]

|| தந்த்ரம்—பலபொருள்களை உணர்த்தும் திறமையுள்ள ஒரு சப்தம்.

$ வைசேஷிகர்கள்—கணாதமஹர்ஷியினல் ப்ரவர்த்திக்கப்பட்டுள்ள தர்க்கசாஸ்திரவழியை பின்பற்றியவர்கள்.

𑌪𑍇𑌤𑌃 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌸𑍍𑌯 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌤𑍍𑌮𑌕𑌤𑍍𑌵𑌾𑌭𑌾𑌵𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗𑌾𑌚𑍍𑌚 𑌸𑌤𑍍𑌯𑌭𑍇𑌦𑌵𑌾𑌦𑌿𑌤𑌾 𑌭𑌵𑌤𑌿। 𑌜𑌾𑌤𑌿𑌗𑍁𑌣𑌯𑍋𑌰𑌿𑌵 𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌾𑌣𑌾𑌮𑌪𑌿 𑌶𑌰𑍀𑌰𑌭𑌾𑌵𑍇𑌨 𑌵𑌿𑌶𑍇𑌷𑌣𑌤𑍍𑌵𑍇𑌨 "𑌗𑍌𑌰𑌶𑍍𑌵𑍋 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑍋 𑌦𑍇𑌵𑍋 𑌜𑌾𑌤𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 𑌕𑌰𑍍𑌮𑌭𑌿𑌃" 𑌇𑌤𑌿 𑌸𑌾𑌮𑌾𑌨𑌾𑌧𑌿𑌕𑌰𑌣𑍍𑌯𑌂 𑌲𑍋𑌕𑌵𑍇𑌦𑌯𑍋𑌰𑍍𑌮𑍁𑌖𑍍𑌯𑌮𑍇𑌵 𑌦𑍃𑌷𑍍𑌟𑌚𑌰𑌮𑍍 । 𑌜𑌾𑌤𑌿𑌗𑍁𑌣𑌯𑍋𑌰𑌪𑌿 𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌤𑍍𑌵𑌮𑍇𑌵 "𑌖𑌣𑍍𑌡𑍋 𑌗𑍌𑌃" "𑌶𑍁𑌕𑍍𑌲𑌃 𑌪𑌟𑌃" 𑌇𑌤𑌿 𑌸𑌾𑌮𑌾𑌨𑌾𑌧𑌿𑌕𑌰𑌣𑍍𑌯𑌨𑌿𑌬𑌨𑍍𑌧𑌨𑌮𑍍 । 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌤𑍍𑌵𑌾𑌦𑌿𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌪𑌿𑌣𑍍𑌡𑌾𑌨𑌾𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌤𑌯𑍈𑌵 𑌪𑌦𑌾𑌰𑍍𑌥𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 "𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 𑌷𑌣𑍍𑌡𑍋 𑌯𑍋𑌷𑌿𑌦𑌾𑌤𑍍𑌮𑌾 𑌜𑌾𑌤𑌃" 𑌇𑌤𑌿 𑌸𑌾𑌮𑌾𑌨𑌾𑌧𑌿𑌕𑌰𑌣𑍍𑌯𑌂 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰𑌾𑌨𑍁𑌗𑌤𑌮𑌿𑌤𑌿 𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌤𑍍𑌵𑌮𑍇𑌵 𑌸𑌾𑌮𑌾𑌨𑌾𑌧𑌿𑌕𑌰𑌣𑍍𑌯𑌨𑌿𑌬𑌨𑍍𑌧𑌨𑌮𑍍, 𑌨 𑌪𑌰𑌸𑍍𑌪𑌰𑌵𑍍𑌯𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑌾 𑌜𑌾𑌤𑍍𑌯𑌾𑌦𑌯𑌃 । 𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌾𑌨𑌮𑍇𑌵 𑌹𑌿 𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌾𑌣𑌾𑌂 𑌕𑌦𑌾𑌚𑌿𑌤𑍍 𑌕𑍍𑌵𑌚𑌿𑌦𑍍𑌵𑌿𑌶𑍇𑌷𑌣𑌤𑍍𑌵𑍇 𑌐𑌕𑌧𑍀𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌯𑍋 𑌦𑍃𑌷𑍍𑌟𑌃, "𑌦𑌣𑍍𑌡𑍀 𑌕𑍁𑌣𑍍𑌡𑌲𑍀" 𑌇𑌤𑌿 𑌨 𑌪𑍃𑌥𑌕𑍍𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌤𑍍𑌤𑌿𑌸𑌿𑌦𑍍𑌧𑍍𑌯𑌨𑌰𑍍𑌹𑌾𑌣𑌾𑌂 𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌾𑌣𑌾𑌮𑍍 । 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌵𑌿𑌶𑍇𑌷𑌣𑌤𑍍𑌵𑌂 𑌸𑌾𑌮𑌾𑌨𑌾𑌧𑌿𑌕𑌰𑌣𑍍𑌯𑌾𑌵𑌸𑍇𑌯𑌮𑍇𑌵 ॥

ஸ்ரீபாஷ்யம்—

ஒரு வஸ்துவினிடத்தில் எதற்கு தாதாத்ம்யம் உபதேசிக்கப்படுகிறது? அதற்கே என்று சொல்லப்படுமேயானால் அது தன் வாக்கியத்தாலேயே அறியப்பட்டிருப்பதால் தாதாத்ம்யோபதேசத்தால் நிச்சயிக்கத்தக்கதொன்றுமில்லை. கல்பிக்கப்பட்டிருக்கிற பேதத்தை நிரஸநம் செய்தல் ப்ரயோஜனமென்று சொல்லப்படுமேயானால் அது ஸாமாநாதிகரண்யத்தாலும் தாதாத்ம்யோபதேசத்தாலும் நிச்சயிக்கத்தக்கதல்லவென்று கூறப்பட்டிருக்கிறது. ஸாமாநாதிகரண்யமோவென்றால் ப்ரஹ்மத்தினிடத்தில் இரண்டு ப்ரகாரங்களை ப்ரதிபாதிப்பதால் விரோதத்தையே உண்டுபண்ணும். பேதாபேதவாதத்திலோவென்றால் ப்ரஹ்மத்தினிடத்திலேயே உபாதியின் சேர்க்கை இருப்பதால் அந்த உபாதியின் சேர்க்கையினாலுண்டுபண்ணப்பட்டிருக்கிற ஜீவனை அடைந்திருக்கிற தோஷங்கள் ப்ரஹ்மத்தினிடத்திலேயே ஆவிர்ப்பவிக்குமாதலால் எல்லாதோஷங்களையும் நிராகரிப்பதும் கல்யாணகுணாத்மகமாகவுமிருக்கிற ப்ரஹ்மத்திற்கு ஆத்மபாவோபதேசங்கள் விரோதத்தால் இழக்கப்பட்டவைகளாக ஆகுமன்று. ஸ்வபாவஸித்தமான பேதாபேதவாதத்திலும் ப்ரஹ்மத்துக்குதானே ஜீவபாவத்தை ஒப்புக்கொண்டிருப்பதால் குணங்கள்போல

தோஷங்களும் ஸ்வாபாவிகங்களாக ஆகவேண்டுமாதலால் தோஷமற்ற ப்ரஹ்மதாதாத்ம்யோபதேசம் விருத்தமே கேவலபேதவாதிகளுககும் முற்றிலும் வேறுபாடுள்ள இரண்டு வஸ்துக்களுக்கு ஒரு விதத்தாலும் ஐக்யம் ஸம்பவியாதலாலேயே பரஹ்மாத்மபாவோபதேசங்கள் ஸம்பவிக்கிறதில்லை, ஆகவே எல்லாவேதாந்தங்களுக்கும் பரித்யாகம் ஸம்பவிக்கும. சிதசிதாத்மகமான ப்ரபஞ்சமனைத்துக்கும் எல்லா உபநிஷத்துக்களிலும் ப்ரஸித்தமாக இருக்கிற ப்ரஹ்மசரீரபாவத்தை ப்ரதிஜ்ஞை செய்கிறவர்களால் எல்லாவஸ்துக்களுக்கும் ப்ரஹ்மாத்மபாவோபதேசங்களெல்லாம நன்கு உபபாதிக்கப்பட்டவைகளாக ஆகின்றன. ஜாதிகுணங்கள்போல த்ரவ்யங்களும் ப்ரஹ்மத்துக்கு சரீரபாவத்தால் விசேஷணமாதலால் ‘கருமங்களால் ஜீவன பசுவாகவும் குதிரையாகவும் மனுஷ்யனுகவும் தேவனுகவும் ஆனுனென்கிற வாக்கிய ப்ரயோகங்களால் ஸாமாநாதிகரண்யமானது உலகத்திலும் வேதத்திலும் முக்கியமாகவே காணப்பட்டிருக்கிறது. ஜாதிகுணம் இரண்டுக்கும் த்ரவ்யத்துக்கு விசேஷணமாக இருத்தலே- ‘கண்டோ கௌ:, சுக்ல:பட:, என்கிற ஸாமாநாதிகரண்யத்திற்குக் காரணம. மனுஷ்யத்வம் முதலிய தர்மங்களுடன்கூடின பிண்டங்களும ஆன்மாவுக்கு ப்ரகாரமாக இருத்தலாலேயே பதார்த்தங்களாதலால் ஆன்மாவானது மனுஷ்யனுகவும் புருஷனுகவும் நபும்ஸகனுகவும் ஸ்திரீயாகவும் ஆயிற்று என்று ஸாமாநாதிகரண்யமானது எல்லா இடததிலும் ஒரே விதமாக ஏற்பட்டிருப்பதுபற்றி ப்ரகாரத்வமே ஸாமாநாதிகரண்யத்திற்குக் காரணமே ஒழிய ஒன்றேடொன்று ஒற்றிராத ஜாதி முதலியவைகள் ஸாமாநாதிகரண்யத்திற்குக்காரணங்களல்ல. விசிஷ்டசப்தமல்லாததால் தன்னையே உணர்த்தி தன்னிடத்தில் விச்ரமிக்கிற சக்தியுடன்கூடிய த்ரவ்யங்கள் வேறு ஒரு த்ரவ்யத்திற்கு ஒரு ஸமயத்தில் அல்லது ஓரிடத்தில் விசேஷணமாவதாக இருந்தால் மத்வர்த்தீய ப்ரத்யயம் காணப்பட்டிருக்கிறது. தண்டமுள்ளவன் குண்டலமுள்ளவன் தண்டீ குண்டலீ என்று. தனித்து அறிவதற்காவது தனித்து இருத்தலுக்காவது தகுதியற்றவைகளான த்ரவ்யங்களுககு மத்வர்த்தீயப்ரத்யயாபேக்ஷை கிடையாது. அவைகளுக்கு விசேஷணத்வமானது ஸாமாநாதிகரண்யத்தில் பர்யவஸிக்கத்தக்கதே.

ச்ருதப்ரகாசிகை—

ப்ரஹ்மாத்மபாவோபதேசத்தின் பரித்யாகம் எவ்வாறு என்கிற சங்கைவரின் ம்ருஷாவாதி பக்ஷத்தில் அதன் அநுபபத்தியைக்கூறுகிறுர்-ஏகஸ்மீந்என்று. சங்கிக்கிறுர்-தஸ்யைவ என்று. மறுமொழி சொல்லுகிறுர்—தந் என்று. ஸ்வவாக்யேந - ஸத்யம் ஜ்ஞானம் என்கிற பதங்களை தொடக்கததில் கொண்டிருக்கிற தன் வாக்கியத்திறைல் ஸ்வரூபபரவாக்கியத்தாலறியப்பட்டிருக்கிற அர்த்தத்தைக் காட்டிலுமதிகமான அர்த்தத்தின் ஜ்ஞாநமிருக்கிறதா ? இல்லையா ? முந்தின பக்ஷத்தில் விசேஷங்களோடு கூடி

இருத்தல். இரண்டாவதுபக்ஷத்திலோ தாதாத்ம்யோபதேசம் பயனற்றதென்றுகருத்து. மீண்டும் சங்கிக்கிறார்—கல்பித என்று. தூஷிக்கிறார்—தத் என்று இரண்டு ப்ரகாரங்களை உபஸ்தாபிக்குந்திறமையுடன்கூடி இருப்பதாலென்று கருத்து. ஸாமாநாதிகரண்ய தாதாத்ம்ய என்று. ஸாமாநாதிகரண்யத்தால் ஏற்படுகிற தாதாத்ம்யத்தால் நிர்ணயிக்கத்தக்கது என்று அர்த்தம். அஸாதகத்வம மாத்திரமன்று விருத்தமுமென்று சொல்லுகிறார்—ஸாமாநாதிகரண்யந்து என்று. † ஔபாதிகமானபேதாபேதவாதத்தில் அதன் அனுபபத்தியைககூறுகிறார்—பேதாபேத என்று. ‡ க்லேசம் கர்மம் முதலியவைகளால் தொடப்படாதவனும் ஸர்வஜ்ஞத்வம முதலிய குணங்களோடுகூடியவனுமல்லவோ ஈஸ்வரன் ஆதலால் தோஷமில்லாத ஈச்வரனுக்கு அவனுக்குத்தகாததான அநீச்வர § தாதாத்மயததைச் சொல்வது வ்யாகாததோஷக்ரஸ்தமாதலால் ஈச்வரதாதாத்ம்யோபதேசம் விருத்தமென்று அர்த்தம. பரித்யக்தாஸ்ஸ்யு: - பரித்யாகம் பலித்ததென்று அர்த்தம். இயற்கையிலுள்ள பேதாபேத பக்ஷத்தில் அதன் அனுபபத்தியைக் கூறுகிறார்— ஸ்வாபாவிக என்று. குணவத் தோஷாஸ்ச ஸ்வாபாவிகாபவேயு: என்று ப்ரஹ்மத்துக்கு ஈச்வராம்சத்தால் ஸர்வஜ்ஞதவம் முதலியகுணங்கள் போல ஜீவாம்சத்தால் தோஷங்களும ஸ்வாபாவிகங்களாக ஆகும். ''அநாதிர்பகவான் காலோ நாந்தோஸ்ய த்விஜவித்யதே- அவ்யுச்சின்னாஸ்த தஸ்த்வேதே ஸர்க்கஸ்தித்யந்த ஸம்யமா:'' (இதன்பொருள்- மகிமையுடைய காலமானது இன்று தொட்டுததோன்றியதென்று சொல்லமுடியாதது. ப்ராஹ்மணா ! இதற்கு முடிவுகிடையாது. அதனாலே தான் இந்த ஜகத் ஸ்ருஷ்டிஸ்திதிஸம்ஹார ப்ரளயங்கள் விட்டுப்போகாமல் தொடர்ச்சியாக நடந்துகொண்டிருக்கின்றன) எனகிற வசனத்தினபடி ஸம்ஸார ப்ரவாஹத்திற்கு முடிவில்லாமையால் தோஷங்கள் நித்யங்களாக ஏற்படுமென்று பொருள். அல்லது அந்தந்ததோஷங்களின் ஸம்பந்தத்திற்குத் தகுந்ததாக இருத்தல் ஸ்வாபாவிகமாக ஏற்படுமென்று பொருள். அதனாலென்னவென்று வினவப்படுமேயானால் அது விஷயத்தில் விடையளிக்கிறா—இதிநிர்தோஷ என்று. ஸத், ப்ரஹ்ம, ஆத்மா, முதலிய சப்தங்கள் நாராயணசப்ததில் பர்யவஸிக்கும் தன்மையுள்ளதாக இருக்கையால் ஈச்வரனைத்தவிர்த்து வேறாக இருக்கிற வஸ்துக்களின் நிஷேதம் முதலியவைகளால் ஈசுவரனுக்கே ப்ரஹ்மத்வத்தை ஸித்தமாகச் செய்து ''நிரவத்யம் நிரஞ்ஜனம்'' இது முதலிய ச்ருதிகளால் ப்ரஹ்மத்துக்கு சொல்லப்பட்டுள்ள தோஷாபாவத்தையும் அபிப்ராயப்பட்டு நிர்தோஷ ப்ரஹ்மதாதாத்ம்யோபதேசவிரோதம் உரைக்கப்பட்டது. நிர்தோஷ ச்ருதி விரோதம் பலித்தது.

அங்ஙனமாகில் நிர்தோஷச்ருதி விரோதமென்று சொல்லத்தக்கதாக இருக்க யாது காரணம் பற்றி நிர்தோஷ ப்ரஹ்மதாதாத்ம்யோபதேசம் விருத்தமென்று சொல்லப்பட்டது? மறுமொழி உரைக்கப்படுகிறது. ஹேய குணஙகளுக்கு அநர்ஹங்களாக இருக்கிற வஸ்துக்களின் தாதாத்ம்யமன்றோ புருஷார்த்தம். ஸ்வரூபைக்யம் சொல்லும்பக்ஷத்தில் ப்ரஹ்மமானது ஹேயார்ஹமாவதால் ஹேயார்ஹமான ப்ரஹ்மதாதாத்ம்ய புத்தியானது ஹேயங்களைப் போக்காது, அந்த ஹேயதாதாத்ம்யானுபவமும் அபுருஷார்த்தமாக இருப்பதுபற்றி உபாயத்வ ப்ராப்யத்வ விரோதத்தால் தாதாத்ம்யோபதேசத்தில் ப்ரதான நோக்கமுள்ள வாக்கியத்திற்கு ப்ரயோஜன பர்யவஸானம் உண்டாகாது. சத்

† ஔபாதிகம்—உபாதியினால் வருகிறது. ‡ க்லேசம்—பிறப்பு இறப்பு பிணிகளாலுண்டாகிற துன்பம். § தாதாத்ம்யம்— ஐக்யம்.

தியினால் வெட்டப்படுகிறவனும் காலாக்னியினால் எறிக்கப்படுகிறவனுமான புருஷனு
டைய உபாஸனமானது உபாஸகனுடைய அநர்த்தத்தை விலக்காதன்றோ. அவனோடு
தாதாத்ம்ய புத்தியானது ஒருவனுக்கும் புருஷார்த்தமாகாதன்றோ. அப்படிப்போல்
என்று ஜ்ஞாபிப்பதற்காக தாதாத்ம்யோபதேசம் விருத்தமென்று உரைக்கப்பட்டது.
ஸ்வநிஷ்டபேத பக்ஷத்தை தூஷிக்கிறார்—கேவல என்று. அத்யந்த பின்னயோ:—
* ப்ரகார$ ப்ரகாரிபாவத்தால் விடுபட்டிருக்கிற இரண்டு வஸ்துக்களுக்கென்று அர்த்தம்
கேநாபி ப்ரகாரேண-விசேஷ்யாம்சத்தால்கூட ஐக்ய ஸித்தி இல்லை என்று அர்த்தம்.
இவ்வாறாக நான்கு பூர்வபக்ஷங்களிலும் அநுபபத்தியைச் சொல்லி தன் பக்ஷத்தில்
வேற்றுமையைக்கூறுகிறார்—நிகில என்று ஸம்யக் சப்தத்தால் முக்யத்வம் சொல்லவி
ரும்பப்பட்டிருக்கிறது. எவ்வாறு முக்யத்வமென்று கேழ்க்கப்பட்டால் சொல்லுகிறார்
ஜாதிகுணயோ; என்று தண்டம் முதலியதின் வ்யாவ்ருத்தியின் பொருட்டுசொல்லு
கிறா—சரீரபாவேந விசேஷணத்வேந என்று. எவ்வாறு முக்கியமே முன்பு பார்க்க
ப்பட்டிருக்கிறதென்று சொல்லப்படுகிறது? அமுக்கியத்வத்திலும் ப்ரயோகம் ஸம்பவிக்கி
றது. சரீரம த்ரவ்யமாக இருப்பதால் அமுக்கியம். தண்டமகுண்டலம் முதலிய சப்த
ங்களுக்கு விசேஷ்ய பர்யந்தமாக அர்த்தத்தை உணர்த்துதல் காணப்படடிருக்கவில்லை.
ஆதலால் த்ரவ்யத்வமிருக்கையில் விசேஷணத்வமாவது ஜாதி குணம் இவ்விரண்டுக்
குள் ஒன்றாக இருத்தலென்கிற தன்மை இருக்க விசேஷணத்வமாவது மத்வர்த்தீய
ப்ரத்யயத்தை அபேக்ஷியாத ஸாமாநாதிகரண்யத்தில் ப்ரயோஜகமாக இருப்பதனால்
சரீரத்தைச் சொல்லுகிற சப்தத்திற்கு விசேஷ்ய பாயந்தம் அர்த்தத்தை உணர்த்துதல்
அமுக்கியமென்று சொல்லப்படுமேயாகில் அந்த விஷயத்தில் கூறுகிறார்— ஜாதிகுண
யோராபி என்று. ஏவகாரத்தால் ஜாதி குணம் இவ்விரண்டுக்குள் ஒன்றாக இருத்தல்
முதலியதற்குப்ரயோஜகத்வம் நிரஸிக்கப்பட்டது. அதனாலென்னவென்று கேட்கில்
சொல்லுகிறார்---மனுஷ்யத்வாதி என்று. இந்த இடத்தில் ப்ரகார சப்தம விசேஷ
ணமாத்திரத்தைச் சொல்லுகிறது. ஏவகாரத்தால் தண்டம் குண்டலம் முதலியதின்
வ்யாவ்ருத்தி அபிப்பிராயப்படப்பட்டிருக்கிறத. ஸாமாநாதிகரண்ய மநுகதமிதி என்
று. ஸாமாநாதிகரண்யம் எல்லா இடத்திலும் ஒரே விதமாக இருப்பதால் எல்லா இடத்
திலும் ஒரே விதமாக இருப்பதே ப்ரயோஜகமென்று சொலலத்தக்கதென்று அர்த்தம்.
ஜாதி குணத்வம் முதலியதற்கு ப்ரயோஜகத்வம் ஏன் உண்டாகக்கூடாது என்று கே
ழ்க்கப்படுமேயானால் சொல்லுகிறார்--— நபரஸ்பர என்று. பரஸ்பர வ்யாவ்ருத்தா:-
ஒன்றை மற்றொன்று அனுஸரியாமலிருப்பவைகள். ஜாத்யாதய:- ஜாதித்வம் முதலிய
வைகள். இது அபிப்பிராயம். "கங்கையில் இடைச்சேரி இருக்கிறது". இது முதலிய
வாக்கியங்களில் ப்ரவாஹம் கரை இவ்விரண்டுக்கும் கங்காபத ப்ரவ்ருத்தி நிமித்தமாக
இருக்கிற $ அனுகதமான ஆகாரம் காணப்படாமையால் அந்த இடத்தில் லாக்ஷணி
கத்வம். இந்த இடத்திலோவென்றால் எந்த எந்த இடத்தில் விசேஷ்ய பர்யந்தமாக
அர்த்தத்தை உணர்த்துகிறதாக ப்ரயோகம் காணப்பட்டிருக்கிறதோ அந்தந்த ப்ரயோ
கங்களில் தொடர்ந்து வருகிற ஆகாரம் காணப்படுவதால் அநுகதமான ஆகாரத்துக்கு
ப்ரயோஜகத்வத்தை ஆச்ரயிப்பதனால் ஓரிடத்தில் லாக்ஷணிகத்வம் சொல்வது யுக்த
மல்ல, அப்படி இல்லாவிட்டால் அத்ரவ்யத்வமிருக்க விசேஷணத்வம் விசேஷ்ய

* ப்ரகாரம்—விசேஷணம். $ ப்ரகாரி—விசேஷ்யம்.

$ அனுகதம்—எல்லாவற்றிலும் தொடர்ந்துவருகிற ஒரு தர்மம்.

பர்யந்தமாக அர்த்தத்தைச் சொல்வதில் ப்ரயோஜக மென்பதும் சொல்லத்தக்கதல்ல. ஜாதித்வமாவது குணத்வமாவது ப்ரயோஜகமாக இருக்கட்டும். மற்றது லாக்ஷணிகமாக இருக்கலாம், அப்படி இருப்பது உமக்கு அபிமதமல்ல. ஜாதியையும் குணங்களையும் சொல்லுகிற இரண்டுவிதமான சப்தங்களும் விசேஷ்யத்தில் பர்யவஸிக்கின்றவைகளாக ப்ரயோகங்கள் காணப்படுவதால். ஆகையால் சரீரத்தைச்சொல்லுகிற சப்தங்களும் விசேஷ்யபர்யந்தமாக அர்த்தத்தை உணர்த்துகிற ஸ்வபாவமுள்ளவைகளாக ப்ரயோகங்களில் காணப்படுவதாலும் எல்லா ப்ரயோகங்களிலும் தொடர்ந்துவருகிறஒரு ஆகாரம் காணப்படுவதாலும் தொடர்ந்து வாராமலிருக்கிற வேறு ஆகாரத்திற்கு ப்ரயோஜகத்வத்தை கல்பிப்பதனால் இரண்டில் ஒன்றுக்கு அமுக்யத்வ கல்பனை அயுக்தமாதலால் இந்த ஸாமாநாதிகரண்யமும் ஜாதி குணவாசி சப்தங்களுக்குப்போல முக்கியமே.

அன்பரே! விசேஷணங்களாக இருக்கிற த்ரவ்ய வாசகபதங்களுக்கு மத்வர்த்தீய ப்ரத்யயத்தை அபேக்ஷியாமலே விசேஷ்ய பர்யந்தமாக அர்த்தத்தை உணர்த்தும் ஸாமர்த்தியமானது தண்டம் முதலிய சப்தங்களுக்கு அவ்விதமான ஸ்வபாவமில்லாததால் பொருந்தாதெனகிற சங்கைவரின் ப்ரகாரமாக இருத்தலையே ஸ்வபாவமாகக்கொண்ட என்று முந்தி அபிப்ராயப்பட்டிருப்பதை விவரிக்கிறார்-ஸ்வநிஷ்டா நாமேவஹி என்று. தனித்திராமல் என்றுமே இணையுற்றிருக்கிற விசேஷணத்தைச் சொல்லுதலே மத்வர்த்தீயப்ரத்யயத்தை அபேக்ஷியாத ஸாமாநாதிகரண்யத்திற்கு ப்ரயோஜகமென்றுபொருள்.

யதி 'கௌரஶ்வோ மநுஷ்யோ தேவ: புருஷோ யோஷித் ஷண்ட: ஶூத்ரா க்ஷத்ரியஜாத:' இத்யுக்தே 'கண்டோ முண்டோ கௌ:' 'ஶுக்ல: பட:' 'க்ருஷ்ண: பட:' இதி ஜாதி குணவசநாத் ப்ரகாரத்வம் மநுஷ்யாதிஶரீராணாமிஷ்யதே; தர்ஹி ஜாதிவ்யக்த்யோரிவ ப்ரகாரப்ரகாரிணோ: ஶரீராத்மநோரபி நியமேந ஸஹ ப்ரதிபத்தி: ஸ்யாத்; ந சைவம் த்ருஶ்யதே । நஹி நியமேந கோத்வாதிவதாத்மாஶ்ரயதயைவாத்மநா ஸஹ மநுஷ்யாதிஶரீரம் பஶ்யந்தி । அதோ 'மநுஷ்யோ ஜாத:' இதி ஸாமாநாதிகரண்யம் லாக்ஷணிகமேவ । நைதமேவம்; மநுஷ்யாதிஶரீராணாமபி ஆத்மைகாஶ்ரயத்வம், ததேகப்ரயோஜநத்வம், தத்ப்ரகாரத்வஞ்ச ஜாத்யாதிதுல்யம் । ஆத்மைகாஶ்ரயத்வமாத்மவிஶ்லேஷே ஶரீரவிநாஶாதவகம்யதே । ஆத்மைகப்ரயோஜநத்வஞ்ச தத்கர்மபலோபபோகார்த்ததயைவ ஸ்ருஷ்டத்வாத் । தத்ப்ரகாரத்வமபி 'தேவோ மநுஷ்ய:' இத்யாத்மவிஶேஷணதயைவ ப்ரதீதே: । ஏததேவ ஹி கவாதிஶப்தாநாம் வ்யக்திபர்யந்தத்வே ச ஹேது: । ஏதத்ஸ்வபாவவிரஹாதேவ தண்டகுண்டலாதீநாம் விஶேஷணத்வே 'தண்டீ,

ண்டோ கௌ:' இதி ஸாமாநாதிகரண்யம் । தேவமநுஷ்யாதிபிண்டாநா மாத்மைகாஶ்ரயத்வதத்ப்ரகாரத்வைகஸ்வபாவாத் 'தே வோ மநுஷ்ய: ஶூத்ர:' இதி லோகவேதயோஸ்ஸாமாநாதிகரண்யேந வ்யவஹார: । ஜாதிவ்யக்த்யோரிவ ஸஹ ப்ரதீதிரநயோஸ்த்வா க்ஷுஷத்வாத் । ஆத்மநஸ்த்வசாக்ஷுஷத்வாச்சக்ஷுஷா ஶரீரக்ரஹண வேளாயாமாத்மா ந க்ருஹ்யதே ॥

ஸ்ரீபாஷ்யம்—

ஆன்மா வினைகளால் பசுவாகவும் மனிதனாகவும் தேவனாகவும் புருஷனாகவும் ஸ்த்ரீயாகவும் நபும்ஸகனாகவும் ஆயிற்று என்கிற வாக்கியத்தில் கோவானது கண்டம் (அதாவது ஒரு கொம்பு முறிந்தது) கோவானது மூண்டம் (அதாவது இரண்டு கொம்பும் முறிந்தது, என்கிற வாக்கியத்திலும் சுக்ல: பட: (வெளுப்பு வஸ்திரம்) க்ருஷ்ண:பட: (கருப்பு வஸ்திரம்) என்கிற வாக்கியத்திலும் ¶ ஜாதிவாசக சப்தங்களுக்கும் குணவாசக சப்தங்களுக்கும் முறையே † வ்யக்தியைப்பற்றியும் * குணியைப்பற்றியும் ப்ரகாரத்வமிருப்பதுபோல மனுஷ்யன் தேவன் முதலிய சரீரங்களுக்கும் ஆத்மாவைக்குறித்து ப்ரகாரத்வம் விரும்பப்படுகிறதேயாகில் ஜாதிவ்யக்திகளுக்குப்போல ப்ரகார ப்ரகாரிகளான சரீரம் ஆத்மா இவ்விரண்டுகளுக்குங்கூட தவறாமல்சேர்ந்தே $ ப்ரதிபத்தியானது ஸம்பவிக்கவேண்டுமே. இவ்வண்ணம் ப்ரதிபத்தியானது காணப்படுகிறதில்லை, ‡ கோத்வம் முதலியதைப்போல தவறாமல் ஆத்மாவை ஆச்ரயித்திருப்பதனாலேயே ஆன்மாவோடுகூட மனுஷ்யன் தேவன் முதலிய சரீரங்களைப் பார்க்கிறார்களில்லையன்றோ. ஆகையால் மனுஷ்யன் ஆத்மா என்கிற ஸமாநாதிகரணப்ரயோகமானது || லாக்ஷணிகமே. இது இவ்வண்ணமல்ல. மனுஷ்யன் தேவன் முதலிய சரீரங்களுக்கும் ஆத்மாவையே ஆச்ரயித்திருத்தலும், அந்த ஆத்மாவுக்கே ப்ரயோஜனமாக இருத்தலும், அந்த ஆத்மாவுக்கு ப்ரகாரமாக இருத்தலும் ஜாதி முதலியவைகளுக்கு துல்யம். ஆத்மாவை ஆச்ரயித்திருத்தலானது ஆத்மா சரீரத்தை விட்டுப் பிரிந்தவுடன் சரீரம் அழிவதனால் அறியப்படுகிறது.

¶ ஜாதி—வஸ்துக்களுடைய அவயவங்களின் அமைப்பு.

† வ்யக்தி—அவயவங்களின் அமைப்போடு கூடின ஒரு வஸ்து.

* குணி—குணங்களுள்ளது.　　$ ப்ரதிபத்தி—ஜ்ஞானம்.

‡ கோத்வம்—பசுவைச்சார்ந்த கொம்புவால் குளம்பு முதலிய அவயவங்களின் அமைப்பு.　　|| லாக்ஷணிகம்—முக்கியமல்லாதது.

ஆத்மாவுக்கே ப்ரயோஜநமாக இருத்தலும் அந்த ஆத்மாவினுடைய கர்ம பலன்களை அநுபவிப்பதற்காகவே இது இருப்பதால் அறியப்படுகிறது. ஆத்மாவுக்கு ப்ரகாரமாக இருத்தலும் தேவன் மனுஷ்யன் என்று ஆத்மாவுக்கு விசேஷணமாக அறியப்படுவதால் நன்கு வெளிப்படுகிறது. இதேயன்றோ கோ முதலிய சப்தங்களுக்கு வ்யக்தி பர்யந்தம் அர்த்தத்தை உணர்த்துகிற ஸாமர்த்தியமுண்டென்பதில் ஹேது. இந்த ஸ்வபாவமில்லாததாலேயே தண்டம் குண்டலம் முதலியவைகளுக்கு விசேஷணத்வம் சொல்லக்கருதப்படும் ஸமயத்தில் § மத்வர்த்தீய ப்ரத்யயம் அபேக்ஷிக்கப்படுகிறது. தேவன் மனுஷ்யன் என்கிற பிண்டங்களுக்கு ஆத்மாவையே ஆச்ரயித்திருத்தல், ஆத்மாவின் கர்மபல போகார்த்தமாகவே இருத்தல், ஆத்மாவுக்கு ப்ரகாரமாக இருத்தல், இவை அனைத்தும் ஸ்வபாவமாக இருப்பதனாலே ஆத்மா தேவன் மனுஷ்யன் என்று உலகத்திலும் வேதத்திலும் ஸமாநாதிகரணமாக வ்யவஹாரம் வந்துகொண்டிருக்கிறது. ஜாதி வ்யக்தி இரண்டும் ¶ சாக்ஷுஷ ப்ரத்யக்ஷ விஷயமாக இருப்பதால் இரண்டுக்கும் தவறாமல் சேர்ந்தே ப்ரதீதி வருகிறது. ஆத்மாவோவெனில் சாக்ஷுஷப்ரத்யக்ஷத்திற்கு விஷயமல்லாததால் கண்ணால் சரீரத்தை க்ரஹிக்கும் தருணத்தில் ஆத்மா க்ரஹிக்கப்படுகிறதில்லை.

ச்ருதப்ரகாசிகை—

எந்த எந்த இடத்தில் தவறாமல் ப்ரகாரத்வ மிருக்குமோ அந்தந்த இடத்தில் தவறாமல் ப்ரகார ப்ரகாரிகள் இரண்டுக்கும் சேர்ந்தே உபலப்தி காணப்பட்டிருக்கிறது. சரீரத்திலோவென்றால் சேர்ந்தே உபலப்தி என்கிற நியமமில்லாமையால் ஆத்மாவோடு இணைபுரியாத ஸ்வபாவமுள்ள விசேஷணத்வம் பொருத்தமுள்ளதாக ஆகாது. ஆகையால் ஸாமாநாதிகரண்யம் லாக்ஷணிகமென்கிற அபிப்ராயத்தால் சோதனம் செய்கிறார் யதிகௌரச்வ: என்று. பக்ஷத்தில் வ்யாபகத்தின் விபர்யயத்தைக் காண்பிக்கிறார்— நசைவம் என்று. அதைவிவரிக்கிறார்— நஹி என்று. அதனால் என்னவென்றுகேட்கில் சொல்லுகிறார்--அத: என்று. பரிஹரிக்கிறார்—நைதத்தேவம் என்று. சேர்ந்தே தவறாமல் அறியப்படுவது நியதப்ரகாரதா ப்ரயோஜகம் என்கிற விஷயத்தில் தூஷணத்தை சொல்லப்போகிறவராக முதலில் சரீரத்துக்கு ஆத்மாவோடு இணைபுரியாத இருப்புடன்கூடிய விசேஷணமாக இருத்தலென்றும் தன்மை அறியப்பட்டிருக்கிறதென்பதைக் காண்பிக்கிறார்--மனுஷ்யாதி என்று. ஆத்மாவையே ஆச்ரயித்திருத்தல் ஆத்மாவின்கர்மபலபோகார்த்தமாக இருத்தல் இவ்விரண்டு தர்மங்களுக்குள் ஒரு தர்மத்தோடு சேர்ந்திருக்கிற ப்ரகாரத்வமே அப்ருதக்ஸித்தவிசேஷணத்வமென்று அர்த்தம்.

அன்றிக்கே ப்ரகாரத்வ சப்தத்தால் ப்ரகாரமாகவே உண்டாகிற ப்ரதீதியானது

---

§ மத்வர்த்தீயப்ரத்யயம்—மதுப்ப்ரத்யயத்தின் அர்த்தமுள்ள இன், இக முதலியது.
¶ சாக்ஷுஷம்—கண்ணாலுண்டாகிறது.

சொல்லக்கருதப்பட்டிருக்கிறது. மேலே ப்ரகாரத்வத்தை விவரிக்கும் தருணத்தில்'ஆத்மவிசேஷணதயைவ ப்ரதீதே:' என்று சொல்லப்படப்போவதால். அதனால் விசேஷ்யத்தின் ப்ரதிபத்தி ஸம்பவிக்கையில் தண்டகுண்டலாதிகள்போல தனித்திருப்பதாக அறியப்பட்டிராமை பலித்தது. ததேகாச்ரயத்வம், ததேகப்ரயோஜநத்வம், விசேஷ்ய ப்ரதீதியானது உண்டாகும்தருணத்தில் தனித்திருப்பதாக அறியப்படாமலிருத்தல் இவை அனைத்தும் அப்ருதக்ஸித்த விசேஷணத்வத்தில் ப்ரயோஜகமென்று அர்த்தம். அந்த மூன்றினுள் ஆத்மைகாச்ரயத்வத்தை * பக்ஷத்தில் காண்பிக்கிறார்— **ஆத்மைகாச்ரயத்வம்** என்று. ததேக ப்ரயோஜநத்வத்தைக் காட்டுகிறார்— **ஆத்மைக** என்று. துக்கத்தையே பலமாகக்கொண்ட நரகவாஸம் செய்கிற மானிட சரீரங்களில் அவ்யாப்தி சொல்லத்தக்கதல்ல. துக்கமானது ப்ரயோஜனமாக இல்லாமலிருந்தபோதிலுங்கூட அவைகள் பாபக்ஷய ரூபப்ரயோஜனத்திற்கு ஹேதுவாக இருப்பதால். ப்ரபுக்கள் முதலியவர்களுடைய ப்ரீதிக்கு ஹேதுவாக இருக்கிற சேவகன் முதலியவர்களின் சரீரங்களில் ததேகப்ரயோஜநத்வமிருப்பதால் $ அதிவ்யாப்தியானது சங்கிக்கத்தக்கதல்ல. தத்ப்ரயோஜநஸாதநமாக இருத்தலென்கிற தன்மை இன்றி ஸ்திதி இல்லாமை சொல்லக்கருதப்பட்டிருப்பதால். வாங்குதல் விற்பனைசெய்தல் முதலியதற்குத் தகுதியற்றதான வஸ்துவுக்கு ததேகப்ரயோஜநத்வம் ஸித்தியாதன்றோ. அந்த ஆன்மாவின் வினைகளின் பயன்களான ஸுகதுக்கங்களை அநுபவிப்பதற்காகவே இருப்பதாலென்றல்லவோ உரைக்கப்பட்டது. ஆகையால் ததேகப்ரயோஜன சப்தத்திற்குமிதே அர்த்தம். அதற்குமேல் அதற்கு ப்ரகாரமாக இருத்தலைக் காண்பிக்கிறார்— **தத்ப்ரகாரத்வமபி** என்று. விசேஷ்யத்தின் ப்ரதீதி ஸித்தியில் அதைவிட்டுப் பிறிந்திருக்கிறதாக ப்ரதீதியினுடைய இன்மை தத் ப்ரகாரத்வ சப்தத்தால் சொல்லக்கருதப்பட்டிருக்கிறதென்று பொருள். பஞ்சமீ நிர்தேசமானது ஔபசாரிகம். அன்றிக்கே அதனாலேயே அதற்கு ப்ரகாரமாக சொல்லப்பட்டதென்று அர்த்தம். அல்லது தனியாக இருக்கிறதென்கிற ப்ரதீதியினுடைய இன்மையில் ப்ரதீதி விசேஷமானது ஹேதுவாக உதாஹரிக்கப்படுகிறது. இந்த ததேகாச்ரயத்வம் முதலிய மூன்று ஸ்வபாவங்களையும் §ஸபக்ஷத்திலும் காண்பிக்கிறார்—**ஏததேவஹி** என்று ‡ விபக்ஷத்தினின்று விலகி இருத்தலையும் காண்பிக்கிறார்— **ஏதத்ஸ்வபாவ** என்று. இப்படிப்பட்ட ப்ரகாரத்வமே மத்வர்த்தீய ப்ரத்யயத்தை அபேக்ஷியாத ஸாமாநாதிகரண்யத்திற்கு ஹேதுவென்று கூறுகிறார்-**தேவமனுஷ்யாதி** என்று. † ஸஹோபலம்பநியமத்திற்கு அன்யதாஸித்தியைக்கூறுகிறார்- **ஜாதிவ்யக்த்யோ:** என்று. ஸஹோபலம்ப நியமமோவென்றால் ஒரு ஸாமக்ரியினால் அறியப்படத்தக்கதன்மையினால் உண்டுபண்ணப்பட்டிருக்கிறதே ஒழிய அப்ருதக்ஸித்த விசேஷணத்வத்தால் உண்டுபண்ணப்பட்டதல்லவென்றுபொருள். சாக்ஷுஷத்வமென்பது காண்பிக்கப்பட்டதற்காக. உபாதியானது பக்ஷத்திலிருப்புள்ளதல்லவென்பதைக்காண்பிக்கிறார்— **ஆத்மநஸ்து** என்று.

𑌵𑍍𑌯𑌵𑌹𑌾𑌰𑌣𑌯𑍋𑌗𑍍𑌯𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌤𑍍𑌵𑍈𑌕𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌕𑌮𑍍 𑌦𑍃𑌷𑍍-
𑌟𑌿𑌸𑌿𑌦𑍍𑌧𑌾 𑌏𑌵𑌾𑌵𑌃 ; 𑌜𑌾𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌵𑌤𑍍𑌤𑌦𑍇𑌕𑌾𑌶𑍍𑌰𑌯𑌕𑌤𑌦𑍇𑌕𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌨𑌕𑌤

---

* பக்ஷம்—ஸந்திக்தமான ஸாத்யத்திற்கு அதிகரணம்.

$ அதிவ்யாப்தி—அலக்ஷ்யத்தில் லக்ஷணத்தின் இருப்பு.

§ ஸபக்ஷம்—நிச்சிதஸாத்ய முள்ளது. ‡ விபக்ஷம்—நிச்சிதஸாத்யாபாவமுள்ளது.

† உபலம்பம்—ஜ்ஞானம்.

விஶேஷணத்வைஶ்ஶரீரஸ்யாபி தத்ப்ரகாரத்வைகஸ்வபாவத்வாவகமாத் ஸஹோபலம்பநியமஸ்த்வேகஸாமக்ரீவேத்யத்வநிபந்தந இத்யுக்தம் | யதா சக்ஷுஷா ப்ருதிவ்யாதேர்கந்தரஸாதிஸம்பந்தித்வம் ஸ்வாபாவிகமபி ந க்ருஹ்யதே; ஏவம் சக்ஷுஷா க்ருஹ்யமாணம் ஶரீரமாத்மப்ரகாரத்வைகஸ்வபாவமபி ந ததா க்ருஹ்யதே; ஆத்மக்ரஹணே சக்ஷுஷஸ்ஸாமர்த்யாபாவாத் | நைதாவதா ஶரீரஸ்ய தத்ப்ரகாரத்வைகஸ்வபாவவிரஹ: | தத்ப்ரகாரத்வைகஸ்வபாவத்வமேவ ஸாமாநாதிகரண்யநிபந்தநம் | ஆத்மப்ரகாரதயா ப்ரதிபாதநஸமர்த்தஸ்து ஶப்த: ஸர்வமேவ ப்ரகாரதயா ப்ரதிபாதயதி ||

நநு ச ஶாப்தேऽபி வ்யவஹாரே ஶரீரஶப்தேந ஶரீரமாத்ரம் க்ருஹ்யத இதி நாத்மபர்யந்ததா ஶரீரஶப்தஸ்ய | நைவம்; ஆத்மப்ரகாரைகஸ்வபாவஸ்ய ஶரீரஸ்ய பதார்த்தவிவேகப்ரஸங்கேநாய நிரூபணாந்நிஷ்கர்ஷகஶப்தாரம்ப:; யதா ‘‘கோத்வம் ஶௌக்ல்யமாக்ருதிர்குண:’’ இத்யாதிஶப்தா: ||

ஸ்ரீபாஷ்யம்—

தனித்து க்ரஹிப்பதற்கு யோக்யமான வஸ்துவுக்கு ப்ரகாரதையையே ஸ்வரூபமாகக்கொண்டிருத்தல் எவ்விதத்தாலுமிசையாதென்று நீ சொல்லாதே. ஜாதி முதலியதுபோல ததேகாச்ரயத்வம் ததேகப்ரயோஜநத்வம் தத்விசேஷணத்வம் எனகிற ஸ்வபாவங்களால் சரீரத்திற்கும் ஆத்மாவுக்குப்ப்ரகாரமாகவே இருத்தலென்கிற ஸ்வபாவம் அறியப்படுவதால். ப்ரகாரம் ப்ரகாரி இவ்விரண்டிற்கும் தவறாமல் சேர்ந்தே ப்ரதீதிவருகிறதென்பதோவென்றால், ஒரு ஸாமக்ரியினால் அறியப்படத்தக்க தன்மையைக்காரணமாகக்கொண்டதென்று பகரப்பட்டது. எவ்வாறு பூமி முதலியதிலுள்ள கந்தம்ரஸம் முதலியதோடு ஸம்பந்தமானது ஸ்வாபாவிகமாக இருந்தபோதிலும் கண்ணால் க்ரஹிக்கப்படுகிறதில்லையோ, இவ்வாறாகவே கண்ணால் க்ரஹிக்கப்படுகிற சரீரம் ஆத்மாவுக்கு ப்ரகாரமாக இருத்தலையே ஸ்வபாவமாகக்கொண்டிருந்தபோதிலுங்கூட அவ்வாறாக க்ரஹிக்கப்படுகிறதில்லை. ஆத்மாவைக்ரஹிப்பதில் கண்ணுக்கு ஸாமர்த்தியமில்லாமையால். இவ்வளவுமாத்திரத்தினால் சரீரத்திற்கு ஆத்மப்ரகாரத்வ ஸ்வபாவமில்லாமல் போகாது. ஆத்மாவுக்கு ப்ரகாரமாக இருப்பதையே ஸ்வபாவமாகக்கொண்டிருத்தலே ஸாமாநாதிகரண்யத்திற்கு ஹேது. ஆத்மாவுக்கு ப்ரகாரமாக இருத்தலை ப்ரதிபாதி

ப்பதில் ஸமர்த்தமான சப்தமோவென்றால் ப்ரகாரதையுடன்கூடவே ப்ரகாரிஸ்வரூபத்தையும் ப்ரதிபாதிக்கிறது. வாதத்தில் வன்மையுள்ளவரே! சாப்தமான வ்யவஹாரத்திலும் சரீர சப்தத்தால் தனித்து சரீரமாத்ரம் க்ரஹிக்கப்படுகிறபடியால் ஆத்மபர்யந்தமாக அர்த்தத்தை உணர்த்தும் திறமை சரீரசப்தத்திற்கு இல்லை. இவ்வண்ணமல்ல ஆன்மாவுக்கு ப்ரகாரமாகவே இருக்கிற சரீரத்தை பதார்த்தவிவேகத்தைக் காண்பிப்பதற்காக நிருபணம் செய்திருப்பதால் இது நிஷ்கர்ஷக சப்தம். கோத்வம் சுக்லத்வம் ஆக்ருதி குணம் முதலிய சப்தங்கள் போல.

ச்ருதப்ரகாசிகை—

ஒரு ஸாமக்ரியினுல் அறியப்படத்தக்கதன்மை ஒன்றே அப்ருதக்ஸித்தவிசேஷணத்வத்தில் ப்ரயோஜகமாக இருப்பதுபற்றி அதில்லாமையால் அப்ருதக்ஸித்த விசேஷணத்வமில்லை என்று ஸந்தேஹித்துச் சொல்லுகிருர்— **ப்ருதக் க்ரஹண** என்று. ஸ்வரூபம் தர்மம். ப்ரகாரத்வமே எதற்கு தர்மமோ அது ப்ரகாரதைகஸ்வரூபம். ஏகசப்தத்தால் ஒரு ஸமயத்தில் ஸம்பவிக்கக்கூடிய அப்ரகாரத்வத்திற்கு நிராஸம் ஸித்தித்தது. அதனுல் தண்டம் குண்டலம் முதலியவற்றைக் காட்டிலும் வைஷம்யம் ஸித்தித்தது. அப்ருதக் ஸித்தவிசேஷணத்வத்தில் வேறு ப்ரயோஜகமில்லாமையால் ஒரு ஸாமக்ரியினுலறியப்படத்தக்கதனமை ப்ரயோஜகமென்று சொல்லப்படுகிறதா? அல்லது அதை அநுஸரித்திருப்பதால் இதுவும் ப்ரயோஜகமென்று சொல்லப்படுகிறதா? என்கிற விகல்பத்தை அபிப்ராயப்பட்டு முதலாவது பக்ஷத்தை மறுத்துச் சொல்லுகிருர்—**ஜாத்யாதி** என்று. 'ப்ரகாரதைகஸ்வபாவத்வாவகமாத்' என்கிற இடத்தில் ஸ்வபாவசப்தத்தாலேயே ப்ரகாரத்வ நியமம் ஸித்தமாக இருக்கையிலுங்கூட ஏக சப்த ப்ரயோகமானது ஒரு ஸாமக்ரியினுலறியப்படத்தக்க தன்மையை ஸ்வபாவமாக உடையதென்பதை விலக்குவதற்காக. ததேகாச்ரயத்வம் முதலியதே அப்ருதக்ஸித்த விசேஷணத்வத்தில் ப்ரயோஜகமாக இருக்குமேயாகில் எவ்வாறு ஜாதி முதலியதில் ஸஹோபலம்ப நியமம்? என்று வினவப்பட்டால் கூறுகிருர்—**ஸஹோபலம்ப** என்று. இதனுல் முன்பு சாக்ஷுஷத்வத்தைச் சொன்னது ஒரு ஸாமக்ரியினுல் அறியப்படத்தக்கதன்மையைக் காட்டுவதற்காக வென்பது ஸ்பஷ்டமாயிற்று.

அதற்குமேல் முற்கூறப்பட்டிருக்கிற விகல்பத்திலடங்கிய இரண்டாவது பக்ஷத்திலும் அப்ருதக் ஸித்த விசேஷணதைக்கு ப்ரயோஜகமாக சொல்லப்படா நின்ற இது, மத்வர்த்தீய ப்ரத்யத்தை அபேக்ஷியாத ஸாமாநாதிகரண்ய ப்ரயோகங்களுக்கு விஷயங்களாகஇருக்கிற எல்லா இடங்களிலும் தொடர்ந்துவருகிறதா? அல்லது உமக்கு அபிமதமாக இருக்கிற ஜாதி குணங்களிலே மாத்திரம் தொடர்ந்துவருகிறதா? என்று விகல்பம் அபிப்ராயப்படப்பட்டிருக்கிறது. அதில் முதலாவது ஸரியல்ல. தேஹம் ஆத்மா இரண்டுக்கும் ஒரு ஸாமக்ரியினுலறியப்படத்தக்க தன்மை இல்லாமையால். ஆகவே எல்லா இடங்களிலும் பொதுவாகத் தொடர்ந்து வருகிற ப்ரயோஜகமிருப்பதனுல் அப்ருதக் விசேஷணத்வமும் எல்லா இடங்களிலும் பொதுவாக இருப்பதால் ஸாமாநாதிகரண்யங்கள் அனைத்துக்கும் முக்கியத்வம் ஸம்பவிக்கிறதாக எல்லா இடங்களிலும் பொதுவாகத்தொடர்ந்து வாராத ஒரு ஆகாரத்தை ப்ரயோஜகமாக அங்கீகரித்து இணைபுறி

யாமல் எப்பொழுதுமே விசேஷ்யத்துடன் சேர்க்கை யுற்றிக்கிற விசேஷணத்தன்மையையும் குருக்கி அதன் வாயிலாக ஸாமாநாதிகரண்ய ப்ரயோகங்களுக்கு அமுக்யத்வத்தை ஆச்ரயிப்பது பொருத்தமில்லாதென்பது அர்த்தத்தால் ஸித்திக்கது. "ப்ரகாரைதக ஸ்வபாத்வாவகமாத்' என்கிற பதத்தில் ஏகசப்தத்தால் ஒரு ஸாமக்ரியினாலறியத்தக்க ஸ்வபாவம் நிரஸநம செய்யப்பட்டிருப்பதால். அதற்குமேல் அந்யனுகரு இஷ்டமான ஸ்தலத்தை அனுஸரித்துச் செல்லுகிற ஸ்வபாவமுள்ள இரண்டாவது பக்ஷமாக இருக்கிற கந்தம் முதலியதில வ்யபிசாரத்தால் தூஷணத்தைச்சொல்லாநின்று கொண்டு ஒரு ஸாமக்ரியினாலறியத்தக்கதன்மைக்கு அப்ருதக விசேஷணத்வா வ்யாபகத்வத்தைச் சொல்லுகிறுர்—யதா என்று. கந்தம் சக்ஷுரிந்த்ரியத்திற்கு அகோசரமாக இருந்தபோதிலுங்கூட பூமிக்கு தவறுமல் ப்ரகாரமாக இருத்தலென்கிற தன்மைக்கு ஹாநி இல்லை யன்றே. ஏவம் சப்தமானது யதா சப்தத்துக்கு ப்ரதியாசச் சொல்லப்பட்டிக்கிறது. ஏன் க்ரஹிக்கப்படவில்லை என்று வினவப்படுமேயாகில் அந்த விஷயத்தில் சொல்கிறா—ஆத்மக்ரஹணா என்று. வ்யாபகத்வாபாவத்திற்கு பலத்தைக்கூறுகிறுர்—நைதாவதா என்று. ஏதாவதா-கணுல் க்ரஹிக்கப்படாமலிருத்தலென்கிற ஸ்வபாவமாத்திரத்தினுல் * ப்ருதிவிக்கு ப்ரகாரமாக இருக்கிற ஸ்வபாவத்திற்குக்குறை இல்லை. ஒரு † ஸாமக்ரியினாலறியத்தக்க தன்மைக்கு அப்ருதக் விசேஷணதா வ்யாபகத்வமில்லாமையாலும் அதையே ஆச்ரயித்தல் முதலிய வேறு ப்ரயோஜனமிருப்பதாலு மென்று கருத்து. அதனுலென்னவென்று கேட்கில் கூறுகிறுர்—தத்ப்ரகாரதா என்று. ஏகசப்தமானது ஒரு ஸாமக்ரியினாலறியத்தக்க ஸ்வபாவமுள்ளதென்பதை நிரஸனம் செய்வதில் கருத்துள்ளது. ஏவகாரமானது தவறுமல் சேர்ந்தே உபலப்தி உண்டாகிறதென்பதை நிரஸநம் செய்வதற்காக. சரீரத்துக்கு அப்ருதக் விசேஷணத்வமிருக்கையில் ஏதாவது ஒரு ப்ரமாணத்தால் அது அவ்வாறுக அறியப்படலாமென்று கேட்கப்படுமேயானுல் மறுமொழி அளிக்கிறுர்— ஆத்மா என்று. சப்தமும் சரீரிபர்யந்தம் அர்த்தத்தை உணர்த்தும் சகதியுள்ளதல்லவென்று வினவுகிறுர்— நநு என்று. பரிஹரிக்கிறுர்—நைவம் என்று. இந்த வினுவிடை இவ்விரண்டுகளும் ஆக்ருத்யதிகரணத்திலும் ஸமானங்கள் என்கிற அபிப்ராயத்தால் சொல்லுகிறுர்—யதா கோத்வம் என்று. நிஷ்கர்ஷக சப்தங்களுக்கு விசேஷ்ய பர்யந்தம் அர்த்தத்தைஉணர்த்தும் தன்மைஇல்லாமலிருக்க சேதநங்களையும் அசேதநங்களையும் சொல்லுகிற சப்தங்கள் ப்ரஹ்மபாயந்தம் அர்த்தத்தை உணர்த்தத்திறமையுள்ளவைகளாகா• "யஸ்யாத்மா சரீரம்-யஸ்யப்ருதிவீ சரீரம்"இது முதலிய ச்ருதிவசனங்களில் ஆத்மா முதலிய சப்தங்கள் நிஷ்கர்ஷக சப்தங்களென்று அறியப்பட்டிருப்பதாலென்று வினவப்பட்டால் மறுமொழி சொல்லப்படுகிறது. நிஷ்கர்ஷகசப்தம் இரண்டு விதமாயுள்ளது- வைவக்ஷிக நிஷ்கர்ஷகம். நியத நிஷ்கர்ஷகமென்று. அவற்றுள் சரீரம் முதலிய சப்தங்கள் நியத நிஷ்கர்ஷகங்கள். ஆத்மா முதலிய சப்தங்கள் வைவக்ஷிக நிஷ்கர்ஷகங்கள், கோத்வம் முதலிய சப்தங்கள் போலவும் சுக்லம் முதலிய சப்தங்கள் போலவும் ப்ரயோகம் வ்யவஸ்தையை உண்டுபண்ணுகிறதாக இருப்பதால். இந்த சப்தம் நிஷ்கர்ஷகம், இந்தசப்தம் நிஷ்கர்ஷகமல்லவென்கிற பாகுபாடும் ப்ரயோகத்தைச் சார்ந்திருக்கிற தன்றே. அது போல இந்தப்பாகுபாடும் அதன் மூலமாக ஏற்பட்டிருக்கிறது. வாதத்தில் வல்லமை வாய்ந்தவரே! சுக்ல க்ருஷ்ண முதலிய சப்தங்கள் எப்பொழுதும் நிஷ்கர்ஷகங்களே. குணிபர்யந்தம் அர்த்தத்தை உணர்த்தும் ஸாமர்த்தியமோ வென்றல் 'குணவசநேப்யோ மதுபோலுக்வக்தவ்ய:' என்கிற காத்யாயந மஹரிஷியினுடைய வார்த்திகபலத்தால்

* ப்ருதிவீ—பூமி. † ஸாமக்ரீ—காரணவஸ்து அல்லது காரணகலாபம்.

விதிக்கிறது. இவ்வண்ணமல்ல. ஜாதிவாசக சப்தங்கள்போல சுக்லமுதலிய சப்தங்களும் பேதமின்றி இணைபுறியாத விசேஷணங்களைச் சொல்லும் தன்மையுள்ளவைகளாக இருப்பதால், ப்ரத்யயமோ, வென்றால் 'த்வி' என்கிற சப்தத்திற்குப்பின்வருகிற த்விவசனம்போல ப்ரக்ருதியின் அர்த்தத்தைவிட வேறான அர்த்தத்தை உணர்த்துகிறதில்லை. மூன்று லிங்கங்களுள்ளதாதலால் சப்த ஸாதுத்வத்திற்காகவும் ஸ்வரவிசேஷத்திற்காகவும் ப்ரத்யயலோபம் வருகிறது- அதனாலேயே யன்றோ. 'குணே சுக்லாதய:பும்ஸி குணிலிங்காஸ்து தத்வதி' என்று நிகண்டுகாரர்கள் கூறுகின்றனர். ஸ்வபாவமாகவே குணிபர்யந்தபோதகங்களாக இருக்கிற குணவாசக பதங்களுக்கு எதனால் லிங்கத்திற்காகவும் ஸ்வரத்திற்காகவும் மதுப் ப்ரத்யயத்தின்லோபம் விதிக்கப்பட்டிருக்கிறதோ குணிகளைச்சொல்லும் சக்தி இல்லாத சப்தங்களுக்கு குணிகளைச்சொல்வதற்காக விதிக்கப்பட்டிருக்கவில்லையோ அதனாலேயேயன்றோ ராக என்கிற பதத்திற்கு ரக்த என்கிற பதத்தோடு துல்யமாக ப்ரயோகம் கிடையாது, ஆகையால் சுக்லாதிசப்தங்கள் வைவக்ஷிக நிஷ்கர்ஷகங்கள். நியத நிஷ்கர்ஷகங்களுக்குங்கூட அப்படிப்பட்டதன்மையானது ப்ரதியோகிவிசேஷத்தை அபேக்ஷித்து வருகிறதே ஒழிய எல்லா இடத்திலும் கிடையாது. "ரஸோஹமப்ஸு கௌந்தேய ப்ரபாஸ்மிசசிஸூர்யயோ:, புண்யோ கந்த: ப்ருதிவ்யாஞ்ச" எனகிற பகவத் கீதாவசனத்தில் கந்தமமுதலிய சப்தங்கள் பரமாத்மபர்யந்தம அர்த்தபோதகங்களாக ப்ரயோகிக்கப்பட்டிருப்பதால். அதனால் ப்ருதிவ்யாதிகளை அபேக்ஷித்தே கந்தாதி சப்தங்கள் நியத நிஷ்கர்ஷகங்கள்.

अतो गवादिशब्दवद्देवमनुष्यादिशब्दा अपि परमात्मपर्यन्ताः । एवं देवमनुष्यादिपिण्डविशिष्टानां जीवानां परमात्मशरीरतया तत्प्रकारत्वात् जीवात्मवाचिनश्शब्दाः परमात्मपर्यन्ताः । अतः परस्य ब्रह्मणः प्रकारतयैव स्थितिमतः सदा युक्तमिति तत्सामानाधिकरण्येन प्रयोगः । अयमर्थो वेदार्थसङ्ग्रहे समर्थितः । इदमेव शरीरात्मभावलक्षणं तादात्म्यम् । "आत्मेति तूपगच्छन्ति ग्राहयन्ति च" इति वक्ष्यति; "आत्मेत्येव तु गृह्णीयात्" इति च वाक्यकारः ॥

ஸ்ரீபாஷ்யம்—

ஆகையால் கோ முதலிய சப்தங்கள்போல மனுஷ்யன் முதலிய சப்தங்களும் ஆத்மபர்யந்தமாக அர்த்தத்தை உணர்த்தும் திறமைவாய்ந்தவைகள். இவ்வண்ணம் தேவன் மனுஷ்யன் முதலிய சப்தங்களால் சொல்லப்படுகிற பிண்டங்களோடுகூடிய ஜீவன்கள் பரமாத்மாவுக்கு சரீரமாக இருப்பதுபற்றி பரமாத்மாவுக்கு ப்ரகாரமாக இருப்பதால் ஜீவாத்மாவைச் சொல்லுகிறசப்தங்கள் விசேஷ்யமாக இருக்கிற பரமாத்மபர்யந்தமாக அர்த்தத்தை உணர்த்துகின்றன. ஆகையால் ப்ரஹ்மத்துக்குவிசேஷணமாக இருப்பதனாலேயே

சித் வஸ்துக்களுக்கும் அசித் வஸ்துக்களுக்கும் பதார்த்தத்வமிருப்பது
பற்றி பரப்ரஹ்மத்தோடு ஸமாநாதிகரணமாக ப்ரயோகம். இந்த அர்த்தம்
வேதார்த்த ஸங்க்ரஹத்தில் ஸமர்த்திக்கப்பட்டிருக்கிறது. இதே சரீராத்ம
பாவரூபமான தாதாத்மியம் 'ஆத்மேதி தூபகச்சந்தி க்ராஹயந்திச'' என்று
சொல்லப்போகிறார்—'ஆத்மேத்யேவதுக்ருஹ்ணீயாத்' என்றும் வாக்யகாரர்.

ச்ருதப்ரகாசிகை—

சரீரவாசக சப்தங்களுக்கு சரீரி பர்யந்தம் அர்த்தபோதந ஸாமர்த்தியத்தை நிகமன
ம்பண்ணுகிறார்—அதோகவாதி என்று. ஆத்மபர்யந்தா: - ஆத்மபர்யந்தமாக அர்த்த
த்தை அறிவிக்கும் சக்தியுள்ளவைகள். சரீரத்தைச் சொல்லுகிற சப்தங்களால் ஆத்ம
போதனமானது சக்தியைக்காரணமாகக்கொண்டு எற்படுவதனுல் முக்கியமென்று அர்
த்தம். ஐயன்மீர்! என்றாலும் சரீரத்தைச்சொல்லுகிற சப்தங்கள் ஆக்ருத்யதி கரணநி
யாயத்திற்கு விஷயங்கள். ஆயினும் அந்த சரீரவாசக சப்தங்கள் சரீரியை உணர்த்து
வது லக்ஷணாவ்ருத்தியின் மகிமையினுல். கோ முதலிய சப்தஙகளாலுங்கூட வ்யக்தி
போதனமானது லக்ஷணாவ்ருத்திக்கு அதீனமாக இருக்கிறது. ஸம்பந்தத்தாலும்
அனுபபத்தியினுலுமன்றோ லக்ஷணா கல்பிக்கப்படுகிறது. கோத்வம் முதலிய ஜாதி
மாத்ரம் கண் முதலிய இந்திரியங்களால் க்ரஹிப்பதற்குத் தகுதியற்றதாக இருப்பதாலும்
வ்யக்தி ஸம்பந்தத்தாலும கோ முதலிய சப்தங்களால் வ்யக்தியானது லக்ஷணையினுல்
அறிவிக்கப்படுகிறது. ப்ரயோகமானது வேறு விதத்தால் ஸித்திப்பதாக இருக்க சக்தி
யைக்கல்பிப்பது பொருத்தமுள்ளதாகஆகாது. இவ்வண்ணமல்ல-விசேஷ்யத்தை விட்டு
ஒருறும் இணைபுறியாமல் சேர்ந்தே இருக்கிற விசேஷணத்தைச் சொல்லுகிற சப்த ஸ்வ
பாவமானது விசேஷ்ய விஷயமான லக்ஷணா கல்பனத்தில் ப்ரதிபந்தமாக இருப்பதால்.
அப்படி இல்லாவிட்டால் ஜாதி முதலிய சப்தங்களுக்குங்கூட விசேஷமின்றி ஸம்பந்த
ம் அனுபபத்தி இவ்விரண்டுமிருப்பதால் ஓரிடத்தில் வ்யக்தி பர்யந்தார்த்தபோதகமாக
ப்ரயோகம் ப்ரஸங்கிக்கும். ஆக்ருதியே சப்த சக்திக்கு விஷயம். வ்யக்திபோதமோ
வென்றால் அர்த்த ஸாமர்த்தியத்தினுல். ப்ரதயபிஜ்ஞையில் ஸம்ஸ்காரத்துடன்கூடின
இந்திரியம்போல. அர்த்த ஸாமர்த்தியத்துடன்கூடின சப்த சக்தியானது விசிஷ்டபோ
தத்தில் காரண மென்பதும் யுக்தமல்ல. ஜாதிமுதலியசப்தஙகளின் ச்ரவணத்தி
ல்கூட விசிஷ்டத்திற்கு போதம் ப்ரஸங்கிப்பதாலேயே. ஸாமக்ரீ இருக்கையில்கார்ய
முண்டாகாமல் போவது பொருந்தா தன்றோ. பெரியோரே! கோ முதலிய சப்தஙகள்
ஜாதிக்கு வ்யக்தி பாரதந்த்ர்யரூபத்தைச் சொல்லுகின்றன. அதனுல் அவைகளால் வ்ய
க்திபர்யந்தமாக அர்த்தபோதம் உண்டாகிறது. ஜாதி முதலிய சப்தங்களோ வென்றால்
ஜாதி ஸ்வரூபமாத்ரத்தை உணர்த்துகின்றன. அதனுல் அவைகளால் வ்யக்திபர்யந்த
போதம் உண்டாகிறதில்லை. இவ்வண்ணமல்ல, ஜாதிமுதலிய சப்தங்களால் த்ரவ்யபார
தந்த்ரிய ப்ரதிபத்தி இல்லாவிடில் த்ரவ்யத்தைக்காட்டிலும் விலக்ஷணமான ஜாதி
ப்ரதீதியானது பொருந்தாமல்போகவேண்டிவருவதால்.

அன்பரே! ஜாதிக்கு த்ரவ்யவிசேஷணமாக இருப்பதே ஸ்வபாவமென்கிற பார
தந்த்ரியத்தின் அபோதனம் சொல்லக்கருதப்பட்டதன்று. பின்னை வேறு விசேஷ
ணங்களோடு அன்வயம் காரகபாவம் இவைகளுக்கு அநர்ஹமாக இருத்தலென்கிற பார
தந்த்ரியத்தின் அபோதனம் சொல்லக்கருதப்பட்டிருக்கிறது என்று. மறுமொழி சொ

ல்லப்படுகிறது. கோ முதலிய சப்தங்களால் அப்படிப்பட்ட தன்மையுடன்கூடி இரு த்தலை அறிவித்தலானது ஒரு பதத்தால் விசேஷ்யததைச் சொல்லுதலைக் காரணமாகக் கொண்டது. குண்டலமுள்ளவனென்று சொல்லப்பட்டவுடன் குண்டலத்துக்கு ருசிர த்வம் முதலிய விசேஷணங்களின் அன்வயமும் குணடலத்தாலலங்கரிக்கப்பட்டவன் எனகிற வாக்கியத்தில்போல காரகபாவமும் உண்டாகிறதில்லையன்றோ. இவ்வண்ண மிருகக பாரதந்த்ரியத்தின் அபோதனத்தால் வ்யக்தியின் அபோதனமானது அங்கீகரி க்கப்படுமபக்ஷத்தில் அன்யோன்யாச்ரய தோஷம் உண்டாகும், பாரதந்த்ரியத்தின் அபோ தனத்திறைல் விசேஷ்யத்தின் அபோதனம், அதன் அபோதனத்திறைல் பாரதந்தரியத் தின் அபோதனம என்று. மேலும் கோ முதலிய சப்தஙகளுக்கு விசேஷ்யத்தைபோ திக்கும் சக்தி இல்லாவிடில் ஜாதி முதலிய சப்தங்களுக்குப்போல பாரதந்த்ரியபோ தனத்தில் அஸாமர்த்தியம ப்ரஸங்கிக்கும். தர்மிபோதநா ஸாமர்த்திய வ்யாபகமாகஜாதி முதலிய சப்தங்களில் காணப்பட்டிருக்கிற பாரதந்தர்யாபோதந ஸாமர்த்தியமானது கோ முதலிய சப்தங்களினின்று நிவ்ருத்தியா னன்றதாக தனக்கு வ்யாப்யமான தர்மி போதன ஸாமர்த்தியத்தை ஏன் நிவ்ருத்திக்கச்செய்யாது. த்ரவ்யாம்சத்தில் சக்திவே ண்டாம், ஜாதிக்கு வ்யக்திபாரதந்த்ரயத்தையும் கோ முதலிய சப்தங்கள் அறிவிப்பிக்கு மென்று சொல்லத்தக்கதல்ல. த்ரவ்யாம்சத்தில் சக்தி இல்லாதவைகளான ஜாதிமுத லிய சபதஙகளாலுங்கூட த்ரவ்யபாரதந்த்ரய போதனம் ப்ரஸங்கிப்பதால். ஆதலால் கோ முதலிய சப்தங்களால் த்ரவ்ய ப்ரதீதியானது சப்த சக்தியைக் காரணமாகக்கொண்ட தே. மேலும் ஜாதி மாத்ரமே முக்கியார்த்தமானல் அப்பொழுது அமுக்கியமாக இருக் கிற த்ரவ்யபர்யந்த ப்ரயோகததைவிட ஜாதி மாத்ரத்தில் கோமுதலிய சப்தங்களுக்கு ப்ரசுரப்ரயோகம் ப்ரஸஙகிக்கும். முக்கியார்த்தமான குணத்தோடு ஸம்பந்தமுள்ள வஸ்து விஷயமான ப்ரயோகத்தைவிட முக்கியார்த்தத்தில் ப்ரசுரமான ப்ரயோகம் காணப்பட்டி ருப்பதால். கங்கா, அக்னி ஸிம்ஹம் முதலிய சப்தங்களுக்கு கரை மாணவகன் புருஷன் முதலியவற்றை விஷயமாகவுடைய ப்ரயோகத்தைவிடமுக்கியார்த்தத்தில் ப்ரசுரமாக ப்ர யோகம் காணப்பட்டிருக்கிறதே ஒழிய கோ என்கிற சப்தமானது வ்யக்தியில்நிலை பெற்றிருக்கிறது, மஹிஷ சப்தமானது வ்யக்தியில் நிலைபெற்றிருக்கிறது என்று ப்ர யோகமில்லையன்றோ ஜாதியே முக்கியார்த்தமாக இருக்குமேயாறைல் கோ முதலிய சப்தங்களுக்கும் ஜாதிமாத்ர விஷயமான ப்ரயோகத்தில் த்வ தல் முதலியப்ரத்யயத்தின து அபேக்ஷை இன்மை உண்டாகலாம். கங்கா முதலிய சப்தங்கள் ப்ரவாஹம் முதலிய அர்த்தங்கள் விஷயத்தில் பாவப்ரத்யயாந்தங்களாக ப்ரயோகிக்கப்படுகிறவைகளில்லையன் ரே. அதிகமாக ப்ரயோகஙகளின் இன்மையும் பாவார்த்தகமான ப்ரத்யயத்தை அ பேக்ஷித்திருப்பதும் கோ முதலிய சப்தங்களுக்கு வ்யக்தியில் நிரூடலக்ஷண ஸம்பந்தத் தாலென்று சொல்லப்படுமேயாறைல் அல்ல. ப்ரசுர ப்ரயோகத்தின் அனுஸரணமன் றோ லக்ஷணைக்கு நிரூடி.

ஆகையால் ப்ரசுர ப்ரயோகமில்லாமையால் ப்ரசுரப்ரயோகமில்லை என்கிற பரி ஹாரமானது இசையாது. ப்ரஸங்கத்துக்கு ப்ரஸஞ்ஜநீயாபாவத்தால் பரிஹரிக்கத்த க்க தன்மை இல்லாமையால். நெருப்புடன்கூடி இருக்கும் தன்மையின் ப்ரஸங்கமான து நெருப்பினது இன்மையினுல் பரிஹரிக்கப்படுகிறதில்லை யன்றோ. பாவப்ரத்யய த்தை அபேக்ஷியாமலிருத்தலின் ப்ரஸங்கமானது எவ்விதத்தாலும் பரிஹரிக்கமுடி யாதது. சுக்ல முதலிய சப்தங்களுக்கு குணியை போதிக்கிறவிஷயத்தில் நிரூடலக்ஷ

ணையை ஒப்புக்கொண்டபோதிலும் படஸ்ய சுக்ல: (வஸ்திரத்தின் வெண்மைநிறம்)
என்று குணமாத்ரத்தை உணர்த்துகிற சப்தப்ரயோகத்தில் பாவப்ரத்யயத்தை அபேக்ஷி
யாமலிருத்தல் காணப்படுவதால். சுக்ல முதலிய சப்தங்களுக்கு லோபித்திருக்கிறமதுப்
ப்ரத்யயத்தின் அர்த்தத்தில் லக்ஷணையானது அன்யர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்
கிறது. எப்படி ஸமாஸங்களில் ப்ராதிபதிகத்தால் ப்ரயோகிக்கப்பட்டிராத விபக்தியி
ன் அர்த்தத்தில் லக்ஷணையானது விரும்பப்படுகிறதோ. லக்ஷணைக்கு நிரூடியாவது எல்
லாப்ரயோகங்களிலும் அனுகதி என்று சொல்லப்படுமேயானால் அல்ல. கோ சப்தத்தில்
அதன் அபாவம் ப்ரஸங்கிப்பதால். கோ என்கிற வ்யவஹாரம் தொடர்ந்து வருகிற
தென்பதுபற்றி கோத்வ மாத்ரத்திலும் கோ சப்தமானது ஓரிடத்தில் ப்ரயோகிக்கப்
படுகிறதன்றோ. மேலும் எல்லா ப்ரயோகங்களிலும் பொதுவாகத் தொடர்ந்து வரு
கிற வ்ருத்தியானது லக்ஷணையே ஆகாது. ஆக்ருதி விஷய வ்ருத்திபோல. வாதத்
தில் வன்மைவாய்ந்தவரே ! வேறு விதத்தால் ஸித்தி பெறாத வ்ருத்தியானது முக்
கியம். உண்மை, வேறு விதத்தால் ஸித்தி பெறாமலிருத்தல் காண்பிக்கப்பட்டது. இ
ணைபுறியாமல் எப்பொழுதும் சேர்ந்தே இருக்கிற விசேஷணங்களைச் சொல்லுகிற சப்த
ங்களுக்கு விசேஷ்யத்தில் லக்ஷணையை கல்பிப்பதில் ஸாமர்த்தியத்தின் இன்மைநன்கு
நிரூபிக்கப்பட்டிருப்பதால். பெறியோரே! உம்முடைய பக்ஷத்தில் தர்மியைச்சொல்லு
கிற பதங்களுக்கு பாவப்ரதான நிர்தேச ஸ்தலங்களில் முக்கியார்த்தத்தின் ஓர் அம்ச
த்தில் லக்ஷணை சொல்வது ஸம்மதம். நமக்கோவென்றால் கோ முதலிய சப்தங்களுக்கு
வ்யக்தியில் லக்ஷணை. அந்த இடத்தில் சக்திக்கு விசேஷணவிசேஷ்ய கோசரத்வம்
கல்பிக்கப்பட்டால் உங்களுக்கு கௌரவமுண்டாகும். கௌரவம் உண்டாகவே உண்டா
கும். ஆனால் அது இங்கு தோஷமாகாது. லாகவத்தால் நிர்வஹிப்பதற்கு யோக்ய
மான இடத்தில் கௌரவமானது தோஷமாகாததால். லக்ஷணையை ஆச்ரயிப்பதில்
அனுபபத்தியானது காண்பிக்கப்பட்டதன்றோ. மேலும் 'பசுவைக்கொண்டு வா' இது
முதலிய வாக்கியங்களில் வ்யக்தியின் ஜ்ஞாநமானது அர்த்தஸாமர்த்தியத்தி னாலுண்டா
கிறதென்று சொல்லப்படுமேயானால் அப்பொழுது சொல்லக்கருதப்பட்டிருக்கிற ஜாதி
க்கு ப்ரதிஸம்பந்தியாக இருக்கிற த்ரவ்யமானது உபஸர்ஜநமாக அறியப்படும். அப்
பொழுது புத்திரன் பிதா என்பதுபோல் கண்டோ கௌரயம்' இந்தக்காளைமாடு ஒரு
கொம்பு முறிந்தது, என்று ஸாமாநாதிகரண்யம்உண்டாகாது. 'புத்ரமாநய' (பிள்ளையை
அழைத்துவா) என்கிற இடத்தில் (மம என்னுடைய)என்கிற பதத்தைச்சொல்லாம
லிருந்தபோதிலும் அர்த்தவசத்தால் சொல்வதற்கு விரும்பப்பட்டிருக்கிற புத்திரனுக்கு
ப்ரதிஸம்பந்தியான பிதாவாக அறியப்படுகிற தேவதத்தன் புத்ரனுக்கு அப்ரதானனாக
அறியப்படுகிறானே ஒழிய தலைமைபற்றி விசேஷ்யமாக அறியப்படுகிறானில்லை யன்
றோ. அந்தபித்ருத்வமானது அந்தபுத்ரத்வத்திற்கு அவச்சேதார்த்தமாகஇருப்பதால் கோ
முதலியசப்தங்களிலோவென்றால் த்ரவ்யமே ப்ரதானமாக அறியப்படுகிறது. 'கங்காயாம்
கோஷ:' (கங்கையில் எடைச்சேரி) என்கிற இடத்தில் ப்ரவாஹமானது சொல்லக்கருதப்
பட்டிராததால் கூலம் (கரை) அதற்கு உபஸர்ஜனமாகஅறியப்படுகிறதில்லை. சத்ரிணோ
கச்சந்தி (கொடைக்காரர்கள் போகின்றார்கள்) என்கிற இடத்தில் அச்சத்ரிகள் (கொ
டை இல்லாதவர்கள்) கொடைக்காரர்களுக்கு ப்ரதிஸம்பந்திகளாக அறியப்படாமலிரு
ப்பதால் அச்சத்ரிகள் (கொடைஇல்லாதவர்கள்) கொடைக்காரர்களுக்கு அப்ரதா
நர்களாக அறியப்படுகிறார்களில்லை. ஆகையால் சொல்லவேண்டுமென்று விரும்பப்பட்
டிருக்கிற அர்த்தத்திற்கு ப்ரதி ஸம்பந்தியாக அறியப்பட்டிருந்தபோதிலும் ப்ரதானமாக
அறியப்படுகிற த்ரவ்யமானது சப்த சக்தியினாலேயே அறியப்படுகிறது. 'அயம்புத்ரீ'

(இவன் பிள்ளையுள்ளவன்) என்கிற இடத்தில் புத்ரி சப்தத்தால் அறியப்படுகிற புத்ர னுள்ளவன்போல. மேலும் விசேஷ்யாம்சத்தில் சக்தியுள்ளரூபி சப்தத்தால் ரூபத்தின் அறிவு காணப்படுவதாலும் அதில்லாத ரூப சப்தத்தால் விசேஷ்யத்தின் ப்ரதீதி காணப்படாமையாலும் சப்தவிசேஷத்தோடு ஸம்பந்தம் பெற்ற விசேஷ்யத்தின் ப்ரதீதியானது அன்வய வ்யதிரேகங்களால் சப்த சக்தியைக்காரணமாகக்கொண்டதென்று நிச்சயிக்கப்படுகிறது. ஆகையால் கோ முதலிய சப்தங்களுக்கு விசேஷ்யத்தை அறிவிக்கும் ஸாமர்த்யமானது சக்தியினுலுண்டாகிறது. ஐயனே ! வ்யக்திகள் முடிவற்றவைகளாக இருப்பதால் அந்த வ்யக்திகளோடு ஸம்பந்த க்ரஹணம் பொருந்தாது. ஒரு வ்யக்தியில் கோ சப்தத்தால் சொல்லப்படத்தக்க தன்மையின் விஷயமாக வ்யுத்பத்தி ஏற்படுகிறதென்றால் வேறு வ்யக்திக்கு கோ சப்தத்தால் வாச்யத்வம் ஸம்பவியாது. இவ்வண்ணமல்ல. வ்யுத்பத்தியானது எங்கு ஜாதியோ அங்கு இந்த சப்தம் என்று இவ்விதமாக இருப்பதால்- அதனுல் வாச்யதைக்கு நிமித்தம் ஒன்றாக இருப்பதால் தனித்தனியாக ஒவ்வொன்றிலும் வ்யுத்பத்தியின் அபேக்ஷை இல்லாமையும்ஒரே ஸமயத்தில் எல்லா வ்யக்திகளுக்கும் வாச்யதா வ்யுத்பத்தியும் ஒவ்வொரு வ்யக்தியிலும் வாச்யதைக்கு நிமித்தமானது சிறந்ததாக இருப்பதால் ஒவ்வொரு வ்யக்திக்கும் வாச்யத்வ ஸித்தியும் இசைவுறுகிறது. எவ்வாறு எண்ணிறந்த வ்யக்திகளுக்கு புத்தியில் ஆரோஹணம் ஸாத்யமாகுமென்று சொல்லப்படுமேயானுல் வ்யக்திகளுக்குசப்தவாச்யத்வத்தை மறுக்கின்ற உன்னுல் வ்யக்திகள் அறியப்பட்டவைகளா ? இல்லையா ? இல்லை என்று சொல்வாயேயாகில் அவைகளில் சப்தங்களால் உணர்த்தப்படத்தக்க தன்மையை நிஷேதிப்பது பொருந்தாது. ஸ்வரூபலாபம் பெற்ற ஒன்றில் அப்படிப்பட்டதே ஒன்று நிஷேதிக்கப்படுகிறது. அறியப்பட்டவைகளென்று சொல்லப்படுமேயானுல் சில வ்யக்திகள் அறியப்பட்டதா அல்லது எல்லா வ்யக்திகளுமா? முதல் பக்ஷத்தில் எல்லாவ்யக்திகளுக்கும் சப்தவாச்யத்வ நிஷேதம் கூடாது. இரண்டாவது பக்ஷத்தில் உன்னைப்போல எல்லோரும் எல்லா வ்யக்திகளையும் அறிவார்கள், வ்யுத்பத்தியுள்ளவர்களாகவும் ஆவார்கள். ஆகையால் கோமுதலிய சப்தங்கள் தன்சக்தியினுலேயே வ்யக்திகளை அறிவிக்கின்றன. அப்படிப்போலவே சரீரத்தைச்சொல்லுகிற சப்தங்களும் தன் சக்தியினுலேயே சரீரிபர்யந்தம் அர்த்தத்தை உணர்த்துகின்றன வென்பது ஸித்தித்தது. இவ்வண்ணம் சரீரத்தைச்சொல்லுகிற சப்தங்கள் சரீரிபர்யந்தம் அர்த்தபோதகங்களாக இருக்கலாம். அதனுல் பரமாத்மசப்தத்திற்கும் சிதசித்துக்களைச்சொல்லுகிற சப்தங்களுக்குமுள்ள ஸாமாநாதிகரண்யத்திற்கு என்ன வென்று வினவப்படுமேயானுல் மறுமொழி கூறுகிறூர்-ஏவம் என்று. ப்ரயோஜகாகாரத்தைச்சொல்லா நின்றுகொண்டு நிகமனம் செய்கிறூர்—அத: என்று. இவ்வண்ணம் 'தத்த்வமஸி என்கிற வாக்கியத்தினுல் சித்துக்களையும் அசித்துக்களையும் சரீரமாகக்கொண்டிருக்கிற காரணவஸ்தையுடன்கூடின ப்ரஹ்மத்துக்கும் கார்யாவஸ்தையுடன் கூடின ப்ரஹ்மத்துக்கும் ஐக்யம் கூறப்பட்டது. ப்ரகாரங்களுடன்கூடின இரண்டுவஸ்துக்களுக்கும் ஐக்யம் கார்ய காரணங்கள் இரண்டுக்கும் ஐக்யமுமென்று அர்த்தபேதமிருப்பதால் வாக்யபேதமென்று சங்கிக்கத்தக்கதல்ல. ப்ரகாரித்வமானது பதத்தாலறியத்தக்கதாக இருப்பதால். தத் என்கிற பதமன்றோ ப்ரக்ருத வஸ்துவாசகம், ஸர்வஜ்ஞத்வம் முதலிய குணங்களோடுகூடியதும் சிதசித்ரூபமான ஜகத்தை சரீரமாகக்கொண்டிருக்கிறதுமான காரணவஸ்துவன்றோ ப்ரக்ருதம். 'ததைக்ஷத, ஏகமேவ, பஹுஸ்யாம் தத் தேஜோஸ்ருஜத, அநுப்ரவிச்ய நாமரூபே வ்யாகரவாணி, ஸதாயதநாஸ்ஸத்ப்ரதிஷ்டா:'' இது முதலிய ச்ருதி வசனங்களால் ஸங்கல்பத்திற்கு ஆச்ரயமாக இருத்தல், நிகரில்லாதவனுக இருத்தல், அசிதந்தர்கதனுன ஜீவனுக்குள் ப்ரவேசித்து நாமரூப

வ்யாகரணம் செய்தல், தாரணம் இவைகள் துலக்கமாகக்கூறப்பட்டிருப்பதால். ஆகை யால் தத் என்கிற பதமானது ஸர்வஜ்ஞத்வம் முதலிய குணங்களுடன் கூடினதும் ஜகத் தை சரீரமாகக்கொண்டிருப்பதுமான ப்ரஹ்மத்தை உணர்த்துகிறது த்வம் பதமானது கார்யமான அசித்தோடு சேர்க்கையுற்ற ஜீவவிசேஷத்துடன் கூடின ப்ரஹ்மத்தை உணர்த்துகிறது. ஆதலால் இரண்டு அவஸ்தைகளுடன்கூடின ப்ரஹ்மமானது சித்து க்களையும் அசித்துக்களையும் ப்ரகாரங்களாக உடையதென்பது பதஙகளாலறியப்பட் டது. இரண்டுபதஙகளிலிருக்கிற ஒரே விபக்தியினால் காரணாவஸ்தையுடன் கூடின ப்ரஹ்மமும் கார்யாவஸ்தையுடன் கூடின ப்ரஹ்மமும் ஒன்றென அறியப்படுகிறது. அதனால் வாக்கியபேதமில்லை. ஆகையால் கார்யாவஸ்தையுடனும் காரணாவஸ்தையு டனும் கூடிய ப்ரகாரியானது ஒன்றென்பது 'தத்த்வமஸி' என்கிற வாக்யத்தினால் ப்ரதிபாதிக்கப்பட்டது.

பரமாத்மாவைக்குறித்து ஜகத் எவ்வண்ணம் சரீரமாகிறது ? ப்ரஹ்மத்துக்கு ப்ர பஞ்சம் சரீரமென்று ஸித்தித்துவிட்டால் ப்ரஹ்மத்துக்கு ஜகத்ரூபசரீரஸம்பந்தத்தால் தோஷங்கள் ஸம்பவித்துவிடும். கூறப்பட்டுள்ள அனுக்ராஹகந்யாயத்தினால் அனுக்ர ஹிக்கப்படத்தக்க ப்ரமாணம் யாது? எவ்வண்ணம் வ்யுத்பத்தி விரோதத்திற்கு பரிஹா ரம் இதுமுதலிய சங்கைவரின் கூறுகிறார்—அயமர்த்த:என்று. அன்யனால் ஸ்வரூபைக்ய பரமாக உதாஹரிக்கப்பட்டிருக்கிற ஸூத்ரத்தையும வாக்கியகாரருடைய வசனதகையும் வியாக்கியானம் செய்கிறார்—இதமேவ இதுமுதலியதால். இந்த இடத்தில் இந்த அர் த்தம் சேர்த்து அனுஸந்திக்கத்தக்கது. ர்ருஷாவாதிகளாகிற அத்வைதிகளால் ஸாமா நாதிகரண்ய நிர்வாஹங்கள் பலவாறாக செய்யப்படிருக்கின்றன. அந்த இடததில் ஸாமா நாதிகரண்யமானது ப்ரக்ருத வஸ்துவைக்காட்டிலும் வேறான வஸ்துக்களின் வ்யாவ்ரு த்தியின் வாயிலாக நிர்விசேஷமான வஸ்துமாத்ரத்தை உணர்த்துகிற தென்பது 'ஸத்யம்' இது முதலிய வாக்கியத்தினால் நிரஸனம் செய்யப்பட்டது. வ்யாவ்ருத் திகள் உபலக்ஷணமென்கிற பக்ஷத்தில் மற்றொருபதத்திற்கு ப்ரயோஜனத்தினின்மை ஏற்படுவதாலும் விசேஷணத்வத்தை ஒப்புக்கொண்டால்முக்கியம் ஸம்பவிப்பதாக இருக் கையில் அதைவிட்டு லாக்ஷணிகமான அர்த்தத்தை ஏற்றுக்கொள்வதென்பது பொருந் தாததாலும். தத்த்வமஸி என்கிற வாக்கியத்தில் அன்வய முகத்தால் ஸ்வரூபமாத்ர பரத்வம் சொல்லப்பட்டால் தத் என்கிற ஸர்வநாமசப்தத்திற்கு ப்ரக்ருத பராமர்சித்வ பங்கம், இரண்டு பதங்களுக்கும் லக்ஷணை, ப்ரவ்ருத்தி நிமித்தபேதமில்லாமையால் ஸா மாநாதிகரண்ய லக்ஷணத்திற்கு ஹானி. உபலக்ஷணரூபமான ப்ரவ்ருத்தி நிமித்தத்தை ஆச்ரயிக்கும் பக்ஷத்தில் பதாந்தரத்திற்கு ப்ரயோஜனமின்மை, ததைக்ஷத இது முதலிய உபக்ரமவிரோதம், உபக்ரமோபக்ரம விரோதம், ச்ருத்யந்தர விரோதம், திரோதானம் முதலிய அனுபபத்திரூப தர்க்கவிரோதம், என பல தூஷணங்கள் உரைக்கப்பட்டிருக்கின்றன. யாதார்த்த ஸாமாநாதிகரண்யமிங்கு ஒப்புக்கொள்ளப்படு மேயாகில் ஸ்வரூபலக்ஷணையும் நஞர்த்தலக்ஷணையும் ஸம்பவிப்பதால் இரண்டு பத ங்களுக்கும் லக்ஷணை முதலிய தோஷங்கள். ப்ரத்யக்ஷத்தால் பாதம் காணப்படாமை யால் வாக்கியத்திற்கு பாதத்தில் கருத்தென்கிற வசனத்திற்கு அனுபபத்தி. பதாந்த ரத்தால் விரோதிதர்மத்தின் உபஸ்தாபனமில்லாததுபற்றி விரோதமில்லாமையால் பாத கல்பனைக்கு அனுபபத்தி என்று அதிகமான இரண்டு தூஷணங்களும் கூறப்பட்டி ருக்கின்றன. அவ்வாறே 'ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம' என்கிற இடத்திலுள்ள ஸாமா நாதிகரண்யமும் ஸர்வபதவாச்யமான ப்ரபஞ்சத்தில் ப்ரஹ்மத்வாகாராரோபணத்தில் கருத்துள்ளதல்ல வென்பதும் யுக்தமல்ல. ஸர்வத்வம் ப்ரஹ்மத்வம் இவ்விரண்டுதர்ம ங்களுக்கும் ஒரு ஆதாரத்திலிருப்பு இல்லாமையால் ஸாமாநாதிகரண்ய லக்ஷணமில்

லாமையாலும் உண்மையாகவே இரண்டு தர்மங்களுக்கும் ஒரு அதிகரணத்தில் நிலை
பெற்றிருத்தல் ஸம்பவிக்கிறதாக இருக்க அதை உபேக்ஷித்து அபாமார்த்தமான ஐக்ய
விஷயத்வத்தை ஆச்ரயிப்பது பொருந்தாததாலும் ஐக்யம் அபாமார்த்த மென்றுசொன்
னால் ஸாமாநாதிகரண்ய வாக்கியத்திற்கு ப்ராமாண்யம் இழக்கப்பட்டதாக ஆகிறது, ப்ர
திபாதிக்கப்படவேண்டுமென்று விருபப்பட்டிருக்கிற வாக்கியம் மித்யையாக இரு
ப்பதால். இவ்வண்ணம் அசித்துக்கும் ப்ரஹ்மத்திற்கும் ஸாமாநாதிகரண்யமானது
ஸத்யத்திற்கும் அந்ருதத்திற்கும் ஐக்யமில்லாமையால் யுக்தமன்று. அந்தக்கரணம்
சிந்மாத்ரம் இவ்விரண்டுக்கும் ஐக்யமில்லாமையால் ‘ ப்ரஹ்மாஹமஸ்மி ’ என்கிற
ஸாமாநாதிகரண்யம் இசையாது. அஹம் சப்தமானது அந்தக்கரணரூபமான உபாதி
விசிஷ்டமான ஜ்ஞப்தியைச் சொல்வதால் அதற்கு உபபத்தி என்று சொல்லப்படு
மேயானால், அல்ல அஹம் சப்தத்திற்கு அந்தக்கரணரூப உபாதியுடன்கூடிய ஜ்ஞப்தி
யைச் சொல்லும் திறமை இல்லாமையால். எப்படி ‘அஹம் இச்சாமி, த்வேஷ்மி ’
என்கிற இடத்தில் இச்சை முதலியதற்கு அஹமர்த்த விசேஷணமாக வ்யவஹாரம்
வருவதால் அஹம் சப்தத்திற்கு அந்தக்கரணரூப உபாதி விசிஷ்டமான இச்சைமுத
லியதைச் சொல்லும் திறமை இல்லையோ; இவ்வண்ணமே அஹம்ஜாநாமி என்
கிற ப்ரயோகத்தால் அந்த அந்தக்கரணோபஹிதமான ஜ்ஞப்தியைச் சொல்லும் வல்ல
மை அஹம் சப்தத்திற்குப் பொருந்தாது. ஜ்ஞப்தியே ஜ்ஞப்தியினால் விசேஷிக்கப்ப
டுகிறதில்லையன்றோ. அறிகிறவன், அறியத்தக்க வஸ்து, இவைகளோடு இணைபுறியாத
ஜ்ஞானம் இவைகளைவிட வேறான ஒன்றொரு முயல்கொம்புபோன்ற ஜ்ஞானமானது
லௌகிகர்களுடைய புத்திக்கு கோசரமல்லாததால் அந்த ஜ்ஞானத்தைச் சொல்லவேண்
டுமென்கிற விருப்பத்தால் அஹம் சப்த ப்ரயோகமானது பொருத்தமுள்ளதாக ஆகாது.
ஆகையால் ‘ அஹம் ப்ரஹ்மாஸ்மி ’ என்கிற ஸாமாநாதிகரண்யம் தகாதது இரண்டு
அந்தக்கரணங்களுக்கும் ஐக்யமில்லாமையாலும், அஹம் முதலிய சப்தங்களுக்கு மூற்
கூறப்பட்டுள்ள நியாயத்தால் அந்தக்கரணோபஹிதமான ஜ்ஞப்திவாசித்வமில்லாமை
யாலும். அஹம் மனுரபவம் இதுமுதலிய ஸாமாநாதிகரண்யமும் பொருத்தமில்லாதது.
ப்ராணன் முதலிய அசேதன வஸ்துவுக்கும் ஜீவனுக்கும் ஐக்யமில்லாமையால் ‘ ப்ரா
ணோஸ்மி ப்ரஜ்ஞாத்மா, அஹமேவேதம் ஸர்வம், மதத்ஸ்ஸர்வமஹம் ஸர்வம்’ இது
முதலியதும் யுக்தமல்ல. அஹம் ஹரி:, ஸர்வமிதம் ஜநார்தன: என்று ஜீவனையும்
ஈச்வரனையும் சொல்லுகிற இரண்டு சப்தங்களுக்கும், அசித்தையும் ஈச்வரனையும சொ
ல்லுகிற இரண்டு சப்தங்களுக்கும் ஸாமாநாதிகரண்யம் யுக்தமல்ல. ஜீவன் ஈச்வரன்
இவ்விரண்டும் ப்ருதிவீ முதலியவைகளும் சிந்மாத்ரத்தில் கல்பிதமாக இருப்பதால் கயி
ற்றில் கல்பிக்கப்பட்டிருக்கிற ஸர்ப்பம், பூமியின் பிளவு. ஜலதாரை, இவைகளைச்சொல்
லுகிற சப்தங்களுக்கு ஒன்றோடொன்று ஸாமாநாதிகரண்யமில்லையன்றோ. அத்யஸ்த
வஸ்துக்களைச் சொல்லுகின்றவைகளான அஹம் ஹரி:ஸர்வம் இது முதலிய சப்தங்
கள் அதிஷ்டானமாக இருக்கிற பரப்ரஹ்ம ப்ரதானங்களாக இருப்பதால் ஒரு அதிகர
ணத்தில் அதாவது ஒரு விசேஷ்யத்தில் இருத்தலென்கிற ஸாமாநாதிகரண்ய லக்ஷ
ணம் பொருத்தமுள்ளதாக ஆகிறதென்று சொல்லப்படுமேயானால் அல்ல. ஆக்ருதி
யைச் சொல்லுகிற சப்தங்கள் வ்யக்திபர்யந்தமாக அர்த்தத்தை உணர்த்துவதுபோல
அத்யஸ்த வஸ்துவைச் சொல்லுகிற சப்தங்கள் அதிஷ்டானபர்யந்தமாக அர்த்தத்தை
உணர்த்துகின்றன வென்கிற வ்யுத்பத்தி இல்லாமையால். ரஜத (வெள்ளி)சப்த
த்திற்கு சுக்தித்வத்திற்கு ஆச்ரயமான த்ரவ்யத்தைச் சொல்லும் சக்தி இருப்பதாக

வ்யுத்பத்தி இல்லையன்றோ. அப்படிப்பட்ட வ்யுத்பத்தியின் இன்மையானது சிப்பித்துண்டு முதலியதில் ரஜதம் முதலிய சப்தங்களுக்கு ப்ரவ்ருத்தி நிமித்தமான ரஜதத்வம் முதலிய தர்மங்களின் இன்மையால் ஏற்படுகிறது. அன்பரே! அத்யஸ்த வஸ்துக்களைச் சொல்லுகிற சப்தங்கள் அதிஷ்டானத்தில் முக்கிய வ்ருத்தியுள்ளவைகள். 'இதம் ரஜதம்' இது வெள்ளி என்கிற வ்ருத்தர்களின் வ்யவஹாரத்தை மூலமாகக்கொண்ட வ்யுத்பத்தி இருப்பதால் என்று கூறப்படுமேயானால் மறுமொழி உரைக்கப்படுகிறது. எந்த அர்த்தத்தைச் சொல்லவேண்டுமென்கிற விருப்பத்தால் சப்தப்ரயோகம இன்றியமையாததாக ஏற்பட்டிருக்கிறதோ அந்த சப்தப்ரயோகத்திற்கு அந்த அர்த்தத்தை உணர்த்தும் திறமை நிச்சயம். அதில் இதுசொல்லத்தக்கது. அத்யஸ்த வஸ்துவைச்சொல்லுகிற சப்தத்திற்கு அதிஷ்டான பர்யந்தம் அர்த்தத்தை உணர்த்தும் திறமையுண்டு என்பதில் ப்ராந்தியுள்ளவர்களின் ப்ரயோகம் மூலமா? அல்லது அறிஞர்களுடைய ப்ரயோகம் மூலமா? முதலாவது பக்ஷம் ஸரியல்ல, ரஜதத்திலும் முன்னிலையிலிருக்கிற வஸ்துவிலும் முறையே இது அத்யாஸத்தால் விஷயீகரிக்கப்பட்டதல்ல. அத்யஸ்த வஸ்துவுக்கு அதிஷ்டானமல்ல என்கிற புத்தியினாலேயே அங்கே ரஜத சப்த ப்ரயோகமிருப்பதுபற்றி அந்த ப்ரயோகமானது அத்யஸ்தத்தைச் சொல்லுகிற சப்தத்திற்கு அதிஷ்டான பர்யந்தமாக அர்த்தத்தை உணர்த்தும் திறமையுண்டென்பதற்கு ஸாதகமாக இல்லாமையால். தேவதத்தத்வதர்மாபாவாஜ்ஞாநத்தினால் ஸம்பவிக்கிற தேவதத்த சப்த ப்ரயோகமானது தேவதத்த சப்தம் யஜ்ஞதத்தனைச் சொல்வதில் மூலமாகாதன்றோ. இரண்டாவது பக்ஷத்திலும் ரஜ்ஜுஸ்ஸர்ப்ப: (கயிர் பாம்பு) என்கிற ப்ரயோகமானது ஸர்ப்பசப்தமானது முன் அநாரோபித புத்தி மூலப்ரயோகாநுவாத ரூபமாக இருப்பதால் ஆரோபிக்கப்பட்டிருக்கிற விஷயத்தில் சக்தியை கல்பிப்பதில் மூலமாக ஆகாது.

அன்பரே! விசேஷ்யத்தை விட்டு இணைபுறியாத விசேஷணவாசக சப்தங்களுக்கு விசேஷ்ய பர்யந்தம் அர்த்தத்தை உணர்த்தும் தன்மை இஷ்டமானது. அத்யாஸத்தால் கல்பிக்கப்பட்ட வஸ்துவானது அதிஷ்டானத்திற்கு அதைவிட்டுப்பிரிக்க முடியாத விசேஷணமாக இருக்கிறது. அது இருந்தால் அவபாஸிப்பதாலும் அதில்லாவிடில் அவபாஸமில்லாமையாலுமென்று சொல்லப்படுமேயானால் அல்ல. வேறு இடத்திலிருக்கிற விசேஷணத்துக்கு முன்னிலையிலிருக்கிற வஸ்துவை உத்தேசித்து அப்ருதக் ஸித்தி இல்லாமையாலும, அக்யாதி பக்ஷத்தில் அத்யஸதம் அதிஷ்டாநம் இவ்விரண்டுமே இல்லாமையாலும், ம்ருஷாவாதி பக்ஷத்தில் மண்ணின் விவர்தமாக இருக்கிற குடம் முதலியதற்கும் அவித்யை என்கிற தோஷத்தினது விவர்தமாக இருக்கிற ரஜதத்திற்கு ஸ்வர்ணத்தைக் குறித்துப்போல முன்னிலையிலிருக்கிற வஸ்துவைக் குறித்து அப்ருதக் விசேஷணத்வ மில்லாமையாலும். ஆகையால் ஜீவேச்வர ஸாமாநாதிகரண்யம் யுக்தமன்று. மேலும், தத்த்வமஸி முதலிய வாக்கியங்களில் ப்ரஹ்மத்திற்குவாசகமாக இருக்கிற பதத்தோடு சேர்க்கைபெற்றிருக்கிற த்வம் முதலிய ஜீவவாசக பதமானது முக்கியார்த்தத்தை இழக்காமையினால் ஸமாநாதிகரணமா? அல்லது அதை இழந்ததனாலா? முதலாவது பக்ஷத்தில் வஸ்துவுக்கு ஸவிசேஷத்வமும், தோஷத்திற்கு அர்ஹமாகவும் அநர்ஹமாகவுமிருக்கிற இரண்டு வஸ்துக்களுக்கும் ஐக்யத்தின் அநுபபத்தியும். இரண்டாவது பக்ஷத்தில் ஜீவன் ப்ருஹ்மம் இந்த இரண்டுக்கும் ஐக்யம் ஸித்தியாது. ஜீவபாவம் மித்யையானதால் அதிஷ்டானமாத்ரத்திற்கு பாரமார்த்த்யமும் ஸித்தியாது. ப்ரக்ருத்யம்சத்தைச் சொல்லக் கருதப்பட்டிருக்கிற அர்த்தைக்யத்தை உணர்த்துவதில் முக்கியமான கருத்துள்ள ஸமாநவிபக்திக்கு

அதனால் சொல்லக்கருதப்பட்டிராத அர்த்தைக்யத்தைப்ரதிபாதிப்பதில் ஸாமர்த்தியமில்லாமையாலும், அதனால் சொல்லக்கருதப்பட்டிராத விசேஷண மித்யாத்வத்தைப்ரதிபாதிப்பதில் ஸாமர்த்தியமில்லாமையாலும். ப்ரஹ்ருஷ்டோ ஜநபத: (தேசமானது அதிக ஸந்தோஷமுள்ளது). அக்நிர்மாணவக: (சிறுவன் நெருப்பு) என்கிற இந்த இடங்களில் ஜநபதத்திற்கும் ப்ரஹர்ஷமுள்ள வஸ்துவுக்கும், அக்னிக்கும் மாணவகனுக்கும் ஐக்யமும, ஜநபதத்வம் அக்னித்வம் இவ்விரண்டும் மித்யையானதால் அவைகளின் அதிஷ்டாநமாத்ரத்திற்கு பாரமார்த்யமும் ஸித்தியாதன்றோ. ஜநபதசப்தத்தால் வாச்யமான அர்த்தத்தைவிட வேறான வெளிப்பட்டிருக்கிற அர்த்தம் லக்ஷணாவ்ருத்தியினால் உணர்த்தப்படுகிறது. த்வம சப்தத்தாலோவென்றால் வாச்யார்த்தத்தினது ஏகதேசமானது லக்ஷணையினால் உணர்த்தப்படுகிறது, ஆதலால் அதற்கு அத்தன்மையை விதிக்கும் பக்ஷத்தில் அதிஷ்டானைக்யமும் விரோதத்தால் ஜீவபாவமித்யாத்வமும் ஸித்திக்கிறதென்று சொல்லப்படுமேயானால் அல்ல. ஜ்ஞாத்ரு பதத்தோடு ஸமாநாதிகரணங்களாக வழங்கப்படுகிற த்வம் முதலிய சப்தங்களுக்கு ஜ்ஞப்தியுடன் வையதிகரண்யத்தினால் ஜ்ஞப்தியை உணர்த்தும் தன்மை ஸித்தியாததால் வாச்யார்த்தத்தினது ஏகதேசத்தில் லக்ஷணை எவ்விதத்தாலும் சொல்வதற்கு ஸாத்தியப்படாது. அது ஸித்தித்தாலும் அதிஷ்டானைக்யமும் இதரமான ஆகாரத்துக்கு மித்யாத்வமும் ஸித்தியாது. தூரத்திலிருக்கிற பாவதத்திற்கு முன்னிலையில எறிகிற நெருப்பைக்கண்டு மலை நெருப்புப்பத்தி எரிகிறது என்று சொன்னால் மலைக்கும் நெருப்புக்கும் ஐக்யமும தாழ்வரை முதலிய வேறு ப்ரதேசங்கள் மித்யையானதால் அதிஷ்டான மாத்ரத்திற்கு பாரமார்த்யமும் ஸித்தியாதன்றோ. ஆகையால் சொல்ல உத்தேசிக்கப்பட்டிருக்கிற ஏகத்வத்திற்கும ஜீவபாவமித்யாத்வத்திற்கும் ஸித்தியில்லை. ஆகையால் எல்லா ஸாமாநாதிகரண்யமும் ம்ருஷாவாதிகளுக்கு விருத்தம்.

ஔபாதிகமான பேதாபேத பக்ஷத்திலும் முக்கியவ்ருத்தியினால் ஸாமாநாதிகரண்யம்பொருத்தமுள்ளதாக ஆகிறதில்லை. அதை நிரூபிக்கிறோம்—அந்த ஔபாதிக பேதாபேதவாதி மதத்தில் ஈஶ்வரனே யன்றோ ப்ரஹ்மம. ஜீவேஶ்வரர்களுக்கும் அசித்ஈஶ்வரர்களுக்கும் க்லேசம் கர்மம் முதலியவைகளுக்குத் தகுதியுற்றிருத்தல் அவைகளுக்கு தகுதியற்றிருத்தல். பரிணாமத்துடன் சேர்ந்திருத்தல், பரிணாமமில்லாமலிருத்தல், இப்படிப்பட்ட விருத்த ஸ்வபாவ ஸம்பந்தத்தால் அவைகளைச் சொல்லுகிற சப்தங்களுக்கு கடம் படம் முதலிய சப்தங்களுக்குப்போல ஸாமாநாதிகரண்யமில்லை. பேதம் போல அபேதமுமிருப்பதால் அதற்கு உபபத்தி என்று பகரப்படுமேயானால், அல்ல. ஏதோ ஒரு ஆகாரத்தால் ஐக்யமிருந்தபோதிலும் ப்ரவ்ருத்தி நிவ்ருத்தபாவாபாவ லக்ஷணமான விசேஷ்யாம்சபேதமானது அறியப்படா நின்றிருக்கையில் ஸமாநவிபக்திக்கு ஐக்ய ப்ரதிபாதநத்தில் ஸாமர்த்தியமில்லாமையால். எக்காரணத்தால் முதலாவதான பதத்தால் அறியப்பட்டிருக்கிற விசேஷ்யத்தைக் காட்டிலும் வேறு பதத்தால் உணர்த்தப்பட்டிருக்கிற விசேஷ்யத்திற்கு கொஞ்சங்கூட பேதத்தை ஸஹியாமலிருக்கிற அபின்னத்வமே ஸாமாநாதிகரண்யத்தால் அறியத்தக்கதாக இருக்கிறதோ அக்காரணத்தாலேயே யன்றோ கண்டம் முண்டம் இரண்டுகளுக்கும் வ்யக்தி ஜாதி ஸ்வரூபத்தாலும், கடம் சராவம் இரண்டுகளுக்கும் கார்யகாரண ஸ்வரூபத்தாலும், கோவுக்கும் வாலுக்கும் அவயவாவயவி பாவத்தாலும், அல்லது ஏகதேச ஏகதேசி பாவத்தாலும், பின்னத்வம் போல அபின்னத்வமும் ஒப்புக்கொள்ளப்படா நின்றிருந்தபோதிலுங்கூட கண்ட: முண்ட:, கட: $ சராவ:, கௌ: § புச்சம் என்று ஸாமாநாதிகரண்யம் கிடையாது.

$ சராவம்—வாணாய் அல்லது மடக்கு § புச்சம்—வால்.

அன்பரே! ψ சித் * அசித் இவ்விரண்டும் ப்ரஹ்மத்தினுடைய ஏகதேசமாதலால் சுக்ல: க்ருஷ்ண: ரக்தஸ்சாயம்பட: (இந்த வஸ்த்ரமானது வெளுப்பாகவும் கருப்பாகவும் சிவப்பாகவுமிருக்கிறது) என்கிற ப்ரயோகத்தில் போல‘வ்யக்தம் விஷ்ணுஸ்தா வ்யக்தம் புருஷ:கால ஏவச’ இது முதலிய இடங்களில் ஸாமாநாதிகரண்யம் பொருத்தமுள்ளதாக ஆகிறது. இவ்வண்ணமல்ல † அவயவாவயவிபாவமிருந்தபோதிலுங்கூட ‡ அங்குளி: புருஷ: (விரல் மனிதன்)என்று ஸாமாநாதிகரண்யம் காணப்படாமையால். அறிஞர்களுக்குள் சிறந்தவரே! சுக்லம் முதலிய சப்தங்களோடு ஒற்றுமை ஏன் இருக்கக்கூடாது?மறுமொழி உரைக்கப்படுகிறது-¶ படத்துக்கு அம்சபேதமும் சுக்லம் முதலிய சப்தங்களுக்கு படசப்த ச்ரவணத்திற்குமுந்தி ஒன்றோடொன்று ஸாமாநாதிகரண்யத்தினது இன்மையும் இருந்தபோதிலுங்கூட § சௌக்ல்யம் முதலியவைகள் அப்ருதக்ஸித்தவிசேஷணங்களாக இருப்பதால் விசேஷ்ய பர்யந்தம் அர்த்தத்தை உணர்த்துகிற சுக்லம் முதலிய சப்தங்களோடு ஒன்று சேர்ந்து சித்ர சப்தத்தால்போல் சொல்லப்பட்டிருக்கிற விசேஷ்யத்தைக்காட்டிலும் பட சப்தத்தால் சொல்லப்பட்டிருக்கிற விசேஷ்யத்திற்கு கொஞ்சமேனும் வேற்றுமை இல்லாமையால் ஸாமாநாதிகரண்யம். வெட்டுதல் முதலிய செய்கைகளுக்கு உரித்தான கை முதலிய அவயவங்களுக்குஅவயவியைக்குறித்து அப்ருதக்ஸித்தவிசேஷணத்வம் இல்லை. வெட்டுதல் முதலிய செய்கையிலும் இந்த்ரியங்கள் நாசமடையாமலிருப்பதாலும் அந்த அந்த $ கோளகங்கள் அந்தந்த இடத்தைவிட்டு நழுவாத ஸ்வரூபத்துடன் கூடி இருப்பதாலும். இவ்வண்ணமாகில் அறுக்கப்பட்ட கை முதலிய அவயவங்களுக்குப்போல உயிர் துறந்த சரீரத்துக்கும் சிதறுமலும் நழுவாமலுமிருக்கிற ஸ்வரூபம் காணபபடுவதால் ஆத்மாவைக்குறித்து அதற்கு அப்ருதக்ஸித்தியானது ஏற்படலாமென்று சொல்லப்படுமேயானால்,அல்ல. சரீரமென்று பெயர் பெற்ற @ பூத ஸங்காதத்திற்கு சைதில்யம் ஏற்பட்ட பிறகே ஜீவாத்மா சரீரத்தைவிட்டு உத்க்ரமிப்பதால். ஜீவாத்மா சரீரத்தைவிட்டுப் போன பிறகு அறிந்துபோன வஸ்த்ரத்தில் வஸ்த்ரமென்கிற புத்திபோல முன் சரீரத்தில் சரீரபுத்தியானது ப்ராந்திரூபமாக ஏற்படுகிறது. வெட்டுகிற ஸமயத்தில் சிதிலமாகாத அம்சங்களுடன்கூடின கை முதலிய அவயவங்களுக்கோவென்றால் · வெட்டின பிறகு சைதில்யம் என்பது விசேஷம். ஆகையால் அதைச்சொல்லுகிற சப்தங்கள் ஹஸ்தம் முதலியதைமாத்திரம் சொல்லுகிற தன்மைவாய்ந்ததாகஇருப்பதால். ஹஸ்தம் முதலிய அவயவங்களின் ஸங்காத ஸ்வரூபியான அவயவிக்கு ஹஸ்தம முதலியஅவயவங்களைக்காட்டிலும் வேற்றுமை இருப்பதால். வேற்றுமையின் இன்மையைக்காட்டுகிற ஏகத்வமானது ப்ரமாணவிருத்தமாதலால் ஸமாந விபக்தியானது அதைப்ரதிபாதிப்பதற்குச் சக்தியுள்ளதாக ஆகாது பெரியோரே! ஹஸ்தத்வம் முதலியதர்மங்கள் சௌக்ல்யம முதலியவைகளைப்போல புரிக்க முடியாதவைகளாக கடத்தினுடையது போல சரீரம் முதலியவற்றின் ஒரு பக்கத்தில் அதாவது ஒரு பாகத்திலிருக்கின்றன.

ψ சித்—அறிவுள்ள வஸ்து, * அசித்—அறிவில்லாதது. ஏகதேசம்—அவயவம். † அவயவி—அவயவமுள்ளது. ‡ அங்குளி—விரல். ¶ படம்—வஸ்திரம். § சௌக்ல்யம்—வெண்ணிறம். $ கோளகம்—அமைக்கப்பட்டிருந்த ஸ்தானம், @ ஸங்காதம்—சேர்க்கை..

ஆகலால் சுக்ல:க்ருஷ்ண:பட: என்பதுபோல ஹஸ்த: பாத: மனுஷ்ய: என்று சொல்வது யுக்தமாகும். யுக்தியை அறியாமையால் உலகம் ப்ரயோகிக்கிறதில்லை மறுமொழி கூறப்படுகிறது. உலகத்திலுள்ள ஜனங்கள் விசேஷித்த அறிவுள்ளவர்களாக இருந்தபோதிலுங்கூட யுக்தியை அறியாதவர்களாக இருப்பதால் சுக்லம்முதலிய சப்தங்களை விசேஷ்ய பர்யந்தம் அர்த்தத்தை உணர்த்தும் தன்மை பொருந்தியவைகளாக ப்ரயோகிக்கிறார்கள். ஹஸ்தம் முதலிய சப்தங்களை அவயவிபர்யந்தங்களாக ப்ரயோகிக்கிறார்களில்லை. ஆகையால் அபிஜ்ஞர்களுடையவும் அநபிஜ்ஞர்களுடையவும் ப்ரயோகங்களுக்கு அனுகுணமாக வ்யவஸ்தாபகமான ப்ரமாணம் யுக்தி சொல்லத்தக்கது. அதைச்சொல்லுகிறார். சில அப்ருதக்ஸித்த தர்மங்கள் சிலவற்றின் ஏகதேசத்திலேயே தவறாமல் இருக்கின்றன, சிலது ஓரிடத்திலேயோ வேறு இடத்திலேயோ நியமமில்லாமலிருக்கின்றன. அவற்றுள் தவறாமல் ஏகதேசத்திலிருக்கிற தர்மவாசக சப்தங்கள் அந்த அந்த ஏகதேச பூதமாக இருக்கிற த்ரவ்யமாத்திரத்திலிருக்கின்றன. ஏகதேசமென்கிற ஜ்ஞாநத்தை தவறாமல் உண்டுபண்ணுவதனால் ஹஸ்தம் முதலியவைகள் ஏகதேசங்களென்றே அறியப்படுகிறதுகளன்றோ, ஏகதேச வ்ருத்தி நியமமில்லாத தர்மவாசக சப்தங்கள் ஏகதேசத்வ ப்ரதீதி நியமத்தை இழந்து விசேஷ்யத்தில் வர்த்திக்கின்றன. ஆகையால் சுக்லம் முதலிய சப்தங்களால் ஏகதேசத்தைவிட்டு அதற்கு ஆச்ரயமாத்திரத்தை உபஸ்தாபிப்பதால் அதனால் உபஸ்தாபிக்கப்பட்டிருக்கிற ஆச்ரயத்தைக்காட்டிலும் படத்வாச்ரயத்திற்கு வேற்றுமை இல்லாமையால் படசப்தத்திற்கு ஸாமாநாதிகரண்யம் யுக்தமானது. ஏகதேசமாத்திரத்தை உணர்த்துகிற ஹஸ்தம் முதலிய சப்தங்களால் ஏகதேசியானது உணர்த்தப்படாமலிருப்பதுபற்றி ஹஸ்தம் முதலிய ப்ராதிபதிகங்களால் அறியப்பட்டிருக்கிற விசேஷ்யத்தைக் காட்டிலும் வேறானதால் ஸாமாநாதிகரண்யம் யுக்தமன்று. ஏதாவது ஓரிடத்தில் ஸாமாநாதிகரண்யமிருக்குமேயாகில் அந்த இடத்தில் ஹஸ்தம் முதலிய சப்தத்திற்கு அவயவியில் லக்ஷணையினாலாவது மனுஷ்யன் முதலிய சப்தங்களுக்கு அவற்றின் ஏகதேசத்தில் லக்ஷணையினாலாவது ப்ராதான்யம் முதலியதில் அபிப்ராயத்தினால் உபசாரத்தாலாவது அது இருக்கலாம். “சித்ரம் ஆகாசம்” என்கிற இடத்திலோவென்றால், ஆகாசத்வத்திற்கு ஸமுதாய வ்ருத்தித்வமில்லாமையால் சித்ரத்தில் புஷ்கலமாக இருப்பதால் ஏகதேசத்தில் லக்ஷணை இல்லை. ஜீவத்வம் அசித்த்வம் முதலிய தர்மங்கள் உன்மதத்தில் ப்ரஹ்மத்துக்கு நியதமான ஏகதேசத்திலிருப்புள்ளவைகளாதலால் அவைகளைச் சொல்லுகிற சப்தங்களோடு ஈப்வரனைச்சொல்லுகிற சப்தங்களுக்கு முக்கிய வ்ருத்தியினால் ஸாமாநாதிகரண்யமில்லை

ஐயனே! தலை, கை, வயிறு, கால், சரீரம் என்று ப்ரயோகம் காணப்படுகிறது. உண்மை, ஏராளமான எல்லா அவயவங்களையும் எடுத்துக்கூறுமிடத்தில் அவயவியான சரீரமானது அந்த அவயவங்களை விட வேறிட்டதாக இல்லாமையால் ஸாமாநாதிகரண்யம் ஸம்பவிக்கிறது, ஒவ்வொன்றுக்கும் ஸாமாநாதிகரண்யமோவென்றால் ஏகதேசத்தில் லக்ஷணை ப்ரஸங்கிப்பதால் அமுக்கியமே. இவ்வண்ணமாக சித்துக்களையும் அசித்துக்களையும் சொல்லுகிற சப்தங்களுக்குள் ஒவ்வொன்றுக்கும் ஈப்வரனைச்சொல்லுகிறபதத்தோடு ஸாமாநாதிகரண்யமானது அயுக்தமாக ஆகும். ஏகதேசங்களைச்சொல்லுகிற சப்தங்களுக்கு ஏகதேசியினிடம் சக்தி இல்லாமையால். ‘வ்யக்தம் விஷ்ணுஸ்ததா வ்யக்தம், ஜ்யோதீம்ஷி விஷ்ணுர் புவநாநிவிஷ்ணு:, பூதாநி விஷ்ணுர் புவநாநி விஷ்ணு:” என்றல்லவோ தனித்தனியாக ஸாமாநாதிகரண்யம். அவ்வண்ணமாகவே அஹம் ஸர்வம் என்று அசித்தையும் ஜீவனையும் சொல்லுகிற இரண்டு பதங்களுக்கும் ஸாமாநாதிகரண்யம் யுக்தமன்று. எல்லா இடங்களிலும் அமுக்யையான வ்ருத்தி

யினால் ப்ருஹ்மம் உணர்த்தப்படுவதனால் ஸாமாநாதிகரண்யத்தில் அதே தோஷம். முக்கியமான ஸாமாநாதிகரண்யம் ஸம்பவிக்கிறதாக இருக்க அதை விட்டு அமுக்கிய வ்ருத்தியை ஆச்ரயிப்பது ந்யாயமல்லாததால், ஸ்வபாவஸித்தமான பேதாபேதபக்ஷத்திலும் போக்தா- போக்யவஸ்து- நியந்தா இம்மூன்றும் ப்ரஹ்மத்தினுடைய அம்சமென்று ஒப்புக்கொள்ளப் பட்டிருப்பதால். அசித்துக்கும் ஜீவனுக்கும், அசித்துக்கும் ஈச்வரனுக்கும், ஜீவனுக்கும் ஈச்வரனுக்கும், ஸாமாநாதிகரண்யமானது 'கட:சராவ:' என்பதுபோல் பொருத்தமில்லாதது என்கிற இந்த விஷயமானது நிலைபெற்றது. கொஞ்சமேனும் விசேஷ்ய பேதத்தை ஸஹியாததாகவே இருக்கிற அபேதமானது ஸாமாநாதிகரண்யத்தால் அறியத்தக்கதாக இருப்பதால் அவைகளுக்கு ப்ரஹ்மஸாமாநாதிகரண்யமும் சிந்திக்கத்தக்கது. ப்ரஹ்மத்தைச் சொல்லுகிற பதங்களுக்கு ஸத்த்வம் த்ரவ்யத்வம் முதலிய ஸாதாரணாகாரம ப்ரவ்ருத்தி நிமித்தமாக ஆகுமேயானால் தத்த்வமஸி என்று சொன்னால் நீ ஸத்தாக இருக்கிறாய், நீ த்ரவ்யமாக இருக்கிறாய், என்று சொல்லப்பட்டதாக ஆகலாம். அப்பொழுது உபதேசம் பயனற்றது. ஒருவனாவது நான் ஸத்தல்லவென்றாவது நான் த்ரவ்யமல்லவென்றாவது நினைக்கிறானில்லையன்றோ. வேறு ஸத்தோடு ஏகத்வமானது உபதேசிக்கத்தக்கதென்று சொல்லப்படுமேயானால் அல்ல. அந்த ஸாமாநாதிகரண்யமானது அறியத்தக்கதாக இல்லாமையால். ஸாமாநாதிகரண்யமானது முன் சொல்லப்பட்டிருக்கிற விசேஷ்யத்திற்கு வேறுபதத்தால் உணர்த்தப்பட்டிருக்கிற விசேஷணைவயத்தை அறிவிக்கிறதேஒழிய விசேஷணத்தோடு அன்வயித்திருக்கிற வஸ்த்வந்தரத்தின் ஐக்யத்தை அறிவிக்கிறதில்லையன்றோ. ''ப்ராஹ்மணஸ்த்வமஸி'' (நீப்ராஹ்மணனாக இருக்கிறாய்,) என்று சொல்லப்பட்டால், த்வம் சப்தத்தால் குறிக்கப்பட்டிருப்பவனுக்கு வேறு ப்ராஹ்மணனோடு ஐக்யமானது சொல்லப்பட்டதாக ஆகிறதில்லையன்றோ. பின்னையோ அவனுக்கு ப்ராஹ்மணத்வ விசேஷணத்தோடு வைசிஷ்ட்யமே ப்ரதிபாதிக்கப்பட்டதாக ஆகிறது. ஆகையால் சொல்வதற்கு விரும்பப்பட்டிருக்கிற ஐக்யத்தின் ஸித்தி இல்லாமையால் உபதேசம் பயனற்றதே. அம்சவிசேஷண ஸாதாரணாகாரம் ப்ரவ்ருத்திநிமித்தமாகில், அப்பொழுது ப்ரஹ்மம் முதலிய சப்தங்களுக்கு அதைவிட வேறான அம்சவாசியான பதத்துடன் ஸாமாநாதிகரண்யத்தில் விரோதம் உண்டாகும். எப்பொழுது நிரதிசய ப்ருஹத்த்வம் ப்ரவ்ருத்தி நிமித்தமோ அப்பொழுது தத்த்வமஸி என்று சொன்னால் நிரதிசய ப்ருஹத்தாக நீ இருக்கிறாய் என்று சொல்லப்பட்டதாக ஆகும். அப்பொழுது அணுவாக இருக்கிற ஜீவனுக்கு நிரதிசய ப்ருஹத்த்வ குண விரோதம். நீ நிரதிசயமான ப்ருஹத் வஸ்துவின் அம்சமென்று அர்த்தங்கொண்டால் ஏகதேசத்தில் லக்ஷணை. ப்ரஹ்ம சப்தத்திற்கு ப்ருஹத்தாக இருக்கிற வஸ்துவின் ஏகதேசம் முக்கியார்த்தமல்லவன்றோ. இவ்வண்ணம் அஸாதாரணமாக இருக்கிற வேறு ஆகாரத்தை ப்ரவ்ருத்தி நிமித்தமாகக் கொண்டாலும் அநுபபத்தியானது காணத்தக்கது. ஆகையால் மூன்று குத்ருஷ்டிகளுக்கும் விருத்தமாக இருக்கிற ஸாமாநாதிகரண்யமானது பாஷ்யகாருடைய பக்ஷத்திலேயே முக்கியம். வேறு வ்யாக்யானங்களில் சொல்லப்பட்டிருக்கிற நிர்வாஹத்தைவிட உம்மால் சொல்லப்பட்டிருக்கிற நிர்வாஹத்திற்கு என்ன வேற்றுமை? மேலும், ஆத்மபேதம் ஸித்தித்தாலன்றோ சரீர சரீரிபாவம், அதே இல்லை. காலவிசேஷத்தில், ஐக்யம் ப்ரதிபாதிக்கப்பட்டிருப்பதால். 'புருஷஸ்சாப்யுபாவேதௌ லீயேதே பரமாத்மநி; ஸகாசாதாத்ம நஸ்தத்வதாத்மாந: ப்ரபவந்திஹி' இது முதலிய வாக்கியங்களால் சித் அசித் இரண்டுக்கும் உத்பத்தியும் ப்ரளயமும் ப்ரதிபாதிக்கப்பட்டிருப்பதாலும் கார்யம் காரணம் இரண்டும் ஒரே த்ரவ்யமாக இருப்பதாலும் ஒரே வஸ்துவானது சரீரமாகவும் சரீரியாகவும் ஆகாதன்றோ.

[illegible] தத்ர — அசித்வஸ்துந: சித்வஸ்துந: பரஸ்ய ச ப்ரஹ்மணோ போக்யத்வேந போக்த்ருத்வேந ப்ரேரித்ருத்வேந ச ஸ்வரூபவிவேகமாஹு: காஶ்சந ஶ்ருதய: — "அஸ்மாந்மாயீ ஸ்ருஜதே விஶ்வமேதத்தஸ்மிம்ஶ்சாந்யோ மாயயா ஸந்நிருத்த:" "மாயாம் து ப்ரக்ருதிம் வித்யாந்மாயிநம் து மஹேஶ்வரம்" "க்ஷரம் ப்ரதாநமம்ருதாக்ஷரம் ஹர: க்ஷராத்மாநாவீஶதே தேவ ஏக:"; அம்ருதாக்ஷரம் ஹர இதி போக்தா நிர்திஶ்யதே, ப்ரதாநமாத்மநோ போக்யத்வேந ஹரதீதி ஹர: । "ஸ காரணம் கரணாதிபாதிபோ ந சாஸ்ய கஶ்சிஜ்ஜநிதா ந சாதிப:" "ப்ரதாநக்ஷேத்ரஜ்ஞபதிர்குணேஶ:" "பதிம் விஶ்வஸ்யாத்மேஶ்வரம் ஶாஶ்வதம் ஶிவமச்யுதம்" "ஜ்ஞாஜ்ஞௌ த்வாவஜாவீஶநீஶௌ" "நித்யோ நித்யாநாம் சேதநஶ்சேதநாநாமேகோ பஹூநாம் யோ விததாதி காமாந்" "போக்தா போக்யம் ப்ரேரிதாரம் ச மத்வா" "தயோரந்ய: பிப்பலம் ஸ்வாத்வத்த்யநஶ்நந்நந்யோ அபிசாகஶீதி" 'ப்ருதகாத்மாநம் ப்ரேரிதாரம் ச மத்வா ஜுஷ்டஸ்ததஸ்தேநாம்ருதத்வமேதி" "அஜாமேகாம் லோஹிதஶுக்லக்ருஷ்ணாம் பஹ்வீம் ப்ரஜாம் ஜநயந்தீம் ஸரூபாம் । அஜோ ஹ்யேகோ ஜுஷமாணோऽநுஶேதே ஜஹாத்யேநாம் புக்தபோகாமஜோऽந்ய:" "ஸமாநே வ்ருக்ஷே புருஷோ நிமக்நோऽநீஶயா ஶோசதி முஹ்யமாந: । ஜுஷ்டம் யதா பஶ்யத்யந்யமீஶமஸ்ய மஹிமாநமிதி வீதஶோக:" இத்யாத்யா:॥

ஸ்ம்ருதாவபி — "அஹங்கார இதீயம் மே பிந்நா ப்ரக்ருதிரஷ்டதா ॥ அபரேயமிதஸ்த்வந்யாம் ப்ரக்ருதிம் வித்தி மே பராம் । ஜீவபூதாம் மஹாபாஹோ யயேதம் தார்யதே ஜகத்॥" "ஸர்வபூதாநி கௌந்தேய ப்ரக்ருதிம் யாந்தி மாமிகாம்। கல்பக்ஷயே புநஸ்தாநி கல்பாதௌ விஸ்ருஜாம்யஹம் ॥ ப்ரக்ருதிம் ஸ்வாமவஷ்டப்ய விஸ்ருஜாமி புந: புந: । பூதக்ராமமிமம் க்ருத்ஸ்நமவஶம் ப்ரக்ருதேர்வஶாத் ॥" "மயாத்யக்ஷேண ப்ரக்ருதி: ஸூயதே ஸசராசரம் । ஹேதுநாநேந கௌந்தேய ஜகத்விபரிவர்த்ததே ॥" "ப்ரக்ருதிம் புருஷம் சைவ வித்த்யநாதீ உபாவபி ।" "மம யோநிர்மஹத்ப்ரஹ்ம தஸ்மிந் கர்பம் ததா

दृष्टेः । सर्वभूतानां तदा भवति भारत ॥" इति ॥
जगदभिन्ननिमित्तं महद्ब्रह्म स्वीयं प्रकृत्याख्यं भूतसू-
क्ष्मचिदचिद्वस्तु यत्; तस्मिंश्चेतनावस्थं गर्भं यत्संयोजयति,
ततो व्यष्टिसमष्टिरूपं देवादिस्थावरान्तनानाविधप्राणिनां
सर्वभूतानां सृष्टिर्भवतीत्यर्थः ॥

ஸ்ரீபாஷ்யம்—

இந்த இடத்தில் இது உண்மையென்று அறியத்தக்கது. மேலே உதாஹரிக்கப்படப்போகிற சில ச்ருதிகள் அசித் வஸ்துவுக்கும், சித் வஸ்துவுக்கும் பரப்ரஹ்மத்துக்கும் முறையே போக்யத்வம் போக்த்ருத்வம் ஈசித்ருத்வம் என்கிற அஸாதாரண குணங்களால் ஸ்வரூபத்தின் பாகுபாட்டைக் கூறுகின்றன. ‘அஸ்மாந்மாயீ ஸ்ருஜதே விச்வமேதத்தஸ்மிம்ஶ்சாந்யோ மாயயா ஸந்நிருத்த:’ (இதன் பொருள்—ஆச்சர்ய சக்தியுள்ள பரமபுருஷன் இவ்வுலகமனைத்தையும் இந்த ப்ரக்ருதியினின்று உண்டுபண்ணுகிறான். அதில் அந்த ப்ரக்ருதி கார்யமான ஸம்ஸாரத்தில் பரம புருஷனைவிட வேறாக இருக்கிற பாதந்த்ரசேதனனான ஜீவன் மாயையினால் (கர்ம பந்தத்தால்) கட்டுப்படுத்தப் பட்டிருக்கிறான்.) மாயாந்து ப்ரக்ருதிம் வித்யாந்மாயிநந்து மஹேச்வரம் - க்ஷரம் ப்ரதானமம்ருதாக்ஷரம் ஹர: க்ஷராத்மாந வீஶதே தேவ ஏக:’ இவைகளின் பொருள்- ப்ரக்ருதியை மாயையென்றும் மஹேச்வரனை மாயையையுடையவ னென்றும் அறியவேண்டும். க்ஷரமென்பது ப்ரதானம்-ப்ரதானத்தை தனக்கு போக்யமாக ஏற்றுக்கொள்பவனான ஜீவாத்மா அக்ஷர சப்தவாச்யன், அழிவற்றவன், நிகரில்லாதவனான பரமபுருஷன் ப்ரதானத்திற்கும் ஜீவாத்மாவுக்கும் §நியந்தாவாக இருக்கிறான்) “அம்ருதாக்ஷரம் ஹர:” என்று ☫போக்தா நிர்தேசிக்கப்படுகிறான். ப்ரதானத்தை தனக்கு போக்ய வஸ்துவாக ஸ்வீகரிப்பவனாதலால் ஜீவாத்மா ஹரன் என்று சொல்லப்படுகிறான். ‘ஸகாரணம் கரணாதிபாதிபோ ந சாஸ்ய கஶ்சிஜ்ஜநிதா ந சாதிப:” (அந்த பரமபுருஷன் எல்லாவற்றுக்கும் காரணம். இந்திரியங்களுக்கு அதிபதியாக இருக்கிற ஜீவனுக்கும் அவன் தலைவன். இவனை உண்டு பண்ணினவன் யாருமில்லை. இவனுக்குத் தலைவன் ஒருவனுமில்லை) ‘ப்ரதான க்ஷேத்ரஜ்ஞபதிர் குணேச:’ - ப்ரக்ருதிக்கும் க்ஷேத்ரஜ்ஞ னென்கிற ஜீவனுக்கும் அவன் இறைவன். குணங்களால் பெருமை வாய்ந்தவன். பதிம்விச்வஸ்யாத்மேச்வரம் சாச்வதம் சிவமச்யுதம் (உலகமனைத்துக்கும் ரக்ஷகனாக இருப்பவனும் தனக்குத்தானே இறைவனாக இருப்பவனும் நித்யனும் மங்களகரனும் பக்தர்களை ரக்ஷிக்கிற விருதத்தினின்று நழுவாதவ

---

§ நியந்தா—அதிபதி அல்லது தலைவன். ☫ போக்தா—அனுபவிக்கிறவன்.

னும்) ஜ்ஞாஜ்ஞௌ த்வாவஜாவீசநீசௌ. (ஜ்ஞாநாச்ரயனுகவும் ஜடமாக வுமிருக்கிற ஜீவனும் ப்ரக்ருதியும் அஜ சப்தத்தால் சொல்லப்படுகின்றன இவ்விரண்டுக்குள் ஜீவன் ப்ரக்ருதிக்கு போக்தாவாக இருப்பதால் ஈசன். அவனுக்கு உடன்பட்டிருப்பதால் ப்ரக்ருதியானது பாதந்த்ரவஸ்து). நித்யோ நித்யாநாம் சேதநஸ்சேதநாநாம் ஏகோபஹூநாம்யோவிததாதி காமான் (ஒரு நித்யனுன சேதனன் நித்யர்களான அனேக சேதனர்களுக்கு காமங்களை (அபீஷ்டங்களை) உண்டு பண்ணுகிருன்). போக்தா போக்யம் ப்ரேரிதாரஞ்சமத்வா- (கர்மபலன்களுக்கு போக்தாவாக இருக்கிற ஜீவன் போக்யமான ப்ரக்ருதியையும் நியந்தாவான பரமாத்மாவையும் நினைத்து) தயோரந்ய: பிப்பலம் ஸ்வாத்வத்தி அநஸ்நன்னன்யோऽபிசாகசீதி- (அந்த இரண்டு சேதனங்களுக்குள் ஒரு சேதனன் அதாவது ஜீவன் கர்மபலனைருசியுடன் அனுபவிக்கிருன். மற்றொருவன் அதாவது பரமாத்மாவானவன் கர்மபலனை அனுபவியாமல் ஸாக்ஷியாக இருந்துகொண்டு அபிமுகமாகப்ரகாசிக்கிருன்)- ப்ருதகாத்மாநம் ப்ரேரிதாரஞ்சமத்வா ஜுஷ்டஸ்ததஸ்தேநாம்ருதத்வமேதி- (ஜீவனையும் ப்ரேரகனுன பரமாத்மாவையும் வேறுபட்டிருப்பவர்களென்று எண்ணி உபாஸித்து அப்படிப்பட்ட உபாஸனத்தினுல் ப்ரஸன்னனுனபரம புருஷனுல் ப்ரீதியுடன் கடாக்ஷிக்கப்பட்டிருக்கிற ஜீவன் மோக்ஷத்தை அடைகிருன்)- அஜாமேகாம் லோஹித சுக்லக்ருஷ்ணும் பஹ்வீம்ப்ரஜாம் ஜநயந்தீம் ஸரூபாம் - அஜோஹ்யேகோ ஜுஷமாணோநுசேதே ஜஹாத்யேநாம் புக்த போகாமஜோன்ய: - (சிவப்பு, வெளுப்பு கருப்பு நிறங்களுள்ளதும் அதாவது ரஜஸ் ஸத்வம் தமஸ் என்கிற முக்குணங்களுள்ளதும் தனக்கு ஸமானமான அனேக கார்யங்களை உண்டுபண்ணுகிறதும் ஒப்பற்றதும் நித்யமாயுமிருக்கிற ப்ரக்ருதியை பிறப் பில்லாதவனுன ஒருவன் ஜீவன் ப்ரீதியுடன் கூடினவனுக அனுபவிக்கிருன். ஜீவவர்க்கங்களாலனுபவிக்கப்படும போகங்களுக்கு ஆஸ்பதமாக இருக்கிற இந்த ப்ரக்ருதியைபிறப் பிறப்பில்லாதவனுன மற்றொருவன் அதாவது பரமாத்மா கொஞ்சமேனும் தனக்கு ஸம்பந்தமின்றி இழந்து விடுகிருன்). 'ஸமானே வ்ருக்ஷே புருஷோ நிமக்னோ அநீசயா சோசதி முஹ்யமாந:-ஜுஷ்டம் யதாபஸ்யத்யந்யமீசமஸ்ய மஹிமாநமிதி வீதசோக: (ஒரு சரீரத்திற்குள் ஜீவன் ப்ரவேசியாநின்றவனுக ப்ரக்ருதியினுல் மயக்கப்படாநின்றுகொண்டு அதில் பரமபோக்ய புத்தியினுல் அமிழ்ந்து துக்கததை அனுபவிக்கிருன். அவ்வண்ணம் துக்கானுபவமுள்ள ஜீவன் எப்பொழுது தன்னைவிட விலக்ஷணனுகவும் தனக்கு நியந்தாவாகவுமிருக்கிற அந்த பரம புருஷனையும் அவனுடைய மஹிமையையும் நன்கு உணர்கிருனே அப்பொழுது இவன் ஸம்ஸாரதுக்கத்தை இழந்தவனுக ஆகிருன்.)

ஸ்ம்ருதியிலுங்கூட அதாவது பகவத்கீதையிலுங்கூட 'அஹங்கார இதீயம்மே பின்னு ப்ரக்ருதி ரஷ்டதா-அபரேயமிதஸ்த்வந்யாம் ப்ரக்ருதிம் வித்திமே பராம் - ஜீவபூதாம் மஹாபாஹோ யயேதம் தார்யதே ஜகத் - ஸர்வ

பூதாநி கௌந்தேய ப்ரக்ருதிம் யாந்தி மாமிகாம்— கல்பக்ஷயே புநஸ்தாநி கல்பாதௌ விஸ்ருஜாம்யஹம், ப்ரக்ருதிம் ஸ்வாமவஷ்டப்ய விஸ்ருஜாமி புந:புந:- பூதக்ராமமிமம் க்ருத்ஸ்நமவசம் ப்ரக்ருதேர்வசாத்— மயாத்யக்ஷேண ப்ரக்ருதிஸ்ஸூயதே ஸசராசரம்- ஹேதுநாநேந கௌந்தேய ஜகத்விபரிவர்த்ததே- ப்ரக்ருதிம் புருஷஞ்சைவ வித்த்யநாதீ உபாவபி' மம யோநிர்மஹத் ப்ரஹ்ம தஸ்மிந் கர்ப்பம் ததாம்யஹம்- ஸம்பவஸ்ஸர்வபூதாநாம் ததோ பவதி பாரத- என்று- (இந்தஉலோகங்களுக்கு ப்பொருள்- கந்தம் முதலிய குணங்களுடன் கூடினப்ருதிவீ ஜலம்முதலிய பஞ்சபூதஸ்வரூபத்தாலும் மனதுமுதலிய பதினொருஇந்திரியஸ்வரூபத்தாலும் மஹதஹங்கார ரூபத்தாலும் எட்டுவிதமாக பிரிக்கப்பட்டிருக்கிற ப்ரக்ருதியை என்னுடையதென்று அறிவாயாக- இது என்னுடைய அப்ராதான ப்ரக்ருதி. ஹேபாருபல முள்ளவனே! இந்தசேதந போக்யையான அசேதந ப்ரக்ருதியைக்காட்டிலும் விஜாதீயமான ஆகாரத்துடன்கூடியதும் அந்த அசேதந ப்ரக்ருதிக்கு போக்த்ரியாக இருப்பதால் ப்ரதானமாக இருப்பதும் சேதநஸ்வரூபிணியுமான ப்ரருதியையும் என்னுடையதென்று அறிவாயாக- எதனால் இந்த அசேதநமாக இருக்கிற உலகமனைத்தும் தரிக்கப்படுகிறதோ- ஹே குந்தீபுத்ர! ஸ்தாவர ஜங்கமாத்மகமான எல்லாபூதங்களும் எனக்கு சரீரமாக இருப்பதும் தமஸ் சப்தத்தால் சொல்லத்தக்கதும் நாமரூபவிபாகாநர்ஹமாகவுமிருக்கிற என்னுடைய ப்ரக்ருதியை நான்முகனுடைய ஆயுள் முடிவடையும் தருணத்தில் (என் ஸங்கல்பத்தால்) அடைகின்றன அதாவது ஸ்தூலமான ப்ரபஞ்சமனைத்தும் ஸூக்ஷ்மமான ப்ரக்ருதியில் லயமடைகின்றன. நான் அவைகளை மீண்டும் கல்பத்தின் தொடக்கத்தில் ஸ்ருஷ்டிக்கிறேன். என்னுடையதாகவும் விசித்ர பரிணாமமுள்ளதுமான, ப்ரக்ருதியை எட்டு விதமாக பரிணமிக்கச்செய்து ஜகன்மோஹினியாகவும் குணமயியாகவுமிருக்கிற ப்ரக்ருதிக்கு வசப்பட்டிருத்தலால் அஸ்வதந்த்ரமாக இருக்கிற தேவதிர்யங் மனுஷ்ய ஸ்தாவராத்மகமாக நான்குவிதமாய் பிறிவடைந்திருக்கிற இந்த பூதக்ராம மனைத்தையும் நான் மறுபடியும் மறுபடியும் அந்த அந்த ஸமயத்தில் ஸ்ருஷ்டிக்கிறேன். ஆதலால்க்ஷேத்ரஜ்ஞர்களுடைய கர்மங்களுக்குத்தக்கபடி என்னுடைய ப்ரக்ருதியானது ஸத்யஸங்கல்பனும தலைவனுமான என்னால் கடாக்ஷிக்கப்பட்டதாக இருந்துகொண்டு சராசரங்களுடன்கூடின உலகத்தை உண்டுபண்ணுகிறது. ஹேகுந்தீநந்தன! இந்தக்ஷேத்ரஜ்ஞ கர்மாநுகுணமான என்னுடைய ஈக்ஷணரூபமான ஹேதுவினாலன்றோ உலகமானது அடிக்கடி தோன்றுவதும் மறைவதுமாக இருந்துகொண்டு சுழன்று வருகிறது. ப்ரக்ருதி, புருஷசப்தவாச்யனான ஜீவன், இவ்விரண்டையும் அநாதியாக இருப்பவைகளாக அறிவாயாக. பரதவம்சத்தினுதித்தவனே! ஸ்தூலரூபமாக இருக்கிற எல்லா உலகத்துக்கும் காரணபூதமான என்னுடைய காரணாவஸ்தையிலுள்ள தமஸ் சப்தத்தால் சொல்லத்தக்க யாதொரு ஸூக்ஷ்ம ப்ரக்ருதியுண்டோ அந்த அசேதந ப்ரக்ருதியினிடம் சேதந புஞ்ஜ ரூபமான கர்ப்பத்தைநான்

உண்டு பண்ணுகிறேன். அதனால் பிரமன் முதலாகவும் புல் ஈறாகவுமிருக்கிற எல்லா பூதங்களும் உண்டாகின்றன. ஜகத்துக்குக்காரணமாக இருக்கிறதும் மஹத்தான ப்ரபஞ்சரூபமாக பரிணாமசக்தியுள்ளதுமான என்னுடைய ப்ரக்ருதி என்று பெயருள்ள பூத ஸூக்ஷ்மரூபமான யாதொரு அசித் வஸ்துவுண்டோ அதில் சேதநனென்று பெயருள்ள கர்ப்பத்தை நான் சேர்ப்பிக்கிறேன், அவ்வண்ணமாக என்னால் செய்யப்பட்டுள்ள சிதசித் ஸம்ஸர்க்கத்தால் தேவன் முதலாக ஸ்தாவரம் ஈறாக அசித்துக்களுடன் சேர்க்கை பெற்ற எல்லா பூதங்களுக்கும் ஸம்பவமுண்டாகிறதென்று அர்த்தம்.

ச்ருதப்ரகாசிகை—

ஆகையால் ஸ்வரூபபரிணாம பக்ஷத்தாலேயே நிர்வாஹம் சிறப்புற்றதென்கிற ஸந்தேஹத்தை பரிஹரிப்பதற்காகவும்,எல்லா ச்ருதிகளுக்கும் முக்கியார்த்தத்வத்தை ஜ்ஞாபிப்பதற்காகவும் அந்தந்த இடங்களில் சிதருண்டதாக சொல்லப்பட்டிருக்கிற அர்த்தங்களை ஒன்று சேர்த்துக் காட்டுவதனால் அநாயாஸமாக அவைகளை மனதினால் க்ரஹிப்பதற்காகவும் தொடங்குகிறார்- அத்ரோதம் தத்வம் என்று. 'போக்யத்வேந போக்த்ருத்வே ந ச' என்கிற இடத்திலுள்ள ச சப்தமானது விசேஷமின்றி ஈசிதவ்யங்களாக இருப்பதுபற்றி அவ்விரண்டுக்கும் ஒரு கோஷ்டியில் ப்ரவேசத்தைக் காட்டுகிறது. அஸமாந்மாயீ என்கிற இடத்தில் மாயாசப்தத்தின் பொருளை நிர்ணயம் செய்வதற்காக எடுக்கிறார்—மாயாந்து ப்ரக்ருதிம் என்று. அன்ய சப்தத்தால் சொல்லத்தக்கவன் ஆத்மா என்பதை வெளிப்படுத்துவதற்காகச் சொல்லுகிறார்— க்ஷரம் ப்ரதானம் என்று. ப்ராக்ருதமான அர்த்தத்தைவிட வேறுபொருளை உணர்த்துவதில் இந்த சப்தத்திற்கு ப்ரஸித்தி அதிகமாதலால் அந்த அப்ராக்ருதார்த்த விஷயமான ப்ரமத்தைப்போக்குவதற்காக ஹர சப்தத்தை வ்யாக்கியானம் பண்ணுகிறார்— ப்ரதானம் என்று. இந்த இடத்தில் -'வ்யக்தா வ்யக்தம் பரதேவிச்வமீச:' என்கிற முந்தின வாக்கியத்தில் ச்ரவணமிருப்பதால் தார்யத்வதாரகத்வ ரூபமான பேதமும் ஸித்தித்தது. ஈச்வர ஈசிதவ்யதா ரூபமான பேதத்தையும் காண்பிக்கிறார்—ஸகாரணம் என்று. காரணாதிபாதிபசப்த வ்யாக்கியானத்தின் அர்த்தத்தைக் கூறுகிறார்— ப்ரதாந என்று. குணேச:- ஸத்வம் ரஜஸ் தமஸ் என்கிற குணங்களுக்கு நியந்தாவாக இருப்பவர். தனக்கு மேலான அதிகாரி இல்லை என்பதைக் காண்பிக்கிறார்—பதிம் என்று. இதனால் சேஷசேஷித்வ ரூபமான பேதமும் ஸித்தித்தது. ரக்ஷணமென்கிற க்ரியையை உணர்த்துகிற 'பா' தாதுவினின்று நிஷ்பன்னமாக இருப்பதால் பதி சப்தமானது ரக்ஷகனைச் சொல்லுகிறது, சேஷியைச்சொல்லுகிறதில்லை என்று சொல்லத்தக்கதல்ல. சேஷியினிடத்தில் இந்த பதி சப்தம ரூடமாக இருப்பதால். அங்ஙனமில்லாவிடில் 'கமேர்டோ:' என்று டோப்ரத்யயாந்தமானகமிதாதுவினின்று நிஷ்பன்னமாக இருப்பதால் கோ சப்தமானது மனுஷ்யன் முதலியதற்கு வாசகமாக ஆகவேண்டியதாக ஏற்படும். நடையுள்ள எல்லா வஸ்துக்களிலும் ப்ரயோகமில்லாமையாலும் நின்றுகொண்டிருக்கிற கோவினிடத்திலும் கோ சப்தம் ப்ரயோகிக்கப்படுவதாலும் அங்கு ரூடி சக்தியானது ஆச்ரயிக்கப்படுகிறதென்று சொல்லப்படுமேயானால் இவ்வண்ணமாகவே, வ்ருத்தௌசு

மாதாபிதரௌ ஸாத்வீபார்யாஸுத: சிசு: - அப்யகார்ய சதம் க்ருத்வா பர்தவ்யா மனுரப்ரவீத், இதன் பொருள்— வயதுசென்றவர்களாக இருக்கிற தாய் தந்தைகளையும் பதிவ்ரதையாக இருக்கிற மனைவியையும் சிறுவனாக இருக்கிற புத்திரனையும் நூற்றுக்கணக்கான அகார்யங்களைச் செய்தாவது காப்பாற்றவேண்டுமென்று மனு சொல்லி இருக்கிறார்-என்கிற நியாயத்தால் மாதா பிதாக்களை ரக்ஷிக்கிற புத்திரனிடத்தில் பிதா முதலியோர்களை அபேக்ஷித்து, பதிசப்த ப்ரயோகமில்லாமையாலும், வாஸக்ருஹம் முதலியவைகளை ரக்ஷிக்காமலிருந்தபோதிலும் ஸ்வாமியினிடம் பதிசப்த ப்ரயோகத்தாலும் சேஷியினிடம் பதி சப்தம் ரூடமாக இருக்கிறது. அப்படியே 'தாஸபூதாஸ்ஸ்வத ஸ்ஸர்வே ஹ்யாத்மாந: பரமாத்மந:-' இதன் பொருள்- எல்லா ஜீவாத்மாக்களும் பரமாத்மாவுக்கு தானாகவே அடிமை செய்பவர்கள் அப்படியே- நந்தவ்ய: பரமச்சேஷீசேஷாநந்தாரசரிதா: - நந்த்ரு நந்தவ்யபாவோயம் ந ப்ரயோஜந பூர்வக:. (இதன் பொருள்- தனக்கு மேல்பட்டவனில்லாத சேஷியாக விளங்குகிற ஸ்ரீமந்நாராயணன் நமஸ்கரிக்கத்தக்கவன். மற்றவர்கள் வணங்குகிறவர்களென்று சொல்லப்பட்டிருக்கிறார்கள்) இந்த நமஸ்கரிக்கிறவனாக இருத்தலும் நமஸ்கரிக்கப்படுகிறவனாக இருத்தலென்கிற தன்மையும் ப்ரயோஜநத்தை முன்னிட்டு ஏற்பட்டதல்லவென்று தாஸசேஷ சேஷி சப்தங்களின் ப்ரயோகமானது $ பகவத்சாஸ்த்ரங்களில் காணப்படுகிறது. பதி முதலிய சப்தங்களில்லாமலிருந்தபோதிலுங்கூட 'வ்ரீஹீந் ப்ரோக்ஷதி''(பொருள்— நெல்லுகளை சுத்ததீர்த்தத்தால் மந்திரத்தை உச்சரித்துக்கொண்டு ப்ரோக்ஷணம் செய்கிறான்) இது முதலிய இடங்களில் த்விதீயாவிபக்தி கேழ்க்கப்படுவதால் ப்ரோக்ஷணம முதலியவற்றுக்கு வ்ரீஹி முதலியவைகளைக்குறித்து சேஷத்வம் போல ''யஸ்யாத்மாசரீரம்'' இது முதலியதால் ஜகத்துக்கு பரமாத்மாவைக்குறித்து சரீரத்வமானது அறியப்பட்டிருப்பதாலும்,சரீரத்துக்கு பரப்ரயோஜனத்தின் பொருட்டே இருத்தலென்கிற ஸ்வபாவம் ''ஸங்காத: பரார்த்தத்வாத்'' இது முதலியவைகளால் ப்ரஸித்தமாக இருப்பதாலும் ஜகத் ப்ரஹ்மம் இரண்டுக்கும் சேஷ சேஷிபாவம் ஸித்தித்தது. ஆகையால் எவ்வாறு அர்த்தம் இங்கு கூறப்பட்டிருக்கிறதோ இதே ஸரியானது. வேறுவிதத்தாலும் பேதத்தின் ஸித்தியைக் காண்பிக்கிறார்—ஜ்ஞாஜ்ஞௌ ஒன்று. உத்பத்தி ப்ரளயபாவ ப்ரதிபாதனத்தைக் காண்பிக்கிறார்—நித்யோ நித்யாநாம் என்று. வேறு ஆகாரத்தாலும் பேதத்தைச் சொல்லுகிறார்—போக்தா என்று. பகவானுக்கு தோஷ லேசஸம்பந்தத்தின் இன்மையைக் காண்பிக்கிறார்—தயோ: என்று. பேதஜ்ஞானமானது மோக்ஷத்திற்கு ஹேதுவென்று கூறுகிறார்—ப்ருதக் என்று. முக்தியில் பேதத்தைச்சொல்லுகிறார்-அஜாம் என்று. ஜீவன் ஈச்வரன் இருவர்களுக்கும் தன் படியாகவே இருக்கிற பேதத்தையும் விசேஷங்களுடன் சேர்ந்திருத்தலையும ஸ்பஷ்டமாக்குவதற்காகச் சொல்லுகிறார்—ஸமானே என்று ப்ருதக்த்வ ஜ்ஞானமே மோக்ஷோபாயமென்பதில் கருத்துள்ள இரண்டு வாக்கியங்களின் மததியில் 'அஜாமேகாம்' என்கிற பதங்களைத்தொடக்கத்தில் கொண்ட வாக்கியம் எடுக்கப்பட்டிருக்கிறது. ஸமானே வ்ருக்ஷே, அஜாமேகாம், என்கிற வாக்கியங்களுக்கு ப்ரதானமாக இருத்தல் ப்ரஸங்கத்தால் வருதலென்கிறகுணங்களின் ஸாமயத்தால். ஜுஷ்டம் - ப்ரீதியுடையவனை.

ஸ்ம்ருதாவபி என்று. எட்டு விதமாகப் பிறிக்கப்பட்டிருக்கிற ப்ரக்ருதியானது என்னுடையது என்கிற இந்த வசநத்தினால் காரணாவஸ்தையிலும் பேதம் ஸித்தித்தது.

$ பகவத் சாஸ்த்திரம்—பாஞ்சராத்ர சாஸ்திரம்.

கல்பக்ஷயத்தில் என்னுடையதான ப்ரக்ருதியை அடைகின்றன என்கிற இடத்திலும் அப்படியே. 'ப்ரக்ருதிம் ஸ்வாமவஷ்டப்ய விஸ்ருஜாமி' என்கிற இடத்திலும் அதன் ஸித்தி. 'மயாத்யக்ஷேண' என்கிற இடத்திலோவென்றால் ஸ்வபாவங்களின் அஸாங்கர்யமும் காரணாவஸ்தையில் பேதமும் ஸித்திக்கின்றன. 'ப்ரக்ருதிம்' என்கிற இடத்தில் அநாதித்வமானது கண்டோக்தமாக இருக்கிறது. 'மமேதி' என்கிற இடத்திலுங்கூட காரணாவஸ்தையில் பேதஸித்தி ஏற்படுகிறது. உதாஹரிக்கப்பட்டிருக்கிற ஸ்ம்ருதிவசனங்களில் வ்யாக்கியானம் செய்யத்தக்க அம்சத்தை வ்யாக்கியானம் செய்கிறார்—ஜகத்யோநி என்று. ஜகத்யோநி சப்தத்தால் 'த்ரிகுணம் தஜ்ஜகத்யோநி:' என்கிற வசனம் நினைக்கும்படி செய்விக்கப்படுகிறது. கார்யாவஸ்தையை வ்யாவ்ருத்திப்பதற்காக பூதஸூக்ஷ்மமென்று உரைக்கப்பட்டது.

𑌏𑌵𑌂 𑌭𑍋𑌕𑍍𑌤𑍃𑌭𑍋𑌗𑍍𑌯𑌰𑍂𑌪𑍇𑌣𑌾𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌯𑍋𑌃 𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌾𑌵𑌸𑍍𑌥𑌾𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌯𑍋𑌶𑍍𑌚𑌿𑌦𑌚𑌿𑌤𑍋𑌃 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌶𑌰𑍀𑌰𑌤𑌯𑌾 𑌤𑌨𑍍𑌨𑌿𑌯𑌾𑌮𑍍𑌯𑌤𑍍𑌵𑍇𑌨 𑌤𑌦𑌪𑍃𑌥𑌕𑍍𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌂 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌃 𑌸𑌾𑌰𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌂 𑌚𑌾𑌹𑍁𑌃 𑌕𑌾𑌰𑌣𑌶𑍍𑌰𑍁𑌤𑌯𑌃—"𑌯𑌃 𑌪𑍃𑌥𑌿𑌵𑍍𑌯𑌾𑌂 𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍 𑌪𑍃𑌥𑌿𑌵𑍍𑌯𑌾 𑌅𑌨𑍍𑌤𑌰𑍋, 𑌯𑌂 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀 𑌨 𑌵𑍇𑌦, 𑌯𑌸𑍍𑌯 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀 𑌶𑌰𑍀𑌰𑌂, 𑌯𑌃 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀𑌮𑌨𑍍𑌤𑌰𑍋 𑌯𑌮𑌯𑌤𑌿" 𑌇𑌤𑍍𑌯𑌾𑌰𑌭𑍍𑌯 "𑌯 𑌆𑌤𑍍𑌮𑌨𑌿 𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍𑌨𑌾𑌤𑍍𑌮𑌨𑍋𑌽𑌨𑍍𑌤𑌰𑍋 𑌯𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌨 𑌵𑍇𑌦, 𑌯𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌾 𑌶𑌰𑍀𑌰𑌂, 𑌯 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑌨𑍍𑌤𑌰𑍋 𑌯𑌮𑌯𑌤𑌿, 𑌸 𑌤 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑍍𑌤𑌰𑍍𑌯𑌾𑌮𑍍𑌯𑌮𑍃𑌤𑌃" 𑌇𑌤𑌿 । 𑌤𑌥𑌾—"𑌯𑌃 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀𑌮𑌨𑍍𑌤𑌰𑍇 𑌸𑌞𑍍𑌚𑌰𑌨𑍍 𑌯𑌸𑍍𑌯 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀 𑌶𑌰𑍀𑌰𑌂, 𑌯𑌂 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀 𑌨 𑌵𑍇𑌦" 𑌇𑌤𑍍𑌯𑌾𑌰𑌭𑍍𑌯 "𑌯𑍋𑌽𑌕𑍍𑌷𑌰𑌮𑌨𑍍𑌤𑌰𑍇 𑌸𑌞𑍍𑌚𑌰𑌨𑍍 𑌯𑌸𑍍𑌯𑌾𑌕𑍍𑌷𑌰𑌂 𑌶𑌰𑍀𑌰𑌂, 𑌯𑌮𑌕𑍍𑌷𑌰𑌂 𑌨 𑌵𑍇𑌦, 𑌯𑍋 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌮𑌨𑍍𑌤𑌰𑍇 𑌸𑌞𑍍𑌚𑌰𑌨𑍍 𑌯𑌸𑍍𑌯 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌃 𑌶𑌰𑍀𑌰𑌂, 𑌯𑌂 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌰𑍍𑌨 𑌵𑍇𑌦, 𑌏𑌷 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌤𑍍𑌮𑌾𑌽𑌪𑌹𑌤𑌪𑌾𑌪𑍍𑌮𑌾 𑌦𑌿𑌵𑍍𑌯𑍋 𑌦𑍇𑌵 𑌏𑌕𑍋 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌃"; 𑌅𑌤𑍍𑌰 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌶𑌬𑍍𑌦𑍇𑌨 𑌤𑌮𑌃𑌶𑌬𑍍𑌦𑌵𑌾𑌚𑍍𑌯𑌂 𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌾𑌵𑌸𑍍𑌥𑌮𑌚𑌿𑌦𑍍𑌵𑌸𑍍𑌤𑍍𑌵𑌭𑌿𑌧𑍀𑌯𑌤𑍇; 𑌅𑌸𑍍𑌯𑌾𑌮𑍇𑌵𑍋𑌪𑌨𑌿𑌷𑌦𑌿—"𑌅𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌮𑌕𑍍𑌷𑌰𑍇 𑌲𑍀𑌯𑌤𑍇, 𑌅𑌕𑍍𑌷𑌰𑌂 𑌤𑌮𑌸𑌿 𑌲𑍀𑌯𑌤𑍇" 𑌇𑌤𑌿 𑌵𑌚𑌨𑌾𑌤𑍍 । "𑌅𑌨𑍍𑌤𑌃𑌪𑍍𑌰𑌵𑌿𑌷𑍍𑌟𑌃 𑌶𑌾𑌸𑍍𑌤𑌾 𑌜𑌨𑌾𑌨𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌾" 𑌇𑌤𑌿 𑌚 ॥

𑌏𑌵𑌂 𑌸𑌰𑍍𑌵𑌾𑌵𑌸𑍍𑌥𑌾𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌚𑌿𑌦𑌚𑌿𑌦𑍍𑌵𑌸𑍍𑌤𑍁𑌶𑌰𑍀𑌰𑌤𑌯𑌾 𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌃 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵 𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌵𑌸𑍍𑌥𑌕𑌾𑌰𑌣𑌾𑌵𑌸𑍍𑌥𑌜𑌗𑌦𑍍𑌰𑍂𑌪𑍇𑌣𑌾𑌵𑌸𑍍𑌥𑌿𑌤 𑌇𑌤𑍀𑌮𑌮𑌰𑍍𑌥𑌂 𑌜𑍍𑌞𑌾𑌪𑌯𑌿𑌤𑍁𑌂 𑌕𑌾𑌶𑍍𑌚𑌨 𑌶𑍍𑌰𑍁𑌤𑌯𑌃 𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌵𑌸𑍍𑌥𑌂 𑌕𑌾𑌰𑌣𑌾𑌵𑌸𑍍𑌥𑌞𑍍𑌚 𑌜𑌗𑌤𑍍 𑌸 𑌏𑌵𑍇𑌤𑍍𑌯𑌾𑌹𑍁𑌃—"𑌸𑌦𑍇𑌵 𑌸𑍋𑌮𑍍𑌯𑍇𑌦𑌮𑌗𑍍𑌰 𑌆𑌸𑍀𑌤𑍍 𑌏𑌕𑌮𑍇𑌵𑌾𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌂, 𑌤𑌦𑍈𑌕𑍍𑌷𑌤, 𑌬𑌹𑍁 𑌸𑍍𑌯𑌾𑌂 𑌪𑍍𑌰𑌜𑌾𑌯𑍇𑌯𑍇𑌤𑌿

தத்தேஜோऽஸ்ருஜத" இத்யாரப்ய "ஸந்மூலாஸ்ஸோம்யேமாஸ்ஸர்வா: ப்ரஜாஸ்ஸதாயதநாஸ்ஸத்ப்ரதிஷ்டா: । ஐததாத்ம்யமிதம் ஸர்வம் தத்ஸத்யம் ஸ ஆத்மா தத்த்வமஸி ச்வேதகேதோ" இதி । ததா "ஸோऽகாமயத பஹு ஸ்யாம் ப்ரஜாயேயேதி । ஸ தபோऽதப்யத । ஸ தபஸ்தப்த்வா । இதம் ஸர்வமஸ்ருஜத" இத்யாரப்ய "ஸத்யஞ்சாந்ருதஞ்ச ஸத்யமபவத்" இத்யாத்யா: ॥

அத்ராபி ப்ராக்த்ருஷ்டாபிஸ்ஸ்ருதிபிரேதா: பரப்ரஹ்மணஸ்ச ஸர்வவிசேஷணஸ்ஸாரித:— 'ஹந்தாஹமிமாஸ்திஸ்ரோ தேவதா:, அநேந ஜீவேநாத்மநாऽநுப்ரவிச்ய நாமரூபே வ்யாகரவாணி' இதி— "தத்ஸ்ருஷ்ட்வா । ததேவாநுப்ராவிசத் । ததநுப்ரவிச்ய । ஸச்ச த்யச்சாபவத்...விஜ்ஞாநஞ் சாவிஜ்ஞாநஞ்ச । ஸத்யஞ்சாந்ருதஞ்ச ஸத்யமபவத்" இதி ச । "அநேந ஜீவேநாத்மநாऽநுப்ரவிச்ய" இதி ஜீவஸ்ய ப்ரஹ்மாத்மகத்வம், "ததநுப்ரவிச்ய, ஸச்ச த்யச்சாபவத், விஜ்ஞாநஞ் சாவிஜ்ஞாநஞ்ச" இத்யநேநைகார்த்யாத் க்ருத்ஸ்நசரீரபாவநிபந்தநமிதி விஜ்ஞாயதே । ஸர்வத்ரைவ நாமரூபவ்யாகரணம் "தத்தேதம் தர்ஹ்யவ்யாக்ருதமாஸீத் । தந்நாமரூபாப்யாம் வ்யாக்ரியத" இத்யத்ராப்யுக்தம் । அத: கார்யாவஸ்த: காரணாவஸ்தச்ச ஸ்தூலஸூக்ஷ்மசிதசித்வஸ்துசரீர: பரம் ப்ரஹ்மைவேதி காரணாத் கார்யஸ்யாநந்யத்வேந காரணவிஜ்ஞாநேந கார்யஸ்ய ஜ்ஞாததயைகவிஜ்ஞாநேந ஸர்வவிஜ்ஞாநம் ஸமீஹிதமேவோபபந்நதரம் ॥

ஸ்ரீபாஷ்யம்—

இவ்வண்ணம் போக்தாவாகவும் போக்யரூபமாகவு மிருக்கிறதும் எல்லா நிலைமைகளுடனுங்கூடி இருப்பவைகளுமான சித் அசித் இரண்டும்பரமபுருஷனுக்கு சரீரமாக இருப்பதுபற்றி அவனால் நியமிக்கப்படத்தக்கதாக இருப்பதால், அந்தபரமபுருஷனை விட்டுத்தனித்திராமல் அவனோடேயே எப்பொழுதும்சேர்ந்தே இருக்கிறவையும், பரமபுருஷனுக்கு ஆத்மத்வத்தைபும் சிலச்ருதிகள்கூறுகின்றன அந்தச்ருதிகளாவன-'ய:ப்ருதிவ்யாம் திஷ்டந் ப்ருதிவ்யா அந்தரோ யம்ப்ருதிவீ நவேத, யஸ்ய ப்ருதிவீ சரீரம், ய:ப்ருதிவீ மந்தரோ யமயதி' (இதன் பொருள்- எவன் ப்ருதிவியிலிருக்கிறானோ ப்ருதிவிக்குள்ளிருக்கிறானோ எவனை ப்ருதிவீ அறியாதோ எவனுக்கு ப்ருதிவீ சரீரமோ

எவன் ப்ருதிவிக்குள் ப்ரவேசித்து நியமனம் செய்கிறானோ) என்பதுதொடங்கி 'ய ஆத்மநி திஷ்டந், ஆத்மநோந்தரோ, யமாத்மாநவேத, யஸ்யாத்மா சரீரம். ய ஆத்மாநமந்தரோ யமயதி, ஸத ஆத்மாந்தர்யாம்ய ம்ருத: (பொருள்-எவன் ஆத்மாவினிடத்திலிருக்கிறானோ-ஆத்மாவுக்குள் ப்ரவேசித்திருக்கிறானோ, எவனை ஆத்மா அறியாதோ, எவனுக்கு ஆத்மா சரீரமோ, எவன் ஆத்மாவை உள்ளே இருந்து நியமனம் பண்ணுகிறானோ, அவன் உனக்கு அந்தர்யாமீ, அழிவற்றவன், அல்லது அவன் மோக்ஷமளிப்பவன்) அப்படியே. 'ய: ப்ருதிவீமந்தரே ஸஞ்சரந் யஸ்ய ப்ருதிவீ சரீரம், யம் ப்ருதிவீ நவேத' என்று தொடங்கி யோக்ஷரமந்தரே ஸஞ்சரந்,யஸ்யாக்ஷரம் சரீரம், யமக்ஷரம் நவேத, யோ ம்ருத்யுமந்தரே ஸஞ்சரந், யஸ்ய ம்ருத்யுச்சரீரம்,யம் ம்ருத்யுர் நவேத, ஏஷ ஸர்வபூதாந்தராத்மா அபஹதபாப்மா திவ்யோ தேவ ஏகோ நாராயண:'' இந்த இடத்தில் ம்ருத்யு சப்தத்தால் தமச் சப்தத்தால் சொல்லத்தக்க ஸூக்ஷ்மாவஸ்தையுடன்கூடின அசித்வஸ்து சொல்லப்படுகிறது. இதே உபநிஷத்தில் 'அவ்யக்தமக்ஷரே லீயதே அக்ஷரந்தமஸி லீயதே''என்கிற வசனத்தினால் பரமாத்மாவுக்கு சித்துக்களும் அசித்துக்களும் சரீரங்களென்று நன்கு ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கிறது. "அந்த:ப்ரவிஷ்டச்சாஸ்தா ஜநாநாம் ஸர்வாத்மா" என்றும் (பொருள்-எல்லா வஸ்துக்களுக்கும் ஆத்மாவாக இருக்கிற பரமபுருஷன் ஜீவன்களுக்குள் ப்ரவேசித்து நியமநம் பண்ணுகிறான், இவனாலும் சேதநா சேதநங்களுக்கும் பரமாத்மாவுக்கும் சரீராத்மபாவம் பலித்தது

இவ்வண்ணம் எல்லா நிலைமைகளுடன்கூடி இருக்கிற சிதசித்வஸ்துக்களை சரீரமாகவுடையவனானதால் அந்த சிதசித்வஸ்துக்களை ப்ரகாரமாகக்கொண்ட பரமபுருஷனே கார்யாவஸ்தையுடனும் காரணாவஸ்தையுடனுங்கூடி ஜகத்ரூபமாக இருக்கிறானென்கிற இந்த அர்த்தத்தைத் தெரிவிப்பதற்காகவே சில ச்ருதிகள் கார்யாவஸ்தையுடனும் காரணாவஸ்தையுடனும் கூடிய ஜகத்தானது அவனே என்று சொல்லின. அந்த ச்ருதிகளாவன- "ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீத், ஏகமேவாத்விதீயம் - ததைக்ஷத, பஹுஸ்யாம் ப்ரஜாயேயேதி தத் தேஜோ ஸ்ருஜத''என்று தொடங்கி," ஸந்மூலாஸ்ஸோம்யேமாஸ்ஸர்வா: ப்ரஜாஸ்ஸதாயதநாஸ்ஸத்ப்ரதிஷ்டா: ஐததாத்ம்யமிதம் ஸர்வம், தத்ஸத்யம், ஸ ஆத்மா, தத்த்வமஸி ச்வேதகேதோ'' என்று- (இந்த ச்ருதிகளுக்குப் பொருள் - ஹே. ஸோமபாநத்திற்குத் தகுதியுள்ளவனே! நேரில் காணப்படுகிற இந்த சிதசிதாத்மகமான ப்ரபஞ்சமானது ஸ்ருஷ்டிக்கு முந்தி அதாவது ப்ரளயகாலத்தில் ஸத் என்கிற சப்தத்துக்கு வாச்யமான ப்ரஹ்மமாகவே இருந்தது. ப்ரஹ்மத்தோடு அபின்னமாகவே இருந்தது. நாமரூபவிபாகமில்லாததாகவும் வேறு நிமித்த காரணத்தை அபேக்ஷியாமல் தானே உபாதானமாகவும் நிமித்தகாரணமாகவுமிருந்தது. அந்த ப்ரஹ்மமானது சேதநா சேதநாத்மகமான வ்யஷ்டி ப்ரபஞ்சரூபமாக நான்

பலவிதமாக ஆகக்கடவேன் அதற்காக நான் ஸமஷ்டி ஸ்ருஷ்டிபூதமான இருபத்திநான்கு தத்வங்களாக பரிணமிக்கக்கடவேன் என்று ஸங்கல்பித்தது. அது உடனே தேஜஸ்ஸை உண்டுபண்ணிற்று. ஹே ஸோமபாநத்திற்குத்தகுதியுள்ளவனே ! இந்த ப்ரஜைகள் ஸத் என்கிற சப்தத்தால் சொல்லப்படுகிற ப்ரஹ்மத்தினிடத்தினின்று உண்டாகின்றன அந்த ப்ரஹ்மத்தால் ரக்ஷிக்கப்படுகின்றன, அந்த ப்ரஹ்மத்தில் லயிக்கின்றன. இவ்வுலகமனைத்தும் ப்ரஹ்மாத்மகம். அந்த ப்ரஹ்மம் ஸத்யமாக இருக்கிறது. அது சேதநா சேதநனங்களனைத்தையும் வ்யாபித்துக் கொண்டிருக்கிறது. ஹே ச்வேதகேதோ! நீ அந்த ப்ரஹ்மாத்மகமாக இருக்கிறாய்) என்று. அப்படியே "ஸோகாமயத பஹுஸ்யாம் ப்ரஜாயேயேதி, ஸதபோதப்யத, ஸதபஸ்தப்த்வா, இதம் ஸர்வமஸ்ருஜத" (பொருள். அந்த பரமபுருஷன் நான் தேவதிர்யங் மனுஷ்யஸ்தாவராத்மகமாக பலவாறாக ஆகக்கடவேன் என்று ஸங்கல்பித்தார். அவர் அவ்வாறு ஸங்கல்பித்து இவை அனைத்தையும் படைத்தார்) என்பது தொடங்கி 'ஸத்யஞ்சாந்ருதஞ்ச ஸத்யமபவத், (சாச்வதமாக இருக்கிற ப்ரஹ்மமானது சேதநா சேதநரூபமான ப்ரபஞ்சமாக ஆயிற்று.) இது முதலியவைகள்.

இந்த இடத்திலும் வேறு ச்ருதிகளால் ஸித்தித்திருக்கிற சித்துக்கும் அசித்துக்கும் பரம புருஷனுக்குமுள்ள ஸ்வரூப விவேகமானது ஸ்மரிக்கும்படி செய்விக்கப்பட்டது, 'ஹந்தாஹமிமாஸ்திஸ்ரோ தேவதா., அநேந ஜீவேநாத்மநாநுப்ரவிச்ய நாமரூபே வ்யாகரவாணி" (நான் ப்ருதிவீ அப் தேஜஸ் முதலிய அசேதந வஸ்துக்களுக்குள் ஜீவனைச் சரீரமாகக்கொண்ட என்ஸ்வரூபத்தால் அனுப்ரவேசித்து அல்லது என்னை ஆத்மாவாகக் கொண்ட ஜீவன் வாயிலாக அனுப்ரவேசம் செய்து ஒவ்வொரு வஸ்துக்களுக்கும் பெயரையும் உருவத்தையும் ஏற்படுத்துகிறேன்) என்று. "தத்ஸ்ருஷ்ட்வா, ததேவாநுப்ராவிசத். "ததநுப்ரவிச்ய, ஸச்சத்யச்சாபவத், விஜ்ஞாநஞ்சா விஜ்ஞாநஞ்ச, ஸத்யஞ்சாந்ருதஞ்ச ஸத்யமபவத்" என்று அதைப்படைத்து அதிலேயே உள்புகுந்தார். அதினுள் ப்ரவேசித்து சேதநங்களாகவும் அசேதநங்களாகவும்ஆனார். ஸத்யவஸ்துவான பரப்ரஹ்மமானது விஜ்ஞாநஸ்வரூபியான சேதந ரூபமாகவும் ஜடமாகஇருக்கிற அசேதந ஸ்வரூபமாகவும் நித்யமான ஜீவஸ்வரூபமாகவும் அழிவுள்ள ப்ருதிவீ முதலிய வஸ்து ஸ்வரூபமாகவும் ஆயிற்று) என்று. அநேந ஜீவேநாத்மநாநு ப்ரவிச்ய" என்று ஜீவனுக்கு, ப்ரஹ்மாத்மகத்வம் சொல்லப்படிருப்பது ததநு ப்ரவிச்ய, ஸச்சத்யச்சாபவத், விஜ்ஞாநஞ்சா விஜ்ஞாநஞ்ச, என்பதோடு அர்த்தைக்யத்தினால் ஆத்மசரீரபாவத்தைதக்காரணமாகக்கொண்டதென்று அறியப்படுகிறது. நாமரூப வ்யாகரணம் இப்படிப்பட்டதே. "தத்தேதம் தர்ஹ்யவ்யாக்ருதமாஸீத், தந்நாமரூபாப்யாம்வ்யாக்ரியத" (இந்த ப்ரபஞ்சரூபமாக பரிணமித்திருக்கிற பூதஸூக்ஷ்மமானது

ஸ்ருஷ்டிக்குமுந்தி நாமரூபவ்யாகரணத்தால் விடுபட்டிருந்தது) அது தத்வ ஸ்ருஷ்டிகளுக்குப்பிறகு நாமரூபங்களால் வ்யாகரணம் செய்யப்பட்டது. என்கிற இடத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் சார்யாவஸ்தையுடனும் காரணாவஸ்தையுடனும்கூடி இருப்பவன் ஸ்தூல சிதசித்வஸ்துக்களேயும் ஸூக்ஷ்ம சிதசித்வஸ்துக்களேயும் சரீரமாகவுடையபரமபுருஷனே. ஆகையால் காரணத்தைக்காட்டிலும் கார்யமானது வேறான வஸ்துவாக இல்லாதது பற்றி காரணஜ்ஞாநத்தால் கார்யம் அறியப்பட்டிருப்பதால் தனக்கு அபிமதமான ஏகவிஜ்ஞாநத்தால் ஸர்வவிஜ்ஞான மென்பது நன்கு பொருத்தமுள்ளதாக ஆகிறது,

---

ச்ருதப்ரகாசிகை—

இவ்வண்ணம் சித் அசித் ஈச்வரன் இம்மூன்றுக்கும் பேதமிருக்க எவ்வாறு ஒன்று என்கிற நிச்சயம் பொருத்தமுள்ளதென்கிற ஸந்தேஹம் வரின் கடகச்ருதிகளே அவதரிப்பிக்கிறார்—ஏவம் என்று- 'ய: ப்ருதிவீமந்தரே ஸஞ்சரந்' என்று ஸுபாலோப நிஷத்தில் சொல்லப்படுகிறது. மரணம் அல்லது யமன் முதலியஅர்த்தங்களே விலக்குவதின்பொருட்டு ம்ருத்யு சப்தத்தை வ்யாக்கியானம் செய்கிறார்—அந்த என்று. லீயதே இதி வசநாத் – லயக்ரமங்கள் ஜ்ஞாபகப்படுத்தப்படுவதாலென்று அர்த்தம். 'யஸ்யாவ்யக்தம் சரீரம், யஸ்யாக்ஷரம் சரீரம், யஸ்ய ம்ருத்யுச்சரீரம் என்றல்லவோ க்ரமம். இந்த க்ரமமானது "அவ்யக்தமக்ஷரே லீயதே, அக்ஷரம் தமஸிலீயதே" என்கிற க்ரமத்தோடு பொருந்துகிறது. தமஸ்ஸுக்கு ஏகீ பாவம் மாத்ரம் ச்ருதியினுல் சொல்லப்பட்டிருக்கிறது லயமல்ல. தமஸ்த்வத்துக்கு அழிவு இல்லாமையால். கார்யத்திற்கு உபயோகப்படாத தமஸ்ஸைச்சரீரமாகக்கொண்டிருக்கிற பரமபுருஷனிடத்தில்கார்யோபயுக்தமான தமஸ்ஸுக்கு ※ ஏகீபாவம். ம்ருத்யுவென்கிற பெயருள்ள தமஸ்ஸானது ப்ரஹ்மத்துக்கு சரீரமென்று சொல்லப்படுவதால் விசேஷணபூதமான தமஸ்ஸோடு தமஸ்ஸுக்கு ஏகீபாவம் யுக்தமானது. எல்லாவஸ்துக்களுக்கும் பரமபுருஷன் ஆத்மாவென்பதை விவரிப்பதற்காகக் கூறுகிறார்— அந்த: ப்ரவிஷ்ட: என்று. இதனுலும் சரீராத்மபாவம் பலித்தது. உள்ளே புகுந்து நியமிக்கப்படத்தக்கதன்மையன்றோ சரீரத்வமென்பது. உள்ளே ப்ரவேசம் சாஸனம் இவைகளால் அரசன் ஆகாயம் இவைகளுக்கு * வ்யாவ்ருத்தி ஏற்படுகிறது. இந்த சரீரலக்ஷணம் பாஷ்யகாரருக்கு அபிமதமானது, பேதச்ருதிகளுக்கும் கடக ச்ருதிகளுக்கும் விரோதமில்லாமல் ஐக்ய வாக்யங்களுக்குப்பொருள் கூறுகிறார்—ஏவம் என்று. கடகமாக எடுக்கப்பட்டது- 'ஸந்மூலா:' என்று. அத்ராபி என்று சாந்தோக்ய ப்ரகரணத்திலும் தைத்தரீய ப்ரகரணத்திலுமென்று அர்த்தம். ஹந்தாஹமிமா: என்று சாந்தோக்யத்தில், தத்ஸ்ருஷ்ட்வா இது முதலியது தைத்திரீயத்தில். ஜீவேநாத்மநா என்பதினுடைய வ்யாக்கியானார்த்தத்தைச் சொல்லுகிறார்—அநேந என்று. அனுப்ரவேசத்தின் ச்ரவணமில்லாவிடினும் பொதுவாகச் சொல்லப்பட்டிருக்கிற நாமரூப வ்யாகரணமானது ஸாமான்யவிசேஷ ந்யாயத்தினுல் அனுப்ரவேசத்தை முன்னிட்டுக்கொண்டிருக்கிற நாமரூப வ்யாகரணத்தில்

※ ஏகீபாவம்—ஒன்று சேருதல். * வ்யாவ்ருத்தி—விலக்கம்.

பர்யவஸிக்கிறதென்று கூறுகிறார்— ஏவம்பூதமேவ என்று. அல்லது ஸர்வசாகா ப்ரத்யய ந்யாயத்தால் ஓரிடத்தில் சொல்லப்பட்டிருப்பதற்கு வேறு இடத்தில் க்ரஹித்துக்கொள்ளத்தக்க தன்மை இருப்பதால் ஓரிடத்தில் அறியப்பட்டிருக்கிற அனுப்ரவேச மானது கார்யத்துக்கு உபயோகியாக இருப்பதுபற்றி வேறிடத்திலும் ஸ்வீகரிக்கத்தக்கதென்று சொல்லுகிறார்—ஏவம் என்று. ஏவம் பூதசப்தமானது அனுப்ரவேசத்தை முன்னிட்டுக்கொண்டிருத்தலென்பதில் நோக்குள்ளது. இந்த நாமரூப வ்யாகரணச்ருதியின் உபபாதனத்தினால் ஜீவன்களுக்கு உத்பத்தி ப்ரளய நாமரூப வ்யாகரணமும் அதன் அபாவமுமே ஒழிய ஸ்வரூப நிஷ்பத்தி விநாசங்களல்லவென்பது சொல்லப்பட்டதாக ஆகிறது. இதனால் முன் சொல்லப்பட்ட சங்கையும் பரிஹரிக்கப்பட்டதாக ஆகிறது. கால விசேஷத்தில் சொல்லப்பட்ட ஐக்யமும் நாமரூப வ்யாகரணாபாவமாத்திரமே ஒழிய ஸ்வரூபைக்ய மல்லவென்று அறியப்படுவதால். அதற்கு மேல் எல்லா ச்ருதிகளுக்கும் இந்த அர்த்தத்தில் முக்கியத்வத்தைக் காண்பியாநின்றவராக முதலில் ஏக விஜ்ஞானத்தினால் ஸர்வவிஜ்ஞான மென்பது அன்யனுடைய மதத்தில் பொருத்தமுள்ளதாக ஆகிறதில்லை என்றும் முன்சொல்லப்பட்ட தன்னுடைய மதத்தில் பொருத்தமுள்ளதாக ஆகிறதென்றும் கூறுகிறார்—அத: என்று. கார்ய காரணங்களுக்கு ஐக்ய ப்ரதிபாதநத்தாலும் ஏகவிஜ்ஞாநத்தால் ஸர்வவிஜ்ஞாந ப்ரதிஜ்ஞையினாலும் ஸாமாநாதிகரண்யத்தாலும் என்று மூன்றுவிதமாக வல்லவோ அத்வைத ப்ரதீதியானது ஏற்படுகிறது. இந்த இடத்தில் முன் சொல்லப்பட்டிருக்கிற இரண்டும் நாம் சொன்னரீதியினால் பொருத்த முள்ளதாக இருக்கிறதென்பது அத: என்கிற பதத்தை தொடக்கத்தில் கொண்ட பாஷ்யத்தால் சொல்லப்பட்டதாக ஆகிறது. விசிஷ்டம் காரணம், அதே கார்யமாக இருப்பதால் காரணத்தைக்காட்டிலும் கார்யத்திற்கு வேற்றுமை இன்மை ஏற்படுகிறது. ஆகலால் கார்யகாரணம் இரண்டுக்கும் ஐக்யத்தை ப்ரதிபாதிப்பதில் நோக்குள்ள ச்ருதிகளுக்கு அந்த இரண்டும் ஒரு த்ரவ்யமென்பதே ப்ரதிபாதிக்கத்தக்க விஷயமே ஒழிய விசிஷ்டத்வ நிஷேதம் ப்ரதிபாதிக்கத்தக்கவிஷயமல்ல. அது விதிக்கப்பட்டிருப்பதால். ஏக விஜ்ஞாநத்தால் ஸர்வ விஜ்ஞாநமும் இவ்வண்ணமே, எப்படி மண்ணுருண்டையினால் அந்த மண்ணின் கார்யமான குடம் வாணாய் முதலிய வஸ்துக்களின் ஜ்ஞாநமிருந்தபோதிலுங்கூட பிண்டத்தை அடைந்திருக்கிற ரூபம் முதலியவற்றின் நிஷேதம் செய்யப்பட்டதாக ஆகாதோ அப்படிப் போல உபபன்னதரம் என்கிற பதத்திலுள்ள தரப் ப்ரத்யயத்தினால் முக்கியத்வம் எல்லா இடத்திலும் சொல்ல விரும்பப்பட்டிருக்கிறது. இவ்வண்ணம் ஸத் வித்யையின்தொடக்கத்திலுள்ள ஏக விஜ்ஞாநத்தால் ஸர்வவிஜ்ஞாநத்திற்கு முக்கியத்வமானது கூறப்பட்டது.

'हन्ताहमिमास्तिस्रो देवता अनेन जीवेनात्मनानुप्रविश्य नामरूपे व्याकरवाणि' इति, 'तिस्रो देवताः' इति सर्वमचिद्वस्तु निर्दिश्य तत्र स्वात्मकजीवानुप्रवेशेन नामरूपव्याकरणवचनात् सर्वे वाचकाश्शब्दाः अचिद्विशिष्टजीवविशिष्टपरमात्मन एव वाचका इति कारणावस्थपरमात्मवाचिना

𑌶𑌬𑍍𑌦𑍇𑌨 𑌕𑌾𑌰𑍍𑌯𑌵𑌾𑌚𑌿𑌨𑌶𑍍𑌶𑌬𑍍𑌦𑌸𑍍𑌯 𑌸𑌾𑌮𑌾𑌨𑌾𑌧𑌿𑌕𑌰𑌣𑍍𑌯𑌂 𑌉𑌪𑌪𑌦𑍍𑌯𑌤𑍇। 𑌅𑌤𑌃 𑌸𑍍𑌥𑍂𑌲𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌚𑌿𑌦𑌚𑌿𑌤𑍍𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵 𑌕𑌾𑌰𑍍𑌯𑌂 𑌕𑌾𑌰𑌣𑌂 𑌚𑍇𑌤𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍋𑌪𑌾𑌦𑌾𑌨𑌂 𑌜𑌗𑌤𑍍 । 𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌚𑌿𑌦𑌚𑌿𑌦𑍍𑌵𑌸𑍍𑌤𑍁𑌶𑌰𑍀𑌰𑌕𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵 𑌕𑌾𑌰𑌣𑌮𑌿𑌤𑌿 ।

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍋𑌪𑌾𑌦𑌾𑌨𑌤𑍍𑌵𑍇𑌽𑌪𑌿 𑌸𑌙𑍍𑌘𑌾𑌤𑌸𑍍𑌯𑍋𑌪𑌾𑌦𑌾𑌨𑌤𑍍𑌵𑍇𑌨 𑌚𑌿𑌦𑌚𑌿𑌤𑍋𑌰𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌶𑍍𑌚 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌾𑌸𑌙𑍍𑌕𑌰𑍋𑌽𑌪𑍍𑌯𑍁𑌪𑌪𑌨𑍍𑌨𑌤𑌰𑌃 । 𑌯𑌥𑌾 𑌶𑍁𑌕𑍍𑌲𑌕𑍃𑌷𑍍𑌣𑌰𑌕𑍍𑌤𑌤𑌨𑍍𑌤𑍁𑌸𑌙𑍍𑌘𑌾𑌤𑍋𑌪𑌾𑌦𑌾𑌨𑌤𑍍𑌵𑍇𑌽𑌪𑌿 𑌚𑌿𑌤𑍍𑌰𑌪𑌟𑌸𑍍𑌯 𑌤𑌤𑍍𑌤𑌤𑍍𑌤𑌨𑍍𑌤𑍁𑌪𑍍𑌰𑌦𑍇𑌶 𑌏𑌵 𑌶𑍌𑌕𑍍𑌲𑍍𑌯𑌾𑌦𑌿𑌸𑌮𑍍𑌬𑌨𑍍𑌧 𑌇𑌤𑌿 𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌵𑌸𑍍𑌥𑌾𑌯𑌾𑌮𑌪𑌿 𑌨 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌵𑌰𑍍𑌣𑌸𑌙𑍍𑌕𑌰𑌃; 𑌤𑌥𑌾 𑌚𑌿𑌦𑌚𑌿𑌦𑍀𑌶𑍍𑌵𑌰𑌸𑌙𑍍𑌘𑌾𑌤𑍋𑌪𑌾𑌦𑌾𑌨𑌤𑍍𑌵𑍇𑌽𑌪𑌿 𑌜𑌗𑌤𑌃 𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌵𑌸𑍍𑌥𑌾𑌯𑌾𑌮𑌪𑌿 𑌭𑍋𑌕𑍍𑌤𑍃𑌤𑍍𑌵𑌭𑍋𑌗𑍍𑌯𑌤𑍍𑌵𑌨𑌿𑌯𑌨𑍍𑌤𑍃𑌤𑍍𑌵𑌾𑌦𑍍𑌯𑌸𑌙𑍍𑌕𑌰𑌃 । 𑌤𑌨𑍍𑌤𑍂𑌨𑌾𑌂 𑌪𑍃𑌥𑌕𑍍𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌯𑍋𑌗𑍍𑌯𑌾𑌨𑌾𑌮𑍇𑌵 𑌪𑌾𑌕𑍍𑌷𑌿𑌕𑍍𑌯𑌾 𑌕𑌦𑌾𑌚𑌿𑌤𑍍𑌸𑌂𑌹𑌤𑌾𑌨𑌾𑌂 𑌕𑌾𑌰𑌣𑌤𑍍𑌵𑌂 𑌕𑌾𑌰𑍍𑌯𑌤𑍍𑌵𑌂 𑌚 । 𑌇𑌹 𑌤𑍁 𑌚𑌿𑌦𑌚𑌿𑌤𑍋𑌃 𑌸𑌰𑍍𑌵𑌾𑌵𑌸𑍍𑌥𑌯𑍋𑌃 𑌪𑌰𑌮𑌪𑍁𑌰𑍁𑌷𑌶𑌰𑍀𑌰𑌤𑍍𑌵𑍇𑌨 𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌤𑌯𑍈𑌵 𑌪𑌦𑌾𑌰𑍍𑌥𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌃 𑌪𑌰𑌮𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 𑌸𑌰𑍍𑌵𑌦𑌾 𑌸𑌰𑍍𑌵𑌶𑌬𑍍𑌦𑌵𑌾𑌚𑍍𑌯 𑌇𑌤𑌿 𑌵𑌿𑌶𑍇𑌷𑌃 । 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌭𑍇𑌦𑌸𑍍𑌤𑌦𑌸𑌙𑍍𑌕𑌰𑌶𑍍𑌚 𑌤𑌤𑍍𑌰 𑌚𑌾𑌤𑍍𑌰 𑌚 𑌤𑍁𑌲𑍍𑌯𑌃 । 𑌏𑌵𑌂 𑌚 𑌸𑌤𑌿 𑌪𑌰𑌸𑍍𑌯 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌃 𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌨𑍁𑌪𑍍𑌰𑌵𑍇𑌶𑍇𑌽𑌪𑌿 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌾𑌨𑍍𑌯𑌥𑌾𑌭𑌾𑌵𑌾𑌭𑌾𑌵𑌾𑌦𑌵𑌿𑌕𑍃𑌤𑌤𑍍𑌵𑌮𑍁𑌪𑌪𑌨𑍍𑌨𑌤𑌰𑌮𑍍 । 𑌸𑍍𑌥𑍂𑌲𑌾𑌵𑌸𑍍𑌥𑌸𑍍𑌯 𑌨𑌾𑌮𑌰𑍂𑌪𑌵𑌿𑌭𑌾𑌗𑌵𑌿𑌭𑌕𑍍𑌤𑌸𑍍𑌯 𑌚𑌿𑌦𑌚𑌿𑌦𑍍𑌵𑌸𑍍𑌤𑍁𑌨 𑌆𑌤𑍍𑌮𑌤𑌯𑌾𑌽𑌵𑌸𑍍𑌥𑌾𑌨𑌾𑌤𑍍𑌕𑌾𑌰𑍍𑌯𑌤𑍍𑌵𑌮𑌪𑍍𑌯𑍁𑌪𑌪𑌨𑍍𑌨𑌤𑌰𑌮𑍍 । 𑌅𑌵𑌸𑍍𑌥𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌪𑌤𑍍𑌤𑌿𑌰𑍇𑌵 𑌹𑌿 𑌕𑌾𑌰𑍍𑌯𑌤𑌾 ॥

𑌨𑌿𑌰𑍍𑌗𑍁𑌣𑌵𑌾𑌦𑌾𑌶𑍍𑌚 𑌪𑌰𑌸𑍍𑌯 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋 𑌹𑍇𑌯𑌗𑍁𑌣𑌾𑌸𑌮𑍍𑌬𑌨𑍍𑌧𑌾𑌦𑍁𑌪𑌪𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 । “𑌅𑌪𑌹𑌤𑌪𑌾𑌪𑍍𑌮𑌾 𑌵𑌿𑌜𑌰𑍋 𑌵𑌿𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌰𑍍𑌵𑌿𑌶𑍋𑌕𑍋 𑌵𑌿𑌜𑌿𑌘𑌤𑍍𑌸𑍋𑌽𑌪𑌿𑌪𑌾𑌸𑌃” 𑌇𑌤𑌿 𑌹𑍇𑌯𑌗𑍁𑌣𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑌿𑌧𑍍𑌯 “𑌸𑌤𑍍𑌯𑌕𑌾𑌮𑌸𑍍𑌸𑌤𑍍𑌯𑌸𑌙𑍍𑌕𑌲𑍍𑌪𑌃” 𑌇𑌤𑌿 𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌗𑍁𑌣𑌾𑌨𑍍𑌵𑌿𑌦𑌧𑌤𑍀 𑌇𑌯𑌂 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌰𑍇𑌵𑌾𑌨𑍍𑌯𑌤𑍍𑌰 𑌸𑌾𑌮𑌾𑌨𑍍𑌯𑍇𑌨𑌾𑌵𑌗𑌤𑌂 𑌗𑍁𑌣𑌨𑌿𑌷𑍇𑌧𑌂 𑌹𑍇𑌯𑌗𑍁𑌣𑌵𑌿𑌷𑌯𑌂 𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌾𑌪𑌯𑌤𑌿 ॥

𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍇𑌤𑌿𑌵𑌾𑌦𑌶𑍍𑌚 𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌸𑍍𑌯 𑌸𑌰𑍍𑌵𑌶𑌕𑍍𑌤𑍇𑌰𑍍𑌨𑌿𑌖𑌿𑌲𑌹𑍇𑌯𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌨𑍀𑌕𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌗𑍁𑌣𑌾𑌕𑌰𑌸𑍍𑌯 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌸𑍍𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌂

𑌜𑍍𑌞𑌾𑌨𑍈𑌕𑌨𑌿𑌰𑍂𑌪𑌣𑍀𑌯𑌂 𑌸𑍍𑌵𑌯𑌂𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌤𑌯𑌾 𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌂 𑌚𑍇𑌤𑍍𑌯𑌭𑍍𑌯𑍁𑌪𑌗𑌮𑌾𑌦𑌵𑌤𑌾𑌰𑌃 । "𑌯𑌃 𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌃 𑌸𑌰𑍍𑌵𑌵𑌿𑌤𑍍" "𑌪𑌰𑌾𑌸𑍍𑌯 𑌶𑌕𑍍𑌤𑌿𑌰𑍍𑌵𑌿𑌵𑌿𑌧𑍈𑌵 𑌶𑍍𑌰𑍂𑌯𑌤𑍇 𑌸𑍍𑌵𑌾𑌭𑌾𑌵𑌿𑌕𑍀 𑌜𑍍𑌞𑌾𑌨𑌬𑌲𑌕𑍍𑌰𑌿𑌯𑌾 𑌚" "𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌤𑌾𑌰𑌮𑌰𑍇 𑌕𑍇𑌨 𑌵𑌿𑌜𑌾𑌨𑍀𑌯𑌾𑌤𑍍" 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌕𑌾 𑌜𑍍𑌞𑌾𑌤𑍃𑌤𑍍𑌵𑌪𑌰𑌾𑌃 𑌶𑍍𑌰𑍁𑌤𑌯𑌃 ; "𑌸𑌤𑍍𑌯𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍍" 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌕𑌾𑌸𑍍𑌤𑍁 𑌜𑍍𑌞𑌾𑌨𑍈𑌕𑌨𑌿𑌰𑍂𑌪𑌣𑍀𑌯𑌤𑌯𑌾 𑌸𑍍𑌵𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌤𑌯𑌾 𑌚 𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌤𑌾𑌮𑍍 ॥

"𑌸𑍋𑌽𑌕𑌾𑌮𑌯𑌤 𑌬𑌹𑍁 𑌸𑍍𑌯𑌾𑌮𑍍" "𑌤𑌦𑍈𑌕𑍍𑌷𑌤 𑌬𑌹𑍁 𑌸𑍍𑌯𑌾𑌮𑍍" "𑌤𑌨𑍍𑌨𑌾𑌮𑌰𑍂𑌪𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌵𑍍𑌯𑌾𑌕𑍍𑌰𑌿𑌯𑌤" 𑌇𑌤𑌿 [illegible] 𑌮𑍃𑌤𑍍𑌯𑍋𑌃 𑌸 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌮𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌯 𑌇𑌹 𑌨𑌾𑌨𑍇𑌵 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿' "𑌨𑍇𑌹 𑌨𑌾𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌕𑌿𑌞𑍍𑌚𑌨" "𑌯𑌤𑍍𑌰 𑌹𑌿 𑌦𑍍𑌵𑍈𑌤𑌮𑌿𑌵 𑌭𑌵𑌤𑌿 𑌤𑌦𑌿𑌤𑌰 𑌇𑌤𑌰𑌂 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 । 𑌯𑌤𑍍𑌰 𑌤𑍍𑌵𑌸𑍍𑌯 𑌸𑌰𑍍𑌵𑌮𑌾𑌤𑍍𑌮𑍈𑌵𑌾𑌭𑍂𑌤𑍍 𑌤𑌤𑍍𑌕𑍇𑌨 𑌕𑌂 𑌪𑌶𑍍𑌯𑍇𑌤𑍍 𑌤𑌤𑍍𑌕𑍇𑌨 𑌕𑌂 𑌵𑌿𑌜𑌾𑌨𑍀𑌯𑌾𑌤𑍍" 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌨𑌾 । 𑌨 𑌚 𑌤𑍇𑌨 "𑌬𑌹𑍁 𑌸𑍍𑌯𑌾𑌂 𑌪𑍍𑌰𑌜𑌾𑌯𑍇𑌯" 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌸𑌿𑌦𑍍𑌧𑌂 [illegible] 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋 𑌨𑌾𑌨𑌾𑌨𑌾𑌮𑌰𑍂𑌪𑌭𑌾𑌕𑍍𑌤𑍍𑌵𑍇𑌨 𑌨𑌾𑌨𑌾𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌤𑍍𑌵𑌂 𑌨𑌿𑌷𑌿𑌧𑍍𑌯𑌤𑍇 । '𑌯𑌤𑍍𑌰 𑌤𑍍𑌵𑌸𑍍𑌯 𑌸𑌰𑍍𑌵𑌮𑌾𑌤𑍍𑌮𑍈𑌵𑌾𑌭𑍂𑌤𑍍" 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌨𑌿𑌷𑍇𑌧𑌵𑌾𑌕𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌚 [illegible]— "𑌸𑌰𑍍𑌵𑌂 𑌤𑌂 𑌪𑌰𑌾𑌦𑌾𑌦𑍍𑌯𑍋𑌽𑌨𑍍𑌯𑌤𑍍𑌰𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌵𑍇𑌦" "𑌤𑌸𑍍𑌯 𑌹 𑌵𑌾 𑌏𑌤𑌸𑍍𑌯 𑌮𑌹𑌤𑍋 𑌭𑍂𑌤𑌸𑍍𑌯 𑌨𑌿𑌶𑍍𑌶𑍍𑌵𑌸𑌿𑌤𑌮𑍇𑌤𑌦𑍍𑌯𑌦𑍃𑌗𑍍𑌵𑍇𑌦𑍋 𑌯𑌜𑍁𑌰𑍍𑌵𑍇𑌦𑌃" 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌨𑌾 ॥

ஸ்ரீபாஷ்யம்—

நான் இந்த எல்லா அசித் வஸ்துக்களுக்குள் என்னை ஆத்மாவாகக்கொண்ட ஜீவன் வாயிலாக ப்ரவேசித்து நாமரூப வ்யாகரணம் செய்கிறேன். 'திஸ்ரோ தேவதா:' என்று எல்லா அசித்வஸ்துக்களையும் சொல்லி, அவைகளில் தன்னை ஆத்மாவாகக்கொண்ட ஜீவனுடைய அநுப்ரவேசத்தால் நாமரூப வ்யாகரணம் சொல்லி இருப்பதால் வாசக சப்தங்களனைத்தும் அசித்துடன் கூடின பரமாத்மாவுக்கே வாசகங்களாதலால் காரணாவஸ்தையுடன் கூடின பரமாத்மவாசக சப்தத்தோடு கார்யவாசக சப்தத்திற்கு ஸாமாநாதிகரண்யமானது முக்கிய வ்ருத்தம். ஆகையால் ஸ்தூலங்களாகவும் ஸூக்ஷ்மங்களாகவுமிருக்கிற சித்துக்களையும் அசித்துக்களையும் ப்ரகாரங்களாகவுடைய ப்ரஹ்மமே கார்யமும் காரணமுமாக இருப்பதால் ஜகத்தானது ப்ரஹ்மத்தை

உபாதானமாகவுடையது. ஸூக்ஷ்மசிதசித் வஸ்துக்களை சரீரமாகக்கொண்ட ப்ரஹ்மமே காரணமாதலால் ஜகத்தைக்குறித்து ப்ரஹ்மத்துக்கு உபாதானத்வமிருந்த போதிலும் ஸங்காதம் உபாதானமாகையால் சித்துக்களுக்கும் அசித்துக்களுக்கும் ப்ரஹ்மத்துக்கும் ஸ்வபாவங்களின் அஸாங்கார்யமும் மிக்கப்பொருத்தமுள்ளது. எப்படி வெளுப்பு கருப்பு சிவப்பு நூல்களின் ஸங்காதத்தை உபாதானமாகக் கொண்டிருந்தபோதிலும் சித்ர படத்துக்கு அந்தந்த நூலுள்ள இடத்திலேயே வெளுப்பு முதலிய குணங்களின் ஸம்பந்தம் இருப்பதனால் கார்யாவஸ்தையிலுங் கூட எல்லா இடத்திலும் ஸாங்கர்யமில்லையோ; அப்படியே ஜகத்தானது சித் அசித் ஈச்வரன் இம்மூன்று பதார்த்தங்களின் ஸங்காதத்தைக் காரணமாகக் கொண்டிருந்தபோதிலும் கார்யாவஸ்தையிலும் போக்த்ருத்வம் போக்யத்வம் நியந்த்ருத்வம் முதலிய குணங்களுக்கு ஸாங்கர்யமில்லை. தனித்திருந்த லுககு யோக்யங்களாகவே இருக்கிற நூல்களுக்கு புருஷனுடைய இச்சையினால் ஒரு ஸமயத்தில் சேர்க்கப்பட்ட அவைகளுக்கு காரணத்வமும் கார்யத்வமும். இவ்விடத்திலோ வென்றால் எல்லா அவஸ்தைகளுடன் கூடின சித் அசித் இவ்விரண்டும் பரமபுருஷனுக்கு சரீரமாதலால் அந்த பரமபுருஷனுக்கு ப்ரகாரங்களாக இருப்பதனாலேயே அவைகளுக்கு பதார்த்தத்வம் ஸித்தித்திருப்பதால் அப்படிப்பட்ட சிதசித்துக்களை ப்ரகாரங்களாகவுடைய பரமபுருஷன் எப்பொழுதும் எல்லாசப்தங்களாலும் சொல்லத்தக்கவனாக ஆகிறானென்பது விசேஷம். ஸ்வபாவங்களின் பேதமும் அவைகளின் அஸாங்கர்யமும் அங்கும் இங்கும் துல்யம். ஆகவே பரப்ரஹ்மத்துக்கு கார்யபூதமான ஜகத்தில் அநுப்ரவேசமிருந்தபோதிலும் ஸ்வரூபத்தின் வேறுபாடில்லாமையால் விகாரமில்லை என்று சொல்வது மிக்கப்பொருத்தமுள்ளது. ஸ்தூலாவஸ்தையை ஆச்ரயித்து தனித்தனியாக நாமங்களாலும் ரூபங்களாலும் பகுக்கப்பட்டிருக்கிற சிதசித்வஸ்துக்களுக்கு ஆத்மாவாக இருப்பதால் ப்ரஹ்மத்திற்கு கார்யத்வமும் மிக்கப்பொருத்தமுள்ளதாக ஆகிறது. கார்யத்வமென்பது வேறு அவஸ்தையை அடைவதேயன்றோ.

நிர்குணவாதங்களும் பரப்ரஹ்மத்துக்கு ஹேய குணங்களின் அஸம்பந்தத்தால் பொருந்துகிற தன்றோ 'அபஹதபாப்மா விஜரோவிம்ருத்யுர் விசோகோ விஜிகத்ஸோபிபாஸ:' என்று ஹேயகுணங்களை நிஷேதித்து 'ஸத்யகாம:ஸத்ய ஸங்கல்ப:' என்று கல்யாணகுணங்களை விதிக்கிற இந்த ச்ருதியே வேறு இடத்தில் ஸாமான்யமாக அறியப்பட்டிருக்கிற குணநிஷேதத்தை ஹேய குண விஷயமென்று வ்யவஸ்தை செய்கிறது. ப்ரஹ்மம் ஜ்ஞானஸ்வரூபமென்கிற வாதமும் எல்லாமறிந்ததும் எல்லா சக்திகளாலும் நிறைந்ததும் எல்லா ஹேய குணங்களுக்கும் நிவர்தகமாகவும் கல்யாண குணங்களுக்கு § ஆகரமாகவுமிருக்கிற ப்ரஹ்மத்தினுடைய ஸ்வரூபமானது ஜ்ஞான

§ ஆகரம்—இருப்பிடம், அல்லது நிதி.

மொன்றாலேயே நிரூபிக்கத்தக்கதென்றும் ஸ்வயம் ப்ரகாசமாக இருப்பத ஞல் ஜ்ஞாநஸ்வரூபமென்றும் ஒப்புக்கொண்டிருப்பதால் நன்கு பொருத்த முள்ளது. 'யஸ்ஸர்வஜ்ஞஸ்ஸர்வவித், பராஸ்ய சக்திர்விவிதைவ ச்ரூயதே ஸ்வாபாவிகீ ஜ்ஞாநபலக்ரியாச, விஜ்ஞாதாரமரே கேந விஜாநீயாத்' இதுமுத லிய ச்ருதிகள் ஜ்ஞாத்ருத்வத்தை அறிவிக்கின்றன. 'ஸத்யம் ஜ்ஞாநம்' இது முதலிய ச்ருதிவசனங்கள் ஜ்ஞாநத்தாலேயே நிரூபிக்கத்தக்கதாக இருப்பதா லும் ஸ்வப்ரகாசவஸ்துவாக இருப்பதாலும் ஜ்ஞாநஸ்வரூபத்தை அறிவி க்கின்றன. 'ஸோऽகாமயத, ததைக்ஷத, பஹுஸ்யாம, தந்நாமரூபாப்யாம் வ்யா க்ரியத', என்று ப்ரஹ்மமே தன் ஸங்கல்பத்தால் விசித்திரமான ஸ்தாவர ஜங் கமரூபமாக பற்பலவிதமாக இருப்பது பற்றி 'ம்ருத்யோஸ்ஸ ம்ருத்யுமாப் நோதி ய இஹநாநேவ பச்யதி, நேஹநாநாஸ்தி கிஞ்சந, யத்ரஹித்வைத மிவபவதி, ததிதர இதரம் பச்யதி, யத்ரத்வஸ்ய ஸர்வமாத்மைவாபூத், தத்கேந கம் பச்யேத், கேந கம் விஜாநீயாத்' இது முதலிய ச்ருதிவசநங்களால் அதற் கு ப்ரத்யநீகமாக அதாவது விருத்தமான ப்ரஹ்மாத்மகமாக இல்லாத வஸ்து க்களின் நாநாத்வமானது தத்வமல்லாததால் அது நிஷேதிக்கப்படுகிறதே ஒழிய 'பஹுஸ்யாம் ப்ரஜாயேய' இது முதலிய ச்ருதி ஸித்தமான தன் ஸங் கல்பத்தால் உண்டுபண்ணப்பட்டிருக்கிற பற்பல நாமரூபங்களை அடைந்திரு ப்பதால் ப்ரஹ்மத்தினுடைய நாநா ப்ரகாரத்வமும் நிஷேதிக்கப்படுகிறதில்லை. 'ஸர்வம் தம் பராதாத்யோऽந்யத்ராத்மநஸ்ஸர்வம்வேத, தஸ்ய ஹவா ஏதஸ்ய மஹதோ பூதஸ்ய நிச்வஸிதமேதத்யத் ருக்வேத:' இது முதலிய ச்ருதிவச னங்களால் 'யத்ரத்வஸ்ய ஸர்வமாத்மைவாபூத்' இது முதலிய நிஷேத வாக்யங் களின் தொடக்கத்திலும் அது ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

ச்ருதப்ரகாசிகை—

அதற்குமேல் அதன் உபஸம்ஹாரத்தை அடைந்திருக்கிற தத்த்வமஸி என்கிற ஸாமாநாதிகரண்யத்துக்கு முக்கியத்வத்தைச் சொல்லுகிறார்—அஹமிமா: என்று. உபா தாநத்வம் ஸ்வபாவங்களின் அஸாங்கர்யம் இவைகள் எவ்வண்ணம் பொருத்தமுள்ளவை களாக ஆகின்றனவென்று வினவப்படுமேயானல் சொல்லுகிறார்- அத:ஸ்தூல என்று. வரப்போகிற அவஸ்தாவிசேஷத்துடன் கூடியதாக இருக்கிற வஸ்துவுக்கு முந்தின அவஸ்தையுடன் சேர்க்கை யன்றோ உபாதாநத்வம். ஆதலால் அவஸ்தா விசேஷங்கள் இரண்டும் ஸ்தூல ஸூக்ஷ்ம சப்தங்களால் காண்பிக்கப்பட்டன. இதனல் ஒரு கால விசேஷத்தில் ஒன்ருகவே இருந்ததென்கிற வசனமானது நாமரூப விபாகமில்லாத தென்கிற அபிப்ராயத்துடன் கூடியதென்று பலித்தது. உபாதாநத்வமிருக்கையிலுங்கூட ஸ்வபாவஙகளின் அஸாங்கர்யததைக் கூறுகிறா—ஸூக்ஷ்ம என்று. த்ருஷ்டாந்தத் தால் இந்த அர்த்தத்தை உபபாதனம் செய்கிறார்—யதா என்று. அன்பரே! வெளுப்பாக வும் கருப்பாகவும் மற்றும் வேறு நிறமுள்ளவைகளுமான நூல்கள் காரணவஸ்தையிலும் வேறு பட்டிருப்பவைகள். அவைகளில் ஏதாவது ஒரு நூலைக்குறித்து ஏதாவது ஒன்று க்கு காரணத்வமில்லை. ஆகையால் அங்கு ஸ்வபாவாஸாங்கர்யம் ந்யாய்யமானது. இந்த இடத்திலோ வென்றால் சிதசித் ப்ரஹ்மரூப ஸங்காதத்திற்கு ஜகத்தைக்குறித்து உபா

தாநத்வ மிருந்தபோதிலும் காரணாவஸ்தையில் பரமாத்மா ஒருவனே ஸ்வ சப்தத்தால் ச்ருதியில் சொல்லப்படுகிறான் சேதநா சேதநங்களோவெனில் சொல்லப்படுகிறதில்லை. மேலும் பரமாத்மாவுக்கு மூர்த்தி ஏகத்வமும் அவனைத்தவிர்த்த மற்ற சேதநாசேதநங்கள் இரண்டுக்கும் உத்பத்தி முதலியதும் ச்ருதியில் கூறப்படுகிறது. ஆதலால் ஸ்வபாவங்களுக்கு அஸாங்கர்யம் என்று சொல்லப்படுமேயானால் சொல்லுகிறார்—தந்துநாம் என்று. நூல்களுக்குள் ஒன்றுக்கொன்று ப்ராதாந்யா ப்ராதாந்யத்தை வஹிக்காமையினால் அந்த இடத்தில் ஏதாவது ஒரு நூலைச்சொல்லுகிற சப்தத்தினால் ஸமுதாயம் சொல்லப்படுகிறதில்லை. இந்த இடத்திலோ வென்றால் எல்லாவற்றையும் ப்ரகாரங்களாகக்கொண்டிருக்கிற பகவானுக்கு ஸர்வசப்தங்களாலும் சொல்லத்தக்கவனாக இருத்தல் பொருத்தமுள்ளதாக இருப்பதுபற்றி ஏகதேசவாசியான சப்தத்தாலுங்கூட விசிஷ்டமே சொல்லப்படுகிறபடியால் விசிஷ்டத்திற்கே காரணத்வ மிருப்பதால் மூர்த்தியுங்கூட பேதமிருக்கிறபடியால் ஸ்வபாவங்களுக்கு அஸாங்கார்யமானது பொருத்தமுள்ளதென்று கருத்து. எந்த ஆகாரத்தினாலொற்றுமை என்று வினவப்படுமேயானால் சொல்லுகிறார்—ஸ்வபாவ என்று. உப்பளத்திலிருக்கிற எல்லா வஸ்துக்களுக்கும் உப்புயகரிக்கும் ஸ்வபாவ மேற்படுவதுபோல் ப்ரஹ்மத்துக்கு வேறுபாட்டைஸந்தேஹித்துச் சொல்லுகிறார்—ஏவங்ச என்று. அங்ஙனமாகில் உபாதாநத்வமே பொருந்தாதென்று கேழ்க்கப்படுமேயாகில் கூறுகிறார்—ஸ்தூலாவஸ்தஸ்ய என்று. ஆத்மாவாக இருப்பதால் எவ்வாறு கார்யத்வமென்று வினவப்படுமேயாகில் சொல்லுகிறார்-அவஸ்தா என்று. அவிகார ச்ருதிகளுக்கு ப்ரக்ருதியை அடைந்திருக்கிற ஸ்வரூபாந்யதா பாவரூபமான விகாரமானது ப்ரஹ்மத்தினிடத்திலில்லை என்று அர்த்தம். ஸ்தூலரூபமானகார்யாவஸ்தையிலுள்ள சிதசித்வஸ்துக்களை நியமனம் செய்தலென்கிற அவஸ்தாந்தர ப்ராப்திதான் ப்ரஹ்மத்துக்கு கார்யத்வம் என்பது கார்யத்வ வாதிகளான ச்ருதிகளுக்கு அர்த்தம். காரணாவஸ்தையிலிருக்கிற சிதசித் வஸ்து நியமனம் கார்யாவஸ்தையிலிருக்கிற சிதசித் வஸ்து நியமன மாகாதன்றோ. அந்த அந்த அவஸ்தையுடன் சேர்ந்திருக்கிற சிதசித்வஸ்துக்களின் நியமனரூபங்களான விசேஷங்களே ப்ரஹ்மத்தினுடைய அத்வாரகாவஸ்தைகள். ஸ்வரூபத்தின் வேறுபாடு ஜ்ஞாநஸங்கோசம் முதலிய விகாரங்களோவென்றால் சேதநாசேதநங்கள் வழியிலாக ப்ரஹ்மத்துக்கு வருகிற ஸத்வாரகாவஸ்தைகள் என்று அர்த்தம். எவ்வாறு க்ராஹக க்ரஹணத்தினால் ஸந்நிதிஸமாம்நாதங்களாகவும் பரமா பூர்வசேஷங்களாகவு மறியப்பட்டிருக்கிற வஸ்துக்களில் யாகம் வ்ரீஹி முதலியவற்றுக்கு அத்வாரக சேஷத்வமும் ப்ரோக்ஷணம் முதலியதற்கு ஸத்வாரகசேஷத்வமும் முக்கியமென்றே அறியப்படுகிறதோ; அவ்வாறே பஹுஸ்யாம் என்று க்ராஹக க்ரஹணத்தினால் பரமாத்மாவினுடையதாக அறியப்பட்டிருக்கிற எல்லா அவஸ்தைகளிலும் ஸ்வரூபத்தின் வேறுபாடு ஜ்ஞாந ஸங்கோசம் முதலிய ஸத்வாரகாவஸ்தைக்கும் அந்த அந்த வஸ்துக்களை நியமநம் செய்தலாகிற அத்வாரகாவஸ்தைக்கும் பரமாத்ம ஸம்பந்தம் முக்கியமே என்று கருத்து.

நிர்குண என்று. அபஹதபாப்மா இதுமுதலியதும் இங்கு கொஞ்சம் விவரிக்கப்பட்டது. ச்ருதிரேவ என்று. மதாந்தரஸ்தர்களால் சொல்லப்பட்டிருக்கிற நிர்வாஹங்களில் ச்ருதஹாநியும் (சப்தத்தால் நேராக உணர்த்தப்பட்டிருக்கிற அர்த்தத்தை விடுவதும்) அச்ருதகல்பனமும் (சப்தத்தால் உணர்த்தப்பட்டிராத அர்த்தத்தை கல்பிப்பதும்) இருக்கிறது. இந்த மதத்திலோ வென்றால் நிர்வாஹமானது ச்ருதியினால் சொல்லப்பட்டதாகவே இருப்பதுடன் சுருதியினால் உணர்த்தப்பட்ட அர்த்தத்திற்கு அனுகுணமாகவுமிருக்கிறதென்று வைஷம்ய மென்று கருத்து.

அதற்குமேல் ஆர்த்தகுண நிஷேதத்தில் கருத்துள்ளதென்பதாக மதாந்தரஸ்தர்களால் அபிமானிக்கப்பட்டிருக்கிற ச்ருதிகளின் பொருளைக் கூறுகிறார்—ஜ்ஞாநஸ்வரூபம் என்று. ஸர்வஜ்ஞஸ்ய இது முதலிய பதங்கள் மங்களகரங்களான குணவிசேஷங்களை விதிக்கிற வாக்கியங்களின் ஸ்மாரணத்தை பலமாகக்கொண்டவைகள். ''தத்குணஸாரத்வாத்'' இது முதலிய ஸூத்ரங்களில் ஸித்தமாகவே இருக்கிற இரண்டு நிர்வாஹங்களும் இங்கு கூறப்பட்டன. ஈச்வரன் ஜ்ஞாதாவாக இருப்பதால் ஜ்ஞாநத்தினாலேயே நிரூபிக்கப்படத்தக்கதன்மை உரைக்கப்பட்டது. ஜ்ஞாதாவுக்கு ஜ்ஞாநமல்லவோ நிரூபகம். தரப் என்கிற ப்ரத்யயத்திற்கு முக்கியத்வம் பொருள்-ஈச்வரன் ஜ்ஞாநஸ்வரூபன், ஜ்ஞாநத்தை குணமாகவுமுடையவன் என்பதை உணர்த்துவதில் கருத்துள்ள ச்ருதிகளைக்காண்பிக்கிறார்—யஸ்ஸர்வஜ்ஞ: என்று. ஜ்ஞாநஸ்வரூபதாம்-இரண்டுவிதத்தாலும் ஜ்ஞானவ்யபதேசத்துக்கு யோக்யனாக இருக்கும் தன்மையை-ஜ்ஞாநஸ்வரூபனாக இருத்தலும் ஜ்ஞாநகுணமுள்ளவனாக இருத்தலும் விதிக்கப்பட்டிருப்பதால் இரண்டும் பொருத்தமுள்ளதென்று அர்த்தம்- ஜ்ஞாநத்துக்கு ஜ்ஞாநாச்ரயத்வம் பொருந்தாதென்கிற கேள்விக்கு பரிஹாரம் முந்தியே செய்யப்பட்டிருக்கிறது. பேதத்தை நிஷேதிக்கிற ச்ருதிகளின் பொருளைக்கூறுகிறார்—ஸோऽகாமயத என்று. விசித்ரஸ்திரத்ரஸநுபதயா-விசித்திரங்களான ஸ்தாவரங்களையும் ஜங்கமங்களையும் சரீரமாகக்கொண்டிருப்பதால். அப்ரஹ்மாத்மக என்பதனால் ப்ரஹ்மத்தை அந்தர்யாமியாகக் கொள்ளாமலிருத்தல் உரைக்கப்பட்டது. விதிக்கப்பட்டிருக்கிற வஸ்துக்களைவிட வேறானதும் தன்னால் தான் நிலைபெற்றிருக்கிறதுமான வஸ்துக்களின் நாநாத்வம் என்று பொருள். அன்றிக்கே. ஸ்திரத்ரஸரூபதயா - ஸ்தாவர ஜங்கமாத்மகமாக இருப்பதால். அப்ரஹ்மாத்மக என்று. அப்ரஹ்மபூதமென்று அர்த்தம். அப்படி சொல்லப்பட்டதால் கார்யகாரணங்களின்பேத நிஷேதம செய்யப்பட்டதாக ஆகும். ஐக்யச்ருதிகள் ப்ரகார விசிஷ்ட வஸ்த்வைக்யத்தில் கருத்துள்ளவைகளாதலால் ஐக்யச்ருதிகளுக்கு சேஷமாக இருக்கிற பேதநிஷேதமும் அவைகளை அநுஸரித்து ப்ரகாரிபேத நிஷேதத்திலேயே நோக்கமுள்ளதாக இருப்பதற்குத்தகுதியுள்ளதென்று அர்த்தம். ஸாமான்யமாக சொல்லப்பட்டிருக்கிற நிஷேதமானது விசேஷவிதி காணப்பட்டால் அந்த விசேஷத்தைத்தவிர்த்த மற்றவைகள் ஸாமான்ய நிஷேதத்திற்கு விஷயமாகக் காணப்பட்டிருக்கிறது. நஹிம்ஸ்யாத் இது முதலியவைகளில்—விசேஷவிதியை ஸாமான்ய நிஷேதமானது பாதிக்கிறதேயானால் வைதமான ஹிம்ஸைக்கு அதர்மம் ப்ரஸங்கிக்குமென்கிற அபிப்ராயத்தால் கூறுகிறார்—ந புந: என்று. சொல்லப்பட்ட அர்த்தத்தை உபக்ரமத்தாலேயே உபபாதனம் செய்கிறார்—யத்ரத்வஸ்ய என்று யோऽந்யத்ராத்மந: என்று. அன்யத்ர என்கிற அவ்யயமானது விநாசப்தத்திற்கு பர்யாயம். ப்ரஹ்மண: ப்ருதக்பூதம் - ப்ரஹ்மத்துடன் அவிநாபாவமில்லாத வஸ்து இல்லை என்று அர்த்தம். பேத விசேஷ நிஷேதம் காணப்பட்டிருப்பதால் பொதுவாக இருக்கிற பேத நிஷேதமும் அந்த விசேஷ நிஷேதத்திலேயே பர்யவஸிக்கிறது. ''சாகோவா மந்த்ரவர்ணாத்'' என்கிற ந்யாயத்தால் என்று கருத்து.

𑌏𑌵𑌂 𑌚𑌿𑌦𑌚𑌿𑌦𑍀𑌶𑍍𑌵𑌰𑌾𑌣𑌾𑌂 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌵𑍈𑌲𑌕𑍍𑌷𑌣𑍍𑌯𑌂 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌵𑍈𑌲𑌕𑍍𑌷𑌣𑍍𑌯𑌞𑍍𑌚 𑌵𑌦𑌨𑍍𑌤𑍀𑌨𑌾𑌂 𑌕𑌾𑌰𑍍𑌯𑌕𑌾𑌰𑌣𑌭𑌾𑌵𑌂 𑌕𑌾𑌰𑍍𑌯𑌕𑌾𑌰𑌣𑌯𑍋𑌰𑌨𑌨𑍍𑌯𑌤𑍍𑌵𑌞𑍍𑌚 𑌵𑌦𑌨𑍍𑌤𑍀𑌨𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑌾𑌸𑌾𑌂 𑌶𑍍𑌰𑍁𑌤𑍀𑌨𑌾𑌮𑌵𑌿𑌰𑍋𑌧𑌃; 𑌚𑌿𑌦𑌚𑌿𑌤𑍋𑌃 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌶𑍍𑌚 𑌸𑌰𑍍𑌵𑌦𑌾 𑌶𑌰𑍀𑌰𑌾𑌤𑍍𑌮𑌭𑌾𑌵𑌂 𑌶𑌰𑍀𑌰𑌭𑍂𑌤𑌯𑍋𑌃 𑌕𑌾𑌰𑌣𑌦𑌶𑌾𑌯𑌾𑌂

நாமரூபவிபாகாநர்ஹஸூக்ஷ்மதஶாபத்திம் கார்யதஶாயாஞ்ச ஸ்தூலதஶாபத்திம் வதந்தீபி: ஶ்ருதிபிரேவ ஜ்ஞாயத இதி ப்ரஹ்ம ஜ்ஞாநவாதவைஸ்யவாயிகப்ரஹ்மவேதவாதஸ்யாநந்யஸ்யாப்யநந்யாய ப்ரத்யக்ஷ ஸகலஶ்ருதிவிரோதஸ்ய ந கதஞ்சிதப்யவகாஶோ த்ருஶ்யதே । சிதசிதீஶ்வராணாம் ஸ்வரூபஸ்வபாவதயா தச்ச்ருதிவிஷா நாம் ஶரீராத்மபாவேந ப்ரகாரப்ரகாரிதயா ஶ்ருதிபிரேவ ப்ரதிபந்நாநாம் ப்ரத்யக்ஷேண கார்யகாரணபாவப்ரதிபாதநம் கார்யகாரணயோரைக்யப்ரதிபாதநஞ்ச ஸ்யாவிரோதம் । யதா — ஜ்ஞேயாஜ்ஞௌ ஷட்த்ராமாநந்தவாக்யை: ப்ரதமம் தஜ்ஞாநு ஸதேவாயாநந்தவாதிவாக்யைரேந ஸதேவாயதமக்ரவாஸீத் “ ஆத்மா வா இதமேக ஏவாக்ர ஆஸீத்” இத்யாதிகாரணவாக்யம் காரிந: கார்யதயா விஷயாதி; யதா சிதசிதீஶ்வராணிவிஶ்வஸ்வரூபஸ்வபாவாநு “க்ஷரம் ப்ரதாநமம்ருதாக்ஷரம் ஹர: க்ஷராத்மாநாவீஶதே தேவ ஏக: ” “பதிம் விஶ்வஸ்யாத்மேஶ்வரம்” “ ஜ்யோதிர் நாராயண: பர: ” இத்யாதிவாக்யை: ப்ரதிபாத்ய “யஸ்ய ப்ருதிவீ ஶரீரம்” “யஸ்யாத்மா ஶரீரம்” “யஸ்யாவ்யக்தம் ஶரீரம் । யஸ்யாக்ஷரம் ஶரீரம் । ஏஷ ஸர்வபூதாந்தராத்மாபஹதபாப்மா திவ்யோ தேவ ஏகோ நாராயண:” இத்யாதிபிர்வாக்யை: சிதசிதோ: ஸர்வாவஸ்தாவஸ்திதயோ: பரமாத்மஶரீரதாம் பரமாத்மநஸ்தாதாத்ம்யம் ப்ரதிபாத்ய ஶரீரிபூதபரமாத்மாபிதாயிபி: ஸதாதிஶப்தை: காரணாவஸ்த: கார்யாவஸ்தஶ்ச பரமாத்மைக ஏவேதி ப்ரதிபந்நம் ஸ்ருஷ்டித்வயம் ‘ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீத்’ ‘தததைக்ஷத பஹு ஸ்யாம்’ ‘ஸச்ச த்யச்சாபவத்’ இத்யாதிவாக்யம் ப்ரதிபாதயதி । சிதசித்வஸ்துஶரீரிண: பரமாத்மந: பரமாத்மஶப்தாபிதாநே ஹி நாஸ்தி விரோத:; யதா தேவமநுஷ்யாதிஶரீரகஸ்யாத்மவிஶேஷஸ்ய ‘தேவாத்மா ஸர்வ:’ இத்யாத்மஶப்தாபிதாநம் இத்யுக்தம் ஸ்ருஷ்டிவிஷயே ॥

ஸ்ரீபாஷ்யம்—

இவ்வண்ணம் சித் அசித் ஈச்வரன் மூன்றுக்கும் ஸ்வரூபபேதத்தையும் ஸ்வபாவபேதத்தையும் சொல்லுகிறவைகளும் கார்யகாரண பாவத்தையும்

கார்யகாரணங்கள் இரண்டுக்கும் (அநந்யத்வத்தை) அபேதத்தைச்சொல்லுகிறவைகளுமான எல்லா ச்ருதிகளுக்கும் அவிரோதமானது சித் அசித் இரண்டுக்கும் பரமாத்மாவுக்கும் எப்பொழுதும் சரீராத்மபாவத்தையும் சரீரபூதங்களான சித்அசித் இரண்டுக்கும் காரணாவஸ்தையில் நாமரூப விபாகங்களுக்கு அநர்ஹமான ஸூக்ஷ்ம தசாப்ராப்தியையும் கார்யதசையில் நாமரூப விபாகங்களுக்குத்தக்கதான ஸ்தூலதசா ப்ராப்தியையும் சொல்லுகிற ச்ருதிகளாலேயே அறியப்படுகிறதாதலால் ஸர்வ ச்ருதிகளுக்கும் விருத்தமாக இருக்கிற ப்ரஹ்மாஜ்ஞானவாதத்துக்கும் ஔபாதிகமான ப்ரஹ்மபேதவாதத்துக்கும் அபந்யாய மூலகமான இன்னும் மற்றதற்கும் எவ்விதத்தாலும் அவகாசமானது காணப்படவில்லை. வெவ்வேறான ஸ்வபாவமுள்ளவைகளாக அந்த அந்த ச்ருதிகளால் ஸித்தமாக இருப்பவைகளும் சரீராத்மபாவத்தால் ப்ரகாரப்ரகாரிகளாக ச்ருதிகளாலேயே அறியப்பட்டிருக்கிற சித சிதீச்வரதத்வங்களுக்கு வேறு ச்ருதிகளால் கார்யகாரண பாவப்ரதிபாதனமும். கார்யகாரணங்கள் இரண்டுக்கும் ஐக்ய ப்ரதிபாதனமும் விருத்தமல்லவன்றோ. எப்படி உத்பத்தி வாக்கியங்களால் தனித்தனியாக ப்ரதிபாதிக்கப்பட்டிருப்பவைகளும் ஸமுதாயத்தை அனுவதிக்கிற இரண்டு வாக்கியங்களால் இரண்டு ஸமுதாயபாவத்தை அடைந்திருக்கிறவைகளுமான ஆக்நேய யாகம் முதலிய ஆறு யாகங்களை தர்சபூர்ணமாஸாப்யாம் என்கிற அதிகார வாக்கியமானது பலகாமனையுள்ளவனுக்குச் செய்யத்தக்கதாக விதிக்கிறதோ, அப்படி வெவ்வேறான ஸ்வரூப ஸ்வபாவங்களுள்ள சிதசிதீச்வரர்களை 'க்ஷரம் ப்ரதாந மம்ருதாக்ஷரம் ஹர:, க்ஷராத்மாநாவீசதே தேவ ஏக:, பதிம் விச்வஸ்யாத்மேச்வரம், ஆத்மாநாராயண: பர:'' இது முதலிய வாக்கியங்களால் தனித்தனியாக ப்ரதிபாதித்து, யஸ்ய ப்ருதிவீ சரீரம், யஸ்யாத்மா சரீரம், யஸ்யாவ்யக்தம் சரீரம், யஸ்யாக்ஷரம் சரீரம், ஏஷ ஸர்வபூதாந்தராத்மா அபஹதபாப்மா திவ்யோதேவ ஏகோ நாராயண:, இது முதலிய வாக்கியங்களால் எல்லா அவஸ்தைகளுடனும் சேர்ந்திருக்கிற சித் அசித் இரண்டும் பரமாத்மாவுக்கு சரீரமென்பதையும் பரமாத்மா, அந்த சித சித்துக்களுக்கு ஆத்மா என்பதையும் ப்ரதிபாதித்து சரீரியாக இருக்கிற பரமாத்மாவைச் சொல்லுகிற ஸத் ப்ரஹ்ம முதலிய காரணாவஸ்தையுடனும் கார்யாவஸ்தையுடனும் கூடிய பரமாத்மா ஒருவனே என்று வெவ்வேறாக அறியப்பட்டிருக்கிற மூன்று வஸ்துக்களையும் 'ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீத், ஐததாத்ம்யமிதம் ஸர்வம், ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம' இது முதலிய வாக்கியம் ப்ரதிபாதிக்கிறது. சித்துக்களையும் அசித்துக்களையும் சரீரமாகக்கொண்ட பரமாத்மாவை பரமாத்ம சப்தத்தால் சொன்னால் விரோதமில்லையன்றோ. எப்படி மனுஷ்யபிண்ட சரீரமுள்ள ஆத்ம விசேஷத்தை இந்த ஆத்மா ஸுகமுள்ளவன் என்று ஆத்ம சப்தத்தால் சொல்வதில் விரோதமில்லையோ. இதுவிஷயமான மிக்க நீண்டவிசாரம் வேண்டாம். இத்துடன் போதுமானது.

ச்ருதப்ரகாசிகை—

மற்ற வ்யாக்யாதாக்களாலும் உம்மாலும் நிர்வாஹ ப்ரகாரங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. அதில் என்ன விசேஷமென்று வினவப்படுமேயாகில் சொல்லுகிறார்— ஏவமே என்று. நம்மால் சொல்லப்பட்டிருக்கிற நிர்வாஹமானது ச்ருதிகளாலேயே கூறப்பட்டிருக்கிறது. ஸ்ம்ருதிக்கும் அனுகுணமானது. அந்த வ்யாக்கியாதாக்களால் செய்யப்பட்டிருக்கிற நிர்வாஹமானது ச்ருதிவிருத்தமானது, ச்ருதியினால் சொல்லப்பட்டது மல்ல, போலியான தர்க்கத்தை மூலமாகவும் கொண்டது. 'அபந்யாயமூலஸ்ய ஸகல ச்ருதி விருத்தஸ்ய' என்கிற இந்த பதங்களும் எல்லா இடங்களிலும் அன்வயிக்கின்றன. அந்யஸ்ய என்பது ஸ்வாபாவிகமான பேதாபேதத்தையும் தன்னிடத்திலுள்ள பேதத்தையும் சொல்லுகிறது இந்த அர்த்தத்தை வைதிகத்ருஷ்டாந்தத்தால் உபபாதிக்கிறார்— சிதசித்தீச்வராணாம் என்று. ஆக்நேய: - அக்நீஷோமத்தைச் சார்ந்த உபாம்சு யாஜங்கள் இரண்டு, ஐந்திரங்கள் இரண்டு, ஐந்த்ராக்னங்கள் இரண்டு ஆக ஆறு யாகங்கள். உத்பத்திவாக்கியம் என்பது முதலாவதான ப்ரதிபத்தியை உண்டுபண்ணுகிற வாக்யம். ப்ருதக்த்பன்னான்-தனித்தனியாக ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கிற உத்பத்தி வாக்கியங்களால்- யதாக்நேயோஷ்டாகபாலோமாவாஸ்யாயாஞ்ச பௌர்ணமாஸ்யாஞ்சாச்யுதோ பவதி இது முதலியவைகளால். ஸமுதாயாநுவாதி வாக்யத்வயேந—ய ஏவம் வித்வாந் பௌர்ணமாஸீம் யஜதே, ய ஏவம் விதவாநமாவாஸ்யாம யஜ்தே, இந்த இரண்டு வாக்கியங்களாலும். தர்சபூர்ணமாஸாப்யா மென்று ஸ்வர்கத்துக்குஸாதனமாக இருத்தலென்கிற ஆகாரத்தால் ஒன்றுபடுத்தி அதனால் செய்யத்தக்கதாக விதிக்கிறது என்றுபொருள். அப்படி இந்த இடத்தில் அர்த்த ப்ரதிபாதனத்தைக் காண்பிக்கிறார்— ததா என்று. சரீரபூத என்று, கார்யாவஸ்தையுடனும் காரணாவஸ்தையுடனும்கூடி இருக்கிற பரமாத்மா ஒருவனே என்கிற வசனபங்கியினால் தனித்தனியாக அறியப்பட்டிருக்கிற மூன்று வஸ்துக்களையும் ப்ரதிபாதிக்கிறதென்று அர்த்தம். ஆக்நேயத்தை முதலாகக்கொண்ட ஸமுதாயத்தில் அதில் உள்ளடங்கிய ஒரு வ்யக்தியைச்சொல்லுகிற சப்தத்தால் ஸமுதாயத்திற்கு அபிதானம் காணப்பட்டிருக்கவில்லை. இந்த இடத்திலோ பரமாத்மாவைச் சொல்லுகிற சப்தத்தால் ஸமுதாயாபிதானம் எவ்வண்ணம் ஏற்படுமென்று வினவப்படுமேயானால் கூறுகிறார்—சித சித்வஸ்து என்று. திருஷ்டாந்தத்தைச் சொல்லுகிறார்—யத்ர என்று.

அங்கு ஒன்றுக்கொன்று ப்ரகார ப்ரகாரி பாவமில்லாமையால் ஸமுதாயத்தில் அடங்கி இருக்கிற ஒரு வ்யக்தியைச்சொல்லுகிற சப்தத்தால் ஸமுதாயத்திற்கு அபிதானமில்லை. இந்த இடத்திலோ வென்றால் அப்படி இல்லாமையால் பொருத்தமுள்ளது. எவ்வாறு என்று வினவப்படுமேயாகில் உத்தரம் கூறப்படுகிறது. அர்த்த ஸாமர்த்தியத்தாலும் சப்தஸாமர்த்யத்தாலும் சித் அசித் இரண்டும் ப்ரஹ்மத்தை விட்டு என்றும் புறியாமலே இருக்கிற விசேஷணமாதலாலும் ப்ரகாரங்களால் விடுபட்டிருக்கிற ப்ரஹ்மத்துக்கு ஜகத்காரணத்வம் பொருந்தாததாலும் ப்ரகாரியைச்சொல்லுகிற சப்தத்தால் ப்ரகாரங்களுடன்கூடின வஸ்துவுக்கே உபஸ்தாபனம் ஸித்திக்கிறது. ஸத் ப்ரஹ்ம என்கிற சப்தங்கள் இரண்டும் விசிஷ்டத்துக்கு ஸத்வப்ருஹத்வகுண ஸம்பந்தமிருப்பதால் விசிஷ்டத்தை உணர்த்துவதில் ஸாமர்த்தியமுள்ளவைகள். ஆத்மசப்தமும் வ்யாப்தி ரூப ப்ரவ்ருத்தி நிமித்தமானது வ்யாப்யத்தை உணர்த்துகிறது என்று. அன்றிக்கே

'அக்ஷராத் ஸம்பவதீஹ விச்வம், யஸ் ஸர்வஜ்ஞஸ்ஸர்வவித், யஸ்ய ஜ்ஞாநமயம் தப:, தஸ்மாதேதத்ப்ரஹ்ம நாமரூப மன்னஞ்ச ஜாயதே ஆத்மந ஆகாசஸ்ஸம்பூத:' இது முதலிய ச்ருதிவசனங்களில் பரமாத்மாவைச் சொல்லுகிற சப்தங்களால் காரணம் கூறப்படுகிறது. அவைகளுக்கு விசேஷணங்களாக இருக்கிற சிதசித்துக்களைச் சொல்லும் விஷயத்தில் சக்தி இல்லை. லக்ஷணையில் அதே தோஷம் ஆகையால் எல்லா இடத்திலும் ஸ்வரூப பரிணாமமே ஸ்வாரஸமாக வருகிறதென்று சொல்லப்படுமேயானால் சொல்லுகிறார்—சிதசித் என்று. வேறு ச்ருதிகளின் பலத்தினால் ஸ்வரூபவிகாரத்துக்கு ஸம்பவமில்லாமையால் சொல்லப்படாமலிருந்தபோதிலுங் கூட கார்யோபயுக்தமான விசேஷணமானது ப்ருஷதாஜ்ய ந்யாயத்தினால் அர்த்தஸ்வபாவத்தால் அருகாமையில் கொண்டுவந்து சேர்ப்பிக்கப்பட்டதாக அநுஸந்திக்கத்தக்கதென்று கருத்து. அதையே உலகத்தில் வழங்குகிற ப்ரயோகத்தாலும திடப்படுத்துகிறார் யதா என்று. இந்த ஆத்மா சுகமுள்ளவன் என்கிற ப்ரயோகத்தால் ஒரு ஆத்மாவுக்கு ஸுகியாகஇருத்தலென்கிற குணத்தை விதித்தால் சரீரமில்லாத ஆத்மாவுக்கு விஷய சுகம் ஸம்பவியாததலால் அப்படிப்பட்ட விஷயசுகத்துக்கு உபயுக்தமான மநுஷ்யன் முதலிய பிண்டத்துடன் சேர்ந்திருத்தல் அர்த்தத்தால் ஸித்திக்கிறது, அப்படிப்போலென்று கருத்து.

யது³க்தம்—ப்³ரஹ்மாத்மைகத்வவிஜ்ஞாநேநைவாவித்³யாநிவ்ருத்திர்யுக்தா—இதி, தத³யுக்தம், ப³ந்த⁴ஸ்ய பாரமார்தி²கத்வேந ஜ்ஞாநநிவர்த்யத்வாஸம்ப⁴வாத் புண்யாபுண்யரூபகர்மநிமித்ததே³வாதி³ஶரீரப்ரவேஶதத்ப்ரயுக்தஸுக²து³:கா²நுப⁴வரூபஸ்ய ப³ந்த⁴ஸ்ய மித்²யாத்வம் கத²மிவ ஶக்யதே வக்தும் । ஏவம்ரூபப³ந்த⁴நிவ்ருத்திஶ்ச ப⁴க்திரூபாபந்நோபாஸநப்ரீதபரபுருஷப்ரஸாத³லப்⁴யேதி வக்ஷ்யதே । ஸாமாநாதி⁴கரண்யேப்யைக்யஜ்ஞாநஸ்ய யதா²வஸ்தி²தவஸ்துவிபரீதவிஷயஸ்ய மித்²யாரூபத்வேந ப³ந்த⁴வ்ருத்³தி⁴ரேவ ஹி ப⁴வதி— “[illegible]” இதி ஶாஸ்த்ராத் । “உத்தம: புருஷஸ்த்வந்ய:” “ப்ருத²கா³த்மாநம் ப்ரேரிதாரஞ்ச மத்வா” இதி ஜீவாத்மவிஸஜாதீயஸ்ய தத³ந்தர்யாமிணோ ப்³ரஹ்மணோ ஜ்ஞாநம் பரபுருஷப்ரஸாத³லக்ஷணமோக்ஷஸாத⁴நமித்யவக³ம்யதே ॥

ஏவஞ்ச ஸாமாநாதி⁴கரண்யஸ்யாபி நிவர்தகஜ்ஞாநஸ்ய மித்²யாரூபத்வாத்தஸ்ய நிவர்தகாந்தரம் ம்ருக்³யம் । நிவர்தகஜ்ஞாநமித³ம் ஸ்வவிரோதி ஸர்வம் ஸஹஜாதம் நிவர்த்ய க்ஷணிகத்வாதே³வ நஶ்யதீதி சேத் ; தத்ஸ்வரூபதது³த்பத்திவிநாஶாநாம் காரகநிகரூபவிநாஶகத்வாநா

𑌕𑌲𑍍𑌪𑌕𑌾𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌯𑌾 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌕𑌾𑌨𑍍𑌤𑌰𑌮𑌨𑍍𑌵𑍇𑌷𑌣𑍀𑌯𑌮𑍍 । 𑌤𑌨𑍍𑌨𑌾𑌶𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌮𑍇𑌵𑍇𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍; 𑌤𑌥𑌾 𑌸𑌤𑌿 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌕𑌜𑍍𑌞𑌾𑌨𑍋𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑌿𑌰𑍇𑌵 𑌨 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍, 𑌤𑌨𑍍𑌨𑌾𑌶𑍇 𑌸𑍍𑌥𑌿𑌤𑍇 𑌤𑌦𑍁𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑍍𑌯𑌸𑌂𑌭𑌵𑌾𑌤𑍍 ॥

ஸ்ரீபாஷ்யம்—

ஸ்வரூபத்தாலும் ஸ்வபாவத்தாலும் ப்ருஹத்த்வகுணமுள்ள ஆத்மா ஒன்று என்கிற ஜ்ஞாநத்தாலேயே அவித்யையின் அழிவு பொருத்தமுள்ளதாக ஆகிறதென்று யாதொரு விஷயம் கூறப்பட்டதோ அது பொருத்தமுள்ளதல்ல. பந்தம் பாரமார்த்திகமாக இருப்பதுபற்றி ஜ்ஞாநத்தினால் அது நிவர்த்திக்கத்தக்கதாக இருப்பதால் புண்யபாபரூபங்களான கர்மங்களால் உண்டாகிற தேவமனுஷ்யாதி தேஹங்களில் ப்ரவேசம், அந்த தேஹ ப்ரவேசத்தாலுண்டுபண்ணப்பட்டிருக்கிற சுகதுக்காநுபவம், இப்படிப்பட்ட பந்தத்திற்கு எவ்விதம் மித்யாத்வம் சொல்லமுடியும். இப்படிப்பட்ட பந்தநிவ்ருத்தியானது பக்திரூபத்தை அடைந்திருக்கிற உபாஸநத்தினால் ப்ரீதியையடைந்த பரமபுருஷனுடைய ப்ரஸாதத்தாலடையத்தக்கதென்று முந்தியே சொல்லப்பட்டிருக்கிறது. உள்ளபடி இருக்கிற வஸ்துக்களுக்கு எது விபரீதமோ அதை விஷயமாகக்கொண்டிருக்கிறதும் உனக்கு அபிமதமாகவுமிருக்கிற ஐக்ய ஜ்ஞாநம் மித்யாரூபமாதலால் அதனால் பந்தத்தின் நிவ்ருத்தியே பலமாக ஆகிறது. மித்யைததந்யத்ரவ்யம் ஹிநைதிதத்ரவ்யதாம்யத:, (பொருள்) எக்காரணத்தால் ஒரு வஸ்து அதைவிடவேறாக இருக்கிற மற்றொரு வஸ்துவாக ஆகாதோ அக்காரணத்தால் ஜீவன் பரமாத்மா இவ்விரண்டு வஸ்துக்களுக்கும் ஐக்யம் மித்யை என்கிற சாஸ்திரத்தினாலும் உத்தம:புருஷஸ்த்வந்ய:, ப்ருதகாத்மாநம் ப்ரேரிதாரஞ்சமத்வா, என்று ஜீவாத்மாவைவிட விஜாதீயனாகவும் ஜீவாத்மாவுக்கு அந்தர்யாமியாகவுமிருக்கிற ப்ரஹ்மவிஷயக ஜ்ஞாநமானது மோக்ஷஸாதநமென்று உபதேசிக்கப்பட்டிருப்பதாலும். மேலும் உனக்கு அபிமதமாக இருக்கிற நிவர்த்தக ஜ்ஞாநமும் மித்யாரூபமாதலால் அதற்கு நிவர்த்தகமான வேறு ஒருஜ்ஞாநம் உன்னால் தேடத்தக்கது. இந்த நிவர்த்தக ஜ்ஞாநமானது தனக்கு விரோதியாக இருக்கிற எல்லா பேத ஜாதத்தையும் போக்கி க்ஷணிகமாதலால் தானே நாசமடைகிறதென்று சொல்லப்படுமேயானால் அது ஸரியல்ல. அதன் ஸ்வரூபம் அதன் உத்பத்தி அதன் விநாசம் இவைகள் கல்பிக்கப்பட்டிருப்பதால் விநாசம் அதன் கல்பனை இவைகளுக்கு கல்பகரூபமான அவித்யைக்கு நிவர்த்தகமான மற்றொன்று தேடத்தக்கது. அதன் விநாசம் ப்ரஹ்மத்தின் ஸ்வரூபமே என்று சொல்லப்படுமேயானால் அங்ஙனமாகில் நிவர்த்தக ஜ்ஞாநத்தின் உத்பத்தியே ஏற்படாது. அதன் விநாசமிருக்கும் பொழுது அதன் உத்பத்தி ஸம்பவியாததாலால்.

ச்ருதப்ர்காசிகை—

7 நிவ்ருத்த்யனுபபத்தியைச் சொல்வதற்காக அனுவதிக்கிறார்— யத்புந: என்று. தூஷிக்கிறார்-ததயுக்தம் இதுமுதலியதால். ப்ரபஞ்ச மஜ்ஞானத்தால் பாதிக்கத்தக்கது, ஜ்ஞானமானது ஐக்யத்தை விஷயமாகவுடையது, இது இரண்டும் அன்யனுக்கு அபிமதம், அவற்றுள் முதலாவதான ஜ்ஞானபாத்யத்வாநுபபத்தியைக் கூறுகிறார்- பந்தஸ்ய என்று. எல்லா ப்ரமாணங்களுக்கும் அனுகுணமான பாரமார்த்யத்தை உபபாதிக்கிறார்—புண்யபாபுண்ய என்று. ஜ்ஞானமாத்திரத்தினால் ஸித்தியுள்ள வஸ்துவுக்கு ஹேது ஹேதுமத்பாவ நியமம் பொருந்தாது. பரமார்த்தமான வஸ்துவுக்கே அர்த்த க்ரியா காரித்வமும் உத்பத்தியுமிருப்பதால். முன் உபபாதிக்கப்பட்டிருக்கிற அஸத்யத்திற்கு ஹேதுத்வாஸம்பவத்தையும் உத்பத்தியின் அஸம்பவத்தையும் உபஜீவித்து உரைக்கப்பட்டது. ப்ரதீதியினால் மாத்திரம் ஸித்தி பெற்றதும் வேறு இடத்தில் இருப்புடையதுமான ஒரு வஸ்துவானது இந்த இடத்தில் ஒன்றையுமுண்டு பண்ணுகிறதில்லையன்றோ. தானுமிப்பொழுது தன்னால் உண்டுபண்ணப்படுகிறதில்லை. மேலும் பரமார்த்தமல்லாததற்கு ப்ராந்திஜ்ஞான ஸாமக்ரியைத்தவிர்த்த வேறுஹேதுவின் அபேக்ஷையும் காணப்பட்டிருக்கவில்லை. அங்குராதி ஸாமக்ரியே முதன்மைவாய்ந்தஸாமக்ரியாக ஆகா. மலையின் உச்சியிலுள்ள மண்ஜலம் வித்து இவைகளின் ஸம்பந்தத்தினால் வீட்டுவாண்டாவிலிருப்பவனுக்கு அங்குர ப்ரமம் ப்ரஸக்திக்க வேண்டியதாக ஏற்படுவதால். பதார்த்தங்களுக்கு அர்த்தக்ரியா காரித்வமும் உத்பத்தியும் மித்யை என்று சொல்லத்தக்கதல்ல. ஜ்ஞானத்தால் பாதிக்கத்தக்க தன்மை இல்லாமையால். எல்லாம் மித்யை என்றுசொல்லப்படும்பக்ஷத்தில் பாவஞ்செய்தபோதிலுங்கூட ப்ராயஶ்சித்தத்தை அபேக்ஷிக்க வேண்டியதில்லை. மித்யை என்கிற புத்தியேபோதுமென்று கருத்து. உன்னாலும் அவித்யைக்கு ஜ்ஞானத்தால் நிவர்த்திக்கத்தக்கதன்மை சொல்லத்தக்கது. அது ஸத்யமாக இருந்தால் எப்படி உபபன்னமாகிறதென்று கேழ்க்கப்பட்டால் சொல்லுகிறார்—ஏவம்நுப என்று. பரமார்த்தத்திற்கு ஜ்ஞானத்தினால் நிவர்த்திக்கத்தக்க தன்மையானது த்ருஷ்டத்வாரா பொருந்துகிறதில்லை, பின்னையோ அத்ருஷ்டத்தின்வாயிலாக. எப்படி உண்மையான பாம்புக் கடி விஷத்துக்கு உபாஸநத்தினால் ப்ரீதியடைந்த கருட ப்ரஸாதத்தால் நிவ்ருத்தியோ அப்படி மித்யை என்ற ஜ்ஞானத்தினால் நிவ்ருத்தி இல்லை என்று அர்த்தம். ப்ரபஞ்சமானது ஜ்ஞானத்தினால் நிவ்ருத்திக்கத்தக்கதல்லவென்பது கூறப்பட்டது. ஐக்ய ஜ்ஞானத்திற்கு உபாயத்வாநுபபத்தியைச் சொல்லுகிறார்—பவதமபிமதஸ்ய என்று. தத்த்வஜ்ஞானமன்றோ மோக்ஷோபாயம். பின்னவிஷயமான அபேத ஜ்ஞானமானது அதத்த்வ ஜ்ஞானரூபமாதலால் விபரீதபலங்கூடவென்று அர்த்தம். அத்வைதம் அதத்ய மென்பதில் ப்ரமாணத்தைக் கூறுகிறார்—மித்யை தத் என்று. ஐக்யம் அதாத்விகமென்பது கண்டோக்தியினால் காண்பிக்கப்பட்டது. ஐக்யத்திற்கு அஸத்யத்வம் எப்படி பலிக்கிறதோ அப்படி பேதஜ்ஞானத்திற்கே மோக்ஷஹேதுத்வத்தைக் கூறுகிறார்— உத்தம என்று. ஸ்ம்ருதிவசநங்களின் * ஸங்கதியின் பொருட்டு ச்ருதி பின்கி எடுக்கப்பட்டிருக்கிறது. ஐக்யஜ்ஞானம் நிவர்த்தகம் என்கிற விஷயத்தில் ப்ரமாண விரோதம் கூறப்பட்டது. அதற்குமேல் ℘ தர்க்க விரோதம் சொல்லுகிறார்—அபிச என்று. காட்டுத்தீ விஷத்தைப்போக்குகிற விஷம் இவைகள் த்ருஷ்டாந்தங்களென்கிற அபிப்ராயத்தால் சங்கிக்கிறார்—நிவர்த்தகஞ்ஜாநம் என்று.

---

* ஸங்கதி—ஸம்பந்தம். ℘ தர்க்கம—யுக்தி.

நிவர்த்தகஜ்ஞாநமும் அதன் விநாசமும் ப்ரஹ்மத்தைக்காட்டிலும் வேறானதா? அல்லது ஸ்வரூபமா? என்கிற விகல்பத்தை அபிப்ராயப்பட்டுச் சொல்லுகிறார்—ந என்று. ப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறாக இருப்பதால் கடம்முதலியதுபோல் விநாசம் கால்பநிகம். எப்படி ஸ்வப்ந தசையில் காணப்படுகிற பதார்த்தங்களின் ஸ்வரூபம் அவைகளின் உத்பத்தி ஸ்திதி இவைகள் கால்பநிகங்களோ அப்படியே நாசமும் கால்பநிகமென்று கருத்து. **விநாச தத்கல்பநா கல்பகநுபாவித்யாயா** என்று. விநாசம் கல்பிக்கத்தக்கது. அந்த விநாச விஷய ப்ரமபுத்தியானது கல்பனை. கல்பகம் ப்ரமாச்ரயம் முதலியது இப்படிப்பட்ட அவித்யைக்கு என்று பொருள். ஸ்வரூப பக்ஷத்தை தூஷிக்கிறார்—ததாஸ்தி என்று. முந்தின பக்ஷத்தில் தூஷணமானது வேறு விதததாலும் வேதார்த்த ஸங்க்ரஹத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. பாவ ரூபத்துக்கு நாசமென்பது பிற்காலத்திலுள்ள நிலைமையை அடைதலே அதோ இங்கு பொருந்துகிறதில்லை. ப்ரஹ்மத்தைவிட வேறாக இருக்கிற அவஸ்தையுடன் கூடிய ஒரு வஸ்துவை ஒப்புக்கொள்ளும் பக்ஷத்தில் அத்வைதத்தின் ஹாநிக்கு ப்ரஸங்கம் வருவதால். அபாவமென்பது பாவாந்தரமன்றோ. கடத்திற்கு ப்ராகபாவம் என்பது பிண்டத்வம் முதலிய பூர்வாவஸ்தையே ப்ரத்வம்ஸமென்பது கபாலத்வம் முதலிய பிந்தின நிலைமையே, இதரேதராபாவமும் அச்வத்தினிடத்திலுள்ள கோத்வா பாவம அச்வத்வரூபமே. கோவினிடத்திலுள்ள அச்வத்வாபாவம கோத்வரூபமே. ஸம்ஸர்காபாவத்திற்குபாவரூபத்வம் எவ்வாறு பொருந்தும்? கடஸம்ஸர்காபாவம் பூதலமேயாகுமேயாகில் கடஸம்ஸர்கமிருக்கும்பொழுதே ஸம்ஸர்காபாவமிருக்கலாம். பூதலத்தைவிட அது வேறான வஸ்துவென்று சொல்லப்படுமேயாகில் அப்பொழுது அபாவமானது அங்கீகரிக்கப்பட்டதாக ஆகிறது. மறுமொழி உரைக்கப்படுகிறது. உன்பக்ஷத்தில் அபாவாச்ரயத்திற்கு எந்த வைலக்ஷண்யமோ அதே ஸம்ஸர்காபாவம். பூமிமாத்ரமே அபாவாச்ரயமாக ஆகில் அப்பொழுது பாவாச்ரயமான பூதலத்தில் கூட அபாவாச்ரயத்வம் ப்ரஸங்கிக்கும். அவ்விடத்திலும் மஹீமாத்ரமிருப்பதால். ஒரு ஒரு விசேஷத்துடன்கூடின பூதலமானது அபாவத்துக்கு ஆச்ரயமாகில் அதேவிசேஷம் ஸம்ஸர்காபாவம் என்று. காலவிசேஷத்தோடு சேர்ந்திருததலிருக்க தேசவிசேஷத்வமே அந்த விசேஷம். அப்பொழுதே கடத்துடன்கூடின வேறு ப்ரதேசத்தை விலக்குவதற்காக தேசவிசேஷத்வமென்று உரைக்கப்பட்டது. வேறு ஸமயத்தில் கடத்துடன் கூடின அதே தேசத்தை விலக்குவதற்காக காலவிசேஷ விசிஷ்டத்வேஸதி என்று உரைக்கப்பட்டது. இதைப்பற்றி அபியுக்தர்கள் கூறுகின்றனர். அது எங்ஙனமென்று வினவப்படுமேயாகில் மேல் வருமாறு கண்டுகொள்ளத்தக்கது. ஸம்ஸர்காபாவமேவம் விதுரிஹ ஸூரயோ பாவமே வத்வபாவம் மந்வாநா: கும்பவத் பூதலத இதர பூபாக பேதஸ்த்வபாவ:. யஸ்தத் தத்காலபேத வ்யதிகரிதக்ருஹ ப்ராங்கணேதி ப்ரதேச: கும்பா பாவாச்ரயோந்யைரகணி ஸ இஹந: க்வாதி கஸ்யோபலம்ப: என்று. நாசமென்பது அவஸ்தாந்தரமாதலால் கர்மநாசத்தைச் சொல்லுகிற உனக்கும் சோத்யம் துல்யமென்று சொல்லப்படுமேயானால் அல்ல கர்மா வென்பது நம்ம பக்ஷத்தில் பகவானுடைய ப்ரீதி அப்ரீதி ரூபமா யுள்ளது. அவற்றுள் எது ஸம்ஸாரபலானுகுண ஸங்கல்பமோ அது விநாசம் செய்யத்தக்க கர்மம் எது மோக்ஷானுகுண ஸங்கல்பமோ அதே முந்தியதின் நாசமென்று பொருத்தமுள்ளதே. ததது:ப்ரஸாதாந்மஹீமாந மீசம், இது முதலியவைகளால்.

𑌅𑌪𑌿𑌚 𑌚𑌿𑌨𑍍𑌮𑌾𑌤𑍍𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑍍𑌯𑌤𑌿𑌰𑌿𑌕𑍍𑌤𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌨𑌿𑌷𑍇𑌧𑌵𑌿𑌷𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍍𑌯 𑌕𑍋𑌽𑌯𑌂 𑌜𑍍𑌞𑌾𑌤𑌾? 𑌅𑌧𑍍𑌯𑌾𑌸𑌰𑍂𑌪 𑌇𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍, 𑌨; 𑌤𑌸𑍍𑌯 𑌨𑌿𑌷𑍇𑌧𑍍𑌯𑌤𑌯𑌾 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌕𑌜𑍍𑌞𑌾𑌨𑌕𑌰𑍍𑌮𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌤𑌤𑍍𑌕𑌰𑍍𑌤𑍃𑌤𑍍𑌵𑌾𑌨𑍁𑌪𑌪𑌤𑍍𑌤𑍇𑌃। 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌮𑌿𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍; 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌕𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿 𑌜𑍍𑌞𑌾𑌤𑍃𑌤𑍍𑌵𑌂 𑌕𑌿𑌂 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌮𑍍? 𑌉𑌤𑌾𑌧𑍍𑌯𑌸𑍍𑌤𑌮𑍍? 𑌅𑌧𑍍𑌯𑌸𑍍𑌤𑌂𑌚𑍇𑌤𑍍, 𑌅𑌯𑌮𑌧𑍍𑌯𑌾𑌸𑌸𑍍𑌤𑌨𑍍𑌮𑍂𑌲𑌾𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑌰𑌞𑍍𑌚 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌕𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌵𑌿𑌷𑌯𑌤𑌯𑌾 𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑍍𑌯𑍇𑌵। 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌕𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌭𑍍𑌯𑍁𑌪𑌗𑌮𑍇 𑌤𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌤𑍍𑌰𑌿𑌰𑍂𑌪𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌰𑌪𑍇𑌕𑍍𑌷𑌯𑌾𑌽𑌨𑌵𑌸𑍍𑌥𑌾 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 । 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌸𑍍𑌯𑍈𑌵 𑌜𑍍𑌞𑌾𑌤𑍃𑌤𑍍𑌵𑍇𑌽𑌸𑍍𑌮𑌦𑍀𑌯 𑌏𑌵 𑌪𑌕𑍍𑌷𑌃 𑌪𑌰𑌿𑌗𑍃𑌹𑍀𑌤𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 । 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌕𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌂 𑌸𑍍𑌵𑌸𑍍𑌯 𑌜𑍍𑌞𑌾𑌤𑌾 𑌚 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑍍𑌯𑌤𑌿𑌰𑌿𑌕𑍍𑌤𑍇𑌨 𑌸𑍍𑌵𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑌰𑍍𑌗𑌤𑌿𑌰𑌿𑌤𑌿 𑌵𑌚𑌨𑌂 "𑌭𑍂𑌤𑌲𑌵𑍍𑌯𑌤𑌿𑌰𑌿𑌕𑍍𑌤𑌂 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌂 𑌦𑍇𑌵𑌦𑌤𑍍𑌤𑍇𑌨 𑌛𑌿𑌨𑍍𑌨𑌮𑍍" 𑌇𑌤𑍍𑌯𑌸𑍍𑌯𑌾𑌮𑍇𑌵 𑌛𑍇𑌦𑌨𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌯𑌾𑌮𑌸𑍍𑌯𑌾𑌶𑍍𑌛𑍇𑌤𑍍𑌤𑍁𑌰𑌸𑍍𑌯𑌾𑌶𑍍𑌛𑍇𑌦𑌨𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌯𑌾𑌶𑍍𑌚 𑌛𑍇𑌦𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑌰𑍍𑌭𑌾𑌵𑌵𑌚𑌨𑌵𑌦𑍁𑌪𑌹𑌾𑌸𑍍𑌯𑌮𑍍 । 𑌅𑌧𑍍𑌯𑌸𑍍𑌤𑍋 𑌜𑍍𑌞𑌾𑌤𑌾 𑌸𑍍𑌵𑌨𑌾𑌶𑌹𑍇𑌤𑍁𑌭𑍂𑌤𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌕𑌜𑍍𑌞𑌾𑌨𑍇 𑌸𑍍𑌵𑌯𑌂 𑌕𑌰𑍍𑌤𑌾 𑌚 𑌨 𑌭𑌵𑌤𑌿 । 𑌸𑍍𑌵𑌨𑌾𑌶𑌸𑍍𑌯𑌾𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌰𑍍𑌥𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 । 𑌤𑌨𑍍𑌨𑌾𑌶𑌸𑍍𑌯 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌤𑍍𑌵𑌾𑌭𑍍𑌯𑍁𑌪𑌗𑌮𑍇 𑌹𑍇𑌤𑍁𑌶𑍂𑌨𑍍𑌯𑌤𑍍𑌵𑌾𑌨𑍍𑌮𑌾𑌯𑌾𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌕𑌲𑍍𑌪𑌨𑌮𑍇𑌵 𑌨𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 । 𑌇𑌤𑍍𑌯𑌲𑌮𑌨𑍇𑌨 𑌶𑌿𑌷𑍍𑌟𑌗𑌰𑍍𑌹𑌿𑌤𑌦𑍁𑌸𑍍𑌤𑌰𑍍𑌕𑌵𑌿𑌵𑌾𑌦𑍇𑌨 ॥

𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑌨𑌾𑌦𑌿𑌕𑌰𑍍𑌮𑌪𑍍𑌰𑌵𑌾𑌹𑌰𑍂𑌪𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍂𑌲𑌤𑍍𑌵𑌾𑌦𑍍𑌬𑌨𑍍𑌧𑌸𑍍𑌯 𑌤𑌨𑍍𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌰𑍁𑌕𑍍𑌤𑌲𑌕𑍍𑌷𑌣𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌦𑍇𑌵 । 𑌤𑌚𑍍𑌚𑌾𑌸𑌕𑍃𑌦𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑌾𑌹𑌰𑌹𑌰𑌭𑍍𑌯𑌾𑌯𑌶𑍋𑌽𑌨𑌵𑌰𑌤𑌵𑌰𑍍𑌣𑌾𑌶𑍍𑌰𑌮𑌪𑌾𑌰𑌾𑌯𑌣𑌵𑍇𑌷𑌾𑌤𑍍𑌮𑌯𑌾𑌥𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌾𑌵𑌬𑍋𑌧𑌵𑌿𑌶𑍇𑌷𑌸𑌂𑌸𑍍𑌕𑍃𑌤𑌵𑌰𑍍𑌣𑌾𑌶𑍍𑌰𑌮𑍋𑌚𑌿𑌤𑌕𑌰𑍍𑌮𑌸𑌾𑌧𑍍𑌯𑌮𑍍 । 𑌤𑌤𑍍𑌰 𑌕𑍇𑌵𑌲𑌕𑌰𑍍𑌮𑌣𑌾𑌮𑌲𑍍𑌪𑌾𑌸𑍍𑌥𑌿𑌰𑌫𑌲𑌤𑍍𑌵𑌮𑍍, 𑌅𑌨𑌭𑌿𑌸𑌂𑌹𑌿𑌤𑌫𑌲𑌵𑌰𑍍𑌣𑌾𑌶𑍍𑌰𑌮𑌪𑌾𑌰𑌾𑌯𑌣𑌵𑍇𑌷𑌾𑌣𑌾𑌂 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾𑌮𑍁𑌪𑌾𑌸𑌨𑌾𑌤𑍍𑌮𑌕𑌜𑍍𑌞𑌾𑌨𑍋𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑌿𑌦𑍍𑌵𑌾𑌰𑍇𑌣 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌯𑌾𑌥𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌾𑌨𑍁𑌭𑌵𑌰𑍂𑌪𑌾𑌨𑌨𑍍𑌤𑌸𑍍𑌥𑌿𑌰𑌫𑌲𑌕𑌤𑍍𑌵𑌂 𑌕𑌰𑍍𑌮𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌦𑍃𑌤𑍇 𑌨 𑌜𑍍𑌞𑌾𑌯𑌤𑍇 । 𑌕𑍇𑌵𑌲𑌾𑌕𑌾𑌰𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌾𑌗𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌯𑍋𑌗𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌾𑌵𑌗𑍋𑌚𑌰𑌵𑌾𑌕𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌨 𑌸𑌂𑌭𑌵𑌤𑍀𑌤𑌿 𑌕𑌰𑍍𑌮𑌵𑌿𑌚𑌾𑌰𑌾𑌨𑌨𑍍𑌤𑌰𑌂 𑌤𑌤 𑌏𑌵 𑌮𑌤𑌃 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌚𑌾𑌰𑌃 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯 𑌇𑌤𑌿 "𑌅𑌥𑌾𑌤𑌃" 𑌇𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌮𑍍 ॥

ஸ்ரீபாஷ்யம்—

மேலும் நிர்மாத்ர ப்ரஹ்மத்தைத் தவிர்த்த எல்லாவஸ்துக்களின் நிஷேதத்தை விஷயமாகக் கொண்டிருக்கிற ஜ்ஞாநத்திற்கு ஜ்ஞாதா யார்? அத்யாஸரூபமென்று சொல்லப்படுமேயானால் அல்ல. அது நிஷேதிக்கப்படத்தக்கதாக இருப்பதுபற்றி நிவர்த்தக ஜ்ஞாநத்திற்கு கர்மாவாதலால் அதற்கு கர்த்ருத்வம் பொருந்தாததால். ப்ரஹ்மஸ்வரூபமே ஜ்ஞாதாவென்று சொல்லப்படுமேயானால் ப்ரஹ்மத்திற்கு நிவர்த்தக ஜ்ஞாநத்தைக்குறித்து ஜ்ஞாத்ருத்வமானது எவ்வித ஸ்வரூபத்துடன் கூடியது? அல்லது அத்யஸ்தமா? அத்யஸ்தமாக இருக்குமேயானால் இந்த அத்யாஸமும் அதற்கு மூலமான வேறு அவித்யையும் நிவர்த்தகஜ்ஞாநத்திற்கு விஷயமல்லாததாக இருக்கவே இருக்கிறது. நிவர்த்தகமான வேறு ஜ்ஞாநத்தை ஒப்புக்கொள்ளும் பக்ஷத்தில் அதுவும் மூன்று ரூபமுள்ளதாக இருப்பதால் ஜ்ஞாதாவை அபேக்ஷித்து அநவஸ்தை ஏற்படும். ப்ரஹ்மஸ்வரூபமே ஜ்ஞாதாவென்று சொல்லும் பக்ஷத்தில் நம்முடைய பக்ஷமே ஏற்றுக்கொள்ளப்பட்டதாக ஆகும். நிவர்த்தக ஜ்ஞாநஸ்வரூபமும் தன்னை அறிகிறவனும் ப்ரஹ்மத்தைவிட வேறாக இருப்பதால் தன்னால் நிவர்த்திக்கத்தக்கதில் உள்ளடங்கியதென்கிற வசனமானது பூதலத்தைத் தவிர்த்தமற்றது முழுமையும் தேவதத்தனால் சேதிக்கப்பட்டது என்கிற இடத்தில் சேதந க்ரியையிலேயே இந்த * சேத்தாவுக்கும் இந்த சேதநக்ரியைக்கும் சேதிக்கப்படத்தக்க வஸ்துவினிடம் அநுப்ரவேசத்தைச் சொல்லுகிற வசனம்போல் பரிஹஸிக்கத்தக்கது. அத்யஸ்தனாக இருக்கிற ஜ்ஞாதாவானவன் தன்னுடைய நாசத்திற்கு ஹேதுவாக இருக்கிற நிவர்த்தகஜ்ஞாநத்தில் தான் கர்த்தாவாகவுமாகிற தில்லை. தன நாசமானது புருஷார்த்தமல்லாததால். அந்த நாசம் ப்ரஹ்மஸ்வரூபமென்று ஒப்புக்கொள்ளப்படும் பக்ஷத்தில் பேத தர்சனமென்ன அதற்கு மூலமான அவித்யை முதலியவைகளென்ன இவைகளின் கல்பனமே உண்டாகாது. ஆதலால் தைவத்தாலடிக்கப்பட்டவனை மீண்டும் உலகையினாலடிப்பதுபோன்ற இந்த விசாரம் போதும். ஆகையால் பந்தமானது அநாதிகர்ம ப்ரவாஹரூபமான அஜ்ஞாநத்தினடியாக உண்டாயிருப்பதால் அதன் நாசமான து கூறப்பட்டுள்ள ஜ்ஞாநத்தினாலேயே. அந்த ஜ்ஞாநத்தின் உத்பத்தியானது நாடோறும் செய்யப்படாநின்ற பரமபுருஷாராதன வேஷம் பூண்ட ஆத்மயாதாத்ம்ய ஜ்ஞாநவிசேஷத்தால் ஸம்ஸ்கரிக்கப்பட்டிருக்கிற வர்ணாச்ரமங்களுக்குத் தக்கதான கர்மங்களால் அடையத்தக்கது. அதில் பலத்தில் விருப்பத்துடன் செய்யப்படும் கர்மங்களைத்தும் அல்பாஸ்திரபலன்களுடன்கூடியதென்பதும் பலத்தைக்கருதாமல் செய்யப்படுகிறவைகளும் பரமபுருஷனுடைய ஆராதனவேஷம்பூண்டவைகளுமான கர்மங்கள் உபாஸநரூப

* சேத்தா—வெட்டுகிறவன்.

மான ஜ்ஞானோத்பத்தியின்வாயிலாக ப்ரஹ்மயாதாத்ம்யானுபவ ரூபமான முடிவில்லாத சாச்வதபலன்களுடன் கூடியதென்பதும் கர்மஸ்வரூபஜ்ஞானமில்லாவிடில் அறியப்படுகிறதில்லை. பலாபேக்ஷையுடன்கூடினதாக செய்யப்படுதலென்கிற ஸ்வரூபத்தின் பரித்யாகத்தை முன்னிட்டு எப்படி இங்கு கூறப்பட்டிருக்கிறதோ அப்படிப்பட்ட ஸ்வரூபத்துடன்கூடின கர்மங்களின் உபாதானம் ஸம்பவிக்கிறதில்லை என்று கர்மவிசாரத்திற்கு பிறகு கர்மங்கள் அல்பாஸ்திரபலனுள்ளவைகளென்று நிச்சயிக்கப்பட்டுவிட்டபடியால்ப்ரஹ்மவிசாரம் செய்யத்தக்கதென்று "அதாதோ ப்ரஹ்மஜிஜ்ஞாஸா" என்கிற ஸூத்ரத்தினால் கூறப்பட்டது.

ச்ருதப்ரகாசிகை—

அதற்குமேல் நிவர்த்தக ஜ்ஞானத்திற்கு ஜ்ஞாதாவின் அனுபபத்தியைக்கூறுகிறார்—அபிச என்று. ஸ்வரூபபூதஜ்ஞானத்திற்கு வேறு ஜ்ஞாதாவின் அபேக்ஷை இல்லையன்றோ அதனால் அதை விலக்குவதற்காக 'க்ருத்ஸ்ந நிஷேத விஷய ஜ்ஞாநஸ்ய' என்று உரைக்கப்பட்டது. ப்ரமாணத்தால் உண்டாகிற ஜ்ஞானமானது ஆச்ரயத்துடன் கூடியதாகவே காணப்பட்டிருக்கிறதன்றோ. ஜ்ஞாதா ப்ரஹ்மத்தைவிடவேறானவனா? அல்லது வேறுபடாதவனா? என்கிற விகல்பாபிப்ராயத்தால சொல்லுகிறார்— சிந்மாத்ர என்று. முதலில் கோயம் என்று தர்மி ப்ரச்னம் ப்ரஹ்மத்தைவிட வேறானதென்கிற பக்ஷத்தில் தூஷணம் கூறுகிறார்—ந என்று. கர்ம கர்த்ருத்வ விரோதத்தாலென்று கருத்து. நிவர்த்திக்கப்படத்தக்க தன்மை இருந்தாலன்றோ கர்மகர்த்ரு விரோதம். ஆகையால் அதன் பரிஹாரத்திற்காக ஸ்வரூப பக்ஷத்தை சங்கிக்கிறார்—ப்ரஹ்ம என்று. இது ஜ்ஞாத்ருத்வ தர்ம விகல்பம். கிம் ஸ்வரூபம் என்று. ஸ்வரூபம் ஸ்வாபாவிகமென்று அர்த்தம். ப்ரீதி உண்டாவதாக புத்தியில் நிலைபெற்றிருப்பதால். அத்யஸ்த பக்ஷத்தை தூஷிக்கிறார்— அத்யஸ்தஞ்சேத் என்று. நிவர்த்தகஜ்ஞானாவிஷய தயா திஷ்டத்யேவ என்று. ஜ்ஞாத்ருத்வாத்யாஸமும் அதற்கு மூலமான வேறு அவித்யையும் நிவ்ருத்தி அடையவேண்டுமேயாகில் அது வேறு நிவர்த்தகத்தை அபேக்ஷித்திருப்பதால் வேறான நிவர்த்தகத்தை நீங்கள் ஒப்புக்கொள்ளாமையால் அது இரண்டும் இருக்கவே இருக்கிறதாதலால் மிகுதி இன்றி அவித்யா நிவ்ருத்தியானது உண்டாகாதென்று அர்த்தம். நிவர்த்தக ஜ்ஞானாந்தரத்தை ஒப்புக்கொள்ளில் அதுவும் ஒன்றுக்கு ஒன்றைக்குறித்து ஸித்திரூபமாக இருப்பதால் ஜ்ஞாதாவை அபேக்ஷிப்பதால் அநவஸ்தை உண்டாகுமென்று சொல்லுகிறார்—நிவர்த்தக என்று. முதலாவது பக்ஷத்தை தூஷிக்கிறார்—ப்ரஹ்மஸ்வரூபஸ்ய என்று. நிருபாதிகமாக இருக்கிற ப்ரஹ்மஸ்வரூபத்துக்கே ஒப்புக்கொள்ளப்படாநின்ற ஜ்ஞாத்ருத்வமானது ஸ்வாபாவிகமென்பது உங்களுக்கும் ஸித்தாந்தமாக ஆகலாமென்று அர்த்தம். ப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறான ஜ்ஞாதாவுக்கும் நிவர்த்தக ஜ்ஞானத்திற்கும் ப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறாக இருத்தலென்கிற உபாதியை ஏற்றுக்கொள்ளுதலை பலமாகக்கொண்ட ப்ரபஞ்ச நிவர்த்தகமாகவும் ப்ரபஞ்சமூலமான அவித்யைக்கு நிவர்த்தகமாகவுமிருக்கிற ஜ்ஞானத்தினாலேயே நிவ்ருத்தியானது உண்டாகப்போகிறதென்று ஆசங்கித்து வ்யாகாதத்தால் தூஷிக்கிறார்— நிவர்த்தக ஜ்ஞாந ஸ்வரூபம் என்று. ஜ்ஞாதாவுக்கும் நிவர்த்தக ஜ்ஞானத்தால் நிவ்ருத்திவரின் நிவர்த்தக ஜ்ஞானத்திற்காக ச்ரவணம் முதலியவற்றில் ப்ரவ்ருத்தியே உண்டாகாமல்

போகவேண்டியதாகும் என்று சொல்லுகிறார்—அந்யஸ்தோஜ்ஞாதா என்று. ஜ்ஞாதாவின் நாசமானது பரமபுருஷார்த்த ரூபமான ப்ரஹ்மஸ்வரூபமாதலால் அபுருஷார்த்தத்வமில்லை என்று ஆசங்கித்துச் சொல்லுகிறார்— தந்நாசஸ்ய என்று. பூர்வபக்ஷநிராகரணத்தை உபஸம்ஹரிக்கிறார்— இதி என்று. இவ்வண்ணம் ப்ரஹ்மத்தைதத்விர்த்த மற்ற எல்லா வஸ்துக்களுக்கும் மித்யாத்வ நிராகரணத்தினால் பந்தம் ஸத்யமென்று ஸித்தித்துவிட்டபடியால அந்த பந்த நிவ்ருத்தியானது கர்மங்களை அபேக்ஷித்துக கொண்டிருக்கிற உபாஸநாரூபமான ஜ்ஞாநத்தினாலேயே என்பதனால் கர்மவிசாரம் ப்ரஹ்மவிசாரத்திற்கு முந்தினகாலத்தில் நடத்தப்பட்டிருத்தல் வேண்டும்என்பது யுக்தமென்று சொல்லுகிறார்-தஸ்மாத் என்று. தஸ்மாதஸாதந சதுஷ்டயமானது ப்ரஹ்மவிசாரத்தைக்குறிதது முந்தி இருககவேண்டுமென்பதில் வஸ்து ஸாமர்த்தியம் என்கிற ஹேதுவானது கூறப்பட்டது. அதுவும் நிர்விசேஷமான ப்ரஹ்மத்தினிடம் அத்யஸ்தமான ப்ரபஞ்சத்திற்கு கர்மங்களை அபேக்ஷியாத ஜ்ஞாநத்தால் நிவிர்த்திக்கப்படத்தக்கதன்மைஎன்பது யாதொன்றுண்டோ அதுவும் பொருந்தாதென்று உபபாதானம் செய்திருப்பதால் வஸ்து ஸாமர்த்தியம் ஸித்தியாமல் போவதாமென்று அர்த்தம். ஸ்வரூபாநாதித்வத்தை விலக்குவதற்காக ப்ரவாஹ சப்தம். அநிர்வசநீய வ்யாவ்ருத்தியை உத்தேசிதது கர்ம சப்தம் ப்ரயோகிக்கப்பட்டிருக்கிறது. உக்தலக்ஷணஜ்ஞாநாதேவ-உபாஸநாத்மக ஜ்ஞாநத்தினாலேயே அதன உத்பத்தியானது வர்ணாச்ரமங்களுக்குத் தகுந்த கர்மங்களால் அடையத்தக்கதாக இருக்கட்டும், அதனால் உபாஸநாதி ஸ்வரூபஜ்ஞாநத்தைக்குறித்து ப்ரஸ்துத கர்மவிசார பூர்வ வ்ருத்தத்வத்திற்கு என்ன வென்று வினவப்படுமேயாகில் கூறுகிறார். தத்ர என்று. கர்மவிசாரத்தாலேயே அதற்கு அல்பாஸ்திரபலத்வம் பலித்ததென்று கருத்து. அநபிஸம்ஹிதபல என்று. யஜ்ஞேநதாநேந இது முதலிய கர்மவிநியோஜக வாக்யார்த்தஜ்ஞாநமானது பதார்த்தஜ்ஞாநத்தை முன்னிட்டே உண்டாவதால் பதார்த்த பூதமான கர்ம ஸ்வரூபமென்கிற பெயருள்ள விசேஷ்யஜ்ஞாநமில்லாமல் உபாஸனத்தின் வாயிலாகஅநந்தஸ்திரபலத்வ ரூபமான விசேஷணமும் அறியப்படுகிறதில்லை என்று அர்த்தம், அதனால் இவ்விடத்திலென்னவென்று கேழ்க்கப்படுமேயாகில் சொல்லுகிறார்—கேவல என்று. கேவலாகார:- ஆத்மயாதாத்ம்யபுத்திஸம்ஸ்கார சூன்யமான உருவம், விடுவதற்காகவும் எடுத்துக்கொள்வதற்காகவு மல்லவோ ஒன்றின் ஜ்ஞானம்-அதில் பலத்தில் வாயிலாக கர்மங்கள் விடத்தககவைகள். ஸ்வரூபத்தால் எடுத்துக்கொள்ளப்படத்தக்கவைகள். ஹானம உபாதானம் இரண்டுக்குமாக ஏற்படுகிற ஜ்ஞாநமானது கர்மவிசாரமில்லாவிடில் ஸித்தியாது. ஆதலால் கர்மவிசாரம் நிவ்ருத்தித்து விடும்பக்ஷத்தில் அந்த ஜ்ஞாநத்திற்கு பலமான ஹாநம் உபாதானம் இரண்டும் ஸம்பவியாதென்று அர்த்தம். அதாத: சப்தத்தை நிகமனம் பண்ணுகிறார்—இதிகர்ம விசாராநந்தரம் என்று. ப்ரஹ்ம விசாரம செய்யத்தக்க தென்பதனால் ப்ரஹ்மஜிஜ்ஞாஸா சப்தார்த்தம் கூறப்பட்டது. விசாரம் செய்யத்தக்கது என்பதில் அதிக விவாதம் கிடையாது. விசாரமானது சப்தத்தால் நேராக உணர்த்தப்படுகிறது, சப்தமின்றி அர்த்தத்தால் ஸித்திக்கிறது, என்று இவ்வளவே யன்றோ வைஷம்யம். அதாத: சப்தார்த்தத்திலேயே யன்றோ அதிக விவாதம். அதனாலேயே அதாத: என்று இவ்வளவு சப்தாநு பூர்வீ எடுக்கப்பட்டது. இவ்வண்ணம் ஸூத்ரத்திலுள்ள அக்ஷரங்களின் யோஜனை செய்யப்பட்டது.

अत्र पूर्वपक्षवादी मन्यते-वृद्धव्यवहारादन्यत्र शब्दस्य बोधकत्वशक्त्यवधारणासम्भवात्, व्यवहारस्य च कार्यबुद्धिपूर्वकत्वेन कार्यार्थ एव शब्दस्य प्रामाण्यमिति कार्यरूप एव वेदार्थः । अतो न वेदान्ताः परिनिष्पन्ने परे ब्रह्मणि प्रमाणभावमनुभवितुमर्हन्ति । न च पुत्रजन्मादिसिद्धवस्तुविषयवाक्येषु हर्षहेतूनां कालत्रयवर्तिनामानन्त्यात् सुतजन्मसुखप्रसवादिहर्षहेतूनामुत्तरोत्तरागमसम्भावनया च प्रियार्थावगतिनिमित्तमुखविकासादिलिङ्गैरर्थविशेषबोधहेतुत्वनिश्चयः ; नापि व्युत्पन्नपदसमभिव्याहृतस्य पदान्तरार्थनिश्चयेन प्रकृत्यर्थनिश्चयेन वा शब्दस्य सिद्धवस्तुन्यपि शक्तिनिश्चयः ; जातकार्यप्रियाप्रियपदसमभिव्याहारस्य तदंशविशेषनिश्चयरूपत्वात्स्य । न च सर्पभीतस्य “नायं सर्पो रज्जुरेषा” इति शब्दश्रवणसमनन्तरं भयनिवृत्तिदर्शनेन सर्पाभावबोधहेतुत्वनिश्चयः ; अत्रापि निश्चितं निवृत्तिहेतुभूतं वस्तुत्राद्यबोधकेषु बहुषु भयनिवृत्तिहेतुषु अस्य विशेषनिश्चयायोगात् ॥

ஸ்ரீபாஷ்யம்—

அதில் பூர்வபக்ஷவாதியானவன் நினைக்கிறான். வ்ருத்தர்களுடைய வ்யவஹாரமில்லாவிடில் சப்தத்துக்கு போதகத்வ சக்திநிச்சயம் ஸம்பவியாததால் வ்யவஹாரமானது கார்யபுத்தியை முன்னிட்டுக் கொண்டிருப்பதால் கார்யார்த்தத்திலேயே சப்தத்திற்கு ப்ராமாண்யம் என்பதனால் வேதார்த்தம் கார்ய ரூபமே. ஆகையால் வேதாந்தங்கள் பரினிஷ்பன்னமான பரப்ரஹ்மத்தினிடத்தில் ப்ரமாணபாவத்தை அனுபவிப்பதற்குத் தகுதியுள்ளவைகளல்ல. புத்திரனுடைய பிறப்பு முதலிய ஸித்தவஸ்துக்களை விஷயமாககொண்ட வாக்கியங்களில் ஸந்தோஷ ஹேதுக்களாக முக்காலங்களிலுமுள்ள வஸ்துககள் முடிவில்லாதவைகளாக இருப்பதாலும் புத்ரஜன்மலக்னம் ஸுகப்ரஸவம் முதலியஸந்தோஷ ஹேதுக்களான வேறு ஸித்தங்களுடைய மேல்மேல்வரவின் ஸம்பாவனையினாலும் ப்ரீதிவிஷயமான விஷயங்களின் அறிவைக்காரணமாகக்கொண்டமுகவிகாஸம் முதலிய அடையாளங்களால் குறிப்பிடத்தக்க ஒரு அர்த்த விசேஷ விஷயகமான புத்திக்கு ஹேதுத்வ நிச்சயமுண்டாகிறதில்லை. வ்யுத்பன்னங்களான பதங்களைக்காட்டிலும் வேறான பதங்களைச் சார்ந்த விபக்த்யர்த்தத்திற்கு வேறு பதங்களின்

அர்த்தநிச்சயத்தாலாவது ப்ரக்ருதியின் அர்த்த நிச்சயத்தாலாவது சப்தத்திற்கு ஸித்தவஸ்துவினிடம் அபிதான சக்தியின் நிச்சயமுண்டாகிறதில்லை. அந்த ஜ்ஞாதமான கார்யத்தைச் சொல்லுகிற பதஸமுதாயமானது அந்த கார்யாம்சவிசேஷ நிச்சயரூபமாக இருப்பதால். ஸர்ப்பத்தினிடமிருந்து பயந்தவனுக்கு இது ஸர்ப்பமல்ல இது கயிறு என்கிற சப்தத்தைக்கேட்ட உடன் பயநிவ்ருத்தியைக்காண்பதனால் ஸர்ப்பத்தின் அபாவபுத்திஹேதுத்வ நிச்சயமில்லை. இந்த இடத்திலும் இந்தவஸ்து அசைவற்றிருக்கிறது விஷமில்லாதது அசேதனம் இதுமுதலிய அர்த்த ஜ்ஞாநங்கள் அனேகங்கள் பயநிவ்ருத்திஹேதுக்களாக இருக்கும்பொழுது விசேஷநிச்சயம் ஏற்படாததால்.

ச்ருதப்ரகாசிகை—

அதற்குமேல் தாத்பர்யார்த்தம் சொல்லப்படுகிறது தத்ர இது முதலியதால். அக்ஷரயோஜனையில் அன்யனால் வேறு விதமாக சொல்லப்பட்டிருக்கிற அக்ஷரார்த்தமானது நிரஸிக்கப்பட்டது அதை நிரஸநம் செய்யும் ஸமயத்திலேயே அன்யனால் வேறு விதமாகக்கூறப்பட்ட தாத்பர்யார்த்தமும் நிரஸிக்கப்பட்டது அன்யனால் ப்ரபஞ்சம் ஸத்யமாக இருப்பதுபற்றி அதற்கு ஜ்ஞாநத்தால் நிவர்த்திக்கப்படத்தக்க தன்மை இல்லாமையால் ஜ்ஞாநத்திற்காக ப்ரஹ்மவிசாரமானது ஆரம்பிக்கத்தக்கதல்லவென்று பூர்வபக்ஷத்தைச் செய்துகொண்டு ப்ரபஞ்சம் மித்யையாக இருப்பது பற்றி அதற்கு ஜ்ஞாநத்தினால் நிவர்த்திக்கப்படத்தக்க தன்மையிருப்பதால் ப்ரஹ்மவிசாரம் ஆரம்பிக்கத்தக்கதென்று ஸித்தாந்தம் செய்யப்பட்டது. அது முந்தியே நிரஸனம் செய்யப்பட்டது. அதற்குமேல் ஸூத்ரகாரருடைய அபிப்ராய விஷயமான நிரஸிக்கத்தக்க சங்கையை உபந்யஸித்து அந்த ஸூத்ரகாரருடைய அபிப்ராய கோசரமான பரிஹாரத்தையும்சொல்வதற்குததொடங்குகிறார்—தத்ர இது முதலியதால். கர்மவிசாரத்திற்குப் பிறகுஅந்த கர்மங்கள் அல்பாஸ்திரபலன்களுடன் கூடியவைகளென்று நிச்சயிக்கப்பட்டிருப்பதாலேயே ப்ரஹ்மவிசாரம் செய்யத்தக்கதென்று சொல்லிவிட்டு ஸித்தவஸ்துவினிடம் சப்தங்களுக்கு வ்யுத்பத்தி இல்லாமையால் ப்ரஹ்ம விசாரம் செய்யத்தக்கது என்கிற வசனம் வ்யாகாத தோஷமுள்ளதென்கிற அன்யனுடைய சோதனமானது பூர்வமீமாம்ஸையை அறியாமையால் செய்யப்பட்டது. அதாதோ தர்மஜிஜ்ஞாஸா என்கிற ஸூத்ரத்தில் அத்தியயனம் செய்தபிறகு வேதாத்தியயனம் செய்து முடிந்துவிட்டபடியினாலேயே தர்மவிசாரம் செய்யத்தக்கது என்று சொல்லிவிட்டு § ப்ராபாகரர்களால் அத்தியயனமானது ஆசார்யகத்தை அதிகாரகமாகக் கொண்டிருப்பதால் தர்மவிசாரம் செய்யத்தக்கதென்று பூர்வ பக்ஷத்தைச் செய்து அர்த்தபோதாதிகாரமாக இருப்பதால் தர்மவிசாரம் செய்யத்தக்கதென்று ஸித்தாந்தம் செய்யப்பட்டது. ¶ பாட்டர்களாலோ வென்றால் அத்தியயனமானது ஸ்வர்கார்த்தமாக இருப்பதால் தர்மவிசாரம் செய்யத்தக்கதல்லவென்று பூர்வபக்ஷத்தைச் செய்துகொண்டு அர்த்த ஜ்ஞாநார்த்தமாக இருப்பதால் அது செய்யத்தக்கதென்று ஸித்தாந்தம் செய்யப்பட்டது. அதுவும்உன் பக்ஷத்தில் வ்யாஹதமாயுள்ளது. அந்த இடத்தில் ஸூத்ராக்ஷரங்களை யோஜனம் செய்து தாத்பர்யார்த்தம் கூறப்பட்டது. இந்த இடத்திலும் அக்ஷரார்த்தத்தைக் கூறி

---

§ ப்ராபாகரர்கள்—மீமாம்ஸகர்கள். ¶ பாட்டர்கள்—மீமாம்ஸகர்கள்.

தாத்பர்யார்த்தம் சொல்லப்படுகிறதென்பது பொருத்தமுள்ளது. அக்ஷர யோஜனையில்
ப்ரஹ்ம விசாராரம்பத்தில் கர்மங்கள் அல்பங்களாயும் அஸ்திரங்களாகவுமுள்ள பலன்
களுடன் கூடியவைகளென்கிற நிச்சயத்துடன் கூடின அநந்த ஸ்திரபலாபாதப்ரதீதி
யானது விசிஷ்ட ஹேதுவாக உரைக்கப்பட்டது. அநந்தஸ்திரபலாபாதப்ரதீதி இல்லா
விடில் அல்பமாகவும் அஸ்திரமாகவுமிருக்கிற பலத்திலேயே த்ருப்தியுள்ளவனுக இரு
க்கலாம், அல்பாஸ்திரபலத்வ நிச்சயமில்லாமல் போமேயானல் ஒழிவானது உண்டாக
லாம்,என்று விசிஷ்டஹேது இந்தஇடத்தில் ஸம்பாவிதமான ப்ராமாண்யத்துடன்கூடி
ன ஆபாத ப்ரதீதியானது சொல்லக்கருதப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட அதுபரவ்ரு
த்திக்குஹேதுவாக இருக்கிறது. அவ்விடத்தில் ப்ரஹ்மஜ்ஞாநத்தின் அநந்தஸ்திரபலா
பாத ப்ரதீதிக்கு ப்ராமாண்ய ஸம்பாவனையானது பொருந்தாதது- ஸித்தவஸதுவில்
சப்தத்துக்கு போதகத்வ நிச்சயமில்லாமையால் என்கிற விசிஷ்ட ஹேதுவில் விசேஷ்
யாம்ச ஸித்தியை ஆசங்கித்து ஸித்தவஸ்துவில் வ்யுத்பத்தி ஸம்பவிப்பதால் அநந்த
ஸ்திரபலாபாத ப்ரதீதி இருக்கிறதென்று பரிஹரிக்கப்படுகிறது. இந்த இடத்தில்
பூர்வபக்ஷம் சொல்பவன் ப்ராபாகரன். ஸூத்ரகாரர்களுக்கு இனிமேல் உண்டாகப்போ
கிற தர்சனங்களை அறியும் வல்லமை இருப்பதாலும் சிலர்களால் சொல்லப்பட்டிரும
விருந்தபோதிலும் ஸம்பாவ்யமானங்களான ப்ரதிகூல பக்ஷங்கள் ஆசங்கித்து நிரஸனம்
செய்யத்தக்கதாக இருப்பதாலும் இவ்வண்ணம் பூர்வபக்ஷம் செய்தல்யுக்தம். அன்றி
க்கே சோதநாலக்ஷணமான அர்த்தமே வேதத்தால் ப்ரதிபாதிக்கத்தக்க தென்பது
ஜைமினிமதம். சோதனையாவது க்ரியையில் ப்ரவ்ருத்தியை உண்டுபண்ணுகிற
வசனம். அதை ஆசங்கித்து ஸித்தவஸ்துவும் வேதத்தால் ப்ரதிபாதிக்கத்தக்கதென்று
ஸூத்ரகாரர்களால் ஸாதிப்பது யுக்தமானது. அக்ஷரயோஜனையில் ப்ரஹ்ம விசா
ரம்செய்யத்தக்கதென்று சொல்லப்பட்டிருப்பதாலும் ப்ரஹ்ம விசாராரம்பம் யுக்தமல்ல
வென்று பூர்வபக்ஷத்தின் முடிவில் சொல்லப்பட்டிருப்பதாலும் ப்ரஹ்மவிசாராரம்பம்
யுக்தமென்பது நிலை பெற்றதென்று ஸித்தாந்தத்தை முடிவுக்குக்கொண்டுவந்திருப்ப
தாலும் நீபத்தில் கண்டோக்தங்களாக இருக்கிற விஷயம் ஸம்சயம் இரண்டும் அர்
த்தஸித்தங்கள். ப்ரஹ்மவிசாரம் என்று சொல்லப்பட்டிருப்பதால் ப்ரஹ்மமீமாம்ஸை
விஷயமென்பது ஸித்தித்தது. ஆரம்பமானது யுக்தமல்லவென்றும் யுக்தம் என்றும்
சொல்லப்பட்டிருப்பதால் ஸம்சயம் ஸித்திபெற்றது. ப்ரஹ்மமீமாம்ஸையானது ஆர
ம்பிக்கத்தக்கதா ? அல்லது ஆரம்பிக்கத்தகாததா? என்று. அதற்காக சிந்திக்சப்படுகி
றது. வேதாந்தங்கள் ப்ரஹ்மத்தினிடம் ப்ரமாணமா? அல்லது இல்லையா? என்று.
அதற்காக பரீக்ஷிக்கப்படுகிறது சப்தத்துக்கு ஸித்தவஸ்துவை உணர்த்துகிற ஸாமர்த்தி
ய நிச்சயம் ஸம்பவிக்கிறதா இல்லையா என்று. அதற்காக விசாரிக்கப்படுகிறது வ்ருத்த
வ்யவஹாரத்தைத் தவிர்த்த மற்ற இடத்தில் சப்தங்களுக்கும் அர்த்தங்களுக்கும் ஸம்ப
ந்தாவதாரணம் ஸம்பவிக்கிறதா இல்லையா என்று. வ்ருத்த வ்யவஹாரத்திலும் சப்த
த்திற்கு ஸித்தவஸ்து போதகத்வ நிச்சயம் ஸம்பவிக்கிறதா இல்லையா என்றும். ஸம்ப
விக்கிற தில்லை என்று பூர்வபக்ஷம். ஸம்பவிக்கிறதென்று ஸித்தாந்தம், எப்பொழுது
வ்யவஹாரத்தைத்தவிர்த்து மற்ற இடத்தில் வ்யுத்பத்தி இல்லையோ வ்யவஹாரத்தி
லும் சப்தம் ஸித்தமான அர்த்தத்தை உணர்த்துகிறதென்கிற நிச்சயம் ஸம்பவிக்கிற
தில்லையோ அப்பொழுது சப்தத்துக்கு ஸித்தவஸ்துபோதன ஸாமர்த்தியமில்லாமை
யால் வேதாந்தங்களுக்கும் பரிநிஷ்பன்னரூபமான ப்ரஹ்மத்தினிடம் ப்ராமாண்யம்
இடையாதென்கிற நிச்சயமுள்ள புருஷனுக்கு அநந்தஸ்திரபலாபாத ப்ரதீதிக்கு ப்ராமா
ண்ய ஸம்பாவனு ஸித்தி இல்லாமையால் விசிஷ்டஹேதுவில்லாமையால் ஆரம்பிக்கத்
தக்கதல்லவென்று பூர்வபக்ஷத்தில் பலபலிபாவம். ஸித்தாந்தத்திலோ வென்றால்எப்பெ

ழுது வ்யவஹாரத்தைத்தவிர்த்த மற்ற இடத்தில் வ்யுத்பத்தியும் வ்யவஹாரத்தில் ஸித்தவஸ்துபரத்வாவதாரணமும ஸம்பவிக்கிறதோ அப்பொழுது சப்தத்துக்கு ஸித்தரூபார்த்தத்தில் ஸாமர்த்தியத்தினால் வேதாந்தங்களுக்கும் பரிநிஷ்பன்னரூபமான ப்ரஹ்மத்தினிடத்தில் ப்ராமாண்யத்தால் ப்ராமாண்யாபாவ நிச்சயமில்லாத புருஷனுக்கு அநந்த ஸ்திரபலரூப ப்ரஹ்மவிஷயா பாதப்ரதீதி ப்ராமாண்ய ஸம்பாவனைஸித்திததிருப்பதால் விசிஷ்ட ஹேதுவின் ஸித்தியினால் ப்ரஹ்மமீமாம்ஸை ஆரம்பிக்கத்தக்கதென்று விசாரங்களுக்கு பலபலிபாவம்.

பூர்வ பக்ஷத்தைச் சொல்ல ஆரம்பிக்கிறார்-தத்ர என்று. முந்தி ம்ருஷாவாதியினால் சொல்லப்பட்ட ஸூத்ர தாத்பர்யம் நிரஸனம் செய்யப்பட்டது. அதன் வ்யாவ்ருத்தியை ஸூசிப்பிக்கிறார் தத்ர சப்தத்தால். தத்ர ப்ரபஞ்சத்திற்கு ஸத்யத்வம் நிலைத்திருக்கையில் என்று அர்த்தம். பூர்வபக்ஷத்தை உபபாதனம் செய்கிறார்-வ்ருத்தவ்யவஹாராத் என்று. வ்ருத்த: - வ்யுத்பத்தியுள்ள ப்ரயோஜ்யனும் ப்ரயோஜகனும். அவ்விருவர்களுடைய வ்யவஹாரம் காயிகமாயும் வாசிகாயுமுள்ளது. வ்யவஹாரத்தைத்தவிர்த்த மற்ற இடத்தில் சக்தி நிச்சயம் உண்டாகவேண்டாம். அதனால் என்னவென்று கேட்கில் சொல்லுகிறார்—வ்யவஹாரஸ்ய ச என்று கார்யபுத்தியை முன்னிட்டுக் கொண்டிருப்பதின் பலத்தைக் கூறுகிறார்—கார்யார்த்த ஏவ என்று. அதனால் பலித்ததைச் சொல்லுகிறார்—கார்யபர என்று. வேதம் சப்தாத்மகமாக இருப்பதாலும் சப்தம் வ்யுத்பத்தியை அபேக்ஷித்திருப்பதாலுமென்று கருத்து. அதனாலென்னவென்று வினவப்படுமேயாகில் சொல்லுகிறார்—அத: என்று. அத: - வேதார்த்தம் கார்யரூபமாக இருப்பதாலென்று பொருள்-ந ப்ரமாணபாவமநுபவிதுமர்ஹந்தி. ப்ராமாண்ய ஸம்பாவனையுமில்லை. அயோக்யமாக இருப்பதாலென்று அர்த்தம். முதலாவதான வ்யுத்பத்தியானது வ்ருத்த வ்யவஹாரத்தைத்தவிர்த்து மற்றதொன்றினாலும் உண்டாகிறதில்லை. குடம் இருக்கிறது என்று சொன்னவுடன் ப்ரவ்ருத்தி இல்லாமலிருக்கையில் அதற்கு போதகத்வம் அறியப்படுகிறதில்லையன்றோ. பசுவைக்கொண்டுவா இது முதலியசப்தங்கள் ப்ரயோகிக்கப்பட்டவுடன் $ ப்ரயோஜ்யனுடைய ப்ரவ்ருத்தியைக்கண்ணுற்று ப்ரவ்ருத்தியானது கார்யபுத்தியை முன்னிட்டுக்கொண்டிருக்கிறதென்று அறிவுடையவனானஜ வ்யுத்பித்ஸுவானவன் இந்த சப்தமானது கார்யரூபமான அர்த்தத்தை அறிவிப்பதில் சக்தியுள்ளது என்று நிச்சயிக்கிறான் அந்தவ்யவஹாரங்களில் அநேக ப்ரயோகங்களில் தொடர்ந்து வருகிற சப்தத்திற்கு தொடர்ந்துவருகிற அர்த்தத்தோடு ஸம்பந்தத்தையும் விலக்கப்பட்டிருக்கிற அர்த்தத்தோடு ஸம்பந்தத்தையும் க்ரஹித்துக்கொண்டு சேர்த்துக்கொள்ளுதல் விலக்குதல் வாயிலாக அர்த்த விசேஷங்களோடு சப்தவிசேஷங்களுக்கு ஸம்பந்தத்தை நிச்சயிககிறான் என்பதனால் முதலில் கார்யார்த்தத்திலேயே வ்யுத்பத்தி ஏற்படுகிறது. முதலிலேயே இந்த சப்தத்துக்கு இது அர்த்தம் என்று சொன்னால் இந்த சப்தத்துக்கு இது அர்த்தமென்கிற இந்த வாக்கியத்திலுள்ள பதங்களுக்கு அர்த்த ப்ரதீதி உண்டாகிறதில்லையன்றோ. இவ்வண்ணம் கார்யார்த்தத்திலேயே வ்யுத்பத்தியை ஏற்படுத்திக்கொண்ட புருஷனுக்கு பிற்காலத்தில் இந்த சப்தத்திற்கு இது அர்த்தமென்று கற்றுக்கொடுத்தபோதிலுங்கூட முதலில் கார்யார்த்தபரமாக வ்யுத்பன்னமாக இருக்கிற சில பதங்களோடு சேர்ந்திருத்தல் காணப்படுவதால் முதலில் வந்த வ்யுத்பத்திக்கு விரோதமின்றி அந்த அந்த சப்தங்களுக்கு அர்த்த ஸம்பந்தம் க்ரஹிக்கப்படுவதால்

$ ப்ரயோஜ்யன்—ஏவத்தக்கவன். ப்ரயோஜகன்—ஏவுகிறவன்.

ஜ வ்யுத்பித்ஸு—வ்யுத்பத்தியில் விருப்பமுள்ளவன்.

எல்லா சப்தங்களும் கார்யார்த்த ப்ரதானங்களென்றே க்ரஹிக்கப்படுகின்றன. அதஞல் எதே லௌகிகங்களோ அதே வைதிகங்களென்கிற நியாயத்திஞல் வேதாந்தங்கள் ஸித்தவஸ்துவிஷயத்தில் போதகங்களாக ஆகிறதில்லை என்று அர்த்தம். வேதாந்தங்கள் ஸம்ஸ்க்ருத சப்தங்களாக இருப்பதால் வேறு பாஷையிஞல் முதலில் வ்யுத்பத்தி வந்த மனிதனுக்கு ஸம்ஸ்க்ருத சப்தத்தில் இந்தசப்தத்துக்கு இது அர்த்தம் என்று வ்யுத்பத்தி உண்டுபண்ணப்படுமேயாகில் ஆரம்பத்திலேயே ஸித்தவஸ்துவில் வ்யுத்பத்தியானது உண்டு பண்ணப்பட்டதாக ஆகலாமென்று சொல்லப்படுமேயாஞல் அல்ல. கார்யார்த்தபரங்களாக முதலில் வ்யுத்பன்னங்களான பாஷாந்தர சப்தங்கள் ஒரே அர்த்தத்தை உணர்த்துகிற ஸ்வபாவமுள்ளவைகளாக (அதாவது) பர்யாயங்களாக நிச்சயிக்கப்பட்டிருப்பதால் ஸம்ஸ்க்ருத சப்தங்களும் கார்யபரங்களாகவே வ்யுத்பன்னங்களாக ஆகலாம்.

ஸித்தவஸ்துவில் வ்யுத்பத்திக்கு || பாட்டர்களால் சொல்லப்பட்ட உதாஹரணத்தை நிரஸனம் செய்கிருர்—நச என்று. முக்காலங்களிலுமிருக்கிறவைகளுக் கென்று ¶ பஞ்சிகையில் கூறப்பட்டிருக்கிறது, அது இவ்விடத்தில் அபிப்ராயப்படப்பட்டிருக்கிறது. தேசம் காலம் யோக்யதை முதலியவைகளால் புத்திரனுடைய பிறப்பை அறிகிருன் என்று சொல்லப்படுமேயாகில் சொல்லுகிருர் ஸுலக்ன என்று. நல்ல லக்னம் ஸுகப்ரஸவம் முதலியதால் அன்யதா ஸித்தியானது * நயவிவேகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆதிசப்தத்தால் பிதாமாதா முதலியவர்களுக்கு பீடாநிவ்ருத்தியும் பிற்காலத்தில் உண்டாகக்கூடிய ஸம்பத்துமுதலியதும் சொல்லக்கருதப்பட்டிருக்கிறது. வ்யுத்பத்தியாவது சப்தத்திற்கு அர்த்த விசேஷங்களோடுகூட ஸம்பந்தத்தை க்ரஹித்தலே ஒழிய அர்த்தமாத்ரத்தோடல்லவென்கிற இவ்வித தூஷண முறைக்கப்பட்டிருக்கிறது ‡ நையாயிகன் முதலியவர்களால் சொல்லப்பட்டிருக்கிற உதாஹரணத்தை நிரஸனம் செய்கிருர்—நாபி என்று. இது வ்யுத்பன்ன பதங்களைக்காட்டிலும் வேருன பதத்திற்கு பதாந்தரார்த்த நிச்சயோதாஹரணம். எது அவ்யக்தமாகக்கூவுகிறதென்கிற விஞவுக்கு (பிக: கூஜதி) குயில் கூவுகிறதென்று ஒருவஞல் சொல்லப்பட்டவுடன் கூஜதி சப்த வ்யுத்பத்தியுள்ளவஞன ஒரு வ்யுத்பித்ஸுவால் பிக சப்தார்த்தம் அறியப்படுகிறது. இது வ்யுத்பன்னபதங்களைவிட வேருன பதத்தினது * விபக்த்யர்த்தத்திற்கு † ப்ரக்ருத்யர்த்த நிச்சயோதாஹரணம். (காஷ்டங்களால்) விறகுகளால் (ஸ்தாலியில்) பாத்திரத்தில் (ஓதனத்தை) அன்னத்தை (பசதி) பக்குவம் செய்கிருன் என்று சொன்னவுடன் வ்யுத்பன்ன விபக்தியுடன் கூடின பசதி சப்தார்த்தத்துடன் கூடின வ்யுத்பித்ஸுவிஞல் காஷ்டம் முதலிய ப்ரக்ருதியின் அர்த்தம் அறியப்படுகிறது, ஜ்ஞாதா என்று. இப்பொழுது கேழ்க்கப்பட்டிருக்கிற இந்த வாக்கியத்தில் முந்தி கார்யபரமாக வ்யுத்பன்னமாக இருக்கிற வாக்கியத்திலுள்ள சில பதங்கள்

|| பாட்டர்கள்—குமாரில பட்டருடைய மதத்தைப் பின்பற்றினவர்களான மீமாம்ஸகர்கள். ¶ பஞ்சிகை—ஒரு க்ரந்தம். * நயவிவேகம்—ஒரு வேதாந்த கிரந்தம். ‡ நையாயிகன்—கௌதமரிஷியிஞல் செய்யப்பட்டுள்ள தர்க்கசாஸ்திர வழியைப் பின்பற்றுகிறவன். * விபக்தி—வேற்றுமை. † ப்ரக்ருதி—ப்ரத்யயம் எந்த சப்தத்தின் பின் சேர்க்கப்படுமோ அந்த சப்தகணடம்.

காணப்படுவதால் இந்த பதஸமுதாயமும் கார்யத்தைச்சொல்லுகிற ஸ்வபாவமுள்ளதென்று அறியப்படுகிறதென்கிற அபிப்ராயத்தால் ஜ்ஞாதகார்யாபிதாயிபதஸமுதாயஸ்ய என்று கூறப்பட்டது. ததம்ச விசேஷ: கார்யாம்ச விசேஷம்-கார்யமானது அநேக $ காரகன்களோடுகூடியதன்றோ. அந்த கார்யம் விசேஷணும்ச நிச்சயரூபமாதலால். அந்த பதாந்தரார்த்த நிச்சயத்திற்கும் ப்ரக்ருத்யார்த்த நிச்சயத்திற்கும் என்று அர்த்தம். அன்றிக்கே ததம்ச விசேஷ: கார்யத்தைச் சொல்லுகிற Ψ பதஸமுதாயாம்ச விசேஷம்-¶ம்ருஷாவாதிகளால் சொல்லப்பட்ட உதாஹரணத்தை தூஷிக்கிறார் நச என்று. § வாசஸ்பதியினால் சொல்லப்பட்டிருக்கிற அர்த்தத்தை ஆசங்கித்து பரிஹரிக்கிறார்—கார்ய என்று. அவனால் இவ்வண்ணமல்லவோ ஸித்த வஸ்துவில் ப்ராமாண்யம் உபபாதிக்கப்பட்டிருக்கிறது எல்லா சப்தங்களுக்கும்தொடர்ந்துவருகிற அர்த்தம் சொல்லத்தக்கது. கார்யரூபமான அர்த்தத்தைச் சொல்லும் தன்மையுடன் சேர்ந்திருத்தல் தொடர்ந்துவருகிறதா? அல்லது கார்யத்துடன் அன்வயித்த தன்னுடைய அர்த்தத்தைச் சொல்லும் திறமையுடன் சேர்ந்திருத்தல் தொடர்ந்துவருகிறதா? முதலாவது பக்ஷத்தில் காரகபதங்களில் ‡ வ்யபிசாரம் வருகிறது. அவைகளுக்கு கார்யாபிதாயித்வ மில்லாமையால். இரண்டாவது பக்ஷத்தில் லிங்கம் முதலியவைகளில் வ்யபிசாரம் வருகிறது. அவைகளுக்கு கார்யத்துடன் சேர்க்கையுற்ற ஸ்வார்த்தத்தைச் சொல்லும் திறமை இல்லாமையால். மூன்றாவது பக்ஷத்தில் காரக பதங்களில் வ்யபிசாரம் ஸம்பவிக்கிறது. அவைகளுக்கு காரகங்களோடு அன்வயித்த ஸ்வார்த்தத்தைச் சொல்லும் திறமை இல்லாமையால். ஆதலால் பதங்களுக்கு அன்யான்விதமான ஸ்வார்த்தத்தைச் சொல்லும் திறமையானது தொடர்ந்து வருகிறதென்று சொல்லத்தக்கது அன்விதாபிதான வாதியால்.

कार्यार्थे व्युत्पत्ति [illegible] [illegible] सर्वैः पदैः कार्यस्यैव विशिष्टस्य प्रतिपादना [illegible] शक्तिनिश्चयः । इष्टसाधनताविशिष्ट कार्य [illegible] व्युत्पत्ति [illegible] ; न स्वरूपेण, अतीतानागतवर्तमान [illegible] इष्टसाधनताविशिष्टे व्युत्पत्त्य [illegible] । ''इष्टाभ्युपायो हि [illegible] न सिध्यति ; कथं [illegible] [illegible] इति [illegible] जायते ; [illegible] । अतः कार्यार्थ एव व्युत्पत्ति [illegible] व्युत्पन्नस्य

$ காரகன்—க்ரியை உண்டுபண்ணும் திறமையுள்ளது.

Ψ ஸமுதாயம்—கூட்டம். ¶ ம்ருஷாவாதி—அத்வைதி. § வாசஸ்பதி—ஒரு மீமாம்ஸகன். ‡ வ்யபிசாரம்—தவறுதல்.

ஸம்ப⁴வாத் வாச்யதயா கார்யஸ்யைவ வேத³வேத்³யத்வாத் பரிச்சி²ந்நரூபப்³ர ஹ்மப்ராப்திலக்ஷணாநந்தஸ்தி²ரப²லப்ரதிபத்தே: ''அக்ஷய்யம் ஹ வை சாதுர்மாஸ்யயாஜிந: ஸுக்ருதம் ப⁴வதி'' இத்யாதி³பி⁴: கர்மணாமேவ ஸ்தி²ரப²லத்வப்ரதிபாத³நாத் கர்மப²லாநாமல்பாஸ்தி²ரத்வ ப்³ரஹ்மஜ்ஞாநப²லாநந்தஸ்தி²ரத்வஜ்ஞாநஹேதுகோ ப்³ரஹ்மவிசாராரம்போ⁴ ந யுக்த: - இதி॥

ஸ்ரீபாஷ்யம்—

கார்யபுத்தி ப்ரவ்ருத்தி இவ்விரண்டுக்குமுள்ள † வ்யாப்திபலத்தினால் சப்தத்திற்கு ப்ரவ்ருத்தியை உண்டுபண்ணுகிற அர்த்தத்தை உணர்த்தும் திறமை அறியப்பட்டிருப்பது பற்றி எல்லாபதங்களும் கார்யார்த்த போதனத்தில் நோக்கமுள்ளதாதலால் எல்லா பதங்களாலும் விசிஷ்டமான கார்யமே ப்ரதிபாதிக்கப்படுவதால் மற்றொன்றோடு அன்வயித்த ஸ்வார்த்த மாத்ரத்தில் ¥ பதசக்தி நிச்சயமில்லை. இஷ்டஸாதநதாபுத்தியோ வென்றால் கார்யபுத்தியின் வழியாக ப்ரவ்ருத்திக்குக் காரணமாக இருக்கிறதே ஒழிய ஸ்வரூபத்தாலல்ல. சென்றதும் இனிவரப்போகிறதும் நிகழ்காலத்திலுள்ளவைகளுமான இஷ்டோபாய புத்திகளில் ப்ரவ்ருத்திக்கு உபலப்தி இல்லாமையால். இஷ்டோபாயமானது என்னுடைய ப்ரயத்னமில்லாவிடில் ஸித்திபெறாது ஆகையால் என் ப்ரயத்னத்தால் ஸாத்தியமென்கிற புத்தியானது எவ்வளவுக்குள் உண்டாகிறதில்லையோ அவ்வளவுக்குள் ப்ரவ்ருத்திக்கிறானில்லை. ஆதலால் கார்யபுத்தியே ப்ரவ்ருத்தி ஹேதுவாக இருப்பது பற்றி ப்ரவர்த்தகமே சப்தத்தால் சொல்லத்தக்கதாக இருப்பதால் கார்யமே வேதத்தால் அறியத்தக்கதாக இருப்பதாலும் பரிச்சின்னரூபமான ப்ரஹ்ம ப்ராப்தி ரூபமான அநந்தஸ்திரபல $ ப்ரதிபத்தி இல்லாமையாலும் "அக்ஷய்யம் ஹவை § சாதுர்மாஸ்யயாஜிந: ஸுக்ருதம்பவதி" இது முதலியவைகளால் கர்மங்களுக்கே ஸ்திரமான பலன்கள் ப்ரதிபாதிக்கப்பட்டிருப்பதாலும் கர்மபலன்கள் அல்பங்கள், அஸ்திரங்கள், ப்ரஹ்மஜ்ஞாந பலன்கள் எண்ணிறந்தவைகள், சாச்வதங்கள், என்கிற ஜ்ஞானத்தைக்காரணமாகக் கொண்டிருக்கிற ப்ரஹ்ம விசாராரம்பமானது யுக்தமல்ல- என்று.

¥ சக்தி—இந்த பதத்தால் இந்த அர்த்தம் அறியத்தக்கதென்கிற ஈச்வரனுடைய இச்சை என்பது தார்க்கிகர்களின் கொள்கை. $ ப்ரதிபத்தி—ஜ்ஞானம்.

§ சாதுர்மாஸ்யம்—ஒரு யாகம்.

ச்ருதப்ரகாசிகை—

மற்றதோடு அன்வயித்திருத்தல் ஸித்த வஸ்துவுக்கும் இருக்கலாமாதலால் கார்ய ரூபமான அர்த்தத்திலேயே வ்யுத்பத்தி என்கிற நிர்பந்தம் பொருந்தாது. இந்த ஆசங்கையை அபிப்ராயப்பட்டு பரிஹரிக்கிறார்—கார்யபுத்தி என்று. கார்யபுத்தி வ்யாப்திபலேந என்கிற பதத்திற்கு மேலே ஸர்வபதாநாம் கார்ய பரத்வேந என்பதோடு அன்வயம். சப்தம் ப்ரயோகிக்கப்பட்டவுடன் ‡ ப்ரவ்ருத்தி காணப்படுவதால் சப்தத்திற்கு ப்ரவ்ருத்தியை உண்டுபண்ணுகிற அர்த்தத்தை உணர்த்தும் திறமை இருப்பதால் கார்யபுத்திக்கும் ப்ரவ்ருத்திக்குமிருக்கிற வ்யாப்தி பலத்தால் * ப்ரவர்த்தகமும் கார்யரூபமாக இருப்பதால் எல்லா பதங்களாலும் விசிஷ்டமான கார்யமே ப்ரதிபாதிக்கப்படுகிறது. ஆகையால் மற்றொன்றுடன் அன்வயித்த ஸ்வார்த்தமாத்ரத்தில் பதங்களுக்கு சக்தி நிச்சயிக்கப்படுகிறதில்லை. பின்னையோ விசிஷ்ட கார்யாம்ச விசேஷத்தில் பதங்களுக்கு சக்தி நிச்சயமென்று அர்த்தம். அறிஞர்களுக்குள் சிறந்தவரே! கார்யமே ப்ரவர்த்தகமாகில் ப்ரவ்ருத்தியை உண்டுபண்ணுகிறது சப்தார்த்தமாதலால் எல்லா சப்தங்களுக்கும் இருக்கலாம். அதில்:—இஷ்டஸாதநதாபுத்தியானது ப்ரவர்த்தகமாதலால் என்று பாட்டர்களால் சொல்லப்பட்ட அர்த்தத்தை ஆசங்கித்துக் கூறுகிறார்— இஷ்டஸாதநதா என்று. ஸ்வப்ரயோஜநோபாயமானது அன்யனால் பாதிக்கப்படுகிறதேயானால் அந்த இடத்திலும் ப்ரவ்ருத்தி உண்டாகிறதில்லையாதலால் இஷ்டோபாயதா புத்தியானது இருந்துகொண்டிருக்கிறபோதிலுங்கூட அதற்கு அப்ரவர்த்தகத்வமானது காணப்பட்டிருக்கிறது. அதனால் கார்யபுத்தியானது ப்ரவ்ருத்திக்கு வ்யாப்யை என்று கருத்து. நண்பரே! கார்யபுத்தியும் ப்ரவ்ருத்தியுடன் தவறாமல் சேர்ந்திருக்கிறதில்லை. தனமில்லாத ப்ராஹ்மணனுக்கு யாகம் செய்யவேண்டுமென்கிற எண்ணமிருந்தபோதிலுங்கூட ப்ரவ்ருத்தி இல்லாமையால் இவ்வண்ணமல்ல. என்னாலேயே இது ஸாதிக்க சக்யமென்கிற புத்தியல்லவோ கார்யபுத்தி. அந்த புத்திக்கு ப்ரவ்ருத்தி வ்யபிசாரம் கிடையாது. தனமில்லாதவனுக்கு இவ்விதமான ப்ரதிபத்திகிடையாது. பின்னையோ யாகம் ஒருக்கால் செய்யத்தக்கது. பொருள் முதலியவற்றின் லாபத்தால் யாகம் அனுஷ்டிக்கப்படுமேயாகில் பலப்ராப்தி இருக்கிறது என்று. ஆகையால் தோஷமில்லை. அதனாலென்னவென்கிற அபேக்ஷையின் உபபாதனம் செய்யப்பட்டிருக்கிற ஹேது சரீரத்தைச் சொல்லாநின்று கொண்டும் வேறு சங்கையை பரிஹரித்துக்கொண்டும் பூர்வபக்ஷத்தை முடிக்கிறார்—அத: இது முதலியதால். ப்ரஹ்மவிசாராரம்பத்தில் விசிஷ்டஹேதுவானது கூறப்பட்டது. அதில் அநந்தஸ்திரபலாபாத ப்ரதீதி ரூபமான விசேஷ்யாம்சத்திற்கு அஸித்தி கூறப்பட்டது. இந்த விஷயத்தில் சோத்யமானது ஆபாதனம் செய்யப்பட்டது. உபாஸநவிதிக்கு சேஷபூதங்களான மந்திரார்த்த வாதங்களில் அநந்தஸ்திரபலாபாத ப்ரதீதியின் ஸித்தியினால் விசேஷ்யாம்சத்திற்கு அஸித்தி இல்லையாதலால் விசிஷ்டமே ஹேது. இதை ஆசங்கித்துக்கூறுகிறார்—அக்ஷய்யம்ஹவை என்று. இதபொருள். மந்திரார்த்தவாதங்களில் அநந்தஸ்திரபலப்ரதீதியினால் ப்ரஹ்மவிசாராரம்பமிருக்குமேயானால் அப்பொழுது பூர்வபாகத்திலும் " அக்ஷய்யம் ஹவை சாதுர்மாஸ்ய யாஜிந: ஸுக்ருதம் பவதி " இது முதலியவைகளால் அநந்தஸ்திரபலப்ரதீதியினால் அல்பா

‡ ப்ரவ்ருத்தி—சேஷ்டை செய்கை.

* ப்ரவர்த்தகம்—ப்ரவ்ருத்தியை உண்டுபண்ணுகிற திறமை யுடையது.

ஸ்திரபலத்வ நிர்ணய ரூபமான விசேஷணாம்சம் ஸித்தி பெறாததால் ப்ரஹ்மவிசாராரம்பம் யுக்தமன்று. விசிஷ்ட ஹேதுவில் விசேஷணம் விசேஷ்யம் இவ்விரண்டுக்குள் ஒரு அம்சத்திற்கு அஸித்தி என்கிற அபிப்ராயத்தால் கர்மபலால்பாஸ்திரத்வ ப்ரஹ்மஜ்ஞான பலாநந்தஸ்திரத்வ ஜ்ஞாநஹேதுகமென்று சொல்லப்பட்டது.

[illegible]

ஸ்ரீபாஷ்யம்—

இந்த இடத்தில் சொல்லப்படுகிறது. எல்லா உலகங்களிலும் ப்ரஸித்தமாக அறியப்பட்டிருக்கிற சப்தார்த்தங்களுடைய ஸம்பந்த நிச்சய ப்ரகாரத்தை விலக்கித்தள்ளிவிட்டு எல்லா சப்தங்களுக்கும் அலௌகிகார்த்தாவதாரணத்தை§ ப்ராமாணிகர்கள் பகுமானிக்கிறார்களில்லை. இவ்வண்ணமன்றோ சிறுவர்கள் சப்தார்த்த ஸம்பந்தத்தை நிச்சயிக்கிறார்கள். மாதா பிதா முதலிய சப்தங்களால் தாய் தகப்பன் மாமன் முதலியவர்களையும் சந்திரன் பசு மிருகம் பக்ஷி ஸர்ப்பம் முதலியவைகளையும் இதை “ அறிந்துகொள் இதையும் தெரிந்துகொள் ” என்கிற அபிப்ராயத்தால் விரலால் குறிப்பிட்டு குறிப்பிட்டு சுட்டிக்காட்டி அந்தந்த சப்தங்களால் அந்தந்த அர்த்தங்களில் பலதடவை சிக்ஷிக்கப்பட்டவர்கள் மெள்ள மெள்ள அந்தந்த சப்தங்களால் அந்தந்த அர்த்தங்களில் தங்களுக்கு ஏற்படுகிற புத்தியின் உத்பத்தியைக்கண்டு சப்தம் அர்த்தம் இவ்விரண்டுக்கும் வேறு ஸம்பந்தம் காணப்படாமையாலும் ஸங்கேதம் செய்த புருஷனை அறியாமையாலும்

---

§ அவதாரணம்—நிச்சயம்.

அந்த அர்த்தங்களில் அந்த சப்தங்களுக்கு ப்ரயோகமானது போதகத்வ சக்தியைக் காரணமாகக்கொண்டதென்று நிச்சயிக்கிறார்கள்.

ச்ருதப்ரகாசிகை—

அத்ராபிதீயதே என்று. இந்த பூர்வபக்ஷத்தில் ஸூத்ரகாரரால் பரிஹாரம் கூறப்படுகிறதென்று அர்த்தம். நிகில என்று. வேறுவிதமாகச் சொல்லுகிற உம்மாலும் மேல் சொல்லப்படப்போகிற ப்ரகாரத்தாலேயே சப்தவ்யுதபத்தியானது செய்யப்பட்டிருக்கிறதென்று நிகில லோக சப்தத்தின் கருத்து. ப்ராமாணிகர்கள்—ப்ரமாணத்தால் அர்த்தத்தை ஸ்வீகரிக்கிறவர்கள் என்று அர்த்தம். எப்படி ஸம்பந்த நிச்சயம் என்று வினவப்படுமேயாகில் சொல்லுகிறார்—ஏவம்கில என்று. மாதாபித்ருப்ரப்ருதிபி: என்று. இதுகருத்து. எப்பொழுது சிறுவன் தானாகவே சப்தார்த்த ஞானத்திற்கு தகுந்தவனாக ஆகிறானோ அப்பொழுதும் இவனை வ்ருத்தர்களான உபாத்தியாயர் முதலியவர்களால் வ்யுத்பத்தியை உண்டுபண்ணிவைப்பதற்கு ச்ரத்தையுள்ளவர்களான தாய் தகப்பன் முதலியவர்கள் தானாக வ்யுதபத்தி உண்டாவதற்குத் தகுதியற்றவனாக இருக்கும் தசையில் உபேக்ஷை பண்ணுகிறார்களில்லையன்றோ. பின்னையோ அக்ஷராப்பியாஸம் முதலியதற்கு உபயோகமான சிக்ஷகளை முதலிலேயே தங்கள்புத்திபூர்வகமாகச்செய்கிறார்கள் ꠸ அம்பா தாத (தாய் தகப்பன்) முதலிய சப்தங்களின் ஸமுதாயமானது ப்ரதி ஸம்பந்தி சப்தாபேக்ஷையுள்ளது. * சசி பசு முதலிய சப்தங்களின் ஸங்காதமானது ப்ரதிஸம்பந்தியின் சப்தங்களில்லாததென்று பாகுபாடு. ஸம்பந்தி சப்தமல்லாத சப்த வ்யுதபததிக்கு முந்தியே அம்பா முதலிய சப்த வ்யுத்பத்தியானது காணப்படுகிறது. அந்த வ்யுத்பத்தியானது உமக்கு அபிமதமான சப்தார்த்த ஸம்பந்தக்ரஹணத்திலோ பொருந்துகிறதில்லை. ஒருவனைக்குறித்து தகப்பனாக இருப்பவன் (தன் ஔரஸ புத்திரர்களைத் தவிர்த்து) மற்றவனுக்கும் ¶தகப்பனாக இருக்கமாட்டானன்றோ. ஆகையால் சப்தாத்த வ்யுத்பத்தியில் விருப்பமுள்ளவனுக்கு மாதாபிதா முதலியவர்களிடங்களில் அன்யர்களால் அந்தந்த சப்த ப்ரயோகத்துக்கு ஸம்பவமில்லாமையால் முதலில் அம்பா முதலிய சப்தார்த்த வ்யுத்பத்தியானது உன் மதத்தில் ஸம்பவிக்கிறதில்லை. ஆகலால் முதலாவதான வ்யுத்பத்தியானது புத்தி பூர்வகையாகவே உண்டாகிறதென்பதைக் காண்பிப்பதற்காக இரண்டுகோடிகள் சப்தங்களில் காண்பிக்கப்பட்டது. தற்செயலாக ஏற்படுகிற வ்ருத்தவ்யவஹாரத்தால் அந்தந்த சப்தங்களின் வ்யுத்பத்தியின் அனுபபத்தியும், எல்லா ஜனங்களாலும் அறியப்பட்டிருக்கிற வ்யுத்பத்திப்ரகார நிராஸமும். ஏநமவேஹி இமஞ்சாவதாரய என்று. ஏநம் போதகசப்தத்தையும். இமம் போத்யமான அர்த்தத்தையும் அறிவாயாகவென்று அர்த்தம். பஹுச: என்று எவ்வளவுக்குள் விரலால் சுட்டிக்காட்டுதலாலும் சப்த ப்ரயோக ‡ ஸாஹசர்யதர்சனத்தாலும் உண்டுபண்ணப்பட்டிருக்கிற வாஸனைகளின் ஆதிக்யத்தினுடைய உதயத்தினால் தானே அந்தந்த அர்த்தஙகளில் அந்தந்த சப்தங்களைப்ரயோகிப்பதற்கும் அர்த்தத்தைத் தனித்துப் பார்ப்பதனால் சப்தத்தை நினைப்பதற்கும் சப்தத்தை மாத்திரம் தனித்துக் கேட்பதனால் அர்த்தத்தை நினைப்பதற்கும் ஸமர்த்தர்களாக ஆகிறார்களோ, அவ்வளவுவரையில் என்று அர்த்தம். சிக்ஷிதர்கள்—அந்த

꠸ அம்பா—மாதா. ¶ தாத—பிதா. * சசி—சந்திரன்.
‡ ஸாஹசர்யம்—கூடச்சேர்ந்திருத்தல்.

ந்த சப்தங்களால் அந்தந்த அர்த்தங்களில் உண்டுபண்ணப்பட்டிருக்கிற ஜ்ஞானமுடையவர்கள். இங்ஙனமாகில் விரலால் குறித்துக்காட்டப்பட்டிருக்கிற அர்த்தங்களில் இந்த சப்தங்கள் ஸங்கேதமுள்ளவைகளாகச் செய்யப்பட்டிருக்கின்றனவென்று எண்ணப்படலாமென்று கேட்கப்படுமேயாகில், அன்றிக்கே, லிங்கம்போல் ஜன்யஜனகபாவம் முதலிய வேறு ஸம்பந்தத்தால் போதகங்களென்று நினைக்கப்படலாமென்று வினவப்படுமேயாகில், அந்த விஷயத்தில் கூறுகிறார்—ஸம்பந்தாந்தரார்தர்சநாத் ஸங்கேதயித்ருபுருஷாஜ்ஞாநாச்ச என்று. இது பொருள்-யாத்ருச்சிகமாக ஏற்படுகிற வ்யுத்பத்தியிலும் சோத்யம் துல்யம். சப்தப்ரயோகத்திற்குப்பிறகு ப்ரயோஜ்யனுடைய ப்ரவ்ருத்தியைப்பார்த்தவனான வ்யுத்பித்ஸுவுக்கு இந்த சங்கையானது உண்டாகிறது. இந்த சப்தப்ரயோகத்திற்குப் பிறகு இவனுடைய ப்ரவ்ருத்தியானது ஜன்யஜநகபாவம் முதலிய ஸம்பந்தத்தாலா? அல்லது ஸங்கேதத்தாலா? என்று. அதில் வேறு ஸம்பந்தத்தாலென்கிற சங்கையினாலேயே உண்டாகிறதில்லை என்று சொல்லப்படுமேயானால் புத்திபூர்வகமான வ்யுத்பத்தியிலும் இந்த பரிஹாரம் ஸமானம். ஸங்கேதபுத்தியின் உத்பத்தியும் பொருந்துகிறதில்லை. இந்த நம்ம தாய்தந்தைமுதலியவர்கள் சப்தங்களுக்குஅர்த்தங்களில் ஸங்கேதத்தை ஏற்படுத்துகிறார்களா? அல்லது முந்தியே ஒருவன் ஸங்கேதத்தைச் செய்திருக்கிறானா என்று. அவற்றுள் முதலாவது பக்ஷம் ஸரியல்ல. அநேக புருஷர்களால் அந்தந்த அர்த்தங்களில் ஒரேவிதமான சப்தப்ரயோகம் காணப்படுவதால். இரண்டாவது பக்ஷமும் ஸரியல்ல. இந்த மனிதனால் முன்பு சப்தங்கள் (அர்த்த விசேஷங்களில்) ஸங்கேதமுள்ளவைகளாக செய்யப்பட்டிருக்கின்றன வென்று ஸங்கேதத்தை ஏற்படுத்தின புருஷன் அறியப்படாமையாலென்கிற பரிஹாரம் உமக்கும் துல்யம். அது நமக்கும் ஸமானம். எல்லா ப்ரமாணங்களுக்கும் அர்த்தத்தை அறிவிப்பிக்கும் தன்மை பேதமின்றி இருந்தபோதிலும் ப்ரத்யக்ஷத்துக்குத்தன்னுடையஇருப்பினால்ஜ்ஞானத்தை உண்டுபண்ணுதல் என்கிற ஸ்வபாவமிருப்பதால் மற்ற ப்ரமாணங்களைக்காட்டிலும் இதற்கு வேற்றுமையும் மேன்மையும். அனுமானம் சப்தம் இவ்விரண்டு ப்ரமாணங்களும் அறியப்பட்டவைகளாக இருந்துகொண்டு ஜ்ஞாபகங்களாக இருக்கின்றன. அவற்றுள் அனுமானமானது ஜந்யஜநகபாவம் முதலிய வேறு ஸம்பந்தங்களின் பரிஜ்ஞானத்தினால் அறியப்படத்தக்க வஸ்து விஷயமான அறிவை உண்டுபண்ணுகிறது. சப்தமோவென்றால் போத்யபோதகபாவரூபமான ஸம்பந்தஜ்ஞானத்தினாலேயே அறியப்படத்தக்கதை அறிவிக்கிறது. இவ்விதமாக ஸம்பந்தாந்தர சங்கையும் ஸங்கேதமுள்ளதாக செய்யப்பட்டிருக்கிறதென்கிற சங்கையும் விலக்கித்தள்ளப்பட்டது. வேறு ஸம்பந்தங்களில்லாமையாலும் ஸங்கேதம் செய்த புருஷன் இவனென்று அறியப்படாமையாலும் போத்யபோதகபாவமே ஸம்பந்தமென்று சிறுவர்களால் அறிவதற்கு ஸாத்தியமாகாதென்று சொல்வாயேயானால் அது உனக்கும் துல்யம். மேலும் சப்தத்தை உச்சரித்தவுடன் ப்ரயோஜ்யவ்ருத்தனுடைய ப்ரவ்ருத்தியைக் கண்ணுற்று ப்ரவ்ருத்தியானது கார்யபுத்தியை முன்னிட்டு ஏற்பட்டிருக்கிறதென்று அனுமானித்து எதற்குப்பிறகு எது உண்டாகிறதோ அது அதற்குக்காரணம் என்கிற நியாயத்தால் சப்தோச்சாரணத்தால் இவனுக்கு கார்யபுத்தி உண்டாயிற்று. ஆதலால் சப்தார்த்தம் கார்யரூபமென்று அறிந்து கொள்வதற்குச்சிறுவர்களால் முடியவே முடியாது. ஸாத்தியப்படாமலிருத்தலும் காணப்படுகிறது. சிறுவர்கள் கூறப்பட்டிருக்கிற வண்ணமாக சப்தத்திற்கு கார்யார்த்த பரத்வத்தை நிச்சயிக்கிறார்களில்லை யன்றோ. ஆகையால் சிறுவர்களால் எவ்விதத்தாலும் அறியமுடியாதென்கிற கேள்வையானது உம்ம பக்ஷத்திலேயே அதிகமாக ப்ரஸங்கிக்கிறது. காலபரிபாகத்தால் அறியப்படுகிறதென்று கூறப்படுமேயானால் இந்த பரிஹாரம் நம்ம பக்ஷத்தில் மிக்க பொருத்தமுள்ளது.

பூயஶ்ச வ்யுத்பந்நேதரஶப்தேஷு "அஸ்ய ஶப்தஸ்யாயமர்த:" இதி பூர்வபூர்வவ்ருத்தைஶ்ஶிக்ஷிதாஸ்ஸர்வஶப்தாநாமர்தமவகம்ய பரேப்யஸ்தத்ப்ரதிபாதநாய தத்ததர்தாவபோதி வாக்யஜாதம் ப்ரயுஞ்ஜதே । ப்ரகாராந்தரேணாபி ஶப்தார்தஸம்பந்தாவதாரணம் ஸம்பவதி — கேநசித் புருஷேண ஹஸ்தசேஷ்டாதிநா "பிதா தே ஸுகமாஸ்தே" இதி தேவதத்தாய ஜ்ஞாபயேதி ப்ரேஷித: கஶ்சித் தஜ்ஜ்ஞாபநே ப்ரவ்ருத்த: "பிதா தே ஸுகமாஸ்தே" இதி ஶப்தம் ப்ரயுங்க்தே । பார்ஶ்வஸ்தோऽந்யோ வ்யுத்பித்ஸுர்மூகவத்ஹஸ்தசேஷ்டாவிஶேஷஜ்ஞஸ்தஜ்ஜ்ஞாபநே ப்ரவ்ருத்தமிமம் ஜ்ஞாபகாந்தரஸம்ஜ்ஞாபநாய ப்ரயுக்தமிமம் ஶப்தம் ஶ்ருத்வா "அயம் ஶப்தஸ்தத்ப்ரத்யாயநஸமர்த:" இதி நிஶ்சிநோதி — இதி கார்யார்த ஏவ வ்யுத்பத்திரிதி நியமோ நிர்நிபந்தந: । அதோ வேதாந்தா: பரிநிஷ்டிதம் பரம் ப்ரஹ்ம தது்பாஸநம் சாபிதததீதி தந்நிர்ணயபலோ ப்ரஹ்மவிசார: கர்தவ்ய:॥

கார்யார்தத்வேऽபி வேதஸ்ய ப்ரஹ்மவிசார: கர்தவ்ய ஏவ । யத: "ஆத்மா வா அரே த்ரஷ்டவ்ய: ஶ்ரோதவ்யோ மந்தவ்யோ நிதித்யாஸிதவ்ய:" "ஸோऽந்வேஷ்டவ்யஸ்ஸ விஜிஜ்ஞாஸிதவ்ய:" "விஜ்ஞாய ப்ரஜ்ஞாம் குர்வீத" "தஹரோऽஸ்மிந்நந்தர ஆகாஶ:, தஸ்மிந் யதந்தஸ்ததந்வேஷ்டவ்யம் தத்வாவ விஜிஜ்ஞாஸிதவ்யம்" "தத்ராபி தஹ்ரம் ககநம் விஶோகஸ்தஸ்மிந் யதந்தஸ்ததுபாஸிதவ்யம்" இத்யாதிபி: ப்ரதிபத்திவிதாநவிஷயகார்யாதிஶயதயைவ "ப்ரஹ்மவிதாப்நோதி பரம்" இத்யாதிபி: ப்ரஹ்மப்ராப்திஶ்ரவணாத் ப்ரஹ்மஸ்வரூபதத்விஶேஷணாநாம் தேஹஸ்விஶேஷப்ரதிபாதகவாக்யாநாம் கார்யோபயோகிதயைவ ஸித்தே:॥

ஸ்ரீபாஷ்யம்—

மீண்டும் வ்யுத்பன்ன சப்தங்களை விட வேறான சப்தங்களில் இந்த சப்தத்திற்கு இது அர்த்தமென்று முந்தி இருந்த வ்ருத்தர்களால் கற்பிக்கப்பட்டவர்கள் எல்லா சப்தங்களுக்கும் அர்த்தத்தை அறிந்து பிறர்களுக்கு அர்த்த

ங்களை அறிவிப்பதற்காக அந்தந்த அர்த்தங்களை அறிவிக்கத்திறமை வாய்ந்த வாக்ய ஜாலத்தை பிரயோகிக்கிறார்கள். வேறு விதத்தாலும் சப்தார்த்த ஸம்பந்த நிச்சயம் எளிதில் ஸாத்தியமாக இருக்கிறது. ஒரு மனிதனால் கையை அசைத்தல் முதலியதால் 'உன் தகப்பன் ஸுகமாக இருக்கிறான் என்று தேவதத்தனுக்குத் தெரியப்படுத்து என்று அனுப்பப்பட்ட ஒருவன் அந்த விஷயத்தைத் தெரிவிக்க முயன்றவனாக உன்பிதா சுகமாக இருக்கிறார் என்று சப்தத்தை ப்ரயோகிக்கிறான். பக்கத்திலிருக்கிற மற்றொருவ்யுத்பித்ஸுவானவன் ஊமைபோல் சேஷ்டைகளை அறிந்தவனாக இருந்துகொண்டு அந்தவிஷயத்தைத் தெரிவிப்பதில் ப்ரவ்ருத்தித்தவன் இவன் என்று அறிந்து அவனை பின்தொடர்ந்தவனாக, அதைத்தெரிவிப்பதற்காக ப்ரயோகிக்கப்பட்டிருக்கிற சப்தத்தைக்கேட்டு, இந்தசப்தம் அந்த அர்த்தத்தின் ஜ்ஞாநஹேதுவென்று நிச்சயிக்கிறான் என்பதனால் கார்யார்த்தத்திலேயே வ்யுத்பத்தி என்கிற நிர்பந்தமானது காரணமில்லாதது. ஆகையால் வேதாந்தங்கள் பரிநிஷ்பன்னமான பரப்ரஹ்மத்தையும் அதின் உபாஸனத்தையும் அபரிமிதபலமுள்ளதென்று அறிவிக்கின்றனவாதலால் ப்ரஹ்மவிசாரம் செய்யத்தக்கது. வேதம் கார்யார்த்தபோதனபரமாக இருந்தபோதிலும் ப்ரஹ்மவிசாரம் செய்யத்தக்கதே. எப்படி என்றால்'' ஆத்மாவாஅரே த்ரஷ்டவ்ய: ச்ரோதவ்யோ மந்தவ்யோ நிதித்யாஸிதவ்ய: - ஸோऽந்வேஷ்டவ்ய: ஸ விஜிஜ்ஞாஸிதவ்ய:, விஜ்ஞாய ப்ரஜ்ஞாம் குர்வீத, தஹரோஸ்மிந்நந்தர ஆகாச: தஸ்மிந்யதந்தஸ்ததந்வேஷ்டவ்யம் தத்வாவவிஜிஜ்ஞாஸிதவ்யம், தத்ராபி தஹ்ரம் ககநம் விசோகஸ்தஸ்மிந்யதந்தஸ்ததுபாஸிதவ்ய'' (இந்தச்ருதிவசனங்களுக்குப் பொருள்-ஹே உபாஸக! பரமாத்மாவானவன் வேதாந்தவாக்கியங்களால் ச்ரவணம் பண்ணத்தக்கவன்;- பிறகு மனனம் செய்யத்தக்கவன்; பிறகு தர்சன ஸமானாகாரமான தியானத்தினால் ஸாக்ஷாத்கரிக்கத்தக்கவன் அவன் தேடத்தக்கவன் அவன் நன்கு அறிவதற்கு விரும்பத்தக்கவன். ஸ்வரூபத்தை அறிந்து உபாஸனை செய்யக்கடவான். இந்த ஸூக்ஷ்மமான ஹ்ருதயபுண்டரீகத்தில் யாதொரு தஹரசப்தவாச்யமான ஸூக்ஷ்மாகாசஸ்வரூபனான பரமாத்மாவுண்டோ அவனும் அவனிடத்தில் யாதொரு குணஜாதமுண்டோ அதுவும் தேடத்தக்கது. அதே நன்கு அறியவிரும்பத்தக்கது. அந்த ஹ்ருதயபுண்டரீகத்தில் ஸூக்ஷ்மமானயாதொரு ஆகாசமுண்டோ அந்த தஹராகாச சப்தவாச்யன் ஸம்ஸாரபந்தமில்லாத பரமாத்மா- அவனிடத்தில் எந்த குணஜாதமிருக்கிறதோ அது உபாஸிக்கத்தக்கது.) இது முதலிய ச்ருதிவசனங்களால் அறியப்பட்டிருக்கிற உபாஸனவிஷயகார்யத்தில் அதிகாரமுள்ளவனுக்கு ''ப்ரஹ்மவிதாப்நோதி பரம்

இது முதலிய ச்ருதிகளால் ப்ரஹ்ம ப்ராப்தியானது பலமாக கேழ்க்கப்படுகிறதாதலால் ப்ரஹ்மஸ்வருபத்துக்கும் அதன் விசேஷங்களுக்கும் துக்கத்துடன் கலர்காத தேச விசேஷரூபமான ஸ்வர்க்கம் முதலியதுபோலவும், ராத்ரிஸத்ரத்தில் பலமாகக் கூறப்பட்டிருக்கிற ப்ரதிஷ்டைபோலவும், பிராமண யநிந்தைக்கும் அபரிமிதயாதனைகளுக்கும் ஸாத்திய ஸாதனபாவம் போலவும் கார்யத்துக்கு உபயோகியாக இருத்தலாலேயே ஸித்தி ஏற்படுவதால்.

ச்ருதப்ரகாசிகை—

புநஸ்ச என்று. இந்த சப்தத்திற்கு இது அர்த்தமென்று வ்யுத்பத்தி இருக்குமேயானால் அன்விதாபிதானத்துக்கு பங்கம் ப்ரஸங்கிக்குமென்று சொல்லப்படுமேயாகில் அல்ல. ஸமுதாயஜ்ஞாநத்திற்காக ப்ரத்யேகபதபத வ்யுத்பத்தி இருப்பதால். காவ்யம் முதலியவைகளில் வாக்கியார்த்த ஜ்ஞாநத்திற்கு உபயோகியாக ஏற்படுகிற பதார்த்த ஜ்ஞாநமானது வாக்கியார்த்த ஜ்ஞாநத்திற்கு விரோதியல்லவன்றோ. அக்ஷரசிக்ஷையும் பதார்த்தஜ்ஞாநவிரோதினியல்லவன்றோ. இவ்வண்ணம் அந்தந்த பதங்களால் ஒன்றோடொன்று சேர்க்கையுற்ற ஸ்வார்த்தாபிதான வ்யுத்பத்திக்கு ஒவ்வொரு பதந்தோறும் உண்டாகிற அர்த்த வ்யுத்பத்தியானது விரோதினியல்ல. பின்னேயோ உபயுக்தையே. எப்படி உம்மபக்ஷத்தில் ஆவாபோத்வாபரூபமான தனித்தனிப்பதத்தினுடைய அர்த்தத்தில் உண்டாகிற வ்யுத்பத்தியானது வாக்கியார்த்தஜ்ஞாநத்திற்கு உபயுக்தமாக இருப்பதால் விரோதினியன்றோ அப்படிப்போல. உம்முடைய பக்ஷத்திலோவென்றால் ப்ரதயேகபதவ்யுத்பத்தியானது பிறகு உண்டாகக்கூடியது. இந்த பக்ஷத்திலோ வென்றால் முந்தி உண்டாகிறது என்பது விசேஷம் வாக்யார்த்தஜ்ஞாநத்திற்கு உபயோகியாக இருத்தல் ஸமாநம். சப்தத்தால் அன்வயபர்யந்தம் அபிதானமன்றோ அன்விதாபிதானம். ப்ரத்யேக பதபதார்த்த வ்யுத்பத்தியிலுங்கூட அதிலேயே வ்யுத்பத்தி உண்டுபண்ணப்படுகிறதாதலால் விரோதமில்லை. அபிஹிதான்வய பக்ஷத்தில் அர்த்தங்களுக்கு ஒன்றோடொன்று அன்வயபோதயோக்யமாக இருத்தல் சப்தங்களுக்கு தத்தம் அர்த்தங்களை உணர்த்துகிற சக்தி சப்தங்களாலுங்கூட அன்யோன்யம் அன்வயிக்க யோக்யமாக அர்த்தத்தை உணர்த்துதல், என்கிற மூன்றும் கல்பிக்கத்தக்கன. அன்விதாபிதான பக்ஷத்திலோ வென்றால் சப்தங்களுக்கு அன்வயபர்யந்தமாக ஸ்வார்த்தபோதன சக்தியை ஒப்புக்கொள்வதால் கல்பனையில் லாகவம் இருக்கிறபடியால் அதே இந்த இடத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அன்விதாபிதானபங்கப்ரஸங்கமும் பரிஹரிக்கப்பட்டது. இந்த சப்தத்துக்கு இது அர்த்தமென்கிற இடத்திலுங்கூட இது அர்த்தமென்று தெரிந்துகொள்ளென்றல்லவோ சொல்லப்பட்டதாக ஆகிறது. ஆகையால் கார்யார்த்தத்திலேயே வ்யுத்பத்தி என்று சொல்லப்படுமேயானால் இங்ஙனமாகில் யாத்ருச்சிக வ்யுத்பத்தியிலும் ஸித்தவஸ்துவிலேயே வ்யுத்பத்தி உண்டாகலாம். ப்ரயோஜ்யவ்ருத்தனுக்கு கார்யபுத்தியானது உண்டாயிருக்கிறதென்றல்லவோ வ்யுத்பத்தியைத் தேடுவதில் விருப்பமுள்ளவன் அறிகிறான். சப்தத்தால் அறியத்தக்கதன்மை கார்யத்திற்கே. புத்திக்கு இல்லை, புத்தியானது சப்தத்தாலுண்டாகிறதே ஒழிய சப்தத்தால் வாச்யையாக ஆகிறதில்லை என்று கூறப்படுமேயானால் இந்த இடத்

திலும் சப்தபோத்யத்வம் அந்தந்த பதார்த்தத்திற்கே; புத்திக்கு அல்ல கடவிஷயகமானபுத்தியானது கடசப்தத்தால் வாச்யையாக ஆகாதன்றோ. பின்னையோ அந்த சப்தத்தால் உண்டாகிறது. வாச்யமோவென்றால் கடமே என்று பரிஹாரம் துல்யமென்று அபிப்ராயப்பட்டு இதை அறிந்துகொள் இதையும் நிச்சயமாகத்தெரிந்துகொள் என்கிற அபிப்ராயத்தால் அங்குல்யா நிர்திச்ய'என்று சொல்லப்பட்டது. தத்ததர்த்தாவபோதி வாக்யஜாதம் ப்ரயுஞ்ஜதே என்று. யாத்ருச்சிக வ்யுத்பத்தியில சில சப்தங்களுக்கு கார்யார்த்தபரமாக வ்யுத்பத்தி காணப்படுவதால் வ்யுத்பத்தியை உண்டுபண்ணுகிற புருஷர்களும் கார்யார்த்தத்திலேயே வ்யுத்பத்தியை உண்டுபண்ணுகிறவர்களாக இருந்துகொண்டு (காமாநய) பசுவைக்கொண்டுவா இதுமுதலியவாக்கியத்தை ப்ரயோகிக்கிறார்களென்று சொல்லப்படுமேயானால் அனேகசப்தங்களுக்கு ஸித்தவஸ்துபரமாக வ்யுத்பத்தி காணப்படுவதால் வ்யுத்பத்தியை உண்டுபண்ணுகிற புருஷர்களும் அப்படியேவ்யுத்பத்தியை ஏற்படுத்தி அந்தந்த அர்த்தங்களைச் சொல்லவேண்டுமென்கிற விருப்பத்தால் சப்தங்களை ப்ரயோகிக்கிறார்கள். வ்யுத்பத்திதர்சனம் ப்ரயோகதர்சனம் இந்த இரண்டும் இந்த இடத்தில் ஸமானமென்று கருத்து. இவ்வண்ணம் புத்திபூர்வக வ்யுத்பத்தியினால் சப்தங்களுக்கு ஸித்தவஸ்து பரத்வம் கூறப்பட்டது யாத்ருச்சிக வ்யுத்பத்தியிலும் ஸித்தமாக இருக்கிற அர்த்தத்திலும் வ்யுத்பத்தி இருக்கிறதென்று சொல்லுகிறார்— ப்ராகாராந்தரேணாபி என்று. வாசகசப்தங்களை அபேக்ஷியாமலே அந்தந்த அர்த்தஜ்ஞானம் சேஷ்டை முதலியதால் ஸம்பவிக்கிறதென்று காண்பிக்கிறார்— ஹர்ஷவத் என்று. அன்யனால் சொல்லப்பட்டிருக்கிற யாத்ருச்சிக வ்யுத்பத்தியில் வ்யுத்பத்தியைப்பெறவேண்டுமென்கிற எண்ணமுள்ளவனைத்தவிர இரண்டுபுருஷர்களின் அபேக்ஷையும் பசுமுதலியதின் அபேக்ஷையும். இதிலோவென்றால் வ்யுத்பத்தியைப் பெறுவதில் விருப்பமுள்ள மனிதனைத்தவிர்த்து மூன்று புருஷர்களின் அபேக்ஷை இருக்கிறதென்பதனால் வைஷம்யம் மேலும் உனக்குப் புத்திரன் பிறந்திருக்கிறான் என்கிற வாக்கியத்திற்கும் பசுவை ஓட்டிக்கொண்டுவா இது முதலிய வாக்கியத்திற்கும் வைஷம்யமானது எவ்விதத்தாலும் உபபாதிக்கமுடியாது. முக்காலங்களிலுமுள்ள ஸந்தோஷஹேதுக்களான வஸ்துக்கள் அனேகங்கள் என்கிற எண்ணத்தாலன்றோ புத்திரனுடைய பிறப்பை உணர்த்துகிற வாக்கியத்தில் வ்யுத்பத்தி அசக்யமென்று உரைக்கப்பட்டது. அது இல்லை. பக்கத்தில் நேர்ந்திருக்கிற புத்திரஜன்மாவைக் கண்டு அதைத் தெரிவிப்பதற்காக முயற்சியுள்ள ஒரு மனிதன் அறியப்பட்டிருக்கவே பிறகு ஜாதகர்மா முதலிய ஸம்ஸ்காரங்கள் பார்க்கப்படவே அதற்குமுன் முகமலர்ச்சி இல்லாமையால் அஸம்பாவிதமான புத்ரஜன்மவிஜ்ஞாநமுள்ள புருஷனுக்கு இந்த வாக்கியத்தைக்கேட்டவுடன் உண்டாகப்போகிற முகமலர்ச்சிக்கு சென்றதும் இனிவரப்போகிறதுமான வேறு ஸந்தோஷஹேதுவான வஸ்துவின் ச்ரவணம் ஹேதுவென்கிற சங்கை உதியாததலால். பக்கத்திலிருக்கிற ஹேதுவைவிட்டு காணப்பட்டிராத ஹேதுவிஷயமான சங்கையானது புத்தியை நாடாதன்றோ. நல்ல லக்னம் ஸுகப்ரஸவம் முதலிய வேறுஹேதுவென்கிற சங்கை உண்டாகலாமென்றுகேழ்க்கப்படுமேயானால் இவ்வண்ணமல்ல-நல்ல லக்னம் முதலியது மாத்திரம் ஸந்தோஷஹேது வென்பது பொருந்தாததால். மற்றொருவனுடைய புத்ரஜனனம் முதலியதைச்சார்ந்திருக்கிற நல்ல லக்னம் முதலியது ஸந்தோஷகாரணமாகிறதில்லை யன்றோ. ஆகையால் தன்னுடைய புத்திரஜன்மாவுக்கு விசேஷணங்களாக இருக்கிற நல்ல லக்னம் முதலியவைகளே ஸந்தோஷஹேதுக்கள். ஆதலால் தன் புத்திரனுடைய பிறப்பானது அறியப்படாமலிருக்கையில்

நல்ல லக்னம் முதலியவைகள் ஸந்தோஷகாரணங்களாக ஆகாமையால் இந்த வாக்கியத்திற்குத் தன் புத்திரனுடைய பிறப்பைத் தெரியப்படுத்தும் திறமை அவசியம் அறியப்பட்டதாக ஆகலாம். முந்தியே புத்திரஜன்மஜ்ஞானம் ஸம்பவித்திருப்பதால் இந்த வாக்கியத்திற்கு நல்ல லக்னம் முதலியதை அறிவிப்பதிலேயே நோக்கமென்று சங்கையுண்டாகலாமென்று கேழ்க்கப்படுமேயானால் இவ்வண்ணமல்ல. அதற்கு முந்திமுகமலர்ச்சி இல்லாமையால் முந்தியே புத்திரஜன்ம ஜ்ஞானசங்கை உதியாததால், ஆகையால் புத்திரஜன்மமானது ஸமீபத்திலிருப்பதாலும் முந்தி முகவிகாஸமில்லாமையாலும் முதன்மையான முகமலர்ச்சிக்குக் காரணமான இந்த வாக்கியத்திற்கு புத்திரஜன்ம ஜ்ஞாபகத்வத்தை வ்யுத்பத்தியைப் பெருவதில் விருப்பமுற்ற சிறுவன் எண்ணுகிறான். அந்த இடத்தில் இவ்விதம் சங்கை உண்டாகிறது. இந்த வாக்கியமானது புத்திரஜன்மம் முதலியதை மாத்திரம் தெரிவிக்கிறதா? அல்லது நல்ல லக்னம் முதலியவைகளுடன் கூடின புத்திரஜன்மம் முதலியதைத் தெரிவிக்கிறதா? என்று. இப்படிப்பட்ட ஸந்தேஹத்தால் கவரப்பட்டிருத்தல் (காமாநய) பசுவை ஓட்டிவா இது முதலிய வாக்கியத்துக்கும் துல்யம் இந்த வாக்கியமானது பசுவை ஓட்டிவருவதை மாத்திரம் சொல்லுகிறதா? அல்லது முன்னிலையிலிருக்கிற பிண்டத்தில் வெண்மை நிறம் முதலிய விசேஷங்கள் காணப்படுகின்றன, அவைகளோடுகூடின பசுவை ஓட்டிவருவதை ப்ரதிபாதிக்கிறதா? என்கிற ஸந்தேஹம் உபபன்னயாக இருப்பதால். ப்ரயோகபேதத்தால் ஆவாபோத்வாபங்கள் வாயிலாக சங்கையை விலக்குதல் இரண்டிடத்திலும் துல்யம். புத்திரஜன்ம வாக்கியத்தைக்காட்டிலும் காமாநய) பசுவை ஓட்டிக்கொண்டுவா இது முதலிய வாக்கியங்களுக்கு அனேக அர்த்தாந்தர சங்கையினால் கவரப்பட்டிருத்தல் மிகவும் காணப்படுகிறதாதலால் அர்த்த விசேஷ நிச்சயமானது செய்வதற்கு மிக்க அசக்யமானது. பசுவை ஓட்டிக்கொண்டுவா என்கிற சப்தப்ரயோகம் செய்த உடன் வேறு வியாபாரமில்லாமல் பசுவானது ஓட்டிகொண்டுவரப்பட்டிருந்த போதிலும் ப்ரயோஜ்ய வ்ருத்தனுடைய ப்ரவிருத்தியானது 'பசுவை நன்றாகக்காட்டு, பசுவை முன்னிலையில் நிற்கச்செய், பசுவைகொடு, பசுவை விற்றுவிடு' இது முதலிய அனேகார்த்த விஷயமான சங்கைக்கு ஹேதுவாக இருப்பதால். மேலும் பசுவை ஓட்டிக்கொண்டுவா இது முதலிய சப்தங்கள் ப்ரயோகிக்கப்பட்டவுடன் பசுவை ஓட்டிவருவதற்கு முன்னதாகவே எழுந்திருத்தல் மேல்வஸ்திரத்தை இடுப்பில் வரிந்துகட்டிக்கொள்ளுதல் தடியை எடுத்தல் தற்செயலாக நேர்ந்திருக்கிற ஜனங்களுடன் ஸம்பாஷித்தல் செல்லுதல் முதலிய அவாந்தரங்களாக இருக்கிற அனேக வியாபாரங்கள் எந்த புருஷனுக்கு இப்பொழுது வ்யுத்பத்தியில் அறியப்படுகிறதுகளோ அந்த மனிதனுக்கு அவைகளுக்குள் ஏதாவது ஒரு அர்த்தத்திற்கு வாசகமென்கிற சங்கையானது 'காமாநய' இது முதலிய வாக்கியத்திற்கு உண்டாகிறது. பிறகு பசுவை ஓட்டிக்கொண்டுவருதலும் தற்செயலாக செய்யப்பட்டதாக இருக்கலாமே ஒழிய வாக்கியத்தினாலுண்டுபண்ணப்பட்ட * ப்ரேரணத்தினாலல்லவென்றும் † சங்கை உண்டாகிறது. ஆகையால் அர்த்தவிசேஷ ஸம்பந்த நிச்சயம் உண்டாகிறதில்லை. அனேக ப்ரயோகங்களால் ‡ அன்வய § வ்யதிரேகங்களால் அர்த்த விசேஷ நிச்சயமென்று சொல்லப்படுமேயானால்

---

* ப்ரேரணம்—விதித்தல், ஏவுதல். † சங்கை—சந்தேகம். ‡ அன்வயம்—தவறாமல் சப்தப்ரயோகத்தால் அர்த்தத்தின் ஜ்ஞானம். § வ்யதிரேகம்—சப்தப்ரயோகமில்லாவிடில் அர்த்தத்தின் ப்ரதிபத்தி இல்லாமை.

இவ்வண்ணமாகவே 'உனக்கு புத்திரன் பிறந்திருக்கிறான்.' இது முதலிய வாக்கியத்தினால் அர்த்தவிசேஷ நிச்சயமானது நன்கு ஸம்பவிக்கிறது. இவ்வண்ணம் ஸித்த வஸ்துவில் சப்தவ்யுத்பத்திக்கு § உபபத்தியை ‡ உபபாதனம் செய்ததால் வேதாந்தங்களுக்கு பரப்ரஹ்மத்தை ப்ரதிபாதிக்கும் ஸாமர்த்தியம் பொருத்தமுள்ளதென்று கூறுகிறார் —அதோ வேதாந்தா: என்று.

அதற்குமேல் கார்யார்த்த பரத்வத்தை ஒப்புக்கொண்டு ப்ரஹ்மவிசாரம் செய்யத்தக்கதென்று கூறுகிறார்— கார்யார்த்தத்வேபி என்று வேதாந்தவாக்கியங்களுக்கு கார்யார்த்தபோதகத்வமொப்புக்கொள்ளப்பட்ட போதிலும் ¶ ஸ்தாவகத்வஸித்திக்கு ஹேதுவாதலாலும் பலத்திற்கு ஸாதனமாதலாலும் இரண்டு ப்ரகாரங்களால் ஸித்த வஸ்துவில் தாத்பர்யம் மேலே விளம்பிச் சொல்லப்படப்போகிறது. இவ்விடத்திலோ வென்றால் வேறு ப்ரகாரத்தால் உபபாதிக்கப்படுகிறது. அநந்தஸ்திரபலவிஷயமான @ ஆபாதப்ரதீதியானது ஸாதிக்கவேண்டுமென்று விரும்பப்பட்டிருப்பதால் பலமாக தாத்பர்யம் கூறுவது இந்த இடத்தில் உசிதமென்று இங்கு பலரூபத்தால் ஸித்தி சொல்லப்படுகிறது. அனேக வாக்கியங்களை எடுத்து உபாஸநத்தில் தாத்பர்யமதிகமென்பதை ஜ்ஞாபிப்பதற்காகவும் || உபஸர்க விசேஷம் ‡‡ ஸம்ப்ரத்யயத்தின் சேர்க்கை, சேர்க்கை இன்மை, இவைகளிருந்தபோதிலும் அர்த்தபேதமில்லை என்பதைத் தெரிவிப்பதற்காகவும், உபாஸந விஷயகார்யாதிக்ருத என்று உபாஸநவிஷயகமானப்ரயத்னத்தால் ஸாதிக்கத்தக்கதான அபூர்வத்தில் அதிகாரமுள்ளவனுக்கு விசேஷிக்கிறதன்றோ விஷயமென்று சொல்லப்படுகிறது ப்ரஹ்மஸ்வரூப தத்விசேஷணநாம் என்று விசேஷணங்கள் குணங்களும் $ விபூதிகளும். விதிவாக்யத்தில் சொல்லப்பட்டிருக்கிற பலத்திற்கு அர்த்தவாதத்தில் சொல்லப்பட்டிருக்கிற விசேஷணத்தில் தாத்பர்ய மிருக்கிறதென்று தெரிவிப்பதற்காக "துக்காஸம் பின்னதேச விசேஷரூபஸ்வர்க்காதிவத்" என்று சொல்லப்பட்டது "யஸ்மிந்நோஷ்ணம் நசீதம் நாரதி:" (பொருள். எந்த இடத்தில் உஷ்ணவஸ்து வில்லையோ சீதமான பதார்த்தமில்லையோ துக்கமுமில்லையோ) என்றல்லவோ ச்ருதிகூறுகிறது. ஸ்வர்க்கமென்கிறபலம் விதிவாக்கியத்தை நாடி இருக்கிறது. விசேஷணமானது வேறு இடத்தில் பலம் விதிவாக்கியத்தை அடைந்திராமலிருந்தபோதிலும் விதியினாலபேக்ஷிக்கப்பட்டிருக்கிற அன்யபரமான அர்த்தவாதத்தில் சொல்லப்பட்டிருக்கிற பலத்தில் தாத்பர்யமிருக்கிறதென்பதைக் காண்பிப்பதற்காக 'ராத்ரிஸத்ரப்ரதிஷ்டாவத்" என்று உரைக்கப்பட்டது. "ராத்ரீருபேயாத்- ப்ரதிதிஷ்டந்திஹவா ஏதே ய ஏதா ராத்ரீருபயந்தி" என்றல்லவோ ச்ருதி இருக்கிறது. இதன்பொருள். ராத்ரிஸத்ரத்தைச் செய்யக்கடவான், எவர்கள் ராத்ரிஸத்ரத்தை அனுஷ்டிக்கிறார்களோ அவர்கள் ப்ரதிஷ்டையைப் பெறுகிறார்கள். ப்ரதிஷ்டையில் விருப்பமுள்ளவன் ராத்ரிஸத்ரத்தை அனுஷ்டிக்கக்கடவானென்கிற வசன

§ உபபத்தி—யுக்தி. ‡ உபபாதனம்—நிரூபணம்.

¶ ஸ்தாவகத்வம்—ஸ்தோத்திரம் செய்கிறதன்மை.

@ ஆபாதப்ரதீதி—ஸம்சய விபர்யயங்களை ஸஹிக்கிற ஜ்ஞானம்.

|| உபஸர்க்கம்—தாதுக்களுக்கு முந்தி சேர்க்கப்படும் 'ப்ர' முதலிய சப்தங்கள்.

‡‡ ஸம்ப்ரத்யயம்—தாதுக்களுக்குப்பின் சேர்க்கப்படும் ப்ரத்யயவிசேஷம். இதற்கு இச்சை அர்த்தம். $ விபூதிகள்—நியமனம் செய்யப்படத்தக்க வஸ்துக்கள்.

மில்லாமலிருந்தபோதிலும் அர்த்தவாத வாக்கியத்தில் சொல்லப்பட்டிருக்கிற பலத்தில் தாத்பர்யம் அங்கீகரிக்கப்பட்டிருக்கிற தென்று அர்த்தம். விதேயத்திற்கு உபகாரகமாக இருக்கிற விரோதபலத்திலும் தாத்பர்யமிருக்கிறதென்பதைத் தெரிவிப்பதற்காக "அபகோரண சதயாதநாஸாத்ய ஸாதனபாவவச்ச" என்று சொல்லப்பட்டது. 'தஸ்மாத் ப்ராஹ்மணாயநாபகுரேத, யோபகுருதே சதேந யாதயாத்' பொருள். ஆகையால் ப்ராஹ்மணனைக்குறித்து ஹுங்காரம் த்வங்காரம் முதலிய கெட்ட சொற்களை முன்னிட்டு நிந்தை செய்யக்கூடாது. எவன் அப்படி நிந்திக்கிறானோ அவனை தண்டதாரனான வைவஸ்வதன் நூருயாதனைகளை அனுபவிக்கச்செய்வான். என்றல்லவோ ச்ருதி இருக்கிறது. இதனால் மோக்ஷோபாய விரோதியான பலத்திலும் தாத்பர்யம் ஸித்தமென்று அபிப்பிராயம். தொடர்ந்துவருகிற ஹேதுவானது கார்யத்துக்கு உபயோகியாக இருப்பதாலேயே ஸித்திப்பதாலென்று சொல்லப்பட்டது. உபாஸந விஷயகார்யத்திற்கு உபயோகியாக இருப்பதால் பலமாக ஆய் இருக்கிற ப்ரஹ்மஸ்வரூபத்திலும் அதற்கு விசேஷணமான குணம் முதலியதிலும் விதிவிரோதியான பலத்திலும் ஸம்ஸார ஹேதுத்வம் முதலியதிலும் விவக்ஷையானது செய்யத்தக்கதென்று அர்த்தம்.

"[illegible]" इत्यादिष्वपि वाक्येषु न कार्यार्थे व्युत्पत्तिः; [illegible] कार्यस्य [illegible]। [illegible] कृत्युद्देश्यं हि सर्वतः कार्यम्। कृत्युद्देश्यत्वञ्च कृतिकर्मत्वम्। कृतिकर्मत्वञ्च कृत्या व्याप्तुमिष्टतमत्वम्। इष्टतमत्वञ्च [illegible] तन्निवृत्तिर्वा। [illegible]

तथापि इष्टसाधनत्वावगमादेव भवति । न च कृतिं प्रति शेषित्वं कृत्युद्देश्यत्वम्, भवदुक्तशेषित्वस्यानिरूपणात् । न च प्रधानोद्देश्यप्रयुक्तकृतिव्याप्यत्वाभावत्वं शेषित्वमिति कृतिविषयेऽपि शेषित्वप्रसक्तेः, तथा सति कृतेरशेषत्वेन तां प्रति तस्य शेषित्वाभावात् । न च प्रधानोद्देश्यप्रयुक्तत्वाभावापादकतया शेषत्वेन वाऽशेषित्वं, उद्देश्यत्वस्यैव निरूप्यमाणत्वात्, प्रधानस्यापि कृत्युद्देश्यप्रयुक्तत्वाभावादुद्देश्यत्वाभावात् । प्रधानस्य कृत्युद्देश्यत्वेऽपि स्वोद्देश्यप्रयुक्तत्वं नास्तीति चेन्न, कृत्युद्देश्यत्वेऽपि प्रधानस्योद्देश्यप्रयुक्तत्वाभावादेव प्रयुक्तत्वे । कार्यस्वरूपस्यैवानिरूपणात् "कार्यत्वे कृतिस्वीयो शेषः कृतिस्वीय शेषी" इत्यन्योन्याश्रयात् ॥

ஸ்ரீபாஷ்யம்—

"பசுவை ஓட்டிக்கொண்டுவா" இதுமுதலிய வாக்கியங்களிலுங்கூட கார்யார்த்தத்தில் வ்யுத்பத்தி இல்லை. உமக்கு அபிமதமான கார்யமானது எவ்விதத்தாலும் நிரூபிக்க முடியாமலிருப்பதால். ஆந்தரமான ப்ரயத்னத்தின் ஸத்தையை அடுத்து உத்தரக்ஷணத்தில் உண்டாகக்கூடிய ப்ரயத்நத்திற்கு உத்தேச்யமன்றோ உமக்கு கார்யம். க்ருதிக்கு உத்தேச்யத்வமாவது க்ருதிக்கு கர்மாவாக இருத்தல். க்ருதி கர்மத்வமாவது - க்ருதியினால் அடைவதற்கு மிக்க இஷ்டமாக இருத்தல் இஷ்டதமமானது சுகமா? அல்லது இருக்கிற துக்கத்தின் நிவ்ருத்தியா? அதில் ஸுகம் முதலியதில்விருப்பமுள்ள புருஷனால் தன் ப்ரயத்னமல்லாவிடில் அது ஸித்தியாதென்று அறியப்பட்டிருக்குமேயாகில் அப்பொழுது ப்ரயத்னத்தில் விருப்பமுள்ள புருஷன் ப்ரவ்ருத்திக்கிறானாதலால் ஓரிடத்திலாவது இச்சாவிஷயத்திற்கு க்ருதிக்கு ஆதீனமான ஸித்தியுடன் கூடி இருத்தலென்பதைத் தவிர்த்துதனித்ததான க்ருதிக்கு உத்தேச்யமாக இருத்தலென்கிற ஒரு தர்மமானது அறியப்படுகிறதில்லை. இச்சைக்கு விஷயமாக இருக்கிற வஸ்துவுக்குப்ரேரகத்வமாவது ப்ரயத்நத்திற்கு அதீனமான ஸித்தியுடன் சேர்ந்திருத்தலே. அதனாலேயே ப்ரவ்ருத்தி ஏற்படுவதால் புருஷனுக்கு அனுகூலமாக இருத்தல் க்ருத்யுத்தேச்யத்வமாகா ஏனெனில் ஸுகமே புருஷானுகூலம், துக்கநிவ்ருத்தியானது புருஷானுகூலமல்ல. புருஷனுக்கு அனுகூலம் ஸுகம்- அவனுக்கு ப்ரதிகூலம் துக்கமென்றல்லவோ ஸுகதுக்கங்களுடைய ஸ்வரூபவிவேகம். துக்கம் ப்ரதிகூலமாக இருப்பதால் அதன் நிவ்ருத்தியானது இஷ்டமாகஇருக்கிறதே ஒழிய அனுகூலதையினாலல்ல- அனுகூல ப்ரதிகூல ஸம்பந்தமின்றி

ஸ்வரூபத்துடனிருத்தலன்றோ துக்க நிவ்ருத்தி ஆகையால் ஸுகத்தைத்தவிர்த்த க்ரியை முதலியதற்கு அநுகூலத்வம் ஸம்பவிக்கிறதில்லை. ஸுகார்த்தமாக இருப்பதால் அதுவும் அநுகூலமென்று சொல்லக்கூடாது. அது துக்காத்மகமாக இருப்பதால் ஸுகார்த்தமாக இருத்தலாலுங்கூட அதன் உபாதான விஷயமான இச்சாமாத்ரமே உண்டாகிறது. க்ருதியைக்குறித்து சேஷித்வம் க்ருத்யுத்தேச்யத்வமல்ல. உம்முடைய பக்ஷத்தில் சேஷித்வம் நிரூபிக்கப்படாமையால் பிறனை உத்தேசித்து ப்ரவ்ருத்திக்கிற க்ருதியின் வ்யாப்திக்குத்தக்கதாக இருத்தல் சேஷத்வமாதலால் அதற்கு ப்ரதிஸம்பந்தியானது சேஷி என்று அறியப்படுகிறதில்லை. அப்படியானால் க்ருதியானது சேஷமல்லாததால் அதைக்குறித்து அதனால் ஸாத்தியத்திற்கு சேஷித்வமில்லாமையால். அன்யனை உத்தேசித்து உண்டாகிற ப்ரவ்ருத்திக்குத்தகுதியுற்றிருத்தல் சேஷசப்தவாச்யமாதலால் அதைவிட வேறாக இருப்பதுசேஷி. உத்தேச்யத்வமே நிரூபிக்கப்படுவதாலும் ப்ரதானனுக்கும் தன்வேலைக்காரனை உத்தேசித்த ப்ரவ்ருத்திக்குத் தகுதியுற்றிருத்தல் காணப்படுவதாலும். ப்ரதானபுருஷனேயென்றால் தனவேலைக்காரனை போஷிப்பதில் தன்னை நன்கு யாது கார்த்துக்கொள்ளுகிற உத்தேசத்தினால் ப்ரவ்ருத்திக்கிறானென்று கூறப்படுமேயானால் அல்ல வேலைக்காரனும் ப்ரதானனாக இருக்கிற ப்ரபு போஷணத்தில் தன்னுடைய நன்மையில் உத்தேசத்தினாலேயே ப்ரவ்ருத்திக்கிறான், கார்யத்தின் ஸ்வரூபமே நிரூபிக்கப்படாமையால் கார்யத்துக்கு எது ப்ரதிஸம்பந்தியோ அது சேஷம், அதற்குப்ரதிஸ்ம்பந்தியாக இருப்பது சேஷி என்பதும் அஸங்கதமானது.

ச்ருதப்ரகாசிகை—

ப்ராவர்த்தகவாக்கியத்திலும் உன்னுடைய அபிமதஸித்தி இல்லை என்று சொல்லுகிறார்—காரம் என்று. கார்யார்த்தே - ப்ரதானமென்று உன்னால் அபிமானிக்கப்பட்டிருக்கிற க்ருத்யுத்தேச்யரூபமான கார்யார்த்தத்தில். எதனாலென்று கேட்கில் சொல்லுகிறார்— பவதபிமத என்று. வேர்வைத்தண்ணீர் ச்ரமம் முதலியவைகளிலும் க்ருதிஸாத்தியத்வமிருப்பதால் அவைகளை விலக்குவதற்காக க்ரியா கார்யத்திலும் உத்தேச்யத்வம் அங்கீகரிக்கத்தக்கது, த்வதுக்தோத்தேச்யத்வஸ்ய துர்நிரூபதயா-உன்னால் சொல்லப்பட்டிருக்கிற அந்த உத்தேச்யத்வரூபமான கார்யமானது எவ்விதத்தாலும் நிரூபிக்கமுடியாமலிருப்பதா லென்று அர்த்தம். துர்நிரூபத்வம் எவ்வாறென்று வினவப்படுமேயானால் சொல்லுகிறார்—க்ருதி என்று. க்ருதிபாவபாவி—க்ருதி, ஆத்மமான ப்ரயத்னம். அதன் ஸத்பாவத்தை அடுத்து உண்டாகிற க்ருதி ஸாத்யத்வமானது பாவார்த்தம். முதலியவைகளிலுங்கூட இருக்கிறபடியால் அதை விலக்குவதற்காக க்ருத்யுத்தேச்யமென்று கூறப்பட்டது. க்ருத்யுத்தேச்யத்வம்-க்ருதி ப்ராதானத்வமென்று அர்த்தம். கார்யத்திற்கு க்ருதி ஸாத்யத்வம், இஷ்டத்வம், க்ருத்யுத்தேச்யத்வம், என்கிற இம்மூன்றும் அவன் மதத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. இஷ்டத்வம் க்ருதி ஸாத்யத்வம் இந்தஇரண்டும் பலத்திற்கும் பாவார்த்தத்திற்கும் ஸா

மான்யங்கள். க்ருதி ப்ரதானத்வமானது இரண்டு ஆதாரங்களைக்காட்டிலும் விலக்ஷணமாக பலபாவார்த்தங்களின் வ்யாவ்ருத்தியை உண்டுபண்ணுகிறதாக வர்ணிக்கப்படுகிறதன்றோ. டீகையில் 'கார்யமர்த்தம் ப்ரதிபாதயதோ வேதஸ்ய ப்ராமாண்யம்' என்று கூறப்பட்டிருக்கிறது, இந்த இடத்தில் அர்த்த சப்தத்தால் ப்ராதான்யமானது சொல்லக்கருதப்பட்டிருக்கிறது. பஞ்சிகையில் கார்யமர்த்தம ப்ரதானதயா ப்ரதிபாதயதோ வேதஸ்ய ப்ராமாணயம் தத்ரைவ ப்ராமாண்ய சப்த வ்யுத்பத்தே: வ்யுத்பத்யாயத்தத்வாத்தஸ்ய' பொருள்—கார்யரூபமான அர்த்தத்தை ப்ரதானமாக ப்ரதிபாதிக்கிற வேதத்திற்கு ப்ராமாண்யம்-அதிலேயே ப்ராமாண்ய சப்தத்திற்கு வ்யுத்பத்தி ஏற்பட்டிருப்பதால். அது வ்யுத்டத்திக்கு அதீனமாக இருப்பதால். என்று. ப்ரகரணசாலிகையில் -க்ருதிஸாத்யம் ப்ராதானம்யத் தத் கார்யமபிதீயதே' க்ருதி ஸாத்யமானப்ராதானம் எதுவோ அந்த கார்யம் சொல்லப்படுகிறதென்று. அவற்றுள் மூன்றுவது ஆகாரமாக ஸம்மதிக்கப்பட்டிருக்கிற க்ருத்யுத்தேச்யத்வமானது க்ருதிஸாத்யத்வம் இஷ்டத்வம் இந்த இரண்டு ஆகாரங்களுக்குள் ஒரு ஆகாரத்தில் முடிக்கிறதென்கிற அபிப்ராயத்தால் தூஷிப்பதற்குச் சொல்லுகிறார்—க்ருத்யுத்தேச்யத்வஞ்ச என்று. பாணினியினால் சொல்லப்பட்டிருக்கிற ரீதியினால் கர்மத்வத்தை விவரிக்கிறார்—க்ருதிகர்மத்வஞ்ச என்று இஷ்டதமத்வமானது கார்யத்திலில்லை என்று சொல்லுகிறார்— இஷ்டதமஞ்ச என்று. க்ருதிகர்மத்வமாவது ப்ரவர்த்தகத்வமென்று சொல்லப்படுமேயானால் கூறுகிறார்— தத்ர என்று. அதுவும் இஷ்டத்துக்கு தன்னுடைய ப்ரயத்னத்தால் ஸாதிக்கத்தக்கதாக இருத்தலே என்று அர்த்தம். ஆதிசப்தத்தால் துக்கநிவ்ருத்தி சொல்லப்படுகிறது. 'ஸ்வப்ரயத்னாத்ருதேயதி' இது முதலியதற்கு இது கருத்து. க்ருதிஸாத்யத்வத்தைக் காட்டிலும் வேறான க்ருதி கர்மத்வமென்பது இஷ்ட தமத்வத்தில் பர்யவஸிக்கிறது 'ப்ரயத்னேச்சு: - செய்யவிருப்பமுள்ளவன். ப்ரவர்த்தே-ஆந்தரமான ப்ரயத்னத்தை விரும்புகிற அவன் அதை உண்டுபண்ணுகிறானென்று அாத்தம. இஷ்டதமத்துக்கே இரண்டு ரூபங்கள் இருக்கின்றன. இச்சா விஷயத்வம் ப்ரேரகத்வம் என்று. அவற்றுள் ப்ரேரகத்வம் க்ருத்யுத்தேச்யத்வம் என்று கூறப்படுமேயானால்சொல்லுகிறார்—இச்சாவிஷயஸ்ய என்று. எதனாலென்று வினவப்படுமேயானால் சொல்லுகிறார்—தத ஏவ என்று. 'புருஷானுகூலத்வம் க்ருத்யுத்தேச்யத்வம்' என்று கூறப்படுமேயானால் சொல்லுகிறார்—நச என்று. ஸுகமே புருஷானுகூலமென்று சொல்லத்தக்கதல்ல, ஸுகத்தைவிட மற்றதுக்கும் அனுகூலத்வம் காணப்படுவதாலென்று சொல்லப்பட்டால் உத்தரமளிக்கிறார்— நச துக்கநிவ்ருத்தே:புருஷானுகூலத்வம் என்று. துக்க நிவ்ருத்தி ஸுகமாக ஆகிறதில்லை யன்றோ என்று அர்த்தம். இதை உபபாதிக்கிறார்—புருஷானுகூலம் என்று.

அங்ஙனமாகில் துக்க நிவ்ருத்திக்கு இச்சாவிஷயத்வமானது எவ்வாறு ஸம்பவிக்குமென்று கேழ்க்கப்படுமேயாகில் சொல்லுகிறார்—துக்கஸ்ய என்று. தானாகவே இஷ்டமாக இருத்தல் அனுகூலத்வமே ஒழிய வேறு இஷ்டங்களுக்கு ஹேதுவாக இருப்பதாலாவது அநிஷ்ட நிவ்ருத்தி ரூபமாக இருப்பதாலாவது இஷ்டத்வமில்லை. இவ்வண்ணமே தானாகவே அநிஷ்டமாக இருத்தல் ப்ரதிகூலத்வமே ஒழிய வேறு அநிஷ்டங்களுக்கு ஹேதுவாக இருப்பதாலாவது இஷ்ட நிவ்ருத்திரூபமாக இருப்பதாலாவது அநிஷ்டத்வமில்லை. ஆகையால் துக்க நிவ்ருத்தி இஷ்டமானது. துக்கம் ப்ரதிகூலமாக இருப்பதால் அனுகூலதையினாலல்லவென்று அர்த்தம். துக்க நிவ்ருத்திக்குஆனுகூல்யாபாவத்தை உபபாதனம் செய்கிறார்-அனுகூலப்ரதிகூலஎன்று ஸ்வரூபேண அவஸ்திதி: ஸுகநிவ்ருத்தி ரூபையாகவும் துக்கநிவ்ருத்தி ரூபையாகவுமிருப்பது, அனுகூல

ப்ரதிகூலஸம்பந்தமில்லாத தன்ஸ்வரூபத்தோடு இருத்தலில் துக்கநிவ்ருத்தி அம்சத்துக்கு ஸாமாநாதிகரண்யத்தால் வ்யபதேசம். துக்கநிவ்ருத்தியே ஸுகமானால் துக்கநிவ்ருத்தி இருக்கையில் சுக நிவ்ருத்தி உண்டாகக்கூடாது. அப்பொழுது ஸுஷுப்தியிலுங்கூட ஸுக ஸம்பந்தம் ப்ரஸங்கிக்கும் இரண்டுக்குள் ஒன்றின் நிவ்ருத்தியானது இரண்டுக்குள் ஒன்றின் ஸம்யோகமாகுமேயாகில் உறக்கத்திலும் ஸுக துக்கங்களின் ஸம்பந்தம் ப்ரஸங்கிக்குமென்று கருத்து. அபூர்வத்துக்கு ஆனுகூல்யஸம்பவத்தில் த்ருஷ்டாந்தாபிப்ராயத்தால் க்ரியை முதலியவற்றை எடுத்தது. 'க்ரியாதே:' என்கிற இடத்திலுள்ள ஆதிசப்தத்தால் ப்ரயத்னம் சொல்லக்கருதப்பட்டிருக்கிறது. ஸுகத்துக்கு ஸாதனமாக இருப்பதுபற்றி அனுகூலத்வமென்று சொல்லப்படுமேயானால் அந்த விஷயத்தில் சொல்லுகிறார்—ந என்று. எதனாலென்று கேழ்க்கப்படுமேயானால் கூறுகிறார்— துக்காத்மகத்வாத் என்று. தஸ்ய-க்ரியை முதலியதற்கு ப்ரதிகூலமாக பாஸிப்பதாவது ப்ரதிகூல விஷயஜ்ஞானமாவது துக்கமே ஒழிய அவைகளைவிட வேறாக இருக்கிற ஆத்மாவைச்சார்ந்திருக்கிற வேறு குணமல்லவென்று அபிப்ராயப்பட்டுதுக்காத்மகத்வாத் என்கிற இந்த ஹேதுவானது கூறப்பட்டது. ஸுகார்த்ததயா என்று. தண்டம் சக்கிரம் முதலியது குடமாக ஆகிறதில்லையன்றோவென்று அர்த்தம். அஸுகார்த்தமான வஸ்துவைக்காட்டிலும் ஸுகார்த்தமாக இருக்கிற வஸ்துவுக்கு என்னவேற்றுமையென்று கேழ்க்கப்படுமேயானால் கூறுகிறார்— ஸுகார்த்த தயாபி என்று. க்ருதிக்கு எது சேஷியோ அதுதான க்ருதிக்கு உத்தேச்யமென்கிற பக்ஷத்தை தூஷிக்கிறார்—நச என்று, அநிரூபணாத்-எவ்விதத்தாலும் நிரூபிக்கமுடியாததாக இருப்பதாலென்று பொருள். பரோத்தேச ப்ரவ்ருத்த க்ருதி வ்யாப்த்யர்ஹத்வம் சேஷத்வமென்கிற பக்ஷத்தை அனுவாதம்செய்து தூஷிக்கிறார்—நசபரோத்தேசப்ரவ்ருத்தஇது முதலியதால். 'நசபரோத்தேச ப்ரவ்ருத்த்யர்ஹதாயா:' என்று. உத்பத்தி என்பது ப்ரவ்ருத்தியுள்ளவனுடைய வ்யாபாரம். ஆகையால் ப்ரவ்ருத்திக்குத்தகுதியுற்றிருத்தல் உத்பத்யர்ஹத்வம்-பரோத்தேச ப்ரவ்ருத்யர்ஹதையானது சேஷரூபமாக இருப்பதாலென்று அர்த்தம். 'உத்தேச்யத்வஸ்யைவ நிரூப்யமாணத்வாத்'என்று. இது அர்த்தம்-க்ருதிக்கு உத்தேச்யமாக இருத்தல் க்ருதிசேஷித்வம். சேஷித்வமென்பது சேஷமாக இருக்கிற வஸ்துவுக்கு ப்ரதிஸம்பந்தியாக இருத்தல். பரோதேசப்ரவ்ருததிக்கு அர்ஹமாக இருத்தல் சேஷத்வம் என்று சொல்லப்பட்டால் உததேச்யத்வமென்பது உத்தேச்யத்வம என்று சொல்லப்பட்டதாக ஆகிறதென்பதனால் ஆத்மாச்ரய தோஷம் ஏற்படுகிறது. உத்தேச்ய நிரூபணத்திற்கு உபயுக்தமான சேஷத்வ நிரூபணமானது உத்தேச்ய நிரூபணத்தை அபேக்ஷிப்பதால் என்று பரோத்தேச ப்ரவ்ருத்தியின் அயோக வ்யவச்சேதம் சொல்லக்கருதப்பட்டிருக்கிறதா? அல்லது அன்யயோகவ்யவச்சேதம் சொல்லக்கருதப்பட்டிருக்கிறதா? என்கிற விகல்பத்தில் முதலாவதுகல்பத்தில் ராஜாவினிடத்தில் அதிவ்யாப்தியைச் சொல்லுகிறார்—ப்ராதாநஸ்யாபி என்று. இங்கு உததேச்ய சப்தத்தால் ப்ரயோஜந பாவாபிஸந்தியானது சொல்லக்கருதப்பட்டிருக்கிறது. அதன் பரிஹாரமுகத்தால் இரண்டாவது கல்பத்தை சங்கிக்கிறார்-ப்ராதாநஸ்து என்று. பரோத்தேசத்தால் ஏற்படுகிற ப்ரவ்ருத்தியின் அன்யயோக வ்யவச்சேதமானது சொல்வதற்கு விரும்பப்பட்டிருக்கிறது. அதோ ப்ரதானத்துக்கு இல்லை. தன்னுத்தேசத்தாலும் ஆதற்கு ப்ரவ்ருத்தி ஏற்படுவதால். ஆதலால் அதிவ்யாப்தி இல்லை என்று அர்த்தம். பரிஹரிக்கிறார்—ந என்று. ப்ருத்யர்களில் அவ்யாப்தியைச் சொல்லுகிறார்—

ப்ருத்யோபிஹி என்று. கார்யத்திற்கு ப்ரதிஸம்பந்தியாக இருத்தல் சேஷத்வம் என்கிற பக்ஷத்தை தூஷிக்கிறார்—கார்யஸ்வரூபஸ்ய என்று. கார்யத்தின் ஸ்வரூபம் நிருபிக்கப்படாநின்றிருக்கையில் பலம் பாவார்த்தம் இவைகளைக்காட்டிலும் வேறானஆகாரத்தால் அதை நிரூபிப்பதற்காக கார்யத்வம் க்ருத்யுத்தேச்யத்வமென்று உரைக்கப்பட்டது. உத்தேச்யத்வமாவது சேஷித்வம். சேஷித்வமாவது சேஷப்ரதிஸம்பந்தியாக இருத்தல். சேஷத்வமாவது கார்யப்ரதிஸம்பந்தியாக இருத்தலென்று சொல்லப்படுமேயாகில் ஆத்மாச்ரயதோஷமுண்டாகும். கார்ய நிரூபணத்துக்கு உபயுக்தமான சேஷத்வ நிரூபணமானது கார்யநிரூபணத்தை அபேக்ஷித்திருப்பதால் என்று அர்த்தம்.

பாஷ்யகாரருக்கு அபிமதமாக இருக்கிற சேஷத்வ லக்ஷணத்தை அங்கீகரித்து க்ருத்யுத்தேச்யத்வ ஸமர்த்தனமும் சக்யமன்று. அப்படியன்றோ "பரகதாதிசயாதானேச்சயா உபாதேயத்வமேவ யஸ்யஸ்வரூபம் ஸ சேஷ: பரச்சேஷீ" இதன் பொருள் சேஷமாக இருக்கிற வஸ்துவைக்காட்டிலும் வேறானசேஷியை அடையத்தகுதியுள்ள மேன்மையை உண்டுபண்ணவேண்டுமென்கிற விருப்பதால் உபாதேயத்வமே எந்த வஸ்துவுக்கு ஸ்வரூபமோ அது சேஷம். இதனாலுண்டுபண்ணப்படுகிற அதிசயத்தை அடைகிற மற்றவன் சேஷீ என்று. பாஷ்யகாரர் வேதார்த்தஸங்க்ரஹத்தில் சேஷிலக்ஷணத்தைச் சொன்னார். 'சேஷ:பரார்த்தத்வாத், என்கிற சேஷசேஷிபாவ லக்ஷணப்ரதிபாதகமான ஜைமினீய ஸூத்ரத்திற்கு அன்யர்களால் வியாக்கியானம் வேறுவிதமாகச்செய்யப்பட்டிருப்பதால் அதை விலக்குவதற்காக அந்த ஸூத்ரத்திற்கு அர்த்தம் இந்த லக்ஷணக்ரந்தத்தால் உள்ளது உள்ளபடி காண்பிக்கப்படுகிறது. இதன் அர்த்தம் உரைக்கப்படுகிறது.—அன்யனுடைய ப்ரயோஜனமே எவனுக்கு பரமப்ரயோஜனமோ அவன் சேஷன். அன்யன் சேஷீ என்று வாக்கியார்த்தம். இந்த இடத்தில் பரசப்தம் அன்யன் என்கிற அர்த்தத்தை உணர்த்துகிறது. பரசப்தம் அதிசய சப்தம் இவ்விரண்டுக்கும் கர்மதாரயஸமாஸசங்கையைப் போக்குவதற்காக மத்தியில் கத சப்தம் ப்ரயோகிக்கப்பட்டிருக்கிறது. அதனால் தன்னை அடைந்திருக்கிற அதிசயத்திற்கு ஆதாரமாகஇருக்கிற சேஷியினிடத்தில் அதிவ்யாப்தி விலக்கப்பட்டது. அதிசய சப்தமானது ப்ரதிகூலங்களான ஆகாரங்களுக்கு இதரங்களான ஆகாரங்களை உணர்த்துவதில் நோக்கமுள்ளது. அல்லது நிக்ருஷ்டங்களான ஆகாரங்களைக்காட்டிலும் வேறாக இருக்கிறஆகாரங்களை உணர்த்துவதில் நோக்கமுள்ளது. அதனால் அன்யனை அணுகுகிறவிநாசத்துக்கு ஹேதுவாக இருக்கிற சஸ்திரம், நெருப்புமுள் முதலியவைகளுக்கு விநாசம்செய்யப்படத்தக்க வஸ்துவைக் குறித்து சேஷத்வம் விலக்கித்தள்ளப்பட்டது. துக்கஹேதுக்களாக இருக்கிற யாதநா சரீரங்களில் அவ்யாப்தி இல்லை. அவைகளும் துக்கத்தை உண்டுபண்ணி அதன் வாயிலாக பாபக்ஷய ரூபமான அதிசயத்துக்குக் காரணமாக இருப்பதால். அபூர்வமானது உண்டாகாமலிருக்கையில்* வ்ரீஹி முதலியவைகளால் அதிசயாதானமுண்டுபண்ணப்படாமையால் அவைகளில் அவ்யாப்தி என்று சொல்லத்தக்கதல்ல. ஸத்தாலாபம் அதிசயரூபமாதலால். தாழ்மையை உருவமாகக்கொண்ட தர்மத்தைக்காட்டிலும் வேறாக இருக்கிற ஆகாரமன்றோ அதிசயம். கல்வியில் சிறந்தவரே! எந்தவஸ்துஸ்வரூபமான ஸம்பந்தத்திற்குத் தகுதியுள்ளதோ, அல்லது வ்யவஹாரத்துக்குத் தக்கதோ, அதே ஸத்தென்பதன்றோ உம்முடைய மதம். ஸத்தாஜாதி இல்லாமையால்

* வ்ரீஹி—நெல்.

அவ்வாறு இருக்க எவ்வாறு ஸ்வரூபமே ஆகாரமென்று உரைக்கப்படுகிறது. அல்ல ஸ்வரூபமே ஸத்தாரூபமாக இருந்தபோதிலும் அதன் லாபத்துக்கு ஆகாரத்வும் உபபன்னமாவதால். ஸத்தாலாபமன்றோ அதிசயமென்று கூறப்பட்டது. ஸத்தாரூபமான ஸ்வரூபத்தினுடைய லாபமாவது ப்ரதமலக்ஷண ஸம்பந்தம். ஸ்வரூபமில்லாமலிருந்தபோதிலுங்கூட புத்தியில் நிலைபெற்றிருப்பதால் பராதிசயாதானம் பொருத்தமுள்ளதாக ஆகிறது. இச்சயா என்கிற பதத்தினால் அன்யனை அடைந்திருக்கிற அதிசயமானது இச்சாவிஷயமாக இருப்பதால் ப்ரயோஜனத்வமறியப்படுகிறது. இச்சாபதமும் உபபதத்துடன் சேர்ந்திராமையால் நேராகவே இச்சாவிஷயத்வமபிப்ராயப்படப்பட்டிருக்கிறது. நேராக எது இச்சாவிஷயமோ அது பரமப்ரயோஜனம். அவாந்தரப்ரயோஜனமானது அந்த பரம ப்ரயோஜனார்த்தமாக இருப்பதனால் இஷ்டமேயொழிய அதற்குநேரில் இச்சாவிஷயத்வமில்லை. ஆகையால் பரம ப்ரயோஜன ஜ்ஞாபகோ 'இச்சயா'' என்கிற பதத்தால் பரார்த்தத்வாத் என்கிற பதத்திலுள்ள அர்த்த சப்தமானது வ்யாக்யானம் செய்யப்பட்டதாக ஆகிறது. அர்த்யதே வேண்டப்படுகிறது என்கிற வ்யுத்பத்தியினால் அர்த்த சப்தம் ஏற்படுகிறது. இச்சிக்கப்படுகிறதென்று அர்த்தம். உபபதமில்லாத அர்த்தசப்தமானது தானாகவே பரமப்ரயோஜனத்தைச்சொல்லுகிறது. இதனால் தனக்குமேன்மையை உண்டுபண்ணுகிற ப்ருத்யன் முதலிய வஸ்துக்களிடம் லக்ஷணத்திற்கு அவ்யாப்திசங்கையின் நிராஸம். வேலைக்காரன் தன்னுடைய அலங்காரம்முதலியதைக்கூட ஸ்வாமியின் அதிசயத்தின்பொருட்டு ஆகிறதென்று தன்புத்தியினால்தனக்கு அதிசயத்தை உண்டுபண்ணிக்கொள்ளுகிறானன்றோ. அதனால் ப்ருத்யனால் தன்னுடைய அதிசயாதானத்திற்கு பராதிசயமானது பரமப்ரயோஜனமாக இருப்பதால் அவ்யாப்தி இல்லை. உபாதேயத்வம் ஸ்வீகரிக்கத்தக்கதாக இருத்தல். வ்யவஹரிக்கத்தக்கதாக இருத்தலென்று அர்த்தம். இச்சைஸ்வீகாரம் இரண்டும் வஸ்துக்குத் தக்கபடி ஸம்பவிக்கின்றன. சேஷசேஷி இவ்விரண்டுக்குள் ஒன்றிலாவது ஸம்பந்தமிருந்தால் இச்சை ஸ்வீகாரம் இவ்விரண்டும் அவைகளை அடைந்தவைகளாக ஆகின்றன. எப்படி ராஜப்ருத்யன் ராஜா அவனுடைய அரண்மனை முதலியதிலோ. இரண்டும் அசேதனங்களாக இருக்குமேயாகில் இச்சை ஸ்வீகாரம் இரண்டும் இரண்டைவிட வேறான சேதநத்தை அடைந்திருக்கின்றனவோ. எப்படி ப்ரபை ப்ரபையுடன்கூடியது, யாகம் அந்தயாகாங்கம் முதலியதிலோ. உபாதேயத்வம் எடுத்துக்கொள்வதற்குத்தக்கதாக இருத்தல். அதனால் அகிஞ்சித்காரதசையில் அவ்யாப்தி பரிஹாரம் ஏற்பட்டது. ஏவகாரத்தால் ஒரு ஸமயத்தில் ஸ்வப்ரயோஜனத்தில் அபேக்ஷை இன்றி பரப்ரயோஜநஸாதகர்களாயும் சிறந்த க்ருபை ஸ்நேஹம் இவைகளுடன் கூடியவர்களாகவுமிருக்கிற மனிதர்களிடம் ஏற்படுகிற அதிவ்யாப்தி நிரஸிக்கப்பட்டது.

அன்றிக்கே ஏரு ஆகாரத்தால் உபஹிதமாக இருப்பதற்கு சேஷத்வமிருக்க அதனால் உபஹிதமல்லாததற்கு சேஷத்வத்தை விலக்குவதற்காக ஏவகாரம். எது உபாதியுடன் சேர்ந்ததன்றோ அது வேறு ப்ரயோஜனத்திற்கு ஸாதகமாதலால் அதற்கு பராதிசயைக ப்ரயோஜநத்வமில்லாமையால். ஸ்வரூபம் தன்னுடையரூபம். அஸாதாரணதர்மம். நிரூபகதர்மமென்று பொருள். நிரூபக சப்தத்திற்கு வ்யுத்பாதனம் ப்ரயோஜனமாதலால் வ்யாவ்ருத்திக்கத்தக்க தர்மங்களின் அபேக்ஷை இல்லை. பராதிசயமே எதற்கு பரம ப்ரயோஜனமோ அதுமற்றொன்றைக்குறித்து சேஷமென்று இலக்கண

சொல்லப்பட்டதாக ஆகிறது. எதனுல் பரம ப்ரயோஜனமான பராதிசயத்திற்கே ஆதாயகத்வம் லக்ஷணமோ அதனுலேயே பாகதமான அதிசயாதானத்தின் அயோகாந்யயோக வ்யவச்சேத விகல்பத்தால் ராஜா ப்ருத்யன் இவ்விருவர்களிடங்களிலும் அதிவ்யாப்தி அவ்யாப்திகளைச் சொல்லுதல் நம்ம பக்ஷத்தில் எரங்குகிறதில்லை. பராதிசய மாத்ராதாயகத்வம் என்பது லக்ஷணமாகாததால். த்வாரசேஷியைநாடி இருக்கிற அதிசயத்திற்கு பரமசேஷியை அடைந்திருக்கிற அதிசயத்தைக் குறித்து ப்ரயோஜகத்வமிருந்தபோதிலும் அது பரம ப்ரயோஜனமல்லாமையால் த்வாரசேஷியைக்குறித்து சேஷபூதமான வஸ்துவில் லக்ஷணத்திற்கு அவ்யாப்தியானது ஸந்தேகிக்கத்தக்கது. சேஷமாக இருக்கிற வஸ்துவை அடைந்திருக்கிற அதிசயத்தை அபேக்ஷித்து சேஷியை அடைந்திருக்கிற அதிசயத்திற்கு மேன்மை மாத்திரம் சொல்லக்கருதப்பட்டிருப்பதால் பரமசேஷியை அடைந்திருக்கிற அதிசயரூபமான பரமப்ரயோஜநத்வத்திற்கு நிராகரிக்கத் தக்க தன்மை இல்லாமையால். ஆதலால் த்வார சேஷியை அணுகி இருக்கிற அதிசயமானது சேஷமாக இருக்கிற வஸ்துவை அடைந்திருக்கிற வேறான அதிசயத்தை உண்டுபண்ணுகிறபடியால் ப்ரயோஜனத்வமானது பரம சப்தத்தால் நிரஸனம் செய்யத்தக்கது. அய்யனே! புருஷஃச கர்மார்த்தத்வாத், என்று புருஷனுக்கு கர்ம சேஷத்வமானது கர்ம மீமாம்ஸையில் ஸித்தாந்தம் பண்ணப்பட்டிருக்கிறது. புருஷனும் ஸ்வர்க்கத்தில் விருப்பமுள்ளவனுதலால் அவனுக்கு பராதிசய நிஷ்பாதனமே பரம ப்ரயோஜனமாக ஆகிறதில்லை. ஆதலால்அவ்யாப்தி என்றுசொல்லப்படுமேயானுல் அல்ல. அவனுக்கு கர்த்ருத்வத்தாலு பஹிதமான வேஷத்தால் சேஷத்வத்தாலும் உபஹிதனுக்கு கர்மத்தைச் செய்வதே முக்கிய ப்ரயோஜனமாக இருப்பதாலும் கர்மசேஷத்வம் பொருந்துவதால். வாதத்தில் திறமை வாய்ந்தவரே! இந்த லக்ஷணமானது அஸம்பவ தோஷத்தால் கெடுக்கப்பட்டுவிட்டது அறிவுள்ளவன் ஒருவனுவது பிறரைஅடைந்திருக்கிற மேன்மையானது தன் பரமப்ரயோஜனமென்று எண்ணி அதற்காக ப்ரவ்ருத்திக்கிறானில்லை யன்றோ. பின்னேயோ பரப்ரயோஜனத்தையும் தன் ப்ரயோஜனார்த்தமாக எண்ணி யன்றோ ப்ரவ்ருத்திக்கிறன். சொல்லப்படுகிறது இவ்வண்ணம் அஸம்பவமில்லை. அசேதநங்களில் பராதிசயத்தையே ப்ரயோஜனமாகக் கொண்டிருத்தல் என்கிற தன்மை காணப்படுவதால். என்றாலும் சேதநன் தன் இச்சையினுல் தன்னுடைய ப்ரயோஜனத்தையே அன்யனுடைய ப்ரயோஜனமாக எண்ணுகிறன். ஆயினும் லக்ஷணத்திற்குக் குறைவொன்றுமில்லை. ஜன்மக்ரியை இவை முதலியவைகளை அறிந்தவர்களான மத்தியஸ்தர்களால் பராதிசய நிஷ்பாதனத்தையே ப்ரயோஜனமாகக் கொண்டிருப்பதாக அறிவதற்கு சக்யமாக இருப்பதால். இச்சை ஸ்வீகாரம் இவ்விரண்டும் ஸம்பவத்துக்குத் தக்கபடி என்று சொல்லப்பட்டிருக்கிற தன்றோ. அப்படிப்ராதிபத்தியோக்யத்வமநிஷ்டமாக இருந்தபோதிலும் விடத்தகாத தென்பதை ப்ருத்யன் தானும் அறிகிறன். மேலும் பராதிசயம் பரமப்ரயோஜன மென்கிற ஜ்ஞானமானது தன்படியாகவே சேதநனுக்கும் உண்டாகிறது. சிறந்த கருணை நேசம் இவைகளோடு கூடியவர்களிடங்களில் அது காணப்படுவதால். தயை என்பது தன் ப்ரயோஜனத்தை அபேக்ஷியாமல் அன்யதுக்கத்தை ஸஹியாமலிருத்தல். இந்த இடத்தில் அனுகூலர்களைக் காட்டிலும் வேறாக இருக்கிற மனிதன் பர சப்தத்தால் சொல்லக்கருதப்பட்டிருக்கிறன். பொருள் முதலியவற்றில் விருப்பத்தால் அன்யனுடைய துக்கத்தைதனிக்க

விருப்ப முள்ளவனுக்கு அந்த துக்கத்தின் தொடர்ச்சியானது அனிஷ்டமாக ஆகலா மென்பதனால் அதை விலக்குவதற்காக ஸ்வார்த்தா நபேக்ஷசப்தம். என்றாலும் கிருபையினால் அன்யனைக் காப்பாற்றுகிறவனுக்கு சாஸ்த்ர ஸித்தமான அத்ருஷ்ட மிருக்கிறது. ஆயினும் அத்ருஷ்டாபிஸந்தி இல்லாதவனுக்கே அன்யனுடைய துக்கத் தைப்பார்த்த நிமிஷத்திற்கு அடுத்த நிமிஷத்திலேயே அவனறியாமல் கண்ணீர்விடுதல் முதலிய துக்கக்குறிகள் காணப்படுவதாலும் அவனைக்காப்பாற்றுகிற தசையிலும் அத்ரு ஷ்டாபி ஸந்தியின் இன்மை காணப்படுவதாலும் ஸ்வப்ரயோஜனத்தில் அபேக்ஷை இன்மை யுக்தமானது. அன்யனுடைய துக்கத்தைப் பார்த்ததனாலுண்டுபண்ணப் பட்டிருக்கிறதும் அச்சமயத்திலுண்டாகிறதுமான தன் துக்கத்தின் நிவ்ருத்தி ரூப மான பலத்தினால் அந்தப்ப்ரவ்ருத்தி என்பதனால் ஸ்வார்த்தாநபேக்ஷை இல்லை யென்று சொல்லப்படுமேயானால் இப்படிப்பட்ட ஸ்வார்த்தத்வம் சேஷனுக்குமிருக் கிறது. அவன் ஸ்வார்த்தா நபேக்ஷையை நாசம் செய்கிறதில்லை. பின்னையோ அதற்கு அநுகூலமே. அன்யனுடைய துக்கத்தை உணர்த்தலென்கிற துக்க நிவ்ருத்தியையும் அன்யனுடைய அபிவ்ருத்தியின் உணர்ச்சியாகிற ப்ரீதியையும் தவிர்த்து ஸ்வார்த்தா நபேக்ஷத்வம் சொல்லக்கருதப் பட்டிருப்பதால். அவ்வண்ணமே மித்திரன் முதலிய வர்களிடங்களில் ஸ்னேஹத்தின் ஆதிக்யத்தால் ஸ்வப்ரயோஜனத்தை அபேக்ஷியாமலு ண்டாகுகிற ப்ரவ்ருத்தியானது பந்துக்களுக்கும் பொருளுக்கும் கீர்த்திக்கும் தர்மத்துக் கும் ஹானியைச் செய்கிறதாகவும் ப்ராண நாசத்தை உண்டுபண்ணுகிறதாகவும் காணப் படுகிறது. ஸம்பந்த விசேஷத்தோடு கூடியவர்களிடங்களில் உண்டாகிற ப்ரீதியானது ஸ்னேஹமென்று சொல்லப்படுகிறது. அஸ்தானத்தில் பயத்தை ஆசங்கித்தல் தோஷம் தோன்றாமலிருத்தல் தோஷத்தில் குணபுத்தி இவைமுதலியவைகள் எந்தஸ்னேசத்தின்பரி ணாமங்களோ, ஸ்னேஹமுள்ள தாய்தகப்பன் முதலியவர்கள் தன்ஸத்தையை அபேக்ஷியா மல்புத்திரன் முதலியவர்களின் துக்கத்தை நிவ்ருத்திசெய்வதற்காக ப்ரவ்ருத்திக்கின்ற வர்களாகக்காணப்படுகின்றார்கள். அப்படி ப்ரவ்ருத்தித்தலானது அந்த புத்திரன் முதலி யவர்களை அணுகிஇருக்கிற துக்கத்தை தாங்காமையினால் செய்யப்பட்டிருக்கிறது. எவனு டையதுக்காதிசயதர்சனமானது தன்ஸத்தையில் அபேக்ஷையினது இன்மையைஉண்டுப ண்ணுமோ அவன்சிறந்த ப்ரீதிக்கு விஷயமாகஇருப்பவன்அன்யனுடைய அனர்த்தத்தா லுண்டாகிற அப்ரீதியின் தாரதம்யமானதுஅவனிடத்திலுள்ள ப்ரீதிதாரதம்யத்தைக்கா ரணமாகக்கொண்டிருப்பதால். எவன் உயர்ந்தப்ரீதிக்குவிஷயமாக இருக்கிறானோஅவனு டைய அபிவ்ருத்தியும் அதிகப்ப்ரியமாக ஆகிறது. அவனுடையப்ரீதி தாரதம்யத்திற்கு அவன் ஸம்பந்தம்பெற்ற ப்ரீதியின் தாரதம்யம் ஹேதுவாக இருப்பதால் தன் ப்ரீதிக்கு ஹேதுவாக இருக்கிற தன்னுடைய ப்ரயோஜனங்களுக்கு ஸாதனமென்று அபேக்ஷி யாமல் தன் இச்சைக்கு விஷயமாக இருப்பதால் அவனுடைய அப்யுதயமும் பரமப்ர யோஜனமாக ஆகிறது. ஆகையால் கருணையினாலோ ஸ்னேஹத்தினாலோ அன்ய னுடைய துக்கத்தை ஸஹியாமலிருத்தல் காணப்படுவதால் பரப்ரயோஜனம் பரமப்ர யோஜனமாக ஸித்தித்து விட்டபடியால் சேஷ லக்ஷணத்திற்கு அஸம்பவமில்லை. பரமப்ரயோஜனரூபமான பராதிசயத்தை உண்டுபண்ணுகிற தன்மையானது மித்ரன் முதலியவர்களிடத்திலுங்கூட ஸம்பவிப்பதால் லக்ஷணத்திற்கு அதிவ்யாப்தியானது சங்கிக்கத்தக்கதல்ல. அவர்களுக்கு பராதிசயத்தையே ப்ரயோஜனமாகக்கொண்டிருத்த லென்கிற நியமமில்லாமையால். அது அவர்களுக்கு ஆகார விசேஷத்தால் உபஹித

ரூபத்தாலோ அல்லது உயிருள்ளவரையிலோ ஒரு புருஷனைக்குறித்து நியதமல்லா
ததாகவும் புருஷபேதத்தாலும் அநியதமாகவுமிருக்கிறது. ப்ருத்யர்களிடங்களிலோ
அது நியதமாகஇருக்கிறது. சேஷிவிசேஷ நியமமில்லாவிடினும் யாரோஒருவனைக்குறி
த்து பாரார்த்யமானது அவனுடைய ஆச்ரயவுள்ளவரையிலிருக்கிறது. இப்படிப்பட்ட
தன்மை எங்கே காணப்படுகிறதில்லையோ அவர்களுக்குப் ருத்யத்வமில்லை. அன்றிக்கே
என்றாலும் கர்ப்பதாஸன் முதலியவர்கள் தங்களுக்கு இருக்கிற பிறர்களுக்கே ப்ரயோஜ
னமாக இருத்தலென்கிற ஸ்வபாவத்தைஅறியாதவர்களாக இருந்துகொண்டு சேஷிக்கு
அதிசயாதானத்தையுங்கூடஸ்வார்த்தமாகநினைக்கிறார்கள் அப்படியிருந்தபோதிலும் நான்
பெருத்தவன் என்று தன்னாத்மாவுக்கு தேஹம் முதலியவற்றுடன் அபேதபுத்தி ஏற்
படுவதுபோல அது ப்ராந்தியாக இருப்பதால் லக்ஷணத்திற்கு அவ்யாப்தி இல்லை. ஸ்வா
ர்த்தத்வ புத்தியானது நான் ஸ்தூலனென்கிற புத்திபோல் ப்ரமாணத்தால் பாதிக்கப்
பட்டிருப்பதால். ஸ்வார்த்தத்வ ப்ராந்திமாத்திரத்தால் பாரார்த்யத்திற்கு ஹானி
இல்லை. ஆத்மாவுக்கு உண்டாகிற 'நான் ஸ்தூலன்' என்கிற ப்ராந்தியினால் தேஹ
வைலக்ஷண்யத்திற்கு ஹானி இல்லையன்றோ. இவ்வண்ணம் சித் அசித் இரண்டுக்கும்
ஸ்வாதந்த்ரிய புத்தியானது ச்ருதியினால் பாதிக்கப்பட்டிருப்பதால் லக்ஷணத்திற்கு
அவ்யாப்தி தோஷமில்லை. வ்ரீஹி முதலியவைகளில் இவைகள் யாகஸம்பந்தம் பெற்
றவைகளென்கிற ஜ்ஞானமில்லாமல் போனபோதிலும் அவைகளுக்குள்ள யாகசேஷ
த்வத்திற்கு ஹானி இல்லையன்றோ. பரமப்ரயோஜனரூபமான பரகதாதிசயத்தை
தவறாமலுண்டுபண்ணுமவிருக்கிற ஸ்வதந்த்ராபிமான முள்ளவனுக்கு இந்தசேஷத்வ
லக்ஷணம் எவ்வாறு பொருந்துமென்று வினவப்படுமேயானால் அல்ல இவன் புத்தியி
னால் அப்படிப்பட்ட எண்ணமில்லாமலிருந்தபோதிலும் உள்ளபடி அவன் பரமாத்
மாவினுடைய லீலைக்கு உபகரணமாக இருப்பதால் பரமாத்மாவின் லீலாரஸரூபமான
அதிசயமானது தவறாமல் ஸித்தி பெறுவதால். தத்வத்தை அறிந்தவர்களால் ஈச்வர
பரிகரமாக தவறாமல் அறியப்படாநின்றிருத்தல் இவனுடைய ஸ்வீகாரம். அதனால்
இவனால் பரிகாரமுள்ளவனாக அறியப்படாநின்றிருத்தலென்கிற அதிசயமானது அன்
யனுக்கு ஸித்திக்கலாம். நீதி அறிந்தவர்களால் அந்த விஷயம் சொல்லப்பட்டிருக்கிற
து. 'மஹாகுபகாரிதா ஸர்வஸ்யாத் யேவ தத் பரிகரத்வேந ஜ்ஞாயமானத்வாத்' என்று'
சேஷபூதமான வஸ்துவினாலுண்டு பண்ணப்பட்ட லீலா ரஸாதிசயத்தை அடைதல்
பரமாத்மாவினுடைய அவாப்த ஸமஸ்தகாமத்வ குணத்திற்கு விரோதியல்ல. இச்சை
இருக்கையில் தனக்கு இஷ்டமான விநியோகத்திற்கு அனுகுணமான பரிகரங்களின்
ஸம்ருத்தியல்லவோ அவாப்த ஸமஸ்தகாமத்வம் - பகவான் பாஷ்யகாரர் வேதாந்தஸார
த்தில் இவ்வண்ணமல்லவோ கூறுகிறார்—ஆத்மத்ருப்தனென் இவனுக்கு அவாப்த ஸம
ஸ்தகாமத்வமாவது எப்பொழுதும் அபிமதமான ஸகல போகோபகரணங்களின் இருப்
பே என்று. ஆகையால் கூறப்பட்டுள்ள சேஷலக்ஷணம் பொருத்தமுள்ளது. இவ்
வாறாக நம்மால் சொல்லப்பட்டிருக்கிற சேஷலக்ஷணத்தை அங்கீகரித்து க்ருதியைக்கு
றித்து சேஷித்வம் க்ருத்யுத்தேச்யத்வம் என்று அன்யர்களால் சொல்லுவதற்கு சக்ய
மாகாது. விகல்பத்தை ஸஹியாமையால். உன்னால் த்வார சேஷித்வம் க்ருத்யுத்தேச்ய
த்வம் என்பது அபிமதிக்கப்பட்டிருக்கிறதா? அல்லது பரமசேஷித்வம் க்ருத்யுத்தே
ச்யத்வமென்று அபிமதிக்கப்பட்டிருக்கிறதா? முதல் பக்ஷத்தில் பாவார்த்தத்துக்குக்
கூட க்ருதி சேஷத்வமுண்டாகலாம். அது க்ருதி ஸாத்தியமாக இருப்பதால். இரண்

டாவது பக்ஷத்தில் ஸ்வர்க்கத்துக்கு க்ருதியைக்குறித்து சேஷித்வமுண்டாகலாம். க்ருதியினால் ஸாதிக்கத்தக்க அபூர்வமும் ஸ்வர்க்கஸாதனமாதலால். ஆதலால் க்ருதி சேஷித்வ ரூபம் க்ருத்யுத்தேச்யத்வமானது பலபாவார்த்த விலக்ஷணாகாரத்தால் ஸித்திக்கிறது.

நாபி க்ருதிப்ரயோஜநத்வம் க்ருத்யுத்தேஶ்யத்வம்; புருஷஸ்ய க்ருத்யாரம்பப்ரயோஜநமேவ ஹி க்ருதிப்ரயோஜநம் । ஸ சேஷ்டவிஷய: । தஸ்மாதிஷ்டத்வாதிரேகி க்ருத்யுத்தேஶ்யத்வாநிரூபணாத் க்ருதிஸாத்யதாக்ருதிப்ரதாநத்வரூபம் கார்யத்வம் துர்நிரூபமேவ

நியோகஸ்யாபி ஸாக்ஷாதிஷ்டவிஷயஸுகது:கநிவ்ருத்திவ்யதிரிக்தத்வாத் தத்ஸாதநதயைவேஷ்டத்வம் । அத ஏவ ஹி தஸ்ய க்ரியாதிரிக்ததா; அந்யதா க்ரியைவ கார்யம் ஸ்யாத்; ஸ்வர்க்காதே: ஸம்பவ்யாபாராநந்தரபாவிந: ஶ்ருதிஜாதிவாக்யம் கார்யம் ஸ்வர்கஸாதநமேவேதி க்ஷணபங்கிநோ யாகாதிரேகி ஸ்திரம் ஸ்வர்கஸாதநமபூர்வமேவ கார்யமிதி ஸ்வர்கஸாதநதாயாமேவ அபூர்வஸ்யோக்தி: । அத: ப்ரயத்நாந்யார்த்ததயா ப்ரவ்ருத்திவிஷயஸ்ய கார்யஸ்யாநந்யார்த்தத்வலக்ஷணாயாம் ப்ரதாநதாயாமேவ ப்ரஸ்தாஸ்வர்கஸாதநம் பவதீத்யபாஸ்யம், ஸ்வர்க்காதேராநிதகார்யாஸிதாயிபதேந ப்ரயத்நவ்யநந்யார்த்தாநுபபத்தேஶ்ச; ஸுகது:கநிவ்ருத்திஸாத்யதேநேஷ்டஸ்ய ஸாதநத்வஸ்ய க்ருதிஸாத்யதாப்ரதிபந்நவலத்த்வாச்ச ॥

ஸ்ரீபாஷ்யம்—

க்ருதி ப்ரயோஜநத்வமும் க்ருத்யுத்தேச்யத்வமல்ல. புருஷனுக்கு க்ருத்யாரம்ப ப்ரயோஜனமே யன்றோ க்ருதி ப்ரயோஜனம் — அது இச்சாவிஷயமாயுள்ளது. ஆகையால் இஷ்டத்வத்தைவிட வேறான க்ருத்யுத்தேச்யத்வம் நிரூபிக்கப்படாததால் க்ருதிஸாத்யதா க்ருதி ப்ரதானத்வ ரூபமான கார்யமானது எவ்விதத்தாலும் நிரூபிக்க முடியாதன்றோ. நியோகமும் நேராக இச்சாவிஷயமாக இருக்கிற ஸுகம் துக்க நிவ்ருத்தி இவ்விரண்டைக்காட்டிலும் வேறானதால் அவைகளுக்கு ஸாதனமாக இருப்பதனாலேயே இஷ்டத்வமும் க்ருதி ஸாத்யத்வமும். அதனாலேயே யன்றோ அது க்ரியையைக்காட்டிலும்

வேறுபட்டிருக்கிறது. அங்ஙனமில்லாவிடில் க்ரியையே கார்யமாக ஆகலாம், ஸ்வர்க்க காமபதச் சேர்க்கைக்குத் தக்கவண்ணமாக லிங் முதலிய ப்ரத்யயங்களால் வாச்யமான கார்யமானது ஸ்வர்க்க ஸாதனமே என்று நொடிப்பொழுதில் அழிந்துபோகிற ஸ்வபாவமுள்ள கர்மங்களைவிட வேறானதும் சாச்வதமும் ஸ்வர்கஸாதனமாகவுமிருக்கிற அபூர்வமே கார்யமென்று ஸ்வர்கஸாதநதோல் லேகனத்தாலேயே யன்றோ அபூர்வ வ்யுத்பத்தி ஏற்படுகிறது. ஆகையால் முதலில் அநந்யார்த்தமாக அறியப்பட்டிருக்கிற கார்யத்தின் அநந்யார்த்தத்வத்தை நிர்வஹிப்பதற்காக அபூர்வமே பிறகு ஸ்வர்கஸாதனமாக ஆகிறது என்பது பரிஹஸிக்கத் தக்கது. ஸ்வர்க காமபதத்துடன் அன்வயித்திருக்கிற கார்யத்தைச் சொல்லுகிற பதத்தால் முதலிலும் அநன்யார்த்தத்வம் சொல்லப்படாமையாலும் ஸுகம் துக்க நிவ்ருத்தி அவைகளின் ஸாதனங்கள் இவைகளைவிட வேறான அநந்யார்த்தத்திற்கு க்ருதிஸாத்யதா ப்ரதீதியானது பொருந்தாததாலும்.

ச்ருதப்ரகாசிகை—

அதற்குமேல் க்ருதி ப்ரயோஜநத்வம் க்ருத்யுத்தேச்யத்வமென்கிற பக்ஷத்தை தூஷிக்கிறார்—நாபி என்று. சைதன்யமுள்ளதும் ப்ரயோஜநமுள்ளதுமான க்ருதி என்கிற ஒரு வஸ்து இல்லையன்றோ. ஆதலால் க்ருதிப்ரயோஜனமாவது க்ருதியுள்ள புருஷனுக்கு ப்ரயோஜனமென்று அர்த்தம். அதனால் என்னவென்று அபேக்ஷையாகில் அது இஷ்டத்தில்பர்யவஸிக்கிறதென்று சொல்லுகிறார்—ஸ ச என்று. ஆக்ருதிஸாத்யதா க்ருதிப்ராதானத்வரூபம் கார்யம் ஆதுரீந்து ஏமேவ என்று. க்ருதிப்ராதானதவ சப்தத்தால் வேர்வைஜலம் முதலியதின் வ்யாவ்ருத்தி ஏற்பட்டது. க்ருதி ஸாத்யதா சப்தத்தால் ஆத்மாவுக்கு வ்யாவ்ருத்தி ஏற்பட்டது. அதற்கு க்ருதி சேஷித்வமன்றோ இருக்கிறது விசிஷ்டம் லக்ஷணமாதலால் அதில் விசேஷ்யாம்சமானது நிரூபிக்கமுடியாமல் போனால் விசிஷ்டமே ஸித்தியாதென்று பொருள். இவ்வண்ணம் மூன்றாவது ஆகார ரூபமான ப்ரயோஜனத்வம் தூஷிக்கப்பட்டது. அதற்குமேல் ஸ்வத: இஷ்டத்வரூபமான ப்ரயோஜனத்வத்தையும் அதனாலுண்டுபண்ணப்பட்டிருக்கிற க்ருதி ஸாத்யத்வத்தையும் தூஷிக்கிறார்—நியோகஸ்யாபி என்று. இஷி: இச்சை-இங்கே இச்சைக்கு விஷயமாக ஆய்இருக்கிற அர்த்தாந்தர ஸாதநத்வ மில்லாமையால் இஷ்டத்வமென்பது ஸ்வத: இஷ்டத்வமே சொல்ல விரும்பப்பட்டிருக்கிறது. அது ஸுகத்துக்கும் துக்க நிவ்ருத்திக்கும் ஸமானம். தானாகவே இஷ்டமாக இருத்தலும் ஸ்வத: இஷ்டத்வத்தாலுண்டுபண்ணப்பட்டிருக்கிற க்ருதி ஸாத்யத்வமும் அவ்விரண்டுகளுக்கே ஆகையால் தானாக இஷ்டத்வமும் அப்படிப்பட்ட இஷ்டத்வத்தாலுண்டுபண்ணப்பட்டிருக்கிற க்ருதி ஸாத்யத்வம் இரண்டும் அவைகளுக்கு ஸாதனமாக இருப்பதால் இஷ்டமான நியோகத்துக்கு ஸித்திக்கிறதுகளில்லை என்று அர்த்தம். ஸாதனமாக இருப்பதால் இஷ்டத்வத்தை உபபாதனம் செய்கிறான்—அதஏவஹி என்று. ஸாதனமாக ஸித்தியை அங்கீகரிக்காத பக்ஷத்தில் தாதுவின் அர்த்தமே கார்யமாக ஆகலாம் என்று சொல்லுகிறார்—

அந்யதா என்று. இதை விவரிக்கிறார்—ஸ்வர்ககாம என்று. அத: என்று. ஸ்வர்ககாமபதான்வயத்திற்கு முந்தி. தாதுவின் அர்த்தமாததிரத்திற்கே கார்யதா ப்ரதிபத்தியினாலும் அதோடு அன்வயம் வரின் அதற்கு ஸாதனமாகவே ப்ரதிபத்தியினாலுமென்று அர்த்தம் ப்ரதமமநன்யார்த்ததயா ப்ரதிபன்னஸ்ய கார்யஸ்யா நந்யார்த்தத்வ நிர்வஹணாயா பூர்வமேவ பஶ்சாத் ஸுகஸாதநம் பவதிஎன்று. இது அர்த்தம். எப்படி தனக்கு ப்ராதான்யத்தை நிர்வஹிப்பதின்பொருட்டு தன் வேலைக்காரர்களுக்கு அபிமதவஸ்துக்களை ப்ரபுவானவன் கொடுக்கிறானோ அப்படிப்போல அபூர்வமும் தான்ப்ரதானமாக இருந்து கொண்டு தனக்கு ப்ராதான்யத்தை நிர்வஹிப்பதற்காகத்தன்னை கர்மங்களின்வாயிலாக உண்டுபண்ணுகிற புருஷனுக்கு ஸ்வர்கத்தைக்கொடுக்கிறது என்று பஞ்சிகையில் இந்த விஷயம் நன்கு சொல்லப்பட்டிருக்கிறது. 'ஆத்மஸித்யனுகூலஸ்ய நியோகஸ்ய ப்ரஸித்தயே । குர்வத் ஸ்வர்காதி கமபி ப்ரதாநம் கார்யமேவ ந:' என்று உபஹாஸ்யம் பக்கத்திலிருப்பவர்களால்கூட சிரிக்கத்தக்கது. அத: என்று. சொல்லப்பட்டிருக்கிற அர்த்தத்தை விவரிக்கிறார்— ஸ்வர்ககாம என்று. கார்ய ப்ரதிபத்தியானது ப்ரதானமெனபது ஒரு பதத்தைக்கேழ்கும் தருணததிலே எறபடுகிறதா? அல்லது ஸ்வர்ககாம பதத்தோடு சேர்ந்திருக்கிற தருணத்திலே எறபடுகிறதா ? என்கிற விகல்பத்தை அபிப்ராயப்பட்டு முதலாவது கல்பத்தில் தூஷணமானது 'அந்யதாக்ரியைவ கார்யம் ஸ்யாத' என்பதனால் கூறப்பட்டதாக ஆகிறது அதே பக்ஷத்தில்அங்கீகாரத்தால்வேறு தூஷணமும் ஒரு பதத்தால் கார்யம் அநந்யார்த்தமாக ப்ரதிபன்னமாக இருக்கட்டும், அப்படி இருந்தபோதிலும் அன்விதாபிதான தசையில் அறியப்பட்ட அர்த்தமே நல்ல அர்த்தம். அதனால் அநந்யார்த்தத்வமில்லை என்று. இரண்டாவது கல்பத்தில் தூஷணம் கூறப்படுகிறது. ஸ்வர்ககாமபதான்வித என்று. ஸ்வர்ககாமபதத்தோடு சேர்ந்திருக்கிற விங முதலியதால். அதற்குஸாதனமாகவே சொல்லப்பட்டிருப்பதால் முதலில் அநந்யார்த்தமாக அறியப்பட்டிருக்கிறதென்று சொல்வது யுக்தமல்லவென்று அர்த்தம். வ்யுத்பத்தி தசையில் அபூர்வமானது ஸாதனமாக அறியப்படுகிறது. அபிதான தசையிலோவென்றால் அநந்யார்த்தமாகவும் ஸ்தாயியாகவும் கார்யமென்றே அறியப்படுகிறதென்கிறசங்கைவரின அபூர்வ வ்யுத்பத்தியுள்ளவனான புருஷனுக்குங்கூட ஒரு பதத்தைக்கேழ்க்கும் தருணத்தில் அநந்யார்த்தத்வ ப்ரதீதியின் அனுபபத்தியைக்கூறுகிறார்-ஸுக என்று. விசேஷமின்றி ஸாமான்யம் கிடையாது என்கிறநியாயத்தால்ஸாத்யமென்று ஸாமான்யமாக சொல்லப்படா நின்றிருந்தபோதிலும் விசேஷத்தில் நிலைபெற்றதாக அறியப்படுகிறது. ஸுகமோ துக்கநிவ்ருத்தியோ அவைகளுக்கு ஸாதனமோ இம்மூன்றே க்ருதி ஸாத்தியங்கள். ஆகையால் இம்மூன்றுக்குள் ஒன்று ஸாத்தியமாக இருக்கத்தக்கது. அதில் ஸுகத்வ துக்க நிவ்ருத்தித்வங்கள் பொருந்ாதலால் ஸாத்யம் ஸாதனமாகவே இருக்கிறதென்று அறியப்படுகிறது க்ருதியோவென்றால் இம்மூன்றுக்குள் ஒன்றைத்தான் விஷயீகரிக்கிறது. அப்படி காணப்படுவதால் எப்படி தர்சனமோ அதை அனுஸரித்தே ஒப்புக்கொள்ளத்தக்கது. க்ருதிக்கு க்ரியையைத்தவிர்த்தமற்றதை விஷயீகரிக்கிற தன்மை காணப்படாததாலன்றோ க்ருதி அபூர்வம் இரண்டுக்கும் கடகமாக பாவார்த்தமானது வைக்கப்பட்டிருக்கிறது ஆகையால் மூன்றுக்குள் ஒன்றாக இருத்தல் என்கிற தன்மை இல்லாவிடில் ஸாதயம் என்கிற ஜ்ஞானமே உண்டாகாது என்று அர்த்தம். மேலும் அன்விதாபிதான வாதியினால் ஸ்வர்ககாமபதத்தோடு சேர்ந்தே இருக்கிற விங் முதலியது கார்யத்தைச் சொல்லுகிறதென்று சொல்லத்தக்

கது. அப்பொழுது அதன் ஸன்னிதான பலத்தால் அதற்கு ஸாதனமாகவே ப்ரதீதி உண்டாகலாமென்பதனுல் அநந்யார்த்தமாக ப்ரதீதி இல்லை. ஸுக இது முதலியதற்கு இப்படியாவது அர்த்தம். ஸுகம் துக்கநிவ்ருத்தி இவைகளைவிட வேருக இருப்பதால் ஸ்வத: இஷ்டமாக இருப்பதால் க்ருதி ஸாத்யத்தம் யுக்தமன்று அதற்கு ஸாதனமாக இருக்கிற வஸ்துவைக்காட்டிலும் வேருக இருப்பதால் பரம்பரையினுல் இஷ்டமாகயிருப்பதால் க்ருதி ஸாத்யத்வமும் யுக்தமல்லவென்று முன்பு மூன்ருவதான ஆகாரரூபமான ப்ரயோஜனத்வம் நிரஸிக்கப்பட்டது. அதற்குமேல் ஸ்வத: இஷ்டத்வரூபமான ப்ரயோஜனத்வமும் ஸுகம் துக்கநிவ்ருத்தி இவ்விரண்டைக்காட்டிலும் வேருக இருத்தலால் நிரஸிக்கப்பட்டது.

[illegible]

[illegible]

தே । யாகஸ்ய ச யாகாதேரபி தேவதாராதநரூபஸ்ய பரமபுருஷாராதநரூபதயா, புருஷாராதிதாத் பரமபுருஷாத் ஃலஸித்திஶ்ருதி꞉ "ஃலமத உபபத்தே꞉" இத்யத்ர வ்யுத்பாதயிஷ்யதே। அதோ வேதாந்தா꞉ பரிநிஷ்பந்நம் பரம் ப்ரஹ்ம போதயந்தீதி ப்ரஹ்மோபாஸநஃலஜ்ஞாநம் ஸ்திரகாலம் ஸித்தம் । யாதாத்ம்யாதிக்ஷயிஃலத்வேந கேவலஸ்ய கர்மண꞉ க்ஷயிஃலத்வேந தோஷாஃலக்ஷயஃலஶ்ரவணம் "வா யாஸ்மாந்நிக்ஷம் ப்ரேத்ய க்ருதம்" இத்யாதிவாக்யைர்ஜ்ஞேயம்।

அத꞉ கேவலாநாம் கர்மணாமல்பாஸ்திரஃலத்வாத், ப்ரஹ்ம ஜ்ஞாநஸ்ய சாநந்தஸ்திரஃலத்வாத்ஸிந்த்யமதோ ப்ரஹ்மவிசாராரம்போ யுக்த இதி ஸ்திதம் ॥

இதி ஶ்ரீபாஷ்யே ஜிஜ்ஞாஸாதிகரணம் ॥

ஸ்ரீபாஷ்யம்—

மேலும் நியோகத்திற்கு ப்ரயோஜனத்வமென்பது என்ன? ஸுகத்துக்குப்போல் நியோகத்துக்கும் அனுகூலத்வமே ப்ரயோஜனத்வமென்று சொல்லப்படுமேயானால் நியோகம் ஸுகமா? ஸுகமே யன்றோ அனுகூலம். ஸுகவிசேஷம்போல நியோக என்கிற சப்தத்தாலும் சொல்லக்கூடியதாகவும் விலக்ஷணமாகவுமிருக்கிற ஒரு வித ஸுகம் என்று கூறப்படுமேயானால் அதில் எது ப்ரமாணமென்று சொல்லத்தக்கது. தன்னுடைய அனுபவமே என்று சொல்லப்படுமேயானால் அது ஸரியல்ல- விஷயவிசேஷாநுபவஸுகம் போல இது நியோகாநுபவஸுகமென்று உன்னாலுமனுபவிக்கப் படுகிறதில்லை. சாஸ்திரத்தினால் நியோகம் புருஷார்த்தமென்று ப்ரதிபாதிக்கப்பட்டிருப்பதால் பிற்காலத்திலல்லவோ அனுபவிக்கப்படப் போகிறதென்று சொல்லப்படுமேயாகில் நியோகத்தை புருஷார்த்தமென்று சொல்லுகிற சாஸ்திரமெது? லௌகிகவாக்கியமாகாது. அது துக்காத்மக க்ரியைகளை விஷயமாகக் கொண்டிருப்பதால், அந்த சாஸ்திரத்தினால் ஸுகம் முதலியவைகளுக்கு ஸாதனமாக இருப்பதால் க்ருதி ஸாத்யதாமாத்ரம் ப்ரதிபாதிக்கப்படுவதால்- வைதிகவாக்கியமுமன்று- அதனாலும் ஸ்வர்கத்திற்கு ஸாதனமாக கார்யம் ப்ரதிபாதிக்கப்படுவதால். நித்ய நைமித்திக சாஸ்திரமுமல்ல. அதற்கும் நியோகத்தை புருஷார்த்தமாகச் சொல்லுதலானது ஸ்வர்க காமவாக்கியத்திலிருக்

கிற அபூர்வ வ்யுத்பத்தியை முன்னிட்டுக்கொண்டிருக்கிறதென்று இங்கீர்த்தியினால் அதனாலும் ஸுகம் முதலியதற்கு ஸாதனமாக இருக்கிற கார்யத்தை உணர்த்துதல் விலக்கத்தகாதது தவறாத ஐஹிகபலத்துடன் சேர்க்கையுற்றதாகச் செய்யப்பட்டிருக்கிற கர்மத்துக்கு பலமாக அப்பொழுது அனுபவிக்கப்படா நின்ற அன்னம் முதலியதென்ன ஆரோக்கியமென்ன இது முதலியவைதவிட வேறான நியோக ரூபமான ஸுகத்தின் உபலப்தி இல்லாமையாலும் நியோகம் ஸுகமென்பதில் ஒரு ப்ரமாணத்தையும் நாமறியோம். அர்த்தவர்தம் முதலியவைகளிலுங்கூட ஸ்வர்கம் முதலிய சுகப்ரகார கீர்த்தனம் போல நியோகரூப சுக ப்ரகார கீர்த்தனமானது உங்களாலும் முன்புபார்க்கப்பட்டதல்ல. ஆகையால் விதிவாக்கியங்களிலும் தாதுவின் அர்த்தத்தினுடைய சப்தானுசாஸநஸித்தமாகவே இருக்கிற கர்த்ருவ்யாபாரஸாத்யதை ஒன்றே லிங்முதலியவைகளுக்கு வாச்யமென்று நிச்சயிக்கப்படுகிறது. தாதுக்களின் அர்த்தங்களான யாகம் முதலிய க்ரியைகளுக்கு அக்னி முதலிய தேவதைகளின் அந்தர்யாமியாக இருக்கிற பரம புருஷனுடைய ஸமாராதனரூபதையும் கர்மங்களால் நன்றாக ஆராதிக்கப்பட்டிருக்கிற பரமபுருஷனிடத்தினின்று பலஸித்தியும் ‘பலமத உபபத்தே:’ என்கிற ஸூத்ரத்தில் ப்ரதிபாதிக்கப்படப்போகிறது. ஆகையால் வேதாந்தங்கள் பரிநிஷ்பன்னமான பரப்ரஹ்மத்தை போதிக்கின்றன என்பதனால் ப்ரஹ்மோபாஸநபலாநந்த்யமும் ஸ்திரத்வமும் ஸித்தித்தது. சாதுர்மாஸ்யம் முதலிய கர்மங்களில்கூட பலாபேக்ஷையுடன் செய்யப்படுகிற கர்மத்துக்கு நச்வரமான பலம் உபதேசிக்கப்பட்டிருப்பதால் அக்ஷய பதச்ரவணமானது ‘வாயுச்சாந்தரிக்ஷஞ்சை தம்ருதம்’ இது முதலியதற்குப்போல் ஆபேக்ஷிகமென்று நினைக்கத்தக்கது. ஆகையால் பலாபிஸந்தியுடன் செய்யப்படுகிற கர்மங்கள் அல்பமாயும் அஸ்திரமாயுமுள்ள பலத்துடன்கூடி இருப்பதாலும் ப்ரஹ்மஜ்ஞானமானது அபரிமிதமாகவும் ஸ்திரமாகவுமிருக்கிற பலத்துடன்கூடி இருப்பதாலும் அதன் நிச்சயத்தை பலமாகக்கொண்டிருக்கிற ப்ரஹ்மவிசாரத்தின் தொடக்கமானது தக்கதென்று நிலைத்தது.

ஜிஜ்ஞாஸாதிகரணம் முற்றிற்று.

ச்ருதப்ரகாசிகை—

இப்பொழுது தன்படியாக இஷ்டத்வம் ஸித்திப்பதற்காகவும் அநந்யார்த்தத்வத்தை திடப்படுத்துவதற்காகவும் நன்கு சிந்திக்கத்தக்கதாக இருக்கிற ஸுகரூப ப்ரயோஜனத்வத்தை தூஷிப்பதற்கத் தொடங்குகிறார்—அபிச என்று. கிமிதம் நியோகஸ்ய ப்ரயோஜநத்வம் என்று கிம் சப்தமானது நிந்தையில். ஸந்தேஹிக்கிறார்— ஸுகவத் என்று. அனுகூல ஸ்வபாவமானது ஸுகத்தைத்தவிர்த்த ஒரு வஸ்துவுக்கும் பொருந்